உலகம் பலவிதம்

ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை 1885-1955

பதிப்பாசிரியர்

சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் நூலகம் நிறுவனத்திற்கு

திருச்செல்வன்
09.09.2021

உலகம் பலவிதம்

ம.வே. திருஞானசம்பந்தப்பிள்ளை 1885-1955

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 125ஆம் ஆண்டுவிழா வெளியீடு

உலகம் பலவிதம்

ம.வே. திருஞானசம்பந்தப்பிள்ளை 1885-1955

பதிப்பாசிரியர்

சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்

வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கம்

கொழும்பு 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு: உலகம்பலவிதம்

நூலாசிரியர்: ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை [1885 - 1955]

பதிப்பாசிரியர்: சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்,
வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பதிப்பாளர்: நவரத்தினம் அசோகன்,
தலைவர்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழையமாணவர்சங்கம், கொழும்பு

எழுத்துருவாக்கமும்
வடிவமைப்பும்: ப. ஜெகதீஸ்வரன்

மீள் எழுத்துருவாக்கமும்
வடிவமைப்பும்: சஞ்சயன் செல்வமாணிக்கம்

அட்டை வடிவமைப்பு: சனாதனன் தாமோதரம்பிள்ளை

அச்சு: கரிகணன் (தனியார்) நிறுவனம், யாழ்ப்பாணம்

பதிப்பு: ஆனி 2017, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
125வது ஆண்டுவிழா [2015] வெளியீடு

விலை: 2700 இலங்கை ரூபாய்

Title: Ulakam Palavitam

Author: Ma. Vē. Tiruñāṉacampantappiḷḷai [1885 - 1955]

Editor: Somesasundary Krishnakumar,
Department of History, University of Jaffna

Publisher: Navaratnam Asokan,
President,
Jaffna Hindu College Old Boys Association, Colombo

Typesetting and Layout: P. Jegatheeswaran

Re-typesetting and Layout: Sanjayan Selvamanickam

Cover design: Sanathanan Thamotharampillai

Printers: Harikanan (Pvt) Ltd., Jaffna.

Edition: June 2017, commemorating 125 years of Jaffna Hindu College [2015]

Price: 2700 Rupees

ISBN: 978-955-8506-02-8

[Columns, short stories, novels and other features written between 1922 and 1951 by M. V. Thirugnaanasampanthappillai (1885 - 1955), teacher, Jaffna Hindu College and editor of the then leading Tamil newspaper in Jaffna, Inthu Saathanam.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரை

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு 125 ஆண்டுகள் நிறைவு பெற்றமை 2015இல் கொண்டாடப்பட்டது. இக்கல்லூரியின் நீண்டவரலாற்றில், இதன் பின்னணியில் எழுந்த எழுத்துக்களையும் படைப்பிலக்கியங்களையும் ஆவணப்படுத்தும் முயற்சியின் ஒருதொடக்கமாக இந்நூல் வெளியாகின்றது.

இந்நூலாசிரியர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை (1885 - 1955), இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நீண்டகாலம் (1912 - 1947) ஆசிரியராகப் பணிபுரிந்தவர். அதேநேரத்தில், அன்றைய யாழ்ப்பாணத்தின் முன்னணிப்பத்திரிகைகளுள் ஒன்றான இந்துசாதனத்திற்கு 1912 இலிருந்து உதவி ஆசிரியராகவும், 1921 இலிருந்து 1951வரை பிரதம ஆசிரியராகவும் இருந்து அதனை வழிநடத்தியவர். இந்துக்கல்லூரியும் இந்துசாதனமும் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் ஏறத்தாழ ஒரேகாலத்தில் தோற்றுவிக்கப்பட்ட சகநிறுவனங்கள்.

திருஞானசம்பந்தப்பிள்ளை ஈழத்தமிழ் பத்திரிகை எழுத்தின் மூத்தவர்களுள் ஒருவர். ஒருகாலகட்டத்தின் கருத்துருவாக்கத்தில் அவரது பங்கு கணிசமானது. இதற்கும் மேலாக, ஈழத்தமிழ் நாவல் இலக்கியத்தின் முன்னோடிகளுள் சிறப்பிடம் பெற்றவர் என்று இலக்கிய வரலாற்றில் பேசப்படுபவர். இவரது படைப்புக்களின் தொகுப்பை வெளிக்கொணர்வதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

125 ஆண்டுக்காலத்தில் இந்துக்கல்லூரிப் பின்னணியில் வந்த எழுத்தாளர்களும் படைப்பாளர்களும் பலர். திருஞானசம்பந்தப்பிள்ளையைப்போன்று பத்திரிகை எழுத்தில் புகழிடம்பெற்ற இன்னொருவர், இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. ந. சபாரத்தினம். இந்துக்கல்லூரிச்சமூகத்தின் ஏனைய இலக்கியப்படைப்புகளும் பல்வேறு எழுத்து - சிந்தனை மரபுகளும் ஆவணப்படுத்தப்படல் தொடரவேண்டும் என்பதே எமது விருப்பம். இந்நூலை, கொழும்பிலிருக்கும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழையமாணவர்சங்கம் வெளியிடும் முயற்சிக்கு ஆதரவு வழங்கும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் இன்றைய அதிபர் திரு. ஐ. தயானந்தராஜாவிற்கு எமது நன்றிகள்.

இத்தொகுப்பின் பதிப்பாசிரியர், திருமதி சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார். இவர் நவீனவரலாற்று ஆவணங்களை ஆராய்வதில் நீண்டகால அநுபவம் உடையவர். 38 ஆண்டுகளாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையில் பணிபுரிகிறார். திருஞானசம்பந்தப்பிள்ளையின் எழுத்துக்களை பழைய இந்துசாதனப் பிரதிகளிலிருந்து தேடியெடுத்துத் தொகுக்கும் முயற்சியை ஒரு வரலாற்றுத்தொண்டாக மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டார். உடல்நலக்குறைவுகளுக்கு மத்தியிலும் முடித்துத்தந்திருக்கிறார். இந்துக்கல்லூரிச் சமூகமும் ஈழத்து இலக்கிய உலகும் இவருக்குக் கடப்பாடுடையவை. 1970களின் பிற்பாகத்தில் இந்துசாதனத்தின் பழையபிரதிகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்திற்குக் கொண்டுவந்துசேர்த்ததில் திரு ஆ. சிவநேசச்செல்வனுடன் இணைந்து பணியாற்றியவர் இவரது கணவர் திரு கிருஷ்ணகுமார் என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டியது.

இந்நூலின் எழுத்துருவாக்கம், வடிவமைப்பு வேலையை ஏற்றுக்கொண்டவர் எமது கல்லூரிப் பழையமாணவர், திரு ப. ஜெகதீஸ்வரன். இவரது பாட்டனார் திரு. A. V. குலசிங்கம் ஒருகாலத்தில் இந்துசாதனத்தின் ஆங்கிலப்பதிப்பான The Hindu Organ இற்கு ஆசிரியராக இருந்தவர். துண்டுகளாக ஒளிப்பிரதிசெய்யப்பட்ட பத்திரிகைப்பாகங்களை, பழைய தமிழ்நடையை விளங்கிக்கொண்டு தவறில்லாமல் எழுத்துருவாக்கம் செய்வது எல்லோருக்கும் எளிதல்ல. தனிப்பட்ட கவனமெடுத்து இதைச் செய்துதந்த திரு ஜெகதீஸ்வரனுக்கும் அவரது உதவியாளர் செல்வி மதில்டா லாஸரஸ் இற்கும் எமது நன்றிகள்.

மூல எழுத்துருவாக்கத்தை இப்பதிப்பிற்குப் பொருத்தமானவகையில் மீள் எழுத்துருவாக்கமும் வடிவமைப்பும் செய்ய நாம் விரும்பியபொழுது, அதைத் தொண்டார்வத்துடன் செய்துதந்தவர் திரு. சஞ்சயன் செல்வமாணிக்கம். இதற்கு உதவியவர்கள் நோர்வே அன்பர்கள், திரு உமாபாலன் சின்னத்துரை, திரு இளவாலை விஜயேந்திரன், திரு சிறீதரன் நாராயணபிள்ளை, திருமதி அருள்நிதி இராதாகிருஷ்ணன் ஆகியோர். இவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இப்பதிப்பு முயற்சியைத் தொடங்கியபொழுதே முன்வந்து, நிதிவழங்கி, ஆதரவுதந்தவர்கள் பலர். இவ்விவரங்களைத் தனியாகக் குறிப்பிட்டுள்ளோம். இவர்கள் அனைவருக்கும், இந்நூலை அச்சிடும் யாழ்ப்பாணம் கரிகணன் அச்சகத்தாருக்கும் மற்றும் இந்நூல் வெளியீட்டிற்கு அரங்குதர இயைந்திருக்கும் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தினருக்கும் எமது நன்றிகள்.

யாழ்ப்பாணம்இந்துக்கல்லூரியின்125 வயதுநினைவுகூரப்படும்பொழுது, அதன் காலத்தின்பின்னணியிற்பிறந்த மூத்த எழுத்துக்கள், குறிப்பாகத் திருஞானசம்பந்தப்பிள்ளையின் படைப்புக்கள், தொகுத்து வெளிக்கொணரப்படுவதன் வரலாறு - இலக்கிய முக்கியத்துவத்தை எமக்கு எடுத்துக்கூறி, ஏற்பாடுகளைச் செய்துதந்தவர், எமது கல்லூரிப் பழையமாணவர், பொன்னம்பலம் இரகுபதி. அவருக்கு எமது நன்றிகள்.

நவரத்தினம் அசோகன்

தலைவர்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழையமாணவர்சங்கம், கொழும்பு.
31.05.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பாசிரியர் முன்னுரை

பழைய இந்துசாதன இதழ்களைத்தேடி ம. வே. திருஞானசம்பந்தப் பிள்ளையின் எழுத்துக்களைத் தொகுத்துத்தரமுடியுமா என்று என்னிடம் கேட்கப்பட்டபொழுது என்மனதிற்கு முதற்தோன்றியது அவர் எழுதிய "ஓம் நான் சொல்லுகின்றேன்" என்ற சிறுகதை. எனது தலைமுறையினர் திருஞானசம்பந்தப்பிள்ளையைத் தெரிந்துகொண்டது அக்கதைக்கூடாகத்தான். பத்தாம்வகுப்புத் தமிழ் இலக்கியப் பாடநூலில் மறுபதிப்புச் செய்யப்பட்டிருந்த அக்கதை அப்படியே மனதில் நின்றுவிட்டதொன்று.

அந்தக்கதையிலேயே தொடங்கி, திருஞானசம்பந்தப்பிள்ளை இந்துசாதனத்திலிருந்து ஓய்வுபெறும்பொழுது எழுதிய "விடைபெற்றுக்கொள்ளுகிறேன்" என்பது இறுதியாகவருமாறு, இத்தொகுப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. அவரது எழுத்துக்கள் உலகம் பலவிதம், உலகம் பலவிதக்கதைகள் என்ற பத்திகளாகவே இந்துசாதனத்தில் வந்தமையால், உலகம் பலவிதம் என்பதே இத்தொகுப்பிற்கும் தலைப்பாகின்றது.

இத்தொகுப்பின் முதற்பாகத்தில், உதிரிகளாக வெளியான அவரது இருசிறுகதைகளும் நூலாக எனக்குக் கிடைக்கக்கூடியதாகவிருந்த கோபால-நேசரத்தினம் நாவலும் இடம்பெறுகின்றன. இரண்டாம்பாகத்தில், 1922இலிருந்து 1936வரை பெரும்பாலும் அரசியல், சமூகம், சமயம் தொடர்பாக எழுதப்பட்ட பத்திகளும், மூன்றாம்பாகத்தில் 1944-1946 காலப்பகுதி தொடர்நாவல்களும், நான்காம்பாகத்தில் 1947-1951 காலப்பகுதி தொடர்நாவல்களும் வருகின்றன. இத்துடன் மூன்று பின்னிணைப்புகளும் இருக்கின்றன.

இத்தொகுப்பு முயற்சியில் இறங்குவதற்கு எனக்கு முதலில் தயக்கம் இருந்தது. பழைய இந்துசாதன இதழ்கள் எந்தளவிற்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் என்பதே காரணம். சைவபரிபாலன சபை அலுவலகத்திலிருந்து 1970களின் பிற்பாகத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்திற்குக் கொண்டுவரப்பட்ட இந்துசாதன இதழ்கள் 1922இலிருந்தே தொடங்குகின்றன. அவையும் சிதைவடைந்தும் தொடர்ச்சியற்றும் காணப்படுகின்றன.

திருஞானசம்பந்தப்பிள்ளை 1912இலிருந்து 1920வரை இந்துசாதன உதவி ஆசிரியராக இருந்தகாலத்து இதழ்களோ எழுத்துக்களோ கிடைக்கவில்லை. அவர் எழுதி நூல்வடிவில் வந்த முதலாவது நாவலாகக் குறிப்பிடப்படும் காசிநாதன்-நேசமலரும் கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் இந்துசாதன ஆசிரியராக இருந்த காலத்திற்குள்ளும், 1936-1944 காலப்பகுதி இதழ்கள் இல்லை. ஏனையவற்றுள்ளும் இடையிடையே சில இதழ்கள் இல்லை. நூலாக வெளிவந்த துரைரத்தினம்-நேசமணி எனக்குக் கிடைக்காததால் பத்திரிகைத்தொடராகவே அது இங்கு சேர்க்கப்பட்டுள்ளது. அதிலும் சில அத்தியாயங்கள் இல்லை.

இப்படியாக, கிடைத்தவற்றைக்கொண்டே இத்தொகுப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. எனினும், இதுவரை நூலாக வெளிவராத பல படைப்பிலக்கியங்களும் அக்கால அரசியல், சமூகம், தொடர்பாக எழுதப்பட்ட, கிடைத்தற்கரிய பல பத்திரிகைப்பத்திகளும் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன.

திருஞானசம்பந்தப்பிள்ளை 35 ஆண்டுகள் (1912-1947) யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் ஆசிரியராக இருந்தவர். அதேநேரத்தில் 40 ஆண்டுகள் (1912-1951) இந்துசாதனம் பத்திரிகைக்கூடாக, பலமானதொரு சுதேச ஊடகம் ஒரு சமூகத்திலும் தேசத்திலும் காலனிய ஆட்சியிலும் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தையும் வழிநடத்தியவர். இதற்கப்பால், நாவல், சிறுகதை, உரைச்சித்திரம் என்று நவீன ஈழத்தமிழ் படைப்பிலக்கிய முன்னோடிகளிலும் ஒருவர். தென்னிலங்கையையும் தமிழ்நாட்டையும் மலாயா-சிங்கப்பூரையும் கதைக்களமாகக்கொண்ட இவரது சிலபடைப்புகள் இன்றைய உலகளாவிய ஈழத்தமிழ் புலம்பெயர் இலக்கிய ஓட்டத்தின் தொடக்கங்கள்.

இந்துக்கல்லூரிக்கும் இந்துசாதனத்திற்கும் திருஞான சம்பந்தப்பிள்ளைக்கும் இடையிலான இடைத்தொடர்புகளைத் தெரிந்துகொள்ளுதல் இத்தொகுப்பைப் படிப்பதற்கு உதவியானது.

ஆறுமுகநாவலர் 1879இல் காலமாகி 9 ஆண்டுகளுக்குப் பின்னர் அவரது மாணவர்களால் 1888இல் உருவாக்கப்பட்டது யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை. நாவலரது பணிகளை மேற்கொண்டு முன்னெடுக்கும் நோக்கில், இச்சபையின் முதல் முயற்சிகளாக இருந்தவை, தமிழ்-ஆங்கிலப் பத்திரிகையாக 1888இலேயே தோற்றுவிக்கப்பட்ட இந்துசாதனம் / The Hindu Organ; 1849இல் யாழ்ப்பாணத்தில் நாவலர் தொடங்கிய பதிப்பு, அச்சக முயற்சியைப் பின்பற்றிய, சைவப்பிரகாச இயந்திரசாலை என்ற அச்சகம்; அடுத்தது, 1872இல் அவர் தொடங்கி, பின் தொடரமுடியாமற்போன சுதேச ஆங்கிலக்கல்விக்கூட முயற்சியை மீட்டுவித்து 1890இல் நிறுவப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

இந்துசாதனத்தின் முதலாவது ஆசிரியர், நாவலரின் பெறாமகனும் மாணவருமாகிய த. கைலாசபிள்ளை. இந்துசாதனமும் The Hindu Organ உம் 1899இலிருந்து தனித்தனிப் பதிப்புகளாக வெளிவரத்தொடங்கின. 1912இல் இந்துசாதனத்தின் உதவி ஆசிரியராகிய திருஞானசம்பந்தப் பிள்ளை, அப்போது ஆசிரியராக இருந்த கார்த்திகேயப்பிள்ளை 1920இல் காலமானபின்னர் அதன் ஆசிரியராகி, 1951 வரை அதை வழிநடத்தினார். திருஞானசம்பந்தப்பிள்ளை, ஆறுமுகநாவலரின் மாணவரும் பின்னர் சிதம்பரத்திலிருந்த நாவலர் கல்விக்கூடத்திற்கு தலைமையாசிரியராக இருந்தவருமான மட்டுவில் க. வேற்பிள்ளை உபாத்தியாயரின் மூத்தமகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துசாதனம் 1913இல் மாதமிருமுறையும் பின்னர் வாரப் பத்திரிகையாகவும் பிறிதொருகாலத்தில் வாரமிருமுறையும் வெளிவந்தது. யாழ்ப்பாணத்தில் இந்துசாதனத்திற்கும் காலத்தில் மூத்த தமிழ்ப் பத்திரிகைகளாக வந்துகொண்டிருந்தவை அமெரிக்கமிஷன் திருச்சபையின் உதயதாரகையும் கத்தோலிக்கத் திருச்சபையின் கத்தோலிக்க பாதுகாவலனும். 1920களில் இருந்த பிற பத்திரிகைகளுள் தேசாபிமானியும் சுதேசநாட்டியமும் குறிப்பிடத்தக்கவை. பின்னர் மேலோங்கிய பத்திரிகையான ஈழகேசரி, 1931இல் ஆரம்பிக்கப்பட்டது. திருஞானசம்பந்தப்பிள்ளை காலத்தில் இந்துசாதனமே இலங்கை, இந்தியா, பர்மா, மலாயா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளை உள்ளடக்கி அதிக வாசகர்களைக்கொண்ட பத்திரிகையாக இருந்ததாகத் தெரிகின்றது.

திருஞானசம்பந்தப்பிள்ளையின் எழுத்துக்கள் அவற்றை இன்று படிப்போருக்கு பலபரிமாணங்களையும் பல்வேறு வகையான கருத்தியற்தாக்கங்ளையும் தரக்கூடியவை; விமரிசனங்களை உருவாக்கக்கூடியவை. இவைபற்றிய உரையாடல்களை ஒரு பதிப்பாசிரியர்தனதுமுன்னுரைக்குள்கொண்டுவருவதுபொருத்தமற்றது. அவை, படிப்போருக்கும் படைப்புகளுக்குமிடையிலானவை. இத்தொகுப்பு காலத்தின் பின்னணியில் படிக்கப்படவேண்டியதொன்று. யாழ்ப்பாணத்தில், அக்காலத்தில், காலனியத்தை எதிர்கொள்ளும் ஆளுமையுடன் இருந்தவர்கள் எத்தகைய சமய, மொழி, சமூகநிலை, பால்நிலை, ஒழுக்கவியல் அடிப்படைகளிலான சமூக உருவாக்கமொன்றைக் கருத்திற்கொண்டிருந்தார்கள் என்பதை இத்தொகுப்பில் காணலாம்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிச் சூழலில் உருவான கருத்தியல் வெளிப்பாடுகளுக்குப் பலமுகங்கள் உண்டு. திருஞானசம்பந்தப்பிள்ளை காலத்திலேயே யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியராகி, 25 ஆண்டுகளுக்குமேல் பணிபுரிந்து (1945-1971) இக்கல்லூரிக்கு அதிபருமாகிய மு. கார்த்திகேசன் போன்றவர்கள் இன்னொருவகையான சிந்தனைத்தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தார்கள். எல்லா ஓட்டங்களும் வரலாற்றுநோக்கில் பதியப்படவேண்டியவை, பார்க்கப்படவேண்டியவை என்பதில் ஐயப்பாட்டிற்கு இடமிருக்கமுடியாது.

20ம் நூற்றாண்டின் முற்பகுதியில், ஈழத்தமிழர்களின், குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்களின், சமூகவியல், மானுடவியல், ஊடகவியல், அரசியல், தேசியம், புலப்பெயர்வு, இலக்கிய ஓட்டம், தமிழ்நடை போன்றவற்றை வரலாற்றுப்பார்வையுடன் ஆராய விரும்புவோருக்கு திருஞானசம்பந்தப்பிள்ளையின் எழுத்துக்கள் அரியதொரு ஆவணம். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமிழ்கற்கும் மாணவருக்கு, ஈழத்தமிழ் உரைநடை - படைப்பிலக்கிய வளர்ச்சியின் ஒரு காலகட்டத்தைத் தரிசிக்க தரமான பயிற்சிநூல். ஏனையோருக்குச் சுவையான வாசிப்பு.

நீண்டபாரம்பரியமுடைய ஒரு கல்வி நிறுவனத்தை நினைவு கூரும்பொழுது, வழமையான விழாக்கொண்டாட்டங்களுக்கு அப்பால், நிலைத்து நிற்கக்கூடியதான ஆவணப்படுத்தலைச் செய்யவேண்டும் என்று கொழும்பிலிருக்கும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பழையமாணவர்சங்கம் முன்வந்திருப்பது காத்திரமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை முன்னெடுத்து, உறுதியுடனும் விடாமுயற்சியுடனும் நடைமுறைப்படுத்தியிருப்பவர் அதன் தலைவர், திரு நவரத்தினம் அசோகன்.

எனக்கு இத்தொகுப்பிற்கான சந்தர்ப்பத்தை வழங்கிய அசோகன், இத்தொகுப்பையும் பதிப்பையும் மேற்பார்வையிட்டுத்தந்த நண்பர் பொன்னம்பலம் இரகுபதி, இந்துசாதன இதழ்களைத் தேடவும் படியெடுக்கவும் அனுமதியளித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகர் திருமதி அ. ஸ்ரீகாந்தலக்ஷ்மி, முதுநிலை உதவிநூலகர் திருமதி மைதிலி விசாகரூபன், ஒளிப்பிரதி செய்துதந்த நூலக கவனிப்பாளர் திரு கந்தசாமி இந்திரன், பிரதியாக்கத்திலும் ஒழுங்குபடுத்தலிலும் பங்குகொண்ட எனது ஆய்வு உதவியாளர் செல்வி காண்டீபன் சுகன்யா, நூலுக்கான எழுத்துருவாக்கமும் வடிவமைப்பும் செய்த திரு ப. ஜெகதீஸ்வரன், மறு எழுத்துருவாக்கமும் வடிவமைப்பும் செய்துதந்த திரு சஞ்சயன் செல்வமாணிக்கம், பக்கங்களைச் செம்மையிட்ட திருமதி தயாளினி பொன்னம்பலம், அட்டை வடிவமைத்த கலாநிதி சனாதனன் தாமோதரம்பிள்ளை, நூலை அச்சிடும் யாழ்ப்பாணம் கரிகணன் நிறுவனத்தினர், இப்பதிப்பிற்கான நிதியுதவியை பல நாடுகளிலிருந்தும் வழங்கிய அன்பர்கள், என்றுமே எனது முயற்சிகளுக்கு உறுதுணையாயிருக்கும் எனது கணவர் கிருஷ்ணகுமார், அனைவருக்கும் எனது நன்றிகள்.

சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்

வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
31.05.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை வாழ்க்கைக் குறிப்பு

பிறப்பு: 1885 மார்கழிமாதம் கார்த்திகை நட்சத்திரம்

தந்தையார்: ம. க. வேற்பிள்ளை என்ற மட்டுவில் கதிரைவேற்பிள்ளை. ஆறுமுகநாவலரது மாணவர், உரையாசிரியர், சிதம்பரம் நாவலர் வித்தியாசாலைத் தலைமையாசிரியர். திருஞானசம்பந்தப்பிள்ளை மூத்தமகனாகப் பிறந்தார்.

தாயார்: புலோலியைச் சேர்ந்த மகேஸ்வரி. சுழிபுரம் விக்டோரியாக்கல்லூரி அதிபராக இருந்த சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரத்தின் மூத்த சகோதரி.

உடன்பிறந்தோர்: குருகவி ம. வே. மகாலிங்கசிவம், சட்டத்தரணி ம. வே. மாணிக்கவாசகர், ம. வே. கந்தசாமி, ம. வே. நடராசா.

முதலாவது வாழ்க்கைத்துணைவியார்: இருபாலை மயில்வாகனத்தின் மகள், தெய்வநாயகி. மகன்: சண்முகசுந்தரம்.

இரண்டாவது வாழ்க்கைத்துணைவியார்: பொன்னம்பலம் மகள் தெய்வானைப்பிள்ளை. பிள்ளைகள்: வயிரவசுந்தரம், மகேஸ்வரி, மனோன்மணி, இராஜேஸ்வரி.

பணியாற்றல்: மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாசாலையில் உதவியாசிரியர். 1912 இலிருந்து 1947 வரை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் ஆசிரியர். 1912 இலிருந்து 1920 வரை இந்துசாதனம் பத்திரிகையின் உதவியாசிரியர். 1921 இலிருந்து 1951 வரை இந்துசாதனத்தின் பிரதம ஆசிரியர். இவற்றைவிட புனைகதையாசிரியர், பதிப்பாசிரியர், பாடநூல் எழுத்தாளர், நாடகாசிரியர், நாடகக்கலைஞர், பிரசங்கியார் என்று பல்துறைவிற்பன்னராக விளங்கினார். 1914 இல் முதலியார் செ. இராசநாயகம், உடுவில் மு. சபாராத்தினசிங்கி, இணுவில் சி. ஆறுமுகதாஸ் போன்றோருடன் சேர்ந்து சரஸ்வதி விலாசசபை என்ற நாடகக்குழுவை ஆரம்பித்தார். 1920 இல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இவரது வழிகாட்டலின்கீழ் ஒரு நாடகக்கழகம் உருவாக்கப்பட்டது.

இறப்பு: 1955

வாழ்க்கைக் குறிப்புகள் திருஞானசம்பந்தப்பிள்ளையின் உடன் பிறந்தவரான பண்டிதர் ம. வே. மகாலிங்கசிவத்தின் பேரனாகிய ஆசிரியர் ம. பா. மகாலிங்கசிவம் அவர்களால் எழுதப்பட்ட திருஞானசம்பந்தப்பிள்ளைபற்றிய நூலிலிருந்து பெறப்பட்டவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதியும் பதிப்பித்தும் வெளியான நூல்கள்

நூலாக வெளியான நாவல்கள்		
காசிநாதன்-நேசமலர்	1924	1ம் பதிப்பு
கோபால-நேசரத்தினம்	1927	1ம் பதிப்பு
துரைரத்தினம்-நேசமணி	1927	1ம் பதிப்பு
பிற நூல்கள்		
சோமவாரவிரத மான்மியம்	1929	2ம் பதிப்பு
செந்தமிழ்வாசக சிந்தாமணி	1935	1ம் பதிப்பு
சமயகுரவர் சந்தானகுரவர் சரித்திரச்சுருக்கம்	1948	1ம் பதிப்பு
பிரதோசவிரத மான்மியம்	1951	1ம் பதிப்பு
தேவார திருவாசகத்திரட்டு	1955	1ம் பதிப்பு
கலாமஞ்சரி		
சிவராத்திரிவிரத மான்மியம்		
ஒன்று தொடக்கம் எட்டு வரையான பால பாடங்கள்		
மாணிக்கவாசகசுவாமிகளின் சரித்திரச்சுருக்கம்	1954	04ம் பதிப்பு
செந்தமிழ் மொழிவளம்		
அரிச்சந்திர புராணம் மயான காண்டம்	1929	4ம் பதிப்பு
அரிச்சந்திர புராணம் மயான காண்டம்	1953	11ம் பதிப்பு
திருக்குறள் (முதல் 20 அதிகாரங்கள்)	1931	2ம் பதிப்பு
கதிர்காம வேலன் திருவருட்பா	1931	2ம் பதிப்பு
வில்லிபாரதம்- இராசசூயச்சருக்கம்	1931	1ம் பதிப்பு
கல்வளையந்தாதி	1934	1ம் பதிப்பு
மயூரகிரிப்புராணம்	1934	2ம் பதிப்பு
நமச்சிவாயமாலை	1937	3ம் பதிப்பு
புட்பயாத்திரைச்சருக்கம்	1949	2ம் பதிப்பு
நளவெண்பா - கலிநீங்குகாண்டம்	1952	2ம் பதிப்பு
கிருஷ்ணன்தூதுச்சருக்கம்		
திருக்குறள் (25 - 34 அதிகாரங்கள்)		
ஈழமண்டலசதகம்	1924	2ம் பதிப்பு
புலியூர் அந்தாதி	1924	1ம் பதிப்பு
திருவாதவூரடிகள் புராணம் - பொழிப்புரை	1947	2ம் பதிப்பு
திருவாதவூரடிகள் புராணம் - விருத்தியுரை	1915	2ம் பதிப்பு
திருவாதவூரடிகள் புராணம் - விருத்தியுரை	1954	3ம் பதிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம்

பாகம் ஒன்று: பத்திகளாக இல்லாமல் வெளியானவை	
ஓம் நான் சொல்லுகின்றேன்: 1938 இந்து சாதனம் பொன்விழா மலர்	19
கோபால-நேசரத்தினம்: 1921, 1927, 1948 நூல் மறுபிரசுரம்	27
சாந்தநாயகி: 1949 இந்து சாதனம் வச்சிரவிழா மலர்	72
பாகம் இரண்டு: உலகம் பலவிதம் பத்திகள் 1922 - 1936. [தலைப்புக்கள் இந்து சாதனத்தில் இல்லை. தொகுப்பிற்காக பதிப்பாசிரியரால் தரப்படுகின்றன]	
1922 ஆகஸ்ட் 3: நல்லூர்க்கோயில், வடமேல் மாகாண ஏசண்டர்,	81
1922 ஆகஸ்ட் 10: பிரதி இராசுமா லிகிதர், வீர சைவர்கள், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, புகைரதம்	82
1922 ஆகஸ்ட் 17: சட்ட நிருபண சபை, மணிக்கூட்டுக் கோபுரம்	84
1922 ஆகஸ்ட் 24: டெய்லி நியூஸ் பத்திரிகை	85
1922 செப்டெம்பர் 7: அரச உத்தியோகஸ்தர் வேதனம், பட்ஜெட், ஆங்கிலக் கல்வி	86
1922 அக்டோபர் 5: ஆங்கிலக் கல்லூரி மாணவர்கள்	88
1922 அக்டோபர் 24: மிஷன் கல்லூரிப் பெண்கள்	89
1922 நவம்பர் 2: புகைரதப் பிரயாணம், திருநெல்வேலி முன்மாதிரித் தோட்டம்	90
1922 நவம்பர் 9: சட்டசபை அங்கத்தவர்	91
1922 நவம்பர் 16: யாழ்ப்பாணத்தில் தெருவிளக்கு	92
1922 நவம்பர் 23: ஆங்கிலம் கற்ற மாணவர்களின் கோலம்	93
1922 நவம்பர் 30: மானிப்பாய் வைத்தியசாலை, தந்தையும் மகனும் 1	94
1922 டிசம்பர் 7: தந்தையும் மகனும் 2	96
1922 டிசம்பர் 14: கள்ளு, சாராய தவறணைகள், கிழவன் அனுபவம்	97
1922 டிசம்பர் 21: கச்சேரி கிளார்க் , தாயும் மகனும்	99
1923 டிசம்பர் 28: மிஷன் பாடசாலைப் பெண்கள்	101
1923 ஜனவரி 4: வேடிக்கைக் கதைகள்	102
1923 ஜனவரி 11: மலாய் நாட்டில் ஐரோப்பியர் ("ஹிந்து" கட்டுரையின் தமிழாக்கம்)	103
1923 ஜனவரி 18: பெண்கள் நடமாட்டம்	106
1923 பெப்ரவரி 1: புகைரத விபத்து	107
1923 பெப்ரவரி 8: வேடிக்கைக் கதை	108
1923 பெப்ரவரி 15: யப்பான் பெண்கள், மகா சிவராத்திரி	109
1923 பெப்ரவரி 22: தேசாபிமானமும் சுயாபிமானமும்	111
1923 மார்ச் 1: வேடிக்கைக் கதை திருடனும் தையல்காரனும் -1	111
1923 மார்ச் 8: வேடிக்கைக் கதை திருடனும் தையல்காரனும் -2	112

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1923 மார்ச் 15: வேடிக்கைக் கதை திருடனும் தையல்காரனும் -3, புகைரதம், கிறீன் துரை	114
1923 மார்ச் 22: கொழும்புப் பத்திரிகைகள்	116
1923 மார்ச் 29: புகைரத விபத்து,	117
1923 ஏப்ரல் 05: யாழ்ப்பாணத்தில் சர்க்கஸ், சீனித் தட்டுப்பாடு, மது விலக்குச் சங்கம்	118
1923 ஏப்ரல் 12: பெண்கள் நடமாட்டம்	119
1923 ஏப்ரல் 26: வடமொழியும் ஆங்கிலமும் -1	120
1923 மே 3: வடமொழியும் ஆங்கிலமும் 2 , நகுலன் கதை	122
1923 மே 10: மதுவிலக்குச் சங்கம்	123
1923 மே 17: மேலைத்தேசப் பழக்கம், நவீன தேசாபிமானிகள்	124
1923 மே 24: இலக்குமண நகைப்பும் உலகம் பலவிதம் பற்றிய விமர்சனமும்	125
1923 ஜூன் 1: யாழ்ப்பாணத்தில் பொருட்காட்சி	126
1923 ஜூன் 7: ஆண் பெண் நாகரீகம்	127
1923 ஜூன் 14: ரிக்ஷோக்காரன்	128
[ஏறக்குறைய ஒரு வருட இந்துசாதனப் பிரதிகள் கிட்டவில்லை]	
1924 ஜூலை 10: தமிழ் மகளிர் கழகம், தேசாபிமானி	129
1924 ஜூலை 17: இளைஞர் ,முதியோர், பெண்கள்	130
1924 ஜூலை 24: கிழவரும் இளைஞரும்	131
1924 ஆகஸ்ட் 7: நல்லூர்த் திருவிழா	133
1924 ஆகஸ்ட் 14: பஞ்சம், தவறணைகள்	134
1924 ஆகஸ்ட் 21: தந்தையும் மகனும், நெல்விலை, நல்லூர்த் திருவிழா	135
1924 ஆகஸ்ட் 28: பெண்கள் கூட்டம்	136
1924 செப்டெம்பர் 4: முருகேசுவும் கிழவியும், மாமிச உணவு	137
1924 செப்டெம்பர் 14: முற்றவெளிமணிக்கூடு, கொழும்புப்பத்திரிகை, சிற்றிசனும் அ. சபாபதியும். பிராமணரும் பிராயச்சித்தமும்.	138
1924 செப்டெம்பர் 21: நீதி, கொழும்புப்பத்திரிகை சிற்றிசன்	140
1924 அக்டோபர் 9 சட்டநிரூபண சபைத்தேர்தல், தபாற்கந்தோர்	141
1924 அக்டோபர் 16 பொதுத்தர்மம், வேடிக்கைக்கதைகள்	142
(ஏறக்குறைய ஒரு வருட இந்து சாதன பிரதிகள் கிட்டவில்லை)	
1926 ஆகஸ்ட் 5 முருகேசுவும் மது எதிர்ப்பும், களுத்துறை வழக்கு, முற்-பிறப்பு	144
(ஏறக்குறைய ஒரு வருட இந்து சாதன பிரதிகள் கிட்டவில்லை)	
நாவல்	
1927 ஜூலை 14 - 1927 டிசம்பர் 15 துரைரத்தினம்-நேசமணி நாவல் தொடர்	146
உரைச்சித்திரம்	
1927 டிசம்பர் 22 - 1928 ஏப்ரல் 26 காவிய சகோதரர் தொடர்	171
உலகம் பலவிதம் பத்திகள் தொடர்ச்சி	
1928 மே 3: வாலிபர் - சுமத்தொழிலும் மோட்டார்ச் சாரத்தியமும், மதுக் கடல்	185
1928 மே 10: முருகேசுவும் சட்ட நிரூபண சபைத்தேர்தலும்	186
1928 மே 24: முருகேசுவும் மதுக்கடைகள் மீளுவதும்	188

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1928 மே 31: அராலி அம்மன்கோவில் வேள்வி	189
1928 ஜூன் 7: மழையின்மை குறித்து முருகேசு 1	191
1928 ஜூன் 14: மழையின்மை குறித்து முருகேசு 2	193
உரைச்சித்திரம்	
1928 ஜூலை 19 - 1928 ஆகஸ்ட் 16 ஒரு மாணவர் தன் வரலாறு கூறல்: கல்விபற்றிய தொடர் 1 - 5	195
1928 ஆகஸ்ட் 23: நல்லூர்த்திருவிழாவும் முருகேசுவும்	200
1928 ஆகஸ்ட் 30: ஒரு மாணவர் தன் வரலாறு கூறல்: கல்விபற்றிய தொடர் 6	201
1928 செப்டெம்பர் 06: நல்லூர்த்திருவிழாவும் வீதிப்போக்குவரத்தும்	202
1928 செப்டெம்பர் 20 - 1928 நவம்பர் 27 ஒரு மாணவர் தன் வரலாறு கூறல்: கல்விபற்றிய தொடர் 7 - 11	204
1928 டிசம்பர் 03: யாழ்ப்பாணத்தில் பல்வேறு வாக்கெடுப்புகள்	210
1930 ஜூலை 10: - 1930 ஆகஸ்ட் 7 கந்தபுராண நிந்தை மறுப்பு 1 - 5	210
1930 ஆகஸ்ட் 14: மது பாவனை	217
1930 ஆகஸ்ட் 21: விலையேற்றம், ஐரோப்பியரைப் பின்பற்றல், புதிய அரசியற் சங்கமும் வாக்காளரும்	218
1931 ஜனவரி 7: சோமசுந்தரம் மீனாட்சி (முழுவதும் கிடைக்கவில்லை)	219
1931 ஜூலை 16: பீடி, சிகரெட், அந்நிய பொருள் பகிஷ்கரிப்பு, விடுமுறையில் வருபவர்	220
1931 ஜூலை 30: பஞ்சதந்திரக் கதை, புதிய அரசாங்க சபை பகிஷ்கரிப்பு, உதய தாரகை பத்திரிகை	221
1931 ஆகஸ்ட் 20: சாவகச்சேரியில் கள்ளுக்கடை, வண்ணை வைத்-தீஸ்வரன் கோவில் திருவிழாவும் மாகாணத் தலைவரும், இக்காலப் பெண்கல்வி	222
1931 செப்டெம்பர் 24: முருகேசுவும் மழையின்மையும் , தேநீர்க்கடைகள், பீடி சிகரெட்	223
1931 அக்டோபர் 8: காந்தி இங்கிலாந்து சென்றமை	224
1931 அக்டோபர் 15: பணமுட்டுக்காலம், புகைரதப் பாதை	225
1931 அக்டோபர் 22: பட்டினசங்கத் தேர்தல்	226
1931 நவம்பர் 5: தீபாவளி	227
1931 நவம்பர் 12: கொழும்பு வழக்கு, தீபாவளி ஆடம்பரம்	228
1931 நவம்பர் 19: யாழ்ப்பாணப் பட்டின சங்கம், இலங்கைப் பொலிஸ், ஒரு கோயில் சூரசங்காரம்	229
1931 நவம்பர் 26: கேலிக்கதை - சாராய மாநாடு	230
1931 டிசம்பர் 03: மது ஒழிப்புத் தேர்தல், பட்டினசபைத் தேர்தல்பற்றி முருகேசு.	231
1931 டிசம்பர் 10: சோமசுந்தரம் மீனாட்சி கதை - இடைத்தொடர்	232
1932 ஜனவரி 28: வேடிக்கைக்கதை - பிரித்தானிய இந்திய அரசு	233
1932 பெப்ரவரி 4: சந்திரவதி, இந்திய அனர்த்தங்கள்	235
1932 பெப்ரவரி 18: சந்தையில் சாரயவியாபாரம், பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் லான்ஸ் பெரி, அரசாங்க சபை அங்கத்தவர்	235
1932 பெப்ரவரி 25: ஒரு வழக்கு, மகாத்மா காந்தி, லோர்ட் உவிலிங்டன், தேசாதிபதியும் அரசாங்க சபையும்	236
1932 மார்ச் 10: பிரித்தானிய இரட்டை நியாயம்	237
1932 மார்ச் 17: மலிந்தவை அரியவை, மலிந்தவர் அரியவர்	238
1932 மார்ச் 24: குத்தரிசி, இலங்கைப்பொலிஸ், இந்திய நீதித்துறை, பம்பாய் வியாபாரம்	238
1932 மார்ச் 31: நெல்லுக்குற்றல்	240

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1932 ஏப்ரல் 28: முருகேசு சொல்பவை	240
ஆனந்தன் - அன்னம் நாவல் (எப்பொழுது தொடங்கியது என்பது தெரியவில்லை. முடிவும் கிடைக்கவில்லை)	
1932 மே 19 - 1933 பெப்ரவரி 09 ஆனந்தன் அன்னம் தொடர்	242
உலகம் பலவிதம் பத்திகள் தொடர்ச்சி	
1933 மார்ச் 09: ஆங்கிலம் கற்றும் உத்தியோகம் இன்மை	274
1933 மார்ச் 16 பணமுட்டு, உத்தியோகமின்மை, டொனமூர் சீர்திருத்த வெள்ளை யானை, அந்நிய பொருள் பகிஷ்கரிப்பு, தீண்டாமை	275
1933 மார்ச் 23: அரசாங்க சபை பகிஷ்கரிப்பு, ஒரு பத்திராசிரியர்	276
அமுதாம்பிகை கதை (பத்திரிகைகள் பெரிதும் சிதைவடைந்துள்ளன. கதையின் தொடக்கம் கிடைக்கவில்லை)	
1934 ஜனவரி 25 - 1934 மார்ச் 01 அமுதாம்பிகை கதைத் தொடர்	278
1935 ஏப்ரல் 14: முருகேசுவும் புதுவருடமும்	284
1935 மே 2: யாழ்ப்பாண பஸ்போக்குவரத்து	285
1935 மே 16: கிராமச்சங்க தேர்தல், அரச சக்கரவர்த்தி வெள்ளி விழாக் கொண்டாட்டம், அரசாங்க சபை தேர்தல்பற்றி முருகேசு	286
1935 மே 23: அரச சக்கரவர்த்தி வெள்ளிவிழாக் கொண்டாட்டம், மது பாவனை அனர்த்தம், தமிழர் சிங்களவர் பேதம்	287
1935 மே 30: யாழ்ப்பாணத்திற்கு நெல் இறக்குமதி, களவுகள், பேசும் படக்காட்சி, சவுளக்கடை	288

கைலாசபிள்ளை கடிதங்களுக்குப் பதில்கள் [கைலாசபிள்ளை கடிதங்கள் தொடர்பான விபரங்களுக்கு பின் இணைப்பு - 2 ப் பார்க்கவும்]	
1935 ஜூன் 6 - 1935 ஜூலை 11: கைலாசபிள்ளை கடிதங்களுக்குப் பதில்கள்	290
1935 ஆகஸ்ட் 8: இந்துசாதன விருத்தி பற்றி முருகரம்மான்	297
1935 ஆகஸ்ட் 22: யாழ்ப்பாண அனர்த்தங்கள், நல்லூர்த் திருவிழா	298
1935 செப்டம்பர் 19: றீபெர்க் கல்லூரி பரிசளிப்பு, இலங்கைக்கு பல்கலைக் கழகம்.	299
1935 செப்டம்பர் 26: யாழ்ப்பாணத்தில் மதுவும் மழையும்	300
1935 அக்டோபர் 3: அபிசீனிய யுத்தமும் மகாபாரத யுத்தமும்	301
1935 அக்டோபர் 10: அபிசீனிய யுத்தமும் சர்வதேச சங்கமும்: வேடிக்கைக் கதை	301
1935 அக்டோபர் 17: பெண் சுவதந்திரம் பற்றி முருகேசு	302
1935 அக்டோபர் 24: சிறு கதை : தீபாவளிப் புடைவை	303
1935 அக்டோபர் 31: முசோலினியின் மனைவி	305
1935 நவம்பர் 14: சிறுகதை: மிதிதடி	306
1935 நவம்பர் 21: புங்குடுதீவுப்பாலமும் பூநகரிப்பாலமும், லண்டன் கேம்பிரிஜ் பல்கலைகழகத் தேர்வுகள்	307
1935 நவம்பர் 28: இலங்கைப் பொலிஸ்	308
1935 டிசம்பர் 05 - 1936 ஜனவரி 09: வேலை: சிறுகதைத் தொடர்	309
1936 ஜனவரி 30: அரசசக்கரவர்த்தியின் பிரேதஅடக்கம், யாழ்ப்பாணத்துப் பஞ்சாங்கம்	312
1936 பிப்ரவரி 13: யாழ்ப்பாணத்துத் தேர்தல் 1	313

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1936 பிப்ரவரி 20: யாழ்ப்பாணத்துத் தேர்தல் 2	314
1936 பிப்ரவரி 27: யாழ்ப்பாணத்துத் தேர்தல் 3	315
1936 மார்ச் 5: யாழ்ப்பாணத்துத் தேர்தல் 4	316
1936 மார்ச் 12: ஹிட்லர்	318
1936 மார்ச் 19: ஹிட்லரும் பிரான்சும், அரசாங்க சபைத்தலைவர் தெரிவு	318
1936 மார்ச் 26: அரசாங்க சபை: வேடிக்கைக்கதை	320
பாகம் மூன்று: கதைகள், நாவல்கள் 1944 - 1946 [உலகம் பலவிதம், உலகம் பலவிதக் கதை என்ற தலைப்புக்களில் பத்திரிகைத் தொடராக வெளியானவை]	
1944 ஏப்பிரல் 06 - 1944 மே 04: சுகுணாம்பிகை: சிறுகதைத் தொடர்	321
1944 மே 11 - 1946 நவம்பர் 29 உலகம் பலவிதக் கதை இரஞ்சிதம் இராமச்சந்திரன் நாவல் தொடர்:	327

பாகம் நான்கு: நாவல்கள், உலகம் பலவிதம்: 1947-1951	
1947 ஜனவரி 17 - 1948 மே 07 சிவபாக்கியம் கண்ணகையம்மை நாவல் தொடர்:	513
1951 ஏப்ரல் 6 - 1951 ஏப்ரல் நவம்பர் 30 வனசாட்சி நாவல் தொடர்:	635
பின்னிணைப்பு 1 த. கைலாசபிள்ளை கடிதங்கள்	681
பின்னிணைப்பு 2 நானும் முருகேசுவும் லிங்கம் வரைவது இந்து சாதனம் பொன்விழா மலர்	685
பின்னிணைப்பு 3 விடைபெற்றுக்கொள்ளுகிறேன்	687

இந்நூற்பதிப்பிற்கு நிதி உதவியோர்:

கனடாவிலிருக்கும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழையமாணவர் சார்பில், க. பிரேமச்சந்திரா
பிரித்தானியாவிலிருக்கும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழையமாணவர் சார்பில், ந. ஜெயசீலன்
மட்டுவில் க. வேற்பிள்ளை உபாத்தியாயர் வழிவந்தோர் நினைவாக, உமாபாலன் சின்னத்துரை, நோர்வே
உருத்திரமூர்த்தி சேரன், கனடா
சண்முகப்பிரபு நல்லையா, நோர்வே
க. ப. ராஜேந்திரா, பிரித்தானியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளையும் துணைவியார் தெய்வானைப்பிள்ளையும்
[நிழற்படம் தந்துதவியவர் அவர்களது மகள் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் 1

"ஓம் நான் சொல்லுகின்றேன்"

முத்தன்

முதலாளி முத்துக்குமாரசுவாமிபிள்ளையான முறை

முத்தன் சிறு பிள்ளையாக இருக்குங் காலத்திலேயே அவனுடைய தகப்பனாகிய வல்லிபுரம் இறந்துபோனார்; ஆனாலும் அவனுடைய தாயாகிய தையலம்மை அவனை வறுமையிற் செம்மையாய் வளர்த்து வந்தாள்; ஐந்து வயதானதும் முத்தனைத் தாய் அயலிலேயுள்ள ஒரு தமிழ்ப் பள்ளிக்கூடத்திற் படிக்கவைத்தாள்; தையலம்மை தன் ஒரேயொரு ஆண்குழந்தையைச் சீராய்ச் சிறப்பாய் வளர்த்தற்குக் கஷ்டப்பட்டாள்; காலையில் அப்பஞ்சுட்டும் பிட்டவித்தும் விற்று அதால் வரும் ஊதியத்தைக் கொண்டே தானுந் தன் பிள்ளையும் காலங்கழித்து வந்தனர்; படிக்குங் காலத்திலே முத்தன் நேரத்திற்கு உணவில்லாமையாலும் மாறிக்கட்டத் துணியில்லாமையாலும் இடையிடையே பள்ளிக்கூட நேரத்திற்குப் பிந்திப்போவதும் போகாமல் விடுவதுமுண்டு; அப்படி ஒழுங்கீனமாகப் பள்ளிக்கூடத்திற்குப் போனானேனும் தன்னுடன் படிக்கும் பிள்ளைகளுள் அவனே திறமை வாய்ந்தவனாகக் காணப்பட்டான்.

சண்முகச் சட்டம்பியார்

ஒருநாள் அயற்கிராமத்திலே ஏதோ வேடிக்கை நடந்தமையினால் முத்தனுடன் படிக்கும் பிள்ளைகளுட் பலர் பள்ளிக்கூடத்திற்கென்று புறப்பட்டு அங்கே போகாமல் ஒருங்குசேர்ந்து யோசித்துக்கொண்டு அந்த வேடிக்கை பார்க்கப் போய்விட்டார்கள்; முத்தன் அந்த வேடிக்கை பார்க்க அன்று போகவில்லையாயினும், வேறு ஏதோ வசதியீனத்தினாலேயே அன்றைக்குப் பள்ளிக்கூடத்திற்குப் போக வாய்க்கவில்லை; அந்தப் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு வராமல் வேடிக்கை பார்க்கப் போனதை அங்கே கண்டவர்கள் யாரோ அடுத்த நாட்காலையில் வந்து சண்முகச்சட்டம்பியாருக்குக் கோள் மூட்டிவிட்டார்கள். சண்முகச் சட்டம்பியாரோ மிகவும் பொல்லாதவர்; பிள்ளைகள் பாடத்தைச் சரியாகச் சொன்னாலும் அடிப்பார்; தவறாகச் சொன்னாலும் அடிப்பார்; தாம் படிப்பிக்கும் பாட்டுக்களில் தமக்கு ஏதும் விளங்காவிட்டாலும் அதற்காகப் பிள்ளைகளைத்தான் தண்டிப்பார். சந்தேக விபரீதமற விளங்கிய ஒரு பாடத்தை, தடையறச் சொல்லக்கூடியதாய்ப் பலமுறை இராப்பகலாகப் படித்து மநநம்பண்ணிய ஒரு பாட்டை, பிள்ளைகள் சண்முகச் சட்டம்பியார் சந்நிதானத்தில் ஒப்புவிக்கப் போனார்களாயின் உடனே ஏக்கங்கொண்டு மறந்து திகைத்து நிற்பார்கள். பேதிமருந்துண்ணாத பிள்ளைகள் சண்முகச் சட்டம்பியார் கையிற் பிரம்பெடுத்த மாத்திரத்தே மல சல விமோசனஞ் செய்த சந்தர்ப்பங்களும் உண்டு. இப்படிச் சிறு பிள்ளைகளை அடித்து மனத்தைக் கலக்கிப் படிப்பித்தலாகிய இரக்கமற்ற செயலோடு கூடியவராகவிருந்தாலும் அவர் தெய்வபக்தியுள்ளவர். "அடா பிள்ளைகளே, தெய்வத்தைக் கும்பிட்டாற்றானெடா உங்களுக்குப் படிப்பு வரும்; ஆனதால் நீங்கள் அயலிலேயுள்ள புளியடி வைரவர் கோயிலுக்கு வெள்ளி செவ்வாயிலேனும் போய்த் தோத்திரம் பண்ணிக் கும்பிட்டுப் படிப்பைத் தரவேணுமென்று வைரவ சுவாமியைக் கேளுங்கள்" என்று சொல்வதுண்டு. பிள்ளைகளும் அப்படியே வெள்ளி செவ்வாய்க் கிழமைகளிற் போய் "சட்டம்பி பொல்லானாம் சற்று மிரங்கானாம், கட்டைப் பிரம்பெடுத்துக் கட்டியடிப்பானாம், நீட்டுப் பிரம்பெடுத்து நீட்டியடிப்பானாம்" என்று தோத்திரஞ் சொல்லி, சுவாமி படிப்புத் தா என்று கேட்பதை விடுத்து "ஐயோ வைரவசுவாமி! நீ உங்கே இருப்பது மெய்யானால் எங்கள் சட்டம்பியாரைச் சடுதியிற் சாகப்பண்ணி எங்களைக் காத்துக்கொள்" என்று குறையிரந்து கும்பிட்டுக் கற்பூரமும் கொளுத்துவார்களாம். இப்படிப்பட்ட சண்முகச் சட்டம்பியார் அடுத்த நாட்காலை பள்ளிக்கூடத்திற்கு வரும்போது ஒரு பிரம்பு ஒரு புளியங்கம்பு ஒரு கொய்யாத்தடி மூன்றையும் ஒரே அளவிற்குப்பாக்கு வெட்டியால் நறுக்கிக் கக்கத்தில் இட்டுக் கொண்டு சர்வசங்கார உருத்திரமூர்த்திபோல் வேகமாக வந்தார். சண்முகச் சட்டம்பியார் பிரசன்னமாவதைக் காணும்போதே ஏங்கும் பிள்ளைகள் மூன்றுவகையான கம்புகளுடன் அவர் வரும்போது என்னபாடுபட்டிருப்பார்களென்பதைச் சொல்லவும் வேண்டுமா? சட்டம்பியார் பள்ளிக் கூடத்துட் புகுந்தார், பள்ளிக்கூடந் தொடங்கி விட்டது; "நேற்றுப் பள்ளிக்கூடத்திற்கு வராத பிள்ளைகள் இங்கே வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நில்லுங்கள்" என்றார் சட்டம்பியார். முதனாள் வராதபிள்ளைகள் அத்தனை பேரும், தூக்குமரத்துக்குப் போவார்போற் சண்முகச் சட்டம்பியார் முன் பயந்து பயந்து மெல்லப்போய் நடுங்கிக்கொண்டு நின்றார்கள்; சிலர் சண்முகச்சட்டம்பியாருடைய கோபத்தோடு கூடிய முகத்தைப் பார்த்தார்கள்; சிலர் அவர் கொண்டுவந்த முக்கம்புகளையும் பார்த்தார்கள்; சிலர் இரண்டினையும் பார்த்தார்கள்; நேற்று ஏன் வரவில்லை என்ற கேள்வியில்லை; "உங்களுக்குத் தனித்தனி மூன்றடி உள்ளங்கையில் உறைக்க அடிப்பே" னென்றார் சட்டம்பியார்; முறைமுறையாகக் கைநீட்ட மும்மூன்றடி கிரமமாக அடித்துக் கொண்டு வந்தார்; முதலடியில் அழுபவரும், இரண்டாமடியிற் கத்துபவரும் மூன்றடியும் வாங்கிக்கொண்டு கதறுபவரும், அடிக்க முந்தியே ஓலமிடுபவர்களுமாகக் காணப்பட்டனர் பிள்ளைகள்; இரண்டு பிள்ளைகளுக்கு அடித்தவுடனே கொய்யாத்தடி சின்னாபின்னமாய்ப்போனது; இன்னும் நாலைந்து பிள்ளைகட்கு அடிக்கவே புளியங்கம்பு கிழிந்து போய்விட்டது; இறுதியிற் சீற்றமேறிய சண்முகச் சட்டம்பியார் தமது திருக்கரத்திற் பிரம்பைப் பரித்துக்கொண்டு கருமமாற்றத் தலைப்பட்டனர். முறைமுறையாக அடித்துவந்தார்; நல்ல பிரம்பானதாற் சிறிது நின்றுபிடித்தது; ஈற்றிலே முத்தன்தான் நின்றான்; "முத்தன் வா" என்று உறுக்கி அதட்டிக் கூப்பிட்டார்; பஞ்சப் புலன்களும் ஒடுங்கி ஒருவழிப்பட்டுச் சிவத்தியானத்திற் சிந்தையைவிட்ட யோகிகளைப் போல, முந்தியே தன் ஐம்புலன்களும் அடங்கியொடுங்கிச் சண்முகச் சட்டம்பியாரின் திருவுருவத்தையும் அவர் செய்யும் தண்டச் செயலையும் தியானித்துக்கொண்டு நின்ற முத்தன், அட்டை ஊர்வதுபோல் மெல்ல மெல்லச் சமீபத்தில் வந்தான்; சட்டம்பியார் அடிக்கத் தடியோங்கினார்; "ஐயோ! சட்டம்பியார் நான் வேடிக்கைபார்க்கப் போகவில்லை; என்னைக் கேட்டடியுங்கள்" என்று மனம் பதற, சரீரம் நடுங்க முத்தன் கத்தினான். அவர் ஓங்கிய பிரம்பைக் கீழே தொங்கப் பிடித்துக்கொண்டு "முத்தா, பயப்படாதே; உள்ளதைச் சொல்லு" என்று கோபத்திடையே சிறிது இரக்கம் பிறக்கச் சொன்னார். "சட்டம்பியாரையா, வேறு ஒன்றுமல்ல, மாறிக் கட்டிக்கொண்டு வருதற்குத் துணியில்லாமையினால் நான் நேற்றுப் பள்ளிக்கூடத்திற்கு வர வாய்க்கவில்லை; துண்டொன்றைக் கட்டிக்கொண்டு உடுத்த துணியை உரிந்து தோய்த்து உலரப்போட்டேன்; மழைக்கோலமிருந்தபடியால் அது உலரவில்லை; கட்டிக்கொண்டுவர வேறு துணியுமில்லை. என்ன செய்வதென்று என் அம்மாவைக் கேட்டேன்; அம்மா அழுது விட்டு, நீ இன்று பள்ளிக்குப் போகவேண்டாம் என்று சொன்னாள். ஆனதினாற்றான் நான் நேற்று வரவில்லை" என்று முத்தன் முழுவதும் விபரமாகச் சொல்லிக் கண்ணீர்விட்டான்.

"மகனே, பஞ்சம்போம், பஞ்சத்திற்பட்ட வடுப்போகாது"

முத்தன் சொன்ன பரிதாபத்தைக் கேட்ட மாத்திரத்திலே சண்முகச் சட்டம்பியாருடைய கன்மனமும் கரைந்தது; "முத்து, நீ ஒன்றுக்குங் கவலைப்படாதே; உனக்கு வேட்டி துணி நான் வாங்கித் தருகிறேன்; உன் அப்பர் இருந்த செல்வஞ் செல்வாக்கென்ன; பெருமையென்ன; உனக்குத் தெரியாது, அவருடைய பிள்ளையாகிய உனக்கா இந்த நிலைமை வந்ததென்று நினைக்க என்மனம் பயப்படுகிறது; உன் அப்பர் எனக்கும் எவ்வளவோ உதவி அந்தக்காலத்திற் செய்தவர்; ஆனதால் அவருடைய பிள்ளையாகிய உனக்கு நான் பதிலுதவி செய்யாவிட்டால் நான் நன்றிகெட்டவனாவேன்; நீ ஒன்றுக்குங் கவலைப்படாதே; இன்று தொடக்கம் உன்னை என் பிள்ளையாக வைத்து நடத்துவேன்" என்று பரிவுடன் சொன்னார். முத்தன் அதற்கு ஒரு பதிலுஞ் சொல்லாமற் கலங்கிக் கொண்டு நின்றான்; பின் சட்டம்பியார் கட்டளைப்படி வகுப்பிற்போயிருந்து படித்தான்; பள்ளிக்கூடம் விட்டபின் முத்தன் வீட்டிற்குப்போய் அன்று பள்ளிக்கூடத்தில் நடந்த கருமம் முழுவதையும் தன் தாயிடம் சொன்னான். கேட்ட தாய் பெரிதுங் கலங்கிக் கண்களில் நின்றும் நீர்சிந்தப் பெருமூச்சுவிட்டுத் தன் பிள்ளையைக் கவலையுடன் பார்த்து "என் செல்வமே, நான்பெற்ற முத்தே, நீ ஒருவரிடமும் ஒன்றும் வாங்க வேண்டாம்; உன் அப்பர் நல்ல குலங்குடியிற் செல்வஞ் செல்வாக்குடன் பிறந்தவர்; நான் அவருக்குச் சொந்த மச்சாள்; எனக்கும் என் பெற்றார்கள் நல்ல சீதனம் கொடுத்தவர்கள்; என்னை அவர் கல்யாணம் முடித்தபிறகு போதிய பொருள்பண்டமிருந்தாலும் ஏதும் தொழில் செய்யாமல் சும்மாவிருப்பது சரியல்ல என்று யோசித்து, நெல் வியாபாரஞ் செய்யத் தொடங்கினார்; வியாபாரத்தினால் எங்களுக்கு நல்ல வரும்படி வந்தது.

இப்படி நடந்துவருங் காலத்தில், 58ம் ஆண்டு பெருமழை பெய்ய, புயலும் அடித்தது; அந்த நேரத்திலே எத்தனையோ கப்பல்கள் கடலில் அமிழ்ந்திப்போயின. அரக்கனில் 500 மூடை நெல் வாங்கிவரும்படி பணம் அனுப்பியிருந்தவர் உன் அப்பர். பறுவதம் என்று சொல்லப்படும் கப்பலொன்று நெல்லேற்றிக்கொண்டு நடுக்கடலில் வரும்போது புயலில் அகப்பட்டுக் கடலில் மூழ்கியது; கப்பற்காரரிற் சிலர் மாத்திரம் தெய்வச் செயலால் உயிர்பிழைத்து எத்தனையோ மாசங்களுக்குப்பின் ஊருக்கு வந்து சேர்ந்தார்கள்; எங்களுக்கென்ற நெல்லுமூடைகள் முழுவதும் கடலுக்கு இரையாக பெருந்தொகைப் பணத்திற்கு அழிவு வந்தது; கடன் கொடுத்த செட்டிமார் உன் அப்பரைப் பணந் தரும்படி நெருக்கினார்கள்; உடனே அவர் உள்ள பொருள்பண்டம் காணிபூமி எல்லாம் விற்றுக் கொடுத்தும் கடன் தீர்க்கப் போதாமையினால் என்னிடத்திருந்த தாலிக்கொடியொன்றைவிட்டுவிட்டு மற்றை நகைவகைகளையெல்லாம் கழற்றி விற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டார், அதன்பிறகும் பழைய நிலைமைக்கு வந்து விடலாமென்று அவர் எத்தனையோ முறை முயற்சி செய்தார்; வாய்க்கவில்லை; பட்ட காலே படும் கெட்ட குடியே கெடும் என்றவிதமாக மேலும் மேலும் எங்களுக்கு இடைஞ்சலே வந்தது; தீராக் கவலையினால் உன் அப்பர் உணவை வெறுத்தார்; நான் எத்தனையோமுறை, சுவரிருந்தாற்றானே சித்திரந் தீட்டலாம், பொருளை மனுஷன் தேடுவதோ, பொருள் மனுஷனைத் தேடுவதோ, உங்கள் மனத்தை உப்படி விடாதீர்கள்; கெட்டார் தழையாரோ கேடொருக்கால் நீங்காதோ, எல்லாந் தெய்வத்தின் செயல், கவலைப்படாதீர்கள், வாருங்கள் உண்ணுங்கள் என்று ஆறுதல் சொன்னாலும் அவர் ஓம் என்று கேட்டுக்கொண்டு கவலைக்கே ஆளானார்; அந்த நேரத்தில் அவருக்கு நோயும் வந்து சேர்ந்தது; எங்களுக்குத் தரவேண்டிய கடன்காரர்களும் கொடுத்த கடனைத் தர மறுத்துவிட்டார்கள்; மேலும் உன் அப்பர் நல்லாயிருந்த காலத்திலே தம் இனசனத்தவர் அயலவர் பலருக்கு எல்லா வகையாலும் உதவி செய்தவர்; படுக்கையிலே கிடந்துகொண்டு அப்படித் தாம் உதவி செய்தவர்கள் பலருக்கு ஆட்சொல்லியனுப்பினார்; சீட்டெழுதியனுப்பினார்; அவர்களுட் பலர் நல்ல நிலைமையிலிருந்தாரேனும் ஒருவரும் வந்து வருத்தம்பார்க்கத்தானும் நினைக்கவில்லை; அவர்கள் செய்த நன்றிகெட்ட செய்கையினால் உன் அப்பர் அதிக கவலைக்காளாக, நோயும் அதிகப்பட்டது; இன்னும் எங்களிடத்தில் உள்ளதையெல்லாம் ஈடு வைத்தும் அறுதிவிற்றுஞ் செலவழித்தோம்; எங்கள் பொருள்முட்டுப்பாட்டை நான் அவருக்குக்காட்டாமல் இயன்ற வரையில் நடந்தேன்; எடியப்பா, ஆருங் கடன்பட்டவர்கள் எங்களிடத்தில் உதவி பெற்றவர்கள், வந்தார்களா? ஏதுந் தந்தார்களா? என்று படுக்கையிற்கிடந்தபடி என்னை இடையிடையே கேட்பார்; நான் ஒருவரும் வரவுமில்லை, ஏதுந் தரவுமில்லை என்று பதில் சொல்லுவேன். மகனே, அப்பொழுது அவர் சொன்ன பாட்டொன்று என் ஞாபகத்தில் இருக்கிறது; அது நல்ல பாட்டு, ஞாபகத்தின்படி சொல்லுகிறேன் கேள் மகனே:-

"உண்டான போது கோடானுகோடி யுறமுறையார்
தொண்டாக வந்து தொழும்புசெய்வார் செல்வந்துஞ்சிவிட்டாற்
கண்டாலும் பேசார் அழைத்தாலும்வாரார் கௌவைகௌவை
சண்டாள ரோடுற வாகாது ரத்னசபாபதியே"

என்ற இந்தப் பாட்டை உன் தகப்பனார் இடை யிடையே சொல்லிக்கொள்வார். அவருடைய நோய் கடுமையாய் விட்டது; வைத்தியரும் கைவிட்டுவிட்டார்; ஆனால் வைத்தியர் எனக்கு உண்மையை அந்த நேரத்திற் சொல்லவில்லை; வைத்தியருடைய முகக்குறிப்பிலிருந்து இவருடைய ஆபத்தான நிலைமையை நான் அறிந்து கவலைப்பட்டேன். என் கவலையைக் கண்டு அவர் ஒருநாள் என்னைக் கிட்ட இருக்கச் செய்து, "நீ ஒன்றுக்குங் கவலைப்படாதே; இது எனக்கு முடிவுக்கு வந்த நோய்; விதியை விலக்கப் பிரமாவாலும் முடியாது; ஆனால் ஒன்று சொல்லுகிறேன் கேள்; நான் இல்லாக்காலம் நீ பெற்ற ஆண் குஞ்சினால் உனக்குப் பிற்காலத்தில் நன்மையுண்டு, அவன் நல்லாயிருப்பான்; அவனுடைய சாதகம் அதிஷ்டமான சாதகம்; எங்கள் பிள்ளையையும் உன் மரியாதையையும் நீ பாதுகாத்துக்கொள்; எங்களுக்குத் தருமதியானவர்கள் ஏதுந் தந்தாலொழிய எவரிடத்தும் தருமத்திற்குப் பொருள் கேளாதே, கை நீட்டி வாங்காதே; நக்கினார் நாவெடார் என்று ஊரிலே சொல்லுவார்கள். இயன்றவரையிற் பாடுபட்டு உழைத்து உன் பிள்ளைக்குக் கொடுத்து நீயும் வறுமையிற் செம்மையாகக் காலங்கழி; அரைக்காசுக்குப் போன மானம் ஆயிரங்காசு கொடுத்தாலும் மீண்டு வரப்போவதில்லையென்று சொல்லுவார்கள்; வறியவர் செல்வராவர் செல்வர்பின் வறியராவர், இது உலகத்தின் இயல்பு;

ஆலம்போல் நீலவிழி அங்கையற்க ணம்மையே
காலம்போம் வார்த்தைநிற்கும் கண்டாயோ - சாலப்
பசித்தார் பொழுதும்போம் பாலுடனே அன்னம்
புசித்தார் பொழுதும்போம் போம்.

என்று பெரியோர் பாடியிருக்கிறார்கள்; ஆனை முதல் எறும்பீறாகவுள்ள உயிரத்தனைக்கும் அமுதளிக்கும் ஐயனுக்கு நீயும் உன் பிள்ளையும் அதிகமென்றெண்ணிக் கவலைப்படாதே; எங்கள் குலதெய்வம். அந்த வைரவப் பரம்பொருளிடந்தான் நான் என் அருமை மனைவியாகிய உன்னையும் என் பிள்ளையையும் ஒப்புவித்து விட்டுப் போகப்போகிறேன்; உலகத்தைக் காக்கிறபடியாற் கேத்திரபாலன் என்று பாராட்டப்படும் வைரவப் பரம்பொருள் இந்த உலகத்திலுள்ள உங்களிருவரையுங் காக்காது கைவிடுவாரென்றா நினைக்கிறாய்? அந்தப் பெருமானை அனுதினமும் வழிபடு; உனக்கும் பிள்ளைக்கும் ஒரு குறையும் நேராது. நீ ஆறியிரு, தேறியிரு; .... என்னால் அதிகம் பேச முடியவில்லை; முட்டாகவிருக்கிறது ...." என்றார். "ஐயோ, நீங்கள் ஏன் அப்படியெல்லாஞ் சொல்லுகிறீர்கள்; நீங்கள் இப்பொழுது அதிகம் பேசவேண்டாம்; உங்களுக்கு ஒரு பிழையும் வராது; அந்தச் சூலம் பிடித்த தெய்வம் ஒருபோதும் என்னையும் என் பிள்ளையையும் அந்தரிக்க விடமாட்டாது என்று அழுதழுது நான் ஆறுதல் சொன்னேன்; என் கண்ணே, அதன்பின் உன் அப்பர் ஒன்றும் பேசவில்லை; என் மனம் பதை பதைத்தது, சரீரம் பதறியது; நான் உடனே போய்ப் பால் கொண்டுவந்து பருக்கினேன், உட்கொண்டார்; என்னை ஏறிட்டுப் பார்த்தார்; பிள்ளை எங்கே என்றார். உன்னைப் படுக்கைக்குக் கிட்டக் கொண்டுவந்து காட்டினேன்; உற்றுப்பார்த்தார், பரம்பொருளே! என் பெண்டிர் பிள்ளைகளைப் பாதுகாத்துக்கொள்; என்னை உன் திருவடி நிழலிற் சேர்த்துக்கொள், அடைக்கலம்! என்று மெல்லச் சொன்னார், உயிர் அடங்கியது; என் குடி முடிந்தது என்று கதறினேன்..." என்று சொல்லித் தையலம்மை அழுதலும், "அம்மா, அழாதீர்கள், நீங்கள் அழ எனக்கும் அழுகை வருகிறது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று முத்து அழுதழுது சொல்ல, தாய் பிள்ளையின் கலக்கத்தைக்கண்டு அழுகையையுங் கவலையையும் அடக்கிக்கொண்டு சற்று நேரம் பேசாமலிருந்தாள். சிறிது நேரம் அப்படியிருந்துவிட்டு ஒருவாறு மனத்தைத் தேற்றிக்கொண்டு, "ஆனதால், மகனே, சண்முகச் சட்டம்பியாரிடத்தாயினும், வேறு யாரிடத்தாயினும் நீ ஒன்றும் வாங்கவேண்டாம்; இது உன் தகப்பனார் கட்டளை; அவர் சொல்லை மீற வொண்ணாது. அல்லாமலும் என் அருமை மகனே! பஞ்சம் போம் பஞ் சத்திற்பட்ட வடுப்போகாது; நான் இன்னும் என்னால் இயன்ற வரையில் உன்னை மரியாதையாகத்தான் வளர்க்க எண்ணியிருக்கிறேன்...." என்று கவலையுடன் சொல்லி முடித்தாள்.

முத்தன் கொண்ட விசாரம்

தாய் தங்கள் வரலாற்றைச் சொன்னநேரந் தொடக்கம் முத்தன் மனத்திற் கவலை ஏற்பட்டது; படிப்பிலும் அவன் மனஞ் செல்லவில்லை. தன்னைப் பெற்றவளைத் துன்பப்படவிடவொண்ணாதென்பதே அவனுடைய சிந்தனை. அவனுடைய இனசனத்தவரும் அயலாரும் தன்னையும் தாயையும் அலட்சியமாக நடத்துவதைக் கண்டு கண்டு அவன் பெருங்கவலை கொண்டான்; தன் தகப்பன் தனது தாய்க்கு அந்தியகாலத்திற் சொன்ன "உண்டான போது கோடானுகோடி உற முறையார்" என்ற பாட்டைச் சொல்லிக் கவலைப்படுவான்; அவன் ஒருநாள் தாய் ஆறுதலாக இருக்குஞ் சமையம் பார்த்து "அம்மா, உங்களிடத்தில் ஏதும் பணம் ஐந்து பத்து உண்டோ" என்று கேட்டான்; "கைம் பெண்டாட்டி, பிச்சைக்காறி, என்னிடத்தில் அஞ்சு பத்து ரூபா அல்ல, அஞ்சு பத்துச் சதந்தானும் இந்த நேரமில்லையே, அதுகிடக்க மகனே, ஏன் அப்படிக் கேட்கிறாய்; உனக்கு இப்பொழுது பணம் எதற்கு" என்று பரிவுடன் அன்னை கேட்டாள். "அம்மா, வேறொன்றுமல்ல; எங்கள் வரலாற்றை நீங்கள் எனக்குச் சொன்னநாள் தொடக்கம் நான் ஏதும் முயற்சி பார்க்கவேணுமென்ற எண்ணம் என் தலையுட் புகுந்து விட்டது; படிப்பிலும் மனம் போகவில்லை; இந்த ஊர் நீங்கள் நல்லாயிருந்த ஊர்; செல்வம் செல்வாக்கோடு இருந்த ஒருவன் கெட்டுநொந்து போனால், சொந்தவூராயிருந்தாலும் அந்தவூரிலிருந்தால் அவன் மானமிழக்க வேண்டி நேரும் என்ற கருத்துப்படப் பஞ்ச தந்திரத்திற் படித்திருக்கிறேன். எங்கள் உற்றார் உறவினர் எங்களுக்கு உதவி செய்யாமல் விடுவதோடு மாத்திரம் நில்லாமல் எங்களைப் புறக்கணித்து நடத்தவும் தலைப்பட்டுக்கொண்டார்கள்; ஆனதால் அம்மா, நீங்களும் வாருங்கள், நாங்கள் திருக்கோணமலைக்குப் போய் அங்கு ஏதும் முயற்சி பார்த்து மரியாதையாய் வயிறு வளர்ப்போம்; எல்லாவற்றிற்கும் கடவுளிருக்கிறார்; இன்றைக்குப் புறப்படவும் எனக்குச் சம்மதம்; ஆனால் தோணிச் செலவுக்குப் பணமில்லையென்பதுதான் கவலை" என்று முத்தன் வாடிய முகத்துடன் தன் மாதாவுக்குச் சொன்னான்! பிள்ளை சொன்ன அறிவான வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தே பெற்றவளுடைய உள்ளம் வெயிலிடைப்பட்ட வெண்ணெயென உருகியது; கண்களினின்றும் கண்ணீர் தாரை தாரையாக ஒழுகியது. "என் கண்ணே, எங்கள் கலி தீர்க்க வந்த குலக்கொழுந்தே; இந்தச் சின்ன வயதில் உனக்கு இவ்வளவு ஞானம் பிறந்ததோடா, என் செல்வமே, துரையே, நீ கவலைப்படாதே; நானும் நீ எண்ணியது போல் இந்த ஊரை விட்டு வேறெங்கேனும் போய்ப் பிழைக்கலா மென்றுதான் எண்ணியிருந்தேன்; ஆனால் உன் படிப்பைக் குழப்பக் கூடாதென்றெண்ணித்தான் இவ்வளவுகாலமும் பேசாமல் இருந்தேன்; இருக்கக் குடிநிலந்தானும் இல்லாத எங்களுக்கு எந்த ஊருஞ் சொந்தவூர்தானே; நீ துயரப்படவேண்டாம்; இன்னும் ஒரு மாசகாலத்துள் என் வாயைக்கட்டி வயிற்றைக்கட்டியாயினும், அப்பந் தோசை சுட்டுவிற்குங் காசில் நாளுக்கு நாள் "மிச்சம்" பிடித்துச் சேர்த்துவைத்து உனக்குத் தருகிறேன்; அதன்பின் தோணியேறிக்கொண்டு திருக்கோணமலைக்குப் போவோம்" என்று கண்கள் கலங்கச் சொன்னாள். தாயின் கலக்கத்தைக் கண்ட முத்தனுங் கலங்கினான். தன் தாயை உண்ணாமல் தின்னாமற் பட்டினி கிடக்க விடுதல் முத்தனுக்குப் பிரியமல்ல; "ஐயோ, என்னைப் பெற்ற பாவி பட்டினியுங்கிடக்கப் போகிறாளே, ஆண்பிள்ளை என்று நான் இருந்துகொண்டு என் ஆத்தாளைப் பசி கிடக்க, வருந்த விடலாமா? இந்தப் பாதகம் என்னைத்தானே வந்து சூழும்; பசுபதீசுரா! ஏன் இந்தச் சின்னவயசில் என்னை இப்படிச் சோதிக்கிறாய்; நீ சோதிக்கத்தொடங்கினால் யார் நின்று பிடிப்பர்? மார்க்கண்டேயர், சண்டீசர், சம்பந்தர் என்னுமிவர்களும் என்போன்ற சிறுவர்தாமே, அவர்களுக்கு மேலான வழியைக் காட்டிய நீ, உயிர்களுக்கெல்லாந் தலைவனென்று பசுபதியெனப் பெயர் படைத்த நீ, நானும் உன் பிள்ளைதானே, எனக்கு ஒரு ஐந்து ரூபாவுக்கு வழி காட்ட உன்னால் முடியாதா? ஏன் ஒரு கண் மூடி ஒரு கண் விழிக்கிறாய்; சுவாமி, என்னைப் பெற்றவள் பட்டினிகிடக்க நான் சகிக்கமாட்டேன்; நீ செய்கிறதைச் செய்" என்று முத்தன் தன் வீட்டிற்கு அயலிலுள்ள சிவன்கோயிற் சந்நிதானத்தில் நின்று தெய்வத்திற்கு முறையிட்டுவிட்டுக் கவலையோடு தெருவழியே போனான்.

வேலாயுதம்பிள்ளை அந்த ஊரிலே ஒரு பெரிய மனுஷன்; குலங்குடியிற் பிறந்தவர்; செல்வஞ் செல்வாக்கோடு கூடியவர்; தருமசிந்தனையுடையவர்; சமயாபிமானம் பூண்டவர்; சைவப் பிள்ளைகள் அந்நிய மார்க்கப் பள்ளிக்கூடங்களிலே படித்துச் சமயாபிமானங் கெட்டு ஈற்றிலே சிலர் தம் மதத்தை விட்டு அந்நிய மதத்திற் சேர்வதைக் கண்டு மனம் பொறாராய், தாமாகவே ஒரு சைவ ஆங்கில வித்தியாசாலையைத் தனியே தொடங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைப் பிள்ளைகளிடத்துக் கல்வி வேதனமும் பெறாமல் நடத்தி வருபவர்; அவருடைய பள்ளிக்கூடம் இன்றும் நன்கு நடைபெறுகிறது; அவரை எல்லாரும் நன்கு மதித்து நடப்பார்கள்; குடும்பத்தில் ஒரு பிணக்கு வந்தாலும் வேறு கலகஞ் சண்டை நேர்ந்தாலும் அந்தப் பெரியவருக்கே அவர்கள் வந்து முறையிடுவார்கள்; அப்படியான பிணக்குகளையெல்லாம் அவர் தீர்த்துச் சமாதானமாக்கி விடுவார். அப்படிப்பட்ட அந்தப் பிரபு தமது வீட்டில் தெருப் பக்கமாகவுள்ள தலைவாசலில் ஒரு சாய்மனை நாற்காலியிற் சாய்ந்தபடி ஏதோ புதினப் பத்திரிகை வாசித்துக்கொண்டிருந்தார்; கோயிலிலிருந்து அந்த மார்க்கமாக வந்த முத்தன் அவரைக் கண்டமாத்திரத்தே தெருவில் நின்றபடி "இந்த ஐயாவை எல்லாரும் நல்லவர் பெரியவர் என்று சொல்லுகிறார்களே; இவரைக் காணவே என் பிதாவின் நினைவு வருகிறது; இவரிடத்தில் ஒரு ஐந்து ரூபா தரும்படி உள்ளதைச்சொல்லிக் கேட்டால் நிச்சயமாகத் தருவார்; ஆனாலும் கேட்கக் கூச்சமாகவிருக்கிறதே" என்று சிறிது நேரம் யோசித்தான்; இப்படி நிற்கும்போது ஒரு பக்கமாகத் திரும்பிப் பார்த்த வேலாயுதம்பிள்ளை முத்தன் நிற்பதைக் கண்டு "முத்து! வா வா" என்றார். முத்தன் சமீபத்திற்போய் விநயமாக நின்றான். "மகனே! நீ இப்பொழுது என்ன செய்கிறாய்; உங்கள் பாடுஞ் சங்கடந்தான்; உன் தகப்பன் இருந்த செல்வஞ் செல்வாக்கென்ன! பெருமையென்ன! அப்படிப்பட்ட பெரியவனுடைய பிள்ளைக்கு இப்படி வந்துவிட்டது; சரி, என்ன செய்யலாம். வாழ்வுந் தாழ்வும் உலகத்தில் எங்குமுண்டு; ஏன் நிற்கிறாய்; உந்த வாங்கில் இரு" எனலும், "இல்லை ஐயா, நான் இப்படி நிற்கிறேன்" என்று சொல்லிவிட்டு முத்தன் பின்னரும் கவலையுடன் நிற்கக் கண்ட வேலாயுதம் பிள்ளை "முத்து, என்னிடஞ் சொல்லக் கூசாதே; உனக்கு நான் ஏதும் உதவி செய்வதானாற் சொல்லு; நான் செய்கிறேன்; என்ன வேணும்" என்று பரிவுடன் கேட்டார். முத்தன் தன் வரலாறு முழுவதையுஞ் சொல்லி "ஐயா, நானும் என் தாயும் திருக்கோணமலைக்குப் போக நினைத்திருக்கிறோம்; தோணிக்காசு கொடுக்க வகையில்லை; நீங்கள் ஒரு ஐந்து ரூபா தந்தால் பெரிய உதவியாயிருக்கும்; ஐயா, போன இடத்தில் ஏதும் பிழைப்புக் கிடைத்தால் உங்கள் பணத்தைத்தான் முதல் திருப்பி அனுப்பிவைப்பேன்; இல்லாவிட்டால் எனக்குப் புண்ணியத்திற்குத் தந்ததென்று எண்ணிக்கொள்ளுங்கள்" என்று கவலையுடன் சொன்னான். "மகனே, முத்து, நீ கவலைப்படாதே; நான் நீ கேட்கும் பணந் தருகிறேன்; மேலுந்தேவையானாற் கேள், தருவேன்; நான் தரும் பணத்தை நீ எனக்குத் திருப்பித் தரவேண்டாம்" என்று சொல்லிவிட்டு அந்தப் பெரியவர் எழுந்து உள்ளே போய் 6 ரூபா எடுத்துக்கொண்டுவந்து முத்தன் கையிற் கொடுத்து "நீ சுகமே போய் வா, நீ நல்லாயிருப்பாய்" என்று ஆசி சொல்லிவிட, முத்தனும் அவரை நமஸ்கரித்துக்கொண்டு மீண்டான்.

திரைகடலோடியுந் திரவியந்தேடு

முத்தன் மனச்சந்தோஷத்தோடு தன் வீட்டிற்குத் திரும்பிவந்து தாயிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு நடந்ததைச் சொன்னான்; தாயும் மகனும் ஒரு நல்லநாட் பார்த்துத் திருக்கோணமலைக்குப் புறப்பட்டனர். தோணிமார்க்கமாகப் போய் இருவரும் துறைமுகத்தில் இறங்கினார்கள்; அந்தவூர் அவர்களுக்குப் புதியது; எல்லாம் வேற்றுமுகமாகக் காணப்பட்டன. துறைமுகத்திலிருந்து சிறிது தூரம் மார்க்கமும் நோக்கமும் குறியாது போனார்கள்; வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில் புலப்படுதலும், அங்கே சென்று அங்குள்ள திருமடத்திற் போயிருந்தார்கள்; அதன்பின் செய்வதென்னவென அவர்களுக்குத் தெரியவில்லை. இருவருக்கும் பசி அதிகம்; திருமடத்துக் கிணற்றிற்றானே பல் துலக்கிக் கால்முகங் கழுவிக்கொண்டு சந்நிதானத்திற்குப் போதலும் அங்கே அறுமுகத்தெய்வத்திற்குக் காலைப் பூசை நடக்குஞ் சமயமாகவிருந்தது; கோபுர வாசலில் விபூதி எடுத்துப் பூசிக்கொண்டு அடியவர் இடர்தீர்க்கும் அறுமுகப்பரம்பொருளுக்குத் தங்கள் குறையை முறையிட்டுத் தாயும் பிள்ளையும் வணங்கினர். பூசை முடிந்தபின் கோயிற் குருக்கள், குலத்திற்குரிய குணம் பூண்டவர்; தமிழ் சமஸ்கிருதம் இரண்டும் நன்கு பயின்றவர்; வந்த விருந்தோம்பி வருவிருந்தை எதிர்பார்த்திருப்பவர்; தெய்வ பக்தியுள்ளவர்; அந்தணரென்று எவருஞ் சொல்லத்தக்கவர்; எந்த நேரமும் பூரண ஆநந்தத்தோடு கூடியவர்; விபூதிப்பிரசாதம் முதலியன வழங்கும்போது இவ்விருவருக்கும் வழங்கினார். இவர்கள் அவ்வூருக்குப் புதியவர்களாயிருப்பதை மாத்திரம் குருக்கள் அவதானித்தார். கோயிலுக்கு வந்தவர்களெல்லாரும் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு போய்விட்டார்கள்; இந்த இருவர் மாத்திரம் சந்நிதானத்திலேயுள்ள கொட்டகையின் கீழ்க் கவலையோடிருந்தார்கள்; கோயிற் கருமமெல்லாம் முடித்துக்கொண்டு தம் வீட்டிற்குப் புறப்பட்ட குருக்கள் இவ்விருவரும் ஆங்கிருப்பக் கண்டு அவர்களிருக்குமிடத்திற்குப் போய், எந்தவூர்? எங்கு வந்தீர்கள்? என்பன முதலியவற்றை அன்புடன் வினவ, அவர்கள் தங்களுடைய வரலாறு முழுவதையும், தெய்வத்திற்கு முறையிடுவார் போற் குருக்களுக்குச் சொன்னார்கள். குருக்கள் அவர்களைப் போசனஞ் செய்தற்குத் தம் வீட்டிற்கு வரும்படி அழைக்க, தையலம்மை "சுவாமி! கேட்டது பெரிய காரியம்; எங்களுக்குப் பசி ஆற வேறு வசதியிருக்கிறது; குறை நினைக்க வேண்டாம்; வேணுமானால் என் பிள்ளையை மாத்திரங் கூட்டிக்கொண்டுபோய் ஏதுங் கொடுங்கள்" என்று பணிவுடன் சொன்னாள். "அதைப் பற்றிக் காரியமில்லை; நீரும் உண்ணலாம்; பிராமணர்களிடத்தில் உண்பதில் ஒரு குறைவும் வராது, அல்லாமலும் கோயிற் பிரசாதம் ...." என்று குருக்கள் பின்னருங் கேட்கத் தாய் மகனுடன் அங்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் உணவுண்டனள். மடத்தின் ஒரு அறையில் அவர்கள் இருப்பதற்கான வசதிகளையெல்லாம் குருக்கள் செய்வித்து வைத்தார். சில நாட்களாக அவ்விருவரும் அம் மடத்திலிருப்பதும் கோயிலின் தொண்டு செய்வதும் கோயிற் பிரசாதம் பெற்று உண்பதுமாகவிருந்து வந்தார்கள். அவர்களுடைய நடையையும் ஒழுக்கத்தையும் நல்ல வார்த்தையையுங் கொண்டு குருக்களும் அயலிலுள்ளவர்களும் அவ்விருவரும் நல்ல குலங்குடியிற் பிறந்தவர்களென்பதையும் நல்லாயிருந்து கெட்டு நொந்தவர்களென்பதையும் அநுமானத்தினால் அறிந்து கொண்டார்கள். "குலத்தளவே யாகுங் குணம்" என்றும் "சாதி சொல்லால் அறியலாம்" என்றும் பெரியோர்கள் பாடியிருக்கிறார்களல்லவா? இப்படி அவர்கள் அங்கே வசதியாக இருந்தாலும் வந்து சிலநாட் சென்றும் இன்னும் ஒருமுயற்சி கிடைக்கவில்லையேயென்று முத்தன் கவலைப் பட்டான்; ஆனால் அவன் தன் கவலையைத் தாயறியாதவாறு நடந்துகொள்வான். "ஐயோ! கந்தசுவாமி, திரைகடலோடியுந் திரவியந் தேடு என்றதை நினைத்து, அந்தவூரிலிருந்து உன்னுடைய இந்தவூருக்கு என்னைப் பெற்றவளையுங் கூட்டிக்கொண்டு வந்தேன்; மோட்ச வழியைக் காட்டுகிற நீ, நான் பிழைக்க ஒரு வழியைக் காட்டவொண்ணாதா? ஐயா! முருகா, எங்களைக் கடைக்கண் பார்" என்று அழுதழுது அந்தப்பெருமான் சந்நிதியில் முறையிட்டான்.

ஆங்காலம் மெய்வருந்த வேண்டா

ஒரு நாள் முத்தன் தன் தாயிடம் அநுமதி பெற்றுக்கொண்டு திருக்கோணமலைப் பட்டினத்தைப் பார்க்கப் புறப்பட்டுப் போனான். அவன் தன்னுடன் வந்தவனோடு கடைவீதியைப் பார்த்துக்கொண்டு போகும்போது அங்கு ஒரு பெரிய கடை வைத்திருக்கும் வியாபாரியொருவர், கடையில் இருந்தபடி கைகாட்டி, முத்தனை அழைத்தார். முத்தன் உடனே அவரிடம் போய் மரியாதையோடு நின்றான். "தம்பீ, நீர் யாழ்ப்பாணமல்லவா" என்று அந்த வியாபாரி வினவ, "ஓம், அண்ணே" என்று முத்தன் விடைசொன்னான். அந்த வியாபாரி முத்தனுடைய ஊர், பெயர், பரம்பரை முதலியவைகளையெல்லாம் விசாரிக்க, முத்தனும் ஒன்றுமொழியாமல் அவைகளையெல்லாஞ் சொன்னான். அந்த வியாபாரி முத்தனையும் கூடவந்த ஆளையுஞ் சற்று நேரம் இருக்கச்செய்து முத்தனைப் பார்த்து "தம்பி, உன்னை எனக்கு இப்பொழுது நல்லாய் விளங்குகிறது; உனது தகப்பனாரை நான் நல்லாய் அறிவேன்; அவருடைய பிள்ளை உனக்கா இந்தக் கதி வந்தது? நானும் யாழ்ப்பாணத்தவன்தான்; உங்களுக்கு அயலூரில் இருப்பவன்; நீ தயவுசெய்து பின்னேரம் 4 மணிக்கு மேல் இன்றைக்கே தவறாமல் வந்து என்னைக் காணவேணும், போய் வாரும்" என்று சொல்லி அந்த வியாபாரி ஆதரவுடன் முத்தனை அனுப்பி விட்டார். முத்தன் இன்னும் தான் பார்க்க விரும்பிய சில இடங்களைப் பார்த்துக்கொண்டு விரைவாக மீண்டு தாயிடம்போய் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாஞ் சொன்னான்; தாயும் "ஏதோ கந்தசாமியார்தான் எங்களுக்குத் துணை" என்று சொல்லிவிட்டுச் சிறிது ஆறுதலுடன் இருந்தாள். பின்னேரம் நாலு மணிக்கு முந்தியே முத்தன் தன் தாய்க்குச் சொல்லிவிட்டு அந்த வியாபாரியிடம் போனான்; வியாபாரி "தம்பீ, நீ என்னுடைய கடையில் இருக்க விரும்புவாயோ" என்று கேட்க, முத்தன் ஓம் என்றான். "நாளைக்கு நல்லநாள், வீட்டிற்குப் போய் உன் தாயிடஞ் சொல்லிச் சம்மதங் கேட்டுக்கொண்டு வா; சம்பளம் முதலியவைகளைப் பற்றி யோசிக்க வேண்டாம்; நீ பெரிய இடத்துப் பிள்ளையென்பது எனக்குத் தெரியும்; அதற்குத் தக்கபடி நடத்திக் கொள்ளுவேன்" என்று சொல்ல, முத்தன் அடுத்த நாட் காலை தான் வருவதாகச் சொல்லிவிட்டுத் தாயிடம் மீண்டான். அடுத்த நாட்காலை குறிக்கப்பட்ட நேரத்திற்கு முத்தன் கடைக்குச் செல்லுதலும் அங்கே முதலாளி தன் கடையிலுள்ள பிரதான கணக்கப்பிள்ளைக்கு முத்தனை இன்னானென விளங்கப்படுத்தி அவனையும் கடையில் வேலை கொள்ளும்படி சொல்ல, அப்படியே அவன் செய்தான். முத்தன் வறுமையின் கொடுமையை உள்ளபடி உணர்ந்தவனாதலினாலும், குலத்திற்குத்தக்க ஒழுக்கமுடையவனாயிருத்தலினாலும் தன் கடமையை நேர்மையோடும் விசுவாசத்தோடும் பார்த்துவந்தான். முதல் மாசம் முடிய முத்தனுக்கு ஐந்து ரூபா வேதனங் கொடுக்கப்பட்டது; அதனைக் கொண்டு போய்த் தாயிடங் கொடுத்தான். பிள்ளையின் உழைப்பைத் தாய் முதன்முதல் வாங்கி அதில் ஒரு சிறுத்தொகையைக் கந்தசுவாமி கோயிலுக்கு நிவேதனத்திற்குக் கொடுத்துவிட்டு எஞ்சிய பணத்தைத் தன் செலவிற்கு வைத்திருந்தாள். முத்தனுடைய ஒழுக்கமான நடை, நேர்மை, ஆதரவான பேச்சு, சிக்கனம் முதலியவற்றைக் கண்டு அந்தக் கடையிலுள்ளவர்கள், கடை முதலாளி, கடைக்குப் பொருள்பண்டம் வாங்க வருவோர், அயலிலுள்ள கடைக்காரர் எல்லாரும் அவனிடத்திற் பிரியம் பாராட்டி நடந்தார்கள். முதலாளியும் முத்தனிடத்தில் விசேஷமான நம்பிக்கை வைத்துக் காலத்திற்குக் காலம் அவனுடைய வேதனத்தை ஏற்றிக் கொடுத்து வந்தார். அவனிடத்தில் அன்புடையவராய் எல்லாரும் அவனை முத்தன் என்று கூப்பிடுவதை விட்டு முத்து என்று அழைத்து வருவாராயினர். முத்து கடையிற் சேர்ந்து ஆறு ஏழு வருஷங்கள் கழிந்துவிட்டன. காலகதியில் முத்துவே அந்தக் கடையிற் பிரதான கணக்கப் பிள்ளையாயினான். முதலாளி தான் பிறந்தவூராகிய யாழ்ப்பாணத்தில் வந்து நிற்குங் காலங்களிலும் முத்துவே கடையை நடத்தி வருவான். முத்துவுக்குச் சம்பளமும் முப்பது ரூபாவிற்கு மேற்படவுண்டு. முதலாளி கணக்கில் கடைத்தெருவுக்குச் சமீபமாகத் தாயும் மகனும் இருக்கும்படி ஒரு வீடு குத்தகைக்கு எடுத்துக் கொடுக்கப்பட்டது. முதலாளி வெளூரிலும் போய்ப்போய்ச் சரக்குகள் வாங்கி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அனுப்ப முத்துவே அங்கிருந்து கடையை நடத்தி வருவானாயினான்.

முதலாளிகொண்ட நோக்கம்

அந்தக் கடையின் முதலாளிக்கு ஒரேயொரு மகள்; அவள் பெயர் தனலட்சுமி; முதலாளி தன் ஏகபுத்திரியை நல்ல முறையிற் கல்வியூட்டி வளர்த்துவந்தான். அவள் மங்கைப் பருவம் அடைந்த பின் அதிக சீதனமுண்டென்ற காரணம்பற்றிப் பல பகுதிகளிலிருந்து அவளுக்கு மணம் பேசிவந்தார்கள். ஆனாலும் தகப்பன் தன் பிள்ளைக்கு வயசு கொஞ்சமென்றும் சில வருடங் கழித்துக் கல்யாணஞ் செய்து வைப்பதே தன் நோக்கமென்றுஞ் சொல்லிக் கடத்திவிட்டான். முத்துவினுடைய குலங் கோத்திரம் தன் குலங் கோத்திரத்தைக் காட்டிலும் சற்று மேலானதென்பதையும் அவன் அறிவான்; முத்துவின் குண ஒழுங்கங்களையும் அனுபவத்தில் நன்கு அறிந்துகொண்டான். தன் மகளை முத்துவுக்கு மண முடித்து வைப்பதனால் தாங்களும் சாதியில் ஏறலாமென்று அவன் நினைத்துக்கொண்டு ஊரில் வந்து நின்றபோது முத்துவின் மரபு ஒழுக்கம் முதலியவைகளையும் தனது நோக்கத்தையும் மனைவிக்கு வெளியிட்டான்; அவளுஞ் சந்தோஷத்துடன் அதற்கு உடன்பட்டாள். ஆனால் முத்துவின் தாய் இந்தச் சம்பந்தத்திற்குச் சம்மதிப்பாளோவென்ற சந்தேகம் புருஷனுக்கும் மனைவிக்குமிடையேயிருந்தது. முத்துவுக்கு அக் காலத்தில் வயசு இருபது வரையிலாய்விட்டது. முதலாளியின் மகளுக்கும் பதினாறு வயசு வரையிலிருக்கும். முதலாளி தன் கடையில் வந்து நிற்கும்போது முத்து கடையிலிருக்க, அவனுடைய தாயிடம் போய்ப் பல கதைகளையும் பேசிவிட்டு ஈற்றில் தனது உள்ளக்கிடக்கையை வெளியிட்டான். அதனைக் கேட்ட மனுஷி சந்தோஷப்பட்டு முதலாளியைப் பார்த்து, "அண்ணே, அவன் இனிமேல் உன்னுடைய பிள்ளை, உனக்கு எது இஷ்டமோ அதைச் செய்துவைக்கலாம்; நீ செய்துவரும் நன்மையை நாங்கள் சாகும் வரையில் மறக்கமாட்டோம்" என்றாள். இதனைக் கேட்ட முதலாளியுள்ளத்திற் பெருஞ் சந்தோஷம் பிறந்தது. மனுஷி ஓம் சொன்ன பிறகு முதலாளி, முத்துவைத் தன் மருகன் போலவே மதித்து நடத்திவருவானாயினான். ஆனாலும் தனது உள்ளக்கிடக்கையைத் தன் மனைவிக்குக் கடித மூலமாகத் தெரிவித்தானேயொழிய வேறு எவருக்கும் வெளியிட்டானல்லன். கடைக்குப் பொருள் வாங்க வருவோரும், அயலிலுள்ள கடைக்காரரும் முத்து என்று சொல்வது கௌரவமல்லவென எண்ணிப்போலும் அவனை முத்துக்குமாரு என்று அழைக்கத் தொடங்கினார்கள். முதலாளி கொண்ட நோக்கத்தைத் தாய் தன் பிள்ளைக்குச் சொன்ன போது "அம்மா, எல்லாம் இந்தக் கந்தசுவாமியின் திருவருளின்படி நடக்கும்; எங்களுக்கு என்னதெரியும், தாயே" என்று சொன்னான்.

முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை

மணம் பேசி ஒரு வருடமளவில் விவாகத்திற்கு நாள் நிச்சயிக்கப்பட்டது. முதலாளியெனிலோ தான் பிறந்தவூரிலும் வியாபாரஞ் செய்யும் ஊரிலும் அதிக செல்வஞ் செல்வாக்குடையவன்; ஆதலினால், விவாக விஞ்ஞாபனத்தை அச்சிட்டுத் தன் சுற்ற மித்திரர் அயலார் முதலிய எல்லார்க்கும் அனுப்பினான். அந்த விஞ்ஞாபனத்தில் இன்ன இடத்திலுள்ள எனது இல்லத்தில், இன்ன தேதியில், இத்தனை நாழிகையில் வருஞ் சுபமுகூர்த்தத்தில் செல்வச்சிரஞ்சீவி வ. முத்துக்குமாரசுவாமிப் பிள்ளைக்கும், எனது ஏகபுத்திரி சௌபாக்கியவதி தனலட்சுமியம்மாளுக்கும் விவாகஞ் செய்துவைக்கத் திருவருளை முன்னிட்டுப் பெரியோர் நிச்சயித்திருப்பதால் ..... என்றிருப்பக்காணப்பட்டது. விவாகம் யாழ்ப்பாணத்தில் முதலாளியின் இல்லத்திற்றானே மிக்க ஆடம்பரத்தோடு விதிப்படி இனிது நிறைவேறியது. மூன்று நாட்களாகப் பலவகையான கொண்டாட்டங்கள் நடைபெற்றன. தம்பதிகள் இறைவனருளால் அட்ட ஐசுவரியங்களையும் பெற்று இனிது வாழ்ந்தனர். முதலாளியும் தனக்கு ஒரேயொரு மகளாதலினால், தன் நிலம்புலம் கடை வீடுவாசல் பொருள்பண்டமெல்லாவற்றையும், தனக்குந் தன் மனைவிக்கும் சீவியங்கண்டு, மகளுக்குச் சீதனமாக எழுதிக் கொடுத்துவிட்டான்.

"ஓம் நான் சொல்லுகிறேன்"

விவாகம் முடிந்தபின் சிலகாலம் மாமன் கடையை நடத்த முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை தாயாருடன் ஊரிலேயே தமது மனையாள் வீட்டில் இருந்தார். கல்யாண வீட்டின் முன் சிலரும் பின் பலரும் இந்த முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை தான் பழைய வல்லிபுரத்தின் மகன் முத்தன் என்பதை அறிந்தார்கள். பலர் அவனுடைய நிலைமையைப்பற்றிச் சந்தோஷப்பட்டார்கள்; சிலர் பொறாமைப்பட்டார்கள்; அவனை முந்திப் புறக்கணித்து நடத்திய இனசனத்தவரும் முறை பேசிக்கொண்டும் சொந்தம் பாராட்டிக்கொண்டும் முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை வீட்டிற்குப் போய்க் கொண்டாடுவாராயினர். அவருடைய சுற்றத்தவர்களுட் செல்வத்தோடிருந்த சிலர் மாத்திரம் "முத்தன் சீதனத்திற்காகச் சாதிவிட்டு இறங்கி விட்டான்" என்று தங்களுட் பேசிக்கொண்டனரேனும், அவன் வீட்டிற்குப் போய்ச் சமபந்தி வகித்தல் மாத்திரஞ் செய்யாது கொண்டாடி வந்தனர். முத்துக்குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் எங்கே சென்றாலும் அவருக்கு மரியாதை செய்தல் முதலிய உபசாரங்களெல்லாம் நடந்தன. வயசில் இளையவர்கள் மாத்திரமல்லாமல் மூத்தவர்களும் முத்துக்குமாரசுவாமிப்பிள்ளையை வழிதெருவிற் கண்டால் தங்கள் சால்வையைத் தாழ்த்துதல், செருப்பைக் கழற்றிவிட்டு ஒதுங்கி நிற்றல் "முதலாளி வாருங்கள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லுதல் எப்பொழுது வந்தீர்கள் என்று கேட்டு முப்பத்திரண்டு பல்லையும் காட்டி நமஸ்காரம் செய்தல் முதலிய உபசாரங்களெல்லாம் நடந்தன. அந்த நேரத்தில் முத்தனுக்கு நடந்த நடப்பு அவன் மாமனுக்குத்தானும் இல்லையென்று சொல்லலாம்.

ஆனால் முத்துக் குமாரசுவாமிப் பிள்ளையில் ஒரு நூதனமான செயல் காணப்பட்டது; எவர் தம்மைக் கண்டு மரியாதை செய்தாலும் முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை உடனே அவருக்கு "ஓம் நான் சொல்லுகிறேன்" என்று சொல்லி வந்தார். இப்படி இவர் சொல்வதற்கு நியாயம் என்னவெனப் பலர் அறிய விரும்பினாலும் அவரை நியாயங்கேட்க எவருந் துணியவில்லை; முத்துக்குமாரசுவாமிப் பிள்ளையும் ஒவ்வொரு நாளும் வீட்டிற்கு மீண்டு போனவுடன் தமது பணப் பெட்டகத்தைத் திறந்து ஏதோ முணுமுணுப்பார்; இப்படி அவர் செய்வதை மனைவி இடையிடையே கண்டனளேனும், அவள் நியாயங்கேட்க நினைக்கவில்லை. இப்படி இவர் செய்து வருகிறாரென்பதை ஊர் முழுவதும் அறிந்தது. ஊரவர்கள் தங்களுள் அவர் இப்படிச் சொல்லுகிறாரே, சொல்வதன் நோக்கமென்ன என்று கலந்து பேசிக்கொள்வார்கள்.

முத்துக் குமாரசுவாமிப் பிள்ளையின் கல்யாணத்தில் வேலாயுதம்பிள்ளையும் சமூகமாயிருந்தவர்; வேலாயுதம் பிள்ளைக்குத் தாம் கடமைப்பட்டவரென்பதை முத்துக் குமாரசுவாமிப்பிள்ளை மறந்துபோகவில்லை; ஒரு நாள் நமது பிள்ளையவர்கள் ஒருதொகைப் பணத்தை எடுத்து மடியில் வைத்துக்கொண்டு வேலாயுதம் பிள்ளையைக் காணும்படி அவர் வீட்டிற்குப் போனார்; அவர் வரவைக்கண்ட வேலாயுதம்பிள்ளை "முதலாளி வாரும், வாரும்; இப்படி உட்காரும்" என்று சொல்லி அயலேயுள்ள ஒரு நாற்காலியைக் காட்டினார். ஆனால் வந்தவர் அப்படிச் செய்யாமல் அந்தப் பெரியவருடைய முன்னிலையில் விழுந்து கும்பிட, "சே, சே; உது என்ன வேலை" என்று சொல்லி வேலாயுதம்பிள்ளை அவரைக் கையிற் பிடித்து எழும்பச் செய்தார்; முதலாளி கண்களில் நீர் பெருக ஒருபுறத்தே விநயமாக ஒதுங்கிநின்று, "ஐயா, நீங்களே எனக்குத் தாய் தந்தையும் குலதெய்வமும் ஆவீர்கள்; உங்கள் புண்ணியத்தினாற்றான் நான் இப்பொழுது நல்லாயிருக்கிறேன்; நீங்கள் அந்த நேரத்திலே எனக்குத் தந்துதவிய ஆறு ரூபாவும் எனக்கு அறுநூறு ரூபாவுக்குச் சரி; ஆனதால் இப்பொழுது அறுநூறு ரூபா கொண்டுவந்திருக்கிறேன்; நீங்கள் அரைச் சதமேனும் வாங்கமாட்டீர்கள் என்பதை நான் அறிவேன்; ஆனாலும் உங்கள் பள்ளிக்கூடத் தருமத்திற்கு நான் தரும் இந்த அற்பபணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று உங்களைப் பணிந்து கேட்கிறேன்" எனக் கூறிக் குறித்த தொகையை வேலாயுதம்பிள்ளை முன்னிலையில் வைத்தார். "அதற்கென்ன நீர் விரும்பிய பிரகாரம் பள்ளிக்கூடத் தருமத்திற்கு உந்தப் பணத்தை உபயோகப் படுத்துகிறேன்" என்று சொல்லிவிட்டு, "முதலாளி உம்மை ஒன்று கேட்கவிருந்தேன்; இப்பொழுதுதான் ஞாபகத்தில் வந்தது; உம்மை யாரும் மரியாதை செய்யும்போது "ஓம் நான் சொல்லுகிறேன்" என்கிறீராமே. அதன் காரணத்தைப் பலர் அறியப் பிரியப்படுகிறார்கள் நானும் அறிய விரும்புகிறேன்; அதை எனக்குச் சொல்ல வொண்ணாதா" என்று கேட்டார். முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை மிக்க வணக்கத்துடன் "ஐயா என்னை முதலாளியென்று நீங்கள் சொல்வது சரியல்ல, முந்திச்சொன்னபடி முத்து என்று சொன்னாற் போதும்; அந்த நியாயத்தை உங்களுக்குச் சொல்லாமல் நான் வேறுயாருக்கு ஐயா, சொல்லுவது; அந்தக் காலத்திலே என் இனசனத்தவர்களும் ஊரவர்களும் என்னைப் புறக்கணித்து அலட்சியஞ் செய்ததையும், அவைகளைச் சகிக்க முடியாமல் நான் உங்களிடம் பணம் வாங்கிக்கொண்டு என்னைப் பெற்றவளையுங் கூட்டிக்கொண்டு தோணியேறித் திருக்கோணமலைக்குப் போனதையும், நீங்கள் அறிவீர்கள்; "அந்தமுத்தன்" இந்த நிலைக்கு வந்தபிறகு, இப்பொழுது அவர்களெல்லாரும் பெரிய மரியாதைகள் செய்கிறார்கள்; யோசித்துப் பார்த்தேன், நான்பழைய முத்தன் தான் ஐயா, இந்த மரியாதைகளும் உபசாரங்களும் எனக்கல்ல, என்னிடத்துள்ள பணத்திற்குத்தான் என்பது புலப்பட்டது; ஆனதினால் யார் யார் மரியாதை செய்கிறார்களோ அப்படிச் செய்தவர்களுடைய பெயர்களையெல்லாம் அவதானித்து வைத்துக்கொண்டு, விட்டிற்கு மீண்டவுடனே அங்கிருக்கும் பணப் பெட்டகத்தைத் திறந்து இன்னின்னார் இன்றைக்கு உனக்கு மரியாதை செய்தார்கள் என்று தனித்தனி யவர்களுடைய பெயர்களைப் பெட்டகத்திலிருக்கும் பணத்திற்குச் சொல்லிவிடுவேன். இவர்களும் மரியாதை செய்யும்போது எனக்கல்ல என்னிடத்திலுள்ள பணத்திற்குத்தான் என்று நான் விளங்கியிருப்பதாற்றான் ஐயா, "ஓம் நான் சொல்லுகிறேன்" என்று அந்த நேரத்தில் அவர்களுக்கும் சொல்லிச்சொல்லி வருகிறேன்" என்றார். இதனைக் கேட்ட வேலாயுதம்பிள்ளை பெருஞ் சிரிப்புச் சிரித்தார்; இக்கதையைக் கேட்டவர்கள் எல்லாரும் நினைத்து நினைத்துச் சிரித்தார்கள்.

முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை புத்திரப்பேறு முதலாஞ் சகல சம்பத்துக்களையும் பெற்று, தான தருமங்களைச் செய்து, சத்கருமங்களில் ஈடுபட்டு உழைத்து இனிது வாழ்வாராயினர். அவருடைய தாயும் தனது மகன் வீட்டிற்றானே இருந்து பேரப்பிள்ளைகளையுங் கண்டு சந்தோஷமாக வாழ்ந்தாள்.

* * *

[இந்து சாதனம், பொன்விழா மலர், 1939, பக். 86-95]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதக் கதை

கோபால-நேசரத்தினம்

முதலாம் அத்தியாயம்

கோபாலன் மூன்று வயசுக் குழந்தையாக விருக்கும்போதே, அவனுடைய பிதா இறந்து போயினர். தாயாகிய வள்ளியம்மை தன் கணவனைப் பறி கொடுத்துவிட்டதற்குப் பெரிதும் வருந்தினள். இவர்கள் பெரிதும் முட்டுப்பாடுடையவர்கள்; அன்றடித்து அன்று வாயிலிடும் வழக்கத்தையுடைவர்களாக ஒருவாறு காலங் கழித்தமையினால், புருஷனிறந்த துயர் வள்ளியம்மையின் உள்ளத்தைப் பெரிதும் உபாதித்தது. பாவம், அவள் என்செய்வாள்! பராயமுற்ற பிள்ளையாகக் கோபாலன் இருந்தாலுங் காரியமில்லை. அவனும் நாம் முன்னே சொன்னபடி மூன்று வயதுக் குழந்தை. தன் புருஷனை நினைத்து தாய் அழுவதைப்பார்க்கும்போது, பிள்ளையாகிய கோபாலனும் அழத் தொடங்கியமையினால், பெற்ற தாயானவள் அவன் சமூகத்தில் அழுவதைவிடுத்து, இராக்காலத்திலே தன்பர்த்தாவை நினைந்து மனங் கரைந்து கண்ணீர் சொரிவாள். ஆனாற் "பாலன் பஞ்சம் பத்து வருடம்" என்றபடி தன் குழந்தை வளர்ந்துவிட்டால் ஒரு காலம் தான் நல்லாயிருத்தலும் கூடும் என்ற ஒரு ஆறுதல்மாத்திரம் வள்ளியம்மையுள்ளத்திலுண்டு. "முடிந்த கருமத்தை யெண்ணி யெண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பதனால் ஆகப் போவதொன்றுமில்லை; ஒருவரிடத்திற் போய் "ஒருநேரச் சோறுதா, ஒரு சேலைதா" என இரப்பது இகழ்ச்சியாகும்; "ஏற்பதிகழ்ச்சி" என்றபடி பிற்காலத்தில் என்குழந்தைக்குப் பெரும் வசையுமாகும். "காலம் போம் வார்த்தை நிற்குங் கண்டாயே" என்று உலகத்திலே சொல்லுகிறபடி, பஞ்சம்போம் பஞ் சத்திற்பட்ட வசை போகாது. ஆனபடியாற் பெண்ணாகப் பிறந்த பாவியாகிய நாம் ஏதும் ஊதியமுள்ள ஒருசிறு தொழில் செய்து கடவுள்தந்த இந்த ஆண்குழந்தையையும் வளர்த்துக் கொண்டு வறுமையிற் செம்மையென்றபடி மரியாதையாக வாழ்வோம்" என்று வள்ளியம்மை நினைத்து, நாள்தோறும் அதிகாலையிற் பிட்டு அவித்து விற்று அதனால்வரும் ஊதியத்தையெடுத்துத் தன் குழந்தையோடு தானுங் காலங்கழித்து வந்தாள். வள்ளியம்மை மற்சமாமிச போசனமில்லாதவளானமையினாலும், மிக்க ஆசாரமுடையவளாதலினாலுங் கூசாமல் அயலாரெவரும் அவளிடத்திலே பிட்டு விலைக்கு வாங்குவித்து உண்பர். கோபாலனும் ஐந்தாம் வயசை அடைந்தான்.

கோபாலனுக்கு ஐந்து வயசாதலும், அவனுடைய அன்னை முறைப்படி வித்தியாரம்பஞ் செய்வித்து, சமீபத்திற் சைவப்பள்ளிக்கூட மில்லாமையினால், அயலிலேயுள்ள ஒரு பாதிரி பள்ளிக்கூடத்திற் போய்ப் படித்து வரும்படி அவனை அனுப்பினாள். கோபாலன் அதிவிவேகி; வருடந்தோறும் ஒவ்வொரு வகுப்பிலுஞ் சித்தியடைந்து ஐந்தாம் வருடமுடிவில் ஐந்தாம் வகுப்பிலுஞ் சித்தியடைந்தான். என்ன கஷ்டப்பட்டும் ஆங்கிலம் பயிற்றிவிட்டால் தன் பிள்ளை பிற்காலத்தில் ஏதும் உத்தியோகம் பார்த்துப் பிழைத்துக்கொள்ளுவான் என்பது தாயின் நம்பிக்கை. அதனால் அவள், தமிழ்ப் பள்ளிக்கூடத்திலே கோபாலனைப் படிப்பித்த உபாத்தியாயருடைய தயவைப்பெற்று, அவர் மூலமாகப் பாதிரிமாரால் நடத்தப்படும் ஒரு ஆங்கிலப் பள்ளிக்கூடத்திற் கோபாலனைச் சேர்த்து படிக்கச்செய்தாள். கோபாலன் ஆங்கில வகுப்புக்களிலும் கிரமமாகச் சித்தியடைந்து நாலாம் வகுப்பிற் படிக்கும்போது, தாய் பள்ளிக்கூட வேதனங் கொடுப்பதற்குக் கஷ்டப்பட்டாள். என்செய்வாள் பாவம்! தான் பிட்டு விற்றுப் பெறும் ஊதியத்தினால் தங்களிருவருக்குமாகிய மற்றைச் செலவுகளையும் கோபாலனுக்கு வேண்டிய புத்தகம் கற்பலகை முதலிய உபகரணங்களுக்காகிய செலவையுங் கொடுத்துவந்தாள். மூன்று வருடகாலமாகப் பள்ளிக்கூடச் சம்பளமுங் கொடுத்தாள். வகுப்பு ஏறஏற வேதனமும் ஏறுமாதலின் நான்காம் வகுப்பிற்குரிய வேதனத்தை மாசந்தோறுங் கொடுப்பதற்கு அவளிடம் பொருளில்லை. இதற்கு முந்தியும் எத்தனையோநாள் தாய் தன் பிள்ளையை உண்ணச்செய்து தான் பட்டினி கிடந்திருப்பாள். வேறு எத்தனையோ விதமாகத் தன்மகனுக்காகத் தன்னை யொறுத்து நடந்து கொள்ளுவாள். ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினம் தாய் தன் பிள்ளை பள்ளிக்கூடத்திலிருந்து பசியோடு வருவானேயென்று ஏதோ சமையல் செய்து கொண்டிருக்கும்போது, கோபாலன் வெம்பியழுதபடி வழக்கமாக வரும்நேரத்திற்கு முந்தி வீட்டிற்கு வந்தான். வந்தமகனைக் கண்டமாதா பதைபதைத்து ஓடிச்சென்று, "என்மகனே! இந்த மத்தியான வெய்யிலில் அழுதுகொண்டு ஏன் வருகின்றாய்; நடந்ததென்ன சொல்லு; அழாதே" யென்று தன்பிள்ளையைக் கட்டியணைத்து முத்தமிட்டுத் கண்ணீர் துடைத்துக் கேட்டாள்.

"அம்மா, மூன்றுமாசப் பள்ளிக்கூடச் சம்பளங் கொடுக்கத் தவறின பிள்ளைகளை யெல்லாம் பள்ளிக்கூடத்திலிருந்து வெளியே போகும்படி பெரிய உபாத்தியாயர் துரத்திவிட்டார்; நாளைக்குச் சம்பளங்கொண்டு தான் பள்ளிக்கூடத்திற்குப் போகவேண்டும்" என்று கோபாலன் தன்னுடைய தாய்க்குச் சொன்னான். தன் பிள்ளை சொன்னவார்த்தையைக் கேட்டமாத்திரத்தே பெற்றவளுக்கு உண்டான துயரத்துக்கு ஓர் அளவில்லை. அவள் பெருமூச்சுவிட்டாள்; கண்கலங்கினாள்; "ஐயோ! மகனே! உன் அப்பர் இருந்தால் இப்படியெல்லாம் வருமா; "தாயோடு அறுசுவைபோம் தந்தையொடு கல்விபோம்" என்று படித்தவர்கள் சொல்வார்கள். இப்போது இதற்கு நான் என்ன செய்வேன்" எனப் பெரிதும் யோசித்தாள். அவள் தன் பிள்ளைக்குப் போசனங் கொடுத்துவிட்டு அவனை வீட்டிற்றானே இருக்க விடுத்து, பின்னேரம் ஐந்து மணிவரையில், பழைய தமிழ் உபாத்தியாயரிடஞ் சென்று நடந்த செய்தியைச் சொல்லி, "சட்டம்பியார், நான் என்ன செய்வேன், கைம்பெண்; என் பிள்ளையைப் படிப்பித்து விட்டாற் பின்னுக்குப் பெரும் உதவியாகுமென்று பார்த்தேன். சம்பளத்திற்கு ஒரு மார்க்கமுமில்லை இவ்வளவிற் படிப்பை நிறுத்தி, சுருட்டுக்கு விடப்போகின்றேன்" என்று மிக்க துயரத்தோடு சொன்னாள். அதனைக்கேட்ட தமிழ் உபாத்தியாயர் துக்கப்பட்டு, "வள்ளியம்மே, நான் சொல்வதைக்கேள்; இப்போதைய இடைஞ்சலைப்பாராதே; கொஞ்சங் கஷ்டப்பட்டாயினும் உன் பிள்ளையை ஏழாந்தரம் வரையில் நீ படிப்பித்து விட்டால், அவன் சிங்கப்பூர்ப் பகுதியிற் போயாயினும் பிழைத்துக்கொள்வான்; அவன் நல்ல விவேகி; "கற்கை நன்றே, கற்கை நன்றே, பிச்சை புகினுங் கற்கை நன்றே" என்று சொல்லுவார்கள். நான் பாதிரியாரைக் கண்டு உன் பிள்ளையைச் சம்பளமில்லாமற் படிப்பிக்கும்படி கேட்டுப் பார்க்கின்றேன்" என்றார். "ஐயோ! உபாத்தியாயர், அப்படிச் செய்வீர்களானால் உங்களுக்குப் பெரும் புண்ணியங்கிடைக்கும்" என்று சொல்லிக்கொண்டு வள்ளியம்மை தன் வீட்டிற்கு மீண்டாள்.

★ ★ ★

இரண்டாம் அத்தியாயம்

தமிழ் உபாத்தியாயருடைய பிரயத்தனத்தினால், கோபாலன் பாதிரி பள்ளிக்கூடத்திற் பள்ளிக்கூடச் சம்பளமின்றிப் படித்துவருவானாயினான். கோபாலன் அதி விவேகியாதலினாலும், தன் தாரித்திரிய நிலைமையை நன்கு உணர்ந்தவனாதலினாலும், வீண்விஷயங்களிலே தன் சிந்தையைச் செல்லவிடாது மிக்க ஆர்வத்தோடு படித்துவந்தான். பள்ளிக்கூடச் சம்பளம் இல்லாமற் படிப்பித்தல் வேண்டுமென்று தமிழ் உபாத்தியாயர் கேட்கும்படி தம்மிடம் வந்தபோது, கோபாலனுடைய விருத்தாந்தங்களை யெல்லாம் நன்குணர்ந்த பாதிரியார் கோபாலனிற் கண்வைத்தார். கோபாலனை மனந் திரும்பச் செய்துவிடின், அவன் பிற்காலத்திலே கிறிஸ்துசமயத்தைப் பரப்புவதற்குப் பெருந் துணையாவானென்ற எண்ணம் பாதிரியாருள்ளத்திற் பிறந்தது. மற்றைப் பிள்ளைகளிடத்திலும் பார்க்கப் பாதிரியார் அவனிடம் அதிக அன்பு பாராட்டினார். பள்ளிக்கூட நேரம் முடிந்த பின்னரும் இடையிடையே அவர் தம்முடைய வீட்டிற்குக் கோபாலனைக் கூட்டிச் சென்று அவனோடு வார்த்தையாடுவார். தம் மதத்தைப் பற்றியும் பேசுவார்; அவனுக்கு வேண்டிய புத்தகங்களையும் படித்தற்காகிய மற்றை உபகரணங்களையும், அவர் அவனுக்குக் கொடுப்பார். கோபாலனும் பாதிரியார் தனக்குச் செய்யும் உதவிகளின்பொருட்டு அவரிடத்தில் நன்றி பாராட்டிவந்தான். ஆனால் அதுவரையிற் பாதிரியார் தமது உள்ளக்கிடக்கையைக் கோபாலனுக்கு வெளியிடவில்லை.

கோபாலன் ஏழாந்தரச் சோதனையிற் சிந்தியடைந்து எட்டாம் வகுப்பிற் சில நாட்களாகப் படிக்கும்போது, ஒருதினம் பாதிரியார் கோபாலனைத் தம் வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய் அவனுக்கு அந்தவகுப்பிற்குரிய புத்தகங்களை யெல்லாங்கொடுத்து, அவனை நோக்கி "கோபால், நீ எப்பொழுது மனந்திரும்புவது" என்று கேட்டார். அவர் கேட்ட கேள்வி ஆரம்பத்திற் கோபாலனுக்கு விளங்கவில்லை; பின்பு விளங்கிக்கொண்டான்; "ஐயா, அந்த விஷயத்தில் என்தாயாரை நான் கேட்டுச் சம்மதமறிந்து சொல்லுகின்றேன்" என்றான். கோபாலன் சொன்ன இந்தப் பதில் பாதிரியாருக்குப் பிடிக்கவில்லை; ஆனாலும் அவர் அப்பொழுது வேறொன்றும்பேசாது "அப்படியே கேட்டுச் சீக்கிரத்தில் எனக்குச் சொல்லவேண்டும்" என்றார். அவன் அன்று வீட்டிற்குச்சென்றவுடன் தன் அன்னையைப் பார்த்து "அம்மா, பாதிரியார் என்னைக் கிறிஸ்து மதத்திற்கு வரும்படி கேட்கின்றார்; நான் இதற்கு என்ன சொல்லுவது" என்று கேட்டான். இந்த வார்த்தை வள்ளியம்மைக்குத் தன் நெஞ்சிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய கல்லைப்போட்டாற் போலிருந்தது. அவள் இப்படி ஏதும் வருமென்று காத்திருந்தவளல்லள். "மகனே, அவர் அப்படிக்கேட்டபோது நீ என்ன பதில் சொன்னாய்" என்று தாய் வினவினாள். "நான் அம்மாவைக் கேட்டு வந்து சொல்லுகிறேன் என்றேன். அதற்கென்ன அப்படிச் செய்" என்று அவர் சொன்னார் எனக் கோபாலன் கூறினான். வள்ளியம்மைக்கு அதிக கவலை ஏற்பட்டு விட்டது. "ஐயோ, கிணறுதோண்டப் பூதம் புறப்பட்டாற்போல் ஆய்விட்டதே; இப்பொழுது பாதிரியார் கேள்விக்கு நான் உடன்படாவிட்டால் என் பிள்ளையின் படிப்பு இடையிற் கெட்டுப்போம்; உடன்பட்டால் எம் அருமையான சமயத்தை விடவேண்டி நேரும்; இருதலைக்கொள்ளியுள் ளெறும்புபோலல்லவா என்கதி ஏற்பட்டிருக்கிறது; சரி, இந்த விஷயத்தை எங்கள் தமிழ் உபாத்தியாயருக்குச் சொல்லுவோம், என்று நினைத்து அவள் தன் பிள்ளையைப் பார்த்து "மகனே, எங்கள் சட்டம்பியாரை ஒருகால் நான் தேடினதாக அவர் வீட்டிற்போய்ச் சொல்லி விட்டுவா" என்றாள். கோபாலன் உடனே உபாத்தியாயரிடம் போய்ச் சொல்ல, அவர் அவனுடன் கூடிக்கொண்டு வந்தார்.

வந்த தமிழ் உபாத்தியாயரை வள்ளியம்மை ஆசனமிட்டு உட்காரச் செய்து "இது என்ன, உபாத்தியாயர், தம்பி இவன் ஏதோ சொல்லுகிறான்; அதைக்கேட்க எனக்குப் பெருங்கவலை யுண்டாகிறது; படிப்பிற்காக எங்கள் மார்க்கத்தை விற்றுவிடுவோமென்று பாதிரியார் நினைக்கிறாரா? அப்படியேதும் எண்ணம் பாதிரியாருக்கு இருக்குமானால், நான் பிள்ளையைப் படிக்கப்போக வேண்டாமென்று மறித்து விடுவேன். மக்களுடையருமையைப் பெற்றவர்களேயறிவர் மலடிதான் அறிவதுண்டோ? என்றபடி, தகப்பனும் இந்தப் பிள்ளை குழந்தையாயிருக்கும்போதே செத்துப்போக நான் கைம்பெண், படாதபாடு பதினெட்டும் பட்டு, சோற்றுக்குக்குறைவில்லாமல், சீலைக்குக் குறைவில்லாமல், எண்ணெய் தண்ணீருக்குக் குறைவில்லாமல், செல்வர்வீட்டுப் பிள்ளைகள் போல் வளர்த்து வந்தேன்; எதற்காக இந்தப் பாடெல்லாம்? நாளைக்கு நான் கண் மூடினால் எனக்குத் தீக்கடன் நீர்க்கடன் திவசம் மகாளயம் என்னும் இவைகளைச் செய்வானென்று நம்பியல்லவா? அல்லாமலும், நான் நெடுங்காலம் பிள்ளை இல்லாமலிருந்து, அந்த நல்லூர்க் கந்தனை வேண்டி வழிபட்டு விரதமிருந்து திருவீதியில் அடியழித்துக் கும்பிட்டுக் கந்தபுராணங் கேட்டு அன்னதானஞ் செய்து அந்தப்பெருமானுடைய கிருபையினாற் கிடைத்த குழந்தை; அப்படிப்பட்ட பிள்ளையை இப்படியாக்கவா பாதிரியார் பார்க்கிறார்? அவன் பள்ளிக்குப் போகவும் வேண்டாம்; உந்தப்படிப்பும் வேண்டாம்; இப்படி வருமென்று நான் முந்தி அறிந்திருந்தால் ஒருபோதும் என் பிள்ளையைப் பாதிரிபள்ளிக்கு அனுப்பியிருக்கமாட்டேன்" என்று மிக்க ஆத்திரத்தோடும் கவலையோடுஞ் சொன்னாள்.

வள்ளியம்மையின் வார்த்தையைக் கேட்ட உபாத்தியாயருக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை; அவர் நெடிது நேரம் யோசித்தார், பின்னர் வள்ளியம்மையைப் பார்த்து "அக்கா, நீ ஆத்திரப்படாதே, ஒன்றுக்குங் கவலைப்பட வேண்டாம்; நெருப்பென்று சொன்னவுடன் வாய்வெந்துபோவதல்ல; பாதிரியார் தன் கடமையைச் செய்ய நினைத்து அப்படிச் சொல்லியிருக்க வேண்டும்; இப்பொழுது, உன் மகன் கிறிஸ்தவனாய் விட்டானா? உங்களுக்குப் பிரியமானாற் செய்யலாம், இல்லாவிட்டால் விடலாம்; ஆர் உங்களை நெருக்க முடியும்; உன் மகன் மனந்திரும்பினாற் பாதிரியாருக்குச் சந்தோஷமாயிருக்கும்; இவனும் படித்து ஒரு வழியில் வந்துவிடுவானென்று பார்க்கின்றேன். பாதிரியாருக்காக இப்பொழுது "ஓம், என்று உன் மகன் சொல்லட்டும்; பின்பு தன் எண்ணப்படி நடக்கலாம். தான் எடுத்தகாரியம் கைகூடுவதற்காக எதனையுஞ் செய்யலாம், மனவிசுவாசந்தானே பிரதானம்; நானும் கிறிஸ்தவன்தான்; ஆனாற் சைவத்தில் எனக்கு நம்பிக்கையில்லையென்றா நினைத்திருக்கின்றீர்கள்; என்னுடைய மனைவி வெள்ளிக்கிழமை விரதம் எப்பொழுதும்அநுட்டித்துவருகின்றாள்;எனக்கானாலுஞ் சரி, என் பிள்ளைக்கானாலுஞ்சரி ஒருதலையிடி வந்தாலும் என் மனைவி மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்குப் போய் அர்ச்சனை செய்விப்பதும் பூசை செய்விப்பதும் வழக்கம். இவைகளில் ஒன்றுமில்லை, கோபாலன் இப்பொழுது பாதிரியாரைக் கொஞ்சம் பிரியப்படுத்தி நடந்து கொள்ளட்டும்; பின் தன் காலத்திலே அவன் தன் இஷ்டப்படி செய்யலாம்; நீ அவனுடைய படிப்புக்கு இடையூறாக நில்லாதே; இதுதான் நான் சொல்லக்கூடியது" என்றார். அதற்கு வள்ளியம்மை, "உபாத்தியாரே, எனக்கு உள்ளொன்று புறம்பொன்றாக நடக்கப் பிரியமில்லை; நீர் செய்த உதவியோடு இன்னும் ஒரு உதவி செய்யவேணும்; இன்றைக்குப் பாதிரியாரிடம் போய், கோபாலனை மனந் திரும்பும்படி கேட்க வேண்டாமென்றும், அப்படிக் கேட்டால் அவன் பள்ளிக்கூடத்திற்கு வரமாட்டானென்றுஞ் சொல்லிவிடும்; அதற்குப்பின் நடக்கிறபடி நடக்கட்டும்" என்று பிடிவாதத்தோடு சொன்னாள். "அப்படியே செய்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு உபாத்தியாயர் போய்விட்டார்.

★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் அத்தியாயம்

உபாத்தியாயர் கோபாலனுடைய விஷயத்தைச் சொல்லும்படி அடுத்தநாள் அதிகாலையிற் பாதிரியார் வீட்டிற்குச் சென்றார். பாதிரியார் உபாத்தியாயரை ஆசனமுதவி உபசரித்து சுகம் விசாரித்தபின் வந்தகாரியம் என்னவென வினவினார். உபாத்தியாயர் பாதிரியாரைப் பார்த்து "ஐயா, தங்களுடைய ஆங்கிலப் பள்ளிக்கூடத்திற் படிக்கும் கோபாலன் என்ற பையனைப்பற்றித் தங்களுடன் சில விஷயம் பேசும்படி வந்தேன்" என்றார். "ஆம் பேசலாம், நான் என்ன செய்யவேண்டும்? அவன் விஷயத்தில் என்னாற் செய்யத்தக்க எதனையும் நான் செய்யச் சித்தமாயிருக்கின்றேன்" என்றார். "வேறொன்றுமல்ல, அவன் மனந்திரும்புவது அவனுடைய தாய்க்குப் பிரியமில்லை போலிருக்கிறது, தாய் நேற்றுப் பின்னேரம் என்னை நேரிற்கண்டு மார்க்க விஷயமாக அவனோடு ஏதும் பேசவேண்டாமெனத் தங்களுக்குச் சொல்லும்படி என்னைக் கேட்டாள். அதனைத்தான் சொல்லும்படி இப்பொழுது இங்கே வந்தேன்" என்று மெல்ல மெல்லச் சொன்னார். உபாத்தியாயர் உரைத்த வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தே பாதிரியாருக்குச் சிறிது ஆத்திரமும் மனத்தளர்ச்சியும் உண்டாயின. அவர் நெடுந்தூரம் யோசித்தார்; இதற்கிடையில் உபாத்தியாயர் பாதிரியாரின் மனக்குறிப்பை யுணர்ந்து, "நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம்; நான் ஆனமட்டும் பார்க்கிறேன்; இப்பொழுதுதான் ஒரு போது வாய்க்காவிட்டாலும் கிழவி கண்மூட, கோபாலன் எங்கள் வழிக்குத் தவறாமல் வருவான்; அப்படி இல்லாவிட்டால் இவ்வளவு காலமும் எங்களுடைய பள்ளிக்கூடத்தில் அவன் படித்ததினாற் பயனென்ன? மேலும், அவன் பள்ளிக்கூட வேதனம் இல்லாமலல்லவா இங்கே படிக்கின்றான்" என்றார். "எங்களிடத்திற் சம்பளமில்லாமற் படிக்கும் ஏழைப் பிள்ளையாகிய கோபாலனை மனந் திரும்பச் செய்யும் விஷயத்தில் இவ்வளவு கஷ்டம் ஏற்படுமானால், இனி நாம் செல்வஞ் செல்வாக்குடைய சைவர்களின் பிள்ளைகளை மனந்திரும்பச் செய்வது எப்படி முடியும்?" என்று பாதிரியார் ஒரு பெருமூச்சோடு சொன்னார்.

உபாத்தியாயரும் பாதிரியாரும் இப்படிப் பேசும்போது, அதற்கு முந்தியே அங்கு வந்திருந்த குட்டித்தம்பிப் போதகர் இவர்களுடைய சம்பாஷணையை அவதானித்துக் கொண்டார். குட்டித் தம்பிப் போதகர் சாமானியமானவரல்லர். அவர் ஆங்கிலமும் தமிழும் சிறிது பயின்றவர்; பாமர சனங்களைத் தம் வாக்குச் சாதுரியத்தால் மருட்டத் தக்கவர்; அவர் ஆதியிற் சைவ சமயத்தவராயிருந்தவர்; அவருடைய சகோதரரும் ஏனைய சுற்றத்தவரும் இன்றுஞ் சைவ சமயத்தவராகவே யிருக்கின்றனர். சகோதரரிற் கநிஷ்டராகிய இவர் அவர்களோடு பயிரிடுந் தொழில்செய்து சிரமப்பட்டுப் பிழைக்க விருப்பமில்லாதவராய்த் தஞ்சமயத்தை விடுத்துக் கிறிஸ்து சமயத்தை யநுசரித்துப் போதகராகிப் பிழைப்பவர். சைவர்களைக் கிறிஸ்தவராக்குவதிற் பாதிரியாருக்குக் குட்டித்தம்பிப் போதகர் செய்த பேருதவியை வேறு எந்தப் போதகரும் செய்யவில்லை யெனலாம். அவருக்கு மூன்று புத்திரிகளும், ஒரு ஆண் குழந்தையுமுண்டு. அவர்களுள் இருவர் மணமுடித்துவிட்டனர். மூன்றாம் மகளாகிய எலிசபேத் நேசரத்தினம் விவாகஞ் செய்து ஒருவருட வாழ்க்கை முடிந்தபின் கணவனையிழந்து கைம்மையாக விருந்தாள். இளைய பிள்ளையாகிய ஆண்குழந்தைக்கு வயசு ஒன்பது வரையிலிருக்கும். குட்டித்தம்பிப் போதகருக்கு, சைவர்களை மனந்திரும்பச் செய்யும் விஷயத்தில் அவருடைய குடும்பத்தினரும் துணையாகவிருந்தார்கள். அன்னையில்லா இப் பிள்ளைகளைப் போதகர் மிக்க அன்போடு வளர்த்துவந்தார். குட்டித்தம்பிப் போதகருடைய வரலாறு இவ்வளவிலிருக்க, அவர் உபாத்தியாயரைப் பார்த்து, "உபாத்தியாயரே, வடலி வளர்த்துக் கள்ளுக் குடிக்க நினைத்தவனைப் போல, தாய் இறக்கும் வரைக்கும் கோபாலன் மனந் திரும்பும் விஷயத்தைத் தவணை போடலாமா? படித்து முடித்தபின் எத்தனையோ சைவப் பிள்ளைகள் நன்றி மறந்தவர்களாய் எங்களை விட்டு ஓடிவிட்டார்கள்; ஆனபடியாற் காலதாமதஞ் செய்யக்கூடாது; காற்றுள்ளபொழுதே தூற்றிக்கொள்ள வேண்டும்" என்றுகூறியபின் பாதிரியாரை நோக்கி, "ஐயா, தாங்கள் கவலைப்பட வேண்டாம்; ஆறு மாசத்துக்குள் இந்தக் கோபாலனை மனந்திரும்பச் செய்யாவிட்டால் நான் இப்போதகர் வேலையை விட்டுவிடுகின்றேன்" என்று சபதமிட்டார்; போதகர் சொன்ன சபதத்தைக் கேட்ட பாதிரியார் சந்தோஷப்பட்டார்; உபாத்தியாயர் ஆச்சரியப்பட்டார். சமயவிஷயமாகத் தாங்கள் ஏதும் கோபாலனுடன் இனிமேற் பேசுவதில்லையெனத் தாய்க்குத் தெரிவிக்கும்படி உபாத்தியாயரிடம் பாதிரியார் சொல்லினார்.

* * *

நான்காம் அத்தியாயம்

இந்திரனுடைய சபையிலே வசிட்ட முனிவர் சமூகத்தில் அரிச்சந்திரனைக்கொண்டு பொய் சொல்லுவிப்பதாகச் சபதமிட்ட கௌசிகருடைய மனம் எவ்வளவு வேதனைப்பட்டதோ, அப்படிப் பட்ட வேதனையோடும் யோசனையோடும் குட்டித் தம்பிப் போதகருங் காணப்பட்டார். அவர் ஒரு தினம் கோபாலனுடைய வீட்டுக்குப் போனார். கோபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச்சமயத்தில் அங்கில்லை. அவனுடைய தாயாகிய வள்ளியம்மை மாத்திரம் அங்கிருந்தாள். போதகரை அவள் உபசரித்து வந்தகாரியம் என்னவென்று வினவினாள். "விசேஷம் ஒன்றுமில்லை எனக்கு ஒரு குழந்தையிருக்கிறான்; அவனுக்குப் பின்னேரவேளையிற் பாடஞ் சொல்லிக்கொடுக்கக் கோபாலனுக்கு வசதியுண்டோவென்று கேட்கலாமென வந்தேன்; நான் நியாயமான சம்பளங் கொடுப்பேன்" என்றார் போதகர். பரம ஏழையாகிய வள்ளியம்மை வஞ் சகமில்லாமல் அவர் கேள்விக்குச் சம்மதித்தாள். "சனிக்கிழமை முதலாந்திகதி; அன்று தொடக்கம் உங்கள் மகனை என் வீட்டிற்கு வரும்படி சொல்லுங்கள்" என்று சொல்லிவிட்டுப் போதகர் போய்விட்டார். மகன் வந்தவுடன் தாய் செய்தியை அவனுக்குச் சொன்னாள்; அவனும் உடன்பட்டான். கோபாலன் சங்கேதப்படி முதற்றிகதி தொடக்கம் பின்னேர வேளையிற் கிரமமாகப் போதகருடைய மகனுக்குப் பாடஞ் சொல்லிக்கொடுத்து வந்தான். போதகருடைய வீட்டிற் போதகரும் மகள் நேசரத்தினமும் அவருடைய மகன் சாமுவேலும் ஒரு வேலைக்கார மனுஷியுமே வசிப்பவர்கள். அவருடைய மூத்தமக்களிருவரும் தத்தங் கணவருடன் பிற இடங்களில் வசித்தனர். கோபாலன் சாமுவேலுக்குப் பாடஞ்சொல்லிக் கொடுக்கும்போது சிற்சில சமயங்களில் அச் சிறுவனுடைய தமக்கையாகிய நேசரத்தினமும் அங்கே வந்து கேட்டுக்கொண்டிருக்கும் வழக்கமுண்டு. போதகர் மிகவும் முயற்சியுள்ள மனுஷன்; அவர் கருமார்த்தமாகப் பெரும்பான்மையும் வெளியே சென்றுவிடுவார்; அதிலும் பின்னேர வேளையில் அவர் வீட்டில் நிற்பது மிக அரிது; நேசரத்தினம் கோபாலனிடத்தில் அன்பும் மரியாதையும் பாராட்டி வந்தாள்; கோபாலன் விபரீதமின்றிச் சகோதரபாவமான மரியாதை அந்தச் சிறுமியிடம் பாராட்டி வந்தான். கோபாலனிடத்து நேசரத்தினத்திற்கிருந்த அன்பானது காலகதியிற் காதலாக மாறத் தலைப்பட்டது. இதற்காகவே பெண்கள் ஏகாந்தமாக விருக்குமிடத்தில் எப்படிப்பட்ட ஆடவருஞ் சஞ்சரிக்க வொண்ணாதெனப் பெரியோர் சொல்லினர். ஆனாற் கோபாலனிடத்தில் அச் சமயத்தில் அப்படிப்பட்ட மாறுதலில்லையாம். அவன் உலகந்தெரியாத சிறுவன். பாடஞ் சொல்லிக் கொடுக்கும்படி போதகர் வீட்டிற்குப் போகுஞ் சமயத்திற் சாமுவேல் சிறிது தாமதமாய் வந்தாலும், நேசரத்தினம் கோபாலன் குரல் கேட்டமாத்திரத்தே ஓடி வந்து அவனை உபசரிப்பாள்; சுகம் விசாரிப்பாள்; சாமுவேல் வந்து படிக்கும்போதும் சகோதரி இயன்றவரையில் தானுங் கூட இருந்துகொள்ளுவாள். தேநீர் கோப்பி முதலிய பானங்களைக் கோபாலனுக்குக் கொண்டுவந்து கொடுக்க நேசரத்தினத்திற்குப் பிரியம்; ஆனால் கிறிஸ்தவர் வீட்டில் சைவப் பிள்ளையாகிய கோபாலன் பானஞ்செய்ய உடன்படுவானோ என்ற அச்சத்தினால் அவள் கேட்கத் துணியவில்லை. ஒருதினம் அவள் ஒரு தோடம்பழத்தைக் கோபாலனுக்கு முன் கொண்டுவந்து, "உபாத்தியாயர், எங்களிடம் தோடம்பழந் தின்னலாந்தானே" என்றாள். "ஓம் உண்ணலாம், தடையில்லை" என்று கோபாலன் சொல்லுதலும், நேசரத்தினம் தானாகவே அந்தத் தோடம்பழத்தை உரித்து அவனிடங் கொடுக்க, அவன் அதை வாங்கிச் சாமுவேலுக்கும் நேசரத்தினத்திற்குஞ் சில சுளைகளைக் கொடுத்துத் தானும் உண்டான்.

"எறும்பூரக் கல் தேயும்" என்பது பழமொழி. கோபாலன் ஓய்வுநாளாகிய ஞாயிற்றுக்கிழமைகளிற் போதகர் வீட்டிற்குப் பாடஞ் சொல்லிக்கொடுக்கப் போவதில்லை. அப்படி ஞாயிற்றுக் கிழமையில் அங்கே போகாமலிருப்பது அவனுக்குச் சிறிது கிலேசம்போல நாளடைவிற் காணப்பட்டது. பாடஞ் சொல்லிக்கொடுக்கப் போகாவிட்டாலும் சும்மா ஞாயிற்றுக்கிழமையிலே போனாலென்ன என்று அவன் நினைத்தான். ஒரு ஞாயிற்றுக்கிழமை பகல் இரண்டுமணி வரையிற் கோபாலன் அங்கே போனான். நேசரத்தினத்திற்கு அவனைக் காத்திராப்பிரகாரம் அத்தினத்திற் கண்டமை பேரானந்தமாக விருந்தது. அவள் கண்டவுடன் அவனைப் பெரிதும் உபசரித்து, "என்ன, உபாத்தியாயர், என்றும் இல்லாத வழக்கம் இன்றைக்கு இங்கே வந்தது" என்று புன்னகையோடு கேட்டாள். "ஏன், வரக்கூடாதோ" என்றான் கோபாலன். "ஐயோ! நூறு முறையும் வரலாம்; அதற்கல்ல, முந்தி ஒருபோதும் ஓய்வு நாளில் வருவதில்லை, இன்றைக்கு வந்தபடியாற் கேட்டேன்; கேட்டதையிட்டுக் குறை நினைக்க வேண்டாம்" என்று நேசரத்தினஞ் சொன்னாள். "இந்த மார்க்கமாக, என்னுடன் படிக்கும் இராசையா வீட்டிற்குப் போய் மீண்டு வரும்போது இங்கே வந்தேன்; வேறொன்றுமில்லை" யென்றான் கோபாலன். ஆனால், இவன் சொன்னது அத்தனையும் பொய்; இவன் போதகர் வீட்டிற்கென்றே வந்தவன்.

* * *

ஐந்தாம் அத்தியாயம்

காதலர் இருவர் பேசிக்கொண்டிருப்பதற்கிடையில் நேரம் அவர்களையறியாமல் விரைவில் நழுவி விடுகிறது என்னுங் கருத்தமைந்த ஒரு ஆங்கிலப் பழமொழி உண்டு. கோபாலனும் நேசரத்தினமும் பலவிஷயங்களையும் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது போதகர் வீட்டு மணிக்கூட்டில் நாலுமணியடித்தது. கோபாலன் நேசரத்தினத்தைப் பார்த்து, "குறைநினைக்க வேண்டாம், நாலுமணியாய்விட்டது; நான் ஆவசியகம் பார்க்கவேண்டிய வேறு கருமங்களுண்டு; இனிமேல் வருகிறேன்; உமது அருமையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தையும் நான் வீணாக்கிவிட்டேன்; இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமையானபடியால் நீங்களும் தேவ வழிபாட்டிற்குப் போகவேண்டுமென்று நினைக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு போவதற்கு எழுந்தான். "தேவ வழிபாட்டிற்கு இன்னமும் நேரமிருக்கிறது; நீர் ஆவசியகம் போகவேண்டியிருந்தாற் போகத்தானே வேண்டும் இனிமேலும் ஞாயிற்றுக்கிழமைகளில் இந்தப்பக்கமாக வந்தால் நல்லது; பேயோடுபழகினும் பிரிதல் அரிதென்றபடி, ஏதோ நாங்கள் ஒருவரோடொருவர் பழகிக்கொண்டபடியினால் ஒருவரையொருவர் காணாதபட்சம் கவலை யேற்படுகின்றது; ஆனால் உமது மனம் எப்படியோ அறியேன்" என்று சிறிது யோசனையோடு நேசரத்தினம் மொழிந்தாள்; போகும்படி எழுந்த கோபாலன் பழையபடி நாற்காலியில் உட்கார்ந்தான். "நேசம்! உமக்கு மாத்திரம் என்னிடத்து அன்புண்டு; எனக்கு உம்மிடத்தில் அன்பில்லையென்று எண்ணிக்கொள்ளவொண்ணாது; என்னைப்போல நீரும் ஒரு வாலிபனாயிருந்தால் நாங்களிருவரும் ஒருவரையொருவர் விட்டுப்பிரியாத ஆருயிர் நண்பராகவிருந்து வருவோம். எங்கள் இருவர் விஷயத்திலும் ஒருவர்மீது ஒருவர் எத்துணை அன்புடையவர்களாயிருந்தாலும், மனசளவில் இருக்க வேண்டுமேயன்றி வெளியிற் பாராட்டுதல் முடியாது. உலகம் விபரீதமாக நினைக்கும்; பெற்றார் சுற்றத்தவர் சந்தேகப்படுவர்; நான் ஆண்பிள்ளை, என்னைப்பற்றிக் காரியமில்லை, உம்முடைய பெற்றாரும் உம்மைக் குறை சொல்வர்; நீர் குறைகேட்பதற்கு நான் காரணனாயிருப்பது சரியல்ல, இவைகளை நினைத்து நான் இங்கே சும்மாநேரத்தில் வரப்பயப்படுகிறேனே யல்லாமல், இங்கு வருதற்கும் உம்மோடு கலந்து பேசுவதற்கும் எனக்கு வேறு ஒரு தடையுமில்லை யென்று அவன் சொன்னான்.

கோபாலன் கூறிய இந்த வார்த்தைகள் நேசரத்தினத்திற்குச் சிறிது கவலையை உண்டாக்கி விட்டன. கோபாலன் தன்னிடத்திற் பாராட்டும் அன்பிற்கும், தான் அவனிடத்தில் வைத்திருக்கும் அன்பிற்கும் சிறிது பேதம் உண்டென்பதை அவள் உணர்ந்துகொண்டாள். அவள் அவனை நோக்கி, "மனம் சுத்தமாகவிருந்தாற் போதும்; எதற்கும் மனந்தான் காரணம்; இங்கு நீர் வந்திருந்து என்னுடன் பேசுவதையிட்டு என்பிதாவும் பந்துக்களும் விபரீதம் நினைக்கமாட்டார்கள்; உலகம் பலவிதம், ஊரார் வார்த்தை எல்லாவற்றிற்குஞ் செவிகொடுத்தால் ஒன்றும் முடியாது; சைவர்களாகிய உங்களுடைய பெண்களுள் அநேகர் ஆடவர்களைக் கண்டால் வீட்டினுள் ஓடியொளிக்கும் வழக்கமுடையவர்களாக இந்தக்காலத்திலுங் காணப்படுகின்றார்கள், நாங்கள் அப்படியோடி ஒளிப்பதில்லை.

"நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு - நெஞ்சிற்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்"

ஓடி யொளிப்பவர்களிடத்திலேதான் காரியம் இருக்கிறது. எங்களிருவருக்குமிடையேயுள்ள நேசத்தைப் பிறர் அறியார்; ஆதலால் மற்றவர்களுடைய சொல்லைக் கேட்டுக்கொண்டு நீர் என்னை மறந்துவிடக்கூடாது, எதற்கும் மனமுண்டானால் இடமுண்டு" என்று கூறி முடித்தாள். இவற்றையெல்லாங் கேட்டுக்கொண்டிருந்த கோபாலன் யாதும் பதில் பேசாதவனாய், சரி, நான் போய்வருகிறேன். நாளைப் பின்னேரம் மீண்டும் இங்கே வருவேன்றானே, இன்னும் ஆறுதலாகப் பேசிக்கொள்வோம்" என்று சொல்லி நேசரத்தினத்திடம் அநுமதி பெற்றுச் சென்றான். செல்லும்போது கோபாலனுக்கு அதிக யோசனை ஏற்பட்டுவிட்டது; நேசரத்தினங் கூறிய வார்த்தைகளிற் சில அவனுக்கு விபரீதமாகத் தோற்றின. "நான் இப் பெண்ணிடத்து வஞ்சகமில்லாத அன்புபாராட்டி வருகின்றேன்; நேசம் இன்று சொன்ன வார்த்தைகள் சில வித்தியாசமாக விருக்கின்றனவே; என் விஷயத்தில் அவள் அப்படியேதும் வித்தியாசமாக நினைத்திருப்பாளா, இல்லை! இல்லை! ஒருபோதுமில்லை; அப்படியிருந்தால் "மனஞ் சுத்தமாயிருந்தாற் போதும்" என்று சொல்வாளா! "நஞ்சுடைமை தானறிந்து..." என்ற பாட்டைப் படிப்பாளா! இப்படியெல்லாமிருக்க நான் ஏன் விபரீதமாக நினைக்கவேண்டும்; ஆனால், நேசம் சொன்ன வேறு சில வார்த்தைகள் ஒரு விதமாகவிருக்கின்றனவே; என்னை மறந்துவிடக்கூடாது என்றாள்; மனமுண்டானால் இடமுண்டென்று சொன்னாள்; இந்த வாக்கியங்களை அவள் சொன்ன நோக்கமென்ன? ஒன்றுந் தெரியவில்லையே; "கானாருந் தெரியற் கடவுளருங் காண்பரோ மானார் விழியார் மனம்" என்றபடி, பெண்களுடைய மனநிலையை உள்ளபடி கண்டு உணர்தல் அசாத்தியம்; அதிலும் என் போன்ற உலக அனுபவமில்லாத வாலிபருக்கு அசாத்தியத்திலும் அசாத்தியமாகும். எல்லாவற்றையும் இருந்து அறிவோம்; இப்பொழுது என் சிந்தையை இந்த விஷயங்களில் விட்டால் என் படிப்பிற்குப் பங்கம்வரும்; "கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்;" என்று யோசித்துக்கொண்டு தன் வீட்டையடைந்தான். மற்றைய எந்தக் கருமத்தையுந் தன் தாய்க்குச் சொல்லுங் கோபாலன், நேசரத்தினத்துக்கும் தனக்குமிடையேயுள்ள சினேகத்தை ஒருவகையிலேனும் தாய்க்குச் சொன்னானல்லன்; நேசரத்தினம் என்ற பெயருடன் குட்டித்தம்பிப் போதகருக்கு ஒரு மகள் உண்டென்பதைத்தானுஞ் சொன்னானல்லன். தொடக்கத்திலே அஃது ஒரு அற்பமான காரியமென்று நினைத்துத் தாய்க்குச் சொல்லாதுவிட்ட கோபாலன், காலஞ்செல்ல, தாய்க்குத் தெரிவிக்க வொண்ணாதென்று நினைத்தே சொல்லாதொழிந்தான்.

★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாம் அத்தியாயம்

தான் கொண்டிருக்கின்ற நோக்கத்தைக் கோபாலனும் உள்ளபடி அறிந்திருக்கின்றானோ இல்லையோ என்ற விஷயத்தில் நேசரத்தினத்திற்கு நெடுநாளாக ஒரு சந்தேகமிருந்தது. அவள் கோபாலன் தன்னந்தனியே யிருக்கும்போது வார்த்தையாடுவாள், மிகச் சமீபத்திற் செல்வாள்; அவன் கொண்டுவந்த குடை கெடியாரம் என்னும் இவைகளை வேடிக்கையார்த்தமாக மறைத்து வைத்துவிட்டு, ஏன் இன்றைக்குக் குடை கொண்டுவரவில்லை, கெடியாரங் கொண்டுவரவில்லை யென்று கேட்பாள்; கோபாலன் சிரித்துவிட்டுச் சும்மாவிருப்பானேயன்றி வேறு யாதும் பேசான். பின்னர் நேசரத்தினம் "பரிகாசமாகாது" என்று சொல்லிவிட்டுத் தானே அவற்றைக் கொண்டுவந்து கொடுப்பாள்; இவைகளைக் கொடுக்கும்போது அவளுடைய கரம் பெரும்பான்மையும் தற்செயலாகப் படுவது போல் அவன்மீது படுவதுமுண்டு. ஆனால் இந்தச் செயல்களினால், கோபாலனுடைய மனக்கிடக்கையை அறிதல் நேசரத்தினத்திற்கு முடியாத காரியமாக விருந்தது; இவனுடைய உள்ளக் கருத்தை எவ்விதத்திலும் முற்றாக அறியவேண்டுமென்பதே நேசரத்தினத்தின் பேராசை. இதற்கிடையிற் குட்டித்தம்பிப் போதகர் சும்மாவிருக்கவில்லை; தாம் வைத்த பொறியில் எலி யகப்பட்டுவிட்டதோ வென்பதை இடையிடையே ஆராய்ந்து கொள்வார். (நேசரத்தினமே போதகர் வைத்த பொறி, சாமுவேல் என்னும் இளைய மகன் பொறியில் வைக்கப்பட்ட இரை, கோபாலனே எலி)

இங்ஙனமாக, ஒரு தினம் கோபாலன் வழக்கம்போற் போதகர் வீட்டிற்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்கப் போனான். வெளி விறாந்தையில் ஒருவரையுங் காணவில்லை. தான்வரமுந்தியே தன் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு மணித்தியாலக்கணக்காக நிற்கும் நேசத்தையுங் காணவில்லை, சாமுவேலையுங் காணவில்லை; ஏதோ கருமார்த்தமாக உள்ளே நேசரத்தினம் நிற்கக்கூடுமென நினைத்து, கதவிற் சுண்டினான்; யாரோ அடிவைத்து நடந்துவரும் அரவங் கேட்டது; இவன் நேசரத்தினந்தான் வருகின்றாள் என்று எண்ணிக்கொண்டு மிக ஆறுதலாக விருந்தான்; வந்தது நேசரத்தினமல்லள்; போதகர் வீட்டு வேலைக்காரமனுஷி; "உபாத்தியார், இப்போது தான் தம்பி கோப்பிகுடிக்கிறது, இதோ வந்துவிடும் என்று சொல்லிவிட்டு மீண்டு அந்தமனுஷி உள்ளே போய்விட்டாள்; சாமுவேலுஞ் சில நிமிஷஞ் செல்லப் புத்தகங்களுடன் தலைவாசற்புறத்து வந்தான்; சாமுவேல் வந்தாலும் வராவிட்டாலும் படித்தாலும் படியாவிட்டாலும் கோபாலனுக்கு அதனால் யாதுங் கவலையில்லை; அவனுடைய மனம் எங்கே சென்றிருந்ததென்பதை நாமெல்லோமும் இப்போது அறிவோமல்லவா; நேசரத்தினத்தைப்பற்றி உடனே விசாரித்தாற் சாமுவேல் ஏதும் சந்தேகப்படுவான் என்று எண்ணிப்போலும், கோபாலன் பத்துநிமிஷ நேரம் அவனைப் படிப்பித்துவிட்டு, ஆவலற்றவன் போல நடித்துக் கொண்டு, "எங்கே, சாமுவேல், இன்றைக்கு உன் அக்காவைக் காணவில்லை" யென்று கேட்டான். "அக்கா தலையிடிக்கிறதென்று படுத்திருக்கின்றா" என்று சிறுவன் மறுமொழி சொன்னான், "மெய்தானோ" என்று சொல்லிவிட்டுக் கோபாலன் பின்னரும் பாடஞ் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தான். கோபாலனுடைய மன நிலையை அந்த நேரம் எதற்கு ஒப்பிடலாமென்றால், தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம் நடக்கப் போகிறதென்பதைக் கேள்வியுற்ற நளமகாராசன், இருதுபன்னனுடன் சாரதியாகச் சென்று தன் மாமனாகிய வீமராசனுடைய மாளிகையின் ஒருபுறத்துச் சமையற்றொழில் செய்து கொண்டிருக்கும்போது, தமயந்தி விஷயமாக அவனுடைய மனநிலை எப்படியிருந்ததோ, அந்த நிலைக்கு இதனையும் ஒப்பிடலாகும். கோபாலனுக்கு உள்ளே போய் நேசரத்தினத்தைப் பார்க்கப் பிரியம்; ஆனால் அங்குள்ளார் ஏதும் விபரீதம் நினைத்தல் கூடும் என்ற அச்சம் அவனை அங்குப் போகவொட்டாது தடுத்தது; நேசரத்தினம் தன் சுகவீனத்தைப்பற்றித் தம்பியிடம் ஏதுஞ் சொல்லி யனுப்புவாளென்று காத்திருந்தான், அப்படியு மொன்றுமில்லை; இவன் பாடஞ்சொல்லிக் கொடுத்துவிட்டுப் போதற்காகிய நேரஞ் சமீபித்து விட்டது; கோபாலன் அதிகம் யோசித்து விட்டு, சாமுவேலைப் பார்த்து, "உபாத்தியாயர் போகிறாராம் என்று மெல்ல உன் அக்காவிடஞ் சொல்லு" என, அவனை அனுப்பிவிட்டு, பின்னருஞ் சிறிதுநேரம் அங்கு நின்றான். இரண்டு நிமிஷஞ் செல்ல, நேசரத்தினம் வாடிய முகத்துடன் தலைவாசற்புறத்துக்கு வந்து கதவோரத்தில் நின்றாள். கோபாலனுடைய மனத்திலிருந்த கவலை முழுவதும் நீங்கிவிட்டது.

வந்து நின்ற நேசரத்தினம் ஐந்து நிமிஷம்வரையிற் கோபாலனுடன் யாதும் பேசினாளல்லள்; வழக்கம்போற் புன்னகை செய்தாளுமல்லள். "நேசம், என்ன, உமக்கு ஏதோ சுகமில்லையென்று சொன்னார்களே, என்ன சுகவீனம்? முகம் மிகவும் வாட்டமாயிருக்கின்றதே" என்று கோபாலன் மிக்க பரிவுடன் கேட்டான். "அப்படி அதிக சுகவீனமொன்றுமில்லை; இன்று முழுவதும் சிறிது தலைவலியாக விருந்தது; அதனாலேதான் படுத்துக்கிடந்தேன்" என்றாள். "நீர், வழக்கம்போல் இந்தப்பக்கம் இன்றைக்கு வராதது எனக்குப் பெரும் மனவருத்தமாகவிருந்தது; தினமுங் கண்டவர்களைக் காணாவிட்டால் அது மனத்திற்குப் பெரும் வேதனை; உமக்கு ஏதோ அதிக சுகவீனம் போலும் என்று எண்ணிவிட்டேன்" எனப் பின்னருங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபாலன் சொன்னான். "சுகவீனம் அதிகமல்ல; சுகவீனத்தினால் நான் இந்தப் பக்கத்திற்கு வராமல் விடவில்லை; ஆவசியகமில்லாமல், ஆண்களோடு வார்த்தையாடிக்கொண்டு நின்றால் உலகம் குற்றஞ் சொல்லு மென்பதையிட்டே நான் இன்று இந்தப் பக்கத்திற்கு வராமல் விட்டேன்; ஒரு காரியத்தைச் செய்து விட்டுக் குற்றங் கேட்கலாம்; ஒன்றுமில்லாமல் ஏன் ஊரிற் குற்றங் கேட்பான்" என்று நேசரத்தினம் புகன்றாள். நேசரத்தினம் அப்பொழுது சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் கோபாலன் காதில் முள்ளுப்போலத் தைத்தது. அதுவுமன்றி, அன்பென்னுந் தேனுடன் கலந்து ஆதரவோடு ஒன்றொன்றாக நேசரத்தினத்தின் வாயினின்றும் வழக்கமாக எழும் வார்த்தைகள் அச்சமயத்தில் அங்ஙனம் பேசப்படவில்லை; இதுவும் கோபாலன் மனசிற் பெருஞ் சஞ்சலத்தை விளைத்தது; அவன் கொஞ் சநேரம் யோசித்தான்; நேசரத்தினத்தின் உள்ளத்தில் யாதும் மாறுபாடு ஏற்பட்டிருத்தல் கூடுமோவெனச் சிந்தித்தான்; இல்லையேல் அவளுடைய பிதா இவ்விஷயமாக யாதும் அவளைக் கண்டித்திருப்பரோ வெனக் கிலேசப்பட்டான். "நேசரத்தினத்தை நாம் குற்றமாக நினைப்பது தவறு; அவள் சொல்வது அத்தனையுஞ் சரி; ஒரு வாலிபனும் யௌவனமுடைய பெண்ணும் ஒருநாள் இரண்டுநாட்களாகவல்ல; எப்பொழுதும் ஏகாந்தமாக வார்த்தையாடிக் கொண்டிருப்பதைக் கண்டால், கண்டவர்கள் சந்தேகங் கொள்வார்களல்லவா? "காணவே, பனைக்கீழ் ஆப்பால் குடிக்கினும் கள்ளேயென்பர்" எனக் கோபாலன் இப்படித் தன்னுட் பலவாறு யோசித்தான். கோபாலன் மனசில் யோசனை தொட்டிருப்பதை நேசம் அவனுடைய முகத்தின்வாயிலாக அறிந்து கொண்டாள். இந்தவிதமான எண்ணங்களெல்லாங் கோபாலன் மனசில் நிகழ்ந்தனவேனும், நேசத்தின்மேல் வைத்த பாசத்தையும் விசுவாசத்தையும் விடுவதற்குக் கோபாலனுடைய மனம் இடங்கொடுக்கவில்லை; கோபாலன் நேசரத்தினத்தைப் பார்த்து, "நேசம், இனிமேல் நான் இங்கே வரும்போது நீர் அதிகமாக இந்தப் பக்கத்திற்கு வரமாட்டீர் என நினைக்கிறேன்; ஞாயிற்றுக்கிழமைகளிலும் நான் இங்கே வருவது சரியல்ல" என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டான்.

"ஐயோ, நீங்கள் மனவருத்தப்படுகிறீர்கள் போலிருக்கிறது; நான் சொன்னதில் ஏதும் தவறுண்டோ என்று நீங்களே யோசித்துப் பாருங்கள்; நாம் வஞ் சகமில்லாமல் நடந்து கொண்டாலும் உலகத்தைப் பார்க்க வேணுமல்லவா? ஒருவரை யொருவர் கண்டு பேசினாற்றான் அன்புண்டென்ற விளக்கமா; மனசில் விசுவாசம் எப்பொழுதும் இருக்குந்தானே; சூரியன் உதிப்பதெங்கே; தாமரைப்பூ இருப்பதெங்கே; முகிற் படலத்தாற் சூரியன் மறைக்கப்பட்ட காலத்தும் தாமரை மலருகின்றதுதானே; எங்கிருந்தாலும் ஒருவர் மேலொருவர் அன்பிருந்தாற் போதும்; நாங்கள் இருவரும் இருந்து வார்த்தையாடுவதையிட்டு உலகத்தவராற் குற்றஞ்சொல்ல முடியுமேயன்றி, அந்தரங்கமாக எங்களிருவருக்குமிடையேயுள்ள அன்பைக் கண்டு பிடித்துக் குற்றஞ்சொல்ல முடியுமா? இப்பொழுதுமென்ன, ஒரு வாரத்திலோ, ஒரு மாசத்திலோ ஒரு நாளைக்காயினும் உங்களைப் பார்க்கமாட்டேனா; உங்களுடன் வார்த்தையாடமாட்டேனா? நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம்; இப்பொழுதும் நீங்கள் நினைத்தால் இப்படிப் பதுங்கவும் வேண்டியதில்லை; ஒதுங்கவும் வேண்டியதில்லை; அந்த எண்ணங்களெல்லாம் எதற்கு; கிட்டாதாயின் வெட்டென மற" என்று நேசரத்தினம் மிக்க ஆதரவோடும் கனிவோடும், பூவுதிர்ந்தாற்போல ஒவ்வொரு வார்த்தையாகச் சொல்லி, ஈற்றில் ஒரு பெருமூச்சோடு தன் பேச்சை முடித்துச் சிறிது கண்கலங்கி நின்றாள். நேசத்தின் வார்த்தைகள் கோபாலனுடைய உள்ளக் கவலையை அதிகரிக்கச் செய்தன. அவள் இறுதியிற் கூறிய சொற்கள் சில அவனுடைய மனசிற் பெரும் யோசனையை உண்டாக்கிவிட்டன. "இப்பொழுதும் நீங்கள் நினைத்தால் இப்படிப் பதுங்கவும் வேண்டாம், ஒதுங்கவும் வேண்டாம், கிட்டாதாயின் வெட்டெனமற" என்று கூறினாளே; இவைகளின் அர்த்தம் புலப்படவில்லையே; மகளிரோடு ஊடாடும்போது கண்ணாடிப் பாத்திரங்களோடு ஊடாடுமாபோல் அவதானமாக இருக்க வேண்டும் என்று யோசித்துக்கொண்டு, "நேசம், நீர் கடைசியிற் சொன்ன சொற்கள் எனக்குப் புலப்படவில்லை, உமது மனசில் ஏதும் இருந்தால், அதனை வெளிப்படையாகச் சொல்லிவிடவேண்டும்" என்றான்.

நேசரத்தினம், அதிக நாணத்தோடு கூடினவளாக நெடிதுநேரம் யோசித்துக் கொண்டு நின்று விட்டுப் பின்னர்க் கோபாலனை நோக்கி, "நீங்கள் நாளைக்கு இங்கே வருவீர்கள்தாமே, அப்பொழுது எல்லாம் யோசித்துக்கொள்வோம்" என்றாள். கோபாலன் "இப்படிச் சாவகாசமாக இனிமேல் நாங்கள் பேசமுடியாது; நாளைக்கு வருவேன்; ஆனால் இனிமேல் இருவரும் இருந்து வார்த்தையாடுவது, நீர் சொல்லுகிறபடி சரியல்ல; நானும் அதனைத் தவிர்த்துக்கொள்ள விரும்புகிறேன்; உலகம் குற்றஞ் சொல்லாதபடி நடக்கவேண்டுமென்பதே எனக்கும் பிரியம்; ஆனபடியால், நீர் ஒன்றையும் ஒளியாமல் உமது உள்ளக்கருத்தை வெளியிடுவது நல்லது" என் றான். நேசரத்தினம் பெரிதும் நாணத்தோடு கூடினவளாய் நிலத்தைப் பார்த்தபடியே சிறிது ஒதுங்கி நின்று கையைக் பிசைந்துகொண்டு "நான் இவ்வளவு நேரமும் பேசியதன் சாரம் உங்களுக்கு விளங்காமலிருக்கிறதா; என்னுடைய வாயினாலே கேட்கவேணுமென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிவாதஞ் செய்கின்றீர்கள்; எங்களிருவருக்கு மிடையே ஒருவர்மேலொருவர் விசுவாசமிருக்கிறது; அதை நீங்களும் ஒத்துக் கொள்வீர்கள்; நாங்கள் இவ்வளவுகாலமும் ஒரு விதமான விபரீதமுமின்றி நடந்துகொள்ளவும் உலகம் உங்களை விபரீதமாக நினைத்துப் பேசுகின்றது; அந்தப் பேச்சு எங்கள் தகப்பனாருடைய காதிற்கும் எட்டியிருக்க வேண்டும்; அவர் என்னுடன் நேற்றுப் பொழுதுபடும்போது பேசிய சில குறிப்பைக்கொண்டு அப்படிச்சொல்லுகிறேன். இதற்கிடையில் சமய வித்தியாசமிருக்கிறதென்பதை நான் மறந்துபோகவில்லை; தகப்பனார் சாமானியமான கிறிஸ்தவராக விருந்தாலுங் காரியமில்லை; அவரோ ஒரு போதகர்; அப்படியிருக்க, அவருடைய மகளாக விருந்து கொண்டு நான் சமயம் மாறுவது சரியல்ல; உங்கள் தாயார் இலேசில் இதற்குச் சம்மதிக்க மாட்டார் என்பதும் எனக்குத் தெரியும்; என்னை வேண்டுமானால் இவைகளெல்லாவற்றையுஞ் சரிப்படுத்துவது உங்கள் கடமையேயாகும்; இவைகளையெல்லாம் அல்லும் பகலும் நான் தன்னந்தனியே இருந்து ஆலோசித்ததன் பலனாகவே இன்று முழுவதும் எனக்குப் பெருந் தலைவலி ஏற்பட்டது; இப்பொழுது உங்களோடு பேசிக்கொண்டு நிற்பதால் எனக்கு வருத்தந் தோற்றவில்லை; தாவிப் படரக் கொழுகொம்பிலாத தனிக் கொடிபோல் (என்) பாவித் தனிமனந் தள்ளாடி வாடிப் பதைக்கின்றது. இந்தச் செய்தியெல்லாம் உங்களுக்குச் சொல்லவேண்டுமென்று சமயம் பார்த்திருந்தேன்; இப்பொழுது சொல்லிவிட்டேன். இனி நீங்கள் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனால் உங்களிடத்திலுள்ள விசுவாசத்தினாலேயே, கன்னிகைபோல் வாழும் நான் என் கருத்தை வாய் திறந்து வெளியிட்டேன்; இப்படியாக இன்னொருவருடன் ஒருநிமிஷந்தானும் வார்த்தையாட மாட்டேன்" என்றாள்.

நேசரத்தினம் கூறிய வார்த்தைகளைக் கேட்ட கோபாலன் சிறிதுநேரம் யாதும் பேசாமற் சித்திரப் பாவைபோல் அசைவற்று யோசனையில் மூழ்கியவனாக விருந்தான். நேசரத்தினத்திற்கும் தனக்குமிடையேயுள்ள நேசம் முற்றிப் பழுத்து விட்டதேயென்பதை அவன் அப்பொழுதுதான் அறிந்தான். அவள் கேட்டகேள்விக்கு இசைவதற்குப் பல இடையூறுகள் உண்டென்பது உண்மையாயினும், அவள் சொல்லிய நியாயங்கள் தக்கன என்று அவன் மனசிற் புலப்பட்டது. நேசத்தின் உள்ளக்கருத்தை அறிந்தும் அறியாதான்போல நடத்தல் இனி முடியாதென்று நிச்சயித்துக் கொண்டு கோபாலன் அதிக சிந்தனையோடு அவளைப் பார்த்து "நேசம், நீர் உமது உள்ளக்கிடக்கை யெல்லாவற்றையும் ஒளியாது வெளியிட்டமையினால், நானும் என் மனக்கருத்தை வஞ்சகமின்றி உமக்குச் சொல்ல வேண்டுமென்பது நியதியாகும். நான் உங்கள் வீட்டிற்கு வந்த போது கொண்டுள்ள நோக்கம் வேறு, உம்மோடு ஆரம்பத்தில் நான் வார்த்தையாடத் தொடங்கிய போதும் இப்படியேதும் விபரீதம் வருமென்று நினைத்திருந்தேனல்லேன். எறும்பூரக் கல் தேயும் என்றபடி காலகதியில் இருவருக்கிடையிலும் உண்மையான சிநேகம் உண்டாகி இப்பொழுது இவ்வளவாகமுற்றி விட்டது; இதனையெண்ணிப் போலும், பெண்கள் தனியே இருக்குமிடத்தில் ஆடவன் ஒருபோதும் இருந்து வார்த்தையாட வொண்ணாதெனப் பெரியோர் கூறியிருக்கின்றனர். ஆனால் நடந்து முடிந்ததையிட்டு இனி யோசிப் பதினால் ஆவது யாதுமில்லை.

"மறுத்துரைப்பது கடனன்று மாந்தருக்
கறத்தியல் ஆர்கணும் அமைதல் வேண்டுமால்"

என்று குந்திதேவி தன் மைந்தனாகிய வீமனுக்கு இடும்பை யென்னும் பெண்விஷயமாகச் சொன்ன பிரகாரம், ஆண்பிள்ளையாகிய நான் மணஞ் செய்து கொள்ளுதல் வேண்டுமென்பது தருமமாயினும், உம்மை விவாகஞ் செய்யும் பட்சத்திற் பல இடையூறுகள் இருக்கின்றன; இருவருக்குமிடையிற் சமயபேதமுண்டு; மேலும் நீர் யௌவனத்தோடு கூடியிருந்தாலும் - சொல்லுகிறேன் என்று குறை நினைக்கவெண்ணாது - கைம்மையாக விருக்கின்றீர்; என்னிடத்தில் இப்பொழுது பொருளில்லை; உமது தந்தையாரின் விருப்பம் என்னவென்று உமக்குந் தெரியாது; இவைகளெல்லாவற்றிற்கும் மேலாக என்னுடைய தாயார் இருக்கின்றார்; நான் சிறுபிள்ளையாகவிருக்குங் காலத்தில் என் தாயாரே தகப்பனும் தாயுமாகவிருந்து படாத கஷ்டமெல்லாம் பட்டு என்னை ஆதரவோடு வளர்த்து ஏதோ படிப்பித்து இந்த நிலைமையிலும் கொண்டுவந்து விட்டவர்; இன்னமும் என்னுடைய படிப்பை நான் முடித்துக் கொள்ளவுமில்லை; என் தாயாருக்கு இந்த விஷயம் எள்ளளவுந் தெரியாது; அவர் இதற்கு ஒருபோதுஞ் சம்மதிக்கமாட்டார்; இது நிச்சயம்.

"தந்தைசொல் மறுப்பவர்கள் தாயுரை தடுப்போர்
அந்தமறு தேசிகர்தம் ஆணையை இகந்தோர்
வந்தனைசெய் வேதநெறி மாற்றினர்கள் மாறாச்
செந்தழல வாயநிரை யத்தினிடை சேர்வார்"

என்று எங்கள் கந்தபுராணத்திற் சொன்ன பிரகாரம் என்னரிய தாயாரின் சொல்லைத்தட்டி நான் எதனையுஞ் செய்தல் முடியாது; நீரும் என்னிடத்தில் உண்மையான அன்பு பாராட்டுகின்றீர்; நானும் அப்படியே; நேசம், உண்மையாக இந்த விஷயத்தில் எனக்கு என்னசெய்வதென்று தெரியவில்லை; எல்லாம் விதியின்படியே நடக்கும்" என்று கோபாலன் சொல்லிப் பெருமூச்சுவிட்டான்.

பெண்ணாகப் பிறந்த ஒருத்தி எவருடனும் பேசத்தகாத இந்த விஷயத்தை, உங்களிடம் வாய் திறந்து பேசத் தொடங்கிய நான் இடையில்விடாது முற்றமுடியப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிவிடுவது உசிதமென்று நினைக்கிறேன்; நீங்கள் இங்கே வரத் தொடங்கிய நாட்களில் நான் என் மனத்தில் இப்படியாக ஏதும் எண்ணம் வைத்திருந்தவளல்லேன்; கொடிகள் சமீபத்தில் நிற்கும் மரத்திற் படருமென்றபடி, நாளடைவில் என் சிந்தை என்னையறியாமலே உங்களிடஞ் சென்றுவிட்டது; மேலும் பெண்களுடைய மெல்லிய இடைபற்றியுஞ் சாயல் பற்றியும் தமிழ்ப் புலவர்கள் பெண்களைக் கொடிக்கு ஒப்பாகச் சொல்லுவர்; பெண்கள் கொடிபோல்வார் என்று சொல்வதற்கு அவர்கள் சொல்லுங் கருத்தும் அமைந்ததே; ஆனால் அதிலும் பார்க்க மேலான இன்னொரு கருத்து இருக்கின்றதென நான் நெடுநாளாக ஆராய்ந்ததைக்கொண்டு இப்பொழுது சொல்லுகிறேன்; நான் சொல்வது சரியென்பதைப் பின்னர் நீங்களும் ஒத்துக் கொள்வீர்கள்; கொடிகள் சமீபத்தில் நிற்கும் மரத்திற் படருகின்ற தன்மைபோல, மாதரும் தங்களிடத்து இங்கிதம் பேசுபவர்மீது அன்பு வைப்பரென்பது பஞ்சதந்திரம். இதனாலும் அவர்களைக் கொடிகளுக்கு ஒப்பிடலாகும். இதுவுமன்றி, கொடிகள் கொழுகொம்பின்றித் தாமே நிற்குந் தன்மையில்லாதவாறு, பெண்களும் சிறு பிராயத்தில் பிதா, இல்லையேல் தமயன் முதலான சுற்றத்தார், அதன்பின்னர் நாயகன், அவனில்லாத காலத்திற் புத்திரர் என்னுமிவர்களுடைய ஆதரவின் கீழன்றித் தாமாக உலகத்திற் சஞ்சரிக்கு மாற்றல் இல்லாதவர்களென்பது மெய்; நான் கிறிஸ்தவளாக விருந்தாலும் இந்த விஷயத்திலே சைவர்களாகிய உங்களுடைய கொள்கையே சரியானதென்று நினைக்கின்றேன்; இதனாலும் மகளிரைக் கொடிகளுக்கு ஒப்பிடலாம்; இன்னும், கொடிகள் கொழுகொம்பில்லையாயின் நிலத்திற் கண்டபடி படர்ந்து வளர்ச்சிகுன்றி அதிகபயன்றரா தொழிதல்போல, பெண்களும் ஆடவருடைய அதிகாரத்திலில்லா தொழிவரேல் தம்மனம் போனவாறே சென்று சிற்சில சமயங்களில் தங்கள் குலத்துக் கீனத்தையும் விளைப்பவர்களாவர்; இனி, கொழுகொம்பு சமீபத்தில் இல்லையாயின் கொடி அயலில் நிற்கின்ற வேறு மரங்களிலே படர்தல் இயல்பாதல் போல பெண்களையும் விசேஷமாக யௌவன காலத்தில் நாயகன் தன்னுடனேயே வைத்துக் கொள்ளாது, உத்தியோக நிமித்தமாகவோ வேறுகாரணம் பற்றியோ தூரதேசத்திலே தான் மாத்திரஞ் சென்றிருப்பனேல், அதனால் அப் பெண்ணுக்கு அநர்த்தம் வருதல்கூடும். ஏன் யௌவன காலத்தை விசேஷமாகச் சொன்னேனென்றால், வயசு முதிரும் போது பெண்களுடைய முயற்சியும் நேரமும் மனமும் தங்கள் குழந்தைகளின் விஷயமாகவே யீடுபட்டிருக்கும். யௌவன காலத்தில் அப்படியல்ல. ஆனமையினால் ஒருத்தி பேரிளம் பெண்ணான பின்பு, அதாவது நாற்பது வயசு சென்ற பின்பு தன் பிள்ளைகளின் படிப்பின் பொருட்டேனும், அப் பிள்ளைகளுக்கு நன்மையான எக் கருமத்தின் பொருட்டேனும் நாயகன் சம்மதத்தோடு அவனைப் பிரிந்து பிள்ளைகளுடன் சொந்த ஊரில் இருத்தலாகும். இனி, சைவர்களாகிய உங்களுடைய கொள்கை பெண்ணானவள் தன் நாயகனை யிழந்துவிட்டாற் பின்னர் விவாகஞ் செய்ய வொண்ணாதென்பதாம்; கிறிஸ்தவராகிய எங்களுடைய கொள்கை பெண்களும் புநர் விவாகஞ் செய்யலாம் என்பதாம். யுகதருமத்தை அனுசரித்து நாங்கள் செய்வதும் பிழையல்லவென நினைக்கின்றேன், மேலும் சமயபேதத்தைப்பற்றிச் சொன்னீர்கள்; இந்தக் காலத்திலும் இங்கே சிற்சில இடங்களிற் புருஷன் சைவனாகவும் மனைவி கிறிஸ்தவளாகவும் இருக்கக் காண்கிறோம்; அதனாலென்ன, அவரவர் மனசிற்கு எது உண்மைபோலக் காணப்படுகின்றதோ அதன்படி நடப்பது தானே; நிற்க, உத்தியோகமில்லை, படிப்பு முடியவில்லை, பொருளில்லை யென்றீர்கள்; இவைகளையிட்டு யோசிக்க வேண்டியதில்லை, எங்கள் தகப்பனாரைச் சாமானியரென்று நினைக்க வேண்டாம்; தக்க உத்தியோகம் உங்களுக்கு ஒழுங்குசெய்ய அவரால் முடியும்; உங்கள் தாயாருடைய விஷயத்திலே கொஞ்சம் யோசிக்கத்தான் வேண்டும்; அந்த விஷயத்திலும் என் தகப்பனார் தலையிட்டால் உங்கள் தாயாருடைய மனத்தைத் திருப்ப முடியும் என்று நினைக்கிறேன்; அஃதன்றியும் ஒவ்வொருவரும் விவாக விஷயத்தில் தங்கள் தங்கள் "வசதி" யைப் பார்ப்பதல்லாமற் பெற்றாருடைய "வசதி" யைப் பார்க்கமுடியுமா? ஏதோ நான் சொல்லவேண்டியவற்றை யெல்லாஞ் சொல்லிவிட்டேன்; இவைகளையும் உங்கள் பேரிலுள்ள ஐக்கியத்தினாலேதான் சொன்னேனென்பதை நன்றாய் மனசில் வைத்துக் கொள்ளுங்கள்; என்னைப்பற்றி ஏதும் விபரீதமாக விளங்கிக்கொள்ள வொண்ணாது; அதிகநேரஞ் சென்றுவிட்டதாயினும் உங்களுடைய எண்ணத்தை எனக்கு இப்போதே வெளியிட்டு விட்டால் என்னுடைய மனம் ஆறுதலோடு கூடியிருக்கும்" என்று நேசரத்தினஞ் சொல்லி முடித்தாள்.

அந்தச் சமயத்திற் கோபாலன் பலாக்காய்ப் பாலில் அகப்பட்ட ஈயின் நிலைமையிலானான். நேசரத்தினம் கூறிய வார்த்தைகளைக்கொண்டு அவள் தான் முந்தி மதித்திருந்ததைக் காட்டிலும் அதிக விவேகமுடையவளென்றும், விஷயமறிந்தவளென்றும் நினைத்தான், அவளுடைய கொள்கைகள் முழுவதும் கிறிஸ்தவக் கொள்கைகளல்ல, சிற்சில சைவத்தையொட்டி யுள்ளனவென்று எண்ணினான்; இந்த எண்ணம் அவனுக்கு அவளிடத்து இதுகாறுமிருந்த சமயத் துவேஷத்தைக் குறைத்துவிட்டது; அவன் சிறிதுநேரம் ஆழ்ந்த சிந்தனையோடு இருந்துவிட்டுப் பின்னர் அவளைப் பார்த்து "நேசம், நீர் சொன்ன மற்றையவைகளை யெல்லாம் ஒருவாறு சரியெனக் கொண்டாலும், என்னுடைய தாயார் விஷயமாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னவைகளை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன்; ஓடும் பொன்னும் ஒப்பநோக்கிய மகாஞானியாகிய பட்டினத்துப் பிள்ளையாரும் தமது தாயாருடைய அந்திய காலத்திற் பெரிதுங் கலங்கி விட்டார்;

"ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்றபோதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பே னினி"

என்று சொல்லிப் பிரலாபித்து அவருடைய ஈமக்கடன்களை முடித்தபின்னரே தமது சந்மபூமியை விட்டு அப்புறஞ் சென்றார்; பெற்றதாய் வயிறெரிய நாம் நல்லாய் வாழ்தல் ஒருபோதும் முடியாது, என் தாயாரோ சமயபக்தி அதிகமுடையவர்; பிடிவாதமுள்ளவர், இந்த விஷயத்திற்குச் சம்மதிப்பாரோ வென்பது சந்தேகம்; நான் என் தாயாருக்கு முழுச்சமாசாரத்தையுஞ் சொல்லி அவருடைய சம்மதத்தை அறிந்து கொண்டுதான் முடிவு சொல்வேன், நீர் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம்" எனக் கோபாலன் ஆறுதல் சொல்லி விட்டு நேசரத்தினத்திடம் விடை பெற்றுக்கொண்டு தன் வீட்டுக்குப் போனான்.

★ ★ ★

ஏழாம் அத்தியாயம்

கோபாலன் சில தினங்களாக ஏதோ மனக்கவலையோடு கூடியவனாகக் காணப்பட்டான்; அவனுடைய தாய் மிக ஏழையாக விருந்தாலும் அவனுக்கு எவ்வகையான குறைவுந் தோற்றாதபடி நடந்து கொள்வாள். போதகர் வீட்டில் மாசந்தோறுங் கிடைக்குஞ் சம்பளத்தையும் அவன் தன் தாயிடத்தே கொண்டுபோய்க் கொடுத்துவிடுவான். தாயானவள் அந்தப் பணத்தைக் கொண்டும் தான் தினந்தோறும் செய்யும் முயற்சியால் வரும் ஊதியத்தைக்கொண்டும், வறுமையிற் செம்மை யென்றபடி ஒருவிதமான குறைவுந் தோற்றாமல் வீட்டுக் கருமங்களை நடத்திக்கொண்டு வருபவளாதலால், கோபாலனுள்ளத்தில் அந்த விஷயமாக ஏதுங் கவலை ஏற்படுதற்குக் காரணமில்லையென்பதை யறிந்தாள். அவள் ஒருநாளிரவு தன் மகனுந் தானும் போசனம் முடித்தபின் மகனைப் பார்த்து "மகனே, இரண்டு மூன்று நாட்களாய் உன் மனத்தில் ஏதோ கவலை குடிகொண்டிருப்பதாக எனக்குப் புலப்படுகின்றது; நான் பெற்றதாயானபடியால் எதனையும் எனக்கு நீ ஒளியாமற் சொல்லலாம், சொல்லு" என்று மிகவும் நெருக்கிக் கேட்டாள். கோபாலன் தொடக்கத்தில் உள்ளதைச் சொல்லப் பின்னிட்டானேனும், தாயினுடைய நெருக்கத்தினால், போதகருடைய மகளுக்குந் தனக்குமிடையே நடந்த சகல விபரங்களையும் இருவருக்கு மிடையேயுள்ள காதலையும் விபரமாகச் சொன்னான். இவற்றைத் தன்பிள்ளை சொல்லக்கேட்ட கிழவி வாயிற் கைவைத்து ஏங்கி, இடிவிழுந்தவள்போற் பெரிதும் வருந்தி "ஐயோ, மகனே, நான் இந்தப் படாதபாடு பதினெட்டும்பட்டு, உன் அப்பரும் எங்களைக் கைவிட்டுப் போக, கண்ணை இமை காப்பதுபோலக் காத்து வளர்த்து வந்தது இதற்குத்தானா! நீ அந்த நல்லூர்க் கந்தனுடைய குழந்தையல்லவா! நான் உயிரோடு இருக்கும் வரைக்கும் உனக்கு ஒருவிதமான இடையூறும் வரவொண்ணாதென இன்றைக்கும் அந்தக் கந்தனைக் கையெடுத்து வருகின்றேன்; நீ அந்தத் தெய்வத்திற்குச் செய்யவேண்டிய நேர்த்திக் கடன்கள் எத்தனையோ உண்டல்லவா! அல்லாமலும் எங்கள் குடிக்கு வழிக்கு இல்லாத காரியத்தைச் செய்யத்துணிந்தாயே; உன் அப்பர் உயிரோடிருந்தால் இந்த எண்ணம் உன் மனத்தில் எப்போதாயினும் வருமா? இவன் பிள்ளையல்ல, கைம்பெண்டாட்டி வளர்த்த கழுதை என்று உற்றார் அயலார் சொல்ல நடக்கப்போகின்றாயா? மகனே, பஞ்சம்போம், பஞ்சத்திற்பட்ட வடுப்போகாது; அவர்களுடைய குலமென்ன, எங்களுடைய குலமென்ன; சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டுமோ; அவர்கள் சாதி பார்ப்பதில்லை; சமயம்வேறு; இந்தக்காரியம் உன்னளவில் முடிந்து விடுவதா? ஊழியுள்ள காலம்வரையும் எங்கள் பிற்சந்ததிக்கு இது ஓர் வசையாகுமல்லவா; உன் அப்பருடைய தகப்பன் சிவபூசை செய்து வந்தவராமே; இவைகள்தாம் ஒருபுறத்திற் கிடந்தாலும், போதகருடைய மகளை வைத்துத் தாபரிக்க உன்னால் முடியுமா? உன்னை விற்றாலும் அவளுடைய உடுப்புக்குக் காணாதே; சட்டையென்ன, பாவாடையென்ன, பவுடர்மாவென்ன, சவர்க்காரமென்ன, கட்டப் பூட்ட நகையென்ன, மூக்குக் கண்ணாடியென்ன, கைமேசு கால்மேசு சப்பாத்தென்ன, இவைகளுக்கு நீயென்ன செய்வது? இவ்வளவோடு நின்றுவிடப் போகின்றதா? இல்லையில்லை, அடுக்களைப் பக்கம் அவர்கள் போவதே கிடையாது; சமையலுக்கு வேலைக்காரி வேணும்; சமைத்து வைத்ததை உண்ணும்படி கொண்டு வந்து கொடுப்பதற்கு ஒரு பையன் வேணும்; இன்னும் மற்றை வீட்டுக்கருமங்கள் பார்ப்பதற்கும் வேலைக்காரர் வேணும்; அவர்கள் பழக்க வழக்கங்களை நாம் ஏன் அவசியமில்லாமற் குறைசொல்லுவான்; நாம் ஒதுங்கிக் கொள்வதல்லவா முறை; நீ இருக்குமட்டு மிருந்துவிட்டு நல்ல சம்பந்தம் யோசித்தாய்; இந்த எண்ணத்தை இப்பொழுதே மறந்துவிடு; நான் உயிரோடு இருக்கும் வரையும் நீ இவைகளைப்பற்றி யோசிக்க வேண்டியதில்லை; அதற்கெல்லாம் காலநேரமிருக்கிறது; நீ உன் படிப்பிலே கண்ணுங் கருத்துமாயிரு, இன்று தொடக்கம் போதகர் வீட்டிற்குப் போகவேண்டாம்; போதகர் வீட்டிற்குப் போனதனால் வந்தவினை போதும்; பெற்ற தாய் மனமெரிய எதனைச் செய்தாலும் அது நல்லாய் வரப்போவதில்லை" என்று சொல்லியழுதாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயார் சொன்ன வார்த்தைகள் கோபாலன் மனசைப் பெரிதும் புண்படுத்தி விட்டன. அவன் உள்ளத்தில் அப்பொழுது உண்டான வெட்கத்திற்குந் துக்கத்திற்கும் எல்லையில்லை யெனலாம். கோபாலன் தன்னைத் தாய் இப்படிப் ஏச முன்னொருபோதுங் கேட்டவனல்லன்; தான் செய்தது முழுதுந் தவறென்பது அவனுக்குப் புலப்பட்டது; அவன் தன் மாதாவைப் பார்த்து "அம்மா, நான் செய்தது முழுதுந் தப்பாகும்; ஆனால் இப்பொழுது வந்த கேடொன்றுமில்லை; உம்மைக் கேளாமல் நான் எதனையுஞ் செய்யமாட்டேன்; நீர் ஒன்றுக்குங் கிலேசப்பட வேண்டாம்; ஆனால் நான் போதகர் வீட்டிற்குப் பாடஞ்சொல்லிக் கொடுக்கப் போகாமல் விடுவது புத்தியாகுமென நினைக்கவில்லை; இந்த விஷயங்களெல்லாம் அந்தப் பெண்ணுக்கும் எனக்குமிடையே நடந்தனவல்லாமல், போதகருக்கும் அங்குள்ள மற்றவர்களுக்கும் இந்த விஷயமாக ஒரு தொடர்புமில்லை; நீ ஏன் பாடஞ் சொல்லிக்கொடுக்க வராமல் விட்டாயென்று போதகர் என்னைக் கேட்டால் நான் என்ன பதில் சொல்வது? கிணற்று நீரை வந்தவெள்ளங் கொண்டுபோகுமா? என்னையறியாமல் ஏதுமொன்று நடக்கப்போகுமா? நிலவுக் கொளித்துப் பரதேசம் போவதா? தாயே, பாடஞ்சொல்லிக் கொடுக்கும் இந்த ஒரு விஷயத்தில் மாத்திரம் நீங்கள் என்னைத் தடுக்க வேண்டாம்" என்று தாயாரை இரந்தான். தாயானவள் ஒருவாறு மாறி, "மகனே, நீ வழக்கம்போற் போய்ப் பாடஞ் சொல்லிவிட்டுவா; ஆனால் புத்தியாக நடந்துகொள்" என்று சொன்னாள். கோபாலனும் "அப்படித் தான் செய்வேன்" என்றான்.

* * *

எட்டாம் அத்தியாயம்

அடுத்தநாட் பிற்பகல் கோபாலனுடைய வரவை நேசரத்தினம் மிக்க ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டு தலைவாசற் புறத்தே நின்றாள். கோபாலன் தெருவீதியிலே தங்கள் வீட்டை நோக்கி வருகின்றா னென்பதைக் கண்டவுடனே உள்ளே சென்றுவிட்டாள். கோபாலன் வழக்கம் போற் சென்று சிறுவனைக் கூப்பிட்டுப் பாடஞ் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தான். அவனுடைய மனமோ தாமரையிலையில் நீர்த்துளி போல நிலையற்றிருந்தது. இதற்கிடையில் நேசரத்தினம் அங்கே வந்து நின்றாள். நேசத்தைக் கண்டவுடனே கோபாலனிடத்திற் கவலை கூடியது; அவள் அவனைப் பார்த்து "என்ன உங்களுக்கு ஏதோ சுகமில்லைபோலிருக்கிறது" என்றாள். "அப்படி யொன்றுமில்லை; சற்று மனஞ் சுகமாயில்லை" யென்று கோபாலன் சொன்னான். "ஏன், தாயார் ஏதும் மாறாகச் சொன்னதுண்டோ" என்று கேட்டாள் நேசரத்தினம். "எல்லாம் விதியின்படி நடக்குமேயல்லாமல் நாம் நினைத்தபடி ஏதும் நடக்குமா" என்று சொல்லிக் கோபாலன் நெட்டுயிர்த்தான். நேசரத்தினத்தின் முகம் கருகியது.

"கானலை நீரென்றெண்ணிக் கடுவெளிதிரியுமான் போல், நான் உனை அரசென்றெண்ணி நாள் அவம் போக்கினேனே" என்று முன்னொருத்தி இப்படிப்பட்ட சந்தர்ப்பத்திற் சொன்ன பிரகாரம், இப்பொழுது நானுஞ் சொல்லவேண்டி ஏற்பட்டிருக்கிறது; எனக்கு உம்மிடத்தில் இருக்கும் உண்மையான அன்பு உமக்கும் என்னிடத்தில் இருக்குமானால், நீர் இந்தவிதமாக ஒருபோதுஞ் சொல்லியிருக்க மாட்டீர்; உண்மையான காதலுக்கு இடையூறாக நிற்க எவராலும் முடியாது; விவாக விஷயத்தில் விசேஷமாக ஆண்களாயுள்ளவர்கள் தங்கள் மனசுக்குத் திருப்தியோவென்பதைப் பார்ப்பதல்லாமல், மற்றையவர்களுடைய சம்மதத்தைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது; இப்பொழுது விவாகஞ் செய்துகொள்வது நீரல்லாமல் உம்முடைய தாயாரல்லர்; மற்றும் விஷயங்களிற் பெற்றார் உற்றார் சிநேகிதருடைய சம்மதத்தைப் பார்க்க முடியுமேயன்றி விவாக விஷயத்திற் பார்க்க முடியாது; மனங் கொண்டது மாளிகையென்று உலகத்திலே சொல்லுவார்கள்; என் விஷயத்திலும் இந்தச் சம்பந்தம் என் தகப்பனாருக்கு அதிக பிரியமில்லாவிட்டாலும், எனக்காக இதற்கு அவர் உடன்படுவர். உங்களுடைய தாயாரும் அப்படியல்லவா செய்ய வேண்டியது; இன்னுஞ் சில காலஞ் செல்ல உங்களுடைய தாயார் கண் மூடிவிடுதல் கூடும்; மனைவியால் உங்களுக்கு வரும் இன்பதுன்பங்களை உள்ளநாள் வரையும் அநுபவிப்பது நீங்களல்லாமல் உங்கள் தாயாரல்லவே; இவைகளையெல்லாம் யோசியாமற் குருட்டுத்தனமாக, தாயாருக்குப் பிரியமில்லை, மற்றையவர்களுக்குச் சம்மதமில்லை யென்று வீண் போக்குச் சொல்வானேன்; உன்னை விவாகஞ்செய்ய எனக்குச் சம்மதமில்லையென்று நீங்கள் நேரே எனக்குச் சொல்லிவிடலாமே" யென நேசரத்தினம் சிறிது கடுகடுத்துப் பேசினாள்.

நேசரத்தினத்தின் வார்த்தைகளை மிக்க துயரத்தோடு கேட்டுக்கொண்டு அவள் பேசி முடியுமட்டும் மௌனமாயிருந்த கோபாலன் பெருந் துயரத்தோடு கூடியவனாய் "நேசம், நீர் ஒன்றுக்கும் வருந்தவேண்டாம்; என்னைக் கோபிக்க வேண்டாம்; நான் இப்பொழுது இருதலைக் கொள்ளியுள் ளெறும்பு போலானேன்; உம்மிடத்தில் எனக்கு அன்பில்லையென நீர் சொல்லும் ஒவ்வொரு வார்த்தைகளும் என்னுள்ளத்தை ஊடுருவுகின்றன; உண்மையாக உம்மை நான் நேசிக்கின்றேன்; நீர் சினந்து கூறும் வார்த்தைகளும் எனக்கு அன்பைப் பெருக்குகின்றனவே யல்லாமல், என் மனத்திற் கோபத்தை உண்டாக்கவில்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யென்னலும், நேசரத்தினம் "உள்ளன்பு இருக்கிற படியாற்றான் நான் சினந்து சொல்லுகிறேனேயல்லாமல், அன்பில்லாதவரிடத்து நான் ஒரு போதும் கடும் வார்த்தைகளைப் பேசமாட்டேன்" என்றாள். கோபாலன் பின்னருஞ் சொல்லுகின்றான்; "நேசம் நீர் சொல்வதில் யாதுந் தவறு இருக்கின்றதென்று நான் சொல்லவில்லை; உம்மைக் காணும்போதும் பேசும்போதும் ஏகாந்தமாக விருந்து உம்மைப்பற்றி நினைக்கும் போதும், நீர் சொல்வனவும் செய்வனவும் எனக்கு உடன்பாடாகவே காணப்படுகின்றன; ஆனால் தாயாரோடு பேசும்போதும் தாயாருடைய முன்னிலையில் நிற்கும்போதும் அவர் சொல்லைத்தட்டி நடப்பதற்கு என்மனம் எழுவதில்லை; அவர் சொல்வது தவறுபோற் காணப்படவுமில்லை; எப்படியென்றாலும் பெற்ற தாயல்லவா, தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லையென்பர்; என் தாய் எனக்கு மிகவும் பிரதானமானவள்; தாயுந் தந்தையும் அவளே; தந்தையாற் போஷித்து வளர்க்கப்பட வேண்டிய என்னுடைய இந்த உடம்பு, ஆங்ஙனமின்றி என் தாயாலேயே போஷித்து வளர்க்கப்பட்டது; நான் சற்புத்திரனாக விருந்தால் என் தாயின் பொருட்டு இந்த உடம்பை அர்ப்பணஞ் செய்யவேண்டி வந்த காலத்தும் செய்தே தீர வேண்டும்; ஆதலால், நேசம், என் தாயாருக்கு விரோதமாக நீர் ஒன்றும் பேசவேண்டாம்; எங்கள் இருவருக்கு மிடையேயுள்ள இந்த விஷயத்தை என் தாயாருக்கு முந்தியே சொல்லாமல் விட்டமை என் குற்றமன்றி அன்னையின் குற்றமன்று. நான் உமக்காக ஒன்று செய்கின்றேன்; என்னாற் கூடியவரையில் இரந்தேனும், பலவிதமாக வேண்டியேனும் என் தாயாரை இதற்குச் சம்மதிக்கச் செய்கின்றேன்; ஒருபோது அப்படிச் செய்யத் தவறுவேனாகில் நான் வேறு எவரையும் விவாகஞ் செய்யாது நித்திய பிரமசாரியாக இருந்து விடுகின்றேன்; இது சத்தியம்" என்று சொல்லி முடிக்கும் போது, அவனுடைய கண்களினின்றும் நீர் ததும்பியது.

கோபாலன் தனக்குந் தாய்க்குமிடையே யிருந்துபடும் இடைஞ்சலும், தான் சிறிது முன்னர்க் கூறிய கடுமொழிகளும், அவன் சொன்ன இரப்பு வார்த்தைகளும், அவன் நித்திய பிரமசாரியாக இருந்துவிடுகின்றேனென்று சொன்ன சொல்லும் ஆகிய இவைகளெல்லாம் ஒருங்கு சேர்ந்து நேசரத்தினத்தின் மனசைப் பெரிதுங் கிலேசப்படுத்திவிட்டன. உடனே அவளும் கண்ணீர் ததும்பப் பெற்றவளாய்க் கோபாலனைப் பார்த்து "நீங்கள் என்னாலல்லவா இவ்வளவாகக் கஷ்டப்படுகிறீர்கள்; நீங்கள் மனம் வருந்தவேண்டாம்; வாழ்விழந்து என்பொருட்டு நித்திய பிரமசாரியாக விருக்கவும் வேண்டாம்; எங்கள் இருவருக்கு மிடையேயுள்ள இந்த அன்பு எந்தநாளும் இப்படியே யிருக்கட்டும். இப்பொழுதுதான் நாங்கள் நினைத்தபடி செய்துகொள்ள முடியாவிட்டாலும், உங்கள் தாயார் இல்லாத காலத்தில் என் கேள்விக்கு நீங்கள் இசைய மறுப்பீர்களென்று நான் நினைக்கவில்லை" யென்றாள்; "கண்ணே, நேசம், அப்படியானால் அதற்கொரு தடையுமில்லை" யென்று கோபாலன் மிக்க மனமகிழ்ச்சியோடு சொன்னான். நேசரத்தினம் வார்த்தையாடிக் கொண்டு நின்றபடியே தன்னுடைய அணிவிரலிலிருந்த நீலரத்தின மோதிரத்தை மெல்லக்கழற்றி, "நீங்கள் சொல்வது சத்தியமென்பதற்கு உறுதியாக இந்த மோதிரத்தை அணிந்து கொள்ளுங்கள்" என்று கோபாலனிடத்தில் நீட்டினாள்; நேசரத்தினம் இப்படிச் செய்வாளென்று கோபாலன் கனவிலாயினும் காத்திருந்தானல்லன்.

நேசரத்தினம் நீட்டிய மோதிரத்தைக் கோபாலன் வாங்கிக் கொள்ளும்படி தன் கையை நீட்டினான்; கோபாலன் கை நீட்டியது மோதிரத்தை வாங்கித் தன் விரலிலணிந்து கொள்வதற்கல்ல; வாங்கி வைத்துக்கொண்டு சமாதானஞ் சொல்வதற்கேயாம்; மோதிரத்தை வாங்கும்படி கோபாலன் கையை நீட்டவே, நேசரத்தினம் அவனுடைய அணிவிரலில் அந்த மோதிரத்தை இட்டுவிட்டுப் புன்னகை செய்தாள்; மோதிரத்தை அணிந்து கொள்வது கோபாலனுக்குப் பிரியமில்லையாயினும், உடனே கழற்றிவிட அவனுக்கு மனமிருந்ததாயினும், தன்னாற் காதலிக்கப்பட்ட ஒரு யௌவனமான பெண் ஆதரவோடு இட்ட மோதிரத்தைப் போடவேண்டா மென்று தடுக்கவும், இல்லையேற் போட்ட பின்னர்க் கழற்றிவிடவும் கோபாலனாலல்ல, மனசார ஆடவர் எவராலும் முடியாதென்றே நினைத்தல் வேண்டும். கோபாலன் மோதிரத்தைப் பார்த்தபடியே, "நேசம், நீர் என் விரலில் மோதிரம் இட்டது சரியல்லவே" யென்றான். "இடவேண்டிய விரலுக்குத் தான் இட்டிருக்கின்றேன்; அல்லாமலும் பாருங்கள், மோதிரம் விரலுக்குச் சரியாய் (அளவாய்) இருக்கிறது; இது தேவச்செயலல்லவா" என்று நேசரத்தினம் விநோதமாகக் கூறினாள். "நேசம், நான் அதற்காகச் சொன்னதல்ல; என்னுடைய தாயார் இந்த மோதிரத்தைக் கண்டால், இது உனக்கு எப்படிக் கிடைத்தது; இது வாங்க உன்னிடம் பணம் ஏது என்று கேட்கக்கூடும்; அதனையிட்டுச் சொன்னேனேயல்லாமல், அளவு அளவில்லாமை பற்றிச் சொன்னேனல்லேன்" என்று கோபாலன் கூறுதலும், நேசரத்தினம் புன்முறுவல் செய்து "நீங்கள் இப்பொழுது, உங்களுடைய தாயார் இந்த மோதிரம் உனக்கு ஏது எனக் கேட்கக் கூடுமென்றுதானே பயப்படுகின்றீர்கள்; அதற்கு நான் ஒரு உபாயஞ் சொல்லுகிறேன், அப்படிச் செய்யுங்கள்; நீங்கள் கையிலணிந்திருக்கும் மோதிரத்தை எனக்குத் தாருங்கள், நான் போட்டுக்கொள்ளுகிறேன்; "இந்த மோதிரம் உன்னுடையதாகக் காணப்படவில்லை, எங்கே உன் சொந்த மோதிரம், இது ஏது" என்று உங்கள் தாயார் அல்லது என்னுடைய மாமியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டால், நீங்கள், "அம்மா, இது ஒரு நல்ல மோதிரம்; எனக்கு அளவாகவுமிருந்தது; அதனால் நான் என்னுடைய மோதிரத்தைக் கொடுத்து மாற்றி இதனைப் போட்டுக்கொண்டேன் என்று உள்ளதைச் சொல்லிவிடுங்கள்" என்று சொன்னாள்.

"நேசம், நீர் இன்றைக்கு மிக்க மகிழ்ச்சியோடு காணப்படுகின்றீர்; வேடிக்கையாகப் பேசுகின்றீர்; பிள்ளைக்கு விளையாட்டுச் சுண்டெலிக்குச் சீவன் போகின்றது என்றாற்போல், உம்முடையபாடு உப்படியிருக்க, இந்த நேரத்தில் என் மனம் படும்வேதனை ஈசனுக்குத்தான் தெரியும்; எந்தக் காரியத்தையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்; இந்தக் கருமத்திற்கு இருக்கும் இடையூறுகள் பல வென்பது எனக்குத்தான் தெரியும்; இது விளையாட்டு விஷயமல்ல; இப்படி இது வருமென்று நான் முந்தி எள்ளளவேனும் நினைத்திருந்தால், உம்மோடு இவ்வாறு அந்நியோந்நியமாக ஊடாடியிருக்கமாட்டேன்; நான் ஒன்றை நினைக்க நீர் பிறிதொன்றை மனசில் வைத்துக் கொண்டீர்" என்று கோபாலன் சிறிது துயரத்தோடு சொல்லுதலும், நேசரத்தினம் "இவ்வளவு பிடிவாதமாக நீங்கள் நிற்பீர்களென்பதை நான் முந்தியே அறிந்திருப்பேனாகில் நானும் ஒருபோதும் உங்களோடு அந்நியோந்நியமாக நடந்திருக்கமாட்டேன்; இந்தப் பக்கத்திற்கு வந்திருக்கவும்மாட்டேன்; மேலும் சந்தோஷமான காரியங்களையுந் துக்கமான காரியமாகப் பாவித்து நீங்கள் மனவருத்தப் படுவதானால் உங்கள் மனசைத் தேற்ற எவரால் முடியும்; நீங்கள் ஒருபோது சமய பேதத்தைப் பற்றி யோசிக்கின்றீர்கள் போலும்; விவாகமாகி விட்டால் நான் உங்களுடைய எண்ணப்படி நடக்கவேண்டியவள்; ஆதலால் அந்த விஷயத்தில் நீங்கள் எனக்காக இப்பொழுது அழுத்தி நில்லாமற் பின்பு உங்கள் இஷ்டம் போலச் செய்யலாம்" என்றாள். நேசரத்தினம் சமயவிஷயத்தில் உங்கள் இஷ்டம்போற் செய்யலாமென்ற வார்த்தை கோபாலனுக்குப் பெருந் திருப்தியாகவிருந்தது. சமயபேதமில்லாவிட்டால் தன் தாயும் இந்தச் சம்பந்தத்திற்குச் சம்மதிப்பாள் என்று அவன் நினைத்தான். "நேசம், எனது மோதிரத்தை உமக்கு நான் தரவேண்டும் என்றுதான் விரும்புகின்றீரா" என்று கோபாலன் கேட்டலும், நேசரத்தினம் "உங்கள் இஷ்டப்படி செய்யலாம்" என்றாள். அவன் உடனே தன்னுடைய மோதிரத்தைக் கழற்றி அவளுடைய விரலில் இட்டு அவளின் முகத்திலும் ஒரு முத்தமிட்டான். நேசரத்தினம் நாணங்கொண்டு முகத்திற் குறு வேர்வையுடையவளாய் நாற்புறமும் பார்த்து விட்டு ஒரு புறத்தே அச்சத்தோடும் மனப்பதறுதலோடும் ஒதுங்கி மௌனமாக நின்றாள். கோபாலன் புன்னகை செய்து "நேசம், நான் முத்தமிட்டது உமக்குப் பிரியமில்லையோ" என்று ஆதரவுடன் கேட்டான். "இல்லை" யென்று நிலத்தைப் பார்த்தபடியே நேசரத்தினம் விடை கூறினாள். "பிரியமில்லாவிட்டால், அதனைத் திருப்பியல்லவா தந்துவிடவேண்டும்" என்று கோபாலன் சொல்லுதலும், "ஆம், அப்படிச் செய்யலாம்" என்று நேசரத்தினம் குறுமுறுவலுடன் கூறினாள். கோபாலன் அனுமதி பெற்றுக்கொண்டு தன் வீட்டுக்குப் போனான்.

இருவரும் மோதிரம் மாற்றிக் கொண்டதன் பின்னர் நேசரத்தினம் தன் வீட்டிற்குக் கோபாலன் வரும்போதெல்லாம் மிகவும் உறவுபாராட்டிஉபசரித்து வந்தாள். அங்கு வரும்போது அவன் அருந்தும்படி பழவகை முதலியவற்றை நேசரத்தினம் தேடி வைத்துவிடுவாள். தேநீர் காப்பி என்னும் இப்படிப்பட்ட பானங்களைக் கோபாலன் தங்கள் வீட்டில் ஒருபோது அருந்துவதற்குக் கூசுவான் என்ற அச்சம் நேசரத்தினத்திடம் இருந்தது. ஏனென்றால் கோபாலன் சந்ததிசந்ததியாகத் தாவர போஜனி. இருவரும் அதிக அந்நியோன்னியமாக ஊடாடினாலும், தாங்கள் இன்னமும் முறைப்படி விவாகஞ் செய்யவில்லையென்ற நியதியையுடையவர்களாக விருந்தார்கள். குட்டித்தம்பிப் போதகரும் தமது வீட்டிற் கோபாலன் இருக்கக்கண்டால் மாமன் மருமகனென்ற மரியாதையோடு நடந்துகொள்ளக் காணப்பட்டார். இப்படியெல்லாமிருந்தாலும் அயலார் இந்த இருவர் விஷயத்திலும் யாதுஞ் சந்தேகங் கொண்டிலர். ஏனென்றால் இப்படியான ஒரு சம்பந்தம் நடைபெறுமென அயலார் எப்போதாயினுங் காத்திருந்தவரல்லர். நேசரத்தினத்தினிடத்திற் கோபாலன் அதிக அன்பு பாராட்டி வந்தானேனும், அவளையே தான் மணஞ்செய்வது என்று தன் மனசில் நிச்சயித்திருந்தானேனும் அவன் முகத்திற் சந்தோஷம் மாத்திரங் காணப்படவில்லை. நேசரத்தினமோ அதிக சந்தோஷத்தோடு கூடியவளாகக் காணப்பட்டாள். தான் சந்தோஷமாக வார்த்தையாடிக் கொண்டிருக்கும் போது, கோபாலனுடைய புலன்வேறெங்கேனுஞ் சென்றிருப்பதைப் பல முறைகளில் நேசரத்தினம் அவதானித்திருந்தாள்; தன் வார்த்தைகளை இடையிடையே கோபாலன் அலட்சியஞ் செய்வதைக் கண்ட நேசரத்தினம், ஒருதினம் அவனுடன் வார்த்தையாடிக் கொண்டிருக்கும் போது அவனைப் பார்த்து "சிறியோர் செய்யுஞ் சிறு பிழை யெல்லாம் பெரியோராகிற் பொறுப்பது கடனே" என்றபடி, நான் தெரிந்து தெரியாமல் ஏதுங் குற்றஞ் செய்திருந்தால் நீங்கள் அதனைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்றாள். "நேசம், நீர் எனக்கு ஒரு குற்றமும் ஒருபோதுஞ் செய்யவில்லையே; குற்றஞ் செய்தாலல்லவா பொறுப்பது; நீர் ஏன் அப்படிச் சொல்லுகின்றீர்" என்று கோபாலன் பரிவுடன் கேட்டான். "இல்லை, பாருங்கள், சில சமயங்களில் நான் உங்களோடு பேசிக் கொண்டிருக்கும்போது உங்கள் புலன் வேறெங்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றிருக்கக் கண்டேன்; ஒரு போது உங்களுக்கு நான் ஏதும் அபராதஞ் செய்து விட்டேனோ என்று நினைத்தே அப்படிச் சொன்னேன்" என நேசரத்தினம் கூறினாள். "நேசம் நீர் எனக்கு ஒரு அபராதமுஞ் செய்யவில்லை; உம்மளவில் நான் அலட்சியமாக விருக்கவுமில்லை; ஆனால் என் அருமைத் தாயாருக்கு நான் செய்த அபராதம் என் மனசை உபாதிக்கின்றது; அதனாலே சிலபோது நீர் என்னுடன் வார்த்தையாடும் நேரத்தில் நான் சிறிது அலட்சியமாகவிருத்தலுங்கூடும்" எனக் கோபாலன் சொல்லிப் பெருமூச்சு விட்டான். "நீங்கள் இந்த விஷயத்தைப்பற்றி இன்னமும் உங்கள் தாயாருக்கு வெளியிடவில்லையோ" என்று நேசரத்தினம் வினவுதலும் கோபாலன், "நேசம், நான் இதனைச் சொல்லலாமென்று எத்தனையோ நாள் வாயுன்னிவிட்டும், பின்னர் ஒருபோது சொன்னால் என் தாயார் எவ்விதமான நிலைமையையடைவாரோ என்ற அச்சத்தினால் இன்னமும் இதனைச் சொல்லாமலிருக்கின்றேன்; வயசுசென்ற காலத்தில் என் தாயாருக்கு நானாகவே மனவருத்தத்தை உண்டாக்கி விட்டால், அவர் சிலவேளை தீரா நோய்க்கு ஆளாதல் கூடும்; இதனையிட்டுத்தான் பயப்படுகின்றேன்; என் அன்னையாரும் இந்த விஷயத்தில் உடன்படுவாரானால் எனக்கு ஒரு குறையுமில்லை; நான் நித்திய சந்தோஷமுடையவனாக விருப்பேன்" என்று சொல்லிப் பெரிதுந் துயரப்பட்டான். கோபாலன் கூறியதைக் கேட்ட நேசரத்தினம் தானும் அதிக துயரங் கொண்டவளாய் "ஐயோ, நான் ஒருத்தியல்லவா உங்களுக்கு இத்துணைத் துயரத்தையெல்லாம் ஆக்கிக்கொண்டிருக்கின்றேன்; ஆனால், உங்களுடைய அருமையான முகத்தைப் பார்த்துச் சொல்லுகிறேன், உங்கள் தாயாருக்கும் உங்களுக்கும் என்னால் இவ்வளவு கவலைவருமென நான் தொடக்கத்திற் கனவிலாயினும் நினைத்தவளல்லேன்; நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம்; வேண்டுமானால் நான் சைவ சமயத்தை அநுசரிக்கச் சித்தமாயிருக்கின்றேனென்ற இரகசியத்தையும் உங்கள் தாயாருக்கு வெளியிடுங்கள்; இதைச் சொன்னால் உங்கள் மாதா மனஞ் சம்மதிக்கக்கூடும்; மேலும், நீங்கள் உத்தரவு தந்தால் நான் உங்கள் தாயாரிடம் வந்து அவருடைய மனசைச் சமாதானப்படுத்துகின்றேன்" என்று கண்களில் நீர் ததும்பச் சொன்னாள்.

நேசரத்தினம் இங்ஙனம் வருந்துவதைக் கண்ட கோபாலன் பதைபதைத்து அவள் சமீபத்திற் சென்று தன் கையால் அவள் கண்ணீரைத் துடைத்து "கண்ணே, நேசம், நீர் கவலைப்பட வேண்டாம்; என் தாயாரை இரந்தாயினும், நான் சமாதானம் பண்ணிக் கொள்ளுகிறேன்; உமது சுகுணங்களையெல்லாம் என் தாயார் உள்ளபடி அறியின் உமக்கு மாறாக ஏதுஞ் சொல்லமாட்டார்; ஆனால், நீர் இப்பொழுது என் தாயாரிடம் வரவேண்டாம்; காத்திராப் பிரகாரம் ஒருபோது உம்மை என் மாதா அலட்சியஞ் செய்தால் அது எனக்குப் பெரும் மனவருத்தமாக முடியும்; இருந்தாலும் அப்படிச் செய்வாரென நான் நினைக்கவில்லை" யென்றான். "உங்கள் வார்த்தைக்கு மாறு சொல்லுகின்றேனென்று எண்ணாதீர்கள்; நான் அங்கே வந்தால் எனது மாமியார் ஒரு போதும் என்னை அவமதிக்க மாட்டார்; அப்படியல்லவென்று அவமதித்தாலும் அதனால் வரும் கேடொன்றுமில்லை; "கேட்டோர்க்குப் பரிபவமென்பது பிறராற் பட்டாலன்றோ" என்று பாரதத்திற் சொன்னபடி, மற்றவர்கள் அவமதித்தாற்றான் நாம் அவமானமாகக் கொள்ளவேணும்" என்றாள். கோபாலன் அவள் வார்த்தைக்கு மாறு பேசாதவனாய் அவளிடத்தில் அனுமதி பெற்றுக்கொண்டு தன் வீட்டிற்கு மீண்டான்.

* * *

ஒன்பதாம் அத்தியாயம்

இச்செய்தி நிகழ்ந்து இரண்டு மூன்று நாட்கள் சென்றபின் ஒருநாள் நிலவோடு கூடிய இரவில், ஏழுமணிவரையில், கோபாலன் தன் தாயாரை நோக்கி "அம்மா, நான் ஒரு விஷயம் உங்களைக் கேட்கிறேன்; உங்களுக்குச் சம்மதமாக விருந்தால் "ஓம்" என்று சொல்ல வேண்டும்; சம்மதம் இல்லாவிட்டால், இல்லையென்று சொல்லி விடுவதல்லாமல், என்னைக் கோபிக்கக் கூடாது; உங்கள் விருப்பமில்லாமல் நான் எதனையுஞ் செய்யமாட்டேன் என்பது உங்களுக்கு நன்கு தெரியுந்தானே" என்றான். "மகனே, நீ ஒன்றையும் ஒளியாமற் சொல்லு; நியாயமான காரியம் எதற்கும் நான் சம்மதிப்பவள் என்று உனக்குத் தெரியும்" எனத் தாய் சொல்லுதலும், கோபாலன் தன் மனசை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு பின்வருமாறு சொன்னான்:- "அம்மா, பின்னும் பின்னும் அதைத்தான் சொல்லுகிறேன் என்று எண்ணிக் கொள்ளக் கூடாது; எந்தக் காரியத்தையும் இயன்றவரையில் ஆராய்ந்த பின்பே அதனையிட்டு நன்மை தீமை குறை குற்றஞ் சொல்லுதல் வேண்டும்; நீங்கள் முந்தி விஷயத்தை உள்ளபடி உணராமல் என்னைக் கோபித்து விட்டீர்கள்; போதகருடைய மகள் விஷயமாக இன்னமுங் கொஞ்சம் நீங்கள் யோசித்தால் நல்லது, அம்மா" என்றான். "மகனே அந்தக் கருமத்தில் உன்னை முந்தி நான் கடுமையாகத்தான் குறை சொல்லிக் கோபித்துவிட்டேன்; ஆத்திரத்தினாலும் அன்பின் பேராலுமே அப்படிச்செய்தேன்; அதை மனத்திற் கொள்ளாதே; பெற்றதாய் குறைசொன்னால் நீ குறைந்து போவதல்ல; ஆனால் அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள மாத்திரம் நீ எண்ணாதே; மற்றைக் கருமங்களுக்கு நீ சமாதானஞ் சொன்னாலும், மார்க்க வித்தியாசத்திற்கு என்ன சமாதானஞ் சொல்லப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகிறாய்? அவள் ஒரு போதும் எங்கள் மார்க்கத்திற்கு வரப்போவதில்லை; போதகருடைய மகளாயிருப்பதால் அவளின் தகப்பன் ஒருபோதும் உடன் படமாட்டார்; ஆனபடியால், பேய்த்தனமாக அந்தப்பிள்ளைக்கு நீ ஏதும் வாக்குப்பண்ணி விடாதே" என்று கிழவி பழைய பாடத்தையே படிக்கத் தொடங்கினாள்.

"அம்மா சமயபேதம் இருக்கிறதென நீங்கள் கொஞ் சமும் யோசிக்க வேண்டாம்; அவள் எங்கள் சமயத்திலே நம்பிக்கையுள்ளவள்; நான் தன்னை விவாகஞ் செய்து கொண்டால் உடனே சைவமாதற்குத் தனக்கு ஒரு தடையுமில்லை யென்று எனக்கு வாக்களித்திருக்கிறாள்.

"நிலத்திடைப் பொன்னுதித் தெழுந்த நீர்மைபோற்
சலத்திடை மிகுந்துள தகுவர் தீயவெங்
குலத்திடைத் தோன்றிய குறையொன் றேயலால்
நலத்திடை யருந்ததி நாணும் பெண்மையாள்;"

என்று பாரதத்திற் சொன்னபிரகாரம், கிறிஸ்து சமயப் போதகருக்கு மகளாகப் பிறந்து விட்டாளென்ற ஒரு குறையே யல்லாமல் வேறு எவ்வகையான குறையும் அவள்மேற் சொல்ல முடியாது; படிப்பு, அறிவு, ஒழுக்கம், சாந்த குணம், ஒறுப்பனவு, சுற்றத்தார் பெரியோரைப் பேணுதல் முதலாம் நற்குணங்களெல்லாம் அவளிடத்தில் மிகவும் உண்டு; அவள் என்னிடத்திலே உண்மையான அன்பு பாராட்டுகிறாள்; எங்கள் சமயத்துப் பெண்கள், இனத்து பெண்கள் எத்தனையோபேர் பிறர் குறை சொல்லக்கூடிய குணமுடையவர்களாயிருக்கின்றார்கள்; இவள் தானாக என்னை விரும்பியதற்காக நாங்கள் அவளைக் குற்றஞ் சொல்வதா? வித்தியாசமான சமயத்திற் பிறந்து விட்டாளென்ற ஒரு நியாயத்திற்காக நாம் புறக்கணிப்பது சரியல்ல, சேற்றிற் பிறந்திடுங் கமலமலர் கடவுளது திருமுடியின் மீதிருக்கும்; தாமரைப்பூ சேற்றிலே உண்டானதென்று அதனைத் தள்ளிவிடுகின்றார்களா; நாறுஞ் சிப்பியிலேதான் முத்திருக்கின்றது;" என்று கோபாலன் சொல்லுதலும், தாயானவள் "மகனே, நீ சொல்லுகிற இந்தப் பிள்ளையைப் பற்றி நான் ஒன்றுங் கேள்விப்படவில்லை யென்றது மெய்தான்; ஆனாற் குட்டித்தம்பிப் போதகருடைய மற்றைப் பிள்ளைகளைப்பற்றி ஊரிலே பலவகையாகப் பேசிக்கொள்ளுகிறார்கள்" என்றாள்.

இப்படி இருவரும் பேசிக்கொண்டிருக்கும் போது அவர்களுடைய வீட்டிற் "படலை" திறந்து பின்விட்ட சத்தங்கேட்டது. பெண்கள் இருவர் தங்கள் தலைவாசலுக்கு வருவது நிலா வெளிச்சத்திற் காணத்தக்கதாயிருந்தது; "நாங்களும் வரலாமோ" என்று முந்திவரும் பெண் சொல்லிக் கொண்டு வந்தாள். "ஓம், ஓம், நல்லாய் வரலாம்" என்று கோபாலனுடைய தாய் சொல்லிக்கொண்டு தலைவாசற் பக்கத்தே சென்றாள்; கோபாலனும் தாயின்பின் சென்றான்; இவர்களிருவரும் தலைவாசலுட் செல்லவே, வந்தவர்களும் தலைவாசலுள் வந்து சேர்ந்தார்கள்; தலைவாசலில் ஒருபுறத்தே ஒரு போத்தல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. நாற்பது வயசிற்கு மேற்பட்ட ஒரு மனுஷி முன்னே நின்றாள்; அவளுடைய உடையைக் கொண்டு அவள் பணிப்பெண்ணென யூகித்துக் கொள்ளலாம்; பதினெட்டு இருபது வயதிற்கு மேற்படாத தோற்றத்தை யுடையவளாய், புள்ளி இடையிடையே இடப்பட்ட பளபளப்பான சாம்பர் நிறத்தோடு கூடிய பாவாடை தாவணியுடை தரித்தவளாய், பொதுநிறத்தோடு கூடியவளாய், இக்காலத்தில் அணியப்படும் ஆபரணங்களை யணிந்தவளாய் "புசர்மா" பூசிய முகத்தில் வேர்வை யரும்பப் பெற்றவளாய், நெற்றியிற் சாந்துப்பொட்டு இட்டவளாய், கையில் ஒரு லேஞ் சியைக் கொண்டவளாய், மயில்போன்ற சாயலுடைய ஒரு அழகிய பெண், முந்திச் சொன்ன வேலைக்கார மனுஷியின் பின்வந்து ஒதுங்கி நிற்பதைக் கிழவி கண்டு, "வாரும் பிள்ளை, உந்தக் கட்டிலிலுள்ள பாயில் இரும்" என்று சொன்னாள், "நீங்கள் எல்லாரும் இருங்கள், நான் இருக்கிறேன்" என்றாள் அந்த இளம் பெண்; கிழவி அந்தப் பெண்ணைக் கையிற்பிடித்து இழுத்துப் பாயிலிருத்திக் கொண்டு தானுங்கூடப் பக்கத்திலிருந்தாள். உடன் வந்த வேலைக்காரப் பெண் நிலத்திலே ஒரு "கப்" போடு சாய்ந்து கொண்டிருந்தாள். கோபாலனைத் தலைவாசலிற் காணவில்லை; "பிள்ளையை எனக்கு விளங்கவில்லை" என்று கிழவி சொல்லுதலும், வேலைக்காரி "அம்மா உங்கள் மகன் தினமும் வந்து பாடஞ் சொல்லிக் கொடுக்கும் வீட்டுப் போதகருடைய மகள்; தங்கச்சியோடு முந்திக் கூடிப் படித்த அன்னம்மா சிங்கப்பூரிலிருந்து வந்திருக்கிறது; அங்கேபோய் வருகிறோம்; வருகிறவழியில் உபாத்தியாயர் வீட்டுக்கும் போகவேணுமென்று இங்கே வந்தது" என்றாள். "மெய்தானா, நல்லகாரியம்; நடந்தா வந்தீர்கள் மகளே" எனலும், "இல்லை, ஐயாவுடைய "வக்கிக்கரத்தை" யில் வந்தோம்; வண்டி ஒழுங்கையில் நிற்கிறது மா..." என்று இன்னுமேதோ சொல்லத் தொடங்கிய நேசரத்தினம் சடுதியிற் சொல்லாது நிறுத்தி விட்டாள். "ஐயோ, மகளே, நேரத்தோடு வந்திருந்தால் அதிகநேரம் நின்று போகலாமே; சரி இப்போதுதான் என்ன கெட்டது; நல்ல நிலவு; வண்டிக்காரனும் உங்களுடைய ஆள்தானே, கொஞ்சஞ் சென்றாலும் தம்பி கூட்டிக் கொண்டுபோய் விடுவான்; நீங்கள் வெற்றிலையும் போடமாட்டீர்கள்; இந்தநாளிற் பிள்ளைகள் வெற்றிலை போடுவதில்லை; மகளே, கொஞ் சநேரம் இருந்துகொள், கோப்பி வைத்துக்கொண்டு வருகிறேன்; எட தம்பி, இங்கே பிள்ளை வந்திருக்கிறது; நீ ஏன் போய் உங்கே மறைவில் நிற்கிறாய்; இப்படிவா; என்று கிழவி பெரிதும் பதைபதைத்தாள். "நீங்கள், சங்கடப்பட வேண்டாம்; நான் போகும்போது கோப்பி குடித்துவிட்டுப் போவேன்! நீங்கள் இப்படி இருங்கள்" என்று நேசரத்தினம் சொல்லி, எழுந்த கிழவியைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையிற் பிடித்து மீளவும் இருத்தினாள். கோபாலன் தலைவாசலின் புறத்தே "தட்டி" மறைவில் நின்றான்; தான் உள்ளே வந்தால் நேசரத்தினம் இருக்காது எழுந்து நிற்பாள் என்பதையிட்டே அவன் தலைவாசலின் உள்ளே வரவில்லை.

கோபாலனுடைய தாயார் நேசரத்தினத்தைப் பார்த்து "மகளே, கொஞ்சநேரம் இருந்து கொள்ளும், நான் கோப்பி வைத்துக்கொண்டு வருகிறேன்" எனலும், நேசரத்தினம் "நாங்கள் உங்களுடைய அடுக்களைப்பக்கம் வரக்கூடாதாக்கும்" என, கிழவி "ஏன் வரக்கூடாது, நல்லாய் வரலாம்; வாரும்பிள்ளை" யென்று நேசரத்தினத்தையும் உடன் கூட்டிக்கொண்டுபோய் அடுக்களை வாசலில் இருக்கச் செய்துவிட்டுக் கோப்பி வைக்கத் தொடங்கியது. கிழவி நேசரத்தினத்தைப் பார்த்து, "பிள்ளை, இன்றைக்கு இந்தப் பக்கமாக வந்ததென்ன; ஏதும் விசேஷம் உண்டோ" எனலும், நேசரத்தினம் "விசேஷமொன்றுமில்லை; உங்கள் வீட்டுக்கு வரவேண்டுமென்றுதான் வந்தேன்" என்றாள். "கேட்கிறேனென்று குறை நினைக்கக்கூடாது; நீயும் எனக்குப் பிள்ளைதானே, இவன் தம்பி ஏதோ சொன்னான்; அந்தக்கதை மெய்தானோ, பிள்ளை" யென்று கிழவி பயத்தோடு வினவுதலும், நேசரத்தினம் "நான் என்ன சொல்லமுடியும், எங்களுக்கு விருப்பந்தான்; நாம் நினைத்தபடியெல்லாம் ஆகி விடுமா; தேவனுக்குச் சித்தமாக இருக்கவேண்டும்; இனி, உங்களுடைய சம்மதம் இல்லாமல் ஏதும் நடக்குமா" என்று அதிக யோசனையோடும் பெருமூச்சோடும் கூறினாள். "மகளே, என்னை வித்தியாசமாக நினைத்துக்கொள்ளவொண்ணாது; நான் இதற்கு மாறானவள் என்று எண்ண வேண்டாம்; தொடக்கத்தில் கொஞ்சம் வித்தியாசமாக நினைத்திருந்தேன்; இன்றைக்கு உன்னை நேரிற் கண்டபின் எனக்கு வெகு சந்தோஷம்; சமயவித்தியாசம் ஒன்றயிட்டுத்தான் நான் யோசிக்கின்றேன்" என்று சொல்லிக்கொண்டு, கிழவி ஒரு பாத்திரத்திற் கோப்பியைக் கொண்டு வந்து வைத்துவிட்டு, அதனை ஆற்றும்படி வேறு இரு பாத்திரங்களையுங் கையில் எடுத்துக் கொண்டு நேசரத்தினத்திற்குச் சமீபமாக வந்திருந்து ஆற்றத் தொடங்க, நேசரத்தினம் இரண்டு பாத்திரங்களையுந் தான் எடுத்து அவற்றுட் கோப்பியைவிட்டு ஆற்றினாள். "மகளே, ஆறிவிட்டாற் குடியும்" என்று கிழவி சொல்லுதலும், நேசரத்தினம் "ஆண்பிள்ளைகளிருக்க நாங்கள் குடிப்பதா; உங்கள் மகனையுங் கூப்பிட்டுக் கொடுங்கள்" என்று சொல்லிக் கோப்பியை இரண்டு பாத்திரங்களிலும் பகிர்ந்து வைத்தாள்; தாயின் சொற்படி தூரத்தே நின்ற கோபாலன் அங்கே வந்து ஒரு பாத்திரத்தையெடுக்கும்போது, நேசரத்தினம் "நாங்கள் கிறிஸ்தவர் தொட்டதை அவர் குடிக்கமாட்டார்" என்று புன்னகையோடு சொல்லுதலும், தாய், "இல்லை, பிள்ளை, நீர் தொட்டதென்றால், சீனி போடாவிட்டாலும் அவனுக்கு இனிக்கும்" என்று பரிகாசார்த்தமாகக் கூறினாள்; இதற்கிடையிற் கோபாலன் பாத்திரத்தையெடுத்துக்கொண்டு அப்புறஞ் சென்று கோப்பியருந்தினான். கோப்பி குடிக்கத் தொடங்கிய நேசரத்தினம் "நீங்களும் குடித்தாலென்ன" என்று கிழவியைக் கேட்கக் கிழவி "நான் தேயிலை கோப்பி குடித்துப் பழக்கமில்லை" என்று சொல்ல, நேசரத்தினம் கோப்பியருந்தினாள். கூடவந்த வேலைக்காரி வண்டிக்காரன் என்னும் இவர்களுக்கும் கோப்பி கொடுக்கப்பட்டது.

பின்னருங் கிழவி நேசரத்தினத்தைப் பார்த்து "மகளே, சொல்லத் தொடங்கியதை இடையில் விட்டுவிட்டேன்; சமய வித்தியாசமில்லாவிட்டால் எனக்கு முழுச்சம்மதம்" எனலும், நேசரத்தினம் "எங்கள் தகப்பனார் சாமானியமான கிறிஸ்தவரென்றாலுங் காரியமில்லை; அவரோ போதகர்; அவருடைய மகளாக நான் இருந்து கொண்டு சமயம் மாறுவதென்றால் அது சரிவருமா" ஒருபோது அவருடைய உத்தியோகத்திற்கும் பிழை நேரக்கூடும்; அதையிட்டுத்தான் நான் யோசிக்கிறேன்" என்று கூறினாள். அதைக்கேட்ட கிழவி "மகளே, நீ முந்தைநாளையிற்பிள்ளை, உனக்கொன்றுந் தெரியாது; எனக்கு நல்லாய்த் தெரியும், உன்பேரனார் அப்பாப்பிள்ளை சுத்தசைவன்; அவர் மற்ச மாமிசந்தானும் புசிப்பதில்லை; அவர் எங்கள் தாய்வழிக்குச் சொந்தமானவர்; அவருக்கு உன் தகப்பனார்தாம் ஒரேயொரு ஆண்பிள்ளை; அவர் நல்லாயிருந்து பின் கெட்டுப் போனார்; உனது தகப்பனார் ஏழுஎட்டு வயதாக இருக்கும்போது பாதிரி பள்ளிக்கூடத்திற் படித்து வந்தார்; இதற்கிடையில் அப்பாப்பிள்ளையாரும் இறந்துபோக, அக்காலத்திலிருந்த பாதிரியார் உன் தகப்பனாரைத் தங்கள் சமயத்திலே சேர்த்து இங்கிலீசும் படிப்பித்துத் தங்கள் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராக்கி வைத்தார். கொஞ்சக்காலம் உபாத்தியாயராக இருந்த பின்புதான் அவர் போதகராக வந்தார்; கிறிஸ்தமார்க்கமான பின்பு தான் நாங்கள் கொண்டாடாமல் விட்டது; என் மகனுக்கு நீ மச்சாள் முறையாகும்; ஆனால் நான் இவைகளொன்றையும் அவனுக்குச் சொல்லவில்லை" யென்று பழைய விருத்தாந்தங்களெல்லாவற்றையுங் கிழவி சொன்னாள்; நேசரத்தினம் இந்த வரலாறு முழுவதையும் கேட்டு ஆச்சரியமடைந்து "ஐயோ, எனக்கு எப்படி இவையெல்லாந் தெரியும்? எங்கள் தகப்பனார் ஒருநாளும் இவைகளைப்பற்றிச் சொன்னதில்லை; இன்றைக்குத்தான் புதினமாகக் கேள்விப்படுகிறேன்; என்றாலும் பாருங்கள், பாதிரிமார் செய்த நன்றியை நாங்கள் மறப்பது சரியல்ல" என்றாள். "பாதிரிமார் செய்த நன்றியை மறக்கக்கூடாதுதான்; உன் தகப்பனார் சைவனாக இருக்கவே அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி செய்திருந்தால் அது உங்கள் பொருட்டுச் செய்த நன்றியாகும்;ஆனால் இது அவர்கள் தங்களுடைய நயங்கருதிச் செய்த செய்கை" என்று கிழவி கூறினாள்; நேசரத்தினம் "ஓம், அது மெய்தான்" என்றாள். "மகளே, பகல் என்றாற் காரியமில்லை; இராக்காலம், அதிக நேரஞ் சென்றுவிட்டது; இனிமேலும் நாங்கள் கண்டுகொள்வோம்" என்று கிழவி சொல்லுதலும், நேசரத்தினம் "ஓம், ஓம்; அதிகநேரமாகிவிட்டது" என்று சொல்லிச் சீக்கிரம் புறப்பட்டாள். கோபாலனுந் தாயும் அவர்களைச் சிறிது தூரஞ்சென்று வழிவிட்டு மீண்டார்கள். நேசரத்தினத்தைப் பற்றிக் கிழவியின் மனசில் நல் எண்ணம் உண்டாய் விட்டது.

* * *

பத்தாம் அத்தியாயம்

இது நடந்து சிலநாட் சென்றபின் ஒரு தினம் குட்டித்தம்பிப் போதகர் தன் மகளைத் தனியே கூப்பிட்டு "மகளே, கோபாலனையும் உன்னையும் பற்றிய கதை மெல்ல மெல்ல வெளியில் வருகின்றது; நேற்று வீரகத்திச்சட்டம்பியாரும் என்னைக்கண்டு இதைப்பற்றி விசாரித்தார்; அதை நெடுகவிடுவது முறையல்ல; இதுவரையில் என்ன முடிவிலிருக்கின்றது" என்று வினவினார். நேசரத்தினம் சிறிது நேரம் மௌனமாகநின்று பின்னர் தன் பிதாவைப் பார்த்து "அப்பா, விவாகத்திற்குச் சம்மதந்தான் ஆனால், எங்கள் மார்க்கத்திற்கு வரப் பிரியமில்லை; தாய் அந்த விஷயத்தில் முழுமாறாக நிற்கிறதாம்" என்றாள். மகள் சொல்லக்கேட்ட குட்டித்தம்பிப் போதகர் சத்தமிட்டுச் சிரித்து, "ஆகா! நல்லாக விருக்கிறது அவளுடைய யோசனை, பின் என்ன, உன்னையும் தங்கள் மார்க்கத்திற்கு வரும்படி கேட்கிறானா" என்று சிறிது ஆத்திரத்தோடு கேட்க, "அப்படித்தான் அவருடைய எண்ணம்" என்று மகள் சொன்னாள். "கிணறு தோண்டப் பூதம் புறப்பட்டாற் போலல்லவா இருக்கிறது; பாதிரியாருடைய முன்னிலையிற் சபதஞ் செய்து விட்டேனேயென்று இப்படியெல்லாஞ் செய்து இவ்வளவு காலமும் பார்த்திருந்தேன்; அதைப்பற்றிக் காரியமில்லை; குட்டித்தம்பி இதுவரையில் எடுத்த காரியத்தில் ஏமாறவில்லை; கோபாலன்தான் ஏமாற்றிவிட்டான்; சரி இருக்கட்டும், ஆனையும் அறுகம் புல்லிலே தடக்குப்படக்கூடும்; ஆனால், அவனை நாளை தொடக்கம் இந்த வீட்டுப் படலை திறக்க வேண்டாமென்றும், வீட்டுப் படியிற் கால்வைக்க வேண்டாமென்றும் நான் சொன்னதாகத் தெரிவித்துவிடு; செத்தையுட் கிடந்த ஆமையை மெத்தையிற் கொண்டுபோய் வைத்தாலும், அது செத்தையைத்தான் நாடும்" என்று கடுகடுத்துச் சொன்னார். தகப்பன் கடைசியிற் கூறிய சிலவார்த்தைகள் நேசரத்தினத்தின் மனசைப் புண்படுத்தின. ஆனால் அவள் மிக்க அடக்கத்தோடு தன் பிதாவைப் பார்த்து "அப்பா, சடுதியில் நாங்கள் அந்த உபாத்தியாயரை இங்கே வரவேண்டாமென்று சொன்னால், இப்படியொரு எண்ணத்தை மனசில் வைத்துக்கொண்டுதான் முந்தி எல்லாஞ் செய்தோம்" என்று அந்த உபாத்தியாயர் எண்ணக் கூடும்; மற்றையவர்களும் ஏதுஞ் சந்தேகங் கொள்ளுவார்கள்; அதுவுமன்றி, "சத்துருவானாலும் தம் வீட்டிற்கு வந்தாற் பெரியோர் அவனைச் சன்மானம் பண்ணுவார்கள்" என்று பஞ்சதந்திரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது; நீங்கள் சாமானியமான ஒருவராகவிருந்துகொண்டு இப்படிச் சொன்னாற் காரியமில்லை; அறியாமை யுள்ளவர்களுக்குச் சுவிசேஷத்தைப் போதிக்கும் நீங்கள், எல்லாருக்கும் புத்தி சொல்லும் நீங்கள்; இப்படிக் கோபித்தலும், ஆத்திரப்படுதலும் பார்ப்பவர்களுக்கு அழகாகத் தோன்றாதென்றாள். போதகர் சிறிது கோபமாறி "ஆம், மகளே, நீ சொல்வது சரிதான்; எனக்கு வேறொன்றிலும் ஆத்திரம் வராது; கர்த்தருடைய கருமமென்றால் ஏதோ என்னையறியாமற் கோபம்வந்துவிடுகிறது; அவன் வந்தபடி வந்து உன் தம்பிக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்கட்டும்; ஆனால் இனிமேல் அவன் வரும்போது நீமாத்திரம் அவனோடு ஒன்றும் பேசவேண்டாம்" என்றார். "பேசுவதையும் சடுதியில்விடவேண்டியதில்லையே; மெல்ல மெல்ல விடலாமே; என்னுடைய சம்மதமில்லாமல் ஏதும் நடக்க முடியுமா" என்று நேசரத்தினம் சொல்ல, "என்ன மகளே, இன்று நீ விபரீதமாகப் பேசுகிறாய்; "நான் கம்பலப் பொதியை விட்டாலும் கம்பலப்பொதி என்னை விடுகிறதில்லை என்ற கதை போலிருக்கிறது" என்று போதகர் சிரிப்போடு கூறினார். "அப்பா, அது என்ன கம்பலப்பொதியின் கதை; அது எனக்கு விளங்கவில்லை; விளங்கச் சொல்லுங்கள்" என்று கேட்க, போதகர் பின்வருமாறு சொல்லுகின்றார்:-

"மகளே, ஒருநாள் ஒரு ஆறு மழையிற் பெருகிப் பாயும்போது, ஆற்றோரத்தில் நின்ற மூவர் அந்த நதியில் ஒரு கம்பலப்பொதி அள்ளுண்டு போகக் கண்டார்கள். அவர்களுள் ஒருவன் மூன்றாம் ஆளைப் பார்த்து "நீ அந்தக் கம்பலப்பொதியை எடுத்துவா" என்று சொல்ல, அவன்; எட்டுந் தண்ணீராதலினால் ஆற்றுளிறங்கி அதனை யெடுக்கும்படி தொடர்ந்து போனான்; போனவன் சிறிதுநேரஞ் செல்ல மற்றையவர்களைப் பார்த்து, "கம்பலப்பொதியைப் பிடித்துக்கொண்டேன்; தனியே கொண்டுவர முடியவில்லை; நீங்களும் வாருங்கள்" என்றான். "தனியே கொண்டுவர முடியாவிட்டால் அது வேண்டாம்; நீ அதனை விட்டு வா" என்று ஆற்றங்கரையில் நின்ற இருவருஞ் சொன்னார்கள். "கம்பலப்பொதி என்னைவர விடுகுதில்லை" என்று அவன் சொல்லுதலும், கரையில் நின்ற இருவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சரியப்பட்டு ஆற்றுள் இறங்கிச் சென்று பார்த்தபோது, தாங்கள் கண்ட பொருள் கம்பலப் பொதியல்ல, வெள்ளத்தில் அள்ளுண்டு போகும் ஒரு கிழக் கரடி இவனைப் பிடித்துக்கொண்டதென்பதை அறிந்தார்கள். உடனே அவ்விருவரும் அக்கரடியைச் சாகக்கொன்று அவனை விடுவித்துக்கொண்டு கரையேறினார்கள்; இதுதான் அந்தப் பழமொழி" யென்று தகப்பன் சொல்லுதலும், மகள் "இந்தப் பழமொழியை எனக்கு ஏன் சொன்னீர்கள்" என்று கேட்க, அல்ல, மகளே, கோபாலன் உன்னை விட்டாலும் நீ கோபாலனை விடமாட்டாய்போற் காணப்படுகிறது" என்றார். பிதாச் சொன்ன இந்தவார்த்தை மகளுக்குப் பிடிக்கவில்லை; "நானாக நேசம் வைத்தேனா; உங்கள் சொற்படிதானே நடந்தேன்" என்றாள் நேசரத்தினம். தாம் காத்திருந்ததற்கு மாறாக விஷயம் முற்றிக்கொண்ட தென்பதை அப்பொழுதுதான் குட்டித்தம்பிப் போதகர் உணர்ந்தார். அவருக்கு ஆறின கோபம் மீண்டு வந்து விட்டது; அவர் தன் பிள்ளையைச் சினந்து பார்த்து "நேசரத்தினம், வீண்கதை பேசாதே; அவனை விவாகஞ் செய்கிற எண்ணத்தை இன்றைக்கே விட்டுவிட வேண்டும்" என்று சொல்லி அவ்விடம் விட்டகன்றார். நேசரத்தினம் எந்நாளுமில்லாத துயரத்தோடு காணப்பட்டாள்.

"நானாக நேசம் வைத்தேனா, உங்கள் சொற்படிதானே செய்தேன்" என்று கூறிய வார்த்தை குட்டித்தம்பிப் போதகருடைய உள்ளத்தில் அதிக சிந்தனையை உண்டாக்கி விட்டது; பிறருக்கென்று வைத்த பொறியிலே, வைத்த அவர்தாமே அகப்படுவது முண்டல்லவா! "கோபாலன் தாயில்லாப் பிள்ளையாகிய என் மகளை வஞ்சித்து விட்டான்போலும்" என்று போதகர் மிகவும் ஆத்திரப்பட்டார். ஆனாற் கோபாலனைத் தாம் வஞ்சிக்க முயன்றமையைப்பற்றிப் போதகர் சிறிதேனும் சிந்தித்திருப்பாராயின் அவர் மனத்தில் அவ்வளவு ஆத்திரம் பிறந்திருக்கமாட்டாது. "கோபாலனை என் வீட்டிற்கு இனிமேல் வரவேண்டாமெனத் தடுப்பது சின்னத்தனம்; அவனையும் என் மகளையும் ஒருவரோடொருவர் பேசவேண்டாமென்று சொல்வதாற் பயனில்லை; சங்கடம் வருவதற்கு முந்திக் காத்துக்கொள்வதே புத்தி" என்று நினைத்துப் போதகர் தமது மகளுக்குச் சீக்கிரத்தில் ஒரு கிறிஸ்தவ வாலிபனை மணஞ்செய்து வைத்தல் வேண்டுமென்று நிச்சயித்தார். அவர் ஒரு தினம் தமது நண்பராகிய அரியகுட்டிச்சட்டம்பியார் வீட்டிற்குச் சென்று வெகுநேரம் வார்த்தையாடிக் கொண்டிருந்த பின் அவரை நோக்கி "உபாத்தியாயர், இன்றைக்கு ஒரு முக்கியமான கருமத்தையிட்டு உம்மோடு யோசிக்கும்படி வந்தேன்" எனலும் சட்டம்பியார் "என்ன கருமமோ" என்று கேட்க, போதகர் "வேறொன்றுமல்ல, எனது மகள் நேசரத்தினமிருக்கிறாளே, அவள் இளம் பெண்; துரதிர்ஷ்டத்தினால் விதவையாய் விட்டாள்; ஒருவருஷ வாழ்க்கைதானுமில்லை; அல்லாமலும் தாயில்லாப் பிள்ளை; அவளை நெடுக இப்படியிருக்க விடுவது சரியல்ல; மனுஷன் சீவியம் நிலையல்ல; நான் இருந்தாற்போற் கண் மூடிவிட்டால் இந்தப் பிள்ளையின் கதி எப்படி முடியுமென்று யோசித்துப் பாரும்; ஆனபடியாற் கூடிய சீக்கிரத்தில் அவளுக்கும் ஒருவழி தேடிவிடவேண்டும்; இதைப்பற்றி உம்மோடு யோசிக்கும்படியே இப்பொழுது இங்கு வந்தேன்" என்று பெருமூச்சோடு சொன்னார்.

"அது தவறாமல், நீங்கள் செய்துவைக்க வேண்டிய கருமந்தான்; ஆனால், கேட்கிறேனென்று என்னை விபரீதமாக விளங்கிக் கொள்ளக் கூடாது; உங்கள் பிள்ளைக்கு வந்தநன்மை தீமை, என் பிள்ளைக்கு வந்த நன்மை தீமையென்று நான் நினைத்து நடப்பவன்; கோபாலன் என்ற வாலிபனுக்குச் செய்ய யோசித்திருக்கிறீர்களென்று ஊரில் ஒரு கதை பிறக்கிறது; நம்முடைய வீட்டுக்காரியும் இரண்டு மூன்று தினங்களுக்கு முன் இதைப்பற்றிக் கேட்டாள்; நான் உங்களை விசாரித்தறிய வேண்டுமென்றிருந்தேன்; இப்பொழுது நீங்கள் இந்த விஷயமாகப் பேசியபடியால் எனக்கு அந்த ஞாபகம் வந்தது" என்று அரிய குட்டிச் சட்டம்பியார் சொன்னார். கேட்ட மாத்திரத்தே போதகருக்கு நெஞ்சு திடுக்கிட்டது; ஆனாலும் அவர் வெளியிற் காட்டவில்லை; "என்ன? உபாத்தியாயர் வீண்கதை பேசுகிறீர்; என்னவோ தின்னவந்த நாய் பிட்டத்தைக் கடிக்க முயன்றாற்போல, பாடஞ் சொல்லிக் கொடுக்கவந்த கோபாலன் அப்படியும் நினைக்க முடியுமா? அவனுடைய மார்க்கமென்ன? எங்களுடைய மதமென்ன? அது சும்மா வீண்கதை; சொல்லுவார் சொன்னாலும் கேட்பார்க்கு மதியில்லையா? என்னை நல்லாய் அறிந்த நீர் இந்தத் தெருக்கதையை எப்படி மெய்யென்றெடுக்கலாம்" என்று புறத்தே அதிக ஆத்திரங்காட்டிப் போதகர் பேசினார். "இல்லை ஐயா, நானும் அந்தக் கதையை நம்பாதபடியாற்றான் உங்களை விசாரித்தேன்" என்று சட்டம்பியார் சாதுரியமாகச் சொல்லுதலும், போதகர் "அது ஒரு போதும் நடக்கப் போவதில்லை; அவன் கைம்பெண்டாட்டி வளர்த்த கழுதை" என்று கோபாலனைப் பின்னரும் நித்தித்துவிட்டு அரியகுட்டிச் சட்டம்பியாரைப் பார்த்து "உபாத்தியாயர், நமது சகோதரியினுடைய பிள்ளையிருக்கிறான் சொலொமன் அரியரத்தினம்; அவனை என்பிள்ளைகளுள் ஒன்றுக்குச் செய்து வைக்கவில்லையென்று என் தமக்கையாருக்கு இன்றைக்கும் என்னோடு மனஸ்தாபம்; இந்த நேசரத்தினத்திற்கே அவனைச் செய்து வைக்க வேண்டும் என்று எனது தமக்கையார் தொடக்கத்தில் எத்தனையோ பாடுபடவும், நான், அவன் படிப்பை அலட்சியஞ் செய்துவிட்டான்; வீண் கூட்டங்கூடித் திரிகிறான்; பொறுப்பறியாதவனாயிருக்கிறான்; ஒரு குடும்பத்தைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பமாக வைத்து நடத்தமாட்டான் என்று நினைத்து இவளுக்கு வேறு விவாகத்தைச் செய்துவைத்தேன்; அதுவும் இடையிற் பழுதாய்ப் போய்விட்டது; எப்படியிருந்தாலும் அவன் நம்முடைய பிள்ளை; நம்முடைய சமயம்; அவனைத் திருத்திக் கொள்ளலாம்; பாதிரியாரோடு பேசி எங்கள் பாடசாலைகளுள் ஒன்றில் உபாத்தியாயராக்கியும் விடலாம்; நீரடித்து நீர் விலகுவதல்ல; அவனுந் தகப்பனில்லாப் பிள்ளை; ஆனபடியால் நானே அவனுடைய காரியங்களைப் பார்க்க வேண்டியவன்; அவனுக்கு வேறெங்காவது விவாகம் பேசிப்போனால், ஏன் உம்முடைய மக்களில் ஒரு பிள்ளையைச் செய்து கொடுத்தாலென்ன என்று என்னைக் கேட்பார்கள்; இனி, நான் சிறுபிள்ளையாக விருக்கும்போது மூத்த சகோதரி என்னிடத்திற் பாராட்டி வந்த அன்புக்கு ஒரு அளவில்லை; அவைகளை யெல்லாம் மறந்து போகக்கூடாது; ஆனபடியால் நீர் என் தமக்கையாரைக் கண்டு நேசரத்தினத்தைச் சொலமனுக்கு மணஞ் செய்து வைப்பது போதகருக்குப் பிரியம் என்று தெரிவியும்" என்றார். அரியகுட்டிச் சட்டம்பியாரும் விரைவில் அப்படிச் செய்வதாக வாக்களித்துச் சென்றார்.

* * *

பதினோராம் அத்தியாயம்

அரியகுட்டிச்சட்டம்பியார் போதகருடைய தமக்கையுடன் இந்த விஷயத்தைப்பற்றிப் பேசியபோது, மனுஷி கோபித்து "ஆமோ, அப்படியுமாச்சோ, அவன் என்னுடைய பிள்ளையைப் போடுதடியென்று நினைத்தானோ, நேசரத்தினம் குமர்ப்பிள்ளையாக விருந்தபோது இந்தச் சம்பந்தத்தைச் செய்து வைக்கவேண்டுமென்று நான் படாத பாடெல்லாம் படவும், குட்டித்தம்பிக்கு இஷ்டமில்லாமற் போச்சு; அவள் கட்டியறுத்த பிறகுதான் குட்டித் தம்பிக்கு மருமகன்மேற் கிருபை பிறந்து விட்டதாக்கும். ஏன்? என் பிள்ளை படிப்பிற் குறைவா? அழகிற் குறைவா? அவன் குருடு செவிடு முடமா? அவனுக்கு இந்த ஊரில் ஒரு பெண் கிடையாதா? எனக்கு ஒரேயொரு பிள்ளை, அதுவுந் தகப்பனில்லாதது; சட்டம்பியார், நீர் குறைநினைக்க வேண்டாம், நான் ஒருபோதுஞ் சம்மதிக்கமாட்டேன்; குட்டித்தம்பியின் மாதிரியைப் பார்த்தாற் "கெட்டமாடெல்லாம் கேப்பா புலத்திற்கு" என்றாற் போலல்லவா இருக்கிறது" என ஆர்ப்பரிக்கத் தொடங்கினாள். இவற்றையெல்லாங் கேட்டுக்கொண்டு பக்கத்திலே நின்ற சொலமன் தாயைப்பார்த்து "அம்மா, அம்மா, பிரியமில்லாவிட்டாற் பிரியமில்லையென்று சொல்லிவிட்டுப் போவதல்லாமல் வீண்கதையெல்லாம் ஏன் பேசுகிறீர்கள்; ஒருவர் வீட்டுப் பெண்ணைக் குறைசொல்வது சரியல்லவே; அவர்கள் ஆர், நாங்கள் ஆர், புறத்தினரல்லவே" என்று தாயைச் சிறிது கடிந்து சொன்னான். "தம்பீ, நீ சொல்வதுதான் நியாயம்" என்று அரியகுட்டிச் சட்டம்பியார் அவர்களுக்குச் சொல்லிவிட்டு "என்னவோ, இன்னமும் யோசித்துச் சொல்லுங்கள்" என்று சொலமனுடைய தாய்குச் சொல்ல, மனுஷி "கிழக்கே உதிக்குஞ் சூரியன் மேற்கே உதித்தாலும் உந்தக் காரியம் நடவாது" என்று பிடிவாதமாக நின்றாள். "சரி, இனி உங்கள் இஷ்டம், நான் சொல்ல வேண்டியதைச் சொன்னேன்" என்று கூறிவிட்டு அரியகுட்டிச் சட்டம்பியார் அவ்விடம் விட்டுப் புறப்பட்டார். அவரை வழிவிடுபவன்போல, சொலொமன் அவர் பின்னே சென்றான். சென்றவன் "உபாத்தியாயர் நடந்த செய்தி என்ன? உங்களை அனுப்பியது யார்? போதகர் மாமாவா" என்று ஆவலோடு கேட்டான். சட்டம்பியார் "ஓம், என்று சகல சமாசாரங்களையும் அவனுக்குச் சொன்னார்; சொலொமன் "உபாத்தியாயர், எனது தாயார் வயது சென்றகாலம்; தாயார் சொன்னவைகளொன்றையும் வெளிவிட வேண்டாம்; நான் தாயாரைச் சரிபடுத்திக் கொள்ளுகிறேன்; அது சம்மதந்தான் என்று மாமாவுக்கு நீங்கள் சொல்லிவிடுங்கள்" என்றான். சட்டம்பியாரும் "அப்படியே செய்கிறேன்" என்று சொலொமனுக்குச் சொல்லிவிட்டுச் சென்றார்.

சொலொமனைப்பற்றி நாம் அதிகஞ் சொல்ல வேண்டியதில்லை; அவன் தக்கவனாக விருந்தால் முந்தியே போதகர் தமது மகளை அவனுக்கு விவாகஞ் செய்து கொடுத்திருப்பார்; அவன் வீணன் என்றறிந்துதான் அப்படிச் செய்யாமல் விட்டவர்; "இந்தப் பெண்ணைக் கண்டவர் எருமை மேய்க்கப் போவரோ" என்றபடி, அப்படிப்பட்ட சொலமனுக்குப் போதகர் இப்படி எண்ணியிருக்கிறாரென்ற செய்தி ஆனந்தமாக இருந்தது. முன்னொருபோதும் போகாத சொலொமன் ஒரு நாட் பின்னேரம் போதகர் வீட்டிற்கு வெகு ஆடம்பரமாக உடுத்திக்கொண்டு சென்றான். அந்த நேரத்திற் போதகர் அங்கேயில்லை; சொலொமனுடைய உடையைப்பற்றியும் அவன் அன்று அங்கே போன உல்லாசத்தைப் பற்றியும் விபரமாகச் சொல்லப்புகின், இக்காலத்து வாலிபர் சிலர் எம்மைக் குறை கூறுவரென்று பயந்து இங்கே சொல்லாமல் விடுகின்றோம். சொலொமன் போதகர் வீட்டுப் படலைதிறந்து உள்ளே செல்லு முன், அவன் அணிந்திருந்த "மிக்காடொ சென்ற்" எனப்படும் வாசனாதிரவியத்தின் வாடை போதகர் வீட்டுட் பிரவேசித்துவிட்டது. அவன் தங்கள் வீட்டுக்கு வரும்போது தலைவாசலிலிருந்த நேசரத்தினம் அவன் அணிந்திருந்த விசேஷ உடையையும் மூக்குக் கண்ணாடியையுங் கண்டு அவனை யாரோ அந்நியனென்று நினைத்து வீட்டினுள்ளே செல்ல முயன்றாள்; பின்னர்ச் சிறிது உற்றுப் பார்த்து, தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைத்துனனாகிய சொலொமன் என்பதை யறிந்து தலைவாசலில் நின்றபடியே "அத்தான், வா, வா, என்ன ஒரு நாளுமில்லாத காரியம், இன்றைக்கு நீ இந்தப் பக்கமாக வந்தது" என்றாள். அவள் பேசிய முறை சொலொமனுக்குப் பிடிக்கவில்லை. "என்ன, இவள் என்னை மரியாதையாக அழைக்கவில்லை; என்னைக்கண்டு சிறிதும் நாணி ஒதுங்கவுமில்லை; ஒருபோது மாமாவினுடைய நோக்கம் இன்னமும் இவளுக்குத் தெரியாமலிருக்கக் கூடும்" என்று மனசில் நினைத்துக் கொண்டு "விசேஷமொன்றுமில்லை; நேசம், சும்மா, வந்தேன்" என்று சொல்லி நின்றான். நின்றவனை நேசரத்தினம் "உந்தக் கதிரையில் இரு அத்தான்" என்று அயலிலேயிருந்த ஒரு நாற்காலியைச் சுட்டிக் காட்டிச் சொன்னாள். அவன் அதில் உட்கார்ந்தான். நேசரத்தினம் தங்கள் வேலைக்காரியைக் கூப்பிட்டு, "அத்தானுக்குக் காப்பி கொண்டுவந்து கொடு" என்று சொன்னாள். வேலைக்காரி கொண்டுவந்து கொடுக்க அவன் அதை வாங்கிக் குடித்தான்; நேசரத்தினம் "அத்தான் இப்பொழுது என்ன செய்கின்றாய்; படிக்கிறாயா? அல்லது, ஏதும் முயற்சி பார்க்கிறாயா?" என்று கேட்டாள். இந்தக் கேள்விக்கு மறுமொழி சொல்வது சொலொமனுக்குக் கஷ்டமாகவிருந்தது. "பள்ளிக்கூடம் விட்டுவிட்டேன்; ஏதும் ஒரு முயற்சி பார்க்கலாமென்றால், அம்மா விடவில்லை, எனது சிநேகிதன் ஒருவர் கண்டிக்கு வரும்படி யெழுதியிருக்கிறார்; போகலாமென்று யோசிக்கிறேன்" என்றான். "போகலாம் என்று யோசிப்பதை விட்டுவிட்டு, போய் ஏதும் முயற்சி பார்க்க வேண்டும், ஏதுமொரு முயற்சியில்லாமல் இந்தக் காலத்திற் சும்மாவிருக்க முடியுமா? அப்படியிருந்தால் ஒருவரும் மதியார்கள்" என்று நேசரத்தினம் புத்திசொன்னாள். இப்படி இவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது வழக்கம் போற் பாடஞ் சொல்லிக் கொடுக்கும்படி கோபாலன் அங்கே வந்தான்.

கோபாலன் வருதலைக் கண்டவுடனே, நாற்காலியிலிருந்த நேசரத்தினம் மெல்ல எழுந்து அன்னமென நடந்து, மயிலென ஒதுங்கி நின்று, குயிலோசையினுமினிய தன் குரலாற் படிக்க வரும்படி தனது தம்பியைக் கூப்பிட்டாள். சிறுவன் உடனே வந்து படிக்கத் தொடங்கினான். "அன்பிற்குமுண்டோ அடைக்குந் தாள்" என்ற பிரகாரம், கோபாலனிடத்துத் தனக்கிருந்த மெய்யன்பை நேசரத்தினத்தினால் மறைக்க முடியவில்லை. அவள் அவனுடனே அந்தச் சமயத்திற் பேசாவிட்டாலும், அவனிடத்திலுள்ள அன்பைக் கண்களாற் பருகுவாள்போல் ஆர்வத்துடன் பார்த்தாள். இவர்களிருவரையுஞ் சொலொமன் மிக நுட்பமாக அவதானித்தான்; ஏனென்றாற் சில தினங்கட்கு முன்னர்ச் சொலொமனுடைய காதிலும் இவர்களைப் பற்றிய செய்தி யெட்டியிருந்தது. தான் வந்தபோது நேசரத்தினம் தன்னையலட்சியஞ் செய்ததும், கோபாலனைக் கண்ட மாத்திரத்தே அவள் மெல்ல இருக்கை விட்டெழுந்து அப்புறம் ஒதுங்கி நின்றதும், இருவரும் ஒருவரையொருவர் ஆர்வத்தோடு நோக்கியதும் சொலொமன் கொண்டிருந்த சந்தேகத்தைத் திடப்படுத்தி விட்டன. சொலொமன் கோபாலனைப் பார்த்து; "மிஸ்டர், நீர் இங்கே ஒவ்வொருநாளும் வந்து பாடஞ் சொல்லிக் கொடுக்கிறதாக்கும்" என்றான். "ஓம்" என்று கோபாலன் பதில் சொல்லிவிட்டுச் சிறுவனுக்குப் பாடஞ் சொல்லிக் கொண்டிருந்தான். வீட்டுவாசலில் ஒதுங்கிநின்ற நேசரத்தினத்தைச் சொலொமன் பார்த்து "நேசம், நாங்கள் ஏன் அவர்கள் படிப்பதற்கு இடையூறாக விருப்பான்? நாங்கள் அந்தப்புறத்திற் போயிருந்து பேசுவோம்" என்று மெல்லச் சொன்னான். சொலொமன் சொன்ன இந்த வார்த்தை நேசரத்தினத்திற்குப் பிடிக்கவில்லை. "பேசவேண்டியதென்ன? ஏதும் பேச வேண்டியிருந்தால், இங்கேதானே பேசிக்கொள்ளலாமே; அவர்கள் தங்கள் பாட்டிற் படிக்கின்றார்கள்" என்று நேசரத்தினம் சிறிது வெறுப்போடு சொன்னாள். இந்த வார்த்தையைக் கேட்டவுடனே சொலொமனுக்கு இருந்த சந்தேகமும் போய்விட்டது. அவன் சிறிதுநேரம் யாதும் பேசாம லிருந்துவிட்டுப் பின்னர்ப் பெருமூச்சுவிட்டு நேசரத்தினத்தைப் பார்த்து "சரி, நேசம், நான் இனி மேல் வருகிறேன்" என்று சொல்லிப் போதற்கு எழுந்தான். "அத்தான், வந்த கருமமென்ன? ஒன்றும்பேசாமற் போகிறாய்; அப்பாவிடம் ஏதுஞ் சொல்ல வேண்டியதுண்டா" என்று கேட்டாள். "அப்படி யொன்றுமில்லை; நான் எல்லாவற்றிற்கும் நாளைக்கு வருவேன்" என்று சொல்லிவிட்டுக் கோபாலனை நோக்கி "மிஸ்ரர், நீர் இருந்து படிப்பியும்; நான் வருகிறேன்" என்று கூறிப் பெருமூச்சு விட்டுக்கொண்டு அவ்விடத்தை விட்டகன்றான். சொலொமன் போனபின் நேசரத்தினமும் கோபாலனும் ஒருவரோடொருவர் வழக்கம்போற் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனாற் சொலொமனைப்பற்றிக் கோபாலன் நேசரத்தினத்திடம் யாதும் பேசவில்லை கோபாலன் ஒருபோது மனம் வருந்தக் கூடுமென்றெண்ணிப் போலும், நேசரத்தினம் தனது பிதாவுக்குந் தனக்குமிடையே நிகழ்ந்த செய்திகளைப் பற்றிக் கோபாலனுக்கு யாதும் கூறினாளல்லள். ஆனாற் சொலொமனுடைய மனத்திற் பெரிதும் ஆத்திரம் உண்டாய்விட்டது. அவன் தன்னைத் தன் மைத்துனி அலட்சியஞ் செய்தமையையும், எங்கோவுள்ள கோபாலனை உபசரித்தமையையும் எண்ணியெண்ணி மனம் புண்ணானான்; முன்னொருமுறை எங்கள் தாயார் பேசிச் சரிப்படாதெனக் கைவிட்ட சம்பந்தத்தை இப்பொழுது போதகர் மாமா தாமாகப் பேசத்தொடங்கி, நான் மறந்திருந்ததையும் ஞாபகப்படுத்தி விட்டாரே; என் விஷயம் தகப்பனுக்குச் சம்மதமன்றி மகளுக்குச் சம்மதம்போற் காணப்படவில்லையே; சரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றையும் நாம் அரியகுட்டிச்சட்டம்பியாரிடம் போய்ச் சொல்வோம்" என்று நினைத்துக்கொண்டு அவன் தன் வீட்டிற்குச் செல்லாமல் நேரே சட்டம்பியார் வீட்டுக்கே சென்று, தான் போதகர் வீட்டுக்குச் சென்றது முதல் அங்கே நடந்த சமாசாரங்களை யெல்லாம் ஒன்றும் ஒழியாமற் சொல்லிப் பெரிதும் ஆத்திரப்பட்டான். சட்டம்பியார் சொலொமனைப் பார்த்து "நீ ஆத்திரப்படாதே; அவள் சிறுபிள்ளை; அவள் நினைத்தபடி ஏதும் நடக்கப்போவதில்லை; போதகர் சாமானியமானவரல்லர்; மிகவும் பிடிவாதமுடையவர்; நான் அவரை, இன்றிரவு இல்லாவிட்டால் நாளைப் பின்னேரம் போய்க்கண்டு இதற்கொரு முற்று எடுத்து வருகிறேன்; நீ ஒன்றுக்கும் அவசரப்படாதே" யென்று சொன்னார். "ஐயா, எனக்கு ஒரு அவசரமுமில்லை; நம்முடைய சொந்த மச்சாள் ஏன் புறத்தியிற் போவான் என்றுதான் பார்க்கிறேன்; எனக்கு நூறு சடங்கு பேசி என்னுடைய தாயாரிடம் ஓயாமல் எத்தனையோ பேர் வருகிறார்கள்" என்று தன்னைப்பற்றிச் சொலொமன் சிறிது புளுகத் தொடங்கினான். "எட, தம்பி உன்னுடைய காரியந்தானே எனக்குத்தெரியும்; சரி, நான் எல்லாவற்றிற்கும் நாளைக்கு உன் மாமாவைக் கண்டுகொண்டு முடிவு சொல்லுகிறேன்" என்று சொல்லிச் சொலொமனை யனுப்பிவிட்டார்.

* * *

பன்னிரண்டாம் அத்தியாயம்

அரியகுட்டிச் சட்டம்பியார் அடுத்தநாட் பின்னேரம் குட்டித்தம்பிப்போதகர் வீட்டிற்குச் சென்று அவரைக் கண்டு பல விஷயங்களைப் பற்றிப் பேசிவிட்டுப் பின்னர், சொலொமனை விவாகஞ்செய்ய நேசரத்தினத்துக்குப் பிரியமில்லைப்போற் காணப்படுகின்றது என்ற செய்தியையுஞ் சொன்னார். ஆனால் அவர் ஒரு அனுபவமுள்ள நல்ல மனுஷனானபடியாற் போலும், கோபாலனையும் நேசரத்தினத்தையும் பற்றிச் சொலொமன் தமக்குச் சொன்ன கதைகளொன்றையும் குட்டித்தம்பிப் போதகருக்கு வெளியிடவில்லை. "உபாத்தியாயர், கோழியைக் கேட்டு ஆணஞ் சமைப்பதா, அவளுடைய பிரியங் கேட்டுக்கொண்டிருக்க முடியுமா? சொலொமனைச் செய்வதற்கு இருக்கிற தடையென்ன? ஒருபோது அவனுக்கு இப்பொழுது ஒரு முயற்சியுமில்லையென்று பார்க்கிறாளா? நான் கூடிய சீக்கிரத்திலே அவனை ஒரு உபாத்தியாயராக்கி வைப்பேன்; அல்லாமலும் தான் முந்தியொருமுறை வாழ்க்கைப்பட்டவளென்ற எண்ணம் நம்முடைய பிள்ளைக்கு இருத்தல் வேண்டும்; என் மகளுடைய விஷயத்தை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்; நீர் நமது மருமகனை விவாகத்திற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யும்படி சொல்லும்" என்றார். அரியகுட்டிச் சட்டம்பியாரும் "அப்படியே சொல்லுகிறேன்" என்று கூறிச் சென்றார். குட்டித்தம்பிப் போதகர் அன்று பொழுதுபட்டபின் தன் மகளைத் தனியிடத்திற் கூப்பிட்டு "மகளே, நேசம், நீ என்னைப் பெரிதும் வருத்துகின்றாய்" எனலும், மகள் "அப்பா, ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்; நான் உங்களுக்கு என்ன தவறு செய்தேன்; நான் அறியாமல் ஏதுந்தவறுசெய்தாலும், என்னைச் சொல்லித் தடுத்தல் உங்கள் கடமை" என்றாள். "நேசம், வேறொன்றுமல்ல, நீயோ சிறுபிள்ளை; உங்களுக்குத் தாயுமில்லை; மனுஷகாயம் நிச்சயமல்ல; எனக்கொரு பொல்லாங்கு நேரிடுமானால் உன் கதி என்னாகும்? இவற்றை யெல்லாம் யோசித்து நான் உனது மைத்துனனாகிய சொலொமனுக்கு உன்னை விவாகஞ் செய்துவைக்க நிச்சயித்திருக்கின்றேன்; நீ அதற்குத் தடை சொல்லாதே" என்று மிக்க துயரத்தோடு கூறினார்.

"அப்பா, நான் சொல்லுகிறேன் என்று கோபிக்க வொண்ணாது; எனக்கு விவாகம் வேண்டாம்; நான் இப்படியே எந்தக் காலமும் இருப்பேன்; நீங்கள் எனக்குச் செய்யவேண்டிய கடமையச் செய்து வைத்தீர்கள், என் பொல்லாத விதியாற் போலும், அது தவறிப்போய்விட்டது....." என்று நேசரத்தினம் சொல்லி முடிப்பதற்கிடையிற் குட்டித்தம்பிப் போதகர் கோபங்கொண்டு "ஏ பைத்தியகாரி, நீயும் அஞ்ஞானிகளைப் போல் விதியைப் பற்றிப் பேசத் தலைப்பட்டுவிட்டாயா? இது எல்லாம் அந்த அஞ் ஞானிப் பயல் கோபாலன் இந்த வீட்டிற்கு வந்து போனதால் வந்த கெடுதியாகும்; நேசரத்தினம், நீ நினைத்தபடி யொன்றும் நடக்கப்போவதில்லை; நான் என் தமக்கையாருக்கு வாக்குப்பண்ணி விட்டேன்; சொலொமனை நீ கல்யாணஞ் செய்யத்தான் வேண்டும்; வீட்டுக்குள்ளிருக்கும் உனக்கென்ன தெரியும்? வெளியே செல்லும் நான் அறிவேன் உன்னைப்பற்றியும் கோபாலனைப்பற்றியும் நாளுக்கு நாள் வரும் வீண்கதைகளை; நீ எனக்கு அவமானத்தைத் தேடிவிடாதே; மற்றைப் பிள்ளைகளால் எனக்கு ஒரு கவலையுமில்லை; உனக்கும் இந்த விவாகத்தைச் செய்து விட்டால் நான் யாதுங் கவலையில்லாமலிருந்து கர்த்தருடைய கருமத்தைச் செய்து வருவேன்" என்று கூறினார். போதகர் இதற்குமுன் ஒருநாளும் தம்முடைய மகளை இப்படிக் கோபித்தறியார். அவர் இவைகளைச் சொல்லும்போது அவருடைய கண்களில் நீர் ததும்பியது; பிதாவின் கடுரமான வார்த்தையைக் கேட்டவுடனே நேசரத்தினத்தினுடைய கண்களினின்றும், முத்து உதிர்ந்தாற் போற் பொலுபொலென்று கண்ணீர்சிந்தியது. அவள் ஒன்றும் பேசாமல் அழுதபடியே நின்றாள். "ஏன், மகளே, ஒன்றுஞ் சொல்லுகின்றாயில்லை" என்றார் போதகர். "என்னை, என்ன பொதுமகளென்று நினைத்தீர்களா? எனக்கு விவாகஞ் செய்து கொள்ளப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியமில்லையென்றாற் பின்பும் ஏன் என்னை நெருக்குகிறீர்கள்? தானாக் கனியாத காயைத் தடிகொண்டடித்துக் கனிவிக்க முடியுமா? நான் இங்கே இருப்பது உங்களுக்குப் பிரியமில்லாவிட்டால், என்னால் மரியாதைக்கேடு உங்களுக்கு வருகின்றதெனக்கண்டால், நான் இந்த ஊரைவிட்டு எங்கேணும் போய்விடுகிறேன்" என்று சொல்லியழுதாள். நேசரத்தினம் கடைசியாகச் சொன்ன வார்த்தை போதகர் நெஞ்சிற் பெரிய கல்லைப் போட்டதுபோல் இருந்தது. அவர் தமது மகளை எல்லைகடந்து கோபித்துவிட்டேன் என்பதை அப்பொழுதுதான் உணர்ந்தார், அதையிட்டுப் பெரிதும் வருந்தினார் "என் மகளே, நேசம், நான் என்னை மறந்து உன்மேல் இன்று அதிகம் கோபித்து விட்டேன்; நான் உங்கள் தாய் இறந்துவிடப் பிதாவும் மாதாவுமாக உங்களை ஆதரவோடு வளர்த்து வருகின்றேன்; நான் "ஆத்திர" த்தினால் ஒன்றைச் சொல்லிவிட்டேனென்று நீ கவலைப்பட வேண்டாம்; இனிமேல் உன் விவாக விஷயமாக நான் ஒன்றும் பேசமாட்டேன்" என்று போதகர் தன் மகளை ஒருவாறு தேற்றினார்.

ஒரு சனிக்கிழமை காலையில் அரியகுட்டிச் சட்டம்பியார் குட்டித்தம்பிப் போதகர் வீட்டிற்குச் சென்றார்; நேசரத்தினம் சிறு பிள்ளையாகவிருக்குங்காலத்தில் இந்த அரியகுட்டிச் சட்டம்பியாரிடம் தமிழ்ப் படித்தவள்; சட்டம்பியாரைக் கண்ட மாத்திரத்தே நேசரத்தினம் உபாத்தியாயர் வருகிறாரென அவரை உபசரித்து ஒரு நாற்காலியில் உட்காரச் செய்தாள் "என்ன, பிள்ளை, எப்படி உங்கள் சுகம்? அப்பா இங்கே தானா? வெளியிற் போய்விட்டாரா?" என்று வினவுதலும், "ஏதோ சுகமேயிருக்கிறோம், அப்பா சற்று முந்தித்தான் வெளியிற் சென்றிருக்கின்றார்; சீக்கிரம் வந்து விடுவார்" என்று நேசரத்தினம் சொல்லிவிட்டு "உபாத்தியாயர், சுருட்டுக்கொண்டு வரவா, வெற்றிலை பாக்குக் கொண்டுவரவா" எனக் கேட்டலும் "ஒரு சுருட்டுக் கொண்டுவா, மகளே, பற்றவைக்கலாம்" என, உடனே நேசரத்தினம் சுருட்டும் நெருப்புப் பெட்டியும் ஒரு பளிங்குத் தட்டின்மீது வைத்துக் கொண்டுவந்து உபாத்தியாயர் முன்பு "மேசை" யில் வைத்தாள். உபாத்தியாயர் சுருட்டுப் பற்றவைத்து வாயினாற் புகைவிட்டுக்கொண்டு "ஆ! நல்ல காரமான சுருட்டு; அப்பா நேற்று முந்தை நாட் பட்டினம் போனவரோ? இது அங்குள்ள சுருட்டுத்தான், இங்கே இப்படிக் கிடையாது, நீ புகைத்துப் பார்க்கவில்லையோ பிள்ளை" என்றார். "உபாத்தியாயர், நான் ஒரு போதும் சுருட்டுப் பிடிப்பதில்லை; பெண்கள் சுருட்டுப் பிடிக்க வொண்ணாதென்று நீங்கள்தாமே முன்பு பள்ளிக்கூடத்தில் எங்களுக்குச் சொல்லியிருக்கிறீர்கள்" என நேசரத்தினஞ் சொல்ல, உபாத்தியாயர் "ஓம், பிள்ளை, அது மெய்தான், அது கூடாது, ஆனால் என்ன செய்வது, நம்முடைய மனுஷிக்கு ஒரு நாளைக்கு ஒரு கட்டுச் சுருட்டு வேண்டும்; தாயைப்பார்த்து என்னுடைய மகளும் இரகசியமாகச் சுருட்டுப் பற்றவைக்கப் பழகிவிட்டாள்; நானும் கண்டுங் காணாதவன்போல் ஒன்றுஞ் சொல்லாமல் விட்டு விட்டேன்; அது கூடாத பழக்கந்தான்" என்னலும், "ஆம், உபாத்தியாயர், சுருட்டுப்புகையாமல் அவர்களைத் தடுத்து விடுங்கள்" என்று நேசரத்தினஞ் சொல்லிவிட்டு "உபாத்தியாயர், நீங்கள் ஏன் அதிகமாக இந்தப் பக்கம் வராமல்விட்டு விட்டீர்கள்" என்று வினவினாள். "பிள்ளை, வரப்பிரியமில்லாமலல்ல, படிப்பிக்கிற முயற்சி யோடு மாத்திரம் நின்றாற் போதாது, ஏதும் வயல் தோட்ட முயற்சியும் பார்த்தாற்றான் எங்கள் சீவியம் மரியாதையாகப் போகும். அதனாலே எங்குஞ் செல்ல நேரமில்லை, இங்கே வராவிட்டாலும் உங்கள் அப்பாவை அதிகமாக வழிதெருவிற் சந்தித்துக் கொள்வேன்; அவ்விடத்தில் உங்கள் சுகத்தையும் விசாரித்துக் கொள்ளுவேன்; இன்றைக்கு உன்னைக்காண வேண்டுமென்று இங்கே வந்தேன்" என்றார்.

"என்ன விசேஷம் உபாத்தியாயர்? நான் செய்ய வேண்டியதென்ன" என நேசரத்தினம் கேட்டலும், அவர் "மகளே, எழுத்தறிவித்தவன் இறைவனாவன் என்றபடி, நானும் உனக்கு ஒரு பிதாவுக்குச்சரி, என்னிடத்தில் நீ ஒன்றையும் ஒளிக்கவேண்டாம், உன் அப்பா உன்னையிட்டே இந்நாட்களில் மிகவுங் கவலைப்படுகிறார்; நேற்றுப் பின்னேரம் என் வீட்டிற்கு வந்த இடத்தில், அவர் உன் விஷயமாக அதிகஞ் சொல்லி மெத்தவும் வருத்தப்பட்டார்; நானறிவேன், உங்கள் தாயார் சிறுவயதிற் பரலோகம் போய்விட, அவரே உங்களை தாயுந் தகப்பனுமாக இருந்து வளர்த்துப் பாதுகாத்து வருகின்றார். நீ படித்தபெண், இவைகளெல்லாம் உனக்குத் தெரியும், நான் சொல்ல வேண்டியதில்லை; அவர் எண்ணத்துக்கு மாறாக நீ நடப்பது சரியல்ல, மகளே" என்று சொல்லுதலும், நேசரத்தினம் "உபாத்தியாயர், நான் இது வரையில் அப்படி மாறாக ஒன்றும் நடந்து கொள்ளவில்லையே" எனலும், உபாத்தியாயர் "நேசம் உனக்கு உன் மைத்துனன் சொலொமனை விவாகஞ் செய்து வைக்கவேண்டுமென்று உன் அப்பா அதற்கான முயற்சிகளைச் செய்ய, நீ சம்மதிக்கின்றா யில்லையாமே; இதற்குச் சம்மதியாமலிருந்த உன் மாமியாரையும் நான் போய்க்கண்டு சம்மதிக்கச் செய்துவிட்டேன்; இப்படியெல்லாமிருக்க, நீ ஒரு நல்ல பிள்ளை, உன் அப்பாவின் சொல்லைத் தட்டி நடப்பது சரியல்லவே; எனக்கும் உன் அப்பாவுக்கும் ஏறக்குறைய ஒரேவயசென்று நினைக்கிறேன்; இருந்தாலும், இன்றைக்கும் அவர் சொல்லை நான் ஒரு போதும் மீறிநடப்பதில்லை; ஊரிலுள்ளவர் களுக்கெல்லாம் போதிக்கும் அவர், தம்முடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளைத் திருத்த முடியாமலிருக்கின்றாரென்ற செய்தி வெளியில் வருமானால் அது மதிப்பாகுமா" என்றார். "உபாத்தியாயர், விவாகஞ் செய்து கொள்ள எனக்கு இஷ்டமில்லை; அப்படி இஷ்டமில்லாத என்னை ஏன் எல்லாரும் நெருக்குகிறீர்கள்; விவாகமும் மற்றையவர்களைத் திருப்திபண்ணுவதற்காகச் செய்யத்தக்க காரியமா? அந்த விஷயத்தில் அப்பா மனஸ்தாபப்படுவது எனக்குப் பெரிய மனவருத்தம்" என்று நேசரத்தினங் கூறினாள். "நேசம், நீ வேறு என்பிள்ளை வேறல்ல; நான் சொல்லுகிறேன் என்று குறை நினையாதே; நீ கோபாலனை விவாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்கிறாயாமே; அது பிழையான எண்ணமென்று நான் சொல்லவில்லை; இப்பொழுது நீங்கள் கொண்டாட்டமில்லையென்பதல்லாமல், அவனும் உங்கள் இனத்தவன்தான், அதனோடு அவன் ஒரு சந்மார்க்கன்; ஆனால் சமயவித்தியாசமிருக்கிறது; மகளே, உன் பிதாவோ ஒரு போதகர்; அவருடைய மகள் ஒரு சைவ வாலிபனை விவாகஞ் செய்வதென்றால், அது அவருக்குப் பெரும் அவமானமாகும்; அல்லாமலும், சிலவேளை அவருடைய வேலைக்கும் கெடுதிநேரிடும், "இவைகளையெல்லாம் நீ யோசிக்க வேண்டும்; என்று உபாத்தியாயர் சொல்லுதலும், "இவைகளை யெல்லாம்; யோசித்துத்தான் நான் எனக்கு விவாகம் வேண்டாம் என்று சொல்லுகிறேன்; மேலும் அந்த உபாத்தியாயருடைய விஷயத்திலும் நான் அப்பாவினுடைய சம்மதமில்லாமல் எதனையுஞ் செய்யவில்லை; இது உண்மை" என்று மிக்க மனத்துயரத்தோடு நேசரத்தினம் சொன்னாள். "நேசம், அந்த விஷயமெல்லாம் நான் அறிவேன்; கோபாலனை மனந்திரும்பச் செய்யலாமென்று எண்ணியே உன் அப்பா உன்னையும் அவனுடன் நேசமாக நடக்கச் செய்தார்; அவன் மனந்திரும்பியிருந்தால் அவனையே உனக்கு விவாகஞ் செய்து வைத்திருப்பார்; அவன் அதற்கு உடன்படவில்லை; அவன்தான் உடன்பட்டாலும் அவனுடைய தாய் ஒருபோதும் அதற்கு உடன்படமாட்டாள்; அந்த மனுஷி ஒரு தேவ பக்தியுள்ள சைவப்பெண்; சரி அந்த விஷயம் கிட்டாதபோது நீ இப்பொழுது உன் அப்பா சொற்படி நடக்கலாமே" என்றார். "உபாத்தியார், வேலி பயிரை மேய நினைத்தாற் போல, சிறு பிள்ளைகளாகிய எங்களுக்குப் புத்தி சொல்லி எங்களை நல்வழியில் நடத்த வேண்டிய நீங்களே இப்படித் தகாத மார்க்கத்தைச் சொல்லத் தலைப்பட்டால், நாம் இனி ஆரை நோவது! விவாகஞ் செய்வதும் வியாபாரமா? மனந்திரும்பினால் விவாகஞ் செய்வது, மனந் திரும்பாவிட்டால் வேறு யாரையும் விவாகஞ் செய்யலாம் என்றீர்களே; நான் ஒரு நியதியற்றவள் என்பதா உங்களுடைய எண்ணம்? இந்த விஷயமாக எனக்கு அதிகம் பேச இஷ்டமில்லை; விவாகஞ் செய்வதென்றால் அந்த உபாத்தியாயரையே செய்வேன்; இல்லையேல் நான் விவாகமின்றி நெறி தவறாது இப்படியே இருப்பேன்; இதுதான் நிலைமை" என்று சிறிது ஆத்திரத்தோடும் துயரத்தோடும் நேசரத்தினம் சொன்னாள். "மகளே, நீ சொன்னது அத்தனையுஞ்சரி; ஆனால் உன்பிதா சொலொமன் விஷயத்திற் பிடிவாதமாக நிற்கின்றார்; தமது தமக்கையாருக்கு வாக்களித்துவிட்டார்; அவர்களும் வேண்டிய ஆயத்தங்கள் செய்கிறார்கள்; உனக்குப் புத்தி சொல்லி உன் மனத்தைத் திருப்பும்படி அவர்தாம் என்னை இங்கே அனுப்பினவர்; நான் ஏதோ சொல்ல வேண்டியதைச் சொன்னேன்; ஒரு வகையான சீர்கேடும் வராமல் நடந்துகொள்ளுங்கள்" என்று சொல்லியபின் அரியகுட்டிச் சட்டம்பியார் அவ்விடம் விட்டுப் புறப்பட்டார். அவர் புறப்படும்போது, சொலொமனும் தாயும் சில பண்டங்கள் கொண்டு போதகர் வீட்டுப் படலை திறந்துவரக் காணப்பட்டனர்.

* * *

பதின்மூன்றாம் அத்தியாயம்

தனது வீட்டிற்குவந்த சொலொமனுடைய தாயை நேசரத்தினம் வேண்டியபடி உபசரித்தாள். சொலொமனும் ஒரு புறத்தே நாற்காலியிலிருந்தான். கிழவி நேசரத்தினத்தோடு வார்த்தையாடும் போது அவளைத் தன் மகனுடைய மனைவி போல் மதித்தே உரிமையும் அன்பும் பாராட்டிப் பேசினாள்; "பிள்ளை, நீ நல்லாய் மெலிந்து போனாய்; தாயில்லாப் பிள்ளை யென்றது உன்னிலேதான் தெரிகிறது; ஆனாலும் இனி உனக்கென்ன குறை, நான் தானே தாய்க்குத்தாயாக விருக்கிறேன்; எப்படியோ எனக்கு இரத்தத்துடிப்பாயினும் இருக்காதா; உன் அப்பர் குட்டித்தம்பியின் செய்கையாலல்லவோ நான் இங்கே வந்து போகாமல் விட்டது. அப்படி வராமல் விட்டிருந் தாலும் உங்களுடைய சுகத்தை நான் எப்போதும் விசாரித்துக்கொண்டே வருகிறேன், மகளே" என்று சொல்லி நேசரத்தினத்தின் முகத்தைத் தடவினாள்; இப்படியிருக்கும்போது அங்குள்ள வேலைக்காரி "காப்பி" யும் வேறு ஏதோ சிற்றுண்டியும் இரு பகுதியாகக் கொண்டுவந்து நேசரத்தினத்தின் முன்னிலையில் வைத்து விட்டு நின்றாள்; நேசரத்தினம் அவற்றுள் ஒரு பகுதியைக் கிழவிக்கு முன் வைத்து, அவற்றை யருந்தும்படி சொல்லி, மற்றதைச் சொலொமனுக்குக் கொண்டுபோய்க் கொடுக்கும்படி தன் வேலைக்காரிக்குக் கண் காட்டினாள். வேலைக்காரி குறிப்புணர்ந்து அதனைச் சொலொமனுடைய முன்னிலையிற் கொண்டு போய் வைத்தாள். வேலைக்காரி தனக்குச் சிற்றுண்டி பரிமாறியது சொலொமனுக்குப் பிடிக்கவில்லை; நேசரத்தினம் கொண்டுவந்து வைப்பாளென்றல்லவா சொலொமன் காத்திருந்தான். கிழவியைச் சிற்றுண்டி யருந்தும்படி நேசரத்தினம் கேட்க, கிழவி "மகளே,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நான் உண்கிறேன், நீயும் உண்" என்று சொல்லித் தான் கொண்டுவந்த சில பழங்களையும் பட்சணங்களையும் நேசரத்தினத்தின் முன் எடுத்து வைத்தாள். நேசரத்தினம் இவற்றுட் சிலவற்றையெடுத்துக் கிழவிக்குக் கொடுத்து, சொலொமனுக்கும் வேலைக்காரியிடங் கொடுத்தனுப்பிவிட்டு "மாமி, நாங்கள் அறையுளிருந்து உண்போம்" என்றாள். கிழவியும் உடன்பட்டு உள்ளே சென்றாள். சொலொமன் உண்ணும் வரையும் வேலைக்காரி அங்கு நின்று பரிமாறினாள். இந்தச் செயல்களெல்லாம் சொலொமனுக்குப் பெரும் மனவருத்தத்தை உண்டாக்கின. "சரி, ஆக்கப்பொறுத்த நாம் ஆறப்பொறுக்க வொண்ணாதா; நேசத்தினுடைய அலட்சியம் இன்னும் எத்தனை நாளைக்கு" என்று சொலொமன் பெருமூச்சுவிட்டுப் போசனஞ் செய்து முடித்தான். இவர்கள் இப்படியிருக்கும்போது வெளியே சென்றிருந்த குட்டித்தம்பிப் போதகரும் மீண்டு வீட்டிற்கு வந்தார்; தமக்கையும் மருமகனும் அங்கிருப்பதைக்கண்டவுடன் அவர் ஆனந்தங் கொண்டார். "அக்கா, இன்றைக்கு உங்கள் வீட்டிற்கு வரவேண்டுமென்றிருந்தேன், அதற்கிடையில் நீங்கள் வந்துவிட்டீர்கள்; மெத்தநல்லது, வெள்ளிக்கிழமை காலை ஆறுமணிக்கு நாள் வைத்திருக்கிறேன். பின்னேரம் உங்கள் வீட்டிற்கு வருவேன் செய்யவேண்டிய முயற்சிகளைச் செய்யுங்கள்" என்றார். வேறும் ஆகவேண்டிய விஷயங்களைப் பேசிக்கொண்டு நேசரத்தினத்திற்குஞ் சொல்லிவிட்டுச் சொலொமனும் தாயும் தங்கள் வீட்டிற்கு மீண்டனர்.

குட்டித்தம்பிப் போதகரும் சகோதரியும் பேசிய வார்த்தைகளும், சொலொமனுடைய தாய் வந்தவிடத்தில் தன்னோடு நடந்துகொண்ட விதமும், சொன்ன சில வார்த்தைகளும் ஆகிய இவைகளெல்லாஞ் சேர்ந்து தனக்கும் சொலொமனுக்கும் விவாகம் விரைவில் நடக்கப் போகின்றதென்பதை நேசரத்தினத்திற்கு வெளிப்படுத்திவிட்டன. "எனது தகப்பனார் விவாக விஷயமாக இனியொன்றும் பேசுவதில்லை யென்று அன்றைக்குச் சொன்னாரல்லவா; அப்படிச் சொல்லிவிட்டு இப்படியேன் செய்தார், இவள் ஏழைச்சிறுமி தானே, இவளால் என்ன செய்ய முடியுமென்று எண்ணினாரோ; பெற்ற பிதாவே பிள்ளைக்கு அவமானத்தைத் தேட நினைத்தால் இனிச்செய்வதென்ன; விவாகமும் ஒருவரைப் பிரியப்படுத்துவதற்காக இன்னொருவர் செய்யக் கூடியதா; அன்பில்லாதவர் மீதிலே கொள்ளும் ஆசையும் ஒரு ஆசையோ; ஆனால் அன்னையில்லாப் பிள்ளையாகிய என்னை என் பிதா இப்படி இம்சிப்பது ஆண்டவனுக்கு அடுக்காது; என்னவோ நடப்பது நடக்கும்; நம்மால் ஆவதொன்றுமில்லை; நீதியை அநீதி வெல்லாது; இன்றைக்கு உபாத்தியாயர் வரும்போது சகல விஷயங்களையுஞ் சொல்லி விடுவோம்; அவர் நம்மிடத்தில் விசுவாசம் வைத்திருக்கும்போது, நாம் அவருக்கு ஒன்றையும் மறைக்க வெண்ணாது;" என இங்ஙனம் நினைத்துப் பெருமூச்சு விட்டுச் சிறிது கலங்கியபின் தன் வீட்டுக் கருமங்களைப் பார்க்கும்படி சென்றாள். அன்று பின்னேரமாதலும், கோபாலன் வழக்கம் போல் அங்கே வந்தான். கோபாலனுடைய முகத்திலும் அன்றைக்கு அதிக மகிழ்ச்சி காணப்படவில்லை; நேசரத்தினம் அவனிருக்குமிடத்திற்கு வந்து கவலையோடு கூடியவளாய் நின்றாள்; சிறிது நேரம் இருவரும் ஒருவரோடொருவர் துக்கத்தினாற் பேச முடியாதவர்போற் காணப்பட்டனர்; பின்னர் "கண்ணே, நேசம், என்ன இன்று மிகவும் வாடிய முகத்துடன் நிற்கின்றீர்? ஏதும் விசேஷ முண்டோ" என்று கோபாலன் வினவினான். "இந்தக் கேள்வியையே நானும் உங்களை இப்பொழுது கேட்கவிருந்தேன்; அதற்கிடையில் நீங்கள் கேட்டுவிட்டீர்கள்; என்று நேசரத்தினஞ் சொன்னாள்.

"நேசம், உமது விவாக விஷயம் முற்றி வருகின்றது; கல்யாணவீட்டிற்கு வேண்டிய சில பொருள்களை "இரவல்" தரும்படி உமது தகப்பனார் தம்முடைய சிநேகிதர் சிலருக்குச் சொல்லியிருக்கிறார். நான் மனம் வருந்தக் கூடும் என்று எண்ணிப்போலும், நீர் அதைப்பற்றி எனக்கொன்றுஞ் சொல்லாமல் விட்டுவிட்டீர்; கண்ணே, நேசம், நீர் ஒன்றுக்கும் விசனப்படவேண்டாம்; எல்லாம் விதியின்படி நடக்கும்; விதியில் உங்கள் தகப்பனார் முதலியவர்களுக்கு நம்பிக்கை யில்லாவிட்டாலும், உமக்கு நல்ல நம்பிக்கை உண்டென்பது எனக்குத் தெரியும்; சொல்லுகிறேன் என்று மனம் வருந்தவேண்டாம்; கண்ணே, இனி மேல் நான் இங்கே வருவது உமக்கும் அழகல்ல; எனக்கும் முறையல்ல; ஆனால் ஒன்றுமாத்திரம் சொல்லுகின்றேன் விவாகஞ் செய்தால் உம்மையே விவாகஞ் செய்வேன்; இல்லையேல் நித்திய பிரமசாரியாக இருந்துவிடுவேன்; இதனை வேண்டுமானால் இருந்து பாரும்" என்று கோபாலன் மிக்க பரிவோடு கூறினான். சொல்லி முடிக்கும்போது கோபாலன் கண்களில் நீர் ததும்பியமையினால், அவன் நேசரத்தினத்தின் முகத்தைப் பார்க்காது அப்புறந் திரும்பி பார்த்தான்; கோபாலன் கூறியவார்த்தைகள் சில நேசரத்தினத்தின் உள்ளத்தை அனலிடைப்பட்ட மெழுகென உருகச்செய்து விட்டமையினால், அவள் நிலத்திற் கண்ணீர் சிந்தத் தன் காற்பெருவிரலைப் பார்த்தபடியே நின்றாள். அவள் ஏதும் சொல்வதற்கு மனத்துயர் அவளை விடவில்லை; அந்த நேரத்திற் சொலொமன் அவர்களிருவர் நிலைமையையுங் காண்பானாயின், நிச்சயமாக அவனுக்குப் பைத்தியம் வந்துவிடும். நேசரத்தினம் ஒருவாறு தன் துயரத்தை அடக்கிக்கொண்டு பேச ஆரம்பித்தாள்; "வன்சொல்லு ஒருவர் மனசை வருத்துமல்லாமல், இன்சொல்லும் அப்படி வருத்துமென்பதை இன்றுதான் அறிந்தேன்; நீங்கள் சொல்லிய வார்த்தை எல்லாம் என் அறிவையொழித்தன. ஆனால் "உன்னையன்றி நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொருவரை விவாகஞ் செய்யேன்" என்ற உங்கள் வார்த்தை என் மனசிலுள்ள துயரையெல்லாம் ஒழித்து எனக்கு அடங்காச் சந்தோஷத்தைத் தந்தது. நாங்கள் கைக்கொண்டு வந்த மார்க்கத்திற்கான சில குறைகளுக்கு ஆளாயிருந்த நான், உங்கள் சகவாசத்தினால் அந்தக் குறைகளெல்லாம் நீங்கிப் பரிசுத்தமானவளானேன். கறந்தபால் முலைக்கேறப்போவதில்லை; இந்த நிலைமையிலிருந்து நான் இறந்தாலும் அது எனக்கு மனரம்மியமாக விருக்கும். ஆனால், இனிமேலும் நான் வாழ்வதானால் உங்களுடன் வாழ்வேன்; இல்லையேல், இல்லையென்பதை மாத்திரம் மனசில் எப்பொழுதும் வைத்துக்கொள்ளுங்கள்; நான் அறியாமையினாற் செய்த பிழைகள் ஏதும் இருந்தாற் பொறுத்துக்கொள்ளுங்கள்; நீங்கள் இனிமேல் இங்கே வராமல் விடுவது நல்லதென நினைக்கின்றேன்; அன்பற்றார் வாசலிலே பின்பற்றிச் செல்லாதேயென்றும், மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று மிதியாமை கோடிபெறும் என்றும் முதியோர் சொல்லியிருக்கின்றனர். இந்த வீட்டிற்கு இவ்வளவு காலமும் நீங்கள் வந்ததையிட்டு யாரும்குறை சொல்லியிருந்தால், அதனையும் எனக்காகப் பொறுத்துக் கொள்ளுங்கள்;" என்று நேசரத்தினம் வைராக்கியத்தோடு கூறினாள். "அன்பே, நேசம், நீர் இப்படியெல்லாஞ் சொல்லுகின்றீரே; வெள்ளிக்கிழமை விவாகத்திற்கான முயற்சிகளெல்லாம் நடக்கின்றனவே; நீர் சொல்வது ஒன்றும் எனக்குப் புலப்படவில்லை; மனத் துயரத்தால் நீர் உமது உயிருக்கு ஏதுந் தீமை தேட நோக்கங் கொண்டிருக்கின்றீரோ? அப்படியானால் ஒரு உயிரளவில் நில்லாதென்பதையும் அறிந்து கொள்ளும்; சில வருடங்களுக்கு முன் வடமராட்சியிலுள்ள ஒரு வாலிபனும் கன்னிகையும் நிலாவரையில் ஒருங்கு வீழ்ந்து உயிர் விட்டவாறாகத்தான் முடியும்" என்று பெருந் துயரத்தோடு கோபாலன் சொன்னான். "ஒருபோதும் நீங்கள் அப்படி என்மீது சந்தேகப்படவேண்டாம்; தற்கொலை செய்வோர் மீளாநரகத்திற்காளாவர் என்பது சைவசமயக் கொள்கையென்று நினைக்கிறேன்; அல்லாமலும், உங்களை வருந்த வைத்து நான் தற்கொலை செய்வதனால் உங்களிடத்தில் அன்பில்லாதவ ளென்றல்லவா முடியும்; நீங்கள் ஒன்றற்கும் யோசிக்கவேண்டாம்; கால தாமசமாகின்றது நீங்கள் சுகமே போய் வாருங்கள் என்று ஆதரவோடும் உபசாரத்தோடும் கோபாலனை நேசரத்தினம் அனுப்பினாள்.

* * *

பதினாலாம் அத்தியாயம்

இவர்கள் விஷயம் இவ்வளவிலிருக்க, குட்டித் தம்பிப் போதகர் தம் மகளுக்கும் மருமகனாகிய சொலொமனுக்கும் விவாகஞ் செய்வதற்கான ஆயத்தங்களெல்லாஞ் செய்தார்; விவாக விஞ் ஞாபனத்தை ஆங்கிலத்திலும் தமிழிலும் அச்சிடுவித்துத் தம் சுற்றமித்தினருக்கு அனுப்பினார். பாதிரியாருக்கே முதன்முதல் விஞ்ஞாபனம் அனுப்பப்பட்டது; சொலொமன் தகப்பனில்லாப் பிள்ளையாதலால், அவனுடைய கருமங்களையுந் தாமே பார்த்தார். போதகர் அதிக செல்வமுடையவரல்லாவிட்டாலும், மிக்க செல்வாக்குடையவர். உபாத்தியாயர்கள் பலர் அவருக்கு வேண்டிய உதவி செய்து அவர் வீட்டுக்கருமம் தம் வீட்டுக்கருமம்போற் பார்த்தார்கள். அயலிலேயுள்ள கிறிஸ்தவப் பெண்களும் சைவப் பெண்களும் நேசரத்தினத்தோடு படித்த பெண்களும் விவாகத்திற்கு முதனாள் அவளைப் பார்த்துச் செல்லும்படி வந்தார்கள். பிறவூரிலிருந்து இந்த விவாகக் கொண்டாட்டத்திற்கு வந்த நேசரத்தினத்தின் சகோதரிமார், வந்தவர்களை உபசரித்தனர். தன்னிடம் வந்து வார்த்தையாடியவர்களோடு நேசரத்தினமும் அன்பு பாராட்டி வார்த்தையாடினாள். "ஆனால், பெண்பிள்ளையின் முகத்திலே சந்தோஷத்தைக் காணவில்லையே என்ன காரணம்" என்று அந்தப் பெண்கள் மீண்டு போகும் போது ஒருவரோடொருவர் சொல்லி அதற்குப் பல காரணங்களையும் பேசினார்கள். "அந்த ஒன்றுமறியாத "பொடிச்சி" யைப்பற்றி இந்த எலும்பில்லாத நாக்கினால் ஊரில் எத்தனை கதை பேசிவிட்டார்கள்" என்று ஒரு கிழவி சொல்லிக்கொண்டு போனாள். "நெருப்பில்லாமற் புகையுமா" என்றாள், கூடிக் கொண்டுபோன இன்னொரு இளம்பெண். வெள்ளிக்கிழமை காலையாய் விட்டது; ஆறேகால் மணியிருக்கும். கைப்பிடிப்பதற்காகிய கிறிஸ்தவக்கோயிலுக்கும் போதகர் வீட்டிற்கும் அரைமைல் தூரமிருக்கும். மாப்பிள்ளை வீட்டிற்கும் ஆலயத்திற்கும் முக்கால்மைல் தூரமிருக்கும்; மாப்பிள்ளையும் சுற்றமித்திரரும் "மோட்டார்" ரதங்களில் மிக்க ஆடம்பரத்துடன் ஆலயத்தில் வந்து சேர்ந்தனர்; கைப்பிடித்தற்கு நியமிக்கப்பட்ட நேரம் எட்டு மணி; பெண்பகுதியார் எட்டு மணியாகியும் வரக்காணவில்லை. ஆலயத்தில் நின்றவர்கள் மிகவும் ஆத்திரப்பட்டனர். காலதாமதமாவதற்குக் காரணமென்னவென்று அறிந்து பெண்ணைச் சீக்கிரம் அழைத்துவரும்படி பாதிரியார் சிலரைப் போதகர் வீட்டிற்கு அனுப்பினார்.

பாதிரியார் அனுப்பிய ஆட்கள் குட்டித் தம்பிப் போதகர் வீட்டிற்குச் சென்றபோது, அந்த வீடு கல்யாணவீடு போற் காணப்படாது இழவுவீடுபோற் காணப்பட்டது. போதகர் கவலையோடு கூடியவராய் இடையிடையே கண்களில் நீர் ததும்பத் தலை குனிந்தபடி தமது வீட்டுத் தலைவாசலில் ஒரு மூலையிலே நாற்காலியில் இருக்கக் காணப்பட்டார். அவருடைய பக்கத்திலே அரியகுட்டிச் சட்டம்பியாரும் வேறு சில உபாத்தியாயர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இன்னொரு பக்கத்திற் போதகருடைய மற்றைப் பிள்ளைகளும் சொலொமனுடைய தாயும் அயலிலுள்ள பெண்களும் மிக்க கவலையோடு இருந்து இரகசியமாக ஒருவரோடொருவர் பேசக்காணப்பட்டனர். பாதிரியார் அனுப்பிய ஆட்கள் போய்ப் போதகருக்குச் சமீபமாக முற்றத்தில் நிற்றலும், அவர் அவர்களைப் பார்த்து "பாதிரியார் உங்களை அனுப்பினாரா" என்று கேட்டார். அவர்கள் "ஓம்" என்றார்கள். போதகர் பெருமூச்சு விட்டார்; அவருடைய கண்களிலிருந்து நீர் சிந்தியது. இந்தச் "சிறுக்கி" இப்படிச் செய்வாள் என்று நான் கனவிலும் நினைத்திருக்கவில்லை" என்று சொல்லிவிட்டுப் போதகர் பின்னரும் பெருமூச்சுவிட்டுப் பேசாமலிருந்தார். இதற்கிடையில் அங்கிருந்த அரிய குட்டிச்சட்டம்பியார் மெல்ல எழுந்து வந்து, பாதிரியார் அனுப்பிய ஆட்களையுங் கூட்டிக்கொண்டு போதகர் வீட்டுப் "படலை" க்குச் சமீபமாகப் போனார். வந்தவர்கள் "சட்டம்பியார், நடந்த செய்தியென்ன" என்று இரகசியமாகக் கேட்டார்கள். "வேறென்ன, பெண்ணைக்காணவில்லை; அவள் எங்கோ ஓடிவிட்டாள்; போதகரோடு இப்பொழுது ஏதும் பேசுவது சரியல்ல; பாவம்! அவர் பெரும் மனத்துயரத்தோடு இருக்கின்றார்; நீங்கள் காலதாமதமின்றி மீண்டு போய்ப் பாதிரியாருக்கு மாத்திரம் உண்மையைச் சொல்லிவிட்டு மற்றையவர்கள் கேட்டால் பெண்ணுக்குச் சுகமில்லை; இன்னொரு நாளைக்குத்தான் கல்யாணம் நடக்கும் என்று சொல்லி, மாப்பிள்ளை பகுதியாரையும், வந்தவர்களையும் திரும்பிப்போகும்படி செய்யுங்கள் என்று அரியகுட்டிச் சட்டம்பியார் சொன்னார்; அவர்கள் "அப்படிச் செய்கிறோம்" என்று சொல்லிவிட்டு மீண்டுபோய்ப் பாதிரியாருக்கு விஷயத்தை மெல்ல வெளியிட்டார்கள். கேட்டவுடனே அவருக்கு அதிகங் கோபம் பிறந்தது. உடனே அவர் ஆலயத்திலுள்ள மேடையில் ஏறிநின்று, "சகோதர சகோதரிகளே, காத்திராப்பிரகாரம் நேர்ந்த அசந்தர்ப்பத்தினால் இன்றைக்கு விவாகம் நடக்கமாட்டாது; குறைநினைக்காது நீங்கள் எல்லீரும் உங்கள் வீட்டிற்குச் செல்லுங்கள்" என்று மிக்க வெறுப்போடு சொல்லிவிட்டு, ஒரு நிமிஷமும் அங்கு நில்லாது தமது வண்டியில் ஏறிக்கொண்டு வீட்டிற்குப் போய்விட்டார். அங்கு நின்றவர்கள், போதகர் வீட்டிற்குப் போய் வந்தவர்களிடம் போய் "நடந்த செய்தியென்னவென்று" ஆவலோடு விசாரித்தார்கள். அவர்கள் ஒருவாறு உண்மையைச் சொன்னார்கள். சிலர் தங்கள் வீட்டிற்குப் போனார்கள். சிலர் போதகர் வீட்டிற்குப் போனார்கள். இப்படி யிருக்கும்போது, அரியகுட்டிச் சட்டம்பியார் போதகருடைய மக்களுள் ஒருத்தியைப் பார்த்து "பிள்ளை, இது மிகவும் மனவருத்தமான காரியம். நேசரத்தினம் இப்படியெல்லாம் செய்யக்கூடுமென்று எவருங் காத்திருக்கவில்லை; நடந்த செய்தியை எனக்கு விபரமாகச் சொல்லவேண்டும்" என்று கேட்டார். "உபாத்தியாயர், அப்படி விசேஷமாக நாங்கள் அறியத்தக்கதாய் ஒன்றும் நடக்கவில்லை; சென்ற இரவு நாங்கள் எல்லோமும் படுக்கைக்குப் போகும்போது பதினொரு மணி வரையிலாய்விட்டது; நேற்று முழுவதும் நேசத்தின் முகத்திற் சந்தோஷமென்பதே கிடையாது; யாரும் ஏதுங் கேட்டாற் பதில் சொல்வதல்லாமல், தானாக ஒருவரோடும் வார்த்தையாடவில்லை; நேற்று நாலுமணி வரையில், என்ன நேசம், ஒருவகையாய் இருக்கிறாய் என்று கேட்டதற்கு, "ஒன்றுமில்லை அக்கா" என்று மாத்திரம் மறுமொழி சொன்னாள். சென்ற இரவு போசனஞ்செய்ய வரும்படி நாங்கள் கேட்டபோது, தனக்குப்பசிக்க வில்லையென்று சொன்னாள்; பின்பு அப்பாவின் நெருக்கத்தினாற் சொற்ப தேநீர் மாத்திரங் குடித்துவிட்டுப் படுக்கைக்குச் சென்றாள். இந்தச்சடங்கு நேசத்திற்குச் சம்மதமில்லை போலிருக்கிறது என்று அப்பாவுக்குச் சொன்னேன்; அவர், இனி அதைப்பற்றி யோசிப்பதிற் பயனென்ன, நேசம் சிறிது மனம் மாறுபட்டு நிற்கிறாள்; முந்தின நேசமல்ல; அவளுடைய மாதிரி நல்லாயில்லை மகளே, என்று சிறிது கவலையோடு எனக்குச் சொன்னார். உபாத்தியாயர், நான் நெடுக இங்கேயிருந்திருப்பேனாயின் இப்பயெல்லாம் வர விட்டிருக்கமாட்டேன்; நான் வந்து இன்றைக்கு நாலு நாள்; செய்திகளை விசாரித்தறியும்போது, அப்பாவிலும் சில விஷயம் குற்றமாகக் காணப்படுகின்றன. முற்றாய் நேசத்தைக் குற்றஞ்சொல்ல இடமில்லை; அது கிடக்க, விடியற்புறம் நாலு மணியிருக்கும், அப்பா எங்களை வந்து எழுப்பினார், நான் எழுந்துவிட்டேன்; மகளே, நேசத்தை யெழுந்திருக்கப்பண்ணி ஆகவேண்டியதைச் செய்யுங்கள் என்று சொன்னார்; நான் ஓம் என்று சொல்லிவிட்டு நேசத்தை எழுப்பும்படி போனேன்; படுக்கையில் தங்கைச்சியைக் காணவில்லை; எனக்குச் சரீரம் நடுங்கத் தொடங்கிவிட்டது; மனம் பதறியது; அப்பா, தங்கச்சியைக் காணவில்லையென்று சொல்லியழுதேன்; அப்பா, ஓடிவந்து, குணம், நீ அழாதே, சத்தமிடாதே, அயல் அறிந்தாற் சங்கையீனம், என்று சொல்லிவிட்டு எங்கும் பார்த்தார், காணவில்லை; வேலைக்காரியை எழுப்பிக் கேட்டார்; அவளும் தான் நித்திரைக்குப் போகும்போது நேசம் நித்திரைகொள்ளவில்லை, விழிப்பாகப் படுத்திருந்ததுதான் தெரியும், அதன்மேல் நடந்த தென்னவென்று தனக்குத் தெரியாதென்றாள்; இதற்கிடையில் வீட்டிலுள்ள எல்லாரும் எழுந்து விட்டார்கள். விளக்குகளையும் கொளுத்திக்கொண்டு கிணறு கொல்லைப்புறம் மற்றும் அறைகள் எங்கும் பார்த்தோம், காணவில்லை; நேசத்தின் உடைகள் நகைகளைப் பார்த்தோம்; அவைகளெல்லாம் வைத்தவைத்த இடங்களில் அந்தந்தப்படியே இருக்கின்றன. இதற்கிடையில் விடிந்து விட்டது, உபாத்தியாயர், இது தான் நடந்த செய்தி" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதகருடைய மூத்த மகளாகிய குணரத்தினங் கூறிக் கண்ணீர் விட்டாள்; "பிள்ளை ஏன் அழுகிறீர்; அழவேண்டாம்" என்று அரியகுட்டிச் சட்டம்பியார் சொல்லுதலும் "இல்லை, உபாத்தியாயர், என் தங்கைச்சியின் உயிருக்கு ஏதும் மோசம் வந்திருக்குமோ என்று பயப்படுகிறேன்; அவள் எங்காயினும் உயிரோடு இருக்கிறாள் என்று கேள்விப்பட்டுவிட்டால் அது எனக்குப் போதும்" என்று சொல்லிக் குணம் பின்னரும் அழுதாள். "மகளே, நீ பயப்பட வேண்டாம்; உன் தங்கைக்குக் கர்த்தர் கிருபைசெய்வார்; ஒரு தீமையும் வராது" என்று சட்டம்பியார் சொல்லிவிட்டுப் பின்னரும் "குணம், கோபாலன் வீட்டிற்கு யாரையாவது மெல்ல அனுப்பினால் ஏதும் வெளிக்கும்" என்றார். "உபாத்தியாயர், அடுத்த வீட்டு வள்ளியம்மையை விடிந்தவுடன் அங்கே அனுப்பினோம்; வள்ளியம்மை எவரும் சந்தேகப்படாதபடி போய் வீட்டின் உள்ளும் புறமும் பார்த்தபோது அப்படியொன்றும் புலப்படவில்லையாம்; தாயையும் மகனையுந் தான்தான் நித்திரையிலிருந்து எழுப்பியதென்றும், அவர்களுக்கு இதைப்பற்றிக் கொஞ்சமுந் தெரியாது போலிருக்கிறதென்றும் சற்று முன்பாக வந்து சொல்லிவிட்டு இப்போது தான் வள்ளியம்மை வீட்டிற்குப் போகிறாள்" என்று குணம் சொன்னாள்.

* * *

பதினைந்தாம் அத்தியாயம்

போதகருடைய வயல்வேலை செய்பவனாகிய விநாசியென்னும் பள்ளன் அங்கே வந்து ஒதுங்கி நின்றான். "விநாசி, ஏதுஞ்செய்தி அகப்பட்டதோ" என்று போதகர் கேட்க, அவன் இல்லை, ஐயா நான் விசாரித்தவரையில் ஒன்றும் கிட்டவில்லை; நான் சொலொமன் தம்பி வீட்டிற்குப் போனேன்; அவர் எங்காயினும் போய்ச் சாத்திரங் கேட்டுக்கொண்டு வரச்சொன்னார்; நான் நேரே சுப்பிரமணிய சாத்திரியாரிடம் போய்க்கேட்டேன்; அவர் சொன்னது கொஞ்சஅளவுக்கு உண்மை போல் தோணுகிறது" என்றான். "எடே, எனக்கு உந்தச் சாத்திரத்திலும், சோதிடத்திலும் நம்பிக்கையில்லை" என்று போதகர் சொன்னார்; "ஐயோ! நாம் அப்படிச் சொல்லக்கூடாது; அந்தச் சாத்திரியார் வைச்சான் வைச்சபடி சொல்லுவார்" என்று விநாசி சொல்ல, அரியகுட்டிச் சட்டம்பியார் "சரி, அவர் என்ன சொன்னார்" என்று விநாசியைக் கேட்டார். "நினைத்தகாரியம் ஒரு உயிரைப் பற்றியதாம்; அதுவும் ஒரு பெண்ணாயிருக்க வேண்டுமாம்; ஒரு மனவருத்தத்தினால் ஒருவருக்குஞ் சொல்லாமல் தன்னெண்ணமாய் இருந்த இடத்தை விட்டுப் புறப்பட்டு இன்னொரு இடத்திற் போயிருக்கிறது; சீவனுக்கு மோசமில்லை; மூன்று மணித்தியாலத்தில், அல்லது மூன்று நாளில், அல்லது மூன்று கிழமையில், அல்லது மூன்று மாசத்தில், அல்லது மூன்று வருடத்தில் அதுதானாக இருந்த இடத்திற்குத் திரும்பி வந்து சேரும் என்று சாத்திரியார் சொன்னார்" என விநாசி சொன்னான். "போ, போ, பைத்தியகாரா, அந்தச்சாத்திரியையும் சொலொமனையும் பிடித்த பைத்தியம் உன்னையும் பிடித்துக் கொண்டது" என்றார் போதகர். இதற்கிடையிற் போதகருடைய மகனாகிய சாமுவேல் என்னுஞ் சிறுவன் "அப்பா, அப்பா, நேசக்காவினுடைய "தவால்" என்னுடைய புத்தகத்துக்குள் இருந்தது, இப்போது படிக்கப் புத்தகத்தை எடுத்தபோது கண்டேன்; புத்தகம் அக்காவின் படுக்கையிலுள்ள தலையணைக்குப் பக்கத்திலே கிடந்தது; என் லெட்பென்சிலும் புத்தகத்துக்குள் வைக்கப்பட்டிருந்தது" என்று சொல்லிக் கொண்டு ஓடிவந்து ஒரு காகிதத்தைத் தகப்பன் கையிற் கொடுத்தான்; போதகர் அதனை வாங்கிப் பக்கத்திலிருந்த அரியகுட்டிச் சட்டம்பியாரிடம் வாசிக்கும்படி கொடுத்தார். சட்டம்பியார் மடியுளிருந்த மூக்குக் கண்ணாடியை எடுத்து மாட்டிக் கொண்டு வாசிப்பாராயினர்:-

"எனது அருமையான தந்தையாரவர்களுக்கு மிக்க தாழ்மையோடும் அதிக மனவருத்தத்தோடும் எழுதிக்கொள்வது, எங்கள் தாயாரும் சிறுவயசிலே எங்களை விட்டுப் பிரிந்துவிட, நீங்களே எங்களுக்கு அன்னையும் பிதாவுமாக விருந்து இவ்வளவு காலமும் ஆதரவாக எங்களை வளர்த்து வந்தீர்கள்; அந் நன்றியை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். நல்ல மனசோடு எனக்கு முறைப்படி ஒரு விவாகத்தையுஞ் செய்துவைத்தீர்கள்; என் துரதிர்ஷ்டத்தினால் அதுவும் ஒரு வருடத்துள் முடிந்து போய்விட்டது; நான் எனக்கு வந்த நிலைமையை எண்ணியெண்ணி இடையிடையே வருந்தியது உண்மையாயினும், பொதுவாக மனரம்மியத்தோடும் மரியாதையோடும் மனக் கட்டுப்பாட்டோடும் இருந்தேன்; சில மாசங்களுக்குமுன் நீங்களாகவே அந்த உபாத்தியாயருக்கும் எனக்குமிடையில் விசுவாசத்தை உண்டாகச் செய்தீர்கள்; உங்களுடைய எண்ணத்திற்கு மாறாக நான் எதனையுஞ் செய்தவளல்லேன்; பின்பு அந்த உபாத்தியாயர் மார்க்கம் மாற மறுத்துவிட்டாரென்று அவரை வெறுத்து அவர்மீது நான் கொண்டுள்ள அன்பை ஒழித்துவிடும்படி எனக்குச் சொன்னீர்கள்; அவர் மார்க்கம் மாறவில்லை யென்றமையினால், நான் அவரிடத்து வைத்த அன்பை மாற்றிவிட முடியுமென்று, எல்லாம் அறிந்த நீங்கள் நினைத்தது தவறென எண்ணுகின்றேன்; மார்க்கத்தை மாற்றுவதற்குப் பெற்ற பிள்ளையைத் துணைக்கருவியாக்கலாமென நீங்கள் நினைத்தது முழுவதுந்தவறென்று நான் மிக்க மரியாதையோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தெரிவிக்கின்றேன்; குறைநினைக்க வேண்டாம். மேலும் என்மீதும் அந்த உபாத்தியாயர் மீதும் நீங்கள் சந்தேகங்கொண்டுவிட்டீர்கள்; எங்கள் இருவருக்குமிடையே உண்மையான அன்பு உண்டென்பது மெய்யேயாயினும், தேவனுக்கும் எங்கள் மனச்சாட்சிக்கும் விரோதமான எந்தக் கருமத்தையும் நாங்கள் இதுவரையுஞ் செய்தறியேம். நிற்க, குறித்த உபாத்தியாயரை உங்களுடைய சம்மதத்தோடு விவாகஞ் செய்வது, இல்லையேல் இப்படியே இருந்து விடுவதென்ற நிச்சயத்தோடு நான் இருக்க, நீங்கள் என்மீது சந்தேகங் கொண்டு, முன்னர் உங்கள் பிள்ளைகள் எவருக்கும் செய்துவைக்க வொண்ணாதெனப் புறக்கணித்துவைத்த சொலொமனை, இப்பொழுது எனக்கு விவாகஞ் செய்துவைக்க வேண்டுமென்று நிச்சயித்தீர்கள்; அப்பொழுதும் எனக்கு விவாகம் வேண்டாம், நான் இப்படியே மரியாதை யாயிருக்கின்றேன் என்று உங்களுக்குப் பலமுறை பணிவோடு சொன்னேன்; நீங்கள் நான் சொன்னதைப் பொருட்படுத்தாது, அன்னையில்லாப் பிள்ளையென்பதையுஞ் சிந்தியாது, உங்கள் மருமகனுக்கு என்னை மணம் முடித்துவைக்க நிச்சயித்தீர்கள்; என் சகோதரிமாரும் உங்கள் சொற்படி நின்றார்கள்; விருப்பமில்லாத ஒரு விவாகத்தைச் செய்து உள்ளநாள் முழுவதும் நான் கண்ணீரும் கம்பலையுமாக இருந்து கலங்குவதைக் காட்டிலும், இந்த இடத்தை விட்டு எங்கேனும் போய் மரியாதையாகச் சீவிப்பது நல்லதென்று நினைத்தே இப்படிச் செய்கின்றேன்; நான் செய்வதில் ஏதும் பிழையிருந்தால் பிதாவாகிய நீங்களும் பரமபிதாவாகிய ஆண்டவனும் அதனைப் பொறுத்துக் கொள்க. நான் உபாத்தியாயர் வீட்டிற்குப் போகின்றேன் என்று எண்ணவேண்டாம்; இல்லையேல் என்னுடைய சீவனுக்கு ஏதும் இடையூறு தேடுவேன் என்று பயப்படவும் வேண்டாம்; இப்பொழுது எங்கே போகிறேன் என்பது எனக்குந் தெரியாது; உங்கள் ஒருவர்மீதுங் குறையில்லை; என் அருமையான பிதாவே! நான் எங்கிருந்தாலும் எங்களை நீர் வளர்த்து வந்த அன்பை மறந்துவிடமாட்டேன்; உங்களுக்கு மரியாதைக் கேட்டைத் தேடவும்மாட்டேன்; ஏழைப் பெண்பிள்ளை செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளுங்கள்; ஆண்டவன் ஆசீர்வதிப்பாராக. கண்ணீர் சிந்தச்சிந்த இக்காகிதத்தை ஆறாத்துயரத்தோடு எழுதி முடிக்கிறேன்; நான் சுகமே போய் வருகின்றேன்.

இங்ஙனம்,

உங்கள் அன்பை என்றும் மறவாத,
கு. நேசரத்தினம்

குட்டித்தம்பிப் போதகரும் மற்றைப் பிள்ளைகளும் காகிதத்தை அரியகுட்டிச் சட்டம்பியார் வாசிக்க வாசிக்கக் கண்ணீர் சிந்தினர்; போதகருடைய கோபமெல்லாம் துயரமாக மாறியது; தமது பிள்ளையைத் தாமே துரத்திவிட்டதாகப் போதகர் நினைத்தார். தம்மைத்தாம் வெறுத்தார். காகிதத்தை வாசித்த அரியகுட்டிச் சட்டம்பியாரும் கடைசியிலே கண்களில் நீர் ததும்ப வாசிக்க முடியாதவராய்க் கண்ணாடியைக் கழற்றிக் கண்ணீரைத் துடைத்துத்துடைத்தே வாசித்து முடித்தார். அந்த உபாத்தியாயர் வீட்டுக்குப் போக மாட்டேன் என்றும், உயிர் விடமாட்டேன் என்றும், உங்களுக்கு மரியாதைக் கேட்டைத் தேடமாட்டேன் என்றுங் கருத்துப்பட எழுதியிருத்தலை நினைத்து நினைத்துப் போதகர் சிறிது மனம் ஆறியிருந்தார். அயலோர் பலர் தாமாகவே நேசரத்தினத்தைத் தேடப் புறப்பட்டனர்.

* * *

பதினாறாம் அத்தியாயம்

சொலொமனும் நேசரத்தினத்தை ஒரு புறமாகத்தேடத் தொடங்கினான். அதனைக் கண்ட அவன் சிநேகிதரும் அயலோரும் "மிஸ்ரர் சொலொமன், உன்னாலல்லவா நேசரத்தினம் புறப்பட்டுப்போனது; நீ ஏன் தேடுகிறாய்; அவள் வெளிப்பட விருந்தாலும் உன்னைக் கண்டாற் பின்னரும் ஒளித்து விடுவாளே" யென்று சொலொமனைப் பரிகாசஞ் செய்தனர். நேசரத்தினம் காணாமற் போனதையிட்டுக் கோபாலன் பெரிதுங் கவலைப் பட்டானேயன்றி அவள்மீது எவ்வகையான சந்தேகமுங் கொண்டிலன், அவனுக்கும் நேசரத்தினம் இப்பொழுது எங்கிருக்கிறாளென்பது தெரியாது. அவனும் அவளை அந்தரங்கமாகத் தேடத் தலைப்பட்டான். கோபாலனும் நேசரத்தினத்தைத் தேடித் திரிகின்றானென்பதை யொருவாறு அறிந்த சிலர் "கோழிதின்ற கள்ளனுங் கூட நின்று உலாவுகிறான்" என்றனர். நேசரத்தினம் தன் சிநேகிதைகளின் வீட்டில் மறைந்திருக்கின்றாள் போலும் என்றனர் சிலர்; அவள் யாரோ தன் இனத்தவர் வீட்டிற்குச் சென்றிருக்க வேண்டுமென்றனர் இன்னுஞ் சிலர்; ஒருபோது தற்கொலைதான் புரிந்து விட்டனளோ என்று சந்தேகப்பட்டனர் வேறு சிலர்; அப்படி யொருபோதும் அவள் செய்யமாட்டாள்; கோபாலன் உதவியைக் கொண்டு புகைரதமேறிப் பிறதேசஞ் சென்றிருக்கக் கூடும் என்றனர் ஒழிந்து சிலர்; அப்படிப் போவதற்கு அவளிடத்திற் கையில் மடியிற் பொருள் வேண்டுமே, உடுத்த சீலையோடுதானே போயிருக்கிறாள் என்றனர் மற்றைச் சிலர்; அறியாமலா பெண்களைப் படிப் பிக்கக்கூடாதென்று முன்னோர் சொல்வது, அவள் தான் வருவதாக யாருக்கோ காகிதம் எழுதிவிட்டுப் போயிருக்க வேண்டும் என்று கூறினர் கிழவிகள் சிலர்; பெண்களுடைய மனசைக் கண்டுபிடிக்க யாரால் முடியும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓதலு மொன்றா வுளமொன்றாச் செய்கையொன்றாப்
பேதைநிலைமை பிடித்துப் பெரும்பவஞ் செய்
மாதர் வலைப்பட்டு மயக்குற்றா ரல்லரோ
சாதல் பிறப்பில் தடுமாறு கின்றாரே"

என்று கந்தபுராணத்திற் சொல்லியிருப்பது பொய்யா என்று சொன்னார்கள் வாலிபர் சிலர்; உலகம் பலவிதமல்லவா; இப்படிப்பலரும் பலவிதமாகப் பேசினர்.

குட்டித்தம்பிப் போதகர் மனவருத்தத்தினாலும், வெட்கத்தினாலும் வெளியே செல்லாதிருந்தார். இப்படியாக, பாதிரியார் அடுத்தநாள் (சனிக் கிழமை) அங்கேவந்தார். குட்டித்தம்பிப் போதகர் பாதிரியாரைக் கண்ட மாத்திரத்தே வேண்டியபடி உபசரித்துவிட்டு அதிக கவலையோடு கூடியவராக விருந்தார்; போதகருடைய கண்களில் இடையிடைய கண்ணீர் ததும்பியது. அதனைக் கண்ட பாதிரியார் "மிஸ்ரர், குட்டித்தம்பி, நீர் துக்கப்பட வேண்டாம்; உம்மில் ஒரு குற்றமுமில்லை; உம்முடைய மகளின் பழக்கம் நல்லாயில்லை; அஞ்ஞானிகளை நீர் வீட்டில் எடுத்ததுதான் உம்மிடத்துள்ள ஒரு தவறு; அந்தப்பிள்ளைக்காக நீர் துன்பப்பட வேண்டாம்; நீர் கர்த்தருடைய கருமத்தில் மனத்தைச் செலுத்தும்; உமது மகளின் மனசைத் திருப்பவேண்டுமென்று கர்த்தரைச் செபம் பண்ணும்; நானுஞ் செபம் பண்ணுகிறேன்; தேவன் உம்மை ஆசீர்வதிப்பார்" என்று தேறுதல் வார்த்தைகள் சொன்னார். "ஐயா, எனக்கு வேறொரு மனவருத்தமுமில்லை; அவளுக்கு ஒரு நோய் கண்டு இறந்தாலும் என் செய்யலாம் என்று மனமாறியிருப்பேன்; இப்பொழுது அவளுடைய கதி எப்படியானதோவென ஒன்றுந் தெரியவில்லையே, அதுதான் என்னை வெகுவாய்; வருத்துகிறது" என்று போதகர் கண்களிலிருந்து நீர் சிந்தச் சொன்னார். "அது மிக மனவருத்தமான காரியந்தான்; அதற்கு என்ன செய்யலாம், ஆனால் அவளுக்கு ஒருபோதும் மோசம் நேர்ந்திருக்க மாட்டாது" என்று சொல்லிவிட்டுப் பாதிரியார் அவ்விடம் விட்டகன்றார்.

* * *

பதினேழாம் அத்தியாயம்

குட்டித்தம்பிப் போதகர் வீட்டிலிருந்து ஏறக்குறைய அரைமைல் தூரத்தில் வேலுப்பிள்ளை யென்பவர் வசிப்பவர். வேலுப்பிள்ளையின் முயற்சி பயிரிடுதல்; அவர் தமிழ்ப் படித்தவர். சைவாசாரம் பெரிது முடையவர். அவருக்கு ஒரேயொரு மகன் மாத்திரமுண்டு. அந்த மகன் மாத்தளைப் பகுதியில் அரசாங்க உத்தியோகத்திலிருக்கின்றான். இந்த வேலுப்பிள்ளையின் வீட்டில் வேலுப்பிள்ளையும் மனைவியும் ஒரு வேலைக்காரனுமன்றி வேறு எவருமில்லை. வேலுப்பிள்ளை குட்டித்தம்பிப் போதகருக்குத் தமயன் முறையிலுள்ளவர். ஆனால் சமயவித்தியாசங் காரணமாக இரு குடும்பத்தாருக்கும் யாதுங் கொண்டாட்டமில்லை. வேலுப்பிள்ளை யென்பவர் வியாழக்கிழமை இரவு தமது வீட்டுத் தலைவாசலிற் படுத்து நித்திரை செய்யும்போது நேரம் பதினொரு மணிக்கு மேற்பட விருக்கக்கூடும், யாரோ படலையில் நின்றுகொண்டு "வீட்டுக்காரர், வீட்டுக்காரர்" என்று கூப்பிடுஞ் சத்தங் கேட்டது. வேலுப்பிள்ளை யெழும்புவதற்குமுன் அந்தச் சத்தத்தைக்கேட்டு எழுந்த அவர் மனைவி தன் புருஷனை நித்திரையினின்றும் எழுப்பி "யாரோ கூப்பிடுகின்றார்கள்" எனலும், வேலுப்பிள்ளை திடுக்குற்று எழுந்து "இந்த நேரத்தில் யார் கூப்பிடுபவர்" என்று சொல்லிக்கொண்டு, தீபத்தையுங் கொளுத்திக் கையிலெடுத்த வண்ணம் பாதித்தூக்கத்தோடு படலைக்குச் சென்று மெல்ல அதனைத் திறந்து "அதார்?" என்று கேட்டார்; "அது தங்கைச்சி உங்களிடம் வந்திருக்கிறது" என்று வந்த ஆளோடு கூடவந்த வேலைக்காரி சொன்னாள். வேலுப்பிள்ளை கையிலிருந்த கண்ணாடி விளக்கை உயர்த்திப் பிடித்துப்பார்த்து "ஐயோ! மகளே, நேசம், இந்த நேரத்தில் ஏன் வந்தாய்; வா, வா, மகளே", என்று சொல்லிவிட்டு "ஏ, இங்கை வாரும், தங்கைச்சி இங்கே வந்து நிற்கிறது" என்று தன் மனையாளைக் கூப்பிட, அந்த மனுஷியும் பரபரப்புடன் ஓடி வந்து "மகளே, தன்னந்தனியேயா இந்தச் சாமத்தில் வந்தாய், இங்கே வா அம்மா" என்று நேசரத்தினத்தைக் கட்டியணைத்து உள்ளே கூட்டிக் கொண்டுபோய் இருத்தினாள். இருந்த நேசரத்தினத்தின் கண்களிலிருந்து நீர் ததும்புவதைக்கண்ட பெரியதாய் "ஏன், மகளே, அழுகின்றாய்" என்றாள். "இப்படியெல்லாம் வருமென்று முந்தியே எனக்குத் தெரியும்" என வேலுப்பிள்ளை சொன்னார். "பெரியப்பா, தயவுசெய்து இந்த மனுஷியை ஒரு துணையோடு எங்கள் வீட்டிற்கு மெல்ல அனுப்பிவிடுங்கள்; பாவம் அந்த ஏழை என்னாலே ஏன் பொல்லாப்புக்கேட்பான்" என்று நேசரத்தினஞ் சொல்லுதலும், உடனே வேலுப்பிள்ளை தன் வீட்டு வேலைக்காரனுடன் அவளைப் போதகர் வீட்டிற்கு இரகசியமாக அனுப்பிவைத்தார்.

வேலுப்பிள்ளையினுடைய மனைவி நேசரத்தினத்தைத் தன் பக்கத்திலிருத்திக் கொண்டு "மகளே, நீ கவலைப்பட வேண்டாம்; நாங்கள் தகப்பனுக்குத் தகப்பன் போலவும் தாய்க்குத் தாய் போலவும் இருக்க உனக்கென்ன கவலை; அதிருக்க, நடந்த செய்தியென்ன அம்மா? ஒன்றையும் ஒளியாமற் சொல்லு" என்று கேட்டாள். அப்படிக் கேட்பதற்கிடையில் வேலுப்பிள்ளை "இப்பொழுது தங்கைச்சியைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமப்படுத்தாதே; அவள் நித்திரை கொள்ளட்டும்; விடிந்தபின் எல்லாம் பேசிக்கொள்ளலாம்" என்று தன் மனையாளுக்குச்சொல்ல, "இல்லை, பெரியப்பா எனக்கு நித்திரை பங்கப்பட்டுவிட்டது. உங்களுடைய நித்திரைக்குப் பங்குசெய்து விட்டேன்" என்று நேசரத்தினஞ் சொல்லினள். "மகளே, அட்டலட்சுமி வீடு தேடிவந்தாற்போல், நீ எங்கள் வீட்டிற்கு வந்திருக்கும்போது எனக்கு நித்திரை வருமா, பசி வருமா, பெண்குழந்தை இல்லையென்று பெரிதும் வருந்திக் கொண்டிருந்தேன்; பிள்ளைக்கலி தீரக் கடவுள் உன்னை இங்கே கொண்டுவந்து விட்டார்; உன் அருமையை நான் அறிவேன், பெற்ற பிதாவானாலும் குட்டித்தம்பி அறியான்" என்று வேலுப்பிள்ளை சொன்னார். நேசரத்தினம் நடந்த வரலாறு முழுவதையும் அவர்களுக்குச் சொல்லி "பெரியப்பா, எனக்கு விவாகம் வேண்டாம், நான் உங்களோடேதான் இனிமேல் இருக்க விரும்புகிறேன்; நீங்கள் இருவருமே, எனக்குத் தாய் தந்தையர்" என்றாள். "என் மகளே, உன் குணத்திற்கும் உன் ஒழுக்கத்திற்கும் நீ இங்கே வந்து சேர்ந்தது பாலோடு தேன் கலந்தது போலாயிற்று. எங்கள் வீடுவாசல் காணி பூமி பொருள் பண்டம் எல்லாம் உன்னுடையவாகும். உன் அண்ணனும் இதைக் கேள்விப்பட்டாற் பெருஞ் சந்தோஷமடைவான்; நான் நாளைக்கு அவனுக்கு ஒரு காகிதம் எழுதுவேன்; ஆனால், இரண்டு மூன்று நாட்களுக்கு நீ சிறிது மறைவாக இருந்துகொள்; நான் ஆகவேண்டிய காரியங்களைப் பார்த்துக்கொண்டு உனக்குச் சொல்லுவேன்" என்று வேலுப்பிள்ளை சொன்னார்; இப்படி இவர்கள் மூவரும் பலவாறு பேசியபின் நித்திரையாய் விட்டனர்.

* * *

பதினெட்டாம் அத்தியாயம்

நேசரத்தினத்தையிட்டுக் குட்டித்தம்பிப் போதகருஞ் சுற்றத்தாரும் நீடித்த காலத்திற்கு வருந்துதலும், உலகம் பலவிதமாகப் பேசுதலும் வேலுப்பிள்ளைக்குப் பிரியமில்லை. மூன்று நான்குநாள் சென்றபின், ஒருநாட் பின்னேரம், பல வருடங்களாகக் குட்டித்தம்பி வீட்டிற்குப் போகாதிருந்த வேலுப்பிள்ளை அங்கே சென்றார். வேலுப்பிள்ளை அங்கு வருவாரெனக் காத்திராத போதகர் அவரைக் கண்டமாத்திரத்தே எழுந்து "அண்ணே, வாருங்கள்" என்று அவரைப் பெரிதும் உபசரித்தார். தமக்கு நேர்ந்த துக்கமான செய்தியைக் கேள்விப்பட்டுத்தான், தமயன் அங்கு வந்தாரென்று குட்டித்தம்பிப் போதகர் எண்ணிக் கொண்டார். போதகர் சிறிது ஆழ்ந்த யோசனையில் மூழ்கியவராய் ஈற்றிற் கண்களிலிருந்து நீர் சிந்தக்கண்ட வேலுப்பிள்ளை "தம்பி, ஏன் வருந்துகின்றாய், இப்பொழுது உனக்கு வந்த மோசமென்ன" என்று கேட்டார், "வேறொன்றுமல்ல, அண்ணே, நானும் தேடாத இடமுமில்லை. தேடுவிக்காத இடமுமில்லை, இன்றைக்கு நாலு நாட்களாகின்றன. இதுவரையில் ஒரு சமாசாரமும் எட்டவில்ல. என் பிள்ளை உயிரோடு இருந்தால் எப்படியோ அவளைப்பற்றி ஏதுஞ் செய்தி இது வரையில் எங்கள் காதிற்கு எட்டியிருக்கும்; அண்ணே, தாயில்லா இந்தப் பிள்ளைகளை நான் வளர்ப்பதற்குப் பட்ட பாடு உங்களுக்குத் தெரியும்...." என்று சொல்லிப் போதகர் அப்பால் ஒன்றுஞ் சொல்ல முடியாதவராய் ஓ என்று கதறியழுதார். "சே, குட்டித்தம்பி, அழாதே, உனக்கென்ன பைத்தியமா. அவளுக்கு ஒரு மோசமுமில்லை, அவள் சுகமாயிருக்கிறாள்" என்று வேலுப்பிள்ளை சொன்னார். இந்த வார்த்தையைக் கேட்டவுடனே போதகருடைய அழுகை, நின்றுவிட்டது; கண்ணீரைத் தன் வஸ்திரத்தினாலே துடைத்தார்; முகத்திற் சந்தோஷம் பிறந்தது; இருந்தவர் எழுந்து தமயனுக்குச் சமீபமாக வந்து நின்றார்; பிதா அழுத சத்தத்தைக் கேட்டு உள்ளே இருந்த அவருடைய மக்களும் அங்கே வந்தார்கள்; போதகருடைய மக்களைக் கண்டவுடனே வேலுப் பிள்ளை அவர்களுடைய சுகத்தைப் பற்றி விசாரித்தார். இதற்கிடையிற் குட்டித்தம்பிப் போதகர் "அண்ணே, உங்களுக்கு ஏதோ தெரியும் போலிருக்கிறது; தெரிந்திருந்தாற் சொல்லுங்கள், என் மனம் ஆற" என்று மிகவும் ஆத்திரப்பட்டார். போதகருடைய பிள்ளைகளும் "பெரியப்பா, சொல்லுங்கள்" என்று மிக்க பரிவுடன் கேட்டார்கள். வேலுப்பிள்ளை "இடத்தைக் கேளாதீர்கள், அவளுக்கு ஒரு குறையுமில்லை, அவள் மரியாதையோடு இருக்கிறாள்" என்று சொல்வதற்கிடையில், போதகருடைய மகளொருத்தி "பெரியப்பா, எங்கே இந்தவூரிலா? இல்லையேற் பிறவூரிலா" என்று மிக்க ஆவலோடு கேட்டாள். "மகளே, இந்த வூரிலே தான்; நேசரத்தினத்தைப் பேய்த்தனமானவள் என்று விளங்கிக்கொள்ள வேண்டாம்; அவள் வெகு புத்திசாலி; அவள் ஒரு பிழையுஞ் செய்யவில்லை; உங்கள் அப்பாவின் பிழையினாலேயே இவைகளெல்லாம் நேர்ந்தன" என்று சொல்வதற்கிடையிற் போதகருடைய மகள் "பெரியப்பா, உங்களாணை, நாங்கள் ஒருவருக்குஞ் சொல்லவில்லை, தங்கைச்சி எங்கே இருக்கிறாள் என்று மாத்திரம் இரகசியமாகச் சொல்லிவிடுங்கள்" என்று கேட்டாள். "மகளே, அந்த ஒன்றையும் இப்போது கேளாதே, பின்பு நான் சொல்லுவேன்" என்று கூறிவிட்டுக் குட்டித்தம்பிப் போதகரைப்பார்த்து, "தம்பி, இரவுக்கு நீ ஒருகால் வீட்டிற்கு வா" என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

குட்டித்தம்பிப் போதகரிடத்துச் சிலநாட்களாகக் குடிகொண்டிருந்த துயரம் ஒருவாறு இப்பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்துவிட்டது. ஆனால் தம்முடைய மகள் எங்கிருக்கிறாளென்பதை யாயினும் அறிந்துவிட வேண்டுமென்ற ஆவல் அதிகப்பட்டது. அவர் எப்போது பொழுதுபடுமென்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். இதற்கிடையில் வீட்டிற்கு மீண்ட வேலுப்பிள்ளை தாம் குட்டித்தம்பிப் போதகர் வீட்டிற்குப் போனதையும் அங்கு நடந்தவைகளையும் ஒன்றும் ஒழியாமல், தமது மனைவிக்கும் நேசரத்தினத்திற்குஞ் சொன்னார். "அப்பா என்னையிட்டுக் கோபித்து அதிக துக்கப் பட்டுக் கொண்டிருக்கிறாரோ, இல்லையேல் அலட்சியமாக விருக்கின்றாரோ? பெரியப்பா" என்று நேசரத்தினம் வினவ, வேலுப்பிள்ளை "நான் போதற்கு முந்தி ஆத்திரத்தோடுந் துயரத்தோடுந் தான் உன் அப்பர் இருந்தார்; ஆனால் என்னைக் கண்டபின் சிறிது மன ஆறுதலுடனிருக்கின்றார், மகளே" என்று சொன்னார்.

இப்படியாக, ஒரு காலமும் வேலுப்பிள்ளை வீட்டிற்கு வராத சொலொமன் அன்றைக்கு அங்கே வந்தான். "சொலொமன், என்ன விசேஷம் இன்றைக்கு இந்தப் பக்கமாக வந்தது" என்று வேலுப்பிள்ளை கேட்க "விசேஷ மொன்றுமில்லை, மாமா, நாங்கள் கொஞ்சப்பேர் நேசமச்சாளைத் தேடித் திரிகிறோம்; மற்றையவர்கள் வெளியில் நிற்கிறார்கள்; எனக்குத் தாகமாக விருக்கிறது; தண்ணீர் குடித்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்" என்று சொலொமன் சொன்னான். "ஆம், ஆம், மிக நல்லது" என்று சொல்லி வேலுப்பிள்ளை தமது மனையாளைக்கொண்டு மோர் எடுப்பித்துச் சொலொமனுக்குக் கொடுப்பித்தார்; அவன் குடித்த பின் "மருமகனே, உங்களில் எத்தனைபேர் நேசரத்தினத்தைத் தேடிப் புறப்பட்டிருக்கிறீர்கள்" என்று பரிகாசார்த்தமாகக் கேட்டார். அதிக விபரீத புத்தியில்லாத சொலமன் "ஐந்தாறுபேர் புறப்பட்டிருக்கின்றோம்" என்றான். "சரி, போய் நல்லாய் எங்குந் தேடுங்கள்; ஆனால், சந்தேகத்தின்பேரில், போகக்கூடாத இடங்களுக்குப் போய் மரியாதையீனப்பட்டு விடாதீர்கள்" என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டார். ஒரு சந்தேகத்தினாற்றான் சொலொமன் அங்கே வந்தான்; அதனை விளங்கிக் கொண்டே வேலுப்பிள்ளையும் பரிகாசமாக மறுமொழி சொன்னார்.

பொழுதுபட்டதுபடவில்லை யெனலுங், குட்டித்தம்பிப் போதகர் வேலுப்பிள்ளை வீட்டிற்குத் தனியே வந்து சேர்ந்தார். வேலுப்பிள்ளை தம்பியை உபசரிக்கவேண்டியபடி உபசரித்தார். சிறிதுநேரம் இருவரும் வார்த்தையாடாது மௌனமாயிருந்தனர். பின்னர்க் குட்டித்தம்பிப் போதகர் தமயனைப் பார்த்து "அண்ணே வரச்சொன்னீர்களே, என்ன சமாசாரம்" எனலும், "வேறொன்றுமில்லை, உன் மகளுடைய விஷயமாக ஏதும் யோசிப்போம் என்றுதான் வரச்சொன்னேன். ஏன், உனக்கு வேறு ஏதும் ஆவசியகமான கருமம் இருக்கிதோ" என்று தமயன் கேட்டார். "இல்லை, அப்படியொன்றுமில்லை; நான் எவ்வளவு நேரமென்றாலும் இருப்பேன்; அண்ணே, அவள் எங்கே இருக்கின்றாள் தயவுசெய்து சொல்லுங்கள்" என்று போதகர் பெரும் பரிதாபத்துடன் கேட்டார். "தம்பீ, சொல்லுகிறேன்; சொல்லத்தான் இங்கே உன்னை வரச்சொன்னேன்; அது கிடக்க, அவள் விஷயமாக நீ இப்பொழுது என்னசெய்ய யோசித்திருக்கின்றாய்" என்று கேட்டார். "நான் இனி ஒன்றும் யோசிக்கவில்லை, அவள் தன் இஷ்டம் போல் நடந்து கொள்ளட்டும்; அவளை ஒருமுறை கண்ணாற் பார்த்துவிட்டாற் போதும்; இதுதான் இப்பொழுது என்னுடைய யோசனை" என்று குட்டித்தம்பிப் போதகர் சிறிது வெறுப்போடும் ஆத்திரத்தோடுஞ் சொன்னார். "குட்டித்தம்பி, நான் சொல்வதை இனியேனுங் கேள்; உனக்கு வந்த கவலைக்கும் அவமானத்திற்கும் நீயே காரணன். சொல்லுகிறேன் என்று குறைநினையாதே; உன் சமயத்தில் உனக்கு நம்பிக்கையிருப்பது மெய்; இன்னும் நம்பிக்கை வைப்பவர்களையும் வேணுமானாற் சேர்த்துக்கொள்; நம்பிக்கையில்லாதவர்களை ஏமாற்றி உங்கள் சமயத்திற்கு மாற்றிக் கொள்ளாதே; எத்தனையோ ஏழைகளையும் அநாதப் பிள்ளைகளையும் நீ ஏமாற்றி உன் சமயத்திற்கு இழுத்தமையினாலேயே, இப்பொழுது உன் பிள்ளை உன்னை ஏமாற்றவேண்டி யேற்பட்டது. நேசரத்தினத்தின் விஷயத்தில் நீ அவளுக்கு இடையூறாக நில்லாதே; சொலொமனை விவாகஞ்செய்ய அவளுக்கு விருப்பமில்லை; அவள் இனி விவாகமில்லாமலே இருப்பாள்" என்று வேலுப்பிள்ளை சொல்ல, போதகர் "இனிமேல் நான் அவள் விஷயமாக ஒன்றும் பேசவில்லை; நீங்களே உங்கள் இஷ்டம்போற் செய்து வையுங்கள்; நான் குறையாகவெண்ணிச் சொல்லுகிறேனென்று எண்ணாதீர்கள்; நேசம் இப்பொழுது எங்கிருக்கின்றாள் என்பதை மாத்திரம் எனக்குச் சொல்லி விடுங்கள்" என்று கேட்டார். வேலுப்பிள்ளை "மகளே நேசம், இப்படி வா அம்மா" என்று கூப்பிட்டார். போதகர் திடுக்குற்றார். நேசரத்தினம் மெல்ல வந்து கதவு நிலையோடு சாய்ந்துகொண்டு நிலத்தைப் பார்த்தபடி நின்றாள். மகள் வந்து நிற்பதைக் கண்ட போதகர் தமது முகத்தை வேறு பக்கத்திற்கு மாற வைத்துக்கொண்டிருந்தார்.

இருவரும் ஒன்றும் பேசவில்லையெனக் கண்ட வேலுப்பிள்ளை குட்டித்தம்பிப் போதகரைப் பார்த்து "பிள்ளை வந்து நிற்கிறாள்; ஏன் குட்டித்தம்பி? அவளுடன் ஒன்றும் பேசுகின்றாயில்லை" என்றார். போதகர் "நேசரத்தினம், உனக்கு அந்த விவாகம் பிரியமில்லாவிட்டால், முந்தியே நீ சொல்லியிருக்கலாமே, இவ்வளவு ஆயத்த மெல்லாஞ் செய்தபின்பு இப்படி ஏன் என்னுடைய மரியாதையைக் கெடுத்தாய்" என்று வேறு பக்கத்திற்கு முகத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தபடி மகளைக் கேட்டார். "அப்பா, எனக்கு இந்த விவாகம் வேண்டாமென்று நான் எத்தனையோமுறை உங்களுக்குச் சொன்னேன்; நீங்கள் என்சொல்லைப் பொருட்படுத்தவில்லை; அக்காவிடம் சொன்னேன்; குறிப்பாக அங்கு வந்தவர்களுக்குத் தெரிவித்தேன்; நீங்கள் ஒருவரும் அதைப்பற்றிச் சிந்திக்கவில்லை" என்று நேசரத்தினஞ் சொல்லுவதற்கிடையிற் போதகர் "சரி, அன்றைக்கு வந்த நேரத்தில் ஆரோடு கூடிக்கொண்டு இங்கேவந்தாய்" என்று கேட்க "தன்னந்தனியேதான் வந்தேன்" என்று நேசரத்தினஞ் சொன்னாள். "நீ விவாகமில்லா மற்றான் இருந்துவிடப் போகின்றாயோ" என்று பிதாக் கேட்க, மகள் "ஆம், அதற்கென்ன அப்படியே இருந்துவிடுகிறேன்" என்றாள். "எனக்குச் சொன்ன இந்தச்சொல்லை நீ எப்போதுங் காப்பாற்றிக் கொள்ளவேண்டும்" என்று போதகர் மகளுக்குச் சொல்ல, அதனைக் கேட்டுக்கொண்டிருந்த வேலுப்பிள்ளை "குட்டித் தம்பி, போனவைகளைப் பற்றி மீட்டும் ஏன் பேசுகின்றாய்; பெற்ற பிள்ளையோடு பிடிவாதமாக நில்லாதே" என்றார். "சரி, நான் ஒன்றும் பேசவில்லை, நேசம், பெரியப்பாவுக்கும் பெரியம்மாவுக்குஞ் சொல்லிவிட்டு நீ வீட்டிற்கு வா, போவோம்" என்று போதகர் சொன்னார். நேசரத்தினம் ஒன்றும் பேசாமல் நின்றாள். "தம்பி, நீ முந்திச் சொன்னபடி இவள் தங்கைச்சியை எங்களோடு விட்டுவிடு; பிள்ளை வந்திருக்கிறாள் என்று நான் தமயனுக்கும் காகிதம் எழுதியிருக்கிறேன்" என்றார் வேலுப்பிள்ளை. "அண்ணே, எனக்கு ஒருதடையுமில்லை, பாதிரியார் ஒருவேளை கோபிப்பாரோ என்றுதான் பார்க்கிறேன்" என்று போதகர் சொல்லுதலும், "ஏ, பைத்தியமே, பாதிரியாருக்காக இங்கு ஒருவரும் பிள்ளைப் பெற்று வளர்க்கவில்லை; நீ பாதிரிக்கு அடிமைச் சீட்டு எழுதிக் கொடுத்தாயா? உன் கடமையை நீ சரியாகச் செய்துவருகிறாயோ என்ற ஒன்றைப் பாதிரியார் பார்க்கவேண்டியவரல்லாமல், இந்தக் காரியங்களுக்கும் பாதிரியாருக்கும் யாதுமொரு தொடர்பில்லை; பாதிரியாருக்காக உன்உற்றார் அயலார் பிள்ளைகளை வெறுக்காதே; நேசம் எங்களுடன் இருக்கட்டும்" என்று வேலுப்பிள்ளை சொன்னார். இதற்கிடையில் வேலுப்பிள்ளையின் மனைவி ஏதோ ஒரு பாத்திரத்திற் கொண்டுவந்து நேசரத்தினத்திடங் கொடுக்க, அவள் அதனை வாங்கிக்கொண்டுவந்து பிதாவிடம் நீட்டினாள். "மகளே, உது என்ன" என்று வேலுப்பிள்ளை கேட்க, "கோப்பி பெரியப்பா" என்று நேசரத்தினஞ் சொல்ல, "தம்பி, அதை வாங்கிக் குடி" என்று வேலுப்பிள்ளை சொல்ல, போதகர் மகளிடம் வாங்கிக் குடித்தார்; பின்னருஞ் சிறிது நேரம் போதகர் அங்கு இருந்துவிட்டு அவர்களிடம் அனுமதி பெற்றுக்கொண்டு தமது வீட்டிற்கு மீண்டார்.

★ ★ ★

பத்தொன்பதாம் அத்தியாயம்

இதன் பின்பு நேசரத்தினம் பெரியதகப்பன் வீட்டிலிருக்கின்றாள் என்ற சமாசாரம் எல்லாருக்குந் தெரியலாயிற்று; சொலொமன் இந்தச் செய்தியைக் கேட்டவுடனே "இனி நான் நேசரத்தினத்தை விவாகஞ் செய்வேனென்ற எண்ணத்தை விட்டு விடவேண்டும்" என்று நினைத்தான். இப்படியாக, கோபாலனுடைய தாய் ஒருதினம் வேலுப்பிள்ளை வீட்டிற்கு வந்தாள். கோபாலனுடைய தாய் முந்தியும் இடையிடையே வேலுப்பிள்ளை வீட்டிற்கு வருவதுண்டு. தன் வீட்டிற்கு வந்த கோபாலனுடைய தாயை வேலுப்பிள்ளையின் மனைவி உபசரிக்கவேண்டியபடி உபசரித்தாள். கோபாலன் தாய் பக்கத்தில் நின்ற நேசரத்தினத்தைக் கண்டு "பிள்ளை, எப்படி உம் சுகம்" என்று கேட்டாள். "சுகமேயிருக்கிறேன்" என்றாள் நேசரத்தினம். "தங்கைச்சி இங்கே இருக்கிறதென்று நேற்றுத்தான் நான் கேள்விப்பட்டேன்" எனக் கோபாலன் தாய் வேலுப்பிள்ளையின் மனைவிக்குச் சொன்னாள். "ஓம், பிள்ளை மூன்று நாலு நாளாக எங்களோடுதான் இருக்கிறாள்; இனி அவளைப் போக நாங்கள் விடமாட்டோம்; கடவுளாக எங்கள் பிள்ளையை எங்களிடம் கொண்டுவந்து விட்டது" என்று மிக்க மகிழ்ச்சியோடு வேலுப்பிள்ளையின் மனைவி சொன்னாள். "பிள்ளை இங்கேதான் இருக்கட்டும், நீங்கள் தகப்பன் வீட்டிற்குப்போக விடவேண்டாம்; தகப்பன் வீட்டிலே பிள்ளைக்கு ஆனதுணையில்லை; உங்களுக்கும் பின்னடிக்குப்பெரும் உதவியல்லவா" என்று கோபாலனுடைய தாய் கூறினாள். "அதற்குஞ் சந்தேகமா" என்று வேலுப்பிள்ளையின் மனைவி சொன்னாள். பின்னர் மூவரும் இருந்து பலகதைகள் பேசினர். கோபாலனைப்பற்றி இந்த மூவருள் ஒருவராயினும் ஒரு வார்த்தையும் பேசினாரல்லர். சிறிதுநேரஞ் சென்றபின் கோபாலன்தாய் வேலுப்பிள்ளையின் மனைவிக்கும் நேசரத்தினத்திற்குஞ் சொல்லி விட்டுத் தன் வீட்டிற்குப் போயினள். தாயைக் கோபாலன்தான் அங்கே அனுப்பியிருத்தல் வேண்டுமென்று நேசரத்தினமும் அவளுடைய பெரியதாயும் தனித்தனியே எண்ணிக் கொண்டனர்.

குட்டித்தம்பிப் போதகருக்குத் தன்மகள் தமயன் வீட்டில் இருப்பது சிறிது விருப்பமில்லை; பாதிரியார் குறைசொல்வாரென்று அவர் பயந்தார். அந்த நியாயத்தைத் தமயனுக்குச் சொன்னாலும் அவர் கேட்கமாட்டாரென்பது போதகருக்குத் தெரியும்; இனி மகளும் பெரியதகப்பன் வீட்டிலேதான் இருக்கப் பிரியப்படுகின்றா ளென்பதையும் போதகர் விளங்கிக் கொண்டார். இவைகளையெல்லாம் பெரிதும் யோசித்துக் கவலைப்பட்டுக் குட்டித்தம்பிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதகர் சில நாட்களாகப் பாதிரியார் வீட்டிற்குப் போகாதொழிந்தார். பாதிரியார் போதகரை வரும்படி ஒருநாட் பின்னேரம் ஒரு ஆள் அனுப்பினார்; போதகர் காலதாமத மின்றிப் பாதிரியார் வீட்டிற்குப் போனார். பாதிரியார் பள்ளிக்கூட விஷயமாகச் சில பேசிவிட்டு "என்ன? மிஸ்றர், குட்டித்தம்பி, உம்முடைய மகள் எங்கேயோ இருக்கிறாளாமே, நீர் அதைப்பற்றி எனக்கு ஒன்றுஞ் சொல்லவில்லையே; உம்மைச் சில நாட்களாக இந்தப் பக்கத்திற் காணவுமில்லை" என்றார். "நான் சில நாட்களாகச் சிறிது சுகமில்லாமல் இருந்து விட்டேன்; இப்பொழுதும் சரியான சுகமில்லை; நீங்கள் ஆள் அனுப்பியபடியால் வந்தேன்; நிற்க, என்மகள் எனது ஒன்றை விட்ட தமயனார் வீட்டிலேதான் போயிருக்கின்றாள்" என்று குட்டித் தம்பிப் போதகர் கூற, "நீர் அவளைப் போய்ப் பார்க்கவில்லையா? வீட்டிற்கு வரும்படி கேட்கவில்லையா" என்று பாதிரியார் கேட்டார். "நான் அங்கே போனேன்; அவளைக் கண்டேன்; வீட்டிற்கு வரும்படி கேட்டேன்; எனது தமயனார் பெண் குழந்தையில்லாதவர்; அவர் தம்மோடு நேசரத்தினம் சிலகாலம் இருக்கட்டும் என்று சொன்னார். அவளுக்கும் இப்பொழுது அங்கே நிற்பதுதான் பிரியமாகவிருக்கின்றது; அவள் தாயில்லாப் பிள்ளை, என் வீட்டிலே தனியேயிருப்பது புத்தியல்ல; அங்கே பெரியதாய் இருப்பதனால் அவளுடைய கருமங்களையும் பார்த்துக்கொள்ளக் கூடும் என்று நினைத்து நான் இப்பொழுது அங்கேதான் இருக்கும்படி விட்டுவந்தேன்" என்று போதகர் சொன்னார். "என்ன, மிஸ்ரர் குட்டித்தம்பி, இன்றைக்கு நீர் மெத்த மூடத்தனமாகப் பேசுகிறீர்; உமது தமயன் அஞ் ஞானியல்லவா? அப்படிப்பட்ட இடத்தில் உமது மகளை இருக்கவிடலாமா? அஞ்ஞானிகளுடைய சகவாசத்தால் அவளும் கர்த்தரில் நம்பிக்கையற்றவள்போற் காணப்படுகிறாள்; அப்படிப்பட்டவளை நீர் அந்த இடத்தில் விட்டது பெருந்தவறு; அவள் ஒருநிமிஷமும் அங்கே நிற்கக்கூடாது; நீர் இன்றைக்கே அவளைப்போய்க் கூட்டிக்கொண்டு வந்து விடுதல் வேண்டும்; நீர் போதகராயிருக்கும் வரையில் உம்முடைய பிள்ளை அஞ்ஞானியாக வரமுடியாது; புத்தியாக நடந்துகொள்ளும்" என்று பாதிரியார் சிறிது கடிந்து சொன்னார். "அப்படியே செய்கிறேன்" என்று சொல்லிவிட்டுக் குட்டித்தம்பிப் போதகர் அதிக கவலையோடு வீட்டிற்கு மீண்டார். "நீர் போதகராயிருக்கும் வரையில் உம்முடைய பிள்ளை அஞ் ஞானியாக வரமுடியாது" என்று பாதிரியார் சொன்ன வார்த்தை போதகர் மனசைப் பெரிதும் புண்படுத்தியது. அந்த வாக்கியத்தைப் போதகர் "உம்முடைய மகள் அஞ்ஞானியாய் வரில் நீர் போதகராயிருக்க முடியாது" என்று மாற்றி நினைத்துப் பார்த்தார். அவருக்கு உண்டான துக்கத்திற்கு ஒரு எல்லயில்லை. "என் பிள்ளை தன்னைக் கெடுத்ததோடு அமையாது, என்னையுங் கெடுத்து என் கஞ்சிக்கும் மண்போடுகிறேன் என்றல்லவா நிற்கின்றாள்" என்று நினைத்து அதிக கவலைப்பட்டார்.

★ ★ ★

இருபதாம் அத்தியாயம்

வேலுப்பிள்ளை குடியிருக்கும் வளவு மிகவிஸ்தாரமானது. அந்த வளவுக்குப் பின் புறத்திலேயுள்ள வளவும் அவருக்கே உரியது. அதன் பரப்பு இரண்டு "ஏக்கர்" வரையிலிருக்கும்; ஒரு பக்கத்திலே பனைகளும் "வடலி" களும் நிற்கின்றன. இன்னொரு புறமாகத் தென்னை, மா, பலா, கொய்யா முதலிய மரங்கள் அடர்ந்து நிற்கின்றன் வேலுப்பிள்ளை குடியிருக்கும் வளவின் மேற்கு வேலியே அவ் வளவிற்குக் கிழக்கு எல்லையாகும். வேலுப்பிள்ளை வீட்டுக்காரர் அந்த வேலியிலேயே ஒருசிறு படலையிட்டு அதுவாயிலாகப் போய்வருவார்கள். வேலுப்பிள்ளை வீட்டு வளவிற்கும் இந்த வளவிற்கும் வடக்குப் புறமாக ஒரு ஒழுங்கை கிழக்குநோக்கி வயல்வெளிக்குச் செல்லுகின்றது; குறித்த ஒழுங்கை வேலியிலும் இந்த வளவிற்கு ஒரு படலையுண்டு. அந்தப் படலை பெரும்பாலும் கட்டப்பட்டேயிருக்கும். நேசரத்தினம் பெரிய தாயோடும் தனித்தும் இடையிடையே இந்தவளவுக்கு வருவதுண்டு. ஒருநாட் பகல் ஒன்றரை இரண்டு மணிவரையிலிருக்கும், வேலுப்பிள்ளை எங்கோ வெளியிற் சென்று விட்டார்; வீட்டுக்கருமம் முடித்து விட்டமையினால் மனைவியுஞ் சிறிது அயர்ந்து கிடந்தாள். பகல் நித்திரை கொள்ள வொண்ணாதென எண்ணிக் கொண்டு நேசரத்தினம் பொழுது போக்கின் பொருட்டுக் குறித்த அந்த வளவுக்குட் சென்று நிழலில் உலாவித் திரிந்து, ஒரு கொய்யாவில் அறக்கனிந்த சில பழங்கள் இருப்பதைக்கண்டு அவற்றைப் பிடுங்கிக்கொண்டு, அயலே நின்ற ஒரு மாமர நிழலில் வெண்மணலின்மேல் இருந்து அக்கொய்யாப்பழங்களை ஒவ்வொன்றாக உண்டு, தன்னுடைய நிலைமையைப்பற்றி யோசித்தாள். நேசரத்தினம் வேலுப்பிள்ளை வீட்டிற்கு வந்தபின் சொலொமன் அதிகமாக அந்தப் பக்கத்தாற் போக்குவரவு செய்யத் தலைப்பட்டான். வழக்கம்போல ஒழுங்கை மார்க்கமாக அப்பொழுது அங்கேவந்த சொலொமன், யாரோ ஒரு இளம்பெண் மாமர நிழலில் தன்னந்தனியே இருக்கக் கண்டான்; சிறிது சமீபத்தில் வேலியோரமாக வந்து அவன் உற்றுப்பார்த்தான். அங்கிருப்பவள் நேசரத்தினம் என்பதை அவதானித்தான் "இவளைக்கண்டு என் எண்ணத்தை இவளுக்குச் சொல்வதற்கு இதுபோல் வாய்த்த சமயம் இனிக் கிடையாது" என்று சொலொமன் நினைத்துக் கொண்டு படலைக்குச் சமீபமாக வந்தான்; படலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப்பட்டிருந்தது; கட்டை ஒருவாறு அவிழ்த்துவிட்டு உள்ளே போய் நின்று படலையைப் பழையபடி கட்டிவிட்டு நேசரத்தினம் இருக்கும் இடத்திற்குச் சென்றான். இவன் செயல்களொன்றையும் நேசரத்தினம் கண்டிலள். "கண்ணே, நேசம், ஏன் தன்னந்தனியே வந்து இந்த இடத்திலிருக்கின்றீர்?" என்று சொலொமன் கேட்ட பொழுதுதான், நேசரத்தினம் திடுக்குற்றுத் திரும்பிப் பார்த்தாள்; தன்பக்கத்திற் சொலொமன் நிற்பதைக் கண்டாள். இருந்தவள் உடனே யெழுந்தாள், "இல்லை, இல்லை, நேசம், நீர் சும்மா இரும்; இந்த இடத்தில் எழுந்து மரியாதை செய்யவேண்டாம்" என்று சொலொமன், நேசரத்தினம் தனக்கு எழுந்து மரியாதை செய்கின்றாள் எனப் பேய்த்தனமாக நினைத்துக்கொண்டு சொன்னான். "பெண்களுடைய மரியாதையைக் காத்து நடவாத உன்னைப் போன்றவர்கள், தங்களுக்குப் பிறர் மரியாதை செய்வாரெனக் காத்திருக்க வொண்ணாது. அதுகிடக்க நீ ஏன் இப்பொழுது இங்கே வந்தாய்" என்று சிறிது ஒதுங்கி நின்று நேசரத்தினம் கேட்டாள்.

நேசரத்தினம்: நான் தனியேயிருந்தால் நீ இங்கே வரவேண்டுமென்று ஒரு பிரமாணமுண்டா? பெண்கள் தனியேயிருக்குமிடத்திற்கு ஆடவர் போகாது விடுதலல்லவா அழகு; எனக்கு ஒரு வியாகூலமுமில்லை; நீ இந்த இடத்தைவிட்டுச் சீக்கிரம் போய்விடு; தற்செயலாக வேறுயாரும், நாங்கள் இப்படி நிற்பதைக் காணில் விபரீதமாக நினைப்பார்கள்.

சொலொமன்: கண்ணே, அப்படியெல்லாஞ் சொல்லக்கூடாது; நீர் தனியே யிருக்கின்றீரே, என்னகாரியம் என விசாரித்துப் போகலாமென்று வந்தேனேயொழிய நான் வேறு ஏதும் விபரீதமாக நினைத்து வந்தவனல்லேன்; மேலும் நீர் இருந்தபடியால் வந்தேனேயல்லாமல் வேறுயாரு மிருந்தால் நான் ஏன் வரப்போகின்றேன்.

நேசம்: நீ விபரீதமாக நினையாமல் இங்கே வந்தாலும் பார்ப்பவர்களுக்கு நாம் இருவரும் தனியேநின்று பேசுவது அழகாய்த் தோற்றாது. "காணவே பனைக்கீழ் ஆப்பால் குடிப்பினும் கள்ளேயென்பார்" பனைமரத்தின் கீழிருந்து பாலைக் குடித்தாலும் கண்டவர் கள்ளென்றுதான் கருதுவார்; அப்படித்தான் என்னுடன் நீ ஏதும் பேச வேண்டியிருந்தாலும் இன்னொருவேளை பெரியப்பா வீட்டிற்கு வா; அங்கேபேசிக்கொள்வோம்.

சொலொ: நேசம், அவைகளெல்லாம் மற்றையவர்கள் நிற்கும்போது சொல்லத்தக்கனவல்ல; நான் கொஞ் சநேரத்திற் பேசி முடித்துக்கொண்டு போகின்றேன்; கோபிக்காமல் நான் சொல்வதைக் கேட்கவேண்டும்; நீர் என்னுடைய மரியாதையைக் கெடுத்தற்கு நியாயமென்ன? உமக்கு என்னை விவாகஞ் செய்துகொள்ள இஷ்டமில்லாவிட்டால் அதனை எனக்கு முந்தியே தெரிவித்திருக்கலாமே; இந்த அவமரியாதையான வேலை ஏன் செய்தீர்?

நேச: உன் விஷயத்தில் எனக்கு இஷ்டமுண்டென்று நான் எப்போதாயினும் உனக்குத் தெரிவித்தேனா? இல்லையே; மேலும் நீயும் உன் தாயும் எங்கள் வீட்டிற்கு வந்தபோது நான் எனக்கு இஷ்டமில்லையென்பதைக் குறிப்பாகக் காட்டினேனே; அதிலிருந்து நீ யூகித்துக் கொள்ளலாமே.

சொலொ: மாமா சம்மதமாயிருந்தபடியால் நானும் சம்மதித்தேன்; உன் பிதாவின் சொல்லை நீ தட்டி உன் எண்ணப்படி நடக்கப்போகின்றாயென்பது யாருக்குத் தெரியும்.

நேச: பிதா தன் மனச்சாட்சியைக் கொன்று கிணற்றுள் வீழ்ந்துவிடு என்று சொன்னாற் பிள்ளை வீழவேண்டுமென நியதியில்லை; உன்னிடத்தில் உன் மாமாவுக்குப் பிரியமிருந்தால் முந்தியே உன்னைப் புறக்கணித்திருக்க மாட்டார்; என்மீது அவர் கொண்ட வெறுப்பினாற்றான் உன்னை எனக்கு மணஞ் செய்து வைக்க நினைத்தார். அவைகளைப்பற்றி இப்பொழுது பேசி ஆவதொன்றுமில்லை; நான் இவ்வளவு நேரமும் உன்னோடு இந்த இடத்தில் நின்று வார்த்தையாடியது தவறு; சரி, நீ போய்வா; நான் இங்கே வந்து அதிகநேரமாய் விட்டது; பெரியப்பா என்னைத் தேடக் கூடும்.

சொலொ: நேசம், போனதெல்லாம் போகட்டும்; நீரடித்து நீர் விலகுவதல்ல, உம்மால் எனக்கு ஒரு அவமானம் வந்தாலும் அது அவமானமல்ல; நீர் இப்பொழுது எனக்கு என்ன சொல்லுகிறீர்.

நேச: இப்பொழுது உன்னை இந்த இடத்தை விட்டுச் சீக்கிரம் போய்விடும்படிதான் சொல்லுகின்றேன்.

சொலொ: கண்ணே, நேசம் அதற்கல்ல நான் கேட்டது; நீர் என் மரியாதையைக் கெடுத்துவிட்டீர் இனியாயினும் என்னை விவாகஞ்செய்து கொள்வீரானால், அன்றைக்கு ஆலயத்தில் நடந்த மரியாதைக்கேடு பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போய்விடும்; நான் இப்பொழுது வெளியிற் புறப்பட்டு நாலு மனுஷருக்குமுன் செல்ல முடியாதவனாயிருக்கின்றேன்; சும்மாவிருந்த எனக்கு உமது பிதாவே இந்த மரியாதைக்கேட்டைத் தேடிவிட்டார். உமது பிதா செய்தது பிழையானாலும் அந்தப் பிழையைப் பிள்ளையாகிய நீரே சரிப்படுத்தவேண்டும்; ஆனபடியால் என்னை நீர் கல்யாணஞ் செய்துகொள்வதே முறையாகும்.

நேச: "இந்த இடத்தில்நின்று வீண்வார்த்தை பேசாதே; உனக்கு மரியாதை முந்தியிருந்தாலல்லவா இப்பொழுது அந்த மரியாதைகெட்டு விட்டதென்று நீ சொல்லலாகும். நீ மரியாதையுள்ளவனாயிருந்தால் அன்று தேவாலயத்தில் அந்த விஷயம் நடந்த பின்னரும் இந்த எண்ணம் வைத்திருப்பாயா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், ஒரு பெண்ணாய்ப் பிறந்தவள் தன்னந்தனியே இருக்கும்போது சிறிதும் யோசனையில்லாமல் வந்து வார்த்தையாடுவாயா? இவையெல்லாம் மரியாதைக்கு உடன் பட்டவர்கள் செயலாகுமா? நீ இந்த இடம் விட்டுச் சீக்கிரம் போகாவிட்டால் நானே போகின்றேன்; இனிமேலாயினும் நீ கொண்ட இந்த எண்ணத்தை விட்டுவிடு"

என்று சொல்லித் தன் வீட்டிற்குப் போகப் புறப்பட்டாள். அப்படிப் போகப் புறப்பட்டவளைச் சொலொமன் குறுக்கே நின்று தடுத்து "கண்ணே, நேசம், உமக்கு என்மீது கொஞ்சமும் நேசமில்லையா? நான் உமது சொந்த மைத்துனனல்லவா நீர் என்னை விவாகஞ் செய்ய வேண்டாம்; எனக்கொரு முத்தந் தந்துவிட்டுப் போம்" என்று இரந்தான். "சிச்சீ, அறிவுகெட்டவனே, உனக்கு வெட்கமில்லையா, மானமில்லையா, ஈனமில்லையா, ஊனமில்லையா, எனக்குப் பிரியமில்லாதிருக்க உன்னால் ஏதுஞ் செய்ய முடியுமா? ஏன் உலுத்தத்தனமாய் நிற்கின்றாய்; வீணாய் மரியாதை கெடாதே. நல்ல குணத்தோடு போய் விடு" என்று நேசரத்தினம் மிக்க சீற்றத்தோடு சொன்னாள். "கோபாலன் கேட்டால் முத்தங் கொடுப்பாயாக்கும்" என்றான் சொலொமன். "ஏ, பதரே, உன்னை அதெல்லாங் கேட்கவில்லை, போ என்று சொன்னாற் போய்விடு; இல்லையேல் நான்போக வழிவிடு" என்று மிக்க ஆத்திரத்தோடு நேசரத்தினஞ் சொன்னாள். "என்ன மெத்த யோக்கியம் பேசுகிறாய், உன் யோக்கியம் எனக்குத் தெரியாதா? உன்னை இங்கு யாருக்குத் தேவை; முந்தியே நீயோ அறுதலி, பிந்தி எடுபட்டு வந்தவள்; அப்படிப்பட்ட உனக்கும் ஒரு வாயா? நீ பத்தினி போலப் பாசாங்கு பண்ணினாலும் உன்னை நான் விட்டுவிடுவேனா? இவ்வளவு நேரமும் உன்னை நயமாக இரந்தேன் நீ உன்னைப்பற்றி அதிகம் நினைத்துக்கொண்டு என்னையும் பேயனாக மதித்துக் கொண்டாய்; உன்னையிட்டு ஊர் சிரிக்குஞ் சிரிப்பு உனக்குத் தெரியாது; பிதா சகோதரங்களை விட்டுச் சமயம் விட்டு அஞ்ஞானியோடு எடுபட்டுவந்த உனக்கும் ஒரு நெறியுண்டா? உன்னால் ஏலுமானாற் போ பார்ப்போம்" என்று சொலொமன் மிகவுங் கோபத்தோடு முரட்டுத்தனமாக அவளைச் செல்லவொட்டாது தடுத்துக் கொண்டு எதிரில் நின்றான். "அடா, போக்கிலி, நீ என்ன நினைத்துக் கொண்டாய்; நான் இதோ போகின்றேன்; உன்னால் ஏதுஞ்செய்ய முடியுமானாற்செய்" என்று சொல்லிவிட்டு நேசரத்தினம் அவனுக்கு விலகி வெகுவிரைவாய்த் தன் பெரிய தகப்பனுடைய வீடுநோக்கி நடந்தாள். சிறிது நேரம், செய்வதென்னவென்று தெரியாமல் யோசித்துக்கொண்டு நின்ற சொலொமன், அவனுடைய பொல்லாத காலத்தினாற் போலும், அவளைத் தொடர்ந்து ஓடிச்சென்று அவளது முதுகுப்புறத்து வஸ்திரத்தில் எட்டிப் பிடித்தான். அவள் "ஐயோ! பெரியப்பா!! சொலொமன் என்னைச் சோலி செய்கிறான்" என்று ஓலமிட்டாள். சொலொமன் ஒருபோதுங் காத்திராத பிரகாரம் உறைப்பான ஒரு அடி "பளீர்" என்று அவன் கன்னத்தில் வீழ்ந்தது; அவன் பதைத்துத் திகைத்து நட்டமரம் போல் நின்றான். "நேசம் நீ வீட்டுக்குப்போ" என்று அந்த அடித்தவர் சொல்லிவிட்டு, "அடா! சொலொமா! நீ அவளை ஆரென்று நினைத்தாய்? இனிமேல் இந்தப்பக்கத்தில் உன்னைக் காண்பேனாயின் காலை முறித்துவிடுவேன்" என்றார். "என்ன, மரியாதைக்கென்று பார்த்தால், நீர் மெத்த விஞ்சுகிறீர்; நானும் பத்துமாசந்தான்; நீரும் பத்துமாசந்தான்; எனக்குங் கால்கையுண்டு; பற்றைமறைவிற் பதுங்கியிருந்துவிட்டு ஓடிவந்து ஒரு தட்டுத் தட்டிப் போட்டேன் என்று நினைக்கின்றீராக்கும்; என் சொந்த மச்சாளோடு நான் பேசினால் நீர் என்னகேட்பது; போதகர் மாமா அவளைப் போய்ப் பிடித்துவா என்று சொன்னார்; உம்முடைய மரியாதையைக் காத்துக்கொள்வதானால், என்னோடு ஒன்றும் பேசாமல் வாயை மூடிக்கொண்டு நடந்துவிடும். உமக்கும் இதுக்கும் ஒரு "அலுவலுமில்லை" என்று சொலொமன் சொல்லுவதற்கிடையில் "மெய்தானா? அப்படியும் ஆளாய் விட்டீரோ" என்ற வார்த்தையோடு அவனுடைய மற்றக் கன்னத்திலும் பட, பட, என்று இரு அடி வீழ்ந்தன. சொலொமன் அடியின் அகோரம் பொறுக்க மாட்டாதவனாய்ப் படலைப்பக்கத்தை நோக்கி ஓடினான். ஓடுபவன் ஒன்றும் பேசாமல் ஓட வொண்ணாதா; "ஒழுங்கையில் வா பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே ஓடினான். அடித்த ஆளும் அவனைத் துரத்திக் கொண்டோடியது; சொலொமன் விரைவாய்த் தப்பியோடலாமென்று படலையைத் தள்ளினான். படலை முந்தி இவனாலேயே கட்டப்பட்டிருந்த படியால் திறக்கப்படவில்லை; சொலொமன் கட்டின கட்டு இப்பொழுது அவனுக்கே பெருங் கஷ்டமாக முடிந்தது; இதற்கிடையிற் சொலமனைத் துரத்திச்சென்றவர் "ஒழுங்கையில் வந்தால் என்ன செய்வாய்" என்று சொல்லிப் படலைக்கட்டை யவிழ்த்துக்கொண்டு நின்ற சொலொமன்முதுகில் "தொம், தொம்" என இரு குத்துக் குத்தினார். சொலொமன் குத்துத் தாங்கமுடியாமல், "ஐயோ! என்னை அடிக்க வேண்டாம்; நானாக வரவில்லை; இந்த ஒழுங்கையால் எங்கோ சும்மா போன என்னை அவள்தான் கைகாட்டிக் கூப்பிட்டாள்; அதனாலேதான் நான் வந்தேன்" என்று அழுதழுது சொல்லுதலும், "அது சரி, ஏனெடா, படலையைக் கட்டினாய்" என்று அந்த ஆள் கேட்க "அதையும், அவள்தான் வரும்போது கட்டிவிட்டு வரச்சொன்னாள்; வேறுஆரும் வரக்கூடுமென்று நினைத்தாக்கும்" எனச் சொலொமன் அழுது சொன்னான். "அது மெய்தான், தான் ஓடுவதாகவும் தன்னைத் துரத்திப்பிடிக்கும்படியும் உனக்கு அவள்தான் சொன்னாளா" என்று அந்த ஆள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்க, சொலொமன் ஒன்றும் பேசாமல் நின்றான். "எடே, மூடா, எனக்கு முழுவிஷயமுந் தெரியும், வீணாகப் பொய் சொல்லி இன்னமும் அடிவாங்காதே; இந்தப் பக்கத்திற்கு வருவதில் இதுவே கடைசிமுறையாக இருக்கட்டும்; ஓடிப்போ" என்று சொல்லி, அந்த ஆள் படலையை அவிழ்த்துச் சொலொமனை வெளியே விட்டுப் பின்னரும் படலையைக் கட்டிவிட்டு மீண்டார்.

வெளியே சென்றிருந்த வேலுப்பிள்ளை வீட்டுக்கு மீண்டு வந்தபோது தமது மனையாள் உறங்கிக் கிடப்பதைக் கண்டார்; நேசரத்தினத்தை வீட்டிற் காணவில்லை; ஒருபோது அடுத்த வளவிற்கு அவள் போயிருத்தல் கூடுமென்று நினைத்துக் கொண்டு அங்கே போனார். போனபோது நேசரத்தினம் மாமர நிழலில் இருப்பதையும், சொலொமன் வளவிற் படலையை வெளியே நின்று அவிழ்ப்பதையுங் கண்டார்; நடப்பதைப் பார்ப்போம் என்று அவர் நினைத்துக்கொண்டு இருவரும் அறியாதபடி மெல்ல வந்து ஒரு கொய்யாப்பற்றை மறைவில் நின்று நடப்பவைகளை அவதானித்தார். நேசரத்தினத்தைச் சொலொமன் துரந்து பிடிக்க, பற்றைமறைவில் நின்ற வேலுப்பிள்ளையே ஆத்திரங்கொண்டு சொலொமனுக்கு அடித்தார். வீட்டிற்கு மீண்ட வேலுப்பிள்ளை நேசரத்தினத்தைப் பார்த்து "மகளே, இனிமேல் அந்த வளவிற்கு நீ போகில், உன் பெரியம்மாவையுங் கூட்டிக்கொண்டு போவதல்லது தனியே போகாதே" என்று சொல்லிவிட்டு, நடந்த சமாசாரம் முழுவதையும் தன் மனைவிக்குச் சொன்னார். "ஐயோ, பாவம், அவனுக்குக் கடுமையாக அடித்துப்போட்டீர்கள் போலிருக்கிறது" என்று மனையாள் சொல்ல வேலுப்பிள்ளை "இனிமேல், அவன் இந்தவிதமாகக் கனவிலும் எண்ணாதபடி செய்து வைத்திருக்கிறேன்" என்றார்.

இந்தச் சம்பவம் நடந்தபின்னர், நேசரத்தினத்திற்குச் சீக்கிரத்தில் விவாகஞ் செய்து வைத்தல் வேண்டுமென்ற எண்ணம் வேலுப்பிள்ளை மனசிற் குடிகொள்வதாயிற்று. சொலொமன் முதலான துஷ்டர்கள் சில சமயங்களில் அவளுடைய மரியாதையைக் கெடுத்துவிட முயலுதலுங் கூடுமென்று அவர் நினைத்தார். விவாகவிஷயமாக நேசரத்தினத்தின் மனக்கருத்து என்ன என்பதை அறியும்படி வேலுப்பிள்ளை தன் மனையாளுக்குச் சொன்னார். மனையாள் ஒருதினம் நேசரத்தினம் தனியேயிருக்கும் போது அவளைப் பார்த்து "மகளே, என்றைக்கும் இப்படியிருப்பது புத்தியாகாது; உனக்கு ஒரு தக்க விவாகஞ் செய்துவைக்க வேண்டுமென்ற எண்ணம் உன் பெரியப்பாவுக்கிருக்கிறது; அதையிட்டு உன்னுடைய எண்ணமென்ன? ஒளியாமற் சொல்லு" என்று கேட்டாள். "பெரியம்மா, சொலொமனைப் போன்ற ஒருவனைவிவாகஞ் செய்து கொள்வதிலும் நான் இந்தப்படியே இருந்துவிடுவது நல்லதென்று நினைக்கின்றேன்" என்று நேசரத்தினஞ் சொன்னாள். "மகளே, அப்படியல்ல, உன்னுடைய நோக்கம் உன் பெரியப்பாவுக்கு நல்லாய்த் தெரியும்; அந்த விவாகத்தைத்தான் ஒழுங்குபடுத்துவதற்கு உன் எண்ணத்தை அறிதற்குப் பெரியப்பா உன்னைக் கேட்டுச் சொல்லும்படி எனக்குச் சொன்னார்" என்று வேலுப்பிள்ளை மனைவி சொன்னாள்; "எனக்குச் சம்மதந்தான்; ஆனால் அந்தப் பகுதியாருடைய விருப்பம் இப்பொழுது எப்படியிருக்கின்ற தென்பதை நாம் அறியாமல் முயற்சிபண்ணி ஆவதென்ன" என்று நேசரத்தினஞ் சொன்னாள். "அதைப்பற்றி நீ யொன்றும் யோசிக்க வேண்டாம்; அவைகளெல்லாம் உன் பெரியப்பா பார்த்துக் கொள்ளுவார்" என்று வேலுப்பிள்ளையின் மனைவிசொல்ல, "உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்" என்று நேசரத்தினஞ் சொன்னாள். நேசரத்தினத்தின் விருப்பத்தை வேலுப்பிள்ளையின் மனையாள் தன் புருஷனுக்குச் சொன்னாள். வேலுப்பிள்ளை கோபாலனோடும் தாயோடும் இந்த விஷயமாகத் தாம் போய்ப் பேசுதல் வேண்டுமென்று நிச்சயித்தார்.

★ ★ ★

இருபத்தொராம் அத்தியாயம்

சிலகாலமாகத் தமிழ் உபாத்தியாயர் வகுப்பிற் படித்து வந்த கோபாலன் அவ்வகுப்புக்குரிய பரீட்சையிற் சித்தியடைந்து ஒரு சைவ வித்தியாசாலையில் தலைமை உபாத்தியாராகக் கடமை பார்த்து வருவானாயினன். உற்றாருறவினரும் ஊரவர்களும் அவனைக் "கோபாலன்" என்று அழைப்பதை விடுத்துக் கோபாலபிள்ளையென்று சொல்லத் தொடங்கினார்கள். பள்ளிக்கூடப் பிள்ளைகள் கோபால உபாத்தியாயர் என்று சொல்லி வருவாராயினர். ஆதலால் நாமும் இனிமேற் கோபாலபிள்ளையென்றே சொல்லவேண்டும். தொட்டிலிற் பிள்ளை தொட்டிலிற்றான் எப்பொழுதுங் கிடந்து விடுவதல்ல; வேலுப்பிள்ளை ஒரு நாட் கோபாலபிள்ளையின் வீட்டிற்குப் போனார். அங்கே கோபாலபிள்ளையும் தாயும் அவரை உபசரித்து, வந்தகாரியம் என்ன என்று கேட்ட போது, வேலுப்பிள்ளை நேசரத்தினத்தினுடைய விவாகத்தை ஒப்பேற்றிவிட வேண்டுமென்ற நோக்கங்கொண்டு தாம் வந்ததாகச் சொன்னார். "எனக்கு ஒரு தடையுமில்லை, தம்பிக்கும் மெத்தப்பிரியம்; ஆனால், அண்ணே, குட்டித்தம்பிப் போதகர் இந்தச் சடங்கிற்குத் தடையாக நிற்கிறார் போல் தெரிகிறது; தகப்பனுடைய விருப்பத்திற்கு மாறாக ஒரு விவாகத்தைப் பிள்ளைக்குச் செய்தால் ஒருபோது உலகம் எங்களைக் குற்றஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லக்கூடும்" என்று கோபாலபிள்ளையின் தாய் சொன்னாள். "குட்டித்தம்பியின் எண்ணத்தின்படி ஏதும் நடக்கப் போவதில்லை; இந்தப் பிள்ளையின் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். அவளுக்கு இந்த விவாகந்தான் செய்யப் பிரியம்; இது இல்லையாயின் அவள் இப்பொழுது இருக்கிறபடியே என்றைக்கும் இருந்து விடுவாள்; குட்டித்தம்பி இந்த விஷயத்தில் ஒன்றுக்கும் வரமாட்டான்; நான் என் வீட்டிலேயே இந்த விவாகத்தைச் சைவ முறைப்படி நடத்த எண்ணியிருக்கிறேன்" என்று வேலுப்பிள்ளை சொன்னார். அதனைக்கேட்ட கோபாலபிள்ளையும் தாயும் மிகவும் சந்தோஷங் கொண்டனர். "நாங்களும் செய்ய வேண்டிய கல்யாணவீட்டு முயற்சிகளைச் செய்கிறோம்; அண்ணே, நீங்களே இருபகுதிக்கும் தலையாளாக நின்று எல்லாக் காரியங்களையுஞ் சிறப்பாக நடத்திவைக்கவேண்டும்; என் பிள்ளையோ தகப்பனில்லாப்பிள்ளை" என்று கோபாலபிள்ளையின் தாய் சொல்ல, வேலுப்பிள்ளை "அப்படியே செய்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் போயினர்.

நேசரத்தினத்தின் விவாக விஷயத்தில் அவளது தகப்பனையும் சம்மதப்படுத்திச் செய்வதுதான் வேலுப்பிள்ளையின் பிரியம்; அவர் ஒரு நாள் குட்டித்தம்பிப் போதகரைத் தம்முடைய வீட்டிற்குக் கூப்பிடுவித்து "தம்பி, நேசரத்தினத்தை இப்படி வைத்துக்கொண்டிருப்பது சரியல்ல; கோபாலனும் நல்ல உத்தியோகத்தோடும் மரியாதையோடு மிருக்கிறான்; அவன் சந்மார்க்கன்; அவனிடத்தில் இவளுக்கு விருப்பம்; அவனுக்கும் இவளிடத்தில் விருப்பம்; எனது மகனும் வருஷப்பிறப்பு "ஈஸ்ரர்" விடுதலை நாட்களுக்கு இங்கே வருவதாக எழுதியிருக்கிறான்; எதனையும் உன்னுடைய சம்மதமில்லாமற் செய்வது எனக்குப் பிரியமில்லை; சித்திரை மாசத்தில் நல்லநாளும் இருக்கிறது; ஆனபடியால் அதை நிறைவேற்றி வைக்கலாமென யோசிக்கிறேன்" என்று போதகருக்குச் சொன்னார். குட்டித்தம்பிப் போதகர் சிறிதுநேரம் யோசித்துவிட்டு "அண்ணே, கோபாலனும் வேண்டாம், சொலொமனும் வேண்டாம்; வேறு யாரையும் பார்த்துச் செய்து வைப்போம்" என்று சொன்னார். "தம்பி, ஊருக்கெல்லாம் போதிக்கும் நீ உன் மகள் விஷயத்தில் இவ்வளவு பேய்த்தனமாயிருக்கின்றாயே; கோபாலனிடத்துள்ள குற்றமென்னவென்பதை மாத்திரம் எனக்குச் சொல்லிவிடு; அவன் ஒழுக்கத்திற் குறைந்தவனா, சாதிமரபிற் குறைந்தவனா; குடித்துவெறித்துச் சூதாடி வீண் கூட்டங்கூடித் திரிகிறானா; சொலொமனையும் கோபாலனையும் ஒத்துப்பார்க்கின்றாயே; தம்பீ இது என்ன அறியாமை, பெண் மாப்பிள்ளை என்னும் இவர்களுடைய பிரியத்தைப் பார்க்க வேண்டாமா? முந்தியும் வாழ்ந்து கெட்டபிள்ளை; இனியாயினும் நல்லாயிருக்க வொண்ணாதா" என்று வேலுப்பிள்ளை சொன்னார். "அண்ணே, நான் வேறொன்றுக்குமல்ல; பாதிரியாரையிட்டுத்தான் பயப்படுகின்றேன்; சிலவேளை என் வேலைக்கும் பழுது வரும் போற் றோன்றுகின்றது" என்று குட்டித்தம்பிப் போதகர் கவலையோடு சொன்னார். "தம்பீ, பாதிரியாருக்கு ஒரு விவாகஞ் செய்துவைப்பதாகவிருந்தாலன்றோ அவரோடு யோசிக்கவேண்டும்; இதற்கும் அவருக்கும் ஒரு தொடர்புமில்லை" என்று வேலுப்பிள்ளை சொன்னார். போதகர் "நான் எல்லாவற்றிற்கும் யோசித்துச் சொல்லுகிறேன்" என்று சொல்லித் தமது மகளையுங் கண்டுகொண்டு வீட்டிற்கு மீண்டார்.

தம்முடைய மகளின் விவாகத்தைப் பற்றிப் பாதிரியாருக்குஞ் சொல்லி அவருடைய சம்மதத்தையும் பெற்று நிறைவேற்றுவதே புத்தியாகுமென்று குட்டித்தம்பிப் போதகர் எண்ணிக்கொண்டு பாதிரியார் வீட்டிற்குப் போனார். பாதிரியார் போதகரோடு பல விஷயங்களைப்பற்றிக் கலந்து பேசிவிட்டு, "மிஸ்ரர் குட்டித்தம்பி, உம்முடைய மகளின் செய்தி எவ்வளவில் இருக்கின்றது" என்று கேட்டார். "ஐயா, நான் அவளுடைய விஷயத்திற் பிரவேசிப்பதில்லையென்று விட்டுவிட்டேன்; அவள் என் தமயனார் வீட்டிலேதான் இருக்கிறாள்; அவளுக்குக் கோபாலனைத் தமயனார் விவாகஞ் செய்துவைக்கப் போகின்றாரென்று நேற்றுக் கேள்விப்பட்டேன்; அதற்கு என்ன செய்யலாமென்று உங்களோடு யோசிக்கும்படிதான் இப்பொழுது இங்கே வந்தேன்" என்று போதகர் சொன்னார். "என்ன? மிஸ்ரர் குட்டித்தம்பி, வீண்கதை பேசுகிறீர், உம்முடைய மகளுக்கு நீர் உயிரோடிருக்கும் வரையில் உமது தமயன் உமக்குமாறாக எப்படி விவாகஞ் செய்து வைக்கமுடியும்? எங்கள் மேய்ப்பனாகிய கர்த்தரின் பட்டிக்கு மேலும் மேலும் ஆடுகளைச் சேர்த்துவிடுவதல்லாமல், உள்ள ஆட்டில் ஒன்றை ஓநாய் கொண்டுபோக விடலாமா? அது ஒருபோதும் முடியாது; உம்முடைய மகளை உம்மோடு வைத்துக் கொள்ளும்படி நான் அன்றைக்கே உமக்குச் சொன்னேன்; நீர் அதைப்பற்றிச் சிந்திக்க வில்லைப்போல் தெரிகிறது; உம்முடைய பிள்ளை அஞ்ஞானியாக மாற, மற்றையவர்கள் உம்முடைய போதனையில் நம்பிக்கை வைப்பார்களா? இந்தக்காரியத்தில் வெகு யோசனையாக நடந்து கொள்ளும்" என்று பாதிரியார் சிறிது கோபத்தோடு சொன்னார். "ஐயா, நான் முழு விசுவாசத்தோடு சொல்லுகிறேன்; நான் சொல்வதை நம்புங்கள்; நான் கூடிய வரையிற் பிரயாசைப் பட்டும் என் மகளின் மனசைமட்டும் மாற்றிக் கொள்ள என்னால் முடியவில்லை; இதற்கு என்ன செய்வேன்" என்று வெகு மனவருத்தத்தோடு போதகர் சொன்னார். "சரி, மிஸ்ரர் குட்டித்தம்பி, நான் நேரே உம்முடைய மகளைக்கண்டு இதைப் பற்றிப் பேசுவது உமக்கு இஷ்டமா" என்று பாதிரியார் கேட்க, போதகர் "நூறு முறையும் இஷ்டம்" என்று பதில் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே இருவரும் குதிரை வண்டியில் வேலுப்பிள்ளை வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றனர். இவர்கள் இருவரும் தம்முடைய வீட்டிற்கு வரவே, வேலுப்பிள்ளை இவர்கள் ஏன் வருகின்றார்களென்பதைக் குறிப்பால் அறிந்து கொண்டார். தம்முடைய வீடுதேடி வந்தவர்களை உபசரிப்பது பெரியோர் கடமை. பாதிரியாருக்கு ஒரு நாற்காலி உதவி அவரை உபசரித்து விட்டுத் தம்பியையும் அயலேயிருந்த நாற்காலியில் இருக்கச் சொன்னார். அவர் ஒருபக்கத்திலிருந்த "வாங்கு" ஒன்றிற் போயிருந்தார். "இவர்தாமா, உம்முடைய தமயன்" என்று பாதிரியார் கேட்க, "ஆம்" என்று போதகர் சொல்ல, "மெத்த நல்ல காரியம்" என்று பாதிரியார் சொல்விட்டு, "மிஸ்ரர், வேலுப்பிள்ளை! மிஸ்ரர் குட்டித்தம்பியினுடைய மகள் நேசரத்தினத்தை நான் பார்க்கலாமா" என்று கேட்க "ஓம், நூறுமுறையும் பார்க்கலாம்" என்று சொல்லிவிட்டு, உள்ளேபோய் நேசரத்தினத்தைக் கூட்டிக்கொண்டுவந்து பாதிரியார் முன்னிலையில் விடுத்தார். நின்ற நேசரத்தினத்தைப் பாதிரியார் பார்த்து "நேசரத்தினம், அப்படி இரும்" என்று ஒரு நாற்காலியைக் காட்டி இருக்கச் சொல்லுதலும், "ஐயா, சொன்னது பெரிய உபகாரம், நான் இருக்கவில்லை; இப்படியே நிற்றேன்" என்று நேசரத்தினஞ் சொல்லிவிட்டு ஒரு புறமாக நின்றாள்.

★ ★ ★ ★

இருபத்திரண்டாம் அத்தியாயம்

நேசரத்தினம் வந்து பாதிரியார் முன்பு நிற்றலும், குட்டித்தம்பிப் போதகர் தம்முடைய சமூகம், பாதிரியார் நேசரத்தினத்திற்குச் சொல்லவிருக்கும் புத்திக்கு உவப்பாயிரா தென்று நினைத்துக்கொண்டு, சமீபத்தில் வசிக்கும் ஒரு உபாத்தியாயரைத் தாம் போய்க் கண்டுகொண்டு மீண்டு வருவதாகச் சொல்லிவிட்டு அவ்விடம் விட்டகன்றார். இதனைக் குறிப்பாலுணர்ந்த வேலுப்பிள்ளையும் தலைவாசற் புறத்தைவிட்டு வீட்டின் உட்பக்கத்துக்குச் சென்றார். பாதிரியார் நேசரத்தினத்தைப் பார்த்து "நேசம், நீர் ஒரு நல்ல பிள்ளை, படித்திருக்கின்றீர்; ஆனால் உம்முடைய தகப்பனார் மனம் வருந்தும்படியாக நீர் நடக்கிறீர் என்று அவர் குறைசொன்னார்; ஏன் அப்படிச் செய்கிறீர், மிஸ்ரர் குட்டித்தம்பி ஒரு கெட்ட மனுஷனல்லர்; அவர் தேவபத்தியுள்ளவர், சுவிசேஷத்தை நல்லாய்ப் படித்து எல்லாருக்கும் போதிப்பவர்; அவருடைய மகளாகவுள்ள நீர் இப்படிச் செய்வது எனக்குப் பெரும் மனவருத்தம்" என்றார்.

நேசரத்தினம்: ஐயா, நான் அவர் வருந்தும்படியான பிழையொன்றுஞ் செய்யவில்லையே; அவர் என்னையிட்டு வருந்தினால் அது எனக்கும் பெரிய மனவருத்தமாகும்.

பாதிரியார்: நீர் ஒரு பிழையுஞ் செய்யவில்லையென்று வைத்துக்கொள்வோம்; இப்பொழுது நீர் உமது தகப்பனார் வீட்டைவிட்டு இங்கு ஏன் வந்திருக்கின்றீர்; உங்கள் அம்மா, நீங்கள் சிறுபிள்ளைகளாயிருக்கும் போதே மரித்துவிட, அவர்தாமே உங்களை மிக்க அன்போடு வளர்த்து வந்தார்; அப்படிப்பட்ட பிதாவை விட்டுவிட்டு நீர் இங்கே வந்து இருக்கலாமா? இங்கே இருக்கக் கூடாதென நான் சொல்லுகிறேனென்று எண்ண வேண்டாம். வேலுப்பிள்ளையும் ஒரு பெரிய மனுஷன்தான்; ஆனால் உமது பிதாவின் சம்மதமில்லாமல் நீர் இங்கே வந்திருப்பது சரியல்லவே.

நேச: ஐயா, நீங்கள் எனக்கு ஒரு பிதாவுக்குச் சரி; உங்களிடத்தில் என் குறையைச் சொல்வது பிழையல்ல; எங்கள் பிதா எங்களை அதிக அன்போடு வளர்த்துவந்தது உண்மையே; அந்த விஷயத்தில் என்றைக்கும் நான் அவரிடத்தில் அன்பு பாராட்டுகின்றேன்; ஆனால் அவர் என்னுடைய விருப்பத்திற்கு மாறாக எனக்கு விவாகஞ் செய்துவைக்க முயற்சி செய்தார்; அது எனக்குப் பிரியமில்லையென்று பலமுறையும் நான் அவருக்குக் குறிப்பாகவும் வெளிப்படையாகவுஞ் சொன்னேன்; அவர் என் சொல்லையும் விருப்பத்தையும் சிறிதும் பொருட்படுத்தவில்லை; அதனால் நான் அங்கு இருக்காது புறப்பட்டு என் பெரியதகப்பனார் வீடாகிய இந்த வீட்டிற்கு வந்தேன்; இவர்கள் இரண்டுபேரும் என்னைத் தாங்கள் பெற்ற சொந்தப்பிள்ளைபோல் வைத்துப் பாதுகாத்து வருகிறார்கள். இதில் நான் செய்த குற்றமென்ன? நான் போகாத விடத்துக்குப் போய்விட்டேனா? செல்லத் தகாதவர்களுடன் கூடிக்கொண்டு சென்றுவிட்டேனா? நீங்களே சொல்லுங்கள்.

பாதிரியார்: நேசம், நீர் சொன்னதுஞ் சரி தான்; ஆனால், சொலொமனை விவாகஞ்செய்ய உமக்கு ஏன் பிரியமில்லை? அவன் உம்முடைய சொந்த மைத்துனன்தானே; ஒருபோது அவனுக்கு இப்பொழுது ஏதும் உத்தியோகமில்லை யென்று நீர் நினைக்கக்கூடும்; நீர் விவாகஞ் செய்வதானால் நான் கூடிய சீக்கிரத்தில் அவனை ஒரு மரியாதையான உத்தியோகத்தில் வைத்துவிடுவேன் அவனும் தேவபக்தியுள்ள ஒரு வாலிபன்.

நேச: ஐயா, எனக்கு விருப்பமில்லைவயென்று சொல்ல முடியுமேயல்லாமல், ஒருவருடைய குறையை எடுத்து இன்னொருவருக்குச் சொல்ல எனக்கு அதிகாரமில்லை; சொலொமனிடத்தில் எங்கள் தகப்பனாருக்கு விருப்பமிருக்குமானால், முந்தியே எங்களுள் ஒருத்திக்கு அவர் சொலொமனை விவாகஞ் செய்திருப்பார்; இப்பொழுது என்மீது கொண்ட வெறுப்பினாலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொலொமனை விரும்புகிறாரேயல்லாமல், சொலொமனுடைய குணங்களையிட்டல்ல. மேலும், உத்தியோகத்தினிமித்தம் ஒருவரை விவாகஞ் செய்வது பேதைமையாகும்.

பாதிரி: சொலொமனை விவாகஞ் செய்ய இஷ்ட மில்லாவிட்டால், வேறு யாரை விவாகஞ் செய்யப்போகிறீர்?

நேச: நான் விவாகமில்லாமலேயிருப்பேன்.

பாதிரி: (சிறிது நேரம் யோசித்து) நேசம், உம்மைக் கேட்கிறேனென்று குறைநினைக்கக் கூடாது. கோபாலனை விவாகஞ் செய்ய எண்ணியிருக்கிறீராமே; அவனுக்கும் உம்மை மணஞ்செய்து கொள்ளப் பிரியமாமே?

நேச: ஒருபோது இருக்கலாம்.

பாதிரி: கோபாலன் என்ன சமயம்?

நேச: சைவ சமயம்.

பாதிரி: நீர்?

நேச: நான் இப்பொழுது கிறிஸ்தவ சமயம்.

பாதிரி: விவாகஞ் செய்துகொண்டால் அதன் பின்?

நேச: அதன்பின் அவருடைய சொற்படி நடக்கவேண்டியதுதான்.

பாதிரி: சைவ சமயத்தை நீர் கைக்கொள்ள வேண்டுமென்று அவர் சொன்னால்?

நேச: கொள்ள வேண்டியதுதான்.

பாதிரி: ஏன், கணவன் சைவனாக மனைவி கிறிஸ்தவளாகவும், கணவன் கிறிஸ்தவனாக மனைவி சைவமாகவும் சிலர் இருக்கிறார்களே அப்படியிருந்தா லென்ன?

நேச: கணவன் சொற்படி மனைவி எப்படியு மிருக்கலாம்.

பாதிரி: ஒருவருடைய சமயவிஷயத்திலும் அப்படியிருக்க முடியுமா? எவர் எந்தச் சமயத்தில் விசுவாசம் வைக்கிறாரோ, எந்தச் சமயத்தை மெய்யென்று நம்பியிருக்கிறாரோ அதன்படி நடப்பதற்கு இன்னொருவர் இடையூறாகவிருப்பது சரியல்லவே?

நேச: ஆம், ஒருபோதுஞ் சரியல்ல; அது தான் என்னுடைய கொள்கையும்.

பாதிரி: அப்படியானால், கணவன் தன் மனைவியைத் தன்னுடைய சமயத்திற்கு வா என்று கற்பிப்பது சரியல்லவென நினைக்கிறேன்.

நேசம்: கணவன் மனைவியென்ற விஷயத்தில் மாத்திரம் அது பொருந்தாது; ஏனென்றால், எங்கள் பெரியோர் கொள்கைப்படி ஒரு பெண்ணுக்குக் கண்கண்ட தெய்வம் அவள் கணவனேயாம். "தெய்வந் தொழாஅள் கொழு நற்றொழு தெழுவாள், பெய்யெனப் பெய்யும் மழை" யென்றும், "கற்புடைய மாதர்கட்குத் தரணி வேந்தே கணவனல்லால் வேறோர் தெய்வங் கருதவுண்டோ" என்றுஞ் சொல்லி யிருக்கிறார்கள். மேலும் "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை", "கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி" என்ற முதியோர் வாக்கின்படி கணவனுடைய சொல்லை மீறாது குறிப்பறிந்து நடப்பதே ஒரு பெண்ணுக்குக் கற்பாகும். புருஷன் தன் மனைவியை "நீ கிறிஸ்தவளாக இரு" என்று சொல்லும்போது, இவளுக்குச் சைவசமயத்தில் விசுவாசமிருந்தாலும் இவள் கிறிஸ்தவளாகவே யிருத்தல் வேண்டும்.

பாதிரி: புருஷன் ஒரு சமயமாகவும், மனைவி வேறொரு சமயமாகவும் சிலர் இருக்கின்றார்களே! அவர்களும் இந்த ஒழுங்கின்படி தான் அப்படி யிருக்கிறார்களா?

நேச: அதை அவர்களிடத்திலேதான் கேட்டு அறிந்துகொள்ளுதல் வேண்டும்.

பாதிரி: (சிரித்துக்கொண்டு) சரி, நேசம், ஒருவருடைய சமய விசுவாசத்திற்கு இன்னொருவர் இடையூறாக விருக்கப்படாதென்று நான் சொன்னதற்கு, நீரும் ஆம், அது சரியல்ல என்று சொன்னீரே; அப்படி சொன்னது யாரைக் குறித்து?

நேச: பெண்கள் விஷயத்தில் நாயகனை யொழிந்த வேறு எவரும் இடையூறாக விருக்கக் கூடாது. உதாரணமாக, தாய் தகப்பன் சுற்றத்தவர் உபதேசிமார் போதனை மாதர் உங்களைப் போன்ற பாதிரிமார் முதலான எவரும் இடையூறாக இருக்கவொண்ணாது.

பாதிரி: சமய விஷயத்தில் ஒரு பெண் தன் தாய் தகப்பனுடைய எண்ணத்திற்கு மாறாக நிற்கலாமா?

நேச: சமய விஷயத்தில் நிற்கலாமென்றுதான் நினைக்கிறேன்.

பாதிரி: சைவருடைய நூலின்படி "அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்" என்று சொல்லப் பட்டிருக்கிறதாமே; அப்படியானால், அவர்களுடைய சொல்லைத் தட்டலாமென்பதென்ன? அவர்களும் தெய்வம், கணவனுந் தெய்வந்தானே சைவ நூல்களின்படி.

நேச: அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்; பெண்களுக்கு நாயகன் அதன்பின்னறிதெய்வம்; பெண்ணை ஒருவனுக்கு மணஞ் செய்து கொடுத்த மாத்திரத்தே, பிதா மாதாக்களுடைய சுவாதீனத்திலிருந்து அவள் நீங்கித் தன்னாயகனுடைய சுவாதீனத்திலாய்விடுகிறாள். விவாகஞ் செய்தபின் அவள் நாயகனுடைய பொருளாகின்றாள். பிதாமாதாக்களின் சொற்படி அவள் ஒரு சமயத்தை அநுசரித்தாலும், விவாகஞ்செய்தபின் கணவன் சொற்படியே அவள் செய்தல் வேண்டும்.

பாதிரி: சரி, அந்த விஷயங்களைப்பற்றி நாம் அதிகம் பேசவேண்டியதில்லை; வந்த கருமத்தைப்பற்றிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுவோம்; நேசம், நீர் சொலொமனை விவாகஞ் செய்யவேண்டாம்; வேறொரு தகுந்த கிறிஸ்தவ வாலிபனை விவாகஞ் செய்து கொண்டாலென்ன?

நேச: அப்படிச் செய்ய எனக்கு இஷ்டமில்லை; வேணுமானால் நான் விவாகமில்லாமலே யிருந்துவிடுகிறேன்.

பாதிரி: விவாகமில்லாமலிருக்கும்படி உம்மை ஒருவருஞ் சொல்லமாட்டார்; ஒரு அஞ்ஞானியை மணஞ் செய்யப் போகின்றீரே என்பது தான் மனவருத்தம். ஆனால் இப்பொழுது கோபாலனை விவாகஞ் செய்வதற்காகத்தானே சைவ சமயத்தைக் கைக்கொள்ள விரும்புகின்றீர்?

நேச: அந்தவிதமான நோக்கமில்லை.

பாதிரி: அந்தவிதமான நோக்கமில்லாவிட்டால், உம்முடைய பிதா எந்தச் சமயத்தவராகவிருக்கின்றாரோ அந்தச் சமயத்தையல்லவா பிள்ளையாகிய நீரும் கைக்கொள்ள வேண்டும்?

நேச: நீங்கள் சொல்லுகிறபடி பிதா மாதாக்களின் மார்க்கத்தையே பிள்ளைகளும் அநுசரிக்க வேண்டுமென்றால், என்பிதா இப்பொழுதும் சைவசமயத்தவராகத்தான் இருத்தல் வேண்டும்; உங்களைப் போன்ற மார்க்க போதகர்களுக்கும் இங்கே வேலையிருக்கமாட்டாது.

பாதிரி: ஏன் அப்படிச் சொல்லுகிறீர்?

நேச: என் தகப்பனாரின் பிதா மாதாக்கள் சைவர்களாக விருந்தவர்களாம்; தகப்பனாரும் சிறு வயசிலே சைவமாகவே யிருந்தவரென்று சொல்லக் கேட்டிருக்கின்றேன். இனி, இங்கிருந்த எங்கள் முன்னோரெல்லாருஞ் சைவர்கள்; அவர்களுடைய பிள்ளைகளும் அந்தச் சமயத்தையே அநுசரிக்க வேண்டுமென்று நீங்களே இப்பொழுது சொன்னீர்கள்; உங்கள் சொற்படி எந்தச் சைவனையும் கிறீஸ்தவனாக்க வொண்ணாது; ஆனபடியாற்றான் உங்களுக்கு இங்கே வேலையிராதென்று சொன்னேன்.

பாதிரி: (சிறிது யோசித்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டு) நேசம், உம்மைச் சாத்தான் மெத்தவும் அணாப்பிவிட்டான்; அவனிலிருந்து உம்மை மீட்க முடியாமலிருக்கிறது; ஆனால் ஒன்று சொல்லுகிறேன், அதை நன்றாய் மனசில் வைத்துக்கொள்ளும்; நீர் அஞ்ஞானியானால் உம்முடைய பிதா போதகராக வேலைபார்க்க முடியாது.

நேசம்: ஐயா, உத்தியோகத்திற்குப் பயந்து, பணத்துக்கு ஆசைப்பட்டு மனச்சாட்சிக்கு மாறாகச் சொந்தச் சமயத்தை விட்டு அந்நிய சமயத்தை அநுசரிப்பவர்களுக்குக் கடைசியில் அந்தவிதமான கதிதான் வந்து சேரும்.

இப்படி இவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருக்கும் போது குட்டித்தம்பிப் போதகர் மீண்டு வந்தார். அங்கே வந்த குட்டித்தம்பிப்போதகர் பாதிரியாருடைய முகத்தைப் பார்த்தவுடனே, அவர் வந்த கருமம் வாய்க்கவில்லை யென்பதைக் குறிப்பால் அறிந்துகொண்டார். "என்ன? மிஸ்ரர் குட்டித்தம்பி, உம்முடைய மகள் ஒன்றுக்கும் இடந்தருவாளாகக் காணவில்லை; உமது மகளை நீர் இப்பொழுதே வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போவது நல்லது" என்று பாதிரியார் சொல்லும் போது, குட்டித்தம்பிப் போதகர் வந்துவிட்டாரென்பதையறிந்த வேலுப்பிள்ளையும் வீட்டின் உட்புறத்திலிருந்து தலைவாசலுக்கு வந்தார்; போதகர் வேலுப்பிள்ளையைப் பார்த்து, "அண்ணே, நான் நேசரத்தினத்தை இப்பொழுது வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போகிறேன்" என்றார். வேலுப்பிள்ளை சிறிதுநேரம் ஒன்றும் பேசாமலிருந்து விட்டு, "தம்பீ, நேசம் இங்கே யிருப்பது எங்களெல்லோமுக்கும் விருப்பம்; இங்கே அவளுக்கு ஒரு குறையுமில்லை; ஆனால் பிள்ளையையும் பிதாவையும் பிரித்துவிடுவது என் நோக்கமல்ல; அவள் ஏதோ மனவியாகூலத்தோடு இருக்கிறாள்; பெரியதாய்க்கு அவளை விடக் கொஞ்சமும் பிரியமில்லை; இருந்தாலும் உன் மகளுக்கு உன்னுடன் வருவது பிரியமானால் நான் அதற்கு இடையூறாகநிற்பது சரியல்ல" என்றார். "மிஸ்ரர் வேலுப்பிள்ளை சொல்வது நியாயம்" என்றார் பாதிரியார். "நேசம், நீ பெரியம்மாவுக்குச் சொல்லிவிட்டு வீட்டுக்குப் புறப்படு, ஐயருடைய குதிரை வண்டியிற்றானே போய்விடலாம்" என்று போதகர் தம் மகளுக்குச் சொன்னார். நேசரத்தினம் ஒன்றும் பேசாமல் நிலத்தைப் பார்த்தபடி நின்றாள். சிறிது நேரஞ்செல்ல அவள் கண்களிலிருந்து நீர்த்துளி முத்துப்போல் உதிர்ந்தது. "ஏன் ஒன்றும் பேசாமல் நிற்கிறாய்; ஒன்றில் "ஆம்" அல்லது "இல்லை" யென்று சொல்லிவிடு; ஐயரை நெடுநேரம் காத்திருக்கச் செய்வது சரியல்ல" என்று குட்டித் தம்பிப் போதகர் சிறிது சினத்தோடு சொன்னார். "அங்கே வந்தால் எனக்கு ஆன துணையில்லை; நான் பெரியம்மாவோடு இங்கேதான் இருக்கப்போகிறேன்" என்று நேசரத்தினம் சொல்வதற் கிடையில், குட்டித்தம்பிப் போதகர் அடங்காக் கோபங்கொண்டு "எடி, நீ நினைத்தபடிதான் நடக்கப் போகிறாயா? நல்ல குணத்தோடு என்னுடன் இப்பொழுதே வந்துவிடவேண்டும்; இல்லாவிட்டால் நீ எனக்குப் பிள்ளையுமல்ல, நான் உனக்குப் பிதாவுமல்ல; என் காணி பூமி பொருள் பண்டம் ஏதும் உனக்கு வருமென்று காத்திராதே" என மிகக் கடுமையாகப் பேசுதலும், பாதிரியார் "என்ன மிஸ்ரர் குட்டித்தம்பி, உம்மை மறந்து பேசுகிறீர்; உலகத்துக்கெல்லாம் போதிக்கும் நீர் உப்படிப் பேசலாமா? கோபம் ஆகாது; வேதத்திலுள்ள பத்துக் கற்பனையை மறந்துவிட்டீரா! உமது மகளுக்கு உம்முடன் வரப் பிரியமில்லையென்று கண்டால், நீர் நெருக்கி ஆவதென்ன? சிறு வயசிலேயே விசுவாசம் வரும்படி நீர் கற்பிக்காமல் விட்டுவிட்டு இப்பொழுது கோபிப்பதால் ஏதும் ஆகுமா" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டித்தம்பிப் போதகர் சிறிது கோபம் ஆறி, "அண்ணே, நான் போய்வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டு வெளியே வந்தார். "மிஸ்ரர் வேலுப்பிள்ளை, "குட் பை" நானும் போகின்றேன்" என்று பாதிரியார் வேலுப்பிள்ளைக்குச் சொல்லிவிட்டு, நேசரத்தினத்தைப் பார்த்து "நேசம் உமது பிதாவின் சொல்லைத் தட்டப்படாது; அவர் மெத்த மனவருத்தப்படுகிறார்; இப்பொழுது அவர் வீட்டிற்கு நீர் போகாவிட்டாலும் இனிமேல் நிச்சயம் போகவேண்டும்; நான் அவருக்கு ஆறுதல் சொல்லுகிறேன்; பிடிவாதம் கூடாது; நான் போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு வெளியே வந்து போதகரோடு வண்டியிலேறிக்கொண்டு போயினார். அந்த நேரத்தில் நடந்த சம்பவமும், ஒரு காலமும் "எடி" யென்று சொல்லியறியாத தன் பிதா தன்னை எடியென்று சொல்லிக் கோபித்ததும், அவர் மனவருத்தத்தோடு தனக்கு ஒன்றுஞ்சொல்லாமற் போனதும் ஆகிய இவைகளெல்லாம் நேசரத்தினத்தின் மனசைப் பெரிதும் புண்படுத்தி விட்டன. அவளுடைய கண்களிலிருந்து நீர் அருவிபோல் ஒழுகியது. இதற்கிடையிற் பெரியதாய் அங்கே வந்து "மகளே, நீ அழ வேண்டாம்" என்று தேற்றி அவளை உள்ளே கூட்டிக்கொண்டு சென்றாள். வேலுப்பிள்ளை நெடுநேரம் யோசித்தபடியே இருந்த இடத்திற்றானே இருந்துவிட்டார். அப்பொழுது மனைவி வேலுப்பிள்ளையிடம் வந்து "இங்கே, பாருங்கள், நீங்கள் அந்தச் சடங்கை இப்படி நெடுகவிட்டிருந்தால், இன்னமும் மாறி மாறிச் சங்கடங்கள்தான் வந்து கொண் டிருக்கும்; தகப்பன் இங்கே வந்துபோன நேரந் தொடங்கிப் பிள்ளை அழுதபடியேதான் இருக்கிறாள்; அவள் சிறுபிள்ளை, தாயுமில்லை; எங்களை நம்பித்தான் பிள்ளை இங்கே ஓடி வந்தவள்; அவளுடைய மனசைக் கசக்குவது சரியல்ல; பெற்றதாயில்லை; தகப்பனோ பகை; நாங்களும் பேசாமலிருந்தால் இனி அவள் தன்குறையை யாரிடஞ்சொல்வது; ஒருபோது செலவுக்குப் பணம் கையிலில்லையென்று யோசிக்கிறீர்களா? அதையிட்டு யோசிக்க வேண்டாம்; தம்பி இன்னும் இரண்டொரு தினத்துள் வருஷப்பிறப்புக்கென்று வருகிறான்தானே; அவன் வரும்போது காசு கொண்டுவருவான்; என்னிடத்திலுங் கொஞ்சக் காசு காணவேணும்" என்று பாரதம் படிக்கத் தொடங்கினாள்.

"ஏ பைத்தியமே, நான் காசுக்கும் யோசிக்கவில்லை, வேறொன்றுக்கும் யோசிக்கவில்லை, ஆண்டவன் தந்த என் ஆண்குழந்தை யிருக்கும்போது எங்களுக்கென்ன குறை; நான் இவ்வளவு காலமும் இச்சம்பந்தத்தை இழுத்துக் கொண்டு வந்தது, இந்த அக்ஷய வருடத்தில் நல்ல நாளில்லை யென்றெண்ணித்தான். இனியென்ன, பிரபவ வருடம் பிறக்கப் போகின்றது, நல்ல மங்கலமான வருடம், சித்திரையிலேயே ஒரு நல்ல நாளைப் பார்த்து இதை நிறைவேற்றி வைக்கவேண்டும்; இதற்கிடையில் தம்பியும் வந்துவிடுவான்" என்று வேலுப்பிள்ளை சொல்லுதலும் மனைவி மிகவுஞ் சந்தோஷப்பட்டு, "பாருங்கள், நாங்களும் பெண்பிள்ளை யில்லாதவர்கள், இந்தச் சடங்கை மெத்தஇடம்பமாக எல்லாருக்குஞ் சொல்லி நடத்தவேணும்" எனலும் "ஓம் அப்படித்தான் நானும் எண்ணியிருக்கிறேன்" என்றார் வேலுப்பிள்ளை. "அப்படியானால், சொல்லுகிறேன் என்று குறை நினைக்க வேண்டாம், நாலுபேர் பெண்டுகள் வருகிற இடம், பாருங்கள், அந்தக் காசிப்பட்டுச் சேலை கண்ட இடத்திற்கெல்லாங் கட்டிக்கட்டி நலங்கிப்போய் விட்டது; எனக்கு இந்தநாளையில் மாதிரியான ஒரு பட்டுச்சேலையும் வங்கிவைச்ச வெள்ளை ரவுக்கையும் எடுத்து வாருங்கள்; வேறொன்றும் வேண்டாம்; உங்களுடைய புண்ணியமாக மற்றவையெல்லாம் உண்டு" என்று மனைவி சொன்னாள். வேலுப்பிள்ளை சிரித்து, "ஓகோ! பிள்ளையினுடைய விவாகத்திற்கு முந்தி உனக்கும் எனக்கும் இரண்டாம் சுயம்வரம் நடத்த வேணும்போல் தோற்றுகிறது" என்று சொல்வதற்கிடையில் மனுஷி "நான் ஏதும் சொன்னால், உங்களுக்குப் பரிகாசந்தான்" என்று சொல்லிக் கொண்டு, நின்ற இடத்தைவிட்டு வீட்டுக்குட் போதலும், வேலுப்பிள்ளை மீளத் தம் மனையாளைக் கூப்பிட்டு "தங்கைச்சியை இங்கே வரச்சொல்லு" என்று சொன்னார். சிறிது நேரத்தால் நேசரத்தினம் தன் பெரியதகப்பனிடம் மிக்க கவலையோடு கூடியவளாய் வந்து நின்றாள். "மகளே, நீ ஒன்றுக்கு; கவலைப்படவேண்டாம்; உன் பிதாச்சொல்வதையிட்டு நீ வருந்தாதே; நாங்களே உனக்குத் தகப்பனுந் தாயுமாக இருக்கிறோம்; எங்கள் காணி பூமி பொருள் பண்டம் எல்லாம் உனக்கே; நான் ஒரு நல்ல நாட்பார்த்து எங்கள் குருக்களைக்கொண்டு பிராயச்சித்தஞ் செய்வித்துச் சமயதீட்சையும் வைப்பிக்கிறேன்" என்று தேறுதல் சொன்னார்.

* * *

இருபத்துமூன்றாம் அத்தியாயம்

இது நிகழ்ந்து சில தினங்கள் சென்றபின், ஒருநாள் இரவு 9 மணிவரையில் ஏதோ ஒரு கூட்ட விஷயமாக வெளியே சென்றிருந்த பாதிரியார் தம்முடைய வீட்டிற்கு மீண்டு வந்தார். அங்கு வெளி "விறாந்தை" யிலிருந்த "மேசை" யில், தமது விலாசம் எழுதப்பட்ட ஒரு கடிதம் இருக்கக்கண்டு அதனைத் திறந்து பார்த்தார். அது பின்வரும் விஞ்ஞாபனமாகக் காணப்பட்டது:-

உ
சிவமயம்
விவாக விஞ்ஞாபனம்
*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பார்ந்த ஐயா!

பிரபவஸ்ரீ சித்திரைமீ 9உ (21.04.27) வியாழக்கிழமை இரவு 3 மணிக்குமேல் நிகழும் கும்பலக்கின சுபமுகூர்த்தத்தில், சரசுவதி வித்தியாசாலைத் தலைமை ஆசிரியராகவிருக்கும் செல்வச்சிரஞ்சீவி கோபாலபிள்ளைக்கு எனது கநிஷ்ட சகோதரமுறை பூண்ட குட்டித்தம்பியின் புத்திரி சௌபாக்கியவதி நேசரத்தின அம்மாளை எனது கிருகத்திற்றானே விவாகஞ்செய்து கொடுத்தற்குத் திருவருளை முன்னிட்டுப் பெரியோர் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் சுற்றமித்திரசகிதமாகச் சமுகஞ்செய்து தம்பதிகளை ஆசீர்வதித்துச் செல்லும்வண்ணம் தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
தங்களன்பன்,
க.வேலுப்பிள்ளை
6.1.27

தமிழை நன்கு எழுத வாசிக்கப் பயின்றவராகிய பாதிரியார் இதனை முதலொருமுறை படித்துப் பார்த்தார்; சிறிது யோசித்தார்; பெரிதும்ஆத்திரப்பட்டார்; உடனே தாம் ஒரு கடிதம் எழுதிக் காகிதவுறைக்குள் வைத்து ஒட்டி மேல்விலாசமிட்டு "ஜோன்" என்று கூப்பிட்டார். அவருடைய வேலைக்காரன் அவரது முன்பு வந்து நின்றான். இந்த "லெட்ட" ரைக் கொண்டுபோய்ப் போதகர் குட்டித்தம்பியிடம் கொடுத்துவிட்டுவா" என்று சொல்லிக் கொடுத்தார். ஜோன் அதை வாங்கிக்கொண்டு விரைவாய்ப் போனான்.

தமதுவீட்டுத் தலைவாசலில் ஒரு சார்மனை நாற்காலியிற் சார்ந்துகொண்டு "சுங்கான்" வாயிலாகப் புகைத்தபடி பலவாறு யோசித்த வண்ணமிருந்த போதகரிடம் பாதிரியாருடைய கடிதத்தை ஜோன் நீட்டினான்; "இது ஆர், ஐயா தந்ததா" என்று சொல்லிக்கொண்டு போதகர் அக்கடிதத்தை வாங்கித் திறந்து படித்தார். படித்தமாத்திரத்தே போதகர் முகம் கருகியது. "இப்படி வருமென்று முந்தியே எனக்குத் தெரியும்" என்று சொல்லிப்போதகர் பெருமூச்சு விட்டார். "பதில் தருகிறீர்களோ? இல்லாவிட்டால் நான் போகலாமோ" என்று ஜோன் கேட்டான். "நீ போகலாம்" என்று போதகர் சொல்லி அவனை அனுப்பிவிட்டுத் திருப்பித் திருப்பிக் கடிதத்தைப் படித்தார். படித்தாவதென்ன; எத்தனைமுறை படித்தாலும் எழுதப்பட்ட அதனைத்தான் படிக்கலாம். கடிதம் ஆங்கில பாஷையில் எழுதப்பட்டிருந்தது; அதன் சாரம் வருமாறு: கனம் குட்டித்தம்பிப் போதகருக்கு: ஐயா, இப்பொழுது நேர்ந்த ஒரு காரணத்தினால், நீர் காத்திராததும் எனக்குப் பெரும் மனவருத்தத்தைத் தரக்கூடியதுமான ஒரு செய்தியை நான் உமக்குத் தெரிவிக்கவேண்டி ஏற்பட்டது. சுவிசேஷத்தைப் போதிக்கும் போதகராக நீர் இருக்க, உமது மகள் ஒரு அஞ்ஞானியை விவாகஞ் செய்வதானால், அச்செயலை எங்கள் சங்கத்தார் மன்னிக்கமாட்டார்கள். இதனை நான் உமக்கு முன்னொருமுறை குறிப்பாகச் சொல்லியிருக்கிறேன். இந்த விவாகம் நிறைவேறுமானால், நான் எழுதியனுப்பிய இக் கடிதத்தைக் கொண்டே நீர் வேலையினின்றும் விலகிவிடுதல் வேண்டும். அதிகம் எழுதவில்லை" என்பதாம்.

"ஏறக்குறைய 25 வருடகாலமாக நான் விசுவாசத்தோடு செய்துவந்த சேவையை இந்தப் பாதிரியார் நினைத்தாரல்லர்; என் பிள்ளை தன் எண்ணப்படி செய்த தவறுக்காக என்னைத் தண்டிக்க நினைத்தார்; இப்படிப்பட்ட இவர்களை நம்பியல்லவா எம்முடைய இனசனங்களையும், ஆசார ஒழுக்கங்களையுங் கைவிட்டோம்; உண்மையாகச் சைவமார்க்கத்தில் யாதும் தவறு கண்டு அந்த மார்க்கத்தை விட்டோமல்லோம்; எத்தனையோ சந்தர்ப்பங்களில் சைவ சமயத்திற்கு மாறாக, நமது மனச்சாட்சிக்கு விரோதமாக வேலைசெய்தோம்; நமது தமயனார் சொன்னவாறு அந்தத் தீமைகளின் பலனே இப்பொழுது எனக்கு என் மகள் வாயிலாக வந்து லபித்தது; பாதிரியார் எழுதிய இந்தக் கடிதத்தைக் கண்டு கொண்டு நான் போதகருத்தியோகம் பார்ப்பது மரியாதைக்கேடு; என் மகள் சைவத்திற் சேர்ந்தாலும் சேராவிட்டாலும் நான் இந்த உத்தியோகத்தை விட்டுவிடவேண்டும்; பாதிரிமாருடைய தன்மையை உள்ளபடி அறிந்தல்லவா முன்னிருந்த சுன்னாகத்து முத்தர் என்னும் வித்துவான்:

"நல்லவழி காட்டுவோம் உடுபுடைவை சம்பளம்
நாளுநாளுந் தருகுவோம்
நாம்சொல் வதைக்கேளு மெனமருட் டிச்சேர்த்து
நானமுஞ் செய்துவிட்டார்
மெல்லமெல் லப்பின்னை வேலையிங் கில்லைநீர்
வீட்டினிடை போமென்கிறார்
வேண்டியொரு கன்னியைக் கைக்கொண்டு கருவாகி
விட்டபின் கணவன்வேலை
இல்லைநீ போவென்று தள்ளுவது போலுமே,
இனியெம்மை யெம்முறவினோர்
எட்டியும் பாரார்கள் கிட்டவும் வாரார்கள்
ஏர்பூட்டி யுழவுமறியோம்
அல்லலா மிம்மைக்கு மறுமைக்கு நரகினுக்
காளாகி மிகவழிந்தோம்!
ஆபரா பரனே! கிறீஸ்தவர்க ளெங்களை
அடுத்துக் கெடுத்தார்களே."

என்று பாடினார். அவர் பாடியது முழுதும் உண்மை. பாதிரியார் நம்மை வேண்டாமென்று சொல்வதற்கு முந்தி நாமாகவே இந்த உத்தியோகம் வேண்டாம் என்று பாதிரியாருக்கு எழுதிவிடுவோம்" என நிச்சயித்துக் கொண்டு குட்டித் தம்பிப் போதகர் பின்வருமாறு ஒரு கடிதம் எழுதினார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனம் பாதிரியாரவர்கட்கு:

ஐயா,

இக்கடிதம் தங்களுக்கு ஒருபோது மனவருத்தத்தைத் தரக்கூடும். தங்களுடைய செயலே இக் கடிதத்தை எழுதும்படி என்னைத் தூண்டியது. 25 வருடகாலமாக ஊழியஞ் செய்த எனக்குத் தாங்கள் செய்த சந்மானம் போதும். ஒருவர் செய்த குற்றத்திற்காக இன்னொருவரைத் தண்டிக்க நினைத்தது பிழையாகும். தாங்கள் கடிதம் எழுதுமுன் என்னோடு நேரிற் பேசியிருக்கலாம். ஆத்திரம் உங்களை அப்படிச் செய்யவிடவில்லை போலும். இன்று தொடக்கமாக நான் என்னுடைய உத்தியோகத்தினின்றும் விலகிக் கொள்ளுகிறேன் என்பதைத் தங்களுக்குத் தெரிவிக்கின்றேன்; அதிகம் எழுதவேண்டியதில்லை.

இங்ஙனம்
தங்களால் அலட்சியஞ்செய்யப்பட்ட,
குட்டித்தம்பி

பாதிரியார் இக் கடிதத்தைப் பார்த்தவுடனே அவர் மனசிற் பெரும் ஆத்திரமுண்டானது. குட்டித்தம்பிப் போதகர் தம்மை வந்து கண்டு இரந்து கேட்பாரென்று பாதிரியார் எண்ணியிருந்தாரேயன்றி இப்படி நினைத்திருந்தவரல்லர். சிறிதுநேரம் யோசித்தார். ஆனாற் பாதிரியாருடைய அகங்காரம் குட்டித்தம்பிப் போதகருக்குப் பதில் எழுதவாவது, அவரைத் தமது வீட்டிற்குக் கூப்பிட்டுப் பேசவாவது இடங்கொடுக்கவில்லை.

* * *

இருபத்துநான்காம் அத்தியாயம்

வியாழக்கிழமை காலையாய் விட்டது; கோபாலபிள்ளை வீட்டிலும் விவாகத்திற்காகிய சகல ஆயத்தங்களும் நடந்தன. வேலுப்பிள்ளையினுடைய மகன் பெண் வீட்டில் நின்று ஆகவேண்டிய முயற்சிகளெல்லாஞ் செய்தான். மத்தியானம் வரையில் வேலுப்பிள்ளையின் சுற்றத்தவர்களுட் சிலர் பெண் வீட்டிற்கு வந்தார்கள்; "தகப்பன் கல்யாணவீட்டிற்கு வருவாரோ" என்று வேலுப்பிள்ளையைக் கேட்டார்கள். "முறைப்படி சொல்லியிருக்கிறேன், வருவாரோ வாராரோ நான் அறியேன்" என்றார் வேலுப்பிள்ளை; "தாயில்லாப் பிள்ளை, தகப்பனும் வராவிட்டால் அந்தப் பிள்ளையின் மனம் என்னபாடுபடும், நாங்கள் இப்பொழுது போய் அவரை அழைத்து வருவோம்" என்று சொல்லிக்கொண்டு அங்கிருந்த பெரியோர் சிலர் புறப்பட்டார்கள்.

அதிக சிந்தனையோடிருந்த குட்டித் தம்பிப் போதகரிடம் அந்தப் பெரியோர் சிலர் போய் "ஐயா, உங்கள் பிள்ளையின் விவாக கொண்டாட்டத்திற்கு நீங்கள் ஏன் புறப்பட்டு வரவில்லை? என்ன மனஸ்தாபமிருந்தாலும் இந்தச் சமயத்தில் நீங்கள் தூரநிற்பது சரியல்ல; உங்களுடைய மற்றைப் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு நீங்கள் இப்பொழுதே வரல்வேண்டும்" என்றார்கள். "பெரிய மனுஷர்களாகிய உங்களுடைய சொல்லைத் தட்டுகிறேன் என்று குறையெண்ண வொண்ணாது; மேலும் என்னுடைய கருமாகவே நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்கள்; என்னுடைய மற்றைப் பிள்ளைகளைக் கல்யாண வீட்டிற்கு வரும்படி அழைக்க எனக்கு அதிகாரமில்லை; இளைய மகன் சாமுவேலிருக்கிறான்; அவனை மாத்திரம் நான் அனுப்பிவைக்க முடியும்; என்பிள்ளையின் கருமம் சந்தோஷமாய் ஒப்பேறட்டும்; இனிமேல் நான் வந்து தம்பதிகளைக் கண்டுகொள்ளுகிறேன்; இன்றைக்குமாத்திரம் என்னை அங்கே சமுகஞ் செய்யும்படி நெருக்க வேண்டாமென உங்களை மிக்க தயவாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று குட்டித்தம்பிப் போதகர் கூறினார். அந்தப் பெரிய மனுஷர் சிறிது யோசித்துப் பின்பு போதகரைப் பார்த்து "ஐயா, உங்களை உலகம் குறைசொல்லு மென்று நினைத்தே அழைத்துப் போகும்படி இங்கு வந்தோம்; என்னவாயினும் யோசித்துச் செய்யுங்கள்; ஆனால் நீங்கள் சொன்னபிரகாரம் உங்கள் மகனை எங்களுடன் அனுப்புங்கள்" என்று சொன்னார்கள். போதகர் தம்மகன் சாமுவேலைக் கூப்பிட்டு "தம்பீ, நீ இவர்களுடன் கூடிக்கொண்டு போய் உன் பெரியப்பா வீட்டிலே இரண்டு மூன்று நாட்கள் நில்" என்று சொல்ல, அவன் மிக்க ஆனந்தத்தோடு அவர்களுடன் கூடிக்கொண்டு வேலுப்பிள்ளை வீட்டிற்குப் போனான்.

பெரியோர் வேலுப்பிள்ளையிடம் மீண்டு "ஐயா, மகளுடைய கல்யாண காலத்திற் சமுகஞ் செய்யும்படி போதகரை மிகவும் வேண்டினோம்; அவர் தாம் இனிமேல் வருவதாகவும், இன்றைக்கு மாத்திரம் வரும்படி தம்மை நெருக்கவேண்டா மென்றுஞ் சொல்லி, இங்கே தம் மகனையும் எங்களுடன் அனுப்பியிருக்கின்றார்" என்றார்கள். "நாம் என்ன செய்வது; ஏதோ கூடியவரையிற் பார்த்தோம், குட்டித்தம்பி இணங்கவில்லை; இனி எம்மேல் எவருங் குற்றஞ் சொல்வதற்கு இடமில்லை" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார். இதற்கிடையில் சாமுவேல் தமக்கையிடம் போனான். நேசரத்தினம் தன் தம்பியைக் கண்ட மாத்திரத்தே கண் கலங்கினாள். "தம்பீ, இங்கே வா" என்று அவனைக் கூப்பிட்டு அவன் முதுகைத் தடவி "ஐயோ, நான் அங்குவிட்டு இங்கே வந்தபின் மிகவும் மெலிந்துபோனாய்; தம்பீ, நீயாயினும் இடையிடையே இங்கே வரக்கூடாதா? உன்னை இங்கே போகவேண்டாம் என்று ஆர் மறித்தது" எனக் கேட்க, ஒன்றும் பேசாமல் அதிக கவலையோடு சாமுவேல் நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பீ, அப்பா இன்றைக்கு இங்கே வரமாட்டாரா" என்று நேசரத்தினம் சாமுவேலைக் கேட்டாள். "அக்கா, அவர் வரமாட்டாரென்று என்னை மாத்திரம் போகும்படி சொன்னார்" எனச் சாமுவேல் சொன்னான். கேட்டமாத்திரத்தே நேசரத்தினத்தின் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் சிந்தியது; "அக்கா, அழாதீர்கள்; நீங்கள் அழுவதைப் பார்க்க எனக்கும் அழுகை வருகின்றது" என்று சாமுவேல் சொன்னான்; நேசரத்தினம் தன் கண்களைத் துடைத்துவிட்டு, "தம்பீ, இப்பொழுது வீட்டுக்கு மீண்டுபோய் அப்பாவிடம் நான் சொன்னதாகச் சொல்லவேண்டிய தென்னவென்றால், பெற்ற மனம் பித்தும் பிள்ளைமனம் கல்லும் என்று உலகத்திலே சொல்லுவார்களாம்; ஆனால் உங்களுடைய விஷயத்தில் மாறியிருக்கிறதாம்; நீங்கள் இன்றைக்கு இங்கே வரத்தவறினால், தான் உங்கே வருவாளாம் என்பதாம்" என்றாள். சாமுவேல் தன் சகோதரி சொன்னபடி மீண்டு வீட்டிற்குப் போய்த் தமக்கை சொன்னதைத் தகப்பனிடஞ் சொன்னான். கேட்ட போதகர் நெடிது நேரஞ் சிந்தித்தார். இதற்கிடையிற் சாமுவேல் "அப்பா, எங்களுக்கு அம்மாவும் இல்லை; மற்றை அக்காமாரும் அங்கே போகவில்லை; நீங்களும் வராவிட்டால் நேசக்காவின் மனம் என்ன பாடுபடும்" என்று பெரும் பரிதாபத்தோடு சொன்னான். "மகனே, நான் இதோ புறப்படுகிறேன்; நீ கவலைப் படாதே" என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டார் குட்டித்தம்பி. போதகர் புறப்படாமல் என்ன செய்ய முடியும்; பெற்றபிள்ளையல்லவா! "கடந்துளோர்களுங் கடப்பரோ மக்கள்மேற் காதல்" தகப்பனும் மகனும் வேலுப்பிள்ளை வீட்டிற்குப் போதலும், சபையிலிருந்தவர்களெல்லாரும் ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். "என்ன, நாங்கள் வீடு தேடிப்போய்க் கேட்கவும் மறுத்த போதகர், இப்பொழுது தாமாகவே புறப்பட்டு வருகின்றார்; ஒருபோது மகள் வரும்படி சொல்லியனுப்பி யிருத்தல் கூடும்" என்று அந்தப் பெரியார் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். "தம்பி, வா, வா" என்று வேலுப்பிள்ளை போதகரைக் கூட்டிக்கொண்டு வீட்டின் உட்புறஞ் சென்றார். பிதாவைக் கண்ட மகள் ஓடிவந்து அவருடைய கால்களிற் பஞ்சாங்கமாக வீழ்ந்து வணங்கி "அப்பா, நான் உங்களுக்கு ஏதுங் குற்றஞ் செய்திருந்தாலும், இந்தச் சமயத்தில் அதைப் பொறுத்துக்கொள்ளுங்கள்" என்றாள். "என் கண்ணே, நீ குற்றஞ் செய்திருந்தாலல்லவோ நான் பொறுப்பது" என்று சொல்லி மகளைத் தமது இரு கைகளாலுந் தூக்கி எழுந்து நிற்கச்செய்தார். போதகர் அங்கே சமுகமானமை எல்லோருக்கும் மனமகிழ்ச்சியை விளைத்தது. மணமகனாகிய கோபாலபிள்ளையும் இச்செய்தியைக் கேள்வியுற்று அதிக சந்தோஷமானார். சுருங்கச் சொல்லுகில், குறித்த சுபமுகூர்த்தத் திலே சைவமுறைப்படி வெகு ஆடம்பரத்தோடு ஸ்ரீ கோபாலபிள்ளைக்கும் திருவளர் செல்வி நேசரத்தினத்திற்கும் விவாகஞ் சிறப்பாக நிறைவேறியதெனலாம். இதனை முன்னரே பத்திரிகை வாயிலாக அறிந்த சிலர் தம்பதிகளை ஆசீர்வதித்துத் தந்தியடித்திருக்கிறார்கள்.

அவற்றுட் சில பின்வருமாறு:-

(1) கோலாலம்பூர், ஏப்பிரல் 21. கோபாலபிள்ளை-நேசம் விவாகத்திற்கு ஆசிகூறுகின்றோம். மாவிட்டபுரம், கோப்பாய் இந்துக்கள்.

(2) ஜொகூர் பாறு, ஏப்பிரல் 22. புதிய தம்பதிகட்கு இறைவனின் ஆசீர்வாதம் உரியதாக. ஜொகூர், இலங்கைத் தமிழர்.

விவாகம் நிறைவேறிய பின்னர், தம்பதிகள் நல்லநேரம் பார்த்து ஆலயதரிசனஞ் செய்து மணமகன் வீடு சென்று விருந்துண்டு, அதன் பின்னர்க் குட்டித்தம்பிப் போதகர் வீட்டிற்குஞ் சென்று அங்குச் சில தினங்கள் தங்கியிருந்தனர். போதகரும் மற்றை மக்களும் தம்பதிகளை நன்கு உபசரித்தனர். இங்ஙனஞ் சிலநாட் சென்றபின் மணமகனும் மணமகளும் வேலுப்பிள்ளை வீட்டிலேயே சில காலம் வசித்தனர். குட்டித்தம்பிப் போதகர் கோபாலபிள்ளையைத் தமக்கு மருமகனாகப் பெற்றதையிட்டு அதிக மகிழ்ச்சியடைந்தார்; இந்த நிகழ்ச்சியைப்பற்றிச் சொலொமனும் பாதிரியாருந் தவிர அந்தக் கிராமத்திலுள்ள மற்றை யெல்லாருஞ் சந்தோஷப்பட்டார்கள். கோபாலபிள்ளை தமது வித்தியாசாலைக்குக் கிரமமாகச் சென்று தம் கடமையை வெகு திறமையோடு செய்துவந்தார். நேசரத்தினம் சில காலஞ்செல்ல, தன் நாயகன் வீட்டிலே மாமியார் மெச்ச, "இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை" என்னும் மூதுரைக்கிணங்க இல்லறத்தை இனிது நடத்திவருவாளாயினள்.

இந்தச் சம்பவங்களை யெல்லாம் நாளுக்கு நாள், பிறர் சொல்லக் கேட்ட பாதிரியாருக்கு உண்டான ஆத்திரத்திற்கு ஒரு அளவில்லை; குட்டித்தம்பிப் போதகர் விஷயத்தில் தாம் நடந்து கொண்டவகை பிழை யென்று பாதிரியார் பச்சாத்தாபப்பட்டார். அவர் அதிகம் யோசித்து விட்டு, குட்டித்தம்பிப் போதகரைத் தம்மிடம் வரும்படி மிக அன்பாக ஒரு கடிதம் எழுதிப் போதகருக்கு அனுப்பினார். கடிதத்தைப் பெற்ற போதகர் நெடிது சிந்தித்தார். "காரியமில்லை; அவரவர் செய்வது அவரவரோடு" என்று சொல்லிவிட்டுப் போதகர் பாதிரியாரைக் காணும்படி புறப்பட்டார்; போதகரைக்கண்ட பாதிரியார் அவரை அன்போடு உபசரித்து முகமன் சொல்லி, தாம் போதகருக்குச் செய்தது தவறென்றும், அதனைப் போதகர் பொறுத்துக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழையபடி உத்தியோகம் பார்க்க வேண்டுமென்றும் கேட்டார். குட்டித்தம்பிப் போதகர் பாதிரியார் கேள்விக்கு உடன்படவில்லை. பாதிரியார் மிகவும் கவலைப்பட்டார். கவலைப்பட்டு இனி ஆவதென்ன. குட்டித்தம்பிப் போதகரும் இளைய மகனாகிய சாமுவேலும் பிராயச்சித்தஞ் செய்யப்பெற்றவர்களாய்ச் சைவ சமயத்தை அநுசரிக்கத் தொடங்கினர். மற்றைப் பெண் பிள்ளைகளைக் காட்டிலும் நேசரத்தினம் தகப்பனிடத்திலும் தம்பியிடத்திலும் அதிக அன்பு பாராட்டி அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை மனப் பூர்வமாகச் செய்து வந்தாள்; குட்டித்தம்பிப் போதகரைச் சில அபிமானிகள் சைவ வித்தியாசாலையொன்றில் உபாத்தியாயராகவிருந்து கல்வி பயிற்றும்படி கேட்டனர்; அதற்கு அவர் தாம் இனிமேற் தம் வயல் தோட்டங்களைச் செய்வித்துக்கொண்டு மனரம்மியத்தோடு காலங் கழிப்பதே தமது விருப்பமென்று சொல்லி மறுத்துவிட்டார். கோபாலபிள்ளையும் நேசரத்தினமும் சகல செல்வங்களையும் அனுபவித்துக்கொண்டு இன்புற்று இனிது வாழ்வாராயினர்.

சம்பூரணம்.

******

[கோபால - நேசரத்தினம் இரண்டாம் பதிப்பு முன்னுரை]

உ

நூன்முகம்

இந்த உலகம் பலவிதக் கதையைப் படிப்பவர்களுக்கு இதனை எழுதிய நோக்கம் இனிது புலப்படும். இக்கதை சென்ற 1921ம் ஆண்டில் இந்து சாதனப் பத்திரிகையிற் பாகம் பாகமாக வெளிவந்ததாகும்; பின்னர் 1927ம் ஆண்டில் இக்கதையைப் பிழையறப் பரிசோதித்து அத்தியாயங்களாக முறையே வகுத்துப் புத்தக ரூபமாக வெளியிட்டோம்; அப் பிரதிகள் வெளியாகிச் சில மாசங்களிலே செலவாய்விட்டன. சென்ற சில வருடங்களாக அன்பர்கள் பலர் இதனை அச்சிட்டு உதவவேண்டுமெனக் கேட்டமையினால், இப்பொழுது இரண்டாம் பதிப்பாக வெளியிடலானோம். படித்தவர்கள் வாசிக்க, படியாதவர்கள் தாமும் கேட்டு விளங்கக்கூடிய இலகுவான தமிழ் வசனநடையில் இந் நூல் ஆக்கப்பட்டிருப்பதோடு, ஆண்பாலார் பெண்பாலா ரெவருங் கூசாது படிக்கவுங் கேட்கவுந் தக்கதாய்க் காம சிருங்காரவருணனை, அசாத்தியமான நிகழ்ச்சிகளின் வரலாறென்னுமிவைகளின்றிச் சிறந்த முறையில் எழுதப்பெற்றதாகும்.

ம.வே. திருஞானசம்பந்தன்
21-2-48

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தநாயகி

"மாசிலாக் குலத்தில் வந்தாள் வருவிருந் துவப்ப வூட்டும்
நேசமிக் குடையாள் கொங்கன் நினைத்தகொண் டொழுகு நீராள்
தேசுறு வாய்மை யுள்ளாள் சினந்திடல் என்று மில்லாள்
பேசுதிண் கற்பு வாய்ந்தாள் பெற்றதே கொண் டுவப்பாள்"

"உங்கள் மருமகன் இப்படிச் செய்வானென நான் கனவிலும் எண்ணி யிருக்கவில்லை" எனக் கவலையோடு சொன்னாள் பர்வதவர்த்தனி; "ஏன் அப்படிச் சொல்லுகிறாய்" என்று ஒன்றுமறியார்போற் கேட்டார் பசுபதிப்பிள்ளை; "என்ன, நீங்களும் பத்தா பூலோகமா என்றவனைப்போல், உங்கள் சகோதரி மைத்துனன் மகன் இவர்களுடைய செய்கைகளை யெல்லாம் அறிந்தும் அறியாதவர் போல என்னைக் கேட்கிறீர்களே. உங்கள் அக்காள் மகன் ஞானசுந்தரத்திற்கும், தங்கம்மாளின் இரண்டாம் மகளுக்கும் சம்பந்தம் பேசி ஒழுங்குசெய்து, வருகிற பங்குனிமாசத்தில் கல்யாண நாளும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறதாமே; நீங்கள் கேள்விப்படவில்லையா" எனப் பர்வதவர்த்தனி தன் கணவனாகிய பசுபதிப்பிள்ளையை "ஆத்திரத்தோடு" கேட்டாள்.

"அப்படி நான் இன்னமுங் கேள்விப்படவில்லை, அது நிசமோ, வீண் கதையோ அறியேன்; நிசமாகத்தானிருந்தாலுமென்ன, அதுகிடக்க, தங்கம்மா என்று சொல்லுகிறாயே, எந்தத் தங்கம்மா? அவளுக்குப் புருஷனில்லையா?" என்று அறியார்போல் வினவினார் பசுபதிப்பிள்ளை; "புருஷனில்லாமலா பிள்ளைப் பெற்றவள்? வேறெந்தத் தங்கம்மா? அந்தக் கணபதிப்பிள்ளை யுடையார் பெண்டாட்டி தங்கம்மாதான்; ஆண் பிள்ளைகளாகிய நீங்கள் தகப்பன் பெயரைச் சொல்லுவீர்கள்; பெண்களாகிய நாங்கள் தாய் பெயரைத்தானே சொல்லுவோம்; இதுதானே ஊரிலுள்ள வழக்கம். இந்த நுட்பங்களெல்லாம் பேசுவீர்களே யொழிய, பார்க்கவேண்டிய கருமத்தைப் பார்க்கமாட்டீர்கள்" என்று கணவனைக் குறை கூறினாள் பர்வதவர்த்தனி.

"அதுசரி, பர்வதம், இப்பொழுது என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்" என்று பசுபதிப்பிள்ளை கேட்க, பர்வதம் "என்ன, இப்படியெல்லாம் கேட்கிறீர்கள்? மலாய்நாட்டிலிருந்து விடுமுறை நாட்பெற்றுக்கொண்டு வருவதுதான் தாமதம், வந்தவுடனே தங்கள் மகனை எங்கள் மகளுக்கே கல்யாணஞ் செய்து வைப்பதென்று உங்கள் தமக்கையார், நேற்றின்றல்ல, உள்ளநாள் முழுவதும் உங்களுக்குச் சொல்ல நான் காதாரக் கேட்டிருக்கின்றேனே; இப்பொழுது தங்கள் மகன் ஊரில் வந்து சேர்ந்தவுடனே, வேற்றிடத்திற் சம்பந்தம் பேசி, உங்கள் அக்காளும் அத்தானும் ஒழுங்கு செய்திருக்கிறார்கள்; கணபதிப்பிள்ளை யுடையார் வீட்டிற்கும் உங்கள் குடும்பங்களுக்கும் முந்தி ஏதுந் தொடர்புண்டா? உடையார் வீட்டிலே நாங்கள் செம்புந் தண்ணீரும் எடுக்க மாட்டோமென்று, நீங்களும் முந்தி உங்கள் மரபைப்பற்றி மேன்மை பேசிவந்தீர்களே. இப்பொழுது அந்த உடையார் வீட்டிலே செம்புந் தண்ணீரும் எடாமல், உண்ணாமற் கொண்டாடாமலா இவர்கள் பெண் கொள்ளப்போகின்றார்கள்? பணம் பந்தியிலும் குலங் குப்பையிலுமென்று அறியாமலா சொல்லுகிறார்கள். பணத்துக்கு, சீதனத்துக்கு ஆசைப்பட்டுத்தானே உங்கள் தமக்கையும் மைத்துனரும் போகாத இடத்திற்குப் போகிறார்கள்; பெண்ணெடுக்கத் தகாத குடியிலே பெண்ணெடுக்கின்றார்கள்; ஆனாற் பஞ்சம்போம் பஞ்சத்திற்பட்ட வடுப் போகாதென்பதை அவர்கள் நினைக்கவில்லை; பணத்தைத் தேடலாம்; சாதிமரபையுந் தேடலாமா? அல்லாமலும், பணத்திற்குக் குலத்தை விற்பதா" என்று கடுகடுத்து ஞாயம் பேசினாள் பர்வதம்.

பசுபதிப்பிள்ளை கடவுள் நம்பிக்கையுள்ள பெரிய மனுஷன்; ஊழின்படி நடக்குமென்ற கொள்ளையுடையவர்; அவர் மனத்திற் கோபம் பிறத்தல் அரிது; கல்வியறிவுள்ளவர்; தம்முடைய மருமகனுக்கு, அவனுடைய பெற்றார்கள், முந்தித் தமக்குச் சொன்ன வாக்கிற்கு மாறாக வேறு குடும்பத்திற் கல்யாணம் பேசுகிறார்களென்பதைப் பசுபதிப்பிள்ளை அறிவார்; விதியின் வண்ணந்தானே எதுவும் நடக்கும், நாம் ஏன் மனம் நோவான், ஒருவரைக் குறை கூறுவான், எல்லாம் இறைவன் செயல் என்ற மனரம்மியத்தோடு இந்தச் சம்பந்தப் பேச்சைத் தம் மனைவிக்கும் வெளியிடாமல் அவர் அறிந்தும் அறியார்போலிருந்தார். ஆனாற் பர்வதவர்த்தனி அன்று காலையிற்றான் அச்சம்பந்த ஒழுங்கைப்பற்றிக் கேள்விப்பட்டு ஆத்திரம்கொண்டாள்.

தம் மனையாள் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட பசுபதிப்பிள்ளை புன்னகை செய்து அவளைப் பார்த்து "பர்வதம், எதற்கும் கவலைப்படாதே, எங்கள் செயலால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவதொன்றுமில்லை. எல்லாம் அவன் செயல்; மனுஷன் நினைத்தபடி யெல்லாம் முடிந்துவிடுமோ? அப்படியானால், தசரதச்சக்கரவர்த்தியின் விருப்பத்தின்படி, முக்கால உணர்ச்சியுடையவரென்று சொல்லப்படும் வசிட்டர் இராமபிரானுடைய பட்டாபிஷேகத்திற்கு நாள் நியமித்தாராமே; அந்தச் சுபதினத்தில் இராமபிரானுக்குப் பட்டாபிஷேகம் நடந்ததா? பெண் புத்தியினால் அவலப்படுகிறாய்; நிதியுங் கணவனும் நேர்படினுந் தந்தம் - விதியின் பயனே பயன் என்றல்லாவா பெரியோர் பாடியிருக்கிறார்கள்; இங்கே நடக்க வேண்டுமென்ற விதியிருந்தால் இங்கே நடக்கும்; அங்கேதான் அந்தக் கல்யாணம் நடக்கவேண்டுமென்ற ஊழிருந்தால் அங்கேதானே நடக்கும்; சாதி மரபிலே எங்கள் குடும்பம் மேலானது என்று நாங்கள் எங்களைப் புகழ்ந்துகொண்டால், மற்றையவர்களும் சாதிமரபிலே தாங்கள் தாம் அதிகமென்று தங்களைச் சொல்லலாந்தானே; இடையிலுள்ளவர்களல்லவா, சாதிமரபில் எவர்கள் கூடியவர்கள் என்று சொல்லவேண்டும்; அல்லாமலும், அவர்கள் சாதிமரபை விட்டுப் பணத்திற்காசைப்பட்டுப் போகாதவிடத்திற்குப் போகிறார்களென்கிறாய்; பொன்னாசை, மண்ணாசை முற்றத்துறந்த முனிவர்களை விட மற்றை எவர்க்குமுண்டுதானே; எங்கள் பிள்ளைக்கும் ஆண்டவன் ஒரு மாப்பிள்ளையை அமைத்திருப்பா னென்றல்லவா எண்ணி மனம் ஆறவேண்டும். பர்வதம், சஞ்சலப்படாதே அந்த வைரவப்பெருமான் எங்களைக் கைவிடமாட்டான்" என்று தேறுதல் சொன்னார்; கேட்ட பர்வதவர்த்தனியும் அப்போதைக்கு ஒருவாறு மனந்தேறியிருந்தாள்.

பசுபதிப்பிள்ளையினுடைய மைத்துனரின் பெயர் சிற்றம்பலம், தமக்கையின் பெயர் சிவகாமியம்மை; இவர்களுடைய வீட்டிற்கு ஒரு நாட் பின்னேரம் தங்கம்மாள், தங்கள் வேலைக்காரப் பெண்ணையுந் துணையாகக் கூட்டிக் கொண்டு குதிரை வண்டி மூலமாக வந்து சேர்ந்தாள்; வந்த தங்கம்மாவைச் சிவகாமியம்மை எதிர்கொண்டழைத்து வந்து பாய் விரித்து இருக்கச்செய்து உபசரித்தாள்; அந்த நேரம் உடையார் வெளியே போயிருந்தார்; ஆனால் மகன் ஞானசுந்தரம் அந்நேரத்தில் வீட்டில் நின்றவன், "அம்மா, உவர்கள் யார்" என்று, வந்தவர்கள் அறியாவண்ணம் மெல்ல வினாவ, தாய், இவர்கள்தாம், மகனே, உனக்குப் பெண்பேசும் உடையார் வீட்டிலிருந்து வருகிறார்கள்; ஒருத்தி உடையார் மனைவி, மற்றவள் வேலைக்காரி" என்று மெல்லச் சொன்னாள். கேட்டவுடனே மகன் கூச்சப்பட்டு, நின்ற இடத்தை விட்டு மெல்ல நழுவித் தலைவாசலின் பக்கலிலுள்ள அறையுட் போய் இருந்தான்.

ஞானசுந்தரன் மெல்லப் போனதைக் கண்டதங்கம்மாள் "என்ன, உங்களுடைய மகன், நாங்கள் வரக் கண்டவுடனே ஓடியொளித்து விட்டார்" என்று சிறுநகையுடன் வினாவ, "மாமியாரைக் கண்டால் மருமகன் மறைவது சகசந்தானே" யென்று சொல்லிச் சிவகாமியம்மை தானுஞ் சிரித்தாள். "எங்கள் மகள் உங்களைக் கண்டால் இப்படிக் கூச்சப்படமாட்டாள், பாருங்கள்; அது வேறொன்றுமல்ல, பள்ளிக்கூடத்திலோ, கல்லூரியிலோ பெண் பிள்ளைகள் படித்து, தம்மோ டொத்த பிள்ளைகளோடும் உபாத்தியாயர்களோடுங் கூச்சமின்றி ஊடாடுவதினாலும் பள்ளிக்கூடங்களில் இடையிடையே கூட்டங்கூட்டி அந்தக் கூட்டங்களிற் பேசுவதினாலும், வீணை முதலியன வாசித்தலினாலும் பெண்பிள்ளைகளுக்குள்ள கூச்சம் மெல்ல மெல்லத் தெளிந்து விடும்; இப்படியான செயல்களினாலே கூச்சந்தெளியாதிருக்கும் பெண்பிள்ளைகளும், வேஷம் போட்டு, அதிலும் பெண்பிள்ளை ஆண்வேஷமிட்டு நடிக்க ஆரம்பித்தால், இந்தப் பொல்லாத கூச்சமென்பது அறவே நீங்கிவிடும்; எங்கள் மகள், இனி உங்கள் மருமகள்; இவள் போனவருடம், தான் படிக்குங் கல்லூரியில், அல்லி அருச்சுனன் நாடகம் நடந்தபோது, அர்ச்சுனனாக வேஷமிட்டு நடித்தாள்; நானும் அவரும் போய்ப் பார்த்தோம், எங்கள் பிள்ளையை நாங்கள் புகழ்வது முறையல்ல, ஆனால் எங்கள் மகள் மூக்கின் கீழே போலி மீசையையும் மாட்டிக்கொண்டு, தலையிற் கிரீடமுந் தரித்துக்கொண்டு, கையிற் காண்டீபம் என்னும் வில்லையும் பிடித்துக் கொண்டு நாடகமேடையிலே வந்து தோன்றிப் பாடியபோது, மச்சாள்! பொய்யென்று எண்ணாதீர்கள் சபையிலே இருந்தவர்கள் அத்தனை பேரும் ஆநந்தப்பட்டுக் கைகொட்டினார்கள்; சிலர் இன்னுமொருக்காற் பாடவேண்டுமென்று இங்கிலீசிலே சொன்னார்கள்; அந்த நேரம் அவரும் நானும் உண்மையாக ஒரு ஆண்பிள்ளையைப் பெற்ற ஆநந்தத்தையடைந்தோம்.

இது மாத்திரமல்ல, உங்களுக்கு வர இருக்கும் மருமகளைப்பற்றி இன்னுஞ் சொல்லுகிறேன் கேளுங்கள்; இந்தப் பிள்ளைக்கு நாங்கள் சங்கீதம் பயிற்றுவிக்கச் செலவிட்ட பணம் கொஞ்சமல்ல; இந்தியாவிலிருந்து வந்த ஒரு ஐயர், பெரிய சங்கீத வித்துவானாம், அவரையே தினமும் காலைவேளையிற் பிள்ளைக்குச் சங்கீதஞ் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்து, மூன்று வருடகாலம், மாசம் இருபது ரூபா விகிதம் சம்பளமாக வாரிக்கொடுத்த பணத்தின் தொகை எவ்வளவென்று நீங்களே கணக்கிட்டுப் பார்த்துக்கொள்ளலாமே; ஆனால், மச்சாள், கொடுத்த பணத்திற்கு மோசமில்லை; சங்கீதந்தெரிந்த அந்த ஐயர் எங்கள் பிள்ளையின் திறமையைக் கண்டு மனம் வைத்துத் தமக்குத்தெரிந்தவை முழுவதையும் எங்கள் மகளுக்குச் சொல்லிக் கொடுத்துவிட்டார்; அவள் ஹாமோனியப் பெட்டியைத் திறந்து சுதிகூட்டிக்கொண்டு பாடத் தொடங்கினாற் பட்டமரமுந் தழைக்கும். மச்சாள், இது நிசம்; அதிகஞ் சொல்லுவதென்ன, நாளைக்கு உங்கள் மகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகத்தானத்திலிருந்து பசியோடு ஆயாசத்தோடு வந்தாலும், உங்கள் மருமகள் பெட்டியைத் திறந்து வாசித்துக்கொண்டு பாடினால், அதை உங்கள் மகன், எங்கள் மருமகன், கேட்டவுடனே அவர் பசியும் ஆயாசமும் பறந்துபோம், இதை இருந்து பாருங்கள், இன்னம் ஒரு கருமத்தை மாத்திரஞ் சொல்லி முடிக்கிறேன் என்று தங்கம்மாள் பின்னருஞ் சொல்லுகின்றாள்:

"சில மாதங்களுக்கு முந்தி எங்கள் மகள் படித்த கல்லூரிப் பொறுப்பில், "காணிவல்" எனப்படும் பொருட்காட்சிக் களியாட்டு விளையாட்டுக் கொண்டாட்டம் ஒரு கிழமையாக நடந்தது அந்தக் கொண்டாட்டத்தில் அழகுப் போட்டியும் ஒரு அமிசமாக விதிக்கப்பட்டது. எங்கள் பிள்ளையே அழகிற் சிறந்தவளென்பதை ஊரெல்லாம் அறியும், அதனாற் போலும் எங்கள் மகளை முந்திப் படிப்பித்த ஒரு உபாத்தியாயர் எங்களிடம் வந்து, எங்கள் மகளையும் அழகுப் போட்டியிற் பங்குபற்ற விடல் வேண்டும், விட்டால் முதற்பரிசு எங்கள் மகளுக்கே தப்பாமற் கிடைக்கும் என்று கேட்டார். பிள்ளையின் தகப்பனார் முதல் மறுத்து விட்டாரெனினும், நான் இரந்து கேட்டபடியால், ஒருவாறு உடன்பட்டார்; பொன்னின் குடத்திற்குப் பொட்டிட வேண்டியதில்லை யென்றாலும், அழகுக்கு அழகு செய்வார்போல், இயற்கையழகமைந்த எங்கள் மகளுக்குச் செயற்கையழகும் செய்தோம். செய்யவேண்டிய அலங்கார மெல்லாஞ் செய்து கொண்டைக்குப் பூமாலையுஞ் சூட்டிவிட்டு நிற்கும்போது, நான் முந்திச் சொன்ன அந்த உபாத்தியாயர் பிள்ளையையும் எங்களையும் அழைத்துப்போக மோட்டார் ரதமுங்கொண்டு எங்கள் வீட்டில் வந்து சேர்ந்தார்.

வந்த உபாத்தியாயர் பிள்ளையை நேரிற் பார்த்தார், நல்லாயிருக்கின்றதென்றார், நாவூறு பார்த்துவிடாதீர்கள் என்றேன் நான்; எல்லாஞ் சரி, ஒரு குறைதான் உண்டு என்றார் உபாத்தியாயர்; என்ன என்று கேட்டேன்; "அழகுப் போட்டிக்கு உந்தவிதமாகக் கூந்தலைப்பின்னி அந்தத்திற் குஞ்சங் கட்டி விட்டால், இக்காலத்துக் கண்களுக்கு இது கவர்ச்சி தராது, கவற்சியையே தரும்; இதனை ஒரு கணக்காகக் கத்தரித்து விட்டாற்றான் பார்ப்பவருக்கு அழகாகத் தோன்றும்; போட்டியிலும் வெற்றிகிடைக்கும், பரிசு அகப்படும்" என்று அழுத்திச் சொன்னார் அந்த உபாத்தியாயர்; ஐயோ, மச்சாள், கூந்தல் சோர்ந்தபடி நிற்கும்போது என் பிள்ளையின் கூந்தல் நிலத்திலே தோயும்; அப்படிப்பட்ட கூந்தலைக் கத்தரிப்பதென்றால் எனக்கு மனம் வருமா? நான் என்னுடைய அவரைப் பார்த்தேன்; "அம்மா, இனி என்ன செய்யலாம்; நாய்க்கு வேஷம் போட்டாற் குரைத்தே தீரவேண்டும்; இப்போது உபாத்தியாயர் சொல்லுகிறபடி செய்வோம்; கத்தரித்த கேசத்தை வீண்போகாமல் வைத்துக் கொள்ளுவோம்; பின்பு பயன்படும்" என்று சொல்லிக் கூந்தலைக் கத்தரிக்க உடன்பட்டாள் எங்கள் அருமையான மகள். பின்னர் ஸ்நாநஞ்செய்து அலங்கரித்து எங்கள் மகளுடன் அவரும் நானும் உபாத்தியாயரும் இரதத்தில் ஏறிக்கொண்டு போனோம்.

காட்சி முன்றிலிற் பலவகையான காட்சிகளும் விளையாட்டுக்களும் முடிந்தபின், அழகுப் போட்டி ஆரம்பமானது; அதற்கென்று இயற்கையழகோடும், செயற்கையழகோடுங் கூடியவர்கள், அழகற்றவர்கள், ஆணோ பெண்ணோ என்று சந்தேகிக்க வேண்டிய தன்மையிலுள்ளவர்களாக நூற்றுக் கணக்கான யுவதிகள் முந்தியே வந்து முற்பட்டு நின்றார்கள்; இதற்கிடையிற் காட்சியை நடாத்தும் அதிகாரிகளுக்கிடையே ஏதோ பிணக்கு நேர்வது போற் காணப்பட்டது ; என்ன என வினாவியவிடத்து, அழகுப்போட்டியில் மதிப்புச் சொல்வதற்கு நடுவ (மத்தியஸ்த) ராக இருக்க வேண்டியவர்கள் ஆண்களோ பெண்களோ என்ற ஆசங்கை அவ்வதிகாரிகட் கிடையில் எழுந்துள்ளதென அறிந்தோம். "பாம்பின் கால் பாம்பறியும்" என்றவாறு பெண்களைப்பற்றிப் பெண்களே நன்கறிவார்கள், ஆதலாற் பெண்கள் தாம் மத்தியஸ்தர்களாக இருத்தல்வேண்டும் என்றார் சிலர்; அப்படியல்ல ஆடவர்கள் தாம் பெண்களின் பேரழகை நுட்பமாக ரசிக்கத்தக்கவர்கள், அனுபவிப்பவர்கள், ஆதலால் அவர்களே நடுச்சொல் வோராயிருக்க வேண்டுமென்றார்கள் வேறு சிலர்; அப்படியல்ல ஆண்களும் பெண்களுஞ் சேர்ந்து மத்தியஸ்தர்களாக இருப்பதுதான் உத்தமமென்றார்கள் இன்னுஞ் சிலர்; இவர்கள் சொன்னபடி ஆண்களும் பெண்களும் கலந்து மத்தியஸ்தர்களாகவிருப்ப, அழகுப்போட்டி ஆரம்பித்தது; ஆனால் அதில் எங்கள் பிள்ளை இரண்டாவதாகத்தான் எடுக்கப்பட்டாள்; அது அந்த மத்தியஸ்தர்களுட் சிலர் இலஞ்சம் வாங்கிக்கொண்டு அப்படிப் பட்சபாதமாகச் செய்தார்களெனப் பின்னர்த்தான் கேள்விப்பட்டோம்" என்று சொல்லி முடித்தாள் தங்கம்மாள்.

"உங்கள் மகள் தமிழ் இங்கிலிஸ் இரண்டும் நன்கு படித்திருக்கிறாளா" என்று சிவகாமி கேட்க, "தமிழ் அதிகம் படிக்கவில்லை, இங்கிலிஸ் லண்டன் மற்றிக் வரையிற் படித்திருக்கிறாள்; ஒரேயொரு பிள்ளையென்ற ஞாயத்தால், தூரமான இடத்திற்குவிட்டு மேற்படிப்புப் படிப்பிக்கப் பிள்ளையின் தகப்பனாருக்குப் பிரியமில்லாததினால், படிப்பை அவ்வளவில் நிறுத்திவிட்டோம்" என்றாள் தங்கம்மாள்; "சமையல் செய்ய, வீட்டுக் கருமங்கள் பார்க்க உங்கள் மகளுக்கு நன்கு பயிற்றியிருக்கிறீர்களோ" என்று சிவகாமி கேட்க, "பாருங்கள் மச்சாள், ஒரேயொரு பிள்ளை, நான் உயிரோடிருக்கும்போது எங்கள் பிள்ளையை அடுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்புக்கு அணித்தாகப் போகவிடுவானேன்; பிள்ளையைப்பற்றிச் சொல்வதென்ன, நானே அடுக்களைப் பக்கத்திற்குப் போவது அருமை; ஒன்றுக்கு இரண்டு வேலைக்காரர் வீட்டிலே சமையலுக்கென்றும் உணவு பரிமாற என்றும் இருக்கிறார்கள்; அவர்களே வேளைக்கு வேளை எங்கள் குறிப்பறிந்து ஆக வேண்டிய ஆகாரஞ் சமைத்துக் கொண்டுவந்து "மேசை" யில் வைப்பார்கள்! அவரும் நானும் மகளும் ஒருங்கு இருந்து போசனஞ் செய்வோம்; அதனாலே மகளுக்குச் சமையல் வேலை, வீட்டுப்பணி யென்னுமிவைகளை இன்னமும் பயிற்றவில்லை; ஆனால் அப்படித்தான் அவைகளைச் செய்யவேண்டி நேர்ந்தாலும், எங்கள் பிள்ளை விவேகி; உடனே பயின்றுவிடுவாள், கண்கண்டாற் கை செய்யாதா? மச்சாள்" என்று சொல்லிமுடித்தாள் தங்கம்மாள். பின்னரும் சிவகாமசுந்தரியும் தங்கம்மாளும் நானாவித வார்த்தைகளையும் பேசிவிட்டு, தங்கம்மாள் சிவகாமியிடம் விடை பெற்று வேலைக்காரியுடன் தன் வீட்டிற்குக் குதிரைவண்டியிலேறிக்கொண்டு மீண்டு போனாள். அவள் போய் ஒருமணி நேரம்வரை சென்றபின்பு சிற்றம்பலம் தம்வீட்டிற்கு மீண்டுவந்த போது சிவகாமசுந்தரி தங்கம்மாளின் வரவைக் கூறி நடந்தவற்றையெல்லாம் விபரமாகச் சொன்னாள்; சிற்றம்பலமும் கேட்டு அப்படியா என்று தமக்கு மருமகளாக வரவிருக்கும் பெண்ணையும் பாராட்டிப் பேசினார்; மகன் மறைந்து நின்று தங்கம்மாள் சொன்னவற்றையெல்லாங் கேட்டானென்பதையறியாத சிற்றம்பலமும் சிவகாமியும், அந்தப்பெண்ணைப் பாராட்டிப் பேசி "மகனே, உனக்கு எல்லாந் திருப்திதானே! இனி, விவாக சோபனத்திற் காகவேண்டிய ஆயத்தங்களெல்லாஞ் செய்யலாந்தானே" என்று ஆவலுடன் கேட்க, "யோசித்துச் செய்வது நல்லது" என்றான் மகன்; கேட்ட பெற்றார் முகவாட்டமடைந்தனர்.

இவை இங்ஙனமாக, பசுபதிப்பிள்ளை தம் மனையாளுக்குச் சமாதானஞ் சொன்னாரேனும், தம் மகளுக்குச் சின்ன வயது தொடக்கம் நிச்சயித்திருந்த கல்யாணம் தவறிவிட்டதே யென்பதையிட்டுத் தம்மளவிற் கவலைப்பட்டார்; தம் மைத்துனனும் சகோதரியும் இப்படி வாக்குத் தவறுவார்களென அவர் எண்ணியதில்லை; ஆனாலும் விதி அங்கே இருக்காதாம் அவர்களைக் குறைசொல்வது முறையல்ல என நிச்சயித்தார் ; கருப்பையுண் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும் விருப்புற்று அமுதளிக்கும் ஆண்டவனுக்கு என் பிள்ளை விஷயத்தில் ஒரு கணவனைக் காட்டிவைப்பது பஞ்சமா என்று இறைவனைச் சிந்தித்து மனந்தெளிந்தார்; அவர் அடுக்களையிற் சமையல் செய்துகொண்டிருந்த தம் மனைவியைக் கூப்பிட்டு, "நாளைக்குச் சித்திரைப்பரணித்தினமாகும்; எங்கள் வைரவ சுவாமி கோயிலில் விசேஷ அபிஷேகம் பூசை திருவிழா சிறுத்தொண்ட நாயனார் புராணப்படிப்பு எல்லாம் நன்கு நடைபெறும், வைரவப் பரம்பொருள் சிறுத்தொண்டருக்கு அருள் புரிந்த புண்ணியதினம் நாளைக்குத்தான்; ஆதலால் நீயும் நானும்போய் எங்கள் குறையை முறையிட்டு அந்தப் பெருமானைக் கும்பிட்டு வரவேண்டும்" என்றார்; பர்வதவர்த்தனியும் அதுதான் நல்லது என்றாள். தங்கள் மகளுக்குச் சொல்லிவிட்டு இருவரும் ஆசார சீலராய், அர்ச்சனைக்குரிய பழம் பாக்கு, வெற்றிலை, திருவிளக்கிற்காகிய நெய் முதலிய திரவியங்களைக் கொண்டுபோய்த் திருக்குளத்திற் கைகால் சுத்தி செய்துகொண்டு திருக்கோயிலை யடைந்தார்கள். அப்பொழுது வைரவ மூர்த்திக்கு விசேஷ அபிடேகம் முடிந்து பூசையாதற்காகிய சமயம்; பூசை தொடங்கியது. இருவரும் தரிசனஞ்செய்து திருக்கோயிலை மும்முறை சுற்றி வந்து பெருமான் சந்நிதியிற் சாஷ்டாங்கமாகவும் பஞ்சாங்கமாகவும் முறையே வீழ்ந்து வணங்கினார்கள். எழுந்து விநயமாக நின்றார்கள்; பசுபதிப்பிள்ளை.

திருச்சிற்றம்பலம்
விரித்தபல் கதிர்கொள் சூலம் வெடிபடு தமரு கங்கை
தரித்ததோர் கோல கால பயிரவ னாகி வேழம்
உரித்துமை யஞ்சக் கண்டு ஒண்திரு மணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வ னாரே
திருச்சிற்றம்பலம்

என்னும் (அப்பர் சுவாமிகள்) தேவாரத்தைப் பத்தியுடன் ஓதித் தம் உள்ளத்தில் நேர்ந்துள்ள கவலையைப் பெருமானுக்கு முறையிட்டார்; பருவதவர்த்தனியும் தன் மனோரதம் நிறைவேற வேண்டுமென்று வைரவப் பரம்பொருளைக் கண்களில் நீர்ததும்ப நின்றிரந்தாள்; அர்ச்சனை செய்வித்தார்கள்; பின்பு புராணங்கேட்டுக்கொண்டு அர்ச்சகர் விபூதிப் பிரசாதம் முதலியன வழங்க இரு கரங்களாலும் ஏற்று அணிந்தார்கள்.

பசுபதிப்பிள்ளையுடைய மகளின் பெயர் சாந்தநாயகி; பெயருக்கு ஏற்ற இயல்புடையவள்; வனப்புடையவள்; கல்வியறிவொழுக்க முடையவள், ஆங்கிலமும் ஒரு அளவிற்குப் பயின்றவள்; மடம் நாணம் அச்சம் பயிர்ப்பு என்னும் நான்கு குணமும் அமைந்தவள்; அந்த நேரத்திற் பதினெட்டு வயசுப் பராயமுடையவள்; மயிலியலாள், குயில்மொழியாள், நுண்ணிய புத்தியும் தெய்வபத்தியும் வாய்ந்தவள்; தன் சொந்த மைத்துனன் தன்னைப் புறக்கணித்து வேறு குடும்பத்திற் பெண்கொள்ளப் போகின்றானென்று தன் பெற்றார் பேசியதும், அதனையிட்டு அவர்கள் கவலைப்படுவதையும் சாந்தநாயகி அறிந்துள்ளாள்; அதுபற்றி அவள் சிறிது சஞ்சலப்பட்டனளேனும், "எல்லார் செயலும் இறைவன் இயற்றுவதே" என்றெண்ணித் தன் மனத்தைத் தேற்றிக் கொண்டாள். தன் பெற்றார் வைரவப் பெருமானை வணங்கிக்கொண்டு கோயிலிலிருந்து பசியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவார்களென்ற எண்ணத்தினாற் சாந்தநாயகி தங்கள் வேலைக்காரச் சிறுமியின் துணையைக் கொண்டு சமையல் வேலையைத் துரிதமாக முடித்துவிட்டு அவர்கள் வரவை எதிர்பார்த்த வண்ணம் தனக்குரிய அறையில் இருந்தாள், இருக்கும்போது யாரோ தலைவாசற் கதவில் மெல்லத் தட்டுஞ் சத்தம் சாந்தநாயகியின் காதிற்பட்டது; பெற்றார்தாம் வந்து கதவிலே தட்டுகிறார்களோ என்ற சந்தேகங் கொண்டாளாய்ச் சாந்தநாயகி சரேலென எழுந்து தலை வாசற் கதவைத் திறந்தாள்; கதவிலே தட்டியவர் தன் பெற்றாரல்லர், ஒரு வாலிபன் என்பதைக் கண்டாள்; சாந்தா கதவைத் திறக்கக்கண்ட வாலிபன் உடனே ஒதுங்கிநின்று "உங்கள் அப்பா இருக்கிறாரோ" என்று விநயமாகக் கேட்க, "இல்லை, அப்பாவும் அம்மாவுங் கோயிலுக்குப் போய்விட்டார்கள்; சீக்கிரம் வந்துவிடுவார்கள்" என்று பாதிமுகந் தெரிய ஒதுங்கி நின்று பதில் சொன்னாள் சாந்தநாயகி. "அப்படியா, அவர் மத்தியானத்தில் வெய்யிலானதினால் வீட்டிலேயே இருப்பாரென்று எண்ணி வந்தேன்; நல்லது பிற்பகல் நாலு மணி வரையில் அவரை வந்து காணுவேன், போய் வருகிறேன், நமஸ்காரம்" என்று சொல்லிவிட்டு அந்த வாலிபன் மீளும் போது, சாந்தநாயகியும் கதவண்டை நின்றபடி பிரதி நமஸ்காரஞ் செய்தவள்; "அப்பா வந்தவுடன், ஆர் இங்கு வந்து தேடியதென்று நான் சொல்வது?" என்று கனிவுடன் வினவ, வாலிபன் "உங்கள் மருமகன் ஞானசுந்தரன் வந்து விசாரித்தான் என்று தெரிவியுங்கள்" எனச் சொல்லிவிட்டுப் போகத் திரும்பினான்.

இந்த வார்த்தை காதிற்பட்ட மாத்திரத்தே, கதவண்டை ஒதுங்கி நின்ற சாந்தநாயகி திடுக்குற்றாள், உளந்துடித்தாள்; "ஆர்! என் அத்தானா?" என்று சொல்லிக்கொண்டு வெளியே வந்தாள்; "அத்தான், வாருங்கள், இப்படி யிருங்கள்" என்று சொல்லிய வண்ணம் மனம் பதைப்புற ஒரு நாற்காலியை இட்டாள்; "அத்தான், சின்ன வயசிற் கண்டதற்குப் பின் உங்களை எத்தனையோ வருஷகாலங் காணாமையினால், இன்னார் என்று அயிர்த்துக்கொள்ள என்னால் முடியவில்லை; குறையெண்ணாதீர்கள்; ஏன் அந்நியர்போல் இன்னமும் நிற்கிறீர்கள்; உந்த நாற்காலியில் அமருங்கள்" என்று இருக்கச்சொல்லி இரந்து நின்றாள். "சாந்தா, நீர் நிற்கின்றீரே" என்றான் ஞான சுந்தரன். "நீங்கள் இருப்பதும் நான் நிற்பதுந்தான் முறை" என்று பரிவுடன் பன்னினாள் சாந்தா.

ஞானசுந்தரம்: சாந்தா, என்னை இன்னானென நீர் அயிர்த்துக் கொள்ளவில்லை யென்பதை, நீர்வந்து கதவு திறந்தபோதே கண்டு கொண்டேன்; அதைப்பற்றிக் காரியமில்லை; நீர் ஏதுங் குறை செய்தாலல்லவோ நான் குறையெண்ணுவது; நீடித்த காலம் காணாமலிருந்து உம்மை இப்பொழுது கண்டது எனக்கு ஆநந்தம் (என்று சொல்வதற்கிடையிற் சாந்தா முகங் கறுத்து உங்களுக்கு மாத்திரந்தான் ஆநந்தமாக்கும் எனச் சொல்ல) இல்லை, உமக்கும் பேராநந்தம்; ஆனாலும் என் மாமன் மாமி இல்லாமல் நீர் வீட்டிலே தன்னந்தனியே நிற்கும்போது நான் உம்முடன் வார்த்தையாடிக் கொண்டிருப்பது முறையல்ல, அதனாற்றான், நீர் பரிந்து கேட்பவும் நான் நாற்காலியில் இருத்தலின்றி நிற்கின்றேன்; குறையெண்ணாதீர்; மனம் வருந்தாதீர், இன்னும் இரண்டுமணி நேரத்தில் நான் மீண்டு இங்கே தவறாமல் வருகிறேன்.

சாந்தா: அத்தான், நீங்கள் சொல்வதைத் தட்டிப் பேசுகிறேன் என்று மனவருத்தப்படாதீர்கள்; நீங்கள் ஒரு அந்நியர் வீட்டிற்குப் போனாற்றான் இந்த ஞாயங்கள் சொல்ல வேண்டும்; பேசக் கூசவேணும்; இது உங்கள் சொந்த அம்மான் வீடு; அல்லாமலும், அத்தான், நான் தன்னந்தனியே இருக்கிறேனென்று தவறாக எண்ணி விடாதீர்கள், தக்க பாதுகாப்போடுதான் இருக்கிறேன்; ஆனதால் நீங்களும் கூசாமல் உந்த நாற்காலியில் இருங்கள்; இருக்காவிட்டால் நான் மனம் வருந்துவேன்.

ஞான: (உடனே நாற்காலியில் இருந்து கொண்டு) தக்க பாதுகாப்பா? இங்கு வேறு எவரையுங் காணேனே.

சாந்தா: அத்தான், "சிறைகாக்குங் காப்பு எவன் செய்யும் மகளிர் - நிறைகாக்கும் காப்பேதலை" என்பது நீங்கள் அறியாததல்ல; அல்லாமலும், எங்கள் குலதெய்வமாகிய அந்த வைரவப்பெருமான் எந்த நேரமும் என்மனக் கோயிலில் இருக்கும்போது எங்களுக்கு என்ன பங்கம் வரப் போகின்றது.

ஞான: (சாந்தாவின் மனத் திண்மையையும் பத்தியையுங்கண்டு அற்புத மடைந்தவனாய் அவளை அன்புடன் நோக்கி) சாந்தா, நீர் இப்பொழுது என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்?

சாந்தா: நான் உங்களை வேறொன்றுஞ் செய்யச் சொல்லவில்லை, ஐந்துநிமிஷம் இங்கேதானிருந்து கொள்ளுங்கள்; நான் தாகசாந்தியின் பொருட்டு ஏதுங்கொண்டு வருகிறேன்.

ஞான: சாந்தா, எனக்கு இப்போது தாகமில்லை, ஆனதால், நீர் சிரமப்பட வேண்டாம். வேணுமானால் இன்னமும் ஐந்துநிமிஷம் நான் இங்கிருக்கிறேன்.

சாந்தா: அத்தான், எங்கள் வீட்டிற்கு வந்த உங்களை உபசரிப்பது எங்கள் கடமை, அந்த உபசாரம் அற்பமாக இருந்தாலும் ஏற்றுக் கொள்வது உங்கள் கடமை.

ஞான: அப்படியானால்?

சாந்தா: அப்படியானால், நான்செய்யும் அற்ப உபசாரத்தை நீங்கள் அன்புடன் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான: சரி, ஏற்றுக்கொள்ளுகிறேன்.

சாந்தா: தனிமையைப் பொருட்படுத்தாது, சற்றுநேரம் இருங்கள் அத்தான், இதோ வந்து விடுகிறேன் (என்று சொல்லி விட்டுச் சாந்தநாயகி அடுக்களையுட்போய், அங்கிருந்த வேலைக்காரச் சிறுமியாகிய இலட்சுமியைத் தலைவாசற் பக்கத்திற் போய் நிற்கச்செய்து விட்டு, முந்தியே காய்ச்சப்பெற்ற பாலிற்குக் கற்கண்டிட்டுச் சேர்த்துப் பின்னருங் காய்ச்சி ஆற்றி ஒரு வெள்ளிப் பாத்திரத்தில் நிறைத்து, அதனையும் கொண்டுவந்து, அத்தான், இதனைப் பருகுங்கள் என்று விநயமாக இருகரங்களாலும் நீட்ட, ஞானசுந்தரன் இருக்கை விட்டெழுந்து இரு கரங்களாலும் ஏற்கின்றான்; அந்த நேரத்தில் வைரவப்பெருமான் கோயிற் கண்டாமணியின் ஓசைகேட்க, சாந்தநாயகி பெருமானை உள்ள முருகச் சிந்தித்துக் கொண்டு கைகூப்புகின்றாள்; ஞானசுந்தரன் அன்புடன் பாலை வாங்கிப் பருகிவிட்டு அவளை ஆதரவுடன் பார்த்து, "சாந்தா, நான் பாலைப் பருக மறுத்தால், எனக்குப் பலாத்காரமாகப் பாலைப் பருக்கி என்னுள்ளத்தை யுருக்கி அன்பைப் பெருக்கி விடுவீர் போலும்" என்றான்.

சாந்தா: அப்படி யெல்லாஞ் செய்ய எனக்கென்ன அதிகாரம்? நான் ஏதுந் தவறு செய்திருந்தாற் பொறுத்துக் கொள்ளுங்கள். (என்று பணிவுடன் சொல்லி, நமஸ்காரஞ் செய்ய ஞானசுந்தரனும் பிரதி நமஸ்காரஞ் செய்து) "சாந்தா, நீர் எனக்குப் பெருந்தவறு செய்துவிட்டு; தவறு செய்திருந்தாற் பொறுத் துக்கொள்ளுங்கள் என்று மாத்திரஞ் சொல்லி விட்டாற் போதுமா? நீர்செய்த தவறு பொறுக்க முடியாதது; ஒருபோது பொறுத்தாலும் மறக்க முடியாதது" என்றான்.

சாந்தா: (மனம் பதைப்ப, சரீரம் பதற, முகத்திற் குறுவியர்வை துளிப்ப) அத்தான் என்ன தவறு செய்துவிட்டேன்? புத்தி பூர்வமாய் உங்களுக்கு ஒரு தவறுஞ் செய்திருக்க மாட்டேன் (என்று பரிவுடன் கேட்டாள்)

ஞான: (புன்னகையுடன்) சாந்தா, பதறாதீர், நீர் செய்த தவறு வேறொன்றுமல்ல, என் உள்ளத்தை உம்பக்கமாக மாற்றிவிட்டீர்; அப்படியில்லை யென்று சொல்லுகிறீரா?

சாந்தா: (தேறுதலடைந்து) நானொன்றும் அறியேன்.

ஞான: சாந்தா, கவலையொன்றும் வேண்டாம், போய் வரட்டுமா?

சாந்தா: இனி எப்போது வருவீர்கள்?

ஞான: இனி இப்போதைக்கு வருவது நானல்லேன்; உமது அம்மானும் மாமியும் வருவார்கள். (என்று சொல்லி அவள் மனத்தைக் குளிரச்செய்து அவளிடம் விடைபெற்றுச் செல்ல, சாந்தாவும் அன்புடன் அநுமதியளித்துச் சில அடி தூரம் பிறகே சென்று வழிவிட்டு அவனிடம் உத்தரவு பெற்று மீண்டுதன் வீட்டுத்தலை வாசலிற் பெற்றார் வரவை எதிர்பார்த்தவண்ணம் மகிழ்ச்சிகூர இருக்கின்றாள்)

சற்றுநேரஞ் செல்ல, சாந்தநாயகியின் பெற்றார் விபூதிப் பிரசாதம் முதலியன கொண்டு வீட்டிற்கு மீண்டு வந்தார்கள்; வரவுகண்ட மகள் அநந்தத்தோடு எதிர்சென்று அவர்களுடன் மீண்டு வந்தாள்; தாய் தன் பிள்ளையின் நெற்றியில், தான் கொண்டுவந்த விபூதியைத் தன் கையாற் பூசிச் சந்தனப் பொட்டிட்டு, தீர்த்தத்தை உட்கொள்ளச் செய்தாள்; "அப்பா, அம்மா, சமையலாய்விட்டது வாருங்கள் போசனம் பண்ண" என்று தன் பெற்றாருக்கு இதமுறச் சொல்ல, தகப்பன் எழுந்து அடுக்களைப் பக்கம் போக, தாயும் பிறகே போனாள்; "அம்மா, இன்றைக்குச் சமைத்த நானே, உங்களுக்குப் போசனம் பரிமாற ஆசைப்படுகிறேன்; நீங்கள் இருவீரும் ஒருங்கிருந்து உணவருந்துங்கள், என் சமையல் சுவையாயிருக்கிறதோ என்று பாருங்கள்" எனக்கனிவுடன் சொல்லுதலும், பர்வதவர்த்தனி புன்னகையுடன், "மகளே, இது உன் விருப்பமானால், நீயும் நானும் பிறகு உண்போம், நீயே இப்போது உன் அப்பருக்கு உணவு பரிமாறு" என்று சொல்ல, "அப்படியே ஆகட்டும்" என்றார் பசுபதிப்பிள்ளையும்; மகள் போசனம் பரிமாறத் தகப்பனார் விருப்புடன் உண்டார். இதனை அவதானித்துக் கொண்டு பக்கலில் நின்ற பர்வதவர்த்தினி ஏதோ நினைத்துக் கவலைப்பட்டுப் பெருமூச்சுவிட்டு, "எங்கள் பிள்ளையின் செய்காரியத்தையும் அருமையையும் உங்கள் சகோதரியும் மைத்துனரும் அறிந்திருந்தால் அந்நிய குடும்பத்திற் சம்பந்தம் பேசப் போயிருக்க மாட்டார்கள்; குணமிருந்தென்ன, அறிவிருந்தென்ன, பணமில்லாதவர் பிணந்தானே" என்று சொன்னாள்; "உனக்குக் கனவிலும் உந்தக் கவலைதான் ஏதோ வைரவப்பெருமானிடம் எங்கள் குறையை முறையிட்டு வந்திருக்கிறோம்; அந்தப்பெருமான் செய்வதைக்கண்டு கொள்வதல்லாமற் கவலைப் பட்டாவதென்ன" என்று தேறுதல் சொன்னார் பசுபதிப்பிள்ளை; "அம்மா, கவலைப்படாதீர்கள், என் மாமனும் மாமியும் என்னைப் பற்றி நன்கு அறியாவிட்டாலும், நான் எப்படிப்பட்டவள் என்பதை என் அத்தான் அறிவார்" என்று மகிழ்ச்சி பொங்கச் சொன்னாள் மகள்; "நீ எப்படிப்பட்டவளென்பதை உன் அத்தான் அறிந்திருந்தால் தங்கம்மாள் வீட்டிற் சம்பந்தஞ் செய்யச் சம்மதித்திருப்பானா" என்று வெறுப்புடன் கேட்டாள் பர்வதவர்த்தினி.

இதற்கிடையிற் போசனமருந்திக் கொண்டிருந்த பசுபதிப்பிள்ளை "ஏன், மகளே, உன் அத்தான் இங்கு இப்பொழுது வந்ததுண்டா" என்று சிந்தனையுடன் வினாவினார்; "ஓம் அப்பா, நீங்கள் கோயிலுக்குப்போய் ஒரு கால் மணி நேரஞ் செல்ல இங்கே வந்தவர், நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுக்கவுங் கேளாமல் இப்பொழுது நீங்கள் வருதற்கு ஒரு பத்துப் பதினைந்து நிமிஷத்திற்கு முந்தித்தான் தம் வீட்டிற்குப் போகிறார்" என்று கூசிக் கூசிப் பன்னினாள் சாந்தநாயகி. கேட்ட இருவரும் அற்புதமடைந்தார்கள். "வந்தவரை, மகளே, நீ உபசரித்தாயா" என்று தகப்பன் ஆவலுடன்வினாவ, மகள் நடந்தவை முழுவதையும் மகிழ்ச்சிகூர விபரமாகச் சொன்னாள்; மகிழ்ச்சியுடன் கேட்டுக்கொண்டிருந்த இருவருட் பருவதவர்த்தனி "நல்லது மகளே, உன் அத்தான் என்ன சொல்லிவிட்டுப் போனார்" என அன்புடன் கேட்க, "இனி எப்போது வருவீர்கள் என்று கேட்டேன்?" "இனி இப்போதைக்கு வருவது நானல்லேன் உமது அம்மானும் மாமியும் வருவார்கள் எனச்சொல்லிவிட்டுப் போகிறார்" என்றாள்; "எல்லாம் அந்தப்பெருமான் செயல்" என்றார் பசுபதிப்பிள்ளை, பெருமானைத் தியானித்துக் கும்பிட்டாள் பருவதவர்த்தனி; பசுபதிப்பிள்ளை ஆகாரஞ் செய்தபின், தாயும் மகளும் மகிழ்வுடன் உணவருந்தினார்கள்.

ஞானசுந்தரன் தன் வீட்டிற்கு மீண்டு செல்லும்போது, தன் அருமை மைத்துனியாகிய சாந்தா, தன்னை உபசரித்த ஆர்வத்தையும் தன்னிடத்திற் பாராட்டிய அன்பையும் விசுவாசத்தையும் உன்னியுன்னி உள்ளமுருகினான்; அவளிடத்துள்ள தெய்வபத்தி, மனத்திடம் என்னுமிவற்றை மெச்சினான்; கனியிருக்கக் காய் கவர நினைத்தேனே யென்று கழிவிரக்கங் கொண்டான். தன் வீடு வந்து சேர்ந்தான்; தாயிடம் போனான்; "அம்மா, ஒரு நல்ல செய்தி சொல்லுகிறேன், கவலைப் படாதீர்கள் என்றான்; "நல்ல செய்தி சொன்னாற் சந்தோஷப்படுவதே யொழியக் கவலைப்படக் காரணமில்லையே, மகனே, செய்தியைச் சொல்லு" என்று அன்புடன் கேட்டாள்; "என் அருமை மைத்துனி சாந்தாவையன்றி நான் வேறு எந்தக் கன்னிகையையும் மணஞ் செய்ய மாட்டேன், எனது நோக்கத்தை அப்பாவுக்குந் தெரிவித்து விடுங்கள்" என்றான் மகன்; கேட்ட தாய் திகைத்தாள்; சற்றுநேரம் யோசித்தாள்; "மகனே, தங்கம்மாளுக்கு நாங்கள் அவள் மகளை ஏற்றுக்கொள்வதாக வாக்குப்பண்ணி விட்டோமே; கல்யாண வீட்டிற்காகிய ஆயத்தங்களெல்லாம் நடக்கின்றனவே" என்று சிந்தனையுடன் சொன்னாள்.

மகன்: அம்மா, என் சொந்த மைத்துனிக்கு உன்னையே தாரமாகக் கொள்வேன் என்று நான் வாக்குப் பண்ணிவிட்டேன்.

தாய்: மகனே, உன்னுடைய சம்மதமுங் கேட்டுத்தானே உடையார் வீட்டிற் சம்பந்தம் பேசி ஒழுங்கு செய்தோம்.

மகன்: நீங்கள் சொல்வது நிசந்தான், அம்மா, ஆனால், அந்தப் பெண்ணின் தாயாகிய தங்கம்மாள், தங்கள் மகளைப் பற்றிப் பாராட்டிப் பேசியவெல்லாம் என்காதில் வீழ்ந்தன் அப்படியான கன்னிகையைக் கட்டிக்கொண்டு அழுவதே யல்லாமல், அவளைத் துணையாகக் கொண்டு இல்லறம் நடத்த முடியாதம்மா;

"மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவராய்ப் பூண்டுய்ப்பி னல்லால் - ஒருவரால்,
இல்வாழ்க்கை யென்னும் இயல்புடைய வான்சகடம்
செல்லா தெற்றிற்று நின்று"

என்றல்லவா சொல்லுவார்கள். அல்லாமலும் இல்வாழ்க்கை யென்பது இரண்டுநாள் நாலுநாளில் முடிந்துவிடுங் கருமமா? உயிருள்ள வரையில் நடத்தப்படுவதல்லவா?

தாய்: மகனே, நீ சொல்வது நிசம்; ஆனாற் பெண் பகுதியாருக்குச் சொன்ன வாக்கிற்கு என்ன செய்வது?

மகன்: மாப்பிள்ளைக்கு விருப்பமில்லையென்று சொல்லிவிடுங்கள்.

தாய்: முதல் உன் அப்பருக்கு விஷயத்தைச் சொல்லுகிறேன்; அவர் யோசித்துச் செய்யட்டும்.

மகன்: அப்பர் என் விருப்பத்திற்கு உடன் படுவாரம்மா.

இவ்வாறு தாயும் மகனும் பேசிக்கொண்டிருக்கும்போது சிற்றம்பலமும் அங்கே வந்தார்; மகன் அவ்விடத்தை விட்டு மெல்ல விலக, தாய் மகனுடைய நோக்கத்தைச் சிற்றம்பலத்திடம் தெரிவித்தாள்; சிற்றம்பலம் சிறிதுநேரம் யோசித்து விட்டு "அப்படியானால் அந்தப் பெண்பகுதியார் அதிகம் ஆயத்தங்கள் செய்ய முந்தி, மாப்பிள்ளைக்கு உந்த விவாகஞ் சம்மதமில்லையென்று சொல்லி யனுப்பிவிடல் வேண்டும்" என்றார். "அந்தப் பெண்பகுதியார் குறை கூறார்களோ" என்று மனையாள் கேட்க, கூறுவார்களென்பது மெய், ஆனால், "மணமகனுக்கு விருப்பமில்லாத கல்யாணத்தைச் செய்வதனால் அவர்களுக்கும் காலகதியிற் கஷ்டந்தானே" என்று சமாதானஞ் சொன்னார் சிற்றம்பலம். சிற்றம்பலத்திற்குச் சொந்த மருமகளையே தம் மகனுக்கு விவாகஞ் செய்யவேண்டு மென்பதுதான் முந்தியுள்ள நோக்கம்; சிவகாமியின் விருப்பத்திற்கும் தன் மகனின் விருப்பத்திற்கும் இசைந்தே புதிய குடும்பத்தில் மணம்பேசி ஒழுங்கு செய்தார். சிற்றம்பலம் தாம் நேரிற் போகாமலும், தம் மனைவியைப் போக விடாமலும், ஒரு கல்யாணத் தரகனைத் தங்கம்மாள் வீட்டிற்கு அனுப்பி அவன்மூலமாகத் தங்கள் மகன் கல்யாணத்திற்கு உடன்படவில்லை யென்பதைத் தெரிவித்தார்; பெண்வீட்டுக்காரர் கேட்டவுடன் சீற்றங்கொண்டனரெனினும், தரகன் சொன்ன சமாதானத்தைக் கேட்டுத் திருப்தியடைந்தார்கள்.

ஒரு சுபதினத்தில், மத்தியான வேளையிற் சிற்றம்பலமும் சிவகாமியம்மையும் பசுபதிப்பிள்ளை வீட்டிற்குச் சென்றார்கள்; அவர்கள் வரவைக் கண்ட பசுபதிப்பிள்ளையும் மனைவியும் மகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பூர்வமாக அவர்களை வரவேற்று உபசரித்தார்கள்; அச் சமயத்திற் சிற்றம்பலமும் மனைவியும் தங்கள் மருமகள் தங்களிடத்துப் பாராட்டிய விசேஷ அன்பையும் நடந்து கொண்ட விநயத்தையும் அவதானித்து மகிழ்ந்தார்கள். பசுபதிப்பிள்ளை தமது மைத்துனராகிய சிற்றம்பலத்தையும் சகோதரியாகிய சிவாகாமியம்மையையும் பார்த்து "நாங்கள் செய்ய வேண்டியதென்ன" என்று விநயமாக வினவுதலும், "வேறொன்றுமில்லை, எங்கள் மகனுக்காகிய விடுமுறைநாள் முடிவதற்கு இன்னும் இரண்டு மூன்று வாரம் மாத்திரமுண்டு; ஆனதால் நாங்கள் முந்தியே நிச்சயித்திருந்த வண்ணம், உங்கள் மகளுக்கும் எங்கள் மகனுக்கும் திருவருளை முன்னிட்டு விவாகத்தை நிறைவேற்றி வைக்கலாமென்பதைத் தெரிவிக்கும் நோக்கமாக வந்தோம்" என்றார் சிற்றம்பலம்; கேட்ட பசுபதிப்பிள்ளையும் பர்வதவர்த்தனியும் அதிக மகிழ்ச்சியுற்றனர்; சாந்தநாயகி ஆநந்த மடைந்தாள்; "நீங்கள் விரும்புகிறபடி செய்வதுதானே எங்கள் கடமை" என்றாள் பர்வதவர்த்தனி; "எங்கள் புரோகிதருடன் யோசித்துப் பொன்னுருக்குதல், பந்தற்கால் நாட்டுதல், விவாகம் என்னுமிவைகளுக்குப் பொருத்தமான சுபமுகூர்த்தங்களை நிச்சயித்துக் கொண்டு உங்களுக்குந் தெரிவிக்கிறோம்" என்று சிற்றம்பலஞ் சொல்லி, அம் மூவரிடத்தும் அநுமதி பெற்றுக்கொண்டு தமது மனைவியுடன், வீட்டிற்கு மீண்டு தங்கள் மகனுக்கும் விஷயத்தைச் சொல்ல, அவன் மனத்திலடங்கா மகிழ்ச்சியடைந்தான்.

சிற்றம்பலம் தம் மகனுக்கு வேறுஇடத்தில் முந்தி விவாகம்பேசி நிச்சயித்ததைப் பற்றிப் பசுபதிப்பிள்ளைக்காயினும், அவர் மனைவிக் காயினுஞ் சொன்னாரல்லர்; அவர்களும் அப்படி வேறெங்கேனுங் கல்யாணம் பேசி நிச்சயித்ததோ என்று சிற்றம்பலத்தையாக அவர் மனையாளையாக வினாவியதுமில்லை. மணமக்கள் வீடுகளில் விவாக சோபனத்திற்காகிய ஆயத்தங்கள் செய்யப்பட்டன, சுற்ற மித்திரர்கட்கு மணவோலை யனுப்பப்பட்டன, நிச்சயித்த சுபமுகூர்த்தத்திலே செல்வச்சிரஞ்சீவி சி.ஞானசுந்தரனுக்கும் திருவளர்செல்வி சாந்தநாயகிக்கும் பல சுற்றமித்திரர் சமுகத்தில் விவாகம் விதிப்படி சிறப்புற நிறைவெய்தியது. மணமகனில்லத்திலும் மணமகளில்லத்திலும் அன்று தொட்டு மூன்று நாள் உபசரணைகளும் அன்னதானம் முதலியனவும் நன்கு நடைபெற்றன. தம்பதிகள் பதினாறு பேறும் பெற்று இனிது வாழவேண்டுமெனப் பெரியோர் அவர்களை ஆசீர்வதித்தார்கள்.

சில தினங்கள் செல்ல, ஞானசுந்தரத்திற்குத் தன் சொந்தவூரை அடுத்த பட்டினத்திலுள்ள ஒரு பண "வங்கி"யிற் சிறாப்பராகக் கடமை பார்க்க முடியுமோ என்ற கேள்விப்பத்திரம் வந்தபோது. அவன் அதற்குச் சம்மதித்து, தான் மலாய்நாட்டிற் பார்த்துவந்த உத்தியோகத்திலிருந்து விலகுவதாகவும் அங்குள்ள அதிகாரிகட்குக் கடிதமெழுதியபின், வங்கிச் சிறாப்பராயிருக்கும் கடமையையே திறமையுடன் பார்த்து வருவானாயினான். தன் கணவருக்குத் தூரதேசத்திலன்றிச் சொந்த ஊரிலேயே தக்க உத்தியோகம் கிடைத்துவிட்டதையிட்டுச் சாந்தநாயகியும், தெய்வத்தின் திருவருளைப் பாராட்டி மகிழ்ச்சியடைந்தாள்; அவள்,

"அன்னை தயையும் அடியாள் பணியுமலர்ப்
பொன்னின் அழகும் புவிப்பொறையும் - வன்னமுலை
வேசி துயிலும் விறன்மந் திரிமதியும்
பேசில் இவையுடையாள் பெண்"

என்ற நீதி வாக்கியத்திற்கு இலக்கியமாகத் தன் கணவனுக்கு வாழ்க்கைத் துணையானாள். காதலனுங் காதலியும், பூவும் மணமும், மணியும் ஒளியும், கவியுஞ் சுவையும், மதனும் ரதியும், அன்பும் அருளும் போல ஐக்கியமுற்று வாழ்வாராயினர்.

ச ம் பூ ர ண ம்.

[இந்து சாதனம்: வச்சிர விழா மலர், அக். 1949, பக் 46 - 60. ம. வே. தி. ச என்ற பெயரில் வெளியானது]

★ ★ ★ ★ ★ ★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் 2

உலகம் பலவிதம்: 1922-1936

உலகம் பலவிதம்: 1922 ஆகஷ்ட் 03

நல்லூர்க் கந்தசுவாமிகோயில் மகோற்சவம் சிறப்பாக நிகழ்ந்து வருகின்றது. இங்குள்ள மாமிசதாரிகளெல்லாரும் மாமிச போசனத்தை விடுத்தனர்; மதுபானிகள் மதுபானத்தை விடுத்தனர். ஆடவர் பெண்கள் சிறுவர் சிறுமியர் சைவாசாரம் பூண்டவர்களாய் விரதமனுட்டித்துக் கொண்டு அனுதினமும் ஆலயத்திற்குச் சென்று முருகக் கடவுளைப் பயபத்தியோடு வழிபட்டு வருகின்றார்கள். எங்கு பார்த்தாலும் சைவ மணமே கமழுகின்றது. நமது அன்பர்கள் இந்த 25 நாட்களும் ஒழுகும் நைட்டிகத்துடன் வருடம் 365 நாளும் ஒழுகினாலோவெனச் சீவகாருண்ணியம் பூண்ட சைவமய சீலர்கள் வாயூறுகின்றார்கள்.

* * *

இவ்வாலயத்தின் நித்திய நைமித்திகங்கள் இப்பொழுதிருக்கும் ஆதீனகர்த்தரின் பரிபாலனத்தில் விசேஷமாக நடைபெறுகின்றனவென்றும், இப் பொழுது கோயில் அர்ச்சகராயிருக்கும் அந்தணர் கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்தவரென்றும், இப்படி எப்பொழுதும் நடத்தல் வேண்டுமென்றும் ஆலயத்திற்குச் செல்லும் அடியார்கள் பேசி மகிழ்கின்றார்கள். ஆனால் சென்ற வருடம் விலக்கப்பட்டிருந்த தாசியர் நடனத்தைப் புதிய ஆதீனகர்த்தர் இவ்வருடம் அனுசரித்துக்கொண்டாரென்றும், இச்செயலை இவர் அனுசரியாதொழிவரேல் இவர் தருமம் பொன் மலருக்குச் சுகந்தமுஞ் சேர்ந்தாப் போலிருக்குமென்றும் பெரியோர் பகர்கின்றனர்.

* * *

தாசியர் நடனம் தவிர்க்கப்பட்டமையால் இல்லாதொழிந்த கலகமும் களவும் இவர்கள் வரவே உடன்வந்துவிடுமேயெனவும், விரதகாரர் தரிசனத்துக்கு வரும்போது தாசியரை ஆலயத்தில் விட்டாட்டுதல் சிவபூசையிற் கரடி விட்டாட்டுவது போலுமெனவும், சென்றவருடம் தாசியர் நடன மில்லாமையால் நேர்ந்த தீமை யாதோவெனவும், முறைசெய்தற்குத் தாசியரின்மையால் யாதுங்கேடு நேர்ந்திருந்தாலன்றோ இம்முறை செய்தற்குத் தாசியர் வேண்டுமெனவும், தாசியர் நடனத்தை அனுசரிக்குமுன் ஆதீன கர்த்தர் பெரியோருடன் கலந்து யோசித்திருப்பரேல் நன்மையாயிருக்குமெனவும், தாசியர் அனுசரணையை இவர் தவிர்க்கும்வண்ணம் கலியுக வரதராகிய சுப்பிரமணியப் பெருமான் திருவருள் பாலிப்பாராகவெனவும், ஆலயத்தை இவர் நடத்திவரும் திறமைக்கு இது ஒரு வடுவாயிருக்கிறதெனவும் விரதகாரர் விளம்புகின்றனர்.

* * *

வடமேன்மாகாண ஏசண்டராகிய மிஸ்டர் ரிறல் (W.E.G.Tyrrel) என்பவர் இலங்கையிலுள்ள நியாயதுரந்தரர்களைப்பற்றி என்ன நினைத்திருக்கின்றாரோ தெரியவில்லை. இவர் சிலவாரங்கட்கு முன்னர் குருநாக்கலிலுள்ள டிஸ்திறிக் நீதிவானுக்கு மேல்வருங் கடிதத்தையெழுதினர்.

குருநாக்கல், 11-7-22.

"எனது அருமைவாய்ந்த நீதிபதியே,

சுப்பிறீங்கோட்டு நீதிவானாகிய சேர் அன்ரன் பீற்றம் அவர்களை உபசரித்தற்கு நாளைக்கு 5 மணிவரையில் மலிக்கவாஎன்னுமிடத்தில்(குருநாக்கற்பட்டினத்திலுள்ள) நியாயதுரந்தரர்களும் (அவர்களது பெண்டாட்டிமாரும்) வந்து கூடுவார்களேயானால் அது எனது பாரியாருக்கும் எனக்கும் மகிழ்ச்சியைத் தரும். ... இந்த விஞ்ஞாபனத்தை நீர் தயவுசெய்து அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விஞ்ஞாபனத்தில் அவர்களுடைய பெண்டாட்டி மாரும் (and their wives) என்னும் வாக்கியங்கள் பின்னர் செருகப்பட்டுள்ளன.

* * *

டிஸ்திறிக் நீதிபதி இந்த விஞ்ஞாபனத்தைக் கோட்டில் நியாயதுரந்தரர்கள் சமூகத்தில் வாசித்துவிட்டுப் பின்னர் மற்றவர்களும் பார்க்கும்படி நீதிஸ்தலத்தின் கதவொன்றில் ஒட்டுவித்துவிட்டனர். ஏசண்டருடைய செயல் நியாயதுரந்தரர்கட்கு அவமானமாக விருந்தமையினால் அவர்களொருவரும் குறித்த கூட்டத்திற்குச் செல்லாதொழிந்தனர். இது ஏசண்டருக்குப் பெரும் ஆத்திரத்தை விளைத்தது. அவர் நியாயதுரந்தரர்களுள் அநுபவத்திற் கூடியவராகிய மிஸ்டர் டானியல்ஸ் என்பவருக்கு, நீங்கள் சுப்பிறீங்கோட்டு நீதிபதியையும் எனது பாரியாரையும் என்னையும் இப்படி வராதொழிந்து அவமானஞ் செய்யலாமாவெனக் கடிந்து ஒரு கடிதமெழுதினர்.

* * *

அதற்கு மிஸ்டர் டானியல்ஸ் "நாங்கள் வேணுமென்று அவமானஞ் செய்யவில்லை. சுப்பிறீங்கோட்டு நீதிபதியிடத்து நாங்கள் இப்பொழுதும் பெரும் மதிப்புப்பாராட்டுகின்றோம். "அவர்களுடைய பெண்டாட்டிமாரும்" என்னும் வாக்கியத்தை உமது விஞ்ஞாபனத்திற்சேர்த்து அவர்களுக்குச் சொல்லும்படி நீதிவானைக் கேட்டால் அது மரியாதையாகுமா? சுப்பிறீங்கோட்டு நீதிபதிதாமும் ஒரு தக்க நியாய துரந்தரராகையால் இவ்விஷயத்தில் நியாய துரந்தரர்கட்குச் செய்யப்பட்ட மான அவமானங்களை நன்கு அறிவர்" என விடையிறுத்தனர்.

* * *

வடமேன்மாகாண ஏசண்டர் நியாயதுரந்தரர்களையும் அவர்கள் மனைவிமாரையும் அழைக்க வேண்டு மேயானால் தனித்தனி ஒவ்வொரு நியாய துரந்தரர்கட்கும் ஒவ்வொரு விஞ்ஞாபனத்தை யனுப்பியிருக்கலாமே. குருநாக்கற் பட்டினத்தில் நியாயதுரந்தரர்களின் தொகை அதிகமல்லவே. டிஸ்திறிக் நீதிபதி நியாயதுரந்தரர்களிடம் விஞ்ஞாபனத்தைப் பற்றிச் சொல்ல முடியும். அவர்கள் பெண்டாட்டிமாரிடம் எப்படிச் சொல்ல முடியும்? அவர்களும் கோட்டிற்கு வருபவர்களென்பது ஏஜண்டரின் எண்ணமா? இனிப் பெண்களை அழைக்கும்போது மரியாதையாகவன்றோ அழைத்தல்வேண்டும். குருநாக்கற் பட்டினத்தில் நமது யாழ்ப்பாணத்து நியாயதுரந்தரர்களுஞ் சிலர் வசிக்கின்றார்கள். அரசாங்க உத்தியோகத்தர்களாகவுள்ளவர்களே பெரும்பாலும் தங்கள் மனைவிமாரை இப்படிப் பட்ட கூட்டங்களுக்கு அழைத்துச் செல்வர். நியாயதுரந்தார்கள் தம்மிஷ் டமான தொழிலுடையவர்களாதலினால் அவர்கள், அவர்களுள்ளும் யாழ்ப்பாணத்துத் தமிழ் நியாயதுரந்தரர்கள், ஒரு போதும் அழைத்துச் செல்லார்களென்பதை ஏசண்டர் அறியார் போலும். இந்த ஏசண்டர் சுதேச நியாயதுரந்தரர்களைப்பற்றியும் அவர்கள் மனைவிமாரைப்பற்றியும் கொண்டிருக்கும் அபிப்பிராயம் பரிதாபத்திற்கிடமானது. இப்படியே ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் இலங்கை வாசிகளைப்பற்றிக் கேவலமான அபிப்பிராயங் கொண்டு இடர்ப்படுகின்றனரென அனுபவத்திற் சிறந்தவர்கள் இயம்புகின்றார்கள்.

* * *

உலகம் பலவிதம்: 1922 ஆகஷ்ட் 10

"புலையன்றன் மலமுண்ணும் எமையுண்ணும் மனிதர்க்குக், குலமென்ன நலமென்ன" எனக் கூவினது கோழி. அதனைக் கேட்ட ஆடுகள் "ஐயோ, எங்கள் வாழ்க்கையும் சஞ்சலத்திற்கிடமா யிருக்கின்றதே, வீட்டு மிருகங்களாகிய எங்களைப் பிள்ளைபோல் அன்பாக வளர்த்து விட்டு, ஈற்றில் ஈனஇரக்கம் பாராது மானுடர்கள் கொன்றுவிடுகிறார்களே தெய்வங்களே, உங்களுக்கு நாங்கள் அடைக்கலமென்று அலறினா லும் அத்தெய்வங்கள் தங்கள் சந்நிதியில் எங்களைக் கொண்டுபோய் வெட்டும் மனிதர்கட்கு யாதுந் தண்டனையை உடனே செய்யாது கண்மூடிக்கொண்டு அசைவற்று மௌனஞ் சாதிக்கின்றனவே; வீட்டையும் நாட்டையும் விட்டுக் காட்டகஞ்சென்று வசிப்போமென்றால் அங்கே சிங்கம் புலி கரடி நாய் முதலிய மிருகங்கள் எங்களை வாயிலிடுமே; இருதலைக்கொள்ளியெறும்புபோலானோமே" என்று கதறுகின்றன.

* * *

இப்பொழுது பிரதி ராசமாலிகிதராகவிருக்கும் மிஸ்டர் ஹோர்ஷ்பறோ சனங்களிடத்து அனுதாபமுள்ளவரோ இல்லாதவரோ என்பதை வடமாகாணத்தவர் நன்கறிவர். ஏனென்றால் அவர் முன்னே சிலகாலம் இங்கே நீதிபதியாகவும் பின்னர் ஏஜண்டராகவுமிருந்தவர். இவர் சென்ற வாரம் வேதன உயர்வு விஷயமாகக் கூடிய சட்டநிரூபணசபைக் கூட்டத்தில் எவ்விதத்திலேனும் மேலுத்தியோகத்தருடைய வேதனத்தை உயர்த்தியே கொடுக்கவேண்டுமென ஒரு நீடித்த பிரசாரணஞ் செய்தார். இவர் வாக்கு வல்லபத்தில் அபூரணராதலால் உபந்நியாசத்திற்கு வேண்டிய நேரத்திலும் கூடிய நேரம் இவருக்கு வேண்டியிருந்தது. தமது பிரசாரணத்தில் இவர் இப்பொழுது உத்தியோகத்தர் பெறும் வேதனம் ஆநந்தமாகச் சீவித்தற்குப் போதியதன்றென்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலுத்தியோகத்தர் தங்கள் பிள்ளைகளை இங்கிலாந்திற்கனுப்பிப் படிப்பித்தற்கு வேதனம் போதாமையால் முட்டுப்படுகின்றார்களென்றும், பலர் கடன்காரரானாரென்றும், ஆதலால் வேதனம் ஆவசியம் உயர்த்திக் கொடுக்கப்படல் வேண்டுமென்றும் பெரிதும் பரிந்து பேசினர். இலங்கை இப்பொழுது முட்டுப்பட்டுக்கொண்டபடியினால் வறுமையிற் செம்மை என்றபிரகாரம் உள்ள வேதனத்தைக்கொண்டு பரிபாலனத்தை நடத்துவதன்றோ பெருந்தன்மையாகுமெனவும், இப்பொழுது கொடுக்கும் வேதனமும் இவர்கட்குப் போதாவிட்டால் இவர்கள் வேதனமுயர்ந்த தேசங்களிற் சென்று பிழைக்கலாமே; குறைந்த வேதனத்துடன் இலங்கா புத்திரர்களே இந்த உத்தியோகங்களை வகித்து அதிக திறமையுடன் நடத்தக்கூடுமே; சனங்கள் கூழுக்குப் போட உப்பில்லையென்றழ, மிஸ்டர் ஹோர்ஷ்பறோ பாலுக்குச் சர்க்கரையில்லையென்று பரிதபிக்கின்றாரேயெனவும் ஏழைகள் வருந்துகின்றார்கள்.

* * *

சில வாரங்கட்கு முன்னர் ஒரு கடிதர் இவ்விந்துசாதனத்தில் வீரசைவர்களென்று சொல்லும் பண்டாரங்கள் பஞ் சமாபாதகங்களையும் அஞ்சாது செய்பவர்கள்; ஆதலால் அவர்கட்கு ஒருபோதும் அன்னதானம் முதலிய தானங்கள் செய்யவொண்ணாது அங்ஙனம் செய்தல் பாவமாகும் என்னுங் கருத்துப்பட எழுதியிருந்த கடிதத்தை வாசித்த உண்மையாக ஒழுக்கத்திற் சிறந்த ஒரு வீரசைவர் மனம் மிக வருந்தி "பண்டாரங்களெல்லோரையும் கடிதர் இப்படிக் குறைகூறலாமா?" மற்சமாமிசபோசனம் செய்யாதவர்களாய், இலிங்கதாரிகளாய் ஐம்பதிற்கு மேற்பட்ட பண்டாரங்கள் யாழ்ப்பாணத்தில் இலைமறைகாய்போல் இருக்கிறார்களே, அவர்கள் ஒழுக்கமாயிருந்தும் ஒழுக்கந்திறம்பிய பண்டாரிகள் நிரையில் பேதமின்றி வைத்தெண்ணப்பட்டார்களேயெனப் பச்சாத்தாபப்படுகின்றார். இதனையறிந்த பத்திரிகாபிமானிகளி லொருவர் இங்ஙனமிருத்தல் உண்மையானால் குறித்த கடிதர் எல்லோரையும் உட்படுத்திக் கண்டித்தமை கடிதர்மேற் குற்றமாகுமென்று தீர்ப்புச் சொல்லுகின்றார்.

* * *

சென்றவாரம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நிகழ்ந்த பரிசளிப்புக்கூட்டத்திற்குப் பலரையும் வரும்படி மேற்படி கல்லூரிப் பிரதமாசிரியராலும் ஏனைய ஆசிரியர்களாலும் விடுக்கப்பட்ட அழைப்புப்பத்திரத்திற் பல ஆட்சேபங்கள் காட்டி அவற்றை இப்பத்திரத்தில் வெளியிடும்படி கல்வியறிவிலும் அபிமானத்திலுஞ் சிறந்த ஒருவர் தமது கைச்சாத்துடன் ஒரு கடிதம் அனுப்பியுள்ளனர். அக்கடிதம் முழுவதையும் வெளியிடில் அதனால் விபரீத விளக்கமும் மனஸ்தாபமும் ஏற்படுதல் கூடுமெனவஞ்சுகின்றோம். ஆயினும் தக்ககாரணமின்றி ஒருகடிதம் வெளியிடப்படாதொழியின் யாம் ஒருபாற்கோடல் என்னும் குற்றத்திற்காளாவேமாதலால் நமது கடிதரது ஆட்சேபங்களுட் சிலவற்றைச் சுருக்கியேனுங்கூறவேண்டியது கடனாகும் "இந்துக் கல்லூரியாசிரியர்கள் தங்கள் விஞ்ஞாபனத்தில் எல்லோரையும் பாரிசமேதராக வரும்படி விஞ்ஞாபனம் அனுப்பிவிட்டு, அவ்வாசிரியருள் மூவரையொழிந்த ஏனையோர் தத்தம் மனைவியரின்றித் தாம் மாத்திரம் தனியே வந்த காரணமென்ன? மேற்படி கல்லூரி அதிகாரசபையார் ஒருவரேனும் பாரிசமேதராய் வராது தனித்தனியே சமூகஞ் செய்தமைக்கேதுயாது? விவாகஞ் செய்யாதவர்களையும் மனைவியை யிழந்தவர்களையும் பாரிசமேதர்களாய் வாருங்களென்றால் அவர்கள் அதற்கென்செய்வார்கள்" என்னுமிவைகளே நமது கடிதரின் பிரதான ஆட்சேபங்கள். நமது ஆசிரியர்கள் பிறரைப் பாரிசமேதராய் வாருங்களென அழைத்துவிட்டுத் தாம்வராதொழிந்தமையுங் குற்றமாகும். அதிகாரசபையார்க்கு அவ்விஞ்ஞாபனம் அங்கீகாரமாயின் அவர்கள் ஆசிரியர் கேள்விப்படி சமூகஞ் செய்திருத்தல் வேண்டும். அவ்விஞ் ஞாபனம் அவர்கட்கு அங்கீகாரமில்லையாயின், ஆசிரியர்களை அவ்வாறான விஞ்ஞாபனத்தை வெளியிட வேண்டாமெனத் தடுத்திருத்தல் வேண்டும். இவைதாம் ஒருவாறானாலும் விவாகஞ் செய்யாதவர்களையும் மனைவியை யிழந்தவர்களையும் பாரிசமேதராய் வரும்படி யழைத்தமை பெருந்தப்பிதமாகும். மேலைத்தேச நாகரிகத்தைப் பின்பற்றி விஞ்ஞாபனம் விடுத்து, கீழைத்தேச வழக்கத்தை அனுசரித்து நடந்தால் சதுரமான வாயுள்ள சாடியை வட்டமான மூடிகொண்டு மூட முயறலையொத்து எவர்க்கும் நகைப்புக்கிடந்தரும்.

* * *

ஒரு சந்நியாசி சிறுவர்கட்கு றோசாப் பூவையேனும் எலுமிச்சம்பழத்தையேனும் முகக்கும்படி கொடுத்துச் சிறுவரை மயக்கித் தன்வசப்படுத்தித் திரிகின்றாரென்னும் வீண் வதந்தி சிலநாட்களாக யாழ்ப்பாணத்தில் விசேஷமாக வலிகாமப்பகுதியிற் பிறக்க, அதனாலே திகிலடைந்த அறியாமையுள்ள சிலபெற்றார் தம்பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற் கனுப்பாதொழிகின்றாரென்றும், காலையிலே தம்பிள்ளைகளைப் பாடசாலைக்கனுப்பிய பெற்றார் பின்னர் வந்து இப்படிச் சொல்லித் தம் பிள்ளைகளை வீட்டிற்கு வரும்படி யழைக்கின்றார்களென்றும், இங்ஙனம் பொய் வதந்தி பரப்புந் துட்டரை அரசினர் தேடிப்பிடித்துத் தக்கவாறு கண்டித்தல் வேண்டுமென்றும் ஆங்கில இந்துசாதன உதவிப்பத்திராசிரியர் உரைக்கின்றார்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த மனுஷனைப்பிடித்து வெளியே தள்ளு" என்னுமிவ் வார்த்தை அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு வந்த சீர்திருந்திய ஓர் மாதின் வாயினின்றுமெழுந்த மென்மதுர வாக்காகும். இதனைக் கூறிய சந்தர்ப்பம் யாதெனிற் சொல்லுதும். சென்றவாரம் காலியிலிருந்து கொழும்பிற்குச் செல்லும் காலைப் புகைரதம் கழுத்துறைப் புகைரத ஸ்தானத்தில் வந்த சமையத்து; ஒரு அவுஸ்திரேலிய மாது அங்கிருந்து கொழும்பிற்குச் செல்லவெண்ணி இரண்டாம் வகுப்பிற் பெட்டியொன்றிற் பிரவேசித்தபோது அப்பெட்டியுள் அயிரோப்பிய உடை தரித்த பல பிரபுக்களும் இருபெண்களும் இருந்தனர். அவ் வண்டியின் ஒரு கோணத்தில் தமது சாதிக்குரிய உடைதரித்த ஒரு சிங்களப்பிரபுவுமிருந்தார். அவரைக் கண்டவுடன் அவ்வெள்ளைப் பெண்மணி மனம் பொறாதவளாகி "இந்த மனுஷனைப் பிடித்து வெளியே தள்ளு" (Turn this man out) என்று தன்பின்னே தனது சுமைகளைக் கொண்டுவந்த பையனுக்குப் பணித்தனள். இப் பெண் கூறிய வார்த்தையைக் கேட்டோரெல்லோரும் அற்புதத்துடன் எட்டிப்பார்த்தனர். அந்தப்பிரபுவும் இம் மாதின் நோக்கத்தைக் கண்டு தாமிருந்தவிடத்தை விட்டு அப்புறஞ் செல்ல அவ்வனிதை வசதியாக வீற்றிருந்தனள். குறித்த சிங்களப் பிரபு மீண்டுவந்து அங்கே உட்காருதலும் அம்மங்கை அடங்காச் சீற்றமுற்றுத் தானிருந்த விடத்தைவிட்டெழுந்து வெளியே சென்று புகைரத உத்தியோகத்தரொருவருக்குத் தன் குறையை முறையிடுதலும் இதற்கிடையில் "கார்ட்" என்னுமுத்தியோகத்தர் ஆங்குவர அந்த ஸ்திரி ஒன்றில் அந்த மனுஷனைப்பிடித்து வெளியே விடல்வேண்டும் இல்லையேல் தனக்கு வேறு இடங் காட்டவேண்டுமென்பதைத் தெரிவித்தலும் புத்தியுள்ள கார்ட் அப்பெண் சென்மத்தை அகற்றிக் கொண்டுபோய் வேறொருபெட்டியில் வசதியாக இருக்கச்செய்தார். அந்த அம்மாவுக்கு அச் சிங்களப்பிரபுவைக் கண்டவுடன் அத்துணைச்சீற்றம் மிகுந்ததற்கு ஏதுயாதெனத் தெரியவில்லை. அப்பிரபு தலையிற் சீப்பணிந்திருந்தது இந் நல்லாள் பார்வைக்கு வாய்ப்பாயிருக்க வில்லைப்போலுமெனச் சிலர் சிந்தித்தனர். புதிதாக இலங்கைக்குவந்த இம்மாது இம்மனிதன் பிரயாணத்திற்காகத் தலைசீவிப் புறப்படுவதற்கு முன் புகைரதம் வந்ததை யுணர்ந்து தலையிற் சீப்புடனேயே புறப்பட்டுவிட்டான் "மனர்ஸ்" (மரியாதை) தெரியாதவனாகவிருக்க வேண்டுமென்றெண்ணிக் கோபமுற்றனள் போலுமென்று வேறு சிலர் பேசிக்கொண்டனர். வந்தஇடத்தில் இத் தையல் இவ்வளவு கடுமையாகவிருந்தால் சொந்தவூரில் இம் மெல்லிநல்லாள் செயல் எவ்வளவாக விருக்குமென்று இன்னுஞ் சிலர் அஞ்சினர்.

* * *

கச்சேரிக் கீழ்தரக் கிளாக்குமார் சிலரும் தபாற்காரர் சிலரும் எம்மை நேரிற் சந்தித்து, "நீர் சம்பள உயர்வுக்கு மாறாகப் பத்திரிகையில் எழுதி எங்கள் வாயில் மண்போடலாமா" என்று எம்மீது கோபிக்கின்றார்கள். இவர்கள் எம்மைக் கோபிப்பது மண்ணுணிப் பாம்பு கோபிப்பது போலாகும். அஃதென்னவெனில் நாகபாம்பாற் கடியுண்டிறந்தானொருவனைத் தகனஞ் செய்துவிட்டு மீண்டுவரும் மார்க்கத்தில் ஒருவன் அகஸ்மாத்தாய் ஒரு மண்ணுணிப் பாம்பின்மேல் மிதிக்க, அப்பாம்பு கோபித்து "எங்களுடைய சாதி சனத்தில் ஒன்று (நாக பாம்பு) கடித்து இறந்தவனைத் தகனஞ் செய்து விட்டு வந்த இவன் எப்படி என்னை மிதிக்கலாம். இவனுக்குப் பட்டும் அறிவில்லைப்போலும்" என்று சீறியதென்பதாம். வேதனங் கூட்டுவது மேலுத்தியோகத்தர்கட்கென்பதையும், இவர்கட்கல்ல வென்பதையும், இக் கீழுத்தியோகத்தர்களுக்காகவே கட்டுப்பாட்டுச் சங்கம் (Retrenchment Committee) ஒன்றை அரசினர் ஏற்படுத்தியிருக்கின்றனரென்பதையும், இவர்கள் தங்களையும் மேலுத்தியோகத்தர்களுடன் ஒப்பிட்டுப் பேசுதல், மண்ணுணிப் பாம்பு தன்னை நாகபாம்பின் சாதிசனமெனப் பேசியதுபோலாகு மென்பதையும் நன்குணர்ந்து எம்மைக் குறை கூறாதொழிவார்களாக.

* * *

உலகம் பலவிதம்: *1922 ஆகஷ்ட் 17*

சென்ற சட்டநிரூபணசபைக் கூட்டத்தில் வேதன உயர்வைக் குறித்து உத்தியோகத்தர்கட்குச் சார்பாகப்பேசிய ஒருவர் உத்தியோகத்தர்கட்கு இப்பொழுது வேதனம் போதாமையாற் சில உத்தியோகத்தர் பெருங்கடன்காரராய் விடு கின்றார்களென்று பேசியிருந்தார். யுத்தத்திற்கு முன் ஆயிரம் ரூபா சம்பளமாகவிருந்த ஒருவருக்கு இப்பொழுது ஆயிரத்தைஞ்ஞூறு ரூபாவாகச் சம்பளத்தை உயர்த்த, அவர் ஆயிரம்ரூபா எடுத்தகாலத்திற்போலல்லாது பெருங்கடன்காரராய்விடுகின்றாராம். எனவே இவரது சம்பளமுங் கூடக்கடனுங் கூடுகின்றதென்பது பெறப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் முன்னர் நடந்த ஒரு சிறிய சம்பவம் ஞாபகத்தில் வருகின்றது. ஒரு கல்லூரியில், இந்தியாவிலிருந்து இங்கே வந்த தேசாபிமானியொருவரின் பிரசாரணத்தைக் கேட்பதற்காகப் பலர் வந்திருந்த சமயத்தில், அங்கே இடப்பட்ட வாங்குகளில் இடமின்மையால் இரு மாணவர்கள் நிற்க வேண்டியவர்களானார்கள். உடனே கல்லூரி ஆசிரியர் ஒரு வாங்கைத் தருவித்து எஞ்சி நின்ற பிள்ளைகளை அதிலிருக்கச் செய்வதற்கிடையில் ஏனைய வாங்குகளில் இருந்தவர்களுஞ் சிலர் அதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிவந்து உட்கார்ந்தார்கள். பிரத்தியேகமான அவ்வாங்கு வைக்கப் பட்டபின் அங்கிருந்தோருள் ஐவர் இடமின்மையால் எழுந்து நிற்க அதையாசிரியர் கண்டு "வாங்கொன்றில்லாதிருந்த சமையத்தில் இருவர் எஞ்சிநின்றார்களே, இஃதென்ன விந்தை!" என உற்று நோக்கியபோது, முந்தி நெருங்கியிருந்தவர்கள் பின்னர் மிகவசதியாக வீற்றிருந்தமையினாலே குறித்த ஐவரும் இடம் பெறாதொழிந்தன ரென்பதைக்கண்டார். அஃதே போல இந்த உத்தியோகத்தர்கட்கு வேதனம் உயர்த்த உயர்த்த இவர்கள் டாம்பீகமான வாழ்க்கையை விரும்புவதனாற் கடனாளிகளாகின்றார்கள். "காலத்திற்குத் தக்க கோலம்" என்ற பிரகாரம் சமையங்கண்டு தங்கள் செலவைச் சுருக்கித் தமக்கும் அரசினருக்கும் ஊரவர்கட்கும் இலாபத்தைக் காட்டும் உத்தமமானவர்கட்கு உயர்ந்த உத்தியோகங்களை உதவுவதன்றி இல்லிக்குடத்தை ஒத்தாரை உத்தியோகத்தில் வைத்தலால் லஞ்சம் விருத்தியாகுமெனவும், தம்மைக்கட்டி நடக்க அறியாதவர்கள் தம்பொறுப்பிலுள்ளாரைக் கட்டி நடப்பதெங்ஙனமெனவும் இங்குள்ள கமக்காரர் பேசிக் கொள்ளுகின்றார்கள்.

* * *

"ஐயா, நிகழுந் துந்துபி வருடம் ஆடி மாதம் ஙக உ கார்த்திகை விரதமென்று இரகுநாதையரவர்கள் பஞ்சாங்கத்திலும், ஆடி மாதம் ஙஉ உ கார்த்திகை விரதமென்று சுப்பிரமணிய சாஸ்திரிகள் பஞ் சாங்கத்திலும் கூறப்பட்டிருக்கின்றதே. சோதிட அறிவில்லாதவர்கள் எதுசரி, எதுபிழை என்று மயங்குகின்றார்களே! பஞ்சாங்கம் கணிப்பவர் தத்தம் மனம் போனவாறு கணித்து அச்சிட்டால் இதனால் வரும் பாவம் யாரைச் சார்வது? இதிலுள்ள சரி பிழைகளை யறியும்படி தங்கள் அபிப்பிராயத்தைப் பத்திரிகையில் வெளியிட்டால் உத்தமோத்தமமாகு" மென்று ஒரு கடிதர் நமக்குத் தெரிவித்தார். நமக்குச்சோதிடம் அதிகம் போகாதாகையால் ஒரு சோதிடர் வாயிலாக இச்சந்தேகத்தை நீக்கக்கருதி அவரிடஞ் சென்று கேட்டபோது அச்சோதிடர் "இவ்விஷயங்களில் ஆட்சேபம் நிகழ்த்துவதால் வரும் பயன் யாதுமில்லை; இரகுநாதையர் பஞ்சாங்கத்தைக் கொள்பவர் அதன்படி கொள்ளலாம்; சுப்பிரமணிய சாஸ்திரிகள் பஞ்சாங்கத்தைக் கொள்பவர்கள் அதன்படி கொள்ளலாம்; திருக்கணித பஞ்சாங்கத்தைக் கொள்பவர் அதன்படி கொள்ளலாம்; எவரும் தாந்தாங் கைக்கொண்ட பஞ்சாங்கங்களின்படி அநுட்டித்தலாற் பாவமில்லையாகும். இதனை யொழித்து வாக்கிய பஞ்சாங்ககாரரிருவருக்குமிடையேயுள்ள விரதநிர்ணய பேதத்திற்குச் சமாதானங் கேட்டால், இருபாலாரும் யந்திர சாலை வைத்திருப்பதனால் ஆடிதொடக்கம் ஆனி வரையிற் சமாதானமெழுதி அச்சிட்டு வெளியிட்டபடியேயிருப்பார்கள்" என விடையிறுத்தனர்.

* * *

யாழ்ப்பாணம் முற்றவெளியிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரம், நல்லாகவிருந்து கெட்டவர்களின் நிலையில், இப்பொழுது நிற்கின்றது. எப்பொழுதும் ஒரேநேரத்தைக் காட்டிக்கொண்டு அது நிற்பதினால் அதனை எட்டிப்பார்ப்பார் எவருமில்லையாவர். யாழ்ப்பாணப் பட்டினத்திலுள்ளவர்கள் வீண்நேரம் போக்காது இடையறாது நேரத்தைக் காட்டிக்கொண்டு பல வருடங்களாக நின்றதும், இப்பட்டினத்திற்கு அழகைத்தருவதுமாகிய இது இந்நிலைமையிலிருப்பவும் இதனை நகரசங்கத்தாராவது அரசினராவது சிந்தித்திலர். பிரபுக்கள் தொடக்கம் றிக்ஷோ இழுப்பவர் ஈறாகக் கையிற் கெடிகாரங் கட்டிக்கொள்வது இப்பொழுது சகசமாகிவிட்டபடியால் இத் தம்பத்தால் இனிப்பயனென்னவென நீதிஸ்தலத்திற்குச் செல்வோர் சொல்லுகிறார்கள். ஆதவனைக்காட்டிலும் அதி நுட்பமாக நேரத்தைக் காட்டும் இதனை இங்ஙனம் அலட்சியமாகவிடலாமா வெனப் பழையோர் பரிவுறுகின்றனர்.

* * *

உலகம் பலவிதம்: 1922 ஆகஷ்ட் 24

கைம்மைவிரதம் அநுட்டியாது தனது ஒழுக்கத்தினின்றுந் திறம்பிய ஒரு கைம்மையிடம் வஞ்சகமற்ற ஒருவன் சென்று "அம்மா, கொஞ்சச் சுண்ணாம்பு கொடுங்கள் வெற்றிலை போடுவதற்கு" என்று கேட்டான். கைம்மை மனத்திற் கரவுடையவளாதலால், அவன் தன்னை நிந்திக்கும்பொருட்டே இப்படிக் கேட்டானென விபரீதமாக விளங்கி அடங்காச் சீற்றங்கொண்டு "ஆரையடா, சுண்ணாம்புகேட்டாய்; யான் விதவையல்லவா; என்னிடத்திற் சுண்ணாம்பு எப்படி நீ கேட்கலாம்; நான் ஒழுக்கந் தவறி நடக்கின்றேன் என்பது உன் எண்ணமா? என்னிடம் இப்படிக் கேட்கச்சொல்லி யார் உன்னைத் தூண்டிவிட்டவர்கள், முட்டாட்பயலே" என்று தன் வாயில் வந்தபடி வைதாள். ஒரு பாபமுமறியாத அம் மனிதன் திடுக்குற்று, "தாயே, நீ கோபித்துக் கொள்ளாதே; நான் உண்மையாகச் சுண்ணாம்பு கேட்டேனேயன்றி அதற்குமேல் ஒன்றுங் கருதிக் கேட்கவில்லை; உனது ஒழுக்கத்தின் பெருமையும் கீர்த்திப்பிரபாகமும் எனக்குத் தெரியாது; கேட்ட குற்றத்தைப் பொறுத்துக் கொள்" என்று சொல்லி "பிச்சை வேண்டாந் தாயே நாயைப் பிடி" என்றவன் சீலமாக அவ்விடம்விட்டுக் கடிதிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றான். அந்த விதவையின் நிலையிலேயே, கொழும்பிற் பிரசுரமாகும் "டெயிலி நியூஸ்" (Daily News) என்னும் பத்திரிகையாசிரியர் இப்பொழுது இருக்கின்றார். விஷயம் யாதெனிற் சொல்லுதும்: இவ்விலங்கையின் ஈடேற்றத்தின் பொருட்டு சிங்களர் தமிழர் என்னும் இரு சாதியாளரும் ஒத்துழைத்தாலே அநுகூல முண்டாகுமென வெண்ணி தமிழர்களாயுள்ளவர் சிங்களருடன் சிலகாலமாக ஐக்கியப்பட்டு உழைக்க முயன்றனர். ஆனாற் சிங்களரோ அந்தச் சமையத்திலும் சுயநயங் கருதுபவர்களாய் பிரிவினை காட்டி நின்றனர். சிங்களரியல்பை மாற்றுவது அசாத்தியமெனக் கண்ட தமிழர், அவர்களை விடுத்து ஐரோப்பியர் பறங்கியர் இஸ்லாமானவர் என்னுமிவர்களுடன் தாமுஞ் சேர்ந்து தங்கள் சாதியின் சுயாதீனத்தின் பொருட்டு உழைக்கத் தொடங்கினர். இச் சிங்களரை யொழிந்த ஏனைய சாதியார்களின் பிரதிநிதிகளும் சனத்தலைவர்களும் இலங்கை அரசியற்றிருத்தத்தைக் குறித்து இலங்கை மந்திரிக்கு ஒரு விண்ணப்பம் சில மாசங்கட்கு முன் அனுப்பியிருந்தனர். தமிழ்மக்கள் முதலிய ஏனைய சாதியினரைச் சிங்களர் புறக்கணிக்க எண்ணிப் பிரிந்துநின்றமையினால் இம்மனுப் பத்திரம் சிங்களர்க்குக் காட்டப்படாமல் அனுப்பப்பட்டமை உண்மையேயாகும். இதற்குச் சிங்களர் இதனை அந்தரங்க விண்ணப்பமாக, மதித்து, எவ்வாற்றானும் பெறுதற்கு முயன்றனர். ஈற்றில் இதிலொரு பிரதி "டெயிலி நியூஸ்" பத்திரிகாசிரியருக்கு அகப்பட்டுவிட்டது. அகப்பட்டவுடனே ஆசிரியர் தம்மை மறந்தார்; தடுமாற்றங் கொண்டார்; பரவசப்பட்டார்; பத்திரத்தில் வெளியிட்டார்; தமிழரைத் தாக்கினார்; சனப்பிரதிநிதிகளை நிந்தித்தார்; ஏதோ கண்டறியாத தொன்றைக் கண்டவர்போற் கூக்குரலிடத் தொடங்கிக் கொண்டார்; இவ்வாசிரியர் தமிழரை மனம்போன வண்ணந் தூற்றினார்; தூற்றுகின்றார் தூற்றுவார். இவர் தாம் புகுந்த சாதியபிமானத்தாலுந்தப்பெற்றுச் சீற்றத்திற்கு அடிமையாகித் தர்க்கரீதியென்பது எட்டுணையுமின்றிச் சனத்தலைவர்களையெல்லாம் தூற்றுகின்றாரென்பது அவர் தம் பத்திரத்தில் வெளியிட்ட உளறுபடைகளை வாசிப்பவர்க்கு நன்கு விளங்கும். தமிழரும் மற்றுஞ் சாதியினரும் சிங்களருக்குப்போலத் தமக்கும் சமத்துவமான சுயாதீனந் தரல்வேண்டுமென்று அரசினருக்கு விண்ணப்பஞ் செய்தால் இச் சிங்களப் புதினப் பத்திராதிபருக்கு இத்துணை ஆத்திரம் வரவேண்டிய காரணமென்ன? இவர்மனம் தட்டியுடையாமல் தானே உடைந்தவாறேது? இவர் தமிழரைத் தம்நயங் கருதுபவர்களெனக் குறை கூறுகின்றார். தாம் பிறர்நயங் கருதியமையாற்போலும் இவருக்கு இவ்விஷயத்தில் இத்துணை ஆத்திரம் ஏற்பட்டது.

* * *

"ஏழைச் சனங்களை வருத்தி வரியிறுக்கச் செய்து எங்களுடைய வேதனத்தைக் கூட்டுவித்துக் கொள்ளுவதனால் என்ன பயன்; ஏதோ அதிஷ்டத்தினால் இந்த உத்தியோக பதவியை யடைந்துவிட்டோம்; இல்லாவிட்டால் எங்களுக்கும் ஏழைக்கும் என்ன பேதம்; உள்ளது போதுமென்ற மனமே குறைவற்ற களஞ்சியமென வெண்ணித் தயாளகுணம் பூண்ட சில உத்தியோகஸ்தர் தங்கட்குச் சம்பளம் இச்சமயத்தில் உயர்த்துவது அனாவசியமெனத் தெரிவிக்கின்றனர். வேறு சில உத்தியோகஸ்தர் வேதனத்தை உயர்த்தும் விஷயத்தில் மனசிற்குப் பிரியமில்லா விட்டாலும் வெளியில் ஒன்றும் பேசாது மௌனஞ் சாதிக்கின்றனர். இன்னுஞ் சிலர் வெந்த வீட்டிற் பிடுங்கியதறிதியென்று தச்சமையத்தை விடவொண்ணாதென்று அரசினர்க்கு மனுப்பண்ணுகின்றனர். இலங்கையிலே புகைரத மோட்டும் ஐரோப்பிய சாரதிகள் சம்பளமுயர்த்தும் நோக்கத்தில் அரசினர் இவ்வாறு காலதாமதஞ் செய்வதாயிருந்தால் தாம் எல்லோரும் ஒருங்கு வேலை நிறுத்தஞ் செய்வேமென வெருட்டுகின்றனர். இச் சாரதிகள் அல்லும்பகலும் இரும்போடும் நெருப்போடும் வெந்நீரோடும் ஊடாடுவதனால் இவர்கள் மனமும் அப்பொருள்களின் தன்மையை யடைந்தது போலும். இச்சாரதிகள் வேலைநிறுத்தஞ் செய்தால் சுதேசிகள் புகைரதஞ் செலுத்தமாட்டார்களென்பது இவர்களின் எண்ணம் போலும். புகைரதஞ் செலுத்துவதிலும் மோட்டர்வண்டி செலுத்துதல் அதிநுட்பமான கருமமென்றும் மோட்டர்வண்டியோட்டும் சாரதிகள் விரைவில் இதனைப் பயின்று கொள்வார்களென்றும் ஆதலினால் அயிரோப்பிய சாரதிகளின் வெருட்டு வெள் வெருட்டாய் முடியுமென்றும் விஷயமறிந்தோர் பேசிக்கொள்ளுகின்றார்கள்.

* * *

உலகம் பலவிதம்: 1922 செப்டெம்பர் 07

இங்குள்ள அரசாங்க உத்தியோகஸ்தர்களுட் பலர் வேதன உயர்வைக் குறித்துப் பத்திரிகாசிரியர்கள் மாறாக எழுதித் தங்கள் வாயில் மண்போடுகின்றார்களென்று சிலவாரங்கட்கு முன்னர்ப் பத்திரிகையாசிரியர்களாகவுள்ளவர்களைக் குறைகூறித் திரிந்தார்கள். ஆனால், உத்தியோகத்தர்கட்கு வேதனம் உயர்த்துவதற்கு முன் காருண்ணிய அரசினர் ஊரவர்களின் நித்திய சீவியத்திற்கு இன்றியமையாதனவாகிய நெல் முதலிய உணவுப் பொருட்களிலும் உடுபுடைவை முதலியவற்றிலும் வரி விதிக்கப் போகின்றார்க ளென்பதை அறிந்தவுடன் இந்த உத்தியோகத்தர்கள் "பிச்சை வேண்டாந் தாயே நாயைப் பிடி" யென்ற யாசகன் சீலமாக அரசினர் பொருட்கள்மீது வரைவின்றி வரி விதிப்பதாயிருந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கட்கு வேதனங் கூட்டித் தருவதால் யாதும் பயனில்லை, ஆதலால் வேதனங் கூட்டவேண்டாமென்று கூறுகின்றார்கள். "வேதனங் கூட்டவும் வேண்டாம் மேலதிகமான வரி விதிக்கவும் வேண்டாம்" என உத்தியோகத்தர்கள் சொல்வது சனங்களிடத்துக் கொண்ட கருணையினாலென்று எவராயினும் பிழையாக எண்ணிக்கொள்ளவொண்ணாது. அங்ஙனமில்லையேற் பின் எக்காரணம் பற்றியெனின், வேதனத்தையும் கூட்டி வரிகளையும் வரம்பின்றி விதித்தால் கூட்டிய வேதனத்தினால் தங்கட்கு யாதும் எச்சமில்லையேயென்பது பற்றியேயாமென்று ஊரவர்கள் பேசுகின்றார்கள்.

* * *

அரசாங்கலிகிதராகிய மிஸ்டர் ஹோஷ்பறோ "பட்ஜற்" எனப்படும் செலவுமதிப்புக் கணக்குப் பத்திரத்தைச் சட்டநிரூபணசபையிற் கொண்டுவந்து எடுத்து ஆண்டபோது, "நாங்கள் வரிகளைவிதித்து அரசிறையை அதிகப்படுத்தி நன்கு பரிபாலிக்காது இலங்கையிற்பழையபடி நீர்ப்பாய்ச்சுதலில்லாமலும், கமத்தொழிற் பகுதியில்லாமலும் சர்வகலாசங்கக்கல்லூரி யில்லாமலும் இருக்கலாமா? வைத்தியசாலைகளையும் மருந்துச்சாலைகளையுந் தவிர்த்து விடுவதா? காட்டுக்காய்ச்சலை அதிகரிக்க விடுவதா?" என்று பெரிதும் பரிந்து பேசினர். அரசாங்க லிகிதர் மேலே சொன்ன விஷயங்களெல்லாம் பல வருடங்களாக ஒருவாறு நடைபெற்றுவருகின்றன. பரிபாலனச் செலவு கூடுவதும் புதிய வரிகள் நியமிக்கவேண்டி யேற்படுவதும் உத்தியோகத்தர் வேதனத்தைச் சில வருடங்களாக உயர்த்திக் கொடுத்து விடுதலினாலும் அது போதாதென்று இன்னும் உயர்த்திக் கொடுக்கவேண்டுமென நிற்பதினாலுமேயாம். ஆதலால் அரசாங்க லிகிதர் வரிவிதித்தற்குக் கூறிய "சாட்டு" மேளச்சத்தத்திற்கு மோட்டர்க்கார் வெருண்டு அள்ளிச் சென்றது என்று சொன்ன பான்மையாக விருக்கின்றது.

* * *

இலங்கைப் புகைரதப்பகுதித் தலைமை உத்தியோகத்தராகிய மிஸ்டர் கிறீன் என்பவருக்கு 2000 ரூபா சம்பளமாகும். இதனோடு வசித்தற்கு வீடும் இனாமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. வத்தா எனப்படும் பிரத்தியேக சம்பளமுங் கொடுக்கப்படுகின்றது. இப்படி யெல்லாமிருக்கவும் இவர் சென்ற சட்டநிரூபணசபைக் கூட்டத்திலெழுந்து தமது வேதனம் செலவிற்குப் போதாதென்றும், தாம் குடும்ப சகிதமாக விடுதலையில் இங்கிலாந்திற்குப் போக நேர்ந்தபோது பிரயாணச் செலவிற்குப் பணமில்லாமையால் அரசினரிடங் கடன் வாங்கிச் சென்றதாகவும், தம்முடைய நிலை இப்படியானால் தமக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகத்தர்களின் நிலை எப்படி இருக்குமென்பதைச் சிந்திக்கவேண்டுமெனவும் வெட்கமின்றிக் கூறினர். இரண்டாயிரம் ரூபா வரையில் மாசந்தோறும் சம்பளம் பெறும் இவர் ஊருக்குப் போவதற்கு வழிச்செலவிற்கு முட்டுப் பட்டுக் கடன்படுவாரானால் இவருக்கு மாசந் தோறும் எத்தனையாயிரம் ரூபா கொடுத்தாற் கடனின்றி ஏதும் மிச்சம் பிடிப்பாரென்பதைக் கணக்கிடுதற்குத் தக்க கணிதாசிரியர்களையே கேட்கவேண்டும். இவர்களுடைய பணம் தண்ணீராகப்போகின்றதோ ஆவியாகப்போகின்றதோ யாமறியோம். இவர்கள் இங்கிலாந்திலிருந்து புறப்பட்டு வரும்போது இலங்கையிலே பொன் விளைகின்றது தோண்டியெடுத்து வரலாமென வெண்ணி வருகின்றவர்கள் போலும். இப்படிப்பட்ட வெள்ளையானைகளைச் செலவுத் தானத்தில் வைத்துக்கொண்டு முட்டுப்பாடின்றிப் பரிபாலனஞ் செய்வதென்றால் முடியுமா?

* * *

கொழும்பு நகரசங்கத்தார் நகர எல்லைக்குட்பட்ட தெருக்களுக்குத் "தார்" இடுவதைத் தவிர்த்து "றப்பர்" போடுதற்கு யோசிக்கின்றனர். "டார்லிறோட்" எனப்படும் வெள்ளைமணல் என்னுமிடத்துள்ள தெருவிற்கு றப்பர் இட்டுப் பரீக்ஷித்துப் பார்த்தவிடத்திலே தாரிலும் பார்க்க றப்பர் விசேடமானதென்றும், தெரு விரைவிலே தேயமாட்டா தென்றும், வண்டிகள் சத்தமின்றிப் போக்கு வரவு செய்யக்கூடுமென்றும் கண்டுபிடித்து விட்டார்கள். மிக விலைகுறைந்து கிடக்கும் றப்பருக்கும் விரைவில் விலையேறிக்கொள்ளுங் காலம் வந்துவிட்டது. இவர்கள் இப்படி யோசனை செய்யச் சட்டநிரூபணச்சபையங்கத்தவர்கள் மேற்படி சபைக்கூட்டங்களிலெழுந்து மணித்தியாலக் கணக்காக, இலங்கை முட்டுப்பட்டுவிட்டதென்று கயரோக முண்டாகும்படி கத்துவது புத்தியீனமல்லவா? தெருக்களுக்கு ரப்பரையிட்டு அதன் மேலே தேயிலையை தூவிவிட்டால் தெருக்கள் அற்பமேனும் தேய்தலின்றியிருக்கும்; நடப்பவர்களுக்கும் காலுக்கு மிருதுவாயிருக்கும். ஆனால் தேயிலை விலை குறையவில்லை!

* * *

உலகம் பலவிதம்: 1922 ஒக்டோபர் 5

அழிவுக்கு அறிகுறி அகந்தையென்பர். நூற்றெட்டு யுகங்களாக ஆயிரத்தெட்டு அண்டங்களையுமாண்ட சூரனெங்கே! அவனது அதிகாரமெங்கே! இந்த இலங்கையை யாண்ட இராவணனெங்கே! அவனதிகாரமெங்கே! தானே பரப்பிரம மென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதித்துத் தெய்வத்தை மறுத்த இரணியனெங்கே! அவன் அதிகாரமெங்கே! தன் சகோதரியையும் மைத்துனனாகிய வசுதேவரையும் சிறையிட்டு அவர்கள் பெற்ற சிசுக்களையும் தன்னாட்டிலுள்ள சிசுக்களையும் ஈனமிரக்கமின்றி வதைசெய்த கம்ஸன் எங்கே! அவனது அதிகாரமெங்கே! தருமமே யுருவெடுத்த பஞ்ச பாண்டவர்களின் நாடுநகரைக் கவர்ந்துகொண்டு அவர்களை வீட்டைவிட்டுக் காட்டகத்திற் கோட்டிய துரியோதனனெங்கே! அவனது அகந்தையெங்கே! எளியாரை வலியார்வாட்டில் வலியரைத் தெய்வம் வாட்டுமென்பர். நன்மையானாலுந் தீமையானாலும் அதிகரித்தால் அதன் பலன் உடனே பிராப்தியாகுமென்பது பஞ்சதந்திரம். ஆதலினால், அன்பர்களே செல்வம் செல்வாக்கு அதிகாரம் என்னும் இவை காரணமாக அகந்தை உண்டாகுமாயின் அது அழிவுக்கு அறிகுறியாகு மென்பதை யுணர்ந்து அதற்கு இயைய நடந்து கொள்ளுங்கள் என்று மகாஞானியொருவர் கூறுகின்றார்.

* * *

இங்குள்ள ஆங்கிலக் கல்லூரிகள் சிலவற்றுள் "ஸ்கவுற்ஸ்" எனப்படும் பரோபகார மாணவர்கள் சிலர் இருக்கின்றார்கள். இவர்களுடைய பரோபகாரகுணம் இவர்களிடத்தில் இயல்பாகவுள்ளதென எண்ணிக் கொள்ளவொண்ணாது, அயிரோப்பிய முறையைப் பின்பற்றி இங்குள்ள கல்லூரி ஆசிரியர்கள் இப்பிள்ளைகளுக்குப் பரோபகாரக்குணத்தை நாள்தோறும் பயிற்றிவருகிறார்கள். "நடையும் நடைப்பழக்கம் நட்பும், தயையும், கொடையும் பிறவிக்குணம்" என்று ஔவையார் சொல்லியிருக்கின்றாரே, ஆதலால் பரோபகாரசிந்தை ஒருவனுக்கு இயல்பாகவன்றோ வர வேண்டுமென்று கேட்டால், அஃது அப்படியல்ல, ஔவையார்க்கிழவி ஆயிரம் வருடங்களுக்கு முன் சொன்னவாக்கு இந்தக்காலத்திற்கு இசையுமாவென அதைத் தள்ளிடல்வேண்டும். இந்தப் பரோபகார மாணவர்கள் தமக்குரிய நூதனமான உடையையும் உடுத்தித் தடியையும் பிடித்துப் பாடத்தையும் சிறிது அலட்சியஞ் செய்து நாள் தோறும் காலையிற் சிறிது நேரம் தங்கள் ஆசிரியர்சொற்படி தேகாப்பியாசஞ் செய்தால் பரோபகாரம் இவர்களுடைய சிந்தையிற் புகுந்து விட இவர்கள் பரோபகாரசிந்தை உடையவர் களாக வந்து விடுவார்கள். இவர்களே "ஸ்கவுற்ஸ்" எனப்படுவார்கள். இவர்களை நேரிற் காண விரும்பினால், "அற்ஹோம்" முதலிய விருந்துக் கூட்டங்கள் நிகழுங் காலத்திலே ஆங்கு வரும் பிரபுக்களைக் கண்டவுடனே, நவீன உடை உடுத்தியவர்களாய் ஒருகரத்திலே நீண்ட தடி பிடித்தவர்களாய், மிக்க விநயத்தோடு, வந்த அந்தப் பிரபுக்களுக்கு நாற்காலி முதலியன எடுத்துக்கொண்டுவந்து உதவியும், தட்டின்கண்ணே சிற்றுண்டி முதலியன கொண்டு வந்து கொடுத்து உபசரித்தும், அற்றம் நோக்கி அவற்றுட் சிலவற்றை யெடுத்துத் தம் வாய்வழங்கியும் பரோபகாரஞ்செய்து கொண்டு நிற்பவர்களே அவர்கள் என்று அவதானித்துக் கொள்ளலாகும். ஆனால் இப்படிப்பட்ட கூட்டங்களிலே மேலே சொல்லப்பட்ட கருமங்களைச் செய்துகொண்டு, குறித்த உடையும் தடியும் இல்லாதவர்களாயுஞ் சிலர் நிற்றல்கூடும். அவர்களை இவர்களெனத் தடுமாற்றமாக விளங்கிக்கொள்ள வொண்ணாது. அவர்கள் வேறுபேராவர். யாருக்காயினும் ஆபத்து வந்த காலத்தில் தம்மால் இயலுமானால் உடனே சென்று அதனைத் தீர்த்துவிடல்வேண்டு மென்பதே இம் மாணவர்களுக்குப் போதிக்கப்பட்ட போதனையாம். இந்த முறையை எமது முன்னோர் அறிந்திருப்பரேல், பொன் காத்த பூதம்போலத் தம்மிடத்துள்ள பொருளைப் புதைத்து வைத்துக் கொண்டிருக்கும் உலோபிகளைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்து இந்த நவீன உடையையு முடுத்தித் தடியையுங் கொடுத்துச் சிறிது தேகாப்பியாசமுந் தினந்தோறுஞ் செய்வித்து அந்த லோபிகளையெல்லாம் பரோபகாரசிந்தை யுள்ளவர்களாக மாற்றியிருப்பர். அந்தோ! பாபம், அவர்கள் அறியாமற்போனார்கள்.

* * *

சிறுவர்களுள் பரோபகார மாணாக்கர் இருப்பதுபோலவே இப்பொழுது சிறுமிகளுள்ளும் இப்படிப் பயிற்றப்பட்டவர்களிருக்கின்றார்களென அறியலானேம். இச்சிறுமிகள் யாழ்ப்பாணத்துள்ள பெண்கள் கல்லூரிகளிலே அவ்வக் கல்லூரி ஆசிரியர்களாலும், ஆசிரியைகளாலும், பரோபகார மாணவர்களாகப் பழக்கப்படுகின்றார்களாம். சிறுவர்கள் பழக்கத்திற்கும் சிறுமியர் பழக்கத்திற்குமிடையே இயல்பாகச் சில பேதம் இருக்குமென்றே நாம் அனுமானித்துக் கொள்ளுதல் வேண்டும். இவர்கள் செயலைப் பற்றி நாம் நுட்பமாக அறிதல் இப்பொழுது முடியாமலிருக்கின்றது. இலங்கையிலுள்ள பரோபகார மாணவச் சிறுமியரெல்லோரும் நேற்றுக் கொழும்பிலே ஒரு கூட்டமாகக் கூடினராம். அக்கூட்டத்திற்கு நமது தேசாதிபதி அவர்களே அக்கிராசனராகவிருந்து இப்பெண்மணிகள் செய்யுந் திறமைகளைப் பார்த்து மெச்சினராம். இவ்விஷயத்தில் ஏனைய இடங்களிலும் பார்க்க நமது யாழ்ப்பாணம் குறைந்து போகவில்லை. யாழ்ப்பாணத்திலே உடுவில் மருதனார்மடம் சுண்டிக்குழி ஆதியாம் இடங்களிலுள்ள பெண் கல்லூரிகளிலிருந்து புகைரதமார்க்கமாக நமது கன்னிகாரத்தினங்கள் சில தினங்கட்கு முன்னர்க் கொழும்பிற்குப் புறப்பட்டுச் சென்றிருக்கின்றனர். சென்றனரேனும் காத்திருந்த தொகையினர் இப்போது செல்லவில்லையாம். சில பெற்றார் தங்கள் குமர்ப் பிள்ளைகளைப் பிறவூருக்கு அனுப்புவதற்குப் பயந்து மறுத்துவிட்டன ரென்றும், சில பெற்றாரிடத்தில் அனுமதி பெறுதற்குக் காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதாமற்போயிற்றென்றும், சில பெற்றாரின் மனசை மாற்ற முடியவில்லையென்றும், கொஞ்ச நாணமுடைய சில பெண்பிள்ளைகள் தாமாக மறுத்துவிட்டனரென்றுஞ் சொல்லுகிறார்கள். இக்கன்னிகாரத்தினங்கள் நமது தேசாதிபதி முன்னிலையிற் சென்று தங்கள் திறமையையும் மற்றும் விஷயங்களையும் காட்டவொண்ணாதென நாஞ் சொல்லத் துணியவில்ல. நாங்கள் அரசனையே கண்கண்ட தெய்வமெனக் கொண்டாடும் இயல்புடையேம். தன்னுயிர்போல் மன்னுயிரையும் ஓம்பும் காருண்ணியம் பொருந்திய மாட்சிமைதங்கிய இத்தேசாதிபதியவர்கள் தாம் பரிபாலிக்கின்ற இந்நாட்டிலுள்ள ஆடவர்கள் நலத்தையும் பெண்கள் நலத்தையும் பெரிதும் அபேட்சிக்கின்றவரென்பதற்கு எட்டுணையும் சந்தேகம் வேண்டாம். ஆனால் யாம் சொல்லக்கூடிய குறையொன்றுளது. ஐயோ, தெய்வமே, நமது நாடு இவ்வளவாகக் கெட்டுப் போய்விட்டதா? என்னபரிதாபம்! வீட்டை விட்டு வெளிமுற்றத்திற்றானும் வரப்பெறாதவர்கள், ஆதவனும் அரிதிற் காணப்பெறும் பெண்மணிகள், மணப்பந்தரிலே, சிங்காரித்து முட்டாக்கிட்டுத் தாதியர் இருபுறந் தாங்க, சுமங்கலிகள் சூழ்ந்து செல்ல, மடம் நாணம் அச்சம் பயிர்ப்பு என்னும் நாற்குணங்களும் கிளர, சூத்திரப் பாவைபோலத் தம் அவயவங்களைப் பிறர் இயக்க, விவாககாலத்திலே தம்மாற் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்து வந்த கன்னிகாரத்தினங்கள் இப்பொழுது நமது சாதிக்கெல்லாம் வடுவுண்டாக்கப் புறப்பட்டு விட்டார்களே. இதற்குத்தானா இவர்கள் படிக்கப் புறப்பட்டார்கள்? இக்கன்னியர்கல்லூரிக்குப் புறப்பட்ட பின்னரும் நாற்குணங்களுமிருக்குமானால், அவற்றுள் கல்லூரியிலிருந்து புகைரதத்தானத்திற்குப்புறப்படவே மடமும், புகைரத ஸ்தானத்திற் புகைவண்டியில் ஏறவே நாணமும், மருதானைப் புகைரதஸ்தானத்திலிறங்கவே அச்சமும் அகன்றுவிடுமே. எஞ்சிய பயிர்ப்பு எவ்விடத்திற் போமோயாமறியேம். ஆ! நளமகாராசனைப்பிடித்தலைத்த கலியே! உன் காலத்தில் இன்னும் என்னென்ன விபரீதங்களை விளைக்க விருக்கின்றாயோ யாமறியேம்!

* * *

பெற்றார்களாயுள்ளவர்கட்குச் சொல்லத்தக்கதொன்றுண்டு. பெண்களுக்குக் கல்வி பயிற்றவொண்ணா தென்னும் அபிப்பிராயங்கொண்ட பேரறிவாளர் சொல்லை யாம் அலட்சியஞ்செய்து, இப்பத்திரிகை வாயிலாகவும் வேறு பல ஏதுக்களாலும் பெண்களுக்குக் கல்வி பயிற்றுதல் ஆவசியகமெனச் சாதித்துவந்துள்ளோம். இப்பொழுது ஆராயுங்கால் அவர்கள் வாக்கு வீண்போகவில்லை. சைவாசாரத்தையும் புராதன ஒழுக்கங்களையும் அனுசரித்து உங்கள் பெண் பிள்ளைகள் கல்வி பயிலுதல் கூடுமானால் அவர்களுக்குக் கல்வி பயிற்றுங்கள். அநாகரிகக் கல்வியை அவர்களுக்குப் பயிற்றிவிட்டுப் பிற்காலத்தில் வசைக்கு ஆளாகாதீர்கள். பெண்மைக்குரிய குணங்களை அவர்கள் போக்கடிக்கச் செய்துவிட்டுப் பேய்க்கூத்தாடாதீர்கள். மடம் நாணம் அச்சம் பயிர்ப்பென்னும் இந்நான்கு குணங்களுமே உங்கள் கன்னிகா ரத்தினங்கட்குச் சிறந்த ஆபரணமென்பதை மனத்துள் வையுங்கள். "நாற்குணமும் நாற்படையா வைம்புலனு நல்லமைச்சா, ஆர்க்குஞ் சிலம்பே அணிமுரசா - வேற்படையும், வாளுமே கண்ணாக வதனமணிக் குடைக்கீழ், ஆளுமே பெண்மை யரசு" என்று கற்பிற்சிறந்த தமயந்தியின் குணாதிசயங்களைப் பெரியோர் வியந்துள்ளனர். இந்த நாற்குணங்களுள் ஒன்று சிதைந்துவிடின் எத்துணைப் பெருந் தொகைச் சீதனமிருந்தாலும், பேரழகிருந்தாலும், கல்வியிருந்தாலும், தையல் பழகியிருந்தாலும், சங்கீதத்தில் நிபுணை யாயிருந்தாலும், ஆடையா பரணமிருந்தாலும், பூசர்மா சவர்க்காரம் முதலிய பிறவிருந்தாலும் பயன்படாவாம். நமது கன்னிகாரத்தினங்களைக் குறைகூற எமக்கிஷ்டமில்லை. மேலும் எய்தவனிருக்க அம்பை நோவது முறையன்று.

* * *

உலகம் பலவிதம்: 1922 ஒக்டோபர் 24:

நமது நாட்டிலே முந்தியிருந்த பெண் பாலார், செல்வர் தரித்திரரென்னும் பேதமின்றி எவரும் தாங்கள் செய்யவேண்டிய சமையற் றொழில், நாயகன் பிள்ளைகள் என்னுமிவர்களைப் போஷித்தல் முதலிய கடமைகளை முடித்துக்கொண்டு எஞ்சிய நேரத்தை வியர்த்தமாகக் கழியாது, கிடுகு பின்னுதல், பெட்டி பாய் இளைத்தல், மாடு கன்று பராவரித்தல் முதலிய லௌகிக கருமங்களையும், விரதங்காத்தல், ஆலயதரிசனஞ்செய்தல், புராணங்கேட்டல் முதலிய வைதிககருமங்களையுஞ் செய்து தத்தம் நாயகருக்குப் பெரும் வாழ்க்கைத் துணையாகவும் பிள்ளைகளுக்கு நற்றாயராகவும் இருந்தார்கள். அவர்கள் தாம் செய்யவேண்டிய கடன்களை அன்றன்று செய்து முடித்துவிட்டோமேயென்று மனரம்மியத்தோடு கூடியிருந்தார்கள். இக்காலத்துப் புத்தகக்கல்வி அக்காலத்தில் இல்லையாயினும், அப்பெண்களுக்கு அவர்களுடைய தாய்மாரும், மூதாட்டிமாரும் தினந்தோறும் இல்வாழ்க்கைக்குரிய பழக்கவழக்கங்களைப் பயிற்றி வந்தார்கள். வீட்டிலிருந்து கொண்டு தங்கள் தங்களுக்குத் தெரிந்த கைத்தொழில்களைச் செய்வதை அக்காலத்திருந்த பெண்கள் கௌரவக் குறைவென நினைத்தாரல்லர். யாழ்ப்பாணத்தில் பற்பல இடங்களில் நூல் நூற்றலாகிய தொழிலைப் பெண்கள் செய்து வந்தனரெனக் காலங்கண்ட முதியோர் கூறுகின்றனர்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்காலத்தில் இங்கு வந்த பாதிரிமாரின் புண்ணியத்தினால் கால் தமிழ்ப் படிப்பும் அரைக்கால் ஆங்கிலக்கல்வியும் நமது சிறுமிகளுக்கு அகப்பட்டன. தையலுஞ் சிறிது பயின்று கொண்டனர். பள்ளிக்கூடத்திற்குச் செல்லும் தங்கச்சிமார் புத்தகம் பிடிக்குங் கையால் சட்டி பானையைத் தீண்டவும், பேனை பிடிக்குங் கையால் உலக்கை பிடிக்கவும், தையல் தைக்குங் கரத்தாற் பன்னவேலை செய்யவும், பள்ளிக்கூடத்திற்கு நடக்கும் பாதத்தால் ஆலயத்திற்கு நடக்கவும், ஓய்வுநாட் பிரசங்கங் கேட்குங் காதால் புராண படனங் கேட்கவும் கூசினர். இவர்கள் மங்கைப் பருவமெய்தியபின்னர் தங்கள் பெற்றாருக்கும், விவாகமானபின்னர் நாயகனுக்கும் மௌட்டிகங் கற்பிக்கத் தலைப்பட்டனர். பழைய பழக்க வழக்கங்களும் ஆசார அனுஷ்டானங்களும் இவர்களுக்கு அஞ்ஞானமார்க்கங்களாயின. சேலைக்குப் பதிலாகப் பாவாடை தாவணியும், இரவிக்கைக்குப் பதிலாகச் சட்டையும், வளையலுக்குப் பதிலாகக் காப்பும் பின்னர் றிஸ்ற் கெடிகாரமும், அரப்புக்குப் பதிலாகச் சவர்க்காரமும், விபூதிக்குப் பதிலாகப் பூசர்மாவும், இயற்கை மலருக்குப் பதிலாகச் செயற்கை மலரும், இயற்கை வாசனைக்குப் பதிலாகச் செயற்கை வாசனையும், இன்னோரன்ன பிறவும் இவர்களிடத்தில் ஏற்படலாயின. இப்பொழுது சாய்ப்புப் பூட்டப்பட்டால் இவர்கள் உயிர்வாழ்தல் அரியதாகவிருக்கின்றது.

* * *

ஆண்களாகவுள்ளாருக்குச் சமையல் செய்து கொடுக்க வேலைக்காரரில்லாவிட்டாலும், இவர்களுக்குச் சமையல் செய்து கொடுக்கச் சுயம்பாகிகள் ஆவசியகம் வேண்டும். வாசிக்கத் தெரியாவிட்டாலும் இவர்களுக்கு ஒரு வாத்தியப் பெட்டி வேண்டும். தையல் தெரியாவிட்டாலும் தையலருக்கு ஒரு தையற்சூத்திரம் வேண்டும். பிள்ளை வளர்க்க ஆயாள் வேண்டும். இப்படிப்பட்ட பெண்மணிகளை "நூல்நூற்கப் பழகிக் கொள்ளுங்கள்; சீலை நெசவு செய்யப் பழகிக் கொள்ளுங்கள்; கதருடையைத்தரியுங்கள்" என ஸ்ரீமதி சரோஜினிதேவி சொன்னால் ஏதும் ஆகுமோ என ஒரு விருத்தர் விளம்புகின்றார்.

* * *

உலகம் பலவிதம்: *1922 நவம்பர் 2:*

ஆநந்தம் அதிகப்பட்டால் சிலர் தாம் சொல்வது இன்னதென்பதைச் சிந்தியாமல் வாயில் வந்தவற்றைக் கூறி விடுகின்றார்கள். சென்றவாரம் வைத்தீஸ்வர வித்தியாலயத்திற் கூடிய பரிசளிப்புக் கூட்டத்தில் அங்குச் சென்றிருந்த இலங்காபிமானியொருவர் பிரதிதேசாதிபதி மிஸ்டர் ஹொரர்ஷபூறோ யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ் செய்தமையினாலேயே மழை பெய்யத் தொடங்கியதெனக் கூறினர். பரிசளிப்புக் கூட்டம் நிகழ்ந்தது சென்ற சனிக்கிழமையாகும். இலங்காபிமானி கூறிய பிரகாரமாயில் சனிக்கிழமைக்கு முன் இங்கே மழை துமிக்காமலு மிருந்திருக்க வேண்டும். சென்றவாரம் முழுவதும் மழை பெய்து வருதலினாலே அதிக மழை காரணமாக இங்குள்ள நெற்பயிர்களுக்குச் சேதம் வருமோவெனக் கமக்காரர் பயப்படுகின்றார்கள். சனிக்கிழமைக்குப் பின்னர் பெய்தமழையினாற் சிற்சில விடங்களிற் பயிரை வெள்ளம் அள்ளிவிட்டது. இப்படியிருத்தலினாலே நமது அபிமானி கூறியது அழிமழையைக் குறித்துப்போலும் என்று அப்பரிசளிப்புக் கூட்டத்தவரில் ஒருவர் கூறுகின்றார்.

* * *

மேலும் நமது இலங்காபிமானி வடமாகாணப் புகைரதமார்க்கமாகப் பிரதிதேசாதிபதி இம்முறை பிரயாணஞ்செய்த சமையத்தில் வட மாகாணப் பகுதிப் புகைரதப் பிரையாணத்தின் வசதிக் குறைவுகளைக் கவனித்திருப்பாரென்றும், அப்படிக் கவனித்தமையினால் அவற்றை இனிமேல் நிகழாதபடி நீக்கி விடுவாரென்றும் கூறினார். வடமாகாணப் பகுதிப் புகைரதப் பிரயாணத்துள்ள வசதியீனங்கள் நீங்கவேண்டுமென்னும் விருப்பம் இங்குள்ளாரெல்லாரிடத்திலும் உண்டு. நமது பிரதிதேசாதிபதி வடமாகாணப் புகைரத மார்க்கமாக இம்முறைதான் முதன் முதற் பிரயாணஞ்செய்தவரல்லர். இதற்கு முன்னரும் பன்முறை இப்புகைரத மார்க்கமாகப் பிரயாணஞ் செய்துள்ளனர். நாட்கணக்கிலன்றி வருடக்கணக்காக இவ்விலங்கையைப் பரிபாலித்த தேசாதிபதிகள் எத்தனையோபேர் இப்புகைரத மார்க்கமாகப் பிரயாணஞ் செய்துள்ளனர். இங்ஙனமெல்லாம் நிகழ்ந்தும் வடமாகாணப் புகையிரதப் போக்குத் திருத்தமடைந்தபாடில்லை. இப் புகைரதப் பகுதியில் யாதும் உண்மையான திருத்தங்கள் வரவேண்டுமாகில் மிஸ்டர் கிறீன் துரையவர்கள் கடைக்கண் நோக்கஞ் செய்து திருவுளமிரங்குதல் வேண்டும். இல்லையேல் அத்துரைக்குப் பின்வருபவர் அதனைக் கவனித்தல் வேண்டும். இங்ஙனமெல்லாமிருத்தலால் இலங்காபிமானியவர்கள் அச்சமையத்திற் கூறியவை உபசாரமோ அபசாரமோவென ஒரு தேசாபிமானி சந்தேகப்படுகின்றார்.

* * *

நாமொன்று நினைக்கத் தெய்வந்தானொன்று நினைத்தாற்போல யாழ்ப்பாணம் சுகாதார சங்கப்பகுதியார் யாழ்ப்பாணத்திற் பெய்யும் மழையாலுண்டாகிய வெள்ளத்தைக் கடலுட் பாயச் செய்ய வேண்டுமென்று நினைத்துப் பெரும்பொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவிட்டு முற்றவெளியிலுள்ள வாய்க்காலைப் பதித்து வெட்ட, கடற்றண்ணீர், அவர்கள் செலவழித்த பணத்தையுஞ் சிந்தியாது, அவ் வாய்க்கால்வழியே ஊருக்குள் வரத் தலைப்படுகின்றது. வெள்ளம் பள்ளத்தை நாடும் போலும்! கடல் நீர் உப்புத்தன்மையின்றிச் சுத்த நீராயிருந்தால், ஆறில்லாத நாடாகிய யாழ்ப்பாணத்துள் இந்த நீர் பாய்வதினால் நன்மையன்றி யாதும் தீமையில்லையாம். இவ்விஷயமாக யாழ்ப்பாண சுகாதார சங்கத்தாரையும் என்சினியர்மாரையும் நாம் குறை கூறுதல் முறையன்று; பள்ளத்தைக் கண்டவுடனே ஓடிவந்த கடல் வெள்ளத்தையே நாம் குறைகூறுதல்வேண்டும்.

* * *

யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலுள்ள முன்மாதிரித் தோட்டம் மலட்டுப்பசுவை யொத்திருக்கின்றது. மலட்டுப் பசுவை வைக்கோல் பிண்ணாக்கு முதலியன இட்டு நன்கு போஷித்தாலும், அது பயனாகக் கொடுப்பது எருவொன்றேயாம். இந்த முன்மாதிரித் தோட்டத்திற்கு அரசினர் பல வருடங்களாக அதிக பொருளைச் செலவிட்டு சொற்ப பயனைத்தானும் பெறுதற்கு மார்க்கமின்றிச் சங்கடப்படுகின்றனரெனவறிகின்றோம். வடமாகாணப் பிரதிநிதியாகவிருந்த ஸ்ரீ துரைசுவாமியவர்களும் இம் முன்மாதிரித் தோட்டத்தைக் குறித்து முன்னொரு முறை சட்ட நிரூபண சபையிற் பேசியிருக்கின்றார். யாழ்ப்பாணத்துள்ள தோட்டக்காரர் இம்முன்மாதிரித் தோட்டத்தின் முறைகளைப் பின்பற்று கின்றிலரென்றும் தங்கள் புராதன முறைப்படியே தோட்டஞ் செய்கின்றார்களென்றும் அதிகாரிகள் குறைகூறக் கேட்டிருக்கின்றோம். ஏதும் அற்ப லாபத்தையாயினும் பெறலாமென்னும் நோக்கத்துடன் அதிக பிரயாசைப் பட்டுத் தோட்டஞ் செய்யும் நம்மூர்ச் சகோதரர்கள், நட்டத்திற்குச் செய்யப்படும் இந்த முன்மாதிரித் தோட்டத்தை எங்ஙனம் பின்மாதிரியாகக் கொள்வது எனத் தோட்டஞ் செய்பவரொருவர் சொல்லுகின்றார்.

* * *

ஒரு சாதியாரின் வாழ்வுந் தாழ்வும் அச் சாதியாருக்குரிய பெண்பாலாரிடத்திலேயே தங்கியிருக்கின்ற வென்பது மேதாவிகள் கொள்கையாதலினால், நாமும் ஒரு சிறந்த சாதியாராக உலகத்திலே மதிக்கப்பட வேண்டுமாயின் நமது சகோதரிகள் நவீன நாகரிகத்தை அறவே ஒழித்து நஞ்சாதிக்குரிய புராதன பழக்கவழக்க அநுஷ்டானங்களையே கைக்கொள்ளுதல் வேண்டுமென இப் பத்திரிகை வாயிலாக அவர்களுக்கு வற்புறுத்திக் கூறி வருகின்றோம். "எங்கள் நன்மையை விரும்பியே இவன் இப்படிக் கூறுகின்றான்" என்று நஞ்சகோதரிகள் எம்மீது குறை கூறாது உவந்து ஏற்றுக்கொள்ள நவீனநாகரிகத்திற்கு அடிமைச் சீட்டெழுதிக்கொடுத்த சில போலித் தேசாபிமானிகள் நம்மைக் குறைகூறி நமக்கு யாதானும் இடர்விளைக்கலாகுமோவென உபாயஞ்சூழ்கின்றனராம். இவர்கள் சூழ்ச்சி நன்று! நன்று! தேசத்திற்கு நன்மையான விஷயத்தில் எமது உயிர் திரணமாக மதிக்கப்படுமென இவர்கள் அறிந்து கொள்ளக்கடவர். சகோதரிகளே, "மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினிது, ஏனையவர் பேசுற்ற இன்சொல் பிறிதென்க" என உங்கள் மூதாட்டியார் கூறியதை மறந்து விடாதீர்கள்.

* * *

உலகம் பலவிதம்: 1922 நவம்பர் 9

சிறுபிள்ளைகளுக்கிடையே விளையாடும் போது ஏதும் மனஸ்தாபம் ஏற்பட்டுவிட்டால் அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி "நான் நேற்றுத் தந்த கடலைக்கொட்டையைத் தா, வெள்ளிக்கிழமை பள்ளிக்குப் போனபோது வழியிலே தந்த கறுவாய்பட்டையைத் தா" என்று கேட்கிற வழக்கமுண்டு. இப்படிக்கேட்கிறது தாங்கள் ஒருவரோடொருவர் கோபம் என்றதற்கு அடையாளமாம். அதுபோல நமதரசாங்கத்தாரும் சனப் பிரதிநிதிகளுக்குக் கொடுத்த கிரயமில்லாத பிரயாணச் சீட்டை (Free Pass)யும், காகிதங்கள் சாதனங்கள் வைத்துக்கொண்டு போகும் பெட்டியையுந் திருப்பி அனுப்பிவிடும்படி, சட்டநிரூபண சபையினின்றும் விலகிய பிரதிநிதிகளுக்குத் தெரிவித்திருக்கின்றார்கள். சனப் பிரதிநிதிகளிடத்தில் பிரயாணச் சீட்டையும் தபாற் பெட்டியையும் தாம் திருப்பி வாங்காது விட்டிருந்தால், அந்தச் சீட்டுகளைத் தமது சொந்தக் கருமார்த்தமான பிரயாணத்திற்கு உபயோகிக்கக்கூடுமென்றும், பெட்டிகளைத் தங்கள் சொந்தக் காகிதங்களையும் உறுதிகளையும் வைத்தற்கு உபயோகிக்கக்கூடுமென்றும் அரசினர் பயப்படுகின்றார்கள் போலும். சனப்பிரதிநிதிகளைப்பற்றி அரசினர் எவ்வகையான அபிப்பிராயங் கொண்டிருந்தனரென்பது நமக்கு விளங்கவில்லை. உற்று யோசிக்குமிடத்துச் சரியாயினும் பிழையாயினும் தங்களுக்கு மாறாக வரமாட்டார்களென்னு மெண்ணம் அவருள்ளத்திற் குடிகொண்டிருந்ததாகத் தோற்றுகின்றது. இச் சனப்பிரதிநிதிகள் சட்டநிரூபணசபையிலே தாங்கள் அலட்சியஞ் செய்யப்பட்டவுடனே புறப்பட்டு வெளியே வந்தமையினாலேயே, இவர்கள் சாமானியரல்லரென்பதும், சனங்களாற் பெரிதும் மதிக்கப்படுகின்றவர்களென்பதும், சுதந்திர எண்ண முடையவர்களென்பதும், பாசையும் பெட்டியையும் வாங்கிக்கொண்டு இல்லையெனச்சொல்லு மியல்புடைய அற்பர்களல்லரென்பதும், வயிற்றுவளர்ப்புக்காகவேனும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவத்தை விரும்பியேனும் அரசியல் விஷயத்திற் பிரவேசித்தவர்களல்லரென்பதும் இனிது புலப்படும். இப்பொழுது இங்கே நிகழும் இப்படிப்பட்ட சிறிய செயல்களை, இலங்கைவாசிகளன்றி, இந்தியரும் அவதானித்து வருகிறார்கள். இந்த விஷயமாகச் சென்னையிற் பிரசுரமாகும் "நவ சக்தி" என்னும் பத்திரிகையின் ஆசிரியர் அப்பத் திரிகையில் எழுதியதை இங்கே தருகின்றோம்.

* * *

"இலங்கைச் சட்டசபையின் ஜனப்பிரதிநிதிகளில் பன்னிருவர் இராஜிநாமா செய்ததையும் அவர்கள் அங்ஙனஞ் செய்தற்குரிய காரணத்தையும் நாம் முன்னர்த் தெரிவித்திருந்தோம். அங்ஙனம் இராஜிநாமா செய்த அங்கத்தினர்கள் உடனே தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த றெயில்வே பாசையும், தபாற் பெட்டியையும் திருப்பி அனுப்பிவிடவேண்டுமென்று அரசாங்க காரியதரிசியால் கேட்கப்பட்டிருக்கிறார்கள். தபாற்பெட்டிகள் என்பன, சட்டசபை அங்கத்தினர் தம் பதவியினின்று விலகினாலும், தாங்கள் அப்பதவியை வகித்ததற்கு அறிகுறியாக அவ்வங்கத்தினர்களால் வைத்துக்கொள்ளப்படுவது வழக்கம். றெயில்வே பிரயாணச்சீட்டுகளை, அங்கத்தினர்கள் தங்கள் பதவியினின்று விலகியவுடனே திருப்பி அனுப்பி விடுவார்கள். அரசாங்கத்தார் கேட்டு, அவைகளை அனுப்பவேண்டுமென்பதில்லை. தங்கள் பதவிகளை இராஜிநாமா செய்தபிறகு சட்டசபை அங்கத்தினர்கள், இந்தச் சீட்டைக் கொண்டு பிரயாணஞ் செய்யமாட்டார்கள். இலங்கை அரசாங்கத்தினர் அங்கத்தினரின் பிரயாணச் சீட்டுக்கும் தபாற்பெட்டிக்கும் எதிர் பார்த்துநிற்பது அவருடைய இழிதகைமையையே காட்டுகிறது என்று கூறுவோம்." நவ சக்தி, 3-11-22.

* * *

"பாரதியும் அரசியன் ஞானமும்" என்னும் மகுடநாமம் புனைந்த கடிதமொன்றை இப்பத்திரிகையில் வெளியிடும்படி கடிதரொருவர் நமக்கு எழுதியனுப்பியிருக்கின்றார். கடிதம் மிக நீண்டதாயிருத்தலினாலும், பிரமஶ்ரீ நவநீதகிருஷ்ணபாரதியவர்கள் தேசநேசன் பத்திரிகையில் காலந்தோறு மெழுதிவந்த விஷயங்களில் ஆக்ஷேபம் நிகழ்த்தியிருப்பதுள் அமையாது, நேரிற் பாரதியாரைக் கண்டித்திருத்தலினாலும் "தேசநேசன்" பத்திரிகை வாயிலாக வெளிவந்த கடிதங்களின் மேல் நிகழ்த்தும் ஆக்ஷேபங்களை அப்பத்திரிகை வாயிலாக வெளியிடுதலே மரபாதலாலும் அக்கடிதத்தை இங்கே வெளியிடாதொழிந்தேம். அரசியல் விஷயங்களில் பாரதியார், இலங்கையிலுள்ள பிரதிநிதிகள் சட்டசபையை விட்டு வெளியே புறப்பட்டுச் சென்றமை தவறாகுமென்றாரெனக் கடிதர் அவரைக் குறை கூறுகின்றார். சனப் பிரதிநிதிகள் சட்டசபையை விட்டு வெளியே வந்தமை தக்கசெயலாகுமென்பதை அப்பிரதிநிதிகளைத் தெரிவு செய்தனுப்பியமாகாணத்தவர்களும், இலங்கை வாசிகளனைவரும் அங்கீகரித்துக் கொள்ளப் பாரதியார் மாத்திரம் அங்ஙனம் கூறியமை தவறாகும். "இந்தியாவிலிருந்து இந்நாட்டிற்கு ஒரு சம்பந்தம் பற்றி வந்த பாரதியார், தமக்கடாததாகிய இலங்கை அரசியல் விஷயத்திற் பிரவேசித்து "ஊரோடுகில் ஒக்க ஓடு ஒருவனோடுகிற் கேட்டோடு" என்ற பழமொழிப்படி இலங்கை வாசிகளுடன் ஒத்துழையாது, அவர்களுக்கு மாறாகப் போதிக்கத்தொடங்கி வாய்த் தவிடும்போய் அடுப்பில் நெருப்புமிழந்தவள் சீலமாக, தமக்கிருந்த மதிப்புங் கெட்டு இங்குள்ளவர்களின் தூஷணைக்கு ஆளாகவேண்டிய காரணமென்னையோ"வெனக் கடிதர் பரிவுறுகின்றார். பாரதியார் அரசியல் விஷயமாகத் தேசநேசனில் எழுதி வந்த வியாசங்களை யாமும் பார்த்துள்ளேம். அவருக்கும் அரசியல் ஞானத்திற்கும் உண்மையாக அதிக தூரமாதலினால் பாரதியார் இனிமேலாயினும் தமது அரசியல் ஞானத்தை வெளியிடாதொழிவரேல், அதுவே இலங்கைவாசிகட்கு அவர் செய்யும் பேருதவியாகும்.

* * *

"மகததேசத்திலிருந்த சுகதத்தனென்னுமொருவன் கோயிற்றிருப்பணிக்காகக் கொண்டு வந்து அரியும்படி விட்ட மரங்களில், வாட்காரர் பிளத்தற்காக ஆப்புகளை இறுக்கிவிட்டுப் போக, அந்தக் கோயில் நந்தனவனத்திலிருந்த குரங்குகளில் ஒன்று முளைகள் அடிக்கப்பட்ட ஒரு மரத்தின்மீதுள்ள பிளப்புள் வந்து உட்கார்ந்து கொண்டு ஆப்புகளைப் பிடுங்கிவிட, பிளப்பு நெருங்க, அதனுள் அகப்பட்டுக் குடர் நசுங்கியிறந்ததெனப் பஞ்சதந்திரத்தில் ஒரு கதையுண்டு. "கவைமரத்தின் பிளப்பதனிற் கால்நுழைத்துக் கொண்டே, ஆப்பதனைப் பிடுங்கிவிட்ட குரங்கதனைப்போல அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீரே" எனப் பட்டினத்தடிகளும் இக்கதையைத் தமது திருப்பாடலிற் குறிப்பிட்டுள்ளனர். அநேகர் ஆப்பிழுக்கப் புறப்பட்ட குரங்கைப்போலத் தமக்கடாத கருமங்களிற் பிரவேசித்து இடர்ப்படுவதைக் காண்கின்றோம்.

* * *

உலகம் பலவிதம்: 1922 நவம்பர் 16

யாழ்ப்பாணச் சுகாதார சங்கத்தார் தெரு வீதிகளில் இப்பொழுது ஏற்றுந் தீபங்களை ஏற்றாதொழிவராயின் அதனாற் பெருந்தொகைப் பணம் எஞ்சுமெனச் சொல்லவேண்டியிருக்கின்றது. தெரு வீதிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தீபங்கள் எரிந்தாலும் எரியாதொழிந்தாலும் அதிக பேதம் ஏற்படாதெனலாம். அந்திப்பொழுதில் ஏற்றப்படவேண்டிய இத் தீபங்கள் இப்பொழுது சிற்சிலவிடங்களில் இரவு ஏழு மணிவரையில் ஏற்றப்படாமலிருக்கின்றன. சில தீபங்கள் தகழி "சிம்னி" முதலியன பழுதுற்றமையினாற்போலும் சில தினங்கட்கு ஏற்றப்படாமலிருக்கக் காணப்படுகின்றன. சில தீபங்கள் ஏற்றப்படுகின்றன ஆனால் வெளிச்சமில்லை. சில தீபங்களைப் பார்க்கும்போது, அவை அத் தீபத்தின் தம்பங்களில் வண்டி, மோட்டர்ரதம் முதலியன முட்டி அத் தம்பங்களைப் பழுதுறச் செய்யாவண்ணம் ஏற்றப்பட்ட தீபங்கள்போற் காணப்படுகின்றன. சில சில தீபங்கள் பிராதக் காலச் சந்திரனைப்போல ஒளி குன்றிக் கிடக்கின்றன. தீபங்கள் வாய்த்த நேரம் ஏற்றப்படாமல் நினைத்த நேரம் அவிந்துபோகின்றன. சில தீபங்கள் வெள்ளி செவ்வாயிற்றான் ஏற்றப்படுகின்றனபோலும், சில தீபச் சுடர் தெருவீதியாற் செல்வோரை ஓயாது எட்டியெட்டிப் பார்த்தபடி காணப்படுகின்றன. அநாவசியமாக நிலாக்காலத்திலே தீபம் எரிவதையும், தீபம் ஆவசியகமான மழைக்காலிருட்டுக் காலத்திலே எரியாதொழிவதையும் சில சமையங்களிற் பார்த்திருக்கின் றேம். தீபம் ஏற்றுபவன் ஒருபக்கத்தாற் சென்று எல்லாத் தீபங்களையும் முறையே ஏற்றிவிட்டு உடனே மீண்டு வந்து ஏற்றிய முறையே அவற்றை அவித்துவிடுவதாகத் தோற்றுகின்றது. சென்ற சனிக்கிழமையிரவு நமது ஆபீசிற்கு எதிர்ப்புறத்தே, அடங்குகிற ஆவிபோல மங்கி மங்கியெரிந்த தீபத்தை இரவு எட்டேமுக்கால் மணிவரையில், யாமும் எமது நண்பரொருவரும் தடுக்கவும் அவன் அவித்துச்சென்றான். யாழ்ப்பாணஞ் சுகாதாரசங்கத்தார் தெருவீதிகளில் வெளிச்சம் போடுவது, இராக்காலங்களில் அவ் வீதிவழியே செல்வோர்க்குப் பயன்படும்படியோ, இன்றேல் வேறு காரணம் பற்றியோ அறியேம். ஊரவர்களுடைய பணத்தைப் பெற்ற சுகாதார சங்கத்தார் அந்த ஊரவர்களின் வசதிக்குத் தக்கபடி வெளிச்சமிடுவதை யொழிந்து தங்கள் வசதிக்குத் தக்கபடி வெளிச்சம் போடுதல் அடாது. ஆனால் இன்னும் ஒருமாச காலத்திற்குத்தானே இந்தச் சங்கடங்களெல்லாம் நிகழும்; பின்னர் பட்டினபரிபாலன சங்கத்தார் தமது காலத்திற் பெரும் வெளிச்சம் போடுவார்களென்ற ஒரு ஆறுதலிருக்கின்றது.

[முடிவுப்பகுதி சிதைவடைந்துள்ளது]

* * *

உலகம் பலவிதம்: 1922 நவம்பர் 23

நமது நாட்டிலே ஆங்கிலம் கற்கும் மாணவர்களுட் பெரும்பாலார் கொண்டிருக்குங் கோலம் காலத்திற்குத் தக்கதாகவில்லை. இவர்கள் வித்தியாசாலைக்குச் சென்று கல்விபயில அறிவார்கள், இல்லையேல் விளையாட்டு முன்றிலிற் சென்று விளையாட அறிவார்கள். கமத்தொழிலையேனும் ஏதுமொரு கைத்தொழிலையேனும் கல்வி பயில்வதோடு விசேஷமாகப் பயின்றுகொள்ள வேண்டு மென்னும் ஆர்வத்தை இவர்களிடத்திற் காணோம். உலகத்திலே உண்ணவும் உடுக்கவும் உறங்கவும் ஆங்கிலம் பயிலவும் விளையாடவும் வாய்த்தால் உத்தியோகம் பார்க்கவுமே தாங்கள் திருவவதாரஞ்செய்ததாக நினைத்துக்கொண்டு இம்மாணவர் பேரிடர்ப்படுகின்றனர். வீட்டிலே தம் பெற்றார் பொருட்டுக் குனிந்து துரும்பெடுக்கவும் இவர்கள் மனங் கூசுகின்றார்கள். தம்மை உணவிலும் உடையிலும் ஒறுத்துப் படாத பாடெல்லாம் பட்டு, தம்பிள்ளைகள் தாம் படுந் தரித்திரத்தை உணராதபடி அவர்கட்கு வேண்டிய உணவு உடை குடை பள்ளிக்கூட வேதனம் கல்விக்குரிய புத்தகம் முதலிய உபகரணங்கள், சிகரற் பீடி சுருட்டு லெமொனட் லொஸன்சர் ஊற்றுப்பேனா றிஸ்ட்கெடிகாரம் பட்டுக் கைக்குட்டை பொடிப்பட்டை கறுவாப்பட்டை கடலை துவிசக்கரவண்டி (சைக்கிள்) முதலிய டாம்பீகத்திற்குரிய பொருட்களாகிய இவற்றின் செலவிற்கும் பணங்கொடுத்து இப்பெற்றார் பெரும்பான் மையும் இலவுகாத்த கிள்ளைபோல் அணாப்புண்டு போகின்றார்கள்.

* * *

இத்தம்பிமாரோ, தம்மைப் போஷித்தற்கும் தமக்குக் கல்வி பயிற்றுதற்கும் தம் பெற்றார் எத்துணைக் கஷ்டப்படுகின்றார்களென்பதை எட்டுணையுஞ் சிந்தியாது, கல்யாணவீட்டிலே தாலிகட்ட மறந்த பான்மையாக, தாங்கள் பிரதானமாகப் பயிலவேண்டியதாகிய கல்வி விஷயத்தை மாத்திரம் அலட்சியஞ் செய்து விளையாட்டு உண்டாட்டுக் களியாட்டு முதலிய வீண் விஷயங்களிலே பொருளைச் செலவு செய்து காற்காசும் பெறாத வீண் பழக்கங்களைப் பயின்றுகொள்ளுகின்றார்கள். இம்மாணவர்களுட் பெரும்பாலார் பழகிவரும் பழக்கங்களெனிலோ நினைப்போரை மனம் நடுங்கச்செய்யும் பான்மையன. பெற்றதாய் தந்தை தஞ்சுற்றத்தார் முதலிய பெரியோரை இவர்கள் ஒருபோதும் மதிக்கின்றிலர். தமது சாதிக்குரிய உடை நடை பாவனைகளைக் கைக்கொள்ளக் கருதுகின்றிலர். வகுப்பிலே தமக்குக் கல்விபயிற்றச் செல்லும் உபாத்தியாயர்களைச் க்ஷேமம் விசாரித்து அவர்களுக்கு மெல்லிய பரிகாசம் பகருகின்றனர். கல்வி விஷயத்திலே தவிர ஏனைய விஷயங்களிலே தாங்கள் உபாத்திக்கு மூத்துள்ளவரென எண்ணி யிடர்ப்படுகின்றனர். பந்தடிக்கும் அந்திக் காலம் எப்போது வந்தணுகுமென்பதிலேயே சிந்தையாக விருக்கிறார்கள். சில மாணவர் வகுப்பிலிருக்கும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணவீட்டிற்கு வந்திருப்பவர்கள்போலவும், கூத்துக்குச் சென்றிருப்பவர் போலவுங் காணப்படுவர். இவர்கள் சிந்தனை தாம் படிக்கவேண்டிய பாடங்களை யொழிந்த ஏனைய விஷயங்களெல்லாவற்றிலுஞ் சென்று சஞ்சரிக்கும். இதற்கிடையில் உபாத்தியாயர் பாடவிஷயமாக ஏதுங் கேள்வி கேட்டால் பிறிது கருமமாகத் தூரத்திற்குச் சென்றிருந்த சிந்தனையைத் திருப்பிக் கூப்பிடச் சில நிமிஷஞ் செல்லும்.

* * *

இனி இவர்கள் விளையாட்டு முன்றிலுக்குப் புறப்பட்டுவிட்டால் கூட்டிலிருந்த புலி வெளியே புறப்பட்டுக் காட்டிற்குச் செல்வது போலவிருக்கும். தெரு வீதியாற் செல்வோரிற் சிலரினுஞ் சிலரே இம்மாணவர்களின் பரிகாச வார்த்தைக்கு அகப்படாமற் செல்லுதல் முடியும். ஒரு கிழவன் வீதிவழியே போனால் அவனுக்கொரு பரிகாச வார்த்தை, மாட்டுவண்டி சென்றால் அதற்கொரு பரிகாசவார்த்தை, யாரும் பெண்பாலார் அலட்சியமாகச் சென்றால் அவர்கட்குப் பரிகாச வார்த்தை, புதிதாகத் துவிச்சக்கரவண்டியோடு மொருவர் ஒரு கிழவிமீது முட்டி கிழவியை வீழ்த்திவிட்டால் அதற்கு அடங்கா நகைப்பும், இடைவிடாக் கரகோஷமுஞ் செய்வர். இங்ஙனமெல்லாம் ஆநந்தவயத்தராகச் சென்று விளையாட்டு முன்றிலையடைந்தபின் அங்கே பந்தடிப்பார் சிலரும் வந்துபார்ப்பார் பலருமாகக் காணப்படுவர். இவர்கள் தேகவலிமையைச் சொல்லுகிலோ கீரைமரம் பிடுங்குவதற்கு ஏலப்பாட்டுப் பாடும் நிலையிலிருக்கின்றனர். அநாவசியகமான நவீனநாகரிகங்கட்கு இவர்கள் ஈடுபட்டு இவர்களது தேகபலமுஞ் சுகமுஞ் சந்தேகத்திலேயே யிருக்கின்றன.

* * *

எய்தவனிருக்க அம்பை நோவதுபோல யாம் இவர்களை நோவதாலும் குறைகூறுவதினாலும் ஆம்பயன் யாதுமில்லையாம். இவர்கட்கு விதேசியக் கல்வியை யொழித்துத் தேசியக் கல்வியை யூட்டவேண்டும். கல்வி பயில்வது உத்தியோகம் பார்த்தற்காகத்தான் என இவர்கள் கொண்டிருக்கும் எண்ணத்தை இவர்கள் மனத்தினின்றும் அறவே களைந்துவிடுதல் வேண்டும். மேய்த்தாற் கழுதை மேய்ப்பேன் இல்லையேற் பரதேசம் போவேன் என்றாங்கு "பார்த்தால் உத்தியோகம் பார்ப்போம் இல்லையேற் சும்மா விருப்போம்" என்றெண்ணி நடக்க இவர்களை விடவொண்ணாது. இப்பொழுது நமது நாட்டிலே ஊட்டப்படுங் கல்விமுறையிற் பெரும் மாறுதல் வந்தாலன்றி இவர்கள் பிற்காலத்திற் கடைத்தேறுதலரிதாகுமென அறிஞ ரொருவர் அறைகின்றார்.

* * *

உலகம் பலவிதம்: 1922 நவம்பர் 30

இது மெய்தானா? மானிப்பாய் மிஷன் வைத்திய சாலையில் ஒரு பெண் தன் குழந்தைக்கு வைத்தியஞ் செய்வித்துக்கொண்டு அங்குத்தானே விடுதிவிட்டிருக்கும்போது, ஒரு நாளிரவு அப்பெண் அணிந்திருந்த கைக்காப்பிலொன்றையும், குழந்தை யணிந்திருந்த கைக்காப்பிலொன்றையும் யாரோ திருடிப்போய் விட்டார்களென்றும், இப்பெண் பரம ஏழையென்றும் அறியலானோம். இங்ஙனமானால் வைத்தியஞ் செய்விக்கும்படி வந்த இந்த ஏழைப் பெண்ணுக்கு நேர்ந்த நஷ்டத்திற்குப் பொறுப்பாயுள்ளார் யார்? விடுதி வைத்தியசாலையில் வைத்தியஞ் செய்விக்கும்படி வந்து தங்கியிருப்போரின் க்ஷேமத்திற்கும் பாதுகாப்பிற்கும் வைத்தியசாலை யதிகாரிகளே பொறுப்புடையர்களாயிருத்தல் வேண்டும். இப்படிப்பட்ட வைத்தியசாலைகளிற் காவற்காரர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்களே. அவர்கள் கடமையென்ன? இதுபோன்ற இன்னொரு வைத்தியசாலையிலும் முன்னர் இவ்வாறான களவு நடந்ததை யாமறிவோம். இவைமாத்திரமன்றி, பெண்கள் கல்வி பயிலும் விடுதிச்சாலைகளிலும் இத்தன்மையான களவுகள் முன்னர் நடந்திருக்கின்றன. இப்படிப்பட்ட களவுகள் உளவின்றி நடக்கமாட்டா ஆதலால் அதிகாரிகளாகவுள்ளவர்கள் தமது சிரமத்தைப் பொருட்படுத்தாது நன்கு ஆராய்ச்சி செய்து உளவாயுள்ளவர்களைக் கண்டுபிடித்துத் தக்கவாறு தண்டிப்பித்தல் வேண்டும். இல்லையேல் இவ்வகையான செயல்களாற் காலகதியிற் பெருந் தீமைகள் விளையுமென்பது திண்ணம்.

* * *

நாற்பத்தைந்து ஐம்பது வயசுவரையிலுள்ள ஒருவர் ஒருதினம் தமது வீட்டுத் திண்ணையில் ஒரு பாயின்மீது உட்கார்ந்து கொண்டு தன்மனையாளை அருகிலழைத்து "ஏனப்பா, நான் சொல்லும்படி உன்னிடஞ் சொன்ன விஷயமெல்லாம் இன்று நீ அவனுக்குச் சொன்னாயா? அவன் என்ன சொல்லுகிறான்" என்று கேட்க, மனையவள் "அவன் சொன்ன சங்கதிகளையெல்லாம் நான் உங்களுக்குச் சொன்னால் நீங்கள் அவனை வாயில்வந்தபடி வைதுவிடுவீர்கள்; அவன் கொஞ் சமேனும் எங்கள் கேள்விக்கு உடன்படுகிறானில்லை; நான் என்னால் ஆன மட்டுஞ் சொல்லிப்பார்த்தேன்" என்று விடையளித்தாள். அந்தப் பெரியவர் சினங்கொண்டு "ஆகா! அவர் சம்மதிக்கமாட்டேனென்கின்றாரா, அந்தப் பிரபுவுக்கு என் குணந் தெரியவில்லை; பைத்தியகாரி, நான் சொல்லச் சொல்லக் கேளாமல் நீ தானே அவனைக் கெடுத்து விட்டாய்; தம்பி இங்கிலீசு படித்தது போதும்; அவன் இப்பொழுது என் கண்முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்பானாகில் நான் அவனுக்குச் செய்கிறவேலை செய்வேன்" என்று துள்ளியெழுந்தார். மனைவி ஒருவாறு அவரைச் சமாதானம்பண்ணி மீளவும் பாயிலிருக்கச் செய்த பின் அவர் தம் மனையாளை நோக்கி "அந்தக் கல்யாணத்தைச் செய்வதற்கு அவன் என்ன தடை சொல்லுகிறான்" என்றார். மனைவி தன் தலையைச் சொறிந்துகொண்டு "உங்கள் மருமகள் இங்கிலீசு படிக்கவில்லையாம்; பாவாடை தாவணி உடுத்துக் கொள்ளவில்லையாம் மூக்கிலும், காதுமுழுவதும் துவாரஞ் செய்து கொண்டார்களாம்; சவர்காரம், என்னவோ மா பாவிக்கத் தெரியாதாம்; குளிக்கும்போதும் முழுகும்போதும் அரப்பும், அவை முடிந்தபின் திருநீறுந்தான் பாவிக்கத் தெரியுமாம்; திண்ணையிலும் நிலத்திலும் இருக்கத் தெரியுமல்லாமல் கதிரையிலும் சார்மனைக் கதிரையிலும் இருக்கிற விதஞ் சிறிதுந் தெரியாதாம்; அவைகளைப் பழக்க ஆறு மாசஞ் செல்லுமாம்; காலை தொடக்கம் அர்த்த சாமம் வரையில், வீடு பெருக்குவதும் மெழுகுவதும் நெல்லுக்குத்துவதும் தண்ணீர் கொண்டுவருவதும் மாடுகன்று பார்ப்பதும் சமையல் செய்வதும் பன்னவேலை செய்வதும் கிடுகு பின்னுவதும் ஆகிய இப்படிப்பட்ட வேலைகளை வண்டிமாடு போலச் செய்யத் தெரியுமேயன்றி, வீணை வாசிக்கவும், ஏதோ பாட்டுப்பெட்டி வாசிக்கவும், பாட்டுப் பாடவும், பந்தடிக்கவும் சொக்கட்டானாடவும், வேறுமென்னென்னவோ செய்யவுந் தெரியாதாம் என்று தம்பி குறைசொல்லுகிறான்" என்று மனைவி மறுமொழி சொன்னாள்.

* * *

பெரியவர் தம்மிடத்தெழுந்த கோபத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு "வேறு என்ன செய்யத் தெரியா தென்றான். சொல்லத் தொடங்கின நீ அவைகளையுஞ் சொல்லி விடலாமே" எனலும், இல்லாள் "நீங்கள் ஏன் அவைகளெல்லாம் விசாரிக்கின்றீர்கள்? அவனுக்குப் பிரியமில்லையென்றால் விட்டுவிடுவதுதானே" உங்களுக்கும் அவனுக்கும் விலக்குப்பிடிப்பது என்றால் எனக்குப் பிராண சங்கடமாகவிருக்கின்றது; நீங்கள் இரண்டுபேரும் எப்பொழுதும் கீரியும் பாம்பும் போலிருந்தால், இதற்குப் போம் புத்தியென்ன? அவன் சிறுபிள்ளை அதனோடு ஒரேயொரு பிள்ளை என்பதைக்கூட நினைக்கின்றீர்களில்லை; இப்படி மத்தளம்மாதிரி இரண்டு பக்கத்தாலும் அவனை நெருக்க அவன் எங்காயினும் ஓடிவிட்டாற் செய்வதென்ன; உங்களுக்கென்ன நீங்கள் பேசாமல் திரிவீர்கள், பத்து மாசமுஞ் சுமந்துபெற்ற என்வயிறன்றோ கொதிக்கும்" எனலும் பெரியவர் "நான் குறை சொல்லவில்லை, அவன் சொன்னதைச் சொல்லு" என மனைவி கூறுகின்றாள்.

* * *

"உங்கள் மருமகள் யாரும் வந்தால் சோனகப் பெண்கள் மாதிரி ஓடியொளித்துக் கொள்கின்றாளாம்; இப்பொழுது இப்படிச் செய்கிறவள், கலியாணமானபின் எவரேனும் தன்னுடைய கூட்டாளிமார் வந்தால் உபசரிப்பதெப்படி, கைகுலுக்குவதெப்படி, கௌரவமாய் வார்த்தை யாடுவதெப்படி, பின்னேரத்தில் உலாத்திற்குப் போவதெப்படி, என்னவோ இங்கிலீசு விருந்துக்குப் போவதெப்படி, ஒரு சினேகிதன் தன் வீட்டிற்கு வந்தவிடத்தில், உம்முடைய - (ஏதோ இங்கிலீசிலே சொன்னான் அதை மறந்துபோனேன்) பெரியவர்-மிசிசுக்கு என்று சொன்னானா; மனையாள் - ஓம் அப்படித்தான் சொன்னான்) - மிசிசுக்குப் பாடத் தெரியுமோ என்று கேட்டால், இல்லை பன்னவேலை தெரியுமென்றுதான் சொல்வதோ, பாட்டுப்பெட்டியையெடுத்துக் கொண்டுவந்து சற்றே பாடச்சொல்லுமென்று தன்னைக் கேட்டால், இவள் தென்னோலையை முன்னிலையிற் கொண்டுவந்து போட்டுக் கிடுகு பின்னுவதோ, தனக்கு அந்தப் பெண் வேண்டாம், அவர்கள் வசதியாக வேறெங்காயினும் பார்த்துக் கொள்ளட்டும், தன்னை நம்பியிருக்கவேண்டாமென்று சொன்னான்" என்றாள்.

* * *

பெரியவராற் கோபத்தையடக்க முடியவில்லை. "அந்தக் கீழ்சாதிப் பயல் அப்படியா சொன்னான்? அவனுக்குத் தன் யோக்கியந் தெரியவில்லை; இந்த அயோக்கியப் பயலுக்கு யாராயினும் பெண் கொடுக்கச் சம்மதிப்பார்களா? இதுவும் என் மைத்துனனுக்குக் கொஞ்சமும் பிரியமில்லை, என் தங்கை என்னுடன் கூடப் பிறந்த ஒரேயொரு சகோதரி. தன் அண்ணன் பிள்ளையைத் தான் புறக்கணித்தால் மற்றவர்கள் கொஞ் சமுங் கவனியார்களேயென்று முகத்துக் கஞ்சி ஒருவாறு சம்மதிக்க, காலுந் தலையுங் கூடிக் காற்காசு பெறாத இந்தப் பயல், விபரந் தெரியாத அந்தப் பிள்ளைக்கு வசை கற்பிக்கத் தொடங்கியிருக்கிறான். பெட்டி வாசிக்கத் தெரியாதாம், வந்தவருக்குக் கைகொடுக்கத் தெரியாதாம், வந்தவருக்குக் கையைக் கொடுத்து விட்டு அவள் உண்ணுதற்கு, இல்லையேல் ஏதும் வேலை செய்வதற்குக் கைக்கு எங்கே போவது? என்று பெரியவர் அட்டகாசஞ் செய்ய, மனையவள் அவரையொருவாறு ஆற்றி, "ஐயோ, நீங்கள் பெற்ற பிள்ளையை இப்படியெல்லாம் பேசினால், உங்கள் பிள்ளை அப்படிப் பேசுவது புதினமல்லவே" எனலும் பெரியவர் "பைத்தியகாரி, உலகத்திலே பிள்ளைகளெல்லாரும் உன் மகனைப்போலத்தானிருக்கின்றார்களா" வென மனையாள், "இப்படியுமுண்டு; அப்படியுமுண்டு. நீங்கள் அவனைக் கோபிப்பதை விட்டு ஆதரவாகக் கூப்பிட்டுப் புத்தி சொல்லுங்கள்" என இரந்தாள். அதற்குப் பெரியவர் ஒருவாறு உடன்பட்டு "சரி இன்றைக்கு நாளைக்கு எனக்கு நேரமில்லை, நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே போகவேண்டும், போனால் வருகிற வியாழக்கிழமை வரையிலேதான் மீண்டு வருவேன்; அப்பொழுது, அந்த முட்டாட் பயலை நேரிற் கூப்பிட்டு இயன்றவரையிற் சொல்லிப்பார்க்கிறேன்" என்றார்.

* * *

உலகம் பலவிதம்: 1922 டிசெம்பர் 07

"இந்த ஓல்ட்மான் உடன் (கிழவனுடன்) காலம்விடுவது மிகவுங் கஷ்டம். நான் ஏன் இந்த வூலுக்குப் (மூடனுக்கு) பிள்ளையாகப் பிறந்தேன்; இன்றைக்கு என்னை நேரிற் காண வேணுமாம்; கண்டால் உள்ள "றிக்காட்டும்" (மரியாதையும்) போய்விடும். நான் அந்த மறீஜிற்குக் கன்ஸன்ற் பண்ணாவிட்டால் (விவாகத்திற்குச் சம்மதிக்காவிட்டால்) இவர் விட்டுவிட வேண்டியதல்லவோ நியாயம். விவாகஞ் செய்வது நானல்லவா? இக்காலத்தில் நாகரிகத்திற்கு இசைய நடக்கக்கூடிய "கேள்" (பெண்) எப்படியிருக்க வேண்டுமென்பதைப்பற்றி இந்தக் கிழவனுக்கு எப்படித் தெரியும்" என்று இருபத்தைந்து வயசு வரையிலுள்ள ஒரு வாலிபன் தன் கூட்டாளியோடு தனது வீட்டுத் தலைவாசலிற் பேசிக்கொண்டு, அப்பேச்சு "சிக்கறற்" புகைப்பதினாலே இடையிடையே தடைப்பட இருக்குஞ் சமையத்தில், வீட்டுத் திண்ணையிலிருந்த தகப்பன் அவனைப் பெயர்சொல்லிக் கூப்பிட, அவ்வாலிபன் சினந்துகொண்டும், முணுமுணுத்துக்கொண்டும் தன் பிதாவிடஞ் சென்றான்.

* * *

"தம்பி நீ சாப்பிட்டுவிட்டாயா, உந்தத் திண்ணைக்குந்திலே கொஞ்ச நேரம் இரு" என்று தகப்பன் சொல்ல மகன், "நானிருக்கவில்லை நீங்கள் சொல்லவேண்டியதைச் சொல்லுங்கள், "ஐ ஆம் இன் ஏ ஹறி; ஸம் படி உவெயிற்றிங் வோர் மீ" (நான் அவசியம் போகவேண்டும் வெளியில் யாரோ என்னை எதிர்பார்த்துக் கொண்டு நிற்கிறார்க) ளென்றான். "அப்படி அவசியமானால் காத்துநிற்பவர்களுடைய கருமத்தை முடித்துவிட்டுச் சீக்கிரம் வா, பின்பு பேசிக் கொள்வோம்" என்று பெரியவர் சொல்ல, பையன் "நெவர் மயின்ட் லெட் ஹிம் உவெயிட்" (காரியமில்லை நீங்கள் சொல்லுங்கள். அவர் காத்து நிற்கட்டும்) என்றான். "தம்பி, நான் சொல்வதைக் கவனமாகக் கேள்; நீ இன்னமுஞ் சிறுபிள்ளையல்ல; இனி, நீயாகவே உணர்ந்து நடக்க வேண்டியபடி நடக்க உனக்கு வயசு போதாதா? உன் விவாக விஷயமாக உனக்குச் சொல்லும்படி உன் தாயாரிடஞ் சொல்லியிருந்தேன். நாங்கள் பெண் வீட்டாருக்கு நெடுகத் தவணை சொல்லிக்கொண்டு வருவது சரியல்ல. கல்யாணத்திற்காகிய ஆயத்தங்களை நான் செய்யவேண்டும்; நீ என்ன சொல்லுகிறாய்" என்று கேட்டார். பையன் "அது சந்தியாது" என்றான். தகப்பன் தனக்கு உண்டான மன ஆத்திரத்தை வெளியே காட்டாமல், "தம்பி இங்கே வா, நான் சொல்வதைத் தட்டாதே; பிதா மாதா மனம் வருந்த நடவாதே; பிள்ளைகளுடைய நன்மையை விரும்பியே நாங்கள் எதனையுஞ் செய்வோம்; இந்தச் சம்பந்தம்போல் எதுவும் உனக்கு வாய்க்காது; இது நல்ல சம்பந்தம்; அந்தப் பிள்ளை எங்கள் சொந்தப் பிள்ளை; ஒன்று வந்துவிட்டால் அவளுக்கு ரத்தம் துடிப்பதுபோல் பிறத்தியாருக்குத் துடிக்குமா? நீ நல்லாய் நினைத்துப் பார்; அகத்தி ஆயிரங்காய் காய்த்தாலும் புறத்தியே புறத்தி; மகனே, வீண்புத்தியை விட்டுவிட்டு நான் சொல்லுகிறபடி அதைச் செய்" என்றார். "ஐ மஸ்ற் திங்க் ஓவர் இற்" (நான் அதைப்பற்றி யோசித்துச் சொல்லவேண்டும்) என்று மகன் சொல்லத் தொடங்கப் பெரியவர் ஆத்திரங் கொண்டு, "எடே, என்னோடு இங்கிலீசு பேசாதே, உன்னுடைய இங்கிலீசை அறிந்தவர்களோடல்லவோ நீ பேசவேண்டும்; நீ தீட்டுத்தடியிலே கூர் பார்க்கிறாய்; அது கிடக்க, இந்தக் கலியாணம் உனக்குப் பிரியமில்லையென்கிறாய், ஏன் பிரியமில்லை? நீ வேறு எங்கே பார்த்திருக்கிறாய் அதனையுஞ் சொல்லு; உன் எண்ணத்தை அறிந்து கொள்வது நல்லது" என்று கேட்க, பையன் "உங்கள் மருமகளுக்குக் காலத்திற்குத் தக்கபடி நடக்க உடுக்க ஊடாடத் தெரியாது; அவர்கள் ஒரு "அப்ருடேற்" ஆன ஆட்களல்ல; (இந்தக் காலத்து மாதிரிக்குத் தக்கதாக நடக்கத் தக்கவர்களல்ல); (தகப்பன்: இங்கிலீசை விட்டு விட்டுத் தமிழிலே பேசு மகனே!) அல்லாமலும் என்னுடைய "கன்ஸன்ற்"றுக்கு (சம்மதத்திற்கு) மாறாக நீங்கள் எதுவுஞ் செய்யக்சொல்லிக் கேட்பது சரியல்ல" என்றான்.

* * *

தகப்பன் "ஏ, முட்டாட் பயலே வீணாய் எனக்குக் கோபம் மூட்டாதே, நீ உன்னை மறந்து கதைபேசுகிறாய், நான் சொன்னபடி செய்வதுதான் உன்கடமை, எங்களிலும் பார்க்க நீ கூட அறிந்துவிட்டாய்போலிருக்கிறது, நீ ஆருக்கு இந்த மறுமொழி சொன்னாய், உன்னை ஒரே யொரு பிள்ளையென்று நினைத்து நான் படாத பாடெல்லாம் பட்டு வளர்த்துப் பள்ளிக்கு வைத்து இங்கிலீசும் படிப்பித்து நீ நல்லாய் வருவாயென்று காத்திருக்க நீ என்னை வித்தியாசமாக நினைத்துக்கொண்டு கதை பேசுகிறாய், இது உன் குற்றமல்ல, நீ கூடின கூட்டத்துப் பழக்கம், உன் தாயும் உனக்குச் செல்லங் காட்டி உன்னைப் பழுதாக்கிவிட்டாள்; உன் அம்மான் மகளைப் பற்றி நீ என்ன குறை சொல்ல முடியும்? அவள் சாதிமரபிற் குறைவா? அழகிற் குறைவா? ஒழுக்கத்திற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவா? உடைநடை பாவனையிற் குறைவா? பெண் பிள்ளைகளுக்கு வேண்டிய வீட்டு வேலைகளைப் பார்ப்பதிற் குறைவா? தமிழ்ப் படிப்பிற் குறைவா? இந்த நாளையில் நாகரிகந்தெரியாதென்றாய், இந்த நாகரிகமேன் உனக்கு; இந்த நாகரிகத்தை நீதானே நல்லாய்ப் பழகியிருக்கிறாய்; பழகிய படியினாலேதான் நீ என்னோடு இப்படி வார்த்தையாடுகிறாய்; "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" என்றதை மறந்துவிட்டாய்; என்ன செய்வது பெற்ற மனம் பித்தும் பிள்ளை மனங் கல்லும் என்றபடி நீ ஒரேயொரு பிள்ளையென்று, நான் கொஞ்சம் உலோபிக்கிறேன்; நீ நான் சொன்னபடி செய்யவேணும் இல்லாவிட்டால் நீ மெத்தத் துக்கப்படவேண்டி வரும்" என்றார்.

* * *

"இந்த காரியத்தில் நீங்கள் உங்களுடைய சொற்படி செய்யவேண்டும் என்று சொல்லி என்னைக் கேட்கக்கூடாது, செய்யவேண்டியது என்னவென்று எனக்குத் தெரியும். நான் அவசியம் போகவேணும்" என்று அவ்விடத்தை விட்டு வாலிபன் புறப்படத் தகப்பன் தடுத்து "இதிலும் பார்க்க அவசியமான தொன்றுமில்லை; இங்கே நில், நீ நான் சொன்னபடி செய்யாவிட்டால் என் காணிபூமி பொருள்பண்டங்களில் ஒரு எள்ளத்தனையும் உனக்குத் தரமாட்டேன். உனக்கு முளைக்க முந்தி இவ்வளவு மிடுக்கானால், இன்னும் நாலு வருஷம் போக எனக்குந் தள்ளாத காலம் வர நீ குதிரையேறத் தொடங்கிவிடுவாய், நீயா எங்களைப் பிற்காலத்திற் பார்க்கப்போகிறாய்; குலம் ஒழுக்கம் ஆசாரம் என்னுமிவைகளைப் பாராமல், நீ உன் எண்ணத்திற்கு ஒருத்திபின்னே போய், இந்தப் பெண்ணைக் கண்டவர் எருமை மேய்க்கப்போவரோ என்றாற்போல, அவளுடைய தொண்டுகளைச் செய்துகொண்டிரு. நீயா எனக்குப் பிள்ளையாய் வந்து வாய்த்தாய். கொச்சை மக்களைப் பெறுதலின் அக்குடி எச்சமற்று ஏமாந்திருக்கை நன்றே என்பர். நீ எனக்குப் பிள்ளையுமல்ல, நான் உனக்குத் தகப்பனுமல்ல, பொல்லாப்பிள்ளையில் அல்லாப்பிள்ளை; நாயே நீ எக்கேடு கெட்டாலுஞ் சரி" என்று வாயில் வந்தபடி வைதுவிட்டு அடங்காச்சினத்தோடும் துயரத்தோடும் புறப்பட்டு வெளியே போகின்றார்.

* * *

உலகம் பலவிதம்: 1922 டிசெம்பர் 14

"யாழ்ப்பாணத்திலுள்ள கள்ளு, சாராயத் தவறணைகள் பல அகற்றப்பட்டன - படுகின்றன. இப்படிச் செய்வதினாலே மதுபானத்தால் வருங் கேடும் பொருட்செலவும் விரைவில் நீங்கிவிடுதல் கூடுமென நம்மவர் எண்ணக்கூடும். ஆனால் விஷயம் அப்படியன்று, மேலைத்தேச மதுபானங்களாகிய பிறண்டி, விஸ்க்கி முதலியன விற்கப்படுஞ் "சாப்பு" கட்கு இப்பொழுதிருக்கும் மானம் வேறு எதற்கும் எவருக்கும் இல்லையெனலாம். கள்ளுக்குஞ் சாராயத்திற்கும் பிரதியாக "ஜின்" எனப்படும் ஒரு மதுபானம் புறப்பட்டிருக்கின்றது. ஜின் வேண்டியமட்டிற்குச் "சாப்பு"களில் இருப்பதால் மதுபானிகட்குப் பணப்பஞ்சமன்றி மதுபானப் பஞ்சமில்லை. கள்ளுக்கடைகளுக்குஞ் சாராயத் தவறணைகளுக்குஞ் சென்று வந்தவர்கள், அவை அகற்றப்பட்டபின்னர் சனிவாரத்திற் காலையிலும் மாலையிலும் ஏனைய வாரங்களில் மாலைக் காலத்திலும் கிரமமாகப் பறங்கித்தெருவிலுள்ள குடிவகைச் சாப்புகளைத் தரிசனஞ்செய்து வருகின்றார்கள். நீடித்தகாலமாக மதுபானத்தை அபிமானித்துவந்த ஒருவரை யாம் கண்டு "அண்ணே, உங்கள்பாடு இப்பொழுது பெருஞ் சங்கடமாயிற்றே என்ன செய்கின்றீர்கள்" என்று வினவ, அவர் நகைத்து "தம்பீ, நீர் சொல்வது தப்பு; கள்ளு, சாராயம் என்றால் முன்னரும் எனக்கு வெறுப்புத்தான். என்ன செய்வதென்று அவைகளைக் குடித்து வந்தேன். புளிச்சற் கள்ளையும், ஈரலையறுக்குஞ் சாராயத்தையும் விட்டு, ஜின்னையல்லவோ குடிக்கவேண்டும்; அது அதிகம் மஸ்து உள்ளதானாலும், குடிவகையல்ல; எல்லா வியாதிகளுக்கும் மருந்து தம்பீ; கொஞ்சம் விலைகூடத்தான்; அதுக்கென்ன செய்கிறது" என்றார். அவருடன் இன்னுங் கொஞ்ச நேரந் தாமதித்துப்பேசினால், அவர் நம்மையும் மதுபானஞ் செய்யும்படி தூண்டி விடுவார் போலிருந்தமையினால் நான் சரி, அண்ணே, போய் வாருமென்று சொல்லிக் கடத்திவிட்டேன் என ஒரு வித்தியாசாலை உபாத்தியாயர் கூறினார்.

* * *

சாராயத்தைப் போத்தலில் வீட்டிற்கு வாங்கிக்கொண்டு போகவொண்ணாது, குடிக்க விருப்பமானவர்கள் தவறணையில் நேரிற் சென்று குடித்துவிட்டு வருதல்வேண்டுமென அரசினர் இவ்வருடத்தில் ஒரு புதிய பிரமாணத்தை விதித்திருக்கின்றனர். இப்படிச் செய்வதினால் மதுபானஞ் செய்வோரின் தொகை குறைந்துவிடுமென்பது அரசினர் நோக்கம்போலும். ஆனாற் காரியம் அப்படியன்று குடிக்கப் பழகிக்கொண்ட ஆடவர் வீட்டில் எடுப்பித்துக் குடிக்க வசதியில்லாவிட்டால் தவறணைக்கு நேரிற் போய்க் குடிக்கக் கூசார்கள். அதுவுமன்றிச் சுருட்டுத்தொழில் செய்யாதோரும், சுருட்டிற்கு இடப்படும் கோடாவிற்கென்று சாராயம் வாங்கிச் செல்கின்றார்களென அறிகின்றேம். சுருட்டுத் தொழிலில் மிக்க அனுபவம் படைத்த ஒருவர் கோடாவிற்குச் சாராயம் வேண்டியதில்லையெனக் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாராயத்தை வேண்டி எக்காலத்தும் நோயென்று சாதித்துவரும் சில பெண்களே இந்தப் பிரமாணத்தினாற் பெரிதுஞ் சங்கடமடைதல்கூடும். இவர்களுக்குச் சாராயம் இருந்தாலும் நோய், இல்லையேற் சாராயம் அகப்படவில்லையே என்ற துன்பம் எக்காலத்துமுண்டு ஆதலால் இவர்கள் நோயுந் துன்பமும் தீர்ந்த பாடில்லையாம். "வீட்டிற் சுகமில்லை" யெனச் சொல்லிச் சொல்லிச் சாராயத்தைத் தவறணையில் வாங்கிச் சென்ற புருஷசிகாமணிகள் இப்பொழுது நேரில் வந்து தாமே மதுபானஞ் செய்துவிட்டுச் செல்கின்றார்களெனத் தவறணை வைத்திருப்பவரொருவர் சொல்லுகின்றார். புருஷன் தவறணையிற் குடிக்க மனைவிக்கு வீட்டிற் சுகம் வந்து விடும்போலும். சாராயத்தை ஒருவன் வாங்கிக் கொண்டுபோய் வீட்டிற் குடிப்பதினாலே அவன் தன்னுடைய மனைவி மக்களுக்கும் வீட்டிலுள்ளாருக்குமே சங்கடத்தை விளைக்கின்றான். அரசினரின் புதுப்பிரமாணப்படி தவறணையிலேயே குடித்துவிட்டுப் போவதினால், தவறணை வாசற்படியினின்றுமிறங்கவே அவனுக்கு வெறி தலைக்கேற, அவன் தெருவாற் செல்லும்போது, வழிப்போக்கர்களாகிய பெண்களுக்கும் சிறுவர் சிறுமியருக்கும் அச்சத்தை விளைத்துச் செல்கின்றான். வெறி இன்னுமதிகந் தலைக்கேற மோட்டர் ரதம் முதலிய வண்டிகளின் போக்குவரவிற்குத் தடையாய் றோட்டிலே தறியுண்டு வீழ்ந்த பனைபோற் குறுக்கே கிடக்கின்றான். சில காலங்களில் இவ்வெறியன் தன் வீட்டிற்குப் போதற்கு முன் வெறி முறிந்துவிடுவதினால் அவனுடைய வீட்டிலுள்ளாருக்கு இதனால் இடைஞ் சலுமில்லையாகின்றது.

* * *

பகன், தனக்கு ஒரு வண்டி உணவுங் கொண்டு நரபலியாக வந்த வீமன் அந்த உணவு முழுவதையும் உண்டுகொண்டிருப்பதைக் கண்டு, அடங்காச் சீற்றங்கொண்டு சமீபத்தில் ஓடிவந்து தன் கையை முட்டியாகப் பிடித்து வீமனுடைய மார்பின் மீதும் தோளின்மீதும் முதுகின்மீதும் குத்த வீமனது தொண்டையுள் விக்கிநின்ற கவளங்களெல்லாம் வயிற்றுட் புக்கன. பகனும் தன் கையலுத்து, "புக்க பண்டமுடன் உன்னுடற் றசை புசிப்பன் எங்ஙன் இவைபோவது" (உன்னை யான் புசிப்பேனாதலால் நீ உண்ட இவ்வுணவு வீண் போகாது) என்று சொல்லித் தன் மனசைத் தானே சமாதானப்படுத்திக்கொண்டான். வீமன் பகனைக் கொல்லாது பகன் வீமனை யுண்டிருப்பனேல் அவன் கூறியதும் ஒருவாறு பொருந்தும். நமது அரசினர் ஊரவர்களுக்கு நன்மைசெய்யப் புகுந்து கள் சாராயத் தவறணைகளை அகற்றிவிடுவதினாலே அரசியல் வருவாய் குறைந்துபோமேயென மனம் வருந்துதலுங் கூடும். கள் சாராயத் தவறணைகள் நிறுத்தப்படவே மேலைத்தேசக் குடிவகைகள் அதிகமாகச் செலவழிகின்றன. அதனால் அரசிறையும் அதிகரிக்கும். கள் சாராயஞ் செலவழிதலினாலே கிடைக்கும் பணத்திற் பெரும்பாகம் உள்ளூரிலேயே செலவாகும். மேலைத் தேசக் குடிவகையிலிடும் பணம் மேலைத்தேசத்தையே யடையும். ஆதலாற் பகன் கூறியது போல் இதனால் ஒருவாறு அரசினருக்கு லாபமன்றி நஷ்டம் யாதுமில்லையாம். அரசினர் மேலைத்தேச மதுபானம் விற்குங் கடைகளையுந் தவிர்த்தாலன்றி மதுபானத்தை அறவே நீக்குதலும் அதுவாயிலாகச் சனங்களுக்கு நன்மை செய்தலும் அசாத்தியமெனவும், இவ்விஷயத்தைக் குறித்து விரிவாகப் பத்திரிகையில் எழுதும்படியும் எமக்கு ஒரு அபிமானி தெரிவிக்கிறார்.

* * *

சந்திரிகையோடுகூடிய ஒருநாள் இரவு 7 மணிவரையில் காதலரிருவர் கடற்கரையோரத்தில் நின்ற அரசமரத்தின்கீழ் வைக்கப்பட்ட ஆசனத்தின்மீது உட்கார்ந்துகொண்டு சரசசல்லாபமாகச் சம்பாஷிக் கலாயினர். இதற்கிடையில் அவ்வழியே வந்த ஒரு கிழவனும் அம்மரத்தின் பிறிதொரு பக்கத்தே ஒரு வேரின்மீது வந்து உட்கார்ந்தான். கிழவன் இவ்விருவரையுங் கண்டானேயன்றி இவ்விருவரும் கிழவன் வந்திருப்பதை யறிந்திலர். காதலரிருவருள் வாலிபன் உயர்தரக்கல்வி பயில்வதற்காக இங்கிலாந்திற்கு அடுத்தநாட் காலை புறப்படவேண்டியவன், அவன் தன் காதலியை நோக்கி "மை டியர், இன்றைக்குத் தான் கடைசியாக நாங்கள் இரண்டுபேரும் இப்படிச் சந்தோஷமாக இந்த இடத்தில் வந்திருக்க வாய்த்தது இனி எப்போது வாய்க்குமோ நானறியேன்" என்று பிரிவாற்றாது மனம்வருந்திச் சொன்னான். "நீங்கள் நாளைக் காலை எத்தனை மணிக்குப் புறப்படவேண்டும்" என்று அக்கன்னிகாரத்தினம் ஆர்வத்துடன் கேட்க, வாலிபன் "கண்ணே, நான் நாளைக்கு 8 மணிக்குக் கப்பலேறுதல்வேண்டும். என்னாருயிரே, கடிதமெழுத மறந்துவிடாதீர்; உமது கடிதமே எனக்கு இனிமேல் ஆறுதல்" என்றான். அப்பொழுது காதலி "நாளைக்கு இந்நேரம் நீங்கள் கப்பலில் இருப்பீர்கள்" என்றாள். "ஆம், கண்மணீ நான் நாளைக்கு இந்நேரம் கடலிலே கப்பலிலேயிருப்பேன், நீர் இந்த இடத்திலே தன்னந்தனியே இருந்து கொண்டு, நான் இப்பொழுது உட்கார்ந்திருக்குமிடம் வெற்றிடமாகவிருக்க, அதைப் பார்த்து மனம் வருந்திக்கொண்டுதானேயிருப்பீர்" என்று அந்த வாலிபன் அதிக மனத்துயரோடும் பெரு மூச்சோடுஞ் சொன்னான். "ஏன் தம்பி, உம்முடைய இடத்திற்கு நாளைக்கு இன்னொரு வாலிபன் வந்திருந்துகொண்டு உன் கண்மணியுடன் பேசிக்கொண்டிருப்பானே; நீர் ஏன் அதைப் பற்றிக் கவலை கொள்ளுகின்றீர்" என்று கிழவன் இடையிற் சொல்ல, இருவருந் திடுக்குற்றுத் திரும்பிக் கிழவனைப் பார்த்தனர். பின் வாலிபன் கிழவனைப் பார்த்து "அப்பா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் அப்படி அபவாதஞ் சொல்லுகின்றீர்; உங்கள் வயசில் ஆட்கள் இப்படிச் சொல்வது சரியல்லவே" என்றான். கிழவன் பெருமூச்சுவிட்டு "தம்பீ, வருகிற ஆடியோடு எனக்கு வயசு எழுபத்தெட்டு முடிகிறது; எனக்குள்ள அனுபவம் உனக்கெப்படியுண்டு? "உலகம்பலவிதம்" என்பதை நீ இந்த நேரத்தில் அறியமாட்டாய்" என்றான்.

* * *

உலகம் பலவிதம்: 1922 டிசெம்பர் 21

கச்சேரிக் கிளார்க் ஒருவர் "இந்துசாதன" பத்திரிகாசிரியரைச் சந்தித்து "என்ன, ஐயா, உம்முடைய பத்திரிகையில், "ஊரிலே பண இடைஞ்சல் அதிகம்; ஏழைகள் உண்ணவும் உடுக்கவுங் கஷ்டப்படுகின்றார்கள்; இப்படியிருக்க அரசினர் கடும் வரிகளை ஏழைகள்மேல் விதிக்கின்றார்கள் என்று ஒருமுறையன்றிப் பலமுறை எழுதிவருகின்றீர் உமது செயலைப் பார்க்கும் போது பொருளிருந்தாலும் இல்லாவிட்டாலும் கொடுத்தாலும் கொடாவிட்டாலும் தம் நாயகனைக் குறைகூறுஞ் சிலபெண்களின் செயல் போலிருக்கின்றது; உண்மையாக ஊரவர்களிடத்திற் பொருளில்லையென்றா சொல்லுகின்றீர்? இந்த யாழ்ப்பாணத்திலே இப்பொழுதிருக்கின்ற செல்வம் முன்னொருபோது மில்லையெனலாம்; இப்பொழுது எத்தனை மோட்டர்வண்டிகளோடுகின்றன; எத்தனை மோட்டர்பஸ் ஓடுகின்றன; பெண்கள் அணிந்திருக்கும் ஆடையாபரணங்களின் மதிப்பென்ன; இன்னமுங் கேளும்; ஒரு டிறாமா என்றால் எத்தனை நூற்றுக்கணக்கான சனங்கள் செல்லுகின்றார்கள்; நேற்றுவரையில் நடந்த சர்க்கஸ் விளையாட்டை இன்னுஞ்சில நாளைக்கு வைத்து நடத்தினாலென்னவென்று இங்குள்ள ஆடவருட் சிலரும் பெண்களுட் பலரும் வாலிபருள் அநேகரும் குறைகூறுகின்றார்கள், இது மெய்; எத்தனையோ பேர், ஆநந்தமாகப் பொழுதுபோக்குதற்கு ஏதும் விநோதக் காட்சிகள் விளையாட்டுகளில்லையேயென மனம்வருந்துகின்றனர்; மேலைத்தேசக் குடிவகை வியாபாரம் கடவுள் புண்ணியமாக நாளுக்குநாள் விருத்தியாகி வருகின்றது; இப்படியெல்லாமிருக்க, நீர் சும்மா ஊரிலே பஞ்சம் பஞ்சம் என்று அரசினரைக் குறை கூறுகின்றீரே; நான் சொன்ன இவைகளெல்லாம் உண்மையல்லவென்று சொல்லப்போகின்றீரா" என்று அவர் மீது நெருங்கினார்.

* * *

பத்திரிகையாசிரியர் தமது மடியிலிருந்த பொடி டப்பியை வெளியேயெடுத்துத் திறந்து மற்றக் கையிருவிரலினாலே கொஞ்சம் பொடியையெடுத்து மூக்கிற்போடும்படி பிடித்தபடியே, ஆனாற் போடாமல், சிறிது நேரம் யோசித்து விட்டுப் பின்னர் கிளார்க்கை நோக்கி "ஐயா, நீர் சொல்வதும் உண்மை; நான் எழுதியவைகளும் உண்மை, ஆனால் நீர் சொல்பவர்களைக் குறித்து நான் எழுதவில்லை; நான் எழுதியவர்களைக் குறித்து நீர் பேசவுமில்லை, சிந்திக்கவுமில்லை. மோட்டர் ரதம் வைத்து ஓடுபவர்களும், ஸர்க்கஸ், நாடகம் என்னும் இவைகளில்லையேயென்று பொழுது போக்குவதற்கு வசதியின்றிக் கஷ்டப்படுபவர்களும் யாரென்றால், பெரும் தனவந்தர்களும், வியாபாரிகளும், அரசாங்க உத்தியோகத்தர்களுமாவர். தனவந்தர்களாகவுள்ளவர்கள் நீதியாகவோ அநீதியாகவோ தம்மிடத்துள்ள பொருளை வட்டிக்குக்கொடுத்து விருத்திபண்ணிக் கொண்டு டாம்பீகமாகக் காலம்போக்குகின்றனர். அரசினர் துறைமுகத் தீர்வையை உயர்த்தி விட்டமையைக் கண்ட வியாபாரிமார் அதனைத் தமக்கு ஒரு சாட்டாக வைத்துக்கொண்டு ஒரு மடங்கு விற்கவேண்டியதை இருமடங்கு லாபம் வைத்து விற்றுப் பொருளீட்டுகின்றனர். இப்பொழுது இந்தியாவிலே நெல்விலை குறைய இங்கேவிலையை முந்தியிருந்ததைக்காட்டிலும் ஏற்றி விற்கின்றனர். இவர்கள் ஊர்ச்சனங்களின் நன்மையை எள்ளளவேனும் சிந்திக்கும் இயல்புடையவர்களல்லர். "வேசியுறவும் வியாபாரி தன்னுறவும் காசுபொருளிவற்றிற் காணலாங் காரிகையே" என்று முன்னிருந்த ஒரு வித்துவான் சொன்னபடி இவர்களிடத்திற் பணவிஷயத்திலே தயவு தாட்சணியம் என்பனவே கிடையா. இவ் வியாபாரிமாரும் தாங்கள் அநியாயமாக ஈட்டிய பொருளை டாம்பீகமாகச் செலவுசெய்கின்றார்கள். "வெளவாலார் தின்றகனி வாயாலே வாயாலே" என்றாற்போல வந்தவழியே அவர்கள் பொருளும் போய்விடும். இனி உத்தியோகத்தர் களிருக்கின்றார்களே, அவர்களுக்கென்ன குறை, காற்றினால் அள்ளுண்டு கற்பாறையில் மோதியுடைந்த கப்பலில் எடுபட்டுவந்து கரையிலொதுங்கிய பொருளைக் கண்டெடுத்துத் தன் வீட்டிற்குக் கொண்டுபோனவனது நிலையிலிருக்கின்றார்கள் உத்தியோகத்தர்கள். கிளார்க்கரே, அதனாலேதான் சனங்கள் படுங் கஷ்டங்களைப்பற்றி நீரும் நன்றாய் விளங்கிக்கொள்ளவில்லை. உயர்ந்த வேதனம் எடுக்கும் உத்தியோகத்தர் தாங்கள் நினைத்தபடி செலவுசெய்தற்கு இருக்குந் தடையென்ன? இனி வாலிபர்களோவென்றால், அவர்களுட் பெரும்பாலார் பெற்றாரை வருத்திப் பொருள் பெற்று வீண்செலவு செய்கின்றார்கள்" என்றார்.

* * *

அதற்குக் கச்சேரிக் கிளார்க் "நீங்கள் சொல்வது மெய்தான்; ஆனால், சர்க்கஸ் நாடகம் முதலியனவற்றை எண்ணிறந்த கூலிக்காரர்களும் சுருட்டுத்தொழில் செய்வோருஞ் சென்று பார்க்கின்றார்களே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களிடத்திற் பணமில்லாவிட்டால் அவர்கள் அப்படிப் போய்ப் பார்க்க முடியுமா" வெனலும் பத்திரிகாசிரியர் "ஆம், பார்க்கின்றார்கள்; நீர் சொல்லும் கூலிக்காரர் முன்னே 10 பணம் கூலி பெற்றதற்குப் பதிலாக இப்பொழுது 14 பணம் 1 ரூபா வரையில் வாங்குகிறார்கள்; 1000 சுருட்டிற்கு ஒருரூபா பெற்ற சுருட்டுத் தொழிலாளர் இப்பொழுது ஒன்றேகால் ரூபா பெற்றுவருகின்றார்கள். ஆனமையினால் இவர்களுக்கு வந்தகுறை யாதுமில்லை" யெனலும், "அங்ஙனமானால், பின்னர் யாரைப்பற்றி நீர் பத்திரிகையிற் புலம்புவது" என்று அவர் கேட்க இவர் சொல்லுகின்றார்.

* * *

"நமது ஊரிலே இடைத்தரவகுப்பினரென ஒருபாலார் இருக்கின்றனர்; இவர்கள் குலங் குடியிற் பிறந்தவர்கள்; நல்லாயிருந்து கெட்டவர்கள்; மானம் மரியாதைக்குட்பட்டவர்கள் மானத்தின் பொருட்டு உயிரையும் விடத்தக்கவர்கள்; ஒருவரிடத்தில் இரக்கவும் மனம்பொருந்தார்; வெளியே புறப்பட்டுக் கூலிவேலை செய்யவும் பின்னிற்பர்; ஏதோ தங்களிடத்துள்ள அற்ப பொருளை ஒருவாறு விருத்திபண்ணி அதனால் வரும் ஊதியத்தையெடுத்து வறுமையிற் செம்மையென்றபடி ஒருவாறு மரியாதையாகக் காலங் கழிப்பவர். இவர்களுட் பெண்பாலராயுள்ளார் சில சமையங்களில் தத்தம் உணவிற்கும் உடைக்கும் பிள்ளைகளைப் படிப்பித்தற்கும் வேண்டிய செலவிற்காக வீட்டிலிருந்துகொண்டே நெல்லுக்குற்றியும், பணிகாரஞ்செய்தும், தையல் வேலை செய்தும், பன்னவேலை செய்தும், பனையீர்க்குக் கயிறுதிரித்தும், எண்ணெய்பிழிந்தும் இன்னோரன்ன பிற தொழில்களைச் செய்தும் காலங்கழிப்பர். புதியவரிகாரணமாக உணவுப் பொருள்கள், உடுக்குந்துணி என்னுமிவைகள் விலையேறிய காலத்திலே இவர்கள் பெருங்கஷ்டப்பட்டனர். அரிசிக்கட்டுப்பாட்டுக்காலத்தில் இவர்கள் பட்ட கஷ்டத்தை யெண்ணில் இப்பொழுது மனம் நடுங்கும். இவர்களுட் பலர் உண்ண உணவின்றி ஒருநேர உணவுண்டும், அதற்கும் வழியில்லாமல் கஞ்சியை மாத்திரந் தாங்கள் குடித்துச் சோற்றைத் தங்கள் பிள்ளைகளுக்கு இலைக்கறியுடன் பகிர்ந்து கொடுத்தும், பள்ளிக்கூட வேதனமில்லாமையால் தங்கள் பிள்ளைகளின் படிப்பை நிறுத்தியும், தாம் உடுத்த சேலையைத் தோய்த்து உலரப்போடும்போது பிரதியாக உடுத்தற்கு வேறு துணி இல்லாமையால் நாட்கணக்கிற் குளியாமலுங் காலங் கழித்தார்கள். இவர்கள் இப்பொழுது ஒருவாறு காலங் கழித்துவருகிறார்கள். ஆனால் அரசினர் இப்பொழுது அநுசரிக்கத் தொடங்கியிருக்கும் பரிபாலன முறையை நோக்குமிடத்தில் இவர்கள் முன்போற் கஷ்டப்படுதல் திண்ணம்" எனலும் கிளார்க் அவற்றையொத்துக்கொண்டு அப்புறமகன்றார்.

* * *

"மகனே, நாளைக்கு வெள்ளிக்கிழமை, நீ கோயிலுக்குப் போய்க் கும்பிட்டுக்கொண்டு ஒரு அருச்சனையுஞ் செய்வித்துக்கொண்டுவா" என்று தாய், கொழும்பிலிருந்து விடுதலைநாட்களில் யாழ்ப்பாணம் வந்து வேட்டகத்தில் (மனைவி வீட்டில்) சில தினந் தங்கிப் பின்னர் தனது வீட்டில் வந்து நிற்கும் தன் மகனுக்குச் சொன்னாள். "கோயிலும், கீயிலும், இது எல்லாம் "நன்ஸென்ஸ்" இதுக்காகத்தான் நான் இங்கே வந்து நிற்கிறதில்லை; அம்மா, உங்களுக்கு இந்தக் கோயிற் பைத்தியம் இன்னமும் போகவில்லையா" என்று மகன் அலட்சியமாகச் சொன்னான். அதற்குத் தாய், "மகனே, முந்தி எனக்குப் பைத்தியமிருந்தாலல்லவோ இப்போது அது போகவேண்டும்; உத்தியோகம் பார்க்கப் போனபின் உன்னைத்தான் பைத்தியம் பிடித்துக் கொண்டது; உன் அப்பரும் (செத்துப்) போக, நானோ கைம்பெண்; படாத பாடெல்லாம் பட்டு, உள்ள விரதமெல்லாம் பிடித்து அந்த நல்லூரான் கிருபையால் உன்னைப் படிப்பித்து ஆளாக்கிக் கலியாணமும் முடித்துவைத்து, நீ நல்லாயிருக்க வேண்டுமென நான் கடவுளை அல்லும் பகலுங் கையெடுத்துவர, நீ எனக்கு விசர்ப்பட்டங் கட்டுகிறாய், என்னோடு இங்கிலிசு பேசுகிறாய்; இதுக்காகத்தான் நான் இங்கே வந்து நிற்கிறதில்லை என்கிறாய். ஏன், நீ இங்கே நிற்கப் பிரியமில்லாவிட்டால் உன் பெண்டாட்டி வீட்டிலேயே போய் நிற்கலாமே" என்று கிழவி கொஞ்சம் கடுமையாகப் பேசவாரம்பிக்க மகன், "அம்மா, இதனாலேதான் நான் உங்களுக்கு ஒரு நியாயமுஞ் சொல்வதில்லை; கொஞ்சம் ஆறுதலாய் நான் சொல்லுகிறதைக் கேளுங்கள்; கடவுளை வணங்குவதற்குக் கோயிலுக்குத்தான் போகவேண்டுமென்ற நியதியில்லை; அவர் எங்குமுள்ளவர்; அவரை வீட்டிலே இருந்து நினைத்தாலும் போதும்; அவரிடத்திலே பக்தியிருக்க வேண்டும்; பக்தியில்லாதவர்கள்தாம் கோயிலுக்குப் போகிறார்கள். படியாத உங்களோடு பேசுவது சங்கடம் அம்மா" என்றான். தாய், "தம்பீ இந்த ஞானம் உனக்கு எப்போது தொடக்கம் உண்டானது. கொழும்பிற்குப் போனபிறகு அதிகம் படித்துவிட்டாய்போலிருக்கிறது. நான் படிக்கவில்லையென்றது மெய்தான். அந்தக் காலத்தில் அவர்கள் என்னைப் படிப்பித்து வைக்கவில்லை; என்ன செய்யலாம். பக்தியில்லாதவர்கள் தாம் கோயிலுக்குப் போக வேண்டுமென்றாய்; தம்பீ, உனக்குப் பக்தி முறுகிவிட்டதோ? பத்தியுள்ளவர்கள் கோயிலுக்குப் போனாலென்ன? பட்டினத்துப் பிள்ளையார் போன்ற ஞானிகளும், தேவாரம் பாடிய நாயன்மாரும், கோயில்களுக்குப் போய்ச் சுவாமிதரிசனஞ் செய்தார்களாமே. "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்று சிறுபிள்ளைகள் படிக்கிறார்களே" எனலும், மகன் "நீங்கள் சொல்வது சரிதான் அம்மா. உண்மையாக அன்பிருந்தால் எங்கிருந்தும் நினைத்துக்கொண்டாற் போதும்" என்றான். "தம்பி உண்மையான அன்பிருந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கிருந்தும் நினைத்துக் கொண்டாற் போதும் மென்கிறாய்; உன் பெண்டாட்டிமீது நீ அதிக அன்பு பாராட்டுகிறாய்; அவளும் உன்மேல் உண்மையான அன்பு வைத்திருக்கிறாள் என்று நீயே எனக்குச் சொல்லியிருக்கிறாய்; நீ அங்கும் (கொழும்பிலும்) அவள் இங்குமாக இருந்துகொண்டு ஒருவரையொருவர் நினைத்துக் கொண்டாற் போதுமே; வீணாக ஏன் காசையுஞ் செலவழித்து லீவுமெடுத்துக்கொண்டு சும்மா சும்மா கொழும்பிலிருந்து இங்கே ஓடி வருகிறாய்" என்று கேட்டாள். மகன் தாயுடன் இன்னும் பேசினால் உள்ள மரியாதையும் கெட்டுப்போமெனவெண்ணி "அம்மா, நான் நாளைக் காலை தப்பாமற் கோயிலுக்குப் போகிறேன்" என்றான்.

* * *

உலகம் பலவிதம்: *1922 டிசெம்பர் 28*

"எடி, தங்கச்சி, கொழும்பு றெயிலும் போய் எவ்வளவோ நேரமாய்விட்டதே, இன்னமும் நித்திரை விட்டு எழும்பாமல் நீ ஒரு குமர்ப் பிள்ளை, படுத்துக்கிடப்பது சரியோ, மார்கழி மாதமல்லவா, தலைவாசலைப் பெருக்கி மெழுகிக் கோலமிட்டு ஒரு மார்கழிப்பிள்ளையார் பிடித்துவை" என்று, மிஷன் விடுதிப் பெண் பாடசாலையிலே படித்து நத்தார் விடுதலைநாட்களின் பொருட்டுத் தனது வீட்டில் வந்து நிற்குந் தன் மகளுக்குத் தாய் சொன்னாள். "அம்மா, இப்போதும் மார்கழிப் பிள்ளையார் பிடித்து வைத்துவருகிறீர்களோ, இவையெல்லாம் எதற்கு. நியாயந் தெரியாமல் ஒன்றையுஞ் செய்யக்கூடாதென்று பாதிரியம்மா எங்களுக்குப் பள்ளிக்கூடத்திற் சொன்ன நினைப்புண்டு. மார்கழிப் பிள்ளையார் எதற்காகப் பிடித்து வைக்க வேண்டும், என்று மகள் தாயைக் கேட்டாள். "மகளே, இந்த மார்கழி மாதம் ஒரு பீடை பிடித்த மாதமாகும். அதற்காகத்தான் இப்படிச் செய்துவருகிறோம், அது கிடக்க, என்ன தங்கச்சி, விடுதிப் பள்ளிக் கூடத்திற்குப் போனபிறகு உன்னிடம் மாறுதல் இருக்கிறது; மாதிரி நல்லாயில்லை" யென்று தாய் சொல்ல, மகள் "என்னிடத்தில் அதிக மாறுதல் இல்லையம்மா, மார்கழி மாதத்தை நீங்கள் பீடை பிடித்த மாதமென்று சொல்லுகின்றீர்களே, அது சரியா, எங்களுக்கு மார்கழிதான் அவர்களுக்கு டிசெம்பர். இந்த டிசெம்பர் மாசந்தானே எல்லாருக்குங் கொண்டாட்டமான காலம். எங்களுக்குப் பள்ளிக்கூடமில்லை; உபாத்திமாருக்கு விடுதலை; உத்தியோககாரருக்கு ஒரு கிழமைக்குக் கோடு கச்சேரியெல்லாம் வேலையில்லை; தேயிலைத் தோட்டத்தில் வேலையாயிருப்பவர்கள், றப்பர்த் தோட்டத்தில் வேலையா யிருப்பவர்கள், கம்பெனிகளில் வேலையாயிருப்பவர்கள், மற்றும் உத்தியோக ஸ்தானங்களி லிருப்பவர்களெல்லாம் பல நாட்களுக்கோ சில நாட்களுக்கோ விடுதலை பெற்றுத் தங்கள் ஊர் தேசம் வீடு வாசல்களுக்கு வந்துவிடுகின்றார்கள். படிக்கும்படியும் உத்தியோகம் பார்க்கும்படியும் பிறவூர்களிற் சென்றிருந்த பிள்ளைகளைப் பெற்றார் கண்டு மகிழ்ச்சிகொள்ளும் மாசம் இந்த மாசமல்லவா? உத்தியோக நிமித்தம் அந்நிய தேசத்திற் சஞ்சரித்த நாயகரைக் கண்டு மகளிர் ஆநந்தங்கொள்ளும் மாசம் இந்த மாசந்தானே; பிரிந்திருந்த சிநேகிதர்களைக் கண்டு சிநேகர்கள் இன்புறும் மாசம் இதுவல்லவா? தமக்கு மணம்பேசி வைத்த காதலர் ஊரில் வந்து பின்னேரத்தில், தம்மிடத்தில் இயற்கையழகில்லாவிட்டாலும் நன்குடுத்து, முகத்திற்குப் பூசர்மாப்பூசி, சுகந்தமணிந்து, கறுத்தப் பொட்டிட்டு, பட்டு "பெனியன்" போட்டு, சரிகைச் சால்வை தரித்து, கரத்திற் பிரம்பு பிடித்து, மீசையை முறுக்கி, ஆங்கிலம் வாசித்து விளங்க முடியாவிட்டாலும் மற்றக் கரத்தில் ஒரு ஆங்கில புதினப் பத்திரிகை சுருட்டி வைத்துக்கொண்டு, ஒய்யாரமாகத் தெருவீதி வழியே பக்கங்களிலுள்ள வேலிகளையெட்டிப் பார்த்துக்கொண்டு நடக்க, அதனைக் கண்டு காத்திருக்குங் கன்னியர் மனமகிழுங் காலமிதுவல்லவா? அம்மா, இவைமாத்திரமா, பொழுது போக்குதற்காகக் கீரிமலை முதலிய சுகஸ்தானங்களில் உத்தியோகஸ்தர்கள் தங்கியிருக்கும் மாசம் இதுவல்லவா? பொழுதுபோக்க வகையறியாதோர் தெருவிலே நின்று ஆட்சேர்த்து ஆறுபேர் சேர்ந்தவுடன் ஒரு இடத்திற் கூடியிருந்து அன்னாகாரமின்றிக் காலை தொடக்கம் மாலை வரையும், மாலை தொடக்கங் காலைவரையுஞ் சீட்டாடுஞ் சிறந்த மாசம் இதுவல்லவா? வருடாந்த சமாஜங்களும் சங்கங்களுங் கூட்டங்களும் நடக்கும் நன்மாசம் இதுவல்லவா? இப்படியெல்லாமிருக்க, அம்மா, இம்மாசத்தை நீங்கள் பீடை பிடித்த மாசமெனச் சொல்லுதல் அடுக்குமா என்றாள்.

* * *

தாய் அதனைக் கேட்டு ஆச்சரியமடைந்து "மகளே, அதிகம் படித்துவிட்டாயடி, உன் அப்பர் உன்னைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியதால் மோசம் போகவில்லை. காலையில் நித்திரை விட்டெழுந்து வேலைபார் என்று நான் சொன்னதற்கு இவ்வளவு பிரசங்கஞ் செய்கிறாய். மார்கழி மாசம் பீடைபிடித்த மாசமென்று பெரியோர் சொன்னதைக் கேட்டு நான் சொல்ல, நீ அதை மறுத்து இதுதான் சந்தோஷமான மாசம் என்று எனக்குப் போதிக்கிறாய். பெண் பிள்ளை எட்டுமணிவரைக்கும் நித்திரை கொள்ளலாமோவென்ற நியாயத்தைக் கேட்டும் கேளாதவள் போலிருக்கிறாய். உன் மாதிரியைப் பார்த்தால் வாய் பேசும் பிடரி கும்பிடும் என்றாற்போலிருக்கிறது. குதர்க்கமல்லாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கையளவில் ஒன்றையுங் காணேன்" என்றாள். மகள் "அம்மா, விடிய எழும்பிக் குளிக்கிறதற்கு ஸோப்பில்லை, ஐயாவிடஞ் சொன்னேன். அவர் இன்று பின்னேரம் பெரியகடைக்குப் போகும்போதுதான் வாங்கி வருவார்" எனலும் தாய் "ஓகோ, அது என்ன தங்கச்சி சோப்பா, அது இல்லாமலோ குளிக்கவில்லை. அரப்புக் கூடாதாக்கும். உங்கே அறைக்குள் உப்புச் சவுக்காரம் இருக்கு; அதிலே பூசிக் குளித்தாலென்ன" எனலும், "இதென்ன அம்மா, உங்களோடு கதை பேச முடியாது; உப்புச் சவர்க்காரம் சீலைக்கல்லவோ போடுவது. சவர்க்காரமென்றால் எல்லாம் உடம்பிற் பூசிக் குளிப்பதா" என்றாள். "தங்கச்சி தெரியாதபடியால் கேட்கிறேன், குறைநினைக்காதே; மாட்டுக் கொழுப்புப் போட்ட சவுக்காரந்தான் மேலுக்குப் போட்டுக் குளிக்க வேணுமாக்கும். உன்மேல் ஒரு குற்றமுமில்லை; சரி உன் அப்பர் வரட்டும், கண்டுகொள்ளுகிறேன்" என்று தாய் கூறினாள்.

* * *

அண்ணாவினுடைய மைத்துனர் உத்தியோகந் தேடித் திரிந்து ஒன்றும் அகப்படாது ஈற்றில் என்னிடத்திற்கு வந்து ஒருமாதம் வரையில் நின்றுவிட்டுத் திரும்பவும் அண்ணாவினிடத்திற்குச் சென்று, அத்தான் அத்தான் உங்களுடைய தம்பியார் தேத்தண்ணீர் சாப்பிடுவதில்லை பிட்டுச் சாப்பிடுவதில்லை. தவளை போல் எந்தநாளும் நீரிலமிழ்ந்தி ஸ்நானம் செய்துவிட்டு, தேகம் முழுவதும் நீற்றை சுவருக்கு வெள்ளையடித்தது போலடித்துக் கொண்டு, பைத்தியகாரர்போல சங்கரா, சிவா, மகாதேவா, சண்முகநாதா, கதிரமலைக்கந்தா என்று உளறித் திரிகிறார். அவர் உத்தியோகம் பார்க்கிறதென்ற கதைதான், ஆனால் நாள் முழுவதும் இந்த வேலைதான் செய்து திரிகிறார் என்று இருபது வயதுள்ள ஒரு வாலிபன் தன் மைத்துனருக்குச் சொல்ல, அத்தான் தம்பியார் மீது சீற்றங்கொண்டு ஒரு கடிதம் எழுதுகிறார். தம்பி, நீ படித்தும் புத்தியில்லை. நீ இருதோணியில் கால் வைத்து நடக்கிறாய். சாம்பிராணியைப் போட்டுக் கற்பூரத்தையுங் கொளுத்திவிட்டுச் "சாமி சாமி" என்று கூத்தாடினாற்போல், கடவுள் உன்னிடத்தில் வந்துவிடப்போறதில்லை. மாந்தரையழைத்து, "மச்ச மாமிசம் புசியாதேயுங்கள், மகேஸ்வரனைப் போற்றுங்கள்" என்று ஞான உபதேசஞ் செய்வதானால் ஒரு தரும சாலை கட்டி, அதில் இருப்பது உத்தமம். உத்தியோகம் என்னத்திற்கு, நான் உன்னிடத்தில் வருவதற்கு நேரமில்லை வந்தால், உன் படங்களையும் எடுத்து வீசி, உன் ஞானத்தையும் போக்கி விடுவேன். உலகமும் வேண்டும் ஞானமும் வேண்டும் என்று இரு தோணியிற் கால் வைத்திருந்தால் ஈற்றில் ஒன்றுங் கிடையாது. நீ "சாமி சாமி" என்று சடத்தாடுவதை விட்டு, பிறர் சொல்லும் புத்தியின்படி நட. அங்ஙனஞ் செய்யாதுவிடின் அதன் பின்பு உனக்குத் தெரியுமென்று தமையன் தம்பியாருக்கு எழுதினாரென ஒரு கடிதன் தெரிவிக்கின்றார்.

* * *

உலகம் பலவிதம்: 1923 ஜனவரி 04

ஈதல் என்னுங் குணம் எட்டுணையுமில்லாத ஒரு தனவந்தன் தன்னிடம் வந்த ஒரு சித்திரகாரனை நோக்கி, "என் நண்பரொவ்வொருவருக்கும் நான் ஒவ்வோர் படம் அனுப்ப வேண்டியிருப்பதினால், என்னைப் போன்ற 100 படம் சித்திரித்து வா" என்று சொன்னான். சித்திரகாரனும் அதற்கியைந்து, சில தினங்களுள் அத்தனவந்தன் சாயலாக 100 படங்களைச் சித்திரித்துக்கொண்டு அச்செல்வனிடஞ் சென்றான். அந்த லோபி 100 படங்களையும் வாங்கிக்கொண்டு கிரயமாகப் பத்து ரூபா மாத்திரங் கொடுக்க, சித்திரகாரன் தனக்கு அத்தொகை போதியதன்றென மறுக்க, "இஷ்டமில்லையாயின் உன் படங்களை எடுத்துக்கொண்டு நீ போ" என்று செல்வன் சொல்ல, அவன் அங்ஙனம் எடுத்துக்கொண்டு மீளுஞ்சமையத்திற் செல்வன் சித்திரகாரனைக் கூப்பிட்டு "உந்தப் படங்களை நீ திருப்பிக் கொண்டுபோவதனால் உனக்கு ஆவதொன்றுமில்லை; புத்தியாக யான் தந்த பத்து ரூபாவையும் எடுத்துக்கொண்டு படங்களை வைத்துப் போ; வீணே நஷ்டமடையாதே"யென, சித்திரகாரன் "ஐயா, இதனால் நயமன்றி நஷ்டம் எனக்கு ஏதுமில்லை"யெனச் சொல்ல ஆச்சரியமுற்று "எப்படி நயங் கிடைக்குமென, "ஐயா, இந்தப் படங்களொவ்வொன்றிற்கும் பின்புறத்தில் ஒவ்வோர் நீண்ட வாலை மாத்திரம் எழுதிவிடுவேனாகில், ஒரு படம் பத்து ரூபாவாக விற்பேனென்றான். செல்வன் எப்படி விற்பாயென்று ஆவலுடன் கேட்க, "உமது படத்திற்கு வாலை மாத்திரஞ் சேர்த்துக் கொண்டால் ஆஞ்சனேயர் படமென எல்லோரும் வாங்கிப் பூசிப்பார்கள்" என்று சித்திரகாரன் உத்தரமுரைத்தான். அதனைக்கேட்ட செல்வன் வெட்கமும் அச்சமுங் கொண்டு "அப்படங்களெல்லாவற்றையும் என்னிடங் கொடுத்துவிடு; நான் உனக்கு வேண்டிய பணந் தருகிறேன்" என்று சொல்லி அங்ஙனஞ் செய்தான்.

* * *

மேகவாகனனாகிய இந்திரன் முகில்களை நோக்கி, "நீங்கள் பூவுலகத்திலேயுள்ள இலங்கையச் சேர்ந்த யாழ்ப்பாணத்திலே காலமழை வருஷியாமையினாலே அங்குள்ள கமக்காரர் தங்கள் நெற்பயிரெல்லாம் வாடுகின்றனவென எனக்கு இப்பொழுது முறையிடுகின்றார்களே, நீங்கள் அங்ஙனம் பெய்யாதொழிந்தமைக்குக்காரணமென்ன"என்றுகேட்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புட்கலாவர்த்தமென்னும் முகில் இந்திரனை வணங்கி, "ஐயனே, எங்கள்மீது குறை கூறுவது தருமமன்று; மழை பெய்யத்தக்கதாக அந்த யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் இப்பொழுது நடந்துகொள்ளவில்லை; "வேத மோதிய வேதியர்க்கோர் மழை, நீதி மன்னர் நெறியினுக்கோர் மழை, காதன் மங்கையர் கற்பினுக்கோர் மழை "மாத மூன்று மழையெனப் பெய்யுமே" என்று அவர்களே சொல்லிக்கொள்ளும் பிரகாரம் முற்காலத்தில் மாசம் மூன்றுமுறை வருஷித்துவந்தோம். காலகதியில் அவர்கள் தங்கள் ஒழுக்கங்களையெல்லாங் கைவிட்டமையினால் இப்பொழுது "வேதியர் பொருட்டாயினும், அரசர் பொருட்டாயினும், மங்கையர் பொருட்டாயினும் நாங்கள் மழையை வருஷித்தற்கு இடமில்லை" என்று கூற, இந்திரன் "இவைகள் பொருட்டு நீங்கள் பெய்யாதொழிந்தாலும் சைவாலயங்களில் நித்திய நைமித்திகங்கள் குறைவற நடக்குமானால் அவைகளின் பொருட்டாயினும் மழை பெய்தல்வேண்டுமே" என, புட்கலாவர்த்தம், "அரசே, அந்தச் சமாசாரத்தை யான் எப்படி உமக்குச் சொல்லுவேன்; அங்குள்ள ஆலயங்களுட் பல கிலமடைந்துபோயின. இன்னும் பல ஒருநேரப் பூசையேனுமின்றிக் கிடக்கின்றன. வேறு பல ஆலயங்களிலுள்ள பொருளை அபகரிப்பது நீயா நானா என்று கோயில் மணியமாயுள்ளவர்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டு வியாச்சியந் தொடுத்திருக்கின்றமையினாலே, கோயிற் கபாடங்கள் பூட்டப்பட்டு அவ்வாலயங்கள் பூசையின்றியிருக்க, கோட்டுச் செலவிற்குப் பொருள் வேண்டித் திருவாபரணங்களும், விக்கிரகங்களும் விக்கிரயஞ் செய்யப்பட, அத்திருவுருக்களில் ஆவாகிக்கப்பட்டிருந்த தெய்வங்கள், தாம் குடியிருந்த கோயிற் கதவுகள் முந்தியே பூட்டப்பட்டிருந்தமையினாலே, செல்லு மார்க்கமறியாது, சிறிது தியங்கிப் பின்னர் யோசித்து உபாயமாகத் தீர்த்தக் கோமுகை வழியே புறப்பட்டு வெளியே வந்து தங்கள் தங்கள் பதவிகளுக்கு ஆகாயமார்க்கமாகச் செல்லும்போது இடைவழியில் நாங்கள் கண்டோம்; அங்குள்ளவர்களோ தாம் தமது மனைவி மக்களுடன் வயிறார உண்டு டாம்பீகமாகக் காலங்கழித்துக்கொண்டு பக்கத்திற் பூசையின்றி யிருக்குங்கோயிலில் ஒரு திருவிளக்கை வெள்ளி செவ்வாயிற்றானும் ஏற்ற மனம் பெறாதிருக் கிறார்கள். மாளிகை போன்ற மேல்வீடுகளையமைத்தும் மேல்மாடங்களில் இருந்துகொண்டு தமது வீட்டிற்குப் பதிவாக அயலிலேயுள்ள கிலமுற்ற கோயிலைப் பார்த்துப் பரிகாசஞ் செய்கிறார்கள்; கோயிலுக்குரிய காணியாகவிருக்கின்றதே இல்லையேல் இதனையும் விலைக்கு வாங்கி எமது காணியோடு சேர்த்து ஒரு வீடுகட்டி இளைய மகளுக்குச் சீதனமாகக் கொடுத்து விடலாமே; முன்னோர் செய்த மூடச்செய்கையை இப்பொழுது மாற்ற முடியவில்லையே என்று வருத்தப்படுகிறார்கள். விருந்துக் கூட்டத்திற்கென்றால் 5 ரூபா ஆவலுடன் கொடுப்பார்கள்; கோயிலுக்கென்றால் அரைக்காசுங் கொடுக்கமாட்டார்கள்; இன்னும் இவர்கள் செய்யும் அக்கிரமங்கள் எண்ணிறந்தன. இப்படியெல்லாமிருப்ப நாங்கள் எப்படி அங்குச் சென்று கால மழையை வருஷிக்கலாம். "முன்னவனார் கோயிற் பூசைகள் முட்டிடின், மன்னுயிர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்" என்று திருமூலர் சொல்லியிருக்கின்றாரே" என்றது.

* * *

அதுகேட்ட இந்திரன் "அங்ஙனமாயின், நீங்கள் செய்தமை முறையாகும்; ஆனால் இடையிடையே அங்கே மழை தூறுகின்றதாமே! அதன் காரணமென்ன?" என்று கேட்க, புட்கலாவர்த்தமென்னும் முகில் "வேந்தே, "அரிசி விற்றிடு மந்தணர்க்கோர் மழை, வரிசை தப்பிய மன்னனுக்கோர்மழை, புருஷனைக் கொன்ற பூவையர்க்கோர் மழை, வருடம் மூன்று மழையெனத் தூறுமே" என்ற பிரகாரம் இடையிடையே தூறிவருகின்றேம்" என, இந்திரன் "அங்ஙனமாயின் சென்றவாரம் அங்கே மழைபெய்ததாக அறிகின்றேனே"யென்ன, "ஆம், ஐயனே, அஃது உண்மை; சென்றவாரம் மார்கழித் திருவெம்பாவை படிக்குங் காலமாதலால் சில ஆலயங்களிலே அதனையோதும்போது "மின்சுரக்கும் இன்னருளே யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்" என்று படித்துவந்தார்கள். மணிவாசகப் பெருமானுடைய திருவாக்குப் பொய்யாகவொண்ணா தென்பதை நினைத்து மழை வருஷித்தேம்" என்று சொல்ல விண்ணவர் கோன் அது முறையாகுமெனக் கூறினான்.

* * *

உலகம் பலவிதம்: 1923 ஜனவரி 11

இற்றைப் பிரசுரத்திலுள்ள, உலகம்பலவிதம் அப்பலவிதங்களுள் ஒருவிதமாகும் இந்தியாவிலே சத்தியாக்கிரகாசிரமத்தில் வசிக்கும் ஸ்ரீ பெனறாசிதாஸ் சதுர்வேதியென்னும் ஒரு அறிஞர், மலாய்நாட்டில் அயிரோப்பியர் இந்தியாவிலிருந்து பிழைப்பின் பொருட்டுச் செல்லும் இந்தியரை நடத்தும்விதங்களைப் பல திருஷ்டாந்த வாயிலாக எடுத்துக்காட்டி ஒரு நீண்ட வியாசமெழுதிச் சென்னையிற் பிரசரமாகும் "ஹிந்து" என்னும் பத்திரத்தில் சென்ற டிசெம்பர்மீ 30உ வெளியிட்டுள்ளனர். இவர் தமது வியாசத்தில் மலாய்நாட்டின் அரசியல் முதலிய சகல வரலாற்றையும் நுட்பமாக எழுதியுள்ளார். அவற்றையெல்லாம் இங்கு மொழிபெயர்த்தெழுதுதற்கு இச்சிறிய பத்திரிகை இடந்தராது. இவ்வபிமானி 12 வருடகாலம் மலாய்நாட்டிற் பற்பலவிடங்களிற் சஞ்சரித்தவர். கீழே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாம் கூறும் விஷயங்கள் நமது சதுர்வேதி பிரத்தியமாகக் கண்டனவும் தமது அனுபவத்திலுள்ளனவுமேயாம். சீர்திருந்திய சாதியினரெனஉலகத்தினராலே மதிக்கப்படும் அயிரோப்பியரின் சுபாவமும் இந்தியர்களைக் குறித்து அந்த அயிரோப்பியர் கொண்டிருக்கும் எண்ணமும் கீழ்வரும் விஷயங்களை வாசிப்பதனால் நன்கு விளங்கும். முந்திய "உலகம்பலவிதம்" என்னும் விஷயங்கள்போல் இவ்விஷயம் அதிகம் வேடிக்கையாகவில்லையேயெனச் சிலர் எண்ணக்கூடும். அங்ஙனமன்று இதுவே பெரும் வேடிக்கையும் பரிதாபமானதுமாம்.

* * *

ஸ்ரீ சதுர்வேதி எழுதுகிறார்; "நான் இந்த நாட்டிலே 12 வருட காலமாக வாசஞ் செய்துள்ளேன். எக்காலத்தும் இங்குள்ள விஷயங்களை உள்ளபடி உணர வேண்டுமென்பது எனது பேராசை. நான் சொல்லும் விஷயங்கள் அனுபவத்தில் யான் நேரில் கண்ட விஷயங்களாம், இங்குள்ள தோட்டங்களில் வேலை செய்யும் நமது சகோதரர்களாகிய இந்தியரை அத்தோட்டங்களின் முதலாளிகளாகிய அயிரோப்பியர் நடத்தும் விதம் பெரிதும் பரிதாபப்படத்தக்கதாம். ஒரு நாள் நான் எனது நண்பரொருவரைக் காணும்பொருட்டு ஒரு தோட்டத்திற்குச் சென்றிருந்தேன். அவர் அத்தோட்டத்து டக்ரர் (வைத்தியர்). அவரும் நானும் அவருடைய வைத்தியசாலையிலேயே பேசிக் கொண்டிருக்கும் போது ஒரு இந்தியப் பெண் அங்கு வந்தாள். அவளுடைய முதுகிலே 19 காயங்கள் காணப்பட்டன. கால் கைகளிற் பல காயங்கள் காணப்பட்டன. நமது நண்பரை இக்காயங்கள் எவ்வாறு வந்தனவென யான் கேட்டபோது எனது நண்பர், அப்பெண் ஒரு அயிரோப்பியனுடைய தோட்டத்திற் கூலி வேலை செய்பவளென்றும், அவள் 7 மாசக் கருப்பிணியென்றும், ஒரு தினம் மழை பெய்யும்போது இந்தப் பெண்ணைத் தோட்டத்திற் களை பறிக்கும்படி அந்த அயிரோப்பியன் கட்டளையிட, இந்த ஏழை தனது முதிர்ந்த கருப்பங் காரணமாக அவ்வேலையை மழைக் காலத்திற் செய்ய முடியாது பின்னிட, எள்ளத்தனையும் இரக்கமில்லாத அந்த அயிரோப்பியன் அவளை நையப் புடைத்தமையினால் நேர்ந்த காயங்கள் அவைகளென்று சொல்லி முடித்தார். இவைகளைக் கேட்டமாத்திரத்தே என்னுள்ளம் நடுங்கியது. நான் ஐயோ, சீர்திருத்தஞ் சிறிதுமில்லாத காட்டு மனுஷனும் இவ்வாறான குரூரச் செயலைச் செய்யானே. மிருகங்களும் கருப்பமுற்ற மற்றும் மிருகங்களுக்குச் சமீபத்திற் செல்லும்போது அவதானமாகச் செல்லுமேயென்றேன்."

* * *

"வேறொரு தோட்டத்திற்கு ஒரு தினம் ஒரு வைத்தியரைக் காணும்படி சென்றேன். இருவருமாக அந்தத் தோட்டத்திலே உலாவும்போது நடக்கும் இயக்கமற்ற ஒரு மனிதன் ஒரு வாளி நிறைந்த றப்பர்பாலை அதிக சங்கடத்துடன் தூக்கிக்கொண்டு மெல்ல மெல்லச் செல்வதைக் கண்டு டக்டரை நோக்கி, "ஐயா, இதுவென்ன அநியாயமென்று கேட்டேன். அவர் இவனுக்குச் சற்று முந்தி 104 டிக்கிறியிற் சுரங் காய்ந்துகொண்டிருக்க இந்த ஏழைமனுஷன் எழும்புதற்குமியலாமல் தன் குடிசையிற் படுத்திருந்தான். அப்போது தோட்ட முதலாளி இவனிடஞ் சென்று இவனைக் காலால் உதைத்து அடே, எழும்பி ஓடிப்போடா வேலைக்கெனலும், நான் ஐயோ பாவம் அவன் கடுஞ் சுரங்கண்டு வருந்துகின்றான் என்று சொல்ல, என்னை அவர் சினந்து பார்த்து, மாடுகளுக்குஞ் சுரம் வருவதா, வெள்ளைக்காரராகிய எங்களுக்குச் சுரம் வருவதுண்டு. கடவுளால் அலட்சியஞ் செய்து விடப்பட்ட இந்தக் கறுத்த மனிதருக்குச் சுரம் வருவதென இன்று நீர் சொல்லத்தான் கேள்விப்பட்டேன் என்றான். அதனாலேதான் இந்த மனுஷன் பால்வாளியையுந் தூக்கிக்கொண்டு மெல்ல மெல்லப் போகின்றான் என்று சொல்லி முடித்தார். அன்பர்களே இந்தவிதமான நீதியீனங்கள் இன்னும் பல கண்டேன். ஆனால் அவற்றையெல்லாஞ் சொல்லுவதனால் என்ன பயனுண்டாகப்போகிறது."

* * *

"இத்தோட்டங்களிலுள்ள அயிரோப்பிய முதலாளிமாருட் பலர் விவாகஞ்செய்யாதவர்கள்; விவாகஞ் செய்தவர்களுள்ளும் அநேகர் தம் பெண்டாட்டிமாரை ஊரிலே இருக்கவிட்டுவந்து இங்கேயிருக்கின்றார்கள். இவர்களுடைய உணவு இறைச்சியும் மீனும் பாலுமாம். இவற்றுடன் மதுபானமும் அகந்தையும் யௌவனமும் திடகாத்திரமும் அதிகாரமும் பொருட்செருக்கும் கூடியிருக்குமானால் இவர்களிடத்து எவ்விதமான துர்க்குணமுண்டாகுமென்பதை நீங்கள் யூகித்தறிதல் கூடும். இத்தோட்டங்களில் பல யௌவன கூலிப்பெண்களும் கங்காணிமார் கணக்கப் பிள்ளைகளின் மனைவிமாரும் இருக்கின்றார்கள். இந்த அயிரோப்பியரிடத்திலே உண்டாகும் மிருகத்தனமான குருட்டுத் தன்மையுள்ள நீதியற்ற காமவிச்சையைத் தீர்த்தற்கு இந்த ஏழைப் பெண்களை இவர்கள் பலாற்காரஞ் செய்தல் சகசம். சில காலங்களில் இந்த அயிரோப்பியர் டாக்டர்களிடத்திற் கருச் சிதைத்தற்கான மருந்தின் பொருட்டு வருதலை யானறிவேன்; "ஏன் இப்படிச் செய்கின்றீர்கள்" என அவர்களைக் கேட்டால் "கூலிப்பெண்கள் வயிற்றில் எங்கள் பிள்ளைகள் பிறக்கவிடலாமா" என்று பதில் சொல்வார்கள். கூலிப்பெண்கள் இவர்களுடைய நீதியற்ற கேள்விக்கு உடன்பட மறுத்தால், இவர்கள் அப்பெண்களுக்குக் கஷ்டமான வேலையைச் செய்யும்படி கட்டளையிடுவார்கள்; அவர்களை நையப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புடைப்பார்கள்; சில சமையங்களில் வேலையினின்றும் விலக்கி விடுவார்கள்."

* * *

இதுவரையும் ஏழைகளாகிய கூலிச்சனங்களைப் பற்றிச் சொன்னேன். இனிக் கற்றவர்களாகிய இந்தியர்களை மலாய் நாட்டிலுள்ள அயிரோப்பியர் நடத்துந் தன்மையைப் பற்றிச் சில சொல்லுகின்றேன். எம். ஏ. பரீக்ஷையிற் சித்தி பெற்றவரும் பம்பாய் அலகபாத் பூனா றங்கூன் கொழும்பு என்னுமிடங்களிற் கணித ஆசிரியராகவிருந்தவரும் லண்டன் பீ. ஏ. பரீக்ஷைக்கு மாணவரைப் பயிற்றிவிடுபவருமாகிய திறமையும், அனுபவமும் வாய்ந்த எனது நண்பரொருவர் மலாய் நாட்டில் வித்தியா பகுதியிலே தமக்கு ஒரு உத்தியோகந் தரும்படி கேட்டபோது குறித்த மேல் அதிகாரி உபாத்திமைப் பரீட்சையிற் சித்தியடைந்தவர்களுக்கும் அயிரோப்பியருக்குமே அப்படிப்பட்ட உத்தியோகங் கொடுக்கப்படுமென அவருக்கு விடையிறுத்தனர். இந்தியருக்குமேலானஉத்தியோகம்கொடுக்கப்படாதாம். அவை அயிரோப்பியருக்கே கொடுக்கப்படுமாம். தோட்டக்கூலிகளாக வேலை செய்வதற்கு மாத்திரம் இந்தியர் வேண்டுமாம். ஏன் அயிரோப்பாவிலேயுள்ள முரடன்களை இங்கே கொண்டுவந்து தோட்ட வேலை செய்ய விட்டிருக்கலாமே. சீனர் மலாயர்கட்குக் காட்டுஞ் சகாயந்தானும் இந்தியர்களாகவுள்ளார்க்கு அரசினர் காட்டுகின்றார்களில்லை."

* * *

"சில மாசங்கட்கு முந்தி என் இருநண்பரும் யானுமாகச் சிங்கப்பூரிலுள்ள ஒரு விடுதியிற் போய் உட்கார்ந்து தாகசாந்தி செய்துகொண்டிருக்கும்போது ஒரு பருத்துயர்ந்த அயிரோப்பியன் உவிஸ்க்கி சோடா வேண்டுமென்று சொல்லிக்கொண்டு அங்கே வந்தான். அந்தச் சமையத்தில் விடுதிச் சுயம்பாகிகள் அவ்விடத்திலில்லாமையினால் அவன் எங்களை அவர்களென மதித்துப்போலும் ஏ, நீங்கள் என்ன, நான் உவிஸ்க்கி சோடா வேணுமென்று சொல்ல அதைக் கவனியாமல் சும்மாவிருந்து உளறிக் கொண்டிருக்கின்றீர்கள் என்றான். (உடையளவில் அந்த அயிரோப்பியனைக் காட்டிலும் நல்ல உடைகளை நாங்கள் அந்தச் சமையத்தில் அணிந்திருந்தோம்.) இதற்கிடையில் அங்கே வந்த விடுதிக் காரியஸ்தன் விஷயத்தை அறிந்துகொண்டு எங்களைச் சுட்டி இவர்களும் உம்மைப்போல இங்கு வாடிக்கையாக வருபவர்களென்றான். அதற்கு அந்த அயிரோப்பியன் அதைப்பற்றி நான் கவனிக்கமாட்டேன், நான் உவிஸ்க்கி-சோடாவென்று கேட்க, இந்தியர் இருந்து ஏதோ குடித்துக்கொண்டிருக்கலாமா என்று சொல்லிக்கொண்டு தன் கையிலுள்ள கம்பை யோங்கிக்கொண்டு எங்களையடிக்க வந்தான். உடனே நாங்கள் மூவரும் எழுந்தோம்; நான் அவனுடைய தடியைப் பறித்தேன். மற்ற நண்பர் அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள, மூன்றாவது நண்பர் ஒரு மைக்கூட்டையெடுத்து அதிலிருந்த மையை அவன் வாயிற் பெய்தார். நான் அவனிடமிருந்து பிடுங்கிய கம்பினாலே அவனுக்குப் பதினைந்து அடிவரையில் அடித்தேன். அடிக்கும்போது அடா, உன்னுடைய நரம்புகளில் ஓடும் இரத்தத்திலும் எங்களுடைய நரம்பில் ஓடும் இரத்தம் குறைந்ததல்ல. இந்தா எங்களுடைய பெயர் வரைந்துள்ள பத்திரம் என்று சொல்லி பத்திரங்களையுங் கொடுத்தோம். அவன் எங்கள்மீது வியாச்சியந் தொடுப்பானென்று காத்திருந்தோம், ஆனால் ஒன்றுஞ் செய்யவில்லை. பின்னர் அந்த அயிரோப்பியன் எப்பொழுதாயினும் எங்களைத் தூரத்திற் கண்டசமையத்தில் எதிர்ப்படாமல் விலகிக்கொள்வான்."

* * *

"ஒருமுறை நானும் என்னுடைய சுற்றத்தார் சிலரும் புகைவண்டி மார்க்கமாக முதல்வகுப்பிற் பிரயாணம் செய்யும்போது வழியிலுள்ள ஒரு புகைரதஸ்தானத்தில் ஒரு அயிரோப்பியன் நாங்கள் இருந்த பெட்டியுள் வந்து புகுந்து நான்கு பக்கமும் பார்த்து இடமின்மையால், நின்றபடியே என்னைப் பிரயாணச் சீட்டுக் காட்டும்படி கேட்டான். நான் உனக்குக் காட்ட வேண்டிய அவசியமில்லையென்றேன்; அதற்கு அவன் இந்தியப் பயல்களாகிய நீங்கள் எப்படி முதல்வகுப்பிற் பிரயாணம் பண்ணத் துணியலாம்; கூலிக்காரராகிய நீங்கள் உங்கள் சீவிய காலத்தில் ஒருநாளும் முதல்வகுப்பிற் பிரயாணஞ் செய்தறியீர்கள் வெளியே போ என்றான்; என்னால் அவன் சொன்னதைப் பொறுக்க முடியவில்லை; உடனே நான் எழுந்து அவனுடைய மூஞ்சியில் நல்லாய்ப் புடைத்தேன். அவனுடைய மூக்கினின்றும் உதிரம் ஒழுக வொழுக நெருங்கி வந்தான், நான் அவனை நையப்புடைத்தேன். அந்த அடியை அவன் சாகும்வரையும் மறக்கமாட்டான். அடுத்த புகை ரதஸ்தானத்தில் அந்த அயிரோப்பியன் இறங்கி என்னை அந்தப் பெட்டியிலிருந்து அகற்றிவிடும்படி புகைரதஸ்தானாதிபதிக்குச் சொல்ல, அவர் நான் இன்னான் என்பதை அவனுக்கு விளங்கப்படுத்த அவன் பேசாமல் இருந்தான்."

* * *

"வேறொரு சமையத்தில் இரவு பதினொன்றரை மணிவரையில் யான் சில நண்பர்களுடன் என்னுடைய மோட்டர் ரதத்தைச் செலுத்திக்கொண்டு போகும்போது ஐந்து அயிரோப்பியர் கையோடு கை சேர்த்துக்கொண்டு தெருவீதிக்குக் குறுக்கே, நாங்கள் வழி விலகச் சொல்லவும் விலகாது நின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுள் ஒருத்தன் அயிரோப்பியருடைய மோட்டர் ரதமோட்டும் இந்திய கூலிக்காரர்களாகிய உங்களுக்கு அயிரோப்பியருக்குரிய மோட்டர் வண்டியில் ஏறிச்செல்லத் துணிவென்னவென்று கேட்டான். நான் விலகும்படி சத்தஞ் செய்தும் அவர்கள் விலகாமையைக் கண்டு அவர்களுக்கூடாக ரதத்தையோட்ட அது அவர்களில் ஒருவனுடைய காலை நெரித்து விட்டது. உடனே நான் இறங்கி என் பெயர் வரைந்த காகிதத் துண்டைக் கொடுத்து, அவனை ரதத்திலேறும்படியும் ஏறினால் சமீபத்திலுள்ள வைத்திய சாலையிற் கொண்டுபோய் விடுவதாகவும் சொன்னேன். அவன் ஒன்றுக்கும் உடன் படவில்லை. பின்னர் எனக்கொன்றுஞ் செய்யவுமில்லை. படித்த இந்தியர்களைத்தானும் அங்குள்ள அயிரோப்பியர் எவ்விதமாக நடத்தத் துணிகின்றார்களென்பதைக் காட்டுவதற்காகவே இவற்றை எழுதினேன்."

* * *

உலகம் பலவிதம்: *1923* ஜனவரி *18*

பெண்கள் அவருள்ளும் யௌவனமானவர் அயல்வீட்டுக்குத்தானும் துணையின்றித் தனியே போகவொண்ணாதெனப் பெரியோர் சொல்வர். ஆனால் நவின நாகரிகந் தடித்த இக்காலத்தில் ஆண்களாயுள்ளார்தானும் தனியே செல்வதற்கு யோசிக்கக்கூடிய தூரித்த இடங்கட்கும் நமது பெண்மணிகள் தன்னந்தனியே புறப்பட்டுக்கொள்கின்றார்கள். முற்காலத்தில் பெண்களாயுள்ளவர்கள் அயலிலுள்ள ஆலயத்திற்குப் போவதென்றாலும் வீட்டில் எத்தனையோ ஒழுங்குகள் செய்த பின்பே, அதிக கஷ்டத்துடன் ஆலயந்தொழச் செல்லவேண்டியவர்களானார்கள். அவர்கள் அங்ஙனஞ் செய்ததற்குக் காரணமென்னவென்றால், இல்லிற்குரியாள் இல்லாள் என்ற நியதிபற்றி வீட்டிற்குரிய சகல கடமைகளும் அவர்கள் பொறுப்பிலேயே இருந்தன. ஆனால் இக்காலத்தில் விஷயம் அப்படியன்று. வீட்டுக் கருமங்களைப் பார்ப்பதற்கு வேலைகாரனிருக்கின்றான்; சமையற்றொழில் பார்ப்பதற்குச் சுயம்பாகிகளிருக்கின்றனர்; பிள்ளைகளை வளர்த்தற்குச் செவிலித்தாயர் (ஆயாமார்) இருக்கின்றனர். வீட்டில் யாராயினும் வந்தால் அவர்களுக்கு மறுமொழி சொல்லுவதற்கும், ஆகவேண்டிய கருமங்களைச் செய்தற்கும், ஏதும் பொருளை வேலைகாரர் முதலானோர் அபகரிக்காது பார்த்துக் கொள்ளுதற்கும் "ஐயா" இருக்கின்றார். இங்ஙனஞ் சகல விஷயங்களுக்கும் ஆட்களிருக்க, விலையுயர்ந்த வஸ்திரங்கள் உடுப்பாரின்றி மடித்தபடி உடுப்புப் பெட்டியிலிருக்க, இரத்தினாபரணங்களும் சுவர்ணாபரணங்களும் முத்தாரமும் தங்களையணிவாரின்றிப் பெட்டகத்திற் சும்மாகிடக்க, முல்லை, மல்லிகை, றோசா, மருக் கொழுந்து, செவ்வந்தி என்னுமிச் செடிகளில் மலர்கள் மலர்ந்திருக்க, இவைகளில்லையாயின் என்றும் வாடாதவாறு காகிதத்தாலும் வஸ்திரத்தாலுஞ் செய்யப்பட்ட சுகந்தமற்ற போலி மலர்கள் தம்மைச் சூடுவாரின்றிக் கிடப்ப, பொட்டுச்சிரட்டை குங்குமச்செப்பு புசர்மாச்சிமிழ் அதனையெடுத்து முகத்திலே யொற்றுதற்கான மிருதுவான குஞ்சம் என்னுமிவைகள் மேசையிலிருப்ப, றிக்ஷாவாயினும் துரகரதமாயினும் மோட்டர் வண்டியாயினும் கொட்டிலில் நிற்க, குதிரை லாயத்திற் திமிர்கொண்டு நிற்க, குதிரைக்காரன் வீட்டு விறாந்தையிற் படுத்துத் தூங்க, வேடிக்கை பார்ப்பாரும் போவார் வருவாருமான மிகுந்த சனசஞ்சாரமுள்ள தெருவீதிகளிருப்ப, சென்று கண்டு பேசிக் கொண்டாடச் சினேகிதர் சிநேகிதைகளின் வீடுகள் தூரத்தேயிருப்ப, வீட்டில் வேலையின்றியிருப்ப, நமது நவீன நாகரிகமுற்றிய நாரியர் இப்பொருள்களை உபயோகியாமலும் இவர்களுக்கு வேலை கொடாமலும் வீட்டில் நாட்டிற் பெண்கள்போல் எங்காயினும் புறப்படாமற் சும்மாயிருத்தல் முடியுமா?

* * *

இப்பெண்மணிகள் றிக்ஷாவிலேனும் குதிரை வண்டியிலேனும் மோட்டர்ரதத்திலேனும் புகைரதத்திலேனும் துணையோடு சென்றாற் குறையில்லையாம். இவர்கள் ஆடவரை வீடுகாக்க வைத்துவிட்டுத் தாம்மாத்திரந் தன்னந்தனியே புறப்பட்டு விடுகின்றார்கள். வித்தியாசாலையிற் பயிலுங் கன்னிகாரத்தினங்களும் தனியே வித்தியாசாலைக்கு றிக்ஷாவிற் போகக் கண்டேம். றிக்ஷா இழுப்பவரோடும் குதிரைக்காரரோடும் நம்பி ஆடவர்களாயுள்ளவர் தங்கள் பெண்களை விடும் அறியாமையிருந்தபடியென்னை? பெண்கள் தன்னந்தனியே செல்வதனால் நேர்ந்த அநர்த்தங்கள் பல. சில வருடங்கட்கு முன்னர் மாலைக்காலத்தில் பறங்கித் தெருவிலுள்ள கடற்கரை வீதியால் ஒரு பெண் தனியே றிக்ஷாவிற் சென்றபோது அப்பெண் அணிந்திருந்த ஆபரணத்தை யாரோ ஒருவன் பின்புறத்தாற் சென்று பிடுங்கிச் சென்ற சமாசாரத்தை அக்காலத்தில் இப்பத்திரிகை வாயிலாக வெளியிட்டுள்ளேம். புகைரத மார்க்கமாகத் தனியே ஒரு பெண்ணாய்ப் பிறந்தவள் இராக்காலத்திற் சென்ற சமையத்தில், சிறிது படுத்துறங்க, யந்திரவண்டியினின்றெழுந்த நெருப்புப் பொறி பறந்து அப் பெண்ணின் வஸ்திரத்திற் பற்றியெரிய, பெண் திடுக்குற்றெழுந்து புகைரதத்தினின்றுங் குதித்து உயிர் மாண்ட கதையை எவரும் அறிவர். இப்படி இன்னும் எத்தனையோ சம்பவங்களுள. தனியே பெண்கள் செல்வதனால் ஆபரணம் போதலோடும் ஆருயிர் போதலோடும் மாத்திரம் நின்றுவிடுமோ. அவர்களுடைய அருங்கற்புப் போகுமாயின் அப் பெண்ஜன்மங்கள் பின்னர் வீட்டுக்கு மீண்டு வரவேண்டியதில்லையே. ஸ்ரீராமருடனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்குமணனுடனுமிருந்த சானகி சிறிதுநேரம் அவர்களை பிரிந்திருந்தமையினால் இராவணனால் வருத்தப்பட்டுப் பெரும் அநர்த்தங்கட்கெல்லாம் காரணியானமையை இராமாயணத்தில் பார்க்க வில்லையா. ஆதலால் மரியாதையை விரும்பிய ஆடவர் ஒருபோதும் தங்கள் பெண்மணிகளைத் தனிவழி செல்ல எக்காரணம் பற்றியும் விடவொண்ணாது. பெண்களுந் தமக்கு எத்துணை வசதி குறை விருந்தாலும் துணையோடல்லாது தனிவழி போகவெண்ணாது. துணையோடு செல்வதனால் வருங் கௌரவக் குறையாதுமில்லையாம்.

* * *

[உலகம் பலவிதம்: *1923* ஜனவரி *25* கிடைக்கவில்லை]

உலகம் பலவிதம்: *1923* பெப்ரவரி *1*

உலகம் பலவிதமாதலால் அந்தவிஷயத்தைக்குறித்து எழுதும்போதும் நாம் அதிக சாவதானத்தோடு கூடியிருக்க வேண்டும்போற் காணப்படுகின்றது. சென்றவாரப் பிரசரத்தில் வெளிவந்த "உலகம் பலவித"த்தில் ஒரு கன்னிகையின் கதையைத் திருட்டாந்தமாகக் காட்டியிருந்தேமல்லவா, அக் கன்னிகைக்குக் குலங்கற்பித்த விஷயமாகச் சிலநண்பர்கள் மனஸ்தாபமடைந்தனரென அறியலானேம். யாதுங் குரோதம்பற்றி அதுசெய்யப்பட்டதன்றென்பதையும், அச்சிறு கதை ஆங்கில வாசகபுத்தகமொன்றிலிருந்து சுருக்கி மொழிபெயர்க்கப்பட்ட தென்பதையும் அந்நண்பர்கள் அறிந்து மனஸ்தாபமொழிவார்களாக.

* * *

"அழுவா ரழுவாரெல்லாந் தங்கவலை திருவன் பெண்டிருக்கு அழுவாரில்லை" யென்று நமது நாட்டுப்பெண்கள் சொல்லும் பழமொழியொன்றுண்டு. இந்தப் புகைரதப் பெருவிபத்தினால் அதிக நஷ்டமடைந்தவூர் நமது யாழ்ப்பாணமாகும். அவ்விஷயத்தில் அகப்பட்டுக் காயமடைந்த சிலரையேற்றிக்கொண்டு சென்ற வெள்ளிக்கிழமையிரவு இரண்டரை மணி வரையில் ஒரு புகைரதம் வந்ததல்லவா? இப்படியொரு விசேஷமான புகைரதம் வருமென்பது அன்று மாலை *6.00* மணிவரையில் அநேகருக்குத் தெரிந்திருக்கும். புகைரதம் வந்த சமையத்தில் விபத்திலகப்பட்ட சனங்களின் மித்திர பந்துக்கள் வந்திருந்தார்களேயன்றி, இந்த வடமாகாணத்தைப் பரிபாலிக்கும் உத்தியோகத்தருள் பொலிஸ் பகுதியாரன்றி வேறெவராயினும் அந்த இடைக்கும் வரக்கண்டிலேம். ஒருபோது வரவேண்டுமென்ற கடமையவர்களுக் கில்லாமலிருக்கலாம், ஆனால் நமது நாட்டிலேயுள்ளவர்கள் மதவாச்சிக் காட்டிலே புகைரத றோட்டிலே மாண்டு போனார்கள், காயமுற்று மீண்டுவருகின்றார்கள், இவர்களைத் தாமே நாங்கள் பரிபாலிப்பது, இவர்கள் உயிரோடிருந்தாற்றானே எவ்வகையான வரிகளும் அறவிடலாம் என்ற அபிமானம், அனுதாபம், ஒன்றுமில்லாமற் போய்விட்டதேயென்றதையெண்ண வெண்ண மனம் புண்ணாகின்றதென்று பிள்ளையைத் தேடிவந்த பிதா ஒருவர் முறையிட்டனர்.

* * *

"கோறணமேந்து உத்தியோகத்தர்கள் தாம் வரவில்லை, தலைமைக்காரர்தாம் வரவில்லை, அவர்கள் எங்களுக்கு அந்நியராய்ப் போய்விட்டார்களாக்கும். எங்கள் சனத் தலைவர்க ளென்றிருப்பவர்கள், சனப் பிரதிநிதிக ளென்றிருப்பவர்கள், நகரசங்கக் கூட்டத்தவரென்றிருக்கிறவர்கள், தேசாபிமானிகளென்றிருக்கிறவர்கள், இவர்களில் ஒருவராவது, நாங்கள் அன்றிரவு ஆரியகுளத்தடியில் பனியில் நின்று கஷ்டப்பட வந்து எட்டிப்பார்க்க மாட்டோமென்று விட்டார்கள். இந்தியாவில் இப்படியொரு விபத்து நடந்தால் எத்தனை சனத்தலைவர்கள், தேசாபிமானிகள் அந்த இடத்தில் வந்து சனங்களுக்காக வேண்டியவைகளைச் செய்வார்கள்; இவர்களுடைய பெண்டிர் பிள்ளைகள் அந்தப் புகைரதத்திலே போயிருந்தால் இவர்கள் வராமல் விடுவார்களா, இவர்களைத்தாமே நாங்கள் பெரிய அபிமானிகளென்று நம்பியிருந்தது, வரட்டுக்கும் பார்த்துக் கொள்வோம், சட்டநிரூபண சபைக்குத் தங்களைத் தெரிவுசெய்விக்க வேண்டியிருந்தால், லோக்கல்போட்டுக்கு அல்லது பட்டின பரிபாலன சங்கத்திற்குத் தெரிவுசெய்யவேண்டியிருந்தால், வீட்டுக்கு வீடு வண்டிகளும் கொண்டுவந்து, எங்கள் ஆண்பிள்ளைகளைப் பசியாறவும் விடாமல் இழுத்துக்கொண்டு போய்விடுவார்கள். இப்பொழுது எங்களுக்குவந்த இந்தப் பேரிழவுக்குத் தூரத்திலே நிற்கின்றார்கள். கொழும்பிலிருந்து ஒரு பெரிய உத்தியோகத்தர் வந்தால், உடனே ஆடம்பரமாக உடுத்து மனைவி மக்களுடனுஞ் சுற்ற மித்திரருடனும், மோட்டர் வண்டியிலும், குதிரை வண்டியிலும், றிக்ஷோவிலும் துவிசக்கரத்திலும் ஏறிப்போய், பூமாலைபோட்டு மேளமடித்துக் கூட்டிக்கொண்டு வருவார்கள். காரியமில்லை, ஆனைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொருகாலம் வருந்தானே; எல்லாவற்றிற்குங் கடவுளுண்டு" என்று தன் புருஷனைத் தேடிவந்த பெண்ணொருத்தி புலம்பினாள்.

* * *

"பார்த்தாயாடி, காயப்பட்ட கார்ட்டுக்குப் பக்கத்தில் இரண்டு டாக்குத்தர்மார் இந்தச் சாமத்தில் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று பதனமாக மெத்தையிட்டு வண்டியில் அவரை வைத்து ஆடாமல் அசையாமல் தள்ளுவித்துக் கொண்டு போகிறார்கள்; மற்றக் காயக்காரரை இரண்டிரண்டு பேர் பிரேதங் கொண்டுபோவது போலத் தூக்கிக் கொண்டு போகிறார்கள். உயிரென்றால் எல்லாஞ் சரிதானேயெடி" என்றாள் ஒருத்தி. "ஒமெடி மச்சாள், இதுக்குத் தானெடி எங்கடையவர், எங்கள் பொடியளுக்குச் சொல்லுகிறது, மக்காள் கவனமாய் இங்கிலிசு படியுங்கள், கோழி மேய்த்தாலும் கோறணமேந்துக்குக் கீழேமேய்க்கவேணும்" என்று மற்றவள் சொன்னாள்.

* * *

உலகம் பலவிதம்: *1923* பெப்ரவரி *8*

பொல்லாதது! பொல்லாதது!! பொறாமை பெரிதும் பொல்லாதது!!! பொறாமை காரணமாகச் சிலர் பிறர்க்குத் தீமை செய்யப் புகுந்து ஈற்றிலே தாமே பெருந் தீமைக்கு ஆளாகின்றனர். ஒரு அரசனுக்கு வஸ்திரம் ஒலித்துக் கொடுக்கும் வண்ணானுக்கும், அந்த அரசனுக்கு மட்கலம் வனைந்து கொடுக்குங் குயவனுக்கு மிடையிற் பொறாமை காரணமாக நெடுநாட்பட்ட குரோதமிருந்தது. குயவன் வண்ணானுக்குத் தீமை விளைக்கவேண்டுமென்னுந் தீய எண்ணங் கொண்டு அரசனிடஞ் சென்று வணங்கி "மகாராசாவே, பெரிய பூமியைப் பரிபாலிக்கும் ஏகசக்கிராதிபதியாகிய தங்களுடைய பட்டத்து யானை சிற்றரசர்களுடைய யானைபோல் கருநிறத்தோடு கூடியிருப்பது தங்கள் மகிமைக்குக் குறைவாகும். தங்களுக்கு வஸ்திரம் ஒலிக்கும் வண்ணானுடைய திறமையைப் பற்றித் தாங்கள் அறியீர்போலும்; அவன் வெள்ளையில் உலகப் பிரசித்தி பெற்றவன்; தங்கள் பட்டத்து யானையை அவனிடம் ஒப்பிப்பீர்களாயின் அவன் அதனை நன்றாய் ஒலித்து, இந்திரனுடைய அயிராவதமென்னும் யானையைப்போல் வெண்மை நிறம் வரச்செய்வன்; அது தங்களுக்குக் கௌரவமாகவுமிருக்கும்" என்றான். இராசாவுக்கும் விவேகம் மட்டுமட்டாதலால், குயவன் சொல்லை மெய்யென நம்பி, வண்ணானைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொல்லி யானையையும் வண்ணானிடம் ஒப்பித்தான். இவையனைத்தும் அழுக்காறு காரணமாகக் குயவன் செய்த உபாயமென்று குறிப்பால் அறிந்த வண்ணான் யானையை ஏற்றுக் கொண்டுபோய்த் தன் வீட்டிலே சில நாட்களாகக் கட்டி வைத்துக்கொண்டான். அரசன் வெளுக்கும்படி வண்ணானிடங் கொடுத்த யானையை வண்ணான் இன்னமுங் கொண்டு வந்து ஒப்பிக்கவில்லையேயென அவன்மீது சினமுற்று அவனைப் பிடித்து வரும்படி ஆளனுப்ப, அரச கட்டளைக்குப் பயந்து வண்ணான் உடனே மன்னவன் முன்னர் வந்து பணிந்து நின்றான். வேந்தன் கோபத்தோடு வண்ணானை நோக்கி "எங்கேயெடா, கட்டாடி, வெளுக்கும்படி உன்னிடந் தந்த பட்டத்து யானை யாருக்காயினும் மாற்றுக்கொடுத்துவிட்டாயா? இத்துணை நாட்கள் செல்லவேண்டுமா யானை வெளுப்பதற்கு? என் குணம் அறியாய் போலும்" என்று வண்ணானுடன் நெருங்கினான். வண்ணான் நடுநடுங்கி "மகா ராசாவே, நான் என்ன செய்வேன்; என்னிடத்திலே பெரிய சால்களில்லை; உள்ளவைகளுட் பெரிய சால்களையெடுத்து, யானையை வெள்ளாவி வைக்கும்படி அவற்றுள் விடவிட அவைகளெல்லாம் உடைந்துபோயின ஆதலால், தங்கள் குயவனிடம் மிகவும் விசாலமானதும் பெலனுள்ளதுமான ஒரு சால் வனைந்து தரும்படி கட்டளையிடுங்கள். அவனுடைய வேலைத் திறமையைப் பற்றித் தாங்கள் கேள்விப்படவில்லைப் போலும்; அவன் ஊர்வாயை மூடத்தக்க உலைமூடி வேண்டுமென்றாலுஞ் செய்துதர வல்லவன். சீக்கிரம் அவனுக்குக் கட்டளையிடுங்கள்; அவன் அப்படிப்பட்ட ஒரு சால் வனைந்து தருவானாயின், நான், இந்திரனும் ஆசை கொள்ளத்தக்க வெண்மையாக, தங்கள் பட்டத்து யானையை ஒலித்துத் தருவேன்; வெள்ளையில் எனக்கும், பானைசட்டி பண்ணுவதிலே தங்கள் குயவனுக்கும் உலகத்தில் ஒப்பாவார் ஒருவருமில்லை" யென்று சொன்னான். அரசனும் வண்ணானை நோக்கி "நீ சொல்வது மெய்தான்; நான் இதோ சால் முடித்துத் தரும்படி அக் குயவனுக்குக் கட்டளையிடுகின்றேன்; நீ போய் நான் கூப்பிடும்பொழுது வா" என்று சொல்லி வண்ணானையனுப்பினார். வண்ணானுந் "தப்பினேன், தப்பினேன்" என்று சொல்லிக்கொண்டு தன் குடிசைக்கு மீண்டான்.

* * *

வண்ணான் தப்பிக்கொண்டான் குயவனுடைய முறை வந்தது. அரசன் குயவனைத் தன்னிடமழைத்து "வண்ணான், நமது பட்டத்து யானையை வெளுக்கும்படி வெள்ளாவி வைத்தற்குத் தகுந்த சால் இல்லையென்று முறையிடுகின்றான். ஆனபடியால் நீ காலதாமதமின்றி, மிகவும் விசாலமானதும் பெலமுடையதுமான ஒரு சால் வனைந்துவா" என்று கட்டளையிட்டான். குயவன் அரசனது கட்டளையை மறுத்தற்குப் பயந்து "ஓம்" என்று சொல்லிவிட்டு ஆழ்ந்த சிந்தனையுடன் வீட்டிற்கு மீண்டு சில நாட்களுள் மிகவும் விசாலமான சால் ஒன்று செய்து கொண்டு வந்து வண்ணானிடங் கொடுக்க, வண்ணான் அச்சாலில் யானையைக் காலை வைக்கும்படி செய்யவே சால் உடைந்தது. இப்படிக் குயவனும் பல பெரிய சால்கள் வனைந்து வனைந்து கொடுக்க யானையும் அவைகளையுடைத்துக் கொண்டு வந்தது. இதற்கிடையில் அரசன் பட்டத்து யானையைக் கொண்டுவரும்படி வண்ணானுக்குப் பணிக்க, வண்ணான் யானையின்றித் தான் மாத்திரம்வந்து மன்னவன் முன்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றான். வேந்தன் அவனைச் சினந்து தன் யானையை ஏன் அதுகாறும் கொண்டுவந்து தரவில்லையென்று கேட்க, வண்ணான் "ஐயா, நான் என்ன செய்வேன்; குயவன் தக்க சால் செய்து தருகின்றானில்லை" யெனலும், அரசன் உடனே குயவனைக் கூப்பிடுவித்துக் கேட்க, குயவன் "மகாராசவே, நான் என்ன செய்வேன்; ஆனையை வெள்ளாவி வைக்கக்கூடிய சால் செய்தல் முடியா" தென்றான். அப்பொழுது வண்ணான் "இல்லை, மகாராசாவே, இக்குயவன் முன்னர் ஆனை வெள்ளாவி வைக்கத்தக்க சாலொன்று வனைந்து எனக்குத் தந்திருக்கின்றான்; இப்பொழுது ஏதோ வஞ்சனையால் அப்படிச் செய்ய முடியாதென்று சொல்லுகின்றான். தாங்கள் நெருக்கிச் சொன்னாற் செய்து தருவான்" என்று சொல்ல, அரசன் அடங்காக் கோபமடைந்து குயவனை நோக்கி, "உனக்கு அத்தனை கர்வமா; இதோ பார், உன்னைக் கொண்டு பெரிய சால் வனைவிக்கின்றேனெனக் கூறி, தன் தண்டலாளரைக் கூப்பிட்டு, இக் குயவனை நையப்புடைத்து இவனைக்கொண்டு நமது பட்டத்து யானையை வெள்ளாவி வைக்கக் கூடிய விசாலமும் பெலமுமுள்ள ஒரு சால் வனைவியுங்கள்"ளென்று பணிந்தான். உடனே தண்டலாளர் குயவனைப் பிடித்துச் சவுக்கால் அவன் முதுகில் உதிரம் வரும்படி உறைக்க அடித்தார்கள். குயவன் அடி பொறுக்கமாட்டாதவனாய் "ஐயோ! என்னை அடியாதீர்; நான் உண்மையெல்லாஞ் சொல்லுகின்றேன்" என்றான். உடனே தண்டலாளர் அவனை விடுதலை செய்து அரசன் முன்னிலையிற் கொண்டுபோய் விடுதலும், அவன் வண்ணான்மீது கொண்ட குரோதங் காரணமாகத் தான் அவனுக்குத் தீமை விளைக்கப் புகுந்து, ஈற்றில் தனக்கே தீமை விளைந்த வரலாறனைத்தையுஞ் சொன்னான்.

* * *

பொறாமையுடையார்க்கு அப்பொறாமையே அமைந்த பகையாகும். பிறர் எவருக்கும் கேடு விளைத்தல்வேண்டா.

> "அழுக்கா றுடையார்க் கதுசாலும் ஒன்னார்
> வழுக்கியும் கேடுன் பது."

என்றார் வள்ளுவரும். பொறாமையுடையார் நெஞ்சம் இடைவிடாது எரிந்தபடியேயிருக்கும். பொறாமையாகிய நெருப்புச் சுவாலை, பிறருடைய கல்வி செல்வம் செல்வாக்கு இன்னோரன்ன திறமைகளாகிய விறகினால் எக்காலமும் எரிந்தபடியேயிருக்கும். சிவபிரான் திரிபுரத்தையெரித்த தீயும், மன்மதனைச் சுட்ட நெருப்பும், அநுமான் இலங்கையில் மூட்டிய அனலும் இப்பொறாமையென்னும் நெருப்பிற்கு ஈடாகா. ஏனென்றால் அவை ஒவ்வோர் காலத்து அவிந்தொழிந்தன. இந்த நெருப்பு அதனைத் தன்னகத்துக் கொண்டவருடைய உடல், நெருப்பில் வைக்கப்பட்ட அன்றே அவிந்தொழியும். ஆதலாற் பொறாமையை முளையிற்றானே களைதல் வேண்டும்.

* * *

உலகம் பலவிதம்: 1923 பெப்ரவரி 15

"கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்னும் ஔவையார் திருவாக்கிற்கு ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர், திருத்தணிகைச் சரவணப்பெருமாளையர் முதலிய அறிஞர்கள் "பெண்களுக்குக் கற்பென்று சொல்லப்படுவது நாயகனுடைய சொல்லினின்றுந் திறம்பாமை" என அக்காலத்தில் உரையெழுதிவிட்டார்கள். ஆனால் "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என நன்னூலில் மிகவும் வசதியான ஒரு சூத்திரமிருக்கின்றது. அச்சூத்திரத்தின்படி இக்காலத்திற்கு இசைய ஔவைப்பிராட்டியின் வாக்கிற்கு நவீனமாகப் பொருள் கொள்ளவேண்டி யேற்பட்டிருக்கின்றது. அஃது எங்ஙனமெனில், கற்பு எனப்படுவது (புருஷனுக்கு) உண்மையான கல்வி யென்று சொல்லப்படுவது, சொல் திறம்பாமை - தனது பெண்டாட்டி சொல்வதிலிருந்தும் பிசகாமையாகும். ஆடவனாயுள்ளவனுக்கு உண்மையான படிப்பு என்னவென்றால் தன் பெண்டாட்டி சொல்லைத் தட்டாமல் நடத்தலாம் என்பது தாற்பரியம். கற்பு என்னுஞ் சொல்லிற்குக் கல்வியென்று அர்த்தங் கொள்வதற்குப் பிரமாணமுண்டோவென்று கேட்டால் ஆம், உண்டு. கற்பிலா மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் என்றவிடத்துக் கற்பு என்னும் பதத்திற்குக் கல்வியெனத் தொல்லாசிரியர் பொருள் கொண்டிருக்கின்றார்கள். "சரி நீ ஏனப்பா இப்படி விபரீதார்த்தம் கொள்ளுகின்றாய்; அருமந்த மனுஷனாக இருந்தாயே, உனக்கு வந்த கேடென்ன" என்று அறிவுடையோர் என்னைக் கேட்டால் அதற்கு நியாயஞ் சொல்லுகின்றேன்.

* * *

கலிமுற்றிய இக்காலத்திற்குத் தக்கதாக முன்னோர் நூல்களையெல்லாம் மாற்றுதல் வேண்டுமென்பது நவீன நாகரிகத்தின் பாற்பட்டார் கொள்கை. புருஷன் மனைவிக்குக் கட்டளையிடுதற்கு மாறாக மனைவி புருஷனுக்குக் கட்டளையிடத் தலைப்பட்டிருக்குங் காலமிதுவாகும். சீர்திருத்தத்தில் மேலைத் தேசத்திற்குச் சமானமானதென்று லௌகீக மனுஷரால் மதிக்கப்படும் ஜப்பான் தேசத்தில் ஜன்மமெடுத்த ஒரு பத்தினி தன் பர்த்தாவுக்குப் பத்துக் கற்பனைகள் பணித்திருக்கின்றாள். அக் கற்பனைகளுட் சில நீதியுள்ளவைகளாகவிருக்கலாம். ஆனாற் சொன்னமாதிரி வாய்க்கவில்லை. அப்புண்ணியவதியின் கற்பனைகள் வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) நான் நித்திரைவிட்டெழுந்திருக்கும் பொழுதே நீயும் எழுந்திருக்கவேண்டும். (2) பிள்ளைகளுடைய சமூகத்திலேனும் வளர்ந்தவர்களுடைய சமூகத்திலேனும் என்னை ஏசாதே. [குறிப்பு-அவர் இவர்கள் சமூகத்திலே ஒன்றுஞ் சொல்ல வொண்ணாதாம்; தான் மாத்திரம் பத்துக் கற்பனைகள் விதித்து ஊரறியத் தேசமறியப் பகிரங்கப்படுத்தலாமாம்]. (3) எங்கே போனாலும் எனக்குச் சொல்லிவிட்டே போகவேண்டும். (4) போகும்போது எந்நேரம் போவது எந்நேரம் மீண்டு வருவது என்றதையும் நீ எனக்குச் சொல்லுதல் வேண்டும். (5) சிற்சில விஷயங்களில் நான் என் எண்ணத்திற்கு நடக்க வேண்டும். [குறிப்பு -விஷயங்கள் என்ன என்பதையுஞ் சொல்லியிருந்தால் நன்றாயிருக்கும்] (6) என்னுடைய எண்ணத்திற்குச் செலவு செய்வதற்காக எனக்கு ஒரு குறித்த தொகைப் பணந் தரல் வேண்டும். (7) நீயே செய்து முடிக்கக் கூடிய கருமத்திற்கு மற்றவர்களுடைய உதவியைக் கேளாதே. [குறிப்பு - மற்றவர்கள் என்றதில் இப்பெண்மணி தன்னையும் உட்படுத்திக் கூறினள் போலும்] (8) பிள்ளைகளுக்குத் தீய முன்மாதிரியான எக்கருமத்தையுஞ் செய்யாதே. (9) நாள்தோறும் எனக்குப் படிப்பதற்குக் கொஞ்ச நேரம் விடு. [குறிப்பு- 8ம் 9ம் கற்பனைகள் குற்றமற்றன] (10) "இஞ்சேரும்! உம்மைத்தானே!" என்று ஒருபோதும் எம்மைக் கூப்பிடாதொழியும். இப்பத்துமே அவ்வுத்தமி தன் பத்தா தலையில் விதித்த கற்பனைகளாம்.

* * *

நவீனநாகரிகம் படைத்த தேசத்தில் வசிப்பவர்களைப் பார்த்து, நெய்யரி (பன்னாடை) போல் நல்லவற்றை விடுத்துத் தீயவற்றைக் கைக்கொள்ளும் பெண்மணிகள் சிலர் நமது தேசத்திலும் உளர். அப்பெண்மணிகள் இப்பத்துக் கற்பனைகளையும் பார்த்துவிட்டுத் தாமும் அப்பத்துக் கற்பனைகளையேனும், இல்லையேல் அவற்றிற்குப் பதிலாக வேறு பத்துக் கற்பனைகளையேனும், தங்கள் நாயகருக்குப் பணிக்க வேண்டுமெனச் சித்தங்கொள்வார்கள். ஆனால் நமது பெண்மணிகள் இவ்விஷயமாக அதிகம் சிந்திக்கவேண்டியதில்லை. ஏனென்றால் "கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி" என்பதற்கு நேர் விரோதமாக, "பெண்டாட்டி குறிப்பறிவான் கொண்டான்" என்ற பிரகாரம் நவீன சீர்திருத்தத்தைப் பின்பற்றிய ஆடவர் சிலர் தங்கள் பெண்கள் குறிப்பை யறிந்து அதற்குத் தக்க விதமாக நடக்கப் பயின்று கொண்டார்கள். ஆயினும் நாகரிகத்தின்பாற்பட்ட பெண்கள் ஜப்பான் பெண்மணியைப் பின்பற்றி 10 கற்பனைகளைத் தம் நாயகருக்கு முந்தியே வரையறுத்துவிட்டால் நாயகன் நாயகிக்கிடையில் விபரீத விளக்கம் ஏற்படாது நாயகி பணித்தபடி நாயகன் நடந்து கொண்டு ஒற்றுமையாக வாழலாகும். ஜப்பான் பெண் விதித்த கற்பனைகளைப் பின்வருமாறு

திருத்தி நவீன சீர்திருத்தம் படைத்த பெண்கள் தம் நாயகருக்குப் பணித்தல் நன்றாகும். (1) நான் நித்திரை விட்டு எழுவதற்கு முந்தி நீ எழுந்து உன் கருமங்களை முடித்துக்கொண்டு பின்னர் வந்து என்னையும் நித்திரையினின்றும் எழுப்பிவிடுதல் வேண்டும். (2) நான் உன்னைப் பலர் சமூகத்திலே தூற்றினாலும் நீ என்னை ஒரு போதும் ஏசாதே. (3) நீ வெளியே போகும் போது எனக்குச் சொல்லி என்னுடைய அனுமதி பெற்றுக்கொண்டுதான் போகவேண்டும். (4) நான் எங்கேனும் புறப்பட்டுப்போனால் எங்கே போகின் றாயென்று ஒருபோதும் என்னை வினவாதே. (5) நான் நினைத்தபடியெல்லாம் என்னை நடந்து கொள்ள விடு. (6) நீ எடுக்குஞ் சம்பளமாயிருந்தாலுஞ்சரி வேறெந்த உழைப்பாயிருந்தாலுஞ்சரி, கிடைத்தவுடன் அதனைப் பொத்தினபடியே கொண்டு வந்து என்னிடந் தந்துவிட்டுப் பின்னர் என்னை மன்றாடி ஒருரூபா, ஐம்பதுசதம், 25 சதம் பத்துச் சதம், ஐந்து சதமாகத் தேவையான நேரத்தில் நான் தர வாங்கிக்கொள்ளுதல் வேண்டும். (7) நான் செய்யவேண்டிய வேலைகளையும் எனக்கு அலுப்பெனக் கண்டால் நீயே செய்தல்வேண்டும். (8) நான் சிறுபிள்ளைகள் முன்னிலையிலேனும் வளர்ந்தவர்கள் முன்னிலையிலேனும் உன்னைக் கோபித்துத் திட்டினாலும் நீ ஒன்றும் பேசாமல் தலைகுனிந்து போதல் வேண்டும். (9) நாள் தோறும் ஊர்க்கதை பேசிச் சண்டை பிடிக்கவும், வீட்டுக்குவீடு போகவும் எனக்கு இயன்றளவு நேரம் விடவேண்டும். (10) என்னை அழைக்கும் போது அம்மா தயவு செய்து இப்படி எழுந்தருளுங்கள் என்று மரியாதையாக அழைத்தல் வேண்டும்; ஏனென்றால் எஜமானாகிய உனக்கு நான் எஜமாட்டியாக இருக்கின்றேன்.

* * *

சைவக்கல்லூரியொன்றில், சென்ற சிவராத்திரி புண்ணிய தினத்தன்று, தமிழ்ப் போதகாசிரியர் என இருக்கும் ஒருவர் தம்மிடங் கற்கும் பிள்ளைகட்கு, சிவராத்திரி முதலிய விரதங்களை அநுட்டிப்பதெல்லாம் மௌட்டிகமாகும்; அபுத்திபூர்வமாக அநுட்டித்தார்க்கு எப்போதாயினும் பயன் கிட்டுமா? என்று சிவநிந்தை செய்யச் சில பிள்ளைகள் அப் புண்ணிய தினத்திற் சிவநிந்தை கேட்க மனம் பொறாதவராய் அவ்வாசிரியர் கூற்றை ஆட்சேபிக்க முயன்றும் உபாத்தியாயர் மாணாக்கர் என்னும் நியதிபற்றி, எதிர்வார்த்தை அதிகம் இயம்பாது, பின் எம்மிடம் வந்து சிவராத்திரி புண்ணிய காலத்திலே அவ்விரதத்தை அநுட்டித்துக்கொண்டிருந்த எம்முட் சிலரும் இச் சிவவிரத நிந்தனையைக் கேட்க நேர்ந்ததே; என்று வருந்திக்கூறி, அவ்வுபாத்தியார் செயலை உலகம் பலவிதத்தில் கண்டித்தெழுதும்படி தெரிவித்தனர். இவ்வாசிரியர் இங்ஙனம் சிவவிரதநிந்தை செய்தமை உண்மைதான் என்பதைத் தக்க ஆதாரத்துடன் அறிந்திருக்கின்றேம். இவ்வாறான பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபராதங்கள் உலகம்பலவிதத்தில் எழுதி அலட்சியமாக விடத்தக்கனவல்ல. சைவ சமயத்தைப் பரிபாலிப்பதே இவ்விந்துசாதனத்தின் பிரதான கடன்களுளொன்றாகும்.

* * *

உலகம் பலவிதம்: *1923* பெப்ரவரி *22*

"நீயே உன்னை யொருபோதும் புழுகாதே; உன்னிடத்தில் அரிய குணங்களுஞ் செயல்களுங் காணப்படின் மற்றவர்களே உன்னைப் புகழ்ந்து பாராட்டுவார்கள். புகழாகவே உன்னைத் தேடி வர வேண்டுமன்றி நீ புகழைத் தேடிச் சென்றால் அது மிகத் தூரத்தே அகன்றுவிடும். அற்பர்களாயுள்ளவர்களே தம்மைத் தாம் புகழுவர்; அறிவுடையோர் அங்ஙனஞ் செய்யார். நிறைகுடம் நீர் தளம்பாது; குறைகுடமே தளம்பும். லெமொனெட் போத்தல் நிறைந்திருந்தாற் சத்தமிடாது; வெறும் லெமொனெட் போத்தலே சத்தமிடும். சிற்றுணர்வோர் என்றுஞ் சிலுசிலுப்பர் ஆன்றமைந்த, முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே வெற்றிபெறும், வெண்கலத்தினோசை மிகுமே, விருபசும்பொன் ஒண்கலத்திலுண்டோ வொலி" என்ற பிரகாரம் அறிவுடையோர் அதிகம் பேசாமல் தங்கள் கருமத்தைச் செய்து முடிப்பர்; அறிவிலார் அதிகம் பேசுவர்; நினைத்த கருமத்தை முடிக்க மாட்டார்கள். புகழை விரும்பித் தானாகத் தன்னைப் புகழுதல் எண்ணெய்க்குப் பதிலாகத் தண்ணீர் பெய்து தீபத்தை எரிக்க முயலுதல் போலாகுமென்னுங் கருத்துப்படப் பெரியோர் "தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர், நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால் - தன்னை, வியவாமையன்றே வியப்பாவ தின்பம் நயவாமையன்றே நலம்" எனக் கூறியிருக்கின்றாரென ஒரு காலங்கண்ட பெரியார் கூறுகின்றனர்.

* * *

"ஐயா, தேசாபிமானிகள், சனத்தலைவர், பெரியமனுஷர் என்று சொல்லுகின்றீர்களே; அவர்களின் இலக்கணம் என்ன? அவர்கள் எப்படிப்பட்டவர்களாகவிருக்க வேண்டும்; தம்நயங் கருதாதவர்களாய், பரோபகார சிந்தை பூண்டவர்களாய், சிறியார் பெரியார் வறியவர் செல்வர் என்னும் பேதம் பாராட்டாதவராய், எல்லாரையுஞ் சமமாக மதிப்பவராய், எவருந் தங்கள் குறைகளை எந்த நேரத்திலும் எடுத்துச் சொல்லக் கேட்டு அவற்றை நீக்குமியல்பினராய், முகமன் பாராதவராய், தம்முடல் பொருள் ஆவி மூன்றனையும் உலக நன்மையின் பொருட்டு அர்ப்பணஞ் செய்ய ஆயத்தமுள்ளவராய், மதபேதம் பாராட்டாதவராய், ஊராருக்கு வந்த விபத்தைத் தமக்கு வந்த விபத்தாக மதிப்பவராயிருப்பவரன்றோ தேசாபிமானிகளென்றும் சனத் தலைவரென்றும் பெரிய மனுஷரென்றுஞ் சொல்லப்படுவர். நம்மவர்களிடத்தில் இக்குணங்கள் அத்திமலர்போல் அபூர்வமாயிருக்கின்றனவே. சிலவாரங்கட்கு முன்னர் நான் ஒரு பொதுவிஷயமாக ஒரு சனத்தலைவரைக் காணும் நோக்கமாக அவர் மனைக்குச் சென்றேன்; சென்று நெடிதுநேரம் அவர்மனைப் புறங்கடையில் நின்றேன்; ஒருவாறு அவர் எமக்குத் தரிசனந் தந்தார்; வந்த நோக்கமென்னவென்றார்; நான் வந்த நோக்கம் சனங்களுக்கு நேர்ந்த ஒரு விபத்தை நீக்குவதற்குத் தங்கள் உதவியும் வேண்டியிருத்தலால் வந்தேனென்று கூறி, விபத்தும் இன்னதென்பதைச் சொன்னேன். அவர் நான் சென்ற நோக்கத்தையேனும் என்னையேனும் பொருட்படுத்திலர். என்னைப் பொருட்படுத்தாமல் அவர் விட்டதற்கு நியாயமுண்டு; நான் அவரைக் காணும்படி போனபோது காற் சட்டை சப்பாத்து தொப்பி முதலியன அணிந்து செல்லவில்லை; மோட்டர் வண்டியிலேனும் துரகரதத்திலேனும் ஏறிச் செல்லவில்லை; ஒரு வேட்டியும் ஒரு பனியனும் ஒரு சவுக்கத் துண்டுமேயணிந்திருந்தேன்; ஆனமையால் என்னைக் கண்டு அவர் தொடக்கத்தில் அலட்சியஞ் செய்தமை நூதனமல்லவென்று நினைக்கின்றேன்; நான் சென்ற கருமத்தின் நோக்கத்தை அலட்சியஞ் செய்தமையே எனக்கு நூதனமாகவிருந்தது. அவர் அந்த நன்மையான விஷயத்தைச் செய்வதற்குத் தன்னால் முடியாது இன்னாரிடம்போய்க் கேளென்றார்; ஈற்றில் நான் கொஞ்சம் நியாயம் பேசினேன்; அதற்குப் பின்னர் எனக்கு இருக்க ஒரு கதிரையைக் காட்டி "வளத்தி"லே வந்தார்; நான் இவருடன் நேரம் போக்குவதாற் பயனில்லையெனக்கண்டு உடனே மீண்டு வந்துவிட்டேன். இந்தியாவிலுள்ள தேசாபிமானிகட்கும் இவர் போன்ற சுயாபிமானிகட்கும் எள்ளளவேனும் சமத்துவமுண்டா என்று அபிமானமுள்ள ஒரு வாலிபர் கூறுகின்றார்.

* * *

உலகம் பலவிதம்: *1923* மார்ச் *1*

ஒரு தையற்காரன் ஒரு தினம் அந்திக் காலத்திலே தன்னுடைய கடையைப் பூட்டிக் கொண்டு வீட்டிற்குச் செல்லும்போது, ஒரு திருடன் அவன்பின்னே தொடர்ந்து சென்று, அத்தையற்காரன் தன் அங்கவஸ்திரத்தில் முடிந்து தோண்மீது போட்டிருந்த பணமுடிப்பை ஒரு கத்திரிக்கோலால் அரிந்தெடுத்தான். உடனே தையற்காரன் திரும்பி அத்திருடனைப் பிடித்து, தன் கையிலிருந்த கத்திரிக்கோலால் அவனுடைய காதுகளிலொன்றை அரிந்தெடுத்துக்கொண்டான். திருடன் அந்தத் துன்பத்தைச் சகிக்க மாட்டாதவனாய்க் "கூவோ முறையோ" என்று ஓலமிட்டுக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிபதியிடஞ் சென்று முறையிட்டான். நீதிபதி உடனே தையற்காரனைப் பிடித்துக் கொண்டுவரும்படி சேவகஞ் செய்வோருக்குப் பணிக்க, அவர்கள் அவனைப் பிடித்துக் கொண்டு வந்து அந்நீதிபதியின் முன்னிலையில் விட்டார்கள். நீதிபதி தையற்காரனைப் பார்த்து "நீ ஏன் இவனுடைய காதைக் கத்திரித்தாய்" என்று கேட்க, தையற்காரன், "இவன் எனது பண முடிப்பைக் கத்தரித்தமையினால், நான் இவனுடைய காதைக் கத்திரித்தேன்" என்றான். நீதிபதி திருடனை நோக்கி, "நீ ஏன் அவனுடைய பண முடிப்பைக் கத்திரித்தா" யென்று கேட்க, திருடன் "ஐயா, என் தொழில் திருட்டுத்தொழில், இன்று வேறொன்றும் அகப்படாமையினால் இத் தையற்காரனுடைய பணத்தை அபகரிக்க முயன்றேன்" என்றான். நீதிபதி ஆச்சரியமடைந்து "உலகத்திலே வேறு எத்தனையோ தொழிலிருக்க நீ இத்திருட்டுத் தொழிலுக்கு ஏன் உடன்பட்டாய்" எனலும், திருடன் உலகத்திலுள்ள தொழில்களுட் பெரும்பாலன திருட்டுத் தொழிலுள் அடங்குமெனலும், நீதிபதி அதிக ஆச்சரியமடைந்து "உலகத்திலுள்ள தொழில்களுட் பெரும்பான்மையன திருட்டுத் தொழிலுள் அடங்குமென்று நீ எப்படித் துணிந்து சொல்லலாம் என, "ஐயனே, சொல்லுகின்றேன் கேட்டருளவேண்டும்" என்று சொல்லத் தொடங்கினான்.

* * *

"ஐயா, என் குடும்பம் மிகப் பெரியது. நான் ஏழு குழந்தைகளையும் என் மனைவியையும், வயோதிகராகிய தாய்தந்தையரையும் போஷிக்க வேண்டியவனாயிருக்கின்றேன். என்னுடைய இலம்பாடோ பெரிதுங் கொடியது; நேர்மையாகப் பிழைத்தற்கோ என்னிடம் பொருளில்லை. வேளாண்மை உபாத்திமைத்தொழில் என்னு மிரண்டுமே நேர்மையான தொழில்களென்றும், ஏனையவையெல்லாம், இக்காலத்தில் ஒருவகையான களவுதொழில்களேயென்றும் அறிந்தேன். வேளாண்மை செய்தற்கு எனக்கு வயலில்லை; உபாத்திமைத் தொழில் பார்ப்பதற்கு எனக்குப் படிப்பில்லை" யென்று திருடன் சொல்லுதலும், நீதிபதி அவனை இடையிலே தடுத்து, "இந்த இரண்டு தொழில்களுந் தவிர ஏனைய தொழில்களெல்லாம் இக்காலத்திற் களவு தொழில் போன்றன வென்றனையே; எங்ஙனம்? அதனை விளக்கிக் காட்டு" என்று சொல்லத் திருடன் சொல்லுகிறான்: "ஆண்டவனே, அரசர்களென்று இருந்துகொண்டு தங்கள்கீழுள்ள குடிகண்மீது அவர்கள் சுமக்கமாட்டாத வரிகளை விதித்து அவர்களை வருத்திப் பணம் பெறுகின்றார்கள். குடியானவர்களுள் ஏழைகளானவர் தாம் ஒருகாலும் மீண்டுவரார் ஆனாற் கள்வராகிய எங்கள் கையில் அகப்பட்ட பொருள் சிலசமையங்களில் மீண்டுவருதலுங்கூடும். ஐயா இவை மாத்திரமா, மேலுத்தியோகத்தர்களாயிருக்கிறவர்கள் தாங்கள் உயர்ந்த சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு, தங்கீழுள்ள அற்ப சம்பளம் பெறும் உத்தியோகத்தரை வருத்தி, தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளையும் அவர்களைக் கொண்டு செய்விக்கின்றார்கள்; இதுமட்டா, யாராயினும் ஒரு கீழுத்தியோகத்தன் இறந்துவிட, அவனுடைய இடத்தில் வருதற்குப் பலர் விண்ணப்பஞ் செய்யும்போது, தகாதவனாயிருந்தாலும் தக்க தட்சணை கொடுப்பானாகில் அவனே தகுந்தவனாகவும், தக்கவனாயினும் தட்சணையில்லையேல் தகாதவனாகவுங் கண்டு, தட்சணை கொடுத்தவனே உத்தியோகத்தைப் பெறுகின்றான். ஒரு கீழுத்தியோகத்தர் உத்தியோகம் மாறி சுவஸ்தானத்திற்கேனும் தமது ஜனன ஸ்தானத்திற்கேனும் செல்ல வேண்டுமாயின், அவரும் தமக்கு மேலேயுள்ள உத்தியோக தெய்வத்திற்குப் பெருந் தட்சணை வைத்து வழிபட்டு அருள் பெற்றே செல்கின்றார். இவைகளெல்லாம் களவல்லவா? நாங்கள் வெளிவெளியாகச் செய்பவைதாமா களவு? இன்னுஞ் சொல்லுகின்றேன் கேட்கவேண்டும்" என்று திருடன் சொல்லத் தொடங்க நீதிபதி அவனைத் தடுத்து "அப்பா, நீ மிக அரிய இரகசியங்களையெல்லாஞ் சொல்லுகின்றாய்; நீ சொல்வதை நான் ஆறுதலுடன் கேட்க விரும்புகின்றேன்; இன்று ஆவசியகம் விசாரணை செய்யவேண்டிய வேறு வியாச்சியங்களுமிருக்கின்றன; ஆதலால் உனது விசாரணை வருகிற வியாழக்கிழமைக்குத் தவணை போடப்பட்டிருக்கின்றது; நீ தவறாது அத்தினம் கோட்டிற் சமூகமாகவேண்டும்" என்று சொல்லி அத்திருடனையும் தையற்காரனையும் அனுப்பி விட்டார்.

* * *

உலகம் பலவிதம்: 1923 மார்ச் 8

நீதிபதி திருடனை நோக்கி, "நீ சொல்ல வேண்டியவற்றைச் சொல்லுதி" யெனலும், திருடன் சொல்லுகின்றான்: "துரையே, தலைமைக்காரரென்றிருப்பவர்களின் செயலை ஏதென்று சொல்லுவேன்; ஊரிலே கலகங்களும் வியாச்சியங்களும் வராது பாதுகாத்தற்காகவே அவர்கள் அரசாங்கத்தினரால் நியமிக்கப்பட்டவர்களாம்; தலைமை உத்தியோகத்தர்களாயுள்ளவர்கள் ஊரிலே கலகம் இடையிடையே நடந்துவருதல் வேண்டும். பஞ்சம் நிகழ வேண்டும் என்று விரும்பவேண்டிய நிலைமையிலிருக்கின்றார்கள். இந்த நிலையில் இவர்களை வைத்தவர்கள் அரசாங்கத்தினர் என்றுதான் நான் நினைக்கின்றேன்; ஏனென்றால் இவர்களுக்கு அரசினர் கொடுக்குஞ் சம்பளம் போதியதல்ல. இதனால் இத்தலைமைக்காரர்கள் ஊரவர்களிடத்தில் வாயாற் கேளாமல் ஏதும் வாங்கிப் பிழைக்க வேண்டியவர்களாகவிருக்கின்றார்கள். கலகமில்லையேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தலைமைக்காரரைக் கவனிப்பாருமில்லையென்றே சொல்ல வேண்டும். இவர்கள் இவ்வுத்தியோகத்தைப் பெறும்போது பெருந்திரவிய சகாயங்கொண்டே பெறவேண்டியவர்களாகவிருக்கின்றார்கள். செட்டி நஷ்டந் தட்டான்மீது, "தட்டான் நஷ்டம் ஊரவர் மீது" என்றபடி இங்ஙனந் தாங்கள் உத்தியோக நியமனம் பெறுங் காலத்திலே செலவழித்த பணத்தைப் பின்னர் ஊரவர்களிடத்திலேயே அறவிடவேண்டியவர்களாயிருக்கின்றார்கள். தலைமை உத்தியோகம் குறைவின்றிப் பார்ப்பதற்குக் கல்வியும், பிரஜைகளிடத்து அநுதாபமும் நேர்மையும் பட்சபாதமின்மையும் பிரதிகூலமான குணங்களாம்; செல்வமும் அரசினர் சகாயமும் பட்சபாதமும் பேராசையுமே அவ்வுத்தியோகத்திற்கு அநுகூலமான குணங்களாம்".

* * *

"ஐயா, இனி, பொலிசர் என்று இருப்போரின் தன்மையை என்னென்று எடுத்துச் சொல்லுவேன்; இவர்கள் ஊரைக்காக்கவும், கலகம் விளைப்போரையும் எங்களைப் போன்ற திருடர்களையுமகப்படுத்தவுமல்லவா நியமிக்கப்பட்டவர்கள்; ஆனால் இப்பொழுது இவர்கள் தன்மை வேலி பயிரை மேயத் தொடங்கினாற்போல இருக்கின்றது. ஊரிலே சமாதானத்தை ஆக்க வேண்டிய இவர்கள் சமாதானத்தை நீக்கி விடுகின்றார்கள்; யாராயினுஞ் சண்டையிட்டாற் சண்டை முடியும்வரைக்கும் இவர்கள் அந்தர்த்தானமாயிருந்து சண்டையோய அவ்விடத்திலே வெளிப்படுவார்கள். இவர்களுக்குக் பணங்கொடாத லோபிகள் குற்றவாளிகளாகவும், இவர்கள் விஷயத்தில் வள்ளற்றன்மையாயிருப்போர் குற்றமற்றவர்களாயுங் காணப்படுவர். இவர்களுடைய சகாயம் கள்வராகிய எங்களுக்கு இல்லையாயின் நாங்கள் இக் களவுதொழிலைக் குறைவின்றி நடத்தி வருதல் கஷ்டமாகும். நானோ சாமானியமான கள்ளனல்லேன்; பக்காத்திருடன் என்று பெயர் பெற்றுள்ளேன்; அப்படிப்பட்ட என்னிடத்திலும் இந்தப் பொலிசார் பணத்தை அபகரித்திருக்கின்றார்களென்றால் இவர்கள் எங்களிலும் மேம்பட்டவர்களல்லவா" என்று கள்ளன் சொல்லுஞ் சமையத்தில் நீதிபதி அவனை இடையிலே தடுத்து "எப்படி நீ பக்காத் திருடன் என்று பெயர்பெற்றாய்? அதனையும் எனக்குச் சொல்"லெனத் திருடன் சொல்லுகின்றான்.

* * *

"ஆண்டவனே, நான் உங்களுக்கு முன்பு சொன்னபடி, உலகத்திலேயுள்ள தொழில்களுட் பெரும் பான்மையான தொழில்கள் களவுத் தொழிலை ஒத்திருக்கின்றன என்பதை என்னுடைய அனுபவத்திற் கண்டபின்பே இக்களவுத் தொழிலிற் கையிட்டேன். ஒரு தினம் நான் என் வீட்டிலிருந்து புறப்படும்போது கொஞ்சச் சாணத்தை எடுத்து நன்றாய்ப் பிசைந்து ஒரு வாழையிலையில் வைத்துப் பொதிந்து ஒரு வஸ்திரத்தினுள் வைத்துப் பொதிசோறுபோலப் பார்ப்போர்க்குத் தோற்றும்படியாகக் கட்டி என் தோண் மேற் போட்டுக்கொண்டு திருட்டுத் தொழிலுக்காக வேற்றூருக்குப் புறப்பட்டுச் செல்லும்போது அதிக வெயிலாயிருந்தபடியினால் தெருவோரத்தில் நின்ற ஒரு மரத்தின் நிழலிற் சிறிதுநேரம் ஆறியிருந்தேன். அச்சமையத்தில் இன்னொருவனும் வந்து கையில் ஒரு முடிப்புடன் அந்த மர நிழலிலே ஒதுங்கினான். "அப்பா, உது என்ன முடிப்பு" என்று நான் அவனைக் கேட்க, அவன் "இது கொஞ்ச அரிசி" என்று சொல்லி விட்டு என் முடிப்பைப் பார்த்து, "உது என்ன" என்று கேட்க நான் "இது கட்டுச்சாத"மென்றேன்; அப்படியானால் ஏன் உண்ணாமலிருக்கின்றாய் என்று அவன் கேட்க, நான் எனக்கு இப்பொழுது பசியில்லை; இன்னுங் கொஞ் சத் தூரம் போன பின் உண்ணலாமெனலும், அவன் அப்படியானால், இந்த அரிசியை நீ வைத்துக்கொள் பசிவந்த வேளை சமைத்துப் பசியாறு. நான் அதிக பசிகொண்டிருக்கிறேன். உதனை எனக்குத் தா என்றான். நான் மிக்க சந்தோஷத்துடன் நமது பொதிசோற்றை அவனிடங் கொடுத்துவிட்டு, அங்குத் தாமதித்து நின்றால் நமது களவு வெளியாகுமென நினைத்து அவன் தந்த அரிசிப் பொதியையும் வாங்கிக்கொண்டு மனமகிழ்ச்சியோடு வேகமாகப் புறப்பட்டு நடந்தேன். அவனும் நான் கொடுத்த பொதிசோற்றை அந்த இடத்தில் அவிழ்த்து உண்ணாமல், விரைவாக நடந்து தன் வழியே போனான். நான் மூன்று நான்கு மைலுக்கப்புறம் போய் ஒரு மரநிழலிலிருந்து கொண்டு அவன் தந்த அரிசிப் பொதியை அவிழ்த்துப் பார்த்தேன்; ஐயா, பார்த்தபோது எனக்குண்டான ஆச்சரியத்தை என்னென்று சொல்லுவேன். நான் நம்பியிருந்தபடி அங்கிருந்தது அரிசியல்ல. மிகச் சிறிய பருக்கைக் கற்களை அவன் சேர்ந்து அரிசிபோற் கட்டிக்கொண்டு வந்து என்னை ஏமாற்றிவிட்டான் என்பதை அறிந்தேன். நான் அவனை ஏமாற்ற அவன் என்னை ஏமாற்றினபடியால் அவனும் பெருந் திருடன்; அவனை எவ்விதமாகவேனுங் கண்டுபிடிக்க வேண்டுமென்று வந்த வழியே மீண்டேன். அவனும் என்னைப் போலவே கட்டுச் சாதத்தை உண்ணலாமென்று அவிழ்த்துப் பார்த்தபோது சாணமெனக் கண்டு ஆச்சரியங் கொண்டு மீண்டபடியினால், சில தூரஞ் சென்று ஒருவரையொருவர் எதிரெதிரே சந்தித்தோம். சந்தித்து "அப்பா நாங்கள் ஒருவரையொருவர் வென்ற திருடர்களாகவிருக்கின்றோம்; நாங்கள் தனித்தனி சென்று திருடுவதைக் காட்டிலும், ஒருமித்துச் சென்று திருடினால் அதிகந் திருடலாம்; ஆனபடியினால் நீயும் என்னுடன் வா" என்று நான் அவனைக் கேட்க, அவனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு உடன்பட, இருவருமாகச் சேர்ந்து திருடும்படி அன்று இரவு ஒரு கிராமத்திற்குச் சென்றோம்.

* * *

அங்குச் சென்று ஒரு லோபியின் வீட்டுட் புகுந்து திருடலாமெனமுயன்றபோது வீட்டுக் கதவுகளெல்லாம் நன்றாய்ப் பூட்டப்பட்டிருந்தன. எவ்வகையாலும் உள்ளே பிரவேசித்தற்கு மார்க்கமில்லை. இருவருமாக வீட்டுக் கூரையின் மீது ஏறி ஓட்டைப் பிரித்துச் சில மரங்களை அரிந்து உள்ளே இறங்குதற்கான மார்க்கத்தை ஆக்கிக்கொண்டோம். பின்னர் என்னுடன் வந்த கள்வன் என்னைப் பார்த்து "நான் முகட்டிலிருந்து கயிற்றைப் பிடித்துக்கொள்ளுகிறேன்; நீ அக்கயிறு வழியே இறங்கி, அகப்படக்கூடிய விலையுயர்ந்த பொருட்களை யெல்லாம் எடுத்து ஒரு பெட்டியுள் வைத்துக் கயிற்றிலே மாட்டிவிடு; நான் மேலே இழுத்து எடுத்துக்கொண்டு, பின்னர் அக்கயிற்று மார்க்கமாக உன்னையும் மேலே தூக்கிவிடுகிறேன் என்றான்" நான் அதற்கு உடன்பட்டுக் கயிற்றின் வழியாக உள்ளே இறங்கிப் பொருட்களை யெல்லாந் திருடி ஒரு பெட்டியுள் வைத்தேன்; வைத்துவிட்டு, புதிதாக வந்தவனை நம்பவொண்ணாதென நினைத்து நானும் அந்தப் பெட்டிக்குள் இருந்துகொண்டு ஒருவாறு தடத்தை இறுக்கி, கயிற்றை இழுக்கும்படி அடையாளங் காட்டினேன். அவன் பெட்டியை இழுத்து வெளியே எடுத்துக்கொண்டு, முகட்டினின்றும் இறங்கி ஓட்டம் பிடித்தான். என்னைத் தூக்கி வெளியேவிட்டால் நான் பங்கு கேட்பேனென்று நினைத்து, என்னை விட்டுவிட்டுப் பொருளைக் கொண்டுபோவதாகவே அவன் நினைத்துக் கொண்டான். எவரைவிட்டுவிட்டுத் தான் தப்பவேண்டுமென்று நினைத்தானோ அவரைத் தான் சுமந்துகொண்டு போவதை அவன் அறியான். நாட்டைக் கடந்து இரண்டு மைல் தூரம் வரையில் ஓடிச்சென்று நடுக்காட்டுட் புகுந்து தனிமையான ஒரு இடத்திலே பெட்டியை வைத்துத் திறந்தான். திறந்தவுடனே நான் பெட்டியினின்றும் புறப்பட்டு வருதலைக் கண்ட அவனுக்கு உண்டான அச்சத்திற்கும் ஆச்சரியத்திற்கும் ஒரு அளவில்லை. எனக்கு அவன் செய்யத் துணிந்த துரோகத்தையிட்டு நான் அவனைக் கண்டித்தேன். பின் அவன் தான் ஒருகாலமுந் துரோகஞ் செய்யமாட்டேனென்று எனக்குச் சத்தியஞ் செய்து தந்தான். அன்று தொடக்கமாக நாங்களிருவரும் பரஸ்பரம் விசுவாசமுடையவர்களாய் எங்கள் தொழிலை நடத்திவந்தோம். சென்ற வருடம் அவன் நோய்வாய்ப்பட்டிறந்தான். அதனால் நான் தனித்துக் கொண்டேன். அத்திருடனே எனக்குப் பக்காத் திருடனென்ற பட்டத்தைக் கொடுத்தவன். இது தான் ஐயா, பக்காத் திருடனென்ற வரலாறு. இப்படிப்பட்ட என்னிடத்திலும் நகர்காவலர் பொருள் பறித்துப்போடுகின்றார்கள்" என்று திருடன் கூறி மேலும் சொல்லத்தொடங்க, நீதிபதி எஞ்சிய வரலாற்றை அடுத்த வியாழக்கிழமை கேட்பேன்; அப்பொழுது சொல்லுதியென்று தவணையிட்டார்.

* * *

உலகம் பலவிதம்: 1923 மார்ச் 15

திருடன் நீதிபதியை நோக்கி "ஐயா, அரசாங்க உத்தியோகத்தரின் தன்மையைச் சொன்னேன்; இனி வியாபாரிமாரென இருப்பவர்களின் இயல்பைச் சொல்லுகின்றேன்; கேளுங்கள்; வியாபாரிமார் தமக்கு நஷ்டம் வாராதபடியும் வாங்குவோருக்கு நஷ்டம் வாராதபடியும் வியாபாரஞ் செய்தல்வேண்டு மென்பது முறைமையாயிருக்க, இக்காலத்து வியாபாரிகள் இவற்றையெல்லாம் மறந்து, வெந்த வீட்டிற் பிடுங்கியது அறுதியென்ற பிரகாரம் சமையம்பார்த்துச் சனங்களின் பணத்தைக் கொள்ளை கொள்ளுகின்றார்கள்; இவர்களுக்குச் சனங்கள்மீது இரக்கமென்பது சிறிதுங் கிடையாது; பஞ்சம் பசி வந்தகாலத்திலேயே இவர்களுந் தங்கள் திறமையைக் காட்டிவிடுவார்கள்; தாங்கள் பொருள் கொள்ளுமிடத்தில் ஒரு பொருள் விலையேறிக் கொண்டால் இங்கே அதனை ஒன்றுக்கு இரண்டாக லாபம் வைத்து விற்பார்கள்; பின்னர் அந்த இடத்திலே விலை குறைந்தாலும் இங்குள்ள வியாபாரிமார் எல்லோரும் ஒத்துக் கொண்டு முந்திய கூடிய விகிதத்திற்கே விலையேற்றி விற்பார்கள். இனி, பணம் வட்டிக்குக் கொடுப்போர் 18 விகிதம் 24 விகிதம் வட்டி வாங்கிக் கடன்காரனுடைய குடியைக் கெடுத்து விடுகின்றார்கள்; வட்டிக்குவட்டி அதற்கு வட்டி யென்று அறவிட்டுக் கடன்பட்டவனைக் குட்டிச் சுவராக்கிவிடுகின்றார்கள். இவர்கள் செய்யும் யோக்கியக் களவைக் கேட்பாரெவருமில்லை. கோயிலதிகாரிகள் பிராமணரென்றிருக்கின்றவர்கள் தெய்வத்தைத் திருடிக்கொண்டு போகின்றார்கள். திருடர்களாகவுள்ள நாங்கள் தாமும் திருடிய பொருளில் ஒருபகுதி தெய்வத்திற்குக் கொடுக்கின்றோம். இப்படியே இன்னும் பொன்செய்வினைஞர் முதலிய தொழிலாளர் கூலிக்காரர் இன்னோரன்ன பிறர் நாள்தோறும் செய்துவருந் திருட்டுத்தொழிலைச் சொல்லுவேன்; ஆனால் அவற்றையெல்லாஞ் சொல்வதினாற் பெரும் மனஸ்தாபம் ஏற்படுமென்று நினைத்து இங்கே சொல்லாதொழிந்தேன்; துரையே தாங்களே யூகித்துப்பாருங்கள். இவற்றையெல்லாஞ் சிந்தித்தே நான் களவுதொழில் விசேஷமெனக்கொண்டேன்; ஆனால் இவ்வளவுகாலமும் அகப்படாமல் தப்பி இப்பொழுது என்னுடைய காதொன்றைப் பறிகொடுத்தேன்" என்று சொல்லி முடித்தான். நீதிபதி இவையனைத்தையுங் கேட்டு ஆச்சரியமடைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையற்காரனைப் பார்த்து, "உனது பணத்தை நீயே பெற்றுக்கொண்டாய்; உன்னிடம் திருடியதற்காக இவனுடைய காதைக் கத்திரித்து இவனுக்குத் தக்கதண்டனையுஞ் செய்துவிட்டாய்; ஆனமையினால் இதற்குமேல் இவனுக்கு இனித் தண்டனையில்லை என்று சொல்லித் தையற்காரனை அனுப்பிவிட்டு, திருடனை நோக்கி "அப்பா, உன்னிடத்திலிருந்து எத்தனையோ அரிய விஷயங்களையெல்லாம் யான் இப்பொழுது அறிந்துகொண்டேன்; ஆனாலும் களவுதொழில் பேராபத்தையும் அரச தண்டனையையும் பெரும் பாபத்தையும் விளைக்கக்கூடிய தொழில்; இதனை நீ இன்றே விடுத்து விவசாயத்தைச்செய்யவேண்டும்; அதற்கு வேண்டிய முதல் யானே தருகின்றேன்; நீ சொல்லி வந்த யோக்கியத்திருடர்களுக்கு இம்மையிலே அரசதண்டனை கிடைக்காவிட்டாலும், மறுமையிலே தெய்வதண்டனை தப்பாமற் கிடைக்கும்" என்று சொல்லி அத்திருடனுக்குக் கமத்தொழில் செய்யும்படி வேண்டிய பணத்தைக் கொடுத்து அவனை அனுப்பினர். திருடனும் அங்ஙனமே செய்து அந்நீதிபதியிடத்து அதிக விசுவாசம் பாராட்டிக்கொண்டு வாழ்ந்தான்.

* * *

ஆங்கிலத்திலுள்ள "Unscrupulous" என்னும் பதத்திற்கு, அவதானமில்லாத, பிறருக்கு வரும் நஷ்ட லாபங்களைக் கருதாத, யோசனையற்ற எனப் பல அர்த்தங்களுண்டு. யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதி பழைக்கும் காங்கேயன்றுறைக்குமிடையே புகைரதஞ் செலுத்திய புச்சன் என்னுஞ் சாரதிக்கு விரோதமாகத் தொடரப்பட்ட வியாச்சியத்தைக் கச்சேரியில் விசாரணை செய்து தீர்ப்புச் சொன்ன சமையத்தில் வழக்காளி ஸ்ரீ கந்தசுவாமியைப் பற்றிச் சொன்னபோது இந்த "Unscrupulous" என்னும் பதத்தை உபயோகித்திருக்கின்றார். அதாவது அவதானமில்லாத வாதி, பிறர்க்கு வரும் நன்மை தீமைகளைச் சிந்தியாத வாதி, ஒரு நியதியில்லாத வாதி என்னுங் கருத்துகளில் ஏதுமொன்றைக் குறித்தே கூறியிருக்கின்றார். வியாச்சியந் தொடர்ந்தவரும் ஒரு அரசாங்க உத்தியோகத்தர், வாதிக்கும் பிரதிவாதிக்கு மிடையில் முற்பகையிருந்ததாகவுங் காணப்படவில்லை. பிரதிவாதி குற்றவாளியாகவுங் காணப்பட்டுள்ளார். இப்படியெல்லாமிருக்க, நீதிபதி வழக்காளிக்கு அடாத அடைமொழி கொடுத்துக் கூறியது யாதுகாரணம்பற்றியென்பது எமக்குப் புலப்படவில்லை. புகைரதப் பிரயாணிகளுக்குப் பெருவிபத்தை விளைக்கக்கூடிய ஒரு விஷயத்தைத் தடுக்க முயன்றது அவதானமின்மையின் பாற்படுமா? இப்படிப்பட்ட அக்கிரமங்களைப் புகைரதப்பகுதியில் நிகழ விடுத்தால் பிரயாணிகளுக்கு உயிர்ச்சேதம் பொருள்நஷ்ட மென்னுமிவைகள் நேருதலுங் கூடுமென்பதை யெண்ணிச் சாரதிக்கு மாறாக வியாச்சியந் தொடர்ந்தமை பிறருக்கு வரும் நஷ்ட லாபங்களைச் சிந்தியாமையின் பாற்படுமா? அயிரோப்பியருக்கு மாறாக வியாச்சியந் தொடர்வது யோசனையின்மையின் பாற்படுமா? நீதிபதியின் வாக்கினின்றும் பொன் போற் போற்றத்தக்க அரிய சொற்களன்றோ ஜநித்தல் வேண்டும். அங்ஙனமின்றிப் பயனில்லாச் சொற்கள் பிறக்கவொண்ணாவன்றோ! "பயனில்சொற் பாராட்டுவானை மகனெனல், மக்கட் பதடி யெனல்" என்பது நாயனார் வாக்காகுமே!

* * *

புகைரதச் சாரதி தன் கடமையினின்றுந் திறம்பினால் அதனைத் தடுத்தற்குக் கார்ட்டுக்கு அதிகார முண்டென்றும், கார்ட் உத்தியோகத்தரே பொறுப்பாளியென்றும் புகைரதப் பிரமாணங்களைப் படித்தவர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இந்த வியாச்சியத்திலே நமது கார்ட் உத்தியோகத்தர் எவ்வாற்றானுஞ் சம்பந்தப்படாமையின் காரணமென்னவென்பதைப்பற்றி இங்குள்ளார் பெருஞ் சந்தேகங் கொள்ளுகிறார்கள். கார்ட்டுக்குச் சாரதி யார், நெருப்பு மூட்டும் மனுஷன் யார் என்பது நன்றாய்த் தெரியுமென்று நினைக்கின்றோம். மேலும் கார்ட் தான் நிற்க வேண்டிய வான்வண்டியில் நின்றிருந்தால் யந்திரவண்டியை விட்டுச் சாரதி விலகுவதும் மீண்டு யந்திரவண்டிக்குச் செல்லுதலுங் காணத் தக்கவாகவிருக்கும். ஏனென்றால் புகைரதத் தொடரிலே யந்திரவண்டி முற்புறத்தும் வான் வண்டி பிற்புறத்தும் தொடுக்கப்பட்டிருத்தலே வழக்கம். ஆனால் இந்த விஷயத்திலே தலைதடுமாற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

* * *

கிறீன்துரைக்கு இப்பொழுதுதான் துரதிஷ்டமான காலம்போற் காணப்படுகின்றது. அவர் தக்க உபகார வேதனத்துடன் வேலையினின்றும் இளைப்பாறவிருக்கும் அந்திய காலத்தில், பட்ட காலே படும் கெட்ட குடியே கெடும் என்ற பிரகாரம் ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு மாசத்துள் ஐந்தாறு விபத்துகள் புகைரதப் பகுதியில் விளைந்துவிட்டன. பழையபடி இராக்காலத்திற் புகைரதமோட்டுதற்கு ஆரம்பிக்கமுன் இராக்காலத்திற் சென்ற யந்திரவண்டி நான்கு சிங்களரைக் கொன்று ஒருவனைப் படுகாயப்படுத்தி விறகிடும் மனுஷனுடைய காலை யொடித்து சாரதியை மாத்திரந் தப்பவைத்து விட்டது. யந்திரவண்டி இரும்பினால் ஆக்கப்பட்டதாயினும் அறிவுள்ளதுபோற் காணப்படுகின்றது. ஏனென்றால் யானை குதிரை எருது என்னும் இம்மிருகங்கள் தமக்குப் புல் தண்ணீர் முதலியன கொடுத்துப் போஷிக்கும் சாரதிகள் மீது நன்றி பாராட்டுவது போல, இந்தப் புகைரத யந்திரவண்டிகளும் எப்படிப்பட்ட அபாயங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்ந்தகாலத்திலும் தங்களுக்கு விறகும் கரியும் தண்ணீரும் உதவி காலந்தோறும் துடைத்துப் பாதுகாக்கும் சாரதிகளை விபத்தில் அகப்படவிடாது பாதுகாத்துக்கொள்கின்றன. நிற்க, கிறீன்துரை தமது உத்தியோகத்தினின்றும் இளைப்பாறும் போது யாராயினும் அவருக்கு உபசரணைக் கூட்டம் வைத்து அவரை உபசரித்து வந்தனோபசாரப் பத்திரம் வாசிக்கும் போது அப்பத்திரத்தின் பிற்பகுதியில் எவ்வாறான வாக்கியங்கள் எழுதப்படுமோ என்று அறிதற்குப் புகைரதப் பிரயாணிகள் ஆவலாக விருக்கின்றார்கள்.

* * *

உலகம் பலவிதம்: 1923 மார்ச் 22

"குரங்கெல்லாம் ஒரேமுகம்" என்றபடி தமிழர் சிங்களர் விஷயத்தில் கொழும்பிலுள்ள சிங்களாரால் நடத்தப்படும் ஆங்கில தினவர்த்தமானிகளெல்லாம் ஒருங்கு சேர்ந்து சிங்களரைப் புகழவும் தமிழரை இகழவுந் தலைப்பட்டுக் கொண்டன. சென்ற சட்ட நிரூபண சபைக் கூட்டத்தில் கௌரவமிஸ்டர் E.W. பெறிறாவுக்கும் ஸேர் பொ. இராமநாதனவர்கட்குமிடையே நிகழ்ந்த விவாதத்தில் கொழும்பிலுள்ள சிங்களரால் நடத்தப்படும் ஆங்கில தினவர்த்தமானிகள் மூன்றும் மிஸ்டர் பெறிறாவுக்கு வெள்ளையடிக்கவும் ஸேர் இராமநாதனுக்குத் "தார்" பூசவுந் தொடங்கிக்கொண்டன. இப் பத்திரிகைகளின் குதர்க்கங்களையும் துராட்சேபங்களையும் நிந்தனைகளையும் கண்டித்து எழுதுவதற்குக் கொழும்பிலா யினும் யாழ்ப்பாணத்திலாயினும் இலங்கையில் வேறெங்காயினும் ஆங்கில பாஷையிலேனும் தமிழ்ப் பாஷையிலேனும் தமிழர் வசம் ஒரு தினவர்த்தமானியில்லை. ஏனில்லை? இவர்களால் நடத்த முடியாதா? இல்லையேல் ஒரு தினவர்த்தமானி நடத்துவதற்குத் தமிழ் மக்கள் தொகை போதாதா? அறிவு போதாதா? செல்வஞ் செல்வாக்குப் போதாதா? இவைகளெல்லாம் போதும்! போதும்!! மும்முறையும் போதும்!!! தமிழ் மக்கள் தொகை போதாதென்றால், இச் சிங்கள பத்திரிகைகளுட் பன்னூற்றுக் கணக்கான பத்திரிகைகளை வாங்கிப் படிப்பவர் நந் தமிழ்மக்களேயாம். அறிவு போதாதென்றால் இப் பத்திரிகைகளுட் சிலவற்றின் ஆசிரியர்களாக விருந்து கோடாலிக் காம்புபோல் உதரநிமித்தம் மனச்சான்றைக்கொன்று தமிழரை நிந்தித்துச் சிங்களரை வந்தித்து எழுதிவருபவர் தமிழர்களேயாம். பின் எவை போதாவென்றால் அபிமானம் போதாது; ஐக்கியம் போதாது; விடாமுயற்சி போதாது. தமிழ்மக்களிடத்து அபிமானமும் ஐக்கியமும் விடாமுயற்சியுமிருக்குமாயின் கொழும்பிலே தினவர்த்தமானியாக நடத்திவந்த தமிழ்ப் பத்திரிகைகளை இடையிற் கைவிட மாட்டார்கள். அபிமானமும் ஐக்கியமுமிருக்குமானால் சமையம் பார்த்திருந்து தஞ்சாதியாரைக் கண்டிக்கும் பத்திரிகைகளைத் தாமே போஷிக்கமாட்டார்கள். தமது நன்மையின் பொருட்டு இயன்றவரையில் உழைத்துவரும் தஞ்சாதிப் பத்திரிகையைத் திருத்தி விருத்தி செய்ய முயலாது அதனை அலட்சியஞ் செய்யார்கள். அந்நியருடன் சேர்ந்துகொண்டு தன் சாதியாருக்கு மண்போட நினையார்கள். ஆனமையினாலே இவர்களிடத்தில் அவைகள் இல்லை.

* * *

இனி நம்மனோர் எல்லாருஞ் சனத் தலைவர், எல்லாரும் தேசாபிமானிகள், எல்லாரும் மகாத்மாக்கள், எல்லாருடைய நோக்கமும் ஒன்றுதான்; அந்த ஒரு நோக்கமென்னவென்றால் நாடெப்படிக் கெட்டாலும் நான்மாத்திரம் முன்னுக்கு வரவேண்டுமென்ற நன்னோக்கந்தான். இந்த நன்னோக்கத் தினாலேயே இவர்கள் இப்படிப் பிளவுபட்டு நாட்டின் பொதுநலத்தின் பொருட்டு ஒத்துழைக்க முடியாதவர்களாயிருக்கின்றார்கள். இவர்கள் தங்களுக்கிடையேயுள்ள அந்தரங்க பகையைச் சாதித்தற்குப் பார்த்திருக்குமிடங்கள் பொதுக் கூட்டங்கள்; எண்ணியிருக்குஞ் சாதனங்கள் புதினப் பத்திரிகைகள்; தேடவிருக்குந் துணை அந்நியசாதியார்; இரு சனத்தலைவர்கள் கூடி ஒரு பத்திரிகை நடத்தமாட்டார்கள். இவர் அவரைக் கண்டிப்பதற்கு இவருக்கொரு பத்திரிகை வேணும்; அவர் இவரைக் கண்டிப்பதற்கு அவருக்கொரு பத்திரிகை வேணும்; அவருடைய கொள்கையை இவர் தம்முடைய பத்திரிகையில் வெளியிட ஒருப்படார்; இவருடைய கொள்கையை அவர் தம்முடைய பத்திரிகையில் வெளியிடார். இப்படியே இவர்கள் கூட்டும் சபைகளும் சங்கங்களும் கழகங்களும் இன்னோரன்ன பிறவுமாம். இவர்கள் அந்நியரை ஆதரிப்பார், தம்மவரைப் புறக்கணிப்பார். உண்மையாக உலக நலத்தை விரும்பி உழைப்பவர்களாயுள்ளவர் இக்கட்சிப்பேதமுடையாரிடையே அகப்பட்டு ஆட்டுக்கடாச் சண்டையில் அகப்பட்ட நரியைப் போலப் பேரிடருக்கு ஆளாகின்றனர். இப்படியென்றால் ஈடேறுவது எப்படி? ஐக்கியப்பட்டுப் பத்திரிகைகள் நடத்துவதெப்படி. இவர்களால், சாமானிய சனங்கள் ஏறச்சொன்னால் எருதிற்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபமென்ற பிரகாரம், யாதுஞ் சொன்னால் ஏதும் ஒரு பக்கத்தார் தம்முடன் குரோதம் பாராட்டுவரென வெண்ணி வாளாயிருக்கத் தலைப்படுகின்றனர்.

* * *

இலங்கையிலேயுள்ள சிங்களரையொழிந்த ஏனைய சாதியினரிலும் பார்க்கத் தமிழ் மக்கள் தொகையிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியவர்களாயிருக்கின்றார்கள். அரசியல்சம்பந்தமான விஷயங்களிலும் மற்றும் விஷயங்களிலும் தமிழ்மக்கள் விசேஷ ஸ்தானம் வகித்திருக்கிறார்கள். இங்ஙனமெல்லா மிருத்தலினால் சிங்களர் அயிரோப்பியர் பறங்கியர் தத்தம் சாதியின் நலத்தின்பொருட்டும் இலங்கையின் பொது நலத்தின் பொருட்டும் ஆங்கில தினவர்த்தமானிகளை வெளியிட்டு வருதல் போலத் தமிழ்மக்களும் தங்கள் சாதியின் நலத்தின் பொருட்டும் இலங்கையின் பொதுநலத்தின் பொருட்டும் கொழும்புநகரத்தில் ஆங்கிலபத்திரிகை யொன்றையாயினும் தினந்தோறும் வெளியிட்டு வருதல்வேண்டும்.

* * *

உலகம் பலவிதம்: *1923* மார்ச் *29*

இலங்கைப் புகைரதப் பகுதியிற் சில மாசங்களாக நடைபெற்றுவரும் அபாயங்களையும் அற்புதங்களையும் எங்ஙனம் எடுத்துக் கூறுவது. மனிதருடைய உடம்பிலே சில ரணம் (புண்) உட்புறத்திற் பெரிதும் விருத்தியாகி ஈற்றிலேயே வெளிப்புறத்து அதாவது தோலுக்கு மேல் ஒரு சிறிய பருப்போடும். அப்பருவுக்கு வைத்தியஞ் செய்யத் தொடங்கவே நாலு பக்கமும் வந்து வெளிப்படும். சத்திரவைத்தியர் அதனை வெட்டிப் பார்க்கும்போது உட்புறத்தே முழுவதும் புண்ணாகவே காணப்படும். இந்த ரணங்களின் நிலையிலேயே இப்பொழுது இலங்கைப் புகைரதப் பகுதியின் நிலைமையும் இருக்கின்றதெனலாம். கிறீன்துரையின் பரிபாலனத்திற் காலந்தோறும் வெளிகாட்டாது நிகழ்ந்துவந்த பழுதுகளெல்லாம் திரண்டு முதல் மகோவில் வெளிகாட்டியது. அதற்கு வைத்தியஞ் செய்ய மதவாச்சியில் பெரு விபத்தாகவே வெளிகாட்டியது. அதனை ஒருவாறு நிவர்த்திசெய்ய அனுராசபுரத்தில் நாலுபேரை முடிவு செய்தது. வடபாகப் புகைரதப் பாதையில் யாதும் விபத்து இனியாயினும் வராவண்ணம் கிறீன்துரை பிரமாணங்கள் வகுக்க, சென்ற வெள்ளிக்கிழமையிரவு மலைநாட்டிற் பிறிதோர் புதுமாதிரியான விபத்து விளைந்துவிட்டது. பழுதுற்றதெனக்கண்டு அதிக சங்கடத்தோடு ஒருவாறு கொண்டுவந்து புகைரத ஸ்தானத்திலே ஒருபுறமாகத் தண்டவாளத்தின் மீது விடப்பட்ட புகைரதயந்திரம் சாரதியில்லாமல் நீராவியில்லாமல் நள்ளிரவில் தன்னெண்ணப்படி புறப்பட்டு, தடுப்போரையும் கவனியாமல் நிமிஷத்திற்கு ஒருமைல் விகிதம் அதிவேமாக ஓடிச் சென்று வழிமறித்தடிக்கக் காத்திருந்த பழம் வைரமுடையார் போல சுரங்கத்துட் புகுந்து அபாயம் வருமெனச் சிறிதும் எதிர்பார்த்திராத பிரயாணிகளை ஏற்றி வந்த புகைரதத் தொடரை முட்டி அதிற் தொடுக்கப்பட்ட சில வண்டிகளைச் சேதஞ் செய்து சிலரைக்கொன்று பலரைக் காயப்படுத்தி இன்னும் பலரைச் சங்கடப்படுத்தி எல்லோரையும் திகிலுறச் செய்து, ஒரு பெண்மணியின் நித்திரைக்கு மாத்திரம் பங்கஞ் செய்யாமல், புகைரதப் போக்கையுந் தடுத்துக் கிறீன்துரை மீது பழிக்குமேற் பழியைச் சுமத்தி நின்றது.

* * *

இவ்விஷயமாக யாரை நோவது? அசம்பாவிதமான கருமங்கள் நடக்கும் இக்கலிகாலத்தை நோவதா? இச்சம்பவங்களை நடத்தும் தெய்வத்தை நோவதா? செங்குத்தான இடத்திலே தண்டவாளத்தின் மீது யாதுந் தடையிடாமல் 90 தொன் கொண்ட யந்திர வண்டியை அலட்சியமாக விட்டுச்சென்ற சாரதியை நோவதா? வண்டியினின்றுங் குதித்துத் தன்னுயிரைக் காத்துக் கொண்ட விறகிடும் மனுஷனை நோவதா? தடைகளெவற்றையும் பொருட்படுத்தாது அதிவேகமாகச் சென்று பேராபத்தை விளைத்த யந்திரவண்டியை நோவதா? வடபகுதிப் புகைரதப்பகுதியிலன்றி இந்த மலைநாட்டுப் புகைரதப் பாதையில் யாதும் விபத்து வராதென்ற நம்பிக்கையோடு புறப்பட்டு வண்டியில் அசைவற நித்திரைசெய்து காத்திராப்பிரகாரம் பேராபத்திலகப்பட்டு உயிர் மாண்ட பேதைப் பெண்களின் விதியையும் குழந்தைகளின் கதியையும் நோவதா? காயப்பட்ட பிரயாணிகளின் காலக்கேட்டை நோவதா? தாம் இளைப்பாறுஞ் சமையத்தில் விளையும் விபத்துகள் காரணமாகப் பழிக்குமேற் பழிகேட்கும் கிறீன்துரையின் துரதிஷ்டத்தை நோவதா? விபத்துநடந்தும் ஆறுமணித்தியாலங்கள் சென்ற பின் அந்த இடத்திற்கு வந்த உதவிப் புகைரதங்களின் ஆபத்துக்குதவுமியல்பை நோவதா? எவரை நோவது எதனை நோவது என்பதை யாமே அறியாது மனம் நோகின்றேம்.

* * *

உலகம் பலவிதம் என்பதிலும் ஏதும் சந்தேகமுண்டா? அம்மம்ம! என்ன விந்தை!! இப்பிரயாணிகட்கு நேர்ந்த விபத்தை எண்ணி மனஞ் சஞ்சலமுறுஞ் சமையத்தில் ஒரு விஷயத்தை நினைக்க விடாநகைப்பும் ஆச்சரியமும் விளைகின்றனவே. ஒரு ஐரோப்பிய பெண்மணியின் நித்திரை இருந்தபடியென்னை! உறங்கிக்கிடந்த இச் சீமாட்டி யந்திரவண்டியோடு யந்திரவண்டி மோதுண்டதனாலுண்டான பேரரவங் கேட்டு எழுந்திருக்கவில்ல; அச்சமையத்திலுண்டான அதிர்ச்சியினால் விழித்தெழவில்லை; சுரங்கத்தி லுண்டான இடி போன்ற எதிரொலி கேட்டுத் துயில் நீங்கவில்லை; அபாயத்திலிடர்ப்பட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்ட ஓலத்தினால் உறக்கம் நீங்கவில்லை; பெருவிபத்திலகப்பட்டாரைக் கப்பற்காரர் மீட்டபோது செய்த வீரத்தொனியாற் சயனத்துக்குப் பங்கம் வரவில்லை; ஈற்றில் ஆதவனே அந்த ஆரணங்கை அறிதுயிலினின்றும் எழுப்பி அனுகூலமடைந்தான். கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் இராவணனுடைய கனிஷ்டனாகிய கும்பகர்ணனது துயிலைக் குறித்துக் கூறியவை புழுகாகுமென்று சொல்லுமவரே பேதையரிற் பேதையராவர்.

* * *

புகைவண்டிப் பெட்டிகளுள் முதலாம் இரண்டாம் வகுப்புப் பெட்டிகளுக்கும் மூன்றாம் வகுப்புப் பெட்டிகளுக்கு மிடையேயுள்ள பேதம், அவைகளுக்கு மெத்தை விசிறி கண்ணாடி சீப்பு சுத்தமான மலகூடம் தண்ணீர் துவாய்த்துண்டு சயனம் துப்பரவு துர்க்கந்தமின்மை அழுத்தம் என்னுமிவைகளுண்டு, இதற்கு அவைகளில்லையென்று இதுகாறுமெண்ணியிருந்தோம். இந்த எண்ணம் தப்பென்றது இப்பொழுதுதான் தெரியவருகின்றது. அவைகளுக்கும் இதற்குமிடையே பெரும் பேதமிருக்கின்றது. மூன்றாம் வகுப்பிற் பெட்டி அபாயம் நேர்ந்தவிடத்து மோதுண்டு நெரியுண்டு சிதறுண்டு அதன்கணிருந்த பிரயாணிகள் பெருங்காயமடைந்து இறந்துவிடும் பட்சத்திலும் முதலாம் இரண்டாம் வகுப்புப் பெட்டிகள் சிறிதும் பழுதுறாமல் தம்மிடத்துள்ள பிரயாணிகளின் நித்திரைக்குத்தானும் பங்குஞ் செய்யாமல் அவர்களைத் தாலாட்டிக் கொண்டிருக்கத்தக்கவிதமாக அமைக்கப்பட்டிருக்கின்றது. பணத்தின் மேன்மையே மேன்மை! மூன்றாம் வகுப்பிற் பிரயாணஞ்செய்யும் ஏழைப் பிரயாணி, பெட்டியில் ஏறும்போதும் பிணமென்பது உண்மையல்லவா! ஏனென்றால் பணமில்லாதவன் பிணமென்பது பழமொழி. இது புகைரதப்பகுதியார் நன்கு அறிந்த விஷயம்.

* * *

அலகலைப் புகைரதஸ்தானத்திலிருந்து யந்திரம் தன்பாட்டிற் புறப்பட்டுப் போக அதன் சாரதியாகிய உவில்லியம்ஹில் அந்த யந்திர வண்டியைப் பிடிக்கும்படி அதன் பின்னர் துரந்து சென்ற காட்சி எதுபோல இருக்குமென்றால், யாழ்ப்பாணத்திலே வண்டிச் சவாரிசெய்வோர் கடுஞ்சவாரி செய்யும்போது சில சமயங்களில் மாடு அறுத்துக்கொண்டு செல்ல வண்டிச் சாரதி அதனைப் பிடிக்கும்படி பின்னே தொடர்ந்து ஓடிச் செல்லுங் காட்சிபோலவேயிருக்குமென்று பள்ளிக்கூடச் சிறுவர் இருவர் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு சென்றனர்.

* * *

உலகம் பலவிதம்: 1923 ஏப்பிரல் 5

ஒரு சர்க்கஸ் கம்பனியார் இங்கேவந்து பலவகை விளையாட்டுகளைத் திறமையுடன் நடத்தி, பன்னிரண்டு தினங்கள்வரையில் நின்று சென்ற திங்கட்கிழமை போய்விட்டார்கள். இவர்கள் போகும்போது குறைந்தபட்சம் 20,000 ரூபா வரையில் இங்கிருந்து கொண்டு போய்விட்டார்களெனச் சொல்லப்படுகின்றது. சர்க்கஸ் கம்பனி நாடகக் கம்பனி முதலிய பொழுதுபோக்கிற்கான கம்பனிகள் யாழ்ப்பாணத்திற்கு வரக்கூடாவென நாம் சொல்லவில்லை. பெரிய பட்டினங்களுக்கு இவைகளும் ஒரு அங்கமாம். யாதும் பொழுது போக்கின்மையினாலே, "கடுதாசி விளையாடுவோமோ, கீரிமலைக்கு ஒரு "பிக்னி" (விருந்து) க்குப் போவோமோ, பரந்தனுக்கு மிருகங்களைச் சுட்டு வேட்டையாடப்போவோமோ ஒரு "முசுப்பாத்தியுமில்லையே" என்று கையை மேசையில் அடித்துப் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருக்கும் சில செல்வர்களுக்கும், சில உத்தியோகஸ்தர்களுக்கும் இப்படிப்பட்ட சர்க்கஸ் நாடகம் முதலிய பொழுதுபோக்கு ஆவசியகம் வேண்டும். வேலையின்றிக் கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கும் எங்கள் நாகரிகப் பெண்மணிகள் சிலருக்கும் இப்படிப்பட்ட சர்க்கஸ் போன்ற விளையாட்டுகள் இன்றியமையாதனவென்பது உண்மையே.

* * *

ஆனால் அன்றடித்து அன்று வாயிலிடும் ஏழைகளுக்கு இக்காட்சிகள் கஷ்டமாயிருக்கும். ஆதலால் இப்படிப்பட்ட சர்க்கஸ் கம்பனியாருக்கு இரண்டு மூன்று நாட்களுக்குமேல் தங்குவதற்கு யாழ்ப்பாணப் பட்டினபரிபாலன சங்கத்தார் இடங் கொடுக்கவொண்ணாது. முன்னர் இங்கிருந்த ஏசண்டரொருவர் இவ்வாறான சந்தர்ப்பத்திற் கேட்டதுபோல அறிவிலார் சிலர் "ஏழைகள் இஷ்டமில்லாவிட்டாற் சர்க்கஸ் முதலிய காட்சிகளைப் பார்க்கப் போகாது விடலாமே, இவர்களைப் போகும்படி யாரும் நெருக்குகிறார்களா" என்று கேட்கக்கூடும். நியாயம் அப்படியன்று. ஏழைகளாயுள்ளவர்கள் பொருள் முட்டினாலே தாங்கள் மனமிருந்தும் போகாதொழிவர். ஆனால் அவர்கள் பெண்களும் சிறுவர் சிறுமியரும் இப்படிப்பட்ட காட்சிகளைத் தாங்கள் சென்று பார்க்க வேண்டுமென்று அவர்களை வருத்தத் தலைப்படுவர். சனங்கள் இஷ்டமில்லாது விட்டாற் போகாதுவிடலாமே, பாராது விடலாமே என்பது நியாயமாகுமானால் உலகத்திலே மதுக்கடைகளை அகற்றுதல் முதலிய தீமைக்காகிய விஷயங்களைத் தவிர்க்க வேண்டுமென்ற நியாயம் ஏற்படாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* * *

"கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம், கரடிவெம்புலிவாயையுங் கட்டலாம் ஒரு சிங்க முதுகின்மேற் கொள்ளலாம் கட்செவி (பாம்பு) எடுத்தாட்டலாம்..." என்ற பிரகாரம் சிங்கம் புலி கரடி சேட்டையுள்ள குரங்கு முதலிய மிருகங்களை அடக்கியாள எங்களால் முடியும். அப்படி அடக்கியாட்டிக்காட்டி வருகின்றோம், ஆனால் இந்த யாழ்ப்பாணத்திலே சர்க்கஸ் பார்க்கும்படி "கலரி" யில் வந்திருந்த இரண்டுகால் மிருகங்களைச் சத்தஞ் செய்யாமலும் சேட்டை பண்ணாமலும் அடக்க எங்களால் முடியாதெனச் சர்க்கஸ் கம்பனியார் சொல்லினராம்.

* * *

சீனியில்லை, சிலநாட்களாக கடைகளிலே சீனியில்லை; விரைவில் வருமென வியாபாரிமார் கூறுகின்றார்கள். இங்கே அதிகாலையிலெழுந்தவுடன் பாலும் காப்பியும் இன்றேல் பாலுந் தேநீரும் அருந்திவிட்டே தங்கள் அவசிய கருமந்தானும் முடிக்கச் செல்லும் தமிழ்த் துரைமார் சிலர் சீனியில்லாமையினாலே பெரிதும் சலனமுறுகின்றனர். ஆமாம், இவர்களுக்குச் சலனமிருக்குந்தான்; ஏனென்றால் "பாலுக்குச் சர்க்கரையில்லை யென்பார்க்கும் பருக்கையற்ற, கூழுக்குப் போட உப்பில்லை யென்பார்க்கும்... சலனமொன்றே" என்று கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் கூறியிருக்கின்றாரல்லவா.

* * *

வண்ணார்பண்ணையிலுள்ள நான்கு மதுக்கடைகளையும் ஒரு சாராயத் தவறணையையும் அந்நிய குடிவகைக் கடையையும் அகற்றிவிட முயற்சிசெய்யும் நோக்கமாகவே இச்சங்கந் தாபிக்கப்பட்ட தென்பதனைச் சென்ற வாரப் பிரசுரத்தில் வெளியிட்டிருந்தோம். இச்சங்கத்தாரின் நன்முயற்சி ஊரவர்களுடைய உதவியின்றி அநுகூலமுறுதல் கஷ்டமாகும். ஆதலினாலே ஊரவர்களுள்ளே தலைவரிப் பணம் கொடுப்போர் எல்லோரும் தங்கள் தங்கள் தலைவரிப்பணப் பற்றுச்சீட்டை சிறிதும் மறதியின்றி யாதுஞ் சந்தேகமின்றி சற்றேனும் வெட்கப்படாது சாவதானமாகக் கொண்டுபோய் மேற்படி சங்கக் காரியதரிசிகளிடம் கொடுத்துத் தங்கள் குடியைக் கெடுத்துவரும் இக்குடிவகைக் கடைகளை நீக்குவதற்குச் சம்மதங் கொடுப்பார்களாக. இனி மயக்கம் வேண்டாம்.

* * *

உலகம் பலவிதம்: 1923 ஏப்பிரல் 12

பெண்களாயுள்ளவர்கள் சுயாதீனமுடையவர்களாய் நடக்கத் தலைப்பட்டால் தூர்த்தர்களால் வஞ்சிக்கப்பட்டுப் பின்னர் அவமானத்திற்கு ஆட்பட்டவராய் எவராலும் நகைக்கப்படுவரென்பது பெரியார் கொள்கை. ஒரு பெண்ணைப் பார்த்து நரியுஞ் சிரித்ததெனப் பஞ்சதந்திரத்தில் ஒரு கதையுளது. அஃது எங்ஙனமெனிற் கூறுதும்: விருத்தனாகிய ஒரு வணிகனுடைய மனைவி தன்னாயகன்மீது வெறுப்புள்ளவளாய் ஒழுகி வருங்காலத்தில் ஒரு தினம் ஒரு விடன் அவளைக் கண்டு காதல் கொண்டு "பெண்ணே, நீ என்னை மணந்து கொள்கின்றனையா" என்று கேட்க அவளும் அதற்கு உடன்பட்டு அக்கிழவன் அறியாதபடி நள்ளிரவில் தனக்கு வேண்டிய ஆடையாபரணங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு தன் பதியை விட்டுத் தூர்த்தனைச் சதமென்றெண்ணி அவன் பிறகே சென்றாள். செல்லுஞ் சமையத்தில் மார்க்கத்திலுள்ள ஒரு நதியை அவ்விருவரும் கடக்க வேண்டி ஏற்பட்டது. சோரன் "யாராயினும் இப்பெண்ணைத் தேடி வந்தால் அவளையும் அவள் கொண்டுவரும் ஆடையாபரணங்களையும் அகப்படுத்திச் செல்வதோடுமாத்திரம் அமையாது எனக்குந் தண்டம் விளைப்பர்; ஆனமையினாலே இவளை விட்டுச்செல்வதே புத்தி" யென்றெண்ணி அப்பெண்ணை வஞ்சிக்கக்கருதி அவளை நோக்கிப் "பெண்ணே, இந்தவாறோ வேகமாகச் செல்வது, இதனைக் கடந்துவருதல் உன்னால் இயலாது; யான் உன்னைப் பதனமாகத் தோண் மீது வைத்துச் சுமந்து செல்கின்றேன்; முதல் உன்னுடைய ஆடையாபரணங்களை என்னிடந் தருகுதி; அவற்றை ஆற்றின் அக்கரையிற் கொண்டுபோய் வைத்துவிட்டுப் பின்னர் உன்னையும் எடுத்துச் செல்கின்றேன்" என்று சொல்லுதலும், அப்பேதை அவன் சொல்லுவது மெய்யென நம்பித் தன்னிடத்திலுள்ள ஆடையாபரணங்களைக் கொடுக்க அவன் அவைகளை வாங்கிக் கொண்டு, இவளை இப்படி விடுத்தால் என் செயலை யாரிடமாயினும் போய்ச் சொல்லி அவர்களை இங்கே அழைத்து வருவாள்; ஆதலால் இவளை வெளியே போகாது தடுத்தற்கு உபாயஞ் சூழ வேண்டுமென நினைத்து அம்மாதைநோக்கி "தங்காய், நீ உன் வஸ்திரத்தையும் அவிழ்த்துத்தருவையேல், யான் பின்னர் வந்து உன்னை இலகுவில் அக்கரையிற் சேர்ப்பேன்" என்று சொல்ல, இவள் அதற்கும் உடன்பட்டு வஸ்திரத்தைக் கொடுத்துவிட்டுத் தண்ணீருக்குளிருந்தாள். சோரநாயகன் அவளுடைய பொருளையும் அபகரித்துக் கொண்டு அப்புறம் அகன்றான். இங்ஙனமாக ஒருநரி இறைச்சித் துண்டை வாயிற் கௌவிக்கொண்டு ஆற்றங் கரையை நோக்கிச் செல்லும்போது ஒரு பெரிய மீன் தண்ணீருள்நின்றுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளிக் கரையில் வீழ்ந்தது. அதனைக் கண்ட அந்தப் பேராசையுள்ள நரி இறைச்சித் துண்டைக் கீழே நழுவவிட்டு மீனைப் பிடிக்க வருதலும் மீன் மீண்டு நீருட் குதித்தோடியது. சம்புகம் இறைச்சித் துண்டை யெடுக்கும்படி மீண்டு போவதற்குள் ஒரு பருந்து அதனைக் கௌவிப் பறந்தது. நரி வாய்த் தவிடும்போய் அடுப்பினெருப்பு மிழந்தவனைப் போல் இரண்டனையும் பறிகொடுத்து நிற்கையில், நீரிலேயிருந்த நங்கை தன்னிலையை மறந்து, நரியின் செயலைப் பார்த்துச் சும்மாவிருக்காமல் சிரித்து "ஓ, நரியே, மீன் உவந்து ஊன் இழந்தையே" (நரியே மீனை விரும்பி இறைச்சியைப் பறிகொடுத்தனையே) என்றாள். அதற்கு நரி "நாரியே, கண் பிழை நாட்டிலில்லையோ பாரிய கணவனைப் பழுது செய்து நீ, நீரிலேயிருப்பது இந்நிலைமையல்லவோ" (பெண்ணே) "தோற்றத்தில் எடுபட்டு மோசம்போவதுமுண்டு; உன் கணவனை வஞ்சித்துச் சோரனை நம்பிவந்து இப்பொழுது அவனாலும் விடப்பட்டு இங்கே தண்ணீருளிருந்து தழப்பமுறும் உன்னிலையும் என்னிலைபோலாகும்" என்றது. பின்னர் அப்பெண்ணை அவளது சொந்த நாயகன் வந்து கண்டித்து அழைத்துச் சென்றான் என்பது கதை.

* * *

இவ்வாறான அநர்த்தங்கள் இக்காலத்திலும் இடையிடையே நிகழ்கின்றன. அலிஸ் நோனா என்னும் 17 வயசுவரையிலுள்ள ஒரு சிங்களக் கன்னிகை கொழும்புப் பொலிஸ் கோட்டிற்கு சென்று, பீட்றிக் பெறிறா யென்னுமொருவன் தன்னையணாப்பித் தனது ஆடையாபரணங்களை யெல்லாம் அபகரித்துக் கொண்டானென்று சென்றவாரம் கொழும்புப் பொலிஸ் நீதிபதியிடம் முறையிட்டாள். நீதிபதி எவ்வாறு அபகரித்தானென்று வினாவியபோது "சென்ற மார்ச் மாதம் 29 உ குறித்த பெறிறா என்னிடம்வந்து என்னை மணஞ் செய்து கொள்வதாக வாக்குச்செய்து, எவருமறியாதபடி எனக்கு உரிய பொருட்களையும் எடுத்துக் கொண்டு இரகசியமாகத் தன்னுடன் புறப்பட்டு வரும்படி சொல்ல, நான் அவனை நம்பி, எட்டுக் காப்புகள், கம்பாயம், பட்டுச்சேலை, இன்னும் சில துணிமணிகள் எல்லாவற்றையும் எடுத்துச் சுருட்டிக் கட்டிக்கொண்டு அவனுடன் சோரமாகச் சென்றேன். மூன்று தினங்களாக நான் அவனுடனிருந்தேன்; அப்பொழுது அவன் நான் கொண்டு வந்த பொருட்களையெல்லாம் தன்னிடந் தந்தால் தான் பதனமாகச் சேமித்து வைப்பதாச் சொல்ல நான் அவனை நம்பிக் கொடுத்துவிட்டேன். மூன்றாநாள் என்னையறியாமல் என் பொருட்களையும் எடுத்துக்கொண்டு என்னைத்தனியே விட்டு எங்கோ ஓடி விட்டான். இப்பொழுது அவன் மீக்கொடையென்னுமிடத்திலே கடை வைத்துக்கொண்டிருக்கின்றான். என் தாய்க்குச் சிறிது சித்தப்பிரமையுண்டு. தகப்பனார் எந்த நேரமும் வீட்டிலிருப்பதில்லை. இதுவே என் வரலாறு" என்று சொன்னாள்.

* * *

இவ்வாறான செயல்கள் இப்பொழுது யாழ்ப்பாணத்திலும் சிற்சில இடங்களில் நடை பெறக் காண்கின்றேம். இக்காலத்து வாலிபரும் கன்னியரும் தாங்கள் தங்கள் தாய்தந்தையரைக் காட்டிலும் கல்வியறிவாலும் நாகரிகத்தாலும் கூடியவர்களென்றெண்ணிச் சுவதந்திரத்தை விரும்பத் தலைப்பட்டமையினாலும், குருட்டுத்தனமாக அந்நிய நாகரிகத்தைப் பின்பற்றத் துணிந்தமையினாலுமே இவ்வாறான தீமைகள் விளைகின்றன. பெற்றார் தங்கள் பிள்ளைகளின் நன்மையை விரும்பியிருத்தலினாலே அவர்களுடைய சொற்படி நடத்தலால் வருந் தீமை யாதுமில்லையாம். அங்ஙனம் நடந்த காலத்தில் யாதும் தீமை விளையுமேல் அது ஊழின்பயனாகும். அறிவிலாச் சிறுவர் சிறுமியர் தத்தம் பெற்றாரை அலட்சியம் செய்வதினாலும் விஷயங்களை உள்ளபடியுணரும் ஆற்றல் இவர்களிடத்து இன்மையாலும் காலகதியில், தாம் ஆராய்வின்றிச் செய்த செயல் காரணமாக இடர்ப்பட்டுப் பெரிதும் பச்சாத்தாபமுறுவர். இனி மேலைத் தேச நாகரிகம் நம்மவருக்கு ஏற்றதன்று. அந் நாகரிகத்திற்கு அடிமைகளானார் சிலர் விவாகநீக்க வியாச்சியங்களில் அகப்பட்டுத் தம் மானமிழந்து மரியாதை கெட்டுப் பிறராற் பரிகசித்துச் சிரிக்கப்படுதலைப் பிரத்தியக்கமாகக் காண்கின்றேம்.

* * *

உலகம் பலவிதம்: 1923 ஏப்பிரல் 26

ஆரியபாஷை இவர்களுக்குச் செய்த அபராதமென்ன! ஆங்கிலச் சொற்களைத் தமிழில் எழுத்துக்கூட்டி எழுதித் தமிழ்மொழியோடு கலந்து வாக்கியங்களில் உபயோகிக்கலாமாம்; V.E.S.A.R முருகேசு என்பதுபோல தங்கள் நாமங்களுக்குமுன் தந்தையர் நாமதேய முதல் அட்சரங்களை ஆங்கில எழுத்தாகவே எழுதிக் கொள்ளலாமாம்; ஆனரபிள், மிஸ்டர் என்னுஞ் சொற்களைப் பெயர்களின்முன் எழுதிக் கொள்ளலாமாம்; ஆனால் ஸ்ரீ, ஸ்ரீமான், ஸ்ரீமத், ஸ்ரீலஸ்ரீ என்பன போன்ற வடமொழி அக்கரங்களைத் தமிழோடு கலந்து உபயோகிக்க வொண்ணாதாம்; கௌரவ ஸ்ரீ சிவசாமியவர்கள் என்று எழுதவொண்ணாதாம்; அவை சமஸ்கிருதமாம் ஆனரபிள் திருவாளர் சிவசாமியவர்கள் என்று எழுதவேண்டுமாம். சில வருடங்கட்கு முன்னர் ஒரு திராவிட பாஷாபிமானி நாமங்களின் முன் ஸ்ரீ, ஸ்ரீமத், ஸ்ரீமாந் என்னும் வடமொழி யக்கரங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதங்களையும் உபயோகிக்க வொண்ணாதென்னுங் கோட்பாடு உடையராய் அவற்றிற்குப் பிரதியாக "திருவன்" என்னும் பதத்தை உபயோகித்தார். உதாரணமாக திருவிலிங்கம் என்னுமொருவரை விளிக்கும் போது திருவன் திருவிலிங்கம் என்று விளித்து வந்தார். எழுதும்போதும் இங்ஙனஞ் செய்துவந்தார். யாழ்ப்பாணத்திலே திருவன் என்ற பதத்திற்கு ஒரு விபரீதமான அர்த்தமிருப்பதினாலே, பலர் தம்நாமத்தின்றலையில் அச்சொல்லைப் பிரயோகித்தலை விரும்பவில்லை. அதனால் திருவாளன் என்று சிறிது பேதப்படுத்தி வழங்கலாயிற்று. ஆங்கிலந் தமிழோடு கலந்தாலும் ஆரியம் கலக்கவொண்ணாதாம். அபிமானமற்றவராயிலும் அந்நியரை அங்கீகரிப்பதும், அபிமானமுற்றவராயினும் நம்மவரைப் புறக்கணிப்பதும் இக்காலத்துள்ள நவீன அபிமானிகட்கு இயல்பாயிருத்தல்போல, ஆரியத்தை அகற்றுவதும் ஆங்கிலத்தை அங்கீகரித்தலும் முறைமையெனக் கொள்ளுகின்றார்கள். ஆரியந் திராவிடம் என்னும் இருமொழிக்குங் கண்ணுதலார் இறைவரென்பதை இவர்கள் அறவே மறந்தனர் போலும்.

* * *

ஒரு மண்வீட்டு விறாந்தையிலே தொங்கக் கட்டப்பட்டிருந்த பன்னாங்கில் மாட்டப்பட்டிருந்த தையலூசியை விறாந்தையிற் கிடந்த அரிதட்டு (பன்னறை) பார்த்து "ஊசியே, ஊசியே, நீ பார்க்கப் பளபளப்பாயிருக்கின்றாய்; மெல்லிசாயிருக்கின்றாய்; ஆனால் உன்னிடத்தில் ஒரு குறைவு இருக்கின்றது" என்னலும் "என்ன குறைவு" என்று ஊசி கேட்க, அரிதட்டு, உன் தலையில் ஒருதுவாரமிருக்கின்றதல்லவா" என்றது. அரிதட்டிற்கு அயலே கிடந்த இடியப்ப உரலும் "ஆம், அது காரியம் மெய்தான்" என்றது. ஊசி நகைத்து, "என்னிடத்தில் ஒரு துவாரமிருக்கின்றதேயென்று நீங்கள் இரண்டுபேருங் கூடி எனக்குக் குறைவு கற்பிப்பதுதான் பெரும் ஆச்சரியமாயிருக்கின்றது; உங்கள் இருவர் முதுகிலும் இருக்கும் ஓட்டைகளை எண்ணிக் கணக்கிடுதல் தானும் இலகுவல்லவே; மேலும் சந்திரனுக்கு மாசுண்டு, நீருக்கு நுரையுண்டு, நெல்லுக்கு உமியுண்டு, பூவுக்குப் புறவிதழுண்டு, இனிய மாங்கனியுள் வண்டுண்டு அப்படியே என்னிடத்திலும் ஒரு துவாரமுண்டு; இதனால் என்மீது தோஷங் கற்பிக்கலாமா? திங்கள் (சந்திரன்) கறையிருளை நீக்கக் கருதாது உலகில் நிறையிருளை நீக்குவதை நீங்கள் இன்னும் அறியீரா? பெரியோரிடத்தும் குற்றங் காணப்படுதல் சகசமே. என்னிடமுள்ள துவாரத்தினால் நான் துணிகளைத் தைத்து ஏழைகளின் மானத்தைக் காக்கின்றேன்; பட்டுப்பீதாம்பரங்களைத் தைத்துச் செல்வமகளிரின் இயற்கையழகோடு செயற்கையழகையுஞ் சேர்த்துவிடுகின்றேன்; தோலைத் தைத்துச் செருப்பு முதலிய பாதரட்சைகளை ஆக்கிவிடுகின்றேன்; நித்திரைக்கழகாகிய மெத்தை தலையணைகளையும், பணப்பையையும் தைத்துப் பயன்படுத்துகின்றேன்; நான் நூலோடு சம்பந்தமாகாவிட்டால் இக்காலத்தில் உத்தியோகத்தர் காற்சட்டை கைச்சட்டை சப்பாத்து இட்டுக்கொண்டு உத்தியோகம் பார்ப்பதும் இங்கிலீசு பேசுவதும் எங்ஙனம் முடியும்! இன்னும் என் உபயோகத்தைச் சொல்லுகின்றேன் இருவருங் கேளுங்கள்; நூலோடு தொடர்பின்றியும் நான் பலவழியாற் பயன்படுகின்றேன்; காலிலேதைத்த முள்ளையெடுத்தற்கு உலகத்தவர் என்னையே கருவியாக உபயோகிக்கின்றார்கள்; உடம்பிலுண்டான கொப்புளத்தைச் சிதைத்துச் சீழைப் போக்குதற்கு வைத்தியர் என்னையே கையிலெடுக்கின்றார்கள்; அழுக்கடைந்த யந்திரங்களின் கண்களைத் திறக்கச் செய்வதற்குத் தொழிலாளிகள் என்னையே பிரயோகிக்கின்றார்கள்; இன்னும் என்னால் உலகோர் எய்தும் பயன் உலப்பில" என்று ஊசி கடுமையாக நியாயம்பேசியது.

* * *

இம் மூன்றனுடைய விவாதத்தையும் கேட்டுக்கொண்டு அதுகாறும் ஒன்றும் பேசாது மௌனஞ் சாதித்துக் கொண்டு கிடந்த முறுக்குரல், அரிதட்டையும் இடியப்பஉரலையும் நோக்கி "உங்களுக்கு ஊசி மீதுள்ள துவேஷமென்ன! கூறுங்க" ளென்ன, அரிதட்டு "ஐயா" சுயம்பாகி என்னை யெடுத்து மாவையிட்டு அலைத்தலைத்து அரித்தபடியே இருக்கின்றான். நான் கப்பியாற் கண்ணடைக்கப்பட்டிருக்குங் காலங்களில் இந்த ஊசி வந்து என் கண்ணைக் குற்றித் துவாரஞ் செய்யாவிட்டால் நான் அலுப்பற்றுச் சும்மாகிடப்பேன். இதுவே இந்த ஊசி எனக்குச் செய்யுங் குறையென்று சொல்லி முடிக்க, முறுக்குரல் இடியப்பஉரலை விளித்து உனக்கு ஊசி செய்த தவறென்ன என்று கேட்க ஐயா, நான் மாவினால் என் கண்களடைப்புண்டு சும்மா கிடக்க விடாமல் இவ்வூசி என் கண்களைத் திறந்து மேலும் மேலும் என்னைப் பிழியச் செய்கின்றது. இதுதான் எனக்கு இவ்வூசி செய்யுந்தவறு என்றது.

* * *

இவற்றைக் கேட்ட ஊசி முறுக்குரலைப் பார்த்து "ஐயா, நான் சொல்வதையுஞ் சற்றே உற்றுக் கேட்டுப் பின் சிந்தியுங்கள்; இந்த அரிதட்டும் இடியப்பஉரலும் முறையே மாவரிக்கவும் இடியப்பம் பிழியவுமே உதவும். இவற்றை உபயோகிப்பவர் சுயம்பாகிகளெனப்படுஞ் சமையற்காரர்மாத்திரமே. கண்களடைக்கப்பட்டிருப்பின் சுயம்பாகிகள் மூலையிலே எறிந்துவிடத் துருப்பிடித்துச் செல்லரித்துக் காலகதியில் இவைகள் அழிந்தொழியும்; நான் இவைகளின் கண்களைத் திறந்து பலர்க்கும் இவைகளை உபயோகமாகச் செய்வது குற்றமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்விஷயமாகச் சொல்லுகிலெனிலோ, நான் தரித்திரர் கையிலுமிருப்பேன், தனவந்தர்கையிலுமிருப்பேன், செம்மார்கையிலுமிருப்பேன், பார்ப்பன மகளிர் கையிலுமிருப்பேன்; உலகத்திலே எவரும் என்னைக் கைவிடார்கள். எனக்கு ஒரு துவார மிருக்கவேண்டுவது ஆவசியகமாகும். துவாரமில்லாதொழிவேனேல் நான் மிகவும் அற்பமாக மதிக்கப்படுவேன்; அதுபற்றியே "காதற்றவூசியும் வாராது காணுங் கடைவழிக்கே" என்று பட்டினத்தடிகளும் பாடியிருக்கின்றனர். நான் இவ்விரண்டிற்கும் நன்மை செய்துவர அவை எனக்குத் தீமையெண்ணுகின்றன" என்று சொல்லிமுடித்தது. முறுக்குரல் இவற்றையெல்லாங் கேட்டு ஊசி சொல்வது சரியென்றும் அரிதட்டும் இடியப்பஉரலும் கூறியன பிழையென்றும் அபிப்பிராயப்பட அரிதட்டு "உனக்கு ஊசியினால்வரும் வருத்தமொன்றுமில்லை; நாங்களல்லவா பெரிதுங் கஷ்டமடைகின்றோம். நீ சொல்வது பட்சபாதம். இதோ இருக்கும் பன்னாங்கை நீதி கேட்போம்" என்று சொல்லி ஊசிமாட்டப்பட்டிருந்த பன்னாங்கைப் பார்த்து "பன்னாங்கே, பன்னாங்கே, காலங்கண்ட பன்னாங்கே, எங்கள் விவாதமனைத்தையும் நீ கேட்டுக்கொண்டிருந்தனையன்றோ; ஆதலினால் நீ யெம்விஷயத்தை நன்கு ஆராய்ந்து எள்ளுக்காய் பிளந்தவாறு நீதியைச் சொல்லிவிடு என்று முறையிட்டன.

* * *

பன்னாங்கு பெருமூச்சுடன் கொட்டாவியும் விட்டுப் பின் அவைகளை நோக்கி "நானே பலகாலமாக இந்த வளையில் மாட்டப்பட்டுப் பனியால் நனைந்து வெயிலால் காய்ந்து மழையால் உக்கி இவ்விடத்தில் தொங்கிக்கொண்டு உள்ளிருக்கும் பொருட்களை வெளியே செல்வோர் காணாவண்ணம் மறைத்துக்கொண்டு தூங்குகின்றேன். இந்த ஊசியெனிலோ தையலின்றிச் சும்மாவிருக்கும் வேளையெல்லாம் என்மீது மாட்டப்படுவதால், உட்கியுலர்ந்த நான் "ஆங்கிற்கு அறுபது கண்" என்ற பிரகாரம் என்னிடத்துள்ள பல கண்களோடு இன்னும் பல சிறிய துவாரங்களையும் அடைந்து விட்டேன். மேலும் இவ்வூசி என்னைக் குற்றுமாயின் நான் காலகதியிற் பயன்படாது அழிந்தொழிவேன்; ஆதலால் ஊசி எம்போலியர்க்கு இடர் விளைப்பது" என்றது. அப்போது முறுக்குரல் பன்னாங்கைச் சினந்து பார்த்து, "பன்னாங்கே, உன்னை நீதி கேட்டால் நீதியைச் சொல்வதை விடுத்து, ஊசி உனக்குச் செய்த குறையை இங்கே கூறலாமா? பகைவனென்றாலும் நீதியைச் செலுத்து. ஓரஞ்சொன்ன குடி உய்யாது.

"வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாளமூலி படருமே-மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன்குடி புகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை"

என்பதை நன்றாய் அறிந்துகொள். இனிய கருப்பை நீரை ஒழுகவிட்டுப் பயனற்ற ஈ எறும்பு மண்டி முதலியவற்றை மாத்திரம் ஏற்று வைத்துக்கொள்ளும் நெய்யரி (பன்னாடை) போலவும், ஒருவரிடத்துள்ள நற்குணங்களையெல்லாம் அலட்சியஞ் செய்து குறைகளை மாத்திரம் எடுத்துப் பேசும் கீழ்மக்கள்போலவும் இந்த அரிதட்டு மிருதுவான மாவைக் கீழே சிந்த விட்டுப் பயனற்ற கப்பிமண் சிறியகல் என்னுமிவைகளைத் தன் கண்களிடையே இடுக்கிக்கொண்டு இடர்ப்படும்போது இவ்வூசியல்லவா இதன் கண்களைத் திறந்து இதனைப் பயனுறச் செய்கின்றது. ஆதலால் ஊசிக்கு நிகருண்டோ யோசி" என்றது. இப்படிச் சொல்லிக்கொண்டிருக் கையில் சுயம்பாகிவந்து அரிதட்டையெடுத்துப் போயினன். சிறிது செல்ல தையலொருத்தி தைத்தற்பொருட்டு ஊசியை யெடுத்துப் போயினள்.

* * *

உலகம் பலவிதம்: *1923* மே *03*

"மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான், பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" ஒத்தென்பது வேதம். வேதியன் தனக்குரியதாகிய வேதத்தை மறந்துவிட்டாலும் பின்னர் அதனை மனனஞ் செய்துகொள்ளுதல் கூடும். ஆனால் அவனுடைய ஒழுக்கங் கெட்டுவிடுமேல் உயர் குலமுங் கெட்டுவிடும். பிராமணவருணத்திற் பிறந்தானாயினும் அவ்வருணத்திற்குரிய ஒழுக்கத்தினின்றுந் திறம்புவனேல் அவன் பிராமணனாக மதிக்கப்படாதொழிவன். "வேதியர்க்கழகு வேதமும் ஒழுக்கமும்" என்றதும் இக்கருத்துப் பற்றியது. தன் வருணாச்சிரம நெறியிலே திறம்பிய மறையவன் சூத்திரனாக மதிக்கப்படுவன். "மறையவர் குலத்தி லருமறை நெறியை வழுவினோன் சூத்திரன்" என்பது நல்லாப்பிள்ளை பாரதம். இவற்றையெல்லாம் இப்பொழுது கூறவெழுந்த காரணமென்னையெனிற் சொல்லுதும். இந்தியாவிலே அந்தணர் குலத்துதித்தோர் பலர் ஆங்கிலங் கற்று உத்தியோகம் பார்க்கத் தலைப்பட்டுத் தம் வருணாச்சிரமத்தினின்றுந் தவறி உத்தியோகப் பிராமணரென்று பட்டமிட்டு அழைக்கப்படுகின்றனர். யாழ்ப்பாணத்தில் ஆங்கிலங்கற்று உத்தியோகம் பார்த்துவரும் பிராமணர் சிலராயினும் அவர்கள் ஒருபோதும் தங்கள் சாதிக்குரிய ஆசாரத்தினின்றும் இதுகாறுந் திறம்பிலர். சிவபூசாதுரந்தரராக விருந்து கொண்டு தங்கள் உத்தியோகக் கடமையையும் செவ்வனே பார்த்துவரும் அந்தண சிகாமணிகள் எங்கள் நாட்டின் கண்ணேயுளர். ஆனால் இப்பொழுது சில பார்ப்பனச் சிறுவர் ஆங்கிலங் கற்கப் புகுந்து தலையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முண்டிதஞ் செய்து ஆங்கில நாகரிகத்தைப் பின்பற்ற முயலுதலைக் காண்கின்றேம். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதலிய கல்லூரிகளிருப்பவும், இவர்கள் இக்கல்லூரிகளில் வசதியாகக் கல்வி பயிலத்தக்க வழிகளிருப்பவும் அந்நிய சமயப் பள்ளிக்கூடங்களிற் சென்று கல்விபயிலத் தொடங்கி இடர்ப்படுதல் புத்தியீனமல்லவா? இப்பிராமணச் சிறுவர் தங்கள் வருணத்திற்குரிய ஒழுக்கத்தினின்றும் திறம்புவதற்கு இவர்களின் பெற்றாரே காரணராவர். இவர்கள் குலாசாரத்தினின்றும் தவறத் தலைப்படுவரேல் தங்கள் பந்துக்களினாலும் ஏனைய வருணத்தினராலும் பதரென விலக்கப்படுவரென்பதை நன்கு அறியக்கடவர்.

* * *

சற்பமாகெனமுற்கொம்பு தாங்கியேநடந்ததென்றல்
வெற்பனாம்முனிவன்சாபம் விளைத்தனன்விளைத்தலோடும்
பொற்பமாகுணமதாகப் போயினான்; அறிவிலாத
அற்பரானவர்க்குச்செல்வ மல்லதுபகைவேறுண்டோ.

பாண்டவரின் மூதாதையாகிய நகுடனென்பான் இந்திரபதவியை வேண்டி நூறு அசுவமேதம் செய்தான். இந்திரன் ஒருசமையம் ஒரு சாபத்தினாலே தன் நிலை குலைந்து சுவர்க்கலோகம் விடுத்துப் பூலோகத்தையடைய, அந்தச் சமையத்தில் இந்த நகுடன் சுவர்க்கலோக நாயகனானான். இந்திரனானவுடனே இந்திரச் செல்வமெல்லாம் அவனுக்கே யுரியனவென்பது ஒரு நியதியாதலால், நகுடன் தன்னை மணந்து கொள்ளும்படி இந்திராணியிடம் தூதனுப்பினான். அந்தப்புரத்திருந்த இந்திராணி நகுடன் சொல்லியனுப்பிய சமாசாரத்தைக் கேட்டமாத்திரத்தே பதைபதைத்துத் தங்கள் குலகுருவாகிய பிரகஸ்பதியையடைந்து தனக்கு நேர்ந்த சங்கடத்தை அவருக்கு முறையிட்டாள். வியாழ பகவான் சிறிது நேரம் யோசித்துப் பின்னர் சசியை நோக்கி "இந்திராணியே, நீ வருந்துதலொழிதி; அந்நகுடன் உன்னையடைய வேண்டுமேல், அவன் ஒரு சிவிகைமீது ஏறி, சத்தரிஷிகளும் சுமந்துவர உன்னிடம் வருதல்வேண்டு மென்பதே வரன்முறை; ஆதலால் அவனை அங்ஙனம் வந்தால் அங்கீகரிப்பதாகச் சொல்லுதி; நின்கற்பிற்குப் பங்கம் வராநெறியை யான் தேடிக் கொள்ளுகின்றேன்" என்று சொல்லி அவளை அவளுடைய அந்தப்புரத்திற்கனுப்பினார். இந்திராணி குருமொழியைச் சிரமேற் கொண்டு அங்ஙனம் நகுடனுக்குத் தூதனுப்பினாள்.

* * *

செல்வச்செருக்காலும் அதிகாரத்தினாலும் தன்னை மறந்தவனாகிய நகுடன் அகத்தியர் முதலாம் சத்தரிஷிகள் சிவிகை பொறுத்துவர அதன்மீது இவர்ந்து செல்லும்போது இந்திராணியைக் காணவேண்டுமென்னும் வேணவாவினால் உந்தப்பெற்று, தன்னைச் சுமந்துசெல்வோர் அருந்தவக்குன்றங்களாகிய முனிவர்களென்பதையும் மதியாமல், "சீக்கிரம் செல்லுங்கள் சீக்கிரஞ் செல்லுங்கள்" என்னுங் கருத்தமைய அம்முனிவர்களை நோக்கிச் "சர்ப்ப சர்ப்ப" என்றான். அதனைக் கேட்டமாத்திரத்தே சிவிகையின் முற்கொம்பு தாங்கிச் சென்றவராகிய அகத்திய முனிவரின்றிருவுளத்து அடங்காச் சீற்றமெழுந்தது. அம்முனிவர் அவனை நோக்கி, "எடா பேதாய், இந்திராணிமீது கொண்ட காதலால், உன்னையும் மறந்து, சுமந்து செல்லும் நாங்கள் யாரென்பதையும் மறந்து, இங்ஙனம் அடாத வார்த்தை கூறினை ஆதலால் நீ சற்பமாகக்கடவை" என்று சாபமிட்டார். உடனே நகுடன் பெரும் பாம்பாக மாறினான். இந்த நகுடன் நெடுங்காலம் பாம்பாகப் பூவுலகில் உழன்று திரிந்து ஒருதினம் வீமனைக் காட்டிற் பற்றிக்கொள்ள, அவனை மீட்கும்படி வந்த தருமரிடத்து நீதியைக் கேட்டுணர்ந்து தன் சாபம் விமோசனமாகப் பெற்றானென்பது பாரதம். இப்படியே அற்பரானவருக்குச் செல்வமும் அதிகாரமும் வருமேயாயின் அவர்கள் அவை வந்தவுடன் தமது பூர்வநிலையை மறந்து மயக்கமடைந்து மௌட்டிகமான கருமங்களைச் செய்து ஈற்றிலே தமக்குத் தாமே நாசத்தைத் தேடிக்கொள்வதை யாம் இக்காலத்திலும் பிரத்தியட்சமாகக் காண்கின்றேம்.

* * *

உலகம் பலவிதம்: 1923 மே 10

"உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங் கீழ், கொண்டு புகல்வதவர் குற்றமே - வண்டு மலர்ச் சேர்க்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றோ, காக்கை விரும்புங் கனி" வண்டானது மலரையே விரும்பி அதனிடத்திற் சஞ்சரிக்கும்; அதுபோல பெரியோர் எப்பொழுதும் ஒருவரிடத்துள்ள நற்குணங்களையே மெச்சிப் பேசுவர். ஆனாற் காகமானது சோலையிலே பலவகைக் கனிகளிருப்பவும் வேப்பம் பழத்தையே உவந்து உண்ணும். அவ்வாறு கீழ்மக்களாயுள்ளவர் ஒருவரிடத்தில் நற்குணமிருப்பவும் அதனை விடுத்து அவரிடத்துள்ள குற்றத்தையே எடுத்துப் பேசுவர். ஈயானது ஒருவர் உடம்பிலுள்ள புண்ணின்மீது விழுமேயல்லாமல் அவருடைய உடம்பிற் சுத்தமான இடத்தை நாடாது. கீழ் மக்களாயுள்ளவருக்கு எத்துணை அரிய கல்வியை ஊட்டினாலும் எத்துணை இதோபதேசத்தைச் சொன்னாலும் எப்படிப்பட்ட உன்னத பதவியிலே வைத்தாலும் அவர்கள் தீயோர் சகவாசத்தையும் தீய செயலையுமே விரும்புவார்கள். "கப்பிநாடொறுங்கழித் துணவளிப்பினுங் கோழி, தப்பிலாது புன்குப்பை போய்க்கிளத்திடல் தவிரா, தொப்பினூல்படித் ...[சிதைவு]னக், குத்திரர்பால் மூன்று குணம்" என்ற பிரகாரம் இவ்வஞ்சகர் முகம் தண்ணளியோடும் புன்னகையோடுங் கூடியிருக்கும். வார்த்தைகளோ மிகவினியனவாயிருக்கும். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமோ தன்னிடத்தில் அகப்பட்ட பொருளைத் துண்டஞ் செய்யுங் கத்தரிக்கோல்போலவிருக்கும். ஆதலால் இவர்கள் திருவுளத்தின் இயல்பைக் கண்டுபிடித்தல் அரிதினுமரிது.

* * *

வண்ணார்பண்ணை மதுவிலக்குச் சங்கம் ஆரம்பசூரத்துவமாகவே முடிந்துவிட்டதுபோற் காணப்படுகின்றது. பெரியோர் பலர் ஒருங்கு கூடிக் கைச்சாத்திட்டுச் சில மாசங்கட்கு முன்னர் விஞ் ஞாபனம் விடுத்து ஒரு சங்கத்தை நீராவியடியிற் பிள்ளையார் கோவிற் கோபுர வாயிலிற் கூட்டி, மதுபானத்தால் விளையுங் கேடுகளைப்பற்றியும் வண்ணார்பண்ணையிலுள்ள மதுக்கடைகளையும் சாராயத் தவறணையையும் நீக்குவதற்கான மார்க்கங்களைப் பற்றியும் மிக்க வாக்குசாதுரியமாகப் பேசினார்கள். நிர்வாகசபையொன்றினையும் அதற்கு வேண்டிய காரியதரிசிகள் முதலாம் உத்தியோகத்தர்களையும் நியமித்தார்கள். பின்பும் இடையிடையே கூட்டங் கூடவேண்டுமென்றும் அக்கூட்டங்களில் மது விலக்குதற்கான முயற்சிகளைச் செய்தல் வேண்டுமென்றும் அத்தினத்திலே பேசிக் கொண்டார்கள். ஆனால் பின்னர் ஒன்றையுங் காணோம். சங்க காரியதரிசிகளும் தம்பாடு; கூட்டத்தவரும் தம்பாடு, இந்த நற்கருமத்திற்கு உதவிசெய்வாரெவரையுங் காணவில்லை. சிலரை உதவி செய்யும்படி கேட்டால் "நாங்களென்ன கள்ளுக் குடிக்கின்றோமா? எங்களுக்குக் கள்ளுக்கடை இருந்தாலென்ன இல்லாதொழிந்தாலென்ன எல்லாஞ் சரிதான்" என்று சொல்லிவிட்டுச் செல்லுகின்றார்கள். மதுபானஞ் செய்வோரைப் போய்க்கேட்டால் அவர்கள் "நீங்கள் எங்களுடைய கள்ளுத்தண்ணிக்கு மண்போடப் பார்க்கின்றீர்களா" என்று நெருங்குகிறார்கள். இப்படியானால் இதனை யார் செய்வது. யாழ்ப்பாணத்திலேயுள்ள மற்றுங் கிராமங்களிலெல்லாம் கள்ளுக்கடைகளும் சாராயத் தவறணைகளும் முற்றாய்த் தவிர்க்கப்பட இவ்வண்ணார்பண்ணையில் மாத்திரம் அக்கடைகளைத் தவிர்க்க முடியாது இடர்ப்படுதல் ஆருக்கு அவமானத்தை விளைக்கும்? சுகாதாரசங்கத்திற்கு ஆட்சேர்க்கும் வண்ணைவாசிகள், பட்டினபரிபாலன சங்கத்திற்கு ஆட்சேர்க்கும் வண்ணைவாசிகள், எத்தனையோ செயற்கருஞ் செயலைச் செய்யும் வண்ணைவாசிகள், இந்த ஒரு கருமத்தில் மாத்திரம் நாட்டுப்புறத்தாருக்குப் பின்னிடைந்து நிற்பது வெட்கம்! வெட்கம்!! பெரும் வெட்கம்!!! வண்ணைமாநகர வாசிகளே விழியுங்கள்! எழுந்திருங்கள்!! கால் கையை நிமிர்த்திக் கொட்டாவி விட்டு அலுப்பை மாற்றுங்கள்!! உசாராக வேலை செய்யுங்கள்!! இன்னமும் காலம் போகவில்லை. இங்குள்ள மதுக்கடைகள் அகற்றப்படாவிட்டால் மதுபான விஷயமாக மற்றுமிடங்களிலுள்ளவர்கள் உங்கள்மீது சந்தேகங்கொள்வர்.

* * *

உலகம் பலவிதம்: 1923 மே 17

அந்நியசாதியாரின் நாகரிகத்தையும், பழக்க வழக்கங்களையும் நம்மவர்கள் பின்பற்றி நடக்கத் தலைப்படும்போது அறிவிலும் அனுபவத்திலும் மேம்பட்ட அபிமானிகள் பெரிதும் பயப்படுகின்றனர். இவர்கள் இப்படிப் பயப்படுவதற்குத் தகுந்த நியாயமுண்டு. நம்மவர் தலையைக் கத்தரித்து விடுவதினாலும் சட்டை தொப்பி இட்டுக் கொள்வதனாலும் சிக்கறற் பிடிப்பதினாலும் கோப்பி குடிப்பதினாலும் தம்மொழுக்கம் விடுத்து அந்நியராகப் போய் விடுவார்களென்று எண்ணியன்று இந்த அபிமானிகள் அஞ்சுவது. நமது ஆண்களிடத்தும் பெண்களிடத்தும் இந்த அந்நியநாகரிகம் சிறிது சிறிதாகப் புகுந்து காலகதியில் எங்கள் சாதி சமயந் தேசம் பாஷை என்னுமிவற்றிற்குரிய பெருங்கட்டுப்பாடுகளையும் அழித்து விடுமென்றே அபிமானிகள் அஞ்சுகின்றனர். உதாரணமாக அயிரோப்பியருக்கிடையில் ஆண்களும் பெண்களும் புநர்விவாகஞ் செய்துகொள்வது மிகச் சாதாரணமான ஒரு வழக்கமாகும். இங்கிலாந்திலே வளர்ந்த மக்கள் தகப்பனிறந்தவிடத்து தாய்மாருக்கு விவாகஞ் செய்து வைப்பது வழக்கம். பேரப்பிள்ளைகள் தங்கள் பாட்டிக் கிழவிக்கு, பாட்டனார் இறந்துவிட இன்னொரு பாட்டனாரை விவாகஞ் செய்து வைப்பது வழக்கம். 75 வயசுக் கன்னிகை 82 வயசு வாலிபனை மணஞ் செய்து கொண்டதாக நாங்கள் புதினப்பத்திரங்களிற் படித்திருக்கின்றேம். சுருங்கச் சொல்லுகில் நமது தேசத்தில் பாட்டன் பாட்டி தங்கள் பேரன் பேர்த்திக்கும் தாய் தகப்பன் தங்கள் பிள்ளைகளுக்கும் மாமன் மாமி தங்கள் மருகருக்கும் தமையன் தனது தம்பி தங்கை முதலானோருக்கும் முறையே மணமகன் மணமகளைத் தேடி மணஞ்செய்து வைப்பது எங்கள் வழக்கமாக, இங்கிலாந்தில் பேரன் பேர்த்தி தங்கள் பாட்டன் பாட்டிக்கும் பிள்ளைகள் தாய் தகப்பனுக்கும் மருமக்கள் மாமன் மாமிக்கும் தம்பிமார் தங்கைமார் தமயன் தமக்கைக்கும் மணஞ்செய்து வைப்பது வழக்கம். மேலைத்தேசத்தாரின் பழக்கவழக்கங்கள் நம்மவரிடத்திலும் வந்து முற்றிக்கொண்டமையினாலே வயதின் முதிர்ந்த ஆண்களும் பெண்களும் புநர்விவாகஞ் செய்துகொள்ளும் வழக்கம் இங்கும் தலைப்பட்டுக் கொண்டமை எங்கள் சாதி சமயக் ..... [மூலத்தில் சிதைவு உள்ளது] விஷயங்கள் இன்னும் எத்தனை வருதற்கு இருக்கின்றனவோ யாமறியேம்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முதிய பனையின் பக்கத்தில் ஒரு சுரைக் கொடி முளைத்து வளர்ந்து அப்பனையைக் கொளுகொம்பாகக் கொண்டு அதிலே சுற்றிப் படர்ந்து சில வாரங்களுள் அதன் வட்டைக் கிட்டிக் குருத்தைச் சுற்றிக்கொண்டு பனையைப்பார்த்து "எப்படிச் சுகம்" என்று கேட்டுச் சிரித்தது. அதற்குப் பனை "சுகத்திற்குக் குறைவில்லை; அது கிடக்க ஏனப்பா சிரிக்கிறாய்" என்று வினவ, சுரைக்கொடி எனக்குச் சிரிப்பு வராமல் முடியுமா? ஒன்றுமல்ல நீ இத்துணை உயரத்தையடைவதற்கு எத்தனை வருடங்கள் சென்றிருக்கும்; என்னைப் பார்த்தாயா? நான் முளைத்து மூன்றுவாரத்துள் உன்னைச் சுற்றிப் படர்ந்து உன் குருத்தையுமடைந்துவிட்டேன். அதனை நினைத்துத்தான் நான் சிரித்தேன்" என்று பெருமிதத்துடன் சொல்லியது. சுரைக்கொடி சொன்னதைக் கேட்டுப் பனை புன்னகை செய்ய, சுரைக்கொடி "அப்பா, நீயேன் சிரிக்கிறாய்" என்று கேட்க, பனை "வேறொன்றுமல்ல, தம்பி உன்னைப்போல எத்தனை சுரைக்கொடிகள் வருடத்துக்கு வருடந் தோன்றி என்னையே ஆதாரமாகக்கொண்டு என்மீது படர்ந்து என் வட்டையடைந்து பின்னர்ச் சிலநாளில் தோன்றியபடியே மறைந்துவிட்டன. நீ என் பக்கத்தில் முளைத்தாலும் என்னைக் கொளுகொம்பாக கொண்டு படராவிட்டால் ஒரு முழந்தானும் தலை நீட்ட முடியாமல் நிலத்திற் படர்ந்து கிடப்பாய். என்னையே ஆதாரமாகக்கொண்டு வட்டுவரைக்கும் வந்த நீ என்னை பரிகாசஞ்செய்து சிரித்தால் எனக்குச் சிரிப்பு வருவது நூதனமா? என்றது. இச்சுரைக்கொடிபோல் பல தேசாபிமானிகள் நவீனமாகத் தோன்றி, நெடுங்காலமாகத் தமிழ்மக்கள் பொருட்டு மனம் வாக்குக் காயமொத்து உழைத்துவரும் சனத் தலைவர்களுக்கு வசைகற்பித்து அவர்களைப் பரிகசித்துச் சிரிப்பதுமுண்டு. அதனாற் சனத்தலைவர்களுக்கு வருங் குறைவு யாதுமில்லையாம். ஏனென்றால் சுரைக்கொடிக்கும் பனைக்குமுள்ள பேதத்தை உலகம் நன்கறியும்.

* * *

உலகம் பலவிதம்: 1923 மே 24

இராவண சங்காரம் முடிந்து, சீதையைச் சிறைமீட்டுக்கொண்டு ஸ்ரீராமர் இலக்குமணர் முதலானோர் அயோத்தியாபுரியடைந்து பரதன் முதலானோரைச் சந்தித்து அளவளாவிக் கலந்திருக்கும் சமயத்தில் இலக்குமணர் சிரித்தனர். அவர் சிரித்தமைக்குக் காரணமென்ன வென்பதை அங்கிருந்தோர் எவரும் அறிந்திலராதலின் பலவாறு தத்தமக்குள் யோசித்தனர். இராவணன் கவர்ந்து சென்ற சீதையை மீட்டுக்கொண்டு வந்து நான் வைத்திருக்கின்றேனே என்பதைக் குறித்துத் தம்பி சிரித்தான் போலும், என்று ஸ்ரீ ராமர் நினைத்தார். எப்படியும் அண்ணனைக் காட்டிற்கனுப்பிவிட்டு யான் ராச்சியபரிபாலனஞ் செய்தேனே என்பதை நினைத்துப்போலும் இலக்குமணன் சிரித்தான் என்று பரதன் சிந்தித்தான். இராமேச்சுரத்தில் சீதாபிராட்டியார் ஸ்தாபித்த பிருதுவி(மண்) லிங்கத்தைப் பெயர்க்க முயன்றவிடத்து அஃது முடியாமையினால் வாலறுந்து நான் அவசமுற்றதைச் சிந்தித்து இளைய பெருமாள் சிரித்தனர் போலுமென்று அனுமார் எண்ணினர். உடன்பிறந்த தமையனை கொன்று யான் கிஷ்கிந்தையை யாளுகிறேன்; யானும் ஒரு உடன்பிறப்பா என்பதையுன்னி இலக்குமணர் சிரித்தனர் போலும் என்று சுக்கிரீவன் நினைத்தான். கோடரிக் காம்புபோற் பகைவருடன் சேர்ந்து நங்குலத்தை நாசமாக்கி, அரிய அண்ணனைக் கொல்வித்து இலங்கைக்கு அரசனாக விரும்பினேனேயென்பதையெண்ணி இளையபெருமாள் புன்னைகை செய்தனர்போலுமென்று விபிஷணன் நினைத்தான். எனது நாயகரை மாயமான் பின்னே செலுத்திய என்னாலல்லவோ இந்த அனர்த்தமெல்லாம் நேர்ந்தனவென்பதை .....[சிதைவு] மென்று சானகி யெண்ணினாள். கொண்ட கணவனுக்குக் கூற்றுவனாய் வந்தேனே யென்பதை நினைத்துப் போலும் என் மகன் சிரித்தானென்று கைகேயி வெட்கமடைந்தாள். என்னுடைய வஞ்சனையினாலன்றோ இக்கேடுகளெல்லாம் நேர்ந்தன என்பதையிட்டு இளையபெருமான் சிரித்தனர் போலுமென்று மந்தரை (கூனி) மதித்தாள். அச்சபையிலிருந்த ஏனையோரும் இலக்குமணர் சிரித்ததையிட்டுப் பலவாறு சந்தேகங் கொண்டனர். ஆனால் அவர்களுள் எவரெனும் சிரித்தமைக்குக் காரணத்தை இலக்குமணரிடங் கேட்கத் துணியவில்லை. ஈற்றில் ஸ்ரீ ராமரே இலக்குமணரை நோக்கி "தம்பி, நீ இப்பொழுது சிரித்தமையின் காரணமென்ன" வென்று வினாவினர். "அண்ணா, வேறென்றுமன்று, இந்த அயோத்தியாபுரியை விட்டு நீங்கி வனவாசஞ் செய்த காலமாகிய பதினான்கு வருடகாலத்திற்கு வராதநித்திரைத்தூக்கம் இப்பொழுது எனக்கு வந்ததே யென்பதையிட்டுச் சிரித்தேன்" என்று இலக்குமணர் பதில் கூறினார். அங்கிருந்த ஏனையோர் தாம் தனித்தனி முந்திநினைத்ததை யெண்ணி நாணமடைந்தனர்.

* * *

இலக்குமணருடைய நகைப்பு எங்கனம் அச்சமயத்து விபரீதமாக விளங்கப்பட்டதோ, அப்படியே இச்சமையத்து நமது "உலகம் பலவிதமும்" சிலரால் விபரீதமாக எண்ணப்படுகிறது. உலகம் பலவிதமாயினும், அப்பல விதத்தில் குணமான விதத்தை அங்கீகரித்துக் குற்றமான விதத்தைக் கண்டுபிடிப்பதே நமது இயல்பு. நமது நாட்டிலுள்ள ஆடவர் மகளிர் சிறுவர் சிறுமியர் இக்காலத்தில் அனுசரித்துவரும் நவீன நாகரிகங்களையும் அந்நிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்க வழக்க ஒழுக்கங்களையும், அரசியல்முறையிற் குறைவுகளுளவேல் அவற்றையும், முந்தியிருந்த சுகாதாரசங்கம் இப்பொழுதிருக்கும் பட்டின பரிபாலன சங்கம் என்னும் இவற்றின்கண் எவையேனும் குறை காணப்படின் அக்குறைகளையும் இவை போன்ற பிறவற்றையும் பொதுவாக இவ்வுலகம் பலவிதத்தில், நோகாமற் கண்டித்து விடுகிறோமேயொழிய; ஒருவரைத் தனியே குரோதம்பற்றி யொருகாலத்தும் யாம் கண்டிக்கவில்லை யென்பதை நடுவுநிலைமை குன்றாச் சான்றோரெவரும் நன்குணர்வர். இவ்வுலகம் பலவிதத்தின் கண்ணே எழுதப்படும் சிறுகதைகளும் நீதி வாக்கியங்களும் சற்போதம் பயக்கும்படி பொதுவாக எழுதப்படுவன. அந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்தாளப்படும் பிரமாணங்கள் ஆன்றோர் வாக்காம்.

* * *

இங்ஙனமெல்லாமிருப்பவும், சிலர் குரோதம்பற்றி யெழுதப்படுகின்றதென எம்மீது அபராதஞ் சுமத்துகின்றனர். என்செயலாம்! காலக்கேட்டாற் பிரதானியன் அப்பிரதானியாகின்றான்; நற்காலத்தினால் பிரதானமற்றவனும் பிரதானியாகின்றான். "ஓடம் வண்டியிலேறும், வண்டி ஓடத்திலேறும்" இவையெல்லாம் கால பேதத்தினால் விளைவன. இதற்காக யாம் பிறரை நோவதாற் பயனில்லையாம். மேலும், யாம் இன்னுமொன்று சொல்லத்தக்கதுளது. இராகம் அறியாதவனும் கொஞ்ச நேரம் வாயில் வந்தபடி பாடினால் அது ஏதும் ஒரு இராகத்தைச் சேரும். ஆனால் பாடிய அவன் இராகந் தெரிந்து பாடியதல்ல. அவ்வாறே யாம் உலகம் பலவிதத்தைப் பொதுவாக எழுதும்போதும் அது அதன் கட் குறிக்கப்பட்ட குற்றமுடையாரைச் சேருதலுங் கூடும். அதற்கு யாம் பொறுப்பாளியல்லேம். இனி, தம்மிடத்து அக்குற்றங்களில்லார் எம்மையுங் குறைகூறார். இந்த உலகம்பலவிதத்தை எவரும் சித்தசமாதானத்தோடு பார்த்தல்வேண்டும். "காய்தலுவத்தல் அகற்றி யொருபொருட்கண், ஆய்வ தறிவுடையார்க் கண்ணதாம் - காய்வதன்கண் உற்ற குணந்தோன்றா உவத்தலின்கண், குற்றமுந் தோன்றாகெடும்" என்ற பிரகாரம் ஒரு விஷயத்தை விருப்போடு பார்த்தால் அதன்கணுள்ள குற்றங்கள் புலப்படா, வெறுப்போடு பார்த்தால் அதன்கணுள்ள குணங்கள் புலப்படா. ஆதலினாலேயே சித்த சமாதானத்துடனே பார்த்தல் வேண்டுமென்றேம். யாமெழுதிவரும் உலகம்பலவிதத்திலேனும் வேறு எவ்விஷயத்திலேனும் குறைகள் காணப்படுமேல் அக்குறைகளைப் பத்திரிகாபிமானிகளா யுள்ளவர்கள் எமக்குக் கடிதமூலமாகத் தெரிவிப்பரேல் யாம் அவற்றை நன்றியறிதலுடன் ஏற்றுக் கொள்ளுவோம். ஆயினும், உலகம் பலவிதமாதலால் இவ்விஷயமாகக் குறைகூறல் முறையன்று.

* * *

"பனை உள்ளுக்குச் சோத்தியானாலும் சுரைக்கொடி சுற்றிப்படருதற்கு ஆட்சேபனையில்லையென்றும், பயன்தருவதில் சோத்திப் பனைக்கும், வைரப் பனைக்கும் பேதமில்லையென்றும், தறிக்கப்படவிருக்கும் பனைக்கன்றோ வைரம் பார்க்க வேண்டுமென்றும், அப் பனை தறிக்கப்படற்காகிய பனையன்றென்றும், முப்பத்து நான்கு வருஷமாய் (க் கொண்டு) இழுப்பதுவே கெட்டித்தனமாகுமன்றி இடையிலே குன்ற விடுவது கெட்டித்தனமாகாதென்றும், யானை படுத்தாலும் குதிரையிலுயரமாகுமென்றும் தேசாபிமானி ஏன் விகடனுக்குச் சொல்லவில்லை" யென ஆட்சேபனை யுண்டாயிருக்கின்றது.

* * *

உலகம் பலவிதம்: *1923 ஜூன் 01*

சென்ற வாரம் யாழ்ப்பாணப் பட்டினத்திலே நடைபெற்ற பொருட்காட்சி வெகு மாட்சியாக விருந்தது; யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் மற்றும் பாகங்களிலுள்ள பொருட்களுமே இக்காட்சிப் பந்தரில் அங்கீகாரம் பெறுமென, காட்சியை நடத்திய அதிகாரிகள் தாம் வெளியிட்ட காட்சி விதானங்களைக் கொண்ட துண்டுப் புத்தகத்தில் வெளியிட்டிருந்தனர். ஆனால் மேலைத்தேச நாடுகளாகிய இங்கிலாந்து ஜர்மனி அவுஸ்திரியா என்னுமிடங்களிலும் அமரிக்கா ஜப்பான் முதலிய இடங்களிலுஞ் செய்யப்பட்ட புசர்மா, சுகந்த வஸ்துக்கள், பட்டு வகைகள், றேந்தைகள், மூக்குக் கண்ணாடிகள் முதலியனவும் காட்சிப் பந்தரிற் காணப்பட்டன. எப்படிக் காணப்பட்டன வென்றால், இக்காட்சியைக் காணும்படி வந்த மாதர்கள் மேனியிலும், சில பொருட்கள் ஆடவர் மேனியிலுங் காணப்பட்டனவென்று காட்சியதிகாரிகண்மீது ஒரு தேசாபிமானி குறைகூறுகின்றார்.

* * *

யாழ்ப்பாணத்தில் விசேஷமாகவுள்ள பனையின் பண்டங்களான பனங்காய் ஓடியல் புளுக்கொடியல் பனங்கட்டி முதலியனவும், பெட்டி கடகம் பாய் ஈர்க்கு கயிறு முதலியனவும் வைக்கப்பட்டிருந்தனவே. ஆனால் ஒரு பொருளைக் காணவில்லையேயென்று காட்சிப் பந்தரில் நின்ற ஒருவர் தன்னுடன் வந்த மற்றொருவருக்கு சொல்ல, அவர் என்ன பொருள் என்று கேட்க, இவர் "கள்ளு" என்றார். அதற்கு மற்றவர் அது இங்கே பந்தலில் வைக்கப்படாவிட்டாலும் இடையிடையே துள்ளித் திரிகின்றதை நீ காணவில்லையா? என்றார். இவர் இல்லை என்றார். உடனே, தன் வயிறு நிறையக் கலன் கணக்காக கள்ளை விட்டுக்கட்டிச் சொல்விளம்பித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளித்திரியும் ஒருவரைச் சுட்டிக்காட்டி இவரிடத்திற் காணலாம் என்றார்.

* * *

சிங்களப் பெண்கள் காட்சிப்பந்தரிலே தறிவைத்து வஸ்திரம் நெசவு செய்ய யாழ்ப்பாணத்துப் பெண்கள் அணிலேற விட்டு அண்ணாந்து பார்த்து நின்ற பிராணியைப் போல ஆவென்று ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டு நின்றார்களே! இவர்களுக்கு வெட்கம் இல்லையா? இவர்களும் இப்படிச் செய்யப் பழகிகொள்ளவொண்ணாதா? என்றபோது நமது பெண்மணிகளிலொருத்தி ஆத்திரங்கொண்டு இவர்களுக்கு வஸ்திரம் நெசவு செய்யத்தானே தெரியும்; எங்களைப்போலச் சொக்கட்டான் ஆடவும் ஊர்க்கதை பேசவும் தெரியுமா? என்று சொல்லி நகைத்தாள். அயலிலே நின்ற இன்னெரு பெண்மணி நாங்களே காட்சிக்கு வந்து நிற்கும்பொழுது இனிவேறு காட்சிப்பொருள்களை இங்கே தருவிக்கவேண்டிய அவசியம் இல்லையல்லவா? என்றாள். முந்திய பெண்மணி "ஆம் ஆம்" என்றனள்.

* * *

பள்ளிக்கூடச் சிறுவர் சிலர் பள்ளிக்கூடத்துக்குப் போவதாகப் பெற்றோருக்குச் சொல்லிக்கொண்டு புறப்பட்டுக் காட்சிப்பந்தருட் புகுந்து அங்கு நிரைக்கப்பட்டிருந்த மாம்பழம் பலாப்பழம் தோடம்பழம் அன்னதாளம்பழம் முதலிய பழங்களை ஆவலுடன் பார்த்து வெகுவாய்யோசித்துக்கொண்டு நின்றார்கள். அப்பொழுது அந்தப்பழங்களுக்குக் காவலாய் நின்ற ஒருவர் இப்பிள்ளைகளை நோக்கி "நீங்கள் என்ன யோசிக்கிறீர்கள்" என்றார். அவர்களுள் ஒரு சிறுவன் வேறென்றுமல்ல, இந்தபழங்களைச் சும்மா இந்த இடத்தில் நிரைத்துவிட்டால் மாத்திரம் காட்சியாகுமா, இவைகளை எப்படி வெட்டியுண்பதென்பதை இங்குள்ளோருக்கு நாங்கள் காட்டிவைக்கலாமென யோசிக்கிறோம்" என்றான். காவலன், "அவ்வளவு சிரமம் உங்களுக்கு வேண்டாம் நல்லது வெளியே போங்கள்" என்றான்.

* * *

உலகம் பலவிதம்: *1923 ஜூன் 07*

நமது நாட்டிலே பிராமணரையொழிந்த ஏனைய சாதியினருள் சிலர் மீசை வைத்துக் கொள்ளுகிறார்கள். உத்தியோகத்தரும்பலர்மீசைவைத்துக்கொள்ளுகிறார்கள்; சிலர் மீசை வைத்துக் கொள்ளுவதில்லை. மீசை வைத்துக் கொண்டவர்களுக்கு அது அடர்த்தியாக விருப்பதே அழகென்ற கொள்கை முன்னே யிருந்தது. ஆனால் இக்காலத்தில் அந்தக் கொள்கை மாறிவிட்டது. இப்பொழுது மீசையை நன்றாய் ஒதுக்கிக் கத்திரித்து நாசித்துவாரங்களிரண்டிற்கும் நேரே கீழே சில ரோமங்களை மாத்திரம் சவரஞ் செய்யாது விடப்படுவதே மீசையாம். இதுதான் "வாஷன்-ஓவ்-தி-டே" அதாவது தற்காலத்திற் கேற்ற நாகரிகமாம். முகத்தை இதுபோல் அவலட்சணமாக்குவது பிறிதொன்றுமில்லை யெனலாம். மீசையிருக்கவேண்டியபடி அடர்தியாக விருக்கலாம். இல்லையேல் முற்றாக அகற்றிவிட்டு மீசை இல்லையென்றிருக்கலாம். சிலர் முகத்தில் மீசை இருக்கிறதெனச் சொல்லவும் முடியவில்லை; இல்லையெனச் சொல்லவும் முடியவில்லை; தாங்கள் ஆண் பிள்ளைகளென்பதில் மற்றவர்கள் சந்தேகப் படாதபடி இந்த அல்ப்ப மீசையை இவர்கள் வைத்துக்கொள்கின்றனர் போலும். வாலிபர்கள் மாத்திரமன்று வயசு சென்று நரைதிரை யடைந்தவர்களும் தங்கள் வெண்ணிற மீசையை இந்தவிதமாக ஒதுக்கிக்கொள்கிறார்கள். அதனைப்பார்க்க மிகவும் அவலட்சணமாக விருக்கிறது. அந்த மீசைக்கு யாம் ஏதும் உபமானஞ் சொன்னால் அவர்கள் எம்மை குறை கூறுவார்கள். இந்த அற்ப மீசையை வைத்துக் கொள்வோர் மீசையில் ஆசையிருந்தால் அதை முற்றாக வைத்துக் கொள்ளட்டும்; இல்லையேல் அறவே அகற்றிவிடட்டும்.

* * *

சிங்களப்பெண்களுள் அந்நிய நாகரிகம் படைத்தவர்களென விருப்பவர் முற்றாகத் தங்கள் உடைகளை மாற்றி அயிரோப்பிய பெண்களைப்போல் தொப்பி "கவுன்" சப்பாத்து முதலியன இட்டுக் கொள்ளுகின்றார்கள். தமிழ் மகளீர்களோ அப்படியன்று. தங்கள் ஆடவர் அயிரோப்பிய உடையை அணிந்து கொண்டு கறுத்த துரைமாராக மாறினாலும், பெண்களாயுள்ளவர்கள் முற்றாக அயிரோப்பிய உடையைத் தரிப்பதில்லை. இது தமிழ்ப் பெண்மணிகளுக்கு ஒரு பெருமைதான். ஆனால் இவர்களும் காலத்திற்கு காலம் தங்கள் ஆடையாபரணங்களைச் சிறிது சிறிது பேதப்படுத்தி வருகின்றார்கள். இங்ஙனம் பேதப்படுத்திவருவதினாலே பெரும் பொருட் செலவு ஏற்படுவதுடன் சில காலங்களில் மிக்க அவலட்சணமான உடையும் எங்கள் பெண்மணிகட்கு ஏற்பட்டு விடுகின்றது. இப்பொழுது நவீன நாகரிகம் மிகப்பழுத்த பெண்கள் தங்கள் வஸ்திரத்தை இடையிற் கட்டிக்கொள்வதற்கு பதிலாக முதுகைச் சுற்றி கட்டிக் கழுத்திற்குக் கீழே ஏதோ ஒருவாறு சொருகித் தாங்களும் சிறிது கூனிக் கொண்டு புறப்படுகின்றார்கள். "ஏன் இந்த வயிற்றெரிச்சலான உடை; இப்படி உடுத்துக் கொள்ளும்படி வந்த ஆத்திரமென்ன" வென்று கேட்டால் இதுதான் "வாஷன்-ஓவ்-தி-டே" யாம். கழுத்தின் கீழே தோட்புறத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொறிவுண்டானாலும் நாங்கள் சொரிந்து கொள்ள முடியாமல் இடர்படுகின்றோம். அப்படியிருக்க நமது பெண்மணிகள் இந்தச் சொருகுதலைத் தாங்களாகத்தான் சொருகி உடுத்துக் கொள்ளுகிறார்களோ இல்லையேல் அங்ஙனஞ் சொருகிக் கொள்வதற்கு பிறருடைய உதவியை வேண்டி நிற்கிறார்களோ என்னும் விஷயமாக ஒரு சந்தேகம் பிறக்கின்றது. நாகரிகமென்று சொல்லி எதனை எங்கள் சகோதரிகள் செய்தாலும் அதனை மகிழ்ச்சியோடு அங்கீகரித்துக் கொள்ளும் ஆடவர்கட்கு இந்த அவலட்சணமான உடையும் இலட்சணமாகவே காணப்படும் போலும். இவ்விஷயமாக நமது சகோதரிகள் தங்கள் உடையைத் திருத்திகொள்வதன்றி எம்மீது குறைகூறவொண்ணாது. இந்திய பெண்மணிகளின் உடை அந்நியசாதியாராலும் மெச்சப்படுவது. இந்துக்களை ஒருகாலத்து அன்புடன் பரிபாலித்த இந்திய பிரதிகாவலராகிய லார்ட் றிப்பன் என்னும் பிரபு ஒருசந்தர்ப்பத்தில் இந்திய பெண்மணிகளின் உடையைப்போல் அழகைத்தருவது வேறு சாதியாரிடத்தில்லையென்றும், ஆனமையினால் அவர்கள் அதனை ஒருபோதுங் கைவிடவொண்ணாதென்றுங் கூறியிருக்கின்றார்.

* * *

உலகம் பலவிதம்: *1923 ஜூன் 14*

றிக்ஷோ வண்டியில் ஏறிச் செல்பவர்கள் சிலசமயங்களில் தம்மை இழுத்துச் செல்லும் றிக்ஷோகாரருடன் வார்தையாடிக்கொண்டு செல்வதும் வழக்கம். ஒரு நாள் ஒரு தமிழ்த்துரை றிக்ஷோ வண்டியிலேறிக்கொண்டு நெடுந்தூரம் போகும் போது றிக்ஷோகாரனை நோக்கி "என்னடா விசேஷம்" என்று கேட்டார். அவன் "ஒன்றுமில்லை ஐயா, ஆனால் இந்த உலகம் தங்களையொத்த பணக்காரருக்காகத்தான் உண்டாக்கப்பட்டிருக்கின்றது" என்றான். துரை "ஏனடா அப்படி சொல்லுகின்றாய்" என்று கேட்டார். "வேறொன்றுமில்லை ஐயா, இந்த வெயிலுக்கும், நாங்கள் செய்கிற இந்த வேலைக்கும், அந்தக் கள்ளுத்தண்ணீர் இல்லாவிட்டால் முடியாது; இப்போதே பொழுதுபட்டு ஏழுமணிக்கு மேல் இருக்கும்; கள்ளுத்தவறணை யெல்லாம் பூட்டிப்போடுவார்கள்; முன்னே என்றால், வீட்டிலுள்ளவர்களிடஞ் சொன்னால் அவர்கள் வாங்கி வைத்திருப்பார்கள்; நாங்கள் எங்கள் பிழைப்பை முடித்துக்கொண்டுபோய் சாமஞ்சென்றாலும் அதைக் குடிக்கலாம். ஆனால் இந்தநாளையில் அப்படி வாங்கிவைத்துக் குடிக்கமுடியாது. நாங்கள் ஏதும் குடிக்கவேணுமென்றால் எங்கள் வேலையை விட்டுவிட்டு இரண்டுகட்டை தூரத்திற்குத் தவறணைக்குப் போகவேண்டும். இதுக்கிடையிற் பிழைப்புக் கெட்டுப்போம். ஏழைகளான எங்களுக்குத்தான் கவுண்மேந்து கட்டளைச் சட்டம் பார்க்கிறது" என்றான். "எட, நீ சொல்லுகிறது சரிதான்; ஆனால் இந்த உலகம் பணக்காரருக்காகதான் உண்டாக்கப் பட்டிருக்கின்றதென்று முந்திச்சொன்னாயே, அதின் கருத்தென்ன?" என்று பிரபு கேட்டார்.

* * *

"இல்லாமற் பின்னை வேறு என்ன ஐயா, நாங்கள் ஏதுங் குடிக்கில் எங்கள் பிழைப்பை விட்டுத்தவறணைக்குப் போகவேணும்; நீங்கள் குடிக்கவேணுமானால் வீட்டிலே இருந்து கொண்டு இரகசியமாக உங்கள் வேலைகாரனையுங் காசையும் சாய்ப்புக்கு அனுப்பினால் பிறண்டியோ உவிஸ்க்கியோ ஜின்னோ வேறென்னோவோ எத்தனை டசின் போத்தல் வேண்டுமென்றாலும் உடனே உங்கள் வீட்டிற்கு வந்துசேரும். நீங்கள் இரகசியமாக குடிக்கலாம். உங்கள் வீட்டுத் தேவைக்கும் எடுத்துக்கொள்ளலாம். வெள்ளைக்கார துரைமாருடைய குடிவகையானபடியாலேதானே கவிண்மேந்தும் இப்படிச் செய்கிறது. நாங்கள் எழைகளானபடியாலே ஊரறியத் தேசமறியப் போய்க் குடித்துவிட்டு வரவேண்டியிருக்கிறது. இதுக்காகத்தான் நயிந்தை, உலகம் பணக்காரருக்காக உண்டாக்கப்பட்டது என்றேன். "நீ சொல்லுவதும் சரிதானடா, ஆனால் இவையெல்லாம் உங்களுடைய நன்மைக்காகத்தானே. நீங்கள் குடித்துக் கெட்டுப் போகக்கூடாதென்பதே எங்களுடைய நோக்கமும் அரசினருடைய நோக்கமும்" என்றார். "நயிந்தை, நாங்கள் கெட்டுப் போகக்கூடாது நீங்கள் கெட்டுப்போகலாமோ படித்த உங்களோடு பறையன் நியாயம் பேசுகிறானென்று குறைநினைக்க வொண்ணாது; நாங்கள் பார்க்கிற பிழைப்பு இந்த றிக்சோவிழுக்குறது; மயக்கம் அதிகப்பட்டால் விட்டுவிட்டுப் பேசாமல் லிருப்போம்; நயிந்தை தாளி பார்க்கிற கடமையிலே ஒரு பிழை வந்தால் அது நயிந்தைக்குமாகாது, ஊருக்குமாகாது அல்லாமலும் பாருங்கள் நாங்கள் தவறணையிலே போய்க்குடித்து விட்டு வந்தால், ஒருவேளை சம்பாத்தியத்திற்கு மாத்திரம் நான் குடித்துவிட்டு வந்திருக்கிறேனென்று தெரியும். அவள் குறிப்புக்கண்டு சோறு போடுவாள், தின்றுவிட்டுப் படுத்தால் விடியத்தான் எழும்புவோம். நயிந்தையைப் போலவுள்ள ஆட்கள் தாங்கள் குடிக்கிறது மிக இரகசியமாகவிருக்குமென்றும் ஆனால் இது வேலைக்காரருக்கு தெரியும். நயிந்தையினுடைய பிள்ளைகளுக்கும், போத்திலை எடுக்க வைக்க மெள்ள மெள்ள தெரியவரும்; அவர்களும் மெள்ள மெள்ளப் பழகிக்கொள்ளுவார்கள். ஆனபடியால் நாங்கள் இனிக்கெட இடமிருந்தாலல்லவோ கெடுகிறது. நாங்கள் முற்றாய்க் கெட்டுப்போனோம். கெட்டாலும் பறையர்தான்; குலங்குடியிலேயுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயிந்தையோடொத்தவர்கள் நல்லாயிருக்கவேணும்; அப்போதுதான் நாங்களும் தங்களை அண்டிப்பிழைக்கலாம். பறையன் இப்படி சொல்லுகிறான் என்று குறைநினைக்கக்குடாது" என்றான். இதற்கிடையில் பிரபுவின் வீடு சமீபிக்க றிக்ஷோக்காரன் கதையை நிறுத்திக்கொண்டான்.

* * *

உலகம் பலவிதம்: 1924 ஜூலை 10

"ஈனர்கட் கெளியேனலேன் திருவாலவாயான் நிற்கவே." முற்பிறப்பிற் செய்த தீவினை காரணமாக ஆருகதசமயத்தைச் சிலகாலம் அநுசரித்துவந்த கூன்பாண்டியனுடைய தேவியாரும் சிவபத்தியிற் சிறந்தவரும் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாருடைய திருவருளினால் தமது நாயகனைச் சற்சமயமாகிய சைவசமயத்தைக் கைக்கொண்டொழுகச் செய்தவரும் சமணர்களுடைய அக்கிரமங்களை அறவேயகற்றியவருமாகிய பாண்டிமாதேவியார், அதிபாலயராகிய ஆளுடையபிள்ளையாருக்குச் சமணர்கள் யாதுந் தீமைவிளைப்பார்களோவென உளம்வருந்தியபோது, அதனைக்குறிப்பாலுணர்ந்த சம்பந்தசுவாமிகள் "பாண்டிமாதேவியாரே, யான் பாலகனாயிருத்தலினாலே சமணர்கள் எனக்கு யாதுந் தீங்குவிளைப்பரென்று நீர் சிறிதும் அஞ்சவேண்டாம். திருவாலவாயிற் கோயில் கொண்டருளிய அமலமூர்த்தியேயாகிய சோமசுந்தரக் கடவுளின் திருவருளிருக்க, அச்சமணர் எனக்குச் செய்யுந் தீங்கு பலியாது" என்னுங் கருத்துக்கமைய "மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள், பானல்வாயொரு பாலனீங்கிவன் என்று நீ பரி வெய்திடேல், ஆனமாமலை யாதியாய விடங்களிற்பல வல்லல்செய், ஈனர்கட்கெளியேனலேன் திருவால வாயர னிற்கவே" என்று பாடியருளினார். சைவ சமயமே மேலான சமயமாகில், அச்சமயத்தாராற் பூசிக்கப்படுஞ் சிவபிரானே முழுமுதற் கடவுளாகில், அச்சிவபிரானுடைய திருவருட்செயலையும் அவ்விறைவனை மெய்யன்போடு வழிபடும் அடியார்களின் பெருமையையும் சைவசமயிகளுக்கு விலக்கப்பட்டவைகள் இன்னின்ன விதிக்கப்பட்டவைகள் இன்னின்ன என்பதனையும் எடுத்துப் பிரதிபாதிப்பதாகிய மேலான கைங்கரியத்தைச் செய்தலே எமது கடனென்பது மெய்யானால் அந்நிய கொள்கையார் செய்ய முயலும் தீமைகள் காரணமாக வரற்பால இடர் யாதுமில்லையாம்.

* * *

மேலைத்தேசவாசிகள் செய்வதுபோலப் பெண்களைப் பூசித்தலாகிய செயல் நம்மவரிடத்தில் இல்லையென்பதன்றி, இல்லற தருமத்தில் ஆடவரைக்காட்டிலும் பெண்களாயுள்ளாருக்கே விசேட உரிமைகள் உதவப்பட்டுள்ளன. எங்கள் சமயக்கொள்கையின்படி இல்வாழ்வான் மனையாளையின்றி எவ்வகையான சற்கருமங்கட்கும் அருகனல்லன். "மருவியகாதன் மனையாளுந்தானும், இருவராய்ப் பூண்டுய்ப்பினல்லால் - ஒருவரால், இல்வாழ்க்கையென்னு மியல்புடைய வான்சகடம், செல்லாதெற்றிற்றுநின்று" என்பர். நம்மவர்களுக்கும் அந்நிய கொள்கையினருக்குமிடையேயுள்ள பேதமென்னவெனில், பெண்களாயுள்ளார் நாயகனையின்றி, இன்றேல்நாயகனுடையஅனுமதியின்றி எக்கருமத்தையுஞ் செய்தற்கருகரல்லரென்பது எங்கள் கொள்கை. பெண்கள் நாயகனுடைய அனுமதியின்றியும் கருமஞ் செய்யலாமென்பது அந்நியர்கொள்கை போலும். இங்குள்ளார் பெண்களை அடிமைகளாக நடத்துகிறார்களென்று உண்மையை யுணராத பாதிரிமார் சொல்லக் கேட்டிருக்கின்றேம். அவர் போல்வார் சிலர் இக்காலத்திலும் அங்ஙனங் கூறித் தம் அறியாமையை வெளியிடுகின்றனர். இங்கே ஆடவர்களாயுள்ளார் பெண்களுக்கு அடிமைத்திறம் பூண்டொழுகவில்லையென்பது உண்மையே. அங்ஙனம் ஆண்கள் பெண்களுக்கு அடிமைத்திறம் பூண்டொழுகாமையினால் இங்குள்ள ஆடவர் பெண்களை அடிமைகளாக நடத்துகின்றார்களென்பது எட்டுணையும் பொருந்தாது. இந்தியாவிலே சிற்சில பகுதியார் பெண்களை அடிமைகள்போல் நடத்துவதும் மாமியார் கொடுமை ஆங்கு இருத்தலும் மெய்யாகும். ஆனால் இங்குள்ளார்க்கு அவ்வாறான செயல் வெறுப்பானதாகும். நோயுடையார்க்கே மருந்து வேண்டும். நோயிலார்க்கு மருந்து அநாவசியமாகும். பெண்களை அடிமைகளாக நடாத்தும் நாடுகளில் வசிப்பவர்கள் முதல் தம் நாட்டிலுள்ள பெண்களின் கஷ்டத்தை நீக்கும் பொருட்டு உழைத்தல் வேண்டும். ஆடவர்களாயுள்ளார் தங்கள் தேச ஈடேற்றத்தின்பொருட்டு உண்மையான தேசாபிமானங் கொண்டு உழைக்க, பெண்பாலாராயுள்ளார் அந்த ஆடவர்கட்குச் சிறந்த வாழ்க்கைத் துணையாகநின்று தங் கடனைத் திறம்பாது செய்யின் நாடு ஈடேறும்; அடிமைத்திறம் அகலும்; சாதிசமயம் ஓங்கும், விபரீதமெல்லாம் நீங்கும். இதனைவிடுத்து ஆடவருடைய கருமத்தைப் பெண்கள் செய்யவும் பெண்கள் கருமத்தை ஆடவர் செய்யவும் தலைப்படின் வண்டிக்கு முற்பக்கமாகக் கொண்டுவந்து குதிரையைப் பூட்டுவதைவிடுத்துக் குதிரைக்கு முற்புறத்தே கொண்டுவந்து வண்டியைப் பூட்டமுயல்வதுபோல் அனர்த்தமாக முடியும்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துசாதனப் பத்திரிகையில் தமிழ் மகளிர் கழகத்தாரை அவதூறாக இகழ்ந்து ஒரு பெண் கடிதம் எழுதியிருந்ததாக அக்கழகத்தைச் சார்ந்த சில அம்மைமார் தமக்கு எழுதியிருந்தார்களென்றும் அந்த இகழ்ச்சியைத் தாம் வாசித்ததாகவும் அவ்வித கடிதம் ஒரு பெண் எழுதுவாளோ என்பது தமக்குச் சம்ச(ய)ம் என்றும் அங்ஙனம் ஒருகால் எழுதியிருப்பினும் அதற்கு இடங்கொடுத்த ஆசிரியர் மாட்டுப் பொருந்திய அவிவேகத்திற்காகவும் அநாகரித்திற்காகவும் எங்களுடன் "வெள்ளாடு நனைகின்றதென்று வேங்கைப்புலி விம்மி விம்மி யழுதவாறாகத் "தேசாபிமானி" பெரிதும் அனுதாபமுறுகின்றது; தான் அனுதாபப்படுவதோடமையாது தமிழ் மகளிர் கழகத்தாரையும் எம்பொருட்டு அனுதாபமுறும்படி, அவர்கட்கும் புத்தி புகட்டுகின்றது. யாம் பிழைத்துவிட்டோமென்பதைத் தைரியமாகக் கூறி எம்முடன் அனுதாபப்படுவதோடமையாது அனுதாபமுறாத கழகத்தாரையும் அனுதாப முறும்படி தூண்டியதனிமித்தம் யாம் தேசாபிமானிக்கு நன்றி கூறுகின்றேம். ஆனால் விவேகிகள் பெரிதும் யோசித்துக் கூறும் விஷயங்களை அவரல்லாதார் தைரியத்தோடு சொல்வர் என்னுங் கருத்தமைந்த ஒரு ஆங்கில முதுமொழியுமுளதன்றோ! ஆனது பற்றி இங்கே தேசாபிமானி தைரியத்தோடு எமக்கு அவிவேகமும் அநாகரிகமும் கற்பித்தமை நூதனமன்று. அழுவார்க்கு அழுவார்போல, எம்பொருட்டுப் பிழையாகவேனும் சரியாகவேனும் அனுதாபப்பட்ட தேசாபிமானி பொருட்டு அது பிழையல்லவற்றைப் பிழையெனக்கொண்டும் நாகரிகத்தை அநாகரிக மென்றும் விவேகத்தை அவிவேகமென்றும் மாறு படக்கொண்டும் தம் நுண்ணறிவைப் பிறர்க்குப் புலப்படுத்த முயன்றமையையிட்டு யாம் பெரிதும் அனுதாபமுறுகின்றேம்.

* * *

உலகம் பலவிதம்: *1924 ஜூலை 17*

ஒரு மரத்திலே நீண்ட கயிற்றினாற் கட்டப்பட்ட ஒட்டகம் அக்கயிறு அவிழ்ந்துவிட, அதனையும் இழுத்துக்கொண்டு செல்வதை ஒரு எலி கண்டது. கண்ட எலி ஒட்டகம் வழிதெரியாது அலைகின்றதென நினைத்து அக்கயிற்றின் நுதியைத் தன் வாயிற் கௌவிக்கொண்டு முன்னே சென்றது. எலி கயிற்றைக் கௌவிக் கொண்டு தன்னை வழிநடத்திச் செல்வதாக எண்ணி முற் செல்வதையுணர்ந்த ஒட்டகம் தனக்குட் சிரித்துக்கொண்டு பின்னே போகும் போது ஒரு ஆறு குறுக்கிடுதலும் எலி செய்வ தின்னதென்றறியாது ஒட்டகத்தைத் திரும்பிப் பார்த்தது. அப்பொழுது ஒட்டகம் சிரித்து "அண்ணே, ஏன் நிற்கின்றாய், இதுவரையும் என்னை வழிநடத்தியதுபோல் இனியும் வழிநடத்திச் செல்லலாமே" என்றது. உடனே, எலி தன் சிறுமையை உள்ளபடியுணர்ந்து நாணமடைந்து கயிற்றை விடுத்து அப்புறமகன்றது. இந்த எலியைப்போன்ற மனுஷர்களுஞ் சிலர் இருக்கின்றார்கள். பெருங்கருமங்களில் அழைப்பாரின்றித் தாமாகச் சென்று தலையிட்டுக்கொண்டு, தம்மாலேயே அக்கருமம் நடைபெறுவதாக வீணெண்ணங் கொள்ளுகின்றார்கள். அக்கருமங்கட்கு யாதும் சங்கடமேற்படும்போதே கருமத்தின் பெருமையும் இவர்களின் சிறுமையும் புலப்படும்.

* * *

இக்காலத்தில் இளைஞர் முதியோரிலும் பார்க்கத் தாங்கள் நுண்ணிய விவேகமுடையவர்களென நினைத்துக்கொள்ளுகிறார்கள். கருமஞ்செய்யும் ஆற்றல் தமக்கே பெரிதுமுடையதென வெண்ணுகின்றனர். இப்படி நினைத்துப் பெரியோரை எள்ளுகின்றனர். இக்காலத்தில் மாத்திரமன்று பூர்வத்திலும் மூத்தோர் சொல்லை அவமதித்துத் தாம் நினைத்தபடி செய்து நாசமுற்றோரின் சரித்திரங்களை அறிந்துள்ளேம். இராவணன் தன் மூதாதையாகிய மாலியவான் சொன்ன புத்தியையும், மாமனாகிய மாரீசன் கூறிய உறுதிமொழியையுங் கேளாது சீதையைக் கவர்ந்து கொடுசென்று சிறையிடை யுய்த்துக் குலத்தோடு நாசமானான். துரியோதனன் தன் சிறியதந்தையாகிய விதுரன், மூதாதையாகிய வீட்சுமன் என்னும் இவர்களுடைய இதோபதேசத்தை அலட்சியஞ் செய்து பாண்டவரைப் பகைத்து, அவர்க்குக் கேடுசூழ்ந்து ஈற்றிலே தானே சுற்றத்தோடு மடிந்தான்.

* * *

பெண்பாலாராயுள்ளார் இல்லற தருமத்தையும் குறைவற நடத்திக்கொண்டு தேச ஈடேற்றத்தின்பொருட்டுப் பெரிதுமுழைத்தல் முடியுமோ வென்பது ஒரு சந்தேகம். கல்வியிற் சிறந்த ஔவைப்பிராட்டி துறவறத்தை யனுசரித்துள்ளனரென்பர். அவர் இல்லறத்துட்பட்டதாக யாண்டுங் கூறப்படவில்லை. காரைக்காலம்மையார் இல்லறத்தை விடுத்தே துறவறத்தைக் கடைப்பிடிக்க வேண்டியவரானாரெனப் பெரியபுராணங் கூறும். இக்காலத்தில் தேச ஈடேற்றத்தின் பொருட்டு உழைத்துவருந் தேவியும் இல்லறத்தை இடையே விடுத்துள்ளரென அறிகின்றேம். அருந்ததி, சந்திரவதி, அநாசூயை, சாவித்திரி, சானகி, தமயந்தி, வாசுகி ஆகிய இவர்கள் இல்லறத்தைக் குறைவற நடாத்திக் கற்புடையவரெனப் பெயர்பெற்றனரேயன்றித் தேசசேவை செய்து கீர்த்தியடைந்தவரல்லர். இவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துள்ள செயற்கருஞ் செயல்களெல்லாம் இவர்கள் மாட்டு விளங்கிய கற்பின் திண்மை காரணமாக வந்தனவாம். வீட்டிற்குரிய கருமம் பார்த்தல், வரவிற்குத் தக்க செலவு செய்தல், பிள்ளைகளை நல்வழியில் வளர்த்தல், நாயகனைப் பேணுதல், மடம் நாணும் அச்சம் பயிர்ப்பென்னும் நாற்குணங்களுமுடைமை, விருந்தோம்பல், அடக்கம், பொறுமை, இன்சொல், கல்விஞானம் என்னும் குணங்கள் மாதர்களிடத்தில் ஒருங்கு அமைந்திருக்குமேல் அது பொன் மலர் நறுமணத்தோடு இருத்தல் போலாகும். அறிந்து மறியார்போலிருத்தலே மடமாம். அறியாதிருந்தும் அறிந்தார்போல் நடித்தல் விடமாம்.

* * *

தேசாபிமானம் சமயாபிமானம் சாதியபிமானம் பூண்டு ஒருவர் உலகநன்மையின் பொருட்டுப் பாடுபடும்போது அபிப்பிராய பேதங்களும் இடையூறுகளும் நிகழ்தல் சகஜமே. உண்மையான அபிமானிகள் அவ்வாறான அபிப்பிராய பேதமுடையார்மீது சீற்றங்கொள்ளார்; அவர்க்கு இடர் செய்ய நினையார்; இடையூறுகளைக்கண்டு மனந்தளரார்; வீரம்பேசார்; விரோதம் பாராட்டார். உலகம் பலவிதமென்பதை உணர்ந்து அதற்கியையக் கருமம் புரிவர்.

* * *

உலகம் பலவிதம்: *1924 ஜூலை 24*

வயசு அறுபதுவரையிலிருக்கும்; வேட்டியைக் கொய்துகட்டியவராய், தலையிற் பழையக் காட்டு லேஞ்சி கட்டியவராய், அரையில் நனை மிண்டை வேட்டிக்குமேற் கட்டியவராய் ஒரு தோளின் இருபுறத்தும் தொங்கச் சால்வையணிந் தவராய், காதுகளில் நாட்டுக் கடுக்கன்கள் தரித்தவராயுள்ள நாட்டுப் புறத்து வயோதிபர் ஒருவர், யாழ்ப்பாணங் காங்கேயன்துறைத் தெருவில் வண்ணார்பண்ணையிலுள்ள வைத்தியநாதர் வீட்டுத் தலைவாயிலில் மழைக்கு ஒதுங்கியிருந்துகொண்டு தம்முடைய மடியிலிருந்த வெற்றிலைப் பையை எடுத்து அவிழ்த்துத் தாம்பூலம் அருந்திக்கொண்டிருந்தார். அந்தச் சமையத்தில் காற்சட்டை தொப்பி யணிந்தவனாகத் துவிச்சக்கரத்திலேறி அதிவேகமாகச் சென்ற ஒரு வாலிபன், மழை சிறிது ஊன்றித் தூறியமையால் நனைந்து போகாவண்ணந் தன் துவிச்சக்கரத்தினின்றுங் குதித்து அதனையுங் கையிற் பிடித்துக்கொண்டு மேற்படி தலைவாயிலுள் வந்து புகுந்தான். புகுந்த வாலிபன் துவிச்சக்கரத்தை ஒரு புறத்தே சார்த்தி விட்டு, நின்றபடியே தன் சட்டைப்பையுளிருந்த ஒரு சிறு தகரப்பெட்டியை எடுத்துத் திறந்து அதற்குளிருந்த "சிக்கறற்" எனப்படும் சுருட்டை எடுத்துப் பற்றவைத்துக்கொண்டு அந்த விருத்தரைப் பார்த்தான். விருத்தருடைய உடை நடை பாவனைகள் வாலிபனுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவன் புன்னகை செய்து கொண்டு ஒருவிதமான உபேட்சையுடன் "பெரியவர் எவ்விடம் இருப்பதோ" என்று வினாவினான். "நான் புன்னாலைக்கட்டுவன் தம்பி" என்று பெரியவர் பதில் சொல்லுதலும் வாலிபன், "அப்பா, நீங்கள் இன்னமும் திருந்தவில்லையா, உங்களாலேதான் எங்கள் தமிழ்ச் சாதிக்கு மதிப்புக் குறைந்தது" என்றான். "ஏன் தம்பி, அப்படிச் சொல்லுகின்றீர்" என்று விருத்தர்கேட்க, வாலிபன் "வேறொன்றுமல்ல, அப்பா, காலத்துக்குத் தக்க கோலம் என்றபடி, உலகத்திலே எங்கும் சீர்திருத்தம் அதிகரித்துவர, நீங்கள் மாத்திரம் அந்தநாளில் உடையும் அந்தநாளில் நடையுமாகச் சுத்த நாட்டுப்புறமாய் இருக்கிறீர்களே; பட்டினப்பக்கங்களில் உள்ளவர்கள் நடந்து கொள்வதை நீங்கள் பார்க்கவில்லையா, தற்செயலாகக் கொழும்பு கண்டியிலேயுள்ளவர் யாராயினும் இங்கே வந்தவிடத்து உங்களை யொத்த ஆட்களைக் கண்டால் எங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள்" என்று சிறிது மனவருத்தத்தோடு சொன்னான்.

* * *

விருத்தர் கேட்டுச் சிரித்து வாலிபனை நோக்கி, "தம்பி, காரியம் அப்படியல்லவே; பட்டினப் பகுதியில் வசிக்கும் உங்களையிட்டுத் தான் நாங்கள் பரிதாபப்படுகிறோம்; போலி நாகரிகத்திலே எடுபட்ட நீங்கள்தான் எங்கள் சாதியாசாரத்தைக் கெடுத்தீர்கள் சமயாசாரத்தை விடுத்தீர்கள்; குலாசாரத்தைக் குலைத்தீர்கள்; பழைய சீர்திருத்தத்தை மறந்தீர்கள்; புராதன பழக்க வழக்க ஒழுக்கங்களைத் துறந்தீர்கள்; உத்தியோகம் பார்க்கின்றேமென நினைத்துப் பிறருக்கு அடிமைப்பட்டு அவர் சொன்னமாதிரி உடுத்து, அவர் நடக்கும்மாதிரி நடந்து, உங்களுக்கென ஒரு எண்ணமின்றி அவர் எண்ணுவது போல் எண்ணிச் சுவாதீனமற்றுத் தயங்குகின்றீர்கள்; நீர் அணிந்திருக்கும் உந்த உடை எங்கள் தமிழருக்குரிய உடையாகுமா? நீங்கள் சாதியைக் கெடுத்தீர்களென்பதைக் காட்டிக் கொடுப்பதற்கு உங்களுடைய உடைமாத்திரம் போதுமே. மூக்கறையன் கடவுளைக் கண்டேன் மூக்கை அரிந்துவிட்டு வாருங்கள் உங்களுக்குங் காட்டுகிறேன் என்று மற்றவர்களையும் மூக்கறையராக்க முயன்றாற்போல, உத்தியோகத் தொண்டு பூண்ட உங்களுட் சிலர் சுவதந்திரத் தொழில் செய்யும் கமக்காரர்களாகிய எங்களையும் உங்களைப் பின்பற்றும்படி சொன்னால் நாங்கள் அதனைச் செய்துவிடுவோமா" என்று சொல்வதற்கிடையில் வாலிபன் அதிக ஆத்திரங்கொண்டு "அப்பா, நில்லு நில்லு, உத்தியோகம் பார்க்கும் எங்களை அடிமைகளென்றும், நாட்டுப்புறத் தோட்டஞ் செய்யும் உங்களைச் சுவாதீன முடையவர்களென்றும் சொன்னீரே;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது நீதியா, எங்களை ஆளவந்த சாதியாரோடு கூடி நாங்களும் அவர்களுக்குத் துணைபுரிந்து உங்களை ஆளுகின்றோமல்லவா? அப்படியிருக்க உத்தியோகத்தரை அடிமைகளென்று நீர் எப்படி வாய் கூசாமற் கூறுவீர்" என்றான்.

* * *

கிழவர் பெருஞ்சிரிப்புச்சிரித்து "தம்பீ, நீங்கள் பார்க்கும் உத்தியோகத்திற்கும் தேசத்தை ஆளுதலுக்கும் வெகு தூரம்; உத்தியோகம் பார்க்கும் நீங்கள் எங்களை ஆளுவதாகவா இதுவரையும் எண்ணியிருக்கிறீர்கள். இதுபோலப் பைத்தியம் வேறு என்ன இருக்கிறது! எங்கள் சைவாலயங்களிலேயுள்ள கோபுரங்களில் கோபுரந் தாங்கிகள் என்று சில பொம்மைகள் செய்யப்பட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்; அவைகள் தோற்றத்திலும் பெயரளவிலும் கோபுரந் தாங்கிகளாயிருந்தாலும் உண்மையை உணர்ந்து பார்த்தால், அவைகளைக் கோபுரந்தாங்குவதன்றி அவைகள் கோபுரத்தைத் தாங்குவனவல்ல. உத்தியோக காரர்களாகிய நீங்கள் முற்றவெளியிலே பந்தடித்து விளையாடுவதைப் பார்த்திருக்கின்றேன்; அடித்த பந்து கைக்குத் தவறி அப்பால் வீழ்ந்து உருண்டு போகும்போது அதனை எடுத்துக்கொடுப்பதற்குச் சில வேலைக்காரர் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்களல்லவா? அந்த வேலைக்காரர் தாங்களும் துரைமாரோடு கூடிப் பந்தடிக்கின்றோமென்று நினைப்பது போலவிருக்கும் உத்தியோகத்தரென்றிருக்கும் நீங்கள் ஆங்கிலரோடுகூடி ராச்சியம்பண்ணுகிறோமென்று சொல்வது. தம்பீ, நீர் சிறுபிள்ளை; உமக்குக் காரியம் விளங்கவில்லை; இந்த வீண்எண்ணத்தை இன்றோடு விட்டுவிடும். நான் ஆங்கிலம் படியாவிட்டாலும் தமிழ் சிறிது படித்திருக்கின்றேன்; மேலும் நான் தேசாபிமானமுள்ள ஒரு கிழவன் எங்கள் சாதி கெட்டுப்போகின்றதே யென்பதையிட்டுச் சதா சிந்தித்து வருந்துகின்றேன். பட்டினப்புறத்தே இருந்து உத்தியோகம் பார்க்கும் நீங்கள் அந்நிய நாகரிகத்தைக் கைக்கொண்டு உங்கள் வாழ்க்கைக்குரிய சகல பொருள்களுக்கும் பிறருடைய கையை எதிர்பார்த்துக்கொண்டல்லவா இருக்கின்றீர்கள். உங்கள் உடைக்குக் கடையைப் பார்க்கின் றீர்கள்; அரிசி நெல் என்னு மிவைகளுக்குக் கிட்டங்கியைப் பார்க்கின்றீர்கள்; கத்தரிக்காய் வாழைக்காய் முதலிய காய் பிஞ்சு தேங்காய் முதலியவைகளுக்குச் சந்தையை எதிர்பார்க்கிறீர்கள்; விறகுக்கு காலையைப் பார்க்கிறீர்கள்; எங்கேனுஞ் செல்வதற்கு றிக்ஷோ சூத்திரவண்டி குதிரைவண்டி மோட்டாக்கார் என்னுமிவைகளைப் பார்க்கிறீர்கள். தொப்பி மூக்குக்கண்ணாடி பீங்கான் சுங்கான் சிக்கரட் சவர்க்காரம் பூசர்மா வாசனைத்திரவியங்கள் சப்பாத்து சட்டைப்பொத்தான் முதலியவைகளுக்கு அந்நியர் வைத்திருக்கும் சாய்ப்புக் களை எதிர்பார்க்கிறீர்கள்; சமையல் முதலிய வீட்டுவேலைகளைச்செய்தற்கு வேலைக்காரரை எதிர்பார்க்கிறீர்கள்; உங்களைப் பட்டினி போடுவதற்கு உங்கள் வேலைக்காரர்களால் முடியும். வீட்டிலே ஏதும் ஒரு சங்கடம் ஏற்பட்டு நீங்கள் தாமதிக்க வேண்டிவந்தால் விடுதலை பெறுதற்கு மேலுத்தியோகத்தாருடைய தயவைப் பார்க்கின்றீர்கள். சுருங்கச் சொல்லுகில் உங்கள் நேரத்தைப் பிறருக்கு விற்கிற உங்களுக்குச் சுவதந்திரம் எப்படியுண்டு" என்று அதட்டிப் பேசினார்.

* * *

வாலிபன் கிழவன் சாமானியமான கிழவனல்லன் என்று மனசுள் நினைத்து கொண்டு "பெரியவரே, சரி நாங்கள் சுயாதீனமில்லாதவர்களென்று வைத்துக்கொள்வோம்; அது இருக்க, உங்களுக்குச் சுயாதீனம் எப்படியுண்டு என்பதை எனக்குச் சொல்லவேண்டும்" என்று கேட்டான். அதற்கு விருத்தர் "தம்பி, ஆற்றங்கரையின் மரமும் அரசறிய, வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே - ஏற்றம், உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர் பணிக்கு" என்றபடி எங்கள் கமத்தொழிலுக்கு ஒப்பான தொழில் வேறேதுமுண்டா? வேளாளர் ஏர்பூட்டாவிட்டால் இரவி (சூரியன்) தேர்பூட்டானென்று கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் ஏரெழுபதிலே பாடியிருக்கின்றார். எங்கள் உணவுக்காகிய நெல் பயறு முதலிய தானியங்களையும், தேங்காய் முதலிய கறிக்கான வெஞ்சனங்களையும் கத்தரிக்காய் வாழைக்காய் முதலிய காய்களையும் மா பலா வாழை எலுமிச்சை தோடை முதலியவற்றின் கனிவர்க்கங்களையும் பனம்பண்டங்களையும் தயிர் பால் நெய் முதலியவற்றையும் பாக்கு வெற்றிலை புகையிலை என்னுமிவைகளையும் தலைக்கெண்ணெய் விளக்கெண்ணெய் என்னு மிவைகளையும் இன்னும் எங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களையும் நாங்களே ஆக்கிக் கொள்ளுகின்றோம். உங்கள் வீட்டுப் பெண்கள் போலாகாது, எங்கள் பெண்கள் தங்கள் வீட்டுக் கருமத்தைக் குறைவற முடித்துக்கொண்டு கமத் தொழிலிலும் எங்களுக்குத் துணைச்செய்கின்றார்கள். எங்களுக்கு ஏதும் அசந்தர்ப்பம் ஏற்பட்டால் நாங்கள் சுகமில்லையென்று வைத்தியரிடம் போய்ப் பத்திரம் வாங்கிக் காட்டி "லீவு" எடுக்கவேண்டியதில்லை. எங்கள் நேரத்தை இன்னொருவருக்குப் பணத்துக்காக நாங்கள் விற்கவில்லை. உங்களுடைய தொழுதூண் சுவையில் எங்களுடைய உழுதூண் இனிது. அன்றடித்து அன்று வாயிலிடும் கூலிக்காரன்தானும் ஒரு நாளைக்குச் சுகமில்லாவிட்டால் வேலைக்குப் போகாமல் விடுதல் முடியும். நீங்கள் போகாமல்விடுவதென்றாற் பெருங் கஷ்டம். உங்கள் மேலுத்தியோகத்தரைத் திருத்திப்படுத் துவதற்கு எத்தனை பொய்யை எத்தனை இரப் புரைகளைச் சொல்லுவீர்களென்பது உங்களுக்கும் கடவுளுக்குமே தெரியும். அப்படிப்பட்ட உங்களுக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாதீன முண்டென்றும், பூர்வ காலத்திற் பாண்டிய சோழ வேந்தர்கட்கு முடியெடுத்துச் சூட்டிவைக்கும் வேளாளராகிய எங்களுக்குச் சுவாதீன மில்லையென்றுஞ் சொல்ல முடியுமா? மூன்று நான்கு வருடங்களுக்கு முன் நடந்த அரிசிப் பஞ்சத்தில் உங்களுடைய யோக்கியமும் எங்கள் யோக்கியமும் தெரிந்திருக்குமே" என்று சொல்வதற்கிடையில் வாலிபன் கிழவனை நோக்கி "அப்பா, அறியாமற் சொல்லிவிட்டேன். பொறுத்துக் கொள்ளவும். நீங்கள் சொல்வது முழுதுஞ் சரி. நான் இவ்வளவுகாலமும் பேய்த்தனமாக எண்ணியிருந்தேன். இந்த இடத்தில் இருவரும் சந்திக்க நேர்ந்தது மிக்க நன்மையாக முடிந்தது. இந்தத் தினத்தை நான் ஒருபோதும் மறவேன். மழை ஓய்ந்துவிட்டது. நான் போய்வருகிறேன்" என்று சொல்லி மிக்க ஆச்சரியத்தோடும் அற்புதத்தோடும் துவிச்சக்கரத்தில் ஏறிச் சென்றான். விருத்தரும் தாம் செல்ல வேண்டிய இடத்தை நோக்கிச் சென்றார்.

* * *

உலகம் பலவிதம்: *1924* ஆகஷ்ட் 7

நல்லூர்க் கந்தசுவாமிகோயிலில் நேற்றுக் கொடியேறி மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. உற்சவ காலத்தில் விரதம் அநுட்டிப்போரும் தரிசனஞ் செய்வாரும் மிக்க பயபக்தியோடு அவற்றைச் செய்துவருகின்றனர். இங்கே மற்ச மாமிசம் புசிப்போர் அவற்றைப் புசியாதொழிந்தனர். புலால் ஆக்குஞ் சட்டி பானைகளையெல்லாம் வெறுத் தொதுக்கி வீட்டுக்கோடியிலே அகற்றி விட்டனர். வீட்டுக் கொல்லைகளையும் வீட்டையும் சுத்தி செய்து விட்டனர். விரத உணவை ஆக்குவதற்குப் புதிய மட்பாண்டங்களைத் தருவித்துக் கொண்டனர். இதுகாறும் உண்ணுவதற்கு உபயோகித்துவந்த உச்சிட்டக் கோப்பைகளையும் மற்றுங் கலங்களையும் இன்ன இடத்திலென்றுதானுந் தெரியாதவண்ணம் மறைத்துவைத்து விட்டனர். வாழையிலை வாழைமடலைக்கொண்ட குற்றி இவைகளைத் தேடிக்கொண்டுவந்து உண்கலமாக உபயோகிக்கும்படி வீடுகளிற் கேஷமித்து வைத்திருக்கின்றனர். இங்குள்ள வீடுகடோறும் காலையிற் சென்று பார்த்தால், பெண்கள் வீடு பெருக்குவோரும் மெழுகுவோரும் சாணம் தெளிப்போரும் வஸ்திரந் தோய்த்து உலரக்கட்டுவோரும் காய்பிஞ்சுகளை வெட்டித் திருத்துவோரும் ஸ்நானத்திற்கு ஆயத்தமாக நிற்போருமாகவே காணப்படுகின்றனர். உற்சவமில்லாத காலத்திலே தலைவாயில்தோறும் நின்று கையிற் கடுதாசியேனும் பூவரசமிலை சண்டியிலைகளேனும் உமலெனப்படுஞ் சிறு கூடையேனும் பிடித்தவராய், தெருவீதியாற் செல்லும் பரதவரை ஆர்வத்தோடும் பார்த்து நின்று அவர்கள் வரக் கண்டமாத்திரத்தே எதிர்சென்று இன்சொற் கூறித் "தந்துவிட்டுப்போ உன்னாணைத் தந்துவிட்டுப்போ, பொடியிலேயாவது பார்த்துத் தந்துவிட்டுப்போ" என்று இரந்து பின்சென்று சிற்சில சமையங்களில் அவர்கள் மீன்பறியிற்கையிட்டு இழுபறிப்படும் (புலாலுண்ணும்) மகளிர் இப்பொழுது அப்பரதவர் தம் வாயில் தேடிவந்து நின்று "பிள்ளை கறி வேண்டுமோ" என்று கேட்கவும் "சீ, வேண்டாம் கொண்டோடு, கோயிலிற் கொடியேறிவிட்டதென்று தெரியாதோ" என்று அவர்களைச் சீறிச் சினந்து கடிந்து கண்ணெடுத்துப்பாராது இரக்கமின்றித் துரத்து கின்றனர். இப்படிப்பட்ட செயலைக் கண்டுதான் "ஓடம் வண்டியிலேறும் வண்டி ஓடத்திலேறும்" என்னும் பழமொழி வழங்கலாயிற்று.

* * *

இனி ஆடவர்களைப் பார்ப்போம்; புலாலின்றி உணவு இறங்கப்பெறாதவர்கள் சாராயமின்றி உண்ட உணவு சீரணிக்கப்பெறாதவர்களுமாயுள்ள ஆடவர் தாமும் புலாலை விட்டனர்; மதுபானத்தை மறந்தனர்; வீண்கருமங்களைச் செய்யாதொழிந்தனர். அதிகாலையிலெழுந்து தங்கள் கடன்களை முடித்து ஆசார சீலராய் ஆலயத்திற்குச் சென்று அங்கப் பிரதக்கிணம் முதலிய வழிபாடுகள் செய்து மீண்டு வீட்டுக்கு வந்து பத்தினி புத்திரரோடு தூயவுண வருந்தியபின் தங்கள் கருமத்திற்குச் செல்கின்றனர். எவரைப்பார்த்தாலும் விபூதி சந்தனம் வில்வப்பிரசாதம் முதலியன தரித்தவராய் ஆசாரமுடையவராய் முகத்தில் தேசஸ் உடையவராய்க் காணப்படுகின்றனர். சுருங்கச் சொல்லுகில் கலியுகவரதராகிய சுப்பிரமணியப் பெருமான் அடியார்க்குத் திருவருள் செய்யும்படி ஆதியிற் கோயில் கொண்டருளிய நல்லூரிலே, தமிழரசரின் இராசதானியாகப் பூர்வத்தில் விளங்கிய நல்லூரிலே, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் அவதரித்த நல்லூரிலே இந்த இருபத்தைந்து தினங்களும் புனிதமாகி சைவமணமே கமழ்கின்றது. நல்லூரில் மாத்திரமன்று, அதன் அயற்கிராமங்களிலும் இச்சமையத்தில் அங்ஙனமே நிற்கின்றது. ஆகா, இவ்விதமாக வருட முந்நூற்றறுபத்தைந்து நாட்களும் இருந்தாலோ என்று சைவசமயபிமானிகள் வாயூறுகின்றனர். சில ஆலயங்களில் உற்சவ காலங்களில் நிகழும் அக்கிரமத்தை தேசாபிமானி வாயிலாகப் படித்து, வேப்பங்கனியை உவக்குங் காக்கைபோலச் சைவர்கள் மீது குற்றந் தெரிவித்த மிஸ்ரர் ஹென்ஸ்மன் இந்த நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் உற்சவ காலத்தில் நிகழும் நன்மைகளையும் எடுத்துக் காட்டுவாராக. சைவப்பிள்ளைகள் சைவசமயத்திற்குப் பாடங்களைப் படிக்கவேண்டும் என்னும் விஷயமாக முயற்சிசெய்யும் சைவாபிமானிகளைக் கண்டிக்கும் மிஸ்டர் ஹென்மனுடைய நுண்ணிய விவேகத்திற்கு இந் நிகழ்ச்சிகள் விசேஷமாகத் தோற்றுமென நாம் காத்திருப்பது வியர்த்தமன்றோ.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கத்திற்கிடையே சந்தோஷமும் சந்தோஷத்திற் கிடையே துக்கமும் வருதலுமுண்டு. நமது மகளிர்கள் இந்த உற்சவக்கொண்டாட்டத்திலே தங்கள் கருமத்தை மறந்துவிடவில்லை. ஆபரணங்கள் பழுப்பு மங்கிவிட்டன. அவற்றைப் பழுக்கச் சுடுவித்தற்குத் தட்டான் வீட்டிற்குப் போகும்படி நாயகனை நெருக்குவார் சிலரும், அழித்துப் புதுமாதிரியாக ஆபரணஞ் செய்விக்க வில்லையேயென்று கணவனைக் குறை கூறுவார் சிலரும், ஈடுவைத்த நகையை இன்னமும் மீட்டுத்தர வில்லையென்று பர்த்தாமேற் பழிசுமத் துவார்சிலரும், விதம்விதமான சேலையில்லை, நிறம் நிறமான ரவிக்கையிலை, இதனால் மற்றும் பெண்கள் தங்களை மதிக்கவில்லை, அவைகளையெல்லாம் கடன்பட்டாயினும் வாங்கித் தருதல் வேண்டுமென்று தம் புருஷனைக் குறை கூறுவார் சிலருமாயினர். "ஐயோ, இந்தப் பெண்டுகளுக்கு (ஆண்களாகிய) நாங்கள் படும் பாடு தெரியவில்லையே, அரிசி அநியாயமாக விலையேறிய இக்காலத்தில் இவர்களும் இப்படி நெருக்கினால் நாமென்ன செய்வோம், இல்லையென்றாற் கண்ணாட்டி கண்ணோட்டஞ் செய்யாளே, ஓமென்றால் வரும்படி போதாதே! நல்லைக்கந்தா! இதுவும் உன் திருவிளையாட்டா, உனக்குத் திருவிழாக்கொண்டாட்டம், எங்களுக்குப் பெருந்திண்டாட்டம் என்று துயருறும் ஆடவர் பலர்.

* * *

உலகம் பலவிதம்: 1924 ஆகஷ்ட் 14

"ஈசா! கயிலைவாசா!! "நுண்மதி வணிகர் தங்களைப் படைத்துச் சோரரை யென்செயப் படைத்தாய்!!!" என்ற வாக்கியம் உண்மையாக வந்துவிட்டது. இங்குள்ள அரிசி நெல் வியாபாரிகள் வன்மந்தான் என்னே? இவர்களுடைய நோக்கம் பொருளீட்டவன்று. கொள்ளையிடவே எனக் கங்கணங்கட்டி நிற்கின்றனர். பஞ்சம் எவ்வளவுக்கு அதிகரிக்கிறதோ அவ்வளவுந் தங்கள் பாக்கியம் என நினைக்கின்றனர். பஞ்சம் பரவ வேண்டுமென்பதே இவர்களுடைய நித்திய பிரார்த்தனையாக இருக்கிறது. சட்ட நிரூபண சபைப் பிரவேசத்தை விரும்பித் தங்களுக்குச் சம்மதங் கொடுக்கவேண்டுமெனத் திரிந்தவர்களும் திரிபவர்களும் மௌனஞ் சாதிக்கின்றனர். எமது காருண்ணிய அரசினருக்கு இதை எடுத்துக் காட்டுவார் ஒருவரையுங் காணேம். சில உத்தியோகத்தர் எங்களுக்கும் நன்மை செய்பவர்கள் போல் நடிக்கிறார்கள். வியாபாரிகளுக்கும் நன்மை செய்வதாகக் காட்டுகிறார்கள். எமக்கு நன்மை செய்பவர்களிடம் வியாபாரிகள் அண்ட மாட்டார்களே! வியாபாரிகளுக்கு நன்மை செய்பவர்களிடம் நாம் அண்டமாட்டோமே! இந்தப் பஞ்சவேளையில் எம்மை அண்டினால் ஆவதொன்றுமில்லை. வியாபாரிகளை அண்டினால் மூடை கட்டலாமல்லவா? அந்த மூடைகள் சந்ததி சந்ததிதோறும் ஜெநநங்கள் ஜெநநங்கள் தோறும் துணைப்புரியுமே? மழையும் எம்மை மறந்து விட்டது. விதைப்புக்காலமும் வந்துவிட்டது. பஞ்சமுங்குடிகொண்டு விட்டது. "தீயதெமதிலம்பாடு, எம்சிந்தையில் வெந்துயர்தீர, நீயருளாயாயி னுயிர்நீப்போம் மற்றென் செய்கேம்" என இங்குள்ள ஏழைகள் பிரலாபிக்கின்றனர்.

* * *

"அண்ணே! அந்த விஷயத்தைப்பற்றி என்னுடன் பேசாதே. நீ அறியாத கருமமன்று. அவர்கள் அப்படிச் செய்து விட்டார்களென்பது ஒரு நூதனமுமன்று. நான் காத்திருந்தபடியே அவர்களும் முடித்துவிட்டார்கள். சூரியன் மேற்கே உதித்தாலும் அவர்கள் அதை விடவும் மாட்டார்கள். அது அவர்களை விடவும்மாட்டாது. வல்லுவெட்டித்துறைத் தவறணைகள் நீக்கப்பட்டமையும் அவர்களுக்குத் திருப்தியாயில்லை. அப்படியெல்லாமிருக்கவும் பருத்தித்துறைத் தவறணைகள் நீக்கப்படவில்லையென்று என் மீது கோபிப்பது நீதியாகாது" என்று பருத்திச் செடி கூறியது. இதனைக் கேட்ட வல்லுவெட்டி புன்முறுவல் செய்து, "தம்பீ! அனுபவத்தில் மிகக் குறைந்த உனக்கு அவ்விஷயம் விளங்காது. நான் சொல்லுகிறேன் கேள். அவர்கள் மற்றவர்களைப்போல் நடிப்பதன்றி உண்மையான அபிமானங்கொண்டன்று. தாம் ஒன்றை உணர்ந்தும் செய்யார்; சொல்வழியுங் கேளார்; "எந்நாளும் உவர் நிலத்தில் நென்முளை வித்திடினும் விளைவெய்திடாது, பன்னாகம் தனக்கமுதங் கொடுத்தாலும் விடமொழியப் பயன்கொடாது" என்பர் மேலோர். அவர்களால் வரிக்கப்பட்ட பிரசாரகர் பலர் பன்முறை எடுத்து இடித்து உரைத்தும் பிரதிகூலமே பூரணசித்தி யெய்தியது. "மானமொரு நான்கிலொன் றேனுமில்லையேற் பட்டமரமன்றியுவமையில்லை" எனவும் ஆன்றோர் கூறுவர். தம்பீ! நீயொரு சற்குணனாக விருந்தால் இன்றோடு அந்த விஷயத்தை நிறுத்திக்கொள்" என்று கூறி மறைந்தது.

* * *

"நான் உங்கள் மத்தியிலுள்ள இந்தச் சந்தியில் வந்து பலவருடங்களாகின்றன. என்னை இவ்விடத்திற்குக் கொண்டுவந்த தருமவான் யாரென்பது என்னைப்பார்த்தவுடன் தெரியும். அந்தப் பிரபு எனக்காக எவ்வளவோ பணம் செலவிட்டார். நானும் அந்த நன்றியை மறவாமல் என்னிடத்தில் வருவோர்க்கெல்லாம் என்னாற் செய்யக்கூடிய உதவியைச் செய்து கொண்டுவந்தேன். என்னைப் புனிதமாக வைத்திருக்க வேண்டுமென நினைத்த ஒரு பிரபு ஒவ்வொருநாளும் என்னையும் எனக்கு முன்னுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதானத்தையும் சுத்தப்படுத்தும் திருத்தொண்டில் ஈடுபட்டு உழைத்து வந்தார். என்னிடத்தில் வருவோரையெல்லாம் புனிதமாக்குந் திறமை என்னிடத்திலிருந்தும் என்னைப்பலர் அசுசிப்படுத்தி வந்தனர். புகையிலையினாற் செய்யப்பட்ட குறங்கொள்ளிகளை எனக்குமுன் வீசினர். வெற்றிலைக் கக்கலைச் சாணிக்குவியல்போலக் குவித்தனர். எனக்கு உதவிபுரியும் தருமவானும் "நித்தம்போக முற்றம் சலிக்கும்" என்றபடி உதவி செய்து அலுத்தார். எவர்கள் எனக்கு எவ்வித இடையூறு செய்தாலும் நான் மற்றவர்களுக்கு இதுகாறும் செய்துவந்த எனது கடமையைச் செய்யாதுவிடமாட்டேன். இது சத்தியம் என்ன செய்வேன். என்னுடைய வாளியையும் இழந்து விட்டேன். கலிகாலம் என்மேலும் ஆட்சிபுரிகிறது. அதிகதூரம் நடந்து களைத்த பலர் என்னிடம் ஆவலோடு வருகிறார்கள். என்னைப்பார்த்து மனம் வருந்துகிறார்கள். அவர்கள் பரிதாபப்படுவதைப் பார்த்து மனவருத்தப்படுகிறேன். இப்பொழுது என்னைச் சூழ்ந்துநின்று பலர் நியாயம் பேசுகிறார்கள்; கலகமிடுகிறார்கள்; நான் நீ என்கிறார்கள். இவர்கள் இதுகாறும் எனக்குச் செய்தது முழுவதும் தீமையே. இப்போ செய்வதும் அதுதான். நான் இதுகாறும் அவர்களுக்கும் எவர்களுக்கும் செய்ததும் செய்வதும் நன்மையே. என்னுடைய விஷயத்திற் கலகமிடுவோருக்கு இருக்கும் கைகளில் ஒன்றேனும் எனக்கிருக்குமாயின், எனது வாசலிலே தவித்து வந்தவர்களுக்கு ஒரு துளி சலமேனும் கொடாது விடமாட்டேன். இவர்களுக்குக் கையைப்படைத்த கடவுள் அதுபோதாதென்றோ அறிவையும் படைத்தார். எனக்கு அறிவும் வேண்டாம்; கையும் வேண்டாம்; அன்றி அவர்களுக்குரிய மனிதப் பிறவியும் வேண்டாம். எனக்குள்ள அந்த ஓட்டை வாளியை மாத்திரம் கொடுத்தாற் போதும். நல்லூரில் உற்சவம் நடைபெறும் இந்தப் புண்ணிய தினங்களிலா எனக்கு இந்தக்கதி நேர்ந்தது? சைவ சமய ஆசாரங்களையும் ஆலயம், மடம், கிணறு முதலிய தருமங்களையும் எடுத்துப் போதிக்கும் "இந்துசாதனமே" என்னை இந்த ஆபத்துவேளையிற் கைவிடாதே!" என்று நீர்வாவியடிச் சந்தியிலுள்ள கூபம் கூக்குரலிடுகின்றது.

* * *

உலகம் பலவிதம்: *1924 ஆகஷ்ட் 21*

"பெற்றதாய்தந்தைதன் சுற்றமேமுதலான பெரியோரை முனிதல்வேண்டாம்" என்றும், "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வ" மென்றும், "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" யென்றும், தாயிற்சிறந்தொரு கோயிலுமில்லை" யென்றும் ஆன்றோர் கூறியுள்ள பிரகாரம் நமது முன்னோர் தங்கள் தாய்தந்தையரைப் பூசித்து அவர்கள் சொற்பிரகாரம் நடந்துவந்தனர். சமதக்கினி முனிவருடைய புதல்வராகிய பரசுராமர் தந்தை வாக்கியபரிபாலனஞ்செய்யும்படி தவறிழைத்த தன் தாயாகிய ரேணுகையை வாள் கொடு தடிந்து பின்னரும் பிதாவின் வரம்பெற்று அவளை மீட்டனர். சிற்றன்னையின் சொற்படி ரகுராமர் பதினான்கு வருடம் வனவாசஞ் செய்தனர். "மகனே இம்மரக்கலத்தில் இந்த இடத்திலேயே நின்றுகொள்ளுதி" என்னு யுத்த வீரனாகிய தன் தந்தை சொற் கடத்தற்கஞ்சி தீவாய்ப்பட்டு எரிந்து கரிந்து சாம்பராயினான் கசபியன்காவென்னும் ஒரு அயிரோப்பிய வாலிபன். ஆனால் அக்காலம் போய்விட்டது; விபரீதகாலம் வந்துவிட்டது. இக்காலமோ, "தாய்புத்தி சொன்னால் மறுத்திடுங் காலம் உயர் தந்தையைச் சீறுகாலம், சற்குருவை நிந்தை செய்காலம் மெய்க் கடவுளைச் சற்றுமெண்ணாத காலம், பேய்தெய்வமென்று உபசரித்திடுங் காலம் புரட்டருக்கேற்றகாலம், பெண்டாட்டி வையினுங் கேட்கின்றகாலம் நற் பெரியோர் சொற் கேளாதகாலம், தேய்வுடன் பெரியவன் சிறுமையுறுகாலம் மிகுசிறியவன் பெருகுகால" மாகும். இக்காலத்திலே, படாத பாடெல்லாம் பட்டுத் தமக்கு ஆங்கிலக்கல்வி பயிற்றி உத்தியோகத்தில் அமரச் செய்துவைத்த தந்தையர் மைந்தரைக் காணும்படி ஊரிலிருந்து உத்தியோக ஸ்தானத்திற்குச் சென்றால் பிள்ளைகள் தம்மோடொத்த உத்தியோகத்தர் முன்னிலையில் அவர்களைத் தந்தையரென்று சொல்ல வெட்கமுற்று "எமது ஊரில் வசிக்கும் அறிமுகமான கிழவன்" என்று ஆங்கிலத்திலேயே சொல்லிவிடுகின்றார்கள். "அப்பு அலுவலாயிருக்கிறார்; சிற்றப்பா நெருப்பெடுத்து வா புகையிலைச்சுருட்டுப் பற்றவைக்க" என்று தன் சிறிய தந்தைக்குக் கட்டளையிட்டானா மொரு சிறுவன். யாழ்ப்பாணத்து வாலிபனொருவன் கொழும்பில் உத்தியோகமாக விருக்குங் காலத்தில் அவனுடைய விடுதிச்சாலையில் அவன் தந்தை அவனைக் காணும்படி சென்று சில நாட்களாக அங்குத் தங்கிவந்தார். இப்படியிருக்கும்போது ஒரு தினம் இரு பறங்கி வாலிபர் இந்த உத்தியோகத்தனைக் காணும்படி விடுதிச்சாலைக்கு வந்தனர். வருதலும் பிள்ளையின் குணத்தையறிந்த பிதா தானிருந்த அந்த அறையை விடுத்து அடுத்த அறையுட் போயிருந்தார். வந்த வாலிபர் அந்தக் கிழவன் யாரென்று ஆங்கிலத்தில் மகனைக் கேட்க, மகன் "அவர் எங்களூரிலிருக்கும் ஒரு ஏழைக் கிழவன் ஏதும் வாங்கிக்கொண்டு போகலாமென்னுமெண்ணத்துடன் இங்கு வந்திருக்கிறார்" என்றான். அவ்வாலிபர் அது மெய்யென நம்பிக்கொண்டு அவ்விடம்விட்டகன்றனர். மகன் சொன்ன உத்தரம் கிழவருக்கு விளங்கி விட்டது. கிழவர் மகனைப்பார்த்து "மகனே, ஏன் அப்படிச் சொன்னாய்; தந்தையென்று சொல்ல வெட்கப்பட்டால் உன் தாயுடைய புருஷன் என்று என்னை அவர்களுக்கு விளங்கப்படுத்தியிருக்கலாமே" யென்றாராம்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிசிநெல்விலையை அரசினர் கட்டுப்படுத்தியமையை யிட்டு அரிசி வியாபாரிமார் இங்கே அதிக ஆத்திரங் கொள்ளுகிறார்களாம். இது சரியல்லவே. அரிசி வியாபாரிமாருக்கு இப்பொழுதும் நியாயமான இலாபமுண்டென்பது அவர்கள் மனச்சாட்சிக்கும் அரிசி நெல் வாங்கியுண்ணுஞ் சனங்களுக்குந் தெரியும். யாழ்ப்பாணத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுதற்காக இந்தியாவில் வாங்கிவைத்த அரிசியை இங்கே அனுப்பாது அங்குத்தானே வைத்து விற்றுவிடும்படி இங்கு வந்திருக்கும் அரிசி வியாபாரிமார் அங்குள்ள தங்கள் பிரதிநிதிகட்குத் தெரிவித்திருக்கின்றார்களென வதந்தி பிறக்கின்றது. இந்த வதந்தி உண்மையானால் அரிசி வியாபாரி மனப்பான்மை மெச்சத்தக்கதல்லவே. அநேக வருடங்கட்கு முன்னே தென்னிந்தியாவிலிருந்து வியாபார நோக்கமாக இங்கு வந்து வியாபாரம் நடத்தி யாழ்ப்பாண வாசிகளோடு சிநேகபாவமாக நடந்து இவ்வியாழ்ப்பாண வாசிகளாற் பெரும் இலாபமடைந்துவரும் வியாபாரிமார் இப்பொழுது இவ்வாறான குரோதங் கொள்வரேல் இவர்கள் நடுவுநிலைமையெங்கே! நன்றியெங்கே! ஊரவர்களைப் பகைத்துக்கொண்டு இந்த வியாபாரிமார் இங்கேயிருந்து இலாபத்தோடு வியாபாரஞ் செய்யலாமென எண்ணவொண்ணாது. அரிசி வியாபாரிமார் ஊரவர்களை அந்நியராக மதித்து அவர்கள்மேற் குரோதம் பாராட்டி அவர்கட்கு இடைஞ்சலை விளைப்பரேல் ஊரவர்கள் அரிசி நெல் வியாபாரத்தைத் தம் பொறுப்பில் ஏற்று நடத்தவேண்டியவராவர். இந்தவிதமான எண்ணம் இப்பொழுது இங்குள்ள சில தனவந்தருள்ளத்தில் ஜனித்திருக்கின்றது. அன்றியும் பசுவைக் கொன்று அதன் தோலினாற் செருப்பைஆக்கி அச்செருப்பைத் தானங்கொடுத்துப் புண்ணியத்தை யீட்ட முயல்வார்போல, இங்குள்ளாரை வருத்திப் பொருளீட்டி இந்தியாவிற் செய்யப்படும் அன்னதானம் முதலிய தானங்களினால் யாதும் புண்ணியமில்லையாம். "நாசகாலே விபரீதபுத்தி" என்றபடி கேட்டிற்கு அறிகுறியான இந்தத் துர்ப்புத்தியை வியாபாரிமார் அறவே துறந்து யாழ்ப்பாண வாசிகட்கு வரும் இன்பமுந் துன்பமும் வாழ்வுந் தாழ்வுந் தங்களுக்கும் பங்காகுமென நினைத்து யாழ்ப்பாண வாசிகளோடு சகோதர பாவமாக நடந்து லாபத்தையும் நீங்காப் புகழையும் புண்ணியத்தையும் அடைதற்கு முயலுதல்வேண்டும்.

* * *

நல்லூர்க் கந்தசுவாமிகோயிலுக்கு உற்சவதரிசனத்தின் பொருட்டுச் செல்பவர்கள் வெளி வீதியில் வெற்றிலைபாக்குண்டு எச்சிலுமிழ்ந்து வீதியை அசுசிப்படுத்தி விடுகின்றார்களே; நூற்றுக் கணக்கான விரதகாரர் அநுதினமும் அங்கப்பிரதக்கிணஞ் செய்யுந் திருவீதியில், நல்லைக்கந்தசுவாமியார் எழுந்தருளித் திருவுலா வரும் பரிசுத்தமான பிரகாரத்தில் இப்படி அசுசி செய்வது குளிக்கப்போய்ச் சேறுபூசுதலை யொக்கு மல்லவா என்று நமது முருகேசு முறையிடுகின்றார்.

* * *

உலகம் பலவிதம்: 1924 ஆகஷ்ட் 28

"சாப்பிடுகிற் சாப்பிட்டுக்கொண்டு என்னை விடுங்கள்; நான் கூட்டத்திற்கு நேரத்தோடு போகவேணும்; போன கிழமையும் போக நேரஞ் சென்றுபோய்விட்டது; பிந்திப் போறதிலும் பார்க்கப் போகாமல் விடுவது நல்லது" என்று தன் புருஷனுக்குச் சொன்னாள் மனைவி. "என்னப்பா, பசிக்காகச் சாப்பிடுவதா, உன்னுடைய வசதிக்காகச் சாப்பிடுவதா? இன்றைக்குக் காலையில் முழுகிச்சாப்பிட்டது, வயிற்றில் ஒரு விதமாக விருக்கிறது; பசியெழவில்லை; கொஞ்சஞ் செல்ல 4 மணி வரையிற் சாப்பிடலாமென்று பார்த்தேன்; நீ அதற்குள் அவசரப்படுகிறாய்; அல்லாமலும் ஒரு அவதியான அலுவலாகப் பின்னேரம் நான் வெளியிற்போகவேணும்; இன்றைக்கு மாத்திரம் நீ கூட்டத்திற்கு போகாமல் விட்டாலென்ன" என்றான் நாயகன். இந்த வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தே மனையவளுக்கு உண்டான சீற்றத்திற்கு ஒரு அளவில்லை. அவள் சீறினாள்; சினந்தாள்; திருவாய் மலர்ந்து பேச ஆரம்பித்தாள். "இந்த ஆணாய்ப் பிறந்தவர்கள் தங்கள் கருமத்தைப் பார்த்துக்கொள்வதல்லாமல், மற்றவர்களைப்பற்றி நினைக்கவில்லை; எவர் எக்கேடு கெட்டாலுஞ் சரியென்று எண்ணிக்கொள்ளுகிறார் கள்; நான் எங்கேனும் வெளிக்கிடுவதென்றால் எனக்குக் கால்கட்டு, கைகட்டு; புருஷனுடைய ஆக்கினையொருபக்கம், பிள்ளையினுடைய ஆக்கினை யொருபக்கமாயிருக்கிறது; ஒருநாளும் எங்களுக்கு விடியாது; வண்டிமாடுபோல் ஓயாமல் வீட்டுக்கருமம் பார்க்கவேண்டியதுதான் எங்கள் தலைவிதி; நான் ஒரு இடத்திற்கும் போகவில்லை; நீங்கள் போகிற இடத்திற்குப் போய்விட்டு வாருங்கள்; இன்றைக்கு இங்கே உலையும் வைக்கமாட்டேன்" என்று ஆர்ப்பரித்தாள்.

* * *

"எடியப்பா, கோவிக்கவேண்டாம்; நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை, ஆபிஸ் இல்லை; என் கருமம் பார்த்துக்கொள்வேன்; நீ இப்பொழுது போகிற்போ, பசிக்காவிட்டாலும் உன்னுடைய வசதிக்காக நான் சாப்பிடுகிறேன்" என்றான் நாயகன். இதனைக் கேட்டமாத்திரத்தே தேவியின் வதனாரவிந்தம் மலர்ந்தது; புன்முறுவல் பூத்தது; அவள் தன் நாயகன் முகத்தை விழிகளாற் பருகுவாள்போல் ஆர்வத்துடன் பார்த்து "நான் சொல்லியதையிட்டு உங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதும் மனஸ்தாபமோ" என்று வினவினாள். அதற்கு நாயகன் அப்படியொன்றுமில்லையென்றான். போசனம் முடித்த பின்பு இல்லாள் கணவனைப் பார்த்து "நேரமாகிறது நான் போய்வருகிறேன்; குழந்தை நித்திரையாய்க் கிடக்கிறது, சந்தைக்குப் போன வள்ளி இதோ வந்துவிடுவாள், குழந்தை எழும்பி விட்டால் அவள் வரும்வரைக்கும் எடுக்கிப் பராக்காட்டுங்கள்; போனகிழமை குழந்தையைக் கூட்டத்திற்குப் போகும்போது எடுக்கிப்போய் நான் பட்டபாடு கொஞ்சமல்ல; அன்று சொற்பொழிவு நிகழும்போது குழந்தை அழத் தொடங்கிவிட்டான்; தேற்ற முடியவில்லை; சிவபூசையுட் கரடி விட்டாற்போலிருந்தது; நான் குழந்தையையுங் கொண்டு வெளியே வந்து விட்டேன்; அதற்காகத்தான் இன்றைக்கு விட்டுவிட்டுப்போகிறேன்" என்று சொன்னாள். நாயகன் சிரித்து, "குழந்தையைப் பராக்காட்டிக்கொள்ளுகிறேன், ஆனால் அவன் பசித்தழுதாற் பாலூட்ட என்னால் முடியுமா, அது நீ தானே செய்ய வேண்டியது" என்றான். மனையவள் மறுமொழி சொல்ல முடியாதவளாக நாணமுற்று நின்றாள். "சரி, இன்றைக்கு உன் விருப்பம்போல் நீ கூட்டத்திற்குப் போய் வா, இவைகளைப்பற்றி இனிமேற் பேசிக்கொள்ளுவோம்" என்று நாயகன் சொல்ல மனையாள் அதிக சிந்தனையோடு சென்றாள்.

* * *

உலகம் பலவிதம்: 1924 செப்ரெம்பர் 4

"எட தம்பீ, எங்கே அவசரமாய்ப் போகிறாய்? நானும் வாறேன்; மெல்ல மெல்லப்போ மகனே" என்று அறுபது அறுபத்தைந்து வயசு வரையிலுள்ள ஒரு கிழவி மிக்க வேகத்தோடு சென்ற முருகேசுவைக் கந்தர்மடத்தடி, நாற்சந்தியிற் சந்தித்துச் சொல்லுதலும், "பாட்டி, நல்லூரடியிற் பள்ளிக்கூடத்திலே சச்சிதானந்த யோகிகள் கதாப்பிரசங்கமாம்; அதுதான் அவசரமாகப் போகிறேன்; நேரஞ்சென்று போனால் இடங்கிடையாது; அதிருக்க, நீ எங்கே கோயிலுக்குப் போகிறாயா" என்று முருகேசு கேட்டார். "இல்லை, மகனே, நானும் அங்கேதான் வருகிறேன்; எனக்கு இடந்தெரியாது; பையப்பைய நீ போனால் நானுங் கூடிக்கொண்டு வந்துவிடுவேன்" என்று கிழவி சொல்லுதலும், முருகேசு "ஐயோ, பேர்த்தி, இந்த வயோதிககாலத்தில் நீ அங்கே போய்க் காலம் விடமாட்டாய்; நான் ஆண்பிள்ளை; இருந்தாலும் முந்திப் போக வேண்டுமென்றுதான் இவ்வளவு அவசரமாகப் போகிறேன்; நீ ஆரும் பெண்களுடன் கூடிக் கொண்டு வரலாமே" யென்றார். "நான் பெற்ற மகனே, அதை எப்படிச் சொல்லுவேன்; பெயர் மறந்துபோனேன்; ஆரோ ஒரு அம்மையின் கதையாம்; நல்லாயிருக்குமாம்; எங்கள் அயலிற் பெண்கள் நேரத்தோடு வெளிக்கிட்டார்கள்; நானும் வாறேன் என்று சொன்னேன்; சங்கையில்லையென்றாக்கும், என்னை விட்டுவிட்டுச் சத்தப்படாமற் போய்விட்டார்கள்; அதனால் தான் நான் மெல்லமெல்லப் புறப்பட்டுவந்தேன்; எனக்குக் கோயிலடி தெரியும்; பள்ளிக்கூடம் இன்ன இடத்திலென்று தெரியாது; நான் பெற்றவரே, உனக்குப் புண்ணியங்கிடைக்கும்; நானும் சாகமுந்தி அந்தப் பிரசங்கத்தைக் கேட்க வேணும்; உன் தாய் வேறு நான் வேறல்ல; என்னையும் மெள்ள மெள்ளக் கூட்டிக்கொண்டுபோய்ப் பெண்கள் பக்கத்தில் விட்டு விட்டாற் போதுமடா மகனே" என்று கிழவி முருகேசுவை இரந்தது. முருகேசு மனங்கசிந்து "பாட்டி, நீ வா, நான் கூட்டிக்கொண்டுபோய் விடுகிறேன்; ஆனால் பின்பு திரும்பிவருதற்கு என்ன செய்வாய்" என்று கேட்க, "மகனே, அதைப்பற்றிக் காரியமில்லை; நான் பிரசங்கத்தையுங் கேட்டுக்கொண்டு திருவிழாவும் பார்த்துக்கொண்டு பையப்பைய வீட்டுக்கு வந்துசேருவேன்; இல்லாவிட்டால் கோவிலடியில் ஒரு மடத்திற் கிடந்துவிட்டு விடிய எழும்பி வருவேன்; இந்தக் கிழப்பிணம் எங்கே கிடந்தாலுமென்ன" வென்று சொல்லியது. முருகேசுவும் கிழவியை மெல்லக் கூட்டிக்கொண்டுபோய்ப் பெண்கள் பக்கத்தில் இருக்க விடுத்துத் தாமும் பிரசங்கத்தைக் கேட்டபின் அற்புதவயத்தராய் வீட்டிற்கு மீண்டார்.

* * *

"என்ன அப்பா, எண்ணெய் வைத்து முழுகி ஒருமாசத்திற்கு மேற்பட்டுவிட்டது. திருவிழா விரதமும் ஞாயிற்றுக்கிழமையோடு முடிந்தது; நேற்றுப் பண்டாரங்களுக்குப் பூசையுங் கொடுத்தாய்விட்டது. நாளைக்குப் புதன்கிழமை, தவறாமல் முழுகவேணும்; இந்தா இரண்டு ரூபா; முக்கால் ரூபாவிற்குக் காற்கலையம் நல்லெண்ணெய் வாங்கிவை; மிச்சக் காசைக் கொடுத்து நாளைக்கு விடிய இராமனை ஐந்து முற்சந்திக்கு அனுப்பிக் கறிக்கு ஏதும் வாங்குவித்துச் சமை" என்று மனையாளிடஞ் சொல்லிக் காசு இரண்டு ரூபாவையுங் கொடுத்தான். மனையாள் பணத்தை வாங்கிக்கொண்டு பதில் யாதுங்கூறாது சிறிது மனங் கயங்குவதைக் குறிப்பாலுணர்ந்த நாயகன் "ஏன் ஒன்றும் பேசுகிறாயில்லை; என்ன யோசிக்கிறாய்" என்று கேட்டான். "ஒன்றும் யோசிக்கவில்லை; நீங்கள் சொல்லுகிறபடி செய்வதற்கு எனக்குத் தடையில்லை; உங்கள் வார்த்தைக்கு எதிர் வார்த்தை சொல்லுகிறேன் என்று குறை நினைக்காதீர்கள்; இந்த அருவருத்த தீனை விட்டதோடு முற்றாய் விட்டுவிட்டாலென்ன என்றுதான் நான் யோசிக்கிறேன்" என மனையாள் சொன்னாள். "என்ன காரியம் உன் மனத்தில் இவ்வளவு மாறுதல் உண்டானது; முந்தி நான் இதை விட்டிருந்தாலும் உனக்குத்தானே இது இல்லாமற் சோறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்காது; இப்பொழுது நீயாக வேண்டாமென்று நிற்கிறாய்; எனக்கும் அது சம்மதந்தான்; ஆனால் இது இல்லாவிட்டால் அந்த வயிற்றுவலி வந்துவிடுமே, அதற்கென்ன செய்வது" என்றான் நாயகன். "இல்லைப் பாருங்கள், அப்படியொன்றும் இனிமேல் உங்களுக்கு வர நல்லூர்க் கந்தர் விடமாட்டார்; இந்த ஒரு மாசகாலமும் ஒருவகையான வயிற்று வலியும் வரவில்லை; இனியும் நாங்கள் திடசித்தமாயிருந்தால் வயிற்றுவலி வராது; விரதகாலத்தில் இந்த வீடுவாசல் எங்கள் உடம்பு மனம் எல்லாம் எவ்வளவு ஆரோக்கியமாயிருந்தன; அல்லாமலும் பெருமாள் கோவிலில் அன்று அந்த யோகிகளின் பிரசங்கம் கேட்ட பின்பு எனக்கு இந்த இழவு தீனில் தொடவும் மனமில்லை; உங்களுக்குஞ் சொல்லவேண்டுமென்றிருந்தேன்; மேலும் போன வெள்ளிக்கிழமை பிள்ளையார்கோவில் ஐயர் நடு மத்தியானத்தில் உங்களைத் தேடி வேர்த்துக் களைத்து இங்கே வந்தார்; பிள்ளை, தாகமாயிருக்கிறது செம்பையுங் கயிற்றையுந் தாரும் தண்ணீர் அள்ளிக் குடிப்போம் என்று கேட்டார்; அதற்கு நான் சுவாமி, மோர் இருக்கிறது சாப்பிடுங்கள் என்றேன்; சாப்பிடலாந்தான் ஆனால் சொல்லுகிறேன் என்று குறை நினைக்க வேண்டாம், மாமிச போசனிகளிடத்தில் நாங்கள் மோர்தானுஞ் சாப்பிடமாட்டோம் என்றார்; எனக்கு உடனே சீலை நழுவியதுபோல் வெட்கமாக இருந்தது; இந்த அவமானத்தினை நாங்கள் விட்டிருந்தால் ஐயர் அப்படிச் சொல்ல முடியுமா" என்று சொன்னாள்.

* * *

நாயகன் சிறிது யோசித்து நீ சொல்வது சரிதான்; ஆனால் தம்பி "மற்சமாமிசமில்லாமற் காலம் விடமாட்டானே; அதற்கென்ன செய்வது" எனலும், "இல்லைப் பாருங்கள்; தம்பியும் போனகிழமை பள்ளிக்கூடத்தால் வந்த உடன் அம்மா, இனி எனக்கு மற்சமாமிசக் கறி வேண்டாம், நீங்கள் தந்தாலும் நான் தின்னேன் என்றான்; ஏன் மகனே அப்படிச் சொல்லுகிறாயென்று நான் கேட்டபோது, இன்றைக்குப் பள்ளிக்கூடத்தில் புலால் உண்ணல் என்னும் பாடத்தை நாங்கள் படிக்கத் தொடங்கியபோது எங்கள் பண்டிதர் புலாலுண்ணாத பிள்ளைகள் எழும்புங்களென்றார். ஐந்து ஆறு பிள்ளைகள் எழும்பினார்கள்; நானும் அவர்களுடன் எழும்பினேன்; அடுத்த வீட்டுப் பொன்னுத்துரை "மாஸ்டர், இவர் மீன் தின்னுகிறவர் இப்பொழுது எழும்பி நிற்கிறார்" என்றான்; மாஸ்டர் என்னைப் பார்த்து, மெய்தானா என்று கேட்க, நான் தின்றது மெய்தான் இப்பொழுது விரதத்திற்காக விட்டுவிட்டோம் என்றேன். பண்டிதர் சிரித்து அப்படியானால் அது கூட்டில்லை, இனிமேலும் அதனை உண்ணாது விட்டுவிட வேண்டுமென்று எவ்வளவோ புத்தி சொன்னார். ஆனபடியால் இனி எனக்கு மற்சம் வேண்டாம் என்றான்" என மனைவி சொல்லுதலும் நாயகன் மனமகிழ்ச்சி கொண்டு "ஆம் அந்தச் சனியை இன்றோடு விட்டுவிடுவோம்" என்று சொல்லி அப்படியே செய்தான்.

* * *

உலகம் பலவிதம்: 1924 செப்டெம்பர் 14

இது இப்பொழுது ஓடுகின்றது. யாழ்ப்பாணம் முற்றவெளிக் கோபுரத்திலுள்ள மணிக்கூடு சிலவருடங்களாக ஓடாமல் எப்பொழுதும் ஒரே நேரத்தையே காட்டிக் கொண்டு நின்றதென இப்பத்திரிகையிற் சில வாரங்கட்கு முன்னர் வெளியிட்டிருந்தோம். யாழ்ப்பாண சுகாதார சங்கத்தார் இது ஓடாமல் நிற்பதைக் கண்டுபோலும் கத்தோலிக்க குருவர்க்கத்திற் சேர்ந்த ஒருவரைக்கொண்டு இதனைத் திருத்துவித்துப் பழையபடி ஓடச்செய்திருக்கின்றனர். பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் இடையிடையே ஏறி இதனைப் பழுதுபார்க்காவிட்டால் இன்னும் பல வருடங்கட்கு இது ஓடுமென்றும், இதற்கு மின்சார வெளிச்சமிட்டாற் பகலிலன்றி இரவிலும் பார்த்தல் முடியுமென்றும் இதனைத் திருத்தியவர் சொல்லியிருக்கின்றாராம். இக் கோபுரம் ஏழாம் எட்வேட் அரசர் 1875ம் ஆண்டு இளவரசராக இலங்கைக்கு விஜயஞ்செய்தபோது ஞாபகசின்னமாகக் கட்டப்பட்டது. அப்பொழுது மணிக்கூடு வைக்கும் நோக்கமாகக் கட்டப்பட வில்லை. பின்னர் இலங்கைத் தேசாதிபதியாக விருந்த ஸேர் ஜேம்ஸ்லாங்டன் தமது உபயமாகவே இம் மணிக்கூட்டை வாங்கி உபகரித்தனர்.

* * *

கொழும்பிலே "சிற்றிஸன்" (The Citizen) என்னும் பெயர்பூண்ட ஒரு ஆங்கிலபாஷைப் பத்திரிகை நடைபெற்றுவருகின்றது. இப்பத்திரிகையுந் தமிழ ரெனப்படுவாராலேயே நடத்தப்பட்டுவருகிறது. இது சில நாட்களாக நமது ஆங்கில இந்து சாதனத்தையும் அதன் ஆசிரியராகிய ஸ்ரீமத் அ. சபாபதியவர்களையுங் குறைகூறுவதையே தனக்குப் பொழுது போக்காகக் கொண்டிருக்கின்றது. "செழும் பொழில்வாய் வேம்பன்றோ காக்கைவிரும்புங் கனி" என்ற பிரகாரம் ஒருவரைக் காரணமின்றிக் குறைகூறி, தானே தன்னை மெச்சிக்கொள்வதே இப்பத்திரிகைக்குப் பேரானந்தமாயிருக்கின்றது. இது குறை கூறுவதென்றால் ஓர் விஷயத்தையெடுத்து "இவ் விஷயத்தில் இன்னார் சொன்னவை இன்னின்ன காரணத்தினாற் பிழையாகும்" என்று இவ்வாறும் குறைகூற இதற்குத் தெரியாது. பின்னர் எவ்வாறென்றால், ஒருவரைப்பார்த்து கோழி, நாய், வாத்து என்று சந்தையிற் பெண்கள்போற் குறை கூறவே இதற்குத் தெரியும். இதன் செயலுக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனிடத்தில் யாம் அனுதாபமுறுவதன்றி இதனைக் கோபிக்கவொண்ணாது. காரண மென்னையெனில், பானையிலுள்ளதே அகப்பையில் வருமென்பது பழமொழியாகும். இப்பத்திரிகைக்கும் தர்க்கத்துக்கும் வெகுதூரமாகும். புண்ணில் வீழும் ஈயைப்போல, நல்லன விடுத்துத் தீயனவில் வீழ்தலே இதன் இயல்பு, சேற்றிற் கல்லெறியாதே என்னும் முதுமொழிபற்றி, ஸ்ரீமாந் சபாபதியவர்கள் போன்ற பெரியார், தன்னை (இப்பத்திரிகையைப்) பொருட்படுத்தித் தனக்குப் பதில் பகரார், பதில் கூறினும் தன்னை நிந்திக்கமாட்டாரென்பது இப்பத்திரிகைக்கு நன்கு தெரியும். சிற்றிசன் பத்திரிகை ஆசிரியர் "இவர் ஒருமுறை இலங்கைச் சட்டநிருபணசபை அங்கத்தவராக (அதிஷ்டங்காரணமாக) நியமனஞ் செய்யப்பட்டார்" என்கிறார். இவர்கூறுவதை உற்றுநோக்குமிடத்து, அதிஷ்டங்காரணமாக நியமனஞ்செய்யப்பட்டமையினாலேயே இவர் சட்ட நிருபணசபை அங்கத்தவராய் வந்தார். சனங்கள் தெரிவு செய்வதாயிருந்தால் ஸ்ரீமாந் சபாபதியவர்கள் ஒருபோதுங் சட்டநிருபணசபை அங்கத்தவராக வந்திருக்கமாட்டார் என்னுங் கருத்து நன்கு தொனிக்கின்றது. இதற்காகவே யாம் மேலே இப்பத்திரிகாசிரியருக்கும், தர்க்கத்துக்கும் வெகுதூரமென்றேம். சபாபதியவர்கள் சட்டநிருபணசபை அங்கத்தவராக நியமனம் பெற்ற காலத்தில், ஊரவர்கள் சனப்பிரதிநிதிகளைத் தெரிந்து சட்ட நிருபணசபைக்கு அனுப்புதலாகிய ஒழுங்கு ஏற்படவில்லையென்பதை இவர் அறியார் போலும். சபாபதியவர்கள் அதிஷ்டத்தினால் சட்ட நிரூபணசபை அங்கத்தவராய் நியமனம் பெறுதல் கூடுமேயன்றி, சனங்களினாலே தெரிவுசெய்யப்பெற்ற பிரதிநிதியாய் வருதல் முடியாதென இவர் கூறுவதற்கு இவருக்குக் காலம் போதாது. எல்லாமறிந்த சிற்றிசன் பத்திரிகாசிரியர் நியமனத்தினாலேனும், தெரிவுசெய்யப் பெற்றேனும் இலங்கைச் சட்டநிரூபணசபை அங்கத்தவராகத் தாம் வருதற்கான அதிஷ்டமுடையவரோ வென்பதை யாம்அறிய எதிர்பார்த்திருக்கிறோம். பஞ்சகாலத்திலே ஆங்கில இந்துசாதனப் பத்திரிகாசிரியர் தானியத்தின் விலையை ஏற்றக்கூடிய வழியைத் தேடினாரன்றி வேறென்ன செய்தாரென்னுங் கருத்தமைய இந்த நவீன பத்திரிகாசிரியர் கூறுகின்றார். பஞ்சகாலத்திலே ஸ்ரீமாந் சபாபதியவர்கள் தமது பத்திரிகை வாயிலாக, ஏழைச்சனங்கள் பசியாற்படுங் கஷ்டங்களை யெடுத்து அரசினருக்கு விளக்கியதும், வடமாகாணத்துள்ள அதிகாரிகளுடன் வாதாடியதும், சட்ட நிரூபண சபையில் அரிசி, நெற் கட்டுப்பாட்டைக் குறித்துப் பலபேசியதும், தமது விருத்தாப்பிய தசையையும், சிரமத்தையும் அரிய நேரத்தையும் பொருட்படுத்தாது இந்திய பிரதிகாவலரை இவ்விஷயமாகக் காணும்படி தெல்ஹி நகருக்குச் சென்றமையுமாகிய விஷயங்களை வடமாகாணத்தவரே நன்கறிவர். இனி, நவீனபத்திராசிரியர், ஸ்ரீ சபாபதியவர்கள் ஊருக்காக என்ன நன்மை செய்தாரென்னுங் கருத்தமையக் கூறுகின்றார். அந்தோ! இந்த நவீன பத்திரிகாசிரியருடைய அறியாமை யிருந்தபடியென்னை? சபாபதியவர்கள் யாழ்ப்பாணச் சங்கத்துக் காரியதரிசியாக இருத்தலை மாத்திரம் இவர் அறிவர்போலும். வடமாகாணத்துள்ளார்க்கு நன்மை பயக்கும் வித்தியாஸ்தாபனங்களுட் சிறந்ததாகிய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி விஷயமாகப் பெரிதும் உழைப்பவர்களுள் இவர் ஒருவரென்பதையும், நேற்று முளைத்த பத்திரிகையாகாது ஙஙவருடகாலமாக இடையீடின்றியும் முட்டின்றியும் நடைபெற்று வரும் ஆங்கில இந்துசாதனத்திற்கு கௌரவ (வேதனம் பெறாத) பத்திரிகாசிரியராகக் கடமைபார்த்து வருகின்றாரென்பதையும், இன்னும் வடமாகாண சன சமூகத்திற்கு நன்மை பயக்கும் ஸ்தாபனங்களெவற்றினும் பேரபிமானத்துடன் உழைத்து வருகின்றாரென்பதையும் சிற்றிசன் பத்திராசிரியர் உணர்வாராக.

* * *

யாழ்ப்பாணத்திலுள்ள சில அந்தண சிகாமணிகள் சூத்திரர்கட்கு அந்தியேஷ்டி செய்கின்றார்களெனவும், மாமிசபோசனிகளாகிய அசற்சூத்திரர்கட்கு ககூ-ம் நாள் உக-ம் நாட்களில் மரணாசௌசம் ஜனனாசௌசங்களை நீக்கிவிடுகின்றார்களெனவும், கிறிஸ்தசமயியாயிருந்த ஆடவன் சைவ சமயக் கன்னிகையையும் கிறிஸ்த சமயக் கன்னிகை சைவசமய ஆடவனையும் மணஞ் செய்ய வேண்டிச் சைவசமயத்திற் பிரவேசிக்கும்போது இவர்கட்கு எவ்வாறான பிராயச்சித்தமுமின்றி வைதிகவிதிப்படி சடங்கை நிறைவேற்றிவிடுகின்றார்க ளெனவும் இங்குள்ள சில பிராமணர்களைக் கண்டித்து ஒருவர் கடிதமெழுதி இப்பத்திரிகையில் வெளியிடும்படி அனுப்பியிருக்கின்றார். அதிக கல்வியறிவு இல்லாமையினாலும், இயல்பாயுள்ளதிலும் பார்க்க மிகுந்த பொருளாசையினாலும் சில பிராமணர் இங்ஙனஞ் செய்தல் உண்மையாயினும் கடிதர் பொதுப்படுத்தி அந்தணரனைவரையுங் குறை கூறுதல் முறையன்றாதலால் அக்கடிதத்தை வெளியிடாது விடுத்தோம். அந்நிய சமயத்துட் பிரவேசித்தவர்கள் மீண்டு சைவசமயத்தை அநுஷ்டிக்க விரும்பும்போது அவர்களைப் பிராயச்சித்தமின்றி ஏற்றுக்கொள்ளுதல் தோஷமாகும் சிலமாதங்கட்கு முன் மலையாளத்திலுள்ள மாப்பிள்ளைமார் என்னும் இஸ்லாமதத்தவர் கலகம் செய்து இந்துக்களுட் சிலரைப் பலவந்தமாகத் தம்மதத்துட் சேர்த்தனர். அவ் இந்துக்கள் இப்பொழுது விடுதலையடைந்து விட்டனர். ஆனால் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மதத்துட் பிரவேசித்தற்கு முன் பெரும் பிராயச்சித்தம் செய்தல் வேண்டுமென அறிவுடையோர் விதித்தபடி செய்து அங்ஙனமே சேருகின்றார்கள். அதனை இங்குள்ள பிராமணரும் ஏனையோருஞ் சிந்திப்பார்களாக. ஆடு, கோழிகளைப் பலியிடுங் கோயில்களில் நிந்திய நைமித்திகம் நடத்தும் பிராமணரையும் நமது கடிதர் மேற்சொன்ன பிராமணர் நிரையிற் சேர்த்து கொள்வராக.

* * *

உலகம் பலவிதம்: 1924 செப்டெம்பர் 21

ஒரு நீதிபதி ஒருவனைக் குற்றவாளியெனக் கண்டு சிலமாதங்கட்குச் சிறை விதித்தபின் சிறிதுநேரஞ் செல்ல அவன் நிரபராதியென்பதை யுணர்ந்தார். அவர் காலதாமசமின்றி உடனே அக்குற்றவாளி பக்கத்து நியாயதுரந்தரரை யடைந்து, அத்தீர்வைக்கு "அப்பீல்" கேட்கும்படி சொன்னார். நியாயதுரந்தரர் அதனை அவனது மனையாளிடந் தெரிவித்தபோது, அவள் "தன் குழந்தைகளுக்குந் தனக்கும் உணவுக்கே வழியின்றி முட்டுப்படுகின்றே" னென்று தன் வறுமை யை யெடுத்துச் சொன்னாள். அவள் கூறியதை நியாயதுரந்தரர் நீதிபதிக்குச் சொன்னார். நீதிபதியின் மனம் சிறிதும் ஆறுதலடையவில்லை. அவர் சிறிதுநேரம் யோசித்தபின், குற்றவாளியின் மனையாளை யழைத்து அவள் கையில் நூறு ரூபாவைக் கொடுத்து, "உன் புருஷன் சிறைச் சாலையால் வரும்வரைக்கும், உன் குழந்தைகளுக்கும் உனக்கும் உணவின்பொட்டு இந்தப் பணத்தைச் செலவுசெய்" எனறு சொல்லினர். இப்படிச் செய்தபின்பே இவரது மனம் சமாதானமடைந்தது. இவர் இப்பொழுது இலங்கையிலே இதிலும் விசேஷமான உத்தியோகத்தை வகித்திருக்கின்றார். இப்படிப்பட்ட பெருந்தகையினர் இவ்விலங்கையில் இலைமறைகாய்போல் இப்பொழுதுமிருக்கின்றார்கள்.

* * *

இன்னொரு நீதிபதி சென்றவாரம் கொழும்பில் ஒரு குடிகாரனை விசாரணை செய்தபோது, "நீ குடித்து வெறிகொண்டு அடாதன செய்தமையால் நீ குற்றவாளி யல்லவா?" என்று கேட்டார். குடிகாரன் "நான் குடித்தது மெய்தான், ஆனால் நான் வெறிகொள்ளவுமில்லை; அடாத செய்யவுமில்லை; குடித்ததற்காக நான் குற்ற வாளிதான்" என்றான். நீதிபதி "மதுபானஞ் செய்தல் குற்றமாகாது; நானும் ஒவ்வொருநாளும் மதுபானஞ் செய்து வருகின்றேன்; வெறிகொண்டு அடாதன செய்தலே குற்ற" மென்றார். நீதிபதி தாம் நாள்தோறும் மதுபானஞ் செய்தலை நீதி ஸ்தலத்திற் பலர் சமூகத்திற் கூறியமை, தம்மைப் பின்பற்றி ஏனையோரும் மதுபானம் செய்யலாமென்னுங் கருத்துப்பற்றியோ வேறு கருத்துப்பற்றியோ வென்பதை யாமறியேம். இவர் இப்படியும் அவர் அப்படியு மிருத்தலினால் .

* * *

"சிற்றிஸன்" (The Citizen) பத்திரிகாசிரியர், ஆங்கில இந்துசாதனப் பத்திரகாசிரியரைத் தாம் வரைவின்றிக் கண்டிக்கவும் அவர் பதில் கூறாது மௌனஞ் சாதிக்கின்றாரெனத் தம்மைப் புகழுகின்றார். ஆங்கில இந்து சாதனப் பத்திரிகாசிரியர் இவ்வுளறுபடைகட்கெல்லாம் மௌனஞ் சாதித்தல், "பேதையரைக் கண்டாற் பெரியோர் வழிவிலகி, நீதியொடு போதல் நெறியன்றோ - காதுமத, மாகரத்த யானை வழிவிலகல் புன்மலந்தின், சூகரத்திற் கஞ்சியோ சொல்". என்ற பிரகாரம் மரியாதைக்குடன்பட்டே யன்றி அவருக்கு அஞ்சியன்று, மேலும் தர்க்கநீதி கடந்து பேசுவா ரெழுதுவாருடன் நியாயம் பேசுதலும் எழுதுதலும் அசாத்தியமாகும். ஸ்ரீமாந் சபாபதியவர்கள் அதிஷ்டத்தினாற்றான் சட்டநிரூபண சபை அங்கத்தவராக நியமனம் பெற்றாரோ, இன்றேல் தகைமைபற்றி நியமனஞ் செய்யப்பட்டாரோ என்னுஞ் சந்தேகத்தைச் சிற்றிஸன் பத்திராதிபர் தாம் தெளிந்துகொள்ள வேண்டுமானால், ஒரு காரியஞ் செய்தல் வேண்டும். அவர் சட்ட நிரூபண சபை அங்கத்தவராகக் கடமை பார்த்து மீண்ட காலத்தில், கொழும்பிற் பிரசுரமாகும் "மார்னிங் லீடர்" (Morning Leader) "டெயிலி நியூஸ்" (Daily News) முதலிய பத்திரிகைகள் அவருடைய திறமையைக் குறித்து எவ்வாறு கூறியுள்ளன வென்பதைச் சித்த சமாதானத்துடன் படித்தல் வேண்டும். அவரது திறமைகளை உள்ளபடி யறிதற்கு "சிற்றிஸன்" பத்திரிகைக்கு வயசு போதாது. இனி சிற்றிசன் பத்திராசிரியர் இன்னுமொரு விநோதங் கூறுகின்றார். அஃதென்னை யெனில் வடமாகாணத்திலுள்ள தமிழர் சங்கத்திலும் பார்க்க, கொழும்புத் தமிழர் சங்கம் விசேடமானதாம். ஏனென்றால் கொழும்புத்தமிழர் சங்கத்தில், வடமாகாணத்திலிருந்து கொழும் பிற்குக் கருமார்த்தமாகச் சென்ற பலர் இருக்கின் றார்களாம். தமிழரின் செநநஸ்தானமாகவும் வாசஸ்தானமாகவுமுள்ள வடமாகாணத்துச் சங்கம் பிரதிநிதித்துவத்திற் குறைந்ததென்றும், கருமார்த்தமாக வடமாகாணத்திலிருந்து சென்ற சில தமிழர்களைத் தன்னகத்துக் கொண்ட கொழும்புத் தமிழர் சங்கம் கூடியதாயிருக்கின்ற தென்றுங் கூறுதல் கிணற்று நீரிலும் குடத்து நீர் அதிகமென்று சொல்லுவதுபோல அசம்பாவிதமாகும். இது பற்றியே "சிற்றிசன்" பத்திராசிரி யருக்கும் தர்க்கத்துக்கும் வெகுதூரமென்று முன்னர் கூறினேம். இனி கொழும்புச் செட்டிகளைக் கொண்டிருத்தலினாலும் கொழும்புத் தமிழர் சங்கம் விசேஷமானதென்கின்றார். கொழும்புச் செட்டிகள் தமிழர்களோ வென்பது இன்னமுஞ் சந்தேகத்திற் கிடமாகும். சிற்றிசன் பத்திராசிரியரைக் கேட்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணப்பமொன்றுள்ளது. அது யாதெனில், வடமாகாணத் தமிழர்களின் விவகாரங்களை அவர்களே பார்த்துக் கொள்ளக்கூடிய தக்கஅறிவும் அனுபவமும் திறமையுமிருந்தால் அவர்களே பார்த்துக்கொள்ளட்டும். இவர் "வெள்ளாடு நனைகின்றதென வேங்கைப்புலி விம்மிவிம்மியழுத பிரகாரம்" வடமாகாணத்தார் பொருட்டுப் புலம்பவேண்டாம்; கொழும்புத் தமிழரின் கருமங்களை இயலுமானால் பத்திராசிரியர் பார்க்கட்டும்.

* * *

உலகம் பலவிதம்: *1924* ஒக்டோபர் *9*

சட்ட நிரூபண சபைப் பிரதிநிகளைத் தெரிதல் முடிந்துவிட்டது. இன்னுஞ் சிலநாளுள் அச்சம்பவம் பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போய்விடும். ஆனால் அச்சமையத்திற் சில வாக்காளர் செய்த அறியாமையான செயல்கள் நினைக்கும்போதெல்லாம் விடா நகைப்பை விளைக்கத்தக்கன. முதன் முறையானமையாற்போலும் சம்மதஞ் சொல்வோருள் அநேகருக்கு அச்சமையத்திற் செய்வதென்னவென்பது புலப்படவில்லை. அநேக வாக்காளர் தங்களுக்கு உதவப்பட்ட சுதந்திரம் எத்தன்மையானது, தாம் செய்யவேண்டிய கடமையென்ன என்பவற்றை உண்மையாக உணர்ந் தார்களல்லர். பிரதிநிதிகளாக முற்பட்டு நின்றோர் அநேகருக்கே தங்கள் கடமை தெரியாதபோது, சாமானிய வாக்காளர் தங்கள் கடன் என்ன என்பதை விளங்காதிருந்தமை நூதனமல்ல, வாக்காளருள் அநேகர் ஆங்கிலமறியார். சென்று செய்வதின்னதென அறியார். சட்டைக்காரரை, வெள்ளைக்காரரைக் கண்டால் வெருட்சியுறுவார். சம்மதஞ் சொல்லும் ஸ்தானத்திலே தலைமை வகித்திருந்த உத்தியோகத்தருட் சிலர் அயிரோப்பியாராகவும் சிலர் பறங்கியராகவும், சிலர் சிங்களராகவு மிருந்தமையினால் சம்மதஞ் சொல்லச்சென்ற யாழ்ப்பாணத்து வாக்காளருடன் தமிழ் பேசுதல் முடியாதிருந்தது. தெரிவுசெய்தற்றினத்தன்று வடமாகாண மத்தியபிரிவிற்குரிய ஒரு ஸ்தாபனத்திற் காரியதரிசியாகவிருந்த உத்தியோகத்தர் தமிழ் நன்கு பேச அறியாத பறங்கியர் வகுப்பைச் சார்ந்தவர். அங்குச் சம்மதஞ் சொல்லச் சென்ற சனங்களுள் அநேகர் ஆங்கிலஞ் சிறிதுமறியாத தமிழர். சம்மதங் குறித்தற்கான "பலற்" பத்திரத்தைக்குறித்த பறங்கி உத்தியோகத்தர் வாக்காளர் கையிற் கொடுத்து, "இது றாசறத்தினம் தொறை, இது றாமனான் தொறை, பிரியந்தொறை நீ போடு" என்று தமிழ்ப்பாஷை பேச இவர்கள் அதை விளங்காது வாங்கிக்கொண்டு சம்மதம் இடப்படும் கூடத்துள் ஒவ்வொருவராகச் செல்வார்கள். சென்றவருட் சிலர் கூடத்துள் ஒருவரையுங் காணவில்லையென்று மீள்வர். சிலர் அங்கே மைக்கூடு பேனை இல்லையென்று திரும்புவர். சிலர் கூடத்துள் வைக்கப்பட்டிருந்த ஒற்றுத்தாளிற் கீறிவிட்டு பலற்துண்டை வெளியே கொண்டுவந்து பெட்டியுட் போடுவர். வேறு சிலர் தங்கள் நாமதேயத்தை "பலற்" துண்டின் மற்றப்பக்கத்தில் எழுதிக்கொண்டு வந்து போடுவர். இன்னுஞ் சிலர் தாம் எவர் பொருட்டுச் சம்மதஞ் சொல்ல விரும்பினாரோ அவருடைய பெயரை "பலற்" துண்டின் மறுபுறத்தில் வரைந்துவிடுவர். மற்றுஞ்சிலர் "பலற்" துண்டை அடையாளஞ் செய்துவிட்டுக் கூடத்துக்கப்பால் எறிந்துவிட்டு வருவர். ஒழிந்த சிலர் கூடத்துட் சென்று அங்கு ஒருவருங் காணப்படாமையால் யாரும் வரும்வரைக்கும் அங்கேதானே உட்கார்ந்து விடுவர். சிற்சிலர் கூடத்துட் சென்று அப்பாற்செல்ல மார்க்க மில்லையேயென்று சொல்லிக்கொண்டு பலற் துண்டோடு மீள்வர். சிலர் அடையாளமிடுதற்குப் பதிலாகத் தாம் விரும்பிய பிரதிநிதியின் பெயரைக் குறித்துவிடுவர். சிலர் பிரதிநிதிகளாக முற்பட்டுநின்றோர் எவருடைய வேண்டு கோளையும் மறுக்கச் சித்தமில்லாதவராய் எல்லாப் பிரதிநிதிகளின் நாமங்கட்கும் அடையாளமிட்டு மீள்வர். சிலர் எவர்க்குஞ் சம்மதஞ் சொல்ல இஷ்டமில்லாராய் "பலற்" பத்திரத்தில் ஒரு அடையாளமுஞ் செய்யாது பெட்டியுட் போட்டு வருவர். குறித்த தினத்தில் இவ்விஷயமாக நடந்த அற்புதங்கள் இன்னும் பல. அவற்றை யெல்லாம் இங்கே சொல்லப்புகின் மிக விரியும்.

* * *

உலகத்திலே இருந்தும் பயன்படாத பொருள் சிலவுண்டு. வண்ணார்பண்ணைத் தபாற்கந்தோரும் இப்பொழுது இருந்தும் பயன்படாத பொருள்களுள் ஒன்றாய் விட்டது. இக்கந்தோர் பலவித்தியாசாலைகளுக்கும் அச்சியந்திர சாலைகளுக்கும் பத்திரிகைக்காரியஸ்தலங்களுக்கும் பெரிய கடைக்கும் வியாபார ஸ்தானங்களுக்கும் மத்தியிலிருந்து பலவருடங்களாக இங்குள்ளார்க்குப் பெரிதும் பயன்பட்டு வந்தது. இவ்வண்ணார் பண்ணையிலும் அயற் கிராமங்களிலு முள்ளோர் இத்தபாற்கந்தோர் வாயிலாகத் தங்கள் கருமத்தை வசதியாகப் பார்த்துவந்தனர். இதனாலே இக்கந்தோரில் வேலையதிகப்பட உத்தியோகத்தரும் இரண்டொருவர் மேலதிகமாகத் தேவையாகவிருந்தனர். அப்படி மேலதிகமான கிளார்க்குமாரை வைத்தற்குப் பதிலாகத் தபாற்பகுதித் தலைமை உத்தியோகஸ்தராகிய மிஸ்டர் சிரேஷ்டா, வண்ணார்பண்ணைத் தபாற்கந்தோரில் இருந்த கிளார்க்குமாருள்ளும் இரண்டொருவரைக் குறைத்து இக்கந்தோரில் பார்சல் முதலியன எடுத்துக் கொள்ள முடியாமற் செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனங்களுக்குப் பெரும் வசதியீனம் விளைக்கலாயினர். இவ்வசதியீனத்தையிட்டு இங்குள்ள பத்திரிகைகள் முறையிட்டன. ஊரவர்கள் மிஸ்ரர் சிரேஷ்டாவுக்கு மனுப்பண்ணினர். "ஓட்டக்கூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்ற பிரகாரம் தபாற்பகுதித் தலைமை உத்தியோகஸ்தர் இக்குறைகளையும் வசதியீனங்களையும் நிவிர்த்தி செய்தற்குப் பதிலாக, இக்கந்தோர் வாயிலாக "இந்துசாதனம்" முதலிய புதினப் பத்திரிகைகளும் அனுப்பட வொண்ணாது; அவையெல்லாம் யாழ்ப்பாணப் பெரிய கந்தோர் வாயிலாக அனுப்பப்படல் வேண்டுமெனப் பிரமாணமுஞ் செய்துவிட்டனர். இக்கந்தோரிற் போதிய உத்தியோகஸ்தர்களில்லாமையினாலே முத்திரை போஸ்ட்காட் என்னுமிவற்றை வாங்கச் செல்பவர்களும் மணித்தியாலக்கணக்காக காத்துக்கொண்டு நிற்கவேண்டி ஏற்பட்டுவிட்டது. இதற்கிடையில் இக்கந்தோரைச் சோனகத் தெருவிற்கு அகற்றவும் யோசிக்கின்றார்களாம். மிஸ்ரர் சிரேஷ்டா இந்த வண்ணார்பண்ணைக் கந்தோருக்குத்தான் இப்படி விதித்திருக்கின்றாரோ வென்றால், இல்லை! இல்லை!! அவர் தம்முடைய பரிபாலன காலத்தில் தம்மால் இயன்றவரையில் வசதியீனங்கள் செய்து வருகிறார்போற் தோன்றுகின்றது. யாழ்ப்பாணக் கச்சேரிக்கணித்தாகவுள்ள தபாற்கந்தோரிலிருந்த உதவி உத்தியோகஸ்தரை அங்கில்லாது செய்து ஒருவரையே வேலை பார்க்கும்படி ஒரு புண்ணியவான் செய்திருக்கின்றார். அந்தக் கந்தோரில் இருக்கும் மனுஷன் தனியே வேலை பார்த்துவிட்டு போசனஞ் செய்யப்போகும் போது கந்தோரைப் பூட்டிக்கொண்டு போவது வழக்கம். ஊரவர்கள் பல சௌரியங்களையும் பெற்றுவரும் இக் காலத்திலே, பெறவேண்டிய இக்காலத்திலே இந்தவிதமான இடைஞ்சல்களை அதிகாரிகள் ஊரவர்கட்குட் செய்துவருதற்கான காரணம் யாதெனத் தெரியவில்லை. இவ்விஷயங்களை இப்பகுதிக்குள்ள சனப்பிரதிநிதி சிந்தித்து சட்டநிரூபண சபையில் எடுத்துப்பேசி, இங்குள்ளார்க்கு நேர்ந்த வசதியீனத்தையும் அதிகாரிகளின் அலட்சியத்தையும் அகற்றி வைக்க முயல்வாரெனக் காத்திருக்கின்றோம்.

* * *

உலகம் பலவிதம்: 1924 ஒக்டோபர் 16

நமது நாட்டிலே பரோபகாரமான பொதுக் கருமங்களுக்கும் தத்தம் சொந்தக் கருமங்கட்கு மிடையேயுள்ள பேதந் தெரியாது இடர்ப்படுவார் பலராயிருக்கின்றார்கள். அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் முதலிய தீய குணங்களின்றுச் சிறிதேனும் சுயநலங் கருதாது தமக்கு எவ்வகை இடர் வந்தவிடத்தும் தளராது "அன்புளார் என்பு முரியர் பிறர்க்கு" என்றபடி தமது சமயம், சாதி, தேசம், பாஷை என்னு மிவற்றிலே பேரபிமானம்பூண்டு செய்வதே பொதுசன சேவையாகும். பொதுக்கருமத்தில் அந்தரங்க பகை சிநேகம் உறவு முகமன் என்னுமிவைகளை அறவே யொழித்துவிடல் வேண்டும். மித்திரபேதம் முதலிய தந்திரங்களை அனுசரிக்க வொண்ணாது. சாமபேத தான தண்டம் என்னும் நால்வகை உபாயங்களும் யுத்தகாலங்களில் அரசினரால் உபயோகிக்கப்பட்டு வந்தனவேயொழிய, அபிமானிகளாற் பொது நன்மை செய்யும் விஷயத்தில் அனுசரிக்கப்பட்டனவல்ல. பாரத நாட்டிலுள்ள சனத்தலைவரிடத்து ஊரவர்கள் பெரும் மதிப்புப் பாராட்டுவதற்கு காரணம் யாதெனில் அச்சனத்தலைவரிடத்து விளங்கும் தூய சிந்தையும் தேசபிமானமும் அனைவரிடத்தும் அனுதாபமுமேயாம். பொதுக்கருமங்களைச் செய்யப் புகும்போது பல இடையூறுகளும் கஷ்டங்களும் அபிப்பிராய பேதங்களும் நிகழ்வது சகசம். உண்மையான அபிமானிகள் அவற்றையிட்டு அதைரியமடையவொண்ணாது; சினங்கொள்ள வொண்ணாது; பிறரைத் தூஷிக்க வொண்ணாது. (மெய்வருத் தம்பாரார், பசிநோக்கார், கண் துஞ்சார், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி, அருமையும் பாரார் அவமதிப்புங்கொள்ளார், கருமமே கண்ணாயினார்.) என்றபடி பரோபகார சிந்தையோடு தாம் எடுத்துக்கொண்ட பொதுக் கருமத்தை இனிது நிறைவேற்றுதல் வேண்டும்.

* * *

ஞாயிறு எழும் திசையில் வெள்ளி எழுந்தது. கமக்காரனுடைய வீட்டு முற்றத்தில் வானளவோங்கி வளர்ந்துள்ள ஆலமரத்தின் கொம்பர்களிலுள்ள சேவல்கள் சிறகுகளை அடித்தடித்துக் கூவிக்கொண்டிருந்தன. சூரியோதயகாலஞ் சமீபித்தவுடன் அங்குள்ள கரிக்குருவி நத்து கிளி நாகணவாய் முதலான பட்சிசாலங்களும் ஒன்றின்பின்னொன்றாய்ச் சத்தமிடத் தொடங்கின. இருள் முழுவதும் நீங்கிய தருணத்திலே அங்குள்ள காக்கைகள் கா கா எனக் கத்தின. தந்திரமுள்ளதும் கரிய தேகமும் கள்ள மனமுமுள்ளதுமாகிய ஒரு காக்கை ஏனைய பட்சிகளைப் பார்த்து "நீங்கள் இரண்டுமணி நேரமாகக் கடைவாய் கிழியக் கத்தியதினாற் பிரயோசனம் என்ன? ஏன் வீணாய் வெறுவாய் சப்புகிறீர்கள்? நானும் என்னினத்தவர்களும் இரண்டுமுறை காகா என்றவுடன் திடீரென விடிந்தது. சூரியோதயமுமாயிற்று" எனப் பரிகாசஞ் செய்தது. இது, விடிய ஐந்து நாழிகைக்குமுன் கூவத் தொடங்கிய சேவல்களுக்குப் பெரும் ஆத்திரத்தை விளைத்து விட்டது. சேவல்கள் "நாங்கள் கூவியமையினாலே தான் விடிந்தது" என்றன. நத்து "நான் கத்தியபின்னரே விடிந்தது" என்றது. கரிக்குருவி "என்னால் விடிந்தது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றது; மற்றைக் குருவிகளும் அவ்விதமே கூறின. கலகமுண்டாகியது. பெருஞ் சமர் மூண்டது, ஒன்றை ஒன்று தாக்கியது. இரத்தப் பிரவாகம் உண்டாகியது.

* * *

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு கமக்கார னுடைய முன்வாசலின் மேலுள்ள சுவரிலிருந்த மணிக்கூடு "பென்டியூலமே கொஞ்சம் நில்" என்றது. பென்டியூலம் நின்றுவிட்டது. மணிக்கூடு பட்சிகள் மேல் கூறியவற்றையெல்லாம் கேட்டது; சினந்தது; சீறியது; தன்னை வெறுத்தது; நெட்டுயிர்த்தது; "நான் உலகத்திலுள்ள மனிதர் மிருகம் பறவை முதலானவற்றின் பெரும் நன்மைகருதி எவ்வளவோ படாதபாடெல்லாம் பட்டேனே. எனக்கு உண்ண நேரமில்லை; உறங்க நேரமில்லை. இங்கு வருபவர்களோடு பேசத் தானும் நேரமில்லையே; யாருக்காக நான் இவ்வளவு பாடுபட்டு உழைக்கிறேனென்பதை இந்த உலகம் ஏன் உணர்ந்துகொள்ளக்கூடாது? மேற்குத்திசையிற் போய் மறைந்த சூரியனைப் பின்னரும் கிழக்குத் திசையில் வந்து தோற்றச் செய்வதற்காக நேற்றுப் பொழுதுபட்ட நேரமுதலாய் இவ்வளவும் நான்பட்ட கஷ்டம் சொல்ல முடியாதே. இப்படியெல்லாம் நான் பாடுபட இரவு முழுவதும் பட்டகட்டை போலப்படுத்து நித்திரை செய்த இந்தக் காகங்களும், சேவல்களும் மற்றும் நன்றி கெட்ட பறவைகளும் தங்கள் தங்கள் பிரயாசத்தினால் விடிந்ததென்று பிதற்றுகிறார்களே, இவர்களுடைய நெஞ்சத் துணிவுதானென்னே? இந்தச் செய்நன்றி கொன்ற பாவிகளுக்கு நல்ல பாடம் படிப்பிக்கிறேன்" எனக்கூறி வேலைசெய்ய மறுத்து நின்றது.

மணிக்கூடு வேலை செய்யாமையினால் கமக்காரன் நேரமறிந்துகொள்ளக்கூடாதவனாய் ஏழுமணிவரைக்கும் படுக்கையிற் கிடந்தான். சூரியவெளிச்சம் சாளர வழியாக வீட்டினுட் புகுந்தவுடன் கமக்காரன் வெளியே சென்று மணிக்கூட்டைப் பார்த்தான். முதல்நாளே சாவி கொடுத்திருந்த மணிக்கூடு ஓடாமல் நின்று விட்டதைக் கண்டான். வெளியிலே நடைபெறுங் கலகத்தைப் பார்த்தான். பட்சிக்கூட்டங்கள் எல்லாம் அவன்முன் வந்து தங்கள் குறையை முறையிட்டன. மணிக்கூடுந் தனது ஆறாத் துயரத்தைப் பெரும் பாரதமாகக் கூறி, நன்றிகெட்ட பாதகர்கள் இருக்கும் இந்த ஊரை விட்டுப் பரதேசம் போகிறேனென விம்மி விம்மி அழுதழுது கூறியது. விவேகமுள்ள கமக்காரன் அவைகளைப் பார்த்து "இது ஒரு பிரமாதமான விஷயம். இதனைத் தீர்ப்பதற்கு ஒரு உபாயங் கூறுகிறேன் கேளுங்கள். நாளையத்தினம் விடியச் செய்யும்பொருட்டு உங்களுள் யாராவது கூவக் கூடாது. மணிக்கூடே நீயும் ஓடக்கூடாது. அப்பொழுது யாரால் விடிந்ததென்பது புலப்படும்" என்றான். அவைகள் அதற்கிசைந்தன. மறுநாள் உதயத்தில் கோழிகள் வழக்கப்படி எழுந்து கூவாதிருந்தன. மற்றும் பட்சிகளும் அப்படியே விழித்துச் சத்தமிடாதிருந்தன. மணிக்கூடும் அப்படியே நின்றுவிட்டது. ஒவ்வொன்றும் இன்றைக்கு விடியாதென நம்பியிருந்தன. மணி நாலாகி நாலரையாகி ஐந்தாகி ஐந்தரையாகி இருள் விடிந்தது. ஆதவன் தனது ஆயிரங் கிரணங்களுடன் உதயமாயினான். பட்சிகளின் அகங்காரம் அடங்கியது. கமக்காரன் பட்சிகளைப் பார்த்தான். பட்சிகள் நாணமுற்றுப் பறந்து மறைந்தன. கமக்காரன் "மணிக்கூடே உன்னுடைய முடிவென்ன" என்றான். "என்னால் விடிவதும் பொய்யே. நான் ஒன்று செய்கிறேனென்பதும் வீணே. அந்த அறைக்குளிருந்து இயங்கத்தான் தெரியும். அதுதான் என் கடமை. அதுவும் ஒருவர் இயக்கினாற்றான் நடைபெறும்" என்று கூறித் தன் கடமையை ஆரம்பித்தது.

* * *

இதுபோலவே உலகில் அறிவிலார் தமக்கு ஏற்படும் கருமங்களைச் செய்யும் பொழுது அக்கருமங்களை "நாமே நடத்தி முடித்தேம். நம்மிடத்திலேதான் அவற்றை நடத்தத்தக்க திறமையுண்டு. நாமில்லா விட்டால் யார்தானென் செய்வர்" என அகங்காரங்கொள்வர்; சிவனருளாலே யாதும் வருமெனத் தேறார்; அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்பதைச் சிந்தியார். அவந்தரு நினைவையெல்லாம் அகற்றிலர்; பவந்தனை ஈட்டி ஈட்டிப் பதைக்கின்றனர். ஒன்றும் நம்செயல் இல்லையென்றுணரார்; ஓர் மயலாலே சென்று சென்று வெம்பவக்கடல் வீழ்குவதோரார்; "உடையாய் உடையபடியன்றி யான் செய்ததொன்றில்லையே" என ஒரு போதுந் தேரார்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1926 ஆகஷ்ட் 05

குறிப்புரை கூறும்படி யெழுந்த நமது முருகேசு அவர்கள் அக்கூட்டத்தவர்களைப் பார்த்து "அபிமானிகளே, "யதார்த்தவாதி வெகு சன விரோதி" யென்று ஒரு பழமொழி யுண்டு; நான் இப்பொழுது பேசப்போகும் விஷயம் சில போது உங்கள் செவிகளுக்கு வெறுப்பைத் தருதலுங் கூடும்; ஆனால் மருந்து உண்ணும் போது கசப்பாயிருந்தாலும் பின்னர் ரோகத்தை நீக்குமல்லவா; மதுபானத்தை நமது நாட்டை விட்டோட்டுவதற்கு நாம் பட்டபாடு கொஞ்சமல்ல; இன்னமும் அதனாலுண்டான சிரமம் நீங்கவில்லை; இக்கள்ளு எங்கள் பணத்தைக் கொள்ளைகொண்டது; மரியாதையைக் கொள்ளை கொண்டது; ஆண்மையைக்கெடுத்துப் பெண்களின் கற்பைப் பங்கப்படுத்தியது; வியாச்சியத்தை விருத்தி செய்தது; கலகத்திற்குக் காரணமாய் நின்றது; ஐந்து பாவங்களுள் நான்கு பாவங்களுக்கும் நடுநாயகமாகநின்று அப்பாவங்களை வளர்த்து எங்களை நாசமாக்கியது; எங்கள் குடியைக் கெடுத்து மிடியையும் மடியையும் புகுத்திய கள்ளை அகற்றியபின் நாங்கள் எவ்வளவோ சமாதானத்தோடும் மனரம்மியத்தோடும் வாழ்கின்றேம். இன்னும் மது நாட்டைவிட்டு முற்றாகப்போகவில்லையென்பது உண்மை; ஆனாற் காலகதியிற் கள் போகாமல் முடியாது; நமது நாட்டைக் கெடுக்கவந்த அந்நியர் சொல்லுஞ் சொல்லை நம்பாதீர்கள்; நாம் கெட்டாலும் தாம் லாபமடைய வேண்டுமென்றே வேற்றூரார் இங்கே வந்து தங்கள் மதத்தைப் போதிக்கின்றார்கள்; மரமேறிகளுக்குப் பிழைப்பில்லை யென்றும் குத்தகைக்காரருக்கு முயற்சியில்லை யென்றும் சொல்வது தகாது; தமக்கு ...[சிதைவு] யென்று சொல்வது மாத்திரம் பொருந்தும்; மரமேறிகள் செய்தற்கு வேலையுண்டு கமத்தொழிலுண்டு; முதல் வைத்திருக்கும் குத்தகைகாரரும் வேறு வியாபாரம் செய்தலாகும்; மது வேட்கைக்காரருக்கு மாத்திரம் அதுவின்றி முடியாதாகும்; மதுக்கடைகள் அகற்றப்படுவதினால் நேரவிருக்கும் நன்மையை இன்னுஞ் சிலகாலத்துள் அனுபவிப்பீர்கள். ஆதலால் அன்பர்களே போன சனியைப் பின்னர் இழுத்துப் பிடியாதீர்கள்" என்று முருகேசு பேசிமுடித்தார். ஐயாத்தம்பியை யொழிந்த மற்றோரனைவரும் முருகேசுவை மெச்சிக் கரகோஷஞ் செய்தனர்.

* * *

களுத்துறைக்குச் சமீபமாக கலவானை என்னும் ஓர் கிராமமுளது. அங்கே வசிக்கும் பொடியா என்னும் ஒருவனுடைய வீட்டுக் கதவை ஆறன் பெற்றா என்னும் ஒருவன் உடைத்துத் திறந்து திருடினானென்று, குறித்த பொடியா, களுத்துறைப் பொலிஸ்கோட்டிலே வழக்குத் தொடர்ந்தான். வழக்காளி பக்கச் சாட்சியாகக் குறித்த வழக்காளியின் மனைவி அழகவல்லி வெளிப்பட்டாள். பொலிஸ் நீதிபதியாகிய மிஸ்ரர் எஸ் டண்டி யவர்கள் குறித்த வழக்கை விசாரணை செய்யத் தொடங்கினார். எதிரி நீதிபதியைப் பார்த்து "ஐயா, நான் இந்த வழக்கிற் குற்றவாளியல்லன்; குறித்த வழக்காளியின் மனைவி பேர் அழகவல்லி; வழக்காளியின் வீட்டுக்கு நான் இடையிடையே போவது வழக்கம்; அந்த அழகவல்லிக்கும் எனக்குமிடையில் அதிக ஐக்கியமுண்டு. ஏதோ காத்திராவண்ணம் நேர்ந்துவிட்டது. அந்த அழகவல்லி எனக்கு எழுதிய அன்பார்ந்த கடிதங்கள் நான்கு என்னிடம் இதோ இருக்கின்றன" என்று வாக்கு மூலம் கூறியபின் அவைகளை நீதிபதிக்குக் காட்டினான். கடிதங்கள் வாசிக்கப்பட்ட போது கோட்டிலுள்ளோர் "கெக்கெக்" கெனச் சத்தமிட்டுச் சிரித்து ஆர்ப்பரித்தார்கள். நீதிபதி வழக்காளியையும் அழகவல்லியையும் கோபித்து பார்த்தார்; இருவர் மீதும் அதிக சந்தேகம் கொண்டு தனித்தனி 150 ரூபா பிணையில் இருவரையும் விட்டபின், கையெழுத்துப் பரிசோதனை நிபுணருக்கு அவைகளைப் பரிசோதிக்கும்படி அனுப்பி வழக்கையும் தவணையிட்டார். வழக்கின் உண்மையை உணர்ந்தறிந்த விவேகமுள்ள நீதிபதி "பெண்களை நம்பாமற் சந்தோஷமாயிரு" எனக்குறிப்பிட்டாராம்.

* * *

ஞானசாஸ்திரங்கள் வழங்கப் பெறாத தேசங்களிலே மனிதர் இருந்தாலும் அவர்களுக்கு ஆறறிவிருக்கமாட்டாது. வயதில் முதிந்தோர் கூறும் வாக்கியங்களில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை; தாந்தாம் கண்ணிற் கண்டனவற்றையே மெய்யென நம்புவர். கண்ணிற்காணாதன எவ்வளவு தூரம் உண்மையாயினும் அவைகளை அவர்கள் சிறிதும் நம்பார்கள்; முழுவதும் பொய்யென்றே தீர்மானித்து விடுவர். இறந்தபின் நிகழும் விஷயங்கள் அல்லது இறக்குமுன் நிகழ்ந்த விஷயங்கள் ஏதும் இப்பொழுது அறியக்கூடாமலிருத்தலால், பிறக்க முன்னும் ஒன்றுமில்லை; இறந்த பின்னும் ஒன்றுமில்லை என்று சாதிப்பதே ஆறறிவில்லாதவர்களுடைய கொள்கை. இவர்கள் இந்த விஷயத்தைத் தங்கள் கண்களால் நேரிற் காணும் வரையும் ஒருபோதும் நம்பமாட்டார்கள். அந்த உண்மைகளை எடுத்துக் கூறுவோரையும் அறிவில்லாத வரெனக் கூறுவர்.

* * *

அறிவிற் குறைந்த இவர்கள் முற்செந்ம சரிதத்தைக் கூறும் ஒருவரைக் கண்டுவிட்டால், அல்லது அவர்சொல்வதைக் கேட்டுவிட்டால் அது அவர்களுக்கு ஒருபெரும் அற்புதமாம். இந்தவிஷயங்களிற் பூரண நம்பிக்கை யுடைய எங்களுக்கு இது ஓர் சாதாரண விஷயம். ஆயினும் அது மிகவும் அரிதாய் ஒருவர் இருவரிடத்திலே உண்டாதலினால் விசேடமுடையதேயாம். அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குண்டாகும் அற்புதம் தாம் காத்திராததொன்று வெளிவந்ததுபற்றியேயாம். எங்களுக் குண்டாகும் விசேடம் அரிதுபற்றியேயாம். வட இந்தியாவிலே அலகபாத்துக்குச் சமீபமாயுள்ள பேரிலி என்னுமிடத்தில் "வக்கீல்" உத்தியோகம் பார்க்கும் கெய்க்கே நந்தான் ஜகா என்னும் ஒருவருடைய இரண்டுவயதுச் சிறுவன் தன்னுடைய முற்செநந வரலாற்றைக் கூறுகின்றா னாம்; காசியிலே ஒரு பிரபலமான குடும்பத்தில் பாஜிபாண்டி என்னும் பேருடையவனாயிருந் தானாம். தான் முன்னிருந்த வீட்டின் அடையாள ங்களையும் வேறு குறிப்புக்களையும், அங்கிருந்த காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களையும் அவன் அதிக விபரமாகக் கூறுகின்றானாம். சிறுவன் கூறும் பூர்வ சரித்திரத்தைப்பற்றி, காசியிலே இப்பொழுது நகரசங்க அக்கிராசனராகவிருக்கும் முன்சீவ் மகாதேவ பிரசாத் அவர்களை விசாரிக்க, அவரும் அவன் கூறுவனவெல்லாம் உண்மையெனக் கூறுகின்றார். இதற்குமுன்னரும் இப்படியான சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன வென்பது வெளிப்படையாகும்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசமணி - துரைரத்தினம்

[உலகம் பலவிதம் 1926 ஆகஸட் 12இல் இருந்து உலகம் பலவிதம் 1927 ஜூலை 7 வரை கிடைக்கவில்லை. நேசமணி - துரைரத்தினம் தொடக்க அத்தியாயங்களும் கிடைக்கவில்லை]

உலகம் பலவிதம்: 1927 ஜூலை 14

"அம்மான், நீங்கள் காரியம் விளங்காமல் என்னைக் குறை சொல்லுகிறீர்கள்; நான் சொல்வதையுங் கேட்டுக்கொண்டு பின்பு என்மேற் குற்றமிருந்தாற் பேசுங்கள்; மனதாரக் காசு 100 பவுண் தருவதாக அவர்கள் சொல்லி எவ்வளவு காலமாய்விட்டது. அவர்கள் அதைத் தந்து தீர்க்கிற நோக்கமில்லை. உண்மையாக அவர்களிடத்திற் பணமில்லாவிட்டால் நாமும் இனியென்ன செய்வதென்று பேசாமல் விடலாம். பணம் வைத்துக்கொண்டு ஏன் அடாத்துப் பண்ணுகிறார்கள். என் மனைவி போகாமல் நின்றாலும் காரியமில்லை; தாய் தகப்பன் வீட்டிற்குப் போனபோது, இனிப் பணம் வாங்கியல்லாமல் இங்கே வரக்கூடாது" என்று துரைரத்தினம் மிக்க பிடிவாதத்தோடு சொன்னார். "தம்பி, ஒருபோதும் அந்தப் பிள்ளை நீர் போ என்று சொல்லாமற் போகமாட்டாள்; அவளுடைய குணம் எனக்குத் தெரியும்; அவள் சரசுவதி; உமக்கு அந்தப் பிள்ளையின் அருமை தெரியவில்லை; ; உலகத்திலே ஒவ்வொருத்தியைக் கட்டிக்கொண்டு உம்மோடொத்த ஆணாகப்பிறந்தவர்கள் படும்பாடு எனக்கல்லவா தெரியும்; நீர் பிறவூரிலிருப்பதால் உமக்கொன்றுந் தெரியாது; வீண்கதையை விட்டுவிட்டு இப்பொழுதே உம் பெண்டிரையும் பிள்ளைகளையும் போய்க் கூட்டிக்கொண்டு வாரும்; பெண்டிரைத்தான் அனுப்பி விட்டிருக்கின்றீர்; பிள்ளைகளையும் விட்டு இருக்க முடியுமா; பிள்ளைகள் உமக்குச்செய்த குற்றமென்ன; கடந்துளோர்களும் கடப்பரோ மக்கள் மேற் காதல் என்று நீர் படிக்கவில்லையா; தம்பீ, படித்தும் இந்தநாட் பிள்ளைகளுக்குப் புத்தியில்லையே; சரி, நீர் போய்க் கூட்டிக்கொண்டு வரவேண்டாம்; நான் இன்றைக்கு அங்கேபோய் எல்லாம் ஒழுங்கு பண்ணிக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டு முருகரம்மான் புறப்பட்டார். "அம்மான், என்னவோ எல்லாம் யோசித்துச் செய்யுங்கள்" என்று துரைரத்தினஞ் சொல்ல, "தம்பீ, நீங்கள்தான் நல்லாய் யோசித்துச் செய்யவேண்டும்; அப்படி யோசித்துச் செய்திருந்தால் இந்தவிதமான பிழைகள் ஒருபோதும் வரமாட்டாது" என்று சொல்லிக் கொண்டு முருகர் போயினர்.

* * *

முருகர் இந்தக் கருமத்திற் பிரவேசித்தமை யாதும் வியாபாரநோக்கமல்ல. இரு பகுதியாரும் முருகரை நன்கு அறிந்தவர்கள். இவர்களுடன் அவர் அதிகம் உறவு பாராட்டி வந்தார். முருகர் அடுத்தநாள் சரவணமுத்து வீட்டிற்குப் போனார். சரவணமுத்து அச்சமையத்தில் அங்கேயில்லை. வள்ளியம்மையும் மகள் நேசமணியுமே வீட்டிலிருந்தனர் முருகரைக் கண்டவுடன் இருவருஞ் சந்தோஷத்துடன் "அண்ணே, வா; அம்மான், வாருங்கள்" என்று முறையே சொல்லி உபசரித்தனர். "எங்கே, பிள்ளை, அப்பரைக் காணவில்லை" யென்று கேட்க, நேசமணி "ஐயா, உங்கே நின்றார், சமீபத்திற் போயிருப்பார், தூரப்போகவில்லை; இதோ வந்துவிடுவார்" என்று சொன்னாள். "சரி, தங்கச்சி, அது இருக்கட்டும்; இது என்ன சங்கதி, நான் நேற்றுத்தான் கேள்விப்பட்டேன்; இது உங்கள் சந்ததிக்குமில்லாத காரியம்; நீங்கள் இரண்டு பேரும் ஏதோ மனஸ்தாபப் பட்டுக்கொண்டீர்களாமே; அதனாலேதான் நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே வந்திருக்கிறாயாமே; ஏன் இப்படியெல்லாம்? நான் உங்களையிட்டு மிகவுஞ் சந்தோஷப்பட்டுக் கொண்டல்லவா இருந்தேன்" என்று முருகர் சொன்னார். "அம்மான், எனக்கொன்றுந் தெரியாது; எனக்கும் அவருக்கும் ஒரு மனஸ்தாபமுமில்லை; இவர்கள் சொன்னபடி சீதனத்தைக் கொடுக்கவில்லையென்ற நியாயத்தாலேதான் இந்தப்பிரிவு வந்தது. ஏதோ அவரவர் தங்கள் இஷ்டம்போலச் செய்துகொள்ளட்டும்; நான் நடப்பதைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்; "ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்" என்றாற் ...

[இப்பந்தியின் தொடர்ச்சியும் இதற்கு அடுத்த பந்தியும் சிதைந்துள்ளன]

* * *

அதுகேட்ட முருகர் "தம்பி, நீ சொல்வதெல்லாஞ் சரிதான்; ஆனாலும் ... பட்ட கருமங்களை யோசித்துச் ... வேண்டும்; உமது மருமகன் பிழையல்லவென்று நான் சொல்லவில்லை; அவரிடத்திலும் தவறுண்டு ஒன்றை யோசிக்கவேண்டும்; மருமகனும் இப்படி வாதாடிக்கொண்டு நின்றால் இதனாற் சங்கடப் படுபவர்கள் மகளும் பிள்ளைகளுந்தான் என்பதைச் சிந்திக்கவேண்டும்; உலகத்தில் எத்தனையோ பேர் இன்னும் மோசமான நிலையிலிருக்கிறார்கள்; மனசார அந்த ஆளுக்கு இடைஞ்சல் வருங்காலத்தில் ... துணைச் செய்யத்தான் வேண்டும்; ... ளெல்லாம் சரிப்பண்ணிக்கொண்டு இப்பொழுது என் சொல்லைத் தட்டாது உமது மகளையும் பிள்ளைகளையும் அனுப்பிவிடும்; இன்னும் இரண்டு தினத்துள் அவர் தமது உத்தியோகத்திற்கு மீண்டு போய்விடுவார்" என்று சொல்ல, சரவணமுத்து "ஒரு ... நானாக அனுப்ப மாட்டேன்; ... மென்றால், தன் பெண்டிர் பிள்ளைகளை அந்தாள் வந்து கூட்டிக்கொண்டு போகட்டும்" என்று பிடிவாதமாக நின்றார்; முருகர் நேசமணியைப் பார்த்து "... உன் புருஷன் வீட்டுக்கு நீயாகப் ... ஒரு குறையும் வராது, ... வண்டியைக் கட்டுவித்துக்கொண்டு பிள்ளைகளுடன் நீ புறப்படு" எனலும், நேசமணி தாயையும் தகப்பனையும் பார்க்க "உன் பிரியம் போலச் செய்" என்றார் தகப்பன். "அம்மான், நாளைக்கு நான் போகிறேன்" என்று அவள்சொல்ல "அப்படியே செய், நான் ... அங்கே வருவேன்" என்று சொல்லிச் சிறிது நேரம் வேறு விஷயங்களைப்பற்றிப் பேசிவிட்டு எல்லாருக்குஞ் சொல்லிக்கொண்டு முருகர் போய்விட்டார். அடுத்தநாட் காலை 8 மணிவரையில் நேசமணி தங்கள் வண்டியில் தானும் பிள்ளைகளுமாகப் புருஷன் வீட்டிற்குப் புறப்பட்டுப் போனாள்.

* * *

உலகம் பலவிதம்: 1927 ஜூலை 21

நேசமணி - துரைரத்தினத்தினம் (முற்றொடர்)

"நாயகனுடைய வீடு சமீபித்தலும் நேசமணிக்கு முன்னொருபோதுமில்லாத அச்சம் பிறந்தது. சகுந்தலை தன்னாயகனாகிய துஷ்யந்த மகாராசனுடைய மாளிகைக்குச் செல்லும்போது தன்னை அவன் அங்கீகரிப்பானோ அல்லனோ என்று எங்ஙனம் பயந்தாளோ" அங்ஙனமே நேசமணி இப்பொழுது கிலேசமுற்றாள். நாணமும் அச்சமும் உள்ளத்தை உபாதிக்க அவள் வண்டியிலிருந்து பிள்ளை களுடன் கீழே இறங்கித் தன் கணவன் வீட்டுத் தெருக்கதவண்டை மெல்ல மெல்லப் போனாள்; கதவிற்கையை வைத்துத் திறக்கும்படி மெல்லத் தள்ளினாள்; அது பூட்டப்பட்டிருந்தது; நேசமணிக்குச் செய்வதென்னவென்று புலப்பட வில்லை; சிறிதுநேரஞ் சும்மா நின்றுவிட்டுப் பின் தன் மூத்த குழந்தையைப் பார்த்து "மகனே, உந்தக்கதவிலே தட்டி ஐயா என்று கூப்பிடு" எனச் சொல்லுதலும் பிள்ளை அப்படியே செய்தது. உடனே ஒருவேலைக்காரன் வந்து கதவைத் திறந்தான். இந்த வேலைக்காரன் யாரென்றால் துரைரத்தினத்தின் சமையற்காரனாகிய ராமன். ராமன் முந்தி நேசமணியை அறிந்தவனல்லன்; அவன் குறிப்பினால் இவர்கள் தனது எஜமானனுடைய பெண்டிர் பிள்ளைகளென்பதை உணர்ந்து கொண்டான். "அம்மா, வாருங்கள் உள்ளே வாருங்கள்" என்று ராமன் மிக்க மரியாதையோடும் உபசாரத்தோடும் நேசமணியை அழைத்தான். "ஐயா உங்கே இருக்கிறாரா" என்று நேசமணிகேட்க ராமன் "ஓம் இருக்கிறார்" என்று சொல்லி உள்ளே கூட்டிக் கொண்டு சென்றான்; நேசமணி வீட்டின் உட்புறத்து விறாந்தையிற் போய் நின்று கொண்டு இந்தப் பிள்ளைகளைத் தகப்பன் இருக்குமிடத்திற் கூட்டிக்கொண்டுபோய் விடு" என்று ராமனுக்குச் சொல்லுதலும் ராமன் "அம்மா, அவர் இங்கேயில்லை, இன்று காலைதான் உத்தியோகம் பார்க்கும் ஊருக்குப் புறப்பட்டு விட்டார்; இதனை உடனே சொன்னால் நீங்கள் மனம் வருந்தக்கூடுமென்று நினைத்தே நான் அப்பொழுது சொல்லாமல் விட்டேன்" என்றான். இந்த வார்த்தையைக் கேட்டவுடனே நேசமணி திடுக்குற்றாள், பெருமூச்சுவிட்டாள்; அவள் கண்களில் நீர் ததும்பியது; தன் புருஷன் தனக்குச் சொல்லாமற் போவாரென்று நேசமணி எப்போதாயினும் காத்திருந்தவளல்லள். நேசமணி நின்று கலங்குவதைக்கண்ட ராமன் "அம்மா, நீங்கள் கவலைப்படவேண்டாம்; அவர் இன்றைக்குப் போவதென் றெண்ணியிருக்கவில்லை, சென்ற இரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து மணிபோல் ஒரு தந்தி வந்தது; அதனாலேதான் காலை 6 மணிக்குப் புறப்பட்டுப் போகிறார்" என்று சொல்லிக்கொண்டு ராமன் ஒரு அறையுட்போய் மீண்டுவந்து ஒரு திறப்பை நீட்டினான்; நேசமணி திறப்பை வாங்கிக்கொண்டு "இந்தத் திறப்பை என்னிடம் ஏன் தருகின்றாய்" என்று கேட்க, ராமன் "அம்மா, நீங்கள் இங்கு வரும்போது உங்களிடம் வீடுவாசலை ஒப்பித்துவிட்டு, நீங்கள் என்னை இருக்கச்சொல்லி மறித்தால் இருக்கும் படியும் போகச் சொன்னாற் போகும்படியும் ஐயா என்னிடஞ்சொல்லி இந்தத் திறப்பையுந் தந்துவிட்டுப் போனார்" என்றான். இராமன் சொன்ன வார்த்தை அவளுக்கு ஆறாத் துயரத்தை உண்டாக்கிவிட்டது; புருஷன் செய்த செய்கை அவள் மனசைப் பெரிதும் உருகச் செய்தது. "விடுதலை நாட்களில் இங்கே சிறிது ஆறியிருக்கலாமென்று நினைத்துவந்த என் பர்த்தாவுக்கு நான் துரோகஞ்செய்து விட்டேனே, அவர் விரும்பிய உணவைத் தேடிக்கொடாது ஆலங்காட்டு நீலிபோல் என் பெற்றார் வீட்டிற் போயிருந்து தன்னந்தனியே வயிறார உண்டேனே; எனக்காகவும் இந்தப்பிள்ளைகளுக்காகவுந் தானே அவர் இந்தப்பாடுபடுகிறார்; என்னைக் கூப்பிட்டுச் சமாதானம் பண்ணி இங்கே இருக்க விட்டுப் போகலாமென்ற எண்ணத்தோடு அவர் இருந்தார்; இதற்கிடையிற் பொல்லாத அந்தத் தந்தி வந்தமையினாலல்லவா அவர் ஒன்றுஞ் சொல்லாமற் போய்விட்டார்; நான் இங்கே வருவேன் என்று எண்ணித்தானே திறப்பை என்னிடங் கொடுக்கும்படி சொல்லிப்போனார்; ஐயோ, நான் கொண்ட கணவனுக்குத் துரோகியானேனே; அவர் எங்களையிட்டு எவ்வளவு கவலைப்படுகின்றாரோ அறியேன்" என்று சொல்லிச் சொல்லியழுதாள். நேசமணியழுவதைக் கண்ட ராமனும் மனம் வருந்தி "அம்மா, ஏன் கவலைப்படுகிறீர்கள்; எங்கோ தூர தேசத்திற்குப் போய்விட்டாரா? இல்லையே? இன்றைக்குக் கடிதம் போட நாளைக் காலை அவர் கையிற் கிடைக்கும்; அவருடைய பதில் நாளைமற்றநாள் உங்களுக்குக் கிடைக்கும்; எல்லா விஷயங்களையும் விபரமாக எழுதலாமே; இதைவிட்டு ஏன் வந்த நேரந் தொடக்கம் கண்ணீர் விட்டபடியே யிருக்கிறீர்கள்; நீங்கள் வருந்துவதைப் பார்த்துப் பிள்ளைகளும் வருந்துகின்றனவே; இங்கே எல்லாப் பண்டங்களும் உண்டு; நான் சமைத்துத்தருகிறேன் சாப்பிடுங்கள்; வண்டியும் வண்டிக்காரனும் நின்று பின்னேரம் போகலாம்" என்றான்.

* * *

ராமன் கூறிய வார்த்தைகளினால் நேசமணி சிறிது மன ஆறுதலடைந்தாள். அவள் ராமனைப் பார்த்து "ராமன் நீ இங்கே எங்களோடுதானே இருந்துகொள்" என்றாள். ராமன் அதற்கு உடன்பட்டான்; அவன் விரைவாகச் சமையலறைக்குச் சென்று ஏதோ பணிகாரம் ஆயத்தஞ்செய்து நேசமணிக்கும் பிள்ளைகளுக்கும் வண்டிக்காரனுக்கும் உண்ணக் கொடுத்தான். நேசமணி, தான் இனிமேல் புருஷன் வீட்டிற்றானே யிருப்பதாக வண்டிக்காரன் மூலமாகத் தன் தாய்தகப்பனுக்குச் சொல்லியனுப்பினாள். ராமன் சற்றே விவேகங் குறைந்தவனாயினும் அவன் விசுவாசமும் நேர்மையுமுள்ள வேலைக்காரன் என்பதை நேசமணி அறிந்தாள். புருஷன்வீட்டிற்கு வந்து இரண்டு மூன்று தினஞ்சென்றபின் அவள் தன் கணவனுக்கு ஒரு கடிதமெழுதினாள். தன் பிதா மாதாக்களுடைய செயலினாலேயே தன் புருஷனுக்கும் தனக்கும் முந்திப் பிரிவு நேர்ந்தது என்று நேசமணியுணர்ந்து, அவர்கள் விஷயமாகச் சிறிது மனவருத்தப்பட்டாள்.

* * *

[இடையில் நான்கு தொடர்கள் இல்லை]

உலகம் பலவிதம்: 1927 ஆகஷ்ட் 25

நேசமணி - துரைரத்தினத்தினம் (முற்றொடர்)

"மிஸ்டர் ரத்தினம், நான் உம்மை அதிக நேரங் காக்கவைத்துவிட்டேன்; குறை நினைக்க வொண்ணாது" என்று தம்பிரத்தினம் சொல்லுதலும் துரைரத்தினம் "அதைப்பற்றிக் காரியமில்லை" என்று சொல்லியபின் இருவரும் பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். சிறிதுநேரம் நின்றுவிட்டு லீலா இவர்களிடம் அநுமதி பெற்றுக்கொண்டு தன் வீட்டிற்குப்போய்விட்டாள். அதன்பின் சினேகித ரிருவரும் வழக்கம்போற் கடற்கரைக்குச் சென்றார்கள். இருவரில் எவராயினும் லீலாவைப்பற்றி யாதும் பேசினாரல்லர். தம்பிரத்தினம் லீலாவைப்பற்றித் தம்மோடு ஏதும் பேசத்தொடங்கியபின்பே தாம் அவனோடு அதைப்பற்றிப் பேசுவதென்று துரைரத்தினம் எண்ணியிருந்தார். அப்படியே தம்பிரத்தினமும் தன் விஷயத்தில் எண்ணியிருந்தான். இதனாற்றான் இருவரும் அவளைப்பற்றிப் பேசாதொழிந்தனர். அன்றுமாத் திரமல்ல பின்னரும் இரண்டு மூன்று தினங்களாக லீலாவைபபற்றி இவர் முதற் பேசுவாரென்று அவரும் அவர் முதற்பேசுவாரென்று இவரும் எதிர்பார்த்திருந்து ஈற்றில் ஒருவரும் அவளைப் பற்றிப் பேசாதுவிட்டனர். இவர்களிருவரும் தம்பிரத்தினம் வீட்டிற் பேசிக்கொண்டிருக்கும் நேரங்களில் இடையிடையே லீலா அங்கே வருவதுண்டு ஆனால், லீலாவுக்கும் தம்பிரத்தினத்திற்குமிடையேயுள்ள தொடர்பு எப்படிப்பட்டதென்பது துரைரத்தினத்திற்குச் சிறிதும் புலப்படவில்லை. லீலா அவனோடு பேசும்போது "பிறதர்" (அண்ணே) என்று அழைப்பதைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரைரத்தினம் பலமுறை அவதானித்தார். லீலாவோடு தான் அன்புபாராட்டி நடப்பது தம்பிரத்தினத்திற்கு விருப்பமாயிருக்குமோ வெறுப்பாயிருக்குமோ வென்பதை அறியமுடியாமையினால் துரைரத்தினம் அவள் விஷயத்திலே சிறிது அலட்சிய முடையவன்போல் நடந்துகொண்டான். இங்ஙன மாக ஒருதினம் இவ்விரு சிநேகிதரும் மாலைக் காலத்திற் கடற்கரையிற்போயிருந்து பலகதைகளையும் பேசிக்கொண்டிருக்கும்போது ஆறரை மணிவரையில் இரு பெண்கள் கடற்கரை மணலின்மீது மெல்ல மெல்ல நடந்து தாங்கள் இருக்கும் பக்கத்தை நோக்கி வருவதை இவர்களிருவரும் கண்டார்கள். இரணியநேரமாத லால் தூரத்தில் வருகிற அவர்கள் யார் என்பதை இவ்விருவரும் அறிந்துகொள்ளுதல் முடியாமலிருந்தது. சிறிது சமீபத்தில் வந்தபின் பார்த்தபோது அந்த இரு பெண்கள் லீலாவும் அவள் தாயுமே யென்பதை இவர்கள் கண்டார்கள். "ஐ, ஸே, மிஸ்ரர் ரத்தினம் இதில் வரும் ஒரு பெண் லீலாவல்லவா" என்று துரைரத்தினம் தம்பி ரத்தினத்திற்கு அவளைச் சுட்டிக்காட்டிக் கேட் டான். "அவளாகத்தானிருக்க வேண்டும்" என்று தம்பிரத்தினம் உற்றுப்பார்த்துவிட்டுச் சொல்ல, துரைரத்தினம் "மற்றது யார்" என்று கேட்க, தம்பிரத்தினம் "அவள் தாயாயிருக்கலாம்" என்று விடையளித்தான்.

* * *

தாயும் மகளும் வந்து இந்த இருவரும் இருக்கும் இடத்திற்கு ஏறக்குறைய 100 யார் தூரத்தில் மிருதுவான மணலிலே உட்கார்ந்தனர். அன்று பூரணையானபடியால் சோடசகலைகளுடன் சந்திரனும் உதயஞ்செய்தது. சிறிது குளிரோடு கூடிய மெல்லிய காற்றும் தென்றல் போல வீசியது. பெருக்கு நேரமாக விருந்தபடியினாற் சமுத்திரத்தின் அலைகள் அரைப்பனையுயரம்வரையில் எழுந்து சுருண்டு நுரையைச் சிந்திக்கொண்டு இரைந்தபடி கரையிற் பெருகி மேலும் மேலுஞ் சென்று மீண்டு கடலிற் போய்க்கொண்டிருந்தன. இங்ஙனம் அலைகள் மீண்டு செல்லும்போது தாம் முந்தி அள்ளிக் கொண்டு வந்த நண்டுகளைக் கரையில் விட்டுப் போக அந்நண்டுகள் எங்ஙனஞ் செல்வதென்றறியாது தியங்குவது, தம்மை நம்பி வந்தவர்களை அந்தரவழியில் விட்டுச் செல்லும் கீழ்மக்களின் செயலுக்குத் திருஷ்டாந்தமாக விருந்தது. இவ்வாறு நின்று தியங்கிய நண்டுகளைப் பின்னர் ஒரு பெருந்திரை வந்து கரையில் மோதி மீண்டு போகும்போது அள்ளிக்கொண்டு கடலுட் செல்லுதல், வினைகளை யனுபவிக்கும்படி ஆன்மாவைப் பிறந்திறந்துழலவிட்ட இறைவன், இருவினையொப்புமலபரிபாக மென்னுமிவைகளை அவ்வான்மா அடையுங்காலத்து அந்த இறைவனே அவ்வான்மாக்களை மார்ச்சால சம்பந்தமாய் (பூனை தன் குட்டிகளைக் கௌவிச் செல்வது போல) வந்து அடிமைக்கொண்டருளுவதை ஞாபகப்படுத்தியது. கடலிலே செல்லும் கட்டுமரம் தோணி முதலியன திரைகள் எழும்பும்போது கட்பார்வைக்கு மறைதலும் அத்திரைகள் கரையில் மோதியபின் கட்புலனுக்குத் தெரிவதும் மலமுனைப்பினாற் பிரபஞ்சத்தில் அழுந்திக் கடவுளை மறந்திருக்கும் நம்மனோர் யாதும் சங்கடம் நேர்ந்தவிடத்து பிரபஞ்ச மயக்கம் குறைய, கடவுளின் ஞாபகத்தை யடைதல்போலக் காணப்பட்டது.

* * *

இவை இங்ஙனமாக தாயுடனிருந்த லீலா திரும்பிச் சற்றே யுற்றுப்பார்த்தபோது இவ்விரு நண்பர்களும் இருப்பதைக் கண்டு தாயிடம் அனுமதிபெற்றுக்கொண்டு அவ்விருவரும் இருக்குமிடத்திற்கு ஓடி வந்தாள். "லீலா இப்படிவா, என்ன இன்றைக்கு இந்தப்பக்கமாகப் புறப்பட்டது" என்று தம்பிரத்தினங்கேட்க "ஒரு விசேஷமுமில்லை. இன்றைக்கு நல்ல நிலாவுண்டு; லீலா வா கடற்கரைக்குப் போவோம் என்று அம்மா கேட்டபடியால் நானும் புறப்பட்டுவந்தேன்" என்று சொல்லி நின்றாள். "லீலா, ஏன் நிற்பான் உட்காரலாமே" என்று துரைரத்தினஞ் சொல்ல, "ஆம்" என்று சொல்லி லீலா உட்கார்ந்தாள். சிறிதுநேரஞ் செல்லத் தம்பிரத்தினம் லீலாவின் தாயிருக்குமிடத்திற்குச் சென்று அவளுடன் வார்த்தையாடிக் கொண்டிருந்தான். துரைரத்தினமும் லீலாவும் ஒருங்கு இருந்தார்கள். மாலைக் காலத்திலே ஒரு பறங்கிச் சிறுமியுடன் கடற்கரை யிலே தாம் இருப்பதை யாரும் சிநேகிதர்கள் தற்செயலாய் வந்து கண்டு விட்டால் தன்னை மெத்த விபரீதமாக நினைக்ககூடுமேயென்று துரைரத்தினம் யோசித்துக்கொண்டிருந்தார். "ஐயா, என்ன அதிகம் யோசிக்கின்றீர்கள் ஊரின் ஞாபகம் வந்துவிட்டதா" என்று லீலா புன்னகையுடன் துரைரத்தினத்தைக் கேட்டாள். "அப்படியொன்றுமில்லை" என்றார் துரைரத்தினம். இப்படி இவர்களிருக்கும்போது கடல் வரவரப் பெருகும் நேரமாதலால் சில திரைகள் இவர்களுக்குச் சமீபமாக வருவதும் பின்னர் மீள்வதும் பின் இன்னுஞ் சில திரைகள் சமீபத்தில் வந்து அவர்களை நனைப்பதுபோற் கிட்டிவிட்டு அவர்களை நனைக்காது மீண்டு போவதுமாக இருந்தன. "லீலா சிறிது இப்பால் இரும், திரை ஒருபோது உம்முடைய உடையை நனைத்துவிடக்கூடும்" என்றார் துரைரத்தினம். ஓம் என்று சொல்லி லீலா சிறிது அப்புறமாகவிருந்துகொண்டு "பாருங்கள் இந்த திரைகளும் சில ஆடவர்களுஞ் சமன் என்றாள். "ஏன் அப்படிச் சொல்லுகிறீர்" என்று துரைரத்தினங் கேட்க, "இல்லை, சும்மா சொன் னேன்" என்றாள் லீலா. "ஒரு நியாயமுமில்லாமல் சொல்லமாட்டீர், ஏதோ இருக்கவேண்டும், அதை நான் அறியக்கூடாதா" என்றார் துரைரத்தினம்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1927 செப்டெம்பர் 1

நேசமணி - துரைரத்தினத்தினம் (முற்றொடர்)

"உங்கள் மனமும் இந்த அலைகளின் நிலைமையிலேதான் இருக்கின்றது; ஏதோ நான் சொன்னேன்; அதனை ஆராய்ந்து விளங்கிக் கொள்வது உங்கள் கடமை" என்று லீலா சொல்லிவிட்டுப் பின்னருந் துரைரத்தினத்தைப் பார்த்து "சரி, உங்களைக்கண்டது சந்தோஷம்; நாங்கள் இருவரும் இந்த இடத்திலே ஒருங்கிருந்து நெடுநேரம் வார்த்தையாடுவது சரியல்ல; கண்டவர்கள் வித்தியாசமாக எண்ணிக் கொள்வார்கள்; நான் அம்மாவிடம் போகின்றேன்" என்று சொல்லிக்கொண்டு எழுந்தாள். துரைரத்தினமும் "ஆம், அது சரியல்லத்தான்; பிறர் மாத்திரமல்லர் உமது தாய்தானும் வித்தியாசமாக நினைத்தல் கூடும்; நீர் போய்வாரும்" என்றான். என் தாயாரும் மிஸ்றர் தம்பிரத்தினமும் ஒருபோதும் அப்படி நினைக்கமாட்டார்கள் என்று சொல்லிவிட்டு லீலா போகும்போது "லீலா, மிஸ்ரர் தம்பிரத்தினத்தை இங்கே வரும்படி தயவுசெய்து சொல்லிவிடு" என்று துரைரத்தினம் சொல்ல" ஆம், அப்படியே செய்கிறேன்" என்று கூறிவிட்டு லீலா துரைரத்தினத்தை அரிதிற் பிரிந்து சென்றாள், லீலா சொன்னவுடனே தம்பிரத்தினம் மீண்டு வந்தமார்க்கமாகவே தங்கள் வீட்டிற்கு மீண்டனர். தம்பிரத்தினம் லீலாவைப் பற்றி ஏதுஞ் சொல்வானென்று துரைரத்தினம் அப்பொழுதும் எதிர்பார்த்திருந்தான். ஆனால் அவன் அவளைப் பற்றி யாதுஞ் சொன்னானல்லன்.

* * *

இது நிகழ்ந்து இரண்டு மூன்று நாட்கள் சென்றபின் தம்பிரத்தினமும் துரைரத்தினமும் கூடிக்கொண்டு உலாத்திற்குப் போய்க் கடற்கரையில் வழக்கமான இடத்தில் இருந்தார்கள். இவர்களிருவரும் பல விஷயங்களையும் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது தம்பிரத்தினத்திற்குச் சிநேகமான இன்னொருவன் அங்கே வந்தான். அவன் ஐரோப்பிய உடைதரித்தவன்; அரசாங்கத்திலோ இன்றேல் ஏதும் வியாபார சமுதாயத்திலோ வேலையாக விருப்பவனாக அவன் காணப்பட்டான். அவன் தம்பிரத்தினத்தைக் கண்டமாத்திரத்தே மிகவும் ஆநந்தங் கொண்டவனாய் "ஹலோ, மிஸ்ரர் ரத்தினம், நான் இன்றைக்கு உம்மை எங்கெங்கெல்லாந் தேடித்திரிந்தேன்; உம்முடைய விடுதியிற்போய் விசாரித்தேன்; நீர் கடற்கரைக்குப்போயிருக்கக் கூடுமென்று அங்கு நின்றோர் சொன்னார்கள்; அதனாற்றான் இங்குவந்தேன்; எனக்கின்றைக்கொரு சந்தோஷ கொண்டாட்டம்; என்னுடைய சிநேகிதர்களெல்லாரையும் நான் அழைத்திருந்தேன் உம்மையும் இன்னும் இரண்டொருவரையுந்தான் நான் இதுவரையிற் சந்திக்க முடியாமற் போயிற்று; இவர்தான் நீர் சொன்ன மிஸ்ரர் துரைரத்தினமென்று நினைக்கிறேன்; சரி அவரும் வரலாம்; நாங்கள் மூன்றுபேரும் இப்பொழுது ஹோட்டலுக்குப் போகவேணும்; அங்கு எல்லாம் ஒழுங்குசெய்திருக்கின்றேன்" என்று அந்த வாலிபன் மற்றவர்களைப் பேசவிடாமல் தானே ஆங்கிலத்திற் பேசிமுடித்தான்.

* * *

அங்கு வந்த சிநேகிதனைத் தம்பிரத்தினம் பார்த்து "உமக்கு அதிஷ்டம் வந்தது எங்களுக்கு மெத்தச் சந்தோஷம்; ஆனால் நாங்கள் ஹோட்டலுக்கு இப்பொழுது போகவேண்டியதில்லை; வசதியாகவிருந்தால் ஹோட்டலில் ஆயத்தஞ் செய்யப்பட்ட பதார்த்தங்களை இங்கே தருவிப்பது நல்லது; இக்கடற்கரையில் நல்ல நிலவில் ஆநந்தமாகக் கொண்டாடலாம்" என்றான். அப்படிச் செய்வதுதான் நல்லதென்றார் துரைரத்தினமும். உங்கள் விருப்பம் அப்படியானால் நான் சீக்கிரம் போய் எல்லாவற்றையும் இங்கேதானே எடுத்துக்கொண்டு வருகின்றேன் என்று சொல்லிவிட்டு அவன் மீண்டுபோய் அரை மணி நேரஞ் செல்வதற்கிடையில் ஒரு பையனிடத்தில் தின்பண்டங்களைக் கொடுத்துக் கூட்டிக் கொண்டுவந்தான். பலவகையான தின்பண்டங்கள் அங்கே வைக்கப்பட்டன. ஈற்றில் புதிய நண்பன் ஒரு உவிஸ்கி போத்தலையும் அதனை வார்த்து அருந்துவதற்கான ஒரு சிறிய பளிங்குப் பாத்திரத்தையும் எடுத்து வைத்தான். அப்பொழுது தம்பிரத்தினம் துரைரத்தினத்தின் முகத்தைப் பார்த்தான். துரைரத்தினத்தின் முகக் குறிப்பு நல்லாயில்லை; இச்செயல் அவருக்குச் சம்மதமல்லவென்பது குறிப்பால் அறியத்தக்கதாயிருந்தது. "ஏன், மிஸ்ரர், ரத்தினம், இப்படி ஒரு கொண்டாட்டமான காலத்திலாயினும் கொஞ்சம் பாவிக்கக்கூடாதா" என்று தம்பிரத்தினம் கேட்டான். "எந்த நேரத்திலும் அதனைக் குடியாமல் விட்டிடுவதே நல்லது; ஒரு நாளைக்குக் குடித்தவனும் குடிகாரன்தான் உள்ளநாள் முழுதுங் குடிப்பவனுங் குடிகாரன்தான்; கள்ளன் என்று பேர் கேட்பதற்கு எப்பொழுதுங் களவெடுக்கவேண்டியதில்லை; குடிவகை உபயோகிப்பது பிழையோ சரியோ என்பதைச் சிந்தித்துப் பிழையெனக் கண்டால் உடனே அதை விட்டுவிடுதலே முறையாகும்" என்று துரைரத்தினம் சிறிது வற்புறுத்திப் பேசினார். "அவரை நாம் நெருக்குவது சரியல்ல, நீர் கொஞ்சம் எடுத்துக்கொள்ளும், நானுங் கொஞ்சம் எடுத்துக்கொள்ளுகிறேன்" என்று அந்தப் புதிய நண்பன் சொன்னான்; "அவர் வேண்டாமென்றபடியால் நாங்களும் அதை விட்டுவிடுவோம்" என்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிரத்தினம். தமது நண்பனுக்கு இஷ்டமான எல்லாவற்றையும் இங்கே எடுப்பித்துக்கொண்டுவர நீங்கள் தடை சொல்வதாயிருந்தால் எனக்கு அது பெரிய மனவருத்தமாகவல்லவா இருக்கும்" என்று அவன் சொல்லித் துயரப்பட்டான். "இல்லை, மிஸ்ரர் ரத்தினம், இதிற் பிடிவாதஞ் செய்யாதீர்; நமது நண்பருடைய மனசைப் புண்படுத்துவது சரியல்ல; இன்றைக்கே முதல் முறையும் கடைசிமுறையுமாக விருக்கட்டும்; இனிமேல் இப்படியொன்றைச் செய்யும்படி நான் ஒருபோதும் உம்மைக் கேட்கமாட்டேன்; தயவுசெய்து எனக்காக இன்றைக்கு இக்கொண்டாட்டத்திற்கு இடையூறாக நிற்கவேண்டாம்" என்று தம்பிரத்தினம் துரைரத்தினத்தைக் கெஞ்சினான்.

* * *

துரைரத்தினம் சிறிது யோசித்து "சரி, நீங்கள் கொஞ்சங் கொஞ்சம் உபயோகித்துக்கொள்ளுங்கள், என்னை மன்னித்துவிடுங்கள்; மற்றும் பட்சணங்களில் நானும் உங்களோடு பங்குபற்றுகின்றேன்" என்றார். புதிய நண்பன் "வேண்டாம்; ஒருவரும் மனஸ்தாபப்படத் தேவையில்லை" என்று சொல்லிவிட்டுச் சிறிது ஆத்திரத்தோடு பையனைப் பார்த்து "எடே, இந்தச் சாமான்களைக் கொண்டுபோய் ஹோட்டலில் வை" என்றான். பையன் அவைகளை எடுக்க வர, தம்பிரத்தினம் தடுத்துக்கொண்டு துரைரத்தினத்தைப் பார்த்து "ஐ, ஸே, பிறதர், இதைக் குளப்பவேண்டாம்; நான் முந்திச் சொன்னபடி இனியொருபோதுங் கேட்கவில்லை; இன்றைக்கு மாத்திரம் என்னுடைய மரியாதையைக் காத்து நடக்கவேண்டும்" என்று தம்பிரத்தினம் பின்னரும் இரந்தான். "தம்பிரத்தினம், உமது மரியாதையைக் காப்பதற்காகத்தான் இந்தப் பானம் வேண்டாமென்று நான் சொல்லுகிறேன்....." என்று பின்னரும் அவர் ஏதோ சொல்லுவதற்கிடையில் தம்பிரத்தினம் "ஐயோ, நான் நியாயம் பேசவில்லையே, செய்வது சரியென்று சொல்லவில்லையே; தவறாகவிருந்தாலும் எனக்காக இதைச் செய்யும்படியல்லவா கேட்கிறேன்" என்று மனஸ்தாபத்தோடு சொன்னான். துரைரத்தினத்திற்கு இன்னது செய்வதெனப் புலப்படவில்லை; நெடுந் தூரம் யோசித்தான். "மிஸ்ரர், தம்பிரத்தினம்; ஒரு சிநேகிதனுக்காக இப்பொழுது நான் செய்யாத காரியத்தைச் செய்கின்றேன்; ஆனால் இதுதான் கடைசிமுறையாக விருக்கட்டும்" என்று அதிக துயரத்தோடு சொல்லிவிட்டுத் தமக்கு முன் பாத்திரத்தில் நிறைத்து வைக்கப்பட்ட உவிஸ்க்கியை எடுத்துக் குடித்தார். "இப்படி ஏதும் உபயோகிக்கும்படி இனிமேல் நான் உம்மைக் கேளாமற் கண்டுகொள்ளும்" என்று தம்பிரத்தினம் சொன்னான்.

* * *

மற்றும் இருவரும் கொஞ்சங் கொஞ்சம் எடுத்துக் குடித்தனர். பையனுக்கும் வார்த்துக் கொடுத்தார்கள்; அவனும் வாங்கிக் குடித்தான். தம்பிரத்தினம் பையனைப் பார்த்து "அடே, ராமசாமி பெட்டியைத் திறந்து அதற்குளிருக்குஞ் சாமான்களை ஒவ்வொன்றாக எடுத்துப் பக்குவமாக ஒரு கடதாசியில் வை" என்றான். பையனுக்கு மதுபானங் கொஞ்சங் கூடிவிட்டது. "ஐயா, அதைச் செய்துவைக்கிறேன்; அது கிடக்க, இந்தக் கடலுக்குக் கரைகட்டினது ஆர், சொல்லுங்கள் ஐயா" என்றான். தம்பிரத்தினம் பையனுக்கு வெறி யதிகப்பட்டுவிட்டதென வெண்ணிக்கொண்டு, "அடே, அதெல்லா மிருக்கட்டும், சொன்னதைச்செய், எல்லாம் எடுத்து வெளியேவை" என்று அதட்டிச் சொன்னான். "என்னை, என்ன செய்யச்சொல்லுகிறீர்கள்; நீங்கள் தின்பதை நீங்கள் எடுத்துவைத்துக் கொள்ளலாம்; எனக்குத் தேவையானதை நான் எடுத்துத் தின்பேன்; அல்லது எனக்குத் தந்து நீங்களும் சாப்பிடுங்கள்; மனுஷரென்றால் எல்லாருஞ் சரிதானே; உங்களுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்; ஐயா, நான் மலையாளத்திலே ஒரு பாட்டுப் பாடட்டுமா" என்று பையன் சொல்லித் தன்பாட்டிற் சிரிக்கத் தொடங்கினான். "எடே உனக்கு என்னமாதிரி யிருக்கிறது" என்று தம்பிரத்தினங்கேட்க, "மாதிரி யென்ன, நான் எஜமான் மாதிரியும் நீங்கள் என் வேலைக்காரர் என்ற மாதிரியும் எனக்கு இப்பொழுது இருக்கிறது; அல்லாமலும் ஐயா, நான் படிக்கிற காலத்திலே பூமி 24 மணித்தியாலத்தில் தன்னைத்தான் சுற்றுகிறதென்று படித்தேன்; இப்பொழுதுத்தான் அப்படிப் பூமி சுற்றுகிற மாதிரி எனக்குத் தெரிகின்றது" என்றான். "இவனோடு ஏதும் பேசிப் பயனில்லை" யென்று சொல்லிவிட்டுத் தம்பிரத்தினம் துரைரத் தினத்தைப் பார்த்தான். அவர் தன்னுடைய சால்வையை மணலில் விரித்து அதன்மேற் படுத்துக்கிடக்கக் காணப்பட்டார்.

* * *

உலகம் பலவிதம்: 1927 செப்டெம்பர் 8

நேசமணி - துரைரத்தினத்தினம் (முற்றொடர்)

"மிஸ்ரர், ரத்தினம், என்னவிசேஷம் என்று" தம்பிரத்தினம் துரைரத்தினத்தைக் கேட்க, சும்மா "ஒருவிதமாகவிருக்கிறது வேறொன்றுமில்லை" என்று துரைரத்தினம் மயக்கத்தோடு மறுமொழி கூறினார். "அதைப்பற்றிக் காரியமில்லை; இங்கேயுள்ள பண்டங்களிற் கொஞ்சங் கொஞ்சஞ் சாப்பிடுவோம்" என்று சொல்லித் தம்பிரத்தினம் இராமசாமியைக்கூப்பிட்டு இந்தப் பண்டங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் மூவருக்கும் பரிமாறு என்று சொல்ல, அவன் தம்பிரத்தினத்தை விடுத்துத் தனக்கும் மற்றும் இருவருக்கும் பகிர்ந்து வைத்தான். "அடே, இராமசாமி எனக்கு ஒன்றுங் கிடையாதோ" என்று தம்பிரத்தினங் கேட்க, மூவருக்கும் என்றுதானே சொன்னீர்கள். உங்களுக்கும் வேண்டுமென்று நீங்கள் எண்ணியிருந்தால் முந்தியே நால்வருக்குமென்று சொல்லிவிடலாமே" யென்று சொல்லிக்கொண்டு தம்பிரத்தினத்திற்கும் தீன்பண்டங்களைப் பகிர்ந்து வைத்தான். நால்வரும் சிறிது சிறிது உண்டபின் புதிய நண்பன் எஞ்சிய பண்டங்களை இராமசாமியிடங் கொடுத்து அவனையுங் கூட்டிக்கொண்டு விடுதிச் சாலைக்குச்சென்றான். கடற்கரையில் துரைரத்தினமும் தம்பிரத்தினமுமேயிருந்தனர். தம்பிரத்தினம் துரைரத்தினத்திற்கு ஒரு சிக்கறற்றைப் பற்ற வைக்கும்படி கொடுத்தான். துரைரத்தினம் அதனை வாங்கிப் பற்றவைத்துக்கொண்டு பாட்டுப்பாடத் தொடங்கினார். இவர்கள் இப்படியிருக்கும்போது லீலாவுந் தாயும் கடற்கரையில் வந்து தாங்கள் வழக்கமாக இருக்குமிடத்தில் இருந்தனர். இவர்கள் வந்திருப்பதைத் தம்பிரத்தினம் முந்தியே கண்டுகொண்டானாயினும் அதைப்பற்றித் துரைரத்தினத்திற்கு ஏதுஞ் சொன்னானல்லன்.

* * *

"லீலா" வைப்பற்றி ஒருபோதும் தம்பிரத்தினத்தோடு பேசாத துரைரத்தினம் அச் சமையத்தில் மதுபானமயக்கத்தினாற் போலும் "ஐ, ஸே, மிஸ்ரர், தம்பிரத்தினம் லீலாவைப் பற்றி உம்முடைய எண்ணமென்ன" என்று கேட்டார். "எனக்கு ஒரு எண்ணமுமில்லை" என்றான் தம்பிரத்தினம். "அதற்கல்ல; அவர்களுடைய குணம் நடை எப்படி யென்று கேட்கிறேன்" எனத்துரைரத்தினஞ் சொல்ல, "குற்றமில்லை, ஆனால் நான் அவைகளைப் பற்றிச் சிந்திப்பதில்லை" யென்று தம்பிரத்தினம் மிக்க அலட்சியத்தோடு சொன்னான். "அவர்களைப் பற்றி ஏதும் பேசுவது உமக்கு இஷ்டமில்லைப் போலும்" என்று துரைரத்தினஞ் சொல்ல, "இல்லை, இல்லை, நூறுமுறையும் பேசலாம்" என்றான் தம்பிரத்தினம். அவர்கள் இப்பொழுது இங்கே வரமாட்டார்களா எனத் துரைரத்தினங் கேட்க, "அதோ இருக்கிற இருவரும் அவர்கள்தான்" என்று தம்பிரத்தினஞ் சொன்னான். துரை ரத்தினமும் நிலா வெளிச்சத்திற் குறிப்பாகப் பார்த்து அங்கிருப்பவர்கள் அவர்கள் தான் என்று அறிந்துகொண்டான். "நாங்கள் இங்கே இருப்பது லீலாவுக்குத் தெரியாதா" என "ஒரு போது தெரியாதிருத்தல் கூடும்" என்று தம்பிரத்தினஞ் சொல்லிவிட்டு அந்த இருவருமிருக்குமிடத்திற்கு எழுந்துசென்றான். இரண்டு மூன்று நிமிஷஞ் செல்ல லீலா துரைரத்தினத்திடம் வந்தாள். துரைரத்தினம் அவளைக்கண்ட மாத்திரத்தே ஆநந்தங் கொண்டவராய் அவளை இருக்கச் செய்து பலவாறு வார்த்தையாடினார். முதனாள் லீலாவைக் கடற்கரையிற் சந்தித்தபோது துரைரத்தினத்தின் மனநிலை வேறு; இப்பொழுது அவனுடைய மனநிலைமைவேறு. அப்பொழுது அவன் மனம் அவன் வசத்ததாயிருந்தது. ஆனால் இப்பொழுதெனிலோ அவனுடைய மனம் மதுபானத்தின் வயத்ததாகக் காணப்பட்டது. "கள்ளினுமுளதுகொல் கருத்தழிப்பதே" என்ற பிரகாரம் ஒருவனுடைய மனசை மதுபானத்தைப் போற் பேதிப்பது வேறுயாதுமில்லை யல்லவா. துரைரத்தினம் அன்று ஆவலுடன் பேசிய வார்த்தைகள் ஒழுக்கமுடைய பெண்கள் எவர்க்கும் வெறுப்பாயிருக்கும். ஆனால் லீலாவிற்கு அவைகள் உவப்பாயிருந்தன. இருவருடைய சிநேகமும் நீதியற்ற காதலாக மாறியது.

* * *

துரைரத்தினமும் லீலாவும் வெகு நேரமாகக் கடற்கரையில் இருந்து பொழுது போக்கினபின் இருவரும் எழுந்து தம்பிரத்தினமும் லீலாவின் தாயும் இருக்குமிடத்திற்குச்செல்ல, அவர்களும் இவர்களுடன் புறப்பட்டு நால்வருமாகக் கூடிக்கொண்டு வீட்டுக்கு மீண்டனர். தம்பிரத்தினம் லீலா தாய் என்னும் மூவரும் தத்தம் வீட்டையடைய, துரைரத்தினம் அவர் களிடத்தில் அனுமதி பெற்றுக்கொண்டு தமது வீட்டுக்குச் சென்றார். அவர் தமது வீட்டுக்குப் போகும்போது நேரம் இராப் பதினொருமணியிருக்கும். துரைரத்தினம் அகாலத்தில் இராப்போசனம் அருந்திவிட்டுப் படுக்கைக்குப் போனார். ஆனால் அவருக்கு நித்திரை வரவில்லை; அவர் மனசிற் பலஎண்ணங்கள் மாறி மாறி நிகழ்ந்தன. மதுபானத்தை வெறுத்திருந்த தாம் அன்று மாலைக்காலத்திற் கடற்கரையில் மதுபானம் அருந்தியதையும், லீலா அங்கே வந்தமையையும், தமக்கும் லீலாவிற்குமிடையே நீதியீனமான காதல் தலைப்பட்டமையையும், தம்முடைய கட்டுப்பாடுகளெல்லாம் பங்கப்பட்டமையையும் நெடுந்தூரம் யோசித்தார், இவைகளெல்லாம் தம்பிரத்தினத்தின் கூட்டுறவாலே வந்த தீமைகளென்றும், தம்பிரத்தினம் உண்மையான சினேகிதனல்லனென்றும் அவருக்குப் புலப்பட்டது. ஊரிலே தனது மனைவியாகிய நேசமணியோடும் அவளின் பெற்றாரோடும் தாம் மனஸ்தாபப்பட்டுக்கொண்டு வந்தமையினால் உண்டான மனவருத்தங் காரணமாகத் தமது பழைய நண்பர்களுக்குத் தாம் ஒளித்துத் திரிந்தமை யினாலேயே தம்பிரத்தினத்தின் தீயசகவாசம் தனக்கு நேர்ந்ததென யூகித்தார். இவைகளை யெண்ணியபோது அவர் மனத்தில் உண்டான பச்சாத்தாபத்திற்கு ஒரு எல்லையில்லை (பச்சாத்தாபம் - ஒரு கருமத்தைச் செய்துவிட்டுப் பின்பு அதனிமித்தம் வருத்தப் படுதல்) தம்பிரத்தினத்தின் சிநேகத்தை முற்றாக ஒழித்துவிடல் வேண்டுமென்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய விடுதிக்காயினும் கடற்கரைக்காயினும் இனிமேல் ஒருபோதும் போவ தில்லை யென்றும் மனத்தில் நிச்சயஞ் செய்தார் ஆனாற் தம்பிரத்தினத்தின் சினேகத்தைச் சடுதியில் விடின் அவன் தீயவனானதால் தமக்கு ஏதும் கேடுவிளைக்கக் கூடுமென்றும் ஆதலினால் அவனுக்குத் தோற்றாமல், காலகதியில் அவன் நட்பை ஒழித்து விடல் வேண்டுமென்றும் யோசித்தார். அன்றிரவு முழுவதும் இவ்விதமாக யோசித்துக்கொண்டு கிடந்தாரேயன்றித் துரைரத்தினம் இமையோடு இமை மூடினாரல்லர். இதற்கிடையில் விடிந்து விட்டது.

* * *

அதிகாலையில் துரைரத்தினம் எழுந்து தன் காலைக்கடன்களை முடித்துப் போசனஞ் செய்துகொண்டு வழக்கம்போல் தமது உத்தி யோகஸ்தானத்திற்குப் போயினர். அங்கே தம் முடன் உத்தியோகம் பார்ப்போரையெல்லாங் காணுந்தோறும் இவருடைய மனசில் வெட்கமும் அச்சமும் தோன்றின. யாராயினும் இருவர் மெல்ல ஏதும் பேசினால் அவ்விருவரும் தம்மைப் பற்றித்தான் பேசுகின்றார்களெனத் துரைரத்தினம் சந்தேகப்படுவார். தாம் பார்க்கவேண்டிய கடமையில் அவருக்கு அன்று புலன் செல்லவில்லை. இதற்கிடையில் நித்திரைச் சோம்பலும் வந்து பிடித்தது. நாற்காலியில் இருந்தபடியே மேசைமீது தலையை வைத்துக்கொண்டு துரைரத்தினம் தம்மை மறந்து உறங்கி விட்டார். மத்தியானப் போசனத்திற்கான நேரம் வந்து விட்டது. மற்றவர்களெல்லாரும் போசனஞ் செய்தற்கு எழுந்தார்கள்; அவர்களுள் ஒருவர் துரைரத்தினம் இருந்தபடியே யுறங்குவதைக் கண்டு சமீபமாகப்போய் அவரைத் தட்டியெழுப்பி "ஐ, ஸே, மிஸ்ரர், ரத்தினம் உமக்கேதும் சுகமில்லையா, பகலில் ஒருபோதும் தூங்காத நீர் இன்றைக்கு இப்படியிருப்பதென்ன" என்று கேட்க, "ஐயோ, எனக்குக் கடுமையான தலைவலியிருக்கிறது, உடம்பு முழுவதும் ஒருவிதமாக விருக்கிறது" என்று சொல்லிக் கொண்டு எழுந்து போசனஞ் செய்யச் சென்றார்; ஆனால் துரைரத்தினம் அன்று திருப்தியாகப் போசனஞ் செய்தாரல்லர். பின்னேரமாதலும் உத்தியோக ஸ்தானத்தினின்றும் தம்முடைய விடுதிக்குத் துரைரத்தினம் மீண்டுபோய்த் தேநீர் அருந்திவிட்டு "இன்றைக்கு எங்கேனும் போவதில்லை; போனதனாலேதான் இந்தத் தீமைக ளெல்லாம் உண்டாயின" என்று எண்ணிக் கொண்டு விடுதியிலேயே இருந்துவிட்டார். வழக்கமான நேரத்திற்கு வருவாரென்று தம்பிரத்தினம் தன் விடுதியில் எதிர்பார்த்திருந்தான். துரைரத்தினம் போகவில்லை; வராமைக்குக் காரணமென்னவென்று தம்பிரத்தினம் அதிகம் யோசித்தான். இதற்கிடையில் லீலாவும் தம்பிரத்தினத்திடம் வந்து "அவர் இன்னமும் வரவில்லையோ" என்று புன்சிரிப்போடு கேட்டாள்; "வரவில்லை, என்ன காரணமென்று தெரியவில்லை" என்றான் தம்பிரத்தினம்.

* * *

உலகம் பலவிதம்: 1927 செப்டெம்பர் 15

நேசமணி - துரைரத்தினத்தினம் (முற்றொடர்)

அடுத்தநாளும் துரைரத்தினம் தம்முடைய உத்தியோகஸ்தானத்திற்குப் போய் மீண்டதேயல்லாமல் வேறு எங்காயினுஞ் சென்றாரல்லர். தம்பிரத்தினமும் லீலாவும் துரைரத்தினம் இரண்டு தினங்களாகத் தங்களிடம் வரவில்லையே யென்பதையிட்டுப் பெரிதும் யோசித்தார்கள். இரண்டாநாள் மாலை 6 மணி வரையில் லீலாவுக்குஞ் சொல்லிவிட்டுத் துரைரத்தினத்தின் விடுதிக்குத் தம்பிரத்தினஞ் சென்றான். துரைரத்தினத்திற்கு ஏதோ சுகமில்லாமையினாற்றான் வராதொழிந்தாரென்றே தம்பிரத்தினம் எண்ணிக்கொண்டுபோனான். போனபோது துரைரத்தினம் தமது விடுதியிலுள்ள அறையுள் சார்மணைக்கதிரையொன்றிற் சாய்ந்துகொண்டு ஏதோ புதினப்பத்திரிகை படித்துக் கொண்டிருக்கக் காணப்பட்டார். "ஐஸே, மிஸ்ரர், ரத்தினம், உமக்கென்ன சுகவீனம்? ஏதும் சுகவீனமென்றால் எனக்குத் தெரிவிக்க வொண்ணாதா? ஒரு துண்டிற் கீறி ஒரு ஆளிடம் கொடுத்துவிடக் கூடாதா? என்ன, ஒரு பையனாவது கிடையானா? நீர் வராததைப்பற்றி நான் அதிகமாக யோசித்துவிட்டேன், சரி, இப்பொழுது நான் என்ன செய்யவேண்டும் என்று தம்பிரத்தினம் சொல்லிநின்று பதைபதைத்தான், "இப்படி அந்த நாற்காலியை இழுத்துச் சமீபத்திற் போட்டுக்கொண்டு உட்காரும்" என்று அவனை இருக்கச்செய்து துரைரத்தினம் "எனக்கு அப்படிப் பெருஞ்சுகவீன மொன்றுமில்லை. முந்தைநாட் கடற்கரையிலிருந்து மீண்ட நேரந் தொடக்கம் ஒரு மெல்லிய கொதியும் தலையிடியும் உண்டாகியிருக்கின்றன" என்றார்.

* * *

"இன்றைக்கு இப்பொழுதே புறப்பட்டுக் கடற்கரைக்குப்போய்க் கொஞ்சநேரம் அந்தக் கடற்காற்றில் இருந்துவிட்டு வந்தால் உந்தத் தலைவலி அலுப்பு எல்லாம் மாறிவிடும்; ஆன படியால் சிரமத்தைப் பாராமல் புறப்படும்" என்று தம்பிரத்தினம் சொல்ல "இல்லை மிஸ்ரர், இரண்டுமூன்று நாட்களுக்கு நான் கடற்கரைக்குப் போகாமல் விட்டாற்றான் எனக்குச் சுகமாயிருக் கும்" என்று துரைரத்தினஞ் சொன்னார். "ஏன், அன்றைக்குக் கடற்கரையில் நடந்த விஷயத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி ஏதும் மனஸ்தாபமோ" என்று தம்பிரத்தினங் கேட்க, துரைரத்தினம் "மனஸ்தாபம் ஒன்றுமில்லை; ஆனால் அவைகளெல்லாம் மரியாதையான செயல்களல்ல" என்றார். "உங்களுக்கு இஷ்டமில்லையென்று கண்டால் அதனை இனியொருபோதுஞ் செய்யாமல் விடவேண்டியதுதானே; சரி, கடற்கரைக்கு இன்று போகாமல் விடுவேம்; நீர் எனது விடுதிக்கு வரவேண்டும்" என்று தம்பிரத்தினம் சொல்லத் துரைரத்தினம் "வேறொன்றுமல்ல, எனக்கு அதிக அலுப்பாயிருக்கிறது, நாளைக்குத் தவறாமல் வருகின்றேன்; உம்மைக் காணுவதற்காகத்தானே நான் அங்கு வருவது, ஆனால் உம்மை இப்பொழுது இங்கே கண்டுகொண்டேன்; உம்முடைய விடுதிக்கு இனிமேல் வருகின்றேன்" என்றார். "அதுசரி, ஆனால் லீலா நேற்றும் இன்றும் இரண்டு மூன்று முறை வந்து உம்மை விசாரித்தாள்; அதற்காகச் சொல்லுகிறேன்" என்று தம்பிரத்தினங் கூறத் துரைரத்தினம் "அந்தச் சிநேகிதம் எனக்குப் பிரியமில்லை அதனால் வீண்பேர் வரும்; இப்படி நான் சொன்னேனென்று அவர்களுக்கு நீர் ஏன் சொல்லுகிறீர்; அதற்காகத்தான் நான் கடற்கரைக்குப் போகாதொழிந்தேன்" என்றார். "அப்படி யெண்ணமிருந்தால் முந்தியே அவளுடன் சிநேகஞ் செய்யாது விட்டிருக்கலாமே; எனக்கு அதைப்பற்றி யொன்றுமில்லை; நீதியைச் சொல்ல வேண்டுமென்றதற்காகச் சொல்லுகின்றேன்; ஒருவர் உம்மீது உண்மையான விசுவாசம் வைத்திருக்கிற பொழுது, நீர் அலட்சியஞ் செய்வது சரியல்ல" என்று தம்பிரத்தினம் குறைகூறினான். "அவள் என்மீது உண்மையான விசுவாசம் வைத்திருக்கிறாளென்று உமக்கு எப்படித் தெரியும்" எனத் துரைரத்தினங் கேட்க, "ஐயோ, அதிலுஞ் சந்தேகமா, நேற்றும் இன்றும் நீர் அங்கு வரவில்லையென்று அவள் துடித்த துடிப்பும் பட்ட பரிதாபமும் கொஞ்சமல்ல, லீலா ஸ்நானஞ் செய்தாளோ, போசனஞ் செய்தாளோ என்பதுஞ் சந்தேகம்; இப்பொழுதும் அவளுடைய பரிதாபத்தைப் பார்க்கமாட்டாமற்றான் பாதியும் இங்கே வந்தேன்; அவள் ஒருவர்மீது இலகுவில் விசுவாசம் வைத்து நடப்பவளல்லள்; உம்முடைய விஷயத்திலே ஏமாந்துபோனாள்" என்று தம்பிரத்தினம் கவலையோடு சொன்னான்.

* * *

"தையலார் மயலிற் பட்டோர் தமக்கொரு மதியுண்டாமோ" என்ற பிரகாரம் பெண்ணாசை கொண்டவரின் மனமும் ஒரு வழிப்படுமா! தம்பிரத்தினங் கூறிய வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தே துரைரத்தினத்தின் வைராக்கியமும் அலுப்பும் அகன்றுபோயின. "ஐ ஸே, மிஸ்ரர் தம்பிரத்தினம், நான் இப்பொழுது அங்கே வர வேண்டுமென்றுதான் சொல்லுகிறீரா" என்று துரைரத்தினங் கேட்க, வேறென்ன சொல்லுகிறேன்; இனி உம்முடைய இஷ்டப்படி செய்து கொள்ளலாம்" என்றான் தம்பிரத்தினம். இருவரும் உடனே புறப்பட்டுத் தம்பிரத்தினத்தின் விடுதியைச் சேர்ந்து அங்கே சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். இதற்கிடையில் லீலா அங்கு வந்தாள். தம்பிரத்தினம் பின்னருங் கொஞ்சநேரம் அங்கே நின்றுவிட்டு வெளியே சென்றான். லீலாவும் துரைரத்தினமும் ஒரு மணித்தியாலம் வரையிலிருந்து பலவாறு சம்பாஷித்தார்கள். தம்பிரத்தினம் மீண்டு விடுதிக்கு வந்தபோது லீலா கடற்கரைக்கு உலாவப்போவதற்குத் தங்களிருவருடன் அவனையும் வரும்படி கேட் டாள். "அவர் தான் இனிக் கடற்கரைக்குப் போவதில்லையென்று சொல்லுகிறார்; இப்பொழுது வரமாட்டார்; ஆனபடியால் அந்த முயற்சியை விட்டுவிடு" என்றான் தம்பிரத்தினம். "இல்லை; அவர் வருவார்" என்றாள் லீலா. "ஏன், மிஸ்ரர் ரத்தினம், கடற்கரைக்குப் போவதா" என்று தம்பிரத்தினங் கேட்கத் துரைரத்தினம் "லீலா பிரியப்படுகிறபடியாற் போய்வருவோமென்று பார்க்கிறேன்" எனத் துரைரத்தினஞ் சொன்னார். மூவரும் ஒருங்கு புறப்பட்டுக் கடற்கரைக்குப் போனார்கள். இப்படியிவர்கள் முன்னொருபோதும் ஒருங்கு கூடிக்கொண்டு போனதில்லை. மூவரும் கடற்கரையிற் போயிருந்து வெகுநேரம் பொழுது போக்கியபின் மீண்டுவந்து தங்கள் தங்கள் வீடுகளுக்குப் போயினர்.

* * *

அதன்பின் துரைரத்தினம் தவறாது தம்பிரத்தினத்தின் விடுதிக்குப் போகத்தலைப்பட்டார். லீலா அவரை விட்டாலும் அவர் லீலாவை விடமாட்டார்போற் காணப்பட்டது. ஒருநாளைக்கு ஒருமுறையேனும் லீலாவைத் தரிசனஞ் செய்யாமலிருத்தல் துரைரத்தினத்திற்கு முடியாமலிருந்தது. உத்தியோக ஸ்தானத்திற்குப் போவதும் கடமைபார்ப்பதும் விடுதியில் வந்து போசனஞ் செய்வதும் போசனஞ் செய்து கையீரம் வற்றுமுன் தம்பிரத்தினத்தின் விடுதிக்குப் போய் லீலாவுடன் சம்பாஷிப்பதும் பின்னர்க்கடற்கரைக்குப்போவதுமேதுரைரத்தினத்தின் செயலாகவிருந்தது. மதுபானத்தை வெறுத்திருந்த அவர் அதனையும் பழையபடி கைக்கொள்ளத் தொடங்கினார். கடற்கரைக்குப் போகும்போது மூவரும்; சிற்சில சமையங்களில் தம்பிரத்தினமின்றி இருவரும் போகத் தலைப்பட்டுக்கொண்டனர். அறநனைந்தவருக்குக் கூதலில்லையல்லவா. இப்படியாகச் சிலநாட்செல்ல, துரைரத்தினம் தம்முடைய உத்தியோக கடமையையும் அலட்சியஞ் செய்வாராயினர். உத்தியோக ஸ்தானத்திற்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரமமாகப் போகாமல் ஒரு வாரத்தில் ஒரு நாள் இரண்டு நாளைக்குச் சுகமில்லையென்று சொல்லி விடுதலைபெற்றுக்கொண்டு நிற்கத்தொடங்கினார். உத்தியோக ஸ்தானத்தில் இவர் பார்க்கும் வேலை எழுத்து வேலையாகும். லீலாவைப்பற்றியே சதா சிந்தனையாக விருந்தமையினால் தாம் உத்தியோக ஸ்தானத்தில் எழுதும் எழுத்து வேலையில் தம்மை மறந்து "லீலா" என்று எழுதிவிட்டுப் பின்னர் சரிபிழை பார்க்கும் போது கண்டு தாம் எழுதிய கடுதாசியைக் கிழித்துவிடுவார். வாரந் தோறும் தம் மனைவியாகிய நேசமணிக்குத் தவறாது காகிதம் எழுதிக்கொண்டுவந்த துரை ரத்தினம் இதன் பின்னர் இரண்டு மூன்று வாரத்திற் கொருமுறையும் பின் மாசமொரு முறையும் பதில் எழுதத் தொடங்கினார். தமது மனைவிக்கு மாசந்தோறும் பணம் அனுப்பிவருங் கிரமமும் காலகதியில் இல்லாதொழிந்தது. லீலா விஷயமாகத் துரைரத்தினம் தமது சம்பளத்திற் கூடியபகுதியைச் செலவிட்டு வந்தார்.

* * *

உலகம் பலவிதம்: 1927 செப்டெம்பர் 22

நேசமணி - துரைரத்தினத்தினம்
(முற்றொடர்)

"எனது நாயகன் பல மாசங்களாக ஊரிற்கு வராமலும் எங்களைக் காணாமலும் இருந்தாலும் கிரமமாகக் கடிதமும் பணமும் அனுப்பிவருகின்றாரே, ஆதலின் எங்களிடத்தில் அன்பாகவே யிருக்கின்றார்; அவர் சுகமாக இருந்தாலே போதும்" என்ற மன ஆறுதலோடி ருந்த நேசமணி, துரைரத்தினத்தின் காகிதம் முன்போற் கிரமமாக வாராமையைக் கண்டு கவலை கொண்டாள். நாயகனுடைய பதில் வந்திருக்கக்கூடுமென்று ராமனைத் தபாற்கந்தோருக்கு அனுப்பிவிட்டு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். இராமன் மீண்டு வந்து "அம்மா, நான் போனது சும்மாவாக முடிந்தது, காகிதம் வரவேயில்லை"; என்று சொல்லக்கேட்டு நேசமணி கலக்கங்கொண்டு கண்ணீர் விடுவாள். அப்படிக் கலங்குபவளைப் பிள்ளைகளும் ராமனும் ஆறுதல் சொல்லித்தேற்ற ஒருவாறு தேறுவாள்; "ஐயோ, என் பிராணேசர் ஒருபோதும் இப்படிக் கடிதமெழுதாம லிருக்கமாட்டாரே, அவருக்கு ஏதும் சுகவீனம் நேர்ந்ததோ, இல்லையேல் உத்தியோக கருமமாக வேறெங்கேனுஞ் சென்றிருக்கின்றாரோ; இல்லாவிட்டால், யாராகினுந் துரோகிகள் எனக்கும் என் குழந்தைகட்கும் மாறாகக் கோள்மூட்டி அவர் மனசைப் பேதித்து விட்டார்களோ; ஒன்றுந் தெரியவில்லையே" என்று இப்படி இடையிடையே எண்ணியெண்ணிச் சஞ்சலப்படுவாள்; இப்படி நேசமணி ஒருதினம் சஞ்சலத்தோடு இருக்கும்போது, வழுக்கி வீழ்பவனுக்கு ஊன்றுகோல் அகப்பட்டாற்போல, "பிள்ளை, எப்படி உங்கள் சுகம், நான் வெகுநாளாய் இந்தப் பக்கம் வரவில்லை, உங்கள் செய்தியென்ன, தம்பியினுடைய காகிதம் கிரமமாக வருகிறதோ, இந்த நாளில் அவர் இங்கே வருகிற நோக்கமில்லை யோ" என்று விசாரித்துக்கொண்டு முருகரம்மான் அங்கே வந்தார். அந்தச் சமையத்தில் முருகரம்மானைக் கண்ட நேசமணிக்கு உண்டான சந்தோஷத்திற்கு ஒரு எல்லையில்லை. "அம்மான், வாருங்கள், வாருங்கள்" என்று சொல்லி நேசமணி இன்சொற் கூறி ஆசனமுதவி அவரை உபசரித்தாள். "என்ன, மகளே உனக்கு ஏதும் சுகமில்லையோ, மெத்த மெலிஞ்சுபோனாய்" என்று பரிவுடன் கேட்டார். "இல்லை, அம்மான், கடவுள்கிருபையாற் சுகவீனமொன்றுமில்லை" என்று நேசமணி சொன்னாள்.

* * *

"பிள்ளை, நான் தம்பியினுடைய சுகத்தைப்பற்றி அறிந்துகொண்டு போகலாமென்றெண்ணியே இங்கு வந்தேன்; எப்படி அவருடைய சுகம்; ஏதும் காகிதம் இந்தநாளில் வந்ததுண்டோ" என்று முருகர் கேட்டலும், நேசமணியின் முகம் மாறியது. அவள் கவலையோடு கூடியவளாய் "அம்மான், சிலமாசங்களாக அவருடைய காகிதம் ஒழுங்காக வருவதில்லை; ஆனாலும் நான் ஒவ்வொரு கிழமையும் கிரமமாகத் தபால் எழுதிப் போடுகிறேன்; என்ன காரணமென்று தெரியவில்லை; ஏதுஞ் சுகவீனமோ என்று பயப்படுகின்றேன்" எனக் கூறிக் கண்கலங்கினாள். "பிள்ளை, நீர் எப்போதாயினும் கடிதத்தில் ஏதும் கடுமையாக எழுதியதுண்டோ" என்று முருகர் கேட்க, "அம்மான், உங்களுக்கு என் குணம் தெரியாதா; நான் அப்படிப்பட்டவளல்லவே" என்று சொல்லிக் கண்ணீர் சிந்தினாள். "ஓம் மகளே, நீ அப்படிப்பட்டவளல்லள்; அது எனக்குத் தெரியும்; சரி, அதற்கு இப்போது என்ன செய்யலாம், சொல்லு பார்ப்போம்" என்று முருகர் கேட்டார். "அம்மான். இந்தநாட்களில் நீங்கள் அந்த ஊருக்குப் போகமாட்டீர்களா" என்று நேசமணி கேட்க, "பிள்ளை, அவசியம் போகவேண்டிய கருமமில்லை; நீ விரும்பினால் இதற்காக ஒருமுறை போய்வருவேன்; நான் என்ன செய்யவேண்டும், சொல்" என்று பின்னரும் முருகர் கேட்டார். "அம்மான் நான் பயணச் செலவு தருகிறேன்; நீங்கள் இரண்டொருவேளையிற் புறப்பட்டு அவருடைய செய்தி என்னவென்று அறிந்துகொண்டு வருவீர்களானாற் பெரிய உதவியாகவிருக்கும்" என்று நேசமணி சொல்ல "அதற்கென்ன மகளே நான் போகின்றேன்; பணச்செலவு நீ தரவேணுமா; முருகரைப்பற்றி என்ன நினைக்கிறாய்; நீ பணந் தரவேண்டாம், நான் போய் அறிந்துவருகிறேன்" என்று சொல்லிச் சிறிதுநேரம் பின்னரும் அங்கிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கதைகளும் பேசிவிட்டுத் தன் வீட்டிற்கு முருகர் மீண்டார். நேசமணியும் தன் கவலை சிறிது குறையப்பெற்றவளாய் அங்கிருந்தாள்.

* * *

இது நிகழ்ந்து இரண்டு மூன்று நாட் சென்றபின்பு முருகரம்மான், துரைரத்தினம் உத்தியோகமாகவிருக்கும் ஊருக்குப் போய்ச் சேர்ந்தார். அவர் போனவுடன் துரைரத்தினத்தின் விடுதிக்குப் போகவில்லை. அந்த ஊரில் முருகரை அறிந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுடைய விடுதிகளில் முருகரம்மான் தங்கியிருந்துகொண்டு துரைரத்தினத்தைப் பற்றி விசாரணை செய்யத் தொடங்கினார். விசாரணை செய்தபோது சிலர் துரைரத்தினத்தை வெகு நாளாகத் தாங்கள் காணவில்லையென்றார்கள். சிலர் துரைரத்தினத்திற்கு ஏதோ சுகமில்லைப் போலும் என்றார்கள். வேறு சிலர் அருமந்த மனுஷன் தம்பிரத்தினத்தின் கூட்டுறவால் மண்ணாய்ப்போய்விட்டார் என்றார்கள். இன்னுஞ் சிலர் துரைரத்தினம் கடன்காரருக்குப் பயந்து வெளியிற் புறப்படுவதில்லை யென்றார்கள். மற்றுஞ்சிலர் அவரைப்பற்றித் தம்பிரத்தினத்திடங் கேட்டாற்றான் தெரியுமென்றார்கள். ஒழிந்தசிலர் அந்தாள் இங்கே ஒரு பறங்கிப் பெட்டையை வைத்துக்கொண்டு கஷ்டப்படுகின்றார் என்றார்கள். மேலுஞ் சிலர் முருகரம்மானிடத்திலே துரைரத்தினத்தைப்பற்றி விசாரிக்கத் தொடங்கினார்கள். ஒருவராவது துரைரத்தினத்தை நன்மையாக முருகருக்குச் சொன்னாரல்லர். சிலநாட் சென்றபின் முருகர் துரைரத்தினத்தை நேரிற் காணுவோமென்று நினைத்துக் கொண்டு அவருடைய விடுதிக்குப் போனார். அங்கே துரைரத்தினமில்லை. அப்பொழுது பின்னேரம் நாலரைமணியிருக்கும். அங்கு நின்ற வேலைக் காரனை விசாரித்தபோது அவன், இப்பொழுது தம்பிரத்தினத்தின் விடுதியில் அவரைக் காண லாமென்றும் இரவு 10 மணிக்குப் பின்பு தான் விடுதிக்கு மீண்டு வருவாரென்றும் சொன்னான். முருகர் நேரே தம்பிரத்தினத்தின் விடுதிக்குப் போனார்.

* * * *

உலகம் பலவிதம்: 1927 செப்டெம்பர் 29

நேசமணி - துரைரத்தினத்தினம் (முற்றொடர்)

முருகரம்மான் தம்பிரத்தினத்தின் விடுதியில் விசாரித்தபொழுது, துரைரத்தினம் அங்கே யில்லையென்றும் ஒருபோது கடற்கரைப் பக்கமாகப் போயிருக்கலாமென்றும் அங்கு நின்றோர் சொல்லினர். முருகர் நேரே கடற்கரைக்குப் போனார். கடற்கரையில் துரைரத்தினத்தைக் காணவில்லை, முருகர் சிறிது தூரம் கடற்கரையோரமாக நடந்து சென்றார். கடற்கரையில் ஒரு பாறைக்கல்லின்மேல் ஒருவாலிபன் "சிகறற்" புகைத்துக்கொண்டு தன்னந்தனியே இருப்பதை முருகர் கண்டு "தம்பீ, துரைரத்தினம் இந்தப்பக்கமாக வரக் கண்டீரோ" என்று கேட்டார். அந்த வாலிபன் முருகரைப்பார்த்து "அண்ணே, இப்படிவாரும்; உம்மை எனக்கு விளங்கவில்லை; எவ்விடம் இருப்பது" என்று கேட்பதற்கிடையில் முருகர் அவனுக்குச் சமீபமாகவந்து உட்கார்ந்து கொண்டு "தம்பீ, நான் யாழ்ப்பாணம்; என்னுடைய மகன் இங்கே ஒரு சுருட்டுக் கடையில் நிற்கிறான்; அவனைப் பார்த்துக்கொண்டு போகும்படி வந்து நிற்கிறேன்; வந்து நாலைந்து நாள்; நாளைப் பின்னேரம் ஊருக்குப் போகலாமென்று பார்க்கிறேன்; இந்தத் துரைரத்தினம் நமக்கு அயல்வீட்டுப் பிள்ளை; நான் புறப்படும்போது அவருடைய வீட்டிலுள்ளவர்கள் ஒருகால் அவரையுங் கண்டுகொண்டு வரும்படி சொன்ன வர்கள்; விடுதியிற்போய் விசாரித்தேன்; அங்கே யில்லை; கடற்கரைக்குப் போயிருக்கக்கூடு மென்று சொன்னார்கள்; ஆனதாற்றான் இப்படி வந்தேன்" என்றார் "அண்ணே, உம்முடைய பெயரென்ன; நீங்கள் அவருக்குச் சொந்தமோ" என்று அந்த வாலிபன் கேட்க, முருகர் "என்னை முருகேசு என்று சொல்லுவார்கள்; நான் அவருக்கு அயலல்லாமற் சொந்தமல்ல தம்பீ" என்றார். "அவருடைய வீட்டுக்காரரின் சுகம் எப்படி; அவர் ஏதும் பணம் ஊருக்கு அனுப்புகிறவரா; சில மாதகாலமாய் அவர் ஊருக்கு வரவில்லைப் போலிருக்கிறது; ஏதும் மனஸ்தாபமுண்டோ" என்று வாலிபன் கேட்க "அயலென்றாலும் எனக்கு அவர்களுடைய சமாசாரம் நல்லாய்த் தெரியாது; அப்படி ஏதும் மனஸ்தாபமிருப்பதாகத் தெரியவில்லை; அப்படித்தான் இருந்தாலும் இவருடைய பெண்சாதி ஒன்றைச் சாதித்து நடப்பவளல்ல; அவள் ஒரு குணமான பிள்ளை; பொறுமையுள்ள புண்ணியவதி" என்று முருகர் சொன்னார். "அவரை இப்பொழுது காணத்தான் வேண்டுமோ" என்று அந்த வாலிபன் கேட்க "ஓம் தம்பீ, கண்டால் நல்லது" என்று முருகர் சொன்னார். அந்த வாலிபன் நூற்றைம்பது இருநூறு யார் தூரம்வரையிற் கடற்கரையோரமாகவிருந்த இருவரைச் சுட்டிக் காட்டி "அண்ணே, அதோ இருக்கிறவருள் ஒருவர் துரைரத்தினமாக விருக்கவேண்டும், போய்ப்பாரும்" என்றான். "மெத்த நல்லகாரியம்" என்று சொல்லிவிட்டு முருகரம்மான் அந்த இருவரையும் நோக்கிச் சென்றார். முருகருடன் பேசிய வாலிபன் தம்பிரத்தினமாகும்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிரத்தினம் கடற்கரைக்கு வரும்போது துரைரத்தினம் லீலா என்னுமிவர்களோடுதான் கூடிக்கொண்டு வந்தவன்; அவர்களிருவரையும் அங்கிருந்து சம்பாஷிக்கவிடுத்துத் தான் தனியேவந்து இந்தப் பாறையிலிருக்கும்போதே முருகர் அவனைக்கண்டு துரைரத்தினத்தைப் பற்றி விசாரித்தார். முருகர் அந்த இருவருக்குஞ் சமீபமாகப் போனபோது அங்கிருப்பவருள் ஒருவர் துரைரத்தினந்தானென்று கண்டார். மற்றவர் தாம் முந்தி நினைத்தபடி ஒரு ஆண்பிள்ளையல்ல வெள்ளைக்காரச் சிறுமியெனக்கண்டார். இருவரு மிருந்த உல்லாசத்தையும் சரசசல்லாபத்தையுங் கண்டு முருகர் அவர்களுக்குச் சமீபத்திலே போகக் கூசியவராய்ச் சிறிது தூரத்திற்போய் நின்றார். நிற்றலும் துரைரத்தினம் அவரைக்கண்டு திடுக்குற்றார். முருகர் அங்கேவருவாரெனத் துரைரத்தினம் எப்போதாயினும் காத்திருந்தவரல்லர். அந்தச் சந்தர்ப்பத்தில் அவரைக் கண்ட துரைரத்தினத்திற்குப் பெரும் பயமாகவிருந்தது. துரைரத்தினம் வெளியில் ஒன்றும் காட்டாமல், சிரித்துக்கொண்டு "அம்மான், வாருங்கள்; வாருங்கள்; என்ன இந்தப்பக்கம்" என்று சொல்லிக்கொண்டு எழுந்து அவரைக் கையிற் பிடித்து அழைத்துக்கொண்டுபோய் இருத்தினார். லீலா சிலயார் தூரத்தில் இருந்தாள். முருகர் நாற்புறமும் பார்த்துவிட்டு "தம்பி, எப்படி உங்கள் சுகம்; இந்தஊர் பிடித்துக்கொண்டதுபோலும்; அந்தப்பக்கத்திற்கு மார்கழி விடுதலைக்கும் வரவில்லையாமே; ஒருபோது உத்தியோகமுயற்சி கடுமையாக்கும்" என்று கேட்டார். "இந்தமுறை விடுதலைக்கு ஊருக்கு வர வசதிப்படவில்லை; அம்மான், என்னோடுகூட வேலை பார்க்கிறவர்களுள் ஒருவர் சுகமில்லையென்று விடுதலைபெற்றுக்கொண்டு போய்விட்டார்; இன்னொருவர் விவாகஞ்செய்யவென்று விடுதலை பெற்றுக்கொண்டு போய்விட்டார்; அவர்களுடைய கடமையையும் நான்தான் பார்க்கவேண்டி ஏற்பட்டுவிட்டது; அதனாற்றான் இந்தமுறை ஊருக்குவரவில்லை; அது கிடக்க, வீட்டிலுள்ள வர்களுடைய சுகம் எப்படி; இங்கே புறப்படும் போது எங்கள் வீட்டுப்பக்கமாக நீங்கள் போகவில்லையோ; ஏதும் விசேடமுண்டோ" என்று துரைரத்தினங்கேட்க "நான் அங்கேபோனேன்; பிள்ளையைக்கண்டு கொழும்புக்கு நான் போகவிருக்குஞ் செய்தியையுஞ் சொன்னேன்; அம்மான், போனால் அவருடைய சுகமெப்படி யென்றும் பார்த்துக்கொண்டுவாருங்கள் என்று பிள்ளைசொன்னாள். இந்தமுறை விடுதலைக்கு நீர் வரவில்லையென்றுஞ் சொன்னாள்" என்று முருகர் சொன்னார். "எல்லாருஞ் சுகந்தானே" என்று துரைரத்தினங் கேட்க முருகர் "சுகத்துக் கென்ன குறை" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார். "அம்மான்; நீங்கள் எப்பொழுது இங்கே வந்தீர்கள்; எங்கே நிற்கிறீர்கள்" என்று துரைரத்தினங் கேட்க "முருகர் நான் வந்து இன்று நாலுநாள்; இங்கே ஒரு சுருட்டுக் கடையிலேதான் தங்கிநிற்கிறேன்" என்றார்.

* * *

முருகர் துரைரத்தினத்தைப்பார்த்து "இது ஆர்; தங்கச்சியைத் தெரியவில்லை;" என்று மெல்லக்கேட்டார். "என்னுடைய சினேகன் ஒரு பறங்கி வாலிபர்; இவர் அவருடைய சகோதரி; இருவரும் இங்கே கூடிக்கொண்டு உலாத்திற்கு வந்தவர்கள்; வந்தவிடத்தில் அவருடைய முதலாளியாகிய வெள்ளைக்காரத் துரையும் தற்செயலாக இங்கே வந்தார். அதனாலே சகோதரியை இங்கே இருக்கச் சொல்லிவிட்டுத் தமையன் துரையோடு பேசிக்கொண்டு உப்படிப்போகிறார்; ஒரு கால்மணித்தியாலத்தில் மீண்டு வந்துவிடுவார்; அவரைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று துரைரத்தினஞ் சொல்ல "ஆம், ஆம், தம்பி நம்பிவிட்டுப் போன பிள்ளையைத் தனியேவிட்டுப் போவது சரியல்ல" என்று முருகர் மிக்க மரியாதையோடு சொல்பவர்போற் சொல்லி "பிள்ளைக்குத் தமிழ் தெரியுமோ" என்று கேட்க, "கொஞ்சங் கொஞ்சம் தெரியும்; மற்றவர்கள் பேசுவதை நன்றாய் விளங்கக்கூடும்" என்று துரைரத்தினஞ் சொன்னார். துரைரத்தினத்தின் வாயில் மதுபானம் மணத்ததை முருகர் அவதானித்தார். "சரி, தம்பி, நான் நாளைக்குப் பின்னேரம் ஊருக்குப்பயணம்; வீட்டிலுள்ளவர்களுக்கு ஏதுஞ் சொல்லவேண்டி யிருந்தாற் சொல்லும்" என்று முருகர் கேட்க, துரைரத்தினம் "அம்மான், தயவுசெய்து நாளைக் காலை என்னை ஒருதரம் விடுதியில்வந்து கண்டால் நல்லது" என்றார். "அதற்கென்ன அப்படியேசெய்கிறேன்; எந்நேரம் வரையில் வருவது" என்று முருகர்கேட்க, துரைரத்தினம் 8 மணிக்குமுன் வந்தால் நல்லது" எனலும் முருகர் ஓம் என்று சொல்லிவிட்டுப் போயினர். அதன்பின் தம்பிரத்தினம் அவர்கள் இருவரும் இருந்த இடத்திற்குவந்து சிறிதுநேரம் பேசிய பின் மூவருமாகப் புறப்பட்டுத் தத்தம் விடுதிகளுக்கு மீண்டனர். முருகர் தம்மைக் கடற் கரையில் அந்த நிலைமையிற் கண்டமை துரைரத்தினத்திற்குச் சிறிது யோசனையையுண்டாக்கி விட்டது. முருகர் ஒரு பேயனல்லர் அதிவிவேகி யென்பது துரைரத்தினத்திற்கு நல்லாய்த் தெரியும்.

* * *

உலகம் பலவிதம்: 1927 ஒக்டோபர் 13

நேசமணி - துரைரத்தினத்தினம் (முற்றொடர்)

முருகர் முதனாட் சொன்னபிரகாரம் அடுத்தநாள் துரைரத்தினத்தின் விடுதிக்குப் போயிருந்தார்; அங்கு அவர் போகும்போது பலர் நிற்கவும் இருக்கவுங் காணப்பட்டார்கள். துரைரத்தினத்தை வெளியிற் காணவில்லை; விடுதியில் இருந்தவர்களும் நின்றவர்களும் யாரென்று முருகர் உசாவியபோது, அவர்களெல்லாரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரைரத்தினத்திற்குக் கடன் கொடுத்தவர்களென அறிந்தார்; புடைவை விற்கும் அவ்கானியர் இருவர் நின்றனர். செட்டிவீட்டுக் கணக்கனொருவன் நின்றான். சவர்க்காரம் புசர்மா வாசனாதிரவியம் விற்கும் வியாபாரியொருவன் நின்றான். அந்நியநாட்டுக் குடிவகைக்கடைச் சிறுவனொருவன் நின்றான். இப்படி இன்னுஞ் சிலர் நின்றனர். இவர்களெல்லாரும் ஒரே நேரத்தில்வந்து நிற்பதற்குக் காரணமென்னவென்று முருகரம்மான் அங்கு நின்ற கடன் கொடுத்தவர்களுள் ஒருவரை வினவிய போது, துரைரத்தினத்திற்கு முதனாள் ஒரு கடன் விறாந்து பிறந்திருக்கின்றதென்றும், அதற்குமுந்தி தாங்கள் தங்களுக்கு வரவேண்டிய பணத்தில் ஏதோ அகப்பட்டதை அறவிட்டுக் கொண்டு போகும் நோக்கமாக வந்து நிற்பதாகவுஞ் சொன்னார். "இப்பொழுது ஆள் எங்கே" என்று முருகர் கேட்க "ஆளைக் காணவில்லை" என்று அந்த வியாபாரி சொன்னான். முருகருக்கு விஷயம் விளங்கிவிட்டது இப்பொழுது துரைரத்தினத்தின் நிலைமை "திடங்கொண்ட ராமபாணஞ் செருக்களத் துற்றபோது, கடங் கொண்டார் நெஞ்சம்போலக் கலங்கினான் இலங்கைவேந்தன்" என்றவாரிருந்தது; முருகர் தாம் அங்குநின்று துரைரத்தினத்தைக் காணுதல் முடியாதென்பதையும் கண்டாலும் பயனில்லை யென்பதையும் மனசில் வைத்துக்கொண்டு அவ்விடத்தைவிட்டு நீங்கி அன்று பின்னேரம் புகைரதமேறி யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்ந்தார்.

* * *

முருகர் யாழ்ப்பாணத்திற்கு மீண்டு வந்த அன்று பின்னேரம் 4 மணி வரையில் நேசமணி வீட்டிற்குச் சென்றார். கவலையோடு கூடியிருந்த நேசமணிக்கு முருகரைக் கண்டமாத்திரத்தே கவலையெல்லாம் ஆதவனைக்கண்ட பனிபோல் அகன்றன. "அம்மான், வாருங்கள், வாருங்கள், இந்த நாற்காலியில் உட்காருங்கள்; எப்போது வந்தீர்கள்" என்று மிக்க மகிழ்ச்சியோடும் உபசாரத்தோடுங் கூறினாள். "நான் இன்று காலைதான், தங்கைச்சி, வந்து சேர்ந்தேன்" என்று சொல்லிக்கொண்டு ஒரு பெருமூச்சோடு முருகர் நாற்காலியில் உட்கார்ந்தார். முருகருடைய முகத்திற் சந்தோஷமில்லாமையையும், அவர் வெறுங்கையோடு வந்திருப்பதையும் நாற்காலியிலிருக்கும்போது விட்ட பெருமூச்சையும் அவதானித்த நேசமணியினுடைய முகத்திலிருந்த சந்தோஷம் மின்னல்போல் மறைந்தது. தன்னுடைய நாயகனைப்பற்றி முருகர் ஏதுஞ் சொல்லுவார் என்று ஐந்து நிமிஷம் வரையில் நேசமணி யாதும்பேசாது அவருடைய வாயையே பார்த்துக் கொண்டிருந்தார். முருகரும் மௌனமாயிருந்தார்; "அம்மான், எங்களுடைய ஆட்களையும் கண்டீர்களோ" என்று மிக்க ஆவலுடன் நேசமணி கேட்க, "கண்டேன், பிள்ளை; கண்டென்ன, காணாதுவிட்டென்ன" என்று முருகர் அதிக சலிப்போடும் வெறுப்போடும் மெல்லச் சொன்னார்; முருகர் சொன்ன மறுமொழியும் சொன்ன விதமும் நேசமணியின் மனசிற் பெருந் திகிலை உண்டாக்கிவிட்டன. "அம்மான், ஏதும் விசேஷமோ? அவருக்கு ஏதுஞ் சுகவீனமோ? சீக்கிரஞ் சொல்லுங்கள்; என்மனம் பதறுகின்றது" என்று மிக்க பதைபதைப்போடு கேட்டாள். சுகவீனம் ஒன்றுமில்லை, பிள்ளை, அந்த வயிற்றெரிச்சலை நான் வந்து உனக்குச்சொல்லி, சும்மாவிருந்த உன்மனத்தை வருத்தவேண்டி வந்துவிட்டதே என்றதையிட்டுத்தான் யோசிக்கின்றேன்" என்று முருகர் மிக ஆறுதலாகச் சொன்னார்.

* * *

அம்மான், அவருடைய சீவனுக்கு ஒரு பொல்லாங்கு மில்லையென்றால் அவ்வளவும் எனக்குப் போதும், இனி, சங்கதியென்ன எல்லாம் விபரமாகச் சொல்லுங்கள்; நீங்கள் வந்துவிட்டீர்களோ என்று ஒவ்வொரு நாளும் உங்கள் வீட்டிற்கு ராமனை அனுப்பி விசாரித்துக் கொண்டிருந்தேன்" என்றாள் நேசமணி. "மகளே, நான் வந்தவுடன் இங்கே வருவேன் என்று உனக்குத் தெரியுந்தானே, நீ ஏன் வீணாக ஆள் அனுப்பிக்கொண்டிருந்தாய்; என்னுடைய குணம் உனக்குத் தெரியாதா? ஒரு கருமத்தைச் செய்வேனென்று உடன்பட்டால் முருகன் தவறாமற் செய்வான் தானே..." என்று இந்த விதமாக முருகர் தம்முடைய திறமைகளைப் பற்றிப் பேசினாரேயல்லாமல் நேசமணியின் கேள்விக்குப் பதில் சொன்னாரல்லர். நேசமணி அவர் சொல்வதைப் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, "அம்மான் உங்களுடைய காரியம் எனக்குத் தெரியுந்தானே, அதுகிடக்க, அவரைப்பற்றிக் கொஞ்சஞ் சொல்லுங்கள்" என்று பின்னரும் கேட்டாள்; "பிள்ளை, அது பெரிய பாரதம்; ஐயோ அருமந்தஆள் மண்ணாய்ப் போச்சு; உன்னுடைய வாழ்வும் அநியாயமாய்ப் போனது; எல்லாம் விதியின்படிதான் நடக்கும்; எழுதாவிதிக்கு அழுதாவதென்ன" என்று முருகர் பின்னரும் ஞானம்பேசத் தொடங்கினாரே யல்லாமல் துரைரத்தினத்தின் செய்தி இன்னதெனச் சொன்னாரல்லர். இதற்கிடையில் இராமன் முருகருக்கு ஒரு பாத்திரத்திற் கோப்பி கொண்டு வந்து கொடுத்தான்; முருகர் அதை வாங்கிக் கொண்டு "இது என்ன" கோப்பியா தேயிலையா" எனலும் ராமன் கோப்பியென்றான்.

* * *

"பிள்ளை, கோப்பி என்ன கொட்டையாக வாங்கி இடித்து வைத்துக்கொள்வதோ, இல்லாவிட்டால் தூளாகக் கடையில் வாங்குவதோ" எனலும் நேசமணி கொட்டை வாங்கி இடித்து வைத்துக்கொள்ளுகிறோம், அம்மான்" எனலும் "ஓம் பிள்ளை, அப்படித்தான் செய்யவேணும், தூளாய் வாங்குவது பெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஷ்டம், அல்லாமலும் சிலர் சிரட்டைக்கரியையுஞ் சேர்த்துக் கோப்பியோடு இடித்துத் தூளாக்கி வைத்து விற்கிறார்கள்" என்று பின்னரும் வேறுகதை பேச ஆரம்பித்தார்; "அம்மான், கோப்பியைக் குடித்து விட்டுப் பேசுங்கள்; சூடாறப்போகின்றது" என்று நேசமணி சொல்ல, ஒருவாறு முருகர் கோப்பியைக் குடித்து முடித்தார். பலமுறையுந் தான் கேட்பவும் முருகர் துரைரத்தினத்தைப்பற்றி ஒன்றுஞ் சொல்லாமையினால், இனிமேல் அவராகச் சொன்னாற் கண்டுகொள்வேமென் றெண்ணிக்கொண்டு நேசமணி யாதும் பேசாமலிருந்தாள். "மகளே, மனவருத்தமான செய்தியானபடியாற்றான் நான் உன் புருஷன் விஷயத்தை உனக்குச்சொல்லக் கூசினேன்; ஆனாற் சொல்லாமலும் முடியாது; சுருக்கமாகச் சொல்லு கிறேன்; கேள்; அவர் முந்திய துரைரத்தினமல்லர்; அவர் கெட்டவர்களுடன் கூடிக் குடிக்கவும் பழகி, தம்முடைய உத்தியோகத்தை அலட்சியஞ்செய்து, லீலா என்னுமொரு பறங்கிச் சிறுமியிற்சிக்கி, உள்ள பணத்தையெல்லாம் அவளுக்கும் குடிவெறிக்கும் அள்ளிக்கொடுத்துப் பெருங் கடனாளியாகி, நூற்றெட்டுக் கடன்காரர் வந்து நெருக்க கடன் விறாந்திற்கு ஒளித்துத் திரிகிறார்; ஒருநாள் மாத்திரம் அந்தப் பறங்கிச்சியோடும் தம்பிரத்தினமென்ற அவருடைய கூட்டாளியோடும் கடற்கரையில் அவரைச் சந்தித்தேன். அடுத்தநாள் அவருடைய விடுதிக்கும் போனேன்; ஆனாற் கண்டுகொள்ள முடியவில்லை; நான் அவர் விஷயமாகக் கேள்விப்பட்டதையும் நேரிற் கண்டதையும் விபரமாகச் சொன்னால், மகளே உனக்கு அதிக வருத்தமாகும்; ஏதோ நீ ஆலோசித்துச் செய்யக்கூடியதைச் செய்" என்று முருகர் சொல்லக், கேட்டபோது; நேசமணிக்கு உண்டான கவலைக்கு எல்லையில்லை யெனலாம்.

* * *

உலகம் பலவிதம்: 1927 ஒக்டோபர் 20

நேசமணி - துரைரத்தினத்தினம் (முற்றொடர்)

துரைரத்தினத்தின் விஷயங்களை யெல்லாம் முருகர் ஒன்றும் ஒழியாமல் நேசமணிக்குச் சொல்லி "மகளே, நீ கவலைப்படாதே; நம்மால் ஆவதொன்றுமில்லை; எல்லாந் தெய்வத்தாலாவதாகும்; நடக்கவேண்டியது நடந்தேதீரும் என ஆறுதலும் கூறிப்போயினர். நேசமணியின் மனத்திற் குடிகொண்ட துயரத்திற்கு ஒரு எல்லையில்லை; அவள் தன்பிள்ளைகள் காணாவண்ணம் மறைவிலிருந்து அழுதுவிட்டுக் கண்ணீரையுந் துடைத்துக்கொண்டு பின்வந்து தன் வீட்டுக் கருமங்களைச் செய்தாள். அன்றிரவு பிள்ளைகளுக்கும் இராமனுக்கும் ஆகாரங் கொடுத்துவிட்டுத்தான் ஒன்றும் உண்ணாது படுக்கைக்குப் போனாள். படுத்தபின் அவள் கண்களிலிருந்து கண்ணீர் வந்தனவேயன்றி நித்திரை வரவில்லை. கவலை தலைப்பட்டால் உறக்கம் எப்படி வரும்! "ஐயோ, என் கணவர் கடன் விறாந்திற்கும் ஒளித்துத் திரியக் காலம் வந்துவிட்டதே; இப்படியானால் இனி இப்பிள்ளைகளின்கதி யென்னாகும்; கடனுக்காக ஒரு மணித்தியாலந்தானும் என் கணவரைப்பிடித்து மறியல் வைத்தாற் பின்நாம் இந்த உலகத்தில் உயிரோடு இருக்க நியாயமுண்டா! மானமழிந்த பின் வாழாமை முன்னினிதே யென்பர். ஆ, தெய்வமே, எனக்கேன் இப்படி விதித்தாய்; நான் ஒருவருக்குந் தீமைசெய்தறியேன்; ஒருவர் பொருளுக்கு ஆசைப்பட்டறியேன்" என்று இந்த விதமாக இரவு முழுவதும் அவள் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணித் தாமரையிலையில் நீர்போற் கலங்கினாள். அவளுக்கு ஆறுதல் சொல்வார் எவருமில்லை. அந்த நீடித்த இரவு ஒருவாறு விடிந்தது. நேசமணி இராமனைக் கூப்பிட்டு "இராமன், வைரமுத்துவிடம்போய் நான்சொன்னதாகச் சொல்லி வண்டியைப் பூட்டு வித்துக்கொண்டுவா" என்றுசொல்லி யனுப்பி விட்டுத் தன் குழந்தைகட்குக் காலைப்போசன மூட்டினாள். சிறிதுநேரத்தால் வண்டி அங்கே வந்துவிட்டது. அவள் இராமனை வீட்டிற்குக் காவலாக வைத்துவிட்டுக் குழந்தைகளையுங் கூட்டிக்கொண்டு வண்டியிலேறித் தன் தாய் தகப்பன் வீட்டிற்குப் போனாள். அந்தச்சமையத்தில் தகப்பன் அங்கேயில்லை. தன்மகள் அதி காலையில் வந்தமையையிட்டுத் தாய் ஓடிவந்து "மகளே, ஏதும் விசேஷமோ" என்று கேட்டாள். "அம்மா, அப்படியொன்றுமில்லை" யென்றாள் நேசமணி.

* * *

தாய் தன் மகளை அன்புடன் கூட்டிக் கொண்டுபோய் இருக்கச்செய்து "மகளே, உன் முகம் மெத்த வாட்டமாயிருக்கிறது; ஏதோ விசேஷமிருக்கவேண்டும்; இல்லாமல் நீ ஒருபோதும் இப்படிப் புறப்பட்டு வரமாட்டாய்; உன் புருஷன் உங்கே வந்திருக்கிறாரா" என்று மிக்க ஆவலுடன் கேட்டாள். "அவர் வரவில்லை; முருகரம்மான் போனவிடத்தில் அவரைக் கண்டவராம்; அவருக்கு அதிகஞ்சுகமில்லையென்று வந்து சொன்னார்; அதற்குத்தான் என்ன செய்வதென யோசிக்கலாமென்று இங்கே புறப்பட்டு வந்தேன்" என்று நேசமணி மனத்துயரத்தோடு சொன்னாள். "கவலைப்படாதே மகளே, உன் அப்பர் இப்பொழுது வருவார்; அவருக்குச் சொல்லி யோசிப்போம்" என்று தாய் சொன்னாள், இப்படி யிருப்பதற்கிடையில் தகப்பனும் அங்கே வந்துவிட்டார். வந்தவர் தம்முடைய மகளைக் கண்டமாத்திரத்தே மிக்க சந்தோஷமுடையவ ராய் "இப்பொழுது தான் வந்தாயோ மகளே" எனலும் "ஓம் அப்பு இப்போதுதான் வருகிறேன்" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசமணி சொன்னாள். அவர் தம் மகள் மருமகன் என்னுமிவர்களுடைய சுகத்தை விசாரித்தபின் இரண்டு மூன்று நாள் இங்கே தங்கிப் போங்கள் என்று சொல்லிவிட்டுப் பேரப் பிள்ளைகளுக்கு விளையாட்டுக் காட்டிக்கொண்டு சிறிதுநேரமிருந்தார். பின்னர்ப் போசனஞ் செய்யும்போது அவர் தம்மனையாளை நோக்கி "தங்கைச்சி இன்று வந்ததென்ன, ஏதும்விசேஷ மோ" என்று கேட்க, மனையாள் தன் மகள் மருமகன் விஷயமாகச் சொன்ன செய்தியை அவருக்குச் சொன்னாள். அவர் போசனம் முடித்துக்கொண்டு மகளையழைத்துத் தமது மருமகனுடைய விஷயத்தை விசாரித்தார். மகள் தன் பிதாவுக்கு ஒன்றும் ஒழியாமல் துரைரத்தினத்தின் பரிதாபமான நிலைமையை உள்ளபடி சொல்லிக் கண்ணீர்விட்டாள். தம் மகளும் மருமகனும் ஐக்கியமுடையவர்களாய் நல்லா யிருக்கிறார்களென இதுவரையும் எண்ணியிருந்த தகப்பனுக்கு இந்தச் சமாசாரத்தைக் கேட்டவுடனே அதிக கவலை உண்டானது.

* * *

நேசமணியின் பிதா ஒரு தனவந்தர். அவர் இளம்வயசில் வறுமையை அனுபவித்தவர். தமது மனைவியின் சீதனப்பொருளைப் பாதுகாத்தும் தமது முயற்சியினாற் பொருளீட்டியுமே செல்வரானவர். கல்வி அதிகமில்லாதவர். புகழ்ப் பிரியமுடையவர். தானதருமம் அதிகஞ் செய்து பழக்கமில்லை. லோபத்துவத்தோடு கூடியவர். செல்வர்கட்கு இயல்பாகவுள்ள பொருளாசை அவரிடத்துமுண்டு. அவரிடத்துள்ள ஒரு தீயகுண மென்னவென்றால் எவரிடத்துஞ் சந்தேகப்படுத லாகும். தமக்குக் காரணமின்றி ஒருவர் நன்மை செய்தாலும் தம்மிடத்துப் பொருளைப் பெறுவதற் காவோ, வேறு ஏதும் நன்மை பெறும்நோக்கமாகவோ, அந்நன்றியை மற்றவர் தமக்குச் செய்கின்றார் என்னும் விபரீத விளக்கமுடையவர். இப்படியிருந்தாலும் தம் மனைவிமக்கள் விஷயத்தில் லோபமின்றி எத்துணைப் பொருளையுஞ் செலவிடத்தக்கவர். மனைவிமக்களுக்குக் கொடுக்கும்போதும் எருமைக்கடா குளத்து நீரைக் கலக்கிவிட்டுக் குடிப்பதுபோல, அவரும் தம் மனைவி மக்களை வருத்திவிட்டே பொருளைக் கொடுப்பார். இந்தக் காரணத்தினாற்றான் நேச மணிக்குச் சீதனமென வாக்குச்சொன்ன 1000 ரூபாவையும் இதுவரையிற் கொடாதிருந்தார். கொடுத்திருப்பரேல் துரைரத்தினத்திற்கும் நேசமணிக்கும் இந்த இடர் நேர்ந்திருக்கமாட்டா. அவர் தன் மகளைப் பார்த்து "நேசம், என்னை இப்பொழுது என்ன செய்யும்படி கேட்கிறாய்" என்றார். "ஏதோ, என்னுடைய துரதிஷ்டத்தினாலும் அவருடைய பொல்லாத காலத்தினாலும் எங்களுக்கு இப்படி நேர்ந்துவிட்டது; அவரைக் கடன்காரனென்று விலங்கிட்டுப் பிரசித்ததெரு வீதியாற் பிடித்துக் கொண்டுபோக, அவருடைய பெண்டாட்டியென்றிருக்கும் நான் நன்கு உண்டு உடுத்துக் கட்டிப் பூட்டி யாதுங்கிலேசமின்றி இங்கே ஒன்றுமறியாதவள்போல் வாழலாமா? தன் கணவனுக்கு ஒரு பேராபத்து வந்தவிடத்துத் துடியாப்பெண்டிர் மடியினெருப்பென்று சொல்லுவார்கள்; ஆனபடியால், நான் அவருடைய கடன்தீர்க்கவேணும்; நீங்கள் எனக்குச் சீதனமாகத் தர வாக்குப்பண்ணிய 1000 ரூபாவையும் இந்தச்சமையத்திலே தாருங்கள்; இதைக் கேட்டு வாங்கிப்போகும் நோக்கமாகவே நான் இங்கே வந்தேன்" என்று கண்களில் நீர்ததும்ப நேசமணி கூறினாள்.

* * *

"மகளே, உனக்குத் தருவனென்றதைத் தருவதற்குச் சந்தேகமில்லை, ஆனால் கையிலுள்ள இந்தப் பணத்தையும் விட்டுவிட்டு இனியென்ன செய்யப் போகின்றாய். அந்த ஆளும் தன்னைத்தான் கெடுத்துக்கொண்டது; இதைப்பற்றித்தான் யோசிக்கிறேன்; மேலும் உன் புருஷன் பட்ட கடனுக்கு நூறுபவுண் போதுமென்று உனக்கெப்படித் தெரியும்; போதாவிட்டால் என்னசெய்வாய் என்று தகப்பன் சொல்ல மகள் போதாவிட்டால் என் நகைகளை யும் விற்றுக் கடன் தீர்க்கவேண்டியதுதான்; அப்பா, சந்திரவதி தன்னை விற்று அரிச்சந்திரனுடைய கடனைத் தீர்க்கவில்லையா என்றாள். மகளே, உன் நன்மையை விரும்பித்தான் இவைகளைச் சொல்லுகிறேன்; என்னை வித்தியாசமாக எண்ணிக் கொள்ளாதே; அரிச்சந்திரன் போன்ற சத்தியவானுக்குச் சந்திரவதி அப்படிச் செய்யத்தானே வேண்டும்; அதனால் நீயும் உன் கணவனுக்கு அப்படிச் செய்யமுடியுமா" என்றார். "அப்பா சந்திரவதிக்குத் தன்கணவன் பெரிது; எனக்கு என் புருஷன் பெரிது" என்றாள் மகள். மகள் கூறிய இந்த வார்த்தை தகப்பனுக்கும் பெரும் ஆநந்தத்தையுண்டாக்கிவிட்டது. இப்படி யொரு நெறியுள்ள பிள்ளையைப் பெறுதற்கு நான் என்ன பூர்வ புண்ணியஞ் செய்தேனோ அறியேன்" என அவர் மனத்தில் நினைத்தார். "மகளே, இந்த ஆயிரம் ரூபாவுமல்ல இன்னும் எத்தனையாயிரம் ரூபா வேணுமானாலும் நான் தருகின்றேன்; உனக்கு நான் புத்திசொல்ல வேண்டியதில்லை; நீ கொண்டுள்ள நாயக பக்தி எனக்கு மெத்தச் சந்தோஷம்" என்று அவர் கூறித் தன்மனையாளையுங் கூப்பிட்டு விஷயம் முழுவதையும் அவளுக்குஞ் சொல்லி ரூபா ஆயிரத்தையும் மிக்க விருப்பத்தோடு தன் மகள் கையிற் கொடுத்து, "நேசம், இன்னும் என்னால் இந்தக் கருமத்தில் ஆகவேண்டியது ஏதும் இருந்தாற் சொல்லு செய்கிறேன்" என்றார். "நான் தேவையானவேளையில் உங்களுக்குச் சொல்லியனுப்புகிறேன்" என்று சொல்லிவிட்டுத் தன் தாய் தகப்பனிடம் அனுமதி பெற்றுக் கொண்டு வண்டியிலேறிப் புருஷன் வீட்டிற்குப் புறப்பட்டாள். நேசமணியின் தாய் தகப்பனைப் பார்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தங்கச்சி தனியே போகிறாள்; நீங்கள் அவளைக் கூட்டிக்கொண்டுபோய் அவள் வீடு வரையில் விட்டுவந்தாலென்ன" என்று சொல்லுதலும், அவர் ஓம் என்று சொல்லித் தன்மகளுடன் வண்டியிலேறிக் கொண்டுபோய் மகளையும் பிள்ளைகளையும் வீட்டில் விட்டு மீண்டுவந்து தன்வீடு சேர்ந்தார். நேசமணி ராமனைப் பார்த்து "ராமன், முருகரம்மானிடம் போய் நான் வரச் சொன்னதென்று சொல்லிக் கையுடன் அவரைக் கூட்டிவா" என்று சொல்லுதலும், இராமன் "ஆம் அம்மா, இதோ போய்க் கூட்டிக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டு முருகரிடம் போனான்.

* * *

உலகம் பலவிதம்: 1927 ஒக்டோபர் 27

நேசமணி - துரைரத்தினத்தினம் (முற்றொடர்)

தனது பெற்றாரிடம் பணம் ஆயிரம் ரூபாவையும் பெற்றுக்கொண்டு தன் வீட்டிற்கு மீண்ட நேசமணி அதன்மேல் தான் செய்வதென்ன வென்பதை நெடுந்தூரம் யோசித்தாள். அவளுக்கு என்ன செய்வதென்பது புலப்படவில்லை. அன்று இரவு படுக்கையிற் படுத்துக்கொண்டு நித்திரையின்றி இதைப்பற்றியே யோசித்து விடிவதற்கிடையில், இனித் தான் செய்யவேண்டியதென்ன வென்பதை ஒருவாறு நிச்சயித்துக்கொண்டாள். விடிந்தவுடன் அவள் முருகரைப் போய்க் கூட்டிக்கொண்டு வரும்படி இராமனை யனுப்பினாள். சிறிது நேரஞ் செல்ல இராமனோடு முருகர் அங்கே வந்தார். வந்த முருகரை நேசமணி முறைப்படி உபசரித்து "அம்மான், நேற்று அப்பரிடம் போய் ஆயிரம் ரூபா வாங்கிவந்திருக் கிறேன்; என் நாயகருடைய கடனை எவ்விதத்திலும் நான் தீர்த்து அவரை மீட்கவேண்டும்; அப்படிச் செய்வதற்கு நான் நேரில் அவர் இருக்குமிடத்திற்குப் போனாலல்லாமல் முடியாது; உங்கள் யோசனை யென்ன, சொல்லுங்கள்" என்று கேட்டாள். முருகர் "மகளே, நீ சொல்வது சரிதான்; ஆனால் நீ அங்கே போய்த் தங்கி நிற்பதற்கான வசதிகள் இல்லையே, அதற்கென்ன செய்வது என்றதையிட்டுத்தான் யோசிக்கிறேன்" என்றார். "அம்மான், அங்கே எனது சிறியதகப்பனார் குடும்பத்தோடு இருக்கிறார்; அவரும் செல்வாக்குள்ள உயர்ந்த உத்தியோகத்திலிருக்கிறார்; அவருடைய வீட்டிலே தங்கியிருந்துகொண்டு இந்தக் கருமத்தைப் பார்க்கலாமென நினைக்கிறேன்" என்று நேசமணி சொல்ல, முருகர் "பிள்ளை, அப்படியானால் மெத்த நல்ல காரியம்" என்றார். "அம்மான், உங்களை நான் அதிகஞ் சிரமப்படுத்துகின்றேனென்று குறை நினைக்கவொண்ணாது; உங்கள் பிள்ளை வேறு நான் வேறல்ல. எனக்குத் துணையாக நீங்களும் இன்று பின்னேரம் என்னோடு புறப்பட்டு வரவேண்டும்" என்று நேசமணி கேட்க, "பிள்ளை, அதற்குத் தடையா, இதற்காக என்னை நீ இரந்து கேட்கவேண்டுமா, நீ வா என்றால் நான் வரமாட்டேனா; உன் விஷயமாக நான் எதனையுஞ் செய்ய ஆயத்தமாக விருக்கிறேன்; அதற்கென்ன, நான் நூறு முறையும் வருகிறேன்" என்று முருகர் சொல்லிவிட்டு நேசமணியிடம் அநுமதி பெற்றுக்கொண்டு பயணத்திற்காகிய ஆயத்தங்கள் செய்யும்படி தம் வீட்டிற்குத் தாமதமின்றி மீண்டு போனார். நேசமணியும் பயணத்திற்காகிய முயற்சிகளைச் செய்தாள். அவள் இராமனை விளித்துத் தான் பயணம் போகவேண்டு மென்பதையும் தான் இல்லாதசமையத்தில் இராமன் வீட்டிற் காவலாக விருந்து செய்யவேண்டியவைகள் இன்னின்ன வென்பதையும் அவனுக்கு விபரமாகச் சொன்னாள். பின்னேரமாதலும் நேசமணி தன் பிள்ளைகளையுங் கூட்டிக்கொண்டு முருகரம்மானுடன் வண்டியிலேறிப் புகைரதஸ்தானத்திற்குப் போய்ச் சேர்ந்தாள்.

* * *

நேசமணி புகைரத மார்க்கமாகச் சென்று அடுத்தநாட் காலை 7 மணி வரையில் அந்தப் பட்டினத்திலிறங்கி, ஒரு மோட்டரத மூலமாகத் தன் பிள்ளைகளோடும் முருகரம்மானோடும் சிறியதந்தையார் வீட்டை யடைந்தாள். காத்திராப் பிரகாரம் நேசமணியைக் கண்டமை அவளுடைய சிறியதந்தைக்கும் சிறியதாய்க்கும் பெரும் மகிழ்ச்சியை விளைத்தது. அவர்கள் அவளையும் பிள்ளைகளையும் முருகரையும் உபசரித்துத் தங்கள் வீட்டிற்றானே தங்கும்படி செய்தனர். நேசமணியின் சிறியதந்தை அவள் அங்கேவந்த காரணத்தை ஒருவாறு யூகித்தறிந்து கொண்டார். அவருக்குத் துரைரத்தினத்தின் விஷயம் முழுவதுந் தெரியும். அவர் முந்தி இரண்டொருமுறை துரைரத்தினத்தைத் தம் வீட்டிற்கழைத்துப் பல புத்திகளைச் சொன்னவர். துரைரத்தினம் தாஞ் சொன்ன புத்தியைக் கேட்கவில்லையென்பதை யுணர்ந்து அறிவிலார்க் குரைப்பவர் அவரிற் பேதையரென்ற வாக்கியத்தை நினைத்துப் பின்னர் துரைரத்தினத்துக்குப் புத்தி சொல்லாமலும், கண்டாற் பேசாமலும் விட்டவர். அவர் அன்று பின்னேரம் நேசமணியைப் பார்த்து "மகளே, நீங்கள் இங்கு வந்ததென்ன, உன் புருஷன் விஷயமாகவா" என்று கேட்க, அவள் "ஓம், சிற்றப்பா, நீங்கள் இங்கே இருந்துகொண்டும் இப்படியெல்லாம் மோசமாகப் போக விடலாமா" என்று மிக்க துயரத்தோடு கேட்டாள். "மகளே, நான் என்ன செய்வேன்; உன்னை நினைத்து நான் எத்தனையோமுறை அந்த ஆளை இங்கே கூப்பிட்டு இரகசியமாக எத்தனையோ புத்திகளைச் சொன்னேன்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஆள் கொஞ்சமேனும் என்புத்தியைக் கேட்க வில்லை; உன் தலைவிதி இப்படியாக்கும் என்று நினைத்துத் துக்கப்பட்டுக்கொண்டு நான் அதன்மேல் ஒன்றும் பேசாமல் விட்டுவிட்டேன். சரி, இந்தச் சமையத்தில் நீ வந்தது மெத்த நல்லது; நீ இப்பொழுது என்னசெய்ய உத்தேசிக்கின்றாய்" என்று சிறியதகப்பன் கேட்டார். "நான் வேறென்ன செய்வது, கொஞ்சக் காசு கையோடு கொண்டுவந்திருக்கிறேன், அவருடைய கடன் களைத்தீர்த்து அவரை மீட்கலாம் என்றுதான் வந்தேன்; நீங்களும் அதற்குத் துணைச் செய்யவேண்டும்" என்று நேசமணி சொன்னாள். சிறிய தகப்பன் "மகளே, இங்கு என்னால் ஆகக்கூடியது எதுவோ அதனையெல்லாஞ் செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்றார்.

* * *

நான் இங்கு வந்ததும், வந்தநோக்கமும் எவரும் அறியாதபடி இரகசியமாக விருக்கட்டும் என்று நேசமணி தன் சிறியபிதாவுக்குச் சொல்ல அவரும் "ஆம் அப்படித்தான் இருக்கவேண்டும்; அது மிகவும் நல்லது" என்றார். இதற்கிடையில் முருகரும் நேசமணியின் சிறியதந்தையும் துரைரத்தினத்தின் கடன் என்னவென்பதையும் யார் யாருக்குக் கடன்கொடுக்க வேண்டுமென்பதையும் ஒருவாறு நாளுக்குநாள் ஆராய்ந்து அறிந்து வந்தார்கள். கடன்காரருட் பலரை முருகரம்மானோடு நேசமணியின் சிறியதந்தை நேரிற் சென்று கண்டு கணக்குப்பார்த்து, அவர்க ளொருவரையும் துரைரத்தினத்திடம் போய்க் கடன்கேட்கவேண்டாமென்றும், துரைரத்தினம் தமக்கு மருமகன்முறை பூண்டவரென்றும் தாமே அந்தக்கடன்களையெல்லாந் தீர்த்துவிடுவதற்குச் சித்தமாயிருப்பதாகவும் தம்முடைய வீட்டிற்கு வரும்படியும், இதனை இப்பொழுது துரைரத்தி னத்திற்குப் பேசவேண்டாமென்றுஞ் சொன்னார். கடன் கொடுத்தவர்களுக்கு இவ்வளவும் போதாதா! நேசமணியின் சிறியபிதாச் சொன்னபடி அக்கடன்காரர் தங்கள் தங்கள் கணக்குப் புத்தகங்களையும் எடுத்துக்கொண்டு தத்தமக்குத் தவணை குறிக்கப்பட்ட தினங்களில், தவறாது நேசமணியின் சிறியதந்தை வீட்டுக்குச் சென்றார்கள். கடன்காரருட் பெரும்பாலார் அந்நிய நாட்டுக்குடிவகை வியாபாரிகளும் வஸ்திர வியாபாரஞ்செய்யும் "பாய்" மாரும் சவர்க்காரம் புசர் மா வாசனாதிரவியம் முதலியன கொண்டுதிரிந்து விற்கும் வியாபாரிமாருமாகவே காணப்பட்டனர். நேசமணி கொண்டுவந்த ஆயிரம் ரூபாவும் புருஷன் பட்ட கடன்தீர்க்கக் கொடுக்கப்பட்டது. இன்னும் 250 ரூபாவரையில் தேவையாகவிருந்தது; இதனை முருகர் நேசமணிக்குச் சொன்னார். நேசமணி தன் கழுத்திலிருந்த விலையுயர்ந்த அட்டியலை அவிழ்த்துக் கொண்டுபோய்த் தன் சிறியதந்தையிடங் கொடுத்து "சிற்றப்பா, இதனை நீங்கள் அறிந்த ஒரு காசுக்கடையில் ஈடுவைத்து எனக்கு 300 ரூபா எடுத்துத்தாருங்கள்" என்று சொன்னாள். சிறிய தந்தை அதனைக்கையில் வாங்கிக் கொண்டு புன்னகைசெய்து "மகளே, நீ என்னைப் பற்றி என்ன நினைத்திருக்கிறாயோ அறியேன்; என்வீட்டிற்கு வந்த உன்னுடைய நகையைக் கழற்றி ஈடுவைத்துப் பணமெடுத்துத்தான் உனக்குத் தருவேன் என்று நினைத்தாயா? கடவுள் புண்ணியமாக நானும் இப்பொழுது நல்லாயிருக்கிறேன்; உன்னைப்போன்ற ஒரு உத்தமியிருப்பது எங்கள் குலத்திற்குப் பெருமையல்லவா; இந்தா, நீ இதைக் கட்டிக்கொள் 300 ரூபாவல்ல, 300 பவுண் வேணுமானாலும் நான் உனக்குத்தருவேன்; உன் புருஷனுடைய எஞ்சிய கடனையும் நான் தீர்த்து விடுகிறேன்; அந்தக் கடன்காரரையெல்லாம் நாளைக்கு வரும்படி சொல்லியிருக்கிறேன்; நான் தரும் பணத்தை எனக்கு நீ திருப்பித்தராவிட்டாற் பெரிய சந்தோஷம்; இனி உன் இஷ்டப்படி செய்; நீ ஒன்றுக்குங் கவலைப்படாதே, என்று சொல்லி அட்டியலைத் திருப்பிக் கொடுத்தார். நேசமணி கண்களில் நீர் ததும்ப இருகரத்தாலும் அதனை வாங்கிப் பழையபடி தன் கழுத்தில் அணிந்து கொண்டாள்.

* * *

இங்ஙனமாக, ஒருதினம் மாலை 5 மணி வரையில் நேசமணியின் சிறியதந்தை தன் மனையாளைப்பார்த்து "இங்கேவாரும், தங்கச்சி வந்த நாள்தொடக்கம் பெருங் கவலையோடு இருக்கிறாள்; நீர் அவளை இன்றைக்குப் பொழுதுபட்டபின் 7 மணிவரையில் எங்களுடைய மோட்டரதத்திற் கூட்டிக் கொண்டுபோய்க் கடற் கரையில் இறங்கி உலாவச் செய்துவிட்டுப் பின் மீண்டுவாருங்கள்; அவளை இன்னாரென்று எவருக்கும் வெளியிட வேண்டாம்" என்று சொல்ல, மனைவி "அப்படியே செய்கிறேன்" என்று சொல்லி யுள்ளே சென்றாள். 7 மணியாதலும் நேசமணி அவளுடைய குழந்தைகள் சிறியதாய் வேலைக்காரன் ஆகிய எல்லாரும் மோட்டரதத்தில் ஏறிக்கொண்டு சனசஞ் சாரம் அதிகமில்லாத கடற்கரையை யடைந்து மோட்ட ரதத்தினின்றும் இறங்கிக் கடற்கரையோரமாக மெல்லமெல்லச் சென்றார்கள். அன்று நிலா வோடுகூடிய இரவாகும்; மெல்லிய காற்று வீசிக் கொண்டிருந்தது; திரைகள் பேரிரைச்சலோடு கரையில் மோதிக்கொண்டிருந்தன. திரைநீர் கரையில் வந்து தங்கள் வஸ்திரத்தை நனைத்து விடாதபடி திரை வரும்போது ஒதுங்கியொதுங்கி அவர்கள் கடற்கரை யோரமாகச் சென்றார்கள். கால்மைல் தூரஞ் செல்லும்வரையில் அவர்கள் வேறெவரையும் அங்கே சந்தித்தாரல்லர். அப்பாற் செல்லும்போது யாரோ இருவர் ஒருங்கு இருந்து கொண்டு மெல்லப் பேசுவதை இவர்கள் கண்டார்கள். நேசமணி சிறியதாயைப் பார்த்து "அம்மா, இனி மீண்டு போவோம்" எனலும் சிறிய தாய் "இல்லை மகளே, இன்னுங் கொஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத் தூரம் போய்த் திரும்புவோ" மென்று சொல்ல, நேசமணியும்; அதற்கு இசைந்து சென்றாள். முன் சொன்ன இருவருக்குஞ் சமீபமாக இவர்கள் வந்தபோது அவர்களுள் ஒருவர் தன்னுடைய நாயகனெனக் கண்டு நேசமணி திடுக்கிட்டாள்.

* * *

உலகம் பலவிதம்: 1927 நவம்பர் 3

நேசமணி - துரைரத்தினத்தினம் (முற்றொடர்)

அங்கேயிருப்பவர் தன் நாயகன்தான் என்று கண்டமாத்திரத்தே நேசமணியின் உள்ளத்தில் அச்சம், நாணம், ஆத்திரம் எல்லாம் ஏககாலத்தில் நிகழ்ந்தன. இவர்கள் அந்த இருவரும் இருக்குமிடத்தையுங் கடந்து சில யார் தூரஞ் சென்றார்கள். சென்றபின் நேசமணி தன் சிறிய தாயைப் பார்த்து "சின்னம்மா, கொஞ்ச நேரம் இந்த மணலில் இருந்துவிட்டு மீண்டு போவோமா" என்று கேட்க, "ஓம், மகளே, எனக்கும் அதுதான் விருப்பம்" என்று சொல்லிச் சிறியதாய் பிள்ளைகளுடன் அங்கே உட்கார்ந்தாள். நேசமணி சிலயார் தூரத்தில் இந்தப் பக்கமாகத் தனியேயிருந்தாள். சிறியதாய் பிள்ளைகள் கேட்குங் கேள்விகளுக்கு மறுமொழி சொல்லிக் கொண்டிருந்தாள். அங்கு சிறிது தூரத்தில் இருக்கும் இருவருள் ஒருவர் தன்னாயகன் என்பதை நேசமணி எவருக்குஞ் சொல்லவில்லை. நாயகனுடன் இருக்கும் மற்ற ஆள் ஆணோ பெண்ணோ என்பதையும் அறிய முடியாமலிருந்தது; ஏனென்றால் அவர்கள் இருவரும் வெள்ளையுடையே தரித்திருந்தார்கள். நேசமணியின் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டிருந்தது. வேறு பெண்களாயிருந்தால் அந்த நிலைமையில் தங்களைப் பிறருக்குக் காட்டிக் கொடுத்துவிடுவார்கள். ஆனால் நேசமணியோ சரியான கருமம் எதையும் ஆறுதலாகவும் பயமில்லாமலுஞ் செய்யும் இயல்புடை யவள். அவள் தனியே இப்படியிருக்கும்போது, சில யார் தூரத்திலிருக்கும் தன்னாயகனும் மற்ற ஆளும் பேசுகிற சத்தங் கேட்டதே யல்லாமல் பேசுவது இன்னதென்பது இவளிற்குப் புலப்பட வில்லை. இன்னதென அறிவதற்குக் கடலின் திரையொலி இடையூறாக அடித்தது. நேசமணி தன் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டும், சிறியதாய் முதலானோர் அவதானித்தபடி மெல்ல எழுந்து அந்த இருவரும் இருக்கும் இடத்திற்கு சிறிது பிற்புறமாக கரையின் மேற் பக்கத்தில் போயிருந்தாள். அவள் இருந்த இடம் காற்றுப் பக்கமாதலினால் அவர்கள் இருவரும் பேசும் வார்த்தைகள் இடையிடையே இவள் காதிற்குப் புலப்பட்டன.

* * *

நீங்கள், இப்பொழுது இவ்வளவு அன்பு பாராட்டி நடக்கின்றீர்கள்; ஆனால் யாழ்ப்பாணம் போய்விட்டால் எனக்குக் காகிதந்தானும் எழுதுவீர்களோ என்பது சந்தேகம்; ஆண்பிள்ளைகளின் ஆசைவார்த்தையில் நம்பிக்கை வைக்கக்கூடாது" என்ற வார்த்தை நேசமணியின் காதிற் பட்டது. "கண்ணே, லீலா, என்னை அப்படி ஒருபோதும் எண்ணாதே" என்று மற்ற ஆள் சொல்லிவிட்டு "அடி, உன் ஆசை நான் மறப்பேனோ, மறந்தால் உயிர் தரிப்பேனோ" என்று பாடத் தொடங்கினார். இப்படிப் பாடத் தொடங்கியவர் வேறெவருமல்லர்; மிஸ்ரர் துரைரத்தினமேயாவர். இவர் அந்தச் சமையத்தில் மதுபானத்தினாலே சிறிது மயக்கங் கொண்டிருந்தமையினால் இப்படிப் பாடவும் பேசவுந் தலைப்பட்டார். "கண்ணே, லீலா" என்ற வார்த்தையைக் கேட்டமாத்திரத்தே நேசமணி, இவள் தான் முருகரம்மான் சொன்ன லீலாவாகிய பறங்கிச் சிறுமியென்றும் இவர்களிருவரும் பொழுது போக்காக இங்கே வந்திருக்கிறார்களென்றும் தன்மனசில் நிச்சயித்துக்கொண்டாள். "ஐயோ! உங்கள் பாட்டை இவ்வளவில் நிறுத்துங்கள்; இன்னுஞ் சற்றுப் பாடுவீர்களானால் கேட்பதற்குச் சனங்கள் வந்து கூடிவிடுவார்கள்; அதனாற் பெருஞ் செலவுண்டாகும்" என்று லீலா பரிகாசமாகச் சொல்லும் வார்த்தையும் நேசமணியின் காதில் வீழ்ந்தது. "ஏன் லீலா, நான் பாடுவது உனக்குப் பிடிக்கவில்லையோ, எங்கே, நீ ஒரு பாட்டுப் பாடு கேட்போம்" என்று துரைரத்தினஞ் சொல்ல, "ஏன் பிடிக்கவில்லை; நல்லாய்ப் பிடிக்கிறது; இப்பொழுது பாட்டு எதற்காக, நீங்கள் இரண்டொரு வேளையில் யாழ்ப்பாணம் போகின்றேனென்று சொல்லுகிறீர்கள்; அதனையிட்டு ஏதும் பேசுவோம்" என்று லீலா சொல்லுவதையும் நேசமணி கேட்டாள். "ஆம், ஆம்; அதைப்பற்றி என்ன பேசப்போகின்றாய்; கேட்க வேண்டியதைக் கேள், நான் சொல்லுகிறேன்" என்று துரைரத்தினம் கேட்க, லீலா "இன்றைக்கு வியாழக்கிழமை; வருகிற வியாழக்கிழமை நீங்கள் யாழ்ப்பாணத்தில் நிற்பீர் களாக்கும்" என்றாள். "என்று தான் நினைக்கிறேன்" எனத் துரைரத்தினம் சொன்னார். "பிறகு எப்போது இங்கே மீண்டு வருவீர்கள்" என்று லீலா கேட்க, "ஒரு வாரம் மெத்த, அதற்குள் மீண்டுவிடுவேன்" என்று அவர் கூற, லீலா "உங்கள் மனுஷி மறித்தால் இந்த ஊரையும் என்னையும் மறந்துபோய் அங்கே நின்றாலும் நின்றுவிடுவீர்கள்" என்றாள். "கண்ணே, லீலா, அவள் மறித்தால் நிற்கத்தான் வேண்டும்" என்று துரைரத்தினம் சொல்ல, லீலா "ஓ, அந்தப்பாசம் இன்னமும் உங்களை விட்டுப் போகவில்லையா" என்றாள். "அந்தப் பாசம் என்னை எப்போதாயினும் விட்டுப்போமா, லீலா, என்மனையாட்டிபோல் ஒரு உத்தமி கிடைப்பதரிது; அவள் தன் துரதிஷ்டத்தினால் எனக்குப் பெண்டாட்டியாயினாள்; நான் அவளுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப் பெருந்துரோகங்களைச் செய்து வரவும் அவள் அவற்றையெல்லாஞ் சகித்துக் கொண்டு இன்றைக்கும் என்னையே தெய்வமென மதித்து நடக்கின்றாள். சீதன விஷயமாக உண்டான ஒரு பிணக்கினால் நான் என்மனையாளைத் தாய் தகப்பன் வீட்டிற்கு அனுப்பிவிட்டு மனஸ்தாபத் தோடு இங்கே வந்துவிட்டேன்; "தன் மனையா ளைத் தாய்மனைக்ககற்றிப் பின்பவட்பாராப் பேதையும் பதரே" என்றபடி நானே பெருந்துரோகி யானேன்; அந்தச் சீமாட்டி என்பிள்ளைகளையும் பாதுகாத்துக்கொண்டு என்வீட்டிலேயே இன்றை க்கும் நெறி தவறாமல் இருக்கின்றாள். லீலா, இந்தப் பழி என்னை எப்போதாயினும் விட்டு நீங்குமோ, என்று துரைரத்தினம் சொன்னார். பின்பு இரண் டொரு நிமிஷத்திற்கு எவராயினும் வார்த்தை யாடுஞ் சத்தம் நேசமணிக்குக் கேட்கவில்லை. "ஏன் அழுகின்றீர்கள்" என்று லீலா சொல்வது மாத்திரங் கேட்டது. இதற்கிடையில் நேசமணியின் சிறியதாய் நேசமணியை வரும்படி கூப்பிட அவள் மெல்ல எழுந்து தன் சிறியதாயுடன் கூடிக்கொண்டு வந்த வழியே மீண்டு மோட்ட ரதத்தில் ஏறி மற்றவர்களுடன் சிறியதந்தையின் வீடு போய்ச் சேர்ந்தாள். சிறிதுநேரஞ் செல்ல, துரைரத்தினமும் லீலாவும் கடற்கரையை விட்டகன்றனர்.

* * *

வீட்டிற்கு மீண்டுசென்ற நேசமணியின் முகம் சந்தோஷத்தோமாயிருத்தலைச் சிறிய தந்தை கண்டார். கடற்கரைக்குப் போனமையினாலேயே அவளுக்குச் சந்தோஷ முண்டாயிற்றென்று அவர் நினைத்துக் கொண்டு "மகளே, எல்லா இடங்களும் போய்ப் பார்த்தீர்களா; நாளைக்கும் தவறாமற் கடற்கரைக்குப் போங்கள்" என்று நேசமணிக்குச் சொல்ல அவள் "ஓம், சிற்றப்பா நாளைக்கும் போவோம்" என்றாள். நேசமணியின் முகத்திற் சந்தோஷமுண்டானதன் காரணம் வேறொன்றுமல்ல, தன்னாயகன் தன்னைப்பற்றி எவ்வளவு மேலான எண்ணங் கொண்டிருக்கின்றான் என்பதை அன்றைக்குத் தான் அவள் அறிந்தாள். "ஐயோ, என்பர்த்தாவை வித்தியாசமாக நினைத்துச் சிற்சில சமையத்திற் குறை கூறியும் விட்டேனே; பொல்லாத காலத்தினாலும் மனஸ்தாபத்தினாலும் தீயவர்களுடைய சகவாசத்தினாலுமே அவர் பிழைப்பட்டுப் போனாரல்லாமல் அவர் இயல்பில் அப்படிப்பட்டவரல்லர்; அவருக்கு மனைவியாக விருந்து கூடிவாழ்ந்து பிள்ளைகளையும் பெற்றநான் இவ்வளவு காலமும் அவருடைய பெருந்தன்மையை அறியாமலிருந்தமை என் குற்றமல்லாமல் அவர் குற்றமல்லவே; என் புருஷனுக்காக நான் இந்தச் சீதனப் பணத்தை மாத்திரமல்ல, என் நகைவகைகளை மாத்திரமல்ல என்னை விற்றுக் கடன் தீர்த்தாலும் தகுமே" என்று நினைத்து நினைத்துச் சந்தோஷப்பட்டாள். அவளுக்கு அன்றிரவு முழுவதும் நித்திரைவரவில்லை.

* * *

அடுத்தநாள் மாலை 7 மணியாதலும் நேசமணியின் சிறியதாய் நேசமணியைப் பார்த்து, "மகளே, இன்றைக்கு நான் உங்களோடு கடற்கரைக்கு வரமுடியாது; இங்கே அவசியஞ் செய்து முடிக்கவேண்டிய வேலயிருக்கிறது; ஆனால் நீ தவறாமற் கடற்கரைக்குப் போகவேண்டுமென உன் சிற்றப்பா சொல்லுகிறார்; ஆனபடியால் நான் ஆயாளைக்கூட அனுப்புகிறேன்; பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு "காரில்" ஏறிப்போய் வாருங்கள்" என்றாள். "அதற்கென்ன, அம்மா, அப்படியே செய்கிறேன்" என்று நேசமணி சொன்னாள். நேசமணியும் பிள்ளைகளும் ஆயாளும் வேலைக்காரனும் மோட்டரதத்தில் ஏறிக்கொண்டு முதனாட் போனபிரகாரமே போய்க் கடற்கரையில் இறங்கி நடந்துசென்றனர். செல்லும்போது, நேசமணி தன்புருஷனும் லீலாவும் முதனாள் இருந்த இடத்தைக் குறிப்பாகத் தூரத்தே நின்று பார்த்தாள். அங்கே ஒரு ஆடவன் மாத்திரம் தலைக்குக் கையைக் கொடுத்துக்கொண்டு கடற் கரையைப் பார்த்தபடி படுத்திருக்கக் கண்டாள். சிறிது அவதானமாகப்பார்த்த போது அந்த ஆடவன் தன் புருஷனல்லாமல் வேறு எவருமல்ல வென்று அறிந்துகொண்டு, அவள் அந்த இடத்திலே தாமதியாமல் தன்னோடு வந்தவர்களுடன் அப்பாற்சென்று தூரத்தில் உட்கார்ந்தாள். சிறிது நேரம் அவர்களுடன் இருந்து "சரி, நீங்கள் இப்படியே இருந்து கொள்ளுங்கள்; நான் சற்றுச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வருகிறேன்" என்று ஆயாளுக்கும் பிள்ளைகளுக்குஞ் சொல்லிவிட்டு மெல்லப் புறப்பட்டு முதனாள் தான் தனியே வந்திருந்த இடத்திலேயே வந்து இருந்தாள். துரைரத்தினம் தன்பாட்டிலிருந்துகொண்டு ஏதோ பாடுவது போலவும் பேசுவது போலவும் இவளுக்குக் கேட்டது; இவள் சிறிது உற்றுக் கேட்டாள். "ஆ, கண்ணே, லீலா, இன்னமும் உன்னைக் காணேனே என்ன மனஸ்தாபம்; என் மனையாட்டியை நேற்றுப் புகழ்ந்து சொன்னது உனக்குப் பிடிக்கவில்லையோ, உள்ளதைத்தானே சொன்னேன்; அந்த உத்தமியால் உனக்கு ஒரு இடையூறுமில்லையே" என்று இப்படிச்சொல்வது அவள்காதிற் பட்டது. இந்தவார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தே நேசமணியின் உள்ளம் அனலிடைப்பட்ட மெழுகுபோல் உருகியது; கண்களிநின்றும் நீர் ததும்பியது; அவள் தன்னை மறந்தாள், மனத்தைத் திடப்படுத்தினாள்; மெல்ல எழுந்தாள்; தன் நாயகனுக்குப் பின்புறமாக மணலின்மீது மெல்ல மெல்ல அடிவைத்துச் சென்றாள். மிகச் சமீபத்திற் சென்றாள்; சிறிது நேரம் நின்றாள்; நாயகன் கடற்கரையைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தபடியே தலைக்குக் கையைக் கொடுத்துக் கொண்டு யோசனையோடு படுத்திருந்தபடியால் இவளைக் காணவில்லை; நேசமணி பின்புறமாக நின்று செந்தாமரைப் பூப் போன்ற மிருதுவான தன் இரு கரங்களினாலும் தனது நாயகனுடைய கண்களை இறுகப் பொத்திக்கொண்டாள். "ஆம், ஆம், தெரியும், தெரியும், கண்ணே, லீலா, விடு, விடு, கண்மணி, இன்றைக்கு நீ வர ஏன் இவ்வளவு நேரஞ்சென்றது; போதும், போதும், இனிவிடு" என்று துரைரத்தினஞ் சொன்னார். அதற்குப் பதிலில்லை; அவர் தன் கண்களைப் பொத்திப்பிடித்திருந்த கைகளை மெல்லத் தடவிப் பார்த்தார். லீலாவின் கையிலில்லாத ஆபரணம் இந்தக் கைகளில் இருப்பதைப் பரிசித்தறிந்தார்; ஆச்சரியங்கொண்டு அச்சத்தோடு திடீரென எழுந்தார்; எழுந்தபோது கண்களை மூடியிருந்த கரங்கள் விலகிவிட்டன. ஏறிட்டு பார்த்தார்; தன் அரிய பத்தினியாகிய நேசமணி தன் பக்கத்தில் நிற்கக் கண்டார்; திடுக்கிட்டார்.

* * *

உலகம் பலவிதம்: 1927 நவம்பர் 10

நேசமணி - துரைரத்தினத்தினம் (முற்றொடர்)

துரைரத்தினத்தின் நெஞ்சு படபட வென்றடித்தது; நள்ளிருளில் திருடச் சென்றவன் சென்றவிடத்து மின்னல் வெளிச்சத்திற் கண்டு பிடிக்கப்பட்டால் எவ்வளவு திகிலடைவானோ அவ்வளவு திகில் துரைரத்தினத்திடம் அச்சமையத்திற் காணப்பட்டது; அவரால் ஒன்றும் பேச முடியவில்லை; அவர் கண்கலங்கியது; அதனைக்கண்ட நேசமணியின் கண்களிலிருந்து "பொலு" "பொலு" என்று கண்ணீர் சிந்தியது; "நேசம், ஏன் அழுகின்றாய்; கலங்காதே" என்று சொல்லி அவள் கண்ணீரைத் தன் சட்டைப்பையிலிருந்த வஸ்திரத்தையெடுத்து அதனாற்றுடைத்து விட்டு, "எப்பொழுது வந்தாய், பிள்ளைகளெங்கே, ஆர் கூட வந்தது; இங்கு எங்கே நிற்கிறீர்கள்; வரப்போகிறேன் என்று எனக்கொரு காகிதம் போட்டிருக்கக் கூடாதா; நான் இங்கே நிற்பேன் என்று எப்படித் தெரியும்" என ஒன்றன்பின் னொன்றாக இத்தனை கேள்விகளையுங் கேட்டார்; நேசமணி மனந்தேறி "இரண்டு மூன்று நாட்களுக்குமுன் நான் இங்கே வந்தேன்; பிள்ளைகளும் வந்திருக் கிறார்கள்; முருகரம்மானுடன்தான் கூடிக்கொண்டு வந்தேன்; சிற்றப்பாவோடு நிற்கின்றேன்; கடிதம் போட்டாலும் பதில் எழுதமாட்டீர்களென்று தெரியும்; உங்களுக்கு ஏதோ சுகமில்லையென்று கேள்விப்பட்டு வந்தேன்; நான் நேற்றும் இந்த நேரம் இங்கே வந்த நான்; அப்பொழுது உங்களைக் கண்டேன்; நீங்கள் வேறு யாருடனோ பேசிக் கொண்டிருந்தீர்கள்; அதனாலேதான் நான் உங்களிடம் நேற்று வந்து பேசவில்லை; இன்றைக்கும் ஒருபோது வருவீர்களென நினைத்து வந்தேன்; நீங்களும் தனியே இருந்தீர்கள், அதனாற்றான் வந்து கண்டேன்; ஏன் இவ்வளவு மெலிந்து போனீர்கள்; சுகமில்லையென்றால் லீவெடுத்துக்கொண்டு அங்கே வரக்கூடாதா" என்று தலைகுனிந்தபடி கண்கள் கலங்கச் சொன்னாள். நேசமணி சொன்ன மறுமொழிகள் மேலும் மேலும் துரைரத்தினத்தின் மனசை உருகச்செய்தன. "நேற்றும் நான் இங்கே வந்தேன்" என்று நேசமணி சொன்னவார்த்தை துரைரத்தினத்தின் நெஞ்சிற் கல்லைப்போட்டாற் போலிருந்தது "நேசம், நேற்று, என்னை நீர் இங்கே கண்டது வேறு யாருக்குந் தெரியுமா; என்று ஆவலாக வெட்கத்தோடு கேட்டார்; "ஒருவருக்குந் தெரியாது; நான் ஏன் இவைகளை யெல்லாம் மற்றவர்களுக்குச் சொல்லப் போகிறேன்" என்று நேசமணி சொன்னாள்; "சரி, இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும்" என்று துரைரத்தினம் தம்முடைய மனையாளைக்கேட்க, "நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று என்னைக் கேட்டால் நான் என்ன சொல்வேன்; நீங்கள் சொல்லுகிறபடி நான் செய் கிறேன்" என்று பதில் சொன்னாள். "இப்பொழுது, இங்கே உன்னோடு கூடிக்கொண்டு வந்தது ஆர்; ஆர்" என்று துரைரத்தினங் கேட்க நேசமணி "நேற்றுச் சின்னம்மா கூட்டிக்கொண்டுவந்தது; இன்றைக்கு வரச்சமையமில்லாதபடியால், வேலைக்காரியோடும் பிள்ளைகளோடும் வந்தேன்; அவர்கள் அங்கே இருக்கிறார்கள்" என்று நேசமணி அவர்கள் இருக்கும் இடத்தைச் சுட்டிக்காட்டிச் சொன்னாள். "ஓ, அப்படியா வா அங்கே போவோம்; பின்பு நானும் உங்களுடன் சிற்றப்பா வீட்டுக்கு வருகிறேன்" என்று துரைரத்தினஞ் சொல்லிக்கொண்டு பிள்ளைகள் இருக்குமிடத்திற்குத் தம் மனையாளோடு சென்றார். செல்லும்போது நேசமணி "ஒருவேளை வேறு யாராயினும் இங்கே உங்களை வந்து காணாவிட்டால் தேடுவார்களோ" என "இல்லை அப்படி ஒருவரும் வரமாட்டார்கள்" என்று துரைரத்தினம் சொல்லிக்கொண்டு போனார்.

* * *

உலகம் பலவிதம்: 1927 நவம்பர் 17

நேசமணி - துரைரத்தினத்தினம் (முற்றொடர்)

துரைரத்தினம் நேசமணியுடன் சென்று பிள்ளைகளைக் கண்டு அவர்களை எடுத்தணைத்து உச்சிமோந்தார். பிள்ளைகள் பிதாவை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். வேலைக்காரி இவர்தான் துரைரத்தினமென்பதைக் குறிப்பாலுணர்ந்து கொண்டாள். எல்லாரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிக்கொண்டு மோட்டரதமிருக்கு மிடத்திற்குச் சென்றார்கள். இதற்கிடையில் லீலா தம்மைத் தேடி வருவாளோ என்ற எண்ணத்தினால் துரைரத்தினம் அங்குமிங்கும் இடையிடையே பார்த்தார். இதனை நேசமணி குறிப்பாலுணர்ந்து தனக்குட் புன்னகை செய்துகொண்டு அறிந்தும் அறியாள்போற் சென்றனள். மோட்டரதத்திற்குச் சமீபமாகச் சென்று எல்லாரும் அதில் ஏறிக்கொண்டு நேசமணியின் சிறிய தந்தையார் வீடு போய்ச் சேர்ந்தனர். இவர்களைக் கண்ட சிறியதந்தையாரும் மனையாளும் அதிக மகிழ்ச்சியோடு கூடியவர்களாய் புதிய தம்பதிகளை உபசரிப்பார்போல உபசரித்தனர். அங்கு நின்ற முருகரம்மானுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு ஒரு எல்லையில்லை. அச் சமையத்தில் துரைரத்தினத்தின் முகத்தில் நாணம் கவலை மகிழ்ச்சி என்னுமிவைகளெல்லாம் மாறிமாறி நிகழக் காணப்பட்டன. நேசமணியின் சிறியதந்தையும் துரைரத்தினமும் பல விஷயங்களைப்பற்றிப் பேசினர்; ஆனால் நேசமணியைப்பற்றி மாத்திரம் ஒன்றும் பேச வில்லை. எல்லாரும் இராப்போசனம் முடிந்தபின் முற்புறத்துள்ள விறாந்தையில் துரைரத்தினம் சுருட்டுப் பிடித்துக்கொண்டு லீலா தேடுவாளே என்ற யோசனையோடு தன்னந்தனியேயிருக்கும் போது, நேசமணி வெற்றிலைத் தட்டைக் கொண்டு வந்து துரைரத்தினத்தின் முன்னிலையில் வைத்து, தாம்பூலம் எடுத்து மடித்து அருந்தும்படி கொடுத்தாள். துரைரத்தினம் தாம்பூலம் அருந்திக் கொண்டு இருக்கும்போது நேசமணி உள்ளே சென்று சில காகிதத் துண்டுகளைக் கொண்டுவந்து தன் கணவன் கையிற் கொடுத்தாள்; துரைரத்தினம் அந்தக் காகிதத் துண்டுகளை வாங்கி விளக்கு வெளிச்சத்தில் ஒவ்வொன்றாகப் பார்த்தார். அவைகளெல்லாம் கடன்காறர் பணம் பெற்றுக்கொண்டு கொடுத்த பற்றுச்சீட்டுகள் எனக்கண்டார். துரைரத்தினத் திற்குண்டான மகிழ்ச்சிக்கும் நாணத்திற்கும் ஒரு எல்லையில்லை யெனலாம். தமது கடன்களைத் தீர்த்தமையையிட்டு அவர் அதிக ஆச்சரியப்படவில்லை; தம்மையறியாமல், கடன்காரரைத் தேடிப்பிடித்துக் கடன் தீர்த்தமையையிட்டு ஆச்சரியப்பட்டார். இந்தப் பற்றுச்சீட்டுகளுள் அடியில் குடிவகைக் கடைக்காரன் கொடுத்த பற்றுச்சீட்டு மிருந்தது. அதனைப் பார்த்தமாத்திரத்தே அவர் நாணந் தலைக்கொள்ள துயரம் மனத்தைவாட்டக் கண்களில் நீர் ததும்ப அதனைத் துடைத்தார். இக்கடன்களைத் தீர்ப்பதற்குப் பணம் எப்படிக் கிடைத்தது, யார்போய்க் கடன்காரரைத் தேடிக் கண்டுபிடித்தது என்ற இவைகளைப் பற்றித் தமது மனையாளிடம் வினவுதற்கு அவருக்கு வாயெழவில்லை. தமது மனையாள் சகல ஆபரணங்களையும் அணிந்திருக்கிறாளோ வென்று பார்த்தார். எல்லாம் அணிந்திருக்கக் காணப்பட்டன. கடன்காரரைக் கண்டுபிடித்தமை முருகரம்மானுடை ய வேலையாக விருக்க வேண்டுமென்று அறிந்தார். இதற்கிடையில் நேசமணியைப் போசனமருந்தும்படி சிறியதாய் கூப்பிட அவள் தன் கணவனுக்குச் சொல்லி விட்டு உள்ளே சென்றாள். அப்பொழுது முருகரம்மான் சுருட்டுப் புகைத்தபடி துரைரத்தினத்திற்குப் பக்கத்தில் வந்து இருந்துகொண்டு "தம்பி, எப்படிச்சுகம்" என்று புன்சிரிப்போடு கேட்டார், துரைரத்தினம் ஒன்றுஞ் சொல்ல முடியவில்லை; "தம்பி, பொல்லாதகாலஞ் செய்கிறவேலை; இவைகளை இட்டுக் கவலைப்படக்கூடாது; ஏதோ நடப்பது நடந்தே தீரும்; இவ்வளவில் எல்லாம் முடிந்தது எனக்குப் பெரிய சந்தோஷம்" என்று முருகரம்மான் சொன்னார். "அம்மான், நடந்த செய்தி யொன்றையும் ஒளியாமல், நேசம் வருவதற்கு முன் சொல்லுங்கள்" என்று துரைரத்தினங் கேட்க, முருகர் "என்ன தம்பி இன்னமும் உமக்கு நேசம் வரவில்லையோ" என்று பரிகாசார்த்தமாகச் சொன்னார் "அதற்கல்ல, அம்மான், நான் என் மனையாளை "நேசம்" என்றுதான் வழக்கமாகக் கூப்பிடுவது" எனலும் "வாயளவில் நேசம்" என்றாற் போதாது மனத்திலும் எப்பொழுதும் நேசம் இருக்கவேண்டும்" என்று பரிகாசமாகச் சொல்லி விட்டு முருகர் நேசமணியின் செயல் முழுவதையும் ஆதியோடந்தமாகச் சொல்லி முடிக்க நேசமணியும் போசனம் முடித்துக்கொண்டு அங்கே வந்தாள். முருகர் அவ்விடத்தைவிட்டகன்று தன் படுக்கைக்குச் சென்றார்.

* * *

துரைரத்தினம் நேசமணி முதலானோர் கடற்கரையைவிட்டு நீங்கிக் கால்மணித்தியாலஞ் செல்வதற்கிடையில் லீலாவுந் தாயும் அங்கே வந்து சேர்ந்தனர். கடற்கரையில் வழக்கமாகத் துரைரத்தினம் வந்து இருக்குமிடத்தில் அவரைக் காணவில்லை. லீலா பலவாறு யோசிக்கத் தலைப்பட்டாள்; "ஐயோ எப்பொழுதும் எனக்கு முந்தியே இங்கு வந்திருக்கும் அவர் இன்றைக்கு இன்னமும் இங்கே வராதகாரணமென்ன; ஏதுஞ் சுகவீனமோ, இல்லையேல் ஊரிலிருந்து ஏதுந் தந்திச்சமாசாரம்வர அவர் போய் விட்டாரோ, அப்படிப் போகிலும் எனக்குச் சொல்லாமற் போகமாட்டாரோ; ஒருபோது புகைரதத்திற்கு நேரம் மட்டுமட்டாயிருக்க, என்னிடம் வர நேரமில்லாமற் போய்விட்டாரோ; அல்லாவிட்டால் கடன் சங்கடம் அவருக்கு இருக்கிறதே; அதனால் ஏதும் இடைஞ்சற்படுகின்றாரோ; என்னைத்தான் வந்து காணநேரமில்லாவிட்டாலும் மிஸ்ரர் தம்பிரத்தினத்திடஞ் சொல்லியனுப்புவாரே; இது மெத்த நூதனமாயிருக்கின்றதே" என்று இப்படிக் கிலேசப்பட்டுக் கொண்டிருக்கும் போது அவளுடைய தாய் "என்ன லீலா, இப்படியிருந் தென்னசெய்வது? அந்த ஆள் வராது போலிருக்கிறது; நேரமும் அதிகம் போய்விட்டது; இனி நாங்கள் இங்கே நிற்பது புத்தியல்ல; வீட்டிற்குப் போய் எல்லாம் யோசிப்போம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கொண்டாட்டத்தை விட்டு விடு என்று சொன்னாலும் நீ கேட்கிறாயில்லை" என்று சொல்லி மகளைக் கூட்டிக்கொண்டு வீட்டிற்கு மீண்டாள்.

* * *

உலகம் பலவிதம்: 1927 நவம்பர் 24

இடையில் ஒரு பத்தி: தேர்வுகள்பற்றி.

"ஆங்காலமெல்லாம் அநியாயமாகச் செலவிட்டுச் சாங்காலஞ் சங்கரா சங்கரா" என்றவன் சீலமாக இங்குள்ள ஆங்கிலக் கல்லூரிகளிலும் வித்தியாசாலைகளிலும் ஸீனியர் ஜூனியர் வகுப்பு மாணவருட் பலர் இப்பொழுது சங்கடப்படுகின்றனர். அடுத்தமாசம் நிகழவிருக்கும் கேம்பிரிஜ் ஸீனியர் ஜூனியர்ப் பரீட்சைகட்கு மாணாக்கரைத்தேர்ந்துவிடும் சமையம் இப்பொழுதேயாகும். சென்றவாரத்தில் இங்குள்ள கல்லூரிகளெல்லாவற்றிலும் குறித்த இருவகுப்புப் பரீட்சைக்காகிய மாணவர்களைத் தேரும்பொருட்டு ஆசிரியர்களாற் பரீட்சைகள் நடத்தப்பட்டன. இந்தப் பரீட்சையிற் சித்தி பெற்றவர்களே அடுத்த மாசம் வரும் மேற்படி சர்வகலாசங்கப் பரீட்சைக்கு அனுப்பப்படுவர். சென்றவாரம் நடத்தப்பட்ட தேர்தற் பரீட்சையிற் சித்தியடைந்தவர்களொழிய, சித்தியடையாது பரீட்சைக்குத் தகாதவர் என ஒதுக்கப்பட்ட மாணவர்கள் படும்பாடு கொஞ்சமல்ல. இந்தப் புத்திர பாக்கியங்களைப் பெற்ற பிதா மாதாச் சகோதரங்கள் படும் பாடு கொஞ்சமல்ல. உபாத்தியாயர்கள் இவர்கள் மூலமாகக் கேட்குங் குறை கொஞ்சமல்ல.

* * *

பரீட்சைக்கு விடப்படாது ஒதுக்கப்பட்ட மாணாக்கருள் எவராயினும் தங்கள் படிப்புப் போதாமையினால் தாங்கள் ஊக்கமாய்ப் படியாமையினாற் பரீட்சைக்கு விடப்படவில்லையென்று நினைப்பாரில்லை. உபாத்தியாயர் தம்மீது கொண்ட கோபத்தினாற் பரீட்சைக்கு விடவில்லை யென்கிறார் சிலர்; தம்மீது கொண்ட பொறாமையினால் தம்மை விடவில்லையென்று சொல்லுகிறார் இன்னுஞ்சிலர். அம்ஸங்களைக் கூட்டிக் கணக்கிட்டபோது பிழையாக உபாத்தியார் கூட்டியிருக்க வேண்டுமென்று ஆருடமுஞ் சொல்லுகிறார் வேறுசிலர். பரீட்சை வினாக்கள் கடுமையானவையென்று சொல்லுகிறார் மற்றுஞ் சிலர். நாங்கள் படியாத பாகத்தில் வினாக்களைக் கேட்டு விட்டார்களென்று சொல்லுகிறார் ஏனைய சிலர். இவர்களுடைய பெற்றாருள்ளுஞ் சிலர் தங்கள் பிள்ளைகள் சொல்வது போல உபாத்தியாயர்களையே குறை சொல்லுகிறார்கள். பரீட்சைக்கு விடப்படாத பிள்ளைகளுட் சிலர் வேறு பள்ளிக்கூடத்திற்குப் போதற்கு சேர்ட்டிவிக்கற் கேட்கிறார்கள். சிலர் இவ்வளவிற் படிப்பை முடித்துக்கொண்டு உத்தியோகத்திற்கு இடந் தேடிக்கொண்டு திரிகிறார்கள். அற நனைந்தவனுக்குக் கூதலில்லை யென்றபடி சில மாணாக்கர், தங்களைப் பரீட்சைக்கு விடாததுதான் நல்லது என்று சொல்லிக்கொண்டு கூட்டங் கூட்டமாகத் தெருவழியே கொண்டாட்டத்தோடு திரிகின்றார்கள். இந்த மாணாக்கர் முந்தியே கிரமமாய்ப் படித் திருந்தால், உபாத்தியாயர்களும் நன்னோக்க முடையவர்களென்ற உண்மையை இவர்களுடைய பெற்றார் உள்ளபடி உணர்ந்திருந்தால், இப்படி இடர்ப்படமாட்டார்கள். முகம் பழுதானாற் கண்ணாடியைக் குற்றஞ்சொல்லி ஆவதென்ன!

* * *

உலகம் பலவிதம்: 1927 டிசெம்பர் 1

நேசமணி - துரைரத்தினத்தினம் (முற்றொடர்)

துரைரத்தினத்தின் மீது லீலாவுக்கு சிறிது அன்பிருந்தபோதும் அந்த அன்பு அவளுடைய தாயின் துர்ப்போதனையால் மெல்ல மெல்ல நாளடைவில் தேய்ந்து போயது, துரைரத்தினத்திடம் உள்ள பொருளைக் கவரவேண்டுமென்ற எண்ணம் தாயிடத்தும் மகளிடத்துங் குடிகொண்டிருந்தது. இங்ஙனமாகத் தம்பிரத்தினம் அவர்களிடஞ் சென்றான்; தம்பிரத்தினத்திற்குத் தாயும் மகளும் துரைரத்தினம் தங்களிடத்து அலட்சியமாயிருத்தலையும் இரண்டொரு நாளாய் வராமல் விட்டதையுஞ் சொன்னார்கள். துரைரத்தினம் இப்பொழுது சில நாட்களாய் விடுதிக்குப் போவதில்லை யென்றும் அங்கு இருப்பதில்லையென்றும் அவருடைய இனத்தவரொருவர் வீட்டிலே வசிப்பதாகத் தான் அறிந்திருப்பதாகவும் தம்பிரத்தினம் அவர்களுக்குச் சொன்னான். இதனைக்கேட்டவுடனே தாய்க்கும் மகளுக்கும் துரைரத்தினத்தின்மீது பெரும் ஆத்திரம் பிறந்தது. "மகளே, பார்த்தாயா, நான் முந்தியே உனக்குச் சொல்லவில்லையா, கறுத்தவனை, அதிலும் யாழ்ப்பாணத்தானை நம்பக்கூடாதென்று இப்பொழுது தெரிகிறதல்லவா; கிழவி சொல்லுக் கின்னரகாறனுக்கு ஏறாதென்றபடி என்சொல்லு உனக்கு ஏறாமற்போய் விட்டது" என்று தாய் சொன்னாள். "அம்மா, இப்போது வந்த கஷ்டமென்ன" என்றாள் லீலா. "கஷ்டமொன்றுமில்லையா இவனுடன் நீ வெளி வெளியாகக் கூடித்திரிகிறாயென்று உன்னுடைய மற்றுஞ் சினேகிதர்களெல்லாரும் உன்னைக் கைவிட்டு விட்டார்களே அவர்கள் உன்னால் என்னோடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகைத்துக் கொண்டார்கள்; ஊரிலே தன்னுடைய பெண்டிரோடு மனஸ்தாபப்பட்டுக் கொண்டு வந்தவனையும் நம்பலாமா" என்று மகளைத் தாய் கடிந்து பேசினாள்; "பட்டாலறிவான் சண்டாளன்" என்ற பிரகாரம் துரைரத்தினம் தாம் செய்த தவறுகளெல்லாவற்றையும் நாளுக்குநாட் சிந்தித்துத் தன் மனையாளுடைய குணாதிசயங்களை மெய்ச்சி அவளிடத்தில் என்றுமில்லாத அன்பு பாராட்டி வந்தார். சில நாட்களாகத் தம் உத்தியோகத்தானத்திற்குப் போய்க் கடமை பார்ப்பதும் நேசமணியின் சிறியதந்தையார் வீட்டிலிருப்பதுமே யல்லாமல் வெளியில் எங்கும் போகாதவராயிருந்தார். நேசமணியின் சிறியதந்தையார் நேசமணியைச் சிலகாலம் தங்கள் வீட்டிற்றானே யிருக்கும்படி கேட்க, நேசமணியும் அதற்கு இசைந்தாள். இப்படியெல்லாமிருந்தாலும் துரைரத்தினத்திற்கு லீலாவின் காதல் இன்னமும் மாறவில்லை. அவளையிட்டுத் துரைரத்தினம் இடையிடையே சிந்தித்துக்கொண்டு தம்மை மறந்திருப்பார். இப்படியிருக்கும் போது ஒரு தினம் நேசமணி தன் நாயகனுக்கு அருந்தும்படி வெற்றிலைபாக்கை நீட்ட அவர் "இப்பொழுது வேண்டாம் லீலா" என்றார். நேசமணி புன்னகை செய்து கொண்டு "லீலாவல்ல, நான் நேசமணி" என்றாள். துரைரத்தினம் திடுக்கிட்டு வாயிற் கைவைத்து "கண்ணே, நேசம்; குறை நினைத்துக் கொள்ளாதே; என்னை விபரீதமாக எண்ணாதே; உன்னைப்போன்ற ஒரு உத்தமிக்கு என் குறைகளை உள்ளபடி சொல்லாமல் விடுவது சரியல்ல; அந்த லீலாவைப் பற்றித்தான் நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன்; அவள் அந்நியவளாயிருந்தாலும் என்னிடத்தில் விசுவாசமாயிருந்தவள்; எனக்கு மாறாகத் தாய் சொல்லும் புத்திகளையும் அவள் கேட்பதில்லை; தாய் இப்படி இப்படிச் சொன்னாளென்று அவள் சொன்னவைகளை யெல்லாம் இவள் ஒளியாமல் வந்து எனக்குச் சொல்லிவிடுவாள்; அவளுக்கு நான் ஒரு வார்த்தையுஞ் சொல்லாமல் அவளிடம் போகாமல் வராமல் விட்டுவிட்டேன்; ஒருமுறை யாயினும் நான் இரகசியமாக அவளிடம் போய் என் விஷயங்களை யெல்லாஞ் சொல்லி, இனி நான் உன் வீட்டிற்கு வரமாட்டேனென்று சொல்லிவிட்டு வந்தால் நல்லது; இப்படி நான் செய்வது உனக்குப் பிரியமாக விருக்குமோ வென்பதை யிட்டுத்தான் நான் யோசித்துக் கொண்டிருக்கும் போது நீ வெற்றிலையைக் கொண்டுவந்து நீட்டினாய்; நான் வாய்தடுமாறி லீலா வென்று சொல்லிவிட்டேன்" என்றார். "என்னைப்பற்றிக் கடுமையாக நினைத்துக் கொண்டிருந்தமையினாற்றான் "லீலா" என்று வாய் தடுமாறிச் சொல்லிவிட்டீர்கள் போலும்" என்று புன்னகை செய்து கொண்டு நேசமணி வேடிக்கையாகச் சொன்னாள். "நான் சொல்லுகிறேன் என்று என்னைக் கோபிக்காதீர்கள்; பெருங்காயம் வைத்த குடுக்கைபோல் அவளுடைய சகவாசத்தை நீங்கள் விட்டபோதும் அவளுடைய பாசம் உங்களை விடவில்லை; லீலா என்பவளைப்பற்றி நான் அதிகம் அறியாவிட்டாலும் பொதுவாக அப்படிப்பட்ட பெண்கள் காட்டும் அன்பெல்லாம் பாசாங்கு; பொருளுக்காக வைத்த அன்பும் ஒரு அன்பா?

"நாவாரவேண்டும்இதஞ்சொல்லுவார்உனை நான் பிரிந்தாற்
சாவேனென்றே யிருந்தொக்கவுண்பார் கைதான் வரண்டாற்
போய்வாருமென்று நடுத்தலைக்கே குட்டும் பூவையருக்(கு)
ஈவார் தலைவிதியோ இறைவா கச்சி யேகம்பனே"

என்று பட்டினத்துப் பிள்ளையார் பாடியது இப்படிப்பட்ட ஒழுக்கமற்ற பொருட் பெண்களைப் பற்றியல்லவா; உங்களுக்கு இஷ்டமானால் இன்னும் ஏதும் அவளுக்குக் கொடுங்கள்; அதற்கு நான் மாறல்ல; ஆனால் அவளை இன்றோடு மறந்துவிட வேண்டும்" என்று ஆதரவுடன் நேசமணி தன் நாயகனுக்குச் சொன்னாள்.

துரைரத்தினம் தம்மனையாள் சொல்வது உண்மைதான் என்று மனத்திற் கொண்டாரேனும், இன்னமும் லீலாவிடத்தில் நம்பிக்கையும் காதலும் வைத்திருந்தான். இரண்டொருதினஞ் செல்ல ஒருநாள் இரவு 7 மணிக்குமேல் துரைரத்தினம் தமது பெண்டிர் பிள்ளைகளுடன் மோட்டரதத்தி லேறிக்கொண்டு கடற்கரைக்குச் சமீபமாகச் சென்று இறங்கிக் கடற்கரையோரமாக நடந்து சென்றனர். அப்பொழுது லீலாவுடைய எண்ணம் இவர் மனசில் அதிகம் உண்டாகியது. ஏனென்றால் முதற்கிழமையும் லீலாவோடு துரைரத்தினம் அந்தக் கடற்கரையில் அந்த நேரத்திற்சென்றதுண்டு. துரைரத்தினமும் மனையாளும் பிள்ளைகளுங் கடற்கரையோரமாக உலாவிச்சென்றபோது சிறிது தூரத்தில் இரண்டு மூன்றுபேர் ஒருங்கிருந்து பேசக் காணப்பட்டனர். சிறிது சமீபமாகச் சென்றபோது அவர்களுள் ஒருவன் தம்பிரத்தின மென்பதைக்கண்டு துரைரத்தினம் தன்மனையாளையும் பிள்ளைகளையும் "நீங்கள் கொஞ் சத்தூரம் மெல்லமெல்லப் போங்கள். நான் இதோ வருகிறேன்" என்று சொல்லி அப்பாற்போகவிட்டு, இந்தக் கூட்டத்தினர் இருக்குமிடத்திற்கு வந்தார். அவர்களுள் ஒருவன் தம்பிரத்தினந்தான்; இன்னொருவன் ஒரு பெண்ணுடைய மடியிலே தலைவைத்துக் கொண்டு மணலில் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கக் காணப்பட்டான். அப்படிப்பட்ட இடத்திற்குத் தாம் வந்தமை தவறென்று உணர்ந்த உடனே திரும்பிய துரைரத்தினம் திரும்பும் போது அந்தப் பெண்யார் என்று அவதானித்துப் பார்த்தார். அவள் லீலா எனக்கண்டு திடுக்குற்றார்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1927 டிசம்பர் 08

நேசமணி - துரைரத்தினத்தினம் (முற்றொடர்)

துரைரத்தினம் தாங்காண்பது கனவோ நனவோ வென்று சந்தேகப்பட்டார்; சந்தேகப்பட வேண்டியதென்ன; அங்கிருப்பவள் லீலாதான்; என்று கண்டார்; சரேலென அவ்விடத்தை விட்டகன்றார். லீலா, "இப்பொழுது இங்கே வந்துவிட்டுத் திரும்பிப்போபவர் யார்" என்று தம்பிரத்தினத்தைக்கேட்க, "துரைரத்தினமா யிருக்க வேண்டும்" என்று பதில் சொன்னான்; அதனைக்கேட்ட லீலா திகிலடைந்தாள்; ஆனால் அந்தச்சமையத்தில் தான் துரைரத்தினத்தை முன்னொரு போதும் அறியாதவள்போல லீலா நடத்திக்கொண்டாள். அந்த மூவரும் பின்னருஞ் சிறிதுநேரம் அங்கிருந்துவிட்டு எழுந்து வீட்டிற்கு மீண்டனர்; வீட்டிற்குப்போனவுடனே லீலா துரைரத்தினம் தன்னைக் கடற்கரையிற் கண்ட செய்தியைத் தாய்க்குச் சொல்ல அவள் "உன் கருமங்களை எனக்குச் சொல்லாதே; நீயொரு அடங்காமாரி; எப்படியாயினுந் தொலைந்துபோ" என்று மகளை வைதுவிட்டுப் பேசாமலிருந்தாள்.

* * *

கடற்கரையில் லீலாவின் மடியிலே தலை வைத்துக்கொண்டு படுத்திருந்தவன் யாரென்னிற் சொல்லுகின்றோம்; இவன் பெயர் துரைசிங்கம்; இவன் தபாற்கந்தோரில் வேலையாகவிருந்தவன்; அக்காலத்திலே இவன் தம்பிரத்தினத்தின் ஏமாற்றத்தில் எடுபட்டு லீலாவோடு சிநேகம் பூண்டு தான் பெற்றுவந்த சம்பளம் முழுவதையும் லீலா விஷயமாகவே செலவு செய்தவன். லீலாவின் காதல்வலையில் அகப்பட்டுக் குறித்த நேரத்திற்குக் கிரமமாக உத்தியோக ஸ்தானத்திற்குப் போகாதொழிந்தமையினால் இவனை மேலதிகாரிகள் வேலையினின்றும் விலக்கிவிட்டனர்.

"விளக்கொளியும் வேசியர் நட்பு மிரண்டும்
துளக்கற நாடில் வேறல்ல விளக்கொளியும்
நெய்யற்ற கண்ணே யறுமே அவரன்பும்
கையற்ற கண்ணே யறும்"

(எண்ணெய் விளக்கில் இருக்கும் வரையிலேயே தீய்ச்சுடர் எரியும். அதுபோலக் கையிற் பொருள் இருக்கும்வரைக்குமே வேசியர்கள் நட்புப் பாராட்டுவார்கள்.) என்ற பிரகாரம் இவனுடைய கை வறண்டமையைக் கண்டு முந்தி லீலாவும் தாயும் இவனைத் தம் வீட்டில் அடுக்காதொழிய இவன் சிலகாலம் சித்தப்பிரமை கொண்டவன்போலத் தெருவழியே திரிந்தான். பின்னர் சில பிரபுக்களின் உதவியினால் ஒரு வியாபார சமுதாயத்தில் இவனுக்கு ஒரு உத்தியோகம் அகப்பட்டது; கையிற் சிறிது பொருள் வந்தவுடனே துரைசிங்கமென்பவன் பழையபடி தம்பிரத்தினத்துடன் லீலா வீட்டிற்கு வந்து சேர்ந்தான்; தாயும் மகளும் இவனைப் பழையபடி சேர்த்துக்கொண்டனர்; தாய் தன் மகளுக்குத் துரைசிங்கத்தோடு வெளிவெளியாகக் கூடித் திரிய வேண்டாமென்று சொல்லவும் மகள் அதனைக் கேளாமற் புறப்பட்டுக் கடற்கரைக்கு வந்து இருந்த சமையத்திலேயே துரைரத்தினம் இவர்களைக் காணநேர்ந்தது.

* * *

உலகம் பலவிதம்: 1927 டிசம்பர் 15

நேசமணி - துரைரத்தினத்தினம் (முற்றொடர்)

துரைரத்தினத்தின் மனசில் லீலா விஷயமாக எஞ்சி நின்ற அன்பும் விசுவாசமும் கடற்கரையில் அவளை அன்று அப்படிக் கண்டவுடனே அகன்றுவிட்டன. துரைரத்தினம் தம் மனையாள் நிற்குமிடத்திற்குப் போகும்போது அதிக கவலையோடுஞ் சென்றார். சமீபத்திற் சென்றவுடன் பெருமூச்சுவிட்டார். "என்ன அதிகம் யோசிக்கின்றீர்கள்; ஏதும் விசேஷமுண்டோ" வென்று நேசமணி தன் கணவனை ஆதரவோடு கேட்க, "கண்ணே, நேசம், நான் என்னவென்று உமக்கு சொல்லுவது; என்பொல்லாதகாலத்தினால் உம்முடைய அருமை பெருமைகளை அறிந்திருந்தும், அந்தப் பரத்தையின் சொற்கேட்டு உம்மை அவமதித்தேன்; அலட்சியம் செய்தேன்; என் பொருளெல்லாவற்றையும் அவளுக்குக் கொடுத்தேன்; மரியாதைகெட்டேன்; கடன்காரனானேன்; குடியென்றுபோய் கெட்டேன். இப்படியெல்லாம் எனக்கு வந்தபின்னரும் அவள் மீது சிறிது விசுவாசம் இந்தநிமிஷம் வரையில் வைத்திருந்தேன்; இப்பொழுதுதான் தெய்வம் அந்தச்சண்டாளியின் வஞ்சனையை எனக்குக் கண்ணாரக் காட்டியது; இவ்வளவிலாவது நான் தப்பியது நீ செய்த புண்ணியமாகும்" என்று சொல்லிக் கண்ணீர் விட்டார். "இங்கேபாருங்கள்; நீங்கள் கலங்க வேண்டாம்; நீங்கள் கலங்குவதைப் பார்த்துக் கொண்டு அழாமலிருக்க என்னால் முடியாது; இவைகளெல்லாம் நன்மைக்குத்தான்; நல்ல குருநாதர் நம்மை வருத்துவது கொல்லவல்லக் கொல்லவல்லப் பொல்லாக்குணம் போக்க; நடந்து முடிந்ததையிட்டு வருந்தி ஆவது ஒன்றுமில்லை; இனிமேலாயினும் நாம் புத்தியாய் நடந்துகொள்ளவேண்டும்" என்று சொல்லி நேசமணி தன்னாயகனைத்தேற்றினாள். இருவரும் பிள்ளைகளுடன் சிறிது நேரம் உலாவிவிட்டு மோட்டார் ரதத்தில் எறிக்கொண்டு தாங்கள் இருக்கும் வீட்டிற்குப் போனார்கள்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் முன்சொன்னபிரகாரம் துரைரத்தினம் நேசமணியின் சிறியதந்தையாரின் வீட்டிலே யிருந்துகொண்டு தமது உத்தியோகஸ்தானத்திற்குப் போய்க் கடமை பார்த்து வருவாராயினர். துரைரத்தினத்தில் நன்மைக்காகிய பல மாறுதல்களை உத்தியோகத்தானத்திலிருக்கும் நண்பர்கள் அவதானித்தார்கள்; துரைரத்தினத்தைப்பற்றி நல்லாயறிந்த ஒருவர் தம்முடன் வேலைசெய்யும் மற்றும் உத்தியோகத் தர்களைப் பார்த்து "மிஸ்டர் துரைரத்தினத்தின் மனைவி இங்கே வந்து இருக்கிறதாக நான் அறிகிறேன். அந்தப்பிள்ளை ஒரு உத்தமியென்று நம்ம வீட்டுக் காரர் எனக்குச் சொன்னதுண்டு; அதனாலே தான் துரைரத்தினத்திடத்தில் நன்மைக்காகிய இந்த மாறுதல்களெல்லாங் காணப்படுகின்றன" என்றார். அதனைக்கேட்ட மற்றவர்கள் "ஆம், ஆம், வீட்டிலுள்ள பெண்ணாய்ப் பிறந்தவளிலே தான் எல்லாந் தங்கியிருக்கிறது" என்றார்கள்.

* * *

இப்படிச் சிலநாட்கள் செல்ல ஒருநாள் துரைரத்தினம் தமது உத்தியோகஸ்தானத்தில் விருந்து தாமிருக்கும் வீட்டிற்கு மீண்டுபோன போது, தபாற்காரன் முந்தியே கொண்டுவந்த ஒரு காகிதத்தை நேசமணி தன் கணவன் கையிற் கொடுத்தாள்; அவர் அதை வாங்கித் திறந்து பார்த்தார். பார்த்தவுடனே அவரு டைய முகத்தில் மின்னல் போல் மகிழ்ச்சி காணப்பட்டது. பக்கத்தே நின்ற நேசமணி அது என்ன என்று கேட்டாள். "கண்ணே, உமது பேரால் குதிரைப்பந்தயத்தில் இரண்டு துண்டு எடுத்திருந்தேன்; அத்துண்டுகளில் ஒன்றில் 2000ரூபா உமக்கு வந்திருக்கிறது" என்று அக்கடிதத்தைத் தம்மனையாள் கையிற் கொடுத்தார். நேசமணியும் அதனைப் பார்த்துப் புன்முறுவல் செய்தாள். இந்தச் சந்தோஷசமாசாரம் முருகம்மானுக்கும் வீட்டிலுள்ள மற்றோருக்கும் உடனே சொல்லப்பட்டது. எல்லோரும் "ஆங்காலம் எல்லாம் ஆகும்" என்று சொல்லிமகிழ்ந்தார்கள்.

* * *

முருகர் இது நடந்து இரண்டு மூன்று தினஞ் செல்ல, துரைரத்தினம் நேசமணி முதலானோரிடத்தில் அநுமதி பெற்றுக்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு மீண்டுவிட்டார். இங்ஙனமாக ஒருநாட்காலை நேசமணி தனது சிறியதந்தை முன்னிலையில் மிக்க ஒதுக்க பதுக்கத்தோடு தன்கைகளை பிசைந்துகொண்டு நின்றாள்; "மகளே, என்ன விசேஷம்; நான் என்ன செய்யவேண்டும்" என்று சிறியதந்தை கேட்க அவள் ஒரு கடதாசிச் சுருளை நீட்ட அவர் வாங்கி விரித்துப்பார்த்தார். காசு 250 ரூபா இருந்தது. "தங்கச்சி, இது என்னவேலை; எனக்கு இந்த காசு நீ தரவேண்டாம்; நான் உனக்கு உபகாரமாக தான் அந்தப்பணத்தை தந்தேன்; நீயும் என்னுடைய பிள்ளைதானே; நான் தருவதை நீ வாங்குவதால் ஏதுங்குறைவுண்டா" என்று மிக்க ஆதரவோடு சிறியதகப்பன் சொல்ல, "அப்படியொன்றுமில்லை; சிற்றப்பர் முந்தி நான் உங்கள் பணத்தைத் திருப்பிதர நினைத்திருக்கவில்லை; இந்த இரண்டாயிரம் ரூபாவும் வந்தமையினாலே தான் தருகிறேன்; நீங்கள் எப்பொழுதும் எனக்கு உதவிசெய்ய வேணும்; இதை எற்றுக்கொண்டால் எனக்கு பெரிய சந்தோஷமாயிருக்கும்" என்று நேசமணி தன் சிறிய தந்தையை இரந்தாள். சரி, அப்படியானால் நான் ஏற்றுக்கொள்ளுகிறேன் என்று மனப்பூர்வமாகச் சொன்னார்.

* * *

துரைரத்தினத்திற்கு உத்தியோக விடுதலை இரண்டு வார காலத்திற்குக் கிடைத்தது. அவரும் மனைவி மக்களும் சிறிய தகப்பனார் மற்றுமுள்ளவர்களுடைய அனுமதி பெற்றுக்கொண்டு யாழ்ப்பாணத்திற்குப் புறப்பட்டு வந்தனர். தங்கள் மகளும் மருமகனும் பிள்ளைகளும் வந்தமையைக் கேள்விப்பட்டு நேசமணியின் தாய் தகப்பன் சுற்றமித்திரர் எல்லோரும் அவர்களைக் காணும்படி நாளுக்கு நாட் போய்ச் சுகம் விசாரித்தார்கள். குதிரைப் பந்தயத்தில் இவர்களுக்கு 2000 ரூபா வந்ததைக் கேள்விப்பட்டு விசேஷமாக நேசமணியின் தகப்பன் பெருஞ் சந்தோஷமடைந்தார்; மகள் மீதும் மருமகன் மீதும் முன்னொருபோதுமில்லாத அன்பு பாராட்டினார்; யாழ்பாணத்திற்கு வந்த அடுத்தநாள் அதிகாலையில் நேசமணி தன்நாயகன் தனியேநிற்குஞ் சமயத்தில் பஞ்சாங்கமாக அவருடைய கால்களில் வீழ்ந்து வணங்கினார். அதனைக்கண்ட துரைரத்தினம் பதைபதைத்துத் தன் மனையாளை அணைத் தெடுத்து நிற்கச்செய்து "கண்ணே நேசம், இது என்னவேலை" என்று அன்பொடு கேட்க, "பிராணேசா, நான் உங்களுடைய உத்தரவில்லாமல் இந்த வீட்டை விட்டு நீங்கள் உத்தியோகம் பார்க்கும் ஊருக்கு வந்ததை பொறுத்துக்கொள்ள வேண்டும" என்று கேட்க "கண்ணே குற்றமாகவிருந்தாலல்லவோ பொறுப் பது; நானல்லவோ உம்மிடம் பொறுதி கேட்க வேண்டியவனாயிருக்கின்றேன்" என்று சொல்லி னார். அன்று தொடக்கம் துரைரத்தினமும் நேசமணியும் செவ்வனே இல்லறத்தை நடாத்திக் கொண்டு யாதுங் குறைவின்றி வாழ்ந்தார்கள்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவிய சகோதரர்

[தலைப்பு பதிப்பாசிரியருடையது]

உலகம் பலவிதம்: 1927 டிசெம்பர் 22

காவிய சகோதரர்

இந்த உலகத்திலே இரண்டு வகையினரான சகோதரர் உண்டு. தம்முடன் பிறந்தோனுக்கு வரும் நன்மை தீமைகளைத் தமக்கு வந்த நன்மை தீமைகளென நினைத்து அவன் மகிழும் போது தாமும் மகிழ்ந்து அவன் துன்புறும்போது தாமும் துன்புற்று, தமக்கும் தம் உடன் பிறந்தோனுக்குமிடையே பேதம்பாராட்டாது ஐக்கியமாக நடப்பவர்கள் உத்தம சகோதரராவர். இப்படிப்பட்டவர்களே சூரபன்மனுடைய தம்பியாகிய சிங்கன் ஸ்ரீ ராமனுடைய தம்பியாகிய பரதன் இராவணனுடைய தம்பியாகிய கும்பகர்ணன் முதலானோர்; "அண்ணா, கந்தனைச் சிறுவனென்று எண்ணாதே; அவனே பரம்பொருளாகும்; ஏழைகளான தேவர்களை நீ சிறை வைத்திருக்கின்றாய்; ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளொக்கும்; இந்திரகுமரனான சயந்தன் முதலிய தேவர்களின் சிறையை விடுத்து சிவகுமாரனாகிய கந்தனை நீ வந்தனை செய்வையேல் அவன் உனக்குப் பூரண அநுக்கிரகஞ் செய்துவிட்டுக் கையிலைக்கு மீண்டுவிடுவான்; நீ ஆயிரத்தெட்டு அண்டசாரங்களையும் எக்காலமும் அரசுபுரியலாம் என்று சிங்கமுகாசுரன் தன் மூத்தோனாகிய சூரனுக்கு இயன்றமட்டும் புத்தி சொன்னான். தம்பி சொன்ன புத்தியைத் தமையன் கேட்கவில்லை; நாசம் வந்துற்ற போது நல்லவும் தீயவாகுமல்லவா! "தம்பி நான் உன்னை இங்கே இப்பொழுது கூப்பிட்டது எனக்குப் புத்திபுகட்டவல்ல; போருக்குப்போகப் பயப்படுகின்றாய்; நீ போக வேண்டாம், நானேபோய் அந்த சிவகுமாரனை வென்று வருகின்றேன்" என்றுகூறி யுத்தத்திற்குப் புறப்பட்டான்; சிங்கன் பார்த்தான்; "என் அண்ணன் மாண்டபின் நான் இங்கு இருப்பது சரியல்ல; என் மூத்தோனுக்குமுந்தி நான் உயிர்விடுதலே முறையாகும்" என்று நிச்சயித்துத் தமையனைத் தடுத்துவிட்டு தானேசென்று அறுமுகக் கடவுளுடன் சமர்செய்து அப்பெருமானுடைய குலிசப் படையால் மாண்டான். தன்தம்பியும் சண்முகப்பெருமானும் செய்யும் கடும் யுத்தத்தை உபரிகையின்மீது பார்த்துக் கொண்டுநின்ற சூரபன்மனிடம் ஏவலர் ஓடி வந்து "குன்றம்பிளந்த குமரேசன் தன் சிரத்தால், உன்றம்பியாவி யொழிந்தான் என்று சொன்னார்கள். கேட்ட சூரன் அந்த உன்னதமான உப்பரிகையினின்று மலைச்சிகரம் வீழ்வதுபோல் நிலத்தில் வீழ்ந்து புரண்டு புலம்பினான்.

பொன்னை நிலந்தன்னைப் புதல்வர்களை மங்கையரைப்
பின்னையுள பொருளையெல்லாம் பெறலாகும்
என்னையுடைய இளையோனே இப்பிறப்பில்
உன்னையினிப் பெறுவதுண்டோ உரையாயே

என்று சொல்லிப் புலம்பினான். இவர்களிருவரும்தாம் சகோதரராவர்.

★★★

வஞ்சனியாகிய கூனியின் துர்ப்புத்தி கேட்டுக் கைகேகி ஸ்ரீ ராமருக்குப் பட்டஞ்சூட்ட விடாது தன் மகன் பரதனுக்கே பட்டஞ்சூட்ட வேண்டுமென்று தசரதச்சக்கரவர்த்தியோடு பிடிவாதஞ்செய்ய, சத்தியம் திறம்பா சக்கரவர்த்தி அப்படியே ஆகட்டுமென்று சொல்லி இராமனுடைய பிரிவாற்றாது துயரத்தால் உயிர் விடுத்தார். அச்சமயத்திலே பரதன் கேகய நாட்டிற்குச் சென்றிருந்தானாதலால் தன் தாய் செய்த வஞ்சனையை அறியான். அயோத்திக்குப் பரதன் தன் தம்பியாகிய சத்துருக்கனுடன் மீண்டு வந்தபோது தாய் செய்த சூழ்ச்சியால் தந்தை மாண்டதையும் தமயன் காட்டிற்கு போனதையும் அறிந்தான். பெற்ற தாயென்றும் பாராமற் கைகேசியை வைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயோத்தியில் சனங்களெல்லாரையுங் கூட்டிக்கொண்டு தமயனிடம் புறப்பட்டுச்சென்று கங்கைக் கரையை யடைந்தான்; நால்வகைச்சேனைகளும் புடை சூழப் பல்லாயிரக்கணக்கான சனங்களுடன் பரதன் வருவதைச் சிருங்கிபேரத்துள்ள வேட்டுவர் தலைவனும் ஸ்ரீ ராமருடைய துணைவனுமாகிய குகன் கண்டான். பரதன் தன் தமையனுடன் போர் செய்வதற்கு வருகின்றான் போலுமென்று இக் கரையில்நின்ற குகன் சிந்தித்து அடங்காச் சீற்றங்கொண்டான்; எந்தக் கருமத்தையும் நல்லாய் ஆராய்ந்து செய்யவேண்டு மெனக் குகன் அகத்தில் நிச்சயித்துக்கொண்டு தன் ஆட்களைப்பார்த்து "அடா வீரர்களே, மார்க்கத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்; எவரும் ஓடம்விட வேண்டாம்" என்று சொல்லிவிட்டுத் தான்மாத்திரம் ஒரு ஓடத்தில் ஏறிச் செலுத்திக்கொண்டு அக்கரைக் குப் போனான். இதற்கிடையில் முதன் மந்திரியாகிய சுமந்திரன் சொல்லக் குகனுடைய பெருந்தன்மையையும் இராமனின் கதியையுங் கேள்வியுற்ற பரதன் தன் தம்பியோடும் சுமந்திரனோடும் குகனை எதிர் கொள்ளும்படி கரைக்கு அதிக சமீபமாக வந்தான். அக்கரையை யடைந்த குகன் "சடைமுடியுடையனாய் மரவுரி தரித்தவனாய்த் தாபத வேடங்கொண்டு கூப்பிய கரத்துடன் கண்களில் நீர்சிந்தத் தனக்கு நேரேவருகின்ற பரதனைக் கண்டான்; மனந் திடுக்குற்றான்; ஆ, கெட்டேன்; இந்த உத்தமனைப்பற்றி நான் நினைத்தது அத்தனையுந் தப்பாகும்; ஆதலால் குலத்துதித்தோர் அல்லன செய்யமாட்டார்" என்று சிந்தித்துக்கொண்டு முன்னோடிச்சென்று குகன் அவனை வணங்க அவன் இவனை வணங்கினான். வணங்கிய குகன் பரதனைப்பார்த்து "இராஜ குமாரனே இந்தப்பக்கமாக வந்த நோக்கமென்ன" என வினவலும், பரதன் "வேடுவத்தலைவனே, நான் இல்லாதசமையத்தில் எங்கள் பிதாவாகிய சக்கரவர்த்தி முறைதப்பி என் அண்ணனுக்குரிய ராச்சியத்தை எனக்கு உதவிவிட்டுத் தாமும் இந்த உலகவாழ்வை விடுத்தகன்றார்; பிதாச் செய்த பிழையை நீக்கும்படி என் அண்ணனை அழைத்து அயோத்திக்கு அரசனாக்கும் வண்ணம் செல்கின்றேன்" என்றான். இதனைக் கேட்ட குகன் வெயிலிடைப்பட்ட வெண்ணெய் போல மனமுருகிக் கண்களில் நீர்ததும்ப நின்று சொல்லுகின்றான்:

தாயுரை கொண்டு தந்தையுதவிய தரணிதன்னை
தீவினையென்ன நீத்துச் சிந்தனை முகத்திற்றேக்கி
போயினை யென்றபோது புகழினோய் தன்மைகண்டால்
ஆயிர மிராமர் நின்கேளாவரோ தெரியினம்மா
என்புகழ்கின்ற தேழை எயினனேன் இரவியென்பான்
தன்புகழ்க் கற்றைமற்றை யொளிகளைத் தவிர்க்குமாபோல்
மன்புகழ் பெருமைநுங்கள் மரபினோர் புகழ்களெல்லாம்
உன்புக ழாக்கிக்கொண்டாய் உயர்குணத் துரவுத் தோழாய்

பரதமகாராசனே தாயின் கேள்விப்படி தந்தை உனக்குத் தந்த இராச்சியத்தை வேண்டாமென்று விடுத்துத் தமையனை யழைத்து அவன் ஏகும் அந்த இராச்சியத்தை ஒப்பிக்கவேண்டுமெனப் புறப்பட்டு வந்திருக்கின்றாயென்றால் ஆயிரம் இராமர் ஒருங்கு சேர்ந்தாலும் உனக்கு ஒப்பாகுமோ, ஒருபோதும் ஆகமாட்டார். ஏழை வேடனாகிய நான் உன் புகழை அறிதல் முடியுமோ; சூரியன் மற்றும் கிரகங்கள் நட்சத்திரங்க ளெல்லாவற்றின் ஒளியையும் தனுட்படுத்திய தன்மைபோல் நீயும் உன் மூதாதைகள் ஈட்டிய புகழையெல்லாம் உன் வசமாக்கிக்கொண்டாய்" என்று புகழ்ந்தான். பரதன்மீது குகன் சந்தேகப்பட்டது ஒரு நூதனமா; பரதன் இராமனிடம் வருவதைத் தூரத்தில் நின்று கண்ட இலக்குமணனே பரதன் படையெடுத்துக் கொண்டு தம் மூத்தோனுடன் போராட வருகின்றா னென்று சந்தேகங்கொண்டு அவனுடன் எதிர்த்து யுத்தஞ் செய்வதற்குத் தமையனை அனுமதி கேட்க தமையன் "இலக்குமணா, என் அரிய தம்பீ, உன் இனிய அண்ணன் பரதன் ஒருபோதும் அப்படிச்செய்யமாட்டான். அவன் என் பிரிவாற்றாது என்னை அழைத்துக்கொண்டு அயோத்திக்குச் செல்வதற்காக வருகின்றான்" என்றார். இலக்குமணனுக்கு அப்பொழுதும் பரதன் மீது கொண்ட சந்தேகம் நீங்கவில்லை. பரதன் தன்னுடன் வந்தவர்களையெல்லாம் பின்னே நிற்கும்படி பணித்து, சத்துருக்கனுடன் ஓ, என்று அலறிக்கொண்டு தமையன்முன் ஓடிவருதலும் இராமர் "இலக்குமணா, பார்த்தாயா பரதனுடைய போர்க்கோலத்தை" என்று சுட்டிக் காட்டினார்; இலக்குமணன் நாண முற்றவனாய்ப் பூமியைப் பார்த்தபடி நின்றான் இவர்களிருவரும் உத்தம சகோதரராவர்.

* * *

இராவணனுடைய தம்பியாகிய கும்பகர்ணன் சீதையைத் சிறைவிட்டு உய்யும்படி தன் மூத்தோனுக்குப் பல புத்திகளைப் புகட்டினான். மூத்தோன் அவற்றைக் கேட்பதை விடுத்துத் தனக்கு இதோபதேசஞ் செய்த தம்பியைச் சினந்து "ஏ, கும்பகன்னா, நீ எனக்குப் புத்தி சொல்லவேண்டியதில்லை; என் ஆவியை விடவேண்டி வந்தாலும் இராகவன் தேவியை நான் விடமாட்டேன்; நீ போர் செய்யப் பயப்படுகின்றாய்; ஊனையும் கள்ளையும் உன் வயிறார உண்டுவிட்டுப் போய்ப்படுத்துறங்குதி; என் கண் முன் நில்லாதே" என்று சொல்லிவிட்டுத் தானே இராமரோடு சமர் செய்யும்படி புறப்பட்டான். உடற்பிறப்பாகிய கும்பகன்னன் தானிருக்கும் வரையில் தன் தமையனைப் போர் செய்து மாளவிடுவானா! ஒருபோதும் விடமாட்டான்; "அண்ணா, சிறியேன் அறியாமையாற் செய்த பிழையத்தனையும் பொறுத்துக்கொள்; இப்பொழுதே நான் அமர்செய்யப் போகின்றேன்; ஆனால் இன்னுமொன்று சொல்கின்றேன்; என்னரிய அண்ணாவே, கேட்கவேண்டும்; இந்திரசித்தனும் இராமன் தம்பி கையால் இறத்தல்திண்ணமென எனக்குப் புலப்படுகின்றது; யான் சமர்க்களத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமனம்பால் மாண்டபின்னாயினும் நீ சீதையின் சிறையைவிட்டு உய்ந்திடுதி; இலங்கைகாவல, அந்த நரர் என்னை வெல்வரேல் உன்னையும் வெல்வரென்பது திண்ணம்; என் மூத்தோனாகிய உன் அரிய முகத்தை நான் இனி எப்போது காண்பேன்; விடைபெற்றேன் செல்கின்றேன்" என்று சொல்லிக் கண்ணீர்சொரிய யுத்தத்திற்குப் புறப்பட்டான். இராவணனுடைய இருபது கண்களும் நீர் சொரிந்தன.

* * *

போர்க்கோலம் புனைந்து நால்வகைச் சேனைகளோடும் யுத்தத்திற்குச் சென்ற கும்பகர்ணனைக்கண்ட ஸ்ரீ இராமர் அற்புதமடைந்தவராய் அயலே நின்ற விபீஷணனை இப்பாரிய யாக்கையன்யார் என்று கேட்க அவன் இராமரை வணங்கி "சுவாமி, இவன் இராவணனுக்குத் தம்பி, எனக்குத் தமையன்; இவன் பெயர் கும்பகன்னன்; முன்னாளிற் பிரமாவிடத்தில் நித்தியவரங்கேட்கச் சென்று நாத்தடுமாறி நித்திரை வரங்கேட்டுப் பெற்றமையினால் உறக்கமே பெரிதும் உடையன்; என் மூத்தோனாகிய இராவணனைக் காட்டிலும் அதிக வலிமையுடையவன்; இந்திரன் இருந்தபடியே முன்னொரு முறை அயிராவதம் என்னும் யானையைத் தும்பிக்கையிற் பிடித்துக் காற்றாடி போல் சுழற்றியவன்; இப்போதும் சீதாதேவியின் சிறையை விட்டு உய்யும்படி இராவணனுக்குச் சொன்னான்; அவன் கேட்காமையினால் இங்கே யுத்தஞ் செய்யப் புறப்பட்டு வந்திருக்கின்றான். அரக்கராகிய எங்களுள் இவன் நீதியோடு கூடியவன்" என்றான், இவற்றைக் கேட்டுக்கொண்டு அயலே நின்ற சுக்கிரீவன் இராமரைநோக்கி "சுவாமி, இப்படியானால் இவனையும் நம்பக்கஞ் சேர்த்துக் கொள்வது நல்ல" தென்றான். இராமர் அது நன்றென்றிசைந்து யாரை அவனிடமனுப்புவதென வினவ, விபீஷணன் "சுவாமி, இயலுமானால் நான் போய் அழைத்து வருகின்றேன்" என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு சேனைகளைக் கடந்து சென்று கும்பகன்னனையடைந்து அவனுடைய பாதங்களை வணங்க அவன் அன்போடு தன் தம்பியை எடுத்தணைத்துத் "தம்பீ, தசரதகுமாரர் பால் அடைக்கலம் புகுந்த நீ அறிவிலாதவர் போல் மீண்டுவந்த காரணமென்ன" என்று கேட்டான்.

* * *

உலகம் பலவிதம்: 1927 டிசெம்பர் 29

காவிய சகோதரர் (முற்றொடர் - 02)

இங்ஙனம் கும்பகன்னன்கேட்ப, விபீஷணன் அவனை நோக்கி "அண்ணா அந்த தசரத குமாரர் அடைக்கலம் புகுந்த என்னை ஒரு போதும் கைவிடமாட்டார். அவர்கள் என்மீது உன்மீதும் கொண்ட அன்பு காரணமாக உன்னையும் தம்மிடம் அழைத்துவரும்படி பணித்தனர்; எங்கள் அண்ணனாகிய இராவணனைத் திருத்தலாமென்று நாமிருவரும் இயன்றவரையிற் புத்தி சொன்னோமல்லவா; அண்ணன் எங்கள் புத்தியைக் கைக்கொண்டிலன் அவன் குலத்தொடு அழிவது திண்ணம் ஆனதால் நீ அண்ணனுடன் கூடி அநியாயமாக அழியவேண்டியதில்லையாம்; நீ எங்கள் பக்கம் வருவையேல் ஸ்ரீ ராமபிரன் எனக்குத் தரவிருக்கும் இலங்கையிராச்சியத்தையும் நான் உனக்குத் தந்து நீ சொல்லுங் குற்றேவல் செய்து நிற்பேன்; தம்பியின் வார்த்தையென்று நான் சொல்வதை எள்ளாதே" என்று இரந்தான்; தம்பியின் வார்த்தையைக் கேட்ட தமயன் பெருநகை செய்து அவனைப் பார்த்து "தம்பி விபீஷணா; என்னை நீ எவ்வாறு நினைத்தனை; நீரிலே தோன்றி மறையும் நிலையற்ற குமிழிக்கு நிகராகிய இந்தப் பிரபஞ்ச வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு, எங்களைப் பிதாப்போற் பரிவுடன் வளர்த்து இப்பொழுதும் என்னை யுத்தத்திற்குப் போகும்படி தன் கையினால் எனக்கு யுத்தக் கோலஞ்செய்தனுப்பிய என் அண்ணனுக்கு மாறாக பகைவரிடஞ் செல்வேனென்றா நினைத் தாய்; எங்கள் அண்ணன் ஒரு பிழையைச் செய்யப் புகுந்தால், தம்பியரென இருக்கும் நாங்கள் தமையன் அப் பிழையைச் செய்யாவண்ணம் இயன்ற வரையிற் புத்தி சொல்லித் தடுக்க முயலுதல் வேண்டும். எங்கள் சொல்லைத் தட்டி அவர் தாம் நினைத்தபடி செய்து உயிரிழக்க வேண்டி வந்தாலும், தம்பியர் களாயுள்ள நாம் அண்ணன் பொருட்டு எங்கள் உயிரை முந்தியே விடுதலல்லவா முறைமையாகும். பொன்னைப் பெறலாம் பொருளைப் பெறலாம் பெண்ணைப் பெறலாம் பிள்ளைகளைப் பெறலாம் உடற் பிறப்பைப் பெறமுடியாது; எங்கள் அண்ணனுக்குத் துரோகஞ் செய்து அவன் இறக்க வழிதேடி அவனுடைய பொருளை நாங்கள் கவர்வதானால் எங்களுக்குச் சமமான சகோதரத் துரோகிகள் கசடர் சண்டாளர் மீளா நரகிற் கிடந்து அழுந்த வேண்டியவர்கள் வேறு எவருமிருக்கின்றாரா; இந்த நிலையற்ற அற்ப பொருளுக்கு ஆசைப்பட்டு எங்கள் அண்ணனை நாங்கள் வஞ்சித்துவிட்டு வாழவிரும்பினாலும் அந்த வாழ்க்கை நீடித்து நிற்குமா? அப்படி வஞ் சித்துப் பெற்ற பொருள் பசுமட்கலத்துட்பெய்த நீரைப்போல, கொண்டானையும் கெடுத்துத் தானும் பயனற்றுப் போகுமல்லவா; அன்றியும் தம்பி, புகழ் நிலை நிற்பதன்றி இந்தப்பொருள் நிலைநிற்பதல்ல, காலம்போம் வார்த்தை நிற்குங்கண்டாயே என்ற பிரகாரம் எவ்வளவுகாலஞ் சென்றாலும் தமய னைத் துன்பப்படுத்தி அவனுடைய பொருளைத் கவர்ந்தானென்ற பழிமொழி அழியப்போவதில்லை.

* * *

"தம்பி, என்னைச் சாமானியனென்று எண்ணாதே, கூற்றுவனும் என்னுடன் அமர் ஏற்று நிற்க அஞ்சுவன்; அனுமனை, அங்கதனை, சுக்கிரீவனை, சாம்புவனை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலனை யுத்தத்திலே வென்று பனிப்படலத்தை ஓட்டும் சூரியனைப்போலவிளங்குவேன்; இராமன் இலக்குமணன் கையினால் இராவணனும் இந்திரசித்தனும் நானும் இறப்பது திண்ணம். அப்படியிறந்தபின் எங்கட்குச் செய்யவேண்டிய தீக்கடன் நீர்க்கடன்களைச் செய்து விடுதி; வருங்காலம் எவையும் வந்தே தீரும்; ஊழை விலக்க ஒருவராலும் முடியாது; ஆனால் நீ அந்தத் தசரத குமாரர்களையே அடைக்கலமாகக் கொண்டு வாழுதி; நான் என் அரிய அண்ணன் பொருட்டு இந்த உயிரை விடுவேன்" என்று சொல்லிக் கும்பகன்னன் தன் தம்பியை மீண்டு இராமரிடம் போகச் செய்து தான் கடுஞ்சமர் செய்து தன் மூத்தோன் பொருட்டு உயிரை விட்டான்; சகோதரருள் இந்தக் கும்பகர்ணன் மிகவும் மெச்சத்தக்கவன். ஆனால் விபீஷணனெனிலோ, தன்னுடன் பிறந்த தமையனுக்குத் துணைபுரியாது விடுவதோடு தானும் அமையாது, அவனுக்கு மாறாக பகைவரிடஞ் சென்று அவனுடைய இரகசியங்களை யெல்லாம் பகைவர்களுக்கு எடுத்துச்சொல்லி, உடன்பிறந்த தமையனை பகைவருடன் நின்று கொல்வித்தான் தமையனுடைய இராட்சியத்தையும் தான் அபகரித்தான். கும்பகர்ணனுடைய இசையும் விபீஷணனுடைய வசையும் எக்காலத்தும் அழியாவாம்.

* * *

உலகம் பலவிதம்: *1928* பெப்ரவரி *09*

காவிய சகோதரர் *(முற்றொடர் - 03)*

வலிமையில் தனக்கு ஒப்பாரும் மிக்காருமில்லாத வாலி, தனது மார்பினிடத்துப் புதைந்துள்ள அம்பில் "ராகவன்" என்று வரைந்திருப்பதைக் கண்ட மாத்திரத்தே முதல் தன் கண்களிற் சந்தேகங் கொண்டான். பின்னரும் அந்தப் பாணத்திற் பொறிக்கப் பெற்றிருந்த நாமத்தை உற்றுப் பார்த்தான்; அற்புதமடைந்தான்; வெடிபடச் சிரித்தான்; மனம் உடைந்தான்; "சந்திர சூரியர்கள் தத்தம் நெறிமாறிச் செல்லினுந் தரும நெறி மாறாத சூரியன் மரபிலுதித்த இராகவன்" குரங்குகளாகிய எங்கள் பொருட்டுத் தன்னுடைய யுத்த தருமத்தினின்றுந் திறம்பலானான்; ஐயோ, வேலி பயிரை மேய்ந்த வாறாயிற்றே; இப்படியானால் உலகத்தில் இனி என்ன தீமைதான் நடவாமல் விடப்போகின்றது" என்று இந்தப் பிரகாரம் சொல்லி மலைக்குகையுட் சென்று மீண்டு வர மார்க்கந் தெரியாது அதன்கண் அகப்பட்டு நின்று கலங்கும் யானை போற் கலங்குகின்றவனாகிய வாலியின் முன்பு ஸ்ரீராமர் வருதலும் வாலி அவரைக் கண்டான்; அவன் கண்களினின்றுங் கோபாக்கினி சிந்தியது; "ஏ, இராகவா, நீ என்ன காரியஞ் செய்தாய்." என்று கூறி வாலி அவரை ஏசத் தொடங்கினான்.

* * *

"சத்தியத்தைக்காக்கும்படி தம்முடைய உயிரை விடுத்த தசரதச்சக்கரவர்த்திக்கு நீ பிள்ளையல்லவா? பிறரை நீதியினின்றுந் தவறாமாற் காத்து, நீ நீதிதவறினாற் குற்றமாகாதா? உன்னைப் பரதனுக்குத் தமயன் என்று சொல்லுகின்றார்களே; அந்த உத்தமனாகிய பரதனுக்கு நீ தமயனாயிருப்பதற்கு உனக்கு யோக்கியம் போதுமா? குலத்திற் பிறந்த நீ, கல்வியிற் சிறந்த நீ, வெற்றியில் மிகுந்த நீ, மூன்று உலகங்கட்கும் நாயகனாகியநீ இப்படிப் பிழைசெய்தபோது இனி நாம் மற்றவர்கள் செய்யும் குற்றங்களையிட்டுக் குறை கூற இடமுண்டா? "ஆவியைச் சனகன்பெற்ற அன்னத்தை அமிழ்தின்வந்த - தேவியைப் பிரிந்த பின்னர்த் திகைத்தனைபோலுஞ் செய்கை" உன்னுடைய தேவியாகிய சீதையை இராவணன் கொண்டு போன பின்புதான் உனக்கு இந்தச் சித்தப்பிரமை ஏற்பட்டிருக்க வேண்டும். அரக்கர்குலத்தவனாகிய இராவணன் செய்த பிழைக்குக் குரங்கினத்தவனாகிய என்னையா நீ தண்டிக்கப் புகுந்தாய்? உன்னிடத்தில் இயல்பாகக் குடிகொண்டிருந்த இரக்கமென்னும் மேலான குணம் இப்பொழுது எங்கே போய்விட்டது? வசையை நீ தேடிக்கொண்டால் இனி இசையை யார் சூடிக்கொள்வது? குரங்குகளாகிய எங்களுக்கு இப்பொழுது கலிகாலம் பிறந்துவிட்டது. நீதி மெலியவரிடத்தல்லாமல் வலியவரிடத்து இல்லாமற் போய்விட்டதா?

* * *

"கூட்டொரு வரையும் வேண்டாக் கொற்றவ பெற்ற தாதை
யூட்டிய செல்வமாங்கே தம்பிக்குக் கொடுத்துப் போந்து
நாட்டொரு கருமஞ் செய்தாய் எம்பிக்கிவ் வரசை நல்கித்
காட்டொரு கருமஞ் செய்தாய் கருமந்தான் இதன்மேலுண்டோ"

ஸ்ரீராமா, உன் பிதா உனக்கு மனப்பூர்வமாகத் தந்த இராச்சியத்தை உன் தம்பிக்கு நீயாகக் கொடுத்து உன்னாட்டில் ஒரு செயலையும், எனக்குரிய இராச்சியத்தை என் தம்பிக்கு அபகரித்துக்கொடுத்து மறைந்து நின்று என்மீது அம்பெய்து காட்டில் அதற்கு முழுவிரோதமான செயலையுஞ் செய்தாய். எனக்கு நீ ஒளித்து நின்று அம்பெய்தது குற்றமாகாதாயின் இராவணன் சமையம்பார்த்து உன்தேவியைக் கவர்ந்துசென்றதுங் குற்றமாகாது. நான் உனக்கு ஒரு அபராதமுஞ் செய்தறியேன்; என்னையும் என் தம்பியையும் நீ ஒரேவிதமாக மதித்தலை விடுத்து, நாமிருவரும் கடும்போர் புரியும்போது நீ அவனிடத்தில் அன்புகாட்டி ஒளித்துநின்று என் மார்பில் அம்பை எய்தாய்; இதுவும் ஒருவர் செய்யத்தக்க செய்கையா? நீ செய்த இந்தச் செய்கை வீரமானதன்று; வெற்றி யானதன்று; நீதியானதன்று; வியக்கத்தக்கதன்று; அழியாவசைக்கு ஏதுவானதொன்றாகும்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ, ஒருபோது இராவணனுடன் யுத்தஞ் செய்தற்குப் படைத்துணைவேண்டி இந்தச் செய்கையைச் செய்தனையெனில், இராவணனை வாலிற் கட்டித்திரிந்த வாலியாகிய என்னைக் கொன்று சிறுவனாகிய என் தம்பியின் துணையைப் பெற நினைத்தல் எதுபோலிருக்குமெனில் யானையின் உதவியை வெறுத்து அதனைப் புறக்கணித்துவிட்டு முயலின் உதவியைத் தேடுதல்போலல்லவா இருக்கும்; நீ ஒருவன் பிறந்து இச்செயலால் மாசற்ற சூரிய வமிசத்தை மாசுபடுத்திவிட்டாயே? இன்னொருவன் என்னைப் போர்க்கறை கூவ, நான் அவனுடன் சென்று எதிர்த்து யுத்தஞ் செய்யுஞ் சமையத்திற் கரந்து நின்று என்மீது பாணப்பிரயோகஞ் செய்த நீயும் சுத்தவீரனென்று என்முன் வெட்கமின்றி வந்துநிற்கின்றாயோ? சூரிய மரபில் வந்த நின்மூதாதையருக்குரிய தருமத்தையுஞ் சத்தியத்தையும் புகழையும் நீ கெடுத்து என்மீது நீதியீனமாக அம்பெய்தாய்; இச்செயலால் வாலியைக் கெடுத்தாய் என்று எண்ணாதே; தருமத்தின் வேலியைக் கெடுத்தாயென்பதை உணர்ந்துகொள்; உன் மனையாளை ஒருவன் கவர்ந்து செல்ல, நீ அந்த ஆத்திரத்தினால் நிராயுதனாகிய என்மீது ஒளித்துநின்று அம்பெய்தாய், இதற்காகவா வில்வித்தை கற்றாய்; நீயும் ஒரு மனுஷனா? சீ, சீ, உனக்கு வெட்கமில்லையா" என்று வாலி இராமரை வாயில் வந்தபடி ஏசினான். இராமர் நெடிது நேரம் யாதும் பதில் பகராது சும்மா நின்று பின்னர் வாலிக்கு உத்தரஞ் சொல்வாராயினர்.

* * *

உலகம் பலவிதம்: 1928 பெப்ரவரி 16

காவிய சகோதரர் (முற்றொடர் - 04)

"ஏ, வாலியே, இச்சமையத்தில் நீ என்னை எவ்வளவு வைதபோதும் யான் உன்னைக் கோபிப்பது முறையல்ல; ஆனால், நான் மறைந்துநின்று உன்மீது பாணப் பிரயோகஞ் செய்தமைக்குக் காரணங் கூறுகின்றேன் கேட்குதி; முன்னாளில் உன் பகைவனாகிய மாயாவியைக் கொல்லும் பொருட்டுத் துரந்துகொண்டு பாதலம் புக்க நீ பின்னர் பல காலமாக மீண்டு வராமை கண்டு நீ இறந்தனையென நினைத்து உன் தம்பியாகிய இச் சுக்கிரீவன் உன்னையிட்டுப் புலம்பி மனம்வருந்திக்கொண்டிருந்தான். அச் சமையத்தில் இங்குள்ள குரங்கினத் தலைவர் உன் தம்பியைத் தேற்றி, இந்த இராச்சிய பரிபாலனத்தை ஏற்றுக்கொள்ளும்படி கேட்க, இவன் "என் அண்ணனைக் கொன்ற மாயாவியோடு சமர்செய்து அவனைக் கொல்லவேண்டும், இல்லையேல் அவனால் மடிதல் வேண்டுமேயன்றி ஒருபோதும் இந்த இராச்சியத்தை ஏற்றுப் பரிபாலிக்க உடன்படேன்" என்றான். பின்னரும் உன் குலத்து முதியோரும் மந்திரிமாரும் சேனைத்தலைவரும் உன் தம்பியை இராச்சிய பரிபாலனஞ் செய்யவேண்டுமென்று நெருக்கிக் கேட்டமையினால், மூத்தோர்சொல்லைத் தட்ட முடியாதவனாய் உன் தம்பி இந்த இராச்சிய பாரத்தை வகித்தான். இதன்பின் நீ பாதலத்திலிருந்து மீண்டுவர உன் தம்பி மிக்க மகிழ்ச்சியுடையவனாய், ஓடிவந்து உன் கால்களில் வீழ்ந்து வணங்கி "அண்ணா, உமது ராச்சிய பாரத்தை இந்த க்ஷணமே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்; இங்குள்ள பெரியோர் வாக்கைத் தட்டப் பயந்து இதனை நீர் வருங்காறும் பரிபாலித்தேன்" என்று சொல்லி உன்னை இரந்து நிற்பவும் நீ அதனைப் பொருட்படுத்தாது இவனைக் கோபித்தாய்; அவ்வளவோடு அமையாது உடன் பிறந்த சகோதரனாகிய இவனைக் கொன்றுவிட நினைத்தாய்; அதனைக் கண்டு இவன் "என் அண்ணா, உனக்கு அடைக்கலம்" என்று உன்னை இரக்கவும், அவனிடத்திற் குற்றமில்லாதிருக்கவும் நீ இரங்கினாயில்லை; இவன் உனக்குப் பயந்து ஒளித்தொளித்துத் திரியவும் இவனைக் கொல்லும்படி எங்குந் தேடித் திரிந்தாய்; தன்னைக் கொல்லவேண்டாமென்று உன் தம்பி உன்னைக் கையெடுத்துக் கும்பிடவும், பாவீ நீ அவனிடத்து இரக்கங்கொண்டிலை; கூடப் பிறந்த சகோதரமல்லவாவென நினைத்தாயுமில்லை; ஆற்றாமையினாலேதான் உன் தம்பி இரிசியமூக மலையிற்போய் இதுகாறும் ஒளித்திருந்தான்; மதங்கமுனிவர் உனக்கிட்ட சாபத்திற்குப் பயந்து நீ அம்மலைக்குப் போகாமல் விட்டாயன்றி உன் தம்பிமீது இரக்கங்கொண்டு போகாதொழிந்தா யில்லை.

* * *

மேலும், வாலியே, நீ செய்த இன்னொரு பிழை எவரும் பொறுக்கத்தக்கதன்று; நீ உன் தம்பியின் தாரத்தைக் கவர்ந்தாய்; தம்பியின் மனையாள் மகளுக்குச் சமானமானவளென்று மனுநீதி சொல்லும்; இது ஒருவன் செய்யுஞ் செய்கையாகுமா? நீ செய்த இந்த அடாத செயல்களைச் சிந்தித்தும் உன் தம்பி என்னிடம் அடைக்கலம் புகுந்தமையினாலும் எனது சொந்தத் தம்பியர் போல் இவனையும் நான் மதித்திருக்கிறமையினாலும் உனக்குப் பாணப் பிரயோகஞ் செய்தேன். வலியார் மெலியாரை வருத்தினால் அவ்வலியாரைக் கொன்று மெலியாரைக் காத்தல் அரசர் குலத்துதித்த நம்மனோர் கடனென்பதை நீ அறிதி" என்றார்.

* * *

ஸ்ரீ இராமர் இங்ஙனங் கூற, அதனைக் கேட்ட வாலி பின்வருமாறு இயம்புகின்றான்:- "இராகவா, என் தம்பியின் தாரத்தை நான் கவர்ந்தேன் என்று என்மீது தோஷஞ் சுமத்துகின்றாய்; மனுஷர் களாகிய உங்களுக்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமங்களும் கற்பும் மற்றும் ஒழுக்கங்களும் கணவன் மனைவியென்ற நியதியும் பாவங்களும் புண்ணியங்களும் இன்ன பிறவும் விதிக்கப்பட்டுள்ளன; குரங்குகளாகிய எங்களுக்குக் கல்யாணமில்லை, மங்கல்யதாரணமில்லை, ஓமமில்லை, புருஷன் மனைவியென்ற நியதியில்லை; எங்கள் மனம் போனபடி செய்வதே முறையாகும்; ஆதலால் தம்பியின் மனைவி எனக்கு மகளாவாளென்ற விதியும் இல்லை; இந்த நியாயம்பற்றி நான் செய்தது குற்றமுமல்ல" இப்படி வாலி கூற அதனைக் கேட்ட இராமபிரான் புன்னகைசெய்து அவனை நோக்கிக் கூறுவார்.

* * *

உலகம் பலவிதம்: *1928* பெப்ரவரி *23*

காவிய சகோதரர் *(முற்றொடர் - 05)*

"கவிக்குலத் தலைவனே, நீ உன்னைக் குரங்கென்றும், ஆதலினால் நீ செய்தவை குற்றமாகாவென்றும் சொல்லுதல் பொருந்தாது; நீ சாமானியமான குரங்கின்பிள்ளையல்லை; உன் பிதா தேவர்கட்கரசனாகிய இந்திரனாவன்; நீயோ சகல சாஸ்திரங்களையுங் கற்றிருக்கின்றனை; நீதிகளையெல்லாம் உணர்ந்திருக்கின்றனை; சிவபூசை செய்து வருகின்றனை; தேவர்களிடத்து வரம்பெற்றுள்ளனை; ஒருவனுடைய ஒழுக்கமும் செயல்களும் அவனுடைய அறிவைப் பொறுத்தன வேயல்லாமல் உடம்பைப்பொறுத்தனவல்ல; விஷ்ணு பூசைக்காகப் பூ எடுக்கும்படி தாமரைத் தடாகத்துள் இறங்கிய சமையத்தில், அத் தடாகத்திலுள்ள முதலையொன்று தன்காலைப் பற்றியிழுக்க, அதனை விடுவிக்கமுடியாமல் "ஆதிமூலமே" என்று ஓலமிட, திருமால் உடனே எழுந்தருளி அக்கராவைக் கொல்ல, அதனால் தான் விடுதலை பெற்றுப்பின்னர் திருமாலின் திருவருளால் முத்திபெற்ற கயேந்திர ஆழ்வானும் ஒரு யானைதானே; மேலும் என் தேவியை இராவணன் கவர்ந்து செல்லும் மார்க்கத்தில் அவனை எதிர்த்து யுத்தஞ் செய்து, அவன் வலிமையைக் கெடுத்துத் தானும் மாண்ட எம் பிதாப் போன்ற சடாயுவும் கழுகுகளின் அரசனாவனன்றோ; பாவம் இன்னது, புண்ணியம் இன்னது எனப் பகுத்தறியும் அறிவற்ற ஜீவராசிகளல்லவா விலங்கினமெனப்படும்; அங்ஙனமாக, புண்ணிய பாவங்களை நன்குணர்ந்த நீ "நானும் விலங்கினந்தான்" என்று சொல்ல முடியுமா?

* * *

"தக்க இன்ன, தகாதன இன்ன என்று)
ஒக்க வுன்னல ராயின், உயர்ந்துள
மக்களும் விலங்கே; மனுவின் னெறி
புக்கவேல், அவ்விலங்கும் புத்தேளீரே"

இன்னது செய்யத்தக்கது இன்னது செய்யத்தகாதது எனப் பிரித்தறியும் ஆற்றல் இல்லையாயின் அவர்கள் மானுட ஜன்மத்தை யெடுத்தவராயினும் விலங்குக்குச் சமானமாவர் பாவபுண்ணியங்களை அறியும் ஆற்றலுடையனவாயின் அவைகள் விலங்காகப் பிறந்திருந்தாலும் தேவர்களாக வைத்தெண்ணப்படு மென் பதை வாலியே நீ அறிதி; இந்த நியாயங்களால் நீ எங்கட்குச் சமானமாயுள்ளனை யென்பதை மறுத்தல் முடியாது; ஆதலால் நீ செய்த செய்கைகளெல்லாம் புநர்பூர்வமாகச் செய்த அடாத செயல்களாம்" என்று ஸ்ரீராமர் கூறினர்.

* * *

இவ்வார்த்தைகளைக் கேட்ட வாலி உத்தரம் பகர முடியாதவனாய்ச் சிறிதுநேரம் சும்மா நின்று பின்னர் இராமபிரானைப் பார்த்துச் சொல்லுகின்றான் "இராகவா, நீ சொல்வன உண்மைதான்; அவைகிடக்க, நீ என்னைக் கொல்லவேண்டின் நேரில் வந்து என்னுடன் எதிர்த்து யுத்தஞ் செய்யாது, பற்றை மறைவிற் பதுங்கி நின்று மிருகங்களை அம்பெய்து கொல்லும் வேடரைப்போல், யுத்த தருமத்திற்கு விரோதமாகக் கரந்துநின்று பாணப் பிரயோகஞ் செய்த காரணமென்ன"? இப்படி வாலி கேட்க, அப்பொழுது இராமருக்குப் பக்கத்தே நிற்கும் தம்பியாகிய இலக்குமணன் "இந்தச் சுக்கிரீவன் முந்தியே வந்து எங்களிடம் அடைக்கலம் புகுந்தபோது உன்னைக் கொல்வதாக என்னண்ணர் இச்சுக்கிரீவனுக்கு வாக்களித்துவிட்டனர். அதன்பின்னர் உன்னை நேரில் வந்து சந்திப்பரேல், நீயும் அடைக்கலம் புகின் உன்னைக் கொல்லுதல் முடியாதென்று சிந்தித்து மறைந்துநின்று பாணந் தொடுத்தார்" என்றார். இளைய பெருமாள் சொன்ன சமாதானத்தைக் கேட்டமாத்திரத்தே வாலியின் மனம் மாறுதலடைந்தது. அவன் தான் தன் தம்பிக்குச் செய்தவெல்லாம் பிழையென உணர்ந்தான்; ஸ்ரீராமரை வணங்கினான்; தான் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்ளும்படி அவரைவேண்டினான்; தன் தம்பியாகிய சுக்கிரீவன் மீது பரிவு கொண்டான்; அவன் பின்னரும் ஸ்ரீ ராமரை வணங்கி "சுவாமீ, என் தம்பி நிலையற்ற இந்த இராச்சியபாரத்தைத் தான் ஏற்றுக்கொண்டு நிலையுள்ளதாகிய மோட்சத்தை எனக்குத் தந்தான்; இவன் தன் அறியாமையினால் உங்கட்கு யாதும் பிழைசெய்யினும் அதனைப் பொறுத்துக்கொள்ளுதல் வேண்டும். மேலும் அயோத்தியாபுரியிலுள்ள உமது தம்பிமாராகிய பரதசத்துருக்கர் இவனைக் காணும்போது தமயனைக் கொல்லுவித்த சகோதரத் துரோகி என்று இவனை வைதால், அப்படி வைய வேண்டாமென்று அவர்களைத் தடுத்துவிடல் வேண்டும். "சுவாமீ! தேவரீருக்கு நான் இன்னமுஞ் சொல்லவேண்டிய தொன்றுளது; நீர் இங்குத் தானே யிருக்க அந்த இராவணனை என்வாலிற் கட்டிக்கொண்டு வந்து உமது முன்னிலையில் உய்த்து எனது பராக்கிரமத்தைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது காட்டியிருப்பேன்; என்செய்யலாம் அந்தப் பாக்கியம் இல்லாமற் போய்விட்டது. நடந்ததைப்பற்றிப் பச்சாத்தாபப்படுதலால் ஆம்பயன் யாதுமில்லை;" ஆதலால், இந்த அனுமன் உங்கள் யுத்தத்தில் உங்களுக்குப் பெருந்துணைபுரியத் தக்கவன்; இவனை நீர் கையிற் கொண்டுள்ள வில்லுக்குச் சமானமானவனென மதித்தல்வேண்டும்."

* * *

உலகம் பலவிதம்: 1928 மார்ச் 01

காவிய சகோதரர் (முற்றொடர் - 06)

"சுவாமி இவனை உமது தம்பியருள் ஒருவனாக மதித்து இவன் செய்யுங் குற்றங்களையும் பொறுத்தருள வேண்டும்" மென இராமரிடங் கூறிப் பின்னர்ச் சுக்கிரீவனைப் பார்த்து "தம்பி, உன்னால் எனக்கு இக்கதி நேர்ந்ததெனவெண்ணிச் சிறிதுஞ் சஞ்சலமுறாதே; இவையெல்லாம் விதியின் செயலாம்; விதியை விலக்க எவரால் முடியும்; நீ இந்த இராமபிரானையே உன் குரு தமயன் பிதா என்னு மிவர்களாகப் பாவித்து இவருடைய குறிப்பறிந்து ஒழுகுதி; அரசனும் நெருப்பும் பாம்புஞ் சரியென நீதிசாஸ்திரங்கள் கூறும்; ஆதலால் அற்ப பிழையைத்தானும் இவர்களுக்கு நீ செய்துவிடாதே நிற்க, எங்கள் மகனாகிய அங்கதனை இங்கே கூப்பிடுதி" என்றான். உடனே சுக்கிரீவன் அங்கதனை யழைக்க, அவன் அங்கே வந்தான். வந்தவன் தன் பிதாவின்மார்பினின்றும் இரத்தம் ஆறாகப் பிரவாகித்துப் பாய்வதையும் மார்பின்கண் புதைந்துகிடக்கும் பாணத்தை ஒரு கையாற் பிடித்தபடி நிற்பதையுங் கண்டான்; ஏக்கங் கொண்டான்; சரீரம் பதறினான்; ஓடிச்சென்று தன் பிதாவின் கால்களில் இரத்த வெள்ளந் தன்மீது தோய வீழ்ந்து கதறினான்; "என் அரும்பிதாவே, இதுவென்ன கோலம், இந்தப் பழியை யார் செய்தார்?

எந்தையே, எந்தையே, இவ்வெழுதிரைவளாகத்தியார்க்கும்
சிந்தையாற் செய்தையாலோர் தீவினைசெய்திலா தாய்
நொந்தனையது தானிற்க நின்முகம்நோக்கிக்கூற்றம்
வந்ததேயன் றோவஞ்சா தாராதன் வலியைத் தீர்ப்பார்.

என்னைப் பெற்ற அப்பனே, இந்த உலகத்திலே மனம் வாக்குக் காயமென்னுமிவைகளால் எவ்வகையான தீமையுஞ் செய்தறியாத உமக்கு இந்தக் கதி வரலாமோ, அந்த யமனும் உமது உயிரைக் கவரும்படி துணிந்து உம்முன் வருவானேர் ஆம், ஆம், அவனைத் தடுக்க யாரால் முடியும்.

பஞ்சின் மெல்லடியாள் பாகன் பாதுகமல்லயாவும்
அஞ்சலித்தறியாச்செங்கை யாணையாய் அமரர்யாரும்
எஞ்சவூரிருந்தார்உன்னால் இன்னமுதீந்தநீயோ
துஞ்சினைவள்ளியோர்கள் நின்னின்யார்சொல்லற்பாலார்.

என் அரிய தந்தையே, நீர் அந்தப் பரமேசுவரனையல்லாமல் வேறு எந்தத் தெய்வத்தையும் கையெடுக்கமாட்டீரே; அப்படிப்பட்ட உமக்கு இந்த ஆபத்து எப்படி நேர்ந்தது; தேவர்கள் அமிர்தத்தையுண்டு சாகாதிருக்க, அந்த அமிர்தத்தைத் தேவர்கட்குத் கொடுத்த நீரா இப்பொழுது சாகப்போகின்றீர்."

* * *

இங்ஙனம் புலம்புகின்ற தன் புதல்வனை வாலி தன் கண்களில் நீர்சொரிய, கையால் அணைத்தெடுத்து "என் குழந்தாய், நீ வருந்தாதே; உலகத்திலே விதியைப் புறங்கண்டார் எவருமில்லை; பிறத்தலும் இறத்தலும் பிரம விஷ்ணுமுதலாந் தேவர்கட்குமுண்டு; எனது ஆயுளும் இன்றோடு முடிவெய்துகின்றது; நான் தவஞ் செய்தமையினாற்போலும் புண்ணிய புருஷனாகிய இந்த இராமபிரான் கையால் இறக்கலானேன்; என் மகனே, பெண்களைப் போலவும் சிறுபிள்ளைகளைப்போலவும் நீ புலம்புவதை யொழிதி; இந்த இராமபிரான் என்னைக் கொன்றாரெனவெண்ணி அவரை வெறுக்காதே; இவரையே இனிமேல் உன் பிதாவாகவும் தெய்வமாகவும் மதித்து நட; இப்பொழுதே அப்பிரான்முன் சென்று அவரை வணங்குதி" எனத் தன் மகனைத்தேற்றிப் பின்னர் இராமரைப் பார்த்துக் கூறுகின்றான்.

* * *

"சுவாமீ, இவன் என் குழந்தை; இவனைச் சிறுவனென்று அலட்சியம் செய்யவொண்ணாது; இராவணன் முதலாம் இராக்கதரை யெல்லாம் நிர்மூலமாக்க இவனால் முடியும்; இன்னாருடைய புதல்வன் இவனென்பதை இராவணன் கேட்ட மாத்திரத்தே திடுக்குறுவான்; சுவாமீ, இன்று தொடக்கம் இவன் உமதடைக்கலம்". இங்ஙனம் வாலி கூற, ஸ்ரீ இராமர் தம்மை வணங்கிய அங்கதனை அன்புடன் பார்த்துத் தமது வாளை நீட்டி "அங்கதனே, நீ இந்த வாளைத் தாங்குதி" என்று கொடுக்க அவன் அதனை இரு கரங்களாலும் வாங்கினான். இங்ஙனமாக வாலி தான் இராமபாணத்தைப் பிடித்திருந்த கையை நெகிழ விடவே, அது அவனுடைய முதுகை ஊடுருவிச் சென்றது; வாலியும் உயிர் நீங்கினன்.

* * *

உலகம் பலவிதம்: 1928 மார்ச் 08

காவிய சகோதரர் (முற்றொடர் - 07)

வாலி சுக்கிரீவன் என்னுமிருவருள் வாலி தன் தம்பியாகிய சுக்கிரீவனுக்குத் தவறு செய்தானேனும் அவன் உத்தம சகோதரன் என்பது அந்தியகாலத்தில் அவன் கூறிய வார்த்தைகளால் அறியத்தக்கதாகும். சுக்கிரீவன் தன் தமயனைக் கொல்வதற்குக் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையும் செய்த உபாயமும் மிகத் துரோக மானதாகும். ஐக்கியமாகவுள்ள சகோதரர்களும் சிற்சில சமையங்களில் மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை யென்னுமிவைகள் காரணமாகத் தம்முள் மாறுபட்டு மாண்டு போவதுமுண்டு. விபீஷணன் சுக்கிரீவன் என்னுமிருவரும் மண்ணாசை பொன்னாசை காரணமாகத் தத்தம் தமயன்மாருக்குத் துரோகஞ் செய்தனர். பெண்ணாசை காரணமாக மாறுபட்டு மாண்ட இரு சகோதரருடைய வரலாற்றை இங்கே சொல்லுவாம்.

* * *

நிகும்பன் என்னும் அசுரனுக்குச் சுந்தன் உபசுந்தன் என இரு பிள்ளைகள் இருந்தார்கள், இந்த இரு சகோதரரும் ஓர் உயிரும் ஈர் உடலும்போல் உண்ணல் உடுத்தல் மகிழ்தல் வருந்துதல் முதலாம் செயல்க ளெல்லாவற்றையும் மாறுபாடின்றி ஒரேமனசாகச் செய்துவந்தனர். இவர்களுடைய ஒற்றுமை காரணமாக இவர்களது பேரும் சுந்தோபசுந்தர் என ஒரே நாமம்போல் வழங்கப்பட்டுவந்தது. இந்த இருவரும் மூன்று உலகங்களையும் தாம் ஆளவேண்டுமென்னும் அவாவுடையராய்த் திரிமூர்த்திகளையும் நினைத்துத் தவஞ்செய்து மிக்க அதிகாரத்தையும் பிறரால் அழியா வரத்தையும் பெற்றனர். தாங்கள் பெற்ற வரத்தின் வலிமையால் இவர்கள் தேவர்களையும் முனிவர்களையும் மனுஷர்களையும் பெரிதும் வருத்தத் தலைப்பட்டனர். இவர்கள் செய்யுங் கொடுமையைச் சகிக்க முடியாது தேவர்களும் முனிவர்களும் பிரமதேவரிடஞ் சென்று முறையிட்டனர்.

* * *

பிரமதேவர் உலகத்திலுள்ள அழகிய பொருள்க ளொவ்வொன்றிலும் எள்ளளவு எள்ளளவு பிரமாணமாக அழகைத் திரட்டித் திலோத்தமை என்னும் பேரழகுடைய ஒரு தெய்வப் பெண்ணைச் சிருட்டித்து, சுந்தோப சுந்தரை மயக்கிப் பேதப்படுத்திவிடும்படி அவளிடங் கற்பித்தார். பிரமதேவரின் கட்டளைப்படி திலோத்தமை சுந்தோபசுந்தர் இருக்குமிடத்தைத் தேடிச் சென்றாள். அந்த இரு சகோதரர்களும் இவள் சென்ற சமையத்தில் விந்த மலைச்சாரலில் மதுவுண்டு களிகொண்டு உல்லாசமாய் ஒருங்கு வீற்றிருந்தனர். திலோத்தமையைக் கண்டமாத்திரத்தே இருவரும் அவள்மீது அடங்காக் காதல் கொண்டு எழுந்து ஓடிவந்து தனித்தனி அவளுடைய கரங்களைப் பற்றி "என்னை மணஞ்செய்குதி, என்னை மணஞ்செய்குதி" என்று கேட்கத் திலோத்தமை வாளா நின்றனள். உடனே சுந்தன் தன் தம்பியாகிய உபசுந்தனைப் பார்த்து "தம்பி, நான் இச்சித்த பெண்ணை நீர் எப்படி இச்சிக்கலாம், நான் இச்சித்தமாத்திரத்தே இவள் உனக்குத் தாயல்லவா" என்றான். அதற்கு உபசுந்தன் "அண்ணா, நான் இச்சித்த பெண்ணை நீர் எப்படி இச்சிக்கலாம், நான் இச்சித்தமாத்திரத்தே இவள் உமக்கு மகளல்லவா" என்றான். அப்பொழுது தமையன் "தம்பி, எனக்காக நீ இந்தப் பெண்ணை இச்சியாதொழிந்தாலென்ன" என்று கேட்கத் தம்பி "அண்ண, எனக்காக நீர் இந்தப் பெண்ணை இச்சியாதொழிந்தாலென்ன" என்றான். கள்ளும் காமமும் ஒன்று சேருமாயின் அவற்றை யுடையவர் அழிவதற்கு யாதும் ஐயமுண்டா? உடனே இரு சகோதரருக்கு மிடையிற் பெரும் மாறுபாடு உண்டாகியது. சுந்தன் தான் கையிற் கொண்ட கதாயுதத்தால் தன் தம்பியின் மார்பிற் புடைத்தான்; உபசுந்தனும் தன் கையிற் கொண்ட கதாயுதத்தால் தமையனுடைய மார்பில் மோதினான். இங்ஙனம் இருவருஞ் சண்டையிட்டு ஈற்றில் ஒருவரால் ஒருவர் மாண்டனர்.

* * *

உலகம் பலவிதம்: 1928 மார்ச் 22

காவிய சகோதரர் (முற்றொடர் - 08)

உலகத்தவராற் பெரிதும் புகழப்படுகின்ற பரதகண்டத்திலே கொங்கதேயமென்றோர் தேயமுளது. அக் கொங்கதேயத்திலே, நூறு யோசனை சதுரமுடையதும், ஆம்பிராவதிநதி பிரவாகித்துச் செல்லப்பெற்றதும், பல்வளங்களும் நிறைந்ததுமாகிய குமணநாடென்னுமோர் நாடுளது. அக்குமணநாட்டின் திலகம்போல் விளங்கியது அதன் தலைநகராகிய குமணபுரியாகும். அங்கே ஓர் பழங்கோட்டையும், அக் கோட்டையைச் சூழ்ந்த அகழியும், ஓர் புராதன சிவாலயமும் அந்நகரின் பழைய கீர்த்திக்கு அறிகுறியாய் நிலவுகின்றன.

* * *

சற்றேக்குறைய இரண்டாயிரம் வருடங்கட்கு முன்னர் குமணன் என்னுமோர் அரசன் அந் நாட்டைப் பரிபாலித்து வந்தான். அவன் சகல சுகுணங்களும், மிக்க பராக்கிரமமும், பேரழகுமுடையவன். தன்னாலும், தன் பரிசனத்தாலும், பகைவராலும், கள்வராலும், துஷ்ட மிருகங்களாலும் தன் பிரசைகளுக்கு எக்காலத்தும் யாதும் இடர் நேராவண்ணஞ் செங்கோல் செலுத்து மியல்பினன். பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்னும் நான்கு வருணத்தாரும் தத்தமக்குரிய தொழில்களைக் குறைவற நடாத்தும்வண்ணம் அவர்களைப் பாதுகாக்குந் தன்மையன். ஈகையென்னுஞ் சிறந்த குணம் ஏனைச் சகல சுகுணங்கட்கும் மேலாக அவ்வரசன்மாட்டு விளங்கியது. அரசனது ஈகையினியல்பை யுணர்ந்த பாவலர் பலர், தேனினுமினிய செந்தமிழ்க்கவிகள் பல பாடிக் கொண்டு வந்து அவனுக்கோத அவன் அக்கவியமுதருந்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிப்பெய்திப் புலவர் வேட்டனவெல்லாம் வரைவின்றி யீய்ந்துவந்தான்.

* * *

இக்குமணவள்ளலுக்கு இளங்குமணன் என்னும் பெயரையுடைய ஓர் இளவலிருந்தான். குமணனிடத்து எத்துணைச் சற்குணங்கள் விளங்கினவோ அத்துணைத் தீக்குணங்கள் அவ்விளங்குமணன்பாற் காணப்பட்டன. அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல், உலோபத்துவம், வஞ்சனை, செய்ந்நன்றிமறத்தல் முதலாம் பல்வகைத் தீயகுணங்கட்கும் அவன் இருப்பிடமாயுள்ளவன். ஈகையென்னும் பெருங் குணத்தை இகழ்வதே அவனியல்பு. அவன் ஒரு தினம் மேல் வருமாறு சிந்திப்பானாயினான்; "பொருளே இம்மைக்கும் மறுமைக்கும் இன்றியமையாத் துணையாயுள்ளது. பொருளில்லார்க்கு இன்பம், புண்ணியம், கீர்த்தி, பெருமை, நினைத்தகாரியம் முடித்தல் முதலியன வில்லையாகும். பொருளில்லாதவர் உலகத்தில் நடைப்பிணமாவர். "இல்லாளை இல்லாளும் வேண்டாள் ஈன்றெடுத்த தாய் வேண்டாள், செல்லாதவன்வாயிற் சொல்". இக்காரணம்பற்றியே பெரியோரும் "பொருடனைப் போற்றிவாழ்" எனக் கூறிப் போந்தனர். இங்ஙனமாகவும், நமதண்ணர், புலவர்கள் கவிவலையிற் சிக்குண்டு இவ் விராச்சியத்தின்க ணுள்ள திரவியமனைத்தையும் அவர்கட் கீந்து வீணே கெடுகின்றனர். இன்னுஞ் சிலகாலம் என்றமையன் இங்ஙனமீய்ந்து வருவரேல் நமது இராச்சியத்தின் கண் தரித்திரமே குடிபுகும். அப்பொழுது வேற்றரசர் நமது நாட்டைக் கவரக் கருதுவர். வயதில் மூத்துளரேனும் விவேகத்தில் அண்ணர் எனக்கு இளையவராவர். எப்பொழுதும் வெள்ளம் வருவதற்கு முன்னரே அணை கோலிக்கொள்ள வேண்டும். ஆதலின் யான் இப்பொழுதே என் அண்ணர்பாற் சென்று அவருக்கு உறுதிபயக்கும் மொழிகளை உரைப்பேன். அவர் யானுரைக்கும் மொழிகளை அலட்சியஞ் செய்வரேல் யானே இவ்விராச்சிய பாரத்தை வகித்து நடாத்துவேன். இதுவே என் றுணிபு" எனப் பலவாறு தன் துன்மதிக் கேற்பச் சிந்தித்துக் கொண்டு தனது முன்னவன் முன்னர் விரைந்து சென்றான்.

* * *

தன்றம்பி முகக்கோட்டத்துடன் வருதலைக் கண்ட குமணன் "தம்பீ, இன்று நீ வாடிய முகத்துடன் என்னை நாடிவந்த காரணம் யாது? உனக்கு நேர்ந்த வியாகுல மென்ன" வென மிக்க பரிவுடன் கேட்டான். அதற்கு இளங்குமணன் "அரசே, நீர் இருக்கும்வரைக்கும் எனக்குறுங் குறை யாதுமில்லை; உம்மிடத்து இன்று ஓர் விஷயத்தைப் பேசவெண்ணி யீங்கு வந்தேன்; திரவியமே இராச்சிய பரிபாலனத்திற்கு இன்றியமையாத் துணையாயுள்ளது; திரவிய மில்லையாயின் நால்வகைச் சேனைகளையும் வைத்து நடத்துதல் முடியாதாகும்; சேனையில்லையேல் அந்நியமன்னர் நமது நாட்டைக் கவருவர்; அப்பொழுது நாம் நாடுநகரிழந்து காவியுடை யுடுத்துத் துறவுபூண்டு கானகத்தின் கண்ணே கலங்கித் திரிய நேரிடுமன்றோ; இதனைச் சிறிதுஞ் சிந்தியாது, தரித்திரத்துழன்று சோற்றினுக் கலைந்து உள்ளங்கால் வெள்ளெலும்பாக ஊர்கடோறும் இரந்து திரியும் புலவர்கள் கவியைப் பொருளென வுன்னி, அவர்களது வாக்குவல்லபத்தில் மருண்டு உள்ள பொருளனைத்தையும் அவர்க்களித்துவிடின் ஈற்றில் இவ்விராச்சியத்தின் கதி யென்னாகும்? புலவர்களாயுள்ளோர் செல்வர்களிடத்திற் றிரவியத்தைப் பெறுதற்கன்றோ ஈகையை விதந்து கூறுவர்; ஈதலாகிய குணம் மன்னர்மாட்டெய்தின் அது தீமைக்கோர் அறிகுறியாகும்; முன்னாளில் அரிச்சந்திரன் தன்னிடத்திலுள்ள திரவியங்களனைத்தையும் கௌசிகருக்குக் கொடுத்துவிட்டுப் பெண்டிர் பிள்ளைகளுடன் பேரிடருற்ற கதையை நீர் கேட்டிலீரோ? திரி லோகங்களையும் அரசுபுரிந்த மாவலிச்சக்கரவர்த்தி, வஞ்சனையினால் வந்து மூன்றடி நிலந் தரவேண்டுமெனக் கேட்ட வாமனருக்கு அங்ஙனங் கொடுக்கவுடன்பட்டு உயிர்மாண்ட கதை உமக்குத் தெரியாதா? தவத்தாற் பெரிய ததீசிமுனிவர் இந்திரன் தம்மை வேண்ட முதுகெலும் பீய்ந்து முடிந்த செயல் பொய்யாமோ? கன்னன் விண்ணவர்கோனுக்குக் கவசகுண்டலமுதவி அவசமுற்றதை யார்தாமறியார்? வேந்தே, நீர் செய்யும் இக்குற்றம் உம்முடன் மாத்திரம் நில்லாது எனக்கும் எங்கள் வமிசத்தா ரனைவருக்கும் இடர்விளைத்தற்கேதுவாகின்றதன்றோ? எமது முன்னோராற் றேடப்பட்ட இவ்விராச்சியம் உம்மால் நீங்குமாயின் உயிருள்ளவரையும் வசையாமல்லவா? ஈதல்போற் றீயகுணம் யாதுளது? ஆதலால், அண்ணலே, இன்று தொடக்கமாக இராச்சியத்தை என்னிடம் ஒப்பித்துவிட்டு நீர் துறவுபூண்டு காட்டிற்குச் சேறலே தக்கதாகும்; அங்ஙனஞ் செய்யாதொழிவீரேல் தமையன் என்பதனையும் சிந்தியாது உம்முடன் யுத்தஞ் செய்து உம்மைக் கொல்வேன்; இது நிச்சயம்" என்றான்.

* * *

உலகம் பலவிதம்: *1928* மார்ச் *29*

காவிய சகோதரர் (முற்றொடர் - *09*)

பொருளாசை என்னும் பைசாசத்தின் வாய்ப்பட்ட வனாகிய இளங்குமணன் இங்ஙனங் கூறுதலும் குமணன் திடுக்குற்றுச் சிறிதுநேரம் யோசித்துப் பின்னர் "என் செயலாம், இவன் புத்தி இப்படியாயிற்று" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகைசெய்து தன்னிளவலைப்பார்த்து, "தம்பீ, உன்னெண்ணப்படி இன்றே இவ்விராச்சியத்தை உன்னிடம் ஒப்பித்து யான் துறவுபூணுகின்றேன்; இதற்கு யாதுந் தடையில்லை; இது கிடக்க, இம்மைக்கும் மறுமைக்கும் உறுதுணையாயுள்ள ஈகையை யிகழ்ந்தும், ஞானச்சுடர் விளக்காய் விளங்கும் வித்துவான்களை அவமதித்தும், அற்பநேரத்திற் றோன்றி நின்றழியும் மின்னலை யொத்த நிலையற்ற செல்வத்தை நிலையெனப் புகழ்ந்தும் என்முன் கூறினை; அங்ஙனம் கூறியமை உன் அறியாமையாகும்; அரிச்சந்திரன், மாவலி, ததீசி, கன்னனாதியோர் தங்கள் பூதவுடம்பு நீங்கியும் புகழுடம்பு அழியப்பெறாது விளங்குதல் அவர்களது ஈகையினாலன்றோ? அவர்கள் இவ்வுலகவாழ்க்கையை நீத்தபின்னர் அடைந்த பதவிகளின் பெருமையை நீயறிவையோ? ஈதலென்னும் நற்குணமொன்று அமையப் பெற்றவரிடத்து மற்றெவ்வகைத் தீக்குணங்களுறினும் ஆதவன் முற்பட்ட பனிபோல் அத் தீக்குணங்கள் அவரைவிட்டகலும்; ஆதலால் அக்குணம் நிந்தையின்பாற் பட்டதன்று; இனி, புலவர்கள் ஊர்கடோறும் இரந்திடுதலாகிய இழிதொழில் பூண்டவரென்றாய்; அந்தோ! உன்னறியாமை யிருந்தபடியென்னை; "செல்வத்துட் செல்வஞ், செவிச்செல்வம் அச்செல்வஞ், செல்வத்துளெல்லாந் தலை" என்றவாறு பொருட்செல்வத்தையுடைய புலவர்கள் மிகவும் மேம்பாடுடையர்; பிரபஞ்சத்தின் கண்ணே கிடந்துழலும் எங்கள் தீவினையைத் தேய்க்க வேண்டியே அவர்கள் வந்து எம்மை யிரப்பரன்றித் தம்பொருட்டு இரப்பவரல்லர்; அவர்கட்கு இரத்தலால் வரும் இழுக்கு யாதுமில்லை; இது இவ்வாறாக, செல்வத்தைப் பெரிதும் வியந்து கூறினை; ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுகங்களாக அரசாண்ட சூரனெங்கே? அவன் செல்வமெங்கே? திரிலோகங்களையும் அரசுபுரிந்த இராவணனெங்கே? அவன் செல்வமெங்கே? சகல சம்பத்துக்களையும் பெற்ற இந்திரன் சூரனால் இடுக்கணுற்று விண்ணுலகம் விட்டு மண்ணுலகெய்திச் சீர்காழியின் கண்ணே வேணுவாகிக் கரந்து தவம் புரிந்தபோது, அவன்செல்வம் யாண்டுச் சென்றது? இந்திரனுடைய செல்வமனைத்தும் அவனது ஏகபுத்திரனாகிய சயந்தனது சிறையைமீட்க ஏன் வந்துதவிலது? இவ்விந்திரனுந் தன் பகைவரைத் தடியக்கருதித் ததீசிபாற் சென்று முதுகெலும்பை வேண்டி யிரந்துநின்றான் என்பதை நீயே சற்று முன்னர் எனக்கெடுத்துரைத்தனை; தம்பீ, யான் சொல்வதை இன்னுங்கேள்; கற்ற கல்வி கற்றபடி ஒழுகுவதனாலேயே பயன்படுதல்போல, பெற்ற செல்வமும் ஈகையினாலேயே சிறப்புறும்; ஒருவன் செல்வத்தைப் பெற்றால் அதனை ஏழைகட்குக் கொடுத்துத் தானுமனுபவித்துப் புண்ணியத்தை யீட்டல் வேண்டும்; அதனை யொழித்துத் திரவியத்தை ஈயாது வைத்திருப்போன் குங்குமஞ்சுமந்த கழுதையை நிகர்ப்பன்; ஆதலால், அரசே, நீ அன்பு கொடை முதலிய நற்குணங்களை அநுசரித்து அமைச்சர் மொழியைத் தட்டாது பன்னெடுங்காலம் இவ்விராச்சியத்தை ஆளுதி; களங்கமற்ற மனமுடையவனாயும் கடவுட்பத்தி யுள்ளவனாயும் இருப்பையாயின் உனக்கு ஒருபோதுங் குறைவு வராது; நிலையற்ற பொருட்செல்வமாகிய இவ்விராச்சிய பாரத்தை என்னிடத்தினின்றும் ஏற்றுக்கொண்டு நிலையுள்ள தவமாகிய செல்வத்தை எனக்குதவியமையால், இன்று முதலாக உன்னைத் தம்பியென்றெண்ணாது என்னை யீடேற்றவந்த குருவென மதிக்கின்றேன்; யான் இப்பொழுதே தவஞ்செய்யும்படி காட்டிற்குச் செல்கிறேன்; நீ நீடூழி வாழ்வாயாக" எனக் குமணன் காட்டிற்குப் புறப்பட்டான்.

* * *

குமணராசன் காவியுடைதரித்துக் காட்டிற்குச் செல்வதைக் கண்ட அந்நகர் மாதரும் ஆடவரும் துன்பக்கடலுள் மூழ்கி இங்ஙனம் கூறுவாராயினர். "பெற்ற தாய்போற் பரிவுடன் எம்மையெல்லாம் பரிபாலித்த நமதரசன், தன்றம்பி சொற்கேட்டு எம்மையெல்லாம் விடுத்து, கால்கள் கன்றவும் வியர்வை சிந்தவும் நடந்து கானகஞ் செல்லலாயினன். ஐயையோ! இஃதென்ன விந்தை! நன்மை செய்தார் தீமை யடைதலும், தீமைசெய்தார் நன்மையடைதலுமா இக்கலிகாலத்தினியல்பு! நாமனைவரும் ஒருங்குச் சென்று எமதரசனைக் கானகம் புகவொண்ணாதெனத் தடுக்கினும் சொற்றவறாதவனாதலின் அவன் ஒருபோதுஞ் செல்லாதொழியான். இதற்கென் செய்வேம். நமதரசனிருந்து அரசாண்ட சிம்மாசனத்தில் அக்கொடியவனிருந்து அரசுபுரிதல், அரியிருந் தரசாண்ட அரியணையில் ஓர் குறுநரியிருந்து நாடாளுதலை யொக்கும் சகோதரத் துரோகி யாகிய அத்துஷ்டனிருந்து அரசாளும் நாட்டில் நாம் உயிர்வாழ்தலினும் நமதரசனுடன் கானகஞ் சென்று வாழ்தல் மிகவும் நன்றாகும். "கொடுங்கோன் மன்னர் வாழுநாட்டிற் கடும்புலி வாழுங் காடு நன்றே" என்பர். நாமெல்லாம் இப்படிப் பிரலாபித்தலை விடுத்து ஒருங்கு திரண்டு இக்கணமே இளங்குமணனுடன் யுத்தம் புரிந்து வென்றாற் பெருமையையும் மாண்டால் வீரசொர்க்கத்தையு மடையலாமே; வாளாவிருப்பதால் வரும் பயனென்னை? நாம் அங்ஙனஞ் செய்தற்கு நமதரசன் உடன்படான்; இனிப் புலவர்களெல்லாரும் யாது செய்யப்போகின்றனர்! தமிழ் மகள் யாரிடம் போய் ஒதுங்கப் போகின்றனள்! என்செய்யலாம், விதியை வென்றவர் ஒருவருமில்லை" என்று இங்ஙனம் பலவாறாகப் புலம்பிக்கொண்டு அங்குள்ள மாந்தரெல்லாம் அரசன்பின்னே செல்வாராயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாத துயரத்துடன் அழுதுகொண்டு தன்னைத் தொடர்ந்துவரும் அமைச்சரையும் நகரவாசிகளையும் அரசன் கருணையுடன் பார்த்து "அன்புடையீர், நீவீர் இப்படித் துன்புறுதலால் எய்தும் பயனென்னை? எதுவும் விதிவழியே நடக்கும்; "தந்தைதாய் தமர்தாரம் மகவு என்னும் இவையெல்லாம் சந்தையிற் கூட்டம், இதிலோ சந்தேகமில்லை, மணிமாட மாளிகை மேடை சதுரங்க சேனையுடனே வந்ததோர் வாழ்வும் ஓர் இந்திரசாலக் கோலம்" இதனை நன்றாய் உணருங்கள்; இப்பிரபஞ்ச வாழ்வு பிறவிக்கேதுவாயது; தவத்தை யொத்த செல்வம்பிறிதொன்றில்லை; தவமே பேரின்பத்திற்குக் காரணமாவது; ஆதலால் யான் இனியொருபோதும் இவ்விராச்சியத்தை விரும்பேன்; கானகஞ்சென்று துறவுபூண்டொழுகக் கருத்துக் கொண்டேன்; இவ்விராச்சியத்தை யானாண்டா லென்ன, என்றம்பி யாண்டாலென்ன யாதொரு பேதமுமில்லை; நீவிரனைவரும் எனக்குச் செய்யும் நன்மை யாதெனில், என்சொற் கடவாது, என்றம்பியை என்னைப்போல் மதித்து, அவனுக்கு இராச்சிய பரிபாலன விஷயத்தில் வேண்டிய உதவிபுரிந்து அவனுக்கமைந்து வாழ்தலேயாகும்" என்றான்.

அரசன் கூறிய வார்த்தையைக்கேட்ட பிரசைகளனைவரும் அவனது மொழியைக் கடக்கச் சித்தமில்லாதவராய் அவனிடம் அநுமதி பெற்றுக்கொண்டு அதிக துயருடன் தத்தம் இடங்கட்கு மீண்டனர். அரசனும் நாடுநகர் கடந்து காட்டகம் புகுந்து ஆங்குள்ளவராகி மலைக்குப் பக்கத்தே ஓர்சார் இருந்து கந்தமூலபலாதிகளை யுண்டு, கடவுளைத் தியானித்துத் தவம் புரிந்தான்.

* * *

உலகம் பலவிதம்: *1928 ஏப்பிரல் 05*

காவிய சகோதரர் *(முற்றொடர் - 10)*

இஃதிங்ஙனமாக, இளங்குமணன் நீதி திறம்பி அரசுபுரிந்தமையின் மழை பெய்யாதொழிந்தது; நாட்டிலே பஞ்சமுற்றது; தான தருமங்கள் இல்லாதொழிந்தன; நால்வருணத்தாருந் தத்தந் தொழில்களைச் செய்ய ஆரம்பித்தனர். தம்மைச் சன்மானஞ் செய்வோரில்லாமையாற் புலவர்கள் அப்பதியை விட்டகன்றனர். ஆலயங்களில் நித்திய நைமித்திகங்கள் கிரமமாக விதிப்படி நடவாதொழிந்தன. தொகுத்துச் சொல்லுங்கால், குமணநாடு துன்பத்தின் வாசஸ்தானமாயிருந்தது. இளக்குமணனுள்ளத்தில் எஞ்ஞான்றும் அச்சமும் எவர்மாட்டுஞ் சந்தேகமுமே குடிகொண்டன.

ஒரு தினம் அவன் தன் மாளிகையிலே தன்னந்தனியேயிருந்துகொண்டு பின்வருமாறு சிந்திப்பானாயினான்: நமது அண்ணர், "இவ் விராச்சியத்தை என்னிடந் தந்து நீ காட்டிற் கேகுதி, இல்லையேற் கொல்லுவேன்" என்று யான் கூறியமாத்திரத்து மிக்க மகிழ்ச்சியுடன் அரசை என்பால் அளித்துவிட்டு ஏதோ வாயில் வந்தனவெல்லாம் கூறியபின் கானகமேகினர்; ஆனால் அவர் செயலைக் குறித்து யான் சிறிது சிந்திக்கவேண்டும்; "பணமென்றாற் பிணமும் வாய்திறக்கும்" என்பது பழமொழி; பணமும், மேம்பாடும், கீர்த்தியும் ஒருங்கே பொருந்திய இந்த இராச்சியத்தை விடுத்து ஒருவன் துறவு பூண்டு கானகஞ் சென்றான் என்பது நம்பற்பாலதன்று; யான் இராச்சியத்தைத் தரும்படி கேட்ட சமையத்தில், என்னுடன் எதிர்த்து யுத்தஞ் செய்யச் சக்தியில்லாமையால், தன்னுடைய உயிரைக் காத்துக்கொள்ள வெண்ணி என்றமையன் அதனை என்பால் ஒப்புவித்து வனத்துக்குச் சென்றாரன்றி, உண்மையாக இவ்விராச்சியத்தை வெறுத்துச் சென்றவரல்லர்; நவரத்தினங்களும் வைத்திழைத்த மாட மாளிகையின் கண்ணே, மிருதுவான கம்பளத்தின்மீது அடி வைத்து உலாவிய நமது தமையன், கல்லும் முள்ளும் வீரவிய கானகத்தில் எங்ஙனங் காலங்கழிப்பர்? பட்ட மரங்களுந் தழைக்கும்படியாகப் பாடுந் திறமைவாய்ந்த பாணர்கள் பாடல்களைக் கேட்டும், அறுசுவையுண்டி குறைவற வுண்டும், மலரணையின் கண் இனிதுதுயின்றும் வாழ்ந்த அரசன், இப்பொழுது கானகத்திற் கரடி புலி சிங்கம் யானையாதிய மிருகங்களின் கொடுந்தொனி கேட்டும், காய் கனி யருந்தியும், கல்லும் முள்ளு முறுத்தவுறங்கியும் காலம் போக்க மனம் ஒருபடுவாரோ; பிறந்தநாட் டொடக்கம் ஏழையாயிருப்பவன் அத்தரித்திர நிலையிற்றானே காலம் போக்குதல் எளிதாயிருக்கும்; செல்வன் தரித்திரமுற்றபின் காலங்கழித்தல் அரிது; ஆதலால் யாதுந் துணைவலி பெற்றபின் எம்முடன் வந்து அமர்புரிந்து நாட்டைக் கவர்தல்வேண்டு மென்பதே எனதண்ணனெண்ணம்; கேடு வரமுன்னர்க் காண்பதே அரசனுக்கு முறையாகும்; அற்ப தீப்பொறி ஓர் இல்லத்தைச் சுட அமைந்ததாகும்; ஆதலாற் சத்துரு அற்பனென்று நாம் அலட்சியஞ் செய்ய வொண்ணாது. பணிப்பெண்ணாகிய கூனி இராமரது பட்டாபிஷேகத்திற்குப் பங்கம் விளைத்தாளன்றோ! ஆராயுமிடத்து நமது தமையன் உயிரோடு இருக்கும்வரைக்கும் இவ் விராச்சியம் நமக்குச் சஞ் சலத்திற் கிடமாகும்; அவரைக் கொன்றபின்பே நான் சித்த சமாதானத்துடன் அரசுபுரிவேன்" என்று இங்ஙனம் பலவாறு தன் துராசைக்கேற்பச் சிந்தித்து அடுத்தநாட் சபையிற்சென்று ஓர் வள்ளுவனை

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவித்துக் "குமணராசனுடைய தலையைக் கொண்டு வந்து கொடுப்பவர்களுக்குக் கோடிபொன் சந்மானமாகக் கொடுக்கப்படும்" என்பதை நாடு முழுவதும் பிரசித்தஞ் செய்யும்படி ஆஞ்ஞாபித்தனன். வள்ளுவனும் அவனுக்கஞ்சி அங்ஙனந் தெரிவித்தான். இதனைக்கேட்ட நாட்டிலுள்ளோரெல்லாரும் நடுநடுங்கி இரு செவிகளையும் பொத்தினர். யாரோ காட்டிற்குச் சென்று குமணவள்ள லிருக்குமிடத்தை யடைந்து இந் நிகழ்ச்சியைக் கூறினர். குமணவள்ளல் கேட்டுப் புன்முறுவல் செய்தான்.

* * *

இது இங்ஙனமாக, மதுரைமாநகரை வாசஸ்தானமாகக் கொண்டவரும், இலக்கண விலக்கிய விற்பன்னரும், ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நான்வகைக் கவிகளையும் நன்கு பாடுமியல்பினரும், சைவசித்தாந்த சாஸ்திரங்களின் மெய்ப் பொருளைக் கண்டவருமாகிய பெருந்தலைச்சாத்தனார் என்னும் அருங்கவிப்புலவர், தம்மை நாடோறும் வருத்தும் வறுமையைக் குறித்துத் துன்புற்று "எம்மை வாட்டும் இம்மிடியை எங்ஙனம் நீக்கலாகும்" எனச் சிந்திந்துக்கொண்டிருக்கும் அமையத்தில் அப்புலவரது நண்பராகிய பெருஞ் சித்திரனார் என்னும் புலவர் ஆங்கு வந்தனர். அவரது வரவைக் கண்ட பெருந்தலைச்சாத்தனார் அவருக்கு வேண்டிய உபசரணை செய்து க்ஷேமம் விசாரித்தபின் தம்மை வருத்தும் வறுமையின் கொடுமையை அப்புலவர் பாலெடுத்துரைத்தார். அதுகேட்ட பெருஞ்சித்திரனார் பெருந்தலைச்சாத்தனாரை நோக்கி "அருங்கவிப்புலவ, குமணபுரியைப் பரிபாலிக்கும் குமணவள்ளலிடஞ் செல்வையேல் நினை நலிக்குங் கலி ஆதவனைக் கண்ட பனியென வகலும்; இது திண்ணம்" எனக் கூறி, அவர்பால் விடைபெற்றுக்கொண்டு தன்நகரெய்தினர். பெருந்தலைச்சாத்தனாரும் களிகொள்ளும் உளத்தராய், அமிழ்தினு மினியவோர் அருங்கவி பாடிக்கொண்டு குமணபுரியை நோக்கிச் சென்றார். சென்றவிடத்து, குமணநாட்டிலுள்ளார், குமணவள்ளல் துறவு பூண்டு கானகம் புக்காரெனச் சொல்லக் கேட்டுப் புலவர் அவனைக் காணுவான் வேண்டிக் கானகஞ் சென்றார்.

* * *

உலகம் பலவிதம்: 1928 ஏப்பிரல் 12

காவிய சகோதரர் (முற்றொடர் - 11)

குமணவள்ளல் அலர்ந்த செந்தாமரை மலரை யொத்து மலர்ந்த முகத்துடன் இனிதிருப்பக் கண்ட பெருந்தலைச்சாத்தனார்; "புலவர் தம் மிடியகற்றும் புரவல வாழிய, வள்ளலே வாழிய" என்று கூறி அரசன் சமீபத்திற் சென்றார். புலவர் வருதலைக் கண்ட அரசன் உடனே அவரெதிர் சென்று "வருதிர், வருதிர், உமது வரவு நல்வரவாகுக" எனப் புகன்று அவரை அழைத்துக் கொண்டுசென்று ஓர் ஆசனத்திருத்தி, "புலவரேறே, உமது வரவால் யான் புண்ணியவானாயினேன்; என் ஜென்மாந்தர தவமே இவண் உம்மைக் கொடுவந்துய்த்தது" என்று பலவாறு இன்சொற் கூறிச் க்ஷேமம் வினாவினான், பின்னர் அரசன் பாவலரை நோக்கிச் "செந்தமிழ்ச் செல்வ, சிறியேனைத் தேடி இக்கானகத்தின்கண்ணே கால் நோவ நடந்த காரணம் யாதோ அறிகிலேன்" என்றான். அதுகேட்ட புலவர், "பாவலர் பசிப்பிணி யகற்றும் பண்பினாய், யான் இங்கு வந்த காரணம் விளம்பக் கேள், எட்டி பழுத்தாற் கிட்டிக் கனி பறிப்பாரும், ஈயாதார் வாழ்ந்தாற் சென்று பொருள் இரப்பாரும் உலகிலில்லை; சேய்மையிலே தேனுறினும் அறுபதம் அதனை நாடிச் செல்லும்; அஃதே போல, மிடியெனும் பாவி பிடர்பிடித்துந்தத் தஞ்சமொன்றின்றி யுன்றனை யடைந்தேன்; அன்றியும் என் சிற்றறிவிற்கேற்ப ஓர் கவி பாடி வந்துள்ளேன், அதனைக் கேட்குதிர்:

"ஆடெரி படர்ந்த கோடுய ரடுப்பில்
ஆம்பி பூப்பத்; தீம்பசி யுழல
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைதொறுஞ்சுவைதொறும் பால்காணா
குழவி தாய்முகம் நோக்க
மனைவி யென்முகம் நோக்க யானும்
நின்முக நோக்கி வந்தனன் குமணா"

எனக் கூறி நின்றார்.

* * *

பெருந்தலைச்சாத்தனார் கூறிய அரும் பொருட் கவியைக் கேட்டமாத்திரத்தே குமணன் வெயிலிடைப்பட்ட வெண்ணெய் போல் உள்ளமுருகிப் புலவரை நோக்கிச் "செந்தமிழ்க்கரசே, நாடுநகரிழந்து வெறுவிலியாய்க் கானகம் வந்து வாழும் இச்சமையத்திற் கவியமுதூட்டி என்னுள்ளத்தை உருக்காநின்றீர்; யான் அரசனாயிருந்த அக்காலத்தில் இக்கவியைக் கேட்டிருப்பேனாயின் உம்மைப் பீடித்த கலி நோயைக் கடிதிலகற்றியிருப்பேன். இப்பொழுது என்னிடத்திற் பொருளில்லையானாலும் ஓர் உபாயஞ் சொல்லுகிறேன்; அங்ஙனஞ் செய்வீராயின் உமக்கு வேண்டிய பொருள் கிடைக்கும்; என்றம்பியின் மனக்கவலையும் நீங்கும்; தீயேனும் புகழ்புண்ணியமென்னும் இரண்டனையு மடைவேன்; யான் சொல்வதை மறுப்பீராயின் இம்மூன்றனையுஞ் சிதைத்தவராவீர்; ஆதலால் என் வார்த்தையைத் தட்டாது கேட்டு என்னை யீடேற்றல் நுமது கடனாகும்" என்றான். புலவர் "அரசே, உனது அபிப்பிராயப்படி செய்கின்றேன்" என்றார். அரசன் "அப்படியாயின், என் தலையைக் கொண்டுபோய்க் கொடுப்பவர்கட்குக் கோடி பொன் அளிப்பதாக என்றம்பி தெரிவித்துள்ளான்; ஆதலால் இதோவிருக்கும் இவ்வாளினால் என்றலையைக் கொய்து தம்பிபாற் கொடுப்பீரேல் அவன் கோடிபொன் கொடுப்பான்; அதனைப் பெற்று உம்முடைய வறுமையைக் களைந்து இனிது வாழும்" எனக் கூறித் தன் உடைவாளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவரிடம் நீட்டித் தன்னைவெட்டும்படி தலை வணங்கிநின்றான்.

* * *

இங்ஙனம் அரசன் கூறிநிற்பக் கண்ட புலவர் நெஞ்சந் திடுக்குற்று "ஐயகோ! இதற்கென்செய்வேன்" எனத் துடிதுடித்து, அரசன் கையில் வாளிருப்பின் அவன் தானே வாளாற் றன்றலையைக் கொய்வானென வஞ்சி அவ்வாளை அரசனிடமிருந்து வாங்கிக்கொண்டு சிறிதுநேரம் யோசித்தார். பின்னர் அவர் குமணவள்ளலை நோக்கி, "அரசனே, நினது சென்னி இன்று தொடக்கம் எனக்கே உரியதாயிற்று; யான் வேண்டிய சமையத்தில் உன்பால் வந்து இச் சென்னியைக் கேட்பேன்; அதுகாறும் அதனைப் பாதுகாத்துத் தருதல் நின் கடனாகும்" எனக் கூறி அவ்விடம்விட்டகன்றார்.

* * *

பெருந்தலைச்சாத்தனார் "அம்மம்மா! இக் குமணராசனது வள்ளற்றன்மையின் றிறத்தை எங்ஙன மெடுத்துரைப்பேன்? பண்டை நாள் விளங்கிய எண்டகு வள்ளல்களும் இவனுக் கீடாகார்; இவ்வுத்தமனுக்கா இவன் தம்பி இத்துணைக்கேடுசூழ முயன்றான்; யான் ஒரு உபாயத்தால் இக்குமணனது இராட்சியத்தை மீட்டும் இவன்பாற் கொடுத்தல் வேண்டும்" என்று பலவாறு சிந்தித்துக்கொண்டு, "மாந்தை" யென்னும் ஊரையடைந்து அங்கு வசித்த மகுடத்தியாகி யென்னும் கம்மிய விற்பன்னனை நோக்கி, "கம்மியர் தலைவ, எனக்கோர்; பேருதவி புரிதல் வேண்டும்" என்றார். கம்மியன், "புலவரேறே, என்னால் இயன்றவுதவி உமக்குச் செய்தற்கு யான் எப்பொழுதுஞ் சித்தமுள்ள வனாயிருக்கின்றேன்" என்னலும், புலவர், "சிற்ப சாஸ்திர விற்பன்ன, குமணராசனது தலையை யொத்த ஓர் போலித்தலை எனக்கு நீ செய்து உதவுதல்வேண்டும்; இங்ஙனஞ் செய்து தருதலே நீ எனக்குச் செயற்பால பேருதவி" என்றார். அக்கம்மியனும் அதற்கு உடன்பட்டு, கண்டோ ரெவரும் "இஃது குமணன் றலை, குமணன் றலை" என்று சிறிதுஞ் சந்தேகமின்றிக் கூறும் வண்ணம் ஓர் போலித் தலை செய்து புலவர்பாற் கொடுக்கப் புலவர் அதனைப் பெற்றுக்கொண்டு இளங்குமணனிடஞ் செல்வாராயினர்.

* * *

உலகம் பலவிதம்: *1928 ஏப்பிரல் 26*

காவிய சகோதரர் *(முற்றொடர் - 12)*

இது இவ்வாறாக, இளங்குமணன் தன் மந்திரி முதலானோரை நோக்கி, "அமைச்சர்காள் என்னுள்ளக் கவலை என் புந்தியைச் சந்ததமும் வாட்டுகின்றதே; இதற்கென்செய்வேன்; என் றமையன் தலையைக் கொண்டுவருவார்க்குக் கோடிபொன் கொடுப்பதாகப் பன்னாட்கு முன்னர்த் தெரிவித்துள்ளேன்; ஆயினும் இற்றைநாள்வரையும் யாரேனும் கொடுவந்திலர்; சிறிய பகை யென்று எள்ளிவிடின் வருவது தீதேயாகும்; மந்திரத் தலைவர்காள், இதற்கோர் உபாயஞ் சூழ்ந்துரைமின்" என்றான். பாதகனாகிய இளங்குமணனது வார்த்தையைக் கேட்டு அமைச்சர் முதலானோர் இடியேறுகேட்ட சர்ப்பம்போல உள்ளம் நடுங்கி "இக்கொடிய மன்னனை விட்டகல்வதே நெறியாகும்" எனச் சிந்தித்துக்கொண்டு வாளாவிருந்தனர்.

* * *

இதற்கிடையிற் பெருந்தலைச் சாத்தனார் குமணன்போலிச் சிரத்தைக் கரத்திற் றாங்கினவராய் இளங்குமணனது அரண்மனைவாயிலிற் புக்குத் தம் வரவை அரசனுக்குத் தெரிவிக்கும்படி துவாரபாலகர்க் குரைத்தார். அவர்கள் உடனே அரசன்முன் சென்று "அரசபூபதியே, ஒருவன் உமது தமையனாரது தலையைக் கொய்துகொண்டு வந்து புறங்கடையில் நிற்கின்றான்; தன்வரவை உமக்குத் தெரிவிக்கும்படி சொன்னான்" என்றனர். அரசன் "அவனை இங்கே இட்டு வருதிர், இட்டு வருதிர், சீக்கிரம் இட்டு வருதிர்" என்றான். துவாரபாலகர் ஓடிச்சென்று புலவருக்குரைக்க அவர் அச்சென்னியுடன் இளங்குமணன் முன்னர் வந்து "அரசனே, இங்கே உனது முன்னவன் சென்னியைக் கொய்துகொண்டு வந்தேன்; எனக்குக் கோடி பொன் றருதி" என்று அச்சிரத்தைக் காட்டினார்.

* * *

அத்தலையைக் கண்டவுடன் இளங் குமணன் அறிவுசோர்ந்து நிலத்தில் வீழ்ந்தான். பின்னர் ஒருவாறு உணர்வு வரப்பெற்று "என் அண்ணாவோ! அண்ணாவோ!! இனிப் பாவியாகிய நான் இதற் கென்செய்வேன்; ஒருதரத்துப் பிறந்த யானோ உமக்குக் கொடிய கூற்றுவனானேன்; உலகத்தில் இந்த அவகீர்த்தியைப் பெறுதற்கோ யான் சென்மமெடுத்தேன்" என்று பலவாறு புலம்பினான். அங்கு நின்ற அமைச்சர் முதலானோரும் "அம்மவோ அம்மவோ" வென அரற்ற லாயினர்; அந்நகரம் முழுவதும் அழுகையொலியால் நிறைந்தது.

* * *

அரசனும், அமைச்சர் முதலாயினோரும், நகர மாந்தரும் இங்ஙனம் புலம்பிக்கொண்டிருக்கையிற் புலவர் இளங்குமணனை நோக்கி "அரசனே, அழுவதால் இனி ஆவதொன்றுமில்லை; நீ கூறியபடி கோடி பொன்னைத் தந்து எனக்கு விடை நல்குதி" என்றார். இதற்கிடையில் இளங்குமணன் " சகோதர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதகனாகிய யான் இனி உயிர்வாழேன்" எனக்கூறித் தனது உடை வாளை எடுத்தான். உடனே புலவர் அதனைத் தடுத்து "அங்ஙனஞ் செய்யாதே, யான் சொல்வதைக் கேள், புலவர்களாகிய எம்மைச் சாமானிய மானுடர்போன் மதியாதே; செந்தமிழ்க் கிறைவியாம் நாமகளது கிருபா கடாக்ஷம் நமக் கிருப்பதால் நமக்கரியதொன்றில்லை; முதலை யுண்ட பாலகனை யழைத்ததும், என்பைப் பெண்ணாக்கியதும், கல்லைக் கடன்மேலே தெப்பம்போல் மிதப்பச் செய்ததும், ஆண்பனையைப் பெண்பனையாக்கியதும், அரவு தீண்டியிறந்த சிறுவனுயிர் மீளச்செய்ததும், மூகைச் சிறுமியைப் பேசச்செய்ததும் செந்தமிழ்ச் செல்வியின் திருவருளாலல்லவா? நானிருக்கும் போது நீ ஒன்றற்கும் வருந்தவேண்டியதில்லை; என் சொற்படி நடப்பாயாயின் உன் மூத்தோனுயிரை மீட்டுத் தருவேன்" என்றார்.

* * *

புலவர் மொழியைக் கேட்ட புரவலன் உடனே அவரடிகளில் வீழ்ந்து வணங்கிப் "புலவர் பெருமானே, எமையெல்லாம் ஈடேற்ற வந்த புண்ணியனே, என்னண்ணனது உயிரை மீட்பீராயின் யானுமக் கடிமையாகின்றேன்" என்றான். புலவர் புன்னகை செய்து "மன்னவ, எனக்கு நீ ஒரு கைம்மாறுஞ் செய்ய வேண்டாம்; உன் தமையனைப் பழமைபோல் அரசனாக்கி விடில் அதுவே அமையும்" என்றார். அரசன் "செந்தமிழ்க்கரசே, அதுமாத்திரமோ, இன்னும் என்னென்ன செய்யும்படி கற்பிக்கின்றீரோ அவையெல்லாம் இன்னே செய்கின்றேன்" என்றான். புலவர் இளங்குமணனையும் அமைச்சர் முதலானோரையும் இட்டுக்கொண்டு காட்டிற்குப் புறப்பட்டார்.

* * *

பெருந்தலைச்சாத்தனார் இளங்குமணன் அமைச்சர் முதலானோருடன் காட்டின் கண்ணே சென்று, பின்னர் அவர்களை நோக்கி "நீவிரனை வரும் இங்கே ஒருபால் இருத்திர்; யான் தனியே ஓரிடத்திற் சென்று அங்கிருந்து கலைமகள்மீது ஓர் பிரபந்தத்தைப்பாடி அத்தேவியின் வரப் பிரசாதத்தாற் குமணனுயிர் மீட்டுப் பின்னர் இங்ஙனம் எய்துவேன்" எனக்கூறி அவர்பால் விடை பெற்றுக்கொண்டு அப்புறஞ் சென்று அப்போலித் தலையை ஓர் பற்றைக்குள் மறைத்துச் சிறிது நேரம் ஆங்கிருந்து பின்னர் மீண்டு இளங்குமணன் முதலானோரை அடைந்து "அரசனே, நீ நின் அமைச்சர் முதலானோருடன் வந்து உன்றமை யனைக் காண்டி" என்றார். அதுகேட்ட அரசனும் அமைச்சரும் மற்றுமுள்ளோரும் இன்ப சாகரத்தின் மூழ்கினவராய், "அவர் எங்குளர், எங்குளர்" என வினவிக்கொண்டு புலவர்பின்னே சென்றனர். புலவர் அவர்களைக் குமணவள்ளல் முன்னர்க் கொடுபோய் உய்த்தலும் அவன் ஆச்சரியமும் உவகையு முடையனாய் அவர்களனைவரையுந்தக்கவாறு உபசரித்து "நீவிர் என்னை நாடி இங்கே வந்த காரணம் யாது?" என வினாவினான். அப்பொழுது இளங்குமணன் தன்றமையனது காலில் வீழ்ந்து, "அண்ணலே, சிறியேன் அறியாமையினாற் செய்த பிழைகள் அத்தனையும் பொறுத்துக்கொண்டு, பழமைபோல் நகருக்கு மீண்டு இராச்சியபாரத்தை வகித்து நடாத்தல் வேண்டும்" என்றிரந்தான். தன்னை வணங்கிய தம்பியைக் குமணவள்ளல் எடுத்தணைத்து "எம்பியே, நீ எனக்கு யாதுங் குறை புரிந்திலை; யான் உலகவின்பத்திற் கட்டுண்டு மூழ்காவண்ணம் துறவறத்தைக் கடைப்பிடித்தொழுகுதற்கு நெறி காட்டியமையாகிய பேருபகாரத்தை எனக்குச் செய்தனை; அந்நன்றியை யான் ஒருகாலும் மறவேன்; இப்பொழுதும் யான் கொண்ட துறவறத்திற்கு யாதும் பங்கம் வராது காத்தல் உன் கடனாகும்" என்றான். அது கேட்ட இளங்குமணன், உரைப்பது இன்னதென்று உணராதவனாய் அமைச்சர் முதலானோரையும் புலவரையும் நோக்கினான். அமைச்சரும் மற்றுமுள்ள சனங்களும் பலவாறு புலம்பி, "அரசே, நீர் எம்முடன் வந்து இராச்சியபாரத்தை ஏற்று நடத்தல்வேண்டும்; அங்ஙனஞ் செய்வாதொழி வீராயின், யாமெல்லாரும் இவ்விடத்திற்றானே இருந்து உயிர் விடுவோம்" என்றனர். இங்ஙனமாக, பெருந்தலைச்சாத்தனார் குமணவள்ளலை நோக்கி "அரசே, உனது தலை என்னுடையதாகும்; அதற்கு முடிபுனைய விரும்பினேன்; மறுத்துக் கூறவொண்ணாது" என்றார். அரசன் புலவர் கூற்றை மறுக்கமாட்டாதவனாய் நகருக்குச் செல்ல உடன்பட்டான். அதனை யுணர்ந்து அங்கிருந்தோ ரெல்லாரும் அகமும் முகமும் மலர்ந்தனர்.

* * *

பெருந்தலைச்சாத்தனாரும், இளங்குமணனும், அமைச்சரும், மற்றுமுள்ளோரும் நானா வாத்தியங்கள் ஒலிப்பவும், நால்வகைச் சேனைகள் புடைசூழ்ந்து வரவும் குமண வள்ளலை அழைத்துக்கொண்டுபோய் ஓர் சுபமுகூர்த்தத்தில் முடி புனைவித்தனர். அரசன் தொன்மைபோல் யாதுங் குறைவின்றி இராச்சிய பரிபாலனஞ் செய்தான். அந்நாட்டின் கண்ணேயுள்ள பிரசைகளெல்லோரும் மிக்க மனோரம்மியத்துடன் இனிது வாழ்ந்தனர்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்

[அரசியல், சமூகக் கட்டுரைகளின் தொடர்ச்சி]

உலகம் பலவிதம்: *1928 மே 03*

யாழ்ப்பாணத்திலே ஆங்கிலம் படித்த படிக்கின்ற வாலிபர்கட்கு இப்பொழுது உத்தியோகங் கிடைப்பது அரிதாய்விட்டது. மலாய் நாட்டிலும் இவர்களுக்கு உத்தியோகம் அகப்படாது. இலாபம் வந்தாலும் நஷ்டம்வந்தாலும் ஒரு உத்தியோகத்துடன் இருக்கவேண்டு மென்பதுதான் இவர்கள் கொண்டுள்ள நோக்கமாகும். வயிற்றுக்கில்லாமற் பட்டினி கிடந்தாலும் கமத்தொழில் செய்தற்கு மாத்திரம் இவர்கள் ஒருபோதும் ஒருப்படார். "தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது" என்பதையும், "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர் பழுதுண்டு வேறோர் பணிக்கு" என்பதையும், "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்" என்பதையும் நம்மனோர் அறவே மறந்துவிட்டார்கள். இனி, கமத்தொழில் செய்யவில்லையேயென்று நமது வாலிபர்களை நாம் முற்றாகக் குறை சொல்வதும் முறையல்லவெனப் புலப்படுகின்றது. ஏனென்றால் கமத்தொழில் செய்யப் புகின் நமது வாலிபர் விவாகமின்றி நித்தியப் பிரமசாரிகளாகவே யிருத்தல் வேண்டும். கமக்காரனும் தன் மகளுக்கு ஒரு உத்தியோகத்தனை மணஞ்செய்ய வேண்டுமென்ற பிடிவாதங்கொண்டேநிற்கின்றான். அவன் மகளும் அப்படியே நிற்கின்றாள். தோட்டக்கார னுக்கு என்மகள் வாழ்க்கைப்படுவதா வென்று கமக்காரனுடைய மனைவியே சொல்லி அருவருக் கின்றாள். இந்தக் காரணங்களினாற்றான் நமது வாலிபர் மனம் கமத்தொழிலிற் செல்வதில்லை.

* * *

இப்படியாக, நமது வாலிபருள் அநேகர் இப்பொழுது ஒரு புதுமுயற்சி கண்டுகொண்டனர். அது என்னவென்றால் மோட்டர்ரதம் ஓட்டுவ தாகும். ஆங்கிலம் 5ம் 6ம் தரம் படித்தவுடனே இந்த வாலிபர்கள் யாராயினும் ஒரு சாரதியின் அறிமுகத்தைப் பெற்று, வழிப்போக்கர் சிலரைக் கொன்றும் பலரைத் தட்டிவீழ்த்தி ஊறுபடுத்தியும் மோட்ட ரதச் சாரத்தியம் பழகி ஒருவாறு சாரத்திய பத்திரத்தையும் பெற்றுக் கொள்ளுகிறார்கள். இப்படிச் சாரத்தியம் பயின்று அனுமதிபெற்றவர்களுட்சிலர் இன்னொருவருக்குக்கீழ், சம்பளத்திற்குச் சாரத்திய உத்தியோகம் பார்க்க, வேறுசிலர் ஏதும் காணியை ஈடு வைத்தாயினும் கடன்பட்டுச் சொந்தமாக ஒரு மோட்ட ரதம் வாங்கிவைத்து ஓடத் தலைப்படுகின்றார்கள். இப்படியான ஒரு வாலிபனுக்கு ஒரு ஏழைக் குடும்பத்திலுள்ள கன்னிகையை மணம் பேசியபோது அந்த வாலிபன் "என்ன சீதனங் கொடுப்பீர்க" ளென்று கேட்க அவர்கள் பெண்ணுக்கு நகை நியாயமாகப் போட்டு, 25 பரப்புக்கொண்ட வயலும் எழுதிக் கொடுப்பதாகப் பெண்ணின் பெற்றார் சொன்னார்களாம். அதற்கு அந்த வாலிபன் "நகையை வேணுமானால் ஏற்றுக் கொள்ளுகிறேன்; வயல் வேண்டாம்; அதை விற்றுவிட்டு அந்தப் பணத்திற்கு ஒரு மோட்டரதம் வாங்கித் தருவதானால், பெண்ணைக் கல்யாணஞ் செய்துகொள்வேன்" என்றானாம். பெண்பகுதியார் "மோட்டரதம் வைத்து ஓடுவதில் நட்டம் வந்தாற் செய்தென்ன" வென்று கேட்டதற்கு வாலிபன் "அதற்காகத்தானே பெண்ணுக்கு நகையிருக்கிறது" என்றானாம். "பெண்ணுக்கு நகை அவள் போட்டுக்கொள்வதற்காகவல்லவா கொடுக்கிறோம்; அவளுக்கு நகை வேண்டாமா" என்று பெண்பகுதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டதற்கு "பெண்ணுக்கு அவளுடைய புன்னகையிருக்குத்தானே" என்றானாம். அப்பொழுது அங்கிருந்த ஒரு முதியவர் அந்த வாலிபனைப் பார்த்து "பெண்ணின் சீதனப் பணத்தையும் அழித்து நகையையும் விற்று உடுத்த சேலையுடன் நீ அவளை விடுவாயானால் அவளிடத்துக் கண்ணீருங் கம்பலையும் இருக்குமேயல்லாமல், புன்னகை எப்படியிருக்கும்" என்று சொல்லிச் சிரித்தாராம். வாலிபன் மௌனஞ் சாதிக்க, பெண்பகுதியார் "உந்தச் சம்பந்தம் சந்தியாது; நாம் வேறெங்காயினும் ஒன்றைப் பார்ப்போம்" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார்களாம். நமது நாடு இப்பொழுது இந்தவிதமான நிலையிலிருக்கிறது.

* * *

யாழ்ப்பாணத்துள்ள அபிமானிகள் பெருஞ் சிரமப்பட்டும் அதிக பணத்தைச் செலவிட்டும் அரசினருடைய உதவியைக்கொண்டும் ஒருவாறு மதுக்கடைகள் யாழ்ப்பாணத்தில் இல்லையென்று எவருஞ் சொல்லும்படி செய்துவிட்டார்கள். மதுபரிபாலனப் பகுதியாரின் முயற்சியினால் யாழ்ப்பாணத்திலே மதுபானம் முற்றாகப் போகவில்லை யென்றாலும், சிங்களர் முதலிய மற்றுஞ் சாதியினர் யாழ்ப்பாணம் மதுபானத்தை யொழித்த நாடு என்று யாழ்ப்பாண வாசிகளை இதுகாறும் மெச்சிக்கொண்டிருந்தார்கள். ஆனால், பழையபடி வேதாளம் முருங்கைமரத்தில் ஏறிக் கொண்டது என்றாற்போல், யாழ்ப்பாணத்திலுள்ள சிற்சில குறிச்சிகளில் வசிப்போருக்கு மதுவிடாய் தலைப்பட்டுவிட்டது. அவர்களால் இந்த வேட்கையை நீடித்த காலத்துக்கு அடக்க முடியவில்லை சிலகாலம் கள்வேட்கையை இவர்கள் அடக்க, இப்பொழுது கள்வேட்கை இவர்களை அடக்கிக் கொண்டது. இப்பொழுது கள்விடாய்கொண்டு நின்று தவிப்பவர்கள் யாரென்னில் தென்மராட்சியிலுள்ள குடியினரும் இந்த வண்ணார்பண்ணையிலுள்ள சிலருமேயாவர். இவர்களுக்கு மானம் மரியாதை ஒழுக்கம் குலம் புண்ணியம் கற்பு என்னுமிவைகளைப் பற்றிக் காரியமில்லையாம்; இவைகள் போனாலும் போகட்டுமாம்; கள்ளு மாத்திரம் வேணுமாம். இந்தக்குடியர் தங்கள் சாதி சமயம் நாடு என்னுமிவைகளுக்கும் தங்கள் பெண்டிர் பிள்ளைகள் சுற்றமித்திரருக்கும் தங்கள் நாட்டிலுள்ள பெரியோருக்கும் வசையைத் தேடக் கங்கணம் பூண்டு நிற்கின்றனர்.

* * *

இந்தக் குடியரைச் சுமக்கப் பாவஞ் செய்த ஊர்கள் எவையென்பதை ஏனையோரும் அறிந்துகொள்ளவேண்டுமாதலாற் சொல்லுகின்றேம். கிளாலி, மாசார், மிருசுவில், பாலாவி, அல்லாரை, எழுதுமட்டுவாள், மீசாலை, இடைக்குறிச்சி, சாவகச்சேரி, கரையூர், சுண்டிக்குழி, வண்ணார்பண்ணை யென்னுமிடங்களாம். இந்த இடங்களில் உள்ள குடியினரும் குடியினர்க்குத் துணையாக நின்று வயிறு வளர்ப்போரும் மதுவியாபாரஞ் செய்து நிலையற்ற பொருளை யீட்டியவர்களுமே கள்ளுக்கடைகள் பழையபடி வேண்டுமென்கிறார்கள். இவர்கள் நூற்றுக்கு 60 பேர் விகிதமானோரைக்கொண்டு சம்மதஞ் சொல்லுவித்துப் பழையபடி கள்ளுக்கடைகளைத் திறப்பித்துக் குடிக்கவும் குடிப்பிக்கவும் மதுவியாபாரஞ் செய்யவும் முயற்சி செய்கின்றார்கள். கள்ளுக்குமாத்திரமல்ல, பஞ்சமாபாதகங்களுள் எஞ்சிய நான்கினையும் நூற்றுக்கு 60 வீதமானோரின் சம்மதம் பெற்றுச் செய்யலாமென அரசினர் அநுமதி கொடுத்தால் இந்தக் குடியினர் அஞ்சாது செய்வர். இவர்களுடைய தீய முயற்சி கைகூடுமோ என்பது சந்தேகம். ஆனால் யாழ்ப்பாணத்தின் மற்றும் பாகங்களில் வசிக்கும் மரியாதையுடைய அபிமானிகள் இந்தக் குடியினரைப் பின்பற்ற நினைக்கவொண்ணாது.

* * *

உலகம் பலவிதம்: *1928* மே *10*

"தம்பி என்னவிசேஷம்; கண்டு வெகு காலம்; இன்றைக்கு இந்தப் பக்கமாக நோக்கினது ஏனோ" என்று தமது வீட்டுக்கு வந்த விசுவலிங்கத்தை நமது முருகேசர் கேட்டபோது "அண்ணே, விசேஷமொன்றுமில்லை; உங்களைத் தான் ஒருமுறை கண்டு போகலாமென்று வந்தேன்" எனலும்; முருகேசு "ஆமாம், நூறு முறையுங் காணலாம்; எனக்கும் அது பெருஞ் சந்தோஷம்; வாருந் தம்பி இந்தப் பாயில் இரும்" என்று சொல்லி ஒரு பாயையிட்டு விசுவலிங்கத்தைப் பெரிதும் உபசரித்து இருத்தினார். பாயிலிருந்தவுடன் விசுவலிங்கம் முருகேசுவைப் பார்த்து "அண்ணே, நான்வந்தது ஒரு பிரதானமான காரியத்தையிட்டுத்தான்; நான் எந்தக் கருமமென்றாலும் உங்களோடு யோசியாமற் செய்வதில்லை; அது உங்களுக்கே தெரியுமல்லவா" என விசுவலிங்கஞ் சொல்ல "ஆமாம்; அது மெய்தான்; வீட்டுக் கருமங்களைத்தன்னும் நீர் என்னுடன் யோசித்துத்தானே செய்வது; உங்கள் அப்பர் செய்து வந்தபடியே நீரும் செய்து வருகிறீர்; அதை நான் இல்லையென்று சொல்ல முடியுமா" என்று முருகேசர் ஒரு நிமிஷத்திற்கு 60 சொல்விகிதம் பேசத் தொடங்கினார். "அண்ணே, மூத்தோர் சொன்ன வார்த்தை யமிர்தம்; வயதுக்கு மூத்தவர்களுடைய புத்தியையுங் கேட்டு நடந்தால் ஒரு பிழையும் வராது; அது கிடக்க, ஒரு விஷயமாக என்னுடைய சிநேகிதர்கள் என்னை மிகவும் நெருக்குகிறார்கள் எனக்கு அது கொஞ்சமேனும் பிரியமில்லை; இவைகளெல்லாம் பெருஞ்சங்கடம்; அவர்கள் சொன்னாலுங் கேட்கிறார்களில்லை; மெத்தப் பிடிவாதமாய் நிற்கின்றார்கள்; இப்பொழுதும் நான் முடிவு சொல்லவில்லை; உங்களுடனும் யோசித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுத்தான் முற்றுச்சொல்லவிருக்கின்றேன்" என்று விசுவலிங்கம் இஞ்சி அநுமானத்தில் மருந்து குடித்தவர்போல் முகத்தில் வெறுப்புக் காட்டிச் சொன்னார்.

* * *

"தம்பி, சங்கதியென்ன, நீர் கூசாமற் சொல்லும்; எனக்குச் சொல்ல உமக்கென்ன பயம்" என முருகேசு கேட்க "வேறொன்றுமல்ல; அண்ணே, இந்தக் கவுன்சிலுக்கு என்னையும் ஒரு ஆளாகத் தெரிபடச் சொல்லி நெருக்குகிறார்கள்" என்று விசுவலிங்கம் விளம்ப, "எந்தக் கவுன்சிலுக்கு" என்று கேட்டார். முருகேசு; "இதுதான் அண்ணே கொழும்பிலுள்ள சட்ட நிருபண சபைக்கு" என்று விசுவலிங்கஞ் சொல்ல, முருகேசு "ஓ அந்தப்பெரிய கவுன்சிலுக்கா நான் நகரசங்கத்துக்கு என்று நினைத்து விட்டேன்; அது சரி, அதுக்குத்தான் யாழ்ப்பாணத்தார் 5 பேர் இருக்கிறார்களே; இன்னும் ஆள் தேவையாமோ" என்று கேட்க "இல்லை, அண்ணே, இப்பொழுது இருக்கிறவர்களுடைய காலம் இன்னும் ஒருவருடத்தால் முடிகிறது; பின்பு புதுத்தெரிவு நடக்கும். அப்போதுதான் என்னையும் தெரிவுக்கு நிற்கச் சொல்லுகிறார்கள்; எனக்கு அது பிரியமில்லை; அதுதான் உங்கள் யோசனையையும் கேட்கிறேன்" என்று விசுவலிங்கம் சொல்ல "உமக்குப் பிரியமில்லையென்பது எனக்குந் தெரிகிறது; நான் இப்பொழுது என்ன செய்யவேண்டும்" என்று முருகேசு கேட்டார். "நான் அதற்காகிய முயற்சிசெய்யவோ விடவோ என்பதைத் தான் உங்களிடம் கேட்கிறேன்; மேலும் அப்படியேதும் முயற்சி செய்வதானால் உங்களுடைய உதவியும் தேவை" என்று விசுவலிங்கம் சொன்னார்; "தம்பி, இந்த விஷயத்தில் நான் சொல்வதென்ன உனக்கு விருப்பமானால் ஒருமுறை முயற்சி செய்து பார்க்கலாம்; நானும் என்னால் இயன்ற உதவி செய்கிறேன்; ஆனால் ஒரு விஷயத்தை யிட்டுத்தான் நான் அதிகம் யோசிக்கிறேன்; சட்ட நிருபண சபைப் பிரதிநிதிகளென்றிருப்பவர்களும் அந்தப் பதவியையடைய முயற்சி செய்பவர்களும் நடந்து கொள்ள வேண்டிய முறைகளை நீர் அறிந்திருக்கின்றீரோ வென்பதைப் பற்றித் தான் பயப்படுகிறேன்; இனி இந்த விஷயத்திலோ நியாயமான ஒரு தொகைப் பணமுஞ் செலவாகுமென்பதையும் மனசில் வைத்துக்கொள்ளவேண்டும்" என்று முருகேசு சொல்ல விசுவலிங்கம் "அண்ணே, பணத்தைப் பற்றிக் காரியமில்லை; என்னிடத்திலும் ஏதோ கொஞ்சமுண்டு; போதாவிட்டால் மனுஷியினுடைய சீதனத்திலும் கொஞ்சம் காசாயுண்டு; அதையிட்டுக் கவலையில்லை; வேறு ஏதோ சொன்னீர்களே; அதுதான் எனக்கு விளங்கவில்லை" என்றார்.

* * *

"வேறு என்னதம்பி, இப்படிப்பட்ட முயற்சிகளில் வெளிப்படும்போது அவதானிக்க வேண்டிய காரியங்கள் பல; நீர் பிழையில்லாமல் ஆங்கிலம் பேசத் தெரியாதவராயிருக்கலாம்; வாக்குச் சாதுரியமில்லாதவராயிருக்கலம்; இவைகளைப் பற்றிக் காரியமில்லை; கௌரவத்தை மாத்திரம் விடக்கூடாது; இது எப்போதென்றால் கவுன்சிலுக்குத் தெரிவு செய்யப்பட்ட பிறகு, முந்திச் செய்யவேண்டிய சில காரியங்களைச் சொல்லுகிறேன், தம்பி, அவதானமாகக் கேளும்; உந்தக் காற்சட்டை தொப்பி நியாயங்களையெல் லாம் கொஞ்சக் காலத்திற்கு விட்டுவிடவேண்டும்; வேஷ்டி பட்டு "பனியன்" பட்டுச் சால்வை அணிந்து கொள்ள வேண்டும்; பர்மீஸ் சான்டல் என்று சொல்லப்படுகிற அந்த மெல்லிய ஒருவிதமான செருப்பு இருக்கிறதல்லவா; அதனைத்தான் காலில் மாட்டிக்கொள்ள வேண்டும், கண்தெரிந்தாலென்ன தெரியாவிட்டாலென்ன தவறாமல் மூக்குக் கண்ணாடி எப்பொழுதும் போட்டுக்கொள்ளவேண்டும்; வழிதெருவில் எவரைக்கண்டாலும் சிறியார் பெரியாரென்ற பேதம்பாராட்டாது 32 பற்களையுங் காட்டிச் சிரித்து முந்தியே கும்பிடு போடவேண்டும்; கலியாணவீடு செத்தவீடு எங்கே நடந்தாலென்ன அழைக்கப்பட்டாலென்ன படாதொழிந்தாலென்ன அங்கெல்லாம் முதலாளாய்ப் போய் நிற்க வேண்டும்; ஊரவர்கள் எதனைக் கேட்டாலும், இயன்றாலுஞ்சரி இயலாவிட்டாலுஞ் சரி, "ஓம் நிச்சயமாகச் செய்வேன்; அதனைப் பின்னர் இருந்துபாருங்கள்" என்று சொல்லி விடவேண்டும். மேலும் இப்பொழுதிருக்கிற சட்ட நிரூபண சபைப் பிரதிநிதிகள் ஊருக்கு நன்மையான காரியங்களைச் செய்தாலும், அவர்களையும் அவர்கள் செய்யும் கருமங்களையும் குறையாகவே சொல்லி, நான் அவர்களைப் போல் இருந்தால் முதல்முறை கொழும்பிற்குப் போய் மீண்டுவரும் போதே சுயராச்சியத்தையும் வாங்கிக்கொண்டு வந்து விடுவேன்" என்ற விதமாகச் சொல்லவேண்டும்; தம்பி, இன்னமுஞ் சொல்லுகிறேன் கேளும்; எந்தக் கூட்டம் நடந்தாலும் எங்கே பிரசங்கம் கொண்டாட்டம் நடந்தாலும் அங்கங்கெல்லாம் அவர்கள் உம்மை யழையாவிட்டாலும் நீராகப் போய்ச் சேரவேண்டும். தமிழிலும் ஆங்கிலத்திலும் வசதியானாற் சொற்பொழிவுகள் செய்ய வேண்டும்; கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளைச் சில வாரங்கட்காயினும் மாசங்கட்காயினும் பணங்கட்டி எடுப்பிக்க வேண்டும்; அந்தப் பத்திரிகைகளைக் கிரமமாகப் படிக்கும் விஷயம் உம்மைப் பொறுத்ததல்ல. இப்படிப்பட்ட ஒரு கருமத்திற்கு எல்லாச் சாதியாரதும் சமயத்தாரதும் சகாயம் வேண்டியிருத்தலால் கிறீஸ்தவர்கட்குக் கிறீஸ்தவர் போலவும் சைவர்களுக்குச் சைவர் போலவும் இஸ்லாமானவர்களுக்கு இஸ்லாமானவர் போலவும் பௌத்தருக்குப் பௌத்தர் போலவும் நடித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்டரதமொன்று சொந்தத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். உம்மைப்பற்றிப் புளுகும்படி அந்தரங்க நண்பர் சிலரை வைத்துக்கொள்ளுதல் வேண்டும். அப்படிப்பட்டவர்களில் வேண்டுமானால் என்னையும் ஒருவனாக வைத்துக்கொள்ளும்; இன்னும் நடந்துகொள்ள வேண்டியவைகள் பல உண்டு; ஆனால் இப்பொழுது எல்லாம் ஞாபகத்திலில்லை; அந்தந்த நேரத்தில் அவைகளைச் சொல்லுவேன்; நான் சொன்ன இவைகளே பிரதானமானவையாகும்; சட்டசபையின் அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டால், அதன் பின் நடந்துகொள்ளவேண்டிய முறைகள் எவையென்று இன்னொரு சந்தர்ப்பத்திற் சொல்லுவேன்" என்று முருகேசு கூறி முடித்தார். "அண்ணே, இவைகளையெல்லாம் எப்படி அவதானித்தீர்கள்" என்று விசுவலிங்கம் வினவ முருகேசர் சிரித்து "தம்பி, என்னைப் பற்றி உமக்கு நல்லாய்த் தெரியாது; உமது அப்பருக்குத் தெரியும்; என்னுடைய அருமை" என்றார். "என்னவோ அண்ணே, உங்களை நம்பித்தான் இந்த முயற்சியில் தலையிடப் போகின்றேன்; இன்னும் இரண்டு மூன்று வேளையில் நான் உங்களிடம் வருகின்றேன்" என்று விசுவலிங்கம் சொல்லி நமது முருகேசுவிடம் அநுமதி பெற்றுக்கொண்டு தம்மிடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

* * *

உலகம் பலவிதம்: 1928 மே 24

"எங்களுக்குஞ் சம்மதந்தான்; கள்ளுத் தவறணையில்லாமல் ஒன்றுஞ் செய்ய முடியாது; எங்கள் சம்மதத்தையும் ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று சொல்லிக்கொண்டு யௌவனத்தோடு கூடிய மூன்று பெண்மணிகள் ஆடையாபரண அலங்கிதராய் அன்னமென நடந்து மயிலென ஒதுங்கி, கிளியெனப் புகன்று, கிளாலியில் கள்ளுத் தவறணை விஷயமாகச் சென்ற வாரம் சம்மதஞ் சொல்லப் போய் நின்றார்களாம். சம்மதம்பெறும் ஸ்தானத்தில் இருந்த உத்தியோகஸ்தர் அந்த மூவரையும் பாதாதிகேசம்வரையில் உற்றுப் பார்த்து "நீங்கள் பெண்கள்போற் காணப்படுகின்றீர்கள்; ஐயோ! தங்கச்சிமாரே, கதிரவன் கிரணங்கள் உங்கள் திருமேனியை வாட்ட, பாதம் நோவ, இச்சுடுமணலில் வீணாக ஏன் நடந்து வந்தீர்கள்? இந்த விஷயத்தில் ஆண்களின் சம்மதமன்றிப் பெண்கள் சம்மதம் தேவையில்லை" யென்றாராம்; "ஏன், கள்ளுத் தேவையானவர்கள் ஆருஞ் சம்மதஞ் சொல்லலாமே" என்று அந்த மூவருள் ஒரு உத்தமி கேட்டாளாம் "அப்படியல்ல, பெண்களுக்கு அது தேவையாகவிருந்தாலும், சம்மதஞ் சொல்லும் விஷயத்தில் ஆண்களுடைய சம்மதந்தான் ஏற்றுக்கொள்ளப்படும்" என்று அந்த உத்தியோகத்தர் மிக்க பரிவுடன் பதில் கூறினாராம். இந்தக் குலக்கொடிகள் மூவரும் சம்மதஞ் சொல்லுந் தானத்திற்கு வந்து காலுளைய நிற்பதைக்கண்ட ஐயாத்தம்பியும், அண்ணன் விசுவநாதனும், விதானையாரும், பெண்கள் நிற்கத் தாம் இருக்க மனம் பொறாதவர்களாய்ச் சரேலென எழுந்து "ஐயோ, ஏன் நிற்கிறீர்கள்; இப்படி உட்காருங்கள்" எனத் தலைவணங்கித் தாழ்ந்து இரந்து கேட்க, "வேண்டியதில்லை; நாங்கள் சம்மதஞ் சொல்ல வந்தோம்; இதற்கு ஆண்களுடைய சம்மதமன்றிப் பெண்களின் சம்மதம் வேண்டியதில்லையென்று துரை சொல்லுகின்றார்; ஆனபடியால் நாங்கள் போகப்போகின்றேம்" என்று அந்தப் பெண்மணிகளுள் ஒருத்தி வாய்விட்டனளாம்; அப்பொழுது ஐயாத்தம்பி "அப்படியல்ல, நீங்கள் இங்கே சமூகமாகவிருந்தால் உங்கள் முகத்திற்காகப் பலர் கள்ளுவேண்டுமென்று சம்மதஞ் சொல்லுவார்கள்" என்றார்களாம். அண்ணன் விசுவநாதன் அவர்களை நோக்கி "நீங்கள் நடந்துவந்ததோ, இல்லையேல் வண்டியில் வந்ததோ" என்று வெகு மரியாதையோடு வினவ, "வீடு சமீபத்திலேதான். நாங்கள் நடந்துவந்தோம்" என்று அப்பெண்களுள் இன்னொருத்தி பதிற்சொல்ல "போகும்போது நடந்துபோக வேண்டியதில்லை; பொல்லாத மணல்; நான் என்னுடைய காரில் உங்களைக் கொண்டுபோய் விடுகின்றேன்" என, அவர்கள் மறுக்க விதானையார் "நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். அவரோடு போவதிற் குற்றமில்லை" என்று விதானையார் சொல்ல, சீதேவியின் தமக்கை போன்ற மூன்று பெண் சென்மங்களும் சிறிது நேரம் அங்கேயிருந்து விட்டுப் பின்னர் மோட்டரதத்திலேறிக் கொண்டு போய்விட்டார்களாம். முருகேசு சொல்லுவதால் இது கற்பனையென்று எவரும் எண்ணவொண்ணாது; இது முழுவதும் பொய்யல்ல; இப்படிப்பட்ட சீமாட்டிகள் இங்கிருக்க மழையெப்படிப் பெய்யும்.

* * *

கிளாலியிலிருக்கும் சொல்விளம்பியப்பன் அல்லாரையிலிருக்கும் மதுநாயகம் பிள்ளையைச் சாவகச்சேரிச் சந்தையிற் சந்தித்து "அண்ணே, எங்கள் சங்கதி தெரியுமோ, வெற்றி எங்களுக்குத்தானே; கேள்விப்பட்டீர்களோ" எனலும் மதுநாயகம் பிள்ளை "தம்பீ, கேள்விப்பட்டேன்; அது மெத்தச்சந்தோஷம்; அது கிடக்க, "எங்களுடைய சமாசாரம் உனக்குத் தெரியாதோ" என்றார். "இல்லை, அண்ணே, நான் ஒன்றுங் கேள்விப்படவில்லை" என்று சொல்விளம்பியப்பன் சொல்லுதலும் "அது வாய்க்கவில்லை, தம்பி, அல்லாரையாரும் பலாலியாரும் எங்களை அடுத்துக் கெடுத்து விட்டார்கள்; நாங்களும் நம்பி மோசம்போய்விட்டோம்; சரி உங்களுக்கு எல்லாரும் உதவியாக நின்றார்களென்று கேள்வி; மெய்தானா" என்று மதுநாயகம்பிள்ளை கேட்டார். "அண்ணே அதைக் கேட்கவும் வேண்டுமா;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைக்காரர் எங்களோடு; மதுப் பகுதியார் எங்களோடு; ஊரவர்கள் எங்களோடு; பெண்கள் தாமும் எங்கள்பக்கம்; தலைமைக்காரருக்குத் தலைவர்மாத்திரம் இடையிலே. இனிப் பிற இடங்களிலிருந்தும் எங்கள் கூட்டாளிமார் சிலர் வந்து விடாதேபிடி என்று நின்று காரியத்தை நிறைவேற்றினார்கள்; நம்பிக் குடியிருக்கில் மாசார் கிளாலி எழுதுமட்டுவாள் மிருசுவில் இப்படிப்பட்ட இடங்களிலல்லவா குடியிருக்க வேண்டும்; இந்த ஊர்களிலிருப்பவர்களல்லவா மனுஷர்கள்; மற்றவர்களும் மனுஷராமோ; இந்தச்சமையத்தில் அவர்கள் செய்த உதவிகளை நாஞ் சொல்ல முடியுமா" என்று சொல்விளம்பியப்பன் சொல்லிப் பின்னருஞ் சொல்லுகின்றான்.

* * *

"அண்ணே, மாசார், கிளாலி, எழுதுமட்டுவாள், மிருசுவில் என்னுங்கிராமங்களிற் குடியிருப்பவர்கள் தங்கள் பொருள் போனாலும் பெண்டிர் பிள்ளைகள் அலைந்தாலும் தாங்கள் மானங்கெட்டு மரியாதைகெட்டு நாசமாகப்போனாலும் ஒருபோதும் எங்களைக் கைவிடமாட்டார்கள்; எங்களுடைய அருமை அவர்களுக்குத்தான் தெரியும்; அங்குள்ள பெண்களுட்சிலரும் எங்களிடத்து அன்பு பாராட்டுகிறார்கள்; நாங்கள் இனிமேல் உங்களைப் போல் மறைந்து திரிய வேண்டியதில்லை. நாங்கள் இனிப் புகைரதத்திற் பிரயாணஞ் செய்வோம்; மோட்டர் லொறியிற் பயணம்பண்ணுவோம்; மோட்டரதத்தில் ஏறித்திரிவோம்; நாங்களிருக்கும் இந்தக் கிராமங்களில் எங்கள் கூட்டாளிகளாகிய சோரம்பிள்ளை, காமமுதலி, கொலையப்பன், குருத்துரோகி யென்று சொல்லப்படும் இவர்களும் எங்களுக்குத் துணையாகக் குடியிருக்கிறார்கள். ஒருபோது மாசார் முதலிய இக்கிராமவாசிகளுக்குப் போன எங்களைத் திரும்பிக்கூப்பிடுவது மரியாதைக் குறைவென்று நீ நினைக்கக்கூடும்; அண்ணே, அப்படி நினையாதே; மரியாதையுள்ளவர்களல்லவோ அது ஒருபோது போய்விட்டதேயெனப் பயப்படக்கூடும்; எங்கள் கிராமங்களிலுள்ளவர்கட்கு மரியாதை இருந்தாற்றானே போகமுடியும்; அதிகம் பேசுவதென்ன எங்களையில்லாமல் அவர்கள் குடியிருத்தல் முடியாது" என்று சொல்விளம்பியப்பன் சொன்னான்.

* * *

தம்பீ, உங்களுக்கு அந்த ஊரார் வசதியாக வாய்த்திருக் கிறார்கள்; ஆனால் நாங்கள் வசிக்கும் கச்சாய், மீசாலை, சாவகச்சேரி முதலிய இடங்களிலிருப்பவர்கள் மிகவும் பிடிவாதமானவர்கள்; அவர்கள் பெரிதும் அபிமானமுடையவர்கள்; ரோசமுள்ளவர்கள்; எங்களைக் கைக்கொள்ளுவோர் சிலர்தானிருக்கின்றார்கள்; தலைமைக்காரரும் மற்றும் உத்தியோகத்தரும் அபிமானி களும் பெரியோர்களும் பெண்களும் பள்ளிக்கூடச் சிறுவர்களும் எங்களுக்கு மாறாகவேயிருக்கின்றார்கள்; அதனாலே நாங்கள் அங்கே தலையெடுக்க முடியாது; அவர்கள் இப்பொழுது எங்களைப் பற்றி நல்லாயறிந்து கொண்டார்கள்; ஆனதால் எங்களூர்களில் எங்கள் பக்கமாக இருப்பவர்களையும் உங்களூருக்குத்தான் அனுப்பிவைப்போம்; அவர்கள் அப்படி வருகிற காலங்களில் நீங்கள் அவர்களை உபசரித்தனுப்புங்கள்; எங்களூரில் ஆடவர்களாயுள்ளவர்களை ஒருவாறு எங்கள் பக்கத்திற்கு இழுக்கலாமென்றாலும் பெண்கள் எங்களுக்கு முழு விரோதமாக நிற்கிறார்கள்" என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டு மதுநாயகம் பிள்ளை சொல்விளம்பியப்பனிடம் அனுமதி பெற்றுக்கொண்டு மீண்டார்.

* * *

உலகம் பலவிதம்: *1928* மே *31*

அடா தம்பி, காசு இருந்தால் இன்னும் ஒரு 25 ரூபா தா, நாளைக்கு அராலி அம்மன் கோவில் வேள்வி; கந்தர் வீட்டில் ஒரு ஆடு தீர்த்து 5 ரூபா முற்காசும் கொடுத்திருக்கிறேன்; இன்றைக்கு மிச்சக்காசுங்கொடுத்து ஆட்டை அவிழ்ப்பிக்க வேணும்; வழக்கமாகச் செய்து கொண்டு வந்ததைச் செய்யாமல் விடுவது சரியல்ல; நீ விடுதலைக்கு இங்கே வந்துவிடுவதாய் காகிதம் எழுதியிருந்தபடியால், வந்து நிற்கும்போது கேட்போம் என்று நினைத்துக்கொண்டு தபாலில் முந்தி உனக்கு இதைப்பற்றி எழுதாமல் விட்டேன்" என்று விடுதலைக்கு ஊரில் வந்து தன்னுடன் நின்ற தன் மகன் சரவணமுத்துவைத் தாய்கேட்டாள். "அம்மா, அம்மன் கோவிலுக்கு நீயும் வெட்டும்படியாக ஆடு வாங்கிக் கொடுத்து வருகின்றாய் என்பது உண்மையாகத் தெரியாது; கோவிற் செலவுக்கென்று முந்தியெல்லாம் நீ காகிதம் எழுதியபோது இப்படியென்று நான் அறிந்திருந்தால் ஒருபோதும் பணம் அனுப்பியிருக்கமாட்டேன்; அம்மா, இவைகளெல்லாம் பெரும் பாவமான செய்கையாகும்; பிறர் இதனை அறிந்திருந்தால் என்னையும் உன்னையும் கொஞ்சமும் மதியார்கள்; மதிப்பு ஒருபுறமிருக்க, குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வது போல, நாம் பணத்தைக் கொடுத்துக் கொலைப் பாவத்தை விலைக்கு வாங்கிக்கொள்வதா? இப்படி இதற்கு முந்திச் செய்துவந்தேனென்பதை இரண்டாம் பேருக்குஞ் சொல்லாதே; கோயிலுக்கு வேறு ஏதுஞ் செலவிடுதற்கெனிற் சொல்லு, 25 ரூபாவல்ல, 50 ரூபா வேணுமானாலுந் தருகின்றேன்" என்று சரவணமுத்து பெரும் மனவருத்தத்தோடு சொன்னார்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவணமுத்து பிதாமாதாக்களுக்கு ஒரே யொருபிள்ளை; தமிழும் ஆங்கிலமும் ஓரளவிற்குப் படித்தவர்; ஒழுக்கமுடையவர்; கடவுட்பத்தியுள்ளவர்; பள்ளிக்கூடத்திற் படிக்குங்காலத்திலேயே உபாத்திமாராற் பெரிதும் விரும்பப்பட்டவர்; நாவலப்பிட்டிக்குச் சமீபமாகவுள்ள ஒரு தேயிலைத் தோட்டத்திற் கிளாக்காக உத்தியோகம் பார்த்துவருபவர்; அங்கே நடக்கும் இந்து வாலிப சங்கம் முதலிய சைவசமயக் கூட்டங்களுக்குக் கிரமமாகச் சென்று அப்படிப்பட்ட கூட்டங்கள் தளர்வின்றி நடக்கக்கூடிய முயற்சிகளுக்குந் துணைச்செய்பவர்; சிறுபராயத்திற்றானே, மற்ச மாமிச போசனிகளாயிருந்த தம் பிதா மாதாக்களுக்குப் புத்திசொல்லிப் புலாலுணவை அவர்கள் விடும்படியாகச் செய்தவர்; தமது நண்பர்களாயுள்ளார் யாராயினும் மற்சமாமிச போசனிகளெனக் கண்டால் அவர்களுக்குக் கொலையால் வரும் பாதகத்தை நாளுக்குநாட் சொல்லிப் புலாலுணவை விடுவித்தலையே தமக்கு விரதமாகக் கொண்டுள்ளவர்; இவருக்கு இன்னமும் விவாகமாகவில்லை; இவருடைய ஒழுக்கத்தையும் உத்தியோகத்தையுங் கண்டு சிலர் அதிக சீதனத்தோடு கல்யாணம் பேசியபோது, பேசப்பட்ட பெண்களும் பெண்பகுதியாரும் மாமிச போசனிகளென்பதையிட்டு அந்த விவாகங்கட்குச் சம்மதியாது, அதிக சீதனமில்லாவிட்டாலும் மற்சமாமிசபோசனமில்லாத குடியிற் சைவாசாரம் ஒழுக்கம் செய்காரியம் கடவுட்பக்தி தமிழ்க்கல்வி முதலாஞ் சுகுணங்களோடு கூடிய ஒரு பெண்ணையே தாம் மணஞ்செய்ய வேண்டுமென்ற எண்ணமுடையவர். இவ்வாறான தக்க சம்பந்தமொன்றைப் பிதா மாதாக்கள் ஒழுங்குபடுத்தி ஆவணி மாசத்தில் நிகழும் நாளுக்கு நிச்சயித்திருக்கிறார்கள்; இப்பொழுது விடுதலை பெற்றுக்கொண்டு ஊரில் வந்து தாய் தகப்பனுடன் அவர் நிற்கும்போதே தாய் இந்தக்கேள்வியை மகனிடங் கேட்டாள். சரவணமுத்து கூறிய வார்த்தைகள் தாய்க்குப் பெரும் ஆச்சரியமாகவிருந்தது; கோயில் விஷயத்தில் இப்படியான மறுமொழியைத் தன்மகன் சொல்லக்கூடுமென்று தாய் ஒருபோதுங் காத்திருக்கவில்லை.

* * *

தாய் மகனைப் பார்த்து "தம்பீ, இதுவென்ன, வீண்கதை பேசுகிறாய்; கோயிற்காரியமல்லவா; அம்மாளின் செய்தி உனக்குத் தெரியாதா? ஆயிரங் கண்ணையுடைய தாய் ஊரை யெரித்துவிடுவாளல்லவா? அல்லாமலும் உனக்காகத்தானே நான் இந்த நேர்த்திக்கடனை வருடத்துக்குவருடம் செய்துகொண்டு வருகிறேன்; ஐயோ! மகனே, உனக்குத் தெரியாது; நான் உன் அப்பரைச் சடங்கு முடித்துப் பத்துப் பன்னிரண்டு வருடகாலம் குழந்தை குஞ்சில்லாமலிருந்து, எங்கள் ஆத்தாளிடம் போய் அவளைக் கையெடுத்து, அவள் கோயிலிற் கொடியேறித் திருவிழா நடக்கும்போது நீ நாளும் விரதமிருந்து அவளுடைய கிருபையாலல்லவா உன்னைப் பெற்றேன்; அப்பொழுதே எனக்கு ஒரு ஆண் குழந்தை கிடைத்தால் வருடம் வருடம் வேள்விக்கு ஒரு ஆடுவெட்டுவேனென்று நேர்ந்து அப்படியே உனக்கும் 27 வயதாகிறது, இன்று வரையிற் செய்துவருகின்றேன்; உள்ளநாள் மட்டுஞ் செய்துவிட்டு இப்பொழுது செய்யாமல்விட்டாற் பெருங் கெடுதியல்லவா, மகனே, வந்து சேரும்; இந்த ஒன்றுக்கு மாத்திரம் தடை சொல்லாதே" என்று கிழவி தன் மகனை இரந்து கேட்டாள்.

* * *

சரவணமுத்து மிகவும் மனம் வருந்தி "அம்மா, உன் சொல்லு என் தலைமேலாகும்; பெற்றதாயின் சொல்லைத் தட்டுகிறேன் என்று எண்ணாதே; படிப்பில்லாமையாற் பரிதவிக்கின்றாய், அறியாமையால் அலைகின்றாய்; ஆத்தாளுக்கு எங்களைப்போல ஆடு கோழிகளும் குழந்தைகள்தான்; அவைகள் வாய்விடாச் சாதி; தன் குழந்தைகளைக் கதறக்கதறத் தன் சந்நிதியிற் கொண்டுவந்து இரக்கமின்றி வெட்டும்படி அவள் ஒருபோதுஞ் சொல்லமாட்டாள்; அப்படிச் செய்வது அம்மாளுக்கு வெறுப்பாக யிருக்குமேயல்லாமல் ஒருபோதும் விருப்பமாக விருக்கமாட்டாது; தாயே, இதை நல்லாய் நம்பு;

கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதவரோ டிணங்காமற் கனவிலும் பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளாமற் றோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே."

என்று பட்டினத்துப் பிள்ளையாரும்,

"கொல்லாவிரதங் குவலயமெல்லா மோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே"

என்று தாயுமானசுவாமிகளும் சொல்லியிருக் கின்றார்கள்; மேலும், தாயே, கொலை பஞ்சமா பாதகத்தி லொன்று; இவ்வளவுகாலமுஞ் செய்து வந்ததை இப்பொழுது விடலாகுமோ என்று தாயே நீ நினைக்கக் கூடும். அப்படியல்ல; பிழையைச் சந்ததி சந்ததியாகச் செய்து கொண்டுவந்தாலும்; பிழையென்று அறிந்தவுடனே அதனை விட்டுவிட வேண்டும்; சந்ததி சந்ததியாக மற்சமாமிசம் புசித்து வந்த நீங்கள் இப்பொழுது அதனை விட்டுவிட்டிருக்கவில்லையா; அல்லாமலும் எங்கள் முன்னோர் செய்துவந்த நல்லகருமங்களை யெல்லாம் நாம் இப்பொழுது தவறாமற் செய்துகொண்டு வருகிறோமா; உலகம்பலவிதமாகக் காலத்திற்குக் காலம் மாறிக்கொண்டு வருகின்றது; எத்தனையோ கோயில்களில் ஆடுகோழி வெட்டுவதாகிய இந்தப் பொல்லாச் செயலை இப்பொழுது விட்டுவிட்டார்கள்; நீங்கள் தாழ்ந்தசாதியாரென்று சொல்லும் அவர்களுள்ளும் எத்தனையோ பேர் ஆடுகோழிகளை வெட்டிப் பலியிடுவதையும் புலாலுண்ணுவதையும் அறவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுத்து, ஆசாரமுடையவர்களாய் வந்துவிட்டார்கள்; வடமராட்சியிலுள்ள தேவரையாளியென்னுமிடத்தில் வசிப்பவர்கள் ஒரு கோயிலுக்கு வருஷந் தோறும் ஆடுகோழி வெட்டிப் பலியிட்டு வந்தார்களென்றும் இப்பொழுது அது தவறென அறிந்து அப்படிச் செய்யாமல் விட்டார்களென்றும் எனக்கு வரும் இந்துசாதனப்பத்திரிகையிற் சில காலத்திற்குமுன் படித்தேன். அப்படி அவர்களெல்லாம் திருந்திவர நாங்கள் மாத்திரம் வேளாளர் உயர்ந்த சாதியாரென இருந்துகொண்டு புலையருஞ் செய்யப் பின்னிற்கும் இந்தப் பாதகச் செயலைச் செய்வது புத்தியாகுமா? அம்மா, குடிக்குட் பிறந்து செடிக்குள் தலை வைக்கலாமா? தாயே, இன்னமுஞ் சொல்லுகிறேன் தயவுசெய்து கேட்கவேண்டும்"

* * *

"அல்லாமலும், தாயே இச்செயல் எங்கள் சைவசமயத்திற்கு முழுவிரோதமானது; இப்பொல்லாக் கருமம், ஆதியிலே குறவர் மறவர் வேடர் என்று சொல்லப்பட்ட வனசஞ்சாரிகளாகிய அறிவில்லாத சனங்களாற் செய்யப்பட்டுவந்தது; அவர்கள் பெருமரங்களில் தங்கள் தெய்வம் இருப்பதாகப் பாவித்து, தங்கள் வழக்கமான உணவாகிய மிருகபலியைத் தெய்வத்திற்கும் படைத்து வந்தார்கள்; பாவ புண்ணியத்தைப் பகுத்தறியும் வன்மையில்லாத அவர்கள் விஷயத்தில் அச்செயல் அதிகம் பிழையாகாது; ஆனால், பாமரராகிய அவர்கள் செய்துவந்த இந்தப் பொல்லாச் செய்கையை நாமுஞ் செய்வ தென்றால் அது பொருந்துமா? மேலும் ஆடு கோழி வெட்டுகின்ற கோயில்களின் பூசாரிமாரும் பிராமணரும் ஊரவர்களும் வியாபாரத்திற்காகவே இச்செயலைச் செய்கின்றார்கள்; ஆடு கோழி வெட்டுங் கோயிலில் பிராமணன் பூசைபண்ண வொண்ணாதென்பதைத் தான் நல்லாய் அறிந்திருந்தும், வருவாய்க்காகவே இந்த அடாத செயலைச் செய்வதாக அறிகிறேன்; பூசாரிமாராயுள்ளார்க்கு வெட்டப்படும் ஒரு ஆட்டிற்கு இன்னதொகை கோழிக்கு இன்ன தொகையென்று பணங் கொடுக்கப்படும். இனி இந்த ஆடு கோழிகளைக் கோயிலிற் கொண்டு போய்த் துடிக்கப் பதைக்க வெட்டுபவர்கள் எல்லாரும் உண்மையாகப் பத்தி மேலீட்டினாற்றான் செய்கின்றார்களோ வென்பதை ஆராய்ந்து பார்ப்போம்; ஆடு கோழிகளை உயிரோடு வாங்கிய விலையிற் பாதிவிலையாயினும் குறையாமற் கோவிலடியில் வெட்டியவுடன் இறைச்சியை விற்கலாமென்பது இவர்களுக்கு நல்லாய்த் தெரியும். இவர்கள் வெட்டிய ஆடுகோழிகளை முற்றாய்க் கோயிலுக்குக் கொடுத்துவிடுவதென்றால் ஒருபோதும் இந்தத் தீயசெயலுக்குடன்படமாட்டார்கள். மேலும் குறித்த வேள்விகள் செவ்வாய்க்கிழமையிரவும் (புதன் கிழமை விடியற்காலத்திலும்) வெள்ளிக்கிழமை யிரவும் (சனிக்கிழமை விடியற் காலத்திலும்) தான் நடைபெறுவன. இவர்கள் வேள்விக்கு வருதற்கு முந்தியே எண்ணெய் முழுக்குக்காகிய சாராயம் முதலிய பொருள்களெல்லாம் ஆயத்தஞ் செய்து வைத்துக் கொள்வார்கள்; ஆடு வெட்டி இறைச்சி வீடுவந்து சேர்ந்தவுடனே, சமையல் ஒருபுறம் நடக்க, இவர்கள் முழுக வேண்டியதேயாகும். ஆதலால், அம்மா, இவர்கள் தெய்வத்திற் பழியைப் போட்டுவிட்டுத் தாங்கள் விலாப்புடைக்க உண்ணுவதற்கு எடுத்துக் கொண்ட மார்க்கமேயல்லாமல் இது வேறொன்றுமல்ல; அவர்கள் செய்யும் இந்தப் பொல்லாதசெயலை அறிந்த நாமுஞ் செய்வது அழகல்ல; தென்னிந்தியாவிலேயுள்ள சிதம்பரம் முதலாம் புண்ணிய க்ஷேத்திரங்களில் இந்தவிதமான செயல் ஒருபோதும் நடப்ப தில்லையாமே. பெரியோர்கள் வெறுக்கத் தக்கதும் சீவகாருண்ணியமற்றதும் பாவமானதும் தெய்வத்திற்கு வெறுப்பானதுமான இந்தச் செய்கையை இன்றோடு நாம் விட்டுவிட வேண்டும்; இப்படியென்று முந்தியே நான் அறிந்திருந்தால் ஒருபோதும் இதற்குப் பணம் அனுப்பியிருக்க மாட்டேன்; இன்னும் வேணுமென்றாற் பணந் தருகின்றேன், நேர்த்திக்கடனிருந்தால் அம்மாளுக்கு ருத்திராபிஷேகம் விசேஷ பூசை செய்விக்கலாம்; திருப்பணிக்குக்கொடுக்கலாம்; ஏழைகளுக்கு அன்னதானஞ் செய்யலாம்" என்று மகன் சொல்லத் தாய் அதுசரிதான் என்று உடன்பட்டு பின் புருஷன் வந்தபொழுது சொல்ல, அவர் "தம்பி நாலு காரியமும் அறிந்தவன்; படித்தவன்; அவன் சொல்லுகிறபடிதான் செய்" என்று மனையாளுக்குச் சொன்னார்.

* * *

உலகம் பலவிதம்: *1928 ஜூன் 07*

"அண்ணே, இதுஎன்ன, பெரும் அநியாயமாகவிருக்கின்றதே; ஏறக்குறைய ஒருவருட காலமாக மழையில்லையே இந்த ஊரில்; ஏன் இந்த அநியாயம்; நல்லார் ஒருவர் உளரேல் அவர், பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை யென்றல்லவா சொல்லுவார்கள்; நல்லவரொருவரும் நமது நாட்டில் இல்லையா? தெய்வமும் கண்மூடிக்கொண்டிருக்கிறதா? அண்ணே, வயது சென்ற உங்களுக்குத் தெரியுமே; முந்தியும் எப்போதாயினும் இப்படி மழையில்லாதிருந்த துண்டோ; என் வயசில் இப்படியொருநூதனத்தை நான் இதற்குமுன் கண்டதில்லை" என்று விசுவலிங்கம் நமது முருகேசரைக்கேட்க, முருகேசர் புன்னகைசெய்து பின்வருமாறு சொல்லுகின்றார்.

* * *

தம்பீ, மழைபெய்யாதது நூதனமென்றாய்; அப்படியல்ல; இந்தக் காலத்தில் மழை பெய்தால் அதுதான் பெரிய நூதனமாகும்; நான் அறிய இப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை பெய்யாமல் எக்காலத்தாயினும் இருந்ததில்லை; சிலகாலங்களிலே மழை அதிகம் பெய்ததுண்டு; சிலகாலங்களிற் குறையப் பெய்ததுண்டு; மழை முற்றாக இல்லாமற் போனது இப்பொழுதுதான்; ஆனால் இது நூதனமல்ல; ஏனென்றால் நமது நாட்டிலே நுற்றுக்கு 99 பங்கு பாவமும் ஒருபங்கு புண்ணியமும் இப்போது நடைபெறத் தொடங்கிவிட்டது; இப்படியானால் மழை எப்படிப் பெய்யும்; நாளுக்குநாள் அதிகப்பட்டுவரும் பாவங்களை அறிந்தவரையிற் சொல்லுகின்றேன், கேள்; இக்காலத்திலே சாதியபிமானமில்லை; சமயாபிமானம் தேசாபிமானமில்லை; பெரியோர் சிறியோரென்ற பேதமில்லை. நீதியில்லை; புண்ணிய பாவமென்ற பாகுபாடில்லை; ஆண் பெண்ணென்ற வித்தியாச மில்லை; இரக்கம் தயவு தாக்ஷணியமில்லை; தான தருமமில்லை; மனச்சாட்சிக்கு பயமில்லை; கடவுளிடத்திற் பத்தியில்லை; சமய சாத்திரங்களில் நம்பிக்கையில்லை; சத்தியமில்லை; பரோபகார சிந்தையில்லை; இன்னும் நன்மைகள் எவைஎவையோ அவையொன்றுமில்லை; இப்படியானால் மழை எப்படிப் பெய்யும்.

* * *

"தம்பி, இன்னும் நான் சொல்வதை நல்லாய் யோசித்துப் பாரும்; இப்பொழுது நமது நாட்டிலே நடப்பன பொய், களவு, மதுபானம், சூது, தூர்த்த நடை, வஞ்சகம், பொருளாசை, ஒருவர்மீதொருவர் சந்தேகம்; உள்ளொன்று புறம்பொன்றாய் நடித்தல், கோள், பொறாமை, கொலை, புறங்கூறல், லோபத்துவம்; எவற்றிலும் விசுவாசமில்லாமை; பேராசை முதலாம் அநியாயங்களேயாகும்; மனுஷர் எந்தக்கருமத்தையும் வியாபாரமாக்கிக் கொண்டார்கள்; தெய்வங்கள் குடியிருக்குமிடமென்று நாம் நம்பியிருக்கும் கோயில்களில் நடப்பது வியாபாரம்; கோயில்களைக் கட்டுவதும் கோயில்களில் நித்திய நைமித்தியங்கள் நடப்பதும் வியாபாரம்; கோயிலென்றிருப்பார் செய்வதும் வியாபாரம்; கோயிலிற் பிராமணர் செய்யும் பூசைகளும் திருவிழாக்களும் வியாபாரம்; ஒரு ஆலயத்திலே பயபக்தியோடு மனப்பூர்வமாய்த் தெய்வத்திற்குப் பூப்போடும் பிராமணர் ஆயிரத்திலொருவராகும்; சந்தியா காலங்களில் தாம் செய்யவேண்டிய கடன்களைக் கிரமமாகச் செய்துமுடிக்கும் அந்தணர் அருகிவிட்டனர்; மறையவரிடத்தில் வேதத்தியானம் அத்திமலர் போலாய்விட்டது; எத்தனையோ பிராமணர்கள் விதிக்கு மாறாக உள்ள ஆடுகோழி வெட்டப்படுங் கோயில்களிலும் பணத்துக்காசைப்பட்டுப் பூசைசெய்கின்றார்கள்; கோயில் முதலாளிகளென்றிருப்பவர்களுக்குப் பயந்து செய்யத்தகாத கருமங்களையும் மந்திராலோபங் கிரியாலோபங்களையும் வேதியர் பலர் இயற்றுகின்றார்கள்; புரோகிதர்களாயுள்ளார் தங்கள் சீடர்களின் க்ஷேம லாபத்தையும் ஈடேற்றத்தையும் சிறிதுஞ் சிந்திக்கின்றார்களில்லையே; தாங்கள் படிக்க வேண்டிய தமிழ் சமஸ்கிருதம் என்னுமிவைகளைப் படித்தலை விடுத்து அற்ப ஆங்கிலத்தை மாத்திரங் கற்றுக் கொண்டு தஞ்சாதிக்குரிய ஆசார ஒழுக்கங்களை விடுத்து, செய்வதின்னதென அறியாமல் தமக்கும் சைவ மார்க்கத்திற்குந் தீராவசையைத் தேடும் பூசுரருஞ் சிலர் இருக்கின்றார்கள். இங்ஙனமானால் "அரிசி விற்றிடும் அந்தணர்க்கோர் மழை" என்றபடி வருஷத்தில் ஒருமழை தூறுமேயல்லாமல் மாசத்தில் ஒருமழை இவர்கள் பொருட்டுப் பொழிவது எங்ஙனம்."

* * *

"இனி, அரசர் விஷயத்தை ஆராய்வோமென்றால் அரசரின் நீதி நாங்கள் எவ்வகையான குற்றத்தையுஞ் சொல்ல முடியாத நிலைமையிலிருக்கின்றது; அரசினர் தம்மாலும் தம்பரிசனராலும் கள்வராலும் அந்நிய பகைவர்களாலும் நமக்கு அதிக தீமைவராமற் காக்கின்றனரே யல்லாமல், பிரசைகட்கு வரும் பஞ்சம் முதலிய துன்பங்களை நீக்க முடியாதவர்களாயிருக்கின்றார்கள்; மதுபானம் முதலிய தீச்செய லுக்கு அநுமதி கொடுக்கின்றார்கள்; சனங்கள் ஈடேறுவதற்கான கல்வியை யூட்டுகின்றார்களில்லை; பிள்ளைகள் படித்து ஈடேறுவதற்கு இடையூறாகப் படிப்பின் விலையை அதிகமாக்கி விட்டார்கள்; குடிகள் தமக்கு நேருங் குறையை நீதிஸ்தலங்களிற் சென்று முறையிடுவதற்கு இடையூறாக முறையிடுவோர்க்கும் பணச்செலவை விதித்துவிட்டார்கள்; பரிதானம் வாங்குதலைத் தடுக்க முடியாத நிலைமையிலிருக்கின்றார்கள்; எங்கள் சாதியாசாரங்கள் சமயாசாரங்கள் இனிது நடைபெறுதற்குத் துணை புரிகின்றிலர்; சிற்சில பழைய ஒழுக்கங்கட்கும் கட்டுப்பாடுகட்கும் மாறாகவிருக்கின்றனர்; அச்சுறுத்தியாள்வதைக் காட்டிலும் அன்பால் ஆள்வதே விசேஷமென்பதைச் சிந்திக்கின்றிலர். நிற்க, வணிகரெனவிருக்கும் வியாபாரிமாரின் செயலைச் சொல்லுகிலோ, அவர்கள் தவித்த முயல் அடிப்பார் போலவும், வெந்தவீட்டிற் பிடுங்கியது அறுதி யென்பார் போலவும் நிற்கின்றார்கள்; பொருளைத் தாம் வாங்கிய விலையைக்காட்டிலும் இன்னும் ஒருமடங்கு விலையேற்றி விற்கின்றார்கள்; தங்கள் கொள் விலைக்குத்தக்க லாபத்தை வைத்து விற்கவேண்டுமென்ற எண்ணமும் பணத்தைத் தருவோருக்கு உண்மையைச் சொல்லி நல்ல பொருள்களைக் கொடுக்கவேண்டுமென்ற எண்ணமும் வியாபாரிகளிடத்தில் அரிது. இனிச் சில்லறை வியாபாரஞ் செய்யும் ஆண்கள் பெண்கள் நிலைமையை என்ன என்று சொல்லுவேன்; பாலுக்குச் சரிபங்கு தண்ணீர் கலந்து விற்கிறார்கள்; பசு நெய்க்குத் தேங்காய் நெய் கலந்து விடுகிறார்கள்; சிற்சில இடங்களில் இங்குள்ள ஆண்கள் பெண்கள் செயற்கைப்பால் செயற்கை நெய் என்னுமிவைகளைச் செய்யவும் பழகியிருக்கிறார்களாம்; இவ்வாறானால் மழை பெய்வது எவ்வாறு."

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மழை பெய்யவில்லையென்றும் வேளாண்மை பழுது போய்விட்டதென்றும் வேளாளர் புறங்கூறுகின்றார்களே; இவர்கள் தங்கள் முன்னோர் செய்துவந்த பெருந் தன்மையான செயல்களையும் தான தருமங்களையும் கிரமத்தையும் கைவிட்டுத் தாங்கள் ஏர்பூட்டி உழத் தெரியாதவர்களாய் கூலிக்கு ஆட்பிடித்து மாடுபிடித்து உழுவித்து, வயலிற் சிந்துண்ட நெல்லைத்தானும் ஏழைகள் பொறுக்கியெடுக்கவிடாத வன்கண்ணர்களாயிருக்கின்றார்கள்; பஞ்சகாலத்திலே இம்மியத்தனை தவிடு உமிகள் தானும் பிதிர விடாதவர்களாய் அயலார் குடிக்கக் கஞ்சிக்குத்தானும் வகையின்றிப் பட்டினி கிடக்க, கூடைகளில் நெல்லைக் கட்டி வைத்துக்கொண்டு இருமடங்கு மும்மடங்கு விலைக்கு விற்கின்றார்கள்; அரிசிவிதையிடும்போதும் மற்றும் நாட்கருமங்களை வயல்களிற் செய்யும்போதும் முன்னோர் செய்துவந்த பொங்கல் வழிபாடு முதலியவற்றைச் செய்தலை விடுத்து, இலங்கையில் றப்பர்த்தோட்டத்திலும் தேயிலைத் தோட்டத்திலும் அயிரோப்பியர் செய்வதுபோல் வயற்கருமங்களைச் செய்யத் தலைப்பட்டுக்கொண்டார்கள்; பிராமணன் தொடக்கம் புலையனீறாகவுள்ள சகல சாதியார்க்கும் உணவையளிப்பவரும் அரசனுக்குத் துணைச் செய்பவரும் எச்சாதியாரைக் காட்டிலும் மேலாக நன்கு மதிக்கப்படுபவரும் தாங்கள் என்பதை வேளாளர் மறந்துவிட்டார்கள்; கம்பர் ஏரெழுபது பாடிப் புகழ்ந்ததையும் "எந்நாளுங் காப்பாரே வேளாளர் காண்" என்று பாடியதையும் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்று வள்ளுவர் சொன்னதையும் "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை" என்று ஔவையார் சொன்னதையும் வேளாளர் மறந்து விட்டனர். இப்படியிருக்க மழை எப்படிப்பெய்யும்.

* * *

உலகம் பலவிதம்: *1928 ஜூன் 14*

இனி, தாழ்ந்த வருணத்தாரென்றிருப்பவர்க ளெல்லாரும் போலிச்சுவாதீனத்தை மாத்திரம் விரும்பி அதன் பொருட்டு ஏனைய சாதியினரோடு வாதாடி அவர்களைக் குறைகூறி அவமதிக்கின்றார்களேயன்றி, தாங்கள் தங்களைத் திருத்திக்கொள்ளுதல் வேண்டும், மற்ச மாமிச போசனத்தையும் மதுபானத்தையும் தவிர்த்தல் வேண்டும், துப்புரவாயிருத்தல் வேண்டும் என்ற இவைகளையிட்டுச் சிந்திக்கின்றார்களில்லை. "மாமிச போசனத்தை விடுங்கள், மதுபானத்தை யொழியுங்கள், ஒழுக்கமாய் நடவுங்கள்" என்று யாராயினும் அறிவுடையோர் இவர்களுக்குச் சொன்னால் "ஏன் மேல் சாதியாரென்றிருப்பவர் களுள் கள்ளுக்குடிப்பாரில்லையா? மாமிசம் புசிப்பாரில்லையா? ஒழுக்கமற்றவரில்லையா?" என்று அடாத நியாயம் பேசுகின்றார்கள். ஒழுக்கமற்றவர்கள் எந்தச் சாதியிலிருப்பினும் அவர்கள் அவமதிக்கப்படுதலையும், ஒழுக்கமுடையார் எந்தச் சாதியிலிருப்பினும் அவர்கள் மதிக்கப்படுதலையும், இவைகளுக்குத் திருவள்ளுவர் திருநாளைப் போவார் முதலானோர் உதாரணமாக விளங்குவதையும் இவர்கள் சிந்திக்கின்றிலர். இனி, உயர்ந்த சாதியாரென்றிருப்போரும் காலவர்த்தமானங்களை அநுசரித்து நடப்பதை விடுத்து, இந்தச் சாதிவிஷய மொன்றில்மாத்திரம் தம் முன்னோரைப்போல் அதிகாரங்காட்டி நடக்க முயன்றால் அது முடியுமா? இப்படியான தலைதடுமாற்றங்கள் நிகழும்போது மழை எப்படிப் பெய்யும்.

* * *

இக்காலத்திலேயுள்ள இன்னொரு பெருந் தீமை யென்னவென்றால், சந்தேகமென்று சொல்லப்படும் அவநம்பிக்கையாகும்; சனங்க ளுக்குத் தெய்வத்திலே நம்பிக்கையில்லை; வேதாகமங்களிலே நம்பிக்கையில்லை; புராணேதிகாசங்களிலும் பெரியோர் வார்த்தையிலும் நம்பிக்கையில்லை; ஆலய வழிபாடு நித்தியானுஷ்டானம் விரதங்காத்தல் பொங்கல் பூசை மந்திரம் முதலியவைகளிலே நம்பிக்கை யில்லை; குரு உபாத்தியாயன் அரசன் என்னுமிவர்களில் விசுவாசமில்லை; முதியோரின் கட்டுப்பாடுகளிலும் கொள்கைகளிலும் இவர்களுக்கு நம்பிக்கையில்லை. பெற்ற தாய் தகப்பனுக்குப் பிள்ளைகளிற் சந்தேகம்; பிள்ளைகளுக்குப் பிதா மாதாக்களிற் சந்தேகம்; பெண்டிரிடத்துப் புருஷனுக்கு நம்பிக்கையில்லை; கணவனிடத்து மனைவிக்கு விசுவாசமில்லை; அண்ணனிடத்துத் தம்பிக்கும் தம்பியிடத்தில் அண்ணனுக்கும் குருவிடத்திற் சீஷனுக்கும் சீஷனிடத்திற் குருவுக்கும் எஜமானனிடத்து வேலைக்காரனுக்கும் வேலைக்காரனிடத்து எஜமானனுக்கும் அரசனிடத்துப் பிரசைகட்கும் குடிகளிடத்து அரசனுக்கும் பரஸ்பரம் நம்பிக்கையில்லை; உற்றாரிற் சந்தேகம்; ஊரார் அயலாரிற் சந்தேகம்; ஆடு மாடுகள் முதலாம் மிருகங்களிலும் மரந்தடிகளிலும் சந்தேகம்; ஈற்றில் தம்மீதும் தமக்குச் சந்தேகம்; ஒருவர் ஒருவர் மீது அன்பு பாராட்டி நடந்தால் அதிலே சந்தேகம்; அதிலும் ஆண் பாலார் பெண்பாலரானால் இன்னும் பெருஞ் சந்தேகம்; சோதிடத்திற் சந்தேகம்; வைத்தியத்திற் சந்தேகம்; உலகத்திலுள்ள எல்லாவற்றிலும் சந்தேகம்; இவ்வாறாயின் எவ்வாறு மழை பெய்யும்.

* * *

அல்லாமலும் இக்காலத்தில் எவரைப் பார்த்தாலும் ஆர் கெட்டும் தாம் தாம் வாழவேண்டுமென்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணமே தலைப்பட்டுவிட்டது; பொருளாசை அதிகரித்துப் பேராசையாக மாறிவிட்டது; பிள்ளைகட்குரிய பொருளைப் பெற்றார் கவர முயலுகின்றனர்; பெற்றாரிடத்துள்ள பொருளைப் பிள்ளைகள் ஒருவரையொருவர் வஞ்சித்துத் தாம் அபகரிக்க முயலுகின்றனர்; அண்ணனுடைய பொருள் பண்டத்தைத் தம்பி தனக்காக்கிக்கொள்ளுகின்றான்; உடன்பிறந்த தம்பிக்கு மாறாகத் தமையன் நீதிஸ்தலமேறி வழக்குப் பேசுகின்றான்; புருஷனை வஞ்சித்துப் பெண்டிர் பணந் தேடுகின்றாள்; மனைவியை வஞ்சித்துக் கணவன் பொருள் கரந்து வைக்கிறான்; எஜமானனை வேலைக்காரன் திருடுகின்றான்; வேலைக்காரனை எஜமானன் ஆடு மாடு முதலாம் மிருகம்போல் நடத்து கின்றான்; வீட்டில் எஜமாட்டிகளென்றிருப்போர் தங்களை நம்பியிருக்கும் வேலைக்காரச் சிறுவர் சிறுமியர்கட்கு வயிறார உண்ண உணவு கொடுக்கின்றார்களில்லை; மாறிக் கட்டத் துணி கொடுக்கின்றார்களில்லை; பொறாமை எவரிடத்துங் குடிகொண்டுவிட்டது; அயல்வீட்டு அடுக்களையிற் புகைவதைக் கண்டு தம் மனம் புகைவார் அநேகர் இருக்கின்றர்கள்; தமக்கு நன்மைசெய்து நம்பி நடந்தவனுக்குப் பிறரோடு கூடித் தீமை செய்ய முயலுங் கயவர் பலருளர்; "செழும் பொழில்வாய் வேம்பன்றோ காக்கை உவக்குங் கனி" என்ற பிரகாரம் ஒருவனிடத்தில் எத்தனை நற்குணங்களிருப்பினும் அத்தனையையும் அலட்சியஞ்செய்து அவனிடத்தில் அரிதாய் ஒரு தீக்குணங் காணப்படின் அதனையே எடுத்து அயலில் தூற்றுவார் பலரைக் காணலாம்; உண்மையாக ஒருவனிடத்துத் தீய செயல் காணப்படாவிடினும் உடனே ஒரு தீமையைக் கற்பித்து அவனைத் தூற்றுவதே பொழுது போக்காகவுடையார் பலர் சஞ்சரிக்கின்றனர்; உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவாரும் முன்னொன்று சொல்லிப் பின்னரிதொன்று பகர்வாரும் எங்குங் காணப்படுவர்; இச்சகம் பேசித் தங்கருமம் பார்ப்பார் இன்னும்பலர்; கோட் சொல்லுங் கசடர் மிகப்பலர்; பொய் வியாச்சியந் தொடர்வாரும் பொய்ச்சான்று சொல்வாரும் பரிதானம் வாங்குவாரும் பத்துக்கைந்து விகிதமானோருளர். பொய்யே எல்லாரிடத்தும் எக்கருமத்தும் முற்பட்டு நிற்கின்றது; தெய்வத்துக்கும் பொய்யாய் ஒழுகுகின்றனர்; அரசனிடத்தும் பெரியோரிடத்தும் பெற்ற தாய்தந்தையரிடத்தும் பிள்ளைகளிடத்தும் உற்றார் உறவினரிடத்தும் பொய்சொல்லிப் பிழைக்கத் தலைப்பட்டார் எண்ணிறந்தோர். இங்ஙனமானால் மழை எங்ஙனம் பெய்யும்.

* * *

புலையுங் கொலையும் அதிகப்பட்டு வருகின்றன; முற்காலத்திலே தாழ்ந்த வருணத்தவரென விருந்தோரே புலாலுண்டு வந்தனர்; வேளாளர் முதலாம் வருணத்தோருட் புலால்புசித்தார் சிலரினுஞ் சிலராக விருந்தனர்; ஆனால் இக்காலத்திலெனிலோ அந்நியதேச சஞ்சாரத்தினாலும் அந்நிய நாகரிகத்தினாலும் சந்ததி சந்ததியாகப் புலாலுண்ணாதவர்களும் உண்ணத் தலைப்பட்டுக்கொண்டனர்; முற்காலத்திற் சாதிமக்களென்றும் பிரபுக்களென்றுமிருந்தோர் ஒருபோதும் மாமிச போசனஞ் செய்தற் கொருப்பட்டிலர்; ஆலயபரிபாலனம் புராணபடனம் முதலிய சற்கருமங்களைச் செய்வோரும் ஒருபோதும் புலால் புசித்தறியார்கள்; உபாத்தியாயர்கள் நூலாசிரியர் உரையாசிரியர்களும் அப்படியே இருந்தனர்; ஆனால் இக்காலத்திலோ கோயிலதிகாரிகளென இருப்போருட் சிலரும், சமய பிரசாரகர்களும், சாதிமக்கள் பிரபுக்களென்றிருப்போர் சிலரும், புராணபடனஞ் செய்வோருட் சிலரும், நிதமும் ஆலயசேவை செய்யவேண்டியவர்களாகிய வாத்தியகாரரும், சைவசாதனம் பூண்டு பாதாதி கேச பரியந்தம் விபூதி பூசிக் கஷாயந் தரித்த ஆஷாடபூதிச் சுவாமிகளும், "பரங்கள்" என்று சொல்லப்படும் பண்டாரங்களும், பிள்ளைகளுக்கு ஒழுக்கத்தைப் பயிற்ற வேண்டியவர்களும், புலாலுண்ணாமையைப் போதிக்கவேண்டியவர்களுமாகிய உபாத்தியாயர்களும் புலால் புசிக்கின்றார்கள்; மேலே சொல்லப்பட்ட இவர்களும் பெண்பாலாருட் சிற்சிலரும் மதுபானத்தையுஞ் செய்கின்றார்கள். முன்னே மீன் விற்பவர்களையும் இறைச்சிக் கடைகளையுங் காண்டல் அரிதாகவிருந்தது; இப்போதோ இவர்களையும் இவைகளையும் இடங்கள்தோறுங் காணலாகும். இனி, கொலையைப் பற்றி ஆராய்வோம். இங்குள்ள அராலி அம்மன்கோவில், உரும்பராய்க் காட்டு வைரவர் கோவில், சுன்னாகம் ஐயனார்கோவில் முதலாம் சில கோவில்களிலே, சைவக்கொள்கைக்கு மாறாக, தெய்வத்தின்மேற் பழியையிட்டுப் பாமரசனங்களும் குருட்டுப் பத்தியுள்ளார் சிலரும் வருடந்தோறும் நூற்றுக்கணக்கான ஆடு கோழிகளையும் வெட்டிக் கொல்லுகின்றார்கள். அறிவுடையோர் இக்குரூரச் செய்கையைச் சென்று தடுத்தாலும் இப் பாமரர் கேட்கின்றிலர். இவ்வாறாயின் மழைபெய்வ தெவ்வாறு.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி

[தலைப்பு பதிப்பாசிரியருடையது]

[உலகம் பலவிதம் 1928 ஜூன் 21 தொடக்கம் ஜூலை 12 வரை கிடைக்கவில்லை. "கல்வி" தொடக்கக் கட்டுரைகளும் கிடைக்கவில்லை]

உலகம் பலவிதம்: 1928 ஜூலை 19

இப்படியாக எனது தாயார் "ஆச்சி, பிள்ளை படிப்பதை நீ போய்நின்று கெடுக்காதே அவர்கள் படிக்கட்டும்; நீ இங்கேவா" என்று பாட்டியாரைக் கூப்பிட, அதுகேட்ட பாட்டி "ஐயோ மகளே, நின்றபிழையைப் பொறுத்துக்கொள்; உன்பிள்ளை படித்துக்கொட்டுவதை நான் கெடுக்கவில்லை; சொல்வதென்ன தாய் தகப்பன் முந்திப்படித்திருந்தாலல்லவோ இப்பிள்ளை படிக்கும்" என்று புறங்கூறிக்கொண்டு பாட்டியார் போய்விட, உபாத்தியாயர் என்னை நெருக்கித் தமிழ் நெடுங்கணக்கில் உயிரெழுத்தைச் சொல்லித்தர, அவர் ஒவ்வொன்றையும் 12 முறை சொன்னபின் நான் ஒருமுறையாக ஒருவாறு சொல்லிமுடித்தேன்; ஒவ்வொரு உயிரெழுத்தையுஞ் சொல்லும்போது என்னுயிர் ஒவ்வொருமுறையும் போய் மீள்வதுபோல் எனக்கிருந்தது; உயிரெழுத்தைச் சொன்னபின் மெய்யெழுத்தைச் சொல்லும்படி சட்டம்பியார் என்னை நெருக்க, "இப்படி நெருக்கினால் நாளைக்கு நான் படிக்கவராமற் காய்ச்சலென்று கிடப்பேன்" என உபாத்தியாயருக்குச் சொல்ல அவர் மெய்யெழுத்தை அப்பொழுது சொல்லித் தராது விட்டார். "தம்பி, நீ மெத்தக் கெட்டிக்காரன்; இன்றைக்குப் படித்தபடிப்புப் போதும்; ஒரேநாளில் அதிகம் படிக்கவொண்ணாது. ஆனால் இன்றைக்கு நல்லநாளாயிருத்தலால் இலக்கமெண்ணுதற்கும் பழக வேண்டும்; உனக்கு எண்ணத்தெரியுமோ" என்று உபாத்தியாயர் என்னைக் கேட்க நான் "ஒன்றுதொடங்கிப் பத்துவரைக்கும் எண்ணத்தெரியும்" என, "சரி, எண்ணுபார்ப்போம் என்றார்.

* * *

நான் "ஒண்டு" என்றேன்; உபாத்தியார் அப்படியல்ல "ஒன்று" என்று என்னைத் திருத்த நான் அவர் சொன்னபடி சொல்லிவிட்டு "இரன்று" என்றேன்; அவர் என்னைத் திருத்தி "இரண்டு" என்றார்; அவர் சொன்னபிரகாரம் நான் சொல்லி விட்டு "மூண்டு" என்றேன்; அப்படியல்ல "மூன்று" என்று அவர் என்னைத் திருத்த "உபாத்தியார், நீங்கள் முதல் எண்ணுங்கள் உங்களைப் பார்த்து நான் பின் எண்ணுகிறேன் எனச் சொல்ல உபாத்தியாயர் சிரித்து "பிள்ளையே, ஒன்று தொடக்கம் மூன்று வரையுந்தான் இந்தச் சங்கடம்" என்று எனக்குச் சொன்னார். இதற்கிடையில் எனது தாயார் அங்கே வந்து "உபாத்தியார், தம்பி இன்று படித்தது போதும்; இனி நாளைக்குப் படிக்கட்டும்" என்று சொல்ல அதனைக்கேட்ட நான் துள்ளியெழுந்து கூட்டிலிருந்துவிடுபட்ட நாவியைப்போல அதிக சந்தோஷத்துடன் ஓடிப்போய் விட்டேன். பின்னரும் உபாத்தியார் என்னைக் கூப்பிட்டார்; நான் வீட்டின் உட்பக்கத்தில் நின்று "என்ன" என்று கேட்டேன்; "இந்தா உன் ஏட்டை எடுத்துக்கொண்டுபோ" எனலும், அதை அம்மாவிடங் கொடுத்தனுப்பும்படி சொல்லிவிட்டு நான் போகாதிருந்தேன்.

* * *

ஒருநாள் நான் போசனஞ் செய்துகொண்டிருக்கும்போது என் தாயார் என்னைப் பார்த்து "மகனே, நீ கெட்டித்தனமாகப் படித்தல் வேண்டும்; விளையாட்டைப்பற்றிய சிந்தனையை விட்டு எப்போதும் படிப்பைப்பற்றிய சிந்தனையாகவே இருத்தல் வேண்டும்" என்று சொல்ல, நான் "அம்மா, எனக்கு எந்த நேரமும் படிப்பைப்பற்றிய சிந்தனைதான்" என்றேன். "அப்படியானால், நீ உபாத்தியார் வரும் நேரத்திலல்லாமல் மற்றும் நேரத்திற் படிக்கக்காணேனே" என்று என் தாயார் சொன்னார். "அம்மா, அப்படியல்ல; என் உபாத்தியார் பாடஞ் சொல்லித்தரவரும்வரைக்கும் ஐயோ! உபாத்தியார் வரப்போகின்றாரே; படிக்க வேணுமே; இன்றைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் வராமல் விடமாட்டாரா; அவருக்கு ஏதும் சுகவீனம் வரக்கூடாதா; சுகவீனம் வந்தால் அவர் வராமல்விட நான் படியாமல் விளையாடித் திரியலாமே" என்பதுதான் எனக்கு எந்தநேரமும் சிந்தனை; நேற்றுப் பொழுதுபட நான் படுக்கைக்குப் போகும்போது "ஐயோ! கடவுளே, இந்த இரா விடியாமலிருக்கவேணும்; விடிந்தாற்றானே உபாத்தியார் வந்து என்னைப் படிக்கச்சொல்லி நெருக்குவார்" என்று நினைத்துக்கொண்டு படுத்தேன்; ஆனால் அது வழக்கம்போல் விடிந்துவிட்டது என்று நான் சொல்ல என் தாயார் சிரித்து, பின் நான் சொன்னவைகளை என் தகப்பனாருக்குச் சொல்ல அவருஞ் சிரித்துவிட்டு என்னைக் கூப்பிட்டு "கவனமாகப் படிக்கவேண்டும்" என்று பல புத்திகளைச் சொன்னார்; தகப்பனார் சொன்ன புத்திகளெல்லாம் அந்த நேரத்தில் எனக்கு வேம்புபோலிருந்தன.

* * *

உலகம் பலவிதம்: 1928 ஜூலை 26

கல்வி (முற்றொடர்)

[முற்பாகம் சிதைந்துள்ளது]

வெளியேபோய் உபாத்தியாயருக்கு நான் எழும்பாத செய்தியைச் சொல்ல அவர் என் படுக்கையில் வந்து எழுப்புவார்; இப்படியாக ஒருநாள் உபாத்தியாயர்வந்து பெருஞ் சத்தமிட்டுக் கூப்பிட்டு என்னைத் துயிலுணர்த்த முயன்றும் வாய்க்காமையால், அவர் உபாயமாகத் "தம்பி விழிப்புப்போலிருக்கிறது; உண்மையாக நித்திரையானாற் கால் ஆடும்" என்றார். என் உபாத்தியாயர் அப்பொழுது செய்த உபாயம் எனக்குப் புலப்படவில்லை; நான் உண்மையாகத்தான் சொல்லுகிறார் என்று நினைத்துக் காலையாட்டினேன்; அவர் "கள்ளப்பயலே எழுந்திரு" என்று உறுக்கிச் சொன்னார்; நான் வெட்கத்தோடும் அச்சத்தோடும் உடனே எழுந்து படிக்கப் போனேன்"

* * *

"கணக்கு விஷயத்திலோ நான் புலி; ஒருநாள் உபாத்தியாயர் என்னைப் பார்த்து, "தம்பி, உன் தாயார் உனக்கு 3 மோதகம் தந்து ஒன்றை உன் தங்கைச்சிக்குக் கொடுக்கும்படி சொன்னார் என்று வைத்துக் கொள்ளுவோம். அப்படியானால் உனக்கு எத்தனை மோதகம் கிடைக்கும்" என்று கேட்டார்; நான் மூன்றுதான் என்று சொன்னேன்; "ஓ பேய்ப்பிள்ளை; 3 மோதகத்தில் ஒன்றை உன் தங்கைக்குக் கொடுத்தால் இரண்டுதானே உனக்கு அகப்படும்; 3 என்று சொல்வது பிழையல்லவா" என்றார். நான் என் தங்கைக்கு ஒன்றைக் கொடுத்தாற்றானே இரண்டு; நான் ஏன் கொடுக்கப்போகிறேன்; நான் ஒருபோதுங் கொடுத்துத் தின்னும் வழக்கமில்லை; ஆனபடியாற்றான் 3 என்றேன்; உபாத்தியாயர் சிரித்துவிட்டு என்னைப்பார்த்து, "சரி, இந்தக்கணக்கைச் சொல்லு பார்ப்போம்; நீயும் உன் தங்கையும் செய்த குற்றத்திற்காக உன் தகப்பனார் உங்கள் இரண்டுபேருக்கும் ஐந்து குட்டுக் குட்டுவதென்று சொல்லிவிட்டு உனக்கு 3 குட்டுக் குட்டினால் உன் தங்கைக்கு எத்தனை குட்டுக் குட்டவேண்டும்" என்று கேட்டார்; நான் 5 என்றேன்; ஏன் என்று கேட்டார்; எனக்குக் குட்ட வேண்டிய 3 குட்டையும் என் தங்கைக்கே குட்டிவிடும்படி என் தகப்பனாருக்குச் சொல்லிவிட்டு நான் அங்கே நில்லாமல் ஓடி விடுவேன் என்று சொன்னேன்; உபாத்தியாயர் பின்னுஞ் சிரித்து நீ மெத்தப் புத்திசாலி என்று சொல்லி விட்டு 6ம் கூட்டல் வாய்பாட்டைச் சொல்லும்படி என்னைக் கேட்க நான் தெரியாமல் நின்று விழித்தேன்; அவர் என்னைக் கோபித்து, "நாளைக்கு நான் வரும்போது இது ஆயத்தமில்லாமலிருந்தால் நான் நிச்சயமாக அடிப்பேன்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். அந்தச் சொல்லு எனக்கு இடி வீழ்ந்தது போலிருந்தது; நான் ஏங்கி ஏங்கி மெல்ல மெல்ல அதிக யோசனையோடு என் தாயாரிடஞ் சென்றபோது தாயார் கால்முகம் கழுவிக்கொண்டு என்னை உண்ணவரும்படி கேட்டார்; பசி தாகம் எல்லாம் உபாத்தியாயர் சொன்ன வார்த்தையைக் கேட்டமாத்திரத்தே பறந்து போய்விட்டன. "அம்மா, எனக்கு இன்றைக்கு ஒன்றும் வேண்டாம்; கொஞ்சமும் பசிக்கவில்லை" என்றேன்; தாய்க்குப் பிள்ளையின் தன்மை தெரியுந்தானே; "ஏன் தம்பி உபாத்தியாயர் ஏதுஞ் சொன்னாரோ" என்று என்னைக் கேட்க நான் கூட்டல் வாய்பாட்டுச் செய்தியைச் சொன்னேன். "எட, தம்பி, நீ ஏன் ஏங்குகிறாய்; நாளைக்குச் சனிக்கிழமை உபாத்தியாயர் வரமாட்டார்" என்று தாயார் சொல்ல எனக்கிருந்த கவலையெல்லாம் பறந்துபோய்விட்டன. உடனே பெரும் பசி உண்டாய் விட்டது; "அம்மா, கடுமையாகப் பசிக்கிறது; நேற்றுப் பல்விளக்கி முகங்கழுவினேனல்லவா; இன்றைக்கும் அப்படிச் செய்தபின்தான் சாப்பிட வேண்டுமோ; ஏன் முந்திச் சாப்பிட்டுவிட்டுப் பின்பு பல்விளக்கி முகங் கழுவினாலென்ன" என்றேன்; "சீ! அது கூடாதபழக்கம்; ஓடிப்போய்ப் பல்விளக்கி முகங் கழுவி வா" என்று தாயார் சொல்ல நான் கிணற்றடிக்குப் போய்க் கொஞ்சநேரம் சும்மா நின்று பல்விளக்காமல் முகத்தை மாத்திரங் கழுவிக்கொண்டு வந்து சாப்பிடத்தொடங்க, "விபூதி பூசவில்லை; போய்ப் பூசிவா" என்று தாயார் சொல்ல நான் சாப்பாட்டையுங் கையிலெடுத்துக் கொண்டு போய் விபூதியிருக்குமிடத்திற்குப் பக்கத்திலிருந்து உண்டுவிட்டு விபூதியும் பூசிக்கொண்டு தாயாரிடம் வந்து "அம்மா, சனிக்கிழமை எத்தனை நாளைக்கொருமுறை வருவது" என்று கேட்டேன்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயார் ஏழுநாளுக்கொரு முறைவருமென்று சொல்ல "ஐயோ, சனிக்கிழமை ஒன்றைவிட்டொரு நாளைக்கு வந்தால் நல்லதல்லவா அம்மா" என்று பெருமூச்சு விட்டேன்.

* * *

உலகம் பலவிதம்: 1928 ஆகஸ்ட் 2

கல்வி (முற்றொடர்)

சில நாட்களாக ஏட்டிலே படித்துக் கொண்டுவந்த எனக்குப் புத்தகத்திற் படிக்க வேண்டுமென்ற ஆசை பிறந்தது. என் தகப்பனாரை ஒரு புத்தகம் வாங்கித் தரும்படி கேட்டேன்; அவர் உடனே வாங்கித்தந்தார். அந்தப்புத்தகம் படங்களுடன் கூடியது. அந்தப் படங்களைப் பார்ப்பதிற் பொழுது போக்கினேனன்றி நான் பாடங்களைப் படிப்பதில்லை. ஒரு சனிக்கிழமை என் தாயார் எனக்கு முழுகும்படி எண்ணெய் வார்த்தபின் படம் பார்க்கவேண்டும் என்ற ஆசையினால் ஓடிப்போய் என் புத்தகத்தை எடுத்துப் படம் பார்த்தேன். என் கையிற் பூசுண்டிருந்த எண்ணெயினாலும் தலையிலிருந்து சிந்திய எண் ணெயினாலும் என் புத்தகம் முழுவதும் எண்ணெய் மயமாகவே காணப்பட்டது. அது எனக்குப் பெரும் மனவருத்தமாக, நான் ஒரு பழந் துணியையெடுத்து எண்ணெய் துடைக்கலாமென்று தேடிப் பார்த்தேன்; எனக்கு எட்டக் கூடியதாக ஒன்றும் அகப்படவில்லை. வீட்டின் அறையுட் சென்று பார்த்தபோது என் தாயார் குத்துவிளக்குத் துடைப்பதற்காக உபயோகிக்கும் பழந்துணி விளக்கின் அடித்தகழியில் இருக்கக்கண்டு அதனையெடுத்துக் கொண்டுபோய்ப் புத்தகத்திலுள்ள எண்ணெய்ப்பற்றைத் துடைத்துவிட முயன்றேன். துணி முந்தியே விளக்குத் துடைத்து அழுக்கோடு கூடியிருந்தமையால் அதைக் கொண்டு புத்தகத்தை நான் துடைக்கவே புத்தகம் முழுவதும் முன்னரிலும் பார்க்கக் கூடிய அழுக்கோடும் எண்ணெய்ப்பற்றோடுங் காணப்பட்டது. உபாத்தியாயர் அறிந்தால் ஒருபோது என்னை அடிப்பாரென்று பயந்து எண்ணெய்ப் பற்றை அகற்றுவதற்கு என்ன செய்வதென்று சிறிதுநேரம் யோசித்தேன்; எனக்கு ஒரு உபாயம் புலப்பட்டது. நான் வஸ்திரத்துக்குப் போடும் சவர்க்காரத்தை யெடுத்துப் புஸ்தகத்திற்கு நன்றாய்ப் பூசி ஒரு வாளியை நீரினால் நிறைத்து அதற்குட் புத்தகத்தை ஊறப் போட்டுவிட்டேன். சில சமையங்களிலே எங்கள் வீட்டு வேலைக்காரர் வஸ்திரம் அலம்புவதற்கு இப்படிச் செய்வதைக் கண்டே நானும் புத்தகத்திற்கு இப்படிச்செய்தேன். அடுத்தநாள் அதிகாலையில் உபாத்தியாயர் வழக்கம்போற் படிப்பித்தற்கு வந்தார். அவரைக் கண்டவுடன்றான் எனக்குப் புத்தகத்தின் ஞாபகம்வந்தது. ஓடிப்போய் வாளியுட் கையை வைத்துப் பார்த்தேன்; புத்தகத்தின் வடிவத்தையே காணவில்லை; சில காகிதத் துண்டுகள் காணப்பட்டன. அவற்றை நான் கையாற்றடவி யெடுக்க அவைகளும் கரைந்து கூழ்போல் ஆய்விட்டன.

* * *

இதற்கிடையில் உபாத்தியாயர் என்னைப் பெருஞ் சத்தத்துடன் கூப்பிட்டார். நான் பதுங்கிப் பதுங்கி மெல்லப் போய், திருடச் சென்றவிடத்து மின்னல் வெளிச்சத்தில் அகப்பட்ட கள்வன்போல் அவர்முன்பு நின்றேன்; அவர் என்னைச் சினந்து "எடுத்துவா புத்தகத்தை என்றார். நான் அழுதேன்; ஏன் அழுகிறாய் என்று அவர் உரப்பிக்கேட்க நான் உள்ளதைச் சொன்னேன்; அவர் என்னை அதிகஞ் சினந்து எவ்விதத்திலும் நீ புத்தகங் கொண்டுவர வேண்டும்; இல்லையேல் 10 அடி முதுகில் உறைக்க அடிப்பேன் என்றார். எவ்விதத்திலும் நீ புத்தகங் கொண்டுவர வேண்டுமென்று உபாத்தியாயர் சொன்னதைக் கேட்டு நான் சிறிது பயந்தணிந்து மீண்டும் போய் அந்த வாளியை அதிக சிரமத்தோடு எடுத்துக் கொண்டுவந்து உபாத்தியாயர் முன்னிலையில் வைத்துவிட்டு நின்றேன். உபாத்தியாரின் முகத்திற் கோபம் சிரிப்பு என்னும் இரண்டும் ஏககாலத்திற் காணப்பட்டன. அவர் என் தாயாரைக் கூப்பிட்டு நான் செய்த விஷயங்களைச் சொல்லி வாளியையுங் காட்டினார். தாயார் என்னை வைத்துவிட்டு "உபாத்தியாயர் தகப்பனிடஞ் சொல்லி இன்று பின்னேரம் ஒரு புதுப்புத்தகம் வாங்கிவித்துக் கொடுக்கிறேன்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டார். புத்தகமில்லாததினால் அன்றைக்கு நான் படிக்கவில்லை. தகப்பனார் அன்று பின்னேரம் ஒரு புதிய புத்தகம் வாங்கித் தந்தார்; நான் புத்தகத்தை ஓயாது கையாடுவதனால் அந்தப் புத்தகமும் ஒருவாரத்துள் மிகவும் கேவலமான நிலையையடைந்துவிட்டது; ஒரு மாசத்திற் குறைந்த கணக்கு, 4 புத்தகம் எனக்கு வேண்டும். புத்தகம் ஒரு வாரத்தில் கிழிந்து போகத் தவறினால் நானே அதை இரகசியமாகக் கிழித்துவிடுவேன். முதற் புத்தகம் படித்து முடிப்பதற்கிடையில் ஒரு 50 புத்தகம் கிழித்துவிட்டேன்.

* * *

ஒரு நாள் நான் என் பாடத்தைப் படிக்கவில்லை யென்று உபாத்தியாயர் அந்தப்பாடத்தைப் 10 முறை எழுதி அடுத்தநாட் காலை தாம் வரும்போது காட்டும்படி விதித்துவிட்டுப் போனார். இது என்னாற் செய்ய முடியாத கருமம்போல் அச்சமையத்தில் எனக்குத் தோற்றியது. உபாத்தியாயர் இப்படிச் சொன்னநேரந் தொடக்கம் நித்திரைக்குப் போகும் வரைக்கும் இதையிட்டுத் தான் சிந்தித்தேன். எனக்கு ஒன்றும் புலப்படவில்லை. அடுத்தநாள் விடிய நித்திரைவிட்டெழுந்தவுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிற்றுவலி என்று சொல்லி நடித்துக்கொண்டு படுத்துவிட்டேன். தாயார் நான் சொல்வது மெய்யென்று நம்பித் தகப்பனாருக்குச் சொல்ல அவர் உடனே போய் வைத்தியரை யழைத்துக்கொண்டு வந்தார். வைத்தியர் நான் படுத்திருக்குமிடத்திற்கு வந்து என் கையைப் பிடித்துப் பார்த்தார்; அவர் கையைப் பிடித்துப் பார்த்தபோது உள்ளது வெளிவந்துவிடுமோ என்று எனக்கு உண்டான பயத்திற்கு ஒரு எல்லையில்லை. ஆனால் வைத்தியர் கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு, "தம்பிக்கு வயிற்றிற் கொஞ்சம் மலச்சிக்கலிருக்கிறது; ஒரு முறை கழற்றிவிட்டால் நல்லது என்று சொல்லி இஞ்சிச் சாற்றிற் குடிக்கும்படி ஏதோ மாத்திரைகள் கொடுத்துவிட்டுப் போய்விட்டார்; உடனே என் தாயார் அனுமானம் தேடி மருந்துரைத்துக் கொண்டுவந்து என்னைக் குடிக்கும்படி நெருக்கினார். நான் குடிக்க மறுத்தேன்; தகப்பனார் பலாத்காரமாகப் பருக்கிவிட்டார்; மருந்து வயிற்றில் வேலைசெய்யத் தொடங்கியது; இதற்கிடையில் நமது உபாத்தியாயரும் அங்கே வழக்கம் போற் படிப்பித்தற்கு வந்தார்; இந்த அநியாயப்படுவானாற்றானே நான் இவ்வளவு கஷ்டப்படவேண்டி வந்ததென்று உபாத்தியாயர்மீது மனசுக்குட் புகைந்தேன்; தகப்பனார் தம்பிக்குச் சுகமில்லையென்று சொல்ல அவர் கேட்டுக்கொண்டு அடுத்தநாள் வருவதாகச் சொல்லிப் போய்விட்டார். எனக்கோ பசியதிகமாய்விட்டது; என் தாயாரைப் பசிக்கிறதென்று கேட்டேன்; மகனே, இப்பொழுது ஒன்றுந் தின்னக்கூடாது; மத்தியானத்திற்கு மேலேதான் ஏதுந் தின்னலாம் என்று சொல்லிக் கொஞ்சம் கஞ்சித்தெளிவு மாத்திரம் தர நான் பெருமூச்சோடு வாங்கிக் குடித்தேன்; அந்தக்கஞ்சியுள் எங்காயினும் ஒரு சோற்றவிழ் அகப்படுமென்று ஆராய்ந்து பார்த்தேன்; என்னுடைய பொல்லாத காலத்தினாற் போலும் ஒன்றாயினும் அகப்படவில்லை. இதற்கிடையில் வீட்டிலுள்ள மற்றையோர்கள் மிக்க சுவையோடு காலைப்போசனம் முடிக்கக் கண்டு நான் கொட்டாவி விட்டேன். ஐயோ, இப்படியெல்லாம் வருமென்று நான் முந்தியே அறிந்திருந்தால் நான் ஒருபோதும் வருத்தமென்று நடித்திருக்க மாட்டேன்; பகல் ஒருமணியாய் விட்டது. எல்லாரும் அறுசுவையோடு மத்தியானப் போசனம் அருந்தினார்கள்; எனக்குப் பத்தியம் வைத்துத் தந்தார்கள்; அந்த நேரம் என் வயிறு எரிந்தது; என் மனம் பட்டபாடு கடவுளுக்கும் எனக்குந்தான் தெரியும். இப்படியாகப் பின்னேரம் 4 மணி போல் வைத்தியர் வந்து என் கையைப் பிடித்துப் பார்த்துத் தம்பிக்கு இப்பொழுது நல்ல சுகம் என்னலும் நான் நாளைக்கு நினைத்த பண்டம் தின்னலாமோ என்று அவரைக் கேட்டேன்; அவர் ஓம் என்றார்; கேட்டமாத்திரத்தே சிறிது சந்தோஷப்பட்டேன்; ஐயோ, படிக்கப் பயந்து வருத்தமென்று பொய்சொல்லி நடித்துப் பட்டபாடு போதும்; இனிமேல் என்ன கஷ்டம் வந்தாலும் வருத்தமென்று மாத்திரம் சொல்வதில்லையென என் மனசில் நிச்சயித்துக் கொண்டேன்.

* * *

உலகம் பலவிதம்: 1928 ஆகஸ்ட் 9

கல்வி (முற்றொடர்)

இங்ஙனஞ் சிலகாலம் நான் வீட்டிலிருந்தே கல்விபயின்றபின் என் தகப்பனார் என்னைப் பள்ளிக்கூடத்திற் கொண்டு போய்ச் சேர்க்க உத்தேசங்கொண்டார். ஒருநாள் ஞாயிற்றுக் கிழமை நமது தகப்பனார் என்னைக் கூப்பிட்டுத் "தம்பீ, நாளைக்கு நீ பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டும்; நாளைக்கு நல்ல நாள்" என்றார். கேட்டவுடனே திடுக்கிட்டேன்; இவ்வளவு சீக்கிரத்திற் பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டிவருமென்று நான் எள்ளளவும் காத்திருக்கவில்லை. தகப்பனார் இப்படிச் சொல்ல அதனை என் பக்கத்திற் கேட்டுக் கொண்டு நின்ற தாயாரின் முகத்தை வளர்த்த நாய் பார்ப்பதுபோற் பார்த்தேன்; என் அன்னையும் அதற்கு மாறுசொல்லவில்லை. இந்தப்பொல்லாத கருமத்திற்கு என் தாயும் உடன்பாடுதானென்று எண்ணித் தாயின் மீது சிறிது சினங்கொண்டேன்; நான் சினந்து என்ன செய்யக்கூடும். செல்லாவிடத்திற் சினங் குற்றமல்லவா. அன்று தகப்பனார் சொன்ன வார்த்தையைக் கேட்டநேரந் தொடக்கம் எனக்கு மனசிலே ஏக்கமுண்டாய்விட்டது; பசிபறந்து போய் விட்டது. பெருங்கவலையோடு பொழுது பட்ட பின், ஒன்றும் உண்ணாது படுக்கைக்குப் போனேன்; படுத்தேனேயாயினும் நித்திரை வரவில்லை; என் கால் கைகளெல்லாஞ் சோர்ந்தன. தலையிடிப்பது போலிருந்தது; பின்னர்ச் சரீரம் சற்றுநேரம் குளிர்ந்தது; போர்த்துக்கொண்டு ஒருவாறு நடுச் சாமத்தின் மேல் உறங்கிவிட்டேன். விடிய நான் நித்திரையினின்றும் விழித்தபோது உண்மையான காய்ச்சல் காய்ந்தது. இதற்கிடையில் என்தாயார் பள்ளிக்கூடத்திற்கு என்னை முதன் முதல் அனுப்புவதற்கான ஆயத்தங்களைச்செய்து கொண்டு என்னை எழுந்து வரும்படி கூப்பிட்டார்; நான் "காய்ச்சல்" என்று அநுங்கியநுங்கிச் சொன்னேன்; "அது எனக்கு நேற்றுத்தெரியும்" என்று என் தாய் சொல்லிக்கொண்டு தகப்பனாருக்குத் தெரிவித்தார்; நான் முன்னர்ப்பல முறைகளிற் படிப்பு நெருக்கத்திற்குப் பயந்து காய்ச்சலென்றும் வயிற்றிற் சுகமில்லையென்றும் பொய் சொல்லி வந்தபடியினால் இதனையும் அப்படியே நினைத்து என் தாய் தந்தையர் நான் சொன்னதை நம்பவில்லை. தகப்பனார் வந்து என் உடம்பைப் பரிசித்துப்பார்த்த பின்பே உண்மையென நம்பினார்கள். உடனே நமது பழைய வைத்தியருக்கு ஆள் அனுப்ப, அவர் மருந்துச் செப்புடன் வந்துசேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவர் நம்முடைய கையைப் பிடித்து நாடிபார்த்து இது ஏக்கத்தினாலே வந்த சுரம் இதற்கு மருந்து வேண்டாம்; இந்தப் பட்டோலைப்படி குடிநீர் வைத்துக் கொடுங்கள்; ஒருமுறை அறிந்தவரைக்கொண்டு விபூதி போடுவித்தால் எல்லாஞ் சுகமாய் விடுமென்று சொல்லிப் போய்விட்டார். இஞ்சி அநுபானத்தில் மருந்து தரவில்லையே குடிநீரோடு விட்டுவிட்டாரே யென்பதையிட்டு எனக்குச் சிறிது சந்தோஷமாயிருந்தது. உடனே தகப்பனார் பஞ்சாங்கத்தை யெடுத்துப்பார்த்து இன்று போக இனி நல்ல நாள் எப்போது உண்டென்று பார்ப்போமென்று சொல்லிக்கொண்டு பார்த்த போது அடுத்தநாளுக்கடுத்தநாளாகிய புதன்கிழமை காலையும் சுபமுகூர்த்தமாக விருப்பக்கண்டு தகப்பனார் சரி தம்பி புதன்கிழமை பள்ளிக்கூடத்திற்குப் போக லாமென்றார். ஐயோ இந்தமாசம் முழுவதும் நல்ல நாளில்லாமல் அடுத்தமாசக் கடைசியில் மாத்திரம் ஒரு நல்லநாள் இந்தப் பஞ்சாங்கத்திலிருக்கப்படாதா; இதுவும் நம்முடைய பொல்லாத காலந்தானென்று நினைத்தேன். திங்கட்கிழமை பின்னேரம் எங்கள் புரோகிதர் வந்து விபூதியிட்டுப் பார்த்தபின் காய்ச்சல் நின்றுவிட்டது. செவ்வாய்க்கிழமை பகல் எப்படிப் போனதென்றுந் தெரியவில்லை. செவ்வாய்க்கிழமை யிரவு முழுவதும் பழையபடி பள்ளிக்கு அடுத்த நாட் காலை போகவேண்டுமே என்ற கவலை மனத்தில் உண்டாகிவிட்டது; முந்திய இரவுபோல் அன்றிரவும் காய்ச்சல் வருமோ என்று பார்த்தேன்; காய்ச்சல் சற்றேனுமில்லை. சுகமில்லையென்று சும்மா நடித்தலும் இனிமேல் முடியாது. பொய் நீடித்து நிற்குமா. வயிறார உண்ணாமல், அன்றிரவு படுக்கைக்குப்போனேன்; இரவு முழுதும் கண்ணோடு கண்மூடவில்லை. விடிந்துவிட்டது; உடனே எழுந்தேன். புதன்கிழமையானது. கொலைத்தண்டனை விதிக்கப்பட்டவனுக்கு அக் கொலை நிகழும் தினம் எப்படியிருக்குமோ அப்படியே எனக்குமிருந்தது.

* * *

உலகம் பலவிதம்: 1928 ஆகஸ்ட் 16

கல்வி (முற்றொடர்)

என்னை வீட்டில் வந்து படிப்பிக்கும் அப்புக்குட்டி உபாத்தியாயரோடு தான் முதன் முதற் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதென்று தகப்பனார் சொன்னார். காலை 8 மணியளவில் என் உபாத்தியாயரும் எங்கள் வீட்டிற்கு வந்து விட்டார். என் தாயார் என்னைக் குளிக்கவார்த்து அலங்கரித்து உணவு தந்து பள்ளிக்கூடத்திற்குப் புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்தபின் தகப்பனார் உபாத்தியாயருடன் கூடிக்கொண்டு பள்ளிக்கூடத்திற்குப் போகும்படி சொன்னார்; நான் அழத்தொடங்கினேன். உபாத்தியாயர் பலாத்காரமாக என்னைத்தூக்கிச்செல்ல நான் கதறத் தொடங்கினேன்; அவர் கீழே என்னை விட்டுவிட்டார். நான் அழுதுகொண்டே வீட்டிற்கு மீண்டு ஓடிவர, வீட்டிற்கடுத்த தலைவாசற்புறத்து நின்ற என் தகப்பனார் என்னை வெருட்டாகவோ உண்மையாகச் சினங்கொண்டோ அறியேன், கோபத்தோடு ஒரு பூவரசங்கம்பைபிடுங்கி இலைகளை உருவிவிட்டு எனக்கு அடிக்கவர நான் வழியில் நின்றேன்; போ பள்ளிக்கென்றார்; நான் போகாமல்நின்று கத்த, காலில் ஒரு அடி உறைக்க அடித்து இரண்டாமுறையுங் கம்பை ஓங்க நான் மீண்டு பள்ளிக்கூடமார்க்கமாக ஓடினேன். சட்டம்பியாரும் தகப்பனாரும் என் பின்னே வந்தார்கள். போகும்போது பெருஞ் சத்தமிட்டு நான் அழுதுகொண்டு போனபடியால், தெருவால் வருவார் போவாரும் அருகிலுள்ள வீடுகளில் வசிப்போரும் வந்து நம்மைப் பார்த்துச் சிரித்தார்கள். தன் வீட்டுத் தலைவாசலில் நின்ற ஒரு பெண் என் காதிற் கேட்கும்படி "ஆ! இந்தக் குத்தியனுக்குப் படிக்கிறதற்கு என்ன நோவாக்கும்; எங்கள் பிள்ளைகள் படிக்கவழியில்லாமல் வீட்டிற் கிடந்து தூங்குகிறார்களே," என்று இன்னும் ஏதேதோவெல்லாஞ் சொன்னாள்; அப்படிச் சொன்ன அவள்மேல் எனக்கு உண்டான ஆத்திரத்திற்கு ஒரு அளவில்லை. ஒரு பெரிய கல்லால் அவளுக்கு எறிந்தாலோ என்று நினைத்தேன்; இவ்வளவு ஆரவாரத்தோடு சென்ற நான் பள்ளிக்கூடஞ் சமீபித்தவுடனே தெருவில் நின்றேன். அழுவதையுங் குறைத்துக்கொண்டேன்.

* * *

நான் என் தகப்பனாருடனும் அப்புக்குட்டிச் சட்டம்பியாருடனுங் கூடிக்கொண்டு பள்ளிக் கூடத்துட் பிரவேசித்தேன். பள்ளிக்கூடத்திலிருந் தோரெல்லாரும் எங்களை - விசேஷமாக என்னையே பார்த்தார்கள். எல்லாம் எனக்கு வேற்று முகமாகவே யிருந்தன. நான் படிக்கும்படி சென்ற பள்ளிக்கூடம் ஒரு சைவப் பள்ளிக்கூடமாகவிருக்கும். அங்கே ஆண்பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் படித்தார்கள். பிள்ளைகளின் தொகை 150 வரையிலிருக்கும். நான்கு உபாத்தியாயர்களும் பெண் பிள்ளைகளுக்குத் தையல் பயிற்றும் ஒருபெண் உபாத்தியாயருமாக 5 பேர் அங்கேயிருந்தனர். அவர்களுள் இரண்டுபேர் எங்கள் வீரகத்திச் சட்டம்பியாருடைய நிலைமை யிலுள்ளவர்கள். ஐந்து உபாத்தியாயர்களுள்ளும் வயசிற் குறைந்தவரும் மூக்குக் கண்ணாடி மாட்டியவருமாக ஒருவர் இருந்தார். அவர் எனது தகப்பனாரைக் கண்டமாத்திரத்தே பெரிதும் உபசரித்து அவருக்கும் அப்புக்குட்டிச் சட்டம்பியாருக்கும் ஆசனமுதவிப் பின் என்னைச் சுட்டிக்காட்டி இவர் உங்கள் மகனா என்று தகப்பனாரைக் கேட்கத் தகப்பனார் "ஓம்" என்றார். "தம்பி வீட்டில் என்ன படித்துவருகிறீர்" என்று அந்த உபாத்தியாயர் என்னைக் கேட்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் படிப்பைப்பற்றிச் சொல்லும்படி குறிப்பாக அப்புக்குட்டிச் சட்டம்பியாருடைய முகத்தைப் பார்த்தேன். அப்புக்குட்டி உபாத்தியாயர் "முதற் பாலபாடம் இரண்டு மூன்று முறை படித்து முடித்து விட்டார்; நாலு எழுத்து ஐந்து எழுத்துச் சொற்களைச் சொல்ல எழுதுவார்; கணக்குப்பகுதி மாத்திரம் கொஞ்சம் குறைவு" என்று அந்த உபாத்தியாயருக்குச் சொன்னார். இவ்வளவு விசேஷமாய் அப்புக்குட்டிச் சட்டம்பியார் என்னைப்பற்றிச் சொல்லுவரென்று நான் ஒருபோதும் நினைத்திருக்கவில்லை.

* * *

உலகம் பலவிதம்: *1928 ஆகஸ்ட் 23*

[இடையில் இக்கட்டுரை நல்லூர்க் கந்தசுவாமி கோயில் திருவிழாபற்றியது]

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் கொடி யேறித் திருவிழா நடைபெறுகின்றது. இன்று நான்காந் திருவிழாவாகும். வருஷம் முழுவதிலும் யாழ்ப்பாணத்துள்ளார்க்கு இந்த மகோற்சவ காலமே சிறந்த காலமாகும். யாழ்ப்பாணம் எங்கே பார்த்தாலும் இப்பொழுது குக மயமாகவே காணப்படுகின்றது. கந்தசுவாமி கோயில் மகோற்சவந் தொடங்குநாள் சமீபிக்கவே இங்குள்ள ஆடவர் மகளிர்களெல்லாரும் தங்கள் தங்கள் இல்லங்களைச் சுத்தி செய்து உற்சவகால விரதத்தை யநுட்டித்தற்காகிய ஆயத்தங்களைச் செய்கின்றனர். மாமிச போசனிகளாயுள்ளார் அந்த உணவை யொழித்து விடுகின்றனர். மதுபானிகள் அந்தப் பானத்தைத் தவிர்க்கின்றனர். விரதம், அநுஷ்டிப்போர் தொகை அதிகமாகவும் அநுஷ்டியாதார் தொகை சொற்பமாகவுமிருக்கும். உற்சவ விரதம் அநுஷ்டிக்காதவர்களும் ஆசாரசீலராக இந்த 26 நாட்களும் ஒழுகிக்கொள்ளுகிறார்கள். உத்தியோகத்தினிமித்தமும் வியாபாரம் முதலிய வேறு கருமங்களின் நிமித்தமும் பிறவூர்களில் வாசஞ் செய்யும் நமது யாழ்ப்பாணத்தவர்கள் தாமும் ஆங்காங்கிருந்து கொண்டு நல்லூரானைக் குறித்து இவ்விரதத்தை அநுஷ்டிக்கிறார்கள்.

* * *

இனி நல்லூர்ப்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலின் மகத்துவத்தையுஞ் சிறப்பையுஞ் சொல்லுமிடத்துக் கோயிலும் கோயிற்பிரகாரங்களும் பிரகாரங்களிலுள்ள திருமடங்களும் திருக்குளமும் அதனை நாற்புறமுஞ் சூழ்ந்துள்ள மண்டபங்களும், திருவீதிகளிலுள்ள கடைகளும் எவையும் கதிர்வேற் பெருமானின் திருவருள் விலாசத்துடனேயே காணப்படும். திருக்கோயிலிலும் திருவீதிகளிலும் கோயிலுக்குச் செல்லும் மார்க்கங்களிலும் காணப்படும் அன்பர்களும் வியாபாரிமார்கள் தாமும் திருவருள் விலாசத்துடனேயே காணப்படுவர். சுருங்கச் சொல்லுகில் இச்சமையத்தில் இங்கே காணப்படும் எவனும் எவளும் எதுவும் எவரும் திருவருள் விலாசத்துடன் காணப்படுவர். இனி முருகன் சந்நிதியில் நல்லூரானே, கதிர்வேலா, அரோகர என்ற திருநாமங்களை உச்சரித்துக் கொண்டும், அருணகிரிநாதர் அமிர்தவாக்குக்களாகிய கந்தரலங்காரம் கந்தரநுபூதி திருப்புகழ் முதலாம் தோத்திரங்களோடும் அன்பர்கள் கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகக் குமரனை இரந்துநிற்றல் கண்டோர் உள்ளத்தை நெருப்பிடைப்பட்ட மெழுகென நெக்கு நெக்குருகச் செய்யும். நல்லூர் ஐயன் சந்நிதியிற் சிறியார் பெரியார், ஏழைகள் செல்வர், கற்றார் கல்லாதார், எஜமான் வேலைக்காரர், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பேதமில்லையாம். ஆலயமோ பகற்காலத்தில் எத்துணைச் சனக்கூட்டமிருந்தாலும் அவற் றையெல்லாந் தன்னகத்திற் கொண்டதாய்ப் பரிசுத்தமாகக் காணப்படும் இராக்காலத்திற் சோதிமயமாகவே காணப்படும். கோயிலின் கண்ணே உந்நதமான கோபுரத்து விளங்கும் இரு பாரிய கண்டாமணிகளின் நாதம் பல மைல்கள் தூரத்திலிருக்கும் அன்பர்களின் செவிவாயிலாக உட்சென்று அப்பெருமானாரது திருவருட் பிரவாகத்தை இடையறாது பெய்து மனத்திற் பத்தியென்னும் பயிரை வளர்க்கும்.

* * *

இனி, நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மகோற்சவகாலம் உற்சவ தரிசனத்திற்கும் கடவுள் வழிபாட்டிற்கும் மாத்திரந்தான் ஆகிய காலமென்று நாம் எண்ணிக்கொள்ளக்கூடாது. இங்குள்ள பெண்கள் தாங்கள் விரும்பிய ஆடையாபரணங்களை நாயகனைக்கொண்டு வாங்குவித்தற்கும் ஈடுவைத்த நகைகளை மீளுவித்தற்கும் புதுப்பித்தற்கும் தாம் விரும்பிய பொருள்களைக் கோயில் வீதியிலுள்ள கடைகளில் தாமே சென்று வாங்குவதற்கும் உற்சவ தரிசனத்தையும் விரதத்தையும் காரணமாகக் காட்டிச் சிறிது சுவாதீனம் பெறுதற்கும் இதுவே வாய்த்த காலமாகும். வியாபாரிமாராகவுள்ளவர்கள் ஏதோ லாபத்தையடைதற்கு இதுவேகாலமாகும். வாத்தியகாரர், காவடி வாடகைக்கு வைத்துக் கொடுப்போர், பூத்தொடுப்போர் பரங்களென்று சொல்லப்படும் பண்டாரங்கள் என்னுமிவர்களும் லாபமடையுங் காலமும் இதுவே. உத்தியோகார்த்தமாகவும் வேறு கருமார்த்தமாகவும் தங்களைப் பிரிந்து பிறவூர்களில் வசிக்கும் நாயகன் வரவை மனையாளும் தந்தை தாயர் வரவைப் பிள்ளைகளும் பிள்ளைகள் வரவை அன்னை தந்தையரும் சகோதரர்வரவைச் சகோதரிகளும் சுற்றமித்திரர் வரவை இங்குள்ள சுற்றமித்திரரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியோடு எதிர்பார்த்திருக்குங் காலமும் இந்த மகோற்சவகாலமேயாகும். இக்காலத்தில் இங்குள்ளார் எல்லாரும் மனமகிழ்ச்சியடைய மற்சமாமிசம் விற்போரும் சோரமாக மதுபானம் விற்போரும் மாத்திரம் தங்கள் பிழைப்புக் குறைந்துவிட்டதேயென்று துயரமுறுவர்.

* * *

ஆனால் இந்த மகோற்சவம் முடிந்த பின்னர் இவர்கள் நடந்துகொள்ளும் விதத்தையிட்டே நாம் யோசிக்கவேண்டியது. மற்சமாமிசம் புசியாத, மதுபானமில்லாத அன்பர்கள் எக்காலத்திலும் ஒரே தன்மையாக ஆசாரசீலராய்க் காணப்படுகின்றனர். மற்சமாமிச போசனிகளும் மதுபானிகளும் இந்த 26 நாளும் தாங்கள் அநுஷ்டித்த விரதங்களையும் வழிபாடுகளையும், ஒழுக்கத்தையும் மறந்து, கழுவிச் கழுவிச் சேற்றில் மிதிப்பார்போற் பின்னரும் இவ்வனாசாரங்களைக் கைக்கொள்ளத் தலைப்படு கின்றனர். மகோற்சவ விரதகாலம் முடிந்து இவர்கள் முழுகும் எண்ணெய் முழுக்கு மிகப்பயங்கரமானது. புறக்கோடிகளிற் கவிழ்த்து வைக்கப்பட்ட புலாற் சட்டிகளெல்லாம் பழையபடி சமயலறையிற் புகுகின்றன. மதுபானம் இவர்களைப் பரவசமாக்கி விடுகின்றது. இவர்கள் அருளையும் அறத்தையும் விடுத்து மருளையும் மறத்தையும் அடுத்து நிற்கின்றனர். மகோற்சவ காலத்தில் இவர்கள் அநுஷ்டித்த விரதமும் ஒழுக்கமும் சிலநாட் செல்ல இவர்களை விட்டுப் பொய்யாய்ப் பழங் கதையாய்க் கனவாய் மெல்லப் போய்விடுகின்றன. "நீற்றைப் புனைந்தென்ன நீராடப்போயென்ன நீ மனமே, மாற்றிப்பிறக்க வகையறிந்தாயில்லை" யென்றும் "சினமடங்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும், மனமடங்கக் கல்லார்க்கு வாய் ஏன் பராபரமே" யென்றும் பெரியோர் சொன்ன பிரகாரம் தாங்கள் பழகிக் கொண்ட அநாசாரங்களையும் தீய செயல்களையும் கைவிட்டு உய்ய முடியாதவர்களுக்கு விரதமென்ன அநுட்டானமென்ன என்று நமது முருகேசு பரிகசித்து "ஐயோ, இவர்களெல்லாரும் மகோற்சவகாலத்தில் ஒழுகி வந்த பிரகாரம் வருஷம் 365 நாளும் ஒழுகிவந்தாலோ" என்று முருகேசுவே வாயூறுகின்றார்.

* * *

உலகம் பலவிதம்: 1928 ஆகஸ்ட் 30

கல்வி (முற்றொடர்)

முதன்முதற் பள்ளிக்கூடத்திற்குச் சென்ற அன்று சிறிது நேரம் அங்கேயிருந்து நாளுக்குப் படித்தபின்னர், தகப்பனாரும் அப்புக்குட்டிச் சட்டம்பியாரும் என்னையுங் கூட்டிக்கொண்டு வீட்டிற்கு மீண்டுவிட்டார்கள். அடுத்தநாள் தொடக்கம் அப்புக்குட்டிச் சட்டம்பியாரே கிரமமாக வந்து அதிகாலையில் என்னை வீட்டிற் படிப்பித்தபின் பள்ளிக்கூடத்திற்குக் கூட்டிக்கொண்டுபோய் விடுவார். பின்னேரம் பள்ளிக்கூடம் விடும்போது எங்கள் வீட்டு வேலைக்காரன் பள்ளிக்கூடத்தில் வந்துநின்று என்னை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போவான். ஆரம்பத்திற் பள்ளிக்கூடத்திற்குப் போவது எனக்குச் சிறிது வெறுப்பாகவிருந்தது; ஆனால் நாட்செல்ல நாட்செல்ல நான் மிக்க விருப்பத்தோடு பள்ளிக்கூடத்திற்குப் போய்வரத் தொடங்கினேன். அங்குள்ள உபாத்தியாயர்க ளெல்லாரும் என்மீது அன்பு பாராட்டினார்கள்; பிள்ளைகளும் என்னுடன் மிக அன்பாக நடந்தார் கள். முதலாம், இரண்டாந் தரங்களில் படித்து அந்தந்த வருட முடிவில் அவ்வவ்வகுப்புப் பரீட்சைகளிற் சித்தியடைந்தேன். மூன்றாம் வகுப்பானதும் நான் வீட்டில் ஆங்கிலம் படித்தற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன. அப்புக்குட்டி உபாத்தியாயருக்கு ஆங்கிலந் தெரியாதாகையால் சின்னத்துரை யென்னும் ஒரு வாலிபரைப் பின்னேரந்தோறும் வீட்டிற்கு வந்து ஆங்கிலஞ் சொல்லித்தரும்படி எனது தகப்பனார் நியமித்தார். அப்புக்குட்டி உபாத்தியாயருக்குக் கணக்குப்பகுதி அதிகம் போகாதாகையால், சின்னத் துரையென்பவரே பின்னேரத்திற் கணக்கும் எனக்குப் படிப்பித்துவந்தார். சின்னத்துரை யென்பவர் கொஞ்சங் கடுமையானவர்; ஏதும் அவர் கேட்க நான் மறுமொழி சொல்லாது நின்றால் இல்லையேற் பிழையாக மறுமொழி சொன்னால் அவர் உடனே என்னை உறுக்கிக் குட்டி யடித்துவிடுவார். சில சமையங்களில் அவர் பாராமுகமாயிருந்துவிட்டு நான் சரியாக மறு மொழி சொன்னாலும் அவர் என்னை அடிப்பார். இதனலே என் ஞாபகத்திலுள்ள விஷயங்களையும் அவரைக் கண்டமாத்திரத்தே மறந்து விடுவேன்; நான் விளங்கிய விஷயமும் அவர் முன்பு சொல்லப்போகும் போது எனக்கு மயக்கமாவேயிருக்கும். சின்னத்துரை யென்பவரைக் காணும்போது எனக்கு யமனைக் காண்பதுபோலவிருக்கும். ஒவ்வொரு நாளும் மத்தியானத்திற்கு மேற் சின்னத்துரையின் எண்ணந்தான் என் மனத்தில் நிகழும். இராக்காலத்தில் இடை யிடையே நித்திரையில் அவர் எனக்கு அடிப்பது போலக் கனவுகண்டு சத்தமிட்டு கத்தியுமிருப்பேன்; போசனஞ் செய்துகொண்டிருக்கும்போது அவரை நினைத்தால் அவ்வளவிற் பசி நின்றுவிடும். அவருடைய அநியாயத்தை என் பெற்றாருக்குச் சொன்னால் அவர்கள் என் சொல்லை ஏற்றுக்கொள்ளார்களென்பது எனக்குத் தெரியுமாதலால் அவர்களுக்கும் நான் சொல்லத் துணியவில்லை.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் வீட்டிற்கு அயலில் வசிக்கும் வீரசிங்கமென்னும் பையனும் என்னுடன் மூன்றாம் வகுப்பிற் படிப்பவன். ஒருநாள் பள்ளிக்கூடம் விட்டு மீண்டுவரும்போது இந்தச் சின்னத்துரை மாஸ்ரருடைய கொடுமையை நான் அவனுக்குச் சொல்லி இதற்கு என்ன செய்யலாமென்று கேட்டேன். வீரசிங்கமும் என்னோடொத்த வயசுடையவன்; அவன் சிறிது யோசித்துவிட்டுப் பின் என்னைப் பார்த்து உனக்கு ஒரு புத்தி சொல்லித் தருகிறேன், அதின்படி செய்; எங்கள் வீட்டிற்குப் பக்கத்திலுள்ள புளியடி வைரவர் மிகவும் புதுமையானவர்; நீ அவருக்கு வெள்ளி செவ்வாயிற் கர்ப்பூரம் வாங்கிக் கொளுத்தி, சின்னத்துரை மாஸ்ரருக்கு வருத்தம்வர வேண்டுமென்று கும்பிடு; அவருக்கு வருத்தம் வந்தால் உன்னைப் படிப்பித்தற்கு அவர் வர முடியாது" என்றான். நானும் அது நல்ல புத்திதான் என்று அவனை மெச்சினேன்; வீட்டிற்குப் போனபின் தாயாரிடம் ஒரு சதம் தரும்படி கேட்டேன்; தாயார் உனக்கேன் காசு என்று கேட்க, எனக்குப் படிப்பு வரவேண்டுமென்று வைரவருக்குக் கர்ப்பூரம் வாங்கிக் கொளுத்தவேணுமென்றேன்; தாயார் சிரித்துக்கொண்டு உடனே ஒரு சதந் தர நான் வாங்கி வைத்துக்கொண்டேன்; அடுத்தநாள் பள்ளிக்கூடத்திற்குப்போய் மீண்டுவரும் போது வழியிலுள்ள கடையில் கர்ப்பூரம் வாங்கிக் கொண்டுபோய் நானும் வீரசிங்கமுமாக வைரவருக்குக் கொளுத்தினோம்; வைரவசுவாமி சின்னத்துரை மாஸ்ரர் வருத்தம்வந்து சாகவேணுமென்று சொல்லி நான் கும்பிட்டேன்; அதனைக் கேட்ட வீரசிங்கம் அடே, அடே, சாகவேணுமென்று சொல்லாதே, வருத்தம் வரவேண்டுமென்று மாத்திரஞ் சொல்லு என்றான். சாகாவிட்டால் வருத்தம் மாறினவுடன் சின்னத்துரை மீண்டும் படிப்பிக்க வருவார்தானே, ஆனபடியாற் சாகத் தான்வேணும் என்று நான் சொன்னேன்; அதுவும் ஒரு நியாயந்தான் என்று வீரசிங்கஞ் சொல்லி என் பேச்சை ஒத்துக்கொண்டான்.

* * *

எங்கள் நேர்த்திக்கடனாலும் வழிபாட்டினாலும் சின்னத்துரை மாஸ்ரருக்கு வருத்தமாயினும் மரணமாயினும் வரவில்லை; அவர் முன்னிருந்ததைக் காட்டிலும் சுகதேகியாகக் காணப்பட்டார்; ஆனால் வைரவரை நாம் முற்றாகக் குற்றஞ் சொல்ல முடியாது; சின்னத்துரை மாஸ் ரருடைய நெருக்கத்தினாற்றான் நான் வயிறார உண்பதில்லையென்பதையும் எப்பொழுதும் கவலையோடு திரிகின்றேனென்பதையும் படிப்புக்குப் பயப்படுகின்றேனென்பதையும் நமது தாயார் விளங்கிக்கொண்டு அதனைத் தகப்பனாருக்குச் சொல்ல, தகப்பனார் அந்த மாசமுடிவில் சின்னத் துரையென்பவரைப் படிப்பிக்க வேண்டாமென்று ஏதுமொரு நியாயஞ்சொல்லி விடவேண்டுமென்று நிச்சயித்தார். அப்படியே அந்த மாசமுடிவில் அவரை விட்டுவிட்டார். அவர் இனிமேற் படிப்பிக்க வரமாட்டார் என்று நான் கேள்விப்பட்டவுடனே எனக்கு உண்டான சந்தோஷத்திற்கு ஒரு எல்லையில்லை. நான் மிக்க முயற்சியோடு படிக்கத் தொடங்கினேன். இந்த விஷயத்தில் என் அனுபவத்தைக் கொண்டு நான் சொல்லத்தக்கது ஒன்றுண்டு எத்தனையோ குழந்தைகளை விவேகிகளாக்குவதும் மந்தராக்குவதும் பெரும்பான்மையும் அவர்களுடைய உபாத்தியாயர்களேயாவர். அப்புக்குட்டிச் சட்டம்பியாரிடத்தும் பள்ளிக் கூடத்தும் சில காலஞ் செல்ல மிக்க ஊக்கத்தோடு படித்த நான் சின்னத்துரை யென்பவர் முன்னிலையில் பெரும் மந்தனாகக் காணப் பட்டேன். உபாத்தியாயர்களாயுள்ளார் குழந்தை களிடத்து அன்புகாட்டி விளையாட்டாகப் படிப் பித்து வருவரேல் படித்துவிடுவார்கள். இதனை விடுத்து, பிள்ளைகளை அச்சுறுத்திப் படிப்பிக் கப்புகின் அக் குழந்தைகள் மனசில் அச்சமும் ஏக்கமும் படிப்பின்மீது வெறுப்பும் ஏற்படுமேயன்றி ஒருபோதும் படிப்பில் மனஞ் செல்லாது. எனக்குக் கணக்குப் போகாது, போகாது என்று சின்னத்துரை மாஸ்ரர் சொன்னமையினால் நானும் அது ஏதோ எனக்குக் கிட்டாத பொருளாகுமென்று நினைத்துக் கணக்கில் ஒன்றும் அறியாதவனானேன். ஆனதால், உபாத்தியாயர்கள் ஒருபோதும் பிள்ளைகளைப் பார்த்து இவனுக்குக் கணக்கு வராது பூமிசாஸ்திரம் போகாது, எழுத்துத் திருந்தமாட்டானென்று பிள்ளைகளுக்குமுன் சொல்லி அவர்களைத் தைரியவீனப்படுத்த வொண்ணாது.

* * *

உலகம் பலவிதம்: *1928* செப்டெம்பர் *6*

[இடையில் இக்கட்டுரை நல்லூர்க் கந்தசுவாமி கோயில் திருவிழாபற்றியது]

ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற் றெட்டு யுகங்களாக ஆண்டு அமரருக்கு இடர் செய்த சூரபன்மனைத் தொலைத்த சுப்பிரமணியர், சிங்கமுகாசுரனுடைய ஆயிரஞ் சிரங்களையும் கொய்த குலிசப்படையைக் கைக்கொண்ட குகனே, வஞ்சக் கிரவுஞ்சகிரி பொடிபடச்செய்த வடிவேலா, அவுணர்குலகாலா, அடியார்களை அஞ்ச வேண்டாமென அபயங் கொடுக்குங் கையையுடைய நல்லூர் ஐயா, பிரணவப் பொருளறியாப் பிரமனைக் குட்டிச் சிறையிட்ட பெருமானே, இதுவும் திருவிளை யாட்டா? உன் உற்சவம் நிகழும் இந்நாட்களில் உன்னைத் தரிசிக்கும்படி வரும் அடியார்கள், உன்திருவீதியில் அங்கப்பிரதட்சணஞ் செய்யுந் தொண்டர்கள், பெண்பாலார், சிறு குழந்தைகள், முதியோர், குருடர், செவிடர் ஆகியோர் அபாயமின்றியும், இடைஞ் சலின்றியும் வசதியாகத் தரிசனஞ் செய்யும்படி, சமாதானத்தையும் சனங்களின் ஷேமத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பும் அரசினர் குறித்த திருவீதியிலும் மிகவும் அணித்தாகவுள்ள சில தெருவீதிகளிலும் வண்டிகள் போக்குவரவு செய்யவொண்ணாதெனப் பிரமாணம் செய்துவிட்டார்களாமே: இந்தப் பிரமாணம் உன் திருவிழாக்காலத்தில் இல்லையாயின் இக்காலத் தில் வரைவின்றிமலிவாக பன்றிகள் ஓடுவது போல் ஓடித்திரியும் மோட்டரதத்தினாற் பல அபாயங்களும் உயிர் மோசமும் விளைதல் கூடுமென்றல்லவா எண்ணியிருந்தோம். அப்படியில்லையாமே: "இது ஒரு அநியாயமான காரியமாமே. இந்த வாக்கும் நால் வேதம் பிறக்கும் வாயாற் பிறந்திருக்கின்றதே: "இப்படித் தடுப்பதற்குக் காரணம் கந்தசுவாமி கோயிலுக்கு அருகிலுள்ள தெருவால் சைவர்கள் தங்கள் சரீரத்தால் உருண்டு உருண்டு பிரதட்சணஞ் செய்கின்றார்கள் என்று சொல்லிவிடுகின்றார்களாமே. உள் வீதியில் உருளக் கூடாதென்று கோயிலதிகாரி சொல்லி விட்டபடியாற்றான் சைவர்கள் தெரு வழியே உருளுகிறார்களாமே. கோயிலதிகாரி உள்வீதியில் உருளவேண்டாமென்று எப்பொழுது சொன்னா ரென்பதும் தெரியவில்லையே: இன்றைக்கும் உள்வீதியிலும் புறவீதியிலும் இடையீடின்றி உருளுகின்றார்களே: எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணனுக்கு, தெருவில் உருளும் ஒரு அடியவனை, கும்பிடவந்த குழந்தையை ஒருமோட்டரதம் நெரித்துக் காயப்படுத்திவிட்டால் இன்றேல் கொன்றுவிட்டாலல்லவா மனமாறியிருக்கும்.

* * *

என்னையாளுடைய முருகனே, செந்தில் முதல்வனே, மாயோன் மருகனே, உன் உற்சவ காலத்திலே பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் சந்நிதியையடைந்து உனது கருணைகூர் முகங்களாறிலும் கண்கள் பன்னிரண்டிலுமிருந்து ஊற்றெடுத்துப் பிரவாகிக்குந் திருவருள் வெள்ளப் பிரவாகத்திற் படிந்து திளைத்துப் பேரானந்தமடைய, எத்தனையோ ஏழைகள் அன்னதானம் முதலியன பெற்றுய்ய, எத்தனையோ வியாபாரிமார் இலாபமுற, எத்தனையோ பிராமணர் பல்லாற்றாலும் ஊதியமுற, அருட்செல்வம், பொருட்செல்வங்கள் பெருக, அவற்றையெல்லாம் நெஞ்சிற் கரந்து, பிராமணசென்மமொன்று உன் உற்சவகாலத்தில் ஆயிரக்கணக்கான சனங்கள் பட்டினிகிடக்கின்றார்களென்று, முருகா உன்மீது அபவாதஞ் சுமத்துகின்றதே; சந்தனமரம் நாக பாம்பைத் தன் சூழலில் வைத்திருத்தல்போல், என் அப்பனே, இந்தத் துன்மதிகளை நீ யேன் அயலில் வைத்துக்கொண்டிருக்கின்றாய். கிருபா மூர்த்தியே, மௌட்டிகமூர்த்தியின் கூற்றால் நின்னடியார் மனம் புண்ணாகின்றதே. சூரபன்மன் உன்னை நேரில் வையவும் பாலனென்று அவமதிக்கவும் திருப்புன் முறுவல் பூத்து அச்சூரனுக்குக் கடைக்கண்ணோக்கஞ் செய்து "கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் றன்னைப், பாலனென் றிருந்தேன் அந்நாட் பரிசிவையுணர்ந்திலேனால்" என்று அவனைச் சொல்லும் வண்ணஞ் செய்து ஈற்றில் அவ்வசுராதிபனைச் சேவலும் மயிலுமாக அடிமைக்கொண்டருளிய உனக்கு இப்பின்மதி கொண்ட பேதை கூற்றும் உவப்பாகவன்றோ இருக்கும். குன்றம் பிளந்த குமரேசா, உனக்கு ரோசமில்லை, விருப்பு வெறுப்பில்லை, நீ உலுத்தன், பூனை குட்டிகளைத் தான் கௌவித் தூக்கிக்கொண்டு வேறு வீட்டிற் சேர்ப்பதுபோல், உன்னை வைவாரையும் நீ வலிதில் ஆட்கொள்ளுங் குணமுடையாய்; ஆனால் உன்னைக் குறைகூறும்போது உன்னடியார் மனம் பொறாதவராய், குறைகூறினார்மீது ஆத்திரப்படுகின்றார்களென்பதை நீ திருவுளத்திற் கொள்ள வேண்டாமா? இக் கையனையெரித்த இறைவன் நுதல் விழித் தோன்றிய முருகைய நீ இக்கையனைப் பராமுகம்பண்ணலாமா?

* * *

பொதுச்சனங்களுக்குரிய தெருவீதி ஒரு சமய உற்சவத்தின் பொருட்டுச் சில நாட்களுக்குத் தடுக்கலாமா; பொலிசர் முற்றிக்கை இடலாமாவென்றும், பட்டின சங்கத்தார் எல்லாருஞ் சைவர்களானதால் இப்படியான பிரமாணத்தை விதித்து விட்டார் என்று பிராமணோத்தமர் பிதற்றுகின்றார். இந்தப் பிரமாணத்தை நிறைவேற்றுவதற்குப் பட்டினசங்கத்தார் மாத்திரமன்றி வடமாகாணத் தலைவருடைய சம்மதமும் வேண்டுமென்பதை அந்தணோத்தமர் அறிந்திலர் போலும். ஒரு சமயத்திற்குச் சார்பாக நின்று இன்னொரு சமயத்திற்கு மாறு செய்வதற்கு அரசினர் உடன்பட்டார்களேயன்றி எச்சமயத்தவரும் தஞ்சமய வழிபாடுகளைச் சமாதானமாகச் செய்தற்கும் சமாதானத்தைக்காத்தற்கும் அரசினரும் பட்டின சங்கத்தவரும் துணை புரிவர். மேலும் துவஜாரோகணம், 10ந் திருவிழா, கார்த்திகைத் திருவிழா, சப்பரத் திருவிழா, தேர், தீர்த்தம் என்னும் இத்திருவிழாக் காலங்களிற்றான் அரசடியிற் சந்திக்கப்பால் வண்டிகள் செல்லக்கூடாவெனப் பொலிசர் தடை செய்கின் றார்களன்றி ஏனைய காலங்களில் பழஞ்சந்தைத் தெருவீதி வரையில் வண்டிகள் செல்லலாமென்பது இச்சுகுமாரனுக்குத் தெரியாது போலும், கள்வருக்காகவே ஆரம்பத்திற் பொலிசர் நல்லூர் உற்சவகாலத்தில் அழைக்கப்பட்டனரென ஒரு அவிவேக பூரண.... மூர்த்தி உபதேசிக்கின்றதென வைத்துக் கொள்வோம். அக்காலத்தில் அக்காரணத்தோடு அவரை அழைத்தமை மெய்யேயாகும். ஆனால் நல்லூர்க் கோயிலிலும் அயலிலும் திருவிழாக்காலங்களிற் சஞ் சரித்த கள்ளர்களெல்லாம் பலவாறு ஒதுக்கப்பட்டும் துரத்தப்பட்டும் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டும் போய்விட்டபடியாலும் இப்பொழுதுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிசாருக்குங் கள்வரைப் பிடித்தற்கு அதிகார முண்டென்பது உண்மையாதலாலும் பொலிசர் ஆங்குச் சமூகமாகிச் சமாதானத்தைக் காத்து வருலாதல் வரும் இழுக்கு யாதுமில்லையாம். நல்லூர்க்கந்தா, இந்த மௌட்டிக மூர்த்திகட்கு அருள்புரிந்து இவைகளை மேலேற்றுதல் நின்கடன்.

* * *

உலகம் பலவிதம்: *1928 செப்டெம்பர் 20*

கல்வி (முற்றொடர்)

தமிழ்ப்பள்ளிக்கூடத்திலே படிக்குங் காலத்தில் நான் செய்த அற்புதங்கள் அதிகமில்லையெனலாம்; மூன்றாம் வகுப்பிலும் ஐந்தாம் வகுப்பிலும் ஒவ்வொரு வருடத்திற் சித்தியடைவதற்குப் பதிலாகத் தனித்தனி இவ்விரண்டு வருடம் படித்தே சித்தியடைந்தேன். நான் இயல்பில் அதிகம் விவேகியுமல்ல, அதிகம் மந்தனுமல்ல, நடுத்தரமான விவேகமுடையேன்; சரீரத்திற்குச் சிரமந்தரக்கூடியவும் பின்னர்த் தேகாரோக்கியத்தைத் தரத்தக்கனவுமான ஓடியாடி விளையாடும் விளையாட்டுக்களை வெறுத்துச் சும்மாவிருப்பதிலும் யாதும் வேடிக்கைகள் நடக்கும்போது போய் அவற்றைப் பார்ப்பதிலுமே பிரியமுள்ளவனாக விருந்தேன்; வகுப்பிலே முதலாம் இரண்டாம் மூன்றாம் பையனாக வரவேண்டுமென்பது என் பெற்றார் உபாத்தியாயர்களுடைய விருப்பமாக விருந்தாலும் நான் அவர்கள் எண்ணத்திற்கு நேர் விரோதமாக, வகுப்பின் மற்றப்பக்கத்தில் முதலாம் இரண்டாம் மூன்றாம் பையனாக நின்று இழுபட்டேன். கணக்கு விஷயத்தில் எப்பொழுதும் எனது சகபாடிகள் என்கணக்கையுஞ் செய்து தந்தார்களேயல்லா மல் நானாக என் கணக்கைச் சரிவரச் செய்த நாட்கிடையாதெனலாம்; சில சமையங்களில் என் அயலிலுள்ள பையன் செய்யுங் கணக்கைப் பார்த்து நான் எழுதிவிடுவதுமுண்டு இச்செய்கைக்கு என் வகுப்புப் பிள்ளைகள் சிலரன்றி எல்லாரும் உடன்பட்டார்கள். இதற்காகச் சில பிள்ளைகளுக்கு நான் ஏதும் தின்பண்டங்கள் இரகசியமாகக் கொண்டுவந்து கொடுத்து அணைத்து வைத்துக்கொண்டேன். நான் படிக்கின்ற காலத்தில், கணக்குச் செய்யும்போது உபாத்தியாயர் எங்களை ஒருவரோடொருவர்எதிர்முகமாகநிற்கச்செய்துவிடுவார்; நாங்கள் கணக்குச் செய்வதும் இக்காலத்திற்போல் காகிதத்திலல்ல, கற்பலகையிலேயாம்; இதனால் எனக்கு அணைவான பையன் கற்பலகையின் ஒருபுறத்தே கணக்கைச் செய்துவிட்டு அந்தப் பக்கத்தை எனக்கு எதிரிற் பிடித்துக்கொண்டு கற்பலகையின் மற்றப்புறத்து மற்றக்கணக்குகளைச் செய்ய நான் இப்புறத்துள்ள கணக்குகளைப் பார்த்து எழுதிவிடுவேன்; கணக்கை நான் பார்த்துப் பார்த்து எழுதும்போது என் நிலைமை எப்படியிருந்ததெனில் பரதாரத்தை இச்சித்துப் பிறரறியாதபடி பார்க்கும் தூர்த்தனுடைய நிலைமைபோலிருந்தது. இனி, என்னுடைய கையெழுத்தின் அழகைப்பற்றிச் சொல்லுகில், யாருக்கும் ஒரு கடிதத்தை நான் எழுதுவதானால், அப்படியெழுதப்பட்ட கடிதத்தை நானே அவரிடங்கொண்டுபோய் அவருக்குப் படித்துக்காட்டவேண்டிய கேவல நிலைமையிலிருந்தது. இதனைக் கண்ட என் உபாத்தியாயர்களுள் ஒருவர், என்னைப்பார்த்து "ஏ மூடப்பிள்ளாய், உன் கையெழுத்தும் தலையெழுத்தும் ஒரேவகையாகத்தான் இருக்கின்றன" என்று என்னைப் பரிகசித்து வந்தார்.

* * *

முதல் வருடத்தில் ஐந்தாம் வகுப்புப் பரீட்சையில் நான் சித்தியடையத் தவறிவிட்டேனென்பதையிட்டு என் பெற்றாரும் சுற்றத்தாரும் உபாத்தியாயர்களும் உடன் பயிலும் மாணாக்கரும், அறிந்தவர்களும் என் பாட்டியார் தானும் என்னைப் பரிகாசஞ் செய்யத் தலைப்பட்டனர். கண்டவர் நின்றவர் எல்லாரும் இந்த விஷயமாக என்னைப் பரிகாசஞ் செய்யத் தலைப்பட்டமை யினால் எனக்கு முன்னொருபோதுமில்லாத வெட்கமும் ரோசமும் உண்டாயின. என்னில் எனக்கே ஆத்திரம் பிறந்தது. அடுத்தமுறை விடாமுயற்சியோடு படித்து ஐந்தாம் வகுப்பில் அதிக திறமையோடு சித்தியடைய வேண்டுமென்ற நோக்கம் என் மனத்தில் எழுந்தது. அந்த ஒரு வருடகாலத்தும் உண்மையான ஊக்கத்துடனும் ஆர்வத்துடனும் படித்துவந்தேன்; அதனால் நான் பரீட்சையில் அதிக திறமையோடு சித்தியெய்தினேன். ஐந்தாம் வகுப்பு முடிந்தபின் என்னை ஆங்கில வித்தியாசாலைக்கு அனுப்புதல் வேண்டுமென்று என் தகப்பனார் நிச்சயித்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தமிழ்ப் பள்ளிக்கூடத்திற் படித்த காலத்தில் பெற்ற அநுபவத்தைச் சொல்லுதல் நல்லதாம். தமிழ் வித்தியாசாலையிற் படிக்குங்காலத்தில் நான் கல்வி விஷயத்திற் சிறிது அலட்சியமாகவும் விளையாட்டுப் பிரியமுடையவனாகவுமிருந்தே னென்பது மெய். ஆனால் எவ்வகையான கெட்ட கூட்டங்கள், கெட்ட செயல்கள், துர்ப்பழக்கங்கள் என்னுமிவைகளிற் சம்பந்தப்படாதவனாயிருந்தேன். கடவுட்பத்தி, பெற்றாரையும் பெரியோரையும் கனம்பண்ணுதல் உபாத்தியாயர்களுக்குக் கீழ்ப்படிந் தொழுகுதல் முதலாங் குணங்களும் ஒழுக்கங்களும் உடையவனாயிருந்தேன். அக் காலத்தில் விபரீதமான பழக்கங்கள் ஒன்றும் என்னிடத்திற் பிரவேசிக்கவில்லை யெனலாம். இப்பொழுதும் நான் முந்திய அந்த நிலையில் இருந்தாலோவென்று விரும்புகின்றேன்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாந்தரப் பரீட்சையிற் சித்தியடைந்த அடுத்த மாசத்தில் என் தகப்பனார் சமீபத்திற் சைவ ஆங்கிலவித்தியாசாலை அக்காலத்தில் இல்லாமையினால், அயலிலுள்ள ஒரு மிஷன் பள்ளிக்கூடத்தில் என்னைக் கொண்டுபோய் ஆங்கில இரண்டாம்வகுப்பிற் சேர்த்துவிட்டார். வீட்டிலும் எனக்குப் பாடஞ் சொல்லி வைக்கும் படி ஆங்கிலம் அறிந்த ஒரு உபாத்தியாயரைத் தகப்பனார் நியமித்தார். இயன்றவரையில் என் பாடங்களை நான் கிரமமாகப் படித்து வந்தேன். அந்த வித்தியாசாலையில் தமிழும் படிப்பிக்கப் பட்டது. நான் அங்குள்ள தமிழ் ஆறாம்வகுப்பிற் சேர்ந்து படித்தேன். அவ்வித்தியாசாலையில் உபயோகிக்கப்பட்ட தமிழ்ப்புத்தகங்கள் கிறீஸ்த சங்கத்தாரால் வெளியிடப்பட்டவை. அவை செந் தமிழ்நடையின்றியும் வழுக்களோடு கூடியனவுமாகக் காணப்பட்டன. ஆங்கிலம் படிப்பிக்கும் ஆசிரியர்களுட் சிலரே எங்களுக்குத் தமிழும் படிப்பித்தார்கள். அங்குள்ள உபாத்தியாயர் சிலர் கிறீஸ்தவராகவும் சிலர் சைவராகவுமிருந்தனர். ஆறாம் வகுப்பிற்குத் தமிழ்ப் பயிற்றிய உபாத்தியாயர் சைவசமயத்தவர்; ஆனாற் பள்ளிக் கூடத்தில் இருக்கும் நேரங்களில் அவருடைய நெற்றியில் விபூதியைக் காண்டலரிதெனலாம். அவர் எங்களுக்கு வாசகபாடம் பயிற்றும்போது அந்த வாசகப்புத்தகத்தில் வரும் சைவசமய கண்டனத்தையும் கிறீஸ்துமதப் புகழ்ச்சியையும் பார்த்துப் பெருமூச்சு விட்டு விட்டுப் படிப்பிப்பார். அவரும் மற்றச் சைவ உபாத்தியாயர்களும் அந்தப் பள்ளிக்கூடத்தில் உதர நிமித்தம் உள்ளொன்று புறம்பொன்றாகவே ஒழுகிவந்தார் கள் என்பது எனக்கு அக்காலத்திலே தெரியா விட்டாலும் இப்போது புலப்படுகின்றது. அங்குப் படித்த பிள்ளைகளுள் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது விகிதமானோர் சைவப்பிள்ளைகள்; அங்ஙனமாகவும் அந்தச் சைவப்பிள்ளைகளும் சைவ உபாத்தியாயர்களும் பள்ளிக்கூடம் தொட ங்கும் போதும் விடப்படும்போதும் "பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய ராச்சியம் வருவதாக" என்று பயபத்தியோடு எழுந்து நின்று செபஞ்செய்வார்கள்; அவர்கள் செய்வதைப் பின்பற்றி நானும் அப்படியே செய்துவரலாயினேன். தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் முதற் சைவ வினாவிடை படித்த எனக்கு வேதவினாவிடை யென்னும் பெயருடைய ஒரு சிறு புத்தகத்தை விலையின்றிச் சும்மா எனக்கு முதல் உபாத்தியாயர் தந்து அதனைக் கிரமமாகப் படிக்கச் சொன்னார். மத்தேயு, லியூக்கா என்னும் சிறு புத்தகங்களையும் எனக்கு உபாத்தியாயர் தந்தார். இந்தப் பாடங்களே பள்ளிக்கூடம் தொடங்கியவுடன் ஒவ்வொருநாளும் எங்களுக்குப் படிப்பிக்கப்படுவன. இடையிடையே ஒரு பாதிரியார் அங்கே வந்து பிரசங்கஞ் செய்வதுண்டு; அவர் பிரசங்க மேடையில் நின்று ஆங்கிலத்திற் சொல்ல, எங்கள் முதல் உபாத்தியாயர் அவர் சொல்வதை உடனுக்குடன் தமிழில் மொழிபெயர்த்துச் சொல்லுவார்; சைவர்கள் பல தெய்வங்களை வணங்குபவர்கள், கல்லையுஞ் செம்பையும் தேவன் என்று எண்ணுகிறவர்கள்; சாம்பரைப் பூசுகிறவர்கள்; விக்கிரகந் தேவனுக்கு வெறுப்பு, அது கண்ணிருந்துங் காணாது, காதிருந்தும் கேளாது, வாயிருந்தும் பேசாது, இந்தப்பேய் வணக்கத்தை விட்டு நீங்கள் எல்லாரும் எங்கள் இரட்சகரை விசுவாசிக்க வேண்டும் என்று இந்தவிதமான பிரசங்கத்தைப் பாதிரியார் சொல்ல, தக்கன் செய்த சிவநிந்தையைக் கேட்டுக் கொண்டிருந்த தேவர்களைப்போல் எங்கள் உபாத்தியாயர்களும் நாங்களும் அந்தச் சிவநிந்தையைக் கேட்டுக்கொண்டிருந்தோம்.

* * *

உலகம் பலவிதம்: *1928* அக்டோபர் *4*

கல்வி (முற்றொடர்)

நான் ஆங்கிலம் ஐந்தாம் வகுப்பிற் சித்தியடைந்து விட்டமையால் எனது தகப்பனார் என்னை ஒரு சைவக் கல்லூரியில் விடுதி மாணவனாகக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டுமென்னும் நோக்கங்கொண்டு ஒரு சுபதினத்தில் என்னை அழைத்துச்சென்று, பட்டினத்திலுள்ள கல்லூரியிற் சேர்த்தனர். எங்கள் வீட்டிற்கும் அந்தக் கல்லூரிக்கு மிடையிலுள்ள தூரம் 9 மைல். கல்லூரியை யடைந்தவுடன் தகப்பனார் அக்கல்லூரியின் பிரதமாசிரியரையும் விடுதிச் சாலை யாசிரியரையுங் கண்டு, நான் அங்கே மாச விடுதி மாணவனாய்ப் படித்தற்கான ஒழுங்குகளெல்லாஞ் செய்தார்; எங்கள் கிராமத்தில் வசிக்கும் ஒரு வாலிபனும் அந்தக் கல்லூரியில் மேல்வகுப்பிலே படிப்பதைக் கண்டு என் தகப்பனார் என்னைப் பார்த்துக் கொள்ளும்படியும், மாசந்தோறும் வீட்டிற்கு வரும்போது என்னையும் உடன் அழைத்து வரும்படியும் அந்த வாலிபனிடஞ் சொன்னார். அவனும் அதற்கு மிகவுஞ் சந்தோஷமாக உடன்பட்டான். பெரிய உபாத்தியாயர் ஒரு பையனை என்னுடன் கூட அனுப்பி என் வகுப்பில் என்னைக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடும்படி சொல்ல, நானும் கூடிக்கொண்டு போய் அந்த வகுப்பிலிருந்தேன்; அந்த வகுப்பின் உபாத்தியாயரும் பிள்ளைகளும் என்னை நன்கு வரவேற்றார்கள்; சிறிதுநேரஞ் செல்ல, தகப்பனாரும் எனக்குச் சொல்லிவிட்டு வீட்டிற்குப் போவதற்காக அங்கே வந்தார்; "தம்பி, கவனமாகப் படி; உனக்கேதுந் தேவையானால் விடுதிச்சாலை உபாத்தியாயரிடங் கேள், அவர் தருவார்; எல்லாம் நான் அவரோடு ஒழுங்கு செய்திருக்கின்றேன்" என்று சொல்லிவிட்டு "நான் போய்வரட்டுமா" என்று என்னைக் கேட்க, எனக்குக் கண் கலங்கியது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச்சமையத்தில் நான் அழுதிருப்பேன், ஆனால் வெட்கத்துக்கஞ்சி அழவில்லை; கேட்ட கேள்விக்கு நான் வாயாற் பதில் சொல்ல அப்பொழுதுண்டான விம்மலும் பொருமலும் தடையாக விருந்தமையினால் நான் ஓம் என்னும் குறிப்புடன் தலையாட்டினேன்; தகப்பனாரும் சிறிது முகவாட்டத்தோடு கூடியவராய் என் வகுப்பு உபாத்தியாயருக்குஞ் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

* * *

உலகம் பலவிதம்: 1928 அக்டோபர் 11

கல்வி (முற்றொடர்)

பள்ளிக்கூடத்திலும் விடுதிச்சாலையிலும் நான் போய்ச்சேர்ந்த நாள் தொடக்கம் நாலு ஐந்து தினங்களாக வீட்டின் எண்ணமென்மனசிற் குடிகொண்டிருந்தது; படிப்பில் மனஞ் செல்லவில்லை; ஒருவாரமாக நான் எவரோடும் அதிகம் வார்த்தையாடாமலிருந்தேன்; ஒருநாள் எங்கள் வகுப்பு உபாத்தியாயர் என்னைப் பார்த்து நெடுக நீ புதுப்பையனாகவிருக்க முடியாது; நீ ஊக்கமாய்ப் படிக்கவேண்டும் என்று சிறிது கடிந்து சொன்னார்; அவர் சொல்லியது எனக்குச் சிறிது மனவருத்தமாயிருந்தது; நான் அவர் சொன்ன நேரந் தொடக்கமாக வீட்டுயோசினையை விட்டுக் கிரம மாகப் படிக்கத்தொடங்கினேன்; என் வகுப்பில் 28 பிள்ளைகள் வரையிலுண்டு; இவர்களுள் ஊக்கத்துடன் படிப்பவர்கள் நாலு ஐந்து பேர்கள் என்றே சொல்லலாம். எஞ்சிய பிள்ளைகளுட்சிலர் படிக்கக்கூடிய விவேகிகளாயிருந்தாலும் அவர்களை மற்ற மூடப்பிள்ளைகள் படிக்க விடமாட்டார்கள்; அவர்களுள் ஒரு சில பிள்ளைகளுக்குப் படிப்பென்றால் நஞ்சுபோலவிருக்கும்; படிப்பை விட வேறு என் செய்யச் சொன்னாலும் மிக்க சந்தோஷத்துடன் செய்து விடுவார்கள்; படிக்கிற பிள்ளைகள் மீது இந்தப் படியாத பிள்ளைகள் ஆத்திரங் கொள்ளுவார்கள்; அவர்களைப் புத்தகப் பூச்சியென்று பரிகாசஞ் செய்வார்கள்; எங்கள் வகுப்பு உபாத்தியாயருக்கு 52 வயசு வரையிலிருக்கும்; சிறிது பெருத்த தேகமுடையவர்; அலுப்போடு கூடியவர்; அவர் அதிகம் கோபித்து அடிக்கும்படி பிரம்பெடுத்தாலல்லாமல் அவருக்குப் பிள்ளைகள் பயப்படுவதில்லை; வகுப்பிற்கு அவர் வந்தவுடன் பிள்ளைகளின் வழக்குகளை விசாரிப்பதில் அரை மணி நேரம், ஒரு மணி நேரம் போய்விடும்; அதன் பின்தான் படிப்பிக்கத் தொடங்குவார்; இதற்கிடையில், படிக்கும் பிள்ளைகள் கதை சொல்லும்படியாக அவரைத் தூண்டுவார்கள்; முதல் அவர் அதற் கிணங்கமாட்டார்; ஆனால் அபயமான இந்தப் பிள்ளைகளோ ஏதும் ஒரு சந்தர்ப்பத்தில் தங்களுக்கு விஷயம் விளங்காததுபோல் நடித்து, விஷயத்தை விளங்கப்படுத்தும்போது அந்த விஷயத்தில் ஒரு கதையைக் கொளுவித் தொடங்கி விடுவார்கள்; இவரும் கருமத்தை மறந்து கதை சொல்லி முடிப்பார்; சில சமயங்களில் படிக்கப் பிரியமில்லாத பிள்ளைகள் சிலர் உபாத்தியாயரைப்பார்த்து "ஸேர், நீங்கள் அன்று ஒரு பாட்டுப் படித்தீர்கள் மிக நல்லாயிருந்தது; இப்படிப் பாடுவீர்களென்பது எங்களுக்குத் தெரியாது; அந்தப் பாட்டை ஒருமுறை பாடுங்கள் கேட்போம்; நீங்கள் பாடினால் நாங்களும் பார்த்துப் பழகிவிடலாம் என்பார்கள்; நரியின் சொல்லைக் கேட்டு வெண்ணெய் கௌவி வைத்திருந்த காக்கை பாடத் தொடங்கினாற் போல எங்கள் உபாத்தியார் உடனே பாடத் தொடங்கி விடுவார்; உண்மையாக அவர் பாடக் கூடியவரல்லர்; பாடும்போது கேட்கப் பரிதாபமாயிருக்கும்; ஆனால் பாடுவதிலே தாம் திறமை படைத்தவனென்ற ஒரு வீணான எண்ணம் அவருள்ளத்திற் குடிகொண்டிருந்தது; தண்ணீர் குடிப்பதற்குச் சலவிமோசனஞ் செய்தற்கு போதற்கு உத்தரவு கேட்டால் உபாத்தியாயர் போகவேண்டாமென்று தடுத்துவிடுவார்; இதனை அறிந்த பிள்ளைகள் அவர் அதிக யோசனையோடு இருக்கும்போது இல்லையேல் ஏதும் ஒரு விஷயத்தை மற்றைப் பிள்ளைகளுக்கு விளங்கப்படுத்திக் கொண்டிருக்கும்போது உபாத்தியாயரிடம் கேட்க அவர் பராமுகமாய்த் தலையசைப்பார்; இவர்கள் அந்தத் தலையசைப்பையே அநுமதியாகக் கொண்டு போய் விடுவார்கள்; இந்தப் பிள்ளைகளுடன் நானும் ஒருநாள் தண்ணீர் குடிக்கவென்று போனேன்; எனக்கு உண்மையான தாகமிருந்தது; ஆனால் மற்றைப் பிள்ளைகள் கிணற்றடிக்குத் தானும் போகவில்லை; மெல்ல அயல்வளவுக்குப் போய் அங்கு நிற்கும் இலந்தைமரங்களுக்குக் கல்லா லெறிந்து பழம் வீழ்த்திப் பொறுக்கித் தின்னத் தலைப்பட்டார்கள்; அவர்களுள் ஒரு பையன் மாத்திரம் என் வேண்டுகோளுக்கிசைந்து கிணற்றண்டை வந்து தண்ணீர் மொண்டுதந்தான். நான் தண்ணீர் குடித்து விட்டுப் பள்ளிக்கூடத்திற்கு மீண்டுவிட்டேன்; மற்றப் பிள்ளைகள் எங்கே என்று உபாத்தியாயர் என்னைக் கேட்ட போது நான் உள்ளதைச் சொல்லிவிட்டேன்; உடனே அவர் ஒரு சிறுவனை அனுப்பி எல்லாரையும் கூப்பிடுவித்தார்; அவர்கள் வருவதற்கிடையில் உபாத்தியாயர் ஒரு பெரிய பிரம்பைக் கையிற் கொண்டவராய் மிக்க கோபத்தோடு நின்றார்; பிள்ளைகள் வந்தவுடனே அவர் அவர்களை நிரையாக நிற்கச் செய்து "உண்மையைச் சொல்லிவிடுங்கள்; இவ்வளவு நேரமும் எங்கு நின்று வருகிறீர்கள்" என்று கேட்க, பிள்ளைகள் ஒரு பதிலுஞ் சொல்லாமல் நிற்க, அவர்களுள் ஒருவன் மிக்க மரியாதையோடு சில இலந்தைப் பழங்களை மடியிலிருந்து எடுத்து உபாத்தியாயருக்கு விநயத்துடன் நீட்டினான்; "உது என்னடா" என்று உபாத்தியாயர் கேட்க, இலந்தைப்பழம் உங்களுக்கென்று கொண்டுவந்தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பயபக்தியாக மறுமொழி சொல்ல அவர் கோபம் நீங்கி இவனுடைய செயலைப் பார்த்துச் சிரித்தார். ஆனால் பிள்ளைகளுட் சிலர் அன்று தொடக்கம் என்மீது வெறுப்புடையவர்களாயிருந்தார்கள்.

* * *

பின்னேரத்தில் எங்கள் வகுப்பைப் படிப்பித்தற்கு ஒரு தமிழ்ப் பண்டிதர் வருவதுண்டு; தமிழ் படித்தற்கான நேரத்தையும் தமிழ்ப் பண்டிதரின் வரவையும் எங்கள் வகுப்புப் பிள்ளைகள் மிக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்; தமிழ்ப்பாஷை தாய் மொழியல்லவா; அதனாற்றான் இவர்கள் அதனைப் பிரியத்தோடு படிக்க விரும்பி எதிர்பார்க் கின்றார்கள்போலும் என்று நான் என் மனசில் விளங்கியிருந்தேன்; ஆனால் நான் எண்ணியிருந்தது தவறென்பதைப் பின்னர்தானறிந்தேன்; தமிழ்ப் படித்தற்கான நேரம் வர மணியடிக்கப்பட்டவுடன் தமிழ் உபாத்தியாயர் ஆங்கு வரலாயினர்; நாங்கள் எல்லாரும் உடனே எழுந்து நிற்க அவர் (Sit down) "இருங்கள்" என்று ஆங்கிலத்திலும் தமிழிலும் உடனே சொல்ல நாங்கள் இருந்தோம். "இன்றைக்கு என்ன பாடம்" என்று எங்களைக் கேட்க பஞ்சதந்திரம் என்று பிள்ளைகள் பதில் சொல்ல, "சரி ஒவ்வொருவராய் வாசியுங்கள்" என்று சொல்லிவிட்டுப் பண்டிதர் ஏதோ ஒரு பெரிய புத்தகத்தைத் தாம் பார்த்தபடியே யிருந்தார்; பிள்ளைகள் எவராயினும் எழுந்துநின்று வாசிக்கவில்லையென்பதை 15 நிமிஷஞ் சென்று கண்ட பண்டிதர் "அடா, ஏன் வாசிக்காமல் இருக்கிறீர்க" ளெனலும், "புத்தகமில்லை" என்றார்கள். புத்தகமில்லாதவர்கள் எல்லாரும் எழுந்து நில்லுங்கள் என்று அவர் சொல்ல என்னைத் தவிர மற்றையெல்லாரும் எழுந்து நின்றார்கள்; இவர்களுட் சிலர் அங்குள்ள பஞ்சதந்திரப் புத்தகங்களைக் கொண்டு வந்தவர்களிடமிருந்து வாங்கி ஒளித்து விட்டார்கள். பண்டிதர் புத்தகம் கொண்டுவராததற்கு நியாயங் கேட்க சிலர் மறந்துபோனதாகவும், சிலர் இன்னமும் வாங்கவில்லையென்றும், சிலர் புத்தகத்தைக் கொண்டுவந்தவிடத்தில் யாரோ திருடிவிட்டார்க ளென்றும், சிலர் வீட்டில் குழந்தை எடுத்துக் கிழித்துவிட்டதென்றும், சிலர் புத்தகக் கடைகளில் இப்புத்தகம் விலைக்கில்லையென்றும் சிலர் இன்றைக்கு இலக்கணமென்று நினைத்துப் பஞ்சதந்திரத்தை எடுத்து வரவில்லையென்றும், சிலர் புத்தகம் வாங்கக் காசு கொண்டு வந்திருப்பதாகவும் சொன்னார்கள். ஒரு பையன் மாத்திரம் தான் ஆங்கிலத்திற் பஞ்சதந்திரம் வைத்திருப்பதாகச் சொன்னான். இப்படி இவர்க ளெல்லாரையும் விசாரணை செய்து முடிவதற்கிடையில் தமிழ் படித்தற்கான நேரமுங் கழிந்துவிட மணியடிக்க பண்டிதர் அந்த வகுப்பைவிட்டுப் போய்விட்டார்.

* * *

[உலகம் பலவிதம்: 1928 அக்டோபர் 18 கிடைக்கவில்லை.]

உலகம் பலவிதம்: 1928 அக்டோபர் 25

கல்வி (முற்றொடர்)

படிப்பு விஷயத்திலும் விளையாட்டு விஷயத்திலும் கிரமந்தவறினாலும் ஒரு விஷயத்தில் மாத்திரம் ஒருபோதும் கிரமந் தவறமாட்டோம்; அது என்னவென்றாற் போசன விஷயமாம். இந்த விஷயத்தில் எங்கள் உபாத்தியாயர்களாவது பெற்றார்களாவது எங்களுக்கு ஏதுஞ்சொல்லி நடத்தவேண்டிய ஆவசியகமில்லையாம். காலை உச்சி இரவு என்னும் மூன்று காலத்தையும் ஆவலோடு எதிர்பார்த்த வண்ணமாகவேயிருப்பேம். போஜனத்திற்காகிய மணி எப்பொழுது அடிக்கப்படுமென்ற எண்ணமே எங்கள் உள்ளத்தில் எந்நேரமுங் குடிகொண்டிருக்கும். மணியடித்துமுடிய முன்னமே போஜனசாலையிற் போய் மொய்த்துக் கொள்வோம். உண்ணமுந்தி ஸ்நானஞ் செய்ய வேண்டுமென்ற நியதி எங்களுக்கில்லை; சுக்கிர வாரத்தில் மாத்திரம் தவறாமல் ஸ்நானஞ் செய்வோம். போஜனஞ் செய்யும் விஷயத்தில் அந்நியமதத்தினரின் வித்தியாசாலைகளிலுள்ள விடுதிச்சாலை மாணவர்களுக்கு இருப்பதாகிய கோப்பைச் சங்கடம் எங்களுக்கில்லை. எங்களுட் பலர் வாழையிலையில் உண்ணச் சிலர்மாத்திரம் அலுமீனீயப்பாத்திரங்களில் உண்பர். அந்தப்பாத்திரங்களை மாறிக் கொள்ளும் வழக்கமில்லை. எங்களுட் சிலர் விபூதி பூசியுண்ண, சிலர் உண்டபின் விபூதி பூச, சிலர் உண்ணும்போதே தம் நெற்றியில் விபூதியில்லையென மற்றவர் சொல்லக்கேட்டு, விபூதி பூசியவருடைய நெற்றியைத் தொட்டுத் தமது நெற்றியிலும் பூசிக்கொள்வதுண்டு. எங்கள் பந்தியில் மரியாதையானவர்கள் உடனிருந்து உண்பார்களோவென்பது சந்தேகம். போஜனம் பரிமாறும் சுயம்பாகிகள் சோற்றை முதற் படைத்துக் கறியைப் பின்வைப்பரேல், கறிவைப்பதற்கிடையில் வெறுஞ் சோற்றையுண்டு விடுவோம். கறியை முன்வைத்துச் சோற்றைப் பின்வைப்பரேல் கறியைமுந்தி யுண்டுவிட்டு வெற்றிலையுடனிருப்போம். இதனைக் கண்ட சுயம்பாகிகள் ஏககாலத்திலேயே ஒருவர் சோறிட ஒருவர் கறியிடுவர்; பொரியல் அப்பளம் முதலியன இடப்படின் அவற்றை மெல்ல எடுத்து வாயில் இட்டுவிட்டு இன்றேல் சோற்றுள் புதைத்து விட்டு "இன்றைக்குப் பொரியல் அப்பளம் பொரிக்கவில்லையா" என்று சுயம்பாகிகளை ஒன்று சேர்ந்தாற்போற் சிரிப்பின்றிக் கேட்போம்; தயிர் மோர் என்னுமிவைகளை அதிகமுண்ண விரும்பி எந்நேரமும் வாயவியல் என்று முந்தியே சொல்லி அவற்றை பெற்றுக் கொள்வோம்; விடுதிச்சாலை உபாத்தியாயர்களுடனும் சுயம்பாகிகளுடனும் மனஸ்தாபப்பட்ட சமையங்களில் அவர்களுக்கு உண்ண எஞ்சவிட வொண்ணாதென வெண்ணி எல்லாரும் ஒருமித்து மிதமிஞ்சியுண்போம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியுண்டும் எஞ்சுமாயின் அன்னத்தை இலையிற் போடுவித்துக் கொண்டுபோய்க் கொட்டிவிடுவோம். அன்னத்தை அநியாயமாகச் சிந்தினால் ஒருகாலத்தில் சோற்றுக் கலையவேண்டி வருமென்பதை புத்தியால் அக்காலத்தில் அறியோம் ; நாங்கள் இருந்து போசனஞ் செய்த மண்டபத்தை போசனம் முடிந்தவுடனே ஒருவர் வந்து பார்த்து நாங்கள் உண்ட அளவு சாதங்கறிகள் அங்கே சிந்திப் பரவுண்டு கிடத்தலைக் காணலாகும். இனி எங்கள் போசனம் இந்த மூன்றுநேரத்தோடும் பின்னேரம் 4 மணிக்குமேற் கிடைக்கும் தேநீர் சிற்றுண்டியோடுந்தான் நின்று விடுமென எவரும் எண்ணவொண்ணாது: சில காலங்களுள் இடையில் வெளியிற் சென்று அயலிலுள்ள தேநீர்க் கடைக்குட் புகுந்து ஆங்கும் ஏதும் பார்த்துக் கொள்ளுவோம்: பார்த்துக் கொண்டு சிகரற்று, பீடி, சுருட்டு, மணத்தோடு கூடிய வெற்றிலைபாக்கு, சொக்ளட், லொஸன்ஸர், மூக்குப்பொடி, என்னுமிவைகளையும் அந்தக் கடைகளில் வாங்கி உபயோகித்துக்கொள்ளு வோம். கடைகளுக்கும் விடுதிச்சாலைச் செலவும் ஏறக்குறையச் சமதொகையாகவே மாசமுடிவிற் காணப்படும்; எங்களைப் படிப்பிக்கும்படி எங்கள் ஏழைப் பெற்றார் படும்பாட்டையும் பொருட் செலவையும் நாங்கள் ஒருபோதும் சிந்திப்பதில்லை; இவைகளெல்லாம் பிள்ளைகளுக்குப் பெற்றார் செய்யவேண்டிய கடமைகள்தானே என்று பேய்த் தனமாக நாங்கள் எண்ணியிருந்தோமேயல்லாமல் பிள்ளைகளாகிய நாங்கள் பெற்றாருக்குச் செய்ய வேண்டிய கடன்களை முற்றாய் மறந்துவிட்டோம்.

* * *

இனி, விடுதிச்சாலையிலுள்ள எங்கள் படிப்புத் திறமையைப்பற்றிச் சொல்லப்புகின், விடுதிச்சாலை மாணவர்களாகிய எங்களைக் காட்டிலும் தத்தம் வீடுகளிலிருந்து நாள்தோறும் வந்து படித்துவிட்டுப் போகும் பிள்ளைகள் பன்மடங்கு திறமையுடையவர்களாவர். சிற்சில சமையங்களில் வகுப்பிலுள்ள ஒரு பிள்ளை பாடங்களைப் படியாமையைக் கண்ட உபாத்தியாயர் நீ விடுதிச் சாலை மாணவனோ என்று கேட்பின் பெரும் பான்மையும் "ஓம்" என்றுதான் சொல்லவேண்டி யிருக்கும்; விடுதிச்சாலை மாணவர்களாகிய நாங்கள் வேணுமென்று படிக்காமல் விடுவதல்ல; மனசார எங்களுக்குப் படிக்க நேரமில்லை. முதற்கருமம் போஜனம் இரண்டாவதான ஆவசிய கருமம் நித்திரை. பகல், இரா என்ற பேதமின்றி நாங்கள் எந்த நேரமும் படுத்துறங்குவதற்கு ஆயத்தமாகவிருப்போம். வகுப்பிலிருந்து படிக்கும்போது மாத்திரம் என்ன செய்வதென்று ஒருவாறு இருப்போம். அப்பொழுதும் எங்களுட் சிலர் பின்புறத்தேயுள்ள சுவரிலும் தூணிலும் முன்புறத்தேயுள்ள மேசையிலும் சாய்ந்து விடுவோம். எண்சாணுடம்பிற்கும் தலையே பிரதானமானதால் இருக்கும்போதும் தலையை மேசை மீது பதமையாகக் கிடத்திவிடுவோம். நித்திரை கொள்வதற்கு எங்காயினும் போய்ப் படுக்க வேணுமென்ற நியதி எங்களுக்கில்லை; படுக்கையில் மாத்திரமன்றி இருக்கும்போதும் நிற்கும் போதும் நடக்கும்போதும் நித்திரைசெய்ய நாங்கள் பழகியிருக்கிறோம். வகுப்பில் அல்லாத நேரங்களில் மாடுகள்போல் நிற்போம் இன்றேல் படுப்போம் ஒருபோதும் இருப்பதில்லை. படிப்பு முதலியவைகளெல்லாம் படுக்கையிற்றானே நடத்திக்கொள்ளுவோம்; எங்களுட் சிலர் மேசை மீது தலையை வைத்துவிட்டு இருந்தபடி நித்திரையாய்விட, இதற்கிடையில் மணியும் அடித்துவிட, எங்களோடு இருக்கும் மற்றைப் பிள்ளைகள் எங்களைத் தட்டியெழுப்பி மத்தியானப் போசனத்திற்கு விடுதிச்சாலைக்கு அழைத்துப்போவது முண்டு. இனி நாங்கள் விடுதிச்சாலையிலிருந்து படிக்கும் கிரமத்தை என்னென்று சொல்லுவேன். "இல்லானுக் கன்பிங் கிடம்பொருள் ஏவல் மற்றெல்லா மிருந்தும் அவற்கெனசெய்யும்" என்ற பிரகாரம் படிக்க மனமில்லாத எங்களுக்கு மற்றைய வசதிக ளெல்லாமிருந்தும் ஆவதொன்று மில்லையாம்.

* * *

உலகம் பலவிதம்: *1928* நவம்பர் *27*

கல்வி (முற்றொடர்)

விளையாட்டு முன்றினில் நின்றும் மீண்டு வந்தவுடன் மாலையாதலும் மணியடிக்க, படிக்க வேண்டுமென்பதே எங்களுக்காகிய கட்டுப்பாடு. தலைமை உபாத்தியாயரோ விடுதிச்சாலை உபாத்தியாயர்களோ யாராயினும் ஒருவர் இருவர் எங்கள் படிப்பை மேற்பார்ப்பதற்காகப் படிக்குஞ் சாலையில் வந்துநிற்பர்; தீபங்கள் பகல் வெளிச்சம்போல் எரிந்துகொண்டு தொங்கும். நாங்களும் படிக்கிற பிள்ளைகள் போல் நிரையே போய் வாங்குகளில் அமர்ந்திருப்போம். போகும் போது ஏதும் அகப்பட்ட ஒரு புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டுதான் போவோம். புத்தகத்தை விரித்துப்பார்த்தபடியும் முணு முணுத்தபடியும் இருப்போம். எவர் அச்சமையத்தில் எங்களைக் காண்கினும் நாங்கள் படிப்பில் மூழ்கிப் பரவசப் பட்டிருக்கிறோ மென்றுதான் நினைப்பர் ஆனால் எங்கள் மனம் வேறு விஷயங்களில் வெகுதூரஞ் சென்றிருக்கிற தென்பதை எவரும் அறிதல் முடியாது. அடுத்த பிள்ளையோடு கதைபேசும்போது தமிழிற்பேச வேண்டுமாயின் தமிழ்ப் புத்தகத்தைப் பார்த்தபடியும் ஆங்கிலத்திற் பேசும் போது ஆங்கிலப் புத்தகத்தைப் பார்த்தபடியும் பிறர் யூகித்து அறியாதபடி பேசிவிடுவோம். இதற்கிடையில் பசி தாகம் மலசல உபாதி முதலியனவும் எங்களை உபாதிப்பதுண்டு. வீட்டிற் செய்யும்படி வகுப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபாத்தியாயர் தந்த அப்பியாசங்களையாயினும் இந்த நேரத்திற் பார்த்து எழுதிக் கொண்டுபோய் நாமே செய்ததாக உபாத்தியாயருக்குக் காட்டி அவரை ஏமாற்றி விடலாமோவென்றால், எங்களுள் ஒருவனாயினும் அவற்றைச் சரிவரச் செய்யத் தக்கவனா யிருந்தாலன்றோ நாங்கள் பார்த்தெழுத முடியும். அப்படிச் செய்யத்தக்கவன் விடுதிச் சாலையில் இருப்பதரிதெனலாம். அதனால், அடுத்தநாள் பள்ளிக்கூடத்திற்கு வரும் பிள்ளைகளின் வரவை எதிர்பார்திருந்து வகுப்பு நேரத்தில் உபாத்தியாயர் படிப்பிக்கும் போது அதனை அலட்சியஞ் செய்து இவற்றைப் பார்த்தெழுதி விடுவோம். அந்தப் பையன் செய்த அப்பியாசம் பிழையானால் எங்கள் அப்பியாசமும் பிழையென்பது பார்க்கவும் வேண்டியதில்லை.

* * *

இனி விடுதிச்சாலை மாணாக்கராகிய நாங்கள் திருவிழாப் பார்க்கப் போதல் படக்காட்சி கூத்து முதலியன பார்க்கச் செல்லுதல் பெருங் கஷ்டமாம். விடுதிச் சாலை உபாத்தியாயர் இப்படிப்பட்ட கருமங்களுக்குச் செல்ல ஒரு போதும் அநுமதி தரமாட்டார். அநுமதி பெறுவது எவ்வளவு கஷ்டமோ அதற்குத்தக இவற்றைப் போய்ப் பார்க்க வேண்டுமென்ற ஆசையும் எங்களுக்கு அதிகப்படுமேயல்லாமற் குறையாது. இதற்காக நாங்கள் சிற்சில சமையங்களில் வீட்டிலுள்ளார்க்குச் சுகமில்லை யென்றும், வீட்டிலிருந்து காகிதம் வந்ததாக ஒரு காகிதத்தைச் சிருட்டித்துக் காட்டியும் பொய் சொல்லி அநுமதி பெற்றுக்கொண்டு நினைத்த இடத்திற்குப் போய்ச் சேர்வதுமுண்டு. இப்படிப்போனவிடத்தில், எங்களை ஆங்குக் கண்டவர்கள் வந்து விடுதிச்சாலை உபாத்தியாயருக்கேனும், மற்றும் உபாத்தியாயர் கட்கேனும், பெற்றாருக்கேனும் சொல்லிவிட, அவர்கள் எங்களைக் கடிந்து கேட்க, நாங்கள் பொய் சொல்லிப் பார்ப்போம். வாய்க்காவிட்டால் உள்ளதைச் சொல்ல அவர்கள் எங்களைக் கண்டிப்பதுமுண்டு. ஒருநாள் எங்களுள் ஒரு பையன் கூத்துப் பார்க்கவிரும்பி, தன் தமையனுக்கு அதிகசுகமில்லையென்று பொய் சொல்லி ஒருவாறு விடுதிச்சாலை ஆசிரியரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு போய்விட்டான். கூத்துக் கொட்டகைக்கு அப்பையன் சென்றபோது, முதல்வகுப்புப்பிரவேசச்சீட்டுப் பெற்றுக்கொண்டு உள்ளே போக, உள்வாசலில் நின்ற ஒருவர் அவனை யழைத்துக்கொண்டுபோய் கொட்டகையில் ஓர் கதிரையைக்காட்டி யிருக்கச்செய்தார். அவன் இருந்துகொண்டு இந்தப்பக்கம் பார்த்தான்; விடுதிச்சாலை

... [சிதைவு] மிகுதி கிடைக்கவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்

[அரசியல், சமூகக் கட்டுரைகளின் தொடர்ச்சி]

உலகம் பலவிதம்: 1928 டிசம்பர் 3

யாழ்பாணப்பட்டினத்தில், நிகழும் இந்த வாரம் முழுவதும் தெரிதல் செய்தல் சம்மதஞ் சொல்லுதல் முதலிய முயற்சிகட்கும் சனங்கள் ஒவ்வோரிடங்களிற் கூட்டங் கூடுதற்கும் ஆகிய வாரமாகக் காணப்படுகின்றது; கள்ளுத்தவறணை வேணும் சாராயத் தவறணை வேணும் அந்நிய நாட்டுக் குடிவகை வேணுமென்று சொல்லும் மதுபானத்துரபிமானிகளும் மதுபானஞ் செய்வோரும் தத்தம் சம்மதத்தைப் போய்ச்சொல்வதற் காகிய நாள் நேற்றுத்தொடங்கிவிட்டது; மேலும் பட்டினசங்கப்பிரதிநிதிகளைப் பட்டினவாசிகள் தெரிவுசெய்யுந்தினம் இந்த டிசெம்பர் மீ 5 தேதியாகிய வருகிற சனிக்கிழமையாகும். ஷி பட்டினசங்கப்பிரதி நிதிகளைப் பட்டினவாசிகள் தெரிவுசெய்தற்கான முயற்சியும், தெரிவு செய்தற்கு முற்பட்டுநிற்போர் முயற்சியும் சென்ற இரண்டுமூன்று வாரங்கட்கு முந்தியே ஆரம்பித்து இந்தவாரமே மிகவும் கடுமையாக நடக்கின்றது. பட்டினசங்கப் பிரதிநிதித்தெரிவு விஷயமாக இந்த வருடத்திற் செய்யப்படும் முயற்சியும் பிறவும் முன்னொருபோதும் நிகழவில்லையென லாம். தெரு வீதிகளிலுள்ள சுவர்கள், மரங்கள், பிரதானஸ்தானங்கள் எந்த இடத்திற் பார்த்தாலும் எவற்றைப் பார்த்தாலும் ஸ்ரீமான்... இன்னாரைத் தெரிவு செய்யுங்கள் என்ற விளம்பரங்கள் பல்வேறு வருணமான காகிதங்களில் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டு ஒட்டப்பட்டிருப்பதையும் தொங்க விடப்பட்டிருப்பதையும் எவருங் காணலாம். வட்டாரவாசிகள் ஒருவரையொருவர் நோக்கி "நீ ஆருக்குச் சொல்லப்போகிறாய்; நீர் எவருக்குச் சொல்லப்போகிறீர்" என்று பரஸ்பரம் விளக்கிக் கொள்வதை எவரும் காதாரக் கேட்கலாம். பிரதிநிதிகளாய் வரவிரும்புவோரும் அவர் களுடைய காரியஸ்தர்களும் வெவ்வேறான கூட்டமாக இல்லங்கள் தோறுஞ்சென்று "என்னைத் தெரிவு செய்யுங்கள், இன்னாருக்காகச் சம்மதஞ் சொல்லுங்கள்" என்று சொல்லிக் கொண்டுங் கேட்டுக்கொண்டுங் திரிவதைக் காணலாம்.

* * *

புருஷனும் மனைவியும் நீடித்த காலம் பிள்ளைப்பேறில்லாமையால் தெய்வத்தை வேண்டி விரதம் அநுட்டித்துத் தவங்கிடந்து படாதபாடெல்லாம் பட்டுப் பெருந்தொகைப் பொருள் செலவிட்டு ஒரு ஆண்குழந்தையைப் பெற்று, ஆண்குழந்தையென்ற மாத்திரத்தே பேரானந்தமடைந்து பெருமிதத்தோடு நாளொரு வண்ணம் பொழுதொருமேனியாக வளர்த்து வந்தார்கள்; பிள்ளையும் கண்டோரெவரும் இது பிதா மாதாக்கள் செய்த தவப்பயன் என்று சொல்லத்தக்கதாக வளர்ந்து வந்தது; ஆனால் ஐயோ, ஐந்து வயசு முடிந்து ஆறாம் வயசு தொடங்கும்போது, எவரும் காத்திராப்பிரகாரம் இந்தப்பிள்ளை சடுதியில் நோய்வாய்ப்பட்டு இந்த டிசெம்பர்மீ 2-ந் தேதி செவ்வாய்க்கிழமை யமன் கைப்பட்டு உயிர்துறந்தது.

* * *

இந்தப் பிள்ளைக்குப் பேர் மதுபான விரோதன்; இக்குழந்தையை அகாலத்திற் பறி கொடுத்த மதுபான நீக்க அபிமானிகளாகிய இங்குள்ள ஆண்கள் பெண்களெனப்படும் தாயும் தகப்பனும் தீராக் கவலைக்கு ஆளானார்கள்; இந்தக் குழந்தை இறந்தமை மிஸ்டர் பிறண்டித்துரைக்கும், சாராயநாதனுக்கும், சொல்விளம்பியப்பனுக்கும் மதுபான அபிமானிகள் பலருக்கும் அதிகாரிகட்கும் பெரிய ஆநந்தமாம். மகாகாருண்ணியத்தோடு கூடிய உத்தம அதிகாரிகளைப் பகைத்துக் கொண்டு மதுபானநீக்க அபிமானிகள் தம்மால் ஒன்றுஞ் செய்ய முடியாதென்று தைரியங் கெட்டனர். "வேந்தன் சீறின் ஆம்துணை இல்லை" யல்லவா. "எங்களைப் பரிகாசம் பண்ணினாயே; இப்பொழுது உன்கதியென்ன" என்று பருத்தித் துறையாரும் சாவகச்சேரியாரும் முருகேசுவோடு நெருங்குகின்றார்களென்று அவர் முறையிடுகின்றார்.

* * *

உலகம் பலவிதம்: 1930 ஜூலை 10

அந்த இராமு சுப்பிரமணிய அநுபூதிச் செல்வராகிய கச்சியப்பசிவாசாரிய சுவாமிகளைக் கைகூசாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலிப்புலவரென வரைகின்றது. முதனூலில் இல்லாத காமசிருங்கார வர்ணனைகளைக் கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் கந்தபுராணத்தில் வருவித்துப் பாடிவிட்டாராம். திருக்கைலாசபரம்பரைத் தருமபுர ஞானசம்பந்தராதீனத்துச் சம்பந்த சரணாலய சுவாமிகள் தாம் பாடியருளிய கந்தபுராணச் சுருக்கத்தில் நமது கச்சியப்பசுவாமிகளுக்கு வணக்கங் கூறுமிடத்து:

போதமுறுசூதமுனிபுகன்றகாந்தப்
புகழ்க்கடலிற்படிந்த தன்கட்பொருளதான
மேதகுவண்புனலருந்திவையமுய்ய
வெய்யதுயர்ப்பிறவியெனும்வெம்மை தீரத்
தாதவிழ்பூம்பொழிற்காஞ்சிக்குவட்டிலேறிச்
சலதியமு தினை நிகர்செந்தமிழதான
காதன் மழைபொழிந்த வருட்கொண்டலான
கச்சியப்பனிருபாதமுச்சிவைப்பாம்.

என விதந்து போற்றியுள்ளார். மேலும் காஞ்சிபுரத்திற் குமரகோட்டத்தெழுந்தருளிய முருகக்கடவுளே இப்புராணத்தைப் பாடும்படி அடியெடுத்துக் கொடுத்தாரென்றும், பாடுங்கால் நேர்ந்த தவறுகள் சிலவற்றைத் திருத்தியருளினாரென்றும், அரங்கேற்றிய சமையத்தில் நேர்ந்த ஆசங்கையை, பெருமான் சபையிற் புலவர் வடிவாக எழுந்தருளிவந்து நீக்கினாரென்றும் சொல்லப்பட்டுள்ளன. இப் புலவர் சிகாமணியின் பெருமை.

வேதமொடு வேதாங்கம் பயின்று வல்லோன்
விரிந்தசிவாகமமுணர்ந்து மேன்மைபூண்டோன்
போதநிறைசிவமறையோன் காஞ்சிவாழும்
புனிதமிகுகச்சியப்பகுரவனானோன்
வாதமுறுபுலவர்குழாமகிழ்ந்து போற்ற
மதிமலிமாடம்புடைசூழ்குமரகோட்டத்
தேதமறுசகாத்தமெழு நூற்றின்மேலா
யிலகுகந்தபுராண மரங்கேற்றினானே

எனவரும் அபியுக்தர்வாக்கினால் அறியலாகும்.

* * *

புராண திலகமாக விளங்கும் கந்தபுராணத்திற் பொதிந்துள்ள அரியபெரிய விஷயங்களைப் பற்றியும் அவற்றைக் கச்சியப்ப சிவாசாரியசுவாமிகள் தமிழுக்கு எடுத்துக்காட்டிய திறமையைப் பற்றியும் மெச்சாத் தமிழறிஞர் இலரெனலாம். இக்காலத்தில் கந்தபுராண விளக்கம் என ஒரு நூல் எழுதிய ஆசிரியர்இப்புராணத்தினியல்பையெடுத்துச் சொல்லுமிடத்துப் பின்வருமாறு கூறுகின்றார்.

"அது பொருளளவாலும் விரிவாலும் தமிழ் நூல்கள் யாவற்றிலுஞ் சிறந்தது. பெருங் காப்பிய இலக்கணங்கள் யாவும் பொருந்தியது. அறம், பொருள், இன்பம், வீடாகிய நான்கையும் விளக்கி அவற்றைப் பெறும் வழியையும் சாதனத்தையுங் காட்டுவது, சிவதருமோத்தரங் கூறும் அறங்களை நிலை நிறுத்துவது. பாரதம் முதலியவற்றைப் போலச் சரித்திரங்களையுங் கூறுவது, பெரிய புராணத்தை ஒப்பச் சிவபெருமானது திருவருட் சிறப்பையும் அடியாரின் அன்புத் திறத்தையுங் கூறுவது. தோத்திர நூலாகிய தேவாரம் திருவாசகங்களைப்போல அரிய அருட்பாக்கள் நிறைந்துள்ளது. திருக்கோவையார்போலப் பொருளிலக்கணத்துக்கிலக்கியமாக ஆன்ம ஈடேற்ற முறையை ஒருங்கே கூறுவது. சாத்திரநூலாகிய சிவஞானசித்தியாரைப்போற் சைவசமயவுண்மையை நாட்டிப் புறச் சமயங்களைக் கண்டிப்பது. ஆயினும் சிவ உபாசனையின் பெருமையையும், சிவநிந்தையின் கொடுமையையும், உயிர்கள் முத்திபெறும் முறைமையையும் விளக்குதலே முதல் நோக்கமாகக் கொண்டது".

எங்கள் கச்சியப்ப சிவாசாரியசுவாமிகளின் பாக்களெனிலோ படிக்குந்தோறும் பக்தி கிளரச் செய்யும் பான்மையனவாம். இதற்குக்காரணம் இத் திவ்விய புராணத்தைப்பாடியருளிய சுவாமிகள் தாமே முருகக்கடவுளின் திருவருட்டிறத்தை இடையறாது நினைந்து நினைந்து உள்ளமுருகு மியல்பினரென்பதாம். தெய்வநாயகியார் திருப்பரங்குன்றத்து தமதுசெய்ய சீறடிகள்வருந்த மெல்ல மெல்ல நடந்து மணப் பந்தரில்வந்தமையை

கல்லுயர்பொருப்பினிடைகாமாடி செல்ல
வல்லனகொலென் றுமணிநூ புரமாற்ற
மெல்லிடைவருந் துமெனமேகலையிரங்க
எல்லவரு முண்மகிழவெம்மனை நடந்தாள்.

எனத் தமது அருமைத்திருவாக்கால் அழகுறக் கூறிய ஆசிரியர் அடுத்த செய்யுளால் தம் மனசைத் தாமே பின்வருமாறு தேற்றுகின்றார்.

பஞ்சிதனின் மெல்லடி பனிப்பவரையின்பாற்
குஞ்சரிநடந்தசெயய்கூறு புதுமைத்தோ
செஞ்சுடர்வைவே லுடையசெம்மலடி தீயே
னெஞ்சகவடுக்கலினு நின்றுலவுமென்றால்

செவ்வொளிகாலும் கூரிய வேற்படையைத் தரித்த அந்தச் சுப்பிரமணியப் பெருமானுடைய அன்றலர்ந்த தாமரைப் பூப்போன்ற திருவடிகள் பாவியாகிய தம்முடைய மனமென்று சொல்லப் படும் பாறைக்கல்லின்மீது இடையிடையே வந்து உலாவுகின்றனவாம், ஆனதினால் திருப்பாங் குன்றத்தில் தெய்வநாயகியார் தமது மிருதுவாகிய பாதங்கள் கன்ற நடந்தது ஒரு புதுமையல்லவாம். ஐயையோ, இவ்வாசாரிய சுவாமிகளின் சுப்பிரமணிய பத்தித்திறம் இருந்தபடியென்னே. இம்மகான் அநுபூதிச்செல்வரென்பது இக்கந்தபுராண இறுதியில் வரும்,

புன்னெறியதனிற்செல்லும் போக்கினைவிலக்கிமேலாம்
நன்னெறியொழுகச்செய்து நவையறுகாட்சிநல்கி
என்னையுமடியனாக்கி இருவினைநீக்கியாண்ட
பன்னிரு தடந்தோள்வள்ளல் பாதபங்கயங்கள்போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுந் திருவிருத்தத்தால் இனிது விளங்கக் கிடக்கின்றதே. அம்மம்ம, இப்படியான தெய்வப் புலவரை, வேத சிவாகமச் செல்வரை, சுப்பிர மணிய தொண்டரைப் போலிப் புலவரென்று கூசாது சொன்னவாய் என்படும்; நாமறியேம். அறுமுகங்கொண்ட பெருமானே இதுவும் உன் திருவிளையாட்டா!

* * *

உலகம் பலவிதம்: *1930 ஜூலை 17*

கந்தபுராணத்திற்கும் சக்சியப்பசிவாசாரியருக்கும் மாசு கற்பிக்கத் தொடங்கிய இராமு இப்பொழுது அதனையும் அவரையும் விடுத்து இந்துசாதனப்பத்திரத்திலும் இதின் ஆசிரியரிலும் தாவத் தலைப்பட்டுக்கொண்டது. "இப்போதுள்ள பத்திராதிபர் சுதேச நலத்தைக் கற்றறியாது சைவசமயத்தைப் பற்றியாவது ஒன்றும் எழுதி வெளியிடாது...." என்று ஒரு வசனம் எழுதி, சாரமற்ற உலகம் பலவிதம் போன்ற வீண் வியாசங்களை இப்பத்திராசிரியர் வெளியிட்டுச் சைவபரிபாலனத்தைக் கெடுக்கின்றாரெனக் கரைந்து இப்பத்திரத்தின் பொருட்டும் இதன் ஆசிரியர்பொருட்டும் பரிவுகூர்ந்து முதலைக் கண்ணீர் விடுகின்றது. சைவசமய நெறியறியாத இப்பத்திராசிரியர் இக் கடமையை வகித்துப் பத்தொன்பது வருடங்களாகின்றனவே. சாரமற்ற வீண்விஷயமாகிய உலகம் பலவிதம் வெளிவரத் தலைப்பட்டும் 9 வருடங்கள் வரையிலாய் விட்டனவே. ஐயோ! இராமு இந்தத்தீமையை ஆரம்பத்திலே சொல்லி விடவொண்ணாதா? அப்படிச் சொல்லியிருந்தால் பத்திரிகையும் பத்திராசிரியரும் இராமுவின் புத்தி கேட்டுத் திருந்துதல் ஆகுமே. உள்ளீடற்ற உலகம் பலவிதமும் தொடர்பாய் வெளிவந்து சைவபரி பாலனத்தை இத்துணை நீடித்த காலத்திற்குக் கெடுத்திருக்கமாட்டாதே. பத்திராசிரியர் திருந்தாத பட்சத்தில் சைவபரிபாலன சபையார் இப்பொழுதுள்ள பத்திராசிரியரை நீக்கிவிட்டு சுதேசநலத்தைக் கற்றறிந்த சைவசமய நெறியை யுணர்ந்த இராமு போன்ற ஒருவரை நியோகித்திருப்பார்களே. இந்தப் புத்தியை அக்காலத்திற் சொல்லுவதற்குச் சோதிடபரிபாலினியில்லையென்ற காரணம்பற்றியா? அன்றேல் "இப்போதுள்ள பத்திராதிபர் சுதேசநலத்தைக் கற்றறியாது சைவசமயத்தைப் பற்றியாவது ஒன்றும் எழுதி வெளிவிடாது...." என்பதுபோன்ற பிழை வசனங்களை எழுதத்தானும் இராமு அக்காலத்திற் கற்றுக்கொள்ளாததினாலா அப்பொழுது கூறாது விட்டது.

* * *

இந்துசாதனத்திற்கும் சோதிடபரிபாலினிக்குமிடையேயுள்ள ஏற்றத்தாழ்ச்சிகளைப் பேசுவதற்குரியோர் இராமுவும் சோதிடபரிபாலினிப் பத்திராசிரியரும் இந்துசாதனப் பத்திராசிரியருமல்லர். இங்குள்ள தமிழ்மக்கள் இவ்விஷயத்தையிட்டுப் பேசிக்கொள்ளட்டும். இந்துசாதனப் பத்திரத்தின் குறைவும் உலகம் பலவிதத்திற் சாரமின்மையும் இராமு இப்பத்திரவாயிலாகக் கண்டிக்கப்பெற்ற பின்றான் இராமுவுக்குப் புலப் பட்டனவா? உலகம்பலவிதமொன்றுதானா இந்து சாதனத்தில் எப்பொழுதும் வெளிவருவது? ஸ்ரீ சு. சி. அவர்கள் எழுதிக்கொடுத்த விசயத்தை இச்சாதனம் ஏற்று வெளியிட்டமையினால் இதனைக் கசக்கிக் குப்பைக்கூடைக்குட் போட்டு விட்டாரென ராமு கூறுகின்றது. இந்த இராமு இந்துசாதனப்பத்திரத்தில் குறித்த ஒரு பிரசுரத்தைத் தான்யாரிடத்தோ வாங்கிப் பார்த்துவிட்டதுபோலும். இந்துசாதனப்பத்திரிகை குப்பைக் கூடைக்குள் கசக்கிப்போடப்படுகின்றதென்று இராமு வருந்தவும் வேண்டாம், மகிழவும் வேண்டாம். இப்பத்திரிகை காலந்தோறும் விருத்தியாகி வருவதையும் இதனை அபிமானிப்போர்தொகை அதிகப்படுதலையும் இராமு வெருட்சியின்றி நேரில் இங்கே வந்து கண்ணாரக்கண்டு தன் சந்தேகம் நீங்கிச் செல்லலன்றோ உசிதம்.

* * *

இனி, சோதிடபரிபாலினிப் பத்திராசிரியர், தமக்கும் தமது பத்திரிகைக்கும் இராமு செய்யுந் தீமையை உள்ளபடி உணராமையினாலோ, இன்றேல் விபரீத விளக்கங்கொண்டோ, யாமறியேம், மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவார்போல் இராமுவைத்துணைக்கொண்டு இந்துசாதனத்தைச் சருவுகின்றார். சோதிட பரிபாலினி நிந்தையான விஷயங்களைச் சுமந்துகொண்டு வெளிவருகின்றனதென இந்துசாதனப் பத்திராசிரியர் பன்மையில் எழுதி விட்டாரெனக் குறைகூறி அவை எவையெனவும் அவற்றிலுள்ள நிந்தைகள் எவையெனவும் வினாவுகின்றார். நிந்தைகளெவையென இங்கே காட்டப்புகின் இப்பத்திரிகையும் நிந்தைகளையே சுமந்துகொண்டு வெளிவர நேரும். காட்ட இயலாமையினால் இந்தநியாயத்தை நாம் சொல்லுகிறோமென பரிபாலினிப்பத்திராசிரியர் சந்தேகங் கொள்ளாதபடி நிந்தைகளுட் சிலவற்றை மாத்திரம் அப்பத்திரிகையிலிருந்து அநுவதித்து இங்கே தருகின்றேம்:

சோதிடபரிபாலினி: *22-6-30:* "தீண்டாதானை வேண்டாமை" என்ற வியாசத்தில் வெளிவந்த நிந்தைகள்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.அடே தீண்டாதானெனக் கைச்சாத்திட்டவனே

2.ஆட்டுத்தோலாற் பரிந்து வரிந்து முதுகின் புறத்தே போட்டுக்கொண்டு 6 பணத்திற்கு அலைந்து திரியும் உன்போன்றவர்களென எண்ணினாயா? உண்மையாய் உன் கருத் தென்னடா?

3.பறையனாகிய நின்சாதியிலும் கீழ்சாதியா னொருவனுடன் உனது மனைவி ஒருமித்திருப் பதைக்கண்ட உனக்கு அது விருப்பாயிற்று.....

4.மடையனே! இனிமேல் இவ்வித வியாசம் எழுதத் துணியின் உனது சாதகத்தை ஓர் பிரபல சோதிடரிடங் கொடுத்துக் கிரக நிலையை அறிந்து பின் இடுபெயரையுமிட்டு எழுது அன்றேல் என் இளைப்பாறும் பழந்தோற் செருப்பால் உன் செருக்கை அடக்கிவைப்பேன்.

இவைகள் ஒரு பிரசுரத்தில் ஒரே வியாசத்தில் வெளிவந்தனவாகும். இவைகளுள் 3ம் இலக்க மிடப்பட்ட நிந்தை காமச்சுவை பயப்பதல்லவாம்; அசங்கிர்தமானதல்லவாம்; அற்ப கல்வியறிவுடைய ஆண்களும் பெண்களும் படிக்கும் பத்திரத்தில் வெளியிடத்தக்கதாம். ஆனால் அறிஞராற் பொருள் விரிக்கப்படும் செய்யுள் வடிவாயுள்ள கந்தபுராணத்துள்ள "கோடுயர் குலவரைக் குறவர் பாவைநீ" என்ற செய்யுள் காமச்சுவையைக் கிளரச்செய்து உலகத்தவரைக் கெடுத்து விடுமாம். இவர்களிருவரின் நுண்ணறி விருந்தவாறென்னே!

* * *

உலகம் பலவிதம்: 1930 ஜூலை 24

நூலை அரங்கேற்றலாமென்ற எண்ணங் கொண்டு காமசிருங்காரப் பாக்களைப் பாடும் புலவர் வகுப்பினில் நமது கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளையும் பாலினிப்பத்திராசிரியர் வைத் தெண்ணுகின்றார். இராமாயணம் பாடிய கம்பர், திருக்கோவையாரையருளிய மாணிக்கவாசக சுவாமிகள், திருக்குறளுட் காமத்துப்பாலையும் செய்த திருவள்ளுவர் என்னும் இப் புலவர்களைப் பாலினிப் பத்திராசிரியர் இனி எந்த நிரையில் வைத்து எண்ணப்போகின்றாரோ யாமறியேம். சென்னையரசினரைத் தமக்குப் பிரமாணமாகக் காட்டும் இப்பத்திராசிரியர் மேலேசொல்லப்பட்ட இப்புலவர்களை எந்த வகுப்பில் வைத்தெண்ண லாமென்பதையும் அவர்களிடங் கேட்டறிந்து தமது பத்திரவாயிலாக வெளியிடுவாராக. என் செயலாம் "கோடலி தன்னுளே மரமது நுழைந்து தன் கோத்திரமெலா மழிக்கும்" என்பது பெரியோர் வாக்கல்லவா. கண்டனவெல்லாம் காமச்சுவையாகச் சுவைக்கும் இவருக்கு தம் பஞ் சாங்கத்திலே "கருப்பாதானம்" என்றிருப்பது எச்சுவை பயக்குமோ யாமறியேம். பஞ்சாங்கத்தைப்பார்த்துப் படிக்கும் அறிவிற்குறைந்தோர் இதன்கருத்து என்னவென்று கேட்டால் கருத்தைச் சொல்லுதல் முடியாமலிருக்கின்றதே. கச்சியப்ப சிவாசாரியரைப் "போலிப்புலவர்" என்றும், காமசிருங்காரப் பாக்களைக் கலந்து பாடும் பிந்தியவகுப்பைச் சேர்ந்த புலவரென்றும், சோதிடத்திற்கு மாறாக அண்டகோசப் படலத்தைப் பாடியவரென்றும், சுருதி யுக்தி யனுபவங்கட்கு மாறாக நூல் செய்தவரென்றும், தவறான கொள்கையுடையவரென்றும் குறித்த பத்திராசிரியர் கூறிவிட்டு இவைளெல்லாம் நிந்தையா நிந்தையா என இடையிடையே வினாவியுங்கொள்ளுகிறார். இவருடைய மதி யிருந்தபடியென்னே.

* * *

கந்தபுராணம் முதலிய புராணங்களெல்லாம் வேதாகம உபநிஷத்துக்கள் மிருதிகள் தருக்க தத்துவநூல்கள் முதலியவற்றைக் கற்குமாற்றலில்லாத மந்தமதிகள் ஈடேறும்பொருட்டு இயற்றப் பட்டனவாம். சோதிடபரிபாலினிப் பத்திராசிரியர், மேலேசொல்லப்பட்ட வேதாகம உபநிஷத்துக்கள் மிருதிகளையெல்லாம் நன்கு ஆராய்ந்துகொண்டாராம்; இவருக்குக் கந்தபுராணம் காமச்சுவையாகத்தானாம் தோன்றுகின்றது மதியின் முதிர்ச்சியிருந்தபடி யென்னே. புராணங்களைச் சூதமகாமுனிவர் சொல்ல நைமிசவனமுனிவர்கள் பயபக்தியோடு கேட்டார் களாமே. சொன்ன சூதமகாமுனிவரும் நைமிசாரணிய முனிவர்களும் மந்தமதியினராக இந்தப் பரிபாலினிப் பத்திராசிரியரும் இராமுவுந்தான் நுண்மதியினர்களாய் விட்டார்களாம். பாரமரசனங்கள் தாமாகவே பிழையென்று கண்டுபிடித்துக் கூறத்தக்க பிழைகளை இந்த இரு அறிஞரும் திருத்திவிடப் போகின்றார்களாம். அவர்கள் தாமாகவே கண்டுபிடிக்கக்கூடிய பிழைகளை இப்புருஷோத்தமர் பிழையென்று காட்டவேண்டிய ஆவசியகமில்லையே.

* * *

பரிபாலினிப் பத்திராசிரியருக்கும் இராமுவுக்கும் புராணங்களும் ஏனைய பழைய நூல்களும் காமச்சுவை பயப்பனவாகவே காணப்படுகின்றன. இது நூல்களின் குற்றமன்று. முகம் இயல்பிலேயே பழுதாகவிருந்தாற் கண்ணாடியென்செய்வது. அது அடுத்ததைத்தானே காட்டும்.

"ஆரணங் காணென்பர் அந்தணர், யோகியர் ஆகமத்தின்
காரணங் காணென்பர், காமுகர் காமநன் னூலதென்பர்,
எரணங் காணென்ப ரெண்ணர், எழுத்தென்பர் இன்புலவோர்
சீரணங் காய சிற்றம்பலக் கோவையைச் செப்பிடினே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் திருக்கோவையர் நூற்சிறப்பிற் பெரியோர் கூறியபிரகாரம் பாலினிப்பத்திராதிபரும் இராமுவும் ஞானநூலாகிய கந்தபுராணத்தைக் காம நன்னூலதென்பர். ஏனைய நூல்களையும் இப்படியே இருவருஞ் சொல்வர். இது நூதனமன்று.

* * *

"காமுகர் காம நன்னூலதென்பர்" என்ற நியாயம்பற்றி இவ்விருவரும் வரைவனவற்றைக் கண்ட உண்மையான சைவாபிமானிகள் பலர் மனம் புண்பட்டமையைக் கண்டும், சோதிட பரிபாலினியை நடத்துவோர் பிராமணரென்றும் ஆதலால் இப்படியான புராணநிந்தை பெரியோர் நிந்தைகட்கு உடன்படார் இடங்கொடாரென்றும் ஒருபோது குறித்த இராமுவின் விஷயம் பத்திராசிரியரின் பராமுகத்தினால் வந்திருத்தல் கூடுமென நினைத்துமே இவற்றையெழுதினேம். குறித்த பத்திராசிரியர் அந்நிய சமயத்தவரைக் காட்டிலும் கூடிய துணிவுடன் நிந்தனைக் குடன்பட்டுப் புறப்பட்டு நிற்கின்றார். இவர் இந்த விபரீதமான கொள்கையூண்டு நிற்கும்பட்சத்தில் இவரும் இவருடைய பத்திரிகையும் சைவத்திற்கு அந்நியமாகவே மதிக்கப்படும். பத்திரிகை யளவில் மாத்திரம் நில்லாவென்பதையும் இவர் பின் புத்தி பண்ணிக்கொள்வாராக.

* * *

உலகம் பலவிதம்: *1930 ஜூலை 31*

கச்சியப்பசிவாசாரியர் போலிப் புலவரென்றும் கந்தபுராணத்திற் காமச்சுவை பயக்கும் பாடல்களுண்டென்றும் இந்தக் கச்சியப்பர் வலிந்து காமமயக்கப் பாடல்களை நூலிற் பாடிவைத்துத் தமிழரை மயக்கத்துளமிழ்த்தி விடுவது எவ்வளவு மடமையென்றும் இராமு எழுதியதையும் பரிபாலினிப்பத்திராதிபர் இவற்றை ஏற்றுப் பிரசுரித்ததையும் இவ்வளவோடமையாது தம் பத்திரிகையின் பிந்திய பிரசுரங்களில் இராமுவும் பத்திராதிபரும் பரஸ்பரம் துணையாக வெளிப்பட்டுத் தாங்கள் செய்த அபராதங்கட்குச் சமாதானம் எழுத முயன்றதையும் இற்றை வரையில் அப்பத்திராதிபர் தான் பிடித்தது சரியெனத் தாபிக்க முயல்வதையும் அபிமானிகள் அறிவர். இவைமாத்திரமல்லாமல், சோதிடநூலையும் கந்தபுராணம் முதலாம் புராணங்களையும் ஏனைய இலக்கண இலக்கியங்களையும் நன்கு பயின்ற அறிஞர் முற்காலத்திலிருந்தார்கள்; இப்பொழுதும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கந்தபுராணம் சோதிட நூலோடு மாறுபடுகின்றதென்று இப்புராணத்தைக் கண்டித்தாருமல்லர். இப்பொழுது பரிபாலினிப் பத்திராதிபருக்கே சோதிடத்திற்கும் கந்தபுராணத்திற்கும் பெருமுரண்புலப்படுகின்றது.

* * *

"தாமெழுதிய நியாயங்களைப் பிரமாணத்தோடு மறுக்கமுடியாத இந்துசாதனப் பத்திராசிரியர்..... பசப்புரைகளை நிரப்பியிருக்கின்றாரேயன்றி ஒன்றையாவது விளக்கினாரல்லர்" என்று பரிபாலினிப்பத்திராதிபர் தமக்குத் தாமே வெற்றி யுஞ் சொல்லிக்கொள்ளுகிறார். தமது பத்திரி கையின் முந்திய பிரசுரங்களிற் புலவரை இரு வகுப்பாய் வகுத்த இவர் இப்பொழுது தமிழ் நூல்களையும் இருபகுப்பாக வகுக்கத்தலைப் பட்டார். நித்திரையாகக்கிடப்பவனை எழுப்புதல் முடியுமேயன்றி நித்திரைபோலக்கிடப்பவனை யெழுப்புதல் முடியாதவாறு, விளங்கியும் விளங்கார்போல் நடித்துப் பிடிவாதஞ் செய்யும் இவருக்கு விளக்குமாறெவ்வாறோவென்பது புலப் படவில்லை. கந்தபுராணம் மாறுபாடுடையது. கச்சியப்பர் போலிப்புலவர். அவர் சரித்திரத்தைத் தாமிட்ட கந்தபுராணப் பதிப்பிலெழுதிய நாவலரவர்கள் கூற்றுப் பிழையாகின்றது என்று ஆன்றோரையுஞ் சான்றோரையுந் தொன்னூல்களையும் நிந்திக்கும் இவருக்குப் பிரமாணங் காட்டுவது எவ்வாறோ; மேலும் "ஆதலின் இவர்க்கு (இந்துசாதன பத்திராசிரியருக்கு)ப் பதில் எழுதுவது அவசியமன்றாயினும் பொதுசனங்கள் உண்மையை உணரும்படி இதனை எழுதுகிறோம்" என்று சாதனப் பத்திராசிரியரை விலக்கிவிட்டுப் பொது சனங்களுக்குச் சமாதானஞ் சொல்லப் பத்திராசிரியர் போகிறார். இவர் எங்கே போனாலும் இவர்செய்த புராண நிந்தை பெரியோர் நிந்தைகள் காரணமாக வந்த பழி இவரைத் தொடர்வதுபோல் இந்துசாதன பத்திராசிரியரும் ஏனைய கற்றோரும் பொது சனங்களும் இவரை விடப்போவதில்லை. இவருடைய தூராட்சேபங்கட்கெல்லாம் கண்ட னங்களும் சமாதானங்களும் பல அறிவாளிகள் அபிமானிகளால் எழுதி இங்கே அனுப்பப்பட் டிருத்தலின், அவற்றை முறையாக இப்பத்திரத் தில் வெளியிடவேண்டியிருத்தலின், அங்ஙனம் வெளியிடுங்கால் அவையே இவர் கூற்றிற்கு விடையாக அமையுமாதலின் இந்துசாதனப் பத்திராசிரியர் கூறியது கூறலாகப் பின் முடியுமெனவெண்ணி இப்பொழுது இவர் சமாதான மெழுதாதொழிந்தாரன்றி நியாயந்தெரியாமலும் பிரமாணங்கிடையாமலும் விடுத்தாரல்லரென்பதைப் பாலினிப்பத்திராதிபர் அறிவாராக. சோதிடத்திற்கு மாறாக அண்டகோசப்படலம் இருப்பது தவறென்று தாங்கூற சாதனப்பத்திராசிரியர் அதனை மறுக்குமாற்றலற்றுத் தம்மதியை அளவிடப்பார்க்கிறார் என்கிறார். இவர் மதி முந்தியே அறிஞராலளவிடப்பட்டுவிட்டது. ஆதலின் இனி அளவிட்டுப்பார்க்க வேண்டியதில்லை. சோதிடத்திற்கும் அண்டகோசப் படலத்திற்கும் மாறுண்டோ இல்லையோவென்பதைக் காட்டும் ஒருவியாசம் சோதிடத்தோடு தமிழறிவும் நிரம்பிய ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞரால் எழுதியுதவப்பட்டுள்ளது. அதனைப் பின்னர் வெளியிடுவேம். ஆதலால் இவர் இப்பொழுது ஒன்றற்கும் முடிவுகட்ட வேண்டியதில்லை.

* * *

"இந்தப்பாலினிப் பத்திராதிபர் தாம் எழுதிய ஒரே வியாசத்திற்றானே தாம் கூறியதற்கு மாறுகொளக் கூறுகின்றாரென்பதை இங்கே எடுத்துக்காட்டுகின்றேம். இந்த ஜூலாய் மீ 27உ வெளிவந்த தம் பத்திரிகையில் 5ம் பராவில் கந்தபுராணமும் ஏனைய புராணங்களும் இலௌகீகநூல் என்கிறார். பின் 13ம் "பரா" வில் அது ஞான நூலல்லவென்கிறார். பின் 15ம் "பரா" வில் தெய்வநூலென்று உலகினர் கொள்ளும் கந்தபுராணமென்கிறார். "உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே" யாகலின் இவர் உலகினர் எனக்குறிப்பது உயர்ந்தோரையே யாகும். மேலும் சனங்கள் பொதுசனங்கள் எனச் சாமானிய சனங்களை இவர் தமது வியாசத்திற் சுட்டியெழுதுவதும் இதனை வலியுறுத்தும்.

* * *

இவரிடத்துக் காணப்படும் கூறியது கூறல் மாறுகொளக்கூறல் முதலிய குற்றங்கள் நூதன மானவையல்ல; கச்சியப்பசிவாசாரியர் கந்த புராணம் பாடியதற்கு ஒரு நூதன காரணம் கண்டுபிடித்திருக்கின்றார். அது உண்மையான நூதனந்தான். இந்த நவீனத்தை அப்பத்திரிகையிலிருந்து இங்கே அநுவதித்துக் காட்டுகின்றேம். உலகத்தினரே, சனங்களே, பொதுசனங்களே படித்துப் படித்துப் பாருங்கள்.

"இது இவ்வித வர்ணனைகளை விரும்பியாயினும் அதனைப் படிப்பவர்க்கு முருகப்பிரானது திருவருட்குணங்களை யறிவித்து அது வாயிலாக ஞானசாத்திரங்களைக் கற்க அவாவுண்டுபண்ணு வதாகவுள்ளது. கோயில்களில் திருவிழாவேடிக்கை பார்ப்போர் அதனிமித்தமாயாவது போய் சுவாமி யைத் தரிசித்தல் போல, உலகவியல்புள்ள இந் நூலைப்படிப்போர் கடவுட்குணங்களை யறியக்கூடும் என்ற நியாயம்பற்றிக் கச்சியப்பசிவாசாரியரால் இது நவரசங்களும் பொருந்த இவ்வாறு இயற்றப்பட்டது."

அதாவது கோவிலுக்குப்போக விருப்பமில்லாதவர் சுவாமிதரிசனஞ்செய்யப் பிரியமில்லாதவர் அக்கோவில்களில் தாசி நடனம் வர்ணம் முதலிய வேடிக்கைகளைப் பார்க்கப்போய் அதனிமித்தமாகச் சுவாமியைத் தரிசித்தல் போல இக்கந்தபுராணம் இவ்வித காமசிருங்கார வர்ணனைகளை விரும்பியாயினும் அதனைப் படிப்பவர்களுக்கு முருகப்பிரானுடைய திருவருட் குணங்களையறிவித்தற்காகக் கச்சியப்பர் பாடிய தாம். ஐயோ, கச்சியப்பரே ஏன் இந்த வஞ்சக வேலைசெய்தீர் இப்படியறிந்தால் இங்குள்ளார் உமது கந்தபுராணம் கோவிலிற் படிக்கப்படும் பொழுது தங்கள் பெண்களைக் கேட்கவிட மாட்டார்களே. அந்தோ ஆறுமுகநாவலரே, கல்வி யறிவொழுக்கங்களால் மேம்பட்ட நீர் இங்குள்ளா ரெல்லாராலும் சமயாசாரியர்போல் மதிக்கப்படும் நீர் இவைகளையெல்லாமறிந்தும் இந்தப்புராணத்தைக் கோவில்களிற் படிக்கும்படியும் பெண்களையும் ஆண்களையும் கேட்கும்படியும் எழுதியதென்ன; இந்தப் பாலினிப்பத்திராதிபருக்குப் புலப்பட்ட வஞ் சனை கல்வியிற் பெரியார் என்று சொல்லப்படும் உமக்கும் புலப்படவில்லையா? இந்த வந்தணர் அக்காலத்தில் முளையாதது நாவலரையாவே! உமது தவக்குறைவுதான். ஒருவர் புதிதாய்க் கண்டுபிடிக்கில் இப்படியொன்றையல்லவோ கண்டுபிடிக்க வேண்டும். பாலினிப்பத்திராதிபர் கண்டுபிடித்து வரும் இந்த நவநுட்பங்களுக்குத் தமிழறிஞர் தக்க சன்மானஞ் செய்வார்கள். ஆனால் பத்திராசிரியர் ஒன்றற்கும் அவசரப்பட்டு முடிவுகட்டக் கூடாது.

* * *

உலகம் பலவிதம்: *1930 ஆகஸ்ட் 07*

காசிராசனுடைய பிள்ளையைத் திருடி யெடுத்துக்கொண்டுவந்து கொன்றவன் சந்திர வதிதானென்று நிச்சயித்து, காசிராசன் அவளைச் சிரச்சேதஞ் செய்யும்படி வீரவாகுவுக்குக் கட்டளைசெய்ய வீரவாகு தன் அடிமையாகிய அரிச்சந்திரத்தோட்டியிடம் சந்திரவதியையும் வெட்டும்படி வாளையும் ஒப்புவித்தான். விதியாரின் செயலை நினைந்து புன்னகை செய்துகொண்டு அரிச்சந்திரன் தான் கையிற்கொண்ட வாளை ஓங்கிச் சந்திரவதியை வெட்ட வாள் அவள் கழுத்தில் மாலையாய் வீழ்ந்தது. உடனே கௌசிகர் வசிட்டர் நாரதர் முதலானோரும் இந்திரனும் அங்கே தோற்றினர். புலையன் வடிவங்கொண்ட யமனும், பிராமணவடிவங் கொண்டு சந்திரவதியை யடிமையாகக்கொண்ட அக்கினிதேவனும் தத்தம் ஆணவத்தோடு அங்கே தோற்றினர். விசுவநாதப்பெருமான் விசாலாட்சி யம்மையாரோடு பாலசுப்பிரமணியப்பெருமான் மத்தியில் விளங்க இடபாரூடராய்ப் பிரசந்நராயினர். காசிராசன் சிறுவனும் தேவதாசனும் உயிர் பெற்றெழுந்து முறையே தம் பிதாமாதாக்களோடு அங்கு வந்து நின்றனர்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேசுவரன் அரிச்சந்திரன் முதலியோர்க்குத் திருவருள் பாலித்தபின் கௌசிகமுனிவனை நோக்கி "முனிவனே, வென்றது யார் தோல்வியுற்றது யார்" என வினவியருளுதலும், வசிட்டர் வென்றார் அடியேன் தோல்வியுற்றேன்; என் தவத்திற் பாதிகொடுக்கின்றேனென்று விண்ணப்பஞ்செய்து வணங்கினார். இதனைக் கேட்ட மாத்திரத்தே அங்கு நின்றோரெல்லாரும் ஆநந்தக் கூத்தாடினர். அதனைக் கண்ட கௌசிகரும் பெரும் ஆநந்தக்கூத்தாடினார். அப்பொழுது நாரதர் கௌசிகரைப்பார்த்து "முனிவரே, தோல்வியுற்ற நீர் எதற்காக ஆநந்தத்தாண்டவம் புரிகின்றீர்" எனவினவ, கௌசிகர் சிரித்து "நாரதரே, இந்த அரிச்சந்திரனுடைய மேலான குணங்களெல்லாம் விளங்குவதற்கும் இம்மன்ன னுக்குப் பெருமான் திருவருள் பாலித்தற்கும் மூலகாரணனாகவுள்ளவன் நானல்லவா? நான் இவனுக்கு இத்துன்பங்களையெல்லாஞ் செய்யாவிட்டால், இவனுடைய சுகுணங்கள் வெளிப்படுமா? பரமசிவன் பிரசந்நராவரா" என்று சொல்லிப் பின்னர் இன்னுமதிகமாகக் கூத்தாடினாராம்.

* * *

இவ்விதமாகவே, கந்தபுராணத்தின் மகத்துவமும் இராமுப்பிள்ளை சோதிட பரிபாலினிப் பத்திராதிபர் என்னுமிவர்கள் காரணமாக இப்பொழுது வெளிவரலாயின. இராமுப்பிள்ளையும் பத்திராதிபரும் கந்தபுராணத்தில் துராட்சேபஞ் செய்தமையினாற்றான், இந்துசாதனப் பத்திரிகையில் அறிஞர்பலர் அந்த ஆட்சேபங்கட்கு விடையெழுதப்புகுந்து கந்தபுராண மகத்துவத்தை உலகோர்க்குத் தெருட்டலாயினர். இங்குள்ள ஏனைய சைவப் பத்திரிகைகளாகிய ஈழகேசரி, சுதேசநாட்டியமென்னுமிவைகளும் கந்தபுராணத்தின் மகத்துவத்தையும் கச்சியப்ப சிவாசாரியசுவாமிகளின் அநுபூதி ஞானம் வித்துவத்திறமையும் பிறநன்மைகளையும் எடுத்துக் கூறலாயின. ஆதலால் இராமுப்பிள்ளையையும் பாலினிப் பத்திராதிபரையும் நாம் குறை சொல்வது முறையல்ல. இவைகளெல்லாம் அந்த முருகப்பிரானின் திருவிளையாட்டென்று அப்பெருமானின் தொண்டர் கொள்வர். இப்படிப் பட்டவைகளையே தீமையிலிருந்து பிறக்கும் நன்மைகளெனப் பெரியோர் சொல்வர். புராணநிந்தை பெரியார்நிந்தை யென்னுமிந்நிந்தை களைப் படித்த கேட்ட தோஷங்களை அந்தக் கலியுகவரதரே நீக்கியருளுவாராக.

* * *

கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் கந்தபுராணத்தை அரங்கேற்றத்தொடங்கியசமையத்தில்நேர்ந்தஆசங்கையைச் சுப்பிரமணியக் கடவுள் புலவர் வடிவங்கொண்டு எழுந்தருளி ஆங்குவந்து வீரசோழியப் பிரமாணங்காட்டி நிராகரித்தருளினரென ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களும் கந்தபுராணத்தைப் பிற்காலத்தில் உரைகளோடு அச்சிட்ட ஆசிரியர்களும் எழுதிய வரலாற்றைச் சோதிட பரிபாலினிப்பத்திராசிரியர் பிழையெனக் கைகூசாது எழுதி, ஸ்ரீ சபாபதி நாவலர் திராவிடப்பிரகாசிகையில் எழுதிய பொருந்தாக் கூற்றைப் பிரமாணமாக எடுத்துக் காட்டுகின்றார். சபாபதிநாவலர் யாழ்ப்பாணத்துச் சிறந்த வித்துவான்களுளொருவரென்பதையும் அவர் எழுதிய திராவிடப்பிரகாசிகை சிறந்த தமிழ் வசன நூலென்பதையும் மறுப்பாரெவருமில்லை. ஆனால் வித்துவக்காய்ச்சல் சபாபதி நாவலரைத்தானும் பீடிக்காது விடவில்லை. அவர் சிலநூல்களிடத்தும் சில ஆசிரியரிடத்தும் துவேஷம் பூண்டவராயிருந்தாரென்பது அவரியற்றிய திராவிடப்பிரகாசிகையில்சித்தாந்தசமயத்தின் இருகண்களாக விளங்கும் பெரிய புராணம் திருவிளையாடற்புராணம் என்னும் இரண்டனுள் திருவிளையாடற்புராணத்தைப் பற்றி யேனும் அதனைப்பாடியருளிய வேளாண்புலவ ராகிய பரஞ்சோதியாரைப்பற்றியாயினும் ஒரு சொல்லேனுங் கூறாதொழிந்தமையினால் இனிது விளங்கும். இவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களுடன் துவேஷங்கொண்டிருந்தவரென்பதைப் பெரியோர் சொல்லவுங்கேட்டுள்ளோம். இதனாற்றான் இக்கண்டனம் திராவிடப்பிரகாசிகையில் எழுந்ததெனலாம். இவர் எழுதிய இக்கண்டனத்தை முற்றாக நிராகரித்து, மகாவித்வான் மேலைப்புலோலி ஸ்ரீமத் நா. கதிரவேற்பிள்ளையவர்கள் தாமியற்றிய சுப்பிரமணிய பராக்கிரமத்திற் பிரமாணத்தோடு வெளியிட்டிருக்கின்றனர். அதனை இங்கே எடுத்துக்காட்டுகின்றோம்.

* * *

அபியுத்தர் வாக்கு:

"முன்னையோர் முத்திநலத் தந்தணன்றன் பொருட்டா
முதல்வனொரு வித்துவான் வடிவ மதைக் கொண்டான்,
பின்னையுமோர் முத்தி நலத் தந்தணனுக் கென்றே
பிரான்மகனு மக் கோலம் பெட்புடனே கொண்டா,
னென்னையீ ததிசயமென் றெல்லவரும் பேசி யேத்திடவே
சோழியத்தின் விதிகாட்டி யிணைக்கத்,
தன்ன வனை யழைத்ததொரு சகக்குரவன் மறையோன்
றன் சரண மெனக்கரணந் தானாக வளர்மே.

இச்சரிதத்தானே வீரசோழிய மென்னுங் நூல் கந்தபுராணத்திற்கு முற்பட்டதென்றே தெரிகிறது. அங்ஙனமாகவுஞ் சிலர் குலோத்துங்கசோழன் வீரசோழ னென்பார் காலம் சாலிவாகனசகம் எண்ணூறுவரையி லிருத்தலான் அவர் பொருட்டுச் செய்த வீரசோழியம் சாலிவாகனசகம் எழுநூற்றிற் செய்யப்பட்ட கந்தபுராணத்திற்கு மேற்கோணுலாமா றியாங்ஙனென வாசங்கித்து மலைகுவர், அவர் வீரசோழன் காலம் சாலிவாகன சகம் எழுநூற்றிற்கு மேலாமென்பதும், குலோத்துங்க சோழனென்னும் பெயருடைய அரசர் பலரென்பதுங் காண்பரே லங்ஙன மாசங்கிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொருப்படாரென்பது தேற்றம். "முந்துகாஞ்சியின் முற்றுணர் மேலையோர்" எனவரூஉஞ் சிவாச்சாரியர் கூற்றுக்கள் இச்சரிதத்துடன் முரணாமை வல்லார் வாய்க்கேட்டுணர்க. விரிப்பிற் பெருகும்.

* * *

"நாம் சென்ற பத்திரத்தில் எழுதியவற்றை இவர்கள் நியாயவாயிலாக மறுக்கவாற்றாமையான் இவ்வாற்றிலிறங்கினரென்பது புலப்படுவதால் இவர்களுக்கு நாம் இனி விடையிறுத்தல் மரபன்றென்று விடுகின்றாம்" எனப் பத்திராசிரியர் இந்த விவாதத்தை முடிப்பதற்குக் காரணம் எமது ஆற்றாமையெனக் காட்டி முடிக்கின்றார். அறிவாலும் அநுபவத்தாலும் ஒருபோது வயசாலும் மேற்பட்ட பத்திராசிரியர் எமது ஆற்றலின்மையைக்கண்டு விஷயத்தை இவ்வளவில் முடித்துவிடவேண்டிய தில்லை சுதேசநாட்டியத்திற் குறிப்பிட்டிருக்கிற பிரகாரம், இப்புராண நிந்தையைக் கண்டவுடன் நாம் மனம்நொந்து இதனைக்கண்டித்தல் சிவ தொண்டென நம்பியெழுதினேமேயல்லாமல் நமது வித்துவத்திறமையைக் காட்டுவதற்கும் தர்க்கரீதியைத் தெருட்டுவதற்கும், சைவபரி பாலனசபையைப் பிரியப்படுத்துவதற்கும் இந்து சாதனத்திற்கு உள்ள சந்தாதாரர் தொகை போதாதென்று இன்னும் அதிகப்படுத்துவதற்கும் கீர்த்தியையோ அபகீர்த்தியையோ இப்படி யெழுதுவதனாற் பெறுவதற்கும் எழுதினேமல்லேம். மொய் தாரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால், வைதாரையும் அங்கு வாழவைப்பான்" என்பதே எமது நம்பிக்கை. மேலும் நாம் இதனைத் தொடக்கிவிட்டால் அறிவுடையோர் சமாதானஞ்சொல்வரென்றெண்ணியே தொடங்கினேம். அங்ஙனமே அறிவாளிகள் இப்பத்திர வாயிலாகவும் ஏனைய சைவப்பத்திரிகைகள் வாயிலாகவும் சமாதானம் எழுதத் தலைப்பட்டிருக்கிறார்கள். எம்முடன் எழுதுவது மரபன்றென விடுத்த பாலினிப் பத்திராதிபர் இந்த அறிஞர்கட்கெல்லாம் சமாதானஞ் சொல்லுவாரெனக் காத்திருக்கின்றேம். ஐயரும் ராமுவும் எம்மை ஆற்றங்கரையில் மரமென நினைத்தனர் போலும்.

* * *

உலகம் பலவிதம்: *1930 ஆகஸ்ட் 14*

நம்மவர்கள் நமது மூதாதைகள் கைக்கொண்டுவந்த மேலான பழக்கவழக்கங்களையும் ஆசாரங்களையும் கைவிட்டு மேலைத்தேச வாசிகளின் நாகரிகங்களையும் உடைநடை பாவனைகளையும் கைக்கொள்ளத் தலைப் பட்டுக் கொண்டார்களல்லவா. இப்படிச்செய்யத் தொடங்கிய இவர்கள் நெய்யரி (பன்னாடை) போல் மேலைத்தேச வாசிகளிடத்துக் காணப்படும் நல்ல செயல்கள் ஒழுக்கங்களையொழுக விடுத்து அவர்களிடத்துள்ள தீயசெயல்களையும் பழக்க வழக்கங்களையுமே ஏந்தி வைத்துக்கொண்டார்கள். மேலைத்தேசவாசிகளிடத்து நேர்மை, உள்ளதை உள்ளபடி சொல்லுதல், குறித்த குறித்த நேரத்திற் குறித்த குறித்த கருமங்களைச் செய்தல், இடையறாவூக்கம் கெம்பீரம் முதலாம் சுகுணங்களும் நற்பழக்கங்களும் காணப்படுகின்றன. ஆனால் அவர்களைப் பின்பற்றி நடக்கும் நம்மனோர் இந்தச்சுகுணங்களையும் நற்பழக்கங் களையும் ஒழுக விட்டுவிட்டு, அவர்களிடத்துள்ள மதுபானம், உடைநடைபாவனைகள், டாம்பீகம் முதலாந் தீச்செயல்களையே ஏந்திவைத்துக் கொண்டு இடர்ப்படுகின்றார்கள். இவைகளைப் பின்பற்றியொழுகும் இவர்கள் ஐரோப்பியர் செய்வதுபோல் அவற்றை மட்டாகவும் முறை யாகவும் கிரமமாகவுஞ் செய்யப் பின்பற்றியிருக் கிறார்களோவென்றால், அதுவுமில்லை.

* * *

உதாரணமாக மதுபானத்தையெடுத்துக் கொள்ளுவோம். கள்ளுண்ணல் முற்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்ததாயினும் அது பெரும் பான்மையுந் தாழ்ந்த சாதியார்மாட்டே காணப் பட்டது. கள்ளல்லாமல், சாராயம் அந்நியநாட்டு மதுபானங்களை இங்குள்ளார் அந்நிய பரிபாலனம் வந்தபின்னரேயன்றி முன்னர் அறியாரெனலாம், முதன்முதற் பறங்கியர் இலங்கைத் துறைமுகங்களில் ஒன்றையடைந்து தம்கப்பலை நங்கூரமிட்டபோது அதனை ஆச்சரியத்தோடு பார்த்த இலங்கைவாசிகள் சிலர் அக்காலத்துத் தம்மையாண்ட இலங்கை வேந்தன் முன்சென்று "மகாராசாவே, நாங்கள் முன்னர்க்காணாத வெள்ளைமனிதர் ஒரு கப்பலில் வந்திருக்கிறார்கள்; அவர்கள் கல்லைத்தின்று இரத்தத்தைப் பருகுகிறார்கள்" என ஆச்சரியத்தோடும் அச்சத்தோடுந் தெரிவித்தார்களென இலங்கைச் சரித்திரத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. அவர்கள் கல்லென்றதும் இரத்தமென்னறதும் முறையே கோதுமை யிற் செய்யப்பட்ட ரொட்டி (விஸ்கோத்து) களையும் உவயின் முதலிய மதுபானங்களையுமாம். ஆனதினால் இந்த அந்நிய மதுபானம் ஐரோப்பியரைக் கண்டபின்பே இங்கே விருத்தியானதென்பது வெளிப்படை.

* * *

அயிரோப்பியர் ஏதும் மதுபானத்தை உட்கொள்வது போசனத்திற்கு முந்தியென்றும், நோக்கம் போஜனம் சீரணமாகவேண்டுமென்றும், அவர்கள் மதுபானத்தைக் குறித்த அளவிற்கு உட்கொண்டபின் போஜனஞ் செய்துவிட்டுத் தம் கருமத்திற்குப் போவார்களென்றும் இதனைச் செய்வதற்குக் குறித்த நேரங்களுண்டென்றும் அயிரோப்பியருடன் ஊடாடிய நம்மவர் சொல்லக் கேட்டிருக்கின்றேம். ஆனால் அவர்களைப் பின்பற்றி

digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அந்நிய மதுபானங்களைக் குடிக்கப் பழகிய நம்மவர்களெனிலோ இடம் நோக்காது காலம் நோக்காது பொருள் வருவாய் நோக்காது, மானம் மரியாதை நோக்காது, தாம் செய்யும் கடமைகள் திறம்புமேயென்பதை நோக்காது குடிப்பதொன்றையே பிரதானமாகக்கொண்டு குடிவகையைப் போத்தற்கணக்கில் தருவித்து "லெமெனட்" "சர்பத்" என்னுமிவைகளைத் தாகமுற்றார் எவ்வளவு விருப்பத்தோடு பருகுகின்றார்களோ, அவ்வளவு ஆவலோடு போத்தல் மூடியைத் தட்டிவிட்டு மட மடவென்று குடித்துவிட்டு இளநீர் குடித்தவர் கோம்பையை வீசியவாறு வெறும்போத்தலை அயலே வீசிவிடுகிறார்கள்.

* * *

சிறிது நேரத்தால் உட்புகுந்த மதுபானம் தன்தொழில் செய்யத்தொடங்க, அதனை உட்கொண்ட இவர் காகம் கொக்கு கனகிளி அனுமான் பேசும் இராவணன், பின் கும்பகர்ணன் என்ற முறையே அவர்களும் அவைகளும் செய்த தொழில்களையும் தீமைகளையும் முறைப்படி செய்கிறார்கள். உத்தியோகத்தர் நியாயவாதிக ளென்றிருப்பாருட் பலர் தாம் கள் சாராயம் முதலிய தாழ்ந்த குடிவகைகளைக் குடிக்கக் கருதவொண்ணாது விலையுயர்ந்த அந்நியநாட்டுக் குடிவகைகளை மேலே சொல்லப்பட்ட பிரகாரம் குடிக்கலாமென்ற நியதியோடு காணப்படுகின்றார்களேயல்லாமல், தாம் வகித்திருக்கும் பொறுப்புக்களுக்கும் செய்யவேண்டிய கடமைகளுக்கும் இந்த மதுபானம் இடையூறானது, தவிர்க்கப்படவேண்டியது, மரியாதையைக் கெடுப்பது, அவமதிப்பைக் கொடுப்பது, மேலான போக்கைத் தடுப்பது நன்றன்றென்று நினைக்கின்றாரல்லர். அயிரோப்பியர் விஷயத்தில் அவர்கள் மதுபானத்தை உட்கொள்ளுகிறார்கள். இங்குள்ளார் விஷயத்தில் மதுபானம் இவர்களை உட்கொள்ளுகின்றது. இதுவே அவர்களுக்கும் இவர்களுக்குமிடையேயுள்ள பேதம்.

* * *

உலகம் பலவிதம்: 1930 ஆகஸ்ட் 21

இப்போது உற்றுநோக்குங்கால் ஐரோப்பியரெனிலோ நம்மை ஆளப்பிறந்த சாதியினராவர்; நாங்களோ ஆளப்படப் பிறந்த சாதியினராவோம். செல்வம் தரித்திரமென்ற இரண்டினுள் செல்வம் அவர்களிடஞ் செல்ல, தரித்திரம் நம்மிடம் வரலாயிற்று. முயற்சி அவர்களையடைய, சோம்பல் நம்மனோரிடங் குடிகொண்டுவிட்டது; அதிகாரம் அவர்கட்குச் சொந்தமாக, அடிமைத்திறம் எங்கட்கு அறுதியா யிற்று. இப்படியே இன்னும் எத்தனையோ பேதங்கள் அவர்களுக்கும் எங்களுக்குமிடையேயுள்ளன. இங்ஙனமெல்லாமிருப்பவும், நாம் அவர்களைப் பின்பற்றி உடுக்கவும் நடக்கவும் உண்ணவும் எண்ணவும் முயன்று நிந்தைக்குள்ளாகி இடர்ப்படுதல், கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி - தானுமதுவாகப் பாவித்து - தானுந்தன் - பொல்லாச்சிறகை விரித்தாடினாற் போலவிருக்குமல்லவா! ஐரோப்பிய பெண்கள் வீட்டுக்கருமம் பார்ப்பதில்லை, சமையல் செய்வதில்லை, குழந்தைகட்குத் தாய்ப்பாலூட்டி வளர்ப்பதில்லை. இவைகளைச் செய்வதற்கு வெவ்வேறு வேலைக்காரரை நியமித்திருக்கிறார்களென்பதைப் பார்த்து, நம்மவர்களுள் உத்தியோகத்தர் பத்தினிமாரா யுள்ள பெண்கள் பலர் தங்கள் ஐயாவிடஞ் சொல்லி 5 ரூபா மாதவேதனத்திற்கு மேற்படாமல் ஒரு சிங்களச் சிறுவனையேனும் சிறுமியையேனும் கொச்சிப்பையனையேனும் வேலைக்கு வைத்துக் கொள்வது வழக்கம். ஐரோப்பியரில்லத்தில் சமையற்காரன், போஜனம் பரிமாறுவோன், எஜமானனுடைய குற்றேவல்களைச் செய்யுஞ் சிறுவன், பிள்ளை பராக்காட்டும் ஆயாள், பூக்கன்றுகளுக்கு நீர் வார்ப்பவன் முதலாம் குறைந்தகணக்கு ஆறுவேலைக்காரராயினும் இருப்பார்கள். இப்படியான அந்தஸ்தோடு கூடிய எஜமானனுடைய மனையாட்டி தான் வீட்டுக்கருமங்களைப் பாராமல் பணியாளர் செய்து கொடுக்கத் தான் உண்டு உடுத்து டாம்பீகமாக வாழ்தல் முடியும். அவள் எவ்வகையான குற்வேலுஞ் செய்யவேண்டியதில்லை; தனக்கு இஷ்டமானால் ஏதுஞ் செய்யலாம்.

* * *

ஆனால், நமது எஜமாட்டிகள் வீட்டில் சுயம்பாகி, உணவுபரிமாறுவோன், சில்லறைக் கருமஞ்செய்வோன், பூக்கன்றுகளுக்கு நீர்வார்ப்போன், ஆயாள் முதலாகச் சொல்லப்பட்ட கருமங்களையெல்லாம் ஒருங்கு நிர்வகித்துப் பார்கவேண்டியவன் நாம் முந்திச்சொன்ன அந்த ஒரேயொரு சிங்களச்சிறுவன் தான், இல்லையேல் சிறுமிதான். ஊருக்கென்றோரு தாசி ஆருக்கென்று ஆடுவாள். இந்த வேலைக்காரன் இல்லையேல் வேலைக்காரி, ஒருவாரம் இருவாரம் நின்று பார்த்துவிட்டு ஆற்றாமையால் வீட்டுக்காரருக்குஞ் சொல்லாமலே மெல்ல ஓடவேண்டியதுதான். வேலைக்காரச்சிறுவன் அல்லது சிறுமி ஓடி விட எஜமானனே பணியாளனாக எஜமாட்டியே பணியாட்டியாகின்றாள். வேலைக்காரர் ஓடிப் போவதற்கும், வேலைக்காரர் நீதி தலங்களில் வேலைகொண்டோருக்கு விரோதமாக வியாச்சி யந் தொடர்வதற்கும், வேலைக்காரர் பாதுகாப்புச் சட்டம் நவமாய் ஏற்படுவதற்கும் மூலகாரணம் நாம் மேலே எடுத்துக்காட்டியவைகளே யாகும். ஆதலாற்றான், ஐரோப்பியர்களை நம்மவர்கள் இப்படியான கருமங்களிற் பின்பற்றி மானபங்க மடைந்து இடர்ப்படவொண்ணாதெனச் சொல்லு கின்றேம். ஐரோப்பியர்களை நம்மனோர் பின் பற்றிச் சங்கடப்படுஞ் செயல்கள் இன்னும் பலவுள.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைத்தனித்தனியெடுத்துச் சொல்லின் இப்போது யாழ்ப்பாணத்திலே கேலியாட்டம் செய்யும் சேஷறாவ் என்னும் இந்தியன் தம் சகோதரர்களாகும் இந்தியர்களையே நையாண்டி பண்ணுவதுபோல, நம்மையே நாம் தூற்றுவதாக முடியுமென்றஞ்சிக் கூறாதொழிந்தேம்.

* * *

"கடலெல்லாம் கஞ்சியானாலும் வார்ப்பார் மனம்" என்றொரு பழமொழியுண்டு அதாவது கடல்முழுவதுங் கஞ்சியாகவே நிறைந்திருந்தாலும் அதனை மொண்டு வார்ப்பதற்கு அதிகாரம் பூண்டுள்ளவருடைய பிரியத்திலும் பிரியவீனத்திலுமே மற்றவர்கள் பெற்றுக் குடிப்பதும் பெறாமல்விடுவதும் தங்கியிருக்கின்றன. இப்பொழுது நமதுநாட்டிலே உணவுக்கு உடைக்கு ஆகிய பொருள்களெல்லாம் மலிவாயிருக்கின்றன. பஞ்சமில்லை; அரிசி நெல், சீனி சர்க்கரை, உழுந்து, பயறு, நெய் தேங்காய் நெய், உடுபுடவை முதலாகச் சொல்லப்பட்ட பொருட்களெல்லாம் விலைகுறைந்து விட்டன. இவைகள் விலைகுறைந்துவிட்டாலும், கடைக்காரரும் கூலிக்காரரும் ஜர்மனிய யுத்தம் நடந்தகாலத்தில் பொருள்களின் விலையேற பஞ் சமுண்டாக என்னவிதமான கூலிபெற்றார்களோ என்னவிதமாய் வியாபாரஞ்செய்தார்களோ அந்த நிலைமையிலேயே நிற்கிறார்களல்லாமல் சிறிதும் இறங்குகின்றார்களில்லை. கூலிக்காரர் அன்றுபெற்ற கூலியே இன்றுந்தர வேண்டுமென வாதாடிப்பெறுகின்றனர். விடுதிச்சாலை, தேநீர்க் கடை முதலியவற்றை வைத்து நடத்துவோர் முன் ஒருநேரப் போஜனத்திற்கு என்னகிரயம் வாங்கினார்களோ, ஒருபேணி தேநீருக்கு எத்தனை சதம் பெற்றார்களோ அத்தனையே இப்பொழுதும் வாங்குகிறார்கள். அந்தக் காலத்தில் உபயோகித்த அளவுகளையே இப்பொழுதும் உபயோகித்துவருகின்றார்கள். இவர்களுடைய செயலைப்பார்க்குமிடத்து அந்நியநாட்டிலிருந்து இங்கே வந்து வியாபாரஞ்செய்து இயன்ற வரையிற் கூடியலாபத்தைப் பெற்றபின் சொந்த நாட்டுக்கு மீண்டுசெல்லும் நோக்கத்தோடுள்ள வியாபாரிகள் செயல்போற் காணப்படுகின்றது. இதனாற்றான் இவர்களுக்கு வியாபார லட்சண மில்லையென்றும் விடிவில்லையென்றும் முருகேசு சொல்லுகிறார்.

* * *

புதிய அரசியற் சங்கத்தில் அங்கத்தினராக வரவேண்டுமென அபேட்சித்து நிற்போர் தங்கள் ஆட்களையனுப்பி, சம்மதஞ்சொல்லு முரிமை பூண்டோரிடம் பேர்கேட்டுப் பதிவு செய்வித்து வருகிறார்கள். வாக்காளருட்பலர் ஏன் எங்கள் பெயரைக்கேட்டுப் பதிவுசெய்விக்கின்றீர்கள் எனக்கேட்டால், அவைகளெல்லாம் பிறகு உங்களுக்கு விளங்கப்படுத்துவோம், இதனால் ஒரு தீமையும்வராது, நீங்கள் பயப்படாமல், யோசிக்காமல் பெயரைச் சொல்லுங்களென்று வாய்த்த இடத்தில் வெருட்டியும் வாய்க்காவிடத்து இரந்தும் பெயரைக் கேட்டுப் பதிவு செய்துகொண்டு போகிறார்கள். பெயர்கொடுப்பவருக்கும் பதிவுசெய்பவருக்கும் இது எதற்கு என்பது உண்மையாய் விளங்காது. புதிய சங்கத்திற்கு அபேட்சகராக நிற்கவிரும்புவோர் புதிய அரசியல் முறையைப்பற்றித் தமிழில் விளக்கியெழுதினால் சனங்களெல்லாருக்கும் பெரும் பயன்படுமென்றும் அப்படி வெளியிட விரும்புவோர் இந்தப்பத்திரிகைவாயிலாக வெளியிடலாகுமென்றும் சிலகாலத்தின் முன் இப் பத்திரிகையில் தெரிவித்தேம். இதுவரையில் எவராயினும் எழுத முற்பட்டு வந்தாரல்லர். காரணம் எவருமறிந்த இரகசியம். இவர்கள் வாளாவிருப்பது வஞ்சகமாயல்ல.

* * *

உலகம் பலவிதம் *1931* ஜனவரி *07*

சோமசுந்தரம் - மீனாட்சி

[உலகம் பலவிதம் *1930* ஆகஸ்ட் *28* இருந்து *1930* டிசம்பர் *31* வரை இல்லை. சோமசுந்தரம் - மீனாட்சி சில பாகங்களே கிடைத்துள்ளன]

சொல்லாதவார்த்தை சில சொல்லினாள். "இல்லாள் வலிகிடந்தமாற்றம் உரைக்குமேல் அவ்வில், புலிகிடந்த தூறாய்விடுமென்று உலகறியச் செப்பினாள் ஔவையென்று தேர்ந்தேன் ஆதலினால் இந்த இல்லறவாழ்க்கை இனியெனக்கு வேண்டாம்; மாண்டவர் பின்னும் பின்னும் மாள்வரோ மதியிலாதாய், என்றபடி இன்னமும் இந்த வாழ்க்கையை விரும்புவதென்றால் நான் ஒரு முழுமூடனாகவல்லவா இருக்கவேண்டும்; என்றைக்கு எதனைப் பிழையெனக் கண்டோமோ அன்றைக்கு அதனை விட்டுத் தொலைத்து மறந்துவிட வேண்டும்; இந்தப் பெண்களுடைய கிருத்திரமங்களை அறியாமலா!

"ஓதலுமொன்றாவுளமொன்றாச் செய்கையொன்றா
பேதை நிலைமைபிடித்துப்பெரும் பவஞ் செய்றாப்
மாதர்வலைப்பட்டு மயக்குற்றாரல்லரோ
சாதல்பிறப்பிற்றடுமாறுகின்றாரே."

என்று நமது முன்னோர் கூறினர் சரி இதைப்பற்றி யான் இனி எவ்வளவுஞ் சிந்திக்கப்படாது. இனிநான் செய்வதென்ன என்பதே யோசிக்க வேண்டியது. "நாடு பெரிய தேசமிருக்கிறது; புண்ணிய தலங்களிருக்கின்றன; புண்ணிய தீர்த்தங்களிருக்கின்றன; உலகப்பற்றை வெறுத்த மகாதுறவிகள் இலைமறை காய்போற் புண்ணிய பூமியாகிய பரதகண்டத்திற் பலரும் நம்முடைய இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் இரண்டொருவரும் இருக்கிறார்களல்லவா; என்னிடத்திலும் சொற்ப பணமிருக்கின்றது. ஆதலால் நாம் இந்தியாவுக்கு இப்பொழுது புறப்படுவதுதான் புத்தி; இங்கிருந்தால் யாரும் இடையிலுள்ளவர்கள் என்னைக் கண்டுபிடித்துப் பின்னரும் இந்தச் சங்கடத்துக்குட் கொண்டுபோய் மாட்டி விடுவார்கள்" என்று இப்படிச் சோமசுந்தரன் பலவாறு எண்ணிக்கொண்டு அன்றிரவு முழுவதும் நித்திரையின்றி, சமீபத்திலுள்ள ஒரு புகைரத ஸ்தானத்தையடைந்து அதிகாலையிற் புகைரதம் வருதலும் அதிலேறிக்கொண்டு யாழ்ப்பாணத்தை விட்டகன்றான்.

* * *

சோமசுந்தரத்தின் செய்தி இவ்வாறாக தன்னாயகன் தன்னுடன் மனஸ்தாபப்பட்டுக் கொண்டு தான் பலமுறை தடுப்பவுங் கேளாது வீட்டைவிட்டுப்போன நேரந் தொடக்கம் மீனாட்சியம்மாள் பட்ட துயரத்திற்கு ஒரு எல்லையில்லை. "ஐயோ, மணலுள் முழுகிமறைந்து கிடக்கும் நுணலும் தன்வாயாற்கெடும் என்றபடி நான் வாயால் எனக்குக் கேடுதேடினேனே; என் பிராணநாதர், எதிர்வார்த்தை பேசாதே; வாய்காட்டாதே என்று எனக்கு எத்தனைமுறை சொன்னார்; நான் கொடியவள் அவர் சொல்லைக் கேட்டேனா; நான் செய்த செய்கையால் இப்பொழுது உற்றார் பழிக்க, ஊரார் சிரிக்க, உலகம் வெறுக்க மூளியலங்காரி போலல்லவோ நானிருந்து தியங்கவேண்டி வந்துவிட்டது; வாய்காட்டிப் புருஷனைத் துரத்தியவள், இவள் பொல்லாதவள் என்று சொல்லி இனி என் இனத்தவர் சனத்தவரும் என்னைத் தம் வீட்டில் அடுக்கமாட்டார்களே; என் அண்ணன் இதனை அறிந்தால் என் கண்ணிலும் விழிக்கமாட்டாரே; ஆ, தெய்வமே, நான் இனி ஆரிடம்போவேன்; இதை ஆருக்கு முறையிடுவேன்; உன்னையன்றி எனக்கு வேறுகதியில்லையே; புருஷனை வருத்திய அரசர் ஒருபோதுங் கொடுக்கப் பிரியப்படார்; ஆனாற் பகைவராயுள்ளவர்கள் அந்த அரசர்கள்மீது வரைவின்றிப் பாணப் பிரயோகஞ் செய்தால் அப்பகையரசர் கேட்டவைகளெல்லாவற்றையும் அவர்கள் கொடுப்பார்கள்; இது அரசர் இயல்யென்பதை அறிந்துகொள்ளுதி.

* * *

[உலகம் பலவிதம் 1931 ஜனவரி 14 இருந்து 1931 ஜூலை 9 வரை கிடைக்கவில்லை]

உலகம் பலவிதம்: 1931 ஜூலை 16

இங்குள்ள வாலிபசங்கத்தார் சாதிய சங்கத்தார் எனப்படும் இவர்கள் சிலநாட்களாக கடைகள் தோறுஞ் சென்று சிகறற், பீடி யென்னுமிவைகளை வைத்து விற்கவேண்டாமென்றும், இங்கு செய்யப்படுவதாகிய சுருட்டை மாத்திரம் வைத்து எவ்வளவும் விற்கலாமென்றும் வியாபாரிமாருக்கு நியாயங்களை எடுத்துக்காட்டித் தெருட்டிவருகிறார்கள். வியாபாரிமார் கடைக்காரர் என்றிருப்போருள்ளும் அறிவுள்ளவர்கள் அபிமானமுடையவர்கள் பலர் தங்களுக்கு வரக்கூடிய வியாபாரக் குறைவைப் பொருட்படுத்தாது, சிகறற் பீடி முதலியவைகளை இனிமேல் தாம் விற்பதில்லையென்று வாக்களித்து விற்றலை விடுத்தனர்; சிலர் தாம் முந்தி வாங்கி வைத்திருக்கும் சிகறற்றுகளை விற்றபின் புதியன வாங்கி விற்காது விடுவோமென்றனர். சில பிடிவாதமுள்ள வியாபாரிமார் மற்றைக் கடைக்காரரெல்லாரும் விட்டபின் தாமும் விடுவதாகச் சாட்டுச் சொல்லுகின்றனர். இன்னுஞ் சிலர் விற்பதில்லையென வாக்களித்துவிட்டு இரகசியமாக விற்கின்றனர். இப்படிப்பட்ட பலவகையான வியாபாரிமாருள் உத்தமமானவர் யார் அதமமானவர் யார் என்பதை இதனை வாசிக்கும் அபிமானிகளே நிச்சயிப்பார்களாக.

* * *

பீடி சிகறற் என்னுமிவைகளை வாங்குவதற்கு ஆட்களிருப்பதனாற்றான் விற்கும் வியாபாரிமாரும் இப்படிச் சங்கடப்படுகின்றார்கள். ஆதலால் நமது வாலிப சங்கத்தாரும் ஏனைய அபிமானிகளும் சுருட்டுத்தொழிற்சாலைக்காரரும் சுருட்டுத் தொழில் செய்வோரும் ஒருங்கு சேர்ந்து ஊருட் பிரவேசித்து சிகறற் பீடி பிடியோமென்று அவற்றை உபயோகிப்பவர் களைக் கொண்டு சத்தியஞ் செய்வித்தல் வேண்டும். பள்ளிக்கூட மாணவர் ஆசிரியர்களாயுள்ளார் தாங்கள் இரகசியமாக இவைகளை உபயோகித்தலை விடுத்து உண்மையான அபிமானமுடையவர்களாக பள்ளிக்கூடமில்லாத நாட்களாகிய சனி ஞாயிற்றுக் கிழமைகள் தோறும் ஏனைய விடுதலை நாட்கள் தோறும் ஊருட்சென்று இவைகளை உபயோகிக்க வேண்டாமென்று நியாயங்களை எடுத்துக்காட்டிச் சனங்கட்குப் போதிக்க வேண்டும். சிகறற்றை, தங்களுக்கும் சில உபாத்தியாயர்கட்குமாகப் பெருந்தொகையாக வாங்குபவர்கள் பள்ளிக்கூட மாணாக்கர்கள் தாமென்று கடைக்காரர்கள் முறையிடுகிறார்கள். ஆனதினாலே பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயர்களும் அதிகாரிகளும் இப்படியான தவறுள்ள மாணவர் விஷயத்திற் சாவதானமாக விருத்தல் வேண்டும். பெற்றார்களா யுள்ளார் படிக்கும் தம் பிள்ளைகட்கு ஒருபோதும் சிகறற் பீடி முதலியன வாங்கி உபயோகிப்பதற்கென்று பணங் கொடுக்கமாட்டார்கள். ஆதலால் இந்தப் பள்ளிச்சிறார்கள் பள்ளிக்கூட வேதனத்திற்கென்றும் விடுதிச்செலவிற்கென்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகம் முதலிய உபகரணங்கட்கென்றும் பொய் சொல்லிப் பெற்றாரிடம் பணம் பெற்றுக்கொண்டுவந்து இவ்விதமாகத் துர்விநியோகஞ் செய்கின்றார்கள். இவர்களை ஆசிரியர்களாயுள்ளார்கள் கண்டித்தல் கடமையாக, சில ஆசிரியர்கள் இந்தப் பிள்ளைகளிடத்திற் பணங்கொடுத்து அப்பிள்ளைகள் மூலமாகக் கடைகளிற் சிகறற் வாங்குவித்துப் பற்றவைக்கின்றார்களாம். ஐயோ இது என்ன கொடுமை! வேலி பயிரை மேயத் தலைப்பட்டாற் செய்வதென்ன? பெற்றாரே, உபாத்தியாயர்களே நீவிர் கெட்டாலும் படிக்கும் பிள்ளைகட்கும், நாட்டிற்கும் கேடு சூழாதீர்கள்.

* * *

இலங்கையின் ஏனைய பாகங்களிலும் சிங்கப்பூர் முதலாம் பிற தேசங்களிலும் இருந்து உத்தியோகம் பார்த்தவர்களுள் றபர்தோட்டங்கள் வியாபார சமுதாயங்களில் உத்தியோகம் வகித்திருந்தோர் பலர் ஆங்காங்கு உத்தியோகமில்லையாக மீண்டு ஊருக்கு வந்துவிட்டார்கள். இப்படி வந்தவர்கள் உள்ளதைச் சொல்லிவிடலாம். இங்ஙனமின்றி, "தம்பி எப்போது வந்தது, எவ்வளவு நாட்களுக்கு விடுதலை, இனிப்போவது எப்போது" என்று அயலார் சுற்றத்தார் இவர்களை வினாவினால் இவர்கள், நான் இன்னும் 3 கிழமையாற் போக வேணும், இல்லையேல் இரண்டுமாசத்தாற் போகவேணும், துரை என்னை விடமுடியாதென்றும் எனக்கு லீவுதரமாட்டேனென்றுஞ் சொல்லிவிட்டான்; ஆனால் நான் துரையை இரந்து ஒருவாறு விடுதலை பெற்று வந்தேன்" என்று சொல்லி வந்தார்கள். ஆனால் மூன்று கிழமை செல்ல, இரண்டுமாசஞ் செல்ல இவர்களை ஏன் இன்னமும் உத்தியோகத்திற்குப் போகவில்லை யென்று கேட்டால், உடம்புக்குச் சுகமில்லை, நான் பின்னரும் ஒருகிழமை லீவு எழுதிக் கேட்டு நிற்கிறேன், ஒரு மாத லீவு கூடக் கேட்டு நிற்கிறேன்" என்று சொல்லுகிறார்கள். இந்தத் தவணைகள் முடிந்தபின்னரும் இவர்கள் ஊரில் நிற்பதைக்கண்டு ஏன் இன்னமும் போகவில்லைப்போலிருக்கிறதென்று யாருங் கேட்டால், அந்த ஊர் எனக்கு ஒத்துக்கொள்ளவில்லை இங்கு ஊரோடு நின்று ஏதும் பார்க்க யோசிக்கிறேன் என்கிறார்கள். ஏன் தொடக்கத்திலேயே உண்மையைச் சொல்லிவிடலாமே யென்றால் சிலர் சொல்ல வெட்கமாயிருக்கிறதென்றும், இன்னும் விவாகஞ் செய்யாத சிலர் விஷயத்தை வெளியில்விட்டால் பேசி ஒழுங்கு பண்ணிய கல்யாணம் குழம்பிப்போகு மென்றுஞ் சொல்லுகிறார்களாம்;. ஆனால் இவர்களுக்குப் பெண்கொடுக்க நிச்சயித்திருப்போர் "தம்பி வேலையில்லாமல் வந்திருக்கிறாரோ, இல்லையேல் உண்மையாக விடுதலையில் வந்திருக் கிறாரோ" என்பதை ஆங்காங்கு உடன் உத்தியோகம் பார்ப்பவருக்கெழுதி வேலையில்லாதவருக்குத் தம் பெண்ணை முடித்துக்கொடுக்க மறுத்து விட்டார்களாம்.

* * *

உலகம் பலவிதம்: *1931 ஜூலை 30*

ஒரு நாட்டில் வேடனொருவன் பறவைகளை அகப்படுத்தவேண்டி, தன்வலையை விரித்து இலைச் சருகுகளினால் அவ்வலையை மறைத்து, மேலே தானியங்களைத் தூவிவிட்டுப் பற்றைமறைவில் நின்றான். அச்சமையத்தில் சித்திரக்கிரீவனென்னும் புறா அரசன் தன்பரிவாரங்களுடன் அந்த இடத்திற்குப் பறந்து வந்தது. பரிவாரப்புறாக்களுட்சில தூவப்பட்ட தானியங்களைக்கண்டு அவற்றை உண்ணுவதற்கு முயல, சித்திரக்கிரீவன் "நிர்மானுஷியமான காட்டில் தானியமிருப்பது விபரீதமென்றும், உண்ணப்புகின் தீமையுண்டென்றுஞ்சொல்லி, அத்தானியங்களை உண்ணவேண்டாமென்று தன் பரிவாரங்களைத் தடுத்தது. ஆனால் அவைகளுள் ஒருபுறா தங்கள் அரசன் சொல்லைக் கேளாமல் தானியத்தை உண்ணச் சென்றது; அதனைக் கண்டு மற்றைப்புறாக்களும் அப்படியேசென்று ஈற்றில் வலையிற் சிக்கிக் கொண்டன. இவற்றையெல்லாங்கண்ட சித்திரக் கிரிவன் "என்புத்தியைக் கேளாமல், அந்த நீசன் செய்கையைப் பின்பற்றி என்பரிவாரங்களெல்லாஞ் சென்று வலையிற் சிக்கிக்கொண்டன; இனி நான் தனியேயிருந்து ஆவதில்லையென்று" நினைத்துத் தானும் அந்த வலையிற்போய்ச் சிக்கிக்கொண்டு பின்னர் பெருஞ் சங்கடமுற்று, புறாவரசன் சிநேகனாகிய எலியினால் வலையினின்றும் அவைகளெல்லாம் விடுவிக்கப்பட்டன என்பது பஞ்சதந்திரம்.

* * *

புதிய அரசாங்கசபை மேலேசொல்லப்பட்ட வலையின் தன்மையுடையதால் எவரையும் அடிமைத்திறத்திற் பந்திக்கும் இயல்புடையதென்று இங்குள்ளார் அபிப்பிராயப்பட்டு, அதனுட் பிரவேசியாதொழிந்தனர். ஆனால் உதயதாரகை ஆங்கிலப்பத்திராசிரியரும் அவர் கூட்டத்தவர் சிலரினுஞ் சிலரும் தானியத்திற் காசைப்பட்ட அந்த மூடத்தனமான சில புறாக்கள் போல, அரசாங்க சபையிற்போய்ப் புகவேண்டு மென்று பிடிவாதமாய் நிற்கின்றனர். இவர்கள் தாங்கள் அரசாங்கசபையிற் புகுந்து இரைதேட வேண்டுமென்று விரும்பினால், அதன்கட் போதற் காகிய மார்க்கங்களைச் சரியாகவோ பிழையாகவோ, அநுசரித்துப் போய்ப் புகுவதேயல்லாமல், உண்மையை உள்ளபடி அறிந்து அரசாங்கசபையைப் புறக்கணித்த சனத்தலைவர்களையும் சனங்களையும் குற்றஞ்சொல்வதும் அவர்களுக்கு மௌட்டிகங் கற்பிப்பதும் எதற்கோ? உதயதாரகை ஆங்கிலப் பத்திராசிரியர் இங்குள்ள சனங்களுக்கும் சனத் தலைவர்கட்கும் அரசாங்கசபையை முறையே கைக்கொள்ளவும் அதனோடு சேர்ந்துழைக்கவும் பிரியம்.. ஆனால் வாலிபசங்கத்தார் கெடுத்துவிட்டனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறுகிறார். அந்தப்பத்திராசிரியர் இவ்வளவோ டமையாது சனத்தலைவர்களாயுள்ளார்கள் தாங்கள் அரசாங்க சபையை அப்பொழுது பகிஷ்காரஞ் செய்ததையிட்டு இப்பொழுது பச்சாத்தாபப் படுகின்றார்களெனவும் பரிந்து கூறுகின்றார்.

* * *

அரசாங்கசபையை வேண்டாமென்று முன்சொல்லிவிட்டு இப்பொழுது அதற்காக மனவருத்தப்படும் சனத்தலைவர் யாரென்பதை உதயதாரகை ஆங்கில பத்திராசிரியர் தமது பத்திர மூலமாக வெளியிடுவாரா? மானிப்பாய்க் கூட்டத்தில் பகிஷ்காரத்திற்கு மாறாகச் சம்மதஞ் சொன்ன பதினொருபேருந்தானா யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள சனங்கள்? இந்தப்பதினொரு பேரையுமொழிய வேறுயார் புதிய அரசாங்கசபை நல்லதென்று அப்பத்திராசிரியருக்கு முறையிட்ட வர்கள்? ஊரை உலைமூடி கொண்டு மூடுதல் இயலாதென்பதை நமது பத்திராசிரியர் இனியேனும் விளங்கிக்கொண்டு சும்மாவிருந்தால் நன்மையாகும்.

* * *

உலகம் பலவிதம்: 1931 ஆகஸ்ட் 20

சாவகச்சேரியிலே கள்ளுநின்று துள்ளி விளையாடுகின்றதாம். பிறவிடங்களிலிருந்து ஒருவர் இப்பொழுது சாவகச்சேரிக்குப் போவாராயின் அவர் முன் எக்காலத்துங் காணாத அவகோலமான காட்சிகளையும் திருவிளையாடல்களையும் அங்கே காணலாம். கள்ளுண்டு வெறிகொண்டு காரணமின்றிப் பாடுவாரும் ஆடுவாரும் தள்ளாடுவாரும் திகம்பரிகளாய் நிற்பாரும் விழுந்துகிடந்து புரளுவாரும், அசங்கிதம் பேசுவாரும், அடிபிடிப்படுவாருமாகவே அங்குள்ளார் காணப்படுவாராம். யாழ்ப்பாணத்திலுள்ளவர்களுக்கு சமீபித்த கள்ளுத்தானம் சாவகச்சேரி யானதினால், இங்குள்ளார் அங்குப் புகைரத மார்க்கம் லொரி மார்க்கம் பஸ் மோட்டரத மார்க்கங்களாற் சென்று முள்ளுக்கொள்ளா வேலியுமில்லை, கள்ளுக்கொள்ளா வயிறுமில்லையென்று உலகோர் சொல்லுவதற்கியைய இயன்றமட்டும் கட்குடித்து வயிற்றை நிறைத்துக் கொண்டு வெறியுடன் மீண்டு வருகின்றார்களாம். இவர்களுள் புகைரதஸ்தானத்திற்கு வரும் வெறியர்கள் உவாந்தித்தும் வேறுவிதமாகவும் புகைரதஸ்தானத்தை அசுசிப்படுத்திவிட, அந்த ஸ்தானத்திலுள்ள சக்கிலியர் புகைரதஸ்தானத்திலுள்ள மேடையைக் கழுவிச் சுத்தஞ் செய்வதில் முயற்சியாயிருக்கின்றார்களாம். இவர்கள் ஏறிச்செல்லும் புகைவண்டியின் நிலைமையைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. இப்பொழுது சாவகச்சேரி மதுபானிகள் யாத்திரை செய்யும் திருப்பதியாகக் காணப்படுகின்றது. ஒரு நாளைக்குச் சாவகச்சேரியிற் செலவாகும் கள்ளின் தொகை 250 கலனாம். இப்படியானால் சாவகச்சேரியிலுள்ளார்க்கும் ஆங்குச் செல்லும் மதுபானிகளுக்கும் என்ன குறை.

* * *

சாவகச்சேரியில் குடிகாரரின் திருவிளையாட்டு இவ்வளவில் நின்றுவிடவில்லை. ஒருநாள் புகைரத மோட்டார்பஸ் செல்லும்போது மதுவுண்டு வெறிகொண்ட இருவர் பஸ் வரும்போது இரு பக்கத்தண்டவாளத்திலும் எதிரே நின்று "இந்த பஸ்சை முந்திப் போறது யார் பார்ப்போம்" என்று வீரம் பேசிக்கொண்டு ஓடத் தொடங்கினராம். பஸ் அதிகாரிகள் அந்த வெறியர் இருவரையும் விலகிப் போகும்படி இயன்றவரையிற் சொல்லியும் அவர்கள் கேளாமையினால் பஸ் அதிகாரிகள் பஸ்ஸை நிறுத்தி அந்த இருவரையும் பிடித்துத் தூக்கிக் கொண்டுபோய் பஸ்ஸில் ஏற்றிச்சென்று பொலிசரிடம் ஒப்புவித்தனராம். இவர்களுக்கு நீதிஸ்தலத்தில் தக்க தண்டனை விதிக்கப்பட்டதாம்.

* * *

இன்னொரு வெறியாட்டாளன் ஓய்வு நாளில் (கிறீஸ்தவ) ஆலயத்திற்குப் போய் வழிபாடு செய்துகொண்டு அதன்பின் கள்ளுக் கடைக்குப் போய் வயிறு முட்டக்குடித்துவிட்டு மீண்டுவந்து வேகமாய் ஓடும் புகைரத மோட்டார் பஸ்ஸில் பாய்ந்தேற முயன்று தவறி வீழ்ந்து சில்லில் அகப்பட்டு நெரியுண்டு யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையிற் கொண்டுபோய்ச் சிகிச்சைசெய்யும்போது உயிர்துறந்தானாம். இப் படியெல்லாம் அநர்த்தம் நேர்ந்தாலும் சொல் விளம்பியப்பனுடைய திருக்கூத்து சாவகச்சேரியில் இன்னமுங் குறையவில்லையாம். கள் சாராயக் கடைகள் வேணுமென்று அரசினரை வரங்கேட்டு அவற்றைப் பெற்று இங்ஙனம் சீர் கெட்ட தென்மராட்சியாருடைய அபகீர்த்தி எப்போதாயினும் நீங்குமோவென்பது சந்தேகம்.

* * *

இது மெய்தானா? சென்றவாரம் வண்ணை வைத்தியேசுவரன் கோவிலில் தேவி உற்சவம் நிகழ்ந்தபோது ஒரு தினம் பகற்காலத்தில் திருக்கோயில் வெளிப்பிரகாரமாகிய தெரு வீதியில் தென்மேற்குத் திக்கில் கோயிற் குருக்கள் சுற்றுப் பலியிடுதலாகிய கிரியையைச் செய்துகொண்டு நிற்கும்போது, அச்சமையத்தில் அந்த மார்க்கமாக வந்த பஸ், மோட்டரதங்கள் முதலியன வழக்கம்போல் நின்றுவிட்டன. (பூசை 5 நிமிஷத்துள் முடியத்தக்கது) ஆனால் வடமாகாணத்தலைவர், முதலியாரோடும் பொலிஸ் தலைவரோடும் அந்தச் சமையத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்டரதத்தில் வந்தனராம். மாகாணத் தலைவருக்கு பலி பூசை செய்வதும், இவை காரணமாக ரதங்கள் சிறிதுநேரம் தாமதிப்பதும் பிடிக்கவில்லையாம். அவர் முதலியாரோடு இறங்கிக் குறித்த பூசை நிகழும் இடத்திற்குச் சமீபமாகப்போய் இவற்றைத் தெருவீதியின் ஒரு ஓரத்திற் செய்வதல்லாமல் நடுவில் வைத்துச் செய்யவொண்ணாதெனக் கடிந்தாராம். குருக்களும் அங்கு நின்ற மற்றுமுள்ளோரும் இப்படிச் செய்தலே வழக்கமென்றனராம். பழைய வழக்கங்களெல்லாம் மாறிவிட்டன, இதனையும் மாற்றிவிட வேண்டுமென்றாராம் மாகாணத் தலைவர். அங்கு நின்றோர் சிலர் இச் சமாசாரத்தைக் கோயில் ஆதீனகர்த்தர்கட்குத் தெரிவிக்க அவர்கள் தெருவீதி கோயிலுக்குரியதென்றனராம். சமய கொண்டாட்டங்களை மரியாதை செய்தலின்றி அலட்சியம் செய்யும் விஷயத்தில் எங்கள் அதிகாரிகட்கு உவப்புண்டாகிறது. இது நன்மைக்கோ தீமைக்கோ நாம் அறியேம்.

* * *

யாழ்ப்பாணத்திலே ஒரு குறிச்சியில் ஒரு கன்னிகை தன் வேலைக்காரனைத் தனக்குப் போசனங் கொண்டுவந்து மேசையில் வைக்கும் படி கட்டளையிட, வேலைக்காரனுக்கு அது இஷ்டமில்லாமையினாற்போலும் கன்னிகையைச் சினந்து ஏறிட்டுப் பார்க்க, கன்னிகை அவன் கோபக்குறிப்பைக் கண்டு ஆத்திரங்கொண்டு தன் திருக்காலை மெல்லத் தூக்கி வேலைக்காரனை உதைய, வேலைக்காரன் பெண்ணாய்ப் பிறந்த இவளிடத்தில் உதைபட்டபின் நான் உயிரோடிருத்தலைக் காட்டிலும் செத்துவிடுதல் நல்லதென்று நிச்சயித்துத் தன்னுயிரை மாய்க்க முயல, அதனைக்கண்ட இன்னொருவன் உன்னுயிரை மாய்ப்பதற்கு இந்த அவமானம் போதாதென்று சொல்லித் தடுக்க, வேலைக்காரன் சாவாது விட்டுவிட்டானாம். இக்கன்னிகை விடுதிச்சாலையிற் கல்வி பயின்றவளாம். வேலைக்காரனுக்கு வயசு 18 இல்லையேல் 19 வரையிலிருக்குமாம். கன்னிகை வேலைக் காரனை உதைத்தமைக்குக்காரணம் உண்மையாக தன்னைச் சினந்து ஏறிட்டுப் பார்த்தமையாயிருந்தால், கன்னிகையின் செய்கை பெரிதுங் கண்டிக்கத்தக்கதும் பழிக்கிடமானதுமாம். மகளிர் ஆடவரோடு ஊடிய காலத்தில் அவ்வாடவரின் தோளிலும் சிரத்திலும் உதைந்தனரெனப் புராணேதிகாசங்களில் பாடியிருக்கக் கண்டோமேயல்லாமல் கன்னியர் ஆடவரைக் காலாலுதைத்தமையைக் கண்டு கேட்டறியேம். உணவருந்தும் விஷயத்திலும் பெண்கள் விசேஷமாகக் கன்னியர்கள் எப்பொழுது உணவருந்துகிறார்களென்பதை வீட்டிலுள்ள பிறர் காணுதல் முடியாதாம். இந்த அநர்த்தங்கள் இக்காலத்துக் கல்வியின் பயனாகுமோ?

* * *

உலகம் பலவிதம்: 1931 செப்டெம்பர் 24

ஏறக்குறைய ஆறுமாசகாலமாக யாழ்ப்பாணத்தில் மழைபெய்யவில்லையெனலாம். இலங்கையின் எப்பாகங்களிலும் மழை பெய்ய இங்கேதான் மழையில்லையே என்று இங்குள்ளார் பலர் கவலைப்படுகின்றனர். விஷயமறிந்த முருகேசு போன்றவர்கள், யாழ்ப்பாணத்தில் மழை பெய்யாமல் விடுவது நூதனமல்ல; மழை பெய்தால் அதுதான் நூதனம் என்று சொல்லுகிறார்கள். இப்பொழுது இங்குள்ளாரிடத்துத் தெய்வ நம்பிக்கை யில்லையாம் தான தருமங்கள் அருகிவிட்டனவாம்; பெரியார் சிறியார், ஆண் பெண் என்ற பேதமில்லையாம்; எல்லாருஞ் சரியாம்; எல்லாஞ் சரியாம்; பாவ புண்ணியங்கட்கு வேறுபாடில்லையாம்; அந்தணர் ஒழுக்கந் திறம்ப, அரசர் முறை திறம்ப, வணிகர் சோர வியாபாரஞ் செய்ய, வேளாளர் தந்தொழில் விட்டுப் பிறதொழில் செய்யத் தலைப்பட்டு வேளாளனென்பான் விருந்திருக்க உண்ணாதான்" என்னுங்கொள்கையை மறந்து உலோபத்துவமடைய, ஏனைய தாழ்ந்த வருணத்தார் சமத்துவம்பேசித் தலை தடுமாற, எல்லாரும் கள்ளுக்குடிப்பது எந்தவிதமாக என்று யோசிக்க, கொலை களவு சூது அடிபிடி கலகம் அதிகப்பட, அரசினர் சமய விஷயங்களில் மாறுபாடாகப் பிரவேசிக்க, பகை பழி பாவம் பல்க, அதிகாரிகளும் ஊரவர்களும் "ஆள் முட்டோ புலி முட்டோ" என்றவிதமாகப் பரஸ்பரம் சந்தேகத்தோடும் அவநம்பிக்கையோடும் ஊடாட, வேலி பயிரை மேய மழை எப்படிப் பெய்யுமென்று ஆட்சேபிக்கிறார் முருகேசு.

* * *

சீனி, தேயிலை, அரிசி, எண்ணெய், தேங்காய் முதலிய பொருள்களெல்லாம் மிகவும் மலிந்தபின்னரும் தேநீர், பணிகாரம் என்னுமிவைகளை முன்னர்ப்போற் கூடியவிலைக்கு விற்பது நீதியல்ல என்று தேநீர்க் கடைக்காரருக்கும் பணிகாரக் கடைக்காரருக்கும் பலமுறை ஓலமிட்டுச் சொன்னேம். ஆனால் அவர்கள் சிறிதேனும் மனம் இளகவில்லை. எவ்வளவு விலையை ஏற்றி விற்றாலும் வாங்கி அருந்துவதற்கு ஆட்களிருந்தால் கடைக்காரர் ஏன் குறைக்கப்போகின்றார்கள். இந்தப் பதார்த்தங்கட்கு விலையை மட்டுப்படுத்தவொண்ணாதா என்று பட்டின சங்கத்தாருக்கு இட்ட முறையீடு காட்டுக்கெறித்த நிலாப்போற் பயனற்றதாய் முடிந்தது. கொள்வாருங் கொடுப்பாரும் ஒத்துக் கொண்டால் இடையிற் புத்தி சொல்லப்போபவருடைய பேச்சு வீண்பேச்சாய் முடிதலுஞ் சகசந்தானே.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நியநாட்டுப் பொருள்களாகிய பீடி சிகறெற் முதலியவற்றைப் பஹிஷ்கரிக்கப் புறப்பட்ட வாலிபர் சங்கத்தார் சிறிது சோர்வடைய, பகிஷ்காரஞ் செய்த கடைகள் பலவற்றில் பீடிக் கட்டுகளும், சிகறற் தகரங்களும் பழையபடி தலைகாட்டத் தொடங்கிவிட்டன. இவற்றை உபயோகிப்போரும் வெளிப்படலாயினர். தானாகக் கனிந்தாலல்லாமல் தடிகொண் டடித்துக் கனிவித்தபழஞ் சுவை தராதாம்.

.....

* * *

உலகம் பலவிதம்: 1931 ஒக்டோபர் 08

பூர்வத்திற் சூரபன்மன் எனப்படும் அசுரன் அரிபிரமேந்திராதி தேவர்களை வருத்த அவர்கட்கு நேர்ந்த இன்னலை நீக்கத் திருவுள்ளங்கொண்டு முருகக்கடவுள் வீரவாகு தேவரைச் சூரபன்மனிடம் தூதாக அனுப்பினர். தூதுசென்ற வீரவாகு தேவரைச் சூரபன்மன் நீ யார் வந்த காரண மேதெனவினவ,

புரந்தரன்குறையயன் முதலமரர்தம்புன்மை
வருந்தும்வானவர் சிறையெலாநீக்கிமற்றவர்தந்
திருந்துதொல்லிறையுதவுவான் செந்திமாநகர்வந்
திருந் தவாதியம்பண்ணவனடியனேன் யானே.

அதாவது "இந்திரன்முதலிய தேவர்கட்கும் முனிவர்கட்கும் நீ செய்யும் இடரை நீக்கும்படி செந்திமாநகரத்தின் கண்ணே எங்கள் சண்முகத் தெய்வம் வந்திருக்கின்றார். அவருடைய தூதன் யான், உனது நோக்கமென்ன, அமரர் சிறையை விடப் போகின்றனையோ, இல்லை சமர்புரியப் போகின்றனையோ, சொல்லுதி" எனக் கேட்டார். அழிவுகாலஞ் சமீபித்தவனாகிய சூரபன்மன் "விண்ணவர் சிறையை விடுகிலேன், போர் புரிவேன்" என்று கூறித் தூதாக வந்த வீரவாகு தேவர்க்கும் இடர் செய்ய முயன்றான்; ஆனால் வாய்க்கவில்லை. சூரபன்மன் முதலாம் அசுரர் கதி என்னவாயிற்றென்பதை எவருமறிவர்.

* * *

ஸ்ரீ ராமசுவாமியிடமிருந்து இலங்கைக்குத் தூதுவந்த அநுமாரை இராவணன் அவமதித்துக் கொல்லநினைத்தான்; அநுமார் இராவணன் முதலாம் அரக்கருக்கெல்லாம் ஒருவாறு தப்பி ஜயத்தோடு இராமசுவாமியிடம் மீண்டார். பின்னர் வாலியின் மகனாகிய அங்கதன் இராவணனிடந் தூதுசென்றபோது இராவணன் அங்கதனைத் தன்வசமாக்க முயன்றான். அங்கதன் அதற்கு இடங்கொடாது தான் சென்ற கருமத்தைச்செய்துவிட்டு வெற்றியுடன் மீண்டான்.

* * *

பஞ்சபாண்டவர்பொருட்டுக் கிருஷ்ண பரமாத்மா நாகக்கொடியோனிடந் தூது சென்றார். சகுனி சொற்கேட்டு வணங்கா முடியோன் அவரை உபசரிப்பதை விடுத்து அவமதித்தான். கண்ணபிரான் அதனைப் பொருட்படுத்தினாரல்லர். துரியோதனன் மாயவனை நோக்கி "நீ வந்த நோக்கம் என்ன" எனக்கேட்க,

"சூதினால் அரசிழந்துநின் துணைவர்
சொன்னசொல்லும்வழுவாதுபோய்
ஏதிலார்களென நொந்து தண்ணிழல்
இலாதகானினிடையெய்தியும்
தீ திலாவகைகுறித்தநாள்பல
கழித்துவந்தனர்செகத்தினிற்
கோதிலாதகுருகுலமகீப அவர்
உரிமைநண்பொடுகொடுத்தியே"

என்று விடையிறுத்தார். உலுத்தனாகிய துரியோதனன் பரமாத்மாவின் நீதியான வேண்டுகோளுக்கு உடன்பட மறுத்தது மாத்திரமல்லாமல், பொறிப்பந்தரிட்டு அவரை அகப்படுத்தவும் நினைத்தான். மாயவனை அன்பினால் அகப்படுத்துவதே யல்லாமல் வஞ் சனையினால் அகப்படுத்த முடியுமோ; முடியாது. மேலும் "நீ பாரத அமரில் யாவரையும் நீறாக்கிப் - பூபாரந் தீர்க்கப் புகுத்தாய் புயல்வண்ணா" என்ற பிரகாரம் பாரதப்போர் நடக்கவேண்டுமென்னும் நோக்கத்துடன் கிருஷ்ணமூர்த்தி உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று கூறித் தூது சென்றமையினால் சமாதானம் ஏற்படவில்லை.

* * *

இப்பொழுது பாரதநாட்டின்பொருட்டு மஹாத்மா பிரித்தானிய அரசினரிடந் தூது சென்றிருக்கின்றார். கிருஷ்ணபரமாத்மாவைப் போலன்றி இந்த மகாத்மா பாரதநாட்டிற்குச் சுவதந்திரம் வேண்டுமென்று மனம் வாக்குக் காயம் ஒத்துச் சென்றிருக்கின்றார். முன்னே தூதாகச் சென்ற வீரவாகு தேவர் அநுமன் அங்கதன் கண்ணபிரான் எல்லாருக்கும் சென்றவிடத்தில் அபசாரமே நடக்க இப்பொழுது மகாத்மாவிற் கெனிலோ சென்றவிடமெல்லாம் உபசாரமே கிடைக்கின்றது. துரியோதனனுக்குச் சகுனி இடையூறாய் நேர்ந்தவாறு பிரித்தானிய அரசினருக்கு இடையூறாய்நேர்ந்த உவின்ஸ்ரன் சேர்ச்சிலும் மகாத்மாவை உபசரிப்பாராயினர். நல்லார்க்கு இல்லைப் பகை என்றவாறு மகாத்மாவிற்கு அங்கே பகையில்லை யெனலாம். முன் எவருக்கு மில்லாத உபசாரம் இங்கிலாந்தில் இப்பொழுது மகாத்மாவிற்கு நடக்கிறதென்று சொல்லலாம். மகாத்மாவின் நீதியான கேள்விகட்கு பிரித்தானியர் இசைவரேல் அவர்கள் நீங்காப்புகழையும் புண்ணியத்தையும் பெறுவர். மகமதியர் ஐக்கியப்படுவரேல் அழியா நன்மைகளை யடைவர்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1931 ஒக்டோபர் 15

ஒரு நரி ஒருநாள் மாமிசத்தை தின்று கொண்டிருக்கும்போது உடைந்த எலும்புச் சிராயொன்று அதன்நாக்கில் தைத்து ஏறிக்கொள்ள அதனால் நேர்ந்த வருத்தத்தைச் சகிக்கமுடியாமல் நரி பெரிதும் வருந்தி அந்த என்பு முள்ளை எப்படியெடுக்கலாமென்று சிந்திக்கையில் ஒரு கொக்கு நரியண்டை வந்து சேர்ந்தது. வந்த கொக்கை நரி பரிவுடன் பார்த்து, "கொக்கே, என் நாக்கில் தைத்த எலும்புமுள்ளை உன் கூரிய அலகுகளால் மெல்லப் பிடுங்கி என் வருத்தத்தை நீக்குவாயாகில் நான் உனக்குப் பெருஞ் சந்மானஞ் செய்வேன்" என்றது. கொக்கு அதற்கு உடன்பட்டு நரியை வாய்திறக்கச் செய்து அதன் நாக்கிலே தைத்திருந்த என்பு முள்ளைத் தன் கூரிய அலகுகளினாற் கொத்தியெடுத்து நரியின் வருத்தத்தையும் துயரையும் நீக்கிவிட்டது. நீக்கி முடிந்தவுடன் நரி கொக்கைப் பார்த்து, பெரிய உபகாரம் நீ போய்வா என்று சொல்ல, கொக்கு நீ தருவதாகச் சொன்ன சந்மானம் எங்கே, அதனைத் தந்தனுப்பு" எனலும் நரி "உன் தலையை உனக்குச் சந்மானமாகத் தந்திருக்கிறேனல்லவா; இதனைக்காட்டிலும் பெரிய சந்மானம் உலகத்தில் வேறென்ன" என்று சொல்லக் கொக்கு என் தலை என்னுடனிருக்க நீ அதை எப்படி எனக்குத் தந்தேன் என்கிறாய்; இது பொருந்தாத நியாயம்" என்றது.

* * *

இப்படிச் சொல்லக்கேட்ட நரி "ஏன் பொருந்தாது என்கிறாய்; நீ என் நாக்கிலுள்ள முள்ளை யெடுக்கும்படி அங்காந்த என் வாயுள் உன் அலகையுந் தலையையும் வைத்தபோது நான் வாயை இறுக்கி மூடியிருந்தால் உன் தலை உனக்குச் சொந்தமானதென்று இப்பொழுது சொல்லியிருக்கமாட்டாய்; அப்படிச் செய்யாமல் விட்டு உன் தலையையும், உயிரையும் உன் உடலில் இருக்கச் செய்தது நானல்லவா? இது உனக்கு நான் செய்யக்கூடிய பெருஞ் சந்மானமென்று நினைத்துக்கொண்டு திறுப்திப்பட்டு போய்விடு" என்று நரி சொல்ல, கொக்கு அந்த இடத்தைவிட்டுப் பறந்து போய்விட்டது. இப்பொழுது பணமுட்டுக் காலமென்றும், தொழின் முயற்சியில்லாக் காலமென்றுஞ் சொல்லி, அரசாங்க சபையிலிருக்கும் அதிகாரமற்ற சனப் பிரதிநிதிகள் ஐரோப்பிய உத்தியோகத்தரின் பிரயாணச் செலவு, உத்தியோக வேதனம் என்று சொல்லப்படும் இவைகளைச் சிறிது குறைக்கும்படி கேட்டபோது, அரசினர் அவைகளைக் குறைத்தல் முடியாது அவற்றைக் கூட்டிக் கொடாமலிருப்பதுதான் இப் பணமுட்டுக் காலத்தில் தொழிலற்ற காலத்தில் நாங்கள் உங்களுக்குச் செய்யக்கூடிய உபகாரமென நரி கொக்குக்குச் சொன்ன விதமாகச் சொல்லி விட்டார்கள். அரச வாக்கிற்கும் எதிர் வாக்குண்டா? ஒருபோதுங் கிடையாது. "வேந்தன் சீறின் ஆந்துணை இல்லை" யென்பர்.

* * *

புகைரதப்பாதை யமைத்தற்குப் பிரதானமாக இங்கே தேவையான பொருள்கள் மண்ணும் கல்லும் மரமும் தண்டவாளமுமாம். இவற்றுள் தண்டவாளம் இங்கிலாந்திலிருந்து வருகின்றது. இலங்கையில் மரங்கள் சிலிப்பர்கட்டைக்கு உதவாதென்று நமது அதிகாரிகள் கண்டுபிடித்து அவுஸ்திரேலியாவிலிருந்தே அவற்றை இப்பொழுது இங்கே தருவிக்கப் போகிறார்கள். எஞ்சியுள்ள கல்லு மண் என்னுமிரண்டனுள் கல்லைமாத்திரம் இங்கே வைத்துக்கொண்டு இங்கிலாந்திலிருந்தே கொண்டுவந்து இங்கே மண் போடுவார்களானால் அது மிகப்பொருத்த மாயிருக்கு மல்லவா?

* * *

பணமுட்டு தொழிலின்மை முதலியவற்றினாற்போலும் இக்காலத்தில் எமது நாட்டிலுள்ளவரெல்லாருங் கவலையுடையவர்களாகவே காணப்படுகின்றார்கள். மேலே சொல்லப்பட்ட இரண்டும் பொதுவாக எல்லார்க்குங் கவலைக்குக் காரணமென்றாலும் விசேஷமாக இன்னாரின்னார்க்கு இன்னின்ன பொருள்களில்லாமையினாலேதான் கவலைக்கிடமாக விருக்கின்றதென அறிவதே சிறப்பாம். பிராமணராயுள்ளார்க்குப் பணமுட்டுக்காரணமாக இப்பொழுது தானதருமங் குன்றிவிட்டமையினால் தங்களுக்குப்போதிய வரும்படியில்லையென்ற கவலை. அரசர்களுக்குத் தம்தாயகத்திலுள்ளார்கள் பணமுட்டினாற் சங்கடப்படுகின்றார்களேயென்ற கவலை. வியாபாரிமாருக்குப் பொருள்கள் மலிந்திருப் பதனால் சரிக்குச்சரி இலாபம் வைத்து விற்று விரைவில் அதிகபொருளீட்டவகையில்லை யென்ற விசனம். வேளாளராகிய கமக்காரருக்கு விதை மழைதானுமில்லாமல் முளைத்தபயிரெல்லாம் வெயிலாற் காய்ந்துபோகின்றனவேயென்ற விசாரம். தொழிலாளருக்கு எவ்வகையான தொழிலையுஞ் செய்யமுடியவில்லையேயென்ற விசாரம். பிதாமாதாக்களுக்கு, படித்த தங்கள் பிள்ளைகள் உத்தியோகங்கிடையாமல் தமக்கும் பூமிக்கும் பாரமாகத் தெருவழியே திரிகின்றார்களேயென்ற விசாரம். வாலிபருக்கு நாம் ஏதும் உத்தியோகம் பெற்றாற்றானே தக்க சீதனத்தோடு நாகரிகமான கன்னிகையைக் கல்யாணஞ்செய்து கொள்ளலாம் அது இல்லாதபோது இதுவும் கிட்டாதேயென்ற விசாரம். நியாயவாதிகளாகிய பிறக்ரர் அப்புக்காத்துமாருக்கு இப்பொழுது வியாச்சியங்கள் அதிகமில்லையேயென்ற விசாரம். மதுபானிகளுக்கு, மரவரியேனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறணையேனும் விரைவில் வரக்காணோமே, வந்தால் ஆசைதீரக் குடிக்கலாமேயென்ற துயரம். இவைகளுட் சிலருக்கு, தாம் குடிப்பதற்காகப் பணஞ் செலவிட்டுப்பயணப்பட்டுப் பருத்தித்துறை சாவகச்சேரி யென்னுந் தூரித்த இடங்கட்குப் போகவேண்டியிருக்கின்றதே; அந்த ஊர்களுளொன்றில் சாநித்தியமாயிருக்க வாய்க்கவில்லையேயென்ற கவலை. பெண்களுக்கும் பொன் வினைஞருக்கும் பவுண்விலை கூடிவிட்டதே ஆபரணஞ்செய்யவும் செய்விக்கவும் வாய்க்கவில்லையேயென்ற துயரம். படிக்கும் பிள்ளைகளுக்குப் படித்தும் பின்னுக்குப் பயனில்லையேயென்ற துயரம். உபாத்தியாயர் களாயுள்ளார்க்கு, வித்தியாபகுதியாராலும், மனேஜர்மாராலும் தலைமையாசிரியராலும் தங்களுக்கு நெருக்கமுண்டேயென்ற கவலை, பத்திரிகை நடாத்துவோருக்கு, பத்திரக்கிரயம் வந்து சேரவில்லையேயென்ற கவலை, இங்குள்ள சைவ மக்களெல்லாருக்கும் தீபாவளி சமீபித்துவிட்டதே புடைவை வாங்குவதற்குப் பணமுட்டுக் காலத்திற் பொருளுக்கு வகையென்ன என்ற சிந்தனை. பட்டினச் சங்கத்தில் அங்கத்தவராய் வர முயற்சி செய்வார்க்கு நமது முயற்சி வாய்க்குமோ வாய்க்காதோ என்ற சிந்தனை. இங்ஙனம் "மாந்தர் குடி வாழ்க்கை மண்ணின் கலம் போலச் சாந்துணையுஞ் சஞ் சலமேதான்" என்ற விதமாயிருக்கிறது.

* * *

உலகம் பலவிதம்: 1931 ஒக்டோபர் 22

பட்டினசங்க அங்கத்தவர்களைத் தெரிவு செய்தனுப்பும்காலஞ் சமீபிக்கின்றது; சமீபிக்கவே இப்பொழுது அங்கத்தவர்களாயுள்ளாரும் புதியராய் அங்கப்பதவியை அடைய விரும்பினாரும் மெல்லமெல்ல வெளிப்பட்டுத் தனித்தனி முயற்சி செய்கின்றனர். இலங்கை அரசாங்கசபையைப் பகிஷ்காரஞ் செய்த நம்மவர்கள் இந்தப் பட்டினசங்க விஷயத்தில் சிரமப்பட்டு முயற்சித்து அபேட்சைகொண்டு நிற்பரென நாம் முன்னர்க் காத்திருக்கவில்லை. நாம் எதிர்பார்த்திருந்ததற்கு மாறாக இப்பொழுது அங்கத்தவராய் வரவிரும்புவோர் புத்தபிமானத்தோடு உழைக்கின்றனர். இந்த விஷயத்தில் நம்மனோர் இப்படியபேட்சித்து நிற்பது ஆவசியகமோ என்பதை ஆராய்வோம். போலிச் சுதந்திரத்திலும் போலி அதிகாரத்திலும் எவ்வகையான நன்மையுமில்லை யென்பதைப் பாரதத் தலைவர்களாகிய மகாத்மா முதலியோர் உலகத்தார்க்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் வெளிப்படையாகக் காட்டிவிட்டார்கள். மகாத்மா காந்தி ஜவர்கலால் நேரு கமலாதேவி முதலாம் இந்திய தேசாபிமானிகளின் போதனைகளை யாழ்ப்பாணத்தவர்களாகிய நாங்கள் நேரே கேட்டுள்ளேம். அவர்கள் தேசத்தின்பொருட்டுப் படும்பாட்டைப் பார்த்துள்ளேம். சுவதந்திர விஷயமாக இப்பொழுது நடப்பனவற்றையும் அறிகின்றேம். அவர்களுடைய போதனையும் செயலும் மேலானவைதாம் என்ற துணிவு எங்களிடம் உண்டென்றால் இந்தப் பட்டினசங்க அங்கத்துவ விஷயத்தில் இன்னமும் நாங்கள் பரஸ்பரம் பிணங்குதல் அடாதாகும். பணமுட்டு நேர்ந்துள்ள இக்காலத்தில் பட்டினசங்க அங்கத்துவத்தை விரும்பிப் பணஞ் செலவிடுதலும் சிரமப்படுதலும் மனஸ்தாபம் அடைதலும் குறை கேட்பதும் அநாவசியமாகும்.

* * *

ஒருகருமத்திற்றலையிடும்போது அதனாற் புகழ் புண்ணியம் பொருள் என்னும் மூன்றையும் இல்லையேல் இரண்டையும் முடியாதாயின் இவற்றுள் ஒன்றையேனும் பெற முயலுதல் வேண்டும். பட்டினசங்கத்திற் பிரவேசிப்பதனால் இந்த மூன்றுள் எதனையும் பெறுதல் முடியுமென நாம் நினைக்கவில்லை. இதன்கட் சேர்வதனாற் பெறத்தக்கது பழியும் பகையும் புறங்கூறப்படுதலுமேயாகும். பட்டின சங்கத்தில் அங்கத்தவர்களாய் வரவிரும்புவோர், தாம் பலநன்மைகளைச் சங்கத்திற் சேர்ந்தவுடன் செய்வதாக வாக்கழிக்கின்றனர். சேர்ந்தபின், "சொன்னபடி ஏன் அக்கருமஞ்செய்யவில்லை" என்று கேட்டால், "நான் என்னசெய்வேன், அந்த விஷயத்திற் கூடியமட்டும் பாடுபட்டேன்; ஆனால் மற்றை அங்கத்தவர்கள் என் பிரேரணைக்கு இடையூறாய் நிற்கிறார்கள்; அதனால் ஒன்றுஞ் செய்ய முடியவில்லை" என்கிறார்கள். ஆனால் உண்மையில் இவர்களால் ஒன்றும்செய்ய முடியாதபடியே சங்க அமைப்பு அரசாட்சியாராற் செய்யப்பட்டுள்ளது. இதைச் சொல்ல வெட்கப் படுகின்றார்கள். போலிமரியாதையை அபேட்சிக் கின்றனர்.

* * *

உண்மையாக ஊருக்கு நன்மைசெய்ய வேண்டுமேயானால் பட்டினசங்கத்திற் சேர வேண்டியதுமில்லை, அரசாங்க சங்கத்திற் சேர வேண்டியதுமில்லை; வாலிபர் மகாநாடு தேசியசங்கம்போன்ற அபிமானம் பூண்ட சங்கங்களிற் சேர்ந்து உழைத்தல் கூடும். மனம் வாக்குக் காயம் என்னுந் திரிகரணங்களும் ஒத்துத் தேச நன்மையின்பொருட்டு உழைப்பவரெனில் பட்டின சங்கம் கிராம சங்கம் அரசாங்க சபை முதலியவைகளெல்லாம் தம்மிடஞ் சேர்த்துக்கொள்ளத் தனித்தனி தேடித்திரியுமல்லவா? இவைகளை நம்மவர்கள் யோசித்துக் காலத்திற்குத் தக நடப்பார்களாக.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1931 நவம்பர் 05

"இங்கே பாருங்கள், போன தீபாவலிக்கும் நல்ல சேலை சட்டை எடுத்துத் தருகிறேன் தருகிறேனென்று சொல்லிச் சமையத்தில் எடுத்துத்தராமற் கடத்திவிட்டீர்கள்; இந்த முறையும் அப்படிச் செய்துவிடவொண்ணாது; எங்கேனும் போகவர, கோயில் குளத்திற்குக் கட்ட ஆன சேலையில்லை; விலை கூடினதாய் நல்லதாய்ப் பார்த்து ஒரு சேலையும் வீட்டிற்கு வெவ்வேறுநிறத்தில் இரண்டுசேலையும், இவைகளுக்குத்தக்க சட்டைச் சீட்டையும் எடுத்துத் தந்தாற்றான் இந்தமுறை தீபாவலி கொண்டாடுவதும் முழுகுவதும் என்று நினைத்துக் கொள்ளுங்கள்; இல்லாவிட்டால் அன்றைக்கு அடுப்பிலே நெருப்பும் மூட்டமாட்டேன்; இந்த நாளில் சீலை துணிகளெல்லாம் கண்டபடி மலிந்து கிடக்க உங்களுக்கு வாங்க என்ன பஞ்சி" என்று அன்னம்மாள் கரைந்தாள்.

* * *

"நீ என்னடியப்பா, எப்போது பார்த்தாலும் நல்லநாட் பெரியநாள் வருகிறதென்று கண்டால் ஒப்பாரி சொல்லத் தொடங்குகிறாய், பிள்ளைகளும் தலைப்பட்டுவிட்டார்கள்; இனி, பிள்ளைகளின் சிறப்பை, கட்டிப் பூட்டிப் பார்ப்பதைவிட்டு நீ எந்தநாளும் மணவறையில் இருக்கப் பார்க்கிறாய்; தலையில் மயிரும் நூற்றுக்கு 5 விகிதம் நரைக்கத் தொடங்கிவிட்டது; எங்கள் காலந்தான் போய்விட்டதே; இனி, அறுபதுநாளைக்கு எழுபதுகந்தை என்றல்லவா நாம் நினைத்து நடக்கவேண்டும்; அல்லாமலும் பணமில்லாமல் மனுஷர் படும்பாட்டை நீ அறியாய்; இந்த நாளையிற் காசைக்காண எனக்கு ஆசையாயிருக்கிறது; மேலும் நீ பரித்தி வேண்டாம் பட்டு வேண்டுமென்கிறாய்; உலகத்திலே எத்தனைபேர் மாறியுடுக்கத் துணியில்லாமல், உடுத்த துணியை அலம்ப முடியாமல் சஞ்சலப்படுகிறார்கள்; ஈரச்சேலையில் பாதியை உடுத்தபடி மற்றப்பாதி காயும்வரைக்கும் அதன் ஒரு தலைப்பை உயரத்திற் கட்டிவிட்டு வெய்யிலிலே நிற்கிறார்கள்; ஏதோ நாம் முற்பிறப்பிற் செய்த அற்ப புண்ணியத்தினால் கடவுள் நம்மை வறுமையிற் செம்மையாக வைத்திருக்கிறார். மானத்தைக் காப்பதற்காகிய சேலைக்குத் தெய்வம் நமக்குக் குறைவில்லாமல் வழி காட்டி விட்டதேயென்றல்லவா நினைத்திருக்கவேண்டும்; ஒரு சேலைக்குமாத்திரம் பத்துப் பதினைந்து ரூபா செலவழித்து என்னைக் கொண்டு வாங்குவித்து உடுத்திக்கொள்ளும் நீ நாலுஐந்து ரூபாவுக்கு ஒவ்வொரு சேலையை வாங்கி உடுத்திக்கொண்டு எஞ்சிய காசுக்கு ஏழைகளாயுள்ளார்க்கு ஏதுந்துணிவாங்கிக் கொடுத்தால் அதுபோன்ற புண்ணியம் ஏது முண்டோ? இவைகளை இன்னமுமேன் நினைக்கிறாயில்லை; நீ பள்ளிக்கூடத்திற் படித்ததென்று சொல்லுகிறாயே; இப்படியான நல்ல கருமங்களைச் செய்தால் எங்கள் பிள்ளைகள் பிற்சந்ததியாரும் நல்லாயிருப்பார்களல்லவா; "போம்பொழுது அருந்துணை புரிந்தபுண்ணியம்" என்று பாடல் படிப்பில் நீ கேட்டதில்லையா; உனக்கு விலைபெற்ற சேலை வாங்கித்தரப் பிரிய மில்லாமல் இப்படியெல்லாஞ் சொல்லுகிறேனென்று எண்ணாதே; வயசு செல்லச்செல்ல ஆணுக்கானாலுஞ் சரி பெண்ணுக்கானாலுஞ்சரி அறிவும் ஏறவேண்டும்; நான் இல்லாத காலத்தும் நீ புத்தியாய் நடக்கட்டும் என்று இதனைச் சொன்னேன்" என அப்புத்துரை தன் மனையாளாகிய அன்னம்மாளுக்குச் சொல்லி முடித்தார். அப்புத்துரை ஒன்று சொல்ல அதற்கு உத்தரமாக இரண்டு சொல்லும் அன்னம்மாள் இன்று தன் புருஷன் சொன்ன விதத்தினாலும் சொல்லும்போது மனப்பூர்வமாக ஏழைகள்பொருட்டு வருந்திச் சொன்னமையினாலும்போலும் அவள் தன் கணவன் வார்த்தைக்கு எதிர்வார்த்தை பேசாதவளாய் அவர் சொன்னதை ஒத்துக்கொண்டாள்.

* * *

குடிகாரன் மனையாள்:- தன் புருஷனைப் பார்த்து "என்ன இரண்டு மூன்று நாட்களாய் மெத்தக் கவலையோடும் யோசனையாடுந் திரிகிறீர்களே உங்களுக்கு என்ன கவலையென்று எனக்குச் சொல்லக்கூடாதா?

குடிகாரன்:- "கவலையென்ன, தீபாவலியும் கிட்ட வருகிறது; உன் நகைவகையெல்லாவற்றையுங் கொண்டுபோய்ச் செட்டிவீட்டில் அடைவுவைத்து விட்டேன்; தீபாவலிக்கு என்ன செய்வதென்றது தான் கவலை;

மனையாள்:- பணமில்லாவிட்டால் இந்த முறை தீபாவலி கொண்டாடாமல் விடுவது; இல்லாமைக்கு என்ன செய்யலாம். இப்பொழுதென்ன சீலை உடுக்காமலிருக்கிறோமோ?

குடிகாரன்:- சீலைவாங்கி உடுப்பதற்கல்ல, வருடத்தில் ஒருமுறை வருகிற தீபாவலி, அன்றைக்காயினும் சாவகச்சேரி இல்லையேல் பருத்தித்துறைக்குப்போய் இரண்டுபோத்தல் சாராயம் வாங்கிக்கொண்டு வந்துகொண்டாட வகையில்லையே;

மனையாள்: ஐயோ இந்த அநியாயக் குடியால் நல்லாயிருந்த எங்கள் குடி இப்படி மண்ணாய்ப் போகவும் இன்னும் உங்களுக்கு அறிவு வரவில்லையே. இனிக்குடிக்கில் என்னை விற்றல்லவோ குடிக்கவேண்டும்" என்று சொல்லி யழுதாள்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1931 நவம்பர் 12

"பெற்றமனம் பித்தும் பிள்ளை மனங் கல்லும்" என்று உலகத்திலே சொல்லுவார்கள். அதாவது பிள்ளைகள் பெற்றாரிடத்துச்சிறிதுஅலட்சியமாகவிருந்தாலும்பெற்றார் அதனைப் பொருட்படுத்தாது தங்கள் பிள்ளைகளிடத்து எப்பொழுதும் இரக்கமாயிருப்பார்களென்பதாம். ஆனால் கொழும்பிலே தாயொருத்தி தன் பிள்ளைக்குச் செய்த சிறுப்பினையை நோக்குமிடத்து, பிள்ளைமனம் பித்தும் பெற்றமனங் கல்லும் என்று பழமொழியை மாற்றிக் கூறவேண்டியிருக்கிறது. வித்தியாதரிசியாகவிருந்து காலஞ் சென்ற முதலியார் றிச்சேட் டீ சில்வா என்பவரின் மகளாகிய சுபத்திரா என்னுங் கன்னிகை, தன்னைப் பெற்றதாயாகிய லிடியா என்பவள் தன் மோட்டரதச் சாரதியாகிய அபயக்கோன் என்பவனுடனும் மேரியென்னும் ஆயாளுடனுஞ் சேர்ந்துகொண்டு பிள்ளையாகிய தன்னைக் கண்டபடி வைது அடிக்கிறாள் எனக் கொழும்புப் பொலிஸ் நீதிபதியிடம் முறையிட்டிருக்கிறாள். இந்தச்சிறுமி சொல்லிய பரிதாபமானமுறையீடாவது: நான் உணவுண்ணும் பாத்திரத்தை எப்பொழுதும் நானே கழுவுதல் வேண்டும்; ஒருநாள் இப்படிக் கழுவுவதற்காக நான் தண்ணீர் எடுத்தபோது ஆயாள் என்னைத் தண்ணீர் எடுக்க வேண்டாமென்று தடுத்து ஏசினாள்; என்தாய் என்பவளும் ஓடிவந்து ஆயாளோடு சேர்ந்து என்னைக் கண்டபடி வைதுவிட்டு உடனே மோட்டரதமோட்டியாகிய அபயக்கோனுக்குச் சொல்வதாகத் தெரிவித்தாள்; இரவு பத்துமணி வரையிலிருக்கும் நான் என் அறையில் படுத்துறங்கும்போது அபயக்கோன் அறையுட் புகுந்து என்னை மயிரிற் சுற்றிப்பிடித்து இழுத்துக் கீழ்விழுத்திப் பலமுறை யடித்தான்; அதனைக் கண்ட என் தாயும் ஒரு தடியெடுத்துக் கொண்டு ஓடிவந்து என்னை யடித்தாள்; போதாதென்றுபோலும் ஆயாளும் வந்து என்னை அடித்தாள்" இதுவே மகளின் முறையீடு; வழக்கு நவம்பர்மாதம் 12ந் தேதி (இன்று) தவணையிடப்பட்டிருக்கின்றது. இதுவும் கலிகால விந்தையே. "பொல்லாத சேயெனில் தாய்தள்ள நீதியோ புகலிடம் பிறிதுமுண்டோ" என்றபிரகாரம் பெற்ற பிள்ளைதான் பெருந் தீமையைச் செய்தாலும் நற்றாய் அப்பிள்ளையின் பிழைகளைச் சகிப்பாளேயல்லாமல் ஒருபோதும் பிள்ளைக்கு நிஷ்டூரஞ் செய்யமாட்டாள். ஆனால் இந்தத் தாயின் நோக்கம் புலப்படவில்லை.

* * *

கொள்ளுப்பிட்டியில் சென்ற வியாழக்கிழமை ஒரு இந்தியபெண் ஒரு குழந்தையை பிரசவித்தவுடன் அதனையும் எடுத்துக்கொண்டு பஸ்லயின் தெருவிலுள்ள இன்னொரு தமிழ் வீட்டிற் போய்ச்சேர்ந்தாள்; சேர்ந்து சிறிது நேரஞ்செல்ல அச்சிசுகாதகி தான் பெற்ற பிள்ளையை வீட்டின் பின் விறாந்தைக்கு எடுத்துக்கொண்டுபோய் மெல்ல இருந்து மடியிற் குழந்தையை வளர்த்திக்கொண்டு அதன் கழுத்தை நெரித்துக் கொல்ல முயல, குழந்தை வீரிட்டழ, அடுத்த வீட்டிலுள்ளார் ஓடிவந்து குழந்தையைத் தாய் கொல்லவொட்டாது தடுத்து அவளையும் குழந்தையையும் பொலிசர்வசம் ஒப்புவித்தனர். பொலிசரிடம் ஒப்புவிக்கப்பட்டபோது அவள் குடி வெறி கொண்டிருக்கக் காணப்பட்டாளாம். மேலே சொல்லப்பட்ட கன்னிகையின் தாயோ இக்குழந்தையின் தாயோ மிகக் கொடியவளென்பதைப் படிப்போர் யோசித்தறியக் கடவர்.

* * *

"பொல்லாத மூர்க்கருக் கெத்தனைதான் புத்தி போதிக்கினும் நல்லார்க்குண்டான குணம் வருமோ" வரப்போவதில்லை; தீபாவலி ஒரு விரததினமாகக் கொண்டாடப்பட வேண்டியதென்றும் இப்புண்ணிய தினத்தில் சொல்லப்பட்டதற்கு நேர் விரோதமாக உண்டாட்டுக் களியாட்டுச் செய்தலை விடவேண்டுமென்றும் புலையுஞ் கொலையுங் களவுந் தவிர்க்கப்படவேண்டுமென்றும் இந்த யாழ்ப்பாணத்துள்ள பாமரசனங்கட்கு ஒருமுறையல்ல, பலமுறை யெடுத்துச்சொல்லி ஓலமிட்டாலும் அவர்கள் இந்த இதோபதேசங்களுக்குச் செவி கொடாது தாம் நினைத்த நினைத்தபடியே பல அநர்த்தங்களைச் செய்கின்றார்கள்; சென்ற திங்கட்கிழமை தீபாவலி நடந்தேறியது; பண முட்டான காலமாக விருந்தாலும் வஸ்திரம் இவ் வருடம் அதிகம் மலிந்தமையினால் சனங்கள் பண முட்டைப்பாராது அற்ப பணத்துடன் வஸ்திரங்களை வாங்கத் தக்கவர்களானார்கள். ஆனால் இங்குள்ள பாமர சனங்கள் பணமுட்டான இக்காலத்தில் வஸ்திரம் மலிந்ததேயென்று மகிழ்ச்சியடைந்து இயன்றவரையிற் செலவைச் சுருக்கித் தீபாவலி கொண்டாடுவதை விடுத்து, உடுக்குந் துணிவாங்கும் விஷயத்திற் சிக்கனவு பாராட்டி, குடிக்கும் விஷயத்திற் கண்டபடி பணத்தைச் செலவிடத்தொடங்கிவிட்டனர். இவர்களுக்கு வசதியாகச் சாராயத்தவறணைகள் பருத்தித்துறையிலும் சாவகச்சேரியிலும் வந்து விட்டனவல்லவா. தீபாவலிக்குத் தமக்கும் தம் மனைவிமக்கள் மற்றும் குடும்பத்தார்க்கும் புடைவை வாங்குவதை தீபாவலித் தினத்தன்றைக்கே வைத்துக்கொண்டு முதனாள் இல்லை யேல் இரண்டொரு தினம் முந்தியே சாவகச் சேரிக்கும் பருத்தித்துறைக்கும் பலர் புறப்படலா யினர்; இப்படிச் சென்றவர்களுட் பலர் வயிற்றில் 1 போத்தல் சாராயத்தை விட்டு நிறைத்தும், தத்தம் திருக்கைகளில் ஒவ்வோர் சாராயப் போத்தல்களைப் பரித்தும் பருத்தித்துறை சாவகச்சேரி யென்னும் புண்ணிய தலங்களிலிருந்து மீண்டு வருவாராயினர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி வருபவர்களுள் ஒருவன் ஐயோ எங்களுக்கும் இராவணனைப்போல 20 கைகளிருந்தால் நாங்கள் ஒரே முறையில் 20 போத்தல் சாராயத்தைக் கொண்டுவர முடியுமேயென்ன, மற்றவன் இராவணனுக்குப்போல் 20 கைகள் எங்களுக்கு வருமானால் 10 வாய்களும் வந்து சேருந்தானே, அதிலென்ன சுகம், 20 கையும் 10 வாயும், 2 கையும் 1 வாயும் சாராய விஷயத்திற் சரிதானே; 20 போத்தல் சாராயம் வேணுமானால் எங்களில் 10 பேர் போய் இருபது கையிலும் கைக்கொன்றாகக் கொண்டுவரலாந்தானே யென்றான்; அதற்கு முந்தியவன் 10 பேருக்கும் புகைரதக் கிரயம் 10 மடங்கு இறுக்கவேண்டி வரும், இராவணனைப் போலென்றால் ஒரு ஆளுக்காகிய கிரயந்தானே கொடுக்கவேண்டி வருமென்றானாம்.

* * *

உலகம் பலவிதம்: 1931 நவம்பர் 19

இங்கே மழைபெய்யத் தொடங்கியபின் அட்டை, மயிர்க்கொட்டிப்புழு, நுளம்பு என்னு மிவைகளின் உபத்திரவம் தொடங்கிவிட்டது, இவற்றோடு யாழ்பாணப் பட்டினசங்க எல்லையினுள்ளே பட்டின சங்கப்பிரதிநிதிகளாய்த் தம்மைத் தெரிவுசெய்வித்தற்கு முற்பட்டு நிற்போரின் உபத்திரவத்தை ஒருவாறு சகித்தாலும் இப்படி முற்பட்டுநிற்போரின் பரிவாரங்களின் உபத்திரவம் தாங்குதற்கரியதென முருகேசு முறையிடுகின்றார். வட்டாரப்பிரதிநிதிகளாய் வர முற்பட்டு நிற்போர் பரஸ்பரம் மாறாக எழுதி அச்சிடுவித்து வெளியிடும் கண்டனத் துண்டுப் பத்திரங்கள் கணக்கற்றன. இந்த யாழ்ப்பாணம் திருந்துவதெக்காலம்.

* * *

இலங்கையிலுள்ள பொலிசருக்குப் பொல்லாதகாலம் பிடித்துக்கொண்டது போலும்; சென்ற இரண்டுமாச காலத்துள் 2 பொலிசர் கொலையுண்டனர்; இரண்டு மூன்று தினங்கட்கு முன்னர் கொட்டாஞ்சேனைக் கணித்தான ஒரு தோட்டத்தில் ஏதோ கலகத்தையிட்டுப் பொலிசர் விசாரணை செய்துகொண்டிருக்கும்போது ஜயலாத், வேலுப்பிள்ளையென்னும் இருபொலிசரைக் கலகக்காரர்கத்தி கொண்டும்இருப்புப்பாரைகொண்டுந் தாக்கி ஊறுசெய்துவிட்டனர்; இவர்களுள் ஜயலாத்தின் நிலைமை ஆபத்தாகவிருக்கின்றது; இவைகளொருபுறமிருக்க யாழ்ப்பாணத்திலே சார்ல்ஸ் என்னும் ஒரு பொலிஸ் யாழ்ப்பாணம் மறியல்வீட்டிலுள்ள சிறையாளர் இருவரை மறியற்கூட அதிகாரிகளுடன் சேர்ந்து மேதர் பணவங்கியைத் திருடும்படி தூண்டி உதவிசெய்ததாக, குறித்த மறியற்காரரின் விசாரணையில் வெளிவரலாயிற்று; மேலும், பொலிஸ் உபபரிசோதகரொருவர் கதிரேச பிள்ளை வீட்டிற் சென்று உவிஸ்கி சோடா என்னும் பானங்களையருந்தியதாகத் தாமே விசாரணையில் ஒத்துக்கொண்டார்; இப்பொழுது வெள்ளவத்தையில் பெறிறா என்னும் ஒரு பொலிஸ், ஏதும் பிழைப்புத்தேடிச் சென்ற லீலாவதி நோனா என்னுங் கன்னிகையை ஏமாற்றிக் கூட்டிக்கொண்டு சென்று ஒரு வீட்டில் தீயநோக்கத்துடன் வைத்திருந்ததாகக் குறித்த சிறுமியின் மாமன் மாமியர் பொலிஸ்மீது வழக்குத்தொடர்ந்திருக்கின்றனர். இந்தநாட்களில் பொலிசாருக்கு மாறாக நீதிபதிகள் சிலர் சொன்ன குறிப்புரைகளும் உண்டு. இவற்றையெல்லாம் யோசிக்குமிடத்து பொலிஸ்பகுதியார் தங்கள் பூர்வமகத்துவத்தைக் காலந்தோறும் இழந்து கொண்டு வருகின்றனரென்பது புலப்படக்கிடக் கின்றது. பொலிசர் ஊரிற் சமாதானத்தைப் பொருட்படுத்தாமல் சமய விஷயங்களிலும் ஆலய விஷயங்களிலும் அவ்வச்சமயவாதிகட்கு மாறாக வழக்கத்திற்கு விரோதமாகத் தலையிடப் புறப் பட்டமையினாற்றான் அவர்கட்கு இப்படியான அநர்த்தங்கள் நேரத்தலைப்பட்டனவென்று முருகேசு சொல்லுகிறார்.

* * *

சூரபன்மனைச் சங்கரித்தது சுப்பிரமணியப் பெருமானென்றும் கயமுக சம்மாரஞ் செய்தது விநாயகக் கடவுளென்றும்தான் சைவ நன்மக்களெல்லாருங் கைக்கொண்டு இதன்படியே உற்சவமும் நடத்தி வருகின்றனர். புராண திலகமாக விளங்கும் கந்தபுராணம் முதலியவற்றிலும் இப்படித்தான் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் யாழ்ப்பாணத்தில் ஒரு கிராமத்துள்ள ஒரு பிள்ளையார் கோவிலிலே, சில தினங்கட்குமுன்னர் சூரசம்மார உற்சவம் நடந்தபோது; மேற்படி கோயிலதிகாரி "ஏன் விநாயகர் இந்தமுறை சூரசம்மாரஞ் செய்தாலென்ன" என்று விநாயகமூர்த்தியையே உற்சவத்திற்கு எழுந்தருளச் செய்யவேண்டுமென்று கோயிற் குருக்களுக்குக் கட்டளையிட, குருக்களும் அப்படியே பிள்ளையாரைக் கொண்டு சூரசம்மாரஞ் செய்வித்தாரென்ற சமாசாரம் எங்களுக்கு எட்டியிருக்கின்றது; இந்தத் துரோகமான செயலால் வரக்கூடிய சிவாபராதம் ஆகமவிரோதமான செயலைச் செய்யென்று சொன்ன கோயிலதிகாரியைச் சேருமா, இல்லையேல் அந்த அதிகாரி சொல்லுக்குப் பயந்து செய்யத்தகாத வேலையைச் செய்த குருக்களைச் சாருமா, இல்லையேல் இவற்றையெல்லாங் கண்டுகொண்டும் அச்சத்தினாற் போலும் இவ்வுற்சவத்திற் பங்குபற்றிய கிராமவாசிகளைச் சேருமா, இல்லையேல் எல்லாரையும் ஒருங்கு பீடிக்குமா நாம் அறியோம். இனி, இவ்வருட சூரசம்மாரம் இப்படியாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவருடம் விநாயகக் கடவுள் யாரைச் சங்காரஞ் செய்யப்போகின்றா ரென்பதையும் இப்பொழுது அறிதல் முடியாது.

* * *

உலகம் பலவிதம்: *1931* நவம்பர் *26*

இடம்: சாவகச்சேரிப் பிரமர்கோவிலுக் கணித்தாயுள்ள மணற்றிடல்; காலம்: பின்னேரம் 5 மணி. அச்சமையத்திற் கூடியது சாராய மகாநாடு; அவைத்தலைவர்: மிஸ்ரர் பிறண்டித் துரை; காரியதரிசி: மிஸ்ரர் ஐயாத்தம்பி; பிரசாரகர்: மிஸ்ரர் சாரயநாதனவர்கள்; தென்மராட்சியின் ஏனைய பாகங்களிலிருந்தும், வடமராட்சியைச் சேர்ந்த பருத்தித்துறையிலிருந்தும் மதுபானசங்கப் பிரதிநிதிகளாகிய சொல்விளம்பியப்பன் முதலாம் பிரதிநிதிகளும் மதுபான அபிமானிகள் பலரும் மரமேறிகள், குத்தகைக்காரர் முதலானோரும் பன்னூற்றுக் கணக்கானோர் சமுகமாயிருந்தார்கள்; நாலரைமணியாதலும் மதுப்பாட்டோடு மகாநாடு ஆரம்பித்தது; அச் சமையத்தில் தலைமையோடு கூடிய ஒருவர் சபைத்தலைவராகிய மிஸ்ரர் பிறண்டித்துரைக்கும் பிரசாரகராகிய மிஸ்ரர் சாராயநாதனுக்கும் மாலையிட, சபையோரெல்லாரும் கரகோஷஞ் செய்தனர். பின்னர் அவைத்தலைவராகிய பிறண்டித்துரை கரகோஷத்திற் கிடையே எழுந்து செந்தமிழ்மொழியிற் பின்வருமாறு கூறினர்:

"சகோதரர்களே, பிரதிநிதிகளே, மதுபான அபிமானிகளே! இன்று இங்கே இந்த மகாநாடு கூட்டப்பட்டதன் காரணத்தையும் பிறவற்றையும் இங்கு வந்திருக்கும் சொற்பொழிவாளராகிய திரு. சாராயநாதனவர்கள் உங்களுக்கு எடுத்துச் சொல்லுவார்; உங்களைப்போல் அவர் மூலமாகவே நானும் காரணத்தை அறியக் காத்திருக்கிறேன்; நிற்க, சொற்பொழிவாளராகிய திரு. சாராயநாதனவர்களைப்பற்றி நீங்களெல்லாரும் நன்றாய் அறிவீர்கள்; உங்களுட்பலர் பல்லாற்றானும் இவரோடு ஊடாடி இவருடைய திறமைகளை அறிந்திருப்பீர்களென்று நினைக்கிறேன்; இவர் வாக்குவல்லபத்தில் திருவாளர் சொல்விளம்பியப்பனுக்கு இரண்டாவதாக வைத்து எண்ணப்படுபவர்; ஆனால் நினைத்த கருமங்களைச் செய்து நிறைவேற்றும் விஷயத்தில் நமது நண்பர் திருவாளர் சொல்விளம்பியப்பரும் இவருக்கு ஈடாகமாட்டார்; இந்தச் சமையத்தில் அவைத்தலைமை வகிப்பதாகிய கடமையை, அதற்குச் சிறிதும் அருகனல்லாத எனக்கு நீங்கள் உதவியதையிட்டு உங்களுக்கு மனமுவந்த நன்றி சொல்லுகின்றேன்; நீங்களெல்லாரும் என்னுடைய சாரமற்ற பேச்சைக்கேட்டு நேரத்தைப் போக்குவதைக் காட்டிலும் திரு. சாராயநாதனவர்களுடைய சாரமான சொற்பொழிவைக் கேட்க அங்கலாய்ப்பீர்களென நினைத்து, நான் இவ்வளவில் என் பேச்சை இப்போதைக்கு நிறுத்துகிறேன்".

* * *

அக்கிராசனருடைய ஆரம்பவுரை முடிந்தவுடன் சபையோர் செய்த கரகோஷத்திற்கிடையே பிரசாரகராகிய திரு. சாராயநாதனவர்கள் எழுந்து தமது சொற்பொழிவை நிகழ்த்தத் தொடங்கினார்:

அன்புள்ள சகோதரர்களே, அபிமானிகளே, என் பிரியநண்பர்களே, இன்று இங்கே இந்த மகாநாடு கூட்டப்பட்ட நோக்கத்தை நான் உங்களுக்கு எடுத்து விளக்குவேனென்று எனக்கு முன் பேசிய அவைத்தலைவர் உங்களுக்குச் சொல்லியிருக்கின்றார்; என்னுடைய நோக்கத்தை இப்பொழுது வெளியிடு கின்றேன்; இந்த யாழ்ப்பாணத்திலுள்ளவர்களாகிய உங்களுக்கும் உங்கள் மூதாதையருக்கும் நான் புதியவனல்லேன்; எங்கள் காருண்ணியந்தங்கிய பிரித்தானிய பரிபாலனந் தொடங்கிய காலந் தொடக்கம் நானும் இந்த இலங்கையிற் தலைகாட்டத் தொடங்கியுள்ளேன்; ஆரம்பத்தில் இந்த யாழ்ப்பாணத் திலுள்ளாருட் சிலரினுஞ் சிலரே என்னை ஒருவாறு கைக்கொண்டு வந்தனர்; எனது பெரிய தந்தையாராகிய சொல்விளம்பியப்பர்மீது இங்குள்ளார் பாராட்டிவந்த அபிமானத்திற் பத்திலொன்றைத்தானும் என்மீது இங்குள்ளார் தொடக்கத்திற் பாராட்டினாரல்லர்; ஆனால் எங்கள் அரசினர் உதவியினாலும் தம் வாழ்க்கையை யெண்ணா முழுமக்கள் சிலரின் சகாயத்தினாலும், என்னுடைய சாமர்த்தியத்தினாலும், நான் இங்குள்ளார் பலரை எனக்கு நண்பராக்கிக் கொண்டுவந்தேன்; இனி எனது பெரியதந்தையாராகிய சொல்விளம்பியப்பரும் விருத்தாப்பிய தசையடைய அவரை அபிமானித்துவந்தவர்களுட் பலர் அவரைக் கைவிட்டு என்னை யபிமானிக்கத்தொடங்கினர்; என்னை அபிமானிக்கும் நண்பர் சிலருடன் கூடிக்கொண்டு அவர்களுடைய வீடுகளுக்குச் சென்றிருந்த சமையத்தில், சிற்சில வீடுகளின் அந்த அபிமானிகளுடைய பெண்டு பிள்ளைகளுடனும் நான் சினேகம் பூண்டு கொண்டேன்; இப்படியாக இற்றைக்குச் சில வருஷங்கட்கு முன்னர் நான் இங்கே மிகவுஞ் செல்வாக்கோடும் அதிகாரத்தோடும் வாழ்ந்து வரும்போது, மதுநீக்க அபிமானிகளென்றும் தேசத் தொண்டர்களென்றும் சொல்லிக்கொண்டு குளித்து விபூதிபூசிச் சிவ பத்தர் சைவப் பழங்கள் என்று நடிக்குஞ் சில ஆசாடபூதிகள் வெளிப்பட்டு எனக்கும் என் பெரிய தந்தையாருக்கும் இப்பொழுது இங்கே அக்கிராசனம் வகித்திருக்கும் மிஸ்ரர் பிறண்டித் துரை முதலானோருக்கும் விரோதமாக வேலை செய்யத் தலைப்பட்டனர்; இவர்கள் எமக்கு மாறாகச் செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகளோ பல; இவர்கள் கூட்டங்களை ஊர்தோறுங் கூட்டி, எமக்கு விரோதமாகச் சனங்களுக்குப் போதித்தார்கள்; பல துண்டுப்பத்திரங்களை எமக்கு விரோதமாக எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தினார்கள்; முருகேசு போன்ற சிலர் பத்திரிகைகளிலும் எழுதி என்னைத் தூற்றினார்கள்; இவை மாத்திரமா; சட்டசபை அங்கத்தவர்களுள்ளும் குடிக்கத் தெரியாதவர்களை இவர்கள் தங்கள் பக்கஞ் சேர்த்துக்கொண்டு அவர்கள் மூலமாக அரசினருக்கு முறையிட்டார்கள்; அரசினரும் என் செய்வார்கள், எமக்கு மாறல்லாவிட்டாலும் சட்டசபை அங்கத்தவர்கள் ஊரவர்கள் என்னும் இவர்களின் நெருக்கத்தினால் எங்களை அகற்றுவதற்கு உடன்படவேண்டியவராயினர்.

* * *

"இப்படியே சிலகாலமாக இந்த யாழ்ப் பாணத்திலிருந்து துரத்தப்பட்டோம்; ஆனால் மதுநீக்க அபிமானிகளென்றிருப்போர் எங்களைத் துரத்தினாரேனும் நாங்கள் இந்த யாழ்ப்பாண நாட்டை முற்றாக விட்டுப் போகவில்லை; முற்றாகவிட்டுப் போவோமானால் எங்களை இங்குள்ளார் அறவே மறந்துவிடுவார்களென்று பயந்து நாங்கள் இங்கே சோரமாகச் சஞ்சரிக்கத் தொடங்கினோம். சில வருடங்கள் இப்படிச் சோரமாகச் சஞ்சரிப்பதை எங்கள் அபிமானிகள் பார்க்கப் பொறாதவர்களாய் எங்களை வெளிப்படையாக அநுசரிக்க வேண்டுமென்று விரும்பினார்கள்; இந்த விஷயத்தில் தங்களுக்கு நேரக்கூடிய அவமானம் வசை பொருட்சேதம் என்னும் இவைகளைச் சிறிதும் பொருட்படுத்தாது எங்களுக்குத் துணையாக நின்றவர்கள் வடமராட்சி தென்மராட்சி என்னு மிருபகுதியிலுமுள்ள முழுமக்களேயாவர்; அவர்கள் என்னையும் என் பெரியதகப்பனாகிய சொல்விளமபியப்பனையும் பழையபடி இழுத்து அரங்கத்திலே விட்டார்கள்; வடமராட்சி தென்மராட்சி என்னும் இருபகுதியின் பிரதான பட்டினங்களாகிய பருத்தித்துறையையும் சாவகச்சேரியையும் நாங்கள் எங்களுக்கு அரணாக வைத்துக் கொண்டு இப்பொழுது இங்குள்ள ஏனைய இடங்களையும் எங்கள் வசப்படுத்த முயற்சி செய்கின்றோம். அரசினரும் ஏனைய மதுவபிமானிகளும் இனிமேல் எங்களைக் கைவிட மாட்டார்கள்."

"மேலும் எம்மை வெளியே வேண்டா மென்றுசொல்லிப் போதித்துக்கொண்டு இரகசியமாகஎன்னை அநுசரிப்பவர்கள் பலர் இருக்கின் றார்கள்; உத்தியோகத்தர்களோ, தலைமைக் காரர்களோ, நியாயவாதிகளோ, செல்வம் செல் வாக்குள்ளவர்களோ, பெண்களோ, இவர்களுட் சிலரொழிய ஏனையோரெல்லாம் என்னை இரகசி யமாகவோ பரகசியமாகவோ கைக்கொள்ளுகிறார்கள் தானே; பள்ளிக்கூட உபாத்தியாய ரென்றிருப்பவர்களுள் மாத்திரம் பலர் எனக்கு மாறாக நிற்கின்றார்கள்; ஆனால் மாணாக்கருட் சிலர் எம்மைக் கொண்டாடுகின்றார்கள்; இவை மாத்திரமா, மங்கலவீடு அமங்கலவீடு, வாழ்வு, தாழ்வு, சூதாடுமிடம், தீபாவலிப்பண்டிகை; சனப்பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யுங் கூட்டம் எந்த இடத்தில் எம்மைப் புறக்கணித்து வைத்திருக்கிறார்கள்; பிரசவகாலங்களிலும் அதற்கு முந்தியும் நான் இல்லாமல் எதுவும் முடியாதென்றல்லவா சில பெண்கள் எம்மைத் தேடி அழைக்கிறார்கள்; இப்படியெல்லாமிருக்க நாம் முன்னே சொன்னபிரகாரம் சைவப் பழங்களென்றிருக்கும் சில பைத்தியகாரர்களும் சில பத்திரிகைகாரர்களும் தான் எங்களை அகற்றலாமென்று பார்க்கின்றார்கள். இது ஒருபோதும் முடியாத காரியம்; அன்பர்களே, இவற்றை உங்களுக்குச் சொல்லும்படியாகத் தான் இந்த மகாநாடு இன்று இங்கே கூட்டப்பட்டது; மேலும் காலமதீதமாதலாலும் மழைக்கோலங் காணப்படுவதாலும் குறிப்புரை முதலியன இன்றி இக்கூட்டத்தை இவ்வளவில் மதுப்பாட்டுப்பாடி முடிப்போமாக" என்று சாராயநாதன் கூறி முடிக்கக் கூட்டம் முடிந்தது.

* * *

உலகம் பலவிதம்: *1931 டிசம்பர் 03*

யாழ்ப்பாணப்பட்டினத்தில், நிகழும் இந்தவாரம் முழுவதும் தெரிதல் செய்தல் சம்மதஞ்சொல்லுதல் முதலிய முயற்சிகட்கும் சனங்கள் ஒவ்வோரிடங்களிற் கூட்டங்கூடுதற்கும் ஆகியவாரமாகக் காணப்படுகின்றது; கள்ளுத் தவறணை வேணும் சாராயத் தவறணை வேணும் அந்நியநாட்டுக்குடிவகை வேணுமென்று சொல்லும் மதுபானத்துரபிமானிகளுந் மதுபானஞ் செய்வோரும் தத்தம் சம்மதத்தைப் போய்ச் சொல்வதற்காகிய நாள் நேற்றுத் தொடங்கிவிட்டது; மேலும் பட்டினசங்கப்பிரதிநிதிகளைப் பட்டின வாசிகள் தெரிவுசெய்யுந்தினம் இந்த டிசெம்பர் மீ 5 தேதியாகிய வருகிற சனிக்கிழமையாகும். மேற்படி பட்டின சங்கப்பிரதிநிதிகளைப் பட்டினவாசிகள் தெரிவுசெய்தற்கான முயற்சியும், தெரிவுசெய்தற்கு முற்பட்டுநிற்போர் முயற்சியும் சென்ற இரண்டுமூன்று வாரங்கட்கு முந்தியே ஆரம்பித்து இந்தவாரமே மிகவும் கடுமையாக நடக்கின்றது. பட்டினசங்கப் பிரதிநிதித் தெரிவுவிஷயமாக இந்த வருடத்திற் செய்யப்படும் முயற்சியும் பிறவும் முன்னொருபோதும் நிகழவில்லையெனலாம். தெருவீதிகளிலுள்ள சுவர்கள், மரங்கள், பிரதானஸ்தானங்கள் எந்த இடத்திற்பார்த்தாலும் எவற்றைப்பார்த்தாலும் ஸ்ரீமான் ..... இன்னாரைத் தெரிவு செய்யுங்கள் என்ற விளம்பரங்கள்பல்வேறுவருணமானகாகிதங்களில்பெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துக்களில் அச்சிட்டு ஒட்டப்பட்டிருப்பதையும் தொங்க விடப்பட்டிருப் பதையும் எவருங்காணலாம். வட்டாரவாசிகள் ஒருவரையொருவர் நோக்கி "நீ ஆருக்குச் சொல்லப்போகிறாய்; நீர் எவருக்குச்சொல்லப் போகிறீர்" என்று பரஸ்பரம் விளங்கிக்கொள்வதை எவரும் காதாரக் கேட்கலாம். பிரதிநிதிகளாய் வரவிரும்புவோரும் அவர்களுடைய காரியஸ்தர்களும் வெவ்வேறான கூட்டமாக இல்லங்கள் தோறுஞ்சென்று "என்னைத் தெரிவு செய்யுங்கள், இன்னாருக்காகச் சம்மதஞ்சொல்லுங்கள்" என்று சொல்லிக்கொண்டுங் கேட்டுக் கொண்டுங் திரிவதைக் காணலாம்.

* * *

உலகம் பலவிதம்: *1931 டிசெம்பர் 10*

[சோமசுந்தரம் - மீனாட்சி கிடைத்துள்ள இன்னொரு பகுதி]

"என்துரையே, நான் பெண்புத்தியினால் அறியாமற்செய்த பிழையைப் பொறுத்துக் கொள்ளுங்கள்; இனிமேல் இப்படியான தவறு ஒன்றுஞ் செய்யமாட்டேன்; இதுவே முதன்முறையும் கடைசி முறையுமாகட்டும்; அல்லாமலும் இந்தக் காலத்தில் தங்கள் கற்புக்குப் பங்கமானதும் நாயகனுக்குத் துரோகமானதும் தீராவசையை, புகுந்த வீட்டிற்கும் பிறந்த வீட்டிற்கும் தரத்தக்கதுமான பிழைகளைச் சில மூடப் பெண்கள் செய்ய அவற்றையும் புருஷன்மாராயுள்ளவர்கள் பொறுத்துக்கொள்ளுகிறார்கள்; நான் அப்படி யொன்றுஞ் செய்யவில்லையே, செய்யப்போவது மில்லையே; நான் எதிர்வார்த்தை பேசிவிட்டேன் என்று என்னோடு பிணக்குற்று இன்று இரண்டு நாட்களாய் அன்னாகார முண்ணாமல், வைரஞ் சாதிக்கின்றீர்களே; நான் அறியாமையினால் ஒருதவறைச் செய்தாலும் என்னைக் கண்டித்துத் திருத்தவேண்டிய கடமை உங்களையல்லவா பொறுத்தது; "நல்ல மாட்டுக்கு ஒரு சூடு நற்பெண்டாட்டிக்கு ஒரு வார்த்தை" என்றபடி நான்செய்த பிழையின் பயனை ஒருமுறை அநுபவத்திற் கண்ட நான் இனியும் பிழை செய்யக் கனவிலாயினும் நினைப்பேனா" என்று மீனாட்சியம்மாள் தன்னாயகனாகிய சோமசுந்தரனைப் பலமுறையும் இரந்தாள்.

* * *

"மீனாட்சி, நீ வீணாக என்னோடு நியாயம் பேசாதே; கறந்தபால் முலைக்கேறப் போவதில்லை; என்குணந் தெரிந்து அதற்கு இசைய நடந்துகொள் என்று உனக்கு எத்தனை முறை முன்னருஞ் சொல்லியிருக்கிறேன்; உனக்கு நான் சொல்லும் புத்தியெல்லாம் புறக்குடத்து ஊற்றிய நீர்போலாகின்றன; நீ படித்த படிப்பில், "பெண்டிர்க்கழகு எதிர் பேசாதிருத்தல்" என்ற முதுமொழியை மாத்திரம் விட்டுப் படித்தாயா; நீ இன்னமுஞ் சின்னவளா; எதிர்க்கெதிர் வாய்காட்டும் பெண்ணோடு இருந்து வாழ்வதிலும் பரதேசம் போய்விடுவது நல்லது; உன்னோடு எனக்கு அதிகம் பேச்சென்ன; நான் ஒருபோதும் உன் கையால் அன்னம் வாங்கி உண்ணப்போவதுமில்லை; இங்கு இருக்கப் போவதுமில்லை; உனக்கு வேண்டிய பொருள் இருக்கிறது; என் வீடுவாசல் இருக்கிறது; வேலைக்காரர் இருக்கிறார்கள்; உன் க்ஷேமத்தைப் பார்க்க உன் அண்ணன் இருக்கிறான்; ஆனதால் உனக்கு வருங்குறை யாதுமில்லை; என் பொருளை அநுபவித்துக்கொண்டு நீ மரியாதையாய் இருந்துகொள்; "சற்றேனும் ஏறுமாறாக நடப்பாளேயாமாகில் கூறாமற் சந்நியாசங்கொள்" என்று முன்னோர் அறியாமற் சொன்னார்களா; இருவர் வாழ்க்கையும் "இவ்வளவு காலமுந்தான் என்று எண்ணிக் கொண்டிரு; நான் செத்தால் நீயும் உடன் கட்டை ஏறிவிடுவதா அந்த வழக்கந்தான் இந்தக்காலத்தில் இல்லையே" என்று மிக்க ஆத்திரத்தோடும் கவலையோடும் சோமசுந்தரன் கூறினான். இப்படித் தன் நாயகன் பேசக்கேட்ட மீனாட்சியம்மாள பெரிதும் மனங் கலங்கி ஏக்கங்கொண்டவளாய், கண்களிலிருந்து நீர் தாரைதாரையாக வடிய அழுதுகொண்டு, "இனி ஒருபோதும் இப்படித் தவறு செய்யமாட்டேன் என்று நான் இரந்து கேட்கவும் நீங்கள் என்னோடு முன்னொருபோதுமில்லாத வர்மஞ் சாதிக்கிறீர்களே; நீங்கள் ஏன் வீட்டைவிட்டு, ஊர்தேசத்தை விட்டுப் பரதேசம் போவான்; நீங்கள் வெளியே போகச் சொன்னால், நான் போய் என் அண்ணனுடன் இருக்கிறேன் ..." என்று மீனாட்சி சொல்லி முடிப்பதற்கிடையிற் சோமசுந்தரன் "அடி பார்த்தாயா, உன் உள்ள குணத்தைக் காட்டிவிட்டாய்; அண்ணன் இருக்கிறான் உன் இனத்தவர் இருக்கிறார்கள்; உன்னைப் பாதுகாப்பார்கள் என்று நினைத்துத்தான் இப்படி என்னைமதியாமல் நடக்கிறாய்; அது நல்லது உன்னுடன் என்னத்திற்கு வீண் பேச்சு, பேசப்பேச எனக்குக் கோபம் மூளும், தீராக்கோபம் போராய் முடியும் என்பார்கள்; நான் செய்யவேண்டியது எனக்குத் தெரியும்" என்று சொல்லிவிட்டு வெளி விறாந்தையிலிருந்த சோமசுந்தரன் சரேலென்று எழுந்து வீட்டுட்போய்ச் சில பொருட்களையும் எடுத்துக்கொண்டு, மீனாட்சி அழுது இரந்து தடுக்கவும் அவளை உதறிவிட்டு வெளியே போனான்; போகும்போது இரவு 10 மணியிருக்கும்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1932 ஜனவரி 28

இந்திய அரசினர் இப்பொழுது தாம் செய்யும் அடக்குமுறைகளையும் அக்கிரமங்களையும் இந்துமக்களின் சாத்வீகப்போர் முயற்சிகளையும் பற்றிய சமாசாரங்களை வெளிவராது தடுக்க முயல்வதைச் சிந்திக்கும் போது, பின்வரும் கதை ஞாபகத்திற்கு வருகின்றது.

* * *

ஒருவீட்டிலே ஒரு கோமுட்டி, அவனுடைய மனைவி, அவர்களுடைய மகள், மகளின் புருஷன் ஆகிய நால்வர் மாத்திரம் இருந்தனர். கோமுட்டியின் முயற்சி கடையிலிருந்து வியாபாரஞ் செய்தல்; மருமகன் கடவுட்பக்தியுள்ள ஒரு வஞ்சகமில்லாத மனுஷன்; மகள் சிறிது நடைப்பிசகுள்ளவள்; இவள் ஒருநாள் கொல்லைப்புறத்திற்சென்று அடுத்தவீட்டிலுள்ள கறுப்பனென்பவனுடன் ஏதோ பேசிக்கொண்டு நின்றாள்; இவள் பேசிக்கொண்டுநின்ற இடத்திற்குச் சமீபத்தில் ஒரு கிழ எருமை கட்டப்பட்டு நின்றது; இந்த எருமையின் கண்களிற் சீழ்வடிந்த மையால் ஈக்கள் வீழ்ந்து மொய்த்தன; அவள் கறுப்பனுடன் பேசிவிட்டுத் திரும்பும்போது, இந்தக் கிழ எருமை ஈக்களின் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் அவற்றை அகற்றும் பொருட்டுத் தன் தலையை அசைக்க கோமுட்டி மகள் அதனைக் கண்டாள்;

"உப்பிருந்த பாண்டமும் உளவுள்ள
நெஞ்சும் தட்டி யுடையாமல் தானே உடையும்"

என்பது பழமொழி. தானும் கறுப்பனும் நின்று பேசின அந்தரங்கவார்த்தைகளை அந்த எருமை கேட்டுக்கொண்டு நின்றுவிட்டு இப்பொழுது தன் தாய்க்கோ தகப்பனுக்கோ சொல்லப்போகின்றது; அப்படிச்சொல்லுவேனென்ற குறிப்பினால் தான் எருமை தலையாட்டுகின்றதென்று அவள் எண்ணிப் பயந்துவிட்டாள்.

* * *

"ஐயோ, இந்த இரகசியம் வெளிவரு மானால் நான் உயிரோடிருந்தபாடில்லை; அல்லாமலும் இதனால் தீராவசை வந்து சேரும்; ஆனபடியால் இந்த எருமையை இரந்தாவது இதனை வெளியிடவேண்டாமென்று கேட்போம்" என வெண்ணிக்கொண்டு கோமுட்டி மகள் எருமையின் கிட்டப்போய் "எருமையே, எருமையே, எங்கள் அருமையான எருமையே, நான் உனக்குவேண்டிய தீன் போடுகின்றேன்; நேரத்திற்குநேரம் தண்ணீர் வைக்கிறேன்; ஆனால் நீ இந்த இரகசியத்தை மாத்திரம் வெளிவிட்டு விடாதே" என்று பலவாறு அவள் எருமையை இரந்துகேட்டாள். எருமையின் கண்களில் மொய்த்த ஈக்கள் உபத்திரவஞ்செய்ய அது பின்னரும் தலையை ஆட்டியது. கோமுட்டிமகள் "ஐயோ இது என்ன பிடிவாதமாக நிற்கின்றதே இதன் காலைப்பிடித்து இரந்தாயினும் இந்த அவமானத்தை வெளியில் விடவேண்டாமென்று கேட்போம்" என எண்ணி அதன் ஒருகாலைப் பிடித்தபடி அதனை இரந்துகொண்டிருந்தாள்.

* * *

தன்மகள் சென்று நீடித்த நேரமாகியும் மீண்டுவராமையைக்கண்ட தாய் உடனே அவளைத் தேடிக்கொல்லைப்புறத்திற்குப் போனாள்; மகள் கிழ எருமையின் காலொன்றைப் பிடித்தபடி இருக்கக்கண்டு, கிட்டப்போய் "மகளே, இது என்ன பேய்த்தனம்; நீ ஏன் இப்படியிருக்கிறாய்" என்று கேட்டாள்; மகள் யோசிக்கிறாள் "நான் உள்ளதை என் தாய்க்குச் சொல்லாமல் மறைத்தாலும் இந்த எருமையோ சொல்லாமல் விடப்போவதில்லை; அல்லாமலும் பெற்ற தாய்க்கு உள்ளதைச் சொல்வதால் வரும் பிழையில்லை; எருமை சொல்லமுன் நானே சொல்லிவிடுகிறேன்" என்று நிச்சயித்துக்கொண்டு "அம்மா, வேறொன்றுமல்ல, அயல் வீட்டுக் கறுப்பனோடு சும்மா பேசிக்கொண்டு நின்றேன்; இந்த எருமை அதை விபரீதமாக நினைத்து, நான் அவனுடன் பேசியதை வெளியிடப்போகின்றேன் என நிற்கின்றது; ஆனபடியால் அதனைச் சொல்லவேண்டாமென்று அதன் காலைப்பிடித்து இரந்துகொண்டிருக்கிறேன்" என்று மகள் தன் கண்களில் நீர்ததும்ப, தாய்க்கு முறையிட்டாள். தாய் நினைக்கிறாள்: "பொல்லாத சேயெனில் தாய் தள்ளநீதியோ, புகலிடம் பிறிது முண்டோ! இல்லை; என்பிள்ளை சிறுபிள்ளைத் தனத்தினால் ஒருபிழையைச்செய்து விட்டாள்; இதை இவள் தகப்பனாயினும் புருஷனாயினும் அறிந்தாற் பெரும் மோசமுண்டாகும்; ஆனதால் இந்த எருமையையே சொல்லவேண்டாமென்று இரப்பது நல்லது" என எண்ணி எருமையைப் பார்த்து "எருமையே, நீ இதை எவருக்குஞ் சொல்லாதே; இவள் சிறுபிள்ளைப் புத்தியினால் ஒருபிழையைச் செய்து விட்டாள்; உன்பிள்ளை வேறு என்பிள்ளை வேறா இந்த ஒரு முறையும் மாத்திரம் வெளிவிடாதே" என்று இரந்தாள்.

* * *

இதற்கிடையில் கலைந்த ஈக்களெல்லாம் எருமையின் கண்களிற் பழையபடி மொய்த்துக்கொள்ள எருமை உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் பின்னரும் தன் தலையைக் கீழும் மேலுமாக அசைத்தது. அதனைக் கண்ட தாய் தன் மகள் விஷயத்தில் எருமை கடுமையாக நிற்கின்றதென்று நினைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை இரந்தாயினுங் கேட்க நினைத்து அதன் இன்னொரு காலைப் பிடித்துக்கொண்டிருந்தாள். இங்ஙனமாக, கடையிலிருந்து கோமுட்டிச்செட்டியார் வீட்டிற்கு வந்து அங்கே பார்த்தபோது வீட்டில் பெண்களெவரையுங் காணவில்லை. அவர் திகிலடைந்து அங்குமிங்குந் தேடிக் கொல்லைப்புறத்திற் சென்றபோது, மகளுந் தாயும் எருமையின் கால்களைப் பிடித்துக் கொண்டிருக்கக் கண்டு சினங்கொண்டு "ஏ மூடப்பெண்களே, ஏன் மூடத்தனமான வேலை செய்கிறீர்கள்; ஏன் எருமையின் காலைக் கட்டிப்பிடித்துக்கொண்டிருக்கிறீர்கள்; உங்களுக்கு வந்த கேடென்ன" என்று கடிந்துரைத்தார். "நாம் உள்ளதைச் சொல்லாவிட்டாலும் எருமை சொல்லிவிடுந்தானே யென்றெண்ணி, தாய் நடந்த செய்தி முழுவதையுஞ் செட்டியாருக்குச் சொன்னாள். செட்டியாரும் என்ன செய்வார்; பெற்ற பிள்ளை பெரும்பிழை செய்தது உண்மை; ஆனால் அதனை வெளிவிட்டால் தங்கள் எல்லாருக்கும் அவமானமென்றறிந்து மகள்செய்த குற்றத்தை வெளியிடவேண்டாமென்று எருமையை இரக்க, எருமை முன்போல் ஈக்களின் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் தலையாட்ட, செட்டியாரும் அதன் மற்றக் காலொன்றைப் பிடித்துக்கொண் டிருந்தார்.

* * *

இவர்கள் மூவரும் இந்த நிலைமையிலிருக்கும்போது, ஏதோ கருமார்த்தமாக வெளியே சென்றிருந்த மருமகன் வீட்டிற்கு மீண்டுவந்தார்; வீட்டில் ஒருவரும் இல்லாமலிருப்பக் கண்டு திகைத்து எங்கும் தேடி ஈற்றில் கொல்லைப் புறத்தையடைந்தபோது அங்கே மாமன், மாமி, மனைவியாகிய மூவரும் கிழ எருமையின் மூன்று கால்களையும் பிடித்துக் கொண்டிருப்பக்கண்டு சமீபத்திற் சென்றார்; இவரைக் கண்டமாத்திரத்தே மூவரும் செய்வதென்ன, சொல்வதென்ன என்று அறியாதவர்களாய்த் தியங்கினரேனும் எருமை சொல்லிவிடுந்தானேயென்ற அச்சத்தினால் விஷயத்தை வெளிவிடத் துணிந்தனர்; மாமியார் மருமகனுக்கு நடந்த சமாசாரத்தை மெல்ல மெல்ல நாணத்துடன் சொல்லினார். மருமகன் முதற் கோபங்கொண்டாரேனும், தம் மனைவிக்குவந்த வசை தமக்கும் உரியது தானேயென்று நினைத்து, அவர்களுடன் சேர்ந்து தாமும் அந்த விஷயத்தை ஊரறியாதபடி மறைக்க முயன்று எருமைக்குக்கிட்டப்போய் "எருமையே, எருமையே இதை நீ வெளிவிட்டு ஆவதென்ன; இதற்கு ஆத்திரப்படவேண்டிய நானே, அப்படிச்செய்யாமற் பொறுத்துக்கொண்டேன்; இலையும் பழுப்பும் எங்குமுண்டுதானே; இதை நீ வெளிவிடாதே" என்று இரந்தான். எருமையின் கண்களில் பழையபடி ஈக்கள் மொய்த்து உபாதித்தமையினால் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் அது பின்னரும் தலையை அசைத்தது.

* * *

எருமை பிடிவாதஞ் செய்கிறதென்று நினைத்து அதை இரந்து வேண்டிக்கொள்வதற்காக மருமகன் அதன் எஞ் சிய ஒரு காலைப் பிடித்தார். இவர்கள் நால்வரும் இப்படித் தன் நாலுகால்களையும் பிடிக்கக்கண்ட எருமை தனக்கு இவர்கள் ஏதோ மோசஞ் செய்யப்போகின்றார்களென்று நினைத்துக் கால்களை உதறி இவர்களை விழச்செய்து கட்டையும் அறுத்துக் கொண்டு வெளியேவந்து தெருவழியே ஓடத் தலைப்பட்டது. எருமை ஓடிய தெரு அங்குள்ள ஊரதிகாரி வீட்டிற்குப் போகுந் தெருவானபடியால், மாமன் "ஐயையோ, இந்தக் கிழஎருமை ஊரதிகாரிக்கு இச்செய்தியைச்சொல்லி எங்களை அவமானப்படுத்துவதற்காகவல்லவா இந்த மார்க்கமாகப்போகின்றது" என்று நினைத்துப் பெரிதுங் கலங்கி மருமகனைப் பார்த்து "எருமை கெட்டநோக்கத்துடன் ஊரதிகாரியிடம் ஓடிப்போகிறது, எருமை போவதற்குமுந்தியே நீர் போய் ஊரதிகாரிக்கு விஷயத்தைச் சொல்லி எருமையின் சொல்லைக் கேட்கவேண்டாமென்று அவருக்குச் சொல்லும்" எனக் கூறி மருமகனை அனுப்பிவிட்டார். மருமகன் கிழஎருமையை முந்தி ஓடிச்சென்று ஊரதிகாரியை யடைந்து சமாசாரத்தைச் சொல்லி, எருமை சொல்ல வருகிறது; அதன் சொல்லை நம்பவேண்டா மென்றும் ஊரதிகாரிக்குச் சொல்லிவிட்டு நின்றார்.

* * *

ஊரதிகாரியோ புத்தியிற் குறைந்தவன்; அவன் அந்தச் செட்டியைப் பார்த்து "நீ பயப்படவேண்டாம், உமக்கு எவ்வகையான வசையும் வராமல் நான் பார்த்துக்கொள்ளுகிறேன் என்று அவனுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு உடனே ஒரு வள்ளுவனைக் கூப்பிடுவித்து இன்ன செட்டியாருடைய மகள் இன்ன செட்டியாருடைய மனைவி அடுத்த வீட்டுக் கறுப்பனுடன் பேசியதாம்; அதை விபரீதமாக நினைத்து ஒரு எருமை ஊரெங்குஞ் சொல்லவருகிறதாம்; ஊரவர்கள் எவரும் அந்தக் கிழ எருமை சொல்லுவதைக் கேட்டு நம்பவேண்டாமாம்; இது எனது கட்டளை என்று பறையடித்துப் பிரசித்தஞ் செய்வாயெனக் கட்டளையிட, வள்ளுவனும் அப்படியே பிரசித்தஞ் செய்து மறைக்கமுயன்ற இரகசியத்தை உலகமறியும்படி செய்துவிட்டான் என்பது கதை.

* * *

இந்திய அரசினர் அங்கு நிகழும் அக்கிரமங்களையும் பிறவற்றையும் மறைக்க முயன்றாலும் மாற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டாலும் அரசினர் மறைக்க முயன்றதினாலும் மாறுபடுத்தி வெளியிடும் சமாசாரங்களினாலும் உலகம் முழுவதும் இந்தியாவில் இப்பொழுது நிகழும் அநர்த்தங்களை அறியலாயின.

* * *

உலகம் பலவிதம்: 1932 பெப்ரவரி 04

சத்தியவிரதம் பூண்ட அரிச்சந்திரமகாராசனைப் பரிசோதிக்க நினைத்து அந்த அரசனுக்கும் மனைவிமக்களுக்கும் செய்யக்கூடிய கஷ்டங்களையெல்லாஞ் செய்தும் அவர்களுடைய நாடு நகர் பொருள் பண்டங்களையெல்லாம் கவர்ந்தும் அவ்வளவோடமையாது அவர்கள் அணிந்திருந்த பீதாம்பரங்களை வாங்கிக்கொண்டு அவைக்குப்பதிலாக அவர்களுக்குக் காவித்துணிகளைக் கொடுத்தவன் கண்மைபூண்ட கௌசிகமுனிவன்தானும் சந்திரவதியின் தாலியை அவிழ்த்துத் தரும்படி கேட்கவில்லை. நமது நாட்டில் இந்த ஆங்கிலர் பரிபாலனகாலத்திலே கொடியோடு சேர்த்துத் தாலியையும் அறுத்துக்கொண்டு போவது உண்மையானாலும், முற்காலத்திலே வல்லை வெளியிலிருந்த கள்வர் தலைவர்களாகிய அம்மையன் கரியன் என்போர் திருடும்போது தாலியை மாத்திரம் திருடியதில்லை என்று காலங்கண்ட முதியோர் சொல்லக் கேட்டிருக்கின்றோம். முற்காலத்தில் அரிச்சந்திர மகாராசன் மாத்திரம் துண்டு காற்பணத்தின் பொருட்டுத் தாலியைக் கழற்றித்தா என்று சந்திரவதியைக் கேட்டதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் அச்செயல் தவத்தால் வலிய கௌசிகமுனிவனுடைய வஞ்சனையினால் நேர்ந்ததென்பர். மேலும் அரிச்சந்திரன் கேட்டாலும் சந்திரவதி அதனைக் கழற்றிக் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பம் வரவில்லை.

* * *

ஆனால் இப்பொழுது இந்தியாவில் நடக்கும் அநர்த்தங்களைக் கேட்க மனம் நடுங்குகின்றது; சரீரம் பதறுகின்றது; இதற்கு மேற் செய்யக்கூடிய தீமைகளும் நிஷ்டூரங்களும் இன்னமும் உண்டோ என்ற ஏக்கம் பிறக்கின்றது. இப்பொழுது இந்தியாவில் நடக்கும் சாத்வீகப் போரில் ஈடுபட்ட ஒரு பாரதமகளுக்கு நீதிபதியொருவர் அபராதம்விதிக்க அம்மாது பண மில்லாமையால் தான் அணிந்திருந்த ஆபரணங் களையெல்லாம் கழற்றிக் கொடுத்தாள். ஆனால் மாங்கல்யத்தை மாத்திரங் கொடாதொழிந்தாள். நீதிபதி அதனையுங் கழற்றித் தரும்படி நெருக்கிக் கேட்டார். அந்த உத்தமி மாங்கல்யம் நாயகன் உயிரோடு இருக்கும் வரையிற் கழற்றிக்கொடுக்கத்தக்கதுமல்ல, அது அழகுக்கு அணியப்படுவதுமல்ல என்று விளங்கப்படுத்தினாள். நீதிபதி அப்படியல்ல என்று பலாத்காரமாக அதனைக் கழற்றி உதவச்செய்தார். ஆனால் அம்மாது பின்னர் மேலதிகாரிகளுக்கு முறையிட்ட போது மாங்கல்யத்தை மாத்திரம் திருப்பிகொடுக்கும்படி நீதிபதிக்கு கட்டளையிட்டனராம். இவையோ, இன்னம் என்ன என்ன அநர்த்தங்களை நாங்கள் கேள்விப்பட இருக்கின்றோமோ அறியோம்.

* * *

உலகம் பலவிதம்: 1932 பெப்ரவரி 18

இதனைக் கேட்பாரில்லையா! இது மது சட்டத்திற்கு விரோதமாகாதா? மதுப்பானம் பெரியகடைச் சந்தைக் கட்டடத்தில் காய்பிஞ்சு விற்கும் வியாபாரிகளுட் பெண்களாயுள்ளார் பலர் தாம் வைத்து விற்கும் காய்கறிப் பொருள்களுடன் இவ்விரண்டு போத்தல் சாராயமும் வைத்து, போத்தலொன்று 3 ரூபா வீதம் விற்கிறார்களே. இவர்கள், தாம் சாவகச்சேரிச் சந்தைக்குப் போய்க் காய்கறிப் பொருள்கள் வாங்கி வரும்போது, பிரமாணத்தின்படி 2 போத்தல் சாராயமும் வாங்கிக்கொண்டு வந்து விற்பதாகவும், 1 போத்தலுக்கு 25 சதம் தங்களுக்கு லாபமென்றும், இவர்களைக் கேட்ட முருகேசுவுக்குச் சொன்னார்கள். இப்படியாக சாராயத்தைப் பிரசித்தமான சந்தையில் வைத்து வியாபாரஞ் செய்வது மதுபானப்பிரமாணங் களுக்கு விரோதமா? இல்லையா? இந்தச் சந்தேகத்தை இப்பத்திரிகை வாயிலாக யாழ்ப்பாணப்பகுதி மதுப் பரிசோதகர் தீர்ப்பாராக. இப் பெண்கள் குறித்த சந்தைக் கட்டடத்திற் சாராயம் விற்பதை மதுப் பரிசோதகர், சுகாதாரப் பரிசோதகர், பொலீசார், சந்தை வரியறவிடுவோர், சந்தைக்குச் செல்வார் எல்லாரும் அனுதினமும் நேரிற் பார்க்கின்றார்களே. இப்படியானால் சாராயத் தவறணை இங்கே திறக்கவேண்டிய தேவையில்லையே!

* * *

பொல்லாதவர்கள் கூட்டத்திலே, மரபிலே நல்லவர்களும் உண்டு, சூரபன்மனும் ஏனைய அசுரர்களும் கொடியவர்களாக, சூரபன்மனுடைய தம்பியருள் ஒருவனாகிய சிங்கமுகன் சாத்வீக குணமுடையவனாய் தன் தமையனுக்கு தேவர்கள் சிறையை விடும்படியும் சிவகுமாரனோடு யுத்தத்திற்குப் போகவேண்டாமென்றும் புத்தி சொன்னான். அரக்கர் தலைவனாகிய இராவணன் தீயோனாக, அவன் தம்பி கும்பகன்னன் சீதையின் சிறையை விடும்படியும் இராமபிரானுடன் போருக்குப் போகவேண்டாமென்றும் தன் மூத்தோனுக்கு இதோபதேசஞ் செய்தான். துரியோதனாகிய நூற்றுவருள் இளையதம்பியாகிய விகர்ணன் மிகவும் நீதியுள்ளவன்; அவன் பாண்டவருக்கு இன்னல் செய்ய வேண்டாமென்றும், பாஞ்சாலியின் சீலை உரிவது அடாதசெயலென்றும் தன் தமையனுக்குச் சொன்னான்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியே எங்களைப் பரிபாலிக்கும் பிருத்தானியருள்ளும் பாராளுமன்றத்து அங்கத் தவருள் ஒருவராகிய மிஸ்ரர் லான்ஸ்பெறி போல்வார் சிலர் இருக்கின்றார்கள்; இவர்கள் தமர் என்றும் பிறரென்றும் பாராது நீதியையே எந்தச் சமையத்திலும் அஞ் சாது எடுத்துச் சொல்லுவர்; இந்த லான்ஸ்பெரி யென்னும் பிரபு ஆங்கில மந்திரியாகிய மிஸ்ரர் மைக்டொனல்டிற்கும், இந்திய மந்திரியாகிய ஸேர் சாமுவேல் ஹோறுக்கும், மிஸ்ரர் உவின்ஸ்ரன் சேர்ச்சில் போல்வாருக்கும் இந்தியரை வருத்த வேண்டாமென்றும் அடக்குமுறையைத் தவிர்க்கும் படியும் பலவாறு புத்திபுகட்டி வருகிறார். இந்தப்பிரபு இப்பொழுது என்ன சொல்லுகிறார் என்று பார்ப்போம்.

"மற்றவனுடைய வீட்டிலுள்ள அழுக்கைப் பார்த்து திருத்துவதற்கு முன் நம்முடைய வீட்டுவாசலிற் கிடக்கும் அழுக்கை அகற்றிக் கொள்ளுதல் வேண்டும்; சீன யப்பானிய யுத்த விவகாரத்தில் நாங்கள் பிரவேசித்து அதனைச் சீர்படுத்துவதற்கு முந்தி இந்திய விஷயத்தில் எங்களைச் சீராக வைத்துக் கொள்ளவேண்டும்; பிருத்தானியராகிய நாங்கள் இப்படிச் செய்வதினாலே உலகம் முழுவதற்கும் நேரக்கூடிய பெரும்தீமையைத் தவிர்த்தவர்களாவோம்; ஜப்பான் சீனதேசத்திற்குச் செய்யும் செய்கை நீதியானதல்ல; ஆனால் இந்தியாவுக்கு நாங்கள் அடாதன செய்துகொண்டு யப்பானியரைக் குறைசொல்வது பொருந்தாது; கண்ணாடி வீட்டில் இருப்பவர்கள் மற்றவர்களுக்குக் கல்எறிய வொண்ணாது. பிருத்தானியர் இந்தியமக்களுக்குச் செய்யும் அநியாயங்களை உலகம் முழுவதும் அறியும்."

இந்தப் புண்ணியவானுக்கு இந்து மக்களின் ஆசி பெருகுமல்லவா! ஆதலால் பிரித்தானியமக்களெல்லாரையும் நாம் சூரன் போலவும், இராவணன்போலவும், துரியோதனன் போலவும், உவின்ஸ்ரன் சேர்ச்சில் போலவும், ஸேர் சாமுவேல் ஹோர்போலவும், லார்ட் உவெலிங்டன் போலவும் வில்லியஸ்போலவும் எண்ணவொண்ணாது.

* * *

பொன்னாற் செய்யப்பட்ட பாத்திரம் என்றும் நின்று ஒளிசெய்யுமேயல்லாமல், பொன் பூச்சிடப்பட்ட பாத்திரம் என்றும் நின்று ஒளி செய்தல் முடியாது; இப்படியே பொதுநலத்தின் பொருட்டு உண்மையாக உழைப்போர் என்றும் மதிக்கப்படுவர். அஃதின்றி அகத்திற் சுயநலமும் புறத்துப் பொதுநலமுமாக நடித்துக் காலங்கழிப்போர் என்றும் மதிக்கப்படாது இடையில் தம் மதிப்பை இழப்பர். அரசாங்கசபையிற் புகுந்த அங்கத்தவர் பொதுநலத்திற்காக ஊர்நன்மைக் காக உழைக்கின்றோமென்று இதுகாறுஞ் சொல்லித் தங்களைத் தாமே கௌரவப்படுத்த முயன்றனர். இவர்கள் அரசாங்க சபைக்குச் சென்ற காலத்தில் அச்சபையைத் திருத்திவிடும் வண்ணம் செல்கின்றோமென்று சொன்னார்கள். அப்படித் திருத்துதல் இவர்களால் ஆகாதாக, இவர்கள் இன்னமும் அந்தச் சபையை இறுகப் பற்றிக்கொண்டு நிற்கின்றார்கள். சபையைத் திருத்தமுடியாத பட்சத்தில் விடுத்துவருவோம் என்று சொல்லி அச்சமையத்திற் சென்ற இவர்கள் இப்பொழுது தேசாதிபதி போங்கள் என்று சொன்னாலும் போகமாட்டார்கள்போற் காணப்படுகின்றனர். பிரதிநிதிகள் சம்பளம் பெறாத காலத்திலென்றால் இவர்கள் இச்சபையை உடனே விட்டுவந்திருப்பார்களே; இப்படி வயிறு வளர்ப்பதைக் காட்டிலும் இரந்து சீவியஞ் செய்தல் எத்தனையோ மடங்கு உத்தமமாகும். தம் நயம்கருதி பொதுநலத்தின் பொருட்டு உழைப்பார்போல் நடிப்பவர் அங்கும் இங்கும் எங்கும் சிற்சிலர் உண்டல்லவா.

* * *

உலகம் பலவிதம்: 1932 பெப்ரவரி 25

உலகம் பலவிதம் என்பதிற் சந்தேக மில்லையல்லவா. ஒரு சிங்களப்பெண் தன் மருமகனுடன்சேர்ந்து தான் பெற்ற சிறுவனைச் சிறைக்கூடத்திற்கு அனுப்பமுயன்று வாய்க்கவில்லையெனலும், அவளை நீதிபதி பொல்லாத நீலியெனக் கடிந்தாரென்பதும் சில தினங்கட்கு முன் இப்பத்திரத்தில் வெளியிடப்பட்டிருந்ததல்லவா. இப்பொழுது, தல்டுவா என்னுங் கிராமத்தில் வசிக்கும் கறோலிஸ் என்னும் சிங்களவனொருவன் தன் பிள்ளையாகிய சைமன் சிங்கோ சித்தப்பிரமைகொண்டு பிதாவான தன்னையும் பிறரையும் கொல்ல முயன்றான் எனப் பொலிசாருக்கு மனுப்பண்ணி அவர்களைக் கொண்டு அப்பிள்ளையைப்பிடித்து அடைப்பித்தான். பொலிசர் அச்சிறுவனை நீதிபதிமுன்னர்க் கொண்டுபோய் நிறுத்தி அவனுக்குப் பைத்தியமோ என்பதைச் சோதிப்பது நன்றென்று நீதிபதிக்குத் தெரிவித்தனர். நீதிபதி சிறுவனை விசாரணை செய்தபொழுது அவன் மிகவும் திட்பநுட்பமாகப் பின்வருமாறு மறுமொழி சொன்னான்: "ஆண்டவனே, எனக்குப் பிரமையுமில்லை; பைத்தியமுமில்லை. என் பிதா அருவருக்கத்தக்க சீவியம் நடத்தி எங்கள் குலத்திற்குத் தீராவசையைத் தேடிவரக்கண்டு நான் என் தகப்பனைத் திருத்தி நடக்கச் செய்யலாமென்று முயற்சி செய்தேன்; இதனால் அவருடைய தீயசெயல்களையும் அக்கிரமங் களையும் கண்டித்து வந்தேன்; இது என் தகப்பனுக்கு பிடியாமையினால் என்னைப் பைத்தியகாரன், கொலைசெய்யத் துணிந்தானென்று அபராதஞ்சுமத்திப் பொலிசரிடம் ஒப்பித்தார். இதுதான் உண்மை" என்று கண்களில் நீர் ததும்ப நின்று சொன்னான். அது கேட்ட நீதிபதி "நான் நீ சொல்வது முழுவதையும் மெய்யென்று நம்புகிறேன்; ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது நான் உன்னை விடுதலை செய்யின் நீ எங்கே போவாய்" என்று கேட்டார். நான் ஏதும் பிழைப் புத் தேடிக்கொண்டு பரதேசம் போவேன்; பிழைப்பு அகப்படும் வரையும் தெருவழியே சென்று வீட்டிற்கு வீடு பிச்சையெடுத்து வயிறு வளர்ப்பேன்; என்மனம் உடைந்துபோனது; பிதா எனப்படும் இந்தச் சண்டாளன் வீட்டிற் கால் வைப்பதைக் காட்டிலும் நான் உண்ண உணவில்லாவிட்டால் பட்டினிகிடந்து இறந்து போவது நல்லது" என்றான்.

நீதிபதி: நீ உன் பிதாவை இனிமேற் கஷ்டப் படுத்தமாட்டேனென்றும், நீ பிறந்த கிராமத்திற்குப் போகமாட்டேனென்றும் எனக்கு வாக்குப் பண்ணித் தருவாயா?

சிறுவன்: ஆண்டவனே, அப்படிச் செய்கிறேன் என்று சற்று முன்பு சொல்லிவிட்டேனே. வேண்டுமானால் சத்தியஞ்செய்கிறேன்; என் சீவனுள்ள பரியந்தம் தால்டுவாக்கிராமத்துள் அடியெடுத்து வைக்கமாட்டேன்"

நீதிபதி: சரி நீ போகலாம்.

என்னே உலகத்தியற்கை!

* * *

மகாத்மா காந்தியை முந்திய இந்திய பிரதிகாவலராகிய ஈர்வின் பிரபு மாத்திரமல்லர், ஆங்கில பிரதம மந்திரியாகிய மிஸ்ரர் மைக் டொனல், இன்னும் பாராளுமன்றத்துப் பிரபுக்கள், ஆங்கிலசனத்தவர்கள் பலர் சந்தித்துச் சந்தித்து மிக்க ஆர்வத்துடன் பேசி நன்றி பாராட்டியுள்ளனர். அவர்கள் மாத்திரமன்றி நமது அரச சக்கரவர்த்தியும் மகாத்மாவை உபசரித்து அவருடன் மிக்க ஆதரவோடு பேசியுள்ளார்; மகாத்மாகாந்தி பாரதமக்களாயுள்ளார். 35 கோடி பேருக்குத் தலைவரென்பதை உலகம் அறியும். இப்படியான மகத்துவத்தோடு கூடிய மகாத்மா காந்தியை இப்பொழுது இந்திய பிரதிகாவலராயுள்ள லார்ட் உவிலிங்டன் மாத்திரம் சந்தித்துப் பேசப் பிரியப்படவில்லை. இந்திய இராசப்பிரதிநிதியாகிய தாம் தமது பிரசைகளுள் ஒருவராக வைத்தெண்ணப்படும் காந்தியைக் கண்டு பேசுதல் தமக்குக் கௌரவக்குறைவென்று லார்ட்உவிலிங்டன் நினைத்துவிட்டனர் போலும். ஆனால் இப்படிக் கௌரவம் பார்க்கும் இந்திய பிரதிகாவலர் இப்பொழுது பெரியண்ணனாகிய சௌகத்அலியைக் கண்டு ஆதரவுடன் கலந்து பேசியுள்ளாராம். இவருடைய மனக்கிடக்கை இருந்தபடி யென்னே!

"கற்றாரைக் கற்றாரே காமுறுவர்-கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்"

என்பது மூதுரை.

* * *

"குனியக் குனியக் குட்டுபவனும் மூடன்; குட்டக் குட்டக் குனிபவனும் மூடன்" என்றொரு பழமொழி யுண்டு. நமது தேசாதிபதி அரசாங்க சபை அங்கத்தவர் நிர்ணயங்களை நிராகரித்துத் தாம் நினைத்தபடி செய்தால் இந்த அரசாங்க சபையோர் அதனைப் பார்த்துக்கொண்டு வாலை யொடுக்கியபடி யிருப்பார்களென்பதை அறிந்தி ருந்தும் பின்னரும் ஒவ்வொரு நிர்ணயங்களை இவர்கள் சபையில் நிறைவேற்றும்வரையிற் சும்மாவிருந்துவிட்டு நிறைவேற்றியவுடன் அவற்றை நிராகரித்து ஒதுக்கித் தாம் நினைத்த பிரகாரஞ் செய்தல், தம்மைப் பார்ப்பவர்களுக்குச் சிறிய மனுஷனாகத் தோன்றச் செய்யுமல்லவா. இனி இச்சபையில் அமைச்சரென்றும் சனப் பிரதிநிதிகளென்றுமிருப்போர் தேசாதிபதி தங்கள் நிர்ணயங்களை ஒருமுறை யிருமுறையல்ல, பலமுறை நிராகரித்துத் தங்களை யலட்சியஞ் செய்து அவமதிக்கக் கண்டுகொண்டும் பின்னரும் உலுத்தத்தனமாக அச்சபையுட் புகுந்து இந்த ஸ்தானத்தை விட்டுப் போகமாட்டோமென்று நிற்பதும், தங்களைத் தெரிவுசெய் தனுப்பிய சனங்களின் நோக்கத்திற்கு நேர்விரோதமாகக் கருமஞ்செய்வதும் மானங்கெட்ட செயல்களாகும். இனி இவர்கள் இப்படிச் செய்வதெல்லாம் சம்பளம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காகவே யென்ற உண்மையை உலகம் அறியும்பொழுது இவர்கள் மனுஷப் பதராகவன்றோ மதிக்கப்படுவார்கள்.

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி யிடித்துண்கை - சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மான மழியாது
உயிர்விடுகை சால வுறும்.

* * *

உலகம் பலவிதம்: 1932 மார்ச் 10

நமது நாட்டிலே இதற்குமுன் உண்ண உணவின்றி உடுக்கத் துணியின்றி தரித்திரம் காரணமாக யாரும் தம்முயிர்விட்டதாக நாம் கேள்விப்படவில்லை. ஆனால் வறுமையின் கொடுமையினால் நிலாவரையில் வீழ்ந்து உயிர் விட்டார்களென்ற சமாசாரம் இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றது. இந்தச் சமாசாரத்தை அறியும் எவரும் திகிலடை யாமல் பரிதாபமுறாமல் இருத்தல் முடியாது. ஏனைய நாடுகளிலே லட்சப் பிரபுக்களும் உண்டு, நித்திய தரித்திரர்களும் உண்டு என்றும், இந்த யாழ்ப்பாணத்தில் மாத்திரம் அதிக செல்வர்களு மில்லை, பெருந்தரித்திரர்களுமில்லையென்றும் பெரியோர் சொல்லக் கேள்விப்பட்டுள்ளோம். ஆனால் இப்பொழுது அதிக செல்வர்கள் இல்லா விட்டாலும் பெருந்தரித்திரர்கள் இருக்கின்றார்க ளென்பது நிலாவரையில் நேர்ந்த இந்த அநர்த்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினால் அறியத்தக்கதாயிருக்கின்றது. நமது நாடு முன்னர் எக்காலத்துமில்லாத இந்த ஆபத்தான நிலைமையை யடைந்தமைக்குக் காரணராயுள்ளார் சனங்களா, இல்லையேல் நம்மைப் பரிபாலிக்கும் அரசினரா, இல்லையேல் இது தெய்வ சங்கற்பமா என்பது தெரியவில்லை.

தமக்கொரு நியாயம் பிறர்க்கொரு நியாயமா? இந்திய மக்கள் தங்கள் கருமங்களைத் தாமே பார்த்துக்கொள்ள வேண்டும். தாம் முன்னேற்ற மடையவேண்டும்; தாமும் உலகத்தில் ஒரு சாதியாராக வைத்தெண்ணப்படவேண்டும் என்ற நோக்கம் பூண்டவர்களாய், சாத்வீகமுறையை அனுசரித்து சுயராச்சியம் உதவும்படி பிருத்தானியரைக் கேட்க, பிருத்தானியர் அங்ஙனம் கொடுப்பதை விடுத்து, இந்தியாவிலே அடக்குமுறையைக் கையாண்டு வருகின்றார்கள். இந்திய அரசினர் செயலை இங்கிலாந்திலுள்ள பெருமக்களும், அமெரிக்கர் முதலானோரும் குறை சொல்லுகிறார்கள். ஆனால் ஜப்பானியர் சீனருடன் நீதியீனமாக யுத்தத்திற்குச் சென்று அவர்களுடைய நாட்டிற் சிலவற்றைக் கவர்ந்து விடுகிறார்களென்றும், பல அனர்த்தங்களைச் செய்கின்றார்களென்றும் ஜப்பானியர் செயல் தவறானதென்றும் பிருத்தானியர் சீனருக்காக ஜப்பானியருடன் மாறுபடுகின்றனர்; சீனரையும் ஜப்பானியரையும் சமாதானமாக்க முயல்கின்றனர். இது விபரீத மல்லவா?

"ஏதிலார் குற்றம்போல் தன்குற்றங் காண் கிற்பான்,
தீதுண்டோ மன்னு முயிர்க்கு."

* * *

உலகம் பலவிதம்: 1932 மார்ச் 17

நமது நாட்டில் இக்காலத்தில் மலிந்துள்ளவை என்ன என்று பார்ப்போம்; மோட்ட ரதங்கள், "பஸ்" கள் சாராயப் போத்தல்கள், மயிர்க்கொட்டிப்புழு, களவு, சூது, பொய், சோர வியாபாரம், இலஞ்சம் வாங்குதல், மரணம், பணமுட்டு, தொழின்முயற்சியின்மை, கொலை, பொய்வழக்கு, ஈனரின் அக்கிரமம், நல்லோரை நிந்தித்தல், நாகரிகத்தைப் பின்பற்றல், சிங்கள நாட்டிலிருந்துவருங் கட்டில், கதிரை, மேசை, பாய், கயிறு, விளக்குமாறு முதலிய பொருள்கள், கள்ளு, அடிபிடிசண்டை, மின்சாரவெளிச்சம், பந்துவிளையாட்டு, சிகறற்பீடி, அலுமினியப் பாத்திரங்கள், தேநீர்க்கடைகள், தெருவீதிகளிலும் ஒழுங்கைகளிலும் அழுக்குகள், துர்நாற்றம், நாட்டுக்காய்ச்சல், வயிற்றுளைவு முதலாம் ரோகங்கள் முதலிய இவைகளேயாம். இக்காலத்தில் அரியனவாயுள்ளன உத்தியோகம் தொழில்முயற்சி, பணம், தேங்காய், வெற்றிலை, கல்வியிலூக்கம், சாதியபிமானம், தேசாபிமானம், சமயாபிமானம், பாஷாபிமான மென்னுமிவைகள், தங்கப்பவுண், பொன், வெள்ளி, பெரியாரைப் பேணல், நீதி ஆசார அநுஷ்டானம், கடவுட்பத்தி, ஒழுக்கம், சமய சாஸ்திரக்கல்வி, அரச விசுவாசம். அரசினர் பிரசைகளின் நன்மையை நோக்கிக் கருமஞ் செய்தல், சத்தியம் முதலியவைகளாம்.

* * *

இக்காலத்தில் மலிந்துள்ளோர் மோட்ட ரதஞ் செலுத்துவோர், பஸ்செலுத்துவோர், நியாயவாதிகள், டக்ரர்மார், நல்லாயிருந்து கெட்டோர், மதுபானிகள், கள்வர், படிப்பில் ஊக்கமில்லாத மாணாக்கர், படித்தும் உத்தியோகமில்லாமற்றிரிவோர், சாதியபிமானம் சமயாபிமானங் கெட்டோர், வியாபாரிமார், அபின்கஞ் சா மதுபானம் முதலாஞ் சோர வியாபாரஞ் செய்வோர், சோம்பேறிகள், நிரீச்சுர வாதம் பேசுவோர் முதலிய இவர்களாவர்; இக் காலத்தில் அரியராயுள்ளோர்: ஒழுக்கமுடைய அந்தணர், நடுவுநிலைமையுடைய அரசர், நீதியுடைய வணிகர், பயிரிடும் வேளாளர், தத்தமக்கு உற்றதொழில் செய்யும் ஏனைய வருணத்தார், இல்லறமினிது நடாத்தும் மகளிர், பெற்றாரைப் பேணும் பிள்ளைகள், புண்ணியவான்கள், தமிழ்ப்புலவர், உள்ளொன்றுவைத்துப் புறம்பொன்றாகக் கருமஞ் செய்யாதோர் என்னுமிவர்களேயாவர்.

* * *

உலகம் பலவிதம்: 1932 மார்ச் 24

"பெண்டுகளெல்லாரும் பழையபடி புழுங்கல் குற்றவேண்டும்" என்று டக்ரர் ஷி.சி.போல் சில தினங்களுக்குமுன் இரத்தினபுரியைச் சேர்ந்த உடாபற்றுக் கிராமத்துக் கூட்டத்திற் சொல்லியிருக்கிறார். குறித்த டக்ரர் அக்கூட்டத்திற் பெண்களைப்பற்றிச் சொன்ன விஷயங்களையெல்லாம் இன்னமும் நாம் எடுத்துக்கூறப்புகின் ஒருபோது இக்காலத்துப் பெண்கள் சீற்றத்தினால் புழுங்கற் குற்றவல்ல, டக்ரர் போலைக் குற்றுவதற்கும் புடைப்பதற்கும் முறையே உலக்கையும் சுளகும் எடுப்பரென்றே சொல்லவேண்டி யிருக்கின்றது. நவநாகரிகத்தின் பாற்பட்டுக் கேடடைந்த நமதுபெண்மக்கள் என்ன நினைத்தாலும், என்னசொன்னாலும் டக்ரர் போல் சொல்வன அத்தனையும் மெய்யாதலால் அவற்றை இங்கே நாம் கூறாமல் விடவொண்ணாது; பின்னரும் டக்ரர் போல் என்ன சொல்லுகிறாரென்று பார்ப்போம். "நாங்களெல்லாரும் "மில்" அரிசி, சம்பா அரிசி என்னும் இவைகளைச் சமைத்து உண்ணுவதைவிடுத்து ஊரரிசியிற் "குத்தரிசி" யையே சமைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணவேண்டும். எங்கள் முன்னோர் இப்படியே செய்துவந்தார்கள். எங்கள் மூதாட்டிகள் தாங்களாகவே புழுங்கற் குற்றித் தாங்களாகவே சமைத்து உண்டமையினால் அவர்கள் அக்காலத்தில் அரோக திடகாத்திர முடையவர்களாயிருந்தார்கள். பெண்களுக்குத் தங்கள் வீட்டிலும் அட்டிற்சாலையிலுமே தேகாப்பியாசமிருக்க இக்காலத்து காரிகர் இவற்றைச் செய்யாது கைவிட்டுப் பந்தடிப்பது வீண். நெல்லுக் குற்றுதல் புழுங்கற் குற்றுதல் போன்ற தேகாப்பியாசமான செயல்கள் வேறு எவையுமில்லையாம். தாம் குற்றிச் சமைத்து உண்ணும் உணவு பெண்களுடைய பசியை நீக்குவதோடு அமையாது அவர்களுக்கு ஒரு மனரம்மியத்தையுந் தருமல்லவா. மேலும் இந்தக்குற்றரிசியிற் பெலத்திற்குரிய சாராம்ச முண்டல்லவா? யாழ்ப்பாணத்திலே ஊரரிசித் தவிடு பனங்கட்டியோடும் சேர்த்துக் குழந்தைகளுக்கு உணவாக ஊட்டப்பட்டு வந்தது. அந்நிய நாகரிகந் தலைப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்துத் தாய்மார் பனங்கட்டியோடு தவிடும் கலந்து குழந்தைகளுக்குத் தீற்றுதலைக் கைவிட்டார்கள்; பல கிருமிரோகங்கட்கு ஏதுவான மேலைத்தேச பலகாரங்களை இக்காலத்துத் தாய்மார் தங்கள் குழந்தைகளுக்கு ஊட்டத் தலைப்பட்டமையினால் குழந்தைகளெல்லாரும் நித்திய ரோகிகளாயினர்; சுகதேகமற்றவராயினர்; ஆதலால் எம்மனோர் பழைய பழக்கவழக்கங் களையும் முறைகளையும் இப்பொழுது கைக்கொள்ள வேண்டும்." டக்றர் போல் சொல்லிய இந்த அரிய விஷயமாகப் பின்னர்ச் சில குறிப்புக் கூறுவேம்.

* * *

இலங்கையிலுள்ள நீதிஸ்தலங்களில் நீதிபதிகளாக வுள்ளவர் பல முறைகளிற் பொலிசாரைத் திருந்தி நடக்கும்படி கண்டித்தல் சகசம்; ஆனால் பொலிசரும் அப் போதைக்கப்போது அக்கண்டனங்களைக் கேட்டுப் பச்சாத்தாபப்படுவதேயல்லாமற் பின்னர்த் தாம் திருந்தி நடப்பதாகக் காணப்படவில்லை; காலியைச் சேர்ந்த கொத்காலா என்னுமிடத்தில் ஒருகொலை நடந்துவிட, அக்கொலை வழக்கு முறைப்பாட்டிற்கு ஒரு உப பொலிஸ்பரிசோதகர் காலிப் பொலிஸ்கோட்டிற் போய் நின்றார். நீதிபதி இந்த முறைப்பாட்டைத் தொடர்வதற்கு பொலிஸ் மேலுத்தியோகத்தர் எவரும் வரவில்லையோ என்று பொலிஸ் உபபரிசோதகரைக்கேட்க அவர் இல்லையென்றார். உடனே நீதிபதி அந்த நீதிஸ்தலத்துப் பொலிஸ் பரிசோதகராகிய மீதின் என்பவரைப் பார்த்து "மேல் உத்தியோகஸ்தர் இங்கே வரத்தான் மாட்டாரோ என்ற உண்மையை அறி" என்று கட்டளையிட்டார். சிறிதுநேரத்துட் காலி உதவிப் பொலீஸ் தலைவர் அங்கே வந்து தோற்றினார். நீதிபதி அவரைப் பார்த்து "இந்தக் கொலைவழக்கு மிகவுங் கஷ்டமானது; இதனை நடத்த ஒரு உபபரிசோதகரை விடுவது சரியல்ல" என்று சொல்லுதலும், உப பொலிஸ்தலைவர் "எனக்கு இந்த வழக்கைப்பற்றிய விபரந் தெரியாது" என்றார். உமது "மேலுத்தியோகத் தராகிய பொலிஸ் தலைவர் எங்கே" என்று நீதிபதி கேட்க, உபதலைவர் "அவர் பொலிஸ்" தானத்திற்றான் இருக்கிறார்" என்று விடை கூறினார். நீதிபதி சிறிது சீற்றத்தோடு உப பொலிஸ் தலைவரைப் பார்த்து "உமது தலைவர் இப்படிப்பட்ட வழக்கில் இங்கேவர நேரமில்லாமல் அப்படி அதிக முயற்சியா யிருக்கிறாரா? அவருக்கு வர நேரமில்லாவிட்டால், உம்மைப் போன்ற மேலுத்தியோகத்தர் பொறுப்பில் அவர் இந்த வழக்கை விடவேண்டும்; இரண்டு மோட்டரதங்கள் ஒன்றோடொன்று மோதிவிட்டால், அந்த விஷயமாக உம்முடைய மேலுத்தியோக த்தர் இங்கே வரமுடியும்; இப்படிப்பட்ட பாரதூர மான கொலைவழக்கில் வர நேரமில்லை; குறித்த அந்தக் கிராமத்திற் கொலைக்குமேற் கொலைகளாக நடைபெறுகின்றன; எத்தனையோ கொலைகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை; கொலை நடப்பதைப்பற்றி பொலிஸ் மேல் உத்தியோகத்தருக்கு "அக்கறை" யில்லை; இருக்கட்டும்; நான் இவர்கள் செயலைப்பற்றி இலங்கைப் பொலிஸ் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்" என்றார். அப்பொழுது பொலிஸ் உபதலைவர் "ஐயா, நீங்கள் சொன்ன வைகளையெல்லாம் நான் எனது தலைவருக்குச் சொல்லிவிடுகிறேன்" எனலும், நீதிபதி "ஆம், ஆம், நீர் சொல்லும்; உம்மீது ஒரு பிழையுமில்லை" என்றார்.

* * *

இது ஒன்று; இன்னுமொன்று என்னவெனில்; சென்றவாரம் ஒரு தினம் கொள்ளுப்பிட்டிப் பொலிஸ் உத்தியோகஸ்தரொருவர் கொழும்பு நகரசங்க நீதிஸ்தலத்தில், கொள்ளுப்பிட்டித் தெருவின் இரு ஓரங்களிலுமுள்ள மேடை வழியே சிலர் துவிச்சக்கரத்தையுருட்டிக் கொண்டு சென்றார்களென அந்தச் சிலருக்கு விரோதமாக வழக்குத் தொடர்ந்தார். அப்பொழுது நீதிபதி வழக்குத் தொடர்ந்த பொலிஸ் உத்தியோகஸ்தரைப்பார்த்து "கொள்ளுப்பிட்டியில் இப்பொழுது பொலிஸ் வழக்கு வேறில்லையோ? அங்கே வழக்குப் பஞ்சம் ஏற்பட்டு விட்டதா? இப்படியான வியாச்சியங்கள் மிகவும் அல்ப்பமானவை" என்று சொல்லி எதிரியாக வந்தவர்களையும் ஓடிப் போங்கள் என்றுசொல்லித் துரத்திவிட்டாராம். இலங்கைப் பொலிசரின் இயற்கை இருந்தபடி யென்னே!

* * *

தன்னுடைய தங்கையாகிய தேவகி பெற்ற குழந்தைகளையெல்லாம் உடனுக்குடன் பறித்து வதைத்த சிசுகாதகனாகிய கம்ஸன் போல்வார், இல்லையேல் அவனிற் சிறிது குறைந்த வன்தண்மையுடையார் இக்காலத்தில் இந்தியாவிலே நீதாசனம் வகித்திருக்கிறார்களென்பது அறியக்கிடக்கின்றது. குச்சரநாட்டில் அந்நியபொருட் பகிஷ்கார முயற்சியில் ஈடுபட்டனரென்ற குற்றத்தின்பேரில் இரு பெண்களுக்கு நீதிபதி சிறைத்தண்டனை விதித்தார்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இருபெண்மணிகளிடத்தும் 1 வயசு நிரம்பாத குழந்தைகள் தனித்தனியுண்டு; இரு தாய்மாரும் தாம் சிறைபுகும்போது பால்குடிகளாகிய இக் குழந்தைகளையும் தம்முடன் கொண்டு போதல் சகசந்தானே; இந்த இரு பெண்களும் இப்படிச் செய்ய முயன்றபோது அதிகாரிகள் குழந்தைகளைக் கொண்டு போகவொண்ணாதென்று தடுக்க, இருவரும் நீதாசனத்திலிருக்கும் அந்த மானுட சென்மத்திற்கு முறையிட்டார்களாம். அந்நீதவான் பிரமாணத்தின்படி நடக்கவேண்டும்; குழந்தைகளை உடன்கொண்டு சிறைக்கூடத்திற்குப் போதல் முடியாதென்று தடுக்க, பொலிசர் தாய்மாரிடமிருந்து இரு குழந்தைகளை வீரிட்டுக் கதறக் கதறப் பிடிங்கிக்கொண்டார்களாம். இது என்ன அநியாயம்; இந்தச் சிசுத்துரோகம் யாரைப்போய்ச் சேருமோ யாமறியேம்!

* * *

அதிகாரிகளாகிய உங்களால் முடியாத காரியம் வியாபாரிகளாகிய எங்களால் முடியுமா" என்ற கேள்வியை பம்பாய்ப்பருத்தி வியாபார சமுதாயத்தார் பம்பாய் அரசினரைக் கேட்க வேண்டியேற்பட்டுவிட்டது. பம்பாயிலுள்ள அதிகாரிகள், அங்குள்ள பருத்திவியாபார சமுதாயத் தலைவருக்கு ஒரு நிருபம் விடுத்த போது "அந்நிய பொருட் பகிஷ்காரஞ் செய்வோருடன் உங்கள் சமுதாயத்து அங்கத்தவர் களும் ஒத்துழைக்கின்றார்களாமே; அவர்களை அடக்க, கட்டுப்படுத்த உங்களால் முடியாதா" என்று கடிந்தனர். அதனைக்கண்ட மேற்படி சமுதாயத் தலைவராகிய ஸேர் புருஷோத்தம தாஸ் தாகூர்தாஸ் என்பவர் சிறிது ஆத்திரத்துடன் பின்வருமாறு விடை பகர்ந்துள்ளார்: "நாங்கள் இங்கிருப்பது வியாபாரம் நடத்துவதற்கல்லாமல் அரசியல் நடத்துவதற்கல்ல; இப்படியிருந்தால் சனங்களுக்கிடையில் எங்கள் வியாபாரம் நடக்கமாட்டாது; ஆதலாற் சமாதானத்தை ஆக்கும்படி கேட்கிறோம்; இனி, நமது சமுதாயத்தாருள் பகிஷ்காரம் நடத்துவோருடன் சம்பந்தப் பட்ட அங்கத்தவர்களை எங்களால் அடக்க முடியாதா என நீங்கள் கேட்கின்றீர்கள்; தேசிய மகாநாட்டார் முயற்சிகளையும் அவர்கள் வெளியிட்டுவரும் துண்டுப்பத்திரிகைப் பிரசுரங்களையும் அடக்குவதற்கு அதிகாரிகளாகிய உங்களால் முடியாமலிருப்ப, இவர்களை அதிகாரமற்ற நாங்கள் அடக்குதல் எங்ஙனம் முடியும்" இந்தக் கேள்விக்குப் பம்பாய் அரசினர் யாது விடை பகர்வரோ தெரியவில்லை.

* * *

உலகம் பலவிதம்: 1932 மார்ச் 31

பெண்ணாய்ப்பிறந்தவர்கள் இல்லறத்துக்குத் துணையாயும் தம் நாயகனுக்குத் துணைவி யராயும் பிள்ளைகளுக்குத் தாயாராகவும் இருந் தார்கள். அந்தக்காலம் போய்விட்டது. இல்லாள் என்ற சொல்லுக்குக் கொள்ளக்கிடந்த கருத்து இல்லத்திற்குரியவள். இல்லத்திற்குரிய கருமங்களை நிர்வகித்தவள் முதலிய இவைகளாம். இவை அந்தநாளிற் கொள்ளப்பட்ட கருத்து; இல்லாள் என்பதற்கு இக்காலத்திற்கொள்ளக் கிடக்கும் கருத்து இல்லறத்தைச் செவ்வனே நடத்துவதற்கான திறமையும் செயல்களும் இல்லாதவள் என்று முருகேசு சொல்லுகிறார். இது எல்லாப்பெண்கட்கும் பொதுவாகக் கொள் ளத்தக்கதல்ல; அந்நியநாகரிகத்தைப் பின்பற்றிப் பயின்று ஒழுகும் பெண்களுக்கே சிறப்பாகச் சொல்லத்தக்கது. டக்ரர் ஷி.சி. போல் பெண்கள் தொன்மையிற்செய்த பிரகாரம் நெல்லுக்குற்ற வேண்டும், புழுங்கற்குற்றவேண்டும், மாவிடிக்க வேண்டும், சமையல் செய்யவேண்டும், போசனம் வழங்கவேண்டுமென்ற கருத்துப்படக் கூறுகின்றார். டக்ரர் போலின் கூற்றைக் கேள்விப்பட்ட நவநாகரிகப்பெண்கள் பலர் அவரைப் பரிகசித்துச் சிரிக்கிறார்கள்; ஐயோ பாவம், அந்த மனுஷன் நல்ல எண்ணத்தோடு சொன்னார்; ஆனால் இந்தப் பெண்களுக்கு அவர் வார்த்தை பிடிக்கவில்லை. இந்த நவநாகரிகப் பெண்கள் தங்களுக்கும் தங்கள் மூதாட்டியருக்குமிடையே உள்ள பேதங்களையும் ஏற்றத்தாழ்வுகளையும் உள்ளபடி உணர்ந்திருப்பரேல் டக்ரர் போலைச் சிரிக்கவும் மாட்டார்கள்; முருகேசுவை முனியவும் மாட்டார்கள்.

* * *

அக்காலத்துப்பெண்கள் மடம் நாணம் அச்சம் பயிர்ப்பென்னும் நாற்குணங்களை உடையவர்களாய், சிறுவயசிற் பிதாமாதாக்களுக்கும், பின்னர் கணவனுக்கும், கணவனில்லாவழித் தமையன் முதலிய மூத்தோர்க்கும் அடங்கியவர்களாய்ப் பொறை யாதி நற்குணம் பூண்டவர்களாய் விவேகிகளாய், சிக்கனமுடையவர்களாய், வறுமையிற் செம்மையென்ற கொள்கையினராய், பிறந்தகுடி புகுந்தகுடி யென்னு மிரண்டிற்கும் வசையைத் தேடிவிடாது இசையைத்தேடி விடுபவர்களாய், கடவுள் வழிபாடு விருந்தோம்பல் முதலாஞ் செயல்களுடையவர்களாய் இன்ன பிறநற்குண நற்செய்கைகள் பொருந்தியவர்களாய் இருந்தார்களாம். இவர்களுடைய உத்தம இலக்கணங்களைச் சொல்லுமிடத்துப் புகழேந்திப்புலவர்,

"நாற்குணமு நாற்படையா, ஐம்புலனு நல்ல மைச்சா,
ஆர்க்கும் நிலம்பே அணிமுரசா-வேற்படையும்,
வாளுமே கண்ணா, வதன மதிக் குடைக்கீழ்,
ஆளுமே பெண்மை அரசு."

என்று விதந்து கூறியுள்ளார்.

* * *

உலகம் பலவிதம்: 1932 ஏப்ரல் 28

வைத்தியர்களாகவுள்ளவர்கள் வைத்தியசாலைகளிலும் நோயாளர் வீடுகளிலுஞ்சென்று நோயாளர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔஷதங்களை ஊட்டி அந்த நோயாளர்களைப் பற்றியே பெரிதும் பேசிக் கொள்வார்கள்; சிந்திப்பார்கள். இதனால் நோயில்லாதவர்கள் தங்களைப்பற்றி வைத்தியர்கள் சிந்திப்பதில்லையே பேசுவதில்லையே என்று நினைக்கமாட்டார்கள். மேலும் நோயாளருக்கு மருந்தை உதவி அதனை உண்ணும் முறையையுஞ் சொல்லும்போது, இந்த ஔஷதப் பிரயோகமும் உண்ணும்முறையும் எங்களுக்குத்தான் என்று நோயில்லாதவர்கள் எண்ணிக் கொள்ளவொண்ணாது.

* * *

இதுபோலவே இந்த உலகம்பலவிதத்தில் தம்மைத் திருத்தி நடந்துகொள்ளவேண்டிய ஆண்கள் பெண்களுக்கு நல்ல நோக்கத்தோடு முருகேசு ஏதுஞ் சொன்னால் எழுதினால், அப்படித்திருந்தி நடக்குந் தேவையில்லாத ஆண்களும் பெண்களும் தங்கள் தலையில் அவைகளைத் தூக்கிப்போட்டுக்கொண்டு முருகேசுவை முனிவதும் குறைசொல்வதும் முறையல்லவே. "உந்தச் சட்டை உனக்கும் அளவாக விருந்தால் நீயும் போட்டுக்கொள்ளலாம்" என்பதே முருகேசுவினுடைய கொள்கை. ஆதலால் முருகேசு நல்ல நோக்கத்தோடு கூறும் விஷயங்களுக்கு அதீதர்கள், அதாவது மேற்பட்டவர்களாயுள்ள ஆடவர் மகளிர் தம் மேன்மையையிட்டு மகிழ்ந்து ஏனையோருக்கும் நடக்க வேண்டிய முறையைப்போதித்து முருகேசுவிற்குத் துணை புரிவதல்லாமல் இனியேனும் அவரை இகழமாட்டார்கள் குறை சொல்லமாட்டார்களென்ற எண்ணத்தினால் முருகேசு பின்னரும் மொழிவதானார்.

* * *

கைத்தொழிலைவிருத்திசெய்யவேண்டும்கமத்தொழிலை ஓங்கச்செய்தல் ஆவசியகம்; ஒறுப்பனவாக வாழ்தல் இன்றியமையாதது; பரதேசப் பொருள்களைப் பகிஷ்காரஞ்செய்து சுதேசியப் பொருள்களைக் கைக்கொள்ள வேண்டும்; அரசாங்க உத்தியோகத்தை நம்பியிருக்கவொண்ணாது; இப்பொழுது அரசினர் ஊட்டுங் கல்வியைப் பயில்வதனால் எவ்வகையான நன்மையுமில்லையென்று இப்படிப் பேசுபவர்களும் எழுதுபவர்களும் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் இங்குள்ள ஆண்பிள்ளைகளைக் குறித்தும் விழித்தும் பேசியும் எழுதியும் வருகிறார்களேயல்லாமல், பெண்கள் விஷயமாக எவ்வகையான உபதேசத்தையும் திருத்தங்களையும் செய்யவும் சொல்லவும் எழுதவுங் காணோமே. காரணம் இங்ஙனஞ் சொல்பவர்களும் எழுதுபவர்களும் இவ்வாறே சொல்லியும் எழுதியும் விட்டுத் தத்தம் வீட்டிற்கு மீண்டுபோகும்போது வீட்டுக்காறியாயுள்ளவள் தம்மைக் குறைகூறி விடுவாளென்று பயந்து போலும் என முருகேசு சந்தேகப்படுகின்றார்.

* * *

ஒறுப்பனவும் வறுமையிற்செம்மையாய் நடந்துகொள்ளுதலும் தம் கடமையைச் செய்தலும் அந்நிய பொருள்களை விலக்குதலும் சுதேசப்பொருள்களைக் கைக்கொள்ளுதலும் பழக்கவழக்க ஒழுக்கங்களும், சத்தியம் பொறுமை அடக்கம் முதலியவைகளும் அவரவர் இல்லங்களிலிருந்தல்லவா முதல் உற்பத்தியாக வேண்டும். ஆணாகப்பிறந்தவன் மேலே சொல்லப்பட்ட நற்குணங்களையும் நற்செய்கைகளையும் உடையவனாயிருந்தாலும் வீட்டிலுள்ள பெண்ணாய்ப் பிறந்தவளிடத்தில் இக்குணங்களுஞ் செயல்களுமில்லையாக, அவள் ஊதாரித்தனமாய்நடப்பளேயாகில் அந்தக்குடித்தனம் அடையும் நன்மை ஏதும் இல்லையாம்.

* * *

நமதுநாட்டில் இக்காலத்துள்ள தமிழ்ப் பெண்களுட் பெரும்பாலார் சிறு பிராயத்திற்றானே தமிழைக்கல்லாது, கற்றாலும் தமிழ்முறையாகக் கல்லாது, ஆங்கிலப் பள்ளிக்கூடங்களிற் சேர்ந்து விடுதிவிட்டு ஆங்கிலத்தை ஆங்கிலமுறையிற் கற்று நவநாகரிகங்களைப் பயின்று தொன்மையையும் தமிழ்மகளிருக்குரிய ஆசாரங்கள் கடமைகளை யறியாராய் அந்த விஷயத்தில் மாத்திரம் மடம் என்னுங் குணம் பூண்டவர்களாய் தமிழொடு விரவாத அரைகுறையான ஆங்கிலக் கல்வியை ஒருவாறு முடித்துக்கொண்டு தத்தம் இல்லத்தில் வந்து விவாகத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிக் கன்னிகையாக வீட்டிலிருக்கும் காலத்திலாயினும் தம் தாயர் இன்னும் வீட்டிலுள்ள பெரிய பெண்கள் மூதாட்டியர் இல்லற கருமங்களைச் செய்யும் விதத்தையும் முறைகளையும் பின்பற்றித் தாமுஞ் செய்ய விரும்புகிறார்களில்லை. இப் பெண்கள் தம் தாயர் மூதாட்டியர்க்கு மௌட்டிகம் கற்பித்துவிட்டு நவீனம் படிப்பதிலும் சமயத் தொடர்பில்லாத ஆங்கில சமாசாரப் பத்திரிகைகளை வாசிப்பதிலும் தாயம் போடுதல் முதலாம் வியர்த்தமான கருமங்களிலும் தம் காலத்தைப் போக்குகிறார்கள். இவர்கள் தம் பிதாமாதாக்களின் தரித்திரிய செல்வ நிலைமைகளை உணரார்கள்; பஞ்சம் பசியறியார்கள்; தாம் இன்னுஞ் சிலகாலத்தில் மனைவியராகவும் பின்னர்த் தாயராகவும் வரவேண்டி ஏற்படுமல்லவா என்பதைச் சிந்தியார்கள். இப்படியான நிலைமையிலேயே பிதாமாதாக்கள் பொய்யையோ மெய்யையோ சொல்லி இவர்களுக்கு விவாகஞ் செய்து வைத்துத் தம் சுமையை நீக்கிவிடுகிறார்கள். இவ்வாறு மணம்முடித்த தம்பதிகளின் கதையொன்றைப் பின்னர்ச் சொல்வேம்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆநந்தன் - அன்னம்

உலகம் பலவிதம் 1932 மே 19

ஆநந்தன் - அன்னம்

ஆநந்தன் தன் பிதாமாதாக்களுக்கு ஏக புத்திரன். அதாவது ஒரேயொருபிள்ளை; அவனுடைய பெற்றார் மணஞ் செய்து நீடித்த காலம் பிள்ளையில்லாமலிருந்து பின்னர் பெற்றமையினால் அவனிடத்தில் மிக்க அருமையும் அன்பும் பாராட்டி அவனை வளர்த்து வந்தார்கள். ஆனாலும் அவனுக்கு ஐந்து வயது ஆரம்பிக்க வித்தியாரம்பஞ் செய்து அவனைப் பள்ளிக்கு அனுப்பி வைத்தனர். அவன் இயல்பில் விவேகியானாலும் அவனுடைய பெற்றார் அவனை அதிக அருமை பாராட்டிப் பழுதாக்கிவிட்டனர். அவனோ வாலிபனாய் வந்தபின்னரும் பசியறியான், நோயறியான், சிரமமறியான், வெய்யில் மழை காற்றுப் பனி யென்னுமிவைகளிற் சென்றறியான். நன்மை தீமையறியான், வேலைசெய்தறியான். சுருங்கச் சொல்லுகில் எவ்வகையான கஷ்டமுமறியான். அவன் கல்விபயிலும் விஷயத்தில் அவனுடைய தாய் தந்தையர் அவனுக்குத் தேவைக்கு மேற்பட்ட வசதிகளைச் செய்தமையினால் அவன் படிப்பில் அலட்சியங்கொண்டான். தொடக்கத்தில் நல்ல விவேகியாயும் கல்வியிற் சிறிது ஊக்க முடையவனாகியுமிருந்த ஆநந்தன் பெற்றார்கள் செய்கையினாற் காலகதியில் மந்தனும் கல்வியில் அலட்சியம் பூண்டவனுமானான். உயர்தர வகுப்பிற் படிக்கும்போது ஒருமுறை இருமுறை தன் பரீட்சையில் அவன் சித்தியடையத் தவறினான். இங்ஙனம் தவறியதினால், முன் அவனுக்குக் கீழுள்ள வகுப்பிற் படித்தவர்கள் அவன் பயிலும் வகுப்பிற்கு வந்துவிட, அவர்களுடன் ஒருங்கிருந்து கற்கப் பிரியமில்லாமல் ஆநந்தன் தான்படித்த கல்லூரியிற் படித்தலை விடுத்து வீட்டிற்றானேயிருந்து பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தத் தொடங்கினான். அப்படிப் படித்தும் அவன் குறித்த பரீட்சையிற் சித்திபெறாமையால் படிப்பை அவ்வளவில் விடுத்து உத்தியோகந் தேடத் தலைப்பட்டான்.

* * *

ஆநந்தனுடைய தந்தைதாயர் அக்காலத்திற் பெருஞ் செல்வம் செல்வாக்குடையவர் களாயிருந்தமையினால், அவன் ஒரு உத்தியோகம் பெற்றுக்கொள்வது அவனுக்கு அருமையான கருமமல்ல. அவன் ஒரு கச்சேரியில் பிரத்தியேக கிளாக்காக நியமனம் பெற்றான். ஆநந்தன் தொடக்கத்தில் தன் உத்தியோகத்தின்பொருட்டுப் பெற்றுவந்த மாதச் சம்பளம் அவனுடைய பிதாவிடத்துள்ள கணக்கப்பிள்ளை பெற்ற சம்பளத்தைக் காட்டிலும் குறைவாகவிருந்தது. இருந்தாலும், தானுமொரு அரசாங்க உத்தியோகத்தன் என்ற பேர் மாத்திரம் அவனுக்குப் பெரிதாயிருந்தது. அவனுடைய பெற்றாரும் எங்கள் மகன் கவர்ண்மெண்டில் வேலையாயிருக்கின்றான் என்று எல்லாருக்குஞ் சொல்லி தாமும் பெருமிதமடைந்தார்கள். பார்க்கும் உத்தியோகம் அடிமைவேலை என்ற எண்ணம் அவனுக்குமில்லை, அவன் பெற்றாருக்குமில்லை. தான் கிளாக்காகவிருத்தலால், அரசாங்க பரிபாலன விஷயத்தில் தானுமொரு அம்ஸம் என்று ஆநந்தன் பேய்த்தனமாய்த் தன்னளவில் எண்ணிக்கொண்டான்.

* * *

ஆநந்தனுக்கு உத்தியோகங் கிடைத்துச் சிலமாசங்கள் செல்வதற்கிடையில் அவனுக்குக் கல்யாணம் பேசத்தொடங்கினார் பலர். இப்படிப் பேசுங்காலத்தில், மடம் நாணம் அச்சம் பயிர்ப்பு முதலாம் நாற்குணங்களையுமுடையவரும் பேரழகு வாய்ந்தவரும் செய்காரியமறிந்து இல்லறத்தை இனிது நடாத்தத் தக்கவரும் கல்வியறிவுடைய வரும் மானமுடையவரும் கடவுட்பத்தி பழைய நாகரிகம் முதலிய சுகுணங்கள் அமைந்தவரும் ஒத்த மரபுடையவருமாகிய சில கன்னியரையும் தனித்தனி ஆனந்தனுக்கு மணம்பேசி வந்தனர். இவ்வாறான கன்னிகைகளுள் ஒருத்தியைத் தம்பிள்ளைக்கு மணம் முடித்து வைக்க ஆநந்தன் பிதாமாதாக்கள் விரும்பினரேனும் அவனுக்கு அது இஷ்டமில்லை. இப்படியே பேசிவரும் நல்ல சம்பந்தங்களையெல்லாம் ஆநந்தன் பிரியப்படாது தட்டிவிடுவதைக்கண்ட அவன் பெற்றார் ஒருதினம் அவனைக் கூப்பிட்டு தம்மருகில் இருக்கச்செய்து "மகனே, ஆநந்தா உனக்கு ஒரு கல்யாணஞ் செய்துவைத்து எங்கள் காலத்திலேயே உன் சீர்சிறப்பைப் பார்க்க ஆசைப்படுகிறோம். தக்கதக்க இடங்களிலிருந்து உனக்குப் பெரியோர் அயலோர் பெண்பேசிவர நீ அவர்களையெல்லாம் வேண்டா மென்று சொல்லித்தட்டிவிடுகிறாய்; உனக்குப் பேசிவந்த பெண்களுள் முருகேசுவின் மகள் எங்கள் குடிக்கு மிகவும் வாய்ப்பானவள் ஒத்த மரபுடையவள்; தூரத்தில் இனமாகவுள்ளவள்; வடிவானவள்; குணமானவள்; தமிழ் நல்லாய்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்திருக்கிறாள், எங்களைப்போலவே அவர்கள் மற்சமாமிசந் தின்பதில்லை. ஞாயமான சீதன முண்டு. அவளோ குடித்தனத்தைக் கெட்டித்தனமாக நடத்தக்கூடியவளென்பது எங்களுக்கு முந்தியே தெரியும், சிறு பராயந் தொடுத்து நாங்கள் அந்தப் பிள்ளையிற் கண் வைத்திருந்தோம்; அப்பெண்ணையும் வேண்டாமென்று நிற்கிறாயாம்; ஆனதால் இனி, நீ உன்னெண்ணத்தை வெளியாகச்சொல்லிவிடு; நீ விரும்பியபடி ஒரு பெண்ணைத் தேடிக் கல்யாணஞ் செய்து வைப்பது எங்கள் கடன்; ஆனால், சாதியைவிட்டு இறங்கிவிடக்கூடா தென்பதை மாத்திரம் மனத்தில் வைத்துக்கொள்" என்று சொன்னார்கள்.

* * *

இவற்றையெல்லாங்கேட்ட ஆநந்தன் சிறிது நேரம் யோசித்தபடி மௌனமாயிருந்து விட்டுப் பின்னர்; தன்தாய் தகப்பனை பார்த்து "அப்பா, அம்மா, நீங்கள் என்னை நெருக்கிப் பிடிப்பதால் என் எண்ணத்தை இப்பொழுது உங்களுக்கு உள்ளபடி சொல்லிவிடுகிறேன். பிதாமாதாக்கள் சொன்னபடி பிள்ளைகள் விவாகஞ் செய்வதும் செய்யாது விடுவதும் உங்கள் காலத்தில் நடந்துவந்த வழக்கமே. இப்பொழுது உலகமோ திருந்திவருகின்றது. கல்யாணம் பேசி வருபவர்கள் தாம் தாம் எடுத்துக்கொண்ட கருமத்தை நிறைவேற்ற நினைத்து வாயில் வந்தபடி மனம்போனவாறு வந்து பலவற்றையும் பேசுவார்கள்; அவர்கள் பேச்சிற்கு நான் செவிகொடுத்தல் முடியாது; மேலும் கல்யாணஞ் செய்பவன் நானல்லாமல் அவர்களல்லர்; நான் என் மனசிற்கு இசைந்த பெண்ணையே கல்யாணஞ் செய்வதன்றி அவர் சொல்லும் இவர்சொல்லுங் கேட்டுச் செய்யமாட்டேன்; காலத்திற்குத் தக்க கோலம் என்ற பிரகாரம் பெண் இக்காலத்து மாதிரியை யறிந்து அதற்குத்தக நடக்கக்கூடியவளா யிருத்தல் வேண்டும். தமிழ் படியாவிட்டாலும் இங்கிலிஷ் நல்லாய் எழுத வாசிக்க, எவரோடுங் கூச்சமின்றிப் பேசப் பயின்றிருத்தல் வேண்டும்; வண்டிமாடு போல சதா அடுப்படிவேலையும் வீட்டு வேலையுஞ் செய்வதை விடுத்து, அவைகளையெல்லாம் வேலைக்காரர் செய்ய தானே மேற்பார்வை செய்துகொள்ளத்தக்க பெண்ணாயிருத்தல் வேண்டும்; நான் வீட்டில் இல்லாத நேரத்தில் என் சிநேகர் யாரும் வந்து என்னைத் தேடினால், விசாரித்தால் கதவுமூலை யிலும் திரை மறைவிலும் நின்று சோனகப் பெண்கள் போல் "அவர் இங்கேயில்லை, வெளியிற் போய்விட்டார்" என்று சொல்லுவதைவிட்டு, நேரே தலைவாசலுக்கு வந்து வந்தவருக்கு மறுமொழி சொல்லி ஆசனமுதவி உபசரிக்கத் தக்கவளாயிருத்தல் வேண்டும்; அபசுரத்தோடாயினுங் காரியமில்லை, "வையோலின், ஹார்மோனியம்" என்னும் இவைகளை வாசிக்கவும் இனிமையாய்ப் பாடவும் தெரிந்திருக்க வேண்டும்; கோயிலுக்குப் போதல் விரதங்காத்தல் முதலிய இந்தப் பேய்த்தனங்களையெல்லாம் விட்டு, கற்புடைய பெண்களுக்குக் கணவனே தெய்வம் ஆனதினால் என்னைக் கும்பிட்டுக்கொண்டு என்னுடன் கூடிக்கொண்டு கூட்டம் விருந்து கூத்து படக்காட்சி என்னுமிவைகளுக்கு வரத்தக்கவளா யிருத்தல்வேண்டும்; உடைநடை பாவனைகளை அந்தந்தக் காலத்திற்குஞ் சமையத்திற்கும் பின்பற்றி மாற்றி நடக்கத்தக்கவளாயிருக்க வேண்டும். இந்தக் குணங்களும் செயல்களும் இருக்குமேயானால் இன்னும் வேண்டிய செயல்களையும் பழக்கங்களையும் பின் நான் பழக்கிக் கொள்ளுவேன்" என்றுசொல்லி முடித்தான். பெற்றார் தம் பிள்ளையின் வார்த்தையைக் கேட்டுக் கதுப்புட் சிரித்துக்கொண்டு "அதற்கென்ன மகனே, அப்படியொன்றைத் தேடிப்பார்ப்போம்" என்று சொல்லிவிட்டு எழுந்து போயினர்.

* * *

உலகம் பலவிதம்: *1932 ஜூன் 02*

ஆநந்தன் - அன்னம் தொடர் *(முற்றொடர் - 02)*

குச்சகமுனிவர் தமது மகனாகிய மிருகண்டியருக்கு அவர்சொன்னபிரகாரம் பெண் தேடத்தலைப்பட்ட தன்மைபோல் ஆநந்தனுடைய பிதா அவனுக்கு, பல இடங்களில் தரகர்களை யனுப்பியும், சில இடங்களில் தாமே சென்றும் பெண் விசாரிக்கலாயினார். ஆநந்தன் சொன்ன இலட்சணம்வாய்ந்த பெண் நவநாகரிகம் அதிகப்பட்ட இக்காலத்தில் அகப்படுவது அரிதல்லவே; கல்யாணத்தரகருள் நமது முருகரம்மான் அப்படியான கன்னிகையை ஆராய்ந்து முடிவுசெய்து கொண்டு ஆநந்தன் பிதா வீட்டிற்கு ஒரு வியாழக்கிழமை பின்னேரம் வந்து சேர்ந்தார். முருகர் வரவைக்கண்ட ஆநந்தனும் அவன் பிதாவும் அவரை அழைத்து உபசரித்து இருத்தினார்கள். "அம்மான், உங்களுக்குச் சாவில்லை, சற்று முன்பாக, தம்பியும் நானும் உங்கள் விஷயமாகத்தான், அம்மானை வெகு நாளாகக் காணவில்லையே என்று பேசிக்கொண்டிருந்தோம். என்ன நூதனம் அதற்கிடையில் நீங்களும் வந்துவிட்டீர்கள்; என்று கூறிமகிழ்ந்து பின் ஆநந்தனின் பிதா தன் மகனைப் பார்த்து, "தம்பீ, அம்மான் வந்திருக்கிறாரென்று அம்மாவிடம் போய்ச் சொல்லிவிட்டு வா" என்றார். ஆநந்தன் தாயிருக்கும் பக்கம் போனான். பின்னர் ஆனந்தன் பிதா முருகரைப் பார்த்து "என்ன, அம்மான், மெத்த மெலிந்து போனீர்கள்; ஏதுஞ் சுகவீனமோ, ஏன் இந்தப் பக்கத்தில் வெகு நாளாகக் காணவில்லை" என்று கேட்டார்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகர் முப்பத்திரண்டு பற்களையுங் காட்டிச் சிரித்து "ஐயா, கடவுளேயென்று சுகவீன மொன்றுமில்லை; தெரியாதா, பண இடைஞ்சலான காலம், அங்குமிங்கும் அலைந்துதிரிய வேண்டியிருக்கிறது; அல்லாமலும் வயசும் போக போக உடம்பும் இளைக்குந்தானே; மேலும் இங்கே வரும்போது ஒரு மங்கலமான செய்தியோடு வரவேண்டுமென்று நினைத்துத்தான் இவ்வளவு நாளும் இந்தப்பக்கம் வராமல் விட்டேன்" என்றார். இதற்கிடையில் ஆநந்தனும் தாயும் தலைவாசலில் முருகர் இருக்குமிடத்திற்கு வந்தனர். "அம்மான், உங்களை வெகுநாளாகக் காணவில்லை; அது கிடக்க, நாங்கள் சொன்ன காரியம் ஏதும் சந்தித்ததோ" என்று ஆநந்தன் தாய் கேட்டாள். "அது, என்ன, பிள்ளை கடையில் வாங்குகிற பண்டமா, இப்படியான கருமங்களை எவ்வளவோ ஆராய்ந்து உசாவியல்லவா செய்ய வேண்டும்; அவசரப்பட்டு ஏதும் ஆகுமா; அல்லாமலும் நீங்கள் என்ன பெண்பிள்ளை வைத்திருக்கிறீர்களா, கடவுள் தந்த பாக்கியம் ஒரேயொரு ஆண்பிள்ளையை வைத்துக்கொண்டு ஏன் அவசரப்படுகிறீர்கள்" என்று முருகர் சொல்ல, "இல்லை, அம்மான், நாங்களும் இந்தப் பிள்ளையின் சீர்சிறப்பைச் சாகமுந்திப் பார்த்து விடலாமென்ற எண்ணந்தான்; வேறொன்றுமல்ல" என்று ஆநந்தன்தாய் சொன்னாள். முருகர் சிரித்து "பிள்ளை, செத்தபிறகு பார்க்கமுடியுமா முடியாது, சாகமுந்தித்தான் பார்க்கவேண்டும்; நானும் உங்கள் விஷயத்தை மறந்துபோகவில்லை; ஏதோ ஓடியாடித்தான் திரிகிறேன்; இன்னமும் ஒன்றாவது நாம் நினைத்தபடி கிட்டவில்லை; ஒவ்வொன்றைப் பேசிப்போனால் அதற்கு ஒவ்வொரு குறையுமிருக்கிறது; ஆனால் நேற்று ஒரு இடத்திற்குப் போனேன்; அந்த இடத்தில் ஒரு பெண்ணிருக்கிறது; அது ஒருவிதமாய் உங்களுக்குச் சந்திக்கும்போற் காணப்படுகிறது; அதைப்பற்றித்தான் சொல்லலாமென்று இன்றைக்கு இப்படி வந்தேன்" என்று முருகர் மெல்ல மெல்லச் சொன்னார்.

* * *

முருகர் இப்படிச் சொன்னதைக்கேட்ட ஆநந்தன் பிதாமாதாக்கள் முருகருக்குச் சமீபத்தில் வந்தார்கள்; ஆநந்தனும் அவருக்கணித்தாக விருந்தான். "அம்மான், நீங்கள் தேடத்தலைப்பட்டாற் கிட்டாத கருமமும் ஒன்று உண்டா, நல்லது, எங்கே, ஆருடைய மகள், தாய்தகப்பன் இருக்கிறார்களா, சாதிமரபு எப்படி, பெண் நிறங் குணமானதா, படித்தபெண்ணா, என்ன சீதனங் கொடுப்பார்கள், தம்பிக்குச் சோடான பெண்ணா, செய்காரியந் தெரிந்தவளா, பெண்ணுக்கு வேறுஞ் சகோதரங்களுண்டா, வயசென்ன இருக்கும், சமீபத்திலா தூரத்திலா" என்று ஆநந்தன் பெற்றார்கள், முருகரம்மானைப் பதில்சொல்ல வாயெடுக்கவிடாது ஒன்றன்பின்னொன்றாக மாறி மாறிக் கேள்வி கேட்டார்கள். முருகர் சிரித்து "ஐயோ, பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்குச் சோதனைகாலத்தில் சோதனைகாரர்தானும் இவ்வளவு கேள்விகேட்கமாட்டார்களே நான் ஒருவன், என்னை நீங்கள் இரண்டுபேரும் மறுமொழி சொல்லவிடாமல் மாறிமாறிக் கேள்வி கேட்டால் நான் ஆருக்கென்று பதில் சொல்வது; ஆனாலும் சொல்லுகிறேன் ஆத்திரப்படாமற் கேளுங்கள்" என்று சொல்லத்தொடங்கினார்.

* * *

உலகம் பலவிதம்: 1932 ஜூன் 09

ஆநந்தன் - அன்னம் தொடர் (முற்றொடர் - 03)

"ஐயா நான் முந்தைநாள் வேலப்பர் சரவணமுத்து வீட்டிற்குப்போனேன்; சரவணமுத்துவுக்கு ஒரேயொரு மகள் உண்டு என்பது முந்தியே எனக்குத்தெரியும்.... என்று முருகர் சொல்லுவதற்கிடையில், ஆநந்தன் பிதா, "ஆம், ஆம், சரவணமுத்துவை எனக்குத் தெரியும்; அவருக்கு ஒரு மகள் நல்ல கெட்டிக்காரி உண்டென்று கேள்வி, சரி, நீங்கள் விஷயத்தைச் சொல்லுங்கள்" என்றார். பின்னர் முருகர் ஏதோ சொல்ல வாயெடுப்பதற்கிடையில் ஆநந்தனுடைய தாய், "அவர்கள் எந்தப்பகுதி, உங்களுக்குத் தெரியுமோ" என்று தன் புருஷனைக் கேட்க, அவர் சினந்து "எடியப்பா பொறு, நீ என்ன, கொத்திலே போட முந்தி எட்டென்று நிற்கிறாயே; கொஞ்ச நேரத்திற்கு உந்த வாயை வைத்துக்கொண்டு சும்மாயிரு; எந்தக்கருமமென்றாலும் முந்தி நிற்பது உன்சுபாவம்; குலங் கோத்திரம் விசாரிக்கத்தானே நான் இருக்கிறேன்" என மனையாள் வெம்பி, "வேறொன்றுமல்ல, குலங்கோத்திரத்தை அறிந்துகொண்டு அவை சரிவந்தால்தானே கல்யாணம் பேசவேண்டும்; இல்லாவிட்டால் ஒருவர் வீட்டுப்பெண்ணைப்பற்றி நாம் ஏன் நன்மை தீமை பேசுவான் என்றெண்ணிக் கேட்டேன்; நீங்கள் அதனை விளங்காமல் என்னைச் சீறுகிறீர்கள்; சரி நான் இந்த இடத்திலிருக்கவில்லை; நான்போய் என்வேலைகளைப் பார்க்கிறேன்; இந்தநாளையில் நான் சொல்வது உங்கள் காதிற்கு ஏறுகிறதில்லை" யென்று சொல்லிச்சீறிக்கொண்டு போக எழுந்தாள். முருகர் "பிள்ளை, பிள்ளை, போக வேண்டாம்; இரு; நீ இல்லாமல் என்ன கலியாணம் பேசுவது; கதையைக் குழப்புகிறாயென்றெண்ணி, ஐயா அப்படிச் சொல்லிவிட்டார்; அதைப்பற்றிக் கவலைப் படாதே" என்றுசொல்லிச் சாந்தப்படுத்த ஆநந்தன் தாய் பேசாமல் இருந்துவிட்டாள்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகர் "அவர்கள் குலங்குடியில் உங்களிற் குறைந்தவர்களல்லர்; சரவணமுத்துவின் தகப்பன்வழி ஐயாவுக்குச் சொந்தமென்று நான் கேள்வி" எனலும் "ஆம், அம்மான், அவர்கள் சொந்தமல்ல ஆனால் தூரத்தில் இனத்தவர்களென்று நமது தகப்பனார் முன்னே சொல்லக் கேட்டிருக்கிறேன்" என்றார். முருகர் "சரி இருக்கட்டும், அவைகளையெல்லாம் பின்பு விசாரித்தறிவோம்; இப்பொழுது நான் சொல்லுவதைக் கேளுங்கள்; சரவணமுத்துவுக்கு இந்தப் பிள்ளையல்லாமல் வேறு பிள்ளைகளில்லை; அவரிடத்தில் நல்ல சம்பாத்தியமுண்டு; சம்பாத்தியம் முழுவதையும் இந்தப்பிள்ளைக்கே கொடுத்துவிடுவார்; பெண்பிள்ளையானாலும் ஆண்பிள்ளையாகப் பாவித்து இந்தப்பிள்ளையை ஆசையருமையாக வளர்த்து வருகிறார்,பிள்ளைக்கு நல்லாய்ப் படிப்பித்திருக்கிறார். ஏழு எட்டு வருஷகாலமாக விடுதிப்பெண் பள்ளிக்கூடத்தில் விட்டுப் படிப்பித்திருக்கிறார்; இங்கிலீசு, தமிழ், சங்கீதம் எல்லாம் நல்லாய்த் தெரியும்; எனலும், ஆநந்தன் தாய், "அம்மான், கேட்கிறாள் என்று குறை நினைக்க வேண்டாம்; பெண்ணை நீங்கள் நேரிற் பார்த்தீர்களா" என்று கேட்க "ஓம் பிள்ளை, எனக்கேன், கிழவனுக்கு ஆரும் ஒளிக்கப்போகிறார்கள்; தகப்பன்தான் கூட்டிக்கொண்டுபோய் ஒரு அறையுள் மகளைக் காட்டினார்; ஏதோ தைத் துக்கொண்டோ பின்னிக்கொண்டோ இருந்த பிள்ளை என்னைக்கண்டவுடன் மரியாதையாக எழுந்து நின்றது; ஓடவில்லை, ஒளிக்கவில்லை; ஒரு நாற்காலியைக் காட்டி "அப்படியிருங்கள்" என்று சொல்ல நான் அந்த நாற்காலியில் இருந்தேன். உடனே, தகப்பன் பிள்ளையைப் பார்த்து "தங்கச்சி, இந்த அப்பா உன்னைக் காணவிரும்புகின்றார்; அவர் எங்களுக்குப் புதியவரல்லர்; அந்த வாத்தியப்பெட்டியை எடுத்துக் கொஞ்சம் வாசித்துக்காட்டு" என்று மகளிடஞ் சொன்னார். என்னைச் சரவணமுத்தர் அம்மான் என்று பிள்ளைக்குச் சொல்லாமல் அப்பா என்று சொன்னது, எனக்குச் சற்று மனவருத்தமாகத் தானிருந்தது, ஆனாலும் நான் அதைவெளியிற் காட்டாமல், எங்கே தங்கச்சி வாசியுங்கொஞ்சங் கேட்கலாம் என்றேன்; பிள்ளை பெட்டியை எடுத்து ஏதோ வாசித்தது; பெட்டிக்கும் வீணைக்குமுள்ள வித்தியாசம் எனக்குத்தெரியுமேயல்லாமல் சங்கீ தத்தைப்பற்றியொன்றுந்தெரியாது, ஆனாலும் பிள்ளை வாசிக்கும்போது நான் மகிழ்ச்சிகாட்டித் தலையசைத்து நல்லாயிருக்கின்றதென்றேன்; அப்படி நான் சொன்னது பிதாமாதாக்களுக்குஞ் சந்தோஷமாயிருந்தது; பிள்ளைக்குஞ் சந்தோஷமாயிருந்தது.

* * *

"இதுமாத்திரமா, அந்தப் பிள்ளை தன் கையால் தைத்த துணிகள், பின்னிய துணிகள், சித்திரித்த படங்கள், சரிகைவேலைகள் என்னு மிவைகளையெல்லாம் தகப்பன் சொல்லச் சொல்ல, எடுத்தெடுத்து எனக்கு ஒன்றொன்றாகக் காட்டியது; நான் அவைகளையெல்லாம் பார்த்துப் பிரமித்து நின்றேன். பின்னர் தகப்பன் மகளைப் பார்த்து "அன்னம், கூச்சப்படாதே, அப்பா எங்களுக்குப் புறம்பல்ல; நீ ஒரு தேவாரமோ திருப்புகழோ, ஏதும் அறிந்த பாட்டுப் படித்துக் காட்டு" எனலும், மகள் நாணமடைந்து தலைகுனிந்து கைவிரல் நகத்தைப் பற்களாற் கடித்துக்கொண்டு ஒதுங்கி நின்றாள்..." என்று முருகர் சொல்வதற்கிடையில், ஆநந்தன் தாய் "அம்மான், அந்தப் பெண்ணுக்குப் பேர்என்ன" என வினவ "அன்னலட்சுமியம்மாள்" என்று முருகர் கூறிப் பின்னருஞ் சொல்லுகிறார்; பிள்ளை கூச்சப்பட்டு நிற்பதைக்கண்ட அவள் தாய் "மகளே இவர் முன்னிலையிற் பாட நீ வெட்கப் பட்டால், நாளைக்கு நாலுபேர் கூடிய ஒரு சபையிலே படிக்கவேண்டி வந்தால் என்ன செய்வாய்; இப்படித்தான் தலைபிறங்க நிற்கப் போகிறாயோ, அறியாமலோ, எண்ணறக்கற்று எழுத்தற வாசித் தாலும் பெண்புத்தி பேய்ப்புத்தி என்று உலகத்திலே சொல்லுகிறார்கள்; பாடச்சொன்னாற் படிக்கச்சொன்னால் தெரிந்ததைப் படித்துவிடுவ தல்லவா பிள்ளைகளுக்கு வடிவு" என்று சிறிது கடிந்து பேசினாள். இப்படிச் சொல்லக் கேட்ட நான், பிள்ளையை நெருக்கவேண்டாம்; வளர்ந்த பிள்ளையல்லவா, கொஞ்சங் கூச்சப்படுந்தானே, என்றேன்; அப்பொழுது சரவணமுத்து "இந்தக் காலத்திலே ஆண்பிள்ளைகளைக் காட்டிலும் பெண்கள் தானே எந்தக் கருமத்திலும் முந்தி நிற்கிறார்கள்; பெண்கள் சட்டசபைகளிலே அங்கத்தவர்களாக வந்துவிட்டார்கள்; இந்திய கிளர்ச்சிகளில் அதிக வேலைசெய்கிறவர்கள் பெண்களல்லவா; இனி அவர்களுடைய காலந்தானே" என்று சொல்லி மகளை ஊக்கப்படுத்தினார்."

* * *

"மகள் உடனே பக்கத்தில் மேசை மீதிருந்த வாத்தியப் பெட்டியை எடுத்துச் சுதி கொடுத்துப் பாடினாள்; சங்கீதத்தின் நுட்பந் தெரியாத எனக்கு அந்தக்கன்னிகை பாடிய பாட்டுக் கர்ணாமிர்தமாயிருந்தது; இதற்கிடையில் அவர்கள் வீட்டிலுள்ள ஒரு சுயம்பாகிச் சிறுவன் 4 பாத்திரங்களில் தேநீர் நிறைத்து ஒரு தட்டில் வைத்துக்கொண்டு வந்தான்; அதனைக்கண்ட சரவணமுத்து, "ராமன், முதல் அம்மானுக்குக் கொண்டுபோய்க் கொடு" என்று அவனுக்குச் சொல்லிவிட்டு என்னைப்பார்த்து "அம்மான், தாகத்திற்குக் கொஞ்சம் சாப்பிடுங்கள், என்றார். "ஐயோ, உங்களிடத்திற் சாப்பிடாமல் குடியாமல் வேறு யார் வீட்டிற் குடிப்பது சாப்பிடுவது; ஆனால் இன்றைக்கு வியாழக்கிழமையில் முதன்முதற் செய்வது சரியல்லவே" என்றேன்; "ஆம், ஆம், அது மெய்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் அதை மறந்துவிட் டோம், தேநீரை விடுங்கள்; அடே, ராமன் ஓடிப் போய் விசுவலிங்கத்தின் கடையில் ஒரு ஸோடாப்போத்தல் எடுத்துக்கொண்டுவந்து உடைத்து, அம்மானுக்குக் கொடு" என்று சரவணமுத்து வின் மனையாள் சொல்லி முடித்தற்கிடையில் ராமன் போய்க் கொண்டுவந்துதந்தான். நான் ஸோடாக்குடிக்க அவர்கள் மூன்றுபேரும் தேநீர் குடித்தார்கள்; பின்னரும் சிறிதுநேரம் அவர்களுடனிருந்து பேசிவிட்டு உத்தரவு பெற்றுக்கொண்டு மீண்டேன்; இதுதான் செய்தி; அந்தப் பிள்ளையின் தன்மைகள், போக்குவாக்குகள் எனக்குப் பிடிக்கிறது. இவர் தம்பிக்கு அவளே தக்கபெண்; யோசித்துச் சொல்லுங்கள்; நான் இப்பொழுது போகிறேன்; இரண்டு மூன்று நாளில் இங்கே வருவேன்" என்று சொல்லி முருகர் போவதற்கு எழுந்தார். "அதற்கென்ன, அம்மான், நாங்கள் யோசித்துச் சொல்லுகிறோம்; அது சந்திக்கும் போலத்தான் தெரிகிறது; எல்லாவற்றிற்கும் இரண்டொரு நாளில் தவறாமல் வாருங்கள்" என்று சரவணமுத்து சொல்லி முருகருக்கு அநுமதி கொடுத்தார்.

* * *

முருகர் அங்கிருந்து புறப்பட்டுச் சிறிது தூரம் போய்த் தெருவில், ஏற வீட்டிலே அவருடனிருந்த ஆநந்தன் ஏதோ ஒருவிதமாய் முந்தி வந்து முருகருக்கு எதிர்ப்பட்டுப் புன்னகை செய்து "அம்மான், நான் கேட்பதை வெளிவிடாதீர்கள்; பெண் என்ன கறுப்பா, சிவப்பா, மெல்லிய பெண்ணா, பருத்தபெண்ணா, உடைநடை பாவனை எப்படி, இந்தநாளில் மாதிரியா, பழைய மாதிரியா" என்று தமயந்தியின் அழகை அன்னத்திடம் வினவிய நளனைப்போல மிக்க ஆர்வத்துடன் முருகரைக் கேட்டான். "தம்பீ, நீ வேறு என்பிள்ளை வேறல்ல, நான் உன்னைத் தனியே கண்டுசொல்ல வேண்டுமென்றிருந்தேன்; நீயாகவே வந்துவிட்டாய்; அந்தப்பெண்ணுக்கு விலையில்லை, மனசாரக் குணமானபிள்ளை. வயசு சொற்பம், இன்னமும் விளையாட்டுப் புத்திமாறவில்லை, உடைநடை பாவனைகளை யெல்லாம் எங்கள் பிள்ளைகள் அவளிடத்திலே பழகவேண்டும்; ஆள் கறுப்பியுமல்ல சிவப்பியுமல்ல பொதுநிறம், நிறத்திலே என்னகிடக்கிறது, நல்ல முகவெட்டான, சாங்கமான பெண், உவளைப்போலப் பெண் உனக்கு வேறு கிட்டாது; ஆனாலும் நீ ஆத்திரப்படாதே; ஏதோ கைகூடுகிறகாலத்தில் அம்மானையும் கவனித்துக்கொள்" என்று சொல்லிச் சிரித்துக் கொண்டு முருகர் போக ஆநந்தனும் பலவாறு யோசித்துக்கொண்டு தன் வீட்டிற்கு மீண்டான்.

* * *

உலகம் பலவிதம்: 1932 ஜூன் 23

ஆநந்தன் - அன்னம் தொடர் (முற்றொடர் - 04)

"ஐயா, இன்றைக்குச் சரவணமுத்து வீட்டிற்குப்போகிறேன்; போவதற்கிடையில் உங்க ளையுங் கண்டு உங்கள் முற்றையும் எடுத்துப் போகலாமென்றெண்ணி இங்கே வந்தேன்; வெயி லுக்கு முந்தி அங்கே போய்ச் சேரவேண்டும்; இன்னமும் நான் அவர்களோடு பேசிக்கொள்ள வேண்டியது ஏதுமிருந்தாற் சொல்லுங்கள்; வேறொன்றுக்குமாகவல்ல, கலியாணம்பேசிச் செய்துவைத்த காலத்தில் மாப்பிள்ளை பெண் இருவரும் நல்லாயிருந்தால், முருகனை நன்மை சொல்லார்கள், முருகன் அலைந்த அலைச்சலையும் செய்த உதவியையும் நினைக்கவும் மாட்டார்கள்; முருகன் என்ன செய்வது மற்றவ ரென்னசெய்வது, எங்கள் நல்லகாலத்தினால் இது வந்துசந்தித்தது என்று சொல்லுவார்கள்; ஆனால் பெண் மாப்பிள்ளைக்கிடையில் ஏதும் பிணக்கு வந்துவிட்டால், பெண்பகுதியார் கொடுப்பேனென்ற சீதனத்தில் ஒரு சிறு பகுதியைத்தானுங் கொடுக்கத்தவறினால், பெண்ணுக்கோ மாப்பிள்ளைக்கோ ஒரு பொல்லாங்கு நேர்ந்துவிட்டால், ஐயோ, என்ன சொல்லுவார்கள்; அந்த முருகன் அந்தப் பக்கத்திற் காசுவாங்கிக்கொண்டு எங்கள் தலையில் பெண்ணையோ மாப்பிள்ளையையோ கட்டியடித்தானே என்று இரண்டுபகுதியாரும் என்னையே திட்டுவார்கள்; ஐயா, இது நான் இத்தனைகாலமும் அநுபவத்திற்கண்ட விஷயம்; ஆதலால் உங்கள் கட்டுப்பாடுகள் ஒழுங்குகளை எனக்கு ஒழியாமல் உள்ள உள்ளபடி சொல்லி விடுங்கள்; நானும் அவைகளைப் பெண்பகுதியாருடன் நேரிற்பேசி விடுகிறேன்; ஆனால் உலக வழக்கத்தைச் சொன்னேனேயல்லாமல் உங்கள் போல் ஒத்த சாதி மரபிலுள்ள பெரியமனுஷர் இப்படிப் பேசுவார்கள் செய்வார்களென்று நான் சொல்லவரவில்லை" என்று முருகரம்மான் ஒரு சிறு சொற்பொழிவு நிகழ்த்திமுடித்தார்.

* * *

"அம்மான், எல்லாம் அறிந்த உங்களுக்கு நான் அதிகஞ்சொல்வதென்ன, உங்கள் பிள்ளை வேறு என்பிள்ளைவேறல்ல; இருந்தாலும் ஏதோ நாம் பேசவேண்டியவைகளை முந்தியே வரையறவாய்ப் பேசிக்கொள்ள வேணும்; முந்திப் பேசாமல் விட்டுவிட்டு, காரியம்நடந்தபின்பு ஒருவரையொருவர் குறை சொல்லுவதும் ஒருவரோடொருவர் பிணக்குப்படுவதும் நல்லதல்ல; இரு பகுதியாரும் தங்கள் பிள்ளைகள் வாழவேண்டுமென்றே இப்படிப்பட்ட ஒரு கருமத்தைச் செய்து வைப்பது; ஆனபடியால் நான் சொல்லப்போகும் இரண்டு மூன்று விஷயங்களை அவர்களுடன் இன்றைக்கே பேசி நிச்சயப்படுத்தி விடுங்கள்; சீதனத்தைப்பற்றிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியமில்லை; அவர்களுக்கு ஒரேயொரு பிள்ளை; எங்களுக்கும் ஒரேயொருபிள்ளை; அவர்களில்லாத காலத்தில் அவர்கள் பொருள் பண்டம் "சொத்து" எல்லாம் இவர்களுக்கே வந்துசேரும்; அப்படியே எங்கள் விஷயத்திலும்; அல்லாமலும் சீதனத்தை எங்கள் தம்பி நம்பியிருக்கவில்லை; கடவுள் புண்ணியமாக எங்களுக்குள்ள காணிபூமி பொருள் பண்டங்களை எனக்குப்பின் அவன் பார்த்துப் பராவரித்துக்கொண்டிருந்தாலும் அவனுக்குப் போதும்; அதுகிடக்க, எங்களுக்கோ பெண் பிள்ளையில்லை; ஆனதால் பெண் எங்கள் வீட்டிலேதான் இருக்கவேணும்; இடையிடையே வேண்டுமானால் தாய்வீட்டிற்கும் போய்வரலாம்; ஏனென்றால், பாவம் பெற்றவர் வளர்த்தவர்கள்; அவர்களுக்கும் அந்த ஒருபிள்ளையுந்தான்....." என்று ஆநந்தன்பிதா சொல்லி முடிப்பதற்கிடையில் அயலேயிருந்த மனையாள் "நீங்கள் சொல்லுவது சரிதான்; ஆனால் சும்மா, சும்மா போகவும் வரவும் கார்ச்செலவென்ன, உலைச்சலென்ன, அப்படியானால் இங்குமில்லாமல் அங்குமில்லாமல் இடையில் நிற்பதாகவல்லவோ முடியும்; தாய்வீட்டிற்கு ஓடியோடிப் போகும் பெண் சீராக இருக்கமாட்டாதென்று உலகத் திலே சொல்லுவார்கள்; பெண் தாய்வீட்டிற்குப் போகவேண்டுமானால் எங்களைக் கேட்டுக்கொண்டு ஆசையருமையாக, ஒரு நல்லநாட் பெரியநாளிற் போவதல்லாமற் சும்மாசும்மா போக முடியாது; அப்படிப் போனால் தம்பிக்கும் அலைச்சல்" என்று சொன்னாள்.

* * *

அவள் இப்படிச் சொல்லக்கேட்ட ஆனந்தன் பிதா சிரித்து "எடி, அப்பா நான் சொல்வதைக்கேள்; தனக்கொரு நியாயம் பிறர்க்கொரு நியாயம் பேசப்பழகாதே; அவர்களுக்கும் அந்தப் பெண்ணே ஒரேயொரு பிள்ளையென்பது இப்பொழுது உனக்கு நல்லாய்த் தெரிகிறது; எங்கள் பிள்ளை எங்களுக்கு அருமையாக இருப்பதுபோலவே, அவர்கள் பிள்ளையும் அவர்களுக்கு அருமையாயிருக்கும்; உனக்கு ஒரு பெண்பிள்ளையிருந்து அந்தப்பெண்ணை மாப் பிள்ளை வீட்டுக்காரர் உன்னிடம் வர விடாமல் அங்கேதானே மறித்துக்கொண்டால் உன்மனம் என்ன பாடுபடும்; அப்படியே மற்றவர்கள் விஷயத்திலும் மதித்துப்பார்; உந்தப் பேச்செல்லாம் மூடப்பெண்டுகள் பேசும் பேச்சு; அல்லாமலும் உன்னை நான் அந்த நாட்களில் உன் பெற்றார் வீட்டிற்குப் போகவிடாமல் மறித்திருந்தால் உன் மனம் என்ன பாடுபடும். பிறந்த இடத்தை நாடுவது எவருக்குஞ் சகசந்தானே" என்று சொல்லித் தன் மனையாளைக் கடிந்து பின் முருகரைப் பார்த்து "அம்மான் இந்த ஒன்றுந்தான் பிரதானமாக உங்களிடஞ் சொல்லவேண்டியது; மற்றை விஷயங்களெல்லாம் உங்களுக்குத் தெரியுந்தானே; சரி போய் அனுகூலத்தோடு வாருங்கள்" என்று சொல்லி முருகருக்கு விடை கொடுத்தனுப்பினார்.

* * *

உலகம் பலவிதம்: 1932 ஜூன் 30 இலிருந்து உலகம் பலவிதம்: 1932 செப்டெம்பர்வரை இல்லை

உலகம் பலவிதம்: 1932 செப்டெம்பர் 08

ஆநந்தன் - அன்னம் தொடர் (முற்றொடர் - 05)

இப்படி அன்னம் கதவை உட்புறத்தில் தாளிட்டுக்கொண்டு சயனத்திற் படுத்துக் கொள்ள, ஆநந்தனும் நீடித்த நேரமாக நின்று கதவைத் தட்டுவதும் அன்னத்தை இன்சொற் சொல்லிக் கூப்பிடுவதும், பொறுதி கேட்பதும் இரப்பதுமாக நின்றான். அவன் வாயும் ஓய்ந்து காலும் அலுத்தன. அன்னத்தின்மீது அவன் கொண்டிருந்த காதல் கோபமாக மாறியது. தான் இப்படி நெடிதுநேரம் நின்று அவளை இரப்பதையுங் கெஞ்சுவதையும் தன்வேலைக்காரர் யாராயினுங் கண்டால் தன்னை ஏளனஞ் செய்வரே, சிரிப்பரே என்ற எண்ணமும் அவன் மனத்தில் இடையிடையே எழுந்தது; அவர்கள் சமீபத்தில் நிற்கிறார்களோ, விழிப்பாயிருக் கிறார்களோ என்ற இவைகளையும் இடை யிடையே பார்த்துக்கொள்ளுவான். வீட்டிலுள்ள வேலைக்காரர் மூவருள் பொடிகாமியும் ராமனும் அந்தச்சமையத்தில் உறங்கிவிட, கறுப்பாயி என்னும் கிழவிமாத்திரம் நித்திரை கொள்வாள்போல் நடித்துக்கொண்டு அன்னத்திற்கும் ஆநந்தனுக்குமிடையேயுள்ள ஊடலை யும் ஆநந்தனுடைய கேவல நிலைமையையும் அவதானித்தாள். "இந்தப்பேய்ப்பையன் இவளு க்கு இடங்கொடுத்துவிட்டான்" என்று தன்னள வில் எண்ணிக்கொண்டாள். "ஏ, அன்னம், நான் கெஞ்சக்கெஞ்ச நீயும் மிஞ்சுகிறாய்; எதற்கும் ஒரு அளவு உண்டு, தன்னந்தனியே உன்னை வேற்றூரிற் கொண்டுவந்து நான் வைத்துக் கொண்டு மனம்வருந்தவிட வொண்ணாதென நினைத்து உனக்கு இதமாக நடக்க, நீ என்னை விபரீதமாய் எண்ணிக்கொண்டாய்; நல்லவர்களுக்குக் கோபம் விரைவில்வராது, வந்துவிட்டால் பின் ஆறாது என்ற நியாயம் உனக்குத் தெரியவில்லைபோலிருக்கிறது; ஒரு உதையில் இந்தக்கதவைத்திறக்க என்னால் முடியும்; ஆனால் பிறர் அறியில் மானக்கேடு என்று யோசிக்கிறேன்; இனி, உன்னை இரக்க மாட்டேன்; உடனே கதவுதிறக்கிறாயோ, இல்லை யோ, சொல்லு" என்று ஆநந்தன் உண்மையாகச் சீற்றங்கொண்டவனாய்க் கடுகடுத்து உரத்த சத்தமாகச் சொன்னான். அதற்கு அன்னலட்சுமியிடமிருந்து எவ்வகையான பதிலுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆநந்தன் இட்ட இந்த அரவத்தினால் உறங்கிக்கிடந்த ராமன் விழித்தெழுந்து தன் எஜமானன் நிற்குமிடத்திற்குப் பாதி உறக்கத்தோடு வந்தான். இராமன் நல்ல விவேகி, கருமம் அறிந்தவன், விசுவாசமுள்ளவன், சமயோசிதமாக சொல்லவுஞ் செய்யவுந்தக்கவன்; தன் எஜமானன் எஜமாட்டி ஆகிய இருவருஞ்செய்யும் சரிபிழைகளை உள்ளபடி உணரத்தக்கவன்; விகடமானவன்; இந்த நற்குணங்களும் நற்செய்கைகளும் இராமனிடத்தில் உண்டேனும், பார்ப்பவர்கள் தன்னைப் பேயனென்று சொல்லத்தக்கவிதமாக நடித்துக்கொள்ளுவான். இராமனுடன் சில நாட்கள் ஊடாடினவர்களுக்கே அவனிடத்துள்ள திறமைகள் விளங்கும். இராமன் மூடனல்லன் என்ற ஒரு எண்ணம் மாத்திரம் ஆநந்தனிடத்தும் அன்னலட்சுமியிடத்தும் உண்டு. ஆனால் அவனிடத்துள்ள திறமைகளை அவர்கள் இன்னமும் உள்ளபடி அறிந்திலர். அங்கே வந்த இராமன் தன் எஜமானனைப்பார்த்து "ஐயா, என்ன செய்ய வேண்டும்" என்றான். "ஒன்றுமில்லை இராமன், நான் வெளியிலே ஒரு சிநேகிதன் வீட்டிற்குப் போய்வர நேரஞ் சென்றுவிட்டது; அதனால், அம்மா நெடுநேரம் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருந்துவிட்டு நேரஞ் செல்லப்படுத்திருக்க வேண்டும்; கூப்பிடக் கூப்பிட நித்திரைவிட்டு எழுக்காணவில்லை" என்று ஆநந்தன் சொல்ல, "கதவு உட்பக்கத்தாற் பூட்டப்பட்டிருக்கிறதா ஐயா" என்று ராமன் கேட்க, ஆநந்தன் "ஓம், நான்தான், அப்படி நேரஞ்செல்லவந்தாற் பூட்டிக் கொள்ளும்படி சொல்லிப்போனேன்" என்று ராமனுக்கு இடங் கொடாமல் மறுமொழி சொன்னான். இராமனும் "அம்மா, அம்மா, ஐயா வந்து விட்டார், கூப்பிடுகிறார் எழுந்திருங்கள்" என்று பலமுறை பெருஞ் சத்தத்தோடு கூப்பிட்டான். இதற்கிடையில் ஆநந்தன் "இராமன், அப்படிப் பெலமாகக் கூப்பிடாதே; அயல்வீட்டிலுள்ளவர்கள் விபரீதமாக நினைப்பார்கள், மெல்லக்கூப்பிட்டு எழுப்பு" எனலும், ராமன் "அப்படியானால், ஐயா, கிட்டப்போய் நின்றல்லவா மெல்ல எழுப்பவேண்டும்" என்றான். பின்னர் ஆநந்தனும் அதட்டிக் கூப்பிட்டான். ஏன் என்றசத்தமே கிடையாது. ராமன் விவேகியாதலினால், இது நித்திரையல்ல, இருவருக்கிடையே ஏதோ பிணக்கிருக்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டு "ஐயா, நித்திரையாகக்கிடந்தாலல்லவோ எழுப்புவதும், ஏன் என்று கேட்பதும்; நித்திரைபோற்கிடந்தால் இவைகளை எப்படிக் காத்திருக்கலாம்" என்று புன்சிரிப்போடு சொன்னான்.

* * *

இராமன் இப்படி விநோதமாகச் சொல்லக் கேட்ட ஆநந்தன் "ஓகோ, இவனுக்கு விஷயம் விளங்கிவிட்டது, இனி ஒளிக்க முடியாது என்று நினைத்து அவனைத்தனியே ஒருபுறத்தில் மெல்லக் கூட்டிக்கொண்டுபோய் "ராமன், ஒருவருக்கும் வெளியிடாதே, அம்மா என்னோடு மனஸ்தாபப்பட்டுக் கொண்டாள்; நான் கூப்பிடக் கூப்பிட ஏனென்றுங் கேட்கிறாளில்லை; நான் இங்கே தானே இருக்கிறேன்; ஐயா கோபித்துக்கொண்டு வெளியேபோய்விட்டாரென்று சொல்லி, அம்மாவைக் கதவைத்திறக்கும்படி செய்துவிடு, அதன்பின் நான் அவளைச் சமாதானப்படுத்திக் கொள்ளுகிறேன்" என்றான். "ஆம், ஐயா, அப்படியே செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு ராமன் கதவண்டைபோய், "அம்மா, அம்மா, சும்மா அல்ல மெய்யாகத்தான் சொல்லுகிறேன், ஐயா உங்களோடு கோபித்துக்கொண்டு, நான் தடுக்கத் தடுக்கக் கேளாமல் வெளியே போய்விட்டார்; இது சரியல்ல, கதவைத் திறவுங்கள், இவைகளெல்லாம் பார்ப்பவர்களுக்கு அழகாயிரா, ஐயா பிழைசெய்தால் நீங்கள் பொறுக்கத் தானேவேணும்" என்று இதமாகச் சொன்னான். இதனைஉள்ளேபடுத்தபடியேகிடந்துகேட்ட அன்னம் ராமன் சொல்லியதைக்கொண்டே, அவர் வெளியேபோகவில்லை வீட்டின் ஒருபுறத்தே இருக்கிறாரென்று உணர்ந்துகொண்டு மெல்ல எழுந்துவந்து "ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்றவாறு உள்ளேயிருந்த இருப்புச்சலாகையையும் எடுத்துக் கதவின் குறுக்கே மாட்டிப் பூட்டிட்டாள். இந்தச்செய்கை ராமனுக்குப் பிடிக்கவில்லை.

* * *

"ராமன் மெல்ல அந்த இடத்தை விட்டு ஆநந்தனிருக்குமிடத்தை யடைந்து "ஐயா, வேலைக்காரச்சிறுவன் சொல்லுகிறான் என்று எண்ணி என்சொல்லை அவமதியாதீர்கள்; இங்குவரமுந்தி இன்னொரு உத்தியோகத்தர் வீட்டில் நான் வேலைக்கிருந்தேன்; அந்தவீட்டு அம்மாளும் இப்படித்தான் பெரும் பிடிவாதகாறியாக இருந்தாள்; ஆனால் அந்த ஐயா நல்ல கெட்டிக்காரன்; அவர் தமது பெண்டாட்டிக்கு இடங்கொடாமல், புத்தியாய்த் திருத்திவிட்டார்; நான் அவர்களைவிட்டு வரும்போது அவர்களிருவரும் பாலும் நீரும்போல ஒற்றுமையாயிருக்கிறார்கள்; இந்த அம்மாவுக்கு நீங்கள் முந்தியே இடங்கொடுத்துவிட்டீர்கள்; ஆனால் இனியுந் திருத்தலாம்; நான் சொல்லுகிறபடி செய்யுங்கள்" என்றான், ஆநந்தன் சிரித்து "ராமன், என்னை என்ன செய்யச்சொல்லுகிறாய்" என்றுகேட்க வேறொன்றுமல்ல, ஐயா உங்களுக்கு இப்பொழுது பசிதாகமிருந்தால் நான் ஆயத்தஞ் செய்து தருகிறேன்; உணவு செய்துவிட்டுப் பேசாமற் போய்ப் படுங்கள்; அம்மாள் இங்கே இல்லை; ஊரிலிருக்கிறாள் என்று நினைத்துக் கொண்டு உறங்குங்கள்; நாளைவிடிய அம்மா தானாகக் கதவுதிறந்தாற்சரி, இல்லையேல் நானே காலைப் போசனம் சித்தப்படுத்தித்தருகிறேன்; நீங்கள் ஸ்நானஞ்செய்து போசனம் முடித்துக்கொண்டு வழக்கம்போற் கந்தோருக்குப் போய்விடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தோரால் மீண்டு இங்கே வரும்போது எல்லாஞ் சரியாகவே இருக்கும்; அப்பொழுது சந்தோஷப் படுவீர்கள்" என்றான். ஆநந்தனுக்கு இப்படியெல்லாஞ் செய்ய மனம் ஒருப்படாவிட்டாலும் பின் ராமனும் தன்னை மதிக்கமாட்டானே என்ற நியாயத்தில் அப்படியே செய்ய நினைத்து அவனைப்பார்த்து "ராமன், நீ சொன்னபடி செய்கிறேன்; ஆனால் மற்ற வேலைக்காரருக்குத் தானும் இதனை வெளிவிடாதே; எனக்கு இப்பொழுது பசிக்கவில்லை; நான் படுக்கைக்குப் போகிறேன்; நீயும் போய்ப்படு" என்று சொல்லிவிட்டு இன்னொரு அறையுட் படுக்கைக்குப் போனான்; ராமனும் போய்ப்படுத்துறங்கினான்; ஆனால் ஆநந்தனுக்கு அன்றிரவு முழுவதும் நித்திரை வரவேயில்லை.

* * *

விடிந்து விட்டது, கறுப்பாயி, பொடிகாமி இருவரும் எழுந்துவிட்டார்கள்; சிறிதுநேரஞ் செல்ல ராமனும் நித்திரை விட்டெழுந்தான். மூவரும் தாங்கள் செய்ய வேண்டிய வீட்டு வேலைகளைச் செய்தார்கள்; இதற்கிடையில் ராமன் "ஏ, பொடிகாமி ஐயாவுக்குக் காலைப்போசனம் ஆயத்தப்படுத்தவேண்டும், அடுக்களையைச் சுத்தப்படுத்து" எனலும் "ஏன், அம்மாவுக்கு என்ன" என்று அவள் கேட்க, ராமன் "அம்மாவுக்குச் சுகமில்லை" என "என்ன சுகமில்லை" என்று அவள் பின்னருங்கேட்க, "மனச்சுகமில்லை" என்று ராமன் புன்னகையோடு சொன்னான். ராமனும் பொடிகாமியும் காலைப்போசனத்தை ஆயத்தஞ் செய்தனர். ராமன் நித்திரையிற்கிடந்த ஆநந்தனை எழுப்பி "ஐயா, 8 மணியாய்விட்டது; கந்தோருக்குப் போகவேண்டுமல்லவா, எழுந்து குளித்துச் சாப்பிட்டுப்போங்கள்" என்றான். ஆநந்தன் திடுக்குற்று எழுவான்போல், சரேலெனப் படுக்கையைவிட்டெழுந்து, நேரஞ்சென்றமையைக்கண்டு பரபரப்போடு தன் காலைக் கடன்களையெல்லாம் முடித்துக்கொண்டு போசனஞ் செய்தான், செய்யும் போது "ராமன், இன்னமும் அம்மா எழும்ப வில்லையோ" என்று மெல்லக்கேட்க; அவன் எழும்பியது எழும்பாததைப்பற்றித் தெரியாது, இன்னமுங் கதவுதிறக்கவில்லையென்றான். ஆநந்தன் அதிக கவலையோடும் பெருமூச்சோடும் போசனஞ் செய்துவிட்டுத் தன் உத்தியோகஸ்தானத்திற்குப் போய்விட்டான்.

* * *

"ஆனந்தன் போனவுடனே, ராமன் வேறொரு கதவிலிருந்த ஆமைப்பூட்டைக் கழற்றி யெடுத்துக் கொண்டுவந்து, அன்ன லட்சுமியின் படுக்கையறையின் கதவின் வெளிப்புறத்தில் அதனைமாட்டி, சத்தமில்லாமல் மெல்லப்பூட்டிவிட்டுத் தன் வேலைகளைப் பார்த்துக்கொண் டிருந்தான். தன் புருஷன் உத்தியோகதானத்திற்குப் போனமையைக் குறிப்பாலுணர்ந்த அன்னம் மெல்ல படுக்கைவிட்டு எழுந்து கதவண்டை வந்து தாழ்ப்பாளை எடுத்துச் சுவரோடுவைத்து, திறப்பினால் திறக்கவேண்டிய பூட்டையுந் திறந்துகொண்டு கதவை யிழுத்தாள்; கதவு திறபடவில்லை; வெளியே பூட்டப்பட்டிருக்கின்றதென உணர்ந்தாள்; அவளுக்குப் பொல்லாத கோபமும் வெட்கமும் ஏககாலத்தில் உண்டாயின. சிறிதுநேரம் செய்வது இன்னதென்று தெரியாமல் திகைத்தாள்; பின் ராமனைக் கூப்பிட்டாள்; "அம்மா இதோ வந்துவிட்டேன்" என்று ராமன் ஓடிவந்தான்; "ராமன், கதவு உந்தப் பக்கத்திற் பூட்டியிருக்கிறதோ என்றுபார்" எனச் சொல்ல "ஓம், அம்மா பூட்டியிருக்கிறது. எப்படி உள்ளே நின்று இதனைப் பூட்டினீர்கள்" என்று கேட்டான். அன்னம் அடங்காச் சினங்கொண்டவளாய் "ராமன் சும்மா சேட்டையை விட்டுவிட்டுக் கதவைத்திற" என்றாள். "அம்மா திறப்பு எங்கே" என்றுகேட்க, "எனக்கெப்படித்தெரியும்; ஐயா போகும்போது உன்னிடத்தில் தந்துவிட்டுப் போக வில்லையா", என்று அதட்டிக்கேட்க, இராமன் "இல்லையம்மா, தரவுமில்லை, ஏதுஞ் சொல்லி விட்டுப் போகவுமில்லை, பொறுங்கள் பொடிகாமி, கறுப்பாயி இவர்களைக் கேட்டுக்கொண்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு அவர்களிடம் போவபனைப்போல் நடித்து, அங்கேபோகாமல் வேறிடத்திற் சிறிதுநேரம் நின்றுவிட்டு மீண்டுவந்து "அம்மா அவர்களுக்கு ஒன்றுந்தெரியாதாம்" என்றான். அன்னலட்சுமி கோபம் மானம் நாணம் என்னும் மூன்றும் அதிகப்பட மனம் புழுங்கிக்கொண்டு உள்ளே நின்றாள்.

* * *

உலகம் பலவிதம்: 1932 செப்டெம்பர் 15

ஆநந்தன் - அன்னம் தொடர் (முற்றொடர் - 06)

"எங்கள் எசமாட்டியை நீடித்த நேரம் வருந்த விடுவது சரியல்ல; அப்படிச் செய்தால் ஐயாவும் பின் என்னைக் கோபிப்பார்; ஆனால் எவ்விதத்திலும் நான்தான் வெளியிற் பூட்டிவிட்டேன் என்று அம்மா நினைக்காமற் செய்யவேண்டும்; இதற்கு என்ன செய்யலாம்" என்று ராமன் யோசித்துக்கொண்டு கதவண்டைபோய் "அம்மா, அம்மா, திறப்பு எடுத்துவிட்டேன்; கதவைத் திறக்கட்டுமா, வேண்டாமா" என்று கேட்டான். அன்னலட்சுமி சிறிதுநேரம் சீற்றத்தாற் பேசாமலிருந்துவிட்டு, "அடா, மடையா, கதவைத்திறவாமல் என்னடா செய்யப்போகிறாய்" என்று அதட்டிக்கூறினாள். "கோபியாதீர்கள், அம்மா, நான் மடையனானபடியினாற்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடைத்தொழிலுக்கு உங்களிடம் வந்தேன்; அதை ஏன் இப்பொழுது சொல்லிக்காட்டுகிறீர்கள். அதுகிடக்க, நான் கதவைத் திறந்தால் ஐயா பின்னேரம் வந்து என்னையல்லவா கோபிப்பார்; அடிப்பார்; ஊருக்கு எளியவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்றவிதமாய் உங்கள்மீது கொண்ட கோபத்தையும் ஐயா சாதிப்பது என்மீது தானே; இருதலைக்கொள்ளியெறும்பு மாதிரி, அங்கும் இடைஞ்சல், இங்கும் இடைஞ்சல் என்றால் நான் என்ன செய்வேன் அம்மா" என்று சொல்லி வருந்துவான்போல் நடித்தான். இராமன் இறுதியிலே சொன்ன வார்த்தைகளால் தன் சினம் மாறப்பெற்ற அன்னம் "ராமன் நீ பயப்படாதே; உனக்கு ஆரும் இடைஞ்சல் செய்யாமல் நான் பார்த்துக்கொள்ளுகிறேன்; நீ கதவைத்திற" எனலும், அம்மா சொல்லுகிற பொழுது எனக்கென்ன பயம் என்று சொல்லிக்கொண்டு கதவைத் திறந்துவிட்டான்.

* * *

அன்னம் மெல்ல வெளியே வந்தாள். அவள் முகத்தில் கோபம், கவலை, வெட்கம், வாட்டம் என்னும் இவைகள் காணத்தக்கனவாயிருந்தன. வந்த அன்னம் வெளி விறாந்தையிலிருந்த ஒரு சாய்மனை நாற்காலியிற் பெருமூச்சோடு சாய்ந்தாள். "அம்மா, பின்பும் வந்து படுக்கிறீர்களே, பசியல்லவா; இங்கு நாங்கள் ஒருவரும் தண்ணீர்தானுங் குடிக்கவில்லை. அல்லாமலும், கறுப்பாயி, பொடிகாமி இவர்களுக்கு இந்தச் செய்தியொன்றுந் தெரியாது; புருஷன் மனைவி மனஸ்தாபப்பட்டால் மற்றவர்களும் அறிய வேண்டுமா; நாங்களும் அறியாமலல்லவோ நீங்கள் நடந்துகொள்ளவேணும்; நீரடித்து நீர் விலகுவதா; ஐயா கோபத்தினிமித்தம் உங்களை வைதாலும் உங்களுக்கொரு தீமை செய்தாலும் நீங்கள் பொறுத்துக்கொள்ளுவதல்லவா முறை. நீங்கள் இருவரும் அல்லும்பகலும் நாயும் பூனையும் போற் சண்டையிட்டால் அயலட்டத்திலுள்ளவர்கள் என்ன நினைப்பார்கள், என்ன சொல்லுவார்கள்; நீங்கள் என்ன இன்னமுஞ் சிறுபிள்ளையா, அல்லது காரியம் விளங்காதா. நீங்களல்லவா ஐயாவையும் எங்களையும், சரியாய் வைத்து நடத்தவேண்டியது; கடவுள் கிருபையால் உங்களுக்கு என்ன குறை; உலகம் இப்பொழுது படும்பாடு உங்களுக்குத் தெரியவில்லை; எத்தனை பெண்கள் உடுக்கத் துணிக்கும் உண்ண உணவுக்கும், கட்டப்பூட்ட நகைக்கும், தங்கள் விருப்பத்திற்குக் கையில் வைத்துச் செலவிடக் காசுக்கும் கஷ்டப்படுகிறார்கள்; வீட்டுவேலை செய்வதில் தங்களுக்குத் துணையாக ஒரு வேலைக்காரப் பையன்தானுமில்லாமல், இராப்பகலாகத் தாங்களே செக்கிழுக்கும் மாடுபோல முழுவேலையுஞ் செய்கிறார்கள்; உள்ள உணவைப் பிள்ளைகளுக்கும் புருஷனுக்கும் பகிர்ந்து கொடுத்துவிட்டுத் தம் வயிறு பசிக்கப் பட்டினி கிடக்கும் பெண்கள் எத்தனையோபேர் உண்டு; இன்னும் எத்தனையோ பெண்கள் புருஷன் குடித்து வெறி கொண்டு வந்து அடிக்கவும், சூதாட அவன் தம் நகையைப் பிடுங்கிக்கொண்டு போய் ஈடுவைக்கவும் சகித்துக்கொண்டு தீராத்துயரோடு காலம் போக்குகிறார்கள். இன்னும் எத்தனையோ பெண்கள் தங்கள் சீதனக் காணியும் பொருள் பண்டமெல்லாம் புருஷன் விற்றுச் செலவிடப் பார்த்துக்கொண்டு பேசாமற் காலம்போக்குகிறார்கள்; இவைகளொன்றும் உங்களுக்குத் தெரியாது, அம்மா, என்றதை எப்பொழுதும் மனதில் வைத்துக்கொள்ளுங்கள்; எங்கள் ஐயா மற்றைய ஆண்பிள்ளைகளைப்போல், குடிக் கிறாரா, வெறிக்கிறாரா, சூதாடுகிறாரா, உங்களை அடிக்கிறாரா, உதைக்கிறாரா, ஏசுகிறாரா, இப்படி ஒன்றுமில்லையே, அம்மா உங்கள் விருப்பத்தின்படிதானே அவர் நடக்கிறார்; அப்படியிருக்க நீங்கள் அவரோடு கோபிக்கலாமா, பிணக்குப்படலாமா, கல்லென்றாலுங் கணவன், புல்லென்றாலும் புருஷன் என்றல்லவா நினைத்து நடக்கவேண்டும். நீங்கள் படித்த படிப்பில் பெண்டிர்க்கழகு எதிர் பேசாதிருத்தலென்று படிக்கவில்லையா, அம்மா, நீங்கள் என்னைப் பெற்ற தாய்க்குச்சரி, நான் இப்படிச்சொல்லுகிறேன் என்று குறை நினையாதீர்கள், இன்றுதொடக்கம் இந்தச் சஞ்சல புத்தியை விட்டு ஐயாவுடன் அன்பாய் நடவுங்கள்; அப்படி நடந்தாற்றான் வேலைக்காரராகிய நாங்களும் மதிப்போம்; ஊராரும் உங்களை மதிப்பார்கள்; வீட்டிலே இலட்சுமீகரமும் உண்டாகும்" என்று சொல்லி முடித்தான்.

* * *

இவற்றையெல்லாங்கேட்ட அன்னம் தன் கவலையுஞ் சினமும் நீங்கப்பெற்றவளாய் வேலைக்காரச் சிறுவனாகிய இவனுக்கு இவ்வளவு புத்தியிருக்கிறதே, இவ்வளவு அனுபவமிருக்கிறதே என்று ஆச்சரியப்பட்டு அவனைப்பார்த்து "ராமன், நான் இதுவரையில் உன்னைச் சாமானியனாய் நினைத்துவிட்டேன்; இன்றுதான் உன்தன்மை எனக்கு வெளிப்பட்டது; நான் இனி ஐயாவோடு பிணக்குப்படவில்லை; அதுகிடக்க, ஐயா போகும்போது கதவை வெளியே பூட்டிவிட்டுப்போனாரே எப்படித் திறந்தாய், யார்திறந்தது என்று என்னைக்கேட்டால் நான் என்ன பதில் சொல்வது" என்று கேட்டாள். "அம்மா, அவர் பூட்டியதாகவும் நான் அதைத் திறந்ததாகவும் நீங்கள் அதை அறிந்ததாகவும் ஏன் வைத்துக்கொள்ளுவான்; தான் கதவை வெளியே பூட்டிவிட்டுப்போனதை ஐயா ஒரு போதும் உங்களைக் கேட்கவும்மாட்டார்; வெளியிடவும் மாட்டார்; ஆனபடியால் நீங்களும் ஒன்றும் அறியாதவர்போல் இருங்கள்" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமன் சொல்ல அன்னமும் அது புத்திதானென்று சொல்லிவிட்டுப் பின்பு காலைக்கடன்கள் முடித்துப் போசனஞ்செய்து விட்டுத் தன் கருமங்களைப்பார்த்தாள்.

* * *

உலகம் பலவிதம்: 1932 செப்டெம்பர் 22

ஆநந்தன் - அன்னம் தொடர்
(முற்றொடர் - 7)

பின்னேரம் ஆநந்தன் தன் உத்தியோகத்தினின்றும் வீட்டிற்கு மீண்டான்; தன் மனையாள் செய்தியெப்படி யென்றறிய வேண்டுமென்ற விருப்பத்தினால் அவன் வழக்கமாக வீட்டிற்கு மீண்டுவரும் நேரத்திற்குச்சிறிது முந்தியே அன்று அங்கு வந்துசேர்ந்தான். தன்மனையாளைக் காண முந்தி வீட்டில் ராமனைக்காண வேண்டுமென்பதே அன்று அவன் விருப்பம்; ராமனும் காத்திராப்பிரகாரம், அச்சமையத்தில் தலைவாசற் பக்கத்திலேயே நின்றான்; ஆநந்தன் மகிழ்ச்சியுடன் அவனைப்பார்த்து "ராமன் அம்மா எங்கே" என்று மெல்லக்கேட்க, ராமன் "அம்மா அடுக்களைப்பக்கத்து சிற்றுண்டியோ, காப்பியோ, நீங்கள் வருவீர்களென்று ஆயத்தஞ்செய்கிறாள், ஐயா" என்றான். "அதுசரி, ராமன், வேறு விசேஷம் மொன்றுமில்லையே" என்றுகேட்க "விசேஷம் ஏதும் இருந்தாலும் அதனைச் சொல்ல இது சமையமல்ல, பிறகு சொல்லுகிறேன்; நீங்கள் சென்ற இரவு இன்றுகாலை நடந்தவைகளை இட்டு ஒன்றும் அம்மாவுடன் பேசவேண்டாம்; அம்மாவும் அதையிட்டு ஒன்றும் உங்களிடம் பேசமாட்டாள்; மற்றும்விஷயங்களை ஆறுதலாய் யோசித்துச்செய்வோம், ஐயா, நீங்கள் அம்மாவை வழக்கமாக நடப்பதுபோல் இப்பொழுதும் அவளுடன் நடந்து கொள்ளுங்கள்" என்று ராமன் சொன்னான். "சரி அப்படியே செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு ஆநந்தன் உள்ளேசென்று "கண்ணே, அன்னம்" என்று கூப்பிட அவள் வந்து முகமலர்ச்சி காட்டி இன்சொற்கூறி இவனுக்கு இருக்கையிட்டு சிற்றுண்டி தேநீர் முதலியன உதவி வழக்கம்போல் உபசரித்தாள்.

* * *

"நீக்கமறுமிருவர் நீங்கிப்புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும்-பூக்குழலாய்
நெல்லினுமி சிறிது நீங்கிப்பழமைபோற்
புல்லினுந் திண்மைநிலைபோம்"

அதாவது முளைப்பது அரிசியேயானாலும் அதன்மேலுள்ள உமியை எடுத்துப் பின் பொருத்தி அந்த நெல்லை விதைத்தால் அது முளையாதாம்; அதுபோல பரஸ்பரம் அன்புள்ள இருவர் இடையில் ஏற்பட்ட மனஸ்தாபத்தினால் மனம் மாறுபட்டு, பின்னர் அன்புபாராட்டினரேனும் அந்த அன்பு முந்தியிருந்த அன்புபோல திண்ணியதல்லவாம். அன்னலட்சுமி அன்று தொடக்கம் அடக்கமுடையாள் அன்புடையாளாய் நடந்தனளேனும், அதிகம் பேசாது ஒழுகினளேனும் அவளுடைய மனத்தில் தன் கணவன் கதவு பூட்டிச்சென்ற விஷயமாக விஷமம் உண்டானது. என்ன இருந்தாலும் இவர் என்னை அறையுள் விட்டுப் பூட்டிச்செல்லலாமா; எள்ளளவேனும் இரக்கமிருந்தால் இவர் இப்படிச்செய்துவிட்டு உத்தியோகத்தானத்துக்குப்போய் அங்கே மனமாறியிருப்பாரா, ... என்மீது அதிக அன்பு பாராட்டிவந்த இவர் அன்றைக்கு அப்படிச் செய்தது நூதனமாயிருக்கிறதே ..... ஆனால் நான் அவருக்கு அன்றிரவும் விடியற்காலத்தும் செய்த செய்கையும் அநியாயந்தான்; நான்தான் விளையாட்டாக அப்படிச்செய்ய இவர் அதனைக் கோபமாகக்கொண்டு ராமனுஞ்சிரிக்கத்தக்க விதமாய் இப்படிச் செய்யலாமோ, இதை நினைக்க நினைக்க மனம் நெருப்பாயெரிகிறதே ....." என்று அவள் இப்படியெண்ணுவதும் துயருறுவதும் பின் தேறுவதுமானாள்.

* * *

மேலே சொல்லப்பட்ட எண்ணங்கள் மாறி மாறி அன்னத்தின் மனசில் நிகழ்ந்தமையினாற்போலும் தன் கணவன்மீது அவளுக்கு அலட்சியந்தொட்டது; தொடக்கத்தில் தன் நாயகன் வெளியேயிருந்து வீட்டிற்கு வரும் போது அவளெதிர்சென்று முகமலர்ச்சி காட்டி இன்சொற்கூறி அழைத்துவந்து இருக்கை உதவி உபசரித்துத் தன் இன்சொற்களினால் அவன் உள்ளத்தைக் கனிவித்துவந்த அன்னலட்சுமி பின் நாளுக்கு நாள் இப்படி உபசரிப்பதை மெல்லமெல்லக் குறைத்து ஈற்றில் அவன் உண்ணும்போது தான்போய் அவனுக்கு உணவு பரிமாறுவதை விடுத்து, ராமனை அல்லது பொடிஹாமியை உணவு பரிமாறச் செய்தாள். பரிமாறும் விஷயத்தில் இப்படிப் பராமுகமாகவிருக்கும் அன்னம் சமையல் விஷயத்தில் எவ்வளவு அலட்சியமாயிருப்பாள் என்பது சொல்லவும் வேண்டுமோ. ஆநந்தனும் இவள் செயலை நாளுக்குநாள் அவதானித்துக் கவலைப்பட்டு யோசித்தான். இவளிடத்தில் அவனுக்கு இருந்த அன்பும் அபரபக்கச் சந்திரன்போல் நாளடைவிற் குறையத்தலைப்பட்டது. தொடக்கத்தில் தன் மனையாள் தனக்கு வந்து அமுதுபடைக்கத் தவறிய சமையங்களிற் கவலைப்பட்ட ஆநந்தன், பின்பு அவள் எப்பொழுதாயினும் தனக்கு உணவிட வரும்போது கவலைப்படுவானாயினான். பரஸ்பரம் இயற்கையன்பின்றிச் செயற்கையன்பு பாராட்டி நடந்து மாமனும் மருகியும் பேசுவது போல் வார்த்தையாடத் தலைப்பட்டார்கள்; ஆனாலும் ஆநந்தன் "எங்களிருவருக்குமிடையே இப்படி வந்ததேயென்று இடையிடையே ஏகாந்தமாயிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்துக் கவலைப்பட்டுக் கண்ணீர் சிந்துவான், பெருமூச்சுவிடுவான். ஆனால் அன்னத்தின் உள்ளமோ தண்ணீர் படப்படச் "சீமந்து" இறுகுவதுபோல, வரவரக் கடினமாய் மாறியது.

* * *

இப்படியாக ஒருநாள் ஆநந்தன் உத்தி யோகத் தானத்தினின்றும் மீண்டு, மாலைக் காலத்தில் பசி, தாகம் களைப்பு என்னுமிவை களுடையவனாய் வீட்டிற்கு வந்தபோது, அன்னம் படுத்த படுக்கையைவிட்டு எழுந்திராமல் "ராமன் ஐயா வந்துவிட்டார் போலிருக்கிறது, அவருக்குத் தேநீர் பணிகாரம் கொண்டுபோய்க்கொடு" என்று சொல்லி மறுபுறம் புரண்டு படுத்துவிட்டாள்.

* * *

உலகம் பலவிதம்: *1932* ஒக்டோபர் *06*

ஆநந்தன் - அன்னம் தொடர் *(முற்றொடர் - 08)*

அன்னத்தின் படுக்கைக்குக்கிட்டச் சென்ற ஆநந்தன் அவள் குப்புறக்கிடப்பதைக்கண்டு இவள் இப்பொழுது வன்மஞ் சாதிக்கின்றாளென் பதையுணர்ந்து செய்வதின்னதென்று தெரியானாய் ரோசமும் வெட்கமுந் தலைகொள்ளச் சிறிதுநேரம் சும்மா நின்றான்; பின்னர் அவள் சமீபத்திற் சென்று "என்ன, அன்னம், உனக்கு ஏதோ சுகமில்லையோ" என்று மெல்ல அவள் முதுகில் தீண்டிக்கொண்டு கேட்டான், முதுகிலே தொட்ட கையை அன்னத்தின் திருக்கரமொன்று வந்து எற்றின விசையில், ஆநந்தன் தன்கை தோளைவிட்டுப் பிடுங்குண்டு போயதோ எனப் பயப்பட்டுச் சிறிது விலகிநின்றான்; அன்னத்தின் கை இப்படிச் செய்ததேயல்லாமல் அவளுடைய கண்களும் திருவாயும் மலர்ந்தில. ஆநந்தனோ வயசிலும் அனுபவத்திலும் குறைந்தவன். தன் மனையாள் தன்னை இப்படி எறிந்து நடக்கவோ என்றதை நினைக்க நினைக்க அவனுடைய உள்ளத்திலே ஆத்திரம் அதிகப்பட்டது; ஆனால் இப்படித் தாங்களிருவரும் பிணக்குப்படுவதை வேலைக்காரர் கண்டால், அயலார் நண்பர் அறிந்தால் தன்னை ஏளனஞ்செய்வார்களேயென்று எண்ணுந்தோறும் அவனுடைய ஆத்திரங் குறைந்தது. "ஐயோ, தெய்வமே, நான் முன்னிருந்தபடி கலியாணஞ் செய்யாமலிருப்பதை விட்டு இந்த அட்டமத்துச் சனியை வட்டிக்கு வாங்கிவந்தேனே, இவளைக் காட்டிலும் உத்தமிகளும் அழகுள்ளவர்களுமாகிய பெண்களை எனக்குக் கல்யாணம் பேசிவந்த காலத்தில் நான் புத்தி மோசமாய் அவர்களை வேண்டாம் வேண்டாமென்று தட்டி விட்டேனே; இந்தக் காந்தாரியை அந்தக் கிழட்டு முருகனல்லவோ; என்னை ஏமாற்றி, கொண்டு வந்து சேர்த்துவிட்டான்; பணம்வாங்கிப் பிழைக்கும் கலியாணத்தரகர் சொல்லை நம்பியுங் கலியாணத்திற்குச் சம்மதிக்கலாமா; இல்லை, இல்லை; அந்தக்கிழவனை நான் குற்றஞ் சொல்வது தவறு; கிழவன் என்ன இவளைத் தின்று பார்ப்பதா; இவள் பெண்ணாக வந்த நாட்களில், அன்னமென நடந்து குயிலெனப்பேசி மயிலென ஒதுங்கினாளே; அவைகளைக் கண்டு நானே இவளிடத்தில் அப்பொழுது ஈடுபட்டேனென்றால், ஏமாந்தேனென்றால், வாக்குமாறிய முருகர்க் கிழவனை இவள் ஏமாற்றியது ஒருநூதனமா. கண்ணகை காளிவடிவங் கொண்ட மாதிரியாக வல்லவா இவள் இப்பொழுது காணப்படுகின்றாள்; அசமுகி, தாடகை, சூர்ப்பனகை, ஆலங்காட்டுநீலி ஆகிய இந்தப்பெண்களெல்லாம் இவளிடத்தில்வந்து பழகவேண்டும்போல் தெரிகிறதே; இவளைச் சொல்லித்திருத்தி நடத்துவதற்கு முதியபெண்கள் ஒருவரும் இங்கில்லையே. என்பொறுமையை இவள் கடுமையாகச் சோதிக்கிறாளே...." என்று இப்படி அவன் எண்ணாத எண்ணமெல்லா மெண்ணியெண்ணி மனம் நொந்தான். அவனுடைய கண்களில் நீர் ததும்பின. அவன் சடுதியில் நின்ற இடத்தை விட்டு வெளியே வந்து ஒருசார்மனைக்கதிரையிற் சாய்ந்து கொண்டான்.

* * *

அன்னம்தன்புருஷன்மீது ஆத்திரங்கொள்வதற்குக்காரணம் வேறொன்றுமல்ல; "அம்மாவுக்குச் சுகமில்லையென்று ராமன் சொன்னவுடனே, ஆனந்தன் ஓடிவந்து தன் சுகம் விசாரித்துத் தனக்குச் சைத்தியோபசாரஞ் செய்து தன்னைச் சமாதனப்படுத்தி உடனழைத்துச் சென்று தன்னுடன் சிற்றுண்டி தேநீர் அருந்தாமல், அவன் தன்னை அலட்சியஞ் செய்துவிட்டு ராமனிடந் தேநீர் வாங்கி உட்கொண்டபின் ஆறுதலாக அங்கு வந்தான் என்பதே. இவைகளை நினைக்க நினைக்க அவளுடைய மனங் கொதித்தெழுந்தது.

* * *

சார்மனையில் சாய்ந்தபடியிருந்த ஆநந்தன் கால்மணி நேரம்வரையில் சினத்துடன் அப்படியிருந்தான். ஆனால் அவனுடைய சினம் ஆறத்தொடங்கியது; அன்னத்தை நெடிதுநேரம் மனம் வருந்தவிட அவனுக்கு மனம் ஒருப்படவில்லை; பிடிவாதஞ்செய்யத் தொடங்கினால் பெண்களளவு நேரத்திற்கு ஆண்கள் பிடிவாதஞ் செய்யமாட்டார்கள்; சில நிமிஷங்களுக்கு முன் அவளை வெறுத்து வெளியேவந்திருந்த ஆநந்தன் அவளிடத்திற் காதல் பெருக உடனே எழுந்து அறையுட் சென்றான்; என் செய்வான் பாவம்;

"அஞ்சனமை வேற்கண் அரிவையர்தம் பேராசை
நெஞ்சுபுகின் ஒருவர் நீங்கும் நிலைமையதோ."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றவிதமாக ஆநந்தன் கோபம் அபிமானம் ரோசம் என்னுமிவைகளெல்லாவற்றையும் உடனே மறந்து அவள் படுத்திருக்கும் இடத்தில் தான் பெருமூச்சோடு மெல்லப்போய் ..... அன்னம் உண்மையாகத்தான் என்னுடன் கோபித்துக் கொண்டாயோ, அல்லது வேடிக்கைக்காக இப்படிச் செய்கிறாயோ, என்னைச் சோதிக்கிறாயோ, கண்ணே, உன்னாசை நான் மறப்பேனோ, மறந்தால் உயிர் தரிப்பேனோ" என்று கோவலன் மாதவி விஷயத்தில் சொன்னவிதமாகச் சொல்லி அவளை இரந்தான். அன்னமெனிலோ இவனிருக்கும் பக்கத்தில் முகங் கொடுத்திலள்; இவனைக் கடைக்கணித்திலள்; இவனுக்கு ஒரு வார்த்தை சொன்னாளல்லள்; இவள் வன்மஞ்சா தித்தலைக்கண்ட ஆநந்தன் சிறிது நேரத்திற்கு முன் தான்பட்ட அவமானத்தை மாத்திரம் மறந்திலனாதலின் அவளைத்தீண்டுதற்குப் பயந்திருந்தான்;

"மொழியொன்று புகலாயாயின் முறுவலும் புரியாயாயின் விழியொன்று நோக்காயாயின் விரகமிக் குழல்வேனுய்யும் வழியொன்று காட்டாயாயின் மனமுஞ்சற் றுருகாயாயிற் பழியொன்று நின்பாற்சூழும் பராமுகந் தவிர்த்தியென்றான்."

என்ற நிலைமையில் இருந்த ஆநந்தன் தன் பெண்டாட்டியைப் பின்னரும் பரிவுடன் நோக்கி "கண்ணே, அன்னம்; நீ ஏன் வீணே என்னுடன் பிடிவாதஞ் செய்கின்றாய்; உனக்கு நான் செய்த குற்றமென்ன; தெரிந்துதெரியாமல் நான் ஏதுங் குறைசெய்தாலும் அதனைப் பொறுத்துக்கொள்வதல்லவோ உனக்கு அழகு; பிறர் உன்னை வைதால் இல்லையேற் கோபித்தாலல்லவோ நீ மனவருத்தப்படவேண்டும்; இப்படி நானும் நீயும் நாளிலும் பொழுதிலும் நாயும் பூனையும்போற் சண்டையிட்டாற் பார்த்தவர் பரிகாசஞ் செய்வாரல்லவா; கண்டவர் கதை பேசுவார்களல்லவா. உயர்குலத்திற்பிறந்த நீ, படித்த நீ, காரியமறிந்த நீ இப்படி முரட்டுத்தனம்பண்ணினால், மூடப் பெண்கள் சாமானியமானவர்கள் என்னதான் செய்யமாட்டார்கள்; அன்னம், குடிக்குட் பிறந்து செடிக்குட்தலைவைக்கலாமா? சந்திரவதி, சாவித்திரி, நளாயினி, தமயந்தி இவர்களுடைய சரித்திரங்களைப் படிக்கவில்லையா; நான் ஒரு தவறைச்செய்தால் நீ பொறுக்க வேண்டும்; நீ ஒரு பிழையைச்செய்தால் நான் சகிக்கவேண்டும்; இதுவல்லவா குடியிற் பிறந்த பெண்களுக்கு அழகு; இங்கே உனக்கு ஒருகுறையுமில்லா திருக்க, எவ்வகையான காரணமுமில்லையாக, நீ காலால் இட்ட ஏவல்களைக் கையாற் செய்ய வேலைக்காரர் இருக்க, உன் எண்ணப்படிநடக்க நானிருக்க, போதியபொருள்பண்டமிருக்க, இப்படி நாமிருவரும் பிணங்குவதும் மனஸ்தாபப் படுவதும் பிழையல்லவா;..... கண்ணே, நடந்த பிழைகளை யெல்லாம் இன்றோடு மறந்துவிடு; இனிமேல் உன்விருப்பத்திற்கு மாறாக நான் எக்கருமமுஞ் செய்யேன்; கொண்டகோபந் தணிகுதி..." என்று இப்படிப்பலவாறு தன் மனையாளை இரந்தான்; இந்த இரப்புரைகளினால் அன்னத்தின் மனமும் ஒருவாறு கசிந்தது. அவள் படுத்தபடியே தன் னாயகனைப்பார்த்துப் புன்முறுவல்செய்தாள். தன் மனையாள் புன்னகைசெய்தமையைக் கண்ட ஆநந்தன் பரமாநந்தனானான்.

* * *

[உலகம் பலவிதம்: 1932 ஒக்டோபர் 13 இல்லை]

உலகம் பலவிதம்: 1932 ஒக்டோபர் 20

ஆநந்தன் - அன்னம் தொடர் (முற்றொடர் - 09)

விஜயரத்தினத்தைச் சந்தித்தநாள் முதலாக கறுப்பாயி அன்னலட்சுமியுடன் அதிகம் பேசக் காணப்பட்டாள்; இப்படிப் பேசும்போது அவள் ஆநந்தனை இடையிடையே அன்னத்திற்கு குறைவாகச் சொல்லவுந் தலைப்பட்டாள்; ஒரு நாள் அன்னந் தன்னந்தனியே யோசனையோடிருக்குஞ் சமையம் பார்த்து கறுப்பாயி அவளிடஞ்சென்று வசதியாயிருந்து கொண்டு "என்ன அம்மா, எப்பொழுது பார்த்தாலும் யோசனையோடுதான் இருக்கிறீர்கள்; உங்களுக்கு என்ன யோசனை, என்ன கவலை, பொருள் பண்டமில்லையா, காசுபணமில்லையா, கட்டப்பூட்டத் துணிமணியில்லையா, ஐயா உத்தியோகத்திற்குப் போய்விட்டால், நீங்கள் எப்போது பார்த்தாலும் ஏதோ கடலில் கப்பலோடு மூழ்கக் கொடுத்தவர் போல, பதினாறு பிள்ளைகளைப் பெற்றவள்போலச் சஞ்சலத்தோடுதானே காணப்படுகிறீர்கள்; உங்களுக்கு என்னகேடு வந்தது, நான் உங்கள் வீட்டிற்கு வந்தும் எத்தனையோ மாதகாலமாச்சே, இன்னமும் அம்மா நீங்கள் சிரித்துக் கதைபேச நான் காண வில்லையே; நீங்கள் ஒருத்திதானே இப்படியிருக் கிறீர்கள்; இப்படிச்சொல்லுகிறாளென்று குறை நினைக்கவேண்டாம்; அடுத்த வீட்டுக் கனகசபா பதியையாவின் அம்மாவைப் பாருங்கள்; எதிர் வீட்டுத் தருமலிங்க ஐயாவின் பெண்சாதியைப் பாருங்கள்; உந்தவீட்டுக் கந்தையாவினுடைய சமுசாரத்தைப் பாருங்கள்; இப்படித்தானிருக்கிறார்களா; என்ன சந்தோஷம்; என்ன முக மலர்ச்சி, ஒருவர் போனால் வந்தால் என்ன அன்பு ஆதரவு, ஐயாமார் உத்தியோகத்திற்குப்போய்விட, அவர்கள் பாடல் படிப்பென்ன, வீணைப்பெட்டியென்ன, பொனக்கிறாப் பெட்டியென்ன, சொக்கட்டான் மனையென்ன, இனி அவர்கள் உங்களைப்போல எந்தநேரமும் வாடியமுகத்தோடா இருக்கிறார்கள்; இடையிடையே முகத்தைக் கண்ணாடியிற் பார்ப்பதும், "பேஸின்" அண்டை போய் சவர்க்காரம்போட்டு முகத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுவுவதும் துடைப்பதும் புசர்மா அடிப்பதும் கறுத்தப்பொட்டிடுவதும் சேலை நகைகளைத் திருத்துவதும், வெளிவிறாந்தைக்கு வருவதும், வந்து சார்மனையில் சாய்ந்துகொண்டு பத்திரிகையோ கதைப்புத்தகமோ ஏதுமொன்றைப் படிப்பதும் இடையிடையே வேலைக்காரனைக் கூப்பிட்டுத் தேநீர் காப்பி தருவித்துப் பருகுவதும் வெற்றிலை பாக்கருந்துவதும் அயலிலுள்ள பெண்கள் வந்தால் அவர்களை உபசரித்து அவர்களுடனிருந்து பல கதைகள் பேசுவதும் இப்படியல்லவோ காலங்கழிக்கிறார்கள். இவை மாத்திரமோ; நாடகம், கூட்டம், கொண்டாட்டம், கலியாணவீடு, படக்காட்சி, விருந்து, "சர்க்கஸ்" மிருகக்காட்சிச்சாலை, கடற்கரை உலாத்து, கோயில், திருவிழா, பிரியாவிடை இவைகளில் எதைத்தான் விடுகிறார்கள்; இந்தப் பெண்களை மேலே சொன்ன எந்த இடத்திலுங் காணலாமே; இவைகளில் ஒன்றுக்காயினும், அம்மா நீங்கள் போகிறீர்களா; இல்லை, உங்கள் வீட்டிற்கு யாரும் அறிந்த பெண்கள் வந்தாலும், நீங்கள் ஒருபோதும் அவர்கள் வீட்டிற்குப் போகக் காணேனே; பிள்ளை குட்டிகள் பெறமுந்தி இந்த வயசில், இந்தச் சமையத்தில் நீங்கள் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்றபடி உலகத்துக்குத்தக்கவிதமாக, நாலுபேரும் நடப்பதுபோல அல்லவா நடக்கவேண்டும்" என்று இப்படிச்சொல்ல, இதற்கிடையில் அன்னம் அவளைப் பார்த்து, "அது, சரி, கறுப்பாயி, இடம் பெருள் ஏவல் என்னுமிவைகளை உத்தேசித்தல்லவா நடக்கவேண்டும்" என்றாள்.

* * *

"அம்மா, உங்கள்வார்த்தை என் தலைமேலிருக்கட்டும்; தட்டிப்பேசுகிறேன் என்று நினைக்கவேண்டாம்; இடம் பொருள் ஏவல் இங்குள்ள மற்றெல்லாருக்குமிருக்க உங்களிரண்டுபேருக்குந்தானா இல்லை; ஐயா என்ன உத்தியோகத்திற் குறைந்தவரா, ஊரிலே பொருள்பண்டம் காணிபூமி நிலம் புலம் உண்டாமே, இனி உங்களுக்கென்ன சீதனங் குறைவா, பொருள் பண்டங் குறைவா? ஐயாவும் நீங்களும் உங்களுங்கள் பெற்றார்களுக்கு ஒவ்வொரு பிள்ளைகள்தானாமே; அம்மா, இது வேறொன்றுமல்ல, உங்கள் விஷயமாக ஏதுஞ் செலவுசெய்ய ஐயாவுக்குப் பிரியமில்லை; அவரைக்கொண்டு செலவு செய்விக்க உங்களுக்கும் இஷ்டமில்லை; அப்படிச் சொல்லுவதைவிட்டு ஏன் இடம் பொருள் ஏவவில்லையென்று சொல்லுகிறீர்கள்; மனமுண்டானால் இடமுண்டு; அல்லாமலும், அம்மா, மற்றவர்களுக்கு இடங்கொடாமலல்லவா நீங்கள் நடக்க வேண்டும்" என்று கறுப்பாயி சொல்லி முடித்தாள். கறுப்பாயி சொன்ன வார்த்தைகள் சில அன்னத்திற்குச் சிறிது ஆத்திரத்தை உண்டாக்கிவிட்டன. தன்புருஷன் தன்னைச் சிறிது அலட்சியமாகத் தான் நடத்துகிறான் என்று அவள் நினைத்து விட்டாள். புருஷனிடஞ் சொல்லி தான் நாடகம், கூட்டம், படக்காட்சி என்னும் வினோதங்கள், கடற்கரை உலாத்து என்னுமிவைகளுக்குப் போகத்தான் வேண்டுமென்று அவள் நிச்சயித்தாள். கறுப்பாயி, நீ சொல்வது நிசந்தான்; நான் இனி அப்படிச் செய்கிறேன்" என்று அன்னஞ் சொல்லுதலும், அவள் "அம்மா, அப்படிச் செய்யுங்கள்; ஆனால் என்னைப் பழிமுடித்து விடாதீர்கள்; நான் சொல்லி நீங்கள் இப்படிச் செய்யப்போகிறீர்களென ஐயா அறிந்தால் துரத்திப் போடுவார்" என்று சொல்லி இரந்தாள். "நான் ஏன் அவருக்குச் சொல்லப்போகிறேன்" என்று அன்னந் தேறுதல் சொன்னாள்.

* * *

இப்படியாக சிலநாட் சென்றபின் அன்னத்தின் விருப்பத்தின்படி ஆநந்தன் அவளை ஆலயத்திற்கும், கூட்டங்களுக்கும், கடற்கரைக்கும் மோட்டரதத்திலும் இடையிடையே நடந்துங்கூட்டிக்கொண்டு போகத் தலைப் பட்டான்; அவனுக்குச் சாவகாசமில்லாத சமையங்களில் அன்னம் கறுப்பாயியையேனும் பொடிகாமியையேனும் இராமனையேனுந் துணையாகக் கூட்டிக்கொண்டு மோட்டரதத்தில் போகவேண்டிய இடங்களுக்குப் போவதுமுண்டு. ஒருநாட்காலை, ஆநந்தன் உத்தியோகத்தானத்திற்குப் புறப்படும்போது, தான் அன்றிரவு நடக்கவிருக்கும் தன் சிநேகனுடைய விவாகத்திற்குப் போகவேண்டுமென்றும், வீட்டிற்கு மீண்டுவந்து கல்யாணவீட்டிற்கு இருவரும் போவதானால் நேரத்திற்குப் போகமுடியாதென்றும், ஆதலால் தான் நேரே வேறுஞ் சினேகிதருடன் புகைரத மார்க்கமாகப் போவதாகவும், அன்னம் வழக்கமாகவுள்ள மோட்டரதச் சாரதியிடம் ஆளனுப்பி அந்த மோட்டரதத்தில் தன் வேலைக்காரருள் ஒருவரையேனுந் துணையாகக் கூட்டிக்கொண்டு அங்கே வரலாமென்றுங் கூறி, அந்தக் கல்யாணவீட்டிற்குப் போகவேண்டிய மார்க்கம், குறிப்பு, அடையாளம் எல்லாவற்றையும் அன்னத்திற்கு விபரமாகச் சொல்லிவிட்டு, அவன் உத்தியோகத்தானத்திற்குப் போய்விட்டான். ஆநந்தன் போனபின் அன்னம் இராமனைக் கூப்பிட, கறுப்பாயி "ராமன் கடைக்குப் போய்விட்டான், என்ன செய்யவேணும், சொல்லுங்கள், நான் செய்கிறேன்" என்றாள். "கறுப்பாயி, எங்களுக்கு வழக்கமாகக் கார்கொண்டு வருபவனுடைய இடம் உனக்குத்தெரியுமா" என்று கேட்க, "ஆம் எனக்குத் தெரியும் அம்மா" என்று கறுப்பாயி சொல்ல "அப்படியானால் நீ அவனிடம் போய் 4 மணிக்குப்பிந்தாமல் கல்யாணவீட்டிற்குப் போவதற்குக் கார் கொண்டு வரட்டாம் என்று சொல்லிவிட்டு வா" என்றாள். அதற்கென்ன, அம்மா நான் இதோ போய்ச் சொல்லிவிட்டு வருகிறேன்; எங்கே அம்மா கல்யாணவீடு என்று கேட்க, அன்னம் அவளுக்கு கல்யாணவீட்டிற்குப் போகவேண்டிய ஊரையும், தன் புருஷன் சொல்லிவிட்டுச் சென்ற செய்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையுஞ் சொன்னாள். கறுப்பாயி அவற்றையெல்லாம் அவதானமாகக் கேட்டுக்கொண்டு கார்க்காரனிடஞ் சொல்லப் போனாள்.

* * *

உலகம் பலவிதம்: 1932 ஒக்டோபர் 27

ஆநந்தன் - அன்னம் தொடர் (முற்றொடர் - 10)

மோட்டோர் காருக்குச் சொல்லச்சென்ற கறுப்பாயி, 2 மணி நேரம் வரையிற் கழித்து வீட்டிற்கு மீண்டாள்; "ஏன் கறுப்பாயி, இவ்வளவு நேரஞ் சென்றது? காருக்குச் சொன்னாயா", என்று அன்னங் கேட்க, "அம்மா, உங்கள் வழக்கமான கார்க்காரன் எங்கோ கல்யாண வீட்டுக்குக் கார் கொண்டு போய்விட்டானாம்; அவனுடைய இடத்திற்குச் சற்றே தூரத்தில் பெறீறா என்றொருவன் கார்வைத்திருக்கிறான்; அவனைக் கேட்டேன்; அவன் பின்னேரம் 4 மணிக்குத் தான் கார்கொண்டு வருவதாகவும், எங்கள் வீடு தெரியுமென்றும், வேறு கார் பிடிக்க வேண்டாமென்றுஞ் சொன்னான்; அந்தக் காரைத்தான் ஒழுங்கு செய்துவிட்டு வந்தேன்; அதனாற்றான் வர நேரஞ்சென்றது" என்று கறுப்பாயி சொன்னாள். "அது, சரி, கறுப்பாயி, ஆனால் ஐயா வழக்கமான காரைப் பிடித்துக் கொண்டுதான் வரச்சொன்னவர்; வேறு கார் பிடித்துக்கொண்டு போனால் ஐயா என்ன சொல்லுவாரோ தெரியவில்லை" என்று அன்னஞ் சொல்லுதலும், கறுப்பாயி "அதிலே என்ன இருக்கிறதம்மா, நானும் உங்களோடு கூடவருகி றேன்தானே, அல்லாமலும், அங்கே கல்யாண வீட்டில் ஐயா முந்தியே போய் நிற்பார்; வரும் போது எல்லாரும் ஒருமித்து வருவோம்; போகும் போது பகற்காலந்தானே; நேரத்தோடு புறப்பட்டுப் போவோம்" என்றாள். "என்றாலும் இராமனையுங் கூட்டிக்கொண்டு போவோம்; இராமன் வரும்போது என்ன பயம்" என்று அன்னஞ் சொன்னாள். கறுப்பாயி அன்னஞ் சொன்னதற்கு ஒரு பதிலுஞ் சொல்லவில்லை.

* * *

பின்னேரம் மூன்றரை மணியென்னவே, அன்னம் தன்னை அலங்கரிக்கத் தொடங்கினாள்; அலங்காரஞ் செய்து முடிய நாலேகால் மணியானது; கறுப்பாயியும் விசேஷமாக உடுத்துக்கொண்டு புறப்பட்டு ஆயத்தமாக நின்றாள்; மத்தியானம் கடைக்குப் போன ராமன் நாலே காலாயும் மீண்டுவரவில்லை; ஆநந்தன் அன்று காலை உத்தியோகத்தானத்திற்குப் புறப்படும்போது ஏதோ கருமமாகச் சிறிது தூரமான இடத்திற்குப் போய் அந்தக் கருமத்தைப் பார்த்துவிட்டு வரும்படி இராமனுக்குச் சொல்லியிருந்தான். இராமன் அந்தக் கருமத்தைப் பார்த்துவிட்டுக் கடைக்கு வந்து பண்டங்களை வாங்கிக்கொண்டு வீட்டிற்குப் போவோமென்ற எண்ணத்துடன் குறித்த அந்த இடத்திற்குப் போய்விட்டான்; போனவிடத்தில் உடனே கருமம் முடித்துவர ராமனுக்குச் சாத்தியப்படவில்லை. இது நிற்க 4 மணிக்கு வருகிறேனென்று சொன்ன கார்க்காரன் நாலேமுக்காலாகியும் கார்கொண்டு வரவில்லை; "என்ன, கறுப்பாயி, நீ சொன்ன காரை இன்னமுங் காணேனே, பொழுதுபடுகிறதே;

அல்லாமலும் இந்த மழைக்காலத்தில் நேரத் தோடல்லவா புறப்பட்டுப்போய் வரவேணும்" என்று அன்னஞ் சொல்ல, கறுப்பாயி "அம்மா, இதோ நான் போய்க் கார்கொண்டு வருகிறேன்" என்று புறப்பட்டுப் போனாள். போய் அரைமணிநேரஞ் சென்றபின் கறுப்பாயியும் காரில் ஏறிக்கொண்டு அங்கே வந்து சேர்ந்தாள். "அம்மா, ஆபத்தான ஒரு வருத்தக்காற ஆளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனேன்; அதனால் நேரஞ் சென்றுபோய்விட்டது; காரியமில்லை அம்மா, நீங்கள் ஏறுங்கள் 10 நிமிஷத்தில் நான் கொண்டுபோய் விடுவேன்; இது புதுக் கார்" என்று பெறீறா சொன்னான். "அது சரி, இராமனைக் காணோமே," என்று சொல்லிவிட்டு அன்னம் அறையுட் சென்று பொடிகாமி "இராமன் போகும்போது உனக்கு ஏதுஞ் சொல்லிவிட்டுப் போனானா" என்று பொடிகாமியைக்கேட்க, "அம்மா, ஐயா யாரிடமோ போய் ஏதோ கருமம் பார்த்துவரும்படி தன்னிடஞ்சொல்லிப் போனா ரென்றும் தான் வர நேரஞ்செல்லுமென்றும் இராமன் போகும்போது சொல்லிவிட்டுப் போனான்" என்று அவள் சொன்னாள்.

* * *

"ஐயோ, இதுஎன்ன பரமசங்கடமாயிருக்கின்றதே, பொழுதும்பட்டுவிட்டது, மழையுந் தூறுகின்றது; கார்க்காரனும் புதியவன்; இராமனையுங் காணோம், போகாமல் விடலாமென்றால், ஐயா முந்திப்போய் அங்கே காத்துக்கொண்டு நிற்பாரே, என்னைக் காணாவிட்டால், கிலேசப்படுவாரே; என்பாடு இருதலைக் கொள்ளி யெறும்பு போலிருக்கிறதே" என்று அன்னம் தாமரையிலையில் நீர்போல் அறையுள் நின்று தயங்கினாள். "அம்மா கார்க்காரன் அவசரப் படுகிறான், நேரஞ்சென்றுபோய் விட்டதாம்; கலியாணவீட்டுக்குப் போய் மீண்டுவந்து வேறொரு நெடுஞ்சவாரி போகவேணுமாம்; புறப்படுங்கள்" என்று கறுப்பாயி சொன்னாள். "ஓம் நான் இதோ வந்துவிட்டேன், பொடிகாமி, இராமன் வரும் வரைக்கும் சாவதானமாயிரு, அறைகளைப் பூட்டிவிடு, கள்வர் குடிகாறர் அதிகப்பட்டகாலம், நீ வீட்டை விட்டு வெளியேபோகாதே; இராமனை வழியிற் சந்தித்தாற் கூட்டிக்கொண்டு போகிறேன்; கலியாணவீட்டில் அதிகம் நிற்கமாட்டோம், சீக்கிரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துவிடுவோம்", என்று சொல்லிவிட்டு அன்னம் வந்து காரில் ஏறினாள். ஏறும்போது காரின் கூடாரம் அவள்தலை நோவத் தட்டியது; "அம்மா தலையைக் குனிந்துகொண்டு ஏறுங்கள்" என்றான் பெறீறா. சகுனம் நல்லாயில்லையென்று மனத்தில் நினைத்துக்கொண்டு மிக்க சஞ்சலத்தோடு அன்னங் காரில் ஏறினாள். கறுப்பாயியும் ஏறிப் பக்கத்தே யிருந்தாள். கார் புறப்பட்டு மிகவும் வேகமாகச் சென்றது.

* * *

சில நிமிஷங்களாக வேகமாகச் சென்ற ரதம் ஊர்மனை கழிந்தபின் மெல்ல மெல்லச் செல்லத்தொடங்கியது; "அப்பொழுது அன்னம் "ஏன், கார் மெல்லப் போகிற" தென்றுகேட்க, அவன் "பெற்றோல், இல்லையாக்கும் அம்மா" என்று சொல்லிக் காரை நிறுத்தி, எண்ணெ யுண்டோ என்று சோதித்துப் பார்த்தான். "அம்மா, இன்னமுங் கொஞ்சப்பெற்றோல் இருக்கிறது; இதற்கிடையில் நாங்கள் அடுத்த குதத்திற்போய் எண்ணெய் விடுவிக்கலாம்" என்று சொல்லிவிட்டுப் பின்னரும் ரதத்தைச் செலுத்திக்கொண்டு போனான். போகும் மார்க்கம் ஒரு புறம் கடற்கரையாக விருந்தது. மற்றப்பக்கத்தில் தென்னந் தோட்டங்களும் இடையிடையே சிறு குடிசைகளு மல்லாமல் வேறு எவையும் எவரும் காணப்படவில்லை. அன்னத்தின் மனத்திற் சஞ்சலம் அதிகப்பட்டது; இதற்கிடையிற் காரும் ஓடி ஓய்ந்து அப்பாற் செல்லாது நின்று விட்டது. அன்னம் கறுப்பாயியைச் சினந்து பார்த்து, "இந்தக்காரை எங்கே தேடிப்பிடித்தாய்" என்றாள். கறுப்பாயி "நான் என்ன செய்வேன் அம்மா" என்று சொல்லிவிட்டுப் பேசாமலிருந்தாள். "அம்மா, பெற்றோல் கொஞ்சமுமில்லை; கார் இந்த இடத்தில் நிற்கட்டும்; நான் சமீபத்திலுள்ள குதத்திற் போய் எண்ணெயெடுத்துக்கொண்டு 5 நிமிஷத்தில் வந்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டு, அன்னத்தின் பதிலை எதிர்பாராதவனாய் அவன் தகரத்தையும் எடுத்துக்கொண்டு விசையாய் நடந்து போனான். அவன் போய்ச் சிறிது நேரத்துக்கிடையில், துமித்துக்கொண்டி ருந்த மழை சோனாமாரியாகப் பெய்யத் தொடங்கியது. பொழுதும் இருண்டு விட்டது. அன்னம் அச்சத்துடன் கறுப்பாயியைத் திரும்பிப் பார்த்தாள். கறுப்பாயி கிலேசமின்றி இருக்கக்கண்ட அன்னம் அவளுடன் ஏதும் பேசவிரும்பினாளல்லள். இதில் ஏதோ சூது இருக்கவேண்டுமென்று நினைத்துக் கலங்கியவள் தெருவின் இருபுறத்தையும் பார்க்கும்போது ஒரு பக்கத்தில் ஒரு பெரிய வீடு தீபங்கள் ஏற்றப்பட்டு இருப்பக் கண்டாள். அந்தவீட்டிற்கு இறங்கிப் போகலாமோ என்றால் காரை எவருமில்லாமல் விட்டுப் போவது சரியல்ல என்று நினைத்தாள்; "5 நிமிஷத்தில் வருகிறேன் என்றுசொல்லிப் போனவனை இன்னமுங் காணனே" என்று அன்னஞ் சொல்ல "மழை பெய்கிறதம்மா எங்கோ ஒதுங்கி நிற்கிறானாக்கும்" என்று கறுப்பாயி மறுமொழி சொன்னாள்.

* * *

இதற்கிடையில் 18 வயசு வரையிலுள்ள ஒரு சிங்களப்பெண் மழைக்குக் குடை பிடித்தபடி அந்தக் காருக்குப் பக்கத்தே வந்து நின்று சிங்களத்தில் "ஏன் நெடுநேரமாக நிற்கிறீர்கள், சாரதி எங்கே" என்று கேட்க, கறுப்பாயி உள்ள விஷயத்தைச் சொன்னாள். "அம்மா, சாரதி வருமட்டும் எங்கள் வீட்டில் வந்து வசதியாயிருக் கலாம்; அங்கே ஆண்பிள்ளைகள் இல்லை; நாங்கள் பெண்டுகள்தான் இருக்கிறோம் வாருங்கள்; நான் போய் இன்னுமொரு குடை யெடுத்துக்கொண்டு வந்து உங்களைக் கூட்டிக்கொண்டு போகிறேன்" எனலும், அன்னம் "காரியமில்லை, சாரதி இதோ வந்துவிடுவான், நாங்கள் போய்விடுவோம், குறை நினைக்க வேண்டாம், பெரிய உபகாரம்" என்று சொன்னாள். "இல்லை அம்மா, காருக்குக்கிட்ட நிற்பதற்கு நான் ஆள் விடுகிறேன், நீங்கள் யோசியாமல் வாருங்கள்; இப்படி நேரத்தில் ஒருவர்க்கொருவர் உதவி செய்யாவிட்டால் என்ன பிறப்பு" என்று அச் சிங்களச் சிறுமி பெரிதும் வேண்ட, கறுப்பாயியும் போவோம் என்று தூண்ட, சாரதியும் வராமையால் அன்னம் இறங்கிப்போவதற்கு உடன் பட்டாள். இதற்கிடையில் அந்தச் சிங்களச் சிறுமி குதூகலத்துடன் வீட்டிற்கு ஓடிப்போய் இரண்டு குடையுமெடுத்துக்கொண்டு ஒரு சிறுவனையுங் கூட்டிக்கொண்டு வந்தாள். சிறுவனை ரதத்திற்குக் காவலாகவிட்டு, இருவரும் இறங்கி மூவருமாக அந்த வீட்டிற்குப் போயினர்.

* * *

போனவுடனே அன்னலட்சுமியை ஒரு சிங்களக் கிழவி "வா அம்மா" என்று சிங்களத்திற் சொல்லி உள்ளே அழைத்துக்கொண்டுபோய் இருக்கச் செய்து சுத்தமான துணிகொண்டுவந்து அன்னத்தின் தலையிலும் தோளிலுமுள்ள மழை நீரைத் துடைத்தது. கறுப்பாயி தலைவாசலிலிருந்தாள். அன்னம் அங்கிருந்தாளாயினும் அவளுடைய எண்ணமெல்லாம் சாரதியின் வரவிலேயே சென்றிருந்தது. "அம்மா, சாரதி வந்தவுடன் சொல்லுகிறோம்; நீங்கள் அலுப்பாயிருந்தால் உந்தச் சோபாவிலே கொஞ்சம் சாய்ந்து கொள்ளுங்கள்" என்று கிழவி சொன்னாள். அன்னம் உண்மையாக உடம்பு அலுப்பும் மனக்கிலேசமும் இருந்தமையால்; மெல்ல அந்தச் சோபாவில் சாய்ந்திருந்தாள்; சாரதி வரவில்லை, மழை வரவர அதிகப்பட்டது; சோபாவிலிருந்த அன்னம் யோசித்தபடியே சிறிது அயர்ந்துவிட்டாள். 10 நிமிஷம் வரையில் அயர்ந்து துடிதுடித்து எழுந்திருந்தாள். சிங்களச் சிறுமியையுங் காணவில்லை; கிழவியையுங் காணவில்லை; தீபமும் மங்கலாக எரியக் காணப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது; அன்னந் திகில்கொண்டு "கறுப்பாயி" என்று கூப்பிட்டாள். கூப்பிட்ட மாத்திரத்தே சட்டை தொப்பி தரித்த ஒரு தமிழ் வாலிபன் உட்புற வாயிலால் அந்த அறையுள் பல்லைக் காட்டிக்கொண்டு வரக்கண்டாள். அன்னந் திடுக்குற்று எழுந்து தலைவாயற் கதவைப் பார்க்கும் போது அது பூட்டப்பட்டிருப்பக் கண்டாள்.

* * *

உலகம் பலவிதம்: *1932 நவம்பர் 03*

ஆநந்தன் - அன்னம் தொடர் *(முற்றொடர் - 11)*

பல்லைக் காட்டிக்கொண்டு அறையினுள் வந்த ஆடவன், வலையில் அகப்பட்ட மான் போல் வெருண்டு சஞ்சலப்பட்டுக் கூசி ஒதுங்கி நிற்கும் அன்னத்தைப் பார்த்து, "என்னை இன்னானென்று உமக்குத் தெரியாதோ" என்று இதமாகக் கேட்க, அன்னலட்சுமி "உன்னை இன்னானென்று நான் அறியவேண்டிய அவசியமில்லை" என்று சினந்து உரைத்தாள். "என்னை நீர் அறியாவிட்டாலும், இன்னானென்று அறிய விரும்பாவிட்டாலும், அன்னம், உம்மை நான் நன்றாய் அறிவேன்; நானும் யாழ்ப்பாணத்தவன்தான்" என்று வந்தவன் சொல்லுதலும், "நீ ஒருபோதும் யாழ்ப்பாணத்தவனல்ல; யாழ்ப்பாணத்தவனாயிருந்தால் இப்படியான அடாத செய்கையைச் செய்ய நினைக்கமாட்டாய்" என்று அன்னம் வெறுப்புடன், அவனுடைய முகத்தைப் பாராமற் சொல்லுதலும், அவன் "கண்ணே அன்னம், ஏன் அப்படிச் சொல்லுகின்றீர்; என்மீது ஏன்சந்தேகப் படுகின்றீர். நான் உமக்கு இப்பொழுது செய்த அடாதசெயல் என்ன? என்வீட்டிற்கு வந்த உம்மை நான் உபசரிக்கவேண்டியது முறைமையல்லவா? ஐயோ, நெடுநேரமாகக் கால் உளைய நிற்கின்றீரே, உந்தச் சோபாவில் உட்கார வொண்ணாதா? என்றான்.

அன்னம்: "போதும், போதும், உன்னுடைய உபசாரம்; என்னை உட்காரவா சொல்லுகிறாய்; அந்தரமார்க்கத்தில் ஆபத்து நேர ஒதுக்கிடந் தேடிவந்த எனக்கு இதுதானா நீ செய்யும் உபசாரம்? என்னுடன் வந்த கறுப்பாயி எங்கே? என்னை இங்கே கூட்டிக்கொண்டு வந்த சிங்களப் பெண் எங்கே? வந்தபின் எனக்கு உபசாரஞ் செய்த கிழவி எங்கே? சீதையை இராவணன் வஞ்சிக்க நினைத்தவிதமாய் நீயும் என்னை வஞ்சிக்கலாமென்று நினைத்து முந்தியே இந்த உபாயமெல்லாஞ் செய்திருக்கின்றாய்? இது மெய்; நீ யாழ்ப்பாணத்தவனாகட்டும், என்னை முன்பு அறிந்தவனாகட்டும், நீ யோக்கியனாயிருந்தால், நீ சரியானவனாயிருந்தால், நான் வெளியேபோக வழியை விடு; வாசற்படியில் நில்லாதே; இல்லையேல் இந்த வெளிக்கதவைத் திறந்துவிடு; அப்படியும் உனக்கு எண்ணமில்லாவிட்டால், கறுப்பாயியை இங்கே கூப்பிட்டுவிட்டு; நீ என்னுடன் பேச வேண்டியதைப் பேசு; வீணாய் உன்னைப்பெற்ற தாய்க்கு அநியாயமான பேர் வாங்கிக்கொடாதே; சூதும் வாதும் வேதனை செய்யும் என்ற விதமாய் உன் வஞ்சகம் உனக்கே கேட்டைத் தேடி விடும்; வீணாய்க் குறுக்கே அழிந்து போகாதே; கிணற்று நீரை வெள்ளம் கொண்டுபோகப் போவதில்லை" என்று மிக்க மன உறுதியோடும் ஆவேசத்தோடும் சீற்றத்தோடும் கூறினாள்.

* * *

அன்னலட்சுமி சொன்னவற்றை யெல்லாம் அவதானமாகக் கேட்ட அவன் முதல் தனக்கு என்ன தீமை வருமோ என்று பயந்து அன்னத்தை வெளியே போகவிட நினைத்தான்; அப்படிப் போகவிட்டால் தான் நினைத்தகாரியம் ஒரு போதும் பின் வாய்க்கமாட்டாதென்றும் யோசித்தான்; அது மாத்திரமல்லாமல் அவள் வெளியே போய்த் தனக்குத் தீமைதேடுதல் அவளால் முடியுமென்றும் உத்தேசித்தான். இவ்வளவோடு அமையாமல், அன்னம் ஏனைய பெண்களைப் போற் பயப்படாமலும் பதறாமலும் ஏங்காமலும் நின்று தன்னுடன் நியாயம் பேசியதை அவன் சிறிது விபரீதமாயும் நினைத்துக்கொண்டான். "உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்பப் போவதில்லை; இவளை இப்படி அகப்படுத்துவதற்கு நான் பலநாட்களாய்ப் பட்டபாடும், செலவிட்ட பொருளும், செய்த உபாயமுங் கொஞ் சமல்ல; இவள் முந்தியே எனக்குப் பெண்ணாய் வரவேண்டியவள்; என் பொல்லாத காலத்தினால் அப்பொழுது அது சந்திக்கவில்லை; இப்பொழுதும் இவளும் இவள் புருஷனும் எந்த நேரமுஞ் சண்டையும் பிணக்குந்தானென்று கறுப்பாயி எனக்குச் சொல்லியிருக்கிறாள்; புருஷனுக்கு இவளிடத்தில் உண்மையான அன்பிருந்தால், கலியாண வீட்டிற்குத் தன்னுடன் கூட்டிக்கொண்டு போவதைவிடுத்து, அவன் நீ வா, நான் முந்திப்போகிறேனென்று சொல்லமாட்டார்கள்; ஒருவேளை என்னை இன்னானென்று அறியாமையினால் இவள் இப்படி வெறுத்துப் பேசவுங் கூடும்; ஆனதால் என்னை இன்னானென்று இப்பொழுதே சொல்லிவிடுவேன்" எனத் தன் துன்மதிக்கு ஏற்பப் பலவாறு யோசித்தான். அந்தோ! தையலார் மையலிற்பட்டார் தமக்கொரு மதியுமுண்டோ!

* * *

"கண்ணே, அன்னம், உன் சம்மதமில்லாமல் ஏதொன்றும் நடக்கப்போவதில்லை..... ஆனதால் நீ கோபிக்காதே....." என்று அவன் சொல்வதற்கிடையில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னம்: அந்தத்துணிவு எனக்கு உண்டு; ஆனபடியாற்றான், நான் இப்படி உன்னோடு நின்று பேசுகிறேன்; இஷ்டமானால் என்பெயரை மாத்திரஞ் சொல்லு, கண்ணே என்று சொல்வதை விட்டுவிடு; சொல்லவேண்டியதைச் சொல்லித் தொலை; நீ ஏதோ பைத்தியங்கொண்டு நின்று ஆடுகின்றாய்.... என்று சொல்வதற்கிடையில் அவன், "எனக்குப் பைத்தியமென்று நீ எண்ணினாலுஞ் சரி, வேறு எப்படி நினைத்தாலுஞ் சரி, என்னை இன்னானென்று அறியாமையினாலே தான் இப்படி ஏசிப்பேசி நிந்திக்கின்றாய்; அறிந்தால் ஒருபோதும் இப்படிச் செய்யமாட்டாய்; நான்தான் விஜயரத்தினம்; முன்பு உன்னை எனக்குக் கல்யாணம் பேசியபோது உன் பெற்றாருக்கு இஷ்டமில்லாமையினால் குழம்பிப் போய்விட்டது ....." என்று பழங்கதை படிக்கத் தொடங்கினான்.

அன்னம்: கல்யாணங் குழம்பியதற்கு இப்போது என்ன செய்யச் சொல்லிக் கேட்கிறாய்; நான் ஏதோ புண்ணியஞ் செய்திருந்தபடியாலே தான் கல்யாணம் அந்த நேரத்திற் குழம்பியது; என் பெற்றார் மாத்திரமல்ல, நானும் உன் கல்யாணத்திற்கு அப்பொழுது சம்மதமில்லாமல் இருந்தேன்; அது என் நல்லகாலந்தான் என்று இப்பொழுது தெரியவருகிறது. ஏ, வெட்கங்கெட்ட மனுஷனே, கைகடந்து போனதைப்பற்றி இப்பொழுது பேசியாவதென்ன; மழை விட்டு விட்டது, சாரதியும் இந்நேரம் வந்திருப்பான்; நான் போகவேண்டிய இடத்திற்குப் போகிறேன்; நீயும் உன் கருமத்தைப் போய்ப் பார்.

விஜய: கை கடந்துபோன பொருள் மீண்டு இப்பொழுது வந்து என்கையில் அகப்பட்டிருக்கிறது. அல்லாமலும் உன்னுடன் பேசுவதைவிட வேறு கருமம் இந்த நேரத்தில் எனக்கில்லை. நீ என்னைப் பைத்தியகாரனென்றாலும் வெட்கங் கெட்டவனென்றாலும் காரியமில்லை; நீ பேச வேண்டாம் என்னை ஏசினாலும் போதும்;....

அன்னம்: பேசுவதும் ஏசுவதும் உனக்குச் சரிதான்; உனக்குத்தான் மரியாதையென்பது அந்த நாள் தொடக்கமில்லையே; அது கிடக்க உன்னிடத்தில் இப்பொழுது அகப்பட்ட பொருளென்ன; நெருப்புத் தணலை முந்தானையில் முடித்து வைத்துக்கொண்டு அகப்பட்டதென்று நினைத்தால் அது சாத்தியப்படுமா; வீண் கதை பேசாதே; உன் பிதா ஒருவனானால் நீ என்னை வெளியே போகவிடு....

விஜய: நீ இசைந்தால் அல்லாமல் வெளியே போகவிடுவேனென்ற எண்ணத்தை மறந்துவிடு; வெளியிற் காறுமில்லை, கார்க்காரனுமில்லை; கறுப்பாயியுமில்லை; எவருமில்லை; நீ உன் பெண்புத்தியினாலே என்னை ஏதோ லேசாக நினைத்துக்கொண்டு வெறுங்கதை பேசுகிறாய்.

அன்னம்: (பதைபதைத்து ஏங்கி) அடா, சண்டாளா! அப்படியா செய்திருக்கின்றாய்; (சிறிது நேரம் பிரமித்து நின்று பின் தன் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு) ஏ, துரோகி, இராவணனால் சீதை விஷயத்திற் செய்ய முடியாத காரியத்தை, கேவலம் நீ என் விஷயத்திற் செய்ய முடியுமா? நீ பெண் சகோதரத்துடன் கூடிப் பிறக்கவில்லையா? .....

விஜய: ஆமாம், அந்தச் சீதை நீதானாக்கும்; பயமாயிருக்கிறது, என்னைச் சபித்துவிடாதே, நான் எரிந்து போவேனென்று; வீணாய்த்துள்ளாதே; நான் ஆநந்தனைப்போற் பேயனல்ல; அதிகம் பேசுவதை நிறுத்து; எனக்கு இணங்காவிட்டால் நீ, உயிருடன் இருக்கமாட்டாய் என்பதை நிச்சயமாய் நம்பு; நான் காலாலிட்டதைத் தலையாற் செய்யத்தக்க சிங்களவர் நாலுபேர் விட்டின் பின்புறத்தில் நிற்கின்றார்கள்.

அன்னம்: (பெரிதுங் கலங்கியவளாய்) அந்தச் சண்டாளி! துரோகி, உண்ட வீட்டிற்கு இரண்டகஞ்செய்தவள், நீலி வடக்கத்தையாள், அந்தக் கொடிய கறுப்பாயிதான் எனக்குச் சதிசெய்துவிட்டாள்; இந்த நேரத்தில் ஆர் இங்கே இல்லாவிட்டாலும் ஆண்டவனும் இல்லாமற் போவானா! (அவனைப்பார்த்து மிக்க ஆவேசத்தோடு பெருஞ் சத்தமாய்) எடா, போக்கிலி, மானத்தை விட்டுச் சாகப்பயந்தவளல்லவா, உன் வெள்வெருட்டுக்குப் பயப்படுவாள். என் உயிர் இந்த உடம்போடு இருக்கும்வரையில் நீ நினைத்த காரியம் நடக்கப் போவதில்லை யென்றெண்ணிக் கொள்ளடா, எச்சிக் கல்லைக்கு இச்சைப்பட்ட நாயே. என்னை ஆரென்றடா நினைத்தாய்.....

விஜய: என்னடி, மெத்த வாய்மதமாய்ப் பேசுகிறாய்; உன்னைப் பிடித்தால் நீ என்னை என்னசெய்வாய் (என்று சொல்லி) அவன் அறையுள் ஓடிப்போய் அன்னலட்சுமியின் முன்தானையை எட்டிப்பிடிக்க முயல, வெளியே போகச் சமையம் பார்த்துக்கொண்டு நின்ற அன்னம் அவன் காத்திராப்பிரகாரம் விலகி வந்து அறையின் வாசலால் வெளியே ஓடினாள். துரோபதையாகிய விரதசாரணியைத் தொடர்ந்த கீசகன்போல விஜயரத்தினமும் அன்னலட்சுமியைத் துரந்து ஓடினான்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1932 நவம்பர் 10

ஆநந்தன் - அன்னம் தொடர் (முற்றொடர் - 12)

பொழுதுபட 6 மணிவரையில் ராமன் வீட்டிற்கு மீண்டுவர, பொடிகாமி அவனைப் பார்த்து "ராமன், அம்மாவை நீ வழியிற் சந்திக்கவில்லையோ" என்று ஆவலுடன் கேட்க "நான் சந்திக்கவில்லை; ஏன் அம்மா எங்கே; ஐயா இன்னமும் ஆபீசால் வரவில்லையோ, இங்கு ஒருவரையுங்காணேனே, கறுப்பாயி எங்கே, இன்றைக்கு என்ன விசேஷம்" என்று ராமனும் பரபரப்புடன் கேட்டான். அன்னலட்சுமியும் கறுப் பாயியும் மோட்டரதத்திற் புறப்பட்டுக் கல்யாண வீட்டிற்குப் போனது இறுதியாக நடந்த சமாசாரம் முழுவதையும் பொடிகாமி ராமனுக்குச் சொன்னாள். கேட்டமாத்திரத்தே ராமன் ஏங்கினான்; அவனுடைய முகம் வெளிறியது; அவன் பரபரப்புடன் காணப்பட்டான். "பொடிகாமி, அம்மா வும் கறுப்பாயியுமல்லாமல் வேறு ஒருவரும் கூடிக்கொண்டு போகவில்லையா? வழக்கமான கார்க்காரன் வரவில்லையா? பொடிகாமி, அந்தக் கார்க்காரனுடைய பேர் என்ன? பொடிகாமி, "பெறிறா" என்றாள். "ஐயோ, அவன் மிச்சங் கெட்டபயல்; ஆர், கறுப்பாயியா கார் ஒழுங்கு பண்ணிக்கொண்டு வந்தவள்" என்று ராமன் கேட்க ஓம் என்று பொடிகாமி மறுமொழி சொல்லிவிட்டு, "ராமன், பயப்படுகிறாய்; 10 நிமிஷத்தில் கார் அங்கே போய்ச்சேர்ந்துவிடும்; அல்லாமலும் கறுப்பபாயி கூடிக்கொண்டு போகிறாள், என்ன பயம்" என்று கேட்டாள். "பொடிகாமி, நீ சாவதானமாக வீட்டில் இருந்துகொள்; இப்பொழுது ஒன்றுஞ்சொல்ல நேரமில்லை" என்று சொல்லிவிட்டு வெளியேபோய் ஒரு கடையில், துவிச்சக்கிரமொன்று வாடகைக்கு எடுத்துக்கொண்டு அந்தக்கல்யாணம் நடக்கும் ஊருக்குச் செல்லும் தெருவால் அவன்சென்றான். மழை தூறிக் கொண்டிருந்தது.

* * *

"இன்னமுங்காணோமே, வருவதாயிருந்தால் இதுவரையில் வந்துவிடுவார்களே, ஒரு போது மழையென்ற நியாயத்தால் புறப்பட்டவர்கள் வராமல் நின்றுவிட்டார்களோ, இல்லையேல் கார் அகப்படவில்லையோ, ஒன்றுந்தெரியவில்லையே" என்று இப்படித் தன்மனைவியை எதிர் பார்த்த வண்ணமே ஆநந்தன் கல்யாணவீட்டில் நின்றான். அங்கு வருகிற கார்களிலெல்லாம் தன் மனைவி வருகின்றாளோ என்று ஒவ்வொன்றாகப்பார்த்தான்; வரவில்லை. கலியாணச் சடங்குகளும் முக்காற்பாகம் நிறைவேறிவிட்டன. தற்செயலாய் வராவிட்டால் அப்படி வராமையை ராமன் துவிச்சக்கிரத்திலாயினும் வந்து தனக்குத் தெரிவிப்பானென்று ஆநந்தன் காத்திருந்தான்; அவனும் வரவில்லை; இவைகளையெல்லாம் உற்றுயோசிக்கவே, ஆநந்த னுடைய உள்ளத்திற் பெரும் பயம் உண்டானது; அங்கே புறப்பட்டுவந்த மார்க்கத்தில் ஏதும் அபாயம் நேர்ந்திருத்தல் கூடுமோ என்று அவன் யோசித்தான்; கல்யாணவீட்டிற் சொல்லவேண்டியவர்களுக்குச் சொல்லிவிட்டு அவன் முந்தியே புறப்பட்டான்; ஆனால் கார் வசதியாகவில்லை. அங்கு நின்ற ஒரு கார்க்காரனை, "என்னைக் கொண்டுபோய் உடனே வீட்டில் விட்டால் உனக்கு மேலதிகமான கூலி தருவேன்" என்றான். கார்க்காரன் உடன்பட்டு அவனை ஏற்றிக்கொண்டு புறப்பட்டான். போகும்போது மணித்தியாலம் 15 மைல் விகிதம் போகவேண்டுமென்றும் அப்படி மெல்லப்போனால் தனது மனையாள் வரும் காரைச் சந்திக்கலாமென்றும் கார்க்காரனுக்குத் தெரிவித்தான்; கார் அப்படியே மெல்லச்சென்றது. செல்லும்போது ராமன் ஒரு துவிச்சக்கிரத்தில், மழையில் நனைந்துகொண்டு வருவதைக் கண்டான்; கார் நிறுத்தப்பட்டது; ராமனும் விலகிச் சென்றவன் கார் தங்கியமையைக்கண்ட மாத்திரத்தே மீண்டு கார் அண்டைவந்து காரை உற்றுப்பார்த்துவிட்டு "அம்மா, எங்கே" என்று ஆநந்தனை ஆவலுடன் கேட்டான். "ஏன், அம்மா வீட்டிலில்லையோ? எப்பொழுது புறப்பட்டது" என்று ஆநந்தன் மிக்க பதறுதலோடு கேட்டான். "ஐயா, புறப்படும்போது நான் வீட்டிலில்லை; கறுப்பாயியுடன் 3 1/2 மணிவரையில் அம்மா புறப்பட்டுவிட்டாளென்று பொடிகாமி சொன்னாள்; காரும் வழக்கமான காரல்லவாம்; பெறிறா என்றொருவனுடைய காராம்; கறுப்பாயிதானாம் அதை ஒழுங்குபண்ணியது" என்று மிக்க பதை பதைப்போடு ராமன் சொன்னான்.

* * *

ஆனந்தனுக்குச் செய்வதென்னவென்பது தெரியவில்லை; "ராமன் சைக்கிளுடன் நீ வீட்டுக்குத் திரும்பு, நானும் வருகிறேன்; அங்கே போய் யோசிப்போம்; இந்தக்கார் அவசியம் மீண்டுபோகவேண்டியது" என்று சொல்லவே ராமனும் மீண்டான்; ஆநந்தனும் வீட்டிற்கு வந்த வுடனே காரை அனுப்பிவிட்டுப் பொடிகாமியைக் கூப்பிட்டு அவளிடம் விசாரிக்க வேண்டியவை களையெல்லாம் விசாரித்தான்; அதன்பின் ராமனோடு பெறீறா கார்விடுகிற கொட்டிலுக்குப் போனான்; அங்கே காரையுங் காணவில்லை. பெறீறாவுமில்லை; "ராமன், இனிச்செய்வதென்ன; செய்தியை முதற் பொலிஸ்தானத்திற்கு தெரிவித்துவிட்டுப் பின்பு அம்மாவைத் தேடுவதுதான் புத்தி" என்று ஆநந்தன் சொல்லுதலும் "ஐயா கொஞ்சம் யோசித்துச் செய்வோம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ்தானத்தில் அறியவந்தாற் சங்கையீனம்; இயன்றவரையில் இரகசியமாகத்தேடுவோம், ஆற்றா விட்டாற் பொலிஸ்தானத்திற்குத் தெரிவிப்போம்; ஒருபோது நீங்கள் ஒருவழியால் வர, அம்மா வேறுவழியாற் கல்யாணவீட்டிற்குப் போயிருத்த லுங் கூடும். ஆனதால் இன்னொரு முறை அங்கே போய்ப்பார்ப்போம்" எனலும் "ஓம், ராமன் அது நல்ல யோசனைதான்; நீ இப்பொழுதே "சைக்கிலிற் புறப்பட்டு அங்கேபோய் அறிந்துவா; போகும்போதும் வரும்போதும் மார்க்கத்திலும் நல்லாய் அவதானித்துக் கொண்டு போ! நீ போய்வருமட்டும் நான் எங்கும் போகாமல் உன்னையே வழிபார்த்தபடி நிற்பேன்" என்று சொல்ல, ராமன் "ஆம் ஐயா, அப்படியேசெய் கிறேன்; நான் இதோ மீண்டு வந்துவிடுவேன்" என்று சொல்லிவிட்டு மிக்க வேகமாகத் துவிச் சக்கரத்திற் போனான்.

* * *

உலகம் பலவிதம்: *1932* நவம்பர் *17*

ஆநந்தன் - அன்னம் தொடர்
(முற்றொடர் - 13)

இராமன் துவிச்சக்கிரத்திலேறிக்கொண்டு போகும் மார்க்கத்தில், குறித்த மோட்ட ரதம் வருமோ என்று அவதானமாகப் பார்த்துக்கொண்டு போனான். அந்தக் கல்யாணவீட்டுக் கொண்டாட்டம் முடிந்து வேறு இரண்டுமூன்று ரதங்கள் மீண்டுவருவதைக்கண்டான். ஆனால் அன்னலட்சுமி கறுப்பாயி என்னுமிவர்கள் வரக்காண வில்லை. கல்யாணவீட்டிற்போய்ச் சேர்ந்த ராமன், போகாமல் அங்கு நிற்கும் மோட்டரதங்களைப் பார்த்தான்; அவைகளுள் குறித்த பெறிறாவின் மோட்டரதத்தைக் காணவில்லை. அப்படியொரு ரதம் வந்ததுண்டோ என்று ராமன் சாரதிகளைக் கேட்க அப்படியொன்றும் வரவில்லையென்று அவர்கள் சொன்னார்கள். பெறிறா என்றொருவன் குறித்த இடத்திலே கார் வைத்திருக்கவில்லையே என்று அங்குநின்ற சாரதிகளுட்சிலர் ஒருவரோடொருவர் பேசினார்கள்; கலியாணவீட்டிற்சென்று பார்த்து ராமன் அங்கே அன்னலட்சுமியில்லையென்பதைச் சந்தேகமற அறிந்துகொண்டு மிக்க கவலையோடு வீட்டிற்குமீண்டான். இராமனுடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டு நின்ற ஆநந்தன் இராமன் அங்கே வந்த நிலைமையைக் கண்ட மாத்திரத்தே அன்னம் அகப்படவில்லையென்பதை உணர்ந்து கொண்டான். "ஐயா, அம்மா இன்னமும் வரவில்லையோ; என்று ராமன் கேட்க, "இல்லை, ராமன், அம்மா அங்கும் இல்லையோ; நான் என்னசெய்யப்போகிறேன்; என் சரீரம் பதறுகிறதே; மனம் ஏங்குகிறதே, எனக்கொன்றுந் தெரியவில்லை" என்று சொல்லி அயலிலிருந்த சார்மனைக் கதிரையிற் சாய்ந்தான்; "ஐயா மனத்தைரியத்தை விடாதீர்கள்; ஒருபிழையும் வரமாட்டாது; இதுவுங்கடவுள் சோதனை....." என்று தன் எஜமானனுக்கு ராமன் ஆறுதல் சொன்னான் பதில் ஒன்றுமில்லை; சமீபத்திற்போய் ஆநந்தனைத்தொட்டுப் பார்த்தான்; ஆநந்தனுக்கு அறிவில்லை. "பொடிகாமி, கொஞ்சத் தண்ணீர்கொண்டோடிவா, ஐயாவுக்குக் கிறுதி வந்துவிட்டது" என்று ராமன் சொல்வதற் கிடையில் பொடிகாமி தண்ணீர் கொண்டுவந்து கொடுக்க, ராமன் ஆநந்தன் முகத்தில் தண்ணீர் தெளிக்க, அவன் ஒருவாறு மயக்கந்தெளிந்தான்; பொடிகாமி உடனே ஒருபாத்திரத்திற் கோப்பி கொண்டுவந்து கொடுக்க ஆநந்தன் வாங்கிக் குடித்துவிட்டுப் பழையபடி சார்மணையிற் சார்ந்து கொண்டான்; அவனுடைய கண்களினின்றும் நீர் தாரைதாரையாகப் பெருகியது. "ஐயோ, பெருஞ் சங்கடம் ஏற்பட்டுவிட்டதே; அம்மாவைக்காண வில்லை, ஐயா மயக்கமடைந்து கிடக்கிறார்; பொடிகாமி, இதற்கு நான் என்னசெய்வேன்" என்று ராமன் நின்று மிகவுங் கலங்கினான்.

* * *

அறையினின்றும் தப்பி வெளியே ஓடிவந்த அன்னலட்சுமி, மானத்தைக்காக்க ஓடியவளாதலால், மிகவும் வேகமாக ஓடிவந்து தெருவிலேறித் திரும்பிப்பார்க்கும்போது, பின்னே தூர்த்தனாகிய விஜயரத்தினந் தன்னைத்துரந்து வரக்கண்டாள்; தெருவில் வந்து ஏறியவுடனே அவளுக்குச்சிறிது மனத்திடம் ஏற்பட்டுவிட்டது, "ஐயோ, கதிர்காமத்தானே, என்மானத்தை நீயே காக்கவேணும்"; என்று ஓலமிட்டாள்; ஒரு மோட்டரதம் பெரும் வெளிச்சத்தோடு அதிவேக மாக வரக்கண்டாள். நடுத்தெருவில் நின்று கொண்டு "ஐயோ, என்னைக்காப்பாற்றுங்கோ" என்று பெருஞ் சத்தமிட்டாள். மோட்டரதம் வருவதைக்கண்ட மாத்திரத்தே விஜயரத்தினம் பின்வாங்கிவிட்டான். வேகமாக வந்த ரதம் மிக்க சங்கடத்தோடு "பிறேக்" இட்டு மறிக்கப்பட்டது. ரதத்துளிருந்த ஒருபெரியமனுஷன், அதென்ன, அதென்ன, என்று துடி துடித்துக்கொண்டு வெளியே இறங்கினார்; அன்னத்தைக் கண்டார், "இங்கே வாரும், நீரும் இறங்கும், யாழ்ப்பாணத்துப் பிள்ளைபோல இருக்கிறது; இதென்ன நூதனம்" என்று தன்மனைவிக்குச்சொல்ல, "என்ன சொல்லுகிறீர்கள்" என்று சொல்லிக்கொண்டு ஒரு பருத்த தேகமுடைய மனுஷியும் வெளியே இறங்கி அன்னத்திற்குக் கிட்டப்போய் "மகளே பயப்படாதே, இப்படிவா" என்று அவளைத் தன் கையால் அணைத்தலும் அன்னம் பேசமுடியாதவளாய்த் தன்னை, ரதத்தில் ஏற்றும்படி சைகை காட்டிவிட்டு நின்றபடியே மனுஷியின் தோளிற் சாய்ந்து கொண்டாள். மனுஷி அன்னத்தை விழுந்துபோகாதபடி கெட்டியாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னோடு அணைத்துக்கொண்டு "பிள்ளை, நீயும் இறங்கி வா" என்றுசொல்ல, மனுஷியினுடைய மகளாயிருக்கவேண்டும், ஒரு இளம்பெண் உடனே இறங்கிவந்தாள்; இருவருமாக அன்னத்தைப் பிடித்து அணைத்து மெல்லக்கொண்டுபோய்க் காரில் ஏற்றினார்கள். அவளால் இருக்க முடியவில்லை. தாயும் மகளும் அன்னத்தை நடுவில் இருத்தி தாங்கள் இருபக்கத்திலுமிருந்து கெட்டியாய் அணைத்துக்கொண்டார்கள். அந்தப் பெரியமனுஷனும் சாரதியும் வேறு அங்கு யாரும் நிற்கிறார்களா வருகிறார்களாவென்று பார்த்தனர்; எவரையுங்காணவில்லை. "ஐயா, இந்த இடத்தில் அதிகம் தாமதிப்பது புத்தியல்ல; இது ஒரு அந்தரமான இடம்" என்று சாரதி அந்தப் பெரியமனுஷனுக்குச்சொல்ல, உடனே பெரிய மனுஷன் வந்து ரதத்தின் முன்புறத்துள்ள ஆசனத்தில் ஏறினார்; சாரதி ரதத்தை வேகமாகச் செலுத்திக்கொண்டுவந்து ஒரு கடைக்குச் சமீபமாக நிறுத்தினான். நேரம் இரவு 9 1/2 மணிவரையிலிருக்கும்.

* * *

தன் மனையாள்சொற்படி அந்தப்பெரிய மனுஷன் கடையில் ஒரு லெமெனட் போத்தல் வாங்கித்திறந்து கொடுக்க; மனையாள் அதனை வாங்கி அன்னத்தைப்பருகச் செய்தனள். பருகியவுடன் அன்னம் கண்களை விழித்துப் பெருமூச்சுடன் "ஆ, ஆ, சண்டாளன், துரோகி" என்று சொல்லிவிட்டுப் பேசாமற் பின்னரும் அயர்ந்தாள். பெரியவர் மனைவி "மகளே, பயப்படாதே; உன்னுடைய வீடு எங்கே என்றுமாத்திரஞ் சொல்லிவிட்டால், உன்னை நாங்கள் அங்கே கொண்டுபோய்ச் சேர்ப்போம். மற்றவைகளெல்லாம் பிறகு அறிந்துகொள்ளுவோம்" என்று ஆதரவுடன் கேட்க, அன்னம் தாங்கள் இருக்கும் வீதியின் பெயரையும் வீட்டு இலக்கத்தையும் மாத்திரம் சொல்லிவிட்டுப் பழையபடி அயர்ந்து விட்டாள்; மோட்டரதம் புறப்பட்டு, குறித்த இடத்திற்கு வேகமாகச் சென்றது. இந்தப்பெரிய மனுஷன், மனைவி, மகள், சாரதி இவர்கள் உண்மையை அறியாதவர்களாதலால் அன்னத்திற்கு வந்த ஆபத்து என்னவென்று பலவாறு கலந்து பேசினர்.

* * *

உலகம் பலவிதம்: 1932 டிசம்பர் 01

ஆநந்தன் - அன்னம் தொடர்
(முற்றொடர் - 14)

பொடிகாமியைச் சாவதானமாக வீட்டில் இருக்கச் சொல்லிவிட்டு, ஆநந்தனும் ராமனும் உடனே ஒரு மோட்டரதத்தில் ஏறிக்கொண்டு அன்னத்தைத் தேடப் புறப்பட்டார்கள்; ஆநந்தனுக்கு இவ்விஷயத்தைத் தன் சிநேகருக்குச் சொல்லி அவர்களுடைய உதவியையுங் கொண்டு அன்னத்தைத்தேடப் பிரியம். ஆனால் ராமன் "ஆற்றாவிட்டால் அப்படிச்செய்யலாம்; இப்பொழுது வேண்டாம்; அம்மா தற்செயலாய் இன்னுஞ் சிறிதுநேரத்தில் வந்துவிட்டால், பிறர் அறிவது சங்கையீனம்" என்ற சொல்லி ஆநந்தனைத் தடுத்துவிட்டான். அதனாற்றான் இருவரும் அன்னத்தை தேடப்புறப்பட்னர். இவர்கள் புறப்பட்டு ஒரு 1/2 மைல் தூரம் போவதற் கிடையில் தங்களுக்கெதிரே ஒரு மோட்டரதம் வேகமாக வருவதைக்கண்டு ஆநந்தன் தான் ஏறிச்சென்ற ரதத்தை நிற்கச்செய்தான்; இது நிற்கக்கண்ட மாத்திரத்தே எதிரே வந்த ரதமும் நின்றுவிட்டது. "ஹலோ, மிஸ்ரர், ஆநந்தம், என்ன விசேஷம்; எங்கே அவசரமாகப் போகிறீர்; நாங்கள் இப்பொழுதுதான் கல்யாணவீட்டில் நின்று மீண்டு வருகிறோம்; நீர் முந்தி வந்து விட்டீர்போல் இருக்கிறது; நாங்கள் கொஞ்சம் அவசரமாகப் போகவேணும்; எங்களைச்சேர்ந்த பிள்ளையொன்று கல்யாணவீட்டிற்கு வந்த இடத்தில் அதற்குச் சிறிது சுகமில்லை. அந்தப் பிள்ளையைக் கொண்டுபோய் வீட்டில் விட வேண்டும்" என்று சுவாமிநாதர் ரதத்தில் இருந்தபடி இடைவிடாமற் சொன்னார். குறித்த பெரியவருக்குப் பெயர் சுவாமிநாதர்; ஆநந்தன் கடமைபார்க்கும் உத்தியோகஸ்தானத்தில் இவர் மேல் உத்தியோகத்தராய் முன் இருந்து இப்பொழுது இளைப்பாறியிருக்கிறார்; ஆநந்தனுக்கு இவர் பழக்கமானவர். "..... பிள்ளையொன்று கல்யாணவீட்டிற்கு வந்தவிடத்தில் அதற்குச் சிறிது சுகமில்லை....." என்ற இந்த வார்த்தை யைக் கேட்டவுடனே ஆநந்தன் சரேலென ரதத் திலிருந்தும் குதித்து மற்ற ரதத்தண்டை வந்து "ஆர், ஐயா, சுகமில்லாதபிள்ளை....." என்று கேட்பதற்கிடையில், ரதத்தின் உள்ளே எரியும் வெளிச்சத்தைக்கொண்டு தன் மனைவியைக் கண்டான்; "ஐயோ, அன்னம், உனக்கு என்ன சுகவீனம்....." என்று பதைபதைப்போடு ரதத்தி னுள் தலையை நீட்டிக்கேட்டான். அன்னம் பதில் சொல்லவில்லை; அவளுடைய மயக்கம் நீங்கவில்லை.

* * *

"ஓ, ஓ, நீர் அறிந்த பிள்ளைபோல் இருக்கிறதே; இந்தப் பிள்ளையினுடைய வீடு எங்கே, சொல்லும்" என்று சுவாமிநாதர் கேட்க, ஆநந்தன் மிக்க கவலையோடும் வெட்கத்தோடும் "என்னுடைய சமுசாரந்தான்" என்று சொல்ல, சுவாமிநாதர் "ஐ, சே, அப்படியா செய்தி, சரி, இதில் ஏறிக்கொள்ளும்; அந்தக் காரையும் திருப்பச் சொல்லும்; விடுதி சமீபத்திற்றானே" என "ஆம், ஐயா, கிட்டத்தான்" என்று சொல்லிக்கொண்டு ஆநந்தன் இந்த ரதத்தில் ஏற ராமன் போய்த் தாங்கள் வந்த அந்த ரதத்தில் ஏறிக்கொண்டு அதனைத் திருப்பச்செய்தான். "தம்பி, எல்லாம் அறிந்த நீர் இந்தப் பிள்ளையைத் தனியே போகவிடலாமா, உமக்குப் படித்தும் புத்தியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லையா" என்று சுவாமிநாதர் மனைவி கேட்பதற் கிடையில், சுவாமிநாதர் "இப்பொழுது ஒரு கதையும் வேண்டாம்; பிள்ளையை வீட்டிற் கொண்டுபோய்ச் சேர்த்தபின் எல்லாம் பேசிக் கொள்ளுவோம்" என்று சொல்லித் தன் மனையாளைத் தடுத்தார். இரண்டு ரதங்களும் ஆநந்தன் விடுதியை அடைந்தன.

* * *

அங்குச் சென்றவுடனே அன்னத்தை மெல்ல இறக்கிக் கொண்டுபோய்ப் படுக்கையிற் கிடத்திற் சைத்தியோபசாரஞ் செய்ய அன்னம் மயக்கந்தெளிந்து கண்விழித்தனள்; அவள் அருந்துவதற்குப் பொடிகாமி "காப்பி" கொண்டு வந்து கொடுத்தாள். அன்னம் எழுந்திருந்து அதனை வாங்கிக் குடித்துவிட்டுப் பெருமூச்சு விட்டாள்; அவளுடைய கண்களினின்றும் நீர் பொலு, பொலென்று சிந்தியது; சுவாமிநாதர் மெல்ல வெளியே வந்து தலைவாசற்பக்கத்தில் இருந்தார். சுவாமிநாதர் மனைவியும் மகளும் அன்னத்தைத் தேற்றி நடந்த வரலாறு என்ன என்று ஆதரவாகக் கேட்டனர்; "கறுப்பாயி எங்கே" என்று இதற்கிடையில் ஆநந்தன் கேட்டான். "அந்த நீலி எங்கு தொலைந்தாளோ நான் அறியேன்; இந்த வினையெல்லாம் அவளாலேதான் விளைந்தது" என்று அன்னம் துயரத்தோடும் சினத்தோடும் சொல்லிவிட்டு, நடந்த வரலாறு முழுவதையும், ஆநந்தனுங் கேட்க, சுவாமிநாதர் மனைவிக்கும் மகளுக்கும் அழுதழுது சொன்னாள். ஆநந்தனிடத்திற் பயமும் ஆத்திரமும் ஏற்பட்டன. "விஜயரத்தினன் இப்படிப்பட்ட துட்டன் என்று இப்பொழுதுதானே எனக்குத் தெரிகிறது" என்று ஆநந்தன் சொல்லிவிட்டு, வெளியே இருந்த சுவாமிநாதரை "ஐயா, இந்தப் பரிதாபத்தைக் கேளுங்கள்" என்று உள்ளே கூட்டிக்கொண்டுவந்து இருத்தினான். சகல செய்தியையும் சொல்லக்கேட்ட சுவாமிநாதர் "மகளே, வருந்தாதே; கடவுள் உன் மானத்தைக் காப்பாற்றி வைத்த அந்தஒன்றும் போதும்; நீயே உத்தமி, இனிமேல் புத்தியாக நடந்துகொள்ள வேண்டும்" என்று சொல்லிவிட்டு, ஆநந்தனைப் பார்த்து "மிஸ்ரர், ஆநந்தம், நீர் என்ன உலகம் அறியாதவர்போல் இருக்கிறீர்; நம்முடைய சொந்த ஊரிலென்றாலும் காரியமில்லை; அந்நிய ஊரில் சிங்களநாட்டில் வந்திருந்துகொண்டு இப்படியெல்லாம் புத்தியீனமாய் நடக்கலாமா? "துணையோடல்லது தனிவழிஏகேல்" என்றவிதமாய் இந்தக் காலத்தில் ஆண்பிள்ளைகளாகிய நாங்களே தனியேபோகப் பயப்படுகிறோம்; நீர் எப்படி முன்பின் ஒன்றும் அறியாத இந்தப் பிள்ளையை ஆண்துணையின்றி அனுப்பத் துணிந்தீர்? இங்கே பாரும், என்னுடைய மகள் கல்யாண வீட்டிற்குப் போக வேணுமென்றாள்; அவர், மருமகனுக்கு நேரமில்லை. தாய் நான் இரண்டுபேருமல்லவா துணையாகப் போகப் புறப்பட்டிருக்கிறோம்; இப்படியல்லவா இருக்கவேண்டும்; நீங்கள் இரண்டுபேரும் இளம்பிள்ளைகள்; உலகம் தெரியாது; மனுஷர்களுடைய தன்மை தெரியாது; உங்களுக்குப் பாலும் வெள்ளை மோரும் வெள்ளை என்ற எண்ணமுண்டு. எவ்வளவு படித்தாலும் அனுபவம் வேண்டும்; அயிரோப்பிய பெண்கள் தனியே போகிறார்கள் வருகிறார்கள்தானே என்று நினைத்து வாலிபர்களான நீங்களும் பேய்த்தனமாய் இந்தப் பிள்ளைகளைத் தனியே போகவா விடுகிறீர்கள்; இந்தப்பிள்ளை தன் புத்தியினாலும் மனத்திடத்தினாலும் மானத்தைக் காத்துவிட்டாள்; தெய்வமும் பிள்ளைக்குச் சகாயமாய் நின்றது; இல்லாவிட்டால் எங்களிடம் இப்பிள்ளை அகப்பட்டிருக்கமாட்டாள். ஆனால் இந்தப் பிள்ளைக்கு ஒரு பிழை மானக்கேடு தற்செயலாய் நேர்ந்திருக்குமானால், பிறகு செய்வதென்ன, அதனால் வரக்கூடிய அவமானம் உம்மளவில் மாத்திரம் நின்றுவிடுமா; யாழ்ப்பாணத்தவர் எல்லார்க்கும் தீராவசையாய் முடியுமல்லவா? தம்பி, இப்படிச் சொல்லுகிறேன் என்று குறை நினைக்கவேண்டாம்; இவைகளையெல்லாம் உத்தேசித்து மெத்தப் புத்தியாய் நடக்கவேண்டும்; யாழ்ப்பாணத்தை விட்டுப் பிழைப்புக்காக நாங்கள் எங்கேபோனாலும் வந்தாலும் எங்கள் ஆசார ஒழுக்கங்கள் கொள்கைகள் பழக்க வழக்கங்களை விட்டு விடக் கூடாது....." என்று இதோபதேசஞ் செய்து முடித்தார்.

* * *

உலகம் பலவிதம்: *1932* டிசம்பர் *08*

ஆநந்தன் - அன்னம் தொடர் *(முற்றொடர் - 15)*

இப்படிச் சொல்லிவிட்டு சுவாமிநாதர் வெளியே வந்து தலைவாசலில் இருக்க சுவாமிநாதர் மனைவி, அன்னலட்சுமியைப் பார்த்து, "பிள்ளை, ஆணாய்ப்பிறந்தவர்கள் என்ன சொன்னாலும் என்ன செய்தாலும் பெண்ணாய்ப் பிறந்தவர்களாகிய நாங்களல்லவோ எங்கள் காரியங்களிற் புத்தியாக நடந்துகொள்ளவேண்டும். மழைக்கால் இருட்டானாலும் மந்தி கொம்பிழக்கப் பாயாது....." என்று சொல்லுவதற்கிடையில், "ஆச்சி, அந்தப் பழமொழியை இன்னமொருக்காற் சொல்லுங்கள், அது எனக்குச் சரியாய் விளங்கவில்லை" என்று அன்னங் கேட்க, "பிள்ளை, மழைக்கால் இருட்டு ஆனாலும் அதாவது மழையும் காற்றும் இருட்டும் ஒருமிக்கத் தான் வந்தாலும், மந்தி கொம்பிழக்கப் பாய்வதில்லை, குரங்கு ஒரு கொப்பிலிருந்து இன்னொரு கொப்பிற்குப் பாயும்போது இலக்குத் தவறிக் கீழே விழமாட்டாது; அதுபோல, மகளே, நாங்கள் இப்படியான கருமங்களில் அவதானமாயிருத்தல் வேண்டும்; அரைக்காசுக்குப் போன மானம் பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரங்காசு செலவிட்டாலும் மீண்டுவரப்போவதில்லை யல்லவா; எங்கள் மானத்தையும் ஒழுக்கத்தையும் குலமகத்துவத் தையும் பெண்களாகிய நாங்களல்லவோ காத்து நடக்கவேண்டும்; ஆணாகப் பிறந்தவன் ஒரு பிழையைச் செய்தாலும் செய்த இடத்தில் அவனுக்கு ஒரு அவமானம் வந்தாலும் அது ஒரு அளவிற்கு அவனளவில் நின்றுவிடுமென்று சொல்லலாம். ஆனால் நாங்கள் ஒரு பிழையைச் செய்தால், ஒரு அவமரியாதையைத் தேடி விட்டால், அந்தவசை பிறந்தகுலம், புகுந்த குலம் இரண்டிற்கும் ஏழு சந்ததிக்கும் வசையாக அல்லவா முடியும்; ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது என்ற பாங்காய் நீங்கள் பள்ளிக் கூடத்திற் படித்த படிப்பு இல்லறத்தைக் கொண்டுநடத்தப்போதாது, எங்களைப்போன்ற வயசுக்கு மூத்தவர்கள், அநுபவப்பட்டவர்கள் சொல்லுஞ் சொல்லைக் கேட்டு நடக்கவேணும்; பெண்ணாய்ப் பிறந்த நாமே புருஷன் பிள்ளைகளுடைய மரியாதையையும் பாதுகாத்து, அவர்களுடைய முகத்திற் கரியைப் பூசிவிடாமற் புத்தியாகக் காலங்கழிக்கவேண்டும்; கட்டிய கணவன்தானும் ஒரு பிழையைச் செய்தால், நாம் சமையம்பார்த்து அவருக்கு இதமாகப் புத்திசொல்லித் திருத்தி நடக்கச் செய்ய வேண்டும்; அதனாலே பாதகமில்லை, சொல்லுகிற விதத்திலேதான் எல்லாந் தங்கியிருக்கன்றன; "..... வேசிதுயிலும் விறன்மந்திரி மதியும்-பேசில் இவையுடையாள் பெண்" என்று நீ படிக்கவில்லையா; நமக்கு இந்த உலகத்திலே உள்ள கடமைகள் கொஞ்சந்தானே, முதல் எங்கள் கற்பைக் காத்துக்கொள்ளவேண்டியது, இரண்டாவதாக எங்கள் புருஷன் பிள்ளைகளைப் பேணி அவர்கள் சுகத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது; ஆனால் ஆண்பிள்ளைகள் விஷயம் அப்படியல்ல; அவர்கள் சீவியத்திற்கு உழைக்கத்தொடங்கிப் பலமுயற்சிகளைச் செய்யவேண்டியவர்கள், பலவகையான மனுஷரோடு ஊடாடவேண்டியவர்கள், பல தேசங்களிற் சென்றுஞ் சஞ்சரிக்க வேண்டியவர்கள்; பலவித மான கஷ்டம்படவேண்டியவர்கள்; அவர்களுடைய மனநிலை எந்தநேரமும் ஒரேவிதமாக இருக்கமாட்டாது; ஒருநேரம் மன ஆத்திரத்தோடு வீட்டிற்கு வருவார்கள்; இன்னொரு சமையம் மன ஆறுதலோடு வீட்டிற்கு வருவார்கள்; கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி என்ற விதமாக அந்தந்த நேரத்தில் அவர்களுடைய மனக்குறிப்பையும் நிலைமையையும் அறிந்து பெண்ணாய்ப்பிறந்த நாங்கள் அதற்குத் தக்க விதமாய் இதமாய் நடந்துகொள்ளவேண்டும்....." என்று இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்போது, தலைவாசற் புறத்திற் சுவாமிநாதரோடு பேசிக் கொண்டிருந்த ஆநந்தன் எழுந்துவந்து "அம்மா, உங்கள் பிள்ளை வேறல்ல, அன்னம் வேறல்ல, இன்னும் வேண்டிய புத்திகளை அன்னத்திற்குச் சொல்லிவிடுங்கள்" என்று சுவாமிநாதரின் மனைவியிடஞ் சொல்ல "ஓம், தம்பி நேரஞ் சென்றாலுங் காரியமில்லை, நான் பிள்ளைக்கு ஆகவேண்டிய புத்தி சொல்லுகிறேன். பிள்ளை கெட்டிக்காரி, தம்பி நீரும் பிள்ளையை அன்பாய் நடத்தவேண்டும்; இவள் நல்லவள், வஞ்சகமில்லாதவள்" என்று சுவாமிநாதரின் மனைவி சொல்ல, ஆநந்தன் "ஓம் என்று சொல்லிவிட்டு மகிழ்ச்சியோடு தலைவாசலில் வந்து சுவாமிநாதருடன் பேசிக்கொண்டிருந்தான்.

* * *

"இன்னமுஞ் சொல்லக்கேள் மகளே எங்களுக்கு ஒழுக்கமே மேலானது; ஆதலால் நாங்கள் வெள்ளைக்காறப் பெண்கள் சிங்களப்பெண்கள் முதலாம் அந்தச் சாதிப் பெண்களைப் பின்பற்றி நடக்கமுடியாது; அவர்கள் தம்மிஷ்டமாகப் போதலும் வருதலும் பேசுதலும் ஊடாடுதலும் அளவளாவிக் கலத்தலும் எல்லாம் இயலும்; எங்கள் விஷயத்தில் அப்படியல்ல, நாம் பெலத்துப்பேசப்படாது; பெண்ணொருத்தி பேசில் பெரும் பூமிதான் அதிரும்" என்ற பாடல் படிப்பிற் சொல்லுவார்கள்; இனி பெண்ணாய்ப் பிறந்தவள் பெருஞ் சிரிப்புச்சிரிப்பதும் பல்லைக் காட்டுவதும் பிழையாகும்; "சிரித்தாயோ சீரைக் கெடுத்தாயோ, என்று சொல்லுவார்கள்; மகளே, பாஞ்சாலி சிரித்ததினால் அல்லவா பாரதப்போர் மூண்டது; அல்லாமலும் ஒருவரைக்கண்டு நாம் வஞ் சகமில்லாமல் நல்ல எண்ணத்தோடு முகமகிழ்ச்சிகாட்ட, கொஞ்சம் சிரிக்க, ஆண்களாயுள்ளார் சிலர் அதனை விபரீதமாக எண்ணிவிடுகிறார்கள். இந்த நியாயங்களைக் கொண்டுதான் நான் பெண்ணாய்ப் பிறந்தவள் பெருஞ் சிரிப்புச் சிரிக்கவொண்ணாதென்றும் காரணமில்லாமற் பல்லைக்காட்ட வொண்ணாதென்றுஞ் சொல்லு கிறேன்....." என இப்படிச் சுவாமிநாதர் மனைவி சொல்லிக்கொண்டிருக்கும்போது, "ஆச்சி, பாஞ் சாலியின் துகில் உரிந்தமையினாலல்லவோ பாரதப்போர் மூண்டதென்று நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். அவள் சிரித்ததாற் போர் மூண்டசெய்தி நான் படிக்கவில்லையே, அதைச் சொல்லுங்கள்" என்று அன்னங் கேட்கச் சுவாமிநாதர் மனைவி சொல்லுகிறாள்.

* * *

உலகம் பலவிதம்: 1932 டிசம்பர் 15

ஆநந்தன் - அன்னம் தொடர் (முற்றொடர் - 16)

"மகளே, தருமபுத்திரர் இராசசூயயாகஞ் செய்த காலத்தில் வணங்காமுடியோன் என்று சொல்லப்படும் துரியோதனனையும் அங்கே அழைத்திருந்தார்; அங்குப்போன துரியோதனன் பளிங்கினால் ஆக்கப்பட்ட தடாகத்தில் இறங்கும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீர் என்று நினைத்துத் தன் உடையை ஒதுக்க, அச்செயலை மேன்மாடத்திலிருந்து கண்ட பாஞ்சாலி வீமனுக்குக்காட்டி, "தகப்பன் மாத்திரமல்லாமல் மகனும் குருடன் போலும்" என்று பரிகாசஞ்செய்து பெருஞ் சிரிப்புச்சிரித்தாள்; வீமனும் அவன் செயலைப்பார்த்துச் சிரித்தான்; இவர்கள் சிரித்தமையைத் துரியோதனன் கண்டு மனத்திற் பெரும் ஆத்திரங்கொண்டான்; ஆனால் அந்தச்சமையத்தில் அவன் ஒன்றும் பேசவில்லை. ராசசூயமண்டபத்தை விட்டு நீங்கித் துரியோதனன் தன் மாளிகையை அடைந்து, அங்கு அப்பொழுதிருந்த தன் மாமனாகிய சகுனியைப் பார்த்து,

"நீலிபழிக்க நிலத்தில் விழுந்தனே சகுனிமாமா!
(அதை) நினைக்க நினைக்க நெருப்பாய் எரிகுதே
சகுனிமாமா!"

என்று சொல்லிப் பெரிதும் ஆத்திரப் பட்டான். பின்பு சகுனி அவனைத்தேற்றி "மருமகனே, நான் இருக்கும்போது உனக்கென்ன கவலை, அந்தப்பாஞ் சாலியையும் பாண்டவரையும் எல்லாருஞ் சிரிக்கும்படியாக நான் அவர்களோடு சூதுவிளையாடி அவர்களை வஞ்சித்து உனக்குநேர்ந்த வசையையும் நீக்கிவிடுகிறேன்" என்று சொன்னான். அதனாலேதான் தருமர் சகுனியோடு சூதாடப்போனதும் வனவாசஞ் செய்ததும் பாரதப்போர் மூண்டதுமாகும். அல்லாமலும், மகளே, எந்தக்காலத்திலும் எந்த யுகத்திலும் பெண்ணாய்ப்பிறந்தவள் காரணமாகவே பெரிய சண்டை ஏற்பட்டதென்று பாடல்படிப்பிற் சொல்லியிருக்கிறது. நீயும் படித்தபிள்ளையல்லவா, ஆனால் இந்தநாளிற் படிப்பிற்கும் அந்த நாளில் நாங்கள் படித்த படிப்பிற்கும் வித்தியாசம் மெத்தவுண்டு, இருந் தாலுஞ் சொல்லுகிறேன்கேள்;

"என்னேகிரேதத்துஇரேணுகையே கூற்றுவனாம்
தன்னேர்திரேதத்தில்சானகியாம் - பின்யுகத்தில்
கூடுந்திரௌபதியேகூற்றாம், கலியுகத்தில்
வீடுதொறுங் கூற்றுவனாமே"

என்று நீதிவெண்பாவில் அந்தக்காலத்தில் நாங்கள் படித்ததுண்டு. அதாவது முதல் யுகமாகிய கிரேதாயுகத்தில், சமதக்கினி முனிவர் பத்தினியாகிய ரேணுகை ஆற்றங்கரையிற் சலந்திரட்டச் சென்றவிடத்து ஆகாயமார்க்கமாகச் சென்ற கார்த்தவீரியனுடைய நிழலைக்கண்டு இச்சைப்பட்டதினாற்றான், அவள் மகனாகிய பரசுராமர் அவளை, தன்பிதாவின் சொற்படி வெட்டவேண்டி ஏற்பட்டதும், பரசுராமன் அந்தச் சூரியகுலத்தரசர்களைத் தலைமுறை தலைமுறையாகக் கொல்லவேண்டி நேர்ந்ததுமாகும். அடுத்தயுகத்திலே சீதையினால் இராவண சங்காரமும், அடுத்த யுகத்திற் பாஞ்சாலியாற் பாரதயுத்தமும் நடந்ததும் தெரியுந்தானே. ஆனதால் மகளே, பெண்ணாகப்பிறந்த நாங்கள் ஒவ்வொருகாரியத்திலும் மிகவும் சாவதானமாக நடந்து கொள்ளவேண்டும். ஆண்களாகவுள்ளவர் நூறுபேர் ஒருவீட்டில் ஒற்றுமையாக இருந்து காலங்கழிப்பார்கள். ஆனால் பெண்ணாய்ப்பிறந்த நாங்கள் இரண்டுபேர்தானும் ஒற்றுமையாக இருப்பது அருமை. "பெண்டுகள் இருந்திடிற் பெரிய சண்டையே" என்று உலகத்திலே பழமொழி சொல்லுவார்கள்" என்று கூறிச் சுவாமிநாதர் மனைவி பின்னருஞ் சொல்லுகிறாள்.

"மகளே, நீயோ சிறுபிள்ளை, உனக்கு உலக அனுபவம் தெரியாது; பெண்ணென்று பிறந்தவளுக்கு நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, அடக்கம் எல்லாம் இருக்க வேண்டும். இந்தக் குணங்களும் செய்கைகளும் இல்லாவிட்டால் அவளை இராட்சதத்தி யென்றே சொல்லவேண்டிவரும். இந்தக் காலத்திலே பெண்பிள்ளைகள், அவர்களுள்ளும் கன்னியர்களாயுள்ளவர்கள், தாங்கள் விடுதிப் பாடசாலைகளிற் போய், தமிழோ இங்கிலீசோ ஏதோ படித்துக்கொண்டு, அந்தப் படிப்பினால் தங்களுக்கு எல்லாவிதமான சுதந்தரமும் உண்டென்றும், தங்களை விட்ட விவேகிகள் எவருமில்லையென்றும் சொல்லிக் கொண்டு, பெற்றோருக்கும் பெரியோருக்கும் மௌட்டிகம் கற்பித்துவிட்டு, கூச்சமின்றியும் பெரியார் சிறியார் ஆண் பெண் என்ற பேதமின்றியும் எவருடனும் பேசவும் ஊடாடவும் தலைப்பட்டுக்கொண்டார்கள்; இவர்களைப் பார்த்துப் பள்ளிக்கூடப் படிப்பில்லாத பெண்களும் இப்படியே நடந்துகொள்ளத் தொடங்கிக் கொண்டார்கள். இப்படியான செய்கைகளினால் தமிழ்ப்பெண்களுக்கு, விசேஷமாக யாழ்பாணத்துப் பெண்களுக்கு முன்னிருந்த மதிப்பும் மரியாதையும் குறையலாயின. பெரும் பிழைகளும் சில சில சமையங்களில் ஏற்படலாயின. இவர்கள் விவாகஞ் செய்தபின் இல்லறத்தை நடத்தச் சங்கடப்படுகிறார்கள். இவர்களைக் கல்யாணஞ் செய்துகொள்ளும் ஆண்பிள்ளைகளெனிலோ அவர்களும் தங்கள் சாதியாசாரம் சமயாசாரம் பழக்க வழக்கம் கொள்கைகளை அருக விட்டவர்களாதலினாலே புருஷன் மனைவி ஒற்றுமை விஷயத்தில் மாத்திரம், சாடிக்கு மூடி வாய்த்தாற்போல், அதிக மாறுதல் இல்லை. ஒன்றில் புருஷனுக்கு மனைவி பயந்து நடக்கிறாள்; இல்லாவிட்டால் மனைவிக்குப் புருஷன் பயந்து நடந்துகொள்ளுகிறான். ஆனால் வேறுபல கெடுதிகள் விளைகின்றன. பெண்ணாய்ப் பிறந்தவள் தன்னை நூதனமாக அலங்காரஞ்செய்ய விரும்பவொண்ணாது; நூதனங்கள், வேடிக்கைகள், விளையாட்டு, கூத்து, படக்காட்சி, பொதுக்கூட்டம் முதலியவைகளைப் போய்ப்பார்க்க ஆசைப் படக்கூடாது. ஆண்கள் செய்யவேண்டிய கருமத்தில் தாங்கள் தலையிட்டுக்கொண்டு இடைஞ்சற்படக்கூடாது. பெண்கோழி கூவி ஒருநாளும் விடியப்போவதில்லை. வரவுக்குத் தக்க செலவு செய்தல், இன்சொல்லு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கம், பொறுமை, தெய்வபத்தி, பரிசுத்தமான சிந்தனை, மனத்திடம் என்று சொல்லப்படும் இந்தக் குணங்களும் கருமங்களும் பெண்களிடத்தில் எப்பொழுதும் இருக்கவேணும், அந்த விசயரத்தினம் என்ற துட்டன் நினைத்த எண்ணத்திற்கு நீசெய்த செய்கையல்லவோ சரி; இதனால்தான் உன்னிடத்தில் எனக்கும் பெரும் அன்பு தொட்டுக்கொண்டது. என் மகளிருக்கிறாளே, இவள் ஒரு பயந்தவள்; இப்படி மன ஓர்மையாய் உன்னைப்போல் நின்றுபிடிக்கமாட்டாள் என்று இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போது "என்ன நெடுக இருக்கிறீர், இனிப் புறப்படுமேன், நேரம் போச்சல்லவா" என்று சுவாமிநாதர் தன் மனையாளுக்குத் தலைவாசற் பக்கத்தில் இருந்தபடி சொன்னார். "ஓம், ஓம், நேரம் போச்சு, இதோ வந்துவிட்டேன்" என்று புருஷனுக்குச்சொல்லிவிட்டு, "மகளே, நீ கவலைப்படாதே, புத்தியாய் நடந்துகொள் நாங்கள் போய்வருகிறோம்" என்று சொல்லிச் சுவாமி நாதர் மனைவி அன்னத்தின் முகத்தைத்தடவிக் கையால் அணைத்து, தான் போக விடை கேட்டாள். அன்னத்தின் கண்களிலிருந்து நீர் பொலுபொலென்று சிந்தியபடி, அவள் அழுது கொண்டு "ஆச்சி, இப்பொழுது அவசியம் போகத்தான் வேண்டுமோ" என்று மனுஷியின் கையைத் தன்கையாற் பற்றிக்கொண்டு வினா வினாள். இதனைக்கண்டு, மனுஷியும் கண் கலங்கினாள்; மகளும் கண்கலங்கினாள். மனைவியும் மகளும் புறப்படத் தாமதிப்பதைக் கண்ட சுவாமிநாதர் "தம்பீ, அவர்களைப் புறப்படச்சொல்லும்" என்று ஆநந்தனிடஞ் சொல்ல, ஆநந்தன் உள்ளேபோய் மூவரையும் இந்த நிலைமையிற் கண்டான். மீண்டு வெளியே வந்து கவலையுடன் தன்மனையாளின் கவலையான நிலைமையைப்பற்றிச் சுவாமிநாதருக்கு அவன் சொன்னான். சுவாமிநாதர் ஒரு பெருந்தன்மையான மனுஷன்; நல்ல குடிகுலத்தைச் சேர்ந்தவர்; அவர் உடனே எழுந்து உள்ளே போய் அன்னலட்சுமியைப்பார்த்து "மகளே நீ வேறல்ல; என் மகள் இவள் வேறல்ல; நீ வேணுமானால் ஆச்சியை இன்று இரவு இங்கே மறித்துக்கொள்ளலாம், கடவுள் கிருபையால் எங்களுக்கு வீட்டில் ஏதும் வசதியீனமில்லை நானும் தங்கச்சியும் இப்பொழுது போகிறோம். இது எங்கள் சொந்தக்கார்; நாளைக்குக் கார் அனுப்பி தங்கச்சியின் தாயை நாங்கள் கூப்பிடுவிப்போம்; (மனைவியை நோக்கி) ஏன் உமக்கும் சம்மதந்தானே" எனலும்; "நூறுமுறையும் சம்மதம், ஆனால் உங்களுக்கு நான் இல்லாவிட்டாற் சரிப்படாதே" என்று மனுஷி சொல்லுதலும், "தங்கச்சி இருக்கிறபொழுது எனக்கு என்ன வசதியீனம்" என்று சொல்லி விட்டு அவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சுவாமிநாதரும் மகளும் காரில் ஏறித் தம் வீடு சென்றனர்.

* * *

உலகம் பலவிதம்: 1932 டிசம்பர் 22

ஆநந்தன் - அன்னம் தொடர் (முற்றொடர் - 17)

"சுவாமிநாதரும் மகளும் போனபின், சுவாமிநாதர்மனைவி, அன்னலட்சுமி ஆநந்தன் என்னும் மூவரும், ஏதோ சிறிதாகப் போசனஞ் செய்துவிட்டு, படுக்கைக்குப்போய்ப் பின்னரும் சிறிதுநேரம் இருந்து யாழ்ப்பாணத்தில் தாங்கள் எந்தக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பரஸ்பரம் கலந்து பேசியபோது, சுவாமிநாதர் மனைவி அன்னலட்சுமிக்குச் சொந்தமானவளென்பதும், தூரித்த கிராமத்தில் வசிக்க நேர்ந்ததாலும் பலவருஷங்களாக இருகுடும்பத்தினருக்கு மிடையே கொண்டாட்டம் உண்பனவு தின்பனவு இல்லாமையாலும், இதுவரையில் ஒருவரையொருவர் அறியாமல் அந்நியர்போல் நடந்து வந்தார்களென்பதும் புலப்பட்டன. சுவாமிநாதர் மனைவி தனக்கு இனத்தவள் என்பதையறிந்து அன்னமும் பின் ஆநந்தனும் பெரிதும் மகிழ்ச்சியடைந்தனர். மனுஷியும் முன்னரைக் காட்டிலும் அவர்களிடத்தில் அதிகம் உறவும் அன்பும் பாராட்டினாள். இப்படியிருக்கும்போது ஆநந்தன் சுவாமிநாதர் மனைவியை விளித்து "ஆச்சி, அந்த விஜயரத்தினமென்பவனை சும்மா விடக்கூடாது; அவனை இந்த ஊரில் இல்லாமற் செய்யவேண்டும்; இல்லாவிட்டால் மறியலுக்கு அனுப்பித் தக்கபாடம் படிப்பிக்கவேண்டும்; இவனைச் சும்மாபேசாமல் விட்டால் இவன் எத்தனையோ பெண்களைக் கெடுத்துவிடுவான்; கீழ்சாதிப்பயல்....." என்று சிறிது ஆத்திரத்தோடு சொன்னான். "தம்பீ, இப்படியான கருமங்கள், நாங்கள் பெண்டுகள், எங்களுக்கு எப்படித் தெரியும், தங்கச்சியின் தகப்பன் விடிய இங்கே வருவார்; அவர் எல்லாம் அறிந்தவர்; அவரோடு யோசித்து அவர் சொல்லுகிறபடி செய்வதுதான், தம்பீ, புத்தி" என்று சுவாமிநாதர் மனைவி சொன்னாள். "அது, சரி, நீங்கள் அவனுக்கு என்னவுஞ் செய்யுங்கள்; நான் மாத்திரம் கோட்டடிக்கு வரமாட்டேன்; இந்தப்பெரிய பட்டினத்தில், கோடேறி இப்படியான காரியத்தில் வழக்காடிவிட்டு நான் பிறகு மனுஷருடைய முகத்தில் விழிப்பதில்லையா? கோட்டுக்கு, மரியாதையான ஆண்பிள்ளைகளே போகமாட் டார்கள்; அப்படியானால் பெண்ணாய்ப் பிறந்தவள் ஒருத்தி எப்போதாயினும் கோடேறத்துணிவாளா? கோட்டிலே, அப்புக்காத்துமார் பிறக்கிறாசிமார் கேளாதகேள்விகளையெல்லாம் கேட்பார்களாம். அந்தக்கேள்விகளுக்கு மறுமொழி சொல்வதைக்காட்டிலும் ஆற்றிலே குளத்திலே விழுந்து உயிரை விட்டுவிடுவது நல்லதல்லவா; கோட்டுக்குப் போகிறாயோ, கேட்டுக்குப் போகிறாயோ என்று உலகத்திலே பழமொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுவார்கள். என்னைக்கொன்றாலும் நான் கோட்டுக்கோ வரமாட்டேன்; அந்தவிஷயத்தில் நீங்கள் மனவருத்தப்படவும் வேண்டாம்; என்னைக் கோபிக்கவும் வேண்டாம். அந்தத் துஷ்டனைத் தெய்வந் தண்டிக்கட்டும்" என்று அன்னம் பிடிவாதமாகச் சொன்னாள்.

* * *

"பிள்ளை சொல்லுவது சரிதான், தம்பீ, பெண்ணாய்ப் பிறந்தவளும் கோட்டுக்குப்போக உடன்படுவாளோ; தலைவாசலில் அவர் ஆராயினும் ஆண்பிள்ளைகளோடு பேசிக் கொண்டிருக்கும் நேரத்தில், இத்தனை வயசு போயும் தலைவாசற்பக்கம் போக எனக்குக் கூச்சமாயிருக்கிறது; அது என்ன மாதிரி சின்னன் சிறுபிள்ளைகளைக் கோட்டுக்கு வரச்சொல்லி நீர்கேட்பது?....." என்று மனுஷிசொல்ல ஆநந்தன் "ஆச்சி, நீங்கள் அந்தநாளையிற் கதையைப் பேசுகிறீர்கள்; இந்த நாளில் கோட்டிற்கு ஒரு முறை நீங்கள் வந்துபார்த்தாலல்லவோ தெரியும்; பெண்கள், அவர்களுள்ளும் வயசிற்குறைந்தவர்கள்தானே கோட்டடியில் இந்நாட்களில் அதிகம். அவர்கள் தானே "நான் என்று" நின்று வழக்கு நடத்துகிறார்கள்; அப்படியான பெண்களுக்குத் தெரிந்த கோட்டு நியாயம் சில பிறக்கிறாசிமார் அப்புக்காத்துமாருக்குந் தெரியாது" என்று சொல்லுதலும், மனுஷி சிரித்து, "தம்பீ, நிலைகெட்ட பெண்கள், நடைகெட்டபெண்கள் அப்படிச் செய்வார்களேயல்லாமல், குலங்குடியிற் பிறந்தவர்கள் அன்றுஞ்சரி, இன்றுஞ்சரி, என்றுஞ்சரி ஒருபோதும் அப்படிச்செய்ய உடன்படமாட்டார்கள்" என்று சொன்னாள். "ஏதோ நீங்கள் சொன்னபடி, நாளைக்கு ஐயா வந்தபின் அவரோடு யோசிப்போம்" என்று ஆநந்தன் சொல்லி, பின்னரும் "ஆச்சி, உங்கள் நித்திரையை நான் ஏன் குழப்புவான், நீங்களும் அன்னமும் இந்த அறையுட்படுங்கள், நான் தலைவாசற்பக்கத்தில் விறாந்தையிற் படுக்கின்றேன்" என்றுசொல்லிப் படுக்கைக்குப் புறப்பட்டான்; "ஏன், ஆச்சியைச் சாட்டிவிட்டுப் போகிறீர்கள்; உங்களுக்கு நித்திரை வந்துவிட்டது நீங்கள் படுக்கைக்குப் போகவேண்டுமென்று உள்ளதைச் சொல்லிவிட்டுப் போய்ப் படுத்துக்கொள்ளலாமே" என்று அன்னம் புன்னகையோடுஞ்சொல்ல, ஆநந்தன் அப்படிச்சொன்னாலுஞ் சரிதான் என்று சொல்லி விட்டுப் படுக்கைக்குப் போனான்.

* * *

"ஆச்சி, நேரம் நடுச்சாமத்திற்கு மேற்பட்டு விட்டது, நீங்கள் கொஞ்சநேரமாவது படுத்து உறங்குங்கள்; நானும் படுத்துக்கொள்ளுகிறேன்; ஆனால் எனக்கு இன்றைக்கு உறக்கம் வரவேயில்லை;...." என்று அன்னலட்சுமி சொல்லிக் கொண்டு தன்படுக்கையிற் படுக்க, மனுஷியும் தனக்கென இடப்பட்ட படுக்கையிற் படுத்துக் கொண்டு மகளே, எனக்கு நித்திரைமெத்தக் குறைவு நான் வீட்டிலும் நாலுமூன்று மணித்தியால நித்திரைதான் கொள்வது; அந்த உறக்கமும் கோழியுறங்குவதுபோலப் பொய்யுறக்கம்; நீ கொஞ்சம் உறங்கு, பிள்ளை, என்னைப்பற்றிப் பாராதே" என்று சொன்னாள். "ஆச்சீ உறக்கம் வந்தால் உறங்குவோம்; அது கிடக்க, எனக்கு ஏன் இப்படியான மரியாதைக்கேடும் சங்கடமும் வந்தன என்பது தெரியவில்லை; நாளைக்கு அயலவர், எங்கள் ஊரிலுள்ளவர்கள் இதையறிந்தால் பலவிதமாக நினைப்பார்களே, நினைத்த நினைத்தபடி கதைபேசுவார்களே இவைகளையிட்டு நினைக்க நினைக்க எனக்கு நித்திரையும் வரவில்லை, பசிக்கவுமில்லை....." என்று சொல்லி அன்னங் கவலைப்பட்டாள்.

* * *

"மகளே, உனக்கு இது முதல் முதல் அநுபவமாதலினாலும் நீ சிறுபிள்ளையானபடியாலும் பெரியகாரியமாகத்தோற்றுகிறது; "மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போல - சாந்துணையுஞ் சஞ்சலமே" என்றபடி உலகத்திலே பெண்ணாய்ப் பிறந்த நாம் எத்தனை சங்கடங்களுக்கு எத்தனை ஆபத்துக்களுக்குத் தப்பிக்கொள்ளவேண்டும்; ஏதோ அந்தப்பெருமான், நீ நல்ல பிள்ளையானபடியால், உனக்கு ஒரு மானக்கேடும் வராமல் காத்துவிட்டார்; அதையிட்டு நீ சந்தோஷப்படவல்லவோ வேண்டும். இப்படியான ஆபத்து உனக்குமாத்திரம் வந்த தென்று எண்ணிக்கொள்ளாதே; எங்கள் ஊரிற்போய் இப்பொழுது விசாரித்தாலும் அங்குள்ள பழையவர்கள் சொல்லுவார்கள்; நான் தங்கச்சியின் தகப்பனைச் சடங்கு செய்தகாலத்தில் எனக்குவந்த ஆபத்தல்லவோ பெரிய ஆபத்து; அதோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபொழுது உது ஒரு ஆபத்தா....." என்று சொல்வதற்கிடையில் "ஆச்சி, எனக்கு நித்திரை கலைந்து போய் விட்டது; உங்கள் உறக்கத்தைக் குழப்புகிறேன் என்று எண்ணாமல் அதனை எனக்கு விபரமாய்ச் சொல்லுங்கள்" என்று அன்னம் ஆவலுடன் கேட்கச் சுவாமிநாதர் மனைவி சொல்லுவாளாயினாள்.

* * *

உலகம் பலவிதம்: 1932 டிசம்பர் 29

ஆநந்தன் - அன்னம் தொடர்
(முற்றொடர் - 18)

"மகளே, என் தகப்பனார் தாயார் தக்க குடும்பத்தைச் சேர்ந்தவர்களாம்; மூன்று நாலு தலைமுறையாக

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எங்கள் குடும்பத்தார் உடையார் வேலைபார்த்து வந்தமையினால் எங்கள் "வளவை" உடையார் வளவென்று சொல்லுவார்கள். என் தகப்பனாரை வீரசிங்க உடையார் என்று சொல்லுவர்; தாயார் பெயர் பெரியநாயகி; ஆனால் பெரிய நாச்சன் என்றே எவரும் சொல்லிக் கொள்வதுண்டு; கல்யாணம் முடிக்க முந்தியும் தாயார் என் தகப்பனாருக்குச் சொந்த மச்சாள்; தாயாரின் சீதனமும் தகப்பனாரின் முதுசொமும் அதிகமுண்டாதலால் எங்கள் கிராமத்தில் இந்தக் குடும்பமே அந்தநாளிற் செல்வத்திலும் கூடியதாகும். தகப்பனாருக்குச் செல்வமிருந்தும் செல்வாக்கிருந்தும் தக்க மதிப்பிருந்தும், கல்யாணம்முடித்துப் பத்துவருட காலமாயும் பிள்ளைப்பாக்கியம் மாத்திரம் இல்லையே என்ற கவலை ஏற்பட்டுவிட்டது. தகப்பனாரைக் காட்டிலும் தாயாருக்கு இதனால் அதிக கவலையாம். பிள்ளைப்பேற்றை விரும்பி என் தாயார் இருக்காத விரதமில்லை; போகாத கோவிலில்லை; கையெடாத தெய்வமில்லை; இருவரும் தங்களால் இயன்ற தானதருமங்களும் செய்து வந்தார்களாம்; ஆனாற் பிள்ளைப் பாக்கியமோ கிட்டுவதாயில்லை. "வருந்தியழைத்தாலும் வாராதவாரா" என்று சொல்லிக்கொண்டு, தகப்பனார் ஒருவிதமாக மனம் ஆறியிருந்தாலும் தாயாருக்கு எந்த நேரமும் இதுவே கவலையாகவிருந்தது.

* * *

"மகளே, இந்த விருந்தாந்தமெல்லாம் என்னைப் பெற்றவள்தான் எனக்குச் சொன்னது; இப்படியிருக்கும்போது வாரிடைப் பரதேசியாரென்று ஒரு பெரியவர் ஒருநாள் எங்கள் வீட்டிற்கு வந்தவிடத்து என்பிதா மாதாக்கள் அவரைப் பெரிதும் உபசரித்து, திருவமுது செய்வித்து, வணங்கி மிக்க கவலையோடும் நின்றார்களாம். பரதேசியார் அவர்களைப் பார்த்து "நீங்கள் கவலைப்படவேண்டாம்; உங்களுக்கு ஒரு குறைவும் வராது; ஆனால் நீங்கள் கையிலே வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்தேடித் திரிகிறீர்கள்; அது பேய்த்தனம்" என்றாராம் அப்பொழுது என்தாய் பெரியவரை மீட்டும் கும்பிட்டு, "சுவாமி சொல்லுவது எங்களுக்குப் புலப்படவில்லை" என்று இரந்து கேட்க, "மகளே, உங்கள் வளவில் நிற்கும் ஒரு புளியமரத்தின் கீழ் ஒரு தெய்வமிருக்கிறதல்லவா; அது பழைமையானதல்லவா" என்று கேட்க "ஓம், சுவாமி, ஒரு வைரவர்சூலமிருக்கிறது, நாங்கள் அந்த வைரவருக்குச் செவ்வாய், வெள்ளிக்கிழமைகள், தைப்பொங்கல், வருஷப்பிறப்பு இப்படியான தினங்களில் விளக்குவைத்தும் இடையிடையே பொங்கலிட்டும் வழிபட்டு வருகிறோம்" என்று சொல்லி முடிவதற்கிடையில் பெரியவர், மகளே அந்த வைரவனுக்கு ஒரு சிறு கோயில் அமைப்பித்து அவனுக்கு ஒவ்வொருநாளும் பூசை செய்வித்துக் கிரமமாக வழிபாடு செய்யுங்கள்; அவன் ஞானவைரவன்; நீங்கள் கேட்டவைகளெல்லாம் தருவான்" என்று சொல்லி என் பெற்றாருக்கு விபூதியுங் கொடுத்துவிட்டு உடனே போய்விட்டாராம். இதனைக் கேட்ட என் பிதா மாதாக்களுக்கு உண்டான சந்தோஷத்திற்கும் அற்புதத்திற்கும் ஒரு எல்லையில்லையாம். தகப்பனார் ஒரு ஆறுமாசகாலத்துள் சிறிய கோவிலுங் கட்டுவித்துக் கும்பாபிஷேகமும் செய்வித்து, தினமும் பூசைக்காகிய ஏற்பாடுகளும் செய்து வழிபட்டுவந்தார். தாயாரும் அப்படியே செய்துகொண்டு சித்திரைப்பரணி விரதம், ஐப்பசிப் பரணி விரதம் தைச் செவ்வாய் விரதம் இப்படியான வைரவர் விரதங்களையும் அநுட்டித்துக் கொண்டு வருங்காலத்தில், ஒரு வருட காலஞ் செல்ல, நான் பிறந்தேனாம்.

* * *

"பிள்ளை, சுருக்கமாகச் சொல்லுகிறேன்; நான் பெண்பிள்ளையானாலும் என் தகப்பனார் என்னை ஆண் குழந்தை போல் பாவித்து ஒரு உபாத்தியாயரைவைத்து என்னைத் தமிழ்ப் படிப்பித்துவந்தார்; என் தாயாரோ பெண்ணாய்ப் பிறந்தவள் செய்யவேண்டிய வீட்டுக் கருமங்கள் எல்லாம் செய்வித்து எனக்கு நல்லபழக்கம் பழக்கிவந்தார்; வைரவக்கடவுளை வழிபடப் போகும்போதெல்லாம் என்னையும் உடன்கூட்டிக் கொண்டு போவதே வழக்கம்; எனக்கும் அறிவு வர வர நானும் அந்தப் பெருமானைப் பத்தியோடு வழிபட்டு வந்தேன்; நான் பெரிய பெண்ணாகும்போது எனக்கு வயசு 15.

* * *

"மகளே, நான் இனிச் சொல்லப்போகும் கதையைத்தான் அவதானமாகக்கேள்; தங்கச்சியின் தகப்பனார் என்தகப்பனாருக்கு முன்பும் மருமகன் முறையிலுள்ளவர்; இவரைவிட என் தாயாரின் தமயனாருடைய மகன் முத்துலிங்க மென்றொருவர் இருந்தவர். அவருக்கு என்னைச் சடங்கு செய்து கொடுக்கவேண்டுமென்ற எண்ணம் தாயாருடைய மனசில் தொடக்கத்திலே இருந்தது. ஆனால் முத்துலிங்கம் படிக்கிற காலத்திலே படிப்பை அலட்சியம்பண்ணிவிட்டுக் கூடாத கூட்டங்கள் கூடி, பழகாத பழக்கங்களைப் பழகித் துர்த்தத்தனமாக நடந்தபடியினால், என் தகப்பனாருக்கு முத்துலிங்கத்தில் மனம் விட்டது. அவர் சொன்னவைகளைக் கேட்டும் வேறுபேர் சொல்லக்கேட்டும் தாயாரும் முத்துலிங்கத்தை எனக்கு முடித்துவைப்பதென்ற எண்ணத்தை விட்டுவிட்டார். தங்கச்சியின் தகப்பனுக்கு என்னை விவாகஞ்செய்து கொடுப்பதென்று எல்லாரும் நிச்சயம் பண்ணிக்கொண்டார்கள். நான் சிறுபிள்ளையாயிருக்கும்போது முத்துலிங்கம் எங்கள் வீட்டிற்கு வருவது போவதுண்டு;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாசமில்லாமல் என்னோடு பேசுவதும் விளையாடுவதும் கொண்டாடுவதுமுண்டு; என்றைக்கு நான் பெரிய பெண்ணானேனோ அன்று தொடக்கம் முத்துலிங்கத்தை அங்கே வரவிட வேண்டாமென்று என்தாயார் தன் தமயனாருக்குச் சொன்னதனால் முத்துலிங்கம் அங்கு வருவதேயில்லை. அந்த ஆளுடைய போக்கு வாக்கு நடை இவைகளை அறிந்தவர்கள் வந்து என் பிதாமாதாக்களுக்குக் குறையாகச் சொல்லச்சொல்ல, நாளுக்குநாள் நானும் அவைகளைக் கேள்விப்பட்டதனால், எனக்கும் அந்த ஆளிடத்தில் என்னையறியாமலே வெறுப்பு உண்டானது. தங்கைச்சியின் தகப்பனுக்கு என்னைக் கல்யாணம் முடித்துக் கொடுப்பதைக் கேள்விப்பட்டமாத்திரத்தே முத்துலிங்கத்திற்குப் பெரும் ஆத்திரம் உண்டானது. ஒருநாள் என் பிதாமாதாக்கள் ஒரு கல்யாண வீட்டிற்குப் போய்விட, வேலைக்காரரும் நானும் மாத்திரம் வீட்டிலே இருக்கும்போது அயல்வீட்டிலிருக்கும் உலகாத்தை என்னும் கிழவி அங்கே வந்தது; வந்த கிழவியை இருக்கச்சொல்லி நான் கிழவியுடன் பேசிக்கொண்டிருக்கும்போது, கிழவி என்னைப்பார்த்து, எடிபிள்ளை நான் அவசரம் வீட்டுக்குப் போகவேண்டும்; வீட்டில் ஒருவருமில்லை, ஆனால், உன்னை ஒரு கதைகேட்கிறேன்; கோபித்துக் கொள்ளாதே; உனக்கு இஷ்டமானாற் சரி, இல்லாவிட்டால் இரண்டாம் பேருக்கும் வெளிவிடாதே, நெருப்பொன்று சொன்னால் மாத்திரம் வாய் வெந்துவிடுவதல்ல" என்றது. அதற்கென்ன பேர்த்தி நீ சொல்லலாம்; நான் குறைநினைக்கவில்லை, கோபிக்கவில்லை, என்றேன். "தங்கைச்சி, வேறொன்றுமல்ல, உன் மச்சான் முத்துலிங்கம் உன்னிடத்தில் ரகசியமாகச் சொல்லச் சொன்னது; தன்னையே சடங்கு முடிக்கவேணுமாம்; இல்லாவிட்டாற் பெரும் பழிவந்து சேருமாம்; ஆர்மனம் மாறினாலும் உன்னை மனம் மாற வேண்டாமாம்; தான் நம்பியிருக்கிறதாம் என்று சொல்லி உன் சம்மதத் தையும் கேட்டுக்கொண்டு வரும்படி என்னிடம் அந்தப்பிள்ளை மன்றாடிச் சொன்னான். நான் முதல் மறுத்துவிட்டேன்; பிறகும் அவனுடைய பரிதாபத்தைப் பார்த்துவிட்டு மனங்கேளாமல் இப்படி உன்னிடம் வந்தேன்" என்று கிழவி சொல்லி முடித்தது.

* * *

இதைக்கேட்ட மாத்திரத்திலே எனக்கு வந்த கோபத்திற்கும் ஆத்திரத்திற்கும் ஒரு எல்லையில்லை; பாட்டி, உனக்கு வயசுக்கல்ல நரைத்தது; அந்தப் பேயன் சொன்னாலும் வயதில் முதிர்ந்த நீ, நாலுகாரியத்தைக் கண்ட நீ அவன் சொன்னதைக் காவிக்கொண்டு இங்கே வரலாமோ, அப்பர் ஆச்சி அறிந்தால் என்னவாய் முடியுமென்று உனக்குத் தெரியாதா; அவன் உனக்கு ஏதோ தந்திருக்க வேண்டும்; அதற்காகத்தான் நீ இப்படிப்பாடுபடுகிறாய் என்று கிழவியைக் கண்டித்துப் பேசினேன். பிள்ளை, தெரியாமற்சொல்லிவிட்டேன்; இப்படி வருமென்று அறிந்துதான்நான்முந்தியே உன்னைக் கோபிக்கவேண்டாமென்று கேட்டுக்கொண்டேன்; அவனிடத்தில் ஏதோ வாங்கினேன் என்று நினைக்கிறாய், உன்னாணைப் பிள்ளை அப்படியொன்றுமில்லை, இதை ஒருவருக்கும் வெளிவிடாதே, என்னைக் காத்துக்கொள்" என்று கிழவி பல்லைக்காட்டி யிரந்தது. "பாட்டி உனக்குப்போல் எனக்கும் பைத்தியமா! இதுவும் வெளியிற் சொல்லத்தக்கதா; நான் ஒருவருக்கும் வெளியிடவில்லை; தாயார் தகப்பனார் மீண்டு வரும் நேரமாய்விட்டது, போய்விடு" என்று சொல்லிக் கிழவியை அனுப்பிவிட்டேன். என் பிதா மாதாக்களுக்கு நான் இதைவெளியிடவில்லை.

* * *

உலகம் பலவிதம்: *1933 ஜனவரி 05*

ஆநந்தன் - அன்னம் தொடர் *(முற்றொடர் - 19)*

"மகளே, இதுநடந்து சிலகிழமை கழிந்த பின்பு தங்கைச்சியின் தகப்பனுக்கும் எனக்கும் விவாகத்திற்காகிய நாளும் நிச்சயிக்கப்பட்டது. முத்துலிங்கம் கலியாணவீட்டைக் குழப்புதற் கான முயற்சிகள் செய்கிறானென்ற செய்தி என்காதிலும் பட்டது. என் தகப்பனார் தாயார் இந்த விஷயத்தைப்பற்றிக் கேள்விப்பட்ட நாள் தொடக்கம் பெரிதும் கவலையோடும் பயத்தோ டும் காணப்பட்டனர். தலைமைக்காரனாயிருந் தாலும் தம்முடைய வீட்டுக் கருமத்தில் ஏதும் இடையூறு நடந்தால் தமக்குத் தீராவசையும் அவமானமுமாகுமென்ற பயந்தான் என் தகப்பனாரை வருத்தியது. இனி முத்துலிங்கனுக்குத் துணையாக என் தகப்பனாரோடு மாறுபட்டவர்கள் சிலர் இரகசியமாகச் சோர்ந்து கொண்டார்கள். என் பெற்றார்கள் இருவரும், முத்துலிங்கனுடைய நோக்கத்தை அறிந்தபின், என்னை மிகவும் பாதுகாப்போடு வீட்டில் வைத் திருந்தார்கள். இப்படியாக ஒருநாள் எங்கள் தாய் தகப்பனார், இயன்றவரையிற் பிறரறியாத படி இரகசியமாக, தூரத்திலிருக்கும் சொந்தக் காரருக்குக் கல்யாணவீட்டிற்குச் சொல்லும்படி போயிருந்தார்கள். இப்பொழுதிருப்பதுபோல, அந்த நாட்களில் மோட்டரதம் முதலியவைகள் இல்லை; குதிரைவண்டியும் அரிது; தேவையானாற் பட்டினத்திற்குப் போய்த்தான் கொண்டுவர வேண்டும். ஆனால் தகப்பனாரிடத்தில் திறமான மாடுகளும் வண்டியும் உண்டு. அந்த வண்டியிற்றான் அவர்கள் விடியுமுன் நேரத்தோடு புறப்பட்டுப்போனார்கள். பொழுதுபடுவதற்கு முன் மீண்டுவிடலாமென்பதுதான் அவர்கள் நோக்கம். அப்படிப்போகும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிற்குக் காவல் வைத்துவிட்டே போனார்கள். எங்கள் இனத்தவர்களும் இரண்டு மூன்றுபேர் அன்று எங்கள் வீட்டில் வந்து தங்கி நின்றார்கள். பொழுதுபட்டு, இரவு பத்துமணியாகியும் என் பிதா மாதாக்கள் வரக்காணவில்லை. போன இடத்தில் ஏதோ தாமதம் நேர்ந்திருக்கக்கூடும் வந்துவிடுவார்கள் என்ற எண்ணத்தோடு நாங்கள் எல்லாரும், போசனஞ் செய்யவுமில்லை, படுத்துறங்கி விட்டோம்; நான் வேலைக்கார மனுஷியோடு, வழக்கமாய்ப் படுக்கும் அறையுட் படுத்துறங்கினேன்; தாயார் தகப்பனார் இப்பொழுது வந்துவிடுவார்கள்தானே, அவர்களோடு போசனஞ்செய்துவிட்டுப் பின்பு தானே படுத்துறங்குவது என்ற எண்ணத்தினால் நான் படுத்திருந்த அறைக்கதவைப் பூட்டாமல் விட்டுவிட்டேன்.

* * *

"மகளே, இப்பொழுதும் நினைக்க என் உடம்பு புல்லரிக்கிறது, நான் படுத்து அயர்ந்து கொண்டு போகும்போது; யாரோ என் முகத்தில் தொட்டதுபோல் இருந்தது. நான் பயந்து திடுக்கிட்டு ஆச்சி என்று சொல்லுவதற்கு வாயெடுக்க முந்தி, சண்டாளா, என்வாயிற் சீலையைத் திரட்டி வைத்து அமுக்கிப் பிடித்துக்கொண்டான்; என்னால் மூச்சுவிடவும் முடியவில்லை; என்னைக் கொலைசெய்யத்தான் எவனோ வந்திருக்கிறான் என்று நினைத்தேன்; என்வாயில் வைத்து அமுக்கும் சீலைத்திரளையும் கையையும் தட்டி விடலாமென்று என்கையை எடுக்க, கொடியவன் என் கைகள் இரண்டையும் தன் மற்றக்கையால் இறுகப்பிடித்துக் கொண்டான். கண்களை விழித்துப் பார்க்கும்போது எரிந்து கொண்டிருந்த விளக்கையும் காணவில்லை; முழுவதும் இருளாகவேயிருந்தது. இதற்கிடையில் இன்னும் இரண்டுபேர் சவத்தைத் தூக்கிக் காவிக்கொண்டு போவதுபோல, என்னைக் காவிக்கொண்டு போவதும் எனக்குத் தெரிந்தது. வீட்டின் முற்றத்துக்குக் கொண்டுபோகும் போதாயினும், தலைவாசலிற் கிடப்பவர்கள் காண்பார்கள், நான் தப்பிவிடுவேன் என்று அந்தச்சமையத்தில் எண்ணினேன்; பாவிகள் அப்படிக் கொண்டு போகாமல், எங்கள் வீட்டுக்கொல்லையின் பிற்புறத்துள்ள ஒழுங்கைப் பக்கமாகக் கொண்டுபோனார்கள்; இயமன் கையில் அகப்பட்ட உயிர்போல் நான் கலங்க, அந்தத் துரோகிகள் ஒருநொடியில், ஒழுங்கையிலே நின்ற குதிரை வண்டியில் ஏற்றினார்கள். அந்த வண்டியோ பழைய மாதிரியான பல்லக்குவண்டி; ஆனால் அதில் வெளிச்சம் எரியவில்லை. இப்படியெல்லாம் செய்யும்போதும் என் வாயிலே அடைத்த சீலையை அந்தத் துரோகி எடுக்கவில்லை; மூச்சுவசதியாக விடுகிறேனோ என்று மூக்குத் துவாரத்தை மாத்திரம் அந்தப்பாதகன் தன் கைவிரலால் இடையிடையே தொட்டுப் பார்த்துக் கொண்டான். என்னை வண்டியில் ஏற்றினவுடனே, அதன் கதவை யாரோ பூட்டினார்கள் என்னை நடுவிலே இருக்கச் செய்தார்கள்; அப்பொழுது வாயில் திணித்த சீலையையும் என்கையைப் பிடித்த பிடியையும் அவன் விடவில்லை; என்னை ஏற்றிய உடனே வண்டி வேகமாகப்போனது. அரை மைல் தூரம் போய்விட்டதெனக் கண்டவுடனே, என்னைப்பிடித்துக் கொண்டிருந்த முத்துலிங்கன், "என்கையில் அகப்பட்ட நீ இனிமேல் தப்பி உன்வீட்டிற்குப்போகப்போவதில்லை; மரியாதையாய் மனமொத்து என்னுடன் பேசாமல் வந்துவிடு; வாய்விட்டுக் கத்துவாயானால், இந்தக் கத்தியால் உன்னையுங் குற்றிக்கொன்று நானும் என்னுயிர் விடுவேன்; கடவுளறிய இது நிசம்;" என்று சொல்லி என் கைப்பிடியை மாத்திரம் விட்டு, அந்தக்கையில் விரித்த ஒரு வில்லுக்கத்தியை எடுத்துக் காட்டினான்; நான் ஒன்றும் பேசவில்லை; பேச எனக்கு நாவும் எழ வில்லை. பின்னரும் அவன் என்னைப் பார்த்து, வாயில் வைத்திருக்கும் துணியையும் எடுத்துவிடுகிறேன்; பேசாமலிருக்கிறாயா? என்று என்னைக் கேட்க, நான் ஓம் என்றதற்கு அடை யாளமாக தலையசைத்தேன்; என்வாயிலிருந்த துணியை எடுத்துவிட்டான். நான் வாய் திறந்து கதறப்பயந்து, என் முந்தானையை முகத்திலிட்டுக்கொண்டு விம்மி விம்மி அழுதேன்; வண்டி மிகவும் வேகமாகப்போனது; மகளே, உனக்கும் அனுபவத்திற்கொஞ்சந் தெரியும்; அந்தநேரத்தில் என் நிலைமை எப்படி யிருந்திருக்குமென்பதை நீயோசித்துப்பார்.

* * *

உலகம் பலவிதம்: *1933* ஜனவரி *19*

ஆநந்தன் - அன்னம் தொடர்
(முற்றொடர் - *20*)

"மகளே, நான் அந்த நேரத்திலும் என் மனத்தைரியத்தை விடவில்லை; நான் சிறு வயசு தொடக்கம் கையெடுத்துவந்த வைரவன் என்னைக் கைவிடான் என்ற நம்பிக்கையும் மனத்திடமும் கொஞ்சமேனுங் குறையவில்லை; அந்தச் சமையத்திலும் அவனைத்தான் நினைத்தேன்; "கர்வங்கொண்ட விஷ்ணுமூர்த்தியின் இரத்தத்தையும் பலியேற்று அத்தெய்வத்திற்கு ஞானத்தை அருளிய கருணாகரா, பரமசிவனை நிந்தனை செய்த பிரமனுடைய உச்சிச்சிரத்தை நகத்தினாற் கிள்ளித் தண்டித்த முழுமுதற் கடவுளே, சிறுத்தொண்டநாயனாரின் பத்தித் திறத்தைப் பரிசோதித்து அவருக்கு முத்தி கொடுத்த முதல்வா! துஷ்ட நிக்கிரகசிஷ்ட பரிபாலனஞ் செய்யும் சூலபாணீ, உன்னுடைய காவலில் இருக்கும் எனக்கும் இப்படி வரலாமா; உலகத்தைக் காப்பதனாலல்லவா உன்னைக் கேத்திரபாலன் என்று சொல்லுவார்கள்; எனக்கு இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநியாயமெல்லாஞ் செய்யும் இந்தப் போக்கிலி நீ நினைத்தால் நாசமாகமாட்டானா; சுவாமி, உன்னையொழிய இந்தச் சமையத்தில் எனக்கு வேறு எவருமில்லை" என்று இப்படிப் பலவிதமாக மனத்துட் பிரார்த்தித்தேன்; மகளே, இதுமாத்திரமல்லாமல், இன்னொருகவலையும் என்மனத்தில் உண்டானது; என்னவெனில், ஊரவர் அயலவர் மாத்திரமல்ல, என் பெற்றாரும், சிலசமையம் நான் மனமொத்து முத்துலிங்கனுடன் காணாமற் கூடிக்கொண்டு போய்விட்டேன் என நினைப்பார்களே, என்பதுதான்; இப்படியெல்லாம் கலங்கி, யமனை அறியாமல் உயிர் போய்விடுமா, என்னுடைய சம்மதமில்லாமல் இவனால் என்ன செய்யமுடியும், என்று எண்ணிக் கொண்டு, அதுவரையில் தலைகுனிந்தபடி எவரையும் பாராமல் இருந்த நான் தலையை நிமிர்த்திப் பார்த்தேன்; முத்துலிங்கன் என் எதிரில் இருந்தானென்பது அந்த இருளிலும் அறியத்தக்கதாயிருந்தது. என்பக்கத்தில் இருப்பது ஆரென்று உற்றுப்பார்த்தேன். நடுவயசுக்கு மேற்பட்ட ஒருபெண்ணென்பது புலப்பட்டது. இந்த இருவரையும் குதிரைக்காரனையும் விட, வண்டியில் வேறு எவரையுங் காணவில்லை;....." என்று சொல்வதற்கிடையில், "ஆச்சி, அப்படியானால், அவனுக்கு உதவியாகவந்து உங்களைத் தூக்கிக்கொண்டு போனார்கள் ஆரென்று தெரியுமா?" என்று அன்னலட்சுமி கேட்கச் சுவாமிநாதர் மனைவி "பிள்ளை, ஆரென்பது இன்றைக்கும் எனக்குத் தெரியாது" என்று சொல்லிவிட்டு பின்னருஞ் சொல்லுகிறாள்.

* * *

"இப்படியே வண்டி வேகமாய்ப்போய் ஒரு சந்தியில் திரும்பும்போது, இன்னொரு மாட்டு வண்டி இந்த வண்டிக்கு எதிர்முகமாகச் சந்தியில் வந்தது. சந்தியென்ற நியாயம்பற்றி அந்த வண்டி அவதானமாய் வந்தபடியால், இக்குதிரை வண்டி அதனோடு மோதாதொழிந்ததென்று சொல்லலாம். மாட்டுவண்டியில் ஒருவெளிச்சமும் எரிந்தது. அந்த வண்டியைக்கண்டமாத்திரத்தே "ஐயோ, என்னைக் காத்துக்கொள்ளுங்கோ, உங்களுக்குப் புண்ணியங்கிடைக்கும்;" என்று, எவருங்காத்திராப்பிரகாரம், நான் ஓலமிட்டுக் கத்தினேன். நான் இப்படிக்கத்துவேன் என்று முத்துலிங்கனாவது குதிரை வண்டியிலிருந்த எவராவது எதிர்பார்த்திருக்கவில்லை. என் ஓலத் தைக்கேட்டவுடனே, மாட்டுவண்டி குறுக்கே நின்றுவிட்டது அதிலிருந்து மூன்றுபேர், ஆண் பிள்ளைகள் குதித்து, இந்த வண்டியண்டை ஓடிவந்தார்கள்; இந்த வண்டியும் போகாமல் நிற்கநேர்ந்ததால், ஓடிவந்தவருள் திடகாத்திரமுடைய ஒருவர் குதிரையைக் கடிவாளத்திற் பிடிக்க, மற்றை இருவரும் "என்ன, என்ன, அதார் அது" என்று சத்தமிட்டுக்கொண்டு, குதிரை வண்டியின் பின்புறத்திற்கு வந்தார்கள்; இவர்களைக் கண்டமாத்திரத்தே முத்துலிங்கனும் குதிரைக்காரனும் குதித்து, வந்தவழியைநோக்கி ஓட்டம்பிடித்தனர். ஓடியவர்களை மாட்டு வண்டியிலிருந்து இறங்கிவந்தவருள் ஒருவர் துரத்திக் கொண்டோடினார்; இன்னொருவர் குதிரைவண்டியின் படியில் ஏறிநின்று கொண்டு,"அதார், என்னகாரியம்" என்று சொல்லிக்கொண்டு, தீப் பெட்டியிற் குச்சியைத் தட்டி அந்தவெளிச்சத்தைப் பிடித்துப்பார்த்தார். நான், "என் அப்பூ," என்றுகத்த, அவரும், "ஐயோ, இது என்ன அநியாயம்," என்று கத்தினார்; நான் சொன்னேன், சொன்னேன், வீட்டிலே பிள்ளை தனியே, அந்த வம்பன் ஏதுஞ் சூதுசெய்வான், நேரத்தோடு போய்விடுவோம் என்று சொன்னேன்; கேட்டீர் களா,..... என்று கத்திக்கொண்டு வண்டியிலிருந்து என்தாயார் இறங்கி ஓடிவந்தாள்; "ஏன் அப்பா கத்துகிறாய்; நாங்கள் கையெடுத்த வைரவன் எங்கள் பிள்ளையைக் காத்து எங்களிடம் தந்து விட்டான், சத்தம்போடாதே; ..... எங்கே அந்தச் சண்டாளன், அவன்தான் இறங்கி ஓடுகிறான் போலிருக்கிறது; முருகேசு, மாடுகள் சும்மா நிற்கும்; இறங்கி ஓடிவா, மச்சான் தனியே அவனைத் துரத்திக்கொண்டுபோகிறார்; நீயும் பிறகே வேகமாய் ஓடிப்போ, என்று என் தகப்ப னார் சொல்ல எங்கள் வண்டிக்காரனாகிய முருகேசு வேகமாக ஓடிப்போனான்"

* * *

உலகம் பலவிதம்: 1933 ஜனவரி 26

ஆநந்தன் - அன்னம் தொடர்
(முற்றொடர் - 21)

"அடி, வள்ளி, நீயுமாஅடி, கூடிக்கொண்டு வந்திருக்கிறாய்; உன் நெஞ்சுத்துணி வென்னடி" என்று அவளை என் தகப்பனார் அடிக்கப்போக, "அப்பா, பாவம், அடியாதீர்கள், என்ன சாட்டைச் சொல்லி அவன் இவளைக் கூட்டிக்கொண்டு வந்தானோ நாம் அறியேம்" என்று சொல்லி நான் அடிக்கவொட்டாமல் என் தகப்பனாரைத் தடுத்தேன்; "ஐயா, நான் ஒன்றும் அறியேன்; ஆரோ வருத்தக்காரரைப் பராமரிக்கவேணுமென்று சொல்லி, அவர் என்னைக் கூட்டிக்கொண்டு வந்தார்; உங்கள் வீட்டுச் சோற்றை உண்டு வளர்ந்த நான் இப்படியென்று முந்தியே தெரியு மானால் வரத்துணிவேனோ; நான் ஏழைக் கோவிச்சி; என்ன செய்வேன்" என்று கதறி அழுதாள். "அப்பா, அவள் வந்ததும் நன்மைக்குத்தான்; இல்லாவிட்டால் ஊர் என்மேற் சந்தேகப்படும்; முத்துலிங்கன் மரியாதையாகத் தான் என்னைக் கூட்டிக்கொண்டுபோகப்பார்த்தான்" என்று நான் தகப்பனாருக்குச் சொல்ல, அவரும் "ஆம், ஆம், அதுவுஞ் சரிதான்" என்றார். இதற்கிடையில், எனது மாமனாரும் வண்டிக்காரனாகிய முருகேசுவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டு வந்தார்கள். "அத்தான், அவர்களைப் பிடிக்க முடியவில்லை; அவர்கள் எங்கோ குறுக்கே ஒழுங்கையால் இறங்கி ஓடிவிட்டார்கள்; இனித் துரத்துவதிற் பிரயோசனமில்லை யெனக்கண்டு நாங்கள் மீண்டு வருகிறோம்" என்று என் மாமா அப்பருக்குச் சொன்னார்.

* * *

"மகளே, அந்த இடத்தில் நின்று கலகப்படுவது புத்தியல்ல என்று நினைத்துப்போலும், என் பிதா மாதாக்கள் என்னைத் தங்கள் மாட்டு வண்டியில் ஏற்றிவிட, என் மாமனார் குதிரை வண்டியைச் செலுத்த இரண்டு வண்டிகளும் எங்கள் வீடுபோய்ச் சேர்ந்தன; நாங்கள் வீட்டிற்குப் போனபோது அங்கு எல்லாரும் உறங்கிக்கிடந்தார்கள்; என் தாயார் தகப்பனார் மாமனார் முருகேசு எல்லாரும் ஏதோ அதிகம் யோசித்து விட்டு, வள்ளியைக் கூப்பிட்டு இன்று நடந்த செய்தியென்றையும் வெளிவிடாதே; வெளிவந்தால் உன்னாலேதான் வந்ததென்று உன் மேற் பழிபோடுவேன்; பின் நீ இந்த ஊரிற் குடியிருந்தபாடில்லை; நீ செய்த பிழையை நான் பொறுத்துக்கொண்டேன் "என்று தகப்பனார் சொல்லி வள்ளியை வெருட்ட, வள்ளி சத்தியம் பண்ணி, தான் சீவன்போனாலும் வெளிவிட மாட்டேன் என்று சொன்னாள். அதன்பின் என் தாயார், வீட்டிலுள்ள எவரும் அறியாதபடி என்னைமெல்ல உள்ளே கூட்டிக்கொண்டு போய்விட, தகப்பனாரும் மற்றவர்களும் சிறிது நேரம் தலைவாசலில் இருந்துவிட்டுப் பின் எல்லாரும் போசனஞ் செய்தார்கள். பிழை செய்தவன் சொந்தமானவன் என்ற நியாயத்தாலும், கோட்டுக்குப் போவது அவமானம் என்ற நியாயத்தினாலும்; இந்தச் செய்தியை இரகசியமாக வைத்துக்கொண்டோம்....." என்று சொல்லிக்கொண்டு வரும்போது அன்னம் சுவாமி நாதர் மனைவியைப்பார்த்து, "ஆச்சி, இப்பொழுதும் இந்தச் சமாசாரம் ஒருவருக்குந் தெரியாதா" என்று கேட்க, "பிறகு பிறகு இனத்தவர்களுக்கெல்லாம் இது தெரியவந்தது. "ஒருவர் அறிந்தது இரகசியம்; இருவர் அறிந்தாலும் பரகசியம் என்று உலகத்திலே சொல்லும் பழமொழி உனக்குத் தெரியாதா; பொல்லாத உலகம் ஒருவருடைய நன்மையை எடுத்துப் பேசாது; தீமையென்றால் உடனே எடுத்துப் பேசும்; இது மனுஷ சுபாவம்; இதுதான் என் சரித்திரம்; ஆதலால் மகளே உனக்குமாத்திரம் இப்படிக்கேடு வந்ததென்று நினையாதே; நிலவும் இருட்டும், இன்பமுந் துன்பமும், பாவமும் புண்ணியமும் அன்றுமுண்டு, இன்றுமுண்டு, என்றும் உண்டு என்பதை அறிந்துகொள்" எனச் சொல்லிமுடித்தாள்.

* * *

"பின்னரும் சுவாமிநாதர் மனைவி அன்னத்தைப்பார்த்து "மகளே உங்களுடைய விஷயத்திலும் நீங்கள் அந்த விஜயரெத்தின மென்பவனுக்கு விரோதமாய் வழக்குத் தொட ராமல், காரியத்தை வெளிவிடாமலிருப்பதுதான், நீ சொன்னவிதம், மரியாதையாகும்; அவனைத் தெய்வங்கேட்கட்டும்; எனக்குச் சதிசெய்ய நினைத்த முத்துலிங்கன் பின் கல்யாணமில்லாமலே செத்தான்; நாளைக்காலை தங்கைச்சியின் தகப்பன் வரும்போது உனது புருஷனும் அவருமாக யோசித்து, இவ்விஷயத்தை இரகசியமாக வைத்திருப்பதே புத்தியாகும். பொருளிழவு கிருகச்சித்திரம், அதாவது வீட்டிலே நடக்கும் இரகசியங்கள், தானம், மானம், அவமானம், ஆயுசு என்னுமிவைகளை வெளியிடவொண்ணாதென்று பஞ் சதந்திரத்திலே படித்திருக்கிறேன் ..." என்று இப்படிச் சொல்லும்போது அன்னம் சிறிது உறங்குவதைக்கண்டு, அவளுடைய உறக்கத்தைக் குழப்பவொண்ணாதென்று, சிறிது நேரஞ்சென்று சுவாமிநாதர்மனைவி தானும் உறங்கினாள்.

* * *

உலகம் பலவிதம்: 1933 பெப்ரவரி 02

ஆநந்தன் - அன்னம் தொடர்
(முற்றொடர் - 22)

"அடுத்தநாள் அதிகாலையிற் சுவாமிநாதர் தமது மோட்டரதத்தில் ஆநந்தன் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்; அவரை ஆநந்தனும் மனைவியும் பெரிதும் உபசரித்தனர்; ஆநந்தன் சுவாமிநாதரைப் பார்த்து "ஐயா அவன் விஜயரத்தினத்தைச் சும்மா விடலாமா; அவனைச் சும்மாவிட்டால் இன்னும் இப்படி எத்தனைபேருக்குக் கேடு செய்வானோ நாம் அறியோம்; இந்த விஷயத்தை உங்களுடன் யோசித்து நீங்கள் சொன்னபடி செய்வதற்கு உங்கள் வரவை எதிர்பார்த்திருந்தேன்" என்றான். சுவாமிநாதர் நெடிதுநேரம் யோசித்துப் பின் ஆநந்தனைப் பார்த்து "தம்பீ, துஷ்டரைத் தக்கபடி தண்டிக்கவேண்டியதுதான் முறை; ஆனால் இந்த விஷயத்தில் இளம்பிள்ளையாகிய உமது மனைவி கோட்டிற்குப் போகவேண்டிவரும்; அது பார்ப்பவர்களுக்கு அழகாயிராது; நிரபராதிகளை யும் எதிரிகளுக்கு ஏற்படும் தரணிமார் தங்கள் அடாத கேள்விகளால் மரியாதை கெடுத்து விடுகிறார்கள்; உண்மையை உள்ளபடி அறியாமல் ஊரவர்கள் பலவிதமாகப் பேசுவார்கள்: கோடேறினாள் என்ற வசை எந்த நாளும் வந்துசேரும்; அல்லாமலும் அந்த விஜயரத்தினமென்பவனோ மகா துஷ்டன். வழக்குக்கு நீங்கள் போனால் அவன் இந்தப்பிள்ளைமேல் அநியாயமான கதை வைத்துக்கட்டுவான்; இந்தப் பொல்லாத உலகம் ஒருவருடைய நன்மையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துச்சொல்லப் பின்னிற்கும், ஆனால் தீமையை எடுத்துச் சொல்ல முன்னிற்கும்; ஆதலால் நீங்கள் வழக்குக்குப் போகவேண்டாம்; இச் செய்தியை எவருக்கும் வெளியிடவும்வேண்டாம். மெலியாரை வலியார் வாட்டினால் வலியாரைத் தெய்வம் வாட்டும் என்றபடி அவனையும் கறுப்பாயி என்னும் அந்த வடக்கத்தையாளையும் தெய்வங் கேட்கட்டும்; என்பிள்ளை வேறு நீங்கள் வேறல்ல. இதுவே நான் உங்கள் இருவருக்குஞ் சொல்லக்கூடிய புத்தி" என்று கூறிமுடித்தார்.

* * *

"அப்பொழுது சுவாமிநாதர் மனைவி, "ஓம் கண்டீர்களோ, நானும் அப்படித்தான் இராத்திரி தங்கச்சிக்குச் சொன்னேன்; கோட்டுக்குப் போகிறாயோ, கேட்டுக்குப் போகிறாயோ என்று பழமொழி சொல்லுவார்கள்; பிள்ளைக்கும் கோட்டுக்குப்போவது பிரியமில்லை; போகாமல் விடுவதுதான் நல்லது, அந்தப் போக்கிலியைக் கடவுள் கேட்கட்டும்" என்று தன் புருஷனுக்குச் சொன்னாள். ஆநந்தனும் அவ்விஷயமாக வழக்குத் தொடரும் எண்ணத்தை விட்டுவிட்டான்; அதனை இயன்றவரையில் இரகசியமாகவே வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் நிச்சயித்தான். பின்பு ஆநந்தன் வீட்டிற்றானே எல்லாரும் காலைப்போசனம் முடித்தனர். ஆநந்தன் தனக்கு ஏதோ இன்றியமையாத கருமமிருப்பதாகக் கடிதமெழுதி அன்று உத்தியோகத்திற்குப் போகாது விடுதலை பெற்றுக்கொண்டான். காலை பத்து மணிவரையில் சுவாமிநாதரும் மனைவியும் தங்கள் மோட்ட ரதத்திற்றானே, ஆநந்தனையும் அன்னலட்சுமியையும் அழைத்துக்கொண்டு தங்கள் வீட்டிற்குப் போயினர்.

* * *

போனவிடத்தில் சுவாமிநாதர் மகள் இவ் விருந்தினர் இருவரையும் இனிது உபசரித்தாள். அவர்கள் அன்று பகல் அங்கேதான் தங்கினர். அப்பொழுது சுவாமிநாதர் மனைவி தன் மகளும் பக்கத்திருப்ப ஆநந்தன் அன்னலட்சுமி யென்னுமிருவரையுங் கூப்பிட்டுத் தன் முன்னிலையில் இருக்கச்செய்து, "மக்காள். என் மகள்போலவே, உங்களிருவரையும் என் பிள்ளைகளாகவே நானும் ஐயாவும் பாவித்து நடப்போம்" இந்த இரண்டு குடும்பத்திற்கும் கடவுள் கிருபையால் எப்போதும் ஐக்கியம் இருக்கட்டும்; நீங்கள் உங்கள் அநுபவக் குறைவாலும் புத்திக்குறைவாலும் முந்திக் கொஞ்சம் பேய்த்தனமாய் நடந்துவிட்டீர்கள்; அதனாற்றான் விஜயரத்தினமென்றவன் உங்களுக்குத் தீமைசெய்ய நினைத்தான்; ஆனாற் கடவுள் கிருபையால் அவன் எண்ணம் வாய்க்கவில்லை; தெய்வமல்லாமல் அந்த நேரத்தில் எங்களைக் கொண்டுவந்து, இந்தப் பிள்ளையின்முன் அன்றைக்கு விட மனுஷரால் முடியுமா; அவனை இன்றி அணுவும் அசையாது, நீங்கள் ஒருபோதும் யோசனையில்லாமல், கண்டவர்களையும் வீட்டில் அடுக்கவொண்ணாது; அந்தக் கறுப்பாயியினாலேதான் இவைகளெல்லாம் வந்தன; மேலும் ஆண்பிள்ளை செய்யுங் குற்றத்தைப் பெண்ணாய்ப்பிறந்தவள் சகித்து நடக்கவேணும், பெண் செய்யும் குற்றத்தை ஆண்பிள்ளை பொறுத்து நடக்கவேண்டும், அப்பொழுதுதான் குடித்தனம் நடக்கும்; என்ன,

"காதன் மனையாளும் காதலனும் மாறின்றித்
தீதில் ஒரு கருமஞ் செய்பவே....."

என்று நீங்கள் படிக்கவில்லையா? உங்களுக்கு இனிமேல் நான் அதிகஞ் சொல்லவேண்டியதில்லை. நீங்கள் பாலும் நீரும் போலவும், பூவும் மணமும் போலவும், மணியும் ஒலியும் போலவும், மதனும் ரதியும் போலவும் எப்பொழுதும் ஒற்றுமையாக வாழவேண்டும். எங்களுடைய உதவி எந்த நேரம் வேணுமோ உடனே எங்களுக்குத் தெரிவிக்கவேண்டும் ....." என்று சொல்லி முடித்தாள்.

* * *

உலகம் பலவிதம்: 1933 பெப்ரவரி 09

ஆநந்தன் - அன்னம் தொடர் (முற்றொடர் - 23)

இப்படிச் சுவாமிநாதர் மனைவி இதோபதேசஞ் செய்தபின் ஆநந்தனும் மனையாளும், அவர்கள் எல்லாரிடத்தும் அநுமதிபெற்றுக் கொண்டு தங்கள் வாசஸ்தானத்திற்கு மீண்டனர்; "கல்லார் செயுங்கேண்மை நாள்தோறும் நன்றாகும்" என்றபடி இரு குடும்பத்தினருக்குமிடையே பரஸ்பரம் பெரும் ஐக்கியம் உண்டானது. வயசிலும் அநுபவத்திலும் குறைந்தவர்களாகிய ஆநந்தனும் அன்னலட்சுமியும் ஏதும் விசேஷமாக ஒரு காரியத்தைச் செய்யப்புகுமுன் சுவாமிநாதர் குடும்பத்தாரைக் கேட்டல்லாமற் செய்யமாட்டார்கள். அன்னமுந் தன்னிடத்திலுள்ள அகந்தை பேய்த்தனங்களெல்லாம் நீங்கப்பெற்றவளாய், "கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி" யென்ற வாக்கியத்திற்கு இலக்காய்த் தன் கணவன் குறிப்பறிந்து இதமாக நடப்பாளாயினள். அவள் அப்படி நடப்பாளாயின் ஆநந்தன் எப்படி நடப்பானென்று சொல்லவும் வேண்டுமோ, தன் மனையாள் தன்மீது மிக்க அன்பு பாராட்டித் தன் குறிப்பறிந்து இதமாக நடக்கின்றாளேயென்று நினைக்குந்தோறும் உண்டாகும் மகிழ்ச்சியினால், ஆநந்தன் எவருமின்றித் தனியே நிற்கும் போதும், நடக்கும்போதும், இருக்கும்போதும், கிடக்கும்போதும், நித்திரையிற் கனாக்காணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் சிரிப்பான். கிரகசாரத்தின் பலனாகத்தான் முன்னர்த் தன் மனையாள் பிடிவாத குணத்தோடு காணப்பட்டாளென்றும், நல்லகாலம் வர அவைகள் போய் இவைகள் வந்தன என்றும் தன் மனசிற்கும் தன் சினேகிதருக்கும் சமாதானஞ் சொல்லிக்கொள்ளுவான். இவர்கள் இப்படி இனிது வாழ்ந்தார்கள்; இது நிற்க, விஜயரத்தினம் கறுப்பாயி என்னுமிவர்களைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

* * *

"சுவாமிநாதரும் மனைவியுஞ் சொன்ன புத்திகேட்டு ஆநந்தன் விஜயரத்தினத்திற்கு விரோதமாக வியாச்சியம் தொடரும் எண்ணத்தை அறவே யொழித்துவிட்டான். அன்று கல்யாண வீட்டிற்குச் சென்றவிடத்து நேர்ந்த அநர்த்தத்தை இயன்றவரையில் இரகசியமாகவும் வைத்துக்கொண்டான். இவனுடைய எண்ணம் குறும்பு செய்தவர்களாகிய விஜயரத்தினத்திற்கும் கறுப் பாயிக்குந் தெரியுமா? தெரியாதே.

"உப்பிருந்த பாண்டமும் உளவுள்ள நெஞ்சும்,
தட்டி உடையாமல் தாமே உடையும்"

என்பது பழமொழியல்லவா. "இனி, நான் அந்த வீட்டுப் படலையுந் திறக்கமாட்டேன்; ஒருவர் கண்ணில் விழிக்கவும் மாட்டேன்; வெளியில் தலைகாட்டவும் மாட்டேன்; விடியமுன் என்னூருக்குத் தப்பியோடிச்சேரவேண்டும்; எனக்கு நூறுரூபா தா; உன்னாலேதான் நான் இந்த வேலைக்கு உடன்பட்டேன்" என்று சொல்லிக் கறுப்பாயி விஜயரத்தினத்தைப் பணந்தரும்படி நெருக்கினாள். "நீ, இந்தியாவிற்குப்போவதற்குப் பத்துரூபா போதும்; இந்தா தருகிறேன்; வாங்கிக்கொண்டு இரகசியமாகப் போய்ச் சேர்ந்துவிடு" என்று சொல்லி விஜயரத்தினம் ஒரு 10 ரூபா நோட்டை எடுத்து நீட்டினான். "உதை நீதான் வைத்துக்கொள்; எனக்கு ஒரு சதமும் நீ தர வேண்டாம்; நீ என்னை ஏமாற்றவா நினைத்தாய்? சரி, சரி, நான் உன்னிடத்திற் பணம் வாங்குகிறவிதமாய் வாங்குவேன்..." என்றாள் கறுப்பாயி. "எப்படி, எடி, வாங்குவாய்; என்ன அதிகம் வாய்காட்டுகிறாய்; என்குணம் உனக்குத் தெரியவில்லையோ..... எடி, நான் ஒரு செம்புச்சல்லியுந் தரமாட்டேன்; நீ ஏலுமானால் என்னிடங் காசு வாங்கிப்பாரடி...." என்று அவளை அதட்டி அடிக்கப்போனான் விஜயரத்தினம். "என் மேல் தொட்டியோ, இரகசியமெல்லாம் வெளிப் படுத்தி உன்னையும் மறியலுக்கு அனுப்ப எனக்கு வழிதெரியும்" என்று கறுப்பாயி சொல்ல, அவளை அடிக்கும்படி கையை ஓங்கிச்சென்ற விஜயரத்தினம் பின்வாங்கினான்.

* * *

"இவளோடு நெருங்கினால், இவள் காரியத்தை வெளிவிட நமக்கு ஆபத்து வந்துசேரும்; ஒன்றில் இவளை முற்றாக இல்லாமற் செய்யவேண்டும்; இல்லையேல் இவளுக்கு இதஞ் சொல்லி என் வசப்படுத்தவேண்டும்" என்று இப்படி அவன் சிறிது யோசித்துக்கொண்டு, பின் சாந்தமாக அவள் கிட்டப்போய் "கறுப்பாயி, இரகசியத்தை வெளிவிடுவேன் என்கிறாய்; வெளி விட்டால், எனக்கு மாத்திரமல்ல உனக்கும் ஆபத்து வருமென்பதை நல்லாய் நம்பு; ஆனதால், அந்த எண்ணத்தை விட்டுவிடு; நூறு ரூபா இப்பொழுதே வை என்று நீ பிடிவாதமாய் நின்றால், கையிற் காசில்லாத நான் இப்பொழுது செய்வதென்ன, வெறுங்கை முழமிடுமா; உனக்கு இருபத்தைந்து ரூபா தருகிறேன்; நீ வாங்கிக் கொண்டு உடனே இந்தியாவுக்குப் போய்விடு ...." என்று இதமாக அவளுக்குச் சொன்னான்.

[மிகுதி கிடைக்கவில்லை]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்

[அரசியல், சமூகக் கட்டுரைகளின் தொடர்ச்சி]

உலகம் பலவிதம்: *1933 மார்ச் 09*

பணமுட்டும் தொழிலின்மையும் உத்தியோகப் பஞ்சமும் அதிகப்பட்ட இக்காலத்தில் இங்கே எவரைப் பார்த்தாலும் "எக்காலக்கண்ணி" படிக்கும் நிலைமையிலேயே காணப்படுகின்றார்கள். ஆங்கிலம் படித்துச் சீமைக்குச் சென்று அங்கும் இரண்டுமூன்று வருடகாலந் தங்கி நின்று பின் தம் சொந்த ஊருக்கு மீண்டுவந்து, இங்கு எவ்வகையான உத்தியோகமும் பெறுதல் அரிதெனக்கண்டு திகைக்கும் உயர்தரக் கல்வியுடைய வாலிபர்கள் சிலர் "ஐயையோ, பழைய நிலைமை வருவதும் எங்களுக்கு மேலான உத்தியோகங்கிடைப்பதும், பெருந்தொகையான சீதனத்தோடு நவநாகரிகம் பயின்ற கன்னிகையைக் கல்யாணஞ்செய்து மேலைத்தேசத்தவர் வாழ்க்கையைப் பின்பற்றி டாம்பீகமாக நாங்கள் வாழ்வதும் எக்காலம்!" என்று வருந்துகின்றார்கள். இங்கே இலங்கையிற்றானே, ஆங்கிலம் படித்து உத்தியோகத்திற்கான பரீட்சைகளிலும் சித்தியடைந்துவிட்டு, "உத்தியோகங் கிடைக்கவில்லையே, வேறுமுயற்சிகள் செய்து பிழைக்கவும் வகையறியோமே, இப்பொழுது உத்தியோகத்திலிருப்பவர்கள் யாரும் இளைப்பாற மாட்டார்களா, சாகமாட்டார்களா, எங்களுக்கு இடங்கிடைக்கமாட்டாதா, நாங்கள் ஈடேறுவது எக்காலம்" என்று புலம்பக் காணப்படுகின்றார்கள். விடுதிப் பெண்பாடசாலைகளிற் சேர்ந்து ஆங்கிலத்தை இயன்றவரையிலும், தமிழைக் கொஞ்ச அளவிற்கும் படித்து, பந்தடித்தல் "டிறில்", நாடகம் நடித்தல், சங்கீதம் முதலியன பயின்று நவநாகரிகம் முழுவதும் பயின்ற தமிழ்ச் சிறுமியர் பலர், "அந்தோ, நாங்கள் இவைகளையெல்லாம் படித்தென்ன, பயின்றென்ன, எங்கள் அந்தஸ்திற்குத் தக்கவிதமாக விவாகஞ் செய்துகொண்டு சீர்திருந்தியவிதமாக இல்லறத்தைக் கொண்டு இழுப்பதற்கு தகுந்த உத்தியோகம் வாய்ந்த வாலிபர்களில்லையே, அப்படியானவர் கள் வந்து கைகூடுவதும் நாங்கள் கரையேறுவதும் எக்காலம்!" என்று பெருமூச்சுவிடுகின்றார்கள். நகைப் பைத்தியங்கொண்ட மகளிர்களுட்பலர், "தங்கப்பவுண் பழையபடி *13* ரூபா *50* சதமாக விலை குறைவதும், நாங்கள் சரக்கொன்றை மரம் பூத்தவிதமாக எங்களிஷ்டப்படி கால் தொடக்கம் தலைவரையில் ஆபரணங்களைக் கட்டுவதும் பூட்டுவதும் எக்காலம்!" என்று சிந்தை வருந்துகின்றனர்.

* * *

பெற்றர்களாயுள்ளார் பெரும் பொருள் செலவிட்டுச் சிரமப்பட்டுப் படிப்பித்த தங்கள் புதல்வர்கள் வளர்ந்துந் தமக்குப் பாரமாயிராது, உத்தியோகம் பெறுவதும் உழைப்பதும் எக்காலம்! என்று துயரப்படுகின்றனர். இப்பொழுது உத்தியோகம் உபாத்திமைத்தொழில் முதலியன வகித்திருப்போர் தங்கள் வேதனத்தில் வெட்டப்படும்பாகம் வெட்டப்படாமல் தாங்கள் முழுச் சம்பளமும் பெறுவது எக்காலம்! என்ற சிந்தனையோடு காணப்படுகின்றனர். எங்கள் அந்நிய அரசினராயுள்ளவர்கள் "உனக்குமுன் கிளைக்கும் நாளும் உண்டியும் வாழ்வும் இங்கே, மனக்கருத்தங்கே" என்ற பிரகாரம் தம்முடைய ஜந்மதேயத்தில் வியாபாரம் கைத்தொழில் விருத்தியடைவதும் அங்குள்ளார் முட்டின்றி இனிது வாழ்வதும் தாங்கள் இந்திரபோகங்களை அனுபவிப்பதும் எக்காலம்! என்று ஏங்குகின்றனர்.

* * *

"இனி நாட்டிற்கு நன்மை செய்யவேண்டும், ஏதுஞ் சுதந்திரத்தை அரசினரிடத்திலிருந்து வலிதிலாயினும் பெறவேண்டும் சுதேசப்பொருள் களை விருத்திசெய்யவேண்டும். அந்நியநாட்டுப் பொருள்களைப் புறக்கணிக்கவேண்டும். நாங்களும் ஒரு சாதியினராக முற்பட்டு வருதல் வேண்டுமென்ற மேலான நோக்கங்கொண்ட தமிழ்மக்களுட் பெரும்பாலார் தங்கள் மனோரதங்களெல்லாம் கைகூடுவது எக்காலம்! என்று கொட்டாவிவிடுகின்றார்கள். இவர்கள் செயலிப்படியாக, கௌரவமான பட்டம் பெறவேண்டும், அடிமையானாலும் போலி அதிகாரத்தோடிருக்க வேண்டும், ஆர்குடி கெட்டலாலும் நாம் மாத்திரம் நல்லாயிருக்கவேண்டும், பொதுக் கருமஞ் செய்யும் சனப்பிரதிநிதியென்றிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு தோசாதிபதியின் மனக்குறிப்பை யறிந்து தம் மனச்சாட்சியைக் கொன்றுவிட்டாயினும், மீளா அடிமைகளாயிருந்தாலும், காரியமில்லை, மாச வேதனமும், புகைரதத்திற் கிரயமில்லா முதல் வகுப்புப் பிரயாணமுஞ் செய்தால்மாத்திரம் போதும், இவைகளெல்லாம் வந்து கைகூடுவதற்கு நமது காருண்யம் பூண்ட தேசாதிபதியவர்கள், எங்களுக்குப் பிரதிநிதித் தெரிவுசெய்தற்காகிய ஒரு சுபமுகூர்த்த புண்ணிய தினத்தை விதித்தருளுவது எக்காலம் என்று விம்முகின்றார்கள்.

* * *

உலகம் பலவிதம்: *1933* மார்ச் *16*

இரும்புத்துண்டை எடுத்து விழுங்கிவிட்டு, அது சீரணிக்கும்படி சுக்கு (வேற்கொம்பு) அவித்துக் குடித்தால் அது சீரணமாய்விடுமா? உலகம் முழுவதிலும் ஏற்பட்டிருக்கும் பண முட்டினையும் தொழிலின்மையையும், உத்தியோகப் பஞ்சத்தையும், யாழ்ப்பாணத்திற்கே பிரதானமாக வந்தனவென்று பேய்தனமாய் நினைத்துக்கொண்டு, இவை வந்தமைக்குக் காரணம் இங்கிருந்து நாலுபேர் சனப்பிரதிநிகளென்று சொல்லிக்கொண்டு நூதமான அரசாங்க சபைக்குப்போய், அங்கே தேசாதிபதியாகிய நட்டுவனால் ஆட்டப்படுஞ் சூத்திரப்பாவைபோல் நின்று ஆடினால், பணமுட்டு நீங்க, தொழின் முயற்சியும் உத்தியோகமும் யாழ்ப்பாணத்தவருக்கு வந்து விடுமா? சிங்களருக்குப் பணமுட்டு முதலியன இல்லையா? யாழ்ப்பாணத்திலே பணமுட்டினாலும் பஞ்சத்தினாலும் எவரேனும் உயிர்விட்டார் சிறை புகுந்தாரென்று நாம் இன்னமுங் கேள்விப்படவில்லை. சிங்களருள் எத்தனைபேர் இவை காரணமாகத் தற்கொலை செய்தனர், சிறைவாசஞ் செய்கின் றனரென்பதை இடையிடையே நாங்கள் புதினப் பத்திரத்திற் படிக்கின்றோமல்லவா? இக்கரைக்கு அக்கரை பச்சனவுபோலத் தோற்றுகின்றதே யல்லாமல், உண்மையில் அக்கரையும் பச்சையல்ல. நாம் அக்கரையிலே போய் நின்று பார்த்தால் நம்கண்ணுக்கு இக்கரை பச்சனவாகத்தான் புலப்படும்.

* * *

"சரி, அரசாங்கசபையை நாம் பகிஷ்காரஞ் செய்தமையினாற்றான் அரசினர் எங்கள் மீது வெறுப்படைந்து எங்களைப் புறக்கணிக்கின் றார்களென்று வைத்துக்கொள்ளுவோம். நம் மனோருள் ஆயிரக்கணக்கானோர் சிங்கப்பூர் முதலாம் மலாய்நாட்டிலிருந்து, உத்தியோகமிழந்து தத்தம் பெண்டிர் பிள்ளைகளோடும், தனித்தும் மீண்டு இங்கேவந்து செய்வ தின்னதெனத் தெரியாமல் அல்லோலகல்லோலப் படுகின்றார்களே. இதற்கென்ன செய்வது? இப்படி நேர்ந்தமைக்குக் காரணமென்ன? சிங்கப்பூர் மலாய்நாட்டுச் சட்ட சபைகளையும் நாங்கள் பகிஷ்காரஞ் செய்தோமா? இல்லையே; எழுதா விதிக்கு அழுதாவதென்ன! விஷயம் வேறொன்றுமல்ல, பணமுட்டு முதலியன ஏற்பட்ட காலத்தில், வேண்டாம் வேண்டாம் உது வேண்டாமென்று சனங்கள் சத்தமிடவும் அதனைப் பொருட்படுத்தாது, அரசினர் டொனமூர்ச் சீர்திருத்தத்தின் பயனாகப் பிறந்த புதிய அரசாங்க சபையென்று சொல்லப்படும் வெள்ளை யானையை, நீங்கள் கொஞ்சநாளைக்கு வைத்துப் பராவரித்துப் பாருங்களென்று எங்களுக்குப் பரீட்சார்த்தமாகத் தந்தார். அந்த வெள்ளை யானையே இலங்கையிலுள்ள பிரயோசனங்கள் முழுவதையும் தனக்கு உணவென்று உண்ணத்தலைப்பட்டுவிட்டது; அந்த யானைக்கு இன்னமும் உணவு போதாதெனக் கண்டால், குடியானவர்களுடைய தலையில்தான் தன் தும்பிக்கையைப்போடும். இந்த வெள்ளை யானையை வேறு ஏதும் ஒரு தேசத்திலே கொண்டுபோய் நம்முடைய அரசினர் விட்டாற்றான் அந்த தேசத்தார் கெட நாங்கள் சிறிது வாழலாகும்; இப்பொழுது நாங்களெல்லாரும் ஆனையுண்ட விளாங்கனி போலானோம்.

* * *

காரியம் இப்படியிருக்க, ஒரு சாதியினராகிய நாங்கள் பாண்டவர் துரியோதனனாதியோர்போல், பகிஷ்காரக்கட்சியார் பகிஷ்காரத்திற்கு மாறான கட்சியார் என இரண்டுபட்டு ஒருவரையொருவர் குறைசொல்லியும் தூற்றியும் வைதும் சண்டை செய்வதனால் ஏதும் பயனுண்டா! இந்த இருகட்சியாருஞ் சேர்ந்து இச்சமையத்திற் செய்யவேண்டிய நன்மைக்கான கருமங்கள் பல இருக்கின்றனவே! அவைகளையல்லவா செய்தல் வேண்டும். இந்தக் கேவலமான நிலைமை இங்கே வந்தபின்னும் நம்மவர்கள் கைத்தொழில் கமத்தொழில்களைச் செய்வது கௌரவக்குறைவென்று நினைத்து உத்தியோக மோகங்கொண்டு உலைந்து திரிகின்றார்களே; சனத்தலைவர்களென்றிருப்போர் இவர்களுக்கு உண்மையைத் தெருட்டிக் கமத் தொழில் கைத்தொழில்களில் இவர்களை ஈடுபடச் செய்ய வொண்ணாதா? எந்தப் பொருள்களையும் இயன்றவரையிற் சொந்த நாட்டிலேயே ஆக்கி உபயோகியுங்கள், இயலாதவைகளைத் தான் அந்நிய நாட்டிலிருந்து தருவியுங்கள் என்று, அரசாங்க சபைக்குட் பிரவேசிக்க விரும்புவோர் மற்றக் கட்சியினரையும் சேர்த்துக்கொண்டு எங்குஞ் சென்று பிரசாரணஞ் செய்ய வொண்ணாதா? தாம் தாம் அப்படிச்செய்து சாமானிய சனங்களுக்கு முன்மாதிரி காட்டி நடத்தவொண்ணாதா? மீண்டுவந்து இங்கே தாண்டவம் புரியும் மதுபானத்தை நாட்டைவிட்டு ஓட்டுவதற்கான முயற்சிகளைச் செய்யவொண்ணாதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை மாத்திரமா, இந்தக் கஷ்டமான காலத்திலே ஜீவனார்த்தமாகப் பயன்றராததாகிய ஆங்கிலக் கல்வியைப் பல பிள்ளைகள் பெருங் கஷ்டப்பட்டுப் படிக்கின்றார்களே. இக் கல்வியினாற் சிறிது இக்காலத்திய அறிவைப் பெற்றுக் கொள்ளலாகும்; ஆனால் இதுவாயிலாக இனிமேற் சீவியம் நடத்த முடியாது. ஆனதால் ஏதுந் தொழிற் கல்வியை நமது கலாசாலைகளில் ஊட்டுவித்தற்கான முயற்சிகளைச் செய்யவொண்ணாதா? சிக்கனமாக வாழும்படி சனங்களுக்குத் தெருட்டவொண்ணாதா? கமத்தொழில் கைத்தொழில்களைச் செய்து சீவித்தல் கௌரவக்குறைவென்ற பேய்த்தனமான எண்ணம் இக்காலத்து வாலிபரிடத்தும் வளர்ந்தவரிடத்தும் உண்டுபட்டிருக்கின்றதே! இந்த எண்ணம் வீணானதே; "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந் தொழுதுண்டு பின்செல்பவர்" என்றும் "போனக மென்பது தானுழந்துண்டல்" என்றும் சனங்களுக்குப் புத்தி புகட்டவொண்ணாதா? நம்மனோர்களை வஞ்சித்து நாம்மாத்திரம் அரசினரிடத்து மதிப்பும் வீண்பட்டங்களும் பெற்றுக்கொண்டாற் போதுமென்று நினைப்பது சரியா? உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று சொல்வதால் எக்காலத்தாயினும் நன்மையுண்டா?

* * *

கொழும்புப் பட்டினத்திலே தீண்டாதார் கோயிற்பிரவேச முயற்சி, பொய்யாய்ப் பழங் கதையாய்க் கனவாய் மெல்லப் போய்விட்டது போலும். இந்த நாட்களில் இதனையிட்டு ஏதும் பேசுவாரையுங் காணேம். இனி இந்தியாவிலும் இந்தக் கோயிற்பிரவேச விஷயமாக, மகாத்மா காந்திக்கும் ஏனைய சனத்தலைவர் சிலருக்குமிடையே அபிப்பிராயபேதம் ஏற்படலாயின. தீண்டாதார் கோயிற்பிரவேசத்தைக் கட்டாயப்படுத்துவதற்காக அரசினரைக்கொண்டு ஒரு பிரமாணம் நிறைவேற்றுவிக்க வேண்டுமென்பது மகாத்மா முதலியோரின் முயற்சி. ஆனால் எந்த விஷயத்திலும் அரசினரோடு ஒத்துழைப்பதில்லையென விரதம் பூண்ட நாம் கோயிற் பிரவேச விஷயத்தில் மாத்திரம் அரசினருடன் ஒத்துழைக்க நினைப்பது பெருந்தவறாகுமல்லவா, கொண்ட விரதத்திற்குப் பங்கமாகுமல்லவா என்பது பண்டிதர் மதன்மோகன் மாளவியா முதலியோருடைய கொள்கையாக, இப்பொழுது அங்கும் இவ்விஷயத்தில் அபிப்பிராயம் இரண்டுபடலாயின. இந்த நியாயம் பற்றி, முன்னர்ச் சிறையிருந்த சிலர் அரசினரிடம் பொறுதிகேட்டுச் சிறைவாசத்தினின்றும் விடுதலைபெற்று வரலாயினர். மகாத்மா காந்தியும் அரசியல் விஷயத்திற் கொண்ட ஊக்கங் குறையை, சமயவிஷயத்திலேயே இனிமேல் அதிக ஊக்கங்கொண்டு உழைப்பாரென ஒரு சோதிடருஞ் சொல்லுகிறாராம். நாம் நடப்பவைகளை இருந்து பார்ப்பதேயல்லாமல் தீர்க்கமாக இப்பொழுது ஏதுஞ் சொல்லுதல் முடியாது.

* * *

உலகம் பலவிதம்: 1933 மார்ச் 23

அரசாங்கசபைப் பகிஷ்காரத்திற்கு மாறாக வேலைசெய்யும் அபிமானியொருவர் ஒருநாள் இரவு காலாதீதமாகத் தம் வீட்டிற்கு வந்து மிக்க ஆயாசத்துடன் ஒரு சாய்மணைக்கதிரையிற் சாய்ந்துகொண்டிருந்தார். அவருடைய மனையாள் அவருக்குத் தாகத்தின் பொருட்டுத் தேநீர் உதவிக்கொண்டு நின்றவள், "இங்கே பாருங்கள், நீங்கள் போன கூட்டம் எப்படி முடிந்தது? ஏதும் விசேஷமுண்டோ, உங்கள் சொற்பொழிவு, வந்தவர்களெல்லாருக்கும் பிடிப்பாயிருந்ததோ?" என்று இப்படிப் பல கேள்வியை ஒன்றன்பின் ஒன்றாகக் கேட்டாள்; "அமிர்தம், நான் போய் எப்போதாயினும் வெற்றியடையாமல் மீண்டுவந்ததுண்டோ, என்னுடைய கெட்டித்தனமெல்லாம் உனக்குத்தானே தெரியுமாச்சே; நான் அந்தக் கூட்டத்திற் பேசும்போது, யாராயிருந்தாலுஞ் சரி, நான் இப்பொழுது சொன்ன விஷயங்களிலும் எடுத்துக்காட்டிய நியாயங்களிலும் எள்ளளவேனும் தவறுண்டு என்று நேரில் எனக்கு எடுத்துத் தெருட்டி என்னை ஒத்துக்கொள்ளச் செய்துவிட்டால், அப்படிச்செய்பவருக்கு 1000 ரூபா உடனே கொடுத்துவிடுகிறேன் என்று சபதஞ் செய்து கொண்டுதான் வந்திருக்கின்றேன்" என்று ஆரவாரித்தார்.

* * *

இவர் சொன்ன சபதத்தைக் கேட்டமாத்திரத்திலே, மனைவியாகிய அமிர்தாம்பிகை வாயிற் கைவிரலை வைத்தபடி திகைத்து நின்றாள். "அமிர்தம், எதற்கு யோசிக்கின்றாய்? ஏன் ஏங்குகின்றாய்?" என்று அவர் கேட்க; "வேறொன்றுமல்ல, ஆயிரம் ரூபா என்றால் விளையாட்டா, ஒரு பிள்ளை சீதனமல்லவா? பணத்துக்கு முட்டுப்படும் இந்த நாட்களில், ஆரேனும் விவேகமுள்ளவர், வாய்ச் சாதுரிய மாகப் பேசக்கூடியவர்கள், நீங்கள் சொன்னது தவறென்று நியாயமெடுத்துக்காட்டி உங்களை ஒப்புக்கொள்ளச்செய்து விட்டால், நீங்கள் சபையிலே எல்லோரும் அறியச் சொன்னபடி 1000 ரூபாவை அள்ளிக்கொடுக்கத்தானே வேண்டும்; இதையிட்டுத்தான் கவலைப்படுகிறேன்" என்று அமிர்தம் பெருமூச்சுடன் சொன்னாள். மனையாள் வார்த்தையைக்கேட்டு அந்த அபிமானி பெருஞ் சிரிப்புச் சிரித்து, "அமிர்தம், இவ்வளவு கால மாகியும், நீ என்னை உள்ளபடி விளங்கிக் கொள்ளவில்லைப்போலிருக்கிறதே; ஒரு விஷயத்தை விளங்காதவர்களுக்கு ஒருவர் விளங்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தல்கூடும்; விளங்கப் பிரியமில்லாதவருக்கு ஆயிரம்பேர் கூடி விளக்கினாலும் விளங்கப்படுத்தலாமோ, எவராயிருந்தாலும் எந்தவிதத்திலாயினும் எதனையும் எடுத்து எத்தனை முறை விளங்கச்செய்தாலும் நானோ விளங்கினதாக ஏற்றுக்கொள்ள மாட்டேன்; நான் சொன்னது தவறென்று ஒப்புக்கொள்ளவும் மாட்டேன்; இப்படியிருக்க, பைத்தியகாறி, ஆயிரம் ரூபா அநியாயமாகப் போய்விடுமென்று நீ ஏன் பேய்த்தனமாய்ப் பயப்படுகிறாய்; இதையிட்டு யோசிக்காதே; நீ போய்ப் போசனத்தைப் படை, முடித்துக்கொண்டு படுக்கைக்குப்போக வேண்டும்; நேரஞ் சென்றுவிட்ட" தென்று புருஷன் சொல்ல, மனையாள் அப்படியே போனாள்.

* * *

அந்தப் பத்திராதிபருக்கு இன்னமும் ஆத்திரம் அடங்கவில்லைப்போலும்; மல்யுத்தஞ் செய்து ஆற்றாதவன் எதிரியை வாயினாற் கடித்தவாறாக, பின்னரும் உபாத்தியாயர்களைத்தான் அவர் சருவுகின்றார். "ஊருக்கெளியவன் பிள்ளையார் கோவிலில் ஆண்டி" என்றவாறு உபாத்தியாயர்கள்தான் அவருக்கு வாய்ப்புடையவர்களாய்ப் புலப்படுகின்றனர் போலும். உதவி நன்கொடைப் பணம்பெறும் பள்ளிக்கூடங்களிற் படிப்பிக்கும் உபாத்தியாயர்களுக்கும் அரசாங்க உத்தியோகத்தருக்கும் பேதமில்லையென்றும் ஆதலினால், உபாத்தியாயர்கள் அரசியல் விஷயங்களில் தலையிடாதபடி அவர்களை அரசினர் தடுத்துவிட வேண்டுமென்றும் சகுனி துரியோதனனுக்கும், கூனி கைகேசிக்கும் உபாயஞ்சூழ்ந்து கொடுத்தவிதமாக, இவரும் அரசினருக்குத் துர்ப்போதனைசெய்ய முயல்கின்றார். காரியம் முழுவதையும் அறிந்த அரசினர் இந்தப் பத்திரிகையாசிரியரின் பொறாமை வார்த்தைக்குச் செவிகொடுக்கப் போவதில்லை. "பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும் - பத்தர் சொன்னவும் பன்னப் படுபவோ" என்று அரசினர் இப்படியானோர் கூற்றுக்குச் செவி கொடுப்பது அசம்பாவிதம். வீட்டுக்குளிருக்கும் பெண்களும், சட்டசபையிற் பிரதிநிதிகளாய்ச் சென்று, ஊரின் நன்மைக்கோ தீமைக்கோ நாமறியேம், வாதாடும் பொழுது, பள்ளிக்கூடத்திற் படிப்பிக்கிறார்களென்ற காரணம்பற்றி உபாத்தியாயர்கள் அரசியல் விஷயமாகப் பேசக்கூடாது, முயற்சி செய்யக் கூடாது என்று கட்டுப்படுத்துதல் அசம்பாவிதமல்லவா? இக்காலத்தின் சீர்திருத்த நிலைமையின்படி உபாத்தியாயர் பேசாவிட்டாலும் உபாத்தியாயருடைய மனைவி அரசியல் விஷயமாகப் பேசுவதற்கும் முயற்சி செய்வதற்கும் இடமுண்டுதானே; உபாத்தியாயர்களை அரசியல் விஷயங்கள் அரசாங்க சபை என்னுமிவைகளிலிருந்து புறக்கணித்துவிட்டு நியாயவாதிகள் மாத்திரம் அரசியல் விஷயத்திலே தலையிட்டுத் தனிமை வியாபாரஞ் செய்யலாமென்று இவர் காத்திருக்கின்றாரா? நமது பத்திராசிரியர் கொள்கையை உற்றுயோசிக்குங்கால், அவர் அரசியல் விவகாரமும் இராசத்துரோகமும் ஒன்றுதான் என்று நினைத்து இடர்ப்படுகின்றாரென எண்ணக் கிடக்கின்றது. குறித்த பத்திரிகை போன்ற தூமகேதுக்கள் இடையிடையே தோற்றிச் சிலகாலம் எவர்க்கும் அநர்த்தத்தை விளைத்துப் பின்னர் மறைந்துவிடுவது சகசமல்லவா!

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுதாம்பிகை

[உலகம் பலவிதம்: 1933 மார்ச் 30 இலிருந்து உலகம் பலவிதம் 1934 ஜனவரி 18 வரை கிடைக்கவில்லை. அமுதாம்பிகையின் தொடக்கமும் கிடைக்கவில்லை]

உலகம் பலவிதம்: 1934 ஜனவரி 25

அமுதாம்பிகை

இங்ஙனம் அமுதாம்பிகை தன் பிள்ளைகளுடன் பெற்றார் வீட்டிற் சிலகாலம் இருந்தாள். தன் புருஷனைப்பற்றி அவள் ஒன்றும் கேள்விப் படவுமில்லை; அறிய விரும்பவுமில்லை; விசுவாசமாக நடந்த தனக்குப் பிறவூரிலே தன்புருஷன் இப்படி அநியாயஞ் செய்யலாமா, தன்னைப் புறக்கணிக்கலாமா, தன்னைத்தான் வெறுத்தாலும் பெற்றபிள்ளைகளை வெறுக்கலாமா என்று இப்படி அவள் நினைத்து நினைத்துத் தன் கணவன்மீது அதிக வாத்திரங் கொண்டாள். இந்த எண்ணங்களினாலே ஆத்திரமுண்டாக, தான் இனி ஒருபோதுந் தன் கணவனுடன் ஒற்றுமைப்பட்டு வாழ்வதில்லையென நிச்சயித்துக் கொண்டாள்; அவள் பெற்றார், "ஐயோ எங்கள்பிள்ளை கல்யாணம் முடித்துங்கன்னி போல் வாழாமலிருக்கின்றதே யென்று யோசித்துப் பெருமூச்சுவிட்டுக் கவலைப் படுவார்கள். ஆனால் தங்கள் மகள் சிறிதேனும் கவலைப்படாதவண்ணம் அவளை அன்போடும் ஆதரவோடும் வேண்டியவைகளெல்லாம் கொடுத்துப் பாதுகாத்து வந்தார்கள். வேலாயுதம் பிள்ளையின் நேரத்திற் கூடிய பகுதி தம் பேரப்பிள்ளைகளோடு பொழுது போக்குவதிலேயே கழிந்த தெனலாம். ஆனால் அந்தப் பிள்ளைகளெனிலோ "அம்மா, எங்கள் ஐயா எங்கே, அவர் எப்பொழுது இங்கு வருவார்? ஐயாவைக் காணோமே" என்று இடையிடையே தங்கள் தாயைக் கேட்பார்கள்; கேட்கும்போதெல்லாம் அமுதாம்பிகை நெட்டுயிர்த்துக் கண்களில் நீர் ததும்ப வேறு கதைகளைச் சொல்லித் தன் பிள்ளைகளைப் பராக்காட்டிவிடுவாள்.

* * *

இப்படியாக, ஒருநாள் காலை பத்து பத்தரைமணிவரையிலிருக்கும், அறுபத்தைந்து எழுபது வயசுவரையில் மதிப்பிடலாம். வேட்டியைக் கொய்து உடுத்திக்கொண்டவர்; பழையக் காட்டு லேஞ்சியைத்தலையிற் கட்டியுள்ளவர்; காதுகளிற் குவளைக்கடுக்கன் அசைந்துள்ளவர்; ஒருதோளில் ஒரு சால்வை; மற்றத்தோளில் ஒரு யோக்கியமிண்டு இட்டுள்ளவர்; அரையில் வேஷ்டிக்கு மேல் ஒரு சவுக்கத்தைச் சுற்றிக் கட்டியுள்ளவர்; கக்கத்திற் குடையும் கையிற் பொல்லும் கொண்டவர்; காலில் தேய்ந்த செருப்பு மாட்டியவர்; சிறிது நரைதிரையுடையவர்; வாய் சிவக்கத் தாம்பூலந் தரித்துள்ளவர்; வீபூதியை முக்குறியாகத் தரித்து நெற்றியில் ஒரு சந்தனப் பொட்டு, அதற்குமேல் ஒரு குங்குமப்பொட்டு இட்டுள்ளவர்; சாந்தநோக்கும் சந்தோஷமான முகமும் உடையவர் ஒருவர் அங்கே தலைவாசலில் வந்து, "அதார் வீட்டுக் காரர், தம்பி உங்கே இருக்கிறாரோ, வெளியே போய்விட்டாரோ" என்று பெலத்த சத்தமாகக் கேட்டார். அப்பொழுது தலைவாசலுக்கணித்தாக நடைகூடத்திலே தன்பிள்ளைகளோடு இருந்த அமுதாம்பிகை மெல்லக்கதவை நீக்கி எட்டிப் பார்த்து வந்தவர் விருத்தரெனக்கண்டு வாசற்படி யண்டைவந்து "அப்பா வெளியே போய்விட்டார்; இன்னம் சாப்பாடாகவில்லை, ஆகையால் இதோ வந்துவிடுவார்; கொஞ்சநேரம் உந்தக்கதிரையி லிருந்தாற் காணலாம்" என்றாள். "சரி, அப்படி யானால் நான் இதோ சமீபத்தில் இருக்கும் ஒருவரைப் பார்த்துக்கொண்டு திரும்பி வந்து விடுகிறேன்; அவர் வந்து குளித்துச் சாப்பிடட்டும்" என்று சொல்லிப் போக எழுந்தவர், "தங்கச்சியை விளங்கவில்லை ....." என்று கேட்டார். "நான் அவருடைய மகள்; நெடுநாள் இங்கேயில்லை; இப்பொழுதுவந்து கொஞ்சநாள்" என அமுதாம்பிகை, சொல்லுதலும், வந்தவர், "பிள்ளை நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்று ஆரோ சொன்னார்கள் நான்பிறகு அதைமறந்து போனேன் எல்லாவற்றிற்கும் பிறகுவாறேன்" என்று சொல்லிப் போகும்போது "அப்பா வந்தால் ஆர்வந்து தேடினதென்றுநான் சொல்வது" என்று அமுதங் கேட்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முருகர்க்கிழவன் தேடிக்கொண்டு போகிறான்" என்று சொல்லிவிட்டு அவர் போனார். தலைவாசற்பக்கமாக யாரோ பேசும் சத்தத்தை, அடுக்களைப்பக்கமாக இருந்து கேட்ட அமுதாம்பிகையின் தாய் விரைந்து வெளிவந்து, "என்ன, முருகரம்மான், வந்துவிட்டு ஓடிப் போகிறீர்கள், எங்களோடென்ன கோபம்?" என்று கூப்பிடுதலும் முருகர் விழுந்த பற்கள் போக எஞ்சியபற்களைக் காட்டிக்கொண்டு "பிள்ளை நீங்கள் கையில் ஏதோ அலுவலாய் இருக்கிறீர்களாக்கும், பிறகு வருகிறநான்தானே" என்று எண்ணிக்கொண்டு போனேன், நான் உதிலே சுப்பரைக்கண்டுகொண்டு ஒரு மணித்தியாலத்தில் திரும்பி வருகிறேன் என்று வேலாயுதம்பிள்ளை மனைவிக்குச் சொல்லிவிட்டுப் போனார்.

* * *

உலகம் பலவிதம்: *1934 பெப்ரவரி 08*
அமுதாம்பிகை (முற்றொடர்)

வெளியே சென்றிருந்த வேலாயுதம்பிள்ளை வீட்டிற்கு மீண்டுவந்து ஸ்நாநம் சந்தியாவந்தனம் போசனம் முதலிய முடித்துக்கொண்டு தன்மகளையிட்டு யோசித்துக்கொண்டு தலைவாசலில் இருக்கும் போது முருகரும் அங்கே வந்தார்; இவர்வரவைக் கண்ட வேலாயுதம்பிள்ளை முகமலர்ச்சியோடு இருக்கைவிட்டெழுந்து "அம்மான் வாருங்கள், வாருங்கள், கண்டுவெகுநாள், ஏதோ எங்களை முற்றாய் மறந்துவிட்டீர்கள்; வருஷப்பிறப்புக்குப் பிறகு இந்தப்பக்கத்தை எட்டிப்பார்க்கவுமில்லை; உங்களைக் காணவேணும் என்று, காத்திருந்தேன்; கண்டு கொள்ளக்கிட்டவில்லை" என உபசாரஞ் சொல்லி, அவரை ஒரு நாற்காலியில் இருத்தினார். பின்னரும் வேலாயுதம்பிள்ளை "ஏன், அம்மான், இந்தப்பக்கம் வருவதில்லை; என்ன விசேஷம்" என்று கேட்க, முருகர் "ஒன்றுமில்லை, தம்பி, இப்பொழுதுகொஞ்சக்காலமாக எனக்கு அதிகம் சுகமில்லை; வயசும்போய்விட்டது; முந்தின உசார் இல்லை; அதிகம் நடக்க, வெய்யிலில் மழையில் போக வர, கடுமையான வேலை செய்ய, இப்பொழுது என்னால் ஏலவில்லை, தம்பி, இதனால்தான் நான் அதிகம் வெளியிற்போவதில்லை; நானும் இங்கே வரவே ணும் வரவேணுமென்று எத்தனையோ நாள் புறப்பட்டும் சந்திக்கவில்லை; எனக்குத் தெரியும் நீரும் பிள்ளையும் குறைசொல்லுவீர்களென்று, உண்மையைச் சொல்லுகிறேன் தம்பி, நான் அப்படியொரு வஞ் சகமாய் இங்கை வராமல் விடவில்லை ....." என்று சொல்வதற்கிடையில் வேலாயுதம்பிள்ளை "ஐயோ, அம்மான், இதெல்லாந் தெரியும், நீங்கள் எங்களை மறக்கவும் மாட்டீர்கள், நாங்கள் உங்களை மறக்கப் போவதுமில்லை" என்று சொல்லிவிட்டு "கேளேன், இங்கே, அம்மான் அல்லவோ வந்திருக்கிறார்" என்று அவர் தம் மனைவியைக் கூப்பிட, மனைவி "கையில் அவசரமான அலுவலாயிருக்கிறேன், இதோ வந்து விடுகிறேன்" என்று அங்கிருந்தே சொன்னாள்.

* * *

"அம்மான், எங்கள் குடும்பத்தில் நடக்கும் கருமங்களில் உங்களுக்கு இரகசியமான தொன்றுமில்லை; உங்களை நான் காணவேணுமென்று காத்துக்கொண்டிருந்தது வேறொன்றுக்குமல்ல; இங்கு அயலிலுள்ள எவர்களுக்கும் இன்னும் இது காரியந்தெரியாது; நம்முடைய மருமகன் கொஞ்சங்குழப்படி பண்ணுகிறார்; இவள் பிள்ளை மனஸ்தாபப்பட்டுக்கொண்டு தன் பிள்ளைகளோடு வந்து, ஏறக்குறைய இரண்டுமாத காலமாக இங்கேதான் இருக்கிறாள்; என்பிள்ளை இரண்டு மாசத்திற்கல்ல, இரண்டு வருஷத்திற்கல்ல, என்சீவனுள்ளளவும் இங்கேயிருந்தாலும் எனக்கு அது சந்தோஷந்தான்; ஆனால் புருஷன் மனைவி எங்கள் கண்காண, எங்கள் காலத்தில் இப்படிப்பிரிந்திருக்கிற தென்றால், எனக்கு மனம் ஒருப்படுமா; ஆறுதல் வருமா, அம்மான் இதை நினைக்க நினைக்க என்மனம் வேதனை அடைகிறது" என்று வேலாயுதம்பிள்ளை சொல்லிக் கவலைப்பட்டுப் பெருமூச்சு விட்டார். "தம்பீ, செய்தி இப்படியோ, அது எனக்குத் தெரியாது, நான் கொஞ்சம் முந்தி இங்கே வந்துவிட்டுப் போனபோது பிள்ளையைக் கண்டேன்; ஏதோ கொஞ்ச நாளுக்குத் தாய் தகப்பன் வீட்டில் வந்து நிற்கிறதென்றல்லவோ நினைத்தேன்; இது மனவருத்தமான காரியந் தான்; ஆனாலும் இப்பொழுது ஒன்றும் முழுகிப் போகவில்லை; புருஷன் பெண்டிருக்கிடையில் பிணக்கு வருவதும், பிரிந்திருக்கிறதும் பின் சமாதானமாவதும் இந்தக்காலத்திற் சகசந்தானே; இதெல்லாஞ் சரிவரும், ஆனால், உங்கள் மருமகன் நல்ல சுவாகியாச்சே, உங்கள் மகளும் தங்கமான பிள்ளை; இப்படி இவர்களுக் கிடையில் வேற்றுமை வர வேண்டியதென்ன? என்று முருகர் கேட்க, "ஓம், அம்மான், எனக்குமது நூதனமாகத்தான் இருக்கிறது; வேறொன்றுமல்ல, இப்பொழுது அவருடைய கூட்டம் வாய்க்கவில்லை; இதனாலேதான் இப்படியெல்லாம் வந்ததென்று என்மகள் சொல்லிவந்து கவலைப்படுகிறாள். அவளையும் அந்த ஆள் மெத்தச் சிறுப்பினைப்படுத்தி விட்டதாகத் தெரிகிறது; முந்தி இங்கே வந்து என்மகள் நின்ற சமையங்களில், தங்கைச்சி உனக்கு உடம்பு சுகமில்லை, இங்கே நின்று உடம்பைத் தேறச் செய்துகொண்டு போ என்று தாய்மறித்தாலும், "பாவம், அம்மா, அவரை நல்ல சாப்பாடு மற்றும் வசதிகள் இல்லாமல் கஷ்டப்பட விட்டுவிட்டு நான்மாத்திரம் சுகமாய் இங்கே இருக்கிறது ஞாயமல்ல" என்று தாய்க்குத்தானும் புத்தி சொல்லிவிட்டுக் கூடிக்கொண்டு போகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை, இப்பொழுது செத்தாலும் இனி அங்கே போகமாட்டேன் என்று ஒரு நிலையாய் நிற்கிறாள். அம்மான் நான் இதற்கு என்ன செய்வேன்; வயசிலும் அறிவிலும் அநுபவத்திலும் மேற்பட்ட நீங்களே எனக்கு ஒரு உபாயஞ்சொல்லித் தரவேண்டும்.....” என்று சொல்லி வேலாயுதம்பிள்ளை மனவருத்தப்படும்போது அவர் மனைவியும் அங்கு வந்தாள்.

* * *

வந்தவள் மிக்க ஆத்திரத்தோடு “அம்மான் நடந்ததெல்லாம் இவர் இப்பொழுது உங்களுக்குச் சொல்லியிருப்பாரென்று நினைக்கிறேன்; இதுக்கு என்ன செய்வது; இந்த மனுஷனும் என்னைத்தானே ஒவ்வொருநாளும் ஏசுகிறார்; குறை சொல்லுகிறார்; எனக்குத்தெரியுமோ இப்படி வருமென்று, பையனை அந்த நாளிற் பார்த்தபொழுது குணமானவன் போற் காணப்பட்டான்; அதனால், நானும் ஊரோடு தேசத்தோடு சொந்தத்துக்குள் ஒருவனை எடுத்துச் சடங்கு முடித்து வைத்துவிட்டால் நல்லாயிருப்பார்க ளென்று நினைத்தேன்; இப்படிவருமென்று முந்தி ஆருக்குத் தெரியும்; ஏன், அந்தப் பையனில் ஒருத்தர் விரல்மடித்து ஒருகுறை சொல்ல முடியாமல் நடந்து வந்தான்; இப்பொழுது எங்கள் பொல்லாத காலம் என்பிள்ளை செய்த பாவமோ, எவரும் கண்திட்டி நாத்திட்டியோ, ஆர் அறிவார்; நாம் ஒன்றை நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்த விதமாய் வந்து முடிந்து விட்டது. அம்மான், நீங்கள்தான் ஒருவாறு இதை சரிப் பண்ணி வைக்கவேண்டும்; இன்னும் நாட்பட்டால் காரியம் இங்கே அயல் வட்டத்தில் வெளிவந்து விடும்; அதற்கு முன் அலுவல்பார்க்க வேணும்; அல்லாமலும் அம்மான், உங்களுக்குத் தெரியாததல்ல ஒரு குடும்பத்தை நெடுநாள் பிரிந்திருக்கக்கண்டால் பிறகு ஒற்றுமைப்படுத்துவது லேசானகாரியமல்ல; எல்லாம் அறிந்த உங்களுக்குப் பெண்ணாய்ப் பிறந்த நான் அதிகஞ் சொல்லுவதென்ன .....” என்று கூறி முடித்தாள். முருகர் தம் மூக்கில் விரல் வைத்துச் சிறிது நேரம் யோசித்தார்.

* * *

உலகம் பலவிதம்: 1934 பெப்ரவரி 15

அமுதாம்பிகை (முற்றொடர்)

என்ன செய்யலாம் தம்பீ, எனக்கும் வயசு 78 ஆய்விட்டது. அந்தக் காலத்திற்கும் இந்தக் காலத்திற்கும் மெத்த வித்தியாசம் ஏற்பட்டுக் கொண்டது. ஐயோ, இந்தக்காலத்துப் பிள்ளை கள் ஆணானாலுஞ் சரி, பெண்ணானாலுஞ்சரி பிதா மாதாக்கள் பெரியோர் நாலுகாரியமறிந்தவர் சொல்லும் புத்தியைக் கேட்கிறார்களில்லையே. ஏதும் புத்திசொல்லப்போனால் “எல்லாம் எங்களுக்குத் தெரியும், நீ ஒன்றுஞ் சொல்ல வேண்டாம்; உன்பழைய ஏட்டைக் கட்டிவை” என்று ஏறுமாறாக எங்களுடன் சண்டைக்கு வருகிறார்கள். அதற்கு மேற்பேசி மரியாதை கெடுவதைப் பார்க்கிலும் நாமாக ஒதுங்கிக் கொள்வது நல்லதென்றெண்ணிக்கொள்ள வேண்டியிருக்கிறது. இவை மாத்திரமோ, இந்த நாளையிற் பிள்ளைகள் கடவுளைக் கையெடார்கள்; கோயிலுக்குப் போகார்கள்; பழைய பழக்கவழக்க ஒழுக்கங்களைக் கைவிட்டு நவநாகரிகம் படைத்துத் தலைகீழாய் நின்று கூத்தாடுகிறார்கள்; பெரிய மனுஷருடைய சகவாசங்கிடையாது, குடிகாரன், சூதாடுபவன், கபடி, தூர்த்தன், முதலானவர்களோடு சேர்ந்து கொள்ளுகிறார்கள்; வரவுக்கு மேற்பட்ட செலவு செய்கிறார்கள்; கண்டதேகாட்சி கொண்டதே கோலமென்று சாதிக்கிறார்கள். நூற்றிலொருவர் ஆயிரத்திலொருவர்தான் நல்ல பிள்ளையென்று கண்டவர்கள் சொல்லத்தக்கதாய் நடந்துகொள்ளுகிறார்கள். இதற்கு நாம் என்ன செய்வது, சில வாலிபரைப் பார்த்தால் பெண்டாட்டியே கண்கண்ட தெய்வமென்று பாராட்டி அவள்குறிப்பறிந்து நடக்கிறார்கள்; சில வாலிபர்கள் தன்னை நம்பி வந்த பெண்ணைக் கலங்கவிட்டு அவள் கொண்டுவந்த சீதனப்பணத்தையும் பொருள் பண்டங்களையும் கூடாத கூட்டங் கூடிக் குடித்து வெறித்து அழித்துவிட்டுக் கடைசியில் தாமும் மண்ணாய்ப் போகின்றார்கள்”

* * *

“ஆண்பிள்ளைகள்தாம் இப்படிக் கெட்டுப்போனார்கள்; பெண்பிள்ளைகள் திறமோ என்றால் அவர்களும் பழகாத பழக்கங்களைப் பழகி, நடவாத நடை நடக்கத்தலைப்பட்டு, வரவுக்கு மேற் செலவழிக்கத் தொடங்கிக் கொள்ளுகிறார்கள்; குடித்தனத்தைச் செப்பமாக நடத்த அறியார்கள். ஆண்மாரித்தனமாக நடப்பவர்கள்தான் இந்தக்காலத்தில் அதிகம்; ஆனால், ஒன்று சொல்லுகிறேன், பிள்ளை; இந்தப் பெண்களைப் பழுதாக்குவது அதிகமாக ஆண்பிள்ளைகள்தான்; அவர்களுக்கு இவர்களைக் கொண்டு நடத்தத் தெரியாது. இவைகளையெல்லாம் அறிந்துதானே பிற்காலத்திலிருந்த புலவரொருவர் ஒரு பாட்டுப் பாடியிருக்கிறார். அதைக் கேளுங்கள்:

“தாய்புத்தி சொன்னால் மறுத்திடுங் காலம் உயர்
தந்தையைச் சீறு காலம்,
சற்குருவை நிந்தைசெய் காலம் மெய்க்கடவுளைச்
சற்றுமெண்ணாத காலம்
பேய் தெய்வமென்று உபசரித்திடுங் காலம் நற்
பெரியோர் சொற் கொளாத காலம்
தேய்வுடன் பெரியவர் சிறுமையுறு காலம் மிகு
சிறியவன் பெருகு காலம்
தெருவில்ஓடி ஆடினோர் வரிசைபெறுகாலம்வசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசம்புவோர்க் குதவுகாலம்
வாய்மதம் பேசிவிடும் அநியாய காரர்க்கு
வாய்த்தகலி காலம் ஐயா,
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே."

அப்படி, தம்பீ, இது காலத்தின் கோலம்! இதில் நாம் ஒருவரையும் குறைசொல்லக்கூடாது. ஏதோ உங்களுடைய கருமமும் நான்தானே பார்க்கவேண்டியவன். அந்த முருகன் கிருபையால் இந்த முருகன் தலையிட்டு இது வரையிற் கைகூடாத காரியம் ஒன்றுமில்லை. அவர் இருக்கிற இடத்திற்கு நான் ஒருமுறை போய்த்தான் வரவேண்டியிருக்கிறது. இங்கும் பல அலுவல் அவசியம் பார்க்கவேண்டியவை உண்டு; அடுத்த கிழமைவரையிற் போனாலென்ன" என்று முருகர் வேலாயுதம் பிள்ளைக்குச் சொன்னார்.

* * *

"அம்மான், ஏதோ கூடிய சீக்கிரத்தில் இந்தக் கருமத்தைப் பார்த்துவைத்தல் நல்லது. போய்வருதற்கான பயணச்செலவும் இன்னும் ஆகவேண்டிய செலவும் நான் தருகிறேன்; எப்பொழுது புறப்படுவதென்பதை மாத்திரம் இரண்டு நாளுக்கு முந்திச் சொல்லி விடுங்கள்" என்று வேலாயுதம்பிள்ளை சொல்லிக் கொண்டிருக்கும்போது, அவருடைய மனைவி, "அதுசரி கண்டீர்களோ, பிள்ளையின் சம்மதத்தையுங் கேட்டுக் கொண்டல்லவோ, நாங்கள் அம்மானை அங்கே அனுப்பவேணும்" என வேலாயுதம்பிள்ளை, "மெய்யே, அம்மான், அப்படிக்கேட்பது அவசியந் தானோ" என்று முருகரைக் கேட்க, முருகர் "ஓம், தம்பி, அது சம்மதங் கேட்கத்தான் வேணும்; பெண்ணின் சம்மதங் கேளாமல் பிதாமாதாக்கள் ஒன்றைப் பேசுவதும் செய்வதும் அந்தக் காலத்திலாகும். இப்பொழுது காலம் மாறிக்கொண்டது; பிள்ளை நீ போய், தங்கச்சிக்குக் காரியத்தைச் சொல்லி, சம்மதந்தானோ என்று கேட்டுவாரும்" என்று தாய் வீட்டினுள்ளே சென்று சொல்லிக் கேட்க, மகள் என்னைக் கொன்றாலும் நான் இனி அங்கே போகமாட்டேன், வேண்டுமானால் அவர் இங்கே இடையிடையே விடுதலை நாட்களில் வந்து போகட்டும்" என்றாள். மகள் சொன்ன மறுமொழியை தாய் புருஷனுக்கும் முருகருக்கும் சொன்னாள். முருகர் "ஓம் பிள்ளை, அதென்ன பிறகு சரிவரும்; பிறகு நாங்களுந்தேவையில்லை" என்று சொல்லி மெல்லச் சிரித்தார்.

* * *

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போது தபாற்காரன் இந்துசாதனம் முதலிய சில பத்திரிகைகளையும் இரண்டு கடிதத்தையும் ஒரு போஸ்காட்டையும் கொண்டுவந்து வேலாயுதம் பிள்ளை கையிற்கொடுத்துப் போனான். அத் கடிதங்களில் ஒன்றின்மேல் விலாசத்தை உற்றுப் பார்த்துப் படித்துவிட்டு "இது பிள்ளைக்கு அவர் எழுதிய கடிதம்போலிருக்கிறது" என்று சொல்லி மகளிடங் கொண்டுபோய்க் கொடுக்கும்படி தன் மனையாளிடங் கொடுத்தார். அவள் அதைத் தன் மகளிடங் கொடுக்க மகள் கை நடுங்க அச்சத்தோடு வாங்கித் திறந்து பார்த்தாள் "என்னவாம் பிள்ளை" என்று கேட்டுத் தாயும் பக்கத்திலே நின்றாள்.

* * *

உலகம் பலவிதம்: 1934 மார்ச் 01

அமுதாம்பிகை (முற்றொடர்)

அமுதாம்பிகை கடிதத்தைப் பிரித்துப் பார்த்தபோது அது பாரதம்போற் பரந்து கிடந்தது. கடிதம் எழுதியவர் தன் கணவன்றானே என்று அதன் இறுதியைப் பார்த்தாள்; அவர் கைச்சாத்திடப்பட்டிருந்தது. கவலையோடும் பயபத்தியோடும் ஆர்வத்தோடும் அக்கடிதத்தை மெல்லப் படித்துப் பார்த்தாள். ஆவலோடு தன் மகள் முகக்குறிப்பை அவதானித்துக்கொண்டும் பதிலை எதிர்பார்த்துக்கொண்டும் நின்ற தாய், மனஞ் சகியாளாய், "பிள்ளை, என்ன எழுதியிருக்கிறார். சொல்லலாமென்றாற் சொல்லேன்" எனலும், "அம்மா, உங்களை யொழித்தும் ஒரு இரகசியமா, அவர் வேறொன்றும் எழுதவில்லை; மெத்தக் கவலைப்பட்டு எழுதியிருக்கிறார்; தான் செய்ததெல்லாம் பெருந்தவறென்று வருத்தப்படுகிறார்; பிள்ளைகளையுங் காண ஆசைப்படுகிறார்; நான் அந்த இடத்தை விட்டு வந்தபிறகு சாப்பாட்டு வசதி அவருக்கு இல்லைப்போல் இருக்கிறது; பாவம்! ....." என்று கவலையோடு அமுதாம்பிகை சொல்வதற்கு இடையில், அவள் தாய், "அது சரி, மகளே, தன் பிள்ளைகளைக் காண அவர் ஆசைப்படுகிறாரல்லாமல், உன்னைக்காண ஆசையில்லையாமோ; அதைப்பற்றி ஒன்றும் எழுதவில்லையோ" என்று கேட்க, "என்னைப்பற்றியும் எழுதித்தானிருக்கிறார்" என்று மகள் சொல்ல, "எடிபிள்ளை, ஏன் விழுங்குகிறாய்? அதை ஒருக்காற் படித்துவிடேன்; உன்னைப்போல நான் அந்தநாளில் நாலு எழுத்தறிந்திருந்தால் இப்படியெல்லாமேன் கேட்டுக்கொண்டு நிற்கப் போகிறேன்" என்று சொல்ல, மகள் படிக்கத் தொடங்க, தலைவாசலில் முருகரம்மானோடு பேசிக்கொண்டிருந்த வேலாயுதம்பிள்ளையும் அங்கே வந்து, "மகளே, அவர் என்ன எழுதியிருக்கிறார்" என்று கேட்க, மகள் "நீங்கள் படித்துப்பாருங்கள்" என்று காகிதத்தைத் தகப்பனிடம் நீட்டினாள். "அது சரியல்ல, அவர் உனக்கு எழுதின காகிதத்தை நான் ஏன் பார்ப்பான்; நீ படித்துவிட்டுப் பொழிப்பை எனக்குச் சொல்லு; முருகரம்மான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் இருக்கிறார்; நான் அவருக்கும் உதைப்பற்றிச் சொல்லவேண்டும்" என்று வோலாயுதம்பிள்ளை கூறி விட்டுத் தலைவாசற்பக்கம் போய் முருகருடன் பேசிக்கொண்டிருந்தார். மகள் அக்கடிதத்தைத் தாய் கேட்கப் படிக்கின்றாள்.

உ

... ...

"கண்ணே அமிர்தம்!

உன் கணவனென்றிருக்கும் நான் இப்பொழுது எழுதியனுப்பும் கடிதத்தை ஏற்றுப் படித்துப் பார்ப்பாயோ, இல்லாவிட்டால் வாங்கி என் கடிதம் என்று கண்ட மாத்திரத்தே பிடித்துக் கிழித்துக் கசக்கிக் காலில் இட்டு மிதித்து உழக்கி விடுவாயோ உன் மனநிலை எப்படியிருக்கின்ற தென்பதை நான் உள்ளபடி அறியேன். நான் உனக்கு ஒரு கடிதம் எழுத வேண்டுமெனத் தொடங்கி ஏறக்குறையப் பதினைந்து நாட்கள் வரையிற் கழிந்தன. என்ன விதமாகக் கடிதமெழுதுவ தென்பதையிட்டு எண்ணியெண்ணியே இத்தனை நாட்களுந் தொலைந்தன. இக்கடிதத்தை இப்பொழுதும் மனம் கூசிக்கூசியே எழுதுகின்றேன். கேடு வரும் போது மதிகெட்டுவரும் என்ற விதமாய், பொல்லாதகாலம் வரவே, எனக்கு விபரீதமான புத்தி ஏற்படலானது. கெட்டவர்களுடைய கூட்டுறவு வந்துசேர்ந்தது, தெய்வத்தை மறக்க நேர்ந்தது. உன்னையும் என்பிள்ளைகளையும் ஒரு நிமிஷமேனும் விட்டுப் பிரிந்திருக்க மனமில்லாத நான் கெடுகாலத்தினால் உங்களை மறந்திருக்கப் பழகிவிட்டேன். உப்பின் அருமை உப்பு ஒழிந்தாலே தெரியும் என்றமாதிரி நீ இந்த வீட்டைவிட்டுப் போனபின்பே உன் அருமை எனக்குத் தெரியவந்தது; அவ்வளவோடு நின்று விட்டதா! இல்லை! இல்லை! நீ உங்கிருந்து கவலைப்பட்டமையினாற் போலும், எந்தநேரம் நான் கண்களை மூடினேனோ, கொஞ்சம் உறங்கினேனோ, அந்த நேரமெல்லாம் உன்னைப் போல் ஓர் அழகிய பெண்ணுருவம் வெளிப்பட்டு என்னைச் சீறிச் சினக்கவும் வெருட்டிப் பயமுறுத்தவும் துயர்ப்படுத்தவுங் காண்கிறேன். இதனைச் சிலர் கனவென்றும் சிலர் நினைவென்றுஞ் சொல்வர். ஆனால் நான் உனக்குச் செய்த அநியாயங்களும் சிறுப்பினைகளுமே திரண்டு ஒரு பெண்ணுருவாகி என்னை இப்படி வருத்தத் தலைப்பட்டதென்பதே என் கொள்கை. கண்ணே, உனக்கு நான் செய்த அக்கிரமங்களை இப்பொழுது நினைக்க நினைக்க என்னெஞ்சே என்னைச் சுடுகின்றது. எனக்குப் பயம் உண்டாகின்றது. எனக்கு நீ பெண்ணாக வந்தமையால், பேடி பிடித்த வாள் போலவும், செவிடன் காதிற் சங்கநாதம் போலவும் குருடன் முகத்திற் கண்ணாடிபோலவும் குடத்துள் வைத்த தீபம் போலவும், கழுதையின் முதுகில் ஏற்றிய குங்குமப் பொதிபோலவும், சங்கீதமறியான் கையிற் கொண்ட யாழ்போலவும், குரங்கின் கைப்பூமாலை போலவும் ஆனாய் என்பது நிசம்.

அமிர்தம், உனக்கு நான் அதிகம் எழுதி உன்னை இன்னமும் வருத்துவதனால் வரும் நன்மை யாதுமில்லை. அந்த வஞ்சகனான சின்னத்துரை யென்பவனே, என்னை இனிமேல் ஈடேறாதபடி கெடுத்து விட்டான். அவனே எனக்குக் குடிவெறியைப் பழக்கிவிட்டான்; அவனே வேசியர் கூட்டுறவைச் சேர்த்து விட்டான்; அந்தத் துரோகி தான் என் மானம் மரியாதை ஒழுக்கம் எல்லாவற்றையும் கெடுத்தவன். என்னிடத்துள்ள பணம் முழுவதையும் கள்ளுக்கும் சூதுக்கும் வேசிக்கும் இன்னமுள்ள தீமைகளுக்கும் செலவழித்து விட்டு நான் இப்பொழுது ஓட்டாண்டியாய் நின்று பரதவிக்கின்றேன். என்னை முன்னர் அறிந்து மதித்து வந்தவர்களெல்லாரும் இப்பொழுது என்னைப் புல்லனென்று அவமதிக்கத் தலைப்பட்டுக் கொண்டார்கள். உன்னையும் பிள்ளைகளையும் நான் இவ்விடத்திலிருந்து துரத்தி விட்டேனென்பதே இங்குள்ளாருடைய எண்ணம்; அதனால் நம்முடைய ஊரவர்களாய் இங்கு வந்திருப்பவர்கள் எவரும் என்னுடன் பேசுவதுமில்லை; என் வீட்டிற்கு வருவதுமில்லை. உன்னை இன்றி நான் இங்கிருந்து உத்தியோகம் பார்த்தலும் முடியாது. ஆதலால், போனதெல்லாம் போகட்டும்; நான் உனக்குச் செய்த பொல்லாங்கு எல்லாவற்றையும் மறந்து ஒரு வேற்றுமையுமில்லாமல், நீ உன்பிள்ளைகளுடன் இங்கு வந்திருந்தாலே நானும் மன ஆறுதலாக இருக்கமுடியும். இனிமேல் நான் கெட்ட கூட்டங் கூடமாட்டேனென்றும் உன் எண்ணத்துக்கு மாறாக நடக்க மாட்டேனென்றும் தொடக்கத்தில் நாங்கள் எவ்விதம் பரஸ்பரம் இருந்தோமோ அப்படியே இனிமேலும் இருப்போமென்றும் உனக்கு உறுதிப்பண்ணிக்கேட்கிறேன். மாமிக்கும் என் சுகத்தைச் சொல்லி இனிமேல் என் விஷயமாகக் கலங்கவேண்டாமென்று சொல்லு. இதற்குள் 60 ரூபா மணிஆடர்" வைத்திருக்கிறேன். அதை மாற்றுவித்து ஆகவேண்டியவற்றைச் செய்யவும். பதில் எழுதினால் அக்கடிதத்தை பெற்றுக்கொண்டு உங்களைக் கூட்டிக்கொண்டு வரும்படி உவ்விடம் வருவேன். பதிலை எதிர் பார்க்கின்றேன்.

இங்ஙனம்

உங்களை இதுகாறும் மறந்திருந்த
மே. இராசையா

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடிதம் வாசிக்கும்போதெல்லாம் அமுதாம்பிகை கவலைப்பட்டாள்: கண்ணீர் விட்டாள்; நெட்டுயிர்த்தாள். தாய் மிகவும் ஆநந்தமடைந்தாள். "பிள்ளை, இப்போ அவர் எழுதியிருக்கிறாரே உன் எண்ணமென்ன? நீ போவதோ? விடுவதோ? என்று கேட்க மகள் உடனே புறப்பட்டு போக வேண்டுமென்பதே அவளுக்கும் விருப்பமானாலும், அதனை வெளிவிடாமல், "அம்மா நீங்களும் அப்பாவுஞ் சொல்லுகிறபடி செய்கிறேன்" என்றாள். தாய் உடனே தலைவாசற்பக்கத்தே சென்று, தன் மருமகன் எழுதிய கடிதத்தின் சாரத்தைத் தன் புருஷனுக்கும் முருகரம்மானுக்குஞ் சொன்னாள். வேலாயுதம்பிள்ளை முருகரைப்பார்த்து "அம்மான், என்ன செய்வது அந்த ஆள் வந்து கூப்பிட்டால் என் மகளும், பிள்ளைகளும் போவதுதானே முறையென்றார். "தம்பி, அதற்குந் தடையோ; புருஷன் பெண்சாதிக்கிடையில் பிணக்குண்டாவது வழக்கந்தான்; பிறகு அவரவர்கள் தாம் செய்த பிழையைச் சிந்தித்து மாறிச் சமாதானப்படுவதும் வழக்கம். மருமகனை லீவெடுத்துக்கொண்டு அடுத்த கிழமை வரும்படி பிள்ளையிடஞ் சொல்லி உடனே பதில் எழுதிவியுங்கள். வந்த இடத்தில் இப்படிக் கடிதம் வந்தது எனக்குப் பெரிய சந்தோஷம். நானும் உங்களுக்காக ஒருபோது அடுத்த கிழமை வரையில் உங்கள் மருமகனிருக்கும் இடத்திற்குப் போகவேண்டி வருமோ என்று பயந்து கொண்டிருந்தேன். எனது நல்லகாலந்தான் இந்த நேரத்தில் இங்கு கடிதம் வந்தது; இன்னும் கொஞ்சநாள் இங்கே பொறுத்த வேலை எனக்கு இருக்கிறது" என்று முருகர் சொன்னார். வேலாயுதம்பிள்ளை "என்ன அம்மான் பெரிய வேலை" என்று கேட்க, "தம்பீ, அதைப்பற்றி இப்பொழுது கேட்காதே; அது பெரிய பாரதம்; இன்னொருமுறை இந்தப் பக்கமாக வரும்போது சொல்லுகிறேன் என்று முருகர் சொல்ல, "அதைப் பிறகு சொல்லலாம், அம்மான், என்ன விஷயம் என்றதை மாத்திரம் இப்பொழுது சொல்லிவிட்டாற் போதும்" என்று வேலாயுதம்பிள்ளை கேட்டார். "வேறொன்றுமல்ல எங்களுடைய ஆட்கள் கொஞ்சப்பேர் தாமும் அந்தக் கவுன்ஸிலுக்குப் போகவேண்டுமென்று இந்த நாட்களிற் கங்கணங்கட்டிக்கொண்டு நிற்கிறார்கள். அவர்களுள் இரண்டு மூன்று பேர், என்னையும் தங்களுக்கு உதவி செய்யும்படி தனித்தனி வந்து வேண்டியிருக்கிறார்கள்; அதுதான் பெரிய சங்கடமாயிருக்கிறது. ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச்சொன்னால் முடவனுக்கு கோபம் என்ற நிலைமையில் இருக்கிறது என்பாடு; அந்தக்கதை இனி மேலாகட்டும்; பிள்ளைக்கு நீங்கள் நல்ல புத்தி சொல்லி, அவர் வரும்போது அவரோடு அனுப்பி வையுங்கள். அவருக்கும் இனிமேல் குடித்தனம் நடத்தவேண்டிய முறைகள் எவரையுங் கொண்டு சொல்லுவியுங்கள்; ஒரு குறையும் வராது; நான் போய்வருகிறேன்" என்று முருகர் வேலாயுதம்பிள்ளைக்கும் மனைவிக்குஞ் சொல்லி விடைபெற்றுக்கொண்டு போனார்.

* * *

அமுதாம்பிகை அன்றைக்கே தன் கணவனுக்கு அன்பான கடிதமொன்றெழுதி அதில் தன்னையும் பிள்ளைகளையும் விரைவில் வந்து கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்றுங் கேட்டிருந்தாள். அதன்படி அடுத்த வாரம் இராசையா விடுதலைபெற்று வந்து சிலநாள் தன் மனைவி வீட்டில் நின்று பின் மனைவியையும் பிள்ளைகளையும் உடன் கூட்டிச்சென்று, முன்போல அன்பாகவும் ஆதரவாகவும் அந்நியோன்னியமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்தான்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்

[அரசியல், சமூகக் கட்டுரைகளின் தொடர்ச்சி]

[உலகம் பலவிதம் 1934 மார்ச் 8இலிருந்து உலகம் பலவிதம் 1935 ஏப்ரல் 7வரை கிடைக்கவில்லை]

உலகம் பலவிதம்: 1935 ஏப்ரல் 14

வருகிற ஞாயிற்றுக்கிழமை புது வருடம் பிறக்கின்றது. புதுவருடக் கொண்டாட்டத்தை இங்குள்ளார் இரண்டு மூன்று விதமாகக் கொண்டாடுகின்றனர். வைதிக முறைப்படி யொழுகுவோர் வருடப்பிறப்புப் புண்ணிய காலத்தில் சூரிய பொங்கல் விசேஷபூசை ஆலய வழிபாடு தானதருமம் விருந்து முதலியன செய்து வருடப் பிறப்புத் தினத்தையும் அதனை யண்டின வாரத்தையும் கழிப்பர். வருடம் பிறந்த பின் எந்தக் கருமத்தைச் செய்யப் புகினும் நல்லநாள் பார்த்தே தொடங்குவர். குரு தரிசனம் ஆசிரியர் தரிசனம் பெரியோர் தரிசனம் கைவிசேஷம் வழங்கல் முதலிய நற்கருமங்களையும் அவ்வைதிகர் செய்வர். சிறுவர் வாலிபர்களாயுள்ளார்க்குப் புதுவருடப் பிறப்புக் காலம் விடுதலை நாட்களானதால் போர்த்தேங்காயடிப்பர், பலவகையான சுதேசிய பரதேசிய விளையாட்டுக்களை அவர்கள் விளையாடுவர். பெண்பாலார் தீபாவளி தமக்குவாய்த்த கொண் டாட்டமென்றும் வருடப்பிறப்பு அவ்வளவு வாய்ப்பான கொண்டாட்டமல்லவென்றும் சிறிது கவலைப்படுவர்.

* * *

வைதிகக்கொள்கைகளில் நம்பிக்கை யில்லாதவர்கள், இவைகளெல்லாம் பேய்த்தனமான கட்டுப்பாடுகள், சீர் திருந்தாதவர்கள்தாம் செய்யுஞ் செயல்கள், நாளென்ன, நட்சத்திரமென்ன, எல்லாநாளும் நாள்தான்; எல்லா நட்சத்திரமும் நட்சத்திரந்தான் என்று, தம்மைப் பரிகசிப்பாரைத் தம் அறியாமையால், வைதிகரையும் பழையோரையும் நிந்தித்துக் காலம் போக்குவர். தம்மைப்பெற்ற தாய் தந்தையரின் சொல்லைக் கேட்கமாட்டார்கள் ஆனால் இவ்வாறு பெற்றோர் பெரியார் சொல்லைக் கேளாத நவநாகரிகர் சிலர் தம் பெண்டாட்டி சொற்கேட்டு இப்படியான வைதீக முறைகளை அநுட்டித்ததை முருகேசு நேரிற் பார்த்துள்ளார்.

* * *

முருகேசு சொன்னது "போ நான் தான் பேசிச் செய்துவைத்த சடங்கு வருடப்பிறப்புக்கு முந்திய தை மாசத்திலுள்ள கடைசிநாளில் நிறைவேறிய கலியாணம். பையனுடைய பெயர் தங்கத்துரை; பெண்ணின் பெயர் தங்கரத்தினம்மாள் இருவரும் செல்வக்குடியிற் பிறந்தவர்கள். இருவருக்கும் பெற்றார் சீவந்தர்களாயிருக்கிறார்கள். பையனுக்கு வைதிக முறைகளில் நம்பிக்கையில்லை; பெண் தமிழும் இங்கிலீசும் கொஞ்சம் கொஞ்சம் விடுதிப் பள்ளிக்கூடத்திற் படித்துள்ளவளாதலால் வைதிகக் கொள்கைகளிற் பாதி நம்பிக்கையும் பாதி நம்பிக்கையீனமும் உண்டு. இருவரும் பரஸ்பரம் அன்பு பூண்டவர்கள். புருஷன் சொல்லைப் பெண் தட்டி நடப்பதில்லை, பெண்ணின் சொல்லைப் புருஷன் மீறி நடப்பதில்லை. சில நாட்கள் செல்ல, கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி யென்பதைத் தங்கத்துரை மறந்து, மனைவியின் மனக்குறிப்பறிந்தொழுகும் மணவாளனானான். புதுவருடம் பிறந்தபின் முதல் வந்த வியாழக் கிழமையில் தங்கத்துரை தன் மனையாளைப் பார்த்து "ஐஸே, டீயர் தங்கம், இன்றைக்குப் பின்னேரம் இருவருமாக உங்கள் வீட்டிற்குப் போவோம்" என்றான்; தங்கரத்தினம் அதற்கென்ன அப்படியே செய்வோம்; நல்லதாய் ஒரு காறுக்குச் சொல்லிவையுங்கள் என்றார். இதைக் கேட்டுக் கொண்டு வெளி விறாந்தையில் நின்ற தாய், "பிள்ளை, தம்பி என்னசொல்லுகிறான்" என்று மருமகளைக் கேட்க "மாமி அவர் இன்றைக்குப் பின்னேரம் எங்கள் வீட்டிற்குப் போகவேணுமாம்" என்று பதில் சொன்னாள். "உங்கள் வீட்டிற்குப் போகாமல் வேறுயார் வீட்டிற்கு முதல்முதற் போவது; ஆனால் இன்றைக்கு வியாழக்கிழமை, வருடம் பிறந்து முதன் முதல் வியாழக்கிழமையிற் போகக்கூடாது; கள்ள வியாழன் கழுத்தறுக்கும், ஒரு நல்லநாட் பார்த்தல்லவோ போகவேணும் என்றாள் தாய். "கண்ணே, என்னவாம் கிழவி" என்று மகன் தன் மனைவியைக் கேட்பதற்கிடையில், தாய் சமீபத்தில்வந்து "ஓமடா, மகனே, நான் கிழவிதான்; அதை இல்லையென்று ஆர் சொன்னது; கிழவி சொல்லு கின்னரகாரனுக்கு ஏறாது. மகன் கேளான் என்பது தாய்க்குத் தெரியும் "பிள்ளை! இப்படி யொருக்கால் வந்துவிட்டுப் போம்" என்று மாமி தன் மருமகளைக் கூட்டிக்கொண்டு அடுக்களைப் பக்கம் போய், "பிள்ளை, நாங்கள் அவனைச் செல்லமாய் வளர்த்துவிட்டோம், ஒரேயொரு பிள்ளையென்று; நாங்கள் சொன்னால் அவன் கேளான் "நீ ஒருக்காற் சொல்லும் பிள்ளை, இன்றைக்குப் போனால் உம்முடைய தாய் தகப்பன் உம்மைத்தான் குற்றஞ்சொல்லுவார்கள்; அல்லாமலும் நாளல்லா நாளிற் போகவொண்ணாது" என்று மாமி சொல்ல, மருமகள் கேட்டுக்கொண்டு புருஷனிடம் வந்து "ஓம், பாருங்கள்; இன்றைக்குப் போவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியல்ல; போனால் உங்கள் மாமன் மாமி உங்களையும் என்னையும் தான் குறை சொல்லுவார்கள்; நாளைக்குப் பின்னேரம் நிச்சயமாகப் போவோம், எனக்காக இப்படிச் செய்யுங்கள்" என்று மெல்ல மெல்லப் பன்னினாள். "ஆல் றயிற், டீயர், நாளைக்குத்தான் போகவேண்டுமென்று நீர் விரும்பினால் நான் மறுக்க முடியுமா; நாளைக்கே போவோம் என்றார் தங்கத்துரை; இப்படியிருக்கிறது ஐயா, இந்த நாளிலுள்ள வாலிபர் போக்கு" என்று முருகேசு சொல்லி முடித்தார்.

* * *

வேறுசிலர் புதுவருட தினத்தில் மருத்து நீர் வைத்து ஸ்நாநஞ் செய்யவேண்டுமெனப் பஞ்சாங்கத்திற் சொல்லப்பட்டிருப்பதைப் பரிகசித்து ஒதுக்கிவிட்டு மது நீரோடு வருடப்பிறப்புப் புண்ணியகாலத்தை அநுட்டிக்கத் தொடங்குகின்றனர். புது வருடம் வரப்போகிறதேயென்று முந்தியே சாராய நாதனைத் தங்கள் வீட்டில் தேடிப்பிடித்துக் கொண்டுவந்து வைத்துக்கொள்ளுகிறார்கள். மங்கலமாக இருக்க வேண்டிய இல்லம் அன்று திருவன் சாராயநாத னுடைய கூட்டுறவால் அமங்கலமாக மாறிவிடுகின்றது. சாராயநாதனோடு கூடிய வீட்டு எஜமான் தன் பெண்டாட்டிக்கு வருடப்பிறப்பில் நல்ல உடை கொடுப்பதற்குப் பதிலாக பொல்லாத உதையைக் கொடுக்கின்றான்; போர்த்தேங்காயடியிற் பொழுதுபோக்கும் அவன் பிள்ளைகளுக்குப் போர்த்தேங்காயைவிட்டுத் தகப்பன் அடியே வழங்குகின்றான். மதுமயக்கஞ் சிறிது நீங்கினால் அவன் நேரம் போக்குவது சீட்டு ஆடுதலிலும் சண்டையிடுவதிலுமாகும். கைவிசேஷம் வழங்குதற் காகிய சுபதினத்தில் மனைவிமக்களுக்கு இவ் வெறியன் அவர்கள் கன்னத்திலும் தோளிலும் முதுகிலும் அடித்துத் தன்கைவிசேஷத்தைக்காட்டி வைக்கிறான். புது வருட புண்ணிய காலத்திற் கோயிலுக்குப் போவதற்குப் பதிலாகக் கள்ளுக்கடைக்கும் சாராயத் தவறணைக்கும் போய் ஆங்காங்கு முறையே எழுந்தருளியிருக்கும் சொல்விளம்பியப்பன் சாராயநாதன் என்னுமிவர்களையே தரிசித்துக்கொண்டு பரமானந்தத்தோடு மீண்டும் வரும் மார்க்கத்தில் ஆடவும் பாடவும் அடிபிடிப்படவுந் தொடங்கிவிடுவார்கள். இப்படியானவர்களுக்கு வருடம் முழுவதும் வருவது அநர்த்தமேயாகும். இவ்வீணர் ஈடேறு நாள் எந்நாளோ யாமறியேம்.

* * *

உலகம் பலவிதம்: *1935 மே 02*

யாழ்ப்பாணப் பகுதியிற் பல இடங்கட்குப் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் பஸ்களுக்கும் சாமான் ஏற்றிச் செல்லும் லொரிகளுக்குமிடையே அதிக பேதத்தைக் காணோம். ஒரே பஸ்ஸிலேயே அரிசி மூடையையும் விறகையும் மனிதனையும் ஏற்றிக்கொண்டு போகிறார்கள். இவ்வள வோடு மாத்திரம் இருந்துவிட்டாற் போதாதா? எத்தனையோ பஸ்களின் மேற்புறத்தே மீன்பறி கறிக்கடகம் வண்ணானுடைய அழுக்குத்துணிப் பொதி இவ்வளவும் ஏற்றப்பட்டபின் மீன்பறிகாரன், கறிக்கரி, கட்டாடி, ஐயர், "சைவம்" ஏனையோரெல்லாரையும் ஒருங்கு பஸ்ஸினுள் ஏற்றி விடுகிறார்கள்; இவ்வாறு ஏற்றப்பட்டபடி பஸ் வேகமாகப் போகும்போது, கள்ளுத் தவறணைகள் வழியிற் காணப்பட, அவர்களிற் சிலர் நடுத்தெருவில் தள்ளாடியபடி வந்து கொண்டு "ஏ மறியடா, பஸ்ஸை" என்று செல்ல வொட்டாது தடுத்துக் குறுக்கே நிற்கிறார்கள். "கண்டக்ரர்" பயம் முதலிய பல காரணங்களினால் அக் குடிகாரரையும் பஸ்ஸில் ஏற்றித்தான் தீர வேண்டியவராயிருக்கிறார். இவர்களும் ஏறிக்கொள்ள பஸ்ஸிலும் பூரண பாரமாய் விட, ஏனைய பிரயாணிகளுக்கும் நேரக்கூடிய வசதியீனங்கள் எல்லாம் வந்து சேருகின்றன. இதற்கிடையில் பெரிய கடையிலிருந்து பஸ்ஸிலேறிய பிரயாணிகளுட் சிலர் அங்கு வாங்கிய மீன் உமல், அஞ்சு முற்சந்தியில் வாங்கிய இறைச்சிப் "பார்ஸல்" இடையில் எங்கேனும் வாங்கிய கருவாட்டுப்பொதி இவைகளையெல்லாம் தாம் தாம் இருக்கும் ஆசனத்தின்கீழ் மெல்லக் கொண்டுவந்து வைத்துவிட்டே ஏறிக் கொள்ளுவர்.

* * *

இக் காரணங்களினாலே பலவகையான துர்நாற்றம் அந்த பஸ்ஸில் மாறிமாறி வீசிக் கொண்டே இருக்கும். ஒரு சமையத்தில் கறிக் கடையில் நாறுவதுபோல் நாறும்; இன்னொரு சமையத்தில் இறைச்சிக் கடையின் வெடில் மணக்கும்; அதில் இருக்கும் பிரயாணிகளுட் சிலர் பெரிய கடையிலுள்ள சாராயத் தவறணைக்குப் போய் வந்தேறியவர்களாதலால், வேறொரு சமையத்தில் சாராயத் தவறணைக்கு அணித்தாகப் போகும்போது எழும் மணம் போன்ற மணம் எழும். கள்ளுத் தவறணையி லிருந்து வந்தோர் இடைவழியில் வந்து ஏறியிருத்தலாற் பிறிதொரு சமையத்திற் கள்ளுத் தவறணையில் ஏற்படும் துர்வாசனை கமழும். அங்குள்ளோருட் பலர் இப்பலவகையான மணத்தையும் நீக்க எண்ணிச் சுருட்டுப் புகைப்பதினாலே, புகையிலையை உலர்த்தும் புகைக் குடிலில் உண்டாகும் கந்தம் அங்கே பரிமளிக்கும். பஸ்ஸிற் பலர் இடையீடின்றி நெருங்கி இருப்பதனாலும் காற்றுக் குறைவாய் இருப்பதனாலும் வெய்யில் அதிகமானதினாலும் வியர்வை உண்டாக, கற்றாளை நாற்றம் இன்னொரு சமையத்தில் உலவும். மீன்பறி கறிக் கடகம் அழுக்குத்துணிப் பொதி இவைகளெல்லாம் ஒருங்கு சேர்ந்து மற்றொரு சமையத்திற், பெரும்பாலும் பஸ் தரிக்கும்போது, முடை நாற்றமாக நாறும். இனி, அந்த பஸ்ஸினுள்ளோர்கள் செய்யுஞ் செயல்களும் பேசும் பாஷையும் ஒரு ஊரில் ஏககாலத்திற் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்களும் பல பேச்சுக்களும் நடக்கும் இயல்பினை ஒத்திருக்கும். ஒருவர் தாம் வெற்றியடைந்த வழக்கைப்பற்றிப் பேசிப் புகழுவார். இன்னொருவர் தமது கிராமத்திலே முதனாளிலோ; சில நாட்களுக்கு முந்தியோ நடந்த அடிபிடியைப் பற்றிப் பேசி அவரே தீர்ப்புஞ் சொல்லி விடுவார். வேறொருவர் சங்கானைக் கிராமச்சங்கத் தெரிவில் நடந்த புதினங்களைப்பற்றிக் கூறுவார். இவை மாத்திரமல்லாமல், பெண் களவெடுத்த வழக்கு, ஆள்மாறித் தாலி கட்டிய வியாச்சியம், அடுத்தமுறை அரசாங்கசபைத் தேர்தல், பெண்கள் மேளம், பேசும்படக்காட்சி மகத்துவம், நெல்லுக்கு வரியேற்றியமை, இன்னமும் கள்ளுக்கடை சாராயத்தவறணைகள் திறக்கவேண்டிய ஊர்கள், தேங்காய் கொப்பறா விலையேறிய புதினம், அராலி அம்மன் கோவில் காட்டு வைரவர் கோயில்களில் ஆடுகோழி வெட்டுந்திருநாள், அரசசக்கரவர்த்தியின் வெள்ளி விழாக் கொண்டாட்டம் முதலிய அநேக விஷயங்கள் அற்பநேரத்தில் அந்த பஸ்ஸிலேயுள்ள சபையோருக்குப் பரஸ்பரம் பிரசங்கிக்கப்படும்.

* * *

இவை மாத்திரமா? இல்லை; இல்லை; இன்னும் விசேஷமான வாக்குஞ் செயலும் பல அவதானிக்கத் தக்கனவாம். அந்தப் பஸ்ஸில் ஏறியிருக்கும் மதுபானிகட்கு வெறியேறிவிட அவர்களுள் ஒருவர் பாடுவர்; மற்றவர் தாளம் போடுவர்; இன்னுமொருவர் கேட்டு ஆநந்தித்துச் சிரக்கம்பனஞ் செய்வர். வேறொருவர் வாய் தும்பியூத நித்திரை தூங்கி அயலிலிருப்பவருடைய மடியில்வீழ, அவர் இவரைச் சினந்து "எட, நீயுங் குடித்தாய் நானுங் குடித்தது மெய்; குடித்தால் இப்படியெல்லாம் நடக்க வேண்டுமோ" என்று அதட்டுவர். பிறிதொருவர் உடுத்திருக்கும் வஸ்திரம் நழுவ வேறொருவர் அதனை உடுத்தி விடுவர். பஸ் வேகமாக ஓடும் போது ஒருவர் கள்ளுமயக்கத்தினால் "ஏனடா, பஸ்ஸை நிற்பாட்டினாய்" என்று சாரதியைக் கோபிப்பர். இதற்கிடையில் "கன்டக்ரர்" இவர்களிடத்திற் பணம் வாங்குவதற்குப் படுங் கஷ்டமோ பார்க்கப் பரிதாபமானது.

* * *

இவைபோக இன்னுஞ் சில விநோதங்களை இங்குள்ள பஸ்களிற் காணலாம். "கட்டாடி வந்து பஸ்ஸில் ஏறினால் கட்டாடி மெத்தையை எடுத்துவிட்டு, வெறும் பலகையில் இரு" என்பார், "கன்டக்ரர்". கட்டாடி அப்படிச் செய்கிறான். கறிக்காறிகளை ஒருபுறமாக இருக்கச் சொல்லுகிறார். மரமேறிகளை "வக்கு" க்குள் இருக்கக் கட்டளை இடுகிறார்.

ஆனால் சாதியிலே தக்க வேளாளனென்று தன்னைச் சொல்லிக்கொள்ளும் இந்தக் கன்டக்ரர் தான் பஸ்ஸின் மேற்புறத்தில் ஏறி நின்றுகொண்டு, கட்டாடி கொடுக்கும் அழுக்குத் துணிப் பொதியையும், கறிக்காரி நீட்டும் கறிக்கடகத்தையும், பரதவர் நீட்டும் மீன் பறியையும் தனது இரு கரங்களாலும் ஏற்று மேலே ஏற்றுபவர். இராவணனுக்குப்போல இவருக்கு இருபது கரங்களிருக்குமேல் அவர் அந்த இருபது கரங்களினாலும் அப் பொதி கடகம் மற்றும் இவைகளை வாங்கி ஏற்றியிருப்பார். பஸ் வைத்து ஓடுவோர் செய்யும் இப்படியான அநாசாரச் செய்கைகள் காரணமாக, மரியாதைக்கு உடன்பட்டோர் பலரும் பெண்களும் இந்நாட்களில் பஸ்ஸிலேறப் பின்னிற்கின்றனர். புகைரதத்தில் இப்படியான செயல்கள் நடத்தல் அரிது. ஆதலாற்றான் அநேகர் புகைரதப் பிரயாணம் வசதியென்று இப்பொழுது எண்ணங்கொண்டு அதனை அபிமானிக்கத் தொடங்குகின்றனர்.

* * *

உலகம் பலவிதம்: *1935* மே *16*

கிராமச்சங்க அங்கத்தவர்களைப் புதியவராகத் தேர்வதில் இப்பொழுது சில விபரீதங்கள் ஏற்பட்டிருத்தலை எவருமறிவர். இவை முதன் முதற் சங்கானைக் கிராமச்சங்க விஷயத்தில் ஏற்பட்டனவேனும் மெல்ல மெல்ல அயற்கிராமங்களிலும் பற்றத் தொடங்கிக்கொண்டது. இதனாற் பலவகையான பிணக்கு, பொறாமை, ஆத்திரம் முதலிய அநர்த்தங்கள் மேல் சாதியாரென்றிருப்போர்க்கும் தாழ்ந்த சாதியினர்க்குமிடையே நேரலாயின. இதில் மேல் சாதியார் ஆத்திரப்படுவது புத்தியீனமல்லவா? ஏன் இவ்வளவு காலமும் கிராமச்சங்கத்தை இவர்கள் நடத்தி வந்தார்கள். இனிமேல் இவர்கள் விலகிக்கொண்டு தாழ்ந்த சாதியாரையே இப்படியான கிராமச் சங்கங்களை நடத்தும்படி விடுவதன்றோ புத்தியாகும். இவர்களும் அவர்களும் கலந்து சங்கங்களை நடத்தப்போனாற்றானே அநர்த்தம் ஏற்படும்! "ஓடம் வண்டியிலேறுவதும் வண்டி ஓடத்தில் ஏறுவதும்" சகசந்தானே.

* * *

எங்கள் அரசசக்கரவர்த்தியின் வெள்ளி விழாக்கொண்டாட்ட காலத்திலே தமிழ் மக்கள் சிலருக்கும் பட்டங்கள் கிடைத்தன; இப்பட்டங்களை அரசினர் தாமாகக் கொடுத்தார்களோ இல்லையேல் பட்டம் பெற்றவர்களின் முயற்சியினால் இவை அவர்களுக்குக் கிடைத்தனவோ யாம் அறியேம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொடுக்கப்பட்ட பட்டங்களில் J. P. எனப்படும் சமாதான நீதிவான் பட்டத்தினால் மாத்திரம் அயலவருக்குக் கொஞ்சம் சுகமுண்டு. என்னவென்றால், அவசியமாக ஒரு சத்தியக்கடுதாசி முடிக்க வேண்டி ஏற்படுஞ் சமையங்களில் ஊரவர்கள் இந்த J. P. முன்னிலையிற் போய் இலகுவாகச் சத்தியஞ் செய்து தம் கருமத்தை முடித்துக்கொள்ளலாகும். ஏனைய பட்டங்களினாற் சனங்களுக்கு எவ்வகையான பயனுமில்லையெனலாம். ஆனால் பட்டதாரிகள் தாம் செய்யும் பரோபகாரச் செயல்களால் தங்கள் பட்டங்களுக்கு மதிப்பை ஏற்றிக்கொள்ளலாமல்லவா? இதனை இவர்கள் சிந்தித்து முயற்சி செய்வார்களா?

* * *

அரசாங்க சபைப் பிரதிநிதிகளை அனுப்புதற்கான அடுத்த தேர்தலுக்கு இன்னும் ஆறு மாசம் வரையிலிருக்கிறது. அந்தத் தேர்தற் காலத்தில் அரசாங்கசபைப் பிரதிநிதியாக வருதற்கு யாரும் முற்பட்டு நிற்பரோ, இல்லையேல் இப்பழைய நால்வரும் எதிரிடையின்றி மீட்டும் தெரிவு செய்யப்படுவரோ என்ற சந்தேகம் இப்பொழுது நீங்கிவிட்டது. ஏன்? பட்டினப் பிரிவிற்கு மிஸ்ரர் H. A. P சந்திரசேகரா தாம் முற்பட்டு முயற்சி செய்வதாகப் பத்திரிகை வாயிலாகத் தெரிவித்திருக்கிறார். ஏனைய பிரிவுகளுக்கும் முற்பட்டுவருதற்குச் சிலர் நோக்கங்கொண்டு அந்தரங்கமாக முயற்சி செய்கிறார்களென்று முருகேசு சொல்லுகிறார். எவ்விதத்திலும் எதிரிடையில்லாமல், பணச்செலவு நேராமல், பிணக்குவராமல் அரசாங்கசபைத் தேர்தல் சமாதானமாக மனமொத்து நடக்கப்போவதில்லை யென்பது விளங்கக்கிடக்கின்றது. இப்பொழுது பிரதிநிதிகளாக இருப்பவருள் இரண்டொருவர், தாம் ஊருக்குச் செய்ய நினைத்த நன்மைகளை இன்னமும் பூரணமாகச் செய்ய வாய்க்கவில்லையென்றும், ஒன்றரை இரண்டுவருடம் அரசாங்கசபையிற்போய் இருந்து விட்டு வருவதற்காகவல்லத் தாம் முந்தி இவ்வளவு சிரமப்பட்டதும் பணஞ்செலவிட்டது மென்றும், அடுத்த நான்கு வருடங்களும் தாம் இருந்து பூரணமான நன்மை செய்துவிட்டுத்தான் வெளியே வரவேண்டுமென்றும் நியாயம் பேசுகிறார்கள்.

* * *

இனிமேல் வரவிரும்புவோர் அவர்கள் சொல்லும் நியாயத்தை ஒப்புக்கொள்ளவில்லை; தாம் அப்பொழுது முயற்சிசெய்யாமலிருந்தது அற்பகாலமென்ற நியாயம் பற்றியும், செலவிடும் பொருளுக்கும் படவேண்டிய சிரமத்திற்கும் அரசாங்கசபையிலிருக்கும் காலம் போதியதன்றென்றும் "ஓடு மீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாங் கொக்கு" என்ற பிரகாரம் சமையம்பார்த்திருக்கிறோமென்றுஞ் சொல்லு கிறார்கள். இந்த நியாயங்களுள் யார் சொல்வது சரி யார் சொல்வது பிழையென்பது முருகேசுவுக்குப் புலப்படவில்லை. புலப்பட்டாலும் முருகேசு வெளியிட்டால் ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்கச்சொன்னால் முடவனுக்குக் கோபமென்ற நியாயமாய் முடியுமெனப் பயப்படுகிறார்.

* * *

யாழ்ப்பாணத்தவர்கள் வீண்செலவு செய்யாமல் சிரமப்படாமல் பிணங்காமல் எதிரிடையின்றிச் சனப்பிரதிநிதிகள் நால்வரை அனுப்புங் காலம் எக்காலமோ யாம் அறியோம்.

* * *

"மாமிமாரென்றிருக்கும் நீங்கள்தான் மக்களையும் மருமக்களையும் ஒற்றுமையாகவாழவிடாதுகுடும்பத்தைக் குலைத்து வைப்பது. புருஷன் மனைவிக்கிடையில் இடையிடையே பிணக்கு வருவதுமுண்டு. ஆனால் அவர்கள் அடுத்தநேரம் தங்களுக்குட் சமாதானமாகி விடுவார்கள்; மாமிமாரென்றிருக்கும் நீங்களெனிலோ இருவருக்குமிடையே புகுந்து அவர்கள் பிணக்கைப் பெரும் பகையாக்கி அவர்கள் பின் ஒருபோதும் ஒத்து வாழாதபடி செய்கிறீர்கள். உங்களைத் தண்டித்தால் இப்படிச் செய்யமாட்டீர்கள்; இனிமேல் நீ ஒருபோதும் உன் மகள் மருமகன் விஷயத்தில் தலையிடக்கூடாது" என்று இப்படி அவிசாவலைப் பொலிஸ் நீதிபதியாகிய மிஸ்ரர் சின்னையா அவர்கள் ஒரு சிங்களமாமியைப் பெரிதும் கடிந்துவிட்டுத் தம்பதிகளைச் சந்தோஷமாய்ப் போயிருக்கும்படி புத்திசொல்லி யனுப்பிவிட்டார். சிங்கள மாமியார் தம் மருமக்களிடத்துத் துவேஷம் பாராட்டி மகளுடன் சேர்ந்து மருமகனுக்கு மாறாக வழக்குத் தொடர்ந்தமையை முன்னரும் பலமுறை பத்திரிகைகளிற் படித்திருக்கிறேன். ஆனால் எங்கள் தமிழ் மாமியார் இப்படியில்லாமல், மகனிடத்திற் பாராட்டும் அன்பைக் காட்டிலும் மருமகளிடத்தில் அதிக ஆர்வம் பாராட்டுவது மெய்ச்சத்தக்கதல்லவா?

* * *

உலகம் பலவிதம்: 1935 மே 23

எங்கள் அரசசக்கரவர்த்தியின் வெள்ளி விழாக் கொண்டாட்ட ஞாபகார்த்தமாக உலகத்தில் பிரித்தானியர் செங்கோல் செலுத்துங் தேயங்களில் வசிப்பாருட் பலருக்கு வெள்ளிக் கண்டிகைகள் சந்மானமாக வழங்கப்பட்டன. இலங்கையிலுள்ள மக்களுள் 500 பேருக்கு இவ்வெள்ளிக் கண்டிகைகள் உதவப்பெற்றன. இலங்கையிலுள்ள குடிசனங்களின் தொகை 50 லக்கமாகும். எனவே பதினாயிரவருள் ஒருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகிதம் வெள்ளிக்கண்டிகை வழங்கப்படலாயினர். ஆனால், இந்தவெள்ளிக்கண்டிகை என்ன வரிசையில் வழங்கப்பட்டதென்பது வழங்கிய அதிகாரிகளுக்கன்றி ஏனையோருக்குப் புலப்படாமலிருக்கின்றது. அரசாங்கத்திலே தலைமை உத்தியோகத்தர் இலங்கைச் சனத்தலைவர் தொடக்கம் சேவகர் இறுதியாக இப் பதக்கங்கள் கொடுக்கப்பட்டன. மேலும் பெண்பாலாருக்குள் சிற்சிலருக்குக் கண்டிகைகள் அளிக்கப் பட்டுள்ளன. நமது அதிகாரிகள் இக் கண்டிகைகளை வழங்கும் விஷயத்திலே சிறியார் பெரியார் என்பதைப் பாராட்டாமலும் வறியார் செல்வரென்ற பேதம் பாராமலும் ஆண் பெண் என்ற பால் பாராமலும் உத்தியோகத்தர் ஊரவர் என்ற வித்தியாசம் நோக்கமாமலும் வழங்கியதையிட்டுப் பலர் அதிகாரிகளை மெச்சுகிறார்கள். மெச்சியுமென்ன? இந்த வெண்பதக்கம் தமக்குக் கிடைக்குமெனத் தனித்தனி நம்பியிருந்தோருட் பலர் தமக்குக் கிடையாமையால் ஏமாந்து கொட்டாவிவிட்டு நெட்டுயிர்கின்றார்களாம். வெள்ளிவிழாவாதலின் அரசினர் வெள்ளியாற் செய்த கண்டிகைகளை உதவவேண்டி ஏற்பட்டது; அதனாற் பலர் குறைகூறவும் நேர்ந்தது. வெள்ளியை விடுத்துச் செம்பினாலேனும் ஈயத்தினாலேனும் வெள்ளைப் பித்தளை அலுமினம் நாகம் என்னுமிவைகளினாலேனும் கண்டிகைசெய்வித்துச் சந்மானிக்கத் தலைப் படுவாரேல், அரசினரை எவருங்குறை சொல்லுதலின்றி எல்லாரும் வாங்கி அணிந்து மகிழ்வாரே! நம்மனோரின் அறியாமை இருந்தபடியென்னே!

* * *

நமது ஊரிலே அடிபிடி சண்டை, கொலை களவு, பிரேதம் நீர்நிலையங்களில் மிதத்தல், ஆள்மாறி ஏமாற்றித் தாலிகட்டுதல், கன்னியரைக் கரவிற் கடத்திச் செல்லுதல், மோட்டரத அபாயம் முதலிய அநர்த்தங்களெல்லாம் வரவர அதிகப்படுகின்றன. வாரத்திற்கு ஒருமுறை இருமுறை இப்படியான புதினங்களைப் பத்திரிகைகளிற் படித்தும் கேள்விப்பட்டும் நேரிற்கண்டும் அறிதலாகுமல்லவா? காரண மென்ன? இங்கே நாள்தோறும் கள்ளுச் சாராயமென்னுமிவைகள் அதிகப்பட்டு வருதலேயாகும். தவறணைகள் சிலகாலம் இவ்யாழ்ப்பாணத்திலே அறவேயில்லா தொழிந்தபோது இவ்வகையான அநர்த்தங்கள் நேருதல் அபூர்வமாயிருந்தது. தவறணைகள் ஊர்தோறும் திறக்கப்பட்டபின் அநர்த்தங்களும் விளையலாயின. ஆனால் இப்பொழுது இத் தீமைகள் மிகவும் அதிகப்பட்டு வருதற்கு ஏது வென்னவென்பதை ஆராய்ந்து பார்க்குமிடத்து, தவறணை இல்லாத ஊர்களுக்கு மரவரி முறையை விதித்து மதுபானத்தை அதிகாரிகள் விருத்திபண்ணி விட்டமையே ஒரு நியாயமாகும். மரவரியை இங்கே பரீட்சார்த்தமாகச் சில ஊர்களில் விதிக்க யோசித்தபோது இங்குள்ள சனப்பிரதிநிதிகளும் ஊரவர்களும் "இந்த மரவரிமுறை வேண்டாம்! வேண்டாம்!! என்று ஓலமிட்டார்கள்; ஒப்புச்சொன்னார்கள்; கூட்டங் கூட்டித்தடுத்தார்கள். இப்படியான ஓலமும் ஒப்பும் தடையும் சிங்கள அங்கத்தவரையே மேலதிக மாகக்கொண்ட அரசாங்க சபையில் காட்டிற் கெறித்த நிலாப்போலவும் புறக்குடத்திலூற்றிய நீர்போலவும் பயன்படாதொழிந்தன.

* * *

நியாயமென்ன? தமிழர் காக்கை கருநிற முடையதென்று சொன்னால், சிங்களர் அப்படியன்று அது வெண்ணிறமுடையதென்று குதர்க்கம் பேசித்தமிழ் மக்களுடன் பகைமை பாராட்டி அவர்கள் எடுத்த கருமத்திற்குப் பிரதிகூலமாக நிற்பதேயாம். மரவரி வேண்டாமென்று அரசாங்கசபையிலே தமிழர் வாதித்தால் மரவரி வேணுமென்று சிங்களவர் சாதிப்பர். அந்நிய நாட்டிலிருந்து வந்து இறக்குமதி செய்யப்படும் நெல்லின் சுங்கவரியை உயர்த்தவேண்டாமென்று தமிழ்ப்பிரதிநிதிகள் வாதித்தால் அதனை உயர்த்தவேண்டுமென்று சிங்களர் சாதிப்பர். இப்படியெல்லாமிருத்தலால் தமிழர் இனிமேல் வேறொரு உபாயத்தைக் கைக்கொள்ளுவது நல்லது. அது என்னவெனிற் சொல்லுகிறேன்; தமிழர் தாம் ஒருவிஷயத்தில் அனுகூலமடைய வேண்டுமானால், அரசாங்கசபையில் அந்த விஷயத்திற்குப் பிரதிகூலமாகப் பேசவேண்டும். உதாரணமாக, அந்நியநாட்டு நெல்லின் இறக்குமதித் தீர்வையை உயர்த்தவொண்ணாதென்பதே தமிழ்ப் பிரதிநிதிகளின் அபிப்பிராயமாயிருந்தால் அந்த அபிப்பிராயம் கைகூட வேண்டுமானால், அவர்கள் அரசாங்கசபையிலே நெல்லின் இறக்குமதித் தீர்வையை உயர்த்தவேண்டு மென்று பேசுதல் புத்தியாகும். அப்படிப் பேசவே தமிழ்ப்பிரதிநிதிகள் கொள்கைக்கு நேர்விரோதமாகச் செய்வதில் மகிழ்ச்சியடையும் சிங்களப் பிரதிநிதிகள் நெல்லின் இறக்குமதித்தீர்வையை ஒருபோதும் உயர்த்தவொண்ணாதென வாதித்துச் சாதித்து அரசாங்கசபைக் கூட்டத்தில் நிறைவேற்றிவிடுவார்கள். நிறைவேற்றவே தமிழ்ப் பிரதிநிதிகளின் நோக்கமும் தமிழ்மக்களின் மனோரதமும் நிச்சயமாக நிறைவேறும். இனிமேல் இப்படிச்செய்வதுதான் புத்தியாகும். இந்த விஷயமாக முருகேசு பின்னரும் இயம்புவார்.

* * *

உலகம் பலவிதம்: 1935 மே 30

"ஓடம் வண்டியிலேறும் வண்டி ஓடத்திலேறும்" என்பது பழமொழி. கீழ் மாகாணத்தின், பிரதான பிரிவுகளாகிய மட்டக்களப்பு திருகோணமலைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளில் விளையும் நெல்லினை யாழ்ப்பாண மக்கள் தலையிற் சுமத்தி அவ்விரு பகுதிகளிலுள்ளாரைச் செல்வராக்க வேண்டுமென்ற சுயநல நோக்கங்கொண்டு, இந்தியா பர்மா முதலாம் வேற்றுநாடுகளிலிருந்து இங்கு வந்து இறக்கப்படும் நெல்லின் சுங்கவரியை உயர்த்தும் வண்ணம் சிங்கள அங்கத்தவர் துணையையும் பெற்று ஸ்ரீ ஆ. ஆ. சுப்பிரமணியமவர்கள் இலங்கை அரசாங்க சபையில் ஒரு நிர்ணயத்தைப் பிரேரித்து அதனை நிறைவேற்றிவிட்டனர். இந்த விஷயத்திலே நமது சுப்பிரமணியருக்குத்தாம்தமிழன்என்றஅபிமானந்தானும் இல்லாமற்போய்விட்டது. இந்தப் பிரமாணம் இற்றைவரையில் அநுசரணைக்கு வராதுவிட்டமை யாழ்ப்பாணத்தாருடைய அதிஷ்டமெனலாம். ஆனால் இப்பொழுது மட்டக்களப்புத் திருக்கோணமலைப் பிரிவுகளின் நிலைமை யென்னே! சுப்பிரமணியர் யாழ்ப்பாணத்தவருக்காகிய நெல்லினைத் தம் பகுதிகளிலிருந்து இங்கு இந்த நேரத்தில் தாம் அனுப்பிவைப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறாரா? இவரை நம்பி நெல்லின் தீர்வையை உயர்தியிருந்தால், மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியவன் பாடு போலல்லவா முடியும்.

* * *

மட்டக்களப்புத் திருக்கோணமலைப் பகுதிகளில் நீடித்த நாட்களாக மழையில்லாமையினால் நெல்லும் சிறுதானியங்களும் விளைவு குன்றிவிடப் பெரும் உணவுப் பஞ்சம் உண்டாயிருக்கிறது. இலங்கையின் ஏனைய மாகாணங்களிலிருந்து நெல்லும் இந்தியா பர்மா முதலாம் வேற்றுத் தேயங்களிலிருந்து அரிசி நெல்லும் இப்பொழுது மலை மட்டக்களப்பு என்னுமிடங்களுக்கு அனுப்பவேண்டி ஏற்பட்டிருக்கிறது. பஞ்சம் எந்த நாட்டிலும் எவருக்கும் இடையிடையே நிகழ்வது சகசந்தானே. ஆனதால் ஒருமுறை இருமுறை கீழ் மாகாணத்திற் பஞ்சம் வந்துவிட்டால் எப்பொழுதும் வருமென்று காத்திருப்பதா எனச் சுப்பிரமணியர் நியாயம் பேசக்கூடும் சரி! இருக்கட்டும்; பஞ்சம் வாராது பூரண விளைவு விளைந்த காலத்திலும் யாழ்ப்பாணத்தவர்களின் தேவைக்குப் போதிய நெல்லினைக் கீழ் மாகாணத்தார் கொடுக்கமுடியுமா? ஒருபோதும் முடியாது. இப்போதைக்கு யாழ்ப்பாண மக்கள் இந்தியா பர்மா முதலிய வேற்றுத் தேயங் களையே அரிசி நெல் முதலியவ்றிற்கு எதிர்பார்த் திருக்கவேண்டிய நிலைமையிலுள்ளனர்.

* * *

யாழ்ப்பாணப் பட்டின சங்க எல்லையுட் களவுகள் வரவர அதிகப்படலாயின. சில தினங் கட்கு முன் பண்ணைத்துறைமுகத்திலுள்ள தானியசாலையுட் கள்வர் புகுந்து 9 மூடை நெல்லைத் திருடி விட்டனர். சந்தேகத்தின் பேரிற் சிலர் பிடித்து அடைக்கப்பட்டிருக்கின்றனர். சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு யாழ்ப்பாணம் பெரியகடைத் தெருவிலுள்ள சண்முகநாதன் புத்தகசாலையில் ஓட்டைப் பிரித்து யாரோ கள்வர் உட்பிரவேசித்து ஒரு தொகைப் பணத்தையும் ஊற்றுப்பேனா முதலிய சில பொருள்களையும் களவாண்டு போயினர். இக் களவிலும் சந்தேகத்தின்பேரில் மூவர் பிடித்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். களவு இவ்வளவோடு நின்றுவிடவில்லை, இங்குள்ள ஒரு தலைமைக்காரன் வீட்டிலும் சென்ற இரவு சில நகைவகை களவுபோனதாக வதந்தி பிறக்கின்றது. யாழ்ப்பாணப் பட்டினமோ முன்னிருந்தவாறு இருட்டோடு கூடியதல்ல. பிரதான தெருக்களிலும் சிற்சில குறுக்குத் தெருக்களிலும் மின்சார வெளிச்சம் ஏற்றப் பட்டிருத்தலினால் இப் பட்டினம் இப்பொழுது பகல் வெளிச்சம் போன்ற வெளிச்சத்தோடு கூடியதாகக் காணப்படுகின்றது. அல்லாமலும் பேசும்படக்காட்சி இப்பட்டினத்தில் அநுதினமும் இரவு 12 மணி வரையில் நடைபெறுவதால் இங்கே சனச்சஞ்சாரம் நடுச்சாமம் வரையிலுண்டு. தேநீர்க்கடைகளும் பல திறக்கப்பட்டுள்ளன.

* * *

இந்த இடங்களிற் பொலிஸ் காவலும் உண்டு என்ற நியாயம் பற்றிக் கடைக்காரர் சிறிதும் பயமில்லாமல் தங்கள் கடைகளைப் பூட்டிவிட்டுப் போய்விடுவார்கள். இப்படியான பிரசித்தமான இடத்திலே சுவரேறி ஓட்டைப் பிரித்துத் துணிகரமான களவு நடக்குமாகில், இச்செயல் எங்கள் பொலிசரின் திறமையிலல்லவா தாக்கும். இக்களவுகளைச் செய்தாரெனச் சந்தேகங் கொள்ளப்பட்டார் சிலரைப் பொலிஸ் அகப்படுத்தியதை இட்டு நாம் அவர்களைப் பாராட்டுகின்றோம். ஆனாலும் இப்படியான இடங்களிற் களவெடுக்க எவரும் துணியாதபடி கருமமாற்றுவதே பொலிசருக்கு பெருமையும் புகழுமாகும். இப்பொழுது இராக்காலத்திற் குறித்த நேரத்திற்குமேலே பொலிசர் பெரிய கடைத் தெருவிற் காவலாக நிற்பதில்லை. அவர்கள் பட்டினத்தைச் சுற்றித்திரிதலே இப்பொழுது நடப்பது. பொலிஸ் அதிகாரிகள் பெரிய கடைத்தெருவில் சில சில பிரதானமான தானங்களில் பொலிசார் இரா முழுவதும் மாறி மாறி காவல் நிற்றற்கான ஏற்பாடுகளை விரைவில் செய்தல் வேண்டும். இப்படிச் செய்யவரேல் இக் காலத்து அதிகப்பட்டு வரும் களவு ஏனைய அக்கிரமங்கள் தலையெடுக்கமாட்டா.

* * *

"மனுஷருள் நாவிதனும் பெண்களுள் பணிப்பெண்ணும் மிருகங்களுள் நரியும் பறவைகளுட் காகமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுரர்களாயிருக்கிறார்கள்" எனப்பஞ்சதந்திரத்தில் ஒரு வாக்கியம் உண்டு. நமது பட்டினசங்கத்தாருக்கும் இங்குள்ள நாவிதர்களுக்கும் இப்பொழுது ஏற்பட்டுள்ள - இல்லையேல் ஏற்படவிருக்கும் பிணக்கைப் பலர் அறிவர். "சலூன்" எனப்படும் சௌளக்கடைகட்கும் பட்டினசங்கத்தார் வரிவிதிப்பரேல் நாவிதர் தாம் ஏகோபித்து வேலைநிறுத்துவதாகக் கதை பரப்புகின்றார்கள். இது உண்மையோ இல்லையேல் வெள்வெருட்டோ யான் அறியேன். நாவிதர் அப்படிச் செய்வரேல் சுயமாக சௌளஞ்செய்யப் பழகிக்கொண்டவர்கள் கொஞ்சநாளைக்கு நின்று பிடிக்கமுடியும்; முருகேசுபோன்ற பழம்போக்கும் கொள்கையும் உடையார்க்கு நாவிதர் செயல் பெரும் வசதியீனமாயிருக்கும். அவர்கள் தாடியுஞ் சடையும்தான் வளர்க்கவேண்டி ஏற்படும். நாவிதர் பொறுப்பை நகரசங்கத்தார் ஏற்றுக்கொண்டால் இந்த விஷயத்தில் நகர சங்கத்தாரோடு வரியிறுப்போராகிய ஊரவர்கள் தாங்களும் ஒத்துழைப்பதற்குச் சித்தமாயிருக்கிறார்களாம்.

* * *

[பார்க்க பின்னிணைப்பு 1]

உலகம் பலவிதம்: 1935 ஜூன் 06

நல்லூர் ஸ்ரீமத். த. கைலாசபிள்ளையவர்கள் "ஆராய்ச்சிமுறை" என்னும் மகுட நாமத்துடன் ஒரு கடிதம் வரைந்து சென்ற திங்கட்கிழமை (3-6-35) வெளிவந்த இந்து சாதனத்தில் வெளியிட்டுள்ளார். இந்துசாதனத் தில் நாவலரவர்கள் சம்பந்தமாக வெளிவந்த விஷயங்கள் தவறானவையென்று அப்பெரியார் தமது கடிதத்திற் சத்தியஞ் செய்திருக்கிறார். இந்துசாதனத் தொடர்பாகவுள்ள விவகாரத்தைக் கொண்ட கடிதத்தை இப் பத்திரிகையில் வெளியிடும்படி முறையாக அனுப்பியதோடு அமையாது, ஆத்திரத்தினாலோ, ஆர் அறிவார், ஈழகேசரியிலும் வெளியிடும்படி அனுப்பியுள்ளார். பிள்ளையவர்கள் இந்துசாதனப் பத்திரிகாசிரியர் தலையிற் சுமத்தும் முதற்குற்றம்: நாவலரையா எழுதியிருக்குஞ் சூசனத்தை அந்தப்படியே ஒருவர் பிரதிபண்ணி இ. மாரிமுத்து உபாத்தியாயர் செய்ததென்று சில வருஷங்களின் முன் இந்துசாதனத்தில் வெளியிடும்படி கொடுக்க இந்துசாதனப் பத்திராதிபரும் அவ்வாறு ஏற்று வெளியிட்டாரென்பதேயாம்.

* * *

இது மெய்தானோ என்று இந்துசாதனப் பத்திராசிரியரை முருகேசு கேட்டதற்கு அன்பு என்ற விஷயமாக, குறித்த மாரிமுத்து உபாத்தியார் கைச்சாத்தோடு அவ்வுபாத்தியாயருடைய மகன் கொடுக்க அக்காலந்திருந்த உதவிப் பத்திராசிரியர் ஏற்று வெளியிட்டிருக்கவேண்டுமென்று பத்திராதிபர் சொல்லுகிறார். மேலும் நமது கைலாசப்பிள்ளையாரைப் போல மாரிமுத்து உபாத்தியாயர் அவர் புத்திரராகிய இவர்களிருவரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர் களின் சந்ததியிலுள்ளாராதலின், நாவலரவர் கட்கு அவர்கள் இழுக்கான காரியத்தைச் செய்யமாட்டார்களென்ற நம்பிக்கையும் பத்திராசிரியரிடத்துச் சரியாகவோ, தவறாகவோ இருந்ததாம்.

* * *

இத்தவற்றைப் பிள்ளையார் குறித்த சூசனம் பத்திரிகையில் வெளிவந்த சமையத்தில் எடுத்துக்காட்டியிருந்தால், இந்துசாதனப் பத்திராசிரியர் அதனை வெளியிட்டு, மாரிமுத்து உபாத்தியாயர் வழித்தோன்றல் செய்த வஞ்சனையையும் எடுத்துக்காட்டிப் பிள்ளையாரிடத்திலும் நன்றி பாராட்டியிருப்பாரே! பிள்ளையார் அச்சமையத்தில் எடுத்துக்காட்டாது சில வருடங்கள் சென்றபின் இப்பொழுது எடுத்துக்காட்டியமைக்குக் காரணந் தெரியவில்லை; ஒருபோது பத்திராசிரியரிடத்து இந்த விஷயமாக இன்னமும் பல தவறுகள் வந்து சேர்ந்த பின்பு ஒருங்கு எடுத்துக் காட்டுதல் தகுமென எண்ணினர் போலும். பிள்ளையாரின் அடக்கமே அடக்கம்! நாவலரையாவிடத்திற் பிள்ளையார் கொண்டுள்ள மதிப்பைக் காட்டிலும் கூடிய மதிப்பு இந்து சாதனப் பத்திராசிரியருக்கு உண்டென்பதைப் பிள்ளையார் விளங்கிக்கொள்வாராக.

* * *

இந்துசாதனப் பத்திராசிரியர் மீது மேற்படி பிள்ளையவர்கள் கற்பிக்கும் இன்னுமொரு அபவாதம், பவ வருடம் மாசிமீ 28உ வெளிவந்த இந்துசாதனத்தில், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் தினநியமம் நாவலரவர்கள் கையாலெழுதியிருந்ததென்று இப்பத்திராசிரியர் கூறியதாம். "அது அவர்கள் கையெழுத்தன்று; இது நிச்சயமான சத்தியம்" என்று பிள்ளையவர்கள் சத்தியஞ் செய்கிறார். சத்தியமும் சும்மா சத்தியமல்லவாம், நிச்சயமான சத்தியமாம். பிள்ளையவர்கள் இப்படி ஆத்திரப்பட்டுச் சத்தியஞ் செய்வதற்குக் காரணம் யாதெனத் தெரியவில்லை. மெய்யைப் பொய்யெனக் கொண்டு சத்தியஞ் செய்வதனால் வரும் பயன்றான் என்னையோ?

* * *

பிள்ளையவர்கள் இப்பத்திரத்தில் வெளியிடும்படி அனுப்பிய கடிதத்தைக் கண்டபின் ஒருபோது அவர் கூற்று மெய்யாகவிருத்தல்கூடுமோ என்று சந்தேகங்கொண்டு தினநியமக் கையெழுத்துப் பிரதியையும், ஸ்ரீலஸ்ரீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுக நாவலரவர்களுடைய கையெழுத்துத்தான் என்று மேற்படி பிள்ளையவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரதியொன்றையும் அவர் எழுதிய ஆறுமுக நாவலர் சரித்திரம் அதிலுள்ள நாவலரவர்கள் கைப்பிரதிகளையும் இப்பத்திரிகையாசிரியர் ஒரு நிபுணருடன் அவதானமாக பார்த்தபொழுது குறித்த தினத்தில் நாவலர் கையெழுத்தோடு ஒத்து காணப்படலாயிற்று. இந்தப்பிரதியில் சந்தேகம் ஏற்படுமானால் கையெழுத்துப் பேதங்களை ஆராய்ந்தறியவல்ல ஒருவரிடமாயினும் இப்பிரதிகளை அனுப்பி நியமத்திற் குறித்த பாகம் நாவலர் கையெழுத்தென்பதை அத்தாட்சிப்படுத்தற்கு இப்பத்திராசிரியர் சிந்திக்கின்றார். மேலும் இக்கையெழுத்துப் பிரதிகளெவற்றையும் சந்தேகமுற்றோரும் நேரில்வந்து பார்த்து தம் சந்தேகத்தை தீர்த்துக்கொள்ளலாம். நேரில் பார்த்த பின்பே பிள்ளையவர்களுடைய கூற்று நிச்சயமான சத்தியமோ அசத்தியமோ என்பது அப்படிப்பட்டோருக்கு புலப்படும்.

* * *

இந்து சாதனப் பத்திராசிரியர் மேற் பிள்ளையவர்கள் ஏற்றும் வேறொரு குற்றம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் ஒரு சாமியார் மேற் பாடியதென்று ஒரு பாட்டை யுவ வருடம் வைகாசி மீ 3உ வெளிவந்த இந்து சாதனத்தில் வெளியிட்டிருப்பதாம். (பத்திரிகையில் பவ வருடம் என வெளிவந்திருப்பது தவறாகும்) அந்தப் பாட்டை நாவலரவர்கள் பாடினாரல்லர் என பிள்ளையவர்கள் யாதும் ஆதாரமுங் காட்டாது சாதிக்கின்றார். சுவாமியார் எனப் பிள்ளையவர்கள் குறிப்பிட்டது, கோவலூர் மடத்து ஸ்ரீமத் முத்துராமலிங்க சுவாமிகளை யாகும். அச் சுவாமிகள் மேல் நாவலரவர்கள் பாடியதாக வெளியிட்ட செய்யுள், இங்குள்ளார் சிலர் ஆங்குச் சென்றவிடத்து அம்மடத்திலுள்ள கையெழுத்துப் பிரதியிலிருந்து பிரதிபண்ணிக்கொண்டு வந்ததாகும். இந்த உண்மையை யாதும் ஆதாரம் காட்டாது பிள்ளையவர்கள் மறுக்கின்றமைக்குக் காரண மென்னவென விளங்கவில்லை. ஏன்? நாவலரவர்கள் ஒருவர் மீதும் இரங்கற்பா பாடவில்லையா? அவர்கள் தமது சீஷரும் சைவப்பிரகாச வித்தியாசாலை உபாத்தியாயர்களுள் ஒருவருமாயிருந்த ஸ்ரீ. வி. சுப்பிரமணியபிள்ளையவர்கள் தேக வியோகத்தைக் குறித்து "என்னுடைய கண்மணியே எனதன்பர் சிகாமணியே..." என்றற் றொடக்கச் செய்யுண் முதலாக இரு செய்யுள்கள் பாடி யிருக்கிறார்களே. சாமியார் மீது நாவலரவர்கள் பாடினாரென்றவுடனே பிள்ளையவர்கட்குச் சங்கோசம் பிறப்பதேன்? நாவலரவர்களும் ஒடுங்கிய மனப்பான்மையுடையவரென்பது பிள்ளையவர்கள் கருத்தா? குறித்த பாவை நாவலரவர்கள் பாடினார்களென்பதில் சந்தேகமிருந்தால் பிள்ளையவர்கள் மேலே சொல்லப்பட்ட மடத்து அதிகாரிகள் மூலமாக இன்றும் விசாரித்து அறிந்து கொள்ளலாமே!

* * *

[பார்க்க பின்னிணைப்பு 1]

உலகம் பலவிதம்: 1935 ஜூன் 13

ஸ்ரீமத் த. கைலாசபிள்ளையவர்கள் இப் பத்திராசிரியர் மீது சுமத்தியுள்ள பிறிதொரு அபராதம், நாவலரையா அவர்கள் அறுபத்திரண்டு வருடங்களுக்கு முன், திருக்கேதீச்சரம் என்னும் ஆலயமிருந்த நிலத்தை வாங்கி அதில் ஒரு சிவாலயங்கட்ட வேண்டுமென்று "யாழ்ப்பாணச் சமயநிலை" என்னும் பத்திரத்தில் எழுதியிருப்ப, அதனை ஸ்ரீ மு. பசுபதிச் செட்டியார் தொடங்கியதென்று அவர் தலையில் இந்துசாதனப் பத்திராசிரியர் ஒரு முறை முடித்திருக்கிறார் என்பதாம். பிள்ளையவர்கள் இவ்விஷயமாகக் குறிப்பிடுவது உலகம் பலவிதம்: 1934ம் ஆண்டு வைகாசி மாதம் 17உ வெளிவந்த இந்துசாதனத்தில் "சைவ பரிபாலன சபை" என்னுந் தலையங்கத்தில் எழுதப்பட்டவைகளைப் பற்றிப்போலும். இந்த விஷயம் இப்பொழுதுள்ள பத்திராசிரியர் மேற்படி செட்டியார் தலையில் ஒருமுறை முடித்ததன்று; குறித்த கைலாசபிள்ளையவர்களே இப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த காலத்து, அதாவது 1894ம் ஆண்டு சித்திரை மீ 18ந் உ வெளிவந்த இந்துசாதனப் பிரசுரத்தில் ஸ்ரீ பசுபதிச்செட்டியார் அவர்களைப் பற்றிப் பின்வருமாறு எழுதியிருக்கின்றார்:-

"இங்கே திருப்பணிவேலை செய்வதற்காக இதுகாறும் நிலப்பரிசோதனை செய்து வருகிறார்கள். இன்னும் சில காலத்துள் வேலை ஆரம்பிக்க வேண்டுமென்னும் அவாவினால் ஸ்ரீ பழனியப்ப செட்டியார் முதலிய செட்டிமாரும் ஸ்ரீ ந.ச. பொன்னம்பலபிள்ளை, ஸ்ரீ சி.த.மு. பசுபதிச் செட்டியார் முதலியவர்களும் சிற்பர்களும் இரண்டு தினத்தில் போகத் தீர்மானித்திருக்கிறார்கள் ....."

பிள்ளையார் இற்றைக்கு 41 வருடங்கட்கு முன் தாமே எழுதிவிட்டு இப்பொழுது உள்ள பத்திராசிரியர்மீது பழிசுமத்தத் தலைப்பட்டது மறதியாலா? இல்லையேல் வேறு காரணத்தினாலா? இதுவே கைலாசபிள்ளைப் பத்திராசிரியர் முதல்முறை செட்டியார் தலையில் முடித்ததாகும்.

* * *

மேலும், உலகம் பலவிதம்: 1906 - ம் ஆண்டு மார்ச்சு மீ 14 - ம் தேதி வெளிவந்துள்ள இந்துசாதனப் பிரசுரத்தில், ஸ்ரீ சி. த. மு. பசுபதிச்செட்டியார் அவர்களின் தேகவியோக விஷயமாக, அக்காலத்திருந்த பத்திராசிரியர் எழுத நேர்ந்தபோது, இத் திருக்கேதீச்சரத் திருப்பணி சம்பந்தமாக, மேற்படி செட்டியார் அவர்களைக் குறித்துப் பின்வருமாறு எழுதியிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம. ர. ர. ஸ்ரீ பசுபதிச் செட்டியாரவர்கள் திருக்கேதீச்சர விஷயத்திலும் அதிக சிரத்தையெடுத்தவர். இப்புண்ணிய க்ஷேத்திரத்திற்குரிய நிலம் அரசாட்சி யாரிடமிருந்து வாங்கப்பட்டபோது இவருக்கு இருந்த ஆநந்தத்திற்கு அளவில்லை. இத் திருக்கேதீச்சரத்தில் முன் ஆலயம் கட்டப்பட்டிருந்த இடத்தைக் கண்டுபிடிப்பதற்கு இவர் எடுத்த பிரயாசை மிகப்பெரிது ...."

இது அக்காலத்திருந்த பத்திராசிரியர் மேற்படி செட்டியார் தலையில் இரண்டாம் முறை முடித்ததாகும்.

* * *

இனி, திருக்கேதீச்சராலயத் தரும பரிபாலகர்களாகிய நகரத்தார்களாலே 19ம் ஆண்டு வைகாசி மீ அச்சிடுவித்து வெளி வந்துள்ள திருக்கேதீச்சர தலபுராணம் 20ம் பக்கம், உத்தரபீடிகையில்:

".... ஐய வருடம் ஆனிமீ க.உ.சி.த.மு. பசுபதிச்செட்டியார் மூலமாகப் பெருந்திரளான பணஞ் செலவு செய்யப்பட்டு பழைய கட்டிடங்களும் கிணறுகளும் கண்டுபிடிக்கலாயின ....." என

எழுதப்பட்டிருக்கின்றது. இது மூன்றாம் முறை மேற்படி செட்டியார் தலையில் குறித்த ஆலயத் தருமபரிபாலகர்கள் முடித்ததாகும். இவ்வாறு பிள்ளைகுடைக்கீழ்,யவர்கள்தாமும் அக்காலத்துப் பத்திராசிரியரும் ஆலய தரும பரிபாலகர்களும் முறைக்குமுறை முடித்துவிட்டு, ஐயோ! பாவம்!! இப்பொழுதிருக்கும் பத்திராசிரியர்மேற் பழி சுமத்துவது முறையாகுமா?

* * *

மேலும் திருப்பணி விஷயமாக அக்காலத்திலே செட்டியாரவர்களுடன் சென்ற "மேஸன்" சின்னவியென்பவரை இப்பத்திராசிரியர் நேரிற் கண்டு கேட்டபோது, செட்டியாரவர்கள் தான் அத் திருப்பணி விஷயத்திற் பிரதான சிரத்தையோடும், இடையறா ஊக்கத்தோடும் உழைத்தவரென்று சொன்னார். இந்த உண்மையை எவரும் குறித்த மேசனிடம் நேரிற்கேட்டு அறிந்து கொள்ளலாகும்.

* * *

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் கையெழுத்தெனத் தக்க ஆதாரத்தோடு இந்துசாதனப் பத்திராசிரியர் நம்பி வெளியிட்ட விஷயத்தைத் தமது "ஆராய்ச்சிமுறை" என்னுங் கடிதத்திற் கண்டித்து இப் பத்திரிகையிலும் ஈழகேசரிப் பத்திரிகையிலும் வெளியிட்டு இப்பத்திராசிரியர் கூற்றைப் பொய்ப்படுத்த முயன்ற ஸ்ரீமத் த. கைலாசபிள்ளையவர்கள் கையெழுத்தாகாத விருந்த மாதகல் பிரமஸ்ரீ சு. ஏரம்பையரவர்களை இருத்தியெடுத்த பிரதிமைப்படத்தை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களுடைய பிரதிமைப் படமென்று பாவித்துத் தமது வித்தியாசாலைப் புதுக்கட்டடப் பிரவேச காலத்தில், திறந்து வைத்துப் பூசித்ததோடு அமையாது இன்னும் பூசித்து வருகின்றாராமே" இது மெய்தானா?

* * *

[பார்க்க பின்னிணைப்பு 1]

உலகம் பலவிதம்: 1935 ஜூன் 20

ஸ்ரீ த. கைலாசபிள்ளையவர்கள் பொருட்டு, "நாவலர் அடியான்" என்று ஒருவர் புனை பெயருடன் தோன்றி "விபரீத விளக்கம்" என்னும் மகுடநாமத்தோடு சென்ற ஞாயிற்றுக்கிழமை வெளிவந்த ஈழகேசரிப் பத்திரிகையிற் சில வரைந்து வெளியிட்டுள்ளார். அக்கடிதத்தை அப்படியே அநுமதித்து, அடுத்த பந்தியில் வெளியிட்டுள்ளோம். விபரீத விளக்கத்தைத் தலையங்கமாகக் கொண்ட இந் நாவலர் அடியான், கைலாசப்பிள்ளையின் "பிரதம நோக்கம் யாதெனவறியாது வழிதவறி இந்து சாதனப் பத்திராதிபரால் வீண் விவாதம் கிளப்பப்படுகிறது" எனவும், பத்திராதிபர் விபரீதமாக விளங்கிக்கொண்டார் எனவும் அதன் பொருட்டுத் தாம் பரிதாபப்படுவதாயும் எழுதியுள்ளார்.

* * *

வீண் விவாதம்கிளப்பியதும் விபரீதமாக விளங்கியதும், இந்துசாதனப் பத்திராசிரியரா? இல்லையேல் இந்த நாவலர் அடியானா? "ஆராய்ச்சிமுறை" என்ற கடிதத்தில் கைலாசபிள்ளையவர்கள் இந்துசாதனப் பத்திரிகையிற் காலந்தோறும் வெளிவந்த நான்கு விஷயங்களை எடுத்துக்காட்டி அவை தவறானவை யென்னுங்கருத்தமைய வெளிப்படையாக எழுதி யிருக்கிறார். அவர் சொல்லுகிறபடி அவை தவறானவையாயிருந்தால், இப்பத்திராசிரியர் மேற்படி பிள்ளையின் கூற்றை ஏற்றுத் தாம் எழுதி வெளியிட்டது தவறென ஒத்துக்கொள்ளுதல் வேண்டும். அவை தவறல்லவெனக் கண்டால் இப்பத்திராசிரியர் அப்படி அல்ல என்பதற்குத்தக்க ஆதாரங்களை எடுத்துக் காட்டிப் பிள்ளையவர்கள் சொல்லியவைதாம் தவறானவை பத்திராசிரியராகிய தாம் வரைந்தவை தவறற்றவை எனச் சாதித்தல் வேண்டும். இவ் விரண்டனுள் இப்பத்திராசிரியர் பிந்தியதைக் கைக்கொண்டு தாம் எழுதியவை அத்தனையும் தவறல்ல நிசமேயென்று சாதித்து வருகின்றார். இப்படியிருக்க இந்த நாவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியான், பத்திராசிரியரை வீண் விவாதம் கிளப்பினாரென்றும் விபரீதமாக விளங்கினாரென்றும் சொல்வதன் நோக்கமென்ன? குறித்த பிள்ளை எதனைச் சொன்னாலும் பத்திராசிரியர் அதனைக் கேட்டுக் கொண்டு மௌனஞ்சாதிக்க வேண்டுமென்பதா "அடியான்" நோக்கம். இந்த அடியானைத்தவிர நடுவுநிலைமையோடு கூடிய வேறு எவரேனும் இப்பத்திராசிரியர் வீண் விவாதங் கிளப்பினார், விபரீதமாக விளங்கினார் என இந்துசாதனப் பத்திராசிரியரை இவ்விஷயத்திற் சொல்லுவாரா?

"காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார்கண் கண் ணதாம்....."

என்பதை இவ்வடியான் பார்த்ததில்லையா?

* * *

மேலும் ஸ்ரீமான் கைலாசபிள்ளையவர்களுக்கு நாவலரையாவிடமிருக்கும் மதிப்பிலும் இந்துசாதனப் பத்திராதிபருக்கு அவர்மீது கொண்டுள்ள மதிப்புக் கூடியதாகும்; எப்படியோ? என்று நாவலர் அடியான் இப்பத்திராசிரியர் கூற்றை ஆட்சேபிக்கின்றார். அடியான் கேள்விக்கு இந்துசாதனப் பத்திராசிரியர் பொருட்டு முருகேசுவாகிய அடியேன் தக்க விடை சொல்லவேண்டியது முறையாகும். இப்படியான வினாவை நாவலர் அடியான் என்பார் வினாவி, அடியேனை விடையிறுக்கச் செய்வ தால் ஸ்ரீ கைலாசபிள்ளையவர்கட்கு இழுக்கைத் தேடிவிடுகின்றாரேயல்லாமல் அவர்கட்கு யாதும் நன்மைசெய்திலர். ஸ்ரீ கைலாசபிள்ளையவர்கட்கு அடியான் செய்யத் தலையிட்ட உதவி இராவணனுக்கு மகோதரன் செய்த உதவிபோலவும், நாகக் கொடியோனுக்குச் சகுனி செய்த சகாயம் போலவும் ஈற்றிற் பிள்ளையவர்கட்கே அநர்த்தத்தை விளைக்குமென அஞ்சுகிறேன்; அஞ்சியுமென்! வருந்தியுமென்! நியாயங்கேட்டபோது சொல்ல வேண்டியது நம்கடமைதானே!

* * *

ஸ்ரீ கைலாசபிள்ளையவர்கள், நாவலரவர்கள் தொடங்கி நடாத்திவந்த அரியபெரிய தருமங்களையும் தருமதாபனங்களையும் அத் தாபனங்கட்கு விடப்பட்ட பொருள்களையும் அவை தருமத்திற்குரியனவல்ல, உருமைக்காரர்களாயுள்ள தமக்கும் இன்னும் சிலருக்கும் முதுசொமாகக் கிடைக்கவேண்டியவையென்று வல்வழக்குத் தொடுத்து வாதாடினார். இந்த உண்மையை யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் 56ம் இலக்க உரிமைத் தத்துவ வழக்காலும் அக்காலத்தில் நிலவிய "சைவ உதயபானு" 1882ம் ஆண்டு ஜூலாய் மீ 24உ பிரசுரத்தில் "யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைச் சைவப் பிரகாச வித்தியாசாலை" என்னும் மகுட நாமத்தோடு வெளிவந்த விஷயத்தினாலும், அதே பிரசுரத்தில் வெளிவந்த யாழ்ப்பாணம் டிஸ்திற்க்கோட்டின் 12732ம் இலக்க வழக்கு விளம்பரத்தினாலும் இன்னும் பிறசாதனங்களினாலும் அறியலாகும். மேலும் ஸ்ரீ கைலாச பிள்ளையவர்கள் தங்கள் தருமச் சொத்தாக யாழ்ப்பாணப் பட்டினத்திலுள்ள நிலங்களைப் பிரசித்த ஏலத்தில் விற்றார். 1886 ஆகஸ்ட் மீ 14 உ சுத்தோலிக்கப் பாதுகாவலன் பிரசுரத்தில் நாவலரடியான் பார்த்து, நாவலரவர்கள் மீது பிள்ளையவர்கட்குள்ள பேரபிமானத்தைத் தெரிந்து கொள்வாராக.

[ஆங்கில இணைப்பு சிதைவடைந்துள்ளது]

ஸ்ரீ கைலாசபிள்ளையவர்கள் செய்யும் தரும விரோதமான இச் செயல்கள் நாவலரையாவிடத்து அவர் பால் மதிப்பைக் காட்டுவனவா? அவமதிப்பைக் கூட்டுவனவா?

[ஈழகேசரியில் வெளியான "விபரீத விளக்கம்" இந்து சாதனத்தில் மறுபிரசுரம் செய்யப் பட்டது. பின்னிணைப்பு 1 இல் காண்க]

* * *

[பார்க்க பின்னிணைப்பு 1]

உலகம் பலவிதம்: 1935 ஜூன் 27

இனி, இந்துசாதனப் பத்திராசிரியர் நாவலரவர்களிடத்து அதிக அபிமானம் பூண்டவரென நான் வரைந்தமைக்குக் காரணங் காட்டுகின்றேன். இப்பத்திராசிரியருடைய அபிமானமும் பாரம்பரியமானதெனலாம். இவருடைய தகப்பனார் நாவலருடைய மாணாக்கருளொருவரா யிருந்து அப்பெரியார் செய்த வித்தியாசாலைத் தாபனம் முதலிய சற்கருமங்கட்குத் துணையாக நின்றவர்; நாவலரவர்கள் தாபித்த சைவப்பிரகாச வித்தியாசாலைகளைப் பின்பற்றி மட்டுவிற் பதியில் ஒரு சிறந்த சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தாபித்து நடாத்திவந்தவர்; அச் சைவப்பிரகாச வித்தியாசாலை சந்திர மௌலீச வித்தியாசாலை யென்னும் பெயருடன் இன்றும் நிலவுகின்றது. இவைகளை இந்துசாதனப் பத்திராசிரியர் அறியாதிருத்தல் கூடுமாயினும், தமியேன் அறிவேன். வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையின் பொருட்டுப் பொருள் சேர்த்துத் துணைபுரிந்தவர்களுள் ஆசிரியர் ஸ்ரீ. ம. க. வேற்பிள்ளையவர்களும் ஒருவரென்பதை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் தாம் எழுதி வெளியிட்ட யாழ்ப்பாணத்து சைவப்பிரகாச வித்தியாசாலையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் 20 வருடத்து ஆவேதனம் ரு - ம் பக்கத்திற் பின்வருமாறு எழுதியுள்ளார்:-

"வண்ணார்பண்ணை வர்த்தகர்களுள்ளே அதி கௌரவமுடையவராகிய அ. ஆறுமுகச் செட்டியார் நமது வித்தியாசாலையின் பொருட்டுச் சௌமிய வருடம் ஐப்பசி மீ கஉ ஒரு நிலம் தரும சாதனஞ்செய்து தந்தனர். இதன்பொருட்டு முயன்றவர் அவர் தௌகீத்திரரும் என் மாணாக்கர்களுள் ஒருவருமாகிய கு. ஆறுமுகச் செட்டியார். மு. சுவாமிநாதையர், க. வேலுப்பிள்ளை என்னும் இருவரும் நல்லூர் வண்ணார்பண்ணைகளில் உள்ள சில புண்ணியவான்களிடத்தே திரவியஞ்சேர்த்து, அந்தநிலத்திலே ஒரு கூடங் கட்டுவித்தார்கள். சாதாரண வருடம் தைமீ முதலாக வித்தியாசாலை அதிலே வைக்கப்படுகின்றது."

* * *

மேலும் இப்பத்திராசிரியர் தந்தையார் சிதம்பரத்து நாவலர் கலாசாலையில் தலைமையாசிரியராகக் கடமை வகித்து உங வருட காலமாக அதாவது தமது மரணபரியந்தம், அதிக திறமையோடு அதனை நடாத்திவந்தவர். இந்த உண்மைகளை யெல்லாம் நமது பிள்ளையவர்கள் அறிந்தும் அறியார் போலிருக்கின்றார்.

* * *

இனி, இப்பத்திராசிரியரும் எந்தக் காலத்தும் நாவலரையாவுடைய தருமங்கள் முட்டின்றி இனிது நடைபெறல் வேண்டுமென்று இந்துசாதனத்திற் பன்முறை எழுதியும் வாழ்த்தியும் வந்துள்ளார்; வருகின்றார். இவர்நாவலரவர்கள் தருமதானத்திற்கு எக்காலத்தேனும் எவ்வாற்றாலும் இடையூறாக நின்றாரென்று பிள்ளையவர்கள் தாமுஞ் சொல்லத் துணியாரென நினைக்கிறேன். ஒருவரிடத்து அபிமானம் பாராட்டும் விஷயத்தில், அவருடைய வழித்தோன்றலாயுள்ளார்தாம் அதிக அபிமானம் பாராட்டுவதென்றும் இனத்தவரல்லார் பாராட்டா ரென்றும் நியதியில்லையே. "மதிப்புப் பேச்சிலா"? என "நாவலரடியான்" ஒரு கடா நிகழ்த்துகின்றார்? மதிப்புப் பேச்சிலுமுண்டு, மனத்திலுமுண்டு, காயத்தாலும் பாராட்டுதல் உண்டு என்பதை அடியான் அறிக. மேலும் நாவலர் அடியான் "நாவலரவர்கள் மறுபடியும் வந்துதான் தம்மீது இவர்கள் காட்டும் மதிப்பை அளக்க வேண்டும்" என்று ஒரு பொருந்தாத வசனம் எழுதியுள்ளார். ஒருவர்மீது இன்னொருவர் காட்டும் மதிப்பை அந்த ஒருவர்தான் வந்து அளக்கவேண்டுமென்ற நியாயத்தை அடியான் எங்குத் தேடிக் கண்டாரோ? அடியான் சொல்லுகிற பிரகாரம் நாவலர் மறுபடியும் வந்தால் தம் தருமத்தாபனங்கள் இப்பொழுது அடைந்திருக்கும் ஈன நிலைமையையும் அத் தருமங்களின் பரிபாலகர்கள் செய்து வரும் கிருத்திரமங்களையும் பார்ப்பரேயானால், பார்க்கச் சகியாது மீண்டும் உடனே மாண்டுவிடுவாரன்றோ!

"நாவலரவர்கள் விருப்பத்துக்கும் நோக்கத்துக்கும் இசைய இவர்களில் எவர் தமது வாழ்க்கையைக் கடைப்பிடித்தார்" என்பதே. நாவலரடியான் கேட்கும் பிறிதொரு கேள்வி. இந்தக்கேள்விக்கு விடை சொல்லப்புகின் இந்து சாதனப் பத்திராசிரியர், ஸ்ரீ கைலாசபிள்ளை யவர்களென்னுமிருவருள் எவரும் நாவலரவர்கள் வாழ்க்கையைப் பின்பற்றி வாழ்கின்றிலரென்றே சொல்லல் வேண்டும். ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்களெனிலோ நைஷ்டிகப்பிரமசாரியாவர். மேலும் அவர் ஒரு அவதார புருஷனாக மதிக்கப்படு பவர். அவருடைய விருப்பத்துக்கும் நோக்கத்துக்கும் இசைய நமது பிள்ளையவர்கள் நடந்துவரின் இந்த விவகாரங்கள் எவையும் ஏற்பட்டிருக்கமாட்டா.

த. கை. என்னுங் கைச்சாத்துடன் ஆராய்ச்சிமுறை; உலகம்பலவிதம்; என முருகேசுவை விளித்து மேற்படி பிள்ளையவர்கள் இந்துசாதனம், 24-6-35 தேதிப் பிரசுரத்தில் வெளியிட்ட கடிதத்திற்கு முருகேசு பின்னர் விடைபகர்வர்.

* * *

[பார்க்க பின்னிணைப்பு 1]

உலகம் பலவிதம்: 1935 ஜூலை 04

ஸ்ரீ த. கைலாசபிள்ளையவர்கள் எழுதிய இரு கடிதங்கள் இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் வெளியிடப்பட்டுள்ளன. சென்ற வியாழக்கிழமைப் பிரசுரத்தில் வெளிவந்த உலகம் பலவிதத்திலே க. வேலுப்பிள்ளையென நான் எடுத்துக் காட்டியவர், இந்துசாதனப் பத்திராசிரியரின் தந்தையாகிய ஆசிரியர் ஸ்ரீ ம. க. வேற் பிள்ளையவர்களல்லர். அப்பெரியார், ஸ்ரீ கைலாச பிள்ளையவர்கள் தமது கடிதத்தில் இப்பொழுது எடுத்துக் காட்டிய பிரகாரம் நல்லூரைச் சேர்ந்த அத்தியடியிற் பிறந்தவராகிய ஒருவரேயாவர். இத் தவற்றை நானும் பத்திராசிரியரும் விஷயம் வெளிவந்த பின்பே உணர்ந்தோம். பிழையைப் பிழையென்று ஒத்துக்கொள்வதே பெருந்தன்மை. அப்படி ஒத்துக்கொள்ளும் விஷயத்தில் நானும் பத்திராசிரியரும் பின்னிற்பதில்லையெனலாம். இத் தவற்றை யெடுத்துக் காட்டியதற்காக ஸ்ரீ கைலாசபிள்ளையவர்களிடத்தும் நன்றி பாராட்டுகின்றேம்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், நமது பிள்ளையவர்கள் இப் பிழையை எடுத்துக் காட்டுவதோடு மாத்திரம் நின்றுவிடவில்லை. அவர் பிழையென எடுத்துக் காட்டிய பின்னரும், நாம் இருவரும் குதர்க்கம் பேசினால், அப்பிழையைச் சரியெனச் சாதிக்க முயன்றால், பிள்ளையவர்கள் அப்பாலும் இறங்கி எம்மீது வசை சொல்வதும் பொருந்தா நியாயம் பேசுவதும் ஒரு அளவிற்குச் சாலும் எனலாம். பிள்ளையவர்கள் இந்த ஒரேயொரு பிழையைக் கண்டுபிடித்த மாத்திரத்தே, என்னை "நல்லது நீர் நில்லும்" என்று சொல்லி நிற்க விடுத்து, நேரே பத்திராசிரியரில் தாவுவாராயினர். நாமிருவரும் ஒத்துக்கொள்ளும் இந்த ஒரு தவறு காரணமாக, நாம் முன்னர்க் காட்டிவந்த ஆதாரங்களெல்லாம் தவறென்பது பெறப்படா. ஆனால் "கலியாணவீட்டிலே ஒப்புச்சொல்லி அழுபவன் செத்தவீட்டைக் கண்டாற் சும்மாயிருப்பனோ" என்ற பிரகாரம், தவறல்லா விஷயங்களைத் தவறெனச் சாதிக்க வெழுந்த பிள்ளையவர்கட்கு இவ்வொருதவறு வைரவரின் வாகனத்திற்கு வெற்றெலும்பு அகப்பட்டது போலாயிற்று. அம் மிருகமானது வெற்றெலும்பைக் கௌவிக் கடிக்க, அதனால் தன் அடிப்பல்லிலிருந்து பொசியும் உதிரத்தை அவ் வெற்றெலும்பிலிருந்து பொசியும் உதிரமென எண்ணி மீட்டும் மீட்டும் என்பைக் கடித்து உதிரத்தைக் குடித்து மகிழ்ச்சியுறும் என்னும் கருத்தமைந்த வசனமொன்று பஞ்சதந்திரத்தி லுண்டு.

* * *

பிள்ளையவர்கள் இதனைக் கண்டமாத்திரத்தே தமது முதுமை பெருமைகளையெல்லாம் மறந்து "ஓகோ! பத்திராதிபர்" என்று ஆரவாரித்தெழுந்தார். ஆராய்ச்சிமுறையை விட்டார்; பத்திராசிரியர்மீது வசைபொழியத் தலைப்பட்டார். "அதனாற்றான்போலும் மட்டுவில் வேலுப்பிள்ளை நாலுவருஷங்களின் முன் சிதம்பரத்தில் இறந்தபோது தாங்களாவது தம்பிமார் நால்வருள் ஒருவராவது கிட்டவும் போகவில்லை" என்று பரிகசிக்கின்றார். ஐயா, கற்றவரே, பெரியவரே, காலங்கண்டமுதியவரே! தாங்கள் இப்படியும் நியாயம் பேசலாகுமா? பிதாவின் அந்திய காலத்திற் பிள்ளைகள் உடனிருப்பதும், உடனில்லா தொழிவதும், பிதாவுக்குப் பிள்ளைகள் அபரக்கிரியைசெய்ய வாய்ப்பதும் அதற்கு நேர்விரோதமாகப் பிள்ளை களுக்குப் பிதா அந்தியேஷ்டி முதலியன செய்ய நேர்வதும், பிதாவின் அந்திய காலத்திலே பிள்ளைகள் உடனில்லாவிட்டாலும் இறந்தவருடைய பௌத்திரன் முறைபூண்ட ஒருவர் அபரக்கிரியை செய்ய வாய்ப்பதும், பிள்ளைகள் மகாளயம் சிராத்தம் முதலியன செய்யும் பாக்கியத்தைப் பெறுவதும், இவைகளைச் செய்வதற்கு இயலாது பிள்ளைகள் முந்தியே இறக்கப் பிதாவே இக்கிரியைகளைச் செய்ய நேர்வதும், இன்னபிறவும் தந்தையும் மைந்தருஞ் செய்துள்ள பாவ புண்ணியங்களைப் பொறுத்தன வென்பதை எல்லாமறிந்த தாங்கள் மறந்து வசைகூறப் புகுதலாகுமா? தசரதச் சக்கரவர்த்திக்கு ஸ்ரீராமன் முதலாக நான்கு புத்திரர்களிருந்தும் அச் சக்கரவர்த்தியின் அந்தியகாலத்தில் அந்நால்வருள் ஒருவரேனும் தம் தந்தைக்கு உடனிருந்து கிரியை செய்யப் பாக்கியம் பெற்றிலரே யென்பதை, பிள்ளையவர்களே, தாங்கள் இராமாயணத்திற் கண்டதில்லையா? இனி, மட்டுவில் வேலுப்பிள்ளையின் அந்திய காலத்தில் நடந்ததைச்சொல்லுகிறேன்; அவருடைய முதுமைப்பருவத்தில் அவர் மக்களுள் ஒருவர் சில மாசங்களாகச் சிதம்பரத்திற்றானே அவருடன் தங்கியிருந்தார். அந்த மகனுடைய படிப்பிற்கு இடையூறு நேருமென்று அவர் மனப் பூர்வமாகவே தம் மகனை யாழ்ப்பாணம் அனுப்பிவிட்டார். மேலும் மரணமடைதற்கு முதனாளும் அவர் தமது ஆன்மார்த்த பூசையைத் தாமாகவே செய்துள்ளார். அவருடன் அவருடைய மருகி, பேரன் அன்பு பூண்ட ஒருவர் ஒருங்கு வசித்தனர். சடுதி மரணமாதலால் தந்தி வந்தபின்பு பதிப்பாசிரியரே சிதம்பரஞ்சென்று சஞ் சயனம் முதலான கிரியைகளைச் செய்துள்ளார். இதில் நேர்ந்த தவறென்ன?

* * *

இனி, மட்டுவில் க. வேலுப்பிள்ளை 40 ரூபா மாச வேதனமாகப் பெற்றுக்கொண்டுதானே படிப்பித்தவர்; சும்மா படிப்பித்தவரா? என்கிறீர். மாசவேதனம் பெற்றுக்கொண்டு படிப்பித்தமையால் வந்த இழுக்கு என்னையோ! மட்டுவில் வேலுப்பிள்ளை மாத்திரந்தான் மாசவேதனம் பெற்றுக்கொண்டு படிப்பித்தாரா? தாங்களும் முந்தி 20 ரூபா வரையில் மாசவேதனம் பெற்றுக்கொண்டு யாழ்ப்பாணச் சைவப்பிரகாச வித்தியாலயத்திற் படிப்பித்து வந்தீர்களாமே! இது மெய்தானா! மட்டுவில் வேலுப்பிள்ளை சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையின் தலைமையாசிரியராகக் கடமைபார்த்த காலத்தில் அவ் வித்தியாசாலையின் மனேஜர் பதவியிலிருந்த ஸ்ரீ க.பொன்னம்பலபிள்ளையவர்கள் ரூபா 30வரையில் வேதனம் பெற்றாராமே? இப்படி இவர்களெல்லாரும் மாசவேதனம் பெற்றுக்கொண்டு கடமை பார்த் தமையினால் இவர்களுக்கும் நாவலரவர்களிடத்தும் அவர்களின் தாபனங்களிலும் அபிமானமில்லையென்பது புலப்படுமா? மட்டுவில் வேலுப்பிள்ளை பிழைப்பின் நிமித்தம் சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலையில் உபாத்தியாயராகப்போகவில்லை. ஸ்ரீ ச. பொன்னம்பலபிள்ளையவர்களுடைய வேண்டுகோட்கையைந்தும் நாவலரவர்கள் தரும தாபனத்தின் மீது கொண்ட அபிமானங் காரணமாகவுஞ் சென்றாரென்பதையும் மட்டுவிலிலே யுள்ள தக்கசெல்வருள் வேலுப்பிள்ளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரென்பதையும் தாங்கள் அறியீர்களா? மட்டுவில் வேலுப்பிள்ளையிடத்து தாங்கள் எக்காலத்தும் பொறாமைபாராட்டி வருகிறீர்களென்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களிடத்து அவர் முறையே கற்றதையும், அவ் வேலுப்பிள்ளையிடத்து தாங்கள் கிரமமாக பாடங்கேட்டதையும் தாங்களெழுதிய ஆறுமுக நாவலர் சரித்திரத்தில் வேணுமென்று தவிர்த்தமையினாற் புலப்படவில்லையா? வேலுப் பிள்ளையிடத்து நான் வேதனங்கொடுத்துத்தானே படித்துள்ளேன் ஆதலால் அவரை வித்தியாகுரு என்று நான் எவ்வாறு ஏற்றுக் கொள்ளுதல் முடியும் என்பீர்கள் போலும். மட்டுவில் வேலுப்பிள்ளை நாவலரவர்களிடத்தே, தங்களைப்போல தூரத்து நின்று கற்றவர் வகுப்பிலேனும் வைத்து எண்ணப்படத்தக்கவரல்லரோ? இல்லையேல், நாவலரவர்களிடத்தில் அவர் கற்றமையைத் தாங்கள் அறியீர்களா? அறியீரேற் சொல்லுதும் கேட்குதீர்; நல்லூர் ஸ்ரீமத் வே. கார்த்திகேயோபாத்தியாயர், உடுப்பிட்டி ஸ்ரீமத் அ. சிவசம்புப் புலவர், புலோலி பிரம்மஸ்ரீ ம. முத்துக்குமாரசாமிக்குருக்கள், புலோலி ஸ்ரீமத் வ. குமாரசுவாமிப்புலவர், ஸ்ரீமத் அ. வேன்மயில்வாகன உபாத்தியாயர், சுண்ணாகம் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப்புலவர், வல்வை, இயற்றமிழ்ப்போதகாசிரியர் ஸ்ரீமத் ச. வைத்தியலிங்கப்பிள்ளை, காரைநகர் ஸ்ரீமத் நாகைநாதையர், திருவனந்தபுரத்து மகாராசா கல்லூரித் திராவிட பிரதம பண்டிதர் ஸ்ரீமத் பு. வ. கணபதிப்பிள்ளை, புலோலி ஸ்ரீ அ. சோமசுந்தர புலவர் முதலிய அறிஞரெல்லாரும் மட்டுவில் வேற்பிள்ளை நாவலரிடத்திற் பலகாலம் கல்விபயின்றாரென்று பாடியிருப்ப, தாங்கள் அந்த உண்மையை மறைத்து சரித்திரத்தில் எழுதியது அழுக்காற்றின் பயனல்லவா?

யாழ்ப்பாணச் சைவப்பிரகாச வித்தியாசாலையை 37 வருடகாலம் நடாத்திவருகின்ற தாங்கள் சும்மா நடத்தி வருகிறீர்களா? தங்களுடைய பணத்தைக் கொண்டுவந்து கொட்டி நடாத்திவருகின்றீர்களா? அரசினர் உதவும் நன்கொடைப்பணமே இக்காலத்திலே பள்ளிக்கூடத்தை நடத்துதற்குப் போதியதாக, வித்தியாசாலை முட்டின்றி இனிது நடை பெறும் பொருட்டு நாவலரையா அமைத்த நிலம்புலங் கட்டடங்களால் வரும் பணம் எங்கே செல்லுகின்றது? நாவலரையாவின் தரும தாபனங்கள் தங்களைப் பரிபாலிக்கின்றனவே யல்லாமல் அவைகள் தங்களாற் பரிபாலிக்கப் படுகின்றன வல்லவாமே! ஐயா, முதியவரே! இந்துசாதனப்பத்திராதிபரின் வீடுதான் கண்ணாடி வீடென்று எண்ணி இடர்ப்படவேண்டாம். கல்லெறியத் தொடங்கினாற்றான், தங்கள் வீடு கண்ணாடி வீடோ கல்வீடோ என்பது புலப்படும். நேரில் நின்று சண்டைசெய்ய ஆற்றாதவனன்றோ, ஓடிக்கரந்து நின்று கண்ணாடிவீட்டிற் கல்லெறிய முயலுவான்.

* * *

[பார்க்க பின்னிணைப்பு 1]

உலகம் பலவிதம் 1935 ஜூலை 11

"இனி இதைப்பற்றி வராது" என்று ஸ்ரீ கைலாசபிள்ளையவர்கள் இறுதிக் கடிதத்திற் குறிப்பிட்டிருத்தலால், அவர் கேட்ட கேள்வி களுக்குப் பதில் எழுதிவிட்டு அவ்வளவில் இவ் விவாதத்தையிட்டு எழுதாது விடுகின்றேன். பிள்ளையவர்கள் என்னை விழித்து "நான் ஆராய்ச்சி முறைகளில் இப்போது வருந் தவறுகளைச் சொல்ல வந்தேனன்றி, உமது பத்திராதிபரைக் குற்றங்கூற வரவில்லை" என்று வரைகின்றார். நமது பத்திராதிபரும் நானும் பிள்ளையவர்கள் சுமத்திய அபராதங்களுக்குச் சமாதானஞ் சொல்ல வந்தோமேயல்லாமல், பிள்ளையவர்களை எவ்வாற்றானும் அவமதித்துக் குறைகூறப் புறப்பட்டிலேம். ஆனால் அப்படி வந்தவிடத்து இருபகுதியார்க்குமிடையே இப்படி முடிந்தமை இரங்கற்பாலது.

* * *

நாவலரவர்கள் எழுதிய சூசனம் மாரி முத்து உபாத்தியாயர் எழுதியதாகப் பத்திரி கையில் இப்பத்திராசிரியர் காலத்து வெளிவந்த தைப் பத்திராசிரியராவது நானாவது மறுக்க வில்லையே! திருக்கேதீச்சரத் திருப்பணி ஸ்ரீ பசுபதிச்செட்டியாரவர்களால் தொடங்கப்பட்ட தென இந்துசாதனப் பத்திரிகையில் யாண்டும் வெளிவரவில்லையே; மேற்படி செட்டியாரவர்க ளும் அத்திருப்பணி விஷயத்தில் ஈடுபட்டு உழைத்தாரென்பதைத்தானே பன்முறையும் பத்திராசிரியரும் நானும் பகர்ந்துள்ளேம்.

"தின நியமம் என்பது "தினநியமனம்" என முதற் பிரசுரத்திலே தவறாக வெளிவந்து விட்டமையைக் கண்டு, அடுத்த பிரசுரத்தில் அது திருத்தப்பட்டிருக்கின்றதே! அப்படியிருப்பவும் திருத்தப்பட்ட பிழையில் அழுத்தி நிற்பது சிறப்பல்லவே! பிள்ளையவர்கட்குப் பிழை புலப்படுவதன்றித் திருத்தம் புலப்படாததேனோ? இனி "நியமனம்" என்னுஞ் சொல்லிற்கு ஏற்பாடு என்ற ஒரு பொருளும் உண்டு. இதற்குப் பிரமாணம் சிவஞானசித்தியார் சிவாக்கிரயோகிகள் உரையிற் காணலாம். இந்த நியாயத்தினாற்போலும் முதற் பிரசுரத்தில் அந்தப்பிழை புலப்படா தொழித்தது. நாவலரையா தினநியமம் என்றே எழுதியுள்ளார். குறித்த தினநியமம் நாவலரை யாவின் கையெழுத்தோ அன்றோ என்ற சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்குச் சிறந்த வழி இலங்கை அரசினர் கையெழுத்து நிபுணரிடம், கையெழுத்துப் பிரதிகளை அனுப்பி அவர் வாயிலாக உண்மையை அறிந்து கொள்ளலேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் வருஞ் செலவை நாங்கள் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறோம்.

* * *

"வித்தியாசாலைத் தருமத்தைக் கெடுத்தது நான் மாத்திரமன்று" வேறும் இன்னின்னார் அதிற் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்று சொல்வதினால் தருமங் கெடவில்லை யென்பது பெறப்படுமா? "தரும விரோதி" என்று நான் எழுதியிருப்ப, பிள்ளையவர்கள் தாமாகவே தம்மைத் தருமத் துரோகி என மாற்றிக் கொண்டதேனோ?

* * *

ஒரு சுவாமியார்மேல் நாவலரையா பாடியதென வெளியிடப்பட்ட பாட்டைப் பிள்ளை யவர்கள் மறுத்த விஷயத்தில், நாவலரையா நரரைப் பாடுவதில்லையென்ற கொள்கையினாற் பிள்ளையவர்கள் இங்ஙனம் மறுக்கின்றனர் போலுமென் றெண்ணியே ஐயா அவர்கள் சுப்பிரமணியபிள்ளைமேற் பாடியுள்ளார்கள் என்றேன். பிள்ளையவர்களே அதனை ஒத்துக் கொள்ளும் பட்சத்தில் நான் எடுத்துக் காட்டியது மிகையாகும். "சுப்பிரமணியப்பிள்ளைமேற் பாடியதை நானே சரித்திரத்திற் சொல்லி இருக்கி றேன்" எனப் பிள்ளையவர்கள் சாதிக்கின்றார். நாவலரையா சுப்பிரமணியப்பிள்ளைமேற் பாடிய தாகப் பிள்ளையவர்கள் சரித்திரத்திற் சொல்லியிருப்பக் காணேனே!

***

உலகம் பலவிதம்: 1935 ஆகஸ்ட் 08

"அம்மான், உங்களைக் கண்டு வெகு நாள்; எப்படிச் சுகம்; நீங்கள் ஏன் இப்பொழுது அதிகம் வெளிப்படுவதில்லை; உங்களைக் காண வேணுமென்று காத்திருக்கேன். கண்டது நல்லது" என்றார் ஏகாம்பரநாதர். "விசேஷமொன்றுமில்லை தம்பீ, சுகத்துக்கு ஒருபோதும் குறையில்லை; நான் இப்பொழுது அதிகந் தலைகாட்டுவதில்லை. தம்பீ; வேறொன்றுக்குமல்ல; இந்தக் காலத்து வாலிபர்களுக்கு நம்முடைய பழைய போக்கு பிடிக்கவில்லையாம். நமக்கு இடையிடையே பகிடியும் கொளுத்துகிறார்கள். அதனாலேதான் நான் அதிகம் வெளிப்படுவதில்லை; அது கிடக்கட்டும், என்னைக் காணவிரும்பியது எதற்கோ!" என்று வினாவினார் முருகேசு. "வேறொன்றுக்குமல்ல அம்மான்; இந்த நாளில் உங்கள் பத்திரிகையைப் பார்த்தேன்; வெகு "கலாதி"யாகவிருக்கிறது. பக்கங்களையுங் கூட்டியிருக் கிறீர்கள். புதினங்களும் பல; விஷயங்களும் அதிகம்; உங்கள் பத்திரிகைக்கு இப்பொழுது ஊரிலே நல்ல பேர் இருக்கிறது; இன்னுங் கொஞ்சத் திருத்தங்கள் செய்தால் நல்லது; ஏன்? உங்களுக்கு இப்பொழுது நல்ல வரும்படி உண்டென நினைக்கிறேன்" என்று ஏகாம்பரஞ் சொன்னார்.

* * *

"தம்பீ, பேருக்குப்புகழுக்குக்குறைவில்லை;"கலா"திக்குப் பஞ்சமில்லை; பத்திரிகையைக் காலத்திற்குத் தக்க கோலமாக்கி வருகிறோம்; பலருக்கு இந்த முறை பிடிக்கிறது; சிலருக்குப் பிடிக்காமலிருக்கலாம்; எல்லாரையும் பிரியப்படுத்த முடியாது; நீர் சொல்லுகிறபடி பக்கங்களைக் கூட்டினோம். பல புதினங்களைக் காலந்தோறும் வெளியிடுகின்றோம்; புதிய முறையிற் சில செய்கிறோம்; "பழைய பாட்டுக்கள் வேண்டாம். புதிய முறையிற் பாட்டுக்கள் வேணும், புராணக் கதைகள் வேண்டாம் அவைகளைப் புத்தகமாக எழுதுங்கள். எங்களுக்குப் புதினங்கள்தான் அதிகம் இருக்க வேணும்; புதினங்களுள்ளும் உள்ளூர் வெளியூர்ப் புதினங்களோடு கோட்டுப் புதினம் வீட்டுப் புதினங்களும் "சுடச்சுட" இருக்கவேணும்; இப்படியெல்லாஞ் செய்வீர்களேல் உங்கள் பத்திரிகையை நாங்கள் தவறாமல் ஆதரிப்போம்" என்று பலர் எங்களை நேரிற் கண்டும் கடித மூலமாகவும் தெரிவித்தார்கள். நாங்களும் அவர்களின் விருப்பப்படி இப்பொழுது காணப்படும் திருத்தங்களைச் செய்துவருகிறோம்; இப்படி நாங்கள் செய்யத் தொடங்கியதைக் கண்ட நவமாக முளைத்த சில பத்திரிகைக்காரர் தங்களைக் கண்டே நாங்களும் இப்படித் திருந்தினோமென்றும், தங்களுடையதைப் பார்த்தே நாங்கள் இவ்வாறு விருத்தியடைகின்றோமென்றும், புலிக்குப் பூனை பாய்ச்சல் பழக்கவந்த விதமாக, எங்களுக்குக் குறிப்பாகக் காட்டித் தம்மைப் புழுகத் தலைப்பட்டனர். அவைகளை நாங்கள் அதிகம் பொருட்படுத்தாமல் எடுத்த கருமத்தை இயன்ற வரையிற் குறைவின்றி ஆற்றிவருகின்றோமென நினைக்கிறேன்.

* * *

"ஆனால், தம்பீ, ஏகாம்பரம்! எங்கள் வரும்படியைப் பற்றிக் கேட்டீரே, அதற்கு நான் என்ன சொல்லுவேன்! ஊர் எச்சம் வீடு பட்டினி என்ற விதமாகத்தான இருக்கிறது. பத்திரிகையைப் பாராட்டுகிறார்கள்; மெச்சுகிறார்கள்; இன்னும் ஊக்கமாக நடத்துங்கள் என்கிறார்கள், இதைத் தினசரியாக்கினால் இன்னமும் நல்லாயிருக்கும் என்கிறார்கள். இப்படியான உபகார வார்த்தைகளுக்குக் குறைவில்லை; தம்பி, உண்மையை உமக்குச் சொல்லாமல் வேறு யாருக்குச் சொல்வது; பத்திரிகைப் பணத்தைக் கேட்கப் போனால், அதை அனுப்பும்படி கடித மூலமாகத் தெரிவித்தால், எங்களுக்கும் அவர்களுக்குமிடையே வித்தியாசம் வந்துவிடுகிறது; பிறவூர்களில் இருக்கும் அபிமானிகளுட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் அடுத்த மாசம் அடுத்த மாசமென்று ஆடி தொடக்கம் ஆனி வரையில் தவணை சொல்லுகிறார்கள்; உள்ளூர் அபிமானிகளிடத்தும் பணம் அறவிடும்படி நாங்கள் அனுப்பும் [சிதைவு] தவணைக்குத் தவணை போய் வெறுங்கையினராய் மீண்டு உள்ளங்கால் வெள்ளெலும்பாக நடந்து அலுத்துத் தமக்கு இந்த உத்தியோகம் வேண்டாம்; இதனைக் காட்டிலும் பிச்சையெடுத்து வயிறு வளர்ப்பது உத்தமம் என்கிறார்கள். நான்கு பக்கமாக வெளிவந்த பத்திரிகை பின் ஆறுபக்கமாகவும் இப்பொழுது எட்டுப் பக்கங்களாகவும் வெளிவந்த போதிலும் அதனால் அதிக செலவும் சிரமமும் எங்களுக்கு ஏற்பட்டவிடத்தும் நாங்கள் பத்திரக் கிரயத்தைக் கூட்ட நினைக்கவில்லை; இதையேனும் அபிமானிகள் சிந்திக்க வேண்டாமா? அபிமானிகள் இவைகளைச் சிந்தித்து நடக்கவில்லையே என்பதுதான் எனக்கு கவலை" என்று பெருமூச்சோடு முடித்தார்.

* * *

"அம்மான், நீங்கள் சொல்வது அத்தனையுஞ் சரி; நானும் உங்கள் பத்திரிகையைச் சிலகாலமாக ஏற்றுப் படித்து வருகிறேன்; அதிலே எல்லாம் நல்லாய்த்தான் காணப்படுகின்றன; ஆனால் பிரதானமல்லாத சில புதினங்களுக்கு விசேஷ மகிமை கொடுக்கிறீர்களென்றும், சொல்லுகிறார்கள்; அவர்கள் சொல்வது எனக்குஞ் சரி போலத்தான் தோணுகிறது. அக்குறைகளைத் தவிர்த்து விடுங்கள். என்னால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தை நான் இந்த மாச முடிவில் நிச்சயமாக அனுப்பி வைக்கிறேன்; நான் சந்திக்கும் மற்றைய அபிமானிகளிடத்துஞ் சொல்லி அவர்களையுந் தூண்டி விடுகிறேன்" என ஏகாம்பரநாதர் சொல்லி முருகரம்மானிடம் விடைபெற்றுக்கொண்டு போயினார்.

* * *

உலகம் பலவிதம்: 1935 ஆகஸ்ட் 22

யாழ்ப்பாணத்திலே இக்காலத்தில் நடக்கும் குரூரமான கொலைகள் அடிபிடி சண்டைகள் அவமிருத்துக்கள் முதலிய அநர்த்தங்களைப் பற்றி உலகம் பலவிதமாகப் பேசிக்கொள்ளுகின்றது: முன் எக்காலத்திலும் நடவாப் பல அநர்த்தங்கள் இங்கே இப்பொழுது நடப்பதற்குக் காரணம் கள்ளுச் சாராயம் முதலிய மதுபானங்கள் நாடெங்கும் பரந்திருத்தலேயென்றும், பெண்பாலாருள்ளும் இம் மதுபானம் புகுந்து விட்டமையேயென்றுஞ் சிலர் சொல்லிக் கொள்ளுகிறார்கள். சமயாநுஷ்டானமில்லாமை, கடவுளிடத்து நம்பிக்கையீனம், நீதி நூல்கள் சமய சாஸ்திரங்களைக் கல்லாமை முதலியவைகளே, இப்படியான அநர்த்தங்கட்கு ஏதுவாகுமென்று வேறு சிலர் எண்ணுகிறார்கள். அநுதினமும் இருமுறை கிரமமாக மேலைத்தேசப் பேசும்படக் காட்சிகளை இங்குள்ளார் சென்று பார்ப்பது இவ்வாறான தீமைகட்கெல்லாம் உற்பத்தியாக இருத்தல் கூடுமென்று இன்னுஞ் சிலர் நினைத்துக் கொள்ளுகிறார்கள். சைவப் பிரசங்கம் கதா காலாட்சேபம் என்னுமிவைகளில்லாமையே இக் கெடுதிகட்கு மூலகாரணமாய் இருத்தல் கூடுமென்று ஏனைய சிலர் சொல்லிக் கொள்ளுகிறார்கள். மேலைத்தேச நாகரிக முறைகளையும் பழக்க வழக்கங்களையும் கொள்கைகளையும் இங்குள்ளார் பின்பற்றி ஒழுகத் தலைப்பட்டமையே பாவச் செயல்கட்கெல்லாம் பிரதான ஏதுவாகுமென்று மற்றைய சிலர் சாதிக்கின்றனர். மேலே சொல்லப்பட்ட தீயசெயல்கள் கொள்கைகள் எல்லாம் திரண்டு இவ்வக்கிரமச் செயல்கட்கு ஏதுவாகுமென்று ஒழிந்த சிலர் அபிப்பிராயப்படுகின்றனர்; சொல்லப்பட்ட தீமைகட்கு எடுத்துக் காட்டப்பட்ட காரணங்களைத் தவிர வேறும் காரணம் உண்டோவென்பதை எவரேனும் எடுத்துச் சொல்லுவார்களா?

* * *

யாழ்ப்பாணத்திலே பேய்த்தனமானதென்று சொல்லக்கூடிய ஒரு வழக்கம் உண்டு; வாசவனைக் காணும்படி கேசவன் அவன் வீட்டிற்குப் போகிறான்; வாசவன் வீட்டுத் தலைவாசலில் எவருமில்லை; கேசவன் தான் தன் கையில் வைத்திருக்குங் குடையினால் வாசவன் வீட்டுக் கதவிலே தடதடவென்று தட்டுகிறான். உட்புறத்தேயிருந்து "அதாரது" என்று ஒரு சத்தங் கேட்கிறது. அதற்குக் கேசவன் "அது நான்" என்று பதில் சொல்லுகிறான்; "நானென்று.....?" பின்னுமொரு வினா உள் வீட்டிலிருந்து புறப்பட்டுத் தலைவாசலுக்கு வருகின்றது; இரண்டாம் வினாவிற்கும் "அதுதான் நான்" என்றே கேசவன் விடை பகருகின்றான்; மூன்றாம் முறை அதார்? தெரியவில்லை; என்று ஒரு கேள்வி உள்ளிருந்து வரவே, "நான் தான் கேசவன்" என்ற விடை இவன் வாயிலிருந்து பிறக்கின்றது; இவ்வளவு சங்கடம் எதற்கோ? முதல்முறையிலேயே "நான் தான் கேசவன்" என்று சொல்லிவிட்டால் இவ்வளவு வினாவும் விடையும் இத்துணைச் சங்கடமும் ஏற்படாதே; ஐரோப்பியர் இப்படியான சந்தர்ப்பத்தில் முதன் முறையிலேயே தம்முடைய பெயரைச் சொல்லி விடுவார்கள். ஐரோப்பியருடைய நல்ல பழக்கங்களை விடுத்து நெய்யரி போலத் தீயனவற்றைப் பின்பற்றும் நமது நாட்டினர் இனியேனும் இப் பேய்த்தனத்தை விட்டு அவர்களுடைய நல்ல பழக்க வழக்கங்களைப் பின்பற்றவொண்ணாதா?

* * *

என்ன ஆநந்தம்! என்ன ஒழுக்கம்? எங்கே பார்த்தாலுஞ் சிவ மணம்! எப்படி நோக்கினாலும் சுகமயம்! எங்கள் நல்லூர்க் கந்தன் கடவுளின் மகோற்சவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறுகின்றது. மற்சமாமிசம் புசிப்போர் அவற்றை அறவே விடுத்தனர்; மதுபானிகள் அதனை முற்றாக வெறுத்தனர்; எவரும் நித்திரை விட்டெழுந்திருப்பது நான்காம் யாமம்; ஸ்நாநஞ் சந்தியாவந்தனம் புலரிக்காலத்தில்! இவைகளை முடித்துக்கொண்டு அர்ச்சனைத் திரவியங்களுடன் ஆண்கள் பெண்கள் எல்லாரும் நல்லூர்த் தலத்தை நோக்கிச் செல்லுகிறார்கள்; இங்குள்ள வித்தியாசாலைகளெல்லாம் இப்பொழுது இம் மகோற்சவத்திற்கென்றே விடுதலை செய்யப்பட்டுள்ளன. இதனாற் பள்ளிக்கூடச் சிறுவர் சிறுமியரும் கணக்கின்றி உற்சவ தரிசனத்திற்குச் செல்கின்றார்கள்; திருக்கோயிலுக்குச் செல்லும் மார்க்கங்களில் தண்ணீர்ப் பந்தர்கள்; நடைப்பக்தர் நடந்து செல்லும் பக்தர் குழாத்தினர் இப் பந்தர்களை அடைந்த மாத்திரத்தே நீர் அருந்தியும் சிறிது நேரம் தங்கியிருந்து சிரமந் தீர்ந்தும் அப்புறம் போவர் வருவர். மோட்டரதம் குதிரைவண்டி மாட்டுவண்டி றிக்ஷோ முதலியவற்றில் இவர்ந்து செல்வார் பலர்; நடந்து செல்வார் பலரிலும் பலர்; அங்கப் பிரதட்சனஞ் செய்து கொண்டு ஆண்களும் பஞ் சாங்கமாக வீழ்ந்து வீழ்ந்து வணங்கியெழுந்து நடந்து பெண்களுஞ் செல்வர்; பாற்காவடி கொண்டு செல்வார் பலர். சங்கீதனங்களிலும் தெரு வீதிகளிலும் தேவாரம் திருவாசக திருப்புராண திருப்புகழ்களின் முழக்கம். கன்னெஞ்சினரையும் உள்ளங் கரைந்து கண்ணீர் பெருகச் செய்யும் வந்தனை வழிபாடு. சுருங்கச் சொல்லுகில் யாழ்ப்பாண மக்கள் மிகவும் தூய்மையாக இருக்குங் காலம் இதுவேயாகும். ஐயா, முருகா, கலியுகவரதா! நம் யாழ்ப்பாண மக்களை எக்காலமும் இப்படியே ஒழுக்கமாகச் சஞ்சரிக்கச் செய்ய உன்னால் முடியாதா? இப்பொழுது இந்நாட்டில் நடக்கும் கொலை களவுகள் காமம் அடிபிடி சண்டை சூது முதலாம் தீமைகளும் மழையின்மை பஞ்சம் பலவகையான நோய் அடிமைத்திறம் முதலிய அநர்த்தங்களும் தலையெடுக்காவண்ணந் தடுத்தருளுவதற்கு, அறுமுகம் படைத்த இறைவனே, ஐயனே, நீ அருள் செய்வதன்றி வேறு யார் அருள் செய்தல் முடியும்? "உன்னையொழிய ஒருவரையும் நம்புகிலேன்" என்று தேவரிருடைய அடியவர் அநுதினமும் ஓலமிடுகின்றனரே! காக்க கடவியநீ காவா தொழிந்தக்கால் ஆர்க்குப் பரமாம் அறுமுகவா!

* * *

உலகம் பலவிதம்: 1935 செப்டெம்பர் 19

சென்ற வாரம் சாவகச்சேரியிலுள்ள டிறிபேர்க் ஆங்கில வித்தியாசாலையில் மிஸ்ரர் மு. பாலசிங்கமவர்கள் சபைத் தலைவராக இருக்க, பரிசளிப்புக் கூட்டம் நடைபெற்றது. அவர் செய்த சொற்பொழிவில், இக்காலத்திற் பிள்ளைகட்குப் போதிய உணவில்லாமையால் அவர்கள் வளர்ச்சி குன்றலாயினரென்றும் பசியோடு கூடிய பிள்ளைகள் ஊக்கமாகப் படித்தல் முடியாதென்றும், ஆதலாற் பள்ளிக் கூடங்களில் ஆடுகோழி வளர்த்தற்காகிய கூட்டங்களை நியமித்துப் பள்ளிப் பிள்ளைகளும் அக் கூட்டங்களிற் சேர்ந்து ஆடுகோழிகளை வளர்த்து ஆட்டுப்பாலையும் கோழி முட்டையையும் உண்டுவர வேண்டுமென்றுங் கருத்தமையக் கூறியுள்ளார். ஆட்டுப்பாலும் கோழிமுட்டையும் அகப்படாமை யினாற்றான் பள்ளிக்கூடப் பிள்ளைகள் உணவின்றி மெலிந்து படித்தற்குச் சக்தியற்றவராயினரென்பது மிஸ்ரர் பாலசிங்கமவர்களின் கருத்துப் போலும்! "பசி வந்திடிற் பத்தும் பறந்திடும்" என்பது மெய். ஆனாற் பள்ளிக்கூடப் பிள்ளைகட்குத் தக்க உணவைக் கொடுக்க வேண்டியவர்கள் பெற்றார்களே. "தாயோடறுசுவைபோம் தந்தையொடு கல்விபோம்" என்பது முதுமொழி. இப் பெற்றாருள் தகப்பன்மாராகவுள்ளவர்களுட் பலர் இக் காலத்தில் தாம் கள் சாராயம் என்னும் வெறிப் பானங்களின் பொருட்டு நாள்தோறும் அந்திக் காலத்திற் செலவிடும் பணத்தில் ஒரு பகுதியை மிச்சம் பிடித்து மிஸ்ரர் பாலசிங்கமவர்கள் சொல்லுகிறபடி ஆட்டுப்பாலின் பொருட்டும் கோழி முட்டையின் பொருட்டும் உதவி வருவரேல், பிள்ளைகளாயுள்ளார்; எவ்வகையான கவலையுமின்றி நன்கு கல்வி பயில முடியுமே! மற்சமாமிசமுண்ணும் பௌத்தர்கள்தாமும் பாவமென்று உண்ணாது தவிர்க்கும் கோழி முட்டை மீது மிஸ்ரர் பாலசிங்கமவர்கட்கு இத்துணை ஆர்வமேனோ?

* * *

இந்திய திறையரசராற் பரிபாலிக்கப்படும் மைசூர் காஸ்மீரம் முதலிய நாடுகளிற்றானும் தனித்தனி ஒவ்வொன்றிற்கு மேற்பட்ட சர்வகலாசங்கங்கள் உண்டு; மைசூர் பரோடா முதலாம் சுதேச அரச நாடுகளில் ஆங்கிலக் கல்விதானும் பிள்ளைகளிடத்தில் வேதனம் வாங்காது இலவசமாக ஊட்டப்படுகின்றதாம். சில ஆண்டுகளின் முன் யப்பானியர் கைப்பட்ட வியூஜி தீவுகட்கும் ஒரு சர்வகலாசாலையுண்டென்று சொல்லுகிறார்கள். ஆனால், சீர்திருந்திய சாதியாருள் ஒரு சாதியாராக வைத்தெண்ணப்படும் பிரித்தானியர் கையில் எங்கள் இலங்கையரே அகப்பட்டு 145 வருடங்கள் வரையிற் கழிந்தன. இற்றைக்கு ஐம்பது அறுபது வருடங்கட்கு முந்தி இலங்கையிலும் ஒரு சர்வகலாசங்கத்தைத் தாபித்தல் வேண்டுமென்று இங்கிந்த பெரியார் பலர் அரசினரைத் தூண்டினர். பிற்காலத்தில் சேர். பொன். அருணாசலம் போன்ற அபிமானிகள் இவ்விஷயமாக முயன்று பார்த்தனர். இற்றைக்குப் பத்து வருடங்கட்கு முன் - அதாவது இலங்கைச் சட்டநிரூபண சபை இருந்த காலத்தில், இலங்கைக்கு ஒரு சர்வகலாசங்கம் ஆவசியம் வேண்டுமென்று தீர்மானஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டது. அப்படியான ஒரு சங்கம் விரைவில் வரும் என்று அக்காலத்தில் இங்குள்ளார் எல்லாருங் காத்திருந்தனர். ஆனால் சர்வகலா சங்கத்தைத் தாபிப்பது கொழும்பிலேயோ இல்லையேல் கண்டிக்கணித்தான தும்பறைப் பள்ளத்தாக்கிலேயோ என்ற விஷயத்திற் பெரும் பிணக்கு உண்டாகி நீடித்த வாக்குவாதங்களும் நிகழ்ந்தன. சர்வகலாசங்கமொன்றைத் தாபிக்கப் போனாற்றானே இப்படியான பிணக்கும் வாக்குவாதமும் ஏற்படலாயின என்றெண்ணிப் போலும் சென்ற 10 வருட காலமாக இலங்கைச் சர்வகலாசங்கத்தைப் பற்றிய ஒரு கதையும் இல்லாதொழிந்தது.

* * *

இலங்கை வித்தியாபகுதியார் ஒன்றரை நூற்றாண்டு சென்றபின் இப்பொழுது ஊட்டிவரும் உயர்தரக்கல்வி, ஆங்கில எட்டாம் வகுப்பிற்குச் சரியான J.S.C வகுப்பும் அதற்கு ஒன்றரை வயசிற்கு மூத்த S.S.C வகுப்புமாகும். நிலைபரம் இப்படியிருக்கையிலே, இப்பொழுதுள்ள அரசாங்க சபையார் இலங்கைக்கு ஆவசியகம் ஒரு சர்வகலாசங்கம் வேண்டியதுதான் என்பதை உணர்ந்துபோலும், சென்ற வாரம் நடந்த அரசாங்க சபைக் கூட்டத்தில் ஒரு பிரேரணையை எடுத்தாண்டு நிர்ணயஞ் செய்திருக்கின்றனர். இவர்களுடைய நிர்ணயப்படி சர்வகலாசங்கத்தைக் கொழும்பிலே நாற்றிட்டுப் பின் பெயர்த்துக் கொண்டு போய்க் கண்டியில் நாட்டி வளர்க்கப் போகின்றார்களென அறியக்கிடக்கின்றது. இவர்கள் எதற்காக இவ்வளவு துரிதப்படுகிறார்களென்பது புலப்படவில்லையே. கல்வியைச் சாட்டி லண்டன் சர்வகலா சங்கத்திற்கும் கேம்பிரிஜ் சர்வகலாசங்கத்திற்கும் இந்த இலங்கை மக்கள் இலட்சக்கணக்கில் வருடந்தோறும் அனுப்பிவந்த முற்பிறப்பிற் பட்டகடன் முடிந்து விட்டதா?

* * *

உலகம் பலவிதம்: 1935 செப்டெம்பர் 26

பெண்கள் ஒழுகத்தைப் பற்றி இந்தச் சமையத்தில் நான் உனக்குச் சொன்னாற் பெரும்பழி உண்டாகும்; அந்தநாளிலும் இப்படிக் காலமழை தவறியதுண்டா என்று தம்பீ, என்னைக் கேட்டாயே; அந்த நாட்களில் மழை ஏன் தவறப் போகின்றது; அக்காலத்திலுள்ளவர்கள் செய்த தானமெவ்வளவு, தருமம் எவ்வளவு, தெய்வ வழிபாடெவ்வளவு, அவர்கள் ஒருவர்க்கு அநியாயஞ் செய்யப் பின்னிற்பர், பொய் சொல்லக் கூசுவர், பிறர்பொருளை அபகரிக்கப் பயப்படுவர்; காலமழை எக்காலத்தாயினும் பெய்யத் தவறினால், தெய்வத்திற்கு விசேஷ ஆராதனை வந்தனை வழிபாடு செய்து தெய்வ அருளால் மழையைப் பெற்றுக்கொள்வர்கள்.

* * *

"ஆனால் கேளும் சின்னத்தம்பி, இந்தக் காலத்தில் எல்லாம் தலைகீழாகவல்லவா நடைபெறுகின்றன; நாடெனிலோ, அரசனெவ்வழி குடிகளும் அவ்வழியென்ற நிலைமையில் இருக்கின்றது; கொலை களவுகள் காமம் என்று சொல்லப்பட்ட பஞ்சமாபாதங்களில் ஒன்றேனுங் குறையவில்லை; மனுஷர்க் கொலை ஒன்றா! இரண்டா! எங்கே பார்த்தாலும் அடிபிடியுஞ் சண்டையும் கத்திக்குற்றும் பொல்லடியுந்தானே தின நிகழ்ச்சிகளாய்க் காணப்படுகின்றன; களவு வரவர அதிகப்பட்டு இப்பொழுது யாழ்ப்பாணத்தில் ஆளைக் கொலைசெய்து விட்டு களவெடுத்தலாகிய பயங்கரமான தொழிலும் தலைப்பட்டுவிட்டது. இனி, இவைகளுக்கெல்லாம் பிரதான காரணம் என்னவென்று எண்ணுகிறீர்; வேறொன்றுமல்ல; மதுபானம்; யாழ்ப்பாணம் தோன்றிய காலத்திற்கு இப்படியும் மதுபானம் அதிகப்பட்டதுண்டா? எங்கே பார்த்தாலும் கள்ளுக்கடை; எந்த ஊரிற் பார்த்தாலும் சாராயத் தவறணை; மேலும் மரவரியென்று சொல்லி ஒரு அநியாய முறையை வைத்தமையினால் பனந்தோப்பு ஒவ்வொன்றும் ஒவ்வொரு கள்ளுத் தவறணையாக மாறிவிட்டது. இங்கே எந்த நேரத்திலும் கள்ளு வாங்கலாம் குடிக்கலாம்; இக்கள்ளின் தீமை சாராயத்தின் கேடு இவ்வளவில் நின்று விட்டதா? இல்லை! இல்லை! அடுத்த பாதகமாகிய காமத்திலல்லவா போய் முடிகின்றது; இக்காலத்தில் எத்தனை பெண்கள் சோரமாய்க் கடத்தப்படுகிறார்கள்! அல்லாமலும், கள்ளு மழை சாராயமழை யாழ்ப்பாணத்தில் இடைவிடாமற் பெய்ய எங்கே பார்த்தாலும் எவரைப் பார்த்தாலும் "தண்ணீ" ரோடு காணப்பட மழை எதற்கு"

* * *

"தம்பீ, இவை மாத்திரமா? இக் காலத்துள்ளார் எந்தக் கருமமும் தங்களால் முடியும் என்ற அகம்பாவத்தோடல்லவா இருக்கிறார்கள்; மழைபெய்யச் செய்தல் முதலிய சில தெய்வீகமான கருமங்களையும் இவர்கள் செய்யத் தக்கவராவரேல், கடவுளை இல்லாமலல்லவா துரத்தி விடுவார்கள்! அதற்குப் பயந்துதான் போலும், தெய்வமும் மழை பெய்யச் செய்தல் முதலிய பஞ்சபூதங்களின் செயல்கள் சிலவற்றைத் தமக்குப் பிடியாக வைத்திருக்கிறார்; இப்பொழுதும் தெய்வத்தை இரந்தால் மழைபெய்யாமல் விடுமா?

"வையகமுற்று மாமழை மறந்து
வயிலினீரிலை மானிலந் தருகோம்
உய்யக்கொள் கமற்றெங்களை யென்ன
வொளிகொள்வெண் முகிலாய்ப்பரந்தெங்கும்
பெய்யுமாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிருவேலி கொண்டருளுஞ்
செய்கைகண்டுநின் றிருவடியடைந்தேன்
செழும்பொழிற் றிருப்புன் கூருளானே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சுந்தரமூர்த்தி நாயனார் பாடியதை நீ அறியாயா? தெய்வத்தால் ஆகாதது ஏதுமுண்டா? ஏதோ நடப்பதை இருந்து பார்ப்போம்" என்று சொல்லிவிட்டு முருகர் தாம் போகவேண்டிய இடத்திற்குப் போயினர்.

* * *

உலகம் பலவிதம்: 1935 ஒக்டோபர் 03

பூர்வத்தில், பாரத யுத்தத்தை நடத்திப் பூமிபாரந் தீர்க்கத் திருவவதாரஞ் செய்த ஸ்ரீ கண்ணபிரான், யுத்தம் ஆரம்பித்தற்கு முன் ஞானியாகிய சகாதேவனை நோக்கி "ஏ மைத்துனா, பாரத யுத்தம் மூளாதபடி தடுத்தற்குச் செய்யக் கூடிய உபாயம் யாதுமுண்டோ? சொல்லுதி" என்று கேட்டார். அப்பொழுது சகாதேவன் புன்னகை செய்து கிருஷ்ண பகவானைப்பார்த்து "பாராளக் கன்னனிகற் பார்த்தனை முன் கொன்றணங்கின் காரமர்குழல்களைந்தூ காலிற்றளை பூட்டி நேராகக் கைப்பிடித்து நின்னையும் யான் கட்டுவனேல், வாராமற் காக்கலாம் மாபாரதம் என்றான்"

"சுவாமீ, கன்னனை உலகாளச் செய்து, அதற்கு முன் அர்ச்சுனனைக் கொன்று, பாஞ்சாலியின் விரித்த கூந்தலைக் கத்திரித்து, உம்மையும் யானே நேரிற் பிடித்துக் கால் கைகளைக் கட்டிவிடுவனேல் பாரதயுத்தம் மூளாவண்ணம் தடுத்தல் முடியும்" என்று பதில் சொன்னான். சகாதேவன் சொன்னபடி செய்திருந்தால் பாரத யுத்தம் நிகழ்ந்தேயிருக்கமாட்டாது.

* * *

இப்பொழுது இற்றலிய அபிஸீனிய யுத்தம் மூளுமோ மூளாதோ என்ற சந்தேகம் எவரிடத்தும் குடிகொண்டுள்ளது. இப்போர் மூளவொட்டாது தடுக்கவேண்டுமானால் செய்யத் தக்கவை இரண்டு உண்டு. பிரான்ஸியரும் ஆங்கிலரும் அபிஸீனியருக்குப் படைத் துணையாகச் செல்வதற்கு முற்பட்டு நிற்பரேல் முஸோலினி ஒருபோதும் மாறுபட்டு யுத்தஞ் செய்யத் துணியமாட்டார் இது ஒரு உபாயம்; இல்லையேல் பிருத்தானியரும் பிரான்ஸியரும் ஒருங்கு சேர்ந்து அபிஸீனிய ராச்சியத்தைச் சரிசரியாகப் பிரித்து ஒரு பாதியை இற்றலியருக்குக் கொடுத்துவிட்டு மற்றொரு பாதியைப் பின்னர் தங்களுக்குட் பகிர்ந்து கொண்டாலும் இற்றலிய அபிஸினிய யுத்தம் நேரப் போவதில்லையென்னலாம். அபிஸினியச் சக்கரவர்த்திக்கு மாறாக யுத்தத்திற்குப் போக வேண்டாமென்று முஸோலினியைத் தடுத்து ஆங்கிலரும் பிரான்ஸியரும் சமாதானம் பேசுவது சிங்கத்தை ஆட்டுக்குட்டியுடன் சண்டைக்குப் போகவேண்டாமென்று இரண்டு வேங்கைகள் தடுத்துச் சமாதானம் பேசுதல் போலல்லவா இருக்கின்றது.

* * *

ஏதோ, இலங்கை மக்கள் செய்த புண்ணியத்தின் பயனாகப் போலும் அரசாங்கசபைத் தலைவருக்கும் அங்கத்தவர்கட்கும் விசேஷ அதிகாரத்தைக் கொடுத்தற்காகிய அந்தச் சட்டம் இப்போதைக்கு நிறைவேறாதுபோற் காணப்படுகின்றது. காரணம் இங்கிலாந்திற்குச் சென்றிருந்த ஸேர் D. B. ஜெயத்திலகை இப்பொழுது இலங்கைக்கு மீண்டு வந்திருத்தலேயாகும். ஸேர் ஜெயத்திலகைக்கு இத்திட்டத்தின் சில அம்ஸங்கள் பிடிக்கவில்லையாம். அவருடைய கொள்கை பெருந்தன்மையானது; அது கிடக்க இந்தச் சந்தர்ப்பத்தில் எங்கள் யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பிரதிநிதிகள் நால்வரையும் மறந்துவிடவொண்ணாது. இவர்கள் நால்வரும் இங்குள்ள சனங்களைக் கொண்டு தங்களைத் தெரிவுசெய்வித்து அரசாங்க சபைக்குப் போன சமையத்தில் தாங்கள் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் விஷயத்திற் சிங்களர் மாறாய் நின்றால் அவர்களுடன் ஒத்துழைக்கப் போவதில்லையென வீரம்பேசி வாய்ப் பறைசாற்றிச் சென்றார்கள்; இப்பொழுது இந்த விசேஷ அதிகாரத் திட்டம் சிங்கள மக்களுக்கு மாத்திரமன்றித் தமிழ் மக்களுக்கும் நேர் மாறானதென்பதை நன்கு அறிந்துகொண்டும் திட்டத்தை நிறைவேற்றும் விஷயத்திற் சிங்கள அங்கத்தவர்களோடு சேர்ந்துகொண்டு, தங்களை அனுப்பிய சனங்களாகிய எங்களுக்கு மாறாக நிற்கின்றார்கள்; அநுராஜபுரப்பகுதிப் பிரதிநிதியாகிய பிறீமன் மாத்திரம் குறித்த திட்டத்திற்கு மாறாய் நிற்கின்றார். இப்பொழுதுள்ள அரசாங்க சபையின் ஆயுள் முடிய இந்த நாலுபேரும் பதுங்கிப் பதுங்கி இங்கேதான் வருவார்கள்; ஏன்? அடுத்த தேர்தலுக்கு ஆட்சேர்ப்பதற்கு; அந்தச் சமையத்திற் பார்த்துக்கொள்ளுவோம் என்று முருகேசு சொல்லிப் பெரிதும் ஆத்திரப்படுகிறார்.

* * *

உலகம் பலவிதம்: 1935 ஒக்டோபர் 10

அரசனொருவன் தனக்கு இரண்டு திறமான குதிரைகள் வாங்கி வரும்படி தன் மந்திரியையும் சேவகனையும் வேற்று நாட்டிற்கு அனுப்பி இருந்தான். அவ்விருவரும் ஆங்குச் சென்று இரு சிறந்த பரிகளை வாங்கிக் கொண்டு மீண்டு காட்டு மார்க்கமாக வரும்போது இராக்காலமாய் விட்டதால், அக்காட்டினிடையேயுள்ள ஒரு வெளியான இடத்தில் குதிரைகளையுங் கட்டிவிட்டு அயலிலே படுத்துக் கிடந்தார்கள். அதன்பின் அந்த மார்க்கமாக வந்த வழிப்போக்கர் சிலர் அவ்விருவரும் படுத்துக் கிடப்பதையும் குதிரைகள் கட்டி நிற்பதையுங் கண்டு "திருடர் சஞ்சரிக்கும் இடம் விழிப்பாகப் படுத்துக் கிடவுங்கள்" என்று எச்சரிக்கை செய்துவிட்டுத் தம் வழியே போயினர்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிப்போக்கர் சொன்னதைக் கேட்ட மந்திரி சேவகனைப் பார்த்து "நீ உறங்காமல் விழிப்பாகப் படுத்துக் கொள்; இல்லாவிட்டால் கள்வர் குதிரைகளைக் களவாண்டு செல்வார்கள்" என்று சொன்னான், "நித்திரை வராமலிருப்பதற்கு ஒரு உபாயஞ் சொல்லித் தரவேண்டும்" என்று சேவகன் மந்திரியைக் கேட்க மந்திரி "ஏதும் ஒரு அருமையான விஷயத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தால் நித்திரை ஒருபோதும் வராது" என உபாயஞ் சொல்லிக் கொடுத்து விட்டுத் தான் உறங்கினான். சேவகனும் யோசித்தபடி கிடந்தான்.

* * *

இரண்டாஞ் சாம முடிவில் உறங்கிக் கிடந்த மந்திரி விழித்து "சேவகா, எதைப்பற்றி யோசிக்கின்றாய்" என்று கேட்க, சேவகன் "ஐயா, பரந்த ஆகாயத்திலே, இப்பொழுது காணப்படும் இந்த வெள்ளிகளையெல்லாம் ஒட்டினபோது அப்படி ஒட்டியவன் தான் எங்கே நின்று ஒட்டினான் என்பதையிட்டு யோசிக்கிறேன்" என்றான். மந்திரி தன்னளவில் புன்னகைசெய்து "இன்னமும் அப்படியே யோசித்துக்கொண்டு கிட" என்று சொல்லிவிட்டுப் புரண்டு படுத்து உறங்கினான். சேவகன் பின்னரும் யோசிக்கலானான்.

* * *

மூன்றாஞ்சாம முடிவில் மந்திரி பின்னரும் விழித்து "சேவகா, இப்பொழுது எதனைப்பற்றி யோசிக்கிறாய்" என்று கேட்க "வேறு ஒன்றைப் பற்றியுமல்ல. ஐயா, இந்தப் பெரிய சமுத்திரத்தைத் தோண்டிய காலத்திலே, தோண்டியவர்கள் தோண்டிய மண் முழுவதையும் எங்கே கொண்டு போய்க் கொட்டினார்கள் என்பதைப் பற்றித்தான் யோசிக்கிறேன்" என்றான். "அது நல்ல யோசனை தான், இன்னமும் யோசித்துக் கொண்டு படு" என்று சொல்லிவிட்டு மந்திரி உறங்கி விட்டான்.

* * *

நான்காம் சாமமாய்விட்டது; வழி நடந்த சிரமத்தினாலும் முதல் மூன்று சாமத்திலும் நித்திரையில்லாதனாலும் சேவகனும் சிறிது அயர்ந்துவிட்டான். இதற்கிடையில் கள்வர் அங்கே வந்து குதிரைகள் இரண்டையும் அவிழ்த்துக் கொண்டு போய்விட்டனர். சேவகன் விழித்தெழுந்து பார்த்தான்; குதிரைகளைக் காணவில்லை. குதிரைகளின் உடுப்புகள் மாத்திரங் கிடந்தன. இதற்கு என்ன செய்வதென்று அவன் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்போது மந்திரி விழித்தெழுந்து "சேவகா, இப்பொழுது எதைப்பற்றி யோசிக்கிறாய்" என்று கேட்டான்; "ஐயா, உடுப்புகளை நீங்கள் கொண்டு போவதோ, இல்லாவிட்டால் நான்தான் கொண்டு போவதோ என்று சேவகன் சொல்ல; குதிரைகள் எங்கே" என்று மந்திரி பதைப்போடு கேட்க, "குதிரைகளைக் கள்வர் கொண்டுபோய் விட்டார்கள்" என்று சேவகன் பதில் சொன்னான். பிறகு இருவரும் கவலையோடு தம் ஊருக்குச் சென்றனர். அரசனுக்கு என்ன பதில் சொன்னார்களோ நான் அறியேன்.

* * *

இத்தாலிய - அபிசீனிய யுத்தம் தொடங்கி ஏறக்குறைய ஒரு வாரமாகின்றது; இத்தாலியர் அபிசீனியாவிற் சில இடங்களைப் பிடித்துவிட்டனரென்றும் பல்லாயிரக் கணக்கானோரைக் கொன்று விட்டனர் என்றும் தந்திச் சமாசாரங்கள் கிட்டுகின்றன. ஆனால் சென்ற ஆறு ஏழுமாச காலமாக இந்த யுத்தம் நேராதபடி சமாதானத்தை ஆக்க வேண்டுமென்று யோசிக்கத் தொடங்கிய சர்வகாரிய சங்கத்தார், யுத்தம் தொடங்கி அபிசீனியருக்கு அதிக சேதம் நிகழ்ந்துவரும் இந்த நேரத்திலும் யோசித்து முடியவில்லை. இந்த யோசனையிற் பிரதானமான சிரமம் பூண்டவர்கள் ஆங்கிலரும் பிரான்சியருமேயாவர். இவர்களெல்லாரும் யோசித்து முடிவெடுத்தற்கு முன், ஒருபோது இத்தாலியர் அபிசீனியரை முறிய அடித்து வெற்றி பெறுதலுங் கூடும். அதன் பின்னரும் அந்த மந்திரியுஞ் சேவகனும் போல இவர்கள் யோசித்துக் கொண்டேயிருப்பர் போலும்.

* * *

உலகம் பலவிதம்: 1935 ஒக்டோபர் 17

"யதார்த்தவாதி வெகுசன விரோதி" என்று உலகத்திலே பழமொழியாகச் சொல்வதுண்டல்லவா அதாவது உண்மையைச் சொல்பவன் பலராற் பகைக்கப்படுவான் என்பது கருத்து. இது மெய்தான் என்பதையும் எல்லாரும் ஒத்துக் கொள்ளுவர். இதற்குப் பயந்து நானும் சொல்ல வேண்டிய சில விஷயங்களைச் சொல்லாமல் விடுவதுமுண்டு. இக்காலத்திலே நமது தமிழ்ப் பெண்களுள் நாகரிகம் படைத்த பெண்களெனத் தம்மைத் தாமே மதித்துக்கொள்ளும் பெண்கள் சிலர் விரும்பும் சுவதந்திரம் காட்டிற் சஞ்சரிக்கும் கழுதையின் சுவதந்திரம் போன்றதென்பது மெய்; இந்த உண்மையை நான் சொல்லப்போனால் முருகேசு ஒரு கெட்டவன், பொல்லாதவன் என்று பெண்டுகளெல்லாரும் என்னைத் திட்ட ஆரம்பிப்பார்கள்; பெண்கள் மாத்திரமா? இல்லை! இல்லை!! பெண்களின் கொள்கைக்கு, எண்ணத்திற்கு, விருப்பத்திற்கு, போக்குக்கு உடன்பட்ட ஆண்பிள்ளைகளும் என்னை ஏசுவார்கள்; அடிக்கப் பார்ப்பார்களல்லவா? இந்தச் சங்கடத்திற்காகத்தான் நான் பெண்மணிகள் விஷயமாக அதிகம் பேசுவதில்லை.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளுக்குப் பயந்து பேசாமல் விட்ட முருகேசு இப்பொழுது பேசத் தலைப்பட்டதற்கும் ஒரு நியாயமுண்டு. அது கீழே படிக்கப்படிக்க வெளிவரும். இக்காலத்திலே கற்ற ஆடவர்கள், படித்தவர்களாகிய தங்கள் பெண்மணிகளுக்குக் கொடுக்குஞ் சுயாதீனம் எப்படிப்பட்டது? எந்தச் சாதியாரைப் பின்பற்றியது? என்ற கேள்விகளைக் கேட்கப் புகுந்தால், அயிரோப்பிய நாகரிகத்தைப் பின்பற்றியதென்ற பதில் வரக்கூடும்; மெய்தான், இக்காலத்துத் தமிழ்ப் பெண்களுள் நவநாகரிகம் படைத்தோர் பிரசித்த கூட்டங்களுக்குச் செல்லுதல், யதேச்சையாகத் திரிதல், அரசியல் விஷயங்களிற் பங்குபற்றுதல் கன்னியராயினும் ஒதுக்கபதுக்கமின்றியும் வாழ்க்கைப்பட்ட பெண்கட்கும் தமக்குமிடையே பேதமின்றியும் எங்குஞ் சஞ்சரித்தல், ஊடாடுதல், கடைத்தெருவுக்குச் சென்று தாங்களாகவே தங்களுக்கு விருப்பமான ஆடையாபரணங்கள் பொருள் பண்டங்களைத் தெரிந்து வாங்குதல், சங்கீதக் கச்சேரி நாடகம் படக்காட்சி என்னுமிவைகளைப் போய்ப் பார்த்தல், இவைகளில் இயலுமானாற் பங்குபற்றுதல் முதலியவைகளைச் செய்துவருகிறார்கள்.

* * *

ஆடவர்களும் இப் பெண்மணிகளை அவர்களுடைய மனக் குறிப்பையறிந்து அன்பாய் நடத்திவருகிறார்கள்; "மருந்தோடாயினும் விருந்தோடுண்" என்ற பிரகாரம் மதுபானமாயிருந்தாலும் நமது ஆடவர்கள் தம் பெண்ணிரத்தினங்களை வஞ்சித்து உட்கொள்ள மனம் பொருத்தார்களாம். சில ஆடவர்கள் "கணவன் உண்ட பின் தான்நுகர் கொள்கையும்" என்பதை மாற்றி "மனைவியுண்டபின் தான்நுகர் கொள்கையும்" என்ற முறையில் நடந்துகொள்ளுகிறார்கள்; இவைகள் மாத்திரமா! படக்காட்சி பார்க்கும்படி தம் பத்தினியையும் குழந்தையையும் மோட்டாரத மார்க்கமாக அழைத்துக் கொண்டுபோன புருஷர், படக்காட்சி முடிந்தபின், குழந்தை மடியில் உறங்கிவிட்டபடியால், அக்குழந்தையை அம்மா தூக்கிக்கொண்டுவரின் அவளுக்குச் சிரமம் ஏற்படுமென்று பயந்து தாமே குழந்தையையுந் தூக்கித் தோளிற் போட்டுக்கொண்டு தமது ஒரு கரத்தினால் தேவியாரையும் அணைத்துக் கொண்டு 50 அடி தூரந்தானும் இல்லாத கார் நிற்குமிடத்திற்குப் போகுங் காட்சி என்னைப்போன்ற ஒடுங்கிய மனப்பான்மையுள்ளவர்களுக்கு ஆபாசமாக இருக்குந்தான், அதற்கென்ன செய்வது, அது என் குற்றமேயல்லாமல் அவர்கள் குற்றம் அல்லவே!

* * *

ஆனால் இந்த விஷயத்தில் ஒரு சந்தேகம் ஏற்படுகின்றது; நமது ஆடவர்கள் தம் பெண்மணிகளுக்கு அயிரோப்பிய பெண்களுக்குரிய சுவதந்திரம் முழுவதையும் கொடுத்திருக்கின்றார்களா? நம் பெண்மணி பூரண சுவதந்திரங்களைப் பெற்றுக் கொண்டார்களா? அவர்கள் ஆணும் பெண்ணும் ஒத்து ஓம் என்று சொல்லக்கூடும்; ஆனால் நான் இல்லை என்றே சொல்லுகிறேன். ஏன்? அயிரோப்பிய பெண்கள் தமக்குப் பழக்கமான தம் நண்பரான அந்நிய புருஷர்களுடன் பேச, ஊடாட, கைகுலுக்க, கூத்தாட, கூடிக்கொண்டு மோட்டரதம் வள்ளம் என்னுமிவைகளிற் போக அவர்கள் கணவர் இடங் கொடுப்பார்கள்; ஆனால் எங்கள் தமிழ்ப் புருஷன் இவைகளுள் ஒன்றுக்கேனும் தம் மனையாளுக்கு இடங்கொடுப்பானோ? சம்மதிப்பானோ? என்பதுதான் சந்தேகம். இவைகளுள் ஒன்றையே செய்வதற்குப் புருஷன் மனைவிக்கு இடங்கொடுத்தாற்றான் ஐரோப்பிய பூரண சுவாதீனம் அவளுக்குக் கொடுத்ததற்குச் சரியாகும் என்று நான் பேய்த்தனமாக நினைக்கிறேன்; ஐரோப்பிய சுவதந்திரமென்றால் அதனைப் பூரணமாகவல்லவோ நாயகன் கொடுக்க வேண்டும்; நாயகி பெற்றுக் கொள்ள வேண்டும்; இதனை விடுத்துப் பாதிச் சுரைக்காய் கறிக்கும் பாதிச் சுரைக்காய் விதைக்கும் என்ற முறையில் நடப்பதும் ஒரு சுதந்திரமாகுமா?

* * *

உலகம் பலவிதம்: 1935 ஒக்டோபர் 24

"எடி அப்பா, உனக்கும் பிள்ளைகளுக்கும் வேலைக்காரருக்கும் தேவையான சட்டை சீலை துணிகள் என்னென்ன என்று நேரத்தோடு சொல்லிவிடு, நான் எங்கேனும் காசுமாறியோ, இல்லையேல் கடனாகவோ எடுத்து வருகிறேன்; பிறகு சமையத்திலே உன்னோடு தலையடிக்க என்னால் முடியாது" என்றார் வல்லிபுரநாதர். "எனக்குப் பிறகு பார்ப்போம்; பிள்ளைகளுக்கும் ஆயாளுக்கும் பொடியனுக்கும் அவர்கள் விருப்பத்தைக் கேட்டு எடுத்துக்கொண்டு வாருங்கள்" என்றாள் மரகதத்தம்மாள். "உனக்கு என்ன பிறகு பார்க்கிறது; ஏன் நீ தீபாவளிக்குக் கோடி கட்டுவதில்லையோ? இல்லையேல் வேறு ஆரும் சேலை எடுத்துத் தருவார்களோ" என்று பகிடியும் வெற்றியுமாகக் கேட்டார் வல்லிபுரநாதர். "அப்படியல்ல, பாருங்கள்; இந்தமுறை விதம்விதமாக சேலைதுணிகளெல்லாம் வந்திருக்கிறதாம். எல்லாம் புதுமாதிரியாம்; அவைகளின் பேரைச் சொன்னாலும் உங்களுக்கு விளங்காது; எனக்கும் பெயர்கள் சரியாகத் தெரியாது; ஆனபடியால் நான் ஒரு காரியஞ் செய்ய யோசிக்கிறேன்" என்று இறுதியிற் சிறிது கூச்சத்தோடு கூறினாள் மரகதம்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி, உன்னுடைய எண்ணத்தை வாய் விட்டுச் சொல்லு; அப்படிச் செய்கிறேன்" என்று புருஷன் பகர, மனையாள் "என்னுடைய யோசனை ஒன்றுமல்லக் கண்டீர்களோ, அடுத்த வீட்டு அரியநாயகி, பக்கத்து வீட்டுப் பாக்கியம் முன் வீட்டு மூத்தக்கா, இவர்கள் எல்லாரும் தங்கள் ஆண்பிள்ளைகளிடம் பணம்வாங்கி வைத்திருக்கிறார்களாம்; இன்று பொழுதுபட்டு 7 மணியானபின் "கார்" ஒன்று பிடித்துக் கொண்டு பெரியக்கடைக்குப் போகப்போகிறார்களாம் சேலைதுணி வாங்க; அதற்குத்தான் என்னையும் வருகிறாயா என்று கேட்டார்கள். நான் உங்களைக் கேட்டுக்கொண்டு காசும் உங்களிடம் வாங்கிக் கொண்டு பொழுதுபட அவர்களுடன் வருவதாகச் சொல்லியிருக்கிறேன்; ஆனதால் எனக்கு ஒரு 20 ரூபா மாத்திரம் தந்தாற் போதும்" என்று மரகதம் மெல்ல மெல்லப் பன்னினாள்.

* * *

வல்லிபுரநாதருக்கு வயசு 53 வரையிலிருக்கும்; அவருக்கு முந்திய தாரத்தாள் பெற்ற இரண்டு ஆண்களும், இரு பெண்களுமுண்டு. மரகதம் இரண்டாந் தாரத்து மனைவி; வல்லிபுரநாதர் மரகதத்திற்கு ஆக முப்பது வயதிற்குத் தான் மூத்தவர்; மரகதம் விடுதிப் பாடசாலையிற் சேர்ந்து ஆங்கிலம் படித்தவள்; நவநாகரிகம் படைத்தவள்; அழகுடையவள்; இயல்பில் நல்ல குணமுடையவள்; தமிழ்ப் பெண்களுக்கு ஆடவர் கொடுக்குஞ் சுயாதீனம் போதாதென்ற பேய்த்தனமான எண்ணங் கொண்டவள். பெற்றார் சிறிது வறியவர்களானதால், வல்லிபுரநாதருடைய பொருள் பண்டம், உபகார வேதனம் சாதி என்னுமிவைகளுக்கு ஆசைப்பட்டு இப்பெண்ணை அவருக்கு முடித்து வைத்தார்கள். வல்லிபுர நாதருக்கு தம்முடைய செல்வத்தையிட்டுப் பெருமிதமுண்டு; மரகதத்திற்குத் தன் யௌவனம், அழகு, அற்ப ஆங்கிலக்கல்வி, நவநாகரிகம் என்னுமிவைகளையிட்டுத் தன்னளவிற் பெரிய எண்ணமுண்டு. இவர்களிருவரும் தம்மைப் பற்றித் தனித்தனி பெருமிதம் அடைந்திருப்ப, இவர்களுக்கிடையே காலமும் தன்பாட்டில் மெல்ல மெல்லக் கழியலாயிற்று; மரகதத்திற்கு மூன்று வயசுவரையிற் பராயமுள்ள ஒரு ஆண் குழந்தை உண்டு; வல்லிபுரநாதரை மரகதத்திற்கு நாயகன் என்று சொல்வதைக் காட்டிலும் மரகதத்தை வல்லிபுரநாதருக்கு நாயகியென்று சொல்வது பொருத்தமாகும். அந்தப் பெரியவர் தம் பெண்டாட்டியின் மனக்குறிப்பறிந்தே எந்த விஷயத்திலும் நடந்துகொள்ளுவார்; இந்த இரகசியம் மரகதத்திற்கு நல்லாய் விளங்கும்; மரகதத்திற்கு காலில் முள் தைத்தால் இவர் அது தன் கண்ணில் தைத்தாற்போற் பதைபதைத்து நடந்துகொள்வார்; இப்படியானால் மரகதத்திற்கு என்ன குறைச்சல்.

* * *

மரகதம் அப்படிச் சொல்லக்கேட்ட வல்லிபுரநாதர், "அதற்கென்ன அப்படியுஞ் செய்யலாந்தான்; ஆனால் எங்களுக்குள் அந்த மாதிரியான வழக்கம் முன்னொருபோதுமில்லை; எனக்குச் சம்மதந்தான்; ஆனால் நம்முடைய இனஞ்சனம் குற்றஞ் சொல்லுமென்று பயப்படுகிறேன்" என்று சிறிது சிந்தனையுடன் நவின்றார். "உங்களுக்கும் எனக்கும் சம்மதமானால் இனஞ்சனத்தைக் கேட்டா நடக்கவேண்டும்; அவர்கள் பொறாமையினாற் பலபடி சொல்லுவார்கள்; அதற்கெல்லாம் காதுகொடுக்க முடியுமோ? காலத்திற்குத் தக்க கோலம் என்றல்லவோ சொல்லுவார்கள்; ஒரு பிள்ளை தலைமுறைக்கு என்னோடு வாழ்ந்தும் இன்னமும் இந்தக் காலத்திற்குத் தக்கவிதமாக நீங்கள் நடந்துகொள்ளப் பழகவில்லையே என்பதுதான் எனக்குப் பெருங்கவலை; சரி, நான் இனி அதிகம் பேசவில்லை; உங்கள் இஷ்டம் போலச் செய்யுங்கள்; ஆனால், அவர்களுக்குத் தான் பொழுதுபடக் கடைக்கு வருகிறேன் என்று சொல்லிவிட்டேன்; அவர்கள் ஏதுங் குறை நினைக்கிறார்களோ என்னவோ தெரியாது" என்று மரகதஞ் சொல்லிச் சிறிது மனம் வருந்தினாள்; முகம் வாடப்பெற்றாள்; கண் கலங்கினாள்; ஒரு துளி நீரும் கண்ணிலிருந்து சிந்தியது.

* * *

ஒரு துளி கண்ணீர் அவள் கண்ணிலிருந்து சிந்தச் சகிப்பாரா வல்லிபுரநாதர்; "கண்ணே, மரகதம், நீ கவலைப்படாதே; உன் விருப்பம் போற் செய்துகொள்; இருபது ரூபா போதாது, இந்தா 30 ரூபா; உனக்கு இஷ்டமான துணிகளை எடுத்துக்கொள்; கார்ச் செலவும் நான் தருகிறேன்; அவர்களை அது எவ்வளவு என்று கேட்டுக் கொடு; ஆனால் ஒரு செய்தி சொல்லுகிறேன் என்று மனவருத்தப்படாதே; விளக்கு வெளிச்சத்திலே துணிகளின் உண்மையான நிறம் தெரியாது; மஞ்சள் நிறமும் வெள்ளையும் விளக்கு வெளிச்சத்தில் ஒரு நிறமாகவே காணப்படும்; அல்லாமலும் நாங்கள் ஆண்பிள்ளைகள், விலையைச் கராராகக் கேட்டுக் கொடுப்போம்; பெண்களென்று உங்களைப் புடைவைக் கடைக்காரராகியவர்கள் ஏமாற்றிவிடக்கூடும் ...." என்று சொல்லுவதற்கிடையில் மரகதம் புன்னகை செய்து "நல்ல கதை சொன்னீர்கள்; எங்களையா கடைக்காரர் ஏமாற்றுவது; அது ஒருபோதும் முடியாது; பெண்ணென்றாற் பேயுமிரங்குமல்லவா; நாங்கள் போய் வாங்கி வந்த பின் அந்தத் துணிகளை நீங்கள் விலைமதித்துப் பாருங்கள்; பாக்கியம் முந்தியும் பல முறைகளில் கடைக்கு நேரிற்போய்ச் சேலை துணி வாங்கி நல்லாய்ப் பழகியிருக்கிறாள்" என்றாள். "சரி, அப்படியானால் பிள்ளைகளுக்கும் வேலைக்காரருக்கும் எனக்கும் நீயே சீலை துணி வாங்கி வரலாமே; அதற்கு இன்னொரு நாளைக்கு வேறு செலவா! பிறகும் ஒரு அலைச்சலா" என்றார் வல்லிபுரநாதர்; "அவர்களுக்கும் உங்களுக்கும் பிடிப்பான மாதிரிகள் வாங்க என்னால் முடியாது; அந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமத்தை நீங்களே செய்யுங்கள்; பிடிக்காவிட்டாற் பிள்ளைகள் குற்றஞ் சொல்லுவார்கள்; பின்னர், உங்களுக்குத்தான் நான் செய்வதெல்லாம் பிடிக்கும்; புடைவை துணிகளை விட்டு விட்டு வேறு ஏதும் சாய்ப்பில் வாங்கவேண்டிய பொருள் வேணுமானாற் சொல்லுங்கள்; புடைவைக்கடைக் கருமத்தை முடித்துக் கொண்டு பௌடர், சவர்க்காரம், சென்ற், றிபன், இன்னும் என்னவோ சாமான்களெல்லாம் வாங்கச் சாய்ப்புக்குப் போகவேண்டுமென்றும் அரியநாயகி சொன்னாள்; ஆனதால், நிச்சயமாய்ச் சாய்ப்புக்கும் போய்த்தான் வருவேன்" என்று மிக்க விநயத்தோடும் மகிழ்ச்சியோடும் புகன்றாள் மரகதம்; "சாய்ப்புப் பக்கம் போவது நிசமானால், நான் காசு தருகிறேன்; ஒரு சாமான் வாங்கிக்கொண்டு வருகிறாயோ" என்று புருஷன் கேட்க, மனையாள் "அதற்கென்ன, அப்படிச் செய்கிறேன்; வாங்க வேண்டியது என்ன" என்று மிக ஆவலுடன் கேட்டாள்; "வேறு ஒன்றுமல்ல, வருஷத்திலே ஒரு நாளைக்குத்தானே, நல்லநாட் பெரிய நாளில் யாரும் சிநேகிதர் உத்தியோகத்தர் பிறக்கிறாசி அப்புக்காத்துமார் யாரும் வரக்கூடும். வந்தால் அவர்களை உபசரிக்கவேணும்; இல்லாவிட்டால் அவர்கள் உன்னையும் என்னையும் மதியார்கள்; இப்பொழுதே காசு தருகிறேன்; இரண்டு உவிஸ்கிப் போத்தல், "டிறைவரை"க் கொண்டு எடுப்பித்துக் காருக்குள் இரகசியமாக வைத்துக்கொண்டு வா ஆண்பிள்ளைகளுக்குப் பதிலாக நீங்கள் பெண்டுகள் வெளிக்கிடத் தொடங்கினால் ஆண்கள் செய்வதை நீங்களுஞ் செய்யத்தானே வேணும்" என்று வல்லிபுரநாதர் புன்சிரிப்புடன் சொன்னார். "உங்களுக்கு எப்போதும் பரிகாசந்தான்" என்று சொல்லி அதற்கு மறுத்து விட்டு, சங்கேதப்படி அன்று மாலை தன் சினேகிதைகளுடன் மரகதம் புடைவைக் கடைக்குப் போனாள்.

* * *

உலகம் பலவிதம்: *1935 ஒக்டோபர் 31*

இற்றைக்கு இரண்டு வாரங்கட்கு முந்தி, பெண்கள் விரும்பும் போலிச் சுவாதீனத்தைப் பற்றி நான் எழுதிய "உலகம்பலவிதம்" பல பெண்களுக்குப் பிடிப்பாக, சில மகளிருக்கு மாத்திரம் பிடிக்கவில்லையாம். முருகருக்கு அறளைபெயர்ந்துவிட்டதாக்கும்; அவர் முற்போக்கில்லாதவர்; அயிரோப்பிய பெண்மணிகளெல்லாரும் பாரத மாதருட் சிலரும் சுயாதீனத்தோடு நாட்டின் ஈடேற்றத்தை இட்டு இடையறாது உழைக்க எங்களைத்தான் இந்தப் பேய் முருகர் அடுப்படியிற் சதா குந்திக்கொண்டிருக்கச் சொல்லுகிறார். இவர் பேச்சைக் கேட்டு நடந்தாற் கெட்டுப்போவோம்" என்று சிலரினுஞ் சில வனிதையர் என்னை ஏசுகிறார்களாம். "பேசவேண்டாம் என்னை அவள் ஏசினாலும் போதும்" அவர்கள் ஏசினாலும் எனக்கு அது சந்தோஷந்தான்; அதைப் பற்றிக் காரியமில்லை; அயிரோப்பிய பெண்கள் எல்லாரும் இந்தப் போலிச் சுவாதீனத்தை விரும்புகிறார்கள் என எங்கள் நவீன பெண்மணிகள் விபரீதமாக விளங்கிக்கொள்ளவொண்ணாது. அயிரோப்பாக் கண்டத்திலே இக்காலத்தில் மிக்க மதிப்போடு இருப்பவர் இத்தாலிய சர்வாதிகாரியாகிய முசோலினியல்லவா? இதனை எவரும் மறுக்க மாட்டார்கள்; இப்படிப்பட்ட நாகரிகமான மனுஷனுடைய மனைவி நடந்துகொள்ளும் விதத்தை முசோலினி சரித்திரத்திலிருந்து அநுவதித்துக் கீழே தருகின்றேன். அதனைப் படித்தபின்னராயினும் நவநாகரிக நாரியர் என்னைக் குறைகூறாதொழிவாராக.

* * *

"உலகெலாம்ஒப்பப்புகழஇட்டாலியின்சர்வாதிகாரியாக இருந்துவரும் மகாவீரரான முசோலினியின் அரிய மனைவியார், ஏனைய தலைவர்களின் மனைவியாரைப் போல வெளி உலகில் தலைகாட்டுவதில்லை. முசோலினியும் தம் மனைவியாரைப் பகிரங்கமாக வெளியுலகில் அழைத்துவந்ததுமில்லை. உலகில் உள்ள பெரிய இராசதந்திரிகள், பத்திரிகை நிருபர்கள், சிறந்த யாத்திரிகர்கள், அரசர்கள் முதலியவர்கள் முசோலினியைச் சந்தித்துப் பேசுகின்றார்களே அல்லாமல், அவர் ஆருயிர் மனைவியாரைக் கண்டதில்லை; அவரைப்பற்றிக் கேள்விப்பட்டதும் இல்லை; முசோலினி எங்கும் தம் மனைவியாரை அழைத்துச் சென்றதும் இல்லை; பேசிய இடங்களில் அவரைப்பற்றி ஒரு வார்த்தை பேசியதும் இல்லை.

* * *

"உலகப் புகழ் வாய்ந்த முசோலினியின் மனைவியார் அந்தப்புர வாழ்க்கை நடத்திவருதல் பேராச்சரியந் தருவதொன்றாம். இதற்குக் காரணம் யாதாயிருக்கும்? இக் காதலர் வாழ்க்கையில் மர்மம் ஏதேனும் உண்டோ? இல்லை முசோலினியைப் பற்றி அறிந்துள்ள இத்தாலிய மக்கள் அவர் மனைவியைப் பற்றியும் நன்கறிந்துள்ளார்கள். அவ்வம்மையாரிடம் நற்குணங்கள் ஒருங்கே குடிகொண்டுள்ளன. அவர் ஓர் உண்மைப் பெண்மணி. செய்யவேண்டுவதைச் செய்துவருகின்றார்; மிலான் நகரில் தம் பிள்ளைகளுடன் இல்லற வாழ்க்கை நடத்தி வருகின்றார். அவருக்கு வேறு கவலை இல்லை. தம் பிள்ளைகளைப் பாதுகாத்தலும் கணவர்க்கேற்ற காரிகையாக இருத்தலுமே அவர் வேலைகளாகும். இவ்விரண்டினையே அவர் மகிழ்ச்சியோடு செய்துவருகின்றார். அவர் அரசியல், பொருளாதார விஷயங்களில் தம் கவனத்தைச் செலுத்தியதில்லை; கடல் கடந்து காணச் செல்லும் பேறு பெற்றுள்ள தம் காதலரை அவர் ரோமாபுரிக்குச் சென்று தம் கணவரின் அரிய நேரத்தைக் கொள்ளை கொள்வது கூடாதென்பதே அவரது எண்ணம். முசோலினி ரோமாபுரியில் தமதரண்மனையில் சில வேலையாட்களோடு தனியே வசித்துவருகிறார்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1935 நவம்பர் 14

"எனக்கு ஏழு எட்டு வயசுவரையில் இருக்குமென நினைக்கின்றேன்; இப்பொழுது நடந்ததுபோல் ஞாபகத்திலிருக்கிறது. எனது தகப்பனார் ஒரு மழைக்காலத்திலே, ஒரு கூட்டம் செருப்பு மிதிதடி வாங்கிக்கொண்டுவந்து என்னிடந்தந்து, "அட மகனே, இதனை நீ எங்கேனும் போகும்போது காலிற் போட்டுக் கொள்" என்று சொல்லித் தந்தார்; நான் அதை மெத்தவும் சந்தோஷத்தோடு வாங்கிக் கொண்டு உடனே காலிற் போட்டுப் பார்த்தேன்; கொஞ்சம் பெரிதாயிருந்தது; அப்பா, இது எனக்கு அளவாயில்லை, கொஞ்சம் பெரிதாய் இருக்கிறதென்றேன். அதைப்பற்றிக் காரியமில்லையடா தம்பி, உன்னுடைய கால் அளவிற்கு எந்தநேரமும் மிதிதடி வாங்கிக் கொள்ள முடியாது; இப்போதைக்கு இதனைப் போடு; அடுத்தமுறை வாங்கும்போது பார்த்துக் கொள்ளுவோம் என்று என் தகப்பனார் சொன்னார். அப்படியல்லவென்று நான் சொன்னால் உள்ள மிதிதடியும் இல்லாமற் போய்விடும் என்ற பயத்தினால் நான் ஓம் என்று சொல்லி அதனை வைத்துக்கொண்டேன்; முதன்முதல் அந்த மிதிதடியைப் போட்டுக் கொண்டு என் தாயாருக்குக் காட்ட விரும்பித் தாயைத் தேடினேன்; தாயார் அடுக்களையில் இருந்தமையால் அதனைப் போட்டுக்கொண்டு அடுக்களைக்குட் போய் அம்மா, எப்படி என் புது மிதிதடியென்று கேட்டேன்; எட மூத்தவனே, அடுப்படியுள் மிதிதடி போட்டுக்கொண்டு வரலாமா, வெளியே போ இல்லையேற் கழற்றிவிட்டு இங்கே வா என்று சினந்து சொல்ல, எனக்கு அது பெரிய மனவருத்தமாயிருந்தது; நான் அதைக் கழற்றிவிட மனமில்லாமல் நின்று வெம்பி அழுதேன்.

* * *

என் தாயார் என்னுடன் பேசும்போது கொஞ்சம் கடுமையாகப் பேசுவதேயல்லாமல், அகத்திலே என்மீது மிகவும் அன்பு; நான் வெம்பி அழுவதைக் கண்டு, மகனே அப்படியல்லவடா; சமைக்கிற இடம் சாப்பிடுகிற இடத்திலே மிதிதடி போட்டுக் கொண்டு வரக்கூடாது; உந்த மிதிதடி நல்லது; நான்தான் உன் அப்பாவிடம் இரண்டு மூன்று நாட்களின்முன் சொல்லி உனக்கு வாங்கிக் கொடுக்கச் செய்தேன் என்று என்னைத் தேற்றினாள்; இனிமேல் நான் அடுப்படியிற் போட்டுக்கொண்டு வருவதில்லையென்று சொல்லிவிட்டேன். அன்றிரவு குளிர்காலமாதலால் வீட்டு அறையினுள்ளே எனக்குப் படுக்கையை ஒழுங்கு செய்துவிட்டு, தாயார் மகனே, வந்து படு, நாளைக்குப் பள்ளிக்கூடத்திற்குப் போகவேணுமல்லவா ;நேரத்தோடு படுத்து நேரத்தோடு எழும்ப வேண்டும் என்றுசொல்ல, நான் ஓம் என்று சொல்லி மிதிதடியைக் காலிற் போட்டபடி அறையுட் போனேன்; என் தாயார் என் பேய்த்தனத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு, "கேட்டீர்களே, இவன் தம்பிக்கு நீங்கள் ஒரு மிதிதடியை வாங்கிக்கொடுத்து அவன் காலை விட்டு அதைக் கழற்றுகிறானில்லை, அதைப் போட்டுக்கொண்டு அடுப்படிக்கு வருகிறான்; நடு அறைக்குட் போகிறான்" என்று சொல்ல, "நீதானே, எடியப்பா, அதை வாங்கிக்கொடுக்கச் சொன்னாய்; உந்த வயதில் எனக்கு என் பிதா மாதாக்கள் மிதிதடி வாங்கித் தந்ததில்லை; நான் கேட்டிருந்தால் அடியல்லவா கிடைத்திருக்கும் என்று தாயாருக்குச் சொல்லிவிட்டு "எட, தம்பி, வீட்டுக்குள் அடுக்களைக்குள் மிதிதடி போட்டுக் கொண்டு போகாதே என்று எனக்குச் சொன்னார். அன்று தொடக்கம் நான் அந்த இரண்டு இடத்திற்கும் மிதிதடியோடு போகுவதில்லை.

* * *

அடுத்தநாட் பள்ளிக்கூடத்திற்குப் போகும் போது மிதிதடியையுங் காலில் மாட்டிக்கொண்டு மெத்த நேரத்தோடு சாப்பிட்டு விட்டுப் புறப்பட்டேன்; "தம்பி, மிதிதடியைச் சாவதானமாகக் கொண்டுபோய்ப் பள்ளிக்கூடத்தில் விட்டுப் பிறகு மாட்டிக்கொண்டு வா, யாராயினும் மாறி எடுத்துப் போடுவார்கள்; காணாமல் எடுத்துக் கொண்டு போயிடுவார்கள்; நாய் இழுத்துக் கொண்டு போய்விடும்; சின்ன மிதிதடியென்றாலும் விலை 60 சதமடா" என்று சொன்னார்; நான் ஓம் என்று கேட்டுக்கொண்டு போய்விட்டேன். பள்ளிக்கூடத்தை அடைந்தபோது, அதனை ஒருபுறத்தே கழற்றிவைத்தால் யாரும் மாறிக்கொண்டுபோய் விடக்கூடும், காணாமல் எடுத்துச் செல்லமுடியும், நாய் கௌவிக் கொண்டோடிவிடும் என்ற அச்சத்தினால் நான் கழற்றி ஓரிடத்தில் விடாது பள்ளிக்கூடத்தினுள்ளும் அதனை மாட்டியபடியே திரிந்தேன். மற்றைய பிள்ளைகள் அன்று என் காலடியைப் பார்த்துச் சிரித்தார்களேயொழிய ஏதும் பேசவில்லை; அவர்கள் பொறாமையினாற் சிரிக்கிறார்கள் என்று நான் எண்ணிக் கொண்டேன். பள்ளிக்கூடம் ஆரம்பமாகும்போது தோத்திரஞ் சொல்லப்படுவது எங்கள் பள்ளிக்கூடத்து வழக்கம்; அப்பொழுதும் நான் மிதிதடியோடு தான் நின்றேன். அதனை ஒருவருங் குறிப்பாய்ப் பார்க்கவில்லைப்போலும்; தோத்திரம் முடிந்ததும் வகுப்புக்குட் போனேன்; சற்றுநேரஞ் செல்ல உபாத்தியாயர் அங்கே வந்தார்; அவர் வந்தவுடன் நாங்கள் எல்லாரும் வழக்கம்போல் எழுந்து மரியாதை செய்துவிட்டு அவர் சொற்படி இருந்தோம்; பிள்ளைகளெல்லாரும் என் காலைக் குறித்துப் பார்த்தார்கள்; அவர்களைக் கண்டு உபாத்தியாயரும் என் காலைப் பார்த்தார்; அவருக்கு வந்தது கோபம்; எட, பேயா மிதிதடியைக் கொண்டுபோய் ஒரு மூலையில் வைத்துவிட்டு வா என்று எனக்கு அடிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவே, நான் எழுந்து ஓடிப்போய் ஒரு மூலையில் விட்டு விட்டு வந்தேன்; அப்படி விட்டுவந்தாலும் என் கண்ணும் கருத்தும் மிதிதடியிலேயே இருந்தன. அன்று என் சிந்தை படிப்பிலே செல்லவில்லை. உபாத்தியாயர் இடையிலே என்னை ஏதோ கேள்வி கேட்டார். நான் சொல்லவில்லை. பிரம்பை ஓங்கி உறைக்க அடித்தார். நான் அடியை வாங்கிக்கொண்டிருந்து அழுதேன்; நில்லடா எழும்பி என்றார். எழும்பி நின்றேன்; பள்ளிக்கூடம் விட்டவுடனே முந்தியே ஓடிப்போய் மிதிதடியை மாட்டிக்கொண்டு அவசரமாக வீட்டிற்கு மீண்டேன்.

* * *

ஆனால் வீட்டிலுள்ளாருக்கு நான் பள்ளிக்கூடத்திலே அன்று நடந்தவைகளைப் பற்றி ஒன்றுஞ் சொல்லவில்லை; சொல்லாமல் விட்டது வேறொன்றையுமிட்டல்ல; சொன்னால் மிதிதடி போட்டுக்கொண்டு பள்ளிக்கூடத்திற்குப் போக விடமாட்டார்கள் என்ற பயத்தினாற்றான். எனக்கு அந்த மிதிதடியில் அப்பொழுது இருந்த ஆசைக்கு ஒரு அளவில்லை. அதனால் நான் அதனைப் போட்டுக்கொண்டு அநாவசியமாகவுந் தெருவழியே திரிந்ததுண்டு. ஒருநாள் என் பொல்லாத காலத்தினாற்போலும் எங்கள் வீட்டிற்கு அருகிலேயுள்ள கோயில் வெளிப்பிரகாரத்திலும் சந்நிதானத்திலும் மிதிதடியிட்டுக் கொண்டு போய்விட்டேன்; அதனைக் கண்ட யாரோ ஒரு தடியன் என்னைக் கோபித்து என் கன்னத்தில் இரண்டுதரம் அறைந்து காலில் மாட்டியிருந்த மிதிதடியிரண்டையும் பிடுங்கித் தூரத்தில் வீசிவிட்டான்; நான் அழுதழுது அவைகளைப் போய் எடுத்துக்கொண்டு காலில் மாட்டாது கையில் மாட்டிக்கொண்டு வீடு சேர்ந்தேன். இந்தச் செய்தியையும் நான் என் பெற்றாரிடம் சொல்லவில்லை. அவர்கள் அடுப்படியிற் போடவொண்ணாது அறையுட் போடவொண்ணாது என்று சொல்லி இருந்ததுபோல், கோயிற் சந்நிதானத்திலும் வீதியிலும் போடவொண்ணாதென்று சொல்லியிருந்தால் நான் ஒருபோதும் அதனை மாட்டிக்கொண்டு அந்த இடங்களுக்குப் போயிருக்க மாட்டேன்.

* * *

உலகம் பலவிதம்: 1935 நவம்பர் 21

ஊரதிகாரியினுடைய குதிரையொன்றைக் கள்வனொருவன் திருடிக்கொண்டுபோய் அதன் நீண்ட வாலைக் கத்தரித்துவிட்டுத் தன் சொந்த மிருகமென்று வைத்துக்கொண்டான். ஊரதிகாரி சில தினங்களுட் குதிரை கள்வனிடம் நிற்பதை அறிந்துகொண்டு, அந்தப் பரியை நன்கறிந்த கோமுட்டியொருவனைச் சாட்சியாக வைத்துக் கொண்டு கள்வனுக்கு விரோதமாக வழக்கைத் தொடர்ந்தான்; வியாச்சியத்தினை விசாரணை செய்யும்போது நீதிபதி சாட்சியாகிய கோமுட்டியை நோக்கி அக்குதிரை ஆருடையது? ஊரதிகாரியினுடையதா? திருடனுடையதா? என்று கேட்டபோது, கோமுட்டி ஊரதிகாரியினுடையதென்று உண்மையைச் சொன்னால் கள்வன் தன்மேற் சீற்றங்கொண்டு தன் வீட்டைத் திருடுவான். திருடனுடையதென்று சொன்னால் ஊரதிகாரி தனக்கு இடர்விளைப்பான், இருதலைக்கொள்ளியுள் எறும்புபோலானேன், இதற்கென்ன செய்வேனென்று சிறிது சிந்தித்து, சமையோசிதமாக, முன் பார்த்தால் ஊரதிகாரியின் குதிரை போலவும் பின் பார்த்தால் திருடனுடையது போலவும் புலப்படுகின்றதென உபாயமாகச் சொன்னான். நீதிபதி அதிவிவேகியாதலின் விஷயத்தை விளங்கிக்கொண்டு குதிரையை மீட்டு ஊரதிகாரியிடங் கொடுக்கச் செய்து திருடனையுந் தண்டித்தாராம்.

* * *

புங்குடுதீவுப் பாலமோ ஆவசியகம் பூநகரிப் பாலமோ ஆவசியகமென்றவிஷயத்தில்முருகேசுவும்கோமுட்டியின் உபாயத்தையே உபயோகிக்கவேண்டியிருக்கிறது. ஏறச் சொன்னால் எருதிற்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபமென்ற விதமாகப் புங்குடுதீவுப் பாலந்தான் ஆவசியகமென்றாற் பூநகரிப் பாலக்காரர் குறை சொல்லுவர்; பூநகரிப் பாலந்தான் ஆவசியகமென்றாற் புங்குடுதீவுப் பாலக்காரர் ஏசுவர்; ஆனதால் இரண்டும் ஆவசியகமானவை என்றே சொல்லவேண்டியிருக்கிறது. இவர்கள் இதற்குத்தான் ஆவசியகம் அதற்கு ஆவசியகமில்லையென்ற நியாயத்தை விடுத்து இரண்டு பாலமும் ஆவசியகந்தான் என்று ஏகோபித்து வாதிக்கத் தொடங்கினால் இரண்டும் ஏககாலத்தில் நிறைவேறுதலுங்கூடும். இல்லையேல் ஒன்று முன்னும் மற்றது பின்னுமாக நிறைவேறுதலுங்கூடும். இந்த விண்ணப்பத்தில் ஊரவர்கள் இரண்டு பட்டால் அரசினர் சாட்டுச் சொல்வதற்கு அது வசதியாகவல்லவா வாய்த்துவிடும்; இலங்கைச் சர்வகலாசாலையைக் கொழும்பிலே தாபிப்பதோ இல்லையேல் கண்டிக்கணித்தான தும்பறைப் பள்ளத்தாக்கிலே அமைப்பதோ என்ற விஷயத்தில் ஊரவர்கள் கட்சிபிரிந்தமையினாலல்லவா சென்ற பத்து வருட காலமாக அந்த விஷயம் ஒரு இடத்திலும் கைகூடுதலின்றி இன்னமுங் கிடந்து இழுபடுகின்றது. எங்களுடைய அரசினர் விஷயத்தில் ஊரவர் இரண்டுபட்டால் ஒன்றும் நிறைவேறாதென்பதை ஏறக்குறைய 150 வருட காலமாக அவர்கள் பிரசைகளாகிய நாங்கள் உணராமலிருக்கலாமா?

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையுங் கிள்ளி விடுவார்போல்" இலங்கை வித்தியா பகுதியார் கேம்பிரிஜ் ஸீனியர்ப் பரீட்சையில் இலங்கை மாணவர் அதிகஞ் சித்தியடையாமற்றடுத்தற்குச் செய்த உபாயமும் வஞ்சகமும் மறக்கத் தக்கனவல்ல. இந்த அடாத செயல் காரணமாக வித்தியாபகுதியாரிடத்து மாத்திரமல்ல இதற்கு இணங்கிய கேம்பிரிஜ் சர்வகலாசங்கத்தாரிடத்தும் இலங்கை மக்களுக்கு மிக்க வெறுப்புண்டாயிற்று; இலங்கை மக்கள் இனிமேற் கேம்பிரிஜ் சர்வகலாசங்கப் பரீட்சைகளைக் கைவிட்டு லண்டன் சர்வகலாசங்கப் பரீட்சைகளைக் கைக்கொள்ளலாமென உத்தேசிக்கலாயினர். ஆனால் லண்டன் சர்வகலாசங்கத்திற்கும் மாறான சமாசாரங்கள் இப்பொழுது வெளிவருகின்றன.

* * *

லண்டன் முதலிய சர்வகலாசங்கங்களிற் சம்பந்தப்பட்ட பரீட்சகர்கள் தாம் பார்க்கும் பரீட்சை விடைப் பத்திரங்களை ஒரே தன்மையாகப் பட்சபாதம் ஏற்படாவண்ணம் பார்த்து வருகின்றார்களோ அல்லவோ என்ற சந்தேகம் சில வித்தியாபிமானிகளிடத்திற் பிறந்தது. இவர்கள் தாம் கொண்ட நோக்கத்தை அந்தரங்கமாக வைத்துக்கொண்டு பிழை சரி பார்த்து "அம்ஸம்" இடப்பட்ட விடைப் பத்திரங்களை ஒருவாறு பெற்றுவிட்டு ஒத்துப் பார்த்தபோது, பரீட்சகர்களுள் அனேகர் ஒரே பாடத்திற்கே வெவ்வேறு முறையில் அம்ஸமிட்டிருப்பதையும் பார்த்து அம்ஸமிடும் விஷயத்திலே கவலையீனம் நேர்ந்திருப்பவுங் கண்டார்களாம். அவர்கள் தாங்கள் கொண்ட சந்தேகத்தைத் திடமாக அறியவேண்டி அப்படிப் பார்த்து அம்ஸமிடப்பட்ட விடைப் பத்திரங்களிலிருந்து பிரதிபண்ணிப் புதிய விடைப் பத்திரங்களைப் போல, குறித்த குறித்த பரீட்சகர்கட்கே அனுப்பி நோக்கத்தை வெளிவிடாமற் பார்ப்பித்தபோது முந்திப் பார்த்த விடைப்பத்திரங்கட்கும் பிந்திப் பார்த்த விடைப் பத்திரங்கட்கும் அம்ஸங்களிட்ட விஷயத்திலே வெகு பேதம் காணப்பட்டதாம். இந்தப் பிழையை எவ்வாறு திருத்தலாமென்பதே மேற்படி ஆராய்ச்சியாளருடைய சிந்தனையாக இப்பொழுது ஏற்பட்டிருக்கின்றது.

* * *

மேலைத்தேசத்துச் சர்வகலாசங்கங்களின் பரீட்சைப் பேறுகள் இப்படியான அல்லோல கல்லோல நிலையிலிருக்கும்போது, இங்குள்ள பெற்றார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஆங்கிலக் கல்வியூட்டுவிக்க வேண்டுமெனப் பேராவல் கொண்டு பொருள் செலவிடுதலிலும் சிரமப்படுதலிலும் வரக்கூடிய சுகமுண்டா? மேலுலகத்தில் (மறுமையில்) நடக்கும் விஷயங்களையிட்டு எங்களுக்கு எவ்வளவு சந்தேகமுண்டோ, அவ்வளவு சந்தேகம் மேல் நாட்டுச் சர்வகலாசங்கங்களின் பரீட்சைப் பேற்றிலும் உண்டாகின்றனவே; இவைகளையெல்லாம் தவிர்த்து உண்மையான கல்வியை அற்ப செலவோடு, பிதாமாதாக்கள் பெரியோர் தங்கள் பிள்ளைகட்கு ஊட்டுவிக்க வேண்டுமேயானால் இலங்கைக்கென ஒரு சர்வகலாசங்கம் ஆவசியகம் வேண்டும். இதன் பொருட்டு எல்லாரும் ஒரே மனதாய் உழைத்தற்கு முற்படுவார்களாக.

* * *

உலகம் பலவிதம்: 1935 நவம்பர் 28

சிங்கள நாட்டிலே நாட்டினர் கடமை செய்யச் செல்லும் பொலிசரைத் தாக்குதலும் அவர்களோடு எதிர்த்துச் சண்டை செய்வதும் அவர்களைப் புறங்காணுதலும் சகசமாய்விட்டன. இப்படித் தாக்குபவர்கள் பெரும்பாலும் கள் சாராயம் என்னும் மதுபானங்களைச் சோரமாக விற்பனவு செய்யும் வகுப்பினரேயாவர்; இவர்கள் மதுப்பகுதிப் பரிசோதகர்களையும் பரிவாரங்களையும் முன்பு பலமுறை பல இடங்களிலே தாக்கி அவர்கட்கு ஊறு விளைத்து வந்தனர்; இப்பொழுது அவ்வளவில் நில்லாது மெல்ல மெல்லப் பொலிசரையுந் தாக்கத் தலைப்பட்டுக் கொண்டனர். இதற்குக் காரணம் சோர மது வியாபாரிகளின் மனத்துணிவோ இல்லையேற் பொலிசரின் பேடித்தனமோ என்பது புலப்படவில்லை.

* * *

யூவா மாகாணத்தைச் சேர்ந்த உவெலி மட என்னும் தானத்தைச் சேர்ந்த பொலிஸ் உதவிப் பரிசோதகரையும் அவருக்குத் துணையாகச்சென்ற பொலிசரையும் சோர மது வியாபாரிகள் தாக்கிச் செய்த சமர் மிகவும் துணிகரமானதும் பயங்கரமானதுமாம். குறித்த உவெலி மட என்னுங் கிராமத்திற்கயலேயுள்ள மரமேறிகள் சிலர் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் கூலிக்காரருக்கு கள்ளுக் கொண்டுபோய் சோரமாக விற்பதையுணர்ந்து பொலிஸ் பரிசோதகர் லொறன்ஸ், மூன்று பொலிசருடன் சோர வியாபாரம் நடக்கும் தானத்திற்கு அயலே போய்ப் பற்றை மறைவிற் பதிவிருந்தனர். சோர மது விற்போருள் ஒருவன் இரண்டு குடம் நிறைந்த கள்ளைத் தன் வீட்டிலிருந்து எடுத்துக் கொண்டு போய் தேயிலைத் தோட்டத்தின் எல்லையிலுள்ள பற்றைக்குள் மறைத்து வைத்துவிட்டு, வேறொரு கட்குடத்தை வீட்டில் வந்து எடுத்துக்கொண்டு அந்தப் பற்றையை நோக்கிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகும்போதே பொலிசார் மெல்ல அவனைப் பின்தொடர்ந்து போய், அவன் அதனோடு இன்னொரு கட்குடத்தையும் இரண்டு கைகளிலும் எடுத்தபோது அவனைப் பிடிக்கவே அவன் கட்குடங்களை நிலத்திற் போட்டு உடைத்துவிட்டானாம். பொலிசருள் ஒருவனாகிய நூர்டின் அவனுக்குக் கைவிலங்குமாட்ட முயன்றபோது அவன் இவனோடு மல்யுத்தஞ்செய்து பெருஞ் சத்தமிடவே, அச்சோரனுடைய இனசனத்தவர் அயலவராகிய ஆண்கள் பெண்கள் சிறுவர் பலர் ஆயுதபாணிகளாய் அங்கே ஓடிவரக் காணப் பட்டனராம். நூர்டினால் அவனுக்குக் கைவிலங்கிட முடியவில்லை.

* * *

இதற்கிடையில்வந்தவர்களுக்கும்பொலிசருக்குமிடையே போர் மூண்டது; வந்தவர்களுள் ஒருவன் நிலத்திலிருந்த கள்நிறைந்த குடமொன்றை எடுத்துப் பொலிசின்மீது வேகமாகப் பிரயோகிக்க அக்குடஞ் சென்று பொலிஸ் பரிசோதகரின் தொப்பியைத் தட்டி வீழ்த்திக் கொண்டு அவர் முகத்தில் மோதி அவருக்கு ஊறு விளைத்துவிட்டுத் தானும் உடைந்து தரையில் வீழ்ந்து துகளாயிற்றாம். வீழ்ந்த தொப்பியை இன்னமுங் காணவில்லையாம். பொலிஸ் பரிசோதகர் முடிமுதல் அடிவரையும் கள்ளினால் அபிஷேகஞ் செய்யப்பட்டபடி நின்றாராம். அவருடைய முகத்திலே கல்லோடு வெட்டியதால் இரத்தம் பெருகியதாம். ஒரு பொலிசதிகாரிக்குச் செய்யக் கூடிய அவமரியாதையில் இது தலையாயதொன்றல்லவா? விஷயம் இவ்வளவோடு நின்றுவிடவில்லை. இதற்கிடையிற் பெண்ணாய்ப் பிறந்தவளொருத்தி பொலிசதிகாரியின் பின்புறத்திலே வந்து தொற்றி அவருடைய கழுத்தைக் கட்டிப்பிடித்து நெரிக்க, அவர் அவள் பிடித்த கழுத்துப் பிடியை விடுவித்து உதறி அவளைப் பின்புறத்தே வீழச் செய்தனராம். இதற்கிடையில் அந்தச் சோர வியாபாரியின் கூட்டத்தவர் அவனைப் பொலிசிலிருந்து பலாத்காரமாய் விடுவித்துக்கொண்டு பொலிசரை நாற்புறமுஞ் சூழ்ந்து அவர்கள்மீது கல்மழை சொரியத் தொடங்கினர்.

* * *

பாவம்! பொலிஸ் பகுதியார் என்ன செய்வர். கல்மழைக்கு நிர்வகித்து நிற்கமுடியாது பின்வாங்கினர். பின்வாங்கும்போது ஜான்ஸன் என்னும் பொலிசின் மார்பிலே ஒரு கல்லுவந்து தாக்க, அவன் நிலத்தில் வீழ்ந்து பரவசமானான். மற்றை மூவரும் அறிவற்றுக் கிடக்கும் ஜான்ஸனைத் தூக்கிக்கொண்டு அதிக கஷ்டத்தோடு போய் அக்கிராமத்திலுள்ள ஆராய்ச்சி வீட்டிற் சேர்த்தனர். பின்னடைந்தபோது நால்வருடைய தொப்பிகளையும் கைவிலங்கொன்றையும் "ரோச்" வெளிச்சத்தையும் கலகக்காரர் பொலிசரிடமிருந்து கவர்ந்து கொண்டனர். பெண்ணொருத்தி மாத்திரமல்லாமல், இக் கலகக்காரருள் 14 வயசுடைய சிறுவனுமொருவன் சேர்ந்துள்ளானாம். இவர்களுள் முதலாம் எதிரியும் வேறு நால்வரும் தனித்தனி 6 மாசங் கடுஞ்சிறை விதிக்கப்பெற, முதலாம் எதிரியின் மனைவியும் 14 வயசுச் சிறுவனும் நன்னடைத்தைப் பிணையில் விடப்பட, ஏனையவர் நிரபராதிகளெனக் கண்டு விடுதலை செய்யப்பட்டனர். மேலும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட எதிரிகள் "அப்பீல்" கேட்க நிச்சயித்தமையின் பிணையில் விடப்பட்டனர்.

* * *

இலங்கையிலே விசேஷமாகச் சிங்களருக்கும் பொலிசருக்குமிடையே, சிங்களருக்கும் மதுபரிபாலனப் பகுதியாருக்குமிடையே, இப்படியான கலகங்களும் எதிர்ப்புஞ் சண்டையும் நிகழுமானால் பொலிசருடைய அதிகாரத்தையும் திறமையையும் பற்றி உலகத்திற் பொதுவாக ஒரு ஏளனமான அபிப்பிராயம் உண்டுபடுமல்லவா? இப்படியான இடங்களுக்குச் செல்லும்போது தக்க பொலிஸ்படை ஒருங்கு செல்ல வேண்டும். இல்லையேல் அறிந்தும் அறியார் போலப் பொலிசார் போகாமல் நிற்பது நல்லதாம்.

* * *

உலகம் பலவிதம்: 1935 டிசம்பர் 05

"என்னுடைய பெயர் முருகேசன்; ஊரைச் சொன்னால் பல மநஸ்தாபம் நேருமானதால் அதை நான் இப்போதைக்குச் சொல்ல மாட்டேன்; நான் மூன்று பெண் சகோதரங்களுக்கிடையில் ஒரேயொரு புத்திரபாக்கியம்; இதனால் ஏகபுத்திரனைக் காட்டிலும் எனக்கு எங்கள் வீட்டிலே நடப்பு அதிகம். சகோதரியாருள் ஒருத்தி எனக்குத் தமக்கை; இருவர் தங்கைமார்; என் பெற்றாரெனிலோ அதிகஞ் செல்வர்களல்லராயினும் வறுமையிற் செம்மையாய்க் குடும்பத்தை நடத்திவந்தார்கள். அவர்களுடைய அருமைபெருமைகளை நான் அவர்கள் உயிரோடு இருக்குங் காலத்தில் அறிந்தேனல்லேன்; உப்பினருமை ஒழிந்தாற்றெரியும் என்றவிதமாக, இப்பொழுதுதான் என் பிதாமாதாக்களின் அருமை எனக்குத் தெரிகிறது; அவர்கள் என்னை வளர்த்த வளர்ப்பையும் நான் அந்த நாட்களில் அவர்களுக்குச் செய்துவந்த இடைஞ் சலையும் இப்பொழுது நினைத்தாலும் கவலைப்பட்டுக் கண்ணீர்விடவேண்டித்தான் இருக்கிறது. என் செயலாம், "பட்டால் அறிவன் சண்டாளன்" என்பது பழமொழியல்லவா? போனதையிட்டு இனிப் பச்சாத்தாபப்பட்டு ஆனது ஒன்றுமில்லை. அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடக்க, என் பெற்றார் மூன்று பெண்பிள்ளைகட்கு நானே ஓர் ஆண்குழந்தையென்ற காரணம்பற்றி என்னிடத்தில் அதிக அன்பு பாராட்டி வந்தார்கள். என்னை இங்கிலீஸ் படிப்பித்து ஆளாக்கிவிட்டாற் காலகதியில் என் சகோதரிமாருக்கும் தங்களுக்கும் பெருந்துணையாயிருப்பேன் என்பதுதான் அவர்களுடைய முழு நம்பிக்கை. ஆனால் அவர்களுடைய நம்பிக்கையை நான் என் விளையாட்டுப் புத்தியினாலும் பேய்த்தனத்தினாலுங் கெடுத்து விட்டேன். இப்பொழுது என்னிடத்துள்ள புத்தியும் யோசனையும் அப்பொழுது இருந்தால் நான் இப்படிக் கெட்டு நொந்திருக்க நேர்ந்திராது. என்ன செய்யலாம்? அன்று என்தலையில் எழுதியவன் இனி அழித்தெழுதப் போவதில்லை"

* * *

தமிழ்ப் பள்ளிக்கூடத்திலே நான் ஐந்தாம் வகுப்பிற் சித்தியடைந்தபின் இங்கிலீஸ் படிக்கும்படி தகப்பனார் என்னை ஒரு சைவ ஆங்கில வித்தியாசாலையிற் கொண்டுபோய்ச் சேர்த்தார். மூன்று வருட காலம் அங்கே படித்து வந்தேன். முதல் இரண்டு வருடங்களிலும் வருடப் பரீட்சையிற் சித்தியடைந்தேன். மூன்றாம் வருடம் பரீட்சையிற் சித்தியடையத் தவறிவிட்டேன்; இதையிட்டு எனக்குப் பெரிய மனவருத்தமும் வெட்கமும் உண்டு. அந்த முறையுஞ் சித்தியடைவான் என்று காத்திருந்த என் பெற்றாருக்கு இது பெரும் கவலையை ஆக்கிவிட்டது. என் தகப்பனாரைக் காட்டிலும் தாயாரே என்னுடைய கல்வி விஷயத்தில் அதிக சிரமப்பட்டு வந்த படியால், நான் பரீட்சையில் அநுகூலமடையவில்லையென்று தாயார் என்னைக் கண்டபடி கடிந்து ஏச, நான் அழுதுகொண்டு தகப்பனாரிடம் போனேன்; அவர், "தம்பீ, ஏன் அழுகிறான்" என்று தாயாரைக் கேட்க, தாயார் அவனைத் தான் கேளுங்கள் என்று வெறுப்போடு சொல்ல, அப்பர் என் முகத்தைப் பார்த்தார். நான் சோதனையிற் "பாஸ்" பண்ணவில்லையாம் என்று சொல்வதற்கிடையில், தகப்பனார் பெரும் ஆத்திரங்கொண்டு, "ஏனடியப்பா பெற்ற பிள்ளையை இப்படிப்பேசி ஏசி வருத்தப்படுத்துகிறாய். இரண்டுமுறை "பாஸ்" பண்ணினான்; ஒரு முறை தவறிப்போனான்; இது உலகத்திலே மற்றைப் பிள்ளைகள் செய்யாததா? பிள்ளைக்கு இப்பொழுது காலஞ் சுகமில்லையென்று சாத்திரி முந்தைநாட் சொன்னான்; சோதனை பாஸ் பண்ணாததையிட்டுக் காரியமில்லை; என் பிள்ளை நோய் துன்பமில்லாமிருந்தாற் போதும்; நல்ல காலம் வரத் தானே படிப்பான்; அவனை ஒருநாளும் ஏசாதே" என்றார். எனக்கு, தகப்பனார் சொன்ன இவ்வளவும் போதாதா? என் கவலையெல்லாம் பறந்துபோய் விட்டது; அழுகையும் மாறிவிட்டது; உடனே நான் சிரிக்காமல் விட்டதுதான் ஒரு குறை ஆனால் என் தகப்பனார் என் முன்னிலையில் இப்படிச் சொன்னது என் தாயாருக்குப் பிடிக்கவில்லை. ஓம், ஓம், பேய் சிரித்தாலும் குற்றம் அழுதாலுங் குற்றம், இனிமேல் நான் உங்கள் பிள்ளையைப்பற்றி ஏதும் பேசினாற் கேளுங்கள்; ஒன்று மாத்திரஞ் சொல்லுகிறேன்; உவனைப் பழுதாக்கினது நீங்கள்தான்; எதற்கும் இடங் கொடுக்கலாம்; படிப்பு விஷயத்திலும் பிள்ளையின் எண்ணப்படி இடங்கொடுப்பதென்றாற் சரிவராது" என்று பெற்றவள் சொல்ல எனக்குண்டான சந்தோஷம் குறைந்துவிட்டது. என்னைத் தாயார் ஏசுவது என் சகோதரிமாருக்கும் அதிகம் பிரியமில்லை; ஆனால் அவர்கள் தாயாருக்குப் பயந்து ஒன்றும் வெளியாகச் சொல்லமாட்டார்கள்.

* * *

இப்படியிருக்க, சிலநாட் சென்றபின் என் தகப்பனாருடைய உற்ற சினேகிதன் அம்பலம் என்பவர் அங்கே வந்தார். அம்பலம் நாலு காரியமும் அறிந்த மனுஷன். தகப்பனார் சிறிது கவலையுடன் இருப்பதைக் கண்டு "என்ன கணபதிப்பிள்ளை, இன்றைக்கு எதனையோ இட்டு யோசிக்கறீர் போலத் தெரிகிறது? என்ன விசேஷம்" என்று கேட்க, "வேறொன்றுமல்ல என் மகன் படிப்பிலே கொஞ்சம் குறைவாய்ப் போனான்; அதனைப் பற்றித்தான் யோசிக்கிறேன்; மேல் வகுப்பிலே போய் ஒருமுறை தவறினாலும் காரியமில்லை; கீழ்வகுப்பிலேயே தவறி விட்டான்; அப்படியானதுதான் பெருங் கவலை" என்றார் என் அப்பர். அந்தச் சமையத்திலே அங்கே நின்ற என்னை "நீ போய்ப் படி" என்று தகப்பனார் சொல்ல, நான் அந்த இடத்தைவிட்டுப் போய்விட்டேன்; அதன் பின் அம்பலமும் அப்பரும் என்ன பேசினார்களோ எனக்குத் தெரியாது".

* * *

உலகம் பலவிதம்: *1936* ஜனவரி *02*

"எனக்கு உத்தியோகமில்லாமையே, தக்க இடங்களில் நல்ல சீதனத்துடன் விவாகஞ் செய்தற்குத் தடையாயிருக்கின்றதென்பதை உணர்ந்த பிறகு எப்படியாயினும் ஏதும் உத்தியோகம் பெற வேண்டுமென்ற சிந்தனை என் மனத்திற் குடிகொண்டது. உத்தியோக விஷயமாக "தேவை"யென்ற விளம்பரங்களைத் தினசரிப் பத்திரிகைகளில் தவறாமற் பார்க்கத் தொடங்கினேன்; அப்பத்திரிகைகளில் "உபாத்தியாயர்" தேவையென்றும் திறமை வாய்ந்த "கிளார்க்மார்" தேவையென்றும் இப்படியாகப் பல தேவை விளம்பரங்கள் இடையிடையே காணப்பட்டன. இப்படியாக உத்தியோகங்களுக்கு விண்ணப்பப் பத்திரம் அனுப்புவோர் இன்னினது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சைகளிற் சித்தியடைந்திருத்தல் வேண்டுமென்றும் அவ்விளம்பரங்களிற் குறிப்பிடப்பட்டிருந்தன. ஆனால் நான் அப்படிப்பட்ட பரீட்சையொன்றிலேனும் சித்தியடையவில்லையே. இதற்கென்ன செய்யலாமென்று யோசித்தேன்; ஐயோ! அந்த நாட்களில் சிரமப்பட்டுப் படித்தேனில்லையே என்று பச்சாத்தாபமடைந்தேன்; போனதையிட்டு யோசித்துக் கவலைப்பட்டு ஆனதென்ன?

* * *

இவ்வாறு நான் மனவருத்தப்பட்டுக் கொண்டு திரியும்போது, என்னுடன் ஒருங்கு முந்திப் படித்த கூட்டாளி ஒருவர் தேயிலைத் தோட்டத்திலே கிளார்க்காகக் கடமை பார்ப்பவர்; நத்தார் விடுதலையின் பொருட்டு ஊரில் வந்து நின்றவர்; ஒருநாட் பின்னேரம் என்னைத் தெருவிற் சந்தித்தார்; "மிஸ்ரர், எப்படிச் சுகம்? நீர் இப்பொழுது என்ன செய்கிறீர் என்று கேட்ட போது, நான் என் விருத்தாக்கங்களையும் அந்த நேரத்தில் என் மனத்திற் கொண்டிருந்த கவலையையும் அவருக்குச் சொன்னேன்; அதற்கவர் "சோதனை பாஸ் பண்ணிவிட்டு உங்கே எத்தனை பேர் சும்மா இருக்கிறார்கள்; இந்த நாளையிற் சோதனை "பாஸ்" பண்ணுவதைக் காட்டிலும் கொஞ்சப் பணம் கைவசமிருந்தால் அதனால் நன்மையுண்டு; பணமில்லாதவன் பிணம்; படிப்பில் ஒன்றுமில்லை" என்றார். அவர் சொன்ன சமாதானம் எனக்கும் சந்தோஷமாயிருந்தது, ஏனென்றால் எனது கொள்கையும் அப்படியேயாகும். "அதுசரி பணத்தை வைத்துக்கொண்டு உத்தியோகத்தை என்ன விலைக்கு வாங்குவதா? என்று நான் அவரைக் கேட்க, அவர் "ஓம் அப்படித்தான்; நீ போய் இன்னின்னாரைக் காண்; அவர்களுக்கு ஏதும் தருவதாகச் சொல்லு; அவர்கள் உத்தியோகம் எது விதத்திலும் உனக்குத் தேடித் தருவார்கள்" என்று மூன்று நாலு பேருடைய குறிப்பையும் எனக்குச் சொல்லிவிட்டுப் போயினர்.

* * *

நான் மெத்தவும் சந்தோஷப்பட்டுக்கொண்டு வீட்டிற்குப் போய் என் தகப்பனாரிடஞ் சொன்னேன்; அவர் "சரி, அந்தக்கருமம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்; நீ ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம்" என்றார். சில நாட்கள் செல்ல, தகப்பனார் எனது கூட்டாளி சொன்ன நாமாவலியில் ஒருவரைப் போய்க் கண்டார்; அவர் தாம் தம்மால் இயன்ற உதவி செய்வதாகவும் ஆனால் தமக்கு அதையிட்டு ஒரு சதமேனும் தர வேண்டாம் என்றும் என் தகப்பனாருக்குத் தெரிவித்திருந்தார். இரண்டு மூன்று மாசம் சென்றும் அவரால் ஏதும் உத்தியோகம் தேடித் தரமுடியவில்லையென்பதைக் கண்டு என் தகப்பனார் இன்னொருவரைப் போய்க் கண்டு கருமத்தைச் சொல்லி, காரியம், வாய்க்குமானால் ரூபா 100 தருவேன் என்று அவருக்கு உறுதிப்படுத்திச் சொன்னார். அதற்கு அவர் ரூபா 50 முந்தியே தரவேண்டுமென்றும் உத்தியோகந் தேடிக்கொடுத்தபின் எஞ்சிய 50 ரூபா தரலாமென்றும் தகப்பனாருக்குச் சொல்ல, தகப்பனாரும் அதற்கு உடன்பட்டு எவ்வளவோ சங்கடப்பட்டு 50 ரூபா எடுத்து அவர் கையிற் கொடுத்தார். பணம் கொடுத்துப் பத்து மாதமாகியும் அவர் ஏதும் உத்தியோகம் தேடித் தருவதற்கு முயற்சி செய்யவில்லை; நானும் தகப்பனாரும் இடையிடையே போய்ப் பலமுறை கண்டபோதெல்லாம் அவர் இந்த மாசம் அடுத்த மாசம் என்று தவணை சொல்லிக்கொண்டு வந்தார்; தகப்பனார் ரூபா ஐம்பதும் தொலைந்ததென்று நிச்சயப்படுத்திக் கொண்டார்; ஆனால், "எப்படியோ மற்றை 50 ரூபாவுக்குமாக ஒரு உத்தியோகத்தை அவர் தேடித் தருவார்தானேயென்று நம்பியிருந்தேன்; முந்திய 50 ரூபாயும் அவருக்கு மிச்சந்தானே என்ற எண்ணம் எனக்கு அப்பொழுது புலப்படவில்லை.

* * *

"உலகம்பலவிதம்" என்றாற்போல இங்குள்ள பஞ்சாங்கங்களும் பலவிதமா? வாக்கிய பஞ்சாங்க கணிதர்கள், சென்ற வருஷத்திற்கு "பவ" வருடமென்று பெயரிட்டிருப்ப, திருக்கணிதர் "பாவ" வருடமென நாமகரணஞ் செய்திருந்தார். வாக்கிய கணிதத்திற்கும் திருக்கணிதத்திற்கும் இடையிடையே இந்தவிதமாக வருடங்களின் பெயரிற் பேதமிருப்பது சகசமாக்குமென்று நினைத்திருந்தேன்; ஆனால் வருகிற வருடத்தின் பெயரில் இங்குள்ள மூன்று பஞ்சாங்க கணிதர்களும் மூன்று விதமாக நாமஞ் சூட்டியிருக்கிறார்கள்; இரகுநாதையர் பஞ்சாங்கத்தில் தாது வருஷமென்றும், சுப்பிரமணிய சாஸ்திரிகள் பஞ்சாங்கத்தில் தாதுரு வர்ஷமென்றும், திருக்கணித பஞ்சாங்கத்தில் தாத்ரு வருஷமென்றும் பேதமான பெயர் இடப்பட்டிருக்கின்றனவே; இதற்குக் காரணமென்ன? இந்தப் பெயர்கள் முந்தியே இப்படிச் சிறிது சிறிது பேதப்படுத்தியிப்பட்டனவா? இல்லையேல் இக்கணிதர்கள் தாம் தாம் பேதப்படுத்துவதா? இவைகளுள் எவை சரி, என்ன பிழை? எல்லாப் பெயர்களும் ஒருபொருள் குறித்த பல சொற்களா? குறித்த ஒரேவருடத்திற்கே கணிதஞ் செய்யும் முப்பாற் கணிதர்களும் இப்படி வருஷத்தின் பெயரிலேயே மாறுபட்டாற் சோதிட கணித விஷயங்களை யறியாதார் செய்வதென்ன? நாமகரணஞ் செய்யும் விஷயத்திலாயினும் இம் முக்கணிதரும் ஒற்றுமைப்படவொண்ணாதா? கடலுள் மீனுக்கு நுழையன் இட்டதே பெயர் என்ற விதமாகவன்றோ இதுவும் இருக்கின்றது.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1936 ஜனவரி 09

எனக்குப் பேசி வந்த சம்பந்தங்களுட் பலவற்றை விலக்கிவிட்டு, இரண்டு சம்பந்தத்தைப் பற்றி மாத்திரம் எனக்கு எழுதியிருந்தார்; அவைகளுள் ஒன்று எங்களுக்கு முன்பு தொடர்பில்லாத பகுதியில் உள்ளதாயினும் சாதி குலம் மரபு என்னுமிவைகளுள் எங்களைக் காட்டிலும் உயர்ந்தவர்களெனத் தம்மைச் சொல்லிக்கொள்ளும் பகுதியைச் சேர்ந்த பெண்ணாகும்; அவர்கள் நல்லாயிருந்து கெட்டுப் போனவர்கள்; ஆனை படுத்தாலும் குதிரையிற் குறையாதென்ற பிரகாரம் அவர்கள் முட்டுப்பட்டாலும் வறுமையிற் செம்மையாக வாழ்ந்து வருபவர்கள்; ஆனால் தாங்கள் சாதியில் உயர்ந்தவர்கள் என்ற ஒரு செருக்கு அக்குடும்பத்தில் இயல்பாக உண்டு; என் தகப்பனார் அந்த விஷயமாக எனக்குக் கடிதம் எழுதியபோது "அவர்கள் எங்கள் குடும்பத்தில் வரத்தக்கவர்களல்லர்; ஆனமையினால் இதைப் பற்றித் தீர்க்கமாக ஆலோசனை செய்து முற்றெழுது ...." என்று கடிதம் அனுப்பியிருந்தார். சீதன விஷயமாக எழுதிய விடத்தில் பணமாக இரண்டாயிரத்தைஞ் நூற்றுக்கு மேற் கொடுக்கமாட்டார்களென்றும், நிலம் புலம் பதினாயிரம் பெறுமதியானவை தரலாமென்றும், நகைவகையும் ஆயிரத்தைஞ் நூற்றுக்குப் போடுவார்களென்றும், பெண் இலட்சணம் குற்றமில்லையென்றும் படிப்பளவில் தமிழில்லாமல் இங்கிலீசு கொஞ்சமும் படிக்கவில்லை, தையல்வேலை தெரியுமென்றும் குணமான பெண்ணெனக் கேள்வியெனவும் இப்படிப் பல விபரங்களை எழுதி, ஈற்றில் எனக்குச் சம்மதமானால் தமக்கும் எங்கள் தாயாருக்கும் சம்மதந்தான் என்று எழுதியிருந்தார்.

* * *

தகப்பனார் எழுதிய கடிதத்தைப் படித்த நாள் முதலாக நான் வேலை செய்யும் நேரம் போக எஞ் சிய நேரமெல்லாம் அதனையிட்டே சிந்தித்துக் கொண்டிருப்பேன்; நான் உத்தியோகம் பார்க்குமிடம் எனக்குப் புதிதாதலினால் இதனையிட்டுக் கலந்து யோசிப்பதற்கு எனக்கு உற்ற நண்பர்களுமில்லை. ஒருமுறை ஊருக்கு மீண்டு வந்து அந்த விவாகப் பேச்சைப்பற்றி ஆராயலாம் என்றால், எனக்கு வேலையேற்றுச் சில காலமானதால் எனக்கு முதலாளி விடுதலை தரமாட்டார் என்ற நியாயத்தினால் அப்படி வருதலும் முடியாமலிருந்தது. ஆனதால் நான் அது எனக்கும் சம்மதந்தான் என்றும், எந் தாயாரை அனுப்பிப் பெண் பார்ப்பித்துத் தாயாருக்குப் பிடிப்பாயிருந்தால் பெண்ணின் சாதகத்தை வாங்கிப் பொருத்தம் பார்க்கும்படியும் என் தகப்பனாருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேன். ஒரு வாரஞ் சென்றபின் தகப்பனார் தாம் அப்படிச் செய்ததாகவும் என் தாயாருக்குப் பெண்ணிற் பிடித்துக் கொண்டதென்றும், சாதகம் வாங்கிப் பொருத்தம் பார்த்த அளவில் நல்ல பொருத்தமென்றும் என் கடிதங் கண்டவுடன் எனக்குச் சம்மதமானால் அந்த விஷயத்திற் பிரவேசிக்கலாமென்றும் உடனே பதில் எழுதும்படியும் கடிதமூலமாகத் தெரிவித்திருந்தார். நானும் காலதாமதஞ் செய்யாது உங்களுக்குச் சம்மதமானால் எனக்குஞ் சம்மதந்தான் என்று எழுதியிருந்தேன்; பெண் இங்கிலீசு படிக்கவில்லை என்பதையிட்டுத்தான் எனக்குக் கொஞ் சங் கவலை.

* * *

எப்பொழுது விடுதலை கிடைக்கும் வீட்டிற்குப் போகலாம்" என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த என்னிடம் ஒருநாட் காலை எங்கள் முதலாளியாகிய துரை வந்து தாம் ஒருவார காலத்திற்குக் கொழும்புக்குப் போய் அங்கு நிற்கவேண்டிவரும் என்றும், அது அடுத்த மாசத்தின் முன் பகுதியிலாகுமெனவும், தாம் இங்கில்லாத சமையத்தில் தம்முடைய கடமையில் ஒரு பகுதியை நான் மேலதிகமாக பார்க்கவேண்டி வருமென்றும் ஆனதால் எனக்கு இஷ்டமிருந்தால் நான் அதற்கு இடையில் ஊருக்குப்போய் ஒருவாரந் தங்கிநின்று வருவதற்குத் தாம் விடுதலை தருவதாகவுஞ் சொன்னார்; அவர் சொன்னதைக் கேட்ட மாத்திரத்தே எனக்கு உண்டான ஆனந்தத்திற்கு ஒரு எல்லையில்லையெனலாம். நீங்கள் செய்யும் உபகாரத்திற்கு நான் என்றும் நன்றியுள்ளவனாக இருப்பேன்; அதனை ஒருபோதும் மறக்க மாட்டேன்; என்ற கருத்துப்பட என் தலைவருக்கு நான் ஆங்கிலத்தில் துதி கூறினேன்; அவர் உடனே 30 ரூபாவுக்கு ஒரு "செக்" எழுதி என்னிடம் தந்துவிட்டு எப்பொழுது ஊருக்குப் போவதற்கு உத்தேசித்திருக்கின்றீர் என்று கேட்க, நான் நாளை மத்தியானம் புகைரதத்திற் புறப்பட்டுப் போகலாமென்று பார்க்கின்றேன் என்றேன்; "மெத்த நல்ல காரியம், அப்படியே செய்யும்" என்று அவர் சொல்லி அநுமதியும் தந்தார்; நான் அடுத்த நாள் மத்தியானம் புகைரதமேறி மற்றைநாட் காலை ஊருக்கு வந்து சேர்ந்தேன்.

* * *

உலகம் பலவிதம்: 1936 ஜனவரி 30

வருகிறவருடத்தின் பெயர் யாழ்ப்பாணத்துள்ள மூன்று பஞ்சாங்கங்களிலும் மூன்று விதமாக இடப்பட்டிருக்கின்றதே, வருட நாமத்திற்றானும் ஒற்றுமையைக் காணவில்லையே, அதற்குக் காரணமென்ன, காரணமிருந்தால் அதனைச் சனங்களுக்கு அந்தந்தப் பஞ்சாங்க கணிதர்கள் எடுத்து விளக்குவது நன்மையாகுமென்று சிலவாரத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் "உலகம்பலவிதம்" மூலமாகக் கேட்டேன். அதற்கு இரகுநாத ஐயர் பஞ்சாங்க கணிதர்கள் தாது வருஷமென்பதே தமிழில் தொன்றுதொட்டு வழங்கிவந்த பெயரென்றும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் போன்ற அறிஞர்களும் தாங்கள் எழுதிய நூல்களில் தாது வருடமென வரைந்துள்ளனரென்றும் வருஷாதி நூலில் குறித்த வருடம் தாது வருடமென்றே பாடப்பட்டிருக்கின்றதென்றும் பிரமாணத்தோடு சமாதானஞ் சொல்லியிருக்கின்றார்கள், தாது வருடமென்பதே உலக வழக்காகவும் இருக்கின்றது.

* * *

இனி, திருக்கணித பஞ்சாங்கத்தார் குறித்த வருடத்தின் பெயரைத் தாத்துரு வருடமென்று வடமொழியில் உள்ள பிரகாரமே இட்டுக்கொண்டதாகத் தெரிவிக்கின்றார். சுப்பிரமணிய சாஸ்திரிகள் பஞ் சாங்க கணிதர் இற்றைவரையில் யாதும் விடையெழுதி வெளியிட்டிலர், விரைவிற் சமாதானம் எழுதி வெளியிடுதல் நன்றென்றெண்ணுகிறேன். இவைகிடக்க, சென்ற மார்கழி மாசத்தில் நிகழ்ந்த விநாயகஷஷ்டி விரதம் திருக்கணித்திலும் சுப்பிரமணிய சாஸ்திரிகள் பஞ்சாங்கத்திலும் 15உ திங்கட்கிழமையெனவும், இரகுநாதஐயர் பஞ்சாங்கத்தில் அடுத்த நாளாகிய 16உ செய்வாய்க்கிழமையெனவுங் கொள்ளப்படல் வேண்டுமென்று குறிக்கப்பட்டிருக்கிறது. பலர் முதனாளும் வேறு பலர் அடுத்தநாளும் அவ் விரதத்தை அநுட்டித்தனரென்பதும் கோவில்களில் உற்சவமும் விசேஷ பூசனையும் அப்படியே இரண்டுபட்டு நடைபெற்றன என்பதும் அறியக்கிடக்கின்றன; இரகுநாதஐயர் பஞ்சாங்கக் கணிதர்கள் தாம் 16உ கொண்டதற்கு நியாயம் வெளியிட்டுள்ளனர். அப்படியே ஏனைய இரு பஞ்சாங்க கணிதர்களும் தங்கள் நியாயங்களை வெளியிடுதல் சனங்களுக்கும் அவர்களுக்கும் நன்மையாக இருக்குமென்று நினைக்கிறேன்.

* * *

சென்ற செவ்வாய்க்கிழமை (28-1-36) யாழ்ப்பாணத்திலும் எங்கள் அரச சக்கரவர்த்தியின் பிரேத அடக்கமாகிய துக்க சம்பவம் பெரும்பான்மையும் மனப்பூர்வமான கவலையோடு கொண்டாடப்பட்டது. தேசாதிபதியின் உத்தரவுப்படி இங்குள்ள உத்தியோக தானங்கள் நீதிஸ்தலங்கள் பொதுத்தானங்கள் எல்லாம் மூடப்பட்டன. தேசாதிபதியின் விருப்பத்தின்படி வியாபாரக் கடைகளும் பல மூடப்பட்டன; சந்தைகளும் கூடவில்லை; எந்த இடத்திலும் நல்லாரும் பொல்லாரும் உண்டென்பது உண்மையல்லவா! இப்படிக் கடைகளைப் பூட்டினோருட் சிலர் பொலிசர் தலைமைக்காரர் யாரும் அதிகாரிகள் சமீபத்தில் நில்லாத சமையம் பார்த்துக் கடையின் ஒரு கதவை மாத்திரம் மெல்லத் திறந்தும், பிற்பக்கத்தால் கதவைத் திறந்தும் நாலுபக்கமும் எட்டியெட்டிப் பார்த்து ஏக்கத்தோடு வியாபாரஞ் செய்யக் காணப்பட்டார்கள். இப்படிப்பட்ட பேராசை பிடித்த வியாபாரிமாரின் செயல் அவர்க்கு மாத்திரமல்லாமல் இங்குள்ள ஏனைய சனங்களுக்கும் அவமானத்தைத் தரத்தக்கதாம். இந்து மக்கள் தம் அரசனைக் கண்கண்ட தெய்வம் என்றும் ஐங்குரவருள் ஒருவனென்றும் பேணிப் பாராட்டி நடப்பவர்கள்; அப்படிப்பட்டவர்களுடைய பரம்பரையில் இந்தப் பேராசை கொண்ட கோடரிக் காம்புகளும் வந்து பிறந்தனவேயென்பதுதான் கவலை.

* * *

பாமர சனங்களுட் சிலர், பணவாஞ்சை பீடித்த வியாபாரிமாருட் சிலர், இப்படிச் செய்தமை ஒரு நூதனமல்ல; தடித்த ராச விசுவாசமுடையவர்களென்று தாமாகவே தம்மைப்பற்றி வாய்ப்பறையறைந்து கொள்ளும் அரசாங்கசபை அபேட்சகர் சிலர் பொருட்டு, அவர் பரிவாரங்களுட் சிலர் இந்த இழவு கொண்டாட்டத்திற்குரிய துக்கத்தோடு கூடிய ஓய்வுநாளை தத்தம் அபேட்சகர் சித்தியடையும்படி முயற்சி பார்ப்பதற்கு வாய்த்த நாளென்றெண்ணிப்போலும், ஆட்சேர்க்கும்படி ஊர்வழியே மோட்டோரத மூலமாக ஓடியாடித் தேடித்திரியக் காணப்பட்டார்களாம். என் செய்யலாம் "ஆசை வெட்கமறியாது" என்பது பழமொழியல்லவா?

* * *

உலகம் பலவிதம்: 1936 பெப்ரவரி 13

பஞ்சவர்ணங்களுள் பச்சைக்கும் சிவப்புக்கும் இருக்கும் மானம் இப்பொழுது ஏனைய நிறங்களுக்கு இல்லையென்று சொல்லலாம். எங்கு பார்த்தாலும் பச்சை அல்லது சிவப்புக் கொடி. பச்சைக் கொடி முருகேசுவுக்கு, சிவப்புக் கொடி கதிரேசருக்கு என்று வைத்துக்கொள்ளுவோம்; இந்த விவகாரத்தை அறியாத ஒரு நாட்டு மனிதன் பனியின் பொருட்டுப் பச்சைக் கம்பளத்தால் தன்னுடம்பைப் போர்த்துக் கொண்டு வரக் காணப்பட்டால் இந்த மனுஷன் முருகேசு பக்கமென்பர் பட்டினத்திலுள்ள வழிபோக்கர்; தேர்தலிற் சிறிதும் சம்பந்தப்படாத இன்னொருவர் சிவப்புக் கம்பளியைத் தோளிற் போட்டிருந்தால் இவர் ஸ்ரீமான் கதிரேசருடைய ஆள் என்பர் கண்டவர்கள். விஷயம் இவ்வளவில் நின்றுவிடவில்லை; சிவப்பு நிறங்கொண்ட பொருள்களைக் காணுந்தோறும் பச்சை நிறப் பகுதியாருக்கும், பச்சைநிறப் பொருள்களைப் பார்க்கும்போது சிவப்புக் கட்சியாருக்கும் பெரும் ஆத்திரம் உண்டாகின்றது. அந்தந்த நிறத்தைச் சேர்ந்த கட்சியார் மோட்டரதத்தில் துவிச் சக்கரத்தில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் கடையில், தலைவாசலில், தெருச்சந்தியில், தத்தம் தலையில், கழுத்தில், மார்பில் அந்தந்த நிறக் கொடிகளையேனும், துணிகளையேனும் கட்டித் தொங்கவிட்டுக் கொள்ளுகின்றனர். பசிய இலைகளைக்கொண்ட செடி செந்நிறப் பூக்களைப் பூத்தால் இலை முருகேசுவுக்கு, பூ கதிரேசுவுக்கு என்றுதானும் சொல்லத் தொடங்கிவிட்டார்கள்.

* * *

இவை மாத்திரமா, இல்லை; இல்லை; இந்தத் தேர்தற் காலத்திலே இன்னும் பலவேடிக்கைகள் இங்கே நடைபெறுகின்றன. பள்ளிக்கூட வாலிபர் இருவர், இச்சமையத்தில் றப்பரால் இதற்கெனச் செய்து விலையாகும் சிவத்தத் தொப்பியை ஒருவனும் பச்சைத் தொப்பியை மற்றவனுமாகத் தரித்துக்கொண்டு தெருவாற் போனார்கள். வேடிக்கை பார்த்து வீண்கதை பேசிச் சிரித்துப் பொழுதுபோக்குஞ் சிலர் அந்த வாலிபர் போகுந் தெருமருங்கில் நின்றுகொண்டு, ஒருவனைக் கதிரேசுவினுடைய ஆள் என்றும் மற்றவனை முருகேசுவினுடைய ஆள் என்றுஞ் சொல்லிப் பரிகசித்தார்கள். கருமம் இவ்வளவில் நின்றுவிட்டாற் காரியமில்லை; இந்த நிற அபிமானம் ஒரு சந்தர்ப்பத்தில் எல்லை கடந்து போய்விட்டது. இரு பெண்களுள் ஒருத்தி பச்சைச் சேலையும், இன்னொருத்தி சிவப்புச் சேலையுங் கட்டியவராய் வர, ஒரு சந்தியில் நின்ற போக்கிலிகள் "இவள் முருகேசுவின் ஆள்; அவள் கதிரேசுவின் ஆள்..." என்று சொல்லி, பெருநகை விளைத்தார்களாம்! யாழ்ப்பாணம் இவ்வளவு கெட்டுப்போதற்குக் காரணம் யாதோ அறிகிலேம். மதுவெறியும் இரத்த வெறியுமே இவைகளுக்குக் காரணங்கள் போலும்.

* * *

முருகரம்மான் சீவரத்தினத்தைத் தெருவிற் சந்தித்தவிடத்து "தம்பீ, இந்தத் தேர்தல் விஷயத்தில் நீ யாருடைய பக்கமாக வேலை செய்கின்றீர்" என்று கேட்டபோது, அவர் சிரித்துக்கொண்டு "அம்மான், நான் இன்னும் ஒரு பக்கத்திலும் சேரவில்லை; எந்தப் பக்கத்தில் வாசியுண்டோ, அந்தப் பக்கத்தில் நான் சேர்ந்து வேலைசெய்ய யோசித்திருக்கிறேன்" என்று ... சொன்னாராம். "பணமென்றாற் பிணமும் வாய்திறக்குமென்பது பழமொழியல்லவா?

* * *

உலகம் பலவிதம்: 1936 பெப்ரவரி 20

இந் நாட்களிலே பச்சை நிறமும் சிகப்பு நிறமும் படும்பாடு கொஞ்சமல்ல! இந்த இருநிறத் துணிகளும் காகிதங்களும் இலங்கையில் எங்கே பார்த்தாலும் விசேஷமாகக் காணப்படுகின்றன. பச்சைநிறக் கொடிகள் சில இடங்களிற் பகற் காலத்திற் சிலரால் ஏற்றப்படுகின்றன. இராக் காலத்தில் வேறு சிலரால் இறக்கப்படுகின்றன; இப்படியே சிவப்புநிறக் கொடிகளும் ஏற்றவும் இறக்கவும் படுகின்றன; இந்தக் கொடியறுக்கல் யாழ்ப்பாணத்தில், சிலகாலத்திற்கு முன் திருடர்கள் செய்துவந்த தாலிக்கொடியறுத்தலைக் காட்டிலும் அதிகமென்னலாம்; ஆனால் இப்படியான செயல்கள் யாழ்ப்பாண மக்கள் ஆதியிற் கனவிலும் அறியாதனவா.

* * *

இனி ஒரு அபேட்சகரைப் புகழ்ந்தும் அவருக்கு எதிரியாகவுள்ளவரை இகழ்ந்தும் பச்சை சிவப்புக் காகிதங்களில் அச்சிட்டு வெளிவரும் துண்டுப் பத்திரிகைகட்கு ஒரு எல்லையில்லையென்னலாம். செந்தமிழ்மங்கை இந்தத் துண்டுப்பத்திர ஆசிரியர்கள் கையிற் பட்டுப் படும் பாடு கொஞ்சமல்ல, தமிழ் மொழியிலேயுள்ள வசைச்சொற்கள் அசங்கத வார்த்தைகள் இடக்கரடக்கர் குழூஉக்குறி அமங்கலப் பதங்கள் பிழைச் சொற்கள் கிராமியச் சொற்கள் பயனில் சொற்கள் இன்னும் தொல்லாசிரியர்களால் எடுத்து ஆளப்படாதன எவைகளோ அவைகளையெல்லாம் இப் பசிய செவ்விய துண்டுப் பத்திரங்களைப் படிப்பவர் தவறாமற் காணலாம்.

* * *

தமக்குச் சார்பான ஒரு அபேட்சகரின், அநுகூலத்தை விரும்பினால் இத்துண்டுப் பத்திரம் வரைவோர் அவருடைய கல்வியறிவொழுக்கம் பெருந்தன்மை, நாட்டிற்கு ஏதும் நன்மையை முன் செய்திருந்தால் அந்த நன்மை, திறமை செல்வஞ் செல்வாக்கு முதலியவைகளை எடுத்துச் சொல்லிவிட்டு, எழுதிவிட்டு அவ்வளவில் நின்று விடலாமே! ஆனால் இப்பொழுது நடக்கும் விஷயம் அப்படியல்லவே குறித்த அபேட்சகருக்கு எதிரிடையாக நிற்பவரைத் தூற்றுவதும் அவமதிப்பதும் நிந்திப்பதும் வசைகூறுவதுமே எதிர்க் கட்சியார் செய்யும் தேர்தல் முயற்சியாகும். தூற்றுவதும் குறை கூறுவதும் அந்த அபேட்சகரைப் பற்றி மாத்திரம் நின்றுவிடவில்லை; அவருடைய தாய்வழி தந்தைவழி மனைவிவழி மூதாதையர் செயல் குலம் கோத்திரம் மரபு இவைகளெல்லாம் சந்தியில் இழுக்கப்படுகின்றன. அவர் மீதும் அவர்கண்மீதும் இவ்வசையெல்லாம் [சிதைவு] ரயப்படுகின்றன. வாசிக்க அறியாத வம்பர் தலைப்பட்டுக் காசுக்கு நூறு கவியென்றாங்கு வசைப் பாட்டுக்கள் பாடப்படுகின்றன. இன்னும் இவை போன்ற அக்கிரமங்கள் கொஞ்சமா?

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகள் மாத்திரமா? இல்லை! இல்லை! இன்னும் பற்பல உண்டு; ஒரு அபேட்சகரைப் பற்றிச் சுவரிலேனும் மரத்திலேனும் ஒட்டப்பட்டிருக்கும் விளம்பரத்தை மற்றைக்கட்சியார் இரவிற் கிழித்து விடுதல், அந்த விளம்பரத்தின் மேல் எதிர்க்கட்சி அபேட்சகரின் விளம்பரத்தை ஒட்டுதல் விளம்பரங்களின் மீதும் அந்த விளம்பரத்தில் அபேட்சகருடைய பிரதிமைப் படம் இருந்தால் அதன் மீதும் சாணத்தை எறிந்து அவற்றைப் பங்கப்படுத்திவிடுதல் இப்படியான பல அநர்த்தங்கள் இங்கே நேருகின்றன.

* * *

கற்றார் கல்லாதார் சிறியார் பெரியார் ஆண்கள் பெண்கள் அறிவுடையார் பாமரர் என்னும் பேதம் இன்றி எல்லாருஞ் சம்மதஞ் சொல்லலாமென்ற இந்த முறையினால் வந்த கேடுகள் இவ்வளவினவென்று சொல்லமுடியுமா? ஐயோ, புதிய முறையான தேர்தலே! நீ, மரியாதையோடு வாழ்ந்த யாழ்ப்பாண மக்களை அவர்கள் முன் செய்தறியாத கேள்விப்பட்டறியாத, தீய செயல்களையெல்லாம் செய்யும்படி இப்பொழுது தூண்டிவிட்டிருக்கிறாய்! குடியாதவர்களைக் குடிக்கவும், கைலஞ்சம் வாங்காதவர்களை வாங்கவும், நேர்மை உடையவன் உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசவும் செய்து விட்டாய்; தகப்பனைப் பிள்ளை பகைக்கவும், தமயனைத் தம்பி வெறுக்கவும், புருஷனை மனையாள் கோபிக்கவும், நண்பனை நண்பன் குறைகூறவும், பெரியாரைச் சிறியார் நிந்திக்கவும், உபாத்தியாயரை மாணாக்கர் புறங் கூறவும் நல்லாரைப் பொல்லார் நகைக்கவும் இப்படி எத்தனையோ கேடுகளை யொல்லர் விளைத்துவிட்டாய்!

* * *

இவை மாத்திரமா? இல்லை! இன்னும் பலவுண்டு; செல்வத்தோடு கூடியவர்களாய், தான தருமத்தைச் செய்து கொண்டு நல்ல வழியிற் காலங் கழித்தவர்களுக்கு இந்த அபேட்சையினை உண்டாக்கி அவர்கள் அதில் ஈட்டிய பணம் முழுவதையும் இலஞ்சத்தின் பொருட்டும் மோட்டர்பஸ் கார் என்னுமிவைகளின் பொருட்டும் இன்னும் பயனற்றவைகள் எவைகளோ அவைகளின் பொருட்டும் செலவிடச் செய்து ஈற்றில் அவர்களை ஓட்டாண்டிகளாக்கச் செய்திருக்கின்றாய். புதிய தேர்தல் முறையாகிய நீ இந்த ஊரில் இல்லாமற் றொலைந்தாலன்றி இங்குள்ளார் ஈடேறுவதற்கு மார்க்கம் இல்லையாகும். இங்குள்ளார் உன்னாற் கெட்டுப் போனாலும், நீ இவர்களை விட்டுப் போனதில்லை!

* * *

உலகம் பலவிதம்: 1936 பெப்ரவரி 27

தேவர்களும் அசுரர்களும் கூடிப் பாற்கடலிற் கடைந்து எடுத்த அமிர்தத்தை அசுரர்கள் உண்ண விடுத்தற்குத் திருமாலுக்கு இஷ்டமில்லை. தேவர்கள் மாத்திரம் உண்ணல் வேண்டுமென்பதே நாராயணமூர்த்தியின் விருப்பம். அசுரர்கள் தேவர்களைக் காட்டிலும் வலியவர்களாதலால் இருபாலார்க்கும் மாறுபாடு நேரில், அசுரர்கள் தேவர்கட்கு அநர்த்தத்தைச் செய்து அமிர்தத்தையும் அவர்களிடத்திலிருந்து கவர்ந்து கொள்வார்களென்பது மாயவனுக்குத் தெரியும். இவைகளையெல்லாம் உத்தேசித்து மாயவ மூர்த்தி ஒரு உபாயஞ் சூழ்ந்தார்; தன்னுடைய பேரழகைக் கண்டு பெண்பாலார் தாமும் ஆசைப்படத்தக்க ஒரு மோகினி வடிவம் பூண்டு ஒரு கையில் அமிர்த கலசத்தையும் மற்றக் கையில் ஒரு சட்டுவத்தையும் பரித்தவராய்த் தோன்றி "ஏ, தேவர்களே! அசுரர்களே! உங்கட்கு அமிர்தம் வேண்டுமோ, மோகினியாகிய என்னை வேண்டுமோ" என்று கேட்டார். அது மாயவனுடைய மாயம் என்பதைத் தம் ஞானத்தினால் உணர்ந்த அமரர் தங்களுக்கு அமிர்தமே வேண்டும் என்றனர். ஞானமற்றவர்களாகிய அசுரர்கள் "எங்களுக்கு அமிர்தம் வேண்டாம்! பெண்ணாரமுதே! நீயே வேண்டும்" என்று ஓடி வந்து மோகினியைச் சூழ்ந்து கொண்டார்கள்.

* * *

மாயமோகினி அமிர்தத்தை தேவர்கட்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டு, அசுரரைப் பார்த்து "உங்களுள் எவன் எல்லாரைக் காட்டிலும் பராக்கிரமசாலியோ, அவனுக்கே நான் உரியவள்" என்று உபாயமாகச் சொன்னாள்; அதனைக் கேட்டு அறிவிற் குறைந்தவர்களாகிய அசுரர்கள் தங்களுக்குள் ஒருவரோடு ஒருவர் தனித்தனி தம் பராரக்கிரமத்தைக் காட்ட முயன்று, மாறுபட்டுச் சண்டையிட்டு எல்லோரும் மாளவே, விஷ்ணுமூர்த்தியும் தாம் கொண்ட மோகினி வடிவத்தை ஒழித்துச் சுயவடிவத்தோடு தேவர்கட்கு அருள் புரிந்தாரென்பது புராணசரித்திரம்.

* * *

இலங்கை மக்கள் இற்றைக்குப் பல வருடங்கட்குமுன் தங்கட்குச் சுவதந்திரம் வேண்டுமென்ற கொள்கை பூண்டவர்களாய் அரசினருக்குத் தங்கள் நியாயங்களைத் தெருட்டி வந்தார்கள். ஆனால் அரசினர் அவர்கள் கேள்வியின்படி நடக்க இஷ்டமில்லாராய் டொனமூர் விசாரணைச் சங்கமொன்றை ஏற்படுத்தி விசாரணை முடிந்தபின் டொனமூர்த் திட்டத்தை அநுசரித்து இந்தப் புதிய அரசாங்கசபைத் தேர்தல் முறைகளை இங்கே அனுசரிக்கலாயினர். ஆரம்பத்தில் இப் புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகட்குங் கொள்கைக்கும் இலங்கை மக்களனைவரும் மாறுபாடாகவே நின்றார்கள். யாழ்ப்பாண மக்கள் இக் காரணம் பற்றி அரசாங்க சபையைப் பகிஷ்காரம் செய்தனர். சிங்களரும் ஒழிந்து தமிழரும் இலங்கையிலுள்ள ஏனைய சாதியினரும் ஆரம்பத்தில் வெறுப்புக் காட்டினரேனும் பின்னர் டொனமூர் அரசியற்றிட்டத்தை அநுசரித்துப் பிரதிநிதிகளாக அதற்குட்பட்டிருந்தனர். இரண்டு இரண்டரை வருடஞ் செல்ல யாழ்ப்பாணத்துள்ள தமிழ் மக்களுள் ஒருசாரார் அதன்கட் போய்ப் புகுந்தனர். இந்தமுறை நடந்த தேர்தலில் தங்கள் வெறுப்பைக் காட்டிக் கொள்ளும் அறிகுறியாய் முந்தியமுறை பகிஷ்கரித்தவர்களுள்பட இங்குள்ள தமிழர்கள் எல்லாரும் பங்குபற்றினர்.

* * *

டொனமூர் அநுசரணைக்கு வந்தபின் இலங்கை மக்களனைவரும் தங்கள் மேலான நோக்கமாகிய சுயராச்சிய வேட்கையை விடுத்து அமிர்தத்தை வெறுத்த அசுரர்கள் மோகினியின் பொருட்டுப் பரஸ்பரம் மாறுபட்டு மாண்டவாறு, இவர்களும் சாதிபேதம் பாராட்டிப் பெரிதும் மாறுபட்டதோடு மாத்திரம் நில்லாது தங்களுள்ளும் மாறுபாடு கொண்டனர்.

* * *

இனி, கற்றார் கல்லாதார் சிறியார் பெரியார் அறிவுடையேர் பாமரர் ஆண்கள் பெண்கள் நல்லார் பொல்லார் என்ற பேதமின்றி எல்லாரும் சம்மதஞ் சொல்லலாமென்ற இந்த ஒரு கொள்கையே இலங்கை மக்களுக்குப் பெருங் கேடாக விளைந்தது. இந்தத் தேர்தல் முறை இந்தியாவிலும் ஏனைய குடியேற்ற நாடுகளிலும் இல்லாததாகும். சீர்திருந்திய இங்கிலாந்திலும் இந்தத் தேர்தல்முறை இற்றைக்கு இருபது இருபத்தைந்து வருடந் தொடக்கமாகவே நடைபெற்று வருவதாகும். அந்தத் தேர்தல்முறை இலங்கை மக்களுக்கு இப்போதைக்குத் தகாததென்றும் அதனாற் பல கெடுதிகள் நேருமென்றும் எல்லாரும் சம்மதஞ் சொல்வதைக் காட்டிலும் மிருகங்கள் மரந்தடிகள் சம்மதஞ் சொல்ல இயலுமானாற் சொல்வது நல்லது என்றும் அரசியல்ஞானம் பழுத்த பெரியாராகிய ஸேர் இராமநாதனவர்கள் அந்தச் சமையத்தில் ஓலமிட்டனரல்லவா? அவர் போன்ற பெரியார் சொல்லும் பழுதாகுமா? பொய்யாகுமா? இந்தத் தேர்தல் முறையினாலே வந்துள்ள அநர்த்தம் கொஞ்சமல்லவே!

* * *

சென்றவாரந் தொடக்கமாகவுள்ள தேர்தல் அநுபவத்தைக் கண்டுகொண்டும் இன்னமும் இத்தேர்தல் முறையால் நன்மையுண்டென்று நாம் சொல்ல நா எழுமா? பணமும் மதுபானமும் ஒரு புறம் வேலை செய்ய, நட்டாமட்டித்தனமும் ஈனசெயல்களும் இன்னொரு புறமாக வேலை செய்ய, தாங்கள் சொல்லும் சம்மதம் என்ன தேவைக்கு என்று அறியாதார் சம்மதஞ் சொல்ல, அறிவாளிகள், பெரியார், விஷயந் தெரிந்தோர் என்னுமிவர்கள் முற்பட்டு ஏதும் முயற்சிசெய்ய முடியாதாக, ஈற்றில் அடிபிடி சண்டை, கத்தி வெட்டு, பொல்லடி, துப்பாக்கிச்சூடு, தேகஊறு, அந்தோ! கொலையென்னு மிவைகளும் வந்து நேர்ந்தனவே! பிரதிநிதித் தேர்தலில் இன்னும் பாதித் தேர்தல் முடியவில்லை; எஞ்சிய பாகம் முடிவதற்கிடையில் என்ன என்ன உற்பாதங்கள் அநர்த்தங்கள் நேருமோ யாம் அறியோம்!

* * *

உலகம் பலவிதம்: 1936 மார்ச் 5

"மழைவிட்டுந் துவானம் மாறவில்லை" என்றவிதமாக பிரதிநிதித் தேர்தல் இந்த யாழ்ப்பாணப் பெரும் பிரிவில் முடிந்தும், தேர்தலினால் அத்தேர்தல் காலத்தில் நேர்ந்த பிணக்கு மனஸ்தாபம் குரோதம் வீண்பேச்சு அடிபிடி சண்டை முதலிய அநர்த்தங்கள் இன்னமும் ஒழிந்தபாடில்லைப் போலும். தேர்தல் நிறைவேறிவிட்டது; வென்றார் ஊர்வலமாகப் பவனி வந்தும் உபசரணைக் கூட்டங்கள் கூட்டுவித்தும் ஆநந்தங் கொண்டாடுகின்றனர்; தோல்வியுற்றார் தாம்பட்ட சிரமத்தையிட்டுக் கவலைப்பட்டும், செலவிட்ட பணத்தைக் குத்து விளக்கிற் கணக்கிட்டுப் பார்த்து ஏக்கங்கொண்டும் சிலர் மூளையையும் பிசகவிட்டுவிட்டனராம். இந்தத் தேர்தற் கருமத்தில் ஒருவர் வெற்றி பெற மற்றவர் தோல்வியுறுவது நிசமென்பதை இவர்கள் முந்திச் சிந்திக்காது இரு அபேட்சகரும் வெல்ல இடமுண்டு என்று விபரீதமாய் எண்ணிவிட்டனர் போலும்.

* * *

தேர்தல் முடிந்து சிலநாட் சென்ற பின்னரும் தத்தமக்குச் சார்பான அபேட்சகர்கள் பொருட்டு வேலைசெய்தவிடத்துக் குரோதங் கொண்ட எதிர்கட்சிக்காரருட் சிலர் வடமராட்சி வலிகாமப் பகுதிகளில் இன்றைக்கும் பேச்சுப்பட்டுக் கைபரிமாறி ஒருவர்க்கொருவர் ஊறு விளைத்துச் சண்டையிடுகிறார்களாம். இஃது என்ன விபரீதம்; தென்மராட்சிப் பகுதியில் ஒரு அபேட்சகர் பொருட்டு முயற்சி பார்த்த ஒருவர், தமது வாரக்காரர் தமக்குக் கீழ்ப்பட்டவர்களாயுள்ளார் தம்முடைய எதிர்க்கட்சி அபேட்சகர்க்குச் சம்மதஞ் சொல்லிவிட்டனரென்று அறிந்து ஆத்திரங்கொண்டு, அந்த வாரக்குடிகளைத் தம்முடைய காணியிற் குடியிருக்கவொண்ணாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் பயிர் செய்யவொண்ணாது என்றும், தமக்குரிய நல்ல தண்ணீர்க் கிணற்றில் வந்து தண்ணீர் மொள்ளவொண்ணாது என்றும் சொல்லித் தடுக்கின்றாராம். இது உண்மையானால், நியாயம் அறிந்தவரென்றிருக்கும் அவர் அப்படிச் செய்தல் முறையல்லவே. அன்பால் எவரையும் இலகுவில் வெல்லலாம். வன்பால் வெல்லமுடியாது என்பதை இவர் உணர்ந்திலர் போலும்.

"இன்னாசெயினும் இனியவே செய்யாக்கான்
என்ன பயத்ததோ சால்பு"

என்ற திருக்குறளை இப்படிப்பட்டவர் எந்த நேரமும் மநநம் பண்ணிக்கொள்ளுதல் ஆவசியமாகும்.

* * *

அபேட்சகராய் நின்றார் நிலை இப்படியாக, இந்த அபேட்சகர்பொருட்டு மனப்பூர்வமாகப் பாடுபட்டு ஓடியாடித் திரிந்து உழைத்தவர்களுக்குத் தான் சங்கடங்களும், வென்ற பக்கத்தினர்க்குச் சரீர வருத்தமும் தோற்ற பக்கத்தினர்க்குச் சரீர வருத்தத்தோடு மனவருத்தமும் அதிகமெனலாம். இப்படி உழைத்தவருட் சிலர் தேர்தற்றேதிக்கு முந்தியே நோய் கண்டு பாயிற் படுத்துவிட்டார்கள்; சிலர் தேர்தல் நிகழ்ந்த அடுத்தநாட் பாயிற் படுத்துவிட்டார்கள்; நமது யாழ்ப்பாண மக்களுட் பலர் இந்தத் தேர்தற் கருமம் ஒன்றில் தான்,

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண் துஞ்சார்
எவ்வெவர் தீமையும் ஏற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்"

என்ற பாட்டிற்கு இலக்கியமாக உழைத் திருக்கிறார்களென்று சொல்லலாம். இப்படி ஏனைய நற்கருமங்களிலும் ஈடுபட்டு உழைக்கத் தலைப்படுவரேல் நமது யாழ்ப்பாண மக்களுக்கு ஏதுங் குறைவுபாடு வருதல் முடியுமா?

* * *

இந்தத் தேர்தல்கள் காரணமாகப் பிதாவுக்கும் பிள்ளைக்குமிடையே பிணக்கு, தமையனுக்கும் தம்பிக்கும் சண்டை, உற்ற சிநேகிதருக்கு இடையே மனஸ்தாபம். பிள்ளைகளுக்கும் தாயாருக்கும் இடையே பிரிவினை, புருஷனுக்கும் மனைவிக்கும் இடையே ஊடல் முதலானவைகள் விளையலாயின என்று முருகேசு சொல்லுகிறார். "ஐஸே, டீயர்! நான் சிவப்புக்குட் போட, நீர் எப்படி பச்சைக்குட் போடலாம்; உம்மைச் சரிப்பண்ணிக்கொள்ளமாட்டாத நான் ஊரவர்களைச் சரிப்பண்ணுவது எப்படி? நீர் இப்படி எனக்குச் சதி செய்வீர் என்று உம்மாணை நான் கனவிலுங் காத்திருக்கவில்லை" என்று சிறிது கடுகடுத்துச் சொன்னார் ஐயா; "இந்தக் காரியத்தில் நீங்கள் என்னைக் குறை சொல்வது உங்கள் புத்திக் குறைவல்லவோ? புருஷமார் நினைத்தபடியே பெண்டுகளும் ஒரே பெட்டியிற் போடுவதென்றால் பெண்களுக்கு வாக்குரிமை தேவையில்லையே; இது எங்கள் பிறப்புரிமையல்லவோ? உமக்குப் பிரியமானவருக்கு நீர் சம்மதஞ் சொல்லலாம்; எனக்குப் பிரியமானவருக்கு நான் சம்மதஞ் சொல்லலாம்; இதுதான் இந்த டொனோமூர் அரசியல் முறையின் நியாயம்; அல்லாமலும் நான் செய்த வேலையையிட்டு நீங்கள் என்மேற் சந்தோஷங் கொள்ள வேண்டியதல்லவோ முறைமை; அடுத்தவீட்டுச் செங்கமலம் அயல்வீட்டுக் கருங்கமலம், பக்கத்துவீட்டுப் பாறுவதி இவர்களெல்லாம் தாங்கள் சம்மதஞ் சொல்லுகிறவருக்குத் தான் தங்கள் புருஷமாருஞ் சொல்லவேண்டுமென்று அவர்களைக் கட்டுப்படுத்தி அப்படியே செய்வித்திருக்கிறதாகவும் எனக்கு நேற்றுத் தேர்தற்றானத்தால் மீண்டு வரும்போதே சொன்னார்கள்; இப்படி நடந்திருக்க நான் உங்களை என் பிரியத்திற்குச் சம்மதஞ் சொல்லச் சொல்லிக் கட்டுப்படுத்தாமல் உங்கள் பிரியத்துக்குச் சம்மதஞ் சொல்லிப் போட்டுவர விட்டது போதாதா! ஓம், ஓம், நன்மைக்குக் காலமில்லை; சரி, இனிமேலாகட்டும்" என்று சொல்லிச் சீறிச் சினந்து முகம்வாடிக் கண் கலங்கி முகத்தை மறுபுறமாக வைத்து ஒரு துளி கண்ணீரும் விட்டாள் அம்மாள்; இந்தப் பரிதாபத்தைப் பார்த்துக்கொண்டு இன்னமுஞ் சும்மா இருப்பாரா ஐயா? கண்டார், பதைபதைத்தார், துடிதுடித்தார்; தன் காதலியின் கண்ணீரைப் பற்றறத் துடைத்தார்; முத்தம் இட்டிருப்பார் மனையாட்டி உடன்பட்டிருந்தால்! "கண்ணே" ஏன் அழுகின்றீர்; கவலைப்படுகின்றீர்; நீர் கண்ணீர் விட்டால், நான் இரத்தக் கண்ணீரன்றோ விட வேண்டியவன்; சஞ் சலப்படவேண்டாம்" நான் வேடிக்கையாகவல்லவா சொன்னேன்; உம்முடைய உள்ளக்கிடக்கை இப்படியென்று முந்தியே அறிந்திருந்தால், நான் சிவப்புக்கு வேலை செய்து நானும் பச்சை பெட்டிக்குள் அல்லவா போட்டிருப்பேன்" என்று சொல்லிப் பெரிதும் பச்சாத்தாபங் கொண்டு ஒற்றைக் காலில் நின்று பரிதவித்தார் ஐயா. அவருடைய இரப்புரையைக் கேட்ட மாத்திரத்தே மனமிழகி அன்புமீதூர புன்னகை செய்தாள் அம்மாள்; ஐயா ஆநந்தமடைந்தார்.

* * *

"மழைக்கால் இருட்டானாலும் மந்தி கொம்பிழக்கப் பாயாது" என்றொரு பழமொழி உண்டல்லவா? அதாவது மழையோடும் காற்றோடும் இருட்டோடுங் கூடிய நேரத்திலே ஒரு மரத்தின் கொம்பரில் இருந்து இன்னொரு மரக் கொம்பருக்குப் பாய்வது சங்கடமானாலும் குரங்கு மாத்திரம் இலக்குத் தவறாமற் கெட்டித்தனமாகப் பாய்ந்துவிடுமாம்;. யாழ்ப்பாணத்து மக்கள் எல்லாருமல்லர், பெரும்பாலார் எப்படிக் கை நீட்டினாலும், வாய்வழங்கியிருந்தாலும், வாங்கிய உண்ட குடித்த நியாயம் பற்றி, தகாதவர்களைத் தேர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமாந்து போகவில்லையாம்; காரியத்திலே கண்ணுங் கருத்துமாகத்தான் இருந்தார்களாம்; கல்வியறிவு திறமை வாக்குவல்லபம் என்னும் இவைகளில்லாமல் தனியே பணம் மாத்திரம் வெற்றியைத் தேடிவிடமாட்டாதென்பதை ஒரு பிரிவுத் தேர்தலில் யாழ்ப்பாணத்தார் காட்டி வைத்துவிட்டார்களென்று முருகேசர் ... [சிதைவு]

* * *

உலகம் பலவிதம்: 1936 மார்ச் 12

"பிறர்க்கின்னா முற்பகற் செய்யில் தமக்கின்னா பிற்பகல் தானே வரும்" என்பது பெரியோர் வாக்கு. நெல்லை விதைத்தவன் நெல்லை அரிவான்; புல்லை விதைத்தவன் புல்லை அரிவான்; "தாம் தாம் முன் செய்த வினை தாமே அனுபவிப்பர்" என்ற இவைகளெல்லாம் பழைய மொழிகளல்லவா! ஜெர்மனிய சக்கரவர்த்தியான கெயிஸர் 1914ம் ஆண்டில் பாரிய யுத்தத்தைத் தொடங்கியது நீதியல்ல என்பதை எவரும் ஒத்துக்கொள்வார்; ஆனால், ஜெர்மனியரை இலகுவில் வெல்ல முடியாதெனக் கண்ட தத்துவ ராச்சியத்தவர்கள் நான்கு வருட யுத்தத்தின் பின் அமெரிக்கருடைய படைவலியைக் கொண்டே ஜெர்மனியரைச் செயித்தனர். தத்துவ ராச்சியங்களின் நோக்கம் ஜெர்மனியரை வென்றதோடு மாத்திரம் திருப்தியடைந்து நிற்கவில்லை; ஜெர்மனியை இனி ஒரு காலமுந் தலையெடுக்கவிடவேண்ணாதென்ற வைராக்கியங் கொண்டு தத்துவ ராச்சியத்தினர் ஜெர்மனி மீது சுமத்தக்கூடிய கட்டுப்பாடுகளையும் பணக் கடன்களையும் இறுக்க முடியாத வரிகளையும் சுமத்தினர்; ஜெர்மனி அதோடு தொலைந்தது என்றுதான் அந்தக் காலத்தில் எல்லாரும் எண்ணியிருந்தனர்.

* * *

ஆனால் விஷயம் அப்படி நின்று விடவில்லை "கெட்டால் தழையாரோ கேடொரு கால் நீங்காதோ" என்ற விதமாய், இடையறா முயற்சியும் ஊக்கமும் அபிமானமும் உடைய சாதியினராதலால் ஜெர்மனியர் தங்கள் முயற்சியாலும் அபிமானத்தினாலும் இரண்டாமுறையுந் தலையெடுக்கலாயினர். ஹேர்கிட்லர் என்று சொல்லப்படும் ஒரு தீரபுருஷன் ஜெர்மனிய சர்வாதிகாரியாக வந்து வெளிப்பட்டார்; ஜெர்மனியின் கௌரவத்தையும் சுவதந்திரத்தையும் பழையபடி நிலைநாட்ட வேண்டுமென்றதே அந்தத் தீரபுருஷனுடைய பிரதான நோக்கம் தன்னுடைய தாய்நாட்டைத் தலையெடுக்காதபடி பகைவர்கள் பலவகையாகக் கட்டியிருக்குங் கட்டுக்களை ஒன்றொன்றாக அறுக்கத் தொடங்கினான்; அதனைக் கண்ட பகைவர்களாகிய தத்துவ ராச்சியத்தினர் இதற்கெனக் கூட்டியுள்ள சர்வதேச சங்கமூலமாக ஜெர்மனியரைக் கண்டித்து வெருட்ட முயன்றனர்.

* * *

இந்தியா, இலங்கை போன்ற கீழைத்தேச நாட்டினரென்றால் அவர்கள் செய்த வெருட்டுக்குப் பயந்து அடங்கியொடுங்கியிருப்பார்கள். பட்டிணத்து நரி சலசலப்புக்கு அஞ்சுமா? ஹிட்லர் என்ற அந்தத் தீரன் தன் வலியையும் மாற்றான் வலியையும் ஆராய்ந்து கொண்டு, அவர்களோடு எதிர்த்து நின்று கட்டுப்பாடுகளையுந் தவிர்த்து ஈற்றில் அவர்களுடைய கட்டுப்பாடுகளெல்லாவற்றையும் உதறியெறிந்துவிட்டு அவர்களுடன் போர்க்கு அறைகூவி நிற்கின்றான்; இப்பொழுது தத்துவ இராய்ச்சியங்களுக்கிடையே பெருஞ் சிந்தனையும்; பாரிய அயிரோப்பிய யுத்தம் இன்னுமொன்று விரைவில் நிகழுமென்ற திகிலும் ஏற்படலாயின. "ஓடம் வண்டியில் ஏறுவதும் வண்டி ஓடத்தில் ஏறுவதும்" சகசந்தானே தத்துவ ராச்சியங்கள் கீழைத்தேயங்கட்கு ஆதியிற் செய்த பழைய வினையை இப்பொழுது அனுபவிக்கப் போகின்றன போலுமென்று தேசசரித்திர ஆராய்ச்சியாளர் பெருமூச்சோடு சொல்லுகின்றார்கள்.

* * *

உலகம் பலவிதம்: 1936 மார்ச் 19

"அவதந்தரம் தனக்கந்தரம்" என்பது பழமொழியல்லவா? இத்தலியர் அபிஸீனியருடன் மண்ணாசைகொண்டு மாறுபட்டு யுத்தத்திற்குப் போனபோது, அபிஸீனியச் சக்கரவர்த்தி இத்தலியருடைய செயல் அடாத்தானதென்றும் அதனைத் தடுத்துத் தங்ளைக் காத்தல் வேண்டுமென்றும் சர்வதேச சங்கத்தார்க்கு முறையிட்டார். சர்வதேச சங்கம் முசோலினியென்றதையிட்டுச் சிறிது பயந்ததேனும் அபிஸீனியருக்குத் துணைபுரிவதற்குப் பின்னிற்கவில்லையெனலாம். இத்தலியருக்கு எண்ணெய் கொடுக்காது கட்டுப்படுத்தி அவர்கள் அபிஸீனியருடன் செய்யும் யுத்தத்தைத் தவிர்த்துவிடலாமென்று சர்வதேச சங்கம் நோக்கங் கொண்டது. ஆனால் அந்தச் சமையத்திலே சர்வதேச சங்கத்தின் நோக்கத்தைப் பூர்த்தியாக விடாமல் இடையூறாய் நின்றவர் பிரான்ஸியரல்லவா? பிரான்ஸீய மந்திரி "பாலுக்குங் காவல் பூனைக்குந் தோழன்" என்றவிதமாக இத்தலியரைத் திருப்திப் படுத்திக்கொண்டு சர்வதேச சங்கத்தோடும் மாறுபடாமல் நடக்க முயன்றாரல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில மந்திரியாகிய சேர் சாவயல் ஹோருக்கு அவர் பதவியை இழக்கச் செய்து வாயில் மண்போட்டவரும் இந்தப் பிரான்ஸிய மந்திரியல்லவா? பிரான்ஸியர் அந்தப் பக்கம் குதிப்பதோ இந்தப் பக்கம் குதிப்பதோ என்ற சந்தேகத்துடன் மதிலில் இருந்தபடியினாற்றான் சர்வதேச சங்கம் நினைத்தபடி இத்தலியர் விஷயத்தில் எண்ணெய்க் கட்டுப்பாட்டைச் செய்ய முடியாமல் நேர்ந்ததென்று சொல்லல் தவறாகாது. திரட்டிச் சொல்லுகில் இந்தப் பிரான்ஸியரே சர்வதேச சங்கத்தின் கட்டுப்பாட்டைக் கெடுத்து அச் சங்கத்தின் ஆற்றலைக் குறைத்தவராவரென்றே சொல்லல்வேண்டும்.

* * *

ஆனால் இப்படி இருமனப்பட்டு நின்ற பிரான்ஸியருக்கு இப்பொழுது வந்திருக்கும் அந்தரமென்ன? ஜெர்மனியின் சர்வாதிகாரியான ஹேர் ஹிட்லர், பெரிய யுத்த முடிவிற் செய்த உடன்படிக்கையைப் பொருட்படுத்தாமல் பிரான்ஸிற்கும் ஜெர்மனிக்கும் எல்லைப் பிரதேசமாகவுள்ள றயின்லன்டில் தமது சைனியத்தை எவருங் காத்திராப்பிரகாரம் அனுப்பி அங்கே நிறுத்தி விட்டாராம். அந்தச் செயல் பிரதானமாகப் பிரான்ஸிற்குப் பெருந் திகிலை விளைவித்து விட்டதாம். அதனாற் பிரான்ஸியர் இப்பொழுது சர்வதேச சங்கத்தாரிடம், ஹிட்லரின் செயலை அவசரம் தடுத்துவிடல் வேண்டுமென்று முறையிடுகின்றனர். அபிசீனியாவிற்குத தீமை செய்யவொட்டாது முசோலினியைத் தடுக்கும் விஷயத்தில் சர்வதேச சங்கத்துடன் ஒத்துழைக்க மறுத்து வெளவால்போல் இருபகுதிக்கும் பொதுவாக நின்ற பிரான்ஸியர் இப்பொழுது தமக்கு இடர் விளைக்கவிடவேண்டாமென்று, ஹிட்லரைத் தடுத்துவிடும்படி சர்வதேச சங்கத்தாரைக் கேட்பது என்ன முறையில் என்பதுதான் புலப்படவில்லை. முசோலினியைத் தடுக்கமுடியாத சர்வதேச சங்கம் ஹிட்லரைத் தடுக்கமுடியுமோ என்பது மற்றொரு நியாயம். இத்தலியர் ஏழைகளாகிய அபிசீனியருக்கு மாறாகப் படையெடுத்துச் சென்று அவர்கட்குச் சுவதந்திர பங்களு செய்யப் பார்த்துக் கொண்டிருக்கும் சர்வதேசசங்கம் ஹிட்லர் தம் அதிகாரத்திற்குட்பட்ட றயின்லன்டில் தற்பாதுகாப்பின் பொருட்டுச் சில போர்வீரரைக் கொண்டுபோய் நிறுத்தினால் அதனைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருப்பதேயல்லாமல், அரசாங்கத்தினால் வேறு என்ன செய்யமுடியும்?

* * *

இனி, ஹிட்லரை "நீ உன் முன்னோர் செய்த உடன்படிக்கைகளை இப்படிக் கெடுக்கலாமா? கட்டுப்பாடுகளைக் குழப்பலாமா" என்று சர்வதேச சங்கத்தார் கேட்டதால், அவர் சொல்லும் பதிலென்ன? சீன தேசத்திற்கு மாறாக "ஜப்பான் படையெடுத்தபோது நீங்கள் செய்த கட்டுப்பாடென்ன? இத்தலியருக்கும் அபிஸீனியருக்குமிடையே நடக்கும் யுத்தத்தைத் தடுக்க உங்களால் முடியவில்லை; நியாயமென்றால் இத்தாலியருக்கு ஒரு நியாயம் ஜர்மனியருக்கு ஒரு நியாயமா? பிரான்சியர் ஜர்மனியருக்கும் தமக்கும் எல்லையாகவுள்ள நாட்டிற் சைனியத்தை நிறுத்தி அரண்செய்திருக்கிறார்கள்; அந்தச் சைனியத்தை அவர்கள் தவிர்க்கட்டும்; அதன்பின் நான் என் சைனியத்தைத் தவிர்த்துவிடுகிறேன்; அல்லாமலும் ஏறக்குறையப் பதினெட்டுத் தத்துவ ராச்சியங்கள் எங்களுக்கு மாறாகவும் பிரான்சியருக்குச் சார்பாகவும் நிற்கும்போது; நாங்கள் ரயில்வண்டியில் தற்பாதுகாப்பின் பொருட்டுச் சில போர்வீரர்களை நிறுத்தினால் அதனையிட்டுப் பிரான்ஸியர் பயப்படக் காரணமில்லையே; சர்வதேச சங்கத்தினர் தம்மோடு ஜர்மனியராகிய நாங்களும் ஒத்த நிலைமையுடையவரென மதித்து நடப்பரேல் நாங்களும் அச் சங்கத்திற் சமூகமாகிக் கருமம் ஆற்றுவோம்; தாங்கள் மேலும் ஜர்மனியர் கீழும் என்று நினைக்கும் சர்வதேச சங்கத்தார் நீதியை எப்படிச் செய்யமுடியும்? சமாதானத்தை எப்படி ஆக்கமுடியும்" என்று மேற்படி ஹிட்லர் நியாயம் பேசுகிறார்; இவைகளையெல்லாம் உற்றுநோக்குமிடத்து, ஜர்மனியர் சர்வதேச சங்கத்திற்கு அடங்கிக் கிடப்பதும் உலக சமாதானம் வருவதும் பிரான்ஸியரின் திகில் நீங்குவதும் இப்போதைக்கில்லையென்று புலப்படுகின்றதல்லவா!

* * *

அரசாங்கசபைத் தலைவரைத் தேர்ந்த விஷயத்தில் இரண்டாமுறையாக, ஸ்ரீ துரைசுவாமியவர்கட்கும் மிஸ்ரர் விறான்ஸிஸ் டீ சொயிசா என்பவருக்கும் தனித்தனி 29 சம்மதங்கள் கிடைத்தனவல்லவா! இரு தொகையும் சமமாக வந்த காரணத்தினால் மூன்றாமுறை தேர்தல் செய்தபோது, முந்தியவருக்கு முப்பதும் பிந்தியவருக்கு இருபத்தெட்டும் வந்தமை காரணமாகவே ஸ்ரீ துரைசுவாமியவர்கள் வெற்றி பெற்றனர். இந்த விஷயத்திலே ஒரு பெரிய "அங்கலாய்ப்பு" ஏற்படுகின்றது. இரண்டாமுறைத் தேர்தலில் சம்மதத்தை மிஸ்டர் விறான்ஸிஸ் சொயிசாவிற்கு இட்டு, மூன்றாமுறைத் தேர்தலில் அதனைத் தவிர்த்து ஸ்ரீ துரைசுவாமிக்காக இட்டவர் யார் என்பதை அறிவதற்கு எல்லாரும் அங்கலாய்க்கின்றனராம். அவர் யாரென்பது இந்தச் சமையத்தில் இட்டவருடைய மனச்சாட்சி க்கும் கடவுளுக்குமே தெரியும்; ஒருபோது ஸ்ரீ துரைசுவாமியும் அறிதல் கூடும்; ஆனாற் காலகதியில் அவர் யாரென்பது ஏனையோருக்குத் தெரிய வரும்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: *1936 மார்ச் 26*

பொன்வினைஞன் ஒருவன் தன்னுடைய அந்திய காலத்தில், அதாவது மரணாவஸ்தையிற் கிடக்கும் போது தன் ஏக புத்திரனை (ஒரேயொரு மகனை)ப் படுக்கைக்குக் கிட்டக் கூப்பிட்டு இருக்கச் செய்து பின்வரும் விதமாகச் சொன்னான்:- "அப்பா மகனே, நான் இனித் தப்பிப் பிழைப்பேன் என்று எண்ணாதே; இந்த நோய் என் முடிவுக்குத்தான் வந்தது; ஆனதால் உனக்குச் சில புத்தி சொல்ல விரும்புகிறேன்; அவதானமாகக் கேள்; உன்னை உன் தாயிருக்குங் காலத்தில் அவள் மிகவுஞ் செல்லமாய் வளர்த்து விட்டாள்; உனக்கு வயசு இருபத்திரண்டாகியும் இன்னமும் அரிசிவிலை தெரியாமலே நடந்து வருகிறாய்; நீ இன்னமுஞ் சின்னவனோ! இனி மேலாயினும் புத்தியாய் நடந்துகொள்; எவருக்கும் நம்பிக்கை வரச்செய்துகொள்; பஞ்சம் போகும் பஞ்சத்திற்பட்ட வசை போகாது; எங்கள் தொழிலிலே சில சில இரகசியங்கள் உண்டு; அவைகளைச் சொல்லித்தருகிறேன் கேள்" என்று சொல்லி, இன்னின்ன நகைகளைச் செய்யும்படி யாரும் உன்னிடந் தந்தால் அவைகளில் இவ்வளவு இவ்வளவு பொன்னுக்குமேல் உனக்கென்று எடுத்துக்கொள்" என அந்தந்த ஆபரணங்களையும் அவைகளைச் செய்யும்போது தனக்கென அவன் எடுத்துக்கொள்ளவேண்டிய பொன்னின் நிறையையும் தகப்பன் மகனுக்குச் சொன்னான்.

* * *

ஆனால் மகன், தகப்பன் மிகவும் ஆதரவோடு சொல்லும் இந்த விபரங்களைக் கேளாமற் பாராமுகமாகவிருந்தான். அதனை அவதானித்த தகப்பன் "மகனே, நான் என் அந்திய காலத்திற் சொல்லும் இந்த அருமையான புத்தியைக் கேளாமல் அலட்சியமாக இருக்கின்றாயே; உன்னுடைய நோக்கமென்ன?" என்ற சிறிது வருத்தத்தோடு கேட்டான். அதுகேட்ட மகன் சிரித்துக்கொண்டு "அப்பா, யாராயினும் நகைகள் செய்யும்படி என்னிடங் கொண்டு வந்து பொன் தரும்போது, நான் அந்தப் பொன்னை வாங்கிக் கொண்டு பிறகு நகை செய்து கொடுக்க எண்ணியிருந்தாற்றானே, நீங்கள் சொல்லுகிற உந்தப் புத்தியைக் கேட்கவேண்டும்; தெரிந்தோ தெரியாமலோ யாராயினும் ஆபரணஞ் செய்யச் சொல்லி என்னிடம் பணத்தைப் பொன்னைக் கொண்டு வந்து தந்தால் நான் பின்பு அவர்களுக்கு ஒருபோதும் நகை செய்து கொடுக்கமாட்டேன்; அகப்பட்டதறுதியென்று தந்த முழுப் பணத்தையும் பொன்னையும் நானே அடக்கிக்கொள்ளுவேன்" என்றானாம்.

* * *

நமது சகோதரர்களென்று நாங்கள் பாராட்டுஞ் சிங்கள மக்கள், மந்திரிகளையும் உபதலைவர் உப அங்கிராசனர்களையுந் தெரிந்த விஷயத்திலே குறித்த பொன்வினைஞ வாலிபன் சொன்ன பிரகாரம் தமக்கு அகப்பட்ட பதவிகள் முழுவதையும் தாங்களே அடக்கிக் கொண்டார்களல்லவா? அரசாங்கசபைத் தலைவர் பகுதியையும் தங்களுள் அடக்கப் பார்த்தார்கள்; அவர்களுடைய துரதிஷ்டத்தினாலோ, தமிழர்களுடைய நல்லதிஷ்டத்தினாலோ, நான் அறியேன், அந்த ஒரு பதவி மாத்திரம் தமிழ்ப் பிரதிநிதிக்கு அகப்பட்டது; இஸ்லாம் பிரதிநிதி இந்தியப் பிரதிநிதி பறங்கியர் வெள்ளையர் பிரதிநிதிகளாகிய இவர்களுக்கு ஒன்றேனும் அகப்படவில்லை. "உடையவனிற் கைப்பற்றியவன் வலியவன்" என்பது பழமொழியல்லவோ!

* * *

அரசாங்கசபைத் தேர்தல் இற்றைக்குச் சில வாரங்கட்கு முன் நடந்தபோது, றூகணைப் பகுதியிலுள்ள ஒரு அபேட்சகர் தமக்குரிய கொடியின் நிறத்தை "செங்கல்மங்கல்" என்று சொல்லப்படும் ஊதாநிறமாகத் தெரிந்துகொண்டாராம். ஏனைய நிறமெல்லாமிருப்ப நீர் ஊதா நிறத்தையே பிரதானமாகத் தெரிந்து கொண்டதன் காரணமென்ன என்று அந்த ஊரவர் சிலர் அவரைக் கேட்டபோது, அவர் "குரக்கனுடைய நிறந்தான்" இந்த நிறம்; குரக்கன்றான் உங்களுக்கும் பிரதானமான உணவுப் பொருளாயிருக்கின்றது; ஆதலினாலே நான் இந்த நிறத்தைத் தெரிந்துகொண்டேன்" என்றாராம். சனங்கள் அவர் சொல்லை நம்பி மெச்சிக்கொண்டது மாத்திரமல்லாமல், அவர் பொருட்டு மிக்க ஊக்கத்தோடு உழைத்தார்களாம். அவர் பட்சமாக வேலை செய்த வாலிபர்களெல்லாரும் குரக்கன் கதிரையே அடையாளமாகத் தங்கள் சட்டைப்பையில் மாட்டிக்கொண்டார்களாம். அவர் பொருட்டுச் சம்மதஞ் சொல்லவந்த பெண்கள் எல்லாரும் கூந்தலிற் குரக்கன் கதிரைச் சூடிக்கொண்டு வந்தார்களாம். நிறபேதத்திலும் கருமங்கள் அநுகூலமாதலும் பிரதிகூலமாதலும் தங்கியிருக்கின்றனபோலும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் 3

உலகம் பலவிதம்: 1944-1946

சுகுணாம்பிகை

(ஒரு ஆங்கிலப் பத்திரிகையிலுள்ள கதையை ஆதாரமாகக்கொண்டு எழுதியது)

உலகம் பலவிதம்: 1944 ஏப்பிரல் 06

நீ சாதியில் திருடனா?
இடையிட்ட திருடனா?

மேன்மாடத்தோடு கூடிய மாளிகை போன்ற உன்னதமான வீடு; முற்புறத்தும் இருபுறத்திலும் பூந்தோட்டம்; பிற்புறத்தே காய்கனிகளைத் தரும் மரங்கள் செறிந்துள்ள வளவு. நேரம் இருட்டோடு கூடிய இரவு இரண்டு மணிவரையிலிருக்கும். கீழ்வீட்டிலுள்ளதாகிய தனது படுக்கையறையிலே சுகுணாம்பிகை சயனத்திற் படுத்துக்கிடக்கிறாள்; ஏதோ ஒரு தீயகனாக்கண்டுகொண்டு கிடந்தவள் தன் படுக்கையறைக்கு அடுத்த அறையுள் ஏதோ அரவங் கேட்க, கண்ட கனாவும் நித்திரையும் இடையில் "முறியக்" கண்விழித்தாள். பின்னரும் அங்கே சத்தங் கேட்பதை அவதானித்தாள்; தன் படுக்கையை விட்டு மெல்ல எழுந்து, அங்கு அமைக்கப்பட்ட மின்சார வெளிச்சத்தைச் செய்யுங் கருவியைத் தட்டவே வீடெங்கும் வெளிச்சமுண்டாகியது. அப்படிச் செய்துவிட்டுச் சுகுணாம்பிகை தன் தலைமாட்டில் தலையணையின் கீழ் வைத்திருந்த திறப்புக்கோவையை மெல்ல எடுத்துக்கொண்டுபோய் அக்கோவையிலுள்ள ஒரு திறப்பினால் அடுத்த அறைக்குப் போதற்காகிய கதவை அதிக சத்தமின்றித் திறந்துகொண்டு அந்த அறையுட் போனாள்; சுகுணாம்பிகையின் வயசு இருபத்தெட்டு இருபத்தொன்பது என்று உத்தேசிக்கலாம்; சிறந்த ரூபலாவண்யமுடையவள்; தமிழும் ஆங்கிலமும் நன்கு படித்தவள்; அவளுடை

இயற்கையழகோடு கல்வியழகும் சேர்ந்து அவளைப் பேரழகியாக்கியது; உத்தம மகளிர்க்குச் சொல்லப்பட்ட இலக்கணங்கள் அத்தனையும் தாமாக தேடிவந்து அவளிடத்திற் குடிகொண்டனவெனலாம். சுகுணாம்பிகையின் இடுகுறிப்பெயர் அவட்குக் காரணப்பெயராக அமைந்ததென்று சொல்லினும் பொருந்தும், வசீகரமான முகம்; கருணை பொழியுங் கண்கள், என்ன அற்புதம்! அந்த அறையிலே ஒரு திருடன் அங்கே வைக்கப்பட்டிருந்த வெள்ளிப் பாத்திரங்களிரண்டைத் தன் இரு கரத்திலுந் தனித்தனி பிடித்தபடி, சரீரம் நடுங்கத் தலை குனிந்தபடி நிற்கிறான்; சுகுணம் வந்ததைக் கண்டமாத்திரத்தே அவளை வெருட்சியடையும்படி கோபக்குறிகாட்டி உற்றுப் பார்க்க முயன்றான்; ஆனால் தன் பார்வையாற் சுகுணாவை வெருட்ட அவனால் முடியவில்லை; அவன் கையில் எவ்வகையான ஆயுதமுமில்லையென அவதானித்த சுகுணா அவனிற்குச் சமீபத்திற் போக, அவன் அவளை வெருட்டிபோடலாமென் றெண்ணிப்போலும் தன் பற்களை நெறுநெறன கறித்து கண்களிற் கோபஞ்சிந்த "ஏறிட்டுப்" பார்த்தான்; அந்தக் கள்வன் தன்னை வெருட்டச் செய்யும் முயற்சிகளைப் பார்த்துச் சுகுணம் மெல்லச் சிரித்தாள்; உடனே தன் சிரிப்பையடக்கிக் கொண்டு அவனை உற்றுப் பார்த்தாள்; தான் நிசமான திருடனென்று அவனே சத்தியஞ் செய்தாலும், அவனுடைய தோற்றம் அவனைத் திருடனென்று நினைக்க விடமாட்டாது. முப்பது முப்பத்திரண்டு வயசு மதிக்கலாம். உயர்ந்த மெல்லிய தோற்றமுடையவன்; வறுமைப் பிணியாற் பீடிக்கப்பட்டவன்; நல்லாயிருந்து கெட்டவன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என்றே அவனைப் பார்த்தவரெவரும் எண்ணுவார்கள்; உடுத்த வெள்ளை வேட்டியும் இடையிடையே கிழிந்து துவாரங்கண்ட "ஷேட்" எனப்படும் உட்சட்டையுமல்லாமல் அவனுடைய தேகத்தில் வேறு எவ்வகையான உடையுங் காணப்படவில்லை; அவனுடைய தோற்றத்தையும் நிலையையுங்கண்டு சுகுணாம்பிகை தன்னிடத்துள்ள அற்பபயமும் நீங்கியவளாயச் சிறிது கோபங் கொண்டாள்போல் அவனைப் பார்த்து "ஏ, நீ, சாதியில் திருடனா? இல்லையேல் இடையிட்ட திருடனா? உள்ளதைச் சொல்லிவிடு; கதவுகளெல்லாம் பூட்டப்பட்டிருந்த இந்த அறைக்குள் எப்படிப்புகுந்தாய்? உண்மை சொன்னால் தப்புவாய்" என்று அதட்டிக் கேட்டாள். திருடன் கலக்கங் கொண்டான்; சரீரம் நடுங்கக் காணப்பட்டான்; கண்களில் நீர் ததும்பியது; "அம்மா, இந்த யன்னற்கம்பியில் இரண்டைப் பேர்த்துவிட்டு இந்த அறையுட் புகுந்தேன்; நான் சாதியிலுந் திருடனல்லேன்; ஆதியிலுந் திருடனல்லேன்" என்று தடுமாறச் சொல்லிவிட்டு அப்பாற் சொல்லமுடியாமற் கண்ணீர் தாரை தாரையாகப் பெருக நின்று அழுதான்.

* * *

"பயப்படாமற் சொல்லு"

சுகுணாம்பிகை இயல்பிலேயே இரக்கம் முதலிய சுகுணங்களோடு கூடியவளென்பது முந்தியே சொல்லப்பட்டது. அந்தத் திருடன் நின்று நடுங்குவதையும் அவன் கண்களில்நின்று நீர் தாரை தாரையாகச் சொரிவதையும் அங்ஙனஞ் சொரியுங் கண்ணீரைத் தான்இட்டுள்ள சட்டையின் முன்கைப்பக்கத்தால் துடைப்பதையும் பார்த்த மாத்திரத்தே சுகுணாம்பிகையின் உள்ளம் வெயிலிடைப்பட்ட வெண்ணெய்போல உருகலாயிற்று. அவள் அவனைப் பரிவுடன் பார்த்து "அப்பா, சின்னப்பிள்ளைகள்போல் அழாதே, உண்மையில் நீ திருடனல்ல; இந்தச் செய்யாத செயலைச் செய்யும்படி உன்னைத் தூண்டிவிட்ட பொல்லா விதி என்ன வென்பதைப் பயப்படாமல் மெல்லச் சொல்லு, உனக்கு நான் எவ்வித ஆபத்தும் நேரவிடமாட்டேன்; என்னை நம்பு" என்று ஆதரவுடன் சொன்னாள். இப்படிச் சொல்லும்போது சுகுணத்தின் கண்களில் நீர் ததும்பியது. இந்த இதமான வார்த்தைகள் தன் செவியிற் படுதலும் அந்த மனுஷன் கவலை அதிகரித்தவனாய்; தன் கையிலிருந்த வெள்ளிப் பாத்திரங்களை மெல்லக் கீழே வைத்துவிட்டுக் கண்ணீரைத் துடைத்தபின் தனது இரண்டு கைகளையும் விரித்து நீட்டியபடி சுகுணாம்பிகையைப் பார்த்து, "அம்மா, என் வரலாறு மிகப் பரிதாபமானது, அதனைச் சொல்லி உங்களைத் துயரப்படுத்த எனக்குப் பிரியமில்லை; தாயே! உங்களுக்குக் கோடி நமஸ்காரம், ஒருநாளுஞ் செய்யாத செய்ய நினையாத, என் மனச்சாட்சிக்கு மாறான கருமத்தைச் செய்யத் துணிந்து அகப்பட்டேன்; மானங் கெட்டேன் அம்மா, புண்ணியவதி என்னை அவமானப்படுத்தி மறியலுக்கு அனுப்பவேண்டாம்; நான் வந்த வழியே போகவிட்டு விடுங்கள்" என்று சொல்லி அழுது கும்பிட்டான்; அந்தப் பரிதாபத்தைப் பார்க்கவும், அவன் சொல்லும் இரப்புரைகளைக் கேட்கவும் சுகுணத்தின் மனம் சகிக்கவில்லை. அவள் தானும் பரிபவமுற்றாளாய், அவனைப் பார்த்து "அப்பா, நீயொன்றுக்கும் பயப்படாதே, அதிகநேரம் போக்காதே, என் கணவர் மேல் வீட்டிற் படுத்துறங்குகிறார்; அவர் விழித்தெழுந்தால் உன் கதி ஆபத்தானதாய் விடும்; உன் வரலாற்றைச் சொல்லிவிட்டு நீ மெல்லத் தப்பிப்போய்விடு" என்று மீட்டுஞ் சொன்னாள், இந்த ஆதரவான வார்த்தையைக் கேட்ட அந்த மனுஷன் பணிவுடன் அவளைப் பார்த்து, "அம்மா" நான் ஒரு திருடனுமல்லேன்; துஷ்டனுமல்லேன்; நான் கிரமமாகப் படித்தவன்; படித்த பின் ஐந்து வருட காலமாக வேறலூரிலுள்ள ஒரு வியாபார சமுதாயத்தில் உத்தியோகம் பார்த்துக்கொண்டிருந்தேன், வேதனம் அதிகமல்லாவிட்டாலும் என் மனைவியோடும் இரு பிள்ளைகளோடுங் கூடியதாகிய என் குடும்ப ரட்சனைக்கு அந்த வேதனம் வறுமையிற் செம்மையாக வாழ்வதற்குப் போதியதாகவிருந்தது; ஆனால் இற்றைக்கு ஒருவருடத்திற்கு முன் நாட்டிலே நேர்ந்த மாறுதல்கள் பஞ்சம் முதலியவை காரணமாக, நான் பார்த்துவந்த வியாபார சமுதாயம் இல்லாதொழிந்தது; அன்று தொடக்கம் பிழைப்பற்றவனானேன்; இரு குழந்தைகளையும் மனைவியையும் தாபரித்தற்காக என் மனையாள் அணிந்திருந்த ஆபரணங்களையும், வீட்டிலுள்ள பொருள்பண்டங்களையும் நாளுக்கு நாள் ஒன்றொன்றாக விற்றுச் சீவியம் நடத்தி வந்தேன்; அவை முடிந்தபின் இருக்கும் வீடுவளவையும் ஈடுவைத்துப் பணம் பெற்றேன்; அந்தப்பணமும் செலவானது; இரண்டு மூன்று நாட்களாக நாங்களிருவரும் பட்டினியாக இருந்துகொண்டு எங்கள் குழந்தைகளுக்கு ஏதும் உணவு கொடுத்து வந்தோம். நேற்றுத் தொடக்கம் குழந்தைகளும் பசியினால் வருந்திக் கதறுகிறார்கள்; ஏழெட்டு மாசக் கருப்பிணியாகிய என் மனையாள் குழந்தைகளின் பரிதாபத்தையும் என் முகத்தையும் மாறி மாறிப் பார்த்து அழுவாளாயினாள்; இந்தப் பரிபவங்களை யெல்லாம் கண்ணாற்பார்க்கச்சகியாத நான் இக்குழந்தைகளையும் தாயையும் ஆற்றிலே கிணற்றிலே கொண்டுபோய் அமுக்கிவிட்டு உடனே நானும் உயிர்விடட்டுமோ என்று நினைத்தேன்; நிரபராதிகளான மனைவி மக்களை, கருவிலிருக்குங் குழந்தையைக் கொன்றால் தீராப்பழி என்னைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழுமென்று பயந்து அந்த எண்ணத்தை உடனே மறந்து, வீட்டைவிட்டுப் புறப்பட்டு செய்யாத இந்தச் செயலையாயினும் செய்து என் பெண்டிர் பிள்ளைகளின் உயிர் உடம்பைவிட்டு நீங்காது பாதுகாக்கலாமென்று துணிந்து வந்தேன் அம்மா, வந்த இடத்திலே தான் இந்த ஆபத்து வந்து நேர்ந்தது; அம்மா ஏதோ என் பெண்டிர் பிள்ளைகள் செய்த அற்ப புண்ணியத்தினாற்போலும் வேறு வீட்டிற்போய்ப் புகாது சீமாட்டியாகிய உங்கள் வீட்டிலே வந்து அகப்பட்டேன்; என்னை ஓடிப்போக விடுங்கள் அம்மா, உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும்" என்று பணிந்து இரந்து கேட்டான். இதற்கிடையில் "சுகுணா உங்கே என்ன செய்கிறாய், இது என்ன வெளிச்சமெல்லாம் எரிகிறது" என்ற வார்த்தைகள் பிறந்தன. அவை தன் கணவன் வார்த்தையென்பதையுணர்ந்த சுகுணாம்பிகை திடுக்கிட்டாளாய் அக் கள்வனைச் சற்று நில் என்று சைகை காட்டிவிட்டு, தன் படுக்கையறைக்கு ஓடிப்போய், அங்கே தலையணையின் கீழ் வைத்திருந்த ஏதோ பொருளை எடுத்துக் கொண்டு வந்து கள்வனிடங்கொடுத்து "அப்பா, ஓடித் தப்பு" என்று சொல்ல, அவன் அதனை வாங்கிக்கொண்டு அவளைக் கும்பிட்டுவிட்டு வந்த வழியால் மீண்டான்; யன்னற் கதவைப் பூட்டிவிட்டுச் சுகுணாம்பிகை தன் படுக்கையறையுட் போய் மின்சார வெளிச்சங்களை அவிழ்த்து விட்டுப் பழையபடி சயனத்திற் படுத்தாள்; நித்திரை குழம்பி விழித்தெழுந்த நாயகனும் பின்னர் உறங்கி விட்டான்.

* * *

உலகம் பலவிதம்: *1944 ஏப்பிரல் 20*
சுகுணாம்பிகை *(முற்றொடர் - 02)*

நல்ல குணமுடையவர்

இவை நிகழ்ந்து ஆறுமாசங்கள் வரையிற் கழிந்துவிட்டன; சுகுணாம்பிகை தனது அறையில் ஒரு "ஸோபா" வின்மேற் சாய்ந்திருந்தபடி ஏதோ ஒரு தமிழ்ப் பத்திரிகையைப் படிக்குஞ் சமயத்தில், அவளுடைய கணவன் வீட்டிற்கு மீண்டு வருதலும், தன்னாயகன் வரவைக்கண்ட அவள் இருக்கை விட்டெழுந்து அவனை இருக்கச்செய்து பக்கலில் விநயமாக நிற்றலும், அவன் அவளை அன்புடன் பார்த்து "சுகுணா, கடவுள் கிருபையால் இந்தப்பட்டினத்தில் வந்து நான் செய்யத்தொடங்கிய புதிய முயற்சி ஒரு அளவிற்கு விருத்தியடைந்து வருகிறது; இந்த ஊரின் சுவாத்தியமும் எங்களிருவருக்கும் ஒத்துப்போகின்றது; சுகுணா, உனக்குச் சொல்ல மறந்துவிட்டேன்; என் முயற்சிக்கு உதவியாளாக ஒருவரை இப்பொழுது நியமித்திருக்கிறேன்; ஒழுக்கமான சீரிய குணம் நடையுடைய ஒரு வாலிபர்; அப்படிப்பட்ட ஒருவரை உதவியாகத் தேடுவது அரிது; ஏதோ, எங்களுடைய அதிர்ஷ்டந்தான் அவர் இந்தச் சமயத்தில் எங்களுக்குக் கிடைத்தது; என்னிடத்தில் விசுவாசமாக நடந்து வருகிறார்; இங்கே இப்பொழுது அவரையும் உடன் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறேன்; தலைவாசலில் வந்திருக்கிறார்; என்னுடன் தலைவாசற்பக்கம் வா, அவரை உனக்கு அறிமுகப்படுத்திவிடுகிறேன்" என்று சொல்லிச் சுகுணாம்பிகையையுங் கூட்டிக்கொண்டு தலைவாசற்பக்கம் போதலும், அவர்கள் வரவைக்கண்ட அந்த வாலிபன் உடனே தானிருந்த நாற்காலியை விட்டெழுந்து "அம்மா, நமஸ்காரம்" என்று சொல்லி விநயமாக நின்றான்; நின்ற வாலிபனுக்குச் சுகுணாம்பிகையும் பிரதி நமஸ்காரம் செய்து, இருக்கச் சொல்லுதலும் "ஆம், அம்மா, இருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு நாற்காலியின் பிற்புறத்துள்ள சட்டத்திற் பிடித்தபடி முகங்கவிழ நின்றான். சுகுணத்தின் கணவன் தானும் இருந்துகொண்டு, தன் மனையாளை இன்னுமொரு நாற்காலியில் இருக்கப் பணித்துவிட்டு, அவனையும் இருக்கும்படி சொல்ல, அவன் தானிருந்த நாற்காலியை ஒரு மூலைப்பக்கமாகச் சிறிது இழுத்து ஒதுங்கியிருந்தான்; "சுகுணா, இவர்தாம் எனது வியாபார சமுதாயத்திற் புதிதாக வந்து சேர்ந்தவர்; வெகு நேர்மையானவர்; நல்ல குணமுடையவர், பெரியஇடத்திற்பிள்ளைபோற் காணப்படுகிறார்" என்று மகிழ்ச்சியோடு சொல்ல அந்த வாலிபன் நிலத்தைப் பார்த்தபடி இருந்தான்; "இவரைப் பார்க்க அப்படித்தான் இருக்கிறது" என்று முகமலர்ச்சியோடு சொன்னாள் சுகுணம். இதற்கிடையிற் சுகுணாம்பிகை உள்ளே சென்று ஆகாரத்திற்காகிய சில பண்டங்களைத் தங்கள் வேலைக்காரச் சிறுமி வாயிலாகத் தருவித்துத் தலைவாசலிற்கு அணித்தாகவுள்ள அறையில் வைக்கச் செய்துவிட்டு, நாயகனிடம் வந்து ஏதோ மெல்லச் சொல்ல அவன் "சேதுராம்; வருதிர் உள்ளேசென்று சிற்றுண்டியருந்துவோம்" என்றழைக்க "ஆம், வருகிறேன்" என்று எழுந்து தன் எஜமானன்பின் சென்றார்; சுகுணா பரிமாற இருவரும் சிற்றுண்டியருந்தி விட்டு மீண்டு தலைவாசற்பக்கம் வந்து இருந்தனர். கணவன் மனைவியை விளித்து, "சுகுணா ஏதோ சேலை துணி வாங்கவேண்டு மென்று சொன்னாயல்லவா, எனக்கு இப்பொழுது நேரமில்லை எங்கள் இரதத்திலேறி இவரையும் உடன் கூட்டிக்கொண்டு புடைவைக்கடைக்குச் சென்று ஆகவேண்டிய சேலைதுணிகளை வாங்கிக்கொண்டு வா" எனச் சொல்லிவிட்டு, தங்கள் சாரதியைக் கூப்பிட்டு ரதத்தைச் சித்தப்படுத்திக்கொண்டு வரச் சொல்லுதலும், அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியே கொண்டுவந்து புறங்கடையில் நிறுத்தினான்; சாரதியுடன் சேதுராமன் முன்னாசனத்திலிருக்க, பின்னாசனத்திலே சுகுணாம்பிகை ஏறியிருந்தாள்; இரதம் புறப்பட்டுக் கடைப்பக்கமாகச் சென்றது. புடைவைக் கடையின்முன் இரதம் நிறுத்தப்பட, சுகுணாம்பிகை இறங்கி முன்செல்ல, எஜமானன் பிறகே வளர்த்தநாய் போவதுபோல, அவள் பிறகே சேதுராமன் சென்றான். சுகுணமே சேலை துணிகளைத் தெரிந்தெடுத்து விலைதீர்த்து வாங்கிக்கொடுக்க, சேதுராமன் அவைகளைக் கொண்டுபோய் இரதத்தில் வைத்தான்; மேலும் கடைகளில் வாங்கவேண்டிய ஏனைய பண்டங்களைப் போய்ப்போய்ச் சுகுணாம்பிகை விலைதீர்த்து வாங்கிக் கொடுக்க பின்தொடர்ந்து போனவனாகிய சேதுராமன் இரு கரங்களாலும் பணிவுடன் அந்தப் பண்டங்களை வாங்கிக்கொண்டு வந்து இரதத்தில் வைத்தான்.

"தங்கையென நினைத்து நடவும்"

வாங்கவேண்டிய பண்டங்களையெல்லாம் வாங்கிக் கொண்டு சுகுணம் ரதத்தில் வந்து ஏறுதலும் சேதுராமனும் பழையபடி இரதத்திலேறி முன்னிருந்தபடியே இருந்தான். சில நிமிஷ நேரத்தில் இரதம் மீண்டு வீடுவந்து சேர்ந்தது; சுகுணம் இறங்கி வீட்டுட்செல்ல, சேதுராமனும் இறங்கி அங்கே கொண்டுவந்த பொருள்களை யெல்லாம் இரதத்திலிருந்து எடுத்துக்கொண்டு போய்த் தலைவாசலில் வைத்துவிட்டு ஒருபுறத்தே நின்றான்; அந்த நேரத்தில் சுகுணத்தின் கணவன் வீட்டிலில்லை; அயலில் எங்கோ சென்றிருந்தான். சாரதி இரதத்தைக் கொண்டுபோய்க் கொட்டிலில் விட்டுப் போய்விட்டான்; சுகுணமும் வேலைக் காரியும் தலைவாசலில் வைக்கப்பட்ட பொருள் களை வீட்டினுட் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். சேதுராமன் தலைவாசலிலேயே நின்றான்; சேலை துணிகளை வைத்தபின் சுகுணம் தலைவாசலில் வந்து "ஏன் நிற்கின்றீர்? இப்படி இருக்கலாமே, ஐயா உடனே வந்துவிடுவார்" என்று சொல்லிவிட்டு அவன் முகத்தைப் பார்த்தபோது அவன் கண்களில் நீர் தாரைதாரையாக வடிவதை அவதானித்தாள்; கண்ட சுகுணம் தானுங் கலங்கியவளாய் "ஏன் கலங்குகின்றீர்? நாங்கள் உமக்குச் செய்த தவறென்ன? உமக்கு நான் ஏதும் உதவி செய்ய வேண்டுமா? வேண்டுமானாற் கூசாமற் சொல்லும் இயன்ற உதவி செய்கிறேன்; உம்மைப்பற்றி என்னுடைய அவருக்கு நல்ல எண்ணமிருக்கிறது; நான் சொல்லாமல் அவரே உமக்கு ஆகவேண்டிய சகாயஞ் செய்வார்; அவரை உமது அண்ணனாகவும் என்னை உமது தங்கையெனவும் நினைத்து நடவும், கடவுள் கிருபையால் உமக்கு ஒருகுறையும் வரவிட மாட்டோம்" என்று பரிந்து சொன்னாள்.

* * *

உலகம் பலவிதம்: 1944 ஏப்பிரல் 27

சுகுணாம்பிகை (முற்றொடர் - 03)

"உற்றது சொன்னால் அற்றது பொருந்தும்"

சேதுராமன் கண்களில் நீர் தாரைதாரையாக வடியத் தன் இரு கைகளையும் குவித்துக் கும்பிட்டு "அம்மா, புண்ணியவதி! அன்றிரவு நீங்கள் எனக்கு அந்தப் பெரிய உதவியைச் செய்திராவிட்டால் இன்று என்னை உயிரோடு இந்த நிலையிற் காணமாட்டீர்கள்; அம்மா, நீங்கள் அந்த நடுச்சாமத்தில் என் மரியாதையை காத்தீர்கள் என் உயிரையும் என் மனைவி மக்களின் உயிரையும் காத்தீர்கள்; ஆண்டவன் உங்களையும் உங்கள் அன்பான கணவரையும் காப்பாராக" என்று பணிவுடன் சொன்னான்; சுகுணத்திற்கு அவன் சொல்வதென்னவென்று புலப்படவில்லை; "சேதுராமா! ஏன் இப்படியெல்லாம் என்னை பாராட்டுகிறீர்? ஏன் வருந்துகிறீர்? இந்த நிலைமையில் உம்மையும் என்னையும் யாருங் கண்டால் அழகாயிருக்காதல்லவா? எனக்கு நீர் சொல்வது விளங்கவில்லை; என்று கலக்கத்துடன் சொன்னாள்; "அம்மா, நான் சொல்வது வேறொன்றுமல்ல; அன்று நள்ளிரவிலே திருடும்படி உங்கள்வீட்டுட்புகுந்து திருடும்முறை தெரியாமையினால் உங்களிடம் அகப்பட்டு உங்கள் கருணையினால் நீங்கள் தந்த பொற்சங்கிலியை வாங்கிக்கொண்டு ஓடிப்போன அந்தத் திருடன் நான்தான் தாயே; நாளைக்கு நான் அந்த ஆபரணத்தையும் கொண்டு இங்கே வந்து உங்கள் ஐயா முன்னிலையில் உண்மையைச் சொல்லி உங்களிடம் தந்துவிடுகிறேன்; உற்றது சொன்னால் அற்றது பொருந்தும் என்றபடி உண்மையை சொல்லி விட்டால் செய்த பாவம் தீரும்" என்று சொல்லி இரந்து நின்றான் சேதுராமன்; கேட்ட சுகுணம் திடுக்குற்றாள்; உடனே முழு விஷயத்தையும் விளங்கிக்கொண்டாள்; அவள் அவனைப் பார்த்து "சேதுராம், அன்றிரவு ஏதோ பெரிய உதவியை நான் உமக்கு செய்தேனென்று நீர் எண்ண வேண்டாம்; என்னைப் புகழவேண்டாம்; உம்மை அன்றிரவு வெளிச்சத்தில் பார்த்தவுடனே நீர் ஒரு கள்வனல்லீர் என்பதையும் கெட்டாலும் மேன் மக்கள் மேன்மக்களே என்ற பிரகாரம் நல்லாயிருந்து கேடடைந்துவிட்டீரென்பதையும், செய்யக்கனவிலும் துணியாத கருமத்தை வறுமையின் கொடுமையினாற் செய்யவந்தீரென்பதையும் உடனே உணர்ந்து கொண்டேன்; நான் உம்மைப்பற்றி அந்தநேரத்தில் எண்ணியது பிழையல்லவென்பதையிட்டு இப்பொழுது சந்தோஷப்படுகிறேன்; அன்றிரவு நடந்த நிகழ்ச்சியை அடியோடு மறந்துவிடும்; இப்பொழுது நீர் நிற்கும் நிலையை எனது நாயகன் கண்டால் சந்தேகப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேருமே; எனக்கும் அந்தச் சேதுராமனுக்குமிடையே அது என்ன தொடர்பு என்று என்னைக் கேட்டால் நான் அவருக்கு என்ன பதில் சொல்லுவேன்; காணவே பனைக்கீழ் ஆப்பால் குடிப்பினுங் கள்ளேயென்பர். ஆனதால் சேதுராமன் நான் உமக்கு ஏதும் உதவி செய்தேனென்று நீர் நினைக்கவும் வேண்டாம்; உமது மனைவி மக்களுக்குத்தானும் வெளியிடவும் வேண்டாம்; அந்த விஷயத்தை இந்தச் கணமே மறந்துவிடும்; இதுதான் நீர் எனக்குச் செய்யும் பேருதவி" என்றாள். சேதுராமன் உடனே வஸ்திரத்தால் தன் கண்ணீரை ஒற்றி முகத்தை துடைத்துக் கவலையற்றவன் போல் நின்றான்; பின்னர், சுகுணம் அவனைப் பார்த்து "சேதுராம், உமது அன்பான வீட்டுக்காரியையும் அருமையான பிள்ளைகளையும் எங்கள் வீட்டிற்கு ஒருமுறை அழைக்கவொண்ணாதா" என்று ஆவலுடன் கேட்க "அம்மா ... நாளில் அவர்களை அழைத்துக்கொண்டு வருகிறேன்" என்று விநயமாக சொன்னான் சேதுராமன். இங்ஙனம் இவர்கள் பேசிக்கொண்டு நிற்கும்போது சுகுணத்தின் கணவன் அங்கே வருதலும், அவனிடம் அனுமதி பெற்றுக்கொண்டு சேதுராமன் தன் கடமையைப் பார்ப்பதற்கு வியாபார சமுதாயத்திற்குப் போயினான்.

எய்தவனிருக்க அம்பை நோகலாமா?

இரண்டுவாரங்கள் சென்றபின் தன் வியாபார சமுதாயத்திலே ஏதோ கணக்கெழுதிக் கொண்டிருந்த சேதுராமனை அந்த முதலாளி பார்த்து "சேதுராம், உமது மூலமாக கடையில் ஏதோ பண்டங்கள் வாங்குவிக்கவேண்டுமென்றும் உம்மை வீட்டிற்கு அனுப்பிவைக்கும்படியும் இன்று காலை என் வீட்டுக்காரி தெரிவித்தாள்; ஆனதால் நீர் இப்பொழுதே அங்கே போக முடியுமோ" என்று கேட்க, "ஆம் ஐயா அப்படியே போகிறேன்" என்று சொல்லிவிட்டு உடனே புறப்பட்டுச் சேதுராமன் சுகுணத்தின் இல்லத்தையடைந்து அவளைக்கண்டு "அம்மா, நீங்கள் என்னை வரும்படி கட்டளையிட்டீர்களென்று ஐயா தெரிவித்தார்; அதனால் வந்தேன்; செய்யவேண்டியது என்ன அம்மா" என்று பணிவுடன் கேட்க, சுகுணம் "ஏன் அப்படிச் சொல்லுகிறீர், நான் பெண் ஜன்மம் உமக்குக் கட்டளையிடுவதா? தயவு செய்து இனிமேல் இப்படிச் சொல்லாதீர்" என்று சொல்லிவிட்டுப் பின்னும் அவனைப் பார்த்து "சேதுராம், வருகிற வெள்ளிக்கிழமை எங்கள் வீட்டில் ஒரு அன்னதானம் நடக்கும்; அதற்காகவேண்டிய பொருள்பண்டங்களை உமது மூலமாக முந்தியே வாங்குவித்து வைத்து ஆகவேண்டிய ஆயத்தங்களை செய்ய நினைத்தே உம்மை இங்கே அனுப்பிவைக்கும்படி அவரிடஞ் சொன்னேன்; நீர் வந்தது நல்லதாயிற்று" என்று முகமலர்ச்சியுடன் சொன்னாள். "நீங்கள் சொல்லும் பணிகளெல்லாஞ் செய்கிறேன்; கேட்கிறேனென்று குறையெண்ணாதீர்கள் அம்மா, எதற்காக அன்னதானஞ் செய்து வருகிறீர்கள்? ஏதும் குருபூசையா? இல்லையேல் உங்கள் மூதாதைகளுக்குரிய சிராத்தமா" என்று பயபக்தியோடு சுகுணாவைக் கேட்டான் சேதுராமன். அவன் அப்படிக்கேட்ட மாத்திரத்தே ஆழ்ந்த கவலையோடு காணப்பட்டாள் சுகுணாம்பிகை; "அம்மா, எனக்குச் சொல்லத் தகாததென்றாற் சொல்லாது விடுங்கள்; கவலைப்படாதீர்கள்; கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்" என்றவாறு நான் எனக்குத் தேவையில்லாத விஷயத்தையிட்டு உங்களைக் கேட்டது தவறு" என்று சேதுராமன் துயரத்தோடு சொல்லுதலும், "அப்படியொன்றுமில்லை, நீர் அன்பாகக் கேட்டபோது நானும் ஆதரவுடன் அந்த நியாயத்தைச் சொல்லவேண்டியதுதான் முறை; சொல்லுகிறேன் சேதுராம்! என்னுடைய அவரும் நானும் இப்படிச் சிறிது நல்ல நிலையிலிருப்பதற்குக் காரணங்களாயிருப்போர் நாங்களிருவருமல்லோம்; அவருடைய தகப்பனார் எனக்குத் தாய்மாமனாராவார்; அவர் தந்த பணம் பண்டத்தைக் கொண்டே நாங்கள் சிறிது நல்லாயிருக்கின்றோம்; என் தகப்பனார் நான் பிறந்து சில மாசங்கள் செல்வதற்கிடையில் இறந்துபோக கைம்மையான என் தாயார் என் மாமனாரையே அண்டியிருக்க நேர்ந்தது; ஆனால், அப்படியிருத்தல் மாமியாருக்கு விருப்பமில்லாமற்போக, என் மாமனார் அப்பொழுது ஐந்து வயதுப் பிராயமுள்ள எனது அண்ணனையும் தாயாரையும் ஆதரிக்காமல் விட்டு என்னை மாத்திரம் தன்னுடன் வைத்துக் கொண்டாராம்; என் மாதா என்னைத் தன் தமையனுடன் இருந்து வாழவிடுத்து தாமும் தமது ஆண்குழந்தையும் இன்ன இடமென்று அறியாமற் போய்விட்டார்களாம்; நான் வளர்ந்து பெரிய பெண்ணாகிய பின் மாமனார் தமது ஒரேயொரு பிள்ளையாகிய இவருக்கு என்னை மணஞ் செய்து வைத்தார். எங்கள் வீட்டின் அயலிலிருந்த மூதாட்டியார் எனக்கு இந்த வரலாற்றைப் பிறகு சொன்னார்கள்; என் மாமி முந்தியே இறந்துவிட; இற்றைக்குச் சில வருடங்கட்குமுன் என் மாமனாரும் மோசம் போயினார்; என் தாயாருக்கும் அண்ணனுக்கும் துரோகஞ் செய்தார்களேயென்ற நியாயத்தால் நான் தொடக்கத்தில் அவர்களை மாத்திரமல்லாமல் எனது கணவரையும் அகத்தே வெறுத்தேன்; ஆனால் நான் அவரை வெறுத்தாலும் அவர் என்னிடத்தில் உள்ளன்பு வைத்து என்னை ஆதரித்து வருவதைக்கண்டு நானும் அவரிடத்தில் மெய்யன்புகொண்டு நடந்துவருகிறேன்; எய்தவனிருக்க அம்பை நோவதால் ஆவதென்ன? எல்லாம் விதியின்படியே நடக்கும்; நாம் எவரையும் குற்றஞ்சொல்லவொண்ணாது. என் மாமனார் இறந்த மாசந் திதி சமீபத்தில் வருவதால் அதையிட்டே இந்த அன்னதானத்தை ஆண்டுதோறும் செய்து வருகிறோம்" என்று கவலைகூரச் சொல்லிப் பெருமூச்சு விட்டாள்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1944 மே 04

சுகுணாம்பிகை (முற்றொடர் - 04)

தாயார் பெயர் மீனாட்சியா?

"அம்மா, கேட்கிறேனென்று குறையெண்ணாதீர்கள்; உங்கள் தாயார் இப்பொழுது எங்கேயிருக்கிறாரென்பது உங்களுக்குத் தெரியுமா? என்று சேதுராமன் வினாவ, சுகுணாம்பிகை நெட்டுயிர்த்து "எங்கள் தாயாரின் கதி என்னவாயிற்றோ என்பது தெரியாது; அவர் உயிரோடு இருந்தால் இத்தனை வருடகாலமாக என்னைத்தேடி இங்கே வராமலிருப்பாரா? என் மாமனாருடன் மாறுபட்டவுடன் எங்கள் இனத்தவராகிய ஒரு பெரியவரோருடன்கூடிக்கொண்டு பிரமதேசம் போன தாகவும், அங்கே அந்தப் பெரியவருடைய பாதுகாப்பிலே இருந்ததாகவும் எனது தமையனாரை அந்தப் பெரியவர் அவ்வூரிலுள்ள ஒரு கலாசாலைக்கு அனுப்பி படிப்பித்து வந்ததாகவும் இற்றைக்குப் பல வருடத்திற்குமுன் இங்கிருந்து அந்த நாட்டிற்குப் போய் உத்தியோகம் பார்த்து இளைப்பாறி மீண்டுவந்த அயலவரொருவர் சொல்லக் கேட்டேன்; அந்த அயலவரும் இறந்து இப்பொழுது சில வருடங்களாயின, அதன் பின்னர் என் அன்னையைப்பற்றியாக, என் அண்ணனைப்பற்றியாக யாதொரு செய்தியும் கேள்விப்பட்டிலேன்; சேதுராம், இவைகளையெல்லாம் ஒன்றொன்றாய் நினைக்க என்வயிறு பற்றியெரிகின்றது" என்று தன் கண்களில் நீர் சிந்தக் கூறினாள்; இப்படி அவள் கூறும்போது ஆழ்ந்த சிந்தனையோடு அயலே நின்ற சேதுராமன் அவளைப் பார்த்து, "அம்மா, உங்கள் தாயாரின் பெயர் மீனாட்சியா" என்று கேட்க, "ஆம், சேதுராம்; எங்கள் தாயாரைப் பற்றி யாதும் அறிவீரா" என்று ஆவலுடன் வினாவினாள் சுகுணம்; "உங்கள் தாயாரையும் மகனையும் அந்தக் காலத்தில் பிரமதேசத்திற்கு அழைத்துக் கொண்டுபோய் ஆதரவுடன் போஷித்து வந்த பிரபுவின் பெயர் சங்கரப்பிள்ளையா" என்று சேதுராமன் கேட்க, "ஆம், ஆம், அவர் பெயர் அப்படித்தான்" என்று ஆவலோடும் ஆச்சரியத்தோடுஞ் சொன்னாள் சுகுணாம்பிகை. சேதுராமன் கண்களில் நீர் ததும்பியது; அவன் சுகுணத்தைப் பாதாதிகேசம் வரையில் அன்புமீதூர உற்று நோக்கி "என் அருமைத் தங்காய் அதிர்ஷ்டம்கெட்ட உன் தமையன் நான்தான், எங்கள் அருமைத் தாயாரும் நானும் உடனிருந்து எடுத்த பிரதிமைப்படம் இப்பொழுது நான் இருக்கும் வீட்டுத் தலைவாசற் சுவரில் தொங்கக்கட்டப்பட்டிருக்கிறது; எனது அருமையான மைத்துனருக்கும் விஷயத்தைச் சொல்லி அவரையும் உடனழைத்துக்கொண்டு நீர் என்னுடன் இப்பொழுது வந்தால், எங்கள் அருமைத் தாயாரின் படத்தையும் உமது மைத்துனியையும் மருமக்களையும் நேரிற் பார்க்கலாம்" என்று கண்களில் நீர் ததும்ப நின்று சொன்னான். இவைகளையெல்லாஞ் சொல்லக்கேட்ட சுகுணாம்பிகை அற்புதம் கவலை ஆனந்தம் என்னுமிவைகள் மாறி மாறி மனத்தில் நிகழ, "அண்ணா, என் அரிய உடன்பிறப்பே, உம்மை இன்னாரென அறியாமல் நான் உமக்கு இதுவரையுஞ் செய்த அபராதங்களையெல்லாம் பொறுத்துக்கொள்ளவேண்டும்" என்று சொல்லி அவனை நமஸ்கரித்து, அயலிலுள்ள நாற்காலியில் இருக்கச்செய்து உள்ளமுருக நின்றாள்; இனியெனக்கு என்ன குறை!அங்ஙனம் நின்ற தங்கையைத் தமையன் சகோதரபாசம் மீதூர நோக்கி: "என் அருமைத் தங்காய், அன்றிரவு எனக்கு நீர்செய்த பேருதவியை என் மரணபரியந்தம் மறக்க முடியுமா? அன்று நீர் அப்படிச் செய்தமையினாலல்லவா, இப்பொழுது நாங்கள் ஒருவரையொருவர் அறியலானோம்; நான் என் அருமைத் தங்கையை இங்குப் பெற்றேன்; இனி எனக்கு என்ன குறையிருக்கின்றது!" என்று இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போது சுகுணத்தின் நாயகனும் அங்கே வந்தான்; சுகுணம் விஷயமொன்றையும் அப்பொழுது தன்னாயகனுக்குச் சொல்லாளாய், "இப்பொழுது வருகிறீர்களா, இவர் வீட்டிற்குப் போய்வருவோம்" என்று தன் கணவனைக் கேட்க அவனும் அதற்கு உடன்பட்டான்; அரைமணி நேரத்தில் மூவரும் ரதத்தில் ஏறிக்கொண்டு சேதுராமனுடைய வாசஸ்தானத்தை யடைந்தார்கள். சேதுராமன் தானிருக்கும் இல்லத்தில் அவர்களை அழைத்துச் சென்று உபசரித்துத் தன் மனையாளைப் பார்த்து "இவர்தான் எங்களை ஆதரிக்கும் பிரபு, இந்தச் சீமாட்டிதான் இப்பிரபுவின் உத்தம பத்தினி" என்று சொல்ல, மனையாள் இருவரையும் நமஸ்காரஞ்செய்ய அவர்களும் பிரதி நமஸ்காரம் செய்தனர். சுகுணாம்பிகை தன் மைத்துனியையும் மருமக்களையும் ஆதரவு பெருகப் பார்த்தாள். இதற்கிடையிற் சேதுராமன் அவ்விருவருக்கும் தலைவாசற் சுவரில் மாட்டித் தொங்கவிடப்பட்ட பிரதிமைப் படத்தைக் காட்டி, "அம்மா சுகுணம், இவர் தான் உம்முடைய அருமைத் தாயார்; பக்கத்தில் நிற்கும் சிறுவன் உமது அண்ணனாகிய நான் தான்; எனக்கு ஏழு எட்டு வயசாயிருக்கும்போதே இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டது என்று என் தாயார் அந்த நாளிற் சொன்னதுண்டு" எனக் கண்கலங்கச் சொல்ல, சுகுணமும் மனமுருகிக் கண்கலங்க நின்று அவதானமாகப் பார்த்தாள்; அவளுடைய நாயகனும் சேதுராமனுடைய மனைவியும் ஒன்றும் புலப்படாமல் நின்று தயங்கினார்கள்; பின்னர், சேதுராமன் சகல வரலாற்றையும் அவர்களுக்கு விரிவாகச் சொல்ல எல்லோரும் ஆச்சரியமும் ஆனந்தமுமடைந்தனர். அன்று தொடக்கம் அவ்விரு குடும்பத்தினரும் எவ்வகையான குறையுமின்றி ஐக்கியத்தோடு வாழ்வாராயினர்.

* * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாலாட்சி - விசுவநாதன்
இங்கிதம் - சூரியநாராயணசாஸ்திரி
இரஞ்சிதம் - இராமச்சந்திரன்

[தொடர்தலைப்பு பதிப்பாசிரியருடையது]

உலகம் பலவிதம்: 1944 மே 11

வெண்ணெயிருக்க நெய்தேடலாமா!

"எனக்குக் கல்யாணமே வேண்டாம் அம்மா, இப்படியே கன்னியாயிருந்து மரியாதையாகக் காலங்கழிப்பேன்" என்று சிறிது வெறுப்போடு சொன்னாள் மகள். "அப்படியல்ல, மகளே, நீ பெரியபிள்ளையாகியும் இன்னமும் சிறுபிள்ளைப் புத்தி உன்னைவிட்டுப் போக வில்லை; குமராக மரியாதையோடிருந்து காலங்கழித்த பெண்ணை நான் என் அனுபவத்திற் கண்டதில்லை; எனக்கும் வயசு 55 வரையிலாகிறது; முந்தி இப்படி யாரும் நித்திய குமராகக் காலங்கழித்தாரென்று நான் கேள்விப்பட்டதுமில்லை; நீ விவாகஞ் செய்யாமல் எவ்வளவு கட்டுப்பாட்டோடு இருந்தாலும் நெறியோடு காலங்கழித்தாலும், பொல்லாத உலகமடி மகளே, இப்படிப்பட்ட உலகம் உன்னைப் பழிசொல்லும்; அல்லாமலும் உன் அப்பரும் நானும் எந்தக் காலத்தும் உன்னோடிருந்து உன்னைப் பாதுகாத் திருப்போமென்று நினைக்கலாகுமா? நாங்கள் இல்லாத காலத்தில் நீ என்ன செய்வாய், நான் பெற்ற கண்ணே! விசாலாட்சி! இந்தப் பிடிவாதமான எண்ணத்தைவிட்டு விடடியம்மா, மேலும் மகளே, நீயெனிலோ நல்லாய்ப் படித்த பெண்; உன் படிப்பிற் பத்திலொன்றுதானும் என்னிடத்திலில்லை; நீ இப்படிப் பிடிவாதஞ் செய்வதையிட்டு உன் அப்பருங் கவலைப் படுகிறார்; நேற்றுராத்திரி ஆகாரம் பண்ணும்போது உங்கள் அப்பர் உனக்கு இந்தக் காரியத்தையிட்டு ஆனபுத்தி புகட்டச் சொன்னார்; அவரெனிலோ, நீ ஒரேயொரு மகளென்ற ஞாயத்தினால் உன்மீது எல்லைகடந்த பட்சம் வைத்து நடக்கிறார்; உனக்கு நிச்சயித்திருக்கும் மாப்பிள்ளை புறத்தியானல்லன்; உன் அப்பருடைய சொந்தச்சகோதரியின் மகன் தானே, அவன் என்ன படிப்பிற் குறைவா, அழகு ஆண்மைகளிற் குறைவா, உடைநடை பாவனை சீர்திருத்தங்களிற் குறைவா? அவன் ஆடவரும் விரும்பும் ஆண்பிள்ளையல்லவா ஏன் அவனை அநியாயமாய் வெறுக்கின்றாய்; உனக்கொரு பொல்லாங்கு வந்தால் அவனுடைய இரத்தமும் அவனுக்கொரு பொல்லாங்கு வந்தால் உன்னுடைய இரத்தமுந் துடிக்குமல்லவா? அல்லாமலும் உன்னில் அவன் அதிகம் அன்பும் அருமையும் பாராட்டுகிறானென உன் அப்பர் பலமுறையுஞ் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்; இப்படியெல்லாம் எங்கள் சொந்தத்தில் மாப்பிள்ளை யிருக்க, அந்த மாப்பிள்ளையை விட்டு வேறு ஏதுஞ் சிந்தனை செய்யலாமா? கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய் தேடுவாரும் ஊரிலுண்டோ மகளே இந்தச் சஞ்சலபுத்தியை இன்றோடு விட்டுவிடு, விசுவநாதன் அருமையான குணமுள்ள பிள்ளை அவனையே நீ கல்யாணஞ் செய்தால் உன் வாழ்வுக்கும் நன்மையாகும்; பெற்றார்களாகிய எங்களுக்குஞ் சந்தோஷமாகும்; அயலட்டத்திலுள்ளவர்களும் அது முறைதான் என்று சொல்லிப்பாராட்டுவார்கள்" எனப் பரிந்து சொன்னாள் தாயாகிய பெரியநாயகி;

"நெஞ்சையொளித்தொரு வஞ்சகமில்லை"

தாய் சொன்னவைகளையெல்லாம் அவதானத்தோடு கேட்டுக் கொண்டிருந்தவளாகிய விசாலாட்சி தன் அன்னையைப் பார்த்து, "அம்மா, என்னை வித்தியாசமாக விளங்கிக் கொள்ளாதீர்கள்; வேறு எந்தக் கருமத்திலும் என் பெற்றார்கள் சொல்லைத் தட்டி நடக்கமாட்டேன்; இந்த விஷயத்திலும் நான் உங்களெண்ணத்திற்கு மாறாக இன்னொருவரை விவாகஞ் செய்ய விரும்பினாற்றான் நீங்கள் என்னைக் குறை சொல்லலாம்; அப்படியான சிந்தனை என்னிடத்திலில்லை; விவாகமின்றிப் பிழைபடாமல் வாழமுடியாதென்று நீங்கள் சொல்லுகிறீர்கள்; அப்பர் சுவாமிகளின் தமக்கையாராகிய திலகவதியார் முதலிய சில உத்தமிகள் அப்படியான தூய வாழ்க்கையைக் கைக்கொண்டொழுகினார்களெனப் படித்திருக்கிறோம்; அந்த உத்தமிகள் சர்வ உலக நாயகராகிய பரமசிவனையே தமக்கும் மேலான நாயகராகக்கொண்டு தொண்டு பூண்டொழுகி உய்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடைந்தனர். மனத்துக்கு ஒவ்வாத கணவனோடு கூடி வாழ்வதைக் காட்டிலும், நம் தலைவிதி இதுதான் என்று எண்ணிக்கொண்டு பத்திநெறியிற் காலத்தைப் போக்கலாமென்று நினைத்தேனேயொழிய என்னைப் பெற்று வளர்த்த அருமையான அன்னையே, உங்கள் சொல்லைத்தட்டி நான் நினைத்தபடி வேறு ஏதுஞ் செய்யத் துணிந்தேனென்று எண்ணாதீர்கள்" எனக் கண்களில் நீர் ததும்பப் பரிவுடன் பகர்ந்தாள். பிள்ளை இப்படிச் சொல்லக் கேட்ட தாயும் மனம் பதைப்ப நடந்து "நான் பெற்ற கண்ணே, நீ கலங்க வேண்டாம், அந்தப் பிள்ளையைக் கல்யாணஞ் செய்வது உனக்கும் விருப்பமாகவிருக்குமென்றெண்ணியே உங்கள் அப்பரும் நானும் இந்தக் காரியத்தில் தலையிட்டோம், உனக்கு இந்தச் சம்பந்தம் இஷ்டமில்லையானால் நானும் சம்மதப்படேன், உங்கள் அப்பரும் உடன்படார்; ஆனால் உங்கள் சம்பந்த விஷயமாக உண்டான பேச்சுக்கால் நேற்றின்று தொடங்கியதல்ல; நாட்பட்டதாய் விட்டது; இனி இந்தக் காரியத்தில் மாறுபட்டுச் சொன்னால் மாப்பிள்ளையும் மாப்பிள்ளை பகுதியாரும் என்ன விபரீதம் நினைப்பரோ நான் அறியேன்; மேலும் இரண்டு குடும்பங்களுக்குமிடையே தீராப் பகையும் வந்து நேரும்; இவைகளையிட்டுத்தான் யோசிக்கிறேன்; மகளே, கேட்கிறேனென்று குறையெண்ணாதே, தாயை யொளித்தொரு சூலில்லையென்று சொல்லுவார்கள்; ஆனதால் எனக்கு மறைக்கவேண்டாம், பயப்படாமல் உள்ளதைச் சொல்லு, அந்த ஆளில் என்ன பிழைகண்டு நீ கல்யாணஞ் செய்ய மறுக்கிறாய்" என்று ஆவலுடன் கேட்டாள். அம்மா, நெஞ்சையொளித்தொரு வஞ்சகமில்லையென்பது நிசம்; அந்த ஆளிடத்து ஏதுங்குறையிருந்தாலும், நான் ஒரு குமர்ப்பெண், அதை வாய்விட்டுச் சொல்லுவது முறையல்ல; அப்படிச் சொல்லுதல் ஒருவரைக் காரணமில்லாமல் தூற்றுவதாகும்; ஆனதால் அவருக்கு மனைவியாக எனக்குப் பிரியமில்லையென்று சொல்லிவிட்டால் அதனால் எவர்க்கும் எவ்வகையான குறையும் வராது" என்றாள் விசாலாட்சி. "நீ சொல்வது சரிதான் மகளே, ஆனால், நீ பிறருக்குச் சொல்லவேண்டாம், உன்னைப் பெற்றவளாகிய எனக்கு மாத்திரஞ் சொல்லிவிட்டால், நான் அந்த ஞாயத்தை என்னளவில் வைத்துக்கொண்டு, பிறருக்கு வேறு ஞாயஞ் சொல்லி விடுவேனே; நீ சொல்லும் நியாயத்தை உன் பிரியமில்லாமல் உங்கள் அப்பருக்குத்தானும் வெளியிடமாட்டேன், என் மகள் மேலாணை" என்று ஆணையிட்டாள் பெரியநாயகி. "ஐயோ, இது என்ன பரம சங்கடமாகவிருக்கிறதே, சொன்னாலும் பிழை சொல்லாவிட்டாலும் பிழையாகுமே, இதற்கென்ன செய்வேன்" என்று தன்னளவிற் கவலைப்பட்டாள் விசாலாட்சி.

* * *

உலகம் பலவிதம்: 1944 மே 18
விசாலாட்சி: (முற்றொடர் - 02)

" தீர விசாரித்துச் செய்"

விசாலாட்சி சஞ்சலத்தோடு கூடியவளாய்த் தன் தாயைப் பார்த்து "அம்மா, எனக்கு விருப்பமில்லாத விஷயத்தைச் சொல்லும்படி நெருக்குகிறீர்கள்; சொல்லுகிறேன்; அப்படிச் சொல்வதனாற் பின் எவ்வகையான பழியும் வராமற் பாதுகாப்பது உங்கள் கடமை; வேறொன்றுமல்ல, அம்மா, உங்கள் மருமகன் கூடாத கூட்டங்கூடி மதுபானஞ்செய்யப் பழகிக் கொண்டாராம்; இதை நான் நம்பிக்கையானவர் மூலமாக அறிந்தேன்; மதுபானஞ் செய்யத் தலைப்பட்டவருக்கு வாழ்க்கையெதற்கம்மா" என்று சொல்லிக்கவலைப்பட்டாள், கேட்ட பெரியநாயகியுந் திடுக்குற்றாள்; பதிலொன்றும் பேசாது சிறிது நேரஞ் சிந்தித்தாள்; நெட்டுயிர்த்தாள்; அவள் கண்களில் நீர் ததும்பியது; பின்னரும் அவள் தன் மகளைப் பார்த்து "மகளே, நீ சொல்வது நிசந்தானா? அந்தப் பிள்ளை அப்படிச் செய்வானென்று நம்புவதற்கு என்மனம் இடங்கொடாதாமே; இது என்ன விபரீதமாகவிருக்கிறது; மீண்டுங் கேட்கிறேனென்று குறை நினையாதேயடியம்மா, உனக்கு இப்படிச் சொன்னது ஆர்" என்று ஆதரவோடும் ஆவலோடுங் கேட்டாள்; "அம்மா, உங்களுடைய மனம் அதை நம்ப இடங்கொடாவிட்டால் அதற்கு நான் செய்வதென்ன? நிசமென்று அறிந்தபின்தான் உங்களுக்குக் கருமத்தை வெளியிட்டேன்; நான் சொல்வதிற் சந்தேகமிருந்தால், நீங்களே உண்மையை நேரில் அறிந்தபின் எனக்குச் சொல்லுங்கள்; இந்தச் செய்தி உண்மையல்லா விட்டால் உங்களைக் காட்டிலும் எனக்கல்லவா சந்தோஷம் அதிகமாகும்; இது கிடக்க, சொன்ன ஆள் ஆரென்று நீங்கள் என்னைக் கேட்பது சரியல்லவே அம்மா" என்று விசாலாட்சி தன் தாய்க்கு விநயத்தோடு சொன்னாள். "மகளே, சொன்னவர் ஆர் என்று கேட்பது முறையல்லவென்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்; ஆனால் சொன்னவர் நம்பத்தக்கவரோ என்பதை அறிவதற்காகவே கேட்டேன்" என்று தாய் பதில் சொல்ல, "அம்மா, வெளிவிடாதீர்கள்; சொன்னவர் வேறெவருமல்லர்; அவருடைய தங்கையாகிய பூரணம் சென்ற சனிக்கிழமை இங்கு வந்தபோது இரகசியமாக எனக்குச் சொன்னாள்; ஆனதினாற்றான் நானும் அதை நம்பினேன்" என்றாள். இதனைக்கேட்ட தாய் வெகுநேரம் யாதும் பேசாளாய் யோசித்தாள்; கவலைப்பட்டாள், பின்னர் மகளைப் பார்த்து "மகளே, கண்ணாரக் கண்டதும் பொய், காதாரக்கேட்டதும் பொய், தீர விசாரித்துச் செய்" என்று பெரியோர் சொல்வதுண்டு; இந்தக் கருமத்தைப்பற்றி நான் தீர்க்கமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்துகொண்டுதான், பிறகு கல்யாணத்தைப்பற்றி யோசிப்பேன்; நீ சொல்லும் விஷயம் உண்மையாக இருந்தால் நானே இந்தச் சம்பந்தத்திற்கு ஒருபோதும் உடன்படமாட்டேன்; மேலும் இந்த விஷயத்தை உங்கள் அப்பருக்கு நான் மறைத்துவைக்க வொண்ணாது" எனலும், இதற்கிடையில் மகள் "அம்மா, அப்பருக்குச் சொல்வதும் சொல்லாமல் விடுவதும் உங்களைப் பொறுத்தவை; ஆனால் நான் உங்களுக்குச் சொன்னேனென்றதை மாத்திரம் அவருக்கு நீங்கள் வெளியிடவேண்டாம்" என்றாள். "அந்தப் புத்தி எனக்குத் தெரியும் மகளே" என்றாள் தாய்.

"சாந்துணையுஞ் சஞ்சலமே..."

வெளியே சென்றிருந்த அருணாசலம்பிள்ளை தம் வீட்டிற்கு மீண்டுவந்து மத்தியானப் போசனம் முடித்துவிட்டுத் தலைவாசலில் ஏதோ புதினத்தாள் படித்துக்கொண்டிருக்கும்போது, பெரியநாயகியும் தன்னுடைய கருமங்களையெல்லாம் முடித்துவிட்டு வெற்றிலைத் தட்டத்தைக் கையிலேந்தியபடி தலைவாசற் பக்கம் வந்து தன்னாயகனாகிய அருணாசலம்பிள்ளைக்கு வெற்றிலைபாக்கு வழங்கிவிட்டுத் தானும் கீழேயிருந்து தாம்பூலந் தரித்துக்கொண்டு அவரைப்பார்த்து "என்ன, பாருங்கள், எல்லாம் சங்கடமாகத்தான் வருகின்றன" என்றாள். "இந்தக்காலத்திலே சங்கடம் எங்களுக்கு மாத்திரந்தானா உலகத்திலே எல்லார் பாடுஞ் சங்கடமாகத்தானே இருக்கின்றது; வயிறார உண்ண உணவு கிடையாது; மாற்றிக்கட்டத் துணி கிடையாது; இந்தப் பஞ்சம் எப்போது நீங்கப்போகிறதோ, எமக்குத் தெரியாது, தெய்வத்திற்குத்தான் தெரியும்" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார் அருணாசலம்பிள்ளை; "நான் அதைப்பற்றிச் சொல்லவில்லை கண்டீர்களோ, நாட்டிலுள்ளது தான் நமக்குமென்றிருக்க வேண்டும்; இப்பொழுது ஒரு செய்தி கேள்விப்பட்டேன்; அதையிட்டு நினைக்க நினைக்கத் தான் மனத்திற்கு வருத்தமாயிருக்கிறது" என்றாள் பெரியநாயகி, "அதற்கென்னசெய்வது, மாந்தர்க்குடி வாழ்க்கை மண்ணின் கலம்போல் சாந்துணையுஞ் சஞ்சலமே தான்" என்றுதானே பெரியோரும் பாடியிருக்கிறார்கள்; நாசியுள்ள மட்டும் சிலேட்டுமமும் உண்டுதானே; மனுஷனுக்குச் சங்கடம் வந்தால் ஒன்றன்பின்னொன் றாகத்தான் வரும் அதுபோக, இப்போது உனக்கு வந்த சங்கடமென்ன" என்று கேட்டார் அருணாசலம் பிள்ளை; "சங்கடமோ, அது சொல்லத்தக்கதோ, சொல்லித்தான் ஆவதென, சொல்லாமல் விட்டுத்தான் ஆவதென்ன" என்று பின்னரும் இழுத்துச் சொன்னாள் மனைவி, "சொல்லாமல் விடலாமென்றால் விட்டுவிடு" என்றார் கணவன். "இதை சொல்லத்தான் வேணும், உங்களுக்குச் சொல்லாமல் வேறு ஆருக்கு நான் அதனைச் சொல்வது என்று பின்னரும் மனைவி சொல்ல "சொல்லுகிறதென்றாற் சொல்; இல்லையேல் என்னைப் பத்திரிகை படிக்கவிடு, குழப்பாதே" என்று சிறிது சினந்து கணவன் சொல்ல "சரி, சொல்லுகிறேன் கேளுங்கள்; வேறொன்றுமல்ல; உங்கள் மருமகன் இப்பொழுது கெட்டுப்போனாரென்று ஊரிலே கதைக்கிறார்கள்; என் காதிலும் இந்தத்தகவல் பட்டது" என்று மனைவிசொல்ல கணவன் சிறிது கவலையுடன் "அப்படித்தான் நானும் உங்களுக்கு முன் கேள்விப்பட்டேன்; நெருப்பில்லாமற் புகையாது. ஆனால் இப்பொழுது இந்தச் செய்தியை எங்கள் மகளின் காதிற்கு எட்டவிடாதே; அவள் ஒருவிதமான பிடிவாதமுள்ளவள்; இதை அறிந்து அந்த ஆளில் மனம்வெறுத்தளேயாகிற் பிறகு அவளை எந்த விதத்திலும் சமாதானப்படுத்த முடியாது, இதை நான் அறிந்துகொண்டு உனக்குத்தானும் சொல்லாமல் இரகசியமாக வைத்திருந்ததன் காரணம் எங்கள் மகள் அறிந்தாற் சங்கடமாகுமென்று பயந்துதான்; ஆனாற் காரியத்தை முற்ற விடாமல் முளையிலேயே களைந்துவிட வேண்டும்; தகப்பனையிழந்த பிள்ளைகள் பாடு பெரும்பான்மையும் இப்படித்தான் அநர்த்தமாய் முடிகின்றது; இந்த விஷயத்தை யார் மூலமாகச் சொல்லி அந்தப் பிள்ளையைத் திருத்தி நடக்கச் செய்வதென்று எனக்குப் புலப்படவில்லை; தாயிடஞ் சொல்லி அவனுக்குச் சொல்லுவிக்கலாமோ என்றால், இந்தக்காலத்துப் பிள்ளைகள் தாய் சொல்வதையா கேட்கப்போகிறார்கள்; நான் நேரே சொல்லலாமோ அது மரியாதையாயிராது; இனி, அவன் ஆருடைய புத்தியைக் கேட்பானென்பதுந் தெரியவில்லை; ஒரு யோசனை புலப்படுகிறது; அவனைச் சிறுவயசிலே படிப்பித்த பொன்னம்பல உபாத்தியாயரிடத்தில் அவன் மரியாதை பாராட்டி நடப்பதை நான் அறிவேன்; அந்த உபாத்தியாயரைக் கண்டு அவர் மூலமாக அவனுக்குச் சொல்லுவிக்கலாமோ என்று யோசிக்கிறேன்; அவர் அவன் செய்யும் பிழையை அறிய நேர்ந்தாலும் அதனால் ஒரு வசையில்லை; எழுத்தறிவித்தவன் இறை வனாகும்" என்று சொல்லிச் சிந்தித்தார். "அப்படித்தான் செய்யுங்கள்; அதுதான் நல்ல உபாயம்" என்று மனைவி கூறிவிட்டுப் பின்னரும் தன் கணவனைப் பார்த்து "உங்களுக்குச் சொல்லாமல் மறைத்து வைப்பது முறையல்ல; நான் அறியமுந்தி இந்தச் செய்தியை யாரோ புத்தியீனமாக, எங்கள் பிள்ளைக்குச் சொல்லி விட்டார்கள்; இதையிட்டு எங்கள் மகள் அதிக கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறாள்" என்று சொல்லித் துக்கப்பட்டாள். "அப்படியா! சரி, கறந்தபால் முலைக்கேறப்போவதில்லை; இனி அதற்கென்ன செய்வது; பார்க்க வேண்டியதைப் பார்ப்போம்; நான் இப்பொழுதே பொன்னம்பல உபாத்தியாயரிடம் போகிறேன்" என்று மனையாளுக்குச் சொல்லிவிட்டு அருணாசலம்பிள்ளை உடனே புறப்பட்டுப் போவாராயினார்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1944 மே 25
விசாலாட்சி: (முற்றொடர் - 03)

"அவரவர் அதிர்ஷ்டம் பாவம்"

அருணாசலம்பிள்ளை பொன்னம்பல உபாத்தியாயர் வீட்டிற்குச் சென்றபோது உபாத்தியாயர் அவரை வரவேற்று உபசரித்து இன்சொற்கூறி இருக்கச் செய்து, "தம்பீ, இந்தப் பக்கம் வந்து வெகுநாள்; வந்த நோக்கமென்ன? என்னால் ஆகவேண்டியது ஏதுமுண்டானாற் சொல்லுக" என்று இதமாகக் கேட்டார்; "ஐயா, உங்களாலேயே ஆகவேண்டிய ஒரு காரியத்தை உத்தேசித்துத்தான் இப்பொழுது இங்கே வந்தேன்; வேறொன்றுமல்ல, ஐயா, என் மகளுக்கும் எனது சொந்த மருமகனுக்கும் சிறு பிராயந்தொட்டுக் கல்யாணம் நிச்சயித்திருந்தோம்; மருமகனும் கிரமமாகப் படித்து நல்ல ஒழுக்கமுடையவனாய்த் திறமையுடையவனாய் வந்தான்; அது உங்களுக்குத் தெரியும்; ஆனால் இப்பொழுது சிலகாலமாக அவன் கூடாத கூட்டங்கூடிக் கள்ளுக் குடித்தல் முதலிய பழகாத பழக்கம் பழகிப் பழுதாகப் பார்க்கிறான்; இதனைக் கேள்விப்பட்டு நான் உங்களைப் போன்ற பெரியாரிடத்திற் சொல்லி அவனைத் திருத்தி நடக்கச் செய்யலாமென்று எண்ணிக் கொண்டிருப்பதற்கிடையில் அவனுடைய நடத்தையைப்பற்றிய செய்தி என் மகளுடைய காதிலும்பட்டுவிட்டது; அவள் அதனால் மனவருத்தங்கொண்டு தனக்கு விவாகமே வேண்டாமென்று பிடிவாதமாக நிற்கிறாள்; என் மருமகனைத் திருத்தி விட்டால் மகளையுஞ் சம்மதிக்கச் செய்யலாம்; மருமகன் உங்களுடைய சொல்லைக் கேட்டு நடப்பானென்று எங்களுக்கு நம்பிக்கையுண்டு; ஆனதால் நீங்கள் ஒரு நாளைக்கு ஆறுதலான நேரத்தில் அவனை இங்கே கூப்பிடுவித்து அவனுக்குப் புத்தி சொல்லவேண்டும்; என் பிள்ளை வேறு உங்கள் பிள்ளை வேறல்ல; இதனைப்பற்றிச் சொல்லும்படிதான் இப்பொழுது இங்கே வந்தேன்" என்று விபரமாகச் சொன்னார் அருணாசலம்பிள்ளை, கேட்ட உபாத்தியாயர் சற்றுநேரம் யோசித்தார்; "தம்பீ, இந்தப் பிள்ளை இப்படிப் பழுதுபடுவானென்று அந்தநாளில் நான் கனவிலுங் காத்திருக்கவில்லை; அவன் செயல் குடியிற் பிறந்து செடியிற் புகுந்தவாறாயிருக்கிறது; மேலும் பெண்ணாசைகொண்டவர், பொருளாசை பிடித்தவர், மதுபானஞ் செய்யத் தலைப்பட்டவராகிய இவர்களைத் திருந்தி நடக்கச்செய்தல் இலகுவான காரியமல்ல; இருப்புக் கோலைச் சிவக்கக் காய்ச்சிச் சுட்டாலும் இவர்கள் அடங்கார்களென்று முதியோர் சொல்லுவர்; ஆனாலும் நீர் விரும்பிய பிரகாரம் நான் அந்தப் பிள்ளையைக் கூப்பிடுவித்து என்னால் இயன்ற அளவிற்கு ஆக வேண்டிய புத்திசொல்லித் திருத்தப் பார்க்கிறேன்; அப்பால் அவரவர் அதிஷ்டம் பாவம்" என்று கூறிப் பொன்னம்பல உபாத்தியாயர் அருணாசலம் பிள்ளைக்குத் தேறுதல் சொல்லி அவரை விடை கொடுத்தனுப்பினார்.

"எழுத்தறிவித்தவன் இறைவனாவன்"

பொன்னம்பல உபாத்தியாயர் அடுத்தநாட்காலை, தம்மிடத்திற் படிக்கும் ஒரு பிள்ளையைக் கூப்பிட்டு, "நீ விசுவநாதன் வீட்டிற்குப் போய் அவன் அங்கே நின்றால் நான் வரச் சொன்னதாகச் சொல்லு" என்று அனுப்ப அந்தச் சிறுவன் அப்படியே அங்கேபோய் விஷயத்தைச் சொல்லி விசுவநாதனை உடனே கூட்டிக்கொண்டு வந்து உபாத்தியாயரிடஞ் சேர்த்தான்; வந்த விசுவநாதன் உபாத்தியாயருக்கு நமஸ்காரஞ் செய்து அவர் இரு என, விநயத்தோடு ஒரு பக்கத்தில் ஒதுங்கியிருந்தான்; அவனையழைத்துவரச் சென்ற சிறுவனைப் போகும்படி அனுமதி செய்துவிட்டுப் பொன்னம்பல உபாத்தியாயர் விசுவநாதனைப் பார்த்து "தம்பீ, உம்மை நான் வெகுநாளாகக் காணவில்லை; எப்படி உமது சுகம்; இப்பொழுதும் படித்து வருகிறீரா? என்ன முயற்சி பார்க்க உத்தேசித்திருக்கிறீர்; இப்பொழுது உமக்கு வயசாய் விட்டதே; எங்கேனும் விவாகப் பேச்சு உண்டா? ஆம், ஆம், நீர்தான் புறத்தியிலே போய்ப்புக வேண்டியதில்லையே; உம்முடைய சொந்த மாமனாருடைய பெண் இருக்கிறாளே, அதனை நான் மறந்துபோய் இப்படிக் கேட்டுவிட்டேன்; உம்மிடத்திலும் போதிய பொருள் பண்டமுண்டு; நன்கு படித்திருக்கிறீர்; அவர்களிடத்திலும் போதிய செல்வஞ்செல்வாக்குண்டு; அந்தப் பெண்ணும் நன்கு படித்திருக்கிறாள்; பண்டிதைப் பட்டமும் பெற்றுவிட்டாளென்று கேள்வி; அவள் நல்ல குணமான பெண் என்பதை நான் அறிவேன்; அல்லாமலும் உமக்குப் பெயர் விசுவநாதன்; அந்தப் பெண்ணுக்குப் பெயர் விசாலாட்சி; இருவர் பெயரும் பொருத்தமாயிருக்கின்றன; இப்படியே இனிமேலும் எல்லாம் பொருத்தமாக இருக்கட்டும்" என்று பாராட்டிச் சொன்னார். "ஐயா, நான் கடவுள் கிருபையாற் சுகமேயிருக்கிறேன்; இப்பொழுதும் படித்து வருகிறேன்; உங்களைப் போலவே எனக்கும் ஒரு உபாத்தியாயராக இருக்கத்தான் பிரியம்; அதற்காகிய முயற்சிகளையே செய்துவருகிறேன்; என் மாமன் மகளையே எனக்குக் கல்யாணஞ் செய்துவைக்க நிச்சயித்திருக்கிறார்கள்; அவள் பண்டித பரீட்சையிற் சித்தியடைந்திருக்கிறாளென்பது மெய்தான்; என் தகப்பனார் மோசம் போனபிறகு எனக்கும் என் தங்கைக்கும் தாயாருக்கும் மாமாவே மேற்பார்வைக்காரனாக விருக்கிறார்; எங்களிருவரையும் அவர் தம்முடைய பிள்ளைகள் போலவே மதித்து நடத்தி வருகிறார், எங்கள் மாமியாரும் அப்படியே" என்று சொல்லி முடித்தான் விசுவநாதன். "தம்பீ, நீர் சொல்லச் சொல்ல எனக்கு ஆநந்தமுண்டாகின்றது; என்னிடத்திலே படித்த பிள்ளைகள் நல்லாயிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார்களென்று கேள்விப்பட்டால் எனக்கு அது பெருஞ் சந்தோஷமாகும்" என்று சொல்லிவிட்டுச் சில நிமிஷநேரம் யாதும் பேசாமல் யோசித்த படியிருந்தார் உபாத்தியாயர்; பின்னரும் அவர் அவனைப் பார்த்து "தம்பீ, உம்மிடம் நான் ஏதும் கேட்டறியலாகுமோ, அதனாற் குறையில்லையே" என்னலும் "ஐயா, நீங்கள் எதனையும் என்னிடங் கேட்டறியலாம்; நீங்களல்லாமல் வேறுயார் கேட்பது, எழுத்தறிவித்தவன் இறைவனல்லவா; நீங்கள் எதனைக் கேட்டாலும் நான் உள்ளபடி உங்களுக்குப் பதில் சொல்லுகிறேன்" என்று விநயத்தோடு சொன்னான் விசுவநாதன். "வேறொன்றுமல்ல தம்பீ, உம்மைப்பற்றி எல்லாம் நன்மையாகச் சொல்லுகிறார்கள்; ஒரேயொரு குறைமாத்திரம் சொல்லக் கேட்டு மனம் வருந்துகிறேன்; ஆனாலும் அதனை நான் முற்றாக நம்பவில்லை; அதனை உம்மிடம் நேரிற் கேட்டு உண்மையையறிந்து அந்தச் சந்தேகத்தையும் என் மனக்கிலேசத்தையும் நீக்கிவிடலாமென்று நினைத்தேன்; அதாவது நீர் மதுபானஞ் செய்யப் பழகிக்கொண்டீராம், அது மெய்தானா" என்று உபாத்தியாயர் மிகவும் ஆறுதலாக வினாவினார். விசுவநாதன் சற்று நேரம் யாதும் பேசாதிருந்துவிட்டுப் பின் தன் வித்தியாகுருவைப் பார்த்து "ஐயா, உங்களுக்கு நான் எதனையும் ஒளிக்கவொண்ணாது; நீங்கள் கேள்விப்பட்ட விஷயத்திற் கொஞ்சம் உண்மையும் உண்டு" என்று வெட்கம் மீதூரச் சொன்னான். "அப்படியானால் உங்கள் குலங் குடிக்கும் உமது படிப்பிற்கும் அந்தப் பழக்கம் ஏற்றதல்லவே; அப்படியான பழக்கமிருந்தால் அதனை இன்றோடு விட்டுவிடுவதுதான் முறைமையாகும். அறியாமையினாலே ஒரு பிழையைச் செய்தால் அது பிழையென அறிந்தவுடனே விட்டுவிடுவதுதான் குலத்திற் பிறந்தார் செய்யுஞ் செயல்; ஆனதால் தம்பி, அந்தத் தீய பழக்கத்தை இந்த நிமிஷந் தொடுத்து எனக்காக நீர் விட்டுவிட வேண்டும்" என்று பரிந்து சொன்னார் உபாத்தியாயர். விசுவநாதன் சற்றுநேரம் யாதும் பதில் சொல்வதின்றி யோசித்துக்கொண்டிருந்தான்; பின்னரும் அவன் தனது உபாத்தியாயரைப் பார்த்து "ஐயா, நீங்கள் சொல்லுகிறபடி செய்கிறேன்; ஆனால் இதனைப்பற்றி உங்களுக்குச் சொன்னவர் ஆரென்பதை நான் அறிய வொண்ணாதா" என்று கேட்க, உபாத்தியாயர் "தம்பி விசுவநாதா, அதனை நீர் அறிவதினாலே வரும் நன்மையென்ன? உம்மிடத்திலே அன்புள்ளவர்கள் தாம் என்னிடம் வந்து, இந்த விஷயம் உண்மையானால் புத்தி சொல்லி உம்மைத் திருத்தும்படி கேட்டார்கள்; நீரும் விஷயம் நிசமென்று ஏற்றுக்கொண்டீர்; அதனை விட்டுவிடுவதற்கும் உடம்பட்டுக்கொண்டீர்; இவ்வளவும் போதுமே" என்று ஆதரவாகச் சொன்னார். "எங்கள் மாமா வீட்டுக்காரருக்கும் இந்தக் கருமந் தெரியுமா ஐயா" என்று மீண்டுங் கேட்டான் விசுவநாதன். உமது மாமனார் வீட்டுக்காரருக்கு இன்னமுந் தெரியாதென்று நினைக்கிறேன்; அவர்கள் அறிய முந்தியே இதனை விட்டுவிட்டாற் சரிதானே" என்றார் உபாத்தியாயர். உபாத்தியாயர் சொன்ன மறுமொழியைக் கொண்டு "இவ்விஷயத்தை என் மாமன் வீட்டுக்காரர்தான் இவருக்குச் சொல்லியிருக்க வேண்டும்" என்ற சந்தேகங் கொண்டான் விசுவநாதன்.

* * *

உலகம் பலவிதம்: *1944 ஜூன் 01*
விசாலாட்சி: *(முற்றொடர் - 04)*

விசுவநாதன் பச்சாத்தாபம்

"நான் இனியொருபோதும் மதுபானத்தைத் தீண்டவும் மாட்டேன்" என்று வாக்களித்துவிட்டு உபாத்தியாயரிடத்தில் விடையும் பெற்றுக்கொண்டு விசுவநாதன் தன் வீட்டை நோக்கிக் கவலையோடு வரும்போது பின்வருமாறு யோசிக்கலானான்: உலகத்திலே இரகசியமாயிருக்குமென்றெண்ணி நாம் ஒரு தவறான கருமத்தைச் செய்ய நினைத்தல் புத்தியீனம்; நாம் செய்யும் பிழையை வேறு எவரறியாவிட்டாலும், தெய்வம் அறியும், நம்முடைய மனச்சாட்சியும் நம்மைச் சுடும்; இந்த மதுபானத்தை இரகசியமாகச் செய்து வருகிறேனென நான் எண்ணிக்கொண்டிருந்தேன்; ஆனால் அந்த இரகசியம் எனது மாமன் மாமிக்குத் தெரிய நேர்ந்தது; என்னிடத்தில் அதிக அன்புபாராட்டி வந்த உபாத்தியாயரும் அதனை யறிந்து மனவருத்தப்படலானார்; நான் படித்திருந்தும் மதுபானம் பஞ்சமாபாதகங்களுட் பெரும் பாவமான தென்பதை மறந்துவிட்டேன்; தான் அறிந்தும் பிறர்க்கு உரைத்தும் தானே அடங்காமல் நடப்பானேயானால் அவனே பேதைகளுட் பேதையாவன்; என் மாமன் மாமி இந்தப் பிழையை அறிந்தார்களே யென்பதைப் பற்றி எனக்கு அதிக கவலையில்லை; என் உபாத்தியாயர் அறிந்ததையிட்டும் நான் அதிகம் கவலைப்படவில்லை; அவர்களுக்கெல்லாம் சமாதானஞ் சொல்லிக்கொள்ளலாம்; என்னைப் பெற்ற தாயாருக்கும் நான் சமாதானஞ் சொல்லலாம்; ஆனால், எனது அருமையான மைத்துனியறிந்தால் அவள் என்னைப்பற்றியென்ன நினைப்பாளோ அறியேன்! இந்தத் துர்ப்பழக்கத்தை நான் பழகுவதற்குக் காரணனாயுள்ளவன் அந்தப் பாலசிங்கன்; அவனுடைய தொடர்பு வேண்டாம் வேண்டாமென்று எனக்குப் புத்திசொன்ன நண்பர்கள் பலர்; ஆனாலும் நான் அவனுடைய நயவஞ்சையான பேச்சில் எடுபட்டு என் உற்ற நண்பரையெல்லாங் கைவிட்டு அந்தப் பாலசிங்கனையே தோழனெனக்கொண்டு கூடித் திரியலானேன்; அவனாற்றான் இத்தீமையெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையலாயின; அவன் சகவாசத்தை இன்றோடு நான் விட்டுவிடவேண்டும்" என்று இப்படிப் பச்சாத்தாபப்பட்டுக்கொண்டு தன் வீடு சேர்ந்தான் விசுவநாதன். வழக்கமாகப் பின்னேர வேளைகளிற் பாலசிங்கன் விசுவநாதன் வீட்டிற்கு வந்து இவனைக் கூட்டிக்கொண்டு பொழுது போக்காக உலாவப்போவான். இல்லையேல் இவன் அவன் வீட்டிற்குப்போய் அவனைக் கூட்டிக்கொண்டு உலாவப்போவான்; அன்று இவன் தான் பாலசிங்கன் வீட்டிற்கு போவதில்லையென்றும், அவனாகத் தன்னைத் தேடி வீட்டிற்கு வந்தாலும் தான் தன் மனக்கிடக்கையை அவனுக்குச் சொல்லிவிட்டு அவன் தொடர்பையும் மெல்ல மெல்ல விட்டுவிட வேண்டுமென்றும் நிச்சயித்துக்கொண்டான். இதற்கிடையில் அவனுடைய தாயாகிய வள்ளியம்மை அவனைப் போசனஞ் செய்தற்குக் கூப்பிட அவன் தன் கவலையைத் தாயுணராதபடி மாற்றிச் சந்தோஷத்துடன் போய் உணவருந்தினான். பொன்னம்பல உபாத்தியாயர் விசுவநாதன் மீண்டபிறகு தம்மிடத்திற் படிக்கும் ஒரு சிறுவனை அருணாசலம்பிள்ளை வீட்டிற்கு அனுப்பி அவரை வரச்செய்து விசுவநாதன் தமக்குச் சொன்ன விவரத்தை அவருக்குத் தெரிவிக்க, அவரும் ஆநந்தமடைந்து உபாத்தியாயருக்கு நன்றிகூறி விட்டுத் தன்னில்லத்திற்கு மீண்டார். மீண்டவர் தமது மனையாளுக்கு இந்தச் சந்தோஷ சமாசாரத்தைத் தெரிவிக்க அவளும் மகிழ்ச்சி யடைந்தாளாய் உடனே போய்த் தங்கள் மகளுக்கு விபரமாகச் சொன்னாள். கேட்ட விசாலாட்சி சிறிது கவலை நீங்கினளேனும் தன் பெற்றார் உற்ற மகிழ்ச்சியையடைந்திலள்.

முள்ளிலே துணியையிட்டால் மெல்ல எடுக்கவேண்டும்

அன்று மாலை நேரத்தில் விசுவநாதன் தன்னிடம் வழக்கம்போல் வருவானென்று பாலசிங்கன் எதிர்பார்த்திருந்தான்; ஆனால் அவன் இவனிடம் போனானல்லன்; வழக்கம்போல் தன்னிடம் வராமைக்குக் காரணமென்னவென்பதை நேரிற் கண்டறியவேண்டிப் பாலசிங்கன் உடனே புறப்பட்டு விசுவநாதன் வீட்டிற்குச் சென்றான்; வீட்டுத் தலைவாசலில் ஏதோ புத்தகம் வைத்துப் படித்த வண்ணம் இருந்த விசுவநாதன் பாலசிங்கன் வரவைக் கண்டமாத்திரத்தேயெழுந்து ஒரு நாற்காலியைக் காட்டி அதில் இருக்கச்செய்து தானும் முன் போலிருந்தானேயொழிய அவனுடன் முந்திப் பேசியதுபோல அளவளாவப் பேசினானல்லன்; "என்ன விசுவநாதா, இன்று அதிக கவலையுடன் காணப்படுகிறாய்; என்ன விசேஷம்" ஏன் நீ அந்தப்பக்கம் வரவில்லை? ஏதும் சுகவீனமா? நீ வழக்கம்போல் வரவில்லையெனக்கண்டுதான் உன்னைப் பார்த்துவிட்டுப் போகலாமென்றெண்ணி வந்தேன்" என ஆவலுடன் வினாவினான் பாலசிங்கன்.

விசுவநாதன்: நீ இருக்கும்போது எனக்கு வேறென்ன கவலை; விசேஷமொன்றுமில்லை; இன்றைக்கு அந்தப்பக்கம் வர எனக்குப் பிரியமில்லை; அதனால் வராமல் விட்டேன்; எனக்கு எவ்வகையான தேக சுகவீனமுமில்லை; நீ என்னை நேரிற்கண்டுபோக வந்தது நல்லது, கண்டுகொண்டாயே; இனிப் போகலாம். விசுவநாதன் சொன்ன பதிலையும் அவன் அந்த நேரத்திலே தன்னோடு பேசிய முறையையும் அவதானித்த பாலசிங்கன் ஆச்சரியமடைந்தான்; தன்னளவிற் பலவாறு யோசித்தான்; சற்றுநேரம் யாதும் வார்த்தையாடாமலிருந்தான்; பின்னரும் அவன் விசுவநாதனைப் பார்த்து "என்ன, நீ சொல்வது வேடிக்கையா, விளையாட்டா, இல்லையேல் நிசந்தானா" என்று கேட்க, "வேடிக்கையுமல்ல, விளையாட்டுமல்ல, நிசந்தான்" என்று சிறிது வெறுப்போடு சொன்னான் விசுவநாதன். "அப்படியானால் இந்தவிதமாக என்னை இன்று நீ வெறுத்துப் பேசுவதற்கு நியாயமென்ன? அதனை வெளிப்படையாகச் சொல்லிவிடவொண்ணாதா" என்று சிறிது ஆத்திரத்தோடு கேட்டான் பாலசிங்கன்; "அந்த நியாயத்தைச் சொல்லுவதனால் ஏதும் பயனுண்டாகாது" என்று விசுவநாதன் கூற "உனக்குப் பயனில்லாவிட்டாலும் அந்த நியாயத்தை அறிவதனால் எனக்குப் பயனுண்டு; நீ சொல்லவிருக்கும் நியாயத்தை அறிந்தவுடனே, நான் உன்னுடன் இனிமேல் ஊடாட வேண்டிய முறையாக ஊடாடிக் கொள்ளலாமல்லவா" என்றான் பாலசிங்கன்; இதனைக்கேட்ட விசுவநாதன் சிறிது யோசிப்பானாயினான்; "இவ்வளவு காலமும் என்னுடன் கூடி உற்ற நண்பனாயிருந்த இவனுடைய தொடர்பை நான் சரேலென அறுத்துவிட வொண்ணாது; அதனாற் சில சமயம் எனக்குங் கேடு நேர்தல் கூடும்; இவன் துஷ்டனென்பதை இப்பொழுது தான் உணர்ந்தேன்; முள்ளிலே துணியையிட்டால் அதனை மெள்ள மெள்ள எடுக்கவேண்டுமென்பர்; ஆனதால் இவனுடைய தொடர்பை மெல்ல மெல்லத்தான் கழற்றிக் கொள்ளவேண்டும்; அல்லாமலும் இவனுக்கு உள்ள காரணத்தைச் சொல்லி இவனைத் திருத்தலாமெனில் திருத்திக்கொள்ள முயற்சி செய்வோம்; திருந்தாதொழிவனேல், "புறநட்டகம் வேர்ப்பார் நச்சுப்பகைமை வெளியிட்டு வேறாதல் வேண்டும்" என்ற பிரகாரம் விஷயத்தை வெளியிட்டு இவனது தொடர்பையும் தவிர்த்துவிடுவோம்" என்று தன்னளவில் நிச்சயித்துக் கொண்டு, பாலசிங்கனைப் பார்த்து "சினேகிதா, உனக்கு உண்மையைச் சொல்லிவிடவேண்டியது என் கடமை. உன்னாலேதான் நான் மதுபானத்தை இரகசியமாகச் செய்துகொள்ளப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகியது; இப்பொழுது அந்த மதுபானம் பரகசியமாகி என் மாமன் மாமி பழைய உபாத்தியாயர் முதலிய எல்லாரும் அறிந்து என்னை இகழவும் புறக்கணிக்கவும் செய்துவிட்டது; என் மாமனார் வீட்டில் எனக்கு நிச்சயித்திருந்த விவாகமும் நடவாது தவறிவிடும்போற் காணப்படுகின்றது; இனிமேல் நானோ ஒருபோதும் மதுபானத்தைத் தீண்டவும் மாட்டேன்; நான் கள்ளுக் குடிப்பதைத் தவிர்த்துவிட்டும் உன்னோடு கூடித் திரிவேனானால் "காணவே பனைக்கீழ் ஆப்பால் குடிப்பினும் கள்ளே யென்பார்" என்றபடி மதுபானியாகவே பிறரால் அவமதிக்கப்படுவேன்; உனக்குமெனக்கும் வேறு ஒரு மனத்தாபமுமில்லை; உற்ற நண்பராய் நீடித்தகாலம் ஒழுகிவந்த நாங்கள் இப்பொழுது பிரிய நேர்ந்ததே யென்பதை யிட்டுக் கவலைப்படாதே; கோபங் கொள்ளாதே; என்னுடன் பகைமை பாராட்டாதே; நண்பராயிருந்தோர் பிரிவு நேர்ந்தவிடத்தில் ஒருவரையொருவர் தூற்றுவதுதான் பெரும் பிழையாய் முடியும்" என்று சொல்லி முடித்தான். அவன் சொன்னவற்றையெல்லாம் அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த பாலசிங்கன் "கலீர்" எனச் சிரித்தான்.

பாலசிங்கன் இயல்பு

இந்தப் பாலசிங்கனென்பவனுக்கு இருபத்துநான்கு இருபத்தைந்து வயசுவரையில் மதிப்பிடலாம்; இவன் செல்வக்குடியிற் பிறந்தவன்; தமிழும் ஆங்கிலமும் ஒரு அளவிற்கு படித்தவன்; பெற்றாருக்கு இவன் ஏக புத்திரன்; இவனுக்கு இருபது வயசாயிருக்கும்போது தகப்பன் இறந்துவிட, தாய் சொற்கேளானாய் இவன் படிப்பைக் குழப்பிவிட்டான்; தந்தை யிறந்தபின் இவனே வீட்டிற்கு எஜமானாகித் தான் நினைத்தபடி நடக்கத்தலைப்பட்டுத் தூர்த்தருடன் கூடிக் கைம்பெண்டாட்டி வளர்த்த கழுதையென்று எவருஞ் சொல்லிச் சிரிக்கவும் அவமதிக்கவுந் தக்கதாக நடப்பானாயினான்; பாலசிங்கன் நல்ல தோற்றமுடையவன்; வாக்குச் சாதுரியமாகப் பேசும் ஆற்றலுள்ளவன்; கண்டோர் விரும்பும் முக வசீகரமுடையவன்; எந்தத் தீமையையும் அஞ்சாது செய்யுந் துணிவுடையவன்; இவன் சொல்வதைத் தட்டாது செய்யக்கூடிய வாலிபர் சிலர் எந்தநேரமும் இவனுக்குத் துணையாகவுள்ளனர்; இப்படிப்பட்ட பாலசிங்கனிடத்தில், காலம் இடம் அறிந்தும் ஆட்களின் பெருமை சிறுமையையுணர்ந்தும் அவரவருக்கிசையப் பேசிக் கருமம் பார்க்குந் திறமையும் உண்டு; பெருஞ் சிரிப்புச் சிரித்து பாலசிங்கன் அப்பொழுது விசுவநாதனைப் பார்த்து "அப்பா, விசுவநாதா, இதற்காகவா என்னுடன் பிணங்கிக் கொண்டாய், எதனையும் வேண்டாமென்றால் விடக்கூடிய மனவைராக்கியம் என்னிடத்திலேயுண்டு; உனக்கு மதுபானஞ் செய்வது இஷ்டமில்லாவிட்டால், அதனாற் பெரும் மானக்கேடு நேர்ந்ததென்று நீ உணர்ந்து கொண்டால் அதனை உடனே விட்டுவிடலாமே; என்னால் அப்படிச் செய்யமுடியும்; உன்னால் ஏன் அப்படிச் செய்ய முடியாது" என்று சொல்லிக் கேட்டான். இதனைக்கேட்ட விசுவநாதன் சிறிது மகிழ்ச்சியடைந்தானாய் "பாலசிங்கம், இன்றோடு இந்தத் தீய பழக்கத்தை விட்டுவிட நிச்சயித்து விட்டேன்; இனிமேல் எந்த மதுபானத்தையும் கையினால் தொடவும் மாட்டேன்; இது சத்தியம்; ஆனால் நீயும் இந்தத் துர்ப்பழக்கத்தை இன்றைக்கே மறந்துவிடுவாயானால் உன்னைக் காட்டிலும் உற்ற நண்பன் எனக்கு உலகத்திலே எவருமில்லையென்று திடமாகச் சொல்லுகிறேன்" என்று உறுதிப்பாட்டோடு கூறினான். இப்படிச் சொல்லக்கேட்ட பாலசிங்கன் சிறிதுவேளை யோசித்து விட்டு "ஆம், அப்படிச்செய்ய வேண்டுமானாலும் செய்யலாம்; அதில் ஒரு கஷ்டமுமில்லை; அது கிடக்க, நாங்கள் இந்த இடத்திலே இருந்துகொண்டு இவைகளையிட்டுப் பேசும்போது உனது தாயார் காதிற்பட்டாலும் மனம்வருந்தக்கூடும்; ஆனதால் நாம் புறப்பட்டு உலாத்தப்போகுவம்; போய்க் கடற் கரையிலிருந்துகொண்டு இந்த விஷயமாகப் பேசுவோம்" என்றான். விசுவநாதனும் அதற்கு உடன்பட்டு அவனுடன் புறப்பட்டான்.

* * *

உலகம் பலவிதம்: 1944 ஜூன் 08
விசாலாட்சி: (முற்றொடர் - 05)

"கள்ளினுமுளதுகொல் கருத்தழிப்பதே"

விசுவநாதனும் பாலசிங்கனும் கடற்கரையை யடைந்து அங்குள்ள மணலின் மீது இருந்தனர்; கடல் பெருக்கில்லாத நேரம் பாலசிங்கன்: (விசுவநாதனைப் பார்த்து) "நண்பா சடுதியிலே உன்னுடைய எண்ணம் மாறுபட்டதற்கு நியாயமென்ன? நீயே யோசித்து மதுபானத்தையும் என்னையும் வெறுக்கத் துணிந்தாயோ? இல்லையேல் உனக்கு யாரும் புத்தி புகட்டினரோ? அல்லாவிடில் உனது மாமன் வீட்டார் இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டு உனக்குப் பெண்தரப் பின்னிற்பரென்றெண்ணிப் பயப்படுகின்றாயோ? கட்குடித்தல் நல்ல பழக்க மென்று நான் சொல்ல வரவில்லை; ஆனாலும் அந்தப் பழக்கம் அந்தக்காலத்திலும் இந்தக்காலத்திலும் உண்டுதானே; ஆண்கள் மாத்திரமல்லர் பெண்களும் மதுவருந்தினரென்று சங்க நூல்களிலும் அவற்றிற்குப் பிற்பட்ட கந்தபுராணம் இராமாயணம் முதலிய புராணேதிகாசங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறதே; உன்னோடொத்த தமிழ்க் கல்வி என்னிடத்தில் இல்லையென்பது நிசமானாலும் நானும் தமிழ் நூல்களை ஆராய்ந்திருக்கின்றேன்; இந்தக் காலத்திலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சாதியாருள்ளும் எச்சமயத்தாருள்ளும் குடியாதவர் சிலர் குடிப்பவர் பலரென்பதை நீ அறிவாயா? அளவு கடந்து மதுபானஞ் செய்யவொண்ணாதென்ற கொள்கையை மாத்திரம் நானும் ஏற்றுக்கொள்ளுகிறேன்; மழைக்காலிருட்டானாலும் மந்தி கொம்பிழக்கப் பாயாது என்ற விதமாக, நான் எவ்வளவு குடித்தாலும் மதி மயங்க மாட்டேன். எதற்கும் மனந்தான் காரணம்".

விசுவநாதன்: (சிறிதுநேரம் யோசித்து விட்டு அவனைப் பார்த்து) "பாலா, உன் வாக்குச் சாதுரியத்தை மெச்சினேன்; தமிழறிவில் நீ எனக்குக் குறைந்தவனல்ல; என்னிலும் பார்க்க இன்னமும் அதிகமான கல்வியறிவுள்ளவனென்று உன்னைச் சொல்லுதல் மிகையாகாது. மதுபானம் தீயதென்பதை நாம் முந்தியேயறிந்திருந்தும் உனது கூட்டுறவால் அதனை மறந்து அத்துர்ப்பழக்கத்தைப் பயின்றுகொண்டேன்; எனது பழைய வித்தியா குருவாகிய பொன்னம்பல உபாத்தியாயரே, என் செயலைக் கேள்விப்பட்டு என்னைக் கூப்பிடுவித்து ஆகவேண்டிய புத்திகளைச் சொல்லித் தெருட்டினார்; எனது மாமன் வீட்டினர் மூலமாகவே இந்த விஷயத்தை உபாத்தியாயர் அறிந்துகொண்டாரென நினைக்கிறேன்; அதுகிடக்க, சங்கநூல்களிலும் புராணேதிகாசங்களிலும் அவ்வக் காலத்திருந்த ஆண்களும் பெண்களும் மதுவருந்தினரெனச் சொல்லப்பட்டிருக்கிறதென்றனையே; அது நிசந் தான்; ஆனால் அந்த மதுபானத்தை அந்த அந்த நூலாசிரியர்கள் ஆங்காங்குக் கண்டித்திருப்பதை நீ படித்துப் பார்க்கவில்லையோ; சங்கநூற்காலத்துக் கொள்கைகளுள்ளும் வழக்குக்களுள்ளும் பல இக் காலத்திற் பொருந்தாவெனக் கைவிடப்படலாயின. புராணங்களுட் சிறந்ததாகிய கந்தபுராணத்தில் ஆண்களும் பெண்களும் மதுவருந்தினாரென்ற இடத்திலே கச்சியப்பசிவாசாரியர் என்ன தெருவிக் கின்றார்; கள்ளையும் கட்குடிப்போரையும் பாராட்டு கின்றாரா? இல்லையே?

"விள்ளுறு நாணினர் வீழுந் தூசினர்
உள்ளுறு களிப்பினர் உரைமயங்கினர்
தள்ளுறு தம்முணர் வின்றிச் சாம்பினார்
கள்ளினுமுளதுகொல்! கருத்தழிப்பதே"

என்றல்லவா மதுவையும் மது அருந்துவோரையுங் கண்டித்திருக்கின்றார் ஆசாரிய சுவாமிகள்; புராணங்களாக, இதிகாசங்களாக, நீதி நூல்களாக எவையும் மதுபானம் பஞ்சமா பாதகத்திற் பெரும் பாவமென்று கண்டிக்கின்றன. "காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய் மொழிதல் ஈதல் மறுத்தல் இவை கண்டாய்.... செம்மை நினையாமை பூண்டார்நெறி" என்பது நளவெண்பாவிற் கண்டது. மேலும், பாலா, நீ சங்கநூல்களில் மதுவுண்ணல் சொல்லப்பட்டிருக் கின்றதெனச் சமாதானஞ் சொல்லுகிறாய்; சொல்லப்பட்டிருக்கிறதென்பதை நான் மறுக்க வில்லை; ஆனால் அது நல்லதென்று எங்கேனும் சொல்லப்பட்டிருக்கின்றதா? சங்க நூல்களுட் சிறந்தது திருக்குறளென்பதை நீயும் ஒப்புக் கொள்ளுவை; எவரும் ஏற்றுக்கொள்வர்; அந்தத் திருக்குறளில் இக்கொடிய மதுபானத்தைப்பற்றி நாயனார் என்ன சொல்லியிருக்கிறார்? சொல்லுகிறேன் கேள்;

"ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால், என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி"

பிள்ளை செய்யும் ஏனைய குற்றங்களையெல்லாம் சகித்துத் தகப்பனுக்குத்தானும் வெளியிடாது வைத்திருக்குந் தாய்தானும், தன் பிள்ளை குடித்து வெறித்துத் தன்முன்வரின் பார்க்கச் சகியாளாம்; பெற்றவளே பிள்ளை செய்யும் இந்தக் குற்றத்தைப் பொறுக்கமாட்டளென்றால், என் மாமன் மாமி அவருடைய மகளாகிய இவர்கள் என் செயலைப் பொறுப்பார்களா? இல்லையேல் என்னை உடனே அருவருத்து வெறுப்பார்களா? ஐந்து பெரும் தீமைகளுள் இந்த மதுபானமே ஏனைய நான்கு பெரும் பாதகங்களுக்கு ஏதுவாக இருக்கின்றது.

"நஞ்சுண்பார் கள்ளுண்பவர்"

இக்கொடிய மதுபானமானது தன்னை யுட்கொள்பவனுடைய மதியை அறவே கெடுத்து அவனை அறிவிற்குறைந்த மிருகத்தின் கீழாக்கி விடுகின்றது; மனுஷனுக்குரிய சிறந்த புத்தி கெடவே அவன் தான்செய்வது இன்னதென்பதையும் செய்யாதொழிவதின்னதென்பதையும் பகுத்துணர முடியாதவனாய் மயக்கத்தினால் தீமையையே செய்கிறான்; காமம் குரோதம் முதலிய தீக் குணங்களெல்லாம் இம் மதுபானங் காரணமாக அவனுடய உள்ளத்தில் ஒன்றொன்றாகவே பிறக்கின்றன. அவன் தெய்வத்தை மறப்பான், மனைவி மக்கள் பெற்றார் உற்றார் பெரியோராகிய இவர்களை மறப்பான்; வெறிகொண்ட குரங்கின் நிலைமையை அடைவான்; அவன் அந்த நேரத்திலே முகம் பார்க்குங் கண்ணாடி முன் சென்று தன்னுடைய முகத்தின் விபரீத தோற்றத்தைப் பார்ப்பானாயின் பின் ஒருபோதுங் கள்ளைத் தீண்டவும் இல்லையேல் மணந்து பார்க்கத்தானுஞ் சிந்தியான்; கள் அவனைத் தன்மயமாக்கிக்கொண்டு குறவன் பாம்பாட்டுவது போல ஆட்டுகின்றது. இந்தக் கொடிய மதுபானத்தினாற் கொலை செய்தவர் எத்தனையோ! இக்கொடிய குடியால் தம் குலங்குடிக்குள்ள பெயரைக் கெடுத்து, மனைவி மக்களை விடுத்து, தாம் பார்த்த உத்தியோகத்தைத் தொலைத்து எவராலும் "சீ" என இகழப்பட்டு, எல்லாருங் கைவிட, பலவகை மடிமையும் மிடிமையுமடைந்து தீரா நோயாற் பீடிக்கப்பட்டு ஓட்டாண்டியாக அலைந்து திரிந்து மாண்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையெத்தனை பேர். இந்தப் பொல்லா மதுபானம் மனுஷனாகப் பிறந்தவனுக்குச் சிறிதும் ஆகாதென்பது பற்றியல்லவா நாயனாரும்,

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்"

என்று பணித்துள்ளார். ஆனால், கள்ளைக் காட்டிலும் நஞ்சு நல்லதென்பது என்னுடைய கருத்து! ஏன்? கள்ளெனிலோ தன்னையுண்டானைப் பலவகையான பாவத்திற்கும் பழிக்கும் ஆளாக்கி அவன் மரியாதையைக் கெடச்செய்து அவனைப்பலகாலம் நோயையும் சிலசமயம் பைத்தியத்தையும் கொள்ளச் செய்து இடர்ப்படுத்தி இறக்கச் செய்யும்; நஞ்செனிலோ தன்னையுண்டவனை உடனே இறக்கச் செய்து விடும்; பாவம் பழிகளையும் மதிப்பீனத்தையும் நஞ்சு தன்னையுண்டானுக்குத் தேடி விடமாட்டாது; ஆனதினாற்றான் கள்ளைக் காட்டிலும் நஞ்சு நல்லதென்கிறேன்; நண்பா, மேலும் கள்ளை மட்டாகக் குடிக்கலாமென்கிறாய்; தொடக்கத்திலே சில பகல் தான் நீ கள்ளைக் குடிக்க முடியும்; அதன்பின் கள்ளு உன் அறிவைக் குடிக்கத் தலைப்பட்டுக்கொள்ளும்; உன் சுயபுத்தி கெட்டபின் மட்டு மரியாதை உனக்கு எப்படிப் புலப்படும்; ஆனதால் அந்த எண்ணத்தை விட்டுவிடு; மதுபானமொன்று மாத்திரமல்ல, தீய உணவுகளும், தீயபழக்கங்களும் பழகிக்கொண்டால், பிறகு பழகியவன் அவைகளை விட முயன்றாலும், அவை அவனைத் தப்பிப்போக விடமாட்டா, மதுபானம் முதலிய தீய பழக்கங்கள் ஒருவனிடத்தில் முதிர்ந்துவிட்டாற் பின்னர் அவனுக்கு எவரெவர் எத்தனையெத்தனை புத்தி சொன்னாலும் அவன் கேட்கப்போவதில்லை; இதுபற்றியே வள்ளுவரும்,

"களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇயற்று"

என்று கூறிப்போந்தனர். அதாவது கள்ளுண்டு வெறிகொண்டு திரிபவனுக்குப் புத்தி சொல்லித் தெருட்டி அவனை மதுபானஞ்செய்யவொட்டாது தடுக்க முயலுதல், ஆழமான தண்ணீருள் மூழ்கி அடியிற்போய்க் கிடப்போனை அத்தண்ணீருள் விளக்குப்பிடித்துத் தேடிப் பார்த்து எடுப்பதற்கு முயற்சிசெய்தல் போலுமென்பதாம். இந்தத் தீயபழக்கம் என்னிடத்தில் இன்னமும் அதிகம் முற்றாமையினால், என் உபாத்தியாயருடைய புத்தியை மேற்கொண்டு இம்மதுபானத்தை விடலானேன்; அப்பா, பாலசிங்கா நீயும் அப்படியே, என் புத்திகேட்டு இந்த மதுபானத்தை மாத்திரம் அறவே விடுவாயானால் உன்னைப்போல் உற்ற நண்பன் உலகத்திலே எனக்கு வேறு எவனுண்டு; நண்பா உன்னை இரந்து கேட்கிறேன் இதனை விட்டுவிடு" என்றான்.

"பெண்புத்தி கேட்டிடும் பேதையும் பதரே"

இவைகளையெல்லாம் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த பாலசிங்கன் சற்றுநேரம் யாதும் பேசாதிருந்து பெருமூச்சு விட்டுக்கொண்டு விசுவநாதனைப் பார்த்து "சிநேகிதா, நீ சொல்வதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்; ஆனால் மதுபானஞ் செய்யவொண்ணாதெனவும் என்னுடன் இனிமேற் கூடித்திரியவொண்ணாதெனவும் உனக்கு ஞானம் பிறந்த ஞாயம் எனக்குத் தெரியும்" என்னலும் "அந்த ஞாயத்தை எனக்குச் சொல்லிவிடலாமே" என்று விசுவநாதன் கேட்டான். "வேறொன்றுமல்ல நீ மதுபானஞ் செய்வதையும் என்னுடன் கூடித் திரிவதையும் இன்னமும் அறிய நேர்ந்தால் உன் மாமனார் தம் மகளை மணம் முடித்துத் தர மாட்டாரென்பதல்லவா உனது நியாயம்? நீ மதுபானஞ் செய்வதை அவர்கள் வெறுப்பது தக்க நியாயந்தான்; ஆனால் உன் அரிய நண்பனாகிய என்னுடன் சிநேகஞ் செய்யக் கூடாதென்று அவர்கள் தடுப்பதற்கு அவர்களுக்கு அதிகாரமில்லை, என் தொடர்பு உனக்கு இஷ்டமில்லையாயின் இன்றே நான் பிரிந்துகொள்கிறேன், ஆனால் கல்யாணஞ் செய்துகொள்ள முந்தியே பெண் பகுதியாருக்குப் பயப்பட்டு, அவர்கள் புத்திகேட்டு நடக்கத் தொடங்கிய நீ கல்யாணஞ் செய்து அவர்கள் வீட்டிற்குட் புகுந்துவிட்டால் பெண்டாட்டிக்கு அடிமையாவாயென்பதைச் சொல்லவும் வேண்டுமா! கல்யாண வீட்டிலேயே அழுபவள் இழவுவீட்டிற்குப் போனாற் சும்மாவிருப்பாளா? செருப்பைக் காலுக்கிடுவாரையன்றிக் கையிலிடுவாரையும் எப்போதாயினுங் கண்டாயா? பெண்ணையும் அவளுக்குரிய இடத்திலே வைப்பதன்றித் தலையிலே தூக்கி வைக்க முடியாது; "பெண்புத்தி கேட்டிடும் பேதையும் பதரே" என்ற வாக்கியம் உனக்குத் தெரியுந் தானே; சரி, இருட்டாய்விட்டது; நீயும் உன் வீட்டிற்குப் போகலாம்; நானும் என் வீடு போய்ச் சேரவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு எழுந்தான் பாலசிங்கன்; "அப்படியல்ல இன்னுஞ் சற்றுவேளை இரு" என்று தடுத்து கையைப்பிடித்து இருத்தினான் விசுவநாதன்.

* * *

உலகம் பலவிதம்: 1944 ஜூன் 15
விசாலாட்சி: (முற்றொடர் - 06)

"தோழனோடும் ஏழைமை பேசேல்"

"மித்திரா, நீ எனது உற்ற நண்பனென்ற காரணத்தினால் உனக்கு உள்ளதைச் சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டேன்; நீ அதனை விபரீதமாக நினைத்துக் கொண்டு என்னைப்பெண்வீட்டுக்காரர் சொற்கேட்டு நடப்பவனென்றும் சுயபுத்தியில்லாதவனென்றுங் கருத்துப்பட ஏளனஞ் செய்கின்றாய்;

"எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"

என்றபடி பெண்வீட்டுக்காரராக உன்னையொத்த உற்ற நண்பராக, உறவினராக, உபாத்தியாராக, பெரியார் சிறியாராக, எவராக நீதியைச்சொன்னாற் கேட்டு நடக்க வேண்டியதுதானே முறை; நான் பழகாத பழக்கம் பழகி நடவாத நடைநடந்து கெட்டுப்போனால் என் பெற்றோருக்குப்போல, என் பெண்வீட்டாருக்கும் கவலை நேருந்தானே, எனக்கு வருஞ் சுக துக்கங்கள் பிரதானமாக என் தாயாருக்கும் மாமன் மாமிக்கும் எனக்கென்று நியமித்திருக்கும் பெண்ணுக்கும் உரியவைகளல்லவா; நல்ல புத்தியை மாமன் வீட்டுக்காரர் சொன்னாரென்ற காரணம் பற்றிக் கொள்ளாது தள்ளிவிடச் சொல்லுகிறாயா? "...விறன் மந்திரி மதியும் பேசில் இவையுடையாள் பெண்" என்றுதானே பாடப்பட்டிருக்கின்றது. உத்தம பத்தினிகள் தத்தம் நாயகனுக்கு இடர் நேர்ந்த காலத்திலே தக்க உபாயஞ் சொல்லி தேற்றி அந்த இடரையகற்றி வழிகாட்டியதைப் பாலசிங்கா, நீ கேள்விப்பட்டதில்லையோ? கௌசிக முனிவருடைய தூண்டுதலினால், சுக்கிரனாகிய தரகன் அரிச்சந்திர மன்னனை பொருள் தரும்படி இம்சிக்க, அந்த மன்னன் அச்சமயத்திலே செய்வதின்னதென்று தெரியாமற் கலங்கி நிற்க, "பிராணேசா, என்னை அடிமையாக விற்று முனிவருடைய கடனைத் தீர்த்துவிடுதீர்" என்று உற்ற இடத்தில் உபாயஞ் சொன்னவள் உத்தமியாகிய சந்திரவதியல்லளோ? அரசனும் உடனே அப்படியே செய்தெல்லவா முனிவர் கடனையும் அந்தச் சமயத்திலே தனக்கு நேர்ந்த இடரையும் தீர்த்தான்; ஆனதால் பெண்புத்தியும் கேட்கத்தக்கதென்றாற் கேட்கத்தான் வேண்டும்; பெண்புத்தி கேட்பதுங் கேளாதொழிவதும் அப் புத்தியை சொல்லும் உத்தமியிலேயே தங்கியிருக்கின்றது. ஆனதாற் பாலா, இந்த விஷயத்திலே உன்னுடைய கொள்கை தவறாகும்; "தோழனோடும் ஏழைமை பேசேல்" என்ற வாக்கியத்தை மறந்து உனக்கு உற்றதை சொன்னமையினாற்றான் நீ என்னைப் பரிகசிக்கின்றாய்; அல்லாமலும், என் மாமனார் வீட்டுக்காரர் இற்றைவரையில் எனக்கு நேரில் ஏதும் புத்தி சொன்னாரல்லர்; எனது உபாத்தியாயர் சொன்ன சற்புத்தியைக்கேட்டே நான் அப்புத்தியின்படி நடக்கத் துணிந்தேன்; நீயும் மதுபானஞ்செய்தல் முதலிய தீய செயல்களை இன்றோடு அறவேயொழித்து, உன் குலத்திற்கும் மரபுக்கும்தக்க நடந்தால் உனக்கும் உன்னுடன் கூடித்திரியும் எனக்கும் அது பெருமையேயாகும்" என்று இதமாக மொழிந்தான் விசுவநாதன்.

"தையல்சொற் கேளேல்"

விசுவநாதன் சொன்னவைகளையெல்லாம் அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த பாலசிங்கன் சற்றுவேளை யோசித்தபடி யாதும் பேசாதிருந்துவிட்டுப் பின்னர் அவனைப் பார்த்து "நண்பா, நீ சொன்னவைகளை நான் மறுக்கவில்லை; உத்தமமான மனைவி வந்து வாய்த்து விட்டால், அவளை மனைவியாகயுடையவனே பெரும் பாக்கியவான்; அப்படிப்பட்டவளுடைய சொல்லைக்கேட்டு நடப்பதனால் நன்மையேயொழிய ஒருபோதும் தீமை வராதென்பது நிசம்; ஒரு பெண் உத்தமியென்பதையும் அல்லளென்பதையும் அவள் கணவனிடம் வருமுன் அந்தக் கணவன் அறிந்துவிட முடியுமா? இதனால் உன் அம்மான் மகளை உத்தமியல்லளெனச் சொல்லுகிறேன் என்று கனவிலும் நினையாதே; அவள் மகா உத்தமியாயிருக்கலாம்; அப்படி இருக்கவேண்டுமென்பதே எனது விருப்பமாகும்; நான் உலகத்துக்குப் பொதுவாக உள்ள நியாயத்தைதான் சொல்லுகிறேன்; நீ சொன்னவை முழுவதும் நிசமானால் தையல் சொற்கேளேல் என்று ஓவையார் சொன்னதற்கு நியாயமென்ன? "காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கண் ஆய்தல் அறிவுடையோர் கண்ணதே. காய்வதன்கண், உற்ற குணந்தோன்றா உவத்தலின்கண் குற்றமும் தோன்றாக்கெடும்" என்று நீயே முன்னர்ப் பலமுறை எனக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறாய்; மனம் ஒருவனிடத்திலே, இல்லையேல் ஒருத்தியிடத்திலே படிந்துவிட்டால், பின்னர் நியாயம் நடுவுநிலைமையென்பன அவன் விஷயமாய், இல்லையேல் அவள் விஷயமாகத் தோன்றாதல்லவா? உன் மைத்தினியின் மீது நீ வைத்த காதல் அவளளவில் நிற்பதோடு அமையாது, அவள் பெற்றாராகிய உன் மாமன் மாமியிடத்தும் அன்பையும் விசுவாசத்தையும் ஆக்கிவிட, நீ இப்பொழுது அவர்களெல்லோரும் நல்லவர்களென் றெண்ணிக்கொண்டு உன் உற்ற நண்பனாகிய என்னைப்புறக்கணிக்கத் தலைப்பட்டுக்கொண்டாய்; பேய் சிரித்தாலும் பிழை, அழுதாலும் பிழை யென்றபடி இனி நான் உனக்கு நன்மை சொன்னாலும் தீமை சொன்னாலும் எதுவும் உன் செவியில் ஏறாது; இதனையிட்டுத்தான் உன் சிநேகத்தை இன்றேடு நான் விரும்பவில்லையென்கிறேன்; இந்த நற்காரியத்தை நீயும் சற்றுமுந்தி உன்னையறியாமலே எனக்கு சொல்லி விட்டாய். உள்ளன்பிலாதபேர் தித்திக்கவே பேசி உறவாடும் உறவும் உறவாமோ? ஆனதால் விசுவநாதா, உனக்கும் எனக்குமிடையேயுள்ள பாசம் இன்றோடு அற்றுப்போகட்டும்; இதனால் எனக்குமுனக்கும் எவ்வகையான பகையும் இல்லையென்பதையும் மறந்துவிடாதே; நீ என்னுடன் சினேகமாயிருந்தாலும் சரி, இல்லையென்றாலும் சரி எங்கிருந்தாலும் நீ நல்லாயிருக்க வேண்டுமென்பதே என்னாசை என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் முகத்திற் கவலைபடச் சொல்லிவிட்டுச் சரேலென எழுந்து சென்றான் பாலசிங்கன். விசுவநாதனும் அவன் ஈற்றிற் சொன்ன வார்த்தைகளினால் மனம் கரைந்தானாய், "எங்கே போகின்றாய் பாலா! கோபித்துக்கொண்டாயோ; நில், நில்! நானும் உன்னுடன் வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டு எழுந்து, நிழல் போவதுபோல அவனைத் தொடர்ந்து போனான்; விரைந்து சென்ற பாலசிங்கன் தன்னை விசுவநாதன் தொடர்ந்து வருகிறானென்பதைத் திரும்பிப் பார்த்தபோது கண்டு தானும் மெல்ல மெல்ல நடந்து போனான்.

"கெடுவது செய்யின் விடுவது கருமம்"

விசுவநாதன் தன்னைத் தொடர்ந்து வருதலைக்கண்ட பாலசிங்கன் சிறிது தாமதித்து நின்று அவனையுங் கூட்டிக்கொண்டு போகும்போது அவனைப் பார்த்து "விசுவநாதா, என்னை ஏன் பின்னும் பின்னும் இழுக்கிறாய்? நான்தான் உனக்கு ஆகாதவனானேனே; நீயும் உன்பாட்டிற் போகலாம்; நானும் என்பாட்டிற் போகிறேன்" எனலும் "இல்லை பாலா, உன்னை வெறுத்துப் பிரிந்துபோக மனமெழவில்லை; ஆனதால் நான் உன் வீட்டிற்கு வரவிரும்புகிறேன்" என்று கவலையுடன் சொன்னான் விசுவநாதன். "ஓம், நூறுமுறையும் வரலாம்; நீ என்னை வெறுத்தாலும் நான் உன்னை இன்னமும் வெறுக்கவில்லையே" என்று சொல்லி அவனையும் உடன் கூட்டிக் கொண்டு தன் வீட்டிற்குப் போனான் பாலசிங்கன். அங்கே அவனுக்கு வழக்கம்போல் ஆகவேண்டிய உபசாரங்களையெல்லாஞ் செய்தான். விசுவநாத னெனிலோ பாலசிங்கனுடைய தொடர்பைக் கொள்ளவும் தள்ளவும் மனமில்லாதவனாய்த் தேக்கிலையில் நீர் போல் தியங்கினான். பாலசிங்கன் விவேகியாதலினால் விசுவநாதனுடைய உள்ளம் ஊஞ் சல்போற் சஞ்சலப் படுதலை ஒருவாறு உணர்ந்து கொண்டான்; அவன் உடனே எழுந்து தன் வீட்டிலுள்ள ஒரு அறையுட் சென்று ஒரு மதுபானம் நிறைந்த போத்தலையும் அதனை வார்த்துக் குடிப்பதற்காகிய ஒரு பளிங்குப் பாத்திரத்தையும் முறையே இரு கைகளிலும் பற்றியபடி மீண்டுவந்து தலைவாசற் பக்கத்தில் இருந்துகொண்டு விசுவநாதனைப் பார்த்து "அன்பா, உன் சொற்படி நானும் இந்தப் பொல்லாத மதுபானத்தை வெறுத்து விடப்போகிறேன்; நீயும் அப்படியே செய்யத் துணிந்தமை மெத்த நல்லது; ஆனால், இன்றைக்கு மாத்திரம் இதனைக் குடித்துவிட்டு நாளை தொடக்கம் மதுபானத்தைத் தீண்டுவதில்லையென்று இப்பொழுதே சத்தியஞ் செய்துவிடுவோம்; இதுவே கடைசிமுறை" என்று சொல்லிக்கொண்டு, போத்தலிலிருந்த மதுபானத்தில் ஒருபகுதியை அந்தப் பளிங்குப் பாத்திரத்தில் நிறைய வார்த்து நீட்ட, விசுவநாதன் அதனை வாங்கித் தன் முன்னிலையிலிருந்த மேசையின் ஒருபுறத்தே வைத்துவிட்டுப் பாலசிங்கனைப் பார்த்து "பாலா, இதுஎன்ன வேலை? நீயும் நானும் குடிப்பதில்லையென்று உறுதி செய்துகொண்டு, அதற்கு மாறாக உடனே இதனைக் குடிப்பதென்றால் உனது நியாயம் எனக்குப் புலப்படவில்லை; இவ்வளவு மனக்கட்டுப்பாடில்லாத நீயா மதுபானத்தை அறவே விடப்போகின்றாய்? நீ சொன்னாலும் நான் இதனை நம்பமாட்டேன். இதனால் நீயுங் கெட்டு என்னையுங் கெடுக்கப்போகிறாய்; கெடுவது செய்யின் விடுவது கருமம் என்றபடி உப்படியான நோக்கம் உன்னிடத்தில் இருக்குமானால் உன் தொடர்பை நான் விடாமல் முடியாது" என்று சொல்லிக்கொண்டு போதற் கெழுந்தான் விசுவநாதன்; "சரி, அப்பா, நீ குடிக்கவேண்டாம்; சற்றுவேளை சும்மா இரு, பின்பு நான் உன்னை உன்வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போய் விடுகிறேன்" என்றான் பாலசிங்கன்; அப்பொழுது நேரம் இரவு எட்டு மணிவரையிலிருக்கும்.

* * *

உலகம் பலவிதம்: 1944 ஜூன் 22
விசாலாட்சி: (முற்றொடர் - 07)

"மருந்தேயாயினும் விருந்தோடுண்"

பளிங்குப்பாத்திரத்தில் நிறைத்த மதுபானத்தைப் பழையபடி "போத்தலி"ல் வார்த்து வைத்தற்குப் பாலசிங்கனுக்கு மனமெழவில்லை. விசுவநாதனைக் குடிக்கும்படி நெருக்கவும் வசதியில்லை; இப்படி அவன் இடைஞ்சற்பட்டுக் கொண்டிருக்குஞ் சமயத்திலே, பாலசிங்கனுடைய இன்னொரு தோழனாகிய வீராசாமி அவனைக்காணும்படி அங்கேவந்தான்; அந்த வீராசாமியை விசுவநாதனும் அறிவான்; வீராசாமியென்பவன் தான் எல்லாமறிந்தவனென்றும் தன்னைவிட விவேகிகள் ஊரிலே வேறெவருமில்லை யென்றும் தன்னைத்தானே பெரியவனென மதித்துக் கர்வம் பூண்டவன்; அழுக்காற்றுப்பாண்டமாயுள்ளவன்; வஞ்சனை பொறாமை லோபம் முதலிய தீய குணங்களுக்கும் பொய் கோள் களவு முதலிய தீய செயல்களுக்கும் உறைவிடமாகவுள்ளவன்; தான் பிடித்த முயலுக்குக் கொம்பு மூன்று எனச் சாதிக்குந் தன்மை கொண்டவன்; சின அடக்கம் மன அடக்கமென்பன சிறிதுமில்லாதவன்; உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவதிலும் நடிப்பதிலுந் தேர்ந்தவன்; சுருங்கச் சொல்லுகில் இயல்பிலே நல்ல குணமுள்ளவனாகிய பாலசிங்கன் இப்படித் தீயவனானமைக்குக் காரணன் இந்த வீராசாமியேயென்று சொல்லலாம். ஆனாலும், வாக்கு வன்மையோடு பேசி எவரையும் வசீகரப்படுத்தித் தன் கருமம் பார்க்கும் ஆற்றல் இந்த வீராசாமி யென்பவனிடத்திலேயுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான குணமுஞ் செயல்களுங் கொண்ட வீராசாமி அங்கே வந்தவுடன் மதுபானப் போத்தலையும், அதன் பக்கத்தே மதுபானம் நிறைத்து வைத்த பளிங்குப் பாத்திரத்தையுங் கண்டு ஆநந்தமடைந்தானாய்ப் பாலசிங்கனையும் விசுவநாதனையும் பார்த்து "இந்தக் குடிவகையை எனக்கென்று வார்த்து வைத்து விட்டு என்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறீர்களா" என்று சொல்லிக்கொண்டு அயலிலேயுள்ள ஒரு நாற்காலியில் இருந்து இந்த இருவருடைய பதிலையும் எதிர்பாராதவனாய், பளிங்குப்பாத்திரத்தில் நிறைத்திருந்த மதுபானத்தை எடுத்து ஒரு கவலையுமில்லாமல் உறிஞ்சிவிட்டான். பாலசிங்கனும் விசுவநாதனும் வீராசாமியின் செயலைக் கண்டு புன்னகை கொண்டனர்; அவன் அவ்வளவோடு அமைந்து நின்றிலன்; அந்தப் போத்தலிலுள்ள குடிவகையில் ஒரு பாகத்தைப் பளிங்குப் பாத்திரத்திற் பின்னரும் நிறையப்பெய்து அதனைக் குடிக்கும்படி பாலசிங்கனுக்கு நீட்ட, அவன் தான் பிறகு குடிப்பதாகச் சொல்லிவிட்டு விசுவநாதனுக்குக் கொடுக்கும்படி குறிப்பாற் காட்ட, வீராசாமி அவனிடம் நீட்ட, அவன் மறுக்க, "இந்தா மச்சான் இதனை நல்லகுணத்தோடு குடித்துவிட்டுப் பாத்திரத்தை உடனே தா, இல்லையேல் உனக்கு நானே பருக்கிவிடுவேன்" என்று அதட்டிச் சொன்னான். விசுவநாதன் பொறியில் அகப்பட்ட எலிபோலச் செய்வதென்னவென்றறியாது விழித்தான். "இஷ்டமில்லாத ஆளை ஏன் நெருக்குகிறாய்" என்று நயவஞ்சகமாக மொழிந்தான் பாலசிங்கன். "விசுவநாதனுக்கு விருப்பமில்லாவிட்டாலும் இவன் குடிக்க வேண்டுமென்று எனக்கு விருப்பம்; இந்தநேரத்தில் என் விருப்பத்தின்படி இவன் எங்களுடன் சேர்ந்து குடிக்கத்தான் வேண்டும்; நீங்கள் இரண்டுபேரும் படித்தவர்கள்; எனக்குத் தமிழ்ப்படிப்புமில்லை, இங்கிலீசுப்படிப்புமில்லை; ஆனாலும் உலகப்படிப்பு உங்களைப் பார்க்கிலும் என்னிடத்தில் அதிகமுண்டு; "மருந்தோடாயினும் விருந்தோடுண்" என்று நீங்கள் படித்ததில்லையா? கூட்டாளிமார் மூன்றுபேர் கூடியிருக்குமிடத்தில் இருவர் குடிக்க ஒருவர் பார்த்துக்கொண்டிருப்பதா? அப்படியானால் விசுவநாதன் முந்தியே இந்த இடத்தில் வந்திருக்கப்படாது" என்று சொல்லிக் கொண்டு குடிவகை கொண்ட பாத்திரத்தை மீட்டும்நீட்ட, விசுவநாதன் பயந்தவனாய், மெல்ல அம்மதுபானத்தை ஏற்றுக்கொண்டு பருகாமல் இருந்தான்; இதற்கிடையில் வீராசாமியிடத்தில் வெறி தலைக்கொண்டு விட்டது; "விசுவநாதா! நீயே உதைப் பருகுகிறாயோ இல்லையேல் நான் பருக்கட்டுமா" என்று மீளவுங் கேட்பதற்கிடையில், அச்சமிகுதியினாற் போலும், விசுவநாதன் அந்தப் பாத்திரத்தை வெற்றுப் பாத்திரமாக்கிவிட்டுக் கீழே வைத்து விட்டான்; வைத்த பாத்திரத்தை வீராசாமி பின்னரும் எடுத்து மதுபானத்தினால் நிரப்பிப் பாலசிங்கனிடம் நீட்ட அவன் இரண்டு கைகளாலும் ஏற்று பால் குடிப்பான் போல உடனே குடித்துவிட்டுப் பாத்திரத்தை இருந்த இடத்தில் வைத்தான்.

"கண்டதே கண்டும்
கேட்டதே கேட்டும்"

இதற்கிடையில் வீராசாமி தன்னிடத்திருந்த மூன்று "சிகறற்"றை எடுத்து அந்த இருவருக்கும் இரண்டை வழங்கி, தானும் ஒன்றை வாயிற் கௌவிப் பற்றவைத்துக் கொண்டு தீப்பெட்டியை அவ்விருவருக்குங் கொடுக்க, அவர்களும் முறையே பற்ற வைத்துக்கொண்டு தீப்பெட்டியை மீட்டுக் கொடுத்தனர்; இங்ஙனமாக, பாலசிங்கன் வீராசாமியைப் பார்த்து, "இன்னும் நாங்கள் இந்த இடத்திலே இப்படியிருந்து பொழுதுபோக்குவது புத்தியல்ல; தாயார் இந்தத் தலைவாசற் பக்கம் வந்தாற் பழி வரும்" என்றான்; "அப்படியானாற் கடற்கரைக்குப் போவோம்" என்றான் வீராசாமி; "கடற்கரைக்குப் போய்விட்டுச் சற்று முந்தித்தான் மீண்டு வந்தோம்" என்றான் பாலசிங்கன். "அதுவும் அப்படியா? சரி, "றீகல்" படமாளிகையில் இன்றைக்கு என்ன படம்" என்று கேட்டான் வீராசாமி; "திருநீலகண்டர்" என்றான் விசுவநாதன்; "அந்தப்படம் உதவாது; 'தாசிப் பெண்' என்றால் நல்லாயிருக்கும் போகலாம்" என்று வீராசாமி சொல்லுதலும், "தாசிப்பெண் படமும் நான் நான்குமுறை பார்த்துவிட்டேன்; கண்டதே கண்டும் கேட்டதே கேட்டுங் காலங் கழிப்பதனால் என்ன பயன்" என்று பாலசிங்கன் சொன்னான்; அதனைக் கேட்டுக்கொண்டிருந்த விசுவநாதன் "பாலசிங்கன் கண்டதே கண்டுங் கேட்டதே கேட்டுங் காலங்கழிப்பதிற் பயனில்லையென்கிறாய், உண்டதே யுண்டும் குடித்ததே குடித்தும் காலங்கழிப்பதில் மாத்திரம் பயனுண்டோ" என்று சிரித்தபடி கேட்டான்; "விசுவநாதா, உனக்கு வெறி இன்னமுஞ் சரியாய் ஏறவில்லை" என்று பாலசிங்கன் சொல்ல, வீராசாமி "எனக்குஞ் சரியாய் ஏறவில்லை" என்று சொல்லிவிட்டுப் போத்தலையெடுத்துப் பாத்திரம் நிறைய வார்த்துத் தான் முதற் குடித்துவிட்டுக் குறைச் சிக்கறற்றைப் பழைய படி வாயிற் கௌவிக்கொண்டு, மற்றை இருவருக்கும் வார்த்துக்கொடுக்க அவர்களும் அப்படியே குடித்துவிட்டுத் தத்தம் குறைச் சிக்கறற்றைப் பழையபடி வாயிற் கௌவிப் புகைத்தனர், இரண்டாமுறை குடித்தபின்னர் மூவர்க்கும் மதுமயக்கம் விஷம்போல் தலைக்கேற, இன்ன இடத்திற்குச் செல்வதென்ற நோக்கமில்லாதவராய்த் தலைவாசலை விட்டுப் புறப்பட்டு வெளியே செல்வாராயினர்.

பட்டும் பட்டும் உணர்ச்சியில்லையா?

வெளியேசென்ற மூவரும் தெருவீதியை யடைந்தவுடன் எங்கே செல்வது, என்ன செய்வ தென்று நின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசித்தனர்; "கடற்கரையிலிருந்து சீட்டாடலாம்; ஆனால் இன்னுமொரு ஆள் வேணுமென்றான்" வீராசாமி; "எல்லாவற்றிற்கும் முதல் பசிக்கிறது, எங்கேனும் தேநீர்க்கடைக்குப் போகவேண்டும் வாருங்கள்" என்றான் பாலசிங்கன்; "பணமில்லையே" என்றான் விசுவநாதன்; "என் மடியிற் போதிய பணமிருக்கிறது, வாருங்கள் இப்படியே கடைக்குப்போவோம்" என்று பாலசிங்கன் சொல்லிக்கொண்டு முற்பட்டுப் போக, மற்றை இருவரும் அவன்பின்னே போயினர்; அவர்கள் போய்ச் சேர்ந்த கடையில் "ஆகாரம் ஏதுமுண்டோ" என்று பாலசிங்கன் வினவியபோது, இருந்த பண்டமெல்லாஞ் செலவாய் விட்டன; இனி நாளைக்காலையிலே தான் வரும்" என்றான் கடைக்காரன்; "வெறுங் கடையை ஏன் திறந்து வைத்துக்கொண்டிருக்கிறாய்" என்று மதுமயக்கத்தினால் வீராசாமி கடைக்காரனைக் கேட்க, அவன் "அது என் பிரியம்" என்று பதில் சொல்ல, வீராசாமி கடைக்காரனுடன் நெருங்க, கடைக்காரனும் எதிர்க்க, சண்டை மூளுமென்று பயந்து விசுவநாதன் வீராசாமியைக் கையிற் பிடித்து இழுத்துக்கொண்டு வர, "இல்லை, என்னைத் தடுக்காதே விடு" என்று அவன் பிடித்தபிடியை உதறவிட்டு வீராசாமி கடைக்காரனைப் புடைக்கப்போக, தன்னை அவன் புடைப்பானென்று ஆயத்தமாக நின்ற கடைக்காரன் வீராசாமியின் தலையிலே, தான் கையிற் கொண்ட குறுந்தடியொன்றினால் அவனுடைய தலையிலே மோத, மண்டையுடைந்து இரத்தம் பெருக, "ஐயோ என்னைக் கொல்லுகிறான்" என்று கதறிக்கொண்டு தலையைப் பொத்திப் பிடித்தபடி தன் கூட்டாளிமார் நிற்குமிடத்திற்கு ஓடி வந்தான் வீராசாமி; "நான் தடுக்கத் தடுக்க, கையைப் பிடிக்கப்பிடிக்க உதறிக்கொண்டு போனாயே, உனக்கு உது தகும்; பட்டாலறிவன் சண்டாளன்" என்று சொன்னான் விசுவநாதன்; "இல்லை இவனைச் சும்மா விடமாட்டேன், இன்றைக்கு ஒரு கை பார்க்கிறேன்; இவனும் பத்து மாதந்தான்; நானும் பத்து மாதந்தான்; ஆறிலுஞ் சா, நூறிலுஞ் சா" என்று சொல்லி ஆத்திரப்பட்டுக் கொண்டு வீராசாமி அயலேகிடந்த ஒரு பெரிய கல்லை இரண்டு கைகளாலும் தூக்கிக்கொண்டு கடைக்காரனைத் தாக்கும்படி போக, அதனைக் கண்ட பாலசிங்கன், அவன் கைகளைப் பிடித்துக் கல்லைக்கீழே போடச்செய்து "வீராசாமி உனக்கு இன்னமும் வெறி முறியவில்லையா? பட்டும் பட்டும் உணர்ச்சியில்லையா? வெள்ளரிப்பழம் பிளந்த விதமாக உன் மண்டை பிளந்து விட்டது, இரத்தம் பெருகுகிறது, பேசாமல் வா, முச்சந்தியிலிருக்கும் மருந்துக் கடையில் இந்தக் காயத்திற்கு மருந்து போடுவிப்போம்" என்று சொல்லி வீராசாமியைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனான்; பாலசிங்கனைப் போலவே விசுவநாதனுக்கும் மதுமயக்கம் குறைந்துவிட்டபடியால் அவனும் தான் அன்று அவர்களுடன் கூடிக்கொண்டு வந்ததையிட்டுப் பச்சாத்தாபப்பட்டவனாய் அவர்கள்பிறகே சென்றான்; நேரம் இரவு 8 மணிக்கு மேற்பட்டு விட்டமையினால், மருந்துச்சாலை பூட்டப்பட்டது; அவர்கள் கதவிலே தட்டிக் கூப்பிட்டார்கள்; உள்ளே உறங்கிக்கிடந்த வைத்தியர் உறக்கம் நீங்கியெழுந்து வெளிச்சத்தை ஏற்றிவிட்டுக் கதவைத் திறந்துபார்த்தார்; இவர்கள் மூவரும் நிற்பக் கண்டார். பாலசிங்கன் வீராசாமியின் தலையிலுள்ள காயத்தைக்காட்டி, அதற்குச் சிகிச்சை செய்யவேண்டுமென்று வைத்தியரைக் கேட்டான்; வைத்தியர் அந்த ஊறைப் பார்த்து விட்டு அது எப்படி நேர்ந்ததென்று கேட்க, தடக்கி வீழ்ந்தவிடத்திலே தலை கல்லில் மோத மண்டையுடைந்ததென்று பாலசிங்கன் உள்ள காரணத்தை மறைத்துச் சொன்னான்; கேட்ட வைத்தியர் "இது அப்படியான காரணத்தினால் நேர்ந்ததாகப் புலப்படவில்லை; வைத்தியனுக்கும் பொய் சொல்லலாமா? உள்ளதைச் சொன்னாற்றான் சிகிச்சை செய்வேன்" என்று கடிந்து ஏச, உள்ளதைச் சொன்னான் விசுவநாதன்; உடனே வைத்தியர் வீராசாமியின் தலையிலுள்ள காயத்தைக் கழுவி மருந்திட்டுச் சிகிச்சை செய்துவிட்டு "நாளை மற்றைநாள் வந்து மருந்து கட்டுவிக்கவேண்டும்" என்று சொல்ல, அவர்கள் வைத்தியருக்குச் சிகிச்சையின் பொருட்டுக் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுத்துவிட்டு அவ்விடம் விட்டகன்றனர். போகும்போது வீராசாமி மற்றை இருவரையும் பார்த்து "ஐயோ, என்னால் தலைவேதனை சகிக்கமுடியவில்லை; எனக்கு ஏதும் மதுபானம் தந்தாற்றான் இந்த வேதனை தீரும்" எனலும் பாலசிங்கன் "இந்த நேரத்தில் நாம் அதற்கு எங்கே போவது படக்காட்சி பார்க்கப்போனால் அங்கே ஒருபோது கிடைக்குமென்றான்; அப்படியே மூவரும் அங்கே போவாராயினர்.

* * *

உலகம் பலவிதம்: 1944 ஜூன் 29
விசாலாட்சி: (முற்றொடர் - 08)

"அறிவிலார்க் குரைப்பவர்
அவரிற் பேதையர்"

அந்த மூவரும் படக்காட்சிச் சாலைக்குப் போனபோது அங்கே இடையிற் பத்துநிமிஷ நேரம் ஓய்வு விடப்பட்டிருந்தது; அப்பொழுது பாலசிங்கன் "எங்களுக்கு மூன்று "டிக்கற்" (பிரவேசச் சீட்டு) தரவேணும்" என்று சீட்டுக் கொடுக்குமிடத்தில் நின்றவனைக் கேட்க, அவன் "பாதிக்காட்சி முடிந்துவிட்டது, இப்பொழுது ஓய்வு நேரம், நாளைக்கும் இதே காட்சிதான் நடக்கும்; நீங்கள் வேணுமானால் வந்து பார்க்கலாம்" என்று சொன்னான்; "பாதிக்காட்சி முடிந்து போனால், அதனாலே வரும் பொருள் நட்டம் எங்களுக்கல்லாமல், உமக்கல்ல;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணந் தருவோம் "டிக்கற் தருகிறீரா? இல்லையா" என்று பாலசிங்கன் சிறிது வெருட்டிச் சொல்ல, "அறிவிலார்க் குரைப்பவர் அவரிற் பேதையர்" என்று மெல்லச் சொல்லிக்கொண்டு, எந்த வகுப்பு "டிக்கற்" தேவை என்று அவன் கேட்க, "எந்த வகுப்பானாலுஞ் சரி, கொடும்" என்றான் வீராசாமி. "சரி, முதல்வகுப்பு டிக்கற் மாத்திரம் இருக்கிறது; மற்றை வகுப்புக்குரிய சீட்டுக்கள் செலவாய்விட்டன; தருவதா" என்று கேட்க "ஓம்" என்றான் வீராசாமி; மூவருக்கும் முதல் வகுப்புக்குரிய மூன்று சீட்டுக்களைக் கொடுக்க அவர்கள் பணத்தைக் கொடுத்துவிட்டு விரைந்து மண்டபத்துட் புகுந்தவுடனே நேரில் மதுபானம் வழங்கப்படும் அறைக்குட்போய் ஐந்து ரூபா நோட்டைக்கொடுத்து தலைக்கொரு ரூபாவாக மூன்று பேருக்கும் மூன்று ரூபாவிற்கு மதுபானந் தா என்று வீரசிங்கன் கேட்க மதுபானம் விற்போன் அப்படியே கொடுக்க, முறையே மூவரும் வாங்கிப் பருகினார்கள். ஐந்து ரூபாவில் எஞ்சிய இரண்டு ரூபாவையும் தரும்படி வீராசாமி கேட்க மதுபானம் விற்பவன் "இப்பொழுது இங்கே சில்லறை" இல்லை; காட்சி முடிவதற்கிடையில் மாற்றிக்கொண்டுவந்து தருகிறேன்" என்று பதில் சொன்னான்; "பிறகு பணந் தர வேண்டாம், அந்த இரண்டு ரூபாவிற்கும் இன்னமும் குடிவகை தா" என்று பாலசிங்கன் கேட்க, மதுபானம் விற்பவன் அப்படியே இரண்டு ரூபாவிற்கும் மதுபானத்தை மூன்றாகப் பகிர்ந்து வார்த்து மூவருக்குங் கொடுத்தான்; அதனையும் வாங்கி மாந்தினார்கள். உடனே மூவரும் மண்டபத்துட் சென்று, வெற்று நாற்காலிகள் ஒருபக்கமாக அங்கே இருப்பவும், அவைகளின் மீது தனித்தனி இருப்பதை விடுத்துப் பெண்கள் ஒருபக்கமாக இருக்குமிடத்திலுள்ள வெற்று நாற்காலிகளில் இருக்கும்படி போனார்கள்; போதலும் அங்கே நின்று மேற்பார்வை செய்பவன், ஆரோக திடகாத்திரமுள்ளவன்; விரைந்து அவர்களுடைய சமீபத்தில் வந்து "நீங்கள் அங்கேயிருக்கும் வெறும் நாற்காலிகளில் இருங்கள், பெண்கள் ஒருபக்கமாக இருக்குமிடத்திற் போயிருப்பது முறையல்ல" என்று நயமாகச் சொன்னான். "ஏ, இங்கே நாடகம் பார்க்கச் சும்மா வரவில்லை, எங்கள் பணத்தைக் கொடுத்து "டிக்கற்" எடுத்துக் கொண்டே வந்தோம், முதல்வகுப்பில் நாங்கள் நினைத்த இடத்திற் போயிருப்போம்" என்று பாலசிங்கன் அதட்டிக்கொண்டு வீராசாமியையும் கையிற்பிடித்து இழுத்தபடி பெண்களுக்குப் பக்கலிலே போயிருக்க முயல, மேற்பார்வைக்காரன் "எங்கே, போ பார்ப்போம் என்று முற்பட்டு வந்து பாலசிங்கனுடைய மார்பிலே பிடித்துத் தள்ள அப்பாடி! யென்று கத்திக்கொண்டு பாலசிங்கன் தன் பின்சென்ற வீராசாமி மீது மோதுண்ண, வீராசாமியும் மதுவெறியினால் தள்ளாடிக்கொண்டு தன்பிறகே தொடரும் விசுவநாதன் மீது மோத, மூவரும் ஒருங்கு பெருஞ் சத்தத்துடன் வீழ்ந்தனர்; அயலேயிருந்த பெண்கள் கலகமென்று பயந்து இருக்கை விட்டெழுந்து கலங்கவே, அவர்களைச் சேர்ந்த ஆண்கள் தாமிருந்த இடத்தை விட்டெழுந்து பெண்களிருக்குமிடத்திற்கு ஓடிவந்தனர்; வந்தவர்கள் விழுந்து எழும்பமுடியாமற் கிடக்கும் மூவரையும் உழக்கிக்கொண்டே போய்ச் சேர்ந்தனர்; கிடந்த மூவரும் ஓலமிட்டனர்; இதனாற் பெரும் அல்லோலகல்லோலம் ஏற்பட்டது; இதற்கிடையில் படக்காட்சி மண்டபத்திற்குரிய அதிகாரிகளுஞ் சிலரும் வந்து கலகத்தையும் அமைதியீனத்தையும் அறிந்து அந்த மூவருமே அவைக்குக் காரணமென்பதையுணர்ந்து அவர்களைத் தூக்குவித்து தெருவிலே போடுவித்து விட்டு, மண்டபத்தில் அமைதியை ஆக்கிக் காட்சியை நடக்கச் செய்தனர்.

விசாலாட்சி கொண்ட கவலை

தெருவிலிடப்பட்ட மூவரையும் அறிந்தவர்களும் அவர்களோடு தொடர்புடையவர்களுமாகிய சிலர் தாங்கள் படம் பார்ப்பதை விடுத்து அவர்கள் கிடக்குமிடத்திற்கு வந்து அவர்களுடம்பிலே தண்ணீர் தெளித்தும், வெறிமுறியக்கூடிய சில கை மருந்துகளை அவர்கள் உச்சியிலிட்டும் அவர்களுக்குப் பருக்கியும் சைத்தியோபசாரஞ் செய்து ஒருவாறு அறிவுவரச் செய்தனர்; வீழ்ந்தமையினாலும் உழக்குண்டமையினாலும் உடம்பில் ஊறும் நெரிவும் இடையிடையே உண்டாயிருப்பக் கண்டனர்; உடனே அவர்கள் ஒரு மோட்டார்ரதத்தை ஒழுங்கு செய்து அந்த மூவரையும் அதில் ஏற்றி வைத்தியசாலைக்குக் கொண்டுபோயினர். அன்று அருணாசலம்பிள்ளையும் மனைவியும் அங்கே படம்பார்க்க வந்தவர்கள் தங்கள் மருமகன் பட்ட அவமானத்தை அவதானித்துக்கொண்டார்கள்; ஆனால் எவருக்கும் வெளியிட்டிலர்; தங்கள் மகளுக்கும் இச் செய்தியை மறைத்து வைத்தனர்; அடுத்த நாட் பின்னேரம், அயல்வீட்டிலுள்ள காமாட்சியென்னும் பெண், விசாலாட்சி வீட்டிற்போய் இரவு நடந்த இவ்விஷயம் முழுவதையும் விசாலாட்சிக்கு இரகசியமாகச் சொல்ல அவள் கேட்டுத் தீராக்கவலை கொண்டாள். வைத்தியசாலையிற் சிகிச்சை பெற்றுக்கிடந்த மூவரும் தங்கள் ஊறுகள் பாதி மாறியும் மாறாமல் இருக்க, வைத்தியசாலை அதிகாரிகளின் சொல்லையும் கேளாமல் மூன்றாநாட் பொழுதுபட்ட நேரத்தில் வைத்தியசாலையை விட்டகன்றனர். பின்னரும் சில தினங்கள் தமக்கு வசதியான வைத்தியரிடத்திற் போய்ச் சிகிச்சை செய்து ஒருவாறு தத்தம் ஊறுகளை மாற்றுவித்துக்கொண்டார்கள்; வைத்தியசாலையை இந்த மூவரும் விட்டகன்றமைக்குக் காரணம், ஊறுகள் மாறும்வரையும் எவ்வகையான மதுபானத்தையும் குடிக்கவொண்ணாதென அங்குள்ள டக்ரர்கள் தடுத்தமையேயாகும். இவர்களோடு கூடியவர்களாதலால் இவர்களுடைய உடம்பிலூறுகளும் நோவும் விரைவிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிவிட்டன. ஒரு வாரஞ் சென்றவுடன் இந்த மூவரும் பழையபடி குடிக்கவும் தீமைசெய்துகொண்டு தெருவழியே திரியவும் தலைப்பட்டனர்; விசுவநாதன் தன் தாய், மாமன் மாமி விசாலாட்சி யென்னுமிவர்களை அறவே மறந்தான்; இடையிடையே தாயிடம் போய் ஏதும் வாங்கி உண்பான்; மற்றைவேளைகளில் தன் கூட்டாளிகளுடன் கடைகளிலும் விடுதிகளிலும் போய் உணவருந்துவான்; சூதாடுபவனும் குடியனும் உணவை அதிகமாகப் பொருட்படுத்துவதில்லையென்று சொல்வார்கள். பாலசிங்கன் குடிகாரனாயிருந்தாலும் தான் நினைத்த காரியத்தைச் செய்து முடிக்க வேண்டுமென்ற நோக்கத்தை எந்த நேரமுங் கொண்டவன்; விசுவநாதன் தன் வீட்டிற்குத் தாயிடம் கிரமமாகப் போகாமையையும், தன் மாமனை, மாமியை, மைத்துனியைப்பற்றி நினையாமலும் பேசாமலும் இருப்பதையும் பாலசிங்கன் அவதானித்து வந்தான்; மித்திரபேதஞ் செய்வதற்கு இதுவே வாய்த்த சமயமென்று தன்னளவில் அவன் நிச்சயித்துக்கொண்டான்.

"இந்தப்பெண்ணைக் கண்டவன் எருமைமேய்க்கப் போவனோ"

ஒருதினம் மாலைநேரத்தில் மூவரும் போய்க் கடற்கரையில் வெறியோடு கூடியவர்களாய் வீண்கதைகள் பேசிக்கொண்டிருக்கும் போது பாலசிங்கன் வீராசாமியைப் பார்த்து "சிநேகிதா, இந்த விசுவநாதனுடைய கூட்டுறவு இன்னுஞ் சில நாளைக்குத்தான்" எனலும் வீராசாமி "ஏன் அப்படிச் சொல்லுகிறாய், இவன் நல்லவன் ஒருபோதும் எங்களை விட்டுப் பிரியமாட்டானென்றுதான் நான் நம்பியிருக்கிறேன்" எனப் பாலசிங்கனையும் விசுவநாதனையும் மாறி மாறிப் பார்த்தபடி சொன்னான்; "வேறொன்றுமல்ல, இவன் தன் மைத்துனியைக் கல்யாணஞ் செய்யப் போகிறான்; கல்யாணஞ் செய்தானோ, பின்னர் இவனை எங்கள் கண்களிலுங் காண முடியாது" என்றான் பாலசிங்கன்; "அதற்காக, அவனை நீ கல்யாணஞ் செய்ய வேண்டாமென்றா சொல்லுகிறாய்? கல்யாணஞ் செய்தல் வேறு, எங்களுடைய சிநேகிதம் வேறு" என்றான் வீராசாமி, "அப்படி நினைத்து நடக்கக்கூடியவர்கள் நீயும் நானுந்தான்; இவன் அப்படியானவனல்லன்; இந்தப் பெண்ணைக் கண்டவர் எருமை மேய்க்கப் போவரோ என்ற நிலையிலுள்ளவன்; இவனை நம்பவொண்ணாது" என்றான் பாலசிங்கன். "வீராசாமி, நீ அவனுடைய வீண் பேச்சைக் கேளாதே; நான் கல்யாணம் முடித்தாலும் உங்களை ஒருபோதும் மறக்கமாட்டேன்" என்றான் விசுவநாதன்; "சரி, இப்பொழுது ஏன் வீண்கதை, அப்பொழுது எல்லாம் பார்த்துக் கொள்ளுவோம்" என்றான் பாலசிங்கன். இப்படிச் சிலநேரம் இருந்து பேசிவிட்டு மூவரும் இருக்கைவிட்டெழுந்து கடற்கரையோரமாகவே போவாராயினர். போகும்போது, சற்றுத் தூரத்தில் கடற்கரையிற்றானே, பள்ளிக்கூடப் பிள்ளைகளாகிய மூன்று கன்னிகைகளும் அவர்களுக்குத் துணையாக ஒரு மனுஷியும் இருப்பக் கண்டார்கள்; அவர்கள் இருக்குமிடத்திற்குப் பத்துமுழம் அப்பால் இந்த மூவரும் போய் இருந்துகொண்டு அவர்களை உற்றுப் பார்த்தார்கள்; ஆனால் அவர்கள் இவர்களைக் கண்டும் காணார்போல் இருப்ப, இவர்களுள் பாலசிங்கன் "உன்னாசை நான் மறப்பேனோ, மறந்தால் உயிர்தரிப்பேனோ" என்று பாட, வீராசாமி தன் கைகளால் தாளம்போட, விசுவநாதன் "பேஷ்" என்று சொல்லித் தலையசைத்தான்; அந்தப்பெண் பிள்ளைகளோடு இருந்த மனுஷி அவர்கள் செயலில் வெறுப்புக் கொண்டு "ஏன்! தம்பிமாரே, உந்தப்பெரிய கடற்கரையில் உந்த இடமல்லாமல் உங்களுக்கு இருக்க வேறு இடமில்லையா" என்று சற்றுப் பெலத்துச் சொல்ல, பாலசிங்கன் "கடற்கரை எல்லாருக்கும் பொதுதான்" என்றான்; அவன் சொன்ன பதில்மொழி காதிற்பட்டவுடன் அந்த மனுஷி தன்னுடன் இருக்கும் கன்னியர் மூவரையும் பார்த்து "தங்கைச்சிமாரே, வாருங்கள் வீட்டிற்குப் போவோம்; இல்லாவிட்டால் வேறு இடத்திற்குப் போயிருப்போம்" எனலும், அந்த மூன்று கன்னியருள் மீனா என்னும் பெண் அம் மனுஷியைப் பார்த்து "ஆயா, உந்தக் குடிகாரருக்குப் பயந்து நாங்கள் போகமுடியாது; இப்படியே இருப்போம் இவர்களால் ஏதுஞ் செய்யமுடியுமானால் செய்யட்டும் பார்ப்போம்" என்று சிறிது சீற்றத்தோடு உரக்கச் சொன்னாள்.

* * *

உலகம் பலவிதம்: 1944 ஜூலை 06
விசாலாட்சி: (முற்றொடர் - 09)

மழைக்காலிருட்டானாலும் மந்தி கொப்பிழக்கப்பாயாது

மீனா என்னுங் கன்னிகை சொன்ன வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தே அந்த மூவர்க்கும் ஆத்திரம் பிறந்தது; மீனா சாமானியமான பெண்ணல்லள்; அவள் தமிழும் ஆங்கிலமும் உயர்தர வகுப்பிற்படிப்பவள்; அவளுடைய தகப்பன் செல்வஞ் செல்வாக்கோடு கூடியவராய் அந்த ஊரில் வசிக்கும் இராமச்சந்திரம்பிள்ளையென்னும் பிரபுவாவர்; அவர் அதிகாரத்தோடு கூடிய அரசாங்க உத்தியோகம் பார்த்துப் பின் உபகாரவேதனம் பெற்று வருபவர்; அவரிடத்தில் ஒரு சிறந்த மோட்டாரதமும் உண்டு; மீனாவின் முழுப்பெயர் மீனாட்சி; இவள் இக் கால நாகரிகத்திற்கு இசையவும் நடந்துகொள்ளத் தக்கவள்; மனத்துணிவுடையவள்; மற்றக் கன்னிகை இந்த மீனாவின் தங்கையாகிய கமலா என்பவள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளும் மீனா படிக்குங் கல்லூரியிற் கீழ் வகுப்பிலே கல்வி கற்று வருபவள்; மூன்றாவது கன்னிகை மேலே சொல்லப்பட்ட இராமச்சந்திரபிள்ளையின் மருகியாவள்; அவளும் தன் மைத்துனிமார் கல்வி பயிலும் பெண்கள் கல்லூரியிலேயே கல்வி பயில்பவள்; அவளுடைய பெயர் சுகுணாம்பிகை; ஆனால், அந்த நாமத்தைச் சுருக்கிச் சுகுணா என்றே அவளை எவரும் அழைப்பர். இந்த மூவரும் சங்கீதமும் பயின்று வருபவர்; மீனா வாய்ப் பாட்டோடு யாழும் வாசிக்கப் பழகியுள்ளாள்; இந்த மூவரும் சங்கீதமறிவார்களென்பதை அங்கே வந்த பாலசிங்கன் முதலிய அந்த மூவரும் அறியார்; தங்களை அந்தக் கன்னிகை மதியாமற் பேசியதையிட்டு ஆத்திரங்கொண்ட பாலசிங்கன், உந்தச் "சிறுக்கி" களை உந்த இடத்தைவிட்டு எழும்பிப்போகச் செய்கிறேன் பாருங்கள்" என்று தன் தோழரிருவருக்குஞ் சொல்லிவிட்டுக் "கனலெறிய மெழுகாயினன் இனியாகிலும் அடி பாதகி கட்டியணைத்தொரு முத்தமே தந்தால் கைதொழுவேன் உன்னை நித்தமே" என்ற காவடிச் சிந்தினை, அப்பெண்கள் காதிற் படும்படி உரத்த தொனியிற் பாடினான்; அப்படிப் பாடியபோது சுதியும் லயமும் தாளமும் இல்லாமல் அவன் பாடியதைக் கேட்டு அந்த மூவரும் "கல்" என்று சிரித்தார்கள்; "சங்கீதத்திலே தன் திறமையை எங்களுக்குக் காட்ட நினைத்துச் சுதியும் தாளமும் விட்டு அந்த வேதாளம் பாடுகிறதடி" என்றாள் மீனா. "இப்படியான பாட்டைக் கேட்டுத்தான் அக்கா, அந்தநாளில் "கழுதை கெட்ட வண்ணான் கண்டேன் கண்டேனென்று பழுதையெடுத்தோடி வந்தான் பார்" என்று காளமேலப் புலவர் பாடியிருக்க வேண்டும்" என்றாள் சுகுணா "குடிகாரரோடு எங்களுக்கென்ன பேச்சு, அக்கா" என்றாள் கமலா. இப்படி இந்த இளம்பெண்கள் மூவரும் பேசியபேச்சு, எரிகிற கொள்ளியை ஏறத் தள்ளிவிட்டதுபோல பாலசிங்கனுக்கு அதிக ஆத்திரத்தையும் சீற்றத்தையும் மூட்டி விட்டது. "எதற்... காக... சிரிப்... பான் என்ற... ஞாய... த்தை... நான்... கேட்கத்தான் வேண்டும்" என்று வெறி மேலீட்டினால் மழலை மொழி பேசிக்கொண்டு மெல்ல எழுந்தான் பாலசிங்கன்; எழுந்தவனை விசுவநாதன் இருந்தபடியே கையிற் பிடித்து "பெண்ணாய்ப் பிறந்தவர்களோடு உனக்கென்ன கதை" என்று சொல்லி மெல்ல இழுத்திருக்க முயலுதலுந் "தொப்பென்று" மணலில் விழுந்தான் பாலசிங்கன்; அதனைக் கண்ட அந்தப் பெண்கள் மூவரும் கைதட்டிக் கலிரென்று சிரித்தார்கள்; அவர்கள் கைதட்டிச் சிரித்த சத்தம் பாலசிங்கன் காதிற் பட்டது; விழுந்த பாலசிங்கனால் எழுந்திருக்க முடியவில்லை; எடே! விசுவநாதா! என்னைத் தடுக்காதே, அந்தச் சிறுக்கிகளை நான் ஒரு ஞாயங் கேட்டுவிட்டுத்தான் வரவேணும், எடே! வீராசாமி என்னைத் தூக்கிவிடடா, போய் ஞாயங் கேட்க" என்று கிடந்தபடி கொன்னித்துப் பேசினான் பாலசிங்கன். அவன் சொன்ன வார்த்தையைக் கேட்டுக்கொண்டிருந்த விசுவநாதன் சிரித்துக் கொண்டு "பாலசிங்கா, உன்னால் தலை நிமிர்த்தி எழும்ப முடியவில்லை; நீ அவர்களிடம் போய் நியாயங்கேட்பதெப்படி? வீணே போய் இன்னமும் அவமானப்படாதே; அல்லாமலும் பெண்பிள்ளைகள் எங்கள் சகோதரமென்றல்லவா மதித்து மரியாதையாக ஊடாட வேண்டும்" என்று வெறிமுறிந்த விசுவநாதன் நீதியைச் சொன்னான். "எடடே பேயா? பெண்களெல்லாரையும் சகோதரங்க ளென்று மதித்துக் கொண்டால் நாங்கள் நாளைக்குக் கல்யாணம் முடிப்பது ஆரையடா? அப்படியானால் உன் "மச்சாள் விசாலாட்சியையும் சகோதரமென்று நினைத்துக்கொண்டு நீ சும்மா இருக்கவேண்டுமடா" என்று நியாயஞ் சொன்னான் பாலசிங்கன். "எடே! பாலா, உனக்கு வெறியென்று சற்று முந்தி உன்னைத் தூக்கி நிறுத்திவிடும்படி என்னைக்கேட்டாய்; இப்பொழுது என்னடா நியாயம் பேசுகிறாய்; வெறிமுறிந்து விட்டதா" என்று கேட்டுச் சிரித்தான் வீராசாமி; "எடே, மச்சான், மழைக்காலிருட்டானாலும் மந்தி கொம்பிழக்கப் பாயாது; எனக்கு வெறியில்லையடா, தலைசுற்றுகிறது, அதனாலே தானடா தலையை நிமிர்த்த முடியவில்லை; அதனாலேதான் அப்படிச் சொன்னேன்; வெறியேறினாலும் ஞாயத்தை விடமாட்டேனடா, தெரியுமா" என்று சொல்லிக்கொண்டு பாலசிங்கன் மெல்ல எழுந்திருந்தான்; இருந்தவன் கையை நிலத்தில் ஊன்றியெழுந்து, மற்றையிருவர் தடுக்கவும் கேளாமல், தள்ளாடிக்கொண்டு, பெண்கள் இருக்குமிடத்தை நோக்கிப் போகும்போது இடையிற் பேந்தும் விழுந்தான்; அதனைக் கண்ட அந்தக் கன்னியர் மூவரும் சிரித்தனர்; நிலத்தில் விழுந்த பாலசிங்கன் மீளவும் எழுந்து குழந்தைகள் போலக் குறுநடை நடந்து அப் பெண்களிருக்குமிடத்தை சமீபித்து "என்னை யார் என்று உங்களுக்குத் தெரியுமா" என நா தட தடக்கக் கேட்டான்; "ஓம்" என்று சிறிதும் அச்சமின்றிச் சிரித்துக்கொண்டு இருந்தபடியே பதில் சொன்னாள் மீனா; "ஆர், சொல்லும் பார்ப்போம்" என்றான் பாலசிங்கன். "நீ ஒரு குடிகாரன்" என்றாள் மீனா, நான் குடித்தது நிசந்தான்; ஆனாலும் எனக்கு மயக்கமில்லை; பெண்களென்ற மரியாதைக்குப் பயப்படுகிறேன்; நீங்கள் ஆண்களாயிருந்தால், அவர்களுக்குச் செய்யவேண்டிய வேலை செய்திருப்பேன்" என்று சினந்து சொன்னான் பாலசிங்கன்; "நீ இருக்கிற நிலையை பார்க்கும்போது செய்கிறது செய்வாய்போலக் காணப்படுகிறது; வீண்கதை பேசாதே; இந்த இடத்தை உடனே விட்டுவிட்டுப் போகிறாயா? இல்லையா?" என்று அதட்டிக் கேட்டாள் மீனா

குடிவெறி அடிபடத்தீரும்

"நான் விட்டுப் போவதுமில்லை; உங்களை விடப் போவதுமில்லை" என்றான் பாலசிங்கன்; இப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சொன்னதைக் கேட்டு அங்கே நின்ற "ஆயாள்" நடுங்கினாள்; "உவனோடு உங்களுக்கு என்ன கதை; வாருங்கள் போவோம்" என்றாள் கமலா; "நேரமாய்விட்டது வீட்டிலே தேடுவார்கள்" என்றாள் சுகுணா; "ஏ! அறிவுகெட்ட மனுஷா! வீணாக அடிவாங்கி அவமானப்படாதே; நல்ல குணத்தோடு இந்த இடத்தைவிட்டுப் போய்விடு" என்று மீட்டுஞ் சொன்னாள் மீனா; "பெண்ணே! நீயா எனக்கா அடிக்கப்போகிறாய்? நல்லாயிருக்கிறது; நீ உந்த மெல்லிய கையினால் அடிக்க அந்த அடி என்மேற்பட எனக்குக் கிடைக்குமா? நீ அடித்தால் மாத்திரம் போதாது, உன் கோபந் தீர என்னை உதைத்தாலும் எனக்கு அது ஆநந்தமாயிருக்கும்; "மாகோபமுண்டேல் என் மார்மீதும் தோள்மீதும் ஓ! ஓ! தாள்கொண்டு தைக்கவொண்ணாதா" என்று பாடிக்கொண்டு மதுமயக்கத்தினாற் பாலசிங்கன் அவளுக்குச் சமீபமாகப் போதலும் அவள் சிறிது பின்வாங்கி யொதுங்கி நின்று கொண்டு "கோவிந்தன்!" என்று உரத்துக் கூப்பிடுதலும் "இதோ வந்துவிட்டேன்" என்று இராச்சதன்போல திடகாத்திரமான தோற்றத்தோடு கூடிய ஒரு மலையாளி தெருவிலிருந்து இறங்கியோடி அங்கே வந்தான். ஓடிவந்த கோவிந்தன் ஒன்றும் யோசியாது "அடா! போக்கிலி, யாரென்றடா நினைத்தாய்" என்று சொல்லிக்கொண்டு பாலசிங்கனுடைய மார்பில் ஒரு அறையறைந்து அவனைப் பிடித்துத் தள்ள அவன் "ஐயோ! என்னைக் கொல்லாதே!" என்று கதறிக்கொண்டு முதுகடிபடக் கடற்பக்கமாக விழுந்தான்; அவன் தலையில் அலை மோதவே, அவன் "வீராசாமி விசுவநாதா!" என்ற சத்தமிட்டான்; இவைகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த வீராசாமியும், விசுவநாதனும் உடனே எழுந்து ஓடிவந்தார்கள்; "சரி, நீங்களும் வாருங்கள் உங்களுக்கும் என் கைவரிசை காட்டி வைக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு துள்ளிக்குதித்துப் பாய்ந்து அவர்களுக்கெதிரே கோவிந்தன் ஓட, "அண்ணே, நாங்கள் உன்னோடு சண்டைக்கு வரவில்லை; பாவம்! அவனை அடியாதே, உனக்கும் புண்ணியம் கிடைக்கும்" என்று அவனை இரந்துகொண்டு வீராசாமி மெல்ல நடந்துவர விசுவநாதனும் பின்தொடர்ந்தான்; "அப்படியா, சரி" என்று சொல்லிவிட்டுக் கோவிந்தன் மீண்டுபோய்ப் பிள்ளைகளின் பக்கத்திலே நின்றான். வீராசாமி பாதி கடல்நீரிற் கிடந்து நனையும் பாலசிங்க னுடன் போய் "பாலா! சொன்னோம் கேட்டாயா? இப்பொழுது எப்படி? குடிவெறி அடிபடத் தீருமடா" என்று சொல்லி அவனை இழுத்துக் கரையிலே இட்டான். இதற்கிடையிற் கோவிந்தன் மீனாவையும் மற்றையோர்களையும் பார்த்து "அம்மா, வாருங்கள் பொழுதுபட்டுவிட்டது, வீட்டிற்குப் போவோம்; வந்து இரதத்தில் ஏறுங்கள்" என்று சொல்லுதலும் அவர்களெல்லோரும் கடற்கரையை விட்டகன்று தெருவிற்போய் இரதத்திலேறிக்கொண்டு போவாராயினர்; போகும்போது தமது மீனாவைப் பார்த்து "அக்கா, நீங்கள் அதிகம் துணிவுடையீர்கள்; அந்தக் குடிகாரன் உங்கள் மேலே தொட்டால் மானம் போய்விடுமேயென்று நான் பயந்தேன்" எனலும் "தங்காய், இப்படியான குடிகாரர் செய்யும் வெருட்டுக்கு இடங்கொடுக்கக்கூடாது; இப்படிச் செய்யாவிட்டால் இந்தத் துஷ்டர் ஏழைக் கன்னியர் தனியே அகப்படும் நேரத்திற் கேடு செய்யத் துணிவார்கள்;" என்றாள் மீனா. "என்றாலும் அவன் தலை தண்ணீரிலும் உடல் தரையிலுமாக விழுந்து கிடக்கக் கண்டபோது பரிதாபமாகவிருந்தது" என்றாள் சுகுணா "அது மெய்தான், ஆனால் அவன் இனிமேற் பெண்கள் இருக்குமிடத்திற்குச் சமீபமாகப் போதற்குத் கனவிலும் நினையான்" என்றாள் மீனா. தங்கள் வீட்டிற்குச் சமீபமாக ரதம் போகும்போது "சரி, கடற்கரையில் நடந்த கருமம் இரகசியமாக இருக்கவேண்டும், அப்பா அம்மாவுக்குத் தானும் வெளியிடாதீர்கள்" என்று மீனா சொல்ல, அவர்களனைவரும் "ஓம்" என்று கேட்டுக் கொண்டார்கள்; எல்லோரும் தத்தம் வீடுபோய்ச் சேர்ந்தனர்.

கோவிந்தன்

கோவிந்தன் நாம் முன்னே சொன்ன பிரகாரம் ஒரு மலையாளி; இராமச்சந்திரபிள்ளையின் மோட்டாரதச் சாரதி; அரோகதிடகாத்திரமுடையவன்; வயசு 35 வரையிலிருக்கும்; விசுவாசமான சேவகன்; சிறுபிராயத்திலேயே இராமச்சந்திரபிள்ளையின் வீட்டில் வேலைக்காரச் சிறுவனாய் வந்து சேர்ந்து வளர்ந்தவன்; மீனா, கமலா என்னுமிவர்கள் சிறு குழந்தைகளாக இருந்த காலத்தில் அவர்களை எடுக்கி வளர்த்தவன்; இராமச்சந்திரபிள்ளையாக, அவர் மனைவியாக, இந்தப் பிள்ளைகளாக காலால் இட்ட வேலைகளைத் தலையாற் செய்வான்; எஜமானனிடத்தில் விசுவாசமுள்ள சேவகனும், சேவகனிடத்து நம்பிக்கையுள்ள எஜமானனும் வந்து வாய்ப்பதரிதென்று சொல்வர்; ஆனால் இராமச்சந்திரபிள்ளை கோவிந்தன் என்போர் விஷயத்தில் அப்படி வாய்த்துவிட்டது, கோவிந்தன் மல்யுத்தஞ் செய்யவும் பயின்றுள்ளவன்; அதனால் அவனை அங்குள்ளவர்கள் "பயில்வான்" கோவிந்தனென்று சொல்வதுண்டு; அவன் அன்று பிள்ளைகளைக் கடற்கரையிற் போய் இருக்கவிட்டுத் தான் ரதத்திற்குத் காவலாக நிற்கும்போதே அந்தக் கருமம் நேர்ந்தது; தெரு அதிக உயரமாக இருந்தமையினாலும் கடற்கரை செங்குத்தான பள்ளமாக இருந்தமையினாலும் கடற்கரை மார்க்கமாக வந்திருந்த பாலசிங்கன் முதலிய மூவரும் கோவிந்தன் தெருவோரத்தில் இரதத்திலிருந்ததைக் கண்டிலர்; அவர்கள் நால்வரும் பெண்கள் தாமே தான் நினைத்ததைச் செய்யலாமென்றெண்ணிப் போனவிடத்திலே பாலசிங்கன் அவமானப்பட்டான்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1944 ஜூலை 13
விசாலாட்சி: (முற்றொடர் - 10)

"தீயாரோடிணங்குவதுந் தீது"

அந்தப் பெண்கள் கடற்கரையை விட்டகன்று ஒரு மணிநேரம் வரையிற் சென்ற பின்தான் பாலசிங்கனுக்கு மதுபானவெறியொருவாறு முறிந்தது; அவன் மயக்கம் நீங்கியவுடன் தன் கூட்டாளிகளைப் பார்த்து "விசுவநாதா! வீராசாமி! நான் எங்கேயிருக்கிறேன்? எனக்கு ஒன்றுந் தெரியவில்லையே" என்று கேட்க; "நீ பூலோகத்திலேதான் இருக்கிறாய்; இன்னுஞ் சற்றுவேளை போனாற்றான் உனக்கு ஏதும் தெரியவரும்; இனிமேல், உன்னுடைய தொடர்பு ஒரு நிமிஷமேனும் வேண்டாம்; நீயே இன்று செய்த செயல்களினால் எங்கள் மரியாதை கெட்டுப்போய் விட்டது; தீயரோடு இணங்கியிருப்பதுவுந் தீது" என்ற உண்மை இன்றைக்குத் தான் எனக்குப் பூரணமாய்ப் புலப்பட்டது" என்று விசுவநாதன் கடிந்து சொன்னான். பாலசிங்கன் ஏதும் பதில் வார்த்தை சொன்னானல்லன்; அப்பொழுது வீராசாமி விசுவநாதனைப் பார்த்து "விசுவநாதா, நான் படியாத மூடன்; நீங்கள் இரண்டு பேரும் படித்த மூடர்கள்; சொல்லுகிறேனென்று கோபிக்காதே, எங்கள் மரியாதை கெட்டுப் போகுமென்று சற்று முந்திச் சொன்னாயே; எங்களுக்கு மரியாதை ஏதும் இருந்தாலல்லவா கெடும்" என்று வேடிக்கையாகச் சொல்லிவிட்டுப் பாலசிங்கனைப் பார்த்து "ஏனடா, பாலா, இன்னமும் வெறி முறியவில்லையா? இந்த இடத்தை விட்டுப்போக உனக்கு இஷ்டமில்லையா? எழுந்து "வாடா போவோம்" என்று அதட்டிச் சொன்னான். "எடே, வீரா, எனக்கு வெறி முந்தியே முறிந்து விட்டதெடா" ஆனால், தலை உயர்த்தி எழும்ப முடியவில்லை; பூமியும் ஆகாயமும் ஒன்றாகச் சுற்றுவது போலிருக்கிறதடா" என்று பாலசிங்கன் சொல்ல வீராசாமி பெருஞ் சிரிப்புச் சிரித்து, "என்னெடா, உன் பேச்சைக் கேட்க, எனக்குப் பைத்தியம் மாறிவிட்டதடி உலக்கை கொண்டு வா தலைப்பாகை கட்ட என்று தன் பெண்டாட்டிக்குச் சொன்ன விசரனுடைய ஞாபகம் வருகிறது. நீ இப்போது எழுந்து வராவிட்டால், பாலசிங்கனும் நீயுமாக இங்கேதானே இருங்கள்; நான் ஆவசியகம் போகவேணும்" என்று சொல்லிக்கொண்டு வீராசாமி போதற்கெழுதலும், விசுவநாதன் அவனைத் தடுத்து "வீரா, நானும் உன்னுடன் வருகிறேன்; ஆனால், இவனை இந்த நிலைமையில் விட்டுவிட்டுப் போவது சரியல்ல" என்று சொல்லுதலும், வீராசாமி பாலசிங்கனைப்போய்த் தூக்கிவிட அவன் தள்ளாடி நடந்து அவர்களுடன் போய்த் தன் வீடு சார்ந்தான்; மற்றை இருவரும் தத்தம் வீட்டையடைந்தனர்.

"கெடுகுடி சொற்கேளாது"

"என்ன பாருங்கள்; நீங்கள் எங்கள் பிள்ளை விஷயமாக ஒன்றும் யோசிக்காமலிருக்கிறீர்கள்; பருவத்தே பயிர்செய்யென்ற விதமாக அந்த அந்தக் காலத்திலே பிள்ளைகளுக்கு நாங்கள் செய்ய வேண்டிய கடமையைச் செய்யாமலிருந்தால், பிறகு நாங்கள் துக்கப்படவேண்டி வருமல்லவோ; எங்கள் மகள் வயசுப்பிள்ளைகள், எங்கள் மகளோடு படித்த பிள்ளைகள், மகளுக்கு இளையபிள்ளைகள் தாமும் ஒவ்வொரு கரை சேர்ந்துவிட, அவர்கள் கல்யாண நிகழ்ச்சியும் பழையதாய்ப் போய்விட, நாங்கள் இரண்டு பேரும் ஒரேயொரு பிள்ளையை வைத்துக்கொண்டு பராமுகமாயிருக்கலாகுமோ; உங்கள் மருமகனுக்குச் செய்து வைப்பதென்றாற் செய்து வைக்கவேண்டும்; அது சந்திக்காவிட்டால் வேறெங்கேனும் போய்யொழுங்கு பண்ண வேண்டும்; மனுஷன் காயம் நிச்சயமல்ல என்பது உங்களுக்குத் தெரியாததல்ல; நீங்கள் என்னவோ யோசியாமல் திரிகிறீர்கள்; எனக்கு இராப் பகலாக இதுவே சிந்தனையாகவிருக்கிறது..." என்று இடையீடின்றி கரைந்தாள் பெரியநாயகி; தம்மனைவி சொல்லி முடிக்கு மட்டும் மௌனத்தோடு கேட்டுக் கொண்டிருந்த அருணாசலம்பிள்ளை பெருமூச்சு விட்டு, "அது சரி, இதற்கு இப்பொழுது என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்; பெண்ணுக்கு மாப்பிள்ளையென்றால், சீலைத்துணிபோல் இல்லை யேல் நகைவகை போல் உடனே பணத்தைக் கொண்டு போய் கடையிற் கொடுத்து விலைதீர்த்து வாங்கக் கூடிய பொருளா? இல்லையேல் நாம் நினைத்தபடி செய்துவைக்கத்தக்க காரியமா? தாரமும் குருவும் தலைவிதியென்று சொல்வார்களே; எல்லாம் வந்து சந்திக்கவல்லவோ வேண்டும்; நமது மருமகன் நல்ல விவேகி, படித்தவன் நல்லாய் வருகிறான்; புறத்தில் போகாமல் அவனையே எங்கள் பிள்ளைக்குக் கல்யாணஞ் செய்து வைக்கலாமென்று மனக் கோட்டை கட்டியிருந்தேன்; ஆனால், அவன் விஷயம் நாமொன்று நினைக்கத் தெய்வம் வேறொன்று நினைத்ததாய் முடிந்து விட்டது; அவனைத் திருத்தலாம், அவன் திருந்துவானென்றெண்ணி ஆகவேண்டிய முயற்சிகளைச் செய்தேன்; கெடுகுடி சொற்கேளாது என்ற நிலையில் அவன் நிற்கிறான்; அவனுடைய யோக்கியத்தை அன்று படக் காட்சியில்தானே நேரிற் கண்டுகொண்டோம். அவனுடைய நடத்தையை பற்றி எங்கள் பிள்ளையும் அறிந்தாளோ, அறியவில்லையோ, எனக்குத் தெரியாது; ஆனால் அவனிடத்தில் அவளுக்கு எள்ளவும் பற்றில்லையென்று யூகிக்கக் கிடக்கின்றது; அந்தக் குடிகாறனை இனி ஆருக்குத் தேவை; வீணே என்னைக் குறை சொல்லாதே, எங்கள் மகளென்றால் அவனைக் கல்யாணஞ் செய்ய உடன்படுகிறாளில்லை, வேறொரு மாப்பிள்ளையைப்பேசி யொழுங்கு பண்ணலாமென்றால் அதற்கும் உடன்படாளாமே;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கென்ன செய்வது; இன்னுமொரு முறை பிள்ளையின் நோக்கத்தையும் நீ உசாவியறிந்து வந்து சொல்; அதன்பின் ஆகவேண்டிய முயற்சியை நான் பார்க்கிறேன்" என்று சிந்தனையோடு சொன்னார்; அப்படியே கேட்டுச் சொல்லுகிறேன் என்றாள் மனைவி. தன் மகள் ஆறுதலாயிருக்குஞ் சமயம் பார்த்து தாய் விஷயம் முழுவதையும் மகளுக்குச் சொல்லி, பிள்ளையை பற்றி தகப்பனார் கவலைப்படுவதையும் தெரிவித்தாள்; "அம்மா உங்களுக்கு கோடி நமஸ்காரம்; என்னை நெருக்காதீர்கள்? இந்த விஷயமாக என் எண்ணத்தை நான் வெளியிடுதற்கு எனக்கு ஆறுமாசத் தவணை தரும்படி எங்கள் அருமை தகப்பனாரிடங் கேளுங்கள்; இதற்காக என்மேற் குறை நினைக்க வேண்டாமென்றும் கோபிக்க வேண்டாமென்றும் ஐயாவிடஞ் சொல்லுங் கள்" என்று விசாலாட்சி இரந்தாள்; எங்கள் செல்வமே, "நீ கவலைப்பட வேண்டாம்; அப்படியே செய்கிறேன்" என்று சொல்லி அவ்விடத்தை விட்டு நீங்கினாள் பெற்றவள். விசாலாட்சி சில காலமாகக் காலையில் ஸ்நானம் முடித்துக் கொண்டும், மாலையில் முகம் கை கால் சுத்தி செய்துகொண்டும், தங்கள் வீட்டிலுள்ள பூசையறையுட் சென்று தேவியைத் தியானிப்பதும் தேவிக்குரிய சிறந்த பிரபந்தமாகிய அபிராமியந்தாதி முழுவதையும் ஓதுவதும் வணங்குவதும் செய்து வந்தாள். அவள் அப்படிக் கிரமமாகத் தேவியைப் பூசிப்பதன் நோக்கமென்னவென்பதை அவளுடைய பெற்றாருமேயறியார், மற்றோருமறியார்.

"உந்தச் சஞ்சலபுத்தியை மறந்துவிடு"

இவை இங்ஙனமாக, அன்று கடற்கரையிலிருந்து வீட்டிற்கு மீண்ட விசுவநாதன் அன்றிரவு தன் தாய் உண்ணும்படி நெருக்கிக் கேட்கவும் உண்ணாதவனாய்த் தன் படுக்கையிற் படுத்தபடி உறக்கமின்றிப் பலவாறு யோசித்துக்கொண்டு கிடந்தான்; பாலசிங்கனைப் போலத் தானும் மதுமயக்கம் அதிகமுற்றவனாய் அந்தச் சமயத்திலிருந்தானாயின் அவன்பட்ட அவமானத்தைத் தானும் படநேர்ந்திருக்குமேயென்று கவலைப்பட்டான்; மறந்திருந்த மைத்துனியையும் அவளுடைய பெற்றோரையும்பற்றியெண்ணினான்; இந்த மருமங்க ளெல்லாம் வெளிவந்தால் விசாலாட்சியைத் தான் மணஞ் செய்வது நடவாத கருமமென்றெண்ணிக் கவலைப்பட்டான். பாலசிங்கன் கண்ணில் இனி மேல் தான் எதிர்ப்படுவதில்லையென்று நிச்சயித்தான். தான் கெட்டது பாலசிங்கன் கூட்டுறவாலே, பாலசிங்கன் பழுதுபட்டது வீராசாமியின் சகவாசத்தாலே, ஆனதால் அவர்களிருவரும் பொல்லாதவர்களென்று நிச்சயித்துக் கொண்டு ஒரு வாரமாக அந்த இருவர் கண்ணிலும் புலப்படாமல் இயன்ற வரையில் ஒதுங்கி மறைந்து திரிந்தான்; அவன் தன் தாயின் சொல்லுக்கு அமைந்து நடப்பதைக் கண்டு தாயும் உவப்படைந்தாள். இவன் செயல் இவ்வாறாக, பாலசிங்கன் தன்னிடம் விசுவநாதன் வராமல் விட்டதையிட்டும் அவன் தன் கண்களில் அகப்படாமல் மறைந்து திரிவதையிட்டும் அதிகம் யோசித்தான்; தன்னை அவன் அறவே கைவிட்டு விட்டானென்று கவலைப்பட்டான்; அருணாசலம் பிள்ளை குடும்பத்தினர்தாம் தன்னுடன் அவன் கூடித் திரியாதபடி அவனைத் தடுத்துவிட்டார்களென்று நிச்சயம் பண்ணினான்; விசுவநாதன் தன்னுடன் சிநேகம் பண்ணாமலிருந்தாலும் கொண்டாடாதிருந்தாலும் காரிய மில்லை, ஆனால் விசாலாட்சியை அவன் விவாகஞ் செய்யாமல் தடுப்பதற்கு ஏதும் உபாயஞ் சூழ வேண்டுமென்று தீர்க்கமாக நிச்சயஞ் செய்து கொண்டு உடனே அவன் வீராசாமியிடம் போய்த் தன் நோக்கத்தை அவனுக்கு வெளியிட்டான். கேட்ட வீராசாமி சிரித்து "எடே, பைத்தியகாரா, அவனுடைய கல்யாணத்தைக் குழப்புவதால் உனக்கு ஏதும் நன்மையுண்டா, அதைக் குழப்பிவிட்டு நீ அந்தப் பெண்ணைக் கல்யாணஞ் செய்யப்போகிறாயோ? உனக்கும் உன்னோடு கூடிய எனக்கும் உலகத்திலே யாராயினும் எப்போதேனும் பெண் தருவார்களா? உன்னை ஏதோ படித்தவ னென்றல்லவா இத்தனை காலமும் உன்னைப் பற்றி யெண்ணிவிட்டேன்; நீ அப்படி ஏதும் படித்திருந்தால் அந்தப்படிப்பு உனக்குத் தீமைக்கே ஏதுவாயிருக்கிறது; நீ கெட்டாலும் நான் கெட்டாலும் எங்களோடு கூடின அவன் நல்லாயிருந்தால் உனக்கு வந்த நட்டமென்ன? ஓ! பாலா, உந்தச் சஞ்சல புத்தியை மறந்துவிடு; நாளைக்கு என்னோடு மாறுபட்டாலும் நீ எனக்கு இப்படித்தானே கேடு செய்யப் பார்ப்பாய்; அல்லாமலும் குலத்திற் பிறந்த பெண்களை மனம் வருந்தச் செய்யாதே; அன்றைக்குக் கடற்கரையில் அந்தப் பெண்களிடம் நீ பட்ட அவமானத்தைச் சிந்தித்தால் நீ அரையிலே துணி கட்டிக்கொண்டு தெருவிலே புறப்பட்டுத் திரிவாயா? உன்னைக் காட்டிலும் அந்த விசுவநாதன் எனக்கு நல்லவன்; அவனுக்கு மாறாக உனக்கு ஏதும் உதவி செய்யமாட்டேன்; நீ ஏதுந் தீமை செய்யவும் விடமாட்டேன்" என்று தடுத்துச் சொன்னான்; பாலசிங்கன் பதிலொன்றுஞ் சொல்லாமல் நெடிது நேரம் நின்று யோசித்தான்.

* * *

உலகம் பலவிதம்: 1944 ஜூலை 27
விசாலாட்சி: (முற்றொடர் - 11)

"என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்?

வீராசாமி கல்வியறிவில்லாதவனாயினும் இயல்பிலே நல்லவன்; வஞ்சனை சூது செய்ய அறியான்; இந்த இருவரைக்காட்டிலும் அவன் உலக அநுபவமுடையவன்; மதுபானஞ் செய்து கொண்டானேயானால் வீரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமியைக் கொண்டு எதுவுஞ் செய்வித்தல் முடியும்; இந்த இரகசியத்தையுணர்ந்த பாலசிங்கன் வீராசாமிக்குக் குடிவகை வாங்கிக் குடிக்கச் செய்துவிட்டு அவனைச் சூத்திரப் பாவைபோல் வைத்து ஆட்டுவான். "வெறியில்லாமற் சுவயகுணத்துடன் இவன் இருக்கும் இந்த வேளையில் என் கருத்திற்கு இவன் இசையான்" என்று நிச்சயித்துக் கொண்டு "வீராசாமி வருகிறாயா உந்தப்பக்கமாகச் சும்மா போவோம்" என்று பாலசிங்கன் கேட்க "ஓம்" என்று உடன்பட்டு எழுந்தான் வீராசாமி; பாலசிங்கன் சொற்ப பணத்தையும் எடுத்து மடியுள் வைத்துக்கொண்டு வீராசாமியுடன் புறப்பட்டு மெல்ல மெல்ல மதுபானக் கடைக்கு அவனைக் கூட்டிக்கொண்டு போய்த் தானுங் குடித்து அவனையும் நிறையக் குடிக்கச் செய்தான்; அதன் பின்னர் அவனைக் கடற்கரைக்குக்கூட்டிக்கொண்டுபோய் அவனுடன் தானும் கடற்கரை மணலின்மீது இருந்தான்; அப் பொழுது நேரம் பிற்பகல் ஐந்து ஐந்தரை மணிவரையிலிருக்கும்; பாலசிங்கன் பக்கத்தே இருந்த வீராசாமியைப் பார்த்து "வீரா, விசுவநாதனை விசாலாட்சியையும் அவனுடைய மாமன் வீட்டுக்காரரும் வெறுக்கச் செய்யவேண்டும்; அதற்கு இப்பொழுதே ஏதும் சூழ்ச்சி தேடவேணும்; உன்னால் ஏதும் உபாயஞ் சொல்ல முடியுமா" என்று மெல்லக்கேட்டான்; "அட பாலா, நீதான் அவனை அந்தப்பெண்ணும் அவளுடைய பெற்றோரும் வெறுக்கும்படியாகச் செய்துவிட்டாயே; வெறுக்கப்பட்டவனைப் பிறகும் வெறுக்கச் செய்வது எப்படியடா" என்றான் வீராசாமி; "அப்படியல்லவெடா, அந்தப் பெண் அவனையே கல்யாணஞ் செய்ய வேண்டுமாம்; இல்லையேல் தான் கல்யாணஞ் செய்வதில்லையென்று பிடிவாதமாக நிற்கிறாளாம்; அதற்காகத்தான் சொல்லுகிறேன், இந்தக் கருமத்தில் நீ எனக்கு உன்னால் இயன்ற உதவி செய்யவேண்டும்" என்று சொல்லி யிரந்தான்; "அது சரி பாலா, அவள் அவனைக் கல்யாணஞ் செய்தாலென்ன, அவனை அவள் கல்யாணஞ் செய்தாலென்ன, அந்தக் கல்யாணந்தான் நடவாமற்போனாலென்ன; நீ ஏன் அந்த விஷயமாக ஆத்திரப்படுகிறாய்? நான் முந்தியுஞ் சொன்னேன் அந்தப் பெண்ணை நீ கல்யாணஞ் செய்யமுடியாது; பயனில்லாத கருமத்திலே தலையிட்டுக் கொண்டு ஏனடா சங்கடப்படுகிறாய்" என்று தடுத்துச் சொன்னான் வீராசாமி; "என் சிநேகிதா, இந்த ஒரு விஷயத்தில் மாத்திரம் என்னை நியாயங் கேளாதே, என்னை உனக்கு வேணுமானால் எனக்கு உதவி செய்" என மீளவும் அவனை இரந்தான் பாலசிங்கன். "சரி எனக்கு உபாயந் தெரியாது; உபாயத்தை நீயே யோசித்துச் சொல்லு; சொல்வதைச் செய்கிறேன்; இதனால் பின்னுக்கு உனக்கும் எனக்கும் ஏதும் அபாயம் வந்தால், உனக்காக நான் அதனையும் அனுபவிக்கிறேன்; நீ என்னைக் குற்றஞ் சொல்லாதே" சரி, இப்பொழுது என்னை என்ன செய்யச் சொல்லு கிறாய்" என்று வெறுப்புடன் கேட்டான் வீராசாமி; பாலசிங்கன் சொல்லுகிறேன் என்று கூறிச் சிறிதுநேரம் யோசித்தான். "சிநேகிதா, சில நாட்களாக விசுவநாதன் எங்களிடம் வராமல் விட்டது மாத்திரமல்லாமல் என் கண்ணிலும் உன் கண்ணிலும் எதிர்ப்படாமல் ஒதுங்கித் திரிகின்றானே; அவனுக்கு என்மேல் அவநம்பிக்கை பிறந்துவிட்டது; குடிவகை கொடுத்து அவனை இனி என் வசப்படுத்த முடியாது; அதற்கு வேறு ஏதும் உபாயம் நான் யோசிக்கிறேன்; நீ அவனுக்குச் சொல்லாமல் அவனை ஏதோ ஒரு உபாயத்தினாலே என்னைச் சந்திக்கச் செய்யமாட்டாயா" என்று பாலசிங்கன் கேட்க, "உபாயம் சூழ்ச்சி வஞ்சகஞ் சூது ஒன்றும் எனக்குத் தெரியாது என்று முந்தியே உனக்குச் சொல்லிவிட்டேன்; அவனை உன்னோடு சந்திக்கச் செய்வதற்கு ஒரு உபாயத்தை நீயே எனக்குச் சொல்லித்தந்தால் நான் அப்படியே செய்கிறேன்" என்றான் வீராசாமி; நல்லது, இன்றைக்கு வேண்டாம்; நாளைப்பின்னேரம் நான் என்வீட்டிலேயே படுத்திருக்கிறேன்; நீ அவனிடம்போய் எனக்கு ஆபத்தான சுகவீனம் சடுதியில் வந்ததென்று சொல்லி அவன் மனத்தை என் விஷயமாக இரங்கச்செய்து என் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு வா; அதன் பிறகு ஆகவேண்டியவைகளை நான் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்றான் பாலசிங்கன்; "என்னடா பாலா, நீ மலைபோலே இருந்து கொண்டு உனக்கு ஆபத்தான வருத்தமென்று அவனுக்குப் பொய்சொல்லி அவனை ஏமாற்றிக் கூட்டிக்கொண்டு வரச் சொல்லுகிறாய்; என்ன சுகவீனமென்று அவன் கேட்டால் உனக்குப் பேதி நோய் கண்டதென்று நான் அவனுக்குச் சொல்லுவதா? சரி பார்ப்போம்; வாய்த்தாற் கண்டுகொள்; இல்லாவிட்டால் என்னைக் குறை சொல்லாதே" என்றான் வீராசாமி; இருவரும் பின்னரும் சிலநேரம் கடற்கரையிற்றானே இருந்துவிட்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு மீண்டு மதுபானக் கடைக்குப் போய்க் குடித்தார்கள். வெறியேறியவுடனே வீராசாமி, "அடே மச்சான், நீ சொன்னதெல்லாம் நான் உனக்காக இனிச் செய்வேனடா" என்று சத்தமிட்டான். அன்று இருவரும் தத்தம் வீட்டிற்கு மீண்டனர். அடுத்தநாட் பின்னேரம், சங்கேதப்படி வீராசாமி விசுவநாதன் வீட்டிற்கு அவன் அங்கேயிருக்குஞ் சமயம் பார்த்துப் போய்ச் சேர்ந்தான்; வீராசாமி தன் வீட்டிற்கு வருவானென்ற எண்ணஞ் சிறிதும் இல்லாத விசுவநாதன் அவனைக் கண்ட மாத்திரத்தே திடுக்குற்றானெனினும் அதனைப் புறத்தே காட்டாதவனாய், தன் வீடுதேடி வந்தவனை உபசரிக்கவேண்டுமென்ற முறைபற்றி, அவனை வரவேற்று இருக்கச் செய்தான்; வீராசாமி விசுவநாதனைப்பார்த்து "விசுவநாதா, உனக்கு ஏதும் சுகமில்லையா? உன்னை வெகுநாளாக வழிதெருவிற்போக நான் கண்டதில்லை" என்று பரிவுடன் வினாவ, "எனக்கு ஒரு சுகயீனமுமில்லை; ஆனாலும் இப்பொழுது சில நாட்களாக நான் வெளியிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதல் வருதலை விட்டுவிட்டேன்; வீண்கூட்டங் கூடித் திரிவதால் அவப்பேர் உண்டாகிறது; நான் இப்பொழுது படிப்பதிலும் இன்னும் ஆகவேண்டிய நல்ல கருமங்களைப் பார்ப்பதிலுமே காலம் போக்குகிறேன்" என்றான்.

"வெளவாலார் தின்றகனி வாயாலே, வாயாலே"

"வீராசாமி, ஏதோ காரணமில்லாமல் நீ வரமாட்டாய்; வந்த நோக்கமென்ன? உண்மையைச் சொல்லு" என்று வினவினான் விசுவநாதன்; "வேறொன்றுமல்ல; பாலசிங்கன் இப்பொழுது சுகவீனமாகக் கிடக்கிறான்; உனக்கு அந்தச் செய்தி தெரியாமலிக்கக்கூடுமென் றெண்ணி இப்பொழுது தெரிவித்துப்போக வந்தேன்" என்று சொன்னான் வீராசாமி; "பாலசிங்கன் சுகவீன மாய்க் கிடந்தால் அது நூதனமல்ல; வெளவாலார் தின்றகனி வாயாலேயென்று சொல்லுவார்கள் எங்களூரிலே; பாலசிங்கன் செய்த அக்கிரமங்களுக்கு அவன் நோய்வாய்ப்பட்டுக் கிடப்பது நூதனமல்ல" என்று வெறுப்போடு பதில் சொன்னான் விசுவநாதன்; "பாலசிங்கனுக்கு நோய் வருவதற்கு நியாயமுண்டு இல்லையென்று இவைகளைப்பற்றி உன்னிடஞ் சொல்ல உன்னோடு யோசிக்க நான் வரவில்லை; அவன் உன் பழைய சினேகிதனல்லவா, அதனால் உனக்குத் தெரிவிக்கவேண்டுமென்ற நியாயம் பற்றித்தான் நான் வந்தேன்; உனக்கு இஷ்டமானால் நீ போய்ப் பார்க்கலாம், இல்லையேல் விடலாம்; அது உன்னைப் பொறுத்தது; அவனுடைய சுகவீனத்தை அறிந்து கொண்டும் நான் உனக்குத் தெரிவிக்காம லிருந்தால் பின்னர் அவனைப் பாராமல் விடுதற்கும் என்னைக் குறைகூறுவதற்கும் நீ குற்றமில்லாதவன்போல் நடப்பதற்கும் வசதியாகவிருக்கும்; ஆனதினாற்றான் இப்பொழுது சொல்லிவிட்டேன்" என்று விசுவ நாதனுள்ளத்திற் சுடும்படியாக விடை சொன்னான் வீராசாமி, அதனைக் கேட்ட விசுவநாதன் வீராசாமியை பார்த்து "நீ சொல்வது சரிதான்; ஆனால் உன்னைநான் குறை சொல்லவில்லை; பாலசிங்கன் ஒரு உற்ற சினேகனல்லன்; அவன் தன்னைநம்பி நடப்பவர்க்குஞ் சதி செய்வான்; அதனால் அவனைப் போய்ப் பார்ப்பதற்கு எனக்கு மனமெழவில்லை; அதுகிடக்க அவனுக்கு என்ன சுகவீனம், அவனுடைய சுகவீனம் ஆபத்தானதா? இல்லையேல் மாறக்கூடியதா? அவன்தான் எனக்குத் தெரிவிக்கும்படி உன்னை இங்கே வரவிட்டானா? இல்லையேல் நீயாகவந்து எனக்கு இதைத் தெரிவிக்கிறாயோ, சொல்லு" என்று விசுவநாதன் ஒன்றன்பின்னொன்றாகப் பல கேள்விகளைக் கேட்டான். "அவனுடைய சுகவீனம் காய்ச்சலென்றுஞ் சொல்லலாம், கொதியென்றுஞ் சொல்லலாம்; அது ஆபத்தாகவும் வரக்கூடும், ஆபத்தில்லாமலும் போகக்கூடும்; அவனும் உனக்குத் தெரிவிக்கும்படி என்னிடஞ் சொன்னான்; உனக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நானும் நினைத்து வந்தேன்" என்று சிறிது வேடிக்கையாகவே வீராசாமி பதில் சொல்ல, வெறுப்போடிருந்த விசுவநாதன் அவன் சொன்னவைகளைக் கேட்டுச் சிரித்துக்கொண்டு "என்ன வீராசாமி, விநோதமாகப் பேசுகிறாய், நான் போய் அவனைப் பார்க்கவேண்டுமா; "போய்ப்பார்ப்பதும் பாராமல் விடுவதும் உன்னைப் பொறுத்தவை; உன் பிரியப்படி செய் என்பதே நான் சொல்லத்தக்கது; ஆனால் ஒன்று மாத்திரம் சொல்லுகிறேன்; அதனை உங்களிருவருக்கும் முந்தியுஞ் சொல்லியிருக்கிறேன்; நீங்களிருவரும் படித்த மூடர்கள், நான் படியாத மூடன்; ஏனென்று கேட்கிறாயோ? பாலசிங்கன் உனக்கு ஏதும்பிழை செய்திருக்கலாம்; அவன் இந்த நேரத்தில் வருத்தமாய்க் கிடக்கிறான்; அவனைப்போய்ப் பார்ப்பதோ பாராமல் விடுவதோ என்று படியாத மூடனாகிய என்னை நீ கேட்கிறாய்; நெல்லுக்கு உமியுண்டு, நீருக்கு நுரையுண்டு, புல்லிதழ் பூவுக்குமுண்டு என்று நீதானே பலமுறையும் முந்தி எனக்குச் சொல்லி வைத்தாய்; உனக்கு சினேகனென்றிருந்தவன் பிழையொன்றிரண்டு செய்தால் நீ அதைப் பொறுப்பதன்றி அவனை இந்தநேரத்தில் அறவே புறக்கணித்து விடலாமோ? கைவிரல் கண்ணிலே குத்திவிட்டால் அதனைத் தறித்தெறிவாருமுண்டோ; நீங்கள் படித்தபடிப்பு புத்தகப்படிப்பு, நான் படித்த படிப்பு உலகப்படிப்படா விசுவநாதா" என்று அதட்டி நியாயம் பேசினான் வீராசாமி. "நல்லது, நான் அவனைப் பார்ப்பதற்கு இப்பொழுதே புறப்பட்டு வருகிறேன்; நீயும் உடன் வருகிறாயோ" என்று விசுவநாதன் கேட்க "வரச் சொன்னால் வருகிறேன்" என்றான் வீராசாமி. "நான் அங்கே வந்தால் அதிகநேரம் தங்கியிருக்க மாட்டேன் சற்றுவேளையாற் புறப்பட்டு விடுவேன்" என்று விசுவநாதன் சொல்ல, "அதைப்பற்றி எனக்கேன் சொல்லுகிறாய்" என்றான் வீராசாமி. உடனே இருவரும் புறப்பட்டு மார்க்கத்திலே நானா வார்த்தைகளையும் பேசிக்கொண்டு பாலசிங்கன் வீட்டையடைந்தனர். அடைந்தவுடனே விசுவநாதன் வீராசாமியைப் பார்த்து "நீ முன்னுக்குப் போ உன் பிறகே நான் வருகிறேன்" எனலும், "நான் முன்னுக்குப்போக நீ என்பிறகே வரலாம், இல்லையேல் நீ முன்போக நான் பின்னே வரலாம்" என்றான் வீராசாமி; "இல்லை நீதான் முன்னுக்குச் செல்; எனக்குக் கூச்சமாயிருக்கிறது, நான் உன்பிறகே வருகிறேன்" என்று விசுவநாதன் சொல்ல, அதற்கு உடன்பட்டு வீராசாமி அவனைக் கூட்டிக் கொண்டுபோய்ப் படுக்கையறையிற் கிடந்த பாலசிங்கன் முன்னிலையில் விட, அவன் அயலேயுள்ள ஒரு நாற்காலியைக் காட்டி அதில் இருக்கச்சொல்ல, அவன் இருந்தான்; இன்னொரு நாற்காலியில் வீராசாமியும் இருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் உங்கே நிற்பான்? உள்ளே வாருங்கள்"

பாலசிங்கன் விசுவநாதனைக் கண்ட மாத்திரத்தே மெல்ல எழுந்து படுக்கையிற்றானே இருந்தபடி "விசுவநாதா உனக்குநான் பெரும் பிழை செய்துவிட்டேன்; அதையிட்டு நான் இப்பொழுது கவலைப்படலானேன்; எனக்கு மனவருத்தமேயொழிய, சரீர வருத்தம் அதிகமில்லை; அந்த மனவருத்தம் உன்னைப் பிரிந்தமையினால் நேர்ந்தது; இனிமேல் மதுபானத்தைப் பற்றி நான் கனவிலும் நினைக்க மாட்டேன்; நான் உனக்குச் செய்த அபராதங்களைப் பொறுத்துக்கொள்; என்னுடன் சிநேகமாயிருக்கா விட்டாலும் என்னைப் பகைக்க வேண்டாம்" என்று விசுவநாதனுடைய உள்ளமுருகச் சொன்னான். "பாலா, நீ கவலைப் படாதே, மதுபானத்தை நீ விட்டுவிட்டால் உன்னை ஒருபோதும் நான் கைவிடமாட்டேன்" என்று பரிவுடன் சொன்னான் விசுவநாதன். "விசுவநாதா, உன்னைக் கண்டபின் எனக்கு மனவருத்தம் மாறிவிட்டது; தேகவருத்தமுஞ் சுகமாய்விட்டது; ஆனதால் உங்களிருவரோடும் நான் இப்பொழுது மெல்ல மெல்ல வெளியிற் போய் உலாவிவர விரும்புகிறேன், உனக்குச் சம்மதமா" என்று பாலசிங்கன் கேட்க, "ஓம்" என்றான் விசுவநாதன். உடனே மூவரும் புறப்பட்டு கடற்கரையை நோக்கிப் போகும்போது, மார்க்கத்தில் ஒரு சிறந்த வீடுகாணப்பட, பாலசிங்கன் மற்றை இருவரையும் பார்த்து "சற்று நேரம் இப்படி நின்று கொள்ளுங்கள்; எனக்குச் சிறிது ஆயாசமாயிருக்கிறது; இது எனக்கு வேண்டியவர்களுடைய வீடு, நான் மாத்திரம் போய்த் தாகசாந்தி செய்வேன் இரண்டு நிமிஷத்தில் வருகிறேன்" என்று சொல்ல, அவர்களும் அதற்குச் சம்மதித்து அவ்வீட்டு வாசலுக்கெதிரே தெருவோரத்தில் நிற்க, பாலசிங்கன் மாத்திரம் உள்ளே புகுந்தான். இருவரும் ஐந்து நிமிஷம் வரையில் அந்த இடத்திற்றானே நின்றார்கள்; பாலசிங்கன் வந்திலன்; "இது யாருடைய வீடு உனக்குத் தெரியுமா" என்று விசுவநாதன் வீராசாமியை வினவ, "எனக்குத் தெரியாது, ஒருபோது இவனுடைய இனத்தவர்களின் வீடாயிருக்கக் கூடுமென நினைக்கிறேன்" என்றான் வீராசாமி; இப்படிப் பதில்சொல்லி முடிவதற்கிடையில் ஒரு வேலைக்காரச்சிறுமி அவ்விருவரும் நிற்குமிடத்திற்கு வந்து "உங்களை உள்ளே வரும்படி அந்த ஐயா சொல்லச் சொன்னார்" என்று தெரிவிக்க, வீராசாமி முன்போக விசுவநாதன் யோசித்தபடி பின்னே சென்றான்; இருவரும் போய்த் தலைவாசலில் ஏறி நின்றனர்; நிற்பதற் கிடையில் தலைவாசலுக்கு நேரேயுள்ள அறையின் வாசலில் இடப்பட்ட அலங்காரத் திரையைத் தன் மெல்லிய கரத்தாற் சிறிது ஒதுக்கிப் பற்றியபடி பூரண சந்திரன்போன்ற முகத்தோடு கூடிய ஒரு இளம்பெண் "ஏன் உங்கே நிற்பான்? உள்ளே வாருங்கள்" என்று குயிலென மொழிந்து அழைக்க, இருவரும் உள்ளே சென்றார்கள்.

* * *

உலகம் பலவிதம்: 1944 ஆகஸ்ட் 03 விசாலாட்சி: (முற்றொடர் - 12)

"முகம்மறுக்க முடியாமல் அருந்தினான்"

அழைத்த பெண் அவ்விருவரையும் முன் செல்லவிட்டுத் தான் அவர்களைத் தொடர்ந்து போக, முந்தியே அங்கே போய் ஒரு ஸோபாவிலிருந்த பாலசிங்கன் இருக்கை விட்டெழுந்து, "வாருங்கள், வாருங்கள், இப்படி இருங்கள்" என்று தான் இருந்த ஸோபாவில் அவர்களிருவரையும் இருத்தி அவர்கள் மத்தியிலே தானும் இருந்தான்; "நான் காலதாமதஞ் செய்யாமல் தாகத்திற்கு ஏதும் குடித்துவிட்டு வரலாமென்றெண்ணி உங்களைப் புறத்தே நிற்கச்செய்து இங்கே வந்தேன்; ஆனால் இந்த ரஞ்சிதத்திற்கு உங்களைப் புறங்கடையில் நிற்கவிட்டு நான் இங்கே வந்திருப்பது பிரியமில்லை; இவளொரு பெருந்தன்மையுள்ள பெண்; இவளோடு பழகி நாலுநாள் ஊடாடியவர்கள் பிறகு இவளை விட்டுப்பிரிய மனம் ஒருப்படார்கள்; இரஞ்சிதம் என்ற பெயர் இவளுக்குக் காரணப் பெயராயிற்றென்று சொல்லினும் பிழையாகாது. நல்லாருடைய சிநேகம் நுனியிலிருந்து அடிப்பக்கம் நோக்கிக் கரும்பு தின்றாற்போல, அவர்களுடன் உறவாட உறவாடத்தான் இனிக்கும்..." எனப் பாலசிங்கன் சொல்லிக்கொண்டிருக்கும்போது, இவர்களிருவரும் வந்து இருந்தவுடன் மறைந்த இரஞ்சிதம், ஒரு பணிப்பெண் ஒரு தட்டிலே பளிங்குப் பாத்திரங்கள் மூன்று ஏதோ பானம் நிறைத்து வைக்கப்பட்டபடி ஏந்திக்கொண்டு வர, தான் பின்னே வந்தாள்; பணிப்பெண் அந்தத் தட்டை அம்மூவர் சமுகத்தில் நீட்ட, முதற் பாலசிங்கன் அவற்றுள் ஒரு பாத்திரத்திலுள்ள பானத்தை எடுத்து விசுவநாதனிடம் நீட்ட, அவன் அதனை ஏற்றுக்கொண்டு பருகாமலிருந்தான்; மற்றைப் பாத்திரத்தைப் பாலசிங்கன் நீட்ட வீராசாமி வாங்கி அதன்கணுள்ள பானத்தை ஒரு துளியுமில்லாமல் உறுஞ்சிவிட்டு வெற்றுப் பாத்திரத்தைத் தட்டத்திலே வைத்துவிட்டான்; எஞ்சிய பாத்திரத்தைப் பாலசிங்கன் தன் கையில் எடுத்துவைத்துக் குடிக்கப்போகும்போது, விசுவநாதன் குடியாமலிருப்பதைக் கண்டு, "விசுவநாதா, ஏன் தந்ததைக் குடியாமலிருக்கிறாய், வந்த இடத்தில் ஒருவரை விட்டு ஒருவர் அருந்துவது சரியல்லவே" எனலும், விசுவநாதன் "அதைப்பற்றிக் காரியமில்லை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு இப்பொழுது தாகமில்லை; நீ உன் தாகத்தைத் தீர்த்துக்கொள்" என்றான். பாலசிங்கன் அயலே விநயமாக நின்ற இரஞ்சிதத்தைக் குறிப்பாகப் பார்க்க, அவள் விசுவநாதனை ஆர்வம் பெருகப் பார்த்து "நீங்கள் யோசியாமற் பருகுங்கள். இது ஏதும் மதுபானமென்று சந்தேகப்படாதீர்கள், இது "ஸ்வீற் அறேஞ்ஜ்" இதைப் பருகுவதினால் ஒரு பாதகமுமில்லை; ஆட்களைப் பார்த்து விளங்கி அவரவர்க்குரிய பானத்தை வழங்க நான் பழகியிருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு விசுவநாதன் கையிலிருந்த பாத்திரத்தைத் தான் வாங்கி மணந்து விட்டு மீள அவனிடங் கொடுத்தாள். பாலசிங்கனுடைய கேள்விக்கு இசையாத விசுவ நாதன் இரஞ்சிதத்தின் இனிய வார்த்தையைக் கேட்டமாத்திரத்தே முகம் மறுக்கமாட்டாமல் அருந்தினான்; பார்த்துக்கொண்டு பக்கத்தேயிருந்த பாலசிங்கன், "நான் கேட்டாற் குடிக்கவொண்ணாது; இரஞ்சிதம் கேட்டாற் குடிக்கலாம் போலும்" என்று புன்னகையுடன் சொன்னான். "இரஞ்சிதத்தின் தோற்றம் கண்ணுக்கு ரஞ்சிதம், வார்த்தை காதுக்கு ரஞ்சிதம், எப்படி மறுக்க முடியும்" என்றான் வீராசாமி; இவைகளையெல்லாம் கேட்டுக் கொண்டு புன்னகை செய்தபடி ஒரு புறத்தே நின்றாள் இரஞ்சிதம். மூவருந் தாகசாந்தி செய்து பின்னரும் சிறிதுநேரம் அங்கிருந்து நானா வார்த்தைகள் பேசிவிட்டு, இரஞ்சிதத்திடம் விடைபெற்றுக் கொண்டு போவாராயினர். "போய் வாருங்கள்" என்று இரஞ்சிதம் விடைகொடுக்கும்போது, விசுவநாதனை அவள் அன்புடன் பார்த்து எங்களை மறந்துவிடாதீர்கள்; இனிமேலும் வாருங்கள்" என்று சொல்ல, அவனும் "ஓம், அப்படியே செய்கிறேன்" என்று சொல்லிவிட்டகன்றான்.

இவளுடைய வரலாறு

ரஞ்சிதம் என்ற பெண்ணின் பூரணநாமம் மனோரஞ் சிதம்; இவள் தென்னிந்தியாவிலுள்ள ஒரு கிராமத்திற் பிராமண வருணத்திலே பிறந்தவளென்றும், தன் மரபோடொத்த மரபுடைய ஒரு பிராமணச் சிறுவனுக்கு மனைவியாக இவள் பால்யத்திலே நிச்சயிக்கப்பட்டிருந்தாளென்றும், அந்தச் சிறுவன் இறந்துவிட, இந்தச் சிறுமியை விதவையாகப் பாவித்து இவள் தலையை முண்டிதமாக்குதல் முதலிய கருமங்களைச் செய்ய முயன்றபோது, இவள் புகுந்தவீட்டாரையறியாமல் ஒளித்தோடிப் போய் அதிக தூரத்திலுள்ள ஒரு பட்டினத்தையடைந்து அங்கே நாடகக்காரருடன் சேர்ந்து நடித்து மாசவேதனம் பெற்று வந்தாளென்றும், அப்படிவரும் போது நாடக முதலாளி இவள் மீது கொண்ட தீய நோக்கத்தைக் கண்டு இவள் அந்தப்பட்டினத்தை எவருமறியாதபடி விட்டு நீங்கிக் கடல் கடந்து இந்தவூரில் வந்து ஒரு தாசியின் அபிமான புத்திரியாக வளர்க்கப்பட்டு வருவாளாயினளென்றும் அந்தத் தாசியே இவளுக்குத் தன் குலத்தொழில்களாகிய பரத நாட்டியம் சங்கீதமென்னுமிவைகளை நன்கு பயிற்றி இவளைத் திறம்படச் செய்தனளென்றும் ரஞ்சிதம் இருக்கும் அந்த ஊரிலுள்ளவர்களும் அயலூரவர்களுஞ் சொல்வார்கள். இரஞ்சிதம் எவர் கண்ணையும் கவரக்கூடிய வனப்பு வாய்ந்தவள்; சங்கீதத்திலும் பரதநாட்டியத்திலும் திறமையுடையவள்; உத்தம மெல்லியலார்க்குச் சொல்லப்பட்ட மேனியுடையவள்; காலத்திற்குஞ் சமயத்திற்கும் ஏற்கத் தன்னையலங்காரஞ் செய்யும் ஆற்றல் பூண்டவள், பதினாறு பதினெட்டு வயசு மதிக்கக்கூடிய பார்வையுடையவள்; ஆனால் உண்மையில் அவள் வயசு இன்னும் பத்து வரையில் மேலதிகமாக இருக்குமென்று அவளுடன் நெருங்கி ஊடாடியவர்கள் சொல்லுவார்கள். தாசித்தொழிலை மேற் கொண்டாளாயினும் அவளுடைய சாதிக்குரிய சில பெருங் குணங்களும் அவளிடத்தில் இயல்பாக வுண்டென்று அவளையறிந்தோர் சொல்லுவார்கள். அவள் சிலசமயத்தில் உண்மையாகவும் நீதியாகவும் நடக்க முயன்றாலும் அவளுடைய "தாய்க்கிழவி" அவளை அங்ஙனம் நடக்கவிடாது, வேட்டுவன் எடுத்த மென்புழுப்போல் தன் வசமாக்கிக் கொள்ளுவாள்.

"எங்களை மறந்துவிடாதீர்கள்"

இரஞ்சிதத்திற்குப் பாலசிங்கன் மீது அகத்தே விருப்பமில்லையெனினும் அவள் புறத்தே விருப்புடையவள்போல் நடித்துவந்தாள்; பால சிங்கனுக்கும் அவளுக்குமிடையேயுள்ள சிநேகம் தாய்க்கிழவியின் பலாத்காரத்தினால் ஆக்கப்பட்டது; பாலசிங்கன் தன்னிடத்துள்ள பொருள் பண்டங்களில் ஒரு பாகத்தை மதுபானத்தின் பொருட்டும் ஒரு பாகத்தை இந்த இரஞ்சிதத்தின் பொருட்டுஞ் செலவழித்து விட்டான்; இவளுக்கு உதவப்பட்ட பொருளாலும் பணத்தாலும் நன்மையடைந்தவள் இவளுடைய தாய்க்கிழவியேயாவள்; இந்த மூவருஞ் சென்ற அத்தினத்து அதிகாலைப் போதினிலே, பாலசிங்கன் இரஞ்சிதத்தின் வீட்டையடைந்து இன்ன இன்ன விதமாக நடந்துகொள்ள வேண்டு மென்று இரஞ்சிதத்தோடும் அவளுடைய தாய்க் கிழவியோடும் ஒழுங்கு செய்திருந்தான். இரஞ்சிதத்தின் மோகவலையில் விசுவநாதனைப் படச்செய்தால், அவன் பின்பு ஒருபோதும் விசாலாட்சியைப்பற்றிச் சிந்திக்க மாட்டானென்பதே பாலசிங்கன் கொண்ட சூழ்ச்சியாகும். பாலசிங்கன் செய்யும் இச்சூழ்ச்சி எவருக்கு நன்மையாய் முடியும் எவருக்குத் தீமையாய் முடியும் என்பதையிட்டு இப்பொழுது சொல்லுதல் முடியாது. அன்றிரவு மூவரும் இரஞ்சிதம் வீட்டிலிருந்து புறப்பட்டுக் கடற்கரைக்குப்போய் அங்கே சற்று நேரமிருந்து பேசிவிட்டு அவ்விடத்தைவிட்டு மீண்டு போய்த் தத்தம் இல்லத்தையடைந்தனர். பாலசிங்கன் தான் செய்யத் துணிந்த புதிய சூழ்ச்சி பலிக்குமோ பலியாதோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சிந்தனையோடு படுத்துக் கிடந்தான்; வீராசாமி இராமனாண்டாலென்ன; இராவணனாண்டாலென்ன, ஆர் எக்கேடு கெட்டாலும் நமக்கு மதுபானம் அகப்பட்டாற் போதுமென்று கிலேசமின்றிப் படுத்து உறங்கினான்; ஆனால் விசுவநாதனுடைய மனம் மாறுபட்டது; இரஞ்சிதத்தையிட்ட சிந்தனை அவனுள்ளத்திலே தலைப்பட்டது. அவளை முன்னொருபோதும் பார்த்தறியான்; அவளையொத்த ரூபவதியையும் எப்பொழுதாயினுங் கண்டறியான்; விசாலாட்சியின் அழகு, இரஞ்சிதத்தைக் கண்டதன்பின் அவனுள்ளத்திற் பகல் விளக்கெனப்பட்டது. "எங்களை மறந்து விடாதீர்கள்" என இரஞ்சிதம் மொழிந்த இனிய வார்த்தை அவனுடைய செவித்துவாரங்களில் எதிரொலி செய்தபடி நின்றன. அந்த வாக்கியம் அவனுடைய சித்தத்துள் தித்தித்தபடியே புதைந்துகிடந்தது; இரஞ்சிதத்தை இன்னுமொரு முறை தரிசிக்கும் பாக்கியம் எனக்கு எப்பொழுது கிட்டுமோ என்று நினைந்து நினைந்து நெட்டுயிர்த்தான்; "அவளுடைய தரிசனம் இந்தத் துஷ்டர் இருவர் சமூகத்திலே கிட்டுவதனால், என்ன பிரயோசனம்; தன்னந்தனியே அவளிருக்கும் போது அவளைத் தரிசித்தால், அவளோடு வார்த்தையாடினால் அவளுடைய உபசரணையை நான் பெற்றால், அப்பொழுதல்லவா அவளிடத்துள்ள நலன்களை நான் உள்ளபடி உணர முடியும்" என்று தன்னளவில் நினைத்துக் கவன்றான். "முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டாற் கிட்டுமோ? கிட்டாதாயின் வெட்டெனமற என்று இப்படியான வாக்கியங்களைத் தன்னளவிற்றானே சொல்லி மனந்தளர்ந்தான். அன்றிரவு முழுவதும் விசுவநாதன் உறக்கங்கொண்டிலன்.

வந்துவிட்டு ஏன் மீளுகிறீர்கள்?

அடுத்தநாள் இரஞ்சிதத்தை ஒரு முறையேனும் தான் தனியே காணவேண்டுமெனவும், அங்ஙனங் காண்பதைப் பாலசிங்கன் வீராசாமி யென்னுமிருவரும் அறியவொண்ணாதென்றும் நினைத்துக்கொண்டு, முதனாட் போன அந்த நேரத்திலேயே விசுவநாதன் அந்த இரஞ்சிதம் இருக்கும் வீட்டு மார்க்கமாகப் போனான். போகும்போது தன் வரவை நல்வரவாக இரஞ்சிதம் நினைப்பாளோ என்ற சந்தேகத்தோடும் போவானாயினான்; ஆனால் இரஞ்சிதத்தின் வீட்டிற்குச் சமீபத்திலே சென்றவுடனே அவன் மனம் பயந்தது; கூசியது, "அவள் உண்மையாக என்னிடத்தில் விசேஷ அன்புடையவளாயிருந்தால், அவளும் இந்த நேரத்தில் வந்து தலைவாசலில் என் வரவை எதிர்பார்த்தபடி நிற்கலாமே; அப்படி அவள் நின்றால் அவள் வீட்டிற் பிரவேசிப்பேன், இல்லையேல் வேறெங்கோ செல்வதுபோற் சென்று விடுவேன்" என்று நிச்சயம்பண்ணிக் கொண்டு இரஞ்சிதம் வீட்டுக்கெதிரே, அந்தப் பக்கமாகத் திரும்பிப் பார்த்தபடி மெல்ல மெல்லப் போனான். அங்கே எவரையுங் காணவில்லை; இரஞ்சிதம் வந்து நிற்காவிட்டாலும் அவள் வீட்டு வேலைக்காரச் சிறுமியையாவது வந்து பார்த்துக்கொண்டு நிற்கும்படி அவள் செய்திருக்கலாமே; உள்ளன்பிருந்தால் நான் இப்பொழுது நினைத்தபடி செய்திருக்க மாட்டாளோ அவள் நேற்றுக் கூறிய வார்த்தை உபசார வார்த்தையே யொழிய உள்ளன்புகொண்டு சொன்ன வார்த்தையல்ல, அன்பிலாதவர்மீதிலே கொள்ளும் ஆசையும் ஒரு ஆசையா," என்று தன்னளவிற் சிந்தித்துத் தயங்கி அவன் அவ்விடத்தை விட்டகல முயலும்போது, "வந்துவிட்டு ஏன் மீண்டு போகிறீர்கள்" என்ற இனிய வார்த்தை அத்தலைவாசலிலுள்ள சாளர மூலமாக வெளிவந்து விசுவநாதன் காதிற் பட்டது; அவ்வார்த்தை இரஞ்சிதத்தின் வார்த்தையென்பதும் அவனுக்குப் புலப்பட்டது; கேட்டமாத்திரத்தே அவன் மகிழ்ச்சியோடு சென்று தலைவாசலிற் பிரவேசித்தான்; அங்கே எவருங் காணப்படவில்லை; தான்கொண்ட இடையறா எண்ணந்தான் இப்படித் தன் காதிலே அவள் வார்த்தையாகப் பட்டதோ என்று தன் காதுகளின் மீதுஞ் சந்தேகங் கொண்டான்; அந்த இடத்திலே அவன் நிற்கவும் முடியாமல், உடனே போகவும் முடியாமல் தேக்கிலையில் நீர்போல அவன் சிந்தை தியங்கியபடி நிற்கும் போது, முதனாள் வந்த சிறுமியே முற்பட்டு வந்து "ஐயா, உங்களை உள்ளே வரும்படி சொல்லுகிறார்கள்" எனலும் விசுவநாதன் உடனே ஆநந்தமடைந்தவனாய் உள் மண்டபத்தை அடைந்தான்; அந்தச் சிறுமி அவனைப் பின்தொடர்ந்துபோய் ஒரு ஸோபாவைக் காட்டி "இப்படி இருங்கள் ஐயா" என்று சொல்ல அவன் அப்படியே இருந்தான். இங்ஙனமாக ஐந்து நிமிஷநேரத்தில் மனோரஞ்சிதம் அங்கு அன்னமென நடந்து மயிலென ஒதுங்கி, "இப்பொழுதுதானா வந்தீர்கள்" என்று குயிலென மொழிந்து நாண மேலீட்டினாற் போலும் தலைகுனிந்து பூங்கொம்பென விநயத்தோடு நின்றாள். அவள் வந்து அங்ஙனம் நிற்பதைக் கண்ட விசுவநாதன் தன் இருக்கை விட்டெழுந்து "ஏன் நிற்பான், நிற்கவேண்டாம் உப்படி அமரும்" என்று ஆநந்தபரவசனாய்ச் சொல்ல, "இல்லை நீங்கள் இருங்கள், பின் நான் இருக்கிறேன்" என்று அவள்கூற விசுவநாதன் பழையபடியிருந்தான்; அவளும் அயலேயுள்ள ஒரு "ஸோபாவில்" அமர்ந்தாள். சில நிமிஷம் இருவரும் யாதும் வார்த்தையாடிலர். இருவரும் யார்முதற் பேசுவதென்பதையிட்டுச் சிறிதுநேரம் தனித்தனி யோசித்தனர்; ஈற்றில் இரஞ்சிதமே பேச ஆரம்பித்தாள்; "நாலுமணி தொடக்கம் உங்களுடைய வரவை எதிர்பார்த்தபடி இடையிடையே தலைவாசலில் வந்து பார்த்து நின்றேன்; நீங்களும் என் கேள்விக்கிசைந்து இப்பொழுது வந்து சேர்ந்தீர்கள்; நான் நேற்றுச் சொன்ன சொல்லின் குறிப்பையறிந்து என்னைப் பொருட்படுத்தி, தன்னந்தனியே இந்தச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தில் என்னிடம் அன்புகொண்டு வந்த உங்கள் ஆதரவையும் குறிப்பறியுந் திறமையையும் நான் மெச்சாமல் இருக்கமுடியாது" என்று ஒரே வசனமாக உயர்ந்த தமிழ் வசன நடையில் உபசாரங்கூறினாள் இரஞ்சிதம்; கேட்ட விசுவநாதன் அகமகிழ்ந்தான். "நேற்று நான் முதன்முதல் இங்கே வந்தபோது குறிப்பாக என்னிடத்திற் பாராட்டிய அபிமானமும் அன்பும் இன்று உம்முடைய வீடுதேடி வரும்படி என்னைத் தூண்டிவிட்டன; ஆனாலும் நான் இங்கு அதிகந் தாமதித்திருக்க என்மனம் இடந்தரவில்லை; காரணம் வேறொன்றுமல்ல, என்னுடைய நண்பரிருவரும் நான் இப்படி வந்தேனென்பதையுணர்ந்தால் என்மீது தீராச்சந்தேகமும் பொறாமையுங் கொள்வர்; ஆனதினாற்றான் சொல்லுகிறேன்" என்றான்; "அதை நானும் அறிவேன், உங்களிடத்தில் மாத்திரமல்ல, என் மீதும் அவர்கள் சந்தேகப்படுவர்; ஆனால் அவர்களுடைய கூட்டுறவு உங்களுக்கு எப்படிக் கிடைத்ததென்பதைப்பற்றித்தான் ஆச்சரியப்படுகிறேன்; உங்களோடு சில விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்கு உத்தேசித்திருக்கிறேன்; ஆனால் இது சமயமல்ல, இன்னொருவேளை சந்திக்கும்போது தெரிவித்துக்கொள்ளுவேன்; நீங்கள் இன்று இங்கே வந்தது இயன்றவரையில் இரகசியமாக இருக்கட்டும்; உங்களை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன்" என்று இப்படி இரஞ்சிதம் பேசிக்கொண்டு இருக்கும்போது வேலைக்காரச் சிறுமி தாம்பூலத் தட்டத்தை அவன் முன்னிலையிற் பணிவுடன் கொண்டுவந்து வைக்க இரஞ்சிதமே வெற்றிலையெடுத்து மடித்துக்கொடுக்க அவன் ஏற்று அருந்தி அவளையும் அருந்தச் செய்து இன்னொருவேளை வருவதாகச் சொல்லி அவளை அரிதிற் பிரிந்து தலைவாசலைக்கடந்து தெருவில் இறங்கும்போது பாலசிங்கனும் எதிரில் வந்தான்.

உலகம் பலவிதம்: 1944 ஆகஸ்ட் 10
விசாலாட்சி: (முற்றொடர் - 13)

"நாற்சந்தியில் நிற்கிறேன்"

விசுவநாதன் இரஞ்சிதத்தின் வீட்டிலிருந்து புறப்பட்டு வருவதைக் கண்ட பாலசிங்கனிடத்தில், அந்த நேரத்திலேயெழுந்த ஆநந்தத்திற்கு ஒரு எல்லையில்லையெனலாம். தான் வைத்த பொறியில் எலி உடனுக்குடன் அகப்பட்டு விட்டதேயென்று அவன் நினைத்துச் சந்தோஷப்பட்டான்; "விசுவநாதா, எங்கிருந்து வருகின்றாய்" என்று எதிர்ப்பட்ட அவனைப் பாலசிங்கன் ஏதும் அறியான்போற் கேட்டான். "இந்த மார்க்கமாகத்தான் ஒருவரிடம் ஒரு கருமமாக வந்தேன்; வந்தவிடத்தில் இரஞ்சிதம் வீட்டிலே நீ நிற்கக் கூடுமோ என்று அவ்வீட்டுத் தலைவாசலைத் தெருவில் நின்றபடி பார்த்தேன், அப்பொழுது அந்தப்பெண் என்னைக்கண்டு உள்ளே வரும்படி அழைத்தாள்; நான் போய்ச் சிறிதுநேரம் இருந்து பேசிவிட்டு வருகின்றேன்; நீ அங்கு வரவில்லையோ என்று வினாவியபோது, இன்னமும் வரவில்லை, சற்று நேரஞ்செல்ல வரக்கூடும் என்று இரஞ்சிதமே எனக்குத் தெரிவித்தாள்" என்று நயமாகச் சொன்னான் விசுவநாதன்; "நல்லது, நீ இப்பொழுது எங்கே போகிறாய்?" எனப் பாலசிங்கன் கேட்க, "நான் இப்பொழுது வீட்டிற்குத்தான் மீண்டு போகிறேன்" என்றான் விசுவநாதன், "நான் உங்கேதான் போய், சிலநிமிஷம் இருந்துவிட்டு உடனே மீண்டு உன்னிடம் வருவேன்; நீயும் இப்பொழுது இரஞ்சிதம் வீட்டிற்கு என்னுடன் வருகிறாயா" என்று பாலசிங்கன் கேட்க, விசுவநாதன் "நான் ஒருமுறை போய் இருந்து பேசிவிட்டு விடையும் பெற்றுக்கொண்டு வந்துவிட்டேன்; இனிமேல் மீண்டுபோவது அழகல்ல; வேணுமானால் நீ மாத்திரம் போய்ச் சீக்கிரம் மீண்டுவா, நான் அந்த நாற்சந்தியில் உன் வரவை எதிர்பார்த்துக் கொண்டு நிற்கிறேன்" என்றான். "நான் இரஞ்சிதம் வீட்டிலே அதிகநேரம் தாமதித்து நிற்கமாட்டேன்; ஆனாலும் அப்பாற்போய்ப் பார்க்கவேண்டிய கருமஞ் சில உண்டு; ஆனதால், விசுவநாதா, நீ உன் வீட்டிற்குப் போ, நானும் வீராசாமியும் பின்னேரம் உன்னிடம் வருவோம்" என்று சொல்லிப் பாலசிங்கன் இரஞ்சிதம் வீட்டிற்குச் செல்ல, விசுவநாதனும் தன் வீட்டிற்கு மீண்டான்.

சூரியனுதிப்பதெங்கே,
தாமரை மலர்வதெங்கே

பாலசிங்கன் இரஞ்சிதம் வீட்டிற்குப் போன போது விசுவநாதனுடைய பிரிவையிட்டுக் கவலைப் பட்டுக்கொண்டிருந்த இரஞ்சிதம் இவனை வரவேற்றாள். பாலசிங்கன் இரஞ்சிதத்தைப் பார்த்து "கண்ணே, ரஞ்சிதம், சந்தோஷப்பட வேண்டிய நேரத்தில் ஏன் கவலைப்படுகிறாய்" என்று புன்னகையோடு கேட்டான்; "எனக்குச் சந்தோஷமென்ன, எப்பொழுதுங் கவலைதான்" என்றாள் இரஞ்சிதம், "மாமயிலே, மருதங்கிளியே, மாங்குயிலே, இப்படியேன் மொழிகின்றாய்; நான் இருக்கும்போது உனக்கு என்ன கவலை" என்று ஆவலுடன் இதமாகக்கேட்டான் பாலசிங்கன். "நீங்கள் இருக்கும்போது எனக்கு வேறு கவலை எதற்கு; அதற்காகவல்ல, உங்கள் வரவை இவ்வளவு நேரமும் எதிர்பார்த்தபடியிருந்தமையினாற் பார்த்த கண்ணும் பூத்துப்போயது; நீங்கள் உடனே என்னைத் தேடிவர நினைக்கவில்லை; நேற்று வந்த அவர் இன்று என் வீடுதேடி வந்தாரே; என்மீது உங்களுக்குள்ள பராமுகத்தை யெண்ணி யெண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்போதுதான், நீங்களும் வந்தீர்கள்" என்று சொல்லி ஊடாடினாள் இரஞ்சிதம். இவள் இப்படிச் சொல்லக்கேட்ட பாலசிங்கன் பெருஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிப்புச் சிரித்து இதற்காகவா கவலைப்படுகின்றனை? வருவதிலும் போவதிலும் சமீபத்தில் இருந்து வார்த்தை யாடுவதிலுந்தானா அன்பு தங்கியிருக்கின்றதென்று இரஞ்சிதம் நீ எண்ணிக் கவலைப்படாதே; சூரியன் உதிப்பதெங்கே? தாமரை மலர் அலர்வதெங்கே? சந்திரன் தோன்றுவதெங்கே, குமுதம் மலர்வதெங்கே, கொண்டல் எத்துணை உயரத்திலிருந்தாலும் கீழேயுள்ள மயில்கள் அக் கொண்டலைக்கண்டு களிகொண்டு ஆடவில்லையா? ஆனதால் கண்மணியே, ரஞ்சிதம் நான் சமீபத்திலேயிருந்தாலும் தூரத்திலேயிருந்தாலும் எந்தநேரமும் என்சிந்தனை உன்னைப்பற்றியேயிருக்குமென்பதை நம்பு. அது கிடக்க, இப்பொழுது விசுவநாதன் இங்கே வந்து மீண்டு போகிறானே; அவன் தானாக இங்கே வந்தானா? இல்லையேல் தெருவிற்போகும் போது கண்டு அவனை வரவழைத்தாயா" என்று இதமாக வினவுதலும், இரஞ் சிதம் "அவர் தெருவில் எங்கள் தலைவாசலுக்கெதிரிலே நின்று யோசிக்கையில், தலைவாசலிலுள்ள யன்னல்வழியாற் கண்ட நானே அவரை உள்ளே வரும்படி கூப்பிட்டேன்; அவர் கூசிக்கூசி உள்ளே வந்தார்; வந்தவுடன் நீங்கள் இங்கே வந்தீர்களோ, இல்லையேல் இனிமேல் வரக்கூடுமோ என்று என்னை வினாவ, நீங்கள் இன்னமும் இங்கே வரவில்லை, இனிமேல் வருதல்கூடுமென்று சொன்னேன்; இந்த மறுமொழியைக் கேட்டவுடனே, நான் இருக்கும்படி தடுக்கவுங் கேளாமல் அவர் உடனே போய்விட்டார்" என்று பொய்யும் மெய்யுமாகக் கலந்து சொன்னாள்; "என்ன இரஞ்சிதம் நான் உன்னை வெகு சமர்த்தியென்று எண்ணியிருந்தேன்; நான் நினைத்த அளவு "கெட்டித்தனம்" உன்னிடத்திலில்லையே யென்பதை நினைக்க எனக்கு வெகு கவலையாயிருக்கிறது; நான் இங்கே வந்து சேரும்வரையிலும், அந்த விசுவநாதனை உன்னால் மறித்துவைக்க முடியவில்லையா" எனச் சிறிது கவலையோடு கேட்டான் பாலசிங்கன்; "நான் என்ன செய்வேன்; பாருங்கள்; பெண்ணாய்ப் பிறந்தவள் நானே நேரிற்போய் நின்று உபசரித்து இருக்கச்செய்து போகவேண்டாம், அவர் வந்துடுவாரென்று சொல்லவும், அந்த ஆள் அதனைக் கேளாமற் போகிறேன் என்று புறப்பட்டுவிட்டது. பெண்களாகிய எங்களைக்காட்டிலும் ஆண்பிள்ளையாகவிருந்தும் என்னோடு ஊடாட அவர் இலச்சைப்படுகிறார்; அப்படிப்பட்டவரை நான் என்ன செய்வது" என்று பரிவுடையாள் போற் சொன்னாள் இரஞ்சிதம். "இரஞ் சிதம், நீ சொல்வது நியாயந்தான்; அந்த விசுவநாதன் இனிமேலும் இங்கே வருவான்; அவன் வரத் தவறினால் நான் எப்படியேனும் அவனை இங்கே வரச்செய்வேன்; நான் இல்லாத சமயத்தில் அவன் இங்கு வந்தாற்றான் நாம் நினைத்த கருமம் கைகூடும்; அவன் இங்கு வரும்போது நீ இன்முகங்காட்டி அவனை உன் வசமாக்கி அவனுக்கு மதுபானமூட்டிவிடு; அப்படிச் செய்துவிடுவையேல், அதற்குமேல் நடக்கவேண்டிய கருமங்களை நான் பார்த்துக்கொள்வேன்; இரண்டா முறையும் ஏமாந்து போகாதே; முதன் முறை ஏமாற்றமடைந்த சிங்கம் அடுத்தமுறையகப்பட்ட கழுதையை அடித்துத் தின்றதென்று பஞ்சந்திரத்தில் ஒரு கதை நீ படித்ததில்லையா" எனப் பாலசிங்கன் சொல்ல, இரஞ்சிதம் "நான் பஞ்சதந்திரம் படித்ததில்லை, அந்தக் கதையென்ன சொல்லுங்கள்" என்று கேட்கப் பாலசிங்கன் சொல்லுவானாயினான்.

ஈரலும் செவியுமிருந்தால் போனகழுதை மீண்டு வருமா?

"ஒரு காட்டிலே மிருகேந்திரனாக வாழ்ந்த ஒரு சிங்கம் தனக்குச் சிலநாள் தேகசுகமில்லாமையினால் தன்மந்திரியாகிய நரியைப் பார்த்து "சம்புகமே, எனக்கு இப்பொழுது தேக சுகமில்லாமையினாற் காட்டில் ஏதும் இரைதேடப்போக என்னால் முடியவில்லை; நீயே, உன் உபாயத்தினால் எங்கேனும்போய் ஏதும் உணவிற்காகிய மிருகத்தை உயிரோடு இங்கே கூட்டிக்கொண்டு வருவையேல், நான் நின்றநிலையில் அதனை அடித்துண்டு என் பசியைத் தீர்ப்பேன்" என்று சொல்லுதலும், நரி அதற்கு உடன்பட்டு உடனே காட்டு மார்க்கமாகப் போனது; போனவிடத்தில், ஒரு கழுதை தன்னந் தனியே நின்று மேய்வதைக்கண்டு சம்புகம் சமீபத்திற்போய் "அம்மான், எப்படி உன் சுகம்" என்று க்ஷேமம் விசாரிக்க, கழுதை நரியைப் பார்த்து "மருமகனே, என்னிடஞ் சுகமா கேட்கிறாய்; நான்படும் பாட்டை உனக்குச் சொல்லாமல் வேறு ஆருக்குச் சொல்லுவேன்; எனக்கு எஜமானன் ஒரு வண்ணான்; அவன் என் வயிறாரத் தின்பதற்குப் புல்லு இடான்; என்னாற் சுமக்க முடியாத பொதிகளை என் முதுகிற் சுமத்திவிட்டு விரைவாய்ப் போகச் சொல்லி என்னைக் கண்டபடி அடிப்பான்; இப்பொழுதும் இந்தப் புல்லில்லாத நிலத்திலே என்னை மேயும்படி விட்டிருக்கிறான்; இங்கேயுள்ள இந்த உலர்ந்த அறுகம்வேரை மாத்திரந் தின்பதனால் என் வயிறு நிரம்புமா? அல்லாமலும் இந்த வண்ணான் கையில் குட்டியாகவே அகப்பட்ட நான் இவ்வளவு வயசு சென்றபின்னும் ஒன்றியாகவேயிருக்கிறேன்; இந்த வண்ணானுடைய சிறையினின்றுந் தப்பிப்போக வழியில்லையேயென்றுதான் கவலைப்படுகிறேன்" எனக் கவலையோடு கூறியது. இப்படிச் சொல்லக் கேட்ட நரி அதன் கவலையையிட்டுத் தானும் கவலைப்படுவதுபோல நடித்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டு கழுதையைப் பார்த்து "மாமா, உன் பரிபவத்தைக் கேட்கக்கேட்க எனக்கு மனவருத்தமாயிருக்கிறது; நீ நல்லாயிருப்பதற்கு நான் ஒருவழி சொல்லுகிறேன்; அப்படிச் செய்கிறாயா" என்று வினவ, கழுதை "ஆம் மருமகனே, நூறுமுறையுஞ் செய்கிறேன்; சொல்லு" என்று மகிழ்ச்சியுடன்

கேட்டது; "அம்மான் வேறொன்றுமல்ல; நான் வசிக்குங் காட்டிலே யதேச்சையாக மேயக்கூடிய பசும் புல் நிலம் பரந்து கிடக்கின்றது; அல்லாமலும் அங்கே வசிக்கும் பெண் கழுதைகள் சில என்னிடம் வந்து "அண்ணே, நாங்கள் நெடுங்காலமாகக் குமரிருக்கிறோம்; எங்கேனும் தக்க மாப்பிள்ளை அகப்பட்டாற் கொண்டு வந்து சேர்த்து விடுவையேல் உனக்குக் குமரைக் கரையேற்றிய புண்ணியங் கிடைக்குமென்று என்னிடஞ் சொல்லியிரந்தன; ஆனதால் அம்மான் உனக்கு நல்லகாலம் பிறந்திருக்கின்றது; இந்த வண்ணான் கெட்டான்; அவனைவிட்டு என்னுடன் கூடிக்கொண்டுவா" என்று சொல்ல, கர்த்தபம் அதற்குச் சம்மதித்து நரியைத் தொடர்ந்து சென்றது. நரி அந்தக் கழுதையைச் சிங்கத்தின் அண்டையிற் கொண்டுபோய்விட்டுச் சிங்கத்திற்குக் கண்சாடை காட்ட, சிங்கம் அதன்மேற் பாய்தற்கிடையிற் கழுதை கத்திக்கொண்டு ஓட்டம் பிடித்தது. நரி சிங்கத்தைச் சினந்து "மிருகேந்திரனென்றிருக்கும் நீ தானாக வந்த இந்தக் கழுதையைத் தப்பவிட்டாயே; இப்படிப்பட்ட நீ யானையை அடிப்பதெப்படி" எனலும், சிங்கம் வெட்கத்துடன் தலைகுனிந்தபடி நிற்க, நரி மீளவுஞ் சிங்கத்தைப்பார்த்து "ஓடிப்போன அந்தக் கழுதையை மீண்டு உன்னிடங் கூட்டிக்கொண்டு வருகிறேன்" தவறாமல் அடித்துவிடு" என்று சொல்லிவிட்டுக் கழுதையோடின திசையைநோக்கி ஓடிப்போய் அக்கழுதையைத் தடுத்து "அம்மான், அம்மான்! என்ன காரியஞ் செய்தாய்" எனலும், "மருமகனே, இந்நேரம் நீ என்னை யமனிடம் அனுப்பியிருப்பாய்; நான் ஏதோ என் அதிஷ்டத்தினால் உயிர்தப்பி வந்தேன்; உன்னுறவு எனக்கு வேண்டாம், என்னை உயிரோடு போகவிடு" என்று சொல்லிவிட்டு மீண்டும் ஓட, நரியும் பின்தொடர்ந்து ஓடிப்போய் வழிமறித்துக் கழுதையைப் பார்த்துப் பெருஞ் சிரிப்புச் சிரித்து, "மாமா, என்ன பேய்தனமான காரியஞ் செய்து விட்டாய்" எனலும், கழுதை "மருமகனே, நீ எனக்கு வேறொன்றுஞ் சொல்ல வேண்டாம்; வச்சிரம்போலக் கூரிய நகங்களோடுகூடிய கால்களும், பயங்கரமான பற்களும், முகமெங்கும் ரோமமுமுள்ள அந்தப்பிராணி யார் அதை மாத்திரஞ் சொல்லி விடு" என்று நின்று கேட்க, நரி "அம்மான்? என்ன, புத்தி மோசமான கேள்வி கேட்கின்றாய்; உன் கண்கள் உனக்குத் துரோகஞ் செய்கின்றன போலும்; அந்தப் பெண் கழுதை உன்னைக் கண்ட மாத்திரத்தே தீரா மோகங்கொண்டு தன் முன்னங்கால்களால் உன்னைக் கட்டியணைக்கும்படி விரைந்துவர, நீ அதனை ஏதோ விபரீதமாய் நினைத்து மீண்டோடி வந்துவிட்டாய்; இப்பொழுது நீ தன்னைக் கல்யாணஞ் செய்யாவிட்டால் தன்னுயிரை விடுவதாக என்று அந்தப் பெண்கழுதை சபதஞ் செய்துகொண்டு பெண்பழியை என்மேற் சுமத்துகின்றது; ஆனதால், அம்மான், நீ அச்சமின்றி என்னுடன் அங்கே வா" எனலும், புத்தியில்லாத கழுதையாதலினால், அது நரியின் சொல்லை நம்பிப் பின்தொடர்ந்து போகச் சிங்கம் உடனே அக்கழுதையை ஒரேயடியாக அடித்துக்கொன்றது. கொன்றபின் அக்கழுதையின் பிணத்தை நரியின் காவலில் வைத்துவிட்டுச் சிங்கம் ஸ்நானஞ் செய்யப்போதலும், அதற்கிடையில் நரி அக் கழுதையின் அங்கங்களிற் சுவையுடையனவாகிய ஈரலையுஞ் செவியையும் தான் தின்று விட்டது. முழுகிவிட்டு மீண்டுவந்த கேசரி நரியைப் பார்த்து "இந்தக் கழுதையின் ஈரலும் காதும் எங்கே" என்று வினவ, நரி "மிருகேந்திரா, ஈரலுங் காதும் இருந்தால், ஒருமுறை ஓடிப்போன இக்கழுதை மீண்டும் இவ்விடம் வருமா? இதற்கு அந்த இரண்டுமில்லை" என்று சமாதானஞ் சொல்ல, சிங்கம் நரிக்கும் மாமிசபாகங் கொடுத்துத் தானும் உண்டது; ஆனதால் இரஞ்சிதம் எதுவும் உபாயத்தினாலே கைகூடும்; விசுவநாதனை மயக்கித் தருவது உன்கடமை; அப்படிச் செய்வையேல், நான் உனக்கு எந்த நாளுங் கடமைப்பட்டவனாவேன்; என்று சொல்லி அவளிடம் விடைபெற்றுக்கொண்டு போனான்.

* * *

உலகம் பலவிதம்: 1944 ஆகஸ்ட் 24 விசாலாட்சி: (முற்றொடர் - 14)

இருப்புத்தூணிற் கறையான் ஏறுமா?

இரஞ்சிதத்தை இரண்டாமுறை சந்தித்த பின்பே, அவள் ஒரு பொதுமகளென்பதும், அந்த வீடு தாசி வீடென்பதும் விசுவநாதனுக்குப் புலப்படலாயின; "தாசிகள் மிகவும் பொல்லாதவர்கள் நயவஞ் சிகள் என்று அறிவுடையோரால் வெறுத்துப் புறக்கணிக்கப்படுகின்றனரே, ஆனால் இந்த இரஞ் சிதத்தில் அப்படியான குணங்களை இன்னமும் நான் காணவில்லையே; இவளிடத்துள்ள தீயகுணங்களை உள்ளபடி அறிவதற்கு இன்னுஞ் சிலகாலம் இவளுடன் ஊடாட வேண்டும் போலும்; பெண்களுடைய உள்ளக்கிடக்கையை உள்ளபடி உணர்வதே கஷ்ட மென்றால், இப் பொதுமகளுடைய மனப்பான்மை யை அனுபவமற்ற நான் விரைவில் அறிதல் முடியுமோ;

"உரிமையி னிரண்டுடற் குயிரொன்றாகினும்
பிரிவற நெடிதுநாட் பழகிப் பேசினும்
சரி வரக்கற்புடைத் தலைமை காண்கினும்
அரிவைமார் மனசு கண்டறிந்துளார்களார்"

என்று பாரதத்திற் சொல்லப்பட்டிருப்பதும் இவளை யொத்த பெண்களைப்பற்றித்தான் போலும்; ஒருபோது என்னைப் பெண்வழியில் மயக்குவதற்குப் பாலசிங்கன் இவளைக் கருவியாகக் கொண்டிருத்தலுங் கூடும்; ஆனாலுமென்ன? என் மனக்கட்டுப்பாட்டைக் கெடுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளால் முடியாது; அந்தப் பாலசிங்கனாலும் முடியாது; அம்மான் மகளிருக்க, சும்மா இன்னொருத்திமேல் என் காதல் செல்லுமா? இருப்புத்தூணிற் கறையான் ஏறுமா? நெருப்பிற் புழு போமா? இரஞ்சிதத்தின் மாயவலையிற் சிக்கச்செய்து என்னை அகப்படுத்த முடியாதென்பதை அந்தப் பாலசிங்கனுக்கு நான் காட்டி வைக்கிறேன்; நாளைப் பின்னேரமும் நான் அவள் வீட்டிற்குப் போவேன்; அவளுடன் சுவாதீனத்தோடு வார்த்தையாடுவேன்; நடப்பதை இருந்துகாண்பேன்" என்று விசுவநாதன் தன் மனம்போனவாறெல்லாஞ் சிந்தித்தான்.

பாம்பு உண்ட நீரெல்லாம் நஞ்சாம்

"பாலா! வெட்கம், ரோசம், மானம், ஈனம், ஊனம் என்ற இவைகளைப்பற்றிய உணர்ச்சி உனக்கு எள்ளளவும் இல்லையடா; அந்த விசுவநாதன் தன்னுடைய "மச்சா"ளாகிய விசாலாட்சியைக் கல்யாணஞ் செய்யவொண்ணாதென்று அவனைத் தடுப்பதற்கும் கெடுப்பதற்கும் நீ எத்தனையோ உபாயங்களைச் செய்து வருகிறாய்; இப்பொழுது பாவம், அந்தப் பேயனை, இரஞ்சிதத்தின் வீட்டிற் கொண்டுபோய் மாட்டப் பார்க்கிறாய்; இப்படிச் செய்வதனால் உனக்கு வரவிருக்கும் நன்மையென்னடா? நீ உன்னைப் படித்தவனென்கிறாயே? பாம்புண்ட நீரெல்லாம் நஞ்சாம் என்றவிதமாக, நீ படித்த படிப்பெல்லாம் உனக்கும் - நீறாக்குங் கேடாகவே முடியுமடா; நீ அந்த விசுவநாதனுக்கு எவ்வளவு கேடுசெய்ய நினைத்தாலும், நினைத்துச் செய்தாலும் உன் நோக்கம் வாய்க்கப்போவதில்லை; ஏனென்று கேட்கிறாயா? அந்த அருணாசலம்பிள்ளையின் மகள் ஒரு உத்தமமான கன்னிகையென்பதை நான் நன்றாயறிவேன்; அவள் இவனையே திருத்திக் கல்யாணஞ் செய்ய வேண்டுமென்ற பிடிவாதத்தோடிருக்கிறாள்; தன் குறையைத் தெய்வத்திற்கு முறையிடுகிறாள்; அவள் இடுகிற ஓலம் உன்னைச் சும்மாவிடாதடா; இன்றோடு இந்தச் சஞ்சல புத்தியை விட்டுவிடு" என்று பாலசிங்கனது வீட்டில் அவனுடன் பேசிக் கொண்டிருந்த வீராசாமி கடிந்து சொன்னான். இவைகளைக் கேட்ட பாலசிங்கன் சற்றுநேரம் யாதும் பதில் கூறாமலிருந்து யோசித்தான்; "இந்த வீராசாமியோடு; இப்பொழுது நான் மாறுபட்டு ஏதும் பேசினால் இவன் என்னை விஞ்சிவிடுவான்; என்சொற் கேளான்; நான் சொல்லுகிறபடி செய்யமாட்டான்; இவனுக்குக் குடிப்பதற்குப் போதிய மதுப்பானத்தை நான் கொடுத்துவிட்டால் உடனே அவன் என்வழிக்கு வருவானல்லவா..." என்று தன்னளவில் யோசித்து நிச்சயித்துக்கொண்டு இருக்கை விட்டெழுந்து அறையுட் சென்று மதுபானப்போத்தலையும் பளிங்குப் பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு தலைவாசலில் மீண்டு வந்திருந்து பளிங்குப் பாத்திரம் நிறைய மதுபானத்தை வார்த்து முதல் அவனுக்குக் குடிக்கக் கொடுத்துப் பின்பு தானும் அப்படியே வார்த்துப் பருகினான்; பத்து நிமிஷம்வரையில் இரண்டுபேரும் பரஸ்பரம் வார்த்தையாடாதிருந்தார்கள்.

நம்பிக்கைக்கு இரண்டகஞ் செய்யலாமா?

பின்னர்ப் பாலசிங்கன் வீராசாமியைப் பார்த்து "வீரா, வருகிறாயா கடற்கரைக்குப் போவோம்" என்று கேட்க, அவன் ஓம் என்று உடனே புறப்பட்டார்கள். இருவரும் நேரே கடற்கரையிற் போயிருந்தபின்; வீராசாமி பாலசிங்கனைப் பார்த்து "பாலா, எங்கேயடா, விசுவநாதனை இந்தப்பக்கத்திலே சில நாட்களாகக் காணவில்லையே" என்று கேட்க, பாலசிங்கன் "அவனை இந்தப்பக்கத்திலே காணமுடியாது, இரஞ்சிதம் வீட்டுப்பக்கத்திலேதான் இனிமேற் காணலாம்" என்று பதில் சொன்னான். "மீட்டும் மீட்டும் சொல்லுகிறேனென்று குறையெண்ணாதே, ஏனெடா அவனைக் கொண்டுபோய் அந்தவீட்டில் மாட்டுகிறாய், உன்னை அவன் ஒரு உற்ற சினேகிதனென்று நம்பியல்லவா வந்து சேர்ந்திருக்கிறான்; நம்பிக்கைக்கு இரண்டகஞ் செய்யலாமா? அவன் மேல் உனக்குப் பிடிப்பில்லாவிட்டால், நீ அவனிடஞ் சொல்லி பிரிந்துகொள்ளலாம், மித்திரத் துரோகம் ஆகாதடா பாலா" என்று வீராசாமி பரிந்து சொன்னான்; "என்னடா, வீரா, உனக்கு வெறியேறியிருக்கவும் நீ ஞானம் பேசுகிறாய்? வழக்கத்தில் வெறியில்லாதபோது ஞானம் பேசுவாய், வெறியேறிவிட்டால் வேறு அடாதா பேசுவாய்; இன்றைக்கேன் இப்படி இந்த நேரத்திலும் ஞானம் பிறந்துவிட்டது" என்று வேடிக்கையாகக் கேட்டான் பாலசிங்கன். அதனைக்கேட்ட வீராசாமி "பாலா, நீ வெறியோடிருக்கும் நேரத்திலும் இல்லாத நேரத்திலும் அடாததே பேசுவாய் செய்வாய்; நான் வெறிகொண்டாலும் கொள்ளாவிட்டாலும் நீதியைத்தான் சொல்லுவேன். இதுதானடா உனக்கும் எனக்குமுள்ள வித்தியாசம் என்று சிரித்துக்கொண்டு சொன்னான். அதன்பின்னர் இருவரும் கடற்கரையை விட்டுப் புறப்பட்டு மீண்டு வரும்போது, பாலசிங்கன் வீராசாமியை நோக்கி, "இரஞ்சிதத்தின் வீட்டிற்கும் போய்விட்டு எங்கள் வீட்டிற்குச் செல்வோமா" என்று வீராசாமியைக் கேட்க அவன் தனக்கு அலுப்பாக விருக்கிறதென்றும் தான் தன் வீட்டிற்போய்ச் சேரவேண்டுமென்றுஞ் சொல்லி மறுத்தான்; அதனால் பாலசிங்கன் தன் வீட்டிற்கு மீள, வீராசாமியும் தன் வீட்டினை யடைந்தான்.

"வேரோடி விலகி முளைத்தாலும் தாய்வழி தப்பாது"

"மகளே இரஞ்சிதம், புதிய ஆளாய் இரண்டு மூன்றுநாள் இங்கே வந்துபோகிற அந்த ஆளுக்குப்

Digitized by Noolaham Foundation

பேரென்ன" என்று தாய்க்கிழவி இரஞ்சிதத்தைக் கேட்க, இரஞ்சிதம் "அவருடைய பெயர் காசியிலிருக்கிற சுவாமியினுடைய பெயர் அம்மா" என்றாள்; "என்ன, விசுவநாதனா, அந்த வாலிபனுடைய பெயர்" என்று தாய்க்கிழவி மீட்டுங்கேட்க, "ஆம், அம்மா" என்று பதில் சொன்னாள் மகள்; "ஏதடியம்மா, இன்றைக்கு உன் பேச்சு நூதனமாயிருக்கிறது; அந்தப் பாலசிங்கன் உனக்குச் செய்வித்துத் தந்த பூணாரங்களுக்குக் கணக்கில்லை; வாங்கித் தந்த சேலைக்கு எல்லையில்லை; கொண்டுவந்து கொட்டின பணத்திற்கு அளவில்லை; இன்றைக்கும் அவன் உன்னையே குலதெய்வமென்று கும்பிட்டுக்கொண்டு திரிகிறான்; அப்படிப்பட்ட அவன் பெயரைக் கொஞ்சமுங் கூசாமல் நூறுமுறை சொல்லிவிடுவாய்; நேற்று வந்த இவன் பெயரைச் சொல்லக் கூச்சப்பட்டுக் காசியிலிருக்கிற சுவாமியின் பெயர் என்று சொல்லுகிறாய்; காரணமென்ன? இவன் உன்னை மருட்டிவிட்டானா? எங்கள் குலத்திற்கு அடாத கருமத்தைச் செய்யத் தலைப்பட்டுக் கொண்டாயே; தாசியாகப்பட்டவள் ஒரு ஆடவன் மேல் மெய்யன்பு வைக்கத் தொடங்கினால் அவள் கெட்டாள் என்பதுதானே கருத்து; மகளே, இந்தவிதமான சகவாசம் உனக்கு வேண்டாம்; இந்த இரகசியத்தைப் பாலசிங்கன் அறிந்தாலும் உனக்குப் பிழைவரும். இவன் இரண்டு மூன்று நாள் இங்கு வந்து போனான்; எனக்கு ஒரு செப்புக்காசுதானுந் தந்தானா? உவன் வந்த நேரமெல்லாம் நீ உவனை உபசரிக்கத் தொடங்கி, அதனால் எனக்குச் செலவேயொழிய உவனால் உனக்குவந்த இலாபமென்ன" என்று கடிந்து கூறினாள் தாய்க்கிழவி. இவைகளையெல்லாம் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்த இரஞ்சிதம் கவலைக்கொண்டவளாய்த் தாய்க்கிழவியைப் பார்த்து "அம்மா, நீங்களும் பாலசிங்கமும் செய்யச் சொன்னதையே நான் செய்துவருகிறேன்; பாலசிங்கத்தைப் பார்க்கிலும் அந்த ஆள் என்னுடன் அதிக மரியாதையாக ஊடாடுவதினாலே, நானும் மரியாதையாக அவருடன் ஊடாடுகிறேன்; அந்த ஆளை வரும் போது நல்லாய் உபசரிக்க வேண்டுமென்று நீங்கள் சொன்னீர்கள்; அதனால் நான் அப்படியே உபசரிக்கிறேன்; அவரிடத்தில் ஒருகாசும் வாங்க வொண்ணாதென்று பாலசிங்கம் எனக்குச் சொன்னார்; அதனால் வாங்காமல் விட்டேன்; உங்களுடைய குல ஆசாரப்படி நடக்கவில்லையென்று என்னைக் குற்றஞ்சொல்லுகிறீர்கள்; நான் தாசியர் குலத்திற் புகுந்ததேயொழிய பிறக்கவில்லையே; வேரோடி விலகி முளைத்தாலும் தாய்வழி தப்பாதென்றல்லவா சொல்லுவார்கள்; ஆனதால் உங்கள் குலத்திற்குரிய பழக்கம் பூரணமாக எனக்கு வரமாட்டாது" என்று சொல்வதற்கிடையில், கிழவி இரஞ்சிதத்தைப் பார்த்து "அது சரி, அந்த ஆளுக்குக் குடிவகை கொடுத்துக் குடிக்கச் செய்யும்படி பாலசிங்கனும் நானும் உன்னிடஞ் சொல்லிவைக்கவில்லையா; மகளே அதை ஏன் செய்யாமல்விட்டாய்" என்று கேட்க, "அன்று அவர் வந்தபோது சோடாவோடு குடிவகையையுங் கலந்து கொடுத்தேன்; அவர் வாங்கி மணந்துவிட்டு நான் இதைக் குடிப்பதில்லையென்றார்; நான் என்ன செய்வது; அவருக்குப் பலாத்காரமாகப் பருக்குவதா" என்று இல்லாததைச் சொல்லிக் கிழவியைச் சமாதானப் படுத்தினாள் இரஞ்சிதம். இவைகளைக்கேட்ட கிழவி "நீ சொல்வதுஞ் சரிதான் மகளே ஆனாலும் புத்தியாய் நடந்து கொள்" என்று சொல்லி அவ்விடம் விட்டு எழுந்து போனாள்.

"பெருமான் என்னைக் கைவிடமாட்டான்"

விசுவநாதன் தன் கூட்டாளிமாருடன் கூடிக் குடித்து ஆறாடியாகி அவமானப்பட்டது மல்லாமல் இப் பொழுது தாசிவீட்டிற்கும் போகத் தலைப்பட்டுக்கொண்டானாம்; ஆனதால் அவனை எங்கள் பிள்ளைக்கு மாப்பிள்ளையாகக் கொள்ளும் எண்ணத்தை நாங்கள் அறவே மறந்துவிடவேண்டும்; அவன் கெட்ட கேட்டையும் பட்ட அவமானத்தையும் எங்கள் மகளுக்குச் சொல்வதனால் மேலும் மேலும் அவளுக்குக் கவலையே அதிகப்படும்; அவைகளை நீ பிள்ளைக்கு வெளியிடாதே; ஆனால் விசுவநாத னைத்தான் கல்யாணஞ் செய்யவேண்டுமென்ற எண்ணத்தை அறவே மறந்துவிடும்படி எங்கள் பிள்ளைக்கு நான் சொன்னதாகச் சொல்லு; நாங்களும் வேறெங்கேனும் தக்க மாப்பிள்ளையாக விசாரித்து மணம்பேசிச் சீக்கிரத்தில் முடித்து வைக்கவேண்டும்; இல்லையேல் எங்கள் பிள்ளைக்கு அந்த விசுவநாதனும் அவனுடைய கூட்டாளிமாரும் ஏதும் தீமை விளைத்தலுங் கூடும்" என்று அருணாசலம்பிள்ளை அதிக கவலையோடு தம் மனையாளுக்குச் சொன்னார்; மனைவியும் தங்கள் பிள்ளைக்குச் சமயம் வாய்க்கும்போது அதைப்பற்றிச் சொல்லி அவளுடைய மனசைத் திருப்புவதாக உத்தேசித்துக் கொண்டிருந்தாள். ஒருநாள் மத்தியான நேரத்தில் தங்கள் பிள்ளை தன்னுடனே சமையல் செய்துகொண்டிருக்கும்போது, தாய் விஷயத்தை மெல்ல மெல்ல மகளுக்கு வெளியிட்டாள். கேட்ட மகள் அதிக நேரம் யோசித்துப் பெருமூச்சுவிட்டு "அம்மா, எல்லாம் விதியின்படி நடக்கும்; எம்பெருமான் எங்களைக் கைவிடமாட்டான்" என்று சிந்தனையோடு சொன்னாள்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1944 ஆகஸ்ட் 31
விசாலாட்சி: (முற்றொடர் - 15)

நான்செய்த பிழையென்ன?

"வாருங்கள், வாருங்கள், இப்படி இந்த "ஸோபா" வில் அமருங்கள்; எப்பொழுது வருவீர்களென்று உங்கள் வரவை எதிர்பார்த்தபடியே தலைவாசலுக்குப் போவதும் வருவதுமாய் இரண்டுமணி தொடக்கம் உலாவித் திரிகின்றேன்" என்று தங்கள் வீட்டிற்கு வந்த விசுவநாதனை உபசரித்து இருத்தினாள் இரஞ் சிதம்; இருக்க விசுவநாதன் அவளைப் பார்த்து "இரஞ் சிதம்; நீயும் உந்த நாற்காலியில் இருக்கலாமே" என, அவள் "நீங்கள் உப்படி இருப்பதும் நான் இப்படி நிற்பதுந்தான் முறை" என்று சொல்லிச் சமீபத்திற் போய்நின்று வார்த்தையாடினாள்; அவன் அவளை நோக்கி "இரஞ்சிதம், சொல்லுகிறேனென்று மனவருத்தப்படாதே; பனையின்கீழிருந்து பாலைக் குடித்தாலும் குடிப்பது கள்ளென்றே கண்டவர் நினைப்பர்; எனக்குமுனக்கு மிடையிலேயுள்ள அன்பு தூயதாகவிருந்தாலும், இங்கு நான் வந்து போவதைக் கண்டவர்கள் எங்களிரண்டு பேரையும் விபரீதமாக நினைக்கத் தலைப்பட்டுக் கொண்டார்கள்; ஆனதால் இனி நான் பல முறையும் இங்கு வரமாட்டேன்; உனக்கு என்னைக் காணவேண்டுமென்ற விருப்பமிருந்தால் பாலசிங்கன் மூலமாக, இல்லையேல் வீராசாமி மூலமாக எனக்கு நீ தெரிவி; நான் உடனே வருவேன்; இதையிட்டு நீ கவலைப்படாதே; இப்பொழுது இதனைச் சொல்லிவிட்டுப்போகத்தான் இங்கே வந்தேன்" என்று கவலையோடு சொன்னான். அவன் அப்படிச் சொல்லக்கேட்ட ரஞ்சிதம் திடுக்கிட்டாள்; ஏக்கமடைந்தாள், தீரா விசாரங்கொண்டாள்; நாட்டிய கம்பம் போல அசைவற நின்று அதிகம் யோசித்தாள்; பெருமூச்சுவிட்டாள்; பலமுறையும் விசுவநாதனை உற்றுப்பார்த்தாள்; அவளுடைய கண்களிலே ததும்பிய நீர்த்துளி முத்தென நிலத்திற் சிந்தியது; அவளுடைய நிலைமையைக் கண்ட விசுவநாதனும் மனம் வருந்தியபடி மௌனமாக விருந்தான்; "ஐயா, உங்களுக்கு நான் செய்த பிழையென்ன" என்று தன் கண்களில் நீர்பெருக விம்மலோடு வினாவினாள் இரஞ் சிதம்; கேட்ட விசுவநாதன் உளம்பதைத்தது "ஐயோ, ரஞ்சிதம், நீ எனக்கு ஒரு பிழையுஞ் செய்யவில்லை; செய்யப்போவதுமில்லை; இங்கே நான் பல முறையும் வந்து போவதற்கு உள்ள இடையூறை உனக்குத் தொடக்கத்திலேயே சொல்லிவிட்டேன்; அதனைக் கேட்டுக்கொண்டுமே நீ சிறுபிள்ளைபோல இப்படிக் கவலைப்படலாமா? இப்பொழுதும் நான் என்ன சொன்னேன்; உனக்கு விருப்பமான நேரத்தில் என்னிடம் சொல்லியனுப்பினால் நான் வருவேனென்று தானே சொல்லுகிறேன்; நீ கலங்காதே..." என்று சமாதானஞ் சொன்னான். "ஐயா, என்னைவந்து காண உங்களுக்கு விருப்பமில்லாதுபோக, உங்களைக் காணவேண்டுமென்று எனக்குமாத்திரம் விருப்பமிருந்து, அதன்படி நான் சொல்லியனுப்ப நீங்கள் என்னிடம் வருவதனால் என்ன சுகம்" என்று பின்னரும் கவலையோடு கேட்டாள் இரஞ்சிதம். "நீ சொல்வது நிசம்; உன்னிடத்தில் எனக்கு விருப்பமில்லையென்று எள்ளளவும் எண்ணாதே; என்னையறியாமலே என் மனத்தில் உன்மேற் பற்று உண்டாய் விட்டது. ஆனால் அந்தப் பற்று தூயதாகவே புலப்படுகின்றது; நெஞ்சில் வஞ்சகமில்லாதபோது நான் இங்கு வந்து போகலாந்தானேயென்று நீ நியாயஞ் சொல்லலாம்; ஆனால் இந்தப்பற்று காலகதியில் எப்படி மாறுதலடையுமோ நான் அறியேன்; "பயிற்சி மடவார் பழகுதல் வேண்டா" என்றும் "எறும்பூரக் கல்குழியும்" என்றும் பெரியோர் சொல்வர். அல்லாமலும் பாலசிங்கனுக்கும் உனக்குமிடையேயுள்ள தொடர்பு எப்படிப்பட்டதென்பதையும் நான் அறியேன்; மேலும் உன் வரலாறு எனக்குத் தெரியாது; அன்றியும் பாலசிங்கனுக்கு இப்பொழுது நான் இங்கே வந்துபோதல் சம்மதமாகவிருந்தாலும், காலகதியில் அவனுடைய உள்ளம் விபரீதப்பட, அதனால் அவன் பொறாமை கொண்டு எங்கள் மேற் சந்தேகப்பட்டு உனக்கும் எனக்கும் தீமை விளைக்கவுங் கூடும்; என்னுடைய நன்மையைக் காட்டிலும் உன்னுடைய நன்மையை அதிகமாக விரும்பியே நான் இப்படிச் சொல்லுகிறே னென்றெண்ணிக்கொள்; வேணுமானால் இன்னுஞ் சிறிதுநேரம் இங்கே உன்னுடன் வார்த்தையாடி விட்டு உன் மனத்தைச் சாந்தப்படுத்திவிட்டுப் போகிறேன்; நீ பின்னர் என்னை விடைதந்தனுப்பு; சிந்தை வருந்தாதே" என்று இதமாகச் சொன்னான் விசுவநாதன்.

"சாதியிலுந் தாசியல்லேன்
நீதியிலுந் தாசியல்லேன்"

அவன் சொன்ன நியாயங்களையெல்லாம் ஆர்வத் தோடும் ஆறுதலோடும் கேட்டவளாகிய இரஞ் சிதம் விசுவநாதனுடைய பெருங்குணத்தையும் அவன் தன்மேல் வைத்த தூய பற்றையும் விளங்கினாள்; அவன் ஒரு உயர்குடியிற் பிறந்த உத்தமனாகவிருக்க வேண்டுமென்பதையும், பாலசிங்கன் அவனுக்கு ஏதோ தீமை செய்யும் நோக்கமாகவே அங்கே வரச்செய்துள்ளானென்பதையும் ஊகித்தறிந்தாள். தன்னிடத்தில் மெய்யன்பு வைத்துத் தன்னுடன் ஊடாடும் அவனுக்குத் தான் துரோகம் எண்ணுதல் தனக்கே தவறாக முடியுமென்றும் நினைத்தாள். விசுவநாதன் தங்கள் இல்லத்திற்கு இனிமேல் வராமல் விடவுங் கூடுமென்றெண்ணிக் கவலைப்பட்டாள்; தான் உள்ளதைச் சொன்னால் சினேகத்துவத்தினால் அந்த மர்மங்களைப் பாலசிங்கனுக்கு அவன் சொல்லிவிடுவானோ என்று பயந்தாள். இப்படி

Digitized by Noolaham Foundation

யெல்லாம் யோசித்துக் கொண்டு அவள் நெடிதுநேரம் மௌனத்தோடு நிற்பதை அவதானித்த விசுவநாதன் அவளைப் பார்த்து "இரஞ்சிதம், ஏன் கவலைப்படுகிறாய்? என்ன யோசிக்கின்றாய்? என்னால் உனக்கு ஆகவேண்டிய நன்மை ஏதுமிருந்தால், நீ அதை எனக்குத் தெரிவித்தால் நான் உடனே செய்து வைப்பேன்; எதனையும் என்னிடம் வெளியிடக் கூசாதே, பயப்படாதே" என்று உறுதியாகக்கூறி அவளைத் தேற்றினான். அவன் அப்படிச் சொல்லக்கேட்ட இரஞ் சிதம் மனத்திடங் கொண்டாளாய் அவனைப் பணிவுடன் பார்த்து நமஸ்காரஞ் செய்து ஒதுங்கி விநயமாக நின்று "ஐயா, உங்களிடத்தில் என் வரலாற்றையும் மர்மங்களையும் சொல்வதற்குப் பயந்து இவ்வளவு நேரமும் தயங்கினேன்; ஆனால் நீங்கள் இப்பொழுது சொன்ன ஆதாரமான வார்த்தையைக் கேட்டபின் உங்களுக்கே என் குறையை முறையிட வேண்டுமென நிச்சயம் பண்ணிக்கொண்டேன்; பாலசிங்கத்திற்கும் எனக்குமுள்ள தொடர்பு எப்படியென்று சற்று முன்பு என்னைக் கேட்டீர்கள்; ஐயா, நான் ஒரு பெண் பேதை தெய்வத்திற்கு முறையிடுவது பால் எண்ணி உங்களுக்கு முறையிடத் துணிந்தேன்; இந்த இரகசியங்கள் ஒருபோதும் வெளிவரவொண்ணாது; வந்தாற் பெரும் மோசம் நேரும்..." என்று அவள் இடையிற் சொல்லிக் கவலைப்பட, விசுவநாதன் "இரஞ்சிதம், என்னை உன்னுடைய நெருங்கிய சுற்றத்தவனென்று மதித்துக்கொண்டு எதனையும் சொல்லு, பயப்படாதே" என்று திடஞ் சொல்ல, அதனால் தேறுதலடைந்த இரஞ் சிதஞ் சொல்லுகின்றாள்:

"ஐயா, பாலசிங்கத்திற்கும் எனக்குமுள்ள உறவு பொய்யுறவாகும்; இந்தத்தாய்க்கிழவியின் கட்டளைக்குப் பயந்து அவரிடத்தில் உறவு கொண்டாற்போல் நடித்து வருகிறேன்; அவருக்கு எவரிடத்திலாவது உண்மையான விசுவாசமில்லை; அதனால் அவர்மீதும் எவரும் உண்மையான விசுவாசம் வைப்பதில்லை; அவர் எப்பொழுதும் உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசி ஊடாடுவார்; ஆனபடியால் நானும் அவருடன் உள்ளொன்று புறம்பொன்றாகவே ஊடாடி வருகிறேன்; அவர் பொய்சொல்லக் கூசார்; களவெடுக்கப் பயப்படார்; கொலைக்கஞ்சார், மதுபானம் அவருக்குத் தேவாமிர்தமாகும்; விபசாரம் அவருக்கு உபசாரமான குணம்; மித்திரரென்றிருப்பவரெல்லாம் அவருக்கு அகத்திலே சத்துருக்கள்; பொறாமை அவருடைய உள்ளத்திலே குடிகொண்டிருக்கிறது. இப்படிப் பட்டவருடைய சிநேகம் உங்களுக்கு எப்படிக் கிடைத்ததென்பதையிட்டே அன்று நீங்கள் இங்கே வந்தபோது ஆச்சரியப்பட்டுக் கேட்டேன்; நீங்களும் புத்தியாக அதற்கு ஒரு பதிலுஞ் சொல்லாது விட்டீர்கள்; என் அருமையான ஐயா, இராவணன் சிறையிற் சீதை அகப்பட்டதுபோல நானும் என் துர்ப்புத்தியினாலும் பொல்லாத காலத்தினாலும் இந்தப் பாழான வீட்டில் இவர்களிடஞ் சிறைப்பட்டிருக்கிறேன்..." என்று சொல்லிக் கவலைமேலீட்டினால் அப்பாற் சொல்ல முடியாதவளாய் அழுதாள் இரஞ்சிதம். அழுகின்ற அவளைக்கண்டு தானும் மனங்கலங்கி ஒருவாறு தன் மனசைத் தேற்றிக் கொண்டு விசுவநாதன் "இரஞ் சிதம், நீ அழாதே என் முன்னிலையில் நின்று நீ இப்படியழுவதை உன் தாய் கண்டாலும் உன்மீதும் என் மீதும் சந்தேகப்படுவாள், என்னை வெறுப்பாள்; உன்னைக் கடிவாள்; ஆனதால் நீ அழாதே, நீ சொல்லத்தொடங்கியதைச் சொல்லிமுடி; உனக்கு என்னால் ஏதும் ஆகவேண்டுமானால் நான் நிச்சமாய்ச் செய்து வைப்பேன்; என்னை நம்பு; அந்தப் பாலசிங்கன் உன்னை வருத்தினாலும், உன்னைப் பெற்றதாய் உனக்குக் கேடுசெய்ய நியாயமில்லையே..." என்று கவலையுடன் கேட்டான். விசுவநாதன் கேட்ட இக்கேள்வி "எரிகிற கொள்ளியை ஏறத் தள்ளியவாறு" அவளுக்கு அதிக கவலையை மூட்டிவிட, அவள் கண்களில் நீர் தாரை தாரையாகச் சொரிய, கண்ணீரைத் தன் முன்றானையால் துடைத்து, தன்னைத்தானே ஒருவாறு தேற்றிக்கொண்டு "ஐயா பிறந்தகுடிக்கும் புகுந்தகுடிக்குந் தீராவசையைத் தேடிய மகாபாதகியாகிய என்னுடைய வரலாற்றைச் சொல்லி நான் கவலைப்படுவதோடமையாது உங்களை யும் கவலைப்படுத்த எனக்கு மனமில்லை; ஆனாலும் என்மேல் நிசமான இரக்கம் வைத்துள்ள உங்களுக்குச் சொல்வதனால் என் உள்ளத்திலுள்ள கவலைமுட்டுச் சிறிதாயினும் குறையும்; நான் துரோகி செய்த பாவத்திலும் ஒருபகுதி கழிந்துவிடும்; ஆனதனாற் சொல்லுகிறேன் கேளுங்கள்; நான் ஒருத்தி இந்தப் பூமியிலே சன்மமெடுத்தநாள் தொடக்கம் இற்றைவரை யிலுள்ள விருத்தாந்தம் முழுவதையும் உங்களுக்குச் சொன்னால் இந்தக்கிழவி என்னுடைய தாயல்ல வென்பதும், நான் பட்ட பரிபவமும் எல்லாம் விளங்கும்; ஐயா, நான் சாதியிலுந் தாசியல்லேன், நீதியிலுந் தாசியல்லேன்; என் பொல்லா ஊழினால், பாதியிலே தாசியானேன்..." என்று அவள் சொல்ல, விசுவநாதன் ஆச்சரியத்தோடு கேட்டுக்கொண்டிருந்தான். "ஐயா, தென்னிந்தியாவிலேயுள்ள ஒரு பட்டினத்தையடுத்த கிராமத்திலே பிராமண குலத்திற் பிறந்தேன்; எங்கள் சமயம் விஷ்ணு சமயம்; என் தகப்பனார் பெயர் ஸ்ரீநிவாச ஐயங்கார்; தாயார் பெயர் ஜானகியம்மாள்; என் பெற்றாருக்கு நான் ஒரேயொரு மகள்; ஆண் சகோதரமுமில்லை; எங்கள் தாய்ப்பாஷை தெலுங்கு; ஆனாலும் எங்கள் குடும்பத்தவர்களெல்லாரும் தமிழ் பேசப் படிக்க எழுத அறிந்தவர்கள்; என் தகப்பனார் புகைரதப்பகுதியில் உயர்ந்த உத்தியோகம் பார்த்து வந்தமையினால், எனக்கு உரிய காலத்திலே வித்தியாரம்பஞ் செய்வித்துத் தெலுங்குந் தமிழும் படிக்கவைத்தார்; பின்பு பட்டினத்திலுள்ள ஆங்கிலக் கலாசாலைக்கு அனுப்பி என்னை மற்றிக்குலேஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பு வரையிற் படித்தற்காகிய ஒழுங்குகளையுஞ் செய்து வைத்தார்; நான் ஊக்கமாகப் படித்து அந்தப் பரீட்சையிலும் சித்தியடைந்தேன்; என் அருமையான தகப்பனார் அவ்வளவோடு விடாமல், எனக்குச் சங்கீதம் பரதநாட்டியம் என்னுமிவைகளையும் வீட்டில் அவற்றிற்காகிய உபாத்தியாயர்களை அழைத்து கிரமமாகப் பயிற்றுவித்தார்; ஐயா, இனி என் தாயார் என்னை வளர்த்த அருமையையும் என்மேற் பாராட்டிவந்த அன்பையும் ஆதரவையும், ஐயா, நினைக்க நினைக்க என்னுள்ளம் உருகுகிறது; கண்ணீர் பெருகுகிறது; எங்கள் பிள்ளைக்கலி தீர்க்கவந்த செல்வமே, சந்ததி தழைக்கவந்த குலக்கொழுந்தே, மலடி மலடியென்று மாநிலத்தார் ஏசாமற் பாதுகாத்த குலவிளக்கேயென்று என்னைத் தாலாட்டிச் சீராட்டிப் பாராட்டிக் கண்ணை இமை காப்பதுபோற் பாதுகாத்து வளர்த்து வந்தாள் என்னைப் பெற்றவள்; என் காலில் ஒரு முள்ளுத் தைத்துவிட்டால், தன் கண்ணில் அந்த முள்ளுத் தைத்ததுபோற் பாவித்துப் பதைப்பாள் என் அரிய அன்னை; என்மேல் வெய்யில்பட்டால், தன்மேலில் நெருப்புச் சுட்டதுபோலத் துடிப்பாள் என் மாதா; நிலத்திற் கிடக்குந் துரும்பைத்தானும் நான் குனிந்து எடுக்க மனஞ்சகியாள் என் அம்மாள்; ஐயா, உங்களுக்கு நான் அதிகஞ் சொல்வதென்ன, என்னை யீன்றவள் தன் ஆருயிரைக்காட்டிலும் என்னையே அருமையாக மதித்து நடந்து வந்தாள்; இப்பொழுது நான் இருக்கும் இந்தக் கேவல நிலைமையைக் கேள்விப்பட்டாலும் என் அம்மை உயிரோடிருந்தால், தன் உயிரை மாய்த்திருப்பாள்; ஐயா, போனதையிட்டு நினைத்து நினைத்துச் சொல்ல, எனக்குப் பொல்லாத மனவருத்த முண்டாகிறது; வயிறு எரிகிறது; அந்தப் பரிபவங்களையெல்லாம் மறந்து எஞ்சிய என் வரலாற்றைச் சுருங்கச் சொல்லி முடிக்கிறேன்...” என்று சொல்லிக்கொண்டு நிற்கும் போது, “அம்மா, உங்களைப் பாட்டி ஒருமுறை வந்துவிட்டுப் போகட்டுமாம்” என்று அங்குள்ள பணிப்பெண் வந்துசொல்ல, “ஐயா, குறையெண்ணாதீர்கள், சற்றுவேளை இருந்து கொள்ளுங்கள் நான் இதோ வந்துவிட்டேன்” என்று விசுவநாதனுக்கு இரஞ்சிதஞ் சொல்லிவிட்டுத் தாய்க்கிழவியிடம் விரைந்து போனாள்.

* * *

உலகம் பலவிதம்: 1944 செப்டெம்பர் 07
விசாலாட்சி: (முற்றொடர் - 16)

“என் சந்தோஷகாலம்”

தன்னிடம் வந்த ரஞ்சிதத்தைத் தாய்க்கிழவி பார்த்து “என்ன, மகளே, அந்த ஆள் வந்தநேரந் தொட்டு இதுவரையும் ஓயாமல் அவருடன் பேசிக்கொண்டிருக்கிறாயேயொழிய, அவரை நீ உபசரிக்கவில்லையே; அது முறையல்லவே, இந்தா இந்தத் தாம்பூலத்தை நீயே கொண்டுபோய் அவர் முன்னிலையில் வைத்து அவரை உபசரி” என்று சொல்லிக் கொடுக்க, இரஞ்சிதம் அதனை ஏற்றுக்கொண்டுபோய் அப்படியே விசுவநாதன் முன்பு வைத்து அருந்தச் சொன்னாள்; அவன் அருந்துகிறே னென்று சொன்னானேயொழிய அந்தநேரம் அருந்தினா னல்லன்; இரஞ்சிதத்தின் வரலாற்றைக் கேட்கவே ஆவலோடிருந்தான்; இரஞ்சிதம் எஞ்சிய வரலாற்றைச் சொல்லத்தொடங்கினாள்:

“ஐயா, என் தாயாருடைய தமையனாரின் புதல்வர், அவருடைய பெயரைச்சொல்ல வாய்கூசுகிறது, அவரும் நானும் சிறுபிள்ளைகளாயிருக்குங் காலத்திலேயே எங்களுக்கு என் பெற்றாரும் அவருடைய பெற்றாரும் கல்யாணம் நிச்சயித்துக்கொண்டார்களாம்; அந்த இரகசியத்தைச் சிறுபிள்ளைப்பிராயத்தில் நாங்கள் அறிந்திலோம், காலகதியிலேதான் அறிந்தோம். என் மாமா வீட்டிற்கும் எங்கள் வீட்டிற்கும் அதிக தூரமில்லை; அவர் எனக்கு இரண்டு வயசிற்குத்தான் மூத்தவர்; அவர் தம்முடைய தாயோடும் தகப்பனோடும் எங்கள் வீட்டிற்கு வருவதும், என்னோடு கூடி விளையாடுவதும், அப்படியே என் பெற்றார் என்னை அங்கே கூட்டிக்கொண்டு போவதும் நான் அவரோடு விளையாடுவதும் வழக்கமாய்விட்டது. சில சமயங்களில் என்பெற்றார் அவரை எங்கள் வீட்டிலே தங்கிப்போகும்படி மறிப்பதும், அப்படியே அவருடைய பெற்றார் என்னைத் தங்கள் வீட்டிலே ஒருநாள் இரண்டுநாள் தங்கச் செய்வதுமுண்டு; இப்படியான காலத்தில் நாங்கள் இருவரும் ஒரே கலாசாலையில், அவர் மேல்வகுப்பிலும் நான் கீழ்வகுப்பிலுமாகப் படித்து வரலாயினோம்; அவர் இடையிடையே எனக்குப் பாடஞ்சொல்லித் தருவதுமுண்டு; அவர் வேறொரு உபாத்தியாயரிடத்திலே, சங்கீதமும் பயின்று வந்தார். நன்றாய் யாழ் வாசிக்கவும் கற்றுக்கொண்டார்; என்னைப் பாடும்படி சொல்லிவிட்டு நான் பாட தாம் யாழ் வாசிப்பார்; காலகதியில் எங்களிருவருக்கு மிடையில் அன்பு விருத்தியானமையினால் நாங்கள் ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்திருத்தல் கஷ்டமாயிற்று; இவைகளையெல்லாம் கண்டு என் பெற்றாரும் அவர் பெற்றாரும் ஆநந்தமடைந்தனர். எங்கள் இருவருடைய பெற்றோர்களும் கலந்து பேசும் வார்த்தைகளினாலும், அயலோர் இடையிடையே சொல்லுங் குறிப்பு வார்த்தைகளாலும், எங்கள் கலாசாலைப் பிள்ளைகள் எங்களைக் கண்டவிடத்திற் சொல்லும் சித்திரவார்த்தைகளினாலும் என் அரிய மைத்துனர்தான் எனக்கு மணவாளராவாரென்பதை யூகித்தறிந்துகொண்டேன்; அறிந்த பிறகு அவரோடு முன்போல ஊடாடும் விஷயத்தில் என்னையறியாமல்

என்னிடத்திலே ஒருவகையான கூச்சம் வந்து விட்டது; நான் அப்படிக் கூசி நாணியொதுங்கி நடக்க முயன்றாலும், அவர் அப்படி ஒதுங்கி நடக்கவொட்டாது தடுத்து என்னைப் பரிகசிப்பார்; என்னுடன் வேடிக்கையாகப் பேசுவார்; "இரஞ்சிதம், நீ இப்படி நாணியொதுங்கி நடப்பதானால், நான் உங்கள் வீட்டிற்கு இனிமேல் வரமாட்டேன்" என்று சொல்லி என்னை வெருட்டுவார். அதற்குப் பயந்து நான் கூசாது ஒதுங்காது அவருடன் ஊடாடி வந்தேன். இப்படி எங்களுடைய பெற்றார்கள் தங்களுட் கலந்து யோசித்து விவாகநிச்சயதாம்பூலம் வழங்கினார்கள். சிலகாலஞ் செல்ல நானும் மங்கைப் பருவமடைந்தேன்; "ஐயா, அவ்வளவு காலமுமே என் சந்தோஷகாலம்"

ஆக்கப்பொறுத்த நீ ஆறப்பொறுக்கவொண்ணாதா?

"ஐயா, நான் மங்கைப்பருவமடைதற்கு முதனாளும் அவர் எங்கள் வீட்டிற்கு வந்து என்னோடு இனிமையாக வார்த்தையாடி, "இரஞ்சிதம், நான் பாடம் படிக்க வேண்டும்; பரீட்சைக்காகிய காலம் சமீபித்துவிட்டதென்பது உனக்குத் தெரியும்; ஆனாலும் நாளைப் பின்னேரம் இங்கு வருவேன்; நெடுநேரம் படிப்பதனால் எனக்குண்டாகும் சிரமம் இங்கே உன்னிடம் வந்து சற்றுநேரம் பேசிக்கொண்டிருந் தாற்றான் தீரும்" என்று சொல்லி என்னிடம் விடைபெற்றுக்கொண்டு என்னை அரிதிற் பிரிந்துபோனார்; நானும் அடுத்தநாட் பின்னேரம் எப்பொழுது வரும் வருமென்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன்; மங்கைப்பருவமடைந்தால் எங்கள் குலத்தார் விதிக்குங் கட்டுப்பாடுகளையும் பற்றி நான் முந்தியறியேன்; என் விஷயத்தைப் பற்றிப் பெற்றோர் தெரிவிக்க அந்த மங்கல செய்தியையறிந்து என் மாமனாரும் மாமியாரும் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள்; வேண்டிய சடங்குகளைச் செய்தார்கள்; எனக்குச் சந்மானங்கள் தந்தார்கள்; ஆனால் அவர் மாத்திரம் ஒருவாரமாக எங்கள் வீட்டுப்பக்கந் தானும் வரவில்லை; ஐயா, நித்தமுங்கண்டு ஊடாடியவரை ஒரு நாளைக்குத்தானும் காணா விட்டால் எவ்வளவு மனவருத்தமாயிருக்கும்; நீங்களே யோசித்துப்பாருங்கள்; ஒருநாளல்ல, இருநாளல்ல, மூன்றுநாளல்ல, ஒருவாரமாக நான் அவரைக் காணாதபோது என்மனம் பட்ட பாட்டை யாரறிவார்; அந்த நாராயணமூர்த்தியேயறிவார், அவரைக் காணா மையினால் எனக்குப் பகலிலே பசியில்லை; இரவிலே உறக்கமில்லை; சற்றுநேரம் உறங்கினாற் காண்பதெல்லாம் கனவேயாகும்; எப்படியான கனவு; நானும் அவரும் அதற்குமுன் கூடி விளையாடியதும் படித்ததும் பாடியதுமாகிய பழைய கருமங்களே என் சொப்பனாவத்தையில் மாறிமாறி நிகழ்ந்தன. நான் காண்பது கனவோ நனவோ என்று கண்விழிப்பேன்; எல்லாம் கனவாகவே என் வயிறு குபீரென்று பற்றியெரிவதுண்டு; நான் இப்படி உண்ணாமல் உறங்காமல் மெலிவதையும், கவலைப்படுவதையும் அவதானித்தறிந்த என் அருமைத்தாயார் ஒருநாள் எனக்கு உணவு பரிமாறியபோது எங்கள் குடும்பத்தின் கொள்கைகளையும் வழக்கங்களையுஞ் சொல்லி மகளே, உங்கள் இருவருக்கும் கல்யாணம் நடக்க இன்னுஞ் சிலமாசந்தானேயுண்டு; அதற்குள் நீ ஏன் அவசரப்படுகிறாய்? ஆக்கப் பொறுத்த நீ ஆறப் பொறுக்க வொண்ணாதா என்று சொல்லி மகளைத் தேற்றினாள் என்னைப் பெற்றவள். நான் அப்போதைக்குத் தேறுதலடைந்தேனாயினும் என் மனம் பூரணமான ஆறுதலையடையவில்லை. இப்படியாக, ஒருவாரஞ் சென்ற பின்பு ஒரு நல்ல நேரத்தில் பிற்பகல் நாலுமணி வரையில் என் தகப்பனார் தலைவாசற்புறத்தில் ஏதோ பத்திரிகை வாசித்துக் கொண்டிருக்கும்போது, என் அன்பர் எங்கள் தலைவாசலை நோக்கி வருவதை யன்னல்வழியாற் கண்டேன்; கண்டவுடனே எனக்குண்டான ஆநந்தத்திற்கு ஒரு எல்லையில்லை யெனலாம். நான் உடனே என்னறையுட் சென்று கண்ணாடி முன்னிலையில் நின்று என் கூந்தல் திருத்தி முகந்திருத்தி உடைதிருத்திக்கொண்டு தலைவாசற்பக்கம் நோக்கிவர, இடையில் நின்ற தாயார் என்னோக்கத்தை யுணர்ந்துபோலும், என்னை மெல்லத் தடுத்து "கண்ணே, எங்கேயடி போகிறாயம்மா" என்று அன்புடன் வினவ, "அவர் தலைவாசலில் வந்திருக்கிறாரம்மா. அங்கேதான் போகிறேன்" என்று ஆவலுடன் மறுமொழி சொன்னேன்; நான் பெற்ற செல்வமே; சொல்லுகிறேனென்று மனவருத்தப்படாதே; முந்தி நீ அப்படிப் போகலாம் வரலாம், இனிமேலும் நீ அப்படிப் போனால் கண்டால் பேசினால் எங்கள் குலங் குடிக்கில்லாததென்று உற்றார் குறை சொல்வர், அயலோர் வசை பேசுவார், ஊரார் சிரிப்பாரடியம்மா; அதற்கெல்லாம் காலநேர மிருக்கிறது; கண்ணே நீ உன் அறைக்குப்போ" என்று சொல்லி என் தாயார் தடுக்க, நான் உள்ளஞ்சோர, உடல்சோர, கண்ணீர்சொரிய, விம்மல் பொருமலுடன் படுக்கையறையுள் தலைகுனிந்தபடி போய் என் சயனத்தில் முகங் குப்புறப் படுத்துக்கொண்டேன்; என் கண்ணீரால் தலையணை நனைந்தது. சற்றுநேரஞ் செல்ல நான் அப்படியே உறங்கிவிட்டேன். எவ்வளவுநேரம் உறங்கினேனோ நான் அறியேன்; யாரோ வந்து மெல்ல என் முதுகிலே தட்டி என்னை யெழுப்புவதுபோற் புலப்பட்டது; கண்ணை விழித்துப் பார்த்தேன்; என் தகப்பனார் நிற்கக் கண்டேன்; பதைபதைத்து எழுந்து சயனத்தை விட்டிறங்கி ஒரு மூலையில் தலைகுனிந்தபடி யொதுங்கி நின்றேன்; "மகளே, இது என்ன கோலம்" என்று சொல்லிவிட்டு என் தாயாரைக் கூப்பிட்டு பிள்ளையை அலங்காரஞ் செய்து சீக்கிரம் தலைவாசற்பக்கம் அனுப்பு" என்று சொல்லித் தலைவாசற்பக்கம் போய்விட, என் தாயார் என்னைச் சீக்கிரம் அலங்காரஞ் செய்துவிட்டுத் தலைவாசலுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகுங் கதவண்டை கூட்டிக்கொண்டுபோய் நிற்கச்செய்ய, "மகளே, உன் அத்தான் போய்வரவாம் உத்தரவு கொடுத்துவிடு" என்று தகப்பனார் சொல்ல, அதற்கிடையில் "நான் போய்வருகிறேன்" என்று தலைகுனிந்தபடி அவர் சொல்ல "ஓம், போய் வாருங்கள்; இனி எப்போது வருவது" என்று நான் சொல்லிக்கேட்க, வருகிற சனிக்கிழமை வருவேன்" என்று அவர் என்னை அன்போடு பார்த்துக்கூற, தவறாமல் வந்துவிடுங்கள்" என்று நானும் அவரைக் கூசாமற் பார்த்துச் சொல்லி விடைகொடுத்து, அவர் போய் மறையும்வரையிற் பார்த்த கண்ணை மீட்காமல் நின்று, பின் கவலையோடு வீட்டினுள் மீண்டேன். அந்த நேரத்தில் என் தகப்பனார்மீது எனக்கிருந்த சந்தோஷத்திற்கு ஒரு அளவில்லை. எனது அன்பர் என் கேள்விப்படி வாரந்தோறும் சனிக்கிழமை இல்லையேல் ஞாயிற்றுக்கிழமை எங்கள் வீட்டிற்கு வருவார்; வந்து என் சுகத்தை விசாரித்துக்கொண்டு போய்விடுவார்; அவர் இருந்தபடியும் நான் கதவோரத்தில் நின்றபடியும் ஏதும் பேசிக்கொள்வதேயொழிய, முந்தி நடந்த விதமாக அவருக்குச் சமீபத்திலே போக, ஏதும் சிற்றுண்டி வழங்கி அவரை உபசரிக்க எங்கள் குல தருமக் கட்டுப்பாடுகள் இடந்த்தரமாட்டா என்பதையிட்டு நாங்கள் இருவருங் கவலைப்பட்டோம். இதற்கிடையில் அடுத்த ஆனிமாசத்தில் எங்களிருவருக்கும் கல்யாணஞ் செய்து வைத்தற்கு எங்கள் பெற்றோர்கள் நிச்சயித்துக் கொண்டார்களென்பதையறிந்தோம். அதனால் இந்தக் கட்டுப்பாடுகளெல்லாம் இன்னும் நாலு மூன்று மாசத்திற்குத்தானேயுண்டு என்றெண்ணி இருவரும் மகிழ்ச்சியடைந்திருந்தோம்.

"மனம் புண்ணானேன்"

"வாரந்தோறும் சனிக்கிழமையேனும் ஞாயிற்றுக் கிழமையேனும் வந்த அவர் ஒரு சனிக்கிழமை வராதொழிய, அடுத்தநாள் வருவாரென்றெண்ணி எதிர்பார்த்திருந்தேன்; அடுத்த நாளும் அவர் வராமை கண்டு நான் அதிக கவலை கொண்டேன்; "அம்மா, அவரை நேற்றுங் காணேன்; இன்றும் வரக்காணேன்; அவருக்கு ஏதும் சுகமில்லையோ; சுகமாயிருந்தால் ஒருபோதும் வராமல் விடமாட்டார்" என்று என் தாயாருக்குத் துயரத்தோடு சொன்னேன்; "நானும் அதைப்பற்றி நினைத்தேன், மகளே, நாளைக் காலை உங்கள் அப்பரை அங்கேயனுப்பி அவர் மூலமாக விஷயத்தையறிந்து கொள்ளுவோம்; நீ கவலைப்படாமல் உறங்கடியம்மா" என்று என் தாயார் சொல்லித் தேற்றினாராயினும், எனக்கு அந்த இரவு முழுவதும் உறக்கமென்பதே வரவில்லை; எப்பொழுது விடியுமென்று எதிர்பார்த்துக்கொண்டு படுத்திருந்தேன்; விடிந்தவுடன் தாயாருக்கு நான் நினைப்பூட்ட, தாயார் தகப்பனாரிடஞ் சொல்ல, அவர் "மெய்தானா, மருமகன் நேற்று முந்தைநாள் இங்கே வரவில்லையா; நான் இல்லாத நேரத்தில் வந்துபோயிருக்கக்கூடுமென்றல்லவா நான் எண்ணி யிருந்தேன்; சரி இப்பொழுதே அங்கே போய் எல்லாம் அறிந்து வருகிறேன்" என்று சொல்லிவிட்டு உடனே மாமா வீட்டிற்குப் போனார்; போனவர் அதிகநேரஞ் சென்றும் மீண்டும் வராமையைக் கண்டு நான் கவலைப் பட்டேன்; அதிகாலையிற் போன என் தகப்பனார் மத்தியானத்தின் பின்னர்த்தான் மீண்டுவந்தார்; என் அப்பர் தலைவாசலில் வந்து ஏறுவதற் கிடையில் அவர் வரவைக்கண்ட தாயார் முன்னே போக நானும் ஆவலுடன் பின்தொடர்ந்து போனேன்; "அங்கே என்ன விசேஷம்? தம்பி ஏன் வரவில்லையாம்" என்று தாயார் கேட்க, "அப்படி ஒரு விசேஷமுமில்லை; மருமகன் முந்தைநாட் சனிக்கிழமை எண்ணெயிட்டு முழுகிவிட்டு, பரீட்சை சமீபித்து விட்டபடியால், இரவு நடுச்சாமம் வரையிற் படித்துக் கொண்டிருந்தாராம்; அதனால் தலைவலியும் உடம்பில் அற்ப கொதியும் உண்டாயிவிட்டனவாம்; இப்பொழுது தலைவலி அதிகமில்லை; ஆனாற் காய்ச்சல் படியவில்லை; மூன்றுநாட் சுரம்மாயிருக்கவேணும்; நாளை வரையில் நோய் படிந்துவிடுமென்று வைத்தியர் சொன்னாராம்" என்று பதில் சொல்லிக்கொண்டு தலைவாசலிலிருந்த நாற்காலியிலே தகப்பனார் அலுப்போடிருந்தார். பின்னர் நான் வாட்டமுற்றிருப்பதை அவதானித்த என் தந்தையார் என்னை ஸ்நானஞ் செய்யச் சொல்லிவிட்டுத் தாமும் ஸ்நானம் முதலியன முடித்துக்கொண்டு, என்னையுந் தம் பக்கத்திலிருந்து ஆகாரமுண்ணச் செய்து தாமும் போசனஞ் செய்தார்; செய்யும் போது, என் தாயாரைப் பார்த்து, "வெயில் தணிந்தபின் நீயும் போய் மருமகனைப் பார்த்துக் கொண்டுவருவது நல்லது" என்று சொல்லத் தாயாரும் அதற்கு உடன்பட்டு அன்று பின்னேரம் அங்கேபோய் பார்த்துக்கொண்டு பொழுதுபட்ட பின் வீட்டிற்கு மீண்டுவந்தார். "ஏன் வர நேரஞ் சென்றது? ஏதும் விசேஷமோ" என்று தகப்பனார் கேட்க, தாயார் "அப்படியதிக விசேஷமில்லை, நான் போகும்போது வைத்தியரும் அங்கே வந்திருந்தார்; கைநாடியைப் பார்த்துவிட்டு ஏழுநாள் கழிந்தபின்பு தான் நோய் படியுமென்று சொன்னார். இப்பொழுது காய்ச்சல் கொஞ்சம் அதிகப்பட்டிருக்கிறதென்றுஞ் சொன்னார்; வைத்தியர் போன பிறகுதான் நான் அங்கிருந்து புறப்பட்டு வந்தேன் என்று அப்பருக்குச் சொல்ல, நானும் ஆவலுடன் கேட்டு அதிக கவலைப் பட்டேன். என் அன்னை தனியேயிருக்குஞ் சமயம் பார்த்து "அம்மா அவருக்கு அதிக சுகவீனமா? இப்போதைக்கு நோய் மாறாதா? வைத்தியர் என்ன சொல்லுகிறார்" என்று ஆவலுடன் கேட்க, "கண்ணே, கவலைப்படாதே; அப்படி அதிக சுகவீன மொன்றுமில்லை; நோய் வருவதும் பின் மாறுவதும் நூதனமல்ல; நீ சஞ்சலப்படாதே; வைத்தியர் சொன்ன தவணை கழிய நோயும் படியத் தொடங்கிவிடும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வா, மகளே, இரவு பத்துமணியாய்விட்டது; வந்து ஏதும் ஆகாரமுண்டு விட்டுப் படுத்துறங்கு" என்று தாயார் என்னை அடுக்களைக்கு அழைக்க, அந்த வேண்டுகோளை மறுக்கமுடியாமல் அற்பமாக ஏதோ உண்டுவிட்டுப் போய் படுத்துக்கொண்டு உறக்கம் வராமையினால் எண்ணாத எண்ணமெல்லா மெண்ணியெண்ணி மனம் புண்ணானேன்.

* * *

உலகம் பலவிதம்: 1944 செப்டெம்பர் 14 விசாலாட்சி: (முற்றொடர் - 17)

"கண்ணன்..... கருணைவேண்டும்"

"ஐயா, அவருடைய நோய் படியவேணுமென்று நான் எவ்வளவுக்கு விரும்பினேனோ, அதற்கு மாறாக அவ்வளவிற்கு நோய் ஏறத் தலைப்பட்டது; எனது பெற்றார் ஒவ்வொருநாளும் காலையிலும் மாலையிலும் எங்கள் மாமனார் வீட்டிற்குப் போய்த் தங்கள் மருகரைப் பார்த்தும் பரிகரித்தும் வந்தனர்; எப்படி அவருடைய சுகமென்று நான் வினாவினால், தாயார் "நோய் படியவுமில்லை ஏறவுமில்லை; பதின்மூன்று நாள் கழிந்தபிறகுதானாம் நோய் படியுமோ படியாதோ என்று சொல்லமுடியுமென வைத்தியர் சொல்லுகிறார்; மகளே, ஏதோ நீ கொடுத்து வைத்தவளாயிருந்தால், அந்தப் பிள்ளையின் உயிருக்கு ஒருபிழையும் வரமாட்டாது" என்று கவலையோடு சொல்ல, நான் கேட்டுப் பெரிதுஞ் சஞ்சலமுற்றேன்; காரணமில்லாமல் இடையிடையே என் மனம் பதைப்பதையும் சரீரம் பதறுவதையும் வலக்கண் துடிப்பதையும் அவதானித்தேன்; இவைகளெல்லாம் அவக் குணங்களென்று தாயார் சொன்னதையும் நினைத்தேன்; ஏதோ பேராபத்து நேரப்போகிறதென்று கிலேசப்பட்டேன்; இப்படியாக, பதின்மூன்றாநாட் பின்னேரம் அங்கே போய் மீண்டு வந்த தாயாரின் முகத்தில் வாட்டமிருப்பதை அவதானித்த நான் "அம்மா, உள்ளதைச் சொல்லுங்கள்; அவருடைய நிலைமை எப்படியிருக்கிறது; ஏதோ என் மனத்திற் பயம் அதிகப்படுகிறது; இன்று அங்கே வைத்தியர் வந்தவரா? வந்து என்ன சொன்னார்? சுகமலருமென்று சொன்னாரா? எனப் பல கேள்விகளையொன்றன்பின் னொன்றாய்க் கேட்டேன்; தாயார் பெருமூச்சு விட்டு "மகளே, சஞ்சலப்படாதே; எல்லாம் விதியின்படி நடக்கும்; நாம் நினைத்தபடி ஏதும் நடக்குமெனக் காத்திருப்பது வீண்; நான் அங்கே போயிருந்தபிறகு வைத்தியர் அங்கே வந்து நோயாளியின் கையைப் பார்த்தார்; நோய் இன்னமும் படியவில்லையென்றும் இருபத்தொரு நாள் கழிந்தபிறகு தான் திடஞ் சொல்ல முடியுமென்றுந் தெரிவித்தார்; நோயாளிக்கு நாளுக்குநாள் பெலவீனம் அதிகப்பட்டு வருகிறது, இந்த நேரத்திலே அந்தப் பிள்ளைக்குக் காலமும் சுகமாயில்லையென்று சோதிடர்கள் சொன்னார்களாம்; கிரகசாந்தி செய்தற்கான ஆயத்தங்களும் உன் மாமனார் செய்கிறார்; நாமொன்றுமறியோம்; அந்தக் கண்ணன், கடல்வண்ணன் கருணைசெய்யவேண்டும்; நீயும் அவனருளை வேண்டு; எங்கள் குலதெய்வமாகிய ஐயனாரைப் பிரார்த்தி..." என்று பரிவுடன் சொன்னார். என்னைப் பெற்றவள் இவைகளையெல்லாஞ் சொல்ல மத்தினாற் கடையப்படுந் தயிர்போல் என் மனம் உடைந்தது, நான் அழுதேன்; அந்த நேரத்தில் வெளியே போயிருந்த அப்பரும் அங்கே மீண்டு வந்து என்னுடைய நிலைமையைக் கண்டு மனங்கலங்கினாரெனினும், உடனே தம்மைத் தாமே தேற்றிவிட்டு, என் தாயாரைப் பார்த்து, "இவள் சிறுபிள்ளை, உலகமறியாதவள்; அவைகளையெல்லாம் இவளுக்குச் சொல்லி இவளையேன் கலங்கவைக்கிறாய் என்று சிறிது கடிந்து சொல்லிவிட்டு, என்னை மாத்திரம் தலைவாசற்பக்கங் கூட்டிக்கொண்டு போனார். "அங்கே போய் அவர் ஒரு நாற்காலியில் இருப்ப, நான் கவலை மீதூர ஒரு புறத்தில் நின்றேன்; தகப்பனார் என்னை ஆதரவுடன் பார்த்து "மகளே, நீ சஞ்சலப்பட வேண்டாம்; உன் அத்தானுக்கு வந்த நோயைக்காட்டிலும் கடுமையான நோயினாற் பீடிக்கப்பட்டு வைத்தியராலும் மற்றையோராலும் கைவிடப்பட்டோர் நல்விதி வசத்தால் பின்னர்ச் சுகமடைந்து இப்பொழுது சுகதேசிகளாய் வாழ்வதை நான் கண்டிருக்கிறேன்; ஆனதால், காலகதியில் உன் அத்தானுக்கு நோய் மாற, அவர் சுகமடைதல் கூடும்; எல்லாம் அந்தச் கேசவனுடைய திருவருளைப் பொறுத்துள்ளன; நீயும் அவனுடைய அருளை இரந்துநில்; முதலை வாய்ப்பட்டு ஆதிமூலமேயென்று ஓலமிட்ட கயேந்திராழ்வானுக்கு உடனே தோன்றி அபயங் கொடுத்து அந்தக் கராவினின்றும் மீட்டு அருள் செய்த பெருமான் உன்னைக் கைவிடுவாரென்றா நினைக்கிறாய்; துட்டனாகிய துச்சாதனன் வேத்தவையிலே பாஞ் சாலியின் துகிலையுரிந்தபோது அவள் ஓலமிட, அவளுடைய மானத்தைக் காத்த கண்ணன் உன்னை அமங்கலையாக விடுவாரென்றெண்ணாதே; ஆனதால் இந்த நேரத்தில் அந்த மணிவண்ணன் மலரடியைப் பணிகுதி; அவனையன்றி ஓர் அணுவும் அசையாதென்று அறிவுடையோர் சொல்வர் மகளே; நீ வீணே சஞ் சலப்பட்டு ஆவதென்ன; நடப்பது நடந்தே தீரும்; ஞானிகளாயுள்ளோரைத் தானும் பொல்லாத விதி விட்டதா? நான் படிக்கும் இந்தப் பாட்டை அவதானமாகக் கேள்:

"அன்று முடிசூடுவ திருக்கரகு ராமன் முன்
அருங்கா டுறைந்த தென்ன,
அண்டரெல் லாமமிர்த முண்டிடப் பரமனும்
காளம் லபித்த தென்ன,
வென்றிவரு தேவர்சிறை மீட்டநீ களவில்
வேடிச்சியைச் சேர்ந்த தென்ன,
மேதினி படைக்குமய னுக்கொரு சிரம்போகி
வெஞ்சிறையில் உற்ற தென்ன,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுமொரு பொய்சொல மன்னவன்விலை போன
தென்ன காண், வல்லமையினால்
எண்ணத்தி னாலொன்றும் வாராது பரமசிவன்
எத்தனைப்படி முடியுமாம்;
மன்றுதனில் நடனமிடு கங்காதரன் பெற்ற
வாபுத்ர வடிவே லவா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே"

என ஒரு சைவப்புலவர் பாடியிருக்கிறார்; ஆனதால் எதுவாயினும் வருவதுதானே வரும்; நீ இப்பொழுது ஒன்றையிட்டுக் கவலைப்பட வேண்டாம்; தேறியிரு என்று சொல்லித் தேற்றினார்; ஆனால் என்மனந் தேறவில்லை.

ஐயனார்

"ஒருநாள் நான் படுத்துறங்கும்போது, எங்களிருவருக்கும் கல்யாணம் நடக்கவும், எல்லாரும் வந்து வந்து விருந்துண்ணவும் கனாக்கண்டேன்; பின் விழித்து முழுவதும் கனவென்று உணர்ந்தவுடனே ஏக்கமடைந்தேன்; விடிந்தவுடன் நான் கண்ட கனவைச் சொல்லி அதன் பலன் என்னவென்று தாயாரைக் கேட்டேன்; தாயார் சற்றுநேரம் யோசித்துவிட்டு, அது அவ்வளவு நல்ல சொப்பனமல்லவடி மகளே யெனக் கூறித் தானும் கவலைப்பட்டார். நானும் அதிக கவலையடைந்தேனாய், என் தாயாரைப் பார்த்து அம்மா, கடவுளைப் பிரார்த்தித்தால் எல்லா இடையூறும் நீங்குமென்று நீங்களும் சொல்லுகிறீர்கள், என் ஐயாவுஞ் சொன்னார்; ஆனபடியால் இன்றுதொடக்கம் மாலைக் காலத்தில் எங்கள் ஐயனார் கோவிலுக்குப் போகும்போது என்னையும் உடன் கூட்டிக் கொண்டு போகிறீர்களா என்று கேட்க என்னைப் பெற்றவள் "ஆம், கண்ணே" என்று சொல்ல நான் அதிக மனமாறுதல் அடைந்தேன்..." எனக் கூறுவதற்கிடையில், விசுவநாதன் இரஞ்சிதத்தைப் பார்த்து "இரஞ்சிதம், நீங்கள் வைஷ்ண சமயத்தைச் சேர்ந்துள்ளீர்களென்று முந்திச் சொன்னாயே, சைவமக்களல்லாமல் வைஷ்ணவர்களும் ஐயனாரை வழிபடும் வழக்கம் உங்களூரில் உண்டா" என்று வினாவினான். "ஐயா, உங்களுடைய இந்த ஊரில் வழக்கமென்னவென்பதை நான் இன்னுமறியேன்; எங்களூரிலே ஐயனாரைத்தான் சைவர் வைஷ்ணவரென்ற வேற்றுமையின்றி இருபகுதி யாரும் பத்தியோடு வழிபட்டு வருவார்கள்; எங்கள் அரியினருளும் உங்கள் அரனுடைய அருளும் பெற்று ஐயனார் அவதாரஞ் செய்தமையினாலே அவரை அரிஹரபுத்திரா என்று எல்லாரும் பாராட்டுவார்கள்; பொங்கல் பூசை செய்து வழிபடுவார்கள்; வேதங்களிற் சில அவரை ருத்திரமூர்த்தியின் அம்சமென்றுங் கூறுமாம், அவரே எங்கள் குலதெய்வம்; அவர் அருளுடையவர், புதுமையுடையவர்..." என்று இரஞ்சிதம் சொல்ல விசுவநாதன் கேட்டு வியப்படைந்து அரிகரபுத்திரரைத் தியானித்து மேலே பார்த்துக் கும்பிட்டுக்கொண்டு பின்னர் இரஞ்சிதத்தின் வரலாற்றைக் கேட்பானாயினான்.

"ஐயா, அன்று பொழுதுபடும் நேரத்தில் எங்கள் வீட்டின் அயலிலேயுள்ளதாகிய ஐயனார் கோவிலுக்கு என் தாயாருடன் கூடிக்கொண்டு நான் அங்கே போகும்போது பூசை நிகழ, நான் அந்த மூர்த்தியைத் தரிசித்து வணங்கி என் குறைகளையெல்லாம் மனத்தில் நினைத்து முறையிட்டேன்; அன்று முதலாகத் தாயார் தினமும் மாலைவேளையில் தாம் கோயிலுக்குப் போம்போதெல்லாம் என்னையும் உடனழைத்துச் செல்ல நானும் போய்ப்போய்க் கும்பிட்டு என் குறையை அந்தப் பெருமானிடத்தில் முறையிட்டு வந்தேன்; ஆனாலும் அவருடைய நோய் குறைந்தபாடில்லை யென்று பெற்றார் வந்து சொல்லக் கேட்டுக்கேட்டு வருந்தினேன்; ஒருநாள் மத்தியானத்தின் மேல் என் மாமனார் வீட்டிற்குப்போன என் பெற்றாரிருவரும் அன்று மாலைக்காலமாகியும் மீண்டு வந்திலர். அவர்கள் வராமையையிட்டு நான் சஞ்சலப்பட்டேன்; எங்கள் வீட்டிலிருந்த வேலைக்காரச் சிறுவனையும் மாமனார் வீட்டிற்குப் போய் ஏதும் விசேஷமோ எனப் பார்த்துவா என்று சொல்லி அனுப்பி விட்டேன்; கோயிலில் மணி கேட்டது; உடனே, நான் எனக்குத் துணையாகவிருந்த வேலைக்காரச் சிறுமியை எங்கள் வீட்டிற்குக் காவலாக வைத்துவிட்டு, வீட்டின் பக்கத்திலேதானே கோயில், நாளிலும் பொழுதிலும் போய்க் கும்பிடும் இடந்தானே என்ற எண்ணத்தினாலும், என் மனத்திற் குடிகொண்ட கவலை அதிகப் பட்டமையினாலும், ஐயனாருக்குப் போய் முறையிட்டால் மன ஆறுதலுண்டாகுமென்ற சிந்தையினாலும், நிலாக்காலமாயிருந்தமையினாலும், தன்னந்தனியே புறப்பட்டுக் கோயிலுக்குப் போனேன்; அங்கே பூசை நடந்தது, தரிசனஞ் செய்தேன், வாயாரத் தோத்திரம் பண்ணினேன்; கவலைமேலீட்டினாலும் சிலநாட்களாக வேளைக்குப் போசனஞ் செய்யாமை யினாலுண்டான தேகமெலிவினாலும் எனக்கு ஒரு ஆயாசமுண்டாக, நான் அந்தச் சந்நிதானத்திலே நிற்கும் ஒரு தூணத்திற் சாய்ந்தபடி மெல்ல இருந்துவிட்டேன்; பூசை முடிந்ததைத்தானும் நான் அந்தநேரம் அறியேன். கோயிற் பூசகர் திருநீறு திருமணபுஷ்பம் தீர்த்தம் முதலிய பிரசாதங்களைத் தரும்படி என்னிடம் வருதலும், நான் அயர்ச்சி நீங்கித் திடுக்குற்று எழுந்து இரு கைகளையும் நீட்டி அவற்றை ஏற்றுத் தரித்துக் கொண்டு, தீர்த்தத்தை இருகரங்கோலி நீட்டி ஏற்று உட்கொண்டேன்; அதனால் என்னிடத்திருந்த ஆயாசம் நீங்கியது.

எழுதாவிதிக்கு அழுதாவதென்ன?

சுவாமி கும்பிடவந்தவர்களுட் பலர் போய்விட இரண்டுமூன்று பேர் பெண்கள்தாம் அங்கே நின்றார்கள்; அவர்களும் ஐயனாரிடத்தில் தங்கள் குறையை முறையிட நானும் என் குறையைக் கவலைமேலீட்டினால் வாயிட்டு முறையிட்டேன்; அரியர புதல்வா, ஐயனே, ஆன்மகோடிகளைக் காத்தருளுந் தெய்வமே! என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையீடு உன் திருச்செவிகளில் ஏறவில்லையா! நான் படுந் துயரம் உன் திருவுளத்திற்குத் தெரியாதா? பூரணை மணவாளா, புட்கலை கணவா, உன் பெண்பிள்ளைகளில் யானு மொருத்தியல்லேனோ! இந்தச் சின்ன வயசில் என்னை ஏன் இப்படிக் கலங்க வைத்தாய்? செண்டாயுதனே, இந்திரன் தன் தேவியை உன்னிடம் அடைக்கலமாக வைத்துக் கைலைக்குப் போய்விட, சூரனுடைய தங்கையாகிய அசமுகி தன்னந்தனியேயிருந்த அந்த இந்திராணிக்கு இடர்செய்யவர, வீரமா காளரென்னும் படைத் தலைவரைக் கொண்டு அந்த அசமுகிக்குத் தண்டஞ் செய்வித்துச் சசியைக் காத்தருள் செய்தாயென்று சைவ மக்கள் உன்னைப் பாராட்டுகின்றார்களே அந்த அருள் இப்பொழுது எங்கே மறைந்துவிட்டது! அப்பனே! என் அன்பருக்கு ஏதும் ஆபத்து வராமற் காக்கவொண்ணாதா! என்று ஓல மிட்டேன்; இதற்கிடையில் என் தாயார் என்னைக் கூப்பிட்டபடி கோவிலுக்கு ஓடிவந்து, கண்ணே இங்கா நிற்கின்றாய்? எழுந்து வா; எழுதா விதிக்கு அழுதாவதென்ன? உன்னை உன் அத்தான் பார்க்க விரும்புகிறார்; உன் அப்பா கார் கொண்டு வருவார், அதற்கிடையிற் புறப்பட ஆயத்தஞ் செய்" என்று சொல்லி வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போகும்போது, நான் துடிதுடித்து அம்மா! அவருடைய சுகம் எப்படி? என்னைக் கூட்டிக்கொண்டு வரும்படி அவர் தாம் உங்களிடஞ் சொன்னாரா என்று ஆவலுடன் கேட்டேன்; "எல்லாஞ் சுகமடி மகளே, பதறாமல் வா; உன்னைப் பார்க்க ஆசைப்படுகிறார்; உன் பெயரையே மயக்கம் நீங்கி நல்லறிவுண்டாகும்போது சொல்லுகிறார்" என்று தாயார் கவலையோடு சொன்னார்; இருவரும் எங்கள் வீட்டிற் போய்ச் சேர்ந்தோம்; சிறிது நேரத்தில் காரும் வந்து சேர்ந்துவிட்டது; "மகளே, புறப்படு" என்று சொல்லிக்கொண்டே அவர் இரதத்தை விட்டிறங்கி வந்தார்; நான் உடுத்த துணியோடு புறப்பட்டு இரதத்தில் ஏறினேன்; நானும் என் பெற்றாரும் வேலைக்காரச் சிறுவனையும் சிறுமியையும் வீட்டிற்குக் காவலாக வைத்துவிட்டுப் புறப்பட்டோம்; ரதமும் அதிவேகமாகச் சென்றது.

* * *

உலகம் பலவிதம்: 1944 செப்டெம்பர் 21
விசாலாட்சி: (முற்றொடர் - 18)

"மானம்விட நேர்ந்தால் உயிரை விடு"

"நாங்கள் போய் இறங்கும் போது மாமா வீட்டுத் தலைவாசற் பக்கத்தில் எவரையும் கண்டிலேம்; நேரே வீட்டினுட்போய் அவர் நோயாய்ப் படுத்திருக்கும் அறையையடைந்தோம்; அவருடைய பெற்றார் சுற்றத்தார் அயலட்டத்திலுள்ளாராகிய பலர் அவர் கிடக்கும் படுக்கையறையைச் சூழ்ந்தபடி நிற்கவும், சிலர் அந்த அறையுணின்று கவலையோடு வெளியே வரவுங் கண்டோம்; நான் ஆவலுடன் விரைந்து அங்கே போனதைக்கண்டு படுக்கையைச் சூழ நின்றவர்கள் சிறிது விலகி, என்னைச் சமீபத்திற் போகவிட்டார்கள்; நெஞ்சு பதற, சரீரம் நடுங்க, கண்ணீர் சிந்த நான் அதிக சமீபத்திலே போய் நின்று "அத்தான். அத்தான்" என்று நாத்தடுமாறக் கூப்பிட்டேன்; பதில் இல்லை; அதன் மேலும் கூப்பிட்டால் அங்கு நிற்பவர்கள் என்னைக் குறைசொல்லுவார்களோ என்று பயந்து அப்படியே நின்றேன்; அவருடைய தலைமாட்டில் நின்ற எனது மாமனார், என்னைக் கவலையோடு பார்த்து "உப்படி உந்தப் படுக்கையில் இரடியம்மா" என்று சொல்ல, நான் உடனே பக்கத்தில் இருந்தேன்; "தம்பீ, இரஞ் சிதம் வந்திருக்கிறாள், நீ தேடினாயல்லவா" என்று மாமனார் சொல்வதற்கிடையில் "ஆ...ர்? ர...ஞ்...சித... மா" என்று மெல்லச் சொல்லிக் கொண்டு கண்விழித்து மேலே பார்த்தார்; நான் உடனே பதைபதைத்து இருக்கை விட்டெழுந்து அவருடைய முகத்தைப் பார்த்தபடி நிற்க, ர...ஞ்...சித...ம், வ...ந்...து விட்டா... யா" என்று என் முகத்தைப் பார்த்தபடி சொல்ல நான் அழுதேன்; "அ...ழா...தே" என்று மெல்ல அவர் சொல்லி, தம்பக்கத்தில் இருக்கும்படி தமது கையை மெல்லத்தூக்கிக் குறிப்பாகக் காட்ட, நான் முன்றானையால் என் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அப்படியே பக்கத்திலிருந்தேன்; அவர் தம் கையை மெல்லநீட்டி என் கையைப்பற்றித் தம் கண்களில் ஒற்றி முத்தமிட்டார்; அவருடைய கண்களிலுள்ள நீர்த்துளி என் கைகளில்தவழ, நான் துடிதுடித்து என் முன்றானையால் அவருடைய கண்களை ஒற்றினேன்; ஐயா, அந்தநேரம் என்மனம் பட்டபாட்டை ஆர் அறிவார், அந்தக் கேசவனொருவனே அறிவான்; என்னால் நா எடுத்துப் பேசமுடியவில்லை; நான் கலங்குவதை அவர் அவதானித்து அழவேண்டாமென்று தம்முடைய கையினாற் சைகைகாட்டி, நான் கலங்குவதை விட்டு முகமலர்ச்சியுடையவள் போல இருந்துகொண்டு "உங்களுக்கு இப்போது என்ன செய்கிறது" என்று நாத்தடுமாறக் கேட்டேன்; நான் கேட்டுமுடிவதற்கிடையில் அவருடைய முகத்திலே எவரும் காத்திராத ஒரு முகமலர்ச்சி தோன்றியது; கண்களை நன்றாய் விளித்து என்னை உற்றுப்பார்த்தார்; அங்கே நின்றவர்களெல்லோரும் அவரை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்; அவர் என் கையைப் பற்றியபடி என் முகத்தை உற்றுப்பார்த்து "ரஞ்சிதம், என்ன செய்யலாம், நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் வேறொன்றை நினைத்துவிட்டது; உன்னை என் உயிர்த் துணைவியாகக் கொண்டு வாழ நான் பாவி கொடுத்துவைக்கவில்லை; வினைப்போகமே யொரு தேகங்கண்டாய் வினை தானொழிந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினைப்போதும் நில்லாது... என்னையிட்டு நீ சஞ் சலப்படாதே, உலகத்திலேயுள்ள ஆன்மாக்களை யெல்லாம் பாதுகாத்தலினால் காவற் கடவுளென்று சொல்லப்படும் அந்த நாராயணன் உன்னையும் பாதுகாப்பான்; நிலையிற் பிரியாதே மானத்தை விட நேர்ந்தால் உன்னுயிரை அதற்குமுந்தி விடு; அந்த நாராயணன் இப்பொழுது தன்னிடம் வரும்படி என்னை அழைக்கிறான்; உன்னிடம் விடைபெற்றுக்கொண்டேன், போகிறேன்...” என்று அறுத்து உறுத்துச் சொன்னார்; நான் பேதை எனக்கு ஒன்றும் புலப்படவில்லை; அவருக்கு அந்த நேரம் நோய் படிந்துவிட்டதென்று எண்ணினேன்; என்னைவிட்டு எங்கே போகப் போகிறீர்கள் என்று கேட்டேன்; பதிலில்லை.

அன்பைக்கரைத்து வார்ப்பதுபோல பாலை வார்த்தேன்

இதற்கிடையில் என் மாமியார் கண்ணீர் தாரை தாரையாகச் சிந்தக் கலங்கியபடி, இந்தா இரஞ்சிதம் இந்தப்பாலை நீ தான் தம்பிக்குப் பருக்கு” என்றுதர நான் உடனே வாங்கி “இதனைக் குடியுங்கள் என்று சொல்லி அவருடைய வாய்க்குச் சமீபமாகக் கொண்டு போக, அவர் வாயைத் திறக்க நான் என்னன்பு முழுவதையும் கரைத்து வார்ப்பவள்போல் வார்க்க அவர் உட்கொண்டார்; உடனே எனது மாமியாரும் அந்தப் பாத்திரத்திற் பாலைநிறைத்து மெய்பதறக் கைநடுங்க, கண்ணீர்பெருக “நான் பெற்ற கண்ணே, பெற்ற வயிறு எரிகிறதடா, உன்னைப்பெற்ற பாவி வார்க்கும் பாலையுங் குடியடா, என்செல்வமே” என்று சொல்லி அழுதழுது பாலைப்பருக்க அதனையும் உட் கொண்டார்; மாமி ஏன் கலங்குகிறீர்கள், அவருக்கு இப்பொழுது இருந்ததிற் சுகமல்லவா” என்று பேய்ச்சி நான் சொன்னேன்; என் வார்த்தைக்குப் பதிலில்லை; மாமியார் அந்தப் பாத்திரத்திற் பின்னரும் கொஞ்சம் பாலை வார்த்து அதனைப் பருக்கும்படி என் மாமனார் கையிற் கொடுக்க, அவர் தம் மெய்சோரக் கைநடுங்க, அதனை வாங்கி “என் செல்வமே, என் அந்தியகாலத்தில் இப்படியெல்லாம் எனக்கு நீ செய்து என்னைச் சாக்காட்டுவாயென்று எண்ணியிருந்தேனடா, இப்பொழுது அதற்கு மாறாகவா செய்ய நினைத்து விட்டாய்; எனக்குப் பால் வார்க்க வேண்டிய உனக்கு நான் பால் வார்க்கிறேன் குடியடா கண்ணே...” என்று சொல்லியழுதபடி பருக்கினார்; வார்த்த பாலிற் சிறிது உள்ளே போக எஞ்சியது கடைவாயால் ஒழுகியது; மாமனார் என்குடி முடிந்ததென்று கதறிக் கொண்டு, பாத்திரத்தை நழுவவிட்டுத் தாமும் கீழே வீழ்ந்தார், அதன் பிறகுதான் நான் என் அன்பரைப் பறிகொடுத்தே னென்பதையுணர்ந்தேன். நான் அறிவு குன்றினேன், ஆவி தளர்ந்தேன்; சோடிழந்த அன்றில்போல் துயரமாகினேன்; ஐயா, அதன்பின் நிகழ்ந்தவைகளை விரித்துச்சொல்லி மேலும் மேலும் உங்களைக் கவலைப்படுத்த எனக்குப் பிரியமில்லை அவருடைய ஈமக்கிரியைகள் முடிந்ததும், அந்த மரணாசௌசமிருக்கும் வரையும் என் பெற்றாரும் நானும் மாமனார் வீட்டிலேதான் தங்கியிருந்தோம். ஆசௌசம் கழிந்த பதின்மூன்றாநாள், எனது பெற்றார் என்னையுங் கூட்டிக்கொண்டு எங்கள் வீட்டிற்குப் போகப் புறப்பட்டனர்; அப்பொழுது என் மாமனார் என் தகப்பனாரைப் பார்த்து “மைத்துனரே நாங்கள் எங்கள் ஒரேயொரு பிள்ளையைப் பறிகொடுத்து விட்டுக் கலங்கும் இந்தநேரத்தில் எங்கள் பிள்ளைக்குப் பிள்ளைபோலிருக்கும் உங்கள் மகளைச் சிலநாட்களாயினும் எங்களுடன் இருக்கவிட்டுச் சென்றால் உமது சகோதரிக்கும் எனக்கும் அது பெரிய ஆறுதலாகவிருக்கும்; நீங்களும் இடையிடையே இங்கு வந்து உங்கள் பிள்ளையையும் எங்களையும் பார்த்துப் போகலாம்” என்று கேட்டார். என் தகப்பனார் உடனே பதில்சொல்லாது தாயாருடன் யோசித்துவிட்டு “உங்களுக்கு விருப்பமாயிருந்தால் உங்கள் மருமகள் சிலநாள் தங்கியிருக்கலாம்; ஆனால் அவளுடைய விருப்பம் என்னவோ நாம் அறியோம்” என்றார். அதனைக் கேட்ட மாமனார் என்னைக் குறிப்பாகப் பார்க்க, நானும் அதற்கு உடன்பட்டேன்; என் பெற்றார் அவர்களிடத்தும் என்னிடத்தும் உத்தரவு பெற்றுக்கொண்டு என்னை அரிதிற் பிரிந்து தங்கள் வீட்டிற்கு மீண்டனர்; நான் அங்கேதானே சிலநாட்கள் இருந்தேன்; என்பெற்றார் இடையிடையே என்னை வந்து கண்டு சுகம் விசாரித்துப் போவாராயினர், என்னுடைய மாமியாரும் மாமனாரும் தங்கள் சொந்தமகள் போல் என்னைப் பாவித்து அன்போடு பேணி வளர்த்து வந்தார்கள்; அங்கேயிருப்பதனால் அக்காலத்தில் எவ்வகையான குறையுமெனக்கில்லை; ஆனால் அங்கேஇருப்பதனால், அவரையிட்ட கவலையெனக்கு நாளுக்குநாள் அதிகப்பட்டு வரலாயிற்று.

அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ

இப்படியாக என்று மாமியார் தம்முடைய ஒரே புதல்வன் மோசம்போன நாள் தொடக்கம் கண்ணீரும் கம்பலையுமாகவே இருந்தார்; ஆகாரத்தை வெறுத்தார்; தனியான இடத்திலே போயிருந்துகொண்டு தனது மகனை நினைத்து அழுவதும் யோசிப்பதுமாகவே காணப்பட்டார்; மாமனார் எவ்வளவு சமாதானஞ் சொன்னாரேனும் தேறுதல் கூறினாரேனும் மாமியார் உள்ளம் சமாதானமடையவுமில்லை; தேறுதலடையவு மில்லை; “பிள்ளைப்பெற்றும் மலடியானேனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியவள்" என்று தம்மைத்தாமே மாமியார் நொந்துவந்தார்; மாமியார் செய்யவேண்டிய வீட்டுக் கருமங்களை நானே மனப்பூர்வமாகச் செய்துவந்தேன்; ஒருநாள் என் மாமியார் கவலைப்பட்டு அழ, அதனைக்கண்டு நானுந் துயர்கொண்டு புலம்ப, அந்த நேரத்தில் என் மாமனார் அங்கே வந்தார்; வந்தவர் நாங்களிருவரும் இருக்கும் நிலைமையைக் கண்டு தாமும் கவலைப்பட்டுப் பின்னர் தம்மைத் தாமே தேற்றிக்கொண்டு, மாமியாரைப்பார்த்து "இன்னமுங் கலங்கி ஆவதென்ன? ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வரப் போவதில்லை; நாமும் இன்னமும் நீடித்த காலத்திற்கு வாழப்போகிறோமா? இருக்கும் வரையில் இறைவனைத் தொழுது எங்கள் ஆன்மா ஈடேறுதற்கான வழியையல்லவா தேட வேண்டும்; உன்னைக்கண்டு இந்தப் பிள்ளையும் வருந்துகிறாள்; இவளோ சிறுபிள்ளை விரகறி யாதவள்; இவளுடைய விதியும் இப்படியாகப் போய்விட்டது; இவளுக்காகவாயினுங் நீ மனந் தேறியிரு; இல்லாவிட்டால் இந்தப்பிள்ளையைத் தாய் தகப்பன் வீட்டிற்கு அனுப்பவேண்டித்தான் வரும்" என்று சமாதானஞ்சொன்னார். அதனைக் கேட்டு அப்போதைக்கு மாமியார் ஒருவாறு தேறியிருந்தார்.

பட்டகாலே படும்கெட்டகுடியே கெடும்

புறத்தே கவலையில்லாதவர் போல் என் மாமியார் நடித்தனரேனும், புத்திர சோகத்தாலும் உண்டியை வெறுத்தமையினாலும் எனது மாமியார் நாளுக்குநாள் தேகம் மெலிந்து ஈற்றில் சுரநோயால் பீடிக்கப்பட்டனர்; அதனையறிந்த என் தாயாரும் தகப்பனாரும் அங்கே வந்து சேர்ந்தனர்; தாயார் என்னை வருந்தவிடாமல் சமயல் செய்வதையும் நோயாளியைப் பார்ப்பதாகிய பொறுப்பையும் ஏற்று நடத்த, மாமனாரும் தகப்பனாரும் மற்றும் ஆகவேண்டிய கருமங்களைப் பார்த்தார்கள்; ஐயா, அதிகஞ் சொல்லிக் கவலைப்பட்டு ஆவதென்ன; என் மாமியாரைப் பீடித்த நோய் மருந்திற் கட்டுப் படாமல் நாளுக்குநாள் அதிகப்பட்டு, நோய் கண்ட இருபத்தேளாநாள் மகனிறந்து ஆறாமாசம், தம்முடைய மகனைப்பற்றிய சிந்தனையோடு உற்றார் கதற, உறவினர் புலம்ப, ஊரார் கவலைகொள்ள உயிர் நீங்கினர். அங்கே இப்பொழுது அவ்விழவிற்கு வந்தவர்களெல்லாரும் "பட்டகாலே படும் கெட்ட குடியே கெடும்" என்ற பழமொழி சொல்லிப் பரிவுகொண்டார்கள். நானும் பிடித்த கொம்பரையும்விட்டு மதித்த கொம்பரையும் தவறிய நிலையடைந்தேன்; என் பெற்றாரும் மாமனாரும் பட்ட துயரத்தை இவ்வளவென்று சொல்லமுடியாது. அங்கே வருவோரெல்லோரும் என் மாமனாருக்கும் எனக்கும் நேர்ந்த பொல்லாத விதியையிட்டுக் கவலைப்பட்டார்கள்; ஆண்கள் என் மாமனாருக்கும் பெண்கள் எனக்கும் தேறுதல் சொல்லிச் சென்றார்கள்; என் தாயாரும் நானும் மாமனார் வீட்டிலேயே தங்கிவிட, தகப்பனார் மாத்திரம் எங்கள் சொந்த வீட்டிற்கு இடையிடையே போவதும் இங்கு வருவதுமாயிருந்தார். இப்படி ஒரு மாசகாலம் சென்றது,

"உங்கள் பிள்ளையையும் உடன்கூட்டிப் போங்கள்"

இப்படியாக, ஒருநாள்எனது மாமனார் ஆறுதலாயிருக்குஞ் சமயம் பார்த்து என் தகப்பனார் அவரிடம் போய் "மைத்துனரே, நாங்கள் இனிமேலும் இங்கே தங்கியிருக்க முடியாதென்பது உங்களுக்கே தெரியும்; எங்கள் வீடுவளவு நிலைகெட்டுப் போயின; நான் பார்த்து வந்த முயற்சியையும் இங்கே தங்கியிருந்தாற் பார்த்தல் முடியாது; ஆனதால் நாளைக்கு எங்கள் வீட்டிற்குப் போகலாமென்று யோசிக்கிறோம்; உங்கள் சம்மதம் எப்படியோ அறியோம்" என்று இதமாகக் கேட்டார். மாமனார் வெகுநேரம் யோசித்துப் பெருமூச்சுவிட்டு "நீங்கள் கேட்பதும் நியாயந்தான்; ஆனால் நம்முடைய மருமகள் ஒரு பெண்துணையில்லாமல் இந்த வீட்டில் தன்னந்தனியேயிருந்து காலங்கழிக்க முடியுமோ என்றதைப்பற்றித்தான் யோசிக்கிறேன்" என்று கவலையோடு சொன்னார்; அதற்கு என் தகப்பனார் உத்தரமொன்றுஞ் சொல்ல இயலாதவராய் மௌனஞ் சாதித்தார்; அப்பொழுது அயலே நின்ற எனது தாயார் மாமனாரைப் பார்த்து" அண்ணா, இந்தப்பெரிய வீட்டிலே நீங்கள் தன்னந்தனியேயிருந்து எந்த நேரமும் கவலைப்படுவதைக் காட்டிலும் நீங்களும் எங்கள் வீட்டிற்குவந்து எங்களுடன் இருக்கலாம்; உங்களுக்கு ஆக வேண்டிய வசதிகளெல்லாம் நாங்கள் செய்வோமென்பது உங்களுக்குத் தெரியுந்தானே; உங்கள் வீடுவளவு அலையாமல் நீங்களும் நாங்களும் எப்போதும் வந்து பார்த்துக்கொள்ளலாம்" என்று விநயமாகச் சொன்னார். இவற்றைக் கேட்ட மாமனார் வெகுநேரம் யோசித்துவிட்டு, தங்காய், "ஒருவருமில்லாமல் இந்த வீட்டை விட்டுப் போவது முறையல்ல; உங்களுடைய உதவி எனக்கு ஆவசியகம் வேண்டும்; இப்போதைக்கு நான் வேலைக்காரரையும் வைத்துக்கொண்டு இங்கேதான் இருக்கவேண்டும்; உங்கள் பிள்ளையையும் உடன் கூட்டிக்கொண்டு போங்கள்; பிறகு ஆகவேண்டியவைகளையெல்லாம் யோசித்துச்செய்வோம்; இப்படியெல்லாம் வருமென்று அந்தநேரத்தில் ஆர் நினைத்தவர்; இடையிடையே உங்கள் வீட்டிற்கு வந்துபோவேன்" என்று கவலையோடு சொல்லி எங்களுக்கு அநுமதி தந்தார்; நாங்கள் மூவரும் உடனே புறப்பட்டு எங்கள் வீடுவந்து சேர்ந்தோம்; ஆனால் "உங்கள் பிள்ளையையும் உடன் கூட்டிக்கொண்டு போங்கள்" என்று மாமனார் சொன்ன வார்த்தை என்னுள்ளத்தைச் சுட்டது.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1944 செப்டெம்பர் 28
விசாலாட்சி: (முற்றொடர் - 19)

"உலகங் குற்றஞ் சொல்லு மென்று பயப்படுகிறேன்"

"ஐயா, சில மாசங்களாக எனது மாமனார் எங்கள் வீட்டிலேயே போசனஞ் செய்துகொண்டு தம் வீட்டிலும் எங்கள் வீட்டிலுமாகக் காலங் கழித்தார்; சிலவேளைகளில் என் தாயாரும் நானும் போய் மாமனார் வீட்டிலிருப்ப, தகப்பனார் இங்குவந்து போசனஞ் செய்துகொண்டு எங்கள் சொந்த வீட்டிற்போய் கருமம் பார்த்துவிட்டு மீண்டு வருவதுமுண்டு; இப்படி யெல்லாமிருந்தாலும் தமது அரிய மகனையும் மனைவியையும் சிலமாசங்களுட் பறிகொடுத்துவிட்டு இருந்து கலங்கவேண்டி நேரிட்டதே யென்பதையிட்ட கவலை காலகதியில் அவருக்கு அதிகமானது; அவ்வளவோடு மாத்திரம் அவருடைய கவலை நின்றுவிடவில்லை; என்னைக்காணும் போதெல்லாம் நானும் இந்தச் சின்னவயதில் அமங்கலையின் கதியையடைந்துவிட்டேனே யென்பதையிட்டும் அவருக்குக் கவலை அதிகப்பட்டது; இவைகளை யவதானித்த என் தாயாரும் தகப்பனாரும் நானும் என் மாமனாரை இயன்ற வரையிற் கவலைகூர விடாமல் ஆகவேண்டிய கருமங்களைப்பார்த்து உபசரித்து வந்தோம், ஆனாலும் மாமனாருள்ளம் தேறுதலடைய வில்லை; அவர் ஒருநாள் என் தாயாரைப் பார்த்து "தங்கைச்சி, என் மருமகள் சின்னஞ் சிறுபிள்ளை; அவள் அமங்கலைபோல இருப்பது எனக்குக் கவலையை அதிகப்படுகிறது; என் மனைவி மக்களை யிழந்த துயரத்தைக் காட்டிலும் இதுவே பெருந் துயரமாகிறது; எங்கள் மகன் கல்யாணஞ் செய்தபிறகு இறந்திருந்தால் இந்தப் பிள்ளையைக் கைம்மையென்று நினைத்து நடக்கலாம்; அப்படியில்லையே; பேச்சுக்கால்மாத்திரந்தானேயிருந்தது; அதனால் ஒரு தோஷமுமல்ல; என் மருமகளுக்குப் போதிய சீதனம் நானே கொடுக்க ஆயத்தமாயிருக்கிறேன்; எனக்கு மகன் முறையான இராமச்சந்திரன் இப்பொழுது பீ.ஏ. வகுப்பிற் சென்னையிலுள்ள கல்லூரியிற் படித்துக்கொண்டிருக்கிறான்; நான் சொன்னால் அவன் கேட்டு அப்படியே நடப்பான்; அவனுக்குத் தாய்தகப்பனில்லை யென்பதும் என் செலவிலேதான் அவன் படிக்கிறானென்பதும் எனது மைத்துனருக்குத் தெரியும்; ஆனதினால் அவனுக்கு விஷயத்தைத் தெரிவித்து இன்னும் ஆறுமாசஞ் செல்ல அவனுடைய பரீட்சையும் முற்றுப்பெற நான் அவனை இங்கே அழைத்து எங்கள் வீட்டிலேயே விவாகம் நடத்தி வைக்கலாமென்று யோசிக்கிறேன்; உன்னுடைய எண்ணமென்ன" என்று கேட்க, என் தாயார் "அண்ணா, உங்கள் மைத்துனருக்கும் உங்களுக்கும் எது சம்மதமோ அது எனக்குஞ் சம்மதந்தான், ஆனால் எங்கள் மரபிலே பெண்ணுக்கு இரண்டாமுறை கல்யாணஞ் செய்து வைப்பதாகிய வழக்கம் இன்னமுமில்லை யென்பதையிட்டுத்தான் யோசிக்கிறேன்" என்று சொல்ல, "தங்காய் எனது மைத்துனருக்கு இந்த விஷயத்தைச் சொல்லு; அவருடைய நோக்கத்தையும் உசாவி நடப்போம்" என்று மாமனார் சொன்னார்; என் தகப்பனாருக்குத் தாயார் இச்செய்தியைச் சொல்ல, அவர் அப்படிச் செய்யலாந்தான்; ஆனால் உலகங் குற்றஞ் சொல்லுமென்று பயப்படுகிறேன்; இருந்தாலும் எங்கள் பிள்ளைக்கு அப்படிச் செய்வது பிரியமோ என்று நீ மெல்லக் கேட்டுப்பார்" என்று தாயாருக்குச் சொன்னார். மாமனார் தாயார் தகப்பனாராகிய இவர்களெல்லாரும் என் படுக்கையறைக்குப் பக்கத்திலேயுள்ள கூடத்திலிருந்து இராக்காலத்திலேயே பேசினார்கள்; நான் உறங்கிவிட்டேனென்று நினைத்துக்கொண்டே இவைகளைப் பேசினார்கள்; ஆனாற் கவலைமேலீட்டினால் எனக்கு உறக்கம் குறைவென்பதை அவர்கள் அறியார்கள்; உறக்கமில்லாமற் கிடக்கும்போதுதான் அவர்கள் பேச நான் இவைகளைக் கேட்டேன்.

"மூத்தோர் சொன்ன வார்த்தையமிர்தம்"

அடுத்தநாளிரவு நான் பலவாறு யோசித்துக்கொண்டு என் படுக்கையறையுள் இருக்கும்போது என் தாயார் என் அருகில் வந்து கவலையுடனிருப்பதைக்கண்டு "அம்மா இன்னுங் கவலைப்பட்டாவதென்ன? நீங்கள் கவலைப்பட என் கவலையும் அதிகப்படுகிறது; ஆனதால் அம்மா, எனக்காக நீங்கள் உள்ள கவலையை மறந்து சந்தோஷமாயிருங்கள் என்று என் தாயாரை இரந்தேன்; அப்பொழுது என்னைப் பெற்றவள் என்னை ஆதரவுடன் பார்த்து, "கண்ணே, எங்கள் பிள்ளைக்கலி தீர்க்கப் பிறந்த செல்வமே, நான் கவலையில்லாமற் சந்தோஷமாயிருப்பேன்; நான் சொல்லுகிறபடி நீ கேட்டு நடக்கிறாயா" என்று என்னைக் கேட்க, நீங்கள் சொல்லுங் கருமம் நான் செய்யக் கூடியதாயிருந்தால், உடனே செய்வேனம்மா; நீங்கள் யோசியாமற் சொல்லுங்கள்; பெற்றார் மகிழ நடப்பது பிள்ளைகளுடைய கடமைதானம்மா என்று உள்ளமுருகச் சொன்னேன்; மாமனார் சொன்னது தாம் சொன்னது தகப்பனார் சொன்னதாகிய எல்லாவற்றையும் என் தாயார் எனக்கு விபரமாகச் சொல்லி, இப்படியெல்லாமிருப்பதால் அந்த இராமச் சந்திரனை நீ கல்யாணஞ் செய்யலாம்; அதனால் ஒரு தோஷமுமல்ல; எங்கள் மூவருடைய சொல்லையும் தட்டாதே மகளே; மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தமடியம்மா, எங்கள் சொல்லை மறுத்தாலும் உன் மாமனார் சொல்லும்போது நீ செய்யலாம்; மேலும் உன்னுடைய நன்மையை உத்தேசித்துத்தானே நாங்கள் இப்படிச் சொல்லுகிறோம், எங்கள் ஆயுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயமல்ல; எங்களுக்கு ஏதும் பொல்லாங்கு நேருங் காலத்தில் நீ சின்னஞ்சிறு பெண் தன்னந்தனியே யிருந்து வாழமுடியுமா; நீதான் நெறியோடிருந்தாலும், உலகம் உன் தலையில் அபவாதஞ் சுமத்திவிடுமே; ஒருவனைப்பற்றி ஓரகத்திரு என்றபடி நீ ஒருவனை ஆதாரமாகக்கொண்டு இல்லறத்தை நடத்திவந்தால் உலகம் உன்மேற் பழிசுமத்த முடியுமா? ஆனதினால் எங்கள் பொருட்டும் இந்த உலகம் உன் தலையில் அபவாதஞ் சுமத்தாமலும் இப்படி ..... [சிதைவு] சம்மதியடியம்மா" என்று பரிவுடன் சொன்னார்.

"கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை"

என் தாயார் இப்படிக் கேட்டபோது என் சித்தங் கலங்கியது, தேகம் சோர்வடைந்தது, கண்ணீர் பெருகியது. "அம்மா, சொல்லுகிறேனென்று மன வருத்தப்படாதீர்கள்; நீங்கள் சொல்வது முழுவதும் நியாயம்; மேலும் என்னுடைய நன்மையையிட்டே சொல்லுகிறீர்கள்; அவரென்னை விவாகஞ் செய்ய வில்லையென நீங்கள் சொல்வதும் நிசந்தான்; ஆனால் அவர் இந்தப் பாவியைத் தம் மனைவியென்றும் நான் அந்தப் புண்ணியவானை என்பர்த்தாவென்றும் பரஸ்பரம் நிச்சயித்தாய்விட்டதும் நிசமல்லவா தாயே; எனக்கு இப்பொழுதும் நினைக்க வயிறெரிகிறதே; இந்தக் கருமியைக் காணுமட்டுமல்லவா, அந்த அவருடைய ஆவி நீங்காமலிருந்தது; தம்முடைய அந்திய காலத்தில் அவர் சொன்ன அந்த ஒரு வார்த்தையை நான் இந்தப் பிறப்பிலல்ல ஏழு பிறப்பிலும் நினைத்து நடக்கவேண்டுமல்லவா அம்மா; ரஞ்சிதம் உன் மானத்திற்குப் பங்கம்வந்தால், அதற்குமுன் உன்னுயிரை விடு என்று செத்துத் தெய்வமாகப் போன என் பர்த்தா சொன்னாரே, அதனை மறப்பேனா? மறந்தால் நான் துரோகி, சண்டாளி, தாசியாவேனல்லவா..." என்று கண்ணீர் பெருகச்சொல்லும்போது, விசுவநாதன் அவளைப் பரிவுடன் பார்த்து, "என்ன இரஞ்சிதம், நீ இப்பொழுது சொல்லுவது உன்னுடைய வரலாறுதானா" என்று ஆச்சரியத்தோடும் ஆர்வத்தோடுங் கேட்க, "ஆம், ஐயா, என்னுடையதுதான் சொல்லி முடிக்கும்வரை பொறுமையோடு கேளுங்கள்" என்று சொல்லிப் பின்னருங் கூறுகின்றாள்; "என் அன்பரை மறந்து, என் பிராணநாதர் அந்திய காலத்திற் சொன்ன வாக்கைமீறி, உந்த இராமச்சந்திரனல்ல, அந்தத் தசரதச் சக்கரவர்த்தியின் தவப்புதல்வனாகிய ராமச்சந்திர னென்றாலும் என்மனம் இசையுமா? கற்பெனப்படுவது சொற்றிறம்பாமையென்று சொல்வார்களே நான் அவரை என்னுடைய உயிர்த் துணைவரென்றும், அவர் என்னைத் தம்முடைய பிரிய பத்தினியென்றும் எங்கள் உள்ளத்தில் மதித்துப் பாராட்டியிருந்த அந்த வாழ்வே எனக்குப் போதும் அம்மா; இந்தத் திடமான எண்ணம், அந்த நாராயணனுடைய அருள் கிடைக்குமானால் அடுத்த பிறவியிலாவது எங்களைக் கைகூட்டி வைக்குமென்பது எனது நம்பிக்கை; அப்படியில்லாமற் போனாலும் எனக்குக் கவலையில்லை; அவரும் இப்பொழுது நல்ல கதியையடைந்திருப்பார்; நானும் மறுமையில் நல்ல கதியையடைவேன்; இப்படியெல்லாமிருக்க, வேலி பயிரைமேய நினைத்த வாறுசிறுபிள்ளைகளாகிய எங்களுக்குப் புத்தி புகட்டி எங்களை நல்லவழியிலே நடக்கச் செய்யவேண்டிய முதுகுரவராகிய நீங்களும் இப்படிப் பொருந்தாத கருமத்தைச் செய்யச் சொல்லிக் கேட்கலாமா? தாயே நான் உங்களுக்குத் தெரிந்து தெரியாமல் ஏதும்பிழை செய்தாற் பொறுத்துக்கொள்ளுங்கள், இந்த ஒரு கேள்வியையுங் கேளாதீர்கள்; உங்களுக்குக் கோடி நமஸ்காரமென்று சொல்லி இருகையையுமெடுத்துக் கும்பிட, என் அருமையான அன்னை தம் கைகளாற் சரேலென என் கையைப்பற்றித் தம்மை நான் கும்பிடவொட்டாது தடுத்து, சஞ்சலப்பட்டு "கண்ணே, நீ கலங்காதே, நான் இனியொரு போதும் இப்படி உன்னைக் கேட்க மாட்டேன்; மற்றவர்கள் கேட்க விடவும்மாட்டேன்; உன் அப்பருக்கும் மாமனாருக்கும் நான் சமாதானஞ் சொல்லிக்கொள்ளுகிறேன்; நீ அழாதே" என்று என்னைத் தேற்றிவிட்டு அவ்விடம் விட்டகன்றார். நான் சொன்ன நியாயங்களைத் தாயார் என் தகப்பனாருக்கும் மாமனாருக்குஞ் சொல்ல, அவர்கள் கேட்டு மறுத்துப்பேச நியாயங் காணாதவர்களாய், என் வைராக்கியத்தை மெச்சி, முன்னரைக் காட்டிலும் என்னிடத்தில் அதிக பரிவுடையவர்களாயிருந்தார்கள். அவர்கள் என்மேற் பாராட்டிய அன்பினால் என் கவலையும் சிறிது ஆறியது.

நான் மனுஷனா? மிருகமா?

"ஐயா, இப்படிப் பத்துமாசங்கள் கழிந்தன; இதற்கிடையில் என் மாமனாருக்குப் பல இடங்களிலிருந்து பலர் பெண்பேசி வர, என் மாமனார் உடன்படாது மறுத்துத் தாம் இனிமேல் விவாகஞ் செய்வதேயில்லையென்ற பிடிவாதத்தோடிருந்தார்; ஒரு பெண்ணின் பகுதியார் என் மாமனாரிடம் நேரிற்போய்ச் சம்பந்தம்பேசப் பயந்து என் அப்பர் மூலமாகப் பேசுவிக்க நோக்கங்கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்து தகப்பனாரிடஞ் சொல்ல, தகப்பனார் தாயாருடன் யோசிக்க, தாயார் தம் தமையனார் உடன்படாரென்று சொல்லித்தடுத்துவிட்டார்; இப்படியாக, எனது பெற்றாரே தாங்கள் பொருள் முழுவதையும் அபகரித்தற்காக, என் மாமனாரைக் கல்யாணஞ் செய்யவிடாது தடுக்கிறார்களென்ற அபவாதம் ஊரிலே பிறந்தது; இதனைக் கேள்விப்பட்டு என் பெற்றார் பெரிதுங் கவலையடைந்தனர்; ஒருநாள் என் தகப்பனார் மாமனாரைப் பார்த்து "மைத்துனரே, அறுபது எழுபது வயதிற்கு மேற்பட்டவர்கள்கூட இந்த வூரிலே எங்கள் சாதியில் புநர்விவாகஞ் செய்கிறார்கள்; உமக்கெனிலோ அதிகம் வயசு போகவில்லை; யாரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணம் பேசிவந்தால் நிராகரித்துத் தள்ளிவிடுகிறீர்; ஆண்பிள்ளை தாரமிழந்தாற் பிறகுந் தாரங்கொள்ளலா மென்றது எங்கள் சமய சம்பிரதாயம்; ஆனதால் ஒத்த மரபிலே வேறுகோத்திரத்திலே ஒரு பெண்ணை எடுப்பதனால் எவ்வகையான குறையுமில்லையே" என்று இதமாகச் சொன்னார். இதனைக்கேட்ட என் மாமனார் பெருஞ் சிரிப்புச் சிரித்து "என்ன, நீராயிருந்தும் வீண்கதை பேசுகிறீர்; உமக்குப் பைத்தியமா? என் ஒரேயொரு அருமையான பிள்ளை போய்விட, அந்தப் பிள்ளையைப் பிரிந்த துயரத்தால் நோய்வாய்ப்பட்டடு என் பத்தினியும் போய்விட பிள்ளைக்கென்று நியமிக்கப்பட்ட பெண் கைம்மை யாயிருக்க, நான் கல்யாணஞ் செய்வதென்றால் நான் என்ன மனுஷனா? மிருகமா? கிழக்கேயுதிக்குஞ் சூரியன் மேற்கேயுதித்தாலும் உந்தக் கருமம் மாத்திரம் நடக்கப் போவதில்லை; வேணுமானால் இருந்துபாரும்" என்று வெறுப்போடு சொன்னார். "மைத்துனரே, அறியாமையாற் கேட்டுவிட்டேன்; கேட்டது என்மேற் குற்றம்; பொறுத்துக்கொள்ள வேண்டும்; இப்படியேயிருந்துவிட்டால் விசேஷந்தான்; ஆனாற் கௌசிகர்போன்ற முனிவரையும் பெண்ணாசை தப்பிப்போக விடவில்லையென்று சொல்வார்கள்" என எனது தகப்பனாரும் சிரித்துக்கொண்டு சமாதானஞ் சொன்னாராம்.

* * *

உலகம் பலவிதம்: 1944 ஒக்டோபர் 05
விசாலாட்சி: (முற்றொடர் - 20)

"என் மாமனாருக்குரிய செல்வங்களையும் உரிமை களையும் நானும் என் பெற்றாரும் பிற்காலத்திலும் எக்காலத்திலும் அநுபவிக்கவிட வொண்ணாதென்ற நோக்கமுள்ள சுற்றத்தவர் இருந்தார்கள்; அப்படியான நோக்கமுடையவர் களுள் இராமசாமிஐயங்கார் என்றவரும் ஒருவர்; எனது மாமனார் ஒருநாள் அந்த இராமசாமி ஐயங்கார் தம் வீட்டுக்கு வந்தபோது தமக்கு வீட்டுக் கருமங்கள் பார்ப்பதற்காக ஒரு வேலைக் காரன் இல்லையேல் ஒரு பணிப்பெண் வேண்டுமென்று இராமசாமி ஐயங்காரிடஞ் சொல்லியிருந்தார். இப்படிச் சொன்னது இராமசாமி ஐயங்காருக்குப் போதாதா; அவர் உடனே அந்த விஷயமாக முயற்சி செய்து, எங்கள் மரபோடொத்த ஒரு ஏழைக்குடும்பத்தில் ஒரு பெண்ணையொழுங்கு செய்து பணிப்பெண்ணென்ற முறையிற் கூட்டிக்கொண்டு வந்து எங்கள் மாமனார் வீட்டிற் சேர்த்தார்; மாமனார் முதல் அப்படியான குமர்ப்பெண்ணைத் தம் வீட்டிற் பணிப்பெண்ணாக வைத்திருப்பதற்கு உடன்பட்டில ராயினும், பின்னர் இராமசாமி ஐயங்கார் சொன்ன சமாதானங்களைக்கேட்டு ஒருவாறு உடன்பட்டாராம், எங்கள் மாமனார் இப்படியான ஒழுங்கு செய்து கொண்டதை உடனே நாங்கள் அறிந்திலேம்; ஒருநாட் காலைப்போசனஞ்செய்ய எங்கள் வீட்டிற்கு மாமனார் வந்தபோது, இச்செய்தியை முதன்முதல் என் தாயாருக்கு வெளியிட்டார்; அப்பொழுது என் தாயார் "அண்ணா, உங்கள் வீட்டிற்கு ஒரு வேலைக்காரனோ, வேலைக்காரியோ ஆவசியகம் வேணுமென்பது நிசம்; ஆனால் இளம்பெண்ணென்றால் அயலட்டத்திலுள்ளவர் ஏதுங் குற்றஞ் சொல்வார்களென்று பயப்படுகிறேன்; அப்படிக் குற்றஞ் சொன்னாலும் பாதகமில்லை; ஆருமற்றது தாரம் ஊரிலொருவன் தோழன் என்று சொல்வார்களே, கன்னிகையாயிருத்தலால் அந்தப் பெண்ணை இரண்டாந் தாரமாகக் கொண்டாலும் பிழையல்லவே" என்று சொல்லுதலும், "தங்கைச்சி உந்தக் கருமம் ஒருபோதும் நடக்கப்போவதில்லை" என்றார் மாமனார். தாயார் இந்தச் செய்தியைத் தகப்பனாருக்குச் சொல்ல அவர் புன்னகை செய்தார்; அன்று பின்னேரம் தம் வீட்டிற்கு எங்களை வரும்படி மாமனார் கேட்க, தாயாரும் நானும் அங்கே போனோம்; அந்தப் பெண்ணைக் கண்டோம்; தாயார் அப்பெண்ணின் வரலாற்றை அவளிடம் வினவியபோது அவள் எல்லாவற்றையும் விபரமாகச் சொன்னாள்; பெண்ணின் பெயர் சீதாலட்சுமி; வயசு இருபது இருபத்திரண்டு வரையிலிருக்கும்; நாலு சகோதரிகளுள் இவளே மூத்தபெண்; வறுமை காரணமாக நான்கு பெண்களும் குமராகவிருக்கிறார்களாம்; காது கழுத்துக் கால் கைகளில் ஒரு ஆபரணமுமில்லை; தரித்திரம் அந்தக்குடும்பத்தை உபாதிக்கின்றதென்பதை அப் பெண்ணின் மெலிவைக் கொண்டே அறியலாம்; இப்படியெல்லாமிருந்தாலும் அழகுள்ள பெண், இதமான வார்த்தை, பணிவான நடை, ஒதுக்கமான ஊடாட்டம்; எங்களைக் கண்டவுடனே எழுந்துநின்ற பெண்ணைத் தாயார் பலமுறை இருக்கச் சொல்லவும் அப்பெண் இருக்க உடன்பட்டிலள்; தங்களைப் பீடித்த தரித்திரத்தைப்பற்றித் தாயாருக்குச் சொல்லியபோது அவள் கண்களிலிருந்து நீர் பெருகியது; தகப்பன் இறந்த பிறகே தங்களுக்குத் தரித்திர தசை வந்து சேர்ந்ததென்றுஞ் சொன்னாள்; இந்த வரலாறுகளைச் சொல்லக்கேட்ட என் தாயாருடைய உள்ளம், நெருப்பிடைப்பட்ட மெழுகுபோல் உருகியது; சீதாலட்சுமிமேல் என் தாயாருக்குப் பரிவுண்டாகியது; என் தாயார் பலாத்காரமாக அப்பெண்ணைத் தன் பக்கலில் இருத்தி அவளுடைய கண்ணீரைத் துடைத்துத் தேறுதல் வார்த்தை பல சொல்லி "சீதா, என் பிள்ளை வேறு நீ வேறென்று நான் நினைக்கவில்லை; நீ ஒன்றுக்குங் கவலைப்படாதே; நீ இங்கேயிருந்தால் என் பிள்ளையும் இந்த வீட்டிற்றானே வந்து மாமனாருடன் இருப்பாள்" என்று தேறுதல் சொன்னார்; நானும் அந்தப் பெண்ணின் நிலமையையிட்டு இரங்கினேன். நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று சிலமணிநேரம் தங்கியிருந்து மாமனாரிடம் விடைபெற்றுக்கொண்டு, சீதாலட்சுமிக்கும் அடுத்த அடுத்த நாள் அங்கே வருவதாகச் சொல்லிவிட்டு வீட்டிற்கு மீண்டோம்.

"குளந் தொட்டுத்தேரைவழிச் சென்றாரில்"

நாங்கள் வீட்டிற்கு மீண்டவுடன் என் தகப்பனார் என்ன விசேஷமென்று தாயாரைக் கேட்க; தாயார் சகல விவரங்களையுஞ் சொல்லி, "பாவம், பாருங்கள், நல்ல குணமான பிள்ளை, கன்னிகை, அதிக தரித்திரப்பட்டது; உங்கள் மைத்துனருக்கு இரண்டாந் தாரமாகக் கல்யாணஞ் செய்துவைத்தாற் பெரிய புண்ணியம்; நான் அண்ணாவை அப்படிச் செய்யும்படி கேட்கப்போகிறேன்" என்று சொல்ல, தகப்பனார் புன்முறுவல் செய்து "நீ எவ்வகையான முயற்சியுஞ் செய்யவேண்டியதில்லை, உன் தமயனார் தாமே அந்தப் பெண்ணைக் கல்யாணஞ் செய்துகொண்டு சிலவேளை பிறகுதான் எங்களுக்குத் தெரிவிப்பார்" என்று வேடிக்கையாகச் சொன்னார். கிரமமாக எங்கள் வீட்டிற்கு வந்து போசனஞ் செய்துபோன மாமனார் ஒருநாட் காலைப் போசனஞ் செய்யும் போது "தங்காய், உன்னைச் சிரமப்படுத்த எனக்குப் பிரியமில்லை; சீதாலட்சுமி தானே எனக்குச் சமைத்துத் தருகிறேனென்று சொல்லுகிறாள்; அவள் தனக்கு எப்படியுஞ் சமையல் செய்ய வேண்டியவள்தானே, ஆனதால் ஒரே சமையலாக எனக்குஞ் செய்யலாமென்று நினைக்கிறேன்; உன்னுடைய சம்மதமெப்படி" என்று கேட்க, தாயார் "மெத்தச் சந்தோஷம், நானே அதைப் பற்றிச் சொல்ல வேணுமென்றிருந்தேன்; பிறகும், நீங்கள் மனவருத்தப்படுவீர்களென்றெண்ணி, சொல்லாமல் விட்டேன்; அப்படிச் செய்வது எனக்கு நூறு முறையும் சம்மதம்; ஆனால் இடையிடையே இங்கும் வந்து போசனஞ் செய்து போங்கள்" என்று சொன்னாள்; "அப்படியே செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு மாமனார் தம் வீட்டிற்கு மீண்டார்; இதனைத் தாயார் தகப்பனாருக்குச் சொன்னபோது அவர் கேட்டு நகைத்து "ஆவது விதியெனில் அனைத்தும் ஆயிடும் ஆம், பெண்ணே, குளந்தொட்டுத் தேரை வழிச் சென்றால், அதாவது குளத்தைத் தோண்டினால் அக் குளத்திற்குத் தேரை பிடித்துக் கொண்டுவந்து விடவேண்டியதில்லை; குளத்தைத்தேடித் தேரை தானே வருமல்லவா" என்றார்.

"வரவர மாமியார் கழுதை போலே"

எனது மாமனாருடைய கேள்விப்படி பின்னரும் ஒருநாள் தாயாரும் நானும் அவர் வீட்டிற்குப் போனோம்; போனவிடத்திலே சீதாலட்சுமியெனது சின்னமாமி யாயினாளென்பதை யூகித்துணர்ந்தேன்; எனது தாயாரும் அவள் தமக்கு மைத்துணியானாளென்று குறிப்பால் அறிந்துகொண்டார்; முந்திய மாமியாரின் ஆடையையும் சில ஆபரணங்களையும் சீதாலட்சுமி அணிந்திருப்பதைத் தாயாரும் நானும் அவதானித்தோம்; அதனால் எங்களிருவருக்குஞ் சந்தோஷமேயொழிய எவ்வகையான பொறாமையுமில்லை; முன்னரைக் காட்டிலும் சீதாலட்சுமி எங்களை அந்த நேரத்தில் அதிக உரிமையோடு உபசரித்தாள்; முறை பாராட்டி எங்களிருவரையும் அழைத்தாள்; "எங்கள் அருமையான மருமகளை வீட்டுக்கு மீண்டுபோக இன்றைக்கு விடமாட்டோம்; இங்கே எங்களுடன் இருக்க வேண்டுமென்று ஐயா எனக்குச் சொன்னார்" என்று அவள் கூற, எனது தாயார் விருப்பம்போலச் செய்யலாமென்று அவளுக்குச் சொல்லிவிட்டு, என்னைப் பார்த்து "மகளே, உனக்கும் விருப்பந்தானோ" என்று என்னைக் கேட்க, நான் விருப்பந்தான் ஆனால் தகப்பனாருடைய சம்மதத்தையுங் கேட்ட வேண்டுமல்லவோ அம்மா, என்று சொல்ல, சரிதான் என்று தாயார் சொன்னார், இதற்கிடையில் மாமனாரும் அங்கே வர, சீதாலட்சுமியெழுந்து மரியாதை செய்து இச்செய்தியை அவருக்குச் சொல்ல, அவர் "மருமகள் இங்கேயிருக்கலாம்; மைத்துனருக்கு இவ்விஷயமாக நான் சொல்லிக்கொள்ளுகிறேன்" என்று சொன்னார்; இங்ஙனமாக என் தகப்பனாரும் அங்கே அந்த நேரத்தில் வந்து சேர்ந்தார்; மாமனார் விஷயத்தை யெல்லாந் தகப்பனாருக்குச் சொன்னார். தகப்பனார் கேட்டுச் சந்தோஷப்பட்டுச் சிரித்துக்கொண்டு, அது சரி மைத்துனரே, "இரும்புத் தூணிற் கறையான் ஏறிவிட்டதே" எனலும், மாமனார் கேட்டு வெட்கப்பட்டார், சற்று நேரஞ்செல்ல, என்னை மாமனார் வீட்டில் இருக்கவிட்டு அவரிடத்து அநுமதி பெற்றுக்கொண்டு சின்ன மாமிக்கும் சொல்லிவிட்டுத் தாயாரும் தகப்பனாரும் தங்கள் வீட்டிற்கு மீண்டுவிட்டனர்; அன்று தொடக்கமாக, ஐயா, சின்னமாமி என்மீது பாராட்டிய அன்பும் என்மேல் வைத்த விசுவாசமும் கொஞ்சமல்ல; தன் உடன் பிறந்த தங்கை போல் என்னை மதித்து நடத்தி வருவாளாயினாள்; இவைகளையெல்லாங் கண்ட என் மாமனாரும் ஆநந்தமடைந்தார்; இடையிடையே அங்கே வந்த என் பெற்றோரும் எங்களிருவருக்குமிடையேயுள்ள விசுவாசத்தையும் சின்னமாமி என்மேற் பாராட்டும் அன்பையும் பார்த்துச் சந்தோஷப்படலாயினர்; சீதாலட்சுமி மீது என் பெற்றார் முன்னரைக் காட்டிலும் அதிக அன்பு பாராட்டினர்; எங்கள் வீட்டிற்கு என் பெற்றார் என்னைக் கூட்டிக்கொண்டு போய்ச் சிலநாள் அங்கே தங்கச் செய்ய விரும்பினால் விசேஷமாகச் சின்னமாமியைக் கேட்டே கூட்டிக்கொண்டு போவார்கள்; பெற்றார் வீட்டிலும் இரண்டு மூன்று தினங்கட்கு மேல் நான் தங்கி நிற்க என் சின்னமாமி மனந்தரியாள், இப்படி யொருவருடகாலம் கழிந்தது; இதற்கிடையிற் சின்னமாமி கருப்பவதியென்பதை என் தாயார் மூலம் அறிந்தேன், அறிந்தபிறகு மாமியை அதிகம் வீட்டுவேலை செய்யவிடாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானே செய்து கொண்டேன், மாதம் நிறைந்தபின் சின்னமாமி ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள்; அக்காலத்தில் என் தாயாரே மாமனார் வீட்டில் வந்திருந்து ஆகவேண்டிய கருமங்களைப் பார்த்து வந்தார்; என்னை மாத்திரம் தகப்பனாருக்காகவேண்டிய சமையல் முதலிய வசதிகளைச் செய்யும்படி எங்கள் வீட்டிற்கு மாமனாரும் தாயாரும் அனுப்பிவிட்டார்கள்; ஆசௌசகாலம் முடிந்தபின் தாயார் எங்கள் வீட்டிற்கு வர, நான் மாமனார் வீட்டிற் போயிருந்தேன்; ஆனால் அதன்பிறகுதான் ஐயா, சின்னமாமியின் மனநிலை மெல்ல மெல்ல மாறுபடலாயிற்று; வீட்டுவேலை முழுவதும் நானே செய்ய வேண்டியவளானேன்; இடையிடையே குழந்தையின் கருமங்களையும் நான் பார்க்கவேண்டியவளானேன்; சுருங்கச் சொல்லுகில் சின்னமாமி என்னையொரு வேலைக்காரச்சிறுமி போற் பாவித்து நடத்தத் தலைப்பட்டாள்.

"வன்சொற் பிரயோகமுஞ் செய்யத் தொடங்கினாள்"

இடையிடையே என்மீது வன்சொற் பிரயோகமுஞ் செய்யத் தொடங்கினாள்; ஆனால் இவைகளை என் மாமனார் ஆரம்பத்தில் அறியார்; நான் இக்குறைகளைச் சொல்லவும் விரும்பவில்லை; என் தாயார் வந்த சமயங்களிலும் நான் மாமி செய்யும் கொடுமையைத் தாயாருக்குச் சொல்லாமல் மறைத்துவிட்டேன்; என் முகவாட்டத்தையும் தேக மெலிவையும் அவதானித்த தாயார் ஒருநாள் தனியான இடத்தில் என்னைப் பார்த்து "மகளே, உனக்கென்ன ஏதுஞ் சுகமில்லையா? இல்லையேல் வேலையதிகமா? அல்லது உன் மாமியோடு பிணங்கிக்கொண்டாயா, உள்ளதை எனக்கு மெல்லச் சொல்லு; நான் ஒருவருக்கும் வெளியிடாமல் ஆகவேண்டியதைப் பார்ப்பேன்" என்று இதமாகக் கேட்க, நான் முதல் மறுத்து, பின்னருந் தாயார் பரிந்து கேட்டமையினால், மாமி செய்யும் கொடுமையிற் சிலவற்றைத்தான் தாயாருக்கு வெளியிட்டு, என் அருமையான அம்மா என்மேலாணை இவைகளை என் தகப்பனாருக்காயினும் மாமனாருக்காயினும் வெளியிட வேண்டாமென்று இரந்தேன்; கேட்ட தாயார் கவலைப்பட்டு என்னைப் பார்த்து "என்னடிமகளே, வர வர மாமியார் கழுதை போலேயென்ற பழமொழியை உன்மாமி நிசமாக்கி விட்டாள்; சரி, நீ கவலைப்படாதே, நான் ஆகவேண்டியவைகளை மெல்லப் பார்க்கிறேன்", என்று சொல்லி என்னைத் தேற்றி மாமனாரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு மாமிக்கும் எனக்குஞ் சொல்லி வீட்டிற்கு மீண்டு போய் விட்டார்; நான் என் மனக்கவலையை எவருக்கும் வெளியிடாமல் நடந்து வரும்போது, ஒருநாட் பிற்பகல், அந்த ஐயனார் கோவிலுக்குப் பூசை செய்யுங் குருக்கள் மாமனார் வீட்டிற்கு வந்தார். அவர் பெருந்தன்மையானவர்; தெய்வ பத்தியுள்ளவர்; அவர் வந்த நேரத்தில் மாமனார் அங்கில்லாமையினால், தலைவாசலில் நின்ற நானே அவரை வரவேற்று ஆசனமுதவி இருக்கச் செய்து ஆகவேண்டிய உபசாரங்களைச் செய்து, சுவாமி, தாங்கள் இப்படி வந்தது என்னவோ என்று விநயமாக வினவினேன்; அவர் என்னைப் பரிவுடன் பார்த்து, "மகளே, உனக்கு நேர்ந்த கதியை அந்த நேரத்திற் கேள்விப்பட்டுக் கவலைப்பட்டேன்; உன்னை நேரிற் பார்க்க வேண்டுமென்று விரும்பி உன் பெற்றார் வீட்டிற்குப்போனேன்; அவர்களும் என்னைக் கண்டவுடன் உன்னையிட்டுக் கவலைப்பட்டு நீ இங்கே யிருக்கிறாயென்பதைச் சொன்னார்கள்; அதனால் இங்கு வந்தேன்; ஒன்றுக்குங் கவலைப் படாதே; அந்த ஐயன் உனக்கு அருள் செய்வான்; நீயோ சின்னஞ்சிறு பிள்ளைதானே; காலத்திற்குத்தக்க கோலமென்றபடி காலத்திற்குத் தகத்தான் நடந்துகொள்ள வேண்டும்; பழைய கொள்கைகளெல்லாவற்றையும் இந்தக் காலத்திலே கைக்கொள்ளமுடியாது; சிலவற்றைக் கொள்ளலாம்; சிலவற்றைத் தள்ளலாம்; சரி, அவைகிடக்க இப்பொழுது உன் மாமனார் எங்கே மகளே" என்று கேட்டார்; அவர் சற்று முந்தி வெளியே புறப்பட்டார்; இப்பொழுது வருவாரோ சற்றுவேளை செல்ல வருவாரோ அறியேன் சுவாமி என்று நான் பதில் சொல்ல, "நான் இன்னொரு வேளை வருகிறேன்; எதற்குங் கவலைப்படவேண்டாம்; நான் இங்கே வந்து தேடிப்போவதாக மாமனார் வந்தவுடன் சொல்லு" என்று கூறிப் போய்விட்டார். நான் அப்படியே சொல்லுகிறேன் எனக்கூறிவிட்டுத் தலைவாசலை விட்டு வீட்டினுட் போனபோது என் மாமி என்னைச் சினந்து பார்த்து "நீ வர வரப் பழுதாகிறாய்; சின்னஞ் சிறு பிள்ளைகள், யாரும் ஆடவர் அவருள்ளும் அந்நியர் வந்தாற் கூசாமற் போய் நின்று கதைக்கலாமா? இது எந்தவூர் வழக்கம்? வயசிற்குத் தக்க ஒதுக்கம் வேண்டாமா" என்று என்னைக் கடிந்து பேச "அப்படியல்ல மாமி அவர் இன்னார், குருக்கள், பெரியமனுஷன், எங்களை முந்தியறிந்தவரென்று" சமாதானஞ் சொல்ல, "எல்லாரும் உன்னையறிந்தவர்போலத்தான் காணப்படுகிறார்கள்" என்று என்னுள்ளஞ் சுடச் சொன்னாள்; நான் முந்தி அப்படியான வெஞ்சொற் கேட்டறியேனாதலால் அழுதேன்; அந்த நேரத்தில் என் மாமனாரும் அங்கே வந்தார்.

* * *

உலகம் பலவிதம்: 1944 ஒக்டோபர் 12 விசாலாட்சி: (முற்றொடர் - 21)

"வேலிக்கிட்ட முள் காலில் தைத்தவாறு"

வந்த மாமனார் நான் நின்ற நிலையைக் கண்டு தாமுங் கவலைகொண்டு "ஏன் அம்மா அழுகிறாய், நடந்ததைச் சொல்லு" என்று பரிவுடன் கேட்க, "ஒன்றுமில்லை" என்று சொல்லி கவலையின் காரணத்தை மறைக்க முயன்றேன்; "சீதாலெட்சுமி உன்னை வைதாளா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அவர் கேட்க, நான் இல்லையென்று அழுதழுது சொன்னேன்; மாமனார் வரவைக்கண்டு முந்தியே வீட்டினுட் சென்ற சின்னமாமி, இதற்கிடையில் தலைவாசற் பக்கத்திற்கு வந்து ஒன்றுமறியாள் போல, "உங்கே ஏன் நிற்கிறீர்கள், உள்ளே வாருங்கள்" என்று மாமனாரை இதமாக அழைக்க அவர், "நீபோய் உன் கருமத்தைப் பார்" நான் வருவேன், என்று சினந்து சொல்லிவிட்டுச் சிந்தனையோடு தலைவாசற்பக்கத்திலுள்ள ஒரு நாற்காலியிற் சிறிதுநேரம் இருந்தார். சீதாலட்சுமி அவ்விடம் விட்டகன்றாள்; அவள் வீட்டினுட் போனதை அவதானித்த மாமனார் என்னை ஆதரவுடன் பார்த்து, "ரஞ்சிதம், நீ கவலைப்படாதே, சீதாலட்சுமி உன்னுடன் சற்றுக் கடுமையாகத் தான் ஊடாடுகிறாள், அதை நான் பலமுறையும் அவதானித்தேன்; இன்னும் சில நாளில் உன் கஷ்டம் நீங்கும், உன் அப்பருடன் கலந்து யோசித்துவிட்டு உனக்குத் தக்க ஒரு வரனைக் கல்யாணஞ் செய்ய நிச்சயித்திருக்கிறேன்; நீ கவலைப்படாதே..." என்று சொல்லி என்னைத் தேற்ற முயல, மாமா எனக்கு அந்த நோக்கமில்லை; "உங்கள் மகன் அந்திய நேரத்தில் மரியாதையாகவிருந்து காலம்போக்கு மானங்கெட வந்தால் அதற்கு முந்தி உயிரைவிடு" என்று சொல்லி வைகுந்தஞ் சேர்ந்தார், அவர் கட்டளையை மீறி நடக்க நினைத்தால் நான் கொடிய நரகத்தில் விழுந்து கிடந்து அழுந்துவேன் என்று சொல்லி அழுதேன்; அவரும் தம் பிள்ளையை நினைந்து கண்ணீர் விட்டார். பின்னர் அவர் தம்மைத்தாமே தேற்றிக் கொண்டு என்னை ஆதரவோடு பார்த்து "அம்மா, நீ அழாதே, கவலைப்படாதே, நீயும் நானும் அதிர்ஷ்டங் கெட்டவர்களானோம் சொந்த மாமியாயினும் உயிருடனிருந்தால் உனக்கு இந்தக் கஷ்டம் வந்திராது; இவைகளையெல்லாம் உத்தேசித்துத்தான் நான் இரண்டாமுறை தாரங் கொள்ள மறுத்துநின்றேன்; உன் பெற்றாரும் அயலாரும் என் நோக்கத்தை தடுத்து இந்தச் சமுசாரசாகரத்தில் என்னை வீழ்த்தி விட்டார்கள்; இவள் உனக்குத் துணையாவாளென்று அந்த நேரத்தில் எண்ணினேன்; வேலிக்கு இட்ட முள் காலிலே தைத்தவாறு நான் எண்ணியிருந்ததற்கு நேர்மாறாக இவள் இப்பொழுது செய்யத் தலைப்பட்டுக்கொண்டாள், அவளிடத்திற் பிள்ளையுமொன்று பிறந்தபின் நடந்தவைகளைப் பற்றிப் பச்சாதாபப்பட்டு ஆவதென்ன? எல்லாம் அந்தப் பகவானுடைய செயல்" என்று பல சமாதானஞ் சொல்லி என் மனக்கவலையை ஒருவாறு ஆற்றினார்.

"உங்களை நான் அறிவேன்
என்னை நீங்கள் அறியீர்கள்"

அன்று என் மாமனார் மாமியுடன் மநஸ்தாபப்பட்டுக் கொண்டு, போசனஞ் செய்யாதமிருப்பதைக் கண்ட நான், இந்த பிணக்கு எவ்வளவு நேரம்

இருவருக்குமிடையே வந்த தென்பதையுணர்ந்து கவலையுற்று மாமனாரிடம் போய், சின்னமாமி மனம் வருந்துகிறாளென்றும் நீங்கள் போசனஞ் செய்யுங்களென்றும் சொல்லி இரக்க அவரும் பிணக்கையொழித்துப் போசனஞ் செய்தார்; அதன்பின் நாங்களிருவரும் போசனம் பண்ணினோம்; தான் பலமுறையும் ஆகாரஞ் செய்யவரும்படி கேட்க மறுத்த என் மாமனார், நான் கேட்டவுடன் போசனஞ் செய்யவுடன்பட்டு விட்டாரே யென்பதையிட்டுச் சின்னமாமிக்கு என்மேற் பொறாமை அதிகப்பட்டது. அவளுடைய பொறாமையையும் எனக்குச் செய்யும் இன்னல்களையும் பொறுத்துக்கெண்டு நான் என்றும் ஒரே விதமாகவே அவளுடன் ஊடாடினேன்; ஆனால் அவள் சமயம் வாய்க்கும் போதெல்லாம் எனக்கு மாறாக மாமனாருக்குக் கோள்மூட்டவுந் தலைப்பட்டாள்; இப்படியாக ஒரு நாள் மத்தியானத்தின் மேல் யாரோ எங்கள் தலைவாசற்கதவில் தட்டுவதைக் கேட்டு என் சின்னமாமி, என்னைப் பார்த்து "ரஞ்சிதம், நான் குழந்தைக்குப் பாலூட்டிக்கொண்டிருக்கிறேன்; தலைவாசற் கதவில் யாரோ தட்டுஞ்சத்தங் கேட்கிறது; நீ போய்ப்பார்த்து யாரென்று கேட்டு ஐயாவை விசாரித்தால், அவர் இப்பொழுது இங்கில்லையென்று சொல்லிவிட்டு மீண்டுவா"என்று சொல்ல, நான் அப்படியே போய்த் தலைவாசற் கதவைத் திறந்தேன்; அங்கே வந்த ஒரு வாலிபர் நான் கதவு திறப்பதைக் கண்டு ஒதுங்கிநின்று "உங்கள் மாமா, உள்ளே இருக்கிறாரா" என்று கேட்க, "அவர் இப்பொழுது வெளியே போயிருக்கிறார்" என்று பதில் சொல்ல, எப்பொழுது மீண்டு வருவார் என்று அந்த வாலிபர் மீட்டும் வினவ, இன்னும் மத்தியானப் போசனமாகவில்லை; ஆனதாற் சீக்கிரம் வந்துவிடுவார் என்று பதில் சொன்னேன்; நின்று யோசித்தார்; அப்பொழுது நான் "ஏன் நிற்பான் உந்த நாற்காலியில் இருக்கலாமே" எனலும் "இல்லை, அவரைத்தான் காணும்படி வந்தேன்; இப்பொழுது காணமுடியவில்லை; பின்னேரம் 4 மணிவரையில் மீண்டு இங்கு வருவேன்; இதற்கிடையில் உங்கள் மாமா வந்தால், நான் வந்து விசாரித்துப்போனதாகச் சொல்லுங்கள்" என்று கூறிவிட்டுப் போகச்சென்றார்; "தேடியவருடைய பெயரென்ன என்று மாமனார் கேட்டால்..." என அவரை நான் கேட்பதற்கிடையில், "இராமச்சந்திரனென்று சொல்லுங்கள்; உங்களை நான் அறிவேன் என்னை நீங்கள் அறியீர்களென்று சொல்லிவிட்டு அவர் மீள, தயவுசெய்து அந்த நாற்காலியிலிருங்கள்; நான் உங்களை முந்திக் கண்டிலேன்; யாரோ அந்நியரென்றெண்ணிவிட்டேன்; எப்பொழுது வந்தீர்கள்" என்று உபசாரத்துடன் கேட்டேன்; உடனே அவர் நாற்காலியிலிருந்து கொண்டு நான் கேட்டவைகளுக்கெல்லாம் பதில் சொன்னார், சற்று இருங்கள் என்று அவரிடஞ் சொல்லிவிட்டு, சின்னமாமியிடம் போய் அவருடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரைச் சொல்லி, அவர் வந்த நோக்கத்தையுஞ் சொல்லி நீங்கள் அங்கே போய் ஆகவேண்டியதைச் செய்யுங்கள் என்றுஞ் சொன்னேன்; "அதற்கு நான் பிள்ளையைப் பிராக்காட்டுகிறேன்; நீ போய் உபசரி, தேநீர் வைத்துக்கொண்டு போய்க்கொடு" என்று மாமியார் சொல்ல, நான் அப்படியே செய்தேன்; சற்றுநேரஞ்செல்ல மாமனார் வீட்டிற்கு மீண்டு வந்தார்; இருவரும் வெகுநேரம் இருந்து பேசிவிட்டு, உள்ளேவந்து "ரஞ்சிதம், அவரை யாரென்று உனக்குத் தெரியுமா? அவர்தான் என்னுடைய பெறாமகன்; இராமச்சந்திரன்; அவருக்கு வேண்டிய உபசாரங்கள் செய்தாயா" என்று கேட்க, நான் ஆம் மாமா என்று பதில் சொன்னேன்; இதற்கிடையில் அவர் அங்கே வந்து போதற்கு மாமாவிடம் விடைபெற்றுக் கொண்டு "நான் போய்வருகிறேன்" என என்னையும் பார்த்துச் சொல்ல "ஆம் போய்வாருங்கள்" என்று நமஸ்காரஞ் செய்து சொன்னேன்; ஆனாற் பக்கத்தில் நின்ற மாமிக்கு அவர் ஏதுஞ் சொல்லாமற் போய்விட்டார். அவர் அப்படிச் செய்தமை மாமிக்குப் பிடிக்கவில்லை; அது அவ்வளவோடமையாது என்மேல் மாமிக்கு இருந்த பொறாமையை இன்னமுங் கூட்டிவிட்டன; ஆனால் இவைகளை அந்த நேரத்தில் மாமனார் அவதானித்திலர்;

பாம்பின்கால் பாம்பறியும்

ஒரு தினம் இரவு ஒன்பது மணிக்கு மேலிருக்கும்; நான் படுக்கையிற் கிடந்தபடி என் கதியை யெண்ணியெண்ணிக் கவலைப்பட்டமையினால் எனக்கு உறக்கம் வந்திலது; என் படுக்கையறையின் பக்கத்திலிருந்த கூடத்தில் எனது மாமனாரும் மாமியும் பேசிக்கொண்டிருக்கும் போது "சீதா, என் மகனும் தாயும் என்னை விட்டுப் போனதை நினைக்க நினைக்க என் மனம் இன்னமும் ஆறுதலடையவில்லை; பொல்லாத விதிவசத்தால் அவர்கள்தாம் போய்விட்டார்கள், என்ன செய்யலாம்; ஆனால் அந்த இராமச்சந்திரனுக்கு இரஞ்சிதத்தைக் கல்யாணஞ் செய்து இந்தவீட்டிலே இருத்தி வைக்கலாமோ என்றால், அதற்கு இரஞ்சிதம் உடன்படுகிறாளில்லையே; இதைப்பற்றி நினைக்க நினைக்கத் துயரமாயிருக்கிறதே" என்று மாமனார் சொன்னது என் காதிற்பட்டது; அப்பொழுது மாமி "உங்கள் மருமகள் ஏன் உடன்படாது மறுக்கிறாள்; அவள் சொல்லுவதை நீங்கள் நம்புகிறீர்களா? அன்று அந்த இராமச்சந்திரன் வந்தபோது அவள் என்னைப் போய் அந்தப்பிள்ளையை உபசரிக்கவிடாமல், தானே துள்ளிக்கொண்டு நின்று சகல உபசாரங்களுஞ் செய்தாளே; அவனைக் கல்யாணசெய்ய விருப்பமில்லாதவள் அப்படியெல்லாஞ் செய்வாளா? இராமச்சந்திரன் மறுத்தாலும் அவள் விடமாட்டாளே; நீங்கள் பாலும் வெள்ளைமோரும் வெள்ளையென்றெண்ணிக்கொள்ளுவீர்கள்; பாம்பின் கால் பாம்பறியும் என்றபடி பெண்களுடைய உண்மையான குணம் பெண்களுக்கல்லவோ தெரியும்; உங்கள் மருமகளை ஒன்றுமறியாப் பேதையென்று நீங்கள் நினைத்திருக்கிறீர்கள்; இப்பொழுது நான் அவளைப்பற்றி ஏதுஞ் சொன்னால் என்னைப் பொல்லாதவளென்று எண்ணிக்கொள்ளுவீர்கள்; ஆனாற் காலகதியிலேதான் நல்லவளெவள் பொல்லாதவ ளெவளென்று விளங்கவரும்; தலைவாசலிலே ஆண்பிள்ளையின் குரல் கேட்டால் அவள்தானே முந்தி ஓடிப்போய்க் கதவைத் திறந்து விசாரிப்பாள்; உபசாரஞ் செய்வாள்; இடையில் வந்த நாம் உங்களையும் உங்கள் மருமகளையும் பிரித்துவைத்து ஏன் பொல்லாப்புக் கேட்பானென்று பேசாமல்விட்டேன்; இப்பொழுதும் நீங்கள் சொன்னபடியால் நானும் உள்ளதை உங்களுக்குச் சொன்னேன்; முந்தியும் ஐயனார் கோவிலுக்குப் பூசை செய்பவராம், ஒரு ஐயங்கார் இங்கே வந்தபோது உங்கள் மருமகள்தானே தலைவாசலுக்கு ஓடிப்போய் அவரோடு பேசி அவரை உபசரித்தாள்; அப்படி அன்று அவள் செய்ததையிட்டு நான் கண்டித்தேன்; அது அவளுக்குப் பிடிக்கவில்லை; அவள் தனக்குக் கல்யாணஞ் செய்ய விருப்பமில்லையென்று சொன்னால் அந்தச்சொல்லை நீங்கள் நம்புவீர்கள்; நான் எப்படி நம்புவேன்" என்று அந்தச் சண்டாளி மாமனாருக்கு என்மேல் அவதூறெல்லாஞ் சுமத்திச் சொன்னதும் என்காதிற்பட்டது; ஐயோ, அந்தநேரம் என் மனம்பட்ட வேதனையைக் கடவுளொருவரேயறிவர், "சீதா, வீண்கதை பேசாதே, என் மருமகளைக் குழந்தைப்பருவம் தொடக்கம் இற்றைவரையில் நான் நல்லாயறிவேன்; அவள் ஒரு உத்தமி; அவளுக்கு ஒரு கல்யாணஞ் செய்துவைக்க வேண்டுமென்பதுதான் என் விருப்பம்; நான் சொன்னால் என் மைத்துனரும் சகோதரியும் உடன்படுவார்கள்; ஆனால் என் மருமகள் தான் அப்படிச் செய்வதற்கு எள்ளளவும் இசையமாட்டா ளென்கிறாள்; இந்த இராமச்சந்திரனையே செய்து வைக்கலாமென்று நான் அவளை நேரிற் கேட்டேன்; என்று என் பிள்ளை மோசம்போனானோ அன்று தொடக்கம் தான் கைம்மையென்பதை மருமகள் எனக்கு நேரிற் சொல்லிவிட்டாள்; உன்பிள்ளை வேறு, இவள் வேறென்றெண்ணி நடவாதே; நிரபராதியான அந்தப் பிள்ளையைப் பழிசொல்லிப் பாவமூட்டையை உன் தலையிற் சுமத்திக்கொள்ளாதே; பெண்களைப்பற்றிப் பெண்களுக்கே தெரியுமென்றாய்; அப்படிச் சொல்லுவது தவறு; பெண்களெல்லாரும் ஒரே தன்மையினரல்லர்" என்று மாமனார் சொன்னார்; "சரி இனிமேல் அந்தப் பெண்ணைப் பற்றி நான் ஒன்றும் பேசமாட்டேன்" என்றாள் மாமி; அழுதுகொண்டு கிடந்த நான் மாமனார் சொன்ன சமாதானத்தினால் மனஞ்சிறிது தேற அயர்ந்துவிட்டேன்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1944 ஒக்டோபர் 19
விசாலாட்சி: (முற்றொடர் - 22)

"காலத்திற்குத்தக்க கோலம்"

இராமச்சந்திரன் எங்கள் மாமனார் வீட்டிற்கு இடையிடையே வருவதுண்டு; மாமனார் கட்டளைப் படி, அவர் இருக்கும்போது இராமச்சந்திரன் வந்தாலும் மாமனார் இல்லாத சமயத்தில் வந்தாலும் நானே அவரை உபசரிக்க வேண்டியவளானேன்; சின்னமாமி தலைவாசற் பக்கத்தில் நின்றாலும் இராமச்சந்திரன் அங்கே வரக்கண்டால் உடனே முகத்தை "மாற வைத்துக்கொண்டு" அவ்விடம் விட்டு உள்ளே வந்து "உங்கள் இராமச்சந்திரன் வந்திருக்கின்றார் போய் உபசரி; இல்லாவிட்டால் உன் மாமனார் உன்னைத்தான் குறை சொல்லுவார்" என்று உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று சொல்லிவிட்டுப் போய்விடுவாள்; நான்போய் ஒதுக்கமாக நின்று அவரை உபசரிப்பேன்; அவர் ஏதுங்கேட்டாற் பதில் சொல்லுவேன்; சிலசமயம் மாமனார் இதற்கிடையில் வந்துவிட்டால், அவரைக் கண்டு அவருடன் பேசிவிட்டுப் போவார்; சிலசமயம் வெகுநேரங் காத்திருந்தும் மாமனார் வராவிட்டால், "நான் வந்து தேடிவிட்டுப் போவதாக, ரஞ்சிதம் உமது மாமாவிற்கு நீர் சொல்லும்" என்று தெரிவித்து என்னிடம் விடை பெற்றுக்கொண்டு போய்விடுவார். மாமனார் வந்தவுடன் நான் அப்படியே அவருக்குச் சொல்லிவிடுவேன்; ஒருநாள் இப்படி நான் சொல்லுஞ் சமயத்தில், மாமனார் என்னைப்பார்த்து "ரஞ் சிதம், உன் விஷயமாக உன் பெற்றாருக்கும் அன்று நான் அங்கே போனபோது சொன்னேன்; உன்னை இராமச்சந்திரனுக்குக் கல்யாணஞ் செய்து வைப்பது உன் தாயார் தகப்பனாருக்குப் பூரண சம்மதமாகும்; எனக்குஞ் சம்மதமென்பது உனக்குந் தெரியுந்தானே; நீ இப்படி ஒன்றியாகவிருந்து, என்னடியம்மா, செய்யப்போகிறாய்? நானிருக்கும் வரையில் உனக்கு ஒரு குறையுமில்லையென்பது நிசம்; அனால் நான் இல்லாக் காலத்தில் நீ சஞ்சலப்பட நேரினும் நேரும்; அல்லாமலும் நான் உயிருடன் இருக்கும்பொழுதே, எனக்கு இரண்டாந்தாரமென்று வந்த இந்தச் சீதாலட்சுமி உன்னைத் தூற்றி உனக்கு வசைதேடி விடுவாள்போற் காணப்படுகிறாள்; இராமச்சந்திரனெனிலோ காலஞ்சென்ற என் பிள்ளைபோன்ற அருமையான குணமுடையவன்; நீ அவனைக் கல்யாணஞ்செய்யச் சம்மதிப்பாயேல் அவனை என் சுவீகார புத்திரனாக வைத்துக்கொண்டு உங்களிருவருக்குமே என் காணிபூமி பொருள்பண்டம் என்னுமிவைகளிற் பெரும்பாகத்தை உங்களுக்கு ஆக்கிவிடுவேன்; எஞ்சியபாகத்தைச் சீதாலட்சுமியின் பிள்ளைக்கு எழுதிக்கொடுப்பேன்; என் அருமையான மகன் இறக்கும்போது உனக்குச் சொன்ன வார்த்தைகளை நான் மறக்கவில்லை; ஆனாலும் காலத்திற்குத்தக்க கோலம் என்றபடி இந்தக் கால தருமத்தை அனுசரித்தும் ஒரு அளவிற்கு நடக்கத்தான் வேண்டுமென்றெண்ணுகிறேன்; மேலும் பெண்கள் எவ்வளவு நெறியோடு நடந்தாலும் தனியேயிருந்தாற் பொல்லாத உலகம் அவதூறுதான் சுமத்துமடியம்மா; உன் தந்தை, தாய், மாமனாகிய நான் இந்த மூன்றுபேரும் நல்ல நோக்கத்தோடு சொல்லும்போது நீ இதற்கு உடன்படலாம்; தெய்வத்திற்கும் இது சம்மதமா யிருக்குமென்றுதான் நம்புகிறேன்" எனப் பரிவுடன் சொன்னார். அவர் சொன்னவைகளையெல்லாங் கேட்டுக்கொண்டு நான் ஏதும் பேசாமல் நின்றேன்; இதற்கிடையிற் சின்னமாமி அங்கே வந்தாள்; தாம் சொன்னவைகளையெல்லாம் அவள் கதவண்டை மறைந்து நின்று கேட்டிருக்கக்கூடுமென்றெண்ணிப் போலும் அவளைக் கண்டவுடன் மாமனார் முகம் மாறுபட்டு வெளிறியது; அவர் என்னைப்பார்த்து நீ போய் உன் கருமங்களைப்பார் என்று சொல்ல, நான் போவதற்கிடையில், "நான் ஏன் பொல்லாதவள் வந்து உங்கள் இரகசியங்களைக் குழப்பவேண்டும்? நான் போகிறேன்" என்று சீறிக் கொண்டு, மாமனார் கூப்பிடவும் மீண்டுவராமல் மாமி போய்விட்டாள்; நானும் வீட்டினுட் போய்ச் செய்யவேண்டிய வேலைகளைச் செய்தேன்.

"இரஞ்சிதம்! நீ ஒரு உத்தமி"

தலைவாசலைவிட்டுச் சீற்றத்தோடு வீட்டினுட்போன மாமி தன் படுக்கையறைக்குட் போய்த் தன்னுடைய பிள்ளையின் பக்கத்திலுள்ள படுக்கையிற் குப்புறக் கிடந்து கண்ணீர்விடுவதைக் கண்டேன்; நான் உடனே மாமனார் இருக்குமிடத்திற்குப் போய் மாமியின் நிலைமையைச் சொல்லி மாமா, கேட்கிறேனென்று கவலைப்படாதீர்கள்; என்னால் உங்கள் குடித்தனங் குலையும்போற் காணப்படுகிறது; உங்களை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன்; ஆனாற் சில நாட்களுக்காயினும் நான் போய் என் பெற்றாருடன் இருக்க உத்தரவு தாருங்கள் என்று அவரை இரந்துகேட்டேன்; அவர் சிறிது நேரம் யோசித்தவிட்டு "அதற்கென்னடியம்மா, அப்படிச்செய்யலாம்; ஆனால் இன்றைக்கு நாளைக்கு நீ இந்த இடத்தைவிட்டு அங்கே போயிருப்பது புத்தியல்ல, நான் உன்னுடன் பேசியவைகளெல்லாவற்றையும் சீதாலட்சுமி ஒட்டி நின்று கேட்டுவிட்டாள் போலிருக்கிறது; நீ இப்பொழுது போய் ஆகவேண்டிய கருமங்களைப் பார், நான் அவளைச் சமாதானம்பண்ணிக் கொள்ளுகிறேன்" என்றார். நானும் என் வேலைகளைச் செய்யப்போனேன்; மாமனாரும் சீதாலட்சுமி கிடக்கும் அறைக்குட் போனார்; ஒருமணிநேரஞ் செல்ல, சின்ன மாமி ஏதோ மனஞ் சமாதானப்பட்டவளாய் வந்து தன் கருமங்களைப் பார்த்தாள். அன்று மத்தியானத் தின் மேல் மாமனாரும் போசனம் முடித்துக்கொண்டு தம் கருமம்பார்க்கும்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே போய்விட்டார், ஐந்துமணி வரையில் இராமச்சந்திரன் அங்கே வந்தார்; ஐயோ, இந்த நேரத்தில் இவர் ஏன் இங்கே வந்தார்; இல்லாள் கணவனுடன் பிணங்கிக்கொண்டிருக்கும் போது அந்த இல்லம் சுடுகாடு போலல்லவோ இருக்கும்; பாவம் இவர் எப்படி இங்கு நடந்த பிணக்கைப்பற்றியறிய முடியும்; வஞ்சகமில்லாமல் வந்துவிட்டார் என்று என்னளவில் எண்ணினேன்; முந்தி அவர் வரக் கண்டவுடனே போய் அவரை உபசரிக்கு மெனக்கு, அன்று அப்படிச்செய்ய மனங் கூசியது; ஆனாலும் மாமனார் கட்டளையை மீறி நடக்கவொண்ணாதென எண்ணிக்கொண்டு மெல்லச் சென்று அவரை இருக்கச்செய்து மாமா இங்கு இல்லை; சற்று முந்தித்தான் வெளியே போயிருக்கிறார் என்று முகவாட்டத்துடன் சொன்னேன்; அவர் என் முகவாட்டத்தை ஒருவாறு அவதானித்துவிட்டார் போலும்; என்னைப் பார்த்து "ஏன் இன்று உன்னுடம்பிற்கேதுஞ் சுகமில்லையோ" என்று கேட்க "உடம்பிற்கு எவ்வகையான சுகயீனமுமில்லை" யென்று சொல்லிவிட்டு நான் நிலத்தைப்பார்த்தபடி நின்றேன்; "மாமனார் இங்கில்லாத நேரத்தில் நான் இங்கு வருவது முயைறல்லவென்று நினைக்கிறேன்" என்று அவர் சொல்ல, "அதனால் ஒருவகையான முறைகேடுமில்லை" என்று நான் பதில் சொன்னேன்; "நான் இங்கு வருவது உமது மாமனாரைக் காணமாத்திரமல்ல, உம்மையும் பார்த்துப் போகலாமென்று தான் இடையிடையே வருகிறேன்; "ஆனால் என்வரவு இங்குள்ளா ரெல்லாருக்கும் சம்மதமாயிருக்குமோ, இல்லையோ என்று கேட்க அஞ்சுகிறேன்" என அவர் கேட்க, சம்மதமாயிருக்குமென்றுதான் நான் நினைக்கிறேன் எனப் பதில் சொன்னேன்; நான் சொன்ன இந்த உபசார வார்த்தையால் இராமச்சந்திரன் மகிழ்ச்சியடைந்து என்னைப் பார்த்து "ரஞ்சிதம், நெஞ்சையொளித்தொரு வஞ்சகமில்லை; நான் இன்று சில விஷயங்களை உம்முடன் நேரிற்கலந்து பேசிப்போகலாமென்று தான் வந்தேன்; உம்மை எனக்குக் கல்யாணஞ் செய்து வைக்கவேண்டுமென்பது உமது மாமனார் கொண்டுள்ள நோக்கமாகும்; ஆனால் அது உமக்குச் சம்மதமோ என்பதைப்பற்றி நான் அறியேன்; எனக்கு உம்மிடத்தில் விருப்பமுண்டு; அன்புண்டு; அப்படியே உமக்கும் என்மீது விருப்பமிருந்தால், அன்பிருந்தால் நான் இனிமேலும் இங்கு வந்து போதல் முறையாகும்; இல்லையேல் வராதுவிடுவதே முறையாகும்; இதனால் எங்களுக்கிடையில் ஏதும் மனஸ்தாபம் இருக்கவொண்ணாது" என வெளிப்படையாகச் சொன்னார். அவர் அப்படிச் சொன்னதையிட்டு எனக்குச் சந்தோஷம்; நான் அவரைப்பார்த்து "ஐயா, எனக்கும் உங்கள் மீது அன்புண்டு; மதிப்புண்டு; ஆனால் அவை ஏதும் நோக்கம் பற்றியனவல்ல; நீங்கள் இன்றுபோல் என்றும் இங்கே வந்துபோகலாம்; அதனால் எவ்வகையான குறையுமில்லை; ஆனால், சொல்லுகிறேனென்று என்னை விபரீதமாக எண்ணிக்கொள்ளாதீர்கள்; இனிமேல் விவாகஞ் செய்யும் நோக்கம் என்னிடத்திலில்லை; அதன் காரணத்தை மாத்திரம் தயவு செய்து என்னைக் கேளாதீர்கள்" என்று நானும் வெளிப்படையாக என்னுள்ளக்கிடக்கையை அவருக்கு எடுத்துச் சொன்னேன்; இப்படிச் சொல்லக்கேட்டவுடனே இராமச்சந்திரன் சந்தோஷமடைந்து "இரஞ்சிதம், நீ ஒரு உத்தமி, உம்மை இன்று தொடக்கம் என்னுடன்பிறந்த தங்கையாக மதித்து நடப்பேன்; இது நிசம்" என்று சொன்னார்; அப்படியே செய்யுங்கள் என்று சொல்லி நான் அவரை நமஸ்கரிக்க அவரும் பிரதி நமஸ்காரஞ் செய்து விட்டிருந்தார். இதற்கிடையில் என் மாமி என்னைக் கூப்பிட்டுக்கொண்டு அங்கே வருதலும், அவர் என்னிடம் விடைபெற்றுக்கொண்டு போக, நானும் இனிமேல் வாருங்கள் வராமல் விடாதீர்கள் என்று சொல்லி அவரையனுப்பிவிட்டேன்; இவைகளை யெல்லாம் பார்த்துக்கொண்டு நின்ற சின்னமாமி யிடத்திற் பொறாமையென்னுந் தீ பற்றியெரியத் தலைப்பட்டது. அவள் அன்று அதன்பிறகு என்னுடன் இன்முகங்காட்டிப் பேசிலள்.

"பேய் சிரித்தாலும் பிழை அழுதாலும் பிழை"

அன்று மத்தியானத்தின்மேல் வீட்டைவிட்டுப் புறப்பட்ட மாமனார் பொழுதுபட்ட பிறகுதான் வீட்டிற்கு மீண்டுவந்தார்; வந்தவுடன் இராமச்சந்திரன் அங்கே வந்துபோன செய்தியை மாமனாரிடஞ் சொன்னேன்; அதனைக்கேட்டுக்கொண்டு அயலே நின்ற மாமி "சரி, பிறகு என்னைக் குற்றஞ்சொல்லாதீர்கள்; இராமச் சந்திரனுக்கு உங்கள் மருமகளைக் கல்யாணஞ் செய்து வைப்பதென்றால், அடுத்துவரும் ஒரு நல்லநாளைப் பார்த்துச் செய்துவைத்து விடுங்கள்; பிறகு என்னைக் குறைசொல்லாதீர்கள்; பேய் சிரித்தாலும் பிழை அழுதாலும் பிழை என்ற நிலைமையில் இப்பொழுது நிற்கிறேன்; அந்த வாலிபன் இங்கே வந்து வந்து போகவும் இந்தப்பிள்ளை அவனோடு நெடுநேரமாகவிருந்து பேசிச் சிரித்து விளையாடிக்கொண்டாடவும் பார்ப்பவர்க்கு அழகாயிராது, அயலட்டத்திலுள்ளவர்கள் இந்த வீட்டுக் கதையைப் பேசிச் சிரிக்கிறார்கள்; நானும் இவைகளுக்கெல்லாம் சம்மதகாரியென்று சொல்லி என்னையும் பழிச் சொல்லுகிறார்கள்; கல்யாணஞ் செய்துவைப்பது உங்களெல்லாருக்குஞ் சம்மதமென்றால் உடனே செய்துவைக்கத் தடையென்ன? பெண் கருப்பவதியான பிறகு தாலிகட்டுவது முறையா? இது எந்தவூர் வழக்கம்? நானும் பேசாமற் பேசாமல் இரகசியமாக வைத்துக்கொள்ளக் கருமம் முற்றிவிடும் போலிருக்கிறது; நான் பேய்ச்சியென்று நீங்களெல்லீரும் என்னைத் தவறாக எண்ணிக்கொண்டீர்கள்; ஒரு பெரும்பிழை வந்தால் நீங்களும் ஊரவரோடு சேர்ந்துகொண்டென்னைக் குறைசொல்லுவீர்களே யல்லாமல், உங்கள் பெறாமகனையும் ஆசை மருமகளையும் குறை சொல்லமாட்டீர்களென்பதை இப்பொழுதே நான் அறிவேன்; உங்கள் மருமகளுக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணஞ் செய்யவிருப்பமில்லை யென்றதை நீங்கள் நம்புவீர்களேயொழிய நான் நம்புவேனா? ஊர் நம்புமா? அப்படித்தான் விருப்பமில்லை யென்பது மெய்யானாலும் நெருப்பையும் பஞ்சையும் ஒரு இடத்தில் வைத்திருந்தால் அது பற்றாமல் விடுமா? புற்றின் பக்கத்திலே வைத்துப் பாம்பாட்டலாமா? உங்கள் மருமகளுக்குக் கல்யாணஞ்செய்யப் பிரியமில்லாவிட்டால், கைம்மையாயிருக்க வேண்டுமென்பது விருப்பமானால், "இந்த நடையேன், இடுப்பிலே கையேனடி" என்ற விதமாக, ஓய்யாரக்கொண்டையேன், அதிலே தாழம் பூவேன்? புசர்மா சவர்க்காரமேன்? கண்ணாடி சீப்பேன்? விதம் விதமான சேலை சட்டைகளேன்? புதுப் புதுப் பூணாரமேன்? குங்குமப்பொட்டேன்; சாந்து பொட்டேன்; வாலிபரைக் கண்டால் தலைவாசற்பக்கம் ஓடிப்போய் வரவேற்பானேன்? பாதிச்சுரைக்காய் கறிக்குப் பாதிவிதைக்கா? அப்படிக் கைம்மையாயிருக்க நோக்கங் கொண்டவள் உடனே தலையை மொட்டையடித்து விட்டு நல்ல நகைகளை நல்ல சேலையை அகற்றிவிட்டுக் கைம்மைவிரதம் பூண்டல்லவா ஒழுகவேண்டும்; அதிகம் பேசுவதென்ன உங்கள் மருமகள் இந்த வீட்டில் இருக்கவேண்டுமானால் ஒழுங்காயிருக்க வேண்டும்; இல்லையேல் இவள் தாய் வீட்டிற்கு இந்த நிமிஷமே போய்விடவேண்டும்; இரண்டுமில்லையேல் என் குழந்தையையுந் தூக்கிக்கொண்டு இந்த வீட்டைவிட்டு இந்த இரவு விடிதற்கிடையில் நான் வந்தவழியே என் சொந்தவீட்டிற்குப் போய்விடுவேன்; என் பிள்ளைமேலாணை; இது நிச்சயம்..." என்று இடியிடித்தவாறு வாய்கூசாது பிடாரிபோற் சந்நதங்கொண்டு ஏசினாள், பேசினாள், ஆரவாரஞ் செய்தாள். என் மனமுஞ் சரீரமும் நடுங்கின; மாமனார் "சீதா, பேசாதே, பேசாதே, அயலட்டத்திலுள்ளார் கேட்டால் மரியாதைக்கேடாகும், இராச்சத்தம் எங்குங்கேட்குமென்று அவளை இரந்தார்"; மாமனார் இரக்க இரக்க அவளுக்கு ஆவேசம் அதிகப்பட்டது; நான் அந்த இடத்தில் அவளுடைய ஏச்சைக் கேட்க முடியாமல் ஓடிப்போய் அறையுட் புகுந்து படுக்கையிற் கிடந்து அழுதேன்.

* * *

உலகம் பலவிதம்: 1944 ஒக்டோபர் 26
விசாலாட்சி: (முற்றொடர் - 23)

"கொடிக்குக் காய் பாரமல்ல"

"நான் அந்த இடத்தைவிட்டு அறையுட் போய்ப் படுத்துக்கிடக்கவும், மாமி மேலும் மேலும் உரக்க சத்தத்தோடு அதிகம் பேசினாள்; அப்பேச்சையெல்லாங் கேட்க என்னால் மனஞ் சகிக்க முடியவில்லை; நான் பிறகும் படுக்கை விட்டு எழுந்துபோய், மாமி! ஏன் அநியாயமாக இப்படிப் பேசுகிறீர்கள்? எலும்பில்லா நாவால் எதனையும் பேசிவிடலாமென்றெண்ணுகிறீர்களா? நான் உங்களுக்கு ஏதும் பிழை செய்தால் நீங்கள் எனக்கு இரண்டு அடியடிக்கலாம்; நீங்களும் ஒரு பெண் குழந்தையை வைத்துக்கொண்டு இப்படி என்னை அநியாயமாகப் பேசலாமா? வேலி பயிரைமேயத் தலைப்பட்ட விதமாக, நீங்களே இப்படி என்னைத் தூற்றத் தலைப்பட்டால் அயலட்டத்திலுள்ளவர்கள் என்னதான் பேசார்கள்; என்னைத்தான் வைது என் மனத்தைப் புண்ணாக்குகின்றீர்கள் காரியமில்லை, உங்கள் கணவனையும் கவலைப்படுத்துகிறீர்களே நான் சிறுபெண், அறிந்தோ அறியாமலோ ஏதும் பிழைசெய்திருந்தால் அதனைத் தெய்வத்துக்காகப் பொறுத்துக் கொள்ளுங்கள்; உங்கள் பிள்ளை வேறு நான் வேறென்று எண்ணவேண்டாம்" என்று இரந்து கும்பிட்டுச் சொன்னேன். நான் இப்படி இரந்துவேண்ட, அவள் நாகம்போற் சீறி "ஆமடி உன்னை நான் அறிவேன்; நீ ஆசாரக்கள்ளியடி நீயோ சிறுபெண்; நீ உருத்திராட்சப்பூனையடி; உனக்கு உலக அநுபவம் முழுவதுந் தெரியுமடி? இப்பொழுது உன் மாமனாருக்கு உன்னைப் பற்றிய இரகசியங்களை வெளிவிடப்போகிறேனென்று பயந்துதான் நீ இப்படிச் சாலம் பண்ணுகிறாய்; உன் மானக்கேடான நடையை இன்னமும் நான் எடுத்து வெளியிட்டால் உன் மாமனார் இந்தக் கணமே உன்னை இந்த வீட்டிலிருந்து துரத்திவிடுவார்; பாவம்! நமக்கேன் அந்தப் பழியென்று யோசிக்கிறேன்..." என்று அவள் சொல்லுவதற்கிடையில், ஐயா, என்னை மறந்து எனக்கு ஆத்திரம் அதிகப்பட்டது; என் சரீரம் நடுங்கியது; மனம் பதறியது; நாத்தடுமாறியது; மாமனாரைத் திரும்பிப்பார்த்தேன்; அவர் தலைகுனிந்தபடி தீராக்கவலையோடிருப்பதைக் கண்டேன்; மாமா, இப்படியெல்லாம் இந்த மனுஷியென்னைப் பேச நீங்களும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? உங்களை நம்பியல்லவா என் பெற்றார் என்னைக் கொண்டு வந்து இந்த வீட்டில் விட்டார்கள்; உங்களைத் தஞ் சமென்றெண்ணியல்லவா நான் இங்கே இருக்கிறேன்; நீங்கள் எனக்காக உங்கள் பெண்டாட்டியைக் கண்டிக்கவேண்டாம்; வெறுக்கவேண்டாம்; நான் குடித்தனத்தைக் குழப்பவில்லை; எனக்கு இந்த ஒரு உதவியையுஞ் செய்யுங்கள்; என்னை என் பெற்றார் வீட்டிற் கூட்டிக்கொண்டுபோய் விடுங்கள்; கொடிக்குக் காய் பாரமல்ல; அவர்கள் என்னைப் பாதுகாப் பார்கள்; நான் இனி இந்த வீட்டிலே ஒரு நிமிஷமும் நிற்கமாட்டேன்..." என்று சொல்வதற்கிடையில், என் மாமி "நீங்களொருவரும் போகவேண்டாம்; உன் அம்மானும் நீயும் சந்தோஷமாயிருந்துகொள்ளுங்கள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பிள்ளையையுங் கொண்டு நான் போகிறேன்" என்று உள்ளஞ் சுடச் சொன்னாள். அவள் சொன்ன வஞ் சகமான வார்த்தை என் மாமனார்க்கு அதிக கோபத்தை மூட்டிவிட அவர் "அடீ சீதா, வீண்பேச்சுப் பேசாதே; இன்னும் ஏதும் அடாத வார்த்தை பேசினால் பெரும் அவமானப்படுவாய்; உன் குணத்தையறியாமல் நான் உன்னை வீட்டில் வைத்தேன்; நீ மிகவும் பொல்லாதவள்; நீ இந்த வீட்டில் வந்து சேருவதற்குப் பட்டபாடு எனக்குத் தெரியும்; சொருகிக்கிடந்த அகப்பையுஞ் சோறள்ள வந்துவிட்டதாம் என்றவிதமாக நீ உன்னுடைய பழைய நிலைமையை அறவே மறந்து இப்போது எல்லாரையும் அடக்கியாளப் பார்க்கின்றாய்; நிரபராதியாகிய என் மருமகளைத் தூற்றத் தலைப்பட்டாய்; எங்கள் குடிக்கு வழக்கில்லாத வார்த்தைகளையெல்லாம் பேசத் தலைப்பட்டுக் கொண்டாய்; இருக்குஞ் சீராய் இருக்க விருப்பமானால் இரு; இல்லையேல் வீட்டைவிட்டு வெளியே போ" என்று கடிந்து சொன்னார்; சின்னமாமி ஆவேசங்கொண்டாளாய், "நீரும் அப்படிச் சொல்லிவிட்டீரா? சரி, உம்முடைய பிள்ளையை ஏற்றுக்கொள்ளும்; என் வயிறெரிய நீங்களிரண்டுபேரும் நல்லாயிருக்கப் போகிறீர்களா? இந்த நிமிஷமே நான் போய்விடுகிறேன்; எனக்கு ஒரு பாண்கிணறு பஞ் சமென்றா நினைக்கிறீர்" என்று சொல்லிவிட்டு வேகமாக அந்த நடுச்சாமத்தில் வீட்டைவிட்டுப் புறப்பட்டாள். மாமனார் இவைகளையெல்லாம் கண்டும் யாதும் பேசாமற் சிந்தனையில் மூழ்கியவராயிருந்தார்.

"நின்றாலும் நிஷ்டூரம்
போனாலும் பொல்லாப்பு"

என்னாலல்லவோ இந்த அநர்த்தங்களெல்லாம் நேர்ந்தனவென்று என்னையே நான் நொந்துகொண்டு வேகமாகப் போகும் மாமி வெளியே செல்வதற்கிடையில் நான் முந்தியோடிப்போய் அவளைத் தடுத்து, "மாமி! நான் செய்தவெல்லாம் குற்றம், பொறுத்துக் கொள் ளுங்கள்; நாளை விடிவதற்கிடையில் நான் என் தாய் தகப்பன் வீட்டிற்குப் போய்விடுவேன்; நீங்கள் போகவேண்டாம் உள்ளே வாருங்கள்" என்று சொல்லிக் கையிற்பிடித்து இழுத்துக் கொண்டு வர, அவள் யாதும் பேசாமல் மீண்டுவர, அந்த நேரத்தில் உறங்கிக்கிடந்த பிள்ளையும் இந்த ஆரவாரத்தினால் விழித்துக் கத்தியது; அவள் போய்த் தன் பிள்ளையின் பக்கலிற் படுத்து விட்டாள்; மாமனாரும் தம் படுக்கையறையுட் போய்ப் படுத்துவிட்டார்; நானும் என்னுடைய படுக்கையிற் போய்ப் படுத்துக்கொண்டேன்; அன்றிரவு எங்கள் வீட்டில் எவரும் போசனமுண்டிலர். நான் படுக்கையிற் கிடந்தபடியே பலவாறு யோசித்தேன்; மானங்கெட நேர்ந்தால் உன்னுயிரை விட்டுவிடு என்று என் அன்பர் அந்தியகாலத்திற் சொன்ன வாக்கு அந்த நேரத்தில் என் ஞாபகத்திற்பட்டது. சீதாலட்சுமி என்னையும் மாமனாரையுஞ் சேர்த்துச் சொன்ன பழிமொழி என்னுள்ளத்தைப் பிழிந்தது; ஐயா, "தீயினாற் சுட்டபுண்ணுள்ளாறும்; ஆறாதே நாவினாற் சுட்ட வடு" என்று அந்தப் பெரியார் உரைத்த திருவாக்கை யெண்ணினேன்; மானமழிந்தபின் வாழாமை முன்னினிதேயென்ற வாக்கியத்தையும் நினைத்தேன்; நான் நாளைக்கு இந்த வீட்டை விட்டு என் பெற்றார் வீட்டிற்குப் போனாலும், அவர்கள் எனக்கு வேறு விவாகஞ் செய்துவைக்கத்தான் முயற்சி செய்வார்கள்; அங்கே போகாமல் இங்கேயிருக்கலாமென்றால் இந்தச் சீதாலட்சுமி என்னை மனச் சமாதானமாகவிருக்க விடமாட்டாள்; நின்றாலும் நிஷ்டூரம் போனாலும் பொல்லாப்பு என்ற நிலைமை நமக்கு வந்துவிட்டது; இப்படி இருதலைக்கொள்ளியினுள் எறும்பொத்து இடையில் நின்று தியங்குவதைக்காட்டிலும் இந்த வுயிரை விட்டு விடுவது நல்லது; நான் இந்தவுலகத்தில் நல்லாய் வாழும் விதியுடையவளாயிருந்தால், என் அன்பர் இடையில் என்னைவிட்டுப் பிரிவாரா? பெண்ணாய்ப் பிறந்தவள், அதிலும் என்போன்ற ஒரு இளம்பெண் எவ்வளவு மனக்கட்டுப்பாட்டோடு சாவதானமாகக் காலங்கழித்தாலும், இந்தப் பொல்லாத உலகம் வசையையே சுமத்திவிடும்; ஆனதால் நான் என்னுயிரை மாய்த்துக் கொள்ளலாமோவென்றால், தற்கொலை புரிவோர்க்கு மீளா நரகமென்று எங்கள் சாத்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கிறதாமே; என் மானத்தைக் காப்பதற்காக நான் தற்கொலை செய்தால் அதுவுந் தோஷமாகுமா; ஆகாது; அதிகம் யோசித்தென்ன, எங்கேனுங் குளத்திலாயினும் ஆற்றிலாயினும் வீழ்ந்து என்னுயிரை விடுவதுதான் புத்தி; இதனையும் இப்பொழுதே செய்துவிடவேண்டும்; அடுத்த மணித்தியாலம் இந்த மனம் எப்படி மாறுமோ நான் அறியேன் என்று யோசித்து என் மனத்தைத் திடப்படுத்தினேன்; அப்பொழுது நேரம் நடுச் சாமத்திற்கு மேலிருக்கும்; ஊரடங்கியுள்ள தாகிய இந்த நேரமே நான் நினைத்ததைச் செய்தற்கு வாய்த்த நேரமென்றெண்ணினேன்; மெல்ல எழும்பிக் கதவைச் சத்தப்படாமல் திறந்துகொண்டு வந்து மாமனார் படுத்துறங்கும் அறையின் கதவண்டை நின்று பார்த்தேன்; அந்த அறையில் எவ்வகையான ஆரவாரமுமில்லை; சீதாலட்சுமி நித்திரையோ என்று அறிவதற்காக, அவள் படுத்திருக்கும் அறையின் வாசலண்டை மெல்ல மெல்ல வந்து நின்றேன்; என் கால்கள் பதறின; உடல் சோர்ந்தது; நெஞ்சிலே பெரிய கல்லையிட்டது போலிருந்தது; ஆனால் அவளும் பிள்ளையும் கிடக்குமறையில் எவ்வகையான சத்தமுங் கேளாமையினால் அவர்களிருவரும் நித்திரையென்றெண்ணிக்கொண்டேன்; உடுத்த துணியோடும் அணிந்திருந்த ஆபரணத்தோடும் புறப்பட்டுத் தலைவாசற் கதவண்டை வந்தேன்; தலைவாசற்கதவு திறந்தபடியேயிருந்தது; தலை வாசலைக் கடந்து தெருக் கதவண்டை வந்தேன்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிரவு இந்தப் பிணக்கெல்லாம் நடந்தமையினாலே, அக்கதவும் பூட்டப்படாது சார்த்தப்பட்டபடியே யிருந்தது; சத்தமில்லாமல் மெல்லக் கதவை நீக்கித் தெருவில் வந்தேன்; அமாவாசையிருளோடு கூடிய இராக்காலம்; எங்கே பார்த்தாலும் நிசப்தமாயிருந்தது; பேயும் உறங்குஞ் சாமம்; தெருவில் வந்தவுடன் மனமுஞ் சரீரமும் பதறின; செய்வதென்ன வென்பது புலப்படவில்லை; வீட்டைவிட்டுப் புறப்பட முந்தியல்லவா யோசிக்கவேணும்; தெருவில் வந்துநின்றுகொண்டு யோசிப்பதிற் பயனில்லை; ஒரு சமயம் மாமனார் விழித்தெழுந்து என்னைக் காணாமையால் தேடப்புறப்பட்டால், நான் தப்பிப்போனபாடில்லை; மேலும் இன்னமும் அவமானம் அதிகப்படும்;

சாகத்துணிந்தவளுக்கு அச்சமென்ன?

அதனையறிந்தாற் சின்னமாமியும் என்னைச் சிரிப்பாள்; சாகத்துணிந்த எனக்கு இனிப் பயமென்ன? என்று மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு வேகமாக நடந்தேன்; மாமனார் வீட்டிலிருந்து எங்கள் வீட்டிற்குப் போகும் மார்க்கமொன்றுதான் எனக்குத் தெரியும்; அந்த மார்க்கமாகப் போகும்போது எங்கே பார்த்தாலும் இருட்டாகவிருந்தது; என் மனத்தில் அச்சம் அதிகப்பட்டது; நான் போகும்மார்க்கத்தில் எதிரே எவரோ வருவதுபோலவும், பிறகே நின்று யாரோ என்னைக் கூப்பிடுவதுபோலவும் புலப் பட்டது; அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாசமெல்லாம் பேய் என்றவிதமாய் எந்தப் பக்கத்தைப் பார்த்தாலும் இருளாகவும் பயங்கரமாகவுங் காணப்பட்டன. பயந்து பயந்து மாமனார் வீட்டிலிருந்து அரைமைல் தூரம் போய்விட்டேன்; அப்பால் ஒரு சந்தியில் மரச் சூழலும் அதனாற் செறிந்த விருளும் காணப்பட்டமையினால் என்னாற் போகவும் முடியவில்லை; மீண்டு மாமனார் வீட்டிற்கு வரவும் முடியவில்லை; அச்சமேலீட்டினால் நெஞ்சு வெடிக்க என்னுயிரும் நீங்கிவிடுமென் றெண்ணினேன்; படுக்கையறையிற்கிடந்து கொண்டு நான் எண்ணின எண்ணங்களும் யோசித்த யோசனைகளும் பஞ்சாய்ப் பறந்துபோயின; நடுக்கடலில் மழையோடுங் காற்றோடும் இருளோடுங்கூடிய சமயத்திற் கரையறியாது திசையறியாது கலங்கும் மீகாமனைப் போலாயினேன்; முன் செல்லக் காலெழாமையினால் தெரு நடுவில் நின்றேன்; மாமனார் வீட்டிற்கு மீளுவதோ பெற்றார் வீட்டிற்குப் போவதோ என்று யோசித்தேன்; தற்கொலை செய்யும் நோக்கத்தை அறவே யொழித்துவிட்டேன். இப்படி நின்று சஞ்சலப்படும் நேரத்திலே சடுதியில் ஒருபெரு வெளிச்சந் தோன்றியது; அந்த வெளிச்சம் எனக்கெதிரே வரும் மோட்டார் இரதத்தின் வெளிச்சமெனப் புலப்பட்டது; இந்த இடத்தில் நின்றால் இரதத்தில் வருபவர்கள் தன்னந்தனியே அகாலத்திற் புறப்பட்ட என்னைக் காண்பார்கள், கண்டாற் சங்கடமாகும் என்றெண்ணிக்கொண்டு நான் ஓடிப்போய்த் தெருவோரத்தில் நின்ற ஒரு பெரு மரத்தின் பின்னே மறைந்து நின்றேன்; வேகமாக ஓடிவந்த இரதம் நான் மறைந்துநின்ற மரத்தடியில் வந்தவுடனே நின்றுவிட்டது; உடனே அந்த இரதத்திலிருந்து இரண்டுபேர் இறங்கி அந்த மரத்தண்டை வந்தார்கள்; என்னைக் கண்டார்கள்; நீ யார் இந்த நேரத்தில் இங்கே ஏன் வந்தாய்; உள்ளதைச் சொல்லு என்று என்னை அதட்டிக்கேட்டார்கள்; அந்தநேரத்தில் என்னுயிர் உடலைவிட்டு நீங்குவது போலிருந்தது; என்னால் வாய்திறந்து ஏதும்பேச முடிய வில்லை; ஏங்கியபடி பேசாமல்நின்றேன்; "வா, வந்து இரதத்தில் ஏறு" என்றார்கள்; நான் போய் ஏறாவிட்டால் என்னைத் தூக்கிக்கொண்டுபோய் இரதத்திலேற்றுவது நிச்சயமென்றெண்ணினேன்; ஒன்றும் பேசாமற்போய் ஏறினேன்; அதில் ஒரு பெண்ணுமிருக்கக்கண்டு அவள் பக்கத்திலிருந்தேன்; இரதம் புறப்பட்டு வேகமாகப் போனது.

* * *

உலகம் பலவிதம்: 1944 நவம்பர் 02
விசாலாட்சி: (முற்றொடர் - 24)

"உங்களை நம்பித்தான் வருகிறேன்"

"வேகமாகச் சென்ற இரதம் சற்றுத்தூரம் போனவுடனே நின்றுவிட்டது; இரதத்தினுள் வெளிச்சம் எரிந்தபடி காணப்பட்டது; அப்பொழுது முன்னாசனத்திலிருந்த ஒருவர், திரும்பி என்னைப் பார்த்து "நீ யாரம்மா? எங்கே வந்தாய்? உன் வரலாற்றை உள்ளபடி சொல்லு; உன்னைச் சேர்க்கவேண்டிய இடத்திலே கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகிறோம்; பயப்படாதே கூசாதே, நாங்களும் பெண்ணோடு கூடப்பிறந்தவர்கள் தாம்" என்று இதமாகக் கேட்டார். நான் கவலை மேலீட்டினாலும், அச்சமேலீட்டினாலும் அக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல மனமெழாமல், அவைகளெல்லாம் பிறகு சொல்லுகிறேன்; முதல் என்னைக்கொண்டு போய் என் பெற்றார் வீட்டில் விட்டுவிடுங்கள், உங்களுக்கும் புண்ணியங் கிடைக்குமென்று சொன்னேன்; "அதற்கென்ன அப்படியே செய்கிறோம்; உங்கள் வீட்டிற்குப் போகும் மார்க்கத்தைக் காட்டும்" என்று கேட்க, நான் திசை தெரியாமல் தடுமாற்றமடைந்து பேசாமலிருந்தேன்; அப்பொழுது என் பக்கத்திலிருந்த பெண் "ஏனம்மா பேசாமலிருக்கிறாய், உங்கள் வீட்டிற்குப் போகும் வழியைக் காட்டினால் இல்லையேற் சொன்னால், நாங்கள் அங்கே கொண்டுபோய் விடுவோம்" என்று சொல்ல, எனக்குத் திசைதெரியவில்லை; குறிப்புந் தெரியவில்லை, அக்கா" என்று சொல்லியழுதேன்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாவிட்டாலுங் காரியமில்லையடியம்மா, உனது தகப்பனார் பெயரையாயினுஞ் சொன்னால் நாங்கள் ஒருவாறு விசாரித்தறிந்து அங்கே கொண்டுபோய் விடுகிறோம்" என்று அந்தப் பெண் சொல்ல, என் பெற்றார் பெயரை நான் அவர்களுக்குச் சொன்னேன்; அவர்கள் அந்தவூரவர்களல்லாமையினாற்போலும் என் பெற்றார் பெயர், பின் என் மாமனார் பெயர் இவைகளையெல்லாம் சொன்னபோதும் அவர்களுக்குப் புலப்படவில்லை; அப்பொழுது அந்த இரதத்தின் முன்னாசனத்திலிருந்த மனுஷன் சிறிதுநேரம் யோசித்துவிட்டு "இந்த நள்ளிரவில் தெருவிலே நின்று யாரைக் கேட்பது, எவரை விசாரிப்பது, நாங்களும் ஆவசியம் போகவேண்டியிருக்கிறது; இந்தப் பெண்ணையுந் தன்னந்தனியே அந்தர வழியில் விட்டுப்போவது சரியல்ல, ஏன் அஞ்சுகம், நீயும் உடனிருக்கிறாய்தானே; இப்பொழுது நாங்கள் போகவேண்டிய இடத்திற்குப் போய், விடிந்தபிறகு உன்னுடன் இப்பெண்ணையும் இரதத்தில் ஏற்றிக்கொண்டு வந்து பெற்றாரிடம் ஒப்புவித்தல் புத்தியென்று நினைக்கிறேன்; பெண்ணின் சம்மதமென்னவென்று நீ கேள்" என என் பக்கத்திலிருந்த பெண்ணுக்குச் சொல்ல, அந்தப் பெண் "என்னெடியம்மா, உன் நோக்கம்" என்று கேட்க, நான் சற்றுநேரம் யோசித்துவிட்டு "பகல் நேரத்திலென்றால் நானும் எங்கள் வீட்டிற்குப் போக வழியறிவேன்; முதற் கடவுள், இரண்டாவது ஏதோ உங்களை நம்பித்தான் வருகிறேன் என்று நான் சொல்ல நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் அம்மா" என்று அந்தப்பெண் சொல்ல, இரதம் உடனே புறப்பட்டுச் சென்றது.

"நான் பிராமணப்பெண்"

இரதமோ மிக வேகமாக ஓடிப் புலரிக் காலத்தில் ஒரு பட்டினத்தையடைந்தது; அப்பட்டினத்திலுள்ள ஒரு உன்னதமான மேன் மாடவீட்டின் வாசலிலே தங்கி நின்றது; எல்லாரும் இரதத்தை விட்டிறங்கினர். நானும் இறங்கி அந்தப் பெண்பிறகே போனேன்; போனவுடனே மின்சார வெளிச்சம் எங்கும் விளங்கியது; அந்தப் பெண் என்னையுங் கூட்டிக்கொண்டு படிவழியே யேறி மேல்வீட்டிற்போய், அங்குள்ள ஒரு அறையுள் அழைத்துச் சென்றாள்; அந்த வீட்டைப் பார்த்தபோது அரசமாளிகைபோலத் தோன்றியது; மனுஷி என்னைப் பார்த்து பயணம் பண்ணிய அலுப்புமாற நீர் சற்றுநேரம் நித்திரை செய்யப்போகிறீரா? அப்படியானால் உந்தச் "ஸோபா"விலே படுத்துறங்கலாம்; இல்லையேல், தேநீர், காப்பி ஏதும் குடிக்கப்போகிறீரா" என்று நயமாகக் கேட்க, எனக்கு உறக்கம் வரவில்லை, என் பெற்றார் வீட்டிற்போய்ச் சேர்ந்தாற்றான் உறக்கம் வரும்; தாகமிருக்கிறது, ஆனால் நான் பிராமணப்பெண்" என்றேன்; "அப்படியா, மிகவும் நல்லது, நானும் பிராமணத்திதான், இங்கே எங்கள் சாதியைச் சேர்ந்தவர்கள் இன்னுஞ் சிலர் இருக்கிறார்கள்; எங்களுக்குச் சமையல் செய்யப் பிராமணருமுண்டு; நீர் ஒன்றுக்கும் கூச்சப்படவேண்டாம்; உமக்கு இப்பொழுது தேநீர் தருவிக்கவா? இல்லையேற் கோப்பி தருவிக்கவா" என்று ஆதரவுடன் கேட்க, நான், காப்பி தந்தால் நல்லது என்றேன்; "மேசையிலிருக்கும் மணியை அந்த அம்மாள் தன் கைவிரலால் ஊன்றிய மாத்திரத்தே எழுந்த ஒலியைக்கேட்டு மூன்று நிமிஷத்துள் ஒரு பிராமணச் சுயம்பாகி இங்கே வந்து, "என்ன அம்மா தேவை" என்ற உடனே "வேங்கு, இரண்டு பாத்திரத்திற் காப்பி கொண்டு வா" என்று சொல்ல அந்தப் பிராமணன் மீண்டு போய்ச் சில நிமிஷத்திற் கொண்டுவந்து வைக்கவேண்டிய மேசையில் வைத்தான்; உடனே அம்மாள் ஒரு பாத்திரத்தை எடுத்துப் பருகச்சொல்லி என்னிடம் ஆதரவுடன் தர நான் ஏற்றுப் பருக, மற்றைப் பாத்திரத்திலுள்ள கோப்பியைத் தான் பருகினாள்; பருகியபின் அந்தப் பார்ப்பான் இரண்டு பாத்திரங்களையும் எடுத்துக்கொண்டு அறையை விட்டகன்றான்; என்னை ஒரு ஸோபாவில் இருக்கச் செய்துவிட்டு, அந்த அம்மாள் தன் ஆபரணங்களையும் உடையையும் மாற்றி வேறு ஆபரணங்களையும் உடையையும் அணிந்து கொண்டாள், அந்த அம்மாள் என்னுடன் ஊடாடிய இதமான முறையை நினைத்து, ஐயோ, இந்த அம்மாளின் நல்ல குணத்தில் நூற்றி லொரு பாகந்தானும் என் சின்னமாமியிடத்தி லிருந்தால் என் மாமனார் வீட்டைவிட்டுப் புறப்பட்டிருக்க மாட்டேனே என்று என்னளவில் எண்ணிக் கவலைப்பட்டேன். நேரம் காலை ஏழு மணிக்கு மேலாய்விட்டது; அம்மாள் என்னைப் பார்த்து "தங்காய் காலைப் போசனத்திற்காகிய நேரமாய்விட்டது; இப்பொழுது ஸ்நானம் முடித்துக்கொண்டு போசனஞ் செய்யப்போகிறீரா? இல்லையேல் மத்தியானம் ஸ்நானஞ் செய்யப் போகிறீரா? "இங்கே வெந்நீர் வைத்தாய்விட்டது; ஸ்நானத்திற்காகிய ஆயத்தங்களெல்லாமுண்டு; நீர் கட்டக் கோடிச்சேலை சட்டையுண்டு; ஒரு சிந்தனையும் வேண்டாம்" என்று பரிவுடன் சொன்னாள்; "அக்கா, என் நிலைமையறியாமல் இப்படியெல்லாங் கேட்கிறீர்கள்; என் விருத்தாந்தத்தைச் சொன்னால், உங்களுக்கு எல்லாம் விளங்கவரும்; நீங்கள் எனக்குச் செய்யும் பேருதவி இப்பொழுதே என்னைக் கொண்டுபோய் என் பெற்றார்வீட்டிற் சேர்த்து விடுவதே; அப்படிச் செய்தால் உங்களை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன் என்று சொல்லி யிரந்தேன்; "அம்மா, நீர் கவலைப்பட வேண்டாம்; இன்று பின்னேரம் மூன்று மணிக்குமேல் உம்மைக் கொண்டுபோய் உம்முடைய பெற்றார் வீடுதேடி சேர்த்து விடுவார்கள்; நானும் உடன் வருவேன்; இப்பொழுது அவர்கள் பார்க்க வேண்டிய ஆவசியமான கருமங்களுண்டு, நீர் எதற்கும் யோசியாமல் இப்பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்நானஞ் செய்யும் அறைக்கு என்னுடன் வாரும்" என்று அன்பாகச் சொல்ல நானும் உடன் எழுந்து போய் ஸ்நானஞ் செய்தேன்; மாறிக்கட்டுதற்காகிய சேலை முதலியவைகளை அந்த அம்மாளே எனக்குத் தந்தாள்; உடனே இருவரும் போசனஞ் செய்தற்காகிய அறையுட் சென்று போசனஞ் செய்தோம். முடித்துக்கொண்டு இருவரும் பழைய அறைக்குள் வந்தோம்; அக்கா, பின்னேரம் போகும் எனக்கு இந்த விசாரணையெல்லா மெதற்கு என்று கேளாதீர்கள், இது என்ன ஒருவருடைய வீடா? இல்லையேல் விடுதிச்சாலையா? இங்குள்ள வர்கள் ஆர்" என்று பயந்து கேட்டேன்; "அம்மா கேட்பதிற் குறையில்லை; நான் பின்பு எல்லாம் விபரமாகச் சொல்லுகிறேன்; நீர் யாரம்மா? அந்த அகாலத்தில் தன்னந்தனியே நீர் வரவேண்டி நேர்ந்த காரணமென்ன? அவைகளை எனக்குச் சொல்லுகிறீரா; எனக்குச் சொல்வதனாற் பரகசியமாய்விடுமென்று பயப்படவேண்டாம்; நான் எவருக்கும் வெளிவிட மாட்டேன்; என்னை நம்பலாமடியம்மா" என்று ஆர்வத்துடன் கேட்க, நன் என்பிறப்பு முதலாக அந்த நடுச்சாமத்திலே அந்தரங்கமான மார்க்கத்திலே வந்துநின்றதீறாக முழு விபரத்தையுஞ் சுருக்கமாகச் சொன்னேன். அந்த அம்மாள் கேட்டுப் பெரிதுங் கவலைப்பட்டாள்; பெருமூச்சு விட்டாள்; என் பொருட்டு இரக்கங் கொண்டாள்; சிறிது நேரம் யோசித்தாள்; "அக்கா என் வரலாற்றைச் சொல்லி விட்டேன்; இனி உங்கள் வரலாற்றை எனக்குச் சொல்ல வொண்ணாதா" என்று நான் கேட்க, அந்த அம்மாள் பரிவுடன் சொல்வாளாயினள்.

பெண்மதியால் மோசம் போனேன்

"தங்காய், என் வரலாறெனிலோ உன் வரலாற்றைக் காட்டிலும் பரிதாபமானது; என் வரலாற்றைக் கேட்டபின் நீ உன்னையிட்டுச் சிறிதேனும் ஆறுதலடைவாய்; நானும் பிரமகுலத்திற்றான் பிறந்தேன்; சின்ன வயசில் என் தகப்பனாரும் தாயாரும் ஒருவர்பின்னொருவராய் ஒருவருட காலத்துள் முறையே வைகுந்தஞ் சேர்ந்துவிட, என் தாய்மாமனாரே என்னைச் சிறு பிராயத்திலே தம் வீட்டிற் கொண்டுபோய் வைத்து வளர்த்துத் தமது இரண்டாம் மகனுக்குப் பருவகாலத்திற் கல்யாணஞ்செய்து வைத்தார்; விவாகஞ் செய்யும்போது எனக்குப் பதின்மூன்று வயசு; அவருக்கு வயசு பதினெட்டு; பத்து வருட காலமாக நாங்களிருவரும் தேனும் பாலும்போல் ஐக்கியமாகவும் இன்பமாகவும் வாழ்ந்து வந்தோம்; கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை யென்ற பிரகாரம் அவருடைய சொல்லைத் தட்டாமல், அவர்பணி கடவாமல் அவருடைய குறிப்பறிந்து அவருக்கு வாழ்க்கைத் துணைவியாகவிருந்தேன். அவர் ஒரு பணகேஷ்ம நிலையத்தில் (வங்கியில்) தலைமைச் சிறாப்பராகக் கடமை பார்த்து வந்தவர்; மேலும் அதிக முதுசொமுடையவர். அதனால் அவருக்காக எனக்காக எவ்வகையான குறையுமில்லை; ஆனால் விவாகஞ்செய்து பத்துவருட காலமாகியும் எங்கட்குப் புத்திரப் பேறில்லையென்ற கவலை அதிகப்பட்டது; அதனையிட்டு அவர் "அலரிட்ட முட்டாட் செய்ய அம்புயத் துறைவோன் சால மலையிட்ட செல்வத் தோர்கள் வழங்கவோர் மகவுதாரான்..." என்று இடையிடையே சொல்லிக் கவலைப்படுவது இப்பொழுதும் என் ஞாபகத்திலிருக்கிறது; இப்படி யாக அதாவது பதினொராம் வருடம், அதாவது இற்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன் சடுதியில் நோய்கண்டு, நான்கதற, பெற்றார் உற்றார் அயலார் புலம்ப எங்களைப் பிரிந்து பரலோகம் போய்விட்டார். நான் அபாக்யவதி, அவரை நினைந்து நினைந்து எந்த நேரமுங் கவலைப்பட்டு என் தலைவிதியையும் நொந்துகொண்டு கண்ணீரும் கம்பலையுமாகக் காலம் போக்கினேன்; இப்படி மூன்று மாசங்கள் கழிந்தன; என் கணவரை நான் பறிகொடுத்த பிறகு என் மாமி என்னை அதிக கடுமையாக நடத்தத் தலைப்பட்டாள்; நான் கட்டிலில் பாய் விரித்துத் தலையணையிட்டுப் படுக்கப்படாது; வெள்ளைச் சேலையல்லாது வேறு நிறச்சேலை கட்டக்கூடாது என்று என்னைப் பலவாறு சிறுப்பினை செய்யத்தொடங்கினாள்; யாரும் வீட்டிற்கு வந்தால் நான் முற்பட்டு நிற்கவொண்ணாது ஒதுங்கி நிற்கவேண்டுமென்று சொல்லி என்னை எல்லாவகையிலும் புறக்கணித்தாள்; மாமி இப்படி என்னை இம்ஸிப்பது என் மாமனாருக்கு விருப்பமில்லை; அவர் ஏதும் மாமிக்குச் சொன்னால் அவள் அவரைச் சீறுவாள், சினப்பாள், புறங்கூறுவாள், சிலசமயம் வைவாள்; அதனால் மாமனார் என் விஷயமாக, மாமியுடன் அதிகம் பேசுவதில்லை; இப்படியாக என் தலையை முண்டிதஞ் செய்தற்கு ஒழுங்கு செய்தாள்; தங்காய், அதைக்கேட்ட நேரந் தொடக்கம் எனக்குண்டான கவலைக்கு ஒரு எல்லையில்லை; நான் போய் ஒதுங்கிக்கொள்வதற்கு எனக்கு வேறு உற்றார் உறவினருமில்லை; அடுத்த நாள் என் தலையை முண்டிதஞ் செய்வதற்கு மாமி நிச்சயித்திருக்க; நான் முதனாளிரவே நடுச்சாமத்தில் தன்னந்தனியே புறப்பட்டு இடையிற் பல கஷ்டப்பட்டு ஈற்றில் இந்தப் படக்காட்சிக் கூட்டத்தில் வந்து சேர்ந்தேன்; முந்தியே சங்கீதமும் நாட்டியமும் ஒரு அளவிற்கு அறிந்த நான் பின்னரும் சிலகாலமாக அவைகளை நன்றாய்ப் பயின்று இப்பொழுது திறமையோடு நடித்து வருகிறேன்; படக்காட்சிச்சபை முதலாளியும் என்னைப் பெரிதும் அபிமானித்து எனக்கும் போதிய வேதனம் தந்து வருகிறார்; இதுதான் அம்மா என் வரலாறு" என்று சொல்லி முடித்தாள் அந்த அம்மாள். அக்கா உங்கள் பெயரென்ன என்று நான் கேட்கத் தன்பெயர் அஞ்சுகத்தம்மாள் எனப் பதில்சொன்னாள். அக்கா, இது அப்படிப்பட்ட இடமா என்று கேட்டு நான் ஏக்கமடைந்தேன்; "தங்காய் நீ பயப்பட வேண்டாம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கும் மரியாதையாக வாழலாம் என்று அந்த அம்மாள் சமாதானஞ் சொன்னாள்; நரி வசிக்குங் காட்டிற்கு அஞ்சிப் புலி வசிக்குங் நாட்டையடைந்தவாறாயிற்றே யென்று என்னளவில் எண்ணிக் கவலைப்பட்டேன்; அப்படியான சமயத்தில் கௌரவமான ஒருவர் அஞ்சுகம் என்று கூப்பிட்டுக்கொண்டு அங்கேவர "வாருங்கள் ஐயா" என்று சொல்லி அவள் எழுந்து அவருக்கு ஆசனமுதவி உபசரித்து நிற்க, நானும் எழுந்து ஒரு மூலையில் ஒதுங்கி நிலத்தைப் பார்த்தபடி நின்றேன்.

* * *

உலகம் பலவிதம்: 1944 நவம்பர் 09 விசாலாட்சி: (முற்றொடர் - 25)

இவர் யாரென்று உமக்கு விளங்குமா?

வந்தவர் நின்ற எங்களிருவரையும் இருக்கும்படி சொல்ல, அஞ்சுகம் என்னை இருக்கச் சொல்லிவிட்டு தான் ஒரு ஸோபாவிலிருக்க, நான் இருத்தலின்றி அப்படியே நின்றேன்; "ஏன் அப்படி அமரலாமே" என்று அந்தப் பிரபு என்னைப்பார்த்துச் சொல்ல இல்லை, ஐயா, நான் இப்படி நிற்கிறேன் என்று சொல்லிவிட்டு ஒதுங்கி நின்றேன்; "இந்த அம்மாள் யாரென்பதை நான் அறியலாமா" என்று அந்தப்பிரபு இதமாக வினவ, அஞ்சுகம் என் வரலாற்றைச் சுருக்கமாக அவருக்குச் சொன்னாள்; "சங்கீதம் பரதநாட்டியம் உமக்கு வருமோ" என்று பிரபு என்னைக் கேட்க, அற்பமாகத் தெரியுமென்று நான் பதில் சொன்னேன்; பின்னரும் சில நிமிஷ நேரம் அந்தப்பிரபு அங்கே இருந்துவிட்டு அறையைவிட்டுப் புறப்பட, அஞ்சுகம் அவரை வழி விடும்படி பிறகே சென்றாள்; செல்லும்போது அஞ்சுகத்திற்கு அவர் ஏதோ இரகசியமாகச் சொல்வதை நான் அவதானித்தேன், அவள் அவரை வழிவிட்டு மீண்டு என்னிடம் வந்து "இப்பொழுது வந்துபோகும் இவர் யாரென்று உமக்கு விளங்குமா" எனப் பெருமிதத்துடன் கேட்க, இராத்திரி வந்த எனக்கு இவரைப்பற்றியென்ன தெரியும் அக்கா என்று சொல்ல, "தங்காய், இவர் இந்தப் பட்டினத்திலுள்ள ஒரு பேசும் படக்காட்சி ஆக்கும் சமுதாயத்திற்கு முதலாளியாகவுள்ளவர்; அவரை யறியாதவர் இந்தத் தேசத்திலே இல்லையெனலாம்; கேசவ முதலியாரென்றாற் பள்ளிக்கூடப் பிள்ளைகள் தாமும் அறிவார்கள்; இவர் ஒரு பிரபு; செல்வஞ் செல்வாக்கோடு கூடியவர்; இலட்சாதிபதி; கொடை வள்ளல்; பேசும்படங்கள் ஆக்கும் இவருடைய சமுதாயத்திலே நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களுமிருக்கின்றார்கள் அவர்களெல்லாராலும் இவர் பெரிதும் மதிக்கப்பட்டு வருகிறார்; இவர் நிர்வகித்து நடத்தும் இந்தச் சமுதாயத்திற் சிறந்த சங்கீத நிபுணர்களும் நடிகர்களும் நடிகையரும் தாமாகவே தேடிவந்து சேருவதற்குக் காரணம்; இந்தப் பிரபு எவரையும் மரியாதையோடும் மதிப்போடும் நடத்தி வருவதேயாகும். இவைகளோடு இவர்தக்க வேதனமும் அவரவர் திறமைக்கேற்பக் கொடுத்து வருகிறார்; அம்மா, உமக்கும் சங்கீதமும் நாட்டியமும் வருமென்று சொல்லுகிறீர்; இவைகளில் ஏதும் குறைவிருந்தால், அவற்றைப் பூரணமாக உமக்குப் பயிற்றக்கூடிய இசை வித்துவான்களும் நாட்டிய ஆசிரியைகளும் இங்கே இருக்கிறார்கள்; இந்தக் காலத்திற் பேசும் படக்காட்சியிற் சேர்ந்து நடிப்பதே மதிப்பையும் பணத்தையும் சனசமூகத்திற்கு அறிவுவிருத்தியையும் தரத்தக்க தொழிலாகும்; இத் தொழிலில் ஈடுபட்டவர்கட்கு எவ்வகையான சஞ்சலமுமில்லையாகும்; தங்காய், சங்கீத வித்துவான்களும் நடிகையரும் முறையே கேட்பார்க்கும் பார்ப்போர்க்கும் மகிழ்ச்சியையளிப்பதோடமையாது, அவைகளைச் செய்யுந் தாமும் ஏக காலத்தில் ஆநந்தமடைகிறார்களல்லவா? கற்றார்க்குச் சென்றவிட மெல்லாஞ் சிறப்பென்பர்; ஆனால் இசைவல்லாரும் நாடக வல்லுநரும், அவர்கள் இருந்த இடத்திலேயே இருக்க முழுவுலகத்தாராலும் அவர்கள் மதித்துச் சிறப்பிக்கப்படுவரடியம்மா; தங்காய், உம்முடைய யௌவன பருவமும் பேரழகும் இனியமொழியும் இசைக்கல்வி நாட்டியக்கலையறிவும் இன்ன பிறவும் இந்த மேலான தொழிலை நீர் கைக்கொண்டு செய்வதற்கு ஏற்றன அம்மா; நல்லாய் யோசித்துப்பாரும்; எவருமறியாமல் ஊரிலிருந்து புறப்பட்ட நீர் இனி ஊருக்கு மீண்டுபோக நினைப்பீராயின் நீர்பிறந்த அகத்தாரும் புக்க அகத்தாரும் உம்மைப் புறக்கணித்து அவமதிப்பர்; பெண்ணாய்ப்பிறந்தவர்கள் தம் மானத்திற்குப் பங்கம் நேராமல் எத்தொழிலைச் செய்தாலும் அதனால் வரக்கூடிய பழி யாதுமில்லையடியம்மா; ஆனதால் நீர் சிறிதும் கவலைப்படாமற் பயப்படாமல் இந்த மேலான தொழிலில் எங்களுடன் சேர்ந்து உழைக்கலாகும்; நானே உமக்கு எல்லாவகையிலும் பாதுகாப்பாளியாகவிருக்கிறேன்" என்று பரிந்து சொன்னாள்.

படத்திற் சேர்ந்து பின் மானத்துடனிருக்கலாகுமா?

இவைகளையெல்லாம் சிந்தனையோடு கேட்டுக் கொண்டிருந்த நான் அஞ்சுதத்தைப் பார்த்து "அக்கா, நீங்கள் சொல்வது சரி, ஆனால் படக்காட்சியிற் சேர்ந்து கொண்டு மானத்துடன் இருப்பதெப்படி? இரண்டும் ஒன்றுக்கொன்று முழு விரோதமான கருமங்களாகும்" என்று கேட்டேன்; "ஆம், தங்கைச்சி, நல்லாயிருக்கலாம் மனக்கட்டுப்பாடிருந்தால்; நான் இங்கே இருக்கும்வரையில் உமக்கு எவ்வகையான மானபங்கமும் நேராமல் நீர் மதிப்போடிருக்கத் தக்கதாகச் செய்வேன்; நான் சொல்வதை நம்படியம்மா;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் என் பெண்மதியால் மோசம் போய்விட்டே னென்பது நிசம்; ஆனால் இன்று தொடக்கம் உம்மை என் உடன்பிறந்த சகோதரியென எண்ணிவிட்டேன்; ஆனதால் உமக்கு எவ்விதமான பிழையும் நேர விடமாட்டேன்" என்று என் தலையிலே தொட்டுச் சத்தியஞ் செய்தாள் அஞ்சுகத்தம்மாள்; நான் சற்றுநேரம் தீர்க்கமாக யோசித்துவிட்டு "சரி, அக்கா, நீங்கள் சொல்லுகிறபடியே நான் செய்கிறேன்; ஆனால் என் மானத்தை உங்களிடத்தில் அடைக்கலமாக வைக்கிறேன்" என்று கண்ணீர் ததும்பச் சொல்லி நமஸ்காரஞ் செய்தேன்; அஞ்சுகத்தம்மாளும் பிரதி நமஸ்காரஞ் செய்து, "தங்காய், நீர் அதையிட்டு எள்ளளவும் யோசிக்கவேண்டாம்; என் பிராணன் போனாலொழிய உம்முடைய மானம் போகவிடேன்" என்று திடமாகச் சொன்னாள்; ஐயா, அந்த அஞ்சுகத்தம்மாள் அப்படியே தன் சொல்லை நிறைவேற்றிவிட்டாள்; என்னுயிருள்ளவரையும் அந்தப் புண்ணியவதியை மறக்கமாட்டேன்; அக்கா, என் பெண்மதியால் மோசம் போனேனென்று சற்று முன்பு சொன்னீர்களே, அதன் கருத்து எனக்கு விளங்கவில்லையென்று கேட்க, தங்காய், நான் இயன்றவரையில் நியதியோடிருக்க முயன்றும், இந்த முதலாளியின் அபிமானத்திற்கு ஆளாய்விட்டேன்; ஆனால், நடந்ததையிட்டுக் கவலைப்பட்டாவதில்லை; இனி உம்முடைய விஷயத்தில் அப்படியேதும் பிழை நேராவண்ணம் நான் பார்த்துக்கொள்ளுவேன்; நீர் யோசிக்க வேண்டாம் என்று பல தேறுதல் சொன்னாள். நான் பலவாறு யோசித்துவிட்டு இப்படிச் சேர்ந்து நடிக்கச் சம்மதித்தேன்.

"நாய்வேஷமிட்டாற் குரைத்தே தீரவேண்டும்"

என்சங்கீத அறிவையும்நாட்டியத்திறனையும் அவைகளில் நிபுணையான ஒரு மனுஷி பரீட்சித்துப்பார்த்து, மேலே சொல்லப் 'பட்ட வித்தைகளை நான் குரு சீட முறையிற் கிரமமாகப் பயின்றிருக்கின்றேனென்றும், தான் பின்னும் சிலகாலம் எனக்கு அவைகளைப் பயிற்றினால் நான் சிறந்த பாடகியாகவும் நடிகையாகவும் வருதல் கூடுமென்றும் அந்த மனுஷி கேசவ முதலியருக்குத் தெரிவிக்க, அவர் அவையிரண்டினையும் ஒருமாச காலத்திற்கு எனக்கு நன்கு பயிற்றிவிட வேண்டுமென்று கட்டளை செய்ய மனுஷியும் அப்படியே செய்வா ளாயினாள்; இராக்காலத்தில் இடையிடையே நான் என் பெற்றோரையும் மாமனாரையும் சின்ன மாமியையும் பற்றி நினைப்பதுண்டு; என்னை அதிகமாக மதித்திருந்த இராமச்சந்திரனும் நான் மாமனார் வீட்டைவிட்டுக் கரவாகப் புறப்பட்டதைக் கேள்விப்படும்போது என்னைப் பற்றி விபரீதமாக நினைப்பாரேயென்றுங் கவலைப்பட்டேன்; நான் அங்கிருந்து சங்கீதமும் நாட்டியமும் கிரமமாகப் பயிலத் தொடங்கிச் சிலநாட் செல்ல, அஞ்சுகத்தம்மாள் இருக்கும் அறையின் பக்கத்திலேயுள்ள அறை எனக்கென்று பிரத்தியேகமாக விடப்பட்டது; நான் அந்த அறையிற் சகல வசதிகளோடும் வசித்து வந்தேன்; நாங்களிருவரும் வெவ்வேறு அறையிலிருந்தாலும் படுக்கைக்குப் போகும் நேரத்திலொழிய ஏனைய நேரமெல்லாம் நான் அஞ்சுக அக்காவின் அறையுட் போயிருப்பேன், இல்லையேல் அக்காள் என் அறையில் வந்து என்னுடனிருப்பாள். கேசவ முதலியார் இடையிடையே அங்கு வருவார்; வரும்போதெல்லாம் அஞ்சுகத்தின் அறையிலிருந்து கொண்டு என்னை அங்கே கூப்பிடுவித்து என் சுகத்தை விசாரிப்பார்; தம்மால் எனக்காக வேண்டிய உதவி யென்னவென்று அன்புடன் கேட்பார்; நான் சுகமேயிருக்கிறேன்; எனக்கு ஒரு குறையும் இங்கேயில்லை, ஏதும் தேவையிருந்தால் தங்களுக்குத் தெரிவிப்பேன் என்று நான் பதில் சொல்லி வருவேன்; இப்படி யாக ஒருநாள் அங்கேவந்த கேசவமுதலியார், அஞ்சுகத்தம்மாளும் என் பக்கலில் இருக்கும் வேளையில் என்னைப் பார்த்து "வருகிற வெள்ளிக்கிழமையிரவு 9 மணி வரையில் சுபமுகூர்த்தமென்று சொல்லுகிறார்கள் அந்த நேரத்தில் எங்கள் சபையார் முன்னிலையில் உம்மை அரங்கேற்றலாமென உத்தேசிக்கிறேன்; உம்முடைய விருப்பமென்ன" என்று கேட்க, நான் அஞ்சுகத்தம்மாளைப் பார்த்தேன்; அஞ்சுகத் தம்மாள் "அப்படிச்செய்வது நல்லதுதான்" எனலும், உங்கள் இரண்டுபேருக்கும் விருப்பமானால் எனக்குஞ் சம்மதந்தான் என்றேன்; சங்கேதப்படி குறித்த வெள்ளிக்கிழமையன்றிரவு சொல்லப்பட்ட நேரத்தில் அரங்கேற்றுவதற்காகிய ஆயத்தங்களெல்லாஞ் செய்யப்பட்டன; அஞ்சுக அக்காளுடன் நான் அந்த மண்டபத்திற்குப் போதற்கு முந்தியே அங்கு பல நடிகர்கள் நடிகையர்கள் சங்கீத வித்துவான்கள் வித்துவாற்ஸைகள் எல்லோரும் வந்து குழுமியிருப்பக் கண்டேன்; என்னைப் பயிற்றிய அந்த அம்மாளும் பக்க வாத்திய காரரும் மேடையிலிருப்பதையும் பார்த்தேன்; (இதற்கிடையில் விசுவநாதன் இரஞ் சிதத்தைப் பார்த்து உம்மைப் பயிற்றிய அந்த அம்மாளுக்கு ஊர் பெயர் இல்லையா என்று வினாவ, அந்த அம்மாள் எந்தவூரவளென்றறியேன்; பெயர் பூங்கோதைநாயகி எனப் பதில் சொன்னாள்) அஞ்சுக அக்காளும் நானும் அங்கே போகக் கண்டவுடன் மேடையில் எங்களுக்கென வகுக்கப்பட்ட இடத்தைக் காட்ட நாங்களிருவரும் அந்தந்த இடத்திலிருந்தோம்.

கல்லுஞ் சொல்லாதோ கவி

நாங்கள் இருந்தவுடனே, மகிழ்ச்சி மேலீட்டினாற் போலும் சபையிலிருந்தோரெல்லாரும் கரகோஷஞ் செய்தார்கள்; அந்தக் கோஷத்தைக் கேட்ட மாத்திரத்தே என் மார்பிற் பெரிய கல்லை வைத்தாற்போல் எனக்கு ஏக்க முண்டானது; மனம் பதறியது, தேகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுங்கியது. நா உலர்ந்தது, கண்டம் அடைத்தது, உடம்பு முழுவதும் குறுவியர்வையரும்பியது, கண்கள் மின்னின, தலைசுழல்வதுபோற் புலப்பட்டது, இந்தப் பேராபத்துள் எங்குவந்து அகப்பட்டேனென்றெண்ணிக் கலங்கினேன்; என் நிலைமையைப் பக்கத்திலிருந்த அஞ்சுக அக்காள் நுட்பமாக அவதானித்துவிட்டாள்; "தங்காய், நாய் வேஷம் போட்டாற் குரைத்தே தீரவேண்டும்; பாடவென்று வந்திருந்துகொண்டு அவைக்கஞ்சாதே. உன்னையொப்பாரும் உன்னில் மிக்காரும் இந்தச் சபையில் இல்லையென்று மனத்தைத் திடப்படுத்தி சகலகலாவல்லியைத் தியானித்துக் கொண்டு அவள்மேல் ஒரு கீர்த்தனம் பாடம்மா" என்று உறுதியாக மெல்ல எனக்குச் சொல்லிவிட்டு "படிகநிறமும் பவளச் செவ்வாயும்..." என்னும் நாமகள் தோத்திரத்தை அடியெடுத்துக் கொடுக்க, நான் கலைமகளைத் தியானித்துக் கொண்டு அச்சமேலீட்டினாற் கண்களை மூடியபடி பாடத் தொடங்க, பக்கவாத்தியகாரரும் வாத்தியங்களை, பருந்தும் அதன் நிழலும் போல் இசைய வாசிக்க, பாடி முடித்த மாத்திரத்தே சில நிமிஷநேரம் கரகோஷம் இடையறாது என் காதிற்பட நான் கண்திறந்தேன்; அங்கிருந்தோரெல்லாம் மகிழ்ச்சியோடிருக்கக் கண்டேன்; நான் படித்த கவியில் அல்லும் பகலும் அநவரதமும் நினைத்தாற் கல்லுஞ் சொல்லாதோ கவி" என்ற ஈற்றடியிரண்டும் என்னுள்ளத்தையுருக்கிக் கலைமகளின் அருளைப் பெருக்கிவிட்டன; இறைவியின் கடாட்சத்தினாற் போலும் என்னைப் பீடித்திருந்த ஏக்கம் அச்சம் முதலியனவெல்லாம் அறவே விட்டகன்றன; உள்ளத்திற் கிளர்ச்சி பதித்தது; பின்னர் ஒருகீர்த்தனை பாடினேன்; திருப்புகழ் ஓதினேன்; மங்களம் படித்தேன்; இவைகளொவ்வொன்றையும் படித்து முடிக்கும்போது சபையோர் மெச்சிக் கரகோஷஞ் செய்தனர்; என் திறமை எள்ளளவுமில்லை, எல்லாம் அந்தத் தேவியின் அருளேயென்றெண்ணி அவளை வழுத்தினேன்; சங்கீதம் ஆய்விட்டது;

"எல்லாம் கலைமகள் கடாட்சம்"

அடுத்த விஷயம் பரதநாட்டியமென்று சபைக்குத் தெரிவிக்கப்பட்டது; நாட்டியத்திற்காகிய உடையை எனக்கு உடுத்திவிடும்படி அக்காள் என்னை அயலிலுள்ள அறைக்குள் அழைத்துக்கொண்டு போனாள்; இடைநேரத்தில் அங்குள்ள வாத்தியகாரர் சங்கீதம் நடத்திக் கொண்டிருந்தனர். எனக்கு அணியவேண்டியவற்றை யணிந்து உடுத்த வேண்டிய முறைப்படி உடுத்தி அலங்காரஞ் செய்தபின் அக்காள் அழைத்துக்கொண்டு வந்து அரங்கில் விட்டாள்; நான் பூங்கோதைநாயகியையும் அஞ்சுக அக்காளையும் கும்பிட்டுச் சபையோருக்கும் நமஸ்காரஞ் செய்துகொண்டு முறைப்படி பரத நாட்டியஞ் செய்தேன்; முன்போலக் கரகோஷம் எழுந்தது; நாட்டியம் முடியவே சிலர் என்னைப் பாராட்டிப் பேசினர்; நானொன்றுமறியேன் எல்லாம் கலைமகள் கடாட்சம்தான் என்று சொல்லிச் சபைக்கு வந்தனஞ் செய்துவிட்டு அக்காளுடன் எங்கள் இருப்பிடத்திற்கு மீண்டேன்; உடன்வரும் போதும் வந்து சேர்ந்த பின்னும் அஞ்சுகத்தம்மாள் என்னைப் பாராட்டினாள்; அக்கா என்மேல் நீங்கள் கொண்ட அபிமானத்தினால் இப்படிச் சொல்லுகிறீர்கள்; உண்மையாக நான் உங்கள் பாராட்டிற்குரியவளல்லேன் என்று சொல்லவும் என் சொல்லை அக்காள் ஏற்றுக்கொள்ளவில்லை; எங்கள் இடத்திற்குச் சென்றவுடன் இருவரும் உடையை மாற்றிக் கொண்டு போசனஞ் செய்தோம்; அஞ்சுக அக்காள் என்னைப்பார்த்து, "தங்காய், உமக்கு இப்பொழுது அதிக சிரமமுண்டல்லவா, சிரம பரிகாரமாகப் போய்ப் படுத்து உறங்கு அம்மா" என்று ஆதரவுடன் சொல்ல, "அக்கா, உங்களைத் தமக்கையாகப் பெற்றமையினாலே நான் என் பெற்றார் உற்றாரையும் மறக்கலானேன்" என்று உள்ளமுருகச் சொன்னேன்; "ஒன்றுக்குங் கவலைப்படவேண்டாம் அம்மா உமக்கு ஏதும் குறைவுநேர ஆண்டவன் விடமாட்டான்" என்று சொல்லித் தன் கையால் என்னை அணைத்து என் அறையுட் கூட்டிக்கொண்டுவந்து, தானே என் படுக்கையை விரித்து என்னைப் படுக்கச் செய்துவிட்டுப் போகும்போது என் அறைக்கதவையும் பூட்டித் துறப்பையும்கொண்டு தன் அறையுட் சென்றாள். அவள் என்மேல் வைத்த அன்பையிட்டு எண்ணியெண்ணி உருகினேன்; அதிக சிரமமிருந்தபோதும் அந்த நேரத்தில் எனக்கு உறக்கம் வரவில்லை; யாதும் பேசாமற் சும்மா படுத்துக்கிடந்தேன்; இங்ஙனமாக கேசவ முதலியார் அங்கேவந்து "அஞ்சுகம் என்ன உறங்கிவிட்டீர்களா" என்று கேட்க, இல்லை ஐயா என்று அக்காள் பதில் சொல்ல, உன்னையும் இரஞ்சிதத்தையும் பார்த்துவிட்டுப் போகலாமென்றல்லவா சிரமத்தையும் நித்திரையையும் பொருட்படுத்தாமல் இந்த நேரத்தில் இங்கே வந்தேன் என்று அவர் சொல்ல, "இரஞ்சிதம் தேக அலுப்பினாற் படுத்து உறங்கிவிட்டாள்; அந்த அம்மாளின் நித்திரைக்குப் பங்கஞ் செய்யவொண்ணாது; வேணுமானால் என்னைப் பார்த்துக்கொண்டு நீங்கள் போகலாம்" என்று அக்காள் சொல்வதைக் கேட்டேன்.

* * *

உலகம் பலவிதம்: 1944 நவம்பர் 16
விசாலாட்சி: (முற்றொடர் - 26)

"என்னைப்போல் ஏமாந்தவளல்லள்"

அங்கு வந்திருந்த கேசவமுதலியார் அஞ்சுகத்தைப் பார்த்து, "அஞ்சுகம், இன்று ரஞ்சிதத்தின் சங்கீதத்தையும் நாட்டியத் திறமையையும் அங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருந்தோரெல்லாரும் பாராட்டினார்கள்; நானும் பல நடிகைகளைப் பார்த்துள்ளேன்; ஆனால், இரஞ்சிதத்திற்கு நிகராக ஒருத்தியையும் இதுவரை யான் கண்டதில்லை; நீ என்ன சொல்லுகிறாய்" என்று அற்புதத்தோடு சொல்லிக் கேட்க, அஞ்சுகம் "நானும் அப்படித்தான் சொல்லுகிறேன்" என்றாள்; "அப்படியாயின் இப்பொழுது நாங்கள் ஆயத்தஞ் செய்ய உத்தேசித்திருப்பதாகிய கீசகன் வதை என்னும் பாரதக்கதையில், இரஞ்சிதத்தை விரதசாரணியாகவும், உன்னைச் சுதேட்டிணையாகவும் நடிக்க ஒழுங்கு செய்ய லாமென்றெண்ணுகிறேன்" என்றார் கேசவமுதலி யார். "அப்படிச் செய்யலாந்தான்; ஆனால் யாரும் ஆடவரோடு சேர்ந்து நடிக்கும் நோக்கம் இரஞ் சிதத்திற்கில்லையென்று நினைக்கிறேன்" எனப் பதில் சொன்னாள் அஞ்சுகத்தம்மாள்; "படக்காட்சியிற் பங்கு பற்றுவதானால் ஆடவருடன் சேர்ந்து நடிக்காமலிருக்க முடியுமா? நீ சொன்னால் அந்தப் பெண் கேட்டுக்கொள்வாள்; வேணுமானால் நானும் நாளைப் பின்னேரம் வந்து நேரிற் கண்டு சொல்லுகிறேன்" என்று முதலியார் சொல்ல, "ஏதோ, கேட்டுப் பார்க்கிறேன்; நீங்களும் வந்து சொல்லிப் பாருங்கள்" என்று அஞ்சுகம் பதில் சொன்னாள்; "அஞ்சுகம், நான் கேட்பதையிட்டு விபரீதமாக நினையாதே; இரஞ்சிதத்தைப் பார்த்தாற் பெரிய இடத்துப் பெண்போற் காணப்படுகிறாள்; நல்ல குணம், யௌவனம், அழகு, இதமான வார்த்தை முதலியவைகளுடையவளாக விருக்கிறாள்; இப்பெண்ணுடைய பூரண வரலாறும் உனக்குத் தெரியுமா" என்று ஆவலுடன் கேசவமுதலியார் கேட்க, அஞ்சுகம் "நீங்கள் சொல்லுங் குணங்களும் செயல்களும் உள்ளபடி அவளிடத்து அமைந்துள்ளன; என்னைப்போல அவளும் ஒரு பிராமணப்பெண்; ஆனால் அவள் குடும்பத்திற்குரிய பெண்; ஒரு மனஸ்தாபத்தினால் தன் வீட்டையும் பெற்றார் சுற்றத்தாரையும் விட்டுப்பிரிந்து சென்ற சமயத்தில், இங்கே வந்து சேர்ந்தாள்; இந்த நாடகத் தொழிலில் அவள் பங்குபற்றக்கூடியவளல்லள்; என்னிடத்தில் அதிகம் விசுவாசம் வைத்துவிட்டாள், நானும் அவளை என்னுடன் பிறந்த தங்கையென மதித்து அன்புடன் நடத்திவருகிறேன்; என்னையே தஞ் சமென்றெண்ணி இங்கே இருக்கிறாள்; ஆனால் ஐயா, என்னைப்போல் "ஏமாந்தவளல்லள்..." என்று சொல்லி முடிப்பதற் கிடையில், "சரி, அஞ்சுகம், எம்மைப்பற்றி ரஞ்சிதத்தின் அபிப்பிராயமென்ன" என்று முதலியார் வினாவ, "உங்களைப்பற்றி அந்தப் பெண் ஏதும் அபிப்பிராயம் கொள்வதற்கு உங்களோடு அவள் நல்லாய் ஊடாடவில்லை; இன்னுஞ் சிலநாள் ஊடாடினாற்றான் உங்களைப்பற்றி அவள் ஏதும் அபிப்பிராயங்கொள்ள முடியும்; அந்த அபிப்பிராயத்தை எனக்குச் சொல்ல முடியும்" என்று வேடிக்கையாகச் சொன்னாள். "நல்லது, அஞ்சுகம் நேரமும் நடுச்சாமமாய் விட்டது; நான் இப்பொழுது வீட்டிற்குப்போய், நாளை மாலை வேளை இங்கே வருவேன்; வந்து இரஞ்சிதத்துடன் சில விஷயங்களை நேரிற் பேசி யொழுங்கு செய்துகொள்ள வேண்டும்" என்று சொல்லிவிட்டு அஞ்சுகத்திடம் விடை பெற்றுக் கொண்டு முதலியார் அகன்றார். நான் உறக்கமின்றிக் கிடந்தமையினால் இருவர் பேசிய வார்த்தைகள் முழுதும் என் காதிற் பட்டன; பின்னர் நானும் உறங்கிவிட்டேன்;

உருத்திராக்கப் பூனை

அன்றிரவு விடிவதற்குச் சற்று நேரமிருப்ப, அஞ்சுகத்தக்காள் தானே திறவுகோலைக் கொண்டுவந்து என் அறையைத் திறந்து "தங்காய், உறக்கம் நீங்கவில்லையா" என்று ஆதரவுடன் சொல்லியபடி என் பக்கத்திலே வந்திருந்தாள்; நானும் உடனே படுக்கைவிட்டெழுந்து "என்ன அக்கா" என்று அன்புடன் கேட்க, கேசவமுதலியார் அங்கே வந்தமை தொடக்கம் மீண்டுபோனமையீறாகச் சகல செய்தியையும் எனக்கு உள்ளபடியே சொல்லி "அம்மா, முதலியார் உம்முடன் நேரே பேசவேண்டுமென்று எனக்குத் தெரிவித்து விட்டுப் போயிருக்கிறார்; அவர் அவ்வளவு திறமானவரென்றெண்ணாதீர்; அவரோடு மரியாதையாகவும் அவதானமாகவும் நடந்து கொள்ளவேண்டும்; அவர் ஒரு உருத்திராக்கப் பூனையடியம்மா; ஆனால் நானிருக்கும் வரையில் அவர் உனக்கு ஒரு பிழையுஞ் செய்ய முடியாது..." என்று என் அக்காள் சொல்ல, "அக்கா, அந்த உருத்திராக்கப் பூனையின் கதை என்ன" என்று நான் கேட்க அவள் பின்வருமாறு சொன்னாள்:

"தங்காய், இது பஞ்சதந்திரத்திலேயுள்ள ஒரு கதை; ஒரு கிலமடைந்த பிள்ளையார் கோவிலிற் பல எலிகள் சஞ் சரித்தன; அங்கே ஒரு பூனையும் போய்ச் சேர்ந்தது; பூனை அந்த எலிகளைப் பிடித்துத் தின்ன முயலலும் எலிகள் அதற்கு அகப்படாதொழிந்தன; பூனையைக் கண்டவுடனே எலிகள் கோயிலை விட்டே அப்புறம் ஓடி விடுவதுண்டு; இதனால் அந்தப் பூனை எலிகளை உபாயத்தால் வஞ்சிக்க நினைத்து அந்தப் பிள்ளையார் கோவிலிலுள்ள ஒரு மாடத்தில் உருத்திராக்கமாலை யொன்று கிடப்பக் கண்டு அதனைத் தன் முன்னங் கால்களால் மெல்ல எடுத்துத் தன் கழுத்திலே யிட்டுக்கொண்டு விநாயகர் சந்நிதியில் யோகஞ் செய்பவர்போல, கண்களை மூடியபடி மேலே பார்த்தவண்ணம் அசைவின்றியிருந்தது; இப்படிப் பூனையிருத்தலை அவதானித்த எலிகள், இந்தப் பூனைக்கு ஏதோ ஞானம் பிறந்துவிட்டதென்றெண்ணி, முதல் தூரத்திலேயிருந்து பார்த்து, மெல்ல மெல்ல அதன் சமீபத்திலும் வரத் தலைப்பட்டன; அப்பொழுதும் பூனை யோக சாதனத்திலேயே ஈடுபட்டிருந்தது; தங்கள் குல பகையாகிய பூனையின் யோகத்திலே நம்பிக்கைகொண்டு அந்த எலிகள் அச்சமல்லாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பூனையைப் பரிசிகத்து விளையாடவும் தொடங்கின; அப்பொழுதும் பூனையின் யோக சாதனம் முடியவில்லை; பூனை எங்களுக்கு இனி எவ்வகையான இடருஞ் செய்யப்போவதில்லையென நம்பி எலிகளெல்லாம் ஒரு இரவு பூனையின் பக்கலிலே படுத்துறங்கும்போது அந்த உருத்திராக்கப்பூனை அது தான் சமயமென்று நினைத்து அந்த எலிகளுட் பலவற்றைக் கொன்று சிலவற்றைத் தின்றது; இதுதான் தங்காய், உருத்திராக்கப் பூனையின் கதை; அப்படியே இந்த முதலியாரும் பார்த்தாற் பசு அம்மா பாய்ந்தாற் புலியாவர்; ஆனால் உம்மிடத்தில் அவருடைய வஞ்சனையொன்றும் பலியாதென்பதை நான் அறிவேன்; நீர் எதனையும் அறிந்தும் அறியார்போல் நடந்துகொள்ள வேண்டு"மென்று எனக்கு அஞ்சுகத்தம்மாள் புத்தி சொன்னாள்; பின்னர் நாங்கள் எங்களெங்கள் நித்திய கருமங்களைப் பார்த்து முடித்தோம்.

உமது நோக்கமென்ன?

பிற்பகல் 4 மணிவரையிலிருக்கும், அக்காளும் நானும் பேசிக்கொண்டிருக்கும் போது ஒரு பெண் அங்கே வந்து அஞ்சுகத்தக்காளைப்பார்த்து "அம்மா, உங்களைப் பயிற்சி மண்டபத்திற்கு அழைத்து வரும்படி உவாத்தியாயர் என்னை இங்கே அனுப்பினார்" என்று சொல்லுதலும், "என்னை மாத்திரமா" எங்கள் இரண்டுபேரையுமா" என்று அக்காள் கேட்க, "உங்களை மாத்திரந்தான் அம்மா" என்று வந்த பெண் பதில் சொன்னாள். வந்த பெண்ணைப் போகச் சொல்லிவிட்டு அஞ்சுகத்தம்மாள் என்னைப் பார்த்து "தங்காய், அவதானமாக இருந்துகொள்ளும்; நான் போய்ப் பொழுதுபடுதற்கு முன் மீண்டு வந்துவிடுவேன்; உமக்கு அலுப்பாகவிருந்தால் நீர் உம்முடைய அறையை உட்பக்கத்தாற் பூட்டிக்கொண்டு படுக்கையிற்போய்ப் படுத்துக்கொள்ளலாம்" என்று சொல்லி என்னிடம் அனுமதி பெற்றுக்கொண்டு போனாள். நான் என்னுடைய அறையிற் பொழுதுபோக்காக ஒரு சங்கீதப் புத்தகத்தை யெடுத்துப் படித்துக்கொண்டிருந்தேன்; நேரம் ஐந்து ஐந்தரைமணி வரையிலிருக்கும்; அஞ்சுகம் என்று கூப்பிட்டபடி கேசவமுதலியார் அக்காளின் அறையை நோக்கி வந்தார்; நான் என்னிருக்கை விட்டெழுந்து எனது அறையின் வாசலண்டை நின்றபடி "அஞ்சுகத்தக்காள் இங்கேயில்லை; சற்று முன்புதான் பயிற்சிக்கழகத்திற்குப் போனது" என்று விநயமாகப் பதில் சொன்னேன்; "அப்படியா, நல்லது, நீர் என்ன செய்கிறீர்; உம்மைக் காணும்படியாக நேற்றிரவு இங்கு வந்தேன், நீர் உறங்கிவிட்டதாக அஞ்சுகஞ் சொன்னாள், அதனால் மீண்டு போய்விட்டேன்; உம்முடன் சில விஷயம் பேசவேண்டியிருக்கிறது..." என்று முதலியார் சொல்வதற்கிடையில், நான் அறையில் இருந்த ஒரு நாற்காலியை வெளியிற் கொண்டுவந்து இட்டு, இப்படி அமருங்கள் ஐயா என்று சொல்ல, அவர் அதில் இருந்து கொண்டு, நீரும் ஒரு நாற்காலியை எடுத்துக் கொண்டுவந்து இட்டு அதில் இருக்கலாமே என்று சொல்ல, இல்லை ஐயா, நீங்கள் இருப்பதும் நான் நிற்பதுந்தான் முறை என்றுசொல்லி ஒருபுறத்தே ஒதுங்கி நின்றேன்; முதலியார் என்னை நோக்கி "இரஞ்சிதம், நேற்று உம்முடைய சங்கீதத் திறமையையும் நாட்டியக்கலைத் திறனையும் கேட்டும் பார்த்தும் பாராட்டாதாரெவருமில்லை; நானும் எத்தனையோ சங்கீத வித்துவான்களையும், நடிகர் நடிகையரையும் பார்த்துள்ளேன், கேட்டுள்ளேன், அவர்களுடன் ஊடாடியுள்ளேன்; ஆனால் உமக்கு நிகராக எவரையும் பார்த்ததுமில்லை; கேட்டதுமில்லை; உம்மை எங்கள் சமுதாயத்திலே முதல்வகுப்பு நடிகையாக நியமித்து உமக்கு உயர்ந்த வேதனமும் உதவ உத்தேசித்திருக்கின்றேன்; உமது நோக்கமென்ன" என்று இதமாகக் கேட்டனர்; ஐயா, ஏதோ என்னைப்பற்றி அதிகமாகச் சொல்லுகிறீர்கள்; நான் ஒன்றுமறியேன்; நீங்கள் என்னையிட்டுச் சொல்வது முகமனல்லாவிட்டால், எல்லாம் அந்தக் கலைமகளின் கடாட்சமென்றே நினைக்கிறேன்; ஆனால் நான் முதல்வகுப்பு நடிகையாக இருக்கமுடியாது என்றேன்; "ஏன் அப்படிச் சொல்லுகிறீர்" என்று முதலியார் அப்பொழுதுங் கேட்க, ஐயா, நான் ஆடவர்களுடன் சேர்ந்து நடிப்பதில்லையென்ற நியதிபூண்டுள்ளேன் என்றேன்; "அப்படியா? அதிலென்ன தோஷம்? இங்குள்ள சிறந்த நடிகையரெல்லாம் தம்மையொத்த திறமையுடைய நடிகர்களுடன் சேர்ந்துதானே நடிக்கிறார்கள்; அதனால் ஒரு குறையுமில்லையே; அப்படிச் சேர்ந்து நடித்தாற்றான் நடிகையரும் மேலும் மேலும் சோபிக்கலாம்" என்றார் முதலியார்.

"உமது அதிர்ஷ்டம் எமது பாக்கியம்"

"ஐயா, சொல்லுகிறேனென்று குறையெண்ணாதீர்கள்; ஏதுஞ் சங்கீதக்கச்சேரி நடத்த, இல்லையேல், தனியே பரதநாட்டியஞ் செய்ய நீங்கள் ஒழுங்கு செய்தாற்றான் நான் உங்களுடைய சபையிற் பங்குபற்ற முடியும்; இல்லையேல் என்னை நெருக்கவேண்டாமென்றேன்; முதலியார் சிறிது யோசித்துவிட்டு "அதற்கென்ன, நீர் உம்முடைய வசதிப்படி செய்துகொள்ளலாம்" என்றார். பின்னரும் முதலியார் என்னை நோக்கி, "ரஞ்சிதம், நான் கேட்பதையிட்டு நீர் விபரீதமாக நினைத்துக் கொள்ளவொண்ணாது; உம்முடைய பெயரையும் விபரத்தையும் எங்கள் பதிவு புத்தகத்திலே பதிந்து கொள்ளல்வேண்டும்; ஆனதால் உமது பெயர், ஊர், பெற்றார்பெயர், விவாகமாயிருந்தாற் கணவன்பெயர், உமது பாதுகாப்பாளர் பெயர் முதலியவைகளை யெல்லாம் விபரமாகச்சொல்லவேண்டும்" என்று கேட்டார். இவைகளையெல்லாம் எப்பொழுது பதிய எண்ணியிருக்கிறீர்கள்? ஐயா, என்று நான் கேட்க, நாளைத் தினம் நல்ல நாள்; ஆனதால் நாளைக்குப் பதிவு செய்யலாமென்று நினைக்கிறேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனலும், "அப்படியானால், அஞ்சுகத்தக்காள் மீண்டு வந்தவுடன் அந்த அக்காள் மூலமாக உங்களுக்கு வேண்டிய விபரங்களைத் தெரிவிப்பேன்; எனக்குப் பாதுகாப்பாளர் எவரும் இந்த நேரத்தில் இல்லை; அஞ்சுகத்தக்காளையே என் பாதுகாப்பாளியாகப் பதிவு செய்துகொண்டாற் போதும்; அந்த அக்காள்தான், இப்பொழுது எனக்குத் தாயுந் தந்தையும் நெருங்கிய சுற்றமுமாயிருக்கின்றாள் என்று கண்களில் நீர் ததும்பக் கவலையுடன் சொன்னேன்; நான் கலங்குவதைப் பார்த்து முதலியார் தாமுங் கவலைப்பட்டுச் சற்றுநேரம் பேசாமலிருந்து பின்னர் என்னைப் பார்த்து, "ரஞ்சிதம், நீர் கவலைப்படவேண்டாம்; உம்முடைய நல்லகாலந்தான் உம்மை இங்கே கொண்டுவந்து சேர்த்துவிட்டதென்றெண்ணிக் கொள்ளும்; உமக்கு இங்கே எவ்வகையான குறையும் வராமல் நானே பார்த்துக்கொள்ளுகிறேன் உமக்கு ஆகவேண்டிய சௌகரியங்களெல்லாம் நானே செய்வித்து வைக்கிறேன்; உமது அக்காள் அஞ்சுகமெனிலோ எல்லார்க்கும் நல்லவள்; எனக்கு மிகவும் இனியவள்; அவள் என்றும் உமக்குத் துணையாயிருப்பாள்; நீர் கலங்கவேண்டாம்; நிற்க, ரஞ்சிதம்; நீர் மற்றை விபரங்களைத்தான் இப்பொழுது சொல்லா விட்டாலும், உம்முடைய குலமென்ன, உமக்கு விவாகமாகிவிட்டதா என்ற இரண்டு கேள்விகளுக்கும் விடை சொல்ல வொண்ணாதா" என்று ஆவலுடன் கேட்டார். "ஐயா, நான் பிராமணப்பெண்; ஐயங்கார் குடும்பத்திற் பிறந்தேன்; கல்யாணமாகியும் ஆகாதவளாகத்தான் இப்பொழுதிருக்கின்றேன்; என் பொல்லாத காலத்தினால், என் சுற்றத்தாருடன் மனஸ்தாபப்பட்டுக்கொண்டு கரவாக வீட்டைவிட்டுப் புறப்பட்டு வரும் மார்க்கத்தில் உங்களுடைய ஆட்களிடத்து அகப்பட்டு இங்கு வந்து சேர்ந்தேன்; எஞ்சிய வரலாறெல்லாம் அஞ்சுகத்தக்காளுக்குத் தெரியும் என்று கவலைமீதூரச் சொன்னேன்; "ரஞ்சிதம், நீ கவலைப்படவேண்டாம்; இங்கே நீர் வந்து சேர்ந்தது உமது நல்லகாலத்தினா லென்றெண்ணிக்கொள்ளும்; உம்முடைய சிறந்த குணமும், உயர்ந்த நடையும், நிகரற்ற வனப்பும், இசைத்திறனும், நாட்டியக்கலைத் தேர்ச்சியும் இன்ன பிறவும் உம்மை எவரும் பாராட்டி அபிமானிக்கச்செய்யும்; தம் பெருமை தாம் அறியாரென்ற பிரகாரம் உம்முடைய அருமை பெருமைகளை நீர் அறியாமல் இடர்ப் படுகின்றீர்; நானும் இந்தப் படக்காட்சித் தொழிலைத் தொடங்கிப் பத்து வருடங்கள் வரையிலாகின்றன; ஆனால் உம்மையொத்த ஒரு நடிகை இற்றைவரையில் இங்கு வந்து சேர்ந்ததில்லை; இது உமது அதிர்ஷ்டம்; எமது பாக்கியம்" என்று முதலியார் பேசிக் கொண்டிருக்கும் போது "தங்காய். ரஞ்சிதம்" என்று கூப்பிட்டுக்கொண்டு அஞ்சுகத்தக்காள் அங்கே வந்தாள்.

* * *

உலகம் பலவிதம்: 1944 நவம்பர் 23
விசாலாட்சி: (முற்றொடர் - 27)

"காவல் தானே பாவையர்க் கழகு"

அந்தச் சமயத்தில் அஞ்சுகம் அங்கே வந்தமை முதலியாருக்குப் "பிடிக்க" வில்லை; "நீங்கள் சற்று முன்பு பயிற்சிக்கழகத்திற் சமூகமாயிருந்தீர்களே இங்கு எப்பொழுது வந்தீர்கள்" என்று அஞ்சகம் முதலியாரைக் கேட்க, அவர் "நான் இரஞ்சிதத்தின் பெயரைப் பதிவு செய்தற்காகிய விபரங்களைக் கேட்பதற்காக இப்பொழுதுதான் இங்கே வந்தேன்" என்று பதில் சொன்னார்; விபரமெல்லாம் அறிந்து கொண்டீர்களா என்று பின்னரும் அவள் கேட்க, "சில விபரங்களைத்தான் கேட்டறிந்தேன்; ஏனைய விபரங்களை உன்னிடம் கேட்டறியும்படி இரஞ்சிதம் சொல்லுகிறாள்" எனலும் "மற்றைய விபரங்களை நான் உங்களுக்கு இப்பொழுது சொல்ல வேண்டுமா? இல்லையேல் இனிமேற் சொல்லலாமா" என்று அஞ்சுகம் மீட்டுங் கேட்க, இப்பொழுது உனக்குச் சிரமமாகவிருக்கும், இனிமேற் சொல்லலாம்" என்றார் முதலியார்! பின்னரும் சற்றுநேரம் முதலியார் எங்களுடன் இருந்து நானா வார்த்தைகளைப் பேசிவிட்டு எங்களிடம் அநுமதி பெற்றுக்கொண்டு சிந்தனையோடு கூடியவராய் அவ்விடம் விட்டகன்றார். முதலியார் அங்கு வந்தமையையிட்டு அக்காள் வினவ நான் எனக்கும் அவருக்குமிடையே நடந்த சம்பாஷணையை உள்ளபடி சொன்னேன். கேட்ட அஞ்சுகத்தக்காள் சிந்தனையோடு கூடியவளாய்க் காணப்பட்டாள்; அதனை அவதானித்த நான், ஏன் அக்காள் முகவாட்டத்துடனிருக்கிறீர்கள் நான் என்னபிழை செய்தேன் என்று விசாரத்துடன் கேட்க, அஞ்சுகத்தக்காள் திடுக்குற்று "தங்காய், நீரா எனக்குப் பிழை செய்வது; நீர் எக்காலத்தும் எனக்கு எவ்வகையான பிழையுஞ் செய்யமாட்டீரென்பதை நான் அறிவேன்; இங்கே வந்த இந்த மனுஷனையிட்டுத்தான் கவலைப்படுகின்றேன், நல்ல மனுஷன்; ஆனால் ஒரு பெரும் பிழைதான் அந்த முதலியாரிடத்தில் இருக்கிறது" என்று துயரத்துடன் சொல்ல, என்ன பிழை அக்கா என்று நான் ஆவலுடன் கேட்டேன்; "வேறொன்றுமல்ல, தங்காய், நான் இங்கில்லாத நேரத்திலே, அதுவும் அந்தி வேளையில் இவர் இங்கே வருதற்கு நியாயமில்லை; இதனையிட்டுத்தான் யோசிக்கின்றேன்" என்று பரிவுடன் சொன்னாள் அஞ்சுகத்தம்மாள்; கேட்ட நான் அகத்துட் சிரித்துக்கொண்டு "அக்கா, ஆர் ஆர் ஆடவர் தத்தம் மனத்தில் எங்களையிட்டு என்ன நினைத்தாலும் எமக்கென்ன, கிணற்று நீரை வந்த வெள்ளம் அள்ளிக்கொண்டு போக முடியுமா? பெண்ணாய்ப் பிறந்தவள் தனக்குரியதாகிய மனக்கட்டுப்பாட்டோடு இருப்பாளேயானால் ஆடவனாகப்பட்டான் எவனும் அவளை என்ன செய்யமுடியும்; இது பற்றியல்லவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவப் பெரியாரும்

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள
கற்பென்னுந் திண்மை யுண்டாகப் பெறின்"

எனக் கூறியுள்ளார். அல்லாமலும் பெண்களாகிய எங்களுடைய மானத்தைப் பாதுகாப்பன நாம் இருக்கும் வீட்டின் நான்கு சுவர்களல்லவாம்; அறையின் பூட்டுத் திறப்புக்களல்லவாம்; காப்பவர் பெற்றார் உற்றார் பெரியோரல்லராம்; எங்களெங்கள் மனத்திண்மைதானாம் எங்கள் அருங் கற்பைக் காப்பது; இதனையிட்டே,

"சிறைகாக்குங் காப்பு எவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை"

என வள்ளுவனாரும் "காவல் தானே பாவையர்க்கழகு" என எங்கள் மூதாட்டியும் முந்தியே சொல்லிவிட்டார்கள்; ஆதலால் அக்கா, அந்த முதலியாரால் என் மானத்திற்கு ஏதும் பங்கஞ் செய்ய முடியாதென்பதை எண்ணிக் கொள்ளுங்கள்; மேலும் பெண்கள் இசையாத பட்சத்தில் ஆடவன் கொண்டதன் நோக்கம் கைகூடியதைப் பாடல் படிப்பில் எங்கேனும் பார்த்ததுண்டா? படித்தவர்கள் சொல்லக் கேட்டதுண்டா? இரண்டுமில்லையே; இந்திரனுடைய தேவிமீது சூரன் இச்சைப்பட்டான்; சானகிமேல் இராவணன் ஆசைவைத்தான்; தமயந்தி இடத்தில் வேடனொருவன் ஆவல்கொண்டான்; விரதசாரணியென்றிருந்த பாஞ்சாலிமீது கீசகன் மோகங்கொண்டான்; புயபலராசனது தேவியாக - புதுப்பூங்கோதை மேல் வனசரனொருவன் காதல் வைத்தான்; அவர்கள் கொண்ட துர்நோக்கத்தினால் அவர்கள் மாண்டார்களேயொழிய, அந்த உத்தமிகளின் கற்பு நெறிக்கு ஏதும் பங்கம் ஏற்பட்டதா? இல்லையே; இன்னும் இவர்கள் கொண்ட தீய நோக்கத்தால், அந்த உத்தமிகளுடைய கற்பு நிலையும் புகழும் நிலைக்கின்றனவேயல்லாமல் அவர்களுக்கு ஏதும் குறை நேர்ந்ததுண்டா" என்று பல நியாயங்களை எடுத்துச் சொன்னேன்; இவைகளையெல்லாஞ் சொல்லக்கேட்ட என்னக்காள் மன ஆறுதலடைந்து, என்னைப் பார்த்துத் "தங்காய் உம் படிப்பையும் உமது ஒழுக்கத்தையும் நான் இப்பொழுதுதான் அறிந்தேன்; உமக்கோ இந்தவிதி வருவது" என்று சொல்லி என்னைப் பாராட்டினாள்.

புதுப்பூங்கோதை

பின்னரும் அஞ்சுகத்தம்மாள் என்னைப் பார்த்து "தங்காய், இந்திராணி, சானகி, தமயந்தி, பாஞ்சாலி யென்னும் உத்தமிகளுடைய வரலாறுகளை அறிவேன்; நீர் ஈற்றிலே சொன்ன புதுப்பூங்கோதையின் வரலாற்றை நான் முந்திப் படித்ததுமில்லை; படித்தோர் சொல்லக் கேட்டதுமில்லை; அந்த உத்தமியின் கதையை விபரமாகச் சொல்லவேண்டுமென்று கேட்டாள்; நான் அந்தச் சரித்திரத்தையும் அஞ்சுகத் தக்காளுக்கு விபரமாகச் சொன்னேன் ..." என்று சொல்வதற்கிடையில், இவைகளையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த விசுவநாதன் இரஞ்சிதத்தைப் பார்த்து "ரஞ்சிதம், அந்தப் புதுப்பூங்கோதையின் வரலாற்றை நானும் அறியேன்; அதனை எனக்குச் சங்கிரகமாகச் சொல்ல வேண்டும்" என்று ஆவலுடன் கேட்க, இரஞ் சிதம் சொல்லுகின்றாள்:

"ஐயா, பூலோகத்தில் ஐப்பத்தாறு தேசங்களு ளொன்றாகிய வங்க நாட்டைப் புயபலன் என்னும் சூரிய குலத்தரசனொருவன் நீதி தவறாது ஆண்டு வருவானாயினான்; அவன் ஒரு நாள் உத்தராயண புண்ணிய காலத்திற் சற்பாத்திரர்களாகிய பிராமண ருக்குப் பலவகையான தானங்களை வழங்கவேண்டி, அவர்களைத் தன் மாளிகைக்கு அழைத்தான். அங்கே வந்த பிராமணர்களுட் சிலர் அப்பொழுது புயபலராசனை நோக்கி "அரசே, விதர்ப்ப நாட்டிலுள்ள சுசீலரென்னும் சிறந்த மறையவர் இந்த நாட்டில் இப்பொழுது வந்துள்ளார்; அந்தப் பிராமணோத்தமரை நீ இப்பொழுது இங்கேயழைத்து அவருக்கு முதற் றானம் வழங்கிய பின்னர் எங்களுக்கும் தானம் வழங்கினால் நன்மையுண்டாகும்" என்று சொல்ல, உடனே அரசன் தனது புரோகிதர் சிலர் மூலமாகச் சுசீலரைத் தன் மாளிகைக்கு வருவித்தான்; வந்த சுசீலருக்குப் புயபலன் செய்யவேண்டிய உபசாரங்கள் அனைத்தையும் பயபக்தியோடு செய்து அவரை ஒரு ஆசனத்தில் இருக்கச் செய்து அவருக்குச் சொன்ன தானத்தை விருப்பத்தோடு வழங்கும்போது, சுசீல முனிவர் அரசனுடைய நெற்றியில் அச் சமயத்திலே திருநீறு பூசியிருப்பக் காணப்படாமையால், அரசனைப் பார்த்து "அரசனே விபூதி தரித்துக்கொண்டு தானத்தை வழங்கு" என்று கூறித் தானத்தை ஏற்க மறுத்தார்; அதனாற் சிறிது சீற்றமுற்றவனாகிய புயபலன் சுசீலரை நோக்கி "ஏன்? சுவாமீ, திருநீறிடாமற் கொடுக்குந் தானம் சிறந்த தானமாகாதா" என்று கேட்க, முனிவர் "அரசனே, சிவசின்னமாகிய திருநீற்றை யணிதலின்றிச் செய்யப்படும் கருமம் எதுவும் சித்தியடையாது; சற்பாத்திரராயுள்ள மறையவர் இப்படிப்பட்டோரிடத்தில் தானம் பெறுவதும் தவறாகும்; மாநிலங் காக்கும் மன்னவனாகிய நீ விபூதியின் மகத்துவத்தையறிந்திருக்க வேண்டும்; ஆகையினால் விபூதி பூசிக்கொண்டு தானத்தை வழங்குவையேல் ஏற்போம்" என்றார், அரசன் அதனைக் கேட்டு அதிக கோபங் கொண்டவனாய் "அந்தணரே, யான் விபூதி பூச மாட்டேன்; நான் தரும் இந்தத் தானத்தை ஏற்க இஷ்டமானால் ஏற்றுக்கொள்ளுதிர், இல்லையேற் கொள்ளா தொழிவிர்" என்று இகழ்ந்துரைத்தான்; சுசீலர் அந்த அரசனுடைய அறியாமையையிட்டுப் புன்னகை செய்து "அரசனே, உனக்கான உறுதியுரைத்தேம்; கேட்டிலை; சிறந்த சிவசின்னமாகிய திருநீற்றை, உன் அதிகாரச் செருக்கால் அவமதித்தாய்; இதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் இராச்சியமும் அதிகாரமும் உன்னை விட்டகல, உன்னுடைய நால்வகைச் சேனைகளும் மாள, மறுமன்னர் உனது நாட்டைக் கவர, உன் மனையாள் உன்னை விட்டுப் பிரிந்துபோக, நீயும் அங்கவீனனாகிச் சோரனென்று ஆங்காங்கு, கலைக்கப்பட்டு நீசனாகக் கடவை" என்று சாபமிட்டு அந்த இடத்தை விட்டு எழுந்து போவாராயினார்.

புதுப்பூங்கோதை செய்த தவறு

சுசீல மறையவர் அங்ஙனம் போம்போது, புயபல ராசன் பக்கத்தேயிருந்த அவன் தேவியாகிய புதுப்பூங்கோதையென்பாள் ஒரு துரும்பை யெடுத்துத் தன் நாசித் துவாரத்துட் புகுத்தித் தும்மி, "ஐயரே, தந்த தானத்தை வாங்காமற் போகின்றீர்; ஆதலால் தும்மலாகியதடையும் நேர்ந்தது" என்று சொல்லி அந்த மறையவரை அவமதித்தாள், சுசீலர் அந்நிய னாகிய இந்த அரசனுடைய நாட்டில் நாம் சஞ்சரிக்க வொண்ணாதென எண்ணி அந்த வங்கநாட்டை விட்டகன்று தமது விதர்ப்ப நாட்டிற்கு மீண்டார். சில நாட்கள் சென்ற பின் புயபலன் நோய்வாய்ப்பட, அவனுடைய நால்வகைச் சேனைகளுங் காரணமின்றி வலிகுறைய, நாட்டிலே பஞ்சமுண்டாக, முந்தி அவனுடன் பொருது போர்க்குடைந்த குறுநில மன்னர் அற்றம் பார்த்துச் சதுரங்க சேனையுடன் வந்து வங்கநாட்டைச் சூழ்ந்துகொள்ள, புயபலன் மாற்றான் வலிக்குத் தன்வலி ஈடாகாதென்பதை யுணர்ந்து தன் தேவியும் தானும் மறைவாக நாட்டை விட்டுக் காட்டகம் புகுந்தான்; கொடிய கானகத்தின் கண்ணே புகுந்து அரசனுந் தேவியும் இராக்காலத்திற் புலி கரடி சிங்கம் யானை முதலியவற்றின் கொடுந் தொனி கேட்டு ஏக்கமுற்றார்கள்; உண்ண உணவின்றிப் பசிப்பிணியால் உலர்ந்தார்கள்; ஒதுங்குதற் கிட மின்றிக் காடெங்கும் அலைந்தார்கள்; புயபலன் தன்னைப்பீடித்த நோயினாலும் பசிப்பிணியாலும் கவலை மேலீட்டினாலும் வழிகடந்த சிரமத்தினாலும் ஆயாசமுற்று நடுக்காட்டிலே மரநிழலிலே கிடந்தான்; அவனுடைய தேவியாகிய புதுப்பூங்கோவை அவனிலும் அதிகமாக மெலிந்து சோர்வுற்றனளேனும் தன்னாயகனுக்கு நேர்ந்த ஆபத்தான நிலையைக் கண்டு புலம்பினாள்; தேவி செய்த சைத்தியோபசாரத்தால் ஒருவாறு அறிவு வரப்பெற்ற புயபலன், தம்தேவி படுந்துயர் கண்டு தானுந் துயரப்பட்டான்; அவள் பொருட்டு இரங்கினான்; அப்படி இரங்கியவனைத் தேவி தேற்றினாள்; இருவருந் தமக்கு நேர்ந்த பொல்லாத விதியை எண்ணியெண்ணிக் கவலை கொண்டனர்; இப்படியிருக்கும்போது அந்த மார்க்கமாக வந்த ஒரு வேடன் புதுப்பூங்கோதையின் பேரழகையும், அவளைப் பாதுகாக்க ஆற்றாத நிலையில் அவள் கணவன் இருக்கும் நிலையையுங் கண்டு அத்தேவியைத் தனக்கு மனைவியாக்கிக் கொள்ள நினைத்து அவள் கரத்தை வலிதிற் பிடித்து இழுத்துச் செல்ல, புதுப்பூங்கோதை புலியேற்றின் வாய்ப்பட்ட மறிமான்போல மனம் பதற மேனிநடுங்க ஏங்கிக் கதறினாள்; தன்னையுந் தன் மானத்தையுங் காக்கும்படி கணவனை நோக்கி ஓலமிட்டாள்; ஐயோ! பாவம்!! அவன் என்ன செய்வான்; இருக்கைவிட்டெழவுஞ் சத்தியில்லாத நிலைமை யிலானான்; தன் பத்தினியைக் கொடிய வனசரன் பிடித்து இழுத்துக்கொண்டு போவதை நோக்கி நோக்கிக் கதறினான்; அவளை விட்டுப் போகும்படி வேடனை வேண்டி ஓலமிட்டான்; அரசியைப் பற்றியபடி வேடன் காட்டில் மறைந்தான்; புயபலன் இந்த அநர்த்தத்தைப் பார்க்க மனஞ் சகியானாய் அறிவு சோர்ந்து நடுக்காட்டிலே வெறுந் தரையில் தன்னந்தனியே கிடந்தான்.

புயபலன் காட்டை விட்டகன்றமை

அவசமுற்றுக் கிடந்த புயபலன், தேற்றுவாரின்றித் தானேயொருவாறு தேறி அந்த வனத்தின் கண்ணே சிலநாள் அலைந்து திரிந்தான்; தன்தேவியை நினைத்து நினைத்து வருந்தினான்; அவள்கதி எப்படி முடிந்ததோ வென எண்ணி ஏங்கினான்; கற்பிற் சிறந்தவளாதலால் அவளுக்கு இடையூறு யாதும் நேரமாட்டாதென்று நினைத்துத் தன்னைத்தானே தேற்றினான்; சுசீல முனிவருடைய சாபத்தினாற்றான் தனக்கு இந்தப் பொல்லாத கதி நேர்ந்ததென்று பச்சாத்தாபப்பட்டான்; இன்னும் இந்தக் காட்டில் நான் சஞ்சரிப்பேனாயின் எனக்கும் ஆபத்து நேருமென்று அஞ்சினான்; இப்படி யெல்லாம் எண்ணியெண்ணி மனம் நொந்துகொண்டு அக்காட்டில் அலைந்து திரியும் போது ஒரு நாள் அவன் கண்ணுக்கு ஒரு ஊர் புலப்பட, அவன் மெல்ல மெல்ல அந்த ஊரை யடைந்தான்; அவன் அடைந்த அந்தஊர் விதர்ப்ப நாட்டிலுள்ள ஊராகும்; அந்தவூரிலே புயபலன் வீடுதோறுஞ் சென்று பிச்சை யெடுத்துண்டு வயிறு வளர்ப்பானாயினான்.

* * *

உலகம் பலவிதம்: 1944 நவம்பர் 30
விசாலாட்சி: (முற்றொடர் - 28)

"குடை நிழலிருந்து குஞ்
சரமூர்ந்தோர்; நடைமெலிந்தோரூர்
நண்ணினும் நண்ணுவர்"

விதர்ப்பநாட்டையடைந்த புயபலன் பசிப்பிணி வருத்த அங்குள்ள வீடுதோறுந் திரிந்து பிச்சையேற்று வயிறு வளர்ப்பானாயினான்; இப்படியிரந்து திரிந்தவன் ஒருநாள் இரவு தன் பசிக்கு உண்ணுதற்கு உணவு இல்லாமையினால் ஒரு வீட்டின் அடுக்களையுட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரவிற் புகுந்து உணவு திருடும்போது, வீடுடையவர் கண்டுபிடித்துக் கள்வனென்று நகர் காவலரிடம் ஒப்புவிக்கப்பட்டான்; நகர்காவலர் நீதியதிகாரிமுன் அவனைக் கொண்டுபோய் நிறுத்தினர்; நீதியதிகாரி விசாரணை செய்யவும் புயபலன் மௌனஞ் சாதித்தமையினால் அதிகாரி அவனைப் பெருந் திருடனெனவெண்ணி அவனுடைய மாறுகால் மாறுகையைத் துணித்துவிடும்படி கட்டளையிடத் தண்டலாளர் அவனை நகர்ப்புறத்தே கொண்டு போய் அப்படியே செய்தனர்; ஒருகாலும் ஒரு கையும் வெட்டுண்ணப்பெற்ற புயபலன், விதி வலியினால் இரணம் மாறப்பெற்று அங்கவீனனாய்ப் பின்னரும் அந்த நாட்டிலே இரந்துகொண்டு அலைந்து திரிந்தான்; இவன் நிலைமை இவ்வாறாக, இவனுடைய தேவியாகிய புதுப்பூங்கோதையைக் கதறக் கதற அந்த வேட்டுவன் கவர்ந்து போகும்போது, புலம்பும் அரவத்தைக் கேட்டு அந்த மார்க்கத்தில் எதிர்ப்பட்ட புலியொன்று அவ்வேடன் மீது பாய்ந்து அவனைப்பற்றிக்கொண்டு போனது; வேடன் புலிவாய்ப்பட அவனிடத்திருந்து தப்பிய புதுப்பூங்கோதை அக்கொடிய காட்டின்கண்ணே தனித்தவளாய் அலைந்து திரிவாளாயினாள்; ஐயா, அவளுடைய கற்பின் மகத்துவத்தினாற்றான் அப்புலி, அங்கே வந்ததென்றும் அவளைத் தப்பவைத்து அந்த வேடனை மாத்திரம் கொன்றதென்றும் எண்ணுகிறேன்; கொடிய கானகத்திலே தனித்தவளாகிய புதுப்பூங்கோதை தன் பொல்லா விதியை நினைத்து மனம் நொந்து அலைந்து திரிந்து ஈற்றில் அந்த விதர்ப்ப நாட்டினையே வந்தடைந்தாள்; அவளும் பசிக் கொடுமையினால் ஒரு யாசகியாகி அந்நாட்டிலுள்ள இல்லந்தோறும் இரந்து திரிந்தாள்; அவளும் ஒருநாளிரவு பசிப்பிணி வருத்த ஒரு மனையிற் புகுந்து உணவு திருடும்போது கண்டுபிடித்து நகர்காவலரிடம் ஒப்புவிக்கப்பட, அவர்கள் நீதியதிகாரி முன்னிலையிற்கொண்டு போய் நிறுத்த, அவள் தன் வரலாற்றை வெளியிட நாணியாதும் பேசாது நின்றமையினால் அதிகாரி கரம், நாசி முதலிய சில அங்கங்களைக் குறைக்கும்படி கட்டளையிடத் தண்டலாளர் அப்படியே செய்தனர்; அங்கபங்கமடைந்து நகர்ப்புறத்தே கிடந்து வேதனை மேலீட்டினால் வருந்திப் புலம்பலானாள்; சிலநாட் கழிய இவளுடம்பிலுள்ள இரணமெல்லாம் ஒருவாறு மாறிவிட அவள் அங்கவீனத்தோடு பின்னரும் யாசித்து திரிவாளாயினாள். திரியும்போது தன் பழைய நிலைமையையெல்லாம் நினைத்து நினைத்து வருந்தினாள்; "மாளிகையை விட்டுப் புறப்பட்டுப் போன சுசீல முனிவரை, நான் என் மூக்கில் துரும்பையிட்டுத் தும்மிப் பரிகசித்தமையினாற்றான் என் நாசியையிழந்தேன்! எனக்கு இக்கதி நேர்ந்தது" என்று எண்ணிப் பச்சாத்தாபப்பட்டாள்.

"பூசவினியது நீறு
புன்மை தவிர்ப்பது நீறு"

புயபலன் ஒருதினம் விதர்ப்ப நாட்டிலுள்ள பிரதான பட்டினத்தில் மறையவர் வசிக்கும் வீதியில் இரந்து திரியும்போது நல்விதி வசத்தினாற்போலும், சுசீல மறையவர் வாழும் வீட்டினையடைந்து "சாமீ, பசிக்கிறது, ஏதும் பிச்சையிடுங்கள்" என்று இரந்தான்; அவனைச் சற்றுநேரம் உற்றுப் பார்த்த சுசீலர் "அப்பா வங்கநாட்டைப் பரிபாலித்த புயபலன் நீதானா" என்று பரிவுடன் வினவுதலும், கேட்ட புயபலன் திடுக்குற்றான்; விபூதியை அவமதித்துத் தேவரிரை நிந்தித்து இந்தக் கதியடைந்த பாவியேன் நான்றான்; பொறியிலியாகிய நான் என்னை அந்த நேரத்திற் பீடித்த அகந்தையினாற் செய்த பிழையனைத்தையும் பொறுத்து அநுக்கிரகஞ் செய்யவேண்டும்" என்று இரந்து அவருடைய பாதங்களில் அடியற்ற மரம்போல் வீழ்ந்து வணங்கினான் புயபலன்; சுசீலர் அவன்மீது கருணை கூர்ந்து அவனுக்கு விபூதி வழங்க அவன் தன் ஒரேயொரு கையை நீட்டி அந்த விபூதியை ஏற்று முதல் நெற்றியிலும் பின் தன் மேனியடங்கலும் பூசினான்; உடனே திருவருளால் அவனுடைய வெட்டுண்ட கரமுங் காலும் பழையபடி கூடி அவனைப் பீடித்த நோய் அறவேயகன்றுவிட அவன் பழைய அழகிய கோலத்துடன் காணப்பட்டான்; எல்லையில்லா ஆனந்தமடைந்தான்; விபூதியின் மகத்துவத்தையும் அந்த விபூதியைத் தனக்கு வழங்கிய சுசீலருடைய தவத்தின் திறத்தையும் தெய்வத்தின் திருவருள் மாண்பையும் பாராட்டினான்; நினைத்து நினைத்து உள்ளம் உருகினான்; சுசீலரைப் பலமுறை பணிந்தான்; அந்த நிலையில் அவன் நிற்கும்போது, கண்டவர் அருவருக்கக்கூடிய அங்கபங்கப்பட்ட யாசகியொருத்தி அங்கே வருதலை இருவருங் கண்டார்கள்; வந்தவள் புயபலனைக் கண்ட மாத்திரத்தே, அலறிக்கொண்டு அவன் கால்களில் வீழ்ந்து "என் அரசே" என்று ஓலமிட, அவன் அவளை இன்னாள் என அறியானாய் ஒதுங்கி நின்று "நீ யார்" என்று கேட்க, "என் பிராண நாதரே அடியாள் உமது பட்டத்துத் தேவியாயிருந்த புதுப்பூங்கோதை" யென்று முறையிடுதலும் "நீ செய்த பிழையென்ன" என்று அச்சத்தோடும் ஆச்சரியத்தோடுங் கூடியவனாய்ப் புயபலன் வினவ அவள் தான்செய்த பிழையை யெடுத்துக் கூறினாள்; புயபலன் பரிவு கொண்டானாய்ச் சுசீலரைப் பணிந்து சுவாமீ, இந்தப் பெண் பேதை அறியாமையினால் தேவரீருக்குச் செய்த அபராதத்தைப் பொறுத்து இவளுக்கு விபூதி வழங்குதல் வேண்டும்" என்றிரந்தான்; சுசீலர் அப்படியே அவளுக்கும் திருநீறு கொடுக்க, அவள் ஏற்றுப் பூசித் தன் அங்கக் குறையெல்லாம் நீங்கித் தொன்மைபோற்

Digitized by Noolaham Foundation

பேரழகுடன் விளங்கினாள்; "ஐயா, பூசவினியது நீறு, புன்மை தவிர்ப்பது நீறு என்று பெரியோர் புகழ்ந்தது பொய்யாகுமா" என்று இரஞ்சிதம் இடையிற்சொல்ல, கேட்ட விசுவநாதனும் அது நிசந்தான்" என்றான்; பின்னரும் இரஞ்சிதம் விசுவநாதனைப் பார்த்துச் சொல்லுகின்றாள்:

புயபலன் மீட்சி

சுசீல முனிவர் இப்படியான அற்புதத்தைச் செய்தாரென்று கேள்வியுற்றவிடனே, அப்பட்டினத்திலுள்ள சனங்களெல்லாரும் அங்கே வந்து சுசீலரை வணங்கி, அம்மறையவருடைய அருளைப்பெற்ற அரசனையும் அரசியையுங் கண்டு ஆச்சரியமடைந்து சுசீலரின் சிவபக்தித்திறத்தைப் பாராட்டினார்கள்; சிலர் விரைந்துசென்று அந்த அற்புதத்தைத் தங்கள் அரசனுக்குச் சொல்ல, உடனே விதர்ப்ப நாட்டரசனும் தன் தேவியுடன் அங்கே வந்துசேர்ந்து அற்புதமனைத்தையும் நேரிற்கண்டு அதிசயமடைந்து சுசீலரை வணங்கினான்; புயபலனும் தேவியும் அங்கே நிற்கக் கண்ட விதர்ப்பன் சுசீலரை மீட்டும் வணங்கி, "சுவாமி, இந்த அரசன் என் மைத்துனனாவான்; இவன் தன் நாடுநகரிழந்து தேவியுடன் கானகம் புக்கானென்பதைக் கேள்வியுற்று இவ்விருவரையும் தேடிக் கண்டு அழைத்து வரும்படி என் ஒற்றர் பலரையனுப்பினேன். ஆனால் அவர்கள் பல இடங்களிற் சென்று சென்று தேடியும் இவர்களைக் காணாது மீண்டு வந்தனர்; நான் அதனாற் கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன்; உமது அநுக்கிரகத்தால் இவர்களை இங்கே காணப்பெற்றேன்; நான் ஆளும் இந்த நாட்டிலே, சுவாமீ, நீர் இருப்பது, உமது பெருமையை அறியாது யானோ இதுகாறும் இருந்து காலங் கழித்தேனே; என் அறியாமை இருந்தபடி யென்னே" என்று சொல்லி மீட்டும் விதர்ப்பராசன் தேவியுடன் சுசீலரை வணங்க, அவர் அவ்விருவருக்கும் விபூதி வழங்கி ஆசிகூறினர். பின்னர் விதர்ப்பநாட்டரசன் புயபலனுடன் உறவு முறை பாராட்டினான்; அவனையும் தேவியையும் தன் மாளிகைக்கு வரும்படி அழைத்தான்; புயபலனும் தேவியும் விதர்ப்பராசனும் அவன் தேவியும் சுசீலரிடம் விடைபெற்றபின், விதர்ப்பர்கோனுந் தேவியும் புயபலனையும் புதுப்பூங்கோதையையும் தங்கள் மாளிகைக்கு உபசாரத்தோடு அழைத்துச் சென்றனர். அங்கே சிலநாட் புயபலனும் தேவியும் வைகினர். பின்னர் விதர்ப்பர்கோன் உதவிய நால்வகைச் சேனையையுந் துணையாகக்கொண்டு புயபலன் தன்னாட்டிற்குத் தேவியுடன் மீண்டு, தன்னாட்டைக் கவர்ந்த குறுநில மன்னரை வென்று தொன்மை போல் நீதிவழுவாது அரசாண்டானென்பதுதான் ஐயா, புதுப்பூங்கோதையின் சுருக்க வரலாறாகும்" என்று இரஞ்சிதம் விசுவநாதனுக்குக் கூறி முடித்தாள்; விசுவநாதனுங் கேட்டு அற்புதமடைந்தான்.

"நின்றான் குறிப்பறிய மாட்டாதவன் மரம்"

"ஐயா, கதையை அதிகம் விரித்துச் சொல்லுவதாலாவ தென்ன, அந்தப் படக்காட்சிச் சமுதாயத்தை நான் விட்டு விலகி வந்ததற்குப் பிரதான காணராயிருந்தவர் அக்கேசவமுதலியார்தான்; அதன் பின்னரும் ஒருதினம், பொழுதுபட்டபின்னர் அஞ்சுகத்தக்காள் இல்லாத சமயம் பார்த்து நான் இருக்கும் அறையுள் வந்தார்; வந்தவரை நாம் உபசரிக்கவேண்டுந்தானே யென்ற முறைப்படி அந்த அறையுளிருக்கும் ஒரு ஸோபாவில் இருக்கச்செய்து ஒதுங்கி நின்றேன்; இருந்த முதலியார் சற்றுநேரம் யோசித்துவிட்டு என்னைப் பார்த்து "ரஞ்சிதம், உம்மால் எனது சமுதாயத்திற்கு அதிக லாபமுண்டு; அதற்காக உமக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்; உமக்கு வேதனம் இன்னமும் அதிகமாக உயர்த்தித் தருவதற்கு உத்தேசித்திருக்கிறேன்; என் கணக்கில் சில சந்மானமும் உமக்குச் செய்ய விரும்புகிறேன்; அதனை நீர் மறுக்காமல் ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு தம் சட்டைப் பைக்குட் கையை வைத்து ஒரு காகிதவுறையுட் பொதிந்திருந்த முத்துமாலையொன்றை எடுத்து, என்னை ஏற்றுக் கொள்ளும்படி நீட்டினார்; பெரிய மனுஷன் நீட்டுவதை உடனே ஏற்க மறுப்பது சரியல்ல என எண்ணி நான் இரு கையையும் நீட்டிப் பணிவுடன் வாங்கிக்கொண்டு "ஐயா, இந்த மாலையை அஞ்சுகத்தம்மாள் வந்தபின் அவளிடம் கொடுப்பதா என்று ஏதும் விளங்காதவள்போற் கேட்டேன்; "இரஞ்சிதம் இது அஞ்சுகத்திற்கல்ல, உமக்கென்றே கொண்டு வந்தேன்; அவளல்லாத சமயத்தில் உமக்கு இதனைத் தரவேண்டுமென்பதுதான் என் நோக்கம். நான் அன்புடன் தந்ததை நீர் ஏற்றுக்கொள்வதனாற் பிழையில்லை" என்று இதமாகச் சொன்னார்; "ஐயா, நீங்கள் எனக்கு இந்த முத்தாரத்தை அன்புடன் தருகிறீர்களென்பது நிசமாயிருக்கலாம்; ஆனால் நான் இதனை அணிவதற்கு உரியவளல்லேன்; அல்லாமலும் ஐயா, இதனை நீங்கள் எனக்குத் தந்தாலும், நான் என் அருமையான தாய்போன்ற அஞ்சுகத்தக்காளுக்கே உள்ளதைச் சொல்லிச் சந்மானமாகக் கொடுப்பேன் என்று சொல்ல முதலியார் திடுக்குற்று ஏக்கங் கொண்டார்; சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டுப் பின்னர் என்னை நோக்கி "ரஞ்சிதம், உமக்கென நான் தருவதை நீர் அவளுக்குக் கொடுப்பேனென்று சொல்வதனால் என்மனம் வருந்துமென்பதை நீர் உணரவில்லையா" என இதமாகக் கேட்க, அப்படி உங்கள் மனம் வருந்துமெனக் கண்டால் நீங்கள் இதனை மீட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்லி என் கையிலிருந்த முத்து மாலையை நீட்டினேன்; நீட்டிய முத்துமாலையை முதலியார் வாங்காது மறுத்துவிட்டு என்னைப் பார்த்து "என்ன? ரஞ்சிதம், ஒன்றுமறியாப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதைபோல் நடிக்கிறாய்? நான் இந்த நேரத்தில் இங்கே வந்த நோக்கம் மென்னவென்பது உள்ளபடி உனக்குப் புலப்படவில்லையா? நின்றான் குறிப்பறிய மாட்டாதவன் நன்மரம் என்பதைப் பெண்பாலாக்கி உமக்குச் சொன்னாற் பொருந்தும் போலிருக்கிறதே" என்று சிறிது அதிகாரத்தோடு பேசினார். ஐயா, ஏதோ பேசுகிறேனென்று குறையெண்ணாதீர்கள்; பெண்ணாகப்பிறந்த நான் குறிப்பறிந்து நடக்க வேண்டியது கணவன் விஷயத்திலேதான்; அதுபற்றியே கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டியென்று சொல்லப்பட்டிருக்கிறது; அப்படிக் குறிப்பறிந்து நடக்கிறதற்கு எனக்குக் கணவனே இல்லை... என்று நான்சொல்லி முடிப்பதற்கிடையில், முதலியார் "என்னையே உன் கணவனாக மதித்து இன்று தொடக்கம் என் குறிப்பறிந்து நடந்தால், இரஞ்சிதம்! உனக்குச் சகல நன்மைகளும் உண்டாகும்" என்று சொல்லி முப்பத்திரண்டு பற்களையுங்காட்டி இரந்தார்; "கேட்ட நான், இருகாதுகளையும் பொத்திக்கொண்டு "ஐயா, அநியாயம்! உங்கள் செய்கை காவலுக்கிட்ட வேலி அந்தப் பயிரையே மேயத் தலைப்பட்ட தன்மை போலிருக்கிறதேயென்று சொல்லிக்கொண்டு, மெல்ல அறையைவிட்டு வெளியே வர முயன்றேன்; அதனைக்கண்ட முதலியார் அறைவாசலில் வந்துநின்று என்னை வெளியே போகவொட்டாது தடுத்தார்.

* * *

உலகம் பலவிதம்: 1944 டிசம்பர் 07
விசாலாட்சி: (முற்றொடர் - 29) -

"மோகம் கோபமாக மாறியது"

அவர் நிற்பதைக்கண்டு நான் பின்வாங்கி அந்த அறையின் சுவரோடு ஒதுங்கி மேனி நடுங்க உள்ளம் பதறக் கண்ணீர் சொரிய நின்றேன்; அதனைப் பார்த்த முதலியார் சற்று அச்சங் கொண்டாராய் பழையபடி வந்து ஸோபாவில் இருந்துகொண்டு, "இரஞ்சிதம், உனக்கு விருப்பமில்லையாயின் நான் பலாத்காரஞ் செய்யமாட்டேன்; நீ பயப்படாதே, கவலைப்படாதே, ஆனால் இந்த விஷயத்தைப்பற்றி அஞ்சுகத்திற்காயினும் வேறெவருக்காயினும் வெளியிடாதே" என்று இரந்தார்; "ஐயா, நான் ஒருவருக்கும் வெளியிடமாட்டேன்; வெளியிட்டால் உங்களைக் காட்டிலும் எனக்கே அதிக அவமானம்; அல்லாமலும் ஐயா, என்னை நீங்கள் பெற்ற பிள்ளைபோற் பாவித்துக்கொள்ளுங்கள்; அஞ்சுகத்தம்மாளை என் தாயென்றே பாவித்து நடக்கிறேன்; அந்த அம்மாளும் என்னைத் தான்பெற்ற பிள்ளையாகப் பாவித்தே அன்பு பாராட்டுகிறாள்" என்று சொல்லிக் கும்பிட்டேன்; நான் இப்படி இரந்து சொன்னவைகளைக் கேட்டு முதலியார் சமாதானம் அடைந்தவரைப்போற் காணப்பட்டார்; யாதும் பேசாமல் யோசித்தபடி சிறிதுநேரம் இருந்துவிட்டு, "இரஞ்சிதம், நீ எனக்கு மகளானால் நான் உனக்குத் தகப்பன்தானே" எனலும் "அதற்குஞ் சந்தேகமா, உங்களைத் தகப்பனாகக் கிடைக்க நான் என்ன புண்ணியஞ் செய்தேனோ அறியேன் என்று மனப்பூர்வமாகச் சொன்னேன்; "சரி, அப்படியானால் பிதா ஏதும் உபகாரத்தைப் பிள்ளைக்குத் தந்தால் மகள் ஏற்கலாந்தானே" என்று புன்னகையோடு கேட்டார்; "ஆம் ஐயா, நூறுமுறையும் ஏற்கலாம்; அப்படி ஏற்றமகள் அது தனக்கு உபயோகப்படாவிட்டால் தன் தாயிடங் கொடுத்தாலும் பிழையல்லவே" என்று அந்த நயவஞ்சக வார்த்தையை நிசமென்று நம்பச் சொன்னேன்; "ரஞ்சிதம், உன் பிரியப்படி எதனையுஞ் செய்" என்று சொல்லி அந்த முத்தாரத்தை எடுத்துப் பழையபடி நீட்ட, நான் இரு கரங்களையும் நீட்டிப் பணிவுடன் ஏற்கும்போது, ஐயோ! அந்தச் சண்டாளன்! என் இரண்டு கையையும் முத்துமாலையோடு சேர்த்து இறுகப் பிடித்துக்கொண்டு, என்னைப் பலவந்தஞ் செய்ய முயன்றான்; திமிறினேன்; காமதுரந்தரனாய இராவணன்போல் அந்த நேரத்தில் நின்ற அவன் பிடியை உதற என்னால் முடியாமையினால், நான் காளிபோல ஆவேசங் கொண்டு அவனுடைய கையிற் புதையும்படி என் பற்களாற் கடிக்க, இரத்தம் பெருக, அவன் கையை எடுத்து என் கன்னத்தில் ஒரு அறை அறைந்தான்; அறையுண்ட மாத்திரத்தே நான் தலைசுழன்று நிலத்தில் அவனுடைய காலடிக்குக்கிட்ட விழுந்தேன்; தாயே! மகேசுவரி, என் மானத்தைக் காக்கவேண்டும் அம்மா" என்று ஓலமிட்டேன்; அந்தத் துர்த்தன், "எடி சத்தமிடாதே" என்று என்னை அணைத்து எடுக்கக் குனிந்தான்; நான் துள்ளியெழுந்து பிற்புறம் வந்து குனிந்து, அவன் என்னைத் திரும்பிப் பார்ப்பதற்கிடையில் அவனுடைய ஒரு காலை என் இருகையாலும் இறுகப்பற்றி இழுக்க, அவன் முகமும் மார்பும் நிலத்தில் மோதுண்ண விழுந்தான்; விழுந்தபோது அவனுடைய முன் வாயிற் பல்லும் "சீமெந்து" நிலத்தில் மோதியமையால் ஒடிந்துபோக, வாயில் நின்று இரத்தம் பெருக எழுந்தான். அவனுடைய மோகம் கோபமாக மாறியது; எழுந்தவன் கண் சிவந்தபடி என்னை ஒரு பார்வை பார்த்தான்; நின்றால் ஆபத்து வருமென்று பயந்து சரேலென அறையைவிட்டு வெளியே வேகமாகக் கதறிக் கொண்டு ஓடினேன்; "என்னடியம்மா, இதோ நான் வந்துவிட்டேன்; பயப்படாதே! என்று என்னெதிரில் ஒரு சத்தங் கேட்டது; என் அக்காள்! என் மானத்தைக் காப்பாற்று! உனக்கடைக்கலம் என்று அவள் காலடியில் வீழ்ந்து நான் கதறுவதற்கிடையில் "பயப்படாதேயடி அம்மா, எழுந்திரு; இப்படியெல்லாம் வருமென்று முந்தியே நினைத்தேன்" என்று சொல்லிக்கொண்டு என்னைத் தன் இரு கைகளாலும் அஞ்சுகத்தக்

காள் அணைத்தெடுத்தாள்; என்னைத் துரந்து வந்த கேசவமுதலி அஞ்சுகத்தைக் கண்டமாத்திரத்தே பின்வாங்கினான். மீண்டுபோய் அறை யுட்புகுந்தான்.

"ஒன்றுக்கும் பயப்படவேண்டாம்"

உடனே என்னை என் அக்காள் தன் கைகளால் அணைத்தபடி மெல்லக் கூட்டிக் கொண்டு போய்த் தன்னுடைய அறையுளுள்ள "ஸோபா" வில் என்னைப் படுக்கவைத்து என் கண்ணீரைத் துடைத்து முகத்தை மிருதுவாகத் தடவிக்கொண்டு மற்றக் கைவிரலால் அங்குள்ள மணியை ஊன்ற அது ஒலித்தது; உடனே சுயம்பாகியாகிய பிராமணன் அங்கே வர, "இரண்டு பாத்திரத்திற் சூடான கோப்பி கொண்டு வாரும்" என்று அஞ்சுகத்தக்காள் கட்டளையிட, அவன் சில நிமிஷத்தில் அப்படிக் கொண்டுவர அக்காள் வாங்கி எனக்குப் பருக்க முயல, நான் இல்லை அக்கா, நான் எழுந்திருந்து குடிக்கிறேன் என்று சொல்லி வாங்கிப் பருகினேன்; மற்றப் பாத்திரத்திலுள்ளதையும் பருகும்படி அக்காள் என்னைக்கேட்க, நான் போதும் அக்காள் என்று சொல்ல, அதனை அவள் தானே உட்கொண்ட பின் பாத்திரங்களைக் கொடுக்கவும் பிராமணன் ஏற்றுத் தட்டத்தில் வைத்துக்கொண்டு மீண்டு போய்விட்டான்; "தங்காய், நீர் ஆயாசந்தீரச் சற்றுநேரம் இதிற் படுத்து உறங்கலாம்" என்று அக்காள் சொல்ல "இங்கிருக்க எனக்குப் பயமாயிருக்கிறது" என்று மெல்லச் சொன்னேன்; "தங்காய், நீர் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம்; இந்த முதலி என்னை மீறி உமக்கு ஏதுஞ் செய்ய முடியாது; அந்த இரகசியமெல்லாம் பிறகு சொல்லுவேன்; நீர் இப்பொழுது சற்றே படுத்து உறங்கும்" என்று மெல்லச் சொல்ல, எனக்கு உறக்கம் வரவில்லை; சும்மா படுத்துக் கிடக்கிறேன் என்று மெல்லச்சொல்லிக்கொண்டு நான் படுத்துக் கொண்டேன்; அடுத்த அறையில் முதலியார் இருந்தபடியாற்போலும் அக்காள் அந்தநேரத்தில் என்னை வேறொன்றுங் கேட்கவில்லை.

"மானமழிந்தபின்
வாழாமை முன்னினிதே"

நான் அங்ஙனம் படுத்துக்கிடக்கும் போது அஞ்சுகத்தம்மாள் மெல்ல எழுந்து அந்த அறையை விட்டு வெளியேபோய், கதவை வெளிப்புறத்திலே பூட்டிக்கொண்டு முதலியார் இருக்கும் அறைக்குட் போனாள்; அங்கே முதலியாரைக் காணவில்லை; அவள் மீண்டு நான் கிடக்கும் அறையுள் வந்து "தங்காய், முதலியார் போய்விட்டார், நீர் மனந்தேறியிரும்; இனிமேல் அந்த முதலியார் இப்படியான தீமை செய்யாமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்; நீர் எதற்கும் யோசிக்கவேண்டாம்" என்று தேறுதல் சொல்லி இராப்போசனத்திற்கு வரும்படியழைக்க, நான் ஆகாரம்பண்ண மறுத்தால், அக்காளும் பட்டினியிருப்பாளென்றதினால் ஒருவாறு உடன் பட்டுப் போய்ப் போசனம் முடித்தேன்; முடித்து மீண்டுவந்து நானும் என் அறையுள் தன்னந் தனியே படுக்கப்பயந்து அக்காளுடைய அறையுட்போய்ப் படுத்தேன்; தங்காய் "முதலியார் இங்கே வந்த பின் நடந்தவைகளை யெல்லாம் விபரமாகச் சொல்லும்" என்று அக்காள் கேட்க, சகல விபரங்களையுஞ் சொன்னேன்; அஞ்சுகத்தக்காள் கேட்டு மேலும் மனம் வருந்தினாள்; கண்ணீர் விட்டாள்; நெட்டுயிர்த்தாள்; "தங்காய், இந்தச் சண்டாளனிருக்கும் இடத்தைவிட்டு நானும் நீரும் இந்த இரவிலேயே எவருக்குஞ் சொல்லாமல் இந்தவூரையேவிட்டு வேறெங்கேனும் போய் விடலாம், ஆனால் நான் இவனுக்கு மூன்று வருடகாலத்திற்கு உடம்படிக்கைப்பத்திரம் எழுதிக் கையெழுத்து வைத்துக் கொடுத்து விட்டேன்; அதனையிட்டுத்தான் யோசிக்கிறேன்" என்று சொல்லிக் கவலைப்பட்டாள். அப்பொழுது நான் அஞ்சுகத்தம்மாளைப் பார்த்து "அக்கா, நீங்கள் அப்படியொன்றுஞ் செய்யவேண்டாம்; உங்களை வைத்து ஆதரிக்கும் முதலியாரோடு நீங்கள் என்பொருட்டு மாறுபடவேண்டாம்; நான் இங்கே இருப்பதனால் உங்களுக்கும் கஷ்டம்; எனக்கும் கஷ்டம், அந்த முதலியாருக்குங் கஷ்டம்; சொல்லுகிறேனென்று மனவருத்தப்படாதீர்கள்; இந்த இரவு விடிவதற்கிடையில் நான் இந்தப் பட்டினத்தைவிட்டு அகன்றுவிட வேண்டும்; நீங்கள் என் பிரிவையிட்டுக் கலங்க வேண்டாம்; நீங்கள் செய்த நன்றியை என் உயிருள்ள வரையில் மறக்கமாட்டேன்; எந்தக் காலத்திலாயினும் நான் உங்களை வந்து சந்திப்பேன்; இங்கிருந்தால் என் மானத்திற்குப் பங்கம் வரும், இல்லையேல் என்னுயிருக்கு ஆபத்து வரும் இது நிச்சயம்; "மானமிழந்தபின் வாழாமை முன்னினிதே" என்று பெரியார் சொல்லியிருக்கிறார்கள், அக்கா என அழுதழுது சொன்னேன்.

"பேயோடு பழகினும் பிரிதலரிது"

கேட்ட அஞ்சுகத்தம்மாள் திடுக்குற்றாள், ஏக்கங் கொண்டாள்; என் பக்கலில் வந்திருந்தாள், என் கண்ணீரைத் தன் முன்றானையால் ஒற்றினாள், தான் கண்ணீர்; சிந்தினாள் சிறிது நேரம் சிந்தித்தாள்; பின்னர் என்னை ஆர்வத்துடன் பார்த்து "தங்காய் நீர் போகலாம்; ஆனால் எங்கே போவதென்று யோசியாமல், ஆராயாமல், சடுதியில் இருந்த இடத்தை விட்டுப்போவது புத்தியல்ல; உமக்கு வசதியான, பாதுகாப்பான இன்னுமொரு இடத்தைத் தேடிக்கொண்டு இந்த இடத்தை விட்டுப்போவது தான் புத்தி; இதற்கு ஆகவேண்டிய ஒழுங்குகளை நான் இன்னுஞ் சிலநாளுட் செய்து வைப்பேன்; அவ்வளவு நாளும் உமக்கு அந்த முதலியாரால் ஏதும் பிழை வராமற் பாதுகாத்துக்கொள்ளுவேன்; என்னை நம்பும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கவலையோடு சொல்லுதலும், அக்கா நீங்கள் என்னையிட்டுக் கவலைப்படாதீர்கள்; நான் என்றைக்கு என் பெற்றாரைப் பிரிந்து, மாமனார் வீட்டைவிட்டு, உற்றார் அயலாரையும் பிறந்த ஊரையும் விட்டு, கட்டுக்கடங்காத கழுதை பரதேசம்போகப் புறப்பட்ட விதமாகப் புறப்பட்டேனோ, அன்றைக்கே நான் அலைந்தவளானேன்; பாவியானேன்; பிறந்த குடிக்கும் புகுந்த குடிக்கும் மாத்திரமல்ல உலகத்திலுள்ள பெண்செந்மம் முழுவதிற்கும் வசை தேடுபவளானேன்; "மண்ணுலகிலுள்ள வரம்பில் பெரும்பவத்தைப் பெண்ணுருவமாகப் பிரமன் படைத்தனனால்" என்று அந்தக் கந்தபுராணம் பாடிய பெரியார் சொன்னது கற்புநெறி பூண்ட உத்தமிகளையல்ல; என்னையொத்த பெண்செந்மங்களைத்தான், அக்கா, அந்தப் பெரியார் குறித்துச் சொல்லியிருக்கவேண்டும்; அலைந்த விதி படைத்த நான் என் மானத்தையும் இழந்து விட்டாற் பின்னும் பேயினுட் கடைப்பட்ட பெண் பேயாயல்லவோ அவமதிக்கப்படுவேன்; அக்கா நீங்கள் என்னைச் சிலநாளேனும் பாதுகாப்பேன் பயப்படவேண்டாமென்று சொல்லுகிறீர்கள்; இன்று சிறிதுநேரம் நீங்கள் இங்கே இல்லாமையினாலல்லவா அந்தத் துரோகியால் இந்த அநர்த்தமெல்லாம் நேர்ந்தன; எந்தநேரமும் என்னுடனிருந்து என்னைப் பாதுகாக்க உங்களால் முடியுமா? ஆனதால் அக்கா நீங்கள் என்னைத் தடுக்கவேண்டாம்; இந்தப் பரதகண்டத்திலே எத்தனையோ புராதன தலங்களுண்டு; புண்ணிய தீர்த்தங்களுண்டு; நான் அங்கெல்லாஞ் சென்று சென்று புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கிப் புராதன தலங்களைத் தரிசித்து செய்த பாவத்திற் சிறிதாயினும் தீர்க்கலாமெனச் சித்தங் கொண்டேன்; என்னை ஆசீர்வதித்து எனக்கு அனுமதி தந்து அனுப்புங்கள்; நீங்களே எனக்குப் பெற்ற தாயும் உற்ற சுற்றமுமாவீர்கள் என்று இரந்தேன்; இப்படியெல்லாம் நான் சொல்லக் கேட்ட அஞ்சுகத்தம்மாள் தன் மனத்திலே துயரம் அதிகப்பட, என்னைப் பார்த்து "தங்காய், நீர் சொல்வதெல்லாம் நிசம்; ஆனால் ஒன்றையிட்டுத்தான் யோசிக்கிறேன்; நீர் நினைத்தபடி தலயாத்திரை தீர்த்தயாத்திரை செய்வதற்கு உம்முடைய இளமையும், பேரழகும் உமக்கு இடந்தரமாட்டா; இந்த இரண்டும் உம்மிடத்தில் இருக்கும் வரையில் தூர்த்தர் கண்ணிற் புலப்படாமற் சஞ்சரிப்பது அரிதிலும் அரிது; அல்லாமலும் பேயோடு பழகினும் பிரிதலரிது என்று சொல்லுவார்கள்; அப்படியிருக்க என் உயிரினும் இனியவளாய் வந்துசேர்ந்த உம்மைவிட்டுப் பிரிந்து எப்படியம்மா, மனக் கிலேசமின்றி நான் உயிர் வாழமுடியும்; நீர் என்னை விட்டு அலைந்து திரிகிறீரோ, உமது கதி என்னவாயிற்றோ என்றெல்லாம் எண்ணியெண்ணி என் சிந்தை எந்தநேரமும் வருந்திய படியிருக்குமல்லவா? நீர் என்னை விட்டுப் பிரிந்து போகின்றீரென்று நினைக்க மனஞ் சகிக்கவில்லையே" எனச் சொல்லி வருந்தினாள்; சரி, அக்காள் நீங்கள் வருந்தவேண்டாம், நாளைக்கு எல்லாம் யோசித்துச் செய்வோம்; நீங்கள் படுத்து உறங்குங்கள்; நானும்போய்ப் படுத்துறங்குகிறேன் என்றேன்; "தங்காய், நீர் அந்த அறைக்குப் போக வேண்டாம்; என்னுடன் படுத்துறங்கும்" என்று சொல்ல, நானும் அப்படியே செய்தேன்; அக்காள் சற்றுநேரத்தால் உறங்கினாள்; ஆனால் எனக்கு உறக்கம் வரவில்லை.

* * *

உலகம் பலவிதம்: 1944 டிசம்பர் 14 விசாலாட்சி: (முற்றொடர் - 30)

"சீவபரியந்தம் உங்களை மறவேன்"

இனிமேலும் நான் இந்த இடத்திலிருக்கலாகாது இருந்தால் மானங்கெடவேண்டி நேரும்; எங்கே போவது, எப்படிப் போவது என்ற இவைகளைப் பற்றியே அன்றிரவு முழுவதுஞ் சிந்தித்துக்கொண்டு கிடந்தேன்; என் பிரிவால் அஞ்சுகத்தம்மாள் கவலைப்படுவாளே யென்பதையுஞ் சிந்தித்தேன்; அவளை விட்டுப் பிரிவது எனக்கும் மனவருத்தந்தான்; ஆனாலும் என்ன செய்யலாம், என்னுடைய நெறியைப் பாதுகாத்துக்கொண்டு நானும் அஞ்சுகத்தக்காளும் உயிரோடிருந்தால் எந்த வேளையிலும் ஒருவரை யொருவர் சந்திக்கலாந்தானேயென்று மனந்தேறினேன். விடிந்தவுடனே காலைக்கடன்களை முடித்துப் போசனமுஞ் செய்தபின் அக்காளுக்கு என்நோக்கத்தை வெளியிட்டேன்; அவள் பெரிதுங் கவலைப்பட்டாள்; தன் கண் கலங்கப்பெற்றாள்; கவலையோடு என்னைப் பார்த்து "அருமைத் தங்காய், நீர் இந்த இடத்தைவிட்டுப் போவீரென்பதை நான் இராத்திரியே நிச்சயம் பண்ணிவிட்டேன்; உயிரோடிருந்தால், உண்மையான அன்பிருந்தால், ஒருவரையொருவர் எப்படியோ சந்திக்கலாம், தங்காய்; ஆனால் தக்க துணையின்றி நீர் தனியே போய் என்ன செய்யப் போகின்றீரென்பதையிட்டு எண்ண எண்ண என் மனம் வேதனைப்படுகின்றது" என்று சொல்லிக் கண்ணீர் விட்டாள் என் அக்காள், "அக்கா துணையில்லையென் றெண்ணி நீர் இரங்க வேண்டாம்; அந்த ஈசுவரி, சகல உலகங்களுக்கும் மாதா, அவள் தான் துணை, அவள் என் மானத்தைக் காப்பாளென்ற திடசித்தங்கொண்டே, இந்த இடத்தைவிட்டுப் புறப்படப் போகின்றேன்; அக்கா, இந்த ஒன்றையும் யோசித்துப் பாருங்கள்; நேற்று அந்தக் கொடியவன் என்னைப் பலாத்காரஞ் செய்யும் நோக்கமாகத் துரந்து வந்தபோது, நான் ஓலமிட்டுக்கொண்டு ஓட, அந்த நேரத்தில் உங்களைக் கொண்டுவந்து என்னெதிரில் விட்டது அந்த மனோன்மணியின் திருவருளல்லவா? உலகத்திலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்கள் பொருட்டு முப்பத்திரண்டு அறங்களைச் செய்யும் காமாட்சி என்னை மாத்திரங் கைவிடுவாளா? ஒருபோதும் விடமாட்டாள்; எல்லாம் அவளருளாலே நடைபெறும் என்றுசொல்லித் தேற்றினேன்; அக்காளும் ஒருவாறு தேறினாள். "தங்காய், எங்கே போகப் போகின்றீர்? எந்நேரம் புறப்படவிருக்கிறீர்? பகலில் நீர் புறப்படுவது புத்தியல்ல, இரவிலே நடுச் சாமத்திற்குமேல் ஒரு புகைரதம் இந்தப் பட்டினத்திலிருந்து "எக்ஸ்பிறெஸ்" அதாவது எல்லாத் தானங்களிலும் தங்காமல் பிரதானமான சில தானங்களில் மாத்திரம் தங்கித் தங்கிப் போகும்; அதிலேதான் புறப்பட்டு நீர் போக வேண்டும்; நானும் உம்முடன் வந்து உம்மைப் பயணமனுப்பினாலன்றி என் மனம் சகியாது; நீர் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம்; ஆக வேண்டிய ஆயத்தங்களையெல்லாம் நானே செய்கிறேன்" என்று அழுதழுது என்னுள்ளமுருகச் சொன்னாள் என் அக்காள்; அவளுடைய அன்பான வார்த்தைகளைக் கேட்டபோது என் மனமும் நெருப்பிலிடைப்பட்ட மெழுகுபோல உருகியது; அக்கா, நீங்கள் கலங்கவேண்டாம்; பெற்ற தாயும் இப்படி உங்களைப்போற் செய்யமாட்டாள்; நான் உங்களை என் சீவபரியந்தம் மறக்கமாட்டேன்; மறந்தாற் பொல்லாத துரோகியாவேன்; நீங்கள் அழாதீர்கள் என்று சொல்லி என் முன்றானையால் அவளுடைய கண்ணீரையொற்றினேன். அஞ்சுகத்தம்மாள் ஒருவாறு தன் மனசைத் தேற்றிக்கொண்டு என்னுடனிருந்து மத்தியானப் போசனத்தையும் முடித்துக்கொண்டு தன்னிடத்திலுள்ள பிரயாணப் பெட்டிகளுள் ஒன்றையெடுத்து எனக்காகிய சேலைகள், என் ஆபரணங்கள், இன்னும் பிரயாணத்திற்கு ஆக வேண்டிய பொருள்கள் எவைகளோ அவைகளை யெல்லாம் அந்தப் பெட்டியினுள்ளே நிரல்பட வைத்தாள்.

அரிதிற் பிரிதல்

அதன்பின்னர் என்னைப் பார்த்து, "தங்காய், நீர் இரவு புறப்படுதற்கு நிச்சயித்துக் கொண்டீர்; இங்கே வந்து பலமாசஞ் சென்றும் இந்தப் பட்டினத்தை இன்னமும் நீர் ஒரு நாளாயினுஞ் சுற்றிப்பார்த்ததில்லை; இப்பொழுது மோட்டர் ரதம் இங்கேவரும், இருவரும் அதில் ஏறிக்கொண்டு இப்பட்டினத்தைச் சுற்றிப் பார்த்து வருதற்கு உமக்குச் சம்மதமா" என்று ஆவலுடன் கேட்க, ஆம், அக்கா, உங்களுக்கு எது பிரியமோ அது எனக்கும் பிரியந்தானே; நீங்கள் என்னைக் கேட்கவேண்டியதில்லையே யென்றேன்; அரைமணி நேரஞ்செல்ல ஒரு ரதம் அங்கே வந்து நின்றது; உடனே அஞ்சுகத்தம்மாள் தன்னையும் என்னையும் அலங்கரித்துக் கொண்டு, ஒரு கைப்பையையும் எடுத்துக்கொண்டு என்னுடன் இரதத்தில் ஏறினாள்; பிரதானமான சில இடங்களையும் கட்டிடங்களையும் பார்த்தபின் கடைத்தெருவிற்கு போனோம்; அங்கே ஒரு பெரிய புடைவைக் கடையில் அஞ்சுகத்தம்மாள் என்னுடன் பிரவேசித்துச் சில சேலைகளும் சட்டைக்குரிய துணிகளும் வாங்கினாள்; வெண் பட்டுச் சேலையும் இரண்டு வாங்கினாள்; அதன் பின் ஒரு க்ஷேமநிதி வங்கியில் சென்று அங்குள்ள உத்தியோகத்தரிடம் பெருந்தொகையான பணத்தைக் கொடுத்து ஏதோ அவருடன் தனியே பேசிவிட்டு ஒரு பத்திரத்தைக் கொண்டுவந்து என்னிடம் தந்து என் கையெழுத்தையும் அந்தப் பத்திரத்தில் இடச் சொல்ல நான் அப்படியே இட்டேன்; அந்தக் கருமத்தை முடித்துக்கொண்டு அங்குள்ள பிராமணர் நடத்தும் ஆகாரக் கடையொன்றிற் சென்று அன்றிரவு எட்டு மணிக்கு நாங்கள் இருக்கும் வாசஸ்தனத்திற்குச் சிற்றுண்டி வகை அனுப்பி வைக்க வேண்டுமென்று தெரிவிக்க, அவர்கள் அப்படியே செய்யலாமென்று சொன்னார்கள்; அதன் பின்னர் அந்தப் பட்டினத்திலுள்ள சிறந்த பூஞ்சோலையிற் சென்று சிறிதுநேரம் பொழுது போக்கிவிட்டு பிற்பகல் ஐந்தரை மணிவரையில் எங்கள் விடுதிக்கு மீண்டோம். இரதத்தை விட்டு இறங்கும்போது சாரதியிடம் அக்காள் ஏதோ குறிப்பாகச் சொல்லிவிட்டாள்; அவன் ரதத்தைக் கொண்டுபோய்விட்டான். நாங்கள் இருவரும் மாலைவேளை செய்யவேண்டிய வந்தன வழிபாடுகளை முடித்தபின் அங்குள்ள பிராமணர் இருவருக்கும் சிற்றுண்டி தேநீர் கொண்டுவந்து உதவ நாங்கள் அவைகளை ஏற்று உண்டபின் அந்தச் சுயம்பாகியிடம் அஞ்சுகத்தக்காள் ஏதோ சொல்லிவிட்டாள். சற்றுநேரஞ் செல்ல அஞ்சுகத்தக்காளிடம் சங்கீதமும் நாட்டியமும் பயிலும் "பத்மா" என்ற பெண்பிள்ளை அங்கே வந்தாள்; அந்தப் பிள்ளையுடன் நான் முந்தியே பழகிக்கொண்டேன்; "பத்மா, நீ இரவுக்கு வீட்டிற்குப் போகவேண்டாம்; இங்கேயே தங்கலாகும்; நீ வீட்டிற்கு இன்றிரவு வரமாட்டாயென்பதை நான் உங்கள் தாயாருக்குச் சொல்லியனுப்புகிறேன்" என்று அக்காள் அந்தப் பிள்ளைக்குச் சொல்ல அவளும் அதற்குடன்பட்டு அன்றிரவு எங்களுடன் தங்கினாள். இராப் போசனத்தையும் முடித்துக் கொண்டோம்; "பத்மா நீ சற்று உறங்க வேண்டுமானால், இந்த அக்காளுடைய அறையுட் போய்ப்படுத்து உறங்கலாம்" என்று அக்காள் சொல்லுதலும் பத்மா அப்படியே போய்ப் படுத்துச் சற்று நேரஞ் செல்ல உறங்கினாள், "தங்காய், இந்தப்பெட்டிதான் பிரயாணம்பண்ணும் போது கொண்டுபோகவேண்டிய பெட்டி; உமக்கு ஆக வேண்டிய பொருள்களெல்லாம் இதற்குள் வைக்கிறேன்" என்று சொல்லுதலும் நான் மனமுருகி "அக்கா, ஆண்டி பரதேசியாகப் புறப்படுமெனக்கு இந்தப் பொருள் பண்டங்களேன்? இப்படியான ஆயத்தங்கள் ஏன்? இரண்டு காவிச்சேலையும் ஒரு உருத்திராக்க மாலையும் போதும்; மற்றவைகளெல்லாம் உங்களுடன் இருக்கட்டும்; இப்படிச் சொல்லுகிறேனென்று மனவருத்தப்படாதீர்கள் என் அன்பான அக்காள்" என்று கண்ணீர்ததும்பச் சொன்னேன். என் பிரிவையிட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலைப்பட்டுக்கொண்டு நின்ற அஞ்சுகஞ் சிரித்து "அப்படியல்ல அம்மா, கையிற் பொருளில்லாமல் யாத்திரை செய்யவொண்ணாது, யாத்திரை பண்ணவேண்டிய முறைகளை நான் சொல்லுகிறேன் கேளும் என்று எனக்குப் பல புத்திகளும் உபாயங்களுஞ் சொல்லித்தந்தாள்; அவைகளுட் சில: பிரதானமான எந்தத் தலத்திலேயாயினும் இரண்டு மூன்று தினங்கட்கு மேல் நிற்க வொண்ணாதென்பதொன்று; யாத்திரை செய்யும் போதெல்லாம் வெண்பட்டுச் சேலையும் உருத்திராக்கமுந் தரித்துக்கொள்ள வேண்டுமென்பது மற்றொன்று; அக்காள் சொன்ன புத்திகளையெல்லாம் அவதானமாகக் கேட்டுக்கொண்டேன்; பயணத்திற் காகிய சிற்றுண்டி முதலியனவெல்லாம் அங்கே வந்து சேர்ந்தன; ஆகவேண்டியவற்றையெல்லாஞ் சித்தஞ் செய்து வைத்துவிட்டு அக்காள் ஒரு பத்திரத்தைக் காகித உறையுள் வைத்தபடி என்னிடந் தந்து "தங்காய், இது எந்தநேரமும் உன் வசம் இருக்கவேண்டும்; ஆபத்து வந்த காலத்திலும் இது உனக்குப் பயன்படும்" என்று சொல்லுதலும், அக்கா, இது என்ன என்று ஆச்சரியத்துடன் கேட்க, நாங்கள் இன்று பகற் போனதாகிய அந்த பணக்ஷேமச் சாலையில் (வங்கியில்) உம்முடைய பேரில் 500 ரூபா இட்டிருக்கிறேன்; நான் இப்பொழுது உம்மிடந் தந்தது அதன் பற்றுச்சீட்டு; உமக்குத் தேவையான நேரத்தில் நீர் அந்தப் பணத்தில் முழுவதையேனும் ஒருபாகத்தையேனும் எங்கே நீர் வசித்தாலும் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்..." என்று சொல்வதற்கிடையில் என்னையறியாமல் என் கண்களிலிருந்து நீர் சிந்தியது, என் மனம் கரைந்தது; இப்படியும் ஒருவர் உலகத்திலே செய்பவருண்டோ என்றெண்ணினேன்; "அக்கா, நேற்று வந்த எனக்கு இவ்வளவு உபசாரமா? அந்நியளாகிய என்மேல் இவ்வளவு அன்பா? இவைகளுக்கெல்லாம், என் அருமையான அக்கா, என்னால் என்ன பதில் செய்யமுடியும் என்று சொல்லிக் கலங்கினேன்; என் கண்ணீரைத் துடைத்து "தங்காய், நான் உம்மை நேற்று வந்தவளென்றெண்ணவுமில்லை; அந்நியளென்று மதிக்கவுமில்லை; என்னுடன் பிறந்த தங்கையென்றே எண்ணிக்கொண்டேன்; நீர் கவலைப் படவேண்டாம்; மேலும். என் ஞாபகார்த்தமாக இந்த மோதிரத்தை யிட்டுக்கொள்ளும்" என்று தன் கைவிரலிலிருந்த ஒரு நீலக்கல்லிழைத்த மோதிரத்தை என் கைவிரலில் தானாக இட்டாள்; "அக்கா, நீங்கள் செய்யத்தக்கதையெல்லாஞ் செய்யுங்கள்; நீங்கள் தர இருக்கிறீர்கள்; நான் ஏற்க இருக்கிறேன் என்று சொல்வதற்கிடையில்; என் அருமைத் தங்காய் என்னுயிரையும் உமக்கு ஏதும் ஆபத்து வந்தால் விடச் சித்தமாயிருக்கிறேன்; அந்தப்பராசத்தி உமக்கு எவ்வகை யான ஆபத்தும் வரவிடமாட்டாள்" என்று திடமாகச் சொல்லிக்கொண்டிருக்கும் போது, அன்றுபகல் வந்த சாரதியே தன் ரதத்தை அதிக சத்தமில்லாமல் மெல்ல அங்குக் கொண்டுவந்து நிறுத்தினான். அவன் தானாகவே வந்து பிரயாணப் பெட்டியையும் ஏனைய பண்டங்களையும் இரதத்தில் ஏற்றினான்; அஞ்சுகத்தம்மாள் மேசையிலுள்ள மணியை ஒலித்த மாத்திரத்தே அந்தச் சுயம்பாகிப்பிராமணர் அங்கே வந்தார்; "ஐயா, தங்கச்சியை அழைத்துக்கொண்டு போய்ப் பயணமனுப்பியிட்டுச் சற்று நேரத்தில் வந்துவிடுவேன்; பாதுகாப்பாய் இங்கே இரும்" என்று சொல்லுதலும் "அப்படியே செய்கிறேன் அம்மா" என்றார் ஐயர்.

"போய்வருகிறேன்"

போய்வருகிறேன் சாமி; இவ்வளவு காலமும் பெற்ற தகப்பனைப்போல் மதித்து நீங்கள் என்னை அன்பாகப் போஷித்து ஆதரித்த நன்றியை மறக்கமாட்டேன் என்று சொல்லி ஐயரை நமஸ்காரஞ் செய்ய, அப்படியொன்றும் நான் செய்யவில்லை மகளே என் கடமையைத் தான் செய்தேன்; சமையல் வேலை செய்யும் ஏழைப் பிராமணன் என்னால் என்ன முடியும். சுகமேபோய் வாரும்; அந்த ஆண்டவன் உம்மைக் காப்பான்; இவ்வளவு சீக்கிரத்தில் எங்களை விட்டுப் பிரிந்து போவீரென்றறியேன்; ஆண்டவன் காவலாகச் சுகமே போய்வாரும்; நீர் விட்டுப் போவதை நினைக்க எனக்கு அழுகை வருகிறது; ஆனாலும் பயணம் புறப்படும்போது அழவொண்ணாதென்று சொல்லுவார்கள்; எங்களை மறந்துவிட வொண்ணாதம்மா" என்று கண்களில் நீர்ததும்பச்சொல்லிப் பிரதி நமஸ்காரஞ் செய்து விடைதந்தார். இதற்கிடையில் அஞ்சுகத்தக்காள் உறங்கிக்கிடந்த பத்மாவையும் எழுப்பி நித்திரைச் சோர்வை மாற்றி எங்களுடன் புறப்படச் செய்தாள்; மூவரும் புறப்பட்டோம்; எங்கள் அறைக் கதவுகளையும் தலைவாசற் கதவையும் அக்காள் தானே பூட்டித் திறவு கோலைத் தன்னுடன் வைத்துக்கொண்டாள்; மூவரும் இரதத்தில் வந்து ஏறினோம்; இரதம் புறப்பட்டது; "தங்காய்; என்னுடைய விலாசம் உமக்குத் தெரியும்; என் பதிலை எதிர்பாராமல் நீர் யாத்திரை செய்யும் ஒவ்வொரு தலத்திலுமிருந்து எனக்குக் கடிதமெழுத வேண்டும்" என்று சொல்லி முத்திரையிட்ட காகித உறையில் தன்னுடைய விலாசம் எழுதப்பட்டபடி சில உறைகளையும் வெற்றுக் கடதாசிகளையும் என்னிடம் தந்தாள்; வாங்கி வைத்துக்கொண்டேன்; இதற்கிடையில் எங்கள் ரதம் புகையிரத ஸ்தானத்தையடைந்தது; முதல் வகுப்பிற் பிரயாணஞ் செய்தற்காகிய பெண்கள் தங்கியிருக்கிறதாகிய அறையுள் மூவரும் இரதத்தைவிட்டு இறங்கிப்போய் இருந்தோம். "தங்காய்; எந்தத் தலத்திற்கு முதற்போகவுத்தேசித்திருக்கிறீர்" என்று கேட்க, சிதம்பரம் போகலாமென்று உத்தேசிக்கிறேன் எனச் சொன்னேன்; உடனே சாரதியைக் கூப்பிட்டுச் சிதம்பரத்திற்கு முதல்வகுப்புப் பிரயாணச் சீட்டு எடுத்து வா என்று சொல்லிப் பணத்தைக் கொடுக்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரதி வாங்கிக்கொண்டு போனான்; "தங்காய், இதற்குட் கொஞ்சப்பணமிருக்கிறது; வழிச்செலவிற்குக் கூடும்" என்று சொல்லி ஒரு பணப்பையை நீட்ட, நான் இரண்டு கையினாலும் ஏற்றுக்கொண்டேன்; சாரதி பிரயாணச்சீட்டு எடுத்துக்கொண்டு வந்து தர, புகையிரதம் வரும் சத்தமுங் கேட்டது; என் நெஞ்சு திடுக்கிட்டது; மனத்தில் ஏக்கம் பிறந்தது பிரிவையிட்ட கவலை அதிகப்பட்டது; இதற்கிடையில் ஒரு கூலிக்காரன் வந்து பெட்டியையும் ஏனைய பயணப்பண்டங்களையும் எடுத்துக்கொண்டு முந்திப்போனான்; அக்காள் முன்செல்ல, நான் நடுவிற் செல்ல பத்மா எங்களைத் தொடர்ந்து வந்தாள்; பெண்களுக்கெனப் பிரத்தியேகமாக வுள்ள ஒரு வண்டியுள் என்னையும் பத்மாவையும் ஏறச்செய்து அக்காள் தானும் ஏறினாள்; அந்த நேரத்தில் அந்தப் வண்டியுள் வேறெவருமில்லை; என்னை நடுவில் இருக்கச்செய்து ஒருபுறம் பத்மாவும் ஒருபுறம் தானும் இருந்துகொண்டு "தங்காய் ஒன்றுக்குங் கலங்கவேண்டாம்; அந்தப் பராசக்தி உம்முடன் எந்த நேரமும் உடன் வருகிறாளென்று எண்ணிக்கொள்ளும்; எந்தத் தலத்திற்குப் போனாலும், இவளொரு கருமியிருக்கிறாள்; இவளும் நல்ல கதியடைய வேண்டுமென்று என்னையிட்டுத் தெய்வத்தைக் கும்பிடும்; அதனோடு நான் தெரிந்தோ தெரியாமலோ ஏதுங் குற்றஞ்செய்திருந்தால் அதை மனசினில் வைக்காமல் மறந்துவிடும்" என்று சொல்லி நமஸ்காரஞ் செய்தாள்; ஐயா, கடைசியிற் சொன்ன இந்த வார்த்தைகளைக் கேட்க என் மனங் குழைந்தது; ஐயோ! அக்கா, பெற்றதாயைக் காட்டிலும் பரிவுடைய அக்கா, இப்படியேன் சொல்லுகிறீர்கள் என்று, சிறுபிள்ளைபோல் அக்காளை என் கைகளால் கட்டிப்பிடித்துக்கொண்டு அழுதேன்; அவள் என் கண்ணீரைத் துடைத்து "அழவேண்டாம் அம்மா, அன்பு மேலீட்டினால் உபசாரமாகச் சொன்னேன்" என்று சமாதானஞ் சொல்லித் தேற்றினாள்; அக்கா, புகைரதம் புறப்பட இன்னமும் நேரமிருக்கிறதோ, இந்த வண்டியிலே வேறெவரையுங் காணோமே என்று பயத்துடன் கேட்க, அக்காள் சிரித்து "தங்காய், முதல் வகுப்புப் பெட்டியிலிருக்கும்போது என்ன பயம்; இந்த ஸ்தானத்தில் புகைரதம் 1/2 மணிநேரம் தங்கிநின்றுதான் புறப்படும்; பராசத்தி உம்முடன் வருகிறாளென்பதை மறந்து விடாதீர்" என்று சொல்லுவதற்கிடையில் "அம்மா, இந்தப்பெட்டி வசதியாக விருக்கிறது; இதில் ஏறுங்களென்று ஒரு பிராமணப்பிரபு தமது தாயாரை அப்பெட்டியில் ஏறச்செய்தார். அம்மா சங்கரையன் மூன்றாம் வகுப்புப் பெட்டியில் இருக்கிறான்; ஒவ்வொரு தானத்திலும் புகைரதம் நிற்கும்போது உங்களை வந்து பார்ப்பான் சுகமே போய்வாருங்கள்; எதற்கும் கடிதம் எழுதுங்கள்" என்று சொல்லிவிட்டு மேடையில் நின்றார் அந்த ஐயர். கிழவி எங்கள் ஆசனத்திற்கு எதிராசனத்தி லிருந்துகொண்டு "நீங்கள் எங்கே போகிறீர்கள்" என்று எங்களைக் கேட்க "இந்தத் தங்கைச்சிதான் யாத்திரை செய்தற்குப் புறப்பட்டிருக்கிறது; நாங்களிருவரும் பயணமனுப்ப வந்தோம்" என்று அக்காள் மறுமொழி சொன்னாள்; "அம்மா, நீங்கள் எங்கே போகிறீர்கள் என்று நான் கேட்க, நானும் யாத்திரை செய்யும் நோக்கமாகப் போகிறேன்; முதன்முதற் சிதம்பரத்திலே போயிறங்க எண்ணியிருக்கிறேன்" என்று பாட்டி பதில் சொல்ல நான் சந்தோஷப்பட்டேன்; அம்மா, என் தங்கைச்சியும் சிதம்பரத்திலேதான் போயிறங்குவாள்; இவளையும் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்ல கிழவி "ஆம், மகளே, அப்படியே செய்கிறேன்" என்று சொல்லிச் சந்தோஷப்பட்டாள்; புகைரதம் புறப்படும் நேரமாய்விட்டது; அப்பொழுதுதான் அக்காள் கண் கலங்கினாள், என்முகத்தைத் தடவி முத்தமிட்டாள்; பத்மாவோடு வண்டியிலிருந்து இறங்கினாள்; புகைரதம் புறப்பட்டது, அக்காளை நமஸ்காரம் பண்ணினேன்; பிரதி நமஸ்காரம் பண்ணினாள்; என் கண்ணை விட்டகன்றாள். ஆனால் இன்னமும் என் மனத்தைவிட்டு அஞ்சுகத்தக்காள் அகன்றிலள்.

* * *

உலகம் பலவிதம்: 1944 டிசம்பர் 21
விசாலாட்சி: (முற்றொடர் - 31)

சிதம்பர தரிசனம்

அன்றிரவு முழுவதும் ஓடிப் புகைரதம் அடுத்தநாட்காலை 8 மணி வரையில், சிதம்பரத்திலுள்ள தானத்தை யடைந்தது; புகைரதத்தில் அந்தப் பாட்டியும் நானும் சற்றுநேரமும் உறங்கவில்லை; பாட்டி என் வரலாற்றைக் கேட்டபோது நான் சுருக்கமாகச் சொல்லிவிட்டேன்; சில விஷயங்களை அப்போதைக்குச் சொல்லாமல் விட்டேன்; பாட்டியுடைய பெயர் சீதையம்மாள்; பாட்டி தன் வரலாற்றைச் சொல்லும்போது தனக்கு என்னைப்போன்ற தோற்றமுடைய யாரோ ஒரு மகளிருந்ததென்றும் அந்த மகளைத் தாங்கள் மிகவும் அருமையாக வளர்த்துத் தங்கள் சொந்த மருமகனுக்கே விவாகஞ் செய்து வைத்ததென்றும், வெகுகாலம் பிள்ளைப்பேறில்லாமல், ஒன்பது வருடத்தின் பின் கருப்பவதியாகித் தசமாசம் நிறைந்து ஒரு ஆண்குழந்தையைப் பெற்றவிடத்தில் பெற்றவீட்டிற்றானே குழந்தையும் தாயும் மோசம் போயினரென்றுஞ் சொல்லிக் கவலைப்பட்டு "மகளே, எங்கள் மகளுடைய தோற்றம் உன்னிடத்தில் அதிகமாக விருக்கிறது, உன்னைக் கண்டநேரந் தொடுத்து என் மகளுடைய ஞாபகமும் உன்னிடத்தில் அன்பும் என் மனத்திற் பிறந்துவிட்டன, என்று சொல்லி என்னிடத்தில் உண்மையான அன்பு பாராட்டினாள், அதனால் நானும் மன ஆறுதலடைந்தேன். நாங்கள் புகைவண்டியைவிட்டு இறங்குவதற்கிடையில், பாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் வேலைக்காரனாகிய சங்கரையர் அங்கே வந்து வண்டியிலுள்ள பயணப்பண்டங்களை இறக்கிக் கீழே வைத்தார்; இதற்கிடையில் ஒரு பிராமணப் பிரபு தமது வேலைக்காரனுடன் அவ்விடத்தில் வந்து பாட்டியைப்பார்த்து "அம்மா, வாருங்கள், வெளியில் இரதம் நிற்கிறது; தங்கள் மகனுடைய கடிதம் நேற்று மத்தியானம் வந்து சேர்ந்தது" என்று சொல்லியழைக்க நாங்கள் இருவரும் நேரேபோய் இரதத்தில் ஏறினோம்; பயணப் பொருள்களைச் சங்கரையரும் அந்தப் பிரபுவுடன் வந்த சாரதியுங் கொண்டுவந்து இரதத்தில் வைத்தார்கள். சாரதியோடு மற்றையிருவரும் முற்புறத்திலிருப்ப, நாங்களிரண்டு பேரும் இரதத்தின் பின்னாசனத்திலிருந்தோம். சில நிமிஷங்களிற் பாட்டிக்கென ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு பெரிய வீட்டின் தலைவாசலில் இரதம் போய் நின்றது. அந்தப் பிராமணர் எங்களை அந்த வீட்டில் அழைத்துக் கொண்டுபோய் இருக்கச் செய்தார். ஆகவேண்டிய வசதிகளெல்லாஞ் செய்தார்; தம்முடைய வீட்டிற்குப் போய்ச் சில நேரத்தில் மீண்டுவருவதாகப் பாட்டியிடஞ் சொல்லிவிட்டு அந்த ஐயர் ரதத்தில் ஏறிக்கொண்டு போய்விட்டார். "பாட்டி, இந்த ஐயர், ஆர்? இவர் உங்களுக்குச் சொந்தமா? இவர் ஏன் உச்சியிற் குடுமி வைத்திருக்கிறார்?" என்று நான் கேட்க, "சொந்தமல்லடியம்மா; இவர் இங்கேயுள்ள தீட்சதர்; எங்கள் மகனுடன் சிநேகமுடையவர்; முந்தியும் நாங்கள் இந்தத் தலத்திற்கு யாத்திரையாக வந்தகாலத்தெல்லாம் இவர்களே தங்க இல்லந்தந்து எங்களை உபசரித்தவர்கள்" என்று சொல்லிவிட்டு "மகளே, ஸ்நானத்திற்கு வெந்நீர் இடப்பட்டிருக்கிறது; வா, ஸ்நானம் முடித்துக்கொண்டு சுவாமி தரிசனஞ் செய்யப்போவோம்" எனலும், அப்படியே போய் ஸ்நானம் முதலிய காலைக் கடன்களெல்லாம் முடித்துக்கொண்டு கோயிலுக்குப் புறப்படுதற்கு ஆயத்தமாக நின்றேன்; நான் அணிந்திருந்த ஆபரணங்களுட் பிரதானமான சிலவற்றை மாத்திரம் அணிந்து கொண்டு ஏனையவற்றைக் கழற்றிப் பெட்டியுள் வைத்துவிட்டு, பெட்டியுளிருந்த வெண்பட்டுச் சேலையை உடுத்திக் கொள்ளும்படி எடுத்தபோது அதற்குள் ஒரு மெல்லிய உருத்திராக்கமாலை, ஒவ்வொரு மணிக்குமிடையே பொற்சில்லுகள் கோக்கப்பட்டதாய் அச்சேலையுள் இருப்பதைக்கண்டு, இது அஞ்சுகத்தக்காளின் செயலென்றறிந்து அந்த அக்காளை நினைத்து மனமுருகினேன். வெண்பட்டுச் சேலையையும் அந்த உருத்திராக்க மாலையையுந் தரித்துக்கொண்டு பாட்டியின் முன் வருதலும் பாட்டி பார்த்து ஆச்சரியப்பட்டு "ஏனடியம்மா! உந்தக்கோலம், உந்த உடை எங்களைப்போன்ற கைம்மைகளுக்கும் வயசு சென்றவர்களுக்குமல்லவோ உரியது" என்று சொல்ல, நான் "இல்லை, ஆச்சி, எனக்கு இதுதான் விருப்பமென்றேன், சங்கரஐயர் துணையாக வர இருவரும் சிதம்பரத் திருக்கோயிலுக்குப் போனோம்;

ஐயா, அந்தத் தலத்தின் மகத்துவத்தைச் சொல்ல என்னால் முடியுமா? தூலலிங்கமாகிய கோபுரத்தைத் தரிசித்துக் கொண்டு உட்சென்று விநாயகப்பெருமானையும் சிதம்பரேசுவரனையும் அம்பாளையும் வணங்கிக் கொண்டு பொன்னம்பலத்தையடைந்தோம், நடராசப் பிரபுவையும் சிவகாமித்தாயையும் அன்றுதான் முதன் முதல் தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன்;

"இருபதமுந் துடியிடையும் திகழுடையுந்
தன தடமும் இயற்பொற் பூணும்
கரு விழியுஞ் செவ்வாயும் வெண்ணகையும்
பசுந்தோளுங் கழுநீர்க் கையும்
பொருவரு மங்கல நாணுங் கந்தரமும்
புரிகுழலும் புனிதன் கண்ணுந்
திருவருளும் உலாவுமெழிற் சிவகாமி
சுந்தரி தாள் சென்னி சேர்போம்"

என்று தேவியைத் தோத்திரஞ்செய்தேன். என் குறைகளையெல்லாமெடுத்து உலக மாதாவாகிய சிவகாமசுந்தரிக்கு முறையிட்டேன்; தரிசனஞ்செய்து விபூதிப் பிரசாதம் முதலியனவும் பெற்றுக்கொண்டு மூவரும் எங்கள் வாசஸ்தானத்திற்கு மீண்டோம்; சகல வசதிகளோடும் நாங்கள் நான்கு ஐந்து நாட்களாகச் சிதம்பர தரிசனம் கிரமமாகச் செய்து வந்தோம்.

ஏனைய தலயாத்திரை

சிதம்பரத்திற்றானே தங்கியிருந்துகொண்டு அதற்கணித்தாகவுள்ள சீர்காழி முதலிய புராதன புண்ணியதலங்களைத் தரிசித்துவந்தோம். சிதம்பரத்திலிருக்கும்போது அந்தத் தீட்சிதருடைய மனைவி மக்கள் சுற்றத்தார் நாங்களிருக்கும் வீட்டிற்கு வந்து வந்து சுகம் விசாரித்து இதமான வார்த்தை பேசிச் செல்வார்கள்; அப்படி வந்தவர்கள் "என்னை யார்" என்று பாட்டியைக் கேட்டால் "இந்தப் பிள்ளையும் எங்களைச் சேர்ந்த குழந்தைதான்" என்று பாட்டி சொல்லிக்கொள்வதுண்டு; "நெல்லுகிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிய புல்லுக்கு மாங்கே பொசியுமாம்" என்ற பிரகாரம் பாட்டியின் பேரால் எனக்கும் பலவகையான உபசாரங்கள் அங்கே நடந்தன. பின்னருஞ் சிலநாள் அங்கே தங்கியிருந்து அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு திருவாரூருக்குச் சென்றோம்; திருவாரூர்த் தியாகராசப் பெருமானாரைத் தரிசனஞ் செய்துகொண்டு, அயலிலுள்ள சிவத்தலங்களுக்கும் போய்ப்போய் மீண்டு திருவாரூரிலுள்ள ஒரு திருமடத்தில் வசதியாகத் தங்கியிருந்தோம்; அந்தத் தலத்தில் ஐந்துநாள் தங்கித் தரிசனஞ் செய்துகொண்டு, திருச்செந்தூர்ப் பெருமானைத் தரிசிக்க வேண்டுமென நோக்கங்கொண்டு புறப்பட்டுப் போனோம். அந்தத் தலத்தையடைந்தவுடனே வசதியாக ஒரு திருமடத்தில் இருந்துகொண்டு செந்திலாண்டவனைக் காலையும் மாலையும் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றோம். கூலியுதவுரதராகிய திருச்செந்தூர் ஆண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசனத்தின் பெருமையை என்னால் எடுத்துச் சொல்ல முடியுமோ! இந்தப் பெண் சந்மத்தையெடுத்த பேற்றை அன்றுதான் பெற்றேன். சண்முகமூர்த்தி திருவுலா வெழுந்தருளிய திருக்கோலக்காட்சி என் கண்களில் அடங்காது; "முண்டகமலர்ந்தனன் மூவிரு முகமுங் கண்ணும், குண்டல நரையுஞ் செம்பொன் மவுலியுங் கோல மார்பும், எண்டரு கரமீராறும் இலங்கெழிற் படைகள் யாவும் தண்டையஞ் சிலம்பு மார்க்குஞ் சரமுற் தெரியக்கண்டான்" என்ற கந்தபுராணத்துள்ள திருவிருத்தம் அப்பொழுது என் ஞாபகத்தில் எழுந்தது. பெருமானுடைய மூவிரு முகங்களிலும் ஒழுகுங் கருணையையும் என்னுடைய ஆதாரமற்ற நிலையையும் உணர்ந்தேன்; செந்திலாண்டவன் சந்நிதியில் அநாதப்பிள்ளைபோல் நின்று தியங்கினேன், என்னுள்ளம் வெயிலிடைப்பட்ட வெண்ணெய் போல உருக,

"கொள்ளித்தலையி லெறும்பதுபோலக் குலையு மென்றன்
உள்ளத்துயரை யொளித்தருளாய்! ஒருகோடி முத்தந்
தெள்ளிக் கொளிக்குங்கடற் செந்தில் மேவிய சேவகனே
வள்ளிக்கு வாய்த்தவனே மயிலேறிய மாணிக்கமே"

என்ற தோத்திரத்தைப் பாடினேன், கும்பிட்டேன்; பாட்டியோடு திருக்கோயிலை விட்டகன்றேன். சிலநாள் அங்கே தங்கியிருந்து சுவாமிதரிசனஞ் செய்தபின், மதுரைக்குப் போக வேண்டுமென்று பாட்டி நோக்கங் கொண்டமையால், நானும் பாட்டியோடு கூடி மதுரைக்குப் புறப்பட்டேன்; திருவாலவாய்ப் பெருமான் அறுபத்துநான்கு திருவிளையாடல்களை ஆன்ம கோடிகள் ஈடேறும் வண்ணம் செய்தருளிய பரிசுத்தமான திருப்பதியல்லவோ மதுரையென்று நினைத்த மாத்திரத்தே அந்தத் தலத்தில் மிதிக்கவே என்னுள்ளங்கால் கூசியது; மதுரையிற் பாட்டியினுடைய மகனுக்கு நண்பரான ஒரு பிராமணப்பிரபுவின் இல்லத்திற்குப் போனோம்; பாட்டி தன் மகன் கொடுத்த கடிதத்தை அந்த வீட்டுப் பிராமணரிடங் கொடுத்தபோது, அவர் அதனை வாங்கி வாசித்து மிகவுஞ் சந்தோஷப்பட்டு எங்களைப் பெரிதும் உபசரித்துத் தமது மாளிகைபோன்ற இல்லத்தில் நாங்கள் தங்குவதற்காகிய வசதிகளனைத்துஞ் செய்தார்.

மதுரைத் திருக்கோயிலையடைந்து சொக்கலிங்கப் பெருமானைத் தரிசித்துக் கொண்டு மீனாட்சி யம்மையாருடைய சந்நிதானத்தையடைந்தோம். எங்கள் மீனாட்சித்தாய் வெளிப்படையாக அங்கே அரசு வீற்றிருக்கக் கண்டோம். "அங்கையற்கண்ணம்மே! தமியேன் பெற்றாரையறியாமல் ஊர்விட்டுத் தேசம்விட்டு ஒளித்துப் புறப்பட்டு வந்தமை, இப்பொழுது தாயே உன்னைத் தரிசிக்க நேர்ந்ததால் நன்மையாக வல்லவோ முடிந்தது, அம்மா; சகல சீவராசிகளையும் பெறாமற் பெற்றருளிய அன்னையே! இந்தப் பாட்டியை எனக்குப் பயணத்துணையாகக் கூட்டியனுப்பியது உன் திருவருளென்றுதான் மதிக்கிறேன்" என்று சொல்லி அழுதேன்.

"செழியர்பிரான் திருமகளாய்க் கலைபயின்று
முடிபுனைந்து செங் கோலோச்சி
முழுதுலகுஞ் செயங்கொண்டு திறை கொண்டு
நந்திகண முனைப்போர் சாய்த்துத்
தொழுகணவற் கணிமணமாலிகை சூட்டித்
தன்மகுடஞ் சூட்டிச் செல்வந்
தழைவுறு தன் னரசளித்த பெண்ணரசி
யடிக்கமலந் தலைமேல் வைப்பாம்"

என்ற தோத்திரத்தையும் படித்தேன்; தாயை விட்டகலும் புனிற்றிளங்கன்றுபோலத் தேவி சந்திதானத்தை அரிதிற் பிரிந்து எங்கள் வாசஸ்தானத்திற்கு மீண்டோம். மதுரைக்குச் சமீபத்திலுள்ளதாகிய திருப்பரங்குன்றத்திற்குச் சென்றோம். எங்கள் முருகக்கடவுள் அகில உலக மாதாவாகிய தெய்வநாயகியைத் திருமணஞ்செய்த திவ்வியதலம் இதுவல்லவோ என்று நினைந்து நினைந்து உள்ளத்தில் அன்பு பெருகப் பரங்கிரி நாதனையும் தேவிமாரையும் வணங்கித் துதித்துக்கொண்டு மதுராபுரிக்கு மீண்டோம்.

* * *

உலகம் பலவிதம்: 1944 டிசம்பர் 28
விசாலாட்சி: (முற்றொடர் - 32)

இராமேசுவர தரிசனம்

பின்னருஞ் சிலநாள் மதுரைத்தலத்திலே தங்கி மீனாட்சி சுந்தரேசுவரரை அநுதினமுந் தரிசனை செய்துகொண்டு, இராமேச்சுவரத்திற்கு யாத்திரை செய்ய ஆசைகொண்டு பாட்டியும் நானும் மதுரையிலுள்ள அந்தப் பிராமணரிடத்திலும் அவர் குடும்பத்தாரிடத்தும் அநுமதி பெற்றுக் கொண்டு புகைரத மார்க்கமாகப் புறப்பட்டோம். அன்று மாலைக் காலத்தில் வந்து இராமேசுவரத்தை யடைந்தோம்; திருக்கோயில் வீதியிலுள்ள ஒரு பிராமணருடைய பெரிய வீட்டிலே தங்குதற்காகிய ஒழுங்குகளெல்லாம் செய்துகொண்டோம். அன்றிரவே இராமநாதப் பெருமானையும் பருவத வர்த்தனியம்மாளையும் தரிசிக்கவேண்டுமென்ற ஆவலினால் நாங்கள் உடனே விரதம் முதலியன முடித்துக்கொண்டு திருக்கோயிலுக்குப் போனோம். குன்றம்போல் உயர்ந்து நிற்கும் கோபுரத்தை வணங்கிக் கொண்டு திருக்கோயிலினுள்ளே சென்று இராமநாதப் பெருமானையும் பருவதவர்த்தனியம்மையாரையும் உடம்பெல்லாம் உரோமஞ் சிலிர்ப்ப, கண்ணீர் பெருக, உள்ளம் நெக்கு நெக்குருக வணங்கித் துதித்தோம்; அங்கே நின்றவர்கள் சீதாலிங்கத்தை தரிசிக்க வரும்படி அழைத்துக்கொண்டுபோய் அந்த சிவலிங்கப் பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியில் விடுத்தார்கள். சந்நிதியிற் போய்நின்ற மாத்திரத்தே இராமாயணச் சரித்திரம் முழுவதும், அதனுள்ளும் சீதாபிராட்டியாரின் கற்பின் மகத்துவமும் திடபக்தியும் என் ஞாபகத்தில் உதித்தன; சீதாதேவிக்கு அனுக்கிரகஞ் செய்த இராமலிங்கப் பிரபுவே! உன் பெண் குழந்தைகளுள் யானுமொருத்தி யன்றோ! என்னைக் கைவிட நீதியுண்டோ என்று முறையிட்டேன்;

"வாலவய தாகியழ காகிமத னாகிபணி
வாணிபமொ டாடிமரு ளாடிவிளை யாடி விழல்
வாழ்வுசத மாகிவலு வாகிமட கூடமொடு பொருள்தேடி
வாசபுழு கோடுமல ரோடுமன மாகி மகிழ்
வாசனைகள் ஆதியிட லாகிமய லாகி விலை
மாதர்களை மேவியவ ராசைதனி லேசுழல சிலநாள் போய்த்
தோல்திரைக ளாகிநரை யாகிகுருடாகியிரு
கால்கள் தடு மாறிசெவி மாறிபசு பாசபதி
சூழ்கதிகள் மாறி சுக மாறிதடி யோடு திரி யுறுநாளிற்
சூலைசெரி யீளை வலி வாதமொடு நீரிழிவு
சோகைகள மாலைசுர மோடுபிணி தூறிருமல்
சூழலுற மூலகசு மாலமென நரியுடலழிவேனோ
நாலுமுக னாதியரி யோமெனஅ தார முரை
யாதபிர மாவைவிழ மோதிபொரு ளோதுகென
நாலுசிர மோடுசிகை தூளிபட தாளமிடும் இளையோனே
நரிதழி வேணிசிவ ரூபகலி யாணிமுத
லீணமக வானைமகிழ் தோழவன மீது செறி
ஞானகுற மாதைதினை காவில்மண மேவுபுகழ் மயில்வீரா
ஓலமிடு தாடகைசு வாகுவளரே முமரம்
வாலியொடு நீலபக னோடொருவி ராதனெழு
மோதகட லோடுவிறல் ராவணகு ழாமமரில் பொடியாக
ஓகைதழல்வாளி விடுமூரிதநு நேமிவளை
பாணிதிரு மார்பனரி கேசன்மரு காஎனவே
ஓதமறை ராமசுர மேவுகும ராவமரர் பெருமாளே

என்ற திருப்புகழை யோதினேன். ஓதி முடித்துக் கும்பிட்டு முடித்துக்கொண்டு பாட்டியைப் பார்த்தேன்; பாட்டி பக்கத்தில் நின்ற சங்கரையர் இன்னும் சமீபத்திலே நின்ற பலர் என்பாட்டைக் கேட்டமையினாற் போலும் என்னைப் பார்த்தபடி நிற்கக் கண்டேன்; அதனால் நான் கூச்சமடைந்து பாட்டியையுங் கூட்டிக்கொண்டு சங்கரையருடன் எங்கள் வாசஸ்தானத்தையடைந்தோம். அடுத்தநாட் காலையிலும் ஸ்நானம் முதலிய நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு திருக்கோயி லுக்குப்போய் அங்குள்ள விசேஷ தீர்த்த மொவ்வொன்றிலும் தீர்த்தமெடுப்பித்துத் தலையிலும் உடம்பிலும் புரோட்சித்தோம்; சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு அநுமகுண்டம் முதலிய தானத்தையும் தரிசனஞ் செய்தோம், அன்று பூரணையும் வெள்ளிக்கிழமையுமாதலால் சுவாமி தரிசனஞ் செய்யவந்த சனக்கூட்டம் அதிகம்; தரிசனம் முடித்துக்கொண்டு எங்கள் வாசஸ்தானத்திற்குப் போனோம்; போய்ப் போசனம் முடித்துக்கொண்டு ஆறுதலாயிருக்கும்போது சங்கரையர் என்னைப் பார்த்து "அம்மா, நேற்றிரவு சுவாமி சந்நிதானத்தில் நீர் படித்த திருப்புகழ் கர்ணாமிதமாயிருந்ததே; இப்பொழுதும் என் காதில் அது தொனித்துக்கொண்டிருக்கிறதே" என்று சொல்லி முடிப்பதற்கிடையிற் பாட்டி என்னைப் பார்த்து "ஆமடியம்மா, இவ்வளவு அடக்கம் உன்னிடத்திலிருக்கின்றதென்பதை நான் முந்தியறியேன்; திருப்புகழைப் பாடிய அருணகிரிநாதர் பிற்காலத்திலே கிளி வடிவு கொண்டு திருப்புகழை முருகப்பிரான் மேற் பாடினாரென்று கன்ன பரம்பரையாக ஒரு கதையுண்டு, அருணகிரிநாதர் கிள்ளைவடிவத்தோடு சொன்னதுபோல இருந்ததடியம்மா நேற்றிரவு நீ ஓதிய திருப்புகழின் சாரமும் இசையும், சென்ற இரவு பிரயாணஞ் செய்த சிரமத்தால் அலுப்படைந்திருப்பாயென்று நான் திருப்புகழ் பாடும்படி கேட்கவில்லையடியம்மா; இப்பொழுது அந்தத் திருப்புகழைப் பாடம்மா காதாரக் கேட்போம்" என்று சொல்ல நானும் ஆனந்தமாகப் பாடினேன்; திருக்கோயிலில் நின்று மீண்டு அந்த மார்க்கமாக வந்தவர்கள் சிலர் நான் ஓதிக்கொண்டிருந்த திருப்புகழை ஆவலுடன் கேட்டபடி நின்றார்கள்; அவர்களுள் ஒரு மனுஷி நான் பாடி முடிந்தவுடன் ஆநந்த பரவசமாய் "அரகரா! கதிர்காமத்தையா! என்று சொல்லித் தெற்கு நோக்கித் தலையிற் கைவைத்துக் கும்பிட்டாள்; இன்னுமொரு பெண் "கதிர்காமத் தையன் பேரிலுள்ள திருப்புகழ் ஞாபகத்திலிருந்தாற் சொல்லுங்கள்; ஆநந்தமாகக் கேட்போம்" என்று எனக்குச் சொல்ல, எல்லீரும் இருந்து கேளுங்கள் நான் அறிந்ததைச் சொல்லுகிறேன் என்று அவர்களை இருக்கச்செய்து அந்தக் கதிர்காமத்துப் பெருமான் மீது பாடப்பட்டதாகிய பின்வரும் திருப்புகழைப் படித்தேன்;

"உடுக்கத் துகில்வேணு நீள்பசி
யவிக்கக் கனபானம் வேணுநல்
ஒளிக்குப் புனலாடை வேணுமெய் யுறுநோயை
ஒழிக்கப் பரிகாரம் வேணுமுள்
இருக்கச் சிறுநாரி வேணுமொர்
படுக்கத் தனிவீடு வேணுமிவ் வகையாவுங்
கிடைத்துக் க்ருஹவாசி யாகிய
மயக்கக் கடலாடி நீடிய
கிளைக்குப் பரிபால னாயுயி ரவமேபோம்
க்ருபைச்சித் தமுஞான போதமு
மழைத்துத் தரவேணு மூழ்பவ
கிரிக்குட் சுழல்வேனை யாளுவ தொருநாளே
குடக்குச் சிலதூதர் தேடுக
வடக்குச் சிலதூதர் நாடுக
குணக்குச் சிலதூதர் தேடுக வெனமேவிக்
குறிப்பிற் குறிகாணு மாருதி
யினித்தெற் கொருதூது போவது
குறிப்பிற் குறிபோன போதிலும் வரலாமோ
அடிக்குத் திரகார ராகிய
வரக்கர்க் கிளையாத தீரனு
மலைக்கப் புறமேவி மாதுறு வனமேசென்
றருட்பொற் றிருவாழி மோதிர
மளித்துற் றவர்மேல் மனோகர
மளித்துக் கதிர்காம மேவிய பெருமாளே.

ஐயா, படித்த நான் என்னை மறந்தேன்; படிக்கக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் தம்மை மறந்தார்கள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கதிர்காமத்தையனுக்கு அரஹரா! கதிரைமலையானுக் ஹரஹர! என்று கேட்டுக் கொண்டிருந்தவர்கள் ஓலமிட்டார்கள். பக்கத்திலே இருந்த பாட்டி தன்கையால் என் முதுகைத் தடவி, "மகளே, சாங்காலம் என் காதில் இந்த அமிர்தமான பாட்டுக்களைக் கேட்ட வைக்கின்றாயே, என்ன புண்ணியஞ் செய்தேனோ வறியேன்" என்று தன் கண்களில் நீர் ததும்பச் சொன் னாள், அப்பொழுது அங்கிருந்த ஒரு பெரிய மனுஷர் எழுந்து கண்களிலே நீர்ததும்ப நின்று "அம்மா, தாயே! இந்தத் திருப்புகழை எங்கள் கதிரையாண்டவன் சந்நிதியில் நின்று நீர் படிக்கவேண்டும்; அந்த முருகன் கேட்டுத் திருவுளமிரங்கி உமக்கு அருள் செய்ய வேண்டும்" என்று சொல்லிவிட்டு உடனே அவ்விடம் விட்டகன்றார். அப்பொழுது நான் அங்கே இருந்தவர்களை நோக்கி, "தாய்மாரே, திருப்புகழை நான் வந்து படிக்க நீங்கள் கேட்டு ஆநந்தங் கொள்ளுகிறீர்கள்; அந்தக் கதிர்காமத்தையன் திருநாமத்தைப் பக்தியுடன் பலமுறையும் உச்சரிக்கின்றீர்கள்; நீங்கள் எந்த ஊர்? அந்தக் கதிர்காமத்தலம் உங்கள் நாட்டிற்குச் சமீபத்திலேயுள்ளதா? என்று ஆவலுடன் கேட்டேன்.

"கதிரையாண்டவனைத்
தரிசிக்க மனங்கொண்டேன்"

"அம்மா, எங்கள் நாடு இலங்கையென்றும் சொல்லப்படும் ஈழநாடாகும்; எங்கள் ஈழநாட்டிலே கதிரைமலைக்குச் சமீபத்திலே மாணிக்ககங்கைக் கரையிலே கதிர்காமத்தலத்திலே வள்ளி தெய்வானை யென்னுந் தேவிமாருடன் முருகையன் கோயில் கொண்டிருக்கிறான்; ஆடி மாசத்திலும் கார்த்திகை மாசத்திலும் கதிர்காமத்தையனுக்கு உற்சவம் நடக்கும்; நாங்களெல்லோமும் விசேஷமாக ஆடி மாச உற்சவ காலத்திலே அந்தத் தலத்திற்குப்போய் மாணிக்க கங்கையில் மூழ்கிக் கதிர்வேலாயுதப் பெருமானைத் தரிசனஞ் செய்து வருவது வழக்கம். உற்சவ காலத்தில் யானை வாகனத்திலல்ல அம்மா, அந்தப் பெருமானைச் சுமத்தப் பூர்வத்திற் புண்ணியஞ் செய்த ஒரு உயிர் யானைமீதுதானம்மா கதிரையாண்டவன் ஏறியிருந்து திருவீதியிலே திருவுலா வருவான்; அந்தக் காட்சியைக் காணாத கண்ணுமொரு கண்ணா? கதிர்காமத்தையனைத் தரிசியாத சந்மம் பிறவிக்கடல் கடந்து கரையேறுவது அரிதம்மா" என்று அங்கிருந்த ஒரு மூதாட்டி சொல்ல, தாயே இந்த இராமேசுவரத்திலிருந்து கதிர்காமத்தலத்திற்கு அதிக தூரம் பயணம் பண்ண வேண்டுமோ என்று கேட்டேன். "இல்லையம்மா; இந்த இராமேசுவரத்திற்குச் சமீபத்தில் இருக்கிறது எங்கள் ஈழநாடு; அந்த ஈழநாட்டிலே தான் கதிர்காமத் தலம்; இங்கிருந்து இரண்டு நாட்பயணமம்மா" என்று சொன்னார்கள்; இதைக் கேட்ட மாத்திரத்தே கதிரையாண்டவனைத் தரிசிக்க மனங் கொண்டேன்.

அங்கு வந்திருந்தவர்களெல்லோரும் எங்களிடத்தில் விடை பெற்றுக்கொண்டு போய்விட்டார்கள்; அப்போது நான் பாட்டியைப் பார்த்து, "பாட்டி, ஊரிலிருந்து வெகுதூரத்திற்கு வந்து சமீபத்திலுள்ளதாகிய கதிர்காமத் தலத்திற்குப் போகாமல், கதிரையாண்டவனைத் தரிசனஞ் செய்யாமல், மீண்டுபோக மனமெழவில்லை, ஆனதால் ஆச்சி, வருகிறீர்களா கதிர்காமத்திற்குப் போய் முருகனைத் தரிசனஞ் செய்துகொண்டு மீண்டு போவோம் என்று கேட்டேன். "மகளே, நீ சொல்வது முழுவதும் நிசம்; கதிர்காம தரிசனஞ் செய்ய எனக்கும் நூறுமுறையும் விருப்பம்; ஆனால் ஊரைவிட்டுப் புறப்படும்போது என் மகனுக்குச் சொல்லி ஆகவேண்டிய ஒழுங்குகளைச் செய்து கொள்ளவில்லையென்று கவலைப்படுகிறேன்" எனக்கூறி "மகளே, ஆண்டவன் சீவனைப் போட்டிருந்தால் இன்னுமொருவேளை யாத்திரை செய்யும்போது கதிர்காமத்தையனையுந் தரிசிக்கலாம் என்று கவலையோடு சொன்னாள். என்மனம் சமாதானப்படவில்லை;

"தேவர்தொழுந் தென்கதிரைச் செவ்வேளைப் போற்றாமல்
தாவுகிர கப்பகையால் தத்தளிக்கப் பட்டுவிட்டேன்"
"வாழுங் கதிரைமலை வள்ளலைநான் போற்றாமல்
வேழம் புசித்த விளாங்கனிபோ லானேனே"

என்று இப்படிப் பாடிக்கொண்டு அன்றிரவு அதே சிந்தனையாக உறங்கிவிட்டேன்.

* * *

உலகம் பலவிதம்: 1945 ஜனவரி 04
விசாலாட்சி: (முற்றொடர் - 33)

"மூத்தோர் சொன்ன வார்த்தை யமிர்தம்"

அடுத்தநாட்காலை பாட்டி என்னைப் பார்த்து "மகளே, யாத்திரைக்கென ஊரைவிட்டுப் புறப்பட்டு வெகுநாட்களாய்விட்டன; இனி நாம் மீண்டு போகவேண்டும் இந்த இராமேசுவரத்திற்கு வந்த நாம் சேதுதீர்த்தம் ஆடாமற்போவது முறையல்ல; ஆனதினால் இப்பொழுதே ஆக வேண்டிய ஆயத்தங்களைச் செய்துகொண்டு சேதுக்கரைக்குப் புறப்படவேண்டும்" என்று சொல்லுதலும் நானும் அதற்குச் சம்மதித்து அன்று காலையிற்றானே புறப்பட்டோம்; அங்கே எங்களுக்குத் தங்குதற்கு வீடுதந்து உபசரித்த ஐயரும் குடும்பத்தினரும் எங்களுடன் சேது தீர்த்தமாடப் புறப்பட்டு வந்தார்கள்; சேதுக்கரையையடைந்து விதிப்படி சங்கல்ப்பஞ்செய்து தீர்த்தமாடி எங்கள் குலதெய்வமாகிய சேதுமாதவனையும் வணங்கித் துதித்து மீண்டு இராமேசுவரத்திற்கு வந்தோம்; அன்றிரவு பாட்டி என்னை நோக்கி "மகளே, நாளைக்காலைப் புகைரதத்தில் நாங்கள் ஊருக்குப் புறப்பட உத்தேசித்திருக்கிறோம்; நீரும் எங்களுடன் மீண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவீர்தானே" எனக் கேட்க, "பாட்டி, உங்களுடன் மீண்டு வருவது போன்ற வசதி வேறு கிடையாது; ஆனால் இவ்வளவு தூரம் வந்து சமீபத்திலுள்ளதாகிய கதிர்காமத்தலத்திற்குப் போகாமல் மீண்டுபோக என் மனம் எழவில்லை, அல்லாமலும் என் வரவை ஊரிலே ஆவலுடன் எதிர்பார்த்திருப்பாரெவருமில்லை; கடற்கரையிற் தாளங்காய்போலத் தேடுவாரற்ற பாவியானேன்; "என் பெற்றதாயாரும் என்னைப் பிணமென்றிகழ்ந்துவிட்டார்; உன் பற்றொழிய ஒருபற்றுமில்லை யுடையவனே" என்று பட்டினத்துப் பிள்ளையார் பாடிய பாட்டின் நிலைமையில் இருக்கின்றேன்; இந்தக் "கட்டை" யிருக்கும்போது கதிர்காமத்தையனை யொருமுறையாயினுந் தரிசனஞ் செய்யவேண்டுமென்று ஆசை கொண்டேன்; ஆனதால் ஆச்சி, அங்கேதான் போதற்கு மனம் வைத்தேன்; நீங்களும் அங்கு வந்தால் நன்மையாகும் என்றேன்; "மகளே கதிரையாண்டவனைக் கண்டு வணங்கும்படி இப்பேதையாகிய நான் கொடுத்து வைக்கலையடியம்மா; என் பிள்ளைக்குச் சொல்லாமற் கடல்தாண்டி ஈழத்திற்குப் போகப் பயப்படுகிறேன்; நான் பெற்ற பிள்ளையானாலும் அவன் இந்தநேரத்தில் எனக்குப் பாதுகாப்பாளனாவான்; அவன் உத்தரவுப்படி தான் நான் நடந்து கொள்ளுதல் வேண்டும்... "என்று சொல்லி முடிப்பதற்கிடையில், நான் பாட்டியை நோக்கி ஆச்சி, பெற்றதாய்க்கும் பிள்ளையின் உத்தரவு வேண்டுமென்கிறீர்களே, இது நூதனமாயிருக்கிறதே, தாய் சொற்படி பிள்ளை நடப்பதா? பிள்ளை சொற்படி தாய் நடப்பதா? இது என்ன விபரீதம் என்றேன்; பாட்டி என்னைப் பார்த்துச் சிரித்து "அப்படியல்லவடியம்மா, நீ உலகமறியாச் சிறுபெண் மூத்தோர் சொன்ன வார்த்தை யமிர்தம், என்பதையெண்ணி எங்கள் பெரியோருடைய கொள்கையை மீறும் பெண்ணாகப் பிறந்த நாங்கள் ஒரு போதும் நினைக்கவொண்ணாது; ஒரு பெண் சிறுவயசிலே தன் தாய் தகப்பனுக்கும், இல்லறத்திற் புகுந்தபின் தன் கணவனுக்கும் அவன் முந்தியிறக்க நேர்ந்தால் தன் ஆண்பிள்ளைக்கும், ஆண்பிள்ளை பராயமற்ற காலத்தில் இல்லையேல் இல்லாத பட்சத்தில், தன் சகோதரன் பெரியதந்தை சிறியதந்தை மாமன் முதலியோருக்கும் அடங்கிக் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும். அதனைவிட்டுக் கட்டறுத்த கழுதைபோலத் தன்னிட்டத்திற்கு அலைந்து திரியவொண்ணாதடி மகளே, பெண்ணாகப் பிறந்தவள் அப்படித் திரியத் தலைப்படுவாளானால், அவள் தனக்கும் தான் பிறந்த மரபுக்கும் புகுந்த மரபுக்கும் தீரா வசையைத் தேடிவிடுவாள்; ஆனதால் மகளே, என்பிள்ளைதான் எனக்கு இப்பொழுது மேலானவன்" என்று சொல்லி முடித்தாள்; பாட்டி சொன்ன சில வார்த்தைகள் எனக்கும் பொருத்தமாயிருந்தன வீட்டைவிட்டுச் சொல்லாமற் கரவாகப் புறப்பட்டதை யெண்ணியெண்ணி நான் பச்சாத்தாபப்பட்டேன்; நடந்ததையிட்டுக் கவலைப்பட்டு இனி ஆவதென்ன என்றெண்ணி ஒருவாறு மனத்தைத் தேற்றினேன்; ஆச்சி நீங்கள் கதிர்காமத்திற்கு வரமுடியாமலிருக்கிறது நிசம்; ஆனால் எனக்கு உத்தரவுதந்து என்னை ஆசீர்வதித் தனுப்புங்கள் என்று பிடிவாதமாகச் சொன்னேன்; "மகளே, நல்ல கருமத்திற்கு நான் இடையூறாக நிற்க மாட்டேன்; ஆனால், கதிர்காமத்தையனுடைய அநுமதியில்லாமல் அங்கே போகவொண்ணாதென்று அந்த நாளில் ஆரோ முதியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன்; அந்தப் பெருமானைப் பிரார்த்தித்துக் கொண்டு அவனிடம் போவாயானால் அவன் உன்னைக் கைவிடமாட்டான்; அந்தத் தலத்திற்குப் போனால் இந்தப் பெண் சந்மத்திற்கும் நல்லகதி காட்ட வேண்டுமென்று என்னையிட்டு முருகனிடம் முறையிடு; எவ்வுயிருங் காக்குங் கதிர்காமத்தையன் உன்னையா கைவிடப்போகிறான்" என்று சொல்லித் தேற்றினாள்.

குழந்தாய் "போய் வருகிறேன்"

அடுத்தநாட் காலை பாட்டியுஞ் சங்கர ஐயரும் ஊருக்கு மீள்வதென்றும், நான் கதிர்காம யாத்திரை செய்யப் புறப்படுவதென்றும் நிச்சயித்துக் கொண்டோம். நாங்கள் தங்கியிருந்த வீட்டிற்குரிய ஐயருக்குங் குடும்பத்தினர்க்கும் எங்கள் நோக்கத்தைத் தெரிவித்தோம். அவர்கள் பிரிவாற்றாது மனம் வருந்தினார்கள். காலைக் கடன்களை முடித்தபின் இராமநாதப் பெருமானிடத்துந் தேவியிடத்தும் உத்தரவு பெற்றுக்கொண்டு அந்தச் சிலநாளுள் எங்களுடன் பழகியவர்களெல்லாரிடத்தும் விடைபெற்றுக்கொண்டு குறித்தநேரத்திற் புகைரத ஸ்தானத்திற்குப் புறப்பட்டோம்; ஐயர் தம்முடைய வேலைக்காரனுடன் எங்களைத் தமது வண்டியில் ஏற்றித் தாமும் ஏறிக்கொண்டு புகைரத ஸ்தானத்திற்குப் பயணமனுப்புதற்கு வந்தார்; சில நிமிஷஞ் செல்லப் பாட்டி ஏறவேண்டிய புகைரதத்தொடர் அங்கே வந்தது; பாட்டி என் பிரிவாற்றாது வருந்தினாள், அவள் கண்களில் நீர்ததும்பியது; கண்ணே, "உம்மைக் கண்டநாள் முதல் இன்று வரையில் நான் பெற்றுச் சாவக் கொடுத்த மகளை மீளக்கண்டவள்போல மனச் சந்தோஷத்துடனிருந்தேன்; இன்றைக்குப்பிரிய நேர்ந்தது; பழையபடி என் மனத்திற் கவலை குடிகொண்டது; ஆனால் மகளே, உம்மை என் மரணபரியந்தம் மறவேன்" என்று சொல்லிக் கலங்க நானும் அழுதேன்: பாட்டி எப்படியேனும் ஒருமுறை நான் உங்களைச் சந்திப்பேன் என்று சொல்லிப் பாட்டியைத் தேற்றி நானும் ஒருவாறு தேறினேன்; இதற்கிடையில் இராமேசுவரத்தையர் தமது வேலைக்காரன் மூலமாகப் பாட்டியின் பிரயாணப் பொருள்களையெல்லாம் புகைவண்டியில் எடுத்து ஏற்றச்செய்தார்; பாட்டியையும் வண்டியில் ஏறச்செய்தார்; "குழந்தாய், போய் வருகிறோம்; கவலைப்படாதேயடி யம்மா" என்று சொல்லிச் சங்கர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயர்கண்களில் நீர்ததும்ப என்னிடம் சொல்ல, போய் வாருங்கள் ஐயா என்று அவருக்குஞ் சொல்லிவிட்டுக் கலங்கி நின்றேன்; புகைரதம் போகத்தொடங்கியது; கட்பார்வைக் கப்பாற் போய் மறையுமட்டும் பாட்டி என்னைப் பார்த்தபடியிருக்க நான் பாட்டியைப் பார்த்தபடி நின்றேன்.

"அவனையன்றி ஆந்துணையார்"

சிலமணி நேரஞ் செல்ல நான் ஏறிச் செல்ல வேண்டிய புகைரதம் அந்த ஸ்தானத்திற்கு வருதலும் இராமேசுவரத்து ஐயர் அப்புகைரதத்தில் என்னை ஏற்றிவிட்டு விடைதந்து மீண்டார். நான் ஏறியிருந்த வண்டியில் ஒரு கிழவியும் வேறுசில பெண்களும் இருந்தார்கள்; அவர்களுள் அந்தக் கிழவி "மகளே, நீர் எந்தவூர்? எங்கே போகின்றீர்? தனியே வந்திருக்கிறீர்; உமக்குத் துணையாக எவரும் வரவில்லையா? கவலை யோடு காணப்படுகிறீர் காரணமென்ன" எனப் பல கேள்விகளை ஒன்றன்பின்னொன்றாகக் கேட்க, நான் என்னுடைய ஊர் இன்னதெனச் சொல்லி, கதிர்காமம் போகிறேன், தனியேதான் வருகிறேன்; அந்தக் கதிர்காமத்தையன்தான் எனக்கு உற்றதுணை; அவனைப் போய்த் தரிசிக்கவேண்டுமென்பதுதான் கவலை என்று பதில் சொன்னேன். "நீர் சொல்வது நிசந்தான் மகளே, ஆனாலும் உம்மைப் போன்ற இளம் பெண்கள் ஆனதுணையின்றித் தன்னந்தனியே புறப்பட்டுச் செல்வது புத்தியல்ல; துணையோடல்லது தனிவழி போகேல் என்று பெரியோர் சொல்லி யிருக்கிறார்கள்; அதனையிட்டுத் தான் சொல்லுகிறேன் அம்மா" என்று அந்தக் கிழவி இதமாகச் சொன்னாள்; ஆச்சி நீங்கள் சொல்வது அத்தனையுஞ் சரி; நான் என் மனத்திற் கொண்ட ஒரு வைராக்கியத்தினால் ஊர்விட்டுத் தேசம் விட்டு இப்படித் தன்னந்தனியே புறப்பட்டு வர நேர்ந்தது; அந்த முருகன் எனக்குத் துணையென நம்பித்தான் தாயே! தனியே புறப்பட்டு அவனிடம் போகிறேன்;

வழிக்குத்துணை திருமென் மலர்ப்பாதங்கள் மெய்மைகுன்றா,
மொழிக்குத்துணை முருகாவெனு நாமங்கள் முன்பு செய்த,
பழிக்குத் துணையிவன்பன்னிருதோளும் பயந்ததனி
வழிக்குத்துணை வடிவேலுஞ் செங்கோடன் மயூரமுமே"

ஆதலால், ஆச்சி! அவனையன்றி வேறார் எனக்குத் துணையாவர்? என்று சொன்னேன்; "மகளே, நீர்பாடும்போது கர்ணாமிதமாகயிருக்கிறதே; உமக்குச் சங்கீதம் வருமா" என்று கேட்க, சற்றுத் தெரியும் என்றேன்; பரத நாட்டியந் தெரியுமா" எனப் பின்னரும் கிழவி கேட்க ஆம் என்றேன். "மிகவும் நல்லது, எங்கள் நாட்டிலே பரத நாட்டியம் சங்கீதமென்னுமிவைகள் அந்தந்தத் தொழிலைச் செய்வோர்க்குத் தெரியுமே யொழிய மற்றைய ஆண்கள் பெண்களுள் அநேகருக்குத் தெரியாது, ஆனால் உங்கள் நாட்டிலே அதிகமாக எல்லாருக்கும் இவை தெரியுமென்று நினைக்கிறேன்" எனச் சொல்லிவிட்டு, "மகளே, ஆகாரஞ் செய்ய நேரமாகிறது இங்கே எங்களிடத்திற் போதிய உணவுப் பண்டமுண்டு; நீரும் உண்ணுகிறீரா" என்று கேட்க, ஆச்சி எனக்கு இப்பொழுது பசியில்லை நானும் போதிய ஆகாரம் கொண்டுவந்திருக்கிறேன்; மேலும் நான் பிராமணப் பெண் ஆச்சி; மறுக்கிறேனென்று குறையெண்ணவொண்ணாதென்றேன், "அப்படியா, அது எங்களுக்குத் தெரியாமற் போய்விட்டது" என்று சொல்லிவிட்டு அவர்கள் ஒருபுறமாகவிருந்து போசனஞ் செய்யத் தொடங்கும்போது சில பழங்களை எனக்கென்று தர, நான் ஏற்று உண்டேன். அன்று மத்தியானம் வரையில் அக்கரையிலே தங்கிநின்று ஸ்நானம் போசனம் முடித்துக் கொண்டு அன்று பொழுது பட்ட பின் ஈழநாட்டிற்குப் புறப்பட்டோம், புறப்பட்டுப் போகும் மார்க்கத்தில் கிழவியென்னைப் பார்த்து "மகளே, நீர் கதிர்காமத்திற்குப் போக வேணுமென்று சொல்லுகிறீர்; அந்தத் தலத்திற்கு உற்சவ காலத்திலே போவதுதான் வசதி; அந்தக் காலத்தில் நாங்களும் எங்களூரிலிருந்து புறப்பட்டு உடன்வருவோம்" எனலும், ஆச்சி, உற்சவம் எந்த மாசத்தில் என்று நான் கேட்கக் கிழவி "ஆடி மாசத்தில் மகளே" என்று சொல்ல, மெய்தானா, அது வரையில் நான் எங்கே தங்கலாமென்று கேட்க, "மகளே எங்கள் ஊரிலும் பல புராதன புண்ணிய தலங்கள் தீர்த்தங்கள் உண்டு; அங்கங்கெல்லாம் போய் நீர் சுவாமி தரிசனஞ் செய்யலாம், தீர்த்தமாடலாம்; போய்ப் போய் வந்து எங்கள் வீட்டிலே தங்குவதற்கு நீர் சம்மதித்தால், நாங்கள் ஆகவேண்டிய வசதிகளெல்லாஞ் செய்வோம்; எங்கள்வீடு பெரிய மேல்வீடாகும்; நீர் இருப்பதற்குச் சமைத்துண்பதற்கெல்லாம் அந்த வீட்டிற் போதிய இடமும் வசதிகளும் உண்டு; வேணுமானால் நீர் எங்களுடன் வந்து எங்கள் வீட்டைப் பாரும்; பார்த்து உமக்குப் பிடித்துக் கொண்டால் இருக்கலாம், இல்லாவிட்டால் வேறு தனி வீட்டை உமக்கென்று நாங்களே ஒழுங்கு செய்து வைப்போம்; எங்கள் வீட்டிலே ஆண் பிள்ளைகள் நிலையாக வசிப்பதில்லை ..." என்று இப்படி இதமாகக் கிழவி சொன்னாள். "ஆச்சி, உங்களுக்கு எது சம்மதமோ அது எனக்குஞ் சம்மதந்தான்; ஏதோ அந்தப் பராசத்திதான் உங்களை எனக்குத் துணையாகக் கொண்டு வந்து விட்டாள்" என்று சொன்னேன்; புகைரதம் அன்று முழுவதும் ஓடி அடுத்த நாள் அதிகாலையிற் கிழவியிருக்கும் பட்டினத்தை யடைந்தது.

"அறியாமையினால் இங்கு வந்து சேர்ந்தேன்"

புகைரத ஸ்தானத்தில் இறங்கியவுடன் பாட்டி என்னையும் தன்னுடன் கூடியவர்களையும் ஒரு மோட்டரதத்தில் ஏற்றித் தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனாள்; கிழவியை வரவேற்பதற்குப் பலர் இந்த வீட்டு வாசலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கக்கண்டேன்; கிழவி வழியிற் சொன்னதைக் காட்டிலும் வீடு இன்னமும் விசேடமானதாக இருக்கக் கண்டேன், யாரோ பெரிய இடத்திலுள்ளவர்களின் வீடாயிது இருக்கவேண்டுமென்று அந்த நேரத்தில் எண்ணினேன். இவ் வீட்டுப் படியிலே நான் அடிவைத்தது தொடக்கம் எனக்கு எல்லாவிதமான உபசரணைகளும் வசதிகளும் செய்யப்பட்டன; இங்கே வந்து ஒரு வாரகாலம் எவ்வகையான கவலையுமின்றிச் சந்தோஷமாகவிருந்தேன்; அஞ்சுகத்தம்மாளைப்போல இந்தக் கிழவியும் எனக்கு இனியவளென்று எண்ணினேன்; ஐயா, ஒரு கிழமைக்கு மேற்றான் இது தாசி வீடென்றறிந்தேன்; அறியாமையினால் இங்குவந்து சேர்ந்தேனேயென்று கவலைப்பட்டேன்.

* * *

உலகம் பலவிதம்: *1945* ஜனவரி *11*
விசாலாட்சி: *(முற்றொடர் - 35)*

"போம்போது அவளோடும்போம்"

பார்ப்பனப் பெண் என்ற நியாயத்தினால் எந்த நாளும் நானே சமைத்து உண்டு வந்தேன்; இவர்கள் எனக்கு ஆகவேண்டிய வசதிகள் இன்றுஞ் செய்துவருகிறார்கள்; இந்தப் பாட்டியும் இங்குள்ள வேலைக்காரரும் என்மீது மதிப்பும் அன்பும் பாராட்டியே நடந்து வருகிறார்கள். வீராச்சாமி பாலசிங்கன் என்னுமிருவரும் இங்கே அதிகமாக வந்து ஊடாடிப் போவதுண்டு; ஒரு நாள் பாட்டி ஆறுதலாகவிருக்கும் நேரத்தில் "பாட்டி! இங்கு நான் வந்தும் பல நாட்களாயின; நான் கதிர்காமம் போக ஆசைப்படுகிறேன்; உங்களைச் சிரமப்படுத்திக்கொண்டு நான் இங்கே நீடித்த காலம் தங்கியிருப்பது சரியல்ல; நீங்கள் சமீபகாலத்தில் கதிர்காமத்தலத்திற்குப் போகும் நோக்கமிருந்தால் அப்போது என்னையும் உடன்கூட்டிக்கொண்டு போங்கள்; இல்லையேல் யாரும் கதிர்காம யாத்திரை செய்வோர் இந்த அயலிலிருந்து புறப்பட்டால் என்னையும் அவர்களுடன் சேர்த்து விடுங்கள்..." என்று விநயமாகக் கேட்டேன்; "மகளே, நாங்கள் இப்போதைக்கு யாத்திரை போகும் நோக்கமில்லை; ஆனால் உம்மைப் பிறரோடு சேர்த்து யாத்திரையனுப்புவதும் புத்தியல்ல, இந்த ஆடிமாசத்திலே போகாவிட்டாலும் வருகிற கார்த்திகைத் தினத்திற்கு நிச்சயமாகப் போக உத்தேசித்திருக்கிறோம்; அப்பொழுது உம்மையும் உடன் கூட்டிக்கொண்டு போவோம்; நீர் எதற்கும் அவசரப்படவேண்டாம்" என்று சமாதானஞ் சொன்னாள்; கேட்டுக்கொண்டு பேசாமலிருந்தேன்; நான் வந்து பல நாட்கள் கழிந்தும் இந்த வீட்டிற்கு யாரும் ஆடவரேயொழிய அயலட்டத்திலேயுள்ள பெண்கள் ஒருவரும் வந்துபோகக் கண்டிலேன்; பாட்டி உங்களுக்கு இனசனம் இந்தவூரில் ஒருவரு மில்லையோ என்று ஒரு நாள் நான் கேட்டபோது, "இருக்கிறார்கள் மகளே, சற்றுத் தூரத்திலேதான், என் மகள் உயிரோடு இருந்த காலத்தில் இந்த வீட்டிற்கு வராத ஆண்களில்லை, பெண்களில்லை; இன சனத்தாரில்லை; போம்போது அவளோடும் போம் என்ற விதமாய் அந்தச் சீமாட்டி எங்களைக் கைவிட்டுப் போய் 18 மாசம் வரையிலாய் விட்டது; அதற்குப் பிறகுதான் இந்த வீட்டிற்கு இந்தக் கேவலமான நிலை வந்தது; எங்களுக்கு ஆண்டவன் கிருபையால் வேறொரு குறையுமில்லை; ஆளில்லாத் துக்கம் அழுதாலுந் தீராது என்றபடி அந்தப் பிள்ளையைப் பறிகொடுத்துத் தான் எனக்குத் தீராக் கவலை;" என்று சொல்லி அழுதுவிட்டுத் தானாகவே தேறிப் பின்னரும் என்னைப் பார்த்து "மகளே, உம்மைப் பார்க்க என் பிள்ளையைப் பார்ப்பதுபோலிருக்கிறது; நீர் வந்த பிறகு எனக்குப் பெரும் மன ஆறுதல்" என்று சொல்லி முடித்தது. நான் இவைகளையெல்லாம் கேட்டுக்கொண்டு ஐயோ, ஒளிக்கத் தெரியாமல் தலையாரி வீட்டில் வந்து ஒளித்த கள்வன் போலானேன்" என்று என் மனதிற் கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன்.

"நானும் பெண் நீரும் பெண்"

இப்படியாக, ஒருநாட் பின்னேரம் பாட்டி எனக்குத் துணையாக வேலைக்காரச் சிறுமியை இருக்கச் செய்துவிட்டு, சற்றுத் தூரத்தில் யாரையோ போய்க் கண்டுகொண்டு வரவேண்டுமென்று சொல்லிப் போய்விட்டாள்; நீடித்த நேரம் வீட்டுள் இருந்துவிட்டுப் பின்பு பொழுதுபோக்காகத் தலைவாசற் பக்கத்திற் போய் நின்றேன்; வேலைக்காரச் சிறுமியும் வீட்டிலே தன் கருமங்களைப் பார்த்துக்கொண்டு நின்றாள், முந்தித் தலைவாசலிலே நான் வந்து நிற்கப் பாட்டி விடுவதில்லை; அன்று நான் அப்படி நிற்கும்போது எதிர் வீட்டுத் தலைவாசலில் நின்ற ஒருபெண் என்னைப் பார்த்துப் புன்னகை செய்து" "என்ன இன்றைக்கு இந்த இடத்திலே நிற்கிறீர் கிழவி எங்கே" என்று அன்புடன் கேட்க "பாட்டி வெளியே போய்விட்டாள்; சும்மா பொழுது போக்காக இந்த இடத்தில் வந்து நிற்கிறேன் அம்மா" என்று பதில் சொன்னேன்; "வேறு உங்கே நிற்பது யார்" என்று அந்த அம்மாள் கேட்க "இப்பொழுது வேலைக்காரிதான் உள்ளே நிற்கிறாள் என்றேன்; பின்னர் மனுஷி யாதும் பேசாமல் என்னைப் பரிவுடன் பார்த்த வண்ணம் நிற்க, நான் "அம்மா, உங்களிடம் நான் வரலாமோ" என்று கேட்டேன்; "நீர் வர வேண்டாம் அம்மா, வேணுமானால் நான் உங்கே வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டு தெரு வீதியை இரண்டு புறமும் திரும்பிப் பார்த்துவிட்டு உடனே நான் நின்ற இடத்திற்கு வந்தாள், வந்த அம்மாளை "அம்மா, இங்கே உள்ளுக்கு வாருங்கள் வந்து உட்காருங்கள்" என்று கேட்க, "இல்லையம்மா; நான் இங்கே வரும் வழக்கமில்லை; எங்கள் வீட்டில் ஆண்பிள்ளையறிந்தாற் குறை சொல்லுவார்; நீர் இங்கே வந்திருக்கின்றீரென்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தியே அறிவேன்; இந்த வேளை உம்மைத் தனியே கண்டமையினால் வந்தேன்; என்னை அறியாமல் என்னிடத்தில் உம்மீது அன்புண்டாகிறது; அதனாற்றான் வந்தேன் குறையெண்ணவேண்டாம்" என்று சொல்லி உள்ளே வருதற்கு மறுத்துத் தலைவாசலிலேயே நின்றாள். நின்ற அந்த அம்மாள் என்னைப் பரிவுடன் பார்த்து "அம்மா நீர் யார்? இருப்பதெங்கே; இவர்கள் முந்தி உங்களுக்குச் சொந்தமா? இல்லையேல் உங்களுடன் பாசமா? உம்மைப் பார்க்கும் போது நீர் இவர்களுக்குச் சொந்தம்போற் புலப்படவில்லையே; உமக்கு விவாகமாய் விட்டதா" என்று ஒன்றன்பின் னொன்றாகப் பல கேள்விகளைக் கேட்டாள்; பரிவுடன் கேட்கும் இந்த அம்மாவிற்கு நான் ஒன்றையும் ஒளிக்க வொண்ணாதென்றெண்ணி என் விருத்தாந்தம் முழுவதையும் சுருக்கமாகச் சொன்னேன்; கேட்ட அந்த அம்மாள் திகைத்தபடி நின்றாள்; என்னைப் பார்த்துக் கவலைப்பட்டாள், "ஏன் அம்மா; ஒன்றும் பேசுகிறீர்களில்லை" யென்று நான் கவலையோடு கேட்க, "அன்று அவன் எழுதியதை ஆரால் அழித்தெழுத முடியும்" என்று சொல்லி பெருமூச்சு விட்டுச் சும்மா நின்றாள் அந்த அம்மாள். அம்மா, நீங்கள் பயப்படாமல் உள்ளதைச் சொல்லுங்கள்; நான் ஒன்றையும் வெளியிடமாட்டேன்; பெண் புத்தியால் வந்து அகப்பட்டுக் கொண்டு விழிக்கிறேன்; உங்கள் தங்கையென்று பாவித்துக்கொண்டு உண்மையைச் சொல்லுங்கள் அம்மா, உயிர் போனாலும் எவருக்கும் வெளியிடமாட்டேன்" என்று இரந்து கேட்க, அந்த அம்மாள் என்னை அன்புடன் பார்த்து, "அம்மா, நான் இந்தத் தலைவாசலுக்கு வந்ததைத்தானும் எங்கள் வீட்டுக்காரர் அறிந்தாற் கண்டிப்பார்கள்; உம்மைக் கண்டவுடனே என் உள்ளத்திற் பரிவுண்டாக, நான் இங்கே வந்தேன்; என்மேல் விசுவாசம் வைத்துக் கேட்கும் உமக்கு எதனையும் மறைக்க எனக்கு மனமெழவில்லை; சொல்லுகிறேன், இரகசியமாக இருக்கட்டும்; இவர்கள் கணிகையர் குலத்தைச் சேர்ந்தவர்கள்; இந்தக் கிழவிக்குச் சொந்த மகளென்றெவளுமில்லை; இந்தக் கிழவி நான் சிறுபிள்ளையாக இருக்குங் காலத்திலேயே தென்னிந்தியாவிற் போய்ப் போய் இளம் பெண்களைக் கொண்டு வந்து அவர்கள் மூலமாக கோயில்களிலும் கலியாண வீடு முதலிய மங்கலமான இடங்களிலும் நாட்டியஞ் செய்வித்தும் பாட்டுக் கச்சேரி வைத்தும் பெரும் பொருள் ஈட்டி வருகிறாள்; இந்த வீட்டிற்கு வந்து போகும் ஆண்பிள்ளைகளும் தாசிவீடு என்ற முறையிலேதான் வந்து போவர். இற்றைக்குச் சில வருடங்களுக்கு முன் இக்கிழவி வளர்த்துப் பிழைத்து வருதற்குத் துணையாயிருந்த பெண் சயரோகங்கண்டு மோசம் போய்விட்டாள், அதனாற் சில காலமாக இக்கிழவி எவ்வகையான பிழைப்பும் வருவாயு மில்லாமற் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள்; ஆனாலும் இவளிடத் திலே சம்பாத்தியம் அதிகமுண்டு. இப்பொழுது உம்மையும், இந்த முறையிலேதான் இந்தியாவிலிருந்து கூட்டிக்கொண்டு வந்திருக்கிறார்க ளென்று இந்தவூரிலே கதைக்கிறார்கள்; ஆனால் உம்மை நேரிற் பார்க்கும்போது இவைகளெல்லாம் வீண் கதையென்று என் மனத்தே புலப்படுகிறது; நானும் பெண்ணாய்ப் பிறந்தவள்; நீரும் பெண்ணாய்ப் பிறந்தவர்தான்; ஆனதாற் புத்தியாய் நடந்துகொள்ளும் அம்மா; நான் இந்தத் தலைவாசலுக்கு வந்தமைதானும் அந்தரங்கமாயிருக்கவேண்டும் அம்மா" என்று பரிவுடன் சொல்லிவிட்டு உடனே அந்த அம்மாள் தங்கள் தலைவாசலில் மீண்டுபோய் நின்றாள், நான் இங்கே நின்றபடி அங்கே நின்ற அந்த அம்மாளுக்கு நமஸ்காரஞ் செய்துவிட்டு மீண்டு வீட்டினுட்போய் என் படுக்கையிற் சாய்ந்தேன்; என் தலை விறைத்தது; மனம் ஏங்கியது; சரீரம் பதறியது; ஆ! கதிர்காமத்தையா! உன்னைத் தரிசிக்க வந்த எனக்கு இதுவாகதி! புலிக்குப் பயந்து சிங்கம் வசிக்கும் குகையில் ஓடி யொதுக்கிடந் தேடிய மான்பிணை போலானேனே! காக்கக் கடவியநீ காவாதிருந்தக்கால் - ஆர்க்குப் பரமாம் அறுமுகவா.... என்று அந்த முருகனுக்கே முறையிட்டேன்; சற்று நேரத்தில் அயர்ந்து விட்டேன்; பொழுதுபட்டு ஏழுமணியிருக்கும் கிழவி வந்து என்னை எழுப்பி "மகளே! என்ன சுகவீனம்; ஏனடியம்மா படுத்துக் கிடக்கிறாய்" என்று அன்புடையாள்போற் கேட்டாள்; பாட்டி எனக்கு வேறொரு சுகவீனமுமில்லை; தாங்கொணாத தலைவலியாயிருக்கிறது! ஆனால் இப்பொழுது படிந்து வருகிறது என்று சமாதானஞ் சொல்லிக்கொண்டு மெல்ல எழுந்திருந்தேன், ஏதோ இறைவன் விட்டவழியைக் கண்டுகொள்வோமென்று ஒருவாறு மனத்தைச் சமாதானப்படுத்தினேன்.

"நாங்கள் உருத்திர கணிகையர்"

அயல்வீட்டுச்சீமாட்டி சொன்ன விஷயங்களை யெல்லாம் கேட்டு மனசில்வைத்துக் கொண்டு அறிந்தும் அறியாள் போல் நடந்து வந்தேன்; ஓர் நாள் வீராசாமியும் பாலசிங்கனும் தலைவாசலில் இருப்ப, பாட்டி என்னிடம் வந்து வெகுநேரம் மிக இதமாகப் பேசிவிட்டு, "மகளே, சமீபத்திலுள்ள ஒரு பிரபு வீட்டிலே நாளை வெள்ளிக்கிழமை கல்யாணம் வெகு சிறப்பாகவும் ஆடம்பரமாகவும் நடக்கப்போகிறது, அவர்கள் எங்களுக்கு மிகவும் வேண்டியவர்கள்; அந்தக் கல்யாணப் பந்தரிற் பாட்டுக் கச்சேரி நடத்த வேண்டுமாம்; சங்கீதத்திலும் நாட்டியத்திலும் உனக்கு ஒப்பாவார் இந்த நாளில் இங்கே எவருமிலர் என்பது எனக்குத் தெரியுமடியம்மா; நீர் அதற்கு உடன்பட்டாற்றான் நான் அவர்களுக்கு ஓம் சொல்ல முடியும்; அவர்கள் போதிய சந்மானஞ் செய்தனுப்புவார்கள்; பொருளுக்காகவல்லவடியம்மா மனுஷரை வேண்டுமென்று நடக்கவேணுங் கண்ணே..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பரிவுடன் கேட்டாள்; "பாட்டி கல்யாண வீட்டிலே பாட்டுக்கச்சேரி நாட்டியம் செய்ய வேணுமென்றால் அவைகளுக்கென்றிருக்கும் கணிகையரோடு ஒழுங்கு செய்வதை விடுத்து இங்கே வந்து அவர்கள் உங்களை ஏன் கேட்கிறார்கள்? நீங்களேன் என்னை அதற்கு உடன்படும்படி கேட்கிறீர்கள்" என்று வெறுப்புடன் கேட்டேன், கிழவி வெகுநேரம் பேசாமலிருந்துவிட்டுப் பின்னர் என்னைப் பார்த்து "மகளே, உண்மையை உனக்கு மறைக்க முடியாதடியம்மா, நாங்கள் உருத்திர கணிகையர் குலமடியம்மா; உருத்திர கணிகையர் குலமென்றால் சாமானியமானதல்ல, அந்த உருத்தர மூர்த்திக்கு நாங்களே உண்மையான அடிமை பூண்டுள்ளோம்; அதனாற்றான் எங்களைத் தேவதாசிகளென்று சொல்வார்கள்; பரவையார் எங்கள் குல மூதாட்டி யல்லவோ... என்று தங்கள் குலப் பெருமையை எடுத்துப் பேசத்தலைப்பட்டாள் கிழவி; இதற்கிடையில் தலைவாசலிலிருந்த பாலசிங்கனும் வீராச்சாமியும் நாங்கள் இருந்து பேசுமிடத்திற்கு வந்தார்கள்.

* * *

உலகம் பலவிதம்: 1945 ஜனவரி 18 விசாலாட்சி: (முற்றொடர் - 35)

"இதுவே முதலும் கடைசியும்"

"இந்தக் காலத்திலே கணிகையர் மாத்திரமல்லர் குலங் குடியிற் பிறந்த பெண்களும் சங்கீதம் பயின்று அதனை விருத்தி செய்கிறார்கள்; பரதநாட்டியம் பயின்று வருகிறார்கள்; பூர்வத்தில் அரசகுமாரிகளும் சங்கீதம் பரதநாட்டியமென்னு மிவைகளைப் பயின்றனரென்று சங்கநூல்களிற் சொல்லப்பட்டிருக்கிறது; உமக்கும் இவையிரண்டும் கைவந்துள்ளனவெனப் பாட்டி சொல்ல அறிந்தேன்; ஆகையால் பாட்டியின் கேள்விப்படி அந்த மணப்பந்தலில் நீரும் போய் உமக்குத் தெரிந்தவைகளைச் செய்து பார்ப்போரையும் கேட்போரையும் மகிழ்ச்சியுற வைப்பதனாற் பிழையல்லவென நினைக்கிறேன்; இனி உமது இஷ்டம்" என்று மாவிலும் படாமல் மாங்காயிலும் படாமல் என்னை நோக்கி இதமுறச் சொன்னான் அங்கே வந்திருந்த பாலசிங்கன். பாலசிங்கன் பேசும்போது வாக்கு வன்மையுடன் பேசுவானென்பதை நீங்களும் அறிவீர்கள்; அவைகளைக் கேட்ட நான் பாலசிங்கனைப் பார்த்து; "அக்காலத்திலே சங்கீதத்தையும் பரத நாட்டியத்தையும் அரசகுமாரிகளும் பயின்று விருத்திபண்ணி வந்தார்களெனச் சங்க நூல்களிற் சொல்லப்பட்டிருத்தல் கூடும்; ஆனால் அந்த அரச குமாரிகள் கல்யாண வீட்டிற் போய் மணப்பந்தலிற் சங்கீதம் பாடினார்களென்றேனும் பரத நாட்டியஞ் செய்தார்களென்றேனும் அச்சங்க நூல்களிற் சொல்லப்பட்டதுண்டோ" என விநயமாகக் கேட்டேன்; பாலசிங்கனுடன் முதன்முதல் நான் வார்த்தையாடிய சந்தர்ப்பம் அதுவேயாம்; அப்படி நான் சொல்லக்கேட்ட பாலசிங்கன் சிறிது யோசித்துவிட்டு, "நீர் சொல்வதும் நியாயந்தான்; அதனால்றான் உமது இஷ்டப்படி செய்யலாமென முந்தியே சொல்லிவிட்டேன்" என்றான்; "பாலசிங்கா, ஏன் இந்த அம்மாளை நீ நெருக்கிக்கேட்கிறாய்; இந்த அம்மாளுக்கு இஷ்டமானாற் செய்யலாம், இல்லையேல் விடலாம்" என்றான் வீராசாமி; அந்த நேரத்தில் நான் பாட்டியின் முகத்தைப் பார்த்தேன்; அவள் முகவாட்டத்துடன் காணப்பட்டாள்; சரி, அவளைக் கவலைப்படவிட எனக்கு இஷ்டமில்லாமையினால், "பாட்டி, இனிமேல் இப்படியான ஏற்பாடுகளை வைத்துக் கொள்ளவொண்ணாது; இதுவே முதன் முறையாகவும் கடைசிமுறையாகவும் இருக்கட்டும்; உங்கள் இஷ்டத்தைப் பொறுத்து இந்த ஒரு முறைமாத்திரம் அந்தக் கல்யாணச் சபையிற் போய்ச் சங்கீதம்மாத்திரம் பாடிவிட்டு வருவேன்; எவ்வகையான சந்மானங்களையும் நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன்; நீங்களும் உடன் வர வேண்டும்" என்று சொல்ல, பாட்டியின் கூம்பிய முகம் உடனே மலர்ந்தது; "இந்த ஒரு உதவியையுஞ் செய்துவிட்டாற் போதும் மகளே, அதன் பின் இப்படியான தொழிலைச் செய்யச்சொல்லி உம்மைக் கனவிலும் கேட்கமாட்டேன்" என்று உறுதியாகச் சொன்னாள் கிழவி. குறித்த நாளும் குறித்தநேரமும் வருதலும், பாட்டி பக்க வாத்தியகாரரை யெல்லாம் முந்தியே மணப்பந்தலுக்குப் போகச்செய்துவிட்டு, ஒரு மோட்டார் ரதத்தில் என்னையும் வேலைக்காரப் பெண்ணொருத்தியையும் அழைத்துக்கொண்டு மண வீட்டிற்குச் சென்றாள்; எங்கள் வரவை அங்கே பலர் எதிர்பார்த்தவண்ணம் நின்றனர்; இரதத்தை விட்டு இறங்கியவுடனே அவர்கள் எங்களை அழைத்துக்கொண்டுபோய் எங்களுக்கென மணப் பந்தலில் முந்தியே வகுக்கப்பட்டிருந்த இடத்தில் இருக்கச் செய்து உபசரித்தார்கள்; நாங்கள் அங்கே போகும்போது வேறு யாரோ சில ஆண்கள் சங்கீதக் "கச்சேரி" நடத்திக் கொண்டிருந்தனர்; நாங்கள் போய் சில நிமிஷஞ் சென்றபின் அக்கச்சேரி முடிந்தது; அதன் பின்னர் அந்த மணவீட்டிற்குரிய பெரியார் பாட்டியிடம் வந்து எங்கள் சங்கீதத்தை ஆரம்பிக்கச் சொல்ல, பாட்டி பக்க வாத்தியகாரரைக் குறிப்பாகப் பார்க்க, அவர்கள் சங்கீதத்திற்குரிய துணைக் கருவிகளைப் பண்படுத்திக்கொண்டு என்னையும் பாட்டியையும் மாறி மாறிப் பார்த்தார்கள்.

"என்னையிட்டுப் பலவாறு பேசத் தலைப்பட்டார்கள்

சபையோருடைய குறிப்பையறிந்து சில கீர்த்தனங்களைப் பாடினேன்; திருப்புகழ் பாடும்படி கேட்டார்கள், பாடிவிட்டு மங்களமும் பாடிமுடித்தேன். சபையோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரகோஷஞ்செய்து தம் மகிழ்ச்சியைக் காட்டினர். உடனே அந்த வீட்டிற்குரிய பிரபு பாட்டியைக் கூப்பிட்டு ஏதோ இரகசியமாகச் சொன்னார்; பாட்டி என் சமீபத்தில் வந்து என்னை ஏதோ கேட்பதற்குக் கூசுபவள்போல நிற்க, அந்தப் பிரபுவே வந்து ஒரு அரைமணிநேரம் நாட்டியஞ் செய்யவேண்டு மென்று கைகளைக் "கயக்கிய" படி என்னை இரந்தார்; முகம் மறுக்கமாட்டாமற் பரதநாட்டியஞ் செய்தற்கும் உடன்பட்டேன்; ஏதோ நான் அறிந்த சில நாட்டியத்தைச் செய்தேன்; சபையோர் இடையிடையே கரகோஷஞ் செய்தனர். உடனே அந்தப் பிரபு ஒரு வெள்ளித் தட்டத்தில் பணப்பை, சிறந்த சேலை முதலிய மங்கலமான பொருள்களை வைத்து ஏத்திக்கொண்டுவந்து எனக்கு நீட்ட, நான் இரு கரங்களையும் நீட்டி அதனை ஏற்று உடனே பாட்டியிடங் கொடுத்துவிட்டுப் பிரபுவுக்கு நமஸ்காரஞ் செய்ய அவரும் பிரதி நமஸ்காரஞ் செய்தார். அவரிடம் விடைபெற்றுக்கொண்டு எல்லாரும் வீட்டிற்கு மீண்டோம்; பின்னரும் என் விருப்பத்துக்கு மாறாக நான் கோயில்களிலே சென்று சங்கீதமும், பரதநாட்டியமும் செய்யவேண்டி ஏற்பட்டது; பாலசிங்கன் வீராசாமி யென்னுமிவர்கள் இடையிடையே எங்கள் வீட்டிற்கு வருவதுண்டு; பாட்டியும் அவர்களுக்கு உபசாரமாகவே நடந்து கொள்ளுவாள்; வீராச்சாமி மதுபானமான தீய பழக்கத்தைப் பழகிக்கொண்டானென்பது நிசமானாலும் அவன் வஞ்சகஞ் சூதற்றவன்; பாலசிங்கன் விவேகி; ஆனால் நயவஞ்சகன்; அவன் என்னிடம் அன்புள்ளவன் போல ஊடாடத் தலைப்பட்டான்; எனக்கு இதமாகவே நடந்தான்; ஆனாலும் நல்லொழுக்க முடையவனாகக் காணப்படாமையால், நான் விளங்கியும் விளங்காள்போல தமையன்போற் பாவித்து, "அண்ணே" என்று விளித்து ஊடாடினேன்; அறியாமல் வந்து இந்த வீட்டில் அகப்பட்டுக்கொண்டேன். ஆ தெய்வமே! எப்படித் தப்பிப்போவதென்ற எண்ணமே, அல்லும் பகலும் என் சிந்தையிற் குடிகொண்டிருந்தது. பாலசிங்கம் பல பொருள்களைக் கொண்டுவந்து எனக்கு உபகாரமாகத் தருவான்; நான் அவை களை ஏற்று உடனே பாட்டியிடம் கொடுத்து விடுவேன்; இப்படியாக, இந்த ஊரிலுள்ளவர்கள் என்னையிட்டுப் பலவாறு பேசத் தலைப்பட்டார்கள்; சிலர் என்னைக் கூத்துக்காரியென்றார்கள்; வேறுசிலர் தாசியென்றார்கள்; இன்னுஞ் சிலர் மொட்டைச்சி இப்படி வந்துவிட்டாள்போலு மென்றார்கள்; ஏனைய சிலர் இந்தப் பெண்ணைப் பார்க்கக் குலங்குடியிற் பிறந்தவள்போற் காணப்படுகிறாள்; ஆனால் தரித்திரங் காரணமாகவோ இல்லையேற் குடும்பத்தில் நேர்ந்த பிணக்குக் காரணமாகவோ குடும்பத்தைவிட்டுப் பிரிந்து இப்படி வந்திருக்கவேண்டுமென்றார்கள்; ஒழிந்த சிலர் எங்கோ நல்ல இடத்துப் பெண்ணை இந்தப் பொல்லாத கிழவி ஏமாற்றிக்கொண்டுவந்து சேர்த்துவிட்டாள், பாவம்! என்று சொல்லிக் கவலைப்பட்டார்கள்; இப்படி அயலட்டத்தார் பல வாறு பேசியதை நான் நேரிற் கேட்டுமுள்ளேன்; எங்கள் வீட்டு வேலைக்காரச் சிறுமி சொல்லக் கேட்டு முள்ளேன்; என்செயலாம்! என் விதி இது என்று நினைந்து நினைந்து கவலைப்பட்டேன்; பாலசிங்கனும் கிழவியும் இடையிடையே அந்தரங்கமாகப் பேசுவதும் யோசிப்பதுமுண்டு.

உமக்கு விவாகமாகிவிட்டதா?

இங்ஙனமாக ஒருநாள் மாலைக்காலத்தில் பாட்டியும் வேலைக்காரச்சிறுமியும் கோயிலுக்குப் போய்விட, நான் மாத்திரம் என் படுக்கையறையில் இருந்து ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தேன்; எங்கள் வீட்டிலுள்ள இன்னொரு வேலைக்காரப்பெண் தலைவாசற் பக்கத்திலிருந்தாள்; அந்தச் சமயத்திற் பாலசிங்கன் அங்கே வந்து பாட்டி வீட்டிலில்லை யென்பதை வேலைக்காரப் பெண்மூலம் அறிந்து கொண்டு, "இரஞ்சிதம், உள்ளே வரலாமோ?" என்று சொல்லிக்கொண்டு வர "வாருங்கள் அண்ணா" என்று சொல்லி அறையுளிருந்த நாற்காலியைக் காட்டி உப்படி உட்காருங்கள் அண்ணா என்று கூறிநிற்க, பாலசிங்கன் அந்த ஆசனத்தில் இருந்தான்; "அண்ணா" என்ற வார்த்தை அந்த நேரத்தில் அவன் செவியில் நாராசத்தைப் புகுத்தியது போலிருந்தது; அதனை நான் அவனுடைய முகக்குறிப்பைக்கொண்டு அறிந்தேன்; இருந்தவன் என்னைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டு "இரஞ்சிதம், உம்மோடு சில வார்த்தைகள் தனியே பேசவேண்டுமென்று சமயம் பார்த்திருந்தேன்; இப்பொழுது சமயம் வாய்த்தது. பேசலாமா" என்று கேட்க, பேசலாம் அண்ணா என்றேன்; "இரஞ்சிதம், நீர் வெளியிடமாட்டீரென்பதை நான் அறிவேன்; இந்தக் கிழவி உம்மை வைத்து நடத்தும் முறை சரியில்லை; இவள் பாட்டுப்பாடவும் "சதி" ராடவும் உம்மைக் கல்யாணச்சபை போன்ற சபைகளுக்குக் கூட்டிக்கொண்டு போவது எள்ளளவும் எனக்குப் பிரியமில்லை; உம்மைப் பார்த்தாற் குலங் குடியிற் பிறந்த படித்த செல்வப் பெண்போற் காணப்படுகின்றீர்; உம்முடைய உண்மையான வரலாற்றை எனக்குச் சொல்லவொண்ணாதா" என்று இதமாகக் கேட்டான். "அண்ணா, என்னுடைய வரலாறு மிகவும் பரிதாபமானது; அதனைச் சொல்லி உங்கள் மனத்தைப் புண்படுத்த எனக்கு பிரியமில்லை; என் வரலாற்றைச் சுருக்கமாகப் பாட்டியிடம் சொல்லியிருக்கிறேன்; நான் இங்கே இப்படியிருக்க வந்தவளல்லேன்; கதிர்காம யாத்திரை செய்யவென்றெண்ணி வந்தேன்; அந்தக் கதிர்காமத்தையன் தன் சந்நிதிக்கு என்னைக் கூப்பிட இன்னமும் திருவுளங் கொள்ளவில்லை போலும் என்று சொல்லிக் கவலைப்பட்டேன் எனச் சொல்வதற்கிடையில் பாலசிங்கன் என்னைப் பார்த்து, இரஞ்சிதம், இதுவா உம் விருப்பம்; இப்படியானால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைக்கும் நீர் கதிர்காமம் புறப்படுவதற்காகவேண்டிய ஒழுங்குகளையெல்லாம் நானே செய்து வைப்பேன்; நீர் இதையிட்டுக் கவலைப்படவேண்டாம்" என்றான். அண்ணா நீங்கள் அப்படிச் செய்து வைத்தாற் பெரும் புண்ணியமாகும்: ஆனால் பாட்டியின் சம்மதமும் வேண்டும். அல்லாமலும் ஆடி மாசத்திற்றான் கதிர்காம யாத்திரை செய்தற்கு வசதியுண்டென்று பாட்டி சொன்னாள், மேலும் கதிர்காம வேலனுடைய அநுமதி பெற்றே அவனிடம் போகவேண்டுமென்று இன்னொரு மூதாட்டி எனக்குச் சொன்னதுண்டு; அப்படியே திருவருள் கூட்டிவைக்க வேண்டுமென்று அந்த முருகனைச் சதா வேண்டிக் கொள்ளுகிறேன் என்றேன். இவைகளைக் கேட்ட பாலசிங்கன் தானும் என்னுடன் அநுதாபப்பட்டவனாய்ச் சற்றுநேரம் பேசாமலிருந்துவிட்டுப் பின்னர் என்னைப்பார்த்து "இரஞ்சிதம், கேட்கிறேனென விபரீதமாக எண்ணாதீர்; நீர் பிராமணப் பெண்ணென்றும், அதனால் வேறாக நீரே சமைத்து உண்டு வருகிறீரென்றும் பாட்டி சொன்னாள். அது நிசந்தானா" என்று கேட்க "ஆம்" என்றேன்; "உமக்கு இனசனமில்லையா? இந்தச் சின்ன வயசில் நீர் யாத்திரை செய்யப் புறப்பட்ட நோக்கமென்ன? உமக்கு இன்னமும் விவாகமாகவில்லையா?" என்று அவன் ஒன்றன்பின்னொன்றாகப் பல கேள்விகளைக் கேட்டான்; அண்ணா, எனக்கு இனசனத்தார் இருந்தும் இப்பொழுது தனித்தவளானேன்; ஒரு மனவைராக்கியத்தினால் ஊர்விட்டுத் தேசம்விட்டு யாத்திரை செய்யப் புறப்பட்டேன்; நான் விவாகம் ஆகியும் ஆகாதவளாயிருக்கின்றேன் எனப் பதில் சொன்னேன்; "ஈற்றில் நீர் சொன்னது எனக்குப் புலப்படவில்லை" என்று பாலசிங்கன் கேட்க, "எனக்குச் சிறு வயதிலேயே மணமகனென்று நிச்சயித்திருந்தவர் என்னைக் கைவிட்டு இடையிற் பரலோகம் போய்ச் சேர்ந்தார்" என்று சொல்லிக் கவலைப்பட்டேன்.

"உன்னைப்
பெற்றவள் உத்தமியானால்....."

பாலசிங்கன் சற்றுநேரம் யோசித்தபடி யாதும் பேசாமலிருந்துவிட்டுப் பின்னர் என்னைப் பார்த்து "இரஞ்சிதம், இதற்காகவா கவலைப்படுகின்றீர்? இந்தக் காலத்திலே முந்தி விவாகஞ் செய்த பெண்கள்தாமும் விதிவசத்தாற் கைம்பெண்களாய்ச் சிலகாலமிருந்துவிட்டு பிறகு விவாகஞ் செய்கிறார்கள்; பிள்ளைப் பெற்ற பெண்களும் அந்தக் கணவன் இறந்தபின் இன்னொருவனுக்கு மனைவியாகி அவனோடு வாழ்கிறார்கள்; இப்படியெல்லாமிருக்க நீர் உமக்கென நியமித்திருந்த நாயகன் இறந்துவிட்டானென்ற காரணத்தினால் விவாகத்தை மறுத்தும் வெறுத்துமிருக்க நியாயமில்லையே; உம்முடைய யௌவனமும் பேரழகும் சங்கீதத் திறமை நாட்டியத் திறமைகளும் பெண்ணலனும் காட்டிற் கெறித்த நிலாப் போல் வீண் போவதா? இது என்ன பேதைமை" என்று பலவாறு சொன்னான்; "அண்ணா, எப்போது என்னைக் கைம்மையென்று நானே மதித்து நடக்கத் தொடங்கினேனோ அப்போதே இளமையும் எழிலும் நலனும் எல்லாம் என்னை விட்டகன்றன. மறு விவாகஞ் செய்வதில்லையென்பது என் மனத்திற் கொண்ட உறுதி; அதனை மாற்ற எவராலும் முடியாது; இந்த விஷயத்தை விட்டு வேறு ஏதும் சொல்லவிருந்தாற் சொல்லுங்கள் என்று சிறிது வெறுப்புடன் சொன்னேன். இப்படி நான் சொல்லக்கேட்ட மாத்திரத்தே அவனுடைய முகத்திலிருந்த மகிழ்ச்சி கோபமாக மாறியது; அதுகாறும் பேசிய இன்சொற்கள் போய் அவன் வாயில் வன்சொற்கள் பிறந்தன; அவன் தேகம் பதறியது; "ஏ, இரஞ்சிதம் என்னெண்ணத்திற்கு நீ இசைந்து நடந்தே தீரவேண்டும்; இந்தக் கிழவி உனக்குப் பெரியவளன்றி எனக்குப் பெரியவளென்றெண்ணாதே; என் தயவிலேதான் இக் கிழவியிருக்கிறாள்; நீ அந்நிய ஊரிலிருந்து வந்தவளாதலால் இங்கே என் செல்வத்தையும், செல்வாக்கையும் இன்னமும் அறிந்திலை, காலக்கதியில் அறிவாய்; நானெனினிலோ நம்பி வந்தவருக்கு மிகவும் நல்லவனாவேன்; அண்ணா என்று என்னை அழைப்பதை விட்டுவிடு; எந்த முறையில் நான் உனக்கு அண்ணா? உன்னை எனக்கு மனைவியாக்கிக் கொள்ளத் துணிந்து விட்டேன்; இதற்கு உடன்படாமலிருக்க முடியாது" என்று சொல்லிக் கொண்டு தன்னிருக்கைவிட்டு எழுதலும், ஒதுங்கி நின்ற நான் அறையைவிட்டுத் தப்பியோட முயல, அவன் சரேலென அறைக்கதவை உட்புறமாகவே நின்று பூட்டிவிட்டு என்னைத் தீண்ட வந்தான். "உன்னைப் பெற்றவள் உத்தமியாகில் என்னைத் தீண்டாதே" என்றேன்.

* * *

உலகம் பலவிதம்: 1945 ஜனவரி 25
விசாலாட்சி: (முற்றொடர் - 36)

"பிழை செய்திருந்தாற்
பொறுத்துக் கொள்ளுங்கள்"

கேட்டமாத்திரத்தே பின்வாங்கித் திகைத்து நின்றான்; உன்னைப் பெற்றவள் ஒழுக்கமற்றவளென்பதை நீ கேட்கவிரும்பாய், உன் சகோதரி நெறிகெட்டவளென அறிந்தால் அவளை வெறுப்பாய்; உன் மகள் கற்பிலே திறம்பினாளென்றால் அவளைக் கண்டிக்க முயற்சி செய்வாய்; உன் மனைவி உனக்குத் துரோகியானால் அவளைக் கொலைசெய்யவுந் துணிவாய்; இவர்களைப்போலவே நானுமொரு பெண்பேதை யென்பதை யறிவாய்; என் மானத்தைப் பங்கப்படுத்தி நீயடையும் பயனென்ன? என்மேல் நீ கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நோக்கத்தைத் தவிர்த்தாயானால், உன்னைவிட உத்தம புத்திரன் உலகத்தில் யாருமுண்டோ என்று ஆவேசத்துடன் பேசினேன். இப்படியெல்லாம் நான் பேசவும் பாலசிங்கன் சிறிது நேரம் யாதும் பேசாமல் யோசித்தபடி நின்றுவிட்டுப் பின்னர் "இரஞ்சிதம், நான் நினைத்ததும் செய்யத் துணிந்ததும் எல்லாம் தவறு; செய்த பிழையைப் பொறுத்துக்கொள்; அண்ணா என்று என்னை அன்புடன் அழைத்த உன்னை இச்சித்துத் தீண்டத்துணிந்தேன் சண்டாளனாகிய நான்; இனிமேல் அப்படிச் செய்யவும்மாட்டேன் செய்யக் கனவிலும் நினைக்கவுமாட்டேன்; ஆண்டவன் மேல் ஆணை; இதனை நம்பு" என்று சொல்லி என்னை நமஸ்கரிக்க, நானும் பிரதி நமஸ்காரஞ் செய்யப் பாலசிங்கன் உடனே அறையைத் திறந்துகொண்டு தலைவாசற் பக்கத்திற்போய் அங்குள்ளதாகிய ஒரு நாற்காலியில் வெகுநேரம் யோசித்தபடி இருந்தான்; நானும் என் அறையைவிட்டகன்று அடுக்களைப்பக்கம் போய் எனக்காகிய உணவைச் சமைக்கத் தொடங்கினேன்; வேலைக்காரப் பெண்ணும் அங்கேவந்து ஆக வேண்டிய உதவிகளைச் செய்தாள்; இரண்டுமணி நேரம்வரை சென்றும் பாட்டி அங்கே வரவுமில்லை; பாலசிங்கன் அந்த இடத்தைவிட்டுப் போகவுமில்லை; என் கருமத்தை முடித்துக்கொண்டு பாலசிங்கன் போயிட்டானாவென்று மெல்லப் பார்த்தேன்; அவன் போகவில்லை; அந்த இடத்திற்றானே தன் நெற்றியைக் கையினால் தாங்கியபடி பச்சாத்தாபத்தோடு இருக்கக் காணப்பட்டான். இப்படியிருந்தவன் என்னைக் கண்டவுடனே எழுந்து தலை குனிந்தபடி வந்து, "இரஞ்சிதம், என் அருமையான தங்காய் நான் போய் வரட்டுமா?" என்று பரிபவத்துடன் சொல்ல நான் அவனுடைய முகத்தைப் பார்த்துப் போய்வரலாம் என்றேன்; அவன் முகத்தில் அதிக மாறுதல் காணப்பட்டது; "தங்காய்" என்ற வார்த்தை அவன் வாயில் மனப்பூர்வமாக வந்ததென்று நான் அறியக்கிடந்தது; உடனே "ஏதும் பிழை செய்திருந்தாற் பொறுத்துக் கொள்ளுங்கள் அண்ணா" என்றேன்.

"செல்லாவிடத்திற் சினங் குற்றம்"

"தங்காய், உமக்கு நான் பிழை செய்தேனேயொழிய, எனக்கு நீர் எவ்வகையான பிழையுஞ் செய்திலீர்; பிழை செய்தாலன்றோ பொறுப்பது? மேலும் என் உள்ளத்தைக் கவர்ந்தெழுந்த இச்சையென்னுந் தீக்குணத்தை உமது கட்டுரையினால் அழித்துவிட்டீர்; இப்பொழுது என்னையிட்டு நானே வெட்கமுறுகிறேன் முந்திச் சொன்னதையே மீட்டுஞ் சொல்லுகிறேன். இந்த நிமிஷந்தொட்டு உம்மை என் உடன் பிறந்தவளெனவே மதித்து நடப்பேனென்பதைத் தீர்க்கமாக நீர் நம்பும்; சற்று முன்னர் நான் செய்த பிழையை எங்கும் வியாபகமாயுள்ள அந்த இறைவனும் நீரும் பொறுத்துக்கொள்ளவேண்டும்" என்று மனமுருகச் சொல்லிமுடித்துக் கும்பிட்டான் பாலசிங்கன். ஐயா! விருந்தால், அன்றுமுதல் இன்றுவரை அவன் என் விஷயத்திலே தன் சொல்லைக் காத்து நடந்தே வருகிறான்; அன்று அவனுக்கும் எனக்குமிடையே நடந்த விஷயத்தை இற்றைவரையில் நான் பாட்டிக்கு வெளியிட்டிலேன்; இனி இந்த வீட்டிற் கிழவியெனிலோ இந்தப் பாலசிங்கனுக்குக் கடமைப்பட்டவளாதலால் அவனிடத்தில் அதிக பயபக்தியாய் நடந்து வருகிறாள்; அவனுடைய எண்ணத்திற்கு மாறாக இவள் எதனையுஞ் செய்யமாட்டாள்; யாரும் அந்நியர் ஆடவர் இந்த வீட்டிற்கு வந்துபோகப் பாலசிங்கன் விடமாட்டான்; இதனால் நானும் மரியாதையாகவிருக்கிறேன். கிழவிக்கு இப்பொழுது பாலசிங்கனிடத்தில் வெறுப்புத் தொட்டுவிட்டது; "செல்லாவிடத்திற் சினங் குற்றம்" என்றபடி அவ்விடத்திலே தன் வெறுப்பைச் சாதிக்க முடியாமையினாலே பாட்டி பல்லுப் பிடுங்கிய பாம்புபோல மனம் புழுங்கிக்கொண்டு புறத்தே அவனை உபசரித்து வருகிறாள். இதுதான் ஐயா இப்பொழுது இங்கேயுள்ளவைகள்.

"தீயென்றவுடன் நாவெந்துபோமா"

இவை இப்படியிருக்க, சில மாதங்கட்கு முன் பாலசிங்கன் ஒருநாள் இங்கே வந்து என்னைப் பார்த்து, "தங்காய், ரஞ்சிதம், உம்மையொரு உதவி கேட்கிறேன், நீர் மறுக்காது உடன்பட்டுச் செய்வீரானால் உயிருள்ளளவும் நீர் செய்யும் நன்றியை நான் மறவேன்" என்று இதமாக இரந்து கேட்டான். அண்ணா நான் செய்யத்தக்கவுதவியானால் தடையில்லாமல் உடனே செய்கிறேன் என்றேன்; "செய்யத்தகாத தொன்றைச் செய்யச்சொல்லி இனிமேலும் உம்மைக் கேட்பேனா, தங்காய், சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாதென்று சொல்லுவார்கள்; அதுகிடக்க என்னுடைய அருமையான நண்பனொருவனிருக்கிறான், அவன் நல்லாய் படித்தவன்; ஒழுக்கமுள்ளவன்; குணமுடையவன்; ஆனால் வஞ்சகஞ் சூதறியாதவன்; அவனை அவனுடைய மாமன் தன் மகளுக்குக் கல்யாணஞ் செய்து வைக்க நிச்சயித்திருக்கிறான்; அவள் அழகுள்ளவள், படித்தவளென்பது மெய்; ஆனால் மிகவும் அகந்தை பிடித்தவள்; தன்னைப்பற்றித் தானே அதிகம் மதித்துக்கொண்டாள்; இவன் அவளைக்கல்யாணஞ் செய்யாமல் தடுத்தே தீரவேண்டும்..." என்று சொல்லி முடிப்பதற்கிடையில் அண்ணா, அந்த ஆள் தன் மாமன் மகளைக் கல்யாணஞ் செய்வதுதானே முறை, அல்லாமலும் அந்தப் பெண் அகந்தை கொண்டவளென்று உங்களுக்கெப்படித் தெரியும்; கன்னியரின் குணத்தையும் உள்ளக் கிடக்கையும் தெய்வத்தினாலும் அறிய முடியா தென்றல்லவா சொல்லுவார்கள்; இப்படியிருக்க நீங்கள் ஒரு கன்னிகையின் குணத்தையறிந்தேனென்று சொல்வ தெவ்வாறு? அகந்தையோடு கூடிய பெண்ணாக இருந்தால், அவளை விவாகஞ் செய்யுங் கணவனல்லவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைகளைப்பற்றிச் சிந்திக்க வேண்டியது? நீங்கள் ஏன் அண்ணா அதில் தலையிடுகிறீர்கள்; எல்லாம் அவரவர் தலையெழுத்தின்படியே நடக்குமென்று தடுத்துச் சொன்னேன்; "தங்காய், என் சொல்லைத் தட்டிப் பேசாதீர். நான் அப்படிச் செய்வதற்குரிய நியாயங்களை நீர் இப்பொழுது கேளாதீர்; என் நோக்கம் நிறைவேறிய பின்பே சொல்லுவேன்." என்று பாலசிங்கன் பின்னரும் என்னை இரந்து கேட்டான்; "சரி, அதற்கு என்னை என்ன செய்யக் கேட்கிறீர்கள் என்று வினவினேன்; நீர் வேறொன்றுஞ் செய்ய வேண்டாம்; என் நண்பன் இங்கே வருவான்; வந்தால் நீர் உமது நெறிக்கு யாதும் பங்கம் வராமல், அவனையும் இதமாக உபசரிக்க வேண்டும்" என்று என்னைக் கேட்டான் பாலசிங்கன்; அப்பொழுது நான் அவனைப் பார்த்து, "அண்ணா, உங்கள் கேள்வி பொருத்தமாகவில்லையே; கீசகன் விஷயத்தில் அவன் தமக்கையாகிய சுதேட்டிணை கீசனையும் சமாதானப்படுத்திக் கற்பையும் பாதுகாத்துக் கொள்ளென்று விரதசாரணியாகிய பாஞ்சாலிக்கு அஞ்ஞாதவாச காலத்தில் சொல்லியவாறல்லவா இருக்கிறது; அண்ணா உங்கள் நண்பனையும் இதமாக உபசரித்து என் மானத்தையும் நான் எப்படிக் காத்தல் முடியும்" என்று ஆசங்கித்தேன்; "அம்மா, ரஞ்சிதம், இந்த ஒரு பேருதவியை நீர் எனக்குச் செய்தே தீரவேண்டும்; நான் இந்த விஷயமாக வீராச்சாமியுடன் சபதஞ் செய்துகொண்டேன்; கற்பென்னுந் திண்மை கொண்ட உம்மை எவராலுங் கெடுக்க முடியாது; அவனை உபசரிப்பதினால் உம்முடைய ஒழுக்கங் கெட்டுப்போகமாட்டாதென்பதை நான் நன்கறி வேன்; தீயென்றுசொன்னவுடன் நா வெந்து போமா! இனிமேல் இப்படியேதுஞ் செய்யும்படி உம்மை ஒருபோதும் நான் கேட்கமாட்டேன்" என்று பலவாறு இரந்தான் பாலசிங்கன்; அந்த நேரத்தில் என் ஒழுக்கத்தைப் பாதுகாப்பதற்கு அவனுடைய தயவும் வேண்டியிருந்தமையால் நான் ஒருவாறு உடன்பட்டு உங்கள் நண்பனுடைய நாமம் என்னவென்று கேட்க, ஐயா, உங்களுடைய பெயரைச் சொன்னான் பாலசிங்கன்; நீங்கள் இங்கே வந்தால் உங்களுக்கு "லெமெனெற்" றோடு மதுபானங் கலந்து கொடுக்கச் சொன்னான்; வேறும் பல சொன்னான்; இவைகளுக்கெல்லாம் பாட்டியும் உடன்பாடென்பதையும் நான் அறிவேன்; முதன்முதல் நீங்கள் இங்கே வந்தபோது உங்களைக் கண்டவுடனே உங்களுக்கு எவ்வகையான தீமையுஞ் செய்ய என் மனம் எழவில்லை; உங்கள் வரவு எனது உடன்பிறந்த சகோதரன் வரவுபோல அன்று தொடக்கம் இற்றைவரையில் இருக்கின்றது; உங்கள் அன்போடு கூடிய முகத்தைக் கண்டவர் உங்களுக்கு ஏதுந் தீமை செய்யக் கனவிலும் நினையார்.

* * *

உலகம் பலவிதம்: 1945 பெப்ரவரி 01 விசாலாட்சி: (முற்றொடர் - 37)

"தெய்வமே சாட்சி"

ஐயா, "தன்நெஞ் சறிந்தது பொய்யற்க பொய்த்தபின், தன்னெஞ்சே தன்னைச் சுடும்" என்று பெரியோர் பணித்தது நீங்கள் அறியாததல்ல; உங்களை என் உடன் பிறப்பென்று பாவித்து என் வரலாறு முழுவதையும் உள்ளபடியுங்களுக்கு முறையிட்டேன்; நான் இதுவரையிற் புத்திபூர்வமாக என் மானத்திற்குப் பங்கஞ் செய்யவில்லையென்பதற்கு என்னெஞ்சே சாட்சி; உயிர்களிடத்தில் வியாபித்திருக்கும் தெய்வமே சாட்சி; இந்த இரண்டையுந் தவிர வேறு எனக்குச் சாட்சியில்லை; நீங்கள் இதனை நம்பலாம் நம்பாமல்விடலாம்; அதனால் எனக்கொன்றுமில்லை; ஆனால் அந்தக் கதிர்காமத்தையன் இப்படியெல்லாம் என்னைச் சோதிக்கிறானேயென்பதையிட்டுத்தான் வருந்துகின்றேன்; சிறைச்சாலை போன்ற இந்த வீட்டிலிருந்து என்னை விடுவித்து உன் சந்நிதிக்கு வரும்படி அருள்புரி முருகையா! என்று அந்தக் கதிரையாண்டவனை எந்த நேரமுஞ் சிந்தித்து இரந்துவருகிறேன்; அவன்தான் திருவுளமிரங்கி உங்களை இங்கே அனுப்பிவைத்தானோ நான் அறியேன்; இனி, உங்களை ஐயா என்று அழைக்கமாட்டேன்; அண்ணா என்றே அழைக்கிறேன்; என் அருமையான அண்ணா! நீங்களே இந்தத் துஷ்டருடைய சிறையிலிருந்து நான் மீளுவதற்கு உபாயஞ் செய்யவேண்டும்; அது முடியாதாயின் நானே என்னுயிரை விடவேண்டி நேரிடும்" என்று இரு கண்களிலும் நீர் பெருக, அதனைத் தன் முன்றானையால் துடைத்துக்கொண்டு நின்று சொன்னாள்; அந்தச் சமயத்தில் தாய்க் கிழவி அங்கு வந்துவிடுவாளோ என்று பயந்து பயந்து திரும்பித்திரும்பிப் பார்த்தாள்.

"அவன்தான் அருள்புரிய வேண்டும்"

இந்த வரலாறு முழுவதையும் கேட்டுக் கொண்டிருந்தவனாகிய விசுவநாதனும் செய்வ தின்னதென்று தெரியாமல் தயங்கினான்; அவள் மீது பரிவுகொண்டான்; நீடித்த நேரம் யோசித் தான்; பின்பு அவன் அவளை அன்புடன் பார்த்து, "தங்காய், உம்மைத் தங்கை யென்றழைப்பதற் குத்தானும் நான் அருகனல்லேன்; உம்மிடத்திலுள்ள ஒழுக்கம், மனத்திண்மை முதலிய சிறந்த குணங்களில் நூற்றிலொன்றுதானும் என்னிடத்திலில்லை; நாம் அறியாத மர்மங்கள் உலகத்தில் எவ்வளவோ உண்டென்பதை இன்றுதான் உணருகின்றேன்; பெண்ணாகப் பிறந்த உம்மிடத்தில் இவ்வளவு மனத்திட மிருப்ப, மேலான நியதிகளிருப்ப, ஆண்பிள்ளையென்று பிறவியெடுத்தும் என்னிடத்தில் இந்த மேலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணங்கள் அற்பமுமில்லையே யென்பதையிட்டு நானே என்னை வெறுக்கிறேன்; உம்முடன் பழகியதால் நானும் சற்றுத் தூயவனானேன்; என்னாலான உதவியை உமக்குச் செய்யாவிட்டால் நான் துரோகியாவேன்; ஆனால், என் அருமைச் சகோதரி, இந்தத் துஷ்டருடைய இல்லத்திலிருந்து உம்மை மீட்பதென்றால், இராவணன் வைத்த சிறையிலிருந்து இராமபிரான் சீதையை மீட்பதற்குப்பட்ட சிரமமே இப்பொழுதும் வேண்டும்; இந்தப் பாலசிங்கனெனிலோ தன்னுடன் மாறுபட்டால் எவ்வகையான தீமையுஞ் செய்யப் பின்னில்லான்; மேலும் நீர் பெண் நான் ஆண்; உம்மை நான் இந்த வீட்டிலிருந்து அகற்றும் விஷயத்திலே அநுகூலமடைந்தாலும் உலகம் எங்களிருவர் மீதும் சகிக்கொணாப் பழியைச் சுமத்திவிடும்; தங்காய், நீர் எந்நேரமும் சிந்தனை செய்யும், அந்தப் கதிர்காமத்தையன், சயந்தன் முதலிய தேவர்களுடைய சிறையை மீட்ட துய்யன் அவன்தான் இந்த இடத்திலும் உனக்கு அருள்புரிய வேண்டும்; அவனையே இன்னமும் வேண்டிக்கொள்க. அம்மா, நான் இன்று இங்கே வந்து வெகு நேரமாய்விட்டது; இன்னமும் நாங்கள் இங்கே பேசிக்கொண்டிருந்தாற் கிழவி சந்தேகப்படுவாள், ஏதோ நான் இயன்ற வரையில் யோசித்துக்கொண்டு நாளைப் பின்னேரம் இங்கே வருகிறேன்" என்று விசுவநாதன் இரஞ்சிதத்திடம் விடை பெற்றுக்கொண்டு அவ்விடத்தை விட்டகன்றான்.

தன்னைத்தானே வெறுப்பவனானான்

இரஞ்சிதம் இருக்கும் வீட்டைவிட்டு மீண்டு போகும்போது விசுவநாதன் சிந்தை தூயவனாய்த் தான் முந்திப் பாலசிங்கனுடனும் வீராச்சாமி யுடனும் கூடிச் செய்த கருமங்களை யெண்ணி யெண்ணித் தன்னைத் தானே வெறுப்பவனானான். அந்தக் கொடியவன் வீட்டிலிருந்து இரஞ்சிதத்தை மீட்பதற்கு உபாயமென்னவென யோசிக்கலானான்; ஆண்பிள்ளை விஷயத்தில் ஒரு உதவியைச் செய்தால் உலகம் விபரீதமெண்ணாதே; இவள் பெண்பிள்ளையாயிருக்கிறாளே, பனையின் கீழிருந்து பாலைக் குடித்தாலும் கள்ளென்று தானே கண்டோர் நினைப்பர் என்று கவலைப்பட்டுக்கொண்டு தன் வீடு போய்ச் சேர்ந்தான். இரஞ்சிதமும் அன்று விசுவநாதனுடன் தான் பேசிய நேரந்தொட்டு மகிழ்ச்சியோடும் மன ஆறுதலோடுங் காணப் பட்டாள்; விசுவநாதன் மிகவும் ஒழுக்கமுள்ளவனென்றும் தன்னை அவன் உடன்பிறந்த சகோதரியென மதித்திருக்கின்றானென்றும் அந்த வீட்டிலிருந்து தன்னை மீட்டுக் கதிர்காமம் போதற்கு தனக்கு அவன் இயன்ற உதவி செய்வானென்றும், கதிர்காமத்தையனே இந்த விசுவநாதன் மூலமாகத் தன்னைத் தமது சந்நிதானத்திற்குக் கூட்டிப்போகிறானென்றும் இரஞ்சிதம் எண்ணியெண்ணிச் சந்தோஷமடைந்தாள். இப்படியெல்லாமெண்ணினளேனும் அந்த வீட்டைவிட்டுத் தான் விலகுவது இலகுவான கருமமல்லவெனவும், அப்படியான நேரத்திலே பாலசிங்கனும் கிழவியும் தன்னோடும் விசுவநாதனோடும் மாறுபட்டுத் தனக்கும் விசுவநாதனுக்கும் ஏதுந் தீமைசெய்வரெனவும்எண்ணிப்பயப்பட்டாள்; ஆனாலும் அந்த முருகையன் தன்னையழைத்தால், அதனைத் தடுப்பவர் ஆர் என்றெண்ணித் தேறுதலடைந்தாள்; அசுரரைக் கடிந்து அமரர் சிறை மீட்டருளிய ஆறுமுகவன் என்னைப் புறக்கணிப்பானோ? ஒருபோதும் புறக்கணிக்கமாட்டான்; அவன் அருள்வள்ளலல்லனோ என்றெண்ணி ஆநந்தமடைந்தாள்; முருகனுக்குரிய திருப்புகழையும் ஏனைய தோத்திரங்களையும் இடையிடையே பக்தியோடு பாராயணஞ் செய்து வருவாளாயினள்.

"பாம்புண்ட நீரெல்லாம் நஞ்சாம்"

இவர்கள் நிலைமை இங்ஙனமாக, விசுவநாதனும் இரஞ்சிதமும் எவ்வாறு ஊடாடுகின்றார்களென்பதைப் பாலசிங்கன் உள்ளபடியறிய வேண்டுமென்ற நோக்கத்துடன் இரஞ்சிதம் வீட்டிற்கு விசுவநாதன் வராத சமயம்பார்த்து இடையிடையே வருவான்; வருபவன் விசுவநாதன் அங்கு வந்தானா என்று இரஞ்சிதத்தை வினாவும்போது, அவன் வந்திருந்தால் ஓம் என்றும் வந்திலனாயின் இல்லையென்றும் சொல்லி விடுவாள் இரஞ்சிதம்; அவள் சொன்ன பதிலில் திருப்தியடையாதவனாய்ச் சிலவேளை விசுவநாதன் வரவைப் பற்றிக் கிழவியிடம் விசாரிப்பான்; கிழவியும் உள்ளபடியே சொல்லிவிடுவாள்; விசுவநாதனைப்பற்றி இரஞ்சிதத்திடம் பாலசிங்கன் ஏதும் வினவும் பொழுது அவள் அந்த விசுவநாதனிடத்து அன்பில்லாதவள்போல நடித்துப் பாலசிங்கனுக்குப் பதில் சொல்லுவாள்; பாலசிங்கன் இரஞ்சிதத்தின் விஷயமாக விசுவநாதனை ஏதும் விசாரிக்கும்போது அவன் அவள் விஷயத்தில் அலட்சியங் கொண்டவன்போலப் பாலசிங்கனுக்கு விடைகூறிவிடுவான்; இவைகளையெல்லாங் கேட்டுக் கேட்டுப் பாலசிங்கன் தான் வைத்த பொறியில் எலி அகப்படவில்லையே யென்றெண்ணிக் கவலைப்பட்டு ஒருநாள் வீராசாமியைப் பார்த்து, "என்னடா, வீராசாமி, அந்த விசுவநாதனும் இரஞ்சிதமும் பரஸ்பரம் காதல் கொண்டவர்கள்போற் காணப்படவில்லையே; இதற்கு என்ன செய்யலாம்?" என்று கேட்க, வீராசாமி, "பாலா, அவர்களிருவரும் பரஸ்பரம் காதல் கொண்டாலென்ன, கொள்ளாமல் விட்டாலென்ன? அதைப்பற்றி உனக் கேன் கவலை? இயல்பிலே இல்லாத காதலை நீ ஆக்கிக் கொடுக்கப்போகிறாயா? உன்னைப் போன்ற ஒரு வீணனை நான் கண்டதில்லையெடா, "பாம்புண்ட நீரெல்லாம் நஞ்சாம், பசுவுண்ட தேம்படு தெண்ணீர் அமுதமாம்" என்று நீதானே எனக்கு முந்திச் சொல்லித்தந்தாய்; அதுபோல நீ படித்த படிப்பினாலே தீமையேயல்லாமல் நன்மை ஏதுமில்லையடா" என்று கடிந்துரைத்தான். அவன் சொன்ன பதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலசிங்கனுக்குப் "பிடிக்க" வில்லை; பாலசிங்கன் அதன்பின் அந்த விஷயமாக வீராசாமியுடன் யாதும் பேசிலன்; பின்னர் விசுவநாதனையும் இரஞ்சிதத்தையுஞ் சேர்த்துத் தூற்றத் தலைப்பட்டான்; விசாலாட்சியும் அவனுடைய பெற்றோரும் அறியும்படியாக விசுவ நாதனைப்பற்றிக் குறையாகப் பிறரிடஞ் சொல்லச் சொல்லியனுப்பினான், அவர்கள் கேள்விப்பட்டு அதிக கவலையடைந்தார்கள்; விசாலாட்சியின் பெற்றோர் விசுவநாதனை வெறுக்கலாயினர்; விசுவநாதனுக்கு மனைவியாகும் எண்ணத்தை அறவே மறந்துவிட வேண்டுமென்று தந்தையும் தாயும் விசாலாட்சிக்கு நேரில் தனித்தனி சொன்னார்கள். தந்தை சொல்லியபோது மகள் யாதும் பேசாது மௌனஞ் சாதித்துக் கொண்டு தாயைப் பார்த்து, "அம்மா, விவாகமே வேண்டாமென்ற எண்ணத்தோடிருக்கு மெனக்கு உப்படிச் சொல்லவேண்டிய தில்லையே" என்று கவலையுடன் சொன்னாள்; அவ் வார்த்தையைக் கேட்ட தாயும் மனம் வருந்தியவளாய் "எங்கள் செல்வமே, கவலைப்படாதே; இந்த விசுவநாதன் இனி உனக்கு உதவான்; உனக்குமாத்திரமல்ல, ஊரிலுள்ள கன்னி எவர்க்கும் உதவமாட்டான்; அவன் தன் குலம், கோத்திரம், படிப்பு, ஒழுக்கம், மானம்மரியாதை எல்லாவற்றையும் அறவே மறந்து அல்லும்பகலும் தாசி வீடே கதியென்று திரிகிறானாம்; இரஞ்சிதம் என்றெரு தாசியாம்; அவள் இந்தியாவிலிருந்து வந்தவளாம்; அவள் இந்த ஊரிலுள்ள எத்தனையோ வாலிபர்களை மண்ணாக்கி விட்டாளாம்; பெரிய செல்வர்களை யெல்லாம் ஓட்டாண்டியாக்கி விட்டாளாம்; அவளுடைய வலையில் அகப்பட்டால் அவர்கள் தப்பியபாடில்லையாம்; அப்படிப்பட்டவளுடைய சகவாசத்தை கொண்டுள்ள அந்த மருமகனுடைய தொடர்பு தமக்கு இனிமேல் வேண்டாமென்று, மகளே, உங்கள் தகப்பனார் சொல்லி, கவலைப்படுகின்றார் என்று தாய் துயரத்துடன் சொல்ல, மகள் கேட்டுச் சிறிதுநேரம் யாதும் பேசாதிருந்து பின்னர் பெருமூச்சு விட்டுக்கொண்டு, "அம்மா, நீங்கள் கவலைப்படாதீர்கள்; நடக்க வேண்டியதுதான் நடந்துதீரும்; நாம் கவலைப் படுவதினால் ஆவதொன்றுமில்லை" யென்று சொல்லி முடித்தாள்; அதனைக் கேட்ட தாயுஞ் சிறிது மன ஆறுதலடைந்தாள்.

* * *

உலகம் பலவிதம்: 1945 பெப்ரவரி 08
விசாலாட்சி: (முற்றொடர் - 38)

அந்த ஆண்டவனும் அருள்புரிய வேண்டும்

இரஞ்சிதம் விட்டை விட்டுச் சென்ற விசுவநாதன் பின்னர் இரண்டுமூன்று தினங்களாய் அங்கு வரவில்லை; அவன் தான் அதிகம் வெளியிற் போதலின்றித் தன்னுடைய வீட்டிற்றானே இருந்து கொண்டு இரஞ் சிதத்தை அந்தக் கிழவி வீட்டிலிருந்து மீட்டுவிடுவது எப்படியென்று பலவாறு யோசித்தான்; முந்தி வீட்டிலே அற்பநேரமுந் தங்குதலின்றிக் கூட்டாளிமாருடன் திரிந்த தன் மகன் இப்பொழுது சில நாட்களாக எங்கும் போதலின்றி வீட்டிலே இருக்கிறான், வேளை தவறாமற் போசனஞ் செய்து வருகிறானென்பதை அவதானித்த அவனுடைய தாய் தன் மகனையிட்டுச் சிறிது மன ஆறுதல் அடைந்தாள்; இன்னுந் தன் மகன் திருத்தமடைந்து நடத்தல் வேண்டுமென்று தெய்வத்தைப் பிரார்த்தித்தாள்; விசுவநாதனுடைய கூட்டாளிகளாகிய பாலசிங்கனேனும் வீராச்சாமியேனுஞ் சில நாட்களாகத் தன் மகனை எங்கேனும் கூட்டிக்கொண்டு போவதற்குத் தங்கள் வீட்டிற்கு வருவதில்லையே யென்பதை யிட்டும் விசுவநாதனுடைய தாய் சந்தோஷப்பட்டாள்; ஆனாலும் தன் மகன் இடையிடையே ஆழ்ந்த சிந்தனையோடிருத்தலையும் தாய் அவதானித்தாள். தன் மைத்துனிக்கென நிச்சயித்திருந்த விவாகம் குழம்பிவிட்டதே யென்பதையிட்டு மகன் கவலைப் படுகிறான்போலு மென்று தாய் அயிர்த்தாள்; "இப்பொழுது மென்னமோசம் வந்தது; அந்தப் பெண்ணுக்கும் வேறெங்கேனும் விவாகம் இன்னமும் நடக்கவுமில்லை, நிச்சயமாகவுமில்லை; அப்படியேதும் நடந்திருந்தாலல்லவோ என்பிள்ளை கவலைப்படவேண்டும்" என்று தாய் தன்னைத் தேற்றிக்கொண்டு, அந்த நேரத்திலே தலைவாசற் புறத்துச் சிந்தனையோடிருந்த தன் மகனிடம் போனாள், அன்னை வருதலும் சிந்தனையோடிருந்த மகன் தன் முகத்தில் மலர்ச்சிகாட்டியபடி இருக்கை விட்டெழுந்து "அம்மா, இப்படி இருங்கள்" என்று சமீபத்திலிருந்த ஒரு நாற்காலியில் இருக்கச்செய்து பின்னர் தானும் பழையபடி இருந்தான். இப்படி தன்னை தன் மகன் உபசரித்தமையினால் அதிக மகிழ்ச்சி கொண்ட தாய் தன் பிள்ளையைப் பார்த்து "எங்கள் அருமை மகனே இப்பொழுதான்டா உன்னில் எனக்கு அதிக சந்தோஷம்; இப்பொழுது சில நாளாக நீ நடப்பதுபோல் வீட்டைவிட்டு வெளியே போகாமல் துட்டப்பிள்ளைகளோடு கூடாமல், எங்கள் குடிக்கு வழக்கில்லாப் பழக்கங்களைப் பழகாமல் முந்தியுமிருந்தால் உனக்கும் எனக்கும் ஒரு குறையும் வந்திருக்கமாட்டாதடா மகனே; உன் அம்மான் தன் மகளை உனக்கு கல்யாணஞ் செய்தற்குக் கொஞ்சமும் பின்னிற்கமாட்டாரே; இப்பொழுதும் தான் வந்த மோசமொன்றுமில்லை; இனிமேலும் நீ நல்ல பிள்ளையாக நடக்கவேணும்; நான் ஆகவேண்டியதெல்லாம் பார்த்துக்கொள்ளுகிறேன்; அந்த ஆண்டவனும் அருள்புரியவேண்டும் என்று தன்னையும் தன் பிள்ளையையும் பாராட்டினாள்; இப்படித் தாய் சொல்லக் கேட்டுக்கொண்டிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் "அம்மா நீங்கள் இப்பொழுது எவ்வகையான முயற்சியும் என் விவாக விஷயமாகச் செய்ய வேண்டாம்; ஆங்காலந்தான் ஆகும்; பெண்வீட்டார் மாப்பிள்ளை வீடுதேடிவந்து ஏதுங் கேட்பதல்லாமல், மாப்பிள்ளை வீட்டார் பெண்வீடு தேடிப்போய் சம்பந்தம் பேசினால், இல்லையேற் செய்யும்படி இரந்து கேட்டால், அந்த மாப்பிள்ளைக்கல்லவா அவமானம் வந்து சேரும்" என்று நியாயஞ் சொன்னான். அப்படி மகன் சொல்லக் கேட்ட தாய் "மகனே, தாய் சொல்லைத் தட்டாதே, உன் மாமன் மாமி தம் பிள்ளைகளுக்கு கல்யாணம் செய்து வைப்பதற்கு உன்னைத்தேடி வரத்தக்கதாக நீ முந்தி நடக்கவில்லை; நீயாகவே உன்னைக் கெடுத்துக் கொண்டாய்; அவர்கள் உன்னை வெறுக்கத்தக்கதாக நடந்தாய்; அவர்கள் வெறுத்தார்களென்று சொல்லுவதென்ன? பெற்றதாயாகிய நானே கவலைப்படத்தக்கதாக நடந்துவிட்டாய்; போனவை போக இனியாயினும் புத்தியாக நடந்துகொள்; இப்பொழுதும் நீ திருந்தி நடக்க தொடங்கியிருக்கிறாயென்றால் உன் மாமனார் பழையபடி உன்னிடத்தில் விருப்பம் கொள்ளுவார்; உன் தகப்பனார் இன்றும் உயிரோடு இருந்தால் இப்படியான மாறுபாடு ஒன்றும் வராது; என்ன செய்யலாம் நீயும் அதிர்ஷ்டம் கெட்டவனானாய்; நானும் அபாக்கியவதியானேன். அவைகளையிட்டு எண்ணியெண்ணி கவலைப்பட்டு ஆவதென்ன; எனக்குமுனக்கும் உன் மாமனாரன்றி வேறுயார் தஞ்சம்? அந்த வீட்டுக்காரரல்லாமல் வேறுயார் சொந்தக்காரர்? அவர்களை வெறுத்தால் நாங்கள் தனித்த குடியாவோம். "பரிபவமென்பது பிறராற் பட்டாலல்லவோ" என்று படித்தவர் சொல்லக் கேட்டிருக்கிறேன்; நீரடித்து நீர் விலகுவது முண்டா? நீ ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம்; இன்றைக்கோ நாளைக்கோ நான் அவர்கள் வீட்டிற்கு நேரில் போய் என் அண்ணனுடன் உன் விஷயமாகப் பேசப்போகிறேன்; நீ இதற்குத் தடை சொல்லாதேயடா மகனே" என்றாள். "சரி அம்மா உங்கள் எண்ணப்படி செய்யுங்கள் என்று சமாதானஞ் சொன்னான் மகன்" தாயும் மகன் சொன்னதைக் கேட்டுச் சந்தோஷமடைந்தாள். இரண்டு மூன்று தினத்துள் தன் தமையன் வீட்டிற்குப் போய் இந்த விஷயமாக பேசவேண்டுமென்று தாய் நிச்சயித்துக் கொண்டாள்.

நானா ஏமாந்தவள்!

இது இவ்வாறாக, ஒருநாட் பிற்பகல் பாலசிங்கன் வீராசாமியோடு கூடிக்கொண்டு இரஞ்சிதத்தின் வீட்டிற்குச் செல்லும் மார்க்கத்தில், அவன் வீராச்சாமியைப் பார்த்து "நண்பா, இந்த இரஞ்சிதம் ஒரு ஏமாந்தவள்போற் காணப்படுகிறாள்" என்று சொல்ல, "ஏன் அவளை அப்படிச் சொல்லுகிறாய்" என்று கேட்டான் வீராசாமி; "வேறொன்றுமல்லவடா, அந்த வஞ்சகஞ் சூழ்ச்சியறியாத வெள்ளைமனத்தோடு கூடிய விசுவநாதனைத் தன் வசமாக்கி தான் நினைத்தபடி ஆட்டி வைக்கச்செய்ய அறியாத அவளை ஏமாந்தவளென்று சொல்லுவதல்லாமல் வேறு எப்படிச் சொல்லுவது" என்று கேட்டான் பாலசிங்கன்; "அப்படியல்லவடா உன் விஷயத்தில் "ஏமாறாத" அவள் அந்த விசுவநாதன் விஷயத்தில் ஏமாந்து விடுவாளென்று நினைக்கிறாயா நீ; அவள் ஏமாந்தவளல்லள்; நல்ல புத்திக்காரி; நீதானடா ஏமாந்தவன்" என்று வேடிக்கையாகச் சொன்னான் வீராசாமி; "என்னடா வீரா, நானா ஏமாந்தவன்" என்று பாலசிங்கன் கேட்க "நீ மாத்திரமல்ல, நானுந்தான்" என்றான் வீராசாமி. "என்னடா, வீரா, எனக்கு மது வெறியென்றா நினைக்கிறாய் நீ" என்று பாலசிங்கன் சிறிது சினந்து கேட்க, "நினைப்பானேன்? உண்மையில் உனக்கு வெறிதானே" யென்று சிரித்துக்கொண்டு பதில் சொன்னான் வீராசாமி, பாலசிங்கன் சினந்தணிந்து வீராச்சாமியின் கையைத் தன் ஒரு கையினாற் பற்றிக்கொண்டு "இப்பொழுது நான் அங்கே ஏன் போகிறேனென்று உனக்குத் தெரியுமா" என மற்றக் கையால் தன் மார்பைத் தட்டி அதட்டிக் கேட்டான். "தெரியும்" என்று சிரித்துக்கொண்டு பதில் சொன்னான் வீராசாமி; "தெரிந்தாற் சொல்லு பார்ப்போம்" என்று பாலசிங்கன் கேட்க "இன்னும் அவளிடஞ் சென்று ஏமாந்து போகத்தான்" என்று சிரித்தபடியே வீராசாமி பதில் சொன்னான்; "சரி, ஏமாந்து போகிறேனோ இல்லையேல் இன்றைக்கொரு "முற்றெடுக்" கிறேனோ என்பதை என்னுடன் வந்து பார்" என்று சொல்லிக்கொண்டு பாலசிங்கன் வேகமாகப் போக, வீராசாமியும் பக்கத்தில் வேகமாக நடந்தான்.

"நீதுக்குதவியுஞ் செய்திடுவார்..."

இரஞ்சிதமிருக்கும் வீட்டிற் படியேறும் வரையிற் சிங்கம்போல் உக்கிரத்தோடு வந்த பாலசிங்கன், அந்த வீட்டிற் பசுப்போலச் சாந்த குணத்தோடு பிரவேசித்தான்; அங்கேபோயிருந்து தாய்க்கிழவியோடு சற்றுநேரம் சம்பாஷித்துவிட்டு இரஞ்சிதமிருக்கு மிடத்திற்குப் போனான்; அவள் அவனை வழக்கம் போல உபசரித்து நின்றாள்; "இரஞ்சிதம், என்ன விசேஷம்" என்று அவன் கேட்க, அவள் ஒரு விசேஷமுமில்லையென்றாள். "விசுவநாதன் இந்த நாளில் இந்தப் பக்கமாக வரவில்லையோ" என்று பாலசிங்கன் கேட்க இல்லையென்றாள் இரஞ்சிதம்.

பாலசிங்கன்: கடைசியாக அவன் இங்கே வந்து எத்தனை நாளிருக்கும்?

இரஞ்சிதம்: நாலைந்து நாளிருக்கும் அண்ணா.

பாலசிங்கன்: பிறகு ஏன் அவன் இங்கே வராமல் விட்டான்?

இரஞ்: அதனை அவரிடத்திலே தான் கேட்டறிய வேணும். இதற்கிடையில் வீராசாமியும் அங்கே வந்து ஒருபுறத்தில் இருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால: இரஞ்சிதம், கேட்கிறேனென்று குறை யெண்ணாதே விசுவநாதன் மனம்வருந்தத்தக்கதாய் நீ ஏதும் சொன்னதுண்டா?

இரஞ்: அப்படி நான் ஏதுஞ் சொல்லவில்லை.

பால: சரி, ரஞ்சிதம், அவன் உன்னோடு விருப்பாக நடந்து கொள்ளுகிறானா இல்லாவிட்டால் வெறுப்பாக நடக்கிறானா?

இரஞ்: விருப்புமில்லை, வெறுப்புமில்லை, மரியாதை யாய் நடந்து கொள்ளுகிறார்.

பால: நீ எப்படி அவனோடு ஊடாடுகிறாய்!

இரஞ்: நானும் அப்படித்தான் மரியாதையாக ஊடாடிவருகிறேன்.

பால: இரஞ்சிதம் உனக்கும் அவனிடத்தில் விருப்பு வெறுப்பில்லையா?

இரஞ்: இல்லை:

வீராசாமி: உங்கள் இரண்டு பேருக்கும் விருப்பம், வெறுப்பும் இல்லாவிட்டால் நீங்கள் தெய்வங் களாயிருக்க வேண்டும் அம்மா.

இரஞ்: அவரைப்பற்றி நான் அறியேன்; நான் தெய்வமுமல்லேன்; தேவதையுமல்லேன், ஆனால் தெய்வத்தில் நம்பிக்கை வைத்துள்ளேன் (என்று மனத்திடமாகச் சொன்னாள்)

பால: (சிறிதுநேரம் யோசித்துவிட்டு) இரஞ்சிதம், கடைசியாக விசுவநாதன் இங்கேவந்து விட்டுப் போகும்போது உன்னிடம் என்ன சொல்லிப் போனான்?

இரஞ்: அவர் வேறொன்றுஞ் சொல்லவில்லை; தாம் இடையிடையே இங்கு வந்து போவதனால் தம்மையும் என்னையும்பற்றி அயலட்டத்தவர் அபவாதமாகப் பேசுகிறார்களென்றும், தாம் ஆண் பிள்ளையாதலினால் தம்மைப்பற்றிக் குற்றஞ் சொல்வதனால் வரும் தோஷத்தைத் தான் சகிக்க முடியுமென்றும், பெண்பிள்ளையாகிய என்னைப் பற்றி வசைகூறக் கேட்டுத் தாம் மனவருத்தப்படுவதாகவும், ஆனதால் இனிமேல் இந்த வீட்டிற்குத் தாம் அதிகம் வரமாட்டாரென்றுஞ் சொல்லிவிட்டு, "தங்கைச்சி, நான் போய்வருகிறேன்" என்றார்; சுகமே போய்வாருங்கள் அண்ணா என்றேன் போய் விட்டார்;

பால: (ஆச்சரியத்தோடு) ரஞ்சிதம், நல்லாயிருக்கிறது உன் செய்கை அவன் "தங்கைச்சி" என்றான் நீ அண்ணா என்றாய். நீ இப்படி எனக்குச் செய்வாய் என்று கனவிலும் நான் நினைத்ததில்லை; நீ எனக்குச் சொன்ன வாக்கை மறந்துவிட்டாய் போலிருக்கிறது. (என்று சிறிது கடிந்துரைத்தான்).

வீராசாமி: பாலா, இந்தப்பிள்ளை சொல்வது ஞாயம்தானே; தங்கைச்சி யென்றழைத்தால், அண்ணா என்று சொல்லாமல், பின் என்ன, அத்தானென்றா சொல்லச் சொல்லுகிறாய்?

பால: (வீராசாமியைப் பார்த்து) வீரா, வீண்கதை பேசாதே இடையில் என்னைக் குழப்பாதே; உனக்கு விஷயம் விளங்காது.

வீரா: என்னை ஏன் கோபிக்கிறாய், நீதியைச் சொன்னேன்; நான் விஷயம் விளங்கினவனாயிருந்தால் உன்னோடு கூடத்திரிவேனா? என்று சிரித்துக்கொண்டு சொன்னான்.

பால: (ரஞ்சிதத்தைப் பார்த்து) ரஞ்சிதம், கேட்பதையிட்டு மனவருத்தப்படாதே; எனக்கு நீ எந்த விஷயத்திலும் உதவி செய்வேனென்று வாக்களித்ததை மறந்து விட்டாயா?

இரஞ்: வாக்களித்தது நிசந்தான் அண்ணா; ஆனால் அண்ணனென உங்களை மதித்து நடக் கும் என்னை தீமைக்கு உதவி செய்யும்படி கேட்பீர்களென்று நான் எதிர்பார்த்திருக்க வில்லை?

பால: உனக்குத்தான் இப்பொழுது அண்ணன்மார் அதிகப்படுகிறார்களே

இரஞ்: அவ்வளவும் நன்மைதானே அண்ணா;

வீராசாமி: (இடையில்) தங்கைச்சி என்னை எந்த நேரமும் உன் சொந்த அண்ணன் என்றே மதித்துக்கொள்.

இரஞ்: அப்படித்தான் அண்ணா இந்த வீட்டிற் கால்வைத்த நாள் தொடக்கம் மதித்து வருகிறேன். (என்று பரிவுடன் சொன்னாள்)

பாலசிங்கனாற் பதிலொன்றும் சொல்ல முடியவில்லை, சிறிது நேரம் யோசித்துக் கொண் டிருந்தான். கோபமுஞ் சஞ்சலமும் அவனுள் ளத்தில் ஏக காலத்திற் பிறந்தன. ஆனாலும் வீராசாமி அங்கே இருக்கும் வரையில் பாலசிங்கன் கோபம் செல்லாவிடத்துச் சினமா யிற்று. இதற்கிடையில் வீராசாமி பாலசிங்கத்தை பார்த்து "பாலா, நான் போகவேண்டும்; இப்பொழுது என்னுடன் வருகிறாயா, இல்லை யேல் இன்னும் சில நேரம் இருந்துவிட்டு வரப்போகிறாயா" என்று கேட்க, "இங்கு இருந்தாவதென்ன உன்னுடன் வந்தாவதென்ன" என்று குறைகூறிக்கொண்டு போவதற் கெழுந் தான். எழுந்தவன் "இரஞ்சிதம் இனிமேல் ஆறுதலாக நான் வருகிறேன் எனலும், இல்லை யண்ணா நாளைக்கும் வாருங்கள்" என்றாள். பாலசிங்கனும் வீராசாமியும் அவ்வீட்டை விட்டகன்றனர்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1945 பெப்ரவரி 15
விசாலாட்சி: (முற்றொடர் - 39)

"அயன் எழுதியதை அழிப்பார் யார்?"

விசுவநாதனுடைய தாய் ஒரு நாள் மத்தியானத்தின்மேல் தனது தமையனராகிய அருணாசலம்பிள்ளையின் வீட்டிற்குச் சென்றாள்; அங்கே அவளைப் பெரியநாயகியும் விசாலாட்சியும் வேண்டியவாறு உபசரித்தனர்; ஏதோ கருமமாக அயல் வீட்டிற்குப் போயிருந்த அருணாசலம்பிள்ளையும் சிறிது நேரஞ் சென்றபின் தம் வீட்டுக்கு மீண்டு வந்தவர் தமது சகோதரி அங்கே வந்திருப்பதைக் கண்டு "ஏன் தங்காய் வெகு நாட்களாய் இந்தப்பக்கம் வராமல் விட்டுவிட்டாய்" என்று விசாரத்தோடு வினாவினார். வீட்டிற் காவலாக விட்டுவர எவருமில்லை; தன்னந்தனியே எந்தக் கருமத்தையும் நானே பார்க்கவேண்டியிருக்கிறது: அதனால் இங்கே வர நேரமில்லாமற் போய்விட்டது" என்று கவலையோடு விடை கூறினாள் விசுவநாதனுடைய தாய்; தமது சகோதரி கவலைப்படுவதைக் கண்ட அருணாசலம்பிள்ளை அவளுடைய கவலையின் காரணத்தைக் குறிப்பாலுணர்ந்து "தங்காய் என்ன செய்யலாம், நீயும் தனியே இராமல், எங்கள் குடும்பமும் தனித்துப் போகாமல் என் மருமகனுக்கு எங்கள் பிள்ளையைக் கல்யாணஞ் செய்து வைக்கலாமென்று அந்தநாள்தொட்டு எல்லாவகையான முயற்சியுஞ் செய்து வந்தேன்; உன்னில் எவ்வகையான குறையுமில்லை; உன் மகன் அப்படிச் செய்து வைத்தற்குக் "கொஞ்ச" மேனும் இடந்தரவில்லை; உனக்கு மாத்திரமல்ல, எனக்கும் என் மனைவி மக்களுக்கும் இதனாற் பெருங் கவலை; என்மேற் குறையெண்ணாதே; இந்தப் பிள்ளையை விசுவநாதன் கல்யாணஞ் செய்துகொண்டு இல்லறத்தைக் கிரமமாக நடத்தினால் எல்லாருக்குஞ் சந்தோஷமாகத்தானே இருக்கும்; கையில் வெண்ணெய் வைத்துக்கொண்டு நெய் தேடுவார் போல வீட்டில் மாப்பிள்ளை இருக்க நான் இப்பொழுது புறத்தியில் மாப்பிள்ளை தேடிப் போகவேண்டியவனானேன்; இனி உங்கள் மகளெனிலோ, சின்ன வயசுதொட்டுத் தன் மைத்துனன் மேற் பாசம் வைத்திருந்தாளென் றெண்ணக் கிடக்கின்றது; இப்பொழுது அவள் தனக்குக் கல்யாணமே வேண்டாமென்று தாய்க்குச் சொல்லி விட்டாளாம்; எனது மைத்துனன் உயிரோடிருந்தால் இப்படியெல்லாம் விபரீதம் நேருமா? என்ன செய்யலாம்? அன்று அயன் எழுதிய எழுத்தை ஆரால் அழிக்க முடியும்....." என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார்; பின்னரும் அருணாசலம்பிள்ளை தம் சகோதரியைப் பார்த்து, "தங்காய்! "தாரமுங் குருவுந் தலைவிதி" யென்பர்; இந்தக் காரணத்தையிட்டு எங்கள் வீட்டுக்கு வராமல் விட்டுவிடாதே; என் மருமகனையிட்டு எனக்குக் கவலையே யொழிய அவனோடு எனக்குப் பகையில்லை" என்று சொல்லிக் கவலைப் பட்டார், தங்கை சிறிது நேரம் யாதும் பேசாது கவலையோடிருந்து பின்னர் தன் தமையனைப் பார்த்து, "அண்ணா, என் பிள்ளை சிறுபிள்ளைப் புத்தியினால் கூடாத கூட்டங் கூடிக் கெட்டுப் போயிருந்தானென்றது மெய்; ஆனால் அவன் இப்பொழுது சில காலமாக நல்ல புத்தி வந்துபோலும் ஒழுக்கமாய் நடக்கிறான்; இப்பொழுது என்பிள்ளை கூடாத கூட்டங் கூடுவதில்லை; வீட்டைவிட்டு வெளியே போவதில்லை; தான் செய்த பிழைகளைப்பற்றி எந்தநேரமுஞ் சிந்தனையோடு கூடியவனாகக் காணப்படுகின்றான் அண்ணா; அவன் இனித் திருந்தி நடப்பான்; "கெட்டார் தழையாரோ, கேடொருகால் நீங்காதோ"; உங்கள் பிள்ளை வேறு, என் பிள்ளை வேறென்றெண்ணாதீர்கள் அண்ணா; அவன் உங்கள் வீட்டில் வந்து சேர்ந்துவிட்டால் திருந்தி நடப்பான்; என் மருமகளும் நல்ல விவேகி; இவள் அவனைத் திருந்தி நடக்கச் செய்வாள்; நீங்கள் புறக்கணித்தாற் பின் என் பிள்ளையை எவர் ஏற்றுக்கொள்வர்! எத்தனையோ வாலிபர் முந்திக் கூடாத கூட்டங்கூடி நடவாத நடைநடந்து தம்மைப் பெற்றாருக்கும் வசை தேடித் திரிந்தவர்கள் குடும்ப பாரத்தைப் பொறுத்தபிறகு தாங்கள் முன் செய்த தீமைகளையெல்லாம் அறவே மறந்து அடங்கியொடுங்கி தம்மை நம்பிவந்த மனைவியிடத்தும் பிற்காலத்துப் பிள்ளைகளிடத்தும் அன்பு பாராட்டி தம்மைப் போல நல்லவர் வேறெவரும் இல்லையென்று சொல்லும்படி நடக்கிறார்கள். அண்ணா, இவைகளெல்லாம் நீங்கள் அறியாத கருமமல்ல; என் பிள்ளையென்று நான் பொய் சொல்லவில்லை; முந்திப் பிழையாக நடந்தான்; நான் விட்ட கண்ணீருக்குத் தெய்வம் இரக்கங்கொண்டு இப்பொழுது அவனைத் திருந்தி நடக்கச்செய்து விட்ட தென்றுதான் நான் எண்ணிக்கொண்டு இன்னமும் அந்த ஆண்டவனை வேண்டுகின்றேன்; ஆனதால் எல்லாவற்றையும் யோசியுங்கள்" என்று அபிமானத்தோடுங் கவலையோடுஞ் சொன்னாள்.

"கணிகை ஆலிங்கனத்தால் தனதாசம்"

இவைகளை யெல்லாம் தமது தங்கை சொல்ல அவதானித்த தமையன் பெருமூச்சுவிட்டு, "தங்காய், நீ சொல்வதும் நிசந்தான்" ஆனால் உன் மகன் இப்பொழுது திருந்தி நடக்கின்றான் என்று நீ சொல்லுகிறாய்; நான் அதை ஏற்றுக் கொள்ள மாட்டேன்; உனக்கு உண்மை தெரியாதிருக்கக்கூடும்; அவன் முன்னரைக் காட்டிலும் இப்பொழுது இன்னமும் மோசமாகக் கெட்டுப் போனான்; இது வீண்கதையல்ல; நம்பிக்கையான ஒருவர் சொல்ல நான் கேட்டேன்; முந்தி அவன் கூட்டாளிமாருடன் கூடிக் குடித்து வெறித்துத் தெருவழியே திரிந்தானென்று கேள்விப்பட்டேன்; அவனுடைய கூட்டாளிமார் அவனை அவ்வளவோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாமல், ஒரு தாசி வீட்டிலுங் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டார்களாம்; அவன் இப்பொழுது அந்த தாசி வீடேதஞ்சமென்று அல்லும் பகலும் அங்கேதான் கிடக்கிறானாம்; இவைகளையெல்லாம் கேள்விப்படும்போது என் மனம் என்ன பாடுபடும்; நீயே யோசித்துப் பார்; அறிந்து கொண்டும் ஆபத்துள் அகப்படுவார் ஆருமுண்டா? இப்படியெல்லாம் அவன் கெட்டுப்போகாமலிருந்தால் என் பிள்ளைக்கு நான் வேறு வரனைத் தேடக் கனவிலும் நினைப்பேனோ? அவனுக்கு இனிக் கல்யாணம் எதற்கு?

"சீலங்கும் குடி அடியாள் தண்டிற் கெடும்,
கணிகை ஆலிங்கனத்தால் தனநாசம்"

என்று சொல்லுவார்கள்; விளக்குப் பிடித்துக் கொண்டு கிணற்றுள் வீழ்வார் போல், இவைகளையெல்லாம் அறிந்துகொண்ட பிறகும் என் பிள்ளையையும் அவளுக்குரிய சீதனம் நகை வகை பணம் எல்லாவற்றையும் அவனிடம் ஒப்புவித்தால் அவன் ஆறு மாசம் செல்வதற்கிடையில் அந்தப் பொருள் பண்டம் நிலம் புலம் நகைவகை யெல்லாவற்றையும் விற்று என் பிள்ளையையும் கட்டப் பாசிமணிக்கும் வகையில்லாமல் உடுக்கக் கந்தைக்கும் வகையில்லாமல் அவள் கலங்க, அவைகளையெல்லாம் தாசி வீட்டிற் கொண்டுபோய்ச் சேர்த்து விடுவானல்லவா? அப்பொழுது நாங்கள் மாத்திரமல்ல, நீயும் உன் மருமகளின் கதியையிட்டுத் துயரப்படுவாய்தானே" என்று வெகு கவலையுடன் சொன்னார். கேட்ட தங்கை இடியேறு கேட்ட சர்ப்பம் போல ஏக்கமடைந்தாள்; சிறிது நேரம் யாதும் பேசாமலிருந்தாள்; அவள் கண்களிலிருந்து நீர் அருவிபோற் பெருகியது. தன் மகனைப்பற்றி தமையன் சொன்னது முழுவதும் நிசமென்று நம்பினாள்; அந்த நேரத்தில் அவளுடைய மனம் பட்ட வேதனை தெய்வத்திற்குத்தான் தெரியும். அவள் சிறிது நேரம் அந்தவிடத்திலேயே நின்றபடி யோசித்துவிட்டு, "சரி அண்ணா, நான் போய்வருகிறேன்; என் பிள்ளையிற் குற்றமிருக்க நான் எவரையும் குறையெண்ணக் கூடாது, நீங்கள் இதையிட்டுக் கவலைப்பட வேண்டாம்; நீங்கள் சொன்ன ஞாயம் முழுவதுஞ் சரி; உண்மையில் என் மகனுடைய இந்த நடத்தையை நான் அறிந்திருந்தால் இந்த நோக்கமாக உங்கள் வீட்டிற்கு இந்த நேரம் வந்திருக்கமாட்டேன்; உங்கள் பிள்ளை எனக்கும் பிள்ளைதான்; இவள் நல்லா யிருந்தாற்தான் பிற்காலத்தில் நான் இவளிடத்தில் வந்து ஒதுங்கியிருக்கவும் முடியும்; இந்தப் பெண்ணுக்கு நல்லவன் பெரியவனாய் குடியாதவன் வெறியாதவனாய் படித்தவனாய் குடிகுலத்திற் பிறந்தவனாய் தெய்வ பக்தியுள்ளவனாய் ஒரு மாப்பிள்ளையைத் தேடிச் சம்பந்தஞ் செய்து வையுங்கள்; நானும் அதற்குத் துணையாய் நிற்பேன்; அண்ணா இதனை நான் என் மனவாக்குக் காயம் ஒத்து உங்களுக்கு சொல்லுகிறேன் என்பதை நம்புங்கள்; நான் போகிறேன்; இனிமேல் நிச்சயமாய் இங்கு வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டு போகப் புறப்பட்டாள்; தங்கை சொல்லிய வார்த்தையை கேட்ட தமையனுடைய உள்ளம் உருகியது; "தங்காய், ஏன் அவசரப்படுகிறாய்; சற்று தாமதித்து போகவொண்ணாதா? அப்படி அவசியம் போக வேண்டுமானால் என் வீட்டுக்காரிக்கும் உன் மருமகளுக்குஞ் சொல்லிவிட்டுப் போகலாம்" என்று சொல்லிப் பின் தன் மனைவியைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொல்ல, மனைவி தன் மைத்துனியைத் தலைவாசற் புறத்திலிருந்து உள்வீட்டிற்குக் கூட்டிக்கொண்டுபோய் அங்கே இருக்கச் செய்தாள்:

"அன்றி யதுவரினும் வந்தெய்தும்"

தன் முகத்திற் கவலை தோன்றாதபடி மைத்துனியுடன் இருந்து வார்த்தையாடினாள்; இருவரும் பேசிக் கொண்டிருப்பதற்கிடையில் மருமகளாகிய விசாலாட்சி ஒரு பாத்திரம் நிறையத் தண்ணீர் கொண்டு வந்து வைத்துக்கொண்டு, "மாமி எழுந்து கைகால் சுத்தி பண்ணிக்கொண்டு இங்கே அடுக்களைப் பக்கம் வாருங்கள்" என்று சொல்லி அத்தண்ணீரை நீட்ட, மாமி தன் மருமகளை அற்புதத்தோடும் ஆர்வத்தோடும் பார்த்துக்கொண்டு பாத்திரத்தை வாங்கிப் புறத்தே போய் வாயலம்பிக் கைகால் சுத்தி செய்துகொண்டு மீண்டுவர, மருமகள் தண்ணீர்ப் பாத்திரத்தை மாமியிடம் தான் வாங்கிக் கொண்டு அவளை அடுக்களைப் பக்கம் அன்புடன் அழைத்துச் சென்றாள்; ஆகாரம் அருந்த இருந்த மாமி தன் மருமகள் தனக்கு உணவு பரிமாறும்போது பாராட்டிய அன்பையும் பேசிய இதமான வார்த்தையையும் நின்ற விநயத்தையும் அவதானித்தாள்; உள்ளமுருகினாள்; இந்தப் பெண்ணுக்கு ஏற்ற நாயகனாக வருதற்கு தன் மகன் தக்கவனல்லனென்று கருதினாள்; மகனைக் காட்டிலும் மருகியிடத்து அன்பு அதிகம் வைத்தாள்; அவளையறியாமலே அவள் கண்களில் நீர் ததும்ப, அவள் தன் இடக் கையினால் முன்றானையைப் பற்றி தன் கண்ணீரை யொற்றினாள்; இதனை மருமகள் அவதானித்தாள்; "மாமி, ஏன் கவலைப்படுகிறீர்கள்? எதற்கும் கவலைப்படாதீர்கள்; எங்கள் எண்ணப் படி ஏதும் நடக்குமென்றும் நடவாதென்றும் நாம் எதிர்பார்த்திருக்கவொண்ணாது; "ஒன்றை கண்காண அது வொழிந்திட்டொன்றாகும்; அன்றி யதுவரினும் வந்தெய்தும்" அந்தப் பரமசிவனிடத்தில் நம்பிக்கை வைத்து அவனை அனுதினமும் வேண்டினால் அவன் எங்கட்கு எவ்வகையான சஞ்சலமும் நேர விடான் மாமி" என்று மகாஞானி போல் விசாலாட்சி மாமிக்கு உபதேசம் செய்ய மாமியும் ஒருவாறு மனந்தேறினாள். அவள் போசனம் முடித்துக் கொண்ட பின்னரும் சற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் அந்த வீட்டில் இருந்துவிட்டுத் தன் தமையன் மைத்துனி மருகியாகிய மூவரிடத்தும் விடை பெற்றுக் கொண்டு தன் வீட்டிற்கு மீண்டாள். மீளும் பொழுது விசாலாட்சி "மாமி, இடையிடையே சிரமத்தை பாராமல் இங்கு வந்துபோங்கள்" என்று அன்புடன் சொல்லுதலும், "தவறமால் வந்து போவனடியம்மா" என்று கூறிப்போயினள்; போகும் மார்க்கத்தில் தன் மகனைப்பற்றி தமையன் சொல்லியவை நிசமோ அல்லவோ என்பதை யெண்ணியெண்ணிக் கிலேசப்பட்டுக் கொண்டு தன் இல்லத்தையடைந்தாள். "எதனையும் இருந்து ஆராய்ந்தறிவோம்" என்று சொல்லி தன் மனத்தைத் தானே தேற்றினாள்; தாய்வரக் கண்ட விஸ்வநாதன் "அம்மா, வந்துவிட்டீர்களா? உங்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்; "நான் ஒரு இடத்திற்கு ஆவசியகம் போய் வரவேண்டும்" எனலும் "போய்வா மகனே" என்று தாய் சொல்ல, அவன் இரஞ் சிதம் இருக்கும் வீடு வந்து சேர்ந்தான்; அப்பொழுது மாலை நேரம் 6.00 மணி வரையிருக்குமெனலாம். விஸ்வநாதன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த இரஞ்சிதம் அவனைக் கண்டதும் ஆனந்த மடைந்தாள்; "அண்ணா, வாருங்கள்" என்று இன்சொற் கூறி அழைத்து உபசரித்தாள்.

* * *

[தொடர் 40;, 41 கிடைக்கவில்லை]

உலகம் பலவிதம்: 1945 மார்ச் 08
விசாலாட்சி: (முற்றொடர் - 42)

"உன்மேல் ஆணைதம்பி இதுதான் உண்மை"

வீராசாமி சமீபத்தில் வருவதற்கிடையில் கிழவி தன் கோபக் குறியையும் இரஞ்சிதம் தன் கவலையோடு கூடிய முகத்தையும் மாற்றி முறையே சாந்தமாகவும் மகிழ்ச்சியாகவும் ஆக்க முயன்றும் வாய்க்கவில்லை; வீராசாமி அவர்கள் இருவருடைய நிலையையும் அவதானித்துக் கொண்டான்; தலைவாசலில் அவன்வரும் போது கிழவி செய்த ஆர்ப்பரிப்பும் அவன் காதிற்பட்டது. அவர்களுக்கிடையே ஏதோ மனஸ்தாபம் நேர்ந்திருக்க வேண்டுமென்று அவன் யூகித்துக் கொண்டு சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டுப் பின்னர் இரஞ்சிதத்தைப் பார்த்து "தங்காய் என்ன, விசேஷம், ஏன் முகம் வாடியிருக்கிறீர்" என்று பரிவுடன் கேட்க இரஞ்சிதத்திடம் அடங்கியிருந்த கவலை முழு வதும் வெளியிற்றோன்ற அவள் விம்மிவிம்மி யழுதாள்; அதனைக் கண்டு வீராசாமியும் பரிபவமுடையவனாய் "அம்மா, நீர் அழ வேண்டாம்; உள்ளதைச் சொல்லும் நீர் இந்த வீட்டிற்கு வந்தபோதே இப்படியான சங்கடமெல்லாம் உமக்கு நேருமென்பதை நான் அறிந்துகொண்டேன்; இவ்வளவு காலமும் ஏதும் பிணக்கு வராமலிருந்தது பெரிய காரியமென்றே யெண்ணிக் கொள்ள வேண்டும்" என்று சொல்ல, இரஞ்சிதம் கவலை மேலீட்டினால் மேன்மேலும் அழுதுகொண்டிருந்தாளே யொழியப் பதில் யாதும் பகர்ந்திலள்; "நீர் அழவேண்டாம் அம்மா" என்று சொல்லிவிட்டு வீராசாமி கிழவியை பார்த்து "பாட்டி, நடந்த செய்தியென்ன, ஒன்றையும் ஒழியாமற் சொல்லுங்கள்" என்று விநயமாகக் கேட்கக் கிழவி "தம்பி ஒரு விசேஷமுமில்லை, நான் ஒன்றும் குறையாக பேசவில்லை; தம்பிக்கு என் குணந் தெரியுந் தானே; நீரும் இந்த வீட்டிற்கு வருகிறீர் போகிறீர் எப்போதாயினும் வெறுக்கப் பேசியதைக் கேட்டதுண்டா? நான் கோபிக்க கண்டதுண்டா? நான் வேறொன்றுஞ் சொல்லவில்லை; இரஞ்சிதம் நினைத்தவுடனே கதிர்காமம் போகவேண்டுமென்று பிடிவாதமாக நின்றது; இப்பொழுது காலநேரம் வசதியில்லை; என்ன அவசரம், இரண்டொரு மாசஞ் சென்றபின்பு அந்த தலத்திற்கு கூட்டிக்கொண்டு போகலாமென்றேன்; இவ்வளவுந்தான் நான் சொன்னது; அதற்கு இந்தப் பெண் முன்னொருபோதும் பேசாத பேச்செல்லாம் பேசக்கேட்டு, இரஞ்சிதம் நீ முந்தி இப்படிப் பேசியதில்லை: இப்பொழுது இப்படியெல்லாம் பேசும்படி உனக்கு ஆர் சொல்லித்தந்தார் என்று மாத்திரங் கேட்டேன்; இப்படிக் கேட்டதற்காக இந்தப் பெண் என்னை வைதுதிட்டி அழுதுகொண்டு நிற்கிறாள்; உம்மேல் ஆணை தம்பி இதுதான் உண்மை; கள்ளிக்குக் கண்ணீர் இமையில் என்ற விதமாக இந்தக் கண்ணீர் இடையீடில்லாமல் எப்படிப் பெறுகிறதோ நான் அறியேன்..... என்று சொல்லி முடிப்பதற்கிடை யில் "கள்ளிக்கு கண்ணீர் இமையில்" என்று சொன்ன வார்த்தையை கேட்டவுடனே வீராசாமியிடத்திற் பெருஞ் சீற்றமுண்டது.

பொருளேன்? பணமேன்?

"ஏ பாட்டீ, வீண்கதை பேசாதே, இந்தப் பிள்ளையையா கள்ளியென்கிறாய்? உன் குணம் எனக்கு தெரியாதா? வயசில் மூத்தவளென்று இதுகாறும் என் கோபத்தையடக்கிக் கொண்டிருந்தேன்; உங்கள் சாதிக்கு இயல்பாகவுள்ள வஞ்சகஞ் சூது கரவு நயவஞ் சக பேச்சு என்னுமிவைகளை என்மேலும் பிரயோகித்து என்னையும் ஏமாற்றிவிட பார்க்கிறாய்; வாலையிலே யாடிய தேவடியாள் இப்பொழுதும் காலைக்காலை யாட்டினாளாமென்ற வசை மொழிக்கு இலக்காய் நிற்கிறாய்; நீ முந்தி இப்படியே எத்தனை கன்னியரைக் கெடுத்தாய். எத்தனை அநாதைப் பெண்கள் வாயில் மண்ணையிட்டாய்; நல்ல குடியிற் பிறந்த எத்தனை வாலிபரைப் பித்தாக்கினாய், அருமந்த ஆடவர்கள் எத்தனைப்பேரை தீராநோய்க்கு இரையாக்கி மாளச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தாய்; எத்தனை குடித்தனங்களை குலைத்து விட்டாய்? உன் சூதையும் வாதையும் நான் அறியேனென்றோ நினைத்தாய்? பஞ்சுப்பெட்டி போல் உன் மயிர் நரைத்தும் தோல் திரைத்தும் வினாவிசைக் குறியீடுபோல் உன் முதுகு கூனியும் பற் கழன்றும் இன்னமும் அகங்காரம் போகவில்லையே; காடு வா வீடு போ என்ற இந்த கிழமான நிலையிலேயிருக்கும் உனக்கு பொருளேன்? பண்டமேன்? பணமேன்? நீ இவை களையெல்லாம் நரகலோகத்திற்கு போகும் போது பொதியாக கட்டி உன் கூனிய முதுகின் மேல் வைத்து சுமந்துகொண்டு போக உத்தேசிக்கிறாயா? தாய் கதறப் பிள்ளையைப் பிடுங்கிக் கொண்டு போகின்ற யமன், பிள்ளைகள் புலம்பத் தாயை கவர்ந்து போகும் நமன், மனைவி ஓலமிடப் புருஷனைக் பறித்துச் செல்லும் காலன், கொண்டான் கலங்க பெண்டாட்டியைப் பற்றிச் செல்லும் கூற்றன், ஏ கிழட்டுப் பிணமே! உன்னையொரு நாளுஞ் சந்திக்கவில்லையா? உன்னிடத்தில் அந்த யமதருமன் வர பயப்படுவான்; ஏன், நீ கண்ணைக் காட்டி, பெண்ணைக் காட்டி அவனையும் அணாப்பப் பார்ப்பாய், இது மாத்திரமல்ல உன்னை அவன் கொண்டு போனாலும் அந்த இருபத்தொரு கோடி நரகங்களிலும் உன்னையிட்டு தண்டிக்க அவை போதா? உனக்கென்று மிகவும் கொடிய நரகத்தை ஆயத்தப்படுத்தி விட்டுத்தான் உன்னைக் கொண்டுபோக அந்தாள் இங்கே வருவான்...” என்று வாயில் வந்தவாறெல்லாம் கிழவியை வையத் தொடங்கினான். கிழவியை வீராசாமி ஏசுவதைக் கேட்டு இரஞ்சிதமும் தன்னாலல்லவோ இந்த அநர்த்த மெல்லாம் விளைந்தனவென்றெண்ணிப் பயந்து நடுங்கினாள். ஆனாற் கிழவி அதிகம் பயந்திலள்; அவள் சினத்துடன் வீராசாமியைப் பார்த்து “என்ன வீராசாமி உனக்கு இன்னமும் வெறி முடியவில்லையா? இந்தச் சிறுக்கி உன்னையும் மருட்டி விட்டாள்” என்றாள்.

“எரிகிற கொள்ளியை ஏறத்தள்ளியவாறு”

வீராசாமி கோபமேலீட்டினால் தன்னை மறந்து விட்டான்; கிழவி சொன்ன வார்த்தை அவனுக்கு எரிகிற கொள்ளியை ஏறத் தள்ளி விட்டாற் போலிருந்தது; ஏ, பெண் பதரே, வீண் வார்த்தை பேசி மோசப்படாதே; வெறி முறியவில்லையா என்றும் சிறுக்கியென்றுஞ் சொன்ன உன் வாயிற் பற்களை கொட்டியிருப்பேன்; ஆனால் உனக்கு பல் ஒன்றுமில்லையேயென்று கவலைப்படு கிறேன், பாலசிங்கன் கள்ளன்; விஸ்வநாதன் எனிலோ பேடி, அவர்களைப் போல் என்னையும் எண்ணி விடாதே; இந்தப் பெண் உன் வீட்டில் வந்து சேர்ந்த நாள் தொடக்கம் நீ இப் பெண்ணுக்குச் செய்துவரும் இம்சைகளை யெல்லாம் ஒன்றும் தவறாமல் அவதானித்து வருகிறேன்; பாவம், இந்தப் பெண்ணை இந்தியாவிலிருந்து ஏதோ ஒருவிதமாய் ஏமாற்றிக் கொண்டுவந்து சேர்த்துவிட்டாய்; இவள் பிராமண குடும்பத்திற் பிறந்த உத்தமமான பெண்ணென்பது இவளுடைய தோற்றத்தாலும் அடக்க ஒடுக்கத்தாலும் “சாதி சொல்லால் அறியலா” மென்றபடி இவள் பேச்சாலும், உன்னிடத்தில் உண்ணுதலின்றித் தன்னளவில் தானே சமையல் செய்து உண்டு வருவதினாலும் அறிந்துகொண்டேன்; உன்னுடைய நோக்கத்திற்கு இப் பெண் ஒருபோதும் உதவாதென்பதை நீ நிச்சயமாய் அறிந்த பிறகும் உன் வசமாக்கலாம் என்று பாடுபடுகிறாய்; உன்னெண்ணம் பலிக்கப் போவது இல்லை; புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது; என்றைக்கு இந்தப் பேதை என்னை அண்ணா என்றழைத்தாளோ, அன்றைக்கு அவள் எனக்கு தங்கை; நான் அவளுக்கு அண்ணன்; நீயாக, பாலசிங்கனாக வேறு எவனாக, எவளாக இப்பெண்ணுக்கு அற்ப தவறேனுஞ் செய்யவிடமாட்டேன்.....” என்று பேசு வதற்கிடையில் கிழவி நாகம் போற் சீறி, “என்ன வீராசாமி! ஏதோ அறப்படித்தவன் போல் அதிக ஞாயம் பேசுகிறாய், இந்த ஞாயமெல்லாம் நீ குடிக்கும் சாராயப் போத்தலுள் இருந்து இன்று புறப்பட்டனவா? நீ என்ன பேசினாலும் கேட்க ஆளில்லையென்று நினைத்துக் கொண்டாயா? அந்தப் பாலசிங்கன் வரட்டும் உனக்கு செய்யவேண்டிய தண்டனை செய்விக்கிறேன்; இது அரசனில்லாப் பட்டினமா? பெண் பேதையென்று நினைத்துத் தானே, நீ துள்ளுகிறாய்; என் வீட்டில் நின்று வாய் மதமாக பேசாதே; வேணுமானால் உவளையுங் கூட்டிக்கொண்டு இந்த நிமிஷமே என் வீட்டைவிட்டு வெளியே இறங்கு, நன்றி மறந்தவனே, நாணங் கெட்டவனே” என்று ஆர்ப்பரித்தாள். “ஏ, மூத்தவளே, முடுவலே, உன் பொக்கை வாயை பொத்து; உன் வாயால் நீயாக உனக்கு ஆபத்தை தேடிக் கொள்ளாதே; நான் சாராயம் குடித்தவன் குடிப்பவன் என்பது மெய்; நீ பாவம், ஒன்றுமறியாத பூனை; உன்னுடைய வீட்டு மூலைகளிற் கிடந்த சாராய போத்தல் எத்தனையென்பதை நான் அறிவேன்; நீ குடியாத குடிவகை உலகத்திலேதுமுண்டா? அந்தப் பாலசிங்கன் ஏதோ செய்து விடுவானென்று என்னை வெருட்டாதே; அவன் உனக்குத்தான் சிங்கன். என் முன்னிலையில் அவன் குள்ள நரியென்றறிந்து கொள்; இராசா இல்லையா, இராச்சியம் இல்லையா என்கிறாய், இந்த வீட்டை விட்டு இப்பெண்ணையுங் கூட்டிக் கொண்டு வெளியிற் போய்விடு என்கிறாய்: பாவம் பழியென்று இன்னமும் பார்க்கிறேன்: உன் யோக்கியங்களையும் நீ செய்யும் சோர வியாபாரத்தை யும் பொலிஸ் தலைவனுக்கு வெளிப்படுத்தி உன்னை மறியல் வீட்டுக்கு அனுப்பிவிட்டு இந்தப் பெண்ணை மரியாதையோடு இந்த வீட்டிலிருக்கும்படி செய்ய என்னால் முடியுமென்பதை யறிந்து கொள்” என்று சொல்வதற்கிடையில் கிழவி “ஆம், ஆம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியுஞ் சொல்ல ஆச்சா, ஏ, "உலுத்தனே போ என்றாற் போகமாட்டாயா" என்று விட்டு ஆவேசங் கொண்டவள்போல், "போடி, நீயும்" எனச் சொல்லிக்கொண்டு, ஒரு புறத்தே பயந்து ஒதுங்கி நின்ற இரஞ்சிதத்தின் பிடரைப் பிடித்து தள்ள, வீராசாமி, "அந்தப் பிள்ளையை தொட்டாயோ கை முறித்துவிடுவேன்" என்று கையோங்கிக்கொண்டு கிழவியை புடைக்கப் போக இரஞ்சிதம் குறுக்கே வந்து "அண்ணா, உங்களுக்குக் கோடி நமஸ்காரம், பாட்டியைத் தொடாதீர்கள்" என்று பரிந்து கேட்க, வீராசாமி பின்வாங்கினான்.

என்னைத் தனியே விட்டுப் போகாதீர்கள்

வீராசாமி யாதும் பேசானாய், அயலேயுள்ள ஒரு நாற்காலியில் இருந்து யோசித்தான்; கிழவியும் வாய் திறந்து ஏதும் பேசப் பயந்து ஒரு பக்கத்தே ஒதுங்கி நின்றாள்; இரஞ்சிதம் தேம்பித்தேம்பி அழுதபடி இன்னொரு புறத்தில் நின்றாள்; சற்று நேரம் யோசித்துக் கொண்டிருந்த வீராசாமி இரஞ்சிதத்தைப் பார்த்து "தங்காய், நீ கவலைப்படாதே, பயப்படாதே, எதையிட்டும் யோசியாதே; நான் உயிரோடிருக்கிற வரையில் உனக்குத் தீமை செய்ய எவராலும் முடியாது; நான் போய் நாளைக்கு அதிகாலையில் வருகிறேன்; பயப்படாமல் இங்கேதானே இரு, பட்டினி கிடவாதே...." என்று தேறுதல் சொல்ல, "ஐயோ, அண்ணா என்னைத் தனியே விட்டுப் போகாதீர்கள்; இங்கே தானே இருங்கள்; எனக்குப் பயமாகவிருக்கிறது" என்று சொல்லி யழுதாள். "வீராசாமிக்கு செய்வதென்னவென்று புலப்படவில்லை; அவன் பதிலேதுஞ் சொல்லாமல் பின்னரும் யோசித்துக் கொண்டிருந்தான்; "பாவம் இந்த சிறு பெண் மிகவும் பயப்படுகிறாள்; இவளைத் தனியே விட்டுப் போனால் கிழவி இந்த இரவு விடிதற்கிடையில் ஏதுந் தீமை செய்வாள்; அவள் தீமை செய்யாவிட்டாலும் இப்பெண் வைராக்கியத்தினால் தானாகவே தன்னுயிருக்கு ஏதும் மோசம் விளைத்து விடுதலுங் கூடும்; என் பொல்லாத காலத்தின் பயனாகப் போலும் இருவரும் பிணங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் நான் இங்கே வரநேர்ந்தது; இப்பொழுது விஷயம் முற்றிக்கொண்டது; இனி, பாலசிங்கன் இங்கே வந்தால் இந்தக் கிழவி சொல்வதைத்தான் மெய்யென்று நம்புவான்; அதனாலும் இந்தப் பிள்ளைக்குத்தான் இடைஞ்சல் நேரும்; சரி நாளை விடிந்தபின் ஆகவேண்டியதைப் பார்ப்போம்; இப்பொழுது இருவரையுஞ் சமாதானமாக்கி விட்டுப் போவோம் என்று நிச்சயித்துக் கொண்டு கிழவிக்குச் சமீபத்திற் போய்ப் "பாட்டி, என்ன கோவித்துக் கொண்டாயா? அந்த நேரம் ஏதோ கோபம் வந்து விட்டது; என்னை மறந்து ஏதோ வாயில் வந்தபடியெல்லாம் பேசிவிட்டேன்; குறையெண்ணக் கூடாது; பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்று சமாதானம் பேச, பயந்திருந்த பாட்டிக்கு அவன் அப்படிச் சாந்தமாகப் பேசியது மனஆறுதலாயிருந்தது; "தம்பி அதனால் எனக்கொரு குறைவுமில்லை; நீர் சொல்லுகிறபடி செய்கிறேன்" என்றாள் கிழவி; "வெகு சந்தோஷம்" என்று சொல்லிவிட்டு வீராசாமி "தங்காய், இங்கே வா: பாட்டியைப் பொறுதிகேள்" என்று இதமாகச் சொல்ல அவளும் அப்படியே பொறுதி கேட்க, கிழவி அவளைத் தடுத்து "மகளே, நானே உனக்குப் பிழை செய்தேன்; நீர் ஒரு பிழையுஞ் செய்யவில்லை; உன்னை நான் பொறுதிகேட்க வேண்டுமென்று சொல்லி இரஞ்சிதத்தின் கையைப் பற்றி அவளை தன் பக்கலில் இருத்தி முதுகைத் தடவினாள்; இரஞ்சிதமும் கவலைநீங்கியவள் போற் காணப்பட்டாள்; இதுவரையும் தத்தம் அறைகளில் சென்று போசனம் முடித்து வரும்படி வீராசாமி சொல்ல, கிழவியும் போசனஞ் செய்யும்படி போனாள்; இரஞ்சிதமும் தனக்குரிய இடத்திற்கு ஆகாரஞ் செய்ய வென்று போய்ச் சில நிமிஷங்களில் மீண்டு வந்தாள்; "ஏன் இரஞ்சிதம் ஆகாரம் செய்யாமல் உடனே மீண்டு வந்துவிட்டாய்" என்று வீராசாமி கேட்க "எனக்கு பசியெழவில்லையண்ணா, நான் தாகத்திற்கு ஏதோ உட்கொண்டுவிட்டு வருகிறேன்" என்று பதில் சொன்னாள்; "தங்காய் இந்த இரவு மாத்திரம் நீர் பயப்படாமல் இங்கே தங்கியிரும், நாளைக்கு நான் உம்மை எங்கேனும் மரியாதையான இல்லத்தில் இருக்கச் செய்கிறேன்; கவலைப்பட வேண்டாம் என்று மெல்லத் தேறுதல் சொல்லிக் கொண்டிருக்கும் போது கிழவியும் ஆகாரம் முடித்துக்கொண்டு மீண்டு அங்கே வந்தாள். நேரம் இரண்டாம் சாமம் வரையிலிருக்கும்; வீராசாமி கிழவியிடத்தும் இரஞ் சிதத்திடத்தும் உத்தரவு பெற்றுக்கொண்டு தன் வீட்டிற்கு மீண்டுவிட்டான்; கிழவி வழக்கம்போல் தன் அறையுட் போய்ப் படுத்துறங்கினாள்; இரஞ்சிதம் வேலைக்காரச் சிறுமியுடன் தன் படுக்கையறைக்குட் போய்ப் படுத்தாள்; ஆனால், அதிகாலையிற் கிழவி நித்திரை விட்டெழுந்து இரஞ்சிதத்தின் பள்ளியறையிலே போய்ப் பார்த்தபோது கதவு பூட்டப்படாமலிருப்பதை அவதானித்தாள்; தன் கையால் அதனை மெல்லத் தள்ளினாள்; கதவு திறபட்டது; வேலைக்காரச்சிறுமி உறங்கியபடி கிடப்பதைக் கண்டாள்; ஆனாற் சயனத்தில் இரஞ்சிதம் படுத்துக்கிடக்க கண்டிலள்; உடனே சந்தேகங் கொண்டாள். இரஞ்சிதத்தை வீடெங்கும் வளவெங்கும் தேடிப் பார்த்தாள். காணவில்லை; ஓடிச்சென்று தலைவாசற் புறக்கதவைப் பார்த்தாள்; அது பூட்டப்படுதலின்றிச் சாத்தியபடி காணப்பட்டது.

* * *

Digitized by Noolaham Foundation.

உலகம் பலவிதம்: 1945 மார்ச் 22
விசாலாட்சி: (முற்றொடர் - 44)

"அடாத செய்பவர் படாதபடுவர்"

வந்த வீராசாமி அங்கே கிழவியும் பாலசிங்கனும் கவலையுடனிருப்பக் கண்டு "ஏன் கவலைப்படுகிறீர்கள்? ஏதும் விசேஷ முண்டோ" என்று பாலசிங்கனைக் கேட்க "வீரா, எவர்க்கும் வெளியிடாதே; இங்கேயொரு பிழை நடந்துவிட்டது; இரஞ்சிதத்தைக் காணவில்லை..." எனலும் "எப்போது தொடக்கம்" என்று வீராசாமி கேட்க, பாலசிங்கன் சென்ற இரவு வழக்கம்போல அறையுட் போய்ப் படுத்துக் கிடந்தாளாம்; அதிகாலையிற் பாட்டி போய்ப் பார்த்தபோது காணவில்லையாம்; இவள் இலட்சுமியும் தனக்கொன்றுந் தெரியாதென்கிறாள்; இதுதான் நடந்த செய்தி" என்று கவலையோடு சொன்னான் பாலசிங்கன்; "பாலா, சென்ற இரவு நான் இங்கே வந்து போகும்போதே இப்படியெல்லாம் வருமென்று எண்ணினேன்; அந்த இரஞ்சிதத்தின் மனத்தை இந்தப்பாட்டி மிகவும் வருத்தி நடக்கத் தலைப்பட்டுக்கொண்டாள்; அவள் இப்பொழுது இந்த வீட்டை விட்டுப் போய்விட்டாளென்பது நிசம்; ஆனால், போனவள் என்ன செய்தாள், எங்கே போனாள்; தன்னுயிருக்கு இதுவரையில் ஏதும் பிழை தேடி விட்டாளோ என்று ஆராய வேண்டும்; அப்படி அவள் ஏதுஞ் செய்திருந்தால் இந்தக் கிழவிக்கும் உனக்குந்தான் பேராபத்து நேரிடு மென்றறிந்து கொள்; அடாத காரியத்திற் பிரவேசிப்போருக்கு வருவது பேராபத்துத்தான்; அடாத செய்பவர் படாதபடுவரென்பது பழமொழி; இவை கிடக்க, இந்த விஷயம் இப்போதைக்கு வெளிவந்தாற் பிழையாகும்; ஆனதால் விஷயத்தை இரகசியமாக வைத்துக்கொண்டு இரஞ்சிதத்தைத் தேடிக்காண இப்பொழுதே முயற்சி செய்யுங்கள்; நானும் என்னால் இயன்ற முயற்சி செய்கிறேன்" என அச்சத்தோடும் கவலையோடுஞ் சொன்னான் வீராசாமி; "இரஞ்சிதம் தன்னுயிருக்கு மோசம் விளைக்க மாட்டாள்; எவருடனுங் கூடிக் கொண்டு தான் போயிருப்பாளென நான் நினைக்கிறேன்...." என்று பாலசிங்கன் சொல்வதற்கிடையில், வீராசாமி "ஏன் அப்படி நினைக்கிறாய்" யென வினவலும் "எனக்கு விசுவநாதனின் மேற் சந்தேகம்; விசுவநாதனிடத்தில் இவள் அதிக விசுவாசமுடையவ ளென்பதை அறிவேன்; அவனுடைய உதவியில்லாமல் இவள் இந்த வீட்டை விட்டுப் போக முடியாது" என்றான். "பாலா, விசுவநாத னிடத்தில் இரஞ்சிதத்திற்கு விசுவாசமிருக்கலாம்; அவளுக்கு அவனிடத்தில் நல்ல எண்ணமிருக்கலாம்; ஆனால், இரஞ்சிதம் இந்த வீட்டைவிட்டு நள்ளிரவிலே ஒரு ஆடவனை மாத்திரந் துணையெனக் கொண்டு புறப்பட்டிருக்கமாட்டாள்; அப்படியல்லவென்று புறப்பட்டாலும் விசுவநாதன் அவளைத் தனியே கூட்டிக்கொண்டு போதற்கு உடன்படமாட்டான்; இதில் ஏதோ கிருத்திரமம் இருக்கிறது; விரைந்து முயற்சி செய்து அறிய வேண்டு"மென்று மனத்துயரத்துடன் சொன்னான் வீராசாமி; இப்படிச் சொல்லியவுடன் பாலசிங்கனுக்கும் கிழவிக்கும் வீராசாமி மேற் கொண்ட சந்தேகம் அறவே நீங்கிவிட்டது; "தம்பீ, இரஞ்சிதம் காணாமற் போனதையிட்டு உம்மீதுஞ் சந்தேகங் கொண்டேன்" என்று கிழவி வீராசாமியைப் பார்த்துச் சொல்ல, "பாட்டி, உடுத்த துணியிலுஞ் சந்தேகங் கொள்ளுதல் உங்கள் குலத்திற்குரிய குணந்தானே; அதை ஏன் இப்பொழுது சொல்லிக் காட்டுகிறீர்கள்" என்று கேட்டான் வீராசாமி; கிழவி யாதும் பதில் பேசாதிருந்தாள்.

அப்படிச் செய்கிறயா?

பின்னரும் பாலசிங்கன் வீராசாமியைப் பார்த்து "நண்பா; இந்த விஷயத்தை விசுவநாதனுக்கு வெளியிடாமல் மறைத்து வைத்திருக்க முடியாது; அவன் இன்றைக்கோ நாளைக்கோ இந்த வீட்டிற்கு வருதல் கூடும்; மேலும் நீ எப்படித்தான் சொன்னாலும் விசுவநாதனை அறியாமல் இரஞ்சிதம் இந்த வீட்டை விட்டுப் போயிருக்க மாட்டா வென்பது என்னுடைய தீர்க்கமான நம்பிக்கை; ஆனதால் எதற்கும் இந்த இரகசியத்தை விசுவநாதனுக்கு வெளியிடுவதுதான் புத்தியின்பாற் பட்டதாகும்;சில காலமாக விசுவநாதன் என்னை வெறுத்து நடக்கிறான். அவன் என்னை வந்து காண்பதில்லை; வழிதெருவிற் கண்டாலும் என்னுடன் அதிகம் பேசுகிறானில்லை; ஆனதால் நீ இப்பொழுது எனக்கு விசுவநாதனிடம் போய் இரஞ்சிதம் காணாமற் போன செய்தியைச் சொல்லி அவனுடைய உள்ளக்கிடக்கையையும் அறிந்து வருவது நல்லது; அப்படிச் செய்கிறாயா" என்று இரந்து கேட்டான்; "சரி, நான் இப்பொழுதே அப்படிச் செய்கிறேன்; ஆனால்! நீ கிழவியோடு வீண்கதை பேசிக் கொண்டிருத்தலைவிட்டு இரஞ் சிதத்தைப் பற்றி ஏதும் அறிய முடியுமானால் எங்கேனுஞ் சென்று தேடியறிந்துவா; இந்த நேரத்தில் சோம்பலாயிருந்து ஏதுஞ் செய்ய முடியாது" என்று சொல்லிவிட்டு, வீராசாமி உடனே புறப்பட்டு விசுவநாதன் வீட்டுமார்க்கமாகப் போனான்; அவன் போக, பாலசிங்கனும் கிழவியும் இரஞ்சிதம் வீட்டை விட்டுப் புறப்பட்டதையிட்டுப் பலவாறு யோசித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்; வீராசாமி போகும் மார்க்கத்தில் விசுவநாதன் தனக்கெதிரே வரக்கண்டு, "விசுவநாதா, நான் உன்னிடந்தானே வருகிறேன் நீ எங்கே புறப்பட்டு வருகிறாய்" என்று கேட்க விசுவநாதன் நான் வேறெங்குமல்ல இரண்டு மூன்று தினங்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரஞ்சிதம் வீட்டிற்குப் போகத் தவறினேன்; அதனால் இப்பொழுது அங்கேதான் போகலா மென்றெண்ணிப் புறப்பட்டு வருகிறேன்" என்றான். "இரஞ்சிதம் உன்வீட்டிலிருக்கக் கூடுமோ என அறிந்து கொண்டு போவதற்காகத்தான் இப்படிப் புறப்பட்டு வருகிறேன" என்று வீராசாமி சொல்ல, "வீரா, உனக்கு எந்த நேரமும் பரிகாசந் தானே" என்றான் விசுவநாதன்; "நான் சொல்வது பரிகாசமல்ல நிசந்தான் விசுவநாதா, என்னை நம்பு" என்றான் வீராசாமி; இதனைக்கேட்ட விசுவநாதன் திடுக்குற்றான்; சித்தங் கலங்கினான்; சிறிதுநேரம் யோசித்தான்; "இரஞ்சிதத்தை எப்போது தொடக்கமாகக் காணவில்லை" என்று விசுவநாதன் கேட்க, "சென்ற இரவு தொடக்கம் காணவில்லையாம்" என்றான் வீராசாமி; "பாலசிங்கன் இப்பொழுது எங்கே" என்று விசுவநாதன் கேட்க, கிழவி வீட்டிலே தான் இருக்கிறான் என்றான் வீராசாமி; கிழவி இதைப்பற்றி என்ன சொல்லுகிறாள்? என்ன செய்கிறாள்? என்று விசுவநாதன் கேட்க, "கிழவி அவள் காணாமல் யாருடனோ கூடிக்கொண்டு போய்விட்டாள் என்று சொல்லிவிட்டுப் பாலசிங்கனுடன் பலவாறு யோசித்துக் கொண்டிருக்கிறள் என விடை சொன்னான் வீராசாமி; "கிழவிக்கும் இரஞ்சிதத்திற்குமிடையே யாதும் பிணக்கு நேர்ந்திருக்கக் கூடுமோ" என்று விசுவநாதன் கேட்க, நேர்ந்தது நேராததைப் பற்றி எனக்கெப்படித் தெரியும்; அதையிட்டுக் கிழவியை இல்லையேல் இரஞ்சிதத்தை யல்லவா விசாரிக்க வேண்டும்" என்றான் வீராசாமி "வீரா, இரஞ்சிதம் காணமற் போனதையிட்டு நீ என்ன நினைக்கிறாய்" என விசுவநாதன் கேட்க "நான் ஒன்றும் நினைக்கவில்லை" யென்றான் வீராசாமி; "சிநேகிதா, வேடிக்கை பண்ணாதே; நீயும் நானும் நாலு நாளாயினும் அவளுடன் கண்டு பேசிப் பழகினோ மல்லவா பாவம்! அவளைச் சடுதியிற் காணவில்லை யென்றால் உன் மனஞ் சஞ்சலமுறாதா; என்மனம் கிலேச மடையாதா; பேயோடு பழகினும் பிரிதல் அரிதென் றல்லவா சொல்லுவார்கள்; அவள் தனித்தவள்; எங்கே போனாளோ, எந்தத் துஷ்டர் கையிற் சிக்கினாளோ, இல்லையேல் தன் மானத்தைப் பாதுகாக்க வேண்டி உயிரை மாய்த்தாளோ, ஒன்றுந் தெரியவில்லையே..... என்று சொல்லிக் கவலைப்பட்டான் விசுவநாதன்; "விசுவநாதா, இரஞ்சிதம் புத்தியுள்ள பெண்; முந்தியே பல கஷ்டங்களையும் அனுபவித்தவள்; தெய்வ நம்பிக்கை யுடையவள்; கதிர்காமத்திற்குப் போய் முருகையனைத் தரிசனஞ் செய்ய வேண்டுமென்ற வைராக்கியம் பூண்டவள்; ஆனதினாலே அவளுக்கு எவ்வகையான இடையூறும் நேராதென்பதை நம்பு; உனக்கும் பாலசிங்கனுக்கும் படித்தும் புத்தியில்லை; நடவாததை நடந்த தென்றெண்ணிக் கவலைப்பட்டுப் புலம்புகிறாய்; கதிர்காமத்திற்குக் கூட்டிக்கொண்டு போகிறேன், கூட்டிக்கொண்டு போகிறேன் என்று அந்தக் கிழவி ஏமாற்றியமையினாலேயே இரஞ் சிதம் மனவெறுப்படைந்து கிழவியிருக்கும் வீட்டை விட்டு எவருமறியாதபடி போய்விட்டாள்; அந்தத் தலத்திற்கு யாத்திரை செய்யும் சாதுக்களுடன் அவள் இரகசியமாக முந்தியே ஒழுங்கு செய்துகொண்டு சென்ற இரவு அவர்களுடன் கூடிக்கொண்டு புறப்பட்டிருக்க வேணுமென்றுதான் நான் நினைக்கிறேன்; இரஞ்சிதம் தற்கொலை செய்திருப்பாளென நான் நினைக்கும் போதெல்லாம் பல்லித்தடை யுண்டாகிறது; இரஞ் சிதத்தை நானும் நீயும் தேடிக் காணத்தான் வேண்டும்; கண்டாலும் அந்தக் கூனிக்கும் பாலசிங்கனுக்குஞ் சொல்லக்கூடாது" என்று சொல்லி வீராசாமி விசுவநாதனைத் தேற்றினான்; இவைகளை யெல்லாங் கேட்டுக்கொண்டு நின்ற விசுவநாதன் வீராசாமியினுடைய புத்தித்திறத்தை மெச்சினான்; "சிநேகிதா, நீ சொல்வது நிச்சயமாய்த் தானிருக்க வேண்டும்; இரஞ்சிதம் ஒருபோதுந் தன்னுயிருக்கு மோசஞ் செய்யாள்; அவள் தற்கொலை செய்தல் பாவமென்று எனக்கே பலமுறை சொல்லியிருக்கிறாள்; ஆனதாற் பயமில்லை; இரஞ்சிதத்தை நானுந் தேடிக் காண முயற்சி செய்கிறேன்; நீயும் அப்படிச் செய்" என்றான் விசுவநாதன்.

அன்பற்றார் வாசலிலே பின்பற்றிச் செல்லாதே

"அப்படியே செய்கிறேன்; அது நிற்க, அந்த வீட்டிற்கு இப்பொழுது நீ என்னுடன் கூடிக்கொண்டு வருகிறாயா" என்று வீராசாமி கேட்க விசுவநாதன் "அங்கே எதற்காக? அந்த மந்தரையையும் பாலசிங்கனையுந் தரிசிப்பதற்கா" என்று சொல்ல, "மந்தரை யென்றால் ஆர்" என்று கேட்க, "இராமருடைய பட்டாபிஷேகத்தைக் கோள் மூட்டிக் குழப்பினாளே அந்தக்கூனி, அவளைத் தான் மந்தரை யென்று சொல்லுவது; இங்கே இந்தக் கிழவியைச் சொன்னேன்; இரஞ்சித மில்லாதபோது நான் அந்த வீட்டு வாசற்படியிலும் அடியெடுத்து வைக்கமாட்டேன்; அல்லாமலும் அந்தச் கிழவியும் பாலசிங்கனும் என்மேற் சந்தேகப்படுவார்கள்; அன்பற்றார் வாசலிலே பின்பற்றிச்செல்லாதே யென்று உலகத்திலே சொல்லுவார்களல்லவா; நான் ஒருபோதும் அந்த வீட்டிற்கு வரமாட்டேன்; வேணுமானால் நீ போய் விசுவநாதனுக்கு இரஞ்சிதம் போனதையிட்டு யாதும் எனக்குத் தெரியாதென்று சொல்லிவிடு; அவர்கள் நம்பப் பிரியமானால் நம்பலாம்; இல்லையேல் விடலாம்" என்று விசுவநாதன் சொல்ல, "நீ சொல்வது ஞாயந்தான்" எனச் சொல்லி வீராசாமி அவனிடம் விடை பெற்றுக் கொண்டு மீள, விசுவநாதனுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வீட்டை நோக்கி மீண்டு போவானாயினான். வீராசாமி தனக்கும் விசுவநாதனுக்கு மிடையே நடந்த வரலாறு முழுவதையும் கிழவிக்கும் பாலசிங்கனுக்குஞ் சுருக்கமாகச் சொல்லி, "விசுவநாதன் மீது சந்தேகங் கொள்ளுதல் தப்பாகும்" எனவுங் கூறி முடித்தான்; இருவருங் கேட்டு மிகவுங் கவலைப்பட்டார்கள்.

"ஆருடங் கேட்போம்"

கிழவி தீராக்கவலை கொண்டாளாய்ச் சிறிதுநேரம் சிந்தித்து விட்டுப் பின்னர்ப் பாலசிங்கனைப் பார்த்துத் "தம்பி, எனக்கொரு புத்தி புலப்படுகிறது; அயலூரிலே கோவிந்தசாமியென்று ஒருவனிருக்கிறான்; அவன் அஞ்சனம் பார்த்து "வைத்தான் வைத்தபடி" எந்த இரகசியத்தையும் உணர்ந்து சொல்லக் கூடியவன்; அநுமாரை நன்கு உபாசித்திருப்பவன்; அவனை, ஒரு ஆளனுப்பி இங்கே கூப்பிடுவித்து அஞ்சனம் பார்ப்பித்து அறியலாமென்று நினைக்கிறேன் அதற்கு வேண்டிய பொருள் பண்டம் எல்லாம் நான் ஆயத்தப்படுத்தி வைக்கிறேன்; அப்படிச் செய்து பார்ப்பது உங்களுக்குஞ் சம்மதந்தானா" என்று பாலசிங்கனைக் கேட்டாள்; "அஞ்சனம் பார்ப்பதில் எனக்கு நம்பிக்கையில்லை; முன்னொருபோது என்னுடைய மோதிரத்தைக் கண்டுபிடித்து எடுத்துத்தருகிறேன் என்று சொல்லி அநுமாருக்குப் பெரிய "மடை" இடவேண்டுமெனத் தெரிவிக்க நான் நிசமென நம்பி, அவன் சொன்ன சொன்ன பொருள்களை யெல்லாம் அதிக பணஞ் செலவிட்டுத் தேடிச் சேர்த்து மடையிட்டேன்; அநுமார் அங்கே தோற்றுகிறார்; இங்கே வருகிறார்; இன்னவீட்டு வளவுட் பிரவேசிக்கிறார், எங்குந் தேடிப் பார்க்கிறார் என்று முதற் சொன்னான்; நானும் அவன் சொல்வதெல்லாம் நிசமென்று நம்பி விட்டேன்; ஈற்றில் அந்த அஞ்சனகாரன் "ஐயோ, அநுமார் சடுதியிற் கோபமடைந்து ஒரு மரக்கொம்பரிலேறி அதனை முறித்தெறிந்துவிட்டுக் குதித்தோடி மறைந்து விட்டார். அநுமாருக்கு ஏதோ குறை நேர்ந்திருக்க வேண்டும்; இன்றைக்கு அவரை யொன்றுங் கேட்கமுடியாது; அவரைக்கொண்டு எதனையுஞ் செய்விக்க முடியாது, அடுத்த வெள்ளிக்கிழமை இதிலுஞ் சிறந்த மடையிட்டு அநுமாரை மகிழ்வித்துப் போன மோதிரத்தைக் கண்டு பிடித்து எடுப்பித்துத் தருகிறேன்" என்று சொல்லி மடைப் பண்டங்களையும் எடுத்துக்கொண்டு தப்பியோடி விட்டான்; போனவன் போனதுதான்; அந்த மோதிரம் இழந்ததுதான்; பொருள் கொடுத்து நான் பேய்ப்பட்டங் கேட்டதுதான் எடுத்த பயன்; ஆனதால் அது வேண்டாம்; ஆருடங் கேட்டுப் பார்ப்போம்; அதில் எனக்கு நம்பிக்கையுண்டு" என்றான். கிழவியும் அதற்கு உடன்பட்டாள்; வீராசாமி தன் எண்ணத்தை வெளியிடவில்லை.

* * *

உலகம் பலவிதம்: 1945 மார்ச் 29
விசாலாட்சி: (முற்றொடர் - 45)

ஆருடங் கேட்டல்

கிழவி அடுத்த வீட்டிலிருக்கும் ஐயன் என்பவனைக் கூப்பிட்டு அவனுக்கு விஷயத்தைச் சொல்லாமல் சமீபத்திலேயுள்ள பிள்ளையார் கோவில் அர்ச்சகராயிருக்கும் கங்காதர ஐயரிடம் ஒரு கெடுதியைப்பற்றி ஆரூடங் கேட்டுவந்து சொல்லும்படி வேண்டிய தக்கிணையும் கொடுத்து அடுத்தநாள் அதிகாலையில் அவனை அனுப்பி வைத்தாள். அடுத்த வீட்டிலிருக்கும் ஐயன் கிழவிக்குப் பசுப்பால் கொண்டுவந்து கொடுப்பவன்; கிழவி சொல்லும் குற்றேவல்களைச் செய்பவன்; எழுதப் படிக்கத் தெரியாதவன்; விவேகமற்றவன்; அவன் உடனே கங்காதர ஐயர் வீட்டிற் சென்று அவரை நமஸ்காரம் பண்ணித் தக்கிணையை அவர்முன் வைத்து, "சாமீ, ஒரு கெடுதி சொல்லவேண்டும்" என்று சொல்லிவிட்டு ஒதுங்கி விநயமாக நின்றான். ஐயர் அவனைப் பார்த்து, "பத்துக்குட்பட ஒரு இலக்கஞ் சொல்லு" என, ஐயன் "பதின்மூன்று" என்றான். "ஏ, பைத்தியகாரா, பத்துக்குட்பட்ட ஒரு இலக்கமென்றால் ஒன்று தொடக்கம் ஒன்பது வரையுஞ் சொல்லலாம்" என்று ஐயர் அதட்டிக் கூற, ஐயன் "ஒன்று" என்றான்; "சரி, ஒரு இலை சொல்லு" என்று ஐயர் கேட்க, ஐயன் "கொடிக்கள்ளியிலை" எனலும், "எடா, முழு மகனே, கொடிக்கள்ளியிலே இலையேது, வேறொன்று சொல்லு" என, அவன் "தெள்ளிலை" யென்றான்; "நல்லது, ஒரு பூ சொல்லு" என்று ஐயர் கேட்க, ஐயன் "ஆலம்பூ" எனச் சொல்லுதலும், ஐயர் சினந்து, "அடா புத்தி கெட்டவனே, ஆலுக்கு ஏதடா பூ?" என்று கேட்டார். "சாமீ, கோபிக்காதீர்கள்; உலகத்திலேயுள்ள சின்னஞ் சிறிய மரங்களிலே செடிகளிலே கொடிகளிலே பூக் காணவிருப்ப, அந்தப் பெரிய ஆலமரத்திலே பூ வில்லை யென்பதை ஆரறிவார் சாமி" என்று சொல்வதற் கிடையில், ஐயர் "அப்படியல்லவொடா, நீ எப்பொழுதுங் காணுகிற ஒரு பூவின் பெயரைச் சொல்லு" என்று கேட்க அவன் "தேங்காய்ப்பூ சாமி, அதனை என் பெண்டாட்டி எப்பொழுதும் சமையல் செய்யும்போது துருவிப் பிழிவாள்" என்றான். ஐயர் தானே தன்தலை யிலடித்து "அட கெடுவானே சுவாமிக்கு நாங்கள் பூசைபண்ணும் பூவிலே யொன்று சொல்லடா" என்று அதட்டிக் கேட்க, அவன் "செம்பரத்தம்பூ" என்றான்; "செம்பரத்தம்பூ யெல்லவடா, செவ்வரத்தம்பூ" என்று திருத்திவிட்டு ஐயர் அவனைப் பார்த்து "உனக்குப் புத்தி கொஞ்சமுமில்லையா? உன்னை ஏன் அந்தக்கிழவி தேடிப்பிடித்து அனுப்பினாளென்பது விளங்க வில்லை" எனலும், "சாமி, எனக்குச் சொந்தமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தியிருந்தால் நான் ஏன் இங்குவருகிறேன்; நானே ஆரூடஞ் சொல்லியிருப்பேனல்லவா? ஒன்றும் அறியாத வனையே ஆரூடங் கேட்க அனுப்ப வேண்டுமென்று கிழவி நினைத்து என்னை இங்கே அனுப்பினாள்" என்றான் ஐயன்.

"மீண்டுவருமென்று சொல்ல இடமில்லை"

கங்காதர ஐயர் ஐயனைப் பார்த்துச் சொல்லுகிறார்; "சரி நீ கேட்பது ஒரு உயிரைப் பற்றியதாகும். அந்த உயிரும் பெண்பால்; தான் இருந்த வீட்டிற்கு உரியவர் அந்த உயிருக்குப் பலவிதமான இடைஞ்சலை நாளுக்கு நாள் செய்து வரவும் அந்த உயிர் பொறுத்துக் கொண்டிருந்து ஈற்றிலே சகிக்க முடியாமையினால் இரவில் தான் இருந்த வீட்டை விட்டு இரகசியமாகப் புறப்பட்டுப் போய்விட்டது. அந்த உயிர் யாரோ ஒரு ஆணுயிரோடு கூடிக்கொண்டு தப்பிப்போய் விட்டதென வீட்டிலுள்ள வர்கள் சந்தேகப்படுகிறார்கள். ஆனால் அது அப்படிப் போகவில்லை. தன்னையொத்த இன் னொரு பெண்ணுயிரின் உதவியைக் கொண்டு தான் அவ்வுயிர் இருந்த வீட்டை விட்டுச் சமீபத் திலுள்ள இன்னொரு வீட்டிலே, மறைவாக இருக்கிறது; தன்னுடைய மானத்தைப் பாதுகாக்க வேண்டித்தான் இப்படியெல்லாம் அந்த உயிர் செய்கின்றது; இன்னுஞ் சில தினங்களுள் அந்த உயிர் தான் இப்பொழுது போயிருக்கும் வீட்டையும் விட்டு நீங்கிச் சற்றுத் தூரத்திலுள்ள வேறொரு வீட்டிலே போய் வசதியாகச் சீவிக்கப் போகிறது. அந்த வீட்டிற் போயிருக்கும்போது தான் அந்த உயிர் நினைத்த கருமங்களெல்லாம் அண்டை வீட்டிலுள்ள ஒரு கன்னிகையின் உதவியாலும் அக் கன்னிகையின் தாயாருடைய உதவியாலும் கைகூடவிருக்கின்றன; இப்பொழுது தான்விட்டுப் போன இல்லத்திற்கு அந்தவுயிர் மீண்டு வருமென்று சொல்லுதற்கு இடமில்லை; இந்த வீட்டிலுள்ள உயிர்கள் அந்த உயிரைத் தேடிக்கண்டு பிடிக்க முயற்சி பண்ணினால், அப்படி முயற்சி பண்ணுபவருக்கே ஆபத்து நேரும்; ஆனதால் தேடாமல் விடுவது இந்த உயிர்களுக்குத்தான் நன்மையாகும்...." என்று சொல்லி முடிப்பதற்கிடையில், ஐயன் ஐயரைக் கும்பிட்டு "சாமீ, இடையிலே குழப்புகிறேனென்று குறையெண்ண வேண்டாம்; வீட்டைவிட்டுப் போகாமலிருக்கும் இந்த உயிர்கள் அந்த உயிரை இனி ஒரு காலமுஞ் சந்திக்க மாட்டாவோ" என்று கேட்க, "சந்திக்கக் கூடும், ஆனால் உடனேயல்ல, ஏழு மணித்தியாலஞ் செல்ல, இல்லையேல் ஏழுநாட் செல்ல, அதுவுமில்லையேல் 7 கிழமை செல்ல, அப்படியுமில்லையேல் 7 மாசஞ் செல்ல, அந்தக் காலங்களிலுஞ் சந்திக்காவிட்டால் 7 வருடங்கள் செல்வதற்கிடையிற் சந்தித்தலும் கூடும்" என்றார் ஐயர். "சாமி, இன்னமும் ஏதும் சொல்வதற்குண்டோ? இல்லாவிட்டால் இவ்வளவுந் தானோ" என்று ஐயன் கேட்க, ஐயர் "இனி நானாகச் சொல்லத்தக்க தொன்றுமில்லை; உனக்கு ஏதுஞ் சந்தேகமிருந்தாற் கேள்" என்று ஐயர் சொல்ல, ஐயன் "எனக்கு வேறொரு சந்தேகமுமில்லை, சாமி, தங்கள் வாக்கியத்திலே கடைசியிலே தான் சற்றுச் சந்தேகம்; ஏழு வருட காலத்திலுஞ் சந்தியா விட்டால் பிறகு எவ்வளவு காலத்திற் கிடையிலே இந்த உயிர்கள் அந்த உயிரைச் சந்திக்கக் கூடும். 70 வருடத்திலே சந்திக்க முடியுமா" என்று கேட்க ஐயர் அவனைச் சினந்து "ஏ, பைத்தியக்காரா, நான் சொன்னவைகளை நீ அப்படியே உன்னை அனுப்பியவர்களிடம் போய்ச் சொல்லு" எனலும், ஐயன் ஐயரிடம் விடைபெற்றுக் கொண்டு கிழவியின் வீட்டிற்கு மீண்டான்.

"எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ"

ஐயன் ஆரூடங் கேட்டுக்கொண்டு மீண்டுபோய்க் கிழவிக்கும் பாலசிங்கனுக்கும் கங்காதர ஐயர் சொன்னவை முழுவதையுந் தவறாமற் சொன்னான்; கேட்ட கிழவி சிற்சில சந்தர்ப்பத்தைச் சொல்லும் போது கோபமடைந்தாள். இரஞ்சிதம் மீண்டு தன் வீட்டிற்கு வரமாட்டாளென்பதைக் கிழவி கேட்டபோது கவலைப்பட்டாள்; அவளைத் தேடிக் கண்டுபிடிக்க முயற்சிசெய்தால் தேடுபவர்களுக்கே சங்கடம் நேருமென ஐயர் சொன்னதைக் கேட்டபோது கிழவி தேடுவது புத்தியல்ல வென்றெண்ணி அந்த முயற்சியைக் கைவிட்டாள்; ஐயன் சொன்ன ஆரூட வரலாற்றாற் பாலசிங்கனிடத்திற் கவலையதிகப்பட்டது; ஆனாலும் வீராசாமி மீதும் விசுவநாதன் மீதும் அவன் கொண்ட சந்தேகம் ஒழிந்தது; இரஞ்சிதம் பொலிஸ்தானத்திற் போய்த் தன் குறையை முறையிட்டால், கிழவியோடு தனக்குஞ் சங்கடம் வருமேயென்று பாலசிங்கன் பயந்தான்; பொல்லாத இந்தக் கிழவி செய்த அநியாயத்தினாற்றான் நல்லவ ளாகிய இரஞ்சிதம் அந்த வீட்டை விட்டகன்றா ளென்றெண்ணிப் பாலசிங்கன் அகத்தே கிழவி மேல் வெறுப்புக் கொண்டானெனினும் புறத்தே அந்த வெறுப்பைக் காட்டினாலல்லன்; அவன் சிறிது நேரம் அங்கேயிருந்து யோசித்துவிட்டுக் கிழவிக்குஞ் சொல்லிக்கொண்டு தன் வீட்டிற்குக் கவலையுடன் மீண்டான். இதற்கிடையில் இரஞ்சிதம் காணாமற் போய்விட்டாளென்ற செய்தி ஊரிற் பரவியது. இரஞ்சிதத்தை நேரிற் கண்டோரும் அவளைப்பற்றிக் கேள்விப்பட்டோரும் தத்தம் மனம் போனவாறெல்லாம் கதைபேசத் தொடங்கினார்கள்; ஆடவர் சிலர் இரஞ் சிதத்தை விசுவநாதன்றான் எங்கோ இரகசியமாகக் கூட்டிக்கொண்டு போய்விட்டானென்றார்கள்; அதனைக் கேட்ட வேறு சிலர் "விசுவநாதன் அப்படிப்பட்டவனல்லன்; அவனை நேற்றும் நாம் தெருவிற் போகக் கண்டோம்; அவன் எங்கும் போகவில்லை உங்கே வீட்டிற்றான் இருக்கிறானென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுத்துச் சொன்னார்கள்; "உங்களுக்கென்ன தெரியும் விசுவநாதனெனிலோ பெரிய ஆஷாடபூதி, அவன் படிப்பது திருவாசகம், இடிப்பது சிவன்கோவில், அவனைப்பற்றி உங்களைக் காட்டிலும் நான் அதிகம் அறிவேன்; அவன் நல்லவனாயிருந்தால் மகாலட்சுமி யொத்தவள், நல்லாய்ப் படித்துப் பண்டிதைப் பட்டம் பெற்றவள், தன் சொந்த மைத்துனி அந்தக் குமரைக் கண்ணீரும் கம்பலையுமாக இருந்து காலங்கழிக்க விட்டு இந்த இரஞ்சிதம் வீட்டிற்கு அல்லும் பகலுந் திரிவானோ" என்றான். கூட்டமாகப் பேசிக்கொண்டு நின்றவர்களுள் ஒரு வாலிபன், "ஆம், ஆம், எந்த புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ, ஆரறிவார்" என்றார் அக் கூட்டத்தில் நின்ற ஒரு கிழவனார்; இதற் கிடையில் அங்கே நின்ற இன்னொரு மனுஷன் முந்திப் பேசிய அந்த வாலிபனைப் பார்த்து "ஆஷாடபூதி யென்றாயே தம்பி, அது என்ன கதை" யென்று கேட்க, வாலிபன் சுருக்கமாகச் சொல்வானாயினான்.

ஆஷாடபூதி

"ஒரு சந்நியாசி ஊரிலே வீடு தோறுஞ் சென்றுசென்று யாசித்துப் பொருள் சேர்த்து அந்தப் பொருளைப் பணமாகத் திரட்டி எவருமறியாதபடி தன் உடையிற் பொதிந்து மறைத்து வைத்துக் கொண்டு பின்னரும் யாசிக்கத் தலைப்பட்டான்: அந்த இரகசியத்தை அறிந்த ஒருவன் மகாபக்தன் போலச் சிவசின்னங்களை யணிந்து கொண்டு சந்நியாசியிடம் வந்து அவனை வீழ்ந்து வணங்கி அழுதபடியெழுந்து "மகானுபவரே, இந்தப் பிரபஞ்சச் சேற்றிலிருந்து தேவரீரே என்னை மீட்டு ஆட்கொண்டருள வேண்டும்; எனக்கு ஒரு சற்குரு அகப்படாமையினாலே நான் இதுகாறும் அலைந்து திரிந்தேன்; நான் முற்பிறப்பிற் செய்த புண்ணியத்தின் பயனாக தேவரீர் எனக்கு அகப்பட்டீர்; நாயேனை தங்கள் சீடனாகக் கொண்டு எனக்கு ஞானோபதேசஞ் செய்தருளவேண்டும்; என்று கும்பிட்டபடி நின்று விம்மி விம்மியழுதான்; சந்நியாசி அவனுடைய செயலும் சொல்லும் நிசமென நம்பி அவனைத் தேற்றி அன்று தொடக்கம் தன் உற்ற சீஷனாகக் கொண்டு அவனிடத்தில் நம்பிக்கை வைத்து ஊடாடினான்; ஒரு தினம் சந்நியாசி தன்னுடைய உயிர் போன்ற பணப்பையை அவனிடம் வைத்திருக்கும்படி கொடுத்துவிட்டு அவசியகருமம் முதலியன முடிக்கும்படி சென்றுவிட்டான்; முடித்துக் கொண்டு மீண்டுவரும் மார்க்கத்தில் இரண்டு ஆட்டுக்கடாக்கள் மாறுபட்டுச் சண்டையிட, அச் சந்நியாசி அந்த அநர்த்தத்தைப் பார்த்துக்கொண்டு நின்றான்; சந்நியாசி நேரஞ் சென்றும் மீண்டும் வராமையால், அற்றம் பார்த்துக் கொண்டிருந்த அந்த ஆஷாடபூதியாகிய சீடன் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டு மென்றெண்ணிக்கொண்டு தன்னிடம் நம்பிக் கைக்குக் கொடுத்த பணப்பையுடன் ஓட்டம் பிடித் தான்; சற்றுநேரஞ் சென்று மீண்டுவந்த சந்நியாசி தன் சீடனை அங்கே காணானாய்ப் பலவிடத்துத் தேடிப் பார்த்தான்; கண்டிலன்; "நாம் உலகத்தை ஏய்க்க ஆஷாடபூதி நம்மை எய்த்தானே" என்று சொல்லிக் கவலைப்பட்டுக்கொண்டு பழையபடி யாசித்துத் திரிந்தான் அந்தச் சந்நியாசி. இதுதான் ஆஷாடபூதியின் கதைச் சுருக்கம் அண்ணே" என்று சொல்ல, அங்கு நின்றோர் எல்லோருங் கேட்டு மெச்சினர்.

* * *

உலகம் பலவிதம்: 1945 ஏப்பிரல் 05 விசாலாட்சி: (முற்றொடர் - 46)

உழுகிற மாடாயின் உள்ளூரில் விலைப்படாதா?

ஆண்கள் மாத்திரமன்றி அயலிலேயுள்ள பெண்களும் இரஞ்சிதத்தையும் விசுவநாதனையும்பற்றிப் பலவாறு பேசலாயினர்; "உழுகிற மாடாயிருந்தால் உள்ளூரில் விலைப்படாதா; அந்த இரஞ்சிதம் ஆனவளாயிருந்தால் அவள் தான் பிறந்த ஊரைவிட்டு, உற்றார் பெற்றாரை விட்டு இந்தவூருக்கு அந்தத் தேவடியாட் கிழவியுடன் எடுபட்டு வருவாளா? இரஞ்சிதம் போன்ற இளம் பெண்களால், பெண்ணாய்ப் பிறந்த எங்களெல்லார்க்கும் வசைதானே" என்றாள் அண்மையிற் கல்யாணம் முடித்த ஒரு இளம்பெண்; "மகளே, கனகம், அப்படிச் சொல்லாதேயடியம்மா கண்ணினாற் கண்டதும் பொய், காதாரக் கேட்டதும் பொய், ஆராய்ந்து அறிந்ததே மெய்; ஆனதால் எலும்பில்லா நாக்கினால் நாங்கள் நினைத்தபடியெல்லாம் பேசிவிடக்கூடாது; நான் அந்த நாளில் உன்னோடொத்த பிராயமாயிருந்தபோது, எங்கள் வீட்டுக்காரனோடு சிநேகமான ஒரு மனுஷன் அல்லும் பகலும் எங்கள் வீட்டிற்கு வந்துபோனதுண்டு; அந்த நாளில் என்னைப் பார்த்தால் பெண்களும் ஆசைப்படுவரென்று எங்கள் அயலோர் சொல்லி வந்த துண்டு; அந்த நியாயத்தினாற் போலும், பாவம், அந்த மனுஷனையும் என்னையும் பற்றி அயலிலுள்ளவர்கள் அநியாயமான கதை கட்டிவிட்டார்கள்; நானும் அதையிட்டுக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்; அந்த மனுஷன் காதிலும் அந்த வீண்கதை பட்டிருக்க வேண்டும்; மனுஷனும் எங்கள் வீட்டிற்கு அதன் பிறகு வராமல் விட்டுவிட்டான்; பின்பு எங்கள் வீட்டுக்காரன் அந்த மனுஷனைக் கண்டு நீர் ஏன் வீட்டிற்குச் சில நாட்களாய் வரவில்லை யென்று கேட்க, எனக்கு நேரமில்லை; பார்க்க வேண்டிய கருமங்கள் பலவுண்டு என மனுஷனும் காரணத் தை மறைத்துச் சொல்ல, என்னுடைய அவர் வந்து என்னைக் கேட்க நான் உற்ற காரணத்தைச் சொல்ல, எங்கள் வீட்டுக்காரன் கைகொட்டிச் சிரித்து "என்ன பைத்தியகாரத்தனம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை எனக்குத் தெரியும் ஊரிலே வம்பர்கள் என்ன சொன்னாலும் அவைகளையெல்லாம் பொருட் படுத்த முடியுமோ என்று சொல்லிவிட்டுத் தம் முடைய சிநேகிதர்களிடம் போய் அந்த ஆளைச் சமாதானப்படுத்திக் கொண்டு வந்தார்; இது மகளே, நான் என்னுடைய அனுபவத்திற் கண்டது; ஆனதால் பெண்களைப்பற்றித் தீர ஆராயாமல் எவருங் குறை சொல்ல வொண்ணாது; அதிலும் பெண்களாயுள்ளவர்கள் தங்களோடொத்த பெண்களைப்பற்றி யொருபோதும் வசை பேசக்கூடாது; இரஞ்சிதம் என்ற அந்தச் சின்னப் பெண் என்ன காரணத்தினால் எப்படிப்பட்ட கொடுமையினால் தன்னூரை விட்டு இந்தவூருக்கு வந்தாளென்பதை நீயும் நானும் எப்படிச் சொல்ல முடியும்; எங்களுக்கு ஊர்க்கதை எதற்கு மகளே" என்று சமாதானஞ் சொன்னாள், கனகத்துடன் அவள்வீட்டு வேலியோரத்தில் நின்று பேசிய அடுத்தவீட்டுக் கிழவி.

கையிற் புண்ணுக்குக் கண்ணாடியேன்?

இரஞ்சிதமெனப்படும் தாசிப்பெண் தானி ருந்த வீட்டைவிட்டுக் கரவாகப் போய்விட்டா ளென்றும் அவளிடத்தில் விசுவநாதனே அதிகம் அன்பாய் ஊடாடி வந்தமையினால் அவன்றான் அவளை அந்த வீட்டிலிருந்து அகற்றி வேறெங் கோ மறைவான இடத்திற் கொண்டுபோய் வைத்திருக்கிறானென்றும் எவரோ போய் விசுவநாதனுடைய மாமனாகிய அருணாசலம்பிள்ளை வீட்டிலே சொல்லிவிட்டார்கள்; இதனைக் கேள்விப்பட்ட அருணாசலம்பிள்ளை பெரிதும் மனவருத்தமடைந்தார்; விசுவநாதன் மீது முன்னரைக் காட்டிலும் அதிக வெறுப்புக் கொண்டார்; அந்த விசுவநாதனுடைய நடத்தை தம் குலங்குடிக்கெல்லாம் தீராவசையை விளைத்ததே யென இரங்கினார்; தம் மகளுக்குத் தக்க ஒரு வரனைத் தேடிக் கல்யாணஞ் செய்து வைத்தால் இந்த விசுவநாதன் ஆக்கிய வசை ஒருஅளவிற்குத் தங் குடும்பத்தைச் சாராதென்று மாமனார் சிந்தித்தார்; இப்படிப் பலவாறு கவலைப்பட்டுக்கொண்டு தலைவாசலிலிருந்த அருணாசலம்பிள்ளை தமது மனைவியைக் கூப்பிட்டு, "கேட்டாயா செய்தி யொன்றை" எனச் சிறிது ஆத்திரத்தோடு சொல்லுதலும் "இல்லை, பாருங்கள், என்ன செய்தி" என்று ஆவலுடன் வினாவினாள் மனைவி; "ஐயோ, நான் எப்படியுனக்கு வாய்திறந்து சொல்லுவேன்; அந்த விசுவநாதன் கழுதை தேய்ந்து கட்டெறும்பானவாறு வரவரக் கெட்டுப் போகிறான்; அவன் செய்து வரும் அவமானச் செய்கைகளினால் நான் ஊரிலே கண்விழிக்க முடியவில்லை; நானும் ஒரு மனுஷனென்று நாலு மனுஷர் முன்பு தலைகாட்ட இயலவில்லை; இவன் இப்படிக் கெட்டுப் போவானென்று நான் எள்ளளவும் எதிர்பார்த்திருக்கவில்லை; இவனைப் போற் படித்த மூடனை இதற்கு முந்தி நான் கண்டதுமில்லை; கேள்விப்பட்டது மில்லை.." என்று சொல்லிக் கொண்டிருக்க, மனைவி "ஐயோ, இடைவிடாமல் ஒப்பாரி சொல்லுகிறீர்களே யல்லாமல் விஷயத்தைச் சொல்லுகிறீர்களில்லையே" என்று மீட்டுங் கேட்க, அருணாசலம்பிள்ளை "சொல்லுவதென்ன; அந்த விசுவநாதன் ஒரு தாசிப்பெண்ணை வைத்திருந்தா னென்றும் அத்தாசி வீட்டிற்கு அல்லும் பகலும் போகிறானென்றும் முந்திக்கதை பிறந்தது; அது நிசமோ அல்லவோவென நான் நம்பியும் நம்பாமலுமிருந்தேன்; ஆனால், இப்பொழுது நிசமாய் விட்டது; கையிற் புண்ணுக்குக் கண்ணாடியேன்? அவன் கெட்டுப் போனான்; இனி, அவன் உலகத்திற்கே உதவான்....." என்று சொல்வதற்கிடையில் மனைவி அவரைப் பார்த்து "நீங்கள் கருமம் இன்னதென்று சொல்லாமல் நெடுநேரம் கதையை வளர்த்துக் கொண்டிருக்கிறீர்களே" எனலும் "கருமமென்ன, அந்தத் தாசிப்பெண்ணை அவளிருந்த வீட்டைவிட்டுக் கரவாக அகற்றிக் கொண்டுபோய் எங்கோ மறைத்து வைத்திருக்கிறானாம் விசுவநாதன்; இதற்குமேல் இனி, அவன் செய்யக் கூடிய தீமையென்ன? தேடிவிடக்கூடிய வசையென்ன விருக்கிறது? இந்த அநியாயத்தை உனக்கு நான் எப்படிச் சொல்வதென்றுதான் இவ்வளவு நேரமும் யோசித்தேன்; சொல்லாமலும் முடியாதுதான்; சரி, இதை நீயும் அறிந்துகொள்; உன் மகளுக்கும் போய்ச் சொல்லு" என்று ஆத்திரத்துடன் சொன்னார்; "அது என்ன, உன் மகளென்று விபரீதமாகச் சொல்லுகிறீர்கள்; உங்களையறியாமல் உங்கள் மகளை நான் பெற்றேனா? உங்கள் மருமகன்மீது கொண்ட கோபத்தை என்மகள் மேலுஞ் செலுத்திவிடப் பார்க்கிறீர்கள் போலிருக்கிறது" என்று சிறிது முகத்தைச் சுழித்தாள் மனைவியாகிய பெரியநாயகி.

நெருப்பில்லாமற் புகையுமா?

"கண்ணாரக் கண்டதும் பொய், காதாரக் கேட்டதும் பொய், தீர விசாரித்து அறிந்ததே மெய்யென்று சொல்வார்கள்; தெருவிலே போகிறவர், திண்ணையிலேயிருப்பவர், வேலையற்ற வீணர் சொல்வனவெல்லாம் மெய்யென்று நம்பிக் கொள்வதா? உங்கள் மருமகனுடைய இந்த நடத்தை மெய்யோ பொய்யோ என்பதை நீங்கள் நேரில் விசாரித்து உண்மையை அறிந்து கொண்டல்லவோ கருமத்தை உங்கள் மகளுக்கு வெளியிட வேண்டும். மருமகனையும் குறை சொல்ல வேண்டும்; இரஞ்சிதமென்ற தாசிப்பெண் தானிருந்த வீட்டைவிட்டுக் காணாமல் ஓடி விட்டாளென்றால், அவளை விசுவநாதன்றான் அகற்றிக் கொண்டு போயிருக்கவேணு மென்பதெப்படித் தெரியும்; காணாமற் போன பெண்ணை இப்பொழுது கண்டுபிடித்து விட்டார்களா? இல்லையேல் அந்தப் பெண்ணை விசுவநாதன் எந்த வீட்டிலே கொண்டுபோய் வைத்திருக்கிறானென்பதை அறிந்தீர்களா? அந்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாசிக்கிழவி வீட்டிற்கு விசுவநாதன் மாத்திரம் போய் வருவதா? யாரோ பாலசிங்கனாம் வீராசாமி யென்றொரு வனாம் இவர்கள் அல்லும் பகலும் அந்த தேவடி யாள் வீட்டிற்குப் போய் வருவார்களாம்; அப்படி யெல்லாமிருக்க ஊருக்கெளியவன் பிள்ளையார் கோவில் ஆண்டியென்றபடி உங்கள் மருமகனொருவன்றான் நீங்கள் வசை சொல்ல வசதிப்பட்டிருக்கிறானா? ஊரவர் சொல்லைக் கேட்டுப் அவனை வசை சொல்லி எங்கள் மகளை மனம் வருந்த வைப்பதினாலே என்ன பயன்?...."என்று பெரியநாயகி முன்னொருபோதும் பேசாத முறையில் அன்று சிறிது ஆத்திரத்துடன் பேசினாள்; மனைவி சொல்வதையெல்லாம் ஆறுத லாக கேட்டுக்கொண்டிருந்த அருணாசலம்பிள்ளை பெருமூச்சு விட்டு, "பெண்ணே, நீ சொல்வதும் நியாயந்தான்; ஆனாலும் நெருப்பில்லாமல் புகை யாதென்று உலகத்திலே சொல்லுவார்களே; இவன் இப்படியானவர்களுடன் சகவாசஞ் செய் வதனாற்றானே இவனைப்பற்றி அவமானப்பேர் பரவுகின்றது; இனி, நான் ஊரிலே புறப்பட்டு என் மருமகனைப் பற்றிய கதை நிசந்தானா இல்லையேற் பொய்யா என்று எல்லோரையும் உசாவியறிய வேண்டுமென்பதா உனது கொள்கை? அவனைப்பற்றிய கதை பொய்யாக, மெய்யாக, அதையிட்டுக் காரியமில்லை; ஆனால் இனிமேல் என்மகளை அவனுக்குக் கல்யாணஞ் செய்து கொடுக்க மாட்டேன்; இது நிச்சயம்; என்னெண்ணத்தை மகளும் அறிந்திருத்தல் நல்லது...." என்று மீட்டுஞ் சொன்னார்; கேட்ட மனைவி "உங்கள் சொல்லைத் தட்டி நடக்க எனக்கு அதிகாரம் இல்லை; மகளுக்கும் உங்கள் நோக்கத்தை வெளிவிடுகிறேன்; ஏதோ எல்லாம் எழுதியவாறுதான் நடக்கும்" என்று சொல்லி நெட்டுயிர்த்துக் கொண்டு மகளிருக்குமிடத்திற்குப் போய் விஷயத்தை மெல்ல மெல்ல வெளியிட்டாள்.

உரலுக்கு ஒரு புறத்தில்இடி மத்தளத்திற்கு இருபுறத்துமடி

மகளாகிய விசாலாட்சி கேட்டுப் பெரிதுங் கவலைப்பட்டாளாய் பின்னர்த் தாயை பார்த்து "எதனையும் நன்றாய் ஆராய்ந்த பிறகுதான் நாம் நம்ப வேண்டும்; நல்லவர்கள் பொல்லாதவர்கள் போற் காணப்படுவதும், பொல்லாதார் நல்லவர் போலத் தோற்றுவதும் கால வித்தியாசத்தினாலென்று பெரியோர் சொல்லுவார்கள்; பிரதானியும் கால பேதத்தினால் அப்பிரதானி யாகின்றான் என்பது பஞ்சதந்திரம்; ஒருவருடைய நடத்தை எங்களுக்கு உடன்பாடல்லாவிட்டால் நாம் அவரைப்பற்றி யாதும் பேசாது விடுவதேயொழிய அவரைப்பற்றிக் குற்றஞ் சொல்வது முறையல்ல அம்மா, எல்லா மறிந்த எங்கள் தகப்பனார் இந்த ஒரு உண்மையையும் அறியாமலிருப்பதேனென்று தெரியவில்லை...." எனலும் தாய் மகளைத் தேற்றிவிட்டுத் தன் கருமம் பார்க்கப் போய்விட்டாள்; விசாலாட்சி தன் அன்னைக்குச் சமாதானஞ் சொல்லினாளெனினும் தன்னளவில் மனச்சமாதான மற்றவளானாள்; "ஆ! தெய்வமே! எனது மைத்துனரைப்பற்றிக் காலந்தோறும் தீமையான பேச்சுப் பிறக்கின்றதேயொழிய எவரேனும் நன்மை சொல்ல நான் கேட்டதில்லையே! இதுவும் தலைவிதியா? நானோ பெண் பேதை, அல்லாமலும் கன்னிகை, அவரைப்பற்றிப் பரவிய கதை நிசமோ அல்லவோ என்பதை எப்படியறிதல் முடியும்! உண்மையையறிந்து எவர் என்னிடம் வந்து சொல்லப் போகிறார்கள்; உரலுக்கு ஒரு புறத்தில் இடி, மத்தளத்திற்கு இருபுறத்திலும் அடியென்றவாறு நான் அவரையிட்டுக் கலங்க, என் பெற்றோரும் என்னை நெருக்குகின்றார்களே நான் இருதலைக் கொள்ளியுள் எறும்பு போலானேன்! ஆருமற்றார்க்குத் தெய்வந் துணையென்பர்; ஐயோ! தெய்வமே! எங்கும் வியாபகமாயிருக்கும் நீ, எல்லாமறிந்த நீ, இந்தக் கருமத்தில் உண்மையை எனக்குப் புலப்படுத்த வொண் ணாதா! பழியஞ்சிய பாண்டியனுக்குச் சந்தேகந் தீர்த்த ஆலவாய்ப் பெருமானே! நின்றிருவருள் தான் எனக்குத் தஞ்சம்" என்று தெய்வத்தை இரந்து வருந்தினாள் விசாலாட்சி.

* * *

[தொடர்ச்சி 47 - 53 இல்லை]

உலகம் பலவிதம்: 1945 ஜூன் 07
விசாலாட்சி: (முற்றொடர் - 54)

"பிழையிருந்தாற் பொறுத்துக்கொள்ளுங்கள்"

இராமச்சந்திரன் தானிருக்குமிடத்தை நோக்கி வரக்கண்ட அந்தப் பெண், கொண்டலின் வருகையைக் கண்ட மயில்போலவும், சந்திரோத யத்தைக் கண்ட சாதகப் புள்ளைப் போலவும், உள்ளக் கிளர்ச்சியற்றாளாய்ச் சரேலெனத் தன்னிருக்கை விட்டெழுந்து விரைந்து முன்வந்து பணிந்து வரவேற்று அவனைத் தன்னறையுள் அழைத்துச்சென்று ஒரு "ஸோபா" வில் இருக்கச் செய்து அயலிலே விநயத்தோடு ஒதுங்கி நிலத்தைப் பார்த்தவண்ணம் கண் காதளவோடி மீண்டுசெல்ல, முகத்திற் புன்முறுவல் பூப்ப நின்றாள்; சில நிமிஷ நேரமட்டில் இருவரும் ஒருவரோடொருவர் வார்த்தையாடிலர்; ஈற்றில் இராமச்சந்திரன் அவளை நோக்கி, "சகோதரி, நீர் என்னை இங்கே வரும்படி சொல்லிவிட்ட காரணமென்ன" என்று கேட்டலும் அவள் திகைத்துச் சிறிதுநேரம் யாதும் பேசாது நின்று பின்னர், "உங்களைப் பார்த்தபின் உங்களுடன் நேரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தையாட வேண்டுமென்ற எண்ணத்தினால் இப்படிச் செய்தேன்; நான் உங்களுக்கு ஆக்கிய சிரமத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்று விநயமாகச் சொன்னாள்! "சிரமமொன்று மில்லை; ஏதும் என்னுடன் பேசவேண்டியிருந்தாற் பேசலாம்; நேரம் அகாலமாய்விட்டது; சுருக்க மாகச் சொன்னாற் கேட்டுக் கொள்ளுகிறேன், சொல்லுகிர்" என்று இராமச்சந்திரன் சொல்ல, அந்தப் பெண் "வேறொன்றுமில்லை; உங்களை நான் முந்தி எப்பொழுதாயினும் பார்த்ததில்லை; நீங்கள் என் ஆடல் பாடல்களை மெச்சி என்னைச் சந்மானித்ததன் பொருட்டு உங்கட்கு எனது நன்றியறிதலை நேரில் தெரிவிக்க விரும்பி இங்கே யழைத்தேன்; இங்கு வந்து அங்கிருக்கும் அரங்கநாத ஐயங்கார் மூலமாக உங்களைப் பற்றிய வரலாறு எதனையும் அறிந்து கொள்ள முடியவில்லை; நீங்கள் இங்கே வந்த நோக்க மென்னவென்பதை நான் அறியவொண்ணாதா?" என்று இதமாகக் கேட்டாள்; "சகோதரி! நான் இங்கே வந்த நோக்கத்தை உம்மைப் போன்ற மகளிருக்குச் சொல்வதால் நன்மையுண்டு...." என்று சொல்வதற்கிடையில் அந்தப் பெண் இராமச்சந்திரனைப் பார்த்து, "ஐயா, எந்தப் பெண்ணையும் சகோதரியென விளிப்பது உள்ளூரிலுள்ள வழக்கமா? இல்லையேல் நீங்கள் மாத்திரம் இப்படி விளிப்பதுண்டா?" என்று வினவ "எங்களூரில் இப்படி அழைப்பாருமுண்டு; ஆனால் நான் எப்பொழுதும் வயசிற் குறைந்த பெண்களைச் சகோதரியென்றும் தங்காய் என்றுமே விளிப்பது வழக்கம்; மேலும் இது நல்ல முறையென்று நினைக்கிறேன்" என இராமச்சந்திரன் பதில் சொன்னான்; "அதைப்பற்றிக் குறையொன்றுமில்லை; சும்மா அறியும்படி கேட்டேன்; குறையெண்ணாதீர்கள்; நான் பெண்பேதை தானே; உங்களோடு ஊடாடும் முறையில் ஏதும் பிழையிருந்தாற் பொறுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு, இராமச்சந்திரனை அங்கே வந்த வரலாற்றைக் கூறும்படி மீண்டும் கேட்டாள் அந்த இளம்பெண்.

"அன்பு வைத்தவரை அன்பாக நடத்தவேண்டும்"

இராமச்சந்திரன் தனக்கு அபிமானப் பிதா ஒருவர் உண்டென்பதையும் அவருடைய ஒரேயொரு புதல்வனுக்கு அந்தப் பிதா தமது மருகியை மணஞ் செய்துவைக்க நிச்சயித்திருந்தாரென்பதையும், மணம் முடித்தற்கிடையில் மகன் அகாலமரணமடைய அந்த மகனுக்கு நிச்சயித்திருந்த பெண் பெரிதுங் கலங்கித் தான் வேறெவரையும் விவாகஞ்செய்ய மறுத்தமையையும், மாமனார் வீட்டிலேயே அந்தப் பெண் இருந்தமையையும், அந்த மாமன் புநர்விவாகஞ் செய்து கொண்டமையையும், இரண்டாந்தாரமாக வந்த அந்தப்பெண் மருகியோடு பிணக்குற்றமையையும், அதனால் மருகி அந்த வீட்டைவிட்டு இரவில் நீங்கியமையையும், தனது அபிமானப் பிதாவின் கேள்விக்கிசைந்து அந்தப் பெண்ணைத் தான் பல இடங்களிலே தேடிக் காணாமையினால் அந்தப் பட்டினத்திற்கு வந்தமையையுமாகிய இவைகளையெல்லாம் இராமச்சந்திரன் ஒன்றும் ஒளியாமல் விபரமாகச் சொன்னான்; அந்த வரலாறனைத்தையும் அவதானமாகக் கேட்டுக் கொண்டு நின்ற அந்தப் பெண் இரமச்சந்திரனைப் பார்த்து, "ஐயா, நீங்கள் சொல்லியவைகளைக் கேட்க என் மனம் உருகுகின்றது; அந்தப் புத்திகெட்ட பெண் எங்கே போனாளோ, எவர் கையிற் சிக்கிக்கொண்டு இடர்ப்படுகிறாளோ, யாருக்குத் தெரியும்? அவளை நீங்கள் எவ்வாறுதேடிக் காணப்போகின்றீர்கள்? என்ன செய்வேன். நான் பெண் ஜன்மமெடுத்தேன்; உங்களைப் போலவே நானும் ஒரு ஆண்பிள்ளையாக விருந்தால் அந்தப் பெண்ணைக் கண்டுபிடிக்கும் விஷயத்தில் என்னாலியன்ற உதவியைச் செய்வேன்; அரிய பெரிய கருமத்திலே தலையிட்டுக்கொண்டு இடர்ப்படுகின்றீர்களே யென்பதை நினைக்க எனக்குக் கவலையாக விருக்கிறது" என்று சொல்வதற் கிடையில் இராமச்சந்திரன், "எனக்கு அதிக சிரமமில்லை மேலும், இந்த அரங்கநாத ஐயங்கார் தம்மாலியன்ற உதவியை இவ் விஷயத்தில் எனக்குச் செய்வாரெனக் காத்திருக்கின்றேன்; சகோதரி, நீர் என்னையிட்டுக் கவலைப்படவேண்டாம்; அவரும் என்னை எதிர்பார்த்த வண்ணம் வெகு நேரமாகத் தலைவாசற் புறத்திலிருக்கின்றார்; ஆனதால் நான் போக விடை தாரும் என்றான். "ஐயா, நீங்கள் அவசரப்படாதீர்கள்; இங்கே எங்களிடத்தில் மோட்டார்ரதம் நிற்கிறது; உங்களை நினைத்தவுடனே உங்கள் விடுதிக்கு அனுப்பிவைப்போம்; நீங்கள் இங்கிருந்து அங்கே நடந்து போகவேண்டியதில்லை; நீங்கள் பரிதாபமான வரலாற்றைச் சொல்லி என்னைக் கவலைக்காளாக்கிவிட்டு, நீங்கள் இடையிற் போவதென்று சொல்வது முறையாகுமா? உங்களிடத்தில் உண்மையான அன்பு வைத்தவர்களை நீங்களும் அன்பாகவல்லவா நடத்தவேண்டும்; நீங்கள் அந்தப் பெண்ணின் குணம் குறி முதலியவற்றை யெனக்குச் சொல்ல வொண்ணாதா?" என்று ஆவலுடன் கேட்க, இராமச்சந்திரன் தான் அவைகளைச் சொல்லி முடித்துக் கொண்டு விரைவில் அந்த வீட்டை விட்டகன்று விடலா மென்றெண்ணிப் பின்வருமாறு சொல்வானா யினான்.

"மழைக்காலிருட்டானாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது"

"சகோதரி, அதிகஞ் சொல்வதென்ன? நிறம், குணம், தோற்றம், உயரம், பெருமை முதலிய இவைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமக்கும் அந்தப் பெண்ணுக்கும் எவ்வகையான பேதமுமில்லையென்று சொன்னாலும் பொருந்தும்; நானும் உம்மை முதன்முதற் கண்டபோது அந்தப் பெண்தானோ என்று சந்தேகித்தேன்; ஆனாற் பின்னர் அவள் வேறு நீர் வேறென்பதை யுணர்ந்து கொண்டேன்; குலங்குடியிற் பிறந்தவளெனினும் உம்மைப் போலவே அந்தப் பெண்ணும் ஆடல் பாடல்கள் நன்கு பயின்றுள்ளவள்; ஏதோ, பொல்லாத விதியினாற்தான் பிறந்தவிடத்தையும் புகுந்தவிடத்தையும் விடுத்து புறப்பட்டு விட்டாள்; "மழைக்காலிருட்டானாலும் மந்தி கொம்பிழக்கப் பாயாது" என்றவாறு இந்தப் பெண் எவ்வாறான சங்கடம் சேர்ந்தாலும் பிழை செய்யமாட்டாள்; நன்னெறியிலிருந்து திறம்பமாட்டாள்; இது நிசம்; அப்படிப்பட்ட உத்தமியென்ற காரணத்திற்தான் நான் அவளைத் தேடச் சம்மதித்துப் புறப்பட்டேன்; இல்லையேல் இருந்த வீட்டைவிட்டு இரவிலே கரந்தோடிப்போன பெண்ணைத்தேடி புறப்படுவேனா; அவள் தன் மானத்திற்குப் பங்கம் வராமல் ஒழுக்கத்தோடுதான் இருக்கிறாளென்று ஒரு ஞானி சொன்ன இடமுமுண்டு; மேலும் இப்பொழுது தேடிக் காணாவிட்டாலும் அதிக சிரமப்பட்டாலும் காலக்கதியில் அந்தப் பெண்ணைத் தேடிக் காண்பேனென்ற திடம் எனக்குண்டு."

"என் பெயர் இங்கிதம்"

இப்படி இராமச்சந்திரன் திடமாக சொல்லக் கேட்டு நின்ற அப்பெண், "ஐயா, அந்தப் பெண்ணுடைய நாமம் என்னவோ?" என்று வினவ, "இரஞ்சிதம்" என்றான் இரமச்சந்திரன்; "அப்பெண்ணின் பெயரும் என் பெயரும் ஒரு அளவிற்கு ஒரே வகையாக தானிருக்கின்றது" என்றாள் அந்தப் பெண்; "உம்முடைய நாமம் என்ன?" என்று இராமச்சந்திரன் கேட்க, "என் பெயர் இங்கிதம்" என்று பதில் சொன்னாள் அவள்; "இங்கிதம் என்ற பெயர் உமக்கு தகும்" என்றான் இராமச்சந்திரன்; "நீங்கள் இப்படிச் சொன்னது என் பாக்கியம்" என்று பதில் சொன்னாள் அந்தப் பெண்; "நல்லது, இங்கிதம் எனக்குப் போய் வர உத்தரவு தரவேண்டும்; வேணுமானால் நாளைப் பகல் நான் தவறாமல் இங்கு வருவேன்" என்று இதமாக சொன்னான் இராமச்சந்திரன்; "ஐயா, உங்களைப் பிரிந்தபின் எனக்கு இந்த இரவு விடிந்தாற்றானே நாளைப் பகலுண்டாகும், அந்தப் பகலில் நீங்கள் வருவதும் முடியும்" என்று உள்ளமுருகச் சொன்னாள் இங்கிதம்; இவ் வார்த்தையை கேட்ட மாத்திரத்தே அவனுடைய உள்ளம் துணுக்குற்றது; ஆனாலும் அவன் அதனைப் புறத்தே காட்டினானல்லன். "சகோதரி, உம்மிடத்திற் சிறு பிள்ளைப் புத்தி இன்னமுங் காணப்படுகின்றது; நாமிருவரும் இந்த அகாலத்திலே இங்கிருந்து வஞ்சகமின்றி வார்த்தையாடினாலும் பார்ப்பவர்க்கு முறையாகத் தோன்றாது; என்னுடன் வந்துள்ள ஐயங்காரே எங்களை விபரீதமாக நினைப்பார்; எந்தக் கருமத்திற்கும் எல்லையுண்டென்று எண்ணிக் கொள்ள வேண்டும்; இப்பொழுது நீர் மனமொத்து எனக்குப் போக உத்தரவு தந்தால் நாளைக்கு நான் தவறாமல் வந்து உம்மைக் காணுவேன்; இல்லையேல் இதுவே இந்த வீட்டில் நான் கால் வைத்த முதன்முறையும் கடைசி முறையுமாகும்" என்று இராமச்சந்திரன் சிறிது கடுகடுத்துச் சொன்னான், "ஏன் ஐயா கோபிக்கிறீர்கள்? உங்களை இன்னும் சற்று நேரம் இருக்கும்படி அன்பின் நிமித்தமாகத்தான் இரந்து கேட்கின்றேன்; உங்களுக்கு இஷ்டமில்லாவிட்டால் நீங்கள் மகாராசனாகப் போய் வரலாம்" என்று கண்களில் நீர் ததும்பக் கவலையோடு சொன்னாள் இங்கிதம்; அந்த நேரத்தில் இவளுடைய நிலையை அவதானித்த இராமச்சந்திரன் அவள் பொருட்டுச் சிறிது இரக்கங் கொண்டான்; "இது என்ன பரமசங்கடமாயிருக்கின்றதே" என்று தன்னளவில் எண்ணிக்கொண்டு "சரி, இங்கிதம் இன்னும் எவ்வளவு நேரம் நீர் என்னை இங்கே இருக்கச் சொல்லுகிறீர்" என்று அவளைக் கேட்க, அவள், "உங்களுக்கு எவ்வளவு நேரம் இங்கு இருப்பது இஷ்டமோ அது போதும்" என்றாள் இங்கிதம். "சரி, நான் இன்னும் கால் மணிநேரம் இங்கே இருப்பது உமக்குத் திருப்திதானே" என்று கேட்டான் இராமச்சந்திரன். "ஓம்" என்று மனரம்மியத்துடன் முகத்தில் மகிழ்ச்சி ததும்பச் சொன்னாள் இங்கிதம்.

"ஐயா கேட்கிறேனென்று குறை யெண்ணாதீர்கள்; நீங்கள் தேடிப்போகும் அந்தப் பெண் அகப்பட்டாற் பின் என்ன செய்வீர்கள்? "என்று அவள் கேட்க, அவன் "செய்வதென்ன, அந்தப் பெண்ணை மரியாதையோடு அழைத்துக் கொண்டு போய் அவளுடைய மாமனாரின் வீட்டிலேனும், பெற்றார் வீட்டிலேனும் ஒப்புவிப்பது தான் முறை" என்றான் இராமச்சந்திரன்.

இங்கிதம்: அதன்பிறகு?

இராமச்: அதன்பிறகு நடக்கவேண்டிய கருமங்களை அவள் பெற்றாரையும் மாமனாரையும் அப் பெண்ணையும் பொறுத்தனவாகும்.

இங்கிதம்: (புன்னகையுடன்) உங்களுக்கு விவாகமாகி விட்டதா?

இராம: இன்னும் ஆகவில்லை.

இங்கிதம்: உங்கள் அபிமானப் பிதாவின் மருமகள் உங்களுக்கென்ன முறையாவள்?

இராம: என்ன இங்கிதம், நீதித் தலத்திலே எதிரியைக் கேள்வி கேட்டதுபோலல்லவா நீரென்னைக் கேள்வி கேட்கிறீர்?

இங்கிதம்: ஆம், ஐயா, அன்பு மேலீட்டினாற்றான் கேட்கிறேன்; தயை கூர்ந்து பதில் சொல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராம: அவள் எனக்கு மைத்துனி முறையென்று தான் சொல்வார்கள்; ஆனால் நான் அவளை என் சகோதரியாகத்தான் மதித்து நடக்கின்றேன்;

இங்கிதம்: நீங்கள் சற்று முன்பு என் விஷயத்திற் சொன்ன விதமாக, நீங்கள் வஞ்சகமில்லாமற் சகோதரியாக மதித்து நடந்தாலும் பார்ப்பவர்கள் விபரீதமாகத்தானே எண்ணுவார்கள். அதனை மறுக்க முடியுமா?

இராம: (சிறிது நேரம் யோசித்துவிட்டு) ஆம், விபரீதமாகத்தான் நினைப்பார்கள்.

இங்கிதம்: மேலும் நீங்கள் அந்தப் பெண்ணைத் தேடிச் சந்தித்தால், ஊருக்கு நீங்கள்தானே அவளைக் கூட்டிக்கொண்டு போய்ச் சேர்க்க வேணும்.

இராம: ஆம், நான் தான் ஒரு மோட்டார் ரதத்தை ஒழுங்கு செய்து அதில் அவளையும் ஏற்றிக்கொண்டு போய்ச் சேர்க்கவேண்டும்; அப்படிப்பட்ட செலவிற்காகிய பணம் என்னிடத் தில் இங்கே உண்டு.

இங்கிதம்: பணம் உங்களிடத்தில் உண்டென்பதை நான் மறுக்கவில்லை; ஆனால் நீங்கள் இருவீரும் ஒரே இரதத்தில் ஏறிக்கொண்டு போகும்போது பார்ப்பவர்கள் உங்களுடைய மனைவியென்று மதிப்பார்களா? மைத்துனியென்று நினைப்பார்களா? இல்லையேற் சகோதரியென்று நினைப்பார்களா? எப்படி நினைப்பார்கள்?

இங்கிதம் கேட்ட இந்தக் கேள்விக்கு இராமச்சந்திரன் பதில் பகர முடியாதவனாய் யோசித்த வண்ணமிருந்தான்.

* * *

உலகம் பலவிதம்: 1945 ஜூன் 14

விசாலாட்சி: (முற்றொடர் - 55)

"சுகமே போய்வாருங்கள்"

யோசித்துக் கொண்டிருந்த இராமச்சந்திரனை இங்கிதம் பணிவுடன் பார்த்து "நான் சும்மா வேடிக்கையினிமித்தம் கேட்டேன்; என் கேள்விக்கு விடைசொல்ல வேண்டுமென்ற சிரமத்தை விடுங்கள்; உங்கள் விடுதிக்கு ஆவசியகம் போகவேண்டுமென நினைத்தாற் போய்வாருங்கள்; நான் சாரதியிடம் சொல்லி எங்கள் இரதத்தை இங்கே வரச்செய்கிறேன்" என்று சொல்லிவிட்டுத் தாய்க் கிழவியைக் கூப்பிட்டு "அம்மா, அரங்கநாத மாமா உங்கிருக்கிறாரா, அவரை இங்கே வரும்படி சொல்லுங்கள்" என்று சொல்ல, தாய்க்கிழவி போய் பார்த்தவிடத்தில் அவரைக் தலைவாசற்புறத்திற் கண்டிலளாக, அங்கு நின்ற வேறொருவர் அந்த ஐயங்கார் தம் வீட்டிற்கு போய் விரைவில் மீண்டு இங்கே வருவதாகச் சொல்லிச் சென்றாரென்று கிழவிக்குத் தெரிவிக்க, கிழவி இங்கிதத்திடம் போய் அப்படியே சொன்னாள். கிழவி சொன்ன வார்த்தை இராமச்சந்திரன் காதிலும் பட்டது; இங்கிதம் இராமச்சந்திரனைப்பார்த்து "ஐயங்கார் மாமாவை ஆள் அனுப்பி உடனே கூப்பிடுவிக்கவா?" என்று கேட்க, அவன் "இல்லை, அவர் வருங்காறும் உம்முடன் பேசிக்கொண்டிருக்கிறேன்" எனலும், "தங்கள் சித்தம் என் பாக்கியம்" என்று புன்முறு வல் தோன்றத் புகன்றாள் இங்கிதம். பின்னரும் அவள் அவனைப் பார்த்து, "ஐயா உங்களுக்குச் சில இரகசியங்களைச் சொல்ல விரும்புகிறேன்; நீங்கள் அவற்றை வெளியிடவொண்ணாது; இந்த ஐயங்காரை நம்பாதீர்கள்; இவருடைய முயற்சி வேறு; நீங்கள் வஞ் சகமற்ற ஒரு உத்தமர் போற் காணப்படுகின்றீர்கள்; புதியராய் இந்தப் பட்டினத்திற்கு வருவோரைத் தம் உபாயத்தாற் தம்மிடத்திற் சிக்கச்செய்து பணம் பறிப்பதே இந்தப் பார்ப்பானுடைய தொழிலாகும்; இந்த வீட்டிலிருப்பவர்களுக்கும் எனக்கும் எவ்வகை யான தொடர்பும் இல்லை; இந்தப் பிராமணனுடைய உபாயத்தால் இங்கு வந்து சிக்கிக் கொண்டேன்; நான் ஆடல் பாடல்களைச் செய்து இவர்களுக்குப் பணத்தையீட்டிக் கொடுக்கிறேனே யொழிய, இற்றை வரையில் மானத்திற்கு பங்கமான எவ்வகையான பிழையும் செய்தறியேன். ஆயினும் அப்படியான பிழையைச் செய்யும்படி இந்தக் கிழவியும் அந்தப் பார்ப்பானும் என்னைத் தூண்டுகின்றார்கள். எனக்கு இஷ்டமில்லாதிருக்கும் போது இவர்களுடையதூண்டுதல் என்னை என்ன செய்ய முடியும்; ஒவ்வொரு நிமிஷமும் இந்த வீட்டைவிட்டு கழன்றுவிட வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இருக்கிறேன்; உங்களுக்கொழிய வேறு எவர்க்காயினும் எனது அந்தரங்கமான இந்த எண்ணத்தை இன்னமும் வெளியிட்டிலேன்; இனிமேலும் வெளியிடமாட்டேன்; உங்களைக் கண்டமாத்திரத்தே உங்களைப்பற்றி நல்ல எண்ணம் என் மனத்திற் பிறந்தது; அதனாற்றான் உங்களைத் தனியே நேரிற் காணவிரும்பினேன் கண்டதினால் அடைய வேண்டிய நன்மையை யடைந்து கொண்டேன்; என்னை நீங்கள் "சகோதரி" என்று ஆதரவுடன் அழைத்தமை என் மனதிற் படிந்து கொண்டது. அந்த வார்த்தை இப்பொழுதும் என் காதிற் பிரதிதொனி செய்தவண்ணம் கேட்கின்றது; நீங்கள் "சகோதரி" என்றழைப்பதற்கு நான் அருகானல்லளாயினும் உங்கள் வரவால் என்னுள்ளம் பரிசுத்தமடைந்தது; உங்கள் இரஞ் சிதத்தைப் பற்றி நான் இந்தவிடத்திலிருந்தாலும் வேறு எந்த இடத்தி லிருக்க நேர்ந்தாலும் தவறாமல் அறிய முயற்சி செய்வேன்; நீங்களும் உங்களால் ஆனவரையில் முயற்சிசெய்து தேடிப்பாருங்கள்; ஆண்டவன் உங்களுக்கு அருள்செய்வான். ஆனால் உங்களிடத்தில்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒரு விஷயம் கேட்கப்போகிறேன்; அதனை மாத்திரம் நீங்கள் எனக்கு மறுத்தலின்றிச் செய்தே தீரவேண்டும்; வேறொன்றுமல்ல. நான் ஓர் அநாதப்பெண்; இந்த வீட்டைவிட்டுத் தப்பிவரும் நேரத்தில் நான் என் மானத்தையும் பாதுகாத்துக்கொண்டு வறுமையிற் செம்மையாக காலம்போக்கத்தக்க ஒரு தொழில் எனக்கு தேடித்தர வேண்டும்; அப்படிச் செய்யும் நன்றியை என் சீவனுள்ள பரியந்தம் மறக்கமாட்டேன்; உங்கள் மேல் விலாசத்தைக் குறித்து என்னிடம் தந்து விடல் வேண்டும்; அல்லாமலும் நான் இப்பொழுது மனப்பூர்வமாக உங்களுக்கு தந்திருக்கும் அற்ப பணத்தை வழிச் செலவிற்காக என்னிடம் ஏற்றுக் கொள்ளவேண்டும்; இந்த மூன்றினையும் செய்தாற்றான் நான் மன ஆறுதலுடனிருப்பேன்; என் விருத்தாந்தத்தை இப்பொழுது அறிய ஆசைப்படாதீர்கள்; சொல்ல வேண்டிய நேரத்திற் சொல்லுவேன்; இந்த இரவு மாத்திரம் உங்கள் விடுதியில் தங்கிவிட்டு நாளைக்கு அதிகாலையில் இப்பட்டினத்தை விட்டகன்று அந்தப் பெண்ணை இன்னமும் தேடிப்பாருங்கள்; ஐயங்கார் இன்னும் சில நிமிஷத்தில் மீண்டு வந்துவிடுவார்; ஆகையால் இவ்வளவுந்தான் உங்களுக்கு இப்பொழுது நான் சொல்லத்தக்கவை. நீங்கள் என்னை மறந்தாலும் நான் உங்களை ஒருபோதும் மறக்கமாட்டேன்" என்று கண்களில் நீர் ததும்பச் சொல்லி முடித்தாள். இவையனைத்தையுங் கேட்ட இராமச்சந் திரன் திகைத்தபடியிருந்தான்; இதற்கிடையில் தங்கள் இரதத்தை கொண்டுவரும்படி இங்கிதம் தலைவாசற் பக்கம் போய்ச் சாரதிக்குச் சொல்ல, அவன் உடனே அங்கே கொண்டுவந்து சேர்த்தான்; அந்த நேரத்தில் அரங்கநாத ஐயரும் மீண்டு அங்கே வந்து சேர்ந்தார்; அவள் தான் காகிதத்துட் பொதிந்து வைத்திருந்த பணத்தை இரு கரங்களாலும் பணிவுடன் இராமச்சந்திரனிடம் நீட்ட, அவனும் ஏற்பதற்கு மறுக்க முடியாதவனாய்ச் தன் இருகரங்களையும் நீட்டி வாங்கிச் சட்டைப் பையுள் இட்டான்; "இரதம் ஆயத்தமாக நிற்கிறது; சுகமே போய்வாருங்கள்; நான் சொன்னவைகளை மறந்துவிடாதீர்கள்" என்று சொல்லி நமஸ்காரம் செய்து விடைகொடுக்க இராமச்சந்திரனும் "தங்காய், போய் வருகிறேன்" என்று சொல்லி நமஸ்காரம் செய்து விடை பெற்றுக்கொண்டு ஐயங்காருடன் இரதத்தில் ஏறித் தன் விடுதியைச் சேர்ந்தான்; இரதமும் இங்கிதம் வீட்டிற்கு மீண்டுவந்து சேர்ந்தது.

"ஊரறிந்த பார்ப்பான்"

இராமச்சந்திரன் தன் விடுதிக்கு மீண்டு வந்தான்; ஐயங்காரும் அவனுடன் வந்து அந்த விடுதிச்சாலையிலேயே இறங்கினார்; இங்கிதத்திற்கும் இராமச்சந்திரனுக்குமிடையே நடந்த சம்பாஷணையைப் பற்றியேனும் அந்த இருவரும் ஊடாடிக் கொண்ட முறையைப் பற்றியேனும் தாம் அறிந்து கொள்ள விரும்பினார் ஐயங்கார்; ஆனால் இராமச்சந்திரன் அந்த விஷயமாய் ஐயங்காருடன் ஏதும் பேசிலன். அவன் ஐயங்காரைப் பார்த்து, "ஐயா இனி இந்தப் பட்டினத்தில் நிற்பதனால் யாதும் பயனில்லை; நான் வந்த கருமத்தைப் பார்த்தே தீரவேண்டும்; நாளைப் புலரிக் காலத்தில் இங்கிருந்து நான் புறப்பட்டுப் போகவேண்டும்; நீர்செய்த உதவியையும் நான் மறக்க மாட்டேன்; இனிமேலும் இருவரும் சந்திப்போமென்று நினைக்கிறேன்; எனக்கு விடைதந்து போய்வாருங்கள்" என்று சொன்னான். ஐயங்கார் இராமச்சந்திரன் இப்படிச் சொல்வானென எதிர்பார்த்திருந்திலர்; அவர் சிந்தனையோடு கூடியவராய் இராமச்சந்திரனைப் பார்த்து, "ஐயா, ஏன் அவ்வளவு சடுதியில் இந்தப் பட்டினத்தை விட்டுப் போகவேண்டுமென்று நிச்சயிக்கின்றீர்கள்; இது பெரிய பட்டினம்; இன்னும் இரண்டொரு தினம் இங்கே தங்கி அந்தப் பிள்ளையைத் தேடிப்பார்க்கலாமே; இங்கிதம் இந்த விஷயமாக உங்களிடம் ஏதும் சொன்னாளா? இல்லையேல் அவள் உங்களைத் தக்கபடி உபசரிக்கத் தவறினாளா? அவள் சிறு பெண்; தன் அறியாமை காரணமாக உங்களுக்கு ஏதும் அபசாரஞ் செய்திருந்தாலும் நீங்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும்; அவள் அதிகம் பேசுபவளாயிருந்தாலும் அகத்திலே நல்ல பெண்" என்று சமாதானஞ் சொன்னார்; அதனைக் கேட்ட இராமச்சந்திரன் "ஐயா, இங்கிதம் மகா உத்தமி என்று சொன்னாலும் தகும்; அவள் எனக்கு எவ்வகையான அபசாரமுஞ் செய்யவில்லை; என்னை தூய முறையில் உபசரித்தாள்; நல்ல மனமுள்ளவள்; தூய நோக்கமுள்ளவள்; அதுகிடக்க, இந்தப் பட்டினத்தில் இனிமேல், வேணுமானால் மீண்டு வரும்போது இரண்டொருதினம் தங்கிப்போவேன்; இப்பொழுது நான் அப்பாற்போக வேண்டிய ஆவசியகமுண்டு. தயை கூர்ந்து எனக்கு விடை தாருங்கள்" என்றான்; "சரி, உங்கள் இஷ்டம் அப்படியானால், நான் அதற்கு மாறாய் நிற்கமாட்டேன்; வேணுமானால் நானும் உங்களுக்கு துணையாக வருகின்றேன்; வந்து ஆக வேண்டிய உதவியைச் செய்கின்றேன்; நான் ஊரறிந்த பார்ப்பானாவேன்; எங்கும் எனக்கு நல்லார் பெரியார் சிநேகம் உண்டு உங்கள் விருப்பத்தைச் சொல்லுங்கள்" என்று ஆவலுடன் கேட்டார் ஐயங்கார்; "ஐயா, உடன் வருகிறேனென்று நீங்கள் சொன்னதையே என்னுடன் வந்ததற்குச் சமானமாக நான் மதித்துக் கொள்ளுகிறேன்; இப்பொழுது நான் தனியே போகத்தான் விரும்பு கிறேன்; ஆவசியகமெனக் கண்ட நேரத்தில் தங்களுக்குத் தெரிவிப்பேன்; அந்த நேரத்திலே வாருங்கள்; இப்பொழுது எனக்கு விடை தாருங்கள்" என்று மீட்டுங் கேட்டான் இராமச்சந்திரன். அதனைக் கேட்ட ஐயங்கார் தம் நோக்கம் சித்தியடையாமை கண்டு அகத்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலைக் கொண்டாராய், புறத்தே அக்கவலையைக் காட்டாராய் "ஐயா, சுகமே போய்வாருங்கள்; உங்கள் கருமஞ் சித்தியடைக! எனக்கும் வீட்டிற்குப் போய்வர விடைதாருங்கள்" என்று சொல்லி அவனிடம் விடை பெற்றுக்கொண்டு வீட்டிற்கு மீண்டார்; இராமச்சந்திரனும் தான் வைகறையிற் புறப்பட்டுப் போதற்காகிய ஆயத்தங்களைச் செய்துவிட்டுத் தன் படுக்கையறையுட் சென்று சயனத்திற் படுத்தான்.

"அரிவைமார் மனசுகண்டு
அறிந்துளார்களார்?"

புலரிக் காலத்தில் தான் நித்திரை விட்டெழுந்து வேறிடத்திற்குப் போக வேண்டுமென்ற நோக்கத்துடன் நித்திரை கொள்ள முயன்றானேனும் அன்றிரவு இராமச்சந்திரனை நித்திரை பீடிக்கவில்லை; நித்திரை தானாக வந்து பீடிப்பதேயொழிய ஒருவர் நினைத்து நித்திரை கொள்ளல் முடியாதென்று அனுபவஸ்தர் சொல்லுவர். இரஞ்சிதத்தை மறந்து அவன் இங்கிதத்தைப் பற்றியே நினைத்தவாறாகக் கிடந்தான்; இந்தப் பெண்பாலாரின் சிந்தையென்ன, குண மென்ன, நடையென்ன, பேச்சென்ன, ஊடாடும் முறையென்ன, ஒன்றற்கொன்று முரண்படுகின்றனவே! இந்த இங்கிதம் அவள் வீட்டிற்கு நான் சென்ற போதில் முதல் பொருள்பறிக்கும் தாசிபோற் காணப்பட்டனள்; இடையில் அப்படியில்லாத குலத்திற் பிறந்தவள்போற் புலப்பட்டனள்; ஈற்றில் அவள் பேசிய பேச்சும், பாராட்டிய அபிமானமும், ஊடாடிய விதமும், செய்த சில செயல்களும் அவளை நான் மாசற்ற ஒரு உத்தமக் கன்னிகையென எண்ணச்செய்து விட்டனவே! என்னை முன் எக்காலத்தும் அறியாதவளாகிய இச் சிறுபெண் முந்தி நன்கு என்னை யறிந்தவள் போல ஊடாடியதற்குக் காரணம் யாதெனப் புலப்பட வில்லையே; அவள் வசிக்கும் இல்லம் தாசி வீடென்பதை அறிந்த நிமிஷமே அந்த வீட்டைவிட்டு நீங்க வேண்டுமென எண்ணங் கொண்ட நான், பின்னர் அவள் தன் வீட்டை விட்டுப்போகச் சொன்னாலும் போக முடியாத நிலைமையில் நின்று விட்டேனே; இது என்ன நூதனம்! வேறு துறைகளில் நுண்ணிய ஆராய்ச்சி செய்து உள்ளபடி பொருள்களை யறிந்து கொள்ளும் விவேகிகளும் இந்தப் பெண்பாலினரின் உள்ளக்கிடக்கையையும் போக்கையும் அறிந்து கொள்ள முடியாது இடர்ப்படுகின்றார்களே இதனையறியாமலா ஆன்றோர்;

"உரிமையி னிரண்டுடற் குயிரொன்றாகினும்
பிரிவற நெடிதுநாட் பழகிப்பேசினும்
சரிவறாக் கற்புடைத் தலைமை காண்கினும்
அரிவைமார் மனசு கண்டறிந்துளார்களார்"

எனப் பெரியோர் கூறிப்போந்தனர்! இவள் தான் தாசி குலத்தினளலல்லென்றும் தன் வரலாற்றைச் சமயம் வாய்க்கும்போது சொல்வதாகவும் எனக்கு கூறினாள்; இவளுடைய வரலாற்றை இப்பொழுதே யறிய நேர்ந்தால் இந்தப் பட்டினத்தை விட்டு உடனே போதலும் முடியாதாகும்; எதனையும் காலகதியில் இருந்தறிவோம்; எதற்கும் அவசரப்பட வொண்ணாதென்பர்; மீண்டுவரும் பொழுதாயினும் இவளை நான் வந்து கண்டு கொண்டு போகிலன்றி என் மனம் திருப்தியடையாது..." என்று இப்படி யோசித்த வண்ணம் நான்காஞ் சாமத்தில் இராமச்சந்திரன் சற்று நேரம் உறங்கிப் பின் விழித்தெழுந்து விடுதியருக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைத் கொடுத்து விடை பெற்றுத் தன் துவிச்சக்கரத்தை யெடுத்துக்கொண்டு தெய்வத்தைத் தியானித்து தன் வாசஸ்தானத்தை விட்டுப் புறப்பட்டுப் போவானாயினான்.

* * *

உலகம் பலவிதம்: 1945 ஜூலை 05
விசாலாட்சி: (முற்றொடர் - 58)

நாயிற் கடைப்பட்ட
நானா கருணை செய்வது?

"அம்மா, ஏன் நிற்கின்றாய்; இப்படியிருக்கலாமே" என்று அந்தச் சந்நியாசப் பெண் சொல்ல, "ஓம் இருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு விசாலாட்சி வெறு நிலத்திலிருக்க முயல, "அப்படி வேண்டா மடியம்மா இப்படியென் பக்கத்தில் இரு" என்று சொல்லி அத்துறவிப் பெண் விசாலாட்சியின் கரத்தை மிருதுவாகப் பற்றி தன் பக்கத்திலே மான்றோலின் மேல் இருக்கச் செய்தாள்; விசாலாட்சி கூசிக்கூசி அதன் மேலிருக்க, "அம்மா, ஏன் கூசுகிறீர், நான் தரித்திருக்கும் இத் தவக்கோலமே யொழியத் தேகத்திலும் மனத்திலும் நீயே என்னைக் காட்டிலும் பரிசுத்தமுடையை; யாசிக்க வந்த எனக்கு ஏனம்மா இவ்வளவு உபசரணை" என்று சொல்லி அந்த அம்மாள் விசாலாட்சியின் முதுகைத் தடவினாள்; இதற்கிடையில் விசாலாட்சியின் தாய் அங்கே வந்து அப்பெண்ணின் தாபத வடிவத்தைக் கண்டு கும்பிட்டு விபூதி வாங்கித் தரித்துக்கொண்டு அற்புதமடைந்தாளாய் ஒருபுறத்தே யொதுங்கி நின்று "நீங்கள் இங்கே வர என்ன புண்ணியஞ் செய்தோமோ அறியேம்; இந்தப் பிள்ளை கடலலையில் அகப்பட்ட துரும்பு போற் கிடந்து சுழலுகிறாள்; இவளுக்கு ஆறுதல் சொல்லி இவளைத் தேற்றுங்கள்; எங்கள் புத்தியை எள்ளளவுங் கேட்க மாட்டேனென்கிறாள்; இவள் மேற் கருணை வையுங்கள்; எங்கள் குலதெய்வந் தான் உங்களை இங்கே கொண்டு வந்து சேர்த்திருக்க வேண்டும் அம்மா" என்று கண்களில்; நீர்த்தும்பக் கைகூப்பியபடி இரந்தாள் பெரிய நாயகி. "தாயே, நிற்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாம்; உப்படியிருங்கள்; நாயிற் கடைப்பட்ட நானோ கருணை செய்வது? நானென்ன சாமியா தெய்வமா? ஒன்று மில்லை; அந்தக் கதிர்காமத்தையன் கருணை புரிய வேண்டும்; அவன் கருணைபுரிவான்; அவனு டைய பூரண அநுக்கிரகங் கிடைக்கவேண்டு மென்று அல்லும் பகலும் அவனையே பிரார்த் தனை பண்ணுங்கள்" எனக்கூறி அந்த அம்மாள் விபூதியை நீட்டப் பெரியநாயகி எழுந்துநின்று இருகரங்களையும் நீட்டித் திருநீற்றை ஏற்றுப் பயபக்தியோடு பூசினாள்; இதற்கிடையில் விசாலாட்சி எழுந்து "ஆச்சி தாகத்திற்கு ஏதுங் கொண்டுவரலாமா" என்று ஆவலுடன் கேட்க "இப்பொழுது எனக்குத் தாகமுமில்லை; பசியுமில்லை எனக்கு ஒன்றும் வேண்டாமடியம்மா; சும்மா, இப்படியிரு" என்று அந்த அம்மாள் அவளைப் பக்கத்திலே இருத்தினாள்; இங்ஙன மாக அச்சந்நியாசப் பெண்ணிடத்தில் அநுமதி பெற்றுக்கொண்டு பெரியநாயகி தன் சமையற் கருமம் பார்க்கப் போய்விட்டாள்.

"விழிக்குத்துணை திருமென்மலர்ப் பாதங்கள்"

விசாலாட்சி அந்த அம்மாளைப் பார்த்து பக்தியோடு சிறிதுநேரம் கண்ணிமைத்தலின்றிப் பார்த்தபடியிருக்க, அந்த அம்மாளும் விசாலாட்சியை அன்புபெருகப் பார்த்தாள்; அவளுடைய பேரழகையும் விநயத்தையும் இன்சொல்லையும், முகத்தில் விசேஷமாகக்காணப்படும் கல்வியறிவாலாகிய பிரகாசத்தையும் அவதானித்தாள்; இவள் மகாஉத்தமியென்று தன் மனத்தில் நிச்சயித்தாள்; இதற்கிடையில் விசாலாட்சி அந்த அம்மாளைப் பார்த்து, "ஆச்சி, கேட்கிறேனென்று குறையெண்ணாதீர்கள்; உங்களைப் பார்க்கப் பார்க்க என்னையறியாமல் என்னுள்ளத்தில் ஆநந்தம் பெருகுகிறது; நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? நீங்கள் இருப்பதெங்கே? இந்த இரவில் எப்படித் தன்னந்தனியே வந்தீர்கள்? உங்களுக்கு வேறு யாரும் பெண்கள் துணையில்லையா? இப்பொழுது இராக்காலத்தில் நீங்கள் தனியே எங்கும் போகவேண்டாம்; இங்கே தானே என்னுடன் இருங்கள்; உங்களுக்கு ஆக வேண்டிய பணிவிடைகளெல்லாம் நானே செய்கிறேன்; என்று பயபக்தியோடு கேட்டாள். "குழந்தாய் என் வரலாறுகளைப் பற்றி இப்பொ ழுது ஒன்றுங் கேட்கவேண்டாமடியம்மா? நான் சமீபத்திலேயுள்ள ஒரு ஆலயத்தைச் சேர்ந்த மடத்திலே தான் தங்கியிருக்கிறேன்; அங்கிருந்து தான் இப்பொழுது இங்கே வந்தேன்; எனக்கு ஆண்துணையுமில்லை; பெண்துணையுமில்லை; அப்படியான துணைகள் எனக்கு வேண்டாம்; எனக்கு ஒரேயொரு துணைதானுண்டு; அந்தத் துணை உனக்குமுண்டு; உலகத்திலேயுள்ள எவர்க்குமுண்டு; அது தோன்றாத் துணையடி யம்மா? அதனைச் சொல்லுகிறேன் அவதானமாகக் கேளடியம்மா;

"விழிக்குத்துணை திருமென் மலர்ப் பாதங்கள் மெய்மைக் குன்றா
மொழிக்குத்துணை முருகா என்னும் நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்த தனி
வழிக்குத்துணை வடிவேலுஞ் செங்கோடன் மயூரமுமே"

இந்தத்துணையிருக்க இன்னுந் துணைகள் வேணுமா? குழந்தாய் நீ கவலைப்பட வேண்டாம்; இன்றிரவு வேணுமானால் நான் இங்கே தங்கிப் புலரிக் காலத்திற்கு முன் மடத்திற்குப் போவேன்; இனிமேலும் உன்னை இடையிடையே வந்து காண்பேன்" என்று சொல்லுதலும் கேட்ட விசாலாட்சி பெருஞ் சந்தோஷ மடைந்தாள். இங்ஙனமாக ஏதோ கருமார்த்தமாகப் புறத்தே சென்றிருந்த அருணாசலம்பிள்ளையும் மீண்டு வீட்டிற்கு வந்தார்; அவரது மனைவியாராகிய பெரியநாயகி துறவுக் கோலம் பூண்ட ஒரு அம்மாள் தங்கள் வீட்டில் வந்திருக்குஞ் செய்தியைச் சொல்ல, விசாலாட்சி தன் தந்தையை அழைத்துக்கொண்டு போய் அந்த அம்மாளைக் காட்ட அருணாசலம்பிள்ளை உள்ளம் மகிழ்ந்து அம்மாள் கொடுத்த விபூதியை ஏற்றுப்பூசிக்கொண்டு, "தாயே: இந்த என் மகள் சிலகாலமாக மனச் சஞ்சலத்தோடு கூடியவளாக இருக்கிறாள் இவளுக்கு நீங்களே ஆகவேண்டிய புத்தி சொல்லித் தேற்றவேண்டும்" எனக்கேட்க "அப்படியே செய்கிறேன் ஐயா, எல்லாம் கதிர்காமத்திறைவன் செயல்" என்று சொல்ல அருணாசலம்பிள்ளை மனமகிழ்ச்சியோடு அவ்விடம் விட்டகன்றார். பின்னர் அந்த அம்மாளைப் போசனஞ் செய்வித்து அவ்வீட்டி லுள்ளாரெல்லாரும் தாங்களும் போசனம் முடித்தனர்.

நாய்க்கொரு சூலும் அதற்கோர் மருத்துவமுமா?

அவ்வீட்டிலுள்ள ஏனையோர் தத்தம் படுக்கை யிடங்களிற் படுத்துறங்க, விசாலாட்சி அந்த அம்மாளைத் தனது படுக்கையறையுள் வரும்படி அழைக்க அந்த அம்மாளும் அதற்கிசைந்து போனாள்; விசாலாட்சி "மெத்தையிற் படுத்தல் நித்திரைக் கழகு" என்றாங்கு, ஒரு கட்டிலின்மேல் மெத்தை விரித்துத் தலையணையிட்டு அதன் மேற் படுத்துச் சயனஞ் செய்யும்படி வேண்ட, அம்மாள் சிரித்து "குழந்தாய், நாய்க்குக் தவிசிட்டவாறு இந்த ஏழைக்கு மெத்தை வேண்டுமோ? தலையணை வேண்டுமோ? இல்லையேல் உறக்கம் வராதா? நாய்க்கொரு சூலும் அதற்கொரு மருத்துவமும் நாட்டிலுண்டோ? எனக் கொன்றும் வேண்டாமடியம்மா; அந்த மான்தோலை இங்கே கொண்டுவந்து தந்தாற் போதும்" என்று சொல்ல விசாலாட்சி விரைந்து போய் மான்தோலை எடுத்துக்கொண்டு வர, அந்த அம்மாள் அதனை வாங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தில் இட்டு அதன்மேலிருந்தாள், அதுகண்ட விசாலாட்சியும், பக்கலில் நிலத்திலே இருக்க முயல, அம்மாள் அவளைத் தடுத்து மான்தோல்மீது தன் பக்கலில் இருத்தினாள். விசாலாட்சி அப்படியிருந்து கொண்டு அம்மாளை அன்புடன் பார்த்து "ஆச்சி, இந்த மான்தோல் உங்களுக்குப் படுக்கப் போதாது, சுத்தமான புற்பாய் கொண்டுவந்து விரித்து விடலாமா" என்று பணிவுடன் கேட்க "குழந்தாய் இந்தப் புல்லிய உடம்பு அடங்குதற்கு இம் மான்தோல் அமையுமடியம்மா; இந்த மான்தோலோ இல்லையேற் படுக்கும் பாயோ தான் இறுதியில் நமக்குத் துணையென்று பட்டினத்துப்பிள்ளையார் பாடியிருத்தலைப் படித்த நீ அறிவைதானே" யெனலும் "இல்லை ஆச்சி, அந்தத் திருப்பாடல் என் ஞாபகத்திலில்லை; சொல்லுங்கள் கேட்போம்" என்று விசாலாட்சி பணிவோடு கேட்க அந்த அம்மாள் பின்வருமாறு படித்தாள்:-

"தாயாருஞ் சுற்றமும் பெண்டிருங் கைவிட்டுத் தாழ்ந்திடுநாள்
நீயாருநானார் எனப்பகர்வார் அந்த நேரத்திலே
நோயாரும் வந்துகுடி கொள்வரே கொண்டநோயு மொரு
பாயாரும் நீயுமல்லாற் பின்னை ஏதுநட்பா முடலே"

இந்தத் திருப்பாடலைச்சற்று உயர்த்தி இனிய ஓசையுடன் படித்தாள் சாமியம்மாள்; கேட்டாள் விசாலாட்சி; அற்புதமடைந்தாள், பரவசமானாள்; இருவர் கண்களும் பக்தி மேலீட்டினால் நீர் சிந்தின; "ஆச்சி நாவிலே தேவாமிர்தத்தை வார்த்தவாறு, கேள்விச் செல்லமில்லாத என் செவிகளில் இக் கானாமிர்தத்தை வார்த்து என்னுள்ளத்தை உருக்குகின்றீர்களே இப்படியான உருக்கத்தோடு திருப்பாட்டைப்பாட நான் ஒருபோதுங் கேட்டதில்லை; அம்மா, இந்த நேரத்தில் உங்களைத் தரிசிப்பதும் இத்தோத்திரத்தை நீங்கள்படிக்கக் காதார உள்ளமுருகக் கேட்பதும் நான் செய்த புண்ணியந்தா னென்று சொல்லித் தன் கண்களில் அரும்பிய நீர்த்திவ லையை முன்றானையாற்றுடைத்தாள் விசாலாட்சி; "குழந்தாய் நானொன்று மறியேன்" எல்லாம் அவன் செயல்" என்று அந்த அம்மாள் சொல்லிவிட்டுப் பின்னரும் விசாலாட்சியை அன்புடன் பார்த்து, "குழந்தாய், நீ அதிக கவலை யோடு கூடியிருக்கிறாயே யென்று சற்று முன்பு உன் ஆத்தாளும் அப்பரும் சொன்னார்களே இந்தச் சின்னவயசில் உனக்கு என்னடியம்மா கவலை; ஏதுமிருந்தால் என்னிடஞ் சொல்லவொண்ணாதா" என்று பரிவுடன் கேட்க "ஆச்சி உங்களுக்கு முறையிடாமல் என்மனச் சஞ் சலத்தையிட்டு வேறு ஆரோடு நோவேன்? ஆர்க் கெடுத் துரைப்பேன் தாயே! நோயாளி தனது நோயை வைத்தியனிடத்தே தெரிவித்தலன்றி வேறு யாரிடத்தில் தெரிவிப்பாள்" என்று தன்னுள்ளத்திற் குடிகொண்ட கவலையனைத்தையும் அந்த அம்மாள் முன்னிலையில் முறையிடுவாளாயினாள்.

* * *

[தொடர்ச்சி 59 - 62 இல்லை]

உலகம் பலவிதம்: 1945 ஆகஸ்ட் 09
விசாலாட்சி: (முற்றொடர் - 55)

"தீராத நெஞ்சிற்குத் தெய்வமே சாட்சி"

இரண்டாம் முறை வந்தபோது நான் அவரைப் பார்த்து அண்ணா, நீங்கள் என்பொருட்டு இடையிடையே இங்து வந்துபோக வேண்டுமென்று பணிந்து கேட்டேன்; அதற்கு அவர் சிறிதுநேரம் யோசித்துவிட்டுத் "தங்காய், வருவதற்குத் தடையில்லை; ஆனால் இது தாசி வீடென்ற பேருட னிருக்கிறது; இங்கே வந்து போனாற் கண்டவர் விபரீதமாகச் சொல்லுவார்கள் ; இனிமேல் இங்கு வரமாட்டேனென்று சொல்லிவிட்டு உம்மிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு போவதற்காகத்தான் இப்பொழுது இங்கே வந்தேன்" என்று கவலையோடு மறுத்துச் சொன்னார்; அப்படியல்ல அண்ணா, நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய இரகசியங்கள் சில உண்டு; அவைகளைச் சொல்லுவதற்காகத்தான் இனிமேலும் உங்களை இங்கே வரும்படி கேட்கிறேன்" என்று இரந்து கேட்க, என் பரிதாபத்தைக் கண்டு அவர் இன்னும் ஒருமுறை என் வீட்டிற்கு வந்துவிட்டுப் போவதாகச் சொல்லி என்னிடம் விடை பெற்றுக் கொண்டு போய்விட்டார். இதற்கிடையில் எனக்கும் அவருக்குமிடையேயுள்ள விசுவாசத்தை விபரீதமாக நினைத்த கிழவி "என்ன மகளே, அந்தஆளும் நீயும் அந்நியோந்நியமாகப் பேசுகிறீர்கள்; ஆண்களுடனே உனக்கென்ன அதிக பேச்சு? எங்கள் பாலசிங்கம் அறிந்தாற் பழியாகுமல்லவா? இனிமேல் இப்படி அதிக பேச்சு வைத்துக்கொள்ளக்கூடாது" என்று என்னைச் சற்று எச்சரித்தாள்; "பாட்டி, நீங்கள் நினைப்பது வேறு; நான் அவருடன் பேசுவது வேறு; நீங்கள் உங்கள் மனப்பான்மைக் கிசையத்தான் என்னையும் நினைப்பீர்கள்; என்னுடைய ஒழுக் கத்திற்கிசையத்தான் நான் நினைப்பேன், பேசுவேன், நல்லவர்களுடன் ஊடாடுவேன், இங்கு வந்து போகும் அவர் மகா உத்தமர்; உங்கள் பாலசிங்கம் வீராச்சாமி யென்னுமிவர்களுடன் கூடிக்கொண்டு வந்தமையினால் அவரையும் இவர்களைப்போற் பொல்லாதவரென் றெண்ணிக் கொள்ளவொண்ணாது; என் மனமும் அவர் மனமும் மாசற்றன வென்பதை நான் அறிவேன்; அவர் அறிவார், தெய்வமறியும்; சந்தேகந்தீராத நெஞ் சிற்குத் தெய்வமே சாட்சியென்பர் என்று கடுகடுத்துச் சொன்னேன்; இப்படி நான் சொன்னது கிழவிக்கு ஆத்திரத்தை விளைத்துவிட்டது "என்ன மகளே, பண்டுதொட்டுப் பழகிய பாலசிங்கத்தை அவமதித்து, நேற்றுவந்த அந்த ஆளைப் பாராட்டுகிறாய்; பாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனையறிந்தாற் பெரும் பழியாய் முடியும்; சிறுபிள்ளைப் புத்தியினால் இப்படிச் சொல்லிவிட்டாய்; இனி மேல் இப்படியொன்றும் சொல்லாதேயடியம்மா" என்று கிழவி எனக்குச் சமாதானஞ் சொன்னாள் நான் கேட்டுக்கொண்டபடி பின்னரும் ஒருநாள் அவர் என்னிடம் வந்தார்; வந்தவிடத்தில் கிழவி எங்களையிட்டுச் சந்தேகப்படுவதை அவருக்குச் சொன்னேன்; "தங்காய், நீர் கிழவிக்கு உண்மையைச் சொல்லவில்லையா" என்று கேட்க, நான் உண்மையைச் சொன்னாலும் கிழவி நம்பப் போவதில்லை; கிழவிக்கு உண்மையைப் பற்றி விளங்காது; அவரவர் கொண்டகோலத்தை ஆரால் மாற்றமுடியும் அண்ணா, உண்மை சொல்வோர் கூட்டத்திற் கிழவி ஊடாடியறியாள்; ஆனமையினால் அண்ணா நீங்கள் கிழவி சொல்வதைப் பொருட்படுத்த வேண்டாம்; நான் இன்று என் விருத்தாந்தம் முழுவதையும் உங்களுக்கு மாத்திரம் சொல்ல விரும்புகிறேன்; கேட்டுக் கொண்டு நான் சொல்வதில் நம்பிக்கையிருந்தால் என்னை இந்தப் பொல்லாதவர்களிடமிருந்து மீட்டுவிட வேண்டுமென்று இரந்தேன்.

"பெயரை எனக்குச் சொல்லவொண்ணாதா"

ஆச்சி, உங்களுக்குச் சொன்னவாறு என் விருத்தாந்தங்களையெல்லாம் நான் அவருக்குச் சொல்ல அவரும் பரிவுடன் கேட்டு என்பொருட்டுக் கவலைப்பட்டார்; அவர் கவலையோடு என்னைப் பார்த்து, "தங்கச்சி உமக்கு உதவிசெய்ய நூறு முறையும் எனக்குப் பிரியம்; ஆனால் நானும் ஒரு பிரம்மசாரி; நீர் இருக்கும் இந்த வீடும் அவ பெயருடன் கூடிய வீடு; நீர் இந்த வீட்டிலிருந்து தப்பிப்போவதற்கு நான் துணை செய்தாலும் ஊரார் உம்மையும், என்னையும் ஒருங்கு சேர்த்துப் பழி சொல்வார்கள்; முதல் இந்தக்கிழவியும் பாலசிங்கனும் எங்கள் மேல் வீண் அபவாதஞ் சுமத்தி விடுவார்கள்; நான் இப்பொழுதே என் மாமனார் வீட்டுக்காரரிடத்துப் பழிச்சொல் கேட்டுவருகிறேன்; இப்படியும் ஒன்று நேர்ந்துவிட்டால் நான் பின்பு இந்த ஊரில் குடியிருந்தபாடில்லை; மேலும் நீரும் என் காரணமாக அவப்பெயர் கேட்கவேண்டி நேரும்; இவைகளையிட்டுத்தான் யோசிக்கின்றேன்" என்று சொன்னார்; "அண்ணா நீங்கள் சொல்வது நிசந்தான்; இது கிடக்க, உங்கள் மாமன் மாமியர் ஏன் உங்களைக் குறை சொல்லுகிறார்கள்; அவர் வீட்டிலே உங்களுக்குப் பெண்ணுண்டா?" என்று நான் ஆவலுடன் கேட்க, அவர் கவலைப்பட்டுச் சற்று நேரம் ஏதும் பேசாதிருந்து பின்னர் என்னைப் பார்த்து "தங்காய், என் பரிதாபமான வரலாற்றை நீர் அறிய விரும்பாதீர்" என்று சொல்லி மறுக்க, நான் மேலும் அவரைச் சொல்ல வேண்டுமென்று இரந்து கேட்க, அவர் தமக்கு மாமன் மாமி உண்டென்றும் அவர்களுக்கு ஏகபுத்திரியுண் டென்றும் அவள் நன்கு படித்துப் பட்டம் பெற்றவளென்றும், கல்வியறிவு ஒழுக்கம் இன்சொல் முதலான குணங்களுஞ் செயல்களும் பூண்டவளென்றும், பேரழகுடையவளென்றும், அவளிடத்துள்ள குணம். ஒழுக்கம், இதமான நடை, பேரழகு, கல்வியறிவு என்னு மிவைகளுக்கு தக்க அந்தப்பெண்ணுக்குப் பெற்றார் விசாலாட்சியென பெயரிட்டிருக்கின் றார்களெனவும், அப்பெண்ணைத் தன் மாமன் மாமியும் தன் பெற்றாரும் சின்ன வயசிலேயே தமக்கு தாரமாக நிச்சயிந்திருந்தார்களெனவும், தம்முடைய தகப்பனார் இறந்துவிட, தாம் தாயாருடன் இருக்கும் காலத்திற் கல்வியைச் சிறிது அலட்சியஞ் செய்து தாய் சொல்லைத் தட்டித் தீயவர்களுடன் சகவாசஞ் செய்தமையினால், தம் தாயார் துயரப்பட தம்முடைய மாமன் மாமி வீட்டுக்காரர் மனம் வருந்தி இப்பொழுது தம்மைப் புறக்கணித்து விட்டார்களென்றுஞ் சொல்லிக் கவலைப்பட்டார்....." என்று இங்ஙனம் சொல்லி முடிப்பதற்கிடையில் பெரியநாயகி ஆச்சரியமடைந்து "அம்மா, நீர் சொல்லும் அந்த ஆளின் பெயரை எனக்குச் சொல்லவொண்ணாதா" என்று இதமாகக் கேட்கக், "சொல்லலாம் அம்மா, அவருடைய பெயர் விஸ்வநாத அண்ணா;" என்று பயபக்தியோடு சொன்னாள்; கேட்ட பெரியநாயகி, சிறிது நேரம் யோசித்தாள்; ஆயினும் ஒன்றும் அறியாள் போல் அவள் நடித்துக்கொண்டு அப்பாலும் அந்தப் பெண் சொல்லும் வரலாற்றை கேட்டுக்கொண்டு இருப்பாளாயினள்; "ஆச்சி, அந்த அண்ணர் இங்ஙனம் சொல்ல, என்னை அந்த வீட்டிலிருந்து அகற்ற துணை புரிவதற்கு உடன்படாதொழிய, நான் வீராசாமியைக் கேட்டேன்; வீராசாமி ஒற்றைப் புத்திக்காரனே யொழிய வஞ்சகஞ் சூது முதலிய தீய குணங்களில்லாதவன் என்பதை நான் முந்தியே உங்களுக்குச் சொன்னேன்; எனக்கு உதவி செய்வது வீராசாமிக்கு இஷ்டமாயினும், பாலசிங்கனுக்கு அவன் பயப்பட்டான்.

"இனிமேல் இங்கிருக்கமுடியாது"

இதற்கிடையில் கிழவிக்கும் எனக்கும் மனமாறுபாடு அதிகப்பட்டது; கிழவி என்னைத் தன் வீட்டில் மறித்து வைத்து அடிமையாக்கித் தன் தூராசைக்கேற்பச் செய்யத்தகாத கருமத்தைச் செய்வித்து என் மூலமாகப் பணமீட்டலாமென்ற நோக்கங் கொண்டுவிட்டாள்; கிழவி என்னுடன் ஊடாடும் முறையைப் பாலசிங்கன், வீராச்சாமி யென்னுமிவர்கள் தாமும் வெறுத்தனர்; ஆனாற் கிழவிக்குப் பயந்து அவர்களும் அறிந்து மறியார் போல் நடந்துகொண்டார்கள்; இனி மேல் இந்த வீட்டிலிருப்பது புத்தியல்ல; இருந்தால் மானங் கெடவேண்டியே நேரும்; ஆனதால் இருக்கமுடியாதென்று நிச்சயித்துக் கொண்டேன்; ஆனால் இந்த வீட்டைவிட்டு தப்பியோடுவது எப்படி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி எங்கே செல்வது? சென்றவிடத்தில் இவர்கள் தேடிக் கண்டுபிடித்து விட்டால் என்ன செய்வது" என்று பலமுறையும் உள்ளம் புண்ணாகச் சிந்தித்தேன்; இந்தக் காலத்தில் எனது அண்ணரும் அங்கேயிராது விட்டார்; இப்படியாக ஒருநாள் மத்தியானம் கிழவியில்லாத நேரத்தில் அந்த வீட்டின் தலை வாசற்பக்கம் வந்து கவலையோடு நின்றேன்; எனக்குத் துணையாகவுள்ள வேலைக்காரச் சிறுமியும் வீட்டுள் ஏதோ கருமம் பார்த்துக் கொண்டிருந்தாள்; அந்த நேரத்தில் நானிருக்கும் வீட்டிற்கு எதிர் வீட்டிலுள்ள அம்மாள், புண்ணியவதி, இல்லறமாட்சி எல்லாமுணர்ந்த சீமாட்டி, என்னுடைய வரலாற்றையும் நான் படுங் கஷ்டத்தையும் முந்தியும் அறிந்துள்ளவள்; என் பொருட்டுப் பெரிதும் இரங்குபவள்; நான் செய்த பாக்கியத்தினாற் போலும் அந்த நேரத்தில் தங்கள் வீட்டு தலைவாசலில் வந்து நின்றாள்; நான் போய் தலைவாசலில் நிற்கக் கண்ட மாத்திரத்தே தெருவின் இருபக்கத்தையும் எட்டிப் பார்த்து எவரும் வழிபோக்கர் அச்சமயத்திலே தெருவில் வரவில்லையென்பதை அவதானித்துக்கொண்டு, என்னைப்பார்த்து, "தங்கைச்சி, எப்படிச் சுகம்? இன்னமும் உந்த வீட்டிலேதான் இருக்கிறீரா?" என்று ஆதரவுடன் வினாவ, "அம்மா இந்தப் பொல்லாத வீட்டில் வந்து அகப்பட்ட எனக்குச் சுகமென்ன அம்மா, எனக்கு ஆருந் துணையில்லை; இந்த வீட்டைவிட்டுத் தப்பிப் போதற்கு மார்க்கமுமில்லை; தப்பிப் போய் ஒதுங்குவதற்கு ஒதுக்கிடமுமில்லை; கடவுளும் நம்மைக் கைவிட்டார் போலிருக்கிறது; கிழவி என்னுடன் வரவரமாறுபடுகிறாள்; என்னைக் கண்டபடி வைகிறாள், தூற்றுகிறாள்; நான் இனி உயிரோடு இருக்கமுடியாது; இருந்தும் பயனில்லை. ஆனபடியால் அம்மா, நீங்கள் என்மேல் அன்பு வைக்கவேண்டாம்; இன்றிரவோ இல்லையேல் இன்னுஞ் சில இரவு கழிந்த பின்னரோ, நானறியேன்; நான் தற்கொலை செய்துகொண்டு விட்டேன் என்று கேள்விப் படுவீர்கள்? மானம் போவதற்கு முன்னர் உயிர் போகவேண்டும் அம்மா" என்று சொல்வதற்கிடையில் பொருமலும் விம்மலும் அதிகப்பட நான் அழுதேன்.

"உங்களுக்கு புண்ணியம் கிடைக்கும்"

நான் கலங்குவதைக் கண்ட அந்த அம்மாள் நான் நிற்குமிடத்திற்கு விரைந்து ஓடி வந்து "கிழவி உங்கே இல்லையோ" என்று கேட்க நான் இல்லையென்றேன்; "அம்மா நீர் கவலைப்பட வேண்டாம்; உமக்கு விருப்பமானால் நீர் இன்று இரவு நடுச்சாமத்தில் உமக்குரிய பொருள் பண்டங்கள் ஏதுமிருந்தால் அவைகளையும் எடுத்துக்கொண்டு எங்கள் வீட்டிற்கு வருதிர்; நான் அந்த நேரத்தில் தலைவாசற் கதவைப் பூட்டாமல் விடுகிறேன்; மேலும் நான் நித்திரை உறக்கமின்றி விழிப்பாகவே தலைவாசலில் வந்து உமது வரவைக் காத்திருப்பேன்; நீர் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம்; என்னுடைய அவருக்கு நான் உம்மைப் பற்றிய விஷயங்களை யெல்லாம் முந்தியே சொல்லிவிட்டேன்; அவரும் உடன் பட்டுக்கொண்டார்; எங்கள் மகளும் உம்முடைய வரவை ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறாள்; நீர் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம்; எங்ள் வீட்டிற்கு நீர் வந்தபின் ஆக வேண்டியதை யோசிப்போம்" என்று அவசரமாகச் சொல்லிவிட்டு மீண்டு போவதற்கிடையில், "அம்மா, உங்களுக்குப் பெரும் புண்ணியம் கிடைக்குமென்று சொல்லி நான் கும்பிட, அந்த அம்மாளும் பிரதி நமஸ்காரம் செய்துவிட்டு மீண்டு போய்விட்டாள்.

* * *

[தொடர்ச்சி 65 - 67 இல்லை]

உலகம் பலவிதம்: 1945 செப்டெம்பர் 20 விசாலாட்சி: (முற்றொடர் - 68)

நின் தாள் சதம் "கச்சியேகம்பனே"

அருணாசலம்பிள்ளை சகோதரி வீட்டிற்குப் போனபோது அவர்வரவைக் கண்ட சகோதரி ஆச்சரியமும் மகிழ்ச்சியுமடைந்தாளாய், இருக் கைவிட்டெழுந்து எதிர்கொண்டு உபசரித்து "வாருங்கள், அண்ணா" என்று இன்சொற் கூறி உறவு பாராட்டி அழைத்துச் சென்று தங்கள் வீட்டுத் தலைவாசலிலுள்ள நாற்காலியில் இருக்கச்செய்து தானும் அயலிலே விநயமாக நின்றாள். அருணாசலம்பிள்ளை சிறிதுநேரம் மௌனமாயிருந்து பின்னர் சகோதரியை நோக்கி "தங்கைச்சி, உங்கள் சுகம் எப்படி? எங்கே தம்பியைக் காணோம்" என்று வினாவ, "அண்ணே ஆண்டவன் கிருபையாற் சுகமேயிருக்கிறோம்; தம்பி இங்கேதான் இவ்வளவு நேரமும் இருந்தவன்; சற்று முன்பாகத்தான் எங்கோ போய்விட்டான்; விரைவில் வந்துவிடுவான்" என்று இதமாகப் பதில் சொல்லிவிட்டு, "அண்ணா மகள் தாயார் எல்லோருஞ் சுகந்தானே" என்று தங்கை கேட்கத் தமையன் "எல்லாரும் சுகமேயிருக்கிறார்கள்" என்றார். பின்னர் அருணாசலம்பிள்ளை சிறிது நேரம் யாதும் பேசாதிருந்துவிட்டு "தங்கைச்சி, நீங்கள் ஏன் வெகுநாளாய் எங்கள் வீட்டுப் பக்கம் வராமல் விட்டுவிட்டீர்கள்" என்று சிந்தனையோடு கேட்டார். "உங்கள் வீட்டிற்கு வரவொண்ணாதென்றல்ல அண்ணா, நானும் மகனுந்தானே இந்த வீட்டில் இருக்கிறோமென்பது உங்களுக்குத் தெரியும். மகன் ஏதும் கருமமாய் வெளியே போய்வருவான்; நான் தான் வீட்டிற்குக் காவலாகவும் இருத்தல்வேண்டும்; தனிக்குடி, என்ன செய்வோம்; இதனாலேதான் நான் எங்கேனும் போகாமல் விட்டுவிட்டேன்; அயலிலிருக்கும் எங்கள் குல தெய்வமாகிய வைரவர் கோயிலுக்குத்தானும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்க்கும்பிட்டு மாசக்கணக்காய்விட்டன; என்ன செய்வோம்; தனிக் குடியானோம்; என்றைக்கு உங்கள் மைத்துனர் எங்களைத் தவிக்க விட்டுவிட்டுப் பிரிந்து போனாரோ அன்றைக்கே நாங்கள் ஆருமற்ற பாவிகளானோம்; நானும் என் பிள்ளையும் புண்ணியஞ் செய்தவர்களாயிருந்தால், அவர் எங்களை இப்படிக் கிடந்து அவலப்பட இடையிற் கைவிட்டுப் போவாரா? அந்த நேரத்தில் நான் அண்ணன் வீடு, மைத்துனி வீடு, மருமகள் வீடு என்றுசொல்லி உங்களைக் காணவேண்டு மென்று ஓடியோடி வந்தபோதெல்லாம், அவர் என்னைப் பார்த்து, அடி பெண்ணே எவர் வீட்டிற்காயினும் கண்டபடி போகாதே; எதற்கும் ஒரு அளவுண்டு; நித்தியம் போனால் முற்றமுஞ் சலிக்கும்; உடன்பிறந்தார் சுற்றத்தாரென்றிருக்க வேண்டாம். தெய்வந்தான் துணை; நிதமும் கோயிலுக்குப் போய்க் கும்பிடு என்று எனக்குப் புத்திசொல்ல,

"ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
பேரும் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளும்
சீரும் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாரும் சதமல்ல நின்தாள் சதம் கச்சியே கம்பனே."

என்ற பட்டினத்துப் பிள்ளையார் பாடலையும் படித்துக் காட்டுவார்; அந்த புண்ணியவான் சொன்ன வாக்கு அந்தநேரத்தில் நான் பாவி நிசமெனக் கொண்டிலேன்" என்று சொல்லிக் கலங்கினாள் விசுவநாதனுடைய தாய்.

நீரடித்து நீர் விலகுவதில்ல

அருணாசலம்பிள்ளை பதில் யாதும் சொல்லாராய்ச் சிறிது நேரம் யோசித்தார்; தம் சகோதரி தங்கள் மீது மனஸ்தாபப்பட்டிருக்கிறாளென்பதையும் அதற்குக் காரணமென்னவென்பதையும் யூகித்துணர்ந்து கொண்டார்; தனக்கென்ன பதில் சொல்வதென்று அவருக்கு புலப்படவில்லை; தாம் தம் சகோதரி மருமகனென்னுமிவர்கள் விஷயத்திற் பராமுகமாக நடந்து கொண்டமை முழுவதுந் தவறென்பதை விளங் கிக்கொண்டார்; தம்முடைய தங்கை சொன்ன வார்த்தை சில அவருடைய உள்ளத்தை போழ்ந்ததோடமையாது, அதனை உருகவுஞ் செய்துவிட்டன; அவர் தம் மனத்தில் வெட்கம் கவலையென்னுமிவை மேற்பட பெருமூச்சு விட்டுத் தம் சகோதரியை ஆதரவுடன் பார்த்து "தங்காய், நான் உங்கள் விஷயத்திற் சில காலமாக நடந்துகொண்ட விதம் முழுவதும் தவறாகும்; நான் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்; வயசில் உனக்கு மூத்தவனாயினும் புத்தியில் உனக்கு இளையவனாயினேன்; என் செய்யலாம்! காலக்கேட்டினாற் புத்தியும் மாறுபடுதலுண்டு; போனவை போகட்டும்; நீரடித்து நீர் விலகுவதில்லை; பரிபவமென்பது பிறராற் பட்டாலன்றோ என்று பாரதத்திலே சொல்லப் பட்டிருக்கிறது; ஆனதினால் நானாக என் மனைவி மக்களாக தெரிந்துதெரியாமல் ஏதும் பிழை செய்திருக்கக்கூடும்; அதனை தங்கைச்சி, நீயும் என் மருமகனும் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்...." என்று சொல்வதற்கிடையில், அவருடைய சகோதரி, "ஐயோ, அண்ணா, அவர்களிருவரும் எனக்கு எவ்வகையான தவறுஞ் செய்யவில்லை" அவர்கள் மிகவும் நல்லவர்கள், என் பொல்லாத காலத்திற்கு நான் என்னை நோவதல்லால் அவர்களை நான் குறைசொல்ல எவ்வகையான காரணமுமில்லை" என்று சொன்னாள்; "தங்காய் இப்பொழுது நான்தான் முழுக் குற்றவாளி என்பது எனக்கு விளங்குகிறது; அவைகளை யெல்லாம் பொறுத்துக்கொண்டு முந்தி வந்தவாறு இனிமேலும் எங்கள் வீட்டிற்கு நீங்கள் வந்துபோக வேண்டும்; இன்று நான் இங்கே புறப்படும்போது என் மனைவியும் உடன்புறப்பட விரும்பினாள். நானே, நீ இன்னுமொரு வேளை வரலாம்; இன்றைக்கு நான் மாத்திரம் போய் வருகிறேனென்று சொல்லி அவளைத் தடுத்து விட்டு வந்தேன்; தங்காய், நான் இன்று இங்கே வந்த செய்தியை என் மருமகன் வந்தபின் மருமகனுக்கு தெரிவி; நாளை மற்றை நாள் வரை நீயும் ஒருமுறையாயினும் எங்கள் வீட்டிற்கு வந்துபோக வேண்டும்; நாங்கள் கலந்து பேச வேண்டிய கருமங்கள் உண்டு" என்று சொல்லிவிட்டுச் சகோதரியிடம் விடைபெற்றுக்கொண்டு தம் வீட்டிற்கு மீளப் புறப்பட்டார்; புறப்பட்டு இரதத்தை நோக்கி போகும் தமையனை வழிவிடச் சென்ற தங்கை, "அண்ணா, உங்கள் வீட்டிற்கு வருவதற்கு எனக்கு எவ்வகையான தடையுமில்லை; ஆனால் அங்கே வந்தபின் என்னுடன் ஏதோ கருமங்கள் கலந்து பேச வேண்டுமென்றீர்களே அந்தக் கருமமென்ன வென்பதனை சுருக்கமாகவாயினும் எனக்கு இப்பொழுது சொல்லவொண்ணாதா என்று மெல்லக் கேட்டாள்.

வெண்ணெய் வைத்துக்கொண்டு நெய் தேடுவானேன்?

வேறொன்றுமல்ல தங்காய், எங்கள் மகள் விசாலாட்சி இப்படி நீடித்த காலம் குமரிருப்பதா? இதையிட்டுத்தான் யோசிக்கலாமென்று இன்று இங்கே வந்தேன்" என்றார் அருணாசலம் பிள்ளை. "அண்ணா உங்கள் மகளுக்கு ஒரு மாப்பிள்ளை தேடுவதா கஷ்டம்? அந்தப் பிள்ளைக்கு என்ன குறை? சீதனமில்லையா? காணி பூமி பொருள் பண்டமில்லையா? கல்வியில்லையா? கட்டழகி ல்லையா? குணமில்லையா? குலம் போதாதா? ஒழுக்கமில்லையா? இதையிட்டு ஏன் யோசிக் கிறீர்கள்; பிள்ளையின் பெயரைச் சொன்னதும் நூறு பேர் சம்பந்தம் பேசிடுவார்களே" என்று சொன்னாள் சகோதரி. தமது தங்கை ஆத்திரத்தில் இப்படிச் சொல்லுகிறாளென்றுணர்ந்த தமையன் பின்னரும் அவளை நோக்கி, "தங்கைச்சி, அப்படியெல்லா முண்டென்பது நிசந்தான்; ஆனாலும் சொந்தத்துள் மாப்பிள்ளையிருப்ப, வெண்ணெய் வைத்துக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய் தேடுவார் போல், இதில் ஏன் சம்பந்தம் பேசினார் என்பதையிட்டுத்தான் சொன்னேன்" என்றார். அண்ணா என் "பிள்ளையைத்தானே நீங்கள் கடிந்ததோடு அமையாது அவனைத் தூற்றியும் விட்டீர்களென்றும் என் பிள்ளை சொல்லிக் கவலைப்பட்டான்; கிட்டாதாயினும் வெட்டென மற என்றபடி நானும் என் பிள்ளையும் உங்கள் வீட்டிற் சம்பந்தஞ் செய்யவேண்டுமென்ற ஆசையை விட்டுவிட்டோம்; அண்ணா, ஒரு பெண்ணுக்கு ஒரு மாப்பிள்ளை எங்கையும் இருக்குந்தானே; அப்படியே ஒரு மாப்பிள்ளைக்கும் எங்கேனும் ஒரு பெண் இருக்கும்தானே; என் மகன் கைம்பெண்டாட்டி வளர்த்த கழுதையென்றும், குடிகாரனென்றும், வேசி தாசி வீட்டிற்குப் போனானென்றும், காற்சதத்திற்கும் உதவாதவனென்றும் அவப்பேர் கொண்டுவிட்டானே; அப்படிப்பட்ட இவன் இனிமேல் திருந்தப் போகிறானா? இவன் இந்தச் சம்பந்தத்திற்கு உடன்படுவானென நான் நினைக்கவில்லை; மேலும் அவன் தனக்கு கல்யாணம் வேண்டாமென்றே சொல்லிவிட்டான்" என்று கவலையோடு சொல்லி முடித்தாள் சகோதரி; அருணாசலம் பிள்ளை இவைகளை யெல்லாம் அவதானமாகக்கேட்டுச் சற்றுநேரம் யோசித்துவிட்டு "தங்காய், நீ ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம்; தயவு செய்து நாளைக்கோ, இல்லையேல் அடுத்த நாளோ ஒருமுறை எங்கள் வீட்டிற்கு வந்துபோக வேண்டும்" என மீட்டுஞ்சொல்லி விடைபெற்றுக்கொண்டு தம் இரதத்தில் மீண்டார்.

தனக்கெளியது சம்பந்தம்

விசுவநாதனுடைய தாய் இப்படியெல்லாஞ் தன் தமையனிடஞ் சொன்னாளெனினும், தமையன் வீட்டாரைப் புறக்கணித்தற்கேனும், பகைத்தற்கேனும் தன் மகனுக்கு அவ்வீட்டிற் பெண்கொள்ளாது விடவேனும் நோக்கம் கொண்டிலள்; மேலும் விசாலாட்சியில் அவள் அத்தியந்த அன்பு பூண்டவள்; பெரியநாயகியைப் பற்றியும் நல்லெண்ணங் கொண்டவள், தமையன் தங்களைப் புறக்கணித்து நடந்துவிட்டாரென்ற ஆத்திரத்தினாலேயே இப்படிச் சொன்னாள்; மாமனார் தங்கள் வீட்டைவிட்டுப் போய் அரை மணிநேரஞ் செல்வதற்கிடையில் விசுவநாதன் மீண்டு வீட்டிற்கு வந்தான்; வந்தபோது, அவனுடைய மாமன் அங்கே வந்த செய்தியை தாய் அவனுக்குச் சொன்னாளேயொழிய, தனக்குந் தமையனுக்குமிடையில் நடந்த பேச்சைப்பற்றி ஏதுஞ் சொன்னாளல்லள்; "அம்மா, இவ்வளவு காலமும் இந்த வீட்டிற்கு வராத எங்கள் மாமா இன்று வந்த நோக்கமென்ன? உங்களுக்கு ஏதுஞ் சொன்னாரா?" என்று தாயைக் கேட்டான். "மகனே அவர் அப்படி விசேஷமாக ஏதுஞ் சொல்லவில்லை; தம்முடைய மகள் நீடித்த காலம் குமரிருப்பதைப் பற்றித்தான் சொல்லிக் கவலைப்பட்டார்" என்று தாய் சொல்வதற்கிடையில், விசுவநாதன் "அம்மா, அந்த விஷயத்தைப் பற்றி அவர் உங்களிடஞ் சொல்லவேண்டிய ஆவசியக மில்லையே" என்றான். "அப்டியல்ல மகனே, நீ சில காலம் புத்தியில்லாமல் நடந்த நடையினால் அவர் உன்னையும் என்னையும் வெறுத்தார்; இப்பொழுது நீ திருந்தி நடக்கிறாயென்றறிந்து சந்தோஷப்பட்டு வீடு தேடி வந்தார்; அதற்காக நாம் அவரைக் குற்றஞ் சொல்லக்கூடாது; உன் அம்மான் மகளிருக்க நீ வேறு கல்யாணஞ் செய்யவிருப்பது முறையல்லவடா மகனே" என்று தாய் சொன்னாள்; "அம்மா, நான் இப்போது வேறு கல்யாணஞ் செய்யவேண்டும்; இல்லையேல் கலியாணந்தான் செய்யவேண்டுமென்று உங்களையாயினும் உங்கள் தமையனாரையாயினும் கேட்கவில்லையே; நான் கூடாத கூட்டங்கூடிச் சில காலம் கெட்டலைந்து திரிந்தது நிசம்; ஆனால், இப்பொழுது நான் திருந்தி நடக்கிறேனென்பதை மாமனார் நம்புகிறாரா? அம்மா, இல்வாழ்க்கையிற் புக வேண்டுமென்ற நோக்கம் எனக்கு இப்பொழுது இல்லை; அப்படித்தான் விதி வசத்தாற் புக வேண்டி வந்தாலும் என் மாமனார் குடும்பத்துட் புகமாட்டேன்; பெரியவீட்டிற் பெண்கொள்ளப் போனால் வருவது சங்கடந்தானம்மா; இதனை யறியாமலா, "தனக்கெளியது சம்பந்தம்" என்று உலகத்திலே சொல்லுகிறார்கள்; ஆனதால் அந்த எண்ணத்தை நீங்களும் உங்கள் தமையனாரும் விட்டுவிட்டால் நன்மையாகும் அம்மா" என்றான் விசுவநாதன். மகன் சொன்ன மறுமொழியைக் கேட்டுத் திகைத்தாள் தாய்; அவன் இப்படிச் சொல்வானென்று அவள் ஒருபோதும் எதிர்பார்த்திலள்.

* * *

உலகம் பலவிதம்: 1945 செப்டெம்பர் 27 விசாலாட்சி: (முற்றொடர் - 69)

"ஊரோடுகில் ஒக்க ஓடு"

"மகனே நீ கல்யாணத்தை வெறுக்க நியாயமில்லை; உன் மாமன் மகளை மணஞ் செய்ய விருப்பமில்லையாயின் வேறொரு கன்னிகையைக் கல்யாணஞ்செய்துகொண்டு வாழலாம்; மேலும் நீ கல்யாணஞ் செய்யாது பிரமசாரி யென்றிருந்தாலும் உலகம் உன்மேற் சந்தேகப்படும்; முந்தி நெருப்புப்பற்றி யெரிந்தவிந்ததாகிய குறங்கொள்ளியிலே மீளவும் நெருப்பு விரைவிற்பற்றுவதுபோல, நீ உன் சிறுபிள்ளைப் புத்தியினால் வீண் பேரை ஆக்கிக்கொண்டாய்; நீ விவாகம் வேண்டாம் நித்திய பிரமசாரியாய் இருக்கப்போகிறேனென்று சொன்னாலும், அப்படித்தான் பிரமசாரியாக உண்மையிற் காலம் போக்கினாலும், ஊர் என்ன சொல்லும் தெரியுமா? அவன் தாசி வீட்டிற்குத் திரிகிறான், அவனுக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணம் எதற்கு? அப்படிப்பட்டவனுக்கு ஒருவர் பெண் கொடுப்பாரா? என்றுதானே ஊரார் உன்னை அபவாதஞ் சொல்லுவார்கள்; ஊரோடுகில் ஒக்கஓடு, ஒருவனோடுகிற் கேட்டோடு" என்று பழமொழியுண்டல்லவா! கல்யாணஞ் செய்து இல்லறத்தை நடத்த மனமில்லாதவன் உடனே சந்நியாசங் கொள்ளவேண்டும்; இல்லறமுமின்றித் துறவறமுமின்றி இடையிற் கிடந்து இடர்ப்படுதல் முறையாகுமா? இந்த இரண்டையும் விட்டு இடையில் நிற்பவன் உலகத்திலிருந்து காலம் போக்குதற்கு இடமில்லையே; வீடுவாசல் மனைவிமக்களென்ற கொள்கையில்லாதவன், அந்தரத்தாமரை போல அலைந்தல்லவா திரிய வேண்டி நேரும்; அவனை உற்றார் மதியார்கள்; ஊரார் நம்பார்கள்; பெண்பாலார் அண்டார்கள்; அவனுடனே எவரும் சிநேகஞ் செய்யார்கள்; அவன் எந்த நேரத்தில் எங்கிருப்பானென்று எவரும் அறியார்கள்; மகனே இவை மாத்திரமா? நீ கல்யாணஞ் செய்து இல் வாழ்க்கையில் அமைந்திராவிட்டால், இறந்த உன் அருமையான அப்பருக்குச் செய்துவரும் திதி, சிராத்தமென்னு மிவைகளைத் தவறாமற் செய்துவர முடியுமா? உன்னைப் பத்துமாதம் நொந்துசுமந்துபெற்றுப் பாராட்டிச் சீராட்டி வளர்த்த தாயாகிய எனக்கு நோயுற்றால் என்னைப் பார்த்துப் பராபரிக்கத் தனியே யுன்னால் முடியுமா? என் மரணப்படுக்கையில் ஒருபெண் துணையின்றிச் சரிக்கட்ட உன்னால் முடியுமா? இல்லாளில்லாதவன் பிதிர்த்கடன்செய்ய இயலுமா? மகனே, பெரிய துறவியாகிய பட்டினத்துப் பிள்ளையாரும் குடியிருந்த வீட்டிற்குக் கொள்ளி வைத்துவிட்டுத்தான் துறவியாகப் பரதேசம் போவேனென்று சொல்லி அப்படியே தம்மைப் பெற்ற தாய்க்கு தீக்கடன் நீர்க் கடன்களைச் செய்து முடித்துவிட்டுத் தானாமே துறக்கப் போனாரென்று சொல்லுவார்கள்; எல்லாம் படித்துவிட்டேனென்று சொல்லும் நீ இந்தக் கதையைப் படிக்கவில்லையா? எங்கள் சந்ததி உன்னோடு அடியற்றுப் போவதா? மகனே, உன் அப்பர் இப்போது உயிரோடிருந்தால் இப்படியான எண்ணத்தை நினைப்பாயா? மாமனார் குற்றஞ் செய்துவிட்டாரென்ற ஞாயத்தினால் உன் வாழ்க்கையைக் கெடுத்துவிடப் போகிறாயா? மாமன் மகளைக் கல்யாணஞ் செய்ய உனக்குப் பிரியமில்லாவிட்டால் இன்னொரு பெண்ணைச் செய்துகொள்ளென்றுதானே சொல்லுகிறேன்; நான் பெற்ற மகனே, இந்தச் சஞ்சல புத்தியை விட்டுவிடு; பெற்றவள் சொல்லைத் தட்டாதே; தாய்சொல்லைத் தட்டி நடந்து ஈடேறினவரில்லையடா கண்ணே இல்லறமல்லது நல்லறமில்லை யென்று ஔவைக்கிழவி சொன்னதற்குமாறாக படித்தவனென்றிருக்கும் நீ நடக்கத் தலைப்படாதே" என்று கவலையோடு சொல்லிமுடித்தாள் விசுவநாதனுடைய தாய், தாய் சொன்னவற்றையெல்லாம் அவதானமாகக் கேட்டுக் கொண்டு சிறிதுநேரம் யோசித்தவண்ணம் இருந்தான் மகன்.

சிந்தனையோடிருந்த மகனுஞ் சிரித்தான்

"அம்மா, நீங்கள் கவலைப்படவேண்டாம்; உங்கள் விருப்பத்தின்படி இல்வாழ்க்கையிற் பிரவேசிக்கிறேன்; ஆனால் என் அம்மான் மகளை மணமுடிக்கச்சொல்லி மாத்திரம் என்னைக் கேளாதீர்கள்" என்று பெருமூச்சோடு சொன்னான் விசுவநாதன்; கேட்டதாய் சற்று மன ஆறுதலடைந்தாளாய் "மகனே, நீ மணமுடிக்க உடன்பட்டமை எனக்கு வெகு சந்தோஷம்; ஆனால் உன் அம்மான் மகளை நீ வெறுப்பதன் நோக்கமென்ன? உன்னைப் பெற்றவளுக்கு அதனையும் ஒளியாமற் சொல்லிவிடு என்று கேட்டாள்; "அம்மான் மகள்மேல் எனக்கு எவ்வகையான வெறுப்பு மில்லை அம்மா, அம்மானிடத்திலேதான் எனக்கு ஆத்திரம்" என்றான் விசுவநாதன்; "என் அருமை மகனே, சொல்லுகிறேனென்று குறையெண்ணாதே; அம்மான்மகளைக் கல்யாணஞ் செய்துகொள்ளும்படி நான் உன்னைக் கேட்டேனேயொழிய, அம்மானைக் கல்யாணஞ் செய்து கொள்ளடா மகனேயென்று நானும் உனக்குச் சொல்லவில்லையே" என்று வேடிக்கையாகச் சொன்னாள் தாய்; தாய் சொன்ன வார்த்தையைக் கேட்டுச் சிந்தனையோடிருந்த மகனுஞ் சிரித்தான்; "அப்படியல்லவடா மகனே, உன் அம்மானை ஆகாதவரென்றெண்ணிக் கொள்ளாதே; அவர் பெரிய மகா உத்தமர்; கபடமற்றவர்; உன்னிலும் என்னிலும் அதிகம் அன்புடையவர்; ஆனால் அவரிடத்து ஒரேயொரு குறையென்னவென்றால் எவர் எதனைப் போய் முதற் சொல்லுகிறாரோ அதனை அவர் நம்பிவிடுவார்; இது ஒரு பெரிய குற்றமல்ல; அவர் இன்று இங்கு வந்தவிடத்தில், எங்கள் விஷயத்திலே அவர் சிலகாலம் நடந்து கொண்டமுறை பிழையென்று நான் சற்றுக் கடுகடுத்துந் சொல்ல, நான் தங்கை, அவர் அண்ணரென்ற முறையையும் பாராமல் உடனே "தங்காய் நான் செய்தது தவறு" என்று ஒப்புக்கொண்டு போய்விட்டார்; அப்படிப்பட்ட பெரிய மனுஷனை நாம் குறைகூற முடியுமா? அவர் தானே இப்பொழுது எங்கள் குடும்பத்திற்குத் தலைவர்" என்று கண்களில் நீர் ததும்பச் சொன்னாள் அன்னை. "அம்மா, நான் சொன்னது வேறொன்றிற்குமல்ல, அந்த நேரத்தில் என் மாமனார் மாமியார் என்னைப்பற்றிக் குற்றமாகப் பேசியபோதெல்லாம் என் மைத்துனியும் அதனைக்கேட்டிருந்து உண்மையென்றெண்ணி என்மேல் வெறுப்படைந்துதானே யிருப்பாள்; முந்தியே வெறுப்படைந்திருந்தால், விவாகஞ் செய்தபின் எங்களுக்கிடையில் ஒற்றுமை வராதென்றுதான் அம்மா பயப்படுகிறேன்" என்றான் மகன். அதனைக்கேட்ட தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியெல்லாம் நீ நினைக்கவொண்ணாது மகனே; என் மருமகளெனிலோ, அருமையான குணமுள்ள பிள்ளை; நல்லாய்ப் படித்தவள் சரிபிழைகளையும் நன்மை தீமைகளையும் தானே பகுத்தறிந்து நடக்கக்கூடியவள்; மேலும் எங்களிருவர் மேலும் அதிக அன்பு பூண்டவள்; அந்தப் பெண்ணைப்பற்றி நாம் அப்படி நினைப்பது பாவமாகும்; அல்லாமலும், அண்ணர் இங்கே சற்று முந்தி வந்தபொழுது என்னைத் தங்கள் வீட்டிற்கு வந்துபோக வேண்டுமெனச் சொல்லிப்போயிருக்கிறார்; ஆனதால் நான் நாளை அங்கேபோவேன்; போகும் போது என் மருமகளையும் பார்த்துக் கொண்டுதானே வருவேன்; நீ எதற்கும் யோசிக்கவேண்டாம்" என்று தேறுதல் சொன்னாள்.

தாயும் மகனும் சுகமேயிருக்கிறார்களா?

இவை இங்ஙனமாக, தமது வீட்டிற்கு மீண்ட அருணாசலம்பிள்ளை கவலையோடு வீடு வந்து சேர்ந்ததை முதல் அவர் மனைவியாரும் பின்னர் மகளும் அவதானித்தனர். அவர் தம் தங்கையின் வீட்டிற்குப் போனவிடத்தில் ஏதும் அபசாரத்தை யடைந்தாரோ என்றும் சந்தேகப்பட்டனர்; ஆனால் சகோதரியாக மகனாக தம் வீடுதேடிப் போனவிடத்தில் அபசாரஞ் செய்ய மாட்டார்களென்றும் நினைத்தார்கள். பெரியநாயகி அங்கே வந்த தனது கணவனை உபசரித்துத் தாகத்திற்கு நீர் வழங்கி அவர் ஆறுதலாகவிருக்கும் நேரம்பார்த்து, "நீங்கள் போன கருமம் எப்படி?" என்று விநயமாகக் கேட்க, "போன கருமத்திற் பிழையொன்றுமில்லை; ஆனால் என் சகோதரிக்கு என்மேல் மனத்தாபம் இன்னுமிருப்பதாகப் புலப் பட்டது; என் தங்கை என்னை வேண்டியவாறு உபசரித்தாள்; மருமகன் நான் போன நேரத்தில் வீட்டிலில்லை; நான் என் சகோதரியை எங்கள் வீட்டிற்கு ஒருமுறை வந்துபோகும்படி சொல்லி விட்டு மீண்டேன்; நாளை அல்லது அடுத்த நாள் இங்கு வரக்கூடும்" என்று சொல்லிமுடித்தார் அருணாசலம்பிள்ளை. "எங்கள் மகளுடைய சம்பந்தத்தைபற்றி உங்கள் சகோதரியுடன் ஏதும் பேசினீர்களோ" என்று மனைவி கேட்க, அதைப்பற்றி அதிகம் பேசவில்லை; இங்கு வந்தபிறகு பேசலாமென் றெண்ணிக்கொண்டு மீண்டுவந்தேன்" என்று கூறினார் அருணாசலம்பிள்ளை; தனது கணவன் கூறிய வார்த்தைகளினால், அவருடைய தங்கை அவரை உபசரித்தது நிசமெனினும் சம்பந்த விஷயத்தில் உடன்பட்டிலளெனவும், தம் கணவனைச் சகோதரி குறை கூறியிருத்தல் வேண்டுமெனவும் பெரியநாயகி அயிர்த்துக்கொண்டாள்; வீட்டின் உட்புறத்தே தாய்போனபோது மகள் தன் தகப்பனார் மாமியார் வீட்டிற்குப் போய்வந்த செய்தியை அறிய ஆவல்கொண்டாளாய் "அம்மா, எங்கள் மாமியார் வீட்டிற்கு ஐயா போய்வந்தாரே; அங்கே என்ன விசேஷமாம்" என்று மெல்லக் கேட்டாள்; "மகளே, அங்கே தமையன் போனவிடத்துத் தங்கை அவரை அன்போடு உபசரித்ததாகவும், இரண்டொரு நாளையில் உன் மாமியார் உனது அப்பரின் கேள்விப்படி எங்கள் வீட்டிற்கு வர உடன்பட்டதாகவும் ஐயா சொன்னார்; மேலும் அப்படி வரும்போது உன் சம்பந்த விஷயமாகப் பேசவேண்டியவைகளைப் பேசி யொழுங்குசெய் யலாமென்றும் ஐயா சொன்னார்" என்று தாய் சொல்ல, "அம்மா, அவைகளைப்பற்றியல்ல தாயும் மகனும் சுகமேயிருக்கிறார்களாவென்பதை யறியக் கேட்டேன்" என்று சொல்ல, "ஓம் மகளே, அவர்கள் சுகமேயிருக்கிறார்களாம்" என்று தாய் கூறினாள்.

* * *

உலகம் பலவிதம்: 1945 அக்டோபர் 04 விசாலாட்சி: (முற்றொடர் - 70)

"போகத்தானே வேண்டும்"

"அம்மா, மாமி வருவதாகச் சொல்லியும் மூன்று நான்கு நாட்களாயினவே. இன்னமும் வரக் காணோமே; ஒருபோது தாயார் இங்கே வருவது மகனுக்கு விருப்பமில்லை போலும்" என்று தன் தாயிடங் கவலையோடு சொன்னாள் விசாலாட்சி; "வராமல் விட்டதற்கு ஞாயமென்ன வென்று எனக்குப் புலப்படவில்லை மகளே. உன் அப்பர் தாமே போய்ச் சொன்னபோது உன் மாமியார் தவறாமல் வரக்கூடுமென்றுதான் நானும் எண்ணியிருந்தேன்; வரக்காணேன்; இன்றைக்கு பார்த்துவிட்டு வராவிட்டால், உன் அப்பரைக் கேட்டுக்கொண்டு நானே நாளைக்குப் போக எண்ணியிருக்கிறேன்" என்று பதில் சொன்னாள் பெரியநாயகி. "நீங்கள் போக வேண்டாம் அம்மா, ஐயாவிடஞ் சொல்லிவிட்டு, மாமியாரை அழைத்து வரும்படி எங்கள் இரதத்தை இன்று பின்னேரம் அங்கே அனுப்பிவிடுங்கள்" என்று மகள் சொல்ல, தாயும் அது நல்ல யோசனைதான்" என்றாள்; கணவனுக்குத் தெரிவித்துவிட்டுப் பெரியநாயகி அன்று பின்னேரம் தங்கள் இரதத்தை மைத்துனி வீட்டுக்குச் சாரதி மூலமாக அனுப்பும்போது, விசாலாட்சி சாரதியைப் பார்த்து "கோவிந்தன், உங்களை உங்கள் மருமகள் தயவுசெய்து ஒருமுறை வந்துபோகச் சொன்னதாக நீ சொல்லு" எனலும், "ஆம், சின்னம்மா, அப்படியே சொல்லுகிறேன்" என்று சொல்லிவிட்டு இரதத்தைச் செலுத்திக்கொண்டு போனான் கோவிந்தன். அவன் இரதத்தையோட்டிக் கொண்டு போய் விசுவநாதன் வீட்டுத் தெரு வாசலில் நிறுத்திவிட்டு இறங்கி உள்ளே போனபோது, தலைவாசலிலிருந்த விசுவநாதன் அவனைக் கண்டு, "கோவிந்தன், என்ன விசேஷம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கேட்க, "ஒரு விசேஷமுமில்லை ஐயா, உங்கள் அம்மாவை அழைத்துக்கொண்டு வரும்படி எங்கள் ஐயா வீட்டுக்காரர் "கார்" அனுப்பியிருக்கிறார்கள்" என்று கோவிந்தன் சொன்னான்; "எல்லாரும் சுகந்தானே, ஏதும் விசேஷமில்லையே" என்று விசுவநாதன் கேட்க, "எல்லாருஞ் சுகந்தான், ஒரு விசேஷமுமில்லை; சின்னம்மாத்தான் உங்கள் தாயாரை தான் அழைப்பதாக என்னிடந் தெரிவித்தது" என்று கோவிந்தன் சொல்ல, உடனே விசுவநாதன் இருக்கை விட்டெழுந்து வீட்டினுட் போய் "அம்மா, உங்கள் மருமகள் உங்களை அழைத்து வரும்படி யனுப்பிய "கார்" வந்து நிற்கிறது" என்றான். கேட்டவுடனே தாய் தலை வாசற்பக்கம் வந்து "கோவிந்தன், எல்லாருஞ் சுகந்தானே, என்னை அங்கே கூட்டிவரும்படி உன்னிடம் ஆர் சொல்லிவிட்ட"தென்று கேட்க சின்னம்மாள் தான் என்றான் கோவிந்தன். "நல்லது சற்று நின்று கொள்; வருகிறேன்" என்று சொல்லிவிட்டுத் தாய் மகன் நிற்குமிடத்திற்குப் போய் "மகனே, என்மருமகள் என்னைக் கூட்டிக்கொண்டு வரும்படி இரதம் அனுப்பியிருக்கிறாள்; அந்தப் பிள்ளை விரும்பும்போது நான் போகாமல் விடுவது முறையல்லவென நினைக்கிறேன்" எனலும், "ஏன் அம்மா போகாமல் விடுவான்! போகத்தானே வேண்டும்" என்றான் மகன். தாய் சற்றுநேரஞ் செல்வதற்கிடையிற் செய்யவேண்டிய ஆயத்தமெல்லாஞ் செய்துவிட்டு இரதத்தில் ஏறிக்கொண்டு தன் தமையனார் வீட்டையடைந்தாள்.

இரண்டுபேரும் பொறுத்துக்கொள்ளவேணும்

தங்கள் இரதம் மீண்டுவருஞ் சத்தத்தைக் கேட்ட மாத்திரத்தே மகளும் தாயும் தலைவாசற் பக்கம் வந்தனர்; இரதம் வந்து முன்றிலில் நின்றது. விசுவநாதனுடைய தாய் இரதத்தை விட்டிறங்குதலும், இருவரும் போய் அவளை எதிர்சென்று உபசரித்து இன்சொற் சொல்லி யழைத்து வந்து ஆசனமுதவி இருக்கச் செய்தனர். அயலிற் சென்றிருந்த அருணாசலம் பிள்ளையும் அந்தச் சமயத்தில் அங்கே வந்து தம் சகோதரியைக் கண்டு சந்தோஷமடைந்தார். அருணாசலம் பிள்ளையும் சகோதரியும் பெரிய நாயகியும் முதல் வேறு விஷயங்களையிட்டுப் பேசிவிட்டுப் பின்னர் மகளின் சம்பந்த விஷயமாகப் பேசத் தொடங்கினர். "என் மகன் என் மருமகளைக் கல்யாணஞ் செய்து கொள்வதுதான் எனக்கு விருப்பம்; ஆனால் மகனுடைய நோக்கம் என்னவோ நான் அறியேன்" என்று விசுவநாதனுடைய தாய் சொன்னாள்; "ஏன் தங்காய், சம்பந்த விஷயமாக மகனுடைய சம்மதத்தை இன்னமும் நீ உசாவவில்லையோ" என்று தமையன் கேட்க, தங்கை "அண்ணா ஒரு அளவிற்கு என் மகனை உசாவினேன். அவன் தனக்குக் கல்யாணமே வேண்டாமென்று பிடிவாதமாக நிற்கிறான்" என்று தங்கை சொன்னாள். "தங்கைச்சி, என் மருமகன் அப்படிச் சொல்வதற்கு நியாயமில்லை; பெற்ற தாய் நீயே அவனுக்குப் புத்திசொல்ல வேண்டும்; நான் மருமகனைக் குறைசொன்னது நிசந்தான்; அவைகளையெல்லாம் உடனுக்குடன் மறந்து விடவேண்டுமென்று மகனுக்குச் சொல்லு; சொந்தத்துள் மாப்பிள்ளையும் பெண்ணு மிருக்கப் புறத்திற் போவது புத்தியல்ல; அப்படிச் செய்தாற் பின்னர் இருபகுதியினரும் கவலைப்படவும் நேரும்; இந்த விஷயமாக நான் என் மருமகனு டன் நேரிற் பேசுவது மரபல்ல" என்று கவலையோடு சொன்னார் அருணாசலம்பிள்ளை; கேட்ட தங்கையும், "அண்ணா, நீங்கள் சொல்வது நிசந்தான்" என்றாள். இப்படிப் பேசி முடித்துக் கொண்டு மாமியார் தம்மருமகள் இருக்கும் அறையுட் செல்ல, மருமகள் இருக்கைவிட்டெழுந்து தன் மாமியை உபசரித்து இருக்கச்செய்து சிந்தனையோடு கூடியவளாய் அயலே நின்றாள்; அதனை அவதானித்த மாமி அவளைப் பரிவுடன் பார்த்து "ஏன், அம்மா, கவலையோடு நிற்கிறீர்" என்று வினாவ, விசாலாட்சி "மாமி, எனக்கு எவ்வகையான கவலையுமில்லை; ஆனால் உங்களுக்காக, உங்கள் மகனுக்காக, நான் அறிந்தோ அறியாமலோ ஏதும் பிழை செய்திருந்தால் இரண்டு பேரும் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறேன்" என்று நமஸ்காரத்துடன் சொல்வதற்கிடையில் விசாலாட்சியின் கண்களிலிருந்து நீர் சிந்தியது. இதனைப் பார்த்த மாமியார் மனஞ் சகியாளாய்த் தன் முன்றானையால் மருமகளுடைய கண்ணீரை ஒற்றி அவளுடைய முதுகைத் தடவி "என் அருமை மருமகளே, நீர் கலங்கவேண்டாம்; எனக்கேனும் என் பிள்ளைக்கேனும் உம்மிடத்தில் அன்பேயொழிய எவ்வகையான மனஸ்தாபமுமில்லை; உமது தகப்பனார் தன்னை ஏதுங் குறை சொன்னகாலத்தில் நீரும் அதனைக் கேட்டுத் தன்னை வெறுத்திருக்கக் கூடுமோ என்று என் பிள்ளை சந்தேகங்கொண்டு பயப்படுகிறானேயொழிய, கண்ணே, உம்மிடத்தில் அகத்தே அவனுக்கு அதிக விசுவாசமுண்டு" என்று சொல்லித் தேற்றினாள்; அதனால் ஒருவாறு தேறிய மருமகள் பின்னரும் மாமியைப் பார்த்து "மாமி, நீங்கள் இங்கே இடையிடையே வந்து போக வேண்டும்" என்று அன்புடன் கேட்க, அவள் "அப்படியே செய்கிறேன்" என்று சொல்லி மருமகளிடத்தும் மைத்துனியிடத்தும் தமையனிடத்தும் விடைபெற்றுக்கொண்டு அவர்களு டைய இரதத்திலேயே தன்வீடு போய்ச் சேர்ந்தாள்.

உண்மையாக பாசம் வைத்திருந்தால்

தங்கள் மகளை மணஞ் செய்வதற்கு உடன்படானோ உடன்படுவானோ எனப் பலவாறு சஞ்சலப்பட்டார்கள் அருணாசலம்பிள்ளையும் அவர் மனைவியும்; தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லும் புத்தியைத் தன் பிள்ளை கேட்பானோ இல்லையேல் மீறுவானோ எனச் சந்தேகப்பட்டாள் விசுவநாதனுடைய தாய்; தன் மைத்துனன் உள்ளபடி விளங்கிக்கொள்ளாமல் தன்னை வெறுத்தான் போலுமென்று சஞ்சலப்பட்டாள் விசாலாட்சி; தன் மாமி அங்கு வந்துமீண்டு போன அன்று இரவுபலவாறு யோசித்துக்கொண்டு படுக்கையிற் கிடந்த விசாலாட்சி, அந்தச் சந்நியாச அம்மாள் வெகுநாளாகத் தன்னிடம் வரவில்லையே யென்பதையிட்டுக் கவலைப்பட்டாள். "நான் அந்த இரஞ்சிதத்தைக் காணவேண்டுமென்று ஆசைப்பட்டதை யுணர்ந்து அப்படியே அப் பெண்ணை என் படுக்கையறைக்கு இரகசியமாக அனுப்பிவைத்த அந்த ஆச்சி, அதன்பின் இன்னமும் என்னிடம் வராமலிருக்க நியாயமில்லையே; அந்த அம்மாள் துறவிதானே, ஆனதால் ஒருபோது இந்த ஊரைவிட்டு வேற்றூருக்குப் போயிருக்கலாமோ, போனவிடத்தில் ஏதும் தலத்தில் விசேஷம் நடந்தால் அங்கே தங்கியிருக்கவும் கூடுந்தானே; ஆனால் அப்படி போக நேர்ந்தாலும் என்னிடம் சொல்லாமற் போகக் காரணமில்லையே; அந்த ஆச்சி இங்கே வந்தால் நான் என் கவலைகளையெல்லாம் அந்த ஆச்சிக்கு முறையிட்டு ஆறுதலடைவேனே; உண்மையாக அந்த அம்மாளிடத்தில் நான் விசுவாசம் வைத்திருந்தால் இன்றிரவு இல்லையேல் நாளைவரையில் அந்த அம்மாள் என்னிடம் வந்தே சேரவேண்டும்" என்ற மன வைராக்கியத்தோடு படுக்கையிற் கிடந்தாள் விசாலாட்சி.

நித்திரைச்சோர்வு நீங்கவிலையா?

நிலவோடு கூடிய இரவு பத்துமணிக்கு மேலிருக்கும்; விசாலாட்சி இப்படிச் சிந்தித்தபடியே உறங்கிவிட்டாள்; அருணாசலம்பிள்ளை ஏதோ பத்திரிகை பார்த்துக்கொண்டு சாய்மனை நாற்காலியில் சார்ந்தபடியிருக்கிறார்; பெரிய நாயகி அடுக்களையிற் செய்யவேண்டிய கருமங்களைச் செய்துமுடிக்கும் வேளையில், தலைவாசற் பக்கமாக "அம்மா விசாலாட்சி" என ஒரு இனிய சத்தம் பெரியநாயகி காதிற்பட்டது; உடனே பெரியநாயகி அந்தத் துறவியம்மாளின் குரலென யுணர்ந்துகொண்டு விரைந்து வந்து "ஆச்சி, வாருங்கள், வாருங்கள், கண்டு வெகுநாள், உங்களைக் காணவில்லையென்ற விசாரத்தோடு தான் எங்கள் மகள் எந்த நேரமுமிருக்கிறாள்" என்று உபசாரஞ் சொல்லி அழைத்துப் போவதற்கிடையில், "எங்கேயம்மா குழந்தை" உறங்கிவிட்டாளா" என்று துறவியம்மாள் கேட்க, "உறங்கிவிட்டாள் போலும்" என்று சொல்லிப் பெரியநாயகி அந்த அம்மாளை விசாலாட்சியின் படுக்கையறையுட் கூட்டிக்கொண்டு போய்த் தன் மகளை எழுப்ப, "அம்மா நீங்கள் எழுப்பாதீர்கள், நானே மெல்ல எழுப்புகிறேன்" என்று துறவியம்மாள் சொல்ல, பெரியநாயகி அறையைவிட்டு மீண்டாள். அந்தத் துறவியம்மாள் விசாலாட்சியின் படுக்கையில் இருந்து கொண்டு "அம்மா, விசாலாட்சி உறக்கமா" என்று சொல்லி அவள் கன்னத்தைத் தன் கரத்தால் மெல்லத் தடவியெழுப்பினாள்; விசாலாட்சி கண்விழித்தாள்; தன் பக்கலில் துறவியம்மாள் இருப்பதைக் கண்டாள்; தான் காண்பது கனவோ, நனவோ எனச் சந்தேகப்பட்டாள்; "என்ன அம்மா, நித்திரைச்சோர்வு நீங்கவில்லையா" என்று துறவி யம்மாள் புன்னகையுடன் வினவ, ஆநந்தத்தோடு பதைபதைத்தெழுந்து படுக்கையை விட்டிறங்கி நின்று "ஆச்சி, வந்துவிட்டீர்களா" என்று சொல்லி நமஸ்காரஞ் செய்தாள் விசாலாட்சி; தன்னை நமஸ்காரஞ் செய்த விசாலாட்சியின் கரங்களை மெல்லெனப் பற்றித் தன் பக்கலில் அவளை இருக்கச்செய்தாள் சந்நியாசி அம்மாள்; விசாலாட்சியின் உள்ளத்திற் பிறந்த மகிழ்ச்சிக்கு ஒரு எல்லையில்லையெனலாம்; "ஆச்சி, இவ்வளவு நாளும் எங்கே போயிருந்தீர்கள்? என்னை மறந்து போனீர்களா? தெய்வத்திலேயே எந்தநேரமும் சிந்தனை செய்துகொண்டிருக்கும் உங்களுக்கு எங்களைப்பற்றிய ஞாபகம் வரமாட்டாதுதான்" என்று பரிவுடன் சொன்னாள் விசாலாட்சி; "அம்மா தெய்வத்தையே எந்த நேரமுஞ் சிந்திக்குந் நிலைமை இலகுவிற் கிட்டுமா? அந்த நிலைமை வந்துவிட்டால் இந்தச் சஞ்சலமெல்லாம் எதற்கம்மா? இங்கு நான் வராதொழிந்தாலும் உம்மை மறக்கமாட்டேன் அம்மா, நீர் கவலைப்பட வேண்டாம்; இன்றிரவு உம்மைக்காணவேண்டுமென்ற விருப்பம் என்மனத்தில் எழுந்தது; ஆனதனால் உடனே புறப்பட்டு வந்தேன்; கவலை வேண்டாம் அம்மா, ஆண்டவன் இருக்கும்போது எமக்கென்ன கவலை" என்று சமாதானஞ் சொன்னாள் துறவியம்மாள்.

* * *

[தொடர்ச்சி 71 - 76 இல்லை]

உலகம் பலவிதம்: 1945 நவம்பர் 22
விசாலாட்சி: (முற்றொடர் - 77)

"அரிவையர் மனசு
கண்டறிந்துளார்களார்"

இராமச்சந்திரன் சொன்ன இந்த வரலாறுகளை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த இரண்டு சாதுப்பெண்களும் கவலைப்பட்டார்கள்; அவர்களுள்ளும் அவனுக்கு அன்னம் பரிமாறிய இளஞ்சாதுப்பெண்ணே அதிக சிந்தனையோடு காணப்பட்டாள்; அந்தப்பெண் சிறிது நேரஞ் சிந்தித்தபடியிருந்து பின்னர் இராமச்சந்திரனை விநயத்துடன் பார்த்து "ஐயா, கேட்கிறேனென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறையெண்ணாதீர்கள்; ஒரு பெண் செயற்கரிய கருமத் தைச் செய்தால் அவள் காரணமாக, உலகத் திலுள்ள பெண்பாலாரெல்லார்க்கும் பெருமையும் புகழுமுண்டாகும்; ஒரு பெண் செய்யத்தகாத கருமத்தைச்செய்து அவமானத்தைத் தேடிவிட் டால், உலகத்திலுள்ள பெண்பாலாரெவருக்கும் அவமானமாகவே தோன்றும்; ஆனதால் பெண்களுக்கு வரும் மதிப்பும் அவமதிப்பும் அந்தப் பெண்பாலார் செய்யுங் கருமங்களிலேயே தங்கியுள்ளன. நீங்கள் சொல்லுகிற அந்தப் பெண் தன் அரியமாமனாருக்கு பெற்றாருக்கு உற்றாருக்கு எவருக்குஞ் சொல்லாமல் இரவிற் கரவிற் போய் விட்டாள்; அப்படிப்போயும் மாசக்கணக்கிலாய் விட்டதென்று சொல்லுகிறீர்கள்; அப்படிப் புறப்பட்டுப்போன பெண் தன்னுயிரை மாய்த்திருந்தால் மானத்தைக் காத்த உத்தமியாய் விடுவாள்; இல்லாமல் இன்னமுந் தன்னுயிரைப் பாதுகாக்க வேண்டி மறைந்தொதுங்கித் திரிவாளேல், அவள் மானம்மரியாதையோடு இருப்பாளென நீங்கள் எப்படிக் காத்திருக்கலாம்? சின்ன மாமியின் கொடுமையை அந்தப் பெண் தன் மாமனுக்கு முறையிட்டிருக்கலாம்; அதனாற் குடும்பப் பிரிவு நேருமெனப் பயந்திருந்தால், அவள் தன் பெற்றார் வீட்டிற்குப் போயிருக்கலாம்; ஒருபெண், அதிலும் ஒரு கன்னிகை அப்படியொன்றுஞ் செய்யாமற் சொல்லாமல் நடுச்சாமத்தில் வீட்டைவிட்டுப் போகக் காரணமில்லையே; இனி ஒருவருடைய துணையில்லாமல் ஒரு பெண் தன்னந்தனியே நள்ளிரவிலே எப்படித் துணிந்து போகக்கூடும்; தற்கொலைசெய்ய நிச்சயித்தவளொருத்திதான் அப்படித் துணிந்து வீடுவிட்டுப் போகமுடியும். அல்லாமலும் அப்படிப் போனபெண்ணைத் தேடிக் கண்டு மீட்டுக்கொண்டு வந்து வீட்டிலே சேர்த்துத் தான் ஆவதென்ன? ஐயா, உங்களைப்போற் படிப்புள்ள ஆண்களுக்குப் படிப்பறியாப் பெண் பேதைகளாகிய நாங்கள் ஏதும் சொல்வது முறையல்ல; கற்பிலே சிறந்த சீதை இராவணனுடைய சிறையிலிருந்து மீட்கப்பட்டாளாய் இராமபிரானிடத்தில் ஆவலோடு வந்தபோதும், இராமபிரான் அந்த உத்தமியைப் பழையபடி தேவியாக ஏற்றுக்கொள்ள மறுத்தாரென்றும், பின்னர்ச் சீதாதேவி தீ மூட்டி அத் தீயிலே மூழ்கிவந்து தான் புனிதையென்பதை இராமருக்குப் பிரத்தியட்சமாய்க் காட்டிய பின்புதான் அவர் சானகியை ஏற்றுக்கொண்டாரென்றும் இராமாயணக் கதையிற் சொல்லப்பட்டிருக்கிறதே; இப்படியெல்லாமிருப்ப, கட்டையறுத்துக் கொண்டு புறப்பட்ட காளையைத் தேடப் புறப்பட்டவர் போல, ஐயா, நீங்கள் அந்தப் பெண்ணைத் தேடிப் புறப்பட்டு அலைகிறீர்களேயென்பதை யிட்டுத்தான் எங்களுக்குக் கவலை. மேலும் அரிவைமார் மனசு கண்டறிந்துளார்கள் ஆர் ஐயா; ஆனால் அந்தப்பெண் இந்தப் பிரபஞ்சப் பற்றை வெறுத்துத்துறவியாய் விட்டாள்; அந்தத் துறவு நிலையிலே திறம்பாது நிற்பாளேயானால் அவளொரு உத்தமிதான் ஐயா; மேலும் உங்கள் சிரமம் வீண் போகாது, நீங்கள் தேடிப் புறப்பட்ட பெண்ணைக் காணாவிட்டாலும் புண்ணிய தீர்த்தங்களில் மூழ்குவதும் புண்ணிய தலங்களைத் தரிசிப்பதுமாகிய பெரும் பேற்றைப் பெற்றுக்கொண்டீர்கள்; ஏதோ, எல்லாம் முருகன் செயல்" என்று சொல்லி முடித்தாள்.

"தான் கள்ளன் பிறரை நம்பான்"

தனக்கு அன்னம் பரிமாறிய அம்மாள் சொன்னவற்றை இராமச்சந்திரன் அவதானமாகக் கேட்டான்; சிறிது கவலைப்பட்டான்; பின்னர் மனந்தேறினான். அவன் அந்த அம்மாளை நோக்கி "ஆச்சி நீங்கள் சொன்னவை நியாயமானவை; உலகத்திலே பெண்களின் இயல்பையும் நிலையையும் பொதுப்படச் சொன்னீர்கள்; உலகத்தில் உத்தமிகளு முண்டென்பதை நீங்களும் ஒப்புக் கொள்வீர்கள்; அல்லாமலும் நாம் ஒரு காரணமு மில்லாமல் ஒருவர்மீது சந்தேகப்படவொண்ணாது; பெரியோர்கள் தம்மைப் போலவே மற்றவர்களு மிருப்பார்களென்றுதான் மதித்து நடப்பர்; சிறியோர்கள் "தான் கள்ளன் பிறரை நம்பான்" என்றபடி எவரிடத்துஞ் சந்தேகங் கொள்ளுவர்; விசுவாசமாக நடக்கிறவர்களிடத்தும் அச் சிறியோர் சந்தேகமாகவே ஊடாடுவார்கள்; சந்தேகமுள்ளவனுக்குப் பிறரிடத்துச் சந்தேகமுண்டாகிக் காலகதியில் தம் நண்பர் உறவினர் மனைவி மக்கள் எல்லார்மீதும் சந்தேகம் ஏற்படும்; அவ்வளவோடு அமையாமல் அச்சந்தேகி ஈற்றில் தன்னிடத்திலும் தெய்வத்தின்மீதும் சந்தேகம் கொள்ளத் தலைப்படுகிறான்; இப்படிப்பட்ட தீராச் சந்தேகமுடையவனுக்கு வேறு எவ்வகையான நற்குணங்கள் செல்வங்கள் இருந்தாலும் மன ஆறுதல் மாத்திரம் இல்லையாக அத்தியகாலத்தில் அவன் சந்தேகியாகவே சாகிறான்; நம்முடன் பிறர் வஞ்சகமாக ஊடாடினாலும், நாம் சந்தேகமின்றி உண்மை வழியில் ஊடாடினால் அந்த வஞ்சகரும் விசுவாசமாகத் தம்முடன் ஊடாடுவார்க்குத் தாம் துரோகஞ் செய்யவொண்ணா தென்று நினைத்து உண்மை யொழுக்கமுடையவராகத் திருந்தி நடத்தலுங் கூடும்; திருந்தாவழியும் அவர்கள் செய்யும் வஞ்சகத்தினால் நம்பி நடப்பவருக்கு ஏதுந் தீது நேரத் தெய்வம் விடமாட்டாது; ஆச்சி, நான் சொல்லுகிற அந்தப்பெண் தனக்கு நிச்சயம் பண்ணியிருந்த வரன் இறந்துவிட்டபடியால், தான் கைம்மையாக இருக்கவேண்டுமென்ற நோக்கங் கொண்டுள்ளவள்; தமிழ்ப் பெண்களுள் முன்னரும் இப்படிப் பலர் இருந்தனர்; திருநாவுக்கரசு நாய னாருடைய தமக்கையாராகிய திலகவதியார் அப்படியிருக்கவில்லையா? அந்த அம்மையாருக்கு அதனாற் கிடைத்தது அழியாப்புகழே யொழிய, இகழ்ச்சி யாதுமுண்டா? இல்லையே; மேலும் நான்தேடித் திரிபவளாகிய இந்தப் பெண் தான் மணஞ்செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென விரும்பினால் இவளுடைய அபிமான பிதாவும் ஏனைய சுற்றத்தாரும் ஆநந்தமாக ஒரு தக்கவரனுக்கு இவளை விவாகஞ்செய்து கொடுப்பர்; பெண் தான் அதற்கு உடன்பட்டிலள்; ஆனதால் அப்படிப்பட்ட மேலான நோக்கங்கொண்ட பெண் தன் ஒழுக்கத்திலே திறம்புவாளென நினைப்பதும் தோஷம் ஆச்சி; அவள் ஒருவருமறியாதபடி, இரவிற் கரவில் வீட்டை விட்டோடிவிட்டாளென்று சொன்னீர்கள் அது பார்ப்பவர்களுக்கு முறையாகத் தோன்றாதென்பது நிசம். ஒருத்தி கற்பென்னுந் திண்ணிய நெறிபூண்டவளா யிருந்தால், அவள் வீட்டிலிருந்தாலென்ன, காட்டிற்குப் போனாலென்ன, சனக்கூட்டத்திற் சஞ்சரித்தாலென்ன, சந்தைக்குப் போய்வந்தாலென்ன, அவளுடைய மனத்திடத்தை மாற்ற எவராலும் முடியாது; அந்தப் பெண் புத்தியீனமாகத் தற்கொலைசெய்து மாண்டாலொழிய, உயிரோடிருந்தால் நான் அந்த முருகனருளால் தேடிக் காண்பேன் ஆச்சி" என்று மனவைராக்கியத்தோடு சொல்லிமுடித்தான்; இவைகளையெல்லாம் இராமச்சந்திரன் சொல்லக் கேட்டுக் கொண்டிருந்த அந்த இளஞ் சாதுப்பெண் உடனே இருக்கை விடடெழுந்து, "ஐயா, என் பேதை மதியால் ஏதோ பிழை சொல்லிவிட்டேன்; பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்று சொல்லி நமஸ்காரஞ்செய்ய, இராமச்சந்திரனும் பிரதி நமஸ்காரஞ் செய்து, "ஆச்சி, நீங்கள் சொன்னதும் பிழையல்ல நான் சொன்னதும் பிழையல்ல" என்றான்.

துறவிக்கேன் உலக விவகாரம்?

இராமச்சந்திரன் அன்று அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு, அச் சாதுக்கள் கேள்விப்படி அடுத்தநாள் மத்தியானப் போசனத்திற்கு அந்த இடத்திற்கு வருவதாக வாக்களித்துவிட்டுத் தான் தங்கியிருக்கும் மடத்திற்குப் போய்விட்டான்; அந்தப் பெண் சாதுக்களுள் இராமச்சந்திரனுக்கு அன்னம் பரிமாறிய அம்மாள் அவன் போனபின்னர் அதிக கவலையோடிருப்பதை வயசில் முதிர்ந்த தோற்றச்சாது அவதானித்தாள்; "ஏன் அம்மா, எந்த நேரமும் சந்தோஷத்தோடு கூடிய நீர் இப்பொழுது கவலையோடு காணப்படுகிறீர்; இங்கு வந்துபோனவர் உங்களுரைச் சேர்ந்தவரா? உங்கள் இனத்தவரா? இல்லையேல் உங்களுக்கு அறிமுகமானவரா? இல்லாவிட்டால் இவர்தேடித் திரியும் பெண்ணுக்கும் உமக்கும் ஏதுந் தொடர்புண்டா?" என்று தானுங் கவலைகொண்டாளாய்ப் பல கேள்விகளைக் கேட்டாள்; "ஆச்சி, இவர் இருப்பதும் நான் இருந்ததும் ஒரே ஊராகும்; இவர் குடும்பத்தினர்க்கும் எங்கள் குடும்பத்தினர்க்குந் தொடர்புண்டு; இவரை நான் முந்தியே அறிவேன்; ஆனால் இவர் என்னை இன் னாளென அறிந்துகொள்ளவில்லை; இவர் தேடித் திரியும் பெண்ணை நான் நன்கு அறிவேன்; அந்தப் பெண்ணுக்கும் இந்தக் கதி நேர்ந்ததே என்பதையிட்டு நினைத்த நேரந் தொடக்கம் என்மனஞ் சஞ் சலப்படுகிறது; பாவம்! இந்த வாலிபரும் அந்தப் பெண்ணைத் தேடிக் காணலாமென்று மாசக்கணக்கில் அலைந்து உலைந்து சிரமப்பட்டுத்திரிகிறாரே; அவளை இவர் தேடிச் சந்திப்பாரோ, இல்லையோ என்ற இவை களையெல்லாம் நினைக்க நினைக்க என்னையறியாமல் என் மனத்திற் கவலை அதிகப்படுகிறது ஆச்சி" என்று துயரத்தோடு சொன்னாள் அந்த இளஞ் சாது; "ஆம் அம்மா, அந்த வரலாறோ பரிதாபமானது; கேட்ட நேரந்தொடக்கம் என் மனமுங் கவலைப்படுகின்றது; காணாமற்போன பெண்ணையிட்டுக் கவலைப்படுவ தைக் காட்டிலும் அந்தப் பெண்ணைத்தேடி யலைந்து திரியும் இந்த வாலிபனுடைய பெருந் தன்மையையும் கஷ்டங்களையும் தன்னையொறுக்கும் விதத்தையும் சிந்திக்கச் சிந்திக்க, என்மனத்திலும் அதிக கவலை யுண்டாகிறது; இந்த வாலிபன் கையிற் பணமும் அதிகமில்லையென நினைக்கக்கிடக்கிறது; ஆனால் நாம் ஏதும் பணம் கொடுத்தால் ஏற்றுக் கொள்வானோ, ஏற்க மறுப்பானோ என்று என் மனம் பயப்படுகிறது; தேடிக்கண்டால் அந்தப் பெண்ணை இந்த வாலிபன் தானே மணஞ்செய்து கொள்ளவுங்கூடும்; ஏனென்றால் அந்தப் பெண்ணிடத்தில் இந்த வாலிபனுக்கு அதிக விசுவாசம் இருக்கிறதென்று இவன் பேசிய பேச்சுக்களைக் கொண்டு யூகிக்கக் கிடக்கிறது; அம்மா, நீர் அந்தப்பெண் வீட்டைவிட்டுப் போனதையிட்டுப் பேசியபோது, வாலிபனுடைய முகம் மாறுபட்டதை நான் அவதானித்தேன்; நீரும் அப்படிக் கண்டித்துச் சொல்லியிருக்கவொண்ணாதம்மா; ஆனாலும் நாங்கள் துறவிகள். சாதுக்களென்றிருந்துகொண்டு உலகவிவகாரத்தையிட்டு இவ்வளவு நேரமும் பேசியது பிழையாகும்; சரி, வாரும் அம்மா நாங்கள் எங்கள் கருமங்களைப் பார்ப்போம்; சாதுக்க ளென்றிருக்கும் நாங்கள் உலக விவகாரங்களிலே சிறிது தலையிட்டா லும் எங்கள் கதி கோவணச் சந்நியாசிக்கு நேர்ந்த கதி போல ஆபத்தாக வந்து சேரும்" என்றாள்.

கோவணச் சந்நியாசி

இப்படி அந்த முதிய அம்மாள் சொல்லக்கேட்ட இளைய அம்மாள் "ஆச்சி, கோவணச் சந்நியாசிபோல என்று முன்னரும் சிலர் உவமானஞ் சொல்லக் கேட்டிருக்கிறேன்; அந்தச் சந்நியாசியின் வரலாறென்ன உங்களுக்குத் தெரியுமா? தெரிந்தாற் சொல்லுங்கள்" என்று கேட்க, அந்த அம்மாள் சொல்லுகின்றாள்; "நான், சிறுமியாயிருக்குங் காலத்தில் என்னுடைய தாயார் எனக்கு இந்தக் கதையைச் சொன்னதுண்டு; ஒரு காட்டிலே ஒரு சந்நியாசி நிர்வாணியாய் தவஞ் செய்து கொண்டிருந்தான்; பின்னர் அவன் நாட்டிலும் இடையிடையே போய்ச் சஞ்சரிக்க விரும்பினான், ஆனால் நாட்டிலே நிர்வாணியாகப் போய்ச் சஞ்சரிப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையல்லவென அந்தச் சந்நியாசி நினைத்து, தான் மாறிக் கட்டிக்கொள்வதற்கு இரண்டு கோவணத்தைச் சம்பாதித்து, அப்படியே மாறி மாறித் தரித்து வந்தான்; ஒருநாள் அவன் ஸ்நாநஞ் செய்துவிட்டு வந்துபார்க்கும் போது மற்றக் கோவணத்தை இட்ட இடத்திற் காணாமையால் தேடிப்பார்க்கும் போது அந்தக் கோவணம் எலியால் வெட்டுண்ட துண்டாக இன்னொரு இடத்திற் கிடக்கக்கண்டான்; அதற்குப் பதிலாக வேறொரு கௌபீனத்தைத் தேடிக் கொண்டு, எலி கோவணத்தை வெட்டிச் சிதையாமல் தடுப்பதற்கு உபாயமென்ன என்று சூழ்ந்து, ஒரு பூனையைத் தன் ஆசிரமத்திற் கொண்டுவந்து சேர்த்தான்; துறவியிடத்துப் பூனைக்கு உணவேது; அந்தப் பூனை உணவில்லாமையால் வாடி அழத்தலைப்பட்டது; அதனை யவதானித்த சந்நியாசி பூனைக்குப்பாலூட்ட வேண்டி ஒரு பசுவுங் கன்றுங் கொண்டுவந்து தன் ஆசிரமத்திலே சேர்த்தான்; அந்தப் பசுவிற் பால் கறப்பதற்கும் அதனைப் பாதுகாப்பதற்கும் ஒரு வேலைக்காரனைத் தேடிக்கொண்டுவந்து சேர்த்தான் சந்நியாசி; வேலைக்காரன் ஒன்றியல்லன்; அவனுக்கு மனைவியும் இரண்டு குழந்தைகளும் உண்டு; அவன் தன் மனைவி மக்களை ஆசிரமத்திலே கொண்டுவந்து சேர்த்தான்; சிலநாளுள் சந்நியாசியின் ஆசிரமம் இல்லறத்தவனுடைய வீட்டின் நிலைமையை யடைந்தது; இப்படியாக ஒருநாள் அந்தச் சந்நியாசி அயலிலேயுள்ள ஒரு கோயிலுக்குப் போகப் புறப்பட, பசுக்காப்போனும் உடன் வருவதாகச் சொல்லி மனைவி மக்களோடு புறப்பட்டுச் சந்நியாசி பின்னே போனான்; போகும் மார்க்கத் தில் குறுக்கேயொரு நதி அந்தநேரத்தில் சற்றுப் பெருகிப் பாய்ந்தமையினால், பசுக்காப்போன் மனைவி தன் இளைய குழந்தையை எடுத்து ஒக்கலையில் வைத்துக்கொண்டு ஆற்றில் இறங்கினாள்; ஆனால் ஆறு அவளை வீழ்த்தி விடுமோ என்ற அச்சத்தினால் புருஷன் அவளை அணைத்துச் செல்ல, அவனுடைய மூத்த குழந்தையை எடுத்துச்செல்ல எவருமில்லாமையி னால், சந்நியாசியே அக்குழந்தையை எடுத்துச் செல்ல வேண்டியவனானான். உடனே அச் சந்நியாசியிடத்தில் ஞானம்பிறந்தது; கோவணத்துக் காசைப்பட்டல்லவா துறவறத்தவனென்றிருந்த நான் இப்பொழுது தடித்த இல்லறத்தவன் போலானேன்! ஐயோ, மோசம்போனேன்" என்று பச்சாத்தாபப்பட்டு அந்தப் பந்தங்களெல்லாவற்றையும் அறவே அகற்றிவிட்டுப் பழையபடி நிர்வாணியாகவிருந்தான்" என்பது தான் அம்மா,

கோவணமொன்றிச்சிப்பக் கூடினவே பந்தமெலாம்
தூவணஞ்சேர் மேனியாய் சோமேசா.....

என்று இக்கதையைப் பிற்காலத்திருந்த அறிஞர் குறிப்பாகப் பாடியிருக்கின்றார்கள்" எனச் சொல்லி முடித்தாள்.

* * *

உலகம் பலவிதம்: 1945 நவம்பர் 2
விசாலாட்சி: (முற்றொடர் - 78)

"போய்வர விடை தாருங்கள்"

முதனாட் சொல்லியபடி இராமச்சந்திரன் சுவாமி தரிசனஞ் செய்து அந்தப் பெண் சாதுக்களிருக்கும் மடத்திற்குவர, அவர்கள் அவனை யுபசரித்து அமுதூட்டினார்கள்; முதனாட் பரிமாறிய அந்த அம்மாளே அவனுக்கு அன்றும் அன்னம்பரிமாறினாள்; அவன் போசனம் முடித்துக் கொண்டு அத் திருமடத்தின் புறத் திண்ணையிலிருப்ப, முந்திச் சொல்லப்பட்ட பெண் சாதுக்கள் தாங்களும் ஆகாரஞ்செய்து சற்று நேரத்தில் மடத்தின் முன்புறத்தை வந்தடைந்தனர் அப்பொழுது இராமச்சந்திரன் அவர்களைப் பார்த்து, "ஆச்சிமாரே, நீங்கள் இரண்டுமூன்று நாட்களாக எனக்குச் செய்த உதவியையும் உபசாரத்தையும் நான் உயிருள்ள பரியந்தம் மறக்கமாட்டேன்; பெற்ற தாயைக் காட்டிலும் பரிவோடு எனக்கு அன்னமிட்டீர்கள்; இப்படி இதற்குமுன் செய்தா ரெவருமிலர்; நான் போய்வர விடை தாருங்கள்" என்று விநயமாகக் கேட்டான்; இப்படி அவன் சொல்லக் கேட்டமாத்திரத்து அவனுக்கு அன்னமிட்ட அம்மாள் திடுக்குற்றாள்; மற்றச்சாது கவலையுற்றாள்; அன்னம் பரிமாறிய அம்மாள் அவனைக் கலக்கத்துடன்பார்த்து, "ஐயா, இப்பொழு ..... [சிதைவு]

இன்னுஞ் சிலகாலம் இந்தப் புண்ணியதலத்திலே தங்கிச் சுவாமி தரிசனஞ் செய்தபின் போக வொண்ணாதா? உங்களுக்கு ஆக வேண்டிய சௌகரியங்களெல்லாம் இந்த மடத்திலே நாங்கள் செய்வோம்; உங்கள் வழிச்செலவிற்காகிய பணம் வேணுமானாலும் நாங்கள் தருவோம். முருகன் கிருபையால் எங்களுக்கு ஒரு குறையுமில்லை. உங்களைப் போல் உத்தமரை நாங்களும் இதுவரையிற் கண்டதில்லை" என்று பரிவுடன் சொன்னாள்; "நானும் அப்படியே கேட்டுக் கொள்ளுகிறேன்" என்றாள் வயதில் முதிர்ந்த அம்மாள்; "ஆச்சிமாரே, நீங்கள் சொல்வன முழுவதும் நிசம்; இந்தப் புண்ணிய தலத்தில் இன்னுஞ் சிலநாளல்ல, சிலமாசமல்ல, சில வருஷகாலந் தங்கியிருந்து சுவாமிதரிசனஞ் செய்தாலும் தெவிட்டாது; அப்படித் தரிசனஞ் செய்யும் பாக்கியம் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது; நமக்கும் அவ்வளவு புண்ணியமல்லவா வேண்டும்; ஆச்சிமாரே, நான் உங்களைப்போல் துறவியுமல்லேன்; இல்லறத்தவனுமல்லேன்; பிரமசாரியாவேன்; மேலும் நான் உத்தேசித்து வந்த கருமமுங் கைகூடியபாடில்லை; என்னூரை விட்டுப் புறப்பட்டுப் பல மாசங்களாயின்ன; ஊரிலுள்ளார்க்கு நான் கடிதம் இடையிடையே எழுதி வருகிறேனெனினும் அவர்கள் எனக்குக் கடிதம் எழுத முடியாத நிலைமையிலிருக்கின்றார்கள்; நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தநேரம் எங்கிருப்பேன், எங்கே போவேனென்பதை நானுமறியேன்; அவர்களும் அறியார்கள்; ஆனதால் நான் இன்னமுங் காலதாமதஞ் செய்யாது ஊருக்கு மீண்டு போகவேண்டும்; இதற்கிடையிற் கதிர்காமத்தையனைத் தரிசிக்க வேண்டுமென்ற ஆசை என்னுள்ளத்தை உபாதிக்கின்றது; ஆனதால் நான் இந்தத் தலத்திற்கு வருதற்கு முந்தித் தங்கியிருந்த அந்தக் கிராமத்திற்குப் போய் யாரும் கதிர்காமம் போவார்களுண்டோ என்று உசாவியறிந்து, யாரும் போனால் உடன் கூடிக்கொண்டு போவேன்; இல்லையேல் "பயந்த தனிவழிக்குத் துணை செங்கோடன் வேலும் மயூரமுமே" என்றபடி அந்தப் பெருமானுடைய வேலையும் மயிலையுந் துணையாகச் சிந்தித்துக்கொண்டு கதிர்காமம் போக உத்தேசித்திருக்கின்றேன்; இதுதான் ஆச்சிமாரே, என் நோக்கம்; ஆனால் முருகன் திருவுளம் எப்படியோ நான் அறியேன்" என்று பயபக்தியோடு சொல்லிமுடித்தான்.

கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமா?

இப்படி இராமச்சந்திரன் சொல்லி முடித்தலும் அவனுக்கு அன்னம் பரிமாறிய அம்மாள் அவனைப் பார்த்து, "ஐயா, நீங்கள் சொல்லுவது முழுவதும் நீதியாகும்; யாத்திரை செய்யப்புறப்படுவோர்க்கு எவரும் இடையூறாக நிற்கவொண்ணாது; அதிலும் கதிர்காம யாத்திரை யென்றால், அதற்குத் தடைசெய்யக் கனவிலும் எண்ணவொண்ணாது; இந்தமடத்திலுள்ள தொண்டர்களாகிய நாங்களும் கதிர்காம யாத்திரை செய்ய முருகன் திருவருளை முன்னிட்டு நிச்சயித்திருக்கிறோம், புராண படனம் நடக்கும் அந்த மடத்திலுள்ள தொண்டர்களுள்ளும் பலர் கதிர்காம யாத்திரை செய்வர்; செய்யும்போது நடந்தே செல்வர்; புகைவண்டி முதலியவற்றில் ஏறிச்செல்வதில்லை; அப்படி நடந்து யாத்திரை செய்யும்போது இடங்கள்தோறும் தங்கிக் கந்த புராணம் படித்தும் பயன் சொல்லியும் கேட்டுக் கொண்டும் ஆநந்தமாகச் செல்லுவார்கள். கதிர் காமத்தலத்தைப் போயடையச் சில வாரங்கள் செல்லுமானாலும் அதுபோல் ஆநந்தமான யாத்திரை வேறொன்றுமில்லையெனலாம்; எப்பொழுது புறப்படுவதென்பதை அவர்களிடங் கேட்டு நாங்கள் உங்களுக்கு நாளை மத்தியானம் தெரிவிப்போம்; அதனையறிந்துகொண்டு நாளை மத்தியானத்தின் மேல் நீங்கள் தங்கியிருந்த கிராமத்திற்குப் போய் மீண்டுவரலாமென நினைக்கிறோம்; வந்து நீங்களும் எங்களுடன் கதிர்காம யாத்திரை செய்யலாம்; அந்தக் கதிரையாண்டவனருளினால் ஒருவேளை நீங்கள் தேடியலையும் பெண்ணையும் அந்தப் புண்ணிய தலத்திலே சந்தித்தலும் கூடும்; முருகன் திருவிளையாட்டை எங்களால் அறியமுடியுமா? ஏதோ ஐயா, எங்கள் விருப்பத்தைச் சொன்னோம்; இனி உங்கள் சித்தம்" என்று விநயமாகச் சொல்லிமுடித்தாள்; இப்படி அந்த அம்மாள் சொல்லக்கேட்ட இராமச்சந்திரன் ஆநந்தமடைந்தான் "இது இந்த அம்மாளுடைய வாக்கல்ல; அந்தக் கதிர்காமத்தையன்தான் இந்த அம்மாள்மூலம் இப்படித் தெரிவிக்கிறான்; அவன் விட்டவழியில் நாம் போகவேண்டுமே யொழிய நம்மால் எதனையும் நினைத்துச் செய்தல் முடியாது" என்று தன்னளவில் நிச்சயித்துக் கொண்டு, "ஆச்சி, கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமா? நானும் உங்களுடன் யாத்திரை புறப்படுகின்றேன்; நான் வந்து தங்கி நின்ற கிராமத்திற்குப் போய் மீண்டுவரவேண்டிய ஆவசியகமான கருமமில்லை; அவர்கள் இப்போதைக்குக் கதிர்காமத்திற்கு யாத்திரை புறப்படுவதில்லை யென்றும், இன்னுஞ் சில மாசஞ் செல்லுமென்றும் முன்பு எனக்குச் சொன்னார்கள்; ஆனதால் நான் அங்கே இப்பொழுது போய் அவர்களைக் கண்டு மீள ஆவசியகமில்லை; நீங்கள் யாத்திரை புறப்படும்வரை நான் இந்தத் தலத்திலேயே தங்கிநின்று சுவாமி தரிசனஞ் செய்வேன்" என்று மகிழ்ச்சியுடன் சொல்லி, நாளை மத்தியானம் அந்த மடத்திற்கு வருவதாகவும் தெரிவித்து விட்டு அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு தான் இருக்கும் மடத்திற்கு மீண்டான்.

"இரந்தார்க்கு ஈந்தருளும் வள்ளல்"

இராமச்சந்திரன் மன ஆறுதலோடு கூடியவனாய்த் தான் இருக்கும் மடத்தையடைந்து தன் அபிமானப்பிதாவுக்குத் தான் கதிர்காம யாத்திரை செய்யக் கொண்ட நோக்கத்தையும் யாத்திரை முடித்துக்கொண்டு கூடிய சீக்கிரம் ஊருக்கு மீண்டுபோகத்தான் கொண்ட உத்தேசத்தையும் ஏனைய விபரங்களையும் எழுதிக் கடித மனுப்பினான்; அன்று மாலைக்காலத்திலும் வழக்கம்போல் சுவாமி தரிசனம் செய்து போசனம் முடித்துக்கொண்டு படுக்கையையடைந்து படுத் தானெனினும் அவனுக்கு உறக்கம் வரவில்லை; அவன் மனத்திற் பலவகையான சிந்தனைகள் மாறிமாறி நிகழ்ந்தன. தான் ஊரிலிருந்து புறப்பட்ட நோக்கத்தை நினைப்பான்; நினைத்தது இன்னமுங் கைகூடவில்லையே யென்றெண்ணிக் கவலைப்படுவான்; எனினும் கதிர்காம யாத்திரை கைகூடப்போகின்றதேயென்று நினைத்த மாத்திரத்தே மகிழ்ச்சியடைவான். மடத்திலுள்ள சாதுக்களிருவரிடமுமுள்ள பெருங் குணங்களையும் தெய்வபக்தியையும் மதித்து மகிழ்ச்சியடைவான்; தனக்கு அன்னம் தரும் அம்மாளின் வயசையும் சின்ன வயசில் அவள் கொண்ட துறவையும், அவளிடத்துள்ள இதமான எண்ணம் நடைகளையும் எண்ணியெண்ணி ஆச்சரியமடைவான்; தான் தேடியலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணைக் கதிர்காமத்தில் ஒரு வேளை தான் சந்தித்தலும் கூடுமென்று அப்பெண் சொன்ன வாக்கு மெய்யாதலும் கூடுமெனச் சிந்தித்து மனந்தேறுவான்; இப்படி பலவாறு சிந்தித்தபடி கிடந்து இராமச்சந்திரன் மூன்றாம் யாமத்தில் துயிலடைந்தான்; அடுத்த நாள் துயிலெழுந்தான்; தன் நித்தியகடன்களை முடித்தான்; திருக்கோயிலுக்குப் போய்ச் சுவாமி தரிசனஞ் செய்தான்; கதிர்காமத்தையடைதற்கு உத்தரவு தரவேண்டுமென்று இந்தத் தலத்திற் கோயில் கொண்டருளிய முருகனை இரந்தான்; இரந்தார்க்கு ஈந்தருளும் வள்ளலல்லவா எங்கள் முருகவேலன்; அந்தப் பெருமான் அவனுக்கு உத்தரவளித்தாரென்பதைச் சொல்லவும் வேண்டுமா? அவன் சுவாமி தரிசனம் முடித்துக் கொண்டு சாதுக்களிருக்கும் மடத்திற்குப் போதலும், அவர்கள் வரவேற்று அன்னமிட்டு உபசரித்தார்கள்; போசனம் முடித்துக்கொண்டு இராமச்சந்திரன் அந்த மடத்தின் முன்புறத்துள்ள திண்ணையில் இருந்தான்; அச் சாதுக்களிருவரும் தாங்களும் போசனஞ் செய்தபின் அவனிருக்கு மிடத்திற்குச் சமீபமாக விநயத்தோடு நின்றார்கள்.

"அப்படியானால் ஆநந்தம்"

இராமச்சந்திரன் அவர்களைப் பார்த்து "ஆச்சிமாரே, கதிர்காம யாத்திரை புறப்படுவது எப்போதென்பதை யறிந்தீர்களா" என்று வினவ, அன்னம் பரிமாறிய அம்மாள், நாளை வெள்ளிக்கிழமை கழித்து அடுத்த வெள்ளிக்கிழமை புறப்பட உத்தேசித்திருக்கிறார்களாம்; இனி முருகன் திருவருள் எப்படியோ அறியோம்" என்று பதில் சொன்னாள். அப்படியானால் மிக ஆநந்தம் என்றான் இராமச்சந்திரன்; பின்னரும் அந்த அம்மாள் அவனை நோக்கி, "ஐயா, நீங்கள் யாத்திரை புறப்படும் வரையும் தவறாமல் இங்கு தானே வந்து போசனஞ் செய்து போக வேண்டும்; இன்னும் உங்களுக்கு ஆக வேண்டியவை யேதுமிருந்தால் இந்த மடத்திலுள்ள நாங்களே அவற்றைச் செய்யச் சித்தமாயிருக்கிறோம் அதிதிகளை உபசரிக்கவேண்டுமென்பது எங்கள் நியதி" என்று இதமுடன் சொன்னாள்; "உங்கள் வாக்கைத் தட்டாமல் உங்களுடைய விருப்பத்திற்கு இசைய நடப்பது என் கடமை" என்றான் இராமச்சந்திரன்; பின்னர் அடுத்தநாள் மத்தியானம் வருவதாகச் சொல்லி விட்டு இராமச்சந்திரன் தானிருக்குமிடத்திற்கு மீண்டான். இவை இங்ஙனமாக, தான் கதிர்காம யாத்திரை செய்தற்கு முந்தி ஒருமுறையேனும் விசாலாட்சியைக் கண்டு அவளுக்கும் விஷயத்தைச் சொல்லிப் போதல் வேண்டுமென நோக்கங்கொண்ட துறவியம்மாள் அன்றிரவு 9 மணிக்கு மேல் விசாலாட்சியின் இல்லத்தை யடைந்தாள்; அந்த அம்மாளின் வரவைக் கண்ட விசாலாட்சி அவளை ஆநந்தத்தோடு வரவேற்றுச் செய்யவேண்டிய உபசாரமெல்லாஞ் செய்து, பால் பழம் அருந்தச்செய்து தன் படுக்கையறையில் தானே அந்த அம்மாளும் படுத்துறங்குதற்கான வசதிகளையும் வழக்கம்போற் செய்து வைத்தாள்; துறவியம்மாள் தன் படுக்கையிலிருந்து கொண்டு விசாலாட்சியை அன்புடன் பார்த்து "அம்மா, என்னையும் அந்தக் கதிர்காமத்தையன் தன் தலத்திற்குக் கூப்பிடுவான் போலிருக்கிறது; எங்கள் மடத்திலுள்ள சாதுக்களும் அயல் மடத்திலுள்ள தொண்டர்களும் திருவருளை முன்னிட்டு அடுத்த வெள்ளிக்கிழமை கதிர்காம யாத்திரை புறப்பட நிச்சயித்திருக்கிறார்கள்; நானும் அவர்களுடன் போய்க் கதிரையாண்டவனைத் தரிசித்துவரக் கருத்துக்கொண்டேன், இதனை உமக்குச் சொல்லி உம்மிடத்திலும் விடைபெற்றுப்போக வந்தேன்" என்று கண்களில் நீர்ததும்ப, ரோமம் பொடிப்ப, ஆநந்தம்பெருக முருகனைத் தியானித்துக் கைகூப்பியபடி சொன்னாள்; கேட்ட விசாலாட்சியும் பிரதி நமஸ்காரம்செய்து, மகிழ்ச்சியடைந்தாளாய், "ஆச்சி அப்படியானால் எனக்கும் அது ஆநந்தம்; அந்தக் கதிரையாண்டவன் சந்நிதியில் என் குறைகளையும் முறையிடுங்கள்; என் செய்வேன்? உங்களுடன் கூடிக்கொண்டு கதிர்காம யாத்திரை செய்ய எனக்கும் ஆசை; ஆனால் என்னாசையை அந்த முருகன் எப்பொழுது நிறைவேற்றி வைப்பானோ நான் அறியேன்" என்று சொல்லிக் கலங்கினாள்; "கவலைப்பட வேண்டாம் அம்மா, உனக்கு வருங்குறை யாதுமில்லை; அருளொழுகும் பன்னிரண்டு திருவிழிகளையுடைய அந்த ஆறுமுகப் பரம்பொருள் உலகிலுள்ள சகல உயிர்களையும் கடைக்கணிக்கும் போது உன்னைமாத்திரம் புறக்கணிப்பானென்று எண்ணிக் கவலைப்படாதே; கருணைகூர் முகங் களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய" என்று பெரியோர் பாடியிருத்தலை அம்மா நீயே முந்தி எனக்குச் சொல்லியிருந்தாய்; ஆனதாற் கவலை வேண்டாமடியம்மா; அவன் அங்கிருந்தாலும், நீ இங்கிருந்தாலும் அவனருள் வந்து கூடும்" என்று சொல்லித் தேற்றினாள்; பின்னர் இருவரும் உறங்கினர்; புலரிக்காலத்திற்கு முன் அந்த அம்மாள் நித்திரைவிட்டெழுந்தாள்; விசாலாட்சி ஒரு பையிற் பணத்தையிட்டு "ஆச்சி, இந்த அற்ப பணத்தைக் கதிர்காம யாத்திரைச் செலவிற்காகவும், முருகனுக்குக் காணிக்கையாகவும் என்னிடம் ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று சொல்லி இரு கரங்களாலும் கொடுக்க, அந்த அம்மாள் அதனை ஏற்றுக்கொண்டு தன் கரத்தினாலே விசாலாட்சியின் நெற்றியில் விபூதியைப் பூசி அவளிடம் விடை பெற்றுக் கொண்டு தானிருக்கும் திருமடத்திற்கு விரைந்து போனாள்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1945 டிசெம்பர் 06
விசாலாட்சி: (முற்றொடர் - 79)

யாத்திரை புறப்படுதல்

குறித்த வெள்ளிக்கிழமை காலை எல்லோரும் வழக்கம்போல் தங்கள் காலைக்கடன் முடித்துக்கொண்டு அங்குள்ள முருகக்கடவுள் சந்நிதியில் வந்து கூடினார்கள்; பூசையாதலும் எல்லோரும் தரிசனஞ் செய்தார்கள்; பின் தொண்டர்களிருக்கும் மடத்திலுள்ளவர்களுள் புராணம் படித்துப் பொருள் சொல்லத் தக்கவர்களைப் புராண படனஞ் செய்வோர்களாகக் கொண்டு அந்த முருகப்பெருமான் சந்நிதியிலேயே கந்த புராண படனம் தொடங்கலாயிற்று. காப்புச் சொல்லி ஒருவர் விதிப்படி வாசிக்க இன்னுமொருவர் பொருள் சொல்வாராயினர்; கந்தபுராணப் படிப்பை அந்தச் சந்நிதானத்திற்றானே தொடங்கிக் கதிர்காமம் போகும் மார்க்கத்திலும் கதிர்காமத்திலும் பின்னர் மீண்டு வரும்போதும் கிரமமாக முறைப்படி படித்து யாத்திரையால் மீண்டுவந்தவுடன், புராணம் ஆரம்பிக்கப்பட்ட அந்த முருகப் பெருமான் சந்நிதியிற்றானே புராண படனத்தைப் பூர்த்திசெய்வதென்பதே அவர்கள் கொண்ட நியதி. அந்தத் தொண்டர் கூட்டம் கதிர்காமயாத்திரை செய்யப் புறப்படுகின்றதென்ற மங்கல செய்தியை முந்தியே அறிந்த அயலட்டத்திலுள்ள அன்பர்கள் பலர் கதிர்காமத்தையனுக்குக் காணிக்கையையும் யாத்திரிகர்களுக்கு வழிச் செலவுக்காகிய பொருள்பண்டங்களையுங் கொண்டு வந்து அங்கே கூடினார்கள்; சுபமூர்த்தமாதலும் கதிர்காம யாத்திரை செய்யும் நியதி பூண்டவர்களாகிய ஆண்கள் தாங்களணிந்திருந்த காதணி மோதிர மென்னு மிவைகளையும், பெண்கள் தாங்களணிந்திருந்த ஆபரணங்களையும் அகற்றி, உருத்திராக்க மாலையணிந்து, காவியுடை தரித்துக்கொண் டார்கள்; மாங்கல்யத்தோடு கூடிய பெண்கள் மாத்திரம் மாங்கல்யமொன்றை அகற்றாது, காவியுடையும் உருத்திராக்கமுந் தரித்தனர்; இது இந்த நாட்டிலே கதிர்காம யாத்திரை செய்வோர் கைக்கொண்டுவரும் பழைய முறையாகும்; இராமச்சந்திரனுக்கும் அங்குள்ள தொண்டர்கள் காவித்துணியும் உருத்திராக்கமும் அணியும்படி கொடுத்தார்கள்; அவன் ஏற்று அணிந்து கொண்டான்; அவன் முந்திக் கொண்டு வந்த பயணப்பை பொருள் பண்டமெல்லாம் பெண் சாதுக்கள் மடத்திலேயே க்ஷேமமாக வைக்கப்பட்டன; யாத்திரிகர் ஒவ்வொருவரும் காவி தோய்க்கப்பட்ட பயணப்பை ஒவ்வொன்று வைத்துக்கொண்டார்கள்; யாத்திரைக்கு ஆக வேண்டிய பண்டங்களெல்லாம் அவ்வப்பைகளில் வைக்கப்பட்டன; யாத்திரை செய்வோரை வழி யனுப்பும்வண்ணம் அயலட்டத்திலிருந்து வந்த வர்களெல்லாம் தாங்கள் கொண்டுவந்த காணிக் கையையும் வழிச்செலவிற்கான பொருளையும் அந்த யாத்திரிகர்களிடம் கொடுத்து ஆண்கள் சாஷ்டாங்கமாகவும் பெண்கள் பஞ்சாங்கமாகவும் வீழ்ந்து வணங்க, அவர்கள் விபூதி வழங்க, ஏற்றுப் பூசி அவர்களுடைய ஆசியையும் பெற்றார்கள்; அந்த இரண்டு மடங்களிற் சேராதவர்கள் சிலரும் யாத்திரை செய்ய நோக்கங் கொண்டு முன் சொன்ன பிரகாரம் கஷாயந் தரித்து உருத்திராக்கம் பூண்டு தொண்டர் கூட்டத்தினருடன் வந்து சேர்ந்தார்கள். முருகப்பெருமானை வழிபாடு செய்துகொண்டு, அங்கு வந்தவர்கள் வழிவிட, அத் தொண்டர் கூட்டத்தினர் கதிர்காம யாத்திரை செய்யப் புறப்பட்டார்கள்; அந்த நேரத்தில் யாத்திரிகர்களின் தொகை ஆண்களும் பெண்களும் சேர்ந்து முப்பது பேர்வரையிலிருக்கும்.

"உயிர்மங்குபொழுது கடிதே
மயிலின்மிசை வரவேணும்"

அவர்கள் புறப்படும்போது மத்தியானம் ஒரு மணி வரையிலிருக்கும்; எல்லோரும் புறப்பட்டு "அரகர" என்ற முழக்கத்தோடு செல்கிறார்கள்; சற்றுத் தூரம் போனபின்னர், கதிரமலைப் பேரின்பக் காதலிற் சில கண்ணிகளைப் பாட, மற்றையோர் ஆநந்தமாகக் கேட்டுக்கொண்டு செல்வர்; சிலர் கந்தாலங்காரம், கந்தரநுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், திருப்போரூர்ச் சந்நிதிமுறை, திருச்செந்தூர் முருகன்பிள்ளைத் தமிழ் என்னுமிவைகளை முறைமுறையே தனித் தனி பாட, ஏனையோரனைவரும் பயபக்தியோடு கேட்டுக்கொண்டு போவார்கள்; ஒருவர் அண்ணாமலை ரெட்டியார் பாடிய காவடிச்சிந்தை இராகதாளத்தோடு படிக்க, பலர் மகிழ்ச்சியோடு கேட்டுக்கொண்டு நடக்கலாயினர்; திருப்புகழ்ச் சாமியார் என்றொரு துறவி திருப்புகழைச் சுதிலயம், சந்தம் அமையப் பக்தியுடன் பாட, பலர் இடையிடையே வேலும் மயிலும் சொல்லிக்கொண்டு, திருப்பாக்களைக் கேட்டு ஆனந்தமடையலாயினர். அதன் பின்னர் அங்குள்ள தொண்டர்கள், சாதுக்கள் மடத்துள் அந்த இளம் சந்நியாச அம்மாளைத் திருப்புகழ் பாடும்படி கேட்டார்கள்; உடனே அந்த அம்மையார் முருகன் திருநாமத்தை உச்சரித் துக்கொண்டு பின்வரும் திருப்புகழைப் பாடுவாளாயினாள்.

தொந்திசரிய மயிரே வெளிறநிரை
தந்தமசைய முதுகே வளையஇதழ்
தொங்கவொருகை தடிமேல் வரமகளிர் -நகையாடி

தொண்டுகிழவ னிவனா ரெனஇருமல்
கிண்கிணெனமு னுரையே குழறவிழி
துஞ்சகுருடு படவே செவிடுபடு -செவியாகி

வந்தபிணியு மதிலே மிடையுமொரு
பண்டிதனுமெ யுறுவே தனையுமள
மைந்தருடைமை கடனே தெனமுடுக -துயர்மேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையழுது விழவே யமபடர்கள்
நின்றுசருவ மலமே யொழுகவுயிர்
மங்குபொழுது கடிதே மயிலின்மிசை வரவேணும்

எந்தைவருக ரகுநா யகவருக
மைந்தவருக மகனே யினிவருக
என்கண்வருக எனதாகுயிர் வருக -அபிராம

இங்குவருக அரசே வருகமுலை
யுண்கவருக மலர்சூ டிடவருக
என்றுமரிவி னொடுகோ சலைபுகல -வருமாயன்

சிந்தைமகிழு மருகா குறவரின
வஞ்சிமருவு மழகா வமரச்சிறை
சிந்தஅசுரர் கிளைவே ரொடுமடிய -அடுதீரா

திங்களவரவு நதிசூ டியபரமர்
தந்தகுமர அலையே கரைபொருத
செந்தினகரி லினிதே மருவிவளர் -பெருமாளே.

இத்திருப்புகழை அத் துறவியம்மாள் இன்னிசையுடன் பாடக் கேட்டோரனைவரும் நெருப்பிலிடைப்பட்ட மெழுகென உள்ளமுருகினர்; இந்தத் திவ்விய திருப்புகழைக் கேட்டு அந்த முருகக்கடவுளே திருவுள்ளமிரங்கிப் படிப்போர்க்கும் கேட்போர்க்கும் கருணைபுரிவரென்றனர் அங்கு வழி நடப்போருட் சிலர். அந்த அம்மாள் அத் திருப்புகழைப் பாடி முடித்தபின் வேறொரு தொண்டர்

"இத்தனை கொடு வேதனைப்படல் கண்டு
இன்னுமிரக்க மிலையா?
சித்திமுத்திகள் தருந் தெய்வமாணிக்கநதி சேருங் கதிரைநகர்
திகழ்சுப் பிரமணியரே நான்-இத்தனை

என நல்லூர் நாவலரவர்கள் இயற்றிய கதிர்காம வேலவர் கீர்த்தனத்தைப் பாடினார். அத் தொண்டர்களெல்லாரும் இப்படியே ஆநந்தமாகப் பாடிக்கொண்டும், சிவநாமங்களைச் சொல்லிக் கொண்டும் அன்று பொழுதுபடும் நேரத்தில், தாங்கள் யாத்திரை புறப்பட்ட தலத்திலிருந்து 18 மைல் தூரத்திலுள்ள வாரிவனநாத சுவாமி கோவில் எனச் சொல்லப்படும் ஒரு புராதன சிவன் கோவிலை யடைந்தனர். அத் திருக்கோயிலின் மேலைவீதியிலுள்ள அழகிய பரந்த தாமரைத் தடாகத்தைக் கடந்து அந்த யாத்திரிகர்களனைவரும் முகங் கால் கை சுத்தி செய்து சந்தியா வந்தனம் முடித்துக்கொண்டு திருக்கோயிலின் சந்நிதானத்தையடைய திருக்கோயிலிற் பூசை நிகழ்ந்ததும், அவர்களனைவரும் பயபக்தியோடு சுவாமி தரிசனஞ் செய்தனர்; அதன் பின்னர் அத் தொண்டர்கள் சிவசந்நிதானத்தில் இருந்து முறையே கந்தபுராணம் படித்துப் பொருள் சொல்ல, அவர்களுடன் அத் தலத்திலுள்ளவர்களும் வந்து புராணங் கேட்டு மகிழ்ந்தனர். புராணம் படித்து முடிந்தவுடன் அத்தலத்திலுள்ளவர்கள் அவர்களை அழைத்துக் கொண்டு போய் திருமடத் திலிருக்கச் செய்து அவர்களுக்குப் பால், பழம் முதலியன வழங்கி உபசரித்ததும் அன்றிரவு அவர்கள் அத்திருமடத்திலே தங்கி விடிதற்கு ஐந்து நாழிகைக்கு முந்தியேயெழுந்து தம் காலைக் கடன்கள் முடித்துக்கொண்டு புறப் பட்டுச் சிறிதுதூரம் போய்க் கச்சாய் கடற்கரை வழியே செல்வாராயினர்.

வெருகல் கங்கைக் கரையிலுள்ள கந்தசுவாமி கோவிலை யடைந்தனர்

அந்த யாத்திரிகர்கள் அவ்வாறு வழிநடந்து மத்தியானத்திற்கு முந்தியே, மார்க்கத்திலுள்ளதாகிய ஒரு பிள்ளையார் கோவிலையடைந்து, வழிநடந்த சிரமந் தீர்த்துக்கொண்டு அக்கோவிலின் மருங்கிலுள்ள திருக்குளத்தில் ஸ்நானம் முதலியன முடித்துச் சுவாமி தரிசனம் செய்து, தெற்கு வீதியிலுள்ள ஒரு மடத்திலே தங்கினர். பெண் தொண்டர்களாயுள்ளோர் சமையல் செய்தனர்; ஆண்களாயுள்ளோர் அதற்காக வேண்டிய உதவிகள் செய்வாராயினர்; இங்கு வந்தவர்கள் கதிர்காம யாத்திரை செய்வோரென்பதை யறிந்த மாத்திரத்தே அந்த அயலிலுள்ள அன்பர்கள் அரிசி, காய்கறி, கறிக்குரிய வெஞ்சனம், பால், தயிர், நெய், வாழையிலை முதலிய பொருள்களையெல்லாம் கொண்டுவந்து கொடுத்து அவர்களை வணங்கினர். அப்படி வணங்கியவர்களுக்கு அத் தொண்டர்களும் கதிர்காமத்தையன் திருநாமத்தைச் சொல்லி வாழ்த்தி விபூதி வழங்கினர். சமையல் முடிந்தபின் அந்த தொண்டர்கள் தாம் கொண்டு செல்லும் வேற் படையை அத்திருமடத்தில் எழுந்தருள வைத்துப் பால் இளநீர் முதலியன கொண்டு அபிஷேகஞ் செய்து, பூமாலை சாத்தி, தாம் தூய முறையில் சமைத்த அன்னங்கறி முதலியவற்றை நிவேதித்துப் பூசை செய்தபின் புராண படனந் தொடங்கினர்; அத் தொண்டர்களோடு அந்த அயலிலுள்ள அன்பர்களும் புராணங் கேட்டு மகிழ்ந்தனர். பின்னர் எல்லோரும் போசனஞ் செய்து இளைப்பாறிய பின் பிற்பகல் நான்கு மணிக்கு மேல் அத்தலத்தை விட்டு அப்பாற் செல்வாராயினர். இந்த விதமாகவே இத் தொண்டர்கள் அதிகாலையிலும் பின்னேரத்திலும் வழிநடந்தும் மத்தியான வேளையிலும் இராக்காலத்திலும் மார்க்கத்திலேயுள்ள கோயில்களிலேனும், கதிர்காம யாத்திரை செய்வோர்க்கென முற்காலத்திலேயே சகல வசதிகளும் அமைக்கப்பட்ட திருமடங்களிலேனும் தங்கித் தங்கள் சந்தியாகாலக்கடன்கள் முடித்துக் கொண்டு, வேற்படைக்குப் பூசை செய்து, புராணப் படனஞ் செய்து மத்தியானத்தில் மாத்திரம் போசனஞ் செய்து யாத்திரை செய்வாராயினர். இப்படிப் பல வாரங்களாக வழிநடந்து திருக்கோணமலையை யடைந்து கோணேசப் பெருமானையும் வழிபட்டு அப்பால் வெருகல் கங்கை கரையிலுள்ள கந்தசுவாமி கோயிலை மாலைக் காலத்தில் அடைந்தனர்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1945 டிசெம்பர் 13
விசாலாட்சி: (முற்றொடர் - 80)

"ஐயோ முருகா!
ஆறு அள்ளிப்போகிறதே!"

அந்த கங்கைக்கரையிற் சென்று அனைவரும் அங்கசுத்தி செய்து மாலைக்கடன் முடித்துத் திருக்கோயிலிற் சென்று, பூசையாகும் வேளை சுவாமி தரிசனம் செய்து, விபூதிப் பிரசாதம் முதலியன பெற்று, அவ்வெருகற் பெருமானுடைய சந்நிதியில் கந்தபுராணம் படித்துப் பொருள் சொல்ல, யாத்திரை சென்றோருடன் அங்குள்ள பலரும் வந்திருந்து, பக்தியுடன் புராணம் கேட்டனர்; படனம் முடிந்தவுடன் அத் தலத்திலுள்ள அன்பர்களே அந்த யாத்திரிகர்கள் இராத் தங்குவதற்காகிய இடம் ஒழுங்கு செய்து போசனம் முதலியனவும் வசதி செய்தனர்; அடுத்த நாளும் அந்த யாத்திரிகர்களை அங்கே தங்கும்படி அத்தலத்திலுள்ளார் கேட்க, அவர்களும் அதற்குடன்பட்டு அங்கே தங்கினார்கள்; அடுத்தநாள் புலரிக்காலமாதலும் எல்லோரும் நித்திரைவிட்டெழுந்து ஸ்நானம் முதலிய காலைக் கடன்களை முடிக்கும் வண்ணம் ஆற்றங்கரையை யடைந்தனர்; ஆற்றங்கரையிலே அந்த யாத்திரிகர்களாயுள்ளாருள் ஆண்கள் ஒரு புறத்தும் பெண்கள் ஒரு புறத்துமாக ஒதுங்கி நின்று ஸ்நானஞ் செய்யலாயினர்; ஆண்களுட் சிலர் ஸ்நானம் முடித்துக்கொண்டு கரையிலுள்ள மணலில் இருந்து சந்தியாவந்தனஞ் செய்யலாயினர்; சிலர் ஸ்நானஞ் செய்துகொண்டுந் துணியலம்பிக் கொண்டும் ஆற்றங்கரையிலே நின்றனர்; பெண் யாத்திரிகர்களுள் அந்த இளைய அம்மாளும் முதிர்ந்த அம்மாளும் அமுங்கி முழுகும்போது ஆற்றின் வேகத்தினால் இளஞ் சாதுவின் கால்நிலை தவறிவிட, வேகமாகவே பாயும் வெருகல் கங்கை வெள்ளம் அவளை அள்ளிக்கொண்டு சென்றது; அதனைக் கண்ட முதிர்ந்த அம்மாள் ஓலமிடுதலும், ஆற்றங் கரையில் நின்று மூழ்கியவர், இருந்து சந்தியாவந்தனை செய்தவர்களாகிய எல்லோரும் "ஆபத்தென்ன" என்று சத்தமிட்டுக்கொண்டு அந்த முதிய அம்மாள் நின்று ஓலமிடும் இடத்திற்கு ஓடிப்போனார்கள்; "ஐயோ, முருகா! அந்த ஆச்சியை ஆறள்ளிக்கொண்டு போகின்றது" என்று தன் கையால் ஆற்றில் அள்ளுண்டு போகும் சாதுவைக் காட்டித் துடித்துப் பதைத்து நின்று கத்தினாள்; ஆடவரும் பலர் நின்று சத்தமிட, அந்தத் தலத்திலுள்ள சில வாலிபர் நன்கு நீந்திப் பழகியவர் உடனே ஆற்றிலே பாய்ந்து விரைந்து நீந்திப் போயினர்; முதிய அம்மாளுக்குச் சமீபத்தில் ஓடிவருதற்கு முந்தியே, அந்தப் பெண் சாதுவை ஆறள்ளிக் கொண்டு போவதைக் கண்ட இராமச்சந்திரன் ஆற்றிற் பாய்ந்து வேகமாக முற்பட்டு நீந்திச் சென்றான்; ஆற்றிலிறங்கியவர்கள் அத்தனை பேரும் விரைந்து நீந்திச் சென்றனரேனும், ஆறள்ளிக்கொண்டு போகும் அம்மாளை மீட்கக்கூடிய சமீபத்திற்போக எவராலும் முடியவில்லை; அப்படி நீந்திச்செல்பவருள் இராமச்சந்திரன் மாத்திரம் தன்னுயிரையும் பொருட்படுத்தாது வேகமாக நீந்தி அந்த அம்மாளுக்குச் சமீபமாய் போய் அவளைப் பற்றலாமென்று தாவுவதற் கிடையில், அந்த அம்மாளை ஒரு சுழியிற் கொண்டுபோய் விட்டுச் சுழலச் செய்தது; இராமச்சந்திரனும் முந்தியே வேகமாகச் செல்லும் நதிகளில் நீந்தப் பயின்றவனாதலால் அச்சுழியிடை புகுந்து அந்த அம்மாளின் கேசத்தைத் தன் ஒற்றைக் கையினாற் பற்றி, தலையை தண்ணீர் மேற் சிறிது நிமிர்த்திய வண்ணம், தான் அந்த அம்மாளின் கைக்கு அகப்படானாய் பிடித்துவந்து எட்டுந் தண்ணீர் கண்டவுடன் அந்த அம்மாளைத் தன் இரு கரத்தினாலும் ஏந்திய வண்ணம் கொண்டு வந்து கரையில் வளர்த்தினான்; ஆற்றில் நீந்தி யவர், கரையில் நின்று ஓலமிட்டோர்களாகிய எல்லாரும் அந்த இடத்திற்கோடிப் போனார்கள்; உயிருண்டோ என்று அந்த அம்மாளின் நாசித் துவாரத்திற் கை வைத்து உணர்ந்து பார்த்தார்கள்; உயிர் உண்டு; வெள்ளத்தை அதிகம் குடித்துவிட்டமையினாலும் ஏக்கத்தினாலும் அந்த அம்மாள் ஸ்வரணையற்றுக் கிடக்கக் காணப்பட்டாள்; அத்தலத்திலுள்ளாருள் ஒரு பெரியவர், அவ்வம்மாளைத் தூக்கிக் கொண்டு போய் மடத்திற் சேர்த்து உடையை மாற்றி உடம்பை உலர்த்தும்படி அங்குநின்ற பெண்களிடம் சொல்ல, அவர்கள் அப்படியே செய்தார்கள்; பின்னர் அந்தப் பெரியவர் தமக்குக் கைவந்த ஔஷதம் ஏதோ கொடுத்து அந்த அம்மாளின் மயக்கத்தை நீக்கினார். வெருகற் கந்தசுவாமியாரின் விபூதிப் பிரசாதத்தை அந்த அம்மாளின் உச்சியிலும் நெற்றியிலும் முகத்திலும் உடம்பின் எவ்விடத்திலும் பெண்கள் உறுத்திப் பூசினார்கள்; அம்மாள் கண்விழித்துப் பார்க்க, எல்லாரும் சந்தோஷங் கொண்டார்கள்.

பட்டதெல்லாம் போதும் பரமேட்டீ?

"ஐயா, முருகா! இதுவும் உன் சோதனையா?" என்று அந்த அம்மாள் மெல்லச் சொல்லிவிட்டுப் பின்னர்க் கிடந்தபடியே அங்குள்ளவர்களைப் பரிவுடன் பார்த்து, "ஆண்டவனே! என்னை ஆற்றில் அள்ளுண்டு மாண்டு போகவிடாமல், ஏன் மீட்டீர்கள்; பட்டதெல்லாம் போதும் பரமேட்டீ!" என்று மெல்லச் சொல்லுதலும், அங்கே நின்ற முதிய அம்மாளும் மற்றைப் பெண்களும் "ஆச்சி, ஏன் அப்படிச் சொல்லுகின்றீர்? இவையெல்லாம் கதிர்காமத்தையனுடைய திருவிளையாட்டுப் போலும்; அவனைத் தரிசிக்க வந்தவிடத்தில் அவன் அன்பர்களுக்கு எவ்வகையான ஆபத்தும் நேரவிடான்; நீர் கவலைப்பட வேண்டாம் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லித் தேற்றினார்கள்; அந்த அம்மாள் தன் அயர்ச்சி நீங்கினவளாய், முருகப்பெருமானை தரிசிக்க வேண்டுமென்று ஆசைப்பட, மற்றைய பெண் சாதுக்கள் அந்த அம்மாளை மெல்லென அணைத்து நடத்திக் கொண்டுபோய் வெருகலிற் கோயில் கொண்டருளிய முருகப்பெருமானுடைய சந்நிதியில் விட, அம்மாள் கண்களில் நீர் தாரை தாரையாக வடிய நின்று பெருமானைத் தோத்திரம் பண்ணி வணங்கினாள்; அந்த நேரத்தில் அவளுடைய நிலைமையைக் கண்டு அங்கு நின்றோரனைவரும் உள்ளம் உருகினர்; முந்திச்சொன்ன அப்பெண் சாதுக்களே அந்த அம்மாளை அணைத்து மெல்லமெல்ல நடத்த அந்த அம்மாள் முருகன் திருக்கோயிலை மும்முறை வலஞ்செய்து சந்நிதியில் வந்து பஞ்சாங்கமாக வீழ்ந்து வணங்கியெழுந்து நின்றாள்; நின்றபோது, பூசை முடித்து அருச்சகர் விபூதி புஷ்பம் தீர்த்தம் சந்தனம் என்னுமிவைகளை அந்த அம்மாளுக்கும் மற்றையெல்லாருக்கும் வழங்கினர்; பின்பு பெருமானுக்குக் காலைப் பூசை வேளையில் நிவேதனமாக வைத்த இனிப்புக் கலந்த பாலை ஒரு பாத்திரத்திற் கொண்டு வந்து அந்த அம்மாளிடம் நீட்ட, அம்மாள் அதனை இரு கரத்தாலும் ஏற்று "இதனை என்ன செய்வதென்று" கேட்க, அர்ச்சகர் "பெருமானுக்கு நிவேதித்த பாற்பிரசாதம் உட்கொள்ளுங்கள் ஆச்சி" என்று ஆதரவுடன் சொல்ல, "முருகா உனக்கே அர்ப்பணம்" என்று சொல்லிக் கொண்டு அதனை உட்கொண்டுவிட்டு உடனே அச்சந்நிதானத்தில் இருந்தாள்; ஆயாசமனைத்தும் ஆதவனைக் கண்ட பனியென அகன்றன. அந்த அம்மாள் உடனே எழுந்து, சந்நிதியில் நின்று "அப்பனே என்னை இப்படியா சோதிக்கத் திருவுளங் கொண்டாய்; உன்னைத் தரிசிக்க வரும் அடியார் கூட்டத்துள் நானொருத்தி அழுக்குள்ளவளென்று திருவுளத்தில் மதித்து என்னை உன் புண்ணிய தீர்த்தமாகிய இந்த ஆற்றில் அள்ளுண்டு போகச் செய்து கழுவினை; இப்படிக் கழுவியமையினால் என் புறத்திலுள்ள அழுக்கு நீங்குமேயொழிய, அறுமுகங் கொண்ட கருணையங்கடலே! என் அகத்திலுள்ள அழுக்கு கழுவுண்ணுமா? அந்த அழுக்கைக் கழுவதற்கு உன் கருணை வெள்ளமல்லவோ வேண்டும் முருகையா! பன்னிருகையனே!" என்று கண்ணீர் தாரை தாரையாகச் சொரிய நின்று கரைந்தாள். அப்பொழுது அயலில் நின்ற பெண்கள் "ஆச்சி, வாருங்கள் ஆயாசந்தீர ஏதும் அருந்த வேண்டுமல்லவா" என்று பக்கலில் வந்து அழைப்ப, "ஆச்சிமாரே! முருகனருளால் எனக்கு ஒரு ஆயாசமுமில்லை; ஆனாலும் நான் வருகிறேன்" என்று சொல்லி முகத்திற் புன்சிரிப்பரும்ப அவர்களுடன் கூடிக்கொண்டு திருமடத்திற்கு போனாள் அம்மாள்; இங்ஙனமாக மற்றைய யாத்திரிகர்களும் சந்நிதியில் சில மணிநேரம் கந்தபுராண படனஞ் செய்துவிட்டு அத்திருமடத்திற் சென்று அன்னாகாரம் அருந்தினர்.

என்னை மீட்டவர் ஆர்?

இன்று காலை வந்த ஆபத்தும் பின்னர் அது நீங்கிய விதமும் எல்லாம் முருகன் திருவருட் செயலாகுமென்று அந்த யாத்திரிகர்களும் அவர்களைத் தரிசிக்கும்படி வந்த ஏனைய அன்பர்களும் திருமடத்திலே கலந்து பேசிக் கொண்டிருந்தார்கள்; ஆற்றில் அள்ளுண்டு மீட்கப்பட்ட அந்த அம்மாள் மாத்திரம் முதிய சாது அம்மாளுடன் மடத்திலே ஒருபுறத்தேயிருந்தபோது, முதிய அம்மாளை அந்த அம்மாள் பார்த்து; ஆச்சி, ஆற்றில் அள்ளுண்டு போன பாவியாகிய என்னை மீட்டவர் ஆர்" என்று வினவினாள். "வேறெவருமல்ல, அம்மா அந்த இராமச்சந்திரன் சாமி, ஐயோ! அந்தப் புண்ணியவான், உம்மை மீட்கப்பட்டப்பாடு கொஞ்சமா? ஆற்றில் உம்மை மீட்கும்படி நீந்தியபோது ஒரு சமயத்தில் அவருடைய உயிரும் ஆபத்திலிருந்தது; தன்னுயிரை வேண்டாமென்றுதான் அவர் உம்முடைய உயிரை மீட்கத்துணிந்தார்; இந்தப் பொல்லாத ஆழமான வேகமாய்ப் பாயும் ஆற்றிலே சுழியோடி ஒரு குழந்தையை மீட்டுக் கையில் ஏந்திவந்தவாறல்லவா, அம்மா உம்மை அந்தச் சாமி பாடுபட்டுக் கரையிற் கொண்டுவந்து சேர்த்தார்; உங்களுக்கு இரண்டாமுறை உயிர் தந்தவர் அந்தச் சாமி தான், அம்மா" என்று கண்களில் நீத் ததும்பச் சொல்லி முடித்தாள் அந்த முதிய அம்மாள்; இப்படிச் சொல்லக்கேட்ட அந்த இளைய அம்மாள் "அப்படியா" என்று சொல்லிவிட்டு திடுக்குற்றாள்; நெட்டுயிர்த்தாள்; ஆழ்ந்த சிந்தனையில் அமிழ்ந்தியவளாகக் காணப்பட்டாள்; அன்று பிற்பகல் நான்கு மணி வரையில் அந்த யாத்திரிகர்களனைவரும் வெருகல் முருகப்பெருமானை வணங்கிக்கொண்டு அங்குள்ள அன்பர்களிடம் அநுமதிபெற்று அப்பாற் செல்வராயினர்.

* * *

உலகம் பலவிதம்: 1945 டிசெம்பர் 27 விசாலாட்சி: (முற்றொடர் - 81)

"சிந்தையை யடக்கியே சும்மாவிருக்கின்ற திறமரிது"

அந்த யாத்திரிகர்கள் அவ்வாறு வழி நடந்து போகும்போது அவர்களிலொரு அன்பர் "கதிரை யாத்திரை விளக்கம்" என்னும் புத்தகத்திலுள்ள:-

நொண்டிச்சிந்து:

"அங்கிருந்து செல்லும்போதில்
அரிப்புக் கண்டேன்
ஆனைத்தீவு கண்டேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனையூர் தனைக் கடந்தேன்-வெருகற்
செய்ய வேலவர் வாழ்
சந்நிதி கண்டேன்
கானக்குறத்தி கணவன் - எங்கள்
கந்தன்முரு கையனை நான்
கண்டு தொழுதேன்

எந்தையெனக் கருள்போற்றி - என்னை
இப்பிறவிநீக்கிஈ டேற்றுவாய் போற்றி
கந்தா கடம்பா போற்றி - என்தன்
காரணா பூரண ஆரண போற்றி
என்றேனவ்விடம் விட்டேன் அப்பால்
இன்பமுடன் நல்ல தண்ணீர்ப்
பாலையுங் கண்டேன்"

என்று பத்தியோடு பாடிக்கொண்டு போக மற்றையோரெல்லாரும் ஆநந்தமாகக் கேட்டுக் கொண்டு சிரமந்தோற்றாது வழிநடந்து நல்ல தண்ணீர்பாலை யென்னுமிடத்தை யடைந்து அங்குள்ள கதிரை யாத்திரிகர் மடத்திலே தங்கினார்கள். அங்கே தங்கியிருந்து தாங்கள் செய்ய வேண்டிய சந்தியாவந்தனம் புராணபடனம் இவைகளைச் செய்து முடித்து ஆகாரமருந்தி விட்டு ஆண்கள் ஒருபுறத்தும் பெண்கள் ஒதுக்கமான இன்னொரு புறத்தும் அத்திருமடத்திற் படுத்துறங்குவாராயினர்; ஆனாலும் அவர்களுள் இருவர் மாத்திரம் படுத்துக் கிடந்தனரேனும் உறங்கிலர்; "இது என்ன விபரீதம்! வழிநடந்த சிரமம் அதிகமிருப்பவும் நடுச்சாமமாகியும் இன்னமும் எனக்கு உறக்கம் வரவில்லையே; மாறுபாடான சிந்தனையிற் செல்லாத என்னுள்ளம் இந்த நேரத்திற் கட்டறுத்தலையும் கழுதை போற் பல விஷயத்திலும் செல்லுகின்றதே; சிந்தையை யொருவழிப்படுத்திக் கதிரையாண்டவனைத் தியானிக்கலாமென்றால் என் சிந்தை ஒரு வழி படுத்தலின்றி குழம்புகின்றதே; "சிந்தையை யடக்கியே சும்மாவிருக்கின்ற திறமரிது" என்று பெரியோர்கள் அறியாமலா பாடினார்கள்! தூயதென்று இதுகாறும் நான் மதித்திருந்த மனம் இன்று நிலைமாறிய காரணமென்ன? சரி, சரி விளங்குகின்றது; அந்தச் சாது அம்மாளை ஆற்று வெள்ளத்திலிருந்து மீட்டபின்புதான் என் மனநிலை சிறிது சஞ்சலமடைகின்றது; "பயிற்சி மடவார் பழகுதல் வேண்டா..." என்று படித்தவர் சொல்லியிருப்பது உண்மைதான்; சாது அம்மாள் அவளுடைய தோற்றத்தை யுத்தேசிக்கும் போது நான் முந்தி மதித்திருந்த வயசிலும் குறைந்தவளென இப்பொழுது புலப்படுகின்றது; உடம்படங்கலுமுள்ள விபூதிப் பூச்சினால் மறைந்திருந்த அந்த அம்மாளின் மேனி, ஆற்று வெள்ளத்திற் கழுவுண்ட பின்பல்லவா, வெண்முகிலால் மூடுண்ட பூரண சந்திரன் அம்முகில் அகலப் புலப்படுகின்றவாறு சொர்ணமயமாக என் கண்களுக்குக் காட்சியளித்தது; சிறந்த குணமும், உயர்ந்த ஒழுக்கமும், இதமான ஊடாட்டமும், யௌவனமும், தெய்வபக்தியோடு கூடிய சிந்தையும், கேட்டார்ப் பிணிக்கும் இனிய வார்த்தையும் இசைத்திறமையும் இவைகளோடு சொல்லொணா வனப்பும் அமையுமானால் அப்படிப்பட்ட பெண்ணை ஆடவருள் உத்தமர் யார்தான் விரும்பார். இந்த அம்மாள் இளமையும் பெண்மைக்குரிய நலங்களும் அவமே போக ஏன் இப்படித் துறவியாகக் காலங்கழிக்கத் துணிந்தாளென்பதற்கு நியமம் எனக்குப் புலப்படவில்லை; ஆம்! ஆம்! தன் பெருமை தனக்குத் தெரியாதென்பர்; அது நிசந்தான்; ஆனால் இந்த அம்மாள் விஷயத்தில் இவள் பெருமை பிறர்க்குந் தெரியாமலிருந்து விட்டது; பிறர் அறியாமலிருக்க வேண்டுமென எண்ணிப்போலும் இந்த அம்மாள் துறவி வேடம் பூண்டனள்; அப்படிப் பூணாதிருந்தால் இந்த அம்மாள் முந்தியே ஒரு உத்தம புருஷனுடைய இல்லக்கிழத்தியாய் அமைந்துவிடுவாள்; என் செயலாம்; எதற்குங் கொடுத்து வைக்க வேணும்" என்று பெருமூச்சு விடுகின்றான்; சிறிது அயர்கின்றான் இராமச்சந்திரன்.

முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டவாறு

ஆனால், அயர்ச்சி அவனை நீடித்த நேரம் பீடிக்கவில்லை; தன் அயர்ச்சி நீங்கியவுடன் பின்னரும் இராமச்சந்திரன் சிந்திக்கின்றான்:- "சீசீ! இது என்ன பேதைமை! உலக பற்றை அறவே துறந்த அந்தச் சந்நியாச அம்மாளை முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டவாறு நான் ஆசைப்படலாமா? அல்லாமலும் கடவுளடியவர் கற்புடைமகளீர் முதலிய இவர்களிடத்தில் யான் பக்தி பாராட்டிப் பணிவுடன் ஒழுகுவதொழியக் காதல் கொண்டு இடர்ப்படலாமா? அப்படி இடர்ப்படுவதும் தூய கருமமாகிய கதிர்காம யாத்திரைக்குப் புறப்பட்டுப் போகுஞ் சமயத்திலா? தூயவை துணிந்தபோது, இடையொன்றாற் றடையுண்டாகுமோ? என் மதியீனம் இருந்தவாறென்னை! அந்த அம்மாள் என்னையொரு உத்தம குணமுடைய நல்லொழுக்கம் பூண்ட படித்த யோக்கியமான வாலிபனென்று மதித்து என்னிடத்தில் விசுவாசமும் அன்பும் மதிப்பும் வைத்து நடந்து வருகிறாள் அந்த அம்மாள் அப்படித் தூய முறையில் என்னுடன் ஊடாட நான் இப்படி விபரீத எண்ணங் கொண்டது பெருந்தவறு; இந்த எண்ணத்தை நான் அறவே மறந்து விட வேண்டும்; "பாழான என் மனங் குவிய வொரு தந்திரம் பண்ணுவதுனக் கருமையோ" என்று தாயுமான சுவாமிகள் தம்முடைய மனத்தை யடக்கும்படி இறைவனருளையே இரந்துள்ளார்; ஆதலினாலே இப்படியான விபரீத எண்ணம் நேராவண்ணம் நான் இறைவனையே தோத்திரம் பண்ணுவேனென்று நிச்சயித்துக் கொண்டு பின்வருமாறு பாடுவானாயினான்:-

தெட்டிலே வலியமட மாதர்வாய் வெட்டிலே
சிற்றிடையிலே நடையிலே சேலொத்த விழியிலே
பாலொத்த மொழியிலே சிறுபிறை நுதற்கீற்றிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொட்டிலே அவர்கட்டு பட்டிலே புனைகந்த
பொடியிலே யடியிலேமேற் பூரித்த முலையிலே
நிற்கின்ற நிலையிலே புத்திதனை நுழையவிட்டு
நெட்டிலே யலையாம லறிவிலே பொறையிலே
நின்னடியர் கூட்டத்திலே நிலைபெற்ற வன்பிலே
மலைவற்ற மெஞ் ஞான ஞேயத்திலேயு னிருதாள்
மட்டிலே மனதுசெல நினதருளு மரு ள்வையோ
வளமருவு தேவையரசே வரைராச னுக்கிருகண்
மணிய யுதித்த மலை வளர்காதலிப்பெண்ணுமையே

இந்தப் திருப்பாடலை இராமச்சந்திரன் பரவசத்தோடு சிறிது உயர்த்திப் படித்தான்; அந்த மடத்துட் படுத்துறங்கியவருட் சிலர் உறக்கம் நீங்கி அவன் பாடுவதைக் கேட்டனர்; பலர் உறங்கியபடியே கிடந்தார்கள்; அந்த இரவு முழுவதும் உறக்கமின்றிக் கிடந்த அச்சாது அம்மாள் காதில் இராமச்சந்திரன் பாடிய இப்பாட்டு இனிதுப்பட்டது; பாடுபவன் இராமச்சந்திரன்றான் என்பதையும் அந்த அம்மாள் அறிந்து கொண்டாள்; இராமச்சந்திரன் இத்திருப்பாடலை பாடியபின் மன ஆறுதலடைந்த் தானாய் மெல்ல உறங்கி விட்டான்.

"நிலையிற் பிரியேல்"

"அந்தச் சாமி என்னை ஆற்றுவெள்ளத்திலிருந்து மீட்டபோது தம் உயிரையும் பொருட் படுத்திலரெனவும், ஒரு குழந்தையை ஏந்திக் கொண்டு வந்தமைபோலத் தம் இரு கைகளிலும் ஏந்திக்கொண்டு வந்தார் என்றும் இந்த ஆச்சி சொல்லக் கேட்டேன்; அவர் என்னை அப்படி மீட்டுக்கொண்டு வந்த நேரத்தில், வெள்ளத்திலே தோய்ந்த எனது உடை என்ன நிலைமையில் இருந்ததோ! ஐயோ! நான் அறியேன்; ஆபத்து வேளையாக விருந்தாலும் என்னுடைய உடம்பை அவர் பரிசித்து விட்டார்; என்னுயிரை முதல் கதிர்காமத்தையன், பின்னர் அவரே பாதுகாத்தார்; அவர் அந்த நேரத்தில் என்னை மீட்காதொழிந்தால், நான் ஆற்றில் அள்ளுண்டு போன போது அவர் என்னை மாளாமே காத்திராவிட்டால் நான் உயிர் மாண்டு பிணமாகிவிட, அந்த ஆறு அள்ளிக்கொண்டு போய்ப் பிணத்தைக் கடலிலே தள்ளிவிட, கடலிலுள்ள சுறா முதலாம் பெரிய மற்சங்களுக்கு இதுவரையில் என்னுடல் இரையாய்விடும். இதனால் அவர் பரிசித்த இந்த உடம்பும் அவர்காத்த என்னுயிரும் அவருக்கேயுரியன, அல்லாமலும் நான் அவரை இன்னாரென்றறிந்து கொண்டும் அவரோடு மாறுவேடத்தோடுதான் ஊடாடுகின்றேன்; அவர் என்னை இன்னாளென்று அறியாமலிருந்தும் என்னிடத்தில் மரியாதையாகவும் தூயமுறையிலும் ஊடாடி வருகிறார்; தாம் பல மாசங்களாக ஆன ஊணும் போதிய உறக்கமுமின்றிச் சிரமப்பட்டு அலைந்து திரிந்தும், இன்னமும் இரஞ் சிதத்தைக் காணவில்லையே என்று கவலைப்பட்ட வண்ணமே அலைகிறார்; இப்படிப்பட்டவர் விஷயத்தில் நான் இன்னும் என்னைக்காட்டாது ஊடாடுதல் பெருந் துரோகந்தான்; ஆனால் நான் என்ன செய்வேன்? என் பர்த்தா தம் அந்திய காலத்திலே எனக்குச் சொல்லிய சொல்லொன்று என்னுள்ளத்தை உபாதிக்கின்றது; அவருடைய சொல்லின்படி நடக்கவேண்டுமென்றே நான் படாதபாடெல்லாம் பட்டு இப்படியான துறவிக்கோலத்தையும் பூண்டேன்; அந்த நியதியோடிருந்த என்னுள்ளம் இப்பொழுது நிலைக்கெட்டுச் சஞ்சலப்படலாமா? அன்றியும் கதிரையாண்டவனைத் தரிசிக்கப் போகும் நேரத்திலா இந்தத் தடுமாற்றம் உண்டாவது? மனமே நான் வேறு என்னுள்ளமாகிய நீ வேறாக பிரிந்து என்னை ஏன் சஞ் சலத்துட் புதைக்கின்றாய்? நெஞ்சே! நிலையிற் பிரியேல் என்ற மூதாட்டி வாக்கை கைவிடாதே; மேலும், நீ தான் அவரை விரும்பினாலும் அவர் உன்னை விரும்புகிறாரென்பதை நீ யறியமுடியுமா? ஐயா! முருகா! ஏன் இந்த அபலையை இப்படிச் சோதிக்கிறாய்? நீ சோதிக்கத் தக்கவளும், உன்னை சோதிக்கத் தக்கவளும் எங்கள் தாயாகிய அந்த வள்ளி நாயகி யொருத்திதான் என்பதை பன்னிரண்டு கண்கொண்ட பரம்பொருளே! நீ யறிவாயே..." என்று இப்படியெல்லாம் அந்த அம்மாள் தன் னுள்ளத்தோடு வாதாடிக்கொண்டு கிடக்கும் போது தான், "தெட்டிலே வலிய மடமாதர் வாய் வெட்டிலே" என் இராமச்சந்திரன் படித்த பாட்டு அந்த அம்மாள் காதிற்பட்டது.

* * *

[தொடர்ச்சி 81 - 93 இல்லை]

உலகம் பலவிதம்: 1946 ஏப்ரல் 05
விசாலாட்சி: (முற்றொடர் - 94)-

"உங்களுக்கு நீடித்த ஆயுள்போலும்"

தங்கள் வீட்டு வேலைக்காரனாகிய இராமனையனுப்பித் துறவியம்மாளை அழைப்பிக்கவேண்டுமென விசாலாட்சி எண்ணிக்கொண்டிருப்பதற்கிடையில் அடுத்த நாள் இரவு 8 மணிக்குமேல் அந்தத் துறவியம்மாள் அங்கே வந்தாள்; அவள் வரவைக்கண்ட விசுவநாதன் பெருமகிழ்ச்சியடைந்தானாய் "ஆச்சி, வாருங்கள், வாருங்கள், உங்களுக்கு நீடித்த ஆயுள் போலும்" என்று உபசார மொழி கூறுதலும் "ஏன், அப்படிச் சொல்லுகிறீர்கள்; நீடித்த ஆயுளுக்கு இருக்க வொண்ணாதென நாம் விரும்பும்போது, நீங்கள் அதற்கு மாறாக விரும்புகிறீர்கள்" என்று புன்னகை யரும்பப் பேசிக்கொண்டு தலைவாசலில் வந்து ஏறுதலும், துறவியம்மாளின் இனியகுரலென்பது தன் காதிற்பட்ட மாத்திரத்தே உள்ளேயிருந்த விசாலாட்சி விரைந்து வந்து முகத்தில் ஆநந்தம் பெருக அந்த அம்மாளை உபசரித்து இருக்கச் செய்தாள்; அந்த அம்மாள் விசாலாட்சியைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து "தங்கைச்சீ, உம்முடைய கணவனார் நான் இங்கு வரக் கண்டமாத்திரத்தே, எனக்கு நீடிய ஆயுள் என்று வாழ்த்துகிறாரே, என்ன காரணம்" என்று கேட்க, விசாலாட்சி "ஆச்சி, வேறொன்றுமல்ல, உங்களைக் காணவேணும் காணவேணும் என்று இவர்கள் காத்திருந்தார்கள்; உங்களிடம் இராமனை யனுப்பி உங்களை அழைப்பிக்க வேண்டு மென்றும் நேற்றுச் சொன்னார்கள்; இதற்கிடையில் நாங்கள் செய்த பாக்கியம், நீங்களாகவே இங்கு வந்துவிட்டீர்கள்; இதனையிட்டுத்தான் இவர்கள் அப்படிச் சொல்லியிருக்கலாமென நினைக்கிறேன்" என்று சொன்னாள்.

"அதற்காகத்தான் நான் அப்படிச் சொன்னேன்" என்றான் விசுவநாதன்; "என்னைக் காணவேண்டுமென விரும்பியது எதற்கோ" என்று கேட்டாள் துறவியம்மாள்; "வந்துவிட்டீர்கள் தானே, இனியெல்லாம் விபரமாகச் சொல்லுகிறேன்" என்றான் விசுவநாதன்; இதற்கிடையில் விசாலாட்சி அந்த அம்மாளை வீட்டினுட் கூட்டிச்சென்று ஏதோ ஆகாரம் அருந்தச் செய்தாள்; ஆகாரம் முடித்துக்கொண்டு அத் துறவியம்மாள் மீண்டும் விசுவநாதன் இருக்குந் தலைவாசற் பக்கஞ் செல்ல, அவன் அவளை உபசரித்து இருக்கச் செய்தான்; "என்னைக் காணவேணுமென விரும்பியது எதற்கோ" என்று துறவியம்மாள் கேட்ப "வேறொன்றுமல்ல, ஆச்சி, அந்த இரஞ்சிதத்தைப்பற்றி உங்களுக்கு எல்லாந் தெரியுமென என் மனைவி சொல்ல அறிந்தேன்; அந்தப் பெண்ணெனிலோ ஒரு உத்தமி; பொல்லாத ஊழினால் தன் பெற்றாரைப் பிரிந்து ஊர்விட்டுத் தேசம் விட்டுத் தன்னந் தனியளாய் அவள் அலைந்து திரிய நேர்ந்தது; அந்தக் கன்னிகை பட்ட கஷ்டங்களுட் சிலவற்றை நான் அறிவேன்; இப்பொழுது அந்தப் பெண்ணுடைய கதியென்னவாயிற்றென்பதை அறிந்திலேன்; அவளும் நானும் உடன் பிறந்தார்போற் சில காலம் ஊடாடி வந்தோம்; ஆனால், இந்தப் பொல்லாத உலகம் அப்படி நாமிருவரும் ஊடாடுவதற்குத் தானும் இடங் கொடாது தூற்றத் தலைப்பட்டது; அதனால் அப்பெண்ணை நான் காணுதலும், அவளுடன் பேசுதலும், அவளுக்கு ஏதும் இயன்ற உதவி புரிதலும் இயலாதாயின; உங்களைப் போன்ற உண்மையான துறவிகளிடத்து உள்ளொன்று புறம்பொன்றாக ஊடாடுதல் முடியாது; ஆச்சி, உண்மையாக, அந்த உத்தமியை என் உடன் பிறப்பென மதித்து நடந்தேன்; அவளும் அப்படியே என்னை மதித்து நடந்தாள். இப்பொழுது ஒரு முறையாயினும் என் தங்கையைப் பார்க்கவேண்டுமென ஆசைப்படுகிறேன்; விஷயம் முழுவதும் உங்கள் தங்கை விசாலாட்சிக்குச் சொல்லியிருக்கிறேன்" என்று விசுவநாதன் பரிவுடன் கூறினான்; இவற்றையெல்லாம் அவதானத்தோடு கேட்டுக் கொண்டிருந்த துறவியம்மாள் சற்றுநேரம் யாதும் வார்த்தையாடாதிருந்து பின்னர் விசுவநாதனைப் பார்த்து "அப்பனே, அந்தப் பெண் பலநாட்களாக என்னுடன் நெருங்கி ஊடாடினளெனினும், என்னிடத்தில் விசுவாசம் பாராட்டி நடந்தாளெனினும், சில அந்தரங்கமான கருமங்களை எனக்குச் சொல்லி என்னுடன் யோசித்தனளெனினும் தனக்கும் உமக்குமிடையேயுள்ள தூய தொடர்பை எனக்கு இற்றைவரையில் வெளியிட்டிலள்; பெண்கள் மனசை அளவிட முடியாதென்று ஆண்களே சொல்லுகிறார்கள்; எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ என்பது பழமொழி. இரஞ்சிதத்தின் உள்ளக்கிடக்கையை நான் அறியேன்; ஒருபோது உங்களிருவருக்கு மிடையேயுள்ள தூய தொடர்பைத் தான் வெளியிட்டால், பொல்லாத உலகம் விபரீதமாக எண்ணிக் கொள்ளுமெனப் பயந்துபோலும் அந்தப் பெண் எனக்குஞ் சொல்லாது மறைத்திருத்தலுங் கூடும்; கிடக்க, கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்" என்றவாறு துறவியாகிய எனக்கேன் அந்த விசாரமெல்லாம், இரஞ்சிதத்தை நான் இனிமேற் காணும்போது நீர் அவளைக் காணவிரும்பிய தாகச் சொல்லுகிறேன்" என்று கூறி முடித்தாள்.

"மாசற்ற நெஞ்சுடையாள்"

"ஆச்சி, அந்த உதவியை எனக்குச் செய்யுங்கள்; ஆனால், இரஞ்சிதத்தையிட்டு விபரீதமாக ஏதும் எண்ணாதீர்கள்; அவள் மாசற்ற நெஞ்சுடையவள்; உயிர்போக நேர்ந்தாலும் தவறு செய்ய உடன்படாள்; நான் சொல்வதை நிசமென நம்புங்கள்" என்று விசுவநாதன் பின்னருஞ் சொல்ல, "அப்பனே, நான் நம்புவதனாலும்; நம்பாதொழிவதனாலும் அந்தப் பெண்ணுக்கு ஒரு கெடுதியுமில்லை; அவளிடத்திற் சந்தேகங் கொண்டால் என் துறவுக்கே பங்கம் நேரும்; ஆனதால் அதனையிட்டு நீர் கவலைப்பட வேண்டாம்" என்று தேறுதல் சொன்னாள் துறவியம்மாள்; அந்தச் சமயத்தில் விசாலாட்சியும் தலைவாசற் பக்கம் வந்தாள்; வந்தவள் தன் கணவனை நோக்கி, "எங்கள் ஆச்சியைக் காணவேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தீர்களே இப்பொழுது ஆச்சியுடன் பேசவேண்டிய கருமங் களெல்லாம் பேசிவிட்டீர்களோ" என்று கேட்க, விசுவநாதன் "ஓம் பேசிவிட்டேன்; இரஞ்சிதத்தைக் காண நேர்ந்தால் நாங்கள் தேடியதாக இரஞ்சிதத்திற்குத் தாம் தெரிவிப்பதாம்; ஆச்சி, அந்த ஒரு உதவியையுஞ் செய்தாற் போதும்" என்றான் விசுவநாதன்.

"அண்ணா" என்னை மறந்துபோனீர்களா?

"இந்த ஆச்சி தெரிவித்தபின் இரஞ்சிதம் தானாக வந்து உங்களைக் காண்பதா? இல்லையேல் நீங்கள் அந்த அம்மாளைப் போய்க் காண்பதா" என்று புன்சிரிப்பரும்பத் தன் கணவனைக் கேட்டாள் விசாலாட்சி; இரஞ்சிதம் வந்தாற் கண்டுகொள்வேன்; இல்லையேல் இருக்குமிடந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிப்போய்க் காண்பேன்; இதில் என்ன சங்கடம்" என்றான் விசுவநாதன்; "ஆச்சி, இரஞ்சிதத்தை ஊருக்கு அழைத்துப் போவதற்காக, அந்த அம்மாளுடைய நெருங்கிய உறவினரொருவர் வந்திருக்கிறாராம்" அவருடைய பெயர் இராமச்சந்திரனாம்; அவர் மிகவும் நல்லவராம்; இரஞ்சிதத்திற்கும் ஊருக்கு மீண்டுபோகப் பிரியமாம்; இவைகளெல்லாம் உண்மைதானா" என்று ஒன்றுமறியாதாள் போல் வினாவினாள் விசாலாட்சி; இவைகளைக் கேட்ட துறவியம்மாள் "அப்படியொருவர் இரஞ்சிதத்தின் நெருங்கிய உறவினர் ஊரிலிருந்து இங்கு வந்து நிற்பது நிசந்தான்; அவர் உங்கள் விவாக தினத்தன்று பந்தரில் வந்திருந்தார்; நீங்கள் காணவில்லை போலும்; ஆனால் இரஞ்சிதத்திற்குத் தான் ஊருக்குப் போகவேண்டு மென்ற நோக்கம் உண்டோ இல்லையோ அதனை இப்பொழுது நாம் அறியேம்" என்றாள் துறவியம்மாள்; இங்ஙனமாக விசாலாட்சி தன் நாயகனைப் போசனமருந்தும் வண்ணம் அழைத்துப் போகும் போது, அத் துறவியம்மாளுக்கு ஏதோ குறிப்பாற் சொல்லிவிட்டு, அவளைத் தன் படுக்கையறைக்குக் செல்லச்செய்தாள்; தன் நாயகன் போசனமுண்டபின் தானும் போசனம் முடித்துக்கொண்டு தன் படுக்கையறைக்குச் சென்றாள்; சென்று சிறிதுநேரம் அந்தத் துறவியம்மாளுடன் பேசிவிட்டு, மீண்டு தன்னாயகன் இருக்குமிடத்திற்கு வந்தாள்; தன் கணவனை அன்புடன் நோக்கி "உண்மையாக இரஞ் சிதத்தை இப்பொழுது காண விரும்புகின்றீர்களா" என்று புன்முறுவலுடன் வினாவ, விசுவநாதன், "என் அன்பிற்குரியாளே, அந்தக் கன்னிகையை நான் காண்பது, உமக்கேனும் துறவியம்மாளுக்கேனும் விருப்பமில்லையெனக் கண்டால், நான் இந்த நிமிஷமே அந்த நோக்கத்தை அறவே மறந்து விடுகிறேன்" என்று சிறிது கலக்கத்துடன் சொன்னான்; "ஏன் கவலைப்படுகிறீர்கள்; உங்கள் நோக்கத்திற்கு மாறாக நடப்பவளல்லேன்; எங்கள் துறவியம்மாளெனிலோ மகா உத்தமி; அந்த அம்மாளையிட்டுச் சந்தேகப்படாதீர்கள்; இரஞ்சிதத்திடம் உள்ள நல்ல குணமெல்லாம் இந்த அம்மாளிடத்தில் இருக்கும்; இந்த அம்மாளிடத்திலுள்ள நற்குணங்கள் முழுவதும் இரஞ்சிதத்திடங் காணலாமாம்; இருவருக்குமிடையே எவ்வகையான பேதமுமில்லையாம்; இப்பொழுதே நீங்கள் இரஞ் சிதத்தைப் பார்க்க வேணுமென்றாலும் எங்கள் துறவியம்மாள் மூலமாக அந்த அம்மாளை இங்கே தருவிக்கலாமென யோசிக்கிறேன்" என்றாள் விசாலாட்சி; "என் கண்ணே, என்ன வினோதமாக விருக்கின்றது! என்னுடன் வேடிக்கையாக வார்த்தையாடுகின்றீரா? இந்த அகாலமான நேரத்தில் எங்கள் துறவியம்மாளை அனுப்பி இரஞ்சிதத்தை இங்கே வரச்செய்வது அழகல்ல; நாளைப் பகல் வரக் கூச்சப்பட்டால், மாலை வேளையில் வந்தாற் போதும்" என்று இதமாகச் சொன்னான் விசுவநாதன்; "இரஞ்சித அம்மாள் இப்பொழுது வந்தால், நீங்கள் வரவேண்டா மென்று சொல்வீர்கள் போலும்" எனப் புன்முறுவல் பூத்தபடி கேட்டாள் விசாலாட்சி; "வருகிறவர்களை வேண்டாமென்று சொல்ல மனமெழுமா" என்றான் விசுவநாதன்; "சற்று நேரம் இங்கே இருந்து கொள்ளுகிறீர்களா நான் படுக்கையறைக்குட்போய் ஐந்து நிமிஷத்துள் மீண்டு வருகிறேன்" என்று மனையாள் கேட்ப, "ஐந்து நிமிஷமல்ல, அரைமணி நேரமானாலும் போய் மீண்டு வரலாமே; இதற்கும் உத்தரவு கேட்க வேணுமா" என்று அன்பு பெருகச் சொன்னான் நாயகன்; உடனே நாயகி தன் படுக்கையறையை நோக்கிச்சென்றாள்; அந்த நேரம் சிந்தனையோடு கூடியவனாயிருந்தான் விசுவநாதன்; ஐந்து நிமிஷம் செல்லவில்லை யெனலாம்; "இங்கே பாருங்கள் உங்கள் அரிய தங்கையாரை" என்று சொல்லியபடி மகாலக்குமியையொத்த ஒரு கன்னிகையைத் தன் கையால் அணைத்து மெல்ல நடத்திக்கொண்டு வந்து தன் கணவன் முன்னிலையில் விட, கண்ட கணவன் திடுக்குற்றுச் சரேலென இருக்கை விட்டெழுந்து நின்று தன் கட்புலனிற் சந்தேகங் கொண்டானாய் "நான் காண்பது கனவா, நனவா" என்று பதைபதைத்த வண்ணம் நின்றான்; "அண்ணா! என்னை மறந்து போனீர்களா" என்று குயில்பயில் ஓசையோடும் ஆதரம் பெருகக் கேட்டாள் அந்தப் பெண்; "என் அருமைத் தங்காய் உம்மை எப்படி மறக்க முடியும்" என்று கண்களில் நீர்ததும்ப நின்றான் விசுவநாதன்; இருவர் நிலையையுங் கண்டு எல்லையற்ற மகிழ்ச்சியோடு நின்றாள் விசாலாட்சி.

* * *

உலகம் பலவிதம்: 1946 ஏப்ரல் 12
விசாலாட்சி: (முற்றொடர் - 95)

"உண்மைக்கு அழிவில்லை"

"நீடித்த நாளாகப் பிரிந்திருந்த நீங்கள், ஒருவரை யொருவர் சந்தித்த பின் சந்தோஷ மடைவதல்லவோ முறையாகும்; அப்படியிருப்ப ஏன் கலங்குகிறீர்கள்" என்று புன்சிரிப்புடன் சொன்னாள் விசாலாட்சி; "அது கிடக்க, எங்கே உங்கள் துறவியம்மாள், கூப்பிடுங்கள் பார்ப்போம்" என்றான்; சந்தேகங்கொண்ட விசுவநாதன்; "உங்கள் தங்கைச்சியும் எங்கள் துறவியம்மாளும் ஏககாலத்திலே இங்கு வந்து நிற்றல் இயலாது" என்று புன்முறுவல் பூத்த வண்ணம் புகன்றாள் விசாலாட்சி; "ஏன், இருவரும் ஒருவரா" என்று விசுவநாதன் தன் மனையாளை வினாவ, "உங்களுக்கு உண்மை இன்னமும் புலப்படவில்லையா" என்று கேட்டாள் விசாலாட்சி; "பெண்கள் ஆண்களை அணாப்ப நினைத்தால், ஆண்கள் அதற்குத் தப்ப முடியுமா" என்று விசுவநாதன் கேட்க, "அதற்கு விடை நீங்கள் தான் சொல்லவேண்டும்" என்றாள் விசாலாட்சி; இப்படிக் கணவனும் மனைவியும் வேடிக்கையாக வார்த்தையாடினரெனினும், இரஞ்சிதம் கவலையோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியவளாகவே ஒதுங்கி நிற்கக் காணப்பட்டாள்; அதனை அவதானித்த விசுவநாதன் அவளை அன்புடன் பார்த்து "தங்காய், ஏன் கவலைப்படுகின்றீர்? உம்மை மகிழச் செய்யும்படியே நாங்களிருவரும் வேடிக்கையாக வார்த்தை யாடுகிறோம்" என்று சொல்லுதலும், இரஞ் சிதம் மேலும் அதிக கவலையோடுகூடியவளாய் "அண்ணா, பஞ்சம் போம், பஞ்சத்திலே பட்ட வசை போகாது என்ற விதமாக, என் துயரங்கள் கஷ்டங்களெல்லாம் உங்களை ஒருங்கு கண்டபின் ஒருவாறு கழிந்து விட்டன; ஆனால் அந்தத் தாசிக்கிழவி வீட்டிலே நான் தங்கியிருக்க நேர்ந்த காலத்திற் கேட்ட வசையும் பட்ட பரிபவமும் என்னுயிர் நீங்கினாலும் விட்டுநீங்க மாட்டா, அண்ணா, இவைகளை யிட்டுத்தான் மனம் வருந்துகிறேன்" என்று கண்களில் நீர் ததும்பச் சொன்னாள். "தங்காய், உண்மைக்கு அழிவில்லையென்று உலகோர் சொல்வர்; இப்பொழுது உம்மேல் மெய்யன்பு பாராட்டும் நானே ஆரம்பத்தில் உம்மீது சந்தேகப்பட்டேன்; நீர் மறந்தும் பிழை செய்ய மாட்டீரென்பதை உம்மோடு ஊடாடிய பின்பே யறிந்தேன்; அப்படியே காலகதியில் உம்முடைய தூய ஒழுக்கத்தையும் நெறி திறம்பாமையையும் பெருங்குணங்களையும் உம்மீது சந்தேகங் கொண்டவர்களெல்லாரும் அறிவார்கள்; ஆனதால் என் அருமைத் தங்காய், நீர் அதையிட்டுக்கவலைப்பட வொண்ணாது" என்று இதமாகச் சொன்னான் விசுவநாதன்; "ஐயோ, எனக்கு என்ன முறை சொல்லி யழைப்பதென்று தெரியவில்லை; நான் சகோதரி என்றே சொல்லப் போகிறேன்" எனக் கூறிவிட்டு "என் அருமைச் சகோதரியே, சந்திரவதி பட்ட பாட்டைக் காட்டிலும் நீங்கள் அதிக பாடு பட்டுவிட்டீர்களா? அந்தப் புண்ணியவதி கேட்ட அவப்பேரைக்காட்டிலும் கொடிய அவப்பேரைக் கேட்டு விட்டீர்களா? பிள்ளையைக் கொன்று அணிகளைத் திருடிய கொலைகாரக் கள்ளி யென்று மல்லவா அந்தக் கற்புக்கரசி அவதூறு கேட்டாள்; பின் உண்மையெல்லாம் வெளிவந்தனதானே; ஆனதால் என் அருமைச் சகோதரமே, நீங்கள் இவைகளையிட்டுக் கவலைப்பட வேண்டாம்" எனத் தேற்ற இரஞ்சிதமும் ஒருவாறு தேறினாள்.

"உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்"

இரஞ்சிதம் ஒருவாறு மனந்தேறியவளாய்ப் பழையபடி தன் துறவியுடையைத் தரித்துக் கொண்டு அன்று அங்கேதானே தங்கினாள்; விசுவநாதன் விசாலாட்சியைப் பார்த்து, "அந்த இராமச்சந்திரன் என்பவரை எங்கள் இரஞ்சிதம் மூலமாக நாங்கள் இன்று எங்கள் வீட்டிற்கு அழைத்தல் முடியுமா" என்று கேட்க, "நான் எங்கள் அம்மாளைக் கேட்டுக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு விசாலாட்சி இரஞ்சிதத்தின் அறையுட் சென்று விஷயத்தை அவளுக்குச் சொன்னாள்; துறவியம்மாள் சற்று நேரம் யோசித்து விட்டு "நீங்கள் விரும்பினால் அவரை இங்கே வரவழைக்கலாம்; வேண்டுமாயின் நான் மடத்திற்குப் போகும்போது இராமனை என்னுடன் அனுப்புங்கள்; அவருக்கு விஷயத்தைச் சொல்லி இராமனுடன் அவரை இங்கு வரச்செய்கிறேன்" என்றான்; "ஆச்சி, நீங்கள் இங்கு நிற்கும்போதே அவர் வருவது நல்லதென என்னுடைய அவர் சொல்லுகிறார்" என்று விசாலாட்சி சொல்ல, துறவியம்மாள் பின்னருஞ் சிறிது யோசித்துவிட்டு "ஏதோ உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்; இராமனை இங்கே கூப்பிடுங்கள்" என்று சொல்ல, விசாலாட்சி இராமனைக் கூப்பிட, அவன் வந்து நின்றான்; "நான் இங்கே அவரை அழைத்ததாக, நீங்களே அவருக்கு இராமனிடஞ் சொல்லிவிடுங்கள்" எனலும், இராமனிடம் விசாலாட்சி சொல்லிவிட இராமன் இராமச்சந்திரன் இருக்கும் மடத்தை நோக்கிப் புறப்பட்டான்; புறப்பட்டவன் இராமச்சந்திரனிருக்கும் மடத்தை யடைந்து அவனைக் கண்டு, "சாமியாச்சி எங்கள் வீட்டில் நிற்கிறார்; தயவுசெய்து உங்களை அங்கே அழைத்துக் கொண்டு வரும்படி என்னிடஞ் சொல்லியனுப்பி யிருக்கிறார்" என்றான்; "அடுத்த மடத்திலிருக்குஞ் சாமியாச்சியா? விசுவநாதர் வீட்டிலா அந்தத் துறவியம்மாள் நிற்பது" என்று வினாவ, இராமன் ஓம் என்றான்; இராமச்சந்திரன் வருவதாக இராமனிடஞ் சொல்லிவிட்டுத் தான் ஆவசியகம் பார்க்கவேண்டிய சில கருமங்களைப் பார்த்துக் கொண்டு இராமனுடன் புறப்பட்டு விசுவநாதன் வீட்டிற்குச் செல்வானாயினான்.

இவை நிசந்தானா?

தங்கள் வீட்டிற்குவந்த இராமச்சந்திரனை விசுவநாதன் வரவேற்றுத் தக்கவாறு உபசரித்தான்; இதற்கிடையில் விசாலாட்சியும் அங்கே வந்து கதவோரமாக நின்றாள்; விசுவநாதன் இராமச்சந்திரனை அன்புடன் பார்த்து "நீங்கள் அன்று எங்கள் கல்யாண வீட்டிற் சமூகமாக விருந்தீர்க ளென்பதைக் கேள்விப்பட்டுச் சந்தோஷமடைந் தோம்; உங்களுடைய பெருந்தன்மையையும் இங்கே நீங்கள் வந்த வரலாற்றையும் எங்கள் துறவியம்மாள் சொல்ல, நாங்கள் அறிந்து சந்தோஷங் கொண்டோம்; உங்களைப் போன்ற உத்தமரை நேரிலே தரிசிக்க ஆசைப்படுகிறோம்; அதனாற்றான் எங்கள் துறவியம்மாள் மூலம் உங்களை இங்கே அழைப்பித்தோம்; எங்களால் உங்களுக்கு நேர்ந்த சிரமத்தையிட்டுப் பொறுத்துக் கொள்ளும்படி கேட்கின்றோம்; நான் மாத்திரம் உங்களைத் தரிசிப்பதானால் உங்கள் மடத்திற்கு நேரில் வந்திருப்பேன்; ஆனால் எனது மனைவியும் விரும்பியதாற்றான் இங்கு உங்களை அழைத்தோம்" என்று இதம் பெருகச் சொன்னான் விசுவநாதன்; "ஐயா, நீங்கள் சொல்லுங் குணங்களொன்றும் உண்மையாக என்னிடத்தில்லை; அந்தச் சாமியம்மாள் ஊரபிமானங் கொண்டு உங்களிடம் என்னைப் பாராட்டிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசியிருத்தல் கூடும்; மேலும் உங்கள் விவாகக் கொண்டாட்டத்திற்கு நான் அன்று வந்தபோதுதான் உங்கள் பெருமையையும் உங்கள் குடிப்பெருமையையும் அறிந்தேன்; உங்கள் பத்தினியைப்பற்றிப் பாராட்டித் துறவியம்மாள் எனக்கு இடையிடையே சொன்னதுண்டு; ஐயா, அந்நியனாகிய என்மீது நீங்கள் பாராட்டும் அபிமானத்தின் பொருட்டு உங்களுக்குத் துதி கூறுகின்றேன்; என்னை இங்கே நீங்கள் வரச் செய்தது எதன்பொருட்டென்பதை நான் அறியலாகுமா?" என்று விநயமாகக் கேட்டான் இராமச்சந்திரன். "நாங்கள் இதற்கு முந்தி நேரில் அறிந்திலமெனினும், உங்களைப்பற்றிக் கேள்விப்பட்ட மாத்திரத்தே உங்களை எங்கள் குடும்பத்தில் ஒருவர்போல் மதித்துக் கொண்டோம்; இரஞ்சிதமென்னும் உத்தமியை நீங்கள் தேடி வந்தீர்களென்றும், இப்பொழுது அந்த அம்மாள் சம்மதப்பட்டால் நீங்கள் அந்த அம்மாளை அழைத்துக்கொண்டு போவீர்களென்றும், அந்த அம்மாள் உங்கள் நெருங்கிய சுற்றத்தவரென்றும் அறிந்தோம்; இவை நிசந்தானா" என்று விசுவநாதன் கேட்க, இராமச்சந்திரன் "ஆர் மூலமாக அறிந்தீர்கள்" என்று வினாவ, "துறவியம்மாள் மூலமாகத் தான்" என்று விசுவநாதன் விடை சொல்ல, அப்படியானால் நிசமாகத்தானே யிருக்கவேண்டுமென்று சிரித்தபடி விடை சொன்னான் இராமச்சந்திரன்.

"தெய்வ சம்மதமும் அப்படியிருந்தால்"

"ஐயா, கேட்கிறோமென்றுகுறையெண்ணவொண்ணாது, அந்த இரஞ்சிதத்தை நீங்கள் உங்கள் இல்லக்கிழத்தியாகக் கொள்வதற்கு ஏதுந் தடையுண்டோ" என விசுவநாதன் பயபத்தி யோடு கேட்க, இராமச்சந்திரன் புன்னகை செய்து "ஐயா, அந்த விஷயமாக ஏதுமொரு முற்றை நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்லக்கூடிய நிலைமையற்றவனாயிருக்கிறேன்; மேலும் அந்த விஷயமாக நாம் ஊருக்கு மீண்ட பின்பே அங்குள்ள உற்றார் பெரியாருடன் யோசித்தல் வேண்டும்; நீங்கள் விசுவாசத்துடன் இக் கேள்வியைக் கேட்டமையினால் உங்களுக்கு இதுவொன்று மாத்திரம் நான் சொல்லத்தான் வேண்டும்; அந்தப் பெண் உட்பட எல்லார்க்கும் நீங்கள் கேட்ட விஷயம் சம்மதமாக விருந்தால், தெய்வ சம்மதமும் அப்படியிருந்தால், நான் அதற்கு உடன்படாமல் நிற்க முடியுமா" என்று சொல்லி முடித்தான் இராமச்சந்திரன்; "அந்தப் பெண்ணை இவர்கள் பார்க்க விரும்பவில்லையா" என்று விசாலாட்சி விசுவநாதனைக் கேட்க, விசுவநாதன் இராமச்சந்திரனுடைய முகத்தைப் பார்க்க அவன் "அந்தப் பெண் இப்பொழுது எங்கேயென அறியேன்" என்றான்; "இங்கேதான்" என்றாள் விசாலாட்சி; "பெண்ணுக்குச் சம்மதமானால் இங்கே வரச் செய்யலாமே" என்று இராமச்சந்திரன் விசுவநாதனைப் பார்த்துச் சொல்ல, விசுவநாதன் தன் மனையாளைக் குறிப்பாக நோக்க, உடனே அவள் வீட்டின் உட்பக்கஞ் சென்று இரஞ்சிதத்தைத் தனது ஆடையாபரணங்களினால் அலங்கரித்தபடி தலைவாசற் பக்கம் அழைத்து வந்தாள்.

* * *

உலகம் பலவிதம்: 1946 ஏப்ரல் 26
விசாலாட்சி: (முற்றொடர் - 96)

"ஆசை வெட்கமறியாது"

அன்னமென நடந்து விசாலாட்சியின் மருங்கில் மயிலென ஒதுங்கி நின்ற இரஞ்சிதத்தை இராமச்சந்திரன், "ஆசை வெட்கமறியாதென்றவாறு" தன் கண்களார அவதானித்துப் பார்த்தான்; பார்த்தனனெனினும் அவளுடைய முழுமதியன்ன முகத்தைப் பூரணமாகக் காண்டல் இராமச்சந்திரனுக்கு இயலாததாயிற்று ஏன்? இராமச்சந்திரன் இரஞ்சிதத்தைப் பார்க்க, இரஞ்சிதம் பூமிதேவியைப் பார்த்த வண்ணம் நின்றாளாதலினாற்றான்; துறவிக்குரிய உடையுடன் நின்று இந்த இரஞ்சிதம் இராமச்சந்திரனுடன் அதிக கூச்சமின்றிப் பேசியவள்தானே; இப்பொழுது இவளிடத்தில் வந்த மாறுதல் என்னையென்று கேட்பின், துறிவியான நேரத்தில் இரஞ்சிதம் இராமச்சந்திரனை இன்னானென அறிந்துள்ளாளெனினும், இராமச்சந்திரன் இவள் இன்னாளென்ற உண்மையை அறிந்திலனல்லவா? இராமச்சந்திரன் இரஞ்சிதத்தைப் பார்க்க, இரஞ் சிதம் நிலத்தைப் பார்த்தபடி நிற்க, இவர்களிருவர்க்கு மிடையேயுள்ள உண்மையான அன்பினை விசுவநாதனும் விசாலாட்சியும் பார்த்து மகிழ்ந்தார்கள்; பார்த்த கண்ணை மீட்க முடியாமல் நின்றான் இராமச்சந்திரன்; நிமிர்ந்து பார்க்க இயலாதவளாய் நின்றாள் இரஞ்சிதம்; இந்த நிலைமையிலுள்ளவர்கள் ஒருவரோடொருவர் உடனுக்குடன் வார்த்தை யாடுவரென எப்படி நாம் எதிர்பார்ப்பது; "ஏன் இவர்களோடு நீங்கள் பேசுவதில்லையோ" என்று இரஞ்சிதத்தைப் புன்னகையுடன் மெல்ல வினாவினாள் அயலேநின்ற விசாலாட்சி; "பேசாமல் நிற்க முடியுமா" என்று விசாலாட்சிக்கு மெல்லச் சொல்லிவிட்டு, இரஞ்சிதம் தன் வரவைக்கண்டு முந்தியே இருக்கைவிட்டெழுந்து நின்ற இராமச்சந்திரன் முகத்தை நாணம் மீதூரநோக்கி "ஏன் நிற்பான், உந்த ஆசனத்தில் உட்காரலாமே" என்று ஒவ்வொரு சொல்லாகப் பன்னுதலும் "கட்டளைப்படி செய்கிறேன்" என்று புன்னகையுடன் சொல்லிவிட்டு அவன் அங்குள்ள ஆசனத்தில் இருந்தான்; "என் பொருட்டு வெகுவாய் அலைந்து விட்டீர்கள்" என்று பூவையெனப் புகன்றாள் இரஞ் சிதம்; "அலைந்தமையினால் வந்த குறையொன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லை" யென்று இதமுறப் பதில் சொன்னான் இராமச்சந்திரன்; இதற்கிடையில் அங்குள்ளவர் களுடைய அநுமதியோடு விசாலாட்சி அவ்விடம் விட்டகன்று சிலநிமிஷஞ் செல்வதற்கிடையில் மீண்டு தலைவாசலையடைந்து, இரஞ்சிதத்தின் அயலிற் போய்நின்று ஏதோ மெல்லச் சொல்ல, இரஞ்சிதம் அப்படிச் சொல்லியதற்கு உடன்பட்டாளாய்த் தலையசைப்ப, உடனே விசாலாட்சி தன்னாயகனிடம் ஏதோ தெரிவிக்க, அவன் இராமச்சந்திரனைப் பார்த்து, "நீங்கள் சிறிது பால் அருந்தவேண்டுமென்று இவர்கள் விரும்புகிறார்கள்" எனலும், இராமச்சந்திரன் அதற்குச் சம்மதிக்க, இரஞ்சிதம் அவனை அதற்காகிய அறைக்கு அழைத்துச் சென்றாள்; விசுவநாதனும் விசாலாட்சியும் தலைவாசலிலேயே இருந்தார்கள்.

ஆளில்லாத் துக்கம் அழுதாலுந் தீராது

விசுவநாதன் விசாலாட்சியைப் பார்த்து, "இந்த இராமச்சந்திரனுக்கு இரஞ்சிதத்தை இல்லக்கிழத்தியாக ஏற்றுக்கொள்ளப் பிரியமென்பது அவர் எம்முடன் பேசிய பேச்சால் அறியக்கிடக்கின்றது; ஆனால், இரஞ்சிதத்தின் உள்ளக்கிடக்கை என்ன என்பதை நாம் அறியோம்; அதனை உசாவியறிவது உனது கடன்" என்று சொல்லுதலும், விசாலாட்சி "நான் ஒருவாறு இரஞ்சிதத்தின் நோக்கத்தை உசாவியுள்ளேன்; இராமச்சந்திரனுக்கு மனைவியாதற்கு இரஞ்சிதத்திற்கும் விருப்பந்தான்; ஆனால் அங்கனஞ் செய்யினும் தங்கள் ஊருக்கு மீண்டபின் தம் பெற்றார் உற்றார் உறவினருடைய சம்மதத்தையும் பெற்ற பின்பே மணஞ் செய்யவேண்டுமென்ற நோக்கம் அந்த அம்மாளிடத்திற் காணப்படுகின்றது; அது நீதியான நோக்கமென்றே நானும் நினைக்கிறேன்" என்றாள்; "அது நீதியான நோக்கந்தான்; அப்படியானால் அவர்களை விரைவில் ஊருக்கு மீண்டு செல்வதற்கான ஒழுங்குகளை நாங்கள் செய்து வைப்பதுதானே முறையாகும்" என்றான் விசுவநாதன்; "ஆகவேண்டிய ஒழுங்குகளை நாங்கள் செய்தல் வேண்டும்; ஆனால், அதில் ஒரு சங்கடமிருக்கிறது; இராமச்சந்திரனுடன் இரஞ்சிதம் பெண்பாலார் வேறெவருமின்றிக் கூடிக்கொண்டுபோதற்கு உடன்படுவாளோ என்பது அந்த அம்மாளைக் கேட்டறிய வேண்டியதாகும்; பெண்துணை யெவருமில்லையே என் செயலா மென்றெண்ணி அந்த அம்மாள் அந்த ஆளுடன் கூடிக்கொண்டு ஊருக்குப் போகநினைத்தாலும், நாங்கள் அப்படி அவர்களைப் போகவிடுதல் சரியல்லவென்று எண்ணுகிறேன்" எனக் கவலையுடன் விசாலாட்சி சொன்னாள்; விசுவநாதனும் சிறிது நேரம் யோசித்துவிட்டு, "நீ சொல்வது நியாயந்தான்; ஆனாற் பெண் துணையாக யாரை அனுப்பலாமென்பதை யிட்டே யோசிக்கின்றேன்" என்றான்; "இரஞ்சிதத் தம்மாள் உங்களுடைய அன்பான சகோதரியாக விருத்தலால் அந்த அம்மாளுக்கு ஒரு பெண் துணை தேடி உடன் அனுப்ப வேண்டிய பொறுப்பு உங்களுக்குத்தானேயுரியது" என்று இதமாகச் சொன்னாள் விசாலாட்சி; "நான் என்ன செய்யலாம்; நானே துணையாகப் போவதென்றால் உடனே புறப்பட்டுப் போய்விடுவேன்; பெண் துணைக்கு நான் எங்கே போய் யாரைக் கேட்பது? ஆளில்லாத் துக்கம் அழுதாலுந் தீராது என்று பழமொழி சொல்வார்களே அந்த நிலையிலே தான் நான் இருக்கிறேன்" எனக் கவலையோடு சொன்னான் விசுவநாதன்; விசாலாட்சி தன் அழகிய முகத்திலே புன்னகையரும்ப அவளைப் பார்த்து "உங்களிடத்திற் பெண் துணையில்லையா" என்று வினவ, "இருந்தால் இப்படியெல்லாம் ஏன் யோசிக்கின்றேன்" என்று விசுவநாதன் பதில் சொல்ல, அவள் உங்கள் செயலைப் பார்த்தால் வெண்ணெய் வைத்துக் கொண்டு நெய் தேடுவார் செயல் போலல்லவா இருக்கிறது" உங்களுக்கு வாய்த்த பெண்துணை நான் என்று சொல்ல உங்களுக்கு வெட்கமாயிருக்கிறதோ? ஒருபோது என்னைக்காட்டிலும் அதிக வாய்ப்புள்ள பெண்துணை வேறு யாருமுண்டோ" என்று சொல்லிச் சிறிது ஊடினாள்; "கோபிக்க வேண்டாம் என் கண்ணே; நான் உம்மைப் பெண் துணை யென்று எண்ணவில்லை; நீர் எனக்கு நாயகியென்றல்லவா மதித்திருக் கிறேன்" எனச் சமயோசிதமாகச் சொல்லி அவளைச் சமாதானப்படுதினான் விசுவநாதன்; "ஆண்பாலாராகிய உங்களுடன் பெண் பேதைகளாகிய நாங்கள் ஞாயம் பேச முடியுமா? நான் பேசத் துணிந்தமை பிழை" என்று ஆர்வம் பெருகப் பேசி அவனை மகிழ்வித்தாள் விசாலாட்சி; "என் அன்பிற்குரியாளே, இப்பொழுது அந்த இருவரையும் ஊருக்கு அனுப்பிவைக்கும் விஷயத்தில் நான் என்ன என்ன செய்யவேண்டு மென்பதை நீயே சொல்லலாமே; நீயும் உடன் வருவாயானால் நாங்கள் இருவரும் அவர்களிருவருக்கும் துணையாகப் புறப்பட்டுச் சென்று தென்னிந்திய நாட்டிலுள்ள விசேஷங்களையும் பார்த்துக்கொண்டு, இயலுமானால் எங்கள் சமுகத்திலேயே அவர்களுடைய விவாகத்தையும் நிறைவேறச்செய்து சந்தோஷமாக மீண்டு வரலாமே; அது உனக்குஞ் சம்மதந்தானா" என்று விசுவநாதன் கேட்க, "உங்கள் சம்மதத்தை விட வேறாக எனக்கும் ஒரு சம்மதம் உண்டா? இல்லையே; அப்படியே செய்வோம்" என்றாள் விசாலாட்சி.

"இப்பொழுதாயினும் அந்தரங்கத்தைச் சொல்லவேண்டும்"

இவை இங்ஙனமாக, இராமச்சந்திரனுக்கு ஏதும் ஆகாரம் வழங்கும்படி அறையுட் சென்ற இரஞ் சிதம் அங்கு வைக்கப்பட்ட பழங்களிற் சிலவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் உண்ணும்படி அன்புடன் பரிமாறி அயலில் விநயமாக நின்றள்; அவற்றை உண்ணத் தொடங்கிய இராமச்சந்திரன் இரஞ்சிதத்தைப் பார்த்தபோது அவளுடைய கண்களில் நீர் ததும்புவதை அவதானித்தான்; அவன் அருந்துவதை விடுத்து மனம் பதைப்ப "இரஞ்சிதம், கவலை எதற்காக? மகிழ்ச்சியடையவேண்டிய நேரத்திலா கவலைப்படுவது; ஏதோ ஆண்டவனருளால் உம்மைத் தேடிக்கண்டுகொண்டேன்; ஊர்விட்டுத் தேசம்விட்டு உற்றார் பெற்றாரை விட்டுத் தன்னந்தனியே இங்கு வந்தீரென்பது நிசமெனினும், நீர் மிகவும் மேலான நிலைமையில் இருக்கின்றீர்; ஊரிலே யிருந்தாலும் இவ்வளவு பெருமையையும் மதிப்பையும் அடைந்திருக்கமாட்டீர்; நான் இந்தவூரில் வந்து தங்கிச் சில மாசங்களாயின; உம்மைப்பற்றி நான் கேள்விப்பட்டனவெல்லாம் நன்மையேயன்றித் தீமை ஏதுமில்லை; இப்பொழுதாயினும் எனக்கு அந்தரங்கத்தைச் சொல்லவேண்டும்; துறவியம்மாளும் நீரும் ஒருவர் தாமே" என்று ஆவலுடன் கேட்டான்; "ஆம்; நான்தான்" என்று இரஞ்சிதம் நிலத்தைப் பார்த்தவண்ணஞ் சொல்ல, "அப்படித்தான் நானும் முந்தி அயிர்த்திருந்தேன்" எல்லாம் இறைவன் செயல்; ஒரு பொல்லாங்குமில்லை; எதற்கும் கவலைப்படவேண்டாம்" என்று தேறுதல் சொல்லி அவன் பழத்தையருந்த இரஞ்சிதம் தன் கவலை மாறப்பெற்றாளாய், முகமலர்ச்சியோடு அவனுக்குப் பருகும்வண்ணம் பாலை வழங்க அவன் ஏற்று உட்கொண்டான்; புறத்தே வந்து கைகால் சுத்திசெய்துகொண்டு தலைவாசற் பக்கம் வருதலும், விசுவநாதனும் விசாலாட்சியும் அவனை உபசரித்து ஆசனத்தில் இருக்கச் செய்தனர்; இரஞ்சிதமும் வந்து விசாலாட்சிக்கயலே நின்றாள். இங்ஙனமாக இராமச்சந்திரன் தான் மடத்திற்கு மீண்டு போவதற்குத் தனக்கு அநுமதி தரும்படி கேட்க, விசுவநாதனும் விசாலாட்சியும் விடை கொடுத்தனர்; "உங்களுக்குச் சிரமத்தையாக்குகிறோமென் றெண்ணவொண்ணாது" இங்கும் இடையிடையே வந்துபோக வேண்டுமென உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்" என்றாள் விசாலாட்சி; "அம்மா, உங்கள் கட்டளைப்படி செய்வேன்" என்றான் இராமச்சந்திரன்; "அந்த இளந் துறவியம்மாள் போசனத்தின்பொருட்டு மடத்தில் என்னை எதிர்பார்த்தவண்ணம் இருத்தல்கூடும்; ஆனதால் எனக்குப் போய்வர உத்தரவு தரல் வேண்டும்" என்று இராமச்சந்திரன் இரஞ்சிதத்திடம் தெரிவிக்க, இரஞ்சிதம் புன்முறுவலரும்ப "சுகமே சென்று நாளைக்குத் தவறாமல் வாருங்கள்" என்று அன்புடன் விடை கொடுத்தனுப்பினாள்; இராமச்சந்திரனும் தன் மனசிலே பலவகையான சிந்தனைகள் மாறிமாறி நிகழத் தான் வசிக்கும் மடத்திற்கு மீண்டு செல்வானாயினான்.

* * *

உலகம் பலவிதம்: 1946 மே 03
விசாலாட்சி: (முற்றொடர் - 97)

விடிந்துந் தடுமாற்றமா?

இராமச்சந்திரன் மடத்திற்கு மீண்டுவிட, விசுவநாதன் விசாலாட்சியின் சமுகத்தில், இரஞ்சிதத்தைப் பார்த்து "தங்காய், விடிந்த பின்னுந் தடுமாற்றமா? இப்பொழுது எல்லாச் செய்தியும் அறிந்தோம்; சந்தோஷம்; இராமச்சந்திரனைப் போன்ற ஒரு உத்தம வாலிபனை இக்காலத்திற் காண்டல் அரிதெனலாம்; இன்று சிறிது நேரம் அந்த ஆளுடன் வார்த்தையாடியூடாடிய பின்னரே, அந்த ஆளுடைய சுகுணங்கள் புலப்படலாயின; இராமச்சந்திரன் ஊரைவிட்டுப் புறப்பட்டு மாசக் கணக்காயின என்பதை இப்பொழுதுதான் நாங்கள் அறிந்தோம்; இன்னமும் இராமச்சந்திரனை இங்கே தாமதிக்கச் செய்வது நியாயமல்ல; உம்மை உமது பெற்றார் மாமனார் சுற்றத்தார் அயலாரெல்லாரும் ஆவலுடன் எதிர்பார்த்த வண்ண மிருக்கின்றார்களென்பதை இராமச்சந்திரன் வாக்கால் அறிந்தேன்; அவர்களை நீடித்தகாலம் மனம் வருந்த வைத்தல் நீதியல்ல; ஆனதால் என் அருமைத் தங்காய், நீர் ஒரு முறை ஊருக்குப் போய் எல்லோரையுங் கண்டு சுகஞ்சொல்லி, பின்னரும் இந்தவூருக்கு வரவிரும்பினால் நீர் மீண்டு வரலாம்; மேலும் உம்மைப் பெண்துணையின்றி ஊருக்கு மீண்டுபோகவிட உமது அபிமான சகோதரியாகிய எங்கள் விசாலாட்சிக்குப் பிரியமில்லை; ஆனதால் நீர் ஊருக்குப் புறப்பட நிச்சயித்தவுடன் விசாலாட்சியும் நானும் உம்முடன் வரச் சித்தமாயிருக்கின்றோம்; பிரயாணத்திற்கு ஆக வேண்டிய ஆயத்தங்கள் எதனையும், நாங்கள் இருக்கும்போது நீர் செய்யவேண்டியதில்லை; இராமச்சந்திரன் என் செலவிலும், நீர் உமது சகோதரியின் செலவிலும் பிரயாணம் பண்ணலாகும்; நீர் தங்குந் திருமடத்திலும் அயலிலும் இருப்பவர்களாய் உம்முடன் அன்பு பாராட்டி நடந்தாரனைவருக்கும் விஷயத்தைச் சொல்லி அவர்களிடத்திற் பிரியாவிடை பெற்று வருதல் நல்லது; இராமச்சந்திரன் நாளைக்கு இங்கு வருவார்; அவருக்கும் இந்த விஷயங்களைத் தெரிவிக்க விருக்கிறேன்; என் அருமைத் தங்காய், உம்மை ஊரிற் கொண்டுபோய்விட்டுப் பிரிந்து மீண்டு வருதலை நினைக்கும்போது எனக்கும் விசாலாட்சிக்கும் கவலை பிறக்கின்றதெனினும், அவற்றைப்பொருட்படுத்தாது நாம் செய்யவேண்டிய கடமையையே செய்தல் வேண்டும்; தங்கைச்சீ, என்னுடைய எண்ணத்தை உமக்கு உள்ளபடி இப்பொழுது சொல்லி விட்டேன்; இனி உமது நோக்கத்தையும் நீர் கூசாமல் எங்கள் முன்னிலையிற் சொல்லலாம்" என்று அன்பு மீதூரச் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களை விட்டுப் பிரிய மனம் வருமா?

விசுவநாதன் சொல்லியவைகளை யெல்லாம் பயபத்தியுடன் கேட்டுக்கொண்டு நின்ற இரஞ்சிதம் வெயிலிடைப்பட்ட வெண்ணெய் போல் உள்ளமுருகப் பெற்றாள்; அவள் கண்களில் நீர் ததும்பியது; சற்று நேரம் பதில்சொல்ல இயலாதவளாய் நின்றாள்; "அண்ணா உங்களுடைய எண்ணத்திற்கு மாறாக நான் எதனையுஞ் செய்யமாட்டேன்; சொல்லவும் மாட்டேன்; அந்நியளாகிய என்னுடன் சிலகாலம் பழகிய உங்களிருவருக்கும் என் பிரிவு கவலை தருமானால், உங்களுடைய முழு ஆதரவில் இவ்வளவு காலமும் உங்களுடன் இருந்த எனக்கு உங்களை விட்டுப்பிரிய மனம் வருமா? எனக்கு நீங்கள் செய்த நன்மைகளும் உதவிகளும் போதாவென்றா இப்பொழுது எனக்குத் துணையாகவும் உடன்வரத் துணிந்தீர்கள்; நீங்கள் இருவீரும் எனக்குச் செய்யும் ஒவ்வொரு நன்மையும் உதவியும் என்னுள்ளத்தை இடையறாது உருகியவண்ணஞ் செய்துவிட்டன; என் அரிய சகோதரியின் ஆதரவினாலும் அன்பினாலுமே நான் மானத்துடன் இந்த அந்நியநாட்டில் வாழலானேன்; உங்கள் விருப்பத்தின்படி உங்களைத் துணையாகக் கொண்டு பிறந்தவூருக்கு நான் போகச் சித்தமா யிருக்கிறேன்; இறைவனுடைய திருவருட்செயல் எப்படி நிகழுமோ என்பதை யான் அறியேன்; நீங்கள் இருவீருமே எனக்குத் தாயுந் தந்தையும் சகோதரமுமானீர்கள்; நான் இன்றிரவு மடத்திற்கு மீண்டுபோய் அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவனை வணங்கி அவரிடத்தில் அநுக்கிரகம் பெற்றுக்கொண்டு, மடத்திலுள்ள ஏனைய அன்பர்களிடத்தும் விடைபெற்றுக்கொண்டு நாளை அந்திப்போது சென்றபின் மீண்டு இங்கே வருகின்றேன்; இதற்கிடையில் அவர் (இராமச்சந்திரன்) இங்கே வந்தால் உங்கள் நோக்கத்தையும் நீங்கள் செய்யவிருக்கும் ஒழுங்குகளையும் அவருக்குச் சொல்லுங்கள்; அவரும் உங்கள் விருப்பத்திற்கு மாறாக நடக்கத் துணியார்" என்று இப்படி யெல்லாஞ் சொல்லிவிட்டு, இரஞ் சிதம் அங்கே தங்கியிருந்து அந்திப்பொழுதானபின் அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு, இராமன் துணையாகச் செல்ல, துறவிக்குரிய உடை பூண்டவளாய்த் திருமடத்திற்கு மீண்டாள்; துணையாகச் சென்ற இராமன் உடனே மீண்டு தன் எஜமானன் வீட்டிற் சென்று சேர்ந்தான்; அந்த இளைய துறவியம்மாள் அன்றிரவே திருக்கோயிலுக்குப் போய்த் தெய்வத்தை வணங்கி மீண்டு திருமடத்திற்கு வந்து அங்கிருக்கும் பெண்சாதுக்களுக்குத் தன் நோக்கங்களை மெல்ல மெல்ல வெளியிட்டாள்; அவர்களும் அவள் தங்களை விட்டுப் பிரியப் போகின்றாளே யென்பதையிட்டுக் கவலைப் பட்டனர்.

சொல்லாமற் செய்வர் பெரியோர்

அடுத்தநாள் இராமச்சந்திரன் விசுவநாதன் வீட்டிற்கு வந்தபோது, இரஞ்சிதம் ஊருக்கு மீண்டுபோதற்கு உடன்பட்டிருப்பதையும், அவளுக்குத் தானும் மனைவியுந் துணையாகப் போய் மீண்டுவர விருப்பதையும், போகும்போது இராமச்சந்திரனும் உடன்வரவேண்டு மென்பதையும் விபரமாக விசுவநாதன் இராமச்சந்திரனுக்கு எடுத்துச் சொன்னான். இவைகளைக் கேட்ட இராமச்சந்திரன் பேரானந்த மடைந்தான்; "ஐயா, இரஞ்சிதம் எம்முடன் கூடிக்கொண்டு ஊருக்கு மீண்டுபோக உடன்பட்டாலும், இளமையோடு கூடிய ஒரு பெண்ணை நான் தன்னந்தனியே அழைத்துப்போதல் அழகாயிராதே இதற்கென்ன செய்யலாமெனக் கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன்; இவ்விஷயமாக உங்களுடன் யோசிக்கலாமெனவும் எண்ணினேன், ஆனால் சொல்லாமலே செய்வர் பெரியோர் என்றாங்கு நான் உங்களுக்குச் சொல்லிக் கேட்கமுந்தியே நீங்கள் ஆகவேண்டிய ஒழுங்குகளைச் செய்துவிட்டு எனக்குத் தெரிவிக்கின்றீர்கள்; இதனாற்றான் நல்லாரிணக்கம் வேண்டுமென்பர்; என்னைக் கேட்பதென்ன? எதனை நீங்கள் செய்யும்படி விதிக்கிறீர்களோ அதனை நான் உடனே செய்ய ஆயத்தமாயிருக்கிறேன்; எந்த நேரம் புறப்படவேண்டுமென்று கட்டளையிட்டால் அந்தநேரம் புறப்படச் சித்தமாயிருக்கிறேன்" என்று இராமச்சந்திரன் மகிழ்ச்சி பெருகச் சொன்னான்; அவன் பின்னரும் சிலமணிநேரம் அங்கிருந்து ஆகவேண்டியவைகளைப் பேசிக் கொண்டு அடுத்தநாள் வருவதாகச் சொல்லி, தான் வசிக்கும் திருமடத்திற்கு மீண்டான்; அங்கே மடத்திலுள்ளவர்களுக்கும் தனக்கு அறிமுகமானவர்கட்கும் தான் விரைவில் ஊருக்கு மீண்டுபோக உத்தேசித்திருப்பதை வெளியிட்டான்; பேயோடு பழகினும் பிரிதலரி தென்பரல்லவா; அப்படியானால் ஒரு சற்புத்திர னாகிய இராமச்சந்திரனை விட்டுப்பிரிய யார் தான் விரும்புவார்கள்; ஆனாலும் அவன் புறப்படும்போது அவனுடன் பழகினோர் ஊடாடினோர் அவனையறிந்தவர்க ளெல்லாரும் அன்புடன் விடைகொடுத்தார்கள்; அன்று இரவே இரஞ்சிதம் திருமடத்திலுள்ளா ரெல்லாரிடத்தும் விடைபெற்றுக்கொண்டு திருக்கோயிலையடைந்து அங்கேயெழுந்தருளிய ஆண்டவனைத் தரிசித்து அநுமதி பெற்றுக்கொண்டு கதிர்காமத்தையனைத் சிந்தித்தவண்ணம், தனக்குரியனவாகிய பிரயாணப்பை முதலியவற்றை இராமன் எடுத்து வர, அவனுடன் விசுவநாதன் வீட்டில் வந்து சேர்ந்தாள்; அடுத்த புதன்கிழமை பிரயாணத்திற்காகிய சுபநாளாதலின், அன்றைக்கே அவர்களெல்லோரும் விசுவநாதன் வீட்டிலிருந்தே புறப்படுவதென நிச்சயிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிந்தாயாத்திரை சென்று வாருங்கள்"

குறித்த புதன்கிழமையன்று பிற்பகல் விசுவநாதன் விசாலாட்சி இரஞ்சிதம் இராமச்சந்திரன் என்னுமிவர்களும் இவர்களுக்குப் பணியாளனாக இராமனும் பிரயாணம் புறப்படுவாராயினர்; இரஞ்சிதம் துறவிக்குரிய உடையுடன் காணப்பட்டாள்; விசுவநாதன் விசாலாட்சி யென்னுமிவர்களுடைய சுற்றத்தாரும் அயலாரும் நண்பர்களும் துறவியம்மாள் இராமச்சந்திர னென்னு மிவர்களுடன் பழகியவர்களும் பயணமனுப்பும்படி விசுவநாதன் வீட்டில் வந்து சேர்ந்தனர்; அங்கு வந்துள்ளவர்களுட் பெண்பாலார் பயணமனுப்பி விட்டு விசுவநாதன் வீடுமட்டில் நின்றுவிட, ஆண்கள் புகைரத ஸ்தானம் வரையில் உடன் செல்வாராயினர்; விசுவநாதன் தன் தாய் மாமன்மாமி யென்னு மிவர்களிடத்தும், விசாலாட்சி தன் பெற்றார் மாமியாரிடத்திலும் விநயமாக விடைபெற்றனர்; துறவியம்மாளும் இராமச்சந்திரனும் அவர்கள் மூவரிடத்தும் உத்தரவு பெற்றுப் புறப்பட்டார்கள்; இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு நின்ற இராமனும் அப்படியே அவர்களிடம் போய்ப் பயணஞ் சொன்னான்; விசுவநாதன் முதலிய நால்வரும் ஒரு இரதத்தில் ஏறிப் புகைரத ஸ்தானத்திற்குப் போக, அருணாசலம்பிள்ளையும் பெரியநாயகியும் பிரயாணத்திற்கு வேண்டிய பொருள் பண்டங்களை வேறொரு இரதத்தில் ஏற்றிக்கொண்டு இராமனுடன் புகைரத ஸ்தானத்திற்கு வழிவிடச் சென்றார்கள்; அருணாசலம் பிள்ளையே புகைரத ஸ்தானத்திற் சென்று விசுவநாதன் முதலியோர் முதல் வகுப்பிற் பிரயாணஞ் செய்தற்காகிய சீட்டுக்களை யெடுத்துத் தம் மகளிடம் கொடுத்தார்; இராமனும் ஒரு வேலைக்காரன் என்ற முறையில் அவர்களுடன் முதல் வகுப்பிற் பிரயாணஞ் செய்யத் தக்கவனானான்; புகைரதம் வந்து ஸ்தானத்தில் நிற்றலும் அவர்கள் ஐவரும் புகைரதத்தில் ஏறினார்கள்; அவர்களுக்குரிய பிரயாணப் பொருள்களெல்லாம் அந்த இரதத்திலேயே ஏற்றப்பட்டன; வழிவிட வந்த பெற்றார் சுற்றத்தார் நண்பர் அயலாராயுள்ளார் யாத்திரை செய்யவேண்டிய முறையையும் மார்க்கத்தையும் தங்கித்தங்கித் தரிசித்துப் போகவேண்டிய தலங்களையும்பற்றித் தாம்தாம் அறிந்தவற்றைச் சொன்னார்கள்; புகைரதம் புறப்பட்டது; "சிந்தா யாத்திரை சென்று வாருங்கள்" என்று எல்லோரும் ஏககாலத்திற் புகைரத ஸ்தானத்தில் எதிரொலி யுண்டாகும்படி பெருஞ் சத்தத்தோடு சொல்லி நமஸ்காரஞ் செய்தார்கள்; விசுவநாதன் முதலியோரும் அவர்களை எழுந்துநின்று நமஸ்காரஞ் செய்தனர்; புகைரதம் விரைந்து தானத்தில் நின்றார் கட்பார்வையைக் கடந்து சென்றது; வழிவிட வந்தவர்களனைவரும் தத்தம் இடங்களுக்கு மீண்டனர்.

* * *

உலகம் பலவிதம்: 1946 மே 10
விசாலாட்சி: (முற்றொடர் - 98)

"அச்சம் என்பது இதுதான் அம்மா"

தன்பக்கத்திலே விசாலாட்சி சஞ்சலத் தோடும் வெருட்சியோடும் மௌனத்தோடும் இருப்பதை அவதானித்த துறவியம்மாள் அவளைப் பார்த்து, "அம்மா, ஏன் கவலைப் படுகிறீர்கள்? பேசாதிருப்பானேன்? பெற்றாரைப் பிரிந்த துயரமா" என்று மெல்ல வினாவ, விசாலாட்சி அவளை நோக்கி, "பெற்றாரைப் பிரிந்தேனென்ற கவலை இல்லை யாச்சி; ஒருமாச காலத்தில் ஆண்டவனருளால் மீண்டு வந்து அவர்களைத் தரிசிப்பேன்; அல்லாமலும் என்பிராணநாதர் உடன்வரும்போது எனக்கென்ன கவலை; ஆனால் புகைரத ஸ்தானத்தில் வந்து சேர்ந்த நேரந்தொட்டு என்னையறியாமல், ஏதுமொரு காரணமுமில்லாமல் என்மனம் பயப்படுகிறது" என்று மெல்லச் சொன்னாள்; துறவியம்மாள் புன்னகை செய்து, "என்ன, அம்மா எல்லாம் படித்துப் பண்டிதப் பட்டம் பெற்ற உங்களுக்கு நான் என்ன சொல்லமுடியும்; நீங்கள் இதற்கு முந்தி எப்போதாயினும் புகைரத மார்க்கமாகப் பிரயாணஞ் செய்ததுண்டா" என்று வினாவினாள்; "இல்லை ஆச்சி, இதுதான் முதன்முறை" என்று விசாலாட்சி விடைசொல்ல "அப்படித்தான் நினைத்தேன்" என்று துறவியம்மாள் சொல்லிப் பின்னரும் விசாலாட்சியைப் பார்த்து, "அம்மா, பெண்களா யுள்ளார்க்கு, நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என நாற்குணங்கள் உண்டென்று நீங்கள் படித்திருக்கிறீர்களல்லவா?" எனலும், "ஓம், ஆச்சி, நாற்குணமும் நாற்படையா, ஐம் புலனும் நல்லமைச்சா..... என நளவெண்பாவிலே நான் படித்திருக்கிறேன்" என்றாள் விசாலாட்சி; "அந்த நாற்குணங்களிலே அச்சம் என்பதுதான் இது; பெண்களாகப்பட்டவர்கள் தாம் முன் எக்காலத்துங் காணாத ஒரு பெரும்பொருளைக் காணும்போது, முந்தி எந்தநாளிலும் போகாத ஒரு சனக் கூட்டத்திலே போகும்போது அவர்களை அறியாமல் அவர்களுடைய உள்ளத்திலே பிறக்கும் பயந்தான் அச்சம் என்று நூல்களிலே சொல்லப்படுவது; இப்பொழுது உம்முடைய உள்ளத்திலே எழுந்த இந்தப் பயமே அந்த அச்சமெனப்படுவது" என்று சொல்ல, "ஆச்சி, எவ்வளவு படித்தாலுமென்ன, அநுபவம் வேண்டும்" என்று அச்சம் நீங்க மகிழ்ச்சியுடன் சொன்னாள் விசாலாட்சி.

"பயப்படாமல் இருங்கள் அம்மா"

அவர்களனைவரும் இடையிலே தங்குதலின்றிப் புகைரதப்பிரயாணஞ் செய்து, இராமேசுவரத்திற்குப் போய்த் தங்கினார்கள்; அங்கே இராமநாதப் பெருமானைத் தரிசித்துக்கொண்டு அடுத்த புகைரதத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறி மதுரையையடைந்து அங்கே தங்கி ஆலவாய்ப் பெருமானையும் மீனாட்சியம்பாளையும் தரிசித்து அங்குள்ள அற்புதக் காட்சிகளையும் பார்த்துக்கொண்டு அயலிலுள்ள சிறந்த சுப்பிரமணிய தலமாகிய திருப்பரங்குன்றத்திற்குச் சென்று கலியுகவரத ராகிய முருகக் கடவுளைத் தரிசித்துக்கொண்டு மீண்டு மதுரைக்கு வந்து அங்குள்ள புகைரத ஸ்தானத்தை யடைந்து, புகைரதம் வருதலும் அதன்கண் இரண்டாம் வகுப்பிலுள்ளதாகிய ஒரு வண்டியில் ஏறியிருந்தார்கள்; மதுரைத்தலத்தில் அற்றைத் தினத்திலே ஏதோ விசேஷ உற்சவம் நடைபெற்றமையினால் கணக்கிறந்த யாத்திரிகர்கள் அத் தலத்திற்கும் போவாரும் போய் மீண்டு வருவாருமாயிருந்தமையினால், விசுவநாதன் முதலானோர் ஏறியிருந்த புகைரதத் தொடரில் அவர்களிருந்த வண்டியொன்றே தவிர ஏனைய வண்டிகளிலெல்லாம் பிரயாணிகள் இடமின்றி மிகவுஞ் செறிந்து இருப்பாரும் நிற்பாருமாகக் காணப்பட்டனர்; புகைரதம் சத்தமிட்டுக்கொண்டு அசையத் தொடங்கும்போது நார்ப்பட்டுச் சேலையுடுத்தவளாய், விபூதி பூசியவளாய், உருத்திராக்கமாலை பூண்டவளாய், தன் கேசத்திற் சில பாகம் முறுகு சடையாகப் பெற்றவளாய் பாலசரசுவதி எனச் சொல்லத் தக்க ஒரு இளம்பெண் தன் கையிற் காவி நிறமுள்ள ஒரு பிரயாணப் பையைக் கொண்டவ ளாய் ஓடிவந்து விசுவநாதன் முதலியோர் இருக்கும் வண்டியில் இடமிருப்பக் கண்டு கதவைத் திறந்து உடல் நடுங்க, நாவுலர, இளைப்புண்டாக ஏறினாள்; ஓடும் புகைரதத்தில் ஏறும் பெண் கால்தவறி விழுதல் கூடுமென்ற பயத்தினால், அவ்வண்டியின் வாசலுக்கு அணித்தாயிருந்த விசாலாட்சி அப்பெண்ணின் கையைப்பற்றி அணைத்து "பயப்படாமல் இப்படி யிருங்கள் அம்மா" என்று சொல்வதற்கிடையில் பக்கலிலிருந்த இரஞ்சிதமாகிய சாமியம்மாள் அந்தப் பெண்ணின் கையிலிருந்த பயணப்பையைத் தான் வாங்கி அயலிற் கிடக்கும் தம் பிரயாணப் பொருள்களோடு அவதானமாக வைத்தாள்.

"அநாதர்க்கு ஆண்டவன் துணை"

"ஆச்சி, உங்களுடன்கூட எவரும் வரவில்லையா? தனியே வந்தீர்களா? ஆயாசமா யிருக்கிறீர்கள்; இங்கே மோர் உண்டு; சிறிது உட்கொள்ளுங்கள்" என்று விசாலாட்சி இதமாக அந்தப் பெண்ணுக்குத் தெரிவிப்பதற்கிடையில் அப்பெண் "மீனாட்சித் தாயே" என்று உச்சரித்துக் கொண்டு "மோர் இருந்தால் தாருங்கள் உட் கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டு, தான் தனியே பிரயாணஞ் செய்வதாகவும் உலக மாதாவாகிய மீனாட்சியம்மாளும் பரமபிதாவாகிய சுந்தரேசுவரருமே தனக்குத் தாய்தந்தைய ரென்றுஞ் சொல்லி அக்கோயிலிருக்குந் திசையை நோக்கிக் கும்பிட்டுக்கொண்டு, இரஞ்சித அம்மாள் அன்புடன் ஒரு வெள்ளிப்பாத்திரத்தில் வார்த்துக்கொடுத்த மோரை வாங்கி உட்கொண்டு, "பரங்கிரி வாசா! எல்லாம் உன் திருவிளையாட்டு" என்று சொல்லி மோர் இட்ட பாத்திரத்தை இருகரத்தாலும் இரஞ்சிதத்தம் மாளிடம் கொடுத்துவிட்டு, விசாலாட்சி இரஞ்சித மென்னு மிருவருக்கு மிடையேயிருந்தாள்; பின்னரும் அந்த அம்மாளை விசாலாட்சி ஆதரவுடன் பார்த்து, "ஆச்சி, நாங்கள் உங்களுக்கு என்ன செய்யவேண்டும்; ஏதும் ஆகவேண்டியதிருந்தாற் சொல்லுங்கள்" என்று கேட்க, "அம்மா, நீங்கள் இப்பொழுது எனக்குச் செய்த உபகாரமே கைம்மாறற்றது; நீங்கள் இந்த வண்டியில் என்னை ஏற்றுக்கொள்ளாதிருந்தால், நான் இன்று பகலும் இரவும் இங்கே தானே தங்கி நாளைக்கு இந்த நேரந்தான் புறப்படவேண்டி வரும்; அவ்வளவோடமையாது, நான் பிராமணப்பெண்; மோர் தந்து என் தாகத்தையும் தீர்த்துவிட்டீர்கள்; அநாதர்க்கு ஆண்டவன் துணை எனச் சொல்வார்களம்மா" என்று நன்றியறிதலுடன் சொன்னாள்; "ஆச்சி, நாங்கள் ஒரு உதவியும் செய்யவில்லை; ஏதோ பிரயாணிகள் ஒருங்கு போகும்போது ஒருவருக்கொருவர் செய்யக்கூடியதாகிய அற்ப உதவியைத்தானும் செய்யவில்லை; அப்படி யிருப்ப, ஆச்சி நீங்கள் எங்களைப் பாராட்டு கிறீர்கள்; உங்களைப்போன்ற சாதுக்களுக்கு ஏதுந் தொண்டு செய்யும்பேறு எளிதிற் கிடைக்குமா" என்று பயபத்தியோடு சொன்னாள் விசாலாட்சி; பின்னர் அந்த அம்மாள் விசாலாட்சியைப் பார்த்து, "இந்த ஐயாக்கள் உங்களுக்குத் துணையாக வருகின்றார்களல்ல ரோ" என்று கேட்க, விசாலாட்சி ஓம் என்று சொல்வதற்கிடையில், இராமச்சந்திரன் "ஆச்சி, உங்களுக்காக நாங்கள் என்ன செய்யவேண்டும்" என்று கேட்டான்; "உங்களைச் சிரமப்படுத்து கிறேனென்று குறையெண்ண வேண்டாம்; ஐயா, நான் சிதம்பரத்திற்குப் போதற்காக மூன்றாம் வகுப்புப் பிரயாணத்துக்குரிய சீட்டுத்தான் வாங்கினேன்; அங்கே இடமில்லாமையினால் நீங்கள் இருக்கும் இரண்டாம் வகுப்பு வண்டியில் வந்து ஏறிவிட்டேன்; அடுத்த புகைரத ஸ்தானத்தைச் சேர்ந்தவுடன் இந்தப் பிரயாணச் சீட்டையும் மேலதிகமான பணத்தையும் தருகிறேன்; ஸ்தானாதிபதியிடம் கொடுத்துச் சிதம்பரம் போகிறவரையில் இரண்டாம் வகுப்புப் பிரயாணச் சீட்டுப் பெற்றுத்தாருங்கள்" என்று இதமாகக் கேட்டாள்; "அதற்கென்ன ஆச்சி அப்படியே செய்கிறோம்" என்று இராமச்சந்திரன் சொல்ல, அந்த அம்மாள் பிரயாணச் சீட்டையும் மேலதிகமான பணத்தையும் உடனே எடுத்து இராமச்சந்திரனிடங் கொடுக்க, அவன் அவைகளை ஏற்றுக்கொண்டான்; அடுத்த புகைரத ஸ்தானம் சமீபித்தலும் இராமச்சந்திரன் இறங்கிப் பிரயாணச் சீட்டையும் மேலதிகமான பணத்தையுங் கொடுத்து அந்த அம்மாள் பொருட்டு இரண்டாம் வகுப்புப் பிரயாணத்திற்குரிய சீட்டை வாங்கிக்கொண்டுவந்து அந்த அம்மாளிடத்தில் அப் பிரயாணச் சீட்டையும், அந்த அம்மாள் சீட்டுப் பெறும்படி முந்திக் கொடுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தையும் கொடுத்தான்; வாங்கிய அம்மாள், "ஏன் ஐயா, இங்கே பணமிருக்க, உங்கள் பணத்தைக் கொடுத்துச் சீட்டெடுத்துக் கொண்டு வந்திருக்கிறீர்களே செய்யும் உதவி போதாதென்று இப்படியுஞ் செய்கிறீர்களா" என மனமுருகச் சொன்னாள்; "இல்லை, ஆச்சி, அதில் ஒரு குறையுமில்லை பிறகு நீங்கள் எனக்குப் பணந்தாருங்கள்" என்று மரியாதையுடன் சொன்னான்; அதற்கு ஏதும் பதில் பேசினால் அவன் மனம் வருந்துவான் என்ற நியாயம் பற்றிப்போலும் அந்த அம்மாள் "உங்கள் இஷ்டம்போற் செய்யுங்கள்" என்று சொல்லிவிட்டுப் பேசாமலிருந்தாள்.

* * *

உலகம் பலவிதம்: 1946 மே 17
விசாலாட்சி: (முற்றொடர் - 99)

எழுதியவாறே காண்
இரங்கு மடநெஞ்சே

விசுவநாதன் முதலியோர் சகல வசதிகளோடும் அன்று பகலும் இரவுமாகப் பயணஞ் செய்து இரவு நடுச்சாமத்தின் மேற் சிதம்பரத் தலத்திற் போய் இறங்கினார்கள்; சிதம்பரத்திலே தங்கி நடராசமூர்த்தியைத் தரிசித்துக்கொண்டு அப்பாற் பிரயாணஞ் செய்ய வேண்டு மென்பதுதான் அவர்கள் நோக்கம்; அப்படியே அவர்கள் இரண்டுநாள் அங்குள்ள திருமடமொன்றில் வசித்துக்கொண்டு நடராசப் பெருமானைத் தரிசித்தார்கள்; நிலவோடு கூடிய ஒரு இரவு சுவாமி தரிசனஞ் செய்து திருமடத் திற்கு மீண்டு அவர்கள் அனைவரும் போசனம் முடித்துக்கொண்டு மடத்தின் முகப்பில் ஆநந்தமாக வந்திருக்கும்போது, இராமனும் தன்னுடைய கருமங்களையெல்லாம் முடித்துக் கொண்டு அங்கே வந்தான்; வந்த இராமனை விசுவநாதன் பார்த்து "இராமன், நீயும் உப்படி இருக்கலாமே" என்று சொல்ல, "ஓம், ஐயா, இருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு அவனும் அவர்களிருக்குமிடத்திற்கணித்தாக ஒதுங்கியிருந்து ஏதோ யோசித்தான்: அப்பொழுது விசாலாட்சி அவனைப் பார்த்து, "இராமன், என்ன அதிகம் யோசிக்கிறாய், உனக்கு என்ன ஆக வேண்டும்; நித்திரைச் சோர்வென்றால் நீ போய்ப் படுத்துறங்கலாகுமே" என்று சொன்னாள். "அம்மா, நீங்கள் இருக்கும்போது, ஐயா இருக்கும்போது, அந்த ஐயா இருக்கும்போது, இந்தச் சந்நியாச அம்மாக்கள் இருக்கும்போது எனக்கு யோசனை என்ன அம்மா, கவலை என்ன அம்மா, யாதொன்றுமில்லை; எனக்குத் தூக்கமும் வரவில்லை; ஆனால் ஒன்றைப்பற்றி மாத்திரம் யோசிக்கிறேன்; உங்களைக் கேட்கப் பயப்படுகிறேன்" என்றான்; "இராமன் நீ எதற்கும் யோசிக்க வேண்டாம்; பயப்படாமற் கேள்" என்று விசாலாட்சி புன்னகையரும்பச் சொன்னாள்; "கேட்கிறேனென்று குறையெண்ணாதீர்கள்; வேறொன்றுமல்ல அம்மா, இந்த இந்தியா நாட்டிலே சின்னவயசோடு கூடிய சந்நியாச அம்மாக்கள் அதிகமோ? எங்கள் நாட்டிலே இப்படியான அம்மாக்கள் அபூர்வமா யிருக்கின்றதே, இதனைப் பற்றித்தான் யோசிக்கின்றேன்" என்று பயபத்தியோடு கேட்டான்; விசாலாட்சி அவனுடைய கேள்விக்குப் பதில் சொல்ல முடியாதவளாய் இரஞ்சித அம்மாளின் முகத்தைப் பார்த்தாள்; இரஞ்சிதம் இராமன் கேட்பது நியாயந்தான் என்று சொல்லிவிட்டுத் தங்களுடன் இருக்கும் மற்றத் துறவியம்மாளைப் பார்த்து "ஆச்சி, நானும் நீங்களும் வாலவயசில் துறவு பூண்டிருப்பது இராமனுக்கு விநோதமாக இருக்கிறது" என்றாள்; அப்படிச் சொல்லக் கேட்டுக்கொண்டிருந்த புதிய துறவியம்மாளின் முகம் வாட்டமுற்றதையும் அவளுடைய கண்களில் நீர் ததும்புவதையும் பூரணமான நிலவோடு கூடிய அந்த நேரத்தில், அவள் பக்கலிலிருந்த இரஞ்சிதத்தம்மாள் அவதானித்து, "ஏன் ஆச்சி கவலைப்படுகிறீர்கள், எழுதியவாறே காண் இரங்கு மடநெஞ்சே, கருதிய வாறாமோ என்றபடி எல்லாம் அன்று அயன் எழுதியபடி தானே நடக்கும்; அதனையிட்டு ஏன் கவலைப்படுவான்; துறவி வாழ்க்கை எல்லார்க்குங் கிட்டுமா; ஏதோ சொற்ப புண்ணியஞ் செய்திருந்தமையினாற்றான் இந்த வாழ்க்கை எங்களுக்குக் கிடைத்ததென்று எண்ணிக்கொள்ளுங்கள்" எனத் தேறுதல் சொன்னாள் இரஞ்சிதம்; "ஆச்சி, நீங்கள் சொல்வது நிசம்; ஆனால் சந்நியாச மென்பதும் உலகப்பற்றை அறவே வெறுத்து மனப்பூர்வமாகத் துறந்தாலல்லவோ உண்மையான சந்நியாசமாகும்; வேறு வைராக்கியங் காரணமாகச் சந்நியாசங் கொண்டால் அதுவும் உண்மையான சந்நியாசமாகுமோ" என்பதையிட்டுத்தான் எனக்குக் கவலையென்று கண்களில் நீர்வாரச் சொன்னாள் அந்தப் புதிய துறவியம்மாள்.

நான் ஒரேயொரு மகள்

அந்த அம்மாள் சொல்லிக் கவலைப் படுவதை அவதானித்த இரஞ்சிதமும் மற்றை யோரும் பெரிதுங் கவலைப்பட்டார்கள்; நான் சும்மாவிருக்க மாட்டாமல், ஒரு கேள்வியைக் கேட்டமையினாலன்றோ இந்தக் கலக்கம் நேரலாயிற்று" என்று இராமன் தன்னளவில் நினைத்துக் கவலைப்பட்டான்; "இந்த அம்மாளின் பால்ய வயதில் இவளுக்கு ஏதோ பல இடர்கள் நேர்ந்திருத்தல் வேண்டும்; அதனாற்றான் இப்படிச் சொல்லுகிறாள்; இத் துறவிக்கோலங் கொள்வதற்கும் இவைதான் காரணம்" என்று ஒவ்வொருவரும் தத்தம் மனத்திற் சிந்தித்தனரேயொழிய, எவரேனும் அந்த அம்மாளின் முந்திய வரலாற்றை அவளிடம் நேரிற் கேட்கத் துணிந்திலர். தன்னுடைய வரலாற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குள்ள அத்தனைபேரும் அறிய விரும்புகிறார்க ளென்பதைக் குறிப்பாலுணர்ந்த அந்த அம்மாள் அவர்களைப் பார்த்து "என்னுடைய பரிதாபமான வரலாற்றை உங்களுக்குச் சொல்லாமல் மறைக்க வேணுமென்று நான் எள்ளளவும் நினைக்கவில்லை; என் வரலாற்றைச் சொல்லி மகிழ்ச்சியோடும் தெய்வ சிந்தனையோடும் இருக்கும் உங்களைக் கவலைப்படுத்த வொண்ணாதென நினைத்தே நான் இதுகாறுஞ் சொல்லத் துணிந்திலேன்; ஆனால் என் வரலாற்றை அறிய நீங்கள் ஆசைப்படுகிறீர்கள்போற் காணப்படுகிறது; என்னிடத்தில் அன்பு பாராட்டும் உங்களுக்கு அதைச் சொல்வதனால் என் கவலையிற் பாதியாயினும் குறைந்துபோம்; நான் சாதியிற் பிராமணப் பெண்; என் பெற்றார் தெய்வபக்தி சாதிக்குரிய ஒழுக்கம் செல்வஞ் செல்வாக்கோடு கூடியவர்கள்; அவர்கள் வேற்றூரிலிருந்து இன்னொரு கிராமத்திலே கோயிற் பூசையின்பொருட்டு வந்து குடியேறியமையினால் அவர்களுடைய சுற்றத்தார் பலர் என் பெற்றார் குடியேறியவூரில் வசித்திலர்; என் தகப்பனாருடைய தம்பியாரும் அவருடைய மனைவியும் அவர்களுடைய ஒரேயொரு மகளுமே எங்கள் வீட்டிற்கயலிலே எங்கள் நெருங்கிய உறவினராய் வாழ்ந்தார்கள்; என் பெற்றோருக்கு நான் ஒரேயொரு மகள்; அவர்கள் என்னை வளர்த்த அருமை பெருமைகளை நினைக்கும் போதெல்லாம் என்னுள்ளம் உருகும். தங்களுக்கு ஆண்குழந்தை யில்லாமையினால் என்னைப் பெற்றவர்கள் என்னை ஆண் குழந்தைபோலப் பாவித்து எனக்குச் சிறுவயதிலேயே தமிழ், சம்ஸ்கிருதம், சங்கீதம் முதலியவற்றையும் ஒவ்வொரு கலைக்கும் ஒவ்வொரு ஆசிரியரை நியமித்து அதிக பொருள் செலவிட்டுப் பயிற்றுவித்தார்கள்; நானும் அவைகளை ஆர்வத்தோடு படித்துவந்தேன்; அதனைக்கண்ட என் சிற்றப்பாவின் மனைவியார், அதாவது என் சிறிய தாயார் தங்களுடைய மகளுக்கும் நான் படிப்பவைகளை யெல்லாம் படிப்பிக்க வேண்டுமென்றும் அக்கலைகளை எனக்குப் பயிற்றும் உபாத்தியாயர்கள் மூலமாகவே தங்கள் மகளுக்கும் படிப்பிக்க வேண்டுமென்றும் என் தாயாரிடங் கேட்க, தாயார் என் தகப்பனாருக்குத் தெரிவிக்க, தகப்பனார் அப்படியேயொழுங்கு செய்தார்; இதனால் என் தங்கையும் எங்கள் வீட்டிற்கு வந்து என்னுடன் ஒருங்கு படித்து வந்தாள். படிப்பில் என் தங்கை என்னைக் காட்டிலும் திறமையுள்ளவளென்று சொன்னாலும் பிழையல்ல; நாங்களிருவரும் சகோதரங்களாதலினால் ஒருவரோடொருவர் அன்பாய் ஊடாடி வந்தோம். என் சிறியதாயார் தங்கள் மகளுக்கு ஆங்கிலமும் பரதநாட்டியமும், சிறிது பயிற்ற வேண்டுமென ஆசைப்பட்டமையினால், ஆங்கிலம் பயிற்றுதற்கு ஒரு ஐயரையும் பரதநாட்டியம் பயிற்றுதற்கு அக்கலையில் நிபுணையாகிய ஒரு பெண்ணையும் என் சிறிய தந்தையார் நியோகித்துத் தம் மகளுடன் நானும் அக் கலைகளைப் பயில்வதற்கான ஒழுங்குகளைச் செய்தார்; என்னுடைய தாய் தகப்பனாரும் அதற்கு உடம்பாடாயிருந்தமையினால், நானும் என் தங்கையும் மேலே சொல்லப்பட்ட கலைகளை அது அதற்குரிய ஆசிரியரிடம் முறையாகப் படித்து வந்தோம்; இப்படிச் சில வருடகாலமாக எங்கள் வாழ்க்கை சந்தோஷமாக நடைபெற்றது.

"வாழ்வாவது மாயம்"

இப்படியிருக்குங் காலத்திலே, ஒருநாள் ஒரு ஆண்டி மத்தியான வேளையில், மிகவும் பசித்தவனாய் "வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்" என்ற பாட்டைக் கேட்பார் உருகும்படி இதமாகப் பாடிக்கொண்டு எங்கள் வீட்டு முற்றத்தில் வந்தான்; அந்தப் பாட்டைக் கேட்க ஆசைப்பட்டு அடுக்களையு ளிருந்த நான் முற்றத்திற்கு ஓடிப் போனேன்; தலைவாசலில் இருந்த என் தகப்பனார் அவனைச் சினந்து பார்த்து "ஏ, பரதேசி, உந்தப்பாட்டை விட உனக்குப் படிக்க வேறு பாட்டில்லையோ" என்று அதட்டிச் சொல்லி அவன் முன்னிலையில் அரையணாவை விட்டெறிந்து அவர் தலைவாசற் பக்கத்தை விட்டு வீட்டின் உட்புறத்தே போய் அதிக கவலையோடிருந்தார். வந்த பரதேசியும் எறிந்த அரையணாவை எடுத்துக்கொண்டு எங்கள் வீட்டை விட்டு விரைந்து போய்விட்டான். இவைகளை யெல்லாம் அவதானித்த நான் உடனே அடுக்களைக்கு மீண்டு வந்து என் அன்னைக்கு முழுவிபரத்தையுஞ் சொல்ல, என்னைப்பெற்றவள் தான் அந்த நேரஞ் செய்த சமையல் வேலையை என்னிடத்தில் ஒப்புவித்து விட்டு என் தகப்பனாரிடம் போய், அவர் கவலையோடு இருப்பதற்குக் காரணமென்னவென்று பதைபதைப்போடு கேட்க, வந்த பரதேசியொருவன் "வாழ்வாவது மாயம் ... என்ற பாட்டைப் படித்துவிட்டானென்றும், அதனால் தங்களெல்லார்க்கும் ஏதோ பெருங்கேடு நேரப்போகிற தென்றும் சொல்லிக் கவலைப்பட்டாராம். அப்படி அப்பர் சொல்லிக் கவலைப்பட்டபோது என் தாயார் எத்தனையோ தேறுதல் வார்த்தைகளை யும் சமாதானங்களையுஞ் சொன்னபோதும் அப்பர் அவைகளைப் பொருட்படுத்தாமற் கவலையோடுதான் இருந்தாரென்று என் தாயார் பின்பு எனக்கு வந்து சொன்னதுண்டு.

* * *

உலகம் பலவிதம்: 1946 மே 24
விசாலாட்சி: (முற்றொடர் - 100)

"மூத்தோர் சொன்ன வார்த்தை அமுதம்"

என் தகப்பனாருக்குத் தாயார் அந்த ஆண்டி படித்த பாட்டு விஷயமாக புறத்தே சமாதானஞ் சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைத் தேற்ற முயன்றாரெனினும், அகத்தே என் அன்னையார் தாமும் அதையிட்டுக் கவலைப்படக் காணப்பட்டார்; அதனால் என்ன அநர்த்தம் வருமோ என்று என் அன்னையார் இடையிடையே எண்ணி யெண்ணி ஏங்குவதை அவதானித்த நான் ஒருநாள் அவரை நோக்கி, அம்மா, ஏன் கவலைப்படுகிறீர்கள்? அந்த ஆண்டி படித்த பாட்டும் ஒரு தேவாரந்தானே, தேவாரம் மங்கலமானதென்றல்லவா சொல்லுவார்கள்; அப்படியெல்லாமிருக்க நீங்களேன் இதையிட்டுக் கவலைப்படுகிறீர்கள் என்று பரிவுடன் கேட்டேன்; "மகளே, தேவாரம் மங்கலமானதுதான், பெரியோர் பாடியது; பெருமானுடைய பெருமைகளை யெல்லாம் தோத்திர வடிவமாய் எடுத்துச் சொல்வது; படிப்பார் கேட்பாருள்ளத்தைப் பரிசுத்தமாக்குவது; மங்கலமான கருமங்களில் எங்கும் ஓதப்படுவது; எல்லாராலும் பாராட்டப்படுவது; ஆனால் அந்தக் குறித்த தேவாரத்தை எங்கள் வீட்டிற்கு வந்த ஆண்டி அன்று படித்தமை அவன் குற்றமல்ல, எங்களுக்கு ஏதோ கேடு வரப்போகிறதென்பதற்கு உற்பாதமாகவே, வேறு தேவாரங்களிருக்க அந்தத் தேவாரம் அன்று அவன் வாயில் வந்தது; அப்படியான தேவாரத்தை யொருவன் காரணமில்லாமற் படித்தாற் படிக்கப்பட்ட இடத்திலே விரைவிற் கேடுவருமென்று பெரியோர் தம் அநுபவத்தைக் கொண்டு சொன்னதை, உன் அப்பர் மாத்திரமல்ல நானுங் கேட்டிருக்கிறேன்; பெரியோர் கொள்கையை நாம் தள்ளிவிட வொண்ணாது; மூத்தோர்சொன்ன வார்த்தை யமுதம் என்பர் என்று எனக்குச் சமாதானஞ் சொல்லிக் கவலைப்பட்டார் என் தாயார்; "அம்மா கவலைப்பட்டு ஆவதென்ன, எது நேரவேண்டுமோ அது நேர்ந்துதானே தீரும் என்று என் அன்னைக்கு நான் ஆறுதல் சொன்னேன். என் பெற்றார் கொள்கையில் எனக்கு அதிக நம்பிக்கை அந்த நேரத்தில் இல்லாமையால் நான் அதையிட்டு அதிக கவலைப்படவில்லை.

எழுதாவிதிக்கு அழுதாவதென்ன?

இது நிகழ்ந்து ஆறுமாச காலஞ்சென்றும் எவ்வகையான இடையூறுமின்றி நாங்கள் பயபத்தியோடு தெய்வத்தை வழுத்தி வாழ்ந்தோம்; இப்படியாக ஏழாமாசத் தொடக்கத்தில் ஐயோ! உங்களுக்கு என்னவென்று எடுத்துச் சொல்லுவேன், என் தகப்பனார் பேதிநோய் கண்டு மூன்றாம் நாள் எங்களைத் தியங்கவிட்டுப் பரலோகப் பிராப்தியானார்; எனினும் என் தாயாரும் அவருடைய பிரிவாற்றாது துடித்துக் கதற, அதிகாரிகள் எங்களை அழவொட்டாது ..... பிரேதத்தைக் கொண்டுபோய் அடக்கஞ் செய்து எங்களையும் தனிமையாக இருத்தி விட்டார்கள்; அன்றுதொடக்கம் என்னைப் பெற்றவள் அன்னாகாரம் உட்கொள்ளாது கண்ணீருங் கம்பலையுமாகக் காணப்பட்டாள்; என் அன்னை என்னைப் பார்ப்பதும் அழுவதும் மார்பிற் கைகளால் மோதுவதும் கதறுவதுமாக விருக்கக் கண்ட நானும் அழுது கவலைப்பட்டு, உணவை வெறுத்தேன்; அதனை அவதானித்த என் தாய் என்னை அன்புடன் பார்த்து, "கொடுத்துவைக்காப் பாவி வயிற்றிற் பிறந்த என் அருமை மகளே, நான் வயசு வந்தவள், அனுபவப்பட்டவள்; உன் அப்பரை ஒரு கணமும் பிரிந்தறியாதவள்; என் குலமுதல் போய்விட்டதென்று கிடந்து புலம்புகிறேன்; ஆனால் நீயோ ஒன்றுமறியாச் சிறுபிள்ளை, நீயும் உப்படி உண்ணாமல், உறங்காமல், எந்த நேரமும் அழுதுகொண்டிருந்தால் ஆவதென்ன? நீ வாழும் பிள்ளை, வளரும் பிள்ளையல்லவா, பிள்ளைக் கலிதீர்க்க வந்த எங்கள் குலக்கொழுந்தே, நீ அழவேண்டாமடியம்மா, பட்டினி கிடக்கவேண்டா மடியம்மா, உங்கள் அப்பர், என் புண்ணியவான் எங்களைப் பரிதவிக்க விட்டுப்போனாலும் எங்களை வெறுங் கையோடு விட்டுப்போகவில்லையடி கண்ணே; என்று முதல் தன்னைத் தேற்றிப் பின் என் கண்ணீரைத் தன் முன்றானையால் துடைத்து உச்சிமோந்து எனக்குத் தேறுதல் சொன்னார்; "அம்மா, அப்பரும் எங்களைக் கைவிட்டுப் போயினார்; நீங்கள்தான் ஆறுதலென்று நம்பியிருக்கிறேன்; ஆனால், நீங்களும் அல்லும்பகலும் அப்பரை நினைந்து அழுத கண்ணுஞ் சிந்திய மூக்கும் விரித்த கூந்தலுமாயிருந்து அவலப்பட்டால், எனக்கு ஆர் தேறுதல் சொல்வது; பெற்றவளாகிய நீங்கள் உப்படிக் கிடந்து அன்னாகாரமின்றி உறக்கமின்றித் துயரப்பட, எனக்கு உண்ணவும் மனம் எழுமா? எழுதா விதிக்கு அழுதாவதென்ன அம்மா; எல்லாம் ஆண்டவன் செயல்; எவையுமறிந்த உங்களுக்கு நான் என்ன சொல்வதென்று என்னைப் பெற்றவளை நான் ஒருவாறு தேறச் செய்தேன்; நான் சொன்னவைகளைக் கொண்டு என் தாயார் அப்பொழுது ஒரு அளவிற்குத் தேறினாரென நான் நினைத்தது பிழை; நான் கவலைப்படுகிறேன், உண்ணாமல் உறங்காம லிருக்கிறேனென்றெண்ணி என் அருமைத் தாயார் என்பொருட்டுத்தான் தேறுதலடைந்தவர்போல் எனக்கும் உணவூட்டி என்னையும் உறங்கச்செய்து தானும் உணவருந்தினார்; உறங்கினாரோ என்பதை நான் அறியேன்; எங்கள் தகப்பனார் மோசம்போன நாள் தொடக்கம் நாங்கள் அடுக்களையில் நெருப்பு மூட்டவேயில்லை; சிற்றப்பாவும் சிறிய தாயாருமே எங்களுக்காகிய சகல கருமங்களையும் அநுதாபத்துடன் நடத்தி வந்தனர்; தாயாரோடு என் தங்கையுமே எனக்குப் பெரிய ஆறுதல் தந்துவந்தார்கள். "வாழ்வாவது மாயம்..." என்று ஆண்டி படித்த பாட்டை இடையிடையே என் தாயார் படித்துக் கவலைப் பட நான் கேட்டேன்.

"உங்களுக்கு முந்தி என்னுயிர் மாய்ப்பேன்"

இங்ஙனமாகச் சிலநாட்களாக ஒருவாறு மனமாறியிருந்த என் தாயார் பழையபடி கண்ணீருங் கம்பலையுமாக விருப்பதை அவதானித்த நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையை அனுதாபத்துடன் பார்த்து "அம்மா, பின்னும் பின்னும் நீங்கள் கவலைப்படத் தொடங்கி என்னையும் தீராக்கவலைக்கு ஆளாக்குகிறீர்கள்; நான் உங்களுக்குச் செய்த குற்றம் என்ன அம்மா; எனக்கு மறைத்துத் தனியிடத்திற் போயிருந்து அழுகிறீர்கள்; சில சமயங்களில் என்னை உண்ண உறங்கச்செய்து விட்டு, நீங்கள் உண்ணாமல் உறங்காமற் கவலைக்கடலில் மூழ்கிக் கிடக்கிறீர்கள்; இனி என்னைக் குறைகூறாதீர்கள்; நீங்கள் இப்படிச் செய்தால் நானும் உண்ணாமல் உறங்காமற் கிடந்து உயிர் விடுவேன், இது பரிகாசமல்ல, நிசமென நம்புங்கள் என்று விம்மியழுது சொன்னேன்; அந்த நேரத்தில் என் அன்னை என்னைத் தேற்ற முயன்றாரெனினும் அவரால் தேற்ற இயலவில்லை; நான் அழுவதைக்கண்டு தாமும் அதிகமாக அழத் தலைப்பட்டார்; அம்மா, நீங்கள் கவலைப்படாமலிருங்கள், அழாதீர்கள், நானும் அப்படியேயிருக்கிறேனெனச் சொல்லி நானே என் தாயாரைத் தேற்ற நேர்ந்தது; என்மீது இரக்கங்கொண்டு ஒருவாறு தேறின என் மாதா என்னைப் பார்த்து "நான் பெற்ற மகளே, என்னையிட்டும் எனக்குக் கவலையில்லை, எங்களை விட்டுப்போன உன் அப்பரையிட்டும் எனக்குக் கவலையில்லை; நானும் போய்விட நீ தன்னந்தனியேயிருந்து எப்படி இந்தப் பொல்லாத உலகத்திலே காலங் கழிக்கப் போகிறாயென்பதையிட்டுத்தான் கவலைப்படுகிறேன்" எனச் சொல்லி, என்னைத் தன் இரு கரங்களாலும் அணைத்துக்கொண்டு ஓ என்று கதறினாள்; இப்படிச் சொல்லக் கேட்ட நான் திடுக்கிட்டு அம்மா, நீங்கள் சொல்வது எனக்கொன்றும் விளங்கவில்லை; நீங்கள் என்ன என்னைத் தனிக்கவிட்டுத் தற்கொலை செய்யப் போகிறீர்களா? அப்படியேதுஞ் செய்யத் துணிந்தீர்களானால், நீங்கள் பெற்ற பிள்ளை தானே நானும், உங்களுக்கு முந்தியே உயிர் மாய்ப்பேன் என்றேன்; அப்படி யொன்றுமில்லை, மகளே, தன்னுயிரைத் தான் விடுவது பொல்லாப் பாவமென்பது எனக்குத் தெரியும்; என் கவலை மேலீட்டால் எனக்கு உறக்கம் வந்திலது. பின்னருஞ் சற்றுநேரஞ் செல்ல "... நீங்கள் என்னைக் கோபித்தாலும் என் பிள்ளையைத் தனியே விட்டு உங்களோடு ஒருபோதும் வரமாட்டேன்..." என்று என் தாயார் "வாய்புலம்ப" நான் திடுக்கிட்டுப் பயந்தெழுந்து பாயிலிருந்து கொண்டு அம்மா! அம்மா! என்று தட்டியெழுப்பவே என் தாயாரும் தன் தேகம் பதற நா தடுமாற பாதி நித்திரையோடெழுந்திருந்து, "என்னடியம்மா, நான் ஏதோ வாய் புலம்பி விட்டேனோ? நீ பயப்படாதே" என்று சொல்லித் தன் இரு கைகளாலும் வாரி மார்போடணைத் தாள்; அப்படிச் செய்தபோதும் அன்னையின் பதைப்பு ஆறவில்லை; அம்மா உள்ளதைச் சொல்லுங்கள்; நீங்கள் ஏதுங் கனவு கண்டீர்களா? ஏதேதோவெல்லாம் புலம்பினீர்களே என்று நான் கலக்கத்துடன் கேட்க "ஒன்றுமில்லை, மகளே, பகலில் நினைப்பவைதான் இரவிலே கனவாய்க் காண்பவை; என் கண்ணே, நீ அதையிட்டுக் கவலைப்பட வேண்டாம்; பேசாமற் படுத்துறங்கு; எனக்கும் உறக்கம் வருகின்றது" என்று சொன்னார்; "அம்மா, நீங்கள் சொல்வது நிசந்தான்; ஆனாற் சற்று முந்திக் கண்ட கனவென்ன? எனக்கு அதை ஒளியாமற் சொல்லுங்கள் என்று அன்னையை இரந்தேன்: என்று இப்படி அந்தத் துறவியம்மாள் தன் பரிதாபமான வரலாற்றைச் சொல்லிக்கொண்டிருக்கும்போது, கேட்டுக்கொண்டிருந்தவர்களு ளொருவனாகிய இராமன், "ஆச்சி, உங்கள் பரிதாபமான வரலாற்றைக் கேட்க எனக்கு அழுகை வருகிறது; பயமுண்டாகிறது; நான் போய்ப் படுத்து உறங்கவேண்டுமென்று சொல்லி அவ்விடத்தை விட்டு எழுதலும், விசுவநாதனும் இது பரிதாபமான கதை; இப்பொழுது படுக்கைக்குப் போவோம்; எஞ்சியதை நாளைக்குக் கேட்போம்" என்று சொல்ல, அங்கிருந்தோரனைவரும் கவலை யோடு கூடியவர்களாய் மடத்துட் சென்று தத்தம் படுக்கையிற் படுத்துறங்கினர்.

* * *

உலகம் பலவிதம்: 1946 மே 31
விசாலாட்சி: (முற்றொடர் - 101)

ஆம் அம்மா
அப்பொழுதுதான் எழுப்பினேன்

அடுத்தநாளிரவும் அவர்களனைவரும் போசனம் முடித்துக்கொண்டு திருமடத்தின் முன்றிலிற்றானே இருந்தபடி புதிய துறவியம்மாள் தன் பரிதாபமான வரலாற்றைக் கவலையுடன் சொல்ல, விசுவநாதன் விசாலாட்சி இராமன் முதலியோர் பரிவுடன் கேட்பாராயினார்; அத் துறவியம்மாள் தன் வரலாற்றின் தொடர்பைப் பின்வருமாறு கூறுவாளாயினாள்:-

"மகளே, கவலையோடுகூடிய காலத்திலே இரவிற் காணுஞ் சொப்பனமும் பயங்கரமாகத் தானிருக்கும்; ஏதோ பொல்லாத சொப்பனங் கண்டேன்; அதைக்கேட்டு நீ கவலைப்பட வேண்டாம்; பயப்படவேண்டாம் என் கண்ணே" என்று சொல்லவும், அப்படியல்ல அம்மா, அதனை நீங்கள் எனக்கு உள்ளபடி சொன்னாற்றான் என்மனம் தேறுதலடையுமென்று இரந்தேன்; என்வேண்டுகோளை மறுக்க இயலாமல் என் தாய் என்னைப்பார்த்து, "நீ பயப்படாதே, வேறொன்றுமல்ல, இப்பொழுது சிலநாளாகச் சொப்பனாவத்தையிலே உன் அப்பர் என்னிடம் வந்து, நீவா, நாங்கள் யாத்திரை செய்யப் போவோம் என்று என்னைக் கேட்க, நான் என் பிள்ளையைத் தன்னந்தனியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு உங்களுடன் யாத்திரைக்கு எப்படி வருவேன்; ஒருபோதும் வரமாட்டேன் என்று மறுப்பதாகக் கனவு காண்கிறேன்; அந்த நேரத்திலேதான் மகளே நான் வாய்புலம்ப, நீ என்னை எழுப்பினை போலும்" என என்தாய் சொல்ல, "ஆம் அம்மா, அப்பொழுதுதான் உங்களை எழுப்பினேன்; அதுகிடக்க நீங்கள் இப்படிக் கனாக்கண்டு வருவதனாற்றான் அன்றொருநாள் நான் தனிக்கப் போகிறேனென்று எனக்குச் சொல்லிக் கவலைப்பட்டீர்கள்" என்றேன்; "இல்லை மகளே, கனவிற் காண்பவெல்லாம் நிசமாய் நடக்கப்போகிறதா என்று சமாதானஞ் சொல்லி என் அன்னையார் என்னைத் தேற்ற நானும் மனந்தேறினேன்.

கொடுத்து வைக்காப் பாவிகளானோம்

இப்படிச் சில வாரங்கள் கழிந்த பின் ஒரு வெள்ளிக்கிழமை என் தாயார் எண்ணெயிட்டு முழுகியபின் அன்றிரவு தமக்கு உடம்பு கொதிக்கிறது, தாங்கொணாத் தலையிடியுண்டாய்விட்டதென்று சொல்லிப் படுத்துக் கிடந்தார்; அன்றிரவு விடிவதற்கிடையில் என் அன்னையாரின் நோய் அதிகப்பட்டது; அடுத்த நாட் புலரிக்காலத்தில் நான் எழுந்து என் சிறிய தாயிடம் போய்ச் சொல்ல, சிறியதாயார் என்னுடன் கூடிக்கொண்டு வந்து என் தாயாரைப் பார்த்துவிட்டு உடனே மீண்டுபோய்ச் சிற்றப்பருக்குத் தெரிவிக்க, அவர் உடனே வந்து என் மாதாவைப் பார்த்தார்; பார்த்துவிட்டு உடனே அயலிலுள்ள எங்கள் குடும்ப வைத்தியரிடம் சிறிய தந்தையர் போய் அவரை அழைத்துக் கொண்டு வந்து தாயாரைக் காட்ட, அந்த வைத்தியர் கைநாடி பார்த்துவிட்டு, என் சிறிய தகப்பனாரையும் உடன் அழைத்துக்கொண்டு தலைவாசற்பக்கம் போய் ஏதோ இரகசியமாகச் சொன்னார்; வைத்தியர் என் தாயாரின் நோயைப் பற்றி என்ன சொல்லுகிறாரென்பதை அறிய விரும்பி ஆவலுடன் அவர்கள் பிறகே சென்ற எனக்கு, அவர்களிருவரும் இரகசியமாகப் பேசியவை புலப்படவில்லை; என் சிற்றப்பர் வைத்தியருக்கு விடைகொடுத்து அவரை யனுப்பிவிட்டு, உடனே எங்கோ சென்று முகத்தில் அம்மைத் தழும்புள்ள ஒரு முதிய பிராமணப் பெண்ணைக் கூட்டிக்கொண்டு வந்து எங்கள் தாயாரைப் பராபரிக்க ஒழுங்கு செய்து, என்னைத் தன்வீட்டில் வந்து இருக்கும்படி சொல்ல, நான் என்னைப் பெற்றவளை விட்டுப் பிரிய மனமில்லாமல் விம்மி விம்மி யழுதேன்; அதனைக் கண்டு என் சிறிய பிதா, "நீ அழ வேண்டாமடியம்மா, இது தொற்றுநோய், ஆனதாற்றான் உன்னை எங்கள் வீட்டிற்கு இட்டுக் கொண்டு போகிறேன்; நீ உன் தங்கையோடும் சின்னம்மாவோடும் சிலநாட்கள் இருக்கலாம்; உன் தாயாரின் நோய் மாறியவுடன் நீ பழையபடி உங்கள் வீட்டில் வந்திருக்கலாம்; இப்பொழுது நான் கூட்டிக்கொண்டுவந்த அந்த மனுஷி உன் தாயாரைப் பார்த்துப் பராபரிப்பாள்; நீ கவலைப் படாதே" என்று தேறுதல் சொல்லி என் கண்ணீரைத் தம்முடைய அங்கவஸ்திரத்தினால் துடைத்துத் தங்கள் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போனார்; நான் அங்குத் தானே சிலதினம் வசித்தேன்; வசித்தாலும், என்மனம் எந்த நேரமும் தாயாரைச் சிந்தித்துக் கவலைப்பட்டுக்கொண்டிருந்தது; உண்ண உறங்க எனக்கு மனமெழுந்தில தெனினும், என் தங்கை தான் உண்ணும் போது என்னையும் உடனிருத்தி உண்ணச் செய்வாள்; ஒருவாறு உண்டாலும் உறக்கமென்பது என்னை விட்டகன்றது; என் சிற்றனைனையும் சிறிய தந்தையாரும் இடையிடையே என் தாயாரைப் பார்த்து வருவார்கள்; கவலையோடு கூடியவர்களாய்த் தங்களுட் பரஸ்பரம் ஏதோ பேசிக்கொள்ளவார்கள்; ஆனால் என் தாயாரின் சுகத்தைப்பற்றி நான் அவர்களுடன் ஏதும் விசாரித்தால், அவர்கள் உடனே முகமலர்ச்சி காட்டி, "அப்படி யொன்று மில்லையடியம்மா, நீ கவலைப்படாதே, உன் அம்மாவின் நோய் தணிந்து வருகிறது" என்று எனக்குத் தேறுதல் சொல்லிவிடுவார்கள்; இப்படியாக ஒருநாள் இரவில் என் சிறியதந்தையார் ஒருவாறு உறங்கிக் கிடந்த என்னை எழுப்பி, உன் தாயார் உன்னைப் பார்க்க ஆசைப்படுகிறார் என்று சொல்ல, நான் பித்துக் கொண்டாள் போல் பதைபதைத்து எழுந்து ஓடிப்போய் "அம்மா, அம்மா! என் அருமை அம்மா" என்று ஓலமிட்டு அழுதழுது கூப்பிட்டேன்; பதிலில்லை; என்னைப் பெற்று வளர்த்தவளைத் தீண்டப்போனேன்; அருகில் நின்ற பிராமணக் கிழவி தீண்டவொட்டாது தடுத்தாள்; இதற்கிடையில் என் சிற்றப்பா வந்து "உங்கள் பிள்ளை வந்து நிற்கிறாள்" என்று தாயார் முகத்தைப் பார்த்துச் சொல்ல, கேட்டவுடனே என்னைப் பெற்றவள் கண் விழித்தாள்; அன்னையின் கண்களில் நீர் தாரை தாரையாக வடிவதை விளக்கு வெளிச்சத்தில் அவதானித்தேன்; ஏன் அம்மா அழுகிறீர்கள், அழாதீர்கள் என்று என் அருமைத்தாயைத் தேற்றப் புகுந்த நானும் அழுதேன்; "நான் பெற்றவளே, கனவு நனவாய் முடிந்தது; உன் அப்பர் என்னைத் தம்முடன் வரும்படி கூப்பிடுகிறார்; அவருடன் கூடிக்கொண்டு நான் போகப்போகிறேன்..." என்று சொல்லி முடிவதற்கிடையில் "ஐயோ! என் அம்மா, நீங்களும் என்னை இந்தச் சின்னஞ் சிறு வயதில் தன்னந்தனியே விட்டுப் போனால், நான் என்ன செய்வேன்! எந்தக் கிணற்றிற் போய்க் குதிக்கப் போகிறேன்; எந்தக் கடலிற் போய் வீழப்போகிறேன்" என்று கதற, என் சிற்றப்பர் எனக்குக் கிட்ட வந்து "அழாதேயடியம்மா, உன் தாயார் சொல்வதைக் கேள்" என்று தாமும் அழுதழுது சொல்ல, நான் ஒருவாறு தேறினேன்; "என் குழந்தாய் நீ கதறாதே, பதறாதே, தலைவிதியைக் கடந்தார் உலகத்திலில்லை; புத்தியீனமாய்த் தற்கொலை செய்துவிடாதே; உன் சிற்றப்பாவோடும், சிறியதாயாரோடும், தங்கைச்சியோடும் இரு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரோடும் சண்டையிடாதே, எதிர்த்துப் பேசாதே, அவர்கள் உன்னைப் பேணி வளர்ப்பார்கள்; உனக்கு ஆக வேண்டியவைகளையெல்லாஞ் செய்து வைப்பார்கள்; உன் அப்பரும் நானும் உன்னைக் கைவிட்டாலும் வேறு ஆர்தான் கைவிட்டாலும், உன்னைப் படைத்த ஈசனாகிய அந்தப் பரம பிதாவும் உலக மாதாவாகிய ஈசுவரியும் உன்னை ஒருபோதுங் கைவிடமாட்டார்கள்; அவர்களிடத்திலேதான் உன்னை அடைக்கலமாகக் கொடுத்துப்போகிறேன்; இது என் மரணப்படுக்கை யென்பதை விளங்கிக்கொள்; ஐயோ மகளே, உன்னை எப்பிறப்பிற் காண்பேன் இனி" என்று அட்சர சுத்தியாக ஆவேசங் கொண்டாள்போற் சொல்லி, என்னை உற்றுப் பார்த்து விட்டுத் தம் கண்களை மூட, "அம்மா, என்னைப் பெற்ற ஆச்சி, என்னைக் கைவிட்டுப் போறியோ" என்று கதறிக்கொண்டு நிலத்தில் வீழ்ந்தேன்; அதன்பின் நடந்ததை நான் அறியேன்; விடிய என் சிறியதகப்பனார் வீட்டுப் படுக்கையறையிலுள்ள கட்டிலிற் படுத்தபடி கண்விழித்தேன்.

"தந்தையார் போயினார்
தாயாரும் போயினார்"

கண் விழித்தவுடனே, அம்மா, அம்மா என்று கூப்பிட்டேன்; என் சிறிய தாயார் ஓடி வந்து, "என்னடியம்மா, ஆரைக் கூப்பிடுகிறாய்" என்று பரிவுடன் கேட்க, "என் அம்மாவை ஒருமுறை பார்க்கப் போகிறேன்" என்றேன்; "சற்றுப் பொறு கண்ணே, சிற்றப்பா எங்கோ போய்விட்டார்; வந்தவுடனே அவரோடு உன்னையும் அனுப்பி வைக்கிறேன்" என்று என் சிறியதாயார் சொல்ல, நான் நிசமென நம்பியிருந்தேன்; சிற்றப்பா அன்று மத்தியானம் வரை அங்கு வந்திலர்; மத்தியானத்தின் பின்புதான் அவர் வந்தார்; என் சிறிய தாய்தந்தையர் இருவரும் தம்மளவில் ஏதோ கலந்து இரகசியமாகப் பேசிக் கவலைப்படுவதையும், என்னைப் பார்த்துப் பார்த்து இரங்குவதையும் நான் அவதானித்தேன்; என் தங்கையும் அன்று முழுதும் என்னை விட்டுப் பிரியாமலே கவலையோடிருந்தாள்; என் மனம் ஆறுதலின்றித் துடித்தது; காரணமில்லாமல் என்னுள்ளத்தில் ஏக்கம் பிறந்தது; சரீரம் நடுங்கியது; இவைகளையெல்லாம் அவதானித்த நான் என் தாயாருக்கு ஏதோ பேராபத்து நேர்ந்ததென்றெண்ணி "ஐயோ! உங்களுக்குப் புண்ணியங் கிடைக்கும் என்னைப் பெற்றவளுடைய கண்ணில் விழிக்கப் போகிறேன்; என்னை இந்த நிமிஷமே கூட்டிக்கொண்டு போய்க் காட்டுங்கள்; இல்லையேல் நானே நேரிற் போகப் போகிறேன்" என்று சொல்லியலறினேன்; என் சிறிய தாயார் அழ, தங்கையழ என் சிற்றப்பரும் வீறிட்டுக் கதறி "ஐயோ! மகளே, இன்று விடியற்புறமே உன் தாயாரின் பிரேதத்தை அதிகாரிகள் எடுப்பித்து அடக்கஞ் செய்துவிட்டார்கள்; எங்களை மனம் நோவாதே; நாங்கள் உன் தாய்க்குச் செய்ய வேண்டிய கிரியைகளையுஞ் செய்து தகனம் பண்ணக் கொடுத்துவைக்கவில்லை; என் அண்ணா; கதியும் உன் தாயார் கதியும் இப்படியாயின; மகளே! எழுதாவிதிக்கு அழுதாவதென்ன, நீ தேறியிரு; எல்லாம் இறைவன் செயல், எங்களை உன் தாய் தந்தையராகவும், எங்கள் பிள்ளையை உன் உடற் பிறப்பாகவும் இன்றுதொடக்கம் எண்ணி நடவடியம்மா; மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச் சாந்துணையுஞ் சஞ் சலந்தானடி யம்மா; ஆனாலும் ஆண்டவன் உன்னைக் கைவிடமாட்டான் கண்ணே" என்று சொல்லி சிறிய தந்தை தாயார் தங்கள் மத்தியில் என்னை எடுத்திருத்தி என் முதுகைத் தடவிக் கண்ணீர் துடைத்து முகந்திருத்தி ஒருவாறு என்னைத் தேற்றினார்கள்; எல்லோரும் ஸ்நானஞ் செய்த பின் என் தங்கை என்னையும் ஸ்நானஞ் செய்வித்து உடனிருத்தி உணவூட்டித் தானு முண்டாள்; சிலநாட்களாக அவள் என்னுடன் உண்பதும் உறங்குவதும் பக்கலிலிருந்து தேறுதல் சொல்லுவதுமானாள்; என் சகோதரி நான் கண்ணீர் விடுவதைக்கண்டால் தானும் உடனே; கண்களில் நீர்ததும்பத் தேறுதல் சொல்லி என்னை ஆற்றுவாள்; அன்னை சிவலோகஞ் சேர்ந்த நாள் தொடக்கம் நான் "தந்தையார் போயினார் தாயாரும் போயினார் தாமும் போவார்..." என்ற தேவாரத்தையே மெல்லச் சொல்லிக் கடவுளைச் சிந்தித்தபடி காலம்போக்கினேன்; ஐயோ பெற்றதாயை எப்படி மறக்கமுடியும்!

* * *

உலகம் பலவிதம்: 1946 ஜூன் 07
விசாலாட்சி: (முற்றொடர் - 102)

"காலம் போகக் கவலை தேயும்"

காலம் போகப்போகக் கவலைதேயுமென்று சொல்லுவார்கள்; என் சிறிய தந்தையார் தாயார் சகோதரியென்னுமிவர்கள் என்மேற் பாராட்டிய அன்பினாலும் வைத்த ஆதரவினாலும் நாளடைவில் என் கவலை தேய்ந்ததெனினும் என் பெற்றாரை நினைத்தவுடனே என்வயிறு "குபீர்" என்று பற்றியெரியும்; இராக் காலத்தில் பூரண உறக்கம் வந்தாலொழிய உறங்காத நேரத்தில் என் பெற்றோரையிட்ட கவலையே என் மனத்திற் குடிகொண்டிருக்கும்; இடையிற் கண்விழித்தால் பின் நித்திரை குழம்பிவிடும்; ஆனாலும் என்னை வளர்த்து வரும் சிற்றன்னை தந்தையரும், என் சகோதரியும் என்னையிட்டுக் கவலைப்படுவார்களே யென்ற காரணத்தினால் நான் ஒருவாறு என் கவலையைப் பிறர்க்கு அதிகம் புலப்படவிடாமற் காலம்போக்கினேன்; என் சிறியதந்தையார் தாம்பெற்ற மகளைக் காட்டிலும் என்மீது அதிக அன்பும் ஆதரவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டி நடந்தார்; "மகளே, நான் சிறுபிராயத்திற் படிப்பை அலட்சியஞ் செய்து திரிய, உன் அப்பர், என் அருமையான அண்ணா; அவர்தான் என்னைக் கண்டித்துத் திருத்திக் கற்கச்செய்து ஆளாக்கிக் கல்யாணமுஞ் செய்து வைத்தவர்; என் அண்ணருடைய அன்பும் பாதுகாப்புமில்லாவிட்டால் நான் இந்த நல்வாழ்வை யடைந்திருக்கமாட்டேன்; அந்தக் காலத்தில் உன் தாயாராகிய என் அண்ணியாரே, தமயன் மனைவி ஐவகைத் தாயருள் ஒருத்தியென்ற முறையில் தாய்போல் என்னை அன்பாக உணவூட்டி வளர்த்து வந்தாள்; ஆனதால் என் அருமை மகளே, உனக்கு மாத்திரம் பெருங் கவலையை ஆக்கிவிட்டார்களென் றெண்ணாதே; உன் பெற்றோர் எனக்குந் தீராக்கவலையை ஆக்கிவிட்டனர். இப்பொழுது இந்தவூரிலே நாங்கள் உற்றார் உறவினரற்ற தனிக் குடியானோம்; ஆனாலும் நாங்கள் பூசிக்குந் தெய்வம், கையெடுக்கும் பெருமான் உன்னையும் எங்களையும் பாதுகாப்பாரடி யம்மா; ஏது வந்தாலும் ஊழால் என்று நாம் இருத்தல்வேண்டும்" எனச் சொல்லிக் கவலைப்பட்டுத் தாமுந்தேறி என்னையுந் தேற்றினார் என் சிற்றப்பர். என் தங்கையும் நானும் ஒரு வயிற்றிற் பிறந்திலோ மெனினும் அவள் உடன்பிறப்பைக் காட்டிலும் என்னிடத்தில் அதிக அன்புபாராட்டி நடந்தாள்; நான் தனியே யிருந்து என் பெற்றோரையிட்டுக் கவலைப்படக் கண்டால், உடனே என் தங்கை ஓடி வந்து வேறுகதை சொல்லி என் கவலையை மறக்கச் செய்வாள்; ஆனால், என் பொல்லாத காலத்தினாலோ வேறு எதனாலோ நான் அறியேன், என் சிறியதாயார் என்மீது தொடக்கத்திற் பாராட்டிவந்த அன்பு, தேய்மதி போல், நாள்தோறும் குறைந்து வருதலை அவதானித்தேன்; ஆனாலும் அதனை உணாந்தும் உணராதவள் போல் என் சிற்றன்னை யாரிடத்து என்னளவில் அன்பும் மரியாதையும் பாராட்டியே நான் ஒழுகி வரலானேன்;

கல்வியுங் கவலையை ஆற்றுமல்லவா?

என் தாயார் சிவபதமடைந்து மூன்று மாசங்கள் வரையிற் கழிந்து விட்டன; எங்கள் வீட்டிலுள்ள விலைபெற்ற பொருள் பண்டங்களை யெல்லாம் என் சிறியதந்தையார் சோரருக்குப் பயந்து தம்முடைய வீட்டிலேயே பிரத்தியேகமான ஒரு அறையில் என்பொருட்டுப் பாதுகாப்போடு வைத்தார்; எங்கள் வீட்டிற்குச் செல்லும் முகப்பு வாசலை அடைத்துவிட்டுத் தங்கள் வளவிலேயே ஒரு படலையிட்டு இரண்டு வீடு வளவுகளையும் ஒன்றாக வைத்துப் பாவித்து வந்தார். எனக்கு ஆகவேண்டிய செலவு முழுவதையும் தம் பொருள் கொண்டே செலவு செய்துவந்தார்; உணவு உடை முதலிய எந்த விஷயத்திலும் நான் வேறு என் தங்கை வேறென்ற பேதம் பாராட்டாமல் எங்கள் இருவரையும் தம் இரு கண்போல் மதித்து அன்புடன் வளர்த்து வந்தார்; என் தாயார் மோசம் போயினமை காரணமாகச் சிலகாலம் படிப்பைத் தவிர்த்திருந்த என் தங்கைக்குப் பழையபடி உபாத்தியாயர்களை யழைத்துப் படிப்பித்தல் வேண்டுமென என் சிறியதாயார் விரும்பியமையினால் சிற்றப்பர் அப்படியே ஒழுங்கு செய்தார்; உபாத்தியாயர் வந்தவுடன் என் சிறிய தந்தையார் என் சகோதரியுடன் என்னையும் பழையபடி போய்ப் படிக்கச்சொல்ல, நான் அநாதப்பெண், எனக்கேன் சங்கீதம் சம்ஸ்கிருதம் என்று நினைத்த மாத்திரத்தே என் கண்களில் நீர் ததும்பியது. அதனை அவதானித்த என் சிறியதகப்பனார் "அம்மா நீ யழாதே, நீ படிக்கவேண்டாம்; உன் தங்கை படிக்கப் பக்கலில் பொழுது போக்காகக் கேட்டுக்கொண்டிரு; கல்வியுங் கவலையை ஆற்றுமல்லவா" என்று இதமாகச் சொல்ல, அதற்கு உடன்பட்டு நானும் அப்போது என் தங்கை படிக்க, சங்கீதம் பயில உற்றுக் கேட்டுக்கொண்டும் பார்த்துக்கொண்டும் இருந்து வந்தேன்; அந்த நேரங்களில் என் கவலை குறைவதையும் அவதானித்தேன்; என் சிறிய தாயார் சமையல் வேலையாக, வீட்டுக் கருமம் எதனையாகத் தனியே செய்யக் கண்டால் நானும் உடனே போய்த் துணைபுரிவேன்; நான் அப்படித் துணைபுரிவதைக்கண்டு என் தங்கை தானும் வந்து துணைபுரிவாள்; சிலவேளையில் என் தங்கை பக்கலில் நான் இருக்கும்போது, என் சிறிய தாயார் தனக்கு வீட்டுப் பணியில் துணைபுரியும்படி என்னைக் கூப்பிடுவதுமுண்டு; நான் உடனே எழுந்துபோய்த் துணைபுரிவதுமுண்டு.

சும்மாவிருப்பதால் என்ன சுகம்?

ஆனால், இது என் சகோதரிக்கு விருப்பமல்ல; சிலநாட் செல்ல நான் என் சகோதரி படிக்குமிடத்திற் போயிருத்தலை விட்டு, என் சிறிய தாயாருக்குச் சமையல் வேலையிலும் மற்றைய வீட்டுக் கருமங்களிலும் துணை செய்துவந்தேன்; இதனை அவதானித்த என் தங்கை ஒருநாள் தன் தாயைப் பார்த்து, "அம்மா, நான் படிக்கும்போது என் அக்காளும் உடன் வந்திருக்கட்டும்; படித்து முடிந்தவுடனே நானும் என் அக்காளும் வீட்டுக் கருமங்களில் உங்களுக்கு எங்களால் இயன்ற துணை செய்கிறோம்" என்று சொல்ல, "மகளே, உனக்கு விஷயந் தெரியாது; நீயோ சிறுபிள்ளை; உன் அக்காள் உன்னுடனிருந்து படித்தாற் காரியமில்லை; சும்மாயிருப்பதனால் என்ன சுகம்? இனிமேல் வீட்டுக்கருமங்கள் முழுவதையுந் தனியே என்னாற் செய்யமுடியாது. படிப்பில்லாத நேரத்தில் நீயும், சும்மாவிருக்கும் வேளையில் உன் அக்காளும் எனக்குத் துணை செய்யவேண்டும்; பெண் பிள்ளைகள் வீட்டுக் கருமங்களையெல்லாம் நன்றாய்ச் செய்யச் சிறுவயசிலேயே பழகிக்கொள்ளுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும்; இல்லாவிட்டாற் பிற்காலத்திலே அவர்கள் இடர்ப்படவேண்டி வரும்; நான் அந்த நாளிற் சமையல் முதலிய வீட்டுக் கருமங்களை யெல்லாம் என் தாயாரிடத்திலே பழகியிருந்த படியினாலே தான், இப்பொழுது பிழை நேராமற் செய்துவருகிறேன்; சங்கீதமும் சம்ஸ்கிருதமும் இங்கிலீசும் மாத்திரம் படித்துவிட்டாற் போதுமென ஒருபெண்பிள்ளை மனரம்மியப்பட்டுக் கொண்டிருக்க முடியாது; இல்லறத்திற்குத் துணையாயிருக்க அறியாத பெண் இவைகளை யெல்லாம் படித்தாலும் ஆவதென்ன? மேலும் நீ சிறுபிள்ளை, இந்த விவகாரங்களில் நீ தலையிடாதே" என்று தன் மகளுக்கு என் சிறியதாய் சிறிது கடுத்துச் சொல்லக் கேட்டேன்; மகளுடனே தாய் அப்படிக் கடுகடுத்துப் பேசியதை முந்தி நான் கண்டிலேன்; என் தங்கையும் தன்னைத் தாய் கடிந்து சொல்லியதையிட்டுக் கவலைப்பட்டாள்; "அம்மா நன்மைக்காகச் சொன்னால் அதையிட்டுக் கவலைப்படுவதா, மனம் வருந்த வேண்டாம், தங்கைச்சி" என்று என் சகோதரியை நானே தேற்றினேன்; "வேறொன்றுமல்ல, அக்கா, முந்தி ஒருநாளும் என்னை இப்படிக் கடிந்து பேசாத என் தாயார் இன்றைக்குக் கடிந்து பேசியதுதான் எனக்குக் கவலை" என்று சொல்லி என் தங்கை ஒருவாறு தேறினாள்.

* * *

உலகம் பலவிதம்: 1946 ஜூன் 14
விசாலாட்சி: (முற்றொடர் - 103)

இரண்டுமுண்டு

சிலநாட் செல்ல, என் தங்கை உபாத்தியாரிடம் போயிருந்து படிக்கும்போது நான் உடன் போயிருப்பதை விட்டுச் சிறிய தாயாருக்கு வீட்டுப் பணியில் இயன்ற துணைபுரிந்து வந்தேன்; இதனைப்பார்த்து என் தங்கையும் தான் படித்தது போதும், அதன்மேல் தான் படிக்கப்போவதில்லையெனச் சொல்லி, படிப்பில் ஊக்கங் குன்றுவாளாயினாள்; தனது நோக்கத்தை என் தங்கை தனது தகப்பனாருக்குச் சொல்ல, "ஏன், மகளே, உன் அக்காளுக்கும் பொழுதுபோக்காக விருக்கும். அவள் கவலையை மறந்திருப்பாள்; அவள் உன்னுடன் இருக்கும்போது நீ சந்தோஷமாகப் படிக்கலாந்தானே; மேலும் கற்கத் தொடங்கியதை நிரம்பக் கற்றல்வேண்டும்; இன்னுஞ் சில காலம் படி" என்று சொல்ல, "என் அக்காள் இப்பொழுது சில நாட்களாக நான் படிக்கும்போது என்னுடன் கூட வந்திருப்பதில்லை; என் தாயாருக்கு வீட்டுப்பணியிலே துணை புரிவதால் என்னுடன் இருந்திலள்; மேலும் போய்விட்டது" என்று தகப்பனுக்கு மகள் உள்ளதைச் சொன்னாள்; தகப்பன் சிறிதுநேரம் யோசித்து விட்டுத் தம் மகளைப் பார்த்து, "உன் சகோதரி தானாகப்போய் உன் அம்மாவிற்கு வீட்டுக் கருமங்களில் துணைபுரிவதோ, இல்லையேல் உன் தாய் உன் அக்காளைக் கூப்பிட்டுப் பணி செய்விப்பதோ" என்று கவலையோடு கேட்க, "இரண்டுமுண்டு ஐயா" என்று மகள் பதிலிறுத்தாள்; "மகளே, உன் தாய் உன் விஷயத்தில் நடந்துகொள்வது எப்படி!" என்று கேட்க, மகள் "என் விஷயத்தில் தாயார் வீட்டுக் கருமம் பார்க்க என்னைக் கூப்பிடாவிட்டாலும், என் அருமையான அக்காளை அதிக சிரமப்படுத்த வொண்ணாதென்று நானாகவே போய்த் துணை செய்வதுண்டு ஐயா" என்றாள்; இவைகளை யெல்லாம் கேட்டுக்கொண்டு சிறிது தூரத்திலே நின்ற நான் என் சிறிய தந்தையார் முன்பு போய், "சிற்றப்பா, நானாகவே போய்ச் சின்னம்மாவிற்கு வீட்டு வேலையில் துணைபுரிவதுண்டு; எனக்குச் சங்கீதத்திலும் இப்பொழுது புலன் செல்வ தில்லை; ஏதும் வீட்டுவேலை செய்து கொண்டிருந் தாற் கவலை தோன்றாமல் விடுகின்றது; என் தாயாரும் சமையல் முதலிய வீட்டு வேலைகளை எனக்கு நன்கு பழக்கி வைக்கத் தவறிவிட்டார்; ஆனதனால், நான் அதனைப் பூரணமாகப் பழகிக்கொள்ள விரும்புகிறேன் சிற்றப்பா" என்று விநயத்தோடு சொன்னேன்; சொன்னேனாயினும் சிற்றப்பர் நான் சொன்னதைக் கேட்டுச் சந்தோஷப்படவில்லை; "நீங்கள் போங்கள் மக்காள்" என்று சொல்லிவிட்டு யோசித்தபடியிருந்தார்; சிறிய தந்தையாரும் நல்ல விவேகி; பொறுமையுள்ளவர்; பின்வரும் கருமத்தை முந்தியே யோசித்துச் செய்யும் இயல்பு பூண்டவர்;

இயற்கையன்பில்லாரைச் செயற்கையன்பு வைக்கச் செய்யலாமா?

இது நிகழ்ந்த அன்று தொடக்கம் அவர் மனச் சந்தோஷமற்றவராயும் சிந்தனையோடு கூடியவராயு மிருப்பதை அவதானித்தேன். என் சிறியதாயார் என்னைப் புறக்கணிக்கத் தலைப்பட்டுக் கொண்டாரென்பதை என் சிறியதந்தையார் அவதானித்துக்கொண்டார்; அதனாற்றான் அவர் பெருங்கவலையடைந்தார்; இந்த விஷயமாகத் தாம் தம் மனைவியிடம் யாதுஞ் சொன்னாற் குடும்பப் பிணக்கு நேருமென்பதையிட்டுக் கவலைப்பட்டார்; இயற்கையில் அன்பில்லாதவரைச் செயற்கையால் அன்பு வைக்கச் செய்வது அசாத்தியமென்றெண்ணி என் சிறியதகப்பனார் எனக்கு எங்கள் சாதிமுறைப்படி பால்ய வயசிலேயே தக்க வரனைத்தேடிக் கல்யாணஞ் செய்து வைக்கவேண்டுமென்ற நோக்கங் கொண்டாராய் அதற்காகிய முயற்சிகள் செய்வாராயினார்; சிறிய தகப்பனார் என் விவாகவிஷயமாக எவ்வளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சி செய்தாரோ அவ்வளவிற்கு அவர் முயற்சி பிரதிகூலமாகவே முடிந்தது; என்னைக் கல்யாணஞ் செய்துகொடுக்க வேண்டுமென்ற கருமத்தில் மாத்திரம் என் சிற்றன்னையும் அவருடன் ஒத்துழைத்தாள்; சிற்றன்னை அப்படி ஒத்துழைத்ததன் நோக்கம் வேறொன்றுமன்று; கூடிய சீக்கிரத்தில் தங்கள் வீட்டிலிருந்து என்னை அகற்றிவிட வேண்டுமென்ற ஒரேயொரு நோக்கந்தான்; நான் முந்தியே சொன்ன பிரகாரம், என் தங்கை வயசிற் குறைந்தவளானாலும் புத்தியிற் சிறந்தவள்; இந்த விவகாரங்களை யெல்லாம் என் அரிய சகோதரி நன்கு உணர்ந்து தான் தன்னளவிற் கவலைப்பட்டு வந்தனளெனினும், என்னுடனாக, தன் தாய் தந்தையருடனாக இவைகளையிட்டு யாதும் பேசாள்; ஆனால் அவள் என் விஷயத்தில் முன்னரைக் காட்டிலும் அதிக அன்புடனும் மதிப்புடனும் ஊடாடி வருவாளாயினாள்; என் அருமைத் தங்கை சிலவேளை வாடிய முகத்துடன் இருப்பக்கண்டு "என்னடியம்மா உனக்குக் கவலை, ஏன் வாடிய முகத்துடன் காணப்படுகிறாய்" என்று நான் கேட்டால், "எனக்கு எவ்வகையான கவலையுமில்லை, அக்கா, நீங்கள் உடனிருக்கும் வரையில் எனக்கென்ன கவலை" யென்று இதமாகச் சமாதானஞ் சொல்லி, முகமலர்ச்சி காட்டுவாள்.

"அன்னையில்லாப்
பிள்ளையிருப்பது அவம்"

தம்முடைய உற்ற நண்பர்கள் யாரும் வீட்டிற்கு வரும்போதெல்லாம், என் சிற்றப்பர் என் விவாக விஷயமாக அவர்களுடன் பேசி எங்கேனுந் தக்க வரன் அகப்பட்டால் தமக்குத் தெரிவிக்கவேண்டும் என்று சொல்வதுண்டு; இப்படியாக ஒரு நாள் எங்கள் வீட்டிற்கு ஒரு பிராமணர் வந்தார்; அவர் வந்த நோக்கம் ஏதோ கல்யாணம் பேச என்பதை அறிந்தமையினால், அவர்கள் பேசிக்கொண்டிருந்த தலைவாசற் பக்கத்திற்கு நான் போகவேயில்லை; என் சிறிய தாயாருக்குச் சமையல் வேலையில் உதவி செய்துகொண்டு அடுக்களைப் பக்கத்திற்றானே அன்று பகல் முழுவதும் இருந்துவிட்டேன்; ஆனால் என் தங்கை தலைவாசற்பக்கம் போவதும் மீண்டு வருவதுமாகவே அன்று காலம் போக்கினாள். வந்த பிராமணருக்கு அன்று எங்கள் வீட்டிற்றானே விருந்தளிக்கப்பட்டது; என் சிற்றப்பரும் அந்தப் பிராமணரும் என் கல்யாண விஷயமாக ஏதோ ஒழுங்கு செய்துகொண்டார்களென்பது மாத்திரம் நான் அயிர்க்கத்தக்கதாயிருந்தது; அவர் போனபின் என் சிறிய தந்தையார் சிறிய தாயாருடன் நீடித்த நேரமிருந்து பேசுவதையும் யோசிப்பதையும் நானும் என் தங்கையும் அவதானித்தோம்; அன்றிரவு என் தங்கை என் பாயிற்றானே பக்கலிற் படுத்துக் கொண்டு எனக்குக் கல்யாணம் பேசி ஒழுங்கு பண்ணியிருக்கிறதென்ற செய்தியைச் சொன்னாள்; எனக்கு ஏன் அம்மா கல்யாணம்! அன்னையில்லாப் பிள்ளையிருப்பது அவம்; என் தாயார் சாவதற்கு முந்தியே நான் செத்திருந்தால் சந்தோஷமாகச் செத்திருப்பேன்" என்று சொல்லிக் கவலைப்பட்டேன்; கேட்ட தங்கையுங் கவலைப்பட்டாள்; "அக்கா, முதற் கடவுள் துணை வேண்டும், இரண்டாவது நான் இருக்கும் வரையும் உங்களை எவரும் புறக்கணித்து நடத்த விடமாட்டேன்" என்று தேறுதல் சொல்ல, "அம்மா, என்னை இப்பொழுதும் எவரும் புறக்கணிக்கவில்லை; அப்படியொருபோது ஆரும் புறக்கணிப்பரென்றாலும், அந்த ஆண்டவன் புறக்கணிக்க மாட்டானடியம்மா" என்று சமாதானஞ் சொல்லி, நானுந் தேறி என் தங்கை யையும் தேற்றினேன்; பின்னர் இருவரும் உறங்கி விட்டோம்.

"ஆய்ந்தோய்ந்து பாரான் கருமம்
தான்சாந்துயரந் தரும்"

என் சிறிய தந்தையார் சிற்றன்னையைப் பார்த்து, "ஆய்ந்தோய்ந்து பாராமற் செய்யுங் கருமம் தான் சாந்துயரந் தருமென்று உலகத்திலே சொல்லுவார்கள்; பார்வைக்கு எப்படியிருந்தாலும் நாம் சம்பந்திகளிருக்கும் ஊருக்குப் போய் அவர்களுடைய குலம் கோத்திரம் சூத்திரம் முதலியவைகளையெல்லாம் விசாரித்தல்லவா எங்கள் பிள்ளையைக் கல்யாணஞ் செய்து கொடுக்கவேண்டும்; ஒரு கருமத்தை யோசி யாமற் செய்துவிட்டுப் பச்சாத்தாபப்படுவதனாற் பயனில்லை; ஆனதால் அந்தச் சம்பந்திகளிருக்கும் ஊருக்கு நான் அவர்களை யறியாமற்போய், அங்கு என்னை யறிந்தவர்கள் சிலர் இருக்கிறார்கள், அவர்களை விசாரித்து இவர்களைப்பற்றி யறிந்த பின் விவாகத்திற்கு உடன்படுவதுதான் புத்தியென்று சொன்னார்; கேட்ட சிறிய தாயார், "அது செய்யத்தான் வேண்டும்; நாளடைவிற் செய்துகொள்ளலாம்; ஆனால் வந்த அந்தப் பிராமணரைப் பார்த்தபோது அவர் நல்ல குலங்குடியிற் சேர்ந்தவர் போலப் புலப்படுகிறாரே; செல்வஞ் செல்வாக்கோடு கூடியவர்போலக் காணப்பட்டாரே எனச் சொல்லி என் சிற்றப்பர் அப்போதைக்குப் போகாதபடி தடுத்துவிட்டார். இங்ஙனமாக ஒருவாரங்கழிந்த பின் அந்தப் பிராமணர் இன்னுமொரு வாலிபப்பிராமணருடன் எங்கள் வீட்டிற்கு வந்தார்; புதிதாக வந்த அவர்தாம் வரனென்றுந் தெரிவித்தார்; அவருடைய தோற்றம் ஊடாடிய முறை முதலியவற்றைக் கண்டு அவர் தக்க வரனென என் சிறிய தாய்தந்தையர் திருப்தியடைந்து கொண்டார்கள்; விவாகம் நிச்சயிக்கப்பட்டது; ஆனால் இந்த விஷயத்தில் என் எண்ணத்தை எவருங் கேட்டாரல்லர்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1946 ஜூன் 21 விசாலாட்சி: (முற்றொடர் - 104)

"மனுஷன் காயம் அநித்தியம்"

நிச்சயிக்கப்பட்ட வரன் பட்டினப் பக்கத்தி லுள்ள ஒரு கலாசாலையில் உயர்தர வகுப்பிற் படிக்கின்றாரென்றும், அவருடைய பரீட்சை நடை பெறுதற்கு ஒருமாச முண்டென்றும் அப்பரீட்சை நடந்தபின்தான் விவாகம் நடத்துவதென்றும் என் சிறிய தந்தையாரும் வந்தவர்களும் கலந்து பேசி நிச்சயம் பண்ணிக்கொண்ட பின், வந்தவர்கள் தம் ஊருக்கு மீண்டு போய்விட்டார்கள், அதன் பின் ஒருநாள் என் சிறிய தந்தையார் என்னைக் கூப்பிட்டு, "மகளே, மனுஷன் காயம் அநித்தியம்; நான் இருக்கும்போதே உன் கருமங்களைப் பார்த்து வைத்தல் வேண்டும்; உனக்கு ஒரு தக்க விவாகம் ஒழுங்கு செய்திருக்கிறேன்; அன்று இங்கு வந்த வாலிபன்தான் உனக்கென நிச்சயிக்கப்பட்ட வரன்; அவன் குலங்குடி கோத்திரஞ் சூத்திரம் எல்லா விஷயத்திலும் எங்களோடு ஒத்தவனென்று அறிந்தேன்; இந்தச் சம்பந்தம் எனக்கு மாத்திரமல்லாமல், உன் சிறியதாயார் தங்கை என்னுமிவர்களுக்குஞ் சம்மதம்; இந்தக் காலத்திலே கோயிற்பூசை பண்ணிக்கொண்டிருப்பதானால் அதிக வருவாயில்லை, மதிப்புமில்லை; உத்தியோகம் பார்ப்பார்க்கே வருவாயுண்டு நடப்புண்டு என்று சொல்லுகிறார்கள்; அந்த வாலிபனெனிலோ உயர்தர வகுப்பிற் படிக்கிறான்; விரைவிலே பரீட்சை நடக்குமாம்; பரீட்சையிற் சித்தியெய்தக்கூடிய விவேகியென்பது ஆளைப் பார்க்கவே புலப்படுகின்றது; இவைகளையெல்லாம் உத்தேசித்துத்தான் அந்தச் சம்பந்தத்திற்கு உடன்பட்டேன்; ஆண்டவன் கிருபையால் உனக்குப் போதிய பொருள்பண்டம் நிலம்புலம் உண்டு; இன்னும் ஆகவேண்டியவைகளை நான் பார்த்துக்கொள்ளுவேன்; நீ நல்லாயிருப்பாயடியம்மா; உனக்கும் இந்தச் சம்பந்தஞ் சம்மதந்தானா" என்று சொல்லி வினாவினார். "சிற்றப்பா, உங்களுக்குச் சம்மதமானால் எனக்குஞ் சம்மதந்தானே" என்று நான் பதில் சொன்னேன். என் சிறிய தந்தையாரும் நான் சொன்ன பதிலைக் கேட்டுச் சந்தோஷப்பட்டார்.

கொல்லவல்லக் கொல்லவல்ல பொல்லாக் குணம்போக்க

இங்ஙனஞ் சிலவாரஞ் செல்ல, என் சிறிய தந்தையார், என்பொருட்டுச் சில ஆபரணங்களைச் செய்வித்தார்; எனக்குந் தங்கைச்சிக்கும் சில விலையுயர்ந்த பட்டாடைகளை வாங்கிக்கொண்டு வந்தார்; இவைகளை யெல்லாம் என் சிறியதாயாருக்கு அவர் காட்டியபோது, சிறியதாயார் கண்டு மகிழ்வதற்கு மாறாக முக வாட்டத்தோடு கூடியவராய்க் காணப்பட்டமையினால், என் சிறிய தந்தையார் சில பட்டாடைகளைச் சிறிய தாயாருக்கும் வாங்கிக் கொண்டுவந்து "எங்கள் பெரிய தங்கைச்சியின் கல்யாணகாலஞ் சமீபிப்பதனால் அக்காலத்தில் உபயோகிக்க உமக்கென்று வாங்கி வந்தேன்" என்று சொல்லிக் கொடுத்தார்; கொடுத்தவற்றை இரு கரத்தினாலும் சிறியதாயார் ஏற்றுக் கொண்டாரெனினும், அவர் முகத்தில் அந்த நேரந்தானும் மலர்ச்சி யுண்டாகவில்லை; அதனைச் சிறியதந்தையாரும் தங்கைச்சியும் நானும் அவதானித்தோம்; இதற்கிடையில் என் தங்கை சிறுபெண்ணல்லவா; தாயாரைப் பார்த்து "என்ன எங்கள் அம்மாவிற்கு முகத்திலே சந்தோஷத்தைக் காணவில்லையே" யென்று புன்னகையரும்பச் சொன்னாள்; அந்தநேரம் சிற்றப்பர் அந்த இடத்திலில்லை; மகள் அப்படிச் சொல்லியதைக் கேட்டவுடனே தாய் மகளைச் சினந்து பார்த்து "நீயும் வரவரக் கெட்டுப் போகிறாய்; உன்மேற் பிழையில்லை, நீ கூடிய கூட்டத்தால் வந்த வினை" என்று கடிந்து சொல்ல, என் தங்கை வெதும்பியவளாய் "அம்மா, நான் ஆரோடு கூடினேன்? ஆர்புத்தி கேட்டேன்? ஏன் இப்படிச் சொல்லுகிறீர்கள் இப்பொழுது வந்த வினையென்ன" என்று கண்களில் நீர் ததும்பச் சொன்னாள்; என் சிறியதாயார் உடனே அவ்விடம் விட்டகன்றார்; நான் என் தங்கையைக் கவலைப்படாது தடுத்து "தங்கைச்சி, அம்மா சொன்னதையிட்டுக் கவலைப்படலாமா? எங்கள் பெற்றோர் ஏதும் புத்திசொல்வதும் இடையிடையே கடிந்து பேசுவதும் எங்கள் நன்மையை உத்தேசித்துத் தானே; நல்ல குருநாதர் நம்மை வருத்துவதுங் கொல்லவல்ல பொல்லாக் குணம் போக்க என்று உலகத்திலே சொல்ல, நீர் கேட்டிருக்கவில்லையா தங்காய்; பரிபவமென்பது பிறராற் பட்டாலன்றோ என்று பாரதத்திற் சொல்லப்பட்டிருக்கிறதே; பிறர் நம்மை ஏதுங் குறைசொன்னால் அதற்குப் பயப்படத்தான் வேண்டும்; மனம் வருந்தத்தான் வேண்டும் என்று பலவாறு சமாதானஞ் சொன்னேன்.

"...உள்ளாறா நாவினாற் சுட்டவடு"

அப்பொழுது என் தங்கை என்னைக் கவலையுடன் பார்த்து, "அக்கா, என் தாயார் என்னைக் கண்டித்துப்பேசியதை யிட்டு நான் கவலைப்படவில்லை; பிழை கண்டாற் பெற்றார் கண்டிக்க வேண்டியது தான், திருத்த வேண்டியதுதான், பிள்ளைகளாகிய நாங்கள் அவர்கள் செய்வது நன்மைக்கென்று உணர்ந்து திருந்தி நடக்கவேண்டியது நியாயந்தான் ஆனால் என் தாயார் என்னைக் குறை சொல்லும்போது "நீயும் கெட்டுப்போகிறாய், உன்மேற் பிழையில்லை, நீ கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்தால் வந்த வினை" என்று சொன்னாரே அந்த வார்த்தைகள் என்னுள்ளத்தைப் புண்படுத்துகின்றன; அக்கா, "தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினாற் சுட்டவடு" என்ற வள்ளுவர் வாக்கு நீங்கள் அறியாததல்ல; என் தாயார் சொன்ன நீயும் என்றதிலே உள்ள உம்மை யாரைக் குறித்தது? கூடாத கூட்டத்தால் வந்த வினையென்று சொன்னாரே என் தாயார்; உங்களை விட நான் வேறு யாருடன் கூடி ஊடாடி வருகிறேன்; உங்களுடைய அன்பு அருமை பெருமைகளை என் அப்பர் அறிவார், சிறுமியானாலும் நான் நல்லாய் அறிவேன்; ஆனால் என்னைப் பெற்றவள் இன்னமும் விளங்கிக்கொள்ள வில்லையே என்பதுதான், என் அருமை அக்கா! எனக்குத் தீராக் கவலையை ஆக்கிவிட்டது" என்று சொல்லி என் அருமைச் சகோதரி விம்மி விம்மி யழுதாள்; அந்த நேரத்தில் என் சிறிய தாயார் என்னைக் குறைகூறியதையிட்டு எனக்கு அதிக கவலையில்லை; ஆனால் என்னையிட்டு என் தங்கை மனம் வருந்துகின்றாளே யென்பதுதான் என் கவலையை அதிகப்படுத்தியது; நான் என் தங்கையைப் பார்த்து "என் அருமைத் தங்காய், நீர் அழவேண்டாம், வருந்த வேண்டாம்; உங்கள் அம்மா தானே எனக்கும் இப்பொழுது தாய்; அம்மா சொன்னதையிட்டு நான் கவலைப்படாமலிருக்க நீர் ஏன் கவலைப்படுகிறீர்; நான் அறிந்தோ அறியாமையாலோ தவறுகள் செய்திருக்கக்கூடும்; என் சிறியதாயார் எனக்கு நேரில் என் குறைகளைச் சொல்லக்கூசி, உமக்குச் சொல்வதுபோற் சொல்லியிருக்கலாம்; ஆனால் நான் செய்யும் பிழை என்ன வென்பதை நேரில் அறிந்து கொள்வேனானால் நான் இயன்றவரையிற் திருந்தி நடப்பேன்; அதையிட்டு நான் கவலைப்படவில்லை; இன்னமும் இயன்ற வரையில் எங்கள் அம்மாவுடன் நான் இதமாகத் தான் நடக்க முயற்சி செய்யவேண்டும்; நீர் ஒன்றுக்கும் வருந்தவேண்டாம்; ஐயாவிடமும் இதைப்பற்றி ஏதும் பேசவேண்டாம்; பொறுமை கடலினும் பெரிது தங்கைச்சி; முற்பிறப்பில் நான் புண்ணியஞ் செய்தவளாயிருந்தால் என் பெற்றாரை நான் இந்தச் சின்ன வயசிற் பறிகொடுத்துக் கலங்கவேண்டி நேரிடுமோ..." என்று சொல்லி, என் தங்கையைத் தேற்றத் தொடங்கிய நானே கலங்க, அதனைக் கண்டு என் தங்கை தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு என் கண்ணீரையுந் துடைத்து என்னைத் தேற்றினாள்; இருவரும் ஒருவாறு தேறிக்கொண்டு எங்கள் கருமங்களைப் பார்த்தோம்; ஆனால் நான் ஒருவாறு தேறியிருந்தேனாயினும் கவலையைப் புறத்தே காட்டாது முகமலர்ச்சியோடு கூடியவள் போல் ஊடாடினேனெனினும், என் தங்கை அன்று தொடக்கம் முகவாட்டத்துடன் எந்த நேரமுங் காணப்பட்டாள்.

* * *

உலகம் பலவிதம்: 1946 ஜூன்; 28 விசாலாட்சி: (முற்றொடர் - 105)

"நீதிமிகு நல்லோர்க ளெங்கிருந்தாலும் நிறைபட்சம் மறவார்கள் காண்"

"அம்மா கேட்கிறேனென்று, குறையெண்ணாதீர்கள்; அந்தக் கல்யாணம் பின்பு உங்களுக்கு நடந்ததா, அதை மாத்திரஞ் சொல்லி விடுங்கள்; முந்தியறிய ஆவலாயிருக்கிறேன்" என்று கேட்டான் ஆவலுடன் இக்கதையை கேட்டுக்கொண்டிருந்த இராமன்: "அப்பனே, அப்படி நடந்திருந்தால் நான் உங்களுடனிருந்து இந்தக் கதையைச் சொல்ல வேண்டி நேர்ந்திராது ..." என்று அந்த புதிய துறவியம்மாள் சொல்லி முடிப்பதற்கிடையில், விசாலாட்சி இராமனைப் பார்த்து "என்ன இராமன், பூசையாக முந்திச் சந்நதமாடப் பார்க்கிறாய்; அவசியப்படாதே கதையை ஆதியோடந்தமாக பொறுமையுடன் அவதானமாகக் கேட்டாற்றான் சுவைக்கும், ஏன் இராமன் உனக்கு நித்திரைச்சோர்வு உண்டாகிறதா" என்று வினாவ, "இல்லை, அம்மா, கேட்கக்கேட்கப் பரிதாபமாயிருக்கிறது, யோசிக்கயோசிக்கச் சந்திரவதி பட்டபாடு போலிருக்கிறது இந்த அம்மாள் பட்டபாடு; இனி நான் இடையிலொன்றும் வினாவ மாட்டேன்" என்று இராமன் சொல்லி முடித்தான், அந்தப் பால துறவியம்மாள் தன் வரலாற்றைப் பின்னரும் பரிவுடன் பகர்வாளாயினாள்; "எங்கள் விவாகத்திற்கு ஆக வேண்டிய ஆயத்தங்களையெல்லாம் சிறிய தந்தையார் வெகு முயற்சியோடு செய்து வந்தார்; சிறிய தாயாரும் அகத்தில் என்ன விருந்தாலும் புறத்தில் மிகவும் ஆர்வத்தோடும் ஊக்கத்தோடும் கருமம் பார்த்து வந்தார்; என் தங்கைக்கு உள்ளத்திலடங்கா மகிழ்ச்சிதான்; ஆனால் நான் சீக்கிரத்திலே தன்னை விட்டுப் பிரிந்திட நேருமே யென்ற கவலையொன்றிருந்தது; அதனை என் தங்கை சொல்லக்கேட்ட நான் "என் உடற்பிறப்பே, நான் உம்மை விட்டுப்பிரிய நேருமேயென்றெண்ணி நீர் துயரப்பட வேண்டாம்; நான் எங்கிருந்தாலும் என் உள்ளம் எந்த நேரமும் உம்மிடத்திலே தான் இருக்கும்; தூரத்திலே நான் வசிக்க நேர்ந்தாலும் உம்மையும் நீர் என்மேல் வைத்துள்ள உண்மையான அன்பையும் நான் மறக்கமுடியுமா? அன்புடையார்க்குச் சமீபமென்றும் தூரமென்றும் பேதமில்லையடியம்மா;

"கதிரவன் உதிப்ப தெங்கே நளின மெங்கே
களித்துள மலர்ந்த தென்ன கார்மேக மெங்கே
பகுந்தோகை யெங்கே கருத்தில் நட்பான தென்ன
மதியமெங்கே பெருங்குமுத மெங்கே முகம் மலர்ந்து
மகிழ் கொண்டதென்ன, வல்லிரவு விடிவ தெங்கே
கோழியெங்கேமகிழ்ந்து கூவிடுத லென்ன
நிதியரசர் எங்கே யிருந்தாலும் அவர்களொடு நேச
மொன்றா யிருக்கும் நீதிமிகு நல்லோர்கள்
எங்கிருந்தாலும் அவர் நிறைபட்சம் மறவார்கள்காண்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பெரியோர்கள் பாடியிருக்கிறார்கள்; அவை போல நான் எங்கிருந்தாலும் என்அருமைத் தங்காய், உம்மை ஒரு கணமும் மறக்கமாட்டேன் என்று தேறுதல் கூறினேன்; தங்கையும் ஒருவாறு தேறிக் கொண்டாள்.

உங்கள் விருப்பமென்ன?

கல்யாணத்திற்காகிய சகல ஒழுங்குகளும் ஆனபின், விவாகமூர்த்த தினத்திற்கு மூன்று தினமிருக்க என்னுடைய பொல்லாத காலத்தினாற் போலும், என் சிறிய தகப்பனார் எவருங் காத்திராப் பிரகாரம் நோய்வாய்ப்பட்டார்; வந்த நோய் ஆபத்தானதல்ல வெனினும், அவர் படுக்கையிற் கிடக்கப் பெண் வீட்டில் ஏதொரு முயற்சியுஞ் செய்தல் முடியாதாயிற்று. அந்த நேரத்தில் வரன் வீட்டுக்காரரும் விவாகத்திற்காகிய எல்லா ஒழுங்குகளையுஞ் செய்துவிட்டு, முகூர்த்த நாளுக்கு முதனாள் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள்; வந்த அவர்களும் என் சிற்றப்பரு டைய சுகவீனத்தையிட்டுக் கவலைப்பட்டார்கள்; சிற்றப்பர் அவர்களுட் பிரதானமான அந்த ஐயரைச் சமீபத்தில் கூப்பிட்டிருத்தி, தாம் சுகவீனமாகவிருப்பதனால், எக்கருமமும் பார்க்க வேறுஆள் இல்லையென்றும், ஆதலினால் விவாக விஷயத்தைத் தவணையிடுவோமென்றுஞ் சொன்னபோது, அந்த ஐயரும் அவர்களுடன் வந்தவர்களும் அதற்கு உடன்பட்டிலர்; பெண் வீட்டுக்கருமங்களையும் தாங்களே வந்துநின்று பார்ப்பதாகச் சொன்னார்கள் ஆனால் என் சிற்றப்பர் தாம் எழுந்து கன்னிகாதானந்தானுஞ் செய்யமுடியாதிருக்கும் நிலைமையிற் கல்யா ணக் கொண்டாட்டம் நடத்துவதெப்படியென்று கவலைப்பட்டார்; அப்பொழுது வரன் பக்கலாக வந்தவர்கள் சிறிது யோசித்துவிட்டு "பெண்ணை வரன் வீட்டிற்கே கொண்டுபோய் ஆகவேண்டியவற் றையெல்லாம் நாங்களே செய்வோம்; நீங்கள் கடவுளருளால் நோய் சுகமானபின் அங்கே வாருங்கள்; எதற்கும் யோசிக்க வேண்டாம்; சஞ்சலப்பட வேண்டாம்; உங்கள் பிள்ளை வேறு எங்கள் பிள்ளை வேறென்று நாங்கள் கனவிலும் நினைக்க மாட்டோம் என பல சமாதானங்களைச் சொன்னார்கள்; ஆனாற் சிற்றப்பர் அதற்குடன்பட்டிலர்; அவர் அவர்களைப் பார்த்து "என் பிள்ளையானால் நான் உடன்பட்டு உங்கள் வசம் ஒப்புவித்தாலும் உலகம் குறை சொல்லாது; இந்தப்பெண் அன்னை தந்தையற்ற அநாதப் பெண்; ஆனதனாற்றான் வந்தவர்களிடத்தில் ஒப்புவித்து விட்டேன் என்று என்னை அயலட்டத்தி லுள்ளார் அறிந்தவர் குறை சொல்லுவார்கள்; நாளைக்கு கல்யாணம் நடவாதொழிவதாற் பொருள் நஷ்டம் அதிகம் உண்டாகாது; உங்களுக்கு ஏதும் நஷ்டம் வந்தால் நானே அந்த நஷ்டத்திற்கு ஈடு செய்வேன்; இந்த நேரத்திலே கல்யாணம் நடத்த என் மனம் எள்ளளவும் உடன்படவில்லை" யென்று சொன்னார்; "பொருள் நஷ்டத்தைப் பற்றி பண நஷ்டத்தைப் பற்றிக் காரியமில்லை. இலட்சக்கணக்கில் வந்தாலும் நாங்கள் செலவிடச் சித்தமாயிருக்கிறோம்; ஆனால் எங்கள் இனசனத்தவர்கள் எங்களூரில் மாத்திர மல்லர் வேற்றூர்களிலும் பலர் இருக்கிறார்கள்; அவர்களெல்லார்க்கும் மங்கலவோலை அனுப்பி விட்டோம் அவர்கள் இன்றைக்கு நாளைக்கு எங்கள் வீட்டில் வந்து சேர்வார்கள்; அவர்களுக்கு நாங்கள் எவ்வகையான சமாதானமுஞ் சொல்ல முடியாது" எனக் கவலையோடு வரன் பகுதியார் சொன்னார்கள்; சிற்றப்பாவிற்குச் செய்வதென்ன வென்பது புலப்பட வில்லை; அவருடைய நோய் ஒருபுறமாக, இந்தச் சங்கடம் ஒருபுறமாக அவர் பெரிதுஞ் சஞ்சலப்பட்டவராய் என் சிற்றன்னையையும் மகளையும் என்னையும் மெல்ல கூப்பிட்டு விஷயம் முழுவதையுஞ் சொல்லி, "உங்கள் விருப்பமென்ன என்று கேட்டார்" "பெண்பிள்ளை பெற்றவர் பிடிவாதஞ் செய்ய முடியுமா?" என்று என் சிற்றன்னை சொல்ல, "அக்காளின் கல்யாண காட்சியை நான் இங்கிருந்து பார்க்கத்தான் வேணும்; ஆனதால் எங்கள் வீட்டிலே தான் கல்யாணம் நடக்க வேண்டும்" என்றாள் என் தங்கை. நான் ஒன்றும் பேசாமல் நின்றேன்;

"தெய்வத்திற்குச் சம்மதமில்லை போலும்"

என் சிற்றப்பா தன் படுக்கையருகில் என்னை இருக்கச்செய்து "என் அருமையான மகளே, உன் அப்பர் அன்னை இருவருமில்லாத சமயத்தில் நானும் என் மனைவியும் உன் கருமத்தைச் சீர் சிறப்பாகச் செய்து வைக்கலாமென உத்தேசித்திருந்தோம்; தெய்வத்திற்கு அது சம்மதமில்லை போலும்; நான் கிடக்குங்கிடை உனக்குத் தெரியுந் தானேயம்மா, கல்யாண கருமத்தைத் தவணையிடும்படி சொன்னாலும் வரன்பக்கத்தார் உடன்படுகின்றிலர்; பரம சங்கடமாயிருக்கின்றதே; நான் என்ன செய்வேனடியம்மா, உன்னைத் தங்கள் ஊருக்கு அழைத்துக் கொண்டுபோய் ஆகவேண்டிய கல்யாணச் சடங்குகளை யெல்லாம் அங்கேதானே செய்யப்போகிறார்களாம்; அதற்கு நாங்கள் உடன்படாவிட்டால் இந்தச் சம்பந்தம் குழம்பிப்போம்; சுகமானவுடன் நான் உன்னிடம் வருவேன்; உனக்குச் சம்மதந்தானா மகளே" என்று கண்களில் நீர்ததும்ப என்னைக் கேட்டார்; "உங்களுக்கு எது சம்மதமோ அது எனக்குஞ் சம்மதந்தான், சிற்றப்பா" என்று நான் சொன்னேன்; என் சிறியதந்தையார் எங்கள் மூவரையும் அறையிலிருந்து அகலச்செய்து விட்டு, வரன் பக்கத்தாரைத் தம்மிடம் அழைத்து "ஐயா, அன்னை தந்தையில்லா அநாதப்பிள்ளை, முதல் ஆண்டவன் துணை, இரண்டாவது உங்களை நம்பி உங்களிடம் ஒப்படைக்கிறேன்; அண்ணனுடைய அருமை மகளாகிய இந்தப் பெண்ணையும் என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளையும் நான் பேதமின்றி என் இரு கண்மணிகள் போல வளர்த்தேன்; அருமையான குணமுடையவள்; பொறுமை பூண்டவள்; கோபமென்பதை யறியாள், இன்சொல்லன்றி வன்சொல் வழங்காள்; பிறந்த வீட்டிற்கும் புகுந்தவீட்டிற்கும் இலட்சுமியாவாள்; சிறுபிள்ளை, அறிந்தோ அறியாமலோ அவள் ஏதும் குற்றஞ் செய்தாலும் பொறுத்துக் கொள்ளுங்கள்; உங்களுக்கு நான் அதிகஞ் சொல்லவேண்டியதில்லை; உங்களிடத்தில் அடைக்கலமாகத் தருகிறேன்; உங்கள் வீட்டிற்குரிய பெண்களை இங்கே அழைத்து என் பிள்ளையைக் கூட்டிக்கொண்டு போங்கள்" என்று கல்லுங்கரையச் சொன்னாராம் என் சிற்றப்பர். வரன் வீட்டிலிருந்து வந்தவர்களும் என் சிறிய தந்தையாருக்குத் தங்கள்மீது நம்பிக்கை யுண்டாகும்வண்ணம் பேசி, தங்களுள் ஒருவரைத் தங்கள் ஊருக்கு அனுப்ப, அவர் அடுத்தநாள் அதிகாலையில் மங்கலமான ஒரு பேரிளம் பெண்ணோடும், ஒரு இளம் பெண்ணோடும் எங்கள் வீட்டில் வந்து சேர்ந்தார்.

"தந்தையொடு கல்விபோம்"

"ஆச்சி, கேட்கிறேனென்று கோபிக்காதீர்கள், பேரிளம்பெண்ணுக்கும் இளம்பெண்ணுக்குமுள்ள பேதமென்ன" என்று இராமன் இடையிற் கேட்க, "அப்பனே, பேரிளம் பெண் நாற்பது வயசிற்கு மேற்பட்டவள்" இளம்பெண் 16 வயசு தொடக்கம் 25 வயசு வரையி லுள்ளவளென்றெண்ணிக்கொள்" என்று அந்தப் பாலிய துறவியம்மாள் பதில்சொல்ல "அம்மா, நான் இளம் பெண்ணைக் காட்டிலும் பேரிளம்பெண் இன்னமும் வயசு குறைந்தவளென் றல்லவா எண்ணிவிட்டேன்" என்றான்; "ஏன் அப்பனே, நீ கொஞ்சமும் படிக்கவில்லையா" என்று அந்த அம்மாள் கேட்க "நான் அற்பமேனும் படிக்கவில்லையம்மா சிறுபிராயத்தில் என்னை என் தகப்பனார் பள்ளிக்கூடத்திற் கொண்டுபோய்ச் சேர்த்து இவனை நல்லாய்ப் படிப்பிக்க வேண்டு மென்று உபாத்தியாயருக்குச் சொல்ல, உபாத்தியாயர் என்னை அவதானமாகப் பார்த்து இவன் இப்பொழுது விவேகிபோற் காணப்படுகிறான், ஆனால் வயசு ஏற ஏற இவன் மந்தனாவான் போற் புலப்படுகிறது; இதனை நான் படிப்பிக்கும் பல பிள்ளைகளிடத்தில் அவதானித்து வந்தேன்" என்றார்; அவர் அப்படிச் சொல்லக் கேட்ட என்தகப்பனார் கவலைப்பட, நான் உபாத்தியாயரைப் பார்த்து ஐயா, உபாத்தி யாயரே, நீரும் சிறுபிராயத்திலே என்னைப் போல விவேகியாய்த்தான் இருந்தீரோ? என்று கேட்டேன்; அதனால் உபாத்தியாயருக்கு பெருங் கோபமுண்டாக, "இவன் அதிகப்பிரசங்கி, எனக்கு அடங்கிப் படிக்கமாட்டான், இவனை ஆரும் வைத்துப் படிப்பிக்கமாட்டார்கள்" என்றுசொல்லி என்னைப் பள்ளிக்கூடத்தில் ஏற்க மறுத்து விட்டார்களாச்சி, பின்னர்ச் சிறுவயசில் என்பிதா செத்துப்போய் விட, "தந்தையோடு கல்விபோம்" என்று படித்தவர்கள் சொல்லுவார்களே, அப்படி யெனக்குக் கல்வியில்லாமற் போய்விட்ட தாச்சி; என்விஷயம் ஒருபுறங் கிடக்க, ஆச்சி உங்கள் வரலாற்றைச் சொல்லுங்கள் என்றான் இராமன்.

* * *

உலகம் பலவிதம்: 1946 ஜூலை 05
விசாலாட்சி: (முற்றொடர் - 106)

பார்த்த முகமெல்லாம் வேற்றுமுகம்

அன்றிரவே நாங்களெல்லோரும் புறப்பட்டுவிட்டோம்; பெண் வீட்டுக்காரருள் நானொருத்தி யொழிய எவரும் எனக்குத் துணையாக வந்திலர்; என்னைத் தனியே அனுப்புவதையிட்டு என் சிறிய தந்தையாரும் என் அரிய சகோதரியும் பெரிதுங் கவலைப்பட்டனர்; சிறியதாயுங் கவலையுடையாள் போற் காணப்பட்டாள்; அயலட்டத்திலுள்ளவர்கள் சிலர் புகைரத ஸ்தானம் வரையில் வந்து என்னைப் பயணமனுப்பினர்; புகைரதத்தில் ஏறியவுடனே என் மனம் திகிலடைந்தது; பார்த்த முகமெல்லாம் வேற்று முகமாக காணப்பட்டன; மாப்பிள்ளை வீட்டிலிருந்து வந்தவர்களென்று சொல்லப்பட்ட இரு பெண்களும் என் பக்கலி லிருந்தார்கள். அவர்களுடன் என்ன பேசுவதென்று எனக்கு அந்த நேரத்திற் புலப்படவில்லை; அவர்கள் ஏதும் கேள்வி கேட்டால் அதற்கு மாத்திரம் பதில் சொல்லிவிட்டு மௌனமா யிருந்தேன்; ஊரைவிட்டுப் புகையிரதம் தூரத் தூரப் போகப்போக எனக்குக் கவலையும் அதிகப்பட்டது; நான் ஒரு புறத்தே யொதுங்கிச் சிந்தனையோடு கூடியவளாய்க் கீழே பார்த்தபடி யிருப்பதை அவதானித்த அந்தப் பேரிளம் பெண் "என்ன, மகளே உறக்கம் வருகிறதோ" என்று கேட்க ஓம் என்று தலையசைத்தேன்; உடனே அந்தப் பெண்களிருவரும் சற்று விலகியிருந்து கொண்டு நான் ஒருவாறு படுத்துறங்க அந்த ஆசனத்திலேயே இடந்தந்தார்கள்; என்மனத்திற் கலக்கம் அதிகப் பட்டமையினாற் படுத்து வெகுநேரஞ் சென்றும் எனக்கு உறக்கம் வரவில்லை; ஆனாலும் நான் உறங்குவாள்போற் கண் மூடிக்கொண்டு சும்மா கிடந்தேன் பின்னர் எப்பொழுது அயர்ந்தேனோ அறியேன்; புகையிரதம் ஒரு பெரிய ஸ்தானத்திற் போய் நின்றபோது அங்கே சனங்கள் வந்து அதிகமாக வண்டிக்குட் புகுந்து இருக்க இடமில்லாமற் கஷ்டப்பட்டு பெருஞ்சத்தமுண்டாக, நான் துடித்துப் பதைத்து விழித்தெழுந்திருந்தேன். நேரம் காலை 7 மணிக்கு மேலிருக்கும்; அந்தத் தானத்திலே அரை மணிநேரம் புகைரதம் தங்கி நிற்குமெனவும் ஆதலினாலே எல்லோரும் பல்துலக்கி முகம் கால் கை அலம்பிக் காலைப் போசனஞ் செய்யலாகுமென்றுஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி, தாங்கள் முகம் கால் கை சுத்திசெய்து கொண்டு என்னையும் அப்படியே செய்யச்சொல்ல, நானும் அப்படியே செய்தேன்; என்னுடன் வந்த ஆண்கள் தாங்கள் விபூதி தரித்துக்கொண்டு எங்களுக்குந் தர நாங்களும் ஏற்றுப்பூசினோம்; என்னுடன் வந்த இளம் வயதுள்ள அம்மாள் எனக்குக் குங்குமப் பொட்டிட்டுத் தானும் இட்டுக்கொண்டு அந்தப் பேரிளம்பெண்ணிடம் கொடுக்க அந்த அம்மாளும் ஏற்று ஒரு பொட்டிட்டுக் கொண்டாள்; உடனே ஒரு பிராமணர் அங்கே இட்லி தோசை முதலிய பணிகாரமும் பழவர்க்கமுங் கொண்டுவர, புகை வண்டியிலுள்ளவர்களெல்லாரும் விலை கொடுத்து வாங்கியருந்தினார்கள். என்னுடன் வந்த ஆண்களுளொருவர் அப்பதார்த்தங்களுட் சிலவற்றை வாங்கி அந்தப்பேரிளம் பெண்ணிடங் கொடுக்க, அந்த அம்மாள் அவற்றுட் சிலவற்றை எனக்கு நீட்ட, நான் அந்தநேரம் எனக்குப் பசியில்லை யென்றும் ஸ்நாநஞ் செய்தபின்பே சந்திபண்ணி ஏதும் அருந்தும் நியதியுண்டென்றும் சொன்னேன்; "அப்படியானாற் கொஞ்சம் பால்குடி மகளே" யென்று அந்தப் பேரிளம் பெண் சொல்ல, நான் ஏதும் உட்கொள்ளாவிட்டால் என்னுடன் வந்த மற்றையோரும் உண்ணார்க ளென்றெண்ணி அதற்கு உடன்பட்டு, அவர்கள் வாங்கித்தந்த பாலை ஏற்று உண்டேன்; ஏனையோரும் தங்கள் காலைப் போசனத்தை முடித்தார்கள்; இதற்கிடையில் புகைரதமும் அத்தானத்தைவிட்டுப் புறப்பட்டது.

"ஏங்கினேன், அயர்ந்தேன்"

புகைரதம் புறப்பட்டு மார்க்கத்திலேயுள்ள ஸ்தானங்கள் பலவற்றிலே தங்காமலும் சிலவற்றில் மாத்திரந் தங்கியும் வேகமாகப் போனது; அப் புகைரதத்தொடர் மிகவும் வேகமாக நீடித்த தூரத்திற்குச் செல்லும் "எக்ஸ்பிறெஸ்" தொடரென்று அதிலிருந்தவர்கள் பேசக் கேட்டேன்; நேரம் காலை 9 மணியாகி, பத்துப் பதினொரு மணியாகி, மத்தியானமாகியும் என்னைக் கூட்டிக்கொண்டு போகிறவர்களுடைய ஊர் வராததைக்கண்டு, என்பக்கத்திலிருக்கும் பேரிளம் பெண்ணை, உங்களுடைய ஊர்போய்ச் சேர்வதற்கு இன்னமும் எவ்வளவு நேரஞ் செல்லு மென்று கேட்க, "இரண்டு இரண்டரை மணி வரையிற் செல்லும், புகைரத தானத்திலிறங்கி அதற்கப்பாலும் நாலைந்து மைல் "பஸ்" சிலேனும் "மோட்டார்" ரதத்திலேனும் ஏறிப்போய்த் தான் வீடு சேரவேணு மென்றாள் அந்த அம்மாள்; கேட்டவுடன் மனங்கலங்கினேன்; நாங்கள் பிரயாணஞ் செய்யும் அன்றைக்கு மத்தியானந் தான் விவாகத்திற்கான சுபமுகூர்த்தமென்று அங்கு வந்த ஐயர் முதனாள் என் சிறிய தந்தையாருக்குச் சொல்வதைக் கேட்டுநின்ற எனக்கு, அந்த அம்மாள் சொன்னது மாறாக புலப்பட்டது; மேலும் என்னைக் கூட்டிக்கொண்டு போகும் அத்தனைபேரும், புகைரதத்தில் ஏறிய பின்னர் விவாக விஷயமாக ஒரு வார்த்தைதானும் பேசக்கேட்டிலேன்; இவைகளை யெல்லாஞ் சிந்தித்தவுடனே என்மனத்தில் ஏக்கம் பிறந்தது; அந்தப் பெண்களிருவருள் எவரேனும் என்னுடன் அன்பாகப் பேசவுமில்லை. அவர்கள் கேட்டதற்கு நான் பதில் சொன்னேன்: நான் கேட்டதற்கு அவர்கள் பதில் சொல்லுவார்கள்; மங்கல கருமத்தில் ஈடுபட்டோர்க்குற்ற மகிழ்ச்சியை அவர்கள் அத்தனை பேர் முகத்திலும் நான் காணவில்லை. தூரித்தவூரிலே ஒரு பணிப்பெண் அகப்பட்டால் அந்தப் பணிப்பெண்ணை, தேவையானவர் தம் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போகுந் தன்மைபோலவே அவர்கள் என்னை யழைத்துப் போகுஞ்செயல் காணப்பட்டது; இவைகளையெல்லாஞ் சிந்திக்கச் சிந்திக்க என்னை யறியாமலே என் கண்களில் நீர் ததும்பியது; நான் கண்ணீரையொற்றுவதற்கிடையில் என்னுடனிருந்த இளம் பெண் அதனை அவதானித்து விட்டாள்; மற்றப்பெண் அந்த நேரத்திற் பாதி நித்திரையோடு இருந்தாள்; அதனைக் கண்ட இந்தப் பெண் என்னண்டை நெருங்கி வந்து, "ஏதோ நடக்கிறதுதான் நடக்கும், ஒன்றுக்குங் கவலைப்படாதே யடியம்மா, அவரவர் தலையிலெழுத்தை அழித்தெழுத முடியுமா" என்று மெல்லச் சொல்லி என்னைத் தேற்ற முயன்றாள்; அந்த வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தே என் நெஞ் சில் இடி விழுந்தது போலிருந்தது; நான் ஏங்கினேன்; சாய்ந்தேன்; அயர்ந்தேன்..."

* * *

உலகம் பலவிதம்: 1946 ஜூலை 12 விசாலாட்சி: (முற்றொடர் - 107)

இவர்களிடம் எப்படிச் சிக்கினீர்கள்?

அன்று பகல் இரண்டரை மணி வரையிலிருக்கும்; ஒரு தானத்திலே புகைரதம் போய் தங்குதலும் என்னையும் இறங்கச் செய்து அவர்களெல்லாரும் இறங்கினார்கள்; கால்மணி நேரஞ் செல்வதற்கிடையில் நடந்து சென்று பஸ்கள் நிற்குந் தானத்தை யடைந்து அங்கே ஒரு பஸ்சிலே என்னையும் ஏறச் செய்து தாங்களும் ஏறினார்கள்; அந்த பஸ் வயல்களுக் கூடாகவும் கிராமங்களுக்கூடாகவும் ஓடி மாலை ஐந்து ஐந்தரை மணிவரையில் ஒரு சிறிய பட்டணத்தை யடைதலும் அங்கே என்னையும் இறக்கி தாங்களும் இறங்கிச் சிறிது தூரம் நடந்து போய் ஒரு வீடு சேர்ந்தார்கள்: அது பெரிய வீடு; கல்யாணம் பேசிவந்த அந்த முதிய ஐயர்தான் அந்த வீட்டுக்கு எஜமானனெனவும் என்னைக் கூட்டிக்கொண்டு போகும்படி வந்த இரு பெண்களுள் அந்த முதிய பெண்தான் ஐயருடைய மனைவியெனவும் அயிர்த்தேன்; நாங்கள் போய்ச் சேர்ந்தவுடனே இலட்சுமியென்று ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப்பெண்ணை அந்த ஐயர் கூப்பிட்டு எல்லாரும் ஸ்நானம் பண்ணவேணும். வெந்நீர் ஆயத்தம் பண்ணு என்று சொல்ல "ஆம் சாமி" என்று சொல்லிவிட்டு அந்தப்பெண் வெந்நீர் வைப்பதற்காகக் கிணற்றண்டை போய் விட்டாள்; இதற்கிடையில் பிரயாணஞ் செய்த ஆயாசத்தினாலும் கவலை மேலீட்டினாலும் நான் இருந்த இடத்திலேயே படுத்து உறங்கிவிட்டேன்; அரை மணிநேரம் உறங்கியிருப்பேனோ இல்லையோ, அறியேன்; அந்த இலட்சுமி என்னை வந்து எழுப்ப, நான் திடுக்குற்று விழித்தெழுந்தேன்; "வெந்நீர் வைத்தாகிவிட்டது; வாருங்கள் அம்மா ஸ்நாநம் பண்ண" என்று அவள் சொல்ல, நான் ஸ்நாநஞ் செய்தவுடன் கட்டுதற்காகிய சேலை சட்டைகளை பெட்டியை திறந்து எடுக்க முயன்ற போது "அம்மா, நீங்கள் சும்மா எழுந்து வாருங்கள்; சேலை சட்டை புதியன கிணற்றடியில் உண்டு" என்று சொல்லிக் கூட்டிக்கொண்டு போனாள்; அப்பொழுது இரவு 7 மணிவரையிலிருக்கும்; அந்த இலட்சுமியென்பவள் நான் ஸ்நானம் பண்ணும்போதெல்லாம் என்னைக் கவலையோடு உற்றுப் பார்த்த வண்ணம் நிற்பதை அவதானித்தேன்; நீ இங்குள்ள பணிப்பெண்ணா என்று நான் கேட்க, "ஆம் அம்மா, நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? இவர்களிடம் எப்படிச் சிக்கினீர்கள்?" என்று நாற்புறமும் திரும்பி பார்த்துப் பார்த்து என்னை வினாவினாள்: "இவர்களிடம் எப்படிச் சிக்கினீர்கள்" என்று அந்தப் பெண் வினாவிய கடைசி வினா, என் மனத்தில் முந்தியிருந்த சந்தேகத்தை இன்னுந் தடிக்கச் செய்து என்னை பெரும் கவலைக்குள்ளாக்கி விட்டது.

உறக்கம் எப்படி வரும்?

தேற்றுவாரில்லாமல் என் கவலையை நானே தேற்றிக்கொண்டு இலட்சுமியைப் பார்த்து, "இலட்சுமி, உன்னைப் பார்த்தால் ஒரு நல்ல பிள்ளைபோற் காணப்படுகிறாய்; என் வரலாறு முழுவதையும் பின்பு நான் உமக்கு விபரமாகச் சொல்லுகிறேன்; இவர்கள் யார்? உண்மையாகப் பிராமணர்களா? இவர்களுடைய தொழிலென்ன என்ற இவைகளை நீ எனக்குச் சொல்லுகிறாயா?" என்று கேட்க, இலட்சுமி, "அம்மா இவர்கள் உண்மையான பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்; தங்கள் குலங்கோத்திரத்திற்குரிய ஆசார ஒழுக்கங்களை இடையிடையே அந்தச் சாமி விட்டாலும், அம்மாள் ஒருபோதும் விடமாட்டாள்; அந்தச் சாமியின் தொழிலைப் பற்றி பிறகு சொல்லுகிறேன் அம்மா; நீங்கள் சீக்கிரம் ஸ்நாநம் செய்துவிட்டுப் போய் போசனஞ் செய்யுங்கள்; உங்களை அவர்கள் எதிர்பார்த்தவண்ணம் இருக்கிறார்கள்" என்று சுருக்கமாகச் சொல்லி முடித்தாள்; அப்படியே நானும் ஸ்நாநஞ் செய்து உடனே போசனம் முடித்துக்கொண்டு அவர்கள் எனக்கெனக் காட்டி விட்ட அறையுட் போய் படுத்தேன்; ஆனால், எனக்கு உறக்கம் வரவில்லை; சற்று நேரம் செல்ல, இலட்சுமி "அம்மா, உறங்கிவிட்டீர்களா" என்று சொல்லிக் கொண்டு பாய் தலையணையுடன் நான் படுத்துக்கிடக்கும் அறையின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வருதலும் "உறங்கவில்லை இலட்சுமி; எனக்கு உறக்கம் எப்படி வரும்" என்று பதில் சொல்லிவிட்டு இந்த அறையுள் தானா நீ படுப்பது என்று கேட்டேன்; "இல்லையம்மா, நான் படுப்பது வேறோரிடம்: இன்று உங்களுக்குத் துணையாக வந்து இந்த அறையிலே படுக்கும்படி பெரியம்மாள் சொன்னாள்; அதனாலே தான் வந்தேன்; ஏன் அம்மா நான் இதற்குட் படுப்பது உங்களுக்குச் சம்மதந்தானே" என்று இலட்சுமி கேட்க, "சம்மதமா, நூறு முறையும் சம்மதம்; இந்த அந்நியவூரிலே நீ தானே எனக்கு உற்ற துணை; நீ ஒவ்வொரு நாளும் இங்கேயே வந்து படுத்தால் எனக்கு அதிக ஆறுதலாகவிருக்கும்" என்றேன்; "எனக்கும் இதுதான் அம்மா விருப்பம்; என்று சொல்லிக்கொண்டு நான் கிடந்த கட்டிலுக்கருகே நிலத்திலே பாயை விரித்துத் தலையணையையிட்டுக்கொண்டு இலட்சுமியும் படுத்துக்கொண்டாள்.

"பிச்சை வேண்டாம் தாயே நாயைப் பிடி"

"இலட்சுமி உறக்கம் வருகிறதா? என்று நான் கேட்க, இல்லையம்மா என்றாள்; அம்மா ஐயா என்ன செய்கிறார்கள் என்று நான் கேட்க, அவர்கள் நித்திரையாகி இரண்டாஞ் சாமமாய் விடும் அம்மா என்று பதில் சொன்னாள் இலட்சுமி; "உங்கள் எஜமானருக்கு என்ன முயற்சி? கோயிற் பூசையா? உத்தியோகமா? என்று கேட்டேன்: "கோயிற் பூசையுமில்லையம்மா; உத்தியோகமுமில்லையம்மா; அவருடைய முயற்சி அவ்வளவு கௌரவமானதல்ல; அவைகளைப் பற்றி உங்களுக்கு நான் ஏதுஞ் சொன்னேனென எஜமானன் எஜமாட்டி அறிய நேர்ந்தாற் பழியம்மா" என்று பயத்தோடு சொன்னாள்: இலட்சுமி, நீ பயப்படாதே. நான் உயிர் போனாலும் ஒன்றையும் வெளியிடமாட்டேன்: நீ பயப்படாமற் சொல்லு என்று கேட்டேன்; "அம்மா, நீங்கள்; எந்தக் குலத்திற் பிறந்தாலும் நான் உங்களை என் உடன் பிறப்பென்று மதித்துதான் சொல்லுகிறேன்: உங்களைக் கண்ட நேரந்தொட்டு உங்கள் விஷயமாகக் கவலைப்படுகிறேன்; இந்த ஐயர் பிராமண குலத்திற் பிறந்தும் தங்குலத்திற்குச் சிறிதும் அடாத செயல் செய்கிறார்; அதனாற்றான் உங்களுக்குச் சொல்லக் கூசினேன்: இவர் இந்த ஊரிலுள்ள ஒரு தாசி வீட்டில் ஈடுபட்டு அவர்களுடைய உதவியாற் பொருளீட்டிச் சீவிக்கிறார். இவரைக் "கும்பகோணத்தையர்" என்று சொன்னாற் பிழையாகாது; இவருக்கு அந்த நாளில் வைப்பாட்டியாக விருந்தவளாகிய கமலமென்ற ஒரு தாசிக்கிழவியிருக்கிறாள்; இந்த ஐயர் யாரும் அநாதைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுமிகளை ஏமாற்றித் தம் வீட்டிற்குக் கொண்டு வந்து பின்னர் அந்தத் தாசி வீட்டிற் கொண்டுபோய்ச் சேர்த்து விட, அங்குள்ளவர்கள் அப்படியான பெண்களுக்குச் சங்கீதம் பரதநாட்டியம் பயிற்றிப் பின்பு தங்களுக்குப் பணந் தேட அந்தப் பெண்களைக் கருவியாக வைத்துக்கொள்ளுவார்கள்: உங்களைக் கூட்டிக்கொண்டுவந்த மற்ற பெண்ணிருக்கிறாளே, அவளும் அப்படிப்பட்ட ஒரு தாசிப் பெண்தான்; அவள் இளம் வயசிலேயே புருஷனையிழந்த மொட்டைப் பார்ப்பாத்தியாக இங்கே வந்தவள். அவள் வந்து சில காலம் இந்த வீட்டிற்றானேயிருந்து மயிர் வளர்த்துச் சங்கீதம் பரதநாட்டிய மென்னுமிவைகளைப் படித்து, இப்பொழுது சாதிமத பேதம் பாராத தாசியாய்க் காலம் போக்குகிறாள்; இது மாத்திரமல்ல அம்மா, இன்னமுஞ் சொல்லுகிறேன் கேளுங்கள்; நான் சிறு வயசிலே தாய் தகப்பன் தமரற்ற அநாதைப் பெண்ணானேன்; நாங்கள் சாதியிலேயே வேளாளர்; ஒரு செட்டியார் வீட்டிற் பணிப் பெண்ணாகப் போய்ச் சேர்ந்தேன்: அப்பொழுது என் வயசு ஏழு எட்டு வரையிலிருக்கும்; அந்தச் செட்டியார் நல்லவர்; ஆனால் அவருடைய வீட்டுக் காரி மிகவும் பொல்லாதவள்; இரக்கமின்றி நான் செய்யவியலாத வேலைகளையெல்லாம் என் தலையிற் சுமத்தி விடுவாள்; நான் இளைத்து இளைத்து ஒருவாறு செய்துமுடித்தாலும் அந்த அம்மாள் நன்மையுஞ் சொல்லாள், வயிறாரச் சோறுந் தரமாட்டாள்; அவள் செய்த கொடுமை சகிக்க முடியாமல், நான் ஒரு நாள் இரவு அச்செட்டியார் வீட்டைவிட்டுச் சொல்லாமற் புறப்பட்டு வரும்போது இந்த ஐயரிடம் அகப்பட் டேன்; ஐயர் என் வாயினால் என் விருத்தாந்தம் முழுவதையும் கேட்டறிந்துகொண்டு, இதம் பேசி நயவஞ்சகமாகத் தம்முடைய இந்த வீட்டிற் கொண்டுவந்து சேர்த்தார். இவர்கள் இட்ட வேலையை தவறாமற் செய்து கொண்டுவந்தேன்; இந்த அம்மாள் எனக்கு அன்புடன் அன்னமிட்டாள்; தனக்குப் பிள்ளைப்பேறில்லாமையினால் இந்த அம்மாள் என்னை தன் பிள்ளைப்போற் பாவித்து ஆதரவாய் நடத்திவருகிறாள். இப்படியிருக்க, ஐயர் தம் மனத்தில் ஏதோ நினைத்துக்கொண்டு போலும், எனக்குச் சங்கீதமும் பரதநாட்டியமும் பயிற்ற வேண்டுமென்று ஒரு சங்கீத வித்துவானையும் நட்டுவனாரையும் தாசி வீட்டிலிருந்து கூப்பிட்டு ஒழுங்கு செய்தார். எனக்கும் சங்கீதத்திற்கும் பரதநாட்டியத்திற்கும் வெகு தூரமென்பதை ஐயர் அறியார்; நட்டுவனாரும் சங்கீத உபாத்தியாயரும் இரண்டு மாச காலம் எனக்கு அவைகளை பயிற்ற முயன்றும் தங்கள் முயற்சி எள்ளளவும் என் விஷயத்திற் பயன்படாமை கண்டு, இந்தப் பெண்ணுக்குச் சங்கீதம் பரத நாட்டியம் பழக்குவதைக் காட்டிலும் கல்லிலே நார் உரிப்பதும் மணலிலே கயிறு திரிப்பதும் இலகுவாகுமென்று ஐயருக்குச் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள்; அதனாற்றான் தாசி வீட்டிற் போய்ச் சேராமல் இங்கேயிருக்கிறேன் அம்மா" என்று சொல்லி முடித்தாள்; இவைகளை யெல்லாம் கேட்டபோது என் மனம் பட்டபாட்டை அந்த ஈசனொருவனே யல்லாமல் வேறுயார் அறிவார்; "பிச்சை வேண்டாம் தாயே, நாயைப் பிடி" என்ற யாசகன்போல், கல்யாணஞ் செய்ய வந்தது போதும், இந்த வீட்டைவிட்டுத் தப்பிப் போவதெப்படியென்று யோசித்தேன்.

* * *

உலகம் பலவிதம்: 1946 ஜூலை 19 விசாலாட்சி: (முற்றொடர் - 108)

தாயே எனக்கொரு தஞ்சமுண்டோ?

ஐயோ! என் அன்னை தந்தையர் என்னை வைத்து வளர்த்த அருமை பெருமையை நினைத்து அழுவேனோ! இல்லையேல், என் சிறியதந்தையும் அரிய தங்கைச்சியும் என்னிடத்திற் பாராட்டி வந்த அன்பை நினைந்து அழுவேனோ, அல்லது என் சிறியதாய் என் விஷயத்திற் செய்த புறக்கணிப்பையெண்ணி அழுவேனோ, என் சிற்றப்பர் என் பொருட்டுச் செய்த கல்யாண முயற்சியையெண்ணி யழுவேனோ நானும் ஒரு வரனைப் பெற்று இதமாக இல்வாழ்க்கையிற் காலங்கழிப்பேனெனச் சில நாட்களாகச் செய்த மனராச்சியத்தைச் சிந்தித்தழுவேனோ அவைக ளெல்லாம் பொய்யாய்ப் பழங் கதையாய்க் கனவாய் மெல்லப் போய்விட இப்பொழுது எனக்கு நேர்ந்த ஆபத்தான நிலைமையை நினைத்து புலம்புவேனோ பட்ட காலே படும் கெட்ட குடியே கெடும் என்ற பழமொழிப்படி தெய்வம் என்னை மேலும்மேலும் சோதிப்பதையிட்டு வருந்துவேனோ ஆனைமுதல் எறும்பீறாக உலகத்திலுள்ள ஆன்மகோடிகளை யெல்லாம் பாதுகாக்கும் அகிலாண்ட நாயகியே, எனக்கு வேறொன்றும் வேண்டாம் பூர்வவினை வயத்தாற் பெண் சந்மம் எடுத்தேன்; பெண்ணாய்ப் பிறந்தவளுக்கு பெரியது மானம் தாயே! என் மானத்திற்கு எக்காலத்தாயினும் பங்கம் வராமற் பாதுகாப்பது உன்கடன் என்று இப்படிப் பலவாறு யோசித்துக் கவலைமேலீட்டினால்:

"நீயே துணையென்று நானிருந்தேன் எனைநீமறந்தால்
தாயே எனக்கொரு தஞ்சமுண்டோ சங்கு சக்கரத்தாய்!
வேயீன்ற முத்துக்கும் விண்ணவர் கோவுக்கும் வேதனுக்கும்
நாயேன் றனக்கும் பதினா லுலகுக்கும் நாயகியே"

என்ற தோத்திரத்தை மெல்லப் படித்து உள்ள முருகினேன்; கேட்டுக்கொண்டு அருகில் விழித்தபடி கிடந்த இலட்சுமி "அம்மா, கேட்கக் கேட்க இனிமையாயிருக்கிறது; இன்னுமொருகால் உந்தப் பாட்டை மெல்லப் படியுங்கள்" என்று கேட்க, நான் மேலும் படித்தேன்; "அம்மா, இப்படி இனிமையாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுவீர்களென்பதை இந்த ஐயரறிந்தால் உங்களுக்கு மேலும் மேலும் சங்கடந்தான் நேரும்" என்று நெட்டுயிர்ப்போடு சொன்னாள் இலட்சுமி; "இலட்சுமி, என்னையிட்டு நீ கவலைப்படாதே; பெற்றார் உற்றார் அயலாரெல்லாரும் என்னைக் கைவிட்டாலும், எல்லாச் சராசரங்களுக்கும் ஏக மாதாவாகவுள்ள இறைவி, அந்தப் புவனேசுவரி, மகிடனைச் சம்மாரஞ் செய்து மன்னுயிரனைத்துங் காத்த மகாஈசுவரி என்னை மாத்திரம் கடைக்கணிக்க மறந்துவிடுவாளா? அந்த மகாசத்தியின் ஆரருள் ஆண்பாலுயிர்களிடத்திற் படிந்திருப்பதைக் காட்டிலும் பெண்பாலுயிர்களாகிய எங்களிடத்தில் அதிகம் படிந்துள்ளதென்று படித்தவர் சொல்லக் கேட்டிருக்கிறேன்; அந்த மனோன்மனியே எந்த நேரமும் வந்து எங்களுக்குக் கைதந்தருளுவாள்; இந்திராணி, சந்திரமதி, சானகி, தமயந்தி, பாஞ்சாலி முதலாகச் சொல்லப்பட்ட கணக்கிறந்த உத்தமிகளின் கற்பிற்குப் பங்கம் வராமற் பாதுகாத்தவள் அந்தச் சிறுமானேந்தும் பெருமானுடைய இடப்பாகத்தில் அமர்ந்துள்ள ஈசுவரியல்லளோ; ஆனதாற் கவலைப்படுவது எதற்கு: எல்லாம் அவளருளாலே நடக்கும் என்று என் மனத்திற்கும் இலட்சுமிக்குஞ் சமாதானம் சொல்லிக்கொண்டு என்னையறியாமல் அயர்ந்து விட்டேன்.

"இனியேதெனக்கருள் வருமோ....."

அடுத்தநாள் அதிகாலையில் இலட்சுமி யெழுப்ப நானும் நித்திரைவிட்டெழுந்தேன்; காலைக் கடன்களை முடித்தற்காகிய ஏற்பாடுகளெல்லாம் இலட்சுமியே செய்தாள்; ஸ்நானம் தெய்வவழிபாடு போசன மெல்லாம் காலை 9 மணிக்கிடையில் முடித்துக்கொண்டேன்; வீட்டிலுள்ளவர்களும் அப்படியே முடித்துக் கொண்டார்கள்; வீட்டிற்குரிய ஐயரின் பெயர் வெங்கடாசல மென்றும், அம்மாளின் பெயர் பாக்கியலட்சுமி என்பதையும் இலட்சுமியே எனக்குச் சொன்னாள்; பகல் பத்து மணியிருக்கும்; நடைகூடத்திலே தம் மனைவி அயலிலே நிற்க, ஒரு சாய்மனை நாற்காலியிலிருந்த ஐயர் என்னைக் கூப்பிட்டு "மகளே, உங்கள் மங்கல கருமம் நிச்சயித்திருந்தபடி நேற்று நிறைவேறுதல் முடியாமற் போய்விட்டது; வரனுக்கு இப்பொழுது உடல்நலங் குன்றியிருக்கிறது அல்லாமலும் உனது சிற்றப்பரில்லாத சமயத்தில் உங்கள் விவாகத்தை நிறைவேற்றி வைப்பது முறையல்ல; உங்கள் விவாக கருமத்தைத் தவணையிடுவதாக உன் சிற்றப்பருக்கு இன்றைக்குக் கடிதமெழுத உத்தேசித்திருக்கிறேன்; இங்கு உனக்கு எல்லாவகையான சௌகரியங்களும் உண்டு; இங்கிருக்கும் உன் ஆத்தாள் மிகவும் நல்லவள்; ஆனதால் அவளையே உன் தாயாகப் பாவித்து விசுவாசமாக நடந்துகொள்; எங்கள் பணிப்பெண்ணிருக்கிறாளே இலட்சுமி, அவள் எங்கள் குலத்திற் பிறந்திலளாயினும் பிராமணப் பெண்களுக்குரிய குணம் நடையெல்லாமுடையவள்; சூதுவாதற்றவள், பொய்யறியாள், விசுவாசமுள்ளவள்; அவளிடத்தில் நீ என்ன சொன்னாலும் அவள் உடனே உனக்கு வேண்டியவற்றைச் செய்வாள்; அவளால் முடியாதவைகளை இங்குள்ள ஆத்தாளிடஞ் சொல்லலாம்" என்று இப்படி அன்பாகச் சொல்லிவிட்டுப் பின்னரும் என்னைப் பார்த்து, "அடியம்மா உனக்குச் சங்கீதம் வருமோ? பரதநாட்டியம் தெரியுமோ? இந்தக் கல்விகளெல்லாம் காலத்திற்கேற்ற கோலமென்ற விதமாய் இக்காலத்தில் இல்லறம் நடத்தவிருக்கும் பெண்களுக்கும் இன்றியமையாதன" என்றார். "ஐயா, பூரணமாக நான் அவைகளுளொன்றையும் பழகிக் கொள்ளவில்லை; அற்பமாக அறிவேன் என்றேன்"; அற்பமேனும் அறிந்திருப்பது நல்லது; இங்கு சங்கீதம் பயிற்றுதற்கும் பரதநாட்டியம் கற்பித்தற்கும் ஆக வேண்டிய சங்கீத வித்துவானும் பரதசாத்திர உபாத்தியாயரும் என் ஆதீனத்தில் இருக்கிறார்கள்; அவர்கள் மூலமாக அந்த இரண்டினையும் உனக்குப் பயிற்றிவைக்கிறேன்; இப்பொழுது ஒரு பாட்டுப்படியம்மா கேட்போம்" என்றார். இனியே தெனக்குனருள் வருமோ எனக்கருதி ஏங்குதே நெஞ்சம் ஐயோ! இன்றைக்கிருந்தாரை நாளைக் கிருப்பரென்றெண்ணலோ திடமில் லையே...." என்ற தாயுமானவர் பாடலை இராகமாலிகையாகப் படித்தேன்: ஐயர் கேட்டு ஆநந்தமடைந்து நல்லாயிருக்கிறதடியம்மா உன் சங்கீதம் என்றார். இப்படி அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போது யாரோ அவரைக் காணும்படி தலைவாசலில் வந்திருப்பதாக இலட்சுமி வந்து தெரிவிக்க, ஐயர் எழுந்து தலைவாசற்பக்கம் போனார்.

கற்கை நன்றே, கற்கை நன்றே
பிச்சைபுகினும் கற்கைநன்றே

சில நாட்கள் செல்ல, சங்கீத வித்வானொருவரும் பரதநாட்டியம் பழக்குபவரொருவரும் நான் இருக்கும் வீட்டிற்கு வந்தார்கள்; ஐயர் என்னைப் பார்த்து அவர்களிடம் இருவித்தைகளையும் கிரமமாகத் திறமையோடு கற்றுக் கொள்ளும்படி எனக்குச் சொல்ல, நான் ஆம் என்று சொல்லிவிட்டு என் ஆத்தாளிடம் போய் விஷயத்தைச் சொன்னேன்; ஆத்தாள் மிகவும் நல்லவள்; என்னிடத்தில் அதிக அன்புள்ளவள்; என்னைத் தன் சொந்தமகள்போலப் பாவித்துப் பேணி நடப்பவள்; அவள் என்னை அன்புடன் பார்த்து "மகளே, நீ ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம்; முதல் ஆண்டவன் துணை, இரண்டாவது நான் இருக்கும்வரையில் நீ இங்கிருக்கும் வரையில் உனக்கு எவ்வகையான பிழையையும் எவரேனுஞ் செய்ய விடமாட்டேன்" என்று உறுதியாகச் சொன்னாள்; ஆத்தாள் அப்படிச் சொன்ன மாத்திரத்தே என்னுள்ளத்துட் குடியிருந்த கவலையெல்லாம் ஆதவனைக் கண்ட பனிப்படலமென என்னைவிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறவே யகன்றன.“அம்மா உங்கள் சொற்படி செய்கிறேன் என்று சொல்லி ஆத்தாளுக்கு நமஸ்காரஞ் செய்துவிட்டு உபாத்தியாயர்களிருக்குமிடத்திற்குப் போனேன்; முறைப்படி அவர்களைப் பணிந்து, அவர்களுட் சங்கீத ஆசிரியர் இருவென இருந்து சொல்லெனச் சொல்லி, அவரிடத்திற் சங்கீதத்தைப் பயின்றேன்; அவர் சங்கீத சாகித்தியத்திற் சிறந்தவரென்பதை முதனாளே யுணர்ந்துகொண்டேன்; பின்னர் பரத நாட்டியத்தையும் அதற்காகிய உபாத்தியாயர் சொல்லித்தர பயின்றேன்; அதன்பின் ஐயர் அந்த இடத்திற்கு வந்து என்னையிட்டு அந்த ஆசிரியர்களிருவரிடத்தும் விசாரிக்க “இந்தப் பெண்ணுக்குச் சங்கீத அறிவும் பரதநாட்டியப் பயிற்சியும் அற்பமாகவுண்டு; மேலும் இரு வித்தை களிலும் ஆர்வமுண்டெனத் தெரிகிறது; கிரம மாகச் சங்கீதத்தையும் நாட்டியத்தையும் எங்கள் போன்ற உபாத்தியாயர்களிடத்திற் பயின்று வந்தால் காலக்கதியில் இப் பெண் இருவித்தைகளிலும் நிபுணையாவாள் என்னுங் கருத்துப்பட ஏகோபித்துச் சொன்னார்கள்; ஐயரும் கேட்டு மகிழ்ச்சியடைந்தார். அன்று தொடக்கம் நான் இருவித்தைகளையும் கற்று வந்தேன். என் ஆத்தாளும் என்னைப் பார்த்து “மகளே, சோர்வடையாதே, படிப்பதை அவதானமாக ஆர்வத் தோடு படித்துக்கொள்: கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே என்பது நீ யறியாததல்ல; இந்த வித்தைகள் உனக்குப் பிற் காலத்திற் பெரும் பயன் தருதலுங் கூடும்” என்று அன்புடன் சொன்னாள்.

“நடக்க விருந்தால் நடக்கும்தானே”

அந்த வீட்டில் நான் போய்ச் சேர்ந்த நாட்களில் என் மனத்திலிருந்த கவலை என் ஆத்தாள் காட்டிய அன்பினாலும் அவள் அன்றன்று சொல்லி வரும் தேறுதல் வார்த்தைகளினாலும் ஒருவாறு குறையத் தொடங்கின. விவாகமும் நடக்கவிருந்தால் நடக்கும் தானே என்ற ஆறுதலான எண்ணம் என் உள்ளத்திற் பிறந்தது. ஆனால் என் சிற்றப்பரையும் தங்கைச்சியையும் பற்றிய கவலை மாத்திரம் என் சிந்தையை விட்டகலாதிருந்தது. சிற்றப்பர் நோய்வாய்ப்பட்டு கிடந்தவரல்லரோ; அவருடைய நோய் மாறியிருந்தால் இதுவரையில் அவர் இங்கு வந்திருப்பாரே; நோய் இன்னமும் சுகப்படவில்லையோ இல்லையேல் இந்த ஐயர் இன்னமும் அவருக்குக் கடிதமெழுதவில்லையோ; இவர் எழுதியிருந்தால் அவர் பதிலாயினும் எழுதாமல் விடமாட்டாரே; நான் இருக்கும் இடந் தெரியாமல் அவர் சிரமப்படுகிறாரோ இந்த ஐயரெனிலோ பொய்யொழுக்கம் பூண்டவர்; இவர் சொல்வதில் எப்படி நம்பிக்கை வைப்பது? என் தங்கை என்னை ஒரு நிமிஷமும் விட்டுப்பிரிய மனம் பொறாதவள்; அவள் என்னைப் பிரிந்தமையினால் துயரப்படுவாளே! அவர்களிடத்திலிருந்து ஒரு கடிதமாயினும் கிடைத்து விட்டால் நான் ஒருவாறு மனம் ஆறியிருக்கலாமே யென்று கவலைப்பட்டேன்; என் கவலையை இடையிடையே இலட்சுமிக்கு மாத்திரம் சொல்லி ஒரு அளவிற்கு மனமாறுவேன்; அவளும் எனக்குத் தேறுதல் சொல்லுவாள். இப்படியாக ஒரு தினம் பிற்பகல் வேளையில் நான் இருக்கும் வீட்டிற்கு யாரோ ஒரு கிராமத்தலைவர் வருவதாகவும், அவரை வரவேற்று உபசரிப்பதற்காகிய ஆயத்தங்கள் செய்யப் போவதாகவும் இலட்சுமி யெனக்குச் சொன்னாள். அப்படியான ஆயத்தங்கள் நடப்பதை நானும் அவதானித்தேன்.

* * *

உலகம் பலவிதம்: 1946 ஜூலை 26
விசாலாட்சி: (முற்றொடர் - 109)

“நா அசைய நாடசையும்”

அன்றிரவு 8 மணியாதலும் ஒரு மோட்டோர் ரதம் எங்கள் ஐயர் வீட்டு வாசலில் வந்து தங்கியது; தங்குவதற்கிடையில் வரவை எதிர்பார்த்த வண்ணம் அன்று பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்நேரம்வரையில் தலைவாசற்பக்கத்திலிருந்த ஐயர் உடனே யெழுந்து இரதத்தண்டை விரைந்து போதலும், அந்த இரதத்திலிருந்து ஒருவர் இறங்கினார்; எங்கள் ஐயர் அவரைக் கண்டமாத்திரத்தே தம் முப்பத்திரண்டு பற்களையுங் காட்டி கையிரண்டையும் விரித்தபடி நீட்டி “வாருங்கள், வாருங்கள்” என்று முகமன் வார்த்தை கூறி, அவரை முந்தி நடக்கவிட்டுத் தாம் தொடர்ந்து சென்று தலைவாசலில் அழைத்துக் கொண்டு வர, அந்தப் பிரபு அங்குள்ள ஒரு நாற்காலியில் இருக்க முயல, எங்கள் ஐயர் அப்படியல்ல இங்கு வாருங்கள் என்று தலைவாசலுக்கடுக்கவுள்ள மண்டபத்திலே ஒரு ஸோபாவின்மீது அமரச்செய்தார்; பிரபுவுடன் வந்த வேலைக்காரன் தலைவாசலில் ஒதுங்கி நின்றான்; சாரதி இரதத்தைத் தலைவாசலுக் கெதிரேயுள்ள முன்றிலிற் கொண்டுவந்து விடுத்துத் தான் அந்த இரதத்திற்றானே இருந்தான்; இவைகளை யெல்லாம் நானும் இலட்சுமியும் தலைவாசற்பக்கத்திலுள்ள அறையின் சாளர வழியாக அவதானித்தோம். அவர் யாரென்று நான் இலட்சுமியைக் கேட்க, அவர் இந்தவூர் அதிகாரியென்றும், அதிக செல்வஞ் செல்வாக்குடையவரென்றும் எங்கள் வீட்டு ஐயாவுக்கு வேண்டியவரென்றும் அவர் “நாவசைய நாடசையு” மென்றும் ஐயாவுக்கும் அவருக்குமிடையில் நீடித்த நட்புண்டென்றும்; ஆனால், எங்கள் அம்மாவிற்கு மாத்திரம் அவர் அங்கே வருவது விருப்பமில்லையென்றும் இலட்சுமி எனக்கு இரகசியமாகச் சொன்னாள்; அம்மாவிற்கு ஏன் விருப்பமில்லையென்று இலட்சுமியை நான் கேட்க அவர் வகித்திருக்கும் அதிகாரத்திற்கும் வயதிற்குந் தக்க ஒழுக்கம் அவரிடத்திலில்லை யென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாள் இடையிடையே ஐயாவுக்குச் சொல்வதை நான் கேட்டிருக்கிறேனென்று இலட்சுமி பதில் சொன்னாள்; இதற்கிடையில் ஐயர் இலட்சுமியென்று கூப்பிட அவள் அங்கே போனாள்; ஊரதிகாரிக்கு ஐயரும் இலட்சுமியுமாக ஆகாரம் வழங்கினார்கள்; அதன்பின்னர் மிகவாசத்தோடு வெற்றிலை பாக்கு அவர்க்கு வழங்கப்பட்டன.

"மனக் காவலுள்ள மகளிருக்கு வருங்குறை யாதுமில்லை"

சற்று நேரஞ்செல்ல, ஆத்தாள் என்னைக் கூப்பிட நான் விரைந்து போனேன்; ஆத்தாள் எனக்கு அலங்காரஞ் செய்ய, ஏன் அம்மா அலங்காரஞ் செய்கிறீர்களென்று நான் கேட்க, "மகளே, இங்கே வந்திருப்பவர், இந்தவூர் அதிகாரி இவர் உங்கள் ஐயருக்கு வேண்டியவராம்" உன்னுடைய சங்கீதத்தைக் கேட்க அதிகாரி ஆசைப்படுகிறாராம்; ஆனதால் உன்னை அலங்காரம் பண்ணி ஐயர் அதிகாரியிருக்குமிடத்திற்கு அனுப்பச் சொன்னார்; அதனாற்றான் அலங்காரஞ் செய்கிறேன்; போய்ச் சற்று நேரம் பாடிவிட்டு வாடியம்மா; அதனால் ஒரு குறையுமில்லை; மனக்காவலுள்ள மகளிருக்கு வருங் குறை யாதுமில்லை; நான் இலட்சுமியையும் உடன் அனுப்புகிறேன்" என்று இதமாகச் சொல்லி அலங்காரஞ் செய்வதை முடித்து இலட்சுமியுடன் ஆத்தாள் என்னை அந்தவூரதிகாரி யிருக்குமிடத்திற்கு அனுப்ப நான் சிந்தனையோடும் இலட்சுமியோடும் அந்த மண்டபத்திற்கு போனேன்; போகவே கண்ட ஊரதிகாரி "வாரும், வாரும், இப்படி இரும்" என்று தமக்குப் பக்கத்திலேயிருந்த ஒரு "ஸோபா" வில் இருக்கச் சொல்ல, நான் இருத்தலின்றி ஒதுங்கி நிற்க, ஐயர் என்னைப் பார்த்து, "மகளே, சும்மா அப்படியிரு" என்று சொல்ல, நான் நிலத்தில் விரித்துக்கிடந்த ஒரு இரத்தினக் கம்பளத்தில் ஒதுக்கத்துடன் இருக்க, இலட்சுமி என் பிறகே நின்றாள்.

சந்தன மரத்தைச் சூழநிற்கும் மரம் போல

வீட்டிற்குரிய ஐயர் என்னைப் பார்த்து, "மகளே இந்த ஐயா அவர்கள் எங்களுக்கு மிகவும் வேண்டியவர்கள்" இவர்களுடைய கிருபையினாலேதான் நாங்கள் மாத்திரமல்ல, இந்த ஊர் முழுவதும் வாழ்கின்றது. இவர்களுக்கு ஒப்பான பிரபு இந்த ஊரில் இல்லையென்று சொல்லலாம். இவர்கள் கொடை வள்ளல்; எவரும் இவர்களை இவர்கள் வாழும் மாளிகையிற் போய்த் தரிசிப்பதேயொழிய இவர்கள் எவர் வீட்டிற்கும் எழுந்தருளச் சம்மதப்படார்கள்; ஏதோ எங்கள்மேல் அந்நாள் தொட்டு வைத்த பெரும் கருணையினால் எங்கள் சிறு குடிலுக்கு இடையிடையே எழுந்தருளி வந்து நாங்கள் செய்யும் அற்ப உபகாரத்தை பெரிதாக மதித்து எங்களைச் வாழவைத்துப் போவார்கள்; சந்தன மரத்தைச் சூழநிற்கும் மரம் போல் இவர்களுடைய பெருமையிற் கீர்த்தியிற் சிறுபாகம் எங்களையுஞ் சேர்கின்றது; இவர்கள் மாளிகையிலே நாள்தோறும் பல சங்கீத வித்துவான்கள் கர்ணாமிர்த சங்கீதத்தைப் பாடியும், பரதநாட்டியம் முதலாம் நாட்டியங்களில் நிபுணைகளாகவுள்ள பெண்கள் நாட்டியஞ் செய்தும், சந்மானங்களை இவர்கள் வரைவின்றி வழங்க, அவர்கள் இருகரங்களாலும் பணிந்து ஏற்றுச் செல்லுவார்கள்; இவரை இந்தவூருக்கு முடிசூடா மன்னரென்ன மதித்துக்கொள். அப்படிப்பட்ட இவர்கள், மகளே, உன்னுடைய சங்கீதத்தை ஒருமுறை கேட்கவேண்டுமென்று விருப்பங்கொண்டு இங்கே வந்துள்ளார்கள்; ஆனதாற் சற்றுப் பாடியம்மா" என்று பரிந்துகூறி, இலட்சுமியைப் பார்த்து "அந்த மகரயாழை நீ போய் அவதானமாக எடுத்துக்கொண்டு வா" என்று சொல்ல, "ஐயா, நானே போய் எடுத்து வருகிறே" னென்று சொல்லிக்கொண்டு எழுந்து போக, இலட்சுமியும் என் பிறகே வந்தாள்; என்ன இலட்சுமி, இந்த ஊரதிகாரியைப் பற்றி எங்கள் ஐயா அதிகஞ் சொல்லுகிறாரே, உண்மைதானா என்று நான் கேட்க, "இவர் இன்னமும் அதிகமாகச் சொல்லுவாரம்மா; எங்கள் ஐயா சொல்வதிற் சில உண்மையுமுண்டுதான்" என்றாள்; இவர் முதியவராகக் காணப்படுகிறாரே, ஐம்பது ஐம்பத்தைந்து வயசுக்கு மேற்பட்டவரென்று மதிக்கலாம்; சாந்த குணமுடையவர் போற் காணப் படுகிறார்; வயதுக்கேற்ற குணம் நடை இருக்கும் தானே என்றேன்; "சின்னம்மா, வயசைப் பற்றி நீங்கள் கொண்ட உத்தேசம் தவறாகும்: இவருக்கு அறுபத்தைந்து எழுபது வரையிலிருக்க வேண்டும்: இவர் தன் மீசைக்குக் கறுப்பு மை பூசியிருக்கிறார்; இவர் தலைப் பாகையை கழற்றிவிட்டால் தலையில் மயிர் பஞ்சு நிறைந்த பெட்டிபோற் காணப்படும்; இவருடைய பற்களெல்லாம் பிந்தி கட்டியமைத்த தந்தவரிசையம்மா; அதிகஞ் சொல்வதென்ன, நான் இந்த வீட்டிற்கு வந்து நாலைந்து வருடங்களாகின்றன. அந்த நாள் தொடக்கம் இற்றை வரையில் எங்கள் ஐயரை யாரும் ஊரதிகாரியின் வயசு என்னவென்று கேட்கநேர்ந்தால், நாற்பத்தைந்தென்றே சொல்லிக்கொண்டு வருகிறார்; அம்மா, இவர் தம்முடைய முதுமையைச் செயற்கையால் இளமையாக்கப் பார்க்கிறார்; இவரோடு அவதானமாக ஊடாட வேண்டும்" என்று சொன்னாள்.

"தலைமயிர் கொக்குக் கொக்க நரைத்து..."

யாழை நான் எடுத்து இலட்சுமி கையிற் கொடுத்து முன்போக அவள் அதனையும் கொண்டு பின்வந்து நான் பழையபடி கம்பளத்திலிருக்க, அவள் யாழை என்னிடந் தந்துவிட்டுப் பின் புறத்தே நின்றாள். எங்கள் வீட்டுக்கார ஐயர் என்னைப்பார்த்து "இவர்கள் கேட்டு மகிழும்படி கூசாமற் பாடு" என்று சொல்ல, "பாட்டனாருக்கு முன்னே பாட எனக்கென்ன கூச்சம் ஐயா" என்று யாழை மீட்டினேன்; "பாட்டனார்" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சொன்னது ஊரதிகாரிக்கு பிடிக்கவில்லை; அவர் முகம் சிறிது சுழித்தது. "ஐயா, என்ன பாட்டுப் பாடக் கேட்கிறீர்களென்றேன்; ஊரதிகாரி பெருமூச்சு விட்டு "ஒரு திருப்புகழ் வருமானாற் பாடும் பெண்ணே" என்றார்; நான் உடனே,

தலைமயிர்கொக்குக் கொக்கநரைத்துக்
கலகலெ னப்பற் கட்டதுவிட்டுத்
தளர்நடைபட்டுத் தத்தடியிட்டுத் -தடுமாறி
தடிகொடுதத்திக் கக்கல்பெருத்திட்
டசனமும்விக்கிச் சத்தியெடுத்துச்
சளியுமிகுத்துப் பித்தமுமுற்றிப் -பலகாலும்;
திலதயிலத்திட் டொக்கவெரிக்கத்
திரிபலைசுக்குத் திப்பிலியிட்டுத்
தெளியவடித்துற் றுய்த் துடல்செத்திட் -டுயிர்போமுன்
திகழ்புகழ்கற்றுச் சொற்கள்பயிற்றித்
திருவடியைப்பற் றித்தொழுதுற்றுச்
சனனமறுக்கைக் குப்பரமுத்திக் -கருள்தாராய்;

என அத்திருப்புகழ் முழுவதையும் பாடினேன். "ஏன் பெண்ணே, வேறு திருப்புகழ் ஞாபகத்திலில்லையா" என்று அவர் கேட்க, உண்டு இதுதான் வாயில் வந்தது என்றேன்; அதிகாரி முகவாட்டமடைந்தார்; ஆனாலும் தம் முகவாட்டத்தை அதிகம் வெளியிற் காட்டாது மகிழ்ச்சிக்காட்டி பெண்ணே உம்முடைய சங்கீதம் கேட்க இனிமையாயிருக்கின்றது; சங்கீதமும் ஒருவருக்குத் தானாக வரவேண்டும்: உம்முடைய சாரீரம், சரீரம் இரண்டும் செவிக்கும் விழிக்கும் இதம் பயக்கின்றன: மேலும் நீர் செய்யும் பரதநாட்டியத்தையும் ஒருமுறை பார்த்து மகிழ விரும்புகிறேன்" என்றார். நான் இன்னமும் பரத நாட்டியத்தை ஒருவர் முன்னிலையிற் செய்ததில்லை யென்றேன்; இதற்கிடையில் எங்கள் வீட்டையர், "செய்யவுமில்லை, இப்பொழுது செய்யினும் பக்கவாத்தியம் ஆயத்தமாகவில்லை; இன்னுமொரு நாளைக்குப் பார்க்கலாம்" என்று சமாதானஞ் சொல்ல ஊரதிகாரி கேட்டுக் கொண்டார்; இதற்கிடையில் இலட்சுமியை திரும்பி பார்த்தேன்: அவளைக் காணவில்லை; எங்கள் ஐயரும் மெல்ல அந்த இடத்தைவிட்டு நழுவினார்: நானும் எழுந்து போகமுயல, ஊரதிகாரி என்னை நோக்கி "உங்கள் ஐயா வரும்வரை இப்படி இருக்கலாம் பெண்ணே" என்று தன் பக்கலிலுள்ள "ஸோபா" வில் இருக்கச் சொல்ல, இல்லை, தாத்தா நான் இப்படி இருக்கிறேன் என்று சொல்லி இருந்த இடத்திலேயே யிருந்தேன்; "இப்படி வந்து இருக்க ஏன் கண்ணே இலச்சைப்படுகிறீர்" என்று அவர் கேட்க: உப்படி வந்திருக்க வேண்டுமென்று ஏன் தாத்தா ஆசைப்படுகிறீர்கள் என்று நான் கேட்டேன்" அப்படி வித்தியாசமாக ஒன்றுமில்லையென்று சொல்லி இருக்கைவிட்டெழுந்து சரேலென வந்து ஊரதிகாரி என் கையைப் பிடித்து இழுத்துத் தன் பக்கத்திற் கொண்டுபோயிருத்த முயன்றார்.

* * *

உலகம் பலவிதம்: 1946 ஆகஸ்ட் 02
விசாலாட்சி: (முற்றொடர் - 110)

"சும்மாவிரு சொல்லற....."

கையை விடுங்கள் தாத்தா, நான் வந்து இருக்கிறேன் என்று நான் சொல்லவே ஊரதிகாரி கையை நழுவவிட்டார்; நான் தாத்தாவிருக்கும் சோபாவில் இருத்தலின்றி அண்டையிற் சென்று நின்றேன்; "அன்னமே, மயிலே, குயிலே, மாடப் புறாவே அருகில் இரு என்று இரந்து கேட்டால் ஒரு நிமிஷ நேரம் இருக்கவொண்ணாதா" என்று ஊரதிகாரி கட்டியமைத்த போலிப்பல் முப்பத்திரண்டையும் காட்டி இரந்தார்; "தாத்தா, அந்தப் பறவைகளொன்றையும் இங்கே காணேனே; அவைகளை வா அருகில் இரு என்று சொன்னால் வந்து இருக்குமா? மேலும் அவைகள் வந்து இருப்பதால் உங்களுக்கு என்ன சுகம் என்று வேடிக்கையாகக் கேட்டேன்; "அந்தப் பறவைகளைக் குருவிகளை நான் கூப்பிடவில்லை கிஞ்சுகமே, என்சுகமே, உம்மைத்தான் இப்படி ஆசையுடன் விளிக்கின்றேன்" என்றார் ஊரதிகாரி; "தாத்தா, என்னை என்ன செய்யச் சொல்லிக் கேட்கிறீர்கள்" என்றேன்; "மானே, தேனே, மரகதமே, என்னைத் தாத்தா என்று விளிக்க வேண்டாம்; நான் உம்மை எவ்வளவோ அருமையான மொழிகளைச் சொல்லி ஆதரவுடன் அழைக்கின்றேனே, அப்படியே நீரும் என்னை இன்சொற் கூறி இதமாக விளிக்க வொண்ணாதா?" என்று கேட்க, "பாட்டா, நீங்கள் என்னைப் பறவைகள், மிருகங்களின் பெயரைச் சொல்லி யழைக்கிறீர்கள்; அப்படியே நானும் உங்களைக் கழுகே கருடனே கானாங்கோழிச்சேவலே யென்றழைப்பதா? இல்லையேல், கழுதையே குரங்கே, காண்டாமிருகமே பன்றியே, நாயே, பூனையே, முதுபுலியேயென்று விளிப்பதா? மனுஷனாகப் பிறந்த உங்களை இப்படியெல்லாம் கூப்பிடுவத னால் என்ன பயன் என்று கேட்டேன்; "கண்ணே, கண்ணின்மணியே கற்கண்டே, கரும்பின் ரசமே, எப்படி நீர் என்னை விளித்தாலும் உம்முடைய மொழி என் செவிக்கு இன்பம் பயக்கின்றது" நீர் விரும்பிய விதமே என்னைச் சொல்லிக்கொள்ளலாம்; ஆனால், என்னருகில் வந்து அரை நிமிஷமேனும் அமர்ந்தாற் போதும்" என ஊரதிகாரி உரைக்க, ஏன் தாத்தா, அருகில் வந்திருக்கக் கேட்கிறீர்கள்; அதனால் உங்களுக்கு என்ன நன்மையென்றேன்; "ஒன்றுமில்லை சும்மாவிருந்தாற் போதும்" என்றார் கிழவர்; பாட்டா இப்பொழுது நீங்கள் சொன்னதுதான் உண்மை; சும்மாவிருப்பது எனக்கு மாத்திரமல்ல, உங்களுக்கும் நன்மையாகத்தான் இருக்கும்; அறமூத்தும் நீடித்தகாலம் அநுபவப்பட்டும் இன்னமுஞ் சும்மாவிருக்க அறியாமற் கலங்குகின்றீர்களே சும்மாவிருத்தல் எல்லார்க்கும் எளிதான கருமமல்ல;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் எம்மான் பிறவான் இறவான்
சும்மா விருசொல் லற" என் றலுமே
அம்மா! பொருளொன்று மறிந்திலனே"

என்று அந்த அநுபூதிமான் அருணகிரிநாதர் பாடியிருத்தலை நீங்கள் அறியீர்களா? பாட்டா, இந்த வீண் எண்ணங்களையெல்லாம் விட்டு அப்படியே சும்மாவிருங்கள் என்றேன்; கிழவனார் பதில்சொல்ல அறியாமற் சிறிது நேரம் சும்மா விருந்தார்.

"பித்துக்கொண்டார்போற் பிதற்றினார்"

கௌசிகர் போன்ற முனிவர்களையும் பெண்ணாசை அறவேவிட்டு நீங்கவில்லையல்லவா? நான்சொன்ன நல்வார்த்தைகளை யெல்லாம் அந்த ஊரதிகாரி கணப்பொழுதில் மறந்து என்னைப் பார்த்து, "பெண்ணே, நீர் சொல்வது முழுவதும் நிசம்; ஆனாலும் உம்மைக்கண்ட நேரந்தொட்டு நான் என்வசமிழந்து பரவசமாக நிற்கின்றேன்; பாவாய் எனக்கொரு முத்தந் தந்து என்னுயிரைக் காவாய்" என்று கையெடுத்துக் கும்பிட, நானும் அந்த அதிகாரிக்குப் பிரதி நமஸ்காரஞ் செய்து, ஐயா, பெரியவரே, நீங்கள் மாத்திரமல்ல நாங்களெல்லோமும் பரவசமானவர்களாயுள்ளோம்; அதாவது பரதந்திரர்; கடவுளொருவரே சுவதந்திரர், அவை போக, ஐயா, நீங்கள் இப்பொழுது கேட்ட விஷயத்தை முந்தியே வெளிப்படையாகச் சொல்லி யிருந்தால், நான் உடனே தந்திருப்பேனே; நீங்களெனிலோ இந்தவூர் அதிகாரி; நானோ ஆருமற்ற ஓர் அந்நியச் சிறுமி; செல்வஞ் செல்வாக்கு அநுபவம் வயசு எல்லாவற்றிலும் சிறந்தும் முதிர்ந்துமுள்ள நீங்கள் ஏழைச் சிறு பெண்ணாகிய என்னிடத்தில் இப்படியொன்றை யிரந்து நிற்றல் நான் செய்த புண்ணியந்தான்; இதற்காகவா என்னை இவ்வளவு நேரமும் இரந்தீர்கள்; என்று நான் சொல்லும்போது, அந்த ஊரதிகாரியிடத்து உண்டாகி வளர்ந்த மகிழ்ச்சிக்கு ஒரு எல்லையில்லை யெனலாம். அவர் என்னைக் கண்ணாற் பருகுவார் போற் பாதாதிகேசம் வரையில் அவதானமாகப் பார்த்து, "கண்மணி, நீர் என்னைப் பரீட்சிக்கின்றீரென்பதை நான் முந்தியே உணர்ந்துகொண்டேன்; பேச வேண்டாம் என்னை நீர் ஏசினாலும் எனக்கு அது இன்பமே; ஐயர் இப்பொழுது இங்கே வருதலுங்கூடும்; எனக்கும் உமக்குமிடையேயுள்ள காதலை ஐயர் அறியவேண்டிய ஆவசியகமில்லையே; ஆனதால் நான் கேட்டதைக் காலந் தாழ்க்காது தந்து என்னை மகிழச் செய்யும்; உம்மை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன்" என்று பின்னரும் அந்த ஊரதிகாரி பித்துக் கொண்டார்போற் பிதற்றினார்; உடனே நான் அவரைப் பார்த்து, ஐயா, ஒரு முத்தமல்ல, இதிலுள்ள முத்தமெல்லாம் உங்களுக்கே யென்றுசொல்லி, நான் அணிந்திருந்த முத்தாரத்தைத் தலையாற் கழற்றி அந்த ஊரதிகாரி கையில் என்னிரு கைகளாலும் பணிவுடன் கொடுக்க, அவர் அதனை ஏற்றுக் கொண்டு சற்றுநேரம் யோசித்துவிட்டு, "பெண்ணே நான் கேட்டதென்ன? நீர் இப்பொழுது தந்ததென்ன? என்று ஆச்சரியத்துடன் கேட்க, "ஐயா, பிரபுவே, நீங்கள் ஒரு முத்தந் தரும்படி கேட்டீர்கள்; நான் பல முத்தங்கொண்ட இந்த மாலையை உங்களுக்கு மனப்பூர்வமாகத் தந்தேன்; இதில் என்ன தவறு? என்று கேட்டேன்; "நான் கேட்டது முத்தமல்லாமல் முத்தை யல்லவே" என்று அவர் சொல்ல, நான் தந்ததும் முத்தந்தானே யென்றேன்; முத்து முத்தமாவதெப்படி யென்று மீட்டு அவர் என்னைக்கேட்க, இரண்டும் ஒன்று தான் என்றேன்; "என்ன? முத்தமும் முத்தும் ஒன்றா" என்று அந்த அதிகாரி என்னைச் சிறிது அதட்டிக் கேட்க, ஆம் ஐயா, பெரியோர்கள் அப்படிப் பாடியிருக்கிறார்களே யென்று சொல்லி "...உள்ளத்துயரை யொழித்தருள்வாய் ஒருகோடி முத்தம் - தெள்ளிக் கொழிக்குங் கடற் செந்தின் மேவிய சேவகனே ... ..." என்ற பாட்டையும் படித்துக் காட்டினேன்; இதனைக் கேட்ட அதிகாரி "அப்படியா, நான் இதனை இப்பொழுது உம்முடைய வாயிலிருந்து தான் அறிந்தேன்; நீர் வெகு புத்திசாலி; "சரி, நீர் தந்த முத்தாரத்தை நான் உவந்து ஏற்றுக்கொண்டேன்; இப்பொழுது நான் தரும் உபகாரத்தையும் நீர் வெறுத்தலின்றி ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும் என்று சொல்லி அந்தமுத்தாரத்தை ஒரு "நோட்" டுள் வைத்து மடித்து என்னிடம் நீட்டினார்.

உங்களுக்கும் பெண்மக்கள் பேர்த்திமாரில்லையா?

பெரியவர் தருவதை வாங்க மறுக்க வொண்ணாதென்ற நியதியினால், நான் அதனை ஏற்று விரித்துப் பார்த்தேன்; அந்த முத்தாரத்தோடு 100 ரூபா பெறுமதியான ஒருநோட்டும் இருந்தது. நான் முத்துமாலையை எடுத்துக் கொண்டு நோட்டை அவரிடம் நீட்ட, அவர் என் இரு கரத்தையும் பற்றி இழுத்தார்; ஐயா, எதற்காக என்னைப் பலாத்காரஞ் செய்கிறீர்கள்? நான் உங்களுக்குச் செய்த தவறென்ன? நீங்கள் பெரிய மனுஷர் ஊரதிகாரி யென்றெண்ணி யல்லவா உங்களுடைய சமூகத்தில் வந்து பாடினேன்; நின்றேன்; நிற்கின்றேன்; ஊரைக் காக்கும் அதிகாரம் பூண்ட நீங்கள், வேலி பயிரை மேயத் துணிந்தவாறு, உங்களூரில் அநாதப் பெண்ணாக வந்து அந்நியர் வீட்டில் ஒதுக்கிடந் தேடி நிற்கும் என்மீது, உங்களுடைய பெருமைக்கும் என் சிறுமைக்குந் தகாத எண்ணங் கொள்ளலாமா? உங்களுக்குப் பெண் மக்கள் பேர்த்திமார் இல்லையா? இல்லாவிட்டாலும் இருந்தாலும் அவர்களுள் ஒருத்தியாக என்னைப் பாவித்து நடக்க உங்களுக்கு அறிவு அநுபவம் வயசு எல்லாம் போதுந்தானே: என் கை நோகிறது; கையை விடுங்கள் ஐயா" என்று இரந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலே இறகு தா என்றால் அது தருமா?

சொன்னவுடன் ஊரதிகாரி தன் கைப்பிடியை விடுத்து, சீற்றமுற்றாராய் "என்னடி சின்னப் பெண்ணே, வாய் மதமாகப்பேசுகிறாய்" என் அதிகாரத்தை நீ அறியாய்; என் நா அசைய இந்த நாடசையும் என்றறிந்து கொள்; உன்னை இதுகாறும் இதமாகக் கேட்டேன்; நீ என் நோக்கத்தை விளங்கியும் விளங்காதவள் போல் நடிக்கிறாய்; மயிலே மயிலே ஒரு இறகுதா என்று கேட்டால் அது தானாகத் தரப் போவதில்லை அதனை அகப்படுத்தி இறகைப் பிடித்துப் பிடுங்கினாற்றான் இறகு கிடைக்கும்; இந்த ஐயராக, வேறு இந்த உலகில் எவராக, வந்து என்னைத் தடுக்கப் பயப்படுவர்: நீ சின்னப் பெண்ணாதலின் என் செல்வஞ் செல்வாக்கு அதிகாரம் முதலியவைகளைப்பற்றி இன்னமும் விளங்கிக் கொள்ளவில்லை. என்னைப்பற்றி இந்த ஐயரும் உனக்கு இன்னமுஞ் சொல்லி வைக்கவுமில்லையெனத் தெரிகிறது: பெண்ணே, இன்னமும் ஒரேமுறை இதமாகக் கேட்கிறேன்; நான் கொண்ட நோக்கத்திற்கு இடந்தருகின்றாயா?" என்று கீசகன்போலப் பிடிவாதமாய் நின்றான் அந்தக் கிழவன்.

அரைக்காசுக்குப் போன மானம் ஆயிரம் கொடுத்தாலும் வரப்போவதில்லை

யோசித்துப் பார்த்தேன்; என் மானத்தைப் பாதுகாப்பதற்கு அந்தப் பிராமணனுந் துணை புரியமாட்டான்; வேறு எவருந் துணை நிற்கமாட் டார்கள்; தெய்வந்தான் துணைபுரிய வேண்டும். அரைக் காசிற்குப் போன மானம் ஆயிரங்காசு கொடுத்தாலும் மீண்டு வரப்போவதில்லை; என் றெல்லாம் எண்ணிக் கொண்டு ஊரதிகாரியைப் பார்த்துப் பெருஞ்சிரிப்புச் சிரித்தேன்; அவருடைய சீற்றம் சிரிப்பாக மாறியது; "கண்ணே என்ன, என்னைச் சோதிக்கிறீரா" என்றார்; வேறென்ன, நிசமென்றா நினைத்தீர்கள்? உங்களுடைய அன்பும் ஆதரவும் கிடைக்குமானால் நான் பாக்கியவதியல்லளோ? ஆனால், தங்களுக்குச் சொந்த மனையாட்டி யுண்டோ இல்லையோ என்றதையிட்டுத்தான் சிந்திக்கிறேன் என்றேன்; "கண்ணே, என் காதலியே, அவைகளைப் பற்றிய விசாரம் உனக்கேன்? பெருமரம் எத்தனை கனியென்றாலும் சுமக்குந்தானே; எனக்கு இந்த வூரில் எவ்வளவு அதிகாரம் நடப்பு உண்டோ, அவ்வளவுக்கும் உன்னையும் ஆக்கி வைப்பேன்; போதாதா" என்றார்: போதும் போதும் என்றேன்; "சரி, என் காதலியே இன்னும் நான் செய்யவேண்டியவை என்ன" என்று கிழவன் இரந்து கேட்க, நான் ஒன்றும்வேண்டாம், நீங்கள் கேட்டதே யமையும்: என்னை இன்னமும் நன்றாக அலங்காரஞ் செய்து கொண்டு உங்களிடம் மீண்டுவர உத்தரவு தாருங்கள் என்று அன்புகூரக் கேட்டேன்; ஓம் நூறு முறையும் போகலாமென்று கிழவன் சொல்ல, நான் அந்த அறையை விட்டகன்று என்னுடைய அறையுட் சென்றேன்.

* * *

உலகம் பலவிதம்: 1946 ஆகஸ்ட் 09
விசாலாட்சி: (முற்றொடர் - 111)

பார்க்கப் பயமாயிருக்கிறது

என்னறையுட் போனவுடன் நான் அணிந்திருந்த காதோலை முதலாகவுள்ள ஆபரணமனைத்தையும் கழற்றி ஒதுங்க வைத்தேன்; சீவிப் பின்னித் தொங்கவிட்டிருந்த என் கூந்தலின் பின்னலை நீக்கிப் பரந்து சோர்ந்தபடி முதுகிலும் மார்பின் இருமருங்கும் தொங்கவிட்டேன்; குங்குமத்தை யெடுத்து இரு கன்னத்திலும் பூசினேன்: நெற்றியிற் பெரிய கரிய பொட்டிட்டேன்: முகத்திற்குப் பூசும் வெள்ளிய "புசர்" மாவை எடுத்துக் கரைத்துக் கடைவாய்களில் வக்கிர தந்தம்போற் புலப்டும்படி வரைந்தேன்: என் அதரங்களிலும் அதனைப் பூசினேன்: உடுத்திருந்த பட்டுச் சேலையை அகற்றிக் கருநிறங் கொண்ட ஒரு சேலையைப் பாவாடை போலக் கொய்து கட்டிச் செந்நிறமான ஒரு துணியைத் தாவணியாக இட்டுக்கொண்டேன்: ஐயர் வெயிற் காலத்திலே குளிர்ச்சியான பார்வையின்பொருட்டு இடும் மூக்குக் கண்ணாடியை இலட்சுமியைக் கொண்டு எடுப்பித்து என் மூக்கிலே மாட்டினேன்; கால்களில் மாத்திரம் ஒலி செய்யக்கூடிய தண்டைகளை இட்டேன்: அயலிலுள்ள வேப்பமரத்தில் இலை செறிந்த இருகிளைகளை இலட்சுமிமூலம் ஒடிப்பித்து இரண்டு கைகளிலும் பரித்துக்கொண்டு என் அறையிலுள்ள நிலைக் கண்ணாடியில் என் அலங்காரத்தைப் போய்நின்று பார்த்தேன்: பார்த்தவுடன் நானே என் தோற்றத்தைக் கண்டு அஞ்சி அருவருத்தேன்: "உண்மையை யுணர்ந்திருந்தும், உங்களை இந்த நேரத்திற் பார்க்கப் பயமா யிருக்கிறதம்மா" என்றாள் இலட்சுமி: இப்படியெல்லாம் அலங்காரஞ் செய்தபின், கைகளில் வேப்பங் கிளைகளைப் பரித்தபடி துரிதமாக நடந்து ஊரதிகாரியிருக்கு மிடத்திற்குப் போய், ஐயா, ஊரதிகாரியாரே! வந்துவிட்டேன்: விரும்பிய விதமே நடந்துகொள்ளுங்கள் என்று உரத்த தொனியுடன் சொன்னேன்; என்னைக் கண்டமாத்திரத்தே ஊரதிகாரியவர்கள் திடுக்குற்றார், ஏங்கினார், வெகுண்டார்: ஏற இறங்கப் பார்த்தார் இருக்கை விட்டு மெல்ல எழுந்தார்; நீ யார் என்று கேட்டார்.

"எனக்கல்ல பைத்தியம்"

சற்று முந்தி நீங்கள் அன்னமே, மயிலே, குயிலே, கண்ணே, மணியே. கற்கண்டே, கனிரசமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று என்னென்னவோ எல்லாஞ் சொல்லி ஆசை வைத்தழைத்த பெண் நான்தான் என்று உரத்த சத்தத்துடன் சொன்னேன்; "உன்னை நான் அப்படி அழைக்கவுமில்லை; உன்மேல் ஆசை வைக்கவுமில்லை: நீ அப்பாற் போய்விடு" என்று அதட்டிச் சொன்னார்; இல்லை, நான்தான் நீங்கள் ஆசை வைத்த பெண்; என்னை அப்படிச் சொல்லிப் புறக்கணிக்கவொண்ணாது என்று சொல்லிக்கொண்டு போகாமல் நின்றேன்; உடனே அந்த ஊரதிகாரி வெகுண்டு, "உனக்கு என்ன பைத்தியமா? என்று கேட்க, எனக்கல்ல பைத்தியம் என்றேன்; நீ என்ன காளியா? என்று அவர் கேட்க, நான் காளியானாலும் உங்களுக்குச் சொன்ன வாக்கை மறக்கவில்லையென்று சொல்லிச் சற்றுச் சமீபத்திற் போக, உங்கள் ஐயர் எங்கே? என்று அவர் கேட்க, நீங்கள் தான் என் ஐயர் என்று நெருங்கினேன்; "சாமீ, சாமீ" என்று ஊரதிகாரி சத்தமிட, வீட்டிற்குரிய ஐயர் ஓடிவந்தார்; இதென்ன சாமி, ஏன் என்னுடன் வீண் வம்பளக்கிறீர்? இது என்ன விபரீதம்? இந்தக் கொடு நீலியை அப்பால் அகற்றிவிட உம்மால் முடியாதா? என்று ஐயரைச் சினந்தார்; ஐயோ, பாவம்; ஐயர் ஏதுமறியார்; என்னைப் பார்த்தவுடனே பெருந்திகில் கொண்டார்; பார்த்தேன்; அந்த ஊரதிகாரியையும் ஐயரையும் என் விஷயத்திலாயினுந் தவறு செய்யாமற் கட்டுப்படுத்தி வைப்பதற்கு அதுதான் நல்ல சமயமென்று உணர்ந்தேன்; தடித்த உரத்த குரலில் அவர்களிருவரையும் பார்த்து "ஹே, அறிவிலிகளே! தூர்த்தர்களே என்ன காரியஞ் செய்யத் துணிந்தீர்கள்; நான் உதிரமாகாளி, இந்தப் பெண் தனக்கு ஏதும் ஆபத்து வந்த காலத்தில் என்னைத் தன் மனத்தில் உறைக்கத் தியானிப்பாள்; அவளுக்கு நேரும் ஆபத்தைத் தடுத்து, ஆபத்துச் செய்யத் துணிந்தவர்களைப் பிடித்துக் கடித்து அவர்களுடைய உடம்பிலுள்ள உதிரத்தைக் குடித்துவிடுவேன்; ஏ, ஊரதிகாரி உன் பேர்த்தியென்று மதிக்கவேண்டிய இந்தச் சிறுமியின்மீது காட்டு மிருகம்போல் நீ இச்சை கொண்டாய்; உன் அதிகார வெறியினால் அடாதன செய்யத் துணிந்தாய் அடா, காமதுரந்தரா! உன்னை இந்தக்ஷணமே பிடித்துக் கதறக்கதறக் கடித்து உதிரங் குடிக்கப் போகிறேன்; என்னடா சொல்லுகிறாய் மூர்க்கா? என்று ஆவேசத்துடன் சொன்னேன்; "தாயே நான் செய்ததெல்லாம் தப்பு, இனிமேல் தவறுசெய்யக் கனவிலும் நினையேன்; உலக மாதாவே, எனக்குப் பிராணபிட்சை தந்தருளவேண்டும் ஆத்தாளே!" என்று சொல்லி என் கால்களில் அடியற்றமரம்போல் விழுந்து கிடந்தபடி கும்பிட்டார்; உடனே ஐயரைச் சீறிப் பார்த்து அடா! மூடப்பார்ப்பானே! நீ பிராமண குலத்திற் பிறந்தும் பஞ்சமா பாதகங்களையும் அஞ் சாமற் செய்யத் துணிந்தாய்; பெற்றபிதா என்று மதித்து நம்பி உன்னிடம் அடைக்கலம் புகுந்த இந்தச் சிறுமிக்குத் துரோகஞ்செய்யத் துணிந்தாய் தூர்த்தா! இந்த ஊரதிகாரியைக் காட்டிலும் நீ கொடியவன், உன்னைப் பிடித்து உன் உயிரையும் உடலிலுள்ள உதிரத்தையும் ஒருங்கு பருகினாலேயொழிய, நான் கொண்ட கோபந் தணியாது: என்னடா சொல்லுகிறாய் மூர்க்கா? என்று சொல்வதற்கிடையில், ஐயர் என் காலில் விழுந்து கிடந்து "அகிலாண்ட நாயகியே! புவனேசுவரியே! நான் பாவி! மூடன், இனிமேற் பிழைசெய்ய நினைக்க மாட்டேன்; என் பிழையை யெல்லாம் பொறுத்து என்னைக் காத்தருளம்மா! என்று கதறினார்; ஏ! மனுஷப் பதரே, எழுந்து நில்லுங்கள் என்றேன்; இருவரும் உடனே எழுந்து ஒதுங்கி நின்றனர்.

"தாயே! உன்னடைக்கலம்"

அதற்கிடையில் அந்தப் பேராரவாரத்தைக்கேட்டு வீட்டிலுள்ள ஆத்தாளும் இலட்சுமியும் அங்கே ஓடிவந்தார்கள்; என்னு டைய கோரமான தோற்றத்தையும், ஐயரும் ஊரதிகாரியும் படும் பாட்டையுங் கண்டு, அந்த அறையுள் வருதலின்றி அஞ்சி ஒதுங்கிச் சிறிது தூரத்திலே நடுங்கியபடி நின்றார்கள்: "ஐயோ! தாயே! இந்தச்சண்டாள மனுஷனைத் தீமைக்கு உதவி செய்யாதே என்று ஆயிரமுறை தடுத்துச் சொன்னேன்: மனுஷன் என்சொல்லைக்கேட்ட பாடில்லை; வீரமாகாளித் தாயே! செய்த பிழை யெல்லாம் பொறுத்து எனக்கு மங்கல்யப் பிச்சை தந்தருளவேண்டும், பரமேசுவரியே" என்று தூரத்தில்நின்று இரந்து கும்பிட்டு வேண்ட, "ஹே, அம்மா! உன்பொருட்டுத் தான் யோசிக்கிறேன்; இல்லையேல் இந்தப்பார்ப் பானை இப்பொழுதே நாசஞ் செய்துவிடுவேன்; பயப்படாதே, நீ கேட்டபடி வரந்தந்தேன்" எனலும் அந்த அம்மாள் தூரத்தில் நின்றபடியே என்னைப் பஞ்சாங்கமாகவீழ்ந்து வணங்கினாள்: ஐயரும் மனமுஞ் சரிரமும் பதறுதலின்றிச் சிந்தனையோடு நின்றார்; ஊரதிகாரியைச் சீற்றத்துடன் திரும்பிப்பார்த்து, "அடா, ஊரதிகாரி" என்று விளிப்பதற்கிடையில், அவன் மீண்டும் என் காலில் வீழ்ந்து கும்பிட்டு, "தாயே! உன்னடைக்கலம்" என்றிரந்தான்; எழுந்து நில் என்றவுடனே, ஊரதிகாரி எழுந்து கால்பதற, கைபதற மனம் பதற நின்றான்; ஏ, அதிகாரி, ஏ பிராமணா! இவளை என் பிள்ளையென்று மதித்துக்கொள்ளுங்கள்; இன்று தொடக்கம் இவள்மீது நீங்களாக, வேறு யாராக, இச்சை கொண்டால், இவளுக்கு ஏதுந் தீங்கு நினைத் தால் பின்பு நான் பொறுப்பதுமில்லை, அப்படிச் செய்பவர்களை உயிருடன் உலகில் சஞ்சரிக்க விடுவதுமில்லை; எச்சரிக்கை! என்று சொன்னேன்: அந்த இடத்தில் அறிவு சோர்ந்து வீழ்ந்தேன்; பின் நான் ஒன்றும் அறியேன்: வேறொன்றுமல்ல, ஆரம்பத்தில் நான் காளிதேவி போல் வேஷமிட்டு ஆவேசங்கொண்டவள்போல் நடித்தேன்; பின் அந்தத் தேவியின் ஆவேசம் என்னிடம் புகுந்து தன்வசமாக்கிவிட்டது. நான் ஆவேசம் நீங்கி அவசமுற்று வீழ்ந்தவுடனே என் ஆத்தாளும் இலட்சுமியும் என்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லத் தூக்கிக்கொண்டு போய்ப் படுக்கையில் கிடத்திச் சைத்யோபசாரங்கள் செய்து எனக்கு ஒருவாறு சுய அறிவு வர, என் வேஷத்தைக் கழுவித் துடைத்து, அந்த உடையை மாற்றி எனக்கு இயல்பாகவுரிய உடையையும் ஆபரணாதிகளையும் தாங்களேபுனைந்து பூரண அறிவு வரச்செய்தார்களென்றும், பின்னரும் ஒரு மணி நேரம் வரையிற் கிடந்து அசைவறத் துயின்றேன் என்றும் அவர்களே பிறகு எனக்குச் சொன்னார்கள்; அதன்பின்னர் அந்த ஊரதிகாரி ஐயர் வீட்டுத் தலைவாசற்படியிற் கால்வைப்பதில்லை; ஐயரும் என் விஷயத்தில் மிகவும் சாவதானமாக நடப்பாராயினார்; ஐயர் அன்று நிகழ்ந்த விஷயத்தைத் தம்மிடத்தில் வருவோர் பலருக்கு வெளியிட்டார்; அந்தத் தாசி வீட்டிலும் போய் விஷயத்தைத் சொல்லிவிட்டார்; ஆத்தாள், இலட்சுமி இவர்களும் என்னளவில் மிக அவதானமாகவே நடந்து வருவாராயினர்; காளிதேவியின் கருணையால் ஒரு பெரிய ஆபத்தினின்றும் தப்பித்துக்கொண்டேன்.

* * *

உலகம் பலவிதம்: 1946 ஆகஸ்ட் 16
விசாலாட்சி: (முற்றொடர் - 112)

"கைவினை கரவேல்"

மாகாளி தேவியைப்போல் வேடமிட்டு அத் தேவி சொல்வது போற் சொன்னமையினால், அத் தேவியின் ஆவேசம் என்னிடத்தில் ஒரு சிறிது உண்டாகி, என்மானத்தையும் காத்ததென்றால், உண்மையாக அந்த மாகாளித் தாயைப் பூசித்து உபாசித்துவரின் எனக்கு எவராலும் எக்காலத்தும் எவ்வகையான இடரும் நேராதென்று துணிந்தேன்; பத்திரையின் திருவுரு வரையப்பட்ட படமொன்றைத் தேடி வைத்து அநுதினமும் அத்தேவியைப் பூசித்துத் தோத்திரஞ் செய்து வரலானேன்; வீட்டிலுள்ள ஐயர் அன்றுதொடக்கம் என்னுடன் பயபத்தியாக ஊடாடினார்; அந்த ஐயர் அபிமானித்து வரும் தாசிவீட்டிற்குரிய கிழவியும் அவர் வளர்க்கும் மகளுமாகிய இருவரும் என்னைப் பார்க்க விரும்பி ஒருநாள் நான் இருக்கும் வீட்டிற்கு வந்தார்கள்; தாசிக்கிழவியின் விஷயம் ஒருபுறமிருக்க, அவளுடைய அபிமான புத்திரி யாகிய அந்த இளம் பெண் அழகுடையவள்; சங்கீதம் பரதநாட்டியமென்னுமிவைகளை முறைப்படி கிரமமாகக் கற்றவள்; அழகிலும் சங்கீதத் திலும் நாட்டியத்திலும் சிறந்தவளென்ற பேர் அந்த வூரிலே அவளுக்கு உண்டு; வயசு இருபதிற்கும் இருபத்தைந்துக்குமிடையில் மதிக்கலாம்; எவரோடும் இதமாகப் பேசவும் விநயமாக ஊடாடவும் பயின்றுள்ளவள்; என்னை முந்தியே யறிந்து என்னுடன் பழகியவள்போல் அவளாய் அன்புடன் வார்த்தையாடினாள்? ஊடாடிய விநயத்தையும் பேசிய இதத்தையும் பாராட்டிய அன்பையுங் கண்டு நானும் அந்தப் பெண்ணிடம் அன்பு பூண்டேன்; அவள் என்னைப் பார்த்து "அம்மா, நீங்கள் நல்லாகப் பாடுவீர்களாமே; உங்கள் பாட்டைக் கேட்க ஆசைப்பட்டு இங்கு வந்தேன்" என்று பணிவுடன் சொல்ல, சங்கீத விடயமாக எனக்கென்ன தெரியும்; பாடுவாரைக்கேட்டு நானும் சிறிது பாடத் தெரிந்துள்ளேனல்லாமல், உம்மைப்போல முறையாகப் பாடவும் ஆடவும் நான் அறியேன் என்று சொல்ல, "ஆம், அம்மா அப்படித் தான் விஷயம்; அறிந்தவர்கள் அவையடக்கஞ் சொல்வார்கள்; ஏதோ நான் கேட்க விரும்பி வந்தேன்; இனி உங்கள் இஷ்டம்; என்னை ஏதும் பாடச் சொன்னால் உடனே அறிந்ததைப் பாடிவிடுகிறேன்" என்று அந்தப் பெண் சொன்னாள். அந்தப் பெண் கேட்க, எனக்கு மறுக்க மனம் வரவில்லை; அல்லாமலும் "கைவினை கரவேல்" என்பது மூதாட்டி வாக்கல்லவா; அதனையும் நினைத்தேன்.

"உண்மையோ, உபசாரமோ நானறியேன்"

உடனே இலட்சுமியைக் கொண்டு என் யாழை எடுப்பித்துச் சுதி கூட்டித் தேவி மேல்:

"பேதாதிபேதம் பிறந்த வுயிர்த் தொகைக்கோர்
ஆதாரமாகி யளவை யறிந் தளித்தாய்
ஓதா மறைநூ லுபநிடதத் துண்மையமாம்
பாதார விந்தம் பெறப் பெற்றேன் பாதகனே."

என்னும் தோத்திரத்தைப் படித்துப் பின்னர் முருகக் கடவுள் பேரிற் சில கீர்த்தனங்களையும் அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்தில் ஒரு சிந்தினையும் பாடி முடித்தேன்; என் பாட்டைக் கேட்கும் போதெல்லாம் அந்தப் பெண் ஆநந்தமுற்றுத் தலையசைத்தாள். நன்றாயிருக்கின்றதென்றாள். அப்படிச் செய்தமையும் சொன்னமையும் உண்மையோ, உபசாரமோ, நானறியேன்; பாடிமுடித்தவுடனே அப்பெண் என்னைப் பாராட்டிவிட்டு நான் சொல்லாமலிருப்பவே, தானாக என்னிடத்திலுள்ள யாழை வாங்கி மீட்டிப் பாடினாள்; கேட்டுக்கொண்டிருந்த எனக்கும் ஏனையோர்க்கும் அப் பாக்கள் கர்ணாமிர்தமாக விருந்தன; சரசுவதியின் அமிசமோ என்று ஐயங் கொண்டேன்; பாடி முடித்தபின், உமது பரத நாட்டியத்தை நான் பார்க்கலாமா எனக் கேட்க, நூறுமுறையும் பார்க்கலாம்; ஆனால், பக்க வாத்தியகாரர் இங்கு ஆயத்தமாயில்லையே; எங்கள் வீட்டிற்கு ஒருமுறை வந்தாற் செய்து வைக்கிறேன்; இல்லையேல் அவர்களையுங் கூட்டிக்கொண்டு நீங்கள் குறிக்கும் நாளில் இங்குவந்து செய்கிறேன்" என்று அந்தப் பெண் அன்புடன் சொன்னாள்; ஆத்தாளும் ஐயாவும் அநுமதி தந்தால் உங்கள் வீட்டிற்கு வர எனக்கு எவ்வகையான தடையுமில்லை யென்றேன்; கேட்டபோது அந்தப் பெண்ணுக்கும் தாய்க்கிழவிக்கும் உண்டான மகிழ்ச்சிக்கு ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையில்லையெனலாம். "அம்மா, ஆத்தாளும் ஐயாவும் அநுமதிதந்தால் இப்பொழுதே புறப்பட்டு எங்கள் இரதத்தில் வீட்டிற்கு வருவீர்களா என்று அந்தப் பெண் வினாவ, "ஆம்" என்றேன். உடனே கிழவியும் அந்தப்பெண்ணும் எழுந்து ஐயர் இருக்குமிடம் போய் அவருக்குச் செய்தியைச் சொல்லி அவர் உத்தரவைப் பெற்றுக்கொண்டு, அப்படியே ஆத்தாளிடம் போய்ச் சொல்லி ஆத்தாளின் அநுமதியையும் பெற்றுக்கொண்டு வந்து எனக்குத் தெரிவித்தார்கள்; நானும் உடனே யெழுந்து ஆத்தாளிடம் போய் விஷயத்தைத் தெரிவிக்க, "மகளே, உமக்குத்தானே, காளிதேவியின் அநுக்கிரகமாகிய கவசமிருக்கிறது; நீர் உமக்கு இஷ்டமானாற் போய் வரலாம்" என்று சொல்ல, நானும் உடன்பட்டு இலட்சுமியையும் உடன் கூட்டிக்கொண்டு அவர்களுடைய இரதத்திலேயே ஏறி அவர்கள் வீட்டிற் போய்ச் சேர்ந்தேன்; சேர்ந்தவுடன் அவர்கள் காட்டிய பரிவும் எனக்குச் செய்த உபசாரமும் சற்றல்லவெனலாம். சிறிதுநேரத்துள் அந்தப் பெண் அங்கே பக்க வாத்தியகாரரை வரச் செய்து தன் பரதநாட்டியத்தை ஆடிக் காட்டினாள். அற்புதமாகவிருந்தது. அப்படியான நாட்டியத்தை முன் எவரேனுஞ் செய்ய நான் கண்டதில்லை; அவர்கள் தங்கள் வீட்டிற்கு நான் வந்ததையிட்டு நன்றி கூறி, பழையபடி என்னையும் இலட்சுமியையும் இரதத்தில் ஏறச்செய்து தாங்களும் உடன்வந்து எங்கள் வீட்டில் இறக்கிவிட்டுச் சென்றார்கள்; அன்று தொடக்கம் அவர்கள் விரும்பியநேரம் நான் அங்கு போவதும் அந்தப் பெண்ணுடன் கலந்து சங்கீதம் பாடுவதும் பரதநாட்டியஞ் செய்வதும், நான் விரும்பியநேரம் அந்தப் பெண் தாய்க் கிழவியுடன் எங்கள் வீட்டிற்கு வருவதும் சங்கீதம் பாடுவதும் போவதும் உண்டு.

உம்முடைய நாமதேயமென்ன?

நமக்கு ஏதோ ஒரு வித்தை தெரிந்திருப்ப நாம் ஒருவரிடத்துச் சும்மா உண்பது சரியல்லவென என்னளவில் நிச்சயித்துக்கொண்டு, இடையிடையே சங்கீதம் பரதநாட்டியஞ் செய்து பொருள்தேடி ஐயருக்குக் கொடுத்துவந்தேன்: அப்படியான சந்தர்ப்பத்திலேதான் ஒரு நாள் இரவு என் சங்கீதத்தைக் கேட்கும்படி இந்தப் பிரபு அங்கே வந்தார் என்று இராமச்சந்திரனைச் சுட்டிக் காட்ட, இராமச்சந்திரன் பெயரப் பெயர விழித்தான்: ஏனையோரெல்லாரும் இராமச்சந்திரனையும் அந்த அம்மாளையும் மாறிமாறி உற்று நோக்கினர்: அந்த அம்மாள் பின்னருந் தன் வரலாற்றைச் சொல்லுகிறாள்; இப்பிரபு என் சங்கீதத்தைக் கேட்டு மெச்சிப்போலும் எனக்கு அந்தநேரத்திற் சன்மானஞ் செய்தார்; நான் இவர் தந்ததை அன்புடன் ஏற்றுக்கொண்டு "அடுத்தது காட்டும் பளிங்கென்ன நெஞ்சம் - கடுத்தது காட்டும்முகம்" என்றபடி, இவரைப் பார்த்த மாத்திரத்தே இவர் ஒரு உத்தம புத்திரனென்று எனக்குப் புலப்பட்டது; இவர் மூலமாக அந்தப் பிராமணவீடாகிய சிறைச்சாலையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாமென்று நினைத்து இவரைத் தனியே காண விரும்பினேன்; கண்டும் என் குறைகளை யெல்லாம் எடுத்துச் சொல்ல அந்த நேரத்திற் சமயம் வாய்க்கவில்லை; ஆனால் இவர் தாம் மீண்டு ஊருக்குப் போகும்போது என்னைக் கண்டு போவதாக வாக்களித்தார்; இவருடைய வரவை எதிர்பார்த்த வண்ணம் இருந்தேன்; நாள் பல கழிந்தன மீண்டுவரக் கண்டிலேன்; அதனால் என் வேண்டுகோளை மறந்து இவர் ஊருக்கு மீண்டு போய்விட்டாரோ வெனச் சந்தேகங் கொண்டேன்; இற்றைக்குச் சிலதினங்களுக்கு முன்னர், என் வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டேனாய், நான் இருந்த வீட்டுக்காரருக்குச் சொல்லாமல் எனக்குரிய கைக் கடங்கிய பொருள்களையும் எடுத்துக்கொண்டு நள்ளிரவில் வீட்டைவிட்டுப் புறப்பட்டு விரைந்து நடந்து அந்தப் பட்டின எல்லையைக்கடந்து, அணிந்திருந்தவுடையோடு சஞ்சரித்தால் என் மானத்திற்கும் உயிருக்கும் ஆபத்து வருமெனக் கருதி, அதனை அகற்றி வைத்துக்கொண்டு முந்தியே நான் தேடி அந்தரங்கமாக வைத்திருந்த இந்தக் காவியுடை உருத்திராக்க மென்னு மிவைகளைப் பூண்டுகொண்டு சில புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கியும் சில சிவத் தலங்களைத் தரிசித்தும் வரும்மார்க்கத்திலே என் அதிர்ஷ்ட வசமாக உங்களைச் சந்தித்தேன்; இதுதான் என் வரலாறு" என்று சொல்லி முடித்தாள்; "அம்மா, உம்முடைய நாமதேயமென்ன?" என்று இராமச் சந்திரன் கேட்க, என் பெயரை மறந்துவிட்டீர்களா? என்னை "இங்கிதம்" என்று சொல்லுவார்க ளென்றாள் அந்த அம்மாள் "என் அருமைத் தங்கை இங்கிதம் நீ தானா அம்மா" என்று இராமச்சந்திரன் கேட்க, "ஆம் அண்ணா என்றாள்" அந்த அம்மாள்.

* * *

உலகம் பலவிதம்: 1946 ஆகஸ்ட் 23 விசாலாட்சி: (முற்றொடர் - 113)

அதற்குஞ் சந்தேகமா?

விசுவநாதன் விசாலாட்சி இரஞ்சிதம் இராமனாகிய எல்லாரும் இராமச்சந்திரனையும் அந்த அம்மாளையும் ஆச்சரியத்துடன் மாறிமாறி உற்றுப் பார்த்தனர்; இவர்களுக்கிடையே முந்தி நிகழ்ந்த செய்தியை அவர்கள் அறியார்கள்; "அண்ணா" நீங்கள் தேடிச்சென்ற பொருள் அகப்பட்டதா" என்று இங்கிதம் ஆவலுடன் வினாவ, "ஆம், தங்காய்" என்றான் இராமச்சந்திரன்; எங்கே என்று அவள் கேட்க, இங்கேதான் என்று துறவி வேடத்தோடிருக்கும் இரஞ் சிதத்தைச் சுட்டிக்காட்டினான் இராமச்சந்திரன்; இரஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதத்தின் துறவி வேடத்தை ஆச்சரியத்துடன் உற்று நோக்கிய இங்கிதம் "ஏன் அம்மா, நீங்கள் இந்த உடை தரித்திருக்கிறீர்கள்" எனக் கேட்க, "அம்மா, உம்மைப்போலவே நானும் துறவியுடை பூணவேண்டிய நிலை எனக்கு நேர்தலாயிற்று" என்று பதில் சொன்னாள் இங்கிதம். "இந்த அம்மாளை நீர் சந்தித்த வரலாறென்ன" என்று விசுவநாதன் கேட்க, இராமச்சந்திரன் அதனைச் சுருக்கமாகச் சொல்லிமுடித்தான்: பின்னர் அவன் இங்கிதத்தைப் பார்த்து, "தங்காய், மீண்டு வரும்போது நீர் இருக்குமிடத்திற்கு வந்து உம்மையுங் கண்டுகொண்டு போவதென்றே உத்தேசித்து வந்தேன்; அதற்குமுந்தியே நீர் எங்களிடம் வந்துசேர்ந்தீர்; இதுவுந் திருவருட் செயல்தான்; இப்பொழுது நீரும் எங்களுடன் வருவீர்தானே" எனலும், விசாலாட்சி "இந்த அம்மாள் வராமல் எங்கே போவது? இப்படி யருமையான ஒரு சகோதரம் எங்களுக்குக் கிடைக்குமா?" என்றாள்; "இந்த அம்மாள் கற்பினுக்கரசி யல்லவோ" என்றாள் இரஞ்சிதம்; "அந்த விஷயத்தில் நீர் என்ன குறைவா" என்று புன்னகையுடன் கேட்டாள் விசாலாட்சி; "கற்பிற்குப் பங்கம் வருதற்கு ஏதுவான இடமாகவுள்ள தாசி வீடுகளில் வசித்தும் தாங்கள் தங்கள் கற்பைப் பாதுகாத்தமையினால் இந்த இருசகோதரிகளும் உத்தமிகள் தாம்" என்றான் விசுவநாதன்; "அதற்குஞ் சந்தேகமா?" என்றாள் விசாலாட்சி. அவர்களனைவரும் அன்றிரவு அந்தத் திருமடத்திலேயே தங்கி, தங்களிடம் புதியவளாய் வந்து சேர்ந்த இங்கிதத்திற்குத் தங்கள் வரலாறு முழுவதையுஞ் சொன்னார்கள்; அவளுங் கேட்டு மகிழ்ச்சியடைந்தாள்; அவர்களெல்லோரும் அடுத்தநாள் அத்தலத்திலெழுந்தருளிய பெரு மானைப் பிரார்த்தித்து விடை பெற்றுக்கொண்டு புகைரத மார்க்கமாக இரஞ்சிதத்தின் ஊரை நோக்கிப் புறப்பட்டுச் செல்வராயினர்.

நீங்கள் சென்ற கருமம் அநுகூலந்தானே?

அவர்களனைவரும் தாம் செல்லும் மார்க்கத்திலுள்ள புண்ணிய தீர்த்தங்கள், புராதன தலங்களில் இறங்கி இறங்கி முறையே முழுகியும், சுவாமி தரிசனஞ் செய்தும், சில தலங்களில் இரண்டு மூன்று தினந் தங்கிநின்றும் பிரயாணஞ் செய்தனர்; இப்படிப் பிரயாணஞ் செய்யும்போது ஒரு தானத்திற் கணித்தாகப் புகைரதம் ஓடும் போது, இராமச்சந்திரனானவன் விசுவநாதன் முதலியோரைப் பார்த்து, "சமீபத்தில் வருகிறதாகிய ஸ்தானத்தில் இறங்கி நமக்கு அறிமுகமான ஒருவரைக் கண்டுகொண்டு வர விரும்புகிறேன்; அப்படிச் செய்வது உங்களுக்குச் சம்மதமா? "என்று கேட்க, "ஓம், ஓம், உங்கள் விருப்பம் போற் செய்யலாம்; எங்களுக்கும் இங்கே தங்கிப் போகப் பிரியம்தான்" என்றான் விசுவநாதன்; அப்பொழுது நேரம் பிற்பகல் ஐந்து மணி வரையிலிருக்கும்; அவர்களெல்லோரும் அந்தத் தானத்திலேயே இறங்கி, தானத்திற்குரிய தாகிய தங்குமிடத்திலே ஒரு அறையைத் தங்கள் உபயோகத்திற்கென ஒழுங்கு செய்துகொண்டு பயணப் பொருள்களையெல்லாம் அந்த அறையுள் இட்டு, சமீபத்திலுள்ள ஒரு திருக்கோயிற் குளத்திற் சென்று முகங் கை கால் சுத்திசெய்து சந்திவந்தனை முடித்து, சுவாமி தரிசனஞ் செய்து மீண்டு புகைரத ஸ்தானத்திற்கு வந்து அங்குள்ள பிராமண விடுதிச்சாலையில் போசனம் முடித்துக்கொண்டு தங்கள் அறைக்கு வந்து சேர்ந்தார்கள்; இராமச்சந்திரன் தன்னுடன் வந்த ஏனையோரை அந்த அறையில் இருக்கச் செய்து, தான் சீக்கிரம் மீண்டுவருவதாகச் சொல்லி விட்டு, அங்கு நின்ற ஓர் ஒற்றைமாட்டு வண்டியைக் கூலிக்குப் பிடித்து, அதில் ஏறிக்கொண்டு தான் போகவேண்டிய இடத் திற்குப் போவானாயினான்; அப்பொழுது நேரம் இரவு 7 மணிக்கு மேலிருக்கும்; அவன் தான் குறித்த வீட்டின் தலைவாசற் கதவிற் போய்த் தட்டுதலும், உடனே ஒரு பணிப்பெண் அங்கே வந்து கதவைத் திறந்தாள்; "ஐயா, உள்ளேயிருக்கிறாரோ" என்று இராமச்சந்திரன் கேட்க "அம்மா தான் இருக்கிறாள்" என்று சொல்லி அந்தப் பணிப்பெண் தலைவாசலிலுள்ள ஒரு நாற்காலியைக் காட்டி அதில் அவனை இருக்கச்செய்து, விரைந்து உள்ளே போய் விஷயத்தைத் தன் எஜமாட்டிக்குத் தெரிவிக்க, அவள் உடனே வந்து இராமச்சந்திரனைக் கண்ட மாத்திரத்தே சந்தோஷ மடைந்தாளாய், வந்துவிட்டீர்களா, ஆநந்தம், என்று நமஸ்காரஞ் செய்ய, இராமச்சந்திரனும் எழுந்து பிரதி நமஸ்காரஞ் செய்து இருந்தான்; "நீங்கள் சென்ற கருமம் அநுகூலந்தானே" என்று அந்தப் பெண் ஆவலுடன் வினாவ, "ஆம் அநுகூலந்தான்" என்றான் இராமச்சந்திரன்.

கண்ணே! இதுஎன்ன கோலம்?

"இப்பொழுது உங்களுடன் கூடிக் கொண்டு வரவில்லையா" என்று பின்னரும் அவள் கேட்க, "வந்திருக்கிறார்கள்; வேறு பேரும் வந்திருக்கிறார்கள்; எல்லோரையும் புகைரத ஸ்தானத்திலுள்ள விடுதியில் இருக்கச் செய்துவிட்டு, நான் முந்தியே உங்கள் வீட்டிற்கு வந்தேன்" என்றான் இராமச்சந்திரன்; அந்தப் பெண் அங்கே நின்ற வண்டிக்காரனிடம் அவன் கூலியைக் கொடுத்துப் போகச் சொல்லிவிட்டு, இராமச்சந்திரனிடம் வந்து "தயவு செய்து சிலநிமிஷமிருங்கள் நானும் அவர்களிடம் வருகிறேன்" என்று சொல்லி, "கோபாலன்" என்று கூப்பிடவே, "என்ன, அம்மா" என்றுகொண்டு அவன் வர இரதத்தைக் கொண்டுவா புகைரதத்தானத்திற்குப் போய்வர வேண்டும்" என்று சொல்ல, அவன் இரதத்தைத் தலைவாசலிற் கொண்டு வந்து நிறுத்தினான்; அந்தப் பெண் சில நிமிஷநேரஞ் செல்ல, அங்கே வந்து இராமச்சந்திரனை இரதத்தின் முன்னாசனத்தில் ஏறியிருக்கச் செய்து தானும் பின்னாசனத்தில் ஏறியிருந்தாள்; இரதம் புகைரத ஸ்தானத்தையடைந்தது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இராமச்சந்திரனும் அந்தப் பெண்ணும் இரதத்தை விட்டிறங்கி அறையுட் செல்லுதலும், விசுவநாதன் முதலானோர் அவளை வரவழைத்தனர்; இரஞ்சிதம் உடனே அந்த அம்மாளிடம் விரைந்து போய், அவளுடைய கரத்தைத் தன்கரங்களாற் பற்றிக் கண்களில் ஒற்றி "அம்மா, என்னை மறந்துவிட்டீர்களா" என்று அன்போடும் ஆவலோடும் கேட்க, அந்தப் பெண் இரஞ்சிதமென்று அயிர்த்து "உம்மை மறப்பேனோ? கண்ணே, இது என்ன கோலம்" என்று கவலையுடன் வினவ, "கவலைப்படாதீர்கள்: கதிர்காமத்தையன் கிருபையாலும் உங்கள் தயவினாலும், என் கவலைகள் நீங்குங் காலம் வந்துவிட்டது" என்று சொல்லித் தேற்றினாள்; பின்னர்ச் சற்றுநேரம் அவர்களெல்லோரும் கலந்து பேசியபின், அந்த அம்மாள் தனக்குச் செய்த உதவிகளையெல்லாம் இரஞ்சிதம் மற்றையோருக்கு எடுத்துச் சொன்னாள்; இராமச்சந்திரனும் அந்தப்பெண் தனக்குச் செய்த உதவிகளைக் கூறினான். "செய்யவேண்டிய கடமையைச் செய்தேன்; நான் ஒன்றும் விசேஷமாகச் செய்யவில்லை" என்று அந்தப் பெண் சொல்லிப் பின் அவர்களைப் பார்த்து "நான் உங்களை என் சிறு வீட்டிற்கு அழைத்துச் செல்ல விரும்புகிறேன்" எனலும் அத்தனைபேரும் அதற்கு உடன்பட்டனர்: உடனே அந்தப் பெண் கோபாலன் மூலமாக இன்னுமொரு இரதத்தை வரச்செய்து, அவர்களெல்லோரையும் இரதங்களில் ஏற்றித் தன் வீட்டிற்கு அழைத்துப் போனாள்.

* * *

உலகம் பலவிதம்: 1946 ஆகஸ்ட் 30
விசாலாட்சி: (முற்றொடர் - 114)

"அவர் பரலோகம் போய்விட்டார்"

அந்தப் பெண் அவர்களைத் தன் மாளிகையொத்த வீட்டிற்கு அழைத்துச் சென்று அவர்களனைவருக்கும் தக்கவாறு உபசாரஞ் செய்தாள்; பின் இரஞ்சிதத்தை அன்புடன் பார்த்து "தங்காய், என் வீட்டைவிட்டு நீர் போனநாள் தொடக்கம் உமது பிரிவால் மனம் வருந்திக் கொண்டேயிருந்தேன்; உமது கடிதம் ஏதுங் கிடைக்குமெனவும், நீர் மீண்டு இங்கே வருவீரெனவும் எதிர்பார்த்திருந்தேன்; இரண்டும் நிகழவில்லை; இதனாற் பெருங் கவலைப் பட்டிருக்கும் போது (இராமச்சந்திரனைக் காட்டி) இந்த ஐயா உம்மைத் தேடிச் செல்லும் மார்க்கத்தில் இங்கே வந்தார்; அதனால் நீர் அதுவரையில் ஊருக்கு மீளவில்லை யென்பதை யூகித்துக்கொண்டேன்; உம்மைத் தேடிக் காணுதற்கான மார்க்கத்தை என் யோசனைக் கெட்டிய வரையில் இவரிடஞ் சொல்லி விட்டேன்: இப்பொழுது உங்களெல்லோரையும் கண்டது எனக்கு ஆநந்தம்; உங்களுடன் வந்திருக்கும் இவர்களும் பெரிய இடத்துப் பிள்ளைகள்போற் காணப்படுகிறார்கள்; இவர்களுடைய வரலாற்றையும் அறிய விரும்புகிறேன்" என்று அன்போடு இரஞ்சிதத்திடம் சொன்னாள்; இரஞ்சிதம் அந்த அஞ்சுகத்தம்மாள் விரும்பியபடி, தன் வரலாற்றையும், விசுவநாதன் விசாலாட்சி இங்கிதம் என்னும் இவர்களுடைய வரலாற்றையும் அவர்கள் தன்னை அன்பாக ஆதரித்த விபரத்தையும், இராமச்சந்திரன் தன்னைத் தேடி வந்து சந்தித்த செய்தியையும், தாங்கள் கதிர்காமயாத்திரை செய்த வைபவத்தையும் இன்ன, பிறவற்றையும் ஆதியோடந்தமாக அஞ்சுகத் தம்மாளுக்குச் சொல்லிவிட்டு, "அக்கா! உங்கள் கேசவ முதலியார் சுகமே யிருக்கிறாரா" என்று வினாவவே, அஞ்சுகத்தின் முகத்திலிருந்த மகிழ்ச்சி கவலையாக மாறியது; அவளுடைய கண்களில் நீர் ததும்பியது; "தங்காய், அவர் பரலோகம் போய் விட்டார்; அவர் எங்களை விட்டுப்பிரிந்து மூன்று மாசங்களாயின" என்று சொல்லிக் கவலைப்படுதலும் அந்த இழவுச் செய்தியைக் கேட்ட இரஞ்சிதமும் கவலைப் பட்டாள்.

அப்படியெல்லா மிருப்ப ஏன் இப்படிச் சொல்லுகிறீர்கள்?

பின்னர் இரஞ்சிதம் அஞ்சுகத்தைப் பார்த்து, "அக்கா, முதலியார் என்ன நோய் கண்டிறந்தார்? அந்த நேரத்திற் சுகதேகியாகக் காணப்பட்டாரே: அவர் நடத்திவந்த கருமங்களை யெல்லாம் இப்பொழுது ஆர் அக்கா நிர்வகித்துப் பார்ப்பது" என்று பரிவுடன் வினவினாள்; "தங்காய், முதலியார் நீடித்த காலம் நோய்வாய்ப் பட்டுப் பாயிற் கிடந்து வருந்தவில்லை; இரத்தாசயத்தில் உண்டான நோய் காரணமாக மூன்று நாட்களில் மோசம் போனார்; அந்திய காலத்திலாக, எந்தக் காலத்திலாக, முதற் கடவுளருள், இரண்டாவது நான் அவருக்கு எவ்வகையான குறைவும் நேரவிடவில்லை; நல்லாகப் பார்த்துப் பராபரித்துச் சாக்காட்டினேன்; முதலியாரெனிலோ பிறவிச் செல்வர்; ஆனதனால் வறுமை யறியார்; அவரிடத்திலே இரண்டொரு குற்றமிருந்தமை நிசந்தான்; அந்தக் குற்றத்திலும் அதிகம் ஈடுபடாமல் நான் அவரைத் தடுத்துவந்தேன்; அப்படியான சில குறைகள் இல்லாவிட்டால், அவருக்கு நிகரான உத்தம புருஷரைக் காணுதல் அரிதெனலாம்; பெண்ணாசை பெரிய முனிவர்களையும் மயக்கிய துண்டு; அதுபோக, முதலியார் தாம் நிர்வகித்து நடத்தி வந்த இந்தப் படக்காட்சி நிர்வாகப் பொறுப்பையும் தாபனம் முழுவதையும், இதற்குரிய பொருள் பண்டங்கள், கருவிகள், சாதனங்களெல்லாவற்றையும் என் பெயருக்கே எழுதிவிட்டுப் பிரிந்தார்; நான்தான் இப்பொழுது இத் தாபனத்தை நடத்தி வருகிறேன்; இதிலிருந்து கருமஞ் செய்பவர்களும் முதலியார் காலத்திற் செய்துவந்த விதமாகவே இப்பொழுதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவாசத்துடன் கடமையாற்றி வருகிறார்கள்: இதனால் எனக்கு எவ்வகையான சிரமமுமில்லை; இலாபமுண்டு; ஆனாலும் இந்தத் தொழில்வாயிலாகப் பொருளீட்டுதல் எனக்கு எள்ளளவும் பிரியமில்லை, தங்காய்" என்று அலுப் போடு சொன்னாள். "ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? இந்தப் படக்காட்சித் தொழில் இசைக் கலையையும் நாடகக் கலையையும் விருத்தி பண்ணுகின்றதெனவும், பழைய சரித்திரங்கள் எங்கள் மூதாதையரின் தொன்மை நாகரிகத்தையும், வாழ்க்கையையும், நீதியையும், வீரதீரச் செயல்களையும், தெய்வ பக்தியையும், அற்புத சரிதைகளையும், காதன்முறையையும் இவை போன்ற பிற நன்மைகளையும் இக்காலத்தில் உலகினர்க்குப் போதிக்கின்றதெனவும், நாகரிக முதிர்ச்சிக்கும் உலக அனுபவ அறிவு வளர்ச்சிக்கும் படக்காட்சி இன்றியமையாததெனவும் சொல்லுகிறார்களே அப்படியெல்லாமிருப்ப, அக்கா, நீங்கள் ஏன் இப்படிச் சொல்லுகிறீர்கள்" என்று ஆச்சரியத்தோடு வினாவினாள் இரஞ்சிதம்.

"மானம் மரியாதை கெட்டு அல்லற்படுவதைக் காணலாம்"

"தங்காய், நீர்சொல்வது நிசமெனினும், இப்படியான படக்காட்சியை நிர்வகித்து நடத்துவோரின் செய்காரியப் பிழையினாலும், பொருளா சையாலும், மனக் கட்டுப்பாடின்மையாலும் சில தவறுகள் இத் தொழிலுள் வந்து புகுந்துவிட்டன; மேலும், படக்காட்சியிற் பங்குபற்றி நடிப்போர் இருபாலாருமாயிருத்தலினால், அவர்களுக்கிடையே பெருந் தவறுகள் நேருகின்றன; ஆடவர்களும் மகளிரும் படக்காட்சியிற் சேர்ந்து தத்தமக்கு விதிக்கப்பட்ட பாகங்களை நடிப்பதோடு அமையாது, தம் அந்தரங்க வாழ்க்கையிலும் அவைகளைக் கைகொள்வதனால் தங்கள் பெயரையும் மதிப்பையும் இழந்துவிடுகிறார்கள். சங்கீதம் பரதநாட்டியம் முதலிய அருங் கலைகளை நன்குணர்ந்த உயர்குடிப்பிறந்த பெண்கள் எத்தனையோ பேர், தம் மேலான நிலையை விட்டு இந்தப் படக் காட்சித் தொழிலிற் புகுந்து தம்மிடத்திருந்த மானம் மரியாதையெல்லாம் கெட்டு அல்லற்படுவதை நேரிற் காணலாம்; படத்திற் சேர்ந்து நடிக்கும் பெண்களுக்கு நெறியு முண்டா? என்று பத்திரிகைகளில் எழுதப்பட்டு வருதலை இடையிடையே நான் பார்க்கும் போ தெல்லாம் என்மனம் புண்ணாகின்றது; சங்கீதம் நாட்டிய மென்னுமிவை கேட்போரையும் பார்த் தோரையும் தம்மிடம் இழுக்கும் இயல்புள்ளன; இசையோடு கூடிய ஒரு பாட்டைக் கேட்டுவிட்டு, சங்கீதத்தை இம்மியத்தனையும் அறியாதவனும் அந்தப் பாட்டைத் தானும் பாடமுயன்று அவலப்படுகிறான்; நாட்டியமென்பதை எள்ளளவும் விளங்கிக் கொள்ளாத பள்ளிக்கூடச் சிறுமியும் படக்காட்சியைப் பார்த்து விட்டுப் பின்னர்த் தானும் ஆபாசமாக நாட்டியமாட முயலுகிறாள்; அதனால் கண்டவர் தன்னைச் சிரிக்கிறார்களே யென்பதை அந்தச் சிறுமியறியாள்; அல்லாமலும் அறிவிற் குறைந்தவர்களாகிய சாமானிய சனங்கள் இப்படியான படக்காட்சிகளை ஆர்வத்தோடு பார்க்கும்படி போய், கருப்பஞ்சாற்றைக் கீழே சிந்தவிட்டு, அதனோடு கலந்திருந்த பயனற்ற பொருள்களை மாத்திரமே ஏந்தி வைத்திருக்கும் நெய்யரி (பன்னாடை) யைப்போல, காட்டப்படும் நாடகங்களிலேயுள்ள நன்மை பயக்கும் விஷயங்களையும் செயல்களையும் நீதிகளையும் வீண் போகவிட்டு, அங்கே நடக்கும் காதற்காட்சிகளையும் காம சிருங்கார வர்ணனையோடு கூடிய கவிகளையும் அசங்கதமான வீண் காட்சிகளையும் தத்தம் உள்ளத்தே பதிய வைத்துக் கொண்டு மீளுகிறார்கள்; நம்நாட்டிலேயுள்ள சிறுவர் சிறுமியர்கள் தூய அருட்பாக்களைப் படித்தலை யொழித்து, வீணான "சினிமாப்" பாட்டுக்களை நடக்கும் போதும் நிற்கும் போதும் இருக்கும் போதும் கிடக்கும் போதும் கனவிலும் நனவிலும் எந்தநேரமும் பாடியலைகிறார்கள்; இம்மட்டா? இல்லை இல்லை எத்தனையோ சிறுவர்கள் தம் பெற்றோரை வஞ்சித்துப் பணந் தேடிக் கொண்டுவந்து இந்தப் படக்காட்சிக்குச் சென்று பணத்தை அள்ளியள்ளி அநியாயமாக இறைக்கின்றார்கள்.

"தானுந்தன் பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போலுமே"

இதனால் எத்தனையோ குடும்பங்களிற் புருஷன் மனைவியர்க் கிடையும், பெற்றார் பிள்ளைகட்கிடையும், உற்றார் சுற்றத்தவர்களுக் கிடையும், பிணக்கும் பொருட் சேதமும் நேரலாயின; இவை மாத்திரமல்லாமல், இந்தப் படக்காட்சிகளை வந்து வந்து பார்த்துப் பார்த்து மோகங்கொண்டு, பள்ளிக்கூட உபாத்தியாயர் களாக உள்ளவர்கள், கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி - தானுந் தன் பொல்லாச் சிறகை விரித்தாடினாற்போல, தங்களிடம் கல்வி பயிலும் பிள்ளைகட்கு நாடகங்களையாக, நாடகங்களி லுள்ள சில காட்சிகளையாக, சிறுவர் சிறுமியரென்ற பேதமின்றிப் பயிற்றத் தலைப்படுகின்றார்கள்; பிள்ளைகளெனிலோ சங்கீதமென்றால் என்ன வென்பதைத்தானும் உணராதவர்கள்; காலைக் கையைத் தலையைத் தாம் விரும்பியபடி அசைத்தல் தான் நாட்டியமெனவும், நடிப்பெனவும் எண்ணிக் கொள்ளுவார்கள்; இவைகளை அந்த வேளைகளிற் பழக்கிவைக்க வரும் உபாத்தியாயர்களெனிலோ, முறையாகச் சங்கீதத்தையேனும் நாட்டியத்தையேனும் குருவிடத்திற் பயிலாதவர்கள்; சுதிலயமென்னுமிவைகள் சங்கீதத்திற்கு இன்றியமையாதவை என்பதைத்தானும் உணரார்கள்; இப்படிப்பட்ட மௌட்டிகத்தோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய உபாத்தியார்கள் தங்களிடத்திற் படிக்கும் பிள்ளைகளுக்கு நாடகங்களைப் பழக்கத் தொடங்கி, இல்லையேல் தங்களையொத்த அறியாமையோடு கூடிய சிலரைக் கொண்டு பயிற்றுவிக்கத் தொடங்கி, கண்ணன் காதல், சுபத்திரை கல்யாணம் என்னுமிவை போன்ற காம சிருங்கார வருணனைகள் பொதிந்த காதற் கதைகளை நாடகமாக நடிக்கச் செய்கிறார்கள்; சிறுமியராயுள்ளவர்களுள் ஒருத்திக்கு இராமர் வேடமும், இன்னொருத்திக்குச் சீதை வேடமும், வேறொருத்திக்கு அநுமார் வேடமும் இட்டு அவர்களைப் பெண்ணாகவும், ஆணாகவும், குரங்காகவும் நடிக்கச் செய்கிறார்கள்; இவர்கள் பாடும் பாட்டையும் நடிக்கும் நடிப்பையும் பார்க்க வந்தவர்களுள் விஷயமறிந்தவர்கள் வெறுப்படைய, சங்கீதம் நாட்டியம் உணர்ந்தோர் நிந்தைச் சிரிப்புச் சிரிக்க, அநுமாருக்கு வேடமிட்டு நடிக்கும் பிள்ளையின் நடிப்பைப் பார்க்க வந்த பெற்றார் "ஐயோ, முந்தித் தவங்கிடந்து முந்நூறுநாட் சுமந்து - அந்தி பகலாய்ச் சிவனை யாதரித்து நொந்து பெற்ற பிள்ளை இப்பொழுது குரங்காய்ப்போனதே" யென்று மனமெரிய, வேடிக்கை பார்க்க வந்த வாலிபர்கள் கரகோஷஞ் செய்ய, எல்லாம் அநர்த்தமாய் முடிகின்றன; இவைகளுக்கெல்லாங் காரணம் ஒரு அளவிற்கு இந்தப் படக்காட்சிகளைப் போய்ப் பார்த்தலாகு மென்றுதான் எண்ணுகிறேன்" என்றாள்.

* * *

உலகம் பலவிதம்: 1946 செப்டெம்பர் 06
விசாலாட்சி: (முற்றொடர் - 115)

"அநாதளானேன்"

"மேலும், எங்கள் நாட்டிலுள்ள மகளிரின் ஒழுக்கத்தைக் கெடுத்தற்கேதுவாகிய இந்தத் தொழிலில், நானும் பெண்ணாய்ப்பிறந்தவளா யிருந்துகொண்டு அப்பெண்களை ஈடுபடுத்த எனக்குப் பிரியமில்லை; அல்லாமலும் நான் ஒரேயொருத்தி இப்படியான பிழையான வழியிற் பொருளீட்டுவதனால் ஆவதென்ன? அன்றியும் நான் அறிந்தோ அறியாமலோ தீவினைகளைச் செய்துவிட்டேன்; அத்தீவினைகளை இனியேனும் ஒழித்து நல்லவழியை நாட விரும்புகிறேன்; பால்ய வயசோடு கூடிய உங்கள் துறவுவேடம் கண்டவுடனே என் மனசை உருக்கி என்னைப் பச்சாத்தாபப்படச் செய்துவிட்டது; எங்கள் முதலியாருடைய உரிமைக்காரர் சிலர் இப்படியான பொறுப்பை ஏற்று நடத்துவதற்குப் பிரியமுள்ளவர்களாகவும், செய்யக் கூடிய ஆற்றலுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்; அவர்களை அழைத்து அவர்கள் வசம் இந்தத் தாபனத்தை ஒப்புவித்து விடலாமென்பதுதான் என்னோக்கம்; முதலியார் செல்வஞ் செல்வாக்கோடு கூடியவராயிருந்தாலும் அவருடைய சந்ததி வழங்குவதற்காகிய பிள்ளைப்பேறு இல்லாமற் போய்விட்டது. அந்திய காலத்தில் என்னையும் பார்த்துப் பராபரிப்பதற்கு ஆளற்ற அநாதளானேன்: ஆனதினாற்றான், இந்த வாழ்க்கையை வெறுத்து. உள்ள பொருளைத் தானதருமத்திற் செலவிட்டுக்கொண்டு தலயாத்திரை தீர்த்தயாத்திரை செய்து நல்ல பொழுது போக்க உத்தேசித்தேன்; இப்படியான நேரத்திலே தான், அம்மா, இரஞ்சிதம், நீரும் இந்த நல்லவர்களோடு இங்கு வந்தீர்; உங்களைத் தரிசிக்க வாய்த்ததும் என் பாக்கியந்தான்" என்று நெட்டுயிர்ப்போடு சொல்லி முடித்தாள் அஞ்சுகம். கேட்டுக்கொண்டிருந்தவர்கள் அத்தனை பேரும் சிறிதுநேரம் யாதும் பதில் சொல்ல முடியாதவர்களாயிருந்தனர்.

"அதுதான் எனக்கும் விருப்பம்"

பின்னரும் அஞ்சுகத்தம்மாள் இரஞ்சிதத்தைப் பார்த்து, "இங்கே ஆகவேண்டிய ஒழுங்கு களை யெல்லாம் செய்து வைக்கிறேன், இரண்டு நாள் இங்கே தங்கிப்போக முடியுமோ" என்று ஆதரவுடன் வினாவ, இரஞ் சிதம் தன்னுடன் வந்த மற்றையோரைக் குறிப்பாகப் பார்த்தாள்; அதனையவதானித்த விசுவநாதன் "அவர்கள் விரும்புகிறபடியால், இன்றிரவும் நாளைப் பகலும் இங்கே தங்கி நாளைப் பிற்பகல் நாங்கள் புறப்படலாம் என நினைக்கிறேன்" எனலும், மற்றையவர்களும் அதற்குச் சம்மதித்தார்கள். உடனே அஞ்சுகம் அவர்கள் அங்கு தங்குதற்காகிய ஒழுங்குகளை யும் ஸ்நானம் போசனம் முதலியவற்றிற்காகிய ஆயத்தங்களையுஞ் செய்து வைத்தாள். அன்றிரவு அங்குள்ள ஏனையோர் சயனஞ் செய்தற்காகிய படுக்கைகளை ஒழுங்கு செய்துவிட்டு, அஞ்சுகம் தன்னுடைய சயன அறையில் இரஞ்சிதத்தையும் உடன் கூட்டிக்கொண்டுபோய்த் தன் படுக்கைக்குப் பக்கத்தில் அவளுக்கும் படுக்கையமைத்து "தங்காய், உமக்குப் பிரயாணஞ் செய்த சிரம முண்டல்லவா, நீர் அலுப்பாயிருந்தாற் படுத் துறங்கலாமே" எனலும், "அக்கா, என் பிரயாணச் சிரமம் மனக்கவலையெல்லாம் உங்களைக் கண்ட மாத்திரத்தே காற்றிலகப்பட்ட பஞ்செனப் பறந்து விட்டன: உங்களுக்குச் சிரமமில்லையானால், உறக்கம் வரும்வரை உங்களுடன் பேசிக்கொண்டிருப்பதே எனக்கு ஆநந்தமாயிருக்கும்" என்று இதமாகச் சொன்னாள்; "அதுதான் எனக்கும் விருப்பம்" என்று கூறிப் பின்னரும் இரஞ்சிதத்தைப் பார்த்து "தங்காய், கதிர்காமத்தையனிடம் நீர் யாத்திரைபோன வரலாற்றை விபரமாகக் கேட்க ஆசைப்படுகிறேன்" என்றாள் அஞ்சுகம். அதனைக் கேட்ட இரஞ்சிதம் தன் கதிர்காம யாத்திரை விபரத்தைச் சொல்லத் தொடங்கி, தான் வெருகல்கங்கை வெள்ளப்பெருக்கில் அள்ளுண்டமை, இராமச்சந்திரன் தன்னை மாளாவண்ணம் வெள்ளத் திலிருந்து மீட்டமை, கதிர்காமத்தலத்தில் அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்வாய்ப்பட்டமை, தான் அவனைப் பரிகரித்தமை, அவனையும் தன்னையும் பார்த்து அத்தலத்திலுள்ள கற்பகனார் சொல்லி ஆசீர்வதித்து விபூதி வழங்கியமை முதலிய சகல வரலாற்றையும் ஒளியாமல் தன் மனமும், கேட்டுக்கொண்டிருந்த அஞ்சுகத்தின் உள்ளமும் உருகும்படி சொல்லி முடித்தாள். பயபக்தியோடு கேட்ட அஞ்சுகத்தம்மாளும் தன் கைகளைக் கூப்பி, தென்திசையைப் பார்த்தவண்ணம் கண்களில் நீர் ததும்ப "அப்பனே! கதிர்காமத்தையா! பொல்லாப் பாதகியாகிய என்னையும் உன் சந்நிதிக்குக் கூப்பிடும் நாளுண்டா" என்று கூறியவண்ணஞ் சிறிதுநேரம் முருகனைத் தியானித்தாள், அவள் பின்னரும் இரஞ் சிதத்தை அன்புடன் பார்த்து, "தங்காய், இங்கு வந்திருக்கும் இராமச்சந்திர னென்பவரெனிலோ, ஒரு உத்தமர்; கல்வியறிவொழுக்கமுடையவர்; எவரோடும் மரியாதையாக ஊடாடுபவர்; அவரைப்பற்றி நான் உமக்கு அதிகஞ் சொல்லவேண்டியதில்லை" தெய்வ பக்தி பூண்டவர், இவைகளெல்லாவற்றைக் காட்டிலும் அவர் உம்மிடத்தில் உண்மையான விசுவாசமுள்ளவரென்பதை, முந்தி அவர் இங்குவந்து இந்த வீட்டில் தங்கியபோது நான் அவதானித் தேன்; அவரையே நீர் கணவனாக வரித்துக் கொள்ளவேண்டுமென்பது கதிர்காமத்தையனுக்கும் திருவுளச் சம்மதமென்பதை, நீர் சற்று முந்திச் சொன்ன கதிரையாத்திரை வரலாற்றைக் கொண்டு யூகித்தறியலாம். மேலும் என்னிடத்தில் நீர் வைத்திருக்கும் அளவு அன்பு உம்மிடத்தில் எனக்கில்லையென்பது நிசமானாலும், உம்முடைய நல்வாழ்க்கையை விரும்புபவர்களுள் நானும் ஒருத்தியாவேன்; ஆனதினால், என் வேண்டு கோளை மறுக்காது நீர் அந்த உத்தம வாலிபருக்கே இல்லாளாக அமையவேண்டும்; அதுதான் எனக்கும் விருப்பம்" என்று பரிந்து கூறினாள்.

"நடப்பதைக் காண்போம்"

இப்படிச் சொல்லக்கேட்டு மன முருகியவளாகிய இரஞ்சிதம் அஞ்சுகத்தை அன்பு பெருக நோக்கி, "அக்கா, நீங்கள் என்னிடத்து வைத்துள்ள அன்பிற் பத்திலொன்றுதானும் நான் உங்களிடத்தில் வைத்தேனோ என்று சந்தேகப்படுகிறேன்; அப்படியிருக்க நீங்கள் என்மீது வைத்த அன்பு குறைவென்று சொன்ன வார்த்தை என்னுள்ளத்தை உபாதிக்கின்றது; அப்படி இனிமேற் சொல்லாதீர்கள்; நிற்க, என் அருமையான அக்கா, ஒருவருக்கு வாழ்க்கைத் துணையாகவிருக்க நிச்சயித்து அது பூரணமாய் நிறைவேறுவதற்கு முன் விதவையானேன்; இன்னொருவருக்கு இல்லா ளாகவொண்ணாதென்ற நியதிகொண்டுதான் பிறந்தவிடம் புகுந்தவிடத்தை விட்டுப் புறப்பட்டு அலைந்துதிரிந்தேன்; அலைந்து திரிந்தேனாயினும் தீர்த்த யாத்திரை தல யாத்திரை செய்யும் பேற்றைப் பெற்றேன்; அகத்திலில்லையெனினும், புறத்தே துறவி வேடம் பூண்டேன்; கதிரையாண்டவன் தரிசனமும் அவனுடைய அருள் வெள்ளப்பெருக்கில் ஒரு துளியுங் கிடைக்கும் பாக்கியத்தையும் பெற்றேன்; "என் செயலாவது யாதொன்றுமில்லை இனித் தெய்வமே, உன் செயலேயென் றுணரப்பெற்றேன்" என்று அந்த மகான் பட்டினத்தடிகள் பாடியருளினாரெனினும், அந்த நிலை என்போன்ற உலகப் பற்றுடையவருக்கு வரப்போவதில்லை; ஆனாலும் அவனருளையே நம்பியிருக்கிறேன்; அவன் திருவுளச் செயல் எப்படி யென்பதை நாம் அறியோம்; இன்னமும் ஒருவர்க்கு வாழ்க்கைத்துணையாக வேண்டுமென்ற பொல்லா வூழிருந்தால் நான் அதிற் புகத்தானே வேண்டும் அக்கா, ஆனதனால் நடப்பதைக் காண்போம்; நீங்கள் கவலைப்பட வேண்டாம்" என்று கண்களில் நீர் ததும்ப மனமுருகச் சொன்னாள்; அஞ்சுகம் அதற்கு யாதும் பதில் கூறிலள்; அவர்களிருவரும் பின்னரும் சிலநேரம் அளவளாய் வார்த்தையாடிய பின் உறங்கினர்.

"போய்வருகிறோம்"

அடுத்தநாளாதலும், முதனாட்போல் அஞ்சுகம் அவர்களுக்குச் செய்யவேண்டிய உபசாரங் களனைத்தையுஞ் செய்தாள்: அன்று பிற்பகலாக அவர்களைப் பயணமனுப்புதற்காகிய ஆயத்தங்களைச் செய்தாள்: தனக்குரிய இரதத்தைவிட, இன்னுமொரு இரதத்தைத் தன் வீட்டிற்கு வருவித்தாள்; அவள் விசுவநாதன் விசாலாட்சி இராமச்சந்திரன் இங்கிதம் என்னுமிவர்களை மகிழ்ச்சியுடன் பார்த்து என் அருமைத் தங்கையின் கூட்டுறவால் நான் இன்னும் இரு தங்கைமார்களையும் ஆண் சகோதரர்களாகிய இந்த இருவரையும் தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன்; இன்று தொடக்கம் உயிருள்ளபரியந்தம் உங்களை மறக்க என்னால் முடியாது; "நல்லாரைக் காண்பதுவும் நன்றே..." என்ற நீதி வாக்கியத்தைப் படித்த பயனை இன்று நான் அடைந்தேன்; உங்களுக்குள் எந்த விசேஷம் எக்காலத்தில் நடந்தாலும், நான் சீவனோடிருக்கும்வரை என்னையும் உங்கள் குடும்பத்தினருள் ஒருத்தியாகப் பாவித்து அன்புவைத்து நடத்துவீர்களெனக் காத்திருக்கிறேன்..." என்று அன்புகூரச் சொல்லி முடித்து அவர்களனைவரையும் இரண்டு இரதங்களிலும் ஏற்றித் தானும் அவைகளுள் ஒரு இரதத்தில் ஏறிக்கொண்டு வழிவிடும்படி புகைரதஸ்தானத்திற்கு உடன் சென்றாள். அங்கே புகைரதம் வரும்நேரம் சமீபித்தமையினால், விசுவநாதன் முதலியோர் தமக்கென விடப்பட்ட அறையிலுள்ள பொருள் பண்டங்களையும் எடுத்துக்கொண்டு இராமனையும் உடன்கூட்டிக்கொண்டு புகைரத ஸ்தானத்திலுள்ள மேடையில் நிற்க, புகைரதமும் அங்குவர, பயணப்பண்டங்களுடன் அவர்கள் புகைரதத்தில் ஏறினார்கள்; புகைவண்டி புறப்படுதலும், அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போய்வருகிறோம்" என்று சொல்ல, அஞ்சுகத்தம்மாள் "சுகமே போய் வாருங்கள்" என்று அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு தன் வீட்டிற்கு மீண்டாள்.

* * *

உலகம் பலவிதம்: 1946 செப்டெம்பர் 13
விசாலாட்சி: (முற்றொடர் - 116)

"அப்படித்தான் நானும் யோசிக்கிறேன்"

அன்றிரவு விடியற்புறமாதலும் விசுவநாதன் இராமச்சந்திரனைப் பார்த்து "உங்களுடைய ஊருக்கு இந்தப் புகைரதம் எந்த நேரம் போய்ச் சேரும்" என்று வினவ, "காலை ஒன்பது ஒன்பதரை மணிவரையிற் போய்ச்சேரும்" என்று பதில் சொன்னான் இராமச்சந்திரன்; இராமச்சந்திரன் இப்படிச் சொல்லக் கேட்ட மற்றையோரெல்லோருஞ் சந்தோஷமுற, இரஞ்சிதம் மாத்திரந் திகிலடைந்தாள்; அவள் முகத்திற் கவலை புலப்பட்டது; இருந்தபடி நீடித்த நேரஞ் சிந்தித்தாள்; அவள் நிலைமையை ஏனையோர் அவதானித்தார்கள்; விசாலாட்சி இரஞ்சிதத்தை அன்புடன் பார்த்து "ஏன் அம்மா, கவலைப்படுகிறீர்கள்? நீடித்த காலம் நீங்கள் பிரிந்திருந்த சொந்தவூரை, உற்றார் பெற்றாரை இப்பொழுது காண்பதென்றாற் பெரும் ஆனந்தமாகவல்லவோ இருக்கும்? அதற்கு மாறாக நீங்கள் ஏன் மனங் கலங்குகிறீர்கள்" என்று கேட்டாள். "வேறொன்று மில்லையம்மா, பிறந்த ஊருக்குச் சமீபத்திலே வரவர, என் மனமும் என்னையறியாமற் பயப்படுகின்றது; சரீரம் பதறுகிறது; ஆனதால் நேரே வீட்டிற்குப் போகாமல் எங்கேனும் தங்கி நின்று கொண்டு, எங்கள் வரவை என் பெற்றார் மாமனார்க்குத் தெரிவித்து, அவர்களை நாங்கள் தங்கிநிற்குமிடத்திற்கு வரச்செய்து, அதன்பின் அவர்களோடு நாங்கள் கூடிக்கொண்டு போனால் என் மனக்குழப்பம் இல்லாதொழியும்" என்று இரஞ்சிதம் பரிபவத்துடன் விசாலாட்சிக்குச் சொன்னாள்; விசாலாட்சி அதனை விசுவநாதனுக்குத் தெரிவிக்க, அவன் அதனை இராமச்சந்திரனுக்குத் தெரிவிக்க, இராமச்சந்திரன் "அப்படித்தான் நானும் யோசிக்கிறேன்" என்றான். அன்று காலை 8 மணிவரையாதலும், இராமச்சந்திரன் தங்கள் ஊருக்குரிய புகைரத தானத்திற்கு இப்பாலுள்ளதாகிய ஒரு புகைரத ஸ்தானத்தில் ஏனையோரை இறங்கச் செய்து தானும் இறங்கினான்; அவன் ஒரு மோட்டார் இரதத்தை அந்த ஸ்தானத்திற் கூலிக்குப் பிடித்து அவர்களையும் ஏற்றித் தானும் ஏறிக்கொண்டு சமீபத்திலுள்ளதாகிய ஒரு தலத்தை யடைந்து, அத்தலத்திலுள்ள மடமொன்றில் எல்லோருந் தங்கியிருத்தற்காகிய ஒழுங்குகளைச் செய்து தானும் அன்று பிற்பகல் வரையில் அந்த மடத்திலேயே தங்கி, ஸ்நாநம், சுவாமி தரிசனம், போசனம் முதலியன முடித்தபின், விசுவநாதன் முதலியோரை அம்மடத்திற்றானே இருக்கச் செய்து, தான் மாத்திரம் புறப்பட்டுப் புகைரத ஸ்தானத்தை அடைந்து, பிற்பகல் 5 மணி வரையில் வரும் புகைரதத்தில் ஏறிக்கொண்டு தன்னுடைய ஊரை இரவு 7 மணிவரையில் அடைந்தான்.

"நான் அதை அறியலாமோ?"

இராமச்சந்திரன் புகைரத ஸ்தானத்தை விட்டிறங்கி ஒரு மாட்டுவண்டியில் ஏறிக்கொண்டு முதல் தன் அபிமானப் பிதாவின் வீட்டினை யடைந்தான்; அப்பொழுது இரவு 8 மணி வரையிலிருக்கும்; அந்த நேரத்தில் அவன் வரவை எள்ளளவும் எதிர்பாராதிருந்த பிதா தம் பெறாமகனைக் கண்டமாத்திரத்தே திடுக்கிட்டார்; சந்தோஷமடைந்தார்; அவன் பக்கலிலும் பின்புறத்திலும் நின்ற நிலையிற் பார்த்தார்; "தம்பி, இராமச்சந்திரன் இப்பொழுதுதான் வருகின்றாயா? வேறு உன்னுடன் வந்தது யார்? உந்த ஆசனத்தில் இரு" என்று ஆவலுடன் வினாவிச் சொல்வதற்கிடையில், "ஐயா, இப்பொழுது இங்கே நான் மாத்திரம் தனியே வந்தேன்; வேறுபேரும் வந்து வேறு இடத்திலே தங்கியிருக்கிறார்கள்" என்றான் இராமச்சந்திரன்; "மருமகள் இரஞ்சிதம் க்ஷேமந்தானே" என்று இராமச்சந்திரன் முகத்தைப் பார்த்தபடி ஆவலோடு வினாவினார் அவனுடைய அபிமானப் பிதா; "க்ஷேமந்தான்" என்றான் இராமச்சந்திரன்; அவளுடைய மாமனார்மனங் குளிர்ந்தது; இதற்கிடையில் அவனுடைய அபிமானத்தந்தையார், அங்கே வந்த வண்டிக்காரனுக்காகிய கூலிப் பணத்தைக் கொடுத்து அவனை அனுப்பிவிட்டு, இராமச்சந்திரனைப் போசனம் பண்ணும்படி சொல்ல, அவன் "ஐயா, இப்பொழுது எனக்குப் பசி தாகமில்லை; சற்றுச் சென்றபின் செய்கிறேன்" என்றான்; "தம்பி, இப்பொழுது என் மருமகள் எங்கே என்பதை நான் அறியலாகுமோ" என்று ஆவலுடன் மெல்லக் கேட்டார்; "ஐயா, உங்கள் மருமகள் நெருங்கிய உறவினரைக் காட்டிலும் அதிக அன்பு பாராட்டும் நட்பினரோடு சில மைல் தூரத்தில் வந்திருக்கின்றாள்; மேலும், இரஞ்சிதம் இங்கிருந்து புறப்பட்டுப்போன காலத்திலிருந்த நற்குணம், நற்செய்கை, கௌரவமென்னு மிவைகளைக் காட்டிலும் கூடிய குணங்கள் செயல்களோடும் கூடிய மரியாதையோடும் ..... இங்கு வரக் கூசுகின்றதாயும் இரஞ்சிதத்தின் பெற்றாரும் ..... போய் இரஞ்சிதத்தையும் எல்லோரையும் அழைப்பித்தலை நலமையாகும்; இதனை ... நான் ..... கொரு மடத்தில் ..... ணம் வேண்டிய ஒழுங்குகளை செய்து தலத்தில் விட்டு முந்தி இங்கு வந் ..... சொல்லி முடித்தான் ..... உடனே அவர் ..... பெற்றார் வீட்டிற்குத் தங்கள் பிள்ளையையிட்டுத் ..... கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் ..... இந்தச் சந்தோஷ சமாசாரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆநந்தத்துடன் சொன்னார்; பல மாசங்கட்கு தங்களை விட்டு இன்ன இடத்தில் அறியாது பிரிந்துபோன பிள்ளை உயிருடன் இருக்கிறாளோ இல்லையோ எனச் சந்தேகப்பட்ட மகள் மீண்டு வந்தா, அதுவும் மானம் மரியாதையோடு வந்தா, என்பதைக் கேட்டவுடனே, பெற்றார் அடையுஞ் சந்தோஷம் இவ்வளவென்பதைப் பேசவும் வேண்டுமா? "ஈன்ற பொழுதிற் பெருதுவக்கும் தன்மகனைச் சான்றோனெனக்கேட்ட தாய்" என்ற வள்ளுவர் வாக்கில் "மகனை" என்பதை "மகளை" என மாற்றிவிட வேண்டியதுதானே.

"பிள்ளைக்கலி தீர்க்கப் பிறந்த குலவிளக்கே"

இரஞ்சிதத்தின் பெற்றாரும் மாமனாரும் இராமச்சந்திரனுடன் புறப்பட்டுப் புகைரத ஸ்தானத்தை யடைந்து புகைவண்டி மார்க்கமாகச் சென்று இறங்கவேண்டிய ஸ்தானத்தில் இறங்கி, ஒரு மோட்டார் ரத மூலமாகக் குறித்த திருமடத்தை யடைந்தனர். இராமச்சந்திரன் அவர்களை அம்மடத்திலிருக்கும் விசுவநாதன், விசாலாட்சி, இரஞ்சிதம், இங்கிதம், இராமனென்னு மிவர்களுடைய முன்னிலையிற் கொண்டுபோய் விடுதலும், இரஞ்சிதத்தின் பெற்றார் மாமனாராகியவர்கள் அங்கிருக்குமெல்லாரும் புதியார்கள்போற் காணப்பட்டமையினாலே நின்று திகைத்தனர். இதற்கிடையில் ஒரு பால்ய துறவிப்பெண் விரைந்து வந்து "என் அரிய அன்னை தந்தையரே! என் அருமையான மாமா! நான் செய்த குற்றங்களையெல்லாம் பொறுத்து என்னைப் பழையபடி ஏற்றுக்கொள்ளல் வேண்டும்" என்று பெற்றாரையும் மாமனாரையும் முறையே பஞ்சாங்கமாக வீழ்ந்து வணங்கினாள்; வணங்குதலும் அவர்கள் அவளை அணைத்தெடுத்து நிற்கச்செய்து, இந்தப் பெண் தங்கள் இரஞ்சிதமாகத்தான் இருக்கவேண்டுமென் றுயிர்த்தனர். உடனே, தாயானவள் கண்களில் நீர்ததும்ப மனமுஞ் சரீரமும் பதற அவள் தங்கள் மகளென்பதை நிச்சயித்துக்கொண்டு, அருகிற்சென்றணைத்து "எங்கள் பிள்ளைக்கலி தீர்க்கப் பிறந்த குலவிளக்கே! இந்தக் கோலத்தைப் பார்க்கவா நான் உன்னைப் பத்துமாசஞ் சுமந்து பெற்றுப் பாடுபட்டு வளர்த்தேன்; உன்னை மணப் பெண்ணாகக் கண்டு மகிழக் காத்திருந்த எனக்கு இந்தக் காவியுடையோடும் உருத்திராக்க மாலையோடுங் கூடிய துறவுக் கோலமா காணக்கிட்டியது" என்று சொல்லிக் கவலைப்படும்போது, இரஞ்சிதத்தின் மாமனார் "தங்காய் நீ விரும்பிய கோலமும் வாழ்க்கையும் என் மருமகளுக்கு வந்து சேரும்; உன் மகள் இந்தத் துறவுகோலத்தோடு இருந்தமையினாற்றான் மானம் மரியாதைக்குப் பங்கமில்லாது பெருமையோடு மீண்டுவந்து எங்களிடஞ் சேர்ந்தாளென்பதை நாம் மறக்கவொண்ணாது" என்று தேறுதல் கூறத் தங்கையுந் தேறினாள். பின்னர் இராமச்சந்திரன் தன்னுடன் அங்கு வந்திருப்பவர்களாகிய விசுவநாதன், விசாலாட்சி, இங்கிதம் முதலியோரின் வரலாற்றை இவர்களுக்குச் சொல்லி, இவர்களை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினான்; பின்னரும் அவனே இரு மோட்டார் ரதங்களை ஒழுங்கு செய்து அவர்களுந் தானுமாக ஏறிக்கொண்டு புகைரத ஸ்தானத்தை யடைந்தான்; புகைரதம் வருதலும் எல்லோரும் அதில் ஏறிக்கொண்டு போய்த் தாங்கள் இறங்கவேண்டிய ஸ்தானத்தில் இறங்கினர்; உடனே இரஞ்சிதத்தின் மாமனார் அங்கே இரு இரதங்களை ஒழுங்கு செய்து அவற்றில் அவர்களையேற்றித் தாமும் ஒன்றில் ஏறி அவர்களனைவரையும் அழைத்துக் கொண்டு போய்த் தம் வீட்டிற் சேர்த்தனர்.

* * *

[இடையில் ஒரு தொடர், செப்டெம்பர் 20, கிடைக்கவில்லை]

உலகம் பலவிதம்: 1946 செப்டெம்பர் 27
விசாலாட்சி: (முற்றொடர் - 117)

"நாளைக்குத் தெரிவிப்போம்"

இராமச்சந்திரன் மீண்டுவந்து இங்கிதத்தின் பொருட்டுத் தான் சென்று தலைமையாசிரியருடன் பேசிய விஷயம் சித்தியாகும்போலும் என்று சொல்லியபோது, அவனுடைய அபிமானப் பிதா இரஞ்சிதம் விசுவநாதன் விசாலாட்சி இங்கிதம் ஆகிய எல்லாருஞ் சந்தோஷமடைந்தார்கள்; குறித்த தினம் வருதலும், இங்கிதம், இங்கிதத்துக்குப் பெண் துணையாக விசாலாட்சி, அந்த இருவருக்கும் ஆண்துணையாக இராமச்சந்திரன் என்னும் மூவரும் புறப்பட்டு ஒரு இரதத்தில் ஏறிக்கொண்டு மேற்படி கலாசாலைக்குச் சென்றார்கள். அங்கே தலைமையாசிரியர் அவர்களனைவரையும் உபசரித்து இருக்கச்செய்தார். சங்கீதம் பரதநாட்டியமென்னுங் கலைகளில் வல்ல நிபுணைகள் சிலர் அங்கே பரீட்சைக்காக வந்திருந்தார்கள். இங்கிதத்துடன் இன்னும் ஐந்து பெண்கள் குறித்த உத்தியோகத்தின் பொருட்டு விண்ணப்பஞ் செய்தவர்கள் அங்கு வந்திருந்தார்கள்; பரீட்சைக்குக் குறிக்கப்பட்ட நேரம் வருதலும் வித்தியாசாலையிலேயுள்ள ஒரு மண்டபத்திற் பரீட்சகர்களும் பரீட்சிக்கப் படுதற்குரியவர்களும் வந்து கூடினர்; தலைமையாசிரியர் இராமச்சந்திரனையும் விசாலாட்சியையும் அந்த மண்டபத்திற்கு அழைத்துக் கொண்டு போய் நிகழ்ச்சியைப் பார்க்கும்படி இருக்கச்செய்து தாமும் அயலில் இருந்தார்; பரீட்சை நேர்முகப் பரீட்சையாகவே நடந்தது; பரீட்சகர்கள் அங்கே வந்திருந்த பரீட்சார்த்திகளைச் சங்கீதத்திலும் பின் பரத நாட்டியத்திலும் ஒவ்வொருவராகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சித்து, ஈற்றில் இங்கிதத்தின் கலைத்திறமையைப் பரீட்சிக்கலாயினர்; இசையும் நாட்டியமுமல்லாமல் இங்கிதத்தின் விநயமான ஊடாட்டமும் இதமான வார்த்தையும் அந்தப் பரீட்சகர்களின் உள்ளத்தைக் கவர்ந்தன; அங்கு அந்த நேரஞ் சமூகமாயிருந்த மற்றைய பரீட்சார்த்திகளும் அவளையும் அவள் கலைத் திறமையையும் பாராட்டினர். பரீட்சைத் தேர்தலையிட்டு "நாளைக்குத் தெரிவிப்போம்" என்று தலைமையாசிரியர், பரீட்சார்த்திகள் அனைவருக்குஞ் சொன்னார்; அவர்கள் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு போயினர்; இராமச்சந்திரன் இங்கிதம் முதலிய இவர்களை அந்தத் தலைமையாசிரியர் உபசரித்து, அவர்களுக்கும் விடை கொடுக்க, அவர்கள் இரதத்தில் ஏறிக்கொண்டு மீண்டு வீடு வந்து சேர்ந்தார்கள்.

இங்கிதம் ஆசிரியையானமை

வீட்டிற்கு மீண்டவுடன், இராமச்சந்திரனை அவனுடைய அபிமானப்பிதா "என்ன மகனே, நீங்கள் போனகருமம் அநுகூலமாகுமோ" என்று வினாவிய போது "அநுகூலமாகும்போற் புலப்படுகிறது, ஐயா" என்றான் இராமச்சந்திரன்; இரஞ்சிதம் இந்த விஷயமாக வினாவியபோது விசாலாட்சியும் அப்படியே சொன்னாள்; கேட்ட அவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள்; அடுத்தநாட் காலை 9 மணியளவில், குறித்த வித்தியாசாலையிலுள்ள சேவகன் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து. இரஞ்சிதத்தின் மாமனாரிடங் கொடுத்தான்: அதில் அவர் மேற்பார்த்து குமாரி இங்கிதத்துக்குக் கொடுக்க வேண்டியதென்ற கருத்துப்பட வரையப்பட்டிருந்தது; உடனே அவர் இங்கிதத்திடம் அக் கடிதத்தை மகிழ்ச்சியோடு கொடுத்து "மகளே, இது உம்முடைய உத்தியோக நியமனக் கடிதம்போலும், திறந்து படித்துப் பார்த்துச் சொல்லும்" என்றார்; அதில் இங்கிதமே கலைகளிற் சிறந்தவளாகத் தேர்தல் பெற்றாளெனவும், அற்றைத்தினமே சுபதினமாயிருத்தலால் உடனே கடமையேற்பதற்குப் புறப்பட்டு வரவேண்டுமெனவும் கருத்துப்பட எழுதியிருப்பதைப் பார்த்தாள்: உடனே அக்கடிதத்தை விநயத்தோடு இரஞ்சிதத்தின் மாமனாரிடங் கொடுக்க, அவர் அதனைப் படித்து மற்றையவர்களுக்குஞ் சொல்லி, இராமச்சந்திரனைத் தம் வீட்டிற்கு வரும்படி ஆள் அனுப்பினார்; இராமச்சந்திரன் உடனே அங்கே வந்து செய்தியையறிந்து மகிழ்ச்சியடைந்தான்; முதனாட் போய்வந்த அந்த இரதத்தையே வரச்செய்து, இங்கிதத்தையும் அவள் வீட்டிலுள்ள ஒரு பணிப் பெண்ணையும் இரதத்தில் ஏறச்செய்து, தானும் ஏறிக்கொண்டு கலாசாலையையடைந்தான்; தலைமையாசிரியர் அவர்களை வரவேற்று, இங்கிதத்தை அவள் கலை பயிற்ற வேண்டிய வகுப்பிற் போயிருந்து சற்று நேரம் படிப்பிக்கச் செய்து, அதன்பின் அங்குள்ள ஏனைய ஆசிரியர்கட்கு இங்கிதத்தையும், இங்கிதத்திற்கு ஏனைய ஆசிரியர்களையும் அறிமுகப்படுத்தி வைத்தார். தலைமையாசிரியருடைய அநுமதியோடு இங்கிதம் அன்று தன் நாட் படிப்பித்தலை முடித்துக் கொண்டு, இரதத்தில் வீட்டிற்கு மீண்டாள்; அடுத்த நாள் தொடக்கம், அந்தப் பள்ளிக்கூடத்திற் கல்வி பயிற்றும் ஒரு ஆசிரியையும் சில சிறுமியரும் போய் வரும் இரதத்திலேயே, இங்கிதமும் கலாசாலைக்குப் போய்வருதற்காகிய ஒழுங்கு செய்யப்பட்டது; அன்று முதலாக இங்கிதம் தன் கடமையைக் கிரமமாகத் திறமையோடு செய்து வருவாளாயினாள். அவளிடத்திற் கலைபயிலும் மாணவர்களும் ஏனைய மாணாக்கர்களும், அங்குள்ள ஆசிரியர்களுமாகிய எல்லாரும் அவள்மேல் அன்பு பாராட்டி வருவாராயினர்; இங்கிதமும் அவர்களுடன் அப்படியே அன்பாக ஊடாடுவாளாயினாள்; இங்ஙனமாகச் சிலநாள் கழிந்தன.

சூரியநாராயண சாஸ்திரியார்

அந்தக் கலாசாலையின் தலைமையாசிரியராக அமர்ந்த சூரியநாராயண சாஸ்திரியார் இருபத்தைந்திற்கும் முப்பதிற்கும் இடைப்பட்ட வயசினர்; அவர் பிரமகுலத்தினரென்பது முந்தியே சொல்லப்பட்டது: சர்வகலாசாலைப் பரீட்சையில் எம். ஏ. வகுப்பில், கணிதப்பகுதியில் விசேஷ திறமையோடு சித்தியடைந்தவர், புருஷ லட்சணம் வாய்ந்தவர்; அவரிடத்துள்ள கல்வியழகை அவர் முகமே காட்டுமெனலாம்; சாந்தமான குணம், இதமான வார்த்தை, இனிய பேச்சு, விநயமான ஊடாட்டம், தெய்வ நம்பிக்கை, ஆலய வழிபாடு, நேர்மை முதலாங் குணங்களுஞ் செயல்களும் சூரியநாராயண சாஸ்திரியாரிடத்தில் இயல்பாகவே யமைந்துள்ளனவெனச் சொல்லுதல் மிகையாகாது; தமிழ் சமஸ்கிருதம் ஆங்கில மென்னும் மூன்று மொழிகளைப் பயின்றுள்ளாரெனினும், இக்காலத்துப் படித்தவரென்றிருப்பவர்களுடைய மூளையுட் புகுந்து குடியிருக்கும் நவநாகரிகமும், விபரீத கொள்கையும் சூரிய நாராயண சாஸ்திரியாரிடத்தில் எள்ளளவேனும் புகுந்தில வெனலாம்; அவர் தம்குலம் கோத்திரத்திற்குரிய வைதிகக் கொள்கையும் ஒழுக்கமுமுடையவர். சங்கீதமும் முறையாகக் கற்றவர்; பிரமகுலத்திற் பிறந்தும், வயசு இருபத்தைந்திற்கு மேற்பட்டும், ஒரு கலாசாலையின் தலைமையாசிரியராக உத்தியோகத்திலிருந்தும், தன் பெற்றாருக்கு ஒரேயொரு மகனாகப்பிறந்தும், எவ்வகையான குறைவற்றவராயிருந்தும், சாஸ்திரியார் இல்லறத்திற் புகுதலின்றி நைஷ்டிகப் பிரமச்சாரியாகவே ஒழுகி வருவாராயினார்.

உலைப்படு மெழுகதென்ன உருக்கின

இங்கிதத்தின் கலைத்திறனை அன்று அந்தப் பரீட்சகர்கள் பரீட்சித்தபோது, இத் தலைமையாசிரியரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனிருந்தாரல்லவா; இங்கிதத்தின் பேரழகும் விநயமும் இனிய இசையும், அச்சமயத்தில் அவள் செய்த பரதநாட்டியமும், அதனிடத்தமைந்த அபிநயமும், அப்போது அவளின் காதளவோடிமீளுங் கண்களின் நோக்கும், அவளது செவ்விய அதரங்களுக்கிடையே தோன்றி மறையும் புன்முறுவலும், இன்ன பிற நலன்களும் ஒருங்குசேர்ந்து, பிரமச்சாரியாகிய சூரியநாராயண சாஸ்திரியினுடைய உள்ளத்தைப் பரீட்சிக்கத் தலைப்பட்டன் சாஸ்திரியின் உள்ளம் அப்பரீட்சைகளை எதிர்த்து நிர்வகித்து நிற்றலாற்றாது உடைந்து பின்னிடந்துபோயதெனலாம்; சாஸ்திரியார் கல்வியறிவிற் சிறந்தவராதலாலும், மனத்திண்மை யுடையவராதலாலும், இங்கிதம் காரணமாகத் தம் உள்ளம் பங்கப்பட்டதைப் புறத்தேகாட் டாது, காதல் கொள்ளாதவர்போல் ஊடாடுவாராயினர்; என்றாலும் தினமும் இங்கிதத்தை அவர் காணவும், அவள் செயல்களை அவர் அவதானிக்கவும் நேர்ந்தமையினால், சாஸ்திரியாருடைய மனக் கட்டுப்பாடும் அவரை அறியாமலே மெல்லமெல்ல நெகிழ்ச்சியுறலாயிற்று. இங்கிதம் தனக்குரிய வகுப்பிலிருக்கும் பிள்ளைகளுக்குக் கலைபயிற்றிக்கொண்டிருக்கும்போது, இடையிடையே தலைமையாசிரியர் அங்கே செல்வதுண்டு; அந்த நேரங்களிலெல்லாம் இங்கிதம் இருக்கை விட்டெழுந்து விநயமாக ஒதுங்கி நின்று இதமாகப் பேசுவாள்; இச்செயல்களெல்லாம் சாஸ்திரியாருடைய உள்ளத்தை உலைப்படு மெழுகதென்ன உருக்கின. ஆனாலும் இங்கிதத்தின் பூரண வரலாற்றையும் உள்ளபடியறிய வேண்டுமென்ற சிந்தனை தலைமையாசிரியருடைய உள்ளத்திற் கிடந்தது.

எப்படி மறக்கமுடியும்?

சாஸ்திரியார் இங்கிதத்தைக் காண வேண்டும் அவளுடன் பேசவேண்டுமென்று எவ்வளவு விருப்பங் கொண்டாரோ, இங்கிதமும் தலைமையாசிரியர் தன் வகுப்பிற்கு வருதல் வேண்டும். தன்னுடன் வார்த்தையாடல் வேண்டுமென்று அவ்வளவு விருப்பமுற்றாள்; எறும்பூரக் கல்லுந் தேயுமல்லவா? இங்கிதத்தின் உள்ளத்தில் அவளையறியாமலே, தலைமையாசிரியர் மீது பற்றுண்டாகி நாளடைவில் அது காதலாக மாறியது: தலைமையாசிரியர் தன்னிடத்தில் வைத்துள்ள பற்று எப்படிப்பட்டதென்று இங்கிதம் படுக்கையிற் கிடந்துகொண்டு சிந்திப்பாள்; நல்ல நிலையிலுள்ள அவர் தம்மை மணஞ்செய்ய எண்ணுவாரோ, உடன்படுவாரோ, ஒருவாறு உடன்பட்டாலும் யார் அதைக்கூட்டிவைப்பவர் என்றெல்லாம் எண்ணியெண்ணி மனங்கவல்வாள்; "முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டாற் கிட்டுமா?" என்று நினைத்து மனம் உடைவாள்; "கிட்டாதாயின் வெட்டென மற" என்றபடி நாம் இந்தச் சிந்தனையை உள்ளத்திலிருந்து அறவே ஒழித்துவிடல் வேண்டும்; இல்லையேல் என் மனதிலுள்ள சமாதானம் பங்கப்படும்; மனக் கவலையிருந்தால் என் கடமையை நான் பூரணமாக ஆற்றுதல் முடியாது" என்று சிந்தித்து அவள் அந்த எண்ணத்தை அறவே மறந்துவிட வேண்டுமென்று நிச்சயிப்பாள்; எப்படி மறக்கமுடியும்? எவ்வாறு நிச்சயிக்கமுடியும்? அவள் நிச்சயித்த அடுத்த நிமிஷம் பழையபடி அந்த எண்ணம் அவளுடைய உள்ளத்தில் வந்தேசேரும்.

"பாதுகாப்பாளரா யுள்ளவர் அந்தப் பரம்பொருள்தான்"

இங்ஙனமாக ஒருதினம் வித்தியாசாலை விட்டுப் பிள்ளைகளும் ஆசிரியர்களும் வீட்டிற்குப் போகப் புறப்படும் நேரத்தில், இங்கிதம் அடுத்தநாள் தான் பள்ளிக்கூடத்திற்கு வருதல் இசையாதென விடுதலை பெறும்பொருட்டு எழுதியகடிதத்தை, தமது உத்தியோக ஸ்தானத்தில் தனிமையாயிருந்த தலைமையாசிரியரிடம் விநயமாகக் கொடுத்தாள்; அவர் அதனை ஏற்று வாசிக்கும் போது, இங்கிதம் நிற்றலைப் பார்த்து, "ஏன் நிற்பான்; உந்த நாற்காலியில் இருக்கலாமே" என்று சொல்லுதலும், தன்னை இருக்கச் சொன்னதன்பொருட்டு ஆசிரியர்க்கு நன்றி கூறிவிட்டு இருத்தலின்றி நின்றாள்; "மற்றை ஆசிரியர்கள் எவரும் இங்கு வரும்போது இருக்கச் சொன்னால் இருப்பார்களே, நீர் இருக்கக் கூசுகின்றீரே" என்று இதமாகச் சொல்ல, "இல்லை, ஐயா, பெரியார் இருக்குமிடத்தில் ஒதுங்கி நிற்பதன்றி அவர்கட்கெதிரில் இருக்கும் வழக்கம் எங்கள் குடும்பத்திலில்லை குறையெண்ணாதீர்கள்" என்று தலைமையாசிரியருடைய உள்ளம் கனியும் வண்ணம் கனிவுடன் பன்னினாள் இங்கிதம். "உங்கள் குடும்பத்தினரின் பழக்க வழக்கங்கள் அப்படிப்பட்டனவா மிக நன்று" என்று தலைமையாசிரியர் சொல்லி, பின்னரும் அவளை அன்பு பெருக நோக்கி, "உம்முடைய விஷயமாக நான் ஏதும் பேசவேண்டியிருந்தால், யாருடன் பேசவேண்டும்" என்று கூசிக் கூசிக் கேட்டார்; "என்னுடைய விஷயமாக ஏதும் சொல்லவேண்டியிருந்தால், என்னிடந்தானே ஐயா சொல்ல வேண்டும்" என்று புன்முறுவலரும்பப் புகன்றாள் இங்கிதம்; தலைமையாசிரியர் தாம் தவறான வழியிற் கேள்வி கேட்டு விட்டோமென் பதை உடனே யுணர்ந்து, அதற்கு உத்தரஞ் சொல்லாது, "உமக்குப் பாதுகாப்பாயுள்ளவர் யார்" என்று இதமாக வினாவினார்; "எமக்குப் பாதுகாப்பாளராயுள்ளவர் அந்தப் பரம்பொருளொருவர் தாம் ஐயா" என்று மேலே பார்த்தபடி, கைகூப்பி கண்களில் நீர் ததும்பக் கவலையுடன் சொன்னாள்; தலைமையாசிரியர் மனந்திடுக்குற்றார்; அவர் உடனே அதே கடிதத்தில் உமக்கு நாளைக்கு விடுதலை யுதவப்பட்டது என்று எழுதிக்கொடுத்துப் "போய்வாரும்" என விடையுங் கொடுத்தார்: "ஐயா, என் விஷயமாக ஏதும் பேச நீங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பினால், என் அண்ணா இராமச்சந்திரரிடம் பேசலாம்" எனலும், "திரு இராமச்சந்திரன் உமது சொந்தத் தமையனா" என்று ஆசிரியர் அற்புதத்துடன் கேட்க, "இல்லை, ஐயா, அவர் எனது அபிமானத் தமையனாக விருந்தாலும், நான் என் சொந்தத் தமையனாகவே அவரைப் பாவித்து நடக்கிறேன்; அவரும் என்னைத் தன் உடற்பிறப்பாகவே மதித்து ஊடாடி வருகிறார்; மற்றவர்கள் என் வரவை எதிர்பார்த்த வண்ணம் இரதத்திலிருக்கிறார்கள்; நான் போய் வருகிறேன்" எனலும், "ஆம் போய் வாரும்" என்று தலைமையாசிரியர் விடை கொடுத்தார்; இங்கிதம் போய் இரதத்தில் ஏறித் தன் வீடு சேர்ந்தாள்.

* * *

உலகம் பலவிதம்: 1946 ஒக்டோபர் 11 விசாலாட்சி: (முற்றொடர் - 118)

என்னால் ஆகவேண்டியது என்னவோ?

அடுத்தநாள், இங்கிதம் வித்தியாசாலைக்கு வராதொழிந்தமை தலைமையாசிரியருக்குக் கவலையை ஆக்கிவிட்டது; எக்காரணத்தினால் இங்கிதம் விடுமுறை பெற்றுச் சென்றாளென்பதை அறிதற்குத் தலைமையாசிரியர், அவள் விடுமுறை கேட்ட நேரத்திலேயே ஆவல் கொண்டிருந்தார்: ஆனால் வராமைக்குக்காரணங் கேட்பது அழகல்லவென எண்ணி அவர் அச்சமயத்திற் காரணங் கேளாதொழிந்தார்; ஏனைய ஆசிரியர்கள் மாணாக்கர்களெல்லோரும் சமூகஞ் செய்தனரெனினும், இங்கிதம் அன்று அங்கு இல்லாமையால் தலைமையாசிரியர் மனச்சோர்வடைந்தார்; ஆயினும் தமது சோர்வை மற்றையோர் யூகித்தறியா வண்ணம் அகத்தேயடக்கிக்காண்டு தம் கடமையை அற்றைத் தினத்திற் செய்தார்: பள்ளிக்கூடக் கருமம் முடிந்து தலைமையாசிரியர் தம் வீட்டிற்கு மீண்டு சென்றபின், இங்கிதம் இருக்கும் வீட்டிற்குத் தாம் ஒருமுறை போய்வர வேண்டுமென விருப்பங் கொண்டார்; போனால் அவ்வீட்டிலுள்ளவர்கள் ஒருபோது தம்மைப்பற்றி விபரீதமாக நினைத்தலுங் கூடுமென்று யோசித்தார்; தமது சகபாடியாகிய இராமச்சந்திரனுடைய வீட்டிற்கேனும் போவோமென்று நினைத்து, அவர் தாம் மாலைக்காலத்திற் செய்யவேண்டிய வந்தனை வழிபாடு முதலிய கருமங்களை முடித்துக் கொண்டு, இரவு 7 மணி வரையில் இராமச்சந்திரன் வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றார்; அந்த நேரத்தில் தன் வீட்டிலேயிருந்த இராமச்சந்திரன் தலைமையாசிரியர் வரக்கண்ட மாத்திரத்தே மகிழ்ச்சியடைந்தானாய், இருக்கை விட் டெழுந்து உபசரித்து ஆசனமுதவி அவரை அமரச் செய்து இன்சொற்கூறித் தொன்மை பாராட்டி வார்த்தையாடியபின் "என்னாலாகவேண்டியது என்னவோ" என்று இதமாக வினாவினான்.

"ஆருமற்றவள் தாரம் ஊரிலொருவன் தோழன்"

சூரியநாராயண சாஸ்திரியார் அங்ஙனம் வினவிய இராமச்சந்திரனை அன்புடன் பார்த்து "நண்பரே, எந்தக் கருமத்தையும் உண்மையான மித்திரனுடன் யோசித்துச் செய்தால் நன்மையே வந்து சேரும்; என்னுடைய உற்ற நண்பர்களுள் நீருமொருவர் என்ற காரணத்தினால் என் வாழ்க்கைக்கேற்ற கருமமொன்றையிட்டு உம்முடன் கலந்து யோசிக்கும்படி இங்கு வந்தேன்; அதனைஉமக்குச் சொல்லலாந்தானே" எனலும், "ஐயா, நூறுமுறையுஞ் சொல்லலாம்; எனக்குச் சொல்லாமல் வேறு யாருக்குச் சொல்வது" என்று மகிழ்ச்சியோடும் ஆவலோடும் பதில் சொன்னான்; "நண்பரே, வேறொன்றுமல்ல, எங்கள் கோத்திரம் சூத்திரம் குடியெல்லாம் உம்முடன் படிக்குங் காலத்திலேயே சொல்லியிருக்கிறேன்; விவாக விஷயத்தில் என் பெற்றார், எங்கள் கோத்திரத்தோடு ஒத்த கோத்திரத்தினளாய், கல்வியறிவொழுக்கம் பூண்டவளாய், ஒருகன்னிகையைநானேவிசாரித்துமணஞ் செய்துகொண்டால் தங்களுக்கும் அது சம்மதமாகுமென முந்தியே எனக்குச் சொல்லியிருக்கிறார்கள்; அவர்கள் அப்படிச்சொன்னமை, நான் தங்களுக்கு ஏகபுத்திர னென்ற அருமை மேலீட்டினாலும், என்னிடத்தில் ஏதோ கொஞ்சம் கல்வியறிவிருப்பதனால் நான் தவறான வழியில் இறங்கமாட்டேனென்ற நம்பிக் கையினாலும் போலுமென்று நினைக்கிறேன்; அவர்கள் அளித்த இந்தச் சுவாதீனத்தை நான் துர்விநியோகஞ் செய்யவொண்ணாது: மேலும் தாயார் விருத்தாப்பியதசை காரணமாகத் தளர்ச்சியடைந்து வருகிறார்; பெண் சகோதரமும் எனக்கில்லை; தாயாரை இன்னமும் சிரமப்படவிடுவது சரியல்ல; அன்றியும் பெண்பிள்ளைகளும் பெண் உபாத்தியாயர்களும் முறையே படித்தும் படிப்பித்தும் வரும் கலாசாலையில் நான் பிரமச்சாரியாகவே தலைமைவகித்து வருவதும் முறையல்ல; நாம் தூயமுறையில் அவர்களோடு ஊடாடினாலும் பொல்லாத உலகம் இல்லாத சொல்லும்; இவைகளையெல்லாம் பலநாட்களாகச் சிந்தித்தபின் இப்பொழுது உம்மிடம் வந்தேன்..." என்று சொல்லி முடித்தார். இவைகளை யெல்லாம் அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த இராமச்சந்திரன் "நீர் சொல்வன அத்தனையும் நிசம்" என்று கூறிப் பின்னரும் அவரைப் பார்த்து "மனமொத்த மித்திரனோடு எந்தக்கருமத்தையும் கூசாமற் சொல்லலாம்; நீர் மணஞ் செய்ய விரும்பும் கன்னிகை எப்படிப் பட்டவளாயிருத்தல் வேண்டு மென்பதை எனக்குச் சொன்னால், நான் என்னால் இயன்றவரை ஆராய்ந்து அந்தவழியில் முயற்சி செய்வேன்" என்றான்; "நண்பரே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் விருப்பமும் நோக்கமும் ஒரு அளவிற்கு உமக்கு விளங்குமானாலும், நான் சொல்லவேண்டியவைகளைச் சொல்லி விடுகிறேன்; பெண் கல்வியறிவொழுக்கமுடைய வளாய், ஒத்த மரபினளாய், நவநாகரிகப் பற்றில் லாதவளாய், வீட்டுப்பணி முதலியவற்றைத் தானே செய்யக்கூடியவளாய், கொண்டான் குறிப்பறிந் தொழுகும் பண்பு பூண்டவளாய், அதிகம் வார்த் தையாடுமியல்பு அற்றவளாய், தனக்காகிய உடை முதலியவற்றைத் தானே ஆக்கிக் கொள்ளப் பயின்றவளாய், இதமான ஊடாட்ட முடையவளாய், இவற்றோடு இக்கால இயல்பிற்கேற்ப ஆங்கில மொழிப் பாஷைப் பயிற்சி சங்கீத மென்னுமிவைகளு முணர்ந்தவளாய் வாய்ப்பாளேயானால் அப்படியான கன்னிகையை நான் பெரிதும் விரும்புவேன்" என்றார். இப்படிச் சொன்ன தலைமையாசிரியரை இராமச்சந்திரன் புன்னகையரும்ப நோக்கி "ஐயா, சாஸ்திரியாரே, எப்படிப்பட்ட கன்னிகை வேண்டுமென நீர் சொல்லும் இந்த இலக்கணம், முற்காலத்திலே மார்க்கண்டேயருடைய மூதாதையாகிய மிருகண் டுயர் தமது தகப்பனாராகிய குச்சகருக்குச் சொன்ன கன்னிகையின் இலட்சணத்தை யொத்திருக்கின்றது; கலியுகம் முற்றிவரும் இந்தக் காலத்திலே இப்படி யெல்லா இலக்கணங்களும் வாய்ந்த பெண்ணைத் தான் கல்யாணஞ் செய்யவேண்டுமென்ற நியதி கொண்டிருந்தால், சொல்லுகிறேனென்று குறையெண்ண வொண்ணாது, நித்திய பிரமச்சாரியாகத்தான் காலம் போக்கவேண்டி நேரும்; ஒரு பெண்ணிடத்தில் சில குணங்கள் அமைந்திருந்தால், வேறுசில குற்றங் களும் உடனிருக்கும்; குலங் கோத்திரம் கல்வியறிவு ஒழுக்கம் என்னுமிவைகள் அமைந்திருந்தால், அழகு முதலியன அமையா தொழிதலுங்கூடும்; அவைகள் தாம் ஒருபோது அமைந்திருந்தாலும், பணம்பண்டம் முதலியன அமைதலின்றித் தரித்திரம் குடிகொண்டிருக்கும், இப்படிப்பலவகையான நிலைமைகளுண்டே யென்பதையிட்டு யோசிக்கிறேன்" என்னலும், தலைமையாசிரியர் "அன்பரே, பணம் பண்டம் செல்வம் செல்வாக்கு என்னுமிவைகள் பெண்ணிடத்தில் ஆவசியகமிருக்க வேண்டுமென்பது எனது கொள்கையல்ல, ஆருமற்றவள் தாரம் ஊரில் ஒருவன் தோழன், என்பதுதான் எனது கொள்கை" என்றார். "அப்படியானால், அது மிகவும் நல்ல கொள்கைதான்; ஆனால் ஐயா, சாஸ்திரியாரே, மணம் பேசும் பொறுப்பு எப்பொழுதும் அனுபவம் வாய்ந்த பெரியோருடையதாகு மென்பதுதான் எங்கள் நாட்டுக்கொள்கை; இதுநீர் அறியாததல்ல; நானும் உம்மைப்போலவே ஒருபிரமச்சாரி, இந்த விஷயத்தில் நான் செய்வேனென்று உமக்குத் திடஞ்சொல்ல என்னால் முடியாது; இயன்ற வரையில் ஆராய்கிறேன்" என்று இராமச்சந்திரன் கூற, தலைமையாசிரியர் "அதையிட்டுக் காரியமில்லை; தக்க கன்னிகை இன்ன இடத்தில் உண்டென்பதை மாத்திரம் நீர் நன்கு ஆராய்ந்து அறிந்துவந்து எனக்குத் தெரிவித்தால், பின் நாங்கள் மூத்தோரையனுப்பி மணம்பேசுவித்து ஒழுங்கு செய்யலாமல்லவா" எனலும் "அது நியாயந்தான்" என்று இராமச்சந்திரன் சொல்லிப் பின்னரும் ஆசிரியரைப் பார்த்து "நீர் சொன்ன இலட்சணங்களைக் காட்டிலும் மேலதிகமான இலக்கணம் ஏதும் அமைந்திருந்தால், அப்படியான கன்னிகையை வேண்டாமென்று கைவிடு வதா" என வேடிக்கையாகக் கேட்டான்; "நண்பரே, நீர் பிரமச்சாரியாகவிருந்தாலும், அனுபவப்பட்ட முதியார் செய்யுங் கருமங்களையும் திறமையோடு செய்வீரென்பதை யறிந்துதான் இங்கே வந்தேன்" என்று சாஸ்திரியாரும் சிரித்தபடி சொன்னார்.

"நல்ல சம்பந்தமாகும்"

"ஐயா, ஏதோ என்னால் இயன்றதைச் செய்கிறேன்; உங்கள் விஷயத்தில் நான் அலட்சியமாக விருக்கமாட்டேன்" என்று சொல்லிவிட்டுப் பின்னரும் இராமச்சந்திரன் தலைமையாசிரியரை நோக்கி "இன்று இங்கிதம் பள்ளிக் கூடத்திற்கு வரவில்லை போலும்" எனலும், "வரவில்லை, காரணமென்ன வென்பதை அறியேன்" என்றார் தலைமையாசிரியர்; "வேறொன்றுமில்லை; இங்கிதத்தின் வீட்டிலே இன்று பிரதானமான ஒரு சிராத்தம், அதனாற்றான் வரவில்லையென நினை க்கிறேன்" என்றான் இராமச்சந்திரன்; பின்னருஞ் சற்று நேரம் இருந்து பேசிவிட்டு இராமச்சந்திரனிடம் விடைபெற்றுக் கொண்டு சாஸ்திரியார் தம் வீட்டிற்கு மீண்டார்; அவர் போனபிறகு, இராமச்சந்திரன் அவர் சொன்ன விஷயமாக ஆலோசிப்பானாயினான்; "சாஸ்திரியாருடைய கொள்கைகளுக்கு ஏற்ற கன்னிகை எங்கள் இங்கிதமென எண்ணலாம்; அவள் கல்வியறிவொழுக்கம், அழகு என்னுமிவைகளோடு கூடியவள்: இதமான நடையுடையவள்; கன்னிகை சங்கீதமுமறிந்திருக்கவேண்டுமென விரும்பினார்; எங்கள் இங்கிதம் சங்கீதம் மாத்திரமல்லாமற் பரதநாட்டியமும் பயின்றிருக்கின்றாள்; போதிய பொருள் அவளிடத்தில் இல்லையேயெனில், ஆருமற்றவள் தாரம் ஊரிலொருவன் தோழன் என்று அவரே எனக்குச் சொல்லியிருக்கிறார்; மேலும் இங்கிதத்தைத் தனக்கு இல்லக்கிழத்தியாக்கும் நோக்கம் சாஸ்திரியாரிடத்திலும் உண்டுபோலும்; இல்லையேல், முன்னொரு போதும் இங்கு வராதவர் இப்பொழுது தம்முடைய விவாகப் பேச்சு விஷயமாக இங்கே வந்தமை அவர் இங்கிதத்தை யுத்தேசித்தே யென்று யூகிக்கக் கிடக்கின்றது; இருவருக்கும் கல்யாணம் நிறைவேறுமேயானால் பொன்மலர் நாற்றமுடைத்தென்றவாறாகும்: இந்த விஷயத்தை நான் என்னளவில் வைத்துக் கொண்டிருப்பதனால் நன்மையில்லை; இந்த விஷயமாக என் அபிமானத் தந்தையாருடன் நான் முதற் கலந்து பேசிக்கொண்டே பின் மற்றையோருக்கு வெளியிடல் வேண்டும்" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப் பலவாறு யோசித்துக்கொண்டு இராமச்சந்திரன் உடனே புறப்பட்டுத் தன் அபிமானப் பிதா வீட்டிற்குச் சென்றான்; அங்கே சென்று, தலைவாசற்புறத்தே தனியேயிருந்த தன் பிதாவுடன் இராமச்சந்திரன் இந்த விஷயமாகப் பேசினான்; விஷயமெல்லாவற்றையும் ஆதியோடந்தமாகக் கேட்டறிந்த பிதா, அப்படியானால் "நல்ல சம்பந்தமாகும்" என்று சொல்லி மகிழ்ந்தார்; ஐயா, நீங்கள் சொல்வது முழுவதும் நிசம்; ஆனாலும் நாங்கள் பெண்ணுடைய விருப்பத்தை அறிய வேண்டுமல்லவோ" என்று இராமச்சந்திரன் சொல்ல, தகப்பனார் "சந்திரா, உன்னை இங்கிதம் தன் சொந்தத் தமயனாக மதித்து நடந்து வருகிறாள்; ஆனதால் நீ அந்தப் பெண்ணுடன் இந்த விஷயத்தை நேரிற் பேசலாந்தானே" எனலும் "பேசிப்பார்ப்போம்" என்று சொல்லிக்கொண்டு இராமச்சந்திரன் வீட்டின் உட்பக்கம் போனான்.

* * *

உலகம் பலவிதம்: *1946* ஒக்டோபர் *18*
விசாலாட்சி: *(முற்றொடர் - 119)*

"இரண்டுபேரையும் இட்டுத்தான்போலும்"

இராமச்சந்திரன் இங்கிதம் இருக்குமிடத்திற்குச் சென்றபோது, அங்கே இரஞ்சிதமும் உடனிருந்தாள்; அவன் வரவைக் கண்ட மாத்திரத்தே இருவரும் இருக்கை விட்டெழுந்தனர்; "வாருங்கள் அண்ணா, இப்படி உட்காருங்கள்" என்று இன்சொற் கூறி இங்கிதம் இராமச்சந்திரன் இருக்கும்வண்ணம் ஒரு நாற்காலியைச் சமீபத்திற் கொண்டுபோய்விட்டு, அவனை இருக்கச்செய்ய, இரஞ்சிதம் ஒருபுறத்தே ஒதுங்கி நின்றாள்; இராமச்சந்திரன் முதல் இருவரையும் நோக்கி "உங்களை உட்காரச் சொல்லிக் கேட்பதிற் பயனில்லை; நீங்களெனிலோ ஒருபோதும் உட்காரமாட்டீர்களென்பதை நான் அறிவேன்" என உபசாரமாகச் சொல்லிவிட்டு, பின்னர் இங்கிதத்தை அன்புடன் நோக்கி, "என் அருமைத் தங்காய், இருவரும் ஒரு வயித்திற் பிறக்கவில்லையேயென்ற குறையொன்றேயொழிய, நாங்களிருவரும் உற்ற சகோதரங்களென்பதிற் சந்தேகமில்லையே" என்று சொல்லி முடிவதற்கிடையில் "எள்ளளவும் இல்லையண்ணா; அந்த உண்மையை எங்கள் மனமறியும், தெய்வமறியும்" என்று பணிவுடன் சொன்னாள் இங்கிதம்; "ஏதோ, தமயன் தங்கைக்குச் சொல்லவேண்டிய அந்தரங்க விஷயமுண்டு போலும், அப்படியானால் நாம் இந்த இடத்தில் நிற்பது அழகல்ல" என்றெண்ணிக் கொண்டு இரஞ்சிதம் மெல்ல அந்த இடத்தை விட்டு நழுவ முயலுதலும், அதனைக் குறிப்பாலுணர்ந்த இராமச்சந்திரன் "தங்காய், நீங்களிருவீரும் நிற்கும்போதுதான் ஒரு விஷயத்தை உங்களுக்குச் சொல்லலாமென எண்ணிவந்தேன்" எனலும், அந்த இடத்தை விட்டகல முயன்ற இரஞ்சிதம் புன்முறுவல் பூத்தபடி போகாது மீண்டும் அப்படியே நின்றாள்; இதனை அவதானித்த இங்கிதம் "இருந்த படியே துறவியாயிருந்துவிட்டால் இப்படியெல்லாம் கூச்சப்பட வராதே" என்று புன்னகை யரும்பியபடி புகலுதலும்; "ஆரை? அம்மா, என்னைக் குறித்துச் சொல்லுகிறீரோ? இல்லையேல் உம்மையிட்டுச் சொல்லுகிறீரோ" என்று புன்சிரிப்புடன் வினாவினாள் இரஞ்சிதம்; "இரண்டு பேரையும் இட்டுத்தான் போலும்" என்று சிரித்த வண்ணஞ் சொன்னான் இராமச்சந்திரன்.

"எவ்வகையான குறையுமில்லை"

"தங்காய், உம்முடைய பெற்றார் உமக்குச் சொல்லவேண்டிய விஷயங்களை நான் சொல்லவும், அவர்களுக்கு நீர் சொல்லவேண்டிய விடையை நான் கேட்கவும் வேண்டி ஏற்பட்டிருக்கிறது; அதுவும் நான் செய்த பாக்கியந்தான்; என் அபிமானத் தந்தையாரும் இவ்விஷயமாக என்னையே உம்முடன் நேரிற் கண்டு பேசி யோசிக்கச் சொன்னார்: அதனாற்றான் இப்பொழுது இங்குவந்தேன்; உம்மிடத்தில் என்னைக் காட்டிலும் அன்பு பூண்டவர்களும் பக்கலில் நிற்கும் இந்தச் சமயத்திலேயே நான் சொல்லவேண்டிய விஷயத்தைச் சொல்லி உம்முடைய நோக்கத்தை அறிதல் உசிதமாகும்; தங்காய், இங்கிதம், உம்முடைய பெற்றார் உற்றார் உறவினர் அயலாரென்னுமிவர்கள் இந்த இடத்திலே யில்லையேயென்ற ஒரு குறையல்லாமல் உமக்கு இங்கே வேறு எவ்வகையான குறையுமில்லை யென்று நினைக்கிறேன்..." என்று சொல்வதற்கிடையில் இங்கிதம் அவனைப் பார்த்து "அண்ணா, இடையிற் குழப்பிப் பேசுகிறேனென்று குறையெண்ணாதீர்கள்; பெற்றார் உற்றார் அயலாரில்லையென்ற குறையும் இங்கே எனக்கில்லை; உங்களைப்போன்ற உற்ற சகோதரமும் இங்கு நிற்கும் இரஞ்சித அக்கா போன்ற உடற் பிறப்பும் பெரிய ஐயா போன்ற தகப்பனும் இப்பொழுது இங்கு வந்து தங்கியிருக்கும் விசாலாட்சி அவருடைய கணவன் இவர்கள் போன்ற உறவினரும் இருக்கும்போது எனக்கு என்ன குறை" என்று கூறினாள்.

"தாவிப் படரக் கொழுகொம்பிலாத தனிக் கொடிபோல்..."

"தங்காய், நீர் இப்படி மனரம்மியத்தோடிருத்தல் எனக்கும் ஆநந்தமாகும்: நிற்க ஒரு விஷயம் சொல்லுகிறேன்; அவதானமாகக் கேட்கவேண்டும்; பெண்பாலார் அவர்களுள்ளும் உங்களைப் போன்ற யௌவனத்தோடும் பேரழகோடுங் கூடிய பெண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடித்தகாலம் ஒன்றியாய் இருத்தல் முடியாது: ஒருவாறு ஒன்றியாய்க் காலங் கழிக்கக்கூடிய மனத்திடமுண்டாகி இளம் பெண்கள் அங்ஙனம் காலங் கழிப்பினும், பொல்லாத உலகம் இல்லாத பழியெல்லாஞ் சொல்லும்; மேலும் பெண்பாலாரை மெல்லியர் என்றும் மெல்லிநல்லார் என்றும் பெண்கொடி யென்றும் கொடிபோன்றாரென்றும் சொல்வது இயல்பாகவே அவர்களிடத்தமைந்த மெல்லிய இயல்புபற்றியேயாம்; ஆண்களும் பெண்களும் சமத்துவமுடையரெனச் சாதிக்க முயலும் ஆங்கிலரும் பெண்பாலாரை அபலைகள் (Weaker sex) என்னுங் கருத்துள்ள தொடர் மொழியால் வழங்குதலைப் படித்திருக்கிறோம்; கொடிகள் படர்ந்து பூத்துக் காய்த்துப் பயன்றருதற்கு எப்பொழுதும் கொழுகொம்பு வேண்டும்: கொழு கொம்பில்லாத கொடிகள் என்றால் நிலத்திலே படர்ந்து அதிக பயன்றரும் இல்லையேற் சமீபத்திலே நிற்கும் மரங்களிலே சுற்றிப் படரும்; "கொடிகள் கிட்டவுள்ள மரங்களிற் படருகின்றன" என்பது பஞ் சதந்திரம்: "துணையேதுமின்றித் தாவிப்படரக் கொழு கொம்பில்லாத தனிக் கொடிபோற் - பாவித் தனிமனந் தள்ளாடிவாடிப் பதைக்கின்றதே" என்று பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள்; ஆதலினாலே மெல்லியலாரென்று சொல்லப்படும் நீங்கள் இன்னமும் விவாகமின்றி யிருத்தல் முறையாகாது..." என்று இப்படி இராமச் சந்திரன் சொல்வதற்கிடையில், இவற்றையெல்லாம் அவதானமாகக் கேட்டுக்கொண்டு நின்ற இரஞ்சிதம் இங்கிதத்தை விளித்து, "என்னடியம்மா இங்கிதம்! உங்கள் அண்ணா; ஒரு கண்ணியிற் பல குருவிகளை அகப்படுத்த முயல்கின்றவர்போற் பேசுகின்றார்" என்று புன்னகையரும்பப் புகல, "உலக நீதி எல்லாருக்கும் ஒத்ததாகத்தானே இருக்கும்" என்று புன்முறுவலோடு சொன்னான் இராமச்சந்திரன்; இருவரும் படர்க்கையில் வார்த்தையாடும் சித்திரத்தை நினைந்து இங்கிதமுஞ் சிறிது சிரித்தாள்; பின்னரும் இராமச்சந்திரன் இங்கிதத்தை அன்புடன் நோக்கி, "தங்காய், நீர் சற்று முன்பு உம்முடைய வாயினாலேயே உமக்கு இப்பொழுது எவ்வகையான குறையுமில்லையென்று சொன்னீர்; அது நிசமென்பதை நானும் ஏற்றுக்கொள்ளுகிறேன்; ஆனாலும் இன்னும் ஒரு குறையிருக்கிறது: அதனை நீர் இன்னமும் உணர்ந்து கொள்ளவில்லை என்பது உண்மை; அக்குறையுந் தீர்ந்து விட்டால் உமக்கு எவ்வகையான குறையுமில்லைஅம்மா" என்று சொல்ல? "என்னையறியாமல் எனக்குள்ள குறை என்ன அண்ணா" என்று ஆவலுடன் கேட்டாள்

இங்கிதம்: "வேறொன்றுமல்ல, என் அபிமானத் தந்தையாரும் நானும் உம்மை ஒரு தக்க வரனுக்கு மணஞ் செய்துவைக்க நோக்கங் கொண்டோம்; அதனையிட்டு உம்முடன் பேசும் படியாகத்தான் தகப்பனார் கட்டளைப்படி இப்பொழுது நான் இங்கே வந்தேன்" என்று சொல்லி முடிவதற்கிடையில், மடம், நாணம், அச்சம் என்னும் முக்குணங்களும் மீதூர இங்கிதம் இரஞ்சிதத்திற்குச் சமீபமாகப் போய் நிலத்தைப் பார்த்தவண்ணம் நின்றாள்: அவளுடைய கண்களில் நீர் ததும்பியது: பின்னர் அவள் இரஞ்சி தத்தைச் சஞ்சலத்துடன் பார்க்க, இரஞ்சிதம் தன் முன்றானையால் அவளுடைய கண்ணீரை ஒற்றி, அவளை நோக்கி. "மங்கலமான செய்தியைச் சொல்ல ஏன் அம்மா துக்கங்கொண்டாடுகிறீர்" என்று சொல்லித் தேற்றினாள்.

மலையிலே விளைந்தாலும்
உரலிலே வந்துதான் மசியவேண்டும்

இரஞ்சிதத்தின் தேறுதல் வார்த்தையாற் சஞ்சலம் நீங்கிய இங்கிதம் இராமச்சந்திரனை விநயத்தோடு நோக்கி, "அண்ணா, நீங்கள் என்மீது பாராட்டிவரும் அன்பையும் எனக்குச் செய்துவரும் உதவிகளையும் என் உயிருள்ள பரியந்தம் மறக்கமாட்டேன்.

"உடன்பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்கவேண்டா
உடன்பிறதே கொல்லும் வியாதி - உடன்பிறவா
மாமலையிலுள்ள மருந்தேபிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு"

அண்ணா, அம்மருந்து போலவே நீங்கள் எனக்குத் தமயனாக வந்து வாய்த்தீர்கள்; இது நான் பூர்வத்திற் செய்த புண்ணியத்தின் பயன் போலும்; முதல் ஆண்டவன், இரண்டாவது உங்கள் உதவியால் நான் ஒரு மரியாதைக்குரிய உத்தியோகத்தையும் பெற்றுக்கொண்டேன்; நான் ஏற்ற கடமையை இயன்றவரையில் மனப்பூர்வமான விசுவாசத்தோடு செய்ய எண்ணியிருக்கிறேன் மேலும் உங்களைப் போன்ற ஒரு அண்ணன், இந்த இரஞ்சித அக்காளைப் போன்ற ஒரு சகோதரம், பெரிய ஐயாவைப் போன்ற ஒரு தகப்பனார், விசாலாட்சியக்காள் அவருடைய கணவர்போன்ற உற்றார் எனக்கு இல்லாவிட்டாலல் லவோ நான் தாவிப்படரக் கொழுகொம்பில்லாத தனிக்கொடி போலாவேன்? எனக்கு ஒரு குறையு மில்லை அண்ணா! இல்லறத்திற் புகப் பயப்படுகிறேன்" னென்று கல்லுங் கரையும் வண்ணங் கரைந்தாள்; கேட்ட இராமச்சந்திரனும் சற்று நேரம் சொல்வது இன்னதென்றறியாமல் தியங்கினான்; அயலே நின்ற இரஞ்சிதமும் அவளுக்குச் சமாதானஞ் சொல்ல வகையறியாது சிந்தனையோடு காணப்பட்டாள்; உடனே இராமச்சந்திரன் தன் மனத்தை யொருவாறு திடப்படுத்திக் கொண்டு இங்கிதத்தை அன்புடன் நோக்கி, "அம்மா, இங்கிதம் உத்தியோகத்தில் நீர் இருப்பது உமக்கும் எங்களுக்கும் பெருமைதான்; அவ்வளவோடமையாது உத்தியோகம் ஒருவரு டைய வாழ்க்கைக்கு ஆதாரமாயுள்ளதென்பது நிசம்; ஆண்பாலாரெனின் - என்னைப் போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களெனின் தமக்குக்கிடந்த உத்தியோகத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு தம் வாழ்நாளை ஒருவாறு கழித்தலும் இயலும்: ஆனால் என் அருமைத் தங்காய்! உங்களைப் போன்ற பெண்பாலினர் "மலையிலே விளைந்தாலும் உரலிலேதான் வந்து மசியவேண்டும்" என்றபடி எவ்வளவு அதிகாரத்தோடு கூடிய உத்தியோகத்தை வகித்திருந்தாலும் விவாகமின்றி ஒன்றியாயிருத்தல்முடியாது; தங்காய் பெண்ணரசிகளும் மணஞ் செய்துகொண்டுதான் இராச்சிய பரிபாலனஞ் செய்தார்களென்பதை நீர் புராண இதிகாசக் கதைகளிற் படிக்கவில்லையா? நெடுந்தூரம் போவானேன்; பிருத்தானிய சக்கிரவர்த்தனியாக விளங்கிய விக்ரோரியாச் சீமாட்டியும் விவாகஞ் செய்துகொண்டுதானே உலகாண்டாள்;

தானாக வந்த சீதேவியைத்
தள்ளலாகுமா?

ஆனதால், தங்காய், நான் சொல்வதை இன்னும் சிந்தித்துப் பாரும்; மேலும், நீர் வித்தியாசாலையில் உத்தியோகம் பெற்றதே இப்பொழுது உமக்கு மாறாக விளைந்திருக்கின்றது" என்று சொல்ல, இங்கிதம் திடுக்குற்று, "அங்கே என்ன தவறு செய்தேன் அண்ணா" என்று ஏக்கத்துடன் கேட்க, "தங்காய், நீராகப் புத்தி பூர்வமாகவேனும், அபுத்திபூர்வமாக வேனுஞ் செய்த தவறொன்றுமில்லை; ஆனால் உம்மிடத்திற் குடிகொண்டுள்ளபேரழகும்,கல்வியறிவொழுக்கங்களும், இன்சொல்லும் இதமான ஊடாட்டமும், இசை, நாட்டியமென்னுமிவற்றிற் பயிற்சியும், இவற்றை நீர் பிள்ளைகட்கு ஊட்டும் திறமையுமாகிய எல்லாஞ் சேர்ந்து உம்முடைய எண்ணத்திற்கு மாறாக உம்மைத் தமக்கு வாழ்க்கைத்துணையாகக் கொள்ளும்படி உங்கள் தலைமையாசிரியரைத் தூண்டி விட்டன; அதனால் அவர் ஆசை வெட்கமறியாதென்றபடி தாமாகவே தமக்கு மணம் பேசி இன்று என்னிடம் வந்தார்; இதுதான் உண்மையம்மா, நீராக நானாக ஏதும் பிழை செய்யவில்லை" என்று சிரித்தபடி சொன்னான். கேட்ட இங்கிதம் நாணத்தாற் சாம்பியவளாய்த் தன் கால்விரல்களை நோக்கியவண்ணம் சற்றுநேரம் மௌனமாய் நின்றாள்; இவற்றைக் கேட்டுக்கொண்ட இரஞ்சிதம் மகிழ்ச்சியடைந்தாள்; பின்னர் இங்கிதம் இரஞ்சிதத்தைப் பார்க்க, அவள் "தானாக வந்த சீதேவியைத் தள்ளுவாருமுண்டா? இனி நீர்தாமே அந்த வித்தியாசாலையில் தலைமையாசிரியை" என்று முறுவலரும்பப் புகலுதலும், "அக்கா, உங்களுக்கு எந்த நேரமும் வேடிக்கை வார்த்தைதான்" என்று இங்கிதம் பூங்கொம்பென ஒல்கி நிற்றலும், இராமச்சந்திரன் அவளை நோக்கி "ஏன், அம்மா, பதிலொன்றுஞ் சொல்லாது நிற்கிறீர்" என்று இதமாகக் கேட்டான். "பதில் கேட்பானேன்; தங்கையின் முகத்தைப் பார்த்தால் விளங்குமே சம்மதமும் சம்மதமில்லாமையும்" என்று புன்னகை பூக்க, இங்கிதத்தின் முகத்தை நோக்கியபடி சொன்னாள் இரஞ்சிதம்; "என்றாலும், கானாருந் தெரியற் கடவுளருங் காண்பரோ - மானார் விழியார் மனம்" என்ற பிரகாரம் பெண்களின் உள்ளக் கிடக்கையைத் தெய்வத்தினாலும் உணர முடியாதென்றால், சிற்றறிவுடைய ஆண்களாகிய நாங்கள் எப்படியறிவது" என்று வேடிக்கையாகப் பதில் சொன்னான் இராமச்சந்திரன்; அதனாற்றான்போலும் ஆண்களெல்லாலாரும் பெண்களை மணஞ் செய்யாமல் நம்பாமற் புறக்கணிக்கிறார்கள்" என்று குறிப்பு மொழியாக இரஞ்சிதஞ் சொல்ல, இராமச்சந்திரன் வெள்கினான். இவ்வாறாக இங்கிதம் இராமச்சந்திரனைப் பார்த்து "அண்ணா, இந்த இரஞ்சித அக்காவுக்கும், உங்களுக்கும், இங்குள்ள மற்றையவர்களுக்கும் சம்மதமானால் நான் சம்மதப்படாமல் எப்படியிருக்கமுடியும்" என்று பணிவுடன் ஒவ்வொரு வார்த்தையாக மொழிந்தாள்; "எங்களெல்லோர்க்கும் சம்மதம் மாத்திரமல்லாமல் மகா சந்தோஷமாகவு மிருக்கும் இந்தச் சம்பந்தம்" என்று இரஞ்சிதஞ் சொல்ல, "இறைவனருளால் நீர் நல்லாயிருப்பீரம்மா" என்று வாழ்த்தி அவர்களிருவரிடத்தும் விடைபெற்றுக்கொண்டு இராமச்சந்திரன் அவ்விடத்தை விட்டகன்றான்.

* * *

உலகம் பலவிதம்: 1946 ஒக்டோபர் 25
விசாலாட்சி: (முற்றொடர் - 120)

"பால்வேண்டும் வாழைப்பழம்"

அவ்விருவரிடத்தும் அநுமதி பெற்றுச் சென்ற இராமச்சந்திரன் தலைவாசலிலிருந்த தன் அபிமானத் தந்தையைக் கண்டு "ஐயா, எல்லாம் நன்மையாகவே நிறைவேறும்போல் எண்ணக்கிடக்கின்றது: நான் விஷயத்தைச் சொல்லக் கேட்டு இங்கிதமும் இணங்கினாள்; இரஞ்சிதத்திற்கும் இச்சம்பந்தம் உடன்பாடாகும்; இருவரும் ஒருங்குநின்ற சமயத்திலே தான் நான் விஷயத்தை வெளியிட்டேன்: உங்களுக்கும் பூரண சம்மதந்தானே ஐயா" என்று இராமச்சந்திரன் வினாவுதலும், "எனக்குப் பூரண சம்மதமல்லாமல் வேறென்ன? தம்பி! ஆங்காலம் மெய்வருந்த வேண்டா; வருவது தானே வரும்: நீ இனி விஷயத்தைத் தலைமையுபாத்தியாயருக்கு வெளியிடலாம்" என்று சொல்ல, "அப்படியே செய்கிறேன்" எனக் கூறி அவரிடம் விடைபெற்றுக் கொண்டு இராமச்சந்திரன் தன்னிடத்திற்கு மீண்டான்; இது இங்ஙனமாக, இராமச்சந்திரன் அவ்விடம் விட்டு நீங்கிய பின் இரஞ்சிதம் இங்கிதத்தையும் அழைத்துக் கொண்டு விசுவநாதனும் விசாலாட்சியும் இருக்குமிடத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியுடன் போனாள்: இரஞ்சிதம் தங்களிடம் முகமலர்ச்சியோடு வருதலையும், அவள் பிறகே இங்கிதம் நாணம் மீதூரவருதலையும் அவதானித்த விசாலாட்சி "வாருங்கள், வாருங்கள், எங்கள் அருமை சகோதரிகாள்! வாருங்கள்" என்று இன்முகங்காட்டி இயம்பி "என்ன விசேஷம்? எங்கள் இங்கிதத் தங்கை இன்று கூசிக் கூசிப்பதுங்குதற்குரிய நியாயமென்ன" என்று புன்முறுவல் பூத்தபடி வினாவினாள். "அக்கா, எங்கள் இங்கிதத் தங்கைச்சிக்கு மங்கலகருமம் சீக்கிரத்தில் நிறைவேறப் போகிறது; ஆனதால் இங்கிதம் கூசாமல் முடியுமா? நாணாமல் முடியுமா? அதனைத்தான் உங்களுக்குத் தெரிவிக்க வந்தேன்" என்றாள் இரஞ்சிதம்: "ஆர், அம்மா, வரன்" என்று விசாலாட்சி கேட்பதற்கு முந்தியே கேட்டான் விசுவநாதன்.

"இனியவர் என்சொலினும்
இன்சொல்லே..."

"அண்ணா, இனத்தை இனம் நாடும்; அப்படித்தான் எங்கள் இங்கிதத்திற்கும் வந்து வாய்த்திருக்கிறது" என்று இரஞ்சிதம் சொல்லுவதற்கிடையில் "அம்மா, இரஞ்சிதம், வரனுடைய பேரென்ன? ஊரென்ன? உத்தியோகமென்ன? இவைகளைச் சீக்கிரஞ் சொல்லவொண்ணாதா" என்று ஆவலுடன் வினாவினாள் விசாலாட்சி. இரஞ்சிதம் சிரித்த வண்ணம் புன்னகை ததும்ப "வேல் வேண்டும் வாள் விழியாய்! வேண்டா புளிங்காடி, பால் வேண்டும் வாழைப்பழம், என்று நீங்கள் படித்திருக்கிறீர்கள் தானே, அது போல எங்கள் தங்கைக்கு வந்து வாய்த்த வரன் வேறொருவருமல்லரம்மா, தங்கை போய்ப் படிப்பிக்கும் வித்தியாசாலையின் தலைமையுபாத்தி யாயர் தாம் வரன்" என்று குதூகலத்துடன் கூறினாள்; "அப்படியா! சந்தோஷம், எல்லாம் ஆண்டவன் திருவருள்தான்" என்று ஆநந்தத்துடன் கூறினான் விசுவநாதன்; "ஆம், ஆம், புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமா? துறவிகள் இல்லறத்திற் புக நினைத்தால் அதற்குத் தக்கபடிதானே புகுவார்கள்" என்று சித்திரமாகச் சொன்னாள் விசாலாட்சி, கேட்டவுடனே இங்கிதம் இரஞ்சிதமாகிய இருவருடைய மனமும் தனித்தனி நாணமுற முகங்கோணியது; அப்படிச் சொன்ன தன் மனைவியை விசுவநாதன் சுழித்துநோக்கி "விசாலாட்சி, தங்கையருடன் சித்திரம் பேசுதல் முறையாகுமா" எனலும் "நான் சொன்னது, தவறு, ஆநத்தமேலீட்டினாற் சொல்லிவிட்டேன்; நான் சொன்ன குற்றத்தை நீங்களும் என் அருமைத் தங்கைமாரும் பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்று நமஸ்காரஞ் செய்து பச்சாத்தாபத்துடன் பன்னினாள் விசாலாட்சி. "அண்ணா, அக்காவைக் கடிந்து கூறாதீர்கள்; எங்கள் அக்காள் அப்படிச் சொன்னது அன்பு மேலீட்டினாற்றானே! "இனியவர் என்சொலினும் இன்சொல்லே, இன்னார் கனி மொழியுங் கடுவே....." என்பது நீங்கள் அறியாததல்ல" என்று இரஞ்சிதம் இதமாகச் சொல்லி விசாலாட்சியை நோக்கி "அக்கா நீங்கள் கவலைப்படாதீர்கள்" என்றாள். குற்றஞ் செய்தால் தண்டிக்கவேண்டியது கணவர் கடன்றானே" என்றாள் விசாலாட்சி; "கடிந்து சொன்னது என்மேற் குற்றம்" என்றான் விசுவநாதன்; "ஒருவர் மேலும் ஒருவகையான குற்றமுமில்லை; எங்கள் அருமை அக்கா! ஒரு முறை சிரியுங்கள்" என்று சிரித்தபடி கேட்டாள் இங்கிதம்" விசாலாட்சி புன்னகை செய்தாள்; விசுவநாதனுஞ் சிரித்தான்; மற்றையிருவருஞ் சிரித்தனர்.

"தூயவை துணிந்தபோது
பழிவந்து தொடர்வதுண்டோ"

அடுத்தநாட்காலை, இராமச்சந்திரன் ஒரு கடிதத்தையெழுதி, இங்கிதம் பள்ளிக்கூடத்திற்குப் போகும் வண்டியில் உடன் போகும் இன்னொரு பெண் உபாத்தியாயரிடம், அக்கடிதத்தைத் தலைமையாசிரியர் கையிற் கொடுக்கும்படி சொல்லிக் கொடுத்தனுப்பினான்; வித்தியாசாலையையடைந்தவுடன் அந்தப் பெண் உபாத்தியாயர் அக்கடிதத்தைத் தலைமையாசிரியரிடங் கொடுக்க அவர் அதனை தூக்கிச் சட்டைப் பைக்குட் சாவதானமாக அந்த நேரம் வைத்துவிட்டார் பின்னர் ஓய்வான நேரத்தில் தலைமையாசிரியர் தம்முடைய அறைக்கு சென்று தனியேயிருந்து அக்கடிதத்தை திறந்து பார்த்தபோது அதில் "இன்றிரவு 7 மணி வரையில் நான் உங்களை வீட்டில்வந்து பார்க்கலாகுமோ" என்ற கருத்துப்பட இராமச்சந்திரன் எழுதியிருக்கக் காணப்பட்டது; கடிதத்தைப் படித்தவுடன் ஏது யாதுமில்லாமல் அவருடைய உள்ளத்திலே உவகையெழுந்தது; அக் கடிதத்தை மூன்று முறை எடுத்தெடுத்து விரித்துப் படித்துப் பார்த்தார்; அன்று பின்னேரம் பள்ளிக்கூடம் விடும் நேரத்தில் தலைமையாசிரியர் ஒரு கடிதமெழுதி இராமச்சந்திரனிடங் கொடுக்கும்படி சொல்லி, அந்தப் பெண்ணுபாத்தியாயரிடத்திலேயே கொடுக்க, அந்த உபாத்தியாயர் தாங்கிக்கொண்டு போய், இங்கிதம் வண்டியைவிட்டிறங்கும் போது "இதனைத் தலைமையாசிரியர் தந்ததென்று சொல்லி உங்களுடைய அண்ணனிடங் கொடு ங்கள்" எனலும், அவள் "அப்படியே செய்கிறேன்" என்று சொல்லிப் பெற்றுக்கொண்டு போய், தங்கள் வீட்டிலே அந்தநேரம் நின்ற இராமச்சந்திரனிடம் விஷயத்தைச் சொல்லிக் கொடுத்தாள்; அவன் ஏற்றுத் திறந்து படித்தபோது இராமச்சந்திரனுடைய வரவைத் தாம் எதிர்பார்த்த வண்ணம் பொழுதுபடும் நேரந் தொடக்கம் வீட்டில் இருப்பதாக எழுதியிருந் தார்; நல்லதென்று தன்னளவிற் சொல்லிவிட்டு இராமச்சந்திரன் தன் வீட்டிற்கு மீண்டான். பின்னர் மாலைக்காலமாதலும், அவன் இங்கிதத்திடம் வந்து "தங்காய், நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையாசிரியரைக் காணும்படி இப்பொழுது புறப்படப் போகிறேன்; இந்த விஷயத்தில் நான் பிரவேசிக்கலாந்தானே" என இதமாகக் கேட்டலும் "அண்ணா ஆண்டவனுடைய திருவுளம் எப்படியோ, அதனை நாம் அறியேம்; ஆனால் என் விஷயமாக நீங்கள் அவருடன் ஏதும் பேசவேண்டி வந்தால், என் பழைய வரலாறு முழுவதையும் அவருக்கு உள்ளபடியெடுத்துச் சொல்லிவிடுங்கள்" எனக் கூறினாள்; இராமச்சந்திரன் சற்றுநேரம் யோசித்து விட்டு, "தங்காய், நீர் சொல்வன எனக்குப் புலப் படவில்லை" என்று சிந்தனையுடன் சொன்னான்; வேறொன்றுமல்ல அண்ணா, என் பெற்றாரைச் சின்னவயசிற் பறிகொடுத்து ஊர்விட்டுத் தேசம் விட்டுத் தன்னந்தனியே புறப்பட்டு அலைந்து திரிந்து தாசிவீட்டைத் தஞ்சமென்றடைந்து, பாட்டுப்பாடி நாட்டியமாடிச் சங்கடப்பட்டு ஒருவாறு தப்பிவந்து துறவுவேடம் பூண்டு உங்களிடம் அடைக்கலம் புகுந்த வரையில் ஒளியாமற் சொல்லிவிடவேண்டும் அண்ணா, இவைகளையெல்லாம் கேட்டறிந்த பின்னரும் தலைமை உபாத்தியாயர் என்னைத் தமக்கு இல்வாழ்க் கைத் துணையாக ஏற்றுக்கொள்ள விரும்பினால், நீங்களும் அவர் விருப்பத்திற்கு உடன்பட்டுச் சம்மதஞ் சொல்லிவிட்டு வாருங்கள்" என்று தன் கண்களில் நீர்சிந்த நின்று சொன்னாள் இங்கிதம். "ஏனடியம்மா, இப்படியெல்லாஞ் சொல்லுகிறீர்" என்று பரிவுடன் இராமச்சந்திரன் வினாவ, "வேறு எதற்காகவுமல்ல அண்ணா, என் பழைய வரலாற்றைப் புதிதாய் வருபவர்கள் அறியார்கள். தாமரையிலையிற் சிந்திய நீர்த்துளியும் முத்தினொளியை யடையுமென்ற பிரகாரம், நான் முந்தி எவ்வளவோ இன்னல்களைப் பட்டாலும், இப்பொழுது உங்கள் குடும்பத்தில் ஒருத்தியாக வந்து சேர்ந்தமையினால், மற்றையோர் கல்வியறி வொழுக்கத்திற் சிறந்த பெரியவீட்டுப் பெண் போல என்னை மதித்தலுங் கூடும்; திருவருளால் விவாகம் நிறைவேறவேண்டி வந்தால், நானாக பிறராக என் பழைய நிலைமையை அவர்களுக்கு வெளியிடவேண்டி நேரும்; அந்த நேரத்திலே அவர்கள் "நாம் ஏன் இவளைத் தொட்டோம்" என்று கழிவிரக்கங் கொள்ளவேண்டி நேரினும் நேரும்; எதனையும் வருமுன் காக்க முயல வேண்டுமே யொழிய, வந்தபின் காத்தல் முடியாதென்பது உங்களுக்கே விளங்கும்; நடந்தபின் இப்படியான ஒரு விபரீதத்தினால் அவர் என்னை விட்டுப் பிரிதலும், நான் அவரைவிட்டுப் பிரிய வேண்டி நேர்தலும் இருவருக்குந் தீராத்துயருக்கும் ஊரார் பழிச்சொற்கும் இடமாகும்; ஆதலினாற்றான் சொல்லுகிறேன், என் அருமையான அண்ணா, குறையெண்ணாதீர்கள்" என்று உள்ளமுருகச் சொன்னாள்; கேட்ட இராமச்சந்திரன் அற்புதமடைந்தானாய், "தங்காய், உம்மிடத்தில் இப்படியான மனத்தூய்மையும் விவேகமுமுண்டென்பதை இன்றுதான் உணர்ந்தேன்; நீர் மகா உத்தமி; "தூயவை துணிந்தபோது பழிவந்து தொடர்வதுண்டோ" என்ற பிரகாரம் மாசற்ற மனத் தோடு கூடிய உம்பொருட்டு நல்ல கருமத்தைச் செய்யத் துணிந்தேன்: உம்மைப்போன்ற உத்தமிகளின் வாழ்க்கைக்கு எவ்வகையான இடையூறும் நேரமாட்டா ;நீர் கவலைப்படவேண்டாம்; போய் வருகிறேன்" எனக் கூறி அவளைத் தேற்றி விடை பெற்றுக்கொண்டு தலைமையாசிரியரிடம் போனான்.

சுடினுஞ் செம்பொன்
தன்னொளி கெடாது

இராமச்சந்திரன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு தம் வீட்டுத் தலைவாசலிலிருந்த தலைமையாசிரியராகிய சூரியநாராயண சாஸ்திரியார், அவன் வரவைப் கண்ட மாத்திரத்தே, முகமலர்ச்சி காட்டி இன்சொற்கூறி ஆசனமுதவி உபசரித்து இருக்கச்செய்து "நண்பரே, நான் உமக்கு அதிக சிரமந் தருகிறேன் போலும், நீர் இங்கு வந்து அலையாமல் என்னையே உம்மிடம் வரும்படி தெரிவித்தால், நானே வந்திருப்பேனே" என்று சொல்வதற்கிடையில், "ஐயா, இதனால் எனக்கு எவ்வகையான சிரமமுமில்லை; இதனை என் சொந்தக் கருமம்போல மதித்து மனமுவந்து செய்கிறேன் ..." என்றான் இராமச் சந்திரன்; "வந்த நோக்கம் என்னவோ? நான் செய்ய வேண்டியதென்ன" என்று தலைமையாசிரியர் வினாவ, இராமச்சந்திரன் "எல்லாம் மங்கல கருமந்தான்: உங்கள் நோக்கத்திற்கு முழுவதும் அமைந்த கன்னிகை யொருத்தி உண்டென்பதைச் சொல்ல வந்தேன்" என்றான்; "சந்தோஷம், கன்னிகை ஆர்புதல்வி, எந்தவூர் என்பன முதலிய வரலாறுகளை நான் அறிய லாகுமோ" என்று விநயமாகக் கேட்க, "நீங்களல்லாமல் வேறு யார் அறிய வேண்டிது; நான் முழு விபரமுஞ் சொல்கிறேன்" என்று பெண்ணின் பெயரையும் அவள் அந்த வித்தியாசாலையிற் கல்வி பயிற்றுகிறா ளென்பதையுந் தவிர ஏனைய விபரங்களையெல்லாம் ஒன்றும் ஒளியாமற் சொன்னான் இராமச்சந்திரன்; இடையிடையே தலைமையாசிரியர் கேட்ட வினாக்களுக்கும் அவன் தக்க விடை புகன்றான்; "பெண் எங்கே சங்கீதம் பரதநாட்டிய மென்னுமிவைகளைக் கற்றாள்" என்று தலைமையாசிரியர் கேட்க, இங்கிதம் வெளியிடும்படி தனக்கு அன்று புறப்பட்டுவரும் போதுசொன்ன பழைய வரலாற்றையும் அவன் உள்ளபடி உரைத்தான்: கேட்ட தலைமையாசிரியர், "தாசி வீட்டிற் சிலநாள் இருந்தும் தன் ஒழுக்கத்தைப் பாதுகாத்த பெண்ணென்பது நிசமானால் அவள் மகா உத்தமியாகவல்லவா இருக்கவேண்டும்; பெரிய ஆபத்துகளில் அகப்பட்டும் தம் மானத்தைக் காத்த உத்தமிகள் தாம் கற்புடை மகளிரென எக்காலத்தும் போற்றப்படுகிறார்கள்; "சுடினுஞ் செம்பொன் தன்னொளி கெடாது" என்பர்; ஆனால் அந்தக் கன்னிகையை நான் ஒருமுறை நேரிற் பார்க்க முடியுமோ" என்று கூசிக் கூசிக் கேட்டார்; இராமச்சந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்து "ஐயா, ஒருமுறை பார்ப்பதென்ன, நீங்கள் அந்தப் பெண்ணைப் பல முறையும் பார்த்துள்ளீர்கள், அவள் சங்கீதத்தைக் கேட்டுள்ளீர்கள், அப் பெண்ணுடன் பேசியுள்ளீர்கள்; மேலும், வெண்ணெய் வைத்துக்கொண்டு நெய் தேடுவார்போல், அகத்திலே கன்னிகையிருக்க அயலூரெல்லாந் தேடியலைவானேன்" என்றான்; தலைமையாசிரியர் சற்றுநேரம் யோசித்து "இவர் கூறுவது இங்கிதத்தைக் குறித்துப் போலும்" எனத் தன்னளவில் நிச்சயித்துக்கொண்டு "நண்பரே, அப்படியானால் அந்தக் கன்னிகையின் நாமத்தை மாத்திரஞ் சொல்லிவிட்டாற் போதும்" என்றார்; "இங்கிதம்" என்றான் இராமச்சந்திரன்; "அப்படித்தான் நானும் நினைத்தேன்" என்றார் தலைமையாசிரியர்.

* * *

உலகம் பலவிதம்: *1946 நவம்பர் 01*
விசாலாட்சி: *(முற்றொடர் - 121)*

"குலந்தளவேயாகுங் குணம்"

"அப்படியென்றால் உங்களுக்கு அது சம்மதந்தானே" என்று வினாவினான் இராமச்சந்திரன்; "என்னைச் சம்மதங் கேட்பதென்ன, எனக்கு அக்கன்னிகையை வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொள்ளுதல் பூரண சம்மதமாகும்; இப்போதைக்கு விவாகஞ் செய்வதில்லையென்ற நியதியோடிருந்த நான் இக்கன்னிகை இங்கு படிப்பிக்கும்படி வந்தநாள் தொடக்கம், பெண்ணின் பேச்சு வார்த்தை ஒழுக்கம் தன் கடமையிலுள்ள ஆர்வம், அதனைக் குறைவின்றிச் செய்வதனால் எழும் மகிழ்ச்சி, விநயமான ஊடாட்டம் நேர்மை தூய்மை முதலிய இவைகளையெல்லாம், பிறர் உணராவண்ணம் நான் என்னளவில் அவதானித்து வந்தேன்: இவைகள் என்னுள்ளத்தைக் கவர்தலாயின; குலத்தளவேயாகுங் குணம் என்றவாறு இப்பெண் ஒரு உயர்குடியிற் பிறந்தவளென்பது என்னுள்ளத்திற் புலப்பட்டது: இவற்றையெல்லாம் யோசித்து இக் கன்னிகையை என் இல்லக்கிழத்தியாகக் கொள்ளின் என் வாழ்க்கை சிறக்குமென்று நிச்சயித்தேன்; மேலும் இப்பெண்ணை மணஞ் செய்யின் இப்பெண்ணும் நானும் இக்கலாசாலையிற்றானே தாரமும் பதியுமாக விருந்து கல்விபயிற்றலாகுமென்பதையும் சிந்தித் தேன்: இவ்வாறு என் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டே அன்று உங்கள் வீட்டிற்கு வந்தேன்; அதன்பின் நிகழ்ந்தவைகளை, நண்பரே, நீரும் அறிவீர்; எனக்கு இக்கன்னிகையை மணஞ் செய்து தருவது உங்களனைவருக்கும் சம்மதமானால், பெண்ணுக்கும் உடன்பாடானால், தெய்வத்திற்கும் சித்தமானால் நான் ஏற்றுக்கொள்வதற்கு எவ்வகையான தடையுமில்லை; ஆனாலும் ஒரு செய்தி சொல்ல விரும்புகிறேன்; என் பெற்றார் என் விவாக விஷயத்தில் எனக்கு இஷ்டமான ஒரு கன்னிகையை நானே ஆராய்ந்து தெரிந்து நிச்சயித்துக்கொண்டு, தங்களுக்குத் தெரிவித் தால் அது, தங்களுக்கும் பூரண சம்மதமாகுமென்று முந்தியே தெரிவித்திருக்கிறார்கள்; அப்படி அவர்கள் தெரிவித்திருந்தாலும், பெற்ற என் அருமையான அன்னை தந்தையரின் பூரண சம்மதத்தையும் ஆசியையும் பெற்றுக்கொண்டு நான் விவாகஞ் செய்தாற்றான் எங்கள் இல்லறம் இனிது நடைபெறும். ஆனதால் இப்பொழுது நாங்கள் செய்துகொண்ட ஒழுங்கினைப்பற்றி இன்றைக்கே என் பெற்றார்க்கு ஒரு கடிதம் எழுதுவேன்: நீங்கள் ஆகவேண்டிய ஆயத்தங் களைச் செய்யலாம்" என்று சொல்லி முடித்தார் தலைமையாசிரியர்; "அப்படியே செய்கின்றோம் மிகவுஞ் சந்தோஷம்" எனச் சொல்லிவிட்டுத் தலைமையாசிரியரிடம் விடை பெற்றுக்கொண்டு இராமச்சந்திரன் மீண்டான்.

கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டும்?

மீண்ட இராமச்சந்திரன் தன் வீட்டிற்குப் போதலின்றி, தன் அபிமானப் பிதா இருக்கும் இல்லத்திற்சென்று, அந்த நேரத்தில் பிதா வீட்டிலில்லையாக, இங்கிதமிருக்கு மிடத்திற்குப் போனான்; அங்கே இங்கிதமும் இரஞ் சிதமும் ஒருங்கிருப்பக்கண்டான்; அவனைக் கண்ட மாத்திரத்தே அவர்களிருவரும் எழுந்து ஒதுங்கி நின் றார்கள்; நளனிடத்தில் அன்னத்தைத் தூதனுப்பிவிட்டு, பின் அது எப்போது மீண்டுவருமென ஆவலோடு எதிர்பார்த்து நின்ற தமயந்தியின் நிலையில், இங்கிதமும் இராமச்சந்திரன் வரவை எதிர்பார்த்த வண்ணம் அவ்வளவு நேரமும் ஆவலுடன் நின்றாளென்று சொல்லுதல் மிகையாகாது; தங்களிடம் வந்த இராமச்சந்திரனை இங்கிதம் ஆசனமுதவி உபசரித்து இருக்கச் செய்தாள்; அவனுடைய முகக் குறிப்பிலிருந்து அவன் சென்ற கருமம் அநுகூலமாகத்தான் இருக்கவேண்டுமென்று இங்கிதமும் இரஞ்சிதமும் யூகித்தனர்; இராமச்சந்திரன் தான் சென்ற விஷயத்தையிட்டுச் சில நிமிஷம் யாதும் பேசாமலிருந்தமையினால், இரஞ்சிதம் அறிய ஆவல் மிகுந்தவளாய், இங்கிதத்தைப் பார்த்த வண்ணம், "சென்ற கருமம் எப்படியென்று உங்கள் அண்ணரைக் கேட்கலாமே, தங்காய்" என்று சொல்ல, இங்கிதம் நாணமுற்றாளாய் நிலத்தைப் பார்த்த வண்ணம் நிற்க, "கேட்பதென்ன, பூரண அநுகூலந்தான்" என்றான் இராமச்சந்திரன்: அவன் பின்னரும் அவர்களை மகிழ்ச்சியுடன் பார்த்து "தலைமையாசிரியருக்கு இந்தச் சம்பந்தம் பூரண சம்மதம்: தாம் இவ்விஷயமாகத் தம் பெற்றோருக்கும் உடனே கடிதமெழுதுவதாகச் சொன்னார்; கல்யாணத்திற்கு ஆகவேண்டிய ஆயத்தங்களைச் செய்வது நல்லதென்று எனக்குச் சொன்னார்; ஆண்டவன் கிருபையால் எல்லாம் நன்மையாக நடைபெறும்; இனி நாங்கள் செய்ய வேண்டிய ஆயத்தங்களைச் செய்யவேண்டும்" என்றான்; "தலைமையாசிரியர் பூரண சம்மதப்படாமல் முடியுமா? கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமா? எங்கள் அருமைத் தங்கையை வாழ்க்கைத் துணையாகக் கொள்ள எல்லாருக்குங் கிடைக்குமா" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டிச் சொன்னாள் இரஞ்சிதம்; "அக்கா, அப்படிச் சொல்லாதீர்கள்; அவர்களும் மேலான நிலைமையில் உள்ளவர்கள்தாமே" என்று இரஞ்சிதத்தை நோக்கி இங்கிதம் சொன்னாள்; இரஞ்சிதம் புன்னகையுடன் "இப்பொழுதே அவரைப்பற்றிக் குறை சொல்ல, உமக்கு ஆத்திரம் பிறக்கிறதென்றால், விவாகம் நிறைவேறிய பின் நாங்கள் அவரைப் பற்றி ஏதுஞ் குறைசொன்னாற் பழியாய் முடியும் போலிருக்கிறது" என்று சொல்ல, "என் அருமையான அக்காவுக்கு எந்த நேரமும் வேடிக்கைதான்" என்று நாணம்மீதூர நின்றாள் இங்கிதம்; இவற்றையெல்லாம் அவதானித்துக்கொண் டிருந்த இராமச்சந்திரன் "பெண்களுக்கு எப்பொ ழுதும் தங்களைப்பற்றிப் பெரிய எண்ணந்தான்" என்று சிரிப்புடன் சொன்னான்; "பெண்களுக்குத் தான் பெரிய எண்ணம், ஆடவர்களிடத்தில் அப்படியான எண்ணம் இல்லை போலும் தங்கைச்சி" என்று இங்கிதத்தைப் பார்த்தபடி பன்னினாள் இரஞ்சிதம்; "அக்கா, நீங்களிருவரும் நேரிற்பேசுங் காலம் வரும்வரை இரு பக்கத்தாலும் எனக்குத்தான் இடிபோலும்" என்று நகை யரும்ப மொழிந்தாள் இங்கிதம்; "அதிலொன்றுமில்லை, தங்கைச்சி, வேடிக்கையாகப் பேசுகிறேன்" என்றான் இராமச்சந்திரன்; இதற்கிடையில் வெளியே சென்றிருந்த என் அபிமானப்பிதா வீட்டுக்கு மீண்டு வந்துவிட்டாரென்பதை யறிந்து இராமச்சந்திரன், அவ்விருவரிடத்தும் அநுமதி பெற்றுக்கொண்டு தலைவாசலிலிருந்த தன் பிதாவைக் கண்டு செய்தி முழுவதையும் அவரிடஞ் சொல்ல, அவர் கேட்டுப் பெருமகிழ்ச்சியடைந்து இங்கிதத்தின் விவாகத்திற்கு ஆகவேண்டிய ஆயத்தங்களனைத்தும் விரைவிற் செய்வதாகச் சொல்ல இராமச்சந்திரன் அதனைக் கேட்டுச் சந்தோஷமடைந்தானாய்த் தன் வீட்டிற்கு மீண்டான்.

"வேண்டுவார் வேண்டுவன ஈவான் கண்டாய்"

இங்ஙனமாக, அடுத்தநாள் அதிகாலையில் அதிக மகிழ்ச்சியோடிருக்க வேண்டிய இங்கிதம், கவலையோடு கூடிய முகத்தினளாயிருப்பதை, இரஞ் சிதம் அவதானித்தாள் "தங்காய், ஏன் அம்மா, கவலைப்படுகின்றீர்? உமக்கு இங்கே நேர்ந்த குறையென்ன" என்று ஆவலுடன் கேட்க, இங்கிதம் பின்னும் அதிக கவலையோடுகூடியவளாய், "அக்கா, இங்கே எனக்கு எவ்வகையான குறையுமில்லை: என் சொந்தப் பெற்றார் உற்றார், உறவினர் அயலாரைக் காட்டிலும் இங்குள்ள நீங்களெல்லீரும் என்னைக்கூடிய அன்போடும் அருமையோடும் நடத்திவருகிறீர்கள்: நீங்கள் அநாதப் பெண்ணாகிய என்மேல் வைத்த அன்பி னாலும் ஆதரவினாலும் இராமச்சந்திர அண்ணருடைய முயற்சியினாலும் நான் ஒரு தொழிலைச்செய்து கௌரமாகக் காலம்போக்க வகை கண்டுகொண்டேன்: அவ்வளவோடு அமையாது நீங்களெல்லீரும் என்னை ஒரு தக்கவரனிடத்தில் ஒப்புவிக்கவும் நிச்சயித்து விட்டீர்கள்; விவாகமும் விரைவில் நிறைவேறுமென்னச் சொல்லி அதற்காகிய முயற்சிகளையுஞ் செய்கிறீர்கள்; என் பூர்வ வரலாறு முழுவதையும் சற்றேனும் ஒளியாமல் முந்தியே உங்களுக்குச் சொல்லிவிட்டேன்; என் பெற்றார் இந்த விவாகக் காட்சியைக் காண, அவர்கள் சமூகத்தில் என் கல்யாணம் நிகழ, அவர்களும் நானும் கொடுத்து வைக்கவில்லை. அதனையிட்டுக் கவலைப்பட்டு இனி ஆவதொன்றுமில்லை; ஆனால் என் அருமையான அக்கா, என் சிறியதாயைப்பற்றி நான் அதிக துயரப்படவில்லை: ஆயினும் என்னை அன்போடு வளர்த்த என் சிற்றப்பரும், என் அருமைத் தங்கையும், நான் அவர்களுடைய வீட்டைவிட்டு நீங்கியநாள்தொட்டு இற்றைவரையில் என்னையிட்டுக் கவலைப்பட்டுக்கொண்டேயிருப்பார்கள்; இது நிச்சயம்: மேலும் என் சிற்றப்பர், என்னைத் தேடி எங்கெங்கெல்லாம் அலைந்துதிரிகிறாரோ அறியேன்; இல்லையேல் சுகவீனமாகக் கிடந்த அவருக்கு ஏதும் ஆபத்து நேர்ந்ததோ, நான் பாவி! அதனையும் அறியேன்; ஆனால் ஆண்டவன் அப்படியான ஆபத்து நேர விடமாட்டாரென்பதுதான் என் நம்பிக்கை; அக்கா, சொல்லுகிறேனென்று என்னை விபரீத மாக எண்ணாதீர்கள்; எனக்கு ஒரு மங்கல கருமம் நிகழும்போது என் சிற்றப்பர், தங்கைச்சி முதலிய இவர்கள் சமூகமாயிருந்தால், எனக்குஞ் சந்தோஷந்தான்; அவர்களுக்கும் சந்தோஷமாக இருக்குந்தானே" இவைகளைச் சென்ற இரவு சிறிது நேரம் இருந்து சிந்தித்தேன்; சிந்திக்கத் தொடங்கிய நேரந்தொட்டு விடிகிறவரையில் நித்திரை வரவுமில்லை, என் கவலை அகலவுமில்லை; அக்கா, இதுதான் என்கவலைக்குக் காரணம்" என்று அதிக கவலையோடு சொன்னாள்; பரிவுடன் கேட்டுக்கொண்டு பக்கலிலிருந்த இரஞ் சிதமும் கவலைப்பட்டாள்; சற்று நேரத்தில் இரஞ் சிதம் தான் தேறி இங்கிதத்தையும் ஒருவாறு தேற்றி அவளை அன்புடன் பார்த்து "தங்காய், நீர் கவலைப்பட வேண்டாம்: உமக்கு நடக்கவிருக்கும் இந்தச் சம்பந்தமும் தெய்வத்தின் அருளாற்றான் நிறைவேறப்போகின்றது: தெய்வத்தில் நம்பிக்கை கொண்ட நீர் நினைக் குங் கருமமெல்லாம் அத்தெய்வத்தின் அருளால் நிறைவேறும்; வேண்டுவார் வேண்டுவன ஈவான் கண்டாய் எனப் பெரியோர் பாடியிருப்பதை நீர் படித்திருக்கிறீரல்லவா" முந்தியே தெய்வமே தஞ் சமென்று கொள்கை பூண்ட நீர் இப்பொழுதும் அந்தத் தெய்வத்தையே தஞ்சமெனக்கொண்டு உமது குறைகளையெல்லாம் அந்தப் பெருமானுக்கு எடுத்து நாள்தோறும் முறையிட்டு வருகுதிர்; அவன் அருள் புரிவான்: சந்தோஷமாக இருக்கவேண்டிய சமயத்திலே கவலைப்பட்டால், கண்டவர் சில சமயம் விபரீதமாகவும் நினைத்தல்கூடும்; ஆதலால் கவலை வேண்டாம்" என்று பல சமாதானங்களைச் சொல்லி அவளைத் தேற்றினாள்.

"வேறொன்றுமல்ல அக்கா, வெட்கமாயிருக்கிறது"

தேறுதலடைந்த இங்கிதம் வித்தியாசாலைக்குப் புறப்பட வேண்டிய நேரஞ் சமீபித்து விட்டபடியால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையிற் செய்யவேண்டிய ஸ்நானம் வழிபாடு போசனம் முதலியவற்றைத் துரிதமாக முடித்துக்கொண்டு வண்டி வரவை எதிர்பார்த்த வண்ணம் தலைவாசற் பக்கத்தில் இரஞ்சிதத்தோடு நின்றவள், அவளைப் பரிவுடன் பார்த்து, "அக்கா! நான் எப்படிப் பள்ளிக்கூடத்திற்குப் போகப்போகிறேன், போய்ப் படிப்பிக்கப்போகிறேன் என்று எனக்குப் புலப்படவில்லை...." எனச் சொல்லி முடிப்பதற் கிடையில், இங்கிதம் அவளைப் பார்த்து "ஏன் தங்காய், சில நிமிஷத்தில் வண்டிவரும் ஏறிக்கொண்டு போகலாம்; போனவுடன் வழக்கம் போல் படிப்பிக்க வேண்டியவற்றைப் படிப்பிக்கலாந்தானே; இதில் என்ன கவலை!" என்று ஒன்றும் விளங்காதவள்போற் சொல்ல, இங்கிதம் "வேறொன்றுமல்ல, அக்கா என்னையறியாமலே நேற்றுத்தொடக்கம் என் மனத்தில் ஒரு வெட்கம் புலப்படுகிறது; வண்டியில் ஏறிப் போகவும் பள்ளிக் கூடத்திற் போய்ப் படிப்பிக்கவும் நினைக்கவே உள்ளம் கூசுகிறது அக்கா" எனலும், இரஞ்சிதம் புன்னகைசெய்து, "தங்காய், இந்த விவாக விஷயம் இன்னும் பரகசியமாகவில்லை: உமக்கும் அவருக்கும் எங்களுக்குந்தான் தெரியுமென்று நினைக்கிறேன்; ஒன்றுமறியாதவள்போல் நீர் உம்முடைய உத்தியோகக் கடமையைப் பார்த்து வாரும்; தலைமையாசிரியரை அங்கே காண, சந்திக்கவேண்டி வந்தால், அவரை உம்முடைய வரன் என்று சிந்தியாமல், தலைமையாசிரியரென்றே மதித்து ஊடாடவேண்டும் அம்மா; அப்படி மதித்து நடந்தால், வெட்கமும் வராது, துக்கமுமுண்டாகாது; பிறர் சந்தேகப்படவும் மாட்டார்கள். அறிந்தும் அறியாதவர்போல நடக்கின்றதாகிய மடமென்னுங் குணம் எங்களுக்குத்தானே யுரியது; அதனாலல்லவா கற்றோர் எங்களை மடவாரென்று பாடல் படிப்பிலே சொல்லியிருக்கிறார்கள்; ஆனதால் அந்தச் சிந்தனையை விட்டுச் சந்தோஷமாகப் பள்ளிக்கூடத்திற்குப் போய்ச் சுகமே வாரும்" என்று இரஞ்சிதம் சொல்லிக்கொண்டு நிற்கும்போது, வண்டி வருதலும், "அருமையான அக்கா, போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, இங்கிதம் வண்டியிலேறிக்கொண்டு வித்தியாசாலைக்குப் போவாளாயினாள்.

* * *

உலகம் பலவிதம்: 1946 நவம்பர் 08
விசாலாட்சி: (முற்றொடர் - 122)

"ஊரை உலைமூடி கொண்டு மூடிவிட முடியுமா?"

அன்று வித்தியாசாலைக்குச் சென்ற இங்கிதம் இயன்றவரையில் தலைமையாசிரியர் கண்ணிற் புலப்படாமல் தன் கடமையைப் பார்த்து வந்தாள்; தலைமையாசிரியரும் கூடிய வரையில் இங்கிதம் கடமை பார்க்கும் வகுப்புக்களுக்குப் போகாதுவிட முயன்றார்; ஆனால் அவள் சங்கீதம் பயிற்றும்போது, அவள் பாட்டைக் கேட்கவொட்டாது தன் செவிகளைத் தடுத்தற்கும், அப்பாட்டைக்கேட்டு உருகவொட்டாது தன்னுள்ளத்தைத் தடுக்கவும் அவரால் முடியவில்லை .இந்தச்சம்பந்தவிஷயம் இரண்டு மூன்று தினங்களுக்கு இரகசியமாக இருந்த தெனினும், பின்னர் மெல்ல மெல்ல வெளிவரலாயிற்று. அவ்வித்தியாசாலையிலுள்ள உபாத்தியாயர்களும் மேல்வகுப்பிலுள்ள பிள்ளைகளும் ஒருவாறு அறியலாயினர். தன்னுடன் படிப்பிக்கும் பெண் உபாத்தியாயர்கள் சிலர் தன்னைக் கண்ட மாத்திரத்தே புன்னகை செய்தலையும், தன்னைப் பார்த்து அவர்கள் தங்களுள் இரகசியம் பேசுதலையும், அப்படியே சிறுமியர் செய்வதையும் வித்தியாசாலையிலே கடமை பார்க்கும்போது இங்கிதம் அவதானித்தாள்; அவர்கள் வேறு விஷயமாகப் புன்னகை செய்தாலும் இரகசியமாகப் பேசினாலும் இங்கிதம் தன் விவாக விஷயமாகத்தான் புன்னகை புரிகிறார்கள், இரகசியம் பேசுகிறார்கள் என்றெண்ணி இலச்சைப்படுவாள்; இது எப்படிப் பரகசியமானதென்று சிந்தனை செய்வாள்: பொய்யான செய்திகளும் பிறக்கும் இந்த உலகத்திலே உள்ளது வெளிவருதல் ஒரு நூதனமா? ஊரை உலைமூடிகொண்டு மூடிவிட முடியுமா? என்று இங்கிதம் தன்னளவிற் சொல்லித் தானாகவே தேறிக்கொள்வாள்; ஆனால் இங்கிதத்தின் விவாக நிச்சய விஷயமாகக் கேள்விப்பட்டோர் எவரும் சந்தோஷ முற்றார்களேயொழிய, பொறாமை கொண்டா ரெவருமில்லையெனலாம்.

துழாவி ஆக்கவேணும் கூழை உசாவிச்செய்யவேணும் கல்யாணத்தை

இவை இங்ஙனமாக, தலைமையாசிரியராகிய சூரியநாராயன சாஸ்திரியார் தாம் ஒழுங்கு செய்துள்ள தம் விவாக விஷயமாகத் தம் பெற்றாருக்கும் உற்ற உறவினர் சிலருக்கும் எழுதிய கடிதங்களைப் படித்து, அக்கடிதத்திலே பெண்ணின் பெருங்குணங்கள் தகைமைகளை யறிந்து வெகுவாகச் சந்தோஷப்பட்டார்கள்; தலைமையாசிரியருடைய பெற்றார் இச்செய்தியையறியாத தம் சுற்றமித்திரர் சிலருக்கும் விஷயத்தைச் சொல்ல, அவர்கள் கேட்டு அது செய்யத்தக்கதென்றனர்; சூரிய நாராயண சாஸ்திரியாரின் தந்தையார் தம்முடைய சிறிய தகப்பனாராகிய, வேங்கடாசல சாஸ்திரியார் வீட்டிற்குப் போய் அவருக்கும் தம் மகன் செய்த ஒழுங்குகளைப் பற்றிச் சொல்ல, அவர் "எட தம்பி நம்ம பேரன் எழுதியிருப்பதெல்லாம் சரிதான்; அது நல்ல சம்பந்தத்தான்; ஆனாலும் துழாவி ஆக்கவேணும் கூழை, உசாவிச் செய்யவேணுங் கலியாணத்தை என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்திலே சொல்லுவார்கள்: எந்த விஷயத்தையும் முந்தியே ஆராய்ந்து செய்வது நல்லது; ஆய்ந்தோய்ந்து பாராதவன் கருமம் தான்சாந்துயரந் தருமென்பது பழமொழி; யோசியாமல் ஒரு கருமத்திலே இறங்கிவிட்டுப் பின்னர்ச் சங்கடப்படுவது புத்தியல்ல; ஆதலால் உங்களுளெவரேனும் முந்தியே அங்கேபோய், பெண்ணின் கோத்திரஞ் சூத்திரம் குலம் என்னுமிவைகளையும் குணம் நலம் இலட்சணம் என்னுமிவைகளையும் நேரில் அறிந்தும் பார்த்தும் செய்ய வேண்டியதைச் செய்வது தானே முறையாகும், தம்பி; ஒரு போதும் இந்தக் கலியாணத்தைக் குழப்புதற்கு இப்படிச் சொல்லுகிறேனென் றெண்ணாதே. எங்கள் குடும்பத்துள் இனசனத்தவருள் உன் பிள்ளைக்கான பெண்ணில்லை யென்பது உனக்குதானே தெரியும்; ஆனதால் எதனையும் ஆராய்ந்து செய்வது நல்லது என்று சொல்லிமுடித்தார்; தலைமையாசிரியரின் தகப்பனாரும் "சிற்றப்பா, நீங்கள் சொல்வது முழுவதும் நிசம்; அறியாமலா, சம்பந்தம் பேசும் விஷயத்திலே காலங்கண்ட முதியோர் தலையிடவேண்டு மென்று உலகத்திலே சொல்வது; ஆனால் எனக்கு மகனிருக்கும் இடத்திற்குப் போக இப்போதைக்கு நேரமில்லை; வேறு இங்கிருந்து அங்கே போக்குதற்கான வாய்த்த ஆளுமில்லை; ஆனதால் சிற்றப்பா, உங்களுக்கு ஆகவேண்டிய பயண வசதிகளெல்லாஞ் செய்து வைக்கிறேன்; நீங்கள் தயவு செய்து எனக்காக, மகனிருக்குமிடத்திற்கு ஒரு முறை போய் எல்லாவற்றையும் நல்லாய் ஆராய்ந்து வருவீர்களானாற் பெரிய நன்மையாகும்" என்று பணிவுடன் கேட்டார்; கிழவனார் சற்று நேரம் யோசித்துவிட்டு, "என்ன தம்பி எனக்கும் வயது எழுபத்தாறாகப் போகிறது; இந்தத் தள்ளாத காலத்திலே என்னைப் போய்வரச் சொல்லிக் கேட்கிறாய், ஆனாலும் நல்ல கருமத்திற்கு மறுப்புச் சொல்லவொண்ணாது; சரி, நீ பயணத்திற்கு ஆகவேண்டிய ஆயத்தங்களைச் செய்; நான் ஒரு நல்லநாள் பார்த்துப் புறப்பட்டுப் போய், எல்லாம் விசாரித்துக்கொண்டு வருகிறேன்" என உடன்படுதலும், "அப்படியே செய்யுங்கள்" என்று சிறியதந்தையாருக்குச் சொல்லிவிட்டு, தலைமையாசிரியரின் தகப்பனார் அவரிடம் விடைபெற்றுக்கொண்டு தம் வீட்டிற்கு மீண்டார்.

"நீ சொல்வதும் நியாயந்தான்"

வேங்கடாசல சாஸ்திரியார் ஒரு நல்ல நாளில், தம் வீட்டிலிருந்து புறப்பட்டுப் புகைரத ஸ்தானத்தை யடைந்து புகைரதமேறிக்கொண்டு, சூரியநாராயண சாஸ்திரியார் இருக்குமிடத்தை யடைந்தார்; குறித்த சாஸ்திரியார் புறப்பட்டு வருகிறாரென்ற செய்தியை முந்தியே தமது தகப்பனார் எழுதிய கடிதமூலம் அறிந்திருந்த தலைமையாசிரியர், உடனே புகைரத ஸ்தானத்திற்குச் சென்று கிழவனாரை எதிரேற்று அழைத்துக்கொண்டு வந்து தம் விடுதியில் உபசரித்து இருக்கச் செய்தார்; கிழவனார் தொன்மை பாராட்டி, தமக்குப் பேரன் முறை பூண்ட தலைமையாசிரியருக்குத் தாம் அப்போது அங்கே வந்த நோக்கத்தையும் ஏனைய வரலாறுகளையும் எடுத்துச் சொல்லி, அப்படியான சம்பந்தம் தமக்கும் சம்மதந்தான் என்று கூறினார்; கிழவனார் அந்தப் பெண்ணை நேரிற் காணவிரும்புகிறார் என்பதைக் குறிப்பாலுணர்ந்த தலைமையாசிரியர் "பாட்டா உங்களைச் சிரமப்படுத்துகிறேனென்று குறையெண்ணாதீர்கள்; ஒருநாளைக்குப் பெண் வீட்டிற்கு நீங்கள் போய்ப் பெண்ணைப்பார்த்து வந்தால் நல்லதென நினைக்கிறேன்" எனலும், "பேரா, அந்தப் பெண் உன்னுடைய பள்ளிக்கூடத்திற் படிப்பிக்கும் கன்னிகையாமே, அப்படியானால் நான் போய்ப் பார்ப்பதென்ன? வேணுமானால் இங்கே பள்ளிக்கூடத்திற்கு வரும்போது நான் போய்ப் பார்க்கலாமே" என்று பதில் சொன்னார்; "பார்க்கலாந்தான், ஆனாலும், பாட்டா, அவர்களுடைய வீட்டிற்கு நீங்கள் நேரிற் போய்ப் பார்ப்பது அவர்களைக் கௌரவப்படுத்துவதாகும், எனக்கும் பெருமையாகும், உங்களுக்கும் மரியாதையாகு மென்றெண்ணுகிறேன்; நீங்கள் பெண்வீட்டிற்குப் போதற்கு ஆகவேண்டிய ஒழுங்குகளை நான் செய்து வைக்கிறேன்" என்றார் தலைமையாசிரியர். "நீ சொல்வதும் நியாயந்தான்பேரா; எங்கே எனக்கு வயசு போக வாக்கு மாறிவிட்டது; சரி, எப்பொழுது போக வேண்டும்" என்று கிழவன் சொல்லிக் கேட்க, "நாளை சனிக்கிழமை, பெண்ணும் வீட்டிலே இருக்குஞ் சமயம்; ஆனதால் நாளைக்காலை போசனத்தை முடித்துக் கொண்டு நீங்கள் அங்கே போய்வரலாம்" என்றார் தலைமையாசிரியர்; பாட்டனாரும் அதற்கு உடன் பட்டார். அன்று பின்னேரம் தலைமையாசிரியர் பள்ளிக்கூடத்திலிருக்கும்போதே, ஒரு கடிதத்தை இராமச்சந்திரனுக்கு எழுதி, விலாசமிட்டு அதனை இராமச்சந்திரனிடங் கொண்டுபோய்க் கொடுக்கும்படி தம் கல்லூரிச் சேவகனிடம் கொடுத்தனுப்பினார்; அவன் அப்படியே கடிதத்தைக் கொண்டு போய்க் கொடுத்தான்;

காடு வா என்கிறது வீடு போ என்கிறது

இவை இவ்வாறாக, தலைமையாசிரியருக்கும் இங்கிதத்திற்கும் கல்யாணம் ஒழுங்கு பண்ணுவதற்காக, தலைமையாசிரியருக்கு மூதாதையாயுள்ள ஒரு பெரியவர், தம்மூரிலிருந்து இங்கே வந்து தலைமையாசிரியருடைய விடுதியிலேதான் தங்கியிருக்கிறாராம் என்ற செய்தி முதல் அக்கல்லூரியாசிரியர் மாணாக்கர்கட் கிடையும் பின்னர்க் கல்லூரியின் அயலட்டத் திலும் பரவியது; அக்கல்லூரியின் அயலிற் குடியிருப்பவளும் அக்கல்லூரியிற் படிப்பவளுமாகிய ஒரு சிறுமி தன் வீட்டிற்கு மீண்டவுடனே தன் பாட்டியைக் கண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாட்டி, பாட்டி இங்கே ஒரு புதினம் உங்களுக்குத் தெரியுமோ" என்று வினவ "இல்லையடியம்மா, எனக்குக் கண்ணுந் தெரியாது, காதுங் கேளாது, இந்தத் தளர்ந்த காலத்திலே எந்தப் புதினத்தை ஆரிடங் கேட்டு, நான் பெற்ற மகனின் மகளே, அறிய முடியும்? அல்லாமல் காடு வா என்கிறது வீடு போ என்கிறது; இந்த நிலைமையிலும் புதினம் அறிய வேண்டுமோ எடியம்மா; என் புதினந்தானே இந்த நேரத்தில் பெரும் புதினமாயிருக்கிறது; இருந்தாலும் சொல்லடியம்மா கேட்கிறேன்" என்று பரக்கப் பறைகிறாள் அந்தக் கிழவி; "புதினமென்ன தெரியுமோ, எங்கள் தலைமை உபாத்தியாயருக்கும், எங்களுக்குச் சங்கீதம் சொல்லித்தரும் உபாத்தியாயரம்மாவுக்கும் கல்யாணம் நடக்கப் போகிறதாம்; கல்யாண மெல்லாம் ஒழுங்குபண்ண எங்கள் தலைமை உபாத்தியாயருடைய பாட்டனாரொருவர் வந்து அவருடைய விடுதியிலேதான் தங்கியிருக்கிறாராம்; அப்படியானால் கல்யாணம் நடக்கும்போது எங்களுக்கும் கல்லூரியிலே இரண்டு மூன்று நாள் விடுமுறை கிடைக்கும், இந்தப் புதினத்தைத்தான் பாட்டிக்குச் சொல்ல வந்தேன்" என்று குதூகலத்தோடு சொன்னாள் அந்தச் சிறுமி; உந்தப் புதினமா, உது முந்தியே எனக்குத் தெரியுமெடி பேரப்பெண்ணே, கல்யாணம் ஒழுங்கு பண்ணப் பாட்டனார் வந்திருப்பதென்ன? முந்தியே மாப்பிள்ளையும் பெண்ணுஞ் சந்தோஷமாமே! இனியென்ன ஊருக்காகப் பேருக்காக ஓமம் வளர்த்துத் தாலிகட்டுவதா? இதற்காகத்தான் பெண்டுகளைப் படிப்பிக்கப் படாதென்று நான் நெடுகச் சொல்லுகிறது" என்று உழறினாள் கிழவி; கேட்ட சிறுமி திடுக்குற்றுக் கவலைப்பட்டுக் கிழவியைச்சினந்து, "பாட்டி, பாட்டி, உந்தப் பல்லில்லா வாயால் எலும்பில்லா நாவால் இப்படி அபவாதஞ் சொல்லாதீர்கள்; நீங்களும் அந்தக் காலத்திலே படித்திருந்தால் ஒருபோதும் இப்படிச் சொல்லத் துணிய மாட்டீர்கள்; உங்களுக்கு வயசுபோயும் மயிர் நரைத்தும் தோல் திரைத்தும் பல்வீழ்ந்தும் உடல் தளர்ந்தும் எவரையும் பொல்லாங்கு சொல்லுங் குணம் மாறவில்லை. எங்கள் பெரிய உபாத்தியாயரையும் சங்கீத உபாத்தியாரம்மாவையும் எல்லாரும் பாராட்டிப்பேச நீங்கள் தான் இப்படி அபவாதஞ் சொல்லுகிறீர்கள்; சற்று முன்பு நீங்கள் கண்தெரியாது காது கேளாது, காடு வா என்கிறது வீடு போவென்கிறது என்றெல்லாஞ் சொன்னீர்களே சாகப்போகிற நீங்கள் இந்தக் குணங்களையும் விசாரத்தையும் விட்டுத் தெய்வத்தை நினைக்கலாமே பாட்டி" என்று சொல்வதற்கிடையிற் கிழவி பெருஞ் சத்தமிட்டு அச்சிறுமியை ஏசுதலும், அதற்கிடையில் கிழவியின் மகளாகிய அந்தச் சிறுமியின் தாய் "பாட்டியோடு உனக்கென்னடி மகளே, சண்டை" என அதட்டிக்கொண்டு வந்த பெண்ணிடம் தாயும் முறையிட்டாள்; மகளும் முறையிட்டாள்; கேட்ட அந்தப் பெண் முதல் தன் மகளைப் பார்த்து, "மகாலெட்சுமி, உனக்குப் பாட்டியோடு என்ன வீண்பேச்சு? பாட்டியோடு சண்டையிடலாமா? வயசுபோன காலத்திலே பாட்டி வாயில் வந்ததைப் பேசக்கூடும்; நீ அவைகளைப் பொருட்படுத்தாதே; பாட்டியோடு மரியாதையாகவல்லவா நடந்துகொள்ள வேணும்; படிக்கும் பிள்ளை உனக்கு இது விளங்காதா?" என்று கடிந்து கூறிவிட்டு, தன் தாயைப்பார்த்து "ஆச்சி, சொல்லுகிறேனென்று கோபிக்காதீர்கள்; சிறு பிள்ளைகளோடு இப்படிப் பட்ட விபரீதமான பேச்சுப் பேசலாமோ" என்று சமாதானஞ் சொல்லிவிட்டுத் தன் மகளைக் கூட்டிக்கொண்டு போனாள்; இப்படி இன்னும் பலர் இந்த விவாக விஷயமாகத் தங்கள் மனப் பான்மைக்கேற்பப் பேசிக்கொள்வார்கள். உலகம் பலவிதமல்லவா.

இருவரும் சகோதரிகளா?

சூரியநாராயண சாஸ்திரியார் அனுப்பிய கடிதத்தைப் பார்த்த இராமச்சந்திரன், அதில் அத்தலைமையாசிரியர் தாம் இராமச்சந்திரன் வீட்டிற்குப் பலமுறையுஞ் செல்வதால் உண்மையறியாதார் தம்மை விபரீதமாக நினைத்தலுங் கூடுமெனவும், ஆதலினால் தயவுசெய்து அடுத்த நாட் காலை தம் விடுதிக்கு வந்துபோக வேண்டுமென்னும் கருத்துப்பட எழுதியிருப்பக் கண்டான்; அப்படியே அவன் அடுத்தநாள் தன் காலைக் கடன்களையும் போசனத்தையும் முடித்துக்கொண்டு தலைமையாசிரியருடைய வாசஸ்தானத்தையடைந்தான்; தலைமையாசிரியர் இராமச்சந்திரனை வேண்டியவாறு உபசரித்து இருக்கச் செய்து, தாமும் அவன் பக்கலிலிருந்து தம் பாட்டனார் அங்கு வந்திருக்குஞ் செய்தியைச் சொல்லி, அவரையும் இராமச்சந்திரன் முன்னி லையில் அழைத்து இருக்கச்செய்து, இருவரை யும் ஒருவரோடொருவர் அறிமுகப்படுத்தினார்; பாட்டனாரும் இராமச்சந்திரனும் சிலமணி நேரம் நானா விஷயங்களையும்பற்றிப் பேசிக்கொண்டி ருந்தார்கள்; இதற்கிடையில் தலைமையாசிரிய ருடைய விடுதிச்சாலை வாசலில் ஒரு மோட்டர் ரதம் வந்துநிற்றலும், சங்கேதப்படி வேங்கடாசல சாஸ்திரியும் இராமச்சந்திரனும் அந்த இரதத்தில் ஏறிக்கொண்டு இங்கிதமிருக்கும் இல்லத்தையடைந்தார்கள்; அங்கே தலைவாசலிலிருந்த இராமச்சந்திரனுடைய அபிமானத் தகப்பனார், தம் வீட்டிற்கு வந்த பெரியவரைப் பெரிதும் உபசரித்தார்; இராமச்சந்திரன் அப் பெரியவர் அங்கே வந்த நோக்கமென்ன வென்பதைத் தன் அபிமானப் பிதாவுக்குத் தெரிவித்தான்; அவரும் அப்படியே ஆகட்டுமென்றுசொல்லி மகிழ்ச்சி யடைந்தார். இதற்கிடையில் இராமச்சந்திரன் வீட்டினுட்பக்கம்போய், அங்கு ஒருங்கிருந்த இரஞ் சிதத்திற்கும் இங்கிதத்திற்குஞ் சொல்ல, இரஞ்சிதம் உடனே இங்கிதத்திற்கு அலங்காரஞ் செய்துவிட்டுத் தானும் உடன் நின்றாள்; இராமச்சந்திரன் பெரியவரை அந்த அறையுள் அழைத்துக் கொண்டுபோய் ஒருநாற்காலியில் அமரச்செய்து தானும் பக்கலில் நிற்க, கன்னியரிருவரும் வந்த பெரியவரைப் பஞ் சாங்கமாக வீழ்ந்து வணங்க, அவர் அவர்களுக்கு ஆசி சொல்லி அவர்களை எழுந்திருங்கள் என்று சொல்ல, அவர்களிருவரும் எழுந்து ஒருபுறத்தே ஒதுங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றார்கள்; "இவர்களிருவரும் சகோதரிகளா?" என்று அவர்களைப்பார்த்து அப்பெரியவர் இராமச்சந்திரனை வினவ, இராமச்சந்திரன் "சகோதரிமாரல்லர், ஆனாற் சகோதரத்துவம் பூண்டே யொழுகுகின்றார்கள்" என்று பின் இங்கிதத்தைச் சுட்டி, "இந்த அம்மாள் என் சகோதரி" என்றான்.

உலகம் பலவிதம்: 1946 நவம்பர் 15 விசாலாட்சி: (முற்றொடர் - 123)

"நீ அந்நியளல்லை"

இங்ஙனஞ் சொல்லியபின் இராமச்சந்திரன் அந்த அறையை விட்டுப் புறத்தே வந்திருந்தான் அங்கிருந்து வந்த பெரியவர் இங்கிதத்தைப் பார்த்து, "குழந்தாய், உன்னைப் பார்த்தால் மகாலட்சுமிபோற் காணப்படுகிறாயே! நீ தான் என் பேரனுக்குத் தகுந்த பெண்; நீங்களிருவீரும் நல்லாயிருப்பீர்கள்" என்று பாராட்டிச் சந்தோஷப் பட்டார்; "முதல் ஆண்டவனருள் வேண்டும்: அடுக்க, உங்களைப்போன்ற பெரியோர் ஆசி வேண்டும்" என்று சொல்லி அப்பெரியவரை நமஸ்காரஞ் செய்தாள் இங்கிதம்; "குழந்தாய், உன் பெற்றார் சீவந்தர்களாய் இருக்கிறார்களா? உங்கள் சொந்தவூர் இதுதானா? இல்லையேல், உத்தியோக நிமித்தம் இங்கு வந்து வசிப்பதா? இவைகளைப் பற்றிய விபரங்களை நாம் அறியலாமா? நான் ஊரறிந்த பார்ப்பானடியம்மா; ஆனதால் உங்கள் வரலாறுகளைச் சொன்னால், சிலசமயம் உன் பெற்றார் உற்றார் முதலானோர் எனக்கு அறிமுகமானவர்களாயிருத்தலுங் கூடும்" என்று கூறினார்; "பாட்டா, என்னுடைய வரலாறு முழுவதையும் இங்கு நிற்கும் இந்த அக்காவுக்குச் சொல்லியிருக்கிறேன். இவர்கள் உங்களுக்கு இப்பொழுது விபரமாகச் சொல்லுவார்கள்" என்று இங்கிதம் இரஞ்சிதத்தைக் காட்டிச் சொன்னாள்; "ஆம், பாட்டா, தங்கைச்சியின் வரலாறு முழுவ தையும் நான் சொல்லுகிறேன்" என்று இரஞ்சிதம் மகிழ்ச்சியோடு சொல்ல, "ஆம், குழந்தாய், எவருக்கும் தம் சொந்த வரலாற்றைத் தாம் சொல்வது சற்றுக் கஷ்டமாகத்தான் இருக்கும்; சொல்லடியம்மா, நான் கேட்கிறேன்" என்றார் பெரியவர்; இரஞ்சிதம் இங்கிதத்தின் வரலாற்றிலே சொல்லவேண்டிய பிரதான பாகங்களைத் தொடர்பாகத் சொல்லத் தொடங்கி, அக்குறித்த கல்லூரியில் உத்தியோகத்திலமர்ந்தமை யீறாகச் சொல்லிமுடித்தாள்; "நல்லது, சந்தோஷம்" என்று சொல்லிப்பெரியவர் பின் இங்கிதத்தை நோக்கி, "குழந்தாய், உன் தகப்பனாரின் தகப்பனுடைய பெயர் உனக்கு விளங்குமா" என்று வினாவ, இங்கிதம் "ஆம்" என்று தன் பாட்டனாரின் நாமத்தையுஞ் சொன்னாள்; "உங்கள் பாட்டனாரை நீ நேரிற் பார்த்ததில்லையென எண்ணுகிறேன்: நீ பிறக்க முந்தியே அவர் காலஞ் சென்றிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்; அவர் ஒரு சிறந்த பாகவதராக அக் காலத்திலே மதிக்கப்பட்டவர்" என்றார் பெரியவர்: "ஆம், பாட்டா, எங்கள் பாட்டா ஒரு பெரிய பாகவதர் என்று என் தகப்பனார் எனக்கு சொன்னதுண்டு" என்றாள் இங்கிதம். பெரியவர் பின்னரும் இங்கிதத்தை அன்புடன் பார்த்து "குழந்தாய், உங்கள் தொன்மையான இல்லம் உங்கள் கிராமத்திலுள்ள வரதராசப் பெருமாள் கோயில் மேற்குவீதியில் இப்பொழுதும் இருக்கிறதல்லவா" என்று வினாவ, "பாட்டா நான் எங்கள் பழைய கிராமத்திற்கு இதுவரையிற் போன தில்லை; ஆனல் மேற்படி வரதராசப் பெருமாள் கோயில் மேற்கு வீதியிற்றான் இருக்கிறதென்று என் தகப்பனார் சொல்லக்கேட்டிருக்கிறேன்" என்றாள். கிழவனாருடைய முகம் மலர்கின்றது; அவர் புன்னகையரும்ப, இங்கிதத்தை ஆதரவுடன் பார்த்து "குழந்தாய், நீ எங்களுக்கு அந்நியளல்லையடியம்மா; எங்கள் தாயார் மரபு விளங்க வந்த தையல் நீ; உன் தகப்பன் சிற்றப்பன் இருவரும் எனக்கு மருமக்கள் முறை பூண்டவர்கள். தன் தமயனாருடைய பெண் குழந்தை இன்ன இடத்திலிருப்பதென்பது தனக்குத்தெரிய வில்லையென்று ஒருபோது எங்களிடம் வந்திருந் தால் தெரிவிக்க வேண்டுமென்றும் சில மாசங் களுக்குமுன் உன் சிற்றப்பன் கவலையோடு எனக்கொரு கடிதமெழுதியிருந்தார்; நான் சில நாள் விசாரித்தபின் அப்படியான குழந்தை இங்கு வரவில்லை, அயலட்டத்தில் விசாரித்தேன் அகப் படவில்லை" என்று நானும் துயரத்துடன் உன் சிறியதந்தைக்குக் கடிதம் எழுதிவிட்டு கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். அந்தக் குழந்தை நீ தானே" என்று ஆநந்தத்தோடு கிழவனார் கேட்க "ஆம் பாட்டா, பெற்றார் உற்றார் அயலார் அண்டினார் எல்லாருக்கும் என்னைத் தேடி வைக்கப் பிறந்த பாவி நான்தான் தாத்தா" என்று கண்களில் நீர் ததும்பச் சொன்னாள் இங்கிதம் "ஏனடியம்மா அப்படிச் சொல்கிறாய், கவலைப் படவேண்டாம்; எங்கள் தாய்மரபு தந்தை மரபென்னும் எந்த மரபிலும் ஏதும் மாசிருந்தால் அந்த மாசைத் துடைத்துத் தூய்மையாக்கப் பிறந்த குலதீபம் நீ தான் என்று எண்ணித் தேறவேண்டுமடியம்மா என்று அந்தப் பெரியவர் பரிவுடன் அவள் கண்களில் ததும்பும் நீரை தம் உத்தரியத்தினால் ஒற்றி, அவளுடைய முதுகைத் தடவி உச்சிமோந்தார்; இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் இருந்த இரஞ் சிதம் உள்ளம்பூர்த்தாள்.

வேரோடி விலகி முளைத்தாலும் தாய்வழி தப்பாது

பின்னரும் பெரியவர் இங்கிதத்தை நோக்கி "குழந்தாய், உன்னுடைய நாமமென்ன சொல்லம்மா" என்று வினவ, "இங்கிதம்" என்றாள் அயலிலே நின்ற இரஞ் சிதம்; "உனக்குத் தக்க நாமம் இது" என்று பெரியவர் சொல்லிவிட்டு, பின்னரும் இங்கிதத்தை நோக்கி, "குழந்தாய், இங்கிதம், வேரோடி விலகி முளைத்தாலும் தாய்வழி தப்பாது என்றபடி, நீ எங்கே பிறந்து எங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்தாயானாலும் பழையபடி எங்கள் மரபில் வந்து சேர்ந்துவிட்டனை; என் பேரன் சூரிய நாராயண சாஸ்திரியிடம் எனக்கு எவ்வளவு அன்பும் அபிமானமு முண்டோ, அவ்வளவு அன்பும் அபிமானமும், குழந்தாய் இங்கிதம், இப்பொழுது எனக்கு உன்னிடத்திலும் பிறக்கின்றன; சூரிய நாராயணசாஸ்திரியின் தகப்பன், எவ்வகையிலும் உன் மாமன், பெண்பார்த்து வரும்படி என்னை இங்கே வரச்செய்தான்; நான் இங்கு வந்தது இப்பொழுது பெரும் நன்மையாய் முற்றியது; வந்தவிடத்தில் உன்னைக்கண்டது, நித்திய தரித்திரன் திரவியப் புதையல் கண்டெடுத்த நிலைபோலாயிற்று; இனி உங்கள் விவாகம் நிறைவேறவேண்டியதற்காகிய முயற்சிகளைச் செய்யலாம் என்று கூறிப் பின்னரும் இங்கிதத்தை நோக்கி, "இவை இவ்வளவிலிருக்க, குழந் தாய் சேரிடமறிந்து சேர் என்றவாறு நீ வந்து அண்ட, உன்னை யாதரித்துவரும் இவர்களும் உத்தமமான அந்தண மரபினரென்பதை நான் முந்தியே அறிவேன்; இந்த உத்தமர்களை வந்தடைந்தமையினால், வெரு துலையிற் சிந்திய நீர் முத்தினொளியை அடைதல்போல, நீ மேலும் மேன்மையையடைந்தாய்; (இரஞ்சிதத்தைக் காட்டி) இந்தக் குழந்தை உடன் பிறவா விட்டாலும் ஒருவயிற்றிற் பிறந்த தமக்கைபோல் உன்னிடத்தில் அன்பும் ஆதரவும் பாராட்டி வருகிறாளென்பதை, இப்பொழுது சற்று நேரம் இங்கிருந்து நேரிற் கண்டுகொண்டேன்; நீ அண்ணனென மதித்து ஊடாடும் இராமச்சந்திரனும் அப்படிப்பட்ட உத்தமனாவன்; மற்றை இந்த வீட்டிலுள்ள பெரியவர்களும் உன் பெற்றார் சுற்றத்தவர்களை ஒப்ப உன்னிடத்தில் அன்பும் அபிமானமும் பாராட்டி வருகிறார்களென்பதை என் பேரன் சூரிய நாராயணசாஸ்திரி சொல்ல அறிந்தேன்; இவர்களை நீ என்றும் மறவாமல் எக்காலத்திலும் இவர்களிடத்து நன்றி பாராட்டி நடத்தல் வேண்டுமடியம்மா; நீ நல்லாயிருப்பாய்" என்று வாழ்த்திவிட்டு இரஞ்சிதத்திற்கும் இனிய வார்த்தை சொல்லிவிட்டுக் கிழவனார் இருந்த அறையை விட்டுப் புறப்பட, இங்கிதம் இரஞ்சித மென்னு மிருவரும் அவரை அழைத்துக்கொண்டு வந்து இராமச்சந்திரனும் அவனுடைய அபிமானப் பிதாவுமிருக்கும் தலைவாசற்பக்கத்திற் சேரச் செய்தார்கள்; வேங்கடாசல சாஸ்திரியார் இங்கே வருதலும் அவர்களிருவரும் இருக்கைவிட்டெழுந்து அவரை ஆசனமிருத்தி உபசரித்தனர்.

"அகத்தி ஆயிரங் காய்த்தாலும் புறத்தியே புறத்தி"

இங்கிதமும் இரஞ்சிதமும் தலைவாசற் பக்கலை நீங்கி விசுவநாதனும் விசாலாட்சியு மிருக்குமிடத்திற்குச் சென்றார்கள். இரஞ்சிதம், அந்தப் பெரியவர் அங்கே வந்தது முதலாக, அவர் தலைவாசற் பக்கம் போனது அறுதியாக சகல விபரங்களையும் விசுவநாதன் விசாலாட்சி யிருவருக்கும் எடுத்துச் சொன்னாள்; அங்கே வந்திருக்கும் பெரியவர் இங்கிதத்தின் மூதாதையாவரென்ற செய்தியை இரஞ்சிதம் சொல்லக் கேட்ட விசுவநாதனும் விசாலாட்சியும் அற்புதமும் ஆநந்தமும் அடைந்தார்கள்; "என்ன ஆச்சரியம்! பாருங்கள், எல்லாரும் ஒரே மரபினராகக் காணப்படுகின்றனரே; வெவ்வேறு இடத்திற் பிறந்து வளர்ந்தவர்கள் ஈற்றில் இப்படி வந்து ஒருங்கு சேர்ந்து சம்பந்தப்படுவது இறைவன் செயல்தானே" என்று விசாலாட்சி அற்புதத்தோடு தன் நாயகனுக்குச் சொன்னாள்; "எல்லாம் அவன் செயல்தான்" என்றான் விசுவநாதன்: இவைகளையெல்லாம் அவதானமாகப் பார்த்துக் கொண்டுங் கேட்டுக்கொண்டும் அயலே நின்ற இராமன் விசாலாட்சியைப் பணிவுடன் பார்த்து, "அம்மா, இன்னுஞ் கொஞ்சநாள் இங்கே தங்கியிருந்தால் நீங்களும் இவர்களுடைய இனத்தவர்களாவீர்களோ" என்று விநயமாகக் கேட்க, விசாலாட்சி புன்னகை செய்து, "இல்லை இராமன், இவர்களெல்லாரும் பிராமண குலத்தினர் நாங்கள் வேளாண் குலத்தவர்களாவோம்; ஆனதால் இம்மையில் நாங்கள் இவர்களுக்கு இனத் தவர்களாய் வருதல் முடியாது; அகத்தி ஆயிரங் காய்த்தாலும் புறத்தியே புறத்தியென்ற பழமொழியை நீ அறியாயா?" எனப் பதில் கூறினாள். "அக்கா அப்படியேன் சொல்லுகிறீர்கள்: இரஞ் சித அக்காவுக்கும் எனக்கும் எல்லாரைக் காட்டிலும் அருமையான உற்ற சுற்றத்தவர்கள் நீங்களென்றே நம்பியிருக்கிறோம்; உங்களை மறந்தால் நாங்கள் துரோகிகளாவோம்" என்று கவலைகூரச் சொன்னாள் இங்கிதம்; எங்களு டைய அருமையான அக்கா இடையிடையே எங்கள் மனநிலையைச் சோதிப்பதற்கு இப்படிச் சுடச் சொல்லுவது முண்டு; அதனையிட்டுக் கவலைப்பட வேண்டாம் தங்கைச்சி" என்று சமாதானஞ் சொன்னாள் இரஞ்சிதம்; "நான் சொன்னது தவறு, அன்பு மேலீட்டினால் வேடிக்கையாகச் சொல்லிவிட்டேன்; பொறுத்துக் கொள்ளவேண்டும்" என்று பச்சாத்தாபத்துடன் சொன்னாள் விசாலாட்சி; விசுவநாதன் இம்மூவரும் வார்த்தையாடும் முறையை அவதானித்துப் புன்சிரிப்புச் செய்து கொண்டு, இரஞ்சிதத்தைப் பார்த்து "தங்காய், இப்பொழுது அந்தப் பெரியவர் எங்கேயிருக்கிறார்? என்று கேட்க, "தலைவாசலில் மாமாவுடன் பேசிக் கொண்டிருக்கிறார்" என்று இரஞ்சிதஞ் சொல்ல, விசுவநாதன் தலைவாசலை நோக்கிச் சென்றான்.

"குஞ்சரி வந்து இந்திரனிடத்தில் வளர்ந்தவாறு"

இராமச்சந்திரனுடைய அபிமானப்பிதா வேங்கடாசல சாஸ்திரியாரை நோக்கி, "உங்கள் பேரனுக்கு நிச்சயித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணைப் பார்த்தீர்களா? அந்தப் பெண்விஷயமாக உங்களுக்கு எல்லாம் திருப்திதானே" என்று கேட்க, "திருப்தியா, ஐயா, குஞ்சரி (தெய்வநாயகியம்மை) வந்து இந்திரனிடத்தில் வளர்ந்தா" ளென்று சொல்லப்படுகிறதே; அதுபோலத்தான் எங்கள் குழந்தை இவள் உங்கள் வீட்டில் வளர்ந்து வருகிறாள்; இது அக்குழந்தையும் நாங்களுஞ் செய்த புண்ணியந்தான். இங்கிதம் வேறானவளல்லள்; இவளும் எனக்குப் பேர்த்திமுறை பூண்ட குழந்தை; உங்களுடைய வீட்டிற்கு வந்தமையினாற்றான், இந்த இரகசியங்களையெல்லாமறிந்தேன்; இனி, நீங்களும் எங்கள் உறவினராவீர்களென்பதை நாளடைவில் அறிவீர்கள்" என்று பதில் சொன்னார் பெரியவர். கேட்ட இராமச்சந்திரனும் அவனுடைய அபிமானப் பிதாவும் அற்புதமும் மகிழ்ச்சி யுமடைந்தனர். இதற்கிடையில் விசுவநாதனும் அங்கு வந்து அவர்களுடன் கலந்து பேசிக் கொண்டிருந்தான், பின்னர் இராமச்சந்திரனுடைய அபிமானப் பிதா அந்தப் பெரியவரைப் பார்த்து "ஐயா, இங்கிதம் உங்கள் சந்ததியிற் பிறந்த பெண்ணென்றால், இப்பெண்ணின் சிறியதந்தையார் சிறியதாயார் முதலாம் சுற்றத்தார் சீவந்தர்களா யிருக்கிறார்களாமே; அவர்களை இப்பெண்ணுக்கும் உங்கள் பேரனுக்கும் கல்யாணம் நடக்கும் சமயத்தில் வரவழைக்கலா குமல்லவா? அப்படிச் செய்தல் இந்தப்பெண்ணுக்கும், மணமகன்பக்கலாருக்கும் இங்குள்ள எல்லாருக்கும் பெருமையாகவும் சந்தோஷமாயு மிருக்குமல்லவா" என்றார்: "அப்படியே செய்ய நான் இப்பொழுது நிச்சயித்திருக்கிறேன்" என்றார் பெரியவர்; பின்னரும் பெரியவர் சற்றுநேரம் அங்கிருந்து அளவளாய்ப் பேசிக்கொண்டு இராமச்சந்திரனுடன் இரதத்திலேறித் தலைமையாசிரியர் வசிக்கும் விடுதிச்சாலையையடைந் தார்: தலைமை யாசிரியருக்கு இங்கிதமும் தமக்குப் பேர்த்திமுறை பூண்ட பெண்ணென்பதைச் சொல்லி, அவளுடைய குணாதிசயங்களையும் பாராட்டிப் பெரியவர் பேச, கேட்ட ஆசிரியர் முன்னரைக்காட்டிலும் அவள்மீது கூடிய ஆர்வம் பூண்டார்; வேங்கடாசல சாஸ்திரியார் பின்னரும் இரண்டு தினம் அங்கே தங்கியிருந்து, தம் பேரனிடம் அநுமதி பெற்றுக்கொண்டு தம் ஊருக்கு மீண்டார்.

★ ★ ★

உலகம் பலவிதம்: 1946 நவம்பர் 22
விசாலாட்சி: (முற்றொடர் - 124)

"பழம் நழுவிப் பாலில் விழுந்தவாறு"

தம்முடைய ஊரைச் சேர்ந்தவுடனே வெங்கடாசல சாஸ்திரியார், தலைமையாசிரியரின் தகப்பனார் தாயாருக்கு மகனுடைய சுகத்தைப் பற்றியும் மகன் மணஞ்செய்ய நிச்சயித்திருக்கும் பெண்ணைப் பற்றியும் சொல்லி, பழம் நழுவிப் பாலில் விழுந்தவாறு அந்தப் பெண் தங்களுடைய சொந்தப் பெண் என்பதனையும் எடுத்துச் சொல்லி, அதுவே உங்கள் மகனுக்கு வாய்த்த சம்பந்தமென்றுங் கூறிமுடித்தார். கேட்ட பெற்றோரும் ஆனந்தமடைந்தனர்; அதன்பின்னர் மகன் தன் பெற்றோருக்கு எழுதித் தம்மிடம் கொடுத்த கடிதத்தை வேங்கடாசல சாஸ்திரியார் தகப்பனாரிடங் கொடுக்க, அவர் படித்து மகிழ்ந்தார். அக் கடிதத்தில் "பாட்டனார் சொல்வதைக் கேட்ட பின் உங்களுக்கும் சம்மதமானால் விவாகத்திற்காகிய சுபநாளை நிச்சயித்து முந்தியே தெரிவியுங்கள்" என்றும் வரையப்பட்டிருந்தது; தலைமையாசிரியரின் தந்தையார் தமது சிறிய தகப்பனாராகிய சாஸ்திரியாரோடு கலந்து யோசித்து இரண்டு வாரம் பிந்தி ஒரு சுபநாளை நிச்சயித்து, குறித்த சுபநாள் பெண் வீட்டாருக்கும் இணக்கமாக விருந்தால், அந்நாளில் விவாகத்தை நடத்துவது உத்தமமாகும் என்று தம் மகனுக்கு ஒரு கடிதம் வரைந்தனுப்பினார்; தந்தை அனுப்பிய கடிதத்தைத் தலைமையாசிரியர் படித்துவிட்டு இராமச்சந்திரனைத் தமது வாசஸ்தானத்திற்கு வரச்செய்து, அவனுக்கு விஷயத்தைத் தெரிவிக்க, அவன் உடனே மீண்டு போய்த் தன் அபிமானப்பிதாவோடுங் கலந்து யோசித்து, மணமகன் பக்கலார் நிச்சயித்துத் தெரிவித்த விவாக முகூர்த்தம் பெண் வீட்டாருக்கும் பொரு த்தமானதெனக் கண்டான்: நாள் நிச்சயஞ் செய்தமை அங்கிருக்கும் இரஞ்சிதம் இங்கிதம் விசுவநாதன் விசாலாட்சி யெல்லார்க்கும் தெரிவிக்கப்பட்டது; இந்த மங்கல செய்தியையறிந்த விசாலாட்சி இங்கிதத்திற்குச் சொல்லி மகிழும்படி இங்கிதமிருக்குமிடத்திற்குப் போதலும், அங்கே இங்கிதமும் இரஞ்சிதமும் ஒருங்கிருக்கக் கண்டாள்; இவள் வரவைக்கண்ட அவர்கள் இருக்கை விட்டெழுந்து முற்பட்டுச் சென்று விசாலாட்சியின் கைகளை ஆளுக்கொன்றாகப் பற்றி அழைத்துக்கொண்டு வந்து தங்கள் மத்தியில் இருத்தினார்கள். இருந்த விசாலாட்சி "இரஞ்சிதத் தங்கைச்சியின் கலியாணக் காட்சியைக் காணவந்த விடத்தில், இங்கிதத் தங்கைச்சியின் கலியாணக் காட்சியையாயினும் காணும் பேறு பெற்றோம்: இதுவும் எங்களுக்குச் சந்தோஷந்தான்" என்றாள். கேட்டுக்கொண்டிரு ந்த இரஞ்சிதம் நாணம் தலைக்கொள்ள நிலத்தைப் பார்த்தவண்ணமிருந்தாள்; இங்கிதத்தின் முகம் மாறுபாடடைந்தது; இங்கிதம் விசாலாட்சியை முகவாட்டத்துடன் பார்த்து, "அக்கா, நீங்கள் இங்கே வந்தது என் அக்காவின் விவாக சோபனத்தைப் பார்த்து மகிழ்ந்து கொண்டாடிப் போவதற்கா; இதனை உண்மையாய் இப்பொழுதுதான் நான் அறிந்தேன்; அக்கா என்னுடன் பிறவாவிட்டாலும் உடன்பிறவா மாமலையிலுள்ள மருந்தே பிணிதீர்க்கும் என்ற பிரகாரம் இரஞ்சித அக்கா உடன்பிறந்த சகோதரத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிலும் எனக்கு அதிகமாவர்; ஆனதனால் என் அக்காள் கன்னிகையாகவிருப்ப இளையாள் நான் கல்யாணஞ்செய்ய நினைப்பதுவுந் துரோகம்" என்று கண்களில் நீர்ததும்பச் சொல்லியெழுந்து நின்றாள்.

தாராதத்தஞ் செய்வது யார்?

உடனே பக்கலிலிருந்த இரஞ்சிதமும் விசாலாட்சியும் முறையே அவள் கண்ணீரை முன்றானையால் ஒற்றி அவளைத் தேற்றினர்; பின்னரும் விசாலாட்சி இங்கிதத்தை பார்த்து, "தங்காய் இங்கிதம்; இரஞ் சிதத்தின் விவாகந்தான் முதல் நடப்பது முறை; சகோதரி இரஞ்சிதத்திற்கு விவாகம் நிச்சயமா யிருப்பதனாற் பிந்தி நடந்தாலும் பிழையல்ல ஆனால் ஒரு கருமத்தையிட்டுத்தான் யோசிக்கிறேன்; நாளைக்கு உமக்கு விவாகம் நடக்கும்போது, உம்மைத் தாரதத்தஞ் செய்வது யார் என்றதையிட்டுத்தான் சிந்திக்கிறேன்..." என்று சொல்லி முடிப்பதற்கிடையில் இரஞ்சிதம் விசாலாட்சியைப் பார்த்து, "ஏன், அக்கா, நீங்களும் விசுவநாத அண்ணாவுஞ் செய்து கொடுக்கலாகுமே; நாங்களிருவரும் உங்களிருவரையும் முறையே எங்கள் தாய் தந்தையராகப் பாவித்துத்தான் நடக்கிறோம்; அப்படி நடப்பதில் ஏதும் பிழை செய்திருந்தாற் பொறுத்துக்கொள்வது உங்கள் கடனாகும். வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய் தேடுவதா? அக்கா நீங்களிருவீரும் தாரதத்தஞ் செய்யலாகுமே என்றாள். "தங்காய், நீர் சொல்வது நியாயம்; ஆனால் வருண வேற்றுமை அப்படிச் செய்தற்கு இடையூறாக விருக்கிறதே; நீங்கள் உடன்பட்டாலும் உங்கள் இனசனத்தார் சுற்றத்தார் உடன்படார்களே இவைகளையிட்டுத்தான் யோசிக்கிறேன்" என்று விசாலாட்சி சொல்லுதலும், "அக்கா ஆளில்லாத் துயரம் அழுதாலும் தீராது: இதற்கு நான் என்ன செய்யலாம் என்று கவலைப்பட்டாள் இரஞ்சிதம்: "தங்காய், இரஞ் சிதம் கவலைப்படவேண்டாம், உபாயஞ் சொல்லித் தந்தால், தட்டாமல் அப்படியே செய்வீரா" என்று விசாலாட்சி புன்னகையுடன் கேட்க, தங்கைச்சியின் நன்மையை உத்தேசித்து என்னாற் செய்யத்தக்கதைச் செய்யத்தானே வேண்டும்" என்று சிந்தனையோடு பதில் சொன்னாள் இரஞ்சிதம்; "தாராதத்தஞ் செய்யப் பெண்ணுக்குப் பெற்றார் உதவாரானால், பெண்ணின் சிறியதந்தை சிறியதாய் இருவருஞ் செய்யலாம்; அவர்களுமில்லையாயின், பெண்ணின் தமயனும் அவன் மனைவியுஞ் செய்து கொடுக்கலாம்; ஐந்து பிதாக்களில் தமயனும் ஒரு பிதாவாக மதிக்கப்படுகிறான்; ஐந்து தாயருள், தமயன் மனைவியும் ஒரு தாயாக மதிக்கப்படுகிறாள்; ஆதலினாலே, தங்காய், இரஞ் சிதம், உங்கள் விவாகம் முந்தி நிறைவெய்துமானால், பின்னர் இங்கிதத்தங்கையின் கலியாணத்திற்கு எவ்வ கைக் குறையும் நேராதே; நீங்களிருவீரும் தாரதத்தஞ் செய்யலாமே" என்று அழகுறப் பேசினாள் விசாலாட்சி: கேட்ட இரஞ்சிதம் பதிலொன்றும் பகராது சற்று நேரம் நிலத்தைப் பார்த்த வண்ணஞ் சிந்தித்தபடி நின்றாள்; சற்று நேரஞ் செல்ல, "அக்கா, உங்கள் சொல்லைத் தட்டிப் பேசுகிறேனென்று என்னைக் கோபிக்காதீர்கள், என்னுள்ளம் இன்னமும் துறவறத்தையே விரும்புகிறது; நான் என்ன செய்வேன்: உங்கள் விவாகத்தைத் தரிசித்தேன். தங்கையின் கலியாணத்தைத் தரிசிக்கப்போகிறேன்; இவ்வளவும் போதும்" என்று சஞ்சலத்துடன் விசாலாட்சியை நோக்கிப் பன்னினாள் இரஞ்சிதம்: "அம்மா, இரஞ்சிதம் இந்த விஷயமாக நீர் இன்னமும் ஏன் சஞ்சலப்படுகிறீர்; நீர் இல்லறத் திற் புகவேணும், புகும்போதும் இராமச்சந்திர ஐயாவுக்கு இல்லாளாக அமையவேண்டும் என்பது நீர் கும்பிடப்போன கதிர்காமத்தையனுடைய திருவுளச் சம்மதமென்பதை மறந்துவிட வொண்ணாது: கதிர்காமத்திற்குப் போகும் மார்க்கத்திலே, வெருகல் கங்கையில் மூழ்கும்போது, நீர் மாத்திரம் மூழ்கினீரல்லீர்; உம்மோடு யாத்திரைவந்த அத்தனை பேரும் ஸ்நானஞ் செய்தார்கள்; அவர்களுளொருவரை அந்த ஆற்று வெள்ளம் அள்ளிச் செல்லாது உம்மையே அள்ளிச் சென்றது; உம்மை ஆறு அள்ளிக் கொண் டோடும்போது அங்கு நின்றவர்களெல்லாரும் உம்முயிரைப் பாதுகாக்க நினைத்துப் பதை பதைத்து வெள்ளத்தில் நீந்தி உம்மை மீட்க முயன்றார்கள்; ஆனால் அவர்களால் முடியாதாக இராமச்சந்திர ஐயா மாத்திரமே உம்முடைய உயிரைக் காத்தாரென்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள்: அந்த நேரத்தில் நீங்கள் யாரென்பதையும் அவர் அறியார்; ஆனதால் அச்செயல் கதிர்காமத்தையனுடைய திருவரு ளால் நிகழ்ந்ததென்று நாம் சிந்தித்து, அக்கந்தக் கடவுளைப் பயபத்தியுடன் வணங்குவதே யொழிய, வேறு எதனையும் கனவிற்றானும் நினைக்கலாமா? அல்லாமலும், தங்காய், இரஞ்சிதம் உங்களிருவரையம் பார்த்துக் கதிர்காமத்திலுள்ள கற்பகனார் கந்தனும் வள்ளியும் போல வாழ்வீர்கள் என்றார். துறவறத்தைக் காட்டிலும் இல்லறமே நல்லறமென்பர் பெரியோர்; அறுபத்துமூன்று நாயன்மாருட் பெரும்பாலினோர் இல்லறத்தை இனிது நடத்தி மேலான கதியடைய வில்லையா? இல்லறத்திலே துறவறமுண்டு, துறவறத்திலே இல்லறமுமுண்டு, அம்மா, நீர் அவரை விவாகஞ்செய்ய வேண்டுமென்பதே உமது வாழ்வை விரும்பிய எங்களுக்கெல்லாம் பெரும் விருப்பமாகும்; உம்முடைய உயிரை மீட்டவருக்கு நீர் பிரதி உபகாரஞ் செய்வதென்றால், அவருக்குச் சிறந்த வாழ்க்கைத் துணையாக அமைந்து இருமைக்குத் துணை புரிவது தான்" என்று முகத்திற் குறுவேர்வையரும்ப, விழிகளில் நீர் துளிர்ப்ப, அபிமானத்தோடு சொல்லி முடித்தாள்; விசாலாட்சியின் ஆர்வமான பேச்சை அவதானமாகக் கேட்டுக்கொண்டு நின்ற இருவருக்கும் அவள் பண்டிதையென்ற ஞாபகம் மீட்டும் வந்தது; இரஞ் சிதம் சிலநிமிஷம் யோசித்த வண்ணம் நின்று, பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாலாட்சியை அன்புடன் பார்த்து, "அக்கா, நீங்கள் கவலைப்படவேண்டாம்; நீங்கள் சொல்லுகிறபடி செய்கிறேன்" எனலும், விசாலாட்சியும் இங்கிதமும் பெருமகிழ்ச்சி யடைந்து தங்கள் ஆசனத்தில் ஒருங்கு இருந்து ஒருவரையொருவர் பாராட்டிப் பேசினர்.

மணநாளும் நிச்சயிக்கப்படலாயிற்று

பின்னர் விசாலாட்சி அவ்விருவரிடத்தும் அநுமதி பெற்றுக்கொண்டு தன் நாயகனிருக்கு மிடத்தையடைந்து, விஷயம் முழுவதையும் தெரிவிக்க விசுவநாதனும் "அதுதக்க" தென்றான். பின்பும் விசாலாட்சி அவ்விஷயத்தை இரஞ்சிதத்தின் மாமனாரிடம் சொல்லும்படி விசுவநாதனைக் கேட்க, அவன் அதற்கு உடன்பட்டுத் தலைவாசற் பக்கத்திலிருந்த இரஞ் சிதத்தின் மாமனாரிடந் தெரிவித்து, இரஞ்சிதத்தின் விவாகத்தைத் தரிசிக்கவென்று ஊரைவிட்டு நாங்கள் வந்து பலநாட்களாயின் ஆனதால், அதனையும் நிறைவேற்றி வைத்தால், நாங்கள் இரு மங்கல கருமங்களையும் தரிசித்துக் கொண்டு விரைவில் ஊருக்கு மீண்டுபோதல் இயலும்" என்றான். அதனைக்கேட்ட ஐயரும் "நீர் சொல்வது முழுவதும் நியாயமாகும்; இரஞ்சிதம் விவாகஞ் செய்யும் விஷயத்தில் இன்னமும் பின்னிற்கிறாளென்ற காரணத்தினாற்றான், நானும் பராமுகமாயிருந்துவிட்டேன்; உமது மனைவியார் இரஞ்சிதத்தை விவாக விஷயத்தில் தீர்க்கமாகச் சம்மதிக்கச் செய்தமை எனக்கு வெகு சந்தோஷம்; இராமச்சந்திரனுக்கும் இவ்விஷயத்தைத் தெரிவித்து, முதல் இவர்களுடைய விவாகத்தையே திருவருளை முன்னிட்டு நிறைவேற்றி வைப்போம். அடுத்துவருஞ் சுபநாளில் மற்றைய விவாகத்தையும் ஆண்டவனருளாற் பூர்த்தி செய்யலாம்" என்றார்; விசுவநாதனும் கேட்டுக்கொண்டு மகிழ்ச்சியுடன் வந்து தன் மனையாட்கு நிகழ்ந்தவற்றைச்சொல்ல அவளும் மனம் பூரித்தாள்; சற்று நேரம் செல்ல இராமச்சந்திரன் அங்கே வந்தான்; அவனுடைய அபிமானப்பிதா அவனுக்கு விஷயத்தை விபரமாகச் சொல்லி, அவனுக்கும் இரஞ்சிதத்திற்கும் முந்தி விவாகம் நிறைவேற வேண்டுமென்றதற்குச் சில ஏதுக்களையும் எடுத்துக் காட்டினார். கேட்ட இராமச்சந்திரன் "உங்கள் வாக்குக்கு எதிர்வாக்குண்டோ" என்று சொல்லி அப்படியே விவாகஞ் செய்தற்கு உடன்பட்டான்; இந்தப் புதிய ஒழுங்கு சூரியநாராயண சாஸ்திரி யாருக்கும், அவர்மூலமாக அவருடைய இனசன த்தார்க்கும் தெரிவிக்கப்பட்டது; சூரியநாராயண சாஸ்திரியாரும் சுற்றத்தவரும் அந்த மங்கல செய்தியை யறிந்த மாத்திரத்தே பெருமகிழ்ச்சி கொண்டாராய், தாங்களும் விவாகப்போதிற் சமூகஞ்செய்ய விரும்புவதாகத் தெரிவித்தார்கள். இராமச்சந்திரன் இரஞ்சிதமென்னுமிருவரின் விவாகம் நிறைவேறிய பின், சிலநாள் கழித்து, அந்த மணப்பந்தலிலேயே சூரியநாராயண சாஸ்திரியார் இங்கிதமென்னு மிவர்களின் விவாகத்தையும் நிறைவேற்றுவதென நிச்சயஞ் செய்ததோடு, இராமச்சந்திரன் இரஞ் சிதமிருவருக்கும் மணநாளும் நிச்சயிக்கப்படலாயிற்று: விவாகத்திற்காகிய ஆயத்தங்களும் முயற்சிகளும் துரிதமாய் நடக்கலாயின.

* * *

உலகம் பலவிதம்: 1946 நவம்பர் 29
விசாலாட்சி: (முற்றொடர் - 125)

"ஆராயினும் நல்லாயிருந்தால் எங்களுக்குஞ் சந்தோஷந்தானே"

மங்கல மண விஞ்ஞாபனங்களை யனுப்பியும், கடிதமெழுதியும், சம்பந்திகள் குடும்பத்தைச் சேர்ந்த ஆண்கள் பெண்கள் உற்றசுற்றத்தவர் வீடுகள்தோறுஞ் சென்று நேரிலே தெரிவித்தும், இரஞ்சிதத்திற்கும் இராமச்சந்திரனுக்கும் நிகழவிருப்பதாகிய விவாக மங்கல செய்தியை பல ஊர்களிலும் பரப்பினார்கள்; சூரியநாராயண சாஸ்திரியாருக்கும் அவருடைய இனசனத்தவர்களுக்கும் மணவோலை விடுக்கப்பட்டன; இராமச்சந்திரன் இரஞ்சித மென்னுமிவர்களுடைய உற்ற சுற்றத்தினருட் பலர் விவாகத்திற்கு நிச்சயிக்கப் பட்ட தினத்திற்கு இரண்டொரு தினம் முந்தியே மணமகன் வீட்டையும், மணமகள் வீட்டையும் முறையே அடைந்து ஆகவேண்டிய கருமங்களைப் பார்த்தார்கள்; இரஞ் சிதத்தின் மாமனாருடைய இல்லமே மணமகளில்லமாகப் பாவிக்கப்படலாயிற்று: இரஞ்சிதத்தின் பெற்றாருஞ் சில தினங்கட்கு முந்தியே தங்கள் வீட்டை விடுத்து இந்த வீட்டிலேயே வந்திருந்தார்கள்; இந்த மங்கல செய்தியைப் பல ஏதுக்களால் அறிந்தவர்களாகிய அந்த அயலிலுள்ள பெண்கள் இருவர் விவாகத்தையுமிட்டுப் பலவாறு பேசத் தலைப்பட்டனர். "நடுச்சாமத்திலே மாமன் வீட்டை விட்டுக் கரவாக ஓடிப்போன இரஞ் சிதம் பிறகு எப்போதடி மீண்டு மாமன் வீட்டிற்கு வந்தாள்? எனக்கு இதைப்பற்றி யொன்றுந்தெரியாதே; வீட்டை விட்டு ஓடிப்போனாளென்று அந்த நாளிற் கேள்விப்பட்டேன்; இப்பொழுது அவளுக்கும் அந்த ஐயங்காருடைய வளர்ப்பு மகன் இராமச்சந்திரனுக்குங் கலியாணம் என்பதை இன்றுதான் கேள்விப் பட்டேன்; இடையில் நடந்ததெதனையும் நான் அறியேன்" என்றாள் இரஞ்சிதத்தின் மாமனாருடைய வீட்டிற்கணித்தாக வசிக்கும் பங்கஜம் என்னும் பேரிளம்பெண்; "அக்கா, கிணற்றுத்தவளைக்கு நாட்டு வளப்பமேன்? ஒரு கருமமும் அறியாமல் நாம் எவரையும் குறைசொல்லுவானேன்? சிறிய தாயின் கொடுமை சகிக்கமுடியாது, சொல்லாமல் பேசாமல் அந்த நேரத்தில் இரஞ்சிதம் மாமன்வீட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு ஓடிவிட்டாளென்ற கதை பிறந்தது; அவளைத் தேடி இராமச்சந்திரன் புறப்பட்டானென்றுங் கேள்விப்பட்டேன்; அவன் எங்கோ அவளைத் தேடிக் கண்டு சந்தித்துக்கூட்டி வந்தானென்றும், வரும்போது இன்னுஞ் சில பிராமணச் சாதியாரல்லாதார் ஆண்களும் பெண்களும் அவர்களுக்குத் துணையாக வந்து உங்கேயிருக்கிறார்களென்றும் கேள்விப்பட்டேன்; மாப்பிள்ளைக்குச் சம்மதமானபடியினாற்றானே அவன் அவளை விவாகஞ் செய்ய உடன்பட்டான்; ஆராயிருந்தாலும் நல்லாயிருந்தால் அது எங்களுக்குஞ் சந்தோஷந்தானே" என்று சமாதானஞ் சொன்னாள் பாடசாலையில் மேல் வகுப்பிற் படித்து விடுமுறை நாளில் தன் வீட்டிற்கு மீண்டுவந்து நிற்பவளாகிய சாவித்திரி யென்னுங் கன்னிகை.

"வரவரக்காலம் மாறுகிறது"

"தனக்கு நிச்சயஞ்செய்த மாப்பிள்ளை மோசம் போனமையினால், இனி தான் இன்னொருவனுக்கு வாழ்க்கைப்படுவதில்லை, துறவியாய் காலங்கழிப்பேனென்று பிடிவாதஞ் செய்த இந்த இரஞ்சிதம், இப்போது கல்யாணத்திற்கு உடன்பட்டிருக்கிறாள்தானே; இந்த நாளிற் பெண்பிள்ளைகளை நம்பக்கூடாது, இவையெல்லாம் இப்பொழுது அவர்கள் படிக்கிற படிப்பினாலும், பழகும் பழக்கத்தினாலும், கூடுங் கூட்டத்திலுந் தான் உண்டாயின; அந்நாளில் நாங்கள் இப்படியேதும் எண்ணங்கொண்டால் எங்கள் இனத்தார் எங்களைப் புறக்கணித்துவிடுவார்கள்; வரவரக் காலம் மாறுகிறது; அல்லாமலும் இந்த வீட்டை விட்டு, ஊர்விட்டுத் தேசம் விட்டு எவரும் அறியாமல் ஓடிப்போன பெண்ணை ஒருவன் கல்யாணம் முடிக்கச் சம்மதித்தானே, இதுவும் இக் காலத்தின் கோலந்தான்" என்று ஒரு கிழவி தனக்குப் பேர்த்திமுறை பூண்ட ஒரு இளம் பெண்ணுக்கு சொன்னாள். அதனைக் கேட்ட அந்தப்பெண் "பாட்டி, நரை திரை மூப்படைந்த, அனுபவப்பட்ட நீங்களும் இப்படிச் சொல்லலாமா? ஒருவருடைய குணத்தையுங் குணக்கேட்டையும் எங்களால் அறியமுடியுமா? இரஞ்சிதம் படிக்குங் காலத்திலேயே நான் அவளுடன் ஊடாடியுள்ளேன்; அவள் அப்போதும் ஒரு சற்குணமான பிள்ளை; தெய்வத்திற்கும் தன் மனச்சாட்சிக்கும் பயந்து நடப்பவள்; சிறியதாய் செய்த கொடுமையைச் சகிக்க முடியாமல் வீட்டைவிட்டு ஓடிப்போனாளென்பது தான் நிசம்; பாட்டி, "சிறைகாக்குங்காப்பு எவன்செய்யும் மகளிர் - நிறைகாக்குங் காப்பே தலை" என்றபடி சுற்றுமதிலோடு கூடிய அரமனையிலிருந்தாலும் பிழை செய்வோர் பிழையைத்தான் செய்வர்; கற்பென்னுந் திண்மை யுடையவர்கள் ஆயிரக்கணக்கான ஆண்கள் வசிக்குமிடத்திலே சஞ்சரித்தாலும் தவறு செய்ய மாட்டார்கள் புலி அறப்பசித்தாலும் புல்லைத் தின்னப் போவதில்லை, பாட்டி, மேலும் தாரமுங் குருவுந் தலைவிதியென்று சொல்லுவார்கள்; எல்லாம் நாம் நினைத்தபடி முடிவதல்ல; ஆனதால், பாட்டி, எல்லாம் அறிந்த நீங்கள் எலும்பில்லா நாக்கினால் ஆராயாமல் எதனையும் பேசிவிடவொண்ணாது: சொல்லால் வருந்தோஷம் பொல்லாதது பாட்டி" என்று அந்தக்கிழவிக்குத் தெருட்டினாள்; அந்த இளம்பெண் சொன்னதை அவதானமாகக் கேட்ட கிழவி "நீ சொல்வது நிசந்தான்" என்று கூறிச் சமாதானமடைந்தாள்; இப்படிப் பலரும் இந்த விவாகத்தைப்பற்றிப் பலவாறு இதாகிதம் பேசினார்கள்; உலகம் பல விதமல்லவா?

"இரஞ்சிதம் - இராமச்சந்திரன் விவாக நிகழ்ச்சி"

இவை இங்ஙனமாக, குறித்த விவாக முகூர்த்த தினத்தன்றும், மணமக்கள் வீட்டாரின் அழைப்பிற்கிணங்கி பல நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் மங்கலகரமாக மணமகனில்லத்திலும் மணமகளில்லத்திலும் வந்து சேர்ந்தனர்; பாலசிங்கன் வீராசாமி என்னுமிவர்களும், பெண்களுள் அஞ்சுகத்தம்மாளும், மணமகள் இல்லத்திலே விசேஷமாகக் காணப்பட்டனர்; வேற்று வருணத்தவராயினும், விசுவநாதன் ஆண் பாலரையும் விசாலாட்சி பெண்பாலாரையும் வரவேற்று உபசரிக்கக் காணப்பட்டனர்; விவாக முகூர்த்தமாதலும் மங்கல வாத்திய சகிதமாக, வைதீக முறைப்படி செல்வச் சிரஞ்சீவி இராமச்சந்திரனுக்கும் திருவளர் செல்வி இரஞ்சிதத்தம்மாளுக்கும் விவாகம் இனிது நிறைவேறலாயிற்று; இரஞ்சிதத்தின் தாய்தந்தையரே தங்கள் புதல்வியை, அந்தணர் ஆசி கூற, பெரியோர் வாழ்த்த, மங்கல வாத்திய மொலிப்ப மணமகனுக்குத் தாராதத்தஞ் செய்தனர்: அதன்பின்னர் நடக்கவேண்டிய சடங்குகளும் விதிப்படி நடந்தன. நாலாநீர் ஊஞ்சலாட்டல் ஊர்வலம் வருதல் முதலிய கிரியைகளும் அடுத்த அடுத்த நாட்களில் நடைபெறலாயின: அந்தச் சமயத்திலே சமூகஞ்செய்யவியலாமல் இருந்த தூரத்தானங்களிலுள்ள நண்பர்கள் சுற்றத்தவர்கள் தந்தி மூலமாகவும், கடித மூலமாகவும் "தம்பதிகள் சகல ஐசுவரியங் களையும் பெற்று இன்புற்று இனிது வாழும் வண்ணம் இறைவன் திருவருளை வேண்டுகின்றோம்" என்னுங் கருத்தமைய வாழ்த்துச் செய்திகளனுப்பினர்.

சூரியநாராயணசாஸ்திரி இங்கிதத்தின் விவாகம்

இராமச்சந்திரன் இரஞ்சிதமெனப்படும் தம்பதிகளிருவரின் விவாகக் கொண்டாட்டம் நிறைவெய்தி இரண்டுநாள் கழிந்தபின் தலைமை யாசிரியர் சூரியநாராயண சாஸ்திரியாருக்கும், இங்கிதத்திற்கும் நிச்சயிக்கப்பெற்ற மணநாள் வருதலும், முந்திய மணப்பந்தரிலேயே பழைய அலங்காரங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகற்றிப் புதிய அலங்காரங்கள் செய்யப்படலாயின; தூரித்த ஊர்களிலிருந்து வந்தவர் தம் ஊருக்கு மீண்டு போதலின்றி, அங்குத்தானே பல உபசாரங்களுடன் தங்கியிருந்தனர். இப்படியானவர்களுட் பிரதானமான வர்கள் சூரியநாராயண சாஸ்திரியாரின் பெற்றார் சுற்றத்தார், அஞ்சுகத்தம்மாள், வீராச்சாமி, பால சிங்கன் இன்னுஞ் சிலர்; இவர்களைத் தவிர இந்த விவாகசோபனத்தின்பொருட்டு, குறித்த தினத்திற்கு மணமகனாகிய சாஸ்திரியாரின் ஊரிலும் அயலூர்களிலும் இருக்கும் நண்பர் சுற்றத்தார் முதலியோரும், உடன் கல்விபயிற்றும் உபாத்தியாயர்களும், மாணாக்கர்களும் கணக்கின்றி வந்து குழுமினர்; மேள வாத்தியகாரர், பேர்பெற்ற சங்கீத வித்துவான்கள், நாட்டிய மகளிர் மணமகனுடைய ஊரிலிருந்து அழைக்கப் பெற்றார்கள். சுருங்கச் சொல்லிகில், இராமச்சந்திரன் இரஞ் சிதமென்னு மிவர்கள் விவாகக் கொண்டாட்டத்தின் பொருட்டு செய்யப்பட்ட ஆயத்தங்களைக்காட்டிலும், இவ்விவாகக் கொண்டாட்டத்திற்கெனச் செய்த ஆயத்தங்களுஞ் சிறப்புக்களும் அதிகமெனலாம். அங்ஙனமாயினும், இதற்கு அங்குள்ளவர்களெல்லாரும் சந்தோஷமடைந்தார்களேயொழிய பொறாமை கொண்டார் எவருமில்லையெனலாம். சுபமுகூர்த்தம் சமீபித்ததும், பெண் வீட்டினரும் மற்றை யோரும் ஒருங்கு சேர்ந்து புறப்பட்டுச் சென்று பள்ளிக்கூடத்திலுள்ள விடுதிச்சாலையிலிருந்து சகலவரிசைகளோடும் சிறப்புக்களோடும் பெண் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்தனர்; வந்த மணமகனுக்குச் செய்ய வேண்டிய உபசாரங் களையெல்லாம், இராமச்சந்திரனும் இரஞ்சிதமும் அவளுடைய பெற்றாருஞ் செய்து அழைத்துச் சென்று மணவறையில் இருக்கச் செய்தார்கள். அதன்பின் ஆகவேண்டிய மங்கல கிரியைகளெல்லாம் கிரயமாக இயற்றப்பெற்றன. முதனாள் விவாகக் கிரியை நிறைவேறியவுடன் இங்கிதம் மணமகனையும் பின்னர்த் தன்னை மகளாகப் பாவித்துத் தாராதத்தஞ் செய்தவர்களாகிய இரஞ்சிதத்தின் பெற்றோரையும், அதன் பின்னர் இராமச்சந்திரனையும் இரஞ்சிதத்தையும் முறையே பஞ் சாங்கமாக வீழ்ந்து வணங்கினாள்; வணங்கியெழுந்து நின்றவள், அந்த மணப் பந்தரிலே முதல்வரிசையில் ஏனைய அந்தணர்களுடன் நடக்குங் கிரியைகளை யெல்லாம் அவதானமாகப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு பிராமணவுத்தமர் முன்னிலையில் அன்னமென நடந்து "சிற்றப்பா, நான் செய்த பிழைகளையெல்லாம் பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்று கிளியென மொழிந்தபடி, அவர் அடிகளிற் பஞ்சாங்கமாக வீழ்ந்து வணங்க, அந்தப் பெரியார் "மகிழவேண்டிய சமயத்திலே கவலை வேண்டாமடியம்மா, எழுந்திரு" என்று தம் இருகரங்களாலும் அவள் கரங்களை மெல்லப் பற்றி எழச்செய்ய, அவள் எழுந்து மயிலென ஒதுங்கி நின்றாள்; அச் சபையிலிருந்தோரும் மணமகனாகிய சாஸ்திரியாரும் அவர் யாரென்றறியாமையினால் அற்புதத்தோடு நோக்கினர்; பின்னரும் இங்கிதம் அவரைப் பணிவுடன் பார்த்து, "சிற்றப்பா, என் அருமைத் தங்கைச்சி எங்கே" என்று ஆவலுடன் கேட்க, "உன் தங்கை என்னுடன் வந்து இப்பொழுது உங்குள்ள பெண்களுடன் இருக்கிறாள் அம்மா" என்றார். இவ் வார்த்தையைக் கேட்டவுடனே அங்குள்ளவர்கள் அந்தப் பெரியவர் இங்கிதத்தின் சிறிய தகப்பனென அயிர்த்தனர். மணமகனாகிய சூரியநாராயண சாஸ்திரியும் உடனே சென்று அவரை வணங்க அவர் இருவருக்கும் ஆசிகூறினார். அதன்பின்னர் இங்கிதம் பெண்களிருக்கும் பக்கத்திற்குப் போனபோது, அவளுடைய தங்கை அவளிடம் ஓடிவர, அவள் தங்கையை அணைத்து,அவள் முதுகைத் தடவி இனிய வார்த்தை கூறி மகிழ்வித்தாள்; அங்கிருந்த மற்றைப் பெண்களெல்லாரும் அச்சிறுபெண் இங்கிதத்தின் சிறியதந்தையின் மகளென்பதையும், அங்கு வந்திருப்பவர் இங்கிதத்தின் சிறியதந்தை யென்பதையும் அறிந்து சந்தோஷப்பட்டனர். அன்று தொடக்கம் நான்கு நாட்களாக, வைதிகக் கிரியைகளும் உபசரணைகளும் குறைவின்றி நடைபெற்றன; தம்பதிகளை அந்தணர் ஆசீர்வதித்தனர்; ஏனைய பெரியோர் பெண்கள் வாழ்த்தினர்; மாணாக்கர்கள் வாழ்த்துப் பாக்களைப்படித்து, தம்பதிகளுக்குப் பல சந்மானங்களை வழங்கினர். சகல கருமங்களும் மங்கலமாக நடந்தேறியன.

சம்பூரணம்

விவாகம் நிறைவேறியபின் தம்பதிகள்

மணமகனுடைய ஊருக்குச் சுற்ற மித்திரருடன் சென்று சில தினம் அங்கே தங்கி மீண்டுவந்து தங்கள் கல்லூரிக்கணித்தாக ஒரு பெரியவீட்டில் இருந்து, இருவரும் கல்லூரியிலேயே கடமையாற்றிக்கொண்டு வருவாராயினர்; இங்கிதம் தன் கணவனுடன் தனது சிறியதந்தையார் வீட்டிற்கும் இடையிடையே சென்று சில நாள் தங்கி மீண்டு வருவாளாயினாள். இரஞ் சிதம் இங்கிதமென்னுமிவர்களுடைய விவாகம் நிறைவேறியபின்னரும் சிலதினம் அங்கே தங்கி யிருந்து விசுவநாதனும் விசாலாட்சியும் இராமனும் அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு தங்கள் ஊருக்கு மீண்டார்கள்; இக் கதையிற் சொல்லப்பட்ட மூன்று தம்பதிகளும் சகல ஐசுவரியங்களையும் அநுபவித்துக் கொண்டு இடையிடையே யொருவரிடம் ஒருவர் சென்று அன்பு பாராட்டி ஒரே குடும்பத்தினர்போல், இறைவனருளால் இனிது வாழ்வாராயினர்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் 4

உலகம் பலவிதம்: 1947-1951

சிவபாக்கியம் கண்ணகியம்மை

உலகம் பலவிதம்: 1947 ஜனவரி 17

கடலும் கலங்கித் தெளியும்

"நான் பெற்ற மகளே, கடலுங் கலங்கித் தெளியும் என்றவிதமாய் உங்கள் அப்பரை அகாலத்திலே பறிகொடுத்த துன்பம், ஒரு அளவிற்கு உன்னாலும் உன் அண்ணனாலும் ஆறி வருகிறதென்றெண்ணியிருந்தேன்; உன் அண்ணன், என் அருமைமகன், எங்கள் குடும்பத்திற்கொரு ஆண்பிள்ளை, நானும் நீயும் பொருள்பண்டமில்லாமல் இடைஞ்சற்படுவதைக் கண்டு, மனஞ்சகியாமல் சின்ன வயசிலேயே எங்களைப் பிரிந்து ஊர்விட்டு, தேசம்விட்டுக் கடல்தாண்டி, மலாய் நாட்டிற்கு உழைக்க வேண்டுமென்று சொல்லிப் புறப்பட்டு ஒன்பது வருடங்களானமை, மகளே நீ அறியாததல்ல; என் பிள்ளை அந்நிய நாட்டிலே தன் தேகசுகத்தைப் பாராமல், தன் நன்மைகளைச் சிந்தியாமல், தன்னையொறுத்து, பெற்ற தாயென்று எனக்கும், உற்றதங்கைச்சியென்று உனக்கும் மாசம்மாசம் தன்னால் இயன்ற பணத்தை அனுப்பிவந்தான்; அதனைக்கொண்டே நானும் நீயும் மகளே, வறுமையிற் செம்மையாகக் காலங்கழித்து வந்தோம்; யுத்தம் உண்டான காலத்திலும் என் பிள்ளையின் பணம் இங்கு வந்து சேருதல் முடியாதாக, எங்கள் நாட்டு அரசினர் உன் அண்ணன் புண்ணியத்தினால் மாதத்துக்கு மாதம் உனக்கும் எனக்கும் பணந் தந்து வந்தார்கள்; சண்டை நடந்த காலத்திலே என் பிள்ளையின் கதி என்னவாகுமோ என்று நானும் என்னோடு நீயுங் கலங்கிய கலக்கம் இன்னமும் முற்றாகத் தீரவில்லை; இப்பொழுதும் அந்த நேரத்திலே நாங்கள் பட்ட அவலத்தை நினைத்தால் உள்ளம் நடுங்கும் உடல் பதறும்; ஆனாலும் நானும் நீயுங் கையெடுத்துக் கும்பிட்ட அந்த அப்பனுடைய அருளால் உன் அண்ணன் ஆபத்துக்கெல்லாம் தப்பிச் சுகமேயிருத்தல் நாங்களிரண்டுபேருஞ் செய்த புண்ணியமென்று அறிந்துகொள்ளடி மகளே; என் பிள்ளை பணமனுப்பிக் கடிதமெழுதும்போதெல்லாம் உன் கல்யாணத்தையிட்டே கவலைப்படுகிறானென்று நீயே அவனுடைய கடிதத்தைப் படித்துப் படித்து எனக்குச் சொல்லியிருக்கிறாய்; என் தமயனார், உன் மாமனார், உன் அண்ணனையும் உன்னையும் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி உங்களைத் தமிழும் இங்கிலீசும் படிக்க வைத்தது நிசம்; அவருடைய உதவியினாலேதான் உன் அண்ணன் தூர தேசத்திலாயினும் ஏதோ உத்தியோகம் பார்த்துத் தன்னையும் எங்களையும் பாதுகாத்து வருகிறான்; நீயும் உன் மாமனுடைய உதவியினாலேதான் வறுமையறியாது படித்து, நாலும்படித்த பெண்பிள்ளைகளுடன் ஒருத்தியென்று மதிக்கத் தக்கவளாயிருக்கிறாய்; உங்கள் மாமனார் உங்களைப் படிப்பித்ததோக்கம், நல்ல நோக்கத்தோடுதானென்பதையும் நான் மறந்து போகவில்லை; உனக்கும் உன் சொந்த "மச்சான்" இராசசேகரன் போன்ற ஒரு உத்தமன் கணவனாய் வந்துவாய்ப்பது அருமையென்பதை நான் அறிவேன்; ஆனால் அவனை உனக்குக் கணவனாகப் பெற நீயும், என் சொந்த மருமகனே உனக்குக் கணவனாகி எங்களுடைய குடும்பக் கருமங்களை நடத்த நானும் கொடுத்து வைக்கவில்லை; மகளே, எழுதா விதிக்கு அழுதாவதென்ன? உன் அத்தான் உயிரோடு இருக்கிறானென்பதை நிச்சயமாக அறிந்திருந்தால், என் அருமை மகளே, சொல்லுகிறேனென்று கவலைப்படாதே, நீ இரண்டு வருடமல்ல இன்னும் நாலு வருடமல்ல, மேலும் எத்தனை வருஷஞ் சென்றாலுங் காத்திருக்கலாம்; நம்பியிருக்கலாம்; அதிலுஞ் சந்தேகமென்றால், நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி வயிறார உண்ணாமல், அசைவற உறங்காமல் கண்ணீருங் கம்பலையுமாகவிருந்து இன்னும் எவ்வளவு காலங் கலங்கப்போகிறாயடி கண்ணே; என் அருமை மருமகன்மேல் எனக்கு அன்பில்லையென்றா நினைக்கிறாய்...” என்று இப்படிக் கண்ணகியம்மை தன் மகளுக்குச் சொல்லி முடிப்பதற்கிடையில், மகளாகிய சிவபாக்கியம், தன் செவ்விய இரு கைகளாலும் காதுகளைப் புதைத்துக்கொண்டு கண்கணில் நீர் வடிய, முகம் வாட, நா உலர, நெஞ்சந் துடிப்ப, மனம் அலமரப் பின்வருமாறு சொல்லுகிறாள்:

“எரிகிற கொள்ளியை ஏறத் தள்ளியதுபோல்”

“அம்மா, உங்களைப்போல் அருமையான தாய் எங்களுக்குக் கிடையாதென்பது நிசம்; எங்கள் அப்பர் எங்களை விரகறியாப் பருவத்திலே விட்டுப் பிரிந்துபோய்விட, நீங்களே எங்களிருவரையும் தாயோடு தந்தையுமாக விருந்து பேணி வளர்த்துவந்தீர்கள்; இப்பொழுதும் வளர்த்துவருகிறீர்கள்; இந்த நன்மையை நானாக, என் அண்ணனாக மறந்தால் பெருந்துரோகிகளாவோம்; எங்கள் உயிருள்ள பரியந்தம் அம்மா, உங்களையும் நீங்கள் செய்துவரும் நன்மைகளையும் மறக்கவே மாட்டோம். ஆனால் வார்த்தைக்கு எதிர்வார்த்தை பேசுகிறேனென்று என்னைச் சினக்கவேண்டாம் அம்மா, வெறுக்கவேண்டாந் தாயே; நீங்களெனி லோ உலகவாழ்க்கையிலேபுகுந்து, வரக்கூடிய இன்பந்துன்பம், சுகம் துக்கம், செல்வம் வறுமை நய நஷ்டம், இன்னுமுள்ள நன்மை தீமைகளையெல்லாம் பல வருடகாலம் உற அநுபவித்து வெறுத்து வைராக்கியம் பூண்டிருக்கிறீர்கள்; இனிமேல் உங்களுக்கு எதிலும் அதிக விருப்பும்வெறுப்பும் தோன்றா;உங்கள் இல்லற வாழ்க்கை பொய்யாய்க் கனவாய்ப் பழங்கதையாய் மெல்லப் போய்விட்டது; ஆனால், அம்மா, உலக இயல்பைப்பற்றியும் சுக துக்கங்களைப் பற்றியும் ஏதுமறியாச் சிறுமியாகிய என்னையும் உங்கள் நிலைமையில் வைத்துப் பேசுகிறீர்களே; அடுப்பிலே தானேகிடந்து எரியுங் கொள்ளியை ஏறத் தள்ளி விட்டதுபோல, என்பாட்டிலேயிருந்து சஞ்சலப்படும் என் மனத்தை, சஞ்சலம் போதாதென்று, சுடும் வார்த்தைகளை இடையிடையே சொல்லி மேலும் மேலுஞ் சஞ்சலப்படுத்துகின்றீர்களே.”

“கைக்கெட்டியது வாய்க்கெட்டாதவாறு”

அம்மா, கைக்கெட்டியது வாய்க்கெட்டா நிலையிற் கிடந்து தியங்கும் எனக்குத் தேறுதல் சொல்லவேண்டிய நீங்கள், அதனை மறந்து இடையில் ஏதோ சொல்லிச் சொல்லி என் உள்ளத்தைப் புண்படுத்துகிறீர்களே, எனக்கு ஆறுதலான வழியென்றெண்ணி, அம்மா, நீங்கள் மாறுதலான மார்க்கத்தையல்லவா எடுத்துச் சொல்லுகிறீர்கள்; என் மனநிலைமையை நீங்கள் உள்ளபடி யுணர்ந்திருந்தால், ஒருபோதும் இப்படியான வார்த்தைகளை எனக்குச் சொல்லமாட்டீர்கள்; என்மனத்தில் வேகும் வேக்காட்டை என்நெஞ்சு அறியும், அந்த ஆண்டவன் அறிவான், வேறுயார் அறியப்போகிறார்கள்? அம்மா, நீங்கள் மனம் வருந்தவேண்டாம் பெருமூச்சுவிடவேண்டாம்; இப்பொழுது என்னை என்ன செய்யச்சொல்லுகிறீர்கள்” என்று பரிபவத்துடன் சொன்னாள் சிவபாக்கியம், சொல்லுகிறேனென்று கவலைப்படாதேயடியம்மா, உன் மைத்துனன்மீது எனக்கு அன்பில்லையென் றெண்ணிக்கொள்ளாதே; அவன் வேறு என் மகன் வேறல்ல; ஆனால் அந்தப்பிள்ளையின்கதி யென்னவாயிற்றோ என்று உன் அண்ணன் கவலைப்படுகிறாரே, அந்தவூரிலிருந்து சிலவாரங் கட்கு முந்தி இங்கே வந்தவர்களை வினாவிய போதும் நமசிவாயத்தைப்பற்றித் தாம் ஏதும் அறியவில்லையென்று உன் மாமனாருக்கு அவர்கள் சொன்னார்களென அவர் எனக்குச் சொல்லிக் கவலைப்பட்டார்; மேலும் “தங்காய், என் பிள்ளையின் கதி என்னவாயிற்றோ என்று நினைக்கும்போதெல்லாம் என் வயிறு பற்றி எரிகிறது; அவன் உயிரோடிருந்தால் இதுவரையில் இங்கே வராமல், வர வாய்க்கா விட்டால், ஒரு கடிதமாயினும் எங்களுக்கு எழுதாமற் சும்மாவிருப்பானென்றா நினைக்கிறாய்; ஆனாலும் என்பிள்ளை உயிரோடில்லையென்று நினைக்க என்மனஞ் சகிக்கவில்லை பாவம், அந்தப் பெற்றவள், நான் பாவி, சொல்லும் தேறுதல் வார்த்தையைக் கேட்டுக் கேட்டுக் கலங்குவதும் தேறுவதுமாகத் தேக்கிலையில் நீர்போல நின்று தியங்குகிறாள்; சோதிடர்களையும் ஆருடஞ் சொல்வோரையுங் கேட்டால், அவர்கள் உண்டோ இல்லையோ என்ற சந்தேகம் எங்களுக்கு நீங்காதபடி சிலேடையாகச் சொல்லுகிறார்கள்; எனக்கு என்னசெய்வதென்று புலப்படவில்லை; எங்கள் அருமை மகன் உயிரோடு மீண்டு வந்தால் நாங்கள் செய்த பாக்கியமென்றெண்ணிச் சந்தோஷப்பட வேண்டியதுதான்; இல்லையேல் நானும் அவனுடைய தாயும் இப்படியான தளர்ச்சியான காலத்திலே தீராக்கவலையோடு சாகவேண்டியது தான்; தங்காய் பிள்ளைப்பாசம் சகிக்கமுடியாதது! ஆனால் உனக்கு ஒன்று சொல்லுகிறேன் கேள், உன் மகளோ தகப்பனில்லாதவள்; அவளுடைய கருமத்தைப் பார்க்க வேண்டியவனும் நானே, இலவுகாத்த கிளி போல, என் பிள்ளையை நம்பியிருந்து என் அருமை மருமகள் தன் காலத்தை அவமே கழிக்கவிடுவது எனக்கும் உனக்கும் நீதியல்ல; ஆனதினால் நானும் என்னால் இயன்ற முயற்சி செய்கிறேன்; அவளுக்கு ஒரு தக்க வரனைத் தேடிக் கல்யாணஞ் செய்து வைக்க நீயும் உன்னால் இயன்ற முயற்சி செய்; என் அருமை மகனுக்கு என்று உன் மகளைச் சிறுவயசு தொடக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயம் செய்திருத்தல் ஊருக்குத் தெரியுமாதலால் ஒருவரும் என் மருமகளுக்குத் தாமாகச் சம்பந்தம் பேசி வருவார்களென நாங்கள் காத்திருக்கவொண்ணாது...” என்று நேற்று நான் அண்ணன் வீட்டிற்குப் போனபோது அவர் கவலையோடு சொன்னார்; மகளே, அதன்பிறகு தான் நான் இப்படி உனக்குச்சொல்லுகிறேன்” என்று தாய் மகளுக்குத் துயரத்தோடு சொன்னாள்.

***

உலகம் பலவிதம்: 1947 ஜனவரி 24 (முற்றொடர் - 02)

“நெஞ்சையொளித்தொரு வஞ்சகமில்லை”

“அம்மா, அறிவிலும் அநுபவத்திலும் வயசிலும் முதிர்ந்த நீங்கள் இப்படியெல்லாம் வாயில் வந்தவைகளைச் சொன்னால், ஒன்றுமறியாதவளாகிய நான் செய்வதென்ன? சொல்லுவதென்ன? தம்முடைய மகனின் கதி என்னவாயிற்றோ என்று மாமனார் கலங்குகிறார்; நீங்களும் உங்கள் மருமகனுடைய செய்தி எப்படி முடிந்ததோ என்று கவலைப்படுகிறீர்கள்; அவரையிட்டு நானும் சஞ்சலப்படாமலிருக்க முடியுமா? அவர் எனக்கு அந்நியரல்லர்; ஆனால், அவருக்கு ஏதும் ஆபத்துநேர ஆண்டவன் விடமாட்டாரென்பதே என் திடமான நம்பிக்கை; அவர் விஷயமான செய்தியொன்றும் அகப்படவில்லையெனக்கண்டவுடனே, உங்கள் அண்ணா புறப்பட்டு மலாய் நாட்டிற்குப் போய் என் அண்ணனுடைய உதவியையுங்கொண்டு அவரைப்பற்றி விசாரித்தறியவேண்டியதல்லவோ முறை, அவருடைய கதி என்னவெனத் தெரியாதிருக்கும் நிலையில் மாமா புறப்பட்டு அந்தவூருக்குப் போய் எங்கும் தேடி அவரைக் காண முயற்சி செய்யாமல் வீட்டிற்றானே கவலைப்பட்டுக்கொண்டிருப்பதும் மாமிக்குத் தேறுதல் சொல்லுவதும், அம்மா, நீங்கள் என்விஷயமாக வேறு ஏதோ நினைப்பதும் பெருந்தவறாகும்; மாமா போகவேண்டாம், நீங்களும் போகவேண்டாம், உங்களுடைய வயசிலும் நிலைமையிலும் இந்த நேரத்தில் நான் இருப்பனேயானால் நானே அவரைத் தேடிப் புறப்பட்டிருப்பேன்; தாயே, நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை யென்று சொல்லுவர்; என் கருமமாக நீங்கள் யோசிக்கும் எண்ணம் ஏதும் நிறைவேறப்போவ தில்லை. நான் என் மைத்துனருக்கே யுரியவள்; அவருக்கு ஏதும் ஆபத்து நேருமென்று நினைக்க என்மனம் இடங்கொடுக்கவில்லை; அப்படியேதும் நேருமானால் என் நியதியைக் காக்க வழி எனக்குத் தெரியும்; இப்படி நான் சொல்லுகிறேனேயென்று, அம்மா, நீங்கள் கவலைப்படவேண்டாம்; என்னையிட்டுக் குறையெண்ண வொண்ணாது” என்று தாய் சொல்லுவதை கொண்டவள்போற் கண்களில் நீர் ததும்பச் சொல்லி முடித்தாள் சிவபாக்கியம்; இப்படிச் சொல்லக்கேட்ட தாய் திகைத்தபடியிருந்தாள்.

தாரமுங் குருவுந் தலைவிதி

தாய் சிறிதுநேரம் யோசித்தவண்ண மிருந்து நெட்டுயிர்த்துக் கவலையோடு கூடியவளாய் மகளைப் பார்த்து “எங்கள் அருமைச் செல்வியே, நீ இப்பொழுது எனக்குச் சொல்லி வந்தவை நீதியானாலும் இறுதியிலே நீ சொன்னவார்த்தை என்னுயிரைக் கொள்ளை கொண்டு போகிறது; “தாரமுங் குருவும் தலைவிதி” யென்பது நீ அறியாததல்ல, என் அருமை மருமகனுக்கு ஏதும் ஆபத்து வரவொண்ணாதெனத் தெய்வத்தை எந்தநேரமும் நான் வேண்டிக்கொள்ளுகிறேன்; எல்லாம் அவனருளாலே நடப்பன என்பதையும் படித்த நீ அறிவாய்; தெய்வ சங்கல்பத்தை மாற்றப் பிரமனாலும் முடியாது. உங்கள் தகப்பனாரும் நானும் என் அண்ணனும் உங்களிருவருக்குமே விவாகஞ் செய்து வைப்பதென நீங்கள் குழந்தைகளாயிருந்த காலத்தில் நிச்சயம் பண்ணி வைத்தது நிசந்தான்; ஆனால் இப்பொழுது தகப்பனாரே தம்முடைய மகன் உயிரோடு இருக்கிறாரோ இல்லையோ எனச் சந்தேகப்பட்டு மனம் வருந்துகின்றார்; தகப்பனில்லாப் பிள்ளையாகிய நீயும் நெடுநாட் குமரிருப்பது முறையல்லவென்றெண்ணி அவர் உன் நன்மையை விரும்பித்தான் உன்னையும் ஒரு கரையிற் சேர்க்கவேண்டுமென எனக்குச் சொல்லுகிறார்; உங்கள் மாமனுடைய சம்மத மில்லாமல் நான் வேறு ஏதும் ஒழுங்கு செய்ய நினைத்தாற்றான் மகளே, நீ என்னைக் குறை சொல்லலாம்; இந்தக்காலத்திலே ஒருபெண், அவளும் இளம்பெண் தனியே இருப்பதென்றால் முடியுமா? ஒருபெண், விவாகமின்றி நீடித்த காலமிருந்தால், உற்றார் சுற்றத்தார் மதியார்; ஊரார் குறை சொல்வர்; பொல்லாத உலகம் எலும்பில்லா நாக்கினால் இல்லாதபழி சொல்லும். நீ நியதியோடிருக்கிறா யென்பதை உலகம் எப்படியறிய முடியும்? பெண்ணாய்ப் பிறந்தவள், அவளுள்ளும் இளம் வயசுள்ளவள், கன்னிப்பருவமுடையவள், வேறு காரணம்பற்றித் தன்னுயிரை மாய்த்தாலும், உலகம் அநியாயமான காரணத்தையல்லவா சொல்லும்; அல்லாமலும் இந்தக் காலத்திலே விவாக நிச்சயஞ் செய்து, மாப்பிள்ளை பெண் வீட்டிற்குப் போகிற சமயத்திலே, சீதனப் பிணக்கினாலோ, வேறு காரணத்தினாலோ கல்யாணங் குழம்பிவிட, அந்த மாப்பிள்ளைக்கு வேறு பெண்ணையும், அந்தப் பெண்ணுக்கு வேறு மாப்பிள்ளையையும் உடனுக்குடன் ஒழுங்குபண்ணிச் சடங்கு செய்துவைத்ததையும் அறிவோம்; ஆனதால், மகளே, உலகத்திலே நடவாததொன்றை நான் சொல்லவில்லை; செய்யாத தொன்றைச் செய்யச்சொல்லி உன்னைக் கேட்கவுமில்லை; ஆதலினாலென்றாற் காரியமில்லை; அவன் சமயம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வரும்போது தன் கருமத்தைத் தானாக முயற்சி பண்ணிச் செய்துகொள்ளுவான்; அதனாற்றான் உன் அண்ணன் விஷயமாக நான் ஏதொன்றும் இப்போது பேசவில்லை; நீயோ பெண்பிள்ளை; உன் கருமங்களைப் பெற்றார் சுற்றத்தார் பெரியோர் அந்த அந்தக் காலத்திலே பார்த்து நிறைவேற்ற வேண்டியதே முறை; உங்கள் அப்பர் உயிரோடிருந்தால் நான் இப்படிக் கவலைப்பட நேர்ந்திராது; ஆனதால் மகளே நீ இன்னமுஞ் சின்னஞ் சிறிய பிள்ளையில்லை; எல்லாவற்றையும் நல்லாய் யோசித்துப்பார்; பெற்றவள் சொல்லைத் தட்டாதே; உங்கள் மாமனார்போன்ற பெரியோர் சொல்லும் புத்தியைக்கேள்; மேலும் உன் அண்ணன் ஐவகைப் பிதாக்களுள் ஒருவனல்லவா? அவனையும் மனம் வருந்தச் செய்யாதே...” என்று தன் மகளுக்குச் சொல்லிமுடித்தாள்.

“கடைசியிலே உண்மைதான் வெளிவரும்”

“அம்மா, உலகத்திலே எத்தனையோ இடத்திற் பேசி நிச்சயஞ்செய்த கல்யாணம் சமயத்திலே குழம்பிவிட, அந்தப் பெண்ணுக்கும் அந்த மாப்பிள்ளைக்கும் முறையே வேறு மாப்பிள்ளையையும், வேறு பெண்ணையும் உடனுக்குடன் ஒழுங்குசெய்து, கல்யாணத்தை நிறைவேற்றி விடுகிறார்களென்று சொல்லுகிறீர்கள்; அப்படி உடனுக்குடன் ஒழுங்குபண்ணிக் கல்யாணஞ் செய்வதற்குப் பெண்ணும் மாப்பிள்ளையும் சம்மதித்தால், அதில் ஒரு சங்கடமுமில்லை யென்பது மெய்; ஆனால், அம்மா அந்தவிதமான கல்யாணங்களை ஆறறிவுள்ளவர்களெனச் சொல்லும் மனிதர்களே செய்யத்தலைப்பட்டால், மிருகங்களுக்கும் அந்த ஆடவர் பெண்களுக்கு மிடையேயுள்ள பேதமென்ன? மிருகங்கள் தாம் இயற்கையின்படி நடக்கின்றன; இவர்கள் இயற்கைக்கு மாறாக மனச்சாட்சிக்கு விரோதமாக அப்படிச் செய்யத் தலைப்பட்டால், இவர்களை மிருகங்களிலுங் கடையானவரென்றுதான் எண்ணிக்கொள்ள வேண்டும்; உற்றார் மதியார், ஊரார் குறை சொல்வர், உலகம் பழி சொல்லுமென்று பயப்படுகிறீர்கள்; நம் நெஞ்சந் தூய்மையாயிருந்தால், நாம் தெய்வத்திற்கும் நம் மனச் சாட்சிக்கும் மாறுபடாமல் நடந்தால், ஊரார் குறை சொன்னாலென்ன, உலகம் பழி சொன்னாலென்ன, கடைசியிலே உண்மைதான் அம்மா வெளிவரும்; ஒருவர் நன்மையையாக, தீமையையாக மறைவாகச் செய்தாலும் பூமாதேவி காலகதியிலே உண்மையைக் காட்டிவிடுவாள் அம்மா; நான் அவரையே வரித்திருந்தமை போலவே, அவரும் என்னையே தம் மனத்தினால் நிச்சயித்திருப்பர்; தாயே! நாங்கள் உலக்கை தேய்ந்து உளிப்பிடியானவாறு, எங்கள் மூதாதையர் மூதாட்டிகளின் மேலான நிலைமையைக் கைவிட்டுச் சாதி நெறி விட்டு மிகவும் ஈனமான கதியை இப்பொழுது அடைந்திருக்கிறோமென்பது நிசமானாலும்; அந்தக் கற்புநெறி தவறாத் தமிழ் மூதாட்டிகளின் வழித்தோன்றல்களென்பதை மறந்துவிடலாமா? தமக்கென வரித்த கணவன் யுத்தமுனையில் மாண்டுபோக, தாமும் உடனே தம்முயிரைவிட முயன்றபோது, தம் அருமைத் தம்பியார் உயிர்விட வேண்டாம் உயிரோடிருந்து தம்மைப் பாதுகாக்க வேண்டுமென்று இரக்க, அதற்கு உடன்பட்டுக் கைம்மை விரதங் காத்துச் சிவதொண்டாற்றி, தம் தம்பியாரைப் புறச்சமய நெறியிற் புகுந்து இடர்ப்படாவகை தடுத்து எங்கள் சைவசமயத்தையும் சிவசின்னங்களையும் ஓங்கச் செய்த சிவநெறிச் செல்வியாராகிய திலகவதியார் அவதரித்த வேளாண்குலத்திற்பிறந்தவள் தானேயம்மா நானும்; அத்திலகவதியார் கடைப்பிடித்த மேலான நெறியை நாமுங் கடைப்பிடிக்கலாந்தானே; அவருக்கு ஏதும் ஆபத்து நேர்ந்தால், அத்திலகவதியார் செய்தது போற் செய்யலாமென்பதுதான் அம்மா, என் நோக்கம்; ஆனதாற் கவலைப்படாதீர்கள்” என்று தன் தாய்க்குத் தேறுதல் சொன்னாள் சிவபாக்கியம்.

திலகவதியார்

தன்பிள்ளை சொல்லியவற்றைக் கேட்டு ஒருவாறு தேறுதலடைந்த தாய் பின்னரும் மகளைப் பார்த்து “மகளே, திலகவதியாரென்ற பெயரை உங்கள் அப்பர் இடையிடையே சொல்லக் கேட்டிருக்கிறேனேயொழிய அந்தத் திலகவதியாரின் வரலாற்றை விபரமாக அறியேனடியம்மா, அந்த உத்தமியின் கதையை எனக்குச் சொல்லடி கண்ணே” என்று கேட்க, மகள் சொல்வாளாயினள்; “அம்மா திலகவதியார் எங்கள் சைவ சமய குரவருள் ஒருவராகிய அப்பர் சுவாமிகளெனப் போற்றப்படும் திருநாவுக்கரசு நாயனாருடைய தமக்கையராவர்; இவர்களுடைய பெற்றோர் திருமுனைப்பாடி நாட்டைச் சேர்ந்த திருவாமூரிலே வேளாண்குலத்திலே பிறந்தவர்கள்; தந்தையார் பெயர் புகழனார், தாயார் பெயர் மாதினியார்; திலகவதியார் பன்னிரண்டு வயசுப் பராயம் அடைந்தபோது தகப்பனாராகிய புகழனார் தம் மரபினரோடு ஒத்த மரபினராகிய கலிப்பகையார் என்பவருக்கு மணம்பேசி நிச்சயித்திருந்தார்; கலிப்பகையாரே தமக்குக் கணவர் என்ற நியதியோடு திலகவதியாருமிருந்தார்; கலிப்பகையார் கல்வியறிவு, தெய்வபக்தி, ஆண்மை, அழகு, ஒழுக்கம் முதலாம் மேலான குணங்களோடுஞ் செயல்களோடுஞ் கூடியவர்; அவர் அந்த நாட்டு அரசனுக்குரிய நால்வகைச் சேனைகளுக்குந் தலைவராகக் கடமை செய்துவந்தார்; கலிப்பகையாருக்கும் திலகவதியாருக்கும் விவாகம் நடைபெறுதற்குச் சிலநாட்களிருப்ப, அந்த நாட்டு அரசனுக்கும் வடநாட்டு அரசனுக்குமிடையே போர் மூள, அந்தநாட்டரசன் கட்டளைப்படி கலிப்பகையாரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனைத் தலைவராய் அரசனுடைய சைநியங்களை வடநாட்டெல்லைக்கு நடத்திச் சென்றார். இரு பகுதிச் சைநியங்கட்கு மிடையே பல நாட்களாகக் கொடிய யுத்தம் நடக்கலாயிற்று; இதற்கிடையில் திலகவதியாரின் தகப்பனாராகிய புகழனார் நோய்கண்டு இறந்துபோக, அவருடைய கற்பிற் சிறந்த மனைவியாரும் உடன்கட்டையேறித் தம்முயிரை விட்டார்; இதனால், திலகவதியாரும், இளமைப் பருவத்தில் மருணீக்கியார் என்னும் பெயர்கொண்ட தம்பியாராகிய அப்பர் சுவாமிகளும் அன்னை தந்தைய ரில்லாத அநாதப் பிள்ளைகளாய்க் கலங்கலாயினர்; இவர்கள் இப்படிக் கலங்கும்போது, "பட்ட காலே படும் கெட்டகுடியே கெடும்" என்ற விதமாக, கலிப்பகையார் பகைவருடன் கடுஞ்சமர் புரிந்து இந்தப் பூதவுடம்பை விட்டுப் புகழுடம்பைப் பெற்றுக்கொண்டார்; அந்தத் துக்கசமாசாரம் திலகவதியார் காதிற் பட்ட மாத்திரத்தே திலகவதியார் "என்னுடைய பிதா மாதாக்கள் என்னை அவருக்கு மணஞ்செய்துகொடுக்க உடன் பட்டிருந்தமையால், இவ்வுயிர் அவருக்கே உரியது; ஆதலால், இவ்வுயிரை அவருயிரோடும் இசைவிப்பேன்" என்று சாகத் துணிந்தார்; அதுகண்ட தம்பியாராகிய மருக்கியார் விரைந்து வந்து, திலகவதியாருடைய இரண்டு பாதங்களிலும் விழுந்து அழுது "அடியேன், நம்முடைய பிதாமாதாக்கள் இறந்தபின்னும் உம்மையே அவர்களாகப் பாவித்துப் பூசிக்கலாமென்றல்லவோ உயிர் வைத்துக் கொண்டிருக்கிறேன்; அடியேனைத் தனியே கைவிட்டு இறப்பீராயின், அடியேன் உமக்கு முந்தியே இறந்துவிடுவேன்" என்றார். திலகவதியார் அதுகேட்டுத் தம்பியார் உயிரோடு இருக்கவேண்டுமென்னும் ஆசையால், தமது கருத்தைத் தடுத்து உயிர்தாங்கி, வேறொரு வரையும் விவாகஞ் செய்யாது சீவகாருண்ய முள்ளவராகி வீட்டிலே தவஞ் செய்து கொண்டிருந்தார்.

திலகவதியார் திருத்தொண்டு

"திருவாமூரிலே இருந்த திலகவதியார் சிவபெருமானிடத்திலே பத்திமிகுந்து, சிவபுண்ணியங்கள் செய்ய விரும்பி, கெடிலந்திக்கு வடகரையில் இருக்கின்ற திருவதிகை வீரட்டானம் என்னுந் திருப்பதியிற் சென்று பரமசிவனை வணங்கி, சிவசின்னங்களைத் தரித்து, தினந்தோறும் சூரியோதயத்துக்கு முன்னே திருக்கோயிலின் உள்ளும் புறமும் திருவலகிடுதல், கோமயத்தினாலே மெழுகுதல் திருநந்தன வனங்களிற் சென்று புஷ்பங்களைப் பறித்துக் கொண்டு வந்து திருமாலை தொடுத்துச் சுவாமிக்குச் சாத்தக் கொடுத்தல் முதலாகிய சிவபுண்ணியங்களைச் செய்துவந்தார். செய்து வருநாளிலே, தம்முடைய தம்பியாராகிய மருணீக்கியார் கபட மார்க்கமாகிய ஆருகதத்திலே பிரவேசித்தமையை நினைந்து, துக்கசாகரத்தில் அமிழ்ந்தி, வீரட்டானேசுரரை வணங்கி, "சுவாமீ, தேவரீர் அடியேனை ஆட்கொள்பவர் என்பது சத்தியமாயின் தவமென்று சொல்லிப் பாயை இடுக்கித் தலைமயிரைப் பறித்தெறிந்து விட்டு, நின்றுகொண்டே உண்கின்ற சமணர்களுடைய கபட மார்க்கமாகிய படுகுழியிலே விழுந்த தமியேனுடைய தம்பியை அதினின்றம் தூக்கிக் காப்பாற்றியருளல் வேண்டும்" என்று பலமுறை விண்ணப்பஞ் செய்தார். பரமசிவன் திலகவதியாருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "தபோதனியே, நீ உன் மனக்கவலையை ஒழி, உன்னுடைய தம்பி துறவியாக நம்மை அடையும் பொருட்டுப் பூர்வசன்மத்திலே தவஞ் செய்திருக்கின்றான். அந்தத் தவத்திற் சிறிது வழுவுற்றதினாலே அந்நிய மதத்திலே பிரவேசித்தான். இனி அவனைச் சூலைநோயினாலே வருத்தி ஆட்கொள்வோம்" என்று சொல்லி மறைந்தருளினார். அப்படியே எம்பெருமான் அப்பர்சுவாமிகள் வயிற்றிற் சூலைநோயை ஆக்கி, அவர் அந்நோயில் வேதனை சகிக்கலாற்றாது தமது சகோதரியிடம் அடைக்கலம் புக, அவ்வுத்தமியார் விபூதி உருத்திராக்க மென்னுஞ் சிவசின்னங்களைத் தம்பியார் அணியச் செய்து ஐந்தெழுத்தை அவருக்கு உபதேசித்து அவரையும் சிறந்த சிவனடியாராகச் செய்தாரென்று பெரிய புராணத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது அம்மா, நானும் அந்த அம்மையார் வாழ்ந்த வாழ்க்கையை விரும்புகிறேன்" என்று மகள் அன்புடன் கூறினாள்.

***

உலகம் பலவிதம்: 1947 ஜனவரி 31 (முற்றொடர் - 03)

வரலாறு

கண்ணகியம்மையின் தமயனார் பெயர் விநாயகமூர்த்தி; இவருடைய மகன் நமசிவாயம்; இவனுக்குச் சிறுபிராயத்திற் பெற்றார் இட்ட நாமம் இராசசேகரன்; இவன் படித்து மலாய் நாட்டிலே அரசசேவையில் அமர்ந்தபின் தன் பெயரை நமசிவாயமென விளம்பரஞ் செய்து மாற்றிக்கொண்டான்; நமசிவாயம் கல்வியறிவு நல்லொழுக்கம் சமய அபிமானம் தெய்வத்தில் நம்பிக்கை வழிபாடு, இன்சொல், ஈகை முதலாம் சுகுணங்களும் நற்செய்கைளுமுடையவன்; சிவபாக்கியத்தின் தகப்பன் பெயர் சிதம்பரப்பிள்ளை; இவரும் கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்தவர்; தமது மகனாகிய சிவகுருநாதனும் மகளாகிய சிவபாக்கியமும் சிறுபிள்ளையாக விருந்தகாலத்திலேயே, சிதம்பரப்பிள்ளை சில நாள் நோய் கண்டு இறந்துபோக, அக்காலத்தில் அவரையிழந்து ஆறாத்துயரடைந்து கலங்கிய கண்ணகியம்மையையும் மக்களிருவரையும், அப்பிள்ளைகளின் தாய்மாமனாராகிய விநாயக மூர்த்தியே தேற்றி ஆகவேண்டிய உதவிகள் புரிந்து ஆதரித்து வந்தார்; தம் மருமக்களைப் பருவ காலத்திலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கு வைத்துத் தமிழும் ஆங்கிலமும் பயிற்றுவித்து வந்தவரும் விநாயகமூர்த்தியே யாவர். வைரவநாதனும் சகல நற்குணங்களோடும் செயல்களோடுங் கூடியவனாவன்; வைரவநாதனும் நமசிவாயமும் ஒத்த வயசினராதலின், தமிழ் ஆங்கில மென்னு மிருபாஷைகளையும் ஒரேவகையில் அதிக திறமையோடு கற்றுத்தேறினர்; இருவரும் ஒருவர்மேலொருவர் பேரன்பு பூண்டவர்கள்; இவர்களிருவரும் சிவபாக்கியத்தில் அன்பும் அபிமானமுமுடையவர்கள்; இளமைப் பருவத்திலே சிவபாக்கியம் தன் மைத்துனனாகிய நமசிவாயத்தையும் தமயன்போலவே பாவித்து ஊடாடினாள்; அவனும் அவளை அப்படியே மதித்து நடந்தான்; விரகறிந்த பின்னரே, அவ்விருவரும் தங்கள் தொடர்பையும் முறையையும் உணர்ந்தனர்; நமசிவாயம் சிவபாக்கிய மென்னும் இருவருடைய பெற்றாரும் அப்பிள்ளைகட்குக் காலகதியில் விவாகஞ்செய்து வைக்க வேண்டுமென அவர்கள் சிறுபிராயத்தினராயிருக்கும்போது நிச்சயித்ததோடு மாத்திரம் அமையாமல், இவ்விருவரும் தாங்கள் ஒருவரை யொருவர் விவாகஞ்செய்து கொண்டு வாழ்வதென்று தங்களளவில், தனித்தனி நிச்சயித்துக் கொண்டார்கள்; வைரவநாதனுடைய விருப்பமும் அப்படியேயாகும். இவர்கள் நல்ல வேளாண் குலத்திற் பிறந்தவர்களெனினும், செல்வம் அதிகமில்லாமையினால், வறுமையிற் செம்மையாக வாழ்ந்து வந்தனர்.

"திரைகடலோடியுந் திரவியந்தேடு"

"திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்றபடி தாம் பிறந்த நாட்டிலே தக்க உத்தியோகம் அகப்படாதொழிய வைரவநாதனும் நமசிவாயமும் தம் பெற்றார் அநுமதியோடு மலாய் நாட்டிற்கு இளம்வயசிற்றானே சென்று சிலவருடகாலம் அரசசேவை புரிந்து, தமக்குக் கிடைக்கும் மாசவேதனத்தில் தம் செலவிற்காகியது போக, எஞ்சிய பணத்தை ஊரிலிருக்கும் பெற்றாருக்குக்கிரமமாக அனுப்பி வந்தனர். இங்ஙனமாக, இரண்டாம் உலக யுத்தம் நடந்தபோது, சிங்கப்பூர் மலாய்நாடு பர்மா முதலியனவெல்லாம் யப்பானியர் கைப்பட்ட காலத்திலே, இந்த இருவரும் நிலைகெட்டாராய் ஒருவரையொருவர் பிரிந்துபோக நேர்ந்தது; பெருங்காற்றடிக்கப் பெருமழையும் பெய்யும்போது தாமரைத் தடாகத்திலுள்ள செந்தாமரைப் பூக்களெல்லாம் நிலைகுலைந்து சலனப்பட்டு நிற்பினும், காற்றும் மழையும் ஓய்ந்தவுடன் அம்மலர்கள் தொன்மை நிலையை யடைந்து நிற்றல்போல, ஜப்பானியர் தோல்வியுற்று, மலாய்நாடு முதலியன பழையபடி பிருத்தானியர் பரிபாலனம் பெற்றவுடனே வைரவ நாதனும் தன் பழைய உத்தியோகத்தைப் பெற்றுக் கடமைபார்த்துக்கொண்டு தான் பிறந்தவூரிலுள்ள தாயார் சகோதரி சுற்றத்தாருக்குக் கடிதமெழுதியும், தாய்க்கும் சகோதரிக்கும் பணமனுப்பியும் வருவானாயினான்; ஆனால் நமசிவாயத்தின் கதி யென்னவாயிற்றென்பதை அந்தநாட்டிலுள்ள வைரவநாதனாக, இந்நாட்டிலிருந்த அவனுடைய பெற்றார் மாமியார் மைத்துனி ஏனைய சுற்றத்தார் நண்பராக, எவரும், அறிதற்குப் பலவகையான முயற்சி செய்தும் அற்றைவரையில் ஏதும் அறிந்திலர்; நமசிவாயத்தின் தகப்பனாராகிய விநாயகமூர்த்தி தம்பிள்ளையை மீளக்காணலாமோ, ஆகாதோ என்ற சந்தேகம் பூண்டவராய்க் கலங்குவாராயினர்; ஆனாலும் தம் மனைவியாராகிய பார்வதியை, அவள் சந்தேகப்பட்டுக் கலங்க இடங்கொடாமல் அவளுக்கு "எங்கள் பிள்ளை வருவான், அவனுக்கு ஆபத்தேதும் நேர ஆண்டவன் விடமாட்டான்" என்று சொல்லித்தேற்றி வந்தார். கண்ணகிக்கும் தன் மருமகன் உயிரோடிருக் கிறானோ என்ற விஷயத்திற் பெருஞ் சந்தேகமுண்டாக அவளுங் கலங்கினாள்; ஆனால் அவளுடைய புதல்வியாகிய சிவபாக்கியத்திற்குத் தன் அருமை மைத்துனன் உயிரோடிருக்கிறானென்ற திடநம்பிக்கை, பலமாசங் கழிந்தும் எள்ளளவுங் குன்றவில்லை; காரணம் சிவபாக்கியம் தெய்வத்திலே திடமான பத்திபூண்டிருத்த லென்றுதான் சொல்லவேண்டும்; கடவுளை நம்பினார் கைவிடப்படாரென்ற கொள்கை அவளுள்ளத்திலே திரப்பட்டுவிட்டது; இந்த நிலைமையிலேதான் மேலே சொல்லப்பட்ட சம்பாஷணை தாய்க்கும் மகளுக்கு மிடையே தொடங்கியதாகும்.

கையில் நெருப்பை வைத்துக்கொண்டு பனிக்கட்டியென்று பாவிக்கமுடியுமா?

திலகவதியாரின் சரித்திரத்தை மகள் சொல்லக் கேட்ட தாய் ஒருவாறு மனந்தேறி இருந்தனளேனும், சொன்னவளாகிய மகள் சிந்தனையோடு கூடியவளாக இருந்தாள்; அப்படிச் சிவபாக்கியம் இருக்குஞ் சமயத்திலே, அவளுடன் ஒரு வகுப்பிற் படித்தவளும், அவளிடத்து அதிக விசுவாசமுடையவளுமாகிய புவனேசுவரி தன் ஒருவயசு முற்றிய ஆண்குழந்தையை ஒக்கலையில் வைத்தபடி அவளைப் பார்த்துப் போகும்படி அங்கே வந்தாள்; புவனேசுவரி தம் வீட்டிற்கு வருவதைக் கண்ட சிவபாக்கியம், தன் சிந்தனை யொழிந்தாளாய் முகமலர்ச்சி காட்டி இன்சொற்கூறி உபசரித்து அழைத்துக்கொண்டு போய்த் தனது அறையிலுள்ள "ஸோபா" வில் இருக்கச்செய்து அக் குழந்தையைத் தான் வாங்கித் தன் மடியில் இருத்தியபடி பக்கலில் இருந்தாள்; சிவபாக்கியம் தன் சிந்தனையை யொழித்து முகமலர்ச்சியோடு புவனேசுவரியை உபசரித்து வார்த்தையாடினளெனினும், தான் அங்கு வரும்போது சிவபாக்கியம் கவலையோடு கூடியவளா யிருந்தாளென்பதைப் புவனேசுவரி ஒருவாறு அயிர்த்துக் கொண்டாள்;அவள் சிவபாக்கியத்தை அன்புடன் பார்த்து, "தங்காய், மலாய் நாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அண்ணனிடமிருந்தேனும்; வேறு எவரிடமிருந்தேனும், ஏதுங் கடிதம் இந்த நாட்களில் வந்ததுண்டோ" என்று ஆதரவாகக் கேட்டாள்; "இல்லை, அக்கா அன்று நீங்கள் இங்கேவந்து என்னைப் பார்த்துக் கொண்டு மீண்டபின் இற்றைவரையில் என் அண்ணர்கடிதமாக, வேறு எவர் கடிதமாக வந்ததில்லை; அண்ணரொருவர் எழுதினாலொழிய வேறு ஆர் எனக்குக் கடிதம் எழுதப்போகிறார்கள்" என்று சொல்லி முடிப்பதற்கிடையில், அவள் கண்களிலிருந்து முத்துப்போல் நீர்த்துளி சிந்தியன; அதனை அவதானித்த புவனேசுவரி பரிவுற்றவளாய், அவளைப்பார்த்து, "தங்காய், நீர் எந்த நேரமும் இப்படிக் கண்ணீருங் கபம்பலையுமாக இருந்தால், உமது தாயார் சுற்றத்தார், உம்மிடத்தில் விசுவாசம் வைத்த என்னைப் போன்ற அன்பினர் எல்லாருக்கும் கவலை யாகத்தானே யிருக்கும்; படியாதவர்களாக விருந்தாலுங் காரியமில்லை; படித்த நீர், என்போல்வார்க்கும் புத்தி சொல்லக்கூடிய விவேகமுள்ள நீர், எல்லாஞ் சிவன் செயலென்று அவனிடத்திலேயே உறுதியான நம்பிக்கையை வைத்து, நடப்பது நடக்குந்தானே யென்று தேறியிருக்க வேண்டுமல்லவா? அப்படிச் செய்கின்றீருமில்லை; இல்லையேல் உங்கள் தாயார் மாமனார் முதலியோருடைய யோசனைக்கும் இசைந்து ஒரு கருமத்துக்கு உடன்படுகின்றீருமில்லை; சொல்லுகிறேனென்று குறையெண்ண வேண்டாந் தங்காய், இப்படி எவ்வளவு காலத்திற்கு இருக்க முடியும்? எது வந்தாலும் ஊழால் என்று நாம் இருத்தல் வேண்டும், துன்பத்தையும் இன்பமாக மதித்து நடக்க வேண்டும் என்று, தங்காய், நீரே முன் பலமுறை எனக்குச் சொல்லி என்னைத் தேற்றியிருக்கிறீர்; அவைகளை இப்போது உமது விஷயத்தில் அயர்த்துவிட்டீரா" எனத் தேறுதல் கூறினாள். இப்படிப் புவனேசுவரி சொல்லக்கேட்ட சிவபாக்கியம்; நெட்டுயிர்த்து "அக்கா, நீங்கள் சொல்வதை நான் அல்லவென்று சொல்லவில்லை ஆனால், துன்பத்தையும் ஒரு அளவிற்குத்தானே இன்பமென்று பாவித்து நடக்கலாம்; சகித்தற்கரிய மனக்கவலை வந்து சேர்ந்துவிட்டால், அதனையும் இன்பமென்று மதித்து நடக்க முடியுமா? உள்ளங்கையிலே நெருப்புத் தணலை வைத்துக்கொண்டு அதனைப் பனிக்கட்டி யென்று பாவிக்க முடியுமா? அப்படியான நிலையிலுள்ளவர்கள் தாம் அக்கா, உலகப்பற்றை அறவேயொழித்த மகா ஞானிகளெனப்படுவர்; அவர்களுக்கும் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய எங்களுக்கும் வெகுதூரம்."

ஆதவனைக் கண்ட பனியென அகலும்

"அக்கா, என்னை நீர் அகமும் புறமும் அறிவீர்; நீர் அறியாத இரகசியம் என் மனத்திலில்லை யென்பதும் உமக்குத் தெரியும்; மேலும் என் அரிய அக்கா, நீர் இடையிடையே இங்கே வந்து எனக்குத் தேறுதல் சொல்லா தொழிந்தால் நான் இதுவரையிற் பைத்தியகாரியாய் விடுவேன்; உம்மிடத்திலன்றி என் கவலையை நான் வேறு ஆரிடத்தில் எடுத்து முறையிட்டு ஆறுதலடைவேன்! (இதற்கிடையில் புவனேசுவரியின் குழந்தை உறங்கிவிட, அக் குழந்தையைச் சிவபாக்கியம் அந்த "ஸோபா" விற்றானே அவதானமாகக் கிடத்திவிட்டு) "அக்கா, என்னை நீங்கள் பரிகசித்தாலுஞ் சரி, இல்லையேல் வெறுத்தாலுஞ் சரி என் மனநிலையைச் சொல்லுகிறேன் கேளுங்கள்; அவர்என்னை மணஞ் செய்யவேண்டாம். வந்து பார்க்கவும் வேண்டாம், பேசவும் வேண்டாம், ஆனால், அக்கா; அவர் எந்தத் தேசத்திலாக, எந்தவூரிலாக, சுகமேயிருக்கிறார் என்ற அந்தச் சந்தோஷமான செய்தி என் காதிற் படுமானால், என்னைப் பீடித்த கவலை யெல்லாம், அக்கா, ஆதவனைக் கண்ட பனிப்படலம் போல உடனே பறந்துபோம்" என்று கரைந்து வருந்தினாள் சிவபாக்கியம்; கேட்ட புவனேசுவரி பதில் சொல்ல முடியாதவளாய்ச் சிறிது தயங்கிப் பின்னர்ச் சிவபாக்கியத்தைப் பார்த்து "தங்காய், கலங்க வேண்டாம்; ஏன், அம்மா, ஒரு முற்றுமில்லாமல் அவர் விஷயத்தில் இவ்வளவு தூரம் உம்முடைய மனத்தை விட்டீர்? கேட்கிறேனென்று குறை நினைக்க வேண்டாம்" என்று பரிவுடன் கேட்டாள். "அக்கா, நானாக என் மனத்தை அவரிடம் விடவில்லை; என்னுள்ளம் என்னையறியாமலே அவரிடம் போய் அங்கே தங்கிவிட்டது" என்று கண்களல் நீர் ததும்ப விடைசொன்னாள் சிவபாக்கியம்; "தங்காய், நீர் சொல்வது முழுவதும் நிசம்; உமது அன்பருக்கு எவ்வகையான ஆபத்தும் நேரவொண்ணாதென்பது தான் எனது பிரார்த்தனையும்; ஆனால், பொல்லாவிதி காரணமாக, ஏதும் நேர்ந்திருந்தால் உம்முடைய நிலைமை யென்னாகுமென்பதை யிட்டுத்தான் நான் சிந்திக்கிறேன்; அப்படியானால் உமது மேலான குணங்களும், கல்வியறிவும், ஒழுக்கமும், இவைகளெல்லாவற்றைக் காட்டிலும் உம்மிடத்தில் மேலாக விளங்கும் பேரழகும் யௌவனமும், நாளல்லாநாட் பூத்த நன்மலர்போல் அவமாய்ப்போக நேருமோ என்று தாம் என் அருமைத் தங்காய், அஞ்சுகிறேன்; அன்றி, ஏதும் பிழைசெய்யச்சொல்லி நான் உமக்கு ஒரு போதுஞ் சொல்லமாட்டேன், காலத்துக்குத்தக்க கோலமாக நடக்கவேண்டு மென்றும் உலகத்திலே சொல்லுகிறார்கள்தானே; அதனையும் சிந்திக்கவேண்டும்" என்று இதமாகச் சொன்னாள் புவனேசுவரி.

ஆசை வெட்கமறியாது

"அக்கா, நீங்கள் சொல்வது அத்தனையுஞ் சரி, ஆனால் அவருக்கும் எனக்குமிடையே அன்பு பிறந்தது நேற்றின்றல்ல; சின்னவயசிற்றானே இருவரும் ஒருவர்மீதொருவர் மெய்யன்புடையரா னேம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையைச் சொல்லுகில் நான் அவரிடத்திற் கொண்டுள்ள அன்பைக் காட்டிலும் அவர் என்னிடத்தில் வைத்துள்ள அன்பு அதிகமென்பதை நான் அறிவேன்; அவர் இங்கிருந்து மலாய் நாட்டிற்குப் புறப்படவிருந்த அன்று காலை பயணஞ்சொல்லிவிட்டுப் போம் படி எங்கள் வீட்டிற்கு வந்தார்; வந்தவிடத்தில் என் தாயார் அவரை உபசரித்து ஆகவேண்டியன செய்தார்; எங்கள் தாயார் பழையமுறைப்படி நடக்கும் இயல்புடையவரென்பது, அக்கா உமக்குத் தெரியும், ஆனதால், அவர் தூர தேசத்திற்குப் பயணம் புறப்பட்டுப் போகும் அந்த நேரத்திலாவது அவர் என்னைக்காண என்னுடன் ஒருவார்த்தை பேச, எனக்குப் பயணஞ் சொல்லிப்போக விடவேண்டுமென்று என் தாயார் நினைக்கவில்லை; எனக்கெனிலோ அவரை யொருமுறை பார்க்கவேண்டும், அவரோடு பேச வேண்டும், அவருக்குப் பிரியாவிடை சொல்ல வேண்டுமென்று வெகு ஆசையிருந்தும், கன்னிகையென்றிருக்கும் நான் என்ன செய்வது; "ஆசை வெட்கமறியாதென்றபடி" நான் தலைவாசலிற் கதவண்டை போய்க் கதவின் பின்னே என்னுடம்பு முழுவதும் மறைய, பாதிமுகம் மாத்திரம் புலப்பட நின்றேன்".

***

உலகம் பலவிதம்: 1947 ஜனவரி 31
(முற்றொடர் - 04)

"மறக்க முடியுமோ"

"அவர் என்மீது தாம்கொண்ட அன்பைக் கண்களால் உகுப்பார்போற் கருணையுடன் என்னைப் பார்த்தார்; பார்த்த மாத்திரத்தே என் கண்களினின்றும் நீர்த்துளி முத்து முத்தாகத் சிந்தியது; அப்பொழுது அவர் தாமும் சஞ்சலப்பட்டாராய்த் தம்முகத்தைத் திருப்பிக்கொண்டு, "பயணம் அனுப்பும்போது ஏன் கலங்குவான், சிந்தாயாத்திரையாய்ச் சென்று வரவேண்டுமென மகிழ்ச்சியோடு விடைதந்தல்லவோ என்னைப் பயணம் அனுப்பி வைக்கவேண்டும்" என்றார், அக்கா, இந்த அமிர்த மொழிகளைக் கேட்ட வுடனே, அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாள்..." என்றபடி நான் கன்னிகை யென்பதையும் மறந்தேன். சரேலென ஓடிப்போய் அவருடைய பாதங்களிற் பஞ் சாங்கமாக வீழ்ந்து பணிந்தேன்; சுகமே போய்வாருங்கள், என்னை மறந்து விடாதீர்கள் என்றேன்; மறக்க முடியுமோ என்றார் அவர்; எழுந்து ஒதுங்கி விநயமாக நின்று தாயாரைப் பார்த்தேன்; தாயார் பிரமித்து நிற்கக் கண்டேன்; எங்களிடம் அநுமதி பெற்றுக் கொண்டு மீண்டார்; அவர் போய் மறையுமட்டும் தலைவாசலில் அவரைப் பார்த்தபடி நின்றேன்; அவர் போகும்போது என் அன்பைத் தாம் பிடுங்கிக்கொண்டு தம்முடைய அன்பில் ஒரு பாகத்தை என்னிடம் விட்டுப் போய்விட்டார்; அப்படிப்பட்டவரை நான் மறக்க முடியுமோ? அவருக்கு ஏதும் ஆபத்து வருமென என்னால் நினைக்க முடியுமோ" என்று உள்ளமுருகக் கூறினாள் சிவபாக்கியம் இவற்றையெல்லாஞ் சொல்லக்கேட்டுக் கொண்டிருந்த புவனேசுவரி தானும் மனமுருகியவளாய் எவ்வகையான சமாதானமுஞ் சொல்ல வகையறியாளாய் மௌனத்தோடிருந்தாள்; பின்னர் அவள் சிவபாக்கியத்தை அன்புடன் நோக்கி "தங்காய் நீர் சொல்வது அத்தனையும் நிசம்; ஆனால், அவருக்கு ஏதும் இடையூறு நேராதபட்சத்தில், இற்றைவரையில் உமக்காயினும் தம்முடைய சுகத்தைத் தெரிவிக்கும்படி ஒரு கடிதம் எழுதியிருக்கமாட்டாரா? அவர் பகைவர் கையிற் சிறைப்பட்டாலும் இப்பொழுது மீட்சியடைந்திருப்பாரே? தேகத்திற்கு ஏதும் ஊறு கண்டிருப்பின் இதுவரையிற் சிகிச்சை பெற்றுச் சுகமாகி மீண்டிருப்பாரே! அவரைப் பற்றி இன்றுவரையில் ஒன்றும் கேள்விப்படாமை யினாலல்லவோ இங்குள்ளார் எல்லாருஞ் சஞ் சலப்படவேண்டியிருக்கிறது; அவர் ஊருக்கு ஒரு கடிதம் இதுவரையில் எழுதாவிட்டாலும், அவரைப் பற்றிய செய்தி ஏதுங் கிடைத்தால் உமது அண்ணர் உடனே கடிதமெழுதி உங்களுக்குத் தெரிவித்திருப்பாரே; எனக்கு ஒன்றும் புலப்படவில்லையே" என்று கவலையுடன் சொன்னாள்; "ஆம், அக்கா, நீங்கள் சொல்வது நியாயம்; ஆனால் அவர் இன்னமும் இருக்கிறாரென்றே என்மனம் திடமாக நினைக்கின்றது; என்குறையை உலக மாதாவாகிய ஈசுவரியிடம் முறையிட்டு வருகிறேன்; அந்த ஈசுவரி என்னைக் கைவிட்ட அன்றுதான் நான் என் நம்பிக்கையைக் கைவிட்டு என் உயிரையும் விடுவேன்; சாவித்திரிக்கு, இறந்த அவள் கணவனை மீட்டுக்கொடுத்த உலகமாதா, சகல உலகங்களிலுமுள்ள ஆன்மகோடிகளையெல்லாம் பாதுகாத்தருளும் அகிலாண்ட நாயகி, அவளுடைய அந்த கோடிக்கணக்கான சிறுமிகளுள் ஒருத்தியான என்னை மாத்திரம் புறக்கணிக்கப்போகின்றாளா? அவள் புறக்கணிக்கத் தலைப்பட்டால் எனக்குப் புகலிடம் பிறிதுமுண்டோ! அக்கா அந்த ஆத்தாளை நம்பினவருக்கு அல்லல் ஒருபோதுமில்லை; இதுவே என் திடசித்தம்" என்று சிவபாக்கியம் உறுதியோடு சொன்னாள். இவற்றை யெல்லாங் கேட்டுக்கொண்டு புவனேசுவரி சிவபாக்கியத்திற்குத் தேறுதல் சொல்லித் தான் சீக்கிரம் அவளை வந்து காணுவதாகவும் தெரிவித்து அவளிடத்தும் அவள் தாயிடத்தும் விடைபெற்றுக்கொண்டு தன் வீட்டிற்குக் குழந்தையோடு மீண்டாள்.

"கடந்துளோர்களுங் கடப்பரோ? மக்கள்மேற் காதல்"

புவனேசுவரி அவ்விடம் விட்டகன்ற பின்னரும் சிவபாக்கியம் சிந்தனையோடு கூடியவளாகவே யிருந்தாள்; இவ்வாறாக அவளுடைய மாமனாராகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகமூர்த்தி தம் தங்கையையும் மருமகளையும் பார்க்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அங்கே வருதலும், தலைவாசற் பக்கத்தில் நின்ற கண்ணகியம்மை தன் தமயனை வரவேற்று உபசரித்து இருக்கச் செய்தாள்; வந்த தமயனார் தங்கையோடு தம்மகன் விஷயமாகவும் பேசிக்கொண்டிருந்தார்; மாமனார் வந்திருப்பதைத் தன் அறையுட் கவலையோடிருந்த மருமகள் அறிந்திலள்; அவள் உலகமாதாவாகிய ஈசுவரியைத் தனக்குத் திருவருள் செய்து தன் சஞ்சலத்தை நீக்கவேண்டு மென்று நிச்சயித்தவளாய்த் தேவியைச் சிந்தனைசெய்தபடி,

"ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை மீதுன் அருகிருந்து
நீமுத்தந் தா என்றவர்கொஞ்சும் வேளையில் நித்த நித்தம்
வேய்முத்த ரோடென் குறைகளெல் லாம் மெல்ல மெல்லச் சொன்னால்
வாய்முத்தஞ் சிந்திவிடுமோ நெல்வேலி வடிவம்மையே"

என்ற தோத்திரப்பாட்டைப் பத்திரசம் பெருகக் கல்லுங் கரையும் வண்ணம் தன்னை மறந்து சற்றுப் பெலத்துப் பாடினாள்; அப்படிப் பாடும் ஓசை விநாயகமூர்த்தியாருடைய காதிற் பட்டமாத்திரத்தே, அவர் தங்கையோடு கதைப்பதை நிறுத்தித் தம் காதார உற்றுக்கேட்ட வண்ணமிருந்தார்; அவரும் மனமுருகியவராய், தம் சகோதரியை நோக்கி "பாடுவது ஆர் தங்கைச்சி? என் அருமை மருமகளா" என வினவுதலும் "ஓம், அண்ணா, தங்கைச்சிதான் என்ன சமாதானத்தை நாம் சொன்னாலும் எங்கள் பிள்ளை உங்கள் மகனையிட்ட கவலையோடு கூடியவளாகவேயிருக்கிறாள்; நான் இன்று உங்கள் வீட்டிற்கு வந்து பிள்ளையின் கவலையைப்பற்றி உங்களுக்குச் சொல்ல எண்ணியிருந்தேன்; அதற்கிடையில் நீங்கள் இங்கே வந்துவிட்டீர்கள்; தங்கைச்சியின் விஷயமாக என்ன செய்வதென்று எனக்குப் புலப்பட வில்லை அண்ணா" என்று விசனத்துடன் சொன்னாள் கண்ணகியம்மை; "தங்காய், எங்கள் மகன் விஷயமாக, பெற்றாராகிய எங்களைக் காட்டிலும் மாமி மச்சானாகிய உன்னையும் உன் மகனையுங் காட்டிலும், எங்கள் அருமை மருமகளே அதிகம் கவலைப்படுகிறா ளென்பதை நான் நன்கறிவேன்; மருமகளுக்குத் தேறுதல் சொல்லத்தான் இங்கே இப்பொழுது வந்தேன்; ஆனால் இந்தப் பிள்ளையின் முன்னிலையிற் போய் நான் என்னவிதமாகத் தேறுதல் சொல்வதென்பது புலப்படவில்லை; என்னைக் கண்டவுடனே எங்கள் மருமகள் இன்னும் அதிகமாகக் கவலைப்படுவாள்; அதனைப் பார்த்தவுடன் என் வயிறும் பற்றியெரியும், நான் பெருஞ் சத்தமிட்டுக் கதற நேர்ந்தாலும் நேரும், இவைகளை யெல்லாம் யோசித்துக்கொண்டு தான் பிள்ளையிருக்கு மிடத்திற்குப் போகக் கூசி, இந்தத் தலைவாசலில் இருக்கிறேன்; தங்காய் பிள்ளைப்பாசம் கொடிது! கொடிது! கடந்துளோர்களுங் கடப்பரோ மக்கள்மேற் காதல் என்றல்லவா முன்னோர் பாடியிருக்கிறார்கள்; என் செய்வேன் கொள்ளித்தலையில் எறும்பது போல உள்ளங் குலைகின்றேன்" என்று கண்களில் நீர் ததும்பச் சொல்லிமுடித்தார்.

"உள்ளக் கவலை எல்லாம் ஒழியும்"

"அண்ணா அறிவு அநுபவம் வயசு எல்லாவற்றிலும் முதிர்ந்த நீங்களே இப்படிக் கலங்கும்போது, ஒன்றும் அறியாப் பேதையான என் பிள்ளை என்ன செய்வாள்? என் மகனுக்கும் உங்கள் மகனுக்கு மிடையே எவ்வகையான பேதமும் பாராட்டியறியாள் என் பிள்ளை; அது உங்களுக்கு நல்லாய் விளங்கும்; ஆனதால் நான் அங்கே வரவில்லை, நீங்களே உங்கள் மருமகளிருக்கும் அறைக்குப்போய் அவளுக்குத் தேறுதல் சொல்லுங்கள்" என்று பரிவுடன் சொன்னாள் கண்ணகியம்மை. "ஆம், தங்காய் அப்படித்தான் செய்யப்போகிறேன்" என்று சொல்லிக்கொண்டு இருக்கைவிட்டெழுந்து தமது மருமகள் இருக்கும் அறை வாசலண்டை போனவுடன் "தங்கைச்சீ, உங்கே வரலாமா" என்று இதமாக வினாவ, அப்பொழுதுதான் தன் மாமனாருடைய வரவையறிந்த சிவபாக்கியம், திடுக்குற்றுச் சரேலென எழுந்து தன் முன்றானையாற் கண்களைத் துடைத்துவிட்டுத் தலையையும் முகத்தையும் சரிப்படுத்திக் கொண்டு "வாருங்கள் மாமா" என்று சொல்லியபடி எதிர்கொண்டு அறையுள் அழைத்துக் கொண்டுபோய் ஆசனமிட்டு உபசரித்துத் தன் கவலையைப் புறத்தே காட்டாதவளாய் ஒரு புறத்தே ஒதுங்கி நின்றாள். ஆனால் அவள் முகத்தைப் பார்த்துப் பேசுவதற்கு விநாயக மூர்த்திக்கு அவர் கொண்ட புத்திரசோகம் சில நிமிஷம் இடங் கொடுக்கவில்லை; பின்னரும் அவர் தாம் கொண்ட கவலையைப் புறத்தே காட்டினால், தம்மருகி மேலும் மேலுங் கவலைப்படுவாளென்றஞ்சி, அவளை ஆதரவுடன் பார்த்து, "நான் ஒரு அரைமணி நேரம் முந்தியே இங்கு வந்து தலைவாசற் பக்கத்திலிருந்து உங்கள் தாயோடு பேசிக்கொண்டிருந்து விட்டேன், அப்பொழுது தேவிக்குத் தோத்திரமாக நீ படித்த பாட்டு என் காதிற் பட்டது; அதனை இன்னுமொருமுறை கேட்க ஆசைப்படுகிறேன், உங்கள் மாமாவுக்குப் படித்துக் காட்டடியம்மா" என்று வெகு இதமாகக் கேட்டார். கேட்டமாத்திரத்தே சிவபாக்கியம் மனங் கூசியவளாய், "மாமா, நீங்கள் தலைவாசற்புறத்து இருக்கிறீர்களென்பதை அப்போது அறிந்திருந்தால் நான் ஒருபோதும் படித்திருக்கமாட்டேன்; அந்தப் பாட்டைப் படிக்கச் சொன்னாற் படிக்கிறேன் மாமா; படித்தால் எனக்குக் கவலை அதிகப்படுமென்று பயப்படுகிறேன்" என்று நிலத்தைப் பார்த்தவண்ணம் மருமகள் சொல்ல, "கவலையல்ல, அந்தப் பாட்டைப் படிக்கும் போது தேவியின்மேற் பக்திதானடியம்மா, அதிகப்படும்; அதனோடு உள்ளக் கவலையெல்லாம் ஒழியும்" என்று ஆதரவாகச் சொன்னார். மருமகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமனார் சொல்லைத் தட்ட மனமில்லாளாய் அந்தப்பாட்டை முன்படித்தவாறு படித்தாள்; படித்து முடிப்பதற்கிடையில், அந்தப் பாட்டிலே பொதிந்துள்ள அருமையான கருத்தையும் பாட்டின் சிறப்பையும் படித்த இனிமையையும் எண்ணியெண்ணி மாமனார் மனமுருகினார், கண்ணீர் சிந்தினார்; மருமகள் கண்களில் நீர் தாரை தாரையாக வடிய நாத்தடுமாறி விம்மலுண்டாக ஈற்றடியை மெல்லச் சொல்லி முடித்தாள்.

***

உலகம் பலவிதம்: 1947 பெப்ரவரி 14 (முற்றொடர் - 05)

"நாமொன்றை நினைக்கத் தெய்வம் வேறொன்றை நினைத்தது"

மாமனாராகிய விநாயகமூர்த்தி மருமகளைப் பரிவுடன் பார்த்து, "மகளே, அன்று தொட்டு இன்றுவரைக்கும் நானாக, என் மனைவியாக, உன்னை மருமகளென் றெண்ணி நடந்தறியேம்; பெண்பிள்ளையைப் பெறும் பேறற்ற நாங்கள் உன்னை எங்கள் சொந்த மகள் போலவே மதித்து நடந்து வருகிறோம்; இதனை உங்கள் தாய் அறிவாள்; எங்களைவிட்டுப் பிரிந்துபோன உங்கள் தந்தையாரும் அறிவார்; எங்கள் மகனுக்கு உன்னைக் கல்யாணஞ் செய்து வைக்க வேண்டுமென்ற நோக்கமும் நேற்றின்று உண்டானதல்ல; உங்கள் சிறுபிராயந்தொட்டே அப்படியே எண்ணி வருகிறோம்: ஆனால், "ஒன்றை நினைக்க அது ஒழிந்திட்டொன்றாகும்" என்றவிதமாக, நாம்நினைத்ததொன்று, தெய்வம் நினைத்தது வேறொன்றாய் நேர்ந்ததோவென எண்ணிக் கவலைப்படவேண்டி யிருக்கின்றது; என் அருமைமகன் மீண்டு எங்களிடம் வருவா னென்ற நம்பிக்கை, நாட்போகப் போகத் தேய்ந்து வருகிறதடியம்மா, (இப்படிச் சொல்லும் போது அவர் கண்களில் நீர் ததும்புகின்றது); என் அருமை மகளே; சொல்லுகிறேனென்று கவலைப்படாதே, உங்களிருவீர் மூலமாகவும் எங்கள் சந்ததியை விளங்கச் செய்யலாமென நம்பியிருந்த நாங்கள், இப்பொழுது அந்த நம்பிக்கை யெல்லாவற்றையும் அறவே விட்டு, உன் மூலமாயினும் எங்கள் பிற்சந்ததி விருத்தியாகச் செய்யலாமென யோசிக்கலானேன்; என் பிள்ளை மீண்டுவராதென்ற சிந்தனை எங்களிடமிருப்ப மகளே, உன்னை ஒரு முற்றுமில்லாமல் நீடித்தகாலம் கன்னிகையாகக் காக்கவைப்பது முறையல்ல என்பது தான் என் கவலை; இதனாற்றான், அன்று உங்கள் தாய் எங்கள் வீட்டிற்கு வந்தபோது உன் விவாகத்திற்காகிய முயற்சிகளைச் செய்யவேண்டுமென்று சொன்னேன்; இப்படி நான் சொன்னதை விபரீதமாக நினைத்து விடாதேயடியம்மா; தந்தையில்லாப் பிள்ளையாகிய உன்னை நீடித்தகாலம் குமர் காக்க வைத்தால், உலகம் எங்களைத்தான் குற்றஞ் சொல்லும்; இனி, உன் இஷ்டம் எதுவோ அதன்படி நாங்கள் நடந்துகொள்ளச் சித்தமா யிருக்கிறேனடியம்மா" என்று கவலையோடு சொல்லிமுடித்தார்.

"தெய்வம் எவ்வகையான பிழையும்நேர விடமாட்டாது"

மாமனார் கூறியவை யனைத்தையும் மனமுருக அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த மருமகள் சிறிதுநேரம் யாதும் பேசாதவளாய் நின்று பின்னர் அவரைப் பணிவுடன் பார்த்து, "மாமா, எப்படி நீங்கள் என்னை உங்கள் பெற்ற பிள்ளைபோற் பாவித்து நடத்தி வருகிறீர்களோ, அப்படியே நானும் அன்று தொடக்கம் இன்று வரையில் உங்களை என் உற்ற பிதாப்போல் மதித்து நம்பி நடந்து வருகிறேன்; நீங்கள் உங்கள் மகனாருக்கு ஏதும் ஆபத்து நேர்ந்திருக்கு மென்றெண்ணி ஒருபோதுஞ் சஞ்சலப் படாதீர்கள்; நாங்கள் கையெடுத்து வழிபடும் தெய்வம் அவருக்கு எவ்வகையான பிழையும் நேரவிடமாட்டா தென்பது என் நம்பிக்கை; அவரைப்பற்றி விசாரித்தறிதற்கு ஏதும் முயற்சி செய்யாதிருக்கிறீர்களே யென்பதை யிட்டுத்தான் எனக்குக் கவலை; இந்தவூரில் இருந்தபடியே நீங்கள் அவரைப்பற்றி விசாரணை செய்து கொண்டிருப்பதனால் ஏதும் உண்மையை அறியலாமோ என்பதும் எனக்குப் புலப்படவில்லை; எங்கள் அண்ணரும் அந்த ஊரிலேயிருப்பதனால், நீங்கள் சிரமத்தைப் பாராமல் இங்கிருந்து புறப்பட்டுப் போய் அங்கே பலவழியாலும் அவரைப் பற்றி விசாரித்தறிய முயற்சி செய்தால், அதனால் நன்மையுண்டாகுமென்று நினைக்கிறேன்; உங்களுக்கு நான் இவைகளைச் சொல்லத் துணிந்த தையிட்டுக் குறையெண்ணாதீர்கள்; என் கல்யாண விஷயமாக நீங்களாக, என் தாயாராக, அண்ணராக ஏதும் முயற்சி செய்வதனால் நன்மையில்லை யென்பதை நம்புங்கள்; எல்லா மறிந்த உங்களுக்கு நான் அதிகஞ் சொல்வதும் என்மேல் தவறாகும்" என்று கண்களில் நீர் சிந்தக் கவலையோடு சொன்னாள்; இவற்றை யெல்லாங் கேட்டுக்கொண்டிருந்த விநாயக மூர்த்தி பெரிதுஞ் சஞ்சலப்பட்டார்; சற்றுநேரம் ஏதும் பேசாது சிந்தித்த வண்ணமிருந்தார்; இப்படியிருக்கும்போது கண்ணகியம்மையும் அங்கேவந்து மாமனும் மருமகளும் கவலையோடு கூடியவர்களாய் முறையே இருப்பதையும் நிற்பதையுங் கண்டாள். அப்போது மாமனார் மருமகளைப் பார்த்து, "நீ ஒன்றுக்குங் கவலைப்பட வேண்டாம் அம்மா; நான் என் பிள்ளையைப்பற்றி அறிதற்காக வேண்டிய முயற்சிகளை இன்று தொடக்கஞ் செய்கிறேன்" என்று மருமகளுக்குத் தேறுதல் சொல்லித் தாமும் ஒருவாறு தேறிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அந்த அறையை விட்டுத் தம் தங்கையுடன் தலை வாசற்பக்கத்தையடைந்து தம் மருமகளின் மனநிலையையும் விசேஷமான குணங்களையும் அவளுடைய தாயாருக்குச் சொல்லிக்கவலைப்பட்டு, அக்கண்ணகியம்மையிடம் அநுமதி பெற்றுக்கொண்டு தம் வீட்டிற்கு மீண்டார்;

தமயனுக்குக் கடிதம்

சிவபாக்கியம் தன்மாமனார்தேற்ற, ஒருவாறு அப்போதைக்குத் தேறினளேனும், பின்னர்ச் சிந்தனையோடு கூடியவளானாள்; சிறிதுநேரம் அவள் யோசித்துத் தன் உள்ளத்தில் ஏதோ நிச்சயஞ் செய்துகொண்டு தன் தமயனுக்குக் கடிதமெழுதும்படி, அதற்காகிய உபகரணங்களை யெடுத்துப் பின்வருமாறு எழுதுவாளாயினாள்:-

உ

"கருணையங்கடலாகிய பரமேசுவரியின் கிருபையால் வாழும் என் அருமையான அண்ணாவுக்கு அன்போடும் பணிவோடும் எழுதிக்கொள்வது, எங்கள் அருமைத்தாயார், அன்பான மாமனார் மாமியார் மற்றைய சுற்றத்தாரும் நானும் ஆண்டவனருளாற் சுகமேயிருக்கிறோம்; சகல அண்ட கோடிகளையும் பாதுகாத்தருளும் ஆண்டவன் உங்களையும் பாதுகாப்பானாக. என் அருமையான அண்ணா, எனக்கு நீங்கள் தமயனாராக இருப்பதோடு எங்கள் தகப்பனார் இறந்த பின் எனக்குத் தகப்பனாராகவும் இன்னும் என்னை அன்போடு பேணி வருகின்றீர்கள். எனக்கு ஏதுங் குறைகளிருந்தால், அக்குறைகளை முதற் கடவுளுக்கு, இரண்டாவது உங்களுக்கன்றி வேறு நான் ஆருக்கு முறையிடுவது; ஈசுவரியின் அருளாலும் நீங்கள் என்மேல் வைத்துள்ள சகோதரத்தினாலும் எனக்கு எவ்வகையான குறையுமில்லை யெனலாம்; ஆயினும் என் அருமையான அண்ணா நான் வேண்டிக்கொள்வது; நீங்கள் எங்களைப் பிரிந்து இந்த ஊரை விட்டுப்போய் எட்டொன்பது வருட வரையிலாயின; சென்றமாசம் நீங்கள் எழுதிய அன்பான கடிதத்திலும் இப்போதைக்கு நீங்கள் ஊருக்கு வர முடியாதென்று கவலையோடு எழுதியிருந்தீர்கள்; நான் மாத்திரமல்ல, எங்கள் தகப்பனாரின் பிரிவையெண்ணி நீடித்த காலமாகக் கவலைப்படும் எங்கள் அன்பான தாயார், நீங்களும் இப்போதைக்கு இந்தவூருக்கு வரமுடியாதென எழுதிய செய்தியையிட்டுப் பெரிதும் கவலைப்படுகின்றார்; என் அருமையான அண்ணா, இப்பொழுது உந்தவூரிலிருந்து இங்கும், இந்தவூரிலிருந்து உங்கும் யாழ்ப்பாணத்தவர்கள் வசதியாகப் பிரயாணம்பண்ணுகிறார்களென அறிகிறோம்; எங்கள் அயலில் இருப்பவர் சிலரும் குடும்ப சகிதமாய், அடுத்த மாசம் வரையில் உவ்விடம் வர உத்தேசித்திருக்கிறார்கள்; ஆனதால், எங்கள் அரிய மாமா மாமியென்னு மிவர்களுடைய அநுமதியும் பெற்றுக் கொண்டு உங்கள் பூரண சம்மதத்தோடும் தக்க துணையோடும் எங்கள் தாயாரும் நானும் உவ்விடம் வந்து உங்களுடன் சிலகாலம் தங்கியிருந்து மீளலாகுமோ என ஆசைப்படுகிறேன், அண்ணா; நான் சிறுமியாதலால், என்னுடைய நோக்கத்தில் ஏதும் தவறிருந்தால், என்னைக் கோபியாது, வெறுக்காது, பிழையைப் பொறுத்துக்கொண்டு அன்பான பதில் எழுதக் கேட்டுக் கொள்ளுகிறேன். என் அரிய அண்ணர் நான் இப்பொழுது கொண்டுள்ள இந்த நோக்கத்தை எங்கள் அருமையான தாயாருக்குத்தானும் இன்னமும் வெளியிடவில்லை; உங்களைநினைத்து மீட்டும் நமஸ்காரஞ் செய்து இக்கடிதத்தை முடிக்கிறேன்.

இங்ஙனம்,
உங்கள் கட்டளைப்படி நடக்கும்
விசுவாசமான தங்கை
சி. சிவபாக்கியம்.

சிவபாக்கியம் தான் எழுதிய கடிதத்தைக் கடிதத்தானத்திற் கொண்டுபோய்ப் போடும்படி தங்கள் வீட்டு வேலைக்காரச் சிறுவனிடங் கொடுத்தனுப்பிவிட்டிருந்தாள்; இவள் விஷயம் இவ்வளவிலிருக்க, இவர்களுடைய வீட்டிற்கு ஒரு கூப்பிடுதூரத்தில் விஜயரத்தினமென்றொருவன் பலவருட காலமாக மலாய்நாட்டில் உத்தியோகம் பார்த்துப் பொருளீட்டியவன், ஒரு சிறந்த மேல்வீடு கட்டிக்கொண்டு அதிற்றானே வசிப்பானாயினான்; இவனுடைய மனைவி விவாகஞ்செய்துசில வருடஞ் செல்வதற்கிடையில், மலாய்நாட்டி லிருக்கும்போதே, முதற்பிள்ளையைப் பிரசவித்த காலத்தில், பிள்ளை செத்துப்பிறக்க, அவளும் மாண்டாள்; விஜயரத்தினம் ஒன்றியாக மலாய் நாட்டில் யுத்தகாலத்திலும் ஒருவாறு தப்பியிருந்து யுத்தம்முடிந்துசமாதானமுண்டானவுடனே, தன் சொந்தவூரை வந்தடைந்தான்; இங்கு வந்த போது அவனிடத்தில் அதிக பணமில்லையாயினும், முந்திச் சம்பாதித்த பணத்தைக் கொண்டு நிலம்புலம் ஈடுபிடித்துப் பொருளீட்டி யுள்ளவன்; தன் பணத்தை விருத்தியாக்கும்படி தனக்குப் பெண் கொடுத்த மாமன் வசமே கொடுத்திருந்தான்; மாமனும் விசுவாசத்துடன் அவனுடைய பொருளை வட்டிக்குக் கொடுத்து ஈட்டி வந்தான்; விஜயரத்தினத்தின் வயசு முப்பத்தாறு முப்பத் தேழு வரையிலிருக்கும்; புநர்விவாகஞ்செய்து கொண்டு மீண்டும் மலாய்நாட்டிற்போய் உத்தியோகம் பார்க்க வேண்டுமென்பதே இவன் கொண்டுள்ள நோக்கம்; இவனாக, இவனுடைய மாமனாக விவாகமுயற்சி செய்யாமலிருக்க, சிறந்த சீதனத்தோடும் இக்காலத்துக் கல்வி நாகரிகத்தோடுங்கூடிய கன்னியர்களைக் கல்யாணத்தரகர் பலர் இந்த விஜயரத்தினத்திற்கு மணம்பேசி வருவாராயினர்; விஜயரத்தினம், அதிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதனத்தை விரும்பிலன்; கல்வியறிவு, நாகரிகம், பேரழகு, தன்னைக்காட்டிலும் சற்றே உயர்ந்த மரபு முதலியவைகளோடு கூடிய ஒரு கன்னிகையைத்தான் மணஞ் செய்ய வேண்டுமென்ற நோக்கங் கொண்டிருந்தான்; அவன் சிவபாக்கியத்தின் கல்வியறிவு, நிறை குணம், சீர்திருத்தம், பேரழகு, சிறந்த மரபு என்னுமிவைகளைப்பற்றி நன்கு அறிவான்; சிவபாக்கியம் சிறுபிராயந்தொட்டு அவளுடைய மைத்துனன் நமசிவாயத்திற்கே விவாக நிச்சயஞ் செய்யப்பட்டிருக்கிறாளென்பதை முன்னர் அறிந்திருந்த விஜயரத்தினம், பின்னர் நமசிவாயம் கதி என்னவாயிற்றோவென அவன் பெற்றார் கவலைப்படுகின்றார்களென்பதையும், அவன் அகப்படாவழி, சிவபாக்கியத்திற்கு வேறு தக்க வரனைத்தேடி மணஞ்செய்ய அவளுடைய தாய்மாமன் முதலான சுற்றத்தார் யோசிக்கின்றனரென்பதையும் பின்னர்க்கேள்விப்பட்டான்.

செல்வச் செருக்கு

அப்படியானால், சிவபாக்கியத்தைத் தனக்கு மணம் பேசுவித்தல் வேண்டுமென்றும் அவன் நோக்கங்கொண்டான்; இந்த விஜயரத்தினத்தின் மரபினருக்கும் சிவபாக்கியத்தின் மரபினருக்கும் எக்காலத்தாயினும் தொடர்பில்லை; இவன் மரபினரைச் சிவபாக்கியத்தின் மரபினர் சற்றுக் குறைந்தவர்களாகவே நினைத்து நடந்து வந்தார்கள்; ஆனாலும் விஜயரத்தினத்தை இப்பொழுது இப்படி மணஞ் செய்யத் தூண்டியது வேறொன்றுமல்ல, அவனிடத்தில் இடையிட்டு வந்த பொருட் செருக்காகும். செல்வம் விரும்பத் தக்கது. ஆனாற் செல்வத்தையிட்டு வரும் செருக்கு வெறுக்கத்தக்கதாம்; ஏன்!

"சிறியரே மதிக்கு மிந்தச் செல்வம்வந் துற்ற போது
வறியபுன் செருக்கு மூடி வாயுளார் மூக ராவர்
பறியணி செவியு ளாரும் பயிறரு செவிட ராவர்
குறிபெறு கண்ணி னாருங் குருடராய் முடிவ ரன்றே."

விஜயரத்தினம் ஒருதினம் தன்வீட்டு மேன்மாடத்திலுள்ள ஒரு அறையில் தன் விவாக விஷயமாகத் தன்னந்தனியே வெகுநேரம் இருந்து யோசித்துவிட்டு, தன் வேலைக்காரனாகிய முத்தனைக் கூப்பிட்டு, "நீ எங்கள் புரோகிதர் வீட்டிற்குப் போய், அவரை "ஐயா" அழைத்துவரச் சொன்னதாகச் சொல்லி அழைத்துவா" என்று பணிக்க, முத்தன் "ஓம் ஐயா இந்த நிமிஷமே அங்கே போய் அவரைக் கூட்டிவருகிறேன்" என்று சொல்லி, விரைந்து புரோகிதர் வீட்டிற்குப் போய், அவரைக்கண்டு விஷயத்தைச் சொல்ல, ஐயர் உடனே புறப்பட்டு விஜயரத்தினத்திடம் வந்தார். வந்த புரோகிதரை விஜயரத்தினம் தக்கவாறு உபசரித்து இருக்கச்செய்து அவருடைய அநுமதிப்படி தானும் ஒரு நாற்காலியில் இருந்து கொண்டு, ஐயரை விநயமாகப் பார்த்து, "சாமி உங்களால் எனக்கு ஆகவேண்டிய கருமமொன்றிருக்கிறது. உங்களாலன்றி வேறெவராலும் அந்தக் கருமம் கைகூடாதென்பது என் நம்பிக்கை; அதனைச் சொல்லத்தான் தங்களை இப்பொழுது அழைத்தேன் சொல்லலாமோ" என்று கேட்டான்; "ஆம் சொல்லலாம்; எம்மிடத்திற் சொல்லாமல் வேறு யாரிடத்திற் சொல்வது" என்று ஐயர் பதில் சொல்ல "சாமீ, உங்களுக்கு விநாயகமூர்த்தியாருடன் அறிமுகமுண்டோ" என்று விஜயரத்தினம் கேட்க, "அறிமுகமா! அவர்களுக்குப் புரோகிதர் நாம் தாமே" என்றார் ஐயர்.

***

உலகம் பலவிதம்: 1947 பெப்ரவரி 28 (முற்றொடர் - 06)

"பொற்றாலியோடு எவையும் போம்"

"அப்படியானால் மிகவும் நல்லகாரியம் சாமி, உங்களிடத்தல்லாமல் வேறுபேரிடத்தில் என் அந்தரங்க விஷயங்களை வெளியிட எனக்கு இஷ்டமில்லை. விஷயங்கைகூடும் வரையில் இரகசியமாக இருத்தல் வேண்டும்; சொல்லுகிறேன், வேறொன்றுமல்ல; கடவுள் எனக்கு எல்லாச் செல்வங்களையும் தந்து விட்டு, ஒரு செல்வத்தை மாத்திரம் இடையிற் பறித்துக் கொண்டார்; மற்றைச் செல்வங்களெல் லாமிருந்தும் இந்த ஒரு செல்வமுமில்லையானால், அவைகளால் என்ன சுகம்; கல்வியறிவு ஒழுக்கம் அரோக திடகாத்திரம் எல்லாமிருந்தும், ஒருவனுக்குக் கண்ணில்லையாயின், அவன் சன்மமெடுத்ததாற் பயனில்லையென்ற விதமாக, ஆடவனாகப் பட்டவனுக்கு வாய்ந்த மனையாள் இல்லையானால் அவன் வாழ்க்கையினால் என்ன பிரயோசனம்? இல்லாளில்லாத இல்லம் இடுகாடொக்குமென்றும், "பாழே மடக்கொடி யில்லாமனை" யென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றனவே; என் அருமை மனைவி இறந்தும் வருடக் கணக்கிற் காலங்கழிந்தது; "பொற்றாலியொடு எவையும் போம்" என்ற பெரியோர் வாக்கியத்தின்படி, எனக்குத் தாரமாக வந்தவள் என்றைக்கு என்னைக் கதறக்கதறக் கைவிட்டுப்பிரிந்து போனாளோ, அன்றைக்கே என் சுகமெல்லாம் இழந்தேன்; சுவாமீ, உங்களைத் தெய்வமாகப் பாவித்துச் சொல்லுகிறேன், என்னிடத்தில் எல்லாச் செல்வங்களுமிருந்தும், "போம்போது அவளோடும்போம்" என்றவிதமாக அந்தப் புண்ணியவதி என் வீட்டைவிட்டுப் போனபோதே என் மனத்திலிருந்த மகிழ்ச்சியும் ஆறுதலும் என்னைவிட்டு அறவேயகன்றன; அந்த உத்தமியைப்போற் சிறந்த பத்தினி இனிமேல் வந்து கிடைத்தல் அருமையென் றெண்ணியே சாமி, சிலகாலமாக ஒன்றியாகவிருந்து கவலையோடு காலங்கழித்து வந்தேன்; நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலாய்நாட்டை விட்டு மீண்டு இங்கு வந்துசேர்ந்த நாள் தொட்டு இற்றைவரையில், மெய்யென்று நம்புங்கள் சாமி, நல்ல சீதனத்தோடும், கல்வியறிவோடும், நாகரிகத்தோடும் கூடிய கன்னிகைகளைத் தனித்தனியே கல்யாணத் தரகர் எத்தனையோ பேர் கல்யாணம் பேசிவந்தார்கள்; ஆனால், நான் ஒன்றுக்கும் இடங்கொடுக்கவில்லை; காரணம் உந்தத் தரகர்கள் பேசிய சம்பந்தம் நூற்றுக்கு ஒன்றுவிகிதம் நல்லாய் வாழ, 99 விகிதம் இடையில் மாண்டுபோவதும், புருஷன் மனைவிக்கிடையே பிணக்கு நேர்ந்து வழக்குப் பேசிக் கல்யாணம் தள்ளுவிக்கப்படுதலும் இப்படியாக பல அநர்த்தங்கள் நிகழ்ந்ததை நான் நேரிற் கண்டுள்ளேன்; மேலும் முதலாந் தாரம் வாய்ப் பானவளாயிருந்து இடையில் இறந்துபோக, அவன் இரண்டாந்தாரமாக ஒரு கன்னிகையை மணம்முடித்துக் கொண்டானேயானாலும், முந்திய தாரம்போற் பிந்திய தாரம் வாய்ப்பாயிராதென்றும், இரண்டு தாரம் கொண்டவர்கள் சொல்லக்கேட்டிருக்கிறேன்; இப்படியே நாம் ஒன்றியாகவிருந்து காலத்தைக் கழித்து விடலாமோ என்றால், கழித்து விடலாம்; ஆனால் நாம் பாடுபட்டுத்தேடிய இந்தப் பொருள் பண்டம் காணிபூமி வீடுவாசல்கள் இவைகளையெல்லாம், நான் இல்லாத காலத்தில் அந்நியர்தானே அபகரித்து அநுபவிக்கப்போகிறார்களென்று நினைக்க என்மனம் சகிக்கவில்லை சாமி; எனக்குப்பின் என் பொருள் முழுவதும் தரும விஷயத்திலே சேரச் செய்துவிடலாமோ, அப்படிச் சேர்த்துவிட்டாற் போகிற வழிக்குப் புண்ணிய முண்டாகுமோ என்றால், முன்னோராலே தரும சாதனஞ் செய்யப்பட்ட சொத்தும், நிலபுலங்களும் இக்காலத்தில், தரும சாதனஞ் செய்தவர்களுடைய எண்ணத்திற்கு நேர்மாறாக, அபகரிக்கப்பட்டு, அநியாயமாகச் செலவு செய்யப்படுதலை, சாமி, நீங்களுங் காணலாம், நானும் பார்க்கலாம்; ஆனதால். அதிலும் ஒரு புண்ணியமில்லையென்று நிச்சயித்துவிட்டேன்; நான் மலடன் சந்ததியற்றவன், என்ற அவப் பெயரைக் கேளாமலும், ஏதோ இருக்கும் வரையிற் சிறப்பாயிருந்து அநுபவிக்கக்கூடிய சுகங்களை அநுபவித்து, அந்திய காலத்தில் எனக்குரிய தீக்கடன், நீர்க்கடன் பின் சிரார்த்தம் திதி முதலியவற்றைச் செய்தற்கான ஒரு புத்திரப்பேற்றையாயினும் பெற வேண்டுமென்ற ஆசை கொண்டேன்; சாமி, விஷயத்தை வளர்த்துச் சொல்வதனாலாவதென்ன? என் மனோரதங்களையெல்லாம் எனக்குத் தாரமாக வந்திருந்து நிறைவேற்றக்கூடிய லட்சணம் வாய்ந்த கன்னிகை இந்தவூரிற்றானே இருக்கின்றாளென்பதை இற்றைக்கு இரண்டு மூன்று தினங்கட்கு முந்தித்தான் நான் அறிந்தேன்.

"கன்றினாற் கொள்வர் கறந்து"

சாமி,

தங்கட் குதவிலர்கைத் தாமொன்று கொள்ளினவர்
தங்கட் குரியவரால் தாங்கொள்க தங்கநெடுங்
குன்றினாற் செய்தனைய கொங்கை யாய், ஆவின்பால்
கன்றினாற் கொள்வர் கறந்து"

என்ற பிரகாரம், நம்மால் நேரிற்பெற்றுக் கொள்ள முடியாத பொருள்களை அவற்றைப் பெற்றுத் தரத்தக்க தகுதியுடையவர்களைக் கொண்டே பெற முயலுதல் வேண்டும்; எல்லாமறிந்த உங்களுக்கு அதிகஞ் சொல்வதென்ன; என்னைப்பற்றி நீங்கள் நல்லாய் அறிந்திருக்கிறீர்களென்று நினைக்கிறேன்; அந்த விநாயக மூர்த்தியின் பரம்பரை முதலியவற்றைப்பற்றியும், சாமி, நீங்கள், அவர்களுக்குப் புரோகிதராயிருத்தலினால், அறிவீர்களென்று நினைக்கிறேன்; விநாயகமூர்த்தி தம்முடைய மகனுக்குத் தம்சகோதரி மகளாகிய சிவபாக்கியத்தைக் கல்யாணஞ் செய்துவைப்பதென்று முந்தியே நிச்சயித்திருந்தவராம்; ஆனால் அவருடைய மகன் மலாய்நாட்டிற் போய் உத்தியோகமாக விருந்தவன், யுத்தம் முடிந்து இவ்வளவு காலமாகியும் இன்னமும் மீண்டு இந்தவூருக்கு வரவில்லையாம்; தன் மகனுடைய உயிருக்கு மோசம் நேர்ந்திருக்க வேண்டுமென்றெண்ணி அவரும் மனைவியும் சுற்றத்தாரும் கவலைப்படுகின்றனராம்; இப்பொழுது விநாயகமூர்த்தி தம் மருமகளாகிய சிவபாக்கியத்துக்கு ஒரு தக்க வரன் அகப்பட்டாற் சம்பந்தஞ் செய்யும் நோக்கங்கொண்டிருக்கிறாராம்; ஆனதனால் சாமி, நீங்கள் என் விஷயமாக அந்தப் பெண்ணுக்குச் சம்பந்தம்பேசி அவளை எனக்கே ஒழுங்கு பண்ணவேண்டும்; இதனை நிறைவேற்றி வைப்பீர்களானால் உங்களுக்கு வேண்டிய சந்மானஞ் செய்வதோடு, நீங்கள் செய்யும் நன்றியையும் சாகிறபரியந்தம் மறக்க மாட்டேள்" என்று சொல்லி முடித்தான் விஜயரத்தினம்.

"அந்தக் குடும்பத்திலே" பெண் கொள்ளவேண்டும்"

விஜயரத்தினஞ் சொல்லியவை முழுவதையும் அவதானமாகக் கேட்டுக் கொண்டிருந்த புரோகிதர் சிறிதுநேரம் யாதும் பேசாது யோசித்த வண்ணமிருந்துவிட்டுப் பின்னர் விஜயரத்தினத் தைப் பார்த்து, "தம்பீ, நீர் சொன்னதெல்லாம் சரி, உம்முடைய கருமத்தில் நாமும் தலையிட்டு, உமக்கு எம்மால் இயன்ற உதவிசெய்ய வேண்டுமென்பது எம் விருப்பம். விநாயகமூர்த்தி யென்பவர் தமது மருமகளைத் தம்மகனுக்கே கல்யாணஞ் செய்துவைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அன்று தொடக்கமிருக்கிறாரென்பதை நாம் அறிவோம். இப்பொழுது தம்மகன் கதியென்னவாயிற்றென்று அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்கிக்கொண் டிருப்பதால் ஒருபோது நீர் சொல்லுகிற பிரகாரம் தம் மருமகளுக்கு வேறெங்கேனுஞ் சம்பந்தஞ் செய்து வைக்க வேண்டுமென விநாயகமூர்த்தி நோக்கங் கொண்டிருக்கிறாரென்பதை நாம் அறியோம். அவர்கள் ஒருவகையான ஆட்கள்; அவர்களுடைய குடும்பத்திலே சம்பந்தம்பேசி அவர்களை அதற்கு இசையச்செய்வது வெகு கஷ்டம். ஆகையால் அந்த எண்ணத்தை விட்டுவிட்டு, உமக்கு வேண்டிய, உம்முடைய மரபோடு ஒத்த மரபிலே ஒரு சிறந்த பெண்ணைப் பேசிக் கல்யாணஞ் செய்வதுதானே; வேறு நல்ல குடும்பங்களிலே நீர் சொன்ன இலட்சணங்க ளெல்லாவற்றோடுங் கூடிய கன்னியர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்களென்பதை நாம் புரோகிதராதலினால், அந்தஅந்த வீடுகட்குப் போகும் வேளைகளில் அவதானித்து வைத்திருக்கிறோம். அப்படிப்பட்ட இடங்களிலே குமர் வைத்திருக்கிற பெற்றார் சிலர், "சாமி, எங்கள் பிள்ளைக்கு எங்கேனும் தக்கவரன் தேடிப்பார்த்தறிந்து அகப்பட்டால் எங்களுக்குச் சொல்லுங்கள்; உங்களுக்குப் பெரும் புண்ணியங் கிடைக்கும்" என்று எம்மிடம் பலமுறை சொல்லி யிருக்கிறார்கள்; ஆனதனால், அப்படியான பெண்களில் உமக்கு இசைந்ததாய் நாம் போய்ப் பேசி ஒழுங்குபண்ணலாமென்று நினைக்கிறோம்; உமது நோக்கமென்ன, சொல்லுந்தம்பி" என்றார்; "சாமி, நீங்கள் சொல்வது நிசந்தான்; உங்களால் அப்படியெல்லாம் செய்துவைக்க முடியுமென்பதையும் நான் அறிவேன்; ஆனால், சாமி உங்கள் வார்த்தைக்கு எதிர் வார்த்தை பேசுகிறேனென்று என்மேற்கோபிக்காதீர்கள்; அந்தக் கன்னிகையும் எல்லாவற்றினுஞ் சிறந்த பெண்ணெனக் கேள்வி; அதுமாத்திரமல்லாமல், அந்தக் குடும்பத்திலே ஒருபெண் கொள்ள வேண்டுமென்பதுவே என்னுடைய வேணவா; மேலுந் தாங்கள் அந்த விஷயத்திலே தலை யிட்டால், அக்கருமம் தவறாமற் கைகூடுமென்பது என் நம்பிக்கை" யென்று ஐயரைப் பெரிதும் இரந்து வேண்டினான் விஜயரத்தினம்.

"புல்லென்றாலுங் கணவன்" கல்லென்றாலும் புருசன்"

ஐயர் அவனை நோக்கி, "தம்பீ, குறிப்பாக உமக்குச் சொன்னோம்;நீர்அதைவிளங்கிக்கொள்ளவில்லையெனப் புலப்படுகிறது; இந்த யாழ்ப்பாணத்திலே இந்த நாளிற் சாதிபேதம் பார்க்கமுடியாது உயர்ச்சி தாழ்ச்சி யென்னு மிவைகளைப்பற்றி யோசிக்கவொண்ணாது உலகந் திருந்தி வருகிறது. அதற்குத் தக்கதாக நாங்களுந் திருந்திக்கொள்ள வேண்டுமென்று பேசிக்கொள்வார்கள்; பிரசங்கம் பண்ணுவார்கள்; பத்திரிகைகளிலும் எழுதிவிடுவார்கள்; மற்றை யவர்கள் விஷயத்திலே காலத்திற்கு தக்க கோலமென்று புத்திசொல்லி அவர்களைத்தூண்டிப் பேதம்பாராது கலந்து ஊடாடவும் அவர்களைக்கொண்டு செய்வித்துவிடுவார்கள்; ஆனால் தங்கள் சொந்தக் குடும்ப விஷயங்களிலென்றாலோ, அவைகளையெல்லாம் மறந்து, மிகவும் நுட்பமாகச் சாதிபேதம் ஏற்றந் தாழ்ச்சி பார்ப்பார்கள்; இது வேளாளர்களாகிய உங்களுக்குள் மாத்திரமல்ல, எங்கள் பிராமணச் சாதியிலும் இன்றும் உண்டு; ஏனைய சாதியினரிடத்துமுண்டு; நீர் சொல்லும் அந்த விநாயகமூர்த்தி குடும்பத்தினர் இங்குள்ள வேளாண்மக்களுள், தாங்களே சாதித்தலைப்பு என்று பேசப் பலமுறையுங் கேட்டிருக்கிறோம்; ஆருமற்றது தாரம், ஊரிலேயொருத்தன் தோழன் என்று உலகத்திலே சொல்லுவார்கள்; நாம் நம்மோடு ஒத்த மரபினரென்றிருக்கும் குடும்பத்தினரிடத்திலேபோய்ச் சம்பந்தம் பேசலாம்; சம்மதித்து வந்தாற் பெண் கொள்ளலாம்; அப்படி யகப்படவில்லையேல், கன்னிகையைக் கடையிலுங் கொள்ளலாமென்றபடி, நம்மிலும் சற்றுத்தாழ்ந்த மரபிலும் சம்பந்தஞ் செய்து கொள்ளலாம்; இதனை விட்டுச் சாதி மரபிலே ஏறவேண்டுமென்று ஆசைபட்டுப்போய்ச் சம்பந்தஞ் செய்தால், அப்படிச் செய்யும் ஆடவன் தனக்கு மாத்திரமல்லாமல் தன் இனசனத்தாருக்கும் தாழ்ச்சியையும் வசையையும் தேடிவிடுகிறான்; இவன் எங்கள் வமிசத்திற் பெண்ணெடுக்கத் தக்கவனோ பணத்திற்கு ஆசைப்பட்டு நம்முடைய ஆட்கள் சாதி மரபு பாராமற் சம்பந்தஞ்செய்து விட்டார்கள் என்று இப்படியெல்லாஞ் சொல்லி அந்த ஆடவனையும் பெண்ணுடைய மரபினரையும் எள்ளுவார்கள்; இனி, அவனுக்கென வந்த பெண் நல்லவளாயிருந்தால் கல்லென்றாலுங் கணவன் புல்லென்றாலும் புருஷன் என்று அவனை மதித்து நடப்பாள்; அப்படியில்லாதவ ளாயிருந்தால், சாதிமரபுச் செருக்குக் கொண்டு, கொண்ட கணவனையும் அவமதிப்பாக நடத்தத் துணிவாள்; சாதிமரபில் உயரலாமென்று எண்ணிச் சம்பந்தஞ்செய்யப் புறப்பட்ட இவனும் ஐயோ நம்மோடு ஒத்த மரபினளாகிய ஒரு கன்னிகையைக் கல்யாணம் முடித்திருந்தால் எனக்கும் என் இனசனத்தாருக்கும் இப்படி அவமானம் நேராதே, நாங்கள் மரியாதையோடு ஒற்றுமையாய் வாழ்வோமே; இப்பொழுது குடித்தனத்தைக் கொண்டு நடத்தவும் விட்டுப் பிரியவும் முடியாமல் இருதலைக்கொள்ளியிலுள் எறும்பு போல நின்று கலங்குகின்றேனே; என்று சொல்லிச் சஞ்சலப்படவேண்டி நேரும்; தம்பி, நாம் உங்கள் சாதியினருட் பல குடும்பத்திற்குப் புரோகிதராயிருக்கிறோம்; எம் அனுபவத்திற் கண்ட உண்மைகளையே இப்பொழுது உமக்குத் தொகுத்துச் சொன்னேம்; மேலும் ஒருவன் உயர்ந்த மரபிலே பெண் கொள்வதனால் தானும் உயர்ந்து விடுவானென்று எண்ணுவது தவறு; மறப்பினும் ஒத்துக்கொளலாகும் பார்ப்பான் பிறப்பு ஒழுக்கங்குன்றக் கெடும்என்று திருவள்ளுவப் பெரியார் விசேஷமாக எங்கள் குலத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்துச் சொன்னாரெனினும், அவருடைய வாக்கை எல்லாரும் தங்கள் தங்கள் குலத்திற்கும் ஒழுக்கத்திற்கும் பொதுவாகத்தான் கொண்டு நடக்கவேண்டும்; சாதி மரபு வேறு, ஒழுக்கம் வேறென்பதை மறந்துவிடவொண்ணாது தம்பீ" என்று சொல்லி முடித்தார்.

***

உலகம் பலவிதம்: 1947 மார்ச் 07 (முற்றொடர் - 07)

கல்லாதொருவன் குலநலம் பேசுதல் நெல்லினுட் பிறந்த பதர்போலும்மே

"சாமி, நீங்கள் சொல்வதை நான் மறுக்க வில்லை; ஆனால், ஒன்று சொல்லுகிறேன்; குறை யெண்ணாதீர்கள்; இந்தச் சாதியென்பதிலுள்ள உயர்வு தாழ்வும், கட்டுப்பாடுகள், தீண்டுதல் தீண்டாமை முதலான பழையகொள்கைகளெல் லாம் இந்தக் காலத்திலே தேய்ந்து வருகின்றன; அதிக காலம் போகவேண்டியதில்லை; இன்னுஞ் சில வருடங்களில் இவைகளெல்லாம் அறவே இல்லாமற் போய்விடுமென்பது தான் என் நம்பிக்கை; அயல்நாடாகிய இந்தியாவில் இப்பொழுது நடப்பவற்றைப் பாருங்கள்; உயர்ந்த சாதியார் தாழ்ந்த சாதியாரென்னு மிவர்கள் தமக்கிடையே கலப்பு மணஞ்செய்யத் தலைப்பட்டுக் கொண்டார்கள்; அங்கே சாதிபேதம் பாராட்டுவதை மெல்லமெல்லக் கைவிட்டு வருகிறார்கள்; சமாசனம், சமபோசன மென்னு மிவைகளும் இப்பொழுது நடக்கத் தொடங்கிக் கொண்டன; சபைகள், சங்கங்கள், கூட்டங்க ளென்னுமிவைகளிலே உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேதம் பார்ப்பதில்லை; அங்கே கல்வியறிவு திறமை யென்னுமிவைகளைப்பற்றிச் சிந்தித்து, இவைகளிற் சிறந்தவர்களையே அச்சபை சங்கங்கட்குத் தலைமை வகிக்கச் செய்கிறார்கள்; அவர்கள் செய்வதும் நியாயந் தானே; "எக்குடிப்பிறப்பினும் யாவரேயாயினும், அக்குடிக் கற்றோரை மேல்வருகென்பர்" எனவும், "கல்லாவொருவன் குலநலம் பேசுதல், நெல்லினுட் பிறந்த பதர்போலும்மே" எனவும் தானே பெரியோரும் பாடியிருக்கின்றார்கள்; சாமி, இப்படியான சீர்திருத்தங்கள் பல இந்தியாவில் தோன்றியிருக்கின்றன; பொதுக்கிணறுகளிற் சாதிபேதமின்றி எல்லாரும் தண்ணீரள்ளிக் குடிக்கலாம்; மடங்கள் சத்திரங்கள் வாசக சாலைகள் முதலிய பொதுத் தாபனங்களில் எல்லாரும் போய் "ஏக போகமாக"ச் சஞ் சாரஞ் செய்யலாம் என்ற திருத்தங்களும் அந்த நாட்டிலே இக்காலத்தில் நடைபெறலாயின; சாமி, இவைகளெல்லாவற் றைக் காட்டிலும் சிறந்த ஒரு சீர்திருத்தம், இந்து சமயத்தை எங்கும் பரவச் செய்வதற்கும், இந்துக்க ளென்றிருப்பவர்கள் அந்நிய மார்க்கங்களிற் பிரவேசிக்காமற் செய்தற்கும் கைகண்ட வழியாகவுள்ள தீண்டாதார் ஆலயப் பிரவேசமென்ற முயற்சி இப்பொழுது இமயந் தொடக்கம் கன்னியாகுமரி ஈறாகப் பரதகண்டம் முழுவதிலும் செய்யப்பட்டு வருதலை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்; பத்திரிகைகள் மூலமாகப் படித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். இப்படிக் கணந்தோறுங் காலம் மாறி வரும்போது விநாயக மூர்த்தி குடும்பத்தினர் இன்னமும் தாங்கள் சாதிமரபிலே சிறந்தவர்களென்று வாய்ப்பறை யறைந்துகொண்டிருப்பதனால் வரவிருக்கும் பயனென்ன சாமி; ஆனதால், நீங்கள் தயவு செய்து என்பொருட்டு அவர்கள் வீட்டிற்குப்போய் இந்த நியாயங்களையும் எடுத்துக்காட்டி அந்தச் சம்பந்தத்தை எனக்கு ஒழுங்கு செய்து வைக்க வேண்டும் சாமி; நீங்கள் செய்யும் நன்மையை நான் ஒருபோதும் மறவேன்" என்று சொல்லிப் புரோகிதரை வேண்டினான் விஜயரத்தினம்.

ஊரோடுகில் ஒக்க ஓடு

புரோகிதர் இவைகளை யெல்லாங்கேட்டுச் சற்றுநேரம் யோசித்துவிட்டுப் பின்னர் விஜயரத்தினத்தைப் பார்த்து "தம்பீ, நீர் சொல்வன நிசமென்பதை நாம் பத்திரிகைகளிற் படித்தும் வருகிறோம், கேள்விப்பட்டும் வருகிறோம்; உலகத்திலே காலத்திற்கொப்ப மாறுதல்கள் உண்டாதலுஞ் சகசந்தான்; ஆனால் இந்த மாறுதல்களினாலே இந்தியாவிலாக, இந்த நாட்டிலாக, இந்தச் சாதிமரபென்ற கொள்கை அறவேயழிந்து போய்விடுமென நாம் எண்ணிக் கொள்ளவொண்ணாது; இக்காலத்திலே சாதி மரபுப் பேதம் பார்க்கிறார்களில்லை, பார்க்க வேண்டியதில்லையென்கிறான். இந்தநேரத்தில் எமக்குச் சொல்லிக்கொண்டிருந்தீரே, விநாயக மூர்த்தி குடும்பத்தில் ஒரு பெண் கொள்ள வேண்டுமென்றும், அப்படியான பெண்ணை அக்குடும்பத்திலே நாமே ஒழுங்குசெய்து வைக்க வேண்டுமென்றும் எம்மைக் கேட்கின்றீர்; சாதி மரபு வித்தியாசம் பார்க்கவேண்டிய தில்லையானால், விநாயகமூர்த்தி மரபுப்பெண்ணை விடுத்து இன்னுஞ் சிறந்த சீதனத்தோடும் மற்றைய சிறப்புக்களோடுமுள்ள ஒரு கன்னிகையைத் தேடி மணஞ்செய்துகொள்ளலாமே; ஆனதனாற் றான் தம்பீ, சொல்லுகிறோமென்று குறையாய் விளங்காதீர்கள்; இந்த நாட்டிலேயுள்ளவர்கள் பேச்சளவிற் காலத்திற்குத்தக்கபடி எலும்பில்லா நாவால் எதனையும் பேசிக்கொள்ளுவார்கள்; செயலளவில் தாங்களும் பழைய ஏட்டை யெடுத்துப் படிக்கத் தொடங்கிவிடுவார்கள்; எங்கள் பிராமணச் சாதியினராக உங்கள் வேளாண் சாதியினராக, வேறு எச் சாதியினராக, பாரம்பரியம், தொன்மையென்னு மிவைகளில்லாதவர்களும் தமக்குரிய வருணாச்சிரத் தருமத்தை அநுட்டித்தலின்றி இவையிட்டுச் செல்வம் அதிகாரம் படைத்தவர்களுமே ஒரு அளவிற்குச் சாதியெது, குலமெது, மரபென்ன, பாரம்பரிய மென்னவென்று குதர்க்கம் பேசி இயலுமானால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடாத கருமங்களையுஞ் செய்யத்தலைப்படுவர்; மூதாதையர்கள் கொண்ட கொள்கைகளெல்லாம் மூடக் கொள்கைகள்; அவர்கள் கொண்டுள்ள தெய்வ நம்பிக்கை கிரியை நம்பிக்கையாய இவைகளெல்லாம் குருட்டு நம்பிக்கையென்றும் சொல்லிக்கொண்டு தாம் ஒன்றிலும் நம்பிக்கை யற்றாராய் அந்தரத் தாமரைபோல் நிலையற்றுச் சலனமுற்றிருக்கிறார்கள். இக் காலத்திலே தம்மைப் படித்தவரென்று தாமே யெண்ணி யிருக்கும் வாலிபர் பலர், தலையிருப்ப வால் ஆடத் தலைப்பட்டவாறு அறிவின் முதியோர் பலர் இருப்ப, அவர்களுடன் கலந்து யோசித்தலின்றி, அவர்களையும் பொருட்படுத்தாமல் - பிந்தி முளைத்தவர்களாகிய இந்த இளைஞர் - விளைக்கும் அநர்த்தங்கள் பலவாகும்; ஆனதால் எந்தக் கருமத்தையும், எந்தக் கொள்கைகளை யும் எங்கள் சாத்திரங்களோடு பெரிதும் முரண்படாது கற்றோர்கள் முதியோர்களென்னுமிவர்களோடு உசாவிச் செய்தலே புத்தியின்பாற் படுமென்பது எமது நம்பிக்கை; ஊரோடுகில் ஒக்கவோடு, ஒருவனோடுகிற் கேட்டோடு" என்பது பழமொழி தம்பீ; அல்லாமலும் இந்தியாவிலே பல மாறுதல்கள் நடப்பதனால் எங்கள் நாட்டிலும் அந்த மாறுதல்கள் நடந்தே தீரவேண்டுமென்ற நியதியில்லை; சீர்திருத்தங்களைச் செய்யும் போது எங்கள் சாதிசமயம் தேசாசாரம் பாஷை யென்னுமிவைகட்கு இயன்றவரையிற் பங்கம் வராமற் பார்த்துக்கொண்டு கருமஞ் செய்யத் தொடங்குதல் வேண்டும்; எங்கள் சமயத்திற்கும் சாதிக்கும் அடிப்படையாகவுள்ள ஆதாரங்களை மாற்ற முயன்றால், அவற்றைப்பங்கப்படுத்த நினைத்தால், இந்நாட்டிலுள்ள தமிழ்ச் சாதியார் சைவசமயத்தாரென்றிருப்போர் தொன்மையானவர் என்ற மதிப்புங் கெட்டுவிடும். சீர்திருத்தமெனப்படுவது பழையனவெல்லாவற்றையும் காரணமின்றி அறவேயொழித்துவிட்டுப் புதிய விபரீதங் களுட் புகுந்துகொள்வ தென்பதல்ல, தம்பீ" என்று கூறினார் புரோகிதர்.

"மெய்ப்பொருள் காண்பதறிவு"

"சாமி, பழையன கழிதலும், புதியன புகுதலும், வழுவலகால வகையினானே" என்று சொல்லிக் கருமங்களைக் காலத்துக்குத் தக்கவாறு மாற்றிச் செய்தலும் மாறல்லவே; இந்தியாவிலே தீண்டாமையை யொழிப்பதற்கும், தீண்டாதாரை ஆலயங்களிற் பிரவேசிக்கச் செய்தற்கும் ஆகிய முயற்சிகளை இக்காலத்திற் செய்தே தீரவேண்டு மென்றும், இல்லாவிட்டால் இந்துக்களாயுள்ளவர்களுட் பலர் அந்நிய மதங்களிற் பிரவேசித்து விடுவார்களென்றும் சொல்லித்தான் இந்தியத் தலைவர்கள் அம் முயற்சிகளில் தலையிட்டு உழைக்கிறார்கள்; அது நியாயந்தானே" என்று விஜயரத்தினம் ஐயரைக் கேட்க, ஐயர் "தம்பீ, நாம் எடுத்த விஷயத்தை மறந்து, வேறு விஷயத்திலே தலையிடலானோம்; ஆனாலும் நீர் கேட்ட கேள்விக்கு நாம் அறிந்த சமாதானத்தைச் சொல்லிவிடுகிறேன்; சொன்னாலும் பிராமணன் தன் சாதியைப் பாதுகாத்துத்தான் நியாயம் பேசுகிறானென்று நீர் எண்ணக்கூடும்; அதை யிட்டுத்தான் யோசிக்கிறோம்" என்றார் புரோகிதர்; "இல்லை, சாமி நான் உங்களைப்பற்றி அப்படி நினைக்கமாட்டேன்; எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்களே ஆனதால் சாமி, நீங்கள் யோசிக்கவேண்டாம்; சொல்லுங்கள்" என்றான் விஜயரத்தினம்; "தம்பீ, நாம் முந்தியே சொன்னோம்; இந்தியாவிலே செய்யப்படுவன வெல்லாம் இங்கே செய்யப்பட வேண்டியதில்லை யென்று; அல்லன நீக்கி, நல்லன செய்தலே நம் நாட்டவரின் கடமை; ஒரு ஊருக்குப் பேச்சு; இன்னொரு ஊருக்கு ஏச்சாக எண்ணப்படுதலுமுண்டு; இந்தியா பெரியநாடு, உலகத்திலேயுள்ள சனங்களுள் ஐந்திலொரு பங்கினர் இந்தியாவிலிருக்கிறார்களென மதிப்பிடப்பட்டிருக்கிறது; இதனாற்றான் இந்தியாவைப் பரதகண்டமென்றுஞ் சொல்லுகிறார்கள்; கண்டம் - உலகத்தின் பெரும்பிரிவு; அங்கே பல பேதமான கொள்கைகள் பாஷைகள் சமயங்கள் ஒழுக்கங்கள் தொன்மைகள் பூண்ட நாற்பதுகோடி மக்களிருக்கிறார்கள்; இந்திய நாட்டினையும் ஒரு சின்னப் பூவுலகமென்று சொல்லலாம்; அப்படிப்பட்ட பரந்த நாட்டிலே பல விவகாரங்களும் பிணக்குகளும் கொள்கை வித்தியாசங்களும் சாதிகளுக்கிடையே வேற்றுமையும் இன்னபிறவுகளும் இருத்தல் சகசமாகும். தீண்டாமை யொழித்தல், தீண்டாதார் ஆலயப் பிரவேசமென்ற முயற்சிகள் அங்கே இந்துக்களுக்கிடையில் மாத்திரம் ஒவ்வொரு நோக்கம் பற்றிச் செய்யப்படுகின்றன வென்றே எண்ணக்கிடக்கின்றது; இவைகள் அங்குள்ள அரசியல் விவகார விஷயமாக எழுந்த சீர்திருத்தமென்றுஞ் சொல்லுகிறார்கள்; ஆனால் தம்பி எங்களுடைய இந்தச் சிறிய நாட்டில், ஆண்டவனருளால் அப்படியான பிணக்குகளும், வேற்றுமைகளும், விபரீதங்களும் இல்லையென்று சொல்லலாம்; நோயுடையவனுக்கு மருந்து வேணுமேயொழிய, அவனைப் பரிகரிக்க வைத்தியன் வேணுமேயொழிய நோயில்லாதவனுக்கு மருந்தேன்? வைத்தியனேன்? எங்கள் நாட்டிலே பிராமணர் தொடக்கம் தாழ்ந்த சாதியார்வரையில் தங்களுக்கிடையே எவ்வகையான வேற்றுமை விபரீதம் பிணக்கு என்னுந் தீமைகளின்றிப் பழைய முறைகளைப் பாராட்டி ஒரு குடும்பத்தினர் போல், தாம்தாம் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்துகொண்டு இனிது வாழ்கின்றார்கள்; அப்படி வாழும்போது மாறுதல்களேன்? விபரீதத்தையும் வேற்றுமையையும் விளைத்து ஐக்கியத்தைக் கெடுக்கக் கூடிய நவமான சீர்திருத்தங்களேன்? நோயுள்ளவன் மருந்தையுட்கொண்டால், அது அவனுடைய நோயை நீக்கி அவனைச் சுகப்படுத்தும், ஆனால் நோயற்றவனாகிய அரோக திடகாத்திரமுடையவன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயாளி மருந்து குடிக்கின்றானே தானும் ஏதும் மருந்தை உட்கொண்டாலென்ன என்றெண்ணி அப்படியுட் கொள்வனேல், அம்மருந்து அவனுக்கு நோயை ஆக்கிவிடுதலுங்கூடும்; அதுபோலத்தான் தம்பி இருக்கும் இந்தநாட்டிலே, இந்தியாவில் நடக்கும் சில விபரீதங்களைக் கொண்டுவந்து புகுத்தத் துணிவது" என்று கூறினார் புரோகிதர்.

சுவாமி, சொல்லுகிறேனென்று குறையெண்ணாதீர்கள், பழைமையைப்பற்றியும் பழைய ஒழுக்க வழக்கங்கள் கொள்கைகள் ஆசாரங்களைப் பற்றியும் பேசுகிறீர்கள்; அவைகளெல்லாம் தொன்மைபோல் இக்காலத்திலுங் கைக்கொள்ளப்பட்டு வந்தால் இந்த மாறுதல்களும் விபரீதங்களும் ஏற்படமாட்டா; இக்காலத்தில் மேலான சாதியினரென்றிருக்கும் பிராமணர் தொடக்கம் மிகவும் தாழ்ந்த சாதியார் வரையில் தங்கள் பிறப்பொழுக்கம் முதலானவைகளையெல்லாம் பெரும்பாலுங் கைவிட்டுத் தலைதடுமாற்றமாக நடக்கிறார்களே இதனாற்றானே, சாமி இந்த மாறுதல்கள் நேரலாயின வென்பதை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்களென்று நினைக்கிறேன்" என்றான் விஜயரத்தினம்; வேதியர் "தம்பீ, நீர் சொல்வது முழுவதும் நிசம்; எங்கள் சாதியினர் தொடக்கம் எல்லாச்சாதியினருள்ளும் பெரும்பாலார் தங்கள் ஒழுக்கங்களை விட்டுவிட்டார்களென்பதும் அதனாற்றான் இந்த விபரீதங்களெல்லாம் நேரலாயின வென்பதும் உண்மை; நாம் பிராமணனாயிருந்தாலும் சாதியபிமானமென்ற காரணத்தினாற் பட்சபாதமாகப் பேசும் இயல்பு பூண்டுள்ளோம்; கற்றவர் விஷய மறிந்தவர்கள் சாதியிலுயர்ந்தவர்கள் மற்றையோருக்கு உபதேசஞ்செய்து அவர்களை நல்ல நெறியிலே நடத்தவேண்டிய கடமை பூண்டவர்கள் தவறு செய்தால், அத்தவறு நாற்சந்தியிலுள்ள தீபம் அவிந்தது போலிருக்கும். அத்தீபம் அவிந்தமை எல்லாராலும் அவதானிக்கப்படும்; அதுபோலவே பெரியோர்செய்யும் பிழைகளை எல்லாரும் எடுத்துச்பேசுவார்கள்; வீட்டின் அறையிலுள்ள தீபம் அவிந்தால் அவ்வீட்டிலிருப்போரிலுஞ் சிலர் அது அவிந்தமையை அறியாதிருத்தல் கூடும்; அப்படித்தான் படியாத சாமானியர் செய்யுந் தவறு பலரால் அறியப்படாது, பெரிதெனக் கொள்ளப்படாது இருக்கும்.

* * *

உலகம் பலவிதம்: 1947 மார்ச் 14
(முற்றொடர் - 08)

"வேதியர்க்கழகு வேதமும் ஒழுக்கமும்"

"பிராமணர்களாகிய எங்களுட் சிலரொழியப் பலர் வேதியர்க்கழகு வேதமும் ஒழுக்கமும் என்ற மூதுரையை அறவே மறந்து தங்களுக்கு விதிக்கப்பட்ட நியதிகள் ஆசாரங்கள் ஆறுகடமைகள் முதலியவற்றை மெல்ல மெல்லக் கைவிடத் தலைப்பட்டுக் கொண்டனர்; எங்கள் குலத்தவர் தாம் ஆவசியகம் படித்துத் தேற வேண்டிய பாஷைகளாகிய வடமொழி தென்மொழிகளைப் பயில்வதைமறந்து, ஆங்கிலத்தையே பயில வேண்டுமென்ற நோக்க முடையவர்களானார்கள்; எங்கள் சாதியிலுள்ள பெற்றாருட் பலர் தாங்கள் ஒரு அளவிற்கு ஆரியமுஞ் செந்தமிழும் ஆராய்ந்தறிந்தவர்களா யிருந்தும், தங்கள் பிள்ளைகட்கு அவைகளை இளமைப் பருவத்திற் பயிற்றி அப்பாஷைகளிலே அவர்களை விருத்தியுறச் செய்யாது, ஆங்கிலத்தை மாத்திரம் ஊட்டுவிக்க முயற்சி செய்கிறார்கள்; அந்த இரண்டு பாஷைகளோடு ஆங்கிலத்தையும் தம் பிள்ளைகட்குச் சேர்த்துப் பயிற்றுவித்தால், அதனாற்பெரும் நன்மையுண்டாகும்; இந்தியாவிலே நம் அந்தணசாதியினராக, வேறுஎச்சாதியினராக நான்கு ஐந்து பாஷைகள் பயின்றவர்களாகவிருக்க, எங்களுடைய இந்த நாட்டிலேதான் ஒரு பிள்ளை ஒருபாஷை இல்லையேல் இரண்டுபாஷைக்கு மேலே தான் பயின்றுகொள்வதற்குப் பயப்படுகிறான்; இனி வடமொழியையும் தமிழையும் ஒரு அளவிற்குப் பயின்றுகொண்டு, பிராமணப்பிள்ளை ஆங்கிலத் தைப்படிக்கத் தொடங்கினால், அப்பிள்ளையின் குலதர்மம் ஆசார அநுட்டான மென்னுமிவைகட்குப் பெரும்பான்மையும் பங்கம் நேரமாட்டாதெனலாம்; அப்படியில்லாமையினாற்றான் பிராமணச்சிறுவர்களுட் பலர் தனியே ஆங்கிலத்தைப் படித்துவிட்டுத்; தமக்குரிய ஆசார ஒழுக்கங்களை மறந்து உடை நடை பாவனைகளை விபரீதமாக்கி பிராமணன் என்ற மதிப்பையிழந்து இடர்ப்படுகிறார்கள். தம்பீ, நாம் எங்கள் சாதியைப் பெருமைப்படுத்துவதற்காகச் சொல்லுகிறோமென எண்ணிக்கொள்ள வொண்ணாது; எங்களுடைய இந்த நாட்டிலே கல்வியறி வொழுக்கம் பெருந்தன்மை முதலிய செயல்களோடுங் குணங்களோடுங் கூடிய பிராமணனை எங்கள் பிராமண வகுப்பினரும், ஏனைய சாதியினரும் அன்றும் இன்றும் என்றும் மேன்மையாக மதித்துப் பாராட்டி அப்படிப்பட்ட அந்தணருடைய சொற்கேட்டே நடந்து வருகிறார்கள்; அப்படி மதிப்புப்பெறும் மறையவர் இக்காலத்திற் சிலரினுஞ் சிலரே யிருக்கிறார்கள்; அப்படிப்பட்டவர்களொழிய ஏனையோர் தங்கள் ஒழுக்கத்திற் பெரும்பாலுந் திறம்பியவர்களாய்த் தாம் செய்யும் ஆன்மார்த்த பரார்த்த பூசைகள், இன்னும் சமய சம்பந்தமாகவுள்ள கிரியைகள் முதலியவற்றையெல்லாம் பத்தி சிரத்தையென்னுமிவைகளின்றிப் பொருளுக்கு ஆசைப்பட்டு வியாபார முறையிற் செய்யத் தலைப்பட்டுக் கொண்டார்கள்; வறுமையும் கல்வியறிவின்மையும் ஒருங்குசேர்ந்து எங்கள் வருணத்தார் பலரைத் தமது விதிக்கு விலக்கப்பட்ட கருமங்களையுஞ் செய்யும் வண்ணம்பண்ணிவிட்டன; ஆனால், நம்முடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபினர் செய்யும் பிழைகளை நாமே யெடுத்துத் தூற்றுதல் முறையல்ல; இவ்வாறு எங்கள் குலத்தில் ஏதுந்தவறிருந்தால் அத்தவறை யகற்றி ஏனைய சாதி மக்களையுந் திருத்தி நல்வழியில் ஒழுகச்செய்யவேண்டிய முதல் வருணத்தவர்களாகிய எங்களுட் பலர் ஒழுக்கந் திறம்பியமையினாற்றான், தம்பீ, மற்றைச் சாதியாரும் நெறி திறம்பவேண்டி நேரிட்டதென்று நாம் நினைக்கிறோம்" என்றார் புரோகிதர்.

"வையந்தோறுந் தெய்வந்தொழு"

பின்னரும் புரோகிதர் விஜயரத்தினத்தைப் பார்த்து "தம்பீ, தாழ்ந்த சாதியார் தங்களுக்கென விதிக்கப்பட்ட தானத்தில் நின்று தெய்வத்தை வணங்குவதை விட்டு, இந்தியாவிலே அவர்கள் கோயிலுக்குட்போய் வணங்கத் தலைப்பட்டிருக் கிறார்களெனவும், காலத்திற்குத் தக்கபடி அப்படிச் செய்ய வேண்டுமெனவுங்கருத்துப்படச் சொன்னீர்; அங்கே அவர்கள் அப்படி உட்சென்று வணங்குதற்குப் பல காரணங்களுண்டென்றும் அறிகிறோம்; ஆனால் ஒன்றை நாம் அவதானித்துக் கொள்ளல் வேண்டும்; தீண்டுஞ் சாதியாரென்றுந் தீண்டாச் சாதியாரென்றும் மனிதன்றான் வகுத்து வைத்தானென்று வைத்துக்கொள்ளுவோம்; இந்தியாவிலே பிராமணரும் மற்றைச் சாதியினரும் ஊடாடும் முறைகளைப்பற்றி நாம் அறியோம்; எங்கள் நாட்டிலே ஒவ்வொரு சாதியாரும் மற்றைச் சாதியாரோடு தீண்டி ஊடாட வேண்டுமென்ற நியதியில்லை; நாம் பிராமணன், நீர் வேளாளன்; எம்மைத் தீண்டவேண்டுமென்ற விருப்பம் உமக்கில்லை; உம்மைத் தீண்ட வேண்டுமென்ற விருப்பம் எமக்குமில்லை; இதனால் நாங்களிரு வருந் தீண்டாச் சாதியினராவோமா? மேலான சாதியினரென்று சொல்லப்படும் பிராமணர்களாகிய நாங்களும் கோயிலுக்குள் எந்தக் காலத்தும் எந்த இடத்திலும் போய் நின்று வணங்குதற்கு எங்களுக் கதிகாரமில்லையே; பராத்தபூசையைச் செய்தற்குரிய ஆதி சைவப் பிராமணனாகவிருந்தாலும் தனக்குரிய ஆசார ஒழுக்கத்தோடுங் குருத்துவத்தோடும் கூடியவ னாய் ஆன்மார்த்த பூசை முதலியன செய்பவனாய் அங்கக்குறைவு எவையுமின்றி ஆசாரியருக்குரிய இலக்கணங்களெல்லாம் அமைந்தவனாக இருந்தால், அவனே சிவலிங்கத் திருமேனியைத் தீண்டி அபிஷேகஞ் செய்தற்கும், அலங்காரஞ் செய்தற்கும், அர்ச்சனை செய்தற்கும் உரியவனென்று தமிழிலுள்ள சைவசமயநெறி முதலிய நூல்களிற் சொல்லப்பட்டிருத்தலை நீரும் படித்துப் பார்க்கலாம்; கோயிலிற் போய்த் தெய்வத்தை வழிபடும் விஷயத்திலே பிராமணனாயிருந்தாலென்ன வேளாளர் முதலிய ஏனைய சாதியினராயிருந்தாலென்ன, தம்ப மண்டபத்திற்கு இப்பால் நின்று கும்பிட வேண்டுமென்று தானே சொல்லப்பட்டிருக்கிறது; மேலும் ஆசாரமில்லாமலும் ஆகௌசத்தோடும் பிராமணனாக வேளாளனாக ஏனைய சாதியினராகத் திருக்கோயிலுட் பிரவேசிக்க வொண்ணாதென்ற கட்டுப்பாடிருக்கிறதல்லவா?

"தாழ்ந்தவருணத்துதித்தோரும் தக்கோராவர் ஒழுக்கத்தால்"

நாம் எங்கள் இல்லங்களில் ஸ்நான மின்றியும், தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரியாமலும் சஞ் சரிப்போம்; ஆனாற் கோயிலுக்குப் போவ தென்றால், ஆசாரசீலராயல்லாமல் திருக்கோயிலின் உட்பிரகாரத்திற்றானும் புகமாட்டோம்; ஸ்நானம் முதலியன முடித்துக்கொண்டுதானே போகிறோம்; காரணமென்ன? எங்கள் இல்லங்களைக் காட்டிலும் வித்தியாசாலைகள் மடங்கள் இன்னும் பொதுவான தாபனங்கள் எவைகளைக் காட்டிலும் திருக்கோயில் பரிசுத்தமான இட மென்றதனாற்றானே; இந்தியாவிலே தீண்டாச் சாதியினரென்று சொல்லப்படுவோரைக் கோயிலுட் போங்கள் என்று தூண்டிநிற்கும் தீண்டுஞ் சாதியின ரென்றிருப்போர் தங்கள் வீடுகளில் அவர்களை எங்கும் புக இடங்கொடுப்பார்களா? மனஞ் சம்மதிப்பார்களா? அவர்களை ஒருபோது தாங்கள் தீண்டினாலும், தங்கள் மனைவி மக்களைத் தீண்டவிடுவார்களா? பொதுவான இடங்களிலுள்ள பொதுக் கிணறுகளிலே தாழ்ந்த சாதியினரும் தண்ணீர் அள்ளிக் குடிக்கலாமென்று சொல்லுகிற அவர்கள் தங்கள் தங்கள் வீடு வளவுகளிலுள்ள கிணறுகளில் அவர்களைத் தண்ணீரள்ள விடுவார்களா? இந்தியாவிலேயுள்ளவர்கள் அரசியல் விஷயமாகத் தாம் மேற்படுவதற்காக அப்படிக் காரணங்காட்டித் தம் தம் வருணாச்சிர தருமத்தின்படி ஒழுகும் இந்து ஏழை மக்களைத் தூண்டிவிடுகிறார்களே யொழிய, அந்தத் தாழ்ந்த வருணத்தார் கோயிலுட் பிரவேசித்துத் தெய்வத் திருமேனிகட்குச் சமீப மாகப்போய் வரங்கேட்டுப் பெற்று மறுமையில் முத்தியையும் பெறட்டும் என்ற கருணையினால் இந்த விபரீதங்களை ஆக்கிவிடுகிறார்களா? இந்திய தேசீயவாதிகள் அந்நாட்டிலுள்ள தீண்டாதார் விஷயமாகச் சொல்லுவதுஞ் செய்வதும், வெள்ளாடு நனைகின்றதென்று வேங்கை விம்மியழுதவாறல்லவா? அந்தத் தீண்டாதாரை அத்தேசீயவாதிகள் நன்னிலைப் படுத்த விரும்பினால் அவர்களுக்குப் போதிய கல்வியூட்டி மது மாமிசம் முதலியன உண்ணாமற் செய்து நல்லொழுக்கங்களைக் கடைப்பிடித்தொழுகப்பயிற்றி அவர்களையும் தக்கோர்களாக்கிவிடலாமே! "தாழ்ந்தவருணத்துதித் தோரும் தக்கோராவர் ஒழுக்கத்தால்" என்று தமிழ் நூல்களிற் கூறப்பட்டிருக்கிறதே; தக்கோரானால் அவரை ஆலயத்துட் பிரவேசிக்க வொண்ணாதென எவருந் தடுத்தல் முடியாதே?..." என்று புரோகிதர் சொல்வதற்கிடையில், விஜயரத்தினம் அவரைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து "சாமீ, வேளாளர் முதலிய உயர்ந்த சாதியினரென்று தங்களைச் சொல்லிக்கொண்டு, தாழ்ந்த சாதியாரென்றிருப் போருட் பலர் செய்யும் கருமங்களாகிய மற்சமாமிசம் புசித்தல் மதுபானஞ் செய்தல் ஆசௌசங் காக்காமை முதலாந்தவறுகளைச் செய்கிறார்களே, அப்படிப்பட்டவர்களுங் கோயிலுக்குப் போகிறார்களே, அவர்கள் போகலா மென்றால் இவர்கள் ஏன் போகக்கூடாது? இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்" எனலும், ஐயர் "தம்பீ நீர் கேட்ட கேள்வி நியாயமானது? இந்தக்கேள்வியை இக்காலத்தில் எம்மிடம் பலர் கேட்கிறார்கள்; இதற்கு நியாயஞ் சொல்வதும் இலகுவல்ல; நாம் இந்த விஷயமாகச் சிந்தித்துப்பார்த்தோம் ஒரு காரணம் மாத்திரஞ் சொல்லலாம்; உயர்ந்த சாதியாருக்குள் மற்சமாமிசம் புசிப்போர் மதுபானஞ் செய்வோர் ஆசார ஒழுக்கமில்லாதவர்கள் கோயிலுக்குட் போகக்கூடாதென்று சிவாலயதரிசனவிதி முதலிய நூல்களிற் சொல்லப்பட்டிருக்கிறது; தான் உயர்குலத்தைச் சேர்ந்தவனென்று தன்னை மதித்துக்கொண்டிருக்கு மொருவன், மேலே சொல்லப்பட்டவிதமாக ஆசாரமில்லாமற் கோயிலுக்குட் போகும்போது, அங்கு நிற்கும் ஆசார ஒழுக்கத்தோடுகூடிய ஒரு அன்பன் அவனை நோக்கி "நீர் இப்படி ஆசாரமில்லாமற் கோயிலுக்குட் புகலாகுமா" என்று கேட்கிறானென வைத்துக்கொள்ளுவோம்; கேட்கப்பட்டவன் பிராமணனாயிருந்தால் என்ன பதில் சொல்லுவான் தெரியுமா? "நான் பிரமகுலத்தவன் என் தமயனார் தாம் இங்கே உற்சவாசாரியராய் வந்து கடமை பார்க்கிறார்; அவர் உற்சவாசாரியராய்க் கடமை பார்க்கலாம் அவருடைய தம்பி நான் மாத்திரம் கோயிலுக்குட் போகவுங் கூடாதா, என்னுடைய ஒழுக்கம் ஒழுக்கவீனத்தைப் பற்றி நீ எப்படி அறிவாய்" என்று தன் சாதிஉயர்ச்சியைச் சொல்லி உரிமை பாராட்டுகிறானே யொழிய, தன் தீய ஒயழக்கத்தைப் பற்றி யாதும் பேச மாட்டான்; மேலும் அத்தீய வொழுக்கத்தை மறைக்கவே முயலுகிறான்; இப்படியே வேளாளர் முதலிய சாதியினருள்ளும் ஒழுக்கங்கெட்டவர்கள் சமா தானஞ் சொல்லத் தலைப்பட்டுக் கொண்டார்கள் தம்பீ, சாதிசமயக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதாகிய பூர்வகாலத்திலே அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் முதலாம் வருணத்தார்கள் தூயவுணவுண்போராய் ஒழுக்கமுடையவர்களாய்க் கல்வியறிவு முதலியவற்றில் மேம்பட்டவர்களாய் ஆசார சீலராய் இருந்தமை யினால், அவர்கள் ஆலயங்களிலே குறித்த குறித்த தானங்கள் மண்டபங்கள் வீதிகளிற் புகுதற்காகிய உரிமையை முன்னோர் அளித்திருந்தார்கள்; தாழ்ந்த வருணத்தவரெனப்படுவோர் அக்காலத்திலே பெரும்பான்மையும் மற்ச மாமிசம் புசிப்பவர்களாய் ஆசாரமற்றவர்களாய் சில குறைவான தொழில்களையும் செய்ய நேர்ந்தமையினால் அவர்களைக் கோயிலின் புறத்தே நின்று கும்பிடவேண்டுமென விதித்து, திருவிழாக்காலங்களிலே அவர்கள் இறைவனை நெஞ்சார நினைக்கவும் கண்ணாரத் தரிசிக்கவும் கையாரக் கும்பிடவும் வாயார வாழ்த்தவும் ஒழுங்கு செய்திருக்கிறார்கள்.

ஞானிக்கில்லை இன்பமுந் துன்பமும்

இப்பொழுதும் காசி கதிர்காமம் முதலிய சில ஆலயங்களிலே அவர்களெல்லாரும் மற்றை யோருடன் கலந்து சுவாமியைத் தரிசனஞ் செய் தற்காகிய ஒழுங்குகள் உண்டு. தாழ்ந்தவரென்று சொல்லப்படும் வருணத்தாருள்ளும் பலர் இந் நாட்டிலே தங்கள் பொறுப்பில் ஆலயங்களை நிர்வகித்து இறைவனைத் தங்கள் விருப்பப்படி வழிபடுகிறார்கள்; இனி, தாழ்ந்த சாதியிலுள்ள ஒருவர் ஆசார ஒழுக்கமுடையவராயிருப்பதைப் பார்த்து அவரை மாத்திரம் ஆலயத்துட் பிரவே சிக்க விடுத்தால், அவருடைய தம்பியாயுள்ளவன் மகனாயுள்ளவன் ஆசார ஒழுக்கமில்லாதவனா யினும், "அண்ணன் கோயிலுக்குட்போகலாம், அப்பர் கோயிலுக்குட்போகலாம் நான் மாத்திரம் போகவொண்ணாதா" என்று நியாயம் பேசுவானே யொழிய, "அண்ணன், அப்பா" ஆசார ஒழுக்கத் தோடு கூடியதாற் கோயிலுக்குட் போகிறார்கள், நாமும் அப்படி யொழுக்கமா நடந்தாற் போகலாந்தானே யென்று ஒருபோதும் எண்ணமாட்டான்; இதனாற்றான் முன்னோர் அவ்விதமான கட்டுப்பாடுகளைச்செய்தனர் போலும்; ஆலய வழிபாட்டில் இந்துக்கள் மாத்திரமல்லர், ஏனைய சமயவாதிகளும் தங்கள் தங்கள் ஆலயங்களுட் சென்று ஒருசாரார் வணங்கலாமெனவும் ஒருசாரார் அக் கோயிலில் வணங்கக்கூடாது, அவர்களுக் கென அமைக்கப்பட்ட வேறு கோயிலிற் போய் வணங்கவேண்டு மெனவும் பேதம் பாராட்டுகிறார்கள்; தம்பீ அவைகளையெல்லாம் இங்கே எடுத்து விரிக்கிற் பெருகும்; இந்துக்களுள் ஞான மார்க்கத்தை யநுட்டித்து வருபவர்க்குச் சாதிக் கட்டுப்பாடுமில்லை; வேறு எவ்வகையான கட்டுப்பாடுமில்லை "ஞானிக்கில்லை இன்பமுந் துன்பமும்" என்றும், "எக்குடிப் பிறக்கினும் யாவரேயாயினும் அக்குடிக்கற்றோரை மேல்வரு கென்பர்" என்றும், "கீழ்ப்பிறந்தாராயினும் கல்லாதார் மேற்பிறந்துங் - கற்றாரனைத் திலர்பாடு" என்றும் பெரியோர் கூறியுள்ளார்; திருவள்ளுவர், திருமூலர் முதலான பெரியோர் இதற்குச்சான்றாக இன்றும் விளங்குகின்றனர். அல்லாமலும் இறைவனை வணங்கப்புகுவோர், அவனருளாலே அவன்தாள் வணங்கி என்ற பிரகாரம் பெரியோர் விதித்த கொள்கைகளின்படி பயபக்தியோடு அகமும் புறமுந் தூயராய் வணங்கினால் அவனருளைப் பெறலாகும்; அதனைவிடுத்து நான் எனது என்னும் அகங்கார மமகாரமுனைப்போடு கோயிலுட் புகுந்து தெய்வத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமேனியைத் தீண்டி வணங்கினாலும் அதனால் நன்மையில்லை; அச்செயல் குளிக்கப் போய்ச்சேற்றைப் பூசிக் கொள்ளலாகும்; தம்பீ, எங்கள் அப்பன் "நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்"; அப்படிப்பட்ட அப்பனைக் கோயிலுக்குள்ளேதான் போய் வணங்கவேண்டும் புறத்தே நின்று வணங்குவதாற் பயனில்லை என்று நினைப்பதும் பிரசாரஞ் செய்வதும் அவனருள் அணுவளவும் பெறாதவர்களுடைய கொள்கையாகும்; இதுவே எமது நம்பிக்கை; இவைகிடக்க, நாம் வருகிற வெள்ளிக்கிழமைக் கிடையில் விநாயகமூர்த்தி வீட்டிற்கு நீர் சொன்னவிஷயமாகப் போய்ப் பேசவேண்டியவற்றைப்பேசி ஆகவேண்டியவற் றைப் பார்ப்போம்" என்று புரோகிதர் சொல்லி விஜயரத்தினத்திடம் விடைபெற்றுமீண்டார்.

* * *

உலகம் பலவிதம்: *1947 மார்ச் 21*
(முற்றொடர் - 09)

"ஒன்றை நினைக்கின்
அதுவொழிந்திட் டொன்றாகும்"

புரோகிதர் விநாயகமூர்த்தியின் வீட்டிற்குப் போதலும், போனவரை விநாயகமூர்த்தி கண்டு, "சாமீ, வருக, வருக" என ஆசனமுதவி இருக்கச் செய்து இன்சொற் பேசிச் சுபம் விசாரித்து அதன்பின் "வந்த கருமம் என்னவோ" என்று விநயமாக வினாவுதலும், "நாம் ஒரு மங்கல கருமத்தையிட்டுப் பேசும்படி வந்தோம்" என்றார் மறையவர். "சொல்லுங்கள் சாமீ" என்றார் விநாயகமூர்த்தி; "வேறொன்றுமல்ல, உமது மருமகளுக்கு வேறெங்கேனும் வரன்தேடி விவாகஞ் செய்துவைக்கும் நோக்கம் உங்களிடம் உண்டோ" என்று புரோகிதர் வினவுதலும், விநாயகமூர்த்தி கவலையோடு சிறிது யோசித்தார்; பின்னர் அவர் ஐயரைப்பார்த்து "சாமீ, என்செய்யலாம், ஒன்றை நினைக்கின் அது வொழிந்திட்டொன்றாகும்" என்பர்; என்பிள்ளை இன்னஇடத்தில் இருக்கிறானென்பதைத்தானும் அறிய முடியவில்லை; அவ்வளவு மாத்திரமல்ல, ஐயா, எங்களுக்கு இப்பொழுது ஒரு மகன் இருக்கிறானோ என்ற விஷயங்கூடச் சந்தேகத்தி லிருக்கின்றது..." என்று சொல்லுவதற்கிடையில் அவருடைய கண்களிலிருந்து நீர்த்துளி சிந்துதலும், புரோகிதர் அவருக்குத் தேறுதல் வார்த்தை சொல்லி ஒருவாறு அவரைத் தேற்றினார்; தேறிய விநாயகமூர்த்தி புரோகிதரைப் பார்த்து "சாமி, என் மருமகளை இன்னமுங் குமரிருக்க வைப்பது சரியல்ல; நான் பெறாவிட்டாலும் அவளையும் என் பிள்ளைபோலப் பாவித்துத் தான் நடக்கிறேன்; ஆனதினால் அப்பெண்ணுக்கு எங்கள் மரபோடு ஒத்த மரபில் ஒரு வரனை எங்கேனும் விசாரித்து மணம்பேசிக் கூடிய சீக்கிரத்திற் கல்யாணஞ்செய்து வைக்கவேண்டு மென்பதுதான் எனது நோக்கம்; ஆனால் என் மருமகள் அதற்கு உடம்படுவாளோ என்பது சந்தேகம்; அவள் வாழ்க்கைப்படுகில் தன் மைத்துனனுக்கே யெனவும் இல்லையேல் இல்லறத்தில் புகுவதில்லை யெனவும் பிடிவாதமாக நிற்கிறாளென்றும் அறிகிறேன்; ஆனதால் சாமி, என் சகோதரி உங்களுக்குப் புதியவளல்லள்; நீங்கள் தயவுசெய்து சகோதரி வீட்டிற்குப்போய், விஷயத்தைப் பேசுங்கள்; சகோதரியும் மகளும் சம்மதித்தாற் பின்பு வந்து எனக்குச் சொல்லுங்கள்; நான் என் சம்மதத்தை உடனே உங்களுக்குச் சொல்லுகிறேன்; சிரமத்தையிட்டுக் குறையெண்ணாதீர்கள்" என்றார். புரோகிதர் அதற்கு உடன்பட்டு உடனே விநாயக மூர்த்தியின் சகோதரிவீட்டிற்குப் போவாராயினர்.

"உண்மை
தெய்வத்திற்குத்தான் தெரியும்"

புரோகிதர் வருதலும் தாயும் மகளும் அவரைப் பரிவுடன் வரவேற்று இன்சொற்கூறி ஆசனமுதவி இருக்கச்செய்தனர்; இருந்த புரோகிதர் அவ்விருவர்க்கும் ஆசி கூறியவண்ணம் விபூதி யுதவ, அவர்கள் விநயமாக இருகரத் தாலும் ஏற்றுப் பூசினர்; அதன்பின் மகளாகிய சிவபாக்கியம் தலைவாசலைவிட்டு வீட்டினுட் போக, தாய் மாத்திரம் அங்கு நிற்க, புரோகிதர் தாம் எண்ணிவந்த கருமத்தை வெளியிடுவாராயினார்; அவர் சிவபாக்கியத்தின் தாயைப்பார்த்து "தங்கைச்சி, உங்கள் மகளுடைய விவாக விஷயம் எவ்வளவில் நிற்கிறது? தகப்பனில்லாப் பிள்ளை; ஆனாலும் மாமனார் இருக்கிறாரென்பது மெய்; இருந்தாலும் ஏதும் ஒரு முற்றுச்செய்து கொண்டு விவாகத்திற்காகிய முயற்சி செய்ய வேண்டும்; தகப்பனார் சீவந்தராயிருந்தாற் காரியமில்லை; அவரில்லாதபோது நீர் உம்முடைய தமயனாருக்கு விஷயத்தைச் சொல்லி ஆக வேண்டிய கருமத்தைப் பார்க்கலாகுமே" என்றார்; புரோகிதர் இப்படிச்சொல்லக்கேட்ட கண்ணகியம்மை கவலை யோடு கூடியவளாய், "சாமி, நீங்கள் குலகுரு; உங்களுக்கு ஒன்றையும் மறைத்துச் சொல்லவொண்ணாது; என் பிள்ளைக்கு என் அண்ணன் மகனையே சிறுபிராயந்தொட்டு நிச்சயித்திருந்தோம்; நாம் நினைத்தபடியெல்லாம் நடக்குமா மலாய் நாட்டிற்குப் போன அந்தப் பிள்ளையின் கதி என்னவானதென்பதை நாங்கள் அறியலாமென ஆனமட்டும் முயற்சி பண்ணினோம்; அந்தவூரிலி ருக்கும் என் மகனும் தன் மைத்துனனைப்பற்றி ஏதும் விசாரித்தறியலாமெனத் தன்னாற் கூடிய முயற்சிகளெல்லாஞ் செய்தும் இன்னமும் ஏதும் அறியமுடியவில்லையென்றுதான் தன் தங்கைக்குப் போனமாசம் எழுதின காகிதத்திற் கவலையோடு எழுதியிருக்கிறான்; அந்தப் பிள்ளையின் பெற்றார் என் பிள்ளைகள் நான் எல்லோரும் அந்தப்பிள்ளையையிட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலைப்படுகிறோம்; ஆனாலும் என்மகள் மாத்திரம் தன் மைத்துனனுக்கு எவ்வகையான மோசமும் நேராதென்று திடமாகச்சொல்லுகிறாள்; உண்மை தெய்வத்திற்குத்தான் தெரியும்; இந்த நிலைமையில் இருக்கும்போது நான் என் குமரைக் கரையேற் றுவதற்கு ஏதும் முயற்சி செய்வது சரியல்ல, சாமி; ஏதோ படைத்தவன் காப்பதற்கும் அறிவான்தானே" என்று கவலையோடு சொன்னாள்; "நீர் சொல்வது நிசந்தான்; ஆனாலும் நீடித்தகாலம் வீட்டிலே கன்னிகையை வைத்துக் கொண்டிருந்தால் உலகங் குறை சொல்லுந் தங்கைச்சி, அதையிட்டுத்தான் சொன்னோம்; அது கிடக்க, இந்த விஷயத்தில் உமது தமையனார் கருத்தென்ன?" என்று புரோகிதர் கேட்க, கண்ணகியம்மை, "சாமி, தம்முடைய மகனைப்பற்றி ஏதும் அறியமுடியவில்லையே என்ற கவலையிலும் பார்க்க, தம்முடைய மருமகள் குமர் இருப்பதையிட்டுத்தான் என் அண்ணாவுக்கு அதிக கவலை; காலத்தைப் போக்காது வேறெங்கேனும் ஒருதக்க மாப்பிள்ளையைத் தேடி தம் மருமகளுக்குக் கல்யாணஞ் செய்துவைக்க வேண்டுமென்பது தான் அவருடைய கருத்து" என்று கவலை கூரச் சொன்னாள்.

போக்கு வாக்கு எப்படி?

"ஏன், தங்கைச்சி, நாம் உங்களுக்கு உண்மையைச் சொல்லிவிடுகிறோம்; வேறு எங்கேனும் உங்கள் மகளுக்கு விவாகஞ் செய்துவைக்கும் நோக்கம் உங்களிடத் துண்டென்றால் உங்கள் குடும்பப் புரோகிதர் என்ற முறையில் நாம் ஒரு மணமகனை விசாரித்துச் சொல்லலாமா என்று கேட்கும் நோக்கத்தோடுதான் இப்போது இங்கே வந்தோம்" என்றார் ஐயர்; "சாமி, நான் சம்மதித்தாலும், என் தமையனார்தாம் சம்மதித்தாலும், எங்கள் மகள் வேறொருவரைக் கல்யாணஞ் செய்யச் சம்மதிப்பாளோ என்பதையிட்டுத்தான் யோசிக் கிறேன்" என்றாள் கண்ணகியம்மை; "அப்படியானால், நீர் பெற்ற தாய்தானே; பிள்ளையின் விருப்பத்தை மெல்ல உசாவிச்சொல்லலாமே" என்றார் புரோகிதர்; "சாமி, எங்கேனும் மணமகனை உத்தேசித்துக்கொண்டு இங்கு வந்திருக்கிறீர்களோ இல்லையேல் ஒரு மாப் பிள்ளையை இனிமேல் விசாரிக்கப் போகிறீர்களோ?" என்று கண்ணகி கேட்க, "விசாரிக்க வேண்டியதில்லை; தக்க குடும்பத்தைச்சேர்ந்த ஒருவர் தாம் தமக்காக உங்கள் பெண்ணுக்குக் கல்யாணம் பேசும்படி எம்மைக் கேட்டார்; அதனால் இப்போது இங்கே வந்தோம்" என்றார் புரோகிதர். "அவர் ஆர்? எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்? சமீபத்திலோ, தூரத்திலோ அவர் இருப்பது? உத்தியோகமென்ன? குணம், நடை போக்குவாக்கு எப்படி? அவர் பெயரை நாங்கள் அறியலாமா? இவைகளையெல்லாம் சொன்ன பிறகுதானே சாமி, எங்களுக்கு ஏற்ற சம்பந்தமெனக் கண்டால், என் மகளுடன் நான் ஏதும் பேசலாம்" என்றாள் கண்ணகியம்மை.

கண்ணகியம்மை இப்படிச் சொல்லக்கேட்ட ஐயர் "நீர் கேட்பவை நியாயமானவைதாம்; அவர் இவ்வூரிலேதாம் வசிப்பவர்; மலாய்நாட்டுப் பகுதியில் உத்தியோகமாயிருந்தவர்; இப்பொழுது விவாகஞ் செய்துகொண்டு மீண்டு உத்தியோகத் தானத்திற்குக் குடும்பத்துடன் போகலாமென்ற நோக்கத்தோடுதான் இங்கே வந்திருக்கிறார்; அவரிடத்திற் போதிய பொருள் பண்டம் நிலம்புலம் எல்லாமுண்டு; நடை போக்கு வாக்கு என்னுமிவைகள் நாம் அறிந்தவரையிற் குற்றமில்லையென்று சொல்லலாம்; பெயர் விஜயரத்தினம், நீடித்தகாலம் தூரதேசத்திலே யுத்தியோகம் பார்த்தமையினாலும், இந்தவூரில் அவர் அதிகஞ் சஞ்சரியாமையினாலும், அவரைச் சிலர் அறிவரேயொழியப் பலர் அறியாரென் றெண்ணுகிறோம்" என விடை கூறினார் புரோகிதர். கேட்ட கண்ணகியம்மை "சாமி, நீங்கள் சொல்லும் யெரைக் கேள்விப்பட்டிருக்கிறேன்; ஆனால் ஆளை நேரில் அறியேன்; அவர்களைப்பற்றிய வரலாறு முழுவதையும் என் அண்ணா அறிந்திருத்தலுங் கூடும்; அவைகளை அண்ணாமூலமாக அறிந்து கொள்ளுகிறேன்; ஆனால் இன்னும் இரண்டொரு விபரத்தையறிய விரும்புகிறேன்; கேட்கிறேனென்று குறையெண்ணாதீர்கள்; துழாவிக் காய்ச்சாத கூழும் உசாவிக் கட்டாத கல்யாணமும் நன்மையாகா என்று நாங்கள் பெண்கள் சொல்லும் பழமொழி யுண்டல்லவா; மாப்பிள்ளைக்கு வயசென்ன? இப்போதுதான் கல்யாணஞ் செய்யப்போகின்றாரா? இல்லையேல் முன்னருந் தாரங் கொண்டவரா? சுத்தபோசன முடையவரா? குடிவெறியில்லாதவரா? தெய்வக்கொள்கை, கடவுள் வழிபாடு, சமயக் கொள்கைகளில் நம்பிக்கைகொண்டவரா? அறிவேறப் படித்தவரா? தானதருமம் இன்சொல் பெரியோரைப் பேணுங் குணம் முதலியன பூண்டவரா? இவைகளைப் பற்றியும் அறிந்துகொண்டு அதன்பின் இந்தக் கருமமாக ஏதும் முயற்சி செய்வது நல்லதென்று நினைக்கிறேன் சாமி" என்றாள்; "நீர் கேட்பது நியாயமானது; அந்த மாப்பிள்ளையின் வயசு முப்பத்தைந்திற்கும் நாற்பதுக்குமிடையிலிருக்கு மென மதிக்கலாம்; அரோக திடகாத்திரமுள்ள ஆள்; முந்தியொரு தாரங் கொண்டதெனவும், அந்தப்பெண் மணம்முடித்துச் சிலவருடஞ் செல்வதற்கிடையிற் பிரசவகாலத்திலே குழந்தையோடு மோசம் போய்விட்டாளெனவும் அந்த விஜயரத்தின மென்பவரே எமக்குச் சொன்னார்; மற்றை வரலாறுகளை நாம் நுட்பமாயறியோம்; அறிய வேண்டுமானால் அந்த அயலிலே மெல்லக் கேட்டறிந்துவந்து உங்களுக்குச் சொல்லலாம்; அதன்பின்னர் நீங்கள் உங்கள் விருப்பப்படி செய்துகொள்ளலாம். ஆனால், தங்கைச்சி உங்கள் மகள் வேறு மாப்பிள்ளையை மணக்கச் சம்மதித்தாற்றானே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அந்த விஷயங்களைப்பற்றி உசாவியறியலாம்; இல்லாவிட்டாற் பயனென்ன" என்றார் புரோகிதர்.

"கிட்டாதாயின் வெட்டென மற"

"ஓம், சாமி, நீங்கள் சொல்வது நிசமானது; நீங்களும் ஐந்து குரவருள் ஒருவராதலின், பிள்ளை தன் பிதாவிற்குச் சொல்வது போல் எங்கள் மகள் தன்னுடைய எண்ணத்தைக் கூசாமல் உங்களுக்குஞ் சொல்லுவாளென்று நினைக்கிறேன்; பிள்ளையை நான் இங்கே அழைக்கிறேன்; அவளுடைய நோக்கத்தைக் கேட்டறியுங்கள் சாமி" என்று கண்ணகியம்மை சொல்லுதலும் ஐயர் அதற்கு உடன்பட, தாய் உள்ளேபோய் உடனே மகளைத் தலைவாசற் பக்கம் கூட்டிக்கொண்டு வந்தாள்; வந்து விநயமாக ஒதுங்கிநின்ற சிவபாக்கியத்தைப் புரோகிதர் ஆதரவுடன் பார்த்து "மகளே, எம்பிள்ளை வேறு நீர் வேறல்லீர்; நாம் உங்கள் குலப்புரோகிதர்; உமது தாயார் உம்மிடஞ் சில விஷயத்தை நேரிற் கேட்டறியும்படி எமக்குச் சொன்னதால் இங்கே உம்மை வரச்செய்தேம்; விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறோம்; உமக்கு உமது மைத்துனரையன்றி வேறொரு வரனை விவாகஞ் செய்ய நோக்கமுண்டோ?"

சிவபாக்கியம்: இல்லை, சாமி,

புரோகிதர்: உமது மைத்துனரை நீர் விவாகஞ் செய்ய வொண்ணாதென்றல்ல அப்படிக் கைகூடினால் எல்லாருக்கும் மகாசந்தோமாயிருக்கும்; அவரைக்கூட்டிவைக்க ஆண்டவன் திருவருள் கைகூடாதபட்சத்தில், செய்யலாந்தானே குழந்தாய்;

சிவபா: செய்யலாம், செய்யாமல் விடலாம்; அது அவரவர் உள்ளக்கருத்தைப் பொறுத்தது சாமி, ஆனால் ஆண்டவன் திருவருள் கைகூடாதென்று நாங்கள் எப்படியறிவோம் சாமி?

புரோ: ஆம் மகளே, அவனருளை நாம் அறிய முடியாதுதான்; ஏன் விஷயத்தை வெளிப்படையாகச் சொல்லுகிறோம். உமது மைத்துனருடைய சம்பந்தம் உமக்கு நிறைவேறாத பட்சத்து, வேறுவிவாகம் பேசிச்செய்வதற்கு நீர் உடம்படுவீரோ என்பதைத்தான் அறிய விரும்புகிறோம்.

சிவபா: உடம்படமாட்டேன்.

புரோ: ஏன் மகளே, அப்படிச்சொல்லுகிறீர்? உடம்பட்டாலென்ன.

சிவபா: அது என் நியதி

புரோ: (கண்ணகியம்மையைப் பார்த்து) அப்படியானால் நாம் பிள்ளையை நியாயங் கேட்கவுமொண்ணாது; வேறு விவாகஞ் செய்யும்படி நெருக்கவுமொண்ணாது என்று கூறி அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு மீண்டார். மீண்டவர் அடுத்த நாட் பிற்பகல் விஜயரத்தினத்தின் வீட்டிற்குப் போய், அதிகஞ் சொல்லாமல், "தம்பி, அந்தப்பெண்ணை நாம் நேரிற் கேட்டோம்; அக்கன்னிகை தன்மைத்துனனையன்றி வேறு எவரையும் விவாகஞ் செய்வதில்லையென்ற மனத்திடங்கொண்டிருக்கிறாள்; ஆனதால் அதிற் பிரவேசிப்பதிற் பயனில்லை; "கிட்டாதாயின் வெட்டென மற" என்றபடி, அந்தப் பேச்சை விடுத்து வேறெங்கேனும் உமக்குப் பெண் விசாரிக்கும்படி நீர் கேட்டால் நாம் ஆநந்தமாக ஒழுங்கு செய்யச் சித்தமாயிருக்கிறோ மென்றார்.

* * *

உலகம் பலவிதம்: 1947 ஏப்ரல் 04 (முற்றொடர் - 10)

"சாக்கிய நாயனார்போல் ஒழுக நேரிட்டது"

"சாமி, அந்தப்பள்ளிக்கூடத்திலேயுள்ள தலைமை உபாத்தியாயர், மற்றை ஆண் உபாத்தியாயர்கள், பெண் உபாத்தியாயர்கள், பள்ளிக்கூட அதிபராகிய பாரதியார் எல்லாரும் கிறிஸ்தவர்களாயிருந்தாலும் என் பிள்ளைமேல் மிகவும் அன்பு பாராட்டியே ஊடாடினார்கள்; என் மகளும் தான் அவர்களோடு விசுவாசமாக நடப்பதாகவும், சமய வித்தியாசத்தைப் பற்றித் தனக்கும் அவர்களுக்கும் எவ்வகையான பிணக்குமில்லையென்றுஞ் சொன்னாள்; நானும் அதையிட்டுச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தேன்; ஆனால், சாமி, இந்த ஒற்றுமை நீடித்த காலம் நிற்கவில்லை; அங்குள்ள பாதிரியாரும் உபாத்தியாயர்களும் மெல்ல மெல்ல, எங்கள் மார்க்கத்தை நிந்திக்கவும் தங்கள் மதத்தைப் பாராட்டிப்பேசவும் தலைப்பட்டனர்; நீறு பூசுதல் கிரியைகள் செய்தல் முதலிய இவைகளெல்லாம் மூடத்தனமான செயல்களென்றார்களாம்; என்பிள்ளை அவைகளையெல்லாங் கேட்டுங் கேளாதவள் போலிருந்தாள்; அவர்கள் அவ்வளவில் நிற்கவில்லை; தங்கள் பள்ளிக்கூடத்தில் எல்லாரும் கிறிஸ்தவர்களாயிருப்ப எங்கள் பிள்ளை மாத்திரம் மறுமதத்துப் பிள்ளையாயிருத்தல் நல்லாயில்லை யென்றும் அங்குள்ள உபாத்தியாயர்கள் பேசத் தலைப்பட்டார்கள்; இவைகளைக்கேட்டு அலுத்து உங்கள் மகள் ஒருநாள் வந்து அங்கு தனக்கு நடக்குங் குறைகளையெல்லாம் எனக்கு முறையிட்டுக் கவலைப்பட்டாள்; அடுத்தநாள் என் மகள் பள்ளிக்கூடத்திற்குப் போகும்போது அப்பள்ளிக் கூடத்துத் தலைமை உபாத்தியாயரை தயவு செய்து பின்னேரம் வரும்படி சொல்லென்று நான் மகளிடஞ் சொல்லிவிட்டேன்; அப்படியே அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபாத்தியாயர் அன்று பின்னேரம் எங்கள் வீட்டிற்கு வந்து என்னைக்கண்டார்; நான் மகள் சொன்ன குறைகளையெல்லாம் அவருக்கு எடுத்து முறையிட்டேன்; தலைமையுபாத்தியாயர் நான் சொன்னவைகளை யெல்லாம் அவதானமாகக் கேட்டுச்சிறிதுநேரம் யோசித்துவிட்டுக் கவலையுடன் என்னைப் பார்த்து, "ஆச்சி, நான் அந்தப்பள்ளிக்கூடத்தின் தலைமை உபாத்தியாயரென்பது நிசந்தான்; ஆனால் உங்கள் மகளோடு பாதிரியராக, மற்றை உபாத்தியாயர் களாகச் சமயவிஷயமாகப் பேசியதை இன்று நீங்கள் சொல்ல அறிகிறேனேயொழிய, இதற்கு முந்தி நான் ஒன்றும் அறியேன்; அறிந்திருப்பேனாயின் நான் அவர்களைச் சமய விஷயமாக உங்கள் மகளோடு ஏதும் பேசவொட்டாது தடுத்திருப்பேன்; ஆனாற் பாதிரியார் உங்கள் மகளோடு சமய விஷயமாக ஏதும் பேசியிருந்தால், அவருக்குக் கீழிருந்து சேவகஞ் செய்யும் நான் அவரை எப்படித் தடுக்கமுடியும்? அல்லாமலும் பாதிரியாரெனிலோ, தம் சமயந்தான் உண்மையானதென்ற நம்பிக்கையுடன் இந்த வூரிலே தஞ்சமயத்தைப் பரப்புங் கடமையோடு வந்தவர்; அவரை நாம் குறை கூறவொண்ணாது; ஆனால் மற்றை உபாத்தியாயர்கள் இப்படியான விஷயத்திலே தலையிட நியாயமில்லையென்று நினைக்கிறேன்; மேலும் ஆச்சி, நீங்கள் என்னோடு விசுவாசமாகப் பேசுகிறபடியால் நானும் என் உண்மை நிலையை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்; நான் ஆதியிலே கிறிஸ்தவனல்லேன்; சைவப் பெற்றார்க்குப் பிள்ளையாகப் பிறந்து சைவனாகவே வளர்ந்து படித்துவந்தேன்; இதற்கிடையில் முதல் என் தகப்பனார் பின் என் தாயார் இருவரும் மோசம் போய்விட, நான் அநாதனானேன்; எனக்கு மேல் வகுப்பிற் படிக்கப் பொருளுதவி செய்யக்கூடிய உற்றார் உறவினருமில்லை; அதனால் நான் மிஷன் பள்ளிக்கூடத்திற் சேர்ந்து படித்து உபாத்தியாயர்ப் பரீட்சையிலும் சித்தியடைந்தேன்; பாதிரியார் எனக்கு உபாத்திமை யுத்தியோகந் தருவதானால் தம் சமயத்திற் பிரவேசிக்கும்படி வற்புறுத்தினார்; ஆச்சி, வறுமையின் கொடுமையால் அவருடைய கேள்விக்கிணங்கி நான் கிறிஸ்தவனானேன்; நான் அகத்திலே கிறிஸ்தவனோ அல்லனோ என்பது என் மனச்சாட்சிக்கும் அந்த ஆண்டவ னுக்கும் தெரியும்; விஷயமறிந்த உங்களுக்கு அதிகஞ் சொல்லுவதென்ன; சுருக்கமாகச் சொல்லுகிறேன்; எங்கள் பெரியபுராணத்திற் சொல்லப்பட்ட சாக்கிய நாயனாரைப் போலத்தான் நானும் அகத்தொன்று புறத்தொன்றாக ஒழுகவேண்டி நேரிட்டது" என்று எனக்குச் சொன்னார்; சாக்கிய நாயனாருடைய வரலாறு என்ன சொல்லும்; உபாத்தியாயரே என்று நான் கேட்க; அவர், "அந்த வரலாற்றை உங்கள் மகளிடங் கேட்டறிந்து கொள்ளுங்கள்; தமிழறிவிலே என்னைக்காட்டிலும் உங்கள் மகள் அதிகம்" என்றார்.

சிவநிந்தனையைக் கேட்டுக்கொண்டிருக்கலாமா?

"உபாத்தியாயர், இப்பொழுது இந்தப் பிள்ளையை என்ன செய்யச்சொல்லுகிறீர்கள்" என்று நான் கேட்க, "ஆச்சி, வேறென்ன செய்வது, அவர்கள் என்ன சொன்னாலும் உங்கள் பிள்ளை அவர்கள் சொல்வதற்குக் காது கொடாமல் தன் கடமையைப் பார்த்துக்கொண்டு வரவேண்டியதுதான்" என்றார் அந்த உபாத்தியாயர்; அதனைக் கேட்டிருந்த என்மகள், "ஐயா, வேறு எந்த நிந்தனையையும் கேட்டுக்கொண்டிருந்தாலும் சிவநிந்தனையைக் கேட்டுக்கொண்டிருக்க முடியுமா? தக்கன் செய்த சிவநிந்தனையைக் கேட்டுக்கொண்டு, சிவனைப் புறக்கணித்து அவன் செய்த யாகத்தில் அவிப்பாகமுண்ட தோஷத்தினாலல்லவோ அரிபிரமேந்திராதி முப்பத்து முக்கோடி தேவர்கள் பலயுககாலமாகச் சூரபன்மன் முதலிய அசுரர்களால் தண்டிக்கப் பட்டார்களென்று எங்கள் புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது; ஆனதால் ஐயா, குறை யெண்ணாதீர்கள், இன்று தொடக்கம் ஒருமாசத் தவணையில் என் உத்தியோகத்தை விடுகிறேன்" என்று உடனே எழுதிக்கொடுக்க, உபாத்தியாயர் கவலையோடு அப்பத்திரத்தை வாங்கிக்கொண்டு போய்விட்டார்; அப்படியே பின்னரும் ஒருமாச காலம் படிப்பித்துவிட்டு என் மகள் இப்பொழுது சும்மாவிருக்கிறாள் சாமி, நீங்கள் எங்கள் குலகுரு, உங்களிடம் இந்த விஷயத்தைச் சொல்லி எங்கேனும் ஒரு தக்க பள்ளிக்கூடத்தில் இப்பிள்ளையை ஒரு உபாத்தியாயராக நியமிக்கச்செய்யலாமோ என்பதைச் சொல்வதற்காகத்தான் உங்களைக் காண விரும்பினோம்" என்று சிவகாமி புரோகிதருக்குச் சொல்லி முடித்தாள்.

"முயற்சி செய்தால் வாய்க்கும்"

இவைகளையெல்லாம் அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த புரோகிதர் சிந்தனையோடு சிவகாமியைப் பார்த்து "சிவகாமியம்மே, நீர் சொல்வது நியாயமானது; உங்கள் பிள்ளை போய்ச் சேர்ந்து படிப்பிக்கக்கூடிய சைவப்பள்ளிக் கூடம் இப்போதைக்கு எமக்கு ஏதும் புலப்படவில்லை; எங்கேனும் உபாத்தியாயர் தேவையென அறிந்தால் உடனே வந்து உங்களுக்குத் தெரிவிப்போம்; ஆனால், எமக்கு இதைவிட இன்னுமொரு நோக்கம் புலப்படுகிறது; அது உங்களுக்குச் சம்மதமாயிருக்குமோ அல்லாமலிருக்குமோ என்பதையிட்டுத்தான் யோசிக்கிறேம்" எனலும், "சாமி, விஷயத்தை வெளியிட்டுச் சொன்னாலல்லவோ நாங்கள் அறிந்து எங்கள் சம்மதம் சம்மதயீனங்களை உங்களுக்குச் சொல்லமுடியும்" என்று சிவாகாமியம்மை வினாவ, புரோகிதர் "வேறொன்றுமல்ல தகுந்த உத்தியோகம் செல்வம் செல்வாக்கு, உங்களோடு ஒத்தமரபு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரேமார்க்கம் ஒழுக்கமென்னு மிவைகளோடுகூடிய ஒரு மாப்பிள்ளையை மணம் பேசி உங்கள் மகளுக்கு ஒழுங்கு செய்தால் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களோ" என்று சொல்லி முடிவதற்கிடையில் தாயின் பக்கலில் நின்ற பாக்கியலட்சுமி மெல்ல அவ்விடத்தை விட்டு நழுவி வீட்டுட் போய்விட்டாள். "அப்படி யெங்கேனும் வசதியாகவுண்டோ சாமீ" என்று சிவகாமியம்மை வினாவ, புரோகிதர் முயற்சி செய்தால் வாய்க்குமென எண்ணுகிறோம்" என்றார், அப்பொழுது சிவாகாமியம்மை, "சுவாமீ, நாங்கள் இந்த நேரத்திலே கெட்டுநொந்திருந்தாலும் எங்கள் குலம் கோத்திரம் மரபு சமயக் கொள்கை யெல்லாம் நீங்கள் அறிந்தவை, எங்கள் சந்ததியில் மற்சமாமிசமுண்போரில்லை; நாங்கள் பிறவிச்சைவர்கள், இவைகளை யெல்லாம் யோசியுங்கள்; இந்தக்காலத்திலே குடிவெறி பழகாத மாப்பிள்ளையைத் தேடுவது அருமையென்று அயலட்டத்திலே பேசக் கேட்டுள்ளோம்; உத்தியோகம் முதுசொம் அதிகாரம் முதலியவையெல்லா மிருந்தும் நல்ல ஒழுக்கமும் தெய்வபக்தியும் மரியாதையோடு கூடிய நடையுமில்லாத மாப்பிள்ளையினால் என்ன சுகம் சாமீ; இவளும் படித்தபெண், இவைகளையெல்லாம் யோசித்து எங்கேனும் இப்படியான குணம் நடையுள்ள ஒரு மாப்பிள்ளை சந்திக்குமானால் முயற்சி செய்யுங்கள் சாமீ" என்று பணிவுடன் சொன்னாள்;

"குலத்திலும் ஒழுக்கம் மேலானது"

புரோகிதர் "சிவகாமியம்மே உங்கள் குலம் கோத்திரம் மரபு ஒழுக்கம் முதலியவைகளையெல்லாம் உங்கள் பரம்பரைப்புரோகிதர்களென்ற முறையில் எமது முன்னோரும் நாமும் நன்கு அறிந்துள்ளேம்; நீங்கள் விரும்புகிற குணம் நடை யொழுக்கம் முதலியனவுள்ள ஒருவர் தமக்குச் சீதனத்தையிட்டுக் காரியமில்லை, குலமொழுக்கம் கல்வியறிவு செய்காரியம் முதலியவைகள் பூண்ட ஒரு கன்னிகை வேண்டுமென எம்மிடஞ் சொன்னார்; நீங்கள் விரும்பும் குணம் நடை முதலியனவெல்லா முடையவர்; உங்களோடு ஒத்த மரபினரோ என்பது எமக்குத் தெரியாது; ஆனாலும் அவரும் மரபில் அதிகம் குறைந்தவரல்லர்; அவர் மலாய்நாட்டிலே உத்தியோம் பார்த்து மதிப்போடு அதிக பொருளீட்டிக் கொண்டுவந்து இப்பொழுது இந்தவூரிலேதான் வாழ்கின்றார்; அவர் இருக்கும் வீடே மாளிகைபோன்ற மேன்மாடவீடாகும்; அதனைச் சூழ்ந்து பெரிய வளவுண்டு, இன்னும் காணிகள் நயம்புலம் முதலியவைகளெல்லாம் அவரிடத்திலுண்டு; அவரையண்டிப் பிழைப்பவர் பலர்; இந்தச் சம்பந்தம் உங்களுக்கு ஏற்றதாயிருக்கு மென நினைக்கிறோம்" என்றார்; "சாமி, நீங்கள் சொல்வதை ஏற்றுக்கொள்ளுகிறோம்; மரபைப் பற்றிக் காரியமில்லை, குலத்திலும் ஒழுக்கம் மேலானதென்று தங்கைச்சியின் தகப்பனார் அந்த நாளில் இடையிடையே சொல்வதுண்டு; ஆனால் முதலொரு தாரமிழந்தவரென்கிறீர்கள்; அதையிட்டுத்தான் யோசிக்கிறேன்; அவருக்கு வயசு என்ன இருக்கும்" என்று சிவகாமி கேட்க ஐயர் "முப்பத்தைந்து வயசுவரையில் மதிக்கலாம்; ஆண்பிள்ளை விஷயத்தில் அது அதிக வயசல்ல; நீங்கள் பொருத்தம் பார்த்துப் பொருந்தினாலே செய்யலாம்; பொருத்தமில்லா விட்டால் நாமே அந்தவிவாகத்தை நிறைவேற விடமாட்டோம்" என்றார்; "ஏதோ சாமி, உங்களுக்குத் திருப்தியென்றால் நீங்கள் பேசிப் பார்க்கலாமே" என்றாள் சிவகாமி; புரோகிதர் சிவகாமியிடமும் மகளிடமும் விடைபெற்றுக் கொண்டு, தாம் மீண்டு சில நாட்களுள் அங்கு வருவதாகச் சொல்லிவிட்டுப் போயினார்.

* * *

உலகம் பலவிதம்: 1947 ஏப்ரல் 11 (முற்றொடர் - 11)

"பெண்ணையும் ஒருமுறை பார்த்தால் நல்லது"

சிலநாட் சென்றபின் ஒருநாள் மத்தியான வேளையிற் புரோகிதர் விஜயரத்தினத்தின் வீட்டிற்குப் போதலும், அவன் அவரைப்பெரிதும் உபசரித்து இருக்கச்செய்து சுகம் வினாவிப் பின்னர் அவரை நோக்கி "சுவாமீ, உங்களிடம் நான் சொன்ன கருமம் எவ்வளவிலிருக்கிறது, என வினவினான்; "சிரமத்தைப் பாராமல் உமது கருமமாகத்தான், இங்கு வந்தோம்" என்றார் ஐயர்; "விஷயத்தைச் சொல்லுங்கள் சாமி" என்றான் விஜயரத்தினம்; அந்த விநாயகமூர்த்தியார் வீட்டுப் பெண்ணின் சம்பந்தம் சந்திக்கவில்லையே யென்று நீர் கவலைப்பட வேண்டாம்; அந்தப் பெண்ணோ டொத்த குணம் குலம் ஒழுக்கம் முதலியனவுள்ள ஒரு பெண், அழகிலும் கல்வியறிவிலும் அந்தப் பெண்ணைக்காட்டிலுஞ் சிறந்தவளென்று சொன்னாலும் பொருந்தும்; பெண் உபாத்திமைப் பரீட்சையிற் சித்திபெற்றுச் சிலகாலம் திறமையோடு ஒரு மிஷன் பள்ளிக் கூடத்திலே படிப்பித்து வந்தவள்; ஆனாற் சமயபேதத்தினால் அப்பள்ளிக்கூட அதிகாரிக்கும் ஆசிரியர்களுக்கும் இந்தப் பெண்ணுக்குமிடையே பிணக்கு நேர்ந்தமையினால், அப்பள்ளிக்கூடத்திற் படிப்பித்தலை விடுத்து இப்பொழுது வீட்டிலே சும்மாவிருக்க நேர்ந்தது; பழைய ஆசார வொழுக்கம் தெய்வபத்தி சமய அபிமான மெல்லாமுடைய உத்தம கன்னிகை; அந்தப் பிள்ளை சிறுபிராயமா யிருந்தபோதே தகப்பன் இறந்துவிட்டபடியால் பொருளாதாரம் மாத்திரம் அதிகமில்லை; ஆனால் நல்லமுறையிலே பொருளை ஈட்டுவதற்கான கல்வித்திறமை அக் கன்னிகையிடத்து உண்டு; அப்படியான ஒரு பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைப்பது இலகுவல்ல" என்று சொல்லிமுடித்தார் புரோகிதர்; ஐயர் சொன்னவற்றையெல்லாம் ஆவலோடு கேட்டுக்கொண்டிருந்த விஜயரத்தினம், "சாமி அந்தப் பெண்ணை நீங்கள் நேரிற் பார்த்தீர்களா" என்று வினவ, புரோகிதர் "ஆம், நேரிற் பார்த்தோம்; அவர்கள் குடும்பத்திற்கும் புரோகிதர் நாம் தாம்" என்றார். "சாமீ அந்தப் பெண்ணுக்குத் தாய் சகோதர முண்டோ" என விஜயரத்தினம் வினவுதலும், "தாயுண்டு; ஆனாற் பெற்றாருக்கு அவள் ஒரே யொரு மகள்" என்றார் புரோகிதர்; "அவ்வளவும் அமையும், சீதனத்தைப்பற்றிக் காரியமில்லை; என்னிடமிருக்குஞ் செல்வப்பெருக்கை நீங்கள் அறிவீர்கள்தாமே சாமீ; அந்தப் பெண் என்னிடம் வந்து சேர்ந்தால் நல்லாயிருப்பாள்" என விஜயரத்தினஞ் சொல்வதற்கிடையில் ஐயர் "நல்லாயிருப்பதென்ன, அந்தப்பெண் இங்கே வந்தால் உம்முடைய வீட்டிற்கு அட்டலட்சுமியும் வந்தவாறிருக்கும்" என்று பாராட்டிப் பேசினார். "நீங்கள் சொல்லமுந்தி எம்மைப்பற்றி அவர்கள் அறிந்திருக்கவில்லையோ சாமீ" என்று விஜயரத்தினம் கேட்க "இல்லை யென்று நினைக்கிறோம்" என்றார் ஐயர். "பெண்ணுக்குச் சாதக முண்டோ" என்று அவன் கேட்க "இருக்குந்தானே" என்றார் ஐயர்; "அப்படியானால் இருவர் சாதகத்தையும் பார்த்துப் பொருத்தமானால் விவாகத்தை நிறை வேற்றலாந்தானே" என விஜயரத்தினஞ் சொல்ல, "அப்படிச் செய்யலாமென்றுதான் நாமும் நினைக்கிறோம்" என்றார் புரோகிதர்; "பொருத்தமும் பார்க்கத்தான் வேண்டும், நான் அந்தப் பெண்ணையும் ஒரு முறை நேரிற் கண்ணாரப் பார்த்தால் நல்லது" என்றான் விஜயரத்தினம்; கேட்ட புரோகிதர் முகம் வாட்டமுற்றது; அவர் சற்றுநேரம் பதிலின்றி மௌனமாயிருந்தார்.

"என்னைப்பார், என்னழகைப்பார்"

"என்ன? சாமி, ஏதோ அதிகம் யோசிக்கின்றீர்களே, கூசாமற்சொல்லுங்கள்" என்று விஜயரத்தினம் வினாவ, "வேறொன்றுமல்ல, தம்பீ, பெண்ணை நீர் நேரிற் போய்ப் பார்க்கலாகுமோ என்ற விஷயத்தையிட்டுத்தான் யோசிக்கின்றோம்; விவாகம் நிறைவேறிவிட்டால் எத்தனை முறையும் பெண்ணை நீர் பார்த்துக் கொள்ளலாந்தானே; அதற்கு முந்தி அவர்கள் உடன்படுவார்களோ என்பது சந்தேகம்" என்றார் புரோகிதர். கேட்ட விஜயரத்தினஞ் சிரித்து "சாமீ, என்ன நூதனம்! இந்த இருபதாம் நூற்றாண்டிலும் இப்படிப்பட்ட பழைய மூடக்கொள்கையோடு கூடியவர்களும் இருக்கிறார்களா? காலத்திற்குத் தக்க கோலமென்ற முறையிலல்லவோ நடக்க வேண்டும்; அந்த நாட்களிலேதான், தாயைச் சந்தையிற் கண்டால் மகளை வீட்டிற்போய்ப் பார்க்கவேண்டுமோ என்றார்கள்; இந்தக்காலத்திலும் அப்படியா? இல்லையே; இந்நாளிலே பெண் பாலாரை அவர்களுள்ளும் கன்னியர்களை எங்குங் காணலாமே; பள்ளிக்கூடங்களில் நடக்குங் கூட்டங்கள், படக்காட்சிச்சாலைகள், கடைத்தெருவிலுள்ள கடைகள், கோயில்களில் நடக்கும் திருவிழாக்கள், கூத்துக்கொட்டகைகள், பகிரங்க கூட்டங்கள், விளையாட்டு முன்றில்கள், பிரசங்கம் நடக்கும் மண்டபங்கள், முற்றவெளி போன்ற மைதானங்கள், கடற்கரை, இசைக் "கச்சேரி" இன்னும் பொழுதுபோக்கிற்குரிய சனக்கூட்டங்க ளெவைகளோ அங்கங்கெல்லாம் இக்காலத்துக் கன்னிகாரத்தினங்களைப் பார்க்க விரும்பினாற் பார்க்கலாமே சாமி, இப்படியான கூட்டங்களிற் காண்பதிலும் பார்க்க இந்த நவீன கன்னியரை அதிகமாகப் பார்க்க விரும்பினால், பள்ளிக்கூடங்கள் கல்லூரிகள் பேரில் நடைபெறும் "கார்ணிவல்" என்று சொல்லப்படும் உண்டாட்டுக் களியாட்டுப்பெருங் கூட்டத்தில் இந்த யுவதிகளை எவ்வளவுங் காணலாமே; மேலே சொல்லப்படுங் கூட்டங்களை இக் குமாரிகள் போய்ப் பார்ப்பதோடு மாத்திரம் நின்றுவிடுகிறார்களா? இல்லை, சாமீ, பள்ளிக் கூடச் சிறுமியர் எத்தனையோ பேர் இப்படியான கூட்டங்கள் சிலவற்றிலே தாங்களும் பங்குபற்றிக் கொள்ளுகிறார்களே இங்கு நடக்கும் "கார்ணிவல்" களியாட்டின்போது, அழகிற் சிறந்த கன்னிகை முற்பட்டு வந்தால் அக்கன்னிகைக்குச் சந்மானங் கிடைக்குமெனச் சில பொறுப்பற்ற வாலிபர்கள் உபாயஞ் சூழ்ந்து தூண்டிவிட, அதனால் எடுபட்டு "என்னைப்பார், என்னழகைப்பார்" என்று சொல்லிக்கொண்டு நாணம் முதலாம் நால்வகைக்குணங்களையும் அறவேயகற்றிவிட்டு முற்பட்டுவரும் கன்னியரும் எங்கள் நாட்டில் முளைத்திருக்கிறார்களென்றால் சாமீ, இந்த நாட்டிலே இக்காலத்தில் நவநாகரிகம் தலைப்பட்டுவிட்டதென்று நாம் எண்ணுவது தவறாகுமா? உலகம் இப்படியிருக்க, சாமீ, சொல்லுகிறேனென்று குறையெண்ணாதீர்கள், நீங்கள் மணம் பேசி வந்த அந்தக் கன்னிகையை மாத்திரம் நான் ஒருமுறை கண்ணாற் பார்க்க அவர்கள் சம்மதிக்க மாட்டார்களென்றீர்கள்; ஊரோடுகில் ஒக்க ஓடு ஒருவனோடுகிற் கேட்டோடு என்றல்லவா பழமொழியிருக்கிறது" எனச் சிறிது மனத்தாபத்தோடு சொன்னான்.

"ஆசை வெட்கமறியாது"

இவற்றையெல்லாங்கேட்ட புரோகிதர் "தம்பீ, பெண்ணைப் பார்க்க வேண்டுமென மாப்பிள்ளை விரும்பினால், ஒருபோது தம்முடைய தரித்திரங் காரணமாக அவர்கள் பெண்ணைக் காட்டச் சம்மதித்தாலும் காட்டும்படி கேட்பது உமக்கு அழகல்லவென நினைக்கின்றோம்; பெண்ணலங் களெல்லாம் அமைந்த பெண்ணுக்குப் பேரழகுந் தானாகவே அமையுமென்பது சாமுத்திரிகாலட்சணம்; மேலும் நாமே பெண்ணை நேரிற் பார்த்துள்ளேம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் உத்தமியென்பதை உமக்குச் சொல்லிவிட்டோம்; பெண்ணைப் பார்க்க நீர் விரும்புகிறீரென்று நாம் அவர்களிடம் சொல்வது எமக்கே கௌரவமாகவிராது" என்று ஐயர் சிறிது வெறுப்போடு பகர்ந்தார்; ஆனாலும் விஜயரத்தினம் ஆசை வெட்கமறியாது என்ற பிரகாரம் "சுவாமீ, இந்த ஒரு உபகாரத்தையும் என்பொருட்டுத் தயைகூர்ந்து செய்யுங்கள் என்று இரந்து கேட்க, புரோகிதர் ஒருவாறு உடன்பட்டுக் கொண்டு உடனே சிவகாமி வீட்டிற்குச் சென்று வேறு பலகதைகள் பேசிவிட்டும் பின்னர் இந்த விஷயத்தைக் குறிப்பாகப்பாக்கியலட்சுமியின் தாயிடம் சொன்னார்; அப்படிச் சொன்னபோதும் பாக்கியலட்சுமி புரோகிதர் சொன்ன குறிப்புரையை அயிர்த்துக்கொண்டு தன்னறைக்கு மீண்டு போயினாள்; "சாமீ, பெண்ணைக் காட்டிக் கல்யாணஞ் செய்யும் முறை எங்கள் சந்ததியில் எக்காலத்துமில்லை; பெண்ணைப்பற்றி அறிய விரும்புபவர் தம் உற்றார் உறவினராயுள்ள பெண்கள் யாரையும் பெண் வீட்டிற்கு அனுப்பி அவர்கள் வாயிலாகப் பெண்ணின் குணம் நடை அழகு முதலியவைகளை யறியலாம்; இல்லையேல் ஆண்பிள்ளை தானே பார்க்க விரும்பினால், பெண்ணாவது பெண்வீட்டாராவது அறியாத பிரகாரம் உபாயமாகப் பெண்ணைப் பார்க்கலாமே; அதுவல்லவா ஆடவர்க்கு அழகு; சொல்லுகிறேனென்று பரிகாசஞ் செய்யாதீர்கள் சாமீ, எங்கள் மகளின் தகப்பனார் அந்த நாளிலே என்னைக் கல்யாணஞ்செய்ய முந்தி, அதாவது நான் குமராகவிருக்கிற காலத்திலேயே, நானாக எங்கள் வீட்டுக்காரர் எவராக அறியாதபடி என்னைப் பார்த்துவிட்டார் என்று அவர் பின்னர் எனக்குச் சொல்லிச் சிரித்தார்; அப்படிச் செய்தால் அது வசைக் கிடமாகாது சாமீ, அல்லாமலும் நீங்கள் இந்த விஷயத்தை எனக்குக் குறிப்பாகச் சொன்னபோது எங்கள் மகள் அதனை அயிர்த்த படியாலும் அந்தச் செய்கை தனக்கு விருப்பமில்லாதபடியாலுந்தான் இங்கே நின்றவிடத்தை விட்டு உடனே தன் அறையுட் போய்விட்டாள்; ஆதனால் அதற்குச் சம்மதிக்க முடியாதென்று நீங்கள் அந்த ஆளுக்குத் தெரிவியுங்கள்; அதனாற் குறையில்லை" என்று கவலையோடு சொன்னாள்;

சத்துருக்களோடு வாழலாம்
சந்தேகமுள்ளவரோடு வாழ்தலரிது

"சிவகாமியம்மை, நீர் சொல்வது முழுவதுஞ் சரி" யென்று சொல்லிவிட்டு ஐயர் புறப்பட்டுக்கொண்டு விடை பெற்றுப்போவதற்காகப் பாக்கியலட்சுமியை வினாவ, பாக்கியலட்சுமி அங்கே வந்தாள்; "குழந்தாய் நாம் போய் வருகிறோமடியம்மா" என்று உத்தரவு கேட்க, "போய் வாருங்கள் சுவாமி, ஆனால் என்விஷயமாக எவருக்காயினும் இப்போது வாக்குச் சொல்லவேண்டாம் சாமீ, நமஸ்காரம்" என்று தங்கள் புரோகிதருக்கு நமஸ்காரம்பண்ணி விடை கொடுத்தனுப்பினாள்; புரோகிதர் போன பின் சிவகாமியம்மை தன் மகளைப் பார்த்து "ஏனடியம்மா, ஐயருக்கு அப்படிச் சொன்னாய்? அது சரியல்லவே" என்று கவலையோடு கேட்க, "எங்கள் புரோகிதர் எங்களைப்பற்றிச் சொன்னதை நம்பாதவருடைய வீட்டிலே பெண்ணென்று போயிருந்து சந்தோஷமாக வாழ்வது எப்படி? அம்மா, சத்துருக்களோடும் வாழலாம் சந்தேகமுள்ளவர்களோடு வாழ்தலரிது தாயே" என்றாள் பாக்கியலட்சுமி. புரோகிதர், அன்று நேரே மீண்டு விஜயரத்தினம் வீட்டிற்குப் போகாது தம்வீட்டிற்குச் சென்று, அடுத்தநாள் அதிகாலையில் விஜயரத்தினத்தின் வீட்டிற்குப் போய் அவனைக்கண்டு, பெண் பார்க்கும் விஷயம் சிவகாமியம்மைக்கும் மகளுக்கும் சம்மதமில்லையென்றும், இந்த விஷயமாகப் பேச்சை இனிமேல் தூண்ட வேண்டாமென்றும் தாயும் மகளும் தமக்குத் தெரிவித்தவற்றை யெல்லாம் ஒன்றுமொழியாமல் விஜயரத்தினத்துக்குச் சொன்னார்; அதனைக்கேட்ட விஜயரத்தினம் புரோகிதர் சொன்ன புத்தியையும் கேளாமல் தான் நேரிற் பெண்பார்க்க விரும்பியதையிட்டுப் பச்சாத்தாபப்பட்டான்; புரோகிதரும் அன்று தொடக்கம் விஜயரத்தினத்தின் மீது அகத்தே வெறுப்புக்கொண்டாரெனினும் புறத்தே அவ்வெறுப்பைக் காட்டாராய் அவனுடன் ஓடும் புளியம்பழமும்போல அதிக பற்றின்றி ஊடாடு வாராயினர்.

"ஆண்டவன் எங்களைக் கைவிடமாட்டார்"

சிவகாமியம்மை தம் மகள் படித்தும் உத்தியோகம் பார்க்கப் பாக்கியம் பெற்றிலளே யென்ற கவலையைத் தம் அருமை மகள் எவ்வகையிலும் அயிர்த்துக் கொள்ளாதபடி முக மலர்ச்சியோடு எந்தநேரமும் ஊடாடுவாளாயினாள்; இப்படியெல்லாம் தாய் மகிழ்ச்சி காட்டி நடந்தனளெனினும், மகள் படித்த விவேகியல்லவா, ஆதலினாற் போலும் தன்னைப் பெற்றவள் வறுமையினாற் கவலைப்படுவதை ஒருவாறு யூகித்தறிந்துவிட்டாள்; ஒரு நாளிரவு பாக்கியலட்சுமி தங்களுக்கு வந்து நேர்ந்த வறுமையையும், தனிமையையுமிட்டுச் சிந்தித்துக்கொண்டு படுக்கையிற் கிடந்தபடியே தன்னை மறந்தாளாய்

"வடிவுந் தனமும் மனமுங் குணமும்
குடியுங் குலமுங் குடி போதியவர்
அடியந் தமிலா அயில்வே லரசே
மிடியென்றொருபாவி வெளிப்படினே"

என்று மெல்லப் படித்தாள். மகள் இப்படிப் பாடியதைக் கேட்டுக்கொண்டு அயலே படுத்துக்கிடந்த தாய் "மகளே, உந்தப்பாட்டு யாரோ வறுமையைக் குறித்துப் பாடிய பாட்டல்லவோ; உதனை உன் அப்பரும் அந்தநாளில் இடையிடையே படிக்கக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டிருக்கிறேன்" எனலும், மகள் "ஆம், அம்மா, இது வறுமையைப் பற்றிய பாட்டுத்தான்; இது வேறெவரும் பாடியதல்ல, எங்கள் அருணகிரிநாதர் பாடிய பாட்டாகும்; வறுமை கொடியதென்று மகா ஞானிகளே பாடியிருக்கின்றார்களென்றால் அறிவிற்குறைந்த நாங்கள் வறுமைக்குப் பயப்படாமல் வாழ முடியுமா? அம்மா, சொல்லுகிறேனென்று மன வருத்தப்படாதீர்கள்; எனக்கு இப்போதைக்கு விவாகமும் வேண்டாம், விவாகப்பேச்சும் வேண்டாம்; திரைகடலோடியுந் திரவியந்தேடு என்றவிதம், நான் என்னுடைய அற்ப கல்வியைக்கொண்டு வேற்றூரிலேனும் போய்ப் பிழைத்து பொருளீட்டி வறுமையிற் செம்மையாக வேனும் வாழ வழிபார்க்கவேண்டும்; ஆண்டவன் எங்களைக் கைவிடமாட்டார்; நீங்கள் வறுமை யையிட்டுக் கவலைப்படவேண்டாம்" என்று தன் தாயைத் தேற்றினாள்; மகள் இப்படிச் சொல்லக் கேட்ட சிவகாமியம்மை அவளைப் பரிவுடன் "என் கண்ணே, வறுமையையிட்டு நீ எள்ளளவுங் கவலைப்படவேண்டாம்; வறுமையுஞ் செல்வமும் மாறி மாறி வருவது இயல்புதானே, வறியவர் செல்வராவர் செல்வர் பின் வறியராவர் என்று கந்தபுராணத்திற் பாடியிருப்பதை நீயும் அறிவாய்தானே; அதனையிட்டு எனக்கு எவ்வகையான கவலையுமில்லை மகளே; ஏதும் நோய் துன்பமில்லாமல் நீ சுகமாக விருக்க வேண்டுமென்பதும், நான்உயிரோடு இருக்கும் போதே நீ ஒரு கரைசேர்ந்துவிட வேண்டுமென்பதுந்தான் நான் தெய்வத்திடம் எந்த நேரமும் செய்துகொள்ளும் பிரார்த்தனை; ஆதலால் என் அருமை மகளே ஆங்காலம் மெய்வருந்தவேண்டா மென்ற பெரியோர் வாக்கைப் படித்த நீ யறிவாய்தானே" என்று மகளைச் சிவகாமியம்மை தேற்ற, அவளும் ஒருவாறு தேறினாள்; இருவரும் உறங்கினர்.

* * *

உலகம் பலவிதம்: 1947 ஏப்ரல் 18 (முற்றொடர் - 12)

"என் அருமையான அண்ணனுடைய கடிதம்"

தன் தமையனுக்கு எழுதிய கடிதத்திற்கு, நாட் பல சென்றும் பதில் வரவில்லையே யென்று சிவபாக்கியமும், தன் மகனுடைய சுகத்தைப் பற்றி ஒன்றும் அறியமுடியவில்லையேயென்று கண்ணகியம்மையும் கவலைப்பட்டுக் கொண் டிருக்கையில், ஒருநாள் மத்தியான வேளையில்கடிதம் கொடுப்பவன் தங்கள் வீட்டிற்கு வரக் கண்ட சிவபாக்கியம், அவன் நீட்டிய கடிதத்தை "இது என் அருமையான அண்ணனுடைய கடிதம்" என்று சந்தோஷத்துடன் சொல்லிவிட்டுத் தாயிடம் ஓடிப்போய் "அம்மா, அண்ணாவின் கடிதம் வந்துவிட்டது" என்று ஆநந்தத்தோடு சொல்ல, அடுக்களையிலிருந்த தாய், "நல்ல காரியம் மகளே, இப்படியிருந்து "பெலத்துவாசி, நானும் கேட்க" என்று முகமலர்ச்சியோடுசொல்ல, மகள் வாசிப்பாளாயினாள்:

"ஆண்டவனருளால் வாழும் எங்கள் தாயாருக்கு நமஸ்காரஞ் செய்து எனது அருமைத் தங்கையை வாழ்த்தி எழுதிக்கொள்வது நான் இவ்விடம் சுகமேயிருக்கிறேன்; உங்கள் சுகத்தையும் நீங்கள் எழுதியனுப்பிய அன்பான கடிதத்தைக் கொண்டு அறிந்து மன ஆறுதலடைகிறேன்; எங்கள் மாமா, மாமி முதலியோருக்கும் என் சுகத்தைத் தெரிவியுங்கள்; என் மைத்துனரைப்பற்றி ஏதும் அறியலாமென்று இப்போதும் என்னால் இயன்றவரை முயற்சிசெய்து வருகிறேன்; ஆனால் இற்றைவரையில் அவரைப்பற்றி ஏதும் அறிய முடியவில்லை; இது மாத்திரம் எனக்கு எந்த நேரமும் பெருங் கவலையாக விருக்கின்றது; ஆனாலும், எப்படியும் ஆண்டவனருளால், எங்கள் அரிய மைத்துனரைப்பற்றி ஏதும் அறிவேன் என்ற நம்பிக்கை என்னுள்ளத்தை விட்டு அகலவில்லை; இதனையிட்டு நீங்களிருவீரும், எங்கள் அரிய மாமன் மாமியும் கவலைப்படவேண்டாம்; இதுவும் தெய்வத்தின் சோதனையிலொன்றென்று எண்ணி மனம் ஆறுதலடைய வேண்டும்.

நிற்க,

என் அருமைத் தங்காய், நீரும் எங்கள் தாயாரும் என்னை நீடித்த காலம் பிரிந்திருப்பதையிட்டுக் கவலைப்படுவதையும் என்னைக் காண ஆவலோ டிருப்பதையும் பற்றி எழுதியிருந்தீர்கள்; எனக்கும் உங்களை வெகு காலமாக வந்து காண வாய்க்க வில்லையே யென்பதையிட்டுப் பெருங்கவலை; காணப் பெரும் ஆசை; ஆனால் என்ன செய்யலாம்; தங்கைச்சி, நாம் பார்க்கும் இந்தச் சின்ன உத்தியோகத்தை இடையில் விட்டுவிட்டு உவ்விடம்வர மனந் துணியவில்லை; இதனைக் கைவிட்டால், மீண்டுவந்து இப்படியொரு சேவையைப் பெற்று கொள்ள முடியுமோ என்பது சந்தேகம்; ஆனதால், தங்கை எனக்கொரு உபாயம் புலப்படுகிறது; எங்கள் சொந்தவூரிலிருந்து இந்தவூருக்கும், இந்தவூரிலிருந்து எங்களுக்குமிடையே இப்பொழுது யுத்தகாலத்திற்கு முந்தி நடந்தவிதமான கப்பற் போக்கு வரவு நடக்கின்றன; உங்குள்ள மனைவி மக்களை இங்கே உத்தியோகம் பார்க்கும் நம்மவர்கள் அழைத்திருக்கிறார்கள். இந்த நாட்டில் இப்பொழுது வாழ்வதற்கு அச்சமில்லை; ஆனதால் ஒருமுறை இங்கே வந்துபோக வேண்டுமென்ற விருப்பம் உங்களிருவரிடத்திலு மிருப்பின், எங்கள் மாமன் மாமியுடைய பூரண சம்மதத்தையும் பெற்றுக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்க துணையோடு நீரும் எங்கள் தாயாரும் உவ்விடமிருந்து புறப்பட்டு வரலாகும்; மாமா உவ்விடம் எங்கள் வீடுவளவுகளையும் பார்த்துக்கொள்ளுவாரென்று நினைக்கிறேன்; எதற்கும் உங்கள் சம்மதத்தைத் தெரிவியுங்கள்; இவைகளை யெல்லாம் உத்தேசித்து இப்பொழுது ரூபா 200 பெறுமதியான "மணியோடர்" எடுத்துவைத் தனுப்பியிருக்கிறேன்; பெற்றுக்கொள்ளவும்; இன்னும் என்னால் ஆகவேண்டியவைகளுக்கு உடனே தெரிவிக்கவும்; வேறு விசேஷமில்லை; ஆண்டவன் உங்களைக் காப்பாராக.

இங்ஙனம்

உனது அன்பான அண்ணன்
சி. சிவகுருநாதன்

நீங்கள் கவலைப்படவேண்டாம்

மகனுடைய கடிதத்தை மகள் வாசிக்கும் போது மிக்க ஆர்வத்தோடு கேட்டுக்கொண்டிருந்த தாய் "மகளே, உன் அண்ணன் எழுதியிருக்கிறபடி, ஒருமுறை மலாய்நாட்டிற்குப் போய் வருவது உனக்கும் விருப்பந்தானே" என்று கேட்க, "நீங்களும் உடன் வருவதானால், மாமாவும் உத்தரவு தருவதானால் எனக்கு நூறுமுறையும் சம்மதம் அம்மா" என்றாள் சிவபாக்கியம்; எனக்குச் சம்மதந்தான் மகளே, ஆனால் உங்கள் மாமனாருடைய சம்மதத்தையும் பெற்றல்லவோ நாங்கள் அப்படிப் புறப்பட நினைக்கவேண்டும்" என்றாள் கண்ணகியம்மை"; "மாமா இன்றைக்கு நாளைக்கு இந்தப்பக்கம் வரமாட்டாரா? அம்மா" என்று மகள் தாயைக் கேட்க "இன்று பொழுது படும் வேளையில் அவர் வருவாரென்றெண்ணுகிறேன்; தவறினால் நாளைக்காலை நானே அங்கே போய் அவருக்கு இந்த விஷயத்தைச் சொல்லி அவருடைய சம்மதத்தையும் அறிந்த பின் உன் அண்ணாவுக்குப் பதில் எழுதுவது தான் நல்லது" என்றாள் தாய்; அன்று மாலை வேளை விநாயகமூர்த்தி தம் தங்கையின் வீட்டிற்கு வந்தார்; வந்தபோது தாயும் மகளும் அவரை உபசரித்தனர். பின் தாய் மகளைப் பார்த்து, "உன் அண்ணா எழுதிய கடிதத்தை எடுத்துக்கொண்டுவந்து உங்கள் மாமாவின் முன்னிலையில் வாசித்துக்காட்டு" என்று சொல்லுதலும், மகள் அப்படியே அக்கடிதத்தைப் போய் எடுத்துக்கொண்டுவந்து தன் மாமனாருக்கு முன்பு நின்று படித்தாள்; விநாயகமூர்த்தி கேட்டுச் சிறிது நேரம் யோசித்துவிட்டு, தம் சகோதரியைப் பார்த்து "தங்கைச்சி, எங்கள் மருமகன் இங்கு வருவதற்குத் தான் பார்க்கும் உத்தியோகம் தடையாகவிருக்கிறது என்று எழுதியிருப்பதால், நீங்களிருவரும் ஒருமுறை அந்த நாட்டிற்குப் போய்ச் சிலகாலந் தங்கியிருந்து பின்பு இங்கே வருவதனால் ஒரு பிழையுமில்லை என்று நினைக்கிறேன்; ஆனால் என் மருமகளையுங் கூட்டிக்கொண்டு உற்ற துணையில்லாமல் எப்படிப்போகலாம்; அதையிட்டுத்தான் யோசிக்கிறேன்" என்றார்; தக்கதுணை கிடைத்தாற்றான் போகலாம், இல்லாவிட்டால் நான் தனித்தவள் குமாப்பிள்ளையையுங் கூட்டிக்கொண்டு வெகு தூரத்திலுள்ள தேசத்திற்குக் கடல்கடந்து போவதெப்படி" என்று கவலையுடன் சொன்னாள் கண்ணகியம்மாள். "ஏன், அம்மா, எங்கள் மாமா எங்களுடன் துணையாக வந்து, சிலநாள் அங்கே தங்கி மீண்டும் எங்களுடன் வர வாய்க்காதோ" என்று தாயைக் கேட்க, தம்மருமகள் தம்முடன் படர்க்கையிற் பேசுகிறாளென்பதையுணர்ந்த விநாயகமூர்த்தி "வரலாமடியம்மா, ஆனால், நானும் உங்களுடன் புறப்பட்டால் என் வீட்டுக் கருமங்களையும் உங்கள் வீடு வாசல் பொருள் பண்டம் நிலம்புலம் என்னுமிவைகளையும் இங்கே பார்த்துப் பராபரிப்பதார் என்பதையிட்டுத் தான் யோசிக்கிறேன்; நீங்கள் கவலைப்பட வேண்டாம்; யாழ்ப்பாணப்பட்டினத்திலே "நாதன்" என்றொருவர் இருக்கிறார்; அவர் சிங்கப்பூர் மலாய் நாட்டிற்கு இங்கிருந்து போய்வரும் கப்பற் பிரயாணிகளுக்கு ஆகவேண்டிய சௌகரியங்களை யெல்லாஞ் செய்துவைக்கும் கப்பல் ஏசண்டாயிருக்கிறார்; அவர் சில வேளை கப்பற் பிரயாணிகளுக்குத் துணையாகத் தாமும் போய் வருவதை நான் அறிவேன்; நாளைக்குப் பட்டினப்பக்கம்போக உத்தேசித்திருக்கிறேன்; போகும் போது அவரையுங்கண்டு இந்த விஷயமாகப் பேசி, மலாய்நாட்டிற்கு இங்கிருந்து கப்பல் எப்போது புறப்படுகிற தென்பதையும் உங்களுக்குத் துணையாக வரக்கூடிய பிரயாணிகள் யாரும் புறப்படுகிறார்களோ வென்பதையும் அவரிடம் அறிந்துகொண்டு வருகின்றேன்; நீங்கள் எதற்கும் யோசிக்க வேண்டாம்" என்று சொல்ல, வேறு விஷயங்களையிட்டும் பேசிவிட்டு விநாயக மூர்த்தி தம்முடைய சகோதரி, மருமகளென்னு மிவர்களிடத்தும் விடை பெற்றுக்கொண்டு மீண்டார்; அடுத்தநாள் பொழுது பட்டபின் விநாயகமூர்த்தி தம் சகோதரி வீட்டிற்கு வந்து, தாம் பட்டினத்திற்குப் போனபோது குறித்த நாதன் என்பவரைச் சந்தித்ததாகவும் குறித்த விஷயங்களைப்பற்றிப் பேசியபோது, அடுத்த மாசம் கொழும்பிலிருந்து சிங்கப்பூருக்குக் கப்பலொன்று புறப்படுமெனவும், இங்குள்ள பெரிய குடும்பங்களிலுள்ள பெண்கள் சிலர் அந்தக் கப்பல்மூலம் புறப்பட்டுச் சிங்கப்பூருக்குப் போக நிச்சயித்திருப்பதாகவும், பெண்களாக ஆண்களாக சகல வசதிகளோடும் மரியாதையோடும் கப்பற்பிரயாணம் செய்தற்காகிய ஏற்பாடுகளையெல்லாம் தாம் செய்து வைக்கச் சித்தமாயிருப்பதாகவும் நாதன் என்பவர் தமக்குத் தெரிவித்தாரென்றும் விநாயகமூர்த்தி தம் சகோதரிக்கும் மருமகளுக்குஞ் சொல்லி பிரயாணத்திற்காகவேண்டிய ஆயத்தங்களையுஞ் செய்யும்படி தெரிவித்து அவர்களிடம் உத்தரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொண்டு தம் வீட்டிற்கு மீண்டு போயினார்; சில தினங்கள் செல்ல, கண்ணகியம்மையும் மகளும் மலாய் நாட்டிற்குப் புறப்படுகின்றார்களென்ற செய்தி அயலட்டத்திலுள்ளார்க்குத் தெரிந்தது; அவர்களுடன் நட்பான அயலார் சுற்றத்தார் அவர்கள் வீட்டிற்குப்போய், பிரயாண விஷயம் நிசந்தானோ என்று தாயையும் மகளையும் கேட்க, அவர்களும் உண்மையைச் சொன்னார்கள்; சிவபாக்கியம் தாங்கள் ஒரு கிழமை செல்ல, தங்களூரிலிருந்து புறப்பட்டு மலாய்நாட்டிற்கு வர உத்தேசித்திருப்பதைத் தனது தமயனுக்குக் கடிதமூலமாக எழுதியனுப்பினாள்; கண்ணகியம்மையும் பிரயாணத்திற்கு வேண்டிய ஆயத்தங்களைத் துரிதமாகச் செய்வாளாயினாள்.

தேவை

இவை இங்ஙனமாக, அந்தப் புரோகிதர் ஒருநாட் காலை, கண்ணகியம்மையின் வீட்டிற்குப் போனபோது கண்ணகியம்மையும் மகளும் அவரை உபசரித்திருத்தி, தாங்களிருவரும் விரைவில் மலாய் நாட்டிற்குப் போதற்கு உத்தேசித்திருப்பதைப் புரோகிதருக்குச் சொல்லி, அப்படிப் போகவேண்டியதற்காகிய ஏது என்னவென்பதையும் தெரிவித்தார்கள்; இவைகளை யெல்லாங்கேட்ட புரோகிதர் "அப்படியானால், நீங்கள் ஒருமுறை அங்கே போய் வருவதுதான் நல்லது, சிந்தாயாத்திரையாகப் போய்வாருங்கள்" என்று ஆசிகூறி அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு தம் வீடு நோக்கிப் போவாராயினர்; அப்படிப் போனவர் தெருவீதியிலுள்ள கடையில் ஒரு தினசரிப் பத்திரிகையை விலைகொடுத்து வாங்கி விரித்துப் படித்துக்கொண்டு அப்பால் மெல்ல நடந்து போகும்போது, "தேவை" என்ற தலையங்கத்தோடு கூடிய ஒரு விளம்பரத்தை அந்தப் பத்திரிகையிற்கண்டு அதனைப் படித்துப் பார்த்தார். அதில் மலாய்நாட்டிலுள்ள தமிழ் மக்கள் அதிகம் வசிக்கும் ஒரு பட்டினத்திலேயிருக்கும் பெண் வித்தியாசாலைக்குத் தமிழ் உபாத்திமைப்பரீட்சையிற் சித்திபெற்ற இல்லையேல் உபாத்திமைத் தராதரப் பத்திரம் பெற்ற ஒரு தலைமையாசிரியை தேவை, வேதனம் தகைமைக்குத் தக்கபடி கொடுக்கப்படும்; வித்தியாசாலைக்கணித்தாகிய வீட்டிலேயே வசித்தற்காகிய வசதிகளெல்லாஞ் செய்யப்படும்; விண்ணப்பஞ் செய்பவர் யாழ்ப்பாணத்துப் பெண்ணாயிருப்பின், விசேஷ சந்மானம் வழங்கப்படும்; ஆகவேண்டிய விபரங்களுக்கு மேற்படி வித்தியாசாலை மனேஜராகிய இன்னாருக்குத்தெரிவிக்கவும் என்ற கருத்துப்பட அந்த விளம்பரம் காணப்பட்டது; அதனைப் படித்த மாத்திரத்தே ஐயருடைய உள்ளத்தில் ஒரு எண்ணம் பிறந்தது; "நாம் இந்தச் சமாசாரத்தை அந்தச் சிவகாமியம்மைக்குத் தெரிவித்தால், பொருள் விஷயமாகக் கஷ்டப்படும் அந்த மனுஷி தங்கள் மகளையுங் கூட்டிக்கொண்டு மலாய் நாட்டிற்குப் போய் குறித்த வித்தியாசாலையிலே தங்கள் மகளைத் தலைமையாசிரியையாகக் கடமை பார்க்கும்படி ஆக்குவிக்க இயலும்; அந்தவூரிலே நம் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பெருமக்கள் தாம் எத்தனையோபேர் இருக்கிறார்களே. இப்படிப் பட்டவர்களுக்கு அவர்கள் தங்களால் ஆக வேண்டிய உதவிகளையெல்லாம் செய்தல் அவர்களுடைய கொள்கையாகும்" என்று யோசித்தபடி, தம் வீட்டிற்குப் போகாது, சிவகாமியம்மை வீட்டிற்கு நேரே போனார்.

ஆண்டவன் கிருபை செய்யட்டும்

தங்கள் வீட்டிற்கு வந்த புரோகிதரைச் சிவகாமியம்மையும் மகளும் பணிவுடன் வரவேற்று மான்றோலுதவி அதன்மேல் இருக்க வைத்தனர். இதற்கிடையில் பாக்கியலட்சுமி, "சாமி, தங்கள் கையில் இருக்கும் பத்திரிகை யென்னவோ" எனப் பணிவுடன் வினவ, இது இந்துசாதனப்பத்திரிகை, இதனையிப்பொழுது தான் படிக்கும்படி கடையில் வாங்கினேம். இப் பத்திரிகைதான் இப்பொழுது எம்மை உங்கள் வீட்டிற்கு வரச்செய்தது; வேறொன்றுமல்ல, குழந்தாய்; இதிலுள்ள "தேவை" என்ற இந்த விளம்பரத்தை உம்முடைய அம்மாவுங்கேட்கப் படித்துப்பாரும்" என்று சொல்லி அவ் விளம்பரத்தைச் சுட்டிக்காட்டியபடி புரோகிதர் அப்பத்திரிகையை அக்கன்னிகையிடம் நீட்ட, அவள் இரு கரங்களினாலும் விநயத்தோடு அதனைவாங்கித் தாயுங்கேட்கும் வண்ணம் வாசித்து முகமலர்ந்தாள்; வாசிக்கக்கேட்ட தாய் யோசித்தபடி நின்றாள்; "சிவகாமியம்மே, எதனையிட்டு யோசிக் கின்றாய்" என்று புரோகிதர் வினாவ, "வேறொன் றையும் பற்றியல்ல, சாமி, எங்கள் மகளுக்குச் சம்மதமானால் அந்த இடத்திற்கு விண்ணப்பப் பத்திரம் அனுப்பலாமோ என்பதை யிட்டுத்தான் யோசிக்கிறேன்...." என்று தாய் சொல்வதற் கிடையில் "அம்மா, எனக்கு நூறு முறையும் சம்மதம்; ஆனாலும் எங்கள் குருக்களையாவின் சம்மதமும் ஆசியும் வேணுமம்மா" என்றாள் பாக்கியலட்சுமி. சிவகாமியம்மை புரோகிதரின் முகத்தைப் பரிவுடன் பார்த்தாள்; "உங்களுடைய சுற்றத்தார், உங்களுக்கு அறிமுகமானவர்கள் யாராயினும் அந்தவூரிலே போய்க் குடும்பத்துடன் இருக்கிறார்களோ" என்று புரோகிதர் வினவ, "சாமீ, இந்தவூரில் இருக்கும்போது ஏதும் மனக் குரோதம் வேற்றுமைகளிருந்தாலும் எங்கள் யாழ்ப்பாணத்தார் வேற்று நாட்டிற் போய் வசிக்குங் காலத்திலே, இங்கிருந்து அங்கே பிறகு போகும் யாழ்ப்பாணத்தவரை அவர் யாராயிருந்தாலும் பேதம் பாராட்டாது தங்கள் சொந்தச் சுற்ற மித்திரர்போல் அன்பு பாராட்டி ஆதரிக்குங் குணம் பூண்டவர்களென்று அந் நாட்டிற்குப் போய் மீண்டு இங்கே வந்தவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம் சாமீ, ஆனதால், அதனையிட்டுக் கவலையில்லை. நாங்கள் அந்த உத்தியோகத்திற்கு விண்ணப்பம் அனுப்புவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தியோ என்பதையிட்டுத்தான் நீங்கள் ஆராய்ந்து சொல்லவேணும்" என்று பணிவுடன் கேட்டாள் சிவகாமியம்மை; அப்படிச் செய்வது நல்லதென்றுதான் நாம் நினைக்கிறோம்; இந்த விஷயமாக உங்களுக்கு அநுகூலமாகுமென்பதும் என்னுள்ளத்திற் புலப்படுகிறது, நீங்கள் ஆக வேண்டிய முயற்சிகளைச் செய்யுங்கள்" என்றார் புரோகிதர்; "செய்கிறோம் சாமி, கருமங் கைகூடுமானால், பெண்ணாய்ப்பிறந்த நாங்களிருவரும் தக்க துணையில்லாமல் இந்தவூரிலிருந்து அந்தத் தூரதேசத்திற்கு எப்படிப் பயணம் பண்ணுவ தென்பதையிட்டுத்தான் யோசிக்கிறேன்" என்று கவலையுடன் சிவகாமி சொல்ல, அதனையிட்டுக் கவலைப்படவேண்டாம், ஆண்டவன் கிருபை செய்யட்டும்; ஆன துணையோடு உங்களை நாமே அனுப்பி வைப்போம்" என்று உறுதி வார்த்தை கூறிவிட்டுப் புரோகிதர் அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு வீட்டிற்கு மீண்டார்.

* * *

உலகம் பலவிதம்: 1947 மே 02
(முற்றொடர் - 13)
எழுதா விதிக்கு அழுதாவதென்ன?

ஒருநாட் பிற்பகல் கண்ணகியம்மையும் மகளும் மலாய்நாட்டிற்குப் போதற்காகிய ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கும்போது, நாற்பது வயசு வரையிலுள்ள ஒரு பெண் அங்கே வந்தாள்; தங்கள் வீட்டிற்கு வந்த பெண்ணைத் தாயும் மகளும் வேண்டியவாறு உபசரித்து இருக்கச்செய்தபின் "நாங்கள் செய்யவேண்டிய தென்னவோ, வந்த நோக்கம் ஏதோ" என்று விநயமாகக் கேட்டாள் கண்ணகியம்மை; "அப்படிப் பெரியகருமம் ஒன்றுமில்லை, அக்கா, உங்களைக் காணவென்றுதான் வந்தேன்; நாங்களும் இந்தவூரில் வடக்குப் பகுதியிலேதான் குடியிருக்கிறோம்; என்னுடைய அவர் மோசம் போனபிறகு நான் அதிகமாக எங்கும் புறப்பட்டுத் திரிவதில்லை; நாம் அடங்க, நம் குலமடங்கும் என்றபடி அவரில்லாதபோது நாம் அங்கிங்கு திரிந்தால், அயலட்டத்திலுள்ளவர்கள் குறை கூறுவர்; வீண்கதை பேசுவர்; அதனால் எனக்கு மாத்திரமல்ல, எங்களுடைய ஒரேயொரு மகளுக்கும் வசை வந்துசேரும்; அதனாற்றான் நான் அதிகம் வெளியில் ஊடாடுவதில்லை என்று சொல்லுகிறேன்; இப்பொழுதும் ஒரு பிரதானமான கருமமாகத்தான் உங்களிடம் வந்தேன்; நீங்கள் எங்களை அறியாவிட்டாலும் உங்களைப்பற்றி நான் நல்லாய்க் கேள்விப்பட்டிருக்கிறேன்; உங்கள் புரோகிதர் தான் எங்களுக்கும் புரோகிதர். புரோகிதரையா உங்களைப்பற்றி எனக்கும் என் மகளுக்கும் பலமுறை பாராட்டிச் சொல்லியிருக்கிறார்; நீங்கள் நாலைந்து வேளையில் மலாய்நாட்டிற்குப் புறப்படப்போகின் றீர்களென்று புரோகிதரையாதான் எங்களுக்குச் சொன்னார். எப்பொழுது புறப்படுவீர்களென்பதை நான் உங்களிடம் கேட்டறியத்தான் இப்பொழுது வந்தேன்" என்றாள் அந்தப் பெண். "ஓம், நாங்கள் போவதற்குத்தான் உத்தேசித்திருக்கிறோம்; பயணத்திற்காகிய ஆயத்தங்களெல்லாஞ் செய் கிறோம்; எங்கள் மகன் எங்களிரண்டு பேரையும் ஒருமுறை தன்னிடம் வந்து சிலநாள் தங்கிநின்று மீண்டு போகச்சொல்லி எழுதியிருக்கிறான்; நானும், உம்மைப்போல ஆண் துணையற்றவள்; அவர் சிலவருடங்களுக்கு முன்னே, தன் மக்களிருவரையும் என்னையும் தவிக்க விட்டுப் பரலோகம் போய்விட்டார்; என்ன செய்யலாம்; எழுதா விதிக்கு அழுதாவதென்ன? என்றாலும் இவைகளையிட்டு நாங்கள் அதிகங் கவலைப்பட்டுக்கொண்டிருக்கவொண்ணாது;
தங்கைச்சி, உம்முடைய பெயரெனக்குத் தெரிய வில்லை (என்று சொல்லுவதற்கிடையில் என்னைச் சிவகாமியென்று சொல்லுவர் எனக் கூறினாள் வந்த மனுஷி.) உமக்குப் பொருத்தமான பேர்தான்; இன்னும் கேளும் சிவகாமியம்மே; உலகத்திலே எத்தனை பெண்கள் கல்யாணஞ் செய்து ஆறுமாசத்தில் ஒருவருடத்தில், இரண்டு மூன்று வருடஞ்செல்வதற்கிடையில் தங்கள் புருஷனைப் பறிகொடுத்துவிட்டு இருந்து சஞ்சலப் படுகிறார்கள்; இன்னும் எத்தனை பெண்கள் இரண்டு மூன்று பெண் குழந்தைகளுடனிருக்க, அந்தப் பெண் குழந்தைகளும் பிராயமற்ற சிறு பிள்ளைகளாகவிருக்க இதற்கிடையிற் கணவன் மோசம் போய்விட, கணவன் பக்கத்தாருடைய உதவியாவது, தங்கள் பக்கத்தாரின் உதவியாவது ஒன்றுமில்லாமல் இடையிலே இருந்து பிள்ளைகளுந் தாயுமாக இடர்ப்படுகிறார்கள்; ஆனால் அவர்களையும் ஆண்டவன் கைவிடமாட்டான்; அவர்களும் ஆண்டவனருளால் ஒருவாறு வறுமையிற் செம்மையாய்க் காலங் கழித்து வருகிறதை எங்கள் கண்ணாரக் காண்கிறோம்; அந்தப் பெண்பிள்ளைகளுள் மூத்த பிள்ளை ஒருவாறு வளர்ந்து பக்குவப்பட, அந்தப் பிள்ளைக்கு ஒரு நல்லவன் பெரியவன் குலங் குடியிற் பிறந்தவன் புருஷனாக வந்து அந்தப் பெண்ணை ஏற்று நல்லாய் வைத்து நடத்துவதோடு மாத்திரம் நின்றுவிடாது, தான் பெண் கொண்ட வீட்டிலுள்ள மாமியாரையும், மற்றைப் பெண் பிள்ளைகளையும் அன்போடு ஆதரித்துப் பாதுகாத்து அந்தப் பெண்பிள்ளைகளும் பக்குவமடைய, அப்பிள்ளைகளைத் தம் மக்கள்போற் பாவித்துத் தானும் தன்னாலியன்ற உதவிசெய்து அப்பெண்களைப் பருவ காலத்தில் ஒவ்வொரு கரையிலேற்றி வைக்கிறான்; அதற்கு மாறாகச் செய்பவர்களும் இருக்கிறார்களென்பது நிசம்; ஆனால் நல்லவன் பெரியவன் குடியிற் பிறந்தவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படிச் செய்யமாட்டான்; உலகம் பலவிதம் என்று சொல்லுவார்கள்; ஆனதால் நாங்கள் இவைகளைப்பற்றி அதிக கவலைப்பட வொண்ணாது, தங்கைச்சி, நீர் நினைத்து இங்கே வந்த கருமத்தைக் கூசாமற் சொல்லும்" என்று ஆதரவுடன் வினாவினாள் கண்ணகியம்மை.

"படைத்தவன் பாதுகாப்பான்"

"வேறொன்றுமல்ல, அக்கா படைத்தவன் பாதுகாப்பானென்பதுதான் என்னுடைய நம்பிக்கையும்; நான் வந்த நோக்கத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள்; எங்களுக்கு ஒரேயொரு பெண்பிள்ளை யிருக்கிறாள்; உங்களுடைய இந்தத் தங்கைச்சிக்கும் எங்கள் மகளுக்கும் அதிக வித்தியாசமில்லையென்று சொல்லலாம்; அவள் தகப்பனிருந்த காலத்தில் கீழ் வகுப்புக்களிலேதான் படித்தாள்; அப்பொழுது சிறு பிள்ளையாயிருந்ததினால் மேற் படிப்பும் படிக்க வாய்க்கவில்லை; இதற்கிடையில் அவரும் போய்விட்டார்; ஆனாலும் என்பிள்ளை தான் மேலும்மேலும் படிக்கவேண்டுமென்ற ஆசை கொண்டதினால், என் சிரமங்கள் சங்கடங்களைப் பாராமல் நான் ஒருவாறு மேல் வகுப்பிற் சேர்ந்து படிக்கச் செய்தேன்; என்பிள்ளை அப்படிப் படித்து உபாத்திமைச் சோதனையிலும் சித்தியடைந்தாள்; பாடுபட்டுப் படித்த தான் சும்மாயிருக்க வொண்ணாதென்பது அவளுடைய நோக்கம்; எங்கேனும் ஒரு சைவப்பள்ளிக்கூடத்திலே சேர்ந்து படிப்பிக்க வேண்டுமென்பதுதான் அவளுடைய கொள்கை; ஆனாற் சைவப் பள்ளிக்கூடமொன்றும் என்பிள்ளைக்குக் கிட்டவில்லை. அதையிட்டுக் கவலைப்பட்டுக்கொண்டு நாங்கள் இருக்கும்போது அறிமுகமான ஒரு உபாத்தியாயர், அயலிலுள்ள ஒரு பாதிரியார் பள்ளிக்கூடத்திற் படிப்பிப்பதற்கு என் பிள்ளைக்கு உதவி செய்தார்; அவர் தாம் அந்தப்பள்ளிக்கூடத்திலே தலைமை உபாத்தியாயர்; அவர் என் பிள்ளையை அன்பாகத் தகப்பன்போல வைத்து நடத்திவந்தார்; ஆனால் அங்குள்ள மற்றைய கிறிஸ்தவ உபாத்தியாயர்களுக்கும், அந்தப் பள்ளிக்கூடத்தின் தலைவராகிய பாதிரியாருக்கும் எங்கள் பிள்ளை சைவப்பெண்ணாயிருந்து கொண்டு தங்கள் பள்ளிக்கூடத்திலே படிப்பிப்பது விருப்பமில்லாதிருந்தது; அதனால் என்பிள்ளை, அவர்கள் தன்னை விலக்கமுந்தித் தானாகவே பள்ளிக்கூடத்தை விட்டு விலகுவது நல்லதென்றெண்ணி, தான் ஒருமாச காலத்தில் உத்தியோகத்தைவிட்டு விலகுவதாகப் பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டாள்; இப்பொழுது அங்கே படிப்பிக்கப் போவதில்லை; உண்மையை சொல்லுகிறேன் அக்கா, என் பிள்ளை வீட்டிலே சும்மாயிருந்தாலும் சோறும் சேலையுங் கொடுக்க, ஆண்டவனருளால் என்னால் முடியும்; ஆனால் என் மகளுக்குத் தான் ஒரு தொழிலைச் செய்யப்படித்துவிட்டுச் சும்மா வீட்டிலேயிருப்பது பிரியமில்லை; எங்கேனும் ஒரு சைவப் பள்ளிக் கூடத்திலே சேர்ந்து படிப்பிக்கவேண்டுமென்பது தான் அவளுடைய ஆசை; இப்போது அப்படிச் செய்ய ஆவசியகமில்லை மகளே, ஏதும் இடம் சந்திக்கும்போது பார்த்துக்கொள்ளலாம்; நீ வீணாய்க் கவலைப்பட வேண்டாமென்று நான் சொன்னாலும் கேட்கிறாளில்லை; எந்த நேரமுஞ் சிந்தனையோடு கூடியவளாகவே யிருக்கிறாள்; இப்படியிருக்க, மலாய்நாட்டிலே எங்கள் யாழ்ப்பாணத்தார் அதிகமாக வசிக்கும் ஒரு பட்டினத்திலே ஒரு சைவப் பள்ளிக்கூட மிருக்கிறதென்றும், அந்தப் பள்ளிக்கூடத்திற்குப் பெண் உபாத்தியாயர்தான் தேவையென்றும், அந்த உபாத்தியாயரும் யாழ்பாணத்தவராயிருந்தால் நல்லதென்றும் பத்திரிகையில் விளம்பரஞ் செய்திருப்பதாக அந்தப் பத்திரிகையையுங் கொண்டு வந்து எங்கள் புரோகிதர் எங்களுக்குக் காட்டினார்; அந்த நேரந்தொடக்கம் என் மகள் தான் எதுவிதத்திலும் அங்கே போய் அந்தப் பள்ளிக்கூடத்திலே ஒரு உபாத்தி யாயராகச் சேர்ந்து படிப்பிக்க வேண்டுமென்ற பைத்தியங் கொண்டவளாய்க் காணப்படுகிறாள்; பிள்ளை கொண்ட நோக்கமும் ஒரு அளவிற்குச் சரிதானே அக்கா; நாமாய்ப் பாடுபட்டு மரியாதையாகப் பொருள் தேடி வாழ்வதனால் எவ்வகையான பழியும் வராது.

துணையோடல்லது தனிவழியேகேல்

"ஏற்பதிகழ்ச்சி" என்ற விதமாக ஒருவரையோ, பலரையோ பின்சென்று அவரிடம் பொருள் பெற்றுச் சீவிப்பதுதான் மரியாதையீனம்; என்பிள்ளையும் நானும் அந்தவூரிலே போய் இருந்து மரியாதையாகக் காலம் போக்கச் சித்தமாயிருக்கிறோம்; இரண்டுபேரும் பெண்ணாய்ப் பிறந்துள்ளோம்; துணையோடல்லது தனிவழி போகேல் என்று சொல்லுவர்; ஆனதால் இங்கிருந்து அந்த நாட்டுக்கு யாரும் போனால் நாங்களும் அவர்களுடைய துணையிற் போகலா மென்று யோசித்துக்கொண்டிருந்தோம். இப்படி யிருப்ப எங்கள் புரோகிதர் பிறகொருநாள் வந்து, நீங்களும் உங்கள் மகளும் மலாய்நாட்டிற்குப் போக உத்தேசித்திருப்பதாகச் சொல்லி, உங்கள் குடும்பப் பெருமை குண விசேஷங்களையுஞ் சொல்லி, உங்களைப்போய் நேரிற் காணும்படியும் எனக்குச் சொன்னார்; அதனாலேதான் நாம் இங்கே இப்போது வந்தேன் அக்கா" என்று சொல்லி முடித்தாள்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1947 மே 09 (முற்றொடர் - 14)

"தாயைப்போலப் பிள்ளை நூலைப்போல சீலை"

சிவகாமியம்மை சொன்னவற்றை யெல்லாம் தாயும் மகளும் பரிவுடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள்; "ஆச்சி நீங்கள் எங்களுடன் மலாய்நாட்டிற்குப் புறப்படுவதானால் சொல்லுகிறேனென்று குறையெண்ணாதீர்கள்; எங்கள் செலவிலேயே உங்களிருவரையும் நாங்கள் அழைத்துக்கொண்டு போவோம்; உங்களைப் போன்ற துணை எங்களுக்குக் கிட்டுமா? உங்கள் மகளின் விருப்பத்திற்கு நீங்களும் உடம்பட்டுப் புறப்படுங்கள்; அங்கே எங்கள் அண்ணா, இன்னும் எங்கள் சொந்தக்காரர் இருக்கிறார்கள்; அவர்கள் மூலமாக நீங்கள் சொல்லுகிற பள்ளிக்கூடத்திலே உங்கள் மகளை ஒரு ஆசிரியையாக நியமித்தற்கான ஒழுங்குகளைச் செய்விக்கலாம்; நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம்; உங்கள் மகள் எனக்கு அக்காளோ, தங்கைச்சியோ, வயசு எவ்வளவென்று எனக்குத் தெரியாது; இப்பொழுது உங்கள் மகளை நான் நேரிற் கண்டால், மலாய்நாட்டிற்கு எங்களுடன் வரும்படி தான் புத்தி சொல்லுவேன்" என்று சிவபாக்கியம் மிகவும் மகிழ்ச்சியோடு சொன்னாள். "தங்கைச்சி, என் பிள்ளை இப்பொழுது பதினாறு வயசாகிறது. உம்மைப் போன்ற நிறமும் தோற்றமும்தான் அவளும்; ஆனால் உம்மிடத்திலுள்ள பெருங் குணம் என் பிள்ளையிடத்திலுண்டோ என்பதுதான் சந்தேகம்; நீங்கள் அவளைக் காணவேண்டுமென்றால் அதையிட்டு கவலைப்படவேண்டாம்; எப்படியோ இன்னுஞ் சிலவேளையில் அங்கு உங்களைச் சந்திக்க வேண்டி வரும் என்று சிவகாமியம்மை சொல்லி முடிவதற்கிடையில், "ஆச்சி, என் குணத்தை மேலாகச் சொல்லாதீர்கள்; என் குணத்தைக் காட்டிலும், என் தங்கைச்சியின் குணம் மேலானதென்று நிசமாகச் சொல்லுவேன்; "தாயைப்போலப் பிள்ளை; நூலைப்போல சீலை" என்றல்லவா உலகத்திலே சொல்லுவார்கள்; உங்களுடைய நல்ல குணத்தையும் இனிய வாக்கையும் நல்ல நடையையும் இங்கு நீங்கள் கதைத்த இந்தக் கொஞ்ச நேரத்தில் விளங்கிக்கொண்டோம் ஆச்சி; நீங்கள் எங்களை வித்தியாசமாக எண்ணவேண்டாம்; வேற்றுமையாக மதிக்கவேண்டாம்; நீங்களும் நாங்களும் இன்று தொடக்கம் ஒரே குடும்பத்தினர் என்று எண்ணிக்கொள்ளுங்கள்; உங்களை நான் என் சிறிய தாயாகவும் உங்கள் மகளை என் அருமைத் தங்கைச்சியாகவும் இந்த நிமிஷந் தொடக்கம் மதித்துக்கொண்டேன்" என்று கண்களில் நீர்த்தும்பச் சொல்லிமுடித்தாள் சிவபாக்கியம், அவளுடைய வார்த்தைகளைக் கேட்ட சிவகாமியம்மையும் பெரும் சந்தோஷமடைந்தாள்; சிவகாமியம்மை பின்னரும் அளவளாவிக் கலந்துபேசி அன்பு பாராட்டிக் கொண்டு சிலநாட்களுக்கிடையில் தான் மீண்டும் அங்கு வருவதாகச் சொல்லி அவர்களிடம் அநுமதி பெற்றுக்கொண்டு தங்கள் வீட்டிற்கு மீண்டாள்.

"நல்லாருமுண்டு பொல்லாருமுண்டு"

தாயும் மகளும் தன்னையுபசரித்த இதமான விதத்தையும் தன்னோடு அன்பு பாராட்டி வார்த்தையாடிய தன்மையையும் சிவகாமியம்மை தன் வீட்டிற்கு மீண்டு போகும் போது நெடிதுநேரம் நினைத்தபடி போவாளாயினாள்; "ஊரிலே, நல்லாருமுண்டு; பொல்லாரு முண்டு; குலத்தளவேயாகும் குணமென்பதை இந்த இருவரிடத்தும் இன்று கண்டேன்; குணத்திலே சிறந்தவள் தாயோ மகளோ என்பதை இன்னமும் நான் அறிந்துகொள்ள முடியவில்லை; முன்பின் அறியாத அந்தப் பிள்ளை இன்று தானே என் மகளைப்பற்றிச் சொல்லக் கேட்டவுடனே, தன் தங்கையென்று அருமை பாராட்டுகிறாளே பிள்ளையென்றால் அதிலும் பெண் பிள்ளையென்றால், இப்படியல்லவோ இருக்க வேண்டும்....." என்று இவ்வாறெல்லாம் எண்ணி யெண்ணி மனமுருகியவண்ணம் (சிவகாமியம்மை) தங்கள் வீடு போய்ச் சேர்ந்தாள்; தன் தாயாருடைய வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு தங்கள் வீட்டுத் தலைவாசற்பக்கலில் நின்ற மகளாகிய பாக்கியலட்சுமி தாயார் வரவைக் கண்டமாத்திரத்தே முற்பட்டு வந்து "அம்மா, நீங்கள் போன கருமம் எப்படி" என்று வினாவிக் கொண்டு தாய் முன்செல்ல, அவளைத் தொடர்ந்து பின்சென்றாள்; சிவகாமியம்மை தலைவாசலிலே தான் இருந்துகொண்டு தன் மகளையும் பக்கலிலே இருக்கச் செய்து, "மகளே, ஆண்டவன் கிருபை நமக்கு இருக்கும்போது, போகுங் கருமங் கைகூடாமல் விடுமா? அங்கே போய்த் தாயையும் மகளையும் கண்டபிறகு, அவர்களை விட்டுப்பிரிந்து மீண்டுவர எனக்கு மனமெழவில்லை; என்ன அன்பு! எவ்வளவு உபசாரம்? அவர்கள் வார்த்தையாடும் இனிமை யென்ன? இப்படிப்பட்ட குலக்குடியிலுள்ளவர்கள் குணமாகவுள்ளவர்கள் இந்தவூரிலேயிருக்கவும் நாங்கள் இவர்களைப்பற்றி இவ்வளவு காலமும் அறியாமல் இவர்களோடு ஊடாடாமலிருந்தது எங்கள் அதிர்ஷ்டக் குறைவுதான் மகளே குணம் நடையில் தாயைத்திறமென்று சொல்வதா, மகளைத் திறமென்று சொல்வதா என்பது இன்னமும் எனக்குப் புலப்படவில்லை; இப்படிப்பட்டவர்களோடு உறவு பாராட்டி வாழ்ந்தால், எங்களிடத்துள்ள கவலை வறுமை, தனிமை எதுவும் புலப்படா; மகளே, சொல்லுகிறேனென்று வித்தியாசமாக எண்ணிக்கொள்ளாதே; அந்தப் பிள்ளையைக் கண்டவுடனே, அவளே நீயென்றெண்ணி நீ இங்கே வீட்டிலே தனியேயிருக்கிறா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யென்பதையும் மறந்து விட்டேன்; உன்மேல் அந்தப்பிள்ளை பாராட்டும் அன்பை நீ நேரிற் சந்தித்தால் அறியமுடியுமே யொழிய, நான் எப்படிச் சொன்னாலும் அது உனக்குப் புலப்படாது; எங்களிருவரையும் மலாய்நாட்டிற்குப் புறப்படுவதென்றால், தங்க ளுடன் புறப்படலாமென்றும், தங்கள் செலவிலேயே எங்களைக் கூட்டிக்கொண்டு போகலாமென்றும் அந்தப்பிள்ளை சொல்லியபோது என்னுள்ளம் வெயிலிடை வைத்த வெண்ணெய் போல் உருகியது; மகளே, உன்னை அந்தப் பிள்ளை ஒருமுறையாயினும் தான் பார்க்க வேண்டுமென்று கொண்ட ஆசைக்கு ஒரு அளவில்லை; என்னை இங்கே மீண்டுவர விட அவர்களிருவருக்கும் இஷ்டமில்லை; ஆனாலும் நீ தனியே இருக்கிறாயென்ற காரணத்தைக் காட்டி நான் ஒருபடியாக மீண்டுவந்தேன்; வரும்போது இன்னுஞ் சிலநாளில் உங்களை வந்து காணுவேன் என்று சொல்லிவிட்டே வந்தேன்" என்றாள்.

பொல்லாத உலகம் இல்லாத வசை சொல்லும்

தாய் சொல்லக்கேட்ட பாக்கியலட்சுமி பெரிதும் வியப்படைந்தாள்; அவளையறியாமலே அவள் மனம் அவர்களிடத்தில், அவர்களுள்ளும் விசேஷமாகச் சிவபாக்கியத்தினிடத்திலே படிந்து விட்டது; அவள் சிவபாக்கியத்தைப்பற்றித் தாயிடம் விசாரிக்க, தாய் சகல விபரங்களையும் இதமாகச் சொன்னாள்; "அம்மா, அப்படியானால் அந்த அக்காளை நான் ஒருமுறையேனும் போய்ப் பார்க்க ஆசைப்படுகிறேன்; என்ன செய்யலாம் சொல்லுங்கள் அம்மா" என்று ஆவலுடன் கேட்டாள்; "மகளே, அந்தப் பிள்ளை யிடம் ஒருமுறையேனும் உன்னைக் கூட்டிக் கொண்டு போகவேண்டுமென்று நானே அவர்கள் வீட்டிலிருந்து மீண்டு வரும்போது நினைத்தேன்; நல்லாரைக் காண்பதுவும் நன்றே ..... என்று மகளே நீ தானே ஒரு பாட்டுப் படிக்கக் கேட்டிருக்கிறேன்; இப்படிப்பட்ட நல்லவர்களைக் காணுவதும் அவர்களுடைய சொல்லைக் கேட்டு நடப்பதுவும், அவர்களோடு பற்றாயிருப்பதுவும் நல்லதென்பதுதான் என் நம்பிக்கை; ஆனால், எப்படி அவர்களிடம் உன்னைக் கூட்டிக்கொண்டு போவதென்பதையிட்டுத்தான் யோசிக்கிறேன்; மகளே, உன் அப்பா போனபின்பு நானே எங்கேனும் அருமையாகத்தானே போய்வரு கிறேன்; அப்படியிருக்க, உன்னை அங்கு இங்கு கூட்டிக் கொண்டு போனால், பொல்லாத உலகம் இல்லாத வசை சொல்லும்; இதற்குத்தான் பயப்படுகிறேன்" என்று சிவகாமியம்மை கவலையோடு சொன்னாள்; "அம்மா, நான் பள்ளிக்கூடத்துக்கு வண்டியிலே போய்வந்தவள்தானே ஆனதால் இப்பொழுதும் அந்த வண்டியை ஒழுங்குசெய்து இந்த நிலவுப்பக்கம் முடிவதற்கிடையிற் பொழுதுபட்டபின் ஒருமுறை அங்கே போய் அந்த அக்காளையும் ஆச்சியையுங் கண்டுகொண்டு வரலாமென்றெண்ணுகிறேன்" என்று இதமாகக் கேட்டாள் பாக்கியலட்சுமி; "அது நல்ல யோசனைதான் மகளே" என்றாள் தாய். பூரணைத் தினத்திற்கு அடுத்தநாள் பொழுது பட்டபின் அப்படியே வண்டி ஒழுங்கு செய்து கொண்டு தாயும் மகளும் கண்ணகியம்மை வீட்டிற்குப் போனார்கள்; அங்கு அவர்கள் போகும்போது மணி ஏழு வரையில் ஆய்விட்டது; கண்ணகியம்மையாக, மகள் சிவபாக்கியமாக இவர்கள் அன்று அங்கே வருவார்களென எள்ளளவும் எதிர்பார்த்திருந்திலர். அன்புடையாரைக் காத்திராவண்ணம் காண நேர்ந்தால், அதனால் வரும் மகிழ்ச்சியதிகமென்று அநுபவமுடையோர் சொல்லுவரல்லவா? தாயும் மகளும் தங்கள் வீட்டிற்கு வருதலை அந்த நேரத்திலே கண்ட தாயும் மகளும் பெரும் சந்தோஷமடைந்தார்கள்; "வாருங்கள், வாருங்கள்; இப்படி வந்திருங்கள்" என்று கண்ணகியம்மை சொல்லி உபசரிப்பதற்கிடையில் சிவபாக்கியம், "அம்மாவும் அம்மாவும் பேசிக்கெண்டிருக்கட்டும், தங்கைச்சி நீங்கள் என்னுடன் வாருங்க" ளென்று பாக்கியலட்சுமியைத் தன் அறைக்குள் அன்புடன் அழைத்துக்கொண்டு போய் அங்குள்ள "ஸோபா" வில் இருக்கச்செய்து தானும் பக்கலில் இருந்து கொண்டு பாதாதிகேசம் வரையில் பாக்கியலட்சுமியை அன்புடன் பார்த்தாள்; அவளுடைய முதுகை தன் மிருதுவான கரத்தால் மெல்லத் தடவினாள்; பாக்கியலட்சுமி ஒன்றும் பேசாமற் சற்றுநேரம் தலைகுனிந்த வண்ணமிருத்தலும், "தங்காய், நீர் ஓர் உபாத்தியாயராயிருக்கிறீரே; இப்படி இங்கே வந்து என்னுடன் ஒன்றும் பேசாமல் தலைகுனிந்தவண்ணம் இருக்கும் நீர் பிள்ளைகளைப் படிப்பிப்பதெப்படி" என்று முகத்திலே புன்னகையரும்பக் கேட்டுக்கொண்டு அவளுடைய அழகிய முகத்தைத் தன் மலர் போன்ற கையினால் தடவுதலும், பாக்கியலட்சுமி அவளை அன்பு பெருகப்பார்த்து "அக்கா, நான் சிறுபிள்ளைகளுக்கு ஒரு உபாத்தியாயரா யிருக்கலாமேயொழிய உங்களைப் போன்ற அறிவாலும் அன்பாலும் குணத்தாலும் மேம்பட்டவர்கள் முன்னிலையில் நானும் ஒரு மாணவி போலவே என்னை மதிக்கலானேன்." என்று அன்புததும்ப இனிது கூறினாள்.

"பொன்னின் குடமுடைத்தாற் பொன்னாகும்"

"தங்கைச்சி, உங்கள் தாயாரையும் அவருடைய பெருந்தன்மையையும் ஊடாட்டத்தையும் அன்று நாங்கள் அவதானித்தபோதே நீரும் ஒரு அருமையான தங்கைச்சியாக இருப்பீரென்று என் மனத்தில் அயிர்த்துக் கொண்டேன்" என்று சிவபாக்கியம் இதமுறச் சொன்னாள்; கேட்ட பாக்கியலட்சுமியும் மகிழ்ச்சியடைந்தாள்; பின்னர் இருவரும் பரஸ்பரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு பாராட்டித் தங்களளவில் அளவளாவிப் பேசினார்கள். அப்படிப் பேசியபின்னர் அவ்விரு கன்னியரும் தங்கள் தாய்மார் இருக்கின்ற இடத்திற்கு மீண்டுவந்து அவர்களோடு கலந்து பேசினர்; பேசிக்கொண்டு, சிவகாமியம்மையும் மகளும், நேரம் இரவு 9 மணிக்கு மேற்பட்டு விட்டமையினால் தாங்கள் தங்கள் வீட்டிற்கு மீண்டு போகவேண்டுமெனத் தெரிவித்தலும் சிவபாக்கியங் கண்கலங்கினாள்; "தங்கைச்சி, ஏன் கலங்குகின்றீர், எங்கள் வீடு அதிக தூரமல்ல; நீர் விரும்பியபோது தெரிவித்தால் நான் வருவேன், கவலைப்படவேண்டாம், எங்கள் மகளும் இனிமேல் உம்மைச் பல நாட்களுக்குக் காணாமல் இருக்கமாட்டாள்" என்று ஒருவாறு தேறுதல்சொன்னாள் "என்ன நூதனம், நீங்கள் இரண்டுபேரும் முதன்முதல் இன்றுதானே ஒருவரையொருவர் சந்தித்தீர்கள்; இப்பொழுது உங்கள் நிலைமையைப் பார்தால், இருவருஞ் சின்னவயசு தொட்டுப் பழகிவந்த பிள்ளைகள்போற் காணப்படுகின்றீர்களே" என்றாள் கண்ணகியம்மாள்; "அம்மா! நல்லவர் சினேகம் கண்டமாத்திரத்திலே கூடும்; கூடினாலும் பின் இடையில் நீங்கப்போவதில்லை; இடையில் ஏதும் வேற்றுமை வந்தாலும், அவ்வேற்றுமை பின்னர் மாறி ஒற்றுமையாகும்; இதனாலேதான் அம்மா பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகும் என்று பாடப்பட்டிருக்கிறது; ஆனதால் இந்தத் தங்கைச்சியை இனிமேல் நாங்கள் பிரிந்திருப்பது கஷ்டம்" என்று தாயிடஞ் சொல்ல, தாயும் "மகளே, நீ சொல்வது நிசம்; இதனாலேதான் பெண்பிள்ளைகளும் நல்லாய்ப் படித்திருக்க வேண்டுமென்று நான் சொல்லிவருவது" என்றாள்; இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த பாக்கியலட்சுமி "அக்கா கவலைப்படாதீர்கள்; இனிமேல் நான் உங்களோடு தானே பயணம் பண்ணுவேன்; அதன்பின்னும் உங்களோடுதானே சிலகாலமேனும் அந்த நாட்டிலே இருப்பேன்; உங்களை விட்டுப்பிரிய என்னாலும் முடியாது, அருமையான அக்கா" என்று சொல்லி, அவளும் தாயும், அவ்விருவரிடத்தும் விரைவில் மீண்டு வருவதாகச் சொல்லி விடைபெற்றுக்கொண்டு தம் வீட்டிற்கு மீண்டனர்.

* * *

உலகம் பலவிதம்: 1947 மே 16
(முற்றொடர் - 15)

"பல்லுப் போகச் சொல்லும் போகும்"

இரண்டு சம்பந்தம் பேசியவிடத்து அந்த இரண்டுங் கைகூடாமையினால் புரோகிதர் விஜயரத்தினத்திற்கு இனிமேல் தாம் பெண் பேசப்போவதில்லை யென்று நிச்சயித்துக் கொண்டு, விஜயரத்தினம் அவரைச் சந்தித்தவிடத்திலே அதைப்பற்றி ஏதுங்கேட்டால் மாத்திரம் "தம்பி, அல்லும் பகலும் உம்முடைய கருமமாகத்தான் அலைந்து திரிகிறோம்; ஆனால் என்ன செய்வது; ஒன்றும் சந்திக்கவில்லையே" என்று விஜயரத்தினத்திற்குச் சமாதானஞ் சொல்லிவிடுவார்; விஜயரத்தினம் தமக்குச் சம்பந்தம் பேசும் விஷயத்திலே அலுப்படைந்து விட்டாரென்றெண்ணி, தனக்கு எங்கேனும் கல்யாணம் பேசுவிக்கலாமென நினைத்துப் பழைய முருகரம்மானைப் பற்றிக் கேள்விப்பட்டு அவருடைய வீடு தேடிப்போய், அவருக்கு விஷயத்தை மெல்லச் சொன்னான்; கேட்ட முருகரம்மான் தம் "பொக்கை" வாயாற் பெருஞ் சிரிப்புச் சிரித்து; "தம்பீ, அந்தக் காலம்போய் விட்டது; முந்திய முருகனல்ல தம்பி, நான் இப்பொழுது எனக்குக் கண்களிருந்தும் காணமாட்டா; காதுகளுண்டு கேட்கா; பல்லும் போகச் சொல்லும்போகும்" என்ற விதமாக, நான் இப்பொழுது எவரோடும் ஏதும் பேசினாலும், அவர்களுக்குப் புலப்படா; தலைநடுக்கம்; நெஞ்சிற் படபடப்பு; எழுந்தால் நின்றால் நடந்தாற் கிறுதி; எந்தநேரமும் ஒரு தடுமாற்றம்; காடு வா, வீடு போ என்ற நிலையில் வந்து விட்டேன்; அந்தக்காலத்திலே நான் பேசாத சம்பந்தமும், அப்படிப்பேசினாற் கைகூடாத கலியாணமும் பெற்றுப் பெருகி வளராத குடும்பமுமில்லையே தம்பி; நான் பேசி நிறைவேற்றிவைத்த கல்யாணம் நிறைவேறிய தம்பதிகளின் பேரப்பிள்ளை பீட்டப் பிள்ளைகளையுங் கண்டுவிட்டேன். இனி எனக்கென்ன குறை; ஆண்டவன் என்னைக்கொண்டு போகிறானில்லையே என்ற ஒரு குறைதான்" என்று பரக்கப் பேசினார்; "அம்மான், நான் இந்த நாட்டிற் பலவருடம் இல்லாமல் மலாய்நாட்டிற் போயிருந்து போன ஆண்டு முடிவிலேதான் இங்கு வந்துசேர்ந்தேன்...." என்பதற்கிடையில், "ஏன் தம்பி, உம்முடைய முந்திய தாரம் மோசம் போய்விட்டதோ" என்று முருகர் வினாவ, விஜயரத்தினம் "ஓம் அம்மான்" என்று சொல்லிச் சலிப்படைந்தான்.

"அது தெரியும்"

"தம்பி, நீரும் என் வீடுதேடி அங்கிருந்து இங்கு வந்துவிட்டீர்; என்னால் ஆகாவிட்டாலும், இதற்கு ஏற்ற உபாயத்தை உமக்குச் சொல்லவேண்டியது என் கடமை; எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவன், முருகேசனென்றொருவன் சமீபத்திலே யிருக்கிறான்; எனக்குப்பிறகு அவன்தான் இந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறான்; ஆனாலும் என்னைப்போல் அவன் அவ்வளவு அநுகூலமானவனல்லன்; அல்லாமலும் சற்றுப் பண ஆசை பிடித்தவன்; மணம் பேசுவதோ, பணம் வாங்குவதோ என்ற கொள்கையுடையவன்; ஆனாலும் என் சொல்லை ஒரு அளவிற்குத் தட்டமாட்டான்; அவனிடம் போய் விஷயத்தைச் சொல்லி, உம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்தான் அவனிடம் போகச்சொன்ன தென்பதையும் தெரிவித்தால், அவன் சிரமத்தைப் பாராமல் உமக்கு ஆகவேண்டிய செய்து வைப்பான்" என்று முருகேசனுடைய வீட்டுக் குறிப்பையுஞ் சொல்லி முருகர் விஜயரத்தினத் திற்கு விடைகொடுத்தனுப்பினார்; விஜயரத்தினம் முருகேசு வீட்டிற்குப் போதலும், முருகேசு அவனை வரவேற்று உபசரித்து அளவளாய்ப் பேசி, "வந்த காரியமென்னவோ" என்று வினவுதலும் விஜயரத்தினம் விஷயத்தை மெல்ல வெளியிட்டான்; தனக்கு மணம் பேச வேண்டிய பெண்ணின் இலச்சணங்களையும் தொகுத்துச் சொல்லி, பெண்ணைத் தான் ஒருமுறை நேரிற் பார்க்கவைத்தால் நல்லதென்றும் தெரிவித்தான்; விஜயரத்தினம் சொல்பவற்றிற் கெல்லாம் முருகேசனும் "அப்படியே ஆகட்டும்" என்றான்; "நிறைவேற்றி வைத்தால் உம்மைச் சும்மா விடமாட்டேன்" என்று விஜயரத்தினஞ் சொல்ல, "அது தெரியும்" என்றான் முருகேசு; பின்னரும் ஆக வேண்டிய சில விஷயங்களைப் பேசிக்கொண்டு அடுத்தவாரம் தான் அங்கு வருவதாக விஜயரத்தினஞ் சொல்லுதலும் "இல்லை, ஐயா நானே உங்கள் வீட்டிற்கு வருகிற வெள்ளிக்கிழமை தவறாமல் வருவேன்" என்று முருகேசன் சொல்ல, விஜயரத்தினம் அவனிடம் விடை பெற்றுக்கொண்டு சிறிது மகிழ்ச்சியுடையனாய்த் தன் வீட்டிற்கு மீண்டான்.

பரிமளம்

பரிமளத்தின் வயது இப்பொழுது பதினாறு வரையிலாகும்; அவளுடைய பெற்றார் வறுமையோடு கூடியவர்களாயினும் வறுமையிற் செம்மையாகவே வாழ்ந்து வருவாராயினர்; பெற்றாருக்குப் பரிமளம் ஒரேயொரு மகள்; அவளுடைய தகப்பன் பெயர் வேலாயுதன்; தாயின் பெயர் வேதநாயகி; அவர்கள் சைவ வேளாளர் மரபினைச் சேர்ந்தவர்கள்; வேலாயுதனுக்குத் தமிழ்க் கல்வியேயன்றி ஆங்கில மொழிக் கல்வி அதிகமில்லையினால் அவன் தன் கிராமத்திற்கு இரண்டுமைல் தூரமுள்ள பட்டினத்திலே கடைவீதியிலுள்ள ஒரு புடைவைக் கடையிற் கணக்கப்பிள்ளையாகவிருந்து விசுவாசமாகக் கடமைபார்த்து அதனாற் பெறும் வேதனத்தைக் கொண்டு மரியாதையோடு தன் குடும்பத்தை ஒருவாறு நடத்தி வந்தான்; வேலாயுதனும் மனைவியும் தெய்வபத்தி சைவ ஒழுக்கம் முதலியன பூண்டவர்கள்; வேதநாயகியும் கொண்டான் குறிப்பறிவாள் பெண் டாட்டி" என்ற வாக்கியத்திற்கியைய இல்லற த்தை நடத்தி வருபவள்; ஆண்குழந்தை இல்லாத பெற்றார் அந்தப் பெண் குழந்தைக்காயினும் நல்ல முறையிற் கல்வியூட்ட வேண்டுமென ஆசைப்பட்டு; அயலிலேயுள்ள ஒரு சைவத் தமிழ்ப்பள்ளிக்கூடத்தில் தங்கள் அருமை மகளைக் கொண்டுபோய்ச் சேர்த்துப் படிக்க வைத்தார்கள்; பரிமளம் இயற்கையில் விவேகி; கட்டழகி; இனியமுறையிற் பேசும் வாக்குவன்மை யுடையவள்; வசீகரமான முகமுடையவள்; வகுப்பில் அவள் நிபுணையாதலின் ஆண்டு தோறும் ஒன்றுவிட்டொரு வகுப்பு மேலேறி வந்தாள்; அந்த வித்தியாசாலையிலே படிக்கும் பிள்ளைகள் தங்களுக்கு நேர்ந்த ஐயந்திரிபுகளைப் பெரும் பான்மையும் பரிமளத்திடங் கேட்டுத்தெளிந்து வருவர்; இதனால் அவ்வித்தியாசாலையிற் படிக்கும் பிள்ளைகளெல்லாம் அவளிடத்தில் அன்பும் மதிப்பும் பாராட்டி வருவாராயினார்; பிள்ளைகள் மாத்திரமல்லர் அப் பள்ளிக்கூடத்திற் படிப்பிக்கும் ஆண்பெண் உபாத்தியாயர்களும் அவளிடத்தில் அன்புகாட்டி ஊடாடினார்கள்; பரிமளத்தின் இனிய குணங்களும் இதமான ஊடாட்டமும் பேரழகும் அவள் வகுப்பில் ஏறி வரவர, அவைகளும் ஏறி வரலாயின; பெற்றாரும் அவளுடைய திறமைகளைக்கண்டு, அவளிடத்தில் எல்லைகடந்த ஆர்வம் பாராட்டி வந்தனர், தாயாக, தகப்பனாக வீட்டிலே அவள் குனிந்து ஒரு துரும்பைத்தானும் எடுக்கவிடாமல் அவளுக்காக வேண்டிய வேலைகளனைத்தையும் தாங்களே செய்து வந்தனர்; வறுமையோடு கூடியவர்களெனினும், அவளைச் செல்வர் வீட்டுப் பிள்ளையைப்போல் அருமை பெருமை பாராட்டி வளர்த்து வரலாயினர். பரிமளம் பள்ளிக்கூடத்திற் சேர்ந்து படித்து ஐந்துவருட காலத்தில் எட்டாம் வகுப்பிலும் திறமையுடன் சித்தியடைந்தாள்; அதற்குமேல் அவள் படிக்கும் பள்ளிக்கூடத்தில் வகுப்பில்லை அதனாற் சிலகாலம் அவள் வீட்டிலே சும்மாவிருக்கவேண்டி நேர்ந்தது; விவேகத்தோடு கூடிய தங்கள் பிள்ளை அவ்வளவு காலமும் படித்துவிட்டு, அதற்குமேற் படித்தற்குப் பணமில்லாமையாற் சும்மாவிருக்கின்றாளேயென்று பெற்றார் கவலையுற்றனர். தன்னுடன் கற்ற பிள்ளைகளெல்லாரும் ஆங்கில வித்தியாசாலையில் சேர்ந்து ஆங்கிலமும் தமிழுங் கற்றுவரத் தான்மாத்திரம் சும்மா வீட்டிலே இருப்பதையிட்டு அவளுந் துயர மடைந்தாள். இப்படியிருக்கும்போது பரிமளம் மங்கைப் பருவமடைந்தாள்.

எதற்கும் மனம்தானே காரணம்

தான் ஆங்கிலமும் தமிழும் சங்கீதமும் படிக்க வேண்டுமென்ற ஆசை பரிமளத்தின் மனதிற் குடிகொண்டிருந்தது. அன்றியும் தரித்திரத்தோடு கூடிய தாய்தந்தையார்க்குத், தான் படித்தவளானாலும் பெரும் பாரமாயிருப்பதையிட்டும், தான் படித்த தமிழ்க் கல்வியைக்கொண்டு சிறுபிள்ளைகள் யாருக்காயினும் பாடஞ் சொல்லிக்கொடுத்து ஏதும் வேதனம் பெற்றுத் தன் பெற்றார்க்கு உதவி செய்ய வேண்டுமென்ற சிந்தனையும் அவளுள்ளத்திற் பிறந்தது; இந்த நோக்கத்தை அவள் தன் பெற்றோருக்கு வெளியிட்டாள்; அதனையறிந்த தகப்பன் செய்த முயற்சியினால், அயலிலுள்ள செல்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுப் பெண்பிள்ளைகள் மூவர் அவளிடத்திலே நாள் தோறும் மாலைவேளையில் வந்து தாங்கள் பள்ளிக்கூடத்திற் படிக்கும் பாடங்களை அன்றன்று கேட்டு ஆயத்தஞ் செய்துகொண்டு போவாராயினர். பரிமளம் தங்கள் பிள்ளைகளுக்கு ஆர்வத்தோடு பாடஞ் சொல்லிக்கொடுக்கிறா ளென்பதையறிந்து அவளிடத்திலே பாடங்கேட்டு வரும் பிள்ளைகளின் பெற்றார்களும் அவளுக்குப் போதிய வேதனங் கொடுத்து வந்தார்கள்; இடையிடையே அவளுடைய உடைக்காகிய துணிகளையும் தங்கள் பிள்ளைகள்மூலம் அவளுக்குச் சந்மானமாக அனுப்பிவைப்பதுண்டு; இவைகளையெல்லாம் அவதானித்துப் பரிமளத்தின் பெற்றோரும் மகிழ்ச்சியுற்றனர்; இங்ஙனமாக, ஒருநாள் அதிகாலையில் வேலாயுதன் தன் மனைவியும் அங்குநிற்கும் நேரத்திலே தங்கள் மகளை முன்னிலையிற்கூப்பிட்டு, "மகளே நீ ஆங்கிலமும் சங்கீதமும் படிக்க ஆசைப்படு கின்றாய்; இந்தக் காலத்திலே ஆங்கிலத்தை எழுத வாசிக்க, சிறிது பேசவாயினுங் கற்றிருக்க வேண்டும்; சங்கீதமும் ஒரு அளவிற்கு அறிந்திருப்பது நல்லது; நீ பிள்ளைகளுக்குப் பாடஞ் சொல்லிப்பெற்ற சம்பளத்தை நான் செலவிடவில்லை; சேர்த்து வைத்திருக்கிறேன்; ஆனதினால் அதனைக்கொண்டு உனக்கு வேண்டிய உடையையும் புத்தகங்களையும் இப்போதைக்கு வாங்கித் தருகின்றேன்; நீ சமீபத்திலே யுள்ளதாகிய மிஷன் விடுதிப் பாடசாலையிற் சேர்ந்து ஆங்கிலம் படிக்கலாம்; சங்கீதமும் அங்கே ஒரு அளவிற்குப் பயிற்றப் படுகின்றதாம், அதனையும் பயின்றுகொள்ளலாம்; ஒரு நல்லநாள் பார்த்து அந்தப் பள்ளிக்கூடத்திற் சேர்த்து விடுகிறேன்; முன்னரைக் காட்டிலும் இப்பொழுது எங்கள் கடை முதலாளி கூடிய வேதனம் தருகிறார்; ஒருவாறு பார்த்துக் கொள்ளுவோம்; மகளே, இப்படி நான் ஒழுங்கு செய்வது உனக்குஞ் சம்மதந்தானே" என்று அன்புடன் கேட்டான். "சம்மதந்தான், அப்பா, ஆனாற் சைவப்பள்ளிக்கூடத்திலே இவ்வளவு காலமும் சைவமுறைப்படி படித்தநான், இனிமேல் வேறுமார்க்கப் பள்ளிக்கூடத்திலே சேர்ந்து படித்தல் ஒத்துப்போகா தென்பதையிட்டுத்தான் யோசிக்கிறேன்" என்றாள். "மகளே, அதைப் பற்றி நீ யோசிக்கவேண்டாம், சமய விஷயத்திலும் ஒழுக்கத்திலும் நீ பிடிவாதமாகயிருந்தால் எவரேனும் உன்னை யென்ன செய்ய முடியும்; எதற்கும் மனந்தானே காரணம்" என்று தகப்பனார் சமாதானஞ் சொல்ல மகளுஞ் சம்மதித்தாள்.

எறும்பூரக் கல்தேயும்

சிலநாட் சென்றபின் ஒரு நல்ல நாளில் வேலாயுதன் தன் மகளை, குறித்த விடுதிக் கலாசாலை நிபந்தனைக்கமைந்த உடை முதலிய உபகரணங்களுடன் கொண்டுபோய் அக்கலாசாலை விடுதிச்சாலையிலேயிருந்து கல்விபயிலும்படி சேர்த்துவிட்டான்; பரிமளமும் அங்கே அவதானத்தோடும் சிரமத்தோடும் கல்விகற்று வந்தாள். அவள் விவேகியானமை யினாலும், தமிழ் வித்தியாசாலையிற் கல்வி பயிலுங் காலத்திலேயே ஆங்கில ஆரம்பக் கல்வியைப் பயின்று வந்தமையாலும் ஒருவாறு ஆங்கில வகுப்பிலும் காலகதியில் சித்தியெய்தி வந்தாள்; அவளுடைய கல்வித்திறமையையும் வாக்குவன்மையையும் பேரழகையும் அவதானித்து வந்த அக்கலாசாலையதிகாரிகளும் ஆசிரியருட் சிலரும் அவளையும் தம் சமயத்திற்கு இழுக்கலாமென முயற்சி செய்தனர். பள்ளிக்கூட மாசவேதனங் கொடுக்கவேண்டியதில்லையெனவும், இலவசமாகத் தங்கள் பள்ளிக்கூடத்திலே கல்வி பயிலலாமெனவும் பரிமளத் திற்குச் சொல்லி அப்படியே செய்து வந்தார்கள்; மேலும் அக்கலாசாலை யதிகாரிகள் அவளுக்கு நவீன உடை முதலியவற்றை உபகாரமாக உதவியும், அப்பள்ளிக்கூடத்தில் நடக்கும் கலாவிருத்திச் சங்கங்கள் கூட்டங்களில் அவளைக் காரியதரிசியாகவும், சில வேளைகளிற் சபைத்தலைவியாகவும் நிர்வகித் துக் கருமமாற்றச் செய்தும் வந்தனர்; தங்கள் நவீன உடைகளை யணியவும், அவளுடைய கண்பார்வை பூரணமாக இருக்கவும் அவளை மூக்குக்கண்ணாடி ட்டிக்கொள்ளவும், கால் மேசு சப்பாத்து "புஸர்" மா சுகந்தாதி அணிந்து கொள்ளவுஞ் செய்தனர்; இந்த விபரீத செய்கைகளையெல்லாம் பரிமளம் ஆரம்பத்திலே சற்று வெறுப்போடு செய்து வந்தாளெனினும் காலகதியில் "எறும்பூரக் கல்தேயும்" என்ற பிரகாரம் சகவாசத்தில் விருப்பத்தோடு செய்யத் தலைப்பட்டாள்.

* * *

உலகம் பலவிதம்: 1947 மே 23 (முற்றொடர் - 16)

"நிலையிற் பிரியேல்"

பரிமளம் சகவாசத்தினாற் சில நவநாகரிகங்களைக் கைக்கொண்டாளெனினும் சமய விஷயத்தில் மாத்திரம் பிடிவாதமாக நின்றாள். அவள் ஆங்கில எட்டாம் வகுப்பிற் சித்தியடைந்தவுடன், அவளை ஒரு ஆங்கில உபாத்தியாயினியாகத் தங்கள் வித்தியாசாலையில் நியமிக்கலாமெனவும், அப்படியிருந்து படிப்பித்துக் கொண்டு மேல் வகுப்பிற்காகிய கல்வியைப் பயில்வதற்குத் தாங்கள் உதவிசெய்ய முடியுமெனவும், அங்ஙனஞ் செய்யும் பட்சத்தில் அவள் சைவத்தை விடுத்துக் கிறீஸ்துவமார்க்கத்தை அநுசரிக்க வேண்டு மெனவும் அவ்வித்தியாசாலையின் அதிகாரிகள் சொன்னார்கள்; பரிமளம் அவர்கள் கேள்விகளுள் முந்திய இரண்டிற்கும் தாம் சம்மதிக்க முடியுமென்றும் மூன்றாவதாகிய சமயம் மாறுதல் விஷயத்திலே தன் பெற்றாரின் சம்மதத்தைக் கேட்கவேண்டு மென்றும் பதில் சொன்னாள். அதனாற் பாடசாலை யதிகாரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வெள்ளிக்கிழமை பிற்பகல் பரிமளத்தை அவள் வீட்டிற்குப்போய் அந்த விஷயத்தைப் பெற்றாரிடஞ் சொல்லி அவர்கள் சம்மதத்தையும் பெற்று வரும்படி தெரிவிக்க, பரிமளம் அப்படியே அன்று தங்கள் வீட்டிற்கு மீண்டுவந்தாள். அவள் வரவைக்கண்டு தாயுந் தந்தையும் மகிழ்ச்சி யடைந்தனர்; மகளுடைய கல்வி விருத்தியைப் பற்றியும்; உணவு விஷயத்தைப்பற்றியும் உசாவினார்கள்; அந்த நேரத்தில் வித்தியாசாலை யதிகாரிகள் தன்னை அன்று அங்கு அனுப்பியதற்கான ஏதுக்களை யெல்லாம் எடுத்துச் சொன்னாள்; கேட்ட தாயாகிய வேதநாயகி "அதனாலென்ன, எதற்கும் மனந்தானே காரணம், படிப்பிலே தேறுவதற்காக அவர்களுக்குப் புறத்தே அவர்களுடைய சமயத்தைக் கைக்கொண்டு நடப்பது போற் காட்டிக்கொண்டு, அகத்திலே சைவசமயப்படி நடந்தாலென்ன" என்றாள்; மனைவி அப்படிச் சொல்லக்கேட்ட வேலாயுதன் "போ, போ, பைத்தியகாரி, வீண் வார்த்தை பேசாதே, அகத்தொன்று புறத்தொன்றாக நடக்கும்படியா பிள்ளைக்குப் புத்தி சொல்லுகிறாய்" ஒன்றிற் சொந்தச் சமயமென்றிருக்க வேண்டும், இல்லையேல் அந்தச்சமயமென்று நடக்கவேண்டும்; இரண்டிலொன்று மின்றி இரண்டகத்தோடு நடக்கத் தலைப்பட்டால் பின் வாழ்க்கை முழு வதிலும் எல்லாவிஷயத்திலும் இரண்டகமாகத் தான் நடக்கவேண்டி நேரும்; எங்கள் மார்க்கத்தில் என்ன பிழை கண்டாய்; அந்நிய மார்க்கத்திலே என்ன உண்மை கண்டாய்; வயிற்றுப்பிழைப்புக்காக மார்க்கத்தைக் கைவிடமுடியுமா? "நிலையிற் பிரியேல்" என்று ஔவையார் சொன்னது சும்மாவா?" என்று மனைவியைக் கடிந்துவிட்டு வேலாயுதன் தங்கள் மகளைப் பார்த்து "மகளே, நீ அங்கே படித்த படிப்புப் போதும்; இன்னுஞ் சிலகாலம் நீ அங்கிருந்து படித்தால், வேட்டுவனெடுத்த மென்புழுப்போல" அவர்கள் உன்னைத் தங்கள் வசமாக்கிவிடுவர்; ஆனதால், அவர்களுடைய பள்ளிக்கூடத்தை மெல்லவிட்டு வீட்டிலே வந்திருப்பதுதான் செய்யத்தக்கது" என்று கடுகடுத்துச் சொன்னான்; "அப்பா, உங்கள் சொற்படி நடப்பதுதான் என் கடமை; அல்லாமலும் வேற்று மதத்திற்புக எனக்கும் விருப்பமில்லை ஆனதனால், அடுத்து வரும் விடுமுறைநாட் காலத்தில் நான் அப்படியே செய்துவிடுவேன்; நிற்க, "வேட்டுவனெடுத்த மென்புழுப்போல் என்றீர்களே அது என்ன அப்பா? எனக்கு விளங்கவில்லை" என்று கேட்டாள் பரிமளம்; "வேட்டுவனென்பது வேட்டை வாளி யென்னுஞ் செந்து, அது வேற்றுப் புழுவை யெடுத்துத் தன்னிடத்திற் கொண்டுபோய் வைத்துவளர்த்துப் பின் தன் வடிவமாக்கிவிடு மென்று நூல்களிற் சொல்லப்பட்டிருக்கிறது; அதுபோல, அவர்கள் உன்னையுந் தம்வசமாக்கி விடுவார்களென்பதற்கு உதாரணமாகச் சொன்னேன்" என்று விளங்கப்படுத்தினான் வேலாயுதன்; பரிமளம் வெள்ளிக்கிழமை இரவும், சனி ஞாயிற்றுக்கிழமைகளிலும் வீட்டில் தங்கியிருந்து திங்கட்கிழமை அதிகாலையில், புறப்பட்டு வித்தியாசாலை போய்ச் சேர்ந்தாள்; அங்கே பாடசாலை யதிகாரிகள் கேட்டபோது, தன்பெற்றாருக்கு அக்கருமஞ் சம்மதமல்ல என்பதையும் உள்ளபடி தெரிவித்துவிட்டாள்; அதனால் அவர்கள் அவளிடத்து வைத்த அபிமானங் குன்றப்பெற்றனர்; அடுத்த விடுமுறை நாள் தொடங்குதலும், பரிமளம் தனக்குரிய பொருள் பண்டங்களையெல்லாம் எடுத்துக் கொண்டு வித்தியாசாலை அதிகாரிகள் ஆசிரியர்கள் சகபாடிகளாகிய எல்லார்க்குஞ் சொல்லி விடைபெற்றுத் தங்கள் வீட்டிற்கு வந்துசேர்ந்தாள்.

எல்லாம் விதியென்று சொல்லிவிட்டு சும்மாவிருக்கலாமா?

பரிமளம் வீட்டிற்குவந்து சிலநாட் சும்மாவிருந்தாள்; தன் படிப்பு விருத்திக்கு இடையூறு வந்ததேயென்பதையிட்டுக் கவலைப்பட்டாளெனினும், மார்க்கம் மாறுவது அவளுக்கும் வெறுப்பாகவேயிருந்தது; இப்படியிருக்க, அவள் தந்தையாகிய வேலாயுதன், அயலிலுள்ள செல்வர் வீட்டுப் பெண் பிள்ளைகள் சிலர் தங்கள் மகளிடம் வந்து பாடங் கேட்கவும், மாசந்தோறும் வேதனங் கொடுக்கவும் ஒழுங்கு செய்தான்; இப்படிச் சில மாசங்கள் கழிந்தன; இங்ஙனம் இருக்கும்போதே, முருகேசன் விஜயரத்தினத்திற்குப் பெண் பேசும் பொருட்டு வேலாயுதன் வீட்டிற்குப் போனான்; முருகேசன் வேலாயுதனுக்கு அறிமுகமானவன்; பரிமளத்தைப் பற்றியும் நன்கு அறிந்தவன்; பொது வாக, கல்யாணத் தரகர்களாயுள்ளவர்கள் தம்மூரில் மாத்திரமல்ல வேற்றூர்களில் வசிக்கும் பிரம சாரிகளான வாலிபர்கள், தாரமிழந்தவர்கள், வயசு ஐம்பது அறுபது வரையிலாகியும் முந்திய தாரத்துப் பிள்ளைகளுடையவர்களாகியும் சாகமுந்தி இன்னொரு தாரங் கொள்ளவேண்டுமென்ற பெண்ணாசைகொண்ட அமங்கலரெனினு மிவர்களைப்பற்றியும், கன்னியர்கள், அவர்களுள்ளும் ஒவ்வோர் காரணம்பற்றிக் கரையேறா மலிருக்கும் மங்கையர்கள், தமக்குரிய கணவன் இறந்துபோக அவனுக்குப் பெற்ற பிள்ளைகள் மூன்று நாலு இருப்ப இன்னமுமொருமுறை கல்யாணம் முடிக்கவேண்டுமென்ற ஆணாசை கொண்ட அரிவையர்கள்; கொண்ட கணவனுடன் ஒற்றுமையாக வாழமாட்டாமற் பிணக்குப்பட்டு நீதித்தலத்திற் போய் அவனுக்கு மாறாக வியாச்சியந் தொடர்ந்து வழக்காடிக் கல்யாணப் பதிவையும் தவிர்ப்பித்தபின், வேறு எவரையும் மணந்துகொண்டு வாழவேண்டுமென்ற நோக்கங்கொண்ட வஞ்சியர்களாகிய இவர்களைப் பற்றியும் நன்கு விசாரித்து அறிந்திருப்பார்கள். இப்படிக் கலியாணத் தரகர்கள் அறிந்திருப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடைய பிழைப்பின் நிமித்தமாகும்; முருகேசன் வேலாயுதனைக்கண்டு சுகம் விசாரித்தபின், பல விஷயங்களை அவனோடு கலந்து பேசிவிட்டு பின் அவனைப்பார்த்து "அண்ணே, எல்லாஞ் சரி, தங்கைச்சியை நெடுக இப்படியே வைத்துக் கொண்டிருப்பது முறையோ, பல பிள்ளைகளென்றாலுங் காரியமில்லை; ஒரேயொரு மகள்; அந்த மகளுக்கு ஒரு சம்பந்தத்தைப் பேசி ஒழுங்குபண்ணிச் செய்துவைத்துச் சீர்சிறப்பை நீங்கள் பார்க்க வேண்டாமா? எல்லாம் விதிதான் என்று சொல்லிவிட்டுச் சும்மா இருந்துவிட்டாற் காரியங்கை கூடுமா? விளக்குத் தகளி நிறைய எண்ணெயி ருந்தாலும், அதிலே திரியிட்டிருந்தாலும், அந்தத் தீபத்தை ஒருவர் ஏற்றினால்தானே அண்ணே, அது சுடர்விட்டெரியும்; இது உங்களுக்குத் தெரியாத கருமமா? நான் சொல்லவேண்டிய தில்லையே....." என்று வாக்குவன்மையோடு வார்த்தையாடினான்; இப்படியாக அவன் பேசிக் கொண்டிருக்கும்போது வேலாயுதன் தன் மனைவியைக்கூப்பிட, அவளும் அங்கேவந்து சேர்ந்தாள்; முருகேசன் பேசியவிஷயத்தை வேலாயுதன் தன் மனைவிக்குச் சுருக்கமாகச் சொன்னான்.

இயன்றதைத்தானே கொடுக்கமுடியும்!

வந்த மனைவியும், "அவர் சொல்லுவது நியாயந்தானே; சும்மா இருந்தால் ஏதும் ஆகுமா?" என்று கணவனையே குறை சொன்னாள்; அதனைக் கேட்ட வேலாயுதன், முருகேசனைப் பார்த்து, "தம்பி, என்னை எல்லாருங் குற்றஞ் சொல்லுகிறார்கள்; நான் செய்வதென்ன? என் பிள்ளையின் கருமத்திலே நான் பராமுகமாக விருக்கவில்லை; நான் நேரிற் பேசாவிட்டாலும் எனக்கு நம்பிக்கையானவர் விசுவாசமானவர் இரண்டு மூன்று பேரைக்கொண்டு கல்யாணம் பேசுவித்தேன்; அவர்கள் பெண்ணையிட்டுத் திருப்திப்படுகிறார்கள்; பெண் படித்தவள், அழகானவள், குணமானவள் என்றெல்லாஞ் சொல்லிச் சம்மதித்தாலும், சீதனம்போதாது என்று சம்மதிக்க மறுத்துவிட்டார்கள்; நான் என்ன செய்வேன்; என்னால் என்னிடத்திலுள்ளதை, என்னாலியன்றதைத்தானே கொடுக்க முடியும்; இனிமேல் உழைப்பதையும் நான் என் மகளுக்குத்தானே கொடுப்பேன்; இல்லையென்று சொல்ல எங்களுக்கு வேறு பிள்ளையுண்டா? அல்லாமலும் என்பிள்ளை ஏதோ தமிழும் இங்கிலீசும் இயன்றவரையிற் படித்திருக்கிறாள்; அற்ப கல்வியாகவிருந்தாலும், தான் கற்றதைக் கொண்டு நாலு பிள்ளைகளுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத்துத் தன்னால் இயன்ற பொருளீட்ட இவளால் முடியும்; இதற்குமேல் இனி நான் என்னசெய்வது, எங்கே போவது, கையிலே மடியிலே பொருளிருந்தால் பெற்ற பிள்ளைக்குக் கொடாமல் உலோபம் பண்ணுவார் உலகத்திலுண்டா? தம்பீ, முருகேசு நான் சொல்வது இவ்வளவு நிசம்; ஏதோ, பிள்ளையின் காலைக்கையைக் கழுத்தை மறைத்து, நாங்கள் குடியிருக்கும் வீடுவளவையும் எங்களுக்குச் சீவியங் கண்டு பிள்ளை பேரில் உறுதி முடித்துக் கொடுக்கலாம். தம்பி, நீயும் இந்தப் பிள்ளைக்கு ஒரு தமயனென்று நினைத்து, எங்கேனும் ஒரு நல்ல சம்பந்தமாய்ப் பேசி ஒழுங்குசெய்து நிறைவேற்றி வைத்தால் உனக்குக் கோடி புண்ணியங் கிடைக்கும்; ஊருக்கெல்லாங் கல்யாணம் பேசி முடித்துவைக்கும் உனக்கு என் பிள்ளை விஷயத்தில் ஒன்றைச் செய்து வைப்பது கஷ்டமல்ல தம்பி" என்று பரிவுடன் சொன்னான்; இங்ஙனமாக, பக்கலிலே நிற்குந் தூணிற் கையிட்டபடி இவைகளையெல்லாங் கேட்டுக்கொண்டு நின்ற வேதநாயகி, "அப்பா, நான் பெண்ணாய்ப் பிறந்தவள்; எந்த இடத்திலே வாய் திறந்தாலும் பொல்லாப்பென்பர்; ஆனாலும் மனங்கேளாமற் சொல்லுகிறேன்; சொல்லுவதிற் பிழையிருந்தாற் பொறுத்துக் கொள்ளுங்கள்; இந்தக்காலத்திலேயுள்ள வாலிபர்கள் பெண்ணுக்குச் சாதி மரபு சமயம் ஒழுக்கம் சீதனம் முதலிய இவைகளைப்பற்றிக் காரியமில்லை; பெண் பேரழகியாகவும், தமிழ் தெரியாவிட்டாலும் இங்கிலீஷ் அற்பமேனும் படித்துப் பேச எழுதப் பழகிக்கொண்டவளாகவும், நவநாகரிகம் படைத்தவளாகவும், ஆண்களோ, பெண்களோ எவரோடும் எந்தக் கூட்டத்திலும்; சுயாதீனமாக ஊடாடக்கூடியவளாகவும், காலத்துக்கேற்ற கோலமென்று தன்னை அலங்காரஞ் செய்யக்கூடியவளாகவும் இருந்தாற்போதுமென்று சொல்லித் திரிகிறார்களாமே; அப்படியானால் எங்கள் பிள்ளை என்ன அழகிற் குறைந்தவளா? ஆங்கிலம் பேசத் தெரியாதவளா? நாலுபேர் கூடிய சபையிலே, சங்கத்திலே, கூட்டத்திலே தக்கபடி ஊடாடத் தெரியாதவளா? கொண்டான் குறிப்பறிந்து காலத்திற்குத்தக்க கோலமாய் நடந்துகொள்ளத் தெரியாதவளா? இந்த வறுமையொன்று தவிர வேறு எங்கள் பிள்ளையிடத்தில் என்ன குறை கூறமுடியும்? இந்த வறுமைதானும் நிலையாக எங்களோடு நின்று விடப்போகிறதா? வறுமையுஞ் செல்வமுஞ் சகடக்கால்போல் மாறி மாறி வருமென்று பெரியோர் சொல்லுவார்களே ஏழையாயிருந்தோர் பல்லக்கேறுதல் கண்டிலீரோ? ஆனதால், நீரும் உம்முடன் கூடப்பிறந்த சகோதரமென்றெண்ணி இந்தப் பிள்ளையின் கருமத்திற் கொஞ்சம் முயற்சி செய்யவேண்டும்" என்றாள்.

கையிற் பணமில்லாமல்.... முடியாது!

தன் மனைவி அந்தநேரஞ் செய்த சின்னப் பிரசாரணத்தைப் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்த வேலாயுதன், புன்சிரிப்புச் செய்து, அவளையும், முருகேசனையும் பார்த்து, "எங்களுடைய இந்தவூரிலே பிரசங்கஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும்போதும், பத்திரிகையில் எழுதும் போதும் இன்னும் சமயம் வாய்க்கும்போதும், இங்குள்ளவர்கள் அவர்களுள்ளும் வாலிபர்கள் "சாதி பேதம் பார்க்கக்கூடாது; சமய பேதத்தைப் பொருட்படுத்தவொண்ணாது; சீதனம் வாங்கும் தீய வழக்கத்தை அறவே தவிர்த்துவிடவேண்டும்; பெண்களுக்கு ஆண்களைக்காட்டிலும் கூடிய சுயாதீனம் கொடுக்கவேண்டியது முறையானா லும், இப்போதைக்கு ஆண்களோடு ஒத்த சுயாதீன மாயினுங் கொடுக்கவேண்டும். பெண் நல்லாய்ப் படித்தவளாய் நவநாகரிகம் படைத்தவளாய்ப் பார்ப்பதற்கழகியாய் இக்காலத்தார் கொள்கை களுக்கு ஏற்றவிதமாக ஊடாடக்கூடியவளாய் மாத்திரம் இருந்தாற்போதும்; சமையல்செய்யத் தெரியாவிட்டாலும், வேலைக்காரனை, வேலைக் காரியை வைத்து ஆக்கிக்கொள்ளலாம்" என்று இப்படியெல்லாம் பேசுவார்கள், எழுதுவார்கள்; இப்படிப் பேசியும் எழுதியும் வம்பளக்குமிவர்கள் தாங்கள் விவாகஞ் செய்யவேண்டி வருங் காலத்தில், தாங்கள் அதுகாறும் பேசிய ஞாயங்களையெல்லாம் அறவே விட்டுவிட்டு, தங்கள் உத்தியோகத்திற்குத் தக்க சீதனந் தரத்தான் வேண்டுமென்பார்கள்; அந்தப்பெண் நல்ல குலங்குடியிற் பிறந்தவளாகட்டும் அழகிற் சிறந்தவளாகட்டும்; கல்வியிலே தேர்ந்தவளாகட்டும், நல்ல குணமொழுக்கம் பூண்டவளாகட்டும், அவைகளைப் பொருட்படுத்தாது தாங்கள் நல்ல சீதனந் தந்தாற்றான் பெண்ணை ஏற்றுக்கொள்வோம்" என்பார்கள்; ஆனதால் என்ன நன்மைகளிருந்தாலும் பண மில்லாவிட்டால் எதனையும் நிறைவேற்ற முடியாது; இதனை யறியாமலா ஒரு புலவர் வறுமையைக் குறித்து பின்வருமாறு பாடியிருக் கிறார்:

"மேலானசாதியி லுதித்தாலுமதிலென்ன
வெகுவித்தை கற்றுமென்ன
மிக்கவதனரூபமொடு சற்குணமிருந்தென்ன
மிகுமானி யாகிலென்ன
பாலான மொழியுடைய னாயென்ன
ஆசாரபரனா யிருந்துமென்ன
பார்மீது வீரமோடு ஞானவா னாயென்ன
பாக்கிய மிலாதபோது
வாலாயமாய்ப் பெற்றதாயுஞ் சலித்திடுவள்
வந்தசுற்றமு மிகழுமே
மரியாதையில்லாம லனைவரும்பேசுவார்
மனைவியுந் தூறுசொல்வாள்
ஆலால முண்டகனி வாயனே! நேயனே!
அனகஆன! அருமைமதவேள்
அநுதினமும்மனதினினை தருசதுரகிரிவளர்
அறப்பளீசுர தேவனே"

ஆனதால், தம்பி முருகேசு என் பெண் டாட்டிக்குமாத்திரமல்ல உமக்குஞ் சொல்லு கிறேன் கேளும், கையிற் பணமில்லாமல் எந்தக் கருமத்தையும் நிறைவேற்ற முடியா தென்பது நிசம்" என்று சொன்னான்.

* * *

உலகம் பலவிதம்: 1947 மே 30 (முற்றொடர் - 17)

"இல்லாளகத்திருக்க இல்லாததொன்றில்லை"

"தம்பி முருகேசு, உலகத்தின் இயல்பை யெடுத்துச் சொன்னேன்; இவை கிடக்க எங்கள் மகளின் படிப்பு குணம் நடை போக்கு வாக்கு என்னுமிவைகள் உனக்குத் தெரியாதனவல்ல; ஆனதால் எங்கள் பிள்ளைக்கு எங்கேனும் ஒரு தக்க இடத்திலே சம்பந்தம்பேசி நிறைவேற்றி வைக்கும்படிதான் உன்னைக் கேட்கிறேன்" என்று வேலாயுதன் சொன்னான்; அண்ணே, அதை உத்தேசித்துத்தான் நானும் இன்று இங்கே வந்தேன்; மாப்பிள்ளையெனிலோ நல்ல குலங்குடியிற் பிறந்தவன், படித்தவன். தேட்டம் முதிசொமுடையவன்; அவன் இருக்கும் மேல்வீடு மாளிகைபோன்றது. சும்மாவிருந்து கொண்டு மரணபரியந்தம் அநுபவித்தற்கு அந்த மாப்பிள்ளையிடத்துள்ள பணம் போதியதாகும்; நல்லகுணம், இனியநடை, தருமசிந்தனை; இதமான பேச்சு, இரக்கம், ஈகை முதமுதலான சற்குணங்களும் நற்செயல்களும் அந்த ஆளிடத்திலுண்டு; பொலிவான தோற்றமுடையவன் செல்வாக்கோடு கூடியவன்; காலாலிட்ட வேலையைக் கையாற் செய்வதற்குப் பணியாளர் அவனிடத்திலுண்டு; இவைகளெல்லா மிருந்துமென்ன! இல்லாளில்லாதபோது அவனும் இல்லாதவனாவான்; "இல்லாளகத்திருக்க இல்லா ததொன்றில்லை" என்றல்லவா பாடியிருக்கிறார்கள்; இதனையிட்டுத்தான் அந்த ஆளுக்குப் பெருங்கவலை; முந்தியொரு தாரமிழந்தவனாயினும், அண்ணே, அந்த மாப்பிள்ளைக்கு நூறு கல்யாணம் பேசி வருகிறார்கள் பெண் பெற்றவர் கன்னிகையை வீட்டில் வைத்திருப் பவர் எத்தனைபேர் என் மூலமாகச் சம்பந்தம் பேசி வந்தார்கள்; ஆனால் அந்த ஆள் அவைகளுக்கு உடன்படவில்லை; என்னில் அந்த ஆளுக்கு நம்பிக்கை, அந்த ஆளில் எனக்கு விசுவாசம்; தனக்கு விருப்பமான பெண்ணின் இலக்கணங்களையெல்லாம் அந்த ஆள் என்னிடம் அந்தரங்கமாகச் சொல்லியிருத்தலால், நான் பலநாளாக யோசித்துவிட்டு உங்களுடைய மகள்தான் அந்த மாப்பிள்ளையின் நோக்கத்திற்கு இசையக்கூடிய பெண்ணென்று உத்தேசித்துக்கொண்டு இப்பொழுது உங்களிடம் வந்தேன்" என்று சொல்லி முடித்தான் முருகேசன்; கல்யாணத்தரகர் பேசத்தொடங்கினால் எப்படியிருக்குமென்று கேட்கவும் வேண்டுமா?

"இவைகளெல்லாம் விதியின் பயனாகும்"

இவைகளையெல்லாம் அருகிற் கேட்டுக் கொண்டு நின்ற வேலாயுதன் மனைவி "எல்லாஞ்சரி, தாரமிழந்த ஆள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லுகிறீர்; இப்பொழுது மாப்பிள்ளையின் வயசு என்ன விருக்கும்" என்று வினாவ முருகேசன் நிச்சயமாகச் சொல்லத்தெரியாது; முப்பந்தைந்திற்கும் நாற்பதுக்குமிடையிலிருக்குமென்று ஒரு உத்தேசம்; அல்லாமலும் ஆச்சி, ஆண்பிள்ளைக்கு வயசைப்பற்றி யோசிக்க வேண்டுமா? ஆணாகப் பிறந்தவன் நல்ல ஒழுக்கத்தோடும் மனக்கட்டுப்பாட்டோடும் நடப்பானேயானால், அவனுக்கு இரண்டுவருடஞ் சென்றபிறகல்லவா ஒரு வயசு கழியுமென்று சொல்லலாம்; மேலைத்தேசத்திலே ஆண்கள் ஐம்பது அறுபது வயசானபிறகுதானே கல்யாணம் முடித்துக்கொள்ள வேணுமென யோசிக்கிறார்களாம்; முயற்சிசெய்கிறார்களாம்; பல கருமங்களிலே மேலைத்தேசவாசிகளைப் பின்பற்றி நடக்க முயலும் எங்கள் நாட்டு மக்கள் இந்த வயசு விஷயத்திலும் அவர்களைப்போல நடந்துகொண்டாலென்ன; பூச்செடியானது சில மாசங்களுள் முளைத்து வளர்ந்து பூத்து அழகு செய்து பின்னர்க் குன்றிவிடுவதுபோல, பெண்கள்தான் அண்ணே சிலகாலத்தில் வளர்ந்து மங்கைப் பருவமடைந்து எவரும் விரும்பக்கூடிய இளைமையோடும் அழகோடும் கூடியவர்களாய், பின் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டுப் பலவோ சிலவோ சொல்லமுடியாது - பிள்ளைகளைப் பெற்று அப்பிள்ளைகட்குத் தாயாகி இளமையும் அழகுங் கெட்டு மூப்படைகிறார்கள்; கோடியு மொரு வெள்ளை, குமரியு மொருபிள்ளை என்று அறியாமலா உலகத்திலே பழமொழி வழங்குகின்றது; மேலும் இளம் வயசினரென்று இசைவுபார்த்துக் கல்யாணம் செய்துவைத்த தம்பதிகள் சில ஆண்டுகளுக்கிடையில் தாரமிழத்தலையும், கணவனைப் பறிகொடுத்துக் கைம்மையா யிருத்தலையும் நாங்கள் காண்கின்றோம்; இரண்டாந்தாரம் மூன்றாம் தாரங்கொண்ட ஆண்கள் அதன்பின்னர்த்தான் பிள்ளைகளைப் பெற்றுப் பெருகி பேரப்பிள்ளைகளையுங் கண்டு கொண்டிருப்பதையும் பார்க்கிறோம்; இவைகளெல்லாம் அவரவர் விதியின் பயனாகும்; அண்ணே, நீங்கள் அதையிட்டு யோசிக்க வேண்டாம்" என்று வேலாயுதனைப் பார்த்துச் சொன்னான் முருகேசன்; கேட்டுக்கொண்டு நின்ற மனுஷிக்கு முருகேசன் பெண்கள் விஷயமாகச் சொன்ன வார்த்தை பிடிக்கவில்லை; அவள் அவனைப்பார்த்து, "ஆண்களுக்கு இரண்டு ஆண்டுக்குப்பின் ஒரு வயசு கழியும்; பெண்களுக்கு மாத்திரம் ஒரு ஆண்டுக்கிடையில் இரண்டு வயசு கழிந்துவிடும்போலும்" என்று சுழிக்கச் சொல்ல; வேலாயுதன் அவளைச் சமாதானப்படுத்தினான்; "அண்ணே, நான் சொல்வதிலே சந்தேகமிருந்தால், வேண்டாமென்று சொல்லுகிறேன் நீங்கள் அந்த மாப்பிள்ளையை, மாப்பிள்ளைக்குரிய வீடுவாசல்களை அந்த ஆளுக்குள்ள நடப்பையெல்லாம் நேரிற் போய்ப் பார்க்கலாமே; அதன்பின் உங்களுக்குச் சம்மதமானால் நான் அந்த விஷயத்திலே தலையிடுகிறேன்; இல்லையானால் விடலாம்; உங்கள் நன்மையையுத்தேசித்தே இவைகளைச் சொன்னேன்" என்றான் முருகேசன்; "அல்ல, அல்ல, அப்படியொன்றுமில்லை தம்பி, உன்னை நம்பாமல், உன் சொல்லை நம்பாமல், வேறு எவரை நம்புவது? எவர் சொல்லை ஏற்றுக் கொள்வது? பெண்டுகள் பேசுவதை எந்த நேரமும் பொருட்படுத்த வேண்டியதில்லை, பொருட்படுத்த வேண்டிய நேரமுமுண்டுதான்; இது நீயறியாததல்ல; வேணுமானால் நானும் ஒருநாளைக்கு உன்னுடன் கூடிக்கொண்டு அந்தப் பக்கம் வருவேன்; வாய்த்தால் எல்லாவற்றையும் நேரிற்பார்த்துக்கொள்ளலாம்; அவையெல்லாம் பிறகு; நீ இந்தச் சம்பந்த விஷயத்தில் இப்பொழுதே தலையிட்டு அந்த ஆளுடன் பேசிப்பார்" என்றான் வேலாயுதன்; "அப்படியே செய்கிறேன்" என்று சொல்லி வேலாயுதனிடத்தும் அவன் மனைவியிடத்தும் விடை பெற்றுக்கொண்டு மீண்டான் முருகேசன்.

"சுகமேயிருக்கிறேன் அண்ணா"

வேலாயுதனிடத்திலும் மனைவியிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு முருகேசன் புறப்படுஞ் சமயத்தில் பரிமளம் தாயிடம் ஏதோ கருமமாகத் தலைவாசற்பக்கம் வரக்கண்டான்; "தங்கைச்சி, எப்படிச் சுகம்?" என்று விநயமாக முருகேசன் வினவ, "சுகமேயிருக்கிறேன், அண்ணா" என்று பரிமளஞ் சொல்ல, "போய்வருகிறேன்" என்று அவளுக்குஞ் சொல்லிவிட்டு வரும்மார்க்கத்திலே, முருகேசன் முன்னர்த் தான் பார்த்ததைக் காட்டிலும் இப்பொழுது பரிமளம் தேக வளர்ச்சியோடும் அதிக அழகோடும் காணப்படுகிறாளென்பதைச் சிந்தித்தான், "இந்தச் சம்பந்தத்தை நிறைவேற்றி வைப்பேனாயின், பெண்பகுதியார் விஷயத்தில் நமக்குப் புண்ணியமாகும்; மாப்பிள்ளை விஷயத்தில் நமக்குப் பணம் கிடைக்கும்; ஆனதால் இவ்விஷயத்திற் காலதாமதமின்றி இப்பொழுதே முயற்சி செய்யவேண்டுமென்று நினைத்துக்கொண்டு, வீட்டிற்கு மீளாமல், நேரே விஜயரத்தினம் வீட்டிற்குப் போனான்.

"இனியன துணிந்தபோது இடையொன்றால் தடையுண்டாமோ"

தன் வீட்டிற்கு வந்த முருகேசனை விஜயரத்தினம் அன்புடன் வரவேற்று ஆசன முதவி இருக்கச்செய்து இன்சொற் பகர்ந்து "ஏதும் விசேஷமுண்டோ" என வினவினான்; "விசேஷமில்லாமல் வருவேனோ" என்றான் முருகேசன்; "நல்லது, விசேஷமிருந்தால் அறிய ஆவலாயிருக்கிறேன்" என்று விஜயரத்தினம் விளம்ப, முருகேசன் சொல்லத் தொடங்கினான்; "நான் வெகுவாக அலைந்து சிரமப்பட்டுப் பல இடங்களிலுஞ் சென்று சென்று ஐயா, உம் பொருட்டுப்பெண் விசாரித்தேன்; சில இடங்களிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிகையுண்டெனினும், நீர் சொன்ன இலட்சணங்கள் பூரணமாய் அமைந்த கன்னிகை புலப்படவில்லை; இதனாற் பெரிதுங் கவலைப் பட்டேன்; ஈற்றில் ஐயா, நீர் செய்த புண்ணியமோ, அல்லது அந்தப் பெண்ணின் அதிர்ஷ்டமோ, நானறியேன்; ஒரு கன்னிகை வாய்த்திருக்கிறாள்; நீர் விரும்பிய குணம் நடை படிப்பு பேரழகு என்னுமிவைகளோடு இன்னும் பல சற்குணமும் நற்செயல்களும் வாய்ந்த உத்தமி, நானும் என் சின்ன அநுபவத்தில் எத்தனையோ கன்னியர்க்குக் கல்யாணம் பேசி ஆண்டவனருளால் நிறைவேற்றியிருக்கிறேன்; ஆனாலும் அவர்களுள் இப்படி எல்லாச் சிறப்பும் வாய்ந்த பெண்களை நான் பார்த்ததில்லை; சுருக்கமாகச் சொல்லுகிறேன்; அவளுக்கு நிகராக அவனியிலே பெண்கள் ஆருமில்லை; ஐயா; அவளே உமக்கேற்ற பெண், நீரே அவளுக்கு வாய்த்த வரன்; ஆனால் ஒருகுறை மாத்திரம் இருக்கிறது ஐயா, உம்முடைய வீட்டிற்கு வரும் பெண்ணுக்கு அக் குறையும் ஒரு சிறப்பாகும்" எனலும், விஜயரத்தினம் அது என்ன குறையெனக் கேட்டேன்; "வேறொன்றுமல்ல பொருட்குறைவுதான்; ஆனாலும் தனலட்சுமியென்ன அந்தக் கன்னிகை உம்முடைய இந்த இல்லத்தையடைந்த மாத்திரத்தே இங்குள்ள செல்வம் இன்னும் பெருகும்; உம்முடைய செல்வத்தை அந்தப் பெண் அனுபவிக்க, நீர் அவளிடத்திலுள்ள நலங்களெல்லாவற்றையும் அனுபவிப்பதானால் பிறகு என்ன குறை ஐயா" என்று வாக்கில் வல்ல வியாழபகவானைப்போற் சாதுரியமாகக் கூறி முடித்தான்; அவன் சொன்னவற்றையெல்லாம் ஒரு அட்சரமுந் தவறாமற் கேட்டுக்கொண்டிருந்த விஜயரத்தினம் அந்தநேரத்தில், அடைந்த ஆநந்தத்தை அவ்வளவு இவ்வளவென்று சொல்லமுடியாது; ஒருவாறு சொல்லுகில், சூர்ப்பநகையானவள் தன் தமயனாகிய இராவணனுக்குச் சானகியின் பேரழகையெடுத்து வர்ணித்தபோது அந்த இலங்கேசனுடைய உள்ளமானது எந்த நிலையை அடைந்ததென்று கம்பர் பாடினாரோ அந்த நிலையைத்தான் விஜயரத்தினம் அப்பொழுது அடைந்தான் எனலாம்; அவன் முருகேசனை முகமலர்ச்சி யோடு நோக்கி "முருகேசு, என்னை இப்பொழுது என்ன செய்யச்சொல்லுகிறீர்" என ஆவலுடன் வினாவினான்; "செய்வதென்ன, சமீபத்திலே விவாகத்திற்காகிய ஒரு சுபமுகூர்த்தம் நிச்சயிக்க வேண்டியதுதான்; பொன்னுருக்குதல் கூறை கொள்ளுதல் பந்தர்க்கால் நாட்டுதல் முதலிய மங்கல கருமங்களுக்கு ஏற்ற நல்லநாளை முந்தியே பார்த்து நிச்சயிக்கவேண்டியது தான்; இன்னும் கல்யாணத்திற்குச் செய்யவேண்டிய ஆயத்தங்களெவைகளோ அவைகளைத் தாமதமின்றிச் செய்யவேண்டியதுதான்" என்றான் முருகேசன்; "பெண்பகுதியாரால் இடையில் ஏதுந் தடையில்லையா? அவர்கள் பூரண சம்மதஞ் சொல்லிவிட்டார்களா" என்று ஆவலுடன் விஜயரத்தினம் வினவ, "ஐயா, இனியன துணிந்தபோது இடையொன்றால் தடையுண்டாமோ" என்றான் முருகேசன்; எல்லையில்லா மகிழ்ச்சியுற்றான் விஜயரத்தினம்.

* * *

உலகம் பலவிதம்: 1947 ஜூன் 06 (முற்றொடர் - 18)

பெண்ணை ஒருமுறை கண்ணாரப் பார்க்கவொண்ணாதா?

தலைவாசலிலே பேசிக்கொண்டிருந்த விஜயரத்தினம் உடனே இருக்கைவிட்டெழுந்து வீட்டினுட்போய் மீண்டு வந்தபோது பண "நோட்டு" ஒன்றை மடித்தபடி கொண்டுவந்து "சும்மா இது இப்போதைக்கிருக்கட்டும்" என்று இதமாகச் சொல்லி நீட்ட, "ஐயா, இப்போது இவைகளெல்லாம் ஏன், கருமம் நிறைவேறிய பின் செய்யலாமே" என்று புறத்தே பணம் வாங்க விருப்பமில்லாதவன்போல் முருகேசன் சொல்ல, அப்படியல்லவென்று சொல்லி விஜயரத்தினங் கொடுக்க, அவன் நன்றிகூறி அப் பணத்தை ஏற்றுக் கொண்டான். பின்னரும் விஜயரத்தினம் முருகேசனைப் பார்த்து "இந்த விஷயம் நிறைவேறும்வரை இதனை எவர்க்கும் வெளியிட இஷ்டமில்லை; ஆனதால், நீரே என் கல்யாண விஷயத்தில் எனக்கு இயன்ற துணைபுரிய வேண்டும்" என்று கேட்க முருகேசன் "என்னால் ஆகக்கூடியது எதனையும் மனப்பூர்வமாகச் செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்றான். சொல்லியபடியே முருகேசன் தாலிக்கொடி செய்விக்கும் விஷயத்திலும் கூறை முதலியன வாங்கும் விஷயத்திலும் தன்னால் இயன்ற துணை புரிந்தான்; பொன்னுருக்குதல் விவாக மென்னுங் கருமங்களுக்கு இன்னின்ன சுபதினங்கள் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றன வென் பதையும் முருகேசனே போய்ப் பெண்வீட்டாருக்குத் தெரிவித்தான்; அந்த நாட்களில் முருகேசனுடைய நேரம் அதிகமாக விஜயரத்தினத்தின் ஏவல்களையுங் கருமங்களையுஞ் செய்தலிலேயே கழிந்தது; இங்ஙனமாக, ஒருநாள் விஜயரத்தினம் ஆறுதலாக முருகேசனுடன் பேசிக்கொண்டிருக்கும்போது அவனை நோக்கி "முருகேசு, கேட்கிறேனென்று குறையெண்ணாதீர் அந்தப் பெண்ணை என் கண்ணால் ஒரு முறை நான் நேரிற் பார்க்கவொண்ணாதா" என்று ஆவலுடன் கேட்டான்; "ஐயா, ஒருமுறை பார்ப்பதென்ன, விவாகமானவுடன் நீர்தானே கால்தொட்டுத் தலைபரியந்தம் பலமுறையும் வைத்து இருகண்ணாரப் பார்க்கலாகும்" என்று முருகேசன் சொல்ல, "அது எனக்குத் தெரியும்" அப்போதல்ல, கல்யாணஞ் செய்யமுந்தி அக்கன்னிகையை ஒருமுறை தூரத்தில் நின்றாயினும் பார்த்துவிட விருப்பங்கொண்டேன்" என்று இரந்து கேட்டான்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதில் அதிக சங்கடமில்லை; பெண்பகுதியார் எவரேனும் அறியாமல் நீர் பார்த்துவிட்டால் நல்லது; அது முடியாவிட்டால், பெண்ணின் பெற்றாருக்கு மாத்திரந் தெரிவித்துவிட்டுப் பெண் தன்னை மாப்பிள்ளை பார்க்கப்போகிறாரென்ற இரகசியத்தை எள்ளளவும் அறியாமல் வைத்திருக்க வேண்டும்; ஏதோ ஆகவேண்டிய உபாயத்தை நான் யோசிக்கிறேன்; அப்படிப் பார்த்தபின்புதான் கல்யாணத்திற்கு ஆகிய ஆயத்தங்களைச் செய்வதோ" என்று முருகேசன் கேட்க, "இல்லை, இல்லை, ஆயத்தங்கள் நடக்கட்டும்; பார்க்க வேண்டுமென்பது என் விருப்பமென்றதைத்தான், உமக்குத் தெரிவிக்கிறேன்" என்றான் விஜயரத்தினம். "அதற்காகிய முயற்சியைச் செய்கிறேன்" என்று மீளவுஞ் சொல்லிவிட்டு அநுமதி பெற்றுக்கொண்டு போயினான் முருகேசன்.

தீராச் சந்தேகமுள்ளவர்

தான் அந்தப்பெண்ணைப்பற்றி எவ்வளவோ சொல்லியிருப்பவும், தன்னை நம்பாமல் விஜயரத்தினம் தானே பெண்ணை நேரிற் பார்க்க வேண்டுமென்கிறானே யென்பதை எண்ணியெண்ணி முருகேசன் சற்று மனவருத்தப்பட்டான்; "இந்த விஜயரத்தினத்தைப் போன்ற தீராச் சந்தேகமுள்ளவர்களும் உலகத்திலே யிருக்கிறார்களென்பது உண்மை; இவர்கள் உற்றார் உறவினர் மனைவிமக்கள் முதலிய எவரையும் நம்பார்கள்; ஒருவர் தம்மிடத்தில் எவ்வளவு விசுவாசம் வைத்து ஊடாடினாலும் இத் தீராச் சந்தேகிகள் அவரிடத்தில் நம்பிக்கை வைக்க மாட்டார்கள். இப்படிப்பட்டவர்கள் வேதாகம புராணம் முதலாம் பழைய சாத்திரங்களை நம்பார்; சமயாசாரம், சாதியாசாரம் பெரியோர் வாக்கு, கொள்கை என்னுமிவைகளை நம்பார்; ஈற்றிலே தம்மைத்தாமே நம்பாதொழிவர்; தீராச் சந்தேகமுற்றாருக்கு ஒரு காலத்தும் மகிழ்ச்சியில்லையென்று பஞ்சதந்திரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது; சந்தேகமுடையாரிடத்திற் பூண்ட நட்பும் நிலைநிற்கமாட்டாது; கொண்ட குணத்தை மாற்ற யாரால் முடியும்? சரி, இதனால் நமக் கென்ன கெட்டுப்போய்விட்டது; இந்த விஜயரத்தினம் நாளைக்கு அந்தப் பெண்ணை நேரிற் காண்பானாயின், நான் சொல்லியதைக்காட்டிலும் கூடிய இலட்சணம் அக்கன்னிகையிடத்திருப்பக் காண்பானென்பது நிசம்; அப்போதாயினும் இவன் திருப்தியடைந்து என் மீது கொண்ட சந்தேகத்தையுந் தவிர்த்துவிடுவான்" என இப்படியெல்லாஞ் சிந்தித்துக்கொண்டு அவன் தன் வீடுபோய்ச் சேர்ந்தான்; அன்றுபோக அடுத்த நாட்காலை முருகேசன் வேலாயுதன் வீட்டுக்குப்போய் அச் சம்பந் ..... [சிதைவு] வேலாயுதன் சற்றுநேரம் யோசித்துவிட்டு, "தம்பீ, முருகேசு அதனால் என்ன பிழை நேரப்போகிறது? விவாகம் நிச்சயமாய்விட்டதால், அந்த நேரந் தொடக்கம் எங்கள் மகள் அவருடைய பெண்டாட்டிதானே; ஆனால், அவர் பெண்ணைப் பார்ப்பதென்பது இயன்றவரையில் இரகசியமாக இருக்கவேண்டும்; தாயறிந்தாற் சிலவேளை சம்மதப்படாள்; மகள் செய்தி தெரிந்தால் இலச்சை கொண்டு முற்பட்டு வர உடன்படாள்;" என்று சொல்லிப் பின்னரும் முருகேசனை நோக்கி, "பெண் பார்ப்பதென்றால் எப்போதைக்கு" என்று கேட்க, இன்றிரவு 8 மணிவரையில் நல்லநாள்; ஆனதால் அந்தநேரம் வைத்துக்கொள்ளலாமென எண்ணுகிறேன்" எனலும் வேலாயுதனும் "அப்படியே ஆகட்டும்" என்றான்; முருகேசன் சந்தோஷமடைந்தவனாய், குறித்த நேரத்திற்கு மாப்பிள்ளையோடு அங்கு வருவதாகச் சொல்லிவிட்டு, வேலாயுதனிடத்தும் அவன் மனைவியிடத்தும் விடை பெற்றுக்கொண்டு நேரே விஜயரத்தினம் வீட்டிற்குப் போனான்;

"நீ நினைத்தால் முடியும்"

போன முருகேசன், விஜயரத்தினத்தைக் கண்டமாத்திரத்தே, கவலையோடு கூடியவன் போல் நடித்துக்கொண்டு தலைவாசலில் இருந்தான்; அதனையவதானித்த விஜயரத்தினம் தானும் கவலைகொண்டானாய், "முருகேசு, நீர் வாடிய முகத்துடன் வந்திருப்பதற்கு ஏதுவென்ன? விவாகத்திற்கு ஏதும் இடையூறுண்டா?" என ஆவலுடன் வினவ, "அப்படியான இடையூறு ஒன்றுமில்லை; ஆனால்..." என்று சொல்வதற்கிடையில், "என்ன ஆனால்" என்று பேராவலோடு மீளவும் கேட்டான் விஜயரத்தினம், "பெண்பிள்ளையை மாப்பிள்ளை விவாகமாதற்கு முந்திப் பார்க்கும் விஷயத்தையிட்டு அவர்களுடன் பேசினேன்; பெண்ணின் தகப்பனைச் சம்மதப்படுத்தலாம்; ஆனால் தாயை உடன்படச் செய்வது சற்றுச் சங்கடம்போற் காணப்படுகிறது" என்றான் முருகேசன்; "தகப்பனுக்குச் சம்மதமானால் தாயும் பெண்ணும் மாத்திரம் அறியாதபடி நாங்கள் போய்ப் பெண்ணை மெல்லப் பார்த்துக்கொண்டு வரவொண்ணாதோ? முருகேசு, நீ நினைத்தால் முடியும்" என்று சொல்லிவிட்டு, விஜயரத்தினம் உடனே வீட்டறையுட் சென்று கையிற் பொத்திப்பிடித்தபடி மீண்டுவந்து ஒரு தொகைப்பணத்தை முருகேசன் கையுள் வைத்துத் தன் பற்கள் தோன்ற இரந்தான், "சரி, ஏதோ பார்ப்போம்; போவதானால் இன்றிரவு எட்டுமணி வரையிற்றான் பெண்வீட்டிற்குப் போகவேணும்; போய்ப் பார்ப்போம்; இதற்கிடையில் ஆகவேண்டிய உபாயத்தை நான் செய்கிறேன்" என்று சொல்லி அவனிடம் விடைபெற்றுக்கொண்டு முருகேசன் தன்வீட்டிற்கு மீண்டான். விஜயரத்தினம் அன்று இரவு எட்டு மணியாதற்கு இன்னும் நீண்ட மணித்தியாலங்கள் இருக்கின்றனவே யென்று மனஞ் சோர்ந்தான்; ஆனாலும் போகும்போது தன்னை நன்கு அலங்கரிக்க வேண்டுமென்ற நோக்கத்தினால் அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை அலங்கரிக்கும் வகையைப்பற்றி நீடித்த நேரஞ் சிந்தித்துக் கொண்டிருந்தமையினால் அன்று பகற்போது ஒருவாறு நீங்கி மணி ஆறாதலும், முருகேசன் வரவை எதிர்பார்த்துக்கொண்டு விஜயரத்தினம் தன்னை அலங்காரஞ் செய்யத் தொடங்குதலும்

..... [சிதைவு]

முடித்துக் கொண்டான். இரவு 7 மணியாதலும் முருகேசனும் அங்கு வந்து சேர்ந்தான்; இதற்கிடையில் விஜயரத்தினம், முழுவதும் வெண்ணிறத்தோடு கூடிய ஐரோப்பிய உடை தரித்து, மூக்குக் கண்ணாடியை மாட்டினான்; சுகந்தப் பொருளைத் தன்னுடம்பிற் பூசவேண்டிய இடங்களிற் பூசினான்; மீசைக்கு மையிட்டு அதனை யொழுங்கு படுத்தினான்; முந்தியே சுகந்தமூட்டப்பட்ட சிறு பட்டுத்துணி யொன்றைச் சட்டைப்பையுட் புகுத்தினான்; அறையிலுள்ள நிலைக்கண்ணாடி முன் நின்று தன்னழகைத் தானே பார்த்து மெச்சியதோடமையாது, பக்கலில் நின்ற முருகேசனைப் பார்த்து எப்படி? முருகேசு, என் தோற்றம்" என்று புன்சிரிப்புடன் கேட்டான்; பத்து வருடங்கட்கு முந்தி உம்மை விட்டுப்போன வாலிபதசை இப்பொழுது மீண்டு உம்மிடம் வந்து சேர்ந்திருக்கிறது" என்று சொல்லிப் புன்சிரிப்புச் செய்தான் முருகேசன்; சட்டைப்பையொன்றுள் இட்டிருந்த சிகறற் தகரத்தை எடுத்துத் திறந்து ஒரு சிகறற்றை முருகேசனிடங் கொடுத்துவிட்டு இன்னொன்றை யெடுத்துத் தன் வாயிற் கௌவிக்கொண்டு, முருகேசன் முன்செல்ல, தான் பின்னே சென்றான் சிறிது தூரத்திற்கு.

ஏன் அம்மா, அப்படி?

இவர்கள் செயல் இங்ஙனமாக, பெண் வீட்டில் அன்று நடந்ததை ஆராய்வோம்; பெண்ணை யொருமுறை மாப்பிள்ளை முந்தியே பார்க்க விரும்புகிறாரென்ற செய்தியை வேலாயுதன் தன் மனைவிக்கு மெல்லச் சொன்னான்; கேட்ட மனையாள் முதல் உடன்பட மறுத்தாளாயினும் வேலாயுதன் சில நியாயங்களை அவளுக்குச் சொல்லித் தெருட்டியபின் அவள் ஒருவாறு உடன்பட்டுக் கொண்டாள்; ஆனாலும் தங்கள் மகள் அதனையிட்டு இம்மியத்தனையும் அறிய வொண்ணாது என்று கணவனுக்குச் சொல்ல, அவனும் "அப்படித்தான் நான் ஒழுங்கு செய்திருக்கிறேன்" அதில் ஒருபிழையும் வராது; அவர்கள் இன்றிரவு 8 மணி வரையில் இங்கு வருவதாகத் தெரிவித்திருக்கிறார்கள்; ஆனதால் அதற்காகிய ஆயத்தங்களை இயன்றவரையிற் செய்யத்தானே வேண்டும்; வீடுவாசலையும் அழுக்கின்றிச் சுத்தமாய் வைத்திருக்கவேணும்; நீயும் ஒருவிதமாகத்தான் அவர்கள் வந்து போகுமட்டும் நடந்து கொள்ளவேண்டும்; மகளையும் சீர்சிறப்பாக வைத்துக்கொள்" என்று சொன்னான்; மனைவியும் அப்படியெல்லாஞ் செய்ய இசைந்தாள்; மகள் அன்று மத்தியானம் வரையில் தலைவார்ந்து கட்டாமல், குளியாமலிருந்தாள்; தாய் என்ன காரணமென்று கேட்டபோது, தனக்கு உடம்பு சிறிது அலுப்பா யிருக்கிறதென்று சோர்வுடன் கொன்னாள்; தாய் சிறிது யோசித்துவிட்டு "மகளே, வெந்நீர் வைத்துத் தரலாம்; குளிக்க இயலாவிட்டால், ஒருவாறு உடம்பைக் கழுவிச் சுத்தி செய்து கொண்டு, உள்ள நகை(ஆபரணங்) களை யிட்டு ஆன சேலையைக் கட்டிக்கொண்டு இரவு எட்டு மணி வரையில் இருந்தால் நல்லது" என்று சொன்னாள்; "ஏன், அம்மா அப்படி?" என்று மகள் கேட்க, "இவளுக்கு இனிக் கருமத்தை மறைக்க முடியா" தென்றெண்ணிக்கொண்டு "மகளே, வேறொன்றுமல்ல உனக்கு ஒரு தக்க இடத்திலே சம்பந்தம் பேசுகிறோம்; அது ஒரு அளவிற்கு நிச்சயமாகும்போற் காணப்படுகிறது; ஆனதால், அந்த மாப்பிள்ளை வீட்டுக்காரர் யாரேனும் இன்று இங்கு வருதலுங்கூடும்" என்று சமாதானஞ் சொன்னாள்; மகளும் தாய் சொல்லைத் தட்டாமல் ஒருவாறு வெந்நீரில் ஸ்நானஞ்செய்து தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள்;

"நல்ல கருமத்தில்
அல்லச் சொல்லவேண்டாம்"

இரவு 7 1/2 மணியாதலும், சங்கேதப்படி விஜயரத்தினமும் முருகேசனும் பெண் வீட்டிற்குப் போயினர்; வேலாயுதனும் அங்குவந்த அவர்களை நல்வரவேற்றுத் தக்கவாறு உபசரித்தனர்; பரிமளம் மாப்பிள்ளை பகுதியிலிருந்து யாரும் பெண்கள் அங்கு வருவார்களென எதிர்பார்த்திருந்தாள்; எவரும் வந்திலர்; அதனால் அவள் தலைவாசற்பக்கம் வருதலின்றித் தன் அறையுள்ளேயே இருந்துகொண்டாள்; அவளைத் தலைவாசற்பக்கம் வரச்செய்தற்கு ஏதும் உபாயமுண்டோ என்று வேலாயுதனைத் தனியிடத்தில் மெல்லக் கேட்டான்; "உபாயம் எதுவும் வேண்டாம்; வந்திருப்பவர் மாப்பிள்ளை யென்பதை மாத்திரம் பெண் அறியாமலிருத்தல் வேண்டும்; அப்படியானால் நான் தலைவாசற் புறத்திருந்து கூப்பிட மகள் அங்கு வருவாள்; எங்கள் மகள் இக்காலத்துக் கேற்றபடி பள்ளிக்கூடத்திற் போய்ப் படிப்பித்தும் வந்தவள்; ஆதலினால் அதிகம் மறைந்து ஒளித்துத் திரியாள்; தான் முற்பட்டு வரத் தகாதவர் முன்னிலையில் நான் தன்னை வரச் சொல்ல மாட்டேன்; கூப்பிடமாட்டேனென்பதை அவள் அறிவாள்" என்றான் வேலாயுதன்; கேட்ட மனைவியும் சரிதான் என்று சொல்லிவிட்டு மகளிடம் போய், அவள் தன்னை அலங்கரிக்கும் முறையைக் கண்டு மகிழ்ச்சியடைந்தாளாய் மகளை அன்புபெருகப்பார்த்து "எங்கள் கண்ணே, நல்ல கருமத்தில் அல்லச் சொல்லவேண்டாமடி யம்மா, இந்தச் சம்பந்தத்தைப் பேசி ஒழுங்குபடுத்திய முருகேசுவும், மாப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியைச் சேர்ந்த ஒருவரும் வந்திருக்கிறார்கள்; வந்த ஆள் உன்னை ஒருமுறை பார்க்கவேண்டுமாம்; அதனாற் குறையில்லை; நிச்சயமான பெண் தானே, மகளே, நீ தலைவாசலுக்கு வரவேண்டாம்; தலைவாசலுக்கு இப்பாலுள்ள அறையின் யன்னலுக்குச் சமீபமாக வந்து இரண்டுநிமிஷம் நின்றுவிட்டாற் போதும்" என்றாள்; மகளும் ஒருவாறு உடன்பட்டு அப்படியே அன்னமென நடந்து வந்து குறித்த இடத்திலே மயிலென நாணம் மீதூர நின்றாள்; முருகேசன் கட்சாடை காட்ட விஜயரத்தினம் பெண்ணின் முகத்தை ஆவலுடன் பார்க்க, அவள் தலை குனிந்தாள்; விஜயரத்தினம் பெண்ணை உற்றுப்பார்க்கக்கூசி முருகேசனைத் திரும்பிப் பார்த்தான்; இதற்கிடையில் பரிமளம் தனக்கு வரித்த மாப்பிள்ளையைப் பார்த்து அவதானித்துக்கொண்டாள்.

* * *

உலகம் பலவிதம்: *1947 ஜூன் 13*
(முற்றொடர் - 19)

"கொத்திலேயிடமுந்தி எட்டென்கிறீர்"

பரிமளம் இரண்டு நிமிஷத்திற்கு மேற்பட அங்கு நில்லாது தனது அறையுட் சென்றாள்; பின்னருஞ் சற்றுநேரம் கல்யாண விஷயங்களைப் பற்றி வேலாயுதனும் மனைவியும் முருகேசனும் விஜயரத்தினமும் கலந்து பேசி நிச்சயித்துக் கொண்டனர்; முருகேசன் "அண்ணே, நான் இனிமேல் வருவேன்; இன்று பார்க்க வேண்டிய இன்னுமொரு ஆவசியகமான கருமமுண்டு; போய்வரவிடை தாருங்கள்" எனலும், வேலாயுதனும் மனைவியும் அவனுக்கு விடை கொடுக்க, விஜயரத்தினமும், "மாமா, மாமி! நானும் போய்வருகிறேன்" எனலும், "ஓம், போய்வாருங்கள்" என்று இருவரும் சொல்லி விட்டு வேலாயுதன் புன்னகைசெய்ய, அவன் மனைவி நாணத்தினால் தலைகுனிய, முருகேசன், "என்ன ஐயா, கொத்திலேஇடமுந்தி எட்டென்கிறீர்; கல்யாணம் நிறைவேறிய பின்னல்லவா மாமன் மாமி என்பது என்று சொல்லிப் பரிகசித்துக் கொண்டு விஜயரத்தினத்துடன் மீண்டான்; யன்னலின் உட்புறத்தே நின்ற பரிமளம் நின்று விட்டுச் சரேலென அவ்விடத்தை விட்டகன்றமை யையும் அங்ஙனம் அகலும்போது அவள் தன் முகத்தைச் சுழித்தபடி விரைந்து போனமையையும் அவளுடைய தாய் அவதானித்துக் கொண்டாள்; தாய் அங்கே வந்த விஜயரத்தினத்தை மாப்பிள்ளையென்று சொல்லாது மாப்பிள்ளை பகுதியைச் சேர்ந்த ஒரு ஆள் எனச் சொன்னபோது, மகளும் அது நிசந்தானென நம்பியே அங்கே வந்தாள்; ஆனால், அவள் அங்கே வந்தபோது, விஜயரத்தினம் இருந்த நிலையும் செய்துகொண்ட அலங்காரமும், அவளைப்பார்த்த பார்வையும் அவனே தனக்குப் பேசிய மாப்பிள்ளையெனப் பரிமளம் அயிர்க்கும்படி செய்துவிட்டன. தன்னுடைய வயசை இரண்டாற் பெருக்கினாலும் அந்த ஆடவனுடைய வயசு பெருக்கிவந்த தொகையைக் காட்டிலும் அதிகமாகவிருக்கு மென்றெண்ணினாள்; அவன் தாரமிழந்தவனென்பதையும் அவள் முந்தியே கேள்விப்பட்டுள்ளாள்; இவர் தம்மைப் பிற்காலத்திலே பார்க்கப் பராமரிக்கத்தான் இப்பொழுது ஒருதாரத்தைத் தேடுகிறார் போலுமென்று பரிமளம் தன்னளவிற் சிந்தித்தாள்; பெற்றபிள்ளை விஷயத்திலே தன் தாய் தனக்கு உண்மை சொல்லாமல் மாப்பிள்ளை பகுதியைச் சேர்ந்த ஒரு ஆள் எனச் சொன்னதுந் தவறாகுமென்று தாயையிட்டும் பரிமளம் சிறிது துயரப்பட்டாள்; வந்த வெள்ளம் கிணற்று நீரையும் அள்ளிக் கொண்டு போக முடியுமா? என்னையறியாமல் எனக்குக் கல்யாணம் நடக்கப்போகிறதா? நடப்பதைப் பார்ப்போம்" என்ற சிந்தனையோடிருக்கும்போது தாய் அவளிருக்கும் அறையுள் வந்தாள்.

சிற்றப்பரா? மாமனாரா?

வந்தவள் தங்கள் பிள்ளை கவலையோடிருப்பதைக் கண்டு திடுக்குற்று "கண்ணே, பரிமளம், என்னடியம்மா கவலை" என்று பரிவுடன் வினாவ, "கவலையொன்றுமில்லையம்மா, சற்று முந்தி முருகேச அண்ணனுடன் இங்கே வந்த ஆள் மாப்பிள்ளை பகுதியைச் சேர்ந்தவரென்றீர்களே, இவர் அவருக்குச் சிற்றப்பரா? மாமனாரா? அதனைத்தான் அறிய விரும்புகிறேன்" என்று சிறிது சீற்றமுங் கவலையும் நேரக் கேட்டாள்; மகள் இப்படிக்கேட்டபோது தாய் திகைத்தாள்; செய்த ஒழுங்கெல்லாம் குழம்பியனபோலு மென்றெண்ணிக் கவலைப்பட்டாள்; ஆனாலும் தன்னுள்ளக் கவலையை மகளுக்குக் காட்டாளாய் "ஏன், கண்ணே, அப்படிக் கேட்கிறாய்" என வினவலும் "அறியத்தான் அம்மா" என்று பதில் சொன்னாள் மகள்; "முருகேசுவைத்தான் கேட்கவேணும், எனக்கு முறை தெரியவில்லை மகளே" என்று தாய் சொல்ல, மகள் "முறை தெரியாமற்றான் அம்மா, கல்யாணஞ் செய்து வைக்க யோசிக்கிறீர்கள்" என்று பரிமளம் மீளவுஞ் சுடச் சொன்னாள்; "என்னவோ, எல்லாம் விதியின்படி தானே நடக்கும்" என்று பெருமூச்சுடன் தாய் சொல்ல, "அதுதான் அம்மா என் நம்பிக்கை" என்றாள் மகள். தாய் சற்றுநேரம் யோசித்துவிட்டு, மகளை ஆதரவுடன் பார்த்து, "எங்கள் கண்ணே பரிமளம், ஏனடியம்மா இந்த நேரத்திலே கவலைப்படுகிறாய்" என்று கேட்க, மகள் "அம்மா, வேலியே பயிரை மேய நினைத்தவாறு, பெற்ற பிள்ளையை வஞ்சிக்க நினைப்பது சரியல்ல; நான் உங்களுக்குப் பாரமாக இராமல், வறுமையிற்செம்மையாய்க் காலங்கழிக்க வகையறிவேன்; எனக்கு இப்போதைக்குக் கல்யாணம் வேண்டாம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் அறிவீர்களோ, அறியீர்களோ, அதனை நான் அறிவேன்; சற்று முந்தி இங்குவந்து போனவர் தாம் முருகேசு பேசிய மாப்பிள்ளையென்பதில் எள்ளளவுஞ் சந்தேகமில்லை; அந்த ஆளின் வயசிற்கும், என் வயசிற்குமிடையில் இருபது இருபத்திரண்டு ஆண்டுகள் வித்தியாசமிருக்குமென்று நினைக்கிறேன்; அவருடைய முதற்றாரம் உயிரோடிருந்தால், அவர் என்னைப்போன்ற ஒரு மகளைப் பெற்றிருப்பாரம்மா; உங்கள் மகளுக்கு ஒரு ஆடவனைச் சேர்த்துவிட்டாற் போதும்; உங்கள் பாரமும் நீங்கிவிடுமென்பதுதான் உங்கள் நோக்கம் போலிருக்கிறதம்மா; பிள்ளைகள் சீராகச் சிறப்பாகப் பெற்றுப் பெருகி வாழவேண்டுமென்ற நோக்கத்துடன் தானம்மா, பெற்றார் தம் மக்களுக்குக் கல்யாணஞ் செய்து வைக்கவேண்டும்; அப்படிச் செய்து வைத்தபின் நடப்பதைத்தான் விதிவசமென்று சொல்வது தாயே.

"ஆங் காலம் மெய்வருந்தவேண்டாம்"

உந்தச் சம்பந்தம் எனக்கு இஷ்டமில்ல; என்னையிட்டு நீங்கள் கவலைப்படாதீர்கள்; ஆங்காலம் மெய் வருந்த வேண்டாம் அம்மா; தாயை யொழித்தொரு சூலில்லை யென்றபடி என்னைப் பெற்று அருமையாக வளர்த்த தாயாராதலினால் உங்களுக்கு என்னுள்ளக் கிடக்கையை வெளியிட்டேன்; வேறெவருக்கேனும் வெளியிடமாட்டேன்; நான் உங்களுக்குச் சொன்ன இவைகளை நீங்கள் என் அப்பருக்குத்தானும் வெளியிட வேண்டாம்; "உங்கள் மகளுக்கு இந்தச் சம்பந்தஞ் சம்மதமில்லை" யென்று மாத்திரஞ் சொல்லிவிடுங்கள்; ஆனால் அப்பரைக் கவலைப்பட விடாதீர்கள்; நீங்களும் கவலைப்பட வேண்டாம்; தாரமுங் குருவுந் தலைவிதி தாயே" என்று கண்களில் நீர்ததும்பச் சொல்லி முடித்தாள் பரிமளம்; அதனையவதானித்த தாய் தானுங் கலங்கிப் பின்னொருவாறு தான் தேறிக்கொண்டு தன் மகளையுந் தேற்றினாள்; மனைவி கவலையோடு கூடியவளாய்த் தன்னிடம் வரக்கண்ட வேலாயுதன் "என்ன விசேஷம்" என்று ஆவலுடன் கேட்க, "எல்லாம் விசேஷந்தான்" என்றாள் மனைவி; "என்ன, உள்ளதைச் சொல்லு, அதற்கிடையில் வந்த விசேஷமென்ன" என்று மீட்டும் ஆவலோடு கேட்டான் வேலாயுதன்; இந்தச் சம்பந்தம் உங்கள் மகளுக்கு விருப்பமில்லை போலிருக்கிறது" என்றாள் மனைவி; ஏனென்று வேலாயுதன் கேட்க, "மாப்பிள்ளையில் அவளுக்குப் பிடிக்கவில்லை; இதை ஒழுங்கு பண்ணியதையிட்டு எங்களையும் மகள் குறை சொல்லுகிறாள்" என்று கவலை மீதூர மனையாள் பன்னினாள்; மாப்பிள்ளையை எப்படி மகளுக்குத் தெரியும்; அப்போது வந்தவர்தாம் மாப்பிள்ளையென்று சொல்லிவிட்டாயா" என்று ஆத்திரத்தோடு கேட்டான் கணவன்; நான் ஒன்றும் சொல்லவில்லை; இது சத்தியம்; மகள் ஏதோ அயிர்த்துக்கொண்டாள்; இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டுமா; அந்தப் பேய்த்தனங்களெல்லாம் எங்கள் காலத்திலும் உங்கள் காலத்திலுமல்லவா இருந்தது....." என்று மனைவி சொல்லிமுடிப்பதற் கிடையில் "மகளுக்கு ஏன் விருப்பமில்லையாம்" என்று வேலாயுதன் கேட்க, "வயசு வித்தியாசந்தான்; வந்த இந்த ஆள் மாப்பிள்ளையின் சிற்றப்பாவா? மாமனாரா? என்று மகள் என்னைக் கேட்கிறாள்; இதற்கு நான் என்ன பதில் சொல்வது; ஆனாலும் நான் ஒன்றும் பேசாமல் நின்றேன்; அதன்பின்னர்த்தான் பெற்றார் தாங்கள் பெற்ற பிள்ளைக்கும் வஞ்சகம் நினைக்கலாமா என்று என்னைத் தெள்ளத்தெளியக் கேட்டாள் மகள்; அல்லாமலும் இந்த நேரத்தில் வந்த ஆளை மாப்பிள்ளையின் சிற்றப்பாதான் மாமனார்தான் என்று சொல்லிவிட்டு, கல்யாணத்தினத்தன்று அன்று வந்த இவர்தான் தனக்கு மாப்பிள்ளையென்பதை நேரிற் பார்க்கும்போது என்ன நடக்கும்? அப்போது கல்யாணம் குழம்பி அவமானப்படுவதைக்காட்டிலும்; இப்பொழுது பேச்சளவிற் குழம்புவது நன்மைக்குத் தானே" என்று சமாதானஞ் சொன்னாள் மனைவி; கேட்ட வேலாயுதன் "நீ சொல்வதும் நியாயந்தான்; ஆனால் அந்த ஆள் எங்கள் பேச்சை நம்பிப் பொன்னுருக்குதல் தாலி கொடி செய்வித்தல் முதலிய ஆயத்தங்களைச் செய்தாயிற்றே; இனி மறுத்தால் என்ன சங்கடங்கள் நேருமோ என்பதையிட்டுத்தான் யோசிக்கிறேன்" என்றான் வேலாயுதன்; "அதிற் சங்கடமிருக்கிறதுதான்; ஆனாற் பெண்ணுக்குப் பிரியமில்லாத சம்பந்தத்தைச் செய்து வைத்துவிட்டு உள்ளநாள் முழுதுஞ் சங்கடப்படுவதைக் காட்டிலும் இந்தச் சங்கடம் ஒருநாள் இரண்டுநாளிலே தீர்ந்துவிடும்; முருகேசு வருவார்தானே; அவரோடு கலந்து யோசித்து அவர் மூலமாகவே சரிபண்ணிக் கொள்ளுவோம்; இருந்தாலும், இந்த மாப்பிள்ளை பெண்ணைத் தான் நேரிற் பார்க்கவேண்டுமென்று இங்கே வந்தமையினாற்றான் இவைகளெல்லாம் நேர்ந்தன" என்று சொல்லிக் கவலைப்பட்டான் வேலாயுதன்.

"இவளுக்கு ஒப்பாக இப்புவியிற் பெண்ணில்லை"

"முருகேசரே, நீர் இந்தப் பெண்ணைப் பற்றிப் பாராட்டிச் சொன்னது போதாது; இவளுக்கு ஒப்பாக இப்புவியிலே பெண்கள் யாருமில்லையென்று சொல்லலாம்; நானும் இந்தவூர் தொடக்கம் இந்தியா சிங்கப்பூர் மலாய்நாடு முதலிய தேசங்களெல்லாஞ் சென்று சென்று ஆங்காங்குள்ள விநோதங்களையும் சிறப்புக்களையும் பார்த்திருக்கிறேன்; ஆனால் இப்படியான சுந்தரியை நான் கண்ணாரக் கண்டதில்லை; யவ்வனத்தோடு கூடிய வயசு; வயசுக்குத்தக்க தோற்றம், தோற்றத்திற்கு ஏற்ற வனப்பு, வனப்புக்கு வாய்த்த குணம், குணத்துக்குத் தகுந்த நடை! இப்பெண்ணைப்பற்றி நீர் சொல்லியபோது அளவுக்கு மேற்படச் சொல்லு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறீரென்று உம்மீது சந்தேகங்கொண்டேன்; அப்படிச் சந்தேகங் கொண்டது என்மேற் குற்றம்; ஆனாலும் காரியமில்லை; பெண்ணை யொருமுறை பார்த்தபின்பு தான் நீர் என்மேல் வைத்திருக்கும் அபிமானத்தையும் என் விஷயத்தில் நீர் பூண்ட சிரமத்தையும் நான் உள்ளபடி உணரலானேன்; எனக்குத் தாரமாக வரவிருக்கும் இக்கன்னி இலட்சுமியின் அவதாரமெனலாம்; நான் செய்த பாக்கியமேபாக்கியம்" என்று இப்படியெல்லாம் பேசிக்கொண்டு விஜயரத்தினம் முருகேசனுடன் தங்கள் வீட்டிற் சேர்ந்தான். சேர்ந்தவன் முருகேசனை விசேஷமாக உபசரித்து, பணமும் பத்துரூபா அவனுக்குச் சன்மானமாகக் கொடுத்தான்; அவன் அடுத்தநாள் விஜயரத்தினத்திடம் வருவதாகச் சொல்லி விட்டுத் தன் வீட்டிற்கு மீண்டான்; தனக்கும் பரிமளத்திற்கும் கல்யாணம் நடத்தற்காகிய சுபதினத்திற்கிடையில் இன்னும் எத்தனை நாளுண்டு, நாட்கள் விரைவிற் கழியவில்லையேயென்ற சிந்தனையோடிருந்தான் விஜயரத்தினம்.

* * *

உலகம் பலவிதம்: *1947 ஜூன் 20*
(முற்றொடர் - 20)

"ஆனைகட்டச் சங்கிலி தானே யெடுத்துக் கொடுக்கும்"

அடுத்தநாட்காலை, நேரம் எட்டு எட்டரை மணிவரையிலிருக்கு மெனலாம். முருகேசன் வேலாயுதன் வீட்டிற்குப் போனான்; போனபோது வேலாயுதன் முருகேசனை, "வா தம்பி முருகேசு" என்று அழைத்தானாயினும், வேலாயுதன் முகத்திலாக அவன் மனையாள் முகத்திலாக மலர்ச்சியில்லையென்பதை முருகேசன் அவதானித்தான்; அந்த நேரத்தில் அவன் பரிமளத்தைக் கண்டிலன்; முருகேசன் உள்ளத்திற் சந்தேகங்கொண்டானாய், "அண்ணே, என்ன விசேஷம்" என வேலாயுதனை வினவ, அவன், "அந்தச் சம்பந்தஞ் சந்திக்காது போலிருக்கிறது" என்று பெருமூச்சுடன் சொல்ல, முருகேசன் மனமுடைந்தானாய், "என்ன, அண்ணே! எல்லாம் நிச்சயமானபின், மாப்பிள்ளை தாலி கூறையெல்லாம் தேடிய பின்பு, இப்படியொரு சம்பந்தம் நடக்கப்போகிறதென்று அயலட்டத்திலுள்ளவர்களெல்லாம் அறிந்த பிறகு, நேற்று இங்கேவந்து பெண்ணை மாப்பிள்ளை பார்த்ததன்மேல், இன்றைக்கு நான் ஏதுஞ் சந்தோஷமான செய்தியை உங்கள் வாயிலாக அறியலாமென்று வந்த இந்த நேரத்திலே, அண்ணே, நீங்கள் அந்தச் சம்பந்தஞ் சந்திக்காது என்று சொல்வது முறையல்லவே; இனி நான் அந்த ஆளுடைய முகத்தில் விழிப்பதெப்படி? அந்த ஆளுக்கு என்ன மறுமொழி சொல்வது" என்று அதிக கவலையோடு சொன்னான்; "தம்பி, முருகேசு, நீ சொல்வது முழுவதும் ஞாயம்; எங்களிலாக, எங்கள் பிள்ளையிலாக, உன்னிலாக ஒரு பிழையுமில்லை; ஆனை கட்டச் சங்கிலி தானே யெடுத்துக்கொடுக்கும் என்ற விதமாக அந்த மாப்பிள்ளை தாமே தம்மைப் பழுதாக்கிக் கொண்டார்; தம்பி, பெண்ணைப்பற்றி நீ சொன்ன அளவில் அந்த ஆள் திருப்திப்பட்டிருக்க வேண்டியது; உன் வார்த்தையில் நம்பிக்கை யில்லாமையினாற்போலும், நேற்று அவர் இங்கே பெண் பார்க்க வேண்டுமென்று வந்து பார்த்து விட்டுப் போனார்; அவர் பெண்ணைப்பார்ப்பதற்கிடையில் பெண் மாப்பிள்ளையைப் பார்த்துவிட்டாள்; பார்த்த விடத்திலே மாப்பிள்ளையிற் பெண்ணுக்குப் பிடிக்கவில்லை; அந்த நிமிஷந் தொடக்கம் அவள் இந்த மாப்பிள்ளைக்கு வாழ்க்கைப்பட மறுக்கிறாள் தம்பி; இதற்கு நான் என்ன செய்வது; இந்தத் தாயென்ன செய்வது; நீ தான் என்னசெய்வது? இதற்காகத்தான் தம்பி, எங்கள் காலத்திலே பெண்ணை மாப்பிள்ளை பாராமலும் மாப்பிள்ளையைப் பெண் பாராமலும் எங்கள் மூதாதையர் ஒரு கட்டுப்பாட்டை வைத்திருக்கிறார்கள்; அந்த நியாயத்தை இந்த நாளிற் சொன்னால், என்னைப் பைத்தியகாரனென்று இக்காலத்து வாலிபர் கன்னியர்கள் பரிகசிப்பர்" எனச் சொல்லி முடித்தான் வேலாயுதன்.

"கொண்டாருங்கொடுத்தாருங்கூடக்கூட கொட்டிவந்த பறையன் தூரத்தூர"

இவைகளையெல்லாங் கேட்டுக்கொண்டிருந்த முருகேசன் சிறிதுநேரம் யோசித்தான்; "பெற்றாருக்குச் சம்மதமானாலும், பெண் சம்மதியாவிட்டாற் கல்யாணஞ் செய்து வைப்பதனாலே நன்மை யுண்டாகாதென்பது நிசம்; இசைவில்லாமற் செய்த இல் வாழ்க்கை எக்காலத்தும் பிணக்குக்குஞ் சண்டைக்குமே ஏதுவாகும்; ஒரு சம்பந்தத்தைச் சிரமப்பட்டுப் பேசி நிறைவேற்றிய பின் அந்தத் தம்பதிகள் நல்லாய் வாழ்ந்தால், செய்துவைத்த நம்மைப் போன்றவர்களைப் பற்றி அத்தம்பதிகளாக, சம்பந்திகளாக அதிலும் நன்மை சொல்லமாட்டார்கள்; விதிவழியே நடந்த தென்று மாத்திரஞ் சொல்லிக்கொள்வார்கள்; சம்பந்தஞ் செய்துகொண்ட இருபகுதியாரும் நல்லாய் உரிமை பாராட்டிக் கொண்டாடிக் கொள்வார்கள்; அந்த நேரத்திலே இப்படியான சம்பந்தத்தைச் சிரமப்பட்டுப் பேசி நிறைவேற்றி வைத்த எம்மைப்போன்றவர்களைத் திரும்பியும் பாரார்கள்; இதனாலல்லவா, கொண்டாருங் கொடுத்தாருங் கூடக் கூட, கொட்டிவந்த பறையன் தூரத்தூர என்ற பழமொழி எங்கள் நாட்டிலே வழங்குகின்றது; ஆனால் அத் தம்பதிகட்கிடையே பிற்காலத்திற் பிணக்குநேர்ந்தால், இல்லையேல் தரித்திரம் வந்தால் "அந்த அநியாயப்பட்ட கல்யாணத் தரகன்தானே ஏதோ ஒருபகுதியிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தை வாங்கிக்கொண்டு எங்கள் பிள்ளையை இப்படி அநியாயமாக வீழ்த்திவிட்டான்" என்று அபவாதஞ் சொல்வார்கள்; இது உலகவியல்பு; இந்த விஷயத்திலே பெண்ணுக்கு ஏதும் சமாதானஞ் சொல்லி இக்கல்யாணத்தை நிறைவேற்றி விடலாமோ என்றால் பெண் ஒருபோதும் உடன்படாளென்பது நிசம்; அல்லாமலும் இந்தச் சம்பந்தப் பேச்சுக் குழம்பியது என்னாலல்ல; என் பேச்சை மாப்பிள்ளை கேளாமல் நம்பாமல் விட்டதனால் வந்த கேடு; ஆனபடியால், நான் இப்பொழுதே போய் அந்த ஆளுக்கு விஷயத்தைத் தெரிவிப்பேன்; நீங்களும் தீர்க்கமாக யோசித்துச் சொல்லலாம்" என்று முருகேசன் வேலாயுதனையும் மனைவியையுங் கேட்க, "தம்பீ, நாங்கள் யோசிக்கக் கூடியவரையில் யோசித்து விட்டோம்; இனி யோசிக்க இடமில்லை; எங்கள் பிள்ளைக்குப் பின்னுக்குச் சங்கடத்தைத் தேடி வைக்கவொண்ணாது; தம்பி முருகேசு, நீர் குறை நினைக்கவேண்டாம்; உள்ளதைப் போய் அந்த ஆளிடம் சொல்லிவிடும்" என்று வேலாயுதன் சொல்ல, முருகேசனும் "அப்படியே செய்கிறேன்" என்று சொல்லி அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு கவலையோடு போவானாயினான்.

"பரிகாசமா? நிசந்தானா?"

முருகேசன் சிந்தனையோடு கூடியவனாய், தனது வீட்டிற்குப் போதலின்றி நேரே விஜயரத்தினம் வீட்டிற்கே சென்றான்; அவன் வரவைக் கண்ட விஜயரத்தினம் அந்த நேரத்தில் அவனை முகமலர்ச்சியோடு உபசரித்து இருக்கச்செய்து, அவன் பக்கலில் தான் வந்து இருந்துகொண்டு, "இனி என்விஷயத்தில் ஒரு தடையுமில்லை; பெண்ணையொருகாற் கண்ணாற் பார்க்கவேண்டுமென்ற ஆசையுந் தீர்ந்தது; இனி எங்கள் கல்யாணத்திற்காகிய ஆயத்தங்களையும் முயற்சிகளையும் துரிதமாகச் செய்துமுடிக்க வேண்டும்; நாளைமுதல் நீர் உமது வீட்டிற்குப் போய்ப் போய் மீண்டு வருவதைவிட்டு, இங்கே என்னுடனே எங்கள் விவாகம் நிறைவேறும் வரையில் தங்கியிருக்கவேணும்; இங்கே உமக்கு ஆகவேண்டிய சௌக்கியங்களெல்லாஞ் செய்யலாம்; விரும்பினால் இரவில் பத்துமணிக்கு மேல் ஒருமுறை உங்கள் வீட்டிற்குப்போய் உடனே மீண்டுவரலாம்; இல்லையேல் அன்றிரவு விடிவதற்கு முன் நாலு நாலரைமணி வரையில் மீண்டு இங்கு வந்தீரானாற் போதும்; இந்த உதவியை நீர் மறுக்காமல் எனக்குச் செய்யத்தான் வேண்டும்; நானோ அதிகம் உற்றார் உறவினர் இல்லாதவனாவேன்; இது நீர் அறியாததல்ல; என்னுடைய உற்றார் நண்பர் தூரித்த ஊர்களில் வசிக்கிறார்களென்பது மெய்; ஆனாலும் அவர்களை யெல்லாம் இந்த நேரத்தில் இங்கே அழைப்பதனால் வீண் சிரமமும் பொருட்செலவுமல்லாமல் வேறு கண்ட பயன் ஏதுமில்லையாம்; மேலும் அவர்கள் இங்கே வந்தாற் குலம் பேசுவார்கள், சாதி விசாரிப்பார்கள்; தத்தம் மனம் போனபடி ஆளுக்கொரு குற்றஞ் சொல்லுவார்கள்; ஆனதால் அவர்கள் இப்போதைக்கு வேண்டாம்; நீரே போதும்; நீர்தாம் என் நெருங்கிய சுற்றமும் நண்புமாவீர்....." என்று ஓயாமற் பேசினான்; விஜயரத்தினம் இப்படியெல்லாம் சொல்லியபோதும் முருகேசன் "உம்" என்று கேட்டானுமல்லன்; இடையில் ஏதும் பேசினானுமல்லன்; உடனே விஜயரத்தினம் அவனுடைய முகத்தை உற்று நோக்கினான்; அவனது முகத்தில் மலர்ச்சியைக் கண்டிலன்; விஜயரத்தினம் ஏங்கினான்; திகைத்தான்; "ஏதும் விசேஷமோ" என்று பதைப்புடன் வினாவினான்; "அப்படி மோசமான விசேஷ மொன்றுமில்லை; நான் இப்பொழுது பெண்வீட்டிலிருந்துதான் நேரே இங்கு வருகிறேன்; விவாக விஷயத்திலே பெற்றாருக்குச் சம்மதம்; பெண் மாறுபட்டு நிற்கிறாள்; அதனால் இப்பொழுது நாம் தீர்க்கமாக ஒரு ஆயத்தமுஞ் செய்யவொண்ணாது..." என்று சொல்லி முடிப்பதற் கிடையில், விஜயரத்தினம் "என்ன! பெண் மாறுபட்டு நிற்கிறாளா? நீர் சொல்வது பரிகாசமா? நிசந்தானா?" என்று மனம்பதற, சரீரம் நடுங்கக் கேட்டான்; "பரிகாசமல்ல, நிசந்தான்" என்றான் முருகேசன்.

விஜயரத்தினம்: காரணம்?

முருகேசன்: காரணம் பெண்ணை நீர் பார்க்கப் போனதுதான்.

விஜய்: ஆம், பார்த்தேன்; பெண்ணில் எனக்கு நல்லாய்ப் பிடித்துக்கொண்டது; அதனாலென்ன?

முரு: அதனாலொன்றுமில்லை; பெண்ணும் மாப்பிள்ளையைப் பார்த்துவிட்டாள்.

விஜய்: பார்த்துவிட்டாளா? ஆனால் பார்த்தாலும் நான் தான் மாப்பிள்ளையென்பதை அவள் அறியாளே மாப்பிள்ளையின் நெருங்கிய சுற்றத்தவனென்றுதானே என்னைப்பற்றிப் பெண் வீட்டிலே சொல்லியிருந்தீர்; அதுதான் நிசம்.

முரு: ஆம், அப்படியேதான் அப்பெண்ணின் பெற்றாருக்குச் சொல்லியிருந்தேன் அவர்களுந் தங்கள் மகளுக்கு அப்படித்தான் சொல்லியிருந்தார்கள்; ஆனால், பெண் நீர் இருந்த நிலையைக்கொண்டோ, பார்த்த பார்வையைக் கொண்டோ, நானறியேன்; நீர் தாம் மாப்பிள்ளையென்று அயிர்த்துவிட்டாள்.

விஜ: நான்தான் மாப்பிள்ளையென்று அவள்அயிர்த்திருந்தால், என்னைப்பார்த்து முன்னரைக் காட்டிலும் அதிகமாக விருப்பப்பட்டிருப்பாளே நானென்ன.... அழகிற் குறைவா? தோற்றத்திற் குறைவா? கெம்பீரமான நடையிற் குறைவா? இல்லையேல் கல்வியறிவு செல்வம் செல்வாக்கு சாதி குலம் மரபு என்னுமிவைகளிற் குறைவா? அல்லது முதுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிற் புலப்படுகிறதா? அவள் என்னை வெறுக்கக் காரணமென்ன?

"இந்தக் கேள்விகளை அந்தப் பெண்ணிடத்திற்றான் கேட்டுக் காரணமறியவேண்டும்" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டான் முருகேசன்; அப்போது விஜயரத்தினமும் பெருந்துயர் கொண்டானாய், "முருகேசரே, என்மனம் பெரிதுஞ் சஞ்சலப்படுகிறது. இந்தக் கல்யாணம் நிறைவேறினாலென்ன, நிறைவேறாதொழிந்தாலென்ன, அதைப்பற்றி இனிமேல் எனக்குக் கவலையில்லை; ஆனாற் கல்யாணம் நடக்கப் போகின்றதென்ற செய்தி மெல்லமெல்ல ஊர் முழுவதும் பரவிவிட்டது; இப்பொழுது அப்படி நடவாமற் குழம்பியதற்குக் காரணமென்ன என்றதைத்தான் அறிய விரும்புகிறேன்; உள்ளதைச் சொல்லும்; என்மேற் பெண்ணுக்குப் பிடிக்கவில்லையா" என்று கவலைமீதூர இதமாகக் கேட்டான்; "அப்படித்தான் எண்ணக் கிடக்கிறது" என்றான் முருகேசன்; "நீர் இன்று காலை அந்த வீட்டிற்குப் போனபோது நடந்த தென்ன சொல்லும்" என்று விஜயரத்தினங் கேட்க, முருகேசன் நடந்த விஷயம் முழுவதையும் ஒன்றையும் ஒளியாமற் சொன்னான்.

* * *

உலகம் பலவிதம்: *1947 ஜூன் 27*
(முற்றொடர் - 21)

பணமிருந்தாற்
பெண்ணுக்கா பஞ்சம்?

இவைகளையெல்லாம் முருகேசன் சொல்லக் கேட்ட விஜயரத்தினம் நீடித்த நேரம் யோசித்தான்; ஈற்றில் நெட்டுயிர்த்துக்கொண்டு முருகேசனைப் பார்த்து "முருகேசு, எனக்கு இக் கல்யாணம் குழம்பியதைப்பற்றிக் கவலையில்லை; இந்தப் பெண் நமக்குத் தாரமாக வந்தாலும் இல்லறம் ஒற்றுமையாக நடக்க மாட்டாது;

"மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவராய்ப்பூண்டுய்ப்பினல்லால் - ஒருவரால்
இல்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடம்
செல்லா தெற்றிற்று நின்று."

என்று படித்தோர் பாடியிருக்கிறார்கள்; தாலி கட்டித் தாரமென்று வந்தபின் பிணக்குப் படுவதைக்காட்டிலும், நீதித்தலத்திலேறி வழக்காடுவதைப் பார்க்கிலும், தாபரிப்புப்பணங் கட்டுவதைக்காட்டிலும், சீர்கெடுவதைக் காட்டிலும், நித்திய சஞ்சலத்துடன் காலம் போக்குவதைக் காட்டிலும் முந்தியே இப்படி வெறுப்பு நேர்ந்ததைப்பற்றி நாம் சந்தோஷப்பட வேண்டும்; உந்தப் பெண் போனால் உவளைக்காட்டிலும் நூறு மடங்கு உத்தமமான பெண்ணைத் தேடிக் கொள்ளமுடியும்; பணமிருந்தாற் பெண்ணுக்கா பஞ்சம்? இப்பொழுது நான் கவலைப்படுவது வேறொன்றையுமிட்டல்ல, தாலி கூறையெல்லாம் ஆயத்தமாய்விட்டன; நாளும் நியமித்தாய் விட்டது; இப்படியான பின் இந்தக் கல்யாணம் ஏன் குழம்பியது என்று யாருங் கேட்டால், என்ன பதில் சொல்வதென்பதையிட்டுத்தான் யோசிக்கிறேன்; வயசு போகாத எனக்கு வயசு போய் விட்டதென்ற காரணம்பற்றி இந்தப்பெண் என்னை மணக்க மறுத்தாளென்றால், அது எனக்கு உள்ளநாள்மட்டும் ஒரு பெரும் வசையாக முடியுமல்லவா? ஆனதாற் பெண்வீட்டார் இந்த நியாயத்தைப் பிறருக்குச் சொல்லி எம்மைத் தூற்றுதற்கு முந்தி, பெண் வீட்டாருக்குச் சம்மதம், எமக்குத்தான் சம்மதமில்லை என்ற விதமாக ஒரு காரணங் காட்டவேண்டும்; காட்டுங் காரணம் உண்மையாயுமிருக்கலாம், பொய்யாயுமிருக்கலாம்; அதைப்பற்றிக் காரியமில்லை; முருகேசரே! நீர்தாம் இப்படியான விஷயங்களில் அதிக அநுபவமுடையீர்; எனக்கு ஒரு உபாயஞ் சொல்லித்தர வேண்டும்" என்று பரிவுடன் கேட்டான்.

"உண்மையுந்தான் பரிகாசமுந்தான்"

விஜயரத்தினம் தான் செய்த குற்றத்திற்காகப் பெண்ணின்மேற் பழிசுமத்துவது முருகேசனுக்குச் சம்மதமல்ல, அவன் விஜயரத்தினத்தைப் பார்த்து "இதற்கு அதிகம் யோசிப்பதென்ன, அந்தப் பெண் அதிக இளமையோடு கூடியவளாயிருப்பதனால் உமக்குச் சம்மதமில்லை; அதனாற்றான் கல்யாணங் குழம்பிவிட்டதென்று நீரும் நானும் நியாயஞ் சொன்னால் உலகம் நம்பாதா" என்று புன்சிரிப்புடன் சொன்னான்; "என்ன முருகேசு, உண்மையாகச் சொல்லுகிறீரா? இல்லையேற் பரிகாசமா?" என்று வினாவ, "உண்மையுந்தான் பரிகாசமுந்தான்" என்று பின்னரும் பதில் சொன்னான் முருகேசன்; "என் மன வேக்காட்டை யறியாமல் இந்த நேரத்திலா பரிகாசம்" என்று கவலைமீதூர விஜயரத்தினஞ் சொல்ல, "பரிகாசமல்லாமல் வேறென்ன ஐயா, நாம் செய்த பிழையினாற் கல்யாணங் குழம்பியதற்குப் பெண்ணைக் குறைசொல்லப் புகுவது புத்தியாகுமா? நீதியாகுமா? உள்ளதை உள்ளபடி சொல்லி நடந்தால், எவ்வகையான பிழையும் எக்காலத்தும் வராது; விவாகப் பேச்சுக் குழம்பியதற்குக் காரணமென்னவென்று யாரும் கேட்டால், "விதியில்லை" என்று ஒருசொல்லில் முடித்து விடலாமே; நாம் ஏன் பிறருக்குக் கேடு சூழ்வான்? "பிறர்க்கின்னா முற்பகல் செய்யின், தமக்கின்னா பிற்பகல் தானே வரும்" என்பதல்லவா பெரியார் வாக்கு என்றான்; "முருகேசரே நீர் சொல்வது முழுவதும் நியாயம்; அப்படி நாம் நினைத்தது தவறு; ஆனால் இந்த விஷயத்தை இவ்வளவிற் பேசாமல் விட்டுவிடுவதா? இல்லையேல் இன்னும் ஏதும் முயற்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து பார்க்கிறீரா" என்று விஜயரத்தினங் கேட்க, "என்ன, ஐயா, நிமிஷத்திற் கொருமுறை மறந்து பேசுகிறீரே, இந்தப்பெண் உமக்கு இல்லறத்திற்கு உதவாளென்று சற்றுமுந்தி எனக்குத்தானே சொன்னீர்; "கூற்றமே இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்" என்ற பாட்டி வாக்கு நீர் படிக்காததல்ல; நீர்தானே சொல்லுகிறீர்; இந்தப் பெண் போனால் இன்னும் உத்தமமான பெண்ணைத் தேடலா மென்று; அப்படியொரு கன்னிகையைத் தேடுதற்கு முயற்சி செய்வோம்; தாலி கூறை ஆயத்தமாகவிருந்தால் அவை எங்கோ மோசம் போய்விடுமா? வாய்ப்புடைய வேறு பெண்ணைப் பார்ப்போம்; "தெய்வத்தாலாகா தெனினும் முயற்சிதன் - மெய்வருத்தக் கூலிதரும்" என்றல்லவோ படித்தவர்கள் பாடியிருக்கின்றார்கள்; ஆனதால், வீண்கவலை வேண்டாம்; இன்னும் என்னால் இயன்றவரையிற் பார்க்கிறேன்" என்று சொல்லி விட்டு, முருகேசன் அன்று விஜயரத்தினத்தினிடம் விடைபெற்றுக்கொண்டு போனான்.

"வருந்தியழைத்தாலும் வராதவாரா!"

முருகேசன் போனபின்பு விஜயரத்தினம் வெகுவாய் யோசித்தான்; தன்சம்பந்தவிஷயம், வெண்ணெய்திரண்டு வரும்போது, தாழியுடைந்தவாறாய் முடிந்ததேயென்று கவலைப்பட்டான்; இரண்டுமுறை சம்பந்த விஷயமாக முயற்சிசெய்து, இரண்டில் ஒன்றேனுஞ் சந்தித்த பாடில்லையே யென்று கவலைப்பட்டான்; தான் பெண்ணை நேரிற் பார்க்கப்போனது தன்மேற் பெருந் தவறென்று பச்சாத்தாபப்பட்டான்; கல்யாணங் குழம்பியதற்குக் காரணங்கேட்போர்க்குத் தக்க நியாயஞ் சொல்வது சங்கட மென்றெண்ணினான்; தன் சொல்லைக் கேளாமற் பெண்பார்க்கப் போனதால் முருகேசனும் இவ் விஷயத்தில் அலட்சியமாக நடக்கிறானென்று சிந்தித்தான்; மலாய் நாட்டிலே சம்பாதித்துக் கொண்டுவந்த பணமும் மெல்லமெல்லச் செல வாகின்றதே என்பதையும் எண்ணினான்; இந்த வூரிலிருந்தால் உள்ள மதிப்புங் கெட்டுவிடுமென்று நினைத்தான்; "நாம் மணமுடிக்க ஆசைப்பட்டு எத்தனை முயற்சி செய்தாலும், எவ்வளவு பொருளைச் செலவிட்டாலும், இப்போதைக்கு எதுவுங் கைகூடக் காணேனே; வருந்தியழைத்தாலும் வராதவாரா" என்றல்லா சொல்லுவார்கள்; ஆனதால் நான் இப்பொழுது எவ்வகையான பிரயத்தனத்தைச் செய்தாலும், ஆகுநாளன்றி எவையும் ஆகா; இந்த விவாக எண்ணத்தை இப்போதைக்கு அறவே மறந்து விடுவதுதான் புத்தி; ஆங்காலம் மெய்வருந்த வேண்டாம்; நடந்தாற் கண்டுகொள்வோம்; உடனே விவாகஞ் செய்யவேண்டும்; இல்லாவிட்டால் இந்த நாட்டைவிட்டுப் பழையபடி மலாய்நாட்டிற்குப்போக வேண்டும்; நல்லாயிருந்தவன் கெட்டுப்போக நேர்ந்தால், மதிப்போடிருந்தவன் அம்மதிப்புக்குப் பங்கம் வருமெனக் கண்டால் அவன் சொந்தத் தேசத்தை விட்டுப் பரதேசம் போவதே நலமென்னுங் கருத்துப்படப் பஞ்சதந்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது; ஆதலால் இங்குள்ள வீடுவாசல் நிலம்புலம் எல்லாவற்றையும் தக்கவர்களுக்குக் "குத்தகை" யாகக் கொடுத்துவிட்டு மீண்டும் மலாய்நாட்டிற்குக் கூடிய சீக்கிரத்திற் புறப்படுவதே புத்தி" யென்று தீர்க்கமாக யோசித்தான் விஜயரத்தினம்; சிங்கப்பூருக்குப் புறப்படவிருக்கும் அடுத்த கப்பலிலே தானும் பயணம் போவதென்று நிச்சயித்துக்கொண்டான்.

"கல்யாணம் முடிப்பது நீங்களா? நாங்களா?

விஜயரத்தினத்தின் செயல் இங்ஙனமாக, இரண்டு மூன்று தினங்கழித்து முருகேசன் வேலாயுதன் வீட்டிற்குப் போனான்; "தம்பி, முருகேசு, அந்த ஆளுக்கு நீர் விஷயத்தை வெளியிட்டுவிட்டீரா? அந்த ஆள் கவலைப்படவில்லையா? என்ன செய்யலாம், எங்கள் மகள் பிடிவாதமாக நிற்கின்றாள்; அப்படி இவள் நிற்காவிட்டால் எங்களுக்கு அந்தச் சம்பந்தம் சம்மதந்தான்; பெண் மாறாய் நிற்கிறபோது, நாம் பலவந்தப்படுத்திக் கல்யாணத்தை முடித்து வைத்தால், அப்படியான குடித்தனம் ஒற்றுமையாய்ச் சீராய்ச் சிறப்பாய் சந்ததி விருத்தியோடு வாழுமென்ற நம்பிக்கை எங்களுக்குமில்லை; அல்லாமலும் இந்தக்காலத்து ஆண்பிள்ளையாக பெண்பிள்ளையாக, தாம் நினைத்தபடி செய்கிறார்களேயொழிய, பெற்றார் சொல்லைக் கேட்கிறார்களில்லையே; அப்படியல்லவென்று தாய் தகப்பன் இந்தக் கல்யாண விஷயத்திலே ஏதும் புத்தி சொல்லப்போனால் கல்யாணம் முடிப்பது நீங்களா, நாங்களா என்று பெற்றாரைக் கேட்கிறார்கள்; பெற்றாரும் மரியாதைக் கேட்டுக்குப் பயந்து, பிள்ளைகள் விஷயத்திலே தலையிடக் கூசுகிறார்கள்; ஏதோ எல்லாம் விதியின் வண்ணம் நடக்குமென நாங்களும் கண்டுகொள்ள வேண்டியதுதான்" என்று சொல்லி முடித்தான்; இதற்கிடையில் வேலாயுதன் மனைவி முருகேசனைப் பார்த்து, "தம்பீ, சும்மாயிருந்த பிள்ளைக்குக் கல்யாண மாம் என்று ஒரு கதையையுண்டாக்கி, இப்பொழுது அயலட்டத்திலேயுள்ளவர்கள், பிறவூர்களிலிருக்கும் எங்கள் இனசனத்தவர்கள், அறிமுகமானவர்கள், பிள்ளைக்கு எப்பொழுது கல்யாணம்? எங்களுக்குந் தெரிவிக்கவேண்டுமென்று எங்களைக் கேட்கிறார்கள்; எங்களுக்குச் சொல்லுகிறார்கள்; கலியாணங் குழம்பிய செய்தியை, நாங்கள் இன்னமும் ஒருவருக்கும் வெளியிடவில்லை; இதற்கு என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை" எனக் கவலையோடு சொன்னாள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இனி விதியின் பயன்"

"ஆச்சி, நீங்கள் கவலைப்படவேண்டாம்; நீங்கள் முந்திச் சொன்னபடி என் சகோதரம் வேறு உங்கள் மகள் வேறென்று நான் எண்ணவில்லை; தெய்வத்தின் சகாயம் வேணும்; நானும் என்னால் இயன்றவரையில் இந்தப்பெண்ணுக்கு ஒரு மாப்பிள்ளை விசாரித்து மணம் முடித்து வைத்தற்கான முயற்சிகளைப் பார்க்கிறேன்; இனி விதியின் பயன்" என்று சொல்லி அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு அதே சிந்தனையாகத் தன் வீட்டிற்கு மீண்டான் முருகேசன்; அன்றிரவு அவன் படுக்கையிற்போய்க் கிடக்கும்போதும், பரிமளத்திற்குத் தான் சீக்கிரத்தில் ஒரு மண மகனைத் தேடி அக்கருமத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற சிந்தனையோடுதான் கிடந்தான்; உறங்கிவிட்டான்; நடுச்சாமமெனலாம்; யாரோ வந்து முருகேசன் வீட்டுத் தெரு வாசலில் நின்று முருகேசு! முருகேசு! முருகேசு!" என்று மும்முறை கூப்பிடுதலும் முருகேசன் துடித்துப் பதைத்து "உது ஆர்" என்று சொல்லிக்கொண்டு விரைந்தெழுந்து நித்திரை மயக்கத்துடன் வெளியே வந்தான்; வந்தவன் தன் வீட்டு வாசலில் ஒரு மோட்டார்ரதம் வந்து நிற்பதைக் கண்டான் "உம்முடைய உறக்கத்தைக் குழப்பிவிட்டோம்போலும்" என்று இதமாகச் சொல்லிக் கொண்டு ஒருவர் அந்த இரதத்தினின்று மிறங்கி முருகேசனுக்குச் சமீபமாக வர, மற்றவர்களும் ஒருவர்பின் ஒருவராக இறங்கி, முருகேசனுக்குச் சமீபமாகப் போனார்கள்; "என்ன விசேஷம்? இந்த அகாலத்தில் வந்தீர்களே" என்று முருகேசன் ஆவலுடன் கேட்க, அங்கு வந்தவர்களுட் பெரியவர் முருகேசனைப் பார்த்து, "தம்பீ, முருகேசு, உம்மாலாகவேண்டிய ஒரு பெரிய கருமமிருக்கிறது; எவ்விதமேனும் நீர் அந்தக் கருமத்திலே துணைபுரிந்தாற்றான் நாங்கள் விடிந்தபின் மரியாதையோடு வெளியே திரியமுடியும்" என்று பதைப்போடு சொல்லி முருகேசனை வேண்டினார்; "சரி, தெருவில் நின்று ஏன் பேசுவான்? வாருங்கள் எங்கள் வீட்டுத் தலைவாசலிலிருந்து பேசுவோம், யோசிப்போம்" என்று சொல்லித் தன்னைத் தேடிவந்த நால்வரையும் தன் வீட்டுத் தலைவாசலில் அழைத்துக்கொண்டு போய் இருத்தினான்; இதற்கிடையில் தலைவாசலிலே தீபம் ஏற்றப்பட்டது. "தம்பி, நாங்கள் இந்த நேரத்தில் உம்மிடம் வந்தது வேறொன்றுக்குமல்ல, இங்குள்ள கச்சேரியிற் "கிளாக்"காக இருக்கிறார் வெற்றிவேலருடைய மகன் குழந்தைவேல், அவரை உமக்குத் தெரியுந் தானே....." என்று வந்த பெரியவர் சொல்வதற் கிடையில், "அவரை நான் நல்லாய் அறிவேன்; அவருக்கும் சரவணமுத்துவின் மகளுக்கும் நாளைக்குக் கல்யாணமென்று யாரோ சொல்லக்கேட்டேன்; அப்படியானால் நானும் ஒருமுறை அந்தக் கல்யாண வீட்டிற்குப் போகத்தான்வேணும்; தகப்பன் மகன் இருவரும் எனக்கு அறிமுகமானவர்கள்" என்றான் முருகேசன்; "அந்தக் கல்யாணந்தான் தம்பி, இன்று பொழுதுபடக் குழம்பிப்போய்விட்டது; மாப்பிள்ளை பகுதியாரும் பெண்பகுதியாரும் வேற்றுமையாகக் கதை பேசிக்கொண்டார்கள்; அது இனி ஒருபோதும் "சந்திக்காது" என்றார் வந்த பெரியவர்; "ஒரு மாப்பிள்ளைக்கு நூறு பெண்ணைப் பேசுவதும், ஒரு பெண்ணுக்கு நூறு மாப்பிள்ளை பேசுவதும், சகசந்தானே அதனாலொன்றுமில்லை; ஆனால் கருமம் இவ்வளவு சமீபித்து வந்த பிறகும் குழம்புவதானால், அது மனவருத்தந்தான்; அந்தச்சம்பந்தம் குழம்பிய தற்குக் காரணமென்ன" என்று ஆவலோடு கேட்க வந்தபெரியவர், "அந்தச் சீர்கேட்டை உமக்குச் சொல்லாமல் வேறு யாருக்குச் சொல்வது" என்று சொல்லத் தொடங்கினார்.

* * *

உலகம் பலவிதம்: 1947 ஜூலை 04
(முற்றொடர் - 22)

"போதுமப்பா போதும்
புதுக்குளத்து வேளாமை"

"தம்பீ முருகேசு, ஒரு பிரதானமான கருமத்திலே பிணக்குண்டாகிக் கல்யாணம் குழம்பியதென்றால் அதையிட்டு அதிக கவலைப்பட நேரிட்டிராது; இது ஒரு அற்ப விஷயம்; வேறொன்றுமல்ல, எல்லாம் ஒழுங்கானபின், பெண் விவாகமானபிறகு யார் வீட்டில் வசிப்பது என்ற கேள்வி பெண்வீட்டுக்காரரிடமிருந்து பிறந்தது; கல்யாணமானபின் பெண் மாப்பிள்ளை வீட்டில் மாப்பிள்ளையோடு ஐக்கியமாக இருப்பதுதானே முறை; வேணுமானால் ஆவசிய கருமமெனக் கண்டால் இடையிடையே பெண் தாய் வீட்டிலும் போய்ச் சிலநாள் தங்கியிருந்து வரலாம்; ஆண்டவன் கிருபையால் ஒரு குழந்தையைப் பிரசவிக்குங் காலத்திலே பெண் சில மாசங்களேனும் பெற்றாரில்லத்திற்றானே இருக்கவேண்டி வரும்; இது எங்கள் நாட்டிலே யுள்ள வழக்கமாயிருப்ப, இப்படியான கேள்வியை இந்தச் சமயத்திலே பெண் வீட்டினராகிய நீங்கள் கேட்டது நியாயமல்லவென்று நாங்கள் சமாதானஞ் சொன்னோம்; அந்தப் பெண்ணின் தகப்பன் அவ்வளவு பொல்லாத மனுஷனல்லன்; ஆனால் தாயெனில்லே அடக்கமற்ற மனுஷி போற் காணப்படுகிறாள்; நாங்கள் இப்படிச் சமாதானஞ் சொன்னதைக் கேட்டவுடனே அந்த மனுஷி பெண்களுக்கிருக்கவேண்டிய நாணம் முதலிய குணங்களொன்றுமின்றி, மனுஷனிருக் கின்றானே நாலு மனுஷர்கள் வீட்டில், அதுவுஞ் சம்பந்த விஷயமாக வந்திருக்கிறார்களே யென்பவைகளை எள்ளளவும் சிந்தியாமல் மார்பிலே தட்டி ஞாயம்பேச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்பட்டாள்; "முந்தித்தவங்கிடந்து முன்னூறுநாட் சுமந்து அந்திபகலாச் சிவனை ஆதரித்து பத்துமாதஞ் சுமந்து வயிறு நொந்து ஆசையருமையாகப் பாடுபட்டு நான் பெற்ற ஒரேயொரு மகள் நாளைக்கு ஆண்டவன் கிருபையால் என் மனுஷனிருக்கும்வரை நான் உயிரோடு வாழு மட்டும் எவ்வகையிலும் குறையுமில்லை; இவளுக்கு ஒன்பது கிராண்டு வீடு வளவு; ஐயாயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட நகை, பணம் பதினாயிரம் ரூபா இவைகளையெல்லாம் சீதனமாகக்கொடுக்க உத்தேசித்திருக்கிறோம்; இவைகள் மாத்திரந்தானா, எனக்குப் பிற்காலத்தில் இந்த வீட்டிலுள்ள பொருள்களெல்லாம் என் பிள்ளைக்கல்லாமல் வேறு யாருக்கு? என்பிள்ளையென்ன கல்வியிற் குறைவா? கட்டழகிற் குறைவா? நடையுடை பாவனையிற் குறைவா? இக்காலத்தில் நாகரீகத்தைப் பின்பற்றி நடப்பதிற் குறைவா? இப்படியொருபெண் உங்கள் மாப்பிள்ளை ஊரெங்குந் தேடினாலுங் கிட்டுமா? வீட்டிற்கு இவள் இலட்சுமியல்லவா? ஊரிலே வேறெவருங் கொடுக்கமுடியாத சீதனத்தைக்கொடுத்து எங்கள் அருமைப் பெண்ணையும் கல்யாணஞ் செய்துவைக்க நாங்கள் நிச்சயித்திருப்பது வேறொன்றுக்குமல்ல, பெண்ணும் மாப்பிள்ளையும் அந்த இரண்டு வீடுவளவுகளில் தங்களுக்கு விருப்பமான தொன்றில், எங்களுக்குத் துணையாக எங்கள் அந்திய காலம்வரையும் எங்களுடன் இருக்கவேண்டுமென்ற நோக்கத்தையிட்டுத்தான்; அப்படியில்லாவிட்டால், என் அண்ணனுடைய மகன், எனக்குச் சொந்த மருமகன்; எங்கள் மகளுக்கு நன்மச்சான், இன்னுஞ் சிங்கப்பூரில் ஆயிரம் வெள்ளிக்குமேல் மாசச்சம்பளம் பெற்றுக்கொண்டு மகாராசன் போல் உயர்ந்த உத்தியோகத்திலிருக்கிறான். அவனும் தாய்தகப்பனுக்கு ஒரேயொரு பிள்ளைதான்; அவனுக்கு எங்கள் பெண்ணைக் கல்யாணஞ் செய்து கொடுக்கவில்லை யென்று அண்ணன் வீட்டுக்காரர் இன்னும் எங்களோடு வெறுப்பாயிருக்கிறார்கள்; நாங்கள் ஏன் அந்தச் சம்பந்தத்திற்குச் சம்மந்தப்படவில்லையென்று தெரியுமா? அவனுக்குக் கல்யாணம் முடித்துக் கொடுத்தவுடனே அவன் எங்கள் பிள்ளையைச் சிங்கப்பூருக்குக் கூட்டிக்கொண்டு போய்விடுவா னென்று பயந்துதானே நாங்கள் புதுச் சம்பந் தத்துட் புக நினைத்தது; இப்பொழுது பார்த்தால், "போதுமப்பா போதும் புதுக்குளத்து வேளாமை" என்று நான் சொல்லவேண்டியிருக்கிறது; நான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தவள் அதிகம் பேசிப் பொல்லாப்புக் கேட்பாள் நான் சொல்லக்கூடியது இவ்வளவுந்தான்; பெண்ணும் மாப்பிள்ளையும் இருக்கவேண்டியது பெற்றார் வீட்டிலேதான்; எங்களிருவருக்கும் பெண்ணுக்குஞ் சம்மதமெனக் கண்டால் இடையிடையே புருஷன் வீட்டிற்கும் போகலாம்; இது இஷ்டமில்லாவிட்டால், கல்யாண ஆயத்தமெல்லாம் ஆய்விட்டனவே யென்பதையிட்டும் யோசிக்கவேண்டாம்; இந்த நிமிஷமே இச்சம்பந்தத்தை விட்டுவிடுவோம்; என் பிள்ளைக்கு நூறு மாப்பிள்ளை தேட முடியும்..." என்று அந்த மனுஷி பேசிக்கொண்டு போகையில், எங்களுடனிருந்த ஒருவர் மனஞ் சகியாமல், "ஏன் ஆச்சி, உங்கள் மகளுக்கு ஒரு மாப்பிள்ளை போதாதா, நூறு மாப்பிள்ளை எதற்கு? என்று சுடச்சுடக் கேட்டார்; கேட்ட மாத்திரத்தே மனுஷி நாகபாம்புபோற் சீறி யெழுந்தது....." என்று அந்தப் பெரியவர் சொல்வதற்கிடையில், முருகேசன் அவரைப் பார்த்து, "ஐயா, இப்படியெல்லாம் தன் பெண்டாட்டி பேச, புருஷன் பார்த்துக்கொண்டுங் கேட்டுக்கொண்டு மிருந்தானா? இடையில் ஏதுஞ் சொல்லிப் பெண்டாட்டியைக் கண்டிக்கவில்லையா" என்று கேட்க "புருஷன் ஆனவனாயிருந்தால் பெண் டாட்டி இப்படியேன் கெட்டுப்போகிறாள்" என்று பெரியவர் விடைசொல்லிப் பின்னருங் கூறுகின்றார்.

"பெண்ணொருத்தி பேசிற் பெரும்பூமி தானதிரும்"

"தம்பி முருகேசு, அசமுகி, தாடகை, சூர்ப்பனகை, ஆலங்காட்டு நீலி என்று சொல்லப்பட்ட பொல்லாத பெண்களின் வரலாறுகளையெல்லாம் கந்தபுராணம் இராமாயணம் பெரியபுராணம் முதலிய நூல்களிற் படித்திருக்கிறோம்; படிக்கக் கேட்டிருக்கிறோம்; ஆனால் அவர்களும் இவளைப்போற் பொல்லாத பெண்களல்லரெனலாம்; இப்படிப்பட்ட பெண்களைத் தான் "அடங்காமாரி என்று எங்கள் நாட்டிலே சொல்லுவார்கள்; அறியாமலா, "பெண்ணொருத்தி பேசிற் பெரும்பூமி தானதிரும்" என்று ஆன்றோர் பாடினார்கள்; பெண்டாட்டி பேசுவதைக் கேட்டுக் கொண்டும், புருஷன் அவளைக் கண்டித்துத் தடுக்காமலிருப்பதைப் பார்த்துக்கொண்டுமிருந்த நாங்கள் இன்னமு மிங்கேயிருந்தால் உள்ள மரியாதையுங் கெட்டுவிடுமென்று பயந்து, "பிச்சைவேண்டாம் தாயே நாயைப்பிடி" யென்ற விதமாக இந்தச் சம்பந்தமும் வேண்டாம், இவர்கள் கொண்டாட்டமும் வேண்டாம் என்று நிச்சயித்துக்கொண்டோம்; இதற்கிடையில் எங்களுடன் வந்திருந்த ஒருவர், "ஆச்சி, ஏன் வீண் பேச்சு? உன் மகளை உன் சொந்த மருமகனுக்கே கல்யாணம் பண்ணிக்கொடு, உன்னைப் பார்த்தபின் உன்பெண்ணை யாரும் விரும்புவாரா? தாயைச் சந்தியிற் கண்டாற் பெண்ணை வீட்டிற் போய்ப்பார்க்கவும் வேண்டுமா? அறியாமலா, தாயைப்போற்பிள்ளை, நூலைப்போற் சேலையென்று எங்கள் நாட்டிலே சொல்லுகிறார்கள்" என்று சொல்லி முடிப்பதற் கிடையில் அந்தக் காந்தாரி, "இங்கிருந்து இன்னமும் வீண்கதை பேசுவீர்களானால், மரியாதை கெடுவீர்கள்" என்று தன் கைவிரலிலொன்றை நிமிர்த்தியபடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிக்கொண்டு அங்குமிங்கும் பார்த்தாள்; அதனை அவதானித்த நாங்கள் உலக்கையையோ, விளக்குமாற்றை யோ தேடுகிறாளாக்குமென்றெண்ணிக்கொண்டு உடனே அந்த வீட்டைவிட்டு வெளியே வந்து விட்டோம்; இதுதான் நடந்த வரலாறு; ஆனால் இதனை யாருக்காயினும் வெளியிடாதே தம்பீ" என்று வந்த பெரியவர் சொல்லிமுடித்தார்.

"ஒருவனைப்பற்றி ஓரகத்திரு"

வந்த பெரியவர் இப்படியெல்லாம் சொல்ல, அவதானத்தோடும் ஆச்சரியத்தோடுங் கேட்டுக்கொண்டிருந்த முருகேசன், "ஐயா, உலகம் பலவிதமென்பது நிசந்தான்; இப்படியான பெண்ணும் உலகத்திலே இருக்கிறாளென்பது எனக்கு இன்றைக்குத் தான் தெரியும்; ஆனால், தாய் இப்படி யிருப்பதனால் பிள்ளையும் அப்படித்தானே இருப்பாளென்று நீங்கள் சொல்வது எப்போதும் பொருந்தாது; சேற்றிலே தாமரை முளைத்து வளர்ந்து பூப்பதுபோல், சில குடும்பங்களிலே தாய் பொல்லாதவளாக, மகள் அதற்கு நேர் விரோதமாக நல்லவளா யிருத்தலையும் அநுபவத்திற் பார்த்திருக்கிறேன்; அந்தப் பெண்ணுடைய தகப்பன் நல்லவரென்பதை நீங்கள் அவளைப்பற்றிச் சொல்லும் வார்த்தைகளைக் கொண்டு அயிர்க்கிறேன்; நான் எதற்காகச் சொல்லுகிறேனென்றால் கல்யாணம் பூரண நிச்சயமானபின்பு குழம்புமானால் அந்தப் பெண்ணுக்கும் ஈனந்தான், மாப்பிள்ளைக்கும் இழுக்குந்தான் என்பதையிட்டுத்தான் சொல்லு கிறேன்; அல்லாமலும், அந்தப் பெண்ணின் தாய் விரும்புவதற்கிசைந்து, சிலகாலம் பிறந்த வீட்டிலும், சிலகாலம் புகுந்த வீட்டிலும் தம்பதிகள் இருக்கலாகுமென்று இப்போதைக்கு உடன்படலாம்; பின்பு அந்தஅந்த நேரத்தில் எப்படியெப்படிச் செய்ய நேருமோ, அதற்கிசைய நடந்துகொள்ளலாமென்று நினைக்கிறேன்" என முருகேசன் சமாதானஞ் சொன்னான்; அவன் அப்படிச் சொல்லக் கேட்ட பெரியவர், "தம்பீ, நீர் சொல்வதிலும் உண்மையுண்டு; ஆனால் மாப்பிள்ளை தன் வீட்டிலிருந்து இல்லறத்தை இனிது நடாத்துவதைவிட்டுப் பெண் வீட்டிலிருந்து இல்லறம் நடத்தப்புகுவனேல், அது நல்லறமாக மாட்டாது; அதனால் மாப்பிள்ளையின் முயற்சி மகிழ்ச்சி மன ஆறுதல் முதலியவற்றிற்குப் பங்கம் வருதலோடு, பெண்ணுந் தன் பெற்றார் புத்தி கேட்டு நடப்பதோ, கணவன் கருத்தறிந்து நடப்பதோ என்ற சந்தேகம் பூண்டவளாய் இருதலைக் கொள்ளியினுள் எறும்பொத்து இடையிற் கிடந்து இடர்ப்பட நேரும். பெண்ணைப் பெற்றவர்கள் நற்குண நற்செய்கையோடு கூடியவர்களாயிருந்தாற் பெண் எந்த வீட்டிலிருந்தாலும் அதனால் தோஷமில்லையெனலாம்; ஆனால் நான் சொன்ன அந்த மனுஷியை மாமியாகக் கொண்ட வீட்டில், மருமகன் ஒருநிமிஷமாயினுந் தங்கியிருக்க முடியுமா? தம்பீ, இந்த விஷயத்தில் உம்மைக் காட்டிலும் வயதில் முதிர்ந்த எம்மைப் போன்றவர்கட்கு அநுபவம் அதிகமுண்டு, இவைகளையெல்லாம் யோசித்துத்தான் தம்பீ, படித்தவர்கள் ஒருவன் வேட்டகத்தில் வசித்த லால் வரும் ஆபத்தைக் குறித்துப் பின்வருமாறு பாடியிருக்கிறார்கள்:-

"வேட்டகந் தன்னிலே
மருகன்வந் திடுமளவில்
மேன்மேலும் உபசரித்து
விருந்துகள் சமைத்துநெய்
பால்தயிர் பதார்த்தவகை
வேண்டுவவெலாம் அமைப்பார்
ஊட்டமிகு வர்க்கவகை
செய்திடுவர் தைலமிட்டு
உறுதியாய் முழுகுவிப்பார்
ஓயாது தின்னவே
பாக்கிலை கொடுத்திடுவர்
உற்றநாள் நாலாகிலோ
நாட்டமொரு படியிறங்
குவதுபோல் மரியாதை
நாளுக்கு நாள்குறைவுறும்
நகைசெய்வர் மைத்துனர்கள்
அலுவல்பார் போ என்று
நாணாமல் மாமி சொல்வாள்
வாட்டமனை யாளொரு
துரும்பாய் மதிப்பள் அவள்
மட்டியினும் மட்டியன்றோ!

இப்படியெல்லாஞ் சொல்லப் பட்டிருத்தலால், அந்த மாமியார் வீட்டிலே எங்கள் மாப்பிள்ளை போயிருக்க வராது அல்லாமலும் தம்பி, பெண் அதுவும் விவாகஞ்செய்த அந்திய நாட்களிலே தன் புருஷன் வீட்டிலிருந்து கொண்டே இல்லறத்தை இனிது நடத்தப் பழக வேண்டும்; இவைகளையெல்லாம் உத்தேசித்தல்லவா ஔவைக் கிழவி "ஒருவனைப் பற்றி ஓரகத்திரு" என்று பெண்களுக்குப் பணித்துள்ளார்; ஆனதால், தம்பீ, முருகேசு, அந்தச் சமாதானப்பேச்சை மறந்துவிடு. கிழக்கேயுதிக்கிற சூரியன் திசைமாறி மேற்கே யுதித்தாலுமஅந்தச் சம்பந்தம் நடக்கப்போவ தில்லை; அதுகிடக்க, தம்பி, உம்மால் இந்தநேரத்திற் செய்யக்கூடிய உதவியை எங்களுக்குச் செய்யுந் தம்பீ; செய்தால் நாங்கள் உம்மைச் சும்மா விடமாட்டோம், அல்லாமலும், நீர்செய்த நன்றியை உள்ள நாள்மட்டும் மறக்கவும் மாட்டோம்" என்று குறையிரந்தார்; "ஐயா, பெரியவரே, நீங்கள் கவலைப்பட வேண்டாம்; என்னை இரந்து கேட்கவேண்டாம்; என்னாற் செய்யக்கூடியதைச் செய்கிறேன்; ஆண்டவனருளிருக்குமானால் எது தான் கைகூடாது" என்றுசொல்லிச் சற்றுநேரம் யோசித்துவிட்டுப் பின்னரும் அவர்களைப் பார்த்து, ஒரு உதவிமாத்திரஞ் செய்வீர்களா" என்று அவன் பெரியவரைக்கேட்க "ஒரு உதவியா! எங்களால் என்ன உதவி வேண்டுமோ அந்த உதவிகளை யெல்லாம் இப்பொழுது செய்யச் சித்தமாயிருக்கிறோம்" என்று பெரியவர் சொல்ல, "நீங்கள் எல்லீரும் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிநேரம் இங்கேதானே யிருந்துகொள்ளுங்கள்; உங்கள் மோட்டரதத்தை மாத்திரம் கொஞ்சநேரத்திற்கு என்னுடன் விடுங்கள்" என்று கேட்க, பெரியவர் மிகவும் நல்லதெனச் சொல்லி தங்களுடைய சாரதியைக் கூப்பிட்டு, "இரதத்தில் இந்த ஐயாவை யேற்றிச் சொல்லுகிற இடத்திற் கொண்டு போ என்று சொல்ல, சாரதி அப்படியே முருகேசனை அந்த இரதத்தில் ஏற்றிக்கொண்டு போவனாயினான்.

* * *

உலகம் பலவிதம்: 1947 ஜூலை 11 (முற்றொடர் - 23)

"பேட்டுக்கோழி கூவி விடியுமா?

மோட்டார்வண்டியிற் சென்ற முருகேசன் வேலாயுதன் வீட்டுத்தலைவாசலிற் போய் இறங்கி வேலாயுதனைக் கூப்பிடுதலும், அவன் விழித்தெழுந்து "தம்பீ, முருகேசு, இந்த அகாலத்தில் வந்ததென்ன; ஏதும் விசேஷமுண்டோ" என்று கேட்டான்; "வேறொரு விசேஷமுமில்லை அண்ணே, உங்கள் தங்கைச்சியின் கருமமாகத்தான் இந்த நேரத்தில் அவசரமாய் இங்கு வந்தேன்....." என்று அவன் சொல்லி முடிவதற்கிடையில் "தம்பீ, நீ குறை நினைத்தாலுஞ் சரி, அந்தச் சம்பந்தம் ஒரு போதுஞ் சந்தியாது, உந்த மாப்பிள்ளையைக் கல்யாணஞ் செய்துகொண்டு சங்கடப்படுவதைக் காட்டிலும் எங்கள் பிள்ளை நித்திய குமராயிருக்கச் சித்தமாயிருக்கிறாள்....." என்று வேலாயுதன் சொல்வதற்கிடையில், "இல்லை, அண்ணே, அந்தச் சம்பந்தமென்றால் இந்த நேரத்தில் நான் ஏன் வருவான்; அதைப்பற்றி ஏன் நினைக்கிறீர்கள்; இது வேறு சம்பந்தம், நல்ல சம்பந்தம், மிகவும் வாய்ப்பானது; ஏதோ தெய்வச் செயலால் வந்து சந்தித்தது" என்று முருகேசன் சொல்லிக்கொண்டு நிற்கும்போது, வேலாயுதன் மனைவியும் அங்கே வந்து, "முற்றத்தில் நிற்பானேன் இங்கே வந்திருந்து பேசலாமே" எனலும் இருவரும் தலைவாசலிற் போயிருந்து கொண்டு பேச, மனைவியுங் கேட்டுக்கொண்டு நின்றாள். முருகேசன் தான் அந்தநேரத்தில் வந்த நோக்கத்தை ஆதியோடந்தமாக வேலாயுதனுக்கும் மனைவிக்குஞ் சொன்னான்; "நீ சொல்வது சரி தம்பி, ஆனால் ஒரு கல்யாணம் பேசி நிச்சயப்படுத்தி எல்லா ஆயத்தமுஞ் செய்தபிறகு குழம்பிவிட்டதென் றால், குழப்பமடைந்த மாப்பிள்ளைக்கு வேறொரு பெண்ணையும் பெண்ணுக்கு வேறொரு மாப்பிள்ளையையும் உடனுக்குடன் கல்யாணம் செய்துவைக்க எந்தப் பெற்றாரும் பேசுவார்க ளல்லவா? விடியக் கல்யாணம் பிடி வெற்றிலை யை என்று நின்றால், அதற்கு உடன்பட முடியுமா? அந்தக் கல்யாணம் குழம்பினால். பின்னர் யோசித்து ஆறுதலாக அந்த மாப்பிள்ளைக்கு எங்கள் பெண்ணைக் கொடுக்கலாந்தான். உடனுக்குடன் ஒன்றுஞ் செய்ய முடியாதே, இது என்ன! கன்னிகையை கடையிலே வாங்கலாகும்மா? என்னவோ பெண்ணாய்ப் பிறந்தவா எனக்கொன்றுந் தெரியாது; பேட்டுக்கோழி கூவி விடியப்போவதில்லையென்று ஆண்பிள்ளைகள்தானே சொல்லுவார்கள்; எதனையும் தீர்க்கமாகயோசித்துச் செய்வது புத்தியாகும் என்று சொன்னாள்.

நீதியுங்கணவனும் நேர்படினுந் தத்தம் விதியின் பயனே பயன்"

"அப்படிநினைக்க வேண்டாம்; நான் உங்கள் மகள் விஷயத்திலே கல்யாணத்தரகனென்ற முறையில் நடந்து கொள்ளவில்லை; நீங்கள் அன்றொருநாட் சொன்னபிரகாரம் என் சகோதரி வேறு உங்கள் மகள் வேறென்று நான் நினைத்து நடக்கவில்லை அக்கா, இது நல்ல சம்பந்தம்; இப்படியொரு சம்பந்தம் இந்தப் பெண்ணுக்குக் கிட்டாதென்று சொல்லலாம். நான் சகல விஷயங்களையும் தீர விசாரித்த பின் நேரே இந்த நேரத்தில் உங்கள் வீட்டுக்கு வந்தேன்; கல்யாணம் செய்யவேண்டுமென்று மாப்பிள்ளை பகுதியார் அவசரப்படுவது வேறொன்றுக்குமல்ல; நாளை வரும் சுபமுகூர்த்தத்தில் அந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் நடக்கப்போகிறது. அதனாற்றான் இவர்களும் அதே முகூர்த்தத்தில் இந்த மாப்பிள்ளைக்குங் கல்யாணஞ் செய்துவைக்க வேண்டுமென்று அவசரப்படுகிறார்கள்; அவர் அவசரப்பட்டென்ன, இவர் அவசரப்பட்டென்ன; எவர் அவசரப்பட்டாலும் விதியின்படி தான் நடப்பது; அறியாமலா "நீதியுங்கணவனும் நேர்படினுந் தத்தம் - விதியின் பயனேபயன்" என்று பெரியோர் பாடி வைத்துப்போயினர். அக்கா, நீங்கள் கொண்ட சிந்தனையை விடுங்கள்....." என்று முருகேசன் சொல்லிமுடிப்பதற்கிடையில், வேலாயுதன் தன் மனையாளைப் பார்த்து, "ஏன் அதிகம் பேசுகிறாய்" எதனையும் தம்பி முருகேசு பொறுப்பில் நம்பி விடுவோம்; ஆண்டவனருளால் எல்லா மங்களமுமுண்டாகும்" எனச் சொல்லிய பின் முருகேசனைப் பார்த்து, "தம்பீ, பெண்டுகளின் மனம் ஒருநிலையில் நில்லாதென்று பெரியோர் சொல்வர்; என் பெண்டாட்டி பேச்சிற் குறையெண்ணாதே; எந்தன் பிள்ளையை உன் அருமையான உடன்பிறப்பென்று மதித்துக் கொண்டு ஆகவேண்டிய கருமத்தைப் பார்க்குதி; நீ எதனைச் செய்யச்சொல்கிறாயோ, அதனை நாங்களிரண்டு பேருஞ் செய்யச் சித்தமாகவிருக்கிறோம்; முதற் கடவுள்; இரண்டாவது எல்லாம் உன் பொறுப்பு" என்று சுருக்கமாகச் சொல்லி முடித்தான்; "அண்ணே ஒரு பொல்லாப்புமில்லை" என்று சொல்லி அவர்களிருவரிடத்திலும் மீண்டு வருவதாகச் சொல்லி விடைபெற்றுக்கொண்டு ரதத்திலேறி, சில நிமிஷங்களுள் தன் வீட்டையடைந்தான்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் வரவை மற்றையவர்களுடன் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த அந்தப் பெரியவர் அவனைக் கண்டமாத்திரத்தே, "என்ன தம்பி, காயா? பழமா?" என்று இதமாகக் கேட்க, "ஐயா இதில் அந்த முருகேசன் கிருபையிருக்க வேண்டும்; அது இருக்கும் போது இந்த முருகேசன் போனால், எந்தக் காயும் பழுக்காமலிருக்க முடியுமா?" என்று துணிவுடன் சொல்ல, கேட்ட எல்லோரும் சந்தோஷமடைந்தார்கள்.

"கெட்டார் தழையாரோ, கேடொருகால் நீங்காதோ"

தம்பீ முருகேசு மிகவும் சந்தோஷம்; நீர் எங்கள் மரியாதையைக் காத்து நீர் செய்யும் இந்த நன்றியை நாங்கள் சீவனுள்ள பரியந்தம் மறக்கமாட்டோம்; நல்லது, இனி பெண் எந்தப்பகுதி அவர்களுடைய குலங்குடி மரபு குணம் ஒழுக்க மென்றவைகளைப்பற்றி நாங்கள் அறியலாந்தானே" என்று அந்தப் பெரியவர் கேட்க, "ஐயா, நீங்கள் கேட்காமல் அறியாமல் வேறு யார் கேட்பது, அறிவது; நான் உங்களையும் அவர்களையும் நன்கறிவேன்; குலங்குடி மரபினால் அவர்கள் உங்களைக் காட்டிலும் எள்ளளவுங் குறைந்தவர்களல்லர்; நல்லாயிருந்தவர்கள் இப்போது கெட்டு நொந்து போனார்கள்; இது ஒன்றுதான் உங்களுக்கும் அவர்களுக்குமிடையே உள்ள பேதம்; அவர்களிடத்திற் பெண்ணுக்கென்று கொடுக்க அதிகஞ் சீதனமில்லை யென்பது நிசம்; ஆனால் அந்தப்பெண்ணெனிலோ, நீங்கள் பேசிக் கல்யாணம் குழம்பப் பெற்ற அந்தப் பெண்ணையும் நான் அறிவேன். அந்தப் பெண்ணைக்காட்டிலும் இந்தப்பெண் பதின்மடங்கு திறமென்றாலும் தவறாகாது; அதையிட்டு நான் சொல்வதென்னை? நாளைக்கு நீங்கள் நேரிற் காண்பீர்கள் தாமே; கிருகச் சித்திரம், கல்வியறிவு, ஒழுக்கம், இன்சொல், கொண்டான் குறிப்பறிந்து நடக்குங் கொள்கை, ஈகை முதலிய சகல இலட்சணங்களும் இந்தப் பெண்ணிடத்து இயற்கையில் அமைந்துள்ளன என்று சொன்னாலும் பிழையாகாது ஐயா, அதிகஞ் சொல்லி ஆவதென்ன? இச் சம்பந்தம் உங்கள் முயற்சியாலும், என் முயற்சியாலும் பொருந்தப்போகின்ற தென்றெண்ணாதீர்கள்; திருவருள் வழியே நடக்கிறதென நினைத்துக் கொள்ளுங்கள்; இந்தப் பெண் உங்கள் வீட்டிற் புக, அட்டலட்சுமியும் தாமே அங்குவந்தடையும்" என்று சொல்லி முடித்தான் முருகேசன். இப்படிச் சொல்ல, மற்றையவர்களோடு இவைகளை யெல்லாங் கேட்டுக்கொண்டிருந்த பெரியவர், "தம்பி, எல்லாம் எங்களுக்கு வெகு திருப்தி; வறுமையைப்பற்றிச்சொன்னீர்; அதையிட்டு எங்கட்கு ஒரு குறையுமில்லை; சீதனத்தைப் பற்றிக் காரியமில்லையென்று முந்தியே உம்மிடம் நாங்கள் சொல்லியிருக்கிறோம்; "கெட்டார் தழையாரோ, கேடொருகால் நீங்காதோ" என்றல்லவா உலகத்திலே சொல்லுவார்கள்; பணம் ஒருவரை விட்டுப்போனாலும் பின்பு தேடிக் கொள்ளலாம்; வறுமையுஞ் செல்வமும் மாறி மாறி நிகழ்வது உலக இயற்கை; ஆனாற் குலமுங் குணமும் ஒருமுறை பங்கப்பட்டாற் பின்னர் அவற்றை மீட்டலரிது; ஆனதால் அந்த இரண்டுந்தான் எந்தக் குடியிலும் ஆவசியகம் இருக்கவேண்டியவை" என்று சொல்லிப் பின்னரும் அவர், "இனி நாங்கள் கல்யாணத் திற்கு ஆகவேண்டிய ஆயத்தங்களையெல்லாஞ் செய்யலாந்தானே" எனலும், "செய்யலாம்; ஆனாலும், நீங்கள் நாளைக்காலை பெண் வீட்டிற்குப் போய், அவர்களை நேரிற்கண்டு செய்யவேண்டிய ஒழுங்குகளை யெல்லாஞ் செய்வதுதான் முறை; வேணுமானால் இங்கு நாளைக் காலை வந்தால் நானும் உங்களுடன் கூடிக்கொண்டு அங்கே வரலாம்" என்றான்; கேட்ட பெரியவரும் மற்றையோரும் "நீர் சொல்வது முழுவதும் நியாயம்; நாங்கள் நாளைக்காலை முதல் இங்கே வருவோம்" என்று சொல்லி முருகேசனிடம் விடைபெற்றுப் போயினர்; முருகேசன் புலரிக்காலத்தில் நித்திரை விட்டெழுந்து வேலாயுதன் வீட்டிற்குப்போய், அங்கே மாப்பிள்ளை பகுதியார் வரவிருக்கிறார்க ளென்பதைச் சொல்லி, அவர்களை வரவேற்று உபசரிப்பதற்காகிய ஆயத்தங்கள் செய்ய வேண்டு மென்பதையும் தெரிவித்துவிட்டு மீண்டான்.

காத்திரா விவாகம்

சங்கேதப்படி, மாப்பிள்ளை வீட்டுக்காரர் முருகேசனையுங் கூட்டிக்கொண்டு பெண் வீட்டிற்குப் போனார்கள்; வேலாயுதனும் மனைவியும் வந்தவர்களை இயன்றவரையில் நன்கு உபசரித்தார்கள்; மாப்பிள்ளை வீட்டிலிருந்து வந்த பெண்கள் சிலர் பெண்ணைப்பார்க்க விரும்பியதனால், வேலாயுதன் மனைவி அவர்களை அழைத்துக்கொண்டு போய்ப் பெண் இருக்கும் அறையில் விடுதலும், பரிமளம் அவர்களை அன்புடன் வரவேற்று, இன்சொற் கூறி உபசரித்தாள்; பெண் பார்க்கவந்த பெண்கள் பரிமளத்தைப் பாதாதிகேசம் வரையில் அவதானமாகப் பார்த்தார்கள்; பாராட்டினார்கள்; அவளுடைய இன்சொல்லைக் கேட்டு மெச்சினார்கள்; இதமான ஊடாட்டத்தைக் கண்டு உவகை கொண்டார்கள்; "பெண்ணுக்குப் பெண்ணாசை கொள்ளும் பெண் இந்தப் பெண்" என்று பெண் பார்க்க வந்தவளுளொருத்தி மற்றவளுக்குச் மெல்லச் சொல்லி மெச்சினாள்; மாப்பிள்ளை வீட்டிலிருந்து வந்தவர்களெல்லாரும் பெண்வீட்டார் செய்த உபசாரங்களைப் பெற்றுக் கொண்டு அவர்களிடம் விடைபெற்று மீண்டார்கள்; ஆனால், முருகேசன் மாத்திரம் அந்த நேரம் அவர்களுடன் மீண்டு செல்லாது வேலாயுதன் வீட்டில் நின்று, கல்யாணத்திற்கு வேண்டிய சில ஆயத்தங்களைச் செய்து, பெண்வீட்டார்க்கு உதவிபுரிந்தான்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமகன் பகுதியார் பெண் வீட்டாருக்குப் போதிய பொருளுதவியும் ஆளுதவியுஞ்செய்து கல்யாணத்தை இடாம்பீகமாக நடத்தவேண்டுமென்று தெரிவிக்க வேலாயுதனும் மனைவியும் அதற்கு உடன் பட்டனர்; சகல ஆயத்தங்களும் வெகு துரிதமாக நடைபெற்றன; முருகேசனே பெண் வீட்டில் நின்று ஆகவேண்டிய கருமங்களையெல்லாம் நடத்தினான்; மனமுண்டானால் எந்தக் கருமந்தான் விரைவிற் கைகூடாது? குறித்த முகூர்த்தத்திலே செல்லச் சிரஞ்சீவி வெ. குழந்தைவேற்பிள்ளைக்கும், திருவளர்செல்வி வே. பரிமளத்தம்மாளுக்கும் விவாகம் அக்கினி சாட்சியாக, சபையோர் சாட்சியாக, வேதப் பிராமணர் சாட்சியாக, சந்திரசூரியர் சாட்சியாக இனிது நிறைவேறியது; "பெண்ணுக்கேற்ற மாப்பிள்ளை மாப்பிள்ளைக்குத் தக்க பெண்" என்று அந்த விவாக சோபனத்தில் சமூகந்தந்த சில பெண்கள் பேசினார்கள்; தம்பதிகள் பதினாறு பேறுகளையும் பெற்று இன்புற்று இனிது வாழ்வார்களாக என்று அங்குச் சமூகமாயிருந்த காலங்கண்ட முதியோர் தம்பதிகளை வாழ்த்தினார்கள்; விவாகம் நிறைவேறிய அன்று பிற்பகல் மணமக்களை மாப்பிள்ளை வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனார்கள்; அங்கே பலவகையான கொண்டாட்டங்களும், உபசாரங்களும் நடைபெற்றன; பரிமளம் பெரும்பான்மையும் தன் கணவன் வீட்டிலேயே இருந்தாள்; குழந்தைவேற்பிள்ளையும் தன் உத்தியோகக் கடமையைக் கிரமமாகச் செய்து கொண்டு இல்லறத்தை இனிது நடத்துவானாயினான்.

* * *

உலகம் பலவிதம்: 1947 ஜூலை 18 (முற்றொடர் - 24)

பிரயாணம்

கொழும்பிலிருந்து சிங்கப்பூருக்குக் கப்பல் புறப்படுகின்றதென்ற செய்தியையும் புறப்படுந் தேதியையும்கொழும்புமலாய்நாட்டிற்கிடையேயோடுங் கப்பல்களுக்கு "ஏஜன்ற்" (பிரதிநிதி) ஆகவுள்ள அந்த நாதனென்பவர் முந்தியே வந்து கண்ணகியம்மை வீட்டில் தெரிவித்தார். மேலும் யாழ்ப்பாணத்திலிருந்து தக்க குடும்பத்துப் பெண்களும் பிள்ளைகளும், அந்தக் கப்பல் மூலமாகச் சிங்கப்பூருக்குப் புறப்படுகிறார்களெனவும், தாமும் அந்தக் கப்பலில் சிங்கப்பூருக்குப் பயணஞ் செய்யவேண்டிய கருமமுண்டெனவும், ஆனதால் ஆண்துணையில்லாமலும் பல சௌகரியங்களோடும் பிரயாணஞ் செய்யலாகுமெனவும், அந்த நாதன் சொல்லிவிட்டுப் போயினார்; புறப்படவேண்டிய தினத்தன்று கண்ணகியம்மை, மகள் சிவபாக்கியம், பாக்கியலட்சுமி, இராமன் என்னும் பெயருடைய ஒரு வேலைக்காரனாகிய இத்தனை பேரும் புறப்பட்டார்கள்; பாக்கிய லட்சுமியின் தாயாகிய சிவாகாமியம்மையும் அவர்களைச் சேர்ந்த சிலரும் கண்ணகியம்மை சிவபாக்கியமென்னு மிவர்களின் சுற்றமித்திரரும் புகைரதஸ்தானத்திற்கு வந்து அந்த நால்வரையும் புகைரதத்திலேற்றிப் பிரியாவிடை பெற்றுப் பயணமனுப்பினர். அவர்கள் நால்வரும் அடுத்தநாட் காலை கொழும்புப் புகைரத ஸ்தானத்தில் இறங்க, முந்தியே அவர்கள் வரவை எதிர்பார்த்துப் புகைரத ஸ்தானத்தில் வந்து நின்றவர்களாகிய கண்ணகியம்மையின் சுற்றத்தவர்கள் அந்நால்வரையும் ஒரு மோட்டார் ரதத்தில் ஏறச்செய்து; தாங்களும் இன்னொரு மோட்டார் ரதத்தில் ஏறிக்கொண்டு அவர்களைத் தங்கள் வாசஸ்தானத்துக்கு அழைத்துக் கொண்டுபோய், கப்பல் புறப்படுதற்கு இரண்டு நாள் இருந்தமையினால் அந்த இரண்டுநாளும் வேண்டியவாறு உபசரித்தனர்; கொழும்பு நகரத்தின் சிறப்பையும் அந்தநகரிலுள்ள விசேஷங்களையும் கண்ணகியம்மை சிவபாக்கியம் பாக்கியலட்சுமி என்னும் மூவருக்கும், அங்குள்ள அவர்களின் சுற்றத்தவர்கள் மோட்ட ரதமூலமாக அழைத்துக் கொண்டுபோய்க் காட்ட, கண்ட இவர்களும் அற்புதமடைந்தார்கள். மூன்றாநாட் கப்பல் புறப்பட, இந் நால்வரையும் அவர்கள் நீடித்த பயணத்திற்காகவேண்டிய உணவுப்பொருள் முதலியவற்றையும் ஆயத்தம் பண்ணிக் கொடுத்து, அவர்களைக் கப்பலிற் கொண்டு போய் ஏற்றிவிட்டு அவர்களிடத்து விடை பெற்றுக்கொண்டு தம் வாசஸ்தானத்திற்கு மீண்டார்கள்; கப்பல் குறித்த நேரத்திற் புறப்பட்டது; அக்கப்பலிலுள்ள பிரயாணிகளுள் ஒரு பெருந்தொகையானவர்கள் யாழ்ப்பாணத்தவர்களாகவே யிருந்தார்கள்.

"அந்த அச்சந்தான் இது"

கப்பல் கடலிற் போம்போது, அக்கப்பலிலுள்ள பிரயாணிகளுள் அநேகர் மகிழ்ச்சியுடன் காணப்பட, சிவபாக்கியமும் பாக்கியலட்சுமியும் மாத்திரம் அச்சத்தோடு கூடியவர்களாகக் காணப்பட்டார்கள். பிரயாணிகளுட் பலர் கப்பலைப்பற்றியும் அது ஓடுங் கடலைப் பற்றியும், தாங்கள் முன்னர்க் கப்பற் பிரயாணஞ் செய்துள்ள அநுபவத்தைப்பற்றியும், பிற கருமங்களைப்பற்றியும் பரஸ்பரம் கலந்து பேசிக்கொண்டிருப்ப சிவபாக்கியமும் பாக்கிய லட்சுமியும் மாத்திரம் வார்த்தையாடாதவர்களாய் வெருட்சியோடுகூடிய முகத்தினராய்க் காணப் பட்டனர்; அவர்களிருவரும் ஒருபுறமாக விருக்கும் போது, கண்ணகியம்மாள் உறங்கிக் கிடந்தாள்; சமீபத்தில் எவருமிலர். இராமன் கப்பற் பிரயாணஞ் செய்த அநுபவமுடையவனாதலின் கப்பலிலே தான் போகக்கூடிய இடங்களிலெல்லாம் போய்த்திரிவான்; குறிக்கப்பட்ட நேரத்திற்றான் இவர்களிருக்குமிடத்திற்கு வருவான்; அவனும் அந்த நேரத்திலே இவர்களுக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீபத்திலில்லை; அப்போது பாக்கியலட்சுமி சிவபாக்கியத்தைப் பார்த்து, "அக்கா, என்ன ஞாயமென்று தெரியவில்லை; கொழும்பு வந்து சேர்ந்த நாள்தொட்டு உண்டான பயம் வரவர அதிகப்படுகிறதே யல்லாமல் குறைந்தபாடில்லை; என்னையறியாமல் என் மனம் பயப்படுவதற்கு ஏதுவென்ன அக்கா, எனக்கு ஒன்றும் புலப்படவில்லையே" என்று கேட்டாள்; சிவபாக்கியமும் சிறிதுநேரஞ் சிந்தித்துவிட்டு, பாக்கியலட்சுமியை அன்புடன் நோக்கி, "தங்காய் உமக்கு மாத்திர மென்றெண்ணிக்கொள்ளாதீர்; எனக்கும் கொழும்பிற்கு வந்துசேர்ந்தபோது தொட்ட பயம் இப்பொழுது அதிகப்பட்டு வருகிறது; நான் அதை உமக்குக் காட்டாமலே உம்முடன் ஊடாடி வருகிறேன்; இங்கே நாங்கள் பயப்பட வேண்டிய காரணம் எதுவுமில்லை; தங்காய், பெண்களாகிய எங்களுக்கு மடம் நாணம் அச்சம் பயிர்ப்பெனப்படும் நான்கு குணங்களுண்டென்று நூல்களிற் சொல்லப்பட்டிருக்கிறதே; அந்த அச்சந்தானே இப்பொழுது எங்களைப் பிடித்துள்ளதென்று யோசிக்கிறேன், தங்கைச்சி" என்றாள்; "யோசிப்பதென்ன அக்கா, அந்த அச்சந்தான் இது; இதிற் சந்தேகமில்லை; பெண்பாலார் முன்னர்த்தாங் காணாத ஒருபெரும் பொருளைக் காட்சியைக் காணும்போதும், அந்நியரைக் காணும்போதும், காரணமில்லாமல் அவருள்ளத்தில் பிறக்கும் பயந்தான் அச்சமென்று புத்தகங்களிற் படித்திருக்கிறேன்; இதனை அது என்றுதான் நினைக்கிறேன்" என்றாள் பாக்கியலட்சுமி; கேட்ட சிவபாக்கியமும், "நீர் சொல்வதுதான் நிசம்; இப்பொழுது நாங்கள் அச்சத்தின் இயல்பை யறிந்து கொண்டோமாதலால், தங்காய் எங்கள் அகத்திலே அச்சமிருந்தாலும் புறத்தே காட்டாமல் நடந்து கொள்ள வேண்டும்" என்று சொல்லி ஒருவாறு மகிழ்ச்சியோடிருப்ப, பாக்கியலட்சுமியும் அப்படி யேயிருந்தாள்; இரண்டு தினங்கள் செல்வதற்கிடையில் பிரயாணிகளுட் பல பெண்கள் அவர்களுடன் அறிமுகமாகி அன்பு பாராட்டி வருவாராயினர்; இதனால் அவர்களுக்குள்ள கப்பற் பிரயாணச் சிரமம் புலப்படாதொழிந்தது.

"கேட்டதற்கு நமஸ்காரம்"

மேல் வகுப்பிற் பிரயாணஞ் செய்வோர் அந்திநேரத்திலே கப்பலின் மேற்றட்டிலே கடற் காற்றை விரும்பி வந்திருப்பது வழக்கம்; கண்ணகியம்மை சிவபாக்கியம் பாக்கியலட்சுமியாகிய இம்மூவரும் இடையிடையே மேற்றட்டிலே வந்து கடற்காட்சியைப் பார்த்துக் கொண்டிருப்பதுமுண்டு; அந்த நேரத்தில் இராமனும் அவர்களுக்குச் சமீபமாக வந்து நிற்பான்; ஒருநாள் சிவபாக்கியம் தேகத்தில் அலுப்படைந்தமையால் மேலே வராது தங்கள் "காம்ப" றையிற்றானே படுத்துக் கொள்ள, கண்ணகியம்மாளும் பாக்கியலட்சுமியும் மேற்றட்டிலே வந்திருந்தார்கள்; இராமனும் அவர்களுக்கு அயலாக உலாவிக்கொண்டு திரிந்தான்; அவன் இடையிற் போய்ச் சிவபாக்கியத்தையும் பார்த்துச் சிவபாக்கியம் அசைவற நித்திரை செய்வதைக் கண்டு மீண்டு வந்து சிவபாக்கியம் உறங்குவதைக் கண்ணகியம்மைக்கும் பாக்கியலட்சுமிக்குஞ் சொல்லிவிட்டு அங்கேதானே உலாவிக்கொண்டு திரிந்தான்; நேரம் 6.30 மணிவரை யிலிருக்கும், பூரணை நிலாவோடு கூடிய இரவு; சந்திரோதயத்தைப் பார்த்துக் கண்ணகியம்மையும் பாக்கியலட்சுமியும் அக்காட்சியைப் பாராட்டிப் பேசிக் கொண்டிருந்தனர்; அவர்களிருக்குமிடத்திற்குச் சிறிது தூரத்தில், ஒரு தமிழ் மகன் கெம்பீரமான தோற்றமுடையவன், அயிரோப்பிய உடை தரித்தவண்ணம், ஒரு சார்மணை நாற்காலியில், வாயிற் "சிகரற்" கௌவிப் புகைத்தபடி ஏதோ யோசித்துக்கொண்டிருந்தான்; இராமன் அந்த ஆளிருக்குமிடத்திற்குச் சமீபமாகப் போதலும், அந்த ஆள், "இராமனை இப்படி வாரும்" என்று கூப்பிட, அவன் அந்த ஆள் முன்னிலையிற் போய் நின்றான்: "நீர் எந்தவூருக்குப் போகிறீர்; அதிலிருக்கும் அந்த அம்மையாருக்கும் மற்றவர்களுக்குந் துணையாக வருகிறீரோ, அந்த அம்மையார் எனக்கு அறிமுகமானவர் போற் புலப்படுகிறது" என்று பல கேள்விகளைக் கேட்டார்; இதற்கிடையில் ராமன் கையில் அந்த ஆள் ஒரு சிகறற்றைக் கொடுக்க, அவன் நன்றிகூறி வாங்கிப் பற்றவைக்காது கையில் வைத்துக்கொண்டு "ஐயா, அந்த அம்மாளும் பிள்ளைகளும் சிங்கப்பூருக்குப் போகிறார்கள்; நான் அவர்களுக்குத் துணையாக வந்தேன்; அவர்கள் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்; அந்த ஆச்சியின் பெயர் கண்ணகியாச்சி யென்று சொல்லுவார்கள்; நான் பெரியம்மா என்றே கூப்பிடுகிறேன்....." எனலும், "நல்லது, உம்முடைய பெயரென்ன" என்று அந்த மனுஷன் கேட்க, என் பெயர் திரு. இராமசாமிப்பிள்ளை; ஆனால், என்னை எல்லாரும் இராமன் என்று தான் கூப்பிடுகிறார்கள்" எனலும், அந்த ஆள் சிரித்துக்கொண்டு, "அந்தப் பெரியம்மாளின் பக்கலில் இருக்கும் பிள்ளை அந்த அம்மாளின் மகளா, பெயரென்ன" என்று வினாவ, "ஓம், அந்தப்பிள்ளையும், ஒரு மகள் தான்; பெயர் பாக்கியம்; நான் சின்னம்மா என்று அழைப்பது" என இராமன் விடை சொன்னான்; "என்ன நோக்கமாகச் சிங்கப்பூருக்கு இப்பொழுது இவர்கள் புறப்பட்டிருக்கிறார்கள்" என்று அந்த ஆள் கேட்க, "சிங்கப்பூரில் இந்த ஆச்சியினுடைய மகன் உத்தியோகமாகவிருக்கிறார்; அவர் வெகு காலம் ஊருக்கு மீண்டுவரவில்லை; வரும்படி இவர்கள் காகிதமெழுதிய போது அவர் தமக்கு இப்பொழுது விடுதலை கிடையாதென்றும், ஆனதால் தாயாரும் சகோதரியும் அங்கே வந்தால் நல்லதென்றும் தெரிவித்தாராம்; அதனாலேதான் ஐயா, இவர்கள் இப்பொழுது அங்கே புறப்பட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகிறார்கள்" என்றான்; "அப்படியா மிகவும் நல்லது; அவர்களுக்கு என்னை விளங்காவிட்டாலும் நான் அவர்களை அறிவேன்; இந்த நேரத்தில் அவர்களுக்கு ஏதுந் தேவையென்றால் நான் செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்று அந்த ஆள் சொல்ல, "அப்படி ஏதும் உதவி வேண்டுமென்று நான் நினைக்கவில்லை" சகல ஆயத்தங்களோடும் பயணம் புறப்பட்டிருக்கிறார்கள்; இருந்தாலும் அந்த ஆச்சியை வேணுமானால் போய்க் கேட்கிறேன்" என்று இராமன் சொல்ல, "போய்க் கேட்டுவந்து சொன்னால் நல்லது" என்று அந்த ஆள் சொல்ல, இராமன் உடனே கண்ணகியம்மையும் பாக்கியலட்சுமியு மிருக்குமிடத்திற்போய் விபரம் முழுவதையுஞ் சொல்லி, அவர் கேட்கச்சொன்ன விஷயத்தையுங் கேட்டான்; "ஆரோ, நம்மை யறிந்தவராக விருக்கவேண்டும்; இப்பொழுது எங்களுக்கு ஒன்றும் வேண்டியதில்லை, தேவையான வேளை தெரிவிக்கலாம்; கேட்டதற்கு நமஸ்காரம் என்று அவரிடம் போய்ச் சொல்லு" என்று கண்ணகியம்மை சொல்ல, இராமன் அப்படியே போய் அந்த ஆளிடஞ் சொல்ல; கண்ணகியம்மையும் பாக்கியலட்சுமியும், சிவ பாக்கியமிருக்கு மிடத்திற்குப் போயினர்.

* * *

உலகம் பலவிதம்: 1947 ஜூலை 25
(முற்றொடர் - 25)

"கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்!"

பாக்கியலட்சுமியும் கண்ணகியம்மையும் சிவ பாக்கியமிருக்குமிடத்திற்குப் போய்விட, இராமன் மாத்திரம் தட்டிலே நிற்க, அந்த ஆள் இராமனைக் கூப்பிட, இராமன் போனான்; "இராமன், நீ இன்னமும் இராப்போசனஞ் செய்யவில்லையே, இல்லாவிட்டால் என்னுடன் போசனஞ் செய்யலாம்" எனலும், "இல்லை ஐயா, போசனத்திற்கு இன்னமும் நேரமிருக்கிறது; நான் படுக்கைக்குப் போகும்போதுதான் உண்பது வழக்கம்; சற்றுச் செல்லப் போய், அங்கே உணவு கொள்வேன்; வேணுமானால், நாளைக்கு ஆச்சியிடஞ் சொல்லிவிட்டு உங்களிடம் உண்ணுவேன்; குறையெண்ணாதீர்கள்" என்று இதமாகச் சொன்னான் இராமன். "இராமன், கேட்கிறேனென்பதையிட்டு விபரீதமாக எண்ணி விடாதே; உங்கள் ஆச்சியின் அருகில் நின்ற அந்தச் சின்னம்மாளுக்கு விவாகமாய்விட்டதா" என்று அந்த ஆள் கேட்க, "இன்னமும் ஆகவில்லை" என்றான் இராமன்; "விவாகமாகு முன் தூர தேசத்திற்குப் புறப்பட்டுப் போகும் வழக்கம் எங்களூரிலே அதிகமாக இல்லையே. அப்படியிருப்ப இவர்கள் இப்பொழுது எதற்காகப் புறப்பட்டுப் போகிறார்கள்? இவர்களுடைய சொந்தக்காரர் யாரும் அங்கிருக்கிறார்களோ? இல்லையேல் இந்தப்பெண்ணை அங்கு கல்யாணஞ் செய்து கொடுக்கக் கூட்டிக்கொண்டு போகிறார்களோ" என்று அந்த ஆள் கேட்க, "இவைகளைப்பற்றிய விபரம் எனக்கு அதிகம் தெரியாது ஐயா; பயணம் புறப்பட இரு வாரங்களுக்கு முந்தித்தான் நான் இவர்களுடைய வீட்டில் வந்து சேர்ந்தேன்; ஆனாலும் இவர்கள் எனக்கு முந்தியே அறிமுகமானவர்கள். இவர்கள் வீட்டிற்கு அயலிலேதான் நாங்களிருப்பது; இந்த ஆச்சியினுடைய மகனொருவர் அத்தேசத்தில் உத்தியோகமாக யிருக்கிறாரென்றும்; அவரைப் பார்க்கத்தான் இவர்கள் போகின்றர்களென்றுமே அறிகின்றேன்; வேறு விபரங்கள் அறியவேணுமானால் ஆச்சியைக் கேட்டுச் சொல்லட்டுமா?" என்று இராமன் கேட்க, "இல்லை நான் வினாவியதாக நீயொன்றுங் கேட்க வேண்டாம்; நீயாகக் கேட்பதுபோற் கேட்க முடியுமானாற் கேள்" என்று மனுஷன் சொல்ல, இராமன்; நானாகக்கேட்பது முறையில்லாவிட்டாலும் அந்த ஆச்சி, கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன் என்று என்னைக் கண்டிப்பார்கள்" என்று பதில் சொல்லிவிட்டு, "அதுசரி நீங்கள் எதற்காக அவர்கள் வரலாற்றையறிய விரும்பி அதை நானறியச் சொல்லி" என்று கேட்க, அந்த ஆள்; வேறொன்றுமல்ல, ராமன் என்னை அவர்கள் நன்கு அறியாவிட்டாலும், நான் அவர்களையும் அவர்கள் குடும்பப் பெருமையையும் நன்கறிவேன்; நானும் மலாய்நாட்டிலேதான் உத்தியோகமாகவிருந்து, அங்கிருந்து ஊருக்கு மீண்டு சிலகாலம் ஊரிலே வசித்து, மீளவும் மலாய் நாட்டிற்கே இப்பொழுதுபோகிறேன்; என் தாரத்தை இழந்து விட்டமையினாற் புநர் விவாகஞ் செய்ய உத்தேசித்திருக்கிறேன், முந்திய தாரத்தினாற் பிள்ளைகளுமில்லை; என்னிடத்திற் போதிய பணம் பண்டம் வீடுகள் நிலம்புலம் மெல்லா முண்டு; ஊரிலிருக்கும்போது விவாகம் பண்ணிக் கொள்ள முயற்சி செய்தும், விதியில்லாமையினாற் போலும் கைகூடவில்லை; உங்கள் ஆச்சி உடம்பட்டால் ஆச்சியின் மகளைக் கல்யாணஞ் செய்யலாமென்பது உத்தேசம்; இதுதான் உண்மை" என்று விபரமாய் அந்த மனுஷன் சொன்னான்; இராமன் சற்று நேரம் யோசித்துவிட்டு "ஐயா, அந்த ஆச்சி நல்ல மனுஷி, நீங்கள் ஆச்சிக்கு மாத்திரம் உங்கள் நோக்கத்தை வெளியிடலாம்; ஆச்சி அதற்கு உடன்பட்டாற் செய்யலாம். இல்லையேல் விடலாம்; அதில் ஒரு குறையுமில்லையென எண்ணுகிறேன்" என்றான்; "ஆச்சி" யோடு எப்படி நான் முதற் பேசுவது; என்னை அவர்களுக்கு விளங்காதே" என்று அந்த ஆள் சொல்ல, நாளை அந்திப்போதில் ஆச்சியை இந்தப்பக்கம் தனியே வந்திருக்கத்தக்கதாக நான் செய்து வைக்கிறேன்; வேணுமானால் நானும் அந்த நேரம் இங்கேதானே உலாவித்திரிவேன்; ஆச்சியோடு நீங்கள் பேச விரும்புவதை என் மூலமாக ஆச்சிக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவிக்கலாம்; ஆச்சி சம்மதமானாற் பேசலாம், இல்லையேல் விடலாம்; இதில் எவ்வகையான சங்கடமுமில்லை ஐயா" என்றான் இராமன்; "நீ சொல்வது நல்ல உபாயந்தான்" என்றான் அந்த மனுஷன், பின்னரும் சிறிதுநேரம் அங்கிருந்துவிட்டு இருவரும் தத்தம் இடங்கட்குப் போயினர்.

"தெய்வமும் தன்னைப் போற்றுவோர்க் கிரங்கும்"

இராமன் கண்ணகியம்மை முதலியோர் இருக்குமிடத்திற்குப் போய்ப் போசனம் முடித்து விட்டு, சற்று நேரம் அங்கே நிற்கும்போது கண்ணகி அவனைப் பார்த்து, "ராமன் இன்று நீ உண்ண வருதற்கு நேரஞ் சென்றுவிட்டது; என்ன பொழுது போக்கு" என்று கேட்க, இராமன் வேறொன்றுமில்லை, ஆச்சி, கப்பலின் மேல் தட்டிலே நல்ல காற்று வீசுகிறது; அருமையான நிலவு எறிக்கின்றது சற்றுநேரம் அங்கேநின்றேன்; அங்கே உங்களை அறிந்தவராம் ஐயா ஒருவர், அவர் நல்ல மனுஷன் போலத் தோற்றுகிறார்; அவரும் தனியேயிருந்தார்; என்னோடு பேச விரும்பினார்; அதனாற் கொஞ்சநேரம் நானும் அவரும் பேசிக்கொண்டிருந்தோம்; அதனாலேதான் ஆச்சி நேரஞ் சென்றுவிட்டது" என்றான் ராமன்; "என்ன பேசினீர்கள்; நாங்கள் அறியலாமோ" என்று கண்ணகை கேட்க, "நீங்கள் அறியாமல் வேறு எவர் ஆச்சியறிவது; உங்களுக்குச் சொல்லாமல், வேறு ஆருக்கு நான் சொல்வது; அந்த மனுஷன் ஒரு நல்லவர்போலக் காணப்படுகிறார்; பெருங் குணமுடையவர் போலவும் தெரிகிறது; அவர்களுக்கு உங்களைப்பற்றி நல்லாய் விளங்கும்; உங்கள் குலம் மரபு ஒழுக்கம் பெருமையெல்லாவற்றையும் பாராட்டிச் சொன்னார்; நானுங் கேட்டுக்கொண்டிருந்தேன்" ஆச்சி என்றான்; இராமன் சொன்ன இந்த வார்த்தைகளைக் கண்ணகியம்மை பெரிதும் விரும்பினாள்; தங்கள் குடும்பத்தைப்பற்றிப் பாராட்டிச் சொன்னமையினாலே, கண்ணகியம்மைக்கும் அந்த ஆளைப்பற்றி ஒரு நல்ல எண்ணமுண்டாயிற்று. தெய்வமே தம்மைப் போற்றுபவர்க்கிரங்கி அருள்புரியுமென்றால், இந்தக் கண்ணகியம்மை தங்கள் குடும்பத்தைப் பெரிதும் பாராட்டிப் பேசிய அந்த மனுஷனை நல்லவனென்று நினைப்பதும் அவனை விரும்புவதும் நூதனமல்லவே; "இராமன், சின்னத் தங்கைச்சியும் நானும் மேல் தட்டில் இருந்தபோது, நீயும் நிற்கும்போது, சற்றுத் தூரத்திலே ஒருசாய்மனையிற் சாய்ந்தபடியிருந்த அந்த ஆள்தானே நீ சொல்லுகிற ஆள்" என்று கண்ணகி கேட்க, "ஆம் ஆச்சி, அவர் தான்" என்றான் இராமன்; "அந்த ஆளை நானும் ஊரிலே எப்போதோ பார்த்த ஞாபகமாயிருக்கிறது; ஆனாலும் இன்னாரென்பது நல்லாய்ப் புலப்படவில்லை; போகட்டும், வேறு என்ன கேட்டார்" எனலும், "வேறு அதிகங் கேட்கவில்லை; நீங்கள் எந்தவூருக்குப் போகிறீர்களெனவும், போகும் நோக்கமென்ன எனவும், உங்களோடு நின்ற தங்கைச்சி உங்களுடைய மகளோ எனவும், தங்கைச்சிக்கு இன்னமும் விவாகமாகவில்லை யோ எனவும், விவாகமாகாத குமர்ப் பிள்ளையைத் தூரதேசத்திற்குக் கூட்டிக்கொண்டு போதற்கு ஏதோ ஞாயமிருக்கவேணுமெனவும், நீ இவர்களுக்குத் துணையாகப் போகிறாயோவெனவும் இன்னும் ஏதோ கேட்டார்; முழுவதும் ஞாபகமில்லை ஆச்சி" என்று சொல்லிமுடித்தான் இராமன்; "இராமன், அவர் தம்மைப்பற்றி உனக்கு ஏதுஞ் சொல்லவில்லையோ" என்று கண்ணகியம்மை கேட்க, "அவரைப்பற்றி நான் விசாரித்தேன்; அவர் தம்மைப்பற்றி எனக்குச் சொன்னார்; தாம் மலாய்நாட்டிலே முந்தி வேலையாக இருந்ததென்றும், பின் சிலமாசம் ஊரிலே வந்து இருந்ததென்றும், தமக்கு வீடு வாசல், பொருள் பண்டம், காசு பணம், நிலம் புலம், இனசனம் எல்லாமுண்டென்றும், ஆனால் தம்முடைய முந்திய தாரம் மோசம்போய் விட்டதென்றும் அதற்குப் பிள்ளையில்லை யென்றும், தாம் ஊரிலிருந்த போது இரண்டா முறை கல்யாணஞ்செய்ய முயற்சி செய்ததாக வும், ஆனால் விதியில்லாமையால் கல்யாணஞ் சந்திக்கவில்லை" யென்றுஞ் சொன்னார்; அது மாத்திரமல்லாமல், "ஆச்சி, அவர் தம்மளவில் ஏதோ யோசித்தார்; அவைகளை நான் உங்களுக்குச்சொல்ல விரும்பவில்லை ஆச்சி" என்று இராமன் சொல்லுதலும், "என்ன யோசித்தார், என்ன சொன்னார், அவைகளைப்பற்றிச் சொல்லவொண்ணாதா" என்று கண்ணகை கேட்க, "அவர் சொன்னதும் கேட்டதும் முந்திச் சொல்லிவிட்டேன் ஆச்சி, யோசித்ததென்ன இப்படியேயிருந்து செத்துப்போனால் இந்தப் பொருள் பண்டம் காணிபூமி யெல்லாம் அநியாயமாக அந்நியருக்குப் போய்ச் சேருமே யென்பதைப் பற்றித்தான் அவர் யோசித்திருக்க வேண்டுமென்று நான் எண்ணுகிறேன்" என்றான் இராமன்; "அவருடைய பெயரென்ன? நீ கேட்க வில்லையா" என்று கண்ணகியம்மை வினாவ, "ஆச்சி, ஒரு பெரிய மனுஷனை உம்முடைய பெயரென்ன என்று நான் கேட்பது முறையல்லவென நினைத்து நான் கேட்கவில்லை; நீங்கள் கேட்டுவரச்சொன்னால், நாளைக்குக் கேட்டு வந்து சொல்லுகிறேன்" என்று இராமன் கூற, "நான் கேட்பதும் முறையல்ல, அவர் தாமாகச் சொன்னால் கேட்டுக்கொள்" என்றாள் கண்ணகியம்மை.

"அது எனக்குத் தெரியாது"

ஆச்சி, அவர் என்னோடு தம் வரலாற்றை யெல்லாம் சொல்லியநேரந்தொட்டு எனக்கு ஒரு யோசனை பிறந்திருக்கிறது; அதனை உங்களுக்குச் சொன்னால் நீங்கள் குறையெண்ணீர்களா" என்று கேட்க, "இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமன் நான் அப்படிக் குறையெண்ண மாட்டேன்; உன்னையும் என் பிள்ளைபோலேதானே எண்ணி நடக்கிறேன், நீ பயப்படாமற் சொல்லு" என்றாள் கண்ணகி; வேறொன்றுமல்ல ஆச்சி, நீங்கள் போய்ச் சிங்கப்பூரில் உங்கள் மகனிடஞ் சேர்ந்தபிறகு, நான் அந்த ஆளிடம் போய் அவருக்கு வேலைக்காரனாக இருக்கலாமென்று யோசிக்கிறேன். உங்களுக்குச் சம்மதமா" என்று கேட்டான் ராமன்; "ஏன் அப்படி யோசிக்கிறாய்" என்று கண்ணகியம்மை கேட்க, "வேறொன்றுக்குமல்ல, ஆச்சி, அவருடன் போய் வேலைக்காரனாக இருந்தால், அவரில்லாத காலத்திலே, அந்தப் பணம் பண்டம் வீடுவாசல் காணிபூமி யெல்லாம் எனக்குச் சேருந்தானே" என்று ராமன் சந்தோஷத்தோடு சொல்ல, ராமன் உனக்குப் பைத்தியமா?" உனக்கு எப்படிச் சேரும், அவருக்கு மனைவி மக்களிருந்தால் அவருக்கல்லவா சேரும்" என்று கண்ணகி சிரிப்புடன் சொல்ல, "அப்படியா! அது எனக்குத் தெரியாது" என்றான் ராமன்.

"உங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன்"

அந்த மனுஷன் அன்று படுக்கைக்குப் போனானேனும் அவனுக்கு உறக்கம் வர வில்லை; கண்ணகியம்மையருகில் அன்று தான் கண்ட பாக்கியத்தை எண்ணியெண்ணி அவன் மனமமதையனானான்; பாக்கியம் போன்ற பேரழகு வாய்ந்த உத்தம கன்னிகை தனக்கு இல்லாளாக வாய்த்தால், சகல பாக்கியமுந் தன்னிடம் வந்து சேருமென்று அவன் நினைத்தான்; நான் பிரயாணம்பண்ணும் இந்தக் கப்பலிலேயே இந் நங்கையும் பிரயாணம்பண்ண நிகழ்ந்தமை ஒருபோது என்னுடைய நல்லூழாகவிருக்குமோ என்று சிந்தித்தான்; இந்த நீண்ட இரவு எப்போது விடியுமோ! விடிந்தாலுமென்ன? நாளை மாலைக் காலமாக வேண்டுமே, மாலைக் காலமானாலு மென்ன, அந்த ஆச்சி தனிய அந்தநேரத்தில் மேல் தட்டில் வந்திருந்தாற்றானே நான் ஏதும் பேச முடியும்; அப்படித்தான் பேசிவிட்டாலும் அதனாலாவதென்ன; அந்த ஆச்சியும் உடன்பட வேண்டுமே" என்று இப்படி யோசித்துக்கொண்டு கிடந்த மனுஷன் நான்காம் யாமத்தில் உறங்கி விட்டான்; உறங்கினானேனும் அதிகாலையில் எழுந்து தன் காலைக்கடன் முடித்துக்கொண்டு போசனமுஞ் செய்துவிட்டுக் கப்பலின் மேல் தட்டிலே போயிருந்தான்; அப்படியிருந்தது கண்ணகி வருவாளென்றெண்ணியல்ல; இராமன் அந்தப்பக்கமாக வந்தால் ஏதும் அறியலாமென்றெண்ணியே; சற்றுநேரம் சிந்தனையோடு கூடியவனாய் அந்த மனுஷன் இருக்கும்போது, அவனுடைய அதிர்ஷ்டவசத்தினாற் போலும் இராமனும் அங்கே வந்தான்; இராமனைக் கண்ட மாத்திரத்தே அந்த மனுஷன் பாக்கியத்தைக் கண்டால் எத்தனை மகிழ்ச்சியடைவானோ. அதனைக் காட்டிலும் பாதி மகிழ்ச்சியடைந்தானாய்,

"இராமன் இப்படி வரவேண்டும்" என்று இதமாக அவனைக் கூப்பிட்டு அருகில் இருக்கச் செய்தான்; "என்ன விசேஷம்?" என்று அந்த மனுஷன் கேட்க, இராமன் "ஒரு விசேஷமுமில்லை; உங்களைப்பற்றி எங்கள் ஆச்சிக்குச் சொல்லியிருக்கிறேன்" என்றான்; "சந்தோஷம்"; அந்த ஆச்சி இன்று மாலை தனியே இங்கு வரக்கூடுமோ?" என்று அந்த ஆள் கேட்க, இராமன் "வரச் செய்கிறேன்" என்றான்; "இராமன்! நான் உனக்கு என்ன உதவி செய்யவேண்டுமோ கூசாமற் சொல்லு செய்யக் காத்திருக்கிறேன்" என்று அன்புடன் கேட்க, "இப்போதைக்கு ஒன்றும் வேண்டாம் ஐயா, கேட்டதற்காக வணக்கம்" என்று விடைகூறித் தான் பின் வருவதாகச் சொல்லிவிட்டு அவன் கண்ணகியம்மையும் மக்களுமிருக்குமிடத்திற்குப் போசனஞ் செய்யும்படி போயினான்; அந்த மனுஷனும் தானிருக்குமிடத்திற் போயிருந்தான்;

"தாங்கமுடியாத தலையிடி"

ராமனும் கண்ணகியம்மையும் அந்த இரவு பேசிய விஷயங்கள் அயலே படுத்துக் கிடந்த சிவபாக்கியம், பாக்கியலட்சுமி யென்னு மிருவர் காதுகளிலும் பட்டன; அவர்கள் கேட்டுங் கேளாதவர்போற் கிடந்தனர்; இராமன் அங்கே மீண்டு போனபோது, பாக்கியலட்சுமி தனக்குத் தாங்கமுடியாமல் தலையிடிக்கிறதென்று படுத்தபடி கண்ணகியம்மைக்குச் சொல்வதைக் கண்டான்; "சின்னத்தங்கைச்சி, உங்களுக் கென்ன தலையிடியா, கண்குத்தா" என்று பரிவுடன் இராமன் கேட்க, "இரண்டுந்தான் ராமன்" என்றாள் பாக்கியலட்சுமி; "அம்மா, சற்றுப் பொறுங்கள் ஒரு நொடிப்போதில், நான் நல்ல மருந்து கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு அந்த ஆளிடம் வந்து "ஐயா, தாங்கமுடியாத தலையிடி, சகிக்கமுடியாத கண்குத்து, இவைகளுக்கு இப்போதைக்கு ஆகிய மருந்து உங்களிடமுண்டோ" என்று கேட்க "ஓம், என்னிடத்தில் நல்ல "ஒறியன்றல்பாம்" இருக்கிறது, தருகிறேன்" என்று சொல்லி விரைவாகத் தன் பயணப்பெட்டியைத் திறந்து எடுத்துக் கொடுக்கும்போது "ஆருக்குச் சுகமில்லை" என்று அந்த மனுஷன் கேட்க "அந்தத் தங்கைச்சிக்குத்தான்" என்று சொல்லி அதனை வாங்கிக்கொண்டு விரைவாய்ப் போனான் இராமன்.

* * *

உலகம் பலவிதம்: 1947 ஆகஸ்ட் 01
(முற்றொடர் - 26)

"படைமுகத்திலும் அறிமுகம்"

"தங்காய், இப்பொழுது சுகமாக விருக்கிறதோ" என்று சிவபாக்கியங் கேட்க, "ஓம், அக்கா, அந்த மருந்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசியபின் கண்குத்து மாறி விட்டது, தலைவலி இன்னமுங் கொஞ்சமிருக்கிறது" என்று பாக்கியலட்சுமி பதில் கூற "அதுவும் சற்று நேரத்துள் நின்றுவிடும்" என்றாள் சிவபாக்கியம்; "இராமன் மருந்தை யாரிடம் வாங்கி வந்தாய், நல்ல மருந்து, கப்பலிலுள்ள டக்ரரிடம் வாங்கினாயா" என்று சிவபாக்கியங் கேட்க, "இல்லை, சின்னம்மா, கப்பலிலிருக்கும் டக்ரருக்குத் தமிழ் தெரியாது, எனக்கு இங்கிலீசு தெரியாது, ஆனதால் நான் கேட்பது அவருக்கு விளங்காது, அவர் சொல்லுவது எனக்குப் புலப்படாது, இந்த மருந்தைத் தந்தவர் இக் கப்பலிலே பயணம் பண்ணும் எங்களூரிலுள்ள ஒரு ஐயா தான்: அவர் நல்ல மனுஷன், நான் அறிவேன், என்னிடத்திலே அவருக்கு அதிக பற்றுண்டு; அவரிடம் நான் தலையிடிக்கு ஏதும் மருந்துண்டோ என்று கேட்டது தாமதம், உடனே பதைபதைத்துப் போய்ப் பெட்டியைத் திறந்து எடுத்துக்கொண்டோடி வந்து தந்து சீக்கிரங் கொண்டுபோய்க் கொடுத்துப் பூசச் சொல் என்று அன்பாகச்சொன்னார்; அவரை நீங்களறிய மாட்டீர்கள் எங்கள் ஆச்சிக்குத் தெரியும். சின்னத் தங்கைச்சியும் அன்று மாலை நேரத்தில் ஒருபோது அவரைக் கண்டிருக்கக் கூடும்" என்றான் இராமன். "அம்மா, தங்கைச்சிக்கு இந்த மருந்தை அனுப்பின ஆளை உங்களுக்குத் தெரியுமாமே, அது ஆர் அம்மா" என்று சிவபாக்கியம் தாயைக்கேட்க, "ஓம், மகளே, முந்தி அந்த ஆளை எங்கோ கண்ட ஞாபகம் எனக்கிருக்கிறது; எங்கே கண்டேனென்பது ஞாபகமில்லை; ஆனால் அந்த ஆளுக்கு எங்களை எங்கள் குடும்பத்தைப் பற்றி நல்லாய் விளங்குமென்று இராமன் சொன்னான்; படை முகத்திலும் அறிமுகம் என்ற விதமாய் எங்களை அறிந்த ஒருவர் இந்தக் கப்பலிற் பயணம் பண்ணுவதும் நன்மைதானே, சற்று முந்திச் சின்னத்தங்கைச்சி தலைவலியாற் பட்ட பாட்டிற்கு அந்த ஆள் அனுப்பிய மருந்தல்லவோ உதவியது; இல்லாவிட்டால் இன்னமுந் தலை வலியுங் கண்குத்தும் மாறாவே" என்று கண்ணகியம்மை சொன்னாள் "அம்மா, அந்த ஆள் உங்களோடு ஒன்றும் பேசவில்லையோ; நீங்கள் அந்த ஆளோடு ஏதும் பேசவில்லையோ; ஒரு ஊரிலிருந்து பிரயாணம் பண்ணுகிறவர்கள், அவர்களுள்ளும் அறிந்தவர்களென்றால், நீங்கள் எவ்விடம், எங்கே போவது? என்று ஏதுங் கேட்டிருக்கலாமே, நாங்கள் தாம் குமர்ப் பிள்ளைகள் அறியாத ஆடவரோடு பேசுவது முறையல்ல நம்மை மதித்து நடப்பவரை நாமும் மதித்துத்தானே நடக்கவேண்டும், அம்மா..." என்று சொல்வதற்கிடையில், "மகளே, நீ சொல்வது முழுவதுஞ் சரி, ஆனாலும், இந்த வயசு சென்றும் ஆண்களோடு நானாகப் போய்ப் பேச எனக்குக் கூச்சம்; மகளே அந்த ஆளாக வந்து ஏதுங்கேட்டிருந்தால், நானும் பதில் சொல்லி அவரைப்பற்றி விசாரித்திருப்பேன்...." என்று தாய் விடை சொன்னாள்; "ஆச்சி, ஆண் பிள்ளைகளோடு பேசக் கூச்சமென்கிறீர்கள்; நானும் ஆண்பிள்ளைதானே, ஆச்சி என்னோடு கூச்சமில்லாமற் பேசுகிறீர்கள், நான் ஏதும் தவறு செய்தால் என்னைக் கூச்சமில்லாமல் ஏசுகிறீர்கள்" என்று இராமன் சொல்ல மற்றை மூவருஞ் சிரித்தார்கள்; "ஆச்சி, அந்த ஐயாவே முதல் உங்களோடு ஏதும் பேசினால், நீங்கள் பிறகு பேசுவீர்களா" என்று கேட்க, "பேசினாற் பேசத்தானே வேணும் இராமன்" என்றாள் கண்ணகி; பின்னருஞ் சிறிது நேரம் பேசிவிட்டு, இராமனுந் தன்னிடத்திற் போய்ப் படுத்தான்; அவர்கள் மூவரும் படுத்துறங்கினர்.

"ஆங்காலந்தானே ஆகும்"

அடுத்தநாட்காலையில் அந்த மனுஷன் இராமனைக் கண்டு "சென்ற இரவு யாருக்குச் சுகமில்லை, இப்பொழுது சுகமா" என்ற கேள்விகளைக் கேட்டபோது, அவன் அதற்காகிய மறுமொழிகளைச் சொல்லி, அவ்வளவோடமையாது "இன்று பின்னேரம் ஆச்சி இங்கு வரும் போது உங்களையுங் காணவேணுமென்று எனக்குச் சொல்லக் கேட்டேன்; இங்கே பின்னேரம் வந்தால், ஐயா நீங்களே ஆச்சியோடு முதற் பேசத் தொடங்குங்கள்" என்று சொல்ல, அந்த மனுஷன் ஓம் என்றான். அன்று பிற்பகல் ஐந்தரை மணிவரையிலிருக்கும், கண்ணகியம்மை இராமனோடு மாத்திரம் வந்து மேல் தட்டிலே யிருக்கும்போது, அந்த ஆளும் தான் வழக்கமாக இருக்குமிடத்திற்குப் போயிருப்பதை இராமன் கண்ணகிக்குக் காட்டி, "ஆச்சி, அந்த ஐயாதான் நான் சொன்ன ஆள்" எனலும், "ஓம், இவரை நான் நேற்றும் இந்த இடத்திலிருக்கக் கண்டேன்; ஊரிலும் எப்போதோ ஒருநாட் கண்ட ஞாபகமிருக்கிறது; நல்லவர்போற் காணப்படுகிறார்" என்றாள்; இராமன் சில நிமிஷஞ் செல்ல அந்த ஆளிடம் போய், "ஆச்சி மாத்திரம் வந்திருப்பதால், நீங்கள் போய்க் காணலாம், பேசலாம்" எனலும், "உங்கள் ஆச்சிக்கும் சம்மதமோ?" என்று அந்த ஆள் கேட்க, "சம்மதமென்ன, நீங்கள் போய்ப் பேசலாம்" என்று இராமன் சொல்ல, அந்த மனுஷன் உடனே கண்ணகியிருக்குமிடத்திற்கு எழுந்து செல்ல, இராமன் முந்தியே சென்று, அந்த ஆளின் வரவைக் கண்ணகைக்குத் தெரிவிக்க கண்ணகி உடனே இருக்கை விட்டெழுந்து "தம்பீ, வாரும்" என்று உபசரித்து, அயலிலிருந்த ஒரு நாற்காலியில் இருக்கச்சொல்ல, "நீங்கள் இருங்கள்; நான் இருக்கிறேன்" என்று அந்த ஆள் சொல்ல கண்ணகியம்மை நாற்காலியிலிருக்க, அந்த மனுஷனும் அங்குள்ள நாற்காலியில் இருந்தான். "என்னை ஒருபோது தங்களுக்குத் தெரியாமலிருக்கலாம்; ஆனால், நான் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் பற்றி நல்லாய்க் கேள்விப்பட்டிருக்கிறேன்; நேரில் அறிந்துமிருக்கிறேன்" என்று அந்த ஆள் சொல்ல, "எங்கள் ஆண்பிள்ளைகட்கு உங்களைப்பற்றி அதிகந் தெரியுமென்று நினைக்கிறேன்; நான் அவர் போனபிறகு எங்கேனும் புறப்பட்டுப் போவது குறைவு; பிள்ளைக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பாக நான் அதிகமாக வீட்டிலேதான் இருக்கவேண்டியது; ஆனாலும் இப்பொழுது இராமன் சொன்னபிறகு தான் உங்களைப்பற்றி நல்லாய் அறிந்தேன்" என்று கண்ணகியம்மை உபசாரமாகச் சொன்னாள்; "இப்பொழுது நீங்கள் பயணம் புறப்பட்டிருக்கும் நோக்கமென்னவோ" என்று கேட்க, கண்ணகியம்மையும் தானும் மகளும் மலாய் நாட்டில் வேலையாயிருக்கும் தங்கள் மகனிடம் போதல் முதலாகிய விபரங்களையெல்லாஞ் சொல்லி, "தம்பி, மலாய் நாட்டிலே ஏதும் உத்தியோகமாக விருக்கிறீரோ" என்று கேட்டவுடனே அந்த ஆள், "ஓம்" என்று சொல்லத்தொடங்கித் தன் முழு வரலாற்றையும் ஆதியோடந்தமாகச் சொல்லி முடித்தான்; தான் விவாகஞ் செய்ய ஊரிலே முயற்சிபண்ணியதையும், ஆனாற் கைகூடாமையையும் மிக விபரமாக அந்த ஆள் சொல்லும் போது, "ஏன், இன்னும் சில மாசம் ஊரிலே தங்கி, ஒரு பெண்ணை ஒழுங்கு செய்து விவாகத்தையும் முடித்துப் பெண்ணையுங் கூட்டிக்கொண்டு உத்தியோகத்திற்குப் புறப்படலாமே" என்று கண்ணகி கேட்க "உத்தியோகத்திற்குச் சீக்கிரம் வரும்படி அதிகாரிகள் எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள்; தவற விட்டாற் பின் இப்போதைக்குக் கிட்டாது; எதுவும் ஆங்காலந்தானே ஆகும் ஆச்சி; எல்லாம் ஆண்டவன் சித்தத்தைப் பொறுத்துள்ளன" என்று சொல்லி அந்த மனுஷன் பெருமூச்சு விட்டான்; அந்த ஆள் தன்னோடு ஊடாடிய மரியாதையான முறையினாலும், இனிய வார்த்தையினாலும் அவன் நல்ல குலங்குடியிற் பிறந்தவனெனவும், பேசுவனவெல்லாம் நிசந்தானெனவும் கண்ணகியம்மை யெண்ணினாள்; "ஆங்காலந்தானே ஆகும் ஆச்சி" என்று அந்த மனுஷன் சொன்னதைக் கேட்டபோது, அவன் தெய்வத்தில் விதியில் நம்பிக்கையுள்ளவனென்றுங் கண்ணகி யம்மை நினைத்தாள்; அவன் விஷயத்தில் அவளுக்கு அநுதாபமுண்டானது; அவள் பின்னருஞ் சிறிது நேரம் அங்கே இருந்துவிட்டு, "பொழுது பட்டு விட்டது; நாளைப் பின்னேரம் காணலாந்தானே" என்று அந்த ஆளுக்குஞ் சொல்லிவிட்டு மக்களிருக்குமிடத்திற்கு மீள, அதனைக்கண்ட இராமனும் கண்ணகியின் பிறகே போனான்; "ஆச்சி, எப்படி அந்த ஐயா" என்று இராமன் கேட்க, "நல்லபிள்ளைபோற் காணப்படுகிறார்" என்று சொல்லிக்கொண்டு மக்களிருக்கு மிடத்தையடைந்தாள் கண்ணகையம்மை.

மரணம் வயசையுத்தேசித்து வருவதல்ல

அன்றிரவு போசனம் முடித்துக்கொண்டு இராமனும் தான் படுக்குமிடத்திற்குப் போய்விட, மக்களும் படுத்து உறங்க, கண்ணகியம்மை மாத்திரம் உறக்கம் வரப்பெறாளாய்ப் படுக்கையிற் சிந்தனையோடு கிடந்தாள்; அர்த்தசாமம் வரை நித்திரையின்றிக்கிடந்த கண்ணகியம்மை "மக்காள் உறங்கிவிட்டீர்களோ" என்று மக்களை விளிக்க, "அம்மா, நான் உறங்கி விழித்துவிட்டேன்; தங்கைச்சி, அசைவற்ற நித்திரை" என்றாள் சிவபாக்கியம்; "மகளே, இப்படி என் பக்கத்தில் வா" என்று தாய் சொல்ல, மகள் பக்கலிற் போயிருந்துகொண்டு "ஏன், அம்மா உங்களுக்கு நித்திரை குழம்பி விட்டதோ" என்று கேட்க, "ஆமடி மகளே, பொழுதுபட்ட நேரந்தொட்டு ஒரு கருமத்தை யிட்டு யோசிக்கத் தொடங்கினேன்; அதனால் நித்திரை குழம்பிவிட்ட" தென்று தாய் சொல்ல, "கருமம் என்ன அம்மா" என்று மகள் ஆவலுடன் கேட்டாள். "வேறொன்றுமல்ல மகளே, எங்கள் இராமன் சொன்ன ஆளை இன்று அந்தி நேரத்தில் நேரிற்கண்டேன், அந்த ஆளாக நானிருக்குமிடத்திற்கு வந்து பேசியதினால் நானும் பேசினேன்; நல்ல பிள்ளை; மரியாதையாக ஊடாடுகிறான்; நல்ல தோற்றம், வயசுகொஞ்சங் கூடிவிட்டதுதான்; முப்பத்தைந்துக்கும் நாற்பதிற்கு மிடையில் மதிக்கலாம்; ஆனால் ஆண்பிள்ளைக்கு அது அதிக வயசல்ல; உங்களுடைய தகப்பனார் மகளே, எனக்கு இருபது வயசிக்கு மூத்தவர்; ஆனாலும் நாங்கள் இல்வாழ்க்கையை இயன்றவரையில் வறுமையிற் செம்மையாக நடத்தித்தானே காலங் கழித்து விட்டோம்; ஆனதால் வயசைப்பற்றிச் சிந்திப்பதிற் பயனில்லை; மரணம் வயசை யுத்தேசித்து வருவதல்ல; ஆறிலுஞ் சா, நூறிலுஞ் சா என்பது உண்மை; அந்தப் பிள்ளை தன்னுடைய நிலைமை முழுவதையும் உள்ளபடி எனக்குச் சொல்லிவிட்டான்; இரண்டாந் தாரமாகக் கல்யாணஞ் செய்யலாமென்று ஊரிலே நின்ற போது தான் பல முயற்சி செய்தும் பெண் சந்திக்கவில்லையென்ற காரணத்தினால், தன் தலைவிதியை நொந்துகொண்டு மீளவும் உத்தியோகம் பார்ப்பதற்காக மலாய் நாட்டிற்குப் புறப்பட்டு வருவதாகவுஞ் சொல்லுகிறான் அந்தப் பிள்ளை; போதிய பொருள் பண்டம் காணி பூமி யெல்லாமுண்டென்று எங்கள் ராமன் சொன்னான்; இவைகளையெல்லாம் யோசித்துக் கொண்டு கிடந்தமையினால் என் நித்திரை குழம்பிவிட்டதடி கண்ணே" என்று கவலையோடு சகல விருத்தாந்தங்களையும் மகளுக்குச் சொல்லி முடித்தாள் கண்ணகி; "அதற்கு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் அம்மா" என்று மகள் கேட்க, "நான் என்ன செய்வது? எங்கள் சின்னத் தங்கைச்சியைப் பற்றி நினைத்தேன்" என்றாள் தாய்.

* * *

உலகம் பலவிதம்: 1947 ஆகஸ்ட் 08
(முற்றொடர் - 27)

"எல்லார் செயலும்
இறைவன் இயற்றுவதே"

"சின்னத் தங்கைச்சியை அந்த ஆளுக்குக் கல்யாணஞ் செய்து வைக்கலாமென்பது உங்கள் நோக்கமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா" என்று சிவபாக்கியம் ஆச்சரியத்துடன் கேட்க, "ஆம் மகளே, அப்படி யோசிக்கிறேன்; ஆனால் நான் மாத்திரம் யோசித்துவிட்டால் முடியுமா? "நிதியுங் கணவனும் நேர்படினும் தத்தம் விதியின் பயனே பயன்" என்று நீங்கள்தாமே இடையிடையே படிக்கக் கேட்டிருக்கின்றேன்; தெய்வத்திற்குச் சித்தமானால் நிறைவேறும் மகளே, ஆனாலும், காலம்வந்தால் தானாக நிறைவேறுமென்றுவிட்டு நாமும் சும்மாயிருக்க வொண்ணாது; விளக்குத் தாழி நிறைய நெய்யிருந்தாலும், அதிலே நல்ல திரியிடப்பட்டிருந்தாலும், ஒருவர் அத்திரியைக் கொழுத்தினாலல்லாமல், திரி தானாகப் பற்றி யெரியப்போவதில்லை, அந்தத் திரியைப் பற்ற வைப்பவர் போலவுள்ளதுதான் முயற்சி; ஆனால் அந்த முயற்சியும் ஆங்காலம் வந்தாலன்றி ஒருவருடைய உள்ளத்திற் பிறக்கமாட்டாது; அது பிறப்பதும் ஆண்டவனருளினாலேதான்; அவனன்றி அணுவும் அசையாதடி கண்ணே; உங்கள் அப்பர் இருக்கும்போது எனக்கு இப்படியான நீதிகளையும் உண்மைகளையும் எடுத்தெடுத்துச் சொல்லுவார்; இவைகளுக்கு உதாரணமாகக் கந்தபுராணத்திலே ஒரு பாட்டும் படித்துக்காட்டுவார்; அந்தக்காலத்தில் என் பெற்றார் என்னைச் சைவப் பள்ளிக்கூடத்திற் கனுப்பிக் கொஞ்சம் தமிழ் படிப்பித்து வைத்தபடியாலும், உங்கள் அப்பா ஒரு படித்த மனுஷனாயிருந்த படியாலும், நானும் சில நீதிகளையும் பெண்கள் கைக்கொண்டு நடத்த வேண்டிய ஒழுக்கங்களையும் தெய்வத்தின் அருமை பெருமைகளையும் திருவருட் செயலையும் ஒரு அளவிற்கு அறியலானேன் மகளே....." என்று தாய் சொல்லும் போது மகள் "அம்மா கந்தபுராணத்திலுள்ள அந்தப் பாட்டு உங்களுக்கு ஞாபகமானாற் சொல்லுங்கள்" எனலும் கண்ணகியம்மை அதனைப் படிப்பாளாயினாள்.

"எல்லார் செயலும் இறைவ னியற்றுவதே
அல்லா திலையோர் அணுவுமசையாதே வையும்
நில்லாஅருளின்றேல் நீயின்றவன்பாலிற்
செல்லாய் உனது செயலும் அவன் செயலே"

இப்படித் தாய் படித்தலும் கேட்ட மகள் "அம்மா இந்தப் பாட்டிலே அருமையான கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன; இந்தப் பாட்டு எந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லப்பட்டது; ஆர் எவரை ஆரிடஞ் செல்லச் சொன்னது; இவைகளைப்பற்றியும் உங்களுக்குத் தெரியுமா? தெரிந்தாற் சொல்லுங்கள்" என்று மகள் கேட்கத் தாய் சொல்லுகிறாள்:

"சிந்தையில் நினைந்த முற்றிச்
சிவகதியதனிற் சேர்வர்"

"மகளே, எங்கள் பரமசிவம் தேவியைப் பிரிந்து தக்கிணாமூர்த்தியெனப்படும் குருமூர்த்தியாக எழுந்தருளிச் சநகர், சநந்தரர், சநாதனர், சநற்குமாரர் என்னும் நான்கு முனிவர்களுக்கும் யோகநிலையைக் காட்டிக்கொண்டிருக்கும் போது, உலகத்திலே ஆண்பாலார் பெண்பாலாரின் கூட்டுறவில்லாதொழிய உலகத்திலே உயிர்கள் பெருகுதலின்றிக் கிடக்க, படைத்தலாகிய தொழிலைச் செய்யும் பிரமதேவர் மன்மதனைத் தம் முன்னிலையிற் கூப்பிட்டு உன் பஞ்சபாணங்களினாலே பரமேசுவரன் கொண்டுள்ள யோகத்திற்குப் பங்கஞ்செய் என்று சொன்னதாக வருமிடத்திலேயுள்ள பாட்டு நான் சொன்ன இந்தப் பாட்டு....." என்று இப்படிச் சொல்லும் போது, மகள் தாயை நோக்கி, "அம்மா, இவைகளெல்லாம் நீங்கள் எங்கள் அப்பாவிடங் கேட்டறிந்தவோ, இல்லையேல் நீங்களாகப் படித்தறிந்தவோ" என்று மகள் அற்புதத்தோடு வினாவ, "உங்கள் அப்பரிடத்திற் கேட்டறிந்தது முண்டு, நானாகப் படித்ததுமுண்டு; இவை போல் மகளே, நாங்கள் விவாகஞ் செய்தும் பல வருட காலம் பிள்ளைப்பேறில்லாமையினாற் கவலைப் படும்போது, ஒருநாள் எங்கள் புரோகிதர் எங்கள் வீட்டிற்கு வந்த சமயத்தில் உங்கள் அப்பா அவரைப் பார்த்து "சாமி, எவ்வளவு செல்வமிருந்துமென்ன, செல்வாக்கிருந்து மென்ன, பிள்ளைச் செல்வமில்லையே, எங்களுக்கு ஏதும் நாகசாபமுண்டோ, வேறு ஏதும் தோஷமுண்டோ? எங்கள் சாதகத்தைப் பார்த்துச் சொல்லுங்கள்; ஏதுஞ் சாந்திகள் செய்யவேண்டியிருந்தாற் செய்வோம்" என்று கவலையோடு கேட்டபோது, புரோகிதர் சிறிது நேரம் யோசித்துவிட்டு உங்களுக்கு ஒரு தோஷமுமில்லை, உங்கள் சாதகம் முந்தியொருமுறை பார்த்த ஞாபகமுண்டு; நீங்கள் சாந்தியுஞ் செய்யவேண்டாம், வேறு பிராயச் சித்தங்களுஞ் செய்யவேண்டாம், உங்கள் அயலிலுள்ள பிள்ளையார் கோவிலிற் கந்த புராணம் படிக்குங்காலத்தில் நீங்களிருவீரும் விரதமிருந்து கந்தபுராணப் படிப்பைக் கிரமமாகக் கேட்கவேண்டும்; படிப்பு நடக்கும்போது விசேஷகாலங்களில் ஏதும் உபயஞ் செய்விக்கவேணும் அப்படிக் கேட்டுவந்தால் தவறாமல் புத்திரப்பேறு கிடைக்கும், அதுமாத்திரமல்ல இம்மையில் மனத்திலே நினைத்தவையெல்லாங் கைகூடும், மறுமையிலும் மேலான கதி கிடைக்கும்; கந்தக் கடவுளின் அருள் எந்த நேரமும் உண்டு என்று சொல்லி, கந்தபுராணம் படிப்போர் பயபக்தியுடன் கேட்போராகிய இவர்கள் அடையும் பலனைப் பற்றிய பாட்டையும் படித்துக் காட்டினார் மகளே....." என்று தாய் சொல்லும்போது மகள் "அந்தப்பாட்டு உங்களுக்குப் பாடமா அம்மா சொல்லுங்கள்" என்று ஆவலுடன் கேட்க, தாய் "ஓம் மகளே சொல்கிறே" னென்று இப் பாட்டைப் படித்துக் காட்டினாள்:-

"இந்திர ராகிப் பார்மேல் இன்பமுற் றினிது மேவிச்
சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வர்
அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேள்
கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோது வோரே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரோகிதர் சொன்னபடி இரண்டு வருடம் விரதமிருந்து கிரமமாக கந்தபுராணப் படிப்புக் கேட்டதினால்தான், மகளே, அந்தக் கந்தக் கடவுள் அருளினாலும், புராணப் படிப்புக்கேட்ட புண்ணியத்தினாலும் தான் அண்ணனைப் பெற்றேன்; அதன் பிறகுதான் உன்னையும் பெற்றேன்; பின்னரும் கோயிலிற் புராணப்படிப்பு நடக்கும்போதெல்லாம் இதுவரையிற் கிரமமாகப் படிப்பு கேட்டதினாலேதான், மகளே நாங்கள் சைவசமய முறைப்படி இப்பொழுது நடந்து வருகிறோம்; மதத்தில் நம்பிக்கை, விதியில் நம்பிக்கை தானதருமஞ் செய்யவேண்டுமென்ற சிந்தனை, மற்ச மாமிசம் புசிக்க வொண்ணாதென்ற கொள்கை, சீவகாருண்யம் இவைகளெல்லாம் ஒரு அளவிற்கு எங்களிடத்திலிருக்கின்றன மகளே; எதுவும் அந்த இறைவனருளாலேதான் நடக்கும்; இப்பொழுதும் அந்த ஆளுக்கு எங்கள் சின்னத் தங்கைச்சியைக் கல்யாணஞ் செய்து கொடுத்தால் நல்லதென்ற எண்ணம், நான் முந்திக் கனவிலும் நினையாமலிருக்க, இப்போ உண்டாகியிருக்கிறது; அதுவும் அந்த ஆண்டவன் செயலேதான்" என்று சொன்னாள்; "அம்மா, நீங்கள் சொல்வது சரிதான்; ஆனாலும், சின்னத்தங்கையின் விஷயத்திலே சின்னத்தங்கைக்கு இது விருப்பமோ என்று உசாவவேணும், அல்லாமலும் சின்னத் தங்கைச்சியின் தாயாருடைய சம்மதத்தை அறியாமல் நாங்கள் ஒன்றுஞ் செய்யமுடியா தல்லவே" என்று மகள் சொன்னாள்.

"சம்மதத்தை உசாவி அறிந்து சொல்லு"

"ஓம் மகளே, நீ சொல்வது முழுவதும் ஞாயம்; நான் இப்போது நீ வேறு, சின்னத் தங்கைச்சி வேறு என்று மதித்து நடக்கவில்லை; உங்களிரண்டு பேரையும் நான் பெற்ற பிள்ளையென்றுதான் மதித்து நடக்கிறேன்; சின்னத் தங்கைச்சியின் தாய், என்றைக்கு இந்தப் பிள்ளையை எங்களிடம் கொண்டுவந்து ஒப்புவித்தாளோ அன்று தொடக்கம் பாக்கியலட்சுமியை உன் உடற்பிறப்பென்று மதித்து தானே மகளே நீயும் நடக்கின்றாய்; அது எனக்கு வெகு சந்தோஷம். இப்பொழுதும் அந்த வாலிபன் நல்ல குணமுடையவன்; குலங்குடியிற் பிறந்தவன்; மற்சமாமிச போசனம், மதுபான மில்லாதவன், எங்கள் பிள்ளையை பெண்ணாக ஏற்றுக்கொண்டு போய் மரியாதையாக வைத்து இல்லறம் நடத்தத் தகுதியுடையவனா என்னு மிவைகளையெல்லாம் நன்றாக அறிந்த பிறகுதானே மகளே, என் பிள்ளையை அந்த ஆளுக்கு தத்தஞ் செய்து கொடுக்கச் சம்மதிப்பேன் ஆனதால், அவைகளை என் அருமைமகளே, நீ விசாரிக்க வேண்டாம். நாளைக்கு அந்த ஆளை நேரிற் கண்டு நான் பேசும்போது எல்லாம் அறிந்துகொள்ளுகிறேன்; ஆனாலும் உன் தங்கையின் உள்ளத்தை யறியாமல் நான் இந்தக் கலியாணத்தில் தலையிட வொண்ணாது; ஆனபடியால் இப்பொழுது உன் தங்கையின் நித்திரையைப் பங்கப்படுத்தாமல் நாளைக் காலையில் தனிமையில் போய் பாக்கியலட்சுமிக்கு விஷயம் அனைத்தையும் எடுத்து விளங்கப் படுத்திவிட்டு அவளுடைய சம்மதத்தை அறிந்து சொல்லு என்று மகளுக்குச் சொல்ல; மகள் அப்படியே செய்கிறேன் அம்மா என்றாள்; கொஞ்சநேரஞ் செல்ல தாயும் மகளும் நித்திரையாயினர்.

"யாரேனும் அறியவொண்ணாது"

அடுத்தநாள் அதிகாலையில் அவர்கள் இருவரும் நித்திரைவிட்டெழுந்து காலைக் கடன்களை முடித்துவிட்டு உணவுண்டனர். இராமனும் ஸ்நானஞ் செய்து விட்டு கப்பலின் மேல்தட்டிற்கு போய்விட்டான்; கண்ணகியம்மை ஒருபுறத்தேயிருக்க சிவபாக்கியமும் பாக்கியலட்சுமியும் ஒரு பக்கத்திலே போய் ஒதுக்கமாக இருந்தனர்; சிவபாக்கியம் தாய் விஷயத்தை மெல்ல பாக்கிலட்சுமிக்கு விபரமாகச் சொல்லி அவளது சம்மதத்தை அறிய கேட்டாள்; "அக்கா, நான் இங்கு புறப்பட்டுவரும் நோக்கம் வேறு இது பிறிதொரு நோக்கமாக இருக்கிறதே" என்று பாக்கியலட்சுமி சொல்ல, "ஓம் தங்காய், அது நிசந்தான்; ஆனால் அந்த நோக்கத்திற்கு இந்த நோக்கம் எவ்வகையிலும் இடையூறாக மாட்டாதே; தங்காய் கன்னிகையாகவிருந்துகொண்டு நீடித்த காலம் கருமம் பார்க்க முடியுமா? மேலும் விவாகஞ் செய்து கொண்டாற்றானே, உலக அபவாதத்திற்கு ஆளாகாமல் தம்தம் கருமங்களையும் இடையூறின்றிப் பார்க்க முடியும்; இப்பொழுது என்ன, விவாகம் உடனே நடக்கப்போகிறதா? இல்லையே; உம்முடைய சம்மதத்தைத்தானே கேட்கிறேன்; நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை யென்பர்; எனக்குச் சொல்லக் கூசும் அந்தரங்கமான விஷயமும் உம்முடைய உள்ளத்திலுண்டா? அப்படியேதுமிருந்தால், நான் கேட்கத் துணிந்தது தவறு" என்று சிவபாக்கியஞ் சொல்லி முடிப்பதற்கிடையில், பாக்கியலட்சுமி திடுக்குற்று, "அக்கா, என் அருமையான அக்கா, என்மனம் வருந்த ஏதுஞ் சொல்லாதீர்கள்; நீங்களும் வருந்தாதீர்கள்; என் நெஞ்சையொளித்தொரு வஞ்சகந் தானிருந்தாலும் உங்களுக்கொளித்து என்னெஞ்சில் ஒரு இரகசியமுமில்லை; அக்கா, உங்கள் விருப்பமும் எங்கள் அம்மாவின் விருப்பமுமே யொழிய எனக்கு வேறாக ஒரு விருப்பமில்லை; இதை நம்புங்கள்; எங்களுக்கு நன்மையல்லாத கருமத்திலே எங்கள் தாயார் தலையிட மாட்டார்; ஆனதினால் உங்கள் எண்ணப்படி எதனைச் செய்ய விருப்பமோ, நீங்களும் அம்மாவுஞ் செய்து வைக்கவேண்டியது; நான் கண்டு கொள்ளவேண்டியது" என்று சிந்தனையோடு சொன்னாள் பாக்கியலட்சுமி; "தங்காய், எதற்கும் யோசிக்க வேண்டாம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் கடவுளருளால் நடக்குமென்று தாயார் சொல்லியிருக்கிறார்; அது கிடக்க, முந்தை நாள் நான் இங்கே அலுப்புப்பட்டுப் படுத்துக்கிடக்க, நீரும் அம்மாவும் மேல் தட்டிற்குப்போய் நின்றீர்களே, அந்த நேரத்தில் நீர் அந்த ஆளைக் கண்டதுண்டோ" என்று சிவபாக்கியங் கேட்க, "நான் அவதானமாய்ப் பார்க்கவில்லை" யென்றாள் பாக்கியலட்சுமி; ஒருநாள் அந்த ஆளைப்பார்க்க விரும்புகிறீரோ" என்று தமக்கை கேட்க, "நான் விரும்பவில்லை. அக்கா, எனக்கு இப்படி நீங்கள் சொன்னபிறகு கூச்சமாயிருக்கிறது; நீங்கள் இயலுமானால் ஒருமுறை கண்டாற் போதுந்தானே அக்கா" என்று நாணம்மீதூரச் சொன்னாள் தங்கை. "தங்கைச்சி, நான் பார்த்தாலென்ன நீர்பார்த்தாலென்ன, நாங்கள் தம்மைப் பார்க்கிறோ மென்பதை அவர் அறியாமலும், எங்களை அவர் பாராமலும் நாங்கள் பார்த்துவிடுவதே கெட்டித்தனம்; மேலும் இராமனாயினும் எங்கள் அம்மாதானும் அறியாமல் இந்தக் கருமத்தைச் செய்யவேணும்; நாங்கள் இருவருந்தான் போய்ப் பார்க்கவும் வேணும்; அதற்காகிய உபாயத்தை இன்று பொழுதுபடுவதற்கிடையில் யோசிப்போம்" என்று புன்னகையுடன் தமக்கை சொல்ல, மகிழ்ச்சியுடன் தங்கை கேட்டு "ஓம்" என்றாள்.

* * *

உலகம் பலவிதம்: 1947 ஆகஸ்ட் 22 (முற்றொடர் - 28)

என்பிறகே வாரும்

"அம்மா, இன்று அந்திப்போதில் நானுந் தங்கைச்சியும் கப்பலின் மேற்றட்டிலே போய்ச்சற்றுநேரம் இருக்க விரும்புகிறோம்; உங்களுக்கு அப்படிச்செய்வது சம்மதமா" என்று சிவபாக்கியந் தாயைக் கேட்க, "உங்கள் விருப்பப்படி செய்யுங்கள்; மக்காள்" என்றாள் கண்ணகியம்மை; பிற்பகல் ஐந்து மணியாதலும் சிவபாக்கியம் தானாகவே பாக்கியலட்சுமியின் சிகையைச் சீப்பிட்டு வாரிப்பின்னித் தொங்க விட்டு, தன் பயணப்பெட்டியைத் திறந்து, தனக்குரிய சிறந்த ஆபரணங்களை யெல்லாம் எடுத்துக் கட்டவேண்டியவைகளைக் கட்டி, பூட்டவேண்டியவைகளைப் பூட்டி, இடவேண்டிய வைகளையிட்டு, முகத்திற்குப் "புசர்" மா தடவி நெற்றிக்குப் பொட்டிட்டு, பின்னிய சடையிற் செயற்கைப்பூச் சொருகி காலுக்குச் சரிகையிழைத்த வெல்வெற் பாதரட்சை மாட்டச் செய்தாள்; சிறந்த சரிகைசெறிந்த "இரவிக்கை" ஒன்றை அணியச்செய்து, அதற்கேற்ற "பனாரிஸ்" பட்டாடை யொன்றை யெடுத்துக் கொடுத்து உடுக்கச் செய்தாள்; இங்ஙன மெல்லாஞ் செய்துவிட்டுச் சிவபாக்கியம் தன் அபிமானத் தங்கையைக் கண்குளிர பாதாதி கேசம் வரையிற் பார்த்தாள்! தனக்கு அலங்காரஞ் செய்வதைக்கண்டு உள்ளமுருக நின்ற பாக்கிய இலட்சுமி "அக்கா, ஏன் இப்படியெல்லாம் எனக்குச் செய்கிறீர்கள்" என்று இதமுற வினாவ, "வேறொன்றுக்குமல்ல, தங்காய், ஒருகால், கப்பலின் மேல் தட்டிற்குப் போவோம்" என்று தமக்கை அன்புடன் சொல்ல. "அப்படியானால், நீங்கள் உங்களை அலங்காரம் பண்ணிக் கொள்ளவில்லையே" என்று தங்கை கேட்க "எனக்கு உள்ள அலங்காரம் போதுந் தங்காய், என் சொல்லைத் தட்டாமல் என்னுடன் வாரும் போவோம்" என்றாள்; அப்போது அந்திப் பொழுது கழிந்து இரவுண்டாயிற்று; சிவபாக்கியம் தான் தரித்திருந்த சேலையோடு முட்டாக்கிட்டுக் கொண்டு "தங்காய், ஏனென்று கேளாதீர், என் பிறகே வாரும்" என்று சொல்லிவிட்டு ஏணிப்படி வழியே ஏறி மேலே போக, அவளைத் தொடர்ந்து சென்றாள் பாக்கியலட்சுமி; மேலேயுள்ள தட்டில் ஏறியமாத்திரத்தே அங்கே வெளிச்சம் பட்டப் பகல்போற் காணப்பட்டது; கண்ட மாத்திரத்தே சிவபாக்கியம் சிறிது கூசினளெனினும் அதனைப் புறத்தே காட்டாது சென்று ஆட்கள் எவருமில்லாத ஒருபக்கலில் பாக்கியலட்சுமியோடு நின்று சந்திரன் உமிழும் நிலவிலே கடற்றிரைகள் மறிகிறதைப் பார்த்தாள்; பார்த்துவிட்டுக் கப்பலின் மேல்தட்டிலேயிருப்பவர்களை அங்கேதானே நின்று பார்க்கும்போது ஒருவர் ஒரு நாற்காலியில் இருப்ப, அவர் பக்கத்திலே இராமன் அவரோடு வார்த்தையாடிக்கொண்டு நிற்பதைச் சிவபாக்கியம் அவதானித்துத் தங்கையை நோக்கி, "தங்காய், அந்த ஆள்தானோ? அம்மா சொன்ன ஆள்" என்று பாக்கியலட்சுமிக்குச் சுட்டிக்காட்டி மெல்லக்கேட்க, "ஓம் அக்கா, உவராகத்தான் இருக்கவேணும்; அன்றும் உவர் உந்த இடத்திலேயே இருக்கக் கண்டேன்" என்று தானும் அவதானித்துக்கொண்டு பதில் கூறினாள் பாக்கியலட்சுமி; "தங்காய், இவர்களிருவரும் எங்களை அவதானிக்கவியலாத விதமாக நாங்கள் சற்றுச் சமீபத்திற் போய் அந்த ஆளை அவதானித்துக்கொண்டு வந்து விடவேணும்; நீர் பயப்பட வேண்டாம், கூச வேண்டாம்; அப்படியேதுஞ் செய்தால் அவர்கள் கண்ணிற் புலப்படவேண்டி நேரும்" என்று சிவபாக்கியஞ் சொல்ல, "அதுசரி அக்கா மற்றவர்கள் எங்களை யறியாவிட்டாலும் இராமன் எங்களை அவதானித்தல் முடியுந்தானே; எப்படித் துணிந்து சமீபத்திற் போவது?" என்று பாக்கியலட்சுமி கேட்க, "இல்லை, தங்காய்; நீர் உப்படி ஆடையாபரணங்களால் நன்கு அலங்காரஞ் செய்ததையும், நான் இப்படி முட்டாக்கிட்டதையும் இராமன் முந்தியொருபோதுங் கண்டிலன்; ஆனதினால் அவனாலும் எங்களை இந்த நேரத்தில் இன்னின்னாரென்று அயிர்த்தல் முடியாது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றியும் நாங்கள் அவர்களுக்குச் சமீபமாகச் சென்று சிலநிமிஷ மேனும் நிற்கப்போவதில்லை; ஒருவரை அவதானிக்க ஒரு நிமிஷம் போதும்; ஆனதாற் கூசாமல் என் பின்னே வாரும்" என்று சிவபாக்கியம் மெல்லமெல்ல ஒருபுறமாக ஒதுங்கிச்செல்ல, பாக்கியலட்சுமியும் அவள் பிறகே கூசிக்கூசி மெல்லச்சென்றாள்.

"பயனுண்டோ? இல்லையோ?"

கன்னியரிருவரும் பிற்பக்கமாக மெல்ல வந்து அந்த ஆளை அவதானித்துக்கொண்டு முகத்தையும் பார்க்கவேண்டுமென்ற நோக்கத்தினால் வலப்புறமாக முற்பட்டு வந்து ஒருநிமிஷ நேரத்தில் ஆளை அவதானித்தபடியே நடந்து அப்பாற் செல்லும்போதே, சிந்தனையோடிருந்த அந்த மனுஷன் அவர்களைக் கண்டான்; உற்றுநோக்கினான்; ஆனால் அவர்கள் அதற்கிடையிற் சென்று கப்பலின் உட்பக்கஞ் செல்லும் படிவழியே இறங்கினர்; அவர்கள் மறைய, அந்த மனுஷன் இராமனைப் பார்த்து, "இராமன் இப்போது இந்த மார்க்கமாக வந்துவிட்டுப் போகிறார்களே இரு பெண்கள்; அவர்கள் யாரென்பது உனக்குத் தெரியுமா?" என்று வினாவ, "நானும் அதையிட்டுத்தான் ஐயா யோசிக்கிறேன்; இன்னாரென்று அவதானிக்க இயலவில்லை" என்று சிந்தனையுடன் சொன்னான் இராமன்; "அவர்கள் எங்களுக்கு முற்புறமாகத்தான் போனவர்கள்; நான் அப்பொழுது, பெண்களை உற்றுப்பார்ப்பது முறையல்ல என்ற எண்ணத்தினாற் பாராமல் விட்டுவிட்டேன்" என்று அந்த ஆள் சொல்ல, அப்படியானால் பிறகு ஏன் ஐயா "அவர்களைப் பார்த்தீர்கள்? அவர்களைப்பற்றி விசாரிக்கிறீர்கள்" என்று சிரித்துக்கொண்டு இராமன் கேட்க, அந்த மனுஷனும் பதில் சொல்ல அறியாதவனாய்ப் புன்னகை செய்து விட்டிருந்தான்; கப்பலின் மேற்றட்டிற் போய் மீண்ட கன்னியரிருவரும் அந்த ஆளை நிழற் படமெடுப்பார்போல் அவதானமாகப் பார்த்துக் கொண்டு வந்துவிட்டார்கள். தங்கள் அறையைச் சேர்ந்தவுடன் அவர்களிருவருந் தங்கள் உடைகளை மாற்றி வழக்கமான உடையைத் தரித்துக் கொண்டிருந்தார்கள். தாங்கள் கண்டவரைப்பற்றி, சிவபாக்கியம் தனக்கு ஏதுஞ் சொல்லுவாளென எதிர்பார்த்திருந்தாள் பாக்கியலட்சுமி; பாக்கியலட்சுமி ஏதுங்குறிப்பாகச் சொல்வாளோ என்று எதிர்பார்த்தவண்ண மிருந்தாள் சிவபாக்கியம்; இருவரும் இப்படி யெதிர்பார்த்தவண்ண மிருந்து கொண்டு தத்தம் கருத்தை முந்தியே வாய்திறந்து வெளியிடாமையினால் இருவருக்குமிடையே சற்றுநேரம் மௌனமே நிகழ்ந்தது; ஈற்றில், சிவபாக்கியம் புன்னகையரும்பப் பாக்கியலட்சுமியை ஆதரவோடு பார்த்து "தங்காய், நாங்கள் வேஷம் மாறி உடை மாற்றிக் கப்பலின் மேற்பக்கம் போய்ப் பார்த்து மீண்டு வந்தமையினாலே ஏதும் பயனுண்டோ? இல்லையோ" என்று புன்முறுவலரும்ப வினாவ, "உண்டோ இல்லையோ என்பது உங்களுக்குத்தானே விளங்கும் அக்கா" என்று சாதுரியமாகப் பதில் சொன்னாள் பாக்கியலட்சுமி; சிவபாக்கியம் சிறிதுநேரம் யோசித்துவிட்டு, "பயனுண்டென்றுதான் நினைக்கிறேன்" எனலும், "பயனுண்டென்று நீங்கள் நினைத்தால் நானும் அப்படித்தானே நினைக்கவேண்டும்" என்றாள் பாக்கியலட்சுமி; கேட்ட சிவபாக்கியம் பாக்கியலட்சுமியைப் பார்த்து "என் அருமைத் தங்காய், எனக்காக அப்படிச் சொல்லவேண்டாம், உம்முடைய மனக்கிடக்கையை உள்ளபடி யெடுத்துச் சொல்லும்" எனலும் "அக்கா, நீங்களும் எனக்காகச் சொல்லவேண்டாம்; உங்களுடைய உள்ளக்கிடக்கையை உள்ளபடி சொல்லுங்கள், என்று புன்முறுவலுடன் கேட்டாள்" பாக்கியலட்சுமி; சிவபாக்கியஞ் சிரித்துக் கொண்டு "பயனில்லையென நினைக்கிறேன்" எனலும், அவளுஞ் சிரித்தபடியே "அப்படித்தான் நானும் நினைக்கிறேன்" என்றாள். "தங்காய், வேடிக்கையாகப் பேசுவதை விட்டு நிசத்தைச் சொல்லும்" என்று பரிவுடன் கேட்க "அக்கா, உங்களுடைய சம்மதத்தையும் எங்கள் அம்மாவின் சம்மதத்தையும் விட எனக்கென்று தனியேயொரு சம்மதம் நோக்கம் இல்லையே யென்று முந்தியே நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேனே" என்று ஆகரங்கூரப் பாக்கியலட்சுமி கிளியென மொழிதலும், "நீரல்லவா என் அருமைத் தங்கை, நான் கேட்டது என்மேற் குற்றம்" என்று அன்பொழுகப் புகன்று அவளுடைய முகத்தைத் தன் மிருதுவாகிய கரத்தினால் தடவுதலும், பாக்கிய இலட்சுமி தன் மென்மையான கரத்தைத் தமக்கையின் தோளில் இட்டபடி உள்ளமுருக நின்று, அவள் தன்னிடத்திற் கொண்டுள்ள அன்பினைத் தன் கண்களாற் பருகினாள்.

* * *

உலகம் பலவிதம்: 1947 ஆகஸ்ட் 29 (முற்றொடர் - 29)

"அல்லும்பகலும் இதுதான்கதை"

சிவபாக்கியம் உடனே தன் தாய்க்குச் சமீபமாகச் சென்று "அம்மா, அந்தச் சம்பந்தம் உங்களுக்கும் விருப்பம், எனக்கும் விருப்பம், தங்கை பாக்கியலட்சுமிக்கும் சம்மதமென்றே நினைக்கக்கிடக்கிறது; எங்கள் இருவருக்கும் உடன்பாடென்றால் தன் தாய்க்கும் அது சம்மதமாகவே யிருக்குமென்ற கருத்துப்படத் தங்கை சொல்லுகிறாள்; ஆனமையினால் அம்மா நீங்கள் எங்கள் இராமன் மூலமாகவேனும் இல்லையேல் நேரிலேனும் உங்களுடைய சம்மதத்தை அந்த ஆளுக்குத் தெரிவிக்கலாம்; சம்மதமானால் நாங்கள் அண்ணாவின் இடத்தையடைந்த பின்பு, அவருக்குத் தெரிவித்துக் கருமத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம்" என்றாள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகள் சொன்னவை அத்தனையும் சரியெனத் தாயும் ஏற்றுக்கொண்டாள்; அடுத்தநாட்காலை இராமனைக் கண்ணகியம்மை சமீபத்திற் கூப்பிட்டு, "எங்கள் சின்னத்தங்கைச்சியைக் கல்யாணஞ் செய்துகொள்ள அந்த வாலிபருக்கு வெகு விருப்பமென்று சொன்னாயே; அது நிசந்தானா....." என்று கேட்பதற்கிடையில் "அம்மா, விருப்பமென்று கேட்கிறீர்களா? நீங்கள் அதற்கு உடன்பட்டால்; அவர் உடனே தாமாக எங்கள் சின்னத்தங்கைச்சிக்கு பெருஞ் சந்மானமுங் கொடுத்துத் தாலி கூறை கொடுத்து, ஏதும் பூணாரங்கள் வேணுமானாலுங் கொடுத்து ஏற்றுக் கொள்ளச்சித்தமாயிருக்கிறார் அம்மா, அல்லும் பகலும் இதைப்பற்றிய கதைதான் என்னுடன் பேசுவார்; நான் இவ்வளவுநாளும் உங்களுக்குச் சொல்லப் பயந்துதான் சொல்லாமல் விட்டேன்; ஒருநாள் சின்னத் தங்கைச்சியைக் கண்டாராம்; அன்று தொடக்கம் இந்தப் பெண்ணைக் கண்டவர் எருமைமேய்க்கப் போவரோ என்ற நிலைமையிலேதான் நிற்கிறார் அம்மா" என்று ஆர்வத்துடன் சொன்னான் இராமன். "உனக்கும் இந்தச் சம்பந்தம் உடன்பாடோ, ராமன்" என்று கண்ணகி கேட்க, உங்களெல்லாருக்கும் உடன் பாடென்றால் எனக்கும் அப்படித்தானே" என்றான் ராமன். "நல்லது, நீ இன்று பின்னேரத்திற் கிடையில் அந்த ஆளைக் கண்டு அவருடைய நோக்கத்தை இன்னமும் உசாவி யறிந்துவந்து சொல்லு" எனலும், "அம்மா, இனி உசாவுவதென்ன? அறிவதென்ன; நானே இப்பொழுது அவருடன் போய்ப் பேசி, அவர் தாமாகவே இதனையிட்டு உங்களுடன் நேரில் வந்து பேசச் செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு இராமன் அவ்விடம் விட்டகன்றான்.

"இல்லையேல் இரண்டாம்பேருக்கும் வெளியிடாதே"

பாக்கியலட்சுமி தனக்குத் தாரமாகக் கிட்டுவாளோ என்ற சிந்தனையே சிலநாளாகக் குடிகொண்ட அந்த மனுஷன் அந்தவண்ணமே தனியே இருக்குஞ் சமயம் பார்த்து இராமன் அங்கே போய்ச்சேர்ந்தான்; "ஐயா, என்ன கவலை! எந்த நேரம் பார்த்தாலும் ஏதோ சிந்தித்தபடிதானே காணப்படுகிறீர்கள்; உங்கள் கவலையை எனக்குச் சொல்லவொண்ணாதோ? ஒருவருடைய உள்ளத்திலே ஏதும் பெருங்கவலை யுண்டானால், அக்கவலையைத் தமக்கு நம்பிக்கையான இன்னொருவருக்கு வெளியிட்டால், அக் கவலை யாலுண்டான வேதனை அதிகம் குறையுமென்று உங்களைப் போன்ற படித்த மனுஷர், பெரிய மனுஷர் பலமுறையுஞ் சொல்லக் கேட்டிருக்கிறேனே; ஏதுங் கவலையிருந்தால் என்னிடஞ் சொல்லலாமே ஐயா, அதனை ஆற்ற என்னால் ஏதும் முடியுமென்றால் உடனே செய்து வைப்பேன் ஐயா" என்றான் இராமன், கேட்ட மனுஷன் சிறிது சிந்தனை குறைந்தவனாய், "இராமன் இந்த நேரத்தில் என் கவலையை உனக்குச் சொல்லாமல் வேறுயாருக்குச் சொல்லுவேன்; என் கவலையின் காரணத்தை உனக்குச் சொல்லுகிறேன்; அதனை நீக்க உன்னால் ஆகுமேற்செய்; இல்லையேல், இரண்டாம் பேருக்கும் வெளியிடாதே" எனலும், "ஐயா, வீண் பேச்சுப் பேசும் வழக்கம் என்னிடமில்லை; நீங்கள் கூசாமற் சொல்லுங்கள்; கூடுமானாற் செய்கிறேன்; இல்லையேல் இரகசியமாக வைத்துக்கொள்ளுகிறேன்" என்றான் இராமன்; "வேறொன்றுமல்ல, ராமன் உங்கள் ஆச்சியோடு அன்று வந்த அந்த அழகிய பெண்ணை நான் கல்யாணஞ்செய்ய ஆசைப்படுகிறேன்; அதற்கு உங்கள் ஆச்சி உடன்படுவாளோ, அந்தப்பெண் சம்மதிக்குமோ என்ற இவைகளைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்று அம்மனுஷன் மெல்லச் சொன்னான்; "ஐயா, எங்கள் ஆச்சி அதற்கு உடன்படக்கூடுமென்றுதான் நினைக்கிறேன்; நான் இந்த விஷயமாக எங்கள் ஆச்சியிடம் ஏதும் கேட்கச் சொன்னால் கேட்கிறேன்; இல்லையேல் ஆச்சியை இங்கே நேரில்வரச் செய்கினும் செய்கிறேன்; எதனைச் செய்ய வேண்டும்" என்று இராமன் கேட்க, "நேரில் வரச்செய்தால் நல்லது, ஆனால் வரும்போது நீயும் உடன் வரவேண்டும்" என்று அந்த ஆள் சொல்ல இராமன் ஓம் என்று சொல்லி விட்டு அவ்விடம் விட்டகன்றான்.

"இந்த நிமிஷமும் ஏற்றுக்கொள்ளச் சித்தம்"

மாலைவேளையாதலும் இராமன் கண்ணகியம்மைக்கு விஷயம் முழுவதையுஞ் சொல்லி, கப்பலின் மேற்றட்டிற்கு அழைத்து வந்து இருக்கச்செய்துவிட்டு அந்த இடத்தில் அந்த மனுஷனையும்போய் இருக்கச்செய்து விட்டுத் தான் விநயமாக நின்றான்; "என்னுடைய நோக்கங்களை உங்களுக்கு இராமன் சொல்லியிருக்கக்கூடுமென நினைக்கிறேன், ஆச்சி" என்று அந்த மனுஷன் மரியாதையோடு சொல்ல கண்ணகியம்மையும் "ஓம், தம்பி, இராமன் ஒரு அளவிற்கு விபரஞ் சொன்னான்; அதைப்பற்றிக் குறையில்லை, அந்தவிஷயமாக என்ன பேச வேண்டினும் என்னுடன் பேசிக்கொள்ளலாம்; அந்தப் பிள்ளைக்கு நானே தாய்" என்று கண்ணகி சொல்ல, "நீங்கள் பெண்ணுக்கு இஷ்டமானதைக் கொடுக்கலாம்; அது உங்கள் விருப்பத்தைப் பொறுத்தது; ஆனால் நான் பெருந்தொகைப்பணம் சந்மானமாகக் கொடுத்து இந்தநிமிஷமும் ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்" என்று அந்த மனுஷன் சுருக்கமாகச் சொல்லி முடித்தான்.

அப்படி அந்த ஆள் சொல்லக்கேட்ட கண்ணகி அகமகிழ்ந்தாள்; அப்படிச் சொல்லக் கேட்டுக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்ற ராமன் சிரித்தபடி "ஐயா கேட்கிறேனென்று குறையெண்ணாதீர்கள்; இந்த நிமிஷமும் செய்யச் சம்மதந்தான் என்கிறீர்கள்; எங்கள் ஆச்சி ஓம் சொன்னால், உடனே எங்கள் தங்கைச்சியைக் கல்யாணஞ் செய்து கொள்வீர்களா? கல்யாணஞ் செய்வதற்குத் தாலி வேண்டாமா? கூறை வேண்டாமா? மற்றை ஆயத்தங்கள் வேண்டாமா?" என்று வேடிக்கையாகக் கேட்க, "தாலியுண்டு, கூறையுண்டு, இன்னும் ஆகவேண்டிய சிலவுண்டு; தெய்வத்தை வழிபட்டுக்கொண்டு மங்கல்ய தாரணஞ் செய்யிற் செய்யலாம்" என்று வேடிக்கையாகவே அந்த மனுஷன் சொன்னான்; "தெய்வத்திற்குச் சித்தமானால் அப்படியுஞ் செய்யலாந்தான்; ஆனால், நாம் இப்பொழுது அவசரப்பட நியாயமில்லையே; செய்வதென்றாலும் எங்களுடைய மகனிடஞ் சென்றபிறகு, அந்த வீட்டிலே வைத்துச் சிறப்பாகச் செய்யலாந்தானே" என்று கண்ணகியம்மை சொன்னாள்; அப்படிச்சொல்லக்கேட்ட அந்த மனுஷன் அதற்கு ஏதும் பதில் சொல்லாது சும்மாவிருந்துவிட்டு, தன்னிடத்திலுள்ள நிலம் புலம் பொருள் பண்டம் வீடுகள் பெருந்தொகைப் பணம் முதலியவைகளையெல்லாம் தான் விவாகஞ் செய்யும் பெண்ணிடத்திலேயே ஒப்புவித்துவிடச் சித்தமாகவிருக்கிறேனென்ற கருத்துப்படக் கண்ணகியம்மைக்குச் சொன்னான்; அப்பொழுது இராமன் அந்த மனுஷனைப் பார்த்து, "ஐயா, இவைகளெல்லாவற்றையும் ஒப்புவித்துவிட்டு உங்களையும் அந்தப் பெண்ணிடமே ஒப்புவித்தால் ஒரு சங்கடமுமில்லை என நினைக்கிறேன்" என்று சொல்லி மெல்லச் சிரித்தான்; "தம்பீ, எனக்கும் சம்மதம், எக்குடியிற் புகுந்தாலும் எங்கள் பெண் சீராய்ச் சிறப்பாய்ப் பேராய்ப் புகழாயிருக்க வேண்டுமென்பதுதான் எங்கள் ஆசை; ஆண்டவன் கிருபையால் உமக்கு அவள் தாரமானால் நல்லாயிருப்பாளென்றுதான் என்மனம் என்னையறியாமல் நினைக்கிறது பெண்ணுக்கும் இது சம்மதம் என்றுதான் எண்ணுகிறேன்; என் மகனும் விஷயத்தையறிந்தால் விருப்பப்படுவான்; எல்லாம் ஆண்டவனுடைய அருள்தான்" என்று சொல்லி விட்டுக் கண்ணகியம்மை அந்த இடத்தை விட்டகன்று தன் மக்களிருக்குமிடத்திற்குப் போனாள்; இராமன் மாத்திரம் அங்கே நின்றான்.

"ஆபத்திற்குப் பாவமில்லை"

கண்ணகியம்மை தான் அந்த ஆளுடன் பேசிய விஷயத்தையும், பாக்கியலட்சுமியைக் கல்யாணஞ் செய்வதற்கு அந்த ஆளுக்குப் பூரணசம்மதமென்பதையும், விவாகத்தைக் கூடிய விரைவிலே செய்வதுதான் அவருக்குப் பிரியமென்பதையும் தன் மக்களிருவருக்குஞ் சொல்லிக் கொண்டிருக்கும் போது, ஒரு சிறிய அழகிய "சூற்கேஸ்" என்று இக்காலத்திலே சொல்லப்படும் பெட்டியை இராமன் கொண்டுவந்து பாக்கியலட்சுமியின் முன் நிலையில் வைத்து "இந்தப் பெட்டி அந்த ஐயா எங்கள் ஆச்சியின் சமூகத்திலே பெண்ணிடங் கொடுக்கும்படி தந்தார்" என்று சந்தோஷத்தோடு சொன்னான். பெட்டியைத் தன் முன்னிலையில் இராமன் இப்படிச் சொல்லி வைத்த மாத்திரத்தே இருந்த பாக்கியலட்சுமி சரேலென எழுந்து ஒருபுறத்தே ஒதுங்கி நாணமடைந்தவளாக கப்பலின் அடித்தட்டைப் பார்த்தவண்ணம் நின்றாள்; அதனை அவதானித்த சிவபாக்கியம் தங்கள் தங்கைச்சியைப் பார்த்து, "அனுப்பிய பொருட்களை அன்புடன் ஏற்கத்தானே வேண்டும்; நீங்கள் எடுத்துத் திறந்து பார்த்துத் தங்கைச்சியிடங் கொடுக்கலாமே" என்று சொல்வதற்கிடையில் இராமன், திறப்பையும் என்னிடந் தந்திருக்கிறார் என்று மடியிலிருந்து திறப்பை யெடுத்தான்; அப்போது கண்ணகியம்மை கண்கலங்க மகளைப் பார்த்து, "மகளே, நான் அமங்கலை; பெண்ணுக்கென முதன்முதல் அனுப்பிய மங்கலப்பொருளை நான் ஏற்று வாங்குவது முறையல்ல; இராமனிடமிருந்த திறப்பை நீயே வாங்கித் திறந்து உன் தங்கையிடம் சந்தோஷமாகக் காட்டடி கண்ணே" என்று தன் கவலையை மாற்றி முகமலர்ச்சியுடன் சொல்லுதலும், "அம்மா, நான் என்ன முறையில் எடுத்துக் கொடுப்பது?" என்று மகள் கேட்க, "மகளே ஆபத்திற்குப் பாவமில்லையென்று சொல்லுவார்கள்; நீதான் பாக்கியலட்சுமிக்குத் தமக்கை; இந்த நேரத்திலே உன் தங்கைக்கு நீ தான் தாயென்று உன்னைப் பாவித்துக் கொண்டு பெட்டியைத் திறந்து அதனுள்ளே இருக்கும் பொருள்களை எடுத்து உன் தங்கையிடங் கொடு" என்று தாய் சொல்ல, சிவபாக்கியம் தாய் சொல்லைத் தட்டாது அப்படியே திறப்பை இராமனிடம் வாங்கிப் பெட்டியைத் திறந்தாள்.

"புற்றண்டை பாம்பாட்டுதல் புத்தியல்ல"

திறந்து பார்த்தபோது, விலையுயர்ந்த பட்டுச் சேலையிரண்டு, இரவிக்கைக்காகிய பட்டுத் துணிகளிரண்டு, அந்தப் பெட்டியுள் வைக்கப்பட்ட ஒரு சிறு பெட்டியுள் "அமெரிக்கன் டொலர்" எனப்படும் பவுண் நாணயங்கள் பத்து, இக்காலத்திற்கேற்ற நவமான முறையிற் செய்யப்பட்ட கல்லிளைத்த மோதிரங்கள் மூன்று வைத்திருப்பக் காணப்பட்டன; இவைகளையெல்லாம் சிவபாக்கியம் ஒவ்வொன்றாக இருந்தபடி எடுத்துக்கொடுப்ப, பாக்கியலட்சுமி தலைகுனிந்தபடி கூசிக்கூசி அவைகளை வாங்கித் தங்கள் பயணப் பெட்டியின்மேல் வைப்பாளாயினாள்; கண்ணகியம்மை அச் சந்மானப் பொருள்களை அவதானித்துக் கொண்டிருந்தாள்; இராமன் உற்றுப்பார்த்தபடி நின்றான்; நின்ற இராமனை இருந்த கண்ணகியம்மை பார்த்து "இராமன், அந்த ஐயா என்ன சொன்னார்" என்று கேட்க, இவைகளைக் கொண்டுவந்து இங்கே கொடுக்கும்படி சொன்னார்; அதோடு இன்றைக்கும் நாளைக்கும் நல்லநாள்; இவை போனால் இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசத்திலே சுப நாளில்லை; அடுத்த மாசம் புரட்டாதி; ஏதோ எல்லாம் ஆண்டவனருள் என்று பெருமூச்சோடு சொன்னார் ஆச்சி" எனலும், "இதனையும், எங்களிடஞ் சொல்லும்படி அவர் சொன்னாரா" என்று கண்ணகி கேட்க, "உங்களுக்குச் சொல்லும்படி சொல்லவுமில்லை, சொல்ல வேண்டாமென்று சொல்லவுமில்லை" என்றான் ராமன்; கேட்ட கண்ணகி அதிகம் யோசித்தாள்; "இந்தக் கல்யாண முயற்சியும் சம்மதமும் எங்கள் முயற்சியால் வந்தனவல்ல; நாமொன்றை நினைத்துப் பயணம் புறப்படத் தெய்வம் வேறொன்றை நினைத்துவிட்டது; இந்த மாசத்தில் இன்றும் நாளையுமே கடைசி நாட்களாம்; அடுத்தமாசம் கல்யாணத்திற்கு ஆகாத மாசமாகும்; அது ஆகிய மாசமாக விருந்தால் எங்கள் மகனிருக்குமிடம் சேர்ந்தவுடனே நல்ல முறையில் இவர்களுக்குக் கல்யாணம் செய்துவைக்கலாம்; அது முடியாதபோது இனி அடுத்ததற்கடுத்த மாசந்தான் நாள் பார்த்துச்செய்யவேண்டி வரும்; அவ்வளவு காலமும் தவணையிட்டு வைப்பது புத்தியல்ல; அந்நியவூரிலே பெண் வேறு மாப்பிள்ளை வேறாக இருப்பதற்காகிய ஒழுங்குகளைச் செய்து வைப்பதுஞ் சங்கடம்; இந்தக்கால நாகரிகத்தின்படி பெண்ணையும் மாப்பிள்ளையையும் ஒருவரையொருவர் காணவும் ஒருவரோடொருவர் பேசவும் வைத்துப் பிறகு சுபவேளை பார்த்துக் கல்யாணஞ் செய்து வைக்கலாமோ வென்றால் புற்றண்டை பாம்பைவைத்தாட்டுவது புத்தியல்ல என்று எங்கள் முதியோர் சொல்லும் பழமொழியு முண்டு....." என்று இப்படி யோசித்துக் கொண்டிருந்தாள் கண்ணகி.

* * *

உலகம் பலவிதம்: 1947 செப்டெம்பர் 05 (முற்றொடர் - 30)

பாக்கியலட்சுமி நாணமுற்றாள் சிவபாக்கியம் சினந்தாள்

நீடித்தநேரம் யோசித்துக்கொண்டிருந்த கண்ணகியம்மை அங்கே வந்த இராமனைப் பார்த்து "இராமன் எல்லாம் ஆண்டவனருளால் விதியின் வண்ணம் நடக்கும்; அந்த மனுஷன் இந்தப் பெண்ணுக்கு இப்படியான விலையுயர்ந்த பொன் பொருள் புடைவையெல்லாம் அனுப்பிய பின்னரும், நாம் பெண்ணையும் மாப்பிள்ளையையும் பிரித்துவைத்துக் கொண்டிருப்பது முறையல்ல; எல்லாரும் மனமொத்துச் செய்யும் சம்பந்தமே நல்ல சம்பந்தமாகும்; ஆனதால், நீ இப்பொழுதே அந்த ஐயாவிடம்போய், நாளை எந்தநேரம் சுபநேரமென்பதைக் கேட்டறிந்து கொண்டுவந்து சொல்லு" என்று சொல்ல, "ஆம், ஆச்சி, அப்படியே போயறிந்துவந்து சொல்லுகிறேன்" என்று கூறிவிட்டு இராமன், விஷயத்தை ஒருவாறு அயிர்த்துக்கொண்டானாதலின், விரைவாகப்போய் அந்த ஆளைக்கண்டு விசயத்தைச் சொன்னான்; அவர் சிரித்துக்கொண்டு "எதற்காகச் சுபநாள்" என்று கேட்க, இராமன் "நீங்கள் அந்தத் தங்கைச்சிக்குச் செய்த சந்மானத்திற்குப் பதிற் சந்மானஞ் செய்யப்போலும்" என்று சொல்லிச் சிரித்தான்; அம்மனுஷன் மகிழ்ச்சியோடு உடனே பெட்டியைத்திறந்து பஞ்சாங்கத்தை யெடுத்துப் பார்த்து "நாளைப்பகல் 10 மணிவரையிலும் ஒரு சுபமுகூர்த்தமுண்டு, இரவு எட்டு மணிக்கு மேலும் ஒரு நல்லநாளுண்டு" என்று சொல்ல, ராமன் "ஐயா, இதனை இப்பொழுதே போய் ஆச்சியிடஞ் சொல்லிவிட்டு மீண்டு உங்களிடம் வருகிறேன்" என்றுகூறி மீண்டு கண்ணகியிடம் போய் இரு சுபநேரங்களையுஞ் சொன்னனான்; கேட்ட கண்ணகியம்மை இராமனையும் மக்களையும் பார்த்து "நாளைப்பகல் நாளுக்கு நடத்துவதோ, இல்லையேல் இராநாளுக்குச் செய்வதோ" எனலும், இராமன் "பகல்நாளுக்கே செய்யலாம்" என, பாக்கியலட்சுமி தலைகுனிந்தபடியிருப்ப, "என்னவிதமாக, அம்மா! செய்வது" என்று சிவபாக்கியங் கேட்டாள்; "சொல்வதென்ன, மகளே, பிள்ளையாரைத் தியானித்துக் கும்பிட்டுக்கொண்டு சின்னத்தங்கைச்சியை அந்த மாப்பிள்ளை கையிலே மனச் சந்தோஷமாக ஒப்புவித்து விடுவதுதான்" என்றாள் கண்ணகியம்மை; "அதனால் ஒரு குறையுமில்லையா, அம்மா" என்று சிவபாக்கியம் பின்னருந் தாயைக் கேட்க "இல்லை, மகளே, மனமொத்த சம்பந்தந்தான் சந்தோஷமான வாழ்க்கையைத் தரும்" என்று சொல்ல, மகளும் தாய் சொல்லை ஏற்றுக் கொண்டாள்; அதன் பின்னர் கண்ணகியம்மை இராமனைப் பார்த்து "இராமன் நீ இப்பொழுது அந்த ஐயா இருக்குமிடத்திற்குப் போகவில்லையோ" என்று வினாவ "போகச்சொன்னாற் போகிறேன்; போய் ஏதுஞ் சொல்லச் சொன்னாற் சொல்லுகிறேன்" என்றான் இராமன் "நீ அந்த ஐயாவிடம்போய், நாளைப் பகல் 10 மணி வரையில் இங்கே வந்து தங்கைச்சியை ஏற்றுக்கொள்ளும்படி நான் சொன்னதாகச் சொல்லு" என்று கண்ணகியம்மை சொல்லுதலும், இராமன் "எந்தத் தங்கைச்சியை ஏற்பது" என்று கேட்க, பாக்கியலட்சுமி நாணமுற்றாள்; சிவபாக்கியஞ் சினந்தாள்; "இராமன் நீ வேறொன்றுஞ் சொல்ல வேண்டாம்; தங்கைச்சியென்றால் எந்தத் தங்கைச்சி யென்பது அந்த ஐயாவுக்கு விளங்கும்; நீ மற்றத்தங்கைச்சியைப் பற்றி ஏதுஞ் சொல்லி விடாதே; மற்றத் தங்கைச்சி இங்கே இருப்பதைத் தானும் அந்த ஆளுக்குத் தெரியாது; ஒருபோது பெரியதங்கைச்சியைப் பற்றி நீ ஏதும் அந்த ஆளுக்கு சொன்னதுண்டோ" என்று பதைப்புடன் கண்ணகியம்மை கேட்கவும் ஏன் அம்மா சொல்லப்போகிறேன் நான் என்ன புத்தியிற் குறைந்தவனா என்று சொல்லிவிட்டு இராமன் அந்த ஆளிடம் போனான்; "என்ன விசேஷம்" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே வந்த இராமனை அந்த ஆள் வினாவுதலும் "இனி எல்லாம் விசேஷந்தானே நாளைப் பகல் பத்து மணியாம் உங்களிருவருக்கும் நிச்சயிக்கப்பட்ட விவாக முகூர்த்தம்; அது உங்களுக்கும் உடன்பாடுதானோ என்று ஆச்சி கேட்டுக்கொண்டு வரச் சொன்னமையினால் இங்கு வந்தேன்; அது நல்ல நேர மென்றுதான் நான் நினைக்கிறேன்" என்றான் இராமன்; "உங்க ளெல்லோருக்கும் நல்ல நேரமாக இருந்தால், அது எனக்கும் நல்ல நேரந்தானே" என்று அந்த ஆள் சொல்ல, அதனைக் கேட்டுக்கொண்டு, இராமன் பின்னரும் சில நிமிஷம் அங்கே யிருந்துவிட்டு பின்வந்து கண்ணகியம்மைக்கும் விஷயத்தைச் சந்தோஷத்துடன் சொல்ல அவர்களுங் கேட்டு ஆனந்தித்தார்கள்; இரு பகுதியாருக்கும் நீடித்த இரவு மகிழ்ச்சியாயிருந்தது.

கல்யாணம்:

அடுத்தநாள் குறித்த சுபமுகூர்த்தம் வருதலும், கண்ணகியம்மை இராமனுக்குச் சொல்லி அந்தஆளை அழைத்து வரும்படி சொன்னாள். அதற்கென முந்தியே ஆயத்தமாய் இருந்த அந்த மனுஷன் கையோடு எழுந்து தனது "பிரிவ்கேஸ்" எனப்படும் பிரயாணப் பெட்டியையும் எடுத்துக் கொண்டு வர இராமன் "பெட்டியை இங்கே தாருங்கள் ஐயா" என்று சொல்லி அந்தப் பெட்டியைத் தான் தூக்கிக் கொண்டு முன்னே போக, அந்த ஆள் பின்னே சென்றான். இவர்களின் வரவைக் கண்ட கன்னியரிருவரும் ஒதுங்கி மறைந்து நின்றனர். கண்ணகியம்மையே அந்த ஆளை வரவேற்றாள்; கப்பலில் வேறு சில பெண்கள் இருந்தாரெனினும் இவ் விஷயத்தை அவர்களுக்கு சொல்லவும் அவர்களை இம் மங்களவிவாகத்திலே துணை புரியவிடவும் கண்ணகியம்மை விரும்பவில்லை; அப்படியே விரும்பினால் விபரீதமாக கொள்வார்களென்பதே அவளுடைய நோக்கு. தம்பீ, "எங்களுடைய மகளை ஏற்றுக்கொள்ள உமக்குச் சம்மதந்தானே" என்று கண்ணகியம்மை கேட்க "முழுச் சம்மதந்தான்" என்று அந்த மனிதன் கூறினான், உடனே கண்ணகியம்மை பாக்கியலட்சுமி யொதுங்கி நிற்குமிடத்திற்குப்போய் அங்கு முந்தியே சிவபாக்கியம் அலங்காரஞ் செய்துவிட நாணத்தோடு நின்றவளை அணைத்துக்கொண்டு வந்து, இறைவன் சாட்சியாக, சூரியன் சாட்சியாக இந்தச் சமுத்திரத்தின் ஸ்தாபகராகிய வருணன் சாட்சியாக, இந்த உள்ளம் சாட்சியாக இச் சுபவேளையில் உமக்கு வாழ்க்கை துணைவியாகத் தருகின்றேன் ஏற்றுக்கொள்ளும்; ஏற்று எல்லாச் சகல செல்வங்களையும் பெற்று வாழ்வீர்களாக" என்று மகிழ்ச்சியோடு அக் கன்னிகையின் கையை மாப்பிள்ளையின் கையில் ஒப்படைக்க உடனே அந்த மாப்பிள்ளை பயபக்தியோடு மேலே சொல்லப்பட்ட சாட்சிகளைத்தானும் ஏற்றுக்கொண்டான்; ஏற்ற மணமக்களை இருக்கச் செய்து அவர்களுக்கு [illegible] கொடுத்துத் தன் பெட்டியுள் வைத்திருந்த தாலி கூறை ஏனைய சந்மானங்கள் ளெல்லாவற்றையும் எடுத்து ஒரு தட்டில்வைத்து முதல் தாலியை எடுத்துப் பெண்ணின் கழுத்திலே கட்டிவிட்டு பின் கூறையையும் ஏனைய சந்மானங்களையும் பெண்ணின் கையில் கொடுக்க, அவள் எழுந்து தலைகுனிந்தபடி அவைகளை ஏற்றாள்; பின் சிவபாக்கியம் மறைவில் நின்று கொஞ்சம் செய்து வைத்த சிற்றுண்டிகளை இராமனைக் குறிப்பாற் கூப்பிட்டுகொடுக்க அவன் கொண்டு போய் மணமகள் கையிற்கொடுக்கக் அவர்கள் பரஸ்பரம் உணவு பரிமாறி னர். சிவபாக்கியம் தன்னை யாரும் காணாவண்ணம் ஒதுங்கி நின்று தான் அங்கு நிகழ்வனவற்றையெல்லாம் கண்டுகொண்டு ஊழின் மகிமையை வியந்தாள். அவை இறைவனருள் என்று உணர்ந்தாள். சற்று நேரஞ் செல்ல கண்ணகியம்மை மணமகனை நோக்கி "மாப்பிள்ளை இந்த நல்ல நேரத்திலேயே பெண்ணைத் தம்முடைய இடத்துக்கு அழைத்துக் கொண்டுபோகலாம்" என்று சந்தோஷத்துடன் சொல்ல "அப்படியே செய்கிறேன் ஆச்சி" என்று சொல்லி மணமகன் மணமகளுடைய கரத்தைப் பற்றி நடக்க கண்ணகியம்மை சிறிது தூரம் பின்னே செல்ல, தாயைத் தொடர்ந்து சிவபாக் கியமும் சற்றுத்தூரம் பின்னே படிவழியேறிச் செல்ல, அவர்கள்பின் இராமன் சென்றான். கப்பலின் மேல்தட்டினைத் தம்பதிகள் அடைந்தவுடன், கண்ணகியம்மை தம்பதிகளை "சுகமே போய் மீண்டு வாருங்கள்" என்று சொல்லி அவ்வளவில் நிற்கவும், "ஓம் போய் வருகிறோம்" என்று மணமகன் திரும்பிப் பதில் சொல்லுதலும் கண்ணகியம்மையின் பிறகே ஒரு அழகிய கன்னிகை வந்துநின்று திரும்புதலையும் அவதானித்தான்; தம்பதிகள் விடை பெற்றுக் கொண்டு தங்களிடத்திற்குப் போக இராமனும் அவர்களுடன் போக, தாயும் மகளும் தங்களிடத்திற்கு மீண்டனர்; மணமக்கள் தங்களிடத்தை யடைந்த மாத்திரத்தே இராமனும் அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு தாயும் மகளுமிருக்கும் இடத்திற்கு மீண்டான்.

"என் பாக்கியமே"

மாப்பிள்ளை தன் காதலியின் விரலில் ஒரு மோதிரத்தைத் தானாக இடுதலும், அந்த மோதிரத்தை மனமகிழ்ச்சியோடு பார்த்தபெண் பின்பு அதில் ஏ, என்னும் ஆங்கில எழுத்துப் பொறிக்கப் பட்டிருத்தலை அவதானித்து "இந்த ஏ எழுத்து எதனைக் குறிக்கிறதென நீங்கள் எனக்குச் சொல்ல வொண்ணாதா" என்று கிளியென மொழிய, "இது என் பெயரின் முதலெழுத்து" என்று காதலன் ஆதரத்துடன் சொல்ல "உங்கள் பெயரை நான் சொல்லக் கூடாதல்லாமல். உங்கள் முழுப் பெயரையும் நான் கேட்டறியலாந்தானே" என்றாள். "என் கண்மணியே! உமக்குச் சொல்லாமல் என் பெயரை யான் வேறு யாருக்குச் சொல்வது? என்னை விஜயத்தினம் என்று சொல்வார்கள்" என இதமுறச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிவிட்டு "என் வாழ்க்கைத் துணைவியின் நாமத்தை நான் அறியவொண்ணாதா" என்று கணவன் கனிவுடன் வினவ, "பாக்கியம் என்றுதான் என்னைச் சொல்வார்கள்; என் முழுப்பெயரையும் சொல்லுகிற் பாக்கியலட்சுமியாகும்" என்றாள் மனையாள். "என் பாக்கியமே! இந்த ஆச்சியின் மகள்தானே நீர்" என்று நாயகன் சொல்ல, "ஆச்சியும் எனக்கு ஒரு தாய்தான்" என்று அன்பு பெருகச் சொன்னாள் நாயகி; இதனைக்கேட்ட மாத்திரத்தே விஜயரத்தினம் சிறிது சந்தேகமுற்று "சற்று முன்பு, நாங்கள் இங்கே வரும்போது, எங்கள் ஆச்சியின் பிறகே வந்து ஆச்சியோடு மீண்டுபோன அந்த அம்மாள் ஆர்? எனக்குச் சொல்லக் கூடாதா" என்று புருஷன் கேட்க, "இனி உங்களுக் கொளித்து என்னுள்ளத்தில் ஒரு இரகசியம் இருக்க இடமுண்டா, நீங்கள் எதனைக் கேட்டாலும் நான் சொல்லுவேன், எதனைச் சொன்னாலும் சொன்னபடி செய்வேன்; அந்த அக்காதான் ஆச்சியின் சொந்த மகள்" என்று மனையாள் சொல்ல, "உங்கள் அக்காவின் பெயரென்ன" என்று கணவன் மீட்டும் வினவ, எங்கள் அக்காளையும் பாக்கியம் என்றே அழைப்பார்கள்; பூரணமான பெயர் சிவபாக்கியம்" என்று உள்ளமுருகப் பன்னினாள் காதலி, கேட்ட விஜயரத்தினம் சற்று யோசித்தவண்ணமிருந்தான்.

* * *

உலகம் பலவிதம்: 1947 செப்டெம்பர் 12
(முற்றொடர் - 31)

ஏன் சிரிக்கிறீர்கள்?

"என் பாக்கியவதியே! கேட்கிறேனென்று குறையெண்ணாதீர்; அந்த அக்கா உமது உடன்பிறந்த சகோதரியா, இல்லையேற் சகோதர முறை பூண்டுள்ள பெண்ணா?" என்று ஆவலுடன் வினவ, என் உடன் பிறந்த சகோதரமல்ல, அபிமானச் சகோதரி; ஆனால் உடன் பிறந்த சகோதரியைக் காட்டிலும் நூறுமடங்கு அன்பு என் அக்காள் என்மேற் பாராட்டி வருகிறாள்; உடன்பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்கவேண்டா, உடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன் பிறவா, மாமலையிலுள்ள மருந்தே பிணிதீர்க்கும், அம்மருந்து போல்வாரு முண்டு" என்று பாட்டுப் படிப்பீர்களல்லவா? அந்தப் பாட்டிலே சொல்லப்பட்ட மாமலையிலுள்ள மருந்தென்று சொல்லலாம் என் அக்காளை" என மனமுருகச் சொன்னாள் பாக்கியலட்சுமி; "அப்படியானால், அந்த ஆச்சி உம்மைப் பெற்ற தாயல்லவா" என்று ஆவலோடு கணவன் கேட்க, மனையாள், இல்லையென்று விபரமாகச் சொல்லித் தன் வரலாற்றையும், கண்ணகியம்மை சிவபாக்கிய மென்னுமிவர்களின் வரலாற்றையும் தான் அறிந்த வரையில் விபரமாகத் தன் நாயகனுக்கு எடுத்துச் சொன்னாள். நாயகன் கேட்டு ஆச்சரியமடைந்து புன்னகை செய்தான்; அதனையவதானித்த பாக்கியலட்சுமி தன் கணவன் சிரித்தமைக்குக் காரணமென்ன வென்பதைச் சிறிது நேரஞ் சிந்தித்து அறியமுடியாதவளாய், "ஏன் சிரிக்கிறீர்கள்? நான் சொன்னதில் ஏதுந் தவறுண்டோ? ஒளியாமற் சொல்லுங்கள்" என்று ஆவலுடன் கேட்க "நீர் ஒரு தவறுஞ் செய்யமாட்டீர்; அப்படித்தான் செய்தாலும் அது தவறாக மாட்டாது; சும்மா சிரித்தேன்" என்றான்; "காரணமில்லாமல் ஒருபோதுஞ் சிரிக்கமாட்டீர்கள்; அந்தக் காரணத்தை எனக்குச் சொல்ல விரும்புகிறீர்களில்லை; சரி, இனிக் காரணங் கேட்கவுமில்லை; நீங்கள் சொல்லவும் வேண்டாம்" என்று சொல்லிப் பாக்கியலட்சுமி சிறிது சிந்தித்தாள். சிலநிமிஷம் அவள் வார்த்தையாடாதவளாய் நிலத்தைப் பார்த்த வண்ணம் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவள்போலிருந்தாள்; தன் காதலியின் ஊடலைக் கண்ட காதலன் கவலை கொண்டானாய், "கண்ணே, என் காதலியே, ஏன் மௌனஞ் சாதிக்கின்றீர்; என்னுடன் கோபமா? ஏதும் மனஸ்தாபமா?" எனப் பரிவுடன் கேட்டதும், காதலி "எனக்கு உங்கள்மேற் கோபமுமில்லை, மனஸ்தாபமுமில்லை; நான் சும்மா மௌனஞ் சாதிக்கிறேன்" என்றாள்; "சும்மா மௌனஞ் சாதிக்கிறதென்றால், அது எனக்கு விளங்க வில்லை" என்று கணவன் புன்முறுவலுடன் கேட்க, "நீங்கள் சும்மா சிரிக்கவில்லையா, அப்படியே நானும் சும்மா மௌனஞ் சாதிக்கிறேன்" என்று பதில் சொன்னாள் பாக்கியலட்சுமி; "என் அன்பே, உனக்கொளித்து எனக்கேதும் இரகசியமில்லை; இதனை நம்பும்; நான் சிரித்ததற்குக் காரணத்தைச் சொன்னால் நீர் என்மீது கோபிப்பீரென்றெண்ணித்தான் சொல்லப்பயப்படுகிறேன், கோபிக்கமாட்டே னென்று உறுதியளித்தாற்றான், சிரித்ததற்கான காரணஞ் சொல்வேன்" எனக்கூற, "நான் ஒருபோதும் கோபிக்கமாட்டேன், மனவருத்தப்பட மாட்டேன்; இது சத்தியம்; உண்மையைச் சொல்லுங்கள்" என்று இதமாகக் கேட்டாள் இல்லாள்.

"ஊழிற் பெருவலி யாவுள"

அன்புக்கினியாளே நான் ஒரு பாக்கியத்தைப் பெறுதற்குப் பலநாள் ஆசைப்பட்டு முயற்சி செய்தேன்; அந்தப் பாக்கியம் கிட்டாதெனக் கண்டு வெட்டென மறந்தேன்; பின்னர் கிட்டியதுபோற் காணப்பட்டது; கிட்டிய பின் பார்த்தேன்; அது நான் ஆசைப்பட்ட பாக்கியத்தைக் காட்டிலும் மேலான பாக்கிய மெனக் கண்டேன்; அதனாற்றான் சிரித்தேன்" என்று காதலன் கனிவுடன் மொழிந்தான். நீங்கள் சொல்வதிலொன்றும் எனக்குப் புலப்படவில்லை" என்றாள் பாக்கியலட்சுமி; "என் பாக்கியமே, நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் முதற்றாரத்தையிழந்த பின் மலாய்நாட்டிலிருந்து ஊருக்கு மீண்டு வந்து இரண்டாந் தாரங்கொள்ள முயற்சி செய்த போது, உமது பெரிய தமக்கையாரையும் மணம்பேசுவித்தேன்; உங்கள் ஆச்சி தமது மகளுக்குச் சொந்த மைத்துனரொருவர் இருக்கிறாரெனச் சொல்லி எனக்கு உமது தமக்கையாரை மணஞ்செய்ய இசையாதொழிந்தனர்; உமது தமக்கையின் பெயர் பாக்கியம் என்றீர் அப்போதே கேள்விப்பட்டிருந்தேன்; அதன் பின்னர் பரிமளமென்றொரு கன்னிகைக்கு மணம் பேசுவித்தேன்; அதுவுங் கைகூடாமற் போயிற்று; விதியிருந்தாற்றானே எதுவுங் கைகூடும்; நீர் என்னை அடையவேண்டுமெனவும், நான் உம்மை அடைய வேண்டுமெனவும் நியதியிருந்தால், வெவ்வேறு எத்தனை முயற்சி செய்தாலும் கைகூடுமா? இந்த இரகசியத்தை யறியாமலா எங்கள் வள்ளுவர்,

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான் முந்துறும்"

இவ்வாறு அக்காலத்திலே பாடியது; இரண்டாவதாக பரிமளத்திற்குப் முன் பொழுங்குசெய்த கல்யாணம் கடைசி நேரத்திலே குழம்ப நேர்ந்ததும் அந்தப்பெண்ணுக்கெனச் செய்துவைத்திருந்த தாலி முதலியவற்றையும் கொடுக்கும்படி வைத்திருந்த சந்மானங்கள், வாங்கி வைத்திருந்த கூறை சேலைகள் ஆகிய எல்லாவற்றையுமெடுத்துக் கொண்டு கல்யாணஞ் செய்யவேண்டுமென்ற நோக்கத்தையும் சோரவிட்டு, பிறந்தவூரையும் விட்டு இன்னமும் பொருள் ஈட்டவேண்டுமென்ற ஊக்கங் கொண்டு மலாய்நாட்டிற்கு இந்தக் கப்பலிற் புறப்பட்டேன்; இக் கப்பலில் வரும் போதே உங்களுடன் வரும் இராமனையும் உங்கள் ஆச்சியையும் ஒருநாள் உம்மையும் காணப்பெற்றேன்; இராமனுடன் நான் வார்த்தையாடியபோது உங்கள் ஆச்சியின் மகள் நீர் தானென்றும், உமது பெயர் பாக்கியமென்றும் நான் விளங்கிக்கொண்டேன்; அதனால் முந்தி நான் கல்யாணம் பேசுவித்து இசையாத பாக்கியமென்னுங் கன்னிகையைத்தான் இப்பொழுது கல்யாணஞ் செய்யப்போகிறேனென்று எண்ணிவிட்டேன்; ஆனால் கல்யாணம் இப்பொழுது நிறைவேறியவுடனே தான் நீர் வேறு பாக்கியம், உங்கள் தமக்கையார் வேறு பாக்கியமென்பதை விளங்கினேன்; இவைகளை யெல்லாம் யோசித்தபோது என்னையறியாமலே சிரித்துவிட்டேன்; இவைகளெல்லாவற்றிற்குங் காரணம், உமக்கும் உமது தமக்கையாருக்கும் "பாக்கியம்" என்ற பெயர் பொதுமைத்தாக இருந்தமையே....." என்று கணவன் சொல்லும் போது மனையாள் "உங்களுடைய அபாக்கியந்தான் அந்தப் பாக்கியம் உங்களுக்குக் கிட்டாமல் இந்தப்பாக்கியம் வந்து சேர்ந்தது" என்று முகத்தைச் சுழித்துக்கொண்டு கிள்ளையெனப் பன்ன, "கண்ணே, என் கண்ணின் மணியே, நீர் ஒருபோதும் அப்படிச் சொல்லவும் நினைக்கவுமொண்ணாது; உம்மை என் அரிய இல்லக்கிழத்தியாகப் பெறும் பாக்கியத்தைப் பெற்ற எனக்கு வேறு பாக்கியமும் வேண்டுமா" "காதலிருவர் கருத்தொருமித்து, ஆதரவு பட்டதே இன்பம்" என்பது எங்கள் மூதாட்டி வாக்கு. அந்த இன்பம் உமக்கும் எனக்கும் பொதுவாக இருப்ப, நானாக, நீராக வேறு இன்பத்தை, வேறு பாக்கியங்களைக் கனவிலும் எண்ண வருமா? இல்லையே; கரும்பே, இப்படியெல்லாம் நான் பேசுவதனால் உமது தமக்கையாரை அவமதிக் கிறேனென்று எண்ணிவிடவொண்ணாது; இந்த நிமிஷந் தொடக்கம் உமது தமக்கையாரை என் சகோதரியாகவே பாவித்து நடப்பேன்; இது சத்தியம்" என்று பயபக்தியோடு சொல்ல, பாக்கியலட்சுமி கேட்டுப் பெருமகிழ்ச்சி யடைந்தாள்.

அவர்தான் இவர்

இவர்கள் இப்படி வார்த்தையாடிக் கொண்டு இருக்கும்போது இராமன் அவர்களுக்காகிய உணவுப்பொருளைக்கொண்டு அங்கே வந்தான்; தான் வரும்போது, காதலியுங் காதலனும் பரஸ்பரம் பாராட்டிய அன்பை அவதானித்து இராமன் ஒரு தமயன் அடையும் மகிழ்ச்சிபோன்ற மகிழ்ச்சியை யடைந்தான்; இராமன் கொண்டுவந்த உணவுப்பண்டத்தைப் பாக்கியலட்சுமி பரிவுடன் வாங்கித் தன்னாயகனை உண்ணச் செய்துவிட்டு, தான் உண்ணாது ஒல்கிநிற்க, கணவன் "ஏன், நீரும் உடனிருந்து உண்ணலாமே" என்று அன்பு பெருகக் கேட்க "கணவன் உண்டபின் தான் நுகர்கொள்கையும், எனக் காசிகாண்டத்திலே சொல்லப்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியுந் தானே, நீங்கள் உண்ணுங்கள், பிறகு நான் உண்ணுகிறேன்" எனலும் "உமது இட்டப்படி செய்யும்" என்று சொல்லித் தான் போசனஞ் செய்தான்; போசனம் முடித்தவுடன் கணவனை மனையாள் பணிவுடன் நோக்கி "என் அக்காளுடன் இப்பொழுது மாத்திரம் போயிருந்து ஆகாரமுண்ண அநுமதி தருவீர்களா" என்று கேட்க, "இப்பொழுது மாத்திரமல்ல, உமக்கு விருப்பமான வேளையிலெல்லாம் நீர் உமது தமக்கையாரோடும் தாயாரோடும் போயிருந்து போசனம் பண்ணலாம்" என்று சொல்ல, பாக்கியலட்சுமி தன்னாயகனுக்குத் தாம்பூலம் வழங்கி அருந்தச்செய்துவிட்டு இராமனுடன் கூடிக்கொண்டு தாயும் தமக்கையும் இருக்குமிடத்திற்குப் போதலும், அவள் வரவைக்கண்ட அவர்களிருவரும் அதிக சந்தோஷமடைந்தார்கள்; இதற்கிடையில் இராமன் கண்ணகியம்மையைப் பார்த்து "ஆச்சி எங்கள் சின்னத்தங்கைச்சி உங்களுடனிருந்து உணவுகொள்ள விரும்புவதாகச் சொல்லிவிட்டு இங்கே வந்தமையினால் நீங்கள் எல்லீரும் ஆகாரம்பண்ணுங்கள்" எனலும், "மகளே, அவரைக் கேட்டுக்கொண்டுதானே இங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாய்" என்று கேட்க "கேளாமல் வருவேனோ ஆச்சி" என்றாள் பாக்கியலட்சுமி, "கேளாமல் வரப்போவதில்லை எங்கள் தங்கைச்சி, கேட்டால் உத்தரவு கொடாமல் விடப்போவதில்லை உங்கள் மருமகன்" என்று சிரித்துக்கொண்டு சொன்னான் இராமன்; மூவரும் ஒருங்கிருந்து போசனஞ் செய்ய, இராமனும் இன்னொரு இடத்திலிருந்து உணவருந்தினான்; அப்பொழுது பாக்கியலட்சுமி தன்னாயகன் தனக்குச் சொன்ன வரலாறு முழுவதையும் தாய்க்கும் தமக்கைக்குஞ் சொல்லி "அவர்தான் இவர்" என்று முடித்தாள், கேட்ட தாய் அற்புதமடைந்தாள்; தமக்கை நாணமடைந்தாள்; அந்த ஆண்டவன் அருளின்படி எதுவும் நடக்குமேயொழிய எங்கள் முயற்சியினாலும் ஏதும் நடப்பதுண்டோ" என்று சொல்லிச் சந்தோஷப்பட்டாள் கண்ணகியம்மை; போசனம் அருந்திய பின் கணவனிருக்குமிடத்திற்கு மீண்டாள் பாக்கியலட்சுமி.

* * *

உலகம் பலவிதம்: 1947 செப்டெம்பர் 19 (முற்றொடர் - 32)

"பிரிந்தவர் கூடிடிற் பேசவும் வேண்டுமோ"

இவைகளெல்லாம் நிகழ்ந்த அடுத்தநாள் அதிகாலையில், இவர்கள் ஏறிச்சென்ற கப்பல் சிங்கப்பூர்த் துறைமுகத்தைப் போய்ச் சேர்ந்தது; கொழும்பிலிருந்து புறப்பட்ட கப்பல், அத்தினத்தில் அங்கே வந்துசேருமென முந்தியே அறிந்தவர்களாகிய மலாய்நாட்டில் வசிக்கும் யாழ்ப்பாண மக்களுட் பலர், தங்கள் மனைவி மக்கள் பெற்றார் சுற்றத்தாரை வரவேற்பதற்காக, கப்பல் போய்ச் சேருவதற்குச் சிலமணிநேரம் முந்தியே துறைமுகத்தில் ஆயத்தமாக வந்து நின்றார்கள்; கண்ணகியம்மையின் மகனாகிய சிவகுருநாதனும் மோட்டோரதத்துடன் அப்போது அங்கே வந்து நின்றான்; தாயுந் தங்கையும் பாக்கியலட்சுமியும் இராமனும் கப்பலைவிட்டு இறங்குதலும் சிவகுருநாதன் அவர்களை ஆநந்தத்தோடு வரவேற்றான்; சிவகுருநாதனைக் கண்ட மாத்திரத்தே தாய்க்குந் தங்கைக்கும் உண்டான சந்தோஷத்தையும், தாயையும் தங்கையையும் கண்ட மாத்திரத்தே சிவகுருநாதனுக்குண்டான ஆநந்தத்தையும் இப்படிப் பட்டதெனச் சொல்லமுடியாது; "பிரிந்தவர் கூடிடிற் பேசவும்வேண்டுமோ" என்றல்லவா சொல்லப்பட்டிருக்கின்றது; சிவகுருநாதன் விவேகி, சந்மார்க்கனென்பது முந்தியே சொல்லப்பட்டது; பாக்கியலட்சுமி இன்னாளென அவன் அந்தநேரத்தில் அறிந்திலனெனினும், தன் தாயையும் தங்கையையும் துணையாகக் கொண்டு பிரயாணம் வந்த ஒரு பெண் என்பதை யூகித்துப் பாக்கியலட்சுமியையும் தன்னுடைய இன்னொரு தங்கையெனப் பாவித்து அன்புடன் உபசரித்தான்; பாக்கியலட்சுமியும் அப்படியே அவனை மதித்து ஊடாடினாள்; மூவரையும் மோட்டாரதத்தில் ஏறும்படி சிவகுருநாதன் சொல்ல, "தம்பி, அங்கே வருகிறார் எங்கள் சின்னத்தங்கைச்சியின் புருஷன்" என்று சற்றுப் பிந்தி இறங்கிவந்த விஜயரத்தினத்தைக் கண்ணகியம்மை காட்டுதலும், சிவகுருநாதன் உடனே விஜயரத்தினத்தை யெதிர்கொண்டு மகிழ்ச்சியோடு இரதத்தண்டை அழைத்து வந்தான். இரதம் பெரியதாதலின் பின்னாசனத்திற் பெண்கள் மூவரும் இருக்க, முன்னாசனத்தில் விஜயரத்தினமும் இராமனும் இருப்ப, தன்னாசனத்திலிருந்து சிவகுருநாதனே இரதத்தைச் செலுத்தித் தன் வாசஸ்தானத்திற்குக் கொண்டு சென்றான்; அவர்கள் வரவை யுத்தேசித்து, முன்னதாகவே ஸ்நானம் காலைப் போசனம் முதலியவற்றிற்காகிய ஒழுங்குகளை யெல்லாம், கிருஷ்ணன் என்னும் பணியாளன் சிவகுருநாத னுடைய வாசஸ்தானத்தில் ஆயத்தஞ் செய்திருந்தான், எல்லோரும் ஸ்நானம் முதலியன முடித்துக் காலையுணவு அருந்தினர். சிவகுருநாதனுடைய வாசஸ்தானமாகிய வீடு விசாலமானது; பல அறைகளோடு கூடியது; தண்ணீர்ச் சௌகரியம் முதலியனவுடையது; விஜயரத்தினமும் பாக்கிய லட்சுமியும் வசிப்பதற்கான இடம், தன் தாய் சகோதரியிருவரும் வசித்தற்கான இடம், தனக்காகிய இடம் எல்லாம் தன் வீட்டிலே வகுத்து வைத்தான்; விஜயரத்தினமும் பாக்கிய இலட்சுமியும் தங்களுக்குரிய அறையில் இருப்ப, சிவகுருநாதன் தன் சகோதரியும் தாயுமிருக்கும் அறையிற் போய், பாக்கியலட்சுமி விஜயரத்தின மென்னு மிவர்களுடைய வரலாற்றைச் சொல்லும்படி தாயைக் கேட்டான்; தாய் முதல் விஜயரத்தினத்தின் வரலாற்றையும் பின்னர்ப் பாக்கியலட்சுமியின் வரலாற்றையும், பாக்கியலட்சுமி தங்களுடன் பிரயாணம் புறப்பட்டு வந்த நோக்கத்தையும், பாக்கியலட்சுமிக்கும் விஜயரத்தினத்துக்கும் கப்பலிலே வரும்போது விவாகம் நடந்த வரலாற்றையும் விபரமாகச் சொன்னாள். கேட்ட சிவகுருநாதன் விதியின் செயலையெண்ணி அற்புதமடைந்தான்; மேலும் மகனுடைய க்ஷேமலாபங்களைத்தாய் விசாரித்தறிய, மகனும் தங்கள் சொந்தவூரிலுள்ள சுற்றமித்திரருடைய க்ஷேம லாபங்களை விசாரித்தறிந்தான்.

"சஞ்சலம் வேண்டாம் தங்காய்"

இங்ஙனமாக, கண்ணகியம்மை மகனைப் பார்த்து, "தம்பீ, உங்கள் மைத்துனன் என் அருமை மருமகன் நமசிவாயத்தைப்பற்றி ஏதும் அறிந்தாயா? என் தமயனாரும் மச்சாளும் எந்த நேரமும் கண்ணீருங் கம்பலையுமாகவே யிருக்கிறார்கள்; உன் தங்கைக்கும் எனக்கும் அந்தப் பிள்ளையையிட்டுத் தீராக் கவலை தான்; மகனே, இவைகளைப்பற்றி யோசிக்கலா மென்றுதான் நான் ஊரிலிருந்துகொண்டு உன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே வரும்படி கடிதம் எழுதினேன்; இங்கே உத்தியோக கடமையதிகமென்று நீயும் வர மறுத்து விட்டாய்; உங்கள் மாமனார் தம்முடைய மகனையிட்டு இரங்குவதைக் காட்டிலும், உன் தங்கை பல வருடமாகக் குமரிருக்கிறாளேயென்று அதிக கவலைப்படுகிறார்; உன் தங்கைக்கு வேறு எங்கேனும் மாப்பிள்ளை பேசித்தாமே கல்யாணஞ் செய்து வைப்பதாகவும் அண்ணன் எனக்குச் சொன்னார்; அது எனக்கு விருப்பமில்லை; நான் தான் என்ன செய்யலாம்; விதியின் வழி நடக்குமென்று ஒரு அளவிற்கு உடன்பட்டாலும், உன்னுடைய இந்தத் தங்கைச்சி எள்ளளவுஞ் சம்மதிக்கமாட்டாளாம்; இப்பொழுதும் மகனே, உன்னைவந்து பார்ப்பதோடு இவைகளைப்பற்றி உன்னுடன் யோசிக்கவும் நமசிவாயத்தைப்பற்றி இன்னமும் முயற்சிசெய்து ஏதும் அறியலாமென்றும் எண்ணியே இங்கே புறப்பட்டு வந்தோம்; அந்தப் பிள்ளையைத் தேடிக் காணமுடியாவிட்டால் உன் தங்கை விஷயமாக என்னசெய்வதென்பதைப்பற்றி எனக்கொன்றும் புலப்படவில்லை; நான் சொல்லவேண்டிய புத்தியெல்லாஞ் சொல்லிவிட்டேன்; ஏதோ நீயும் உன் தங்கைக்கு ஆகவேண்டிய புத்திகளைச் சொல்லிப்பார்" என்று கவலையோடு சொன்னாள்; பாக்கியலட்சுமியின் முகம் அந்த நேரத்தில் வாட்டமுற்றது; தாய் சொன்னவற்றை எல்லாம் கேட்டபின் சிவகுருநாதன் சற்று நேரம் யோசித்தபடியிருந்து பெருமூச்சு விட்டுத் தன் தாயைப் பரிவுடன் பார்த்து "அம்மா, ஆண்டவன் கிருபையாலும் உங்கள் ஆசியினாலும், என் அருமைத் தங்கைச்சியின் அன்பினாலும், நான் இப்பொழுது உயர்ந்த உத்தியோகம் வகித்திருக்கிறேன்; முன்னரைக் காட்டிலும் அதிகமான வேதனம் பெற்று வருகிறேன்; மேலதிகாரிகளும் என்னிடத்தில் அன்பு பாராட்டி என்னை ஆதரித்து வருகிறார்கள்; எனக்கு வேறு எவ்வகையான கவலையுமில்லை தாயே, என் அருமைத் தங்கைச்சியையும் அன்பான மைத்துனரையும் இட்டுத்தான் அம்மா, அல்லும் பகலுங் கவலை; நானும் அவரைத் தேடக்கூடிய இடமெல்லாந் தேடிப் பார்த்தேன்; அகப்பட்டிலர்; என் நண்பர்களாயுள்ளார் பலருக்குப் பலமுறை கடிதங்கள் எழுதி விசாரித்தேன்; இப்பொழுதுங் கடிதங்கள் எழுதியிருக்கின்றேன்; ஆனாலும், இயன்றவரையில் எவரேனும் எனக்கு என் மைத்துனரையிட்டு ஒரு சந்தோஷமான பதிலை எழுதினாரல்லர்; ஆனால் நான் இன்னமும் என் மைத்துனர் வாழ்க்கையிற் சந்தேகப்படவில்லை; அவரைத் தேடும் முயற்சியையுங் கைவிடவில்லை; அதற்கு ஒரு முற்றுமில்லாமலிருக்க, எங்கள் தங்கைச்சியின் விவாக விஷயமாக வேறு முயற்சிகளைச் செய்வதும் புத்தியல்ல, அம்மா," என்று இப்படித் தாய்க்குப் பதில் சொல்லும்போது சிவகுருநாதன் தன் தங்கையின் முகத்தைப் பார்த்தான், அவள் தன் முன்றானையால் தன்னுடைய கண்களை ஒற்றக் கண்டு, மனம் பதைத்து "என் அருமைத் தங்காய், நீ ஏன் அம்மா கவலைப்படுகிறாய், உனக்கு எவ்வகையான துன்பமும்நேர ஆண்டவன் விடமாட்டான்; தங்கைச்சி, நீ ஊரிலிருந்து கவலைப்படுகிறாயென்பதை யுணர்ந்தே நான் அம்மாவோடு உன்னை இங்கு வரும்படி கடித மெழுதினேன்; சஞ்சலம் வேண்டாம், தங்காய்" என்று தேற்றினான்.

"அன்புடையார் பிரிவு துன்பம் தருவது"

விஜயரத்தினமும் சிவகுருநாதனும் நண்பராயினர்; விஜயரத்தினத்திடம் ஏதும் தவறான கொள்கைகளிருந்தால், அவைகளெல்லாம் சிவகுருநாதனுடன் சிலகாலம் ஊடாடியமையினால் நீங்கிவிட்டனவெனலாம்; இதனாலல்லவா "நல்லாரோடிணங்கியிருப்பதுவும் நன்று" என முன்னோர் பாடியுள்ளனர்; பத்து நாள்வரை விஜயரத்தினமும் பாக்கியலட்சுமியும் சிவகுருநாதனுடைய வாசஸ்தானத்திற்றானே சகல சௌகரியங்களோடும் இருந்தனர்; பின்னர் விஜயரத்தினம் தான் முந்தி உத்தியோகம் பார்த்த இடமாகிய கோலாலம்பூருக்குப் போய்த்தனக்கு உத்தியோகத்திற்காகிய ஒழுங்கினைச் செய்துகொண்டு தானும் மனைவியும் அங்கே வசிப்பதற்காகிய ஒரு வீடும் ஒழுங்குபண்ணிக் கொண்டு வருவதாகச் சொல்லித் தன் மனைவியிடத்தும் சிவகுருநாதன் தாய் முதலியோரிடத்தும் அனுமதி பெற்றுக்கொண்டு புறப்பட்டான்; புறப்படும்போது சிவகுருநாதன் தங்கள் மைத்துனனாகிய நமசிவாயத்தின் வரலாற்றையும் குணங்குறிகளையும் விஜயரத்தினத்திற்கு எடுத்துச் சொல்லி அவனைப் பற்றி ஏதும் அறிந்தால் உடனே தங்களுக்குத் தெரிவிக்கும்படியும் சொன்னான். அப்படியே செய்வதாகக் கூறி விஜயரத்தினம் பயணம் போனான்; போன விஜயரத்தினம் அவ்வூரில் தன்னுடைய நண்பர்களின் உதவியினாலும் பழைய அதிகாரிகளின் சகாயத்தினாலும் ஒரு தக்க உத்தியோகத்தைப் பெற்றான்; தானும் தன்மனைவியும் போயிருத்தற்காகிய நல்ல ஒரு இல்லத்தையும் ஒழுங்கு செய்துகொண்டு ஒரு வாரத்துள் மீண்டு சிவகுருநாதன் முதலியோர் இருக்குமிடத்தையடைந்தான்; சென்ற கருமமெல்லாம் அநுகூலமாயின என்று விஜயரத்தினஞ் சொல்லக் கேட்ட பாக்கியலட்சுமியும் சிவகுருநாதன் முதலாயினோரும் மகிழ்ச்சியடைந்தனர்; பாக்கியலட்சுமி இச்செய்தியை உடனே சிவபாக்கியத்திற்குத் தெரிவிக்க, அவள் "தங்காய், பாக்கியலட்சுமி உடனிருக்கும்போது, கணவனுக்குச் சகலபாக்கியங்களும் கைகூடுந் தானே" என்று சொல்லிப்புன்னகை செய்தாள்; "அக்கா, ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்; எல்லாநன்மையும் நீங்கள் என்மீது வைத்த அன்பினால் வந்துசேர்ந்தன" என்று இனிது பதில் சொன்னாள்; விஜயரத்தினமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கியலட்சுமியும் கோலாம்பூருக்குப் புறப்படுதற்காகிய தினம் வந்தது; அன்புடையார் பிரிவு துன்பந்தருவதென்பர்; பாக்கியலட்சுமி தங்களைவிட்டுப் பிரியப்போகிறாளே யென்பதை யிட்டுச் சிவபாக்கியங் கலங்கினாள்; சிவாபாக்கியம் முதலானோரைப் பிரிய நேர்ந்ததே யென்பதை யெண்ணிப் பாக்கியலட்சுமி சஞ்சலப்பட்டாள்; இவர்கள் இருவருங் கலங்கிக்கொண்டு நிற்கும்போது கண்ணகியம்மை அவர்கள் நிலையைக் கண்டாள்; "மகளே, எங்கள் சின்னத்தங்கைச்சியைப் பிரிவது எனக்குங் கவலைதான்; ஆனாலும் சின்னத்தங்கைச்சி தன் நாயகனோடிருந்து வாழ்வதற்குத்தானே புறப்படு கிறாள்; அல்லாமலும் அதிக தூரமான ஊருக்குப் போகவில்லை, நினைத்தவுடனே நாங்களும் அங்கே போய் இவர்களைக் காணலாம்; அப்படியே இவர்களும் இங்கேவந்து எங்களைக் காணலாம்; சின்னத்தங்கைச்சியுங் கணவனும் இப்போதைக்கு எங்களைப் பிரிந்துபோனாலும், அவர்களை நாங்களும் எங்களை அவர்களும் எந்தநேரமேனும் மறக்கமுடியுமா கவலைப்பட வேண்டாம்" என்று சொல்லி இருவரையுந் தேற்ற, அவர்கள் ஒருவாறு தேறினர்; பின்னர் தம்பதிகளிருவரையும் பயணமனுப்பும்போது, சிவகுருநாதன் இராமனையும் அவர்களுக்குத் துணையாகப்போய்ச் சிலநாள் அங்கே தங்கி நின்று மீண்டு வரும்படி சொல்ல, அவனும் அவர்களுடன் சென்றான்; விஜயரத்தினமும் பாக்கியலட்சுமியும் இராமனோடு சுகமே தங்கள் வாசஸ்தானத்தைச் சேர்ந்தவுடன், சிவகுருநாதன் முதலியோருக்குத் தாம் போய்ச் சேர்ந்த செய்தியைத் தந்திமூலமாகத் தெரிவித்தான்; செய்தி கிடைத்து இவர்களும் மகிழ்ந்தார்கள்; விஜயரத்தினம் தன் உத்தியோகக் கடமையைத் திறமையுடனே பார்த்துக்கொண்டு, அந்த உத்தியோகத்தானத்திற்குச் சமீபமாகவுள்ள தன்னில்லத்திலே, கொண்டான் குறிப்பறிந் தொழுகுஞ் சிறந்த இல்லாளாகிய பாக்கியலட்சுமியுடன் இனிது வாழ்வானாயினான்.

* * *

உலகம் பலவிதம்: 1947 செப்டெம்பர் 26 (முற்றொடர் - 33)

"அடியார் தலைப்பட்டால் முடியாத தொன்றில்லை"

இரண்டுவார காலம் வரையில் இராமன், விஜயரத்தினம் பாக்கியலட்சுமி யென்னுமிவர்களுடைய வாசஸ்தானத்திலே தங்கி நின்று பின்னர் இவர்களுடைய அநுமதியோடு சிவகுருநாதன் கண்ணகியம்மை சிவபாக்கிய மென்னு மிவர்கள் வசிக்கும் தானத்திற்கு மீண்டுவந்தான்; சிவபாக்கியத்திற்கும் தாய்க்கும் தமயனுக்கும், விஜயரத்தினம் பாக்கியலட்சுமி யென்னுமிவர்களுடைய சுகங்களைப் பற்றி இராமன் சொன்னான்; சிலதினஞ் செல்ல விஜயரத்தினம் பாக்கியலட்சுமி இருவரிடமிருந்து சிவகுருநாதனுக்கு ஒரு கடிதம் வந்தது; அதில் பாக்கியலட்சுமி தான் இரண்டு தினங்களுக்கு முந்திச் சமீபத்திலுள்ளதாகிய ஒரு வித்தியாசாலையில் ஆசிரியையாகச் சேர்த்து படிப்பிப்பதாகவும், அவ்வித்தியாசாலையிலேயுள்ள உபாத்தியாயர்கள் யாழ்ப்பாணத்தவர்களென்றும், அவர்களெல்லாருந் தன்னிடத்தில் அபிமானமும் மதிப்பும் பாராட்டி வருகிறார்களென்றும், தானும் அப்படியே அவர்களுடன் ஊடாடிக்கொள்வதென்றும், தான் இப்படியான நல்ல நிலையிலிருப்பது அவர்கள் மூவருஞ் செய்துவரும் உதவியினாற்றானென்றும், சிவபாக்கியம் கண்ணகியம்மை சிவகுருநாதன் என்னும் மூவரையும் தான் சீவிய பரியந்தம் மறத்தல் முடியாதென்றும் தன்னாயகன் தன்னிடத்தில் அதிக அன்பு பாராட்டி வருகிறாரென்றும், தானும் அவருக்கு இதமாக நடந்துகொள்வதென்றும் விபரமாக எழுதியிருந்தாள்; இவற்றோடு "அம்மா அண்ணாவுக்கு எங்கள் சுகத்தையுஞ் சொல்லுங்கள்" என்றும் எழுதியிருந்தாள்; விஜயரத்தினம் சிவகுருநாதனுக்கு எழுதிய கடிதத்திலே அவனது மைத்துனனாகிய நமசிவாயத்தைப்பற்றி அறிதற்கான முயற்சிகளைத் தான் செய்துவருவதாகவும், தூரித்த ஊர்களிலுள்ள தன் நண்பர்களுக்குத் தான் அந்த விஷயமாகக் கடிதமெழுதியிருப்பதாகவும், இற்றைவரையில் யாராயினும் நமசிவாயத்தைப் பற்றித் தனக்கு ஒன்றும் தெரிவிக்கவில்லையெனவும் எழுதியிருந்தான்; விஜயரத்தினத்தின் கடிதத்தைப் படித்துக்காட்டக் கேட்டுக்கொண்டிருந்த தங்கை சிவபாக்கியம் நமசிவாயத்தின் விஷயமாகத் தமயன் படித்தபோது முகவாட்டமுற்றாள்; அதனைத் தமயன் அவதானித்து "தங்கைச்சி, நீ கவலைப்பட வேண்டாம்; எங்கள் அத்தான் விஷயத்தில் நானும் கண்ணுங் கருத்துமாய் முயற்சி செய்து வருகிறேன்; திருவுளச் செயலை யார் அறிவார்; நீ இறைவனை வேண்டிக்கொள்; எங்கள் அம்மாவும் தம்முடைய மருமகனையிட்டு அல்லும் பகலும் தெய்வத்தைப் பிரார்த்தித்த வண்ணமாயிருத்தலை நாங்கள் தாமே நேரிற் காண்கிறோம்; எங்கள் தாயாரிடத்திலே தெய்வ நம்பிக்கையும் பத்தியும் உண்டு; நாங்கள் மூன்று பேரும் ஒரே மனசாய்க் கடவுளை இந்த விஷயமாகப் பிரார்த்தித்தால், அவர் ஒரு வழி காட்டுவார்; அடியார் தலைப்பட்டால் முடியாததொன்றில்லை" என்று இவ்வாறு சொல்லி அவளை ஒருவாறு தேற்றினான்; சிவபாக்கியமும் எந்தநேரமும் தெய்வசிந்தனையோடு கூடியவளாய் ஒழுகுவாளாயினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயமொருபோதுமில்லை"

பாக்கியலட்சுமி ஒருநாள் தன் நாயகனுக்குப் போசனம் பரிமாறும் போது அவனைப் பார்த்து "கேளுங்கள், எங்கள் பள்ளிக்கூடத்திலே செவ்வாய் வெள்ளிக்கிழமைகள்தோறும் சடையோடு கூடிய ஒரு சாமியார் வந்து பிள்ளைகளுக்குச் சமயபாடம் படிப்பித்துத் தேவாரமுஞ் சொல்லிக் கொடுத்துப் போகிறார்; தெய்வபக்தியுள்ளவர்; எந்த நேரமும் திருநீறும் உருத்திராக்கமும் அணிந்தபடியே அவரைக் காணலாம்; பள்ளிக்கூடத்திலே சைவப் பிள்ளைகளாக, உபாத்தியாயர்களாக, நெற்றியில் விபூதியில்லாது காணப்படின், அந்தச் சாமியார் தம்முடைய பட்டுப் பையிலேயுள்ள விபூதியை எடுத்து அவர்களுக்குப் பூசும்படி கொடுக்க, அவர்களும் இரண்டு கைகளாலும் விபூதியை ஏற்றுச் சிவ சிவ என்று சொல்லிப் பூசிக் கொள்வார்கள்; இடையிடையே சிவ மந்திரத்தை மெல்ல உச்சரிக்கிறார்; தம் கடமையைச் செய்வதன்றித் தலைமை யுபாத்தியாயரோடும் அதிகம் பேச்சு வைத்துக்கொள்ளமாட்டார்; நான் பள்ளிக்கூடத்திற் படிப்பிக்கும்படி சேர்ந்த நாளுக்கு அடுத்தநாள், அதாவது ஒரு செவ்வாய்க்கிழமை நான் படிப்பித்துக் கொண்டிருந்த வகுப்பிற்குச் சமயபாடம் படிப்பிக்கவும் தேவாரஞ் சொல்லிக் கொடுக்கவும் அந்தச் சாமியார் வந்ததைக்கண்டு பிள்ளைகள் எழுந்து நமஸ்கரித்ததைப் பார்த்து நானும் உடனே எழுந்து நின்று நமஸ்காரஞ் செய்தேன்; உடனே அவர் தம்மிடமிருந்த விபூதிப் பையிலிருந்த விபூதியை எடுத்து எனக்குத் தர, நான் பயபத்தியோடு ஏற்றுப் பூசினேன்; பூசும் போது "மகளே, உம்மை ஆண்டவன் காப்பாராக, நீர் யாழ்ப்பாணமா" என்று கேட்க "ஓம், சுவாமி" என்று சொல்லி மீளவும் நமஸ்காரஞ் செய்தேன்; சிவாயநம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாய மொருநாளுமில்லை, அம்மா" என்று சொல்லி விட்டுப் பிள்ளைகளுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்க அவர் தொடங்க, நான் அந்த வகுப்பைவிட்டு, அடுத்த வகுப்பிற்குப் போய்ப் படிப்பித்தேன்; அவர் எங்கிருந்து வருபவர் பெயரென்ன என்பவைகளைப்பற்றி நானொன்று மறியேன்; அவரைப்பற்றிய வரலாறுகளை எனக்கு அறியப் பிரியமானாலும், மற்றைய உபாத்தியாயர்களிடம் விசாரிக்கக் கூச்சப்பட்டு நான் இதுவரையில் எவரையுங் கேட்கவில்லை; உங்களுக்கு இந்த வரலாறுகளை யெல்லாம் சொல்வது வேறொன்றற்குமல்ல, அந்தச் சாமியார் பல இடங்களிலுஞ் சஞ்சரிப்பவர்போற் காணப்படுகிறார்; அவர் மூலமாக எங்கள் அக்கா அண்ணனென்னு மிவர்களுடைய அத்தானைப் பற்றி ஏதும் அறியலாகுமோ என்பதற்காகத்தான் சொல்லுகிறேன்; என் அருமையான அக்காளுக்குத் தன் மைத்துனரைப்பற்றி ஏதேனும் அறிய முடியவில்லையே யென்பதையிட்டுப் பெருங் கவலை; அக்காளிடமிருந்து நேற்றுக்கிடைத்த கடிதத்திலும் அந்த விஷயமாகக் கவலையோடு எழுதியிருப்பதைப் படித்தேன்" என்று சிந்தனையோடு சொன்னாள்; கேட்ட விஜயரத்தினம், "அவருடைய தோற்றம் எப்படிப்பட்டது? வயசு என்ன இருக்கும்? உடையென்ன" என்று வினாவ "நல்லநிறமுள்ளவர்; எந்த நேரமும் நெற்றியிலே திருநீறும் சந்தனப்பொட்டும் தரித்துள்ளவர்; அதிகம் வயசு முதிர்ந்தவராய்த் தோற்றவில்லை; காவிதோய்த்த கதர்த்துணியைச் சந்நியாசிகள் உடுப்பதுபோல் உடுத்திக் கொள்ளுகிறார்; கையிலே ஒரு நுனியில் வளைந்த இந்தச் சிங்கப்பூர்ப் பிரம்புதான் வைத்துக்கொள்ளுவார்; சில சமயம் பிரம்பின்றிக் குடைகொண்டு வருவார்; என்று விபரமாக மனையாள் சொன்னாள்; "ஆம், நீர் சொல்லுகிறபடி அப்படிப்பட்டவர்கள் எங்குஞ் சஞ்சரிப்பதனால் அறிதலுங் கூடும்; ஆனாற் சில சந்நியாசிகள் உலக விவகாரங்களைப்பற்றி அறிதற்குச் சிறிதும் விரும்புகிறதில்லை; இவர் எப்படிப்பட்டவரென்பதுந் தெரியவில்லை; அந்தச் சாமியாரை எங்கள் வீட்டிற்கு வரும்படி யழைத்தால் வருவாரோ வாராரோ என்பதையும் அறியேன்" என்று கவலையோடு கணவன் சொல்ல பாக்கியலட்சுமி "நாளைக்கு வெள்ளிக்கிழமை யானபடியாற் சுவாமியார் பள்ளிக்கூடத்திற்கு வருவார்; கேட்டுப்பார்க்கிறேன்; சம்மதித்தால் அழைத்து வருகிறேன்; மறுப்பாரேயானால் நான் என்ன செய்யலாம்" என்றாள், இருவரும் போசனம் முடித்தனர்;

"தனியே இருப்பதற் கெண்ணினேன்"

அடுத்த நாட் பாக்கியலட்சுமி பள்ளிக்கூடத்திற்குப் போம்போது அதே சிந்தனையாகச் சென்றாள்; குறித்த நேரத்திற் சாமியாரும் பள்ளிக்கூடத்திற்கு வந்து தம் கடமையைச் செய்தார்; பாக்கியலட்சுமி யிருந்து படிப்பிக்கும் வகுப்பிற்குச் சாமியார் வருதலும், அவள் அவரை நமஸ்காரஞ்செய்து வகுப்பைவிட்டுப் போகாது ஒதுங்கிநிற்க, சாமியார் அவளைப் பார்த்து "என்ன, அம்மா, வேணும்" என்று ஆதரவுடன் கேட்க, "சுவாமீ, எங்கள் வீடு மிகவுஞ் சமீபத்திலுள்ளது; சுவாமிகளை இன்று பின்னேரம் எங்கள் வீட்டிற்கு ஒருமுறை அழைத்துக்கொண்டு போகலாமென்று எண்ணுகிறேன்" எனப் பணிவுடன் சொல்லி நமஸ்காரம் பண்ணுதலும், "மகளே, நான் எவர் வீட்டிற்கும் போவதில்லை; நான் ஒரு சுவாமியுமல்லேன், பெரிய துறவியுமல்லேன்; தனியே யிருப்பதற் கெண்ணினேன்; இதுவல்லாமல் என்னிடத்தில் வேறு ஏதும் விசேஷமில்லை, மகளே, நான் வரவேண்டுமென்று நீ அன்புடன் கேட்பதால், நாளை வருவேன்; இன்றைக்கு வெள்ளிக்கிழமையாதலால் அதிகநேரம் கோயிலிலேயே எனக்குக் கழியும்; உங்கள் வீட்டின் குறிப்பை எனக்குச் சொன்னால். நாளை மத்தியானம் அங்கு வருவேன்" என்று சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுப் பிள்ளைகளுக்குப் படிப்பிக்கத் தொடங்க, பாக்கியலட்சுமியும் அவரை நமஸ்கரித்துக் கொண்டு தன் வகுப்பிற்குப் போனாள்.

* * *

உலகம் பலவிதம்: 1947 ஒக்டோபர் 03 (முற்றொடர் - 34)

உங்கள் இஷ்டம்போற் செய்கிறேன்

அன்று பின்னேரம் பாக்கியலட்சுமி வீட்டிற்கு மீண்டபோது, அந்தச் சாமியாரைக் கண்டதும், அவரைத் தான் வீட்டிற்கு வரும்படி கேட்டதும், அதற்கு அவர் அடுத்தநாள் மத்தியானம் வருவதாக வாக்களித்ததுமாகிய விபரங்களையெல்லாம் தன் கணவனுக்குச் சொல்ல, அவனுங் கேட்டுச் சந்தோஷப்பட்டான்; அடுத்தநாட் காலை தொடக்கம் பாக்கியலட்சுமி அச்சாமியாரை உபசரித்தற்காகிய ஆயத்தங்களையெல்லாஞ் செய்தாள்; அன்று மத்தியானத்திற்குமேல் ஒருமணியாதலும், சனிக்கிழமையானதால் விஜயரத்தினமுந் தன் உத்தியோகத்தானத்திலிருந்து கடமை பார்த்து முடித்துக் கொண்டு விரைவாகத் தன் வாசஸ்தானத்திற்கு மீண்டுவந்து "சாமியார் இன்னும் வரவில்லையோ" என்று ஆவலுடன் வினாவ, "வரவில்லை. இனி விரைவில் வந்துவிடுவார்" என்று மனையாள் பதில் சொன்னாள்; விஜயரத்தினம் தன் உத்தியோக உடையை மாற்றி வீட்டில் உடுத்திக்கொள்வதாகிய உடையைத் தரித்துக்கொண்டு முகம் கைகால்கள் சுத்திசெய்து விபூதி தரித்துச் சுவாமியாரை வரவேற்பதற்காக மத்தியானப் போசனமுண்ணாது அவரை எதிர்பார்த்தவண்ண மிருந்தான்; பாக்கியலட்சுமியும் அப்படியே இருந்தாள்; சில நிமிஷஞ் செல்லச் சாமியார் அங்கே வருதலும், இருவரும் அகமும் முகமும் மலர்ந்தவர்களாய்ச் சுவாமியாரை வரவேற்று உபசரித்தார்கள்; சுவாமியாரைப் போசனஞ் செய்ய எழும்படி இருவரும் பணிவுடன் கேட்டார்கள்; சுவாமியார் அவர்களை நோக்கி நான் ஒருவேளை மத்தியானத்தில் மாத்திரம் ஏதும் ஆகாரம் அருந்துவதுதான் நியதி ....போசன மென்னுமிவைகளை முடித்துக்கொண்டுதான் இப்பொழுது வரலானேன்; நீங்கள் பசியோடு காணப்படுகிறீர்கள்; ஆனமையினால் ஆகாரம் பண்ணிக்கொண்டு வாருங்கள்; நான் வழிநடந்த சிரமம் தீரச் சற்றுநேரம் இந்தப் புலித்தோலில் இருக்கிறேன்" என்று அவர்களுக்குச் சொன்னார்; "சுவாமி, தாங்கள் இங்கே சும்மாவிருக்க நாங்கள் போசனஞ்செய்ய மனம்வருமா? தாகத்திற்கு ஏதும் அருந்தினாலும் எங்கள் மனம் ஆறுதலடையும்" என்று பாக்கியலட்சுமி இரந்து கேட்க, "நல்லது மகளே உங்கள் இஷ்டப்படி செய்கிறேன்" என்று சாமியார் சொல்ல, உடனே கற்கண்டிட்டு வற்றக் காய்ச்சிய பசுப்பாலை பாக்கியலட்சுமி ஒரு வெள்ளிப் பாத்திரத்திலே வார்த்துக் கொண்டு வந்து வைக்க, விஜயரத்தினம் ஒரு பாத்திரத்திலே தண்ணீர் கொண்டுவந்து இரு கரங்களாலும் நீட்ட, சுவாமி, வாங்கிக் கால்கை சுத்திசெய்து விபூதி தரித்துக்கொண்டு, அவ்விருவருக்கும் விபூதி வழங்கி, அந்தப் பாலில் ஒரு பாகத்தைத் தாம் பருகிக்கொண்டு பாக்கிய லட்சுமியிடம் எஞ்சிய பாகத்தைக் கொடுத்து நீங்கள் போசனம் முடித்துக்கொண்டு வாருங்கள் என்று வற்புறுத்திச் சொல்ல, அவர்களிருவரும் சென்று விரைவிற் போசனம் முடித்து மீண்டு சுவாமிமுன் வந்தனர்.

"இல்லறத்தேனல்லேன் இயற்கைத் துறவியல்லேன்"

பாக்கியலட்சுமி மீளவும் சுவாமியாரை வணங்கிநின்று "சுவாமி, உங்களைப்போன்ற பெரியோர் எங்கள் இல்லத்திற்கு எழுந்தருள நாங்கள் என்ன புண்ணியஞ் செய்தோமோ அறியோம்; எங்கள் மனத்தில் எழுந்த ஒரு விசாரத்தைச் சுவாமி மூலமாக நீக்கிக் கொள்ளலாகுமோ என்ற எண்ணத்தினாலேதான்; சுவாமியை இன்று இங்கு அழைத்தோம்" என்று பணிவுடன் சொல்ல, சாமி "உங்களுக்கு ஏதும் விசாரமிருந்து அது என்மூலம் நீங்குமானால், அதை நீங்கள் கூசாமற் கூறலாம்" என்றார். "சுவாமி, எங்களுக்கு நெருங்கிய உறவினர்; அவருடைய பிரதிமைப் படம் இங்கேயிருக்கிறது; (என்று நமசிவாயத்தின் பிரதிமைப் படத்தை சுவாமி கையிற் கொடுத்து) இவரை சிலகாலமாகக் காணவில்லை; எங்குந் தேடியும் இன்ன இடத்திலிருக்கிறாரென்பதும் அறியமுடியவில்லை; இவரையிட்டு இவருடைய பெற்றார்கள் மைத்துனன் மைத்துனி மாமியார் எல்லாருஞ் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கிறார் கள்; சுவாமி, நீங்கள் இடையிடையே தேச சஞ் சாரஞ் செய்வதுண்டென்று எனக்கு அன்று பள்ளிக் கூடத்திலுள்ளவர்கள் சொன்னார்கள். இந்தப் படத்திலுள்ள சாயலுள்ளவரைச் சுவாமி எங்காயினும் எப்போதேனும் கண்டதுண்டோ? அறிய ஆசைப்படுகிறேன்" என்று அன்புடன் வினவினாள்; இவைகளையெல்லாம் ஆதரவுடன் கேட்ட சாமியார் புன்னகை செய்து மகளே நான்,

"இல்லறத்தே னல்லேன்
இயற்கைத் துறவியல்லேன்
நல்லறத்து ஞானியல்லேன்"

என்றபடி, நான் இல்லறத்தேனல்லேன், துறவறத்தவனு மல்லேன் ஒரு ஞானியுமல்லேன்; ஆநுடம் திடமென்னு மிவைகளை யறியவுமல்லேன்; ஆனதால், மகளே என்னிடத்தில் ஏதும் விசேஷமுண்டென்று எண்ணிவிடாதீர்கள்; தனியேயிருந்து கொண்டு இறைவன் திருவடியைச் சிந்திக்கலாமென்பது தான் என்னுடைய நோக்கம்; நீங்கள் காட்டும் இந்த ஆளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரையில் நான் நேரிற் பார்த்ததில்லை; உங்கள் பள்ளிக்கூட விடுமுறைக் காலத்திலே நான் தேச சஞ்சாரஞ் செய்வதுண்டு; அடுத்த விடுமுறை நாளுஞ் சமீபித்து வருவதால், நான் அக்காலத்தி லெங்கேனும் போகும்போது, இந்த தோற்றமுடையவரைக் கண்டால் அவதானித்துக் கொண்டு வந்து உங்களுக்குத் தெரிவிப்பேன்; அதனால் எனக்கு என்ன சிரமம் மகளே; இந்தப் படத்திலுள்ள இவருக்கும் உங்களுக்குமுள்ள தொடர்பென்ன? இவரை எவ்வளவுக் காலமாக நீங்கள் காணவில்லை? இவர்களைப்பற்றிய வரலாற்றைச் சுருங்கச் சொன்னாற்றானே, நானும் இவரைச் சந்திக்க நேர்ந்தால், ஏதுக்களைப் பற்றிச் சொல்லிக் கூடுமளவு கூட்டிக்கொண்டு வரலாம்" என்றார்.

"இதுதான் சாமி வரலாறு"

"சுவாமி நாங்கள் பிறந்தவூர் யாழ்பாண மென்பது உங்களுக்கு முந்தியே தெரியும்; இந்தப் படத்திலுள்ளவரை இன்னமும் நாங்கள் நேரிற் கண்டறியேம்; என்னைத் தம் சொந்தப் பிள்ளைப்போல் ஆதரித்துக் கல்யாணம் செய்து வைத்த அபிமானத்தாயார் இருக்கிறார்; அவருடைய பெயர் கண்ணகியம்மை; அந்த அம்மை யாருடைய அருமை மகள், என்னை அபிமானத் தங்கையாகப் பாவித்து என்மீது அன்பு பாராட்டி வருகிறார், அண்ணனுடைய பெயர் சிவகுருநாதன், அவருடைய தங்கை, எனது அருமையான அக்காவின் பெயர் சிவபாக்கியம்; இவர்களுடைய நன்மைத்துனரின் பிரதிமைப் படந்தான் சுவாமி இந்தப்படம்; இவர் நாமம் நமச்சிவாயம்; என் தமக்கைக்கு இவரையே கணவனாக நிச்சயித்திருக்கிறார்கள்; தமக்கையின் விவாகம் நிறைவேறின பின்தான் தமயனும் இல்லறத்திற் புகுவதென்ற நோக்கமாம்; இந்த நாட்டில் பிருத்தானியருக்கும் யப்பானியருக்கும் யுத்தம் மூண்டநாள் தொடக்கம் இற்றைவரையில் இவருடைய கடிதம் பெற்றோருக்காயினும் சுற்றத்தாருக்காயினுங் கிடைக்கவில்லையாம்; இவருடைய பெற்றார் சொந்தவூரிலிருந்து இவரையிட்டுக் கலங்குகிறார்கள்; இவருடைய மாமியாரும் மகளும் இவரையிட்டுக் கவலைப்பட்டுக்கொண்டு ஊரிலிருந்துவிட்டு இரண்டு மாசங்கட்கு முன் அங்கிருந்து புறப்பட்டார்கள்; நானும் அவர்களுடன் புறப்பட்டு வந்தேன்; சுவாமி, உங்களைப் போன்ற பெரியோருக்கு எதனையும் மறைக்க வொண்ணாது; உள்ளதைச் சொல்லக் கூசவொண்ணாது; கப்பலில் வரும் மார்க்கத்திலேயே (விஜயரத்தினத்தைக் காட்டி) இவர்கள் என்னைக் கல்யாணஞ் செய்தார்கள்; நாங்கள் எல்லோரும் சிங்கப்பூரில் வந்து இறங்கிச் சிவகுருநாத அண்ணன் வீட்டிலேயே இருந்தோம்; பின்னர் என்னுடைய இவர் இங்கே உத்தியோகம் பார்க்க வந்தமையினால், நானும் உடன்வந்து இங்கே இருக்கிறேன்; நான் பள்ளிக்கூடத்திலே சேர்ந்து படிப்பிக்கும் விஷயம் சாமிக்குத் தெரியும்; இதுதான் சாமி, வரலாறு" என்று கனிவோடு சொல்லி முடித்தாள்; சாமியாரும் அவதானமாகக் கேட்டுக்கொண்டு சிந்தனையோடிருந்தார்.

"அவனையன்றி அணுவுமசையாது"

அதனை அவதானித்த விஜயரத்தினம் "சுவாமி, அவருடைய ஆயுளுக்கு எவ்வகையான இடையூறு மில்லையே" என்று ஆவலுடன் வினாவ, சுவாமியார் "ஆயுளுக்கு இடையூறில்லை யென்றே நாம் நினைத்துக் கொள்ள வேண்டும்; நீங்கள் சொன்ன குறிப்புக்களும் இப்படத்தில் தோற்றமுள்ளவரை இன்று தொடக்கம் நான் சஞ்சரிக்குமிட மெல்லாம் அவதானித்து வருவேன்; கண்டால் இங்கு அழைத்துக் கொண்டு வருவேன்; இல்லையேல் விடுமுறை நாட்களில் நான் வேற்றூர்களுக்குப் போகும்போது தேடிக் கண்டுபிடித்துக் கொண்டுவந்து சேர்க்க முயற்சி செய்கிறேன்; ஆனால் மகளே, ஒன்று சொல்கிறேன்; நீங்களும் நானும் அவர்களும் நினைத்த வண்ணம் ஏதும் நிகழப்போவதில்லை; உயிர்களாகிய நாங்களெல்லோமும் சூத்திரப் பாவைகள் இறைவன் எங்களை ஆட்டி வைக்கும் நட்டுவன் அவன் கைவிட்டால் பாவைகளாகிய நாங்கள் மண்ணிலே வீழ்ந்து கிடக்கவேண்டியதுதான்; இதனாற்றான் "அவனையன்றி அணுவும் அசையாது" என்று பெரியோர் கற்பித்திருக்கின்றனர்; அவனருளே கண்ணாகக் காணினல்லாள் மக்களாகிய நாங்கள் இந்த ஊனக்கண்ணைக் கொண்டு இந்த வெற்றுப் பிரபஞ் சத்தைத் தானும் உள்ளபடி பார்க்க முடியாது" என்று இப்படியான ஞானமொழிகளைக் கூறி விஜயரத்தினம் பாக்கியலட்சுமி யென்னு மிருவரிடத்தும் அநுமதி பெற்றுக்கொண்டு தம்மிடத்திற்கு மீண்டார்.

"எனக்கு பேருபகாரஞ் செய்யவேண்டும்"

இந்தப் பள்ளிக்கூடத்தில் விடுமுறைக் காலந் தொடங்கியது; தொடங்கிய அடுத்தநாட் சனிக்கிழமை சாமியார் விஜயரத்தினம் வீட்டிற்கு வந்தார்; அந்தநேரம் விஜயரத்தினம் வீட்டிலில்லை; பாக்கியலட்சுமியும் வேலைக்காரச் சிறுமியும் மாத்திரம் இருந்தனர்; சுவாமியாரைப் பாக்கியலட்சுமி அன்போடு உபசரித்தாள்; சாமியார், பாக்கியலட்சுமியைப் பார்த்து மகளே, நேற்று உம்மைப் பள்ளிக்கூடத்திலே கண்டபோது பேசலாமென நினைத்தேன்; ஆனால் கடமை செய்யும் நேரத்திலே அந்த இடத்தில் நின்று வேறுகருமங்களையிட்டு நாங்கள் பேசுவது முறையல்லவென்று எண்ணிக்கொண்டே இன்று உங்களிடம் வந்தேன்; தம்பி விஜயரத்தினம் இன்னமும் உத்தியோகத்தானத்திலிருந்து வரவில்லை போலிருக்கிறது; அவரும் வந்து விட்டால் நல்லது" எனலும், "இன்னுஞ் சில நிமிஷத்தில் அவர் வந்துவிடுவார் சாமி, தாக சாந்தியாக ஏதும் உட்கொள்ளுகிறீர்களா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பாக்கியலட்சுமி பணிவுடன் கேட்க, "மகளே, இப்பொழுது எனக்குத் தாகமில்லை; வேண்டிய நேரங் கேட்கிறேன்" என்று சொல்லிப் பின்னரும் சுவாமியார் பாக்கியலட்சுமியைப் பார்த்து "மகளே இன்றைக்குச் சனிக்கிழமை, நாளைக்கு ஞாயிறு போக, திங்கட்கிழமை பின்னேரம் இவ்விடம்விட்டு வேற்றூர்களுக்குப் போய்ப் பள்ளிக்கூடந் தொடங்குவதற்கு முன் வருவதற்கு உத்தேசித்திருக்கிறேன்; இந்தமுறை காசியாத்திரை செய்யவேண்டுமென்று என் மனத்தில் ஆசை பிறந்திருக்கிறது; அப்படிப் போகும்போது நீங்கள் சொன்ன கருமத்தையும் மறதியின்றிப் பார்த்து வருகிறேன்; அந்த இறைவன் எல்லா நன்மைகளையுங் கூட்டி வைப்பான்; இதுபோக மகளே, நான் இந்த நாட்டைவிட்டுத் தூரதேசத்திற்குப் போய் யாத்திரை செய்து மீண்டுவர உத்தேசித்திருத் தலாலே, நீங்கள் எனக்கு இந்த நேரத்திலே ஒரு பேருபகாரஞ் செய்யவேண்டும் அம்மா" என்று சிந்தனையோடு சொன்னார். "சுவாமி, தங்களுக்கு நாங்கள் பேருபகாரமல்ல, ஒரு அற்ப உபகாரத்தைத் தானும் செய்யக் கிடைக்குமானால், எங்களைப்போற் புண்ணியஞ் செய்தவர்கள் வேறு எவருமில்லை யென்று எண்ணியல்லவா சந்தோஷப்படுவோம் சுவாமி, எங்களால் ஆகாவிட்டாலும் அந்த ஆண்டவ னுடைய கருணை கொண்டு நாங்கள் செய்துவைப்போம்; சொல்லுங்கள் சுவாமி" என்று பாக்கியலட்சுமி நமஸ்காரஞ் செய்தவண்ணம் ஆவலுடன் அவரைக் கேட்கும் வேளையிலே, அவளுடைய கணவனும் தன் உத்தியோகத் தானத்திலிருந்து அங்கே வருவானாயினான்; வந்த கணவனைப் பாக்கியலட்சுமி விரைந்து எதிர்சென்று "எங்கள் சுவாமியார் வந்திருக்கின்றார்" என்று சொல்லி அழைத்துவர அவனும் சுவாமியாரைக் கும்பிட்டு முகமன்கூறி மகிழ்ச்சியோடு நின்றான். "தம்பி, நீரும் இந்த நேரத்தில் வந்தது நன்மையாயிற்று; நான் நாளை மற்றநாள், அதாவது திங்கட்கிழமை இந்தவூரைவிட்டுக் காசி யாத்திரை போகத் திருவருளை முன்னிட்டு உத்தேசித்திருக்கிறேன்; போகும் மார்க்கத்தில் நீங்கள் சொன்ன கருமத்தையும் இயன்ற வரையிற் பார்ப்பேன்; நான் புறப்படுவதற்கிடையில் எனக்கு ஒரு உபகாரஞ் செய்ய வேண்டுமென இந்த மகளுக்குச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே நீரும் இங்கே வந்தீர்" என்று சொல்லி முடிவதற் கிடையில், விஜயரத்தினம் சந்தோஷமடைந்தானாய் "சுவாமி, உங்களுக்கு உபகாரஞ் செய்யவேண்டுமென நீங்கள் வாயினாற் கேட்க வைத்தது எங்கள்மேல் தவறாகும்; உங்கள் குறிப்பறிந்து எங்களால் இயன்ற பணியைச் செய்யவேண்டியது எங்கள் கடமை; சுவாமி, சொல்லுகிறேனென்று குறையெண்ணவேண்டாம்; நீங்கள் காசியாத்திரை செய்வதற்காகிய பணம் பண்டமெல்லாம் நாங்களே உங்கள் பிள்ளைகள் போலிருந்து உங்களுக்கு இப்பொழுதும் பணிவுடன் தருதற்குச் சித்தமாயிருக்கிறோம்; நாங்கள் தருவதை ஏற்றருளி எங்களை ஆசீர்வதிக்க வேண்டும் சுவாமி" என்று விஜயரத்தினம் மீட்டும் அவரை நமஸ்கரிக்க, பாக்கியலட்சுமியும் நமஸ்காரம் செய்தாள்; கேட்ட சுவாமியார் அவர்களை அன்புடன் பார்த்து "அன்பர்களே, ஏதோ பெரிய சாமியென்று எண்ணிக்கொண்டு இடர்ப்படுகிறீர்கள்; தேவையான நேரத்தில் உங்களிடமன்றி வேறுயாரிடம் கேட்பது; இப்போது அவையொன்றும் வேண்டாம்; இந்த நேரத்தில் எனக்கு நீங்கள் செய்யவேண்டிய உதவியைச் சொல்லுகிறேன், கேளுங்கள்.

* * *

உலகம் பலவிதம்: 1947 ஒக்டோபர் 10 (முற்றொடர் - 35)

"இது நான் செய்த புண்ணியப் பயன்"

"வேறென்றுமல்ல, எனக்கு மகள் முறை பூண்ட ஒருபெண்பிள்ளை இருக்கிறாள்; அந்தப் பிள்ளை சோறும் ஆக்கித் தந்து இன்னும் ஆகவேண்டிய பணியைச் செய்துகொண்டு என் வாசஸ்தானத்தில் இருக்க, நான் அப்பிள்ளையைப் பாதுகாத்துக்கொண்டு வேறெங்கும் போகாமல் இந்தவூரிற்றானே சிலகாலம் வசிக்கலானேன்; இப்பொழுது நான் காசியாத்திரை புறப்படுவதென்றால், அப்பிள்ளையை நான் வசிக்கும் வீட்டிலே தனியே இருக்கவிட்டுப் புறப்படமுடியாது; ஆனதால் மகளே, நீரும் எனக்கொரு மகள்தானே, நான் காசியாத்திரை போய்மீண்டு வரும்வரை உம்மோடு அந்தப் பிள்ளையையும் இருக்கவைத்துப் போகலாமென உத்தேசித்திருக்கிறேன்" என்றார் சுவாமியார்; கேட்ட பாக்கியலட்சுமி உள்ளத்தில் அடங்கா ஆநந்தங் கொண்டாள். "சுவாமி, நல்லது சொன்னீர்கள்; இதனையா உங்களுக்கு நாங்கள் செய்யவேண்டிய உபகாரமென்று சொன்னீர்கள்; இது நீங்கள் உங்கள் மகளாகிய எனக்குச்செய்யும் பெரிய உபகாரமல்லவா சுவாமி; என்அருமையான அக்காளைப் பிரிந்து பெண் துணையின்றித் தன்னந்தனியே இருக்கும் எனக்கு, நீங்கள் அருமையான ஒரு தங்கச்சியை அழைத்துக்கொண்டு வந்து என்னுடன் இருக்கச் செய்வதென்றால், இது நான்செய்த புண்ணியப் பயனல்லவோ; அந்தச் தங்கச்சியை இன்றைக்கே சுவாமி, இங்கே அழைத்துக்கொண்டு வந்து என்னிடம் ஒப்புவிக்கிறீர்களா? இல்லையேல், நானே சாமியோடு ஒரு மோட்டார் ரதத்தில் வந்து என் தங்கச்சியை அழைத்துக்கொண்டுவரலாமா? நான் இங்கே இருப்பது என் தங்கைச்சிக்குத் தெரியுமா?" என்று ஆவலோடு சுவாமியைப் பாக்கியலட்சுமி வினாவினாள்; "மகளே, உமது இஷ்டம் போற் செய்யலாம்" என்றார் சாமியார்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கியலட்சுமி பக்கலில் நின்ற தன்கணவனை அன்புடன் பார்த்து "நான் சாமியாருடன் போய் அந்தத் தங்கச்சியை அழைத்துவருவது உங்களுக்குஞ் சம்மதமென்றால், இப்பொழுது போய் அழைத்து வருவதற்கு ஒரு மோட்டார் ரதம் ஒழுங்குபண்ணுங்கள்" என்று வேண்டுதலும் விஜயரத்தினம் "இப்படியான நல்ல கருமத்திற்கு என்னிடம் சம்மதம் கேட்க வேண்டுமா? நான் இப்பொழுதே போய் ரதமொன்று ஒழுங்கு பண்ணிக்கொண்டு வருகிறேன்; எங்கள் சாமியாரும் நீரும் போய் அந்தத் தங்கச்சியைக் கூட்டிக்கொண்டு வருவதுதான் முறையென நினைக்கிறேன்" என்று சொன்னான்; சொல்லும் போது சுவாமியார் புன்சிரிப்புச்செய்து "என் மகளே, கோமுட்டிச்செட்டி தேவியிடம் வரம் கேட்டதுபோல், உமது கணவனிடத்திலும் ஒரே முறையில் இரண்டுவரங் கேட்டுப் பெற்றுக் கொண்டீர்" என்றார். பாக்கியலட்சுமி சற்று யோசித்துவிட்டுச் "சுவாமி, நீங்கள் சொல்வது எனக்குப்புலப்படவில்லை" என்று பரிவுடன் சொன்னாள்.

கோமுட்டி வரங்கேட்ட வரலாறு

வேறொன்றுமல்ல மகளே, ஒரே வாக்கியத்தில் நீர் உம்முடைய தங்கச்சியை இங்கே அழைத்து வருதல் உமது கணவருக்குச் சம்மதமே என்பதையும், நீராகவே ரதத்தில் போய்த் தங்கச்சியை அழைத்து வருதல் உடன்பாடோ என்பதையும் போய்வருவது இரதத்திலே தானே என்பதையும் ஏககாலத்திலே கேட்டுச் சம்மதம் பெற்றுக்கொண்டீரே யென்பதையிட்டுத்தான் சிரித்தேன் என்றார். தன்னைப்பற்றிப் புகழ்ந்து சாமியார் சொல்லுவதைக் கேட்ட மாத்திரத்தே பாக்கியலட்சுமி சற்று நாணமுற்றாளாய், பின்னரும் சுவாமியைப் பணிவுடன் பார்த்து, சுவாமி "கோமுட்டிச் செட்டி தேவியை வரங்கேட்ட வரலாற்றைச் சொல்ல வேண்டுமெனக் கேட்டலும், சுவாமியார் சொல்ல இருவருங் கேட்பாராயினர்:-

"கோமுட்டிச் செட்டியொருவன் மகா தரித்திரன், சந்ததியற்றவன், விருத்தன், பிறவிக் குருடன், செய்வதின்னதென் றறியானாய்க் கவலைப்பட்டுக் கொண்டிருந்தான்; அவன் மீது பரிவுகொண்ட ஒரு பெரியவர் அவனைப் பார்த்து, "ஏ வணிகனே, நீ தேவியைக் குறித்துத் தவஞ் செய்வாயானால், அத்தேவி வாயிலாகச் சகல செல்வங்களையும் பெற்றுக்கடைத்தேறுவாய்" என்று சொல்லிச் சென்றார்; அந்தப் பெரியவர் வாக்கை உபதேசமாகக் கொண்ட செட்டி, அன்று தொடக்கம் புனிதமான முறையில் தேவியைத் தியானித்துச் சிலகாலம் விரதங்கிடந்தான்; இப்படியாக ஒருதினம் தேவி அவன் முன்னிலையில் வந்து தோன்றினாள்; செட்டி பேராசை பிடித்தவன் என்பதை உணர்ந்த அந்தத்தேவி அவனை நோக்கி "ஏ, அன்பனே, நீ பல வரங்களைக் கேட்டால் நான் தரமாட்டேன்; ஏதும் ஒரேயொரு வரத்தை மாத்திரங் கேள் தருவேன்" என்றாள். வணிகன் சற்றுநேரம் யோசித்துவிட்டு, தேவியை வணங்கி தாயே, நான் பல வரங்களைக் கேட்கவில்லை; ஒரேயொரு வரம்மாத்திரங் கேட்கிறேன் தந்தருள்க; வேறொன்றும் வேண்டாம்; என் பேரப்பிள்ளைக்கு எனது மருமகள் வெள்ளிக் கிண்ணத்திலே அன்னம் பிசைந்து, மூன்றடுக்கு மாளிகையிலுள்ள மேன் மாடத்திலிருந்து உணவூட்ட, நான் அதைக் கண்ணாரப்பார்க்க வேண்டும்; அம்மா, தாயே இந்த ஒரு வரம் மாத்திரம் தந்தாற் போதும்" என்று மீளவும் பணிந்தான்; தேவி புன்முறுவல் பூத்துச் செட்டியின் புத்தி சாதுரியத்தை மெச்சி "அப்படியே உனக்கு வரந் தந்தேன்" என்று சொல்லி மறைந்தாள்; செட்டியும் அவ்வரங்களை யெல்லாம் பெற்று வாழ்ந்தானென்பது கதை; செட்டி தன் பேரப்பிள்ளைக்கு மருமகள் உணவூட்ட என்றதனால், தனக்கு ஒரு மகன் பிறந்து கல்யாணஞ் செய்து புத்திரப் பேற்றையடைய வேண்டுமென்பதும், பேரப்பிள்ளை யென்றதனால் தனக்குச் சந்ததிவிருத்தியும் நீடித்த ஆயுளும் வேண்டுமென்பதும், மாளிகையின் மேன்மாடத்திலேயிருந்து வெள்ளிக்கிண்ணத்திலே உண வூட்டஎன்பதனால், சிறந்த செல்வம் வேண்டு மென்பதும், பேரப்பிள்ளைக்கு மருகி அன்னமூட்டுவதைத் தான் பார்க்கவேண்டு மென்றதினால் பிறவிக் குருடனாகிய தனக்குக் கட்பார்வை கிடைக்கவேண்டும் என்பதும் பெறப் படலாயினவல்லவா; இதை உத்தேசித்தே அப்படிச்சொன்னேன்" என்று சாமியார் சொல்ல, பாக்கியலட்சுமியும் கணவனுங் கேட்டுச் செட்டியின் நுண்ணிய விவேகத்தை மெச்சினர்.

அண்ணா நமஸ்காரம்

உடனே விஜயரத்தினம் போய் ஒரு மோட்டர்ரதத்தை யொழுங்கு செய்து அதில் ஏறிக்கொண்டு வீட்டிற்கு மீண்டான்; அதற்கிடையிற் பாக்கியலட்சுமியும் புறப்படுதற்காகிய ஆயத்தங்களைச் செய்து நின்றாள்; "எங்களுடன் தம்பி, நீரும் வரலாகுமே" என்று சுவாமியார் விஜயரத்தினத்தைக் கேட்க, அவன், "சுவாமீ, நீங்களும் மகளும் போய் அந்தத் தங்கைச்சியை அழைத்து வாருங்கள்; நான் அதுவரை வீட்டில் நிற்க அனுமதி தாருங்கள்" என்று சொல்லுதலும், அப்படியே என்று சொல்லிவிட்டுச் சாமியார் பாக்கியலட்சுமியோடு இரதத்தின் மீது ஏறிக்கொண்டு தமது வாசஸ்தானத்தை யடைந்தார்; சுவாமியார் இருக்குமிடத்திற்கும் விஜயரத்தினத்தின் வாஸ்தானத்திற்குமிடையே ஒன்றரைமைல் தூரமிருக்குமென மதிக்கலாம்; சிறிய இல்லம்; ஆனாற் சுத்தமான முறையில் வைத்திருக்கக் காணப்பட்டது; பட்டினத்தின் ஒருபுறத்தே ஒரு விசாலமான தோட்டத்தின் மத்தியிலுள்ளதெனலாம்; சுவாமியார் தம்மிடத்துப் பாக்கியலட்சுமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயரத்தினமென்னு மிருவர் வைத்துள்ள விசுவாசத்தையும் பயபத்தியையும் தாம் அவர்களிடத்துக் கொண்டுள்ள அன்பையும் தம்முடைய அந்த அபிமான புத்திரிக்கு முந்தியே சொல்லியுள்ளார்; இரதம் சற்றுத் தூரத்திலே நிற்க, இருவரும் இறங்கினர்; சுவாமியார் வழிகாட்டிக்கொண்டு சிறிது தூரம் நடந்துசெல்ல, அவரைத் தொடர்ந்து கொண்டு பாக்கியலட்சுமி போனாள்; சற்றுத்தூரத்தில் வரும்போதே அவர்கள் வருகையை அந்தப் பெண் தங்கள் இல்லத்தின் முன்வாசலில் நின்று கண்டாள்; சாமியார் முந்திச் சொல்லிய பெண் அந்தப் பெண்ணாகவிருக்கக்கூடுமோ என்று தன்னளவிற் சந்தேகங் கொண்டாள்; சந்தோஷப்பட்டாள்; அவ்விருவரும் சமீபத்தில் வருதலும் அவள் "ஐயா, இந்த அக்காள்தானா நீங்கள் முந்தி எனக்குச்சொன்ன அக்காள்" என்று வினாவிக் கொண்டு விரைந்து வந்து பாக்கியலட்சுமியின் ஒரு கரத்தைத் தன் இருகரங்களினாலும் அன்புடன் பற்றி அழைத்துக் கொண்டுபோனாள்; "ஆம், அந்த அக்காள்தான்" என்று சாமியார் சொல்வதற்கிடையில் அச்சிறுமி பாக்கியலட்சுமியைப் பரிவுடன் ஒரு ஆசனத்தில் இருக்கச் செய்து தானும் பக்கலில் நின்றாள்; இதற்கிடையில் சாமியார் அந்தப் பெண்ணைப் பார்த்து "மகளே, இந்த அக்காள் உன்னை அழைத்துக்கொண்டு போம்படிதான் இப்பொழுது இங்கே வந்திருப்பதால், நீ சீக்கிரம் புறப்படம்மா" என்று சொல்லுதலும், அதனைக்கேட்ட அச் சிறுமி அதிக சந்தோஷமடைந்தாளாய், "நான் புறப்பட்டு வருகிறேன், அக்கா சற்றுநேரம் இப்படியிருக்கிறீர்களா" என்று கேட்க, பாக்கியலட்சுமி "ஓம்" என்றாள்; அப்பெண் அறையினுள்ளே போய்விட, பாக்கியலட்சுமி அவ்வீட்டை அவதானித்துப் பார்த்தாள்; அது அவளுக்கு ஒரு வீடுபோற் புலப்படவில்லை; ஒரு சிறிய ஆசிரமம் போலவே புலப்பட்டது; அங்கே மான்றோல், புலித்தோல், உருத்திராக்கமாலை, பூசைக்குரிய சில உபகரணங்கள், அயலிலே பூச்செடிகள் ஆகிய இவைகளெல்லாங் காணப்பட்டன; இவைகளைப் பாக்கியலட்சுமி அவதானித்துக் கொண்டிருக்கும் போது சுவாமியார் அங்குவந்து பாக்கியலட்சுமியைப் பார்த்து, "மகளே, உம்மையும் உமது தங்கையையும் இப்பொழுது நான் உங்களுடைய வாசஸ்தானத்தில் அழைத்துக்கொண்டுபோய் விட்டு, பிறகும் நான் இங்கே வந்து பிரயாணத்திற்காகிய சில ஆயத்தங்களும் இந்த வீட்டின் பாதுகாப்பிற்காகிய சில ஒழுங்குகளுஞ் செய்யவேண்டும்" என்று சொல்ல, "அப்படியே செய்யுங்கள் சாமி" என்று பாக்கியலட்சுமி சொன்னாள்; இதற்கிடையில் அந்தச் சிறுமி புறப்பட்டு வருதலும், சாமியார் முன்செல்ல, அவர் பிறகே இரதம் நிற்குமிடத்திற்கு இருவரும் போய் அதில் ஏறிப் பின்னாசனத்திலிருந்தார்கள்; சாமியாரும் சாரதியும் முன்னாசனத்திலிருந்தார்கள்; இரதம் புறப்பட்டுச் சில நிமிஷங்களில் விஜயரத்தினத்தின் வாசஸ்தானத்தை யடைந்தது; அவர்கள் இறங்கியபின், சாரதி விஜயரத்தினத்திடம் பணம் பெற்றுக்கொண்டு இரதத்துடன் தன்னிடத்திற்கு மீண்டான்; விஜயரத்தினம் சாமியாரை உபசரித்து இருக்கச்செய்ய, பாக்கியலட்சுமியும் அந்தப் பெண்ணை அன்போடு கூட்டிக்கொண்டு போய் உபசரித்திருத்தினாள்; பாக்கியலட்சுமியின் கணவன் தான் விஜயரத்தின மென்பதைக் குறிப்பினால் அயிர்த்த அந்தச் சிறுமி, உடனே இருக்கை விட்டெழுந்து சமீபத்திலே போய், "அண்ணா நமஸ்காரம்" என்று சொல்லிப் பணிவுடன் நமஸ்கரிக்க, அவனும் பிரதி நமஸ்காரம் செய்து, "தங்காய், எங்கள் சாமியார் யாத்திரை முடித்து மீண்டு வரும்வரையும் நீர் இங்கே எவ்வகையான கவலையுமின்றிச் சந்தோஷமாக உங்கள் அக்காவுடன் இருந்து கொள்ளலாம் அம்மா" என்று இனியமொழி சொல்லுதலும் "எங்கள் ஐயா மீண்டு வந்த பின்னரும் நான் உங்களோடுதான் இருப்பேன்; உங்களைப்பற்றி எங்கள் ஐயா முந்தியே எல்லாம் நன்மையாகச் சொல்லியிருக்கிறார்" என்று இதமாக மொழிந்தாள்; "அப்படியே செய்யலாம் தங்காய்" என்று விஜயரத்தினமும் அன்புடன் சொன்னான்.

"சிந்தாயாத்திரையாகப் போய்வாருங்கள்"

சுவாமியார் போனபின்னர் பாக்கியலட்சுமி புதிதாக வந்த அந்தப்பெண்ணுக்கு ஆகாரம் உதவியபின், தன் பக்கலில் இருக்கச்செய்து, "தங்காய், உமது பெயரென்ன என்பதை நாங்கள் அறியலாமோ" என்று ஆதரவுடன் கேட்க, "அக்கா நீங்கள் அறியாமல் வேறு யார் அறிவது; என்னைத் தனபாக்கியமென்று சொல்வார்கள் எனலும், பாக்கியலட்சுமி சந்தோஷங் கொண்டாளாய், "தங்கைச்சி, உம்மோடு எங்களுள் மூன்று பாக்கியங்கள் உண்டு" என்றாள்; "அக்கா நீங்கள் சொல்வது எனக்குப் புலனாகவில்லை" என்று தனபாக்கியங் கேட்க, "தங்காய், நான் இப்படிச் சொன்னதற்கு நியாயம் என் அருமையான அக்காவின் பெயர் சிவபாக்கியம்; உம்முடைய பெயர் தனபாக்கியம்; என்னைப் பாக்கியலட்சுமியென்று சொல்லுவார்கள்; ஆதலினாலேதான் அப்படி சொன்னேன்" என்று பாக்கியலட்சுமி பதில் கூறினாள்; தனபாக்கியம் படுப்பதற்கும் தன் பொருள்களை வைத்து எடுப்பதற்குமாகத் தங்கள் இல்லத்திலே பாக்கியலட்சுமி ஒரு அறையை ஒழுங்கு செய்தாள்; பாக்கியலட்சுமியோடு வசிப்பதனால் தனபாக்கியமும் தனபாக்கியந் தனக்குத் துணையாயிருப்பதனால் பாக்கியலட்சுமியும் பரஸ்பரம் பெரும் மகிழ்ச்சியடைவாராயினர்; இங்ஙனமாக அடுத்தநாட் காலை சுவாமியார் தம்முடைய வாசஸ்தானத்தின் பாதுகாப்பிற்காகிய ஒழுங்குகள் செய்துவிட்டு, காசியாத்திரை புறப்பட்டுக்கொண்டு விஜயரத்தினத்தின் வீட்டிற்கு வந்தார். அங்கிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே அன்று பின்னேரம் யாத்திரை புறப்படுவதென்ற நோக்கத்துடன் யாத்திரை செய்தற்காகிய பொருள் பண்டங்களையெல்லாம் பாக்கியலட்சுமியும் தனபாக்கியமும் ஆயத்தஞ் செய்தனர்; யாத்திரை செய்யும் நேரம் சமீபித்தலும், விஜயரத்தினமும் புறத்தே சென்றிருந்தவன் தன் வீட்டிற்கு மீண்டான்; சுவாமியார், தமது அபிமான புத்திரியை அவதானமாகப் பேண வேண்டுமென்று சொல்லின், பாக்கியலட்சுமியும் விஜயரத்தினமும் கவலைப்படுவார்கள் என்று பயந்து, அதனைச் சொல்லாது "எங்கள் வாசஸ்தானத்திற்கு ஒரு பாதுகாப்பினை ஒழுங்கு செய்திருக்கிறேன்; நீங்களும் இடையிடையே அங்கேபோய் அதனைப் பார்வைசெய்து வாருங்கள்" என்று சொல்லிவிட்டு, தனபாக்கியத்தைப் பரிவுடன் பார்த்து, "மகளே, இவர்களிருவரையும் உனது உற்ற சகோதரங்கள் போற் பாவித்து, இவர்கள் சொல்வதைத் தட்டாது, மனக்குறிப்பறிந்து நடந்துகொள்; உங்கள் எல்லீருடைய நன்மையையும் உத்தேசித்து, நான் யாத்திரை சென்று புண்ணிய தீர்த்தங்களில் முழுகி, புராதன தலங்களைத் தரிசித்து விரைவில் மீண்டு வருகிறேன்" என்று சொல்லி அவ்விருவரிடத்தும் விடை கேட்க, அவர்கள் "சாமி, சிந்தா யாத்திரையாகப் போய்வாருங்கள்" என்று அன்புடன் சொல்லி அனுப்பினர். சாமியாரை விஜயரத்தினம் பயணத்திற்காக வேண்டிய பொருள்களுடன் ஒரு ரதத்தில் ஏற்றிப் புகைரத ஸ்தானத்திலே கொண்டுபோய்ப் பயணமனுப்பி விடைபெற்று மீண்டான்; அநாதப் பெண்ணாகிய தனபாக்கியம் சாமியாரையே தனக்குத் தஞ்சமெனக் கொண்டிருந்தவள், அவருடைய பிரிவினாற் சிறிது சஞ்சலப்பட்டனளேனும், பாக்கியலட்சுமி விஜயரத்தினமென்னு மிருவரும் அவளிடத்துப் பாராட்டிய அன்பினாலும், உரிமையினாலும், மன ஆறுதலடைந்திருந்தாள்; அன்றிரவு தனபாக்கியம் படுக்கைக்குப் போகும் போது பாக்கியலட்சுமியும் அவளுடைய அறையுட் போய்த் தனபாக்கியத்திற்கு இடப்பட்ட படுக்கையில் உட்கார்ந்து கொண்டு அவளையுந் தன் பக்கத்திலே இருக்கச் செய்து, அவளுடைய முதுகைத் தடவியபடி, அவளை ஆசரங்கூர நோக்கி, "என் அருமைத் தங்காய், கேட்கிறேனென்று குறையெண்ணாதீர், நீர் பிறந்தவூரும், நாங்கள் பிறந்தவூரும் ஒன்றென்றெண்ணுகிறேன்; எங்கள் சாமியார் உமக்கு அபிமானப் பிதாவான தெப்படி? உமது பெற்றார் இப்பொழுது எங்கேயிருக்கிறார்கள்? உமக்கு உடன்பிறந்த சகோதரர், சுற்றத்தார் உண்டா? சாமியார் முந்தியும் உமக்குத் தொடர்பானவரோ? இந்த வரலாறுகளையெல்லாம் உம்முடைய அருமையான அக்காவாகிய எனக்குச் சொல்ல வொண்ணாதா" என்று கேட்டாள்; "அக்கா, உங்களுக்கு நானாகவே என் வரலாற்றைச் சொல்லி, உங்களையும் தீராக்கவலைக்கு ஆளாக்குவானேன் என்ற எண்ணத்தினாற் சொல்லக் கூசுகிறேன்" என்று முகவாட்டத் தோடுங் கண்கலக்கத்தோடுங் கூற, பாக்கியலட்சுமி "சொல்ல வேண்டாந் தங்காய்" என்று பதைபதைப்போடு அவள் கண்ணீரைத் தன் முன்றானையால் ஒற்றித் தேற்ற "அப்படியல்ல அக்கா, உங்களுக்கு என் வரலாற்றைச் சொன்னாற்றான் என்மனம் ஒருவாறு தேறுதலடையும்" என்று தன் வரலாற்றைச் சொல்லத் தொடங்கினாள்.

* * *

உலகம் பலவிதம்: 1947 ஒக்டோபர் 17 (முற்றொடர் - 36)

"பெற்றாருக்கு நான் ஒரேயொருபிள்ளை"

"அக்கா, என் பெற்றார் யாழ்ப்பாணத்திலே வேளாண் குலத்தைச் சேர்ந்தவர்கள்; தூய சைவமுறைப்படி ஒழுகி வந்தவர்கள்; தகப்பனார் பெயர் சரவணமுத்தர்; தாயார் பெயர் தங்கம்மாள்; தகப்பனார் என் தாயாரைக் கல்யாணஞ் செய்தற்கு முந்தியே, இந்த மலாய் நாட்டிற்கு வந்து இந்தவூரிலே புகைரதப் பகுதியில் உத்தியோகம் பார்த்து வருவாராயினார்; பின்னர் அவருடைய பெற்றார் அவருக்கு விவாகஞ் செய்துவைக்க உத்தேசித்து ஊருக்கு வரும்படி தெரிவித்தபோது, அவர் ஆறுமாச விடுமுறைநாள் பெற்றுக்கொண்டு சொந்தவூருக்கு மீண்டு போய் அங்தே தமது தாய் மாமனுடைய மகளையே கல்யாணஞ் செய்து சிலநாள் தங்கிநின்று என் தாயாரையும் உடன் கூட்டிக்கொண்டு இங்கு வந்து பழையபடி தமது உத்தியோகக் கடமையைக் கிரமமாகப் பார்த்துவந்தாராம்; அந்தக் காலத்திலேதான் நான் பிறந்தேனென்றும் நான் பிறந்ததும் இந்தவூரிலே தானென்றும் என் அன்பான பெற்றோர்கள் சொன்னார்கள்;" (என்று சொல் வதற்கிடையில் தனபாக்கியத்தின் கண்களில் நீர்ததும்ப, தங்காய் கவலைப்படாதே யென்று பாக்கியலட்சுமி தேற்ற, ஒருவாறுதேறிப் பின்னருந் தன் வரலாற்றைச் சொல்லுகிறாள்) "எனக்குப்பின்னர் சகோதரர்களில்லை; நான் என் பெற்றாருக்கு ஒரேயொரு பிள்ளையென்ற நியாயத்தினாலோ, வேறுகாரணம் பற்றியோ நானறியேன், என் பெற்றார் என்னை அன்பாகப் பாராட்டிச் சீராட்டிப் பேணி வளர்த்து வந்தார்கள்; பருவமான பிராயத்தில் எனக்கு ஏடு தொடக்கி, ஒரு தமிழ் உபாத்தியாயர் தினமும் வீட்டிற்கு வந்து என்னைப் படிப்பித்தற்காகிய ஒழுங்குகளை என் அருமையான அப்பர் செய்து வைத்தார். இரண்டுவருட காலம் அந்த உபாத்தியாயரிடத்திலே நான் தமிழை மாத்திரம் படித்துக்கொண்டு வரும்போது என் தகப்பனார் என்னைச் சமீபத்திலுள்ள ஒரு வித்தியாசாலையிலே தமிழும் ஆங்கிலமும் படிக்கும்படி கொண்டு போய்ச் சேர்த்தார்; நான் வீட்டிற்றானே யிருந்து தினமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூடத்திற்குப் போய்வரலானேன். அந்தப் பள்ளிக்கூடத்திற் படித்து ஆங்கிலம் ஐந்தாம் வகுப்பிலும் தமிழ் ஏழாம் வகுப்பிலும் சித்தியடைந்தேன்; அதன்மேல் அங்கே படித்தல் இயலாதாக, ஒருநாள் என் தகப்பனார் தாயாரைப் பார்த்து "நீயும் ஊரைவிட்டு இங்கே வந்து பலவருடங்களாயின; எங்கள் மகளை ஊரிலேயுள்ள இனசனத்தார் பார்க்க ஆசைப்படுவதாகக் கடிதங்கள் எழுதியுள்ளார்கள்; நான் இப்போதைக்கு விடுமுறை பெற்றுக்கொண்டு உங்களுடன் ஊருக்கு வருதல் முடியாமலிருக்கிறது; என்னுடன் உத்தியோகம் பார்த்த இன்னொருவர் ஊருக்குப் போய்விட்டபடியால் அவர் வருமளவும் நானே அவருடைய கடமையையுஞ் சேர்த்துச் செய்யவேண்டி யிருக்கிறது; அல்லாமலும் எங்கள் மகள் மேற் படிப்பு இங்கே படிக்க முடியாதவளாயிருக்கிறாள்; ஆண்பிள்ளைப் பேறு இல்லாத நாங்கள் இந்தப் பெண்பிள்ளையையேனும் ஆண்பிள்ளையைப் படிப்பிப்பதுபோலப் படிப்பித்து விட்டால் அதனால் எங்களுக்கும் நன்மையுண்டு; எங்கள் பிள்ளைக்கும் நன்மை பின்னுக்குண்டு; ஆதலினாலே நீயும் எங்கள் குழந்தையுமாக இப்பொழுது புறப்பட்டு ஊருக்குப்போகலாம்; போய் அங்கே எங்கள் பிள்ளையை இராமநாதன் கல்லூரியிலே விடுதியிற் சேரச் செய்து தமிழும் இங்கிலீசும் படிக்க வைக்கலாம்; இன்னும் ஒரு வாரத்தில் என்னுடைய நண்பரொருவர் தம் குடும்பத்தோடு இங்கிருந்து எங்கள் சொந்த வூருக்குப் புறப்பட யுத்தேசித்திருக்கிறார்; அவர்கள் துணையில் உங்களையும் அனுப்பி வைக்கலாமென யோசிக்கிறேன்" என்றார்.

"மங்கைப் பருவமடைந்தேன்"

இப்படித் தகப்பனார் சொன்னபோது என் தாயார் பெருங் கவலை கொண்டார்; முற்காலத்திலே மகாராசன் புட்கரனோடு சூதாடி தங்கள் நாடு நகர் செல்வம் அதிகாரம் எல்லாவற்றையு மிழந்து; தம் தாரம் மக்க ளென்னு மிவர்களுடன், காட்டு மார்க்கமாக நடந்து போகும்போது, தன் மனைவி மக்கள் வனவாசத்திற் சங்கடப்படுவார்களென்றெண்ணி, கற்பிற் சிறந்த தன்னுடைய தேவியைப் பார்த்து, "பெண்ணே இந்தக் காட்டில் என்னுடன் வந்து கஷ்டப்பட உன்னால் முடியாது, எங்கள் அரிய மக்களுடன் உன் தந்தையாருடைய மாளிகைக் குப் போய்ச் சேர்" என்று சொன்னபோது, அந்த உத்தமியாகிய தமயந்தி அவ்வார்த்தையைக் கேட்டு எவ்வளவு கவலைப்பட்டாளோ, அவ்வளவு கவலைப்பட்டார்; அவர் சொன்ன வார்த்தையைக் கேட்டு என் தாயார்; அக்கா, என் தாய் ஊருக்குப் போவதற்குப் சம்மதியாமைக்குக் காரணஞ் சில உண்டு; என் தகப்பனாரெனிலோ, சைவாசாரமுள்ளவர்; மற்ச மாமிசம் மதுபானமென்னும் இத் தீமைகளைச் சந்ததி சந்ததியாக வெறுத்த பரம்பரையிற் பிறந்தவர். விரத அனுஷ்டான முடையவர் என்று உங்களுக்கு முந்தியே சொன்னேன் அக்கா, இப்படிப்பட்டவர் ஒரு சுயம்பாகியை வைத்துச் சமையல் செய்வித்தேனும் விடுதிகளில் உணவு செய்தேனுங் காலங் கழிக்கக் கஷ்டப்படுவாரென் றெண்ணியே என் தாய் என்னுடன் ஊருக்குப் போவதற்கு விரும்பினா ரல்லர்; தாயாருடையயுளக் குறிப்பை யுணர்ந்த என் தந்தையார் தாயாரைத் தம்முடன் இருக்கச்செய்து, என் படிப்பைபற்றிச் சிலநாள் யோசித்து என் வீட்டி லிருந்து நாலு ஐந்து மைல் தூரத்திலுள்ள ஒரு உயர்ந்த வித்தியாசாலையிற் சேர்ந்து நான் படிக்கும், அந்த வித்தியாசாலையிலே தங்கியிருந்து படித்தற்கான விடுதிச்சாலை யில்லாமையினால், அதற்குச் சமீபத்திலுள்ள யாழ்ப்பாணத்து நண்பருடைய வீட்டிலே தங்கியிருந்து பள்ளிக்கூடத்திற்குப் போய் வருவதற்கு ஆன ஒழுங்குகளைச் செய்து என்னை அப்படியே அங்கே யிட்டுக்கொண்டு போய் அப்பள்ளிக்கூடத்திற் சேர்ந்து படிக்கவும், அந்த நண்பர் வீட்டிலே தங்கி யிருக்கவும் வேண்டிய ஒழுங்குகளை யெல்லாம் செய்தார்; நான் கிரமமாகப் படித்து வருடந்தோறும் பரீக்ஷைகளிற் சித்தியடைந்து வந்தேன்; அந்த வித்தியாசாலையிலுள்ள உபாத்தியாயர்கள் என்னிடத்தில் அதிக அன்புகாட்டி வர நானும் அவர்களிடத்தில் அதிகம் விசுவாசம் பாராட்டி வந்தேன்; நான் தங்கியிருந்த வீட்டிலுள்ளார் இருவரும், தங்கள் பிள்ளைகளைப் படிப்பித்தற்காக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி விட்டபடியால், என்னைத் தங்கள் சொந்த மகள் போலப் பாவித்து நடத்தினார்கள்; நானும் அவர்களை என் தாய் தகப்பன்போற் பேணி நடந்து வந்தேன்; என் பெற்றார் சில வேளைகளில் சனி ஞாயிற்றுக் கிழமைகளில் நானிருக்குமிடத்திற்கு வந்து என்னைப் பார்த்து எனக்கு ஆகவேண்டிய பொருள் பண்டங்களையுந் தந்து, என்னை வைத்து ஆதரிப்போருக்கும் நன்றி சொல்லிப் போவார்கள்; சிலவேளை வெள்ளிக்கிழமை பிற்பகல் வந்து என்னை இரதத்திலேற்றித் தங்கள் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போய்த் திங்கட்கிழமை அதிகாலையிற் பள்ளிக்கூடத்தி லேனும், நான் படிக்கும்படி தங்கியிருக்கும் அந்த வீட்டிலேனும் விட்டுச் செல்வார்கள்; இப்படியான ஒருமுறை விடுதலைநாட்களில் நான் எங்கள் வீட்டிலேயே இருக்கும்போது, அக்கா மங்கைப் பருவ மடைந்தேன்; பின்னர் சிலவாரம் வித்தியாசாலைக்குப் போகாமல் வீட்டிலேதானே தங்கிநின்று, பின்னருஞ் சில மாசம் பள்ளிக்கூடத்திலே படித்து அந்த வருட முடிவிற் பிரவேசிக்க வேண்டிய பரீட்சையிற் பிரவேசித்துச் சித்தியடைந்தேன்; அதன் பின்னர் என் பெற்றோர் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புதலின்றி வீட்டிலேயே இருக்கச் செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சாந்துணையுஞ் சஞ்சலமேதான்"

வீட்டிலிருந்து சமையல் முதலிய வீட்டுப் பணிகளில் என் தாயாருக்குத் துணைபுரிந்து, ஆங்கிலத்திலும் தமிழிலும் அறிவுக்குரிய நூல்களையும் மற்றை வெளியீடுகளையும் தினசரிப் பத்திரிகைகளையும் படித்து வந்தேன்; இப்படி யிருக்கும்போதுதான்; அக்கா யப்பானியர் எங்களுடைய பிரித்தானியர் வசமுள்ள இந்த நாட்டைக் கைப்பற்றுதற்கான யுத்தந் தொடங்கியது; யுத்தமோ எள்ளளவேனுங் காத்திராதது; அந்த நேரத்தில் இங்கேயுள்ள சனங்கள் பட்ட பாட்டையும் கொண்ட கலக்கங்களையும் இவ்வள வென்று சொல்லமுடியா; இங்குள்ள மக்களுக்கு அந்நாட்களில் ஊனில்லை, இரவில் உறக்கமில்லை, மன ஆறுதல் இம்மியத்தனையும் இல்லாமல் எந்த நேரமும் மனக்கலக்கங்கள் "மாந்தர் குடிவாழ்க்கை மண்ணில் கலம்போலச் சாந்துணையுஞ் சஞ்சலமே" என்ற எங்கள் மூதாட்டியின் வாக்கை அந்த நேரத்திலே தான் இங்குள்ள நாங்கள் அனுபவத்தில் கண்டோம்; அந்த ஆபத்தான நிலையிலே யாழ்ப்பாணத்து மக்களும் இந்த நாட்டிலிருந்து ஆண்களும் பெண்களும் ஒவ்வொரு அயலவரும் ஒருங்குவந்து இராக் காலங்களில் சேர்ந்து இந்த ஆபத்திற்கு என்ன செய்வோம் என்று யோசிப்பார்கள்; அவர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து என் தகப்பனாரைக் கண்டு எங்கள் ஆபத்திற் கேதுவான நிலையைச் சொல்லிக் கவலைப்படுவார்கள்; தகப்பனார் அவர்களுக்கு ஆறுதல் சொல்லுவார்; இப்படியாக, நாங்களி ருக்கும் ஊருக்கு அயலிலே உள்ளஊரில் யப்பானிய விமானங்கள் வெடிகுண்டு போடத் தலைப்பட்டன என்ற செய்தி காதிற்படலும் எங்களூரிலுள்ளவர்கள் அடைந்த திகிலை நான் எப்படிச் சொல்லுவேன்! இப்படியெல்லாம் விபத்துக்கள் நேருகின்றன என்பதை யறிந்து கொண்டும் என் தகப்பனார் மற்றையவர்களைப் போல் அதிகந் திகிலடையாதவராய், காலையும் மாலையும் தாம் சந்தியா வந்தனஞ் செய்யும் போதெல்லாம் எவ்வகையான இடையூறும் வராது காத்தருள வேண்டுமென்று எங்கள் குலதெய்வமாகிய வீரபத்திரக் கடவுளைத் தியானிப்பதும் தோத்திரம் பண்ணுவதுமே செய்து வந்தார்...." என்று தனபாக்கியஞ் சொல்லும்போது, பாக்கியலட்சுமி அவளைப் பரிவுடன் பார்த்து, "தங்காய், இடையிற் கதையைக் குழப்புகிறே னென்று குறை யெண்ணாதீர், உங்களுக்கு வீரபத்திரக் கடவுள் குலதெய்வமாக வழிபடவந்ததெப்படி" என்று கேட்க, "அக்கா, யாழ்பாணத்திலே நாங்கள் இருக்கும் கிராமத்திலே வீரபத்திர சுவாமி கோயில் உண்டென்றும் அந்தப் பெருமானையே குலதெய்வமாகக் கொண்டு அக்கிராமத்திலுள்ள மக்கள் பாரம்பரியமாக வழிபட்டு வருகிறார்களென்றும் என் அப்பர் சொல்லி அந்தப் பெருமானையே எப்பொழுதும் தியானித்து வழிபட்டு வந்தார்" என்று சொல்லி அப்பாலுஞ் சொல்லுகின்றாள். "இப்படியான நேரத்திலே, ஒருநாள் என் தாயார் தகப்பனாரைப் பார்த்து "ஐயோ, அயலூரெங்கும் யப்பானிய விமானங்கள் வெடிகுண்டு போடுகின்றனவாமே, இங்கும் வந்து சேருமாமே, இங்குள்ள மக்களெல்லாம் ஒதுக்கிடந்தேடி ஓடிப் போகிறார்களாமே, நாங்கள் மாத்திரம் சும்மாயிருந்து விடலாமோ, எங்கள்பிள்ளை பெரிதும் பயப்படுகிறாளே என்று பதைப்போடு சொல்லுதலும்; என் தகப்பனார் சிரித்து "ஏ, பைத்தியகாரி, எங்கே ஓடியொளித்துத் தப்புவது, நாமாக எங்களுயிரைப் பாதுகாக்க முடியுமென்றா எண்ணுகின்றாய்? இது நடக்கக்கூடிய கருமமல்ல, எவ்வுயிருங் காத்தளிக்கும் அந்த இறைவனொருவனே உயிர்களைப் பாதுகாக்க முடியும்; ஆனதனாற்றான் அவனைப் பசுபதி என்று போற்றுவர் எங்கள் வீரபத்திரன் எங்களைக் கைவிடமாட்டான்; நாங்கள் இன்னமுஞ் சீவனுடன் இருக்கவேண்டுமென்பது நியதியானால் இருப்போம், மாளவேண்டியது விதியானால் மாண்டே போவோம், எங்கே ஓடிப் போகச் சொல்லுகிறாய், நிலவிற் கஞ்சிப் பரதேசம் போக முடியுமா என்று ஞானம் பேசினார்.

"ஏதோ யோசித்தாள்"

ஆனாலும் என் தகப்பனார் சொன்ன சமாதானங்கள் தாயார் மனசைத் தேறச்செய்தில; தாயார் பின்னருங் கவலைப்பட்டு "எங்களைப் பற்றிக் காரியமில்லை; எங்கள்குடிக் கொரேயொரு அருமையான மகளையாயினும் எங்கேனும் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பிவைத்தாற் போதும்" என்று தகப்பனாரை வேண்டுதலும், அவர் உடனே ஒரு இரதத்தை ஒழுங்கு செய்து அதில் என்னை ஏற்றி, அந்தச் சாரதி ஒரு சீனன், அவன் எங்களுக்கு அறிமுகமானவன், இந்தப் பிள்ளையைச் சாவதானமாகக் கொண்டுபோய்த் தங்கைச்சி முந்திப் படித்த பள்ளிக்கூடத்திற்குச் சமீபமாகவுள்ள அந்த வீட்டிலே கொண்டுபோய் விட்டு, நாங்களும் கூடிய சீக்கிரம் உவ்விடம் வருவோமென்று சொல்லி அவர்களிடம் பிள்ளையை ஒப்புவித்து வா என்று அவனிடஞ் சொல்லி எனக்கும் ஆக வேண்டிய புத்தி சொல்லித் தேற்றி விடைதந்து அனுப்பி வைத்தார்கள்; அக்கா, இரதத்தில் ஏறிக்கொண்டு போனேன், சில நிமிஷத்தில் அந்தவீடு போய்ச் சேர்ந்தோம், இறங்கி உள்ளே போனோம், எவரையும் காணவில்லை, கூப்பிட்டுப் பார்த்தோம், பதிலில்லை, திறந்தபடியிருந்த யன்னல் வாயிலாக நானுஞ் சாரதியும் பார்த்தோம், அங்கே எவருமில்லை, எனக்குப் பெரும்பயம் உண்டானது, சரீரம் பதறியது, சாரதியைப் பார்த்து இவர்கள் எங்கோ ஒதுக்கிடந் தேடிப் போயிருக்கிறார்கள், இங்கே நிற்பதாற் பயனில்லை, என்றுசொல்லி மோட்ட ரதத்தில் ஏறிக்கொண்டு இரதத்தை எங்கள் வீட்டிற்குத் திருப்பிக் கொண்டுபோய் என்னை என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றாரிடம் விடு என்றேன்; அவன் இரதத்தில் ஏறியிருந்துகொண்டு ஏதோ யோசித்தான், என் அப்பா வீட்டிற்கு இரதத்தை விடச்சொன்னால் விடுவதற்கு என்ன யோசிக்கிறாய் என்று சற்று ஆத்திரப்பட்டுச் சொன்னேன்; ஆம் அம்மா என்று தன் பாஷையிலே அவன் சொல்லிவிட்டு இரதத்தைத் திருப்பி வேகமாகச் செலுத்தினான்; ஆனால் இரதம் எங்கள் வீட்டிற்குப் போகும் வழியாற் போகவில்லை யெனக்கண்டேன்; மனத்திலே சந்தேகமும் பெருந்திகிலும் உண்டாயிற்று.

* * *

உலகம் பலவிதம்: *1947* ஒக்டோபர் *21* *(முற்றொடர் - 37)*

"ஆருமற்றார்க்குத் தெய்வந் துணை"

பின்னரும் சாரதியிடம் இரதத்தை நிறுத்தும்படி நான் பலமுறையும் ஓலமிட அதைக் கேட்டுங் கேளான்போல் வேகமாகச் செலுத்திச் சென்ற சாரதி ஒரு நாற்சந்தி எதிர்ப்படுதலும் இரதத்தை மெல்லச் செலுத்தித் திருப்பத் தொடங்கினான்; அந்தச் சந்தியில் ஒருபொலிஸ் நாற்புறத்தாலும் வரும் வண்டிகளைத் தடுத்து ஒன்றோடொன்று முட்டுண்ணாவண்ணம் சைகை செய்து முறைப்படுத்தி அந்த அந்த வண்டிகள் முறையே போகவேண்டிய மார்க்கங்களைக் காட்டுதலான கடமையைச் செய்துகொண்டு நிற்கக் கண்டேன்; ஆருமற்றார்க்குத் தெய்வந் துணை யென்றபடி இது தெய்வத்தின் அருளென்று உடனே சிந்தித்துக்கொண்டு மனத்தைத் திடப்படுத்தி என் இரண்டு கைகளையும் நீட்டி "ஐயா உமக்கு அடைக்கலம்; என் மானத்தைப் பாதுகாக்கவேண்டும்! இந்தச் சீனன் என்னைக் கொல்லக் கொண்டு போகிறான்" என்று தமிழிலேயே ஓலமிடுவதற்கிடையில், அந்தப் புண்ணியவான் இரதத்தை நிறுத்தென்று அவனுக்குக் குறிப்புக் காட்டவே, அவன் இரதத்தை நிறுத்த, "மகளே, நீ பயப்படாதே நான் உன்னைக்காக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு கிட்டிவந்தார்; அக்கா, அந்த நேரத்தில், என் மனத்திலே பொங்கிய மகிழ்ச்சிக்கு ஒரு எல்லையில்லை; என் மனத்திற் கொண்ட பதைப்பு அச்சமெல்லாம் சூரியனைக் கண்ட பனியெனப் பறந்துவிட்டன; வேறொன்றுமல்ல அக்கா, அந்த இடத்திலே, அப்படியான ஆபத்து வேளையிலே மலாய்ப்பாஷையில்லை, சீன பாஷையில்லை, வேறு அந்நிய பாஷைகளில்லை, எங்கள் தாய்மொழியாகிய தமிழில், "மகளே, நீ பயப்படாதே...." என்ற வாக்கு என் காதிற் பட்டபோது, செந்தமிழ்ப் புலவனாகிய அந்தக் கந்தசுவாமியார்தாம் இப்படிப் பொலிஸ் வடிவங் கொண்டு என் மானத்தைக் காக்கும்படி வந்தாரென்று எண்ணி அந்தப் பொலிசைக் கையெடுத்துக் கும்பிட்டபடி இருக்கைவிட்டெழ, அந்தப் பொலிஸ் இரதத்தின் கதவைத் திறந்துவிட. நான் ரதத்தை விட்டுக் குதித்து வந்து அந்தப் பொலிஸின் பின்புறத்தே போய் நின்றேன்; இதற்கிடையில் சீனன் இரதத்தை மெல்ல ஓட்டிக்கொண்டு போகமுயலுதலும், அந்தப் பொலிஸ் அவனை அதட்டி உரப்பி நிறுத்தச்செய்துவிட்டுத் தன்னிடமிருந்த குழலை யூதுதலும், சில நிமிஷஞ் செல்வதற்கிடையில் இரு பொலிஸார் அந்த இடத்தில் துவிச்சக்கரத்தில் வந்திறங்கினார்கள்; அவர்களைக் கண்டவுடன் இந்தப் பொலிஸ் அவர்களுக்கு ஏதோ சொல்லிக் கொண்டு நிற்கும்போது ஒரு இராணுவ "லொரி" அச்சந்தியை நோக்கி வருதலும், அந்த லொரி போக வேண்டிய தெருவிற்குப் போக அநுமதி கொடுத்துவிட்டு, இரு பொலிஸாரையும் கூட்டிக்கொண்டு மோட்டாரதத்திற்குச் சமீபமாக வருதலும் அங்கே சாரதியாகிய சீனனின் ரதம்மாத்திரம் வெறுமனே யிருக்கக்கண்டார் என்னைப் பாதுகாக்கவந்த அப்பொலிஸார்; சீனன் தான் அதன் பின்னரும் அங்கு நின்றால் தனக்கு பெரும் ஆபத்து வந்து சேருமென் றெண்ணிப்போலும் அந்த இடத்தைவிட்டு மெல்ல நழுவிவிட்டான்; முன்னைய பொலிஸ் அங்குவந்த இரு பொலிஸாருக்கும் மலாய்ப் பாஷையில் எனது விருத்தாந்தங்களையும் சொல்லி, வேறுஞ் சில குறிப்புக்கள் கூறி எங்களை போகவிடுத்து, இரதத்தை புறத்தே ஒதுங்கி நிற்கவிட்டு அதில் என்னை ஏறி இருக்கச்சொல்லி, நான் ஏறியிருந்த வுடனே, "மகளே நீர் ஒன்றிற்கும் பயப்படவேண்டாம்; நான் ஒரு யாழ்ப்பாணத்தவன்தான் குலங்குடியிலே பிறந்துள்ளேன்; இராக்காலத்தில் சமயோசித பொலிஸ் கடமை பார்க்கிறேன்; இன்னும் பத்து நிமிஷத்தில் என்னுடைய இன்றைத்தினக் கடமையொழிய, எனக்குப் பிரதியாக இன்னுமொரு பொலிஸ் இங்கே வருவார்; அவரைக் கடமை பார்க்க விடுத்து, உன்னை நான் பொலிஸ்தானத்திற்கு இந்த இரதத்திலேயே கூட்டிக்கொண்டு போய் பொலிஸ் தலைவருக்கு விஷயத்தை தெரிவித்து அவர் கட்டளைப்படி நடந்துகொள்ள வேண்டுமடியம்மா" என்று ஆதரம் பெருகச் சொன்னார்; "ஐயா, நான் உங்களிடம் அடைக்கலம் புகுந்தேன்; என்னைப் பாதுகாக்க வேண்டியது உங்கள் கடன் நீங்கள் சொல்லுகிறபடி செய்வது என் கடன் எனக்குத் தாயும் தந்தையும் தமயனும் நீங்களே" என்று கண்கள் நீர்சொரிய, நாத் தடுமாற, சரீரம் பதறச் சொன்னேன்; "மகளே ஒன்றிற்கும் பயப்பட வேண்டாம்; இந்த ஆபத்து வேளையில் உன்னைக் காப்பதற்கு நான் தெய்வமல்லேன். அந்த ஆண்டவனே, உன்னையும் உன் பெற்றாரையும் என்னையும் தன் அயலாரெல்லாரையும் காத்தருளுவாரம்மா..." என்று சொல்லிக்கொண்டு நிற்கும்போது, அவருக்குப் பிரதிகடமை பார்க்கவேண்டிய அப்பொலிஸ் அங்கே வந்தார்; வந்தவருக்கு என் விஷயமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரங்களையெல்லாம் சொல்லி விட்டு அந்த பொலிஸ் நான் இருந்த ரதத்தில் ஏறி அதனைச் செலுத்திக்கொண்டு பொலிஸ்தானத்தை நோக்கிப் போனார்.

"பெண் துணையின்றி இருக்கவிடுதல் புத்தியாகாது"

பொலிஸ்தானத்தை யடைந்தவுடனே இந்தப் பொலிஸ் அங்குள்ள பொலிஸ் தலைவருக்குச் சகலத்தையுஞ் சொன்னார்; கேட்டதும் "அந்தச் சாரதியைத் தப்பவிட்டீர்களே" என்று சொல்லிக் கவலைப்பட்டுப் பின்னர் இந்தப் பொலிசைப் பார்த்து "இந்தப் பிள்ளை யாழ்ப்பாணத்துப் பிள்ளையா" என்று தமிழிலேயே வினாவ, இவர் "ஓம், ஐயா என்றார்; "ஆனால் இந்தப்பிள்ளையை பொலிஸ்தானத்தில் வைத்துப் பாதுகாப்பதற்கு இந்த நேரத்தில் ஆகவேண்டிய ஒழுங்கு எதுவுமில்லையே என்ன செய்வது? நீரறிய யாழ்ப்பாணத்தவர் யாரும் இந்த அயலிலே குடும்பத்தோடு வசிக்கிறார்களா" என்று பொலிஸ்தலைவர் கேட்க, இவர் "ஐயா, சமீபத்தில் யாழ்ப்பாணத்தவர்களெவரும் மனைவி மக்களோடு வசிக்கவில்லை; என் வீட்டிற்கு அயல் வீட்டிலே இந்தியாவைச் சேர்ந்த ஒரு சைவமனுஷி, விதவை இருக்கிறாள்; அந்த மனுஷியிடத்திலேதான் நான் இடையிடையே போசனஞ் செய்வது; இஷ்டமானால் அங்கு இருக்க ஒழுங்கு செய்யலாம்; அந்தப் பிள்ளையின் சம்மதத்தைக் கேட்டுச் சொல்லுங்கள்" என்றார்; பொலிஸ் தலைவர் என்னைக் கேட்பதற்கு முந்தியே "ஐயா, நான் வேறு எங்கேயும்போய் எவரோடேனும் இருக்க விருப்பமில்லை; இந்த ஐயாவே என் மானத்தையும் உயிரையுங் காத்தவர்; இவரே எனக்குத் தாயுந் தந்தையும் தமயனுமாவார்; ஆனதனால் இப்போதைக்கு இந்த ஐயா இருக்குமிடத்தில் இவருக்குச் சமையல் செய்து கொடுத்துக் கொண்டு இருக்க விரும்புகிறேன் என்று சொன்னேன்; ஏன் இந்தப்பிள்ளை விரும்புகிறபடி செய்தற்கு உமக்குச் சமமதந்தானே, யாழ்ப்பாணத்துப் பிள்ளைக்குப் பகையாக ஏதும் இடையூறு வருமானால் எங்களெல்லாருக்கும் அது வசை தானே" என்று பொலிஸ் தலைவர் இவருக்குச் சொல்ல, "ஆம். ஐயா, நீங்கள் சொல்வது நிசந்தான்; ஆனாற் பெண்துணையில்லாத வீட்டிலே இந்தப் பிள்ளையை நான் தனியே வைத்துப் பாதுகாப்பது எப்படி யென்பதை யிட்டுத்தான் யோசிக்கிறேன்; அல்லாமலும் நான் என் கடமையை பார்க்கும்படி புறப்பட்டுவிட்டால், மீண்டு வீட்டிற்குப் போகும்வரையும் இந்தப் பிள்ளை தன்னந்தனியே தானே இருக்கநேரும், அப்படி இருக்கவிடுதல் புத்தியாகாது" என்றார்; பொலிஸ் தலைவர் சிறிதுநேரம் யோசித்துவிட்டு "அடுத்தவீட்டிலிருக்கும் இந்திய மனுஷி தனித்தவளா? அவள் பிழைப்பென்ன? வயசு எவ்வளவு இருக்கும்? ஒழுக்கமுள்ளவளா" என்ற இந்தக் கேள்விகளை யெல்லாம் ஒன்றன்பின் னொன்றாகக் கேட்கவும் பொலிஸ் "தனித்த மனுஷி, என்னைப்போல் யாரும் சமையல் செய்து உண்ணச் சௌகரியமில்லாதவர்களுக்கு அன்னம் ஆக்கியிட்டு அதனால்வரும் ஊதியத்தைக் கொண்டு வறுமையிற் செம்மையாகக் காலம் போக்குபவள்; ஐம்பது வயசுவரையிலிருக்கும், குணமொழுக்க முள்ளவள்" என்று பதில் சொன்னார்; அப்படியானால், பொலிஸ் அதிகாரியின் பொறுப்பிற் பணந்தரலாகும் "அந்த மனுஷியை இந்தப்பிள்ளைக்குத் துணையாக உமது வீட்டில் வந்து சிலகாலம் வசிப்பதற்கான ஒழுங்கினைச் செய்ய முடியுமோ" என்று பொலிஸ்தலைவர் கேட்க "செய்யமுடியுமென்று தான் நினைக்கிறேன்; ஆனால் பொலிஸ் அதிகாரப்பகுதி இவள் பொருட்டுப் பணந்தர வேண்டியதில்லை; பணவிஷயத்தை நானே பார்த்துக்கொள்ளுவேன் ஐயா" என இந்தப் பொலிஸர் பதில் சொன்னார்; "உமது இஷ்டம் போற் செய்யவும்" என்று பொலிஸ்தலைவர் இவருக்குச் சொல்லிவிட்டு, என்னைப்பார்த்து "மகளே, நானும் யாழ்ப்பாணத்திற்பிறந்தவன், என் மனைவி மக்களும் இப்பொழுது அந்த வூரிலே தானிருக்கின்றார்கள்; உம்மைப்போன்ற மகள் எனக்குமுண்டு; உம்மைக் கண்ட நேரந்தொட்டு என் மகளுடைய ஞாபகம் என் மனத்துட் புகுந்துவிட்டது, அந்தத் துஷ்டச் சீனன் தப்பிவிட்டானே யென்பது எனக்குப் பெருங்கவலை; ஆனாலும் மகளே, அகப்படுத்துவதற்கான முயற்சி செய்யாமல் விடமாட்டேன்; அந்தத் துஷ்டனால் உமக்கு ஏதும் மானபங்கம் நேராமல் நீர் உம்மைப் பாதுகாத்ததையிட்டு நான் பெரிதும் மெச்சுகிறேன்; எங்கள் யாழ்ப்பாணத்துப் பெண்கள் உயிரைக் காட்டிலுந் தங்கள் மானமே மேலானதென்று மதித்து நடக்கும் உத்தமிகள்; நீர் அந்த மதிப்பிற்கு ஒரு பங்கம் வராமற் செய்துவிட்டீர்; நீர் ஒன்றுக்கும் யோசிக்கவேண்டாம்; இந்த ஆபத்தான காலத்திலும் இந்த நாட்டில் வந்து கடமை பார்க்கும் எங்களுக்கு எவ்வகையான இடையூறும் வர அந்த ஆண்டவன் விடமாட்டான்; நான் இந்த ஊரில் இருக்கும்வரை உமக்காக, உம்மைப் போன்ற உத்தமப்பெண்கள் எவர்க்காக, எவ்வகையான அபாயமும்நேர விடமாட்டேன்; உமக்கு உதவியாக வந்த இவரை ஒரு சாமானியமான பொலிஸ் என்று எண்ணிவிடாதீர் இவர் இப்பொழுது சமயோசிதமாகத்தான் இந்தக் கடமையைப் பார்க்கிறார்; இவர் யாழ்ப்பாணத்திலே தக்க குலங்குடியிற் பிறந்தவரென்பதையும், தமிழும் ஆங்கிலமும் மறிவரென்பதையும், தெய்வபத்தி யொழுக்கமுடையவ ரென்பதையும் இவர் இந்த உத்தியோகத்திற்கு வர முந்தியே நான் நேரில் அறிவேன்; ஆனதால் இவரோடு நீர் போய்ச் சிலகாலம் வசிக்கலாம்; உமக்கு ஆகவேண்டியவைகளை யெல்லாம் செய்து வைப்பார்" என்று ஆதரவோடு சொல்லி ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகப்பிரதியில் என் விஷயமாக எழுதி எனக்குப் படித்துக்காட்டி அதன்கீழ்க் கைச்சாத்திடும்படி அந்தப் பொலிஸ்தலைவர் என்னைக்கேட்க நான் உடனே கையெழுத்திட்டேன்; பின்னரும் அவர் என்னைப் பார்த்து அந்தச் சீனனுடைய பெயர் அவன் வசிக்குமிடம் எனக்குத் தெரியுமோ என்று கேட்க, நான் தெரியாது ஐயா என்றேன்; எனக்கு உதவியாகவந்த பொலிஸ் மூலமாக அவன் கொண்டுவந்த இரதத்தின் இலக்கத்தை மாத்திரங் கேட்டுப் பதிந்துகொண்டு, தம்முடைய முன்னிலையில் நின்ற இன்னொரு பொலிஸைப் பார்த்து "நீ இவர்களிருவரையும் ஏற்றிக் கொண்டுபோய் இவர்களுடைய இடத்தில் இறக்கிவிட்டு மீண்டு வந்து இரதத்தை பொலிஸ் தானத்திலுள்ள பாதுகாப்பிடத்தில் நிறுத்திவை" என்று கட்டளையிட்டார்; நாங்களிருவரும் பொலிஸ் தலைவருக்கு நமஸ்காரஞ் செய்து விடை பெற்றுக்கொண்டு இரதத்தில் ஏறி எனக்கு உதவியான பொலிசருடைய வாசஸ்தானத்தை யடைய, இரதத்தைச் செலுத்திவந்த சாரதியாகிய பொலிஸ் எங்களிடம் விடைபெற்றுக்கொண்டு இரதத்தோடு மீண்டான்.

"மழைக்கால் இருட்டானாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது"

பொலிஸ் ஐயா தம்முடைய வீட்டை யடைந்தவுடனே அடுத்த வீட்டிலுள்ள இந்திய மனுஷியோடு சகல செய்தியையுந் தெரிவித்து ஒழுங்கு செய்ய, அந்த மனுஷி எனக்குத் துணையாக விருந்து எங்களுக்குச் சமையல் செய்துதந்து வந்தாள்; நானும் சமையல் விஷயத்திலும் ஏனைய வீட்டுப் பணிகளிலும், அந்த மனுஷிக்கு என்னால் இயன்ற உதவி செய்து இதமாக நடத்துவர, பெற்ற தாய்போல் அந்த மனுஷி என்னிடத்தில் அன்பும் ஆதரவும் பாராட்டி வந்தது; எங்கள் பொலிஸ் ஐயாவும் மற்சமாமிசம் புசியாதவராய்த் தூய உணவுண்பவராய் உண்பொழுது நீராடிச் சந்திவந்தனை செய்து உண்பவராய் விரதங்காப்பவராயும், காலையும் மாலையும் கடவுளைத் தொழுபவராய் நல்லொழுக்கம் பூண்டவராய்த் தமிழறிவுடையவராய், இன்சொற் பேசுபவராயிருந்தமையினாலே, அக்கா, அந்த இருவரையும் நான் என் தாய் தந்தையார்போல் மதித்துப் பயபத்தியோடு அவர்களிடத்தில் நடந்து வந்தேன்; அவர் என்னை மகளேயென்று கூப்பிட்டு வந்தபடியால், நானும் ஐயா என்று சொல்லிவந்தேனே யொழிய, உண்மையில் என்னுடைய வயசையும் அவருடைய வயசையும் நோக்குமிடத்தில் அவரை யெனக்குத் தமயனாக மதிக்கலாம்; இந்த இளம் வயசிலே இவரிடத்தில் மேலான குணங்களும் ஒழுக்கங்களுங் காணப்படுகின்றனவே என்று என்னளவில் எண்ணியெண்ணி வியந்து கொள்ளுவேன்..." என்று தனபாக்கியஞ் சொல்லும்போது, பாக்கியலட்சுமி அவளைப் பார்த்து, "தங்காய். எங்கள் யாழ்ப்பாணத்து மக்கள் பெண்களாக ஆண்களாக இந்த நாட்டிலே இளமைப் பருவத்திலும் முதுமைப் பருவத்திலும் எந்தக் காலத்திலும் தங்கள் நாட்டின் பெருமை, குலப் பெருமை சமயக் கொள்கையென்னு மிவைகளையும் பாதுகாத்து ஒழுக்கமாகவே நடந்து கொள்ளுகிறார்களென்றும் இந்நாடு பெண்ணாசை முதலாம் ஆசைகளை அதிகப் படுத்துவதற்கு ஏதுவான நாடென்றும், ஆதலினாலேதான் எங்கள் நாட்டு மக்கள் இந்த நாட்டிற் சாவதானமாக ஊடாடித் தாங்கள் வந்த கருமத்தைச் செவ்வனே செய்து முடித்துக் கொண்டு உபகார வேதனத்தோடு ஊருக்கு மீண்டு விடுகிறார்களென்றும் எங்களூரிலேயுள்ள பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன் தங்காய்; ஆதலினால் உம்முடைய ஐயா, வயசிற் குறைந்தவராயிருந்தாலும் ஒழுக்க முடையவரா யிருத்தல் நூதனமல்ல; "மழைக்கால் இருட்டானாலும் மந்தி கொப்பிழக்கப்பாயாது" என்று எங்கள் நாட்டில் ஒரு பழமொழியுண்டல்லவா" என்று பாக்கியலட்சுமி சொல்லுதலும், "அந்தப் பழமொழியை முந்தியுஞ் சொல்லக் கேட்டிருக்கிறேன்; அதன் கருத்து விளங்கவில்லை; தெரிந்தாற்சொல்லுங்கள் அக்கா" என்று தனபாக்கியங் கேட்க, பாக்கியலட்சுமி சொல்லுகின்றாள்.

* * *

உலகம் பலவிதம்: 1947 நவம்பர் 07
(முற்றொடர் - 38)

நீதித்தலத்தில் விசாரணை

"மழைகால் இருட்டானாலும் மந்தி கொம்பிழக்கப் பாயாது" மழை பெய்யும்போதே ஒரு மரத்திலிருந்து மற்ற மரத்தின் கொம்பிற்குப் பாய்தல் கஷ்டமாகும்; ஏனெனிற் பாயும்போது மழை ஈரத்தினால் வழுக்குதலுங் கூடுமல்லவா? கால் என்றாற் காற்று; மழை பெய்யும்போது காற்றும் அடித்தால் அதனாற் கொம்பசைய இலக்கு வைத்துக்கொண்டு ஒரு மரக் கொம்பரிலிருந்து மற்றை மரக்கொம்பருக்குப் பாய்வது இன்னும் கஷ்டமாக இருக்கும்; இவற்றோடு இருட்டுமாயிருந்தால், மரக்கொம்பிருக்குமிடத்தை அவதானித்து இலக்காகப் பாய்தல் மிக அரிதல்லவா? இப்படியான சங்கடங்களெல்லா மிருந்தாலும் குரங்கு தன் இயற்கை யறிவினாற்போலும் இலக்குத் தவறாமல் ஒரு கொம்பரிலிருந்து மற்றக் கொம்பிற்குப் பாயுமென்பதுதான் தங்காய் இந்தப் பழமொழியின் கருத்தென்று நினைக்கிறேன்; இதுபோல என்ன சங்கடங்கள் தாம் நேர்ந்தாலும், பெண்ணாகப் பிறந்தவள் தன் மானத்தைப் பாதுகாக்கவேண்டு மென்று சொல்லுகிறேன்" எனக் கூறிமுடித்தாள்; "நல்ல கருத்துள்ள பழமொழி அக்கா" என்று சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுப் பின்னரும் தனபாக்கியந் தன்வரலாற்றைச் சொல்லுவாளாயினாள்; "இப்படியாக ஒருநாள் நமது அபிமானத் தகப்பனார் தம்கடமை பார்த்து விட்டு அந்திக் காலம் வீட்டிற்கு மீண்டு வந்தபோது "மகளே அந்தச் சீனன் அகப்பட்டு விட்டான்; இப்பொழுது விளக்க மறியலில் இருக்கிறான்" என்று எனக்குச் சொன்னார்; "எப்படி அகப்பட்டான் ஐயா" என்று நான் கேட்டபோது, "அந்த இரதத்தின் சொந்தக்காரன் தன் இரதம் பொலிஸ்தானத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிற தென்பதையறிந்து, அங்கே வந்தபோது, சாரதி செய்யத் துணிந்த சதியையும் இரதம் பொலிஸ் தானத்திலே தடை செய்யப்பட்டிருத்தற்குக் காரணத்தையும் பொலிஸ் தலைவர் சொல்ல, இரதச் சொந்தக்காரன் பொலிஸ் துணைகொண்டு தானும் தேடிக் கண்டு அவனைப் பிடித்துக் கொண்டுவந்து நீதிஸ்தலத்தில் ஒப்புவித்திருக்கிறான்; நாளைத் தினம் ஒருபோது விசாரணை நடக்கும்; அந்த நேரம் மகளே, நீரும் நியாயத்தலத்திற்கு வரநேரினும் நேரும்" என்று சொன்னார்; நீதித் தலத்தில் வந்து உண்மையைச் சொல்வதற்குப் பயமென்ன ஐயா, நான் வருகிறேன் என்று சொல்லி, அடுத்தநாள் குறித்த நேரத்தில், பொலிஸ் கொண்டு வந்த ஒரு இரதத்தில் ஐயாவுடன் கூடிக்கொண்டு நீதித்தலத்திற்குப் போனேன்; விசாரணை நடக்கும் போது நீதித் தலத்தில் என்னையுஞ் சாட்சியங் கேட்டார்கள்; நான் நடந்தவைகளையெல்லாம் ஒன்றுந் தவற விடாமல் உள்ளபடி சொன்னேன்; பொலிஸ் ஐயாவையுங் கேட்டார்கள், அவரும் உள்ளதைச் சொன்னாராம்; இதற்கிடையில் அந்தச் சீனன் தன் மீது பாரிக்கப்பட்ட இரு குற்றங்களையும் தான் செய்ததென ஒப்புக்கொண்டான் ...." என்று சொல்லும்போது, பாக்கியலட்சுமி தனபாக்கியத்தைப் பார்த்து "இரண்டு குற்றங்கள் என்ன, என்ன" என்று வினவ, தனலட்சுமி ஒன்று என்னை மானபங்கஞ் செய்ய முயன்றமையாம், மற்றையது பொலிசின் கட்டளையை மீறித் தப்பியோடியது" என்று பதில் சொல்லிப் பின்னருங் கூறுகின்றாள்;

"பெண்ணென்றாற் பேயுமிரங்கும்"

எதிரிக்கு நியாயவாதியில்லை, வழக்காளி பக்கமாகப் பொலிஸ் தலைமையதிகாரியே வழக்கை நடத்தினார்; நீதிபதி எதிரியைப் பார்த்து "நீ செய்த குற்றங்களெனிலோ பெருங் குற்றங்களாகும்; இரதச் சாரதியாகவுள்ள நீ உன் பொறுப்பை முந்தியே அறிந்திருக்க வேண்டியது; சாரதியாகிய உன்னிடத்தில், உன் இரதத்தில் ஏறிவருபவர்கள் தங்கள் உடல் பொருள் ஆவி மானம் என்னுமிவைகளை உன்னிடத்திலேயே பிரயாணம் செய்யும்வரை, இல்லையேல் உன் இரதத்தைவிட்டு இறங்கும் வரை ஒப்புவித்துவிடுகிறார்கள்; பெருந் தொகையான பணத்தைக்கொண்டு, கருமம் சாதிப்போர் சில சமயங்களிற் சாரதியாகிய உன்போன்றவர்களை நம்பியவாறு துணையின்றி உங்கள் இரதங்களில் ஏறிவருகிறார்கள். பிராயப்பட்ட பள்ளிக்கூடச்சிறுமிகளை வேறு துணையின்றி உன்னைப் போன்றவர்களை நம்பி இரதத்தில் ஏற்றிப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவைக்கிறார் கள்; பள்ளிக்கூடத்திலிருந்தும் தங்கள் குமர்ப் பிள்ளைகளை ஏற்றிக்கொண்டு வரும்படி பெற்றார் பாதுகாப்பாளர்களை நம்பிச் சொல்லுகிறார்கள்; இரதத்திலுள்ள மக்கள் எல்லா வகையிலும் உங்களை நம்பி உங்கள் மீது விசுவாசம் வைத்து நடக்க, "வேலி பயிரை மேயத் தலைப்பட்ட விதமாக" இந்தப் பிள்ளைக்கு வழியில் ஏதும் இடையூறு வந்தாலுங் காக்கவேண்டிய நீ நீதிக்கு மாறாக, நம்பிக்கைத் துரோகமென்பதைச் சிந்தியாமல், உன் பொறுப்பை மறந்து, இந்தப் பெண் தடுக்க தடுக்க, இப் பெண்ணினுடைய விருப்பத்திற்கு மாறாக தீய எண்ணத்தில் இப்பெண்ணைக் கொண்டுபோயிருக்கிறாய்; இப்பெண்ணுடைய நல்ல நேரத்தினாற்போலும், அந்த பொலிஸ், வழியில் உன்னைத் தடுக்காதிருந்தால் இந்தத் தீமையை இந்தப் பெண் விஷயத்திலே செய்திருப்பாய்; பெண்ணென்றாற் பேயுமிரங்கு மென்றபடி, யாராயினும் ஒரு பெண்ணுக்கு ஆபத்து நேரக்கண்டால், உடனே அப்பெண்ணை அந்த ஆபத்திலிருந்து நீக்கத்தான் முயற்சி செய்வர், அப்படிப்பட்டவர்களே உண்மையான ஆடவர்களாவர். நீ மனுஷனாகக் காணப்படினும், மனுஷ குணங்கள் உன்னிடமில்லாமையேல், நீ இராக்கதனாயிருத்தல் கூடும்; உன்னைச் சிங்கம் புலி முதலிய மிருகங்களுக்கு ஒப்பாகச் சொல்லலாமோ எனின், அந்த மிருகம் தம் இரையை வீரத்தோடு பற்றிக்கொன்று தின்னுமே யொழிய உம்மைப்போல், பேடித் தனமாகப் மனிதனுடைய மானத்தைப் பங்கப்படுத்த ஒரு போதுந் துணியா; ஆதலால் நீ அந்தத் துஷ்ட மிருகங்களைக் காட்டிலும் பன்மடங்கு துஷ்டனாவாய்; இது மாத்திரமல்லாமல் நீ இன்னொரு நம்பிக்கைத் துரோகஞ் செய்திருக்கிறாய்; உன் முதலாளியாகவுள்ள மனுஷன் உனக்குத் தக்க சம்பளம் தந்து, உன்னைப் போஷித்துப் பல ஆயிர ரூபா கொண்ட இரதத்தை உன்னிடம் நம்பி ஒப்படைக்க, நீ அதனை மறந்து உன்னை நம்பி நடக்கும் முதலாளிக்கே துரோகஞ் செய்தாய்; இப்படிப்பட்ட நீ ஒருபோதும் நல்லவனாக இருக்க வொண்ணாது; நீ நம் நாட்டிற்கு சாரதியாக விருத்தலினால் மனுஷ வர்க்கத்துக்கு அதிக கேடு உண்டாகும்; இந்தக் குற்றங்களின் பேரில் உனக்கு 6 மாசக் கடுங்காவல் தண்டனை விதிக்கிறேன்; இயன்ற அதிகாரத்திற்குரிய சாரதிப் பத்திரத்தையும் இன்று தொடக்கம் உனக்கு இல்லாமற்செய்து; உன்மேலுள்ள இன்னொரு குற்றம் பொலிஸ் கட்டளையை மீறித் தப்பியோடியது; இதற்கும் மூன்று மாசம் கடுங்காவல் விதிக்கிறேன்" எனக்கூறி நீதிபதி அந்தத் சீனனுக்கு ஒன்பது மாசக் கடுங்காவல் விதித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விமான வரலாறு"

இது நடந்தபின் சிலநாட்செல்ல, ஐயா பொலிஸ் வேலையிலிருந்து அந்தச் சிறிய வீட்டிற்றானே, இருந்தார்; ஐயாவுக்கும் எனக்கும் அந்த இந்தியமனுஷியே சமையல் செய்து தந்துகொண்டு எங்கள் வீட்டிலேயே யிருந்தாள்; இதற்கிடையில் நாங்கள் இருக்கும் இந்தவூரும் யப்பானியர் கைப்பட்டது; எங்கள் ஐயா யப்பானியருடைய கொடுங்கோன்மையிலிருந்து இந்தநாடு சீக்கிரத்தில் விடுதலையடைய வேண்டுமென்று தெய்வத்தை அல்லும் பகலும் பூசித்துக் கும்பிட்டு வந்தார்; வழக்கமான உடையை நீக்கிக் காவியுடை உருத்திராக்க மாலை யென்னுமிவைகளை அணிந்துகொண்டு வருவாராயினர்; நாங்கள் வசித்த வீட்டிற்கு அயலிலிருந்தவர்கள் ஆபத்திற்குப் பயந்து வேறு ஒதுக்கிடங்கள்தேடிப் போனார்கள்; ஆனால் எங்கள் ஐயா மாத்திரம் எல்லாவுயிர்களையும் பாதுகாக்கும் ஆண்டவன் எங்களையும் பாதுகாப்பான் என்று எங்களுக்குப் புத்தி சொல்லிக் கொண்டு வேறெங்கும் போகாமலிருந்தார்; அக்கா, யப்பானியர் இந்தநாட்டைப் பற்றியாண்ட நேரத்திலே நாங்கள் பட்ட கஷ்டம் பல, ஆனால் அவைகளை இப்போது உங்களிடஞ் சொல்லி உங்களையும் கவலைக்குளாக்க வொண்ணாதென்று தான் சொல்லாமல் விடுகிறேன்; என் பெற்றாரின்கதி யென்ன வாயிற்றோ என்று நினைக்கும்போதெல்லாம் என்னுள்ளம் "குபீர்" என்று பற்றியெரியும்; நான் கவலை சகிக்கமுடியாமல் அழுவேன்; அப்பொழுது இந்த ஐயா "மகளே, கவலைப் படாதே அவர்களுக்கு எவ்வகையான தீமையும் வரமாட்டா, ஆண்டவன் காப்பார்" என்று தேறுதல் சொல்லுவார்; ஒருநாள் இந்த ஐயா, எங்களை யறியாமல், பகைவர் கையில் அகப்படாமல் இரகசியமாகப்போய் என் அருமையான பெற்றார் வசித்த இல்லத்தைப் பார்த்தாராம்; இல்லமிருந்த இடத்தைத்தானும் அவதானிக்க முடியாமல் அந்தப்பட்டினம் முழுவதும் அழிந்து மயானம் போற் கிடந்ததென்பதை அப்பொழுது சொல்லாமல் யப்பானியர் இந்த நாட்டைவிட்டு நீங்கியபிறகே எனக்குச் சொன்னார்; நான் கேட்டுக் கவலைப்பட, அப்பொழுதும் எனக்குத் தேறுதல்தான் சொன்னார்; இப்பொழுதும் தேறுதல்சொல்லி வருகிறார்; யப்பானியர் இந் நாட்டினின்றுந் துரத்தப்பட்ட பின்னர்த்தான், அக்கா, நீங்கள் இப்பொழுது சேர்ந்து படிப்பித்து வரும் பள்ளிக்கூடத்திலே சமயமும் தமிழும் படிப்பிக்கும் உபாத்தியாயராகக் கடமை பார்த்து வருகிறார்; தாம் எப்பொழுதும் இப்படித் துறவியாக விருந்தே காலங்கழிப்பதென்றும் எனக்கு இடையிடையே சொல்லுவார்; இதற்கிடையில், யப்பானியர் இந்நாட்டை விட்டொழிந்து போகவே. எங்களுக்குச் சமையல் செய்துகொண்டிருந்த இந்திய மனுஷியும் தன் சொந்தவூரை விட்டுப் புறப்பட்டு இந்த நாட்டுக்குத் தான் வந்து வெகு காலமென்றும் தன் உற்றார் உறவினரைத் தான் ஊரிற் போய்ப் பார்க்கவேணுமென்றும் எங்களிடம் விடைபெற்றுக்கொண்டு போய்விட, இப்பொழுது சில மாசங்களாக ஐயாவும் நானுமே அங்கு வசித்து வரலானோம்; நானும் ஐயாவுமே சமையல் செய்து உண்டு வருகிறோம்; அயலிலுள்ள ஒரு இந்திய மனுஷன் எங்களுக்கு வந்து ஏதும் உதவிசெய்து தருவது வழக்கம்; இப்பொழுது எங்கள் வீடு அந்த இந்திய மனுஷன் பொறுப்பிலேயே யிருக்கிறது; அக்கா, இதுதான் என்னுடைய பரிதாபமான வரலாறு" என்று சொல்லி முடித்தலும், பரிவுடன் கேட்ட பாக்கியலட்சுமி அவளுக்குத் தேறுதல் கூறி நித்திரை செய்ய விடுத்துத் தானும் படுக்கைக்குப் போனாள்.

"மாதரார் தாமிருந்த இடவகையில் தனிபுகுதோம்"

ஒருநாள் மத்தியானத்தின்மேல் இரண்டு மணிவரையிலிருக்கும், சிவகுருநாதன் தன் உத்தியோகம் பார்க்கப் போய்விட்டான், மத்தியானபோசனம் முடித்துக்கொண்டு கண்ணகியம்மையும், மகளாகிய சிவபாக்கியமும் நமசிவாயத்தின் விஷயமாக யோசித்துக் கவலைப்பட்டுக் கொண்டு தலைவாசலில் இருக்கும்போது, தாடி மீசை முறுகிய சடையோடு கூடிய ஒரு துறவி அங்கே போனார்; அத்துறவியின் வரவைக் கண்டவர்களாகிய தாயும் மகளும் உடனே இருக்கை விட்டெழுந்து நமஸ்காரம் பண்ணி "சுவாமி வாருங்கள்" என்று உபசாரத்தோடு வரவேற்ப, அந்தச் சந்நியாசியார் "விசுவநாதா, விசாலாட்சி" என்று உச்சரித்துக் கொண்டு தலைவாசலையடை தலும் அவர்கள் அந்தத் துறவிக்கு ஆசனமிட்டு உபசரித்து இருக்கச்செய்தனர், இருத்தலும் கண்ணகியம்மை அத்துறவியைப் பணிவுடன் பார்த்து "சுவாமீ, மிகவும் ஆயாசத்தோடு காணப்படுகிறீர்கள், தாகத்துக்கு ஏதும் உட் கொள்ளுகிறீர்களா? பாலுண்டு, மோருண்டு கொண்டு வரலாமா" என்று விநயமுடன் கேட்க, அத்துறவி கண்ணகியம்மையைப் பார்த்து "தாயே, இப்போது எனக்கு ஏதும் வேண்டாம், தேவையானாற் கேட்கிறேன்; மேலும், ஆச்சி, நீங்கள் நினைப்பதுபோல நான் ஒரு பெரிய சந்நியாசியல்லேன்; வாழ்நாளில் ஒருமுறையேனும் காசியாத்திரை சென்று கங்கையிற் படிந்து, விசாலாட்சிசமேத விசுவநாதப் பெருமானைத் தரிசிக்க வேண்டுமென்ற வேணவாவி னால் இப்படியான உடையோடு புறப்பட்டேன்; இந்தவீட்டில் இப்போது யாரும் ஆண்பிள்ளைகள் இல்லையா" என வினாவ "இல்லை, சாமீ என் மகனொருவன் இந்த வீட்டிற்குரியவன். இன்னும் ஒன்றரை, இரண்டுமணி நேரத்துள் வந்துவிடுவான், அவனுக்கு உங்களைப் போன்ற பெரியவர்களைக் காண, கண்டு உபசரிக்க வெகு ஆசை..." என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகியம்மை சொல்லி முடிப்பதற்கிடையில் "அப்படியானால், அவர் வந்தபின் 5 மணி வரையில் நான் தவறாமல் மீண்டு இங்கே வருவேன்" என்று சொல்லிப் போதற்கு எழுந்தார், இதற்கிடையில் தாயின் பக்கலிலே ஒதுங்கி நின்ற சிவபாக்கியம் அத்துறவியை நமஸ்காரஞ் செய்து "சுவாமீ, சொல்லுகிறேனென்று குறையெண்ணாதீர்கள், பெண்களாய்ப் பிறந்த நாங்கள் அவ்வளவு அதிக பாவிகளா" என்று மனவருத்தத்தோடு கேட்க, "இல்லை. அம்மா, ஆண்களில்லாத வீட்டிலே வந்திருத்தல், உணவு செய்தல் பிரமசாரிக்காக, துறவிக்காக, ஆணாய்ப்பிறந்தவரெவருக்கும் முறையல்ல; அதனாற் சொன்னேனேயொழிய உங்கள் மீது வெறுப்புக் கொண்டேனும், நீங்கள் பாவிகளென் றெண்ணியேனுஞ் சொன்னேனல்லேன்; நீங்கள் அறியாத விஷயத்தை நான் உங்களுக்குச் சொல்ல வரவில்லை, சிறுத்தொண்ட நாயனார் இல்லத்தில் இல்லாத சமயத்தில் எங்கள் வைரவப்பெருமான் அங்கே சென்று நாயனார் உங்கிருக்கின்றாரோ என்று வினாவியபோது அந்நாயனாருடைய பத்தினியாராகிய வெண்காட்டு நங்கையார் விரைந்துவந்து வைரவவடிவங்கொண்ட இறையவரை வணங்கி, சுவாமீ, எங்கள் நாயனார் இன்று முழுதும் யாரும் சிவனடியவர் இங்கு வரவில்லையே என்று கவலைகொண்டு சிவனடியாரைத் தேடிப் போய்விட்டார்; சற்று நேரத்தில் வந்துவிடுவர், சுவாமியை இங்கிருப்பக்கண்டால் ஆநந்தமடைவார்; ஆதலினாற் சற்றுநேரம் இருந்தருள வேண்டும்" என்று இரந்தபோது வைரவமூர்த்தி சொல்லியருளியதென்ன "மாதரார் தாமிருந்த இடவகையில் தனிபுகுதோம்" என அருளிச் செய்து அவ்விடம்விட்டகன்றாரென்று எங்கள் பெரியபுராணத்திற் சொல்லப்பட்டிருக்கிறது; அதனாற்றான் சொன்னேன்; அல்லாமலும் நான் சற்றுநேரஞ் செல்ல இங்கு மீண்டுவருவேன்" என்றார். "சுவாமி, உங்கள் விருப்பத்தை எங்களாற் றடுக்கமுடியுமா? ஆனால், அந்த வைரவமூர்த்தி வெண்காட்டு நங்கையாருக்குத் தாம் வசிக்குமூர் உத்தரதேசம் எனச் சொல்லிவிட்டுப் போனாரென்று பெரியபுராணத்திற் சொல்லப்பட்டிருக்கிறதே, அதுபோல, நீங்களும் உங்கள் சொந்தவூர் எது என்று சொல்ல வொண்ணாதா? நீங்கள் பிறந்தவூர் யாழ்ப்பாணமா" என்று விநயத்தோடு கேட்டாள் சிவபாக்கியம்; சந்நியாசியார் புன்னகை செய்து "படித்தவருக்கும் பரதேசிக்கும் எந்தவூருஞ் சொந்தவூராம்; ஆனால் என் சந்மவூர் யாழ்ப்பாணந்தான்" என்றார்; "சுவாமி நாங்களும் யாழ்ப்பாணத்தவர்கள் தாமென்பது எங்கள் பேச்சினால் உங்களுக்கு விளங்கும்; சுவாமீ, நீங்கள் படித்தவராகவும் பரதேசிபோலவுங் காணப்படுகிறீர்கள்; எந்தவூருஞ் சொந்தவூரே யென்றும் சொல்லுகிறீர்கள்; அது நிசம்; ஆனதினால், என் அண்ணர் இன்னுங் கொஞ்ச நேரத்தில் வந்துவிடுவார்; அது வரையிலும் எந்தவீடும் சொந்தவீடுதான் என்று எண்ணிக்கொண்டு இங்கு இருங்கள்" என வணக்கத்துடன் சொன்னாள் சிவபாக்கியம்; சந்நியாசியார் புன்சிரிப்புடன் கண்ணகியம்மையைப் பார்க்க "சுவாமி, இவள் என் மகள்; சிறுபிராயந்தொட்டு இவள் குறும்புக்காரி; ஆனால் உள்ளத்தில் எவ்வகையான அழுக்குமில்லாதவள்; யாழ்ப்பாணத்தவர்களென்றால் இவளுக்கு வெகு அபிமானமுண்டு; அதனாற்றான் சாமி இவள் இப்படி உங்களோடு உரிமை பாராட்டி வார்த்தையாடுகிறாள்; குறை நினையாதீர்கள்" என்று பணிவுடன் சொல்ல, ஒரு குறையுமில்லை ஆச்சி, இந்தப் பிள்ளையின் உள்ளம் பளிங்கு போன்றதென்பது பேச்சால் விளங்குகின்றது; இளம் வயசில் இப்படித்தான் ஆச்சி....." என்று சாமியார் சொல்லி முடிப்பதற்கிடையில், சிவபாக்கியம் அடுக்களைக்குச் சென்று சுத்தமான ஒரு பாத்திரத்திலே பாலும், இன்னொரு பாத்திரத்திலே தண்ணீரும் கொண்டுவந்து அத் துறவியின் முன் வைத்து, "சுவாமி, நல்ல பால் இருக்கிறது; தாகசாந்தி செய்யுங்கள்; அப்படிச் செய்வீர்களானால் எங்கள் மனம் சந்தோஷப் படும்" என்று சொல்லி ஒருபுறத்து ஒதுங்கி விநயமாக நின்றாள்; அந்தச் சந்நியாசியாரும், அக்கேள்வியை மறுக்க விருப்பமில்லாராய் உடனே யெழுந்து கை கால் அலம்பி விபூதி தரித்துக்கொண்டு வந்திருந்து பாலினையெடுத்து உட்கொண்டு "விசுவநாதா, விசாலாட்சித் தாயே" என்று உச்சரித்துவிட்டுத் சிறிதுநேரம் இருந்தார்; இங்ஙனமாக சிவகுருநாதன் தன் உத்தியோகத் தானத்திலிருந்து மீண்டு அங்கே வந்தான்.

* * *

உலகம் பலவிதம்: 1947 நவம்பர் 14 (முற்றொடர் - 39)

"எந்நேரமும் இதுவே சிந்தனை"

வந்த சிவகுருநாதன் சந்நியாசியொருவர் தங்கள் வாசஸ்தானத்தில் வந்திருப்பதைக் கண்டு ஆநந்தங்கொண்டு நேரே அவர் முன்னிலையிற் சென்று பயபத்தியோடு பணிந்து ஒருபுறத்தே விநயமாக நிற்க. அந்த சந்நியாசி "விசுவநாதா, விசாலாட்சி" என்று உச்சரித்து அவனுக்கு விபூதி வழங்க, அவன் அதைத் தன் இரு கரங்களாலும் ஏற்றுச் சிவசிவ என்றுச் சொல்லி கிழக்குமுகமாக நின்று பூசிக்கொண்டு மீட்டும் அச்சந்தியாசியாரை வணங்கினான்; "அப்பனே, உனக்குப் பசியல்லவா, போய்ப் போசனம் முடித்துக்கொண்டு வரலாம்; நான் உன்னையும் பார்த்துக்கொண்டு போகவேண்டு மென்ற நோக்கத்திலேயே இதுவரை இங்கே இருக்கிறேன்" என்று சந்நியாசி சொல்லுதலும், "சுவாமீ, தாங்கள் இங்கே போசனஞ் செய்தால் நாங்கள் புண்ணியராவேம்" என்று தன் கைகளைப் பிசைந்துகொண்டு பணிவுடன் கேட்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை அப்பனே, நான் ஆகாரம் முடித்தபிறகு தான் உங்களிடம் வந்தேன்; உண்பது ஒருவேளை உணவுதான்; மேலும் சற்றுமுன் உன் தாயாரும் சகோதரியும் தாகசாந்தியின் பொருட்டுப் பால் தந்தார்கள், உட்கொண்டேன்; நீ போய் ஆகாரஞ் செய்துவா" என்று சொல்லிவிட்டுச் சிவபாக்கியத்தைப் பார்த்து "உங்கள் அண்ணாவை அழைத்துக் கொண்டுபோய் ஆகாரம் பரிமாறு அம்மா" என்றார்; சிவபாக்கியம் தமையனுக்கு உணவு பரிமாறும்படி அடுக்களைப்பக்கம் போக, சிவகுருநாதன் அவரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு போசனஞ் செய்யச் சென்றான்; அப்பொழுது அத்துறவியின் அயலிலே ஒதுக்கத்தோடு நின்ற கண்ணகியம்மை மீட்டும் அவரை வணங்கி, "சுவாமி, உங்களைப்போன்ற பெரியோர்கள் வாயிலாகத்தான் உண்மைகளைக் கேட்டறியலாம்; எங்கள் குடும்பத்திலே சில காலமாகத் தீராக்கவலையொன்று நேர்ந்து விட்டது; வேறொன்றுமல்ல சாமி, எங்கள் சொந்த மருமகன், இந்த நாட்டில் முந்தியே வந்து உத்தியோகம் பார்த்துக்கொண்டிருந்தவர்; பொல்லாத யப்பானியர் சண்டைசெய்து இந்த இராச்சியத்தைக் கைப்பற்றி அநியாயஞ் செய்தார்களாம்; அந்தக்காலம் தொடக்கம் எங்கள் அருமை மருமகனைப்பற்றி ஏதும் அறிந்து கொள்ள முடியவில்லை அவருக்குக் கல்யாணஞ் செய்து கொடுப்பதெனச் சின்ன வயசிலேயே நிச்சயஞ் செய்து வைக்கப்பெற்றவள்தான் சாமி, இந்த மகள்; இவளெனிலோ "இல்வாழ்க்கையில் வாழ்வதானால் தன் மைத்துனனுக்கு "இல்லக் கிழத்தியாய் வாழ்வேன்; இல்லையேல் இப்படியே நித்திய கன்னிகையாக விருந்து சாவேன்" என்று பிடிவாதமாக நிற்கிறாள்; இவள் சொல்வதும் பிழையென்று யான் சொல்லவில்லை, சாமி, ஆனால் எந்நேரமும் இதுவே சிந்தனையாயிருந்து கலங்குகிறாள்; இவள் இப்படிக் கலங்கும்போது, பெற்ற தாயாகிய நான் உற்ற தமயனாகிய என் மகன் எந்நேரமும் கலங்கவேண்டித்தானே இருக்கிறது சாமி; இந்த ஒன்றுதான் சாமி, ஆண்டவன் எங்களுக்கு இட்ட குறை; வேறு ஒருவகையான குறையுமில்லை எங்கள் அருமை மருமகன் உயிரோடு இருக்கிறாரோ இல்லையோ என்பதுஞ் சந்தேகமாயிருக்கிறது, சாமி..." என்று முறையிட்டு கண்களில் நீர் தாரையாக வடிய நின்றாள்.

"ஆண்டவன் செய்யுஞ் சோதனை, ஆச்சி"

கண்ணகியம்மையின் முறையீட்டைக் கேட்ட சந்நியாசி அவளைப் பரிவுடன் பார்த்து "ஆச்சி, நீர் கவலைப்பட வேண்டாம்; எது நடக்க வேண்டுமென்ற நியதியுண்டோ அது நடந்தே தீரும்; ஆனால் நடப்பதெது வென்பதை நாமறியோம்; மேலும், நான் முக்காலமும் முணர்ந்த ஞானியுமல்ல, ஆருடஞ் சோதிடமென்பவைகளை யறிந்தவனுமல்லேன், நான் இறைவனிடத்திலே பெரியவர்கள் ஞானிகள் பாராட்டும் பத்து இலட்சத்திலொரு கூறுதானும் என்னிடத்திலில்லை; அவனை அறிய வேண்டுமென்ற ஒரு ஆசை மாத்திரம் என்னிடத்திலுண்டென்று சொல்லலாம் இவை கிடக்க, உங்கள் மருமகனுக்கு ஏதும் ஆபத்து இருக்குமென்று எண்ண என் மனம் இடந்தரவில்லை; உங்கள் குடும்பம் புண்ணியஞ் செய்த குடும்பம் போல் எனக்குப் புலப்படுகின்றது; கடவுட் பக்தி அடியார் வணக்கம் முதலாம் செயல்களுங் குணங்களும் உங்களிடத்திற் காணப்படுகின்றன; ஆதலால் உங்களுக்கு ஒரு ஆபத்தும் நேராது; இவையெல்லாம் ஆண்டவன் செய்யுஞ் சோதனையாச்சி, காலஞ்செல்ல வெல்லாம் நன்மையாய் முடியுமென்று சொல்லிவிட்டு, அச்சந்நியாசி பின்னரும் கண்ணகியம்மையைப் பார்த்து "ஆச்சி, கேட்கிறேனென்று குறையெண்ணாதீர்கள், உங்கள் பெயர் கண்ணகியம்மையா? "ஓம் சாமி"; உங்கள் மகள் பெயர் சிவபாக்கியமா? "ஓம் சாமி"; மகன் பெயர் சிவகுருநாதனா? "ஓம் சாமி, இவைகளெல்லாம் சொல்லாமலேயறிந்த நீங்கள் மருமகனைப் பற்றியும் அறியமுடியுஞ் சாமி, உடையது விளம்பேல் என்றபடி பெரியோர்கள் உள்ளக்கிடக்கையை தங்கள் பெருமையைப் பிறருக்கு இலேசில் வெளியிடமாட்டார்கள், சாமி, நீங்களும் அப்படித்தானிருக்கிறீர்கள்" என்று ஆவலோடு சொல்லிக்கேட்டாள் கண்ணகியம்மை; இப்படிக் கண்ணகியம்மை சொல்லிக்கொண்டு நிற்குஞ் சமயத்திலே, சிவகுருநாதன் போசனம் முடித்துக் கொண்டு அங்கேவர, சிவபாக்கியமும் தமயன் பிறகே அங்கு வந்து நின்றாள்; ஆகாரமாய் விட்டதா என்று சாமி சிவகுருநாதனைக் கேட்க, அவன் "ஆம், சாமி" என்று சொன்னபின், அத்துறவி கண்ணகியம்மையை மீளவும் நோக்கி "ஆச்சி, இந்த வரலாறுகளையெல்லாம் நான் சொல்லாமலறிந்தேனல்லேன்; பிறர் சொல்லவே அறிந்தேன், அதுபோக, கோலாலம்பூரிலே உங்களுக்குச் சொந்தமான பாக்கியலட்சுமி யென்றொரு பெண்ணும், அப்பெண்ணின் கணவன் விஜயரத்தின மென்றொருவரும் இருக்கிறார்களா?" என வினாவ "ஓம் சாமி, இருக்கிறார்கள்" என்று மூவரும் ஆச்சரியத்தோடு விடைசொன்னார்கள்; "அவர்களைப் பார்த்துக் கொண்டு வருகிறீர்களா சாமி" என்று ஆவலுடன் வினாவினாள் கண்ணகியம்மை; "ஆம், ஆச்சி, நான் யாத்திரைக்குப் புறப்படும்போதும் அவர்களைப் பார்த்துக்கொண்டுதான் புறப்பட்டேன்; அந்தப் பாக்கியலட்சுமி படிப்பிக்கும் பள்ளிக்கூடத்திலே தான், ஆச்சி, நானும் சமயபாடம் படிப்பிக்கும் உபாத்தியாயராகக் கடமைபார்க்கிறேன்; உங்களுடைய இந்த மகளுக்கும் அந்த மகளுக்கும் எந்த விஷயத்திலும் அதிக பேதத்தைக் காணேன்; தனக்குந்தாய் நீங்கள் தாமெனவும், உங்கள் மக்களிருவரும் தனக்குச் சகோதரர்களெனவும் அந்த மகள் எனக்குச் சொன்னாள்; உங்கள் வரலாறு முழுவதையும் சொல்லி நீங்கள் கவலைப்படுவதற்கு ஏதுவாகவுள்ள செய்தியையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்கூறி, உங்கள் மருமகனுடைய நாமத்தையுஞ் சொல்லி, எங்கேனும் அவரைச் சந்தித்தால் உடனே அழைத்துக்கொண்டு வரும்படியும் என்னிடம் அந்த அம்மாள் சொல்லியிருக்கிறாள்; நீங்கள் உங்கள் மருமகனையிட்டு எவ்வளவு கவலைப்படுகிறீர்களோ, அவ்வளவு கவலை அவரையும் தன் தமக்கையையும் இட்டு அந்தப் பாக்கியலட்சுமியிடத்திலுமுண்டு ஆச்சி" என்று சொல்லுதலும், கண்ணகியம்மை கண்கலங்கினாள், சிவகுருநாதன் முகம் வாடியது; சிவபாக்கியத்தின் கண்களிலிருந்து நீர் சிந்தியது; சுவாமி, நான் பெறாவிட்டாலும் பாக்கியலட்சுமி என் அருமையான மகள்தான்; உடன் பிறவாவிட்டாலும் என்னுடைய இந்தப் பிள்ளைகளிருவருக்கும் அவள் அன்பான தங்கைதான்; அவளுக்கு வாய்த்த கணவனும் அருமையான குணமுடையவர்" என்றாள் கண்ணகியம்மை; "அந்தவூரிலே யிருந்தாலும் எங்கள் தங்கைக்கு எந்த நேரமும் இந்த வூரிலிருக்கும் எங்களைப்பற்றிய சிந்தனைதான்" என்றாள் சிவபாக்கியம்; "அதிலுஞ் சந்தேகமா? தங்கைச்சி" என்றான் சிவகுருநாதன்.

"இங்கேதானே தங்குதல் வேண்டும்"

அதன்பின்னர் அந்தச் சந்நியாசியார் யப்பானிய யுத்தம் நடந்தபோது, ஒரு சிறுபெண் தன் பெற்றாரைப் பிரிந்து தனித்தவளாய்த் தம்மிடத்தில் அடைக்கலம் புகுந்த வரலாற்றையும், அப் பெண்பிள்ளையைத் தாம் தம் மகளாகப் பாவித்தும் பாதுகாத்து வருதலையும், காசியாத்திரை புறப்பட்டு வரும்போது, அந்த மகளைப் பாக்கியலட்சுமியுடைய பாதுகாப்பில் ஒப்புவித்து வந்ததையும் விபரமாக எடுத்து அவர்களுக்குச் சொல்ல, அவர்கள் மூவரும் உள்ளமுருகினார்கள். சிவகுருநாதன் அத் துறவியை வணங்கி, "சுவாமி, நீங்கள் வேறெங்கும் போகவேண்டாம்; இன்றிரவு இங்கேதானே தங்குதல் வேண்டும்" என்று பக்தியுடன் கேட்க, அப்படிச் செய்யலாமென்றார் சுவாமியார்" அவர்களிருவரும் மாலைக்கால மாதலும் சந்தியாகாலத்திற் செய்ய வேண்டிய கடன்களைச் செய்து முடித்துக்கொண்டு சமீபத்திலுள்ள திருக்கோயிலுக்குச் சென்று, அங்கு எழுந்தருளிய தெய்வத்தைக் கும்பிட்ட பின் மீண்டு தம் வாசஸ்தானத்தையடைந்தனர்; சற்றுநேரஞ் செல்லுதலும் சிவகுருநாதன் சாமியாரைப்பணிந்து "சுவாமி. ஒருவேளை யுணவொழிய உண்பதில்லை யென்றீர்கள்; இப்பொழுது சொற்ப பால்பழம் உண்ண வொண்ணாதா?" என்று கேட்க, "பால் பழமெனல் உட்கொள்ளலாம்" என்றார் சாமியார்; சிவகுருநாதன் சுவாமியாரைப் போசனஞ்செய்தற்காகிய இடத்திற்கு அழைத்துக் கொண்டுபோய் இருக்கச்செய்து தானும் உடனிருப்ப, சிவபாக்கியம் உணவுக்குரிய பண்டங்களை ஒரு பாத்திரத்தில் இட்டபடி எடுத்துக்கொண்டு அங்கேவர, கண்ணகியம்மை பசுப்பால் கொண்டு பின்னே வந்தாள்; அப்பொழுது அந்தச் சந்நியாசியார் கண்ணகியம்மையைப் பார்த்து "ஆச்சி, உங்கள் மகளைச் சிரமப்படுத்த வேண்டாம்; நீங்களே ஆகாரம் பரிமாறலாம்" என்று குறிப்பாகச்சொல்ல, சிவபாக்கியம் தான் கொண்டுவந்த உணவுப் பாத்திரத்தை அங்கே தானே மெல்ல வைத்துவிட்டு. அந்த இடத்தை விட்டகன்றாள்; இருவருக்கும் உண்கலததையிட்டுக் கண்ணகியம்மையே சந்நியாசியாருக்குப் பழ வர்க்கமும் பாலும் தம்மகனுக்குப் பணிகாரம் பழம் என்னுமிவைகளும் பரிமாறினாள். துறவியாகிய தாம் கன்னிகை பரிமாற உணவேற்றருந்த வொண்ணாதென்ற காரணத்தினாற்றான், அச் சந்நியாசியர் சிவபாக்கியத்தைப் புறக்கணித்துக் குறிப்பாற்கூறினர் போலுமென, தாயும் மகனும் அயிர்த்தனர்; அந்த இடத்தைவிட்டு அடுத்த அறையிற் போய்நின்ற சிவபாக்கியம், தங்கள் தாயார் கைம்மையாயிருந்தாலும் தமக்கு உணவு பரிமாறச் சம்மதித்த சாமியார், தன்னைக் கன்னிகையென்ற காரணம்பற்றியல்லவா புறக் கணித்தாரென்றெண்ணிக் கவலைகூர்ந்தாள்; அதனைச் சாமியாரும் விளங்கிக்கொண்டார்;

"சந்தேகமொன்றுண்டு கேட்கலாமா?"

இருவரும் போசனம் முடித்துக்கொண்டு தலைவாசற்பக்கம் வந்திருப்ப, தாயும் மகளும் ஆகாரஞ் செய்தபின் அங்கே வந்தார்கள்; காசி யாத்திரையின் மகத்துவத்தைப் பற்றிச் சாமியார் சொல்ல, அந்த மூவரும் பயபக்தியோடு கேட்டுக் கொண்டிருந்தனர்; அதன் பின்னர்ச் சிவகுருநாதன் தான் படுத்துறங்கும் அறையிலே அந்தச் சாமியாரும் உறங்குதற்காகிய படுக்கையை ஆயத்தஞ் செய்தான்; இருவரும் தத்தமக்கென இடப்பட்ட படுக்கையிற் படுத்தனர்; ஆனால் உறங்கிலர்; கண்ணகியம்மையும் மகளும் தாம் படுக்கும் அறையிற் போய்ப்படுத்தனர்; சிவபாக்கியத்திற்கு அன்றிரவு உறக்கம் வந்திலது; காரணம் வேறொன்றுமல்ல; அந்தச் சாமியார் தமக்கு அன்னம் பரிமாறாது தன்னைப் புறக்கணித்தாரே யென்ற கவலைதான்; இங்ஙனமாக, சிவகுருநாதன், "சுவாமி, தங்களிடத்திற் கேட்டறியவேண்டிய சந்தேகமொன்றுண்டு, கேட்கலாமோ" எனலும், சுவாமியார் "சந்தேகமிருந்தாற் கேட்டறிய வேண்டியது உன்கடன், அறிந்தவரையிற் சொல்லவேண்டியது என்போல்வார் கடன்" என்றார்; சிவகுருநாதன் படுக்கை விட்டெழுந்து அப்படுக்கையிற்றானே யிருந்தபடி, "சுவாமி. அதிதிகள் யாரும் வீட்டிற்கு வந்தால். அவர்களுக்குக் கன்னியாயுள்ளார் அன்னம் பரிமாறலாகுமோ" என்று பணிவுடன் கேட்க, பரிமாறுதல் முறையல்லவென நினைக்கிறேன்" என்றார் அந்தச் சந்நியாசியார்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1947 நவம்பர் 21 (முற்றொடர் - 40)

"நன்மையுமுண்டு தீமையுமுண்டு"

பின்னரும் சிவகுருநாதன் அத் துறவியை நோக்கி, "சுவாமி, என் அறியாமை காரணமாகக் கேட்கின்றேன், குறையெண்ணவொண்ணாது; பஞ்ச பாண்டவருடைய தாயாகிய குந்திதேவி கன்னிகையாயிருந்த காலத்திலே துருவாச முனிவருக்குத் தொண்டு செய்தாளென்றும், சுபத்திரை சந்நியாசவடிவங்கொண்டு வந்த அருச்சுனனுக்கு, அவன் அருச்சுனனென்றறியாத வேளையிலே தொண்டு செய்தாளென்றும் பாரதத்திற் சொல்லப்பட்டிருக்கிறதே, சுவாமி" என்றான்; கேட்ட சந்நியாசி "பாரதத்திலே அப்படிச் சொல்லப்பட்டிருத்தல் நிசந்தான்; ஆனால் அக்கன்னியர் அவர்களுக்குத் தொண்டு செய்தமையினால் நேர்ந்த நன்மையுமுண்டு தீமையுமுண்டு" என்று அத் துறவி பதில் சொல்லிமுடித்தார். இங்ஙனம் சம்பாஷித்த பின்னர் இருவரும் உறங்கினர்; அடுத்த நாளாதலும், அத்துறவிக்குச் சிவகுருநாதன் செய்யக்கூடிய சௌகரியங்களெல்லாஞ் செய்து கப்பலிலேற்றினான்; துறவியும் காசியாத்திரை செய்து மீண்டு வரும்போது அவர்களை வந்து காண்பதாகவும், நமசிவாயத்தை எங்கேனுங் கண்டால் அழைத்து வருவதாயுஞ் சொல்லிப் புறப்பட்டார். துறவி விஷயம் இங்ஙனமாக, சில நாட்கள் சென்றபின் பாக்கியலட்சுமி தானுங் கணவனும் தங்களுடனிருக்கும் சுவாமியின் அபிமான புத்திரியாகிய தனபாக்கியமும். தங்களுக்கு விடுமுறைநாள் சில நிகழுமாதலின்; அந்தவேளையிற் சிவபாக்கியத்திடம் வருவதாகக் கடிதம் எழுதியிருந்தார்கள்; அக்கடிதத்தைப் படித்த சிவபாக்கியம், தாய், தமயனென்னும் மூவரும் சந்தோஷமடைந்து அவர்கள் வரவை எதிர்பார்த்த வண்ணமிருந்தனர்; கடிதங்கிடைத்து மூன்று நான்கு தினங்கள் கழிவதற்கிடையில் முன்னர்ச் சொல்லப்பட்ட மூவரும் சிவபாக்கியம் முதலானோர் வசிக்கும் வாசஸ்தானத்தை யடைதலும், அவர்கள் இவர்களை அன்புடன் வரவேற்று உபசரித்தனர்; விஜயரத்தினத்திற்கு மூன்று நான்கு தினங்கள் மாத்திரம் விடுமுறை நாட்களாதலினால் அவர் இரண்டுநாள் மாத்திரம் அங்கே தங்கி மூன்றா நாள் தம்முடைய உத்தியோகத்தானத்திற்கு மீண்டு போயினர்; ஆனாற் பாக்கியலட்சுமிக்குப் பாடசாலை தொடங்குதற்குப் பின்னருஞ் சிலவார மிருந்தமையினால், அவள் தனபாக்கியத்துடன் கண்ணகியம்மை முதலியோருடைய இல்லத்திலே தங்கியிருந்தாள்.

"நட்புந் தயையுங் கொடையும் பிறவிக் குணம்"

கண்ணகியம்மை, சிவபாக்கியம், சிவகுருநாதன் என்னும் இம்மூவரும் முன்னொரு போதும் தனபாக்கியத்தைக் கண்டவரல்லர்; தனபாக்கியத்தின் வரலாற்றை அறிந்தவரையில் பாக்கியலட்சுமியே அவர்களுக்குச் சொன்னாள்; தனபாக்கியத்துக்கு பேராபத்து நேராவண்ணம் பாதுகாத்த அந்தச் சாமியாரையும் அவர்கள் மூவரும் பாராட்டினார்கள்; யாழ்ப்பாணத்திலே தனபாக்கியத்தின் மூதாதையர் யார், இப்பொழுது அங்குள்ள சுற்றத்தவர்கள் யார், அவளுடைய பெற்றார் பிறந்த கிராமம் எவை யென்ற இவைகளைப் பற்றி ஏதும் அறியலா மென்று கண்ணகியம்மை ஒவ்வொன்றாக வினாவியபோது தனபாக்கியம் தன் அன்னை தந்தையின் நாமங்களன்றி வேறு எவ்வரலாற்றையும் அறியாதவளாய்த் தியங்கினாள்; எங்கனமாயினும், அந்தப் பிள்ளை குலங்குடியிற் பிறந்தவளென்பதையும், செல்வமாக வளர்ந்தவள் என்பதையும் கண்ணகியம்மை முதலா னோர் அவளிடத்துள்ள குணங்கள், செயல்கள் ஊடாடும் முறை முதலியவற்றாலும் அவளுடைய முகத்தில் விளங்கும் "தேஜஸ்" என்று சொல்லப் படும் இயல்பான ஒளியினாலும் அயிர்த்துக் கொண்டார்கள், "நடையும் நடைப்பழக்கும், நட்புந் தயையும் கொடையும் பிறவிக்குணம்" என்றல்லவா பெரியோர் பாடியுள்ளார்கள்; தனபாக்கியம் நித்திய சந்தோஷத்தோடு கூடியவளாகக் காணப்பட்டனளெனிலும், இடையிடையே அவள் திடுக்கிடுதலையும், உடனே அவள் முகம் வாடுதலையும், பின்னர் ஒருவாறு தேறுதலடைதலையும் சிவபாக்கியம் அவதானித்து, பாக்கியலட்சுமியை அதன் காரணமென்ன வென்று வினாவ, அவள் "அக்கா, நானும் அதனை அவதானித்தேன்; ஆனாலும் அந்தப் பிள்ளையை நேரிற் காரணங்கேட்க எண்ணம் எழவில்லை; தன் பெற்றாரைப் பற்றி நினைக்கும்போது அப்படியான ஏக்கம் முக வாட்டம் முதலியவை தோன்றுகின்றனபோலு மென்று எண்ணியிருக்கிறேன்" என்றாள்; "தங்கை நீ சொல்வதுதான் காரணமாயிருக்க வேண்டுமென நானும் எண்ணுகின்றேன்" என்றாள் சிவபாக்கியம்; தனபாக்கியம் வயசில் மற்றை இரு பாக்கியங்கட்கும் இளையவள்; பேரழகில் அவ்விருவரைக் காட்டிலும் சிறந்தவள்; குணம் நடை இன்சொல் முதலியவற்றில் அவ்விருவரையும் ஒத்தவளெனலாம்; அவள் சிலநாள் அங்கே தங்கியிருக்கும்போது, சிவபாக்கியத்தைத் தன் உடன் பிறந்தாள் போலவும், கண்ணகியம்மையைத் தன் தாய் போலவும், சிவகுருநாதனைத் தன் உற்றவன் போலவும் மதித்து ஊடாடி வருவாளாயினாள், அதனால் அந்த மூவரும் தனபாக்கியத்திடம் அதிக அன்பும் விசுவாசமும் பாராட்டி நடப்பாராயினார்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளும் அவர்களிடம் அப்படியே நடந்து வந்தாள்; "தங்காய், எங்கள் சாமியார் காசியாத்திரை செய்து மீளும்போது, முதல் இங்கேவந்து எங்களைக் கண்டுகொண்டு பின்னர்த்தான் உங்களிடம் வருவதாகச் சொல்லியிருக்கிறார், ஆனதால் அவர் மீண்டு இங்கே வருங்காறும் தனபாக்கியம் இங்கேயிருந்தாலென்ன? சாமியார் வரும்போது உடன் அனுப்பி வைக்கலாம்" என்று சிவபாக்கியங் கேட்க, "அக்கா, இந்தத் தங்கைச்சி என்னுடனிருந்தாலென்ன, உங்களோடிருந்தாலென்ன, அதிலொரு பேதமுமில்லை; ஆனால், அக்கா உங்களுக்கு எங்கள் தாயார் துணையாக இருக்கிறார்; நானிருக்குமிடத்தில் இந்தத் தங்கைச்சியைத் தவிர வேறு பெண்துணை எனக்கு எவருமில்லை அக்கா; அதையிட்டுத்தான் யோசிக்கிறேன்" என்றாள் பாக்கியலட்சுமி; "தங்காய், நீர் சொல்வது முழுவதுஞ் சரி, நான் கேட்டது பிழை; குறையெண்ணாதீர்" என்று சிவபாக்கியம் பரிவுடன் சொல்ல, "இதிலே குறை யெண்ணுவதெப்படி! அக்கா, அன்பு முதிர்ச்சியினாலே நீங்கள் கேட்டீர்கள்; அன்பு மேலீட்டினாலேதான் நான் தடுத்துப் பதில் சொன்னேன்" என்று சமாதானஞ் சொன்னாள் பாக்கியலட்சுமி.

"புருஷனாலே திருந்தும் மனைவியும்
மனைவியாலே திருந்தும் புருஷனுமுண்டு"

இங்ஙனஞ் சிலவாரங்கள் செல்ல, பாக்கியலட்சுமி படிப்பிக்கும் பள்ளிக்கூடத்தின் விடுமுறை நாட்களுங் கழிந்து அது பழையபடி ஆரம்பிக்கும் நாளும் சமீபிக்க, விஜயரத்தினமிடமிருந்து ஒரு கடிதம் அவன் மனைவியாகிய பாக்கியலட்சுமிக்குக் கிடைத்தது; அதில் தாம் உத்தியோகக் கடமையை விட்டு விடுமுறைநாள் பெற்றுக்கொண்டு அவ்விடம் வரமுடியாதெனவும், ஆதலினால், அங்கு நிற்கும் விசுவாசமுள்ள பணியாளனாகிய இராமனைத் துணையாகக் கூட்டிக்கொண்டு வந்து சேர்வதுதான் புத்தியாகு மென்றும், இதற்கிடையில் அங்கே கண்ணகியம்மை முதலானோர் இருக்குமிடத்திற்கு, சுவாமியார் யாத்திரை முடித்துக்கொண்டு மீண்டு வந்தால் அவரோடு கூடிக்கொண்டு வரலாகு மென்றும் அக்கடிதத்தில் விஜயரத்தினம் தமது மனைவிக்கு எழுதியிருந்தார்; குறித்தநாள் வருவதற்கிடையிற் சுவாமி அங்கே வந்தால் அவருடன் கூடிக்கொண்டு கணவன் இருக்குமிடத்திற்குத் தாங்கள் போகலாகுமென்றும், வரப்பிந்தினால் இராமனைத் துணையாகக் கூட்டிக்கொண்டு போகலாகுமென்றும் பாக்கிய லட்சுமி உத்தேசித்துக்கொண்டிருந்தாள்; இப்படியாக ஒருநாள் பாக்கியலட்சுமி தனியேயிருக்குஞ் சமயம் பார்த்து, கண்ணகியம்மை அவளைப் பரிவுடன் நோக்கி "மகளே, கேட்கிறேனென்று இலச்சைப்டாதே, உன் கணவன் உன்னோடு இதமாக நடந்து கொள்ளுகிறாரா? நீ அவருக்குக் கீழ்ப்படிவாகவும் விசுவாசமாகவும் பணியாற்றி வருகிறாயோ" என்று ஆதரவுடன் கேட்க, "அம்மா, எங்கள் இல்வாழ்க்கையைப்பற்றி நீங்கள் விசாரிக்காமல் வேறு யார் விசாரிப்பது; ஏதோ நீங்கள் நல்மனதோடு நிறைவேற்றி வைத்த படியினாற்போலும், நாங்கள் இருவரும் எவ்வகையான வேற்றுமையுமின்றி ஒருவகையான குறைவுமின்றி இனிது வாழ்ந்து வருகிறோம்; "கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி" என்ற பிரகாரம் அவர் விருப்பறிந்து அதற்கிணங்க நான் நடந்து வருகிறேன், அவரும் என்னை அன்போடு ஆதரித்து வருகிறார் அம்மா" என்று மகிழ்ச்சியுடன் சொன்னாள்; இதனைத்தான் நாம் விரும்புவது, மகளே புருஷனாலே திருந்தும் மனைவியுமுண்டு; மனைவியாலே திருந்துங் கணவனு முண்டென்று சொல்லுவார்கள்; நல்ல நாள் நட்சத்திரம் பாராமல், விதிப்படி கிரியைகள் செய்யாமல், கப்பலில் நடந்த கல்யாணம், என்னவாய் வருமோ என்று ஏங்கிக் கொண்டிருந்தேன்; இப்பொழுது மகளே, உன் வாயினாலேயே நாங்களிருவரும் ஒரு குறையுமின்றி அன்பாய் வாழ்கின்றோம் என்று சொல்லக் கேட்டேன்; இவ்வளவும் போதும் என் மகளே" என்று சொல்லிச் சந்தோஷப்பட்டாள் கண்ணகியம்மை; பாக்கியலட்சுமி தாங்கள் இருக்கும் ஊருக்குப் புறப்பட வேண்டிய நாள் சமீபித்து விட்டது, சுவாமியாருடைய வரவை எதிர்பார்த்தார்கள்; வரக் கண்டிலர்; சிவகுருநாதனுக்கு அந்த நாட்களில் உத்தியோக ஓய்வு கிடைத்தது; அதனால் சிவகுருநாதனே பாக்கியலட்சுமியையும் தனபாக்கியத்தையும் அவர்களிருக்கு மூருக்குக் கூட்டிக்கொண்டு போய்விட நோக்கங் கொண்டான்; தன்னோக்கத்தைச் சிவகுருநாதன் சொன்ன மாத்திரத்தே பாக்கியலட்சுமி பெரிதுஞ் சந்தோஷப்பட்டாள்; "அண்ணா, உங்களை நான் சிரமப்படுத்துகிறேனோ" என்று பாக்கியலட்சுமி கேட்க, "எனக்கு எவ்வகையான சிரமமுமில்லை, தங்கைச்சி நானும் உங்கள் ஊரை ஒருமுறை பார்க்க விரும்புகிறேன்; அல்லாமலும் இது என் கடமையல்லவா? என்று அன்புடன் புகன்றான் சிவகுருநாதன்; அவர்கள் புறப்படும்போது, கண்ணகியம்மை பாக்கியலட்சுமியை நோக்கி, (தனபாக்கியத்தைச் சுட்டிக்காட்டி) "மகளே இந்தப்பிள்ளையோ எங்களுக்குக் கிடைத்தற்கரிய பிள்ளை; எந்தக்காலத்திலானாலும், எங்களை அறியாமல் இந்தப் பிள்ளையை வெளியில் விட்டுவிடாதே" என்று சொல்லி, அவர்கள் மூவருக்கும் பிரியாவிடை சொல்லிப் பயணமனுப்ப, பாக்கியலட்சுமியும் தனபாக்கியமும் சிவகுருநாதனைத் துணையாகக் கொண்டு தாங்களிருக்கும் ஊருக்குப் போவாராயினர்; அவர்கள் புறப்பட்ட அடுத்தநாள், சுவாமியாரும் யாத்திரை முடித்துக்கொண்டு மீண்டு கண்ணகியம்மை முதலானோர் வசிக்கும் இல்லத்தில் வந்து சேர்ந்தார்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1947 நவம்பர் 28 (முற்றொடர் - 41)

"நீங்கள்தாம் உபாயஞ் சொல்லவேண்டும்"

யாத்திரைசெய்து மீண்ட சுவாமியாரைக் கண்ணகியம்மை சிவபாக்கியம் இராமன் எல்லோரும் வணங்கி உபசரித்தார்கள்; அவரும் அவர்களுக்குக் கங்கைத் தீர்த்தம் விபூதிப் பிரசாதம் முதலியன கொடுத்தார்; பாக்கியலட்சுமி தனபாக்கியமென்னு மிவர்கள் சிலநாட்கள் அங்கே வந்து தங்கியிருந்து, சுவாமியார் மீண்டுவருவதையும் எதிர்பார்த்துக் காத்திருந்து, வரக்காணாமையால் முதனாளே சிவகுருநாதனைத் துணையாகக் கொண்டு அவ்விருவரும் தாங்கள் வசிக்கும் ஊருக்கு போனார்களென்ற செய்தியைக் கண்ணகியம்மை அந்தச்சந்நியாசிக்கு சொல்லுதலும், அவர் கேட்டு, "இன்னும் இரண்டு மூன்று தினந்தான் பள்ளிக்கூடந் தொடங்குதற்கு இருப்பதால், பாக்கியலட்சுமி தன் கடமையைப் பார்க்கவேண்டும் மென்ற காரணத்தினாற் போயிருக்கவேண்டும்; நானும் அதை யுத்தேசித்தே காலதாமசஞ் செய்யாது யாத்திரை முடித்துக் கொண்டு மீண்டுவந்தேன்" என்று சொன்னார். கண்ணகியம்மை அதன் பின்னர் சுவாமியாருக்கு போசனம் வழங்கித் தாங்களும் போசனஞ் செய்தனர்; இதற்கிடையில் தன் மைத்துனரைப்பற்றிச் சாமியார் ஏதும் கேள்விப்பட்டதுண்டோ வெனச் சாமியாரைக் கேட்கும்படி சிவபாக்கியம் இரகசியமாகத் தங்கள் தாயிடம் சொல்ல, கண்ணகியம்மை தன் மருமகனைப் பற்றிச் சாமியாரிடம் விசாரித்தாள்; சாமியார் உடனே பதில் சொல்லாது சற்றுநேரம் யோசித்து விட்டுத் தாம் சென்றவிடமெல்லாம் நமச்சிவாயத்தைப் பற்றி, அவருடைய குணங்குறிகளைக் சொல்லி விசாரித்ததாகவும் அக்குணங்குறி யுடையவர் யாரும் எங்கேனும் எதிர்ப்படுகின்றார்களோ என அவதானித்ததாகவும், ஆனால் தாம் அவரைப்பற்றிக் கேள்விப்படவில்லையெனவும், சந்திக்கவில்லை யெனவும் பதில் சொன்னார். அப்படிச் சொல்லக்கேட்ட மாத்திரத்தே தாயின் பக்கலிலே நின்ற சிவபாக்கியம் முகம் வாட, கண்களிலே நீர் ததும்பச் சஞ்சலமுற்றாளாய் அவ்விடத்தை விட்டகன்று தன்னறையிட் சென்று அங்கிருந்த படுக்கையிற் போய்ப் படுத்துக்கொண்டாள். மகள் அதிக கவலையோடு அவ்விடத்தை விட்டுச்சென்றதை யறிந்த கண்ணகியம்மை துயரத்தோடு சுவாமியாரைப் பார்த்து "சுவாமி, நான் இதற்கு என்ன செய்வேன்! எங்கள் அருமை மருமகனைப் பற்றியும் ஏதும் அறியமுடியவில்லை; இந்த நாட்டில் ஏதேனும் அவரைப்பற்றி அறியலாமென்ற நோக்கோடுதான் என் பிள்ளை பிறந்த ஊரையும் உற்றார் சுற்றத்தார் வீடுவாசல் பொருள் பண்டம் எல்லாவற்றையும் விட்டு மறந்து இங்கே வந்தாள்; இங்கு வந்தும் ஆறு மாசங்கட்கு மேலாகின்றன; சுவாமி யாத்திரை போய் மீண்டுவரும்போது தன் மைத்துனனைப் பற்றி ஏதும் அறிந்துகொண்டுதாம் வருவாரென்று என் பிள்ளை காத்திருந்தாள்; அப்படிக் காத்திருந்ததும் வீணாயிற்றெனக் கவலை கொண்டுதான் இந்த இடத்தை விட்டுத் தன்னறைக்குப் போய்ப் படுத்துச் சிந்தனையோடு கிடக்கிறாள்; தகப்பனில்லாப்பிள்ளை; தமயனும் இந்தநேரம் இங்கேயில்லை; நான் எப்படி தேற்றினாலும், என்ன சமாதானங்களைச் சொன் னாலும் அவள் தேறுகிறாளுமில்லை, கேட்கிறாளுமில்லை, எந்த நேரமுஞ் சஞ்சலத்தோடு கூடியவளாகவே காணப்படுகிறாள். ஒரெயொரு மகள், அவள் சஞ் சலப்படுவதனால், நானுங் கவலைப்படுகிறேன்; அவளுடைய தமயனுங் கவலைப்படுகிறான்; இதற்கு என்ன செய்வதென்று, சாமி படித்த நீங்கள், தெய்வபக்தியுள்ள நீங்கள், நாலு காரியமுமறிந்த நீங்கள் தாம் ஒரு உபாயஞ் சொல்ல வேண்டும" என்று கவலைமீதுரச் சாமியையிரந்தாள்.

எழுதாவிதிக்கு அழுதாவதென்ன?

கண்ணகியம்மை சொன்ன வார்த்தை களைக் கேட்ட சாமியார் சிறிது நேரம் யோசித்துவிட்டுப் பின்னர்க் கண்ணகியம்மையை நோக்கி "ஆச்சி, எழுதா விதிக்கு அழுதாவதென்ன என்றபடி, மனுஷராகப்பட்ட எங்களுக்கு என்ன என்ன விதிக்கப் பட்டிருக்கின்றனவோ அவை நிகழும், விலக்கப்பட்டன நிகழா; இறைவ னருளால் நடப்பதை நாம் காண்பதேயொழிய, நாமாக எதனையும் நடத்தல் முடியாது; தாரமுங் குருவுங் தலைவிதியென்பர்; உங்கள் மருமகனை நீங்கள் காணவேணும், அவர் உங்கள் மகளைக் கலியாணஞ் செய்து வாழ வேணுமென்பதுதான் எனக்கும் விருப்பம், ஆனாலும் விதிவசத்தால், நீங்கள் எண்ணியிருப்பதற்கு மாறாக ஏதும் நேர்ந்தால் உங்கள் மகள் உப்படியே யிருப்பதா? அப்படியான நோக்கமிருந்தால் நான் உங்கள் மகளுக்கு எதுந்தேறுதல் சொல்வதாற் பயனென்ன"? என்று சொல்லுவதற்கிடையிற் கண்ணகியம்மை அவரைப்பார்த்து "சாமி, இது சந்திக்காவிட்டால், தான் இப்படியே கன்னிகையாகவிருந்து காலங் கழிக்க வேண்டுமென்பது எங்கள் மகளுடைய நோக்கம்; அதையிட்டுத்தான் கவலைப்படு கிறேன் என் மகனுக்கும் அதனாற் பெருங்கவலை; ஆனாலும், சாமி உங்களைப்போன்ற பெரியவர்கள், அனுபவப்பட்டவர்கள், தெய்வபக்தியுள்ளவர்கள் புத்தி சொன்னால், என் மகள் கேட்டலுங் கூடுமென்று நினைக்கிறேன்" எனக் கண்ணகியம்மை சொல்ல, சாமியார்"ஆச்சி, நான் பெரியவனுமல்லேன், தெய்வபக்தி அதிக முடையவனுமல்லேன், என்னைப்பற்றி முந்தியே உங்களுக்குச் சொல்லிவிட்டேன்; அல்லாமலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான கருமத்தில் ஒரு கன்னிகைக்கு நாம் புத்திபுகட்டத் துணிவதே புத்தியாகாது; மேலும், ஆச்சி, உங்கள் மகளுக்கு இப்பொழுது நான் என்னவிதமான புத்திசொல்வதென்பதும் எனக்கு விளங்கவில்லையே" என்றார்; "வேறொன்றுமல்ல, சாமி, விதியின் விபரீதத்தால் தன் மைத்துனனுக்கு மனைவியாய் வாழும்பேறு கிட்டாதாயின், வேறு ஒரு தக்கவரனுக்கு வாழ்கைப்படும்படி என் பிள்ளைக்கு நீங்கள் புத்தி சொன்னாற் போதும்" என்று கண்ணகியம்மை இரந்து கேட்டாள்; "ஆச்சி, சொல்லிப்பார்க்கிறேன், உங்கள் மகள் உடன்படாவிட்டால் என்னை குறைசொல்லாதீர்கள்" என்று சாமியார் சொல்லுதலும்;, "உங்களைக் குறைசொல்ல முறையில்லையே" யென்று சொல்லிவிட்டு, மகள் கவலையோடு படுத்துக் கிடக்கும் அறையுட்போய், சாமியார் அவளைக் காணவிரும்புவதாக மகளுக்குச் சொல்லி அழைத்து வந்தாள் கண்ணகியம்மை; வந்த மகள் ஒருபுறத்தே ஒதுங்கி நின்று "சாமி நான் செய்யவேண்டிய தென்ன சொல்லுங்கள்" என்று முகவாட்டத்துடன் கேட்டாள்; "செய்ய வேண்டியது வேறோன்றுமில்லை; உம்முடைய தாயாரும் தமயனாரும் உமையிட்டுக் கவலைப்படுகிறார்கள்; அதைப் பற்றித்தான் எதுஞ் சொல்லலாமென்று உம்மை இங்கு அழைப்பித்தேன்" என்று சாமியார் சொல்லுதலும், "சாமி" அவர்களுக்குக் கவலை விளைவிக்கக்கூடிய தவறென்றையும் நான் செய்யவில்லையே என்றாள் சிவபாக்கியம்.

சாமி: நீர் தவறொன்றுஞ் செய்யவில்லை; செய்யப்போவது மில்லை; இப்படி நித்திய கன்னிகையாகவிருந்தால் பிற்கால வாழ்வு எப்படியாகுமோ என்று உம்முடைய தாயார் கவலைப்படுகிறார்.

சிவபாக்கியம்: பிற்கால வாழ்வையும் இப்படியே தூய முறையிற் கழிக்கலாகுந்தானே சாமி.

சாமி: காத்திருக்கும் பொருள் கிட்டாதாயின் வெட்டென மறப்பதன்றோ முறை.

சிவ: கிட்டாதென்பதற்கும் கிட்டும் என்பதற்கும் முற்றில்லை; கிட்டாதாயின் மறப்பதுதான் சாமி என்னுடைய நோக்கம்.

சாமி: எதனை மறப்பது?

சிவ: இல்வாழ்க்கையை.

சாமி:இல்வாழ்க்கையை ஏன் மறப்பான்?

சிவ: கிட்டாதபடியினாலேதான்.

சாமி: இல்வாழ்க்கையை அறவே விட்டுவிட்டுத் துறவியாவதா?

சிவ: ஆம் சாமி, தங்களைப்போல் துறவியாகிக் காலம் போக்கலாகுமே.

சாமி: துறவியாய் வாழ்தல் ஆண்களுக்கன்றிப் பெண்களுக்கு அவ்வளவு இலகுவல்ல, ஏனென்றால் பெண்பாலாருக்கு மற்றவர்களுடைய பாதுகாப்பு வேணும்; அதனாற்றான் சொல்லுகிறேன்.

சிவ: அப்படியானால் "சிறைகாக்குங் காப்பு எவன் செய்யும் மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை" என்று எங்கள் வள்ளுவர் சொன்னது என்ன சாமி? அல்லாமலும் திலகவதியாருடைய துறவு பாராட்டற்குரியதென எண்ணுகிறேன்.

சாமி: கேட்கிறேனென்று குறை எண்ணவொண்ணாது; உம்முடைய மைத்துனனையன்றி வேறு எந்த ஆடவனையும் வரிப்பதில்லை யென்பதுதானே உம்முடைய கொள்கை?

சிவ: ஆம் சாமி, அதுதான் என்னுடைய நியதி; அதற்காகதான் திலகவதியாரை உதாரணமாக எடுத்துச் சொல்லுகிறேன்.

சாமி: நீர் சொல்வது நிசம்; ஆனால் உம்முடைய மைத்துனர் இப்பொழுது வேறொரு பெண்ணைத் தமக்கு வாழ்க்கைத்துணையாக்கியிருந்தால் நீர் என்ன செய்வீர்?

சிவ: அப்படி அவர் செய்திருந்தால் அச்செயல் அவரைப்பொறுத்தது நான்கொண்ட தூய நோக்கத்தை ஆண்டவன் அருளாற் கைக்கொண் டொழுகுவேன்; ஆனாலும், சாமி, அவர் இப்பொழுது உயிரோடிருக்கிறாரென்பதும், அப்படியிருப்பின் அவர் என்னையொழிய வேறு எவரையும் தம் வாழ்க்கைத் துணையாகக் கொள்ளமாட்டாரென்பதும் என் திட நம்பிக்கை" என்று சொல்லிக் கண்களில் நீர் ததும்ப, சிவபாக்கியம் அதனைத் தன் முன்றானையால் ஒற்றிவிட்டு நிலத்தைப் பார்த்தவண்ணம் நின்றாள்.

சாமி: "நீர் நினைத்த பிரகாரம் நடக்க ஆண்டவன் அருள்புரிவார். "பெண்ணிற் பெருந் தக்கயாவுள கற்பெனும் திண்மை யுண்டாகப் பெறின்" என்ற வள்ளுவனார் வாக்கு நீர் அறியாததல்ல; உமக்கு நான் ஏதுஞ் சொல்லத் துணிந்தமை; என்மேற் பிழை" என்று சாமியார் கூறிமுடித்தார்;

சிவபாக்கியம் தன்னறையை நோக்கிச் செல்ல கண்ணகியம்மை மாத்திரம் கவலையோடு அங்கு நிற்றலும், சாமியார் ஒரு பொல்லாங்கும் வராது என்று சொல்லி அவளையுந் தேற்றினார். அன்று சாமியார் அங்கே தங்கி நின்று அடுத்தநாள் பாக்கியலட்சுமியும் தமது மகளுமிருக்கும் ஊருக்கு புறப்பட்டார்.

"இது நான் செய்ய வேண்டிய கடமை"

இவர்கள் விஷயம் இவ்வாறாக, பாக்கிய லட்சுமி தனபாக்கியமென்னு மிவர்களுக்குத் துணையாக சென்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகுருநாதன் அவர்களுடைய வாசஸ்தானத்தை யடைந்தவுடனே, விஜயரத்தினம் அவனைப்பெரிதும் உபசரித்து அன்பு பாராட்டினான் "நான் உம்மைச் சிரமப்படுத்தி விட்டேன்" என்று விஜயரத்தினஞ் சொல்ல சிவகுருதான் "இது நான் செய்யவேண்டிய கடமை" என்றான்; பாக்கியலட்சுமி தன்னையும் தனபாக்கியத்தையும் சிவகுருநாதனும் தாயாரும் சகோதரியும் அன்புபாராட்டி உபசரித்த வைபவத்தைத் தன் கணவனுக்குச் சொல்லி மகிழ்ந்தாள்; சிவகுருநாதன் முதலியோர் வாழும் வீட்டிற்கு சாமியார்போன செய்தியையும், அவரைக் கண்ணகியம்மை முதலானோர் உபசரித்த விஷயத்தையும், அவர் யாத்திரை முடித்துக் கொண்டு மீண்டு அங்கு வருவதாகச் சொல்லி யாத்திரை போனதையும் இன்னபிற வரலாறு களையும் கண்ணகியம்மையும் சிவபாக்கியமும் தனக்குச் சொன்னார்களென்று பாக்கியலட்சுமி தன் கணவனுக்குச் சொன்னாள், தனபாக்கியத்தின் குணங்கள் செயல்கள் ஊடாட்ட மென்னுமிவைகளைக் கண்ணகியம்மை, சிவபாக்கிய மென்னுமிவர்கள் பெரிதும் பாராட்டினார்களென்றும் பாக்கியலட்சுமி தன் கணவனுக்குச் சொன்னாள்; இவைகளை யெல்லாங் கேட்டு விஜயரத்தினம் அதிக மகிழ்ச்சியும் வியப்புங் கொண்டான்; சிவகுருநாதன் மீண்டு தங்கள் வாசஸ்தானத்திற்குப் புறப்பட வேணுமென்று சொல்லுதலும், கேட்ட விஜயரத்தினமும் பாக்கியலட்சுமியும் அவரை "இன்று நின்று, நாளை போகலாம்" என்று தடுக்க, அவன் அப்படியே அடுத்தநாட் புறப்படுவதாக நிச்சயித்துக்கொண்டு அங்கேயிருந்தான்; இங்ஙனமாக, யாத்திரை செய்யச் சென்ற சாமியாரும் அன்றிரவு மீண்டு அங்கே போய்ச்சேர்ந்தார்.

* * *

உலகம் பலவிதம்: 1947 டிசம்பர் 05 (முற்றொடர் - 42)

"இயன்றவரையில் விசாரித்தேன் அறியமுடியவில்லை"

சுவாமியார் மீண்டு வந்தமையைக் கண்ட போதே தனபாக்கியம், பாக்கியலட்சுமி, விஜய ரத்தினம், சிவகுருநாதன் ஆகிய எல்லோரும் பெருமகிழ்ச்சியடைந்தார்கள்; சுவாமியார் தம்மை வணங்கிய அவர்களுக்கு விபூதிப் பிரசாதம் கங்கா தீர்த்தமென்னு மிவைகளை வழங்கி, அவர்கள் அவற்றை விநயத்தோடு ஏற்று முறையே பூசினார்கள், உட்கொண்டார்கள்; பின்னர் பாக்கியலட்சுமியும் தனபாக்கியமும் போசனம் பரிமாற, சுவாமியார் சிவகுருநாதன் விஜயரத்தின மென்னுமிவர்கள் அருந்திவிட்டு, மூவரும் தலைவாசற்பக்கம் போய் உட்கார்ந்தனர்; சற்றுநேரத்துட் பாக்கியலட்சுமியும் தனபாக்கியமும் ஆகாரம் முடித்துக்கொண்டு அம்மூவரும் இருக்கும் தலைவாசலை யடைந்தனர்; சுவாமியார் தம் யாத்திரை வரலாற்றைச் சுருக்கமாக அவர்கள் நால்வருக்கும் சொன்னார்; சொல்லியபோது நமசிவாயத்தைப்பற்றி ஏதுஞ் சொல்லாமையினால் சிவகுருநாதன் சுவாமியாரை விநயமாக நோக்கி "சுவாமி, என் மைத்துனரைப்பற்றி ஏதுமறிந்தீர்களோ" என்று ஆவலுடன் வினாவுதலும், "இயன்றவரையில் விசாரித்தேன் அறியமுடியவில்லை" என்று கவலையுடன் பதில் சொன்னார் சாமியார்; "முடியவில்லை" என்ற வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தே சிவகுருநாதனுடைய கண்களிலிருந்து நீர்த்துளி சிந்தியது; மற்றை மூவருஞ் சஞ்சலப்பட்டனர்; அதனை அவதானித்த சுவாமியார் அவர்களை அன்புடன் பார்த்து "கவலைப்படாதீர்கள்; நமசிவாயத்தை நான் காணாமையினால், நமசிவாயம் இல்லையென்று நீங்கள் எப்படி முற்றுப்பண்ணலாம்? நமசிவாயம் உயிரோடு இருக்கிறாரென்ற திடம் என்னுள்ளத்தில் யாத்திரைப்போது உண்டாயிருக்கிறது. அவருடைய சீவனுக்கு மோசமில்லையென்பதை நம்புங்கள்; சிவபாக்கியம் ஒரு புண்ணியவதி என்பதிற் சந்தேகமில்லை" என்று அவர்களைத் தேற்றினார்; தாம் கண்ணகியம்மை சிவபாக்கிய மென்னுமிவர்களை மீண்டு வரும்போது கண்டு அங்கே ஒருநாள் தங்கியதும், முதனாளே இவர்கள் அங்கிருந்து புறப்பட்டுத் தம்வீட்டிற்கு மீண்டு வந்ததாகக் கண்ணகியம்மை சொல்லியதுமாகிய வரலாறுகளையெல்லாம் சுவாமியார் அவர்களுக்குச் சொன்னார்; அப்போது தான் அடுத்தநாட் காலை தங்கள் வாசஸ்தானத்திற்குப் புறப்பட்டுப்போக வேண்டுமென்பதைச் சிவகுருநாதன் சுவாமியாருக்குத் தெரிவித்தான்.

"கல்யாணஞ் செய்துகொள்ளக் கனவிலுங் கருதேன்"

அப்பொழுது சுவாமியார் சிவகுருநாதனைப் பார்த்து, "அப்பனே உன்னோடு நான் பேசவேண்டிய நல்ல விஷயமொன்றுண்டு; அதனை இப்பொழுதே சொல்லலாமென நினைக்கிறேன்" எனலும், "சுவாமி, சொல்லுங்கள், இயலுமானதைச் செய்கிறேன்" என்றான் சிவகுருநாதன். வேறொன்றுமல்ல, என் அபிமான புத்திரி யிருக்கிறாள் தனபாக்கியம், அவள் இனிய குணமுடையவள்; அழகுள்ளவள் தெய்வபத்தி யுடையவள்; ஓர் அளவிற்குப் படித்தவள்; ஒழுக்கமுடையவள்; கொண்டானுக்கு இதமாக நடக்கும் பண்பு பூண்டவள்; உன்னைப்போன்ற ஒரு சந்மார்க்கனுக்கே அவள் வாழ்க்கைத் துணையாவதற்குரியவள்; ஆதலால் அவளை நீயே ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவதற்கிடையில் அங்கு நின்ற தனபாக்கியம் நாணமடைந்து அவ்விடத்தை விட்டு மெல்ல நழுவி வீட்டினுட் புகுந்தாள்; "அப்படித்தான் நானும் எண்ணியிருந்தேன் சாமி, எங்கள் கண்ணகியாச்சியும் ..... [சிதைவு]

* * *

உலகம் பலவிதம்: 1947 டிசம்பர் 12 (முற்றொடர் - 43)

"உடன்பிறப்பைத் தேடமுடியாது"

சிவகுருநாதன் தங்கள் தாயைப் பார்த்து "அம்மா, மற்றையவர்கள் என்ன சொன்னாலும் நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை; எங்களிருவருக்கும். இந்தநேரத்திலே தாயுந் தகப்பனுமாயிருக்கும் நீங்களும் இப்படிச் சொல்லலாமா? என் அருமைத் தங்கைச்சி தாமரையிலையில் நீர்த்துளி போன்று; மனநிலையற்றுக் கலங்கிக்கொண்டிருக்கும் இந்த நேரத்திலே, என் அருமை மைத்துனரைப் பற்றி ஏதுமறிய முடியவில்லையென்று சுவாமி வந்து சொன்ன இந்த நிலையிலே நீங்கள் உங்கள் அருமை மகளின் நிலைமையை அறவே மறந்து விவாக விஷயமாக நனவில்லிலை, கனவிலுஞ் சிந்திக்கலாமா? என் தங்கை யெனிலோ வாழ்க்கைத் துணை வாழ்வதானால் தன் சொந்த மைத்துனனுக்கே வாழவேண்டும், இல்லையேல் இல்வாழ்க்கை வேண்டாமென்று பிடிவாதமாய் நிற்கிறாளென்றெங்களுக்குத் தெரியும்; எனது அருமைத் தங்கைச்சி பொல்லாத காலம் காரணமாக இல்வாழ்க்கையிற் புகாவிட்டால், என் அருமைத் தங்கையை பாதுகாத்துக்கொண்டு நானும் நித்திய பிரமசாரியாக இருக்க வேண்டியது கடமையல்லவா? பொன்னைத் தேடலாம், பொருளைத் தேடலாம், நிலம் புலத்தை தேடலாம், பெண்ணைத் தேடலாம். பிள்ளைகளைத் தேடலாம், இன்னும் உலகத்தில் அரிய பண்டங்களெவைகளோ அவைகளையெல்லாந் தேடலாம், ஆனால் உடற்பிறப்பை இப்பிறவியிலே தேடமுடியா தென்று பெரியோர்கள் சொல்லியுள்ளார்களே! என்னைப் பெற்ற தாய் அறமூப்படைந்தமையி னால் இவ்விடத்தில் மறதியுண்டாய் விட்டது போலும்; நான்தான் அறியாமையினால் என் தங்கையை மறந்து இல்லறம் புக நினைத்தாலும், நீங்களென்னை அப்படிப்புகவொட்டாது எனக்கு புத்திசொல்லித் தடுக்கவேண்டும் என்று இப்படிச்சொல்லி முடிப்பதற்கிடையில், தாய் தன்னைத் ..... [சிதைவு] சினந்து "நான்பெற்ற செல்வங்களை அப்படி எண்ணியது என் தவறு; ஆனால் தங்கைச்சி விவாகம் நிறைவேறிய பின்பு அந்தப் பிள்ளையை நீ கல்யாணம் செய்யவேண்டுமென்று நினைத்தாலும், அதனை விபரமாகச் சொல்ல மறந்துவிட்டேன் முதுமை நிலைமையால்" என்று அன்போடு சொன்னாள்; அதற்கு இல்லையம்மா என்றான் மகன்.

"உடன்பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்கவேண்டா"

தாயும் மகனும் இந்த விஷயமாக பேசும்போது, சிவபாக்கியம் இல்லையென்றே யெண்ணினர்கள்; ஆனாற் சிவபாக்கியம் கூடத்திலே தன்நிலைமையைச் சிந்தித்தபடி யிருந்தாள்; தனபாக்கியத்தைக் கல்யாணஞ் செய்து வைக்கவேண்டுமென்று சொன்னதுக்கு தங்கைச்சி இந்த நிலைமையிலே எப்படி நான் கல்யாணஞ் செய்யலாம்" என்ற கருத்துப்படச் சொல்லிய வார்த்தை சிவபாக்கியத்தின் காதிற் பட்ட மாத்திரத்தே அவள் தன் சிந்தனையை யொழித்து அவர்களுடைய சம்பாஷனையை அவதானித்துக் கொண்டிருந்தாள்; தன் தங்கை கன்னிகையாக விருந்து கலங்க தமயன் ஒருபோதும் கல்யாணஞ் செய்யமாட்டேனென்று தாய்க்கு சொன்ன வார்த்தைகள், சிவபாக்கிய த்தின் முந்திய கவலையை அறவே ..... [சிதைவு] அவளுடைய உள்ளத்தை கொள்ளை கொண்டன; "என்னாலல்லவோ என் அருமை யண்ணர் தாம் இல்வாழ்க்கையிற் புகவொண்ணா தென்று பிடிவாதஞ் செய்கிறார்; உடற்பிறப்பாற் சுகமுண்டென்பது உலகத்தோர் கொள்கையாக, நான் என் அண்ணருடன் பிறந்து, அவருடைய இல்வாழ்க்கைக்கு இடையூறுடையவளானேனே! இதையிட்டுத்தானா, எங்கள் மூதாட்டி "உடன் பிறந்தார் சுற்றத்தாரென்றிருக்கவேண்டா" எனக் கூறிப் போந்தனள், என் அருமையான அண்ணருடன் நான் பிறவாதொழிந்தால், அவர் இதுவரையில் தாம் விரும்பிய பெண்ணை விவாகஞ் செய்து இல்லறத்தை இனிது நடத்தி வருவாரே! ஐயோ! நானுங்கெட்டு, என் அண்ணரின் நல்வாழ்க்கையையுங் கெடுத்தவளானேனே! நான் கவலைப்படுகிறதை அவதானித்தே என் அண்ணர் தாம் நித்தியப் பிரமசாரியாகக் காலம் போக்க நிச்சயித்துவிட்டார்; அண்ணர் அந்த எண்ணத்தை விடுத்து இல்லறத்திற் புகுந்து இனிது வாழ்வாரேயானால் என் கவலைகளெல்லாம் அறவே யொழிந்துவிட நானும் நித்திய சந்தோஷத்தோடிருப்பேன்; முதற் கடவுள் இரண்டாவதாக இப்படிப்பட்ட அன்பான அண்ணர் இருக்கும்போது எனக்கென்ன குறை; ஆனதால், என் அண்ணரை இப்பொழுதே தனபாக்கியத்தை வாழ்க்கைத்துணையாகக் கொண்டு இல்லறத்திற் புகும்படி கேட்பேன்; என்மேல் அவர் அளவுகடந்த அன்பு வைத்துள்ளவராதலால், என் வேண்டுகோளை ஒருபோதும் மறுக்கமாட்டார்; ஆனாலும் நான் இப்பொழுது கேட்பது முறையல்ல, நாளைக்குக் கேட்பதுதான் புத்தி" என்று தன்னளவில் யோசித்துக்கொண்டு தன் கவலை ஒருவாறு நீங்கப்பெற்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மைப்போற் சகோதரம் எனக்குக் கிடைக்குமா?

அடுத்தநாள், சனிக்கிழமை சிவகுருநாதன் தன் உத்தியோகத்தானத்திலிருந்து மத்தியானத்தின் மேல் மீண்டுவந்து தன் போசனம் முடித்துவிட்டு, ஒரு சார்மனை நாற்காலியிற் சாய்ந்தவண்ணம், தன் வீட்டு விலாசத்திற்கு வந்திருந்த இந்துசாதனப் பத்திரிகையை எடுத்து ஆர்வத்தோடு படித்துக் கொண்டிருக்கும்போது, சிவபாக்கியமும் அந்தத் தலைவாசற்பக்கஞ் சென்றாள்; சிவபாக்கியம் தன் மனத்தைத் தேற்றி முகமலர்ச்சி காட்டிக்கொண்டு தன் தமயன் முன் போனாளெனினும், அவனைக் கண்டவுடனே, அவளையறியாமல் அவளுள்ளத்திலே கவலை பிறக்க, அதனால் அவள் முகமும் வாட்டமுற்றது. தன் அருமைத் தங்கை தன்னிடம் வருதலைக் கண்ட சிவகுருநாதன் பத்திரிகை படித்தலை விடுத்து நிமிர்ந்திருந்து, தங்கைச்சி வாரும் அம்மா, ஆகாரமாய்விட்டதா" என்று அன்புடன் வினாவ, ஆம் அண்ணா, அம்மாவும் நானும் ஆகாரம் முடித்து விட்டோம்" என்று அன்பும் இதமும் விரவ விடைகூறினாள்; இதற்கிடையிற் சிவகுருநாதன் தன் அருமைச் சகோதரியின் முகம் புலர்ந்திருப்பதை அவதானித்தான்; அவன் தன் பக்கலில் நின்ற தங்கையைப் பார்த்து "உப்படி இரு அம்மா" என்று சொல்ல, அயலே இருந்த ஒரு நாற்காலியிற் சிவபாக்கியம் இருந்தாள், "தங்கைச்சி, ஏன் அம்மா கவலைப்படுகின்றீர், எங்கள் சாமியார் சொன்னபடி எல்லாம் நல்லாய் நிறைவேறும், இப்பொழுது எங்களுக்கு ஏதோ காலகஷ்டம் நேர்ந்திருக்கக்கூடும்; நீர் கவலைப்படுவதனால் எங்கள் தாயாரும் நானும் கவலைப்பட வேண்டியிருக்கிறது, ஒரு கவலையும் வேண்டாம், அம்மா, சந்தோஷமாயிரும், ஆண்டவன் எங்களைக் கைவிடமாட்டான்" என்று தன் தங்கையைத் தேற்றத் தலைப்பட்ட தமயன் தானே கவலையோடு சொன்னான்; "அண்ணா! எங்கள் அருமைத் தாயாரும் உங்களைப்போன்ற அன்பான தமயனாரும் எனக்கு இருக்கும்போது என்னுள்ளத்திற் கவலையெப்படி உண்டாகும்? நீங்கள் சிலகாலமாக என்னை எந்த நேரமும் கவலையோடு பார்ப்பதனால் நானும் முகவாட்டமுடையவளாய் உங்கள் கண்ணுக்குப் புலப்படுகிறேன்" என்று புன்னகையோடு பன்னினாள். "அப்படியானால் எனக்குச் சந்தோஷம்" என்றான் தமயன்; சிலநிமிஷம் இருவரும் பேசாமலிருந்தனர்; பின்னர்ச் சிவபாக்கியம் தமயனைப் பரிவுடன் பார்த்து "அண்ணா, என்னால் எனக்கு எவ்வகை யான கவலையுமில்லை; உங்களாலேதான் எனக்குக் கவலை" என்று சொல்லுதலும், கேட்ட சிவகுருநாதன் திடுக்குற்று "தங்கைச்சி, என்னாலா உமக்குக் கவலை? உமக்குக் கவலைக்கிடமான செயலை நான் கனவிலுஞ் செய்ய மாட்டேனே! ஏன் அம்மா இப்படிச் சொல்லுகிறீர்" என்று மனம்பதைப்புறச் சொல்லுதலும், தங்கை "அண்ணா நீங்கள் ஒருபோதும் அப்படிச் செய்யமாட்டீர்கள்; அப்படிச் செய்தாலும் நான் கவலைப்படமாட்டேன்; ஆனால் நீங்கள் என்மீது வைத்துள்ள சகோதரபாசமே என்னைத் தீராக் கவலைக்கு ஆளாக்கிவிட்டது" என்று கண்களில் நீர்ததும்பச் சொன்னாள், கேட்ட தமயன் தன் மனப்பதைப்பு ஒழியப் பெற்றவனாய்த் தன் தங்கையை ஆதரவோடு நோக்கி "தங்காய் உம்மைப்போல் அருமைச் சகோதரம் எனக்குக் கிடைக்குமா? உம்மீது பாசம் வைக்காம லிருக்க என்னால் முடியுமா? அதற்காக ஏன், அம்மா கவலைப்படுகிறீர்? ஒரு பொல்லாங்குமில்லையே; உமக்கு என்ன வேண்டும்; கூசாமற் சொல்லும்" என்று ஆவலுடன் வினாவினான்.

* * *

உலகம் பலவிதம்: 1947 டிசம்பர் 19 (முற்றொடர் - 44)

"திலகவதியார் வாழ்க்கை"

"அண்ணா, நான் உங்களை ஏதுங் கேட்டால் எனக்காகச் செய்வீர்கள்தானே" என்று இனிவுகூர வினாவுதலும், "தங்காய், உமக்காக எதனையுஞ் செய்யச் சித்தமாயிருக்கிறேன்; நான் இந்த உலகத்தில் வாழ்வதும் என் தாயாருக்கும் உமக்குமாகத்தான் என்று கண்டுகொள்ளும்" என அன்புடன் பகர்ந்தான் தமயன்; "அப்படியானால் நான் ஒன்று கேட்கலாமோ, அண்ணா" எனலும் நூறு முறையுங் கேட்கலாம்; நீரல்லாமல் வேறு யார், தங்கைச்சி, என்னைக் கேட்பது" என்று மகிழ்ச்சியுடன் சொன்னான் தமயன். "அண்ணா ஒரு முறை கேட்டாலே செய்வீர்களே, அப்படியிருக்க நான் உங்களை நூறு முறை கேட்கவேண்டியதில்லையே" என்று புன்னகை யரும்பச் சொன்னாள் சிவபாக்கியம்; "நான் குறித்துச் சொன்னது அப்படியல்ல, தங்கைச்சி, ஒன்றல்ல நூறு கருமத்தைச் செய்யும்படி நீர் கேட்டாலும் நான் தயங்காமற் செய்வேன் என்பதையிட்டே சொன்னேன்" என்று சொன்னான் சிவகுருநாதன்; "அண்ணா, உங்களையும் தனபாக்கியத்தையும் தம்பதிகளாகப் பார்க்க ஆசைப்படுகிறேன்" என்று கனிவுகூரச் சொன்னாள் தங்கை; கேட்ட தமயன் திகைத்தான்; உடனே அவன் மனதைத் திடப்படுத்திக் கொண்டு "தங்கைச்சி, அப்படி நடக்குங்காலத்தில் நீர் தானே நின்று எல்லாக் கருமங்களையும் நடத்தி வைப்பிர்; நீர்தானே தம்பதிகளை மகிழ்ச்சியோடு பார்ப்பீர்" என்று இதமாகச் சொன்னான் தமயன்; "அந்தக் காட்சி எப்பொழுதண்ணா எனக்குக் கிடைக்கும்" என்று தங்கை கவலையுடன் கேட்க, "நடக்கும்போது தான் கிடைக்குமம்மா, நாம் நினைத்தபடியெல்லாம் நடக்குமா? அந்த ஆண்டவன் நினைத்தல் வேண்டும்; அல்லாமலும் என்னருமைச் சகோதரமே, நீர் இப்படிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிகையாகவிருக்க, நான் கல்யாணஞ் செய்வே னென்று நீர் எப்படிக் காத்திருக்கலாந் தங்காய்? உம்முடைய கருமம் என்றைக்கு நிறைவேறுமோ அன்றைக்கே என் கருமமும் நிறைவேறியதற்கு ஒப்பாகும்" என்றான் மூத்தோன்; "அண்ணா, என் உள்ளக் கிடக்கை உங்களுக்குத் தெரியுந்தானே" என்றாள் இளையாள் "தெரிந்தபடியாற்றான் இப்படிச் சொல்கிறேன். என் அருமைத் தங்காய்" என்றான் தமயன். "உங்கள் கருமம் நிறைவேறினால் என் கருமம் நிறைவேறியதையொப்பச் சந்தோஷப்படுவேன் அண்ணா, என்னுள்ளத்தில் நான் வரித்துள்ளவர் இன்னமுங் கிட்டவில்லை; கிட்டியபின் தாயார் சொற்படியும் உங்கள் சொற்படியும் நடந்து கொள்வேன்; தனபாக்கியத்தை நீங்கள் பெண்ணாகக் கொள்ளவேண்டு மென்பது எல்லார்க்கும் சம்மதம், நீங்களும் அதற்கு மாறல்ல; ஆனதால் அண்ணா, தடை சொல்லாமல் இப்பொழுதே என்னையும் தாயாரையும் தங்கை பாக்கியலட்சுமியையும் மற்றையோரையும் மகிழச் செய்யுங்கள்; என் விஷயத்தில் "கிட்டாதாயின் வெட்டெனமற" என்றபடி ஒருவர்க்கு வாழ்க்கைப்பட வேண்டுமென்பதை அறவேமறந்து, தெய்வத்தைச் சிந்தித்து வழிபட்டுக்கொண்டு மன ஆறுதலோடு வாழ்வேன்; பத்தியுடன் இறைவனைப் பணிவார்க்கு இடைஞ்சலில்லை அண்ணா, அல்லாமலும், அண்ணா சொல்லுகிறேனென்று குறை யெண்ணாதீர்கள், தமக்கென வரித்த கணவன் கிட்டாதுபோக, உத்தமியாராகிய திலகவதியார் வாழ்ந்த தூய சைவவாழ்க்கையையும செய்த சிவத்தொண்டையும் பெற்ற பேற்றையும் நாங்களெல்லோமும் பெரியபுராணத்திற் படித்தோ மல்லவா; அப்படியான வாழ்க்கையை வாழ வேண்டுமென நான் ஆசைப்படுகிறேன்; அண்ணா நீங்கள் கவலைப்படாதீர்கள்; எங்கள் தாயார் கவலைப்பட்டால் நீங்களே தாயாருக்கு ஆறுதல் சொல்லித் தேற்றுங்கள்" என்று கண்களில் நீர் துளிப்பச் சொன்னாள் சிவபாக்கியம். தன் அருமைத் தங்கை இப்படியெல்லாம் ஞாயஞ் சொல்லக் கேட்டுக் கொண்டிருந்தவனாகிய சிவகுருநாதன், சற்றுநேரம் யோசித்துவிட்டு, "தங்காய், திலகவதியாரைப் போல் வாழவேண்டு மென்று நீர் விரும்பினால், அவருடைய சகோதரராகிய திருநாவுக்கரசரைப் போல வாழ வேண்டுமென்று நானும் விரும்பலாந்தானே, அம்மா" என்று சிந்தனையோடு சொன்னான் சிவகுருநாதன்; கேட்ட தங்கை பதில் சொல்வதற்கு வகையறியாளாய்ச் சும்மாவிருந்தாள்; இங்ஙனமாக, கண்ணகியம்மை தம் மக்களிருந்த தலைவாசற் பக்கம் வந்தாள்.

"நெஞ்சங் கடுத்தது காட்டும்முகம்"

தன்னுடைய அருமையான மக்களிருவரும் முகவாட்டத்தோடு கூடியவர்களாகப் பேசக்கண்ட தாயானவள் "என் மக்கள், நீங்கள் இங்கேயா நிற்கிறீர்கள்" என்று கேட்பதற் கிடையில், தன் பிள்ளைகளிருவருங் கவலையோடு நிற்பதை அவதானித்தாள். மக்களும் தாங்கள் கொண்ட கவலையை மறைத்துத் தத்தம் முகத்தில் மகிழ்ச்சி காட்ட முயன்றனரேனும், "நெஞ்சங் கடுத்தது காட்டும் முகம்" என்றபடி, அகத்திலேயுள்ள கவலை பெற்றவளைக் கண்ட மாத்திரத்தே அதிகப்பட இருவரும் சற்றுநேரம் தாயாருக்கு என்னபதில் சொல்வதென் றறியாதவராய்ச் சும்மா நின்றனர். பின்னர்ச் சிவகுருநாதன் ஒருவாறு தன் கவலை அகற்றிவிட்டுச் சந்தோஷத்தோடு கூடிய முகத்தினனாய் "அம்மா, எங்கள் தங்கைச்சி சொல்வதைக் கேளுங்கள்" எனலும், தாய் மகளுடைய முகத்தைப் பார்க்க, மகளும் முகமலர்ச்சி காட்டி, "அம்மா, நீங்கள் அண்ணாவுக்காகவுஞ் சொல்லக்கூடாது, எனக்காகவுஞ் சொல்லக்கூடாது, நடுவு நிலைமை யோடு ஆர் சரியென்பதைச் சொல்லிவிடுங்கள், நான் உள்ளதைச் சொல்லுகிறேன்" என்று தனக்குந் தன் தமயனுக்குமிடையே நடந்த சம்பாஷணையை ஒன்று மொழியாமற் சொன்னாள்; "மகனே, உன்னுடைய முறைப்பாட்டைச் சொல்லு" என்று தாய் கவலைகூர்ந்தவளாய் வினவ, "அம்மா, எனக்கு வேறாக முறைப்பாடில்லை; தங்கைச்சி சொன்னவை முழுவதும் நிசம்; ஆனால் ஒரு விஷயம் மாத்திரம் உங்களைக் கேட்கிறேன். அம்மா, என் அருமைத் தங்கைச்சி நித்திய கன்னிகையாக விருக்க, நான் இல் வாழ்க்கையுட் புக, என்மனஞ் சம்மதப்படுமா? தெய்வத்திற்குச் சம்மதமாகுமா? உலகம் ஒத்துக்கொள்ளுமா? தங்கைச்சி இப்படி என்னைக் கேட்கலாகுமா? நான் வேறொன்றுஞ் சொல்லவில்லை, தங்கைச்சி விவாகஞ் செய்தவுடன், தங்கைச்சி சொல்லுகிற பெண்ணை நான் கல்யாணஞ் செய்துகொள்வேனென்றுதானே சொல்லுகிறேன்; நிச்சயித்திருந்த வரன் விதிவசத்தால் அகப்படாதொழிந்தால், வேறொரு வரனை எங்களுக்காக. உலகத்திற்காக, சந்ததி விருத்திக்காகச் செய்து கொள்வதுதானே அம்மா முறையாகும்; இதற்குத் தங்கை உடன்படத்தானே வேணும்; உலகத்தில் அப்படி நடப்பதில்லையா? மணப்பந்தரிற் போயிருந்த மாப்பிள்ளை தாலி கட்டுவதற்கிடையில், கல்யாண ஒழுங்கு ஏதுங் காரணத்தினாற் குழம்பிப்போக, அந்த மணமகனுக்கு வேறு பெண்ணையும், பெண்ணுக்கு வேறு மாப்பிள்ளையையும் பின்னர் மணஞ்செய்து வைக்க, அவர்கள் இல்லறத்தை இனிது நடாத்திச் சந்ததி விருத்தியாக வாழ்ந்த செய்தியும் உலகத்திலே உண்டுதானே, அம்மா" என்றான் தமயன்; "அப்படியுமுண்டுதான் அண்ணா, திலகவதியாரைப் போன்ற உத்தமிகளு முண்டுதாம் அண்ணா என்று நான் சொல்ல, திலகவதியாரைப்போல் நீ இருந்தால், திருநாவுக்கரசர்போல நான் இருப்பேன் என்று அண்ணா சொல்லுகிறார் அம்மா, ஆண்களுக்கும் பெண்களுக்கும் எல்லா விஷயத்திலும் ஒரே நியாயம் ஒற்றுமையாய் வருமா? ஒரு ஆடவன் தாரமிழந்தால், இன்னொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரத்தைக்கொண்டு இல்லறம் நடத்தலாம்; ஆனால் ஒரு பெண் கணவனையிழந்தால் இன்னுமொருவனுக்கு இல்லாளாய் வாழ்வது சைவர்களாகிய எங்களுக்கு ஏற்குமா? அம்மா, இப்படிச் சில சில கொள்கைகள் ஆண்களுக்கு வேறு, பெண்களுக்கு வேறு என்றதற்குச் சொல்லுகிறேனே யல்லாமல், என் அருமையான அண்ணனுக்கு எதிராக நியாயம் பேச எப்போ தாயினுந் துணிவேனோ" என்று சொல்லி இதமாக முடித்தாள் சிவபாக்கியம்; தன் பிள்ளைகளின் இனிய வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த தாய் எது நியாயம், எது நியாயத்திற்கு மாறு என்பதைச் சொல்ல முடியாதவளாய், இருதலைக் கொள்ளியினுள்ளெறும்பு போன்றவளாய் இடர்ப்பட்டாள்.

கடிதங்கள்

தன் பிள்ளைகள் ஒருவரையிட்டொருவர் கவலைப்படுவதையும், அவர்களுக்கிடையேயுள்ள சகோதர பாசத்தையும் தன் மருமகனைப் பற்றி ஏதும் அறிய முடியாமலிருப்பதையும் தன் மகள் கொண்ட வைராக்கியத்தையும் பற்றி மாறி மாறிச் சிந்தித்துக்கொண்டு அன்றிரவு முழுவதும் உறக்கமின்றிச் சிந்தனையோடு கூடியவளாய்க் கிடந்தாள் கண்ணகியம்மை. சிவபாக்கியமும் தான் இருப்பதனால், தனக்கேனும் தங்கள் தாய் சகோதரம் மாமி மாமன் முதலியவர்களுக்கேனும் எவ்வகையான நன்மையுமில்லாதாக, தான் இருந்தும் இறந்தவள் போலானேனேயென்ற சிந்தனையோடு கூடியவளாக உறக்கமின்றிப் படுத்துக் கிடந்தாள். அந்த நீண்ட இராக்காலம் ஒருவாறு கழிந்தது; தாயும் மகளும் தங்களைத் தாங்களே தேற்றிக் கொண்டு தாம்தாம் செய்யவேண்டிய வீட்டுக் கருமங்களைச் செய்தார்கள்; அன்று மத்தியானம் சிவகுருநாதன் தன் விலாசத்தில் ஒரு கடிதமும், சிவபாக்கியத்தின் விலாசத்தில் ஒரு கடிதமும் கிடைத்தன; சிவபாக்கியம் தன் தமயன் விலாசத்தில் வந்த கடிதத்தை வைத்து விட்டுத் தன் விலாசத்தில் வந்த கடிதத்தைப் பிரித்துப் படித்தாள்? அது பாக்கியலட்சுமி சிவபாக்கியத்திற்கும் தமயனுக்கும் தாய்க்கும் எழுதிய கடிதமாகும்; அக்கடிதத்தில் சிவபாக்கியத்தின் மைத்துனரைப்பற்றி இன்னமும் அறியமுடியாதிருத்தலையிட்டுத் தாங்கள் கவலைப்படுவதாகத் தொடக்கத்திலே எழுதிச் சிவபாக்கியத்திற்குத் தேறுதல் கூறியும் எழுதியிருந்தாள் பாக்கியலட்சுமி, அவ்வளடோடமையாது ஊரிலிருந்து தன் சொந்தத் தாய் தனக்கு எழுதிய கடிதத்தையும் பாக்கியலட்சுமி தானெழுதிய கடிதத்தோடு சேர்த்து அனுப்பியிருந்தாள்; அக்கடிதத்திலே பாக்கியலட்சுமியின் சொந்தத் தாய் கண்ணகியம்மைக்கும் மக்களிருவருக்கும் நன்றி பாராட்டி யெழுதியதோடு சிவபாக்கியத்தின் மைத்துனனைப்பற்றி ஒன்றுந் தெரியவில்லையே யென்பதையிட்டுக் கவலைப்பட்டும் எழுதியிருந்தாள்; சிவகுருநாதன் மத்தியானப் போசனமுண்ணும்படி வீட்டிற்கு வந்தபோது அவனுடைய விலாசத்திற்கு வந்த கடிதத்தையும், பாக்கியலட்சுமி தனக்கெழுதிய கடிதத்தையும் சிவபாக்கியம் தன் தமையனிடம் கொடுத்தாள்; சிவகுருநாதன் தன்னுடைய விலாசத்தில் வந்த கடிதத்தைப் பிரித்துப் பார்த்த போது அது தங்கள் மாமன் தங்களிருவருக்கும் தாயாருக்கும் எழுதிய கடிதமெனக்கண்டான்; அக்கடிதத்திலும் மாமனார் தம்முடைய மகனைப்பற்றி அதுவரையில் ஒன்றுமறிய முடியவில்லையே யென்றும், மருமகளுடைய நிலைமை தம்மை வருந்துகின்றதென்றும் எழுதியிருக்கக் காணப்பட்டது. கடிதங்களைப் படித்துப் பார்த்துவிட்டுத் தன் சட்டைப்பையுள் அக் கடிதங்களை வைத்துக்கொண்டு தாய்க்குஞ் சகோதரிக்குந் தேறுதல் சொல்லித் தேற்றிவிட்டுப் போசனம் முடித்துக்கொண்டு கவலையோடு கூடியவனாய்த் தன் உத்தியோகத்தானத்திற்கு மீண்டான்; அவன் அன்று பிற்பகல் உத்தியோகத் தானத்திலிருந்து மீண்டு வந்தபோதும் தன் தங்கை சஞ்சலத்துடனிருக்கக் கண்டு அவளுக்குப் பலவாறு ஆறுதல் வார்த்தை சொல்லி ஒருவாறு தேற்றினான்; தன் மாமனாருக்கு எப்படிப் பதில் எழுதுவது என்று சிவகுருநாதன் அன்றிரவு படுத்துக்கொண்டு யோசித்தபடி அயர்ந்துவிட்டான்; சிவபாக்கியமும் பாக்கியலட்சுமிக்குக் கவலைப்பட வேண்டாம், எல்லாம் விதிவழி நடக்குமென ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு உறங்கினான்; அடுத்த நாள் மத்தியானம் போசனஞ்செய்ய வரும்போது தன் உத்தியோகத்தான விலாசத்தில் வந்த ஒரு கடிதத்தைச் சந்தோஷத்துடன் தன் அருமைத் தங்கையின் கையிற் சிவகுருநாதன் கொடுத்தான், படித்துப்பார்த்த தங்கை ஆநந்த மடைந்தாள்; மகள் சொல்லக் கேட்ட தாயும் பெரு மகிழ்ச்சியடைந்தாள்.

* * *

உலகம் பலவிதம்: 1947 டிசம்பர் 26 (முற்றொடர் - 45)

"எடுத்துரைக்க வென்றால் ஏடு இடங்கொடாது"

அக்கடிதம் பின்வருமாறு: "எனது அன்பார்ந்த மைத்துனரவர்களுக்கு ஆதரவுடன் எழுதிக்கொள்வது, எல்லாம்வல்ல இறைவனுடைய திருவருளால் நான் இன்னமும் இவ்வுலகத்திலே தான் இருக்கிறேனென்பதை அறியும் போது நீங்களெல்லீரும் மகிழ்ச்சியடைவீர்கள்; உங்கள் சுகத்தையும் எனது மாமியார் சுகத்தையும் உங்கள் சகோதரியின் சுகத்தையும் அறிதற்கு அதிக ஆவலாயிருக்கிறேன்; என்னுடைய வரலாற்றை யெடுத்துரைக்க என்றால் ஏடு இடங்கொடாது, எழுதுங் கை அலுப்படையும், மேலும் என் வரலாறு படிப்போ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெவருக்குந் தீராக்கவலையைத் தேடிவிடும்; ஆனதினால் உங்களை நான் நேரிற் காணும்பேறு கிடைக்கும் போது, உங்களுக்கு விபரமாகச் சொல்லு வேன் சில தினங்கட்கு முன்னர் என் அருமைப் பெற்றாருக்கும் ஒரு தேறுதலான கடிதமெழுதி யிருக்கிறேன். அக்கடிதம் இற்றைவரையில் அவர்களுக்குக் கிடைத்திருக்குமோ இல்லையோ என்பதைப்பற்றி யறியேன்; இக்காலத்திற் கடிதப் போக்கு வரவுகளின் ஒழுங்குகளைப்பற்றி எனக்குத் தெரியாது.

நிற்க உங்கள் தாயாரும் சகோதரியும் ஊரிலிருந்து உவ்விடம் வந்திருக்கிறார்களென் பதைச் சில வாரங்கட்கு முந்தித்தான் அறிந்தேன்; அப்படியறிந்தேனாயினும் உங்கள் சரியான மேல் விலாசத்தை அந்த நேரத்தில் அறியமுடியவில்லை; பிந்தித்தான் அறிந்து இக் கடிதத்தை உங்களுக்கு எழுதலானேன். உங்கள் எல்லீர் சுகத்தையும் அறிய ஆவலாயிருக்கிறேன்; இக்கடிதத்தின் மேற்புறத்தில் எழுதியுள்ள விலாசத்தின்படி எழுதுவீர்களானால் உங்கள் கடிதம் என்னிடம் வந்து சேரும் ஆனாலும் கடித விஷயங்கள் இயன்றவரையில் இரகசியமாக இருப்பது நல்லது.

இங்ஙனம்,
உங்கள் அன்பை மறவாத,
வி. நமசிவாயம்

தங்கள் மைத்துனர் தங்களுக்குக் கடிதம் எழுதிய உவகையோடு கூடிய செய்தியைச் சிவபாக்கியம் கடித மூலமாக, பாக்கியலட்சுமிக்குத் தெரிவிக்க, பாக்கியலட்சுமி பெருஞ் சந்தோஷமடைந்து, தன் கணவனுக்கும் தனபாக்கியத்திற்கும் பின்னர்ச் சாமியாருக்கும் தெரிவிக்க, அவர்களும் பெரு மகிழ்ச்சியடைந்தனர்; பாக்கியலட்சுமி இங்ஙனந் தெரிவித்து விட்டு, சிவபாக்கியத்திற்கும் சிவகுருநாதனுக்குங் கண்ணகியம்மைக்கும், அச்செய்தி தங்களுக்குப் பெருஞ் சந்தோஷத்தைத் தந்ததென்று கடித மெழுதினாள்; சிவகுருநாதன் தங்கள் மாமனாராகிய விநாயகமூர்த்திக்கும் அவர் மனைவிக்கும் அவர்களுடைய மகன் தங்களுக்குக் கடித மெழுதிய செய்தியைத் தெரிவித்திருந்தான் சிவகுருநாதன் தன் மைத்துனனுக்கும் ஒரு பதில் எழுதியிருந்தான்; அக் கடிதத்தில் யுத்தந் தொடங்கிய பின்னர்த் தனக்கு நேர்ந்த கஷ்டங்களையும், யுத்தம் முடிந்த பின்னர்த் தான் பழையபடி உத்தியோகத்தில் அமர்ந்திருப் பதையும் தமது தாயாருஞ் சகோதரியும் தன் வாசஸ்தானத்திற் சில மாதங்களாக வந்து வசிப்தையும், மைத்துனனாகிய அவனைக் காணாமையால் எல்லாருஞ் கவலைப்பட்டதையும், கடிதங்கிடைத்த பின் சிறிது தேறுதலடைந்திருப்பதையுமாகிய எல்லா விபரங்களையும் அக்கடிதத்தில் எழுதியிருந்தான்.

* * *

உலகம் பலவிதம்: 1948 ஜனவரி 02 (முற்றொடர் - 46)

"எரிகிறகொள்ளியை ஏறத்தள்ளிவிட்டவாறு"

சிவகுருநாதன் நமசிவாயத்திற்குக் கடித மெழுதிச் சிலநாட் சென்ற பின், அவனிடமிருந்து தங்களுக்குச் சீக்கிரம் பதில் கிடைக்குமென எதிர்பார்த்திருந்தான்; நாட்கள் போய் வாரங்களாயின, பதிலில்லை; வாரங்கள் கழிந்து மாசங்களாயின; பதிற் கடிதங் கிடைத்தபாடில்லை; சிவபாக்கியம் தன் மைத்துன னுடைய கடிதம் இன்றுவரும், நாளைவரும், அடுத்த வாரத்திலாயினுங் கிடைக்குமென்று எந்நேரமும் ஆவலோடுங் கவலையோடும் எதிர்பார்த்த வண்ணமிருந்தாள்; மைத்துனன் அங்கே கடிதம் எழுதினாற்றானே, இங்கே இவளுக்கு அது கிடைக்கும்; சிலமாசங்கள் கழித்துங் கடிதம் வராமையை யுணர்ந்த சிவபாக்கியம் மனமுடைந்தாள்; தீராக்கவலைக்கு ஆளானாள்; முன்னுள்ளபடியே தன் மைத்துனனைப் பற்றி ஏதுமறியாதிருந்தாளாயின் சிவபாக்கியம் இவ்வாறு பெருங் கவலைக்கு ஆளாகமாட்டாள்; தன் மைத்துனர் உயிரோடிருக்கிறார், தங்களை மறந்திலர், விரைவில் வந்து காண்பார் விவாகம் நிறைவேறும் தன் மனோரதமெல்லாம் பூரணமாகும் ஏன், அவனுடைய கடிதத்தைக் கண்டபின் மனக்கோட்டை கட்டி அதன்கண் வாழ்ந்த சிவபாக்கியம், அக்கோட்டையானது தோன்றி மறைந்தொழியுமானால், பாவம்! அவள் கவலைக்கடலில் மூழ்காமல் வேறு என்னதான் செய்வாள்! இப்படியெல்லாம் உள்ளம் வருந்தின ளேனுஞ் சிவபாக்கியம் தன் தீராக்கவலையைத் தமயனுக்கேனுந் தாய்க்கேனும் வெளியீட்டிலள்; ஆனால், தமயனுந் தாயும் அவனுடைய கடிதம் பின்னர் வராமையால் முன்னரைக்காட்டிலும் அதிகங் கவலைப்பட்டனரே யொழிய, சிவபாக்கியத்திற்குத் தேறுதல் வார்த்தைதானுஞ் சொல்லத் துணிந்திலர்; அவர்கள் தாங்கள் ஏதுந் தேறுதல்வார்த்தை சொல்லப் புகில், அது எரிகிற கொள்ளியை ஏறத்தள்ளிய வாறு, இன்னும் அவளுக்கு அதிக கவலையை ஆக்கிவிடுமென்று பயந்தனர்; இதனைச் சிவபாக்கியமும் யூகித் தறிந்துகொண்டாள்; தன்னையிட்டு அவர்கள் தீராக்கவலையோடிருக் கின்றனரேயென்று சிந்தித்து, அதனாலுந் துயரமடைந்தாள் சிவபாக்கியம்,

"மனக்கவலை மாற்றலரிது"

மானங் குலம்கல்வி வண்மை யறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்துபோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பெரியோர் பாடியிருக்கிறாரல்லவா; ஆனால் இந்தப் பத்தையும் பறக்கச்செய்யும் பசியும் உள்ளக் கவலை யதிகப்பட்டால் உடனே பறந்துவிடும்; இதுபற்றியே மனக்கவலை மாற்றலரிது என்று அறிஞர் சொல்வர். கவலை மேலீட்டினாற் சிவபாக்கியம் உணவை யொறுத்து வர, உறக்கம் அவளைவெறுத்து அவளிடம் வாராதொழிய, அவள் மனம் நலிந்து தேகம் மெலிந்து வருதலைப் பெற்றதாயும் உற்றதமயனும் அவதானித்துத் துயரப்பட்டனர்; பெற்ற பிள்ளை ஊண் உறக்கமின்றி நாளடைவில் மெலிந்துவர, தாய் தான் உண்ணுவாளா, ஆறுதலாய் உறங்குவாளா; மனஞ் சகிப்பாளா, தான் சொல்வதனால் தன் மகள் தேறுதலடைய மாட்டாளெனக் கண்டதாய், தன் மகன் தனியேயிருக்கும் அற்றம் பார்த்து அவனருகிற் போய்ச் சிவபாக்கியத்தின் மனநிலையையும் தேகநிலையையும், அழுதழுது தன் மகனுக்குச் சொல்ல, கேட்ட அவனும் தாயாருக்கு ஆறுதல் சொல்ல இயலாதவனாய்த் தானும் அழுது பின்னொருவாறு தான் தேறிக்கொண்டு தாயையுந் தேற்றி, "அம்மா, எந்நேரமும் என் அருமைத் தங்கையையிட்டுச் சிந்தை வருந்துகிறேனென்பதை நீங்களும் அறிவீர்கள், என் உத்தியோகத்தானத்திற் போய்க் கடமை செய்யும்போதும் என் அருமைச் சகோதரியையிட்ட துயரம் என் கடமையை இடையிடையே குழப்பிவிடுகின்றதே; என் சகோதரிக்கு ஏதுஞ் சமாதானஞ் சொல்லி, அவளுடைய உள்ளத்தை ஒருவாறு தேற்றலாகுமே என்று யோசித்தேன்; அப்படிச் சொல்லப்போனால் இன்னும் என் தங்கையின் துயரத்தை நானே அதிகப்படுத்துபவனாவேன்; அந்தக் கடிதமும் எங்கள் மைத்துனன் எழுதிய கடிதந்தானோ இல்லையேல் யாரும் வஞ்சகருடைய சூழ்ச்சியோ என்று சந்தேகப்படுகிறேன்; அம்மா என் அருமைத் தங்கையின் கருமத்தில் ஆண்டவன் திருவுள மிரங்குவதல்லாமல், நீங்களும் நானும் வேறு எவருங் கவலைப்படுவதால் என்ன ஆகப்போகின்றது தாயே" என்று கண்களில் நீர் ததும்பச் சொன்னான்; "மகனே, சொல்லுகிறேனென்று சினங்கொள்ளாதே, அந்தத் தனபாக்கியத்தை நீ ஏற்றுக்கொண்டாற்றான் ஆறுதலாக இருப்பேனென்று உன் அருமைத்தங்கை சொல்லுகிறாளே, அப்படிச் செய்தால் என்னடா நான் பெற்ற கண்ணே" என்று பயந்து பயந்து துயர்கூரக் கேட்டாள்; கண்ணகியம்மை; அம்மா, வேலியே பயிரை மேயத் தலைப்பட்டவாறு, நீங்களே சாமானிய பெண்கள்போல் இப்படி அடாத காரியத்தைச் செய்யச் சொன்னால், அறிவிலும் அநுபவத்திலும் குறைந்த நான் மனம் வருந்துவதே யொழிய வேறு என்ன செய்வேன்! என் அருமைத் தங்கை இப்போதிருக்கும் நிலைகண்டும் நான் கல்யாணஞ் செய்ய நினைக்கலாமா? இந்தக் கேள்வியை அறவே மறந்துவிடுங்கள்; இதுவொன்றொழிய வேறு எதனைச் செய்யச் சொன்னாலும் செய்கிறேன், தாயே" என்று பரிவுடன் சொன்னான் சிவகுரு நாதன்; "அப்பனே, வேறுநான் சொல்வதென்ன உன் அருமைத்தங்கை கவலைப்படாமல், அவளுக்குத் தேறுதல் சொல்லு; நீ சொன்னால் அவள் கேட்டுத் தேறுவாள்" என்று தாய் சொல்ல, மகன் "ஏதோ இயன்றவரையிற் சொல்லிப் பார்க்கிறேன்" என்றான்.

"சொப்பனங் கண்டேன்"

இவ்வாறாக அடுத்தநாள் பாக்கியலட்சுமியிடமிருந்து சிவபாக்கியத்திற்கு ஒரு கடிதம் கிடைத்தது; அதில் அவள் பின்வருமாறு எழுதி யிருந்தாள்:

"எல்லாம்வல்ல இறைவனருளால், இனிது வாழும் எனது அரிய அக்கா, அம்மா, அண்ணா மூவருக்கும் வணக்கத்துடன் எழுதிக்கொள்வது, இவ்விடம் தங்கை தனபாக்கியமும் நாங்களும் ஆண்டவன் கிருபையாற் சுகமே இருக்கின்றோம்; உங்கள் சுகத்தை அறிய ஆவலாயிருக்கின்றோம். இராமனுக்குஞ் சுகஞ் சொல்லுங்கள்; நிற்க,

என் அருமையான அக்கா, உங்கள் கடிதங் கிடைத்து வெகுநாளாயின; காரண மென்னவென எனக்குப் புலப்படவில்லை, உவ் விடத்தில் யாருக்குஞ் சுகவீனமோ? இல்லையேல் வேறுஏதுங் கஷ்டம் நேர்ந்ததோ? மேலும், என் அருமையான அக்கா, சென்ற இரவு ஒரு சொப்பனங் கண்டேன்; அதனாற்றான் இந்தக் கடிதத்தை விடிந்தபின் உங்களுக்கு எழுதலானேன்; நீங்கள் ஏதோ நோய்வாய்ப்பட்டு வருந்தவும் அதனையறிந்து நான் உவ்விடம் வரவும், டக்ரர்கள் வந்து உங்களைப் பார்த்து நோய் முற்றிவிட்டது என்று சொல்ல, அம்மா அண்ணன் தனபாக்கியம் நாங்களெல்லோமும் அழுது கவலைப்படவும் நேற்றிராக் கண்ட கனா என்னுள்ளத்தை வேதனைப்படுத்துகிறது, அக்கா நான்கண்ட கனவை என்னுடைய அவருக்குத் தானும் நான் இன்னமும் வெளியிடவில்லை; ஆனதால் உடனே நீங்கள் பதில் எழுதினாற்றான் என்மனம் ஆறுதலடையும்; ஆனாலும் எங்கள் குலதெய்வம் எங்களுக்குக் கேடொன்றும் நேர விடமாட்டாதென்ற நம்பிக்கை என்னிடம் எந்த நேரமும் உண்டு.

என் அன்பான அக்கா, இன்னும் ஒரு விஷயத்தை உங்களுக்குப் பணிவுடன் தெரிவிக்க விரும்புகிறேன்; நாங்கள் உவ்விடம்வந்து தங்கியிருந்தபோது நீங்கள் எங்களை அன்போடு ஆதரித்ததுமல்லாமல், இவ்விடம் ஒருமுறை வந்து சிலதினம் தங்கியிருந்து போவதாக எனக்குச் சொல்லியிருந்தீர்கள்; உங்களைக் கண்டு வெகுநாளானமையினால் உங்களைக் காண ஆசைப்படுகிறேன்; தங்கைச்சி தனபாக்கியமும் நீங்கள் எங்களிடம் வருவீர்களோ என்று ஆவலுடன் கேட்கிறாள்; இப்பொழுது அண்ணாவுக்கும் அரசாங்க விடுமுறைக் காலமென நினைக்கின்றேன்; ஆனதால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் விசுவாசமான தங்கையாகிய என் கேள்விக் கிசைந்து அம்மா, அண்ணா, நீங்கள் மூவீரும், இயலுமானால் இராமனையுங் கூட்டிக்கொண்டு எங்களிடத்திற்கு ஒருமுறை வரக்கூடுமோ என்று பணிவுடன் கேட்கிறேன்; வருவீர்களானால் எங்களுக்கும் ஆனந்தமாகும்; உங்களுக்கும் இடமாற்றத்தினால் மன ஆறுதலாகும்; உங்கள் தங்கையின் விண்ணப்பத்தை மறக்கமாட்டீர்களென நம்பிக் காத்திருக்கிறேன்; வருவதானால் தந்திச் சமாசாரமனுப்பிவிட்டுப் புறப்படுங்கள்; வேறு விசேஷமில்லை, அக்கா, நமஸ்காரம்.

இங்ஙனம்,

உங்கள் நன்றி மறவாத தங்கை
வி. பாக்கியலட்சுமி

"தங்கைச்சியிடம் போவது நல்லது"

சிவபாக்கியம் தன் அபிமானத்தங்கை அன்புடன் எழுதிய கடிதத்தை இருமுறை படித்தாள், உள்ளமுருகினாள்; தங்கள் தாயாருக்கு வாசித்துக்காட்டினாள்; வாசிக்கும்படி தமயனிடங் கொடுத்தாள். சிவகுருநாதன் கடிதத்தைப் படித்து முடித்துவிட்டுத் தாயை நோக்கி "அம்மா, அந்தத் தங்கைச்சியின் கேள்விக்கு என்னசெய்வது" என்று சிந்தனையுடன் கேட்க, "மகனே. உனக்கும் உன் தங்கைக்கும் எது விருப்பமோ அதன்படி நான் நடந்து கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்" என்றாள் தாய்; தமயன் தங்கையின் முகத்தைப் பார்க்க, "அண்ணா தங்கைச்சியிடம் போவது நல்லது, இனி உங்கள் விருப்பமெப்படியோ அப்படிச் செய்யுங்கள்" என்றாள் சிவபாக்கியம். "தங்காய் எனக்கும் இப்பொழுது ஓய்வுநாள், உமக்குச் சம்மதமானால், அம்மாவும் நீரும் நானும் இப்பொழுது புறப்பட்டுப்போய் ஓய்வு நாட்கள் முடியுமுன்னர் மீண்டு வரலாம்; இராமன் வீட்டைப் பாதுகாத்துக்கொள்ளுவான்; மேலும் எங்கள் தங்கைச்சிக்கும் இடமாற்றம் இந்த நேரத்தில் நன்மையாகும்" என்று தாய்க்குஞ் சகோதரிக்குஞ் சொன்னான் சிவகுருநாதன்; அவர்களும் உடன்பட்டார்கள்; சிவகுருநாதன் அன்று அந்திவேளை தாங்கள் புறப்படுவதாக முந்தியே விஜயரத்தினத்திற்குத் தந்திச்செய்தி அனுப்பிவிட்டு அப்படியே புறப்பட்டார்கள்; தந்திச்செய்தி கிடைக்கப்பெற்ற விஜயரத்தினம் பாக்கியலட்சுமி தனபாக்கியம், அச்செய்தியைக் கேள்வியுற்ற சாமியார் எல்லாரும் சந்தோஷமடைந்தார்கள்; விஜயரத்தினம் அவர்கள் தங்களூரில் வந்து சேருவதற்காகிய நேரத்தை யுத்தேசித்து, மோட்டர்ரதத்துடன் புகையிரத ஸ்தானத்திற்குச் சென்று, புகைரத்தினின்றும் அவர்கள் இறங்கியவுடனே வரவேற்று மோட்டர் ரத மூலமாகத் தங்கள் வாசஸ்தானத்திற்கு அழைத்து வந்தான். அவர்கள் வரவைக் கண்ட போது பாக்கியலட்சுமி கொண்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை யெனலாம்.

* * *

உலகம் பலவிதம்: *1948 ஜனவரி 09*
(முற்றொடர் - 47)

"அக்கா, இது என்ன கோலம்"

வீட்டிற்கு வந்தவர்களைப் பாக்கியலட்சுமியும் தனபாக்கியமும் ஸ்நானஞ் செய்வித்து உணவருத்தி அன்புடன் உபசரித்தார்கள்; சிவபாக்கியமும் முகமலர்ச்சியோடு காணப்பட்டாள்; "பிரிந்தவர் கூடிடிற் பேச வேண்டுமோ" என்றல்லவா பெரியோர் சொல்லியிருக்கிறார்கள்; அவர்களுடைய வரவை எதிர்பார்த்திருந்த சாமியாரும் அங்கே வந்து அவர்களிடத்தில் அன்புபாராட்டி ஊடாடினார்; சற்றுநேரஞ் செல்ல, பாக்கியலட்சுமி சிவபாக்கியத்தைத் தன்னுடைய அறைக்குட் கூட்டிக்கொண்டு போனாள்; தனபாக்கியமும் அவர்களுடன் அந்த அறையுட் சென்றாள்; இருவரும் ஒரு சோபாவில், சிவபாக்கியத்தை மத்தியில் இருத்திக்கொண்டு இரண்டருகிலும் இருந்தார்கள்; பாக்கியலட்சுமி சிவபாக்கியத்தின் முதுகைத் தடவியபடி கவலையோடு கூடியவளாய் "அக்கா இது என்ன கோலம்? நீங்கள் ஊணுறக்கமின்றிக் கவலை யோடிருக்கிறீர்களென்பதை அண்ணா எனக்கு எழுதிய கடிதமூலமாக அறிந்துதான் நான் உங்களுக்கு, இங்கு சிலநாள் வந்து தங்கிப் போகும்படி கடிதமெழுதினேன்; எல்லாமறிந்த நீங்களும் உலகத்திலுள்ள சாமானிய பெண்கள் போல இப்படிக் கவலைப்பட்டாற் செய்வதென்ன அக்கா, நான் கவலைகொண்ட சமயத்தில் எனக்கு எத்தனையோ புத்திகளைச் சொல்லி என்னைத் தேற்றிய நீங்களே இப்படிக் கவலை கொண்டு ஊணுறக்கந் துறந்து தேக மெலிவடைந்தாற் செய்வது என்ன? அக்கா" என்று கவலைமீதூரப் பரிவுடன் சொன்னாள்;மனம் வருந்துந் தங்கையைச் சிவபாக்கியம் கவலைப்பட வேண்டாமெனச் சொல்லி, "தங்காய், என் விஷயமாக எனக்கு எள்ளளவுங் கவலையில்லை; எங்கள் அருமையான அண்ணரையிட்டுத்தான் எனக்குத் தீராக்கவலை. அவர் எங்கள் தனபாக்கியத்தைத் தாரமாகக் கொண்டு இல்வாழ்க்கையை இனிது நடத்தி வருவாரானால் எனக்கு என்ன கவலை தங்கைச்சி" என்று சொல்லுவதற்கிடையில், அருகிலிருந்த தனபாக்கியம் நாணம் மீதூர மெல்ல எழுந்து அந்த அறையைவிட்டுப் புறத்தே போக முயலுதலும். சிவபாக்கியம் அவளுடைய கரத்தைத் தன் கரத்தாற் பற்றிப் பழையபடி பக்கலில் இருத்தி "எங்கேயம்மா? ஓடப்போகிறீர்; எங்களிடம் வந்து சேர்ந்தபின் தப்பியோட முடியுமா? உம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யொளித்து எங்களுக்கு ஒரு இரகசியமுண்டா", என்று கனிவுடன் சொல்ல, தனபாக்கியம் தலை குனிந்தபடி பக்கலில் இருந்தாள்; இதுதான் என் மனக்கவலைக்குங் தேகமெலிவிற்குங் காரணம்" என்று சொல்லிமுடித்தாள் சிவபாக்கியம்; கேட்ட பாக்கியலட்சுமி சிந்தனையோடு கூடியவளாய்த் தன் தமக்கையைப் பார்த்து "அக்கா, நீங்கள் இந்த நிலையிலிருக்க, எங்கள் அண்ணா எப்படி உடன்படுவார்" என்று மெல்லச் சொன்னாள்; "தங்காய், என்னுடைய நோக்கமும், நான் கொண்ட நியதியும் உமக்குத் தெரியுந்தானே, என்னை அண்ணாவாக, தாயாராக, வேறு எவராக, நான் மனத்தில் வரித்துள்ள அவருக்கன்றி வேறெவருக்கேனுங் கல்யாணஞ் செய்து வைக்கப்போவதில்லை; நான் சம்மதிக்கப் போவதுமில்லை; மேலும் தமயனார் "அரசன் உபாத்தியாயர் தம் முன்...." என்ற பாட்டின்படி ஐந்து பிதாக்களுள் ஒருவராவர்; அதன்படி அவர் விவாகஞ் செய்யலாம்; அவர் என் விவாகத்திற்கு ஒரு நிச்சயமுஞ் செய்யாமல், தாம் விவாகஞ் செய்வாராயின் அவரை உலகஞ் சிலவேளை குறைசொல்லுதலுங் கூடும்; எனக்கு நிச்சயித்த விவாகம் இன்னமுங் கைகூடாதிருத்தல் என் விதிப்பயன்; தமயனார் விவாகஞ் செய்யாம லிருந்தாலும், விவாகஞ் செய்து இல்வாழ்க்கையை இனிது நடத்தினாலும், என்விஷயத்தில் வருந்தி யழைத்தாலும் "வாராத வாரா" என்ற மன ரம்மியத்தோடு நான் எஞ்சிய வாழ்நாளையும் நல்லவழியிற் கழிக்க வேண்டும்; இம்மைக்கு இல்லையாயினும் மறுமைக்கு உறுதுணையாகிய புண்ணியத்தை ஈட்டவேண்டும்; தங்காய் உம்மைப் போன்ற மனமொத்த சகோதரியுடன் என் அந்தரங்க நோக்கங்களைச் சொல்லி யோசித்து அதன்படி நடப்பதற்காகவே நான் இப்பொழுது பிரதானமாக இங்கு வந்தேன்; அண்ணா விவாகஞ் செய்து வீட்டிலிருக்க, எங்கள் தாயாரும் மகனும் இராமனைத் துணையாகக் கூட்டிக்கொண்டு காசியாத்திரை செய்ய வேண்டுமென்பதுதான் என்னோக்கம்; தங்காய் இப்பொழுது உனக்கும் எங்கள் தனபாக்கியத்திற்குமே என்னுடைய நோக்கத்தை முதன் முதலாக வெளியிடுகிறேன்" என்று சொல்லிமுடித்தாள் சிவபாக்கியம்.

"கடலுங் கலங்கித் தெளியும்"

இவற்றையெல்லாம் சிந்தனையோடு கேட்டுக்கொண்டிருந்த பாக்கியலட்சுமி கவலை மிகுந்தவளாய்ச் சிவபாக்கியத்தைப் பார்த்து "அக்கா உங்களுக்குச் சமாதானஞ் சொல்ல என்னால் முடியாது; உங்கள் நோக்கத்தை அம்மாவிற்கேனும் அண்ணாவிற்கேனும் வெளியிட்டதுண்டோ" என்று கேட்க, தங்காய், என்னுடைய நோக்கத்தை அம்மாவிற்கும் அண்ணாவிற்கும் வெளியிட்டுவிட்டேன்; ஆனால் காசியாத்திரை செய்யும் நோக்கத்தை மாத்திரம் இன்னமும் அவர்களுக்கு நான் தெரிவிக்கவில்லை; நீர் அதனை அவர்களுக்குச் சொல்லலாம்" என்றாள் சிவபாக்கியம்; கேட்ட, பாக்கியலட்சுமி சற்றுநேரஞ் சஞ்சலப்பட்டாள்; இருதலைக் கொள்ளிக்குள்ளகப்பட்ட எறும்புபோல் பயப்பட்டாள்; தன் மனத்தை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு சிவகுருநாதனுந் தாயும் ஒருங்கிருக்கும் சமயம்பார்த்துத் தன் தமக்கை கொண்டுள்ள நோக்கத்தை அவர்களுக்கு வெளியிட்டாள்; கேட்ட தமயனுந் திடுக்குற்றார்; சற்றுநேரம் யாதும் பேசாமல் ஆழ்ந்த சிந்தனையோடிருந்த சிவகுருநாதன், "கடலுங் கலங்கித் தெளியும்" என்றபடி ஒருவாறு தன் சிந்தனையொழிந்து மனதைத் திடப்படுத்திக்கொண்டு தாயை நோக்கி "அம்மா, கவலைப்படாதீர்கள், எது நடக்கவேண்டுமோ அது நடந்தே தீரும், இது பெரியார்கள் கண்ட உண்மை; அருமைத் தங்கைச்சி கொண்ட நோக்கங்கள் எல்லாவற்றிற்கும் தடையாக நின்றால், தங்கைச்சியின் மனம் பேதப்படுதலுங்கூடும்; ஆனதனால். என் தங்கை காசியாத்திரை செய்யவேண்டுமென்று விரும்பினால். நாங்கள் அதற்காக வேண்டிய ஒழுங்குகளைச் செய்துவைப்பது தான் முறை; அல்லாமலும். அம்மா நீங்களும் அந்திய காலத்திலே காசியாத்திரை செய்யும் பேறு உங்களுக்குக் கிடைத்திருக்கின்றது; ஆணாகப் பிறந்தாலும் எனக்கு அந்தப் பேறு இன்னமுங் கிடைக்கவில்லை; எங்கள் அப்பருக்குக் கிடையாமற் போய்விட்டது; காசி யாத்திரை செய்யவேனும்; வேறு எந்தத் தல யாத்திரை தீர்த்த யாத்திரைகள் செய்யவேனும் பூர்வ புண்ணியம் வேணும் அம்மா" என்று சொன்னான்; "மகனே, நீ சொல்லுவது நிசம்; ஆனால் என் பிள்ளை கல்யாணஞ் செய்து தம்பதிகளாய்க் காசியாத்திரையோ, வேறு எந்த யாத்திரையோ செய்வதென்றால் என்மனஞ் சந்தோஷமடையும், கைம்பெண்ணுங் கன்னிகையும் காசியாத்திரை செய்வதென்றால், என் மனம் எப்படியடா மகனே ஆறுதலடையும்" என்று சொல்லிக் கண் கலங்கினாள் கண்ணகியம்மை; "அம்மா, அதற்கென்ன செய்யலாம்; புண்ணியத்தைத் தேடுதற்காகிய கருமத்தை உத்தேசிக்கும் போது கவலைப்படாதீர்கள்; என் தங்கையின் விருப்பம் நிறைவேற வேண்டும்; அவளோ தெய்வ பத்தியும் நியதியும் பூண்டவள், அவளுடைய நோக்கத்திற்கு நாங்கள் மாறாக நின்றாற் பழிவந்து சேரும்" என்று மகன் சொல்லத் தாயும் ஒருவாறு மனந்தேறி அதற்குச் சம்மதித்தாள்; பின்னரும் தாய் தன் மகனைப் பார்த்து "மகனே, இங்கே புறப்பட்டு வரும்போது உங்கள் சாதகக் குறிப்புக் கொண்டுவந்திருக்கிறேன்; உன் தங்கைச்சியின் சாதக பலன் இந்த நேரத்தில் எப்படி என்று யாராயினும் சோதிடருக்குக் காட்டிப் பார்ப்பித்தால் நல்லது, யாத்திரை போவதானாலும் காலநேரம் நல்லவோ என்று பார்த்தறிந்து தானே புறப்படவேண்டும்" என்றாள்; மகன் "ஆம் அம்மா, அது முறைதான்" என்று சொல்லிவிட்டு விஜயரத்தினத்திடம் போனான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கள் புரோகிதர்"

போனவன் விஜயரத்தினத்திடம் "இந்தப் பட்டினத்தில் யாரும் சிறந்த சோதிடர் இருக்கிறாரோ" என்று கேட்க, விஜயரத்தினம் ஓம் என்று சொல்லிப் பின்னருஞ் சொல்லுகின்றான்; "இங்குள்ள மாரியம்மன் கோயில் அர்ச்சகர் இராமசாமி ஐயர் யாழ்ப்பாணத்திலிருந்து பல வருடங்கட்கு முந்தியே இங்குவந்து இக்கோயிற் பூசையை ஏற்றுச் செய்து வருகிறாராம்; அந்த ஐயர் தமிழ் சமஸ்கிருதம் நன்கு பயின்றவர். புராணபடனஞ் செய்பவர்; சோதிடம், விஷவைத்தியம், மாந்திரீகம் முதலியன நன்கு பயின்றவர். இங்கே எங்கள் புரோகிதரும் அவரே; இன்று வெள்ளிக்கிழமை யல்லவா, என் மனைவியும் நானும் பொழுதுபட அந்தக் கோயிலுக்குப் போவோம்; அப்பொழுது நீரும் வரலாம்; சுவாமிதரிசனஞ் செய்தபின்பு, ஐயரைக் கண்டு விஷயத்தைச் சொல்லி, நாளைக்கு வீட்டிற்கு வரும்படி சொன்னால் அவர் வருவார். ஆகவேண்டியதைப் பார்ப்பித்துக் கொள்ளலாம்" என்று விஜயரத்தினஞ் சொல்ல, சிவகுருநாதனும் அதற்கு உடன்பட்டு அப்படியே செய்தான்; சங்கேதப்படி அடுத்தநாட் காலை புரோகிதர் விஜயரத்தினத்தின் வீட்டிற்கு வருதலும் அங்குள்ளவர்கள் அவரைத் தக்கவாறு உபசரித்தனர்; யாழ்ப்பாணத்து ஐயரென்றமையினாற் கண்ணகியம்மை அவருடைய குலங் கோத்திரத்தை விசாரித்தபோது அவர் யாழ்ப்பாணத்திலே தங்கள் புரோகிதராகவுள்ள ஐயரின் குடும்பத்தைச் சேர்ந்தவரென்பதை அறிந்தாள்; ஐயரும் கண்ணகியம்மையின் மரபு முதலியனவற்றை யறிந்தார்; இருவரும் பரஸ்பரம் தொன்மை பாராட்டினர்; கண்ணகியம்மை தங்கள் வரலாற்றையும் தாங்கள் மலாய்நாட்டில் வந்திருந்தற்குக் காரணத்தையும், தன் பிள்ளைகளின் நிலைமையையும் ஐயருக்கு விபரமாகச் சொல்லிக் கவலைப்பட்டாள், ஐயர் தேறுதல் சொல்லிச் சிவபாக்கியத்தின் சாதகக் குறிப்பைத் தரும்படி கேட்க, கண்ணகியம்மை அதனைக்கொடுக்கும் போது "சாமீ, கன்னிகை யாகவுள்ளவர்களும் யாத்திரை செய்யலாமோ? அப்படி எங்கேனும் பாடல்படிப்பிற் சொல்லப் பட்டிருக்கிறதோ" என்று வினாவ "இக்காலத்தில் நம்மவர்களுள் அப்படியான வழக்கமில்லை யானாலும், கன்னிகை யொருத்தி காசியாத்திரை செய்து தனக்குகந்த கணவனைப்பெற்று வாழ்ந்த கதையொன்றுண்டு" எனலும் "அக்கதையைச் சொல்லுங்கள் சாமி" என்று கண்ணகியம்மை கேட்க, ஐயர் சொல்லத்தொடங்க, பாக்கியலட்சுமி, சிவபாக்கியம், தனபாக்கிய மென்னு மிவர்களும் அக்கதையைக் கேட்கும்படி ஐயருக்குச் சமீபமாக ஒதுங்கி நின்றனர்.

* * *

உலகம் பலவிதம்: 1948 ஜனவரி 16 (முற்றொடர் - 48)

இரத்தினாவல்லி

"கலாவதி யென்னும் உருத்திரகணிகை யொருத்தி ஒரு சிவராத்திரி புண்ணிய காலத்திலே, காசியிலுள்ள இரத்தினேசுவர சிவலிங்கத்தின் சந்நிதியிற் பத்தியோடு நர்த்தனஞ் செய்து பாடியதன் பயனாக, அடுத்த பிறப்பிற் காந்தருவராச னொருவனுக்குச் சிறந்த மகளாய்ப் பிறந்தாள்; பெற்றாரும் பெரியோரும் அவளுக்கு இரத்தினாவல்லியெனப் பெயரிட்டனர்; இரத்தினாவல்லி பேரழகிலும் இசையிலும் யாழ்வாசித்தலிலும் தனக்கு ஒப்பாரும் மிக்காரு மில்லாதவளாக வளர்ந்து கன்னிப்பருவமடைந்தாள்; தந்தையாகிய காந்தருவ வேந்தன் தன் புதல்விக்கு, சந்திரலேகை அனந்தலேகை சித்திரலேகை யென்னும் மூன்று கன்னியரைச் சேடியராக நியமிக்க, அம்மூவருடன் இரத்தினாவல்லி யாழ் வாசித்து இசைபாடிக் கலைமகளை நாள்தோறும் வணங்கிக்கொண்டு புனலாடல் பூக்கொய்தல் பந்தாடல் நாட்டியம் பயிலுதல் முதலிய பொழுதுபோக்கிற்குரிய கருமங்களைச் செய்து வருவாளாயினாள்; அந்த இரத்தினாவல்லிக்கு இறைவனருளால் முற்பிறப்பைப் பற்றிய ஞானங் கைகூட, அதனை யுணர்ந்து அக்கன்னிகை தன்னுடைய பாங்கியர் மூவரோடும் தினந்தோறும் காசியையடைந்து கங்கையில் மூழ்கிக் கடன்முடித்து இரத்தினேசுவரலிங்கப் பெருமானை வணங்கியன்றி ஆகாரம் உட் கொள்வதில்லை யென்ற நியதி பூண்டவளாயினாள்; இங்ஙனமாக, ஒருநாள் இரத்தினேசுவரலிங்கப் பெருமானுடைய சந்நிதியில் இரத்தினாவல்லி தன் தோழியர் மூவரோடும் நின்று யாழ் வாசித்துத் தோத்திரஞ் செய்துகொண்டு மீண்டு தன் மாளிகையை யடைந்து, அன்றிரவு உறங்கிக் கிடக்கும்போது, இரத்தினேசுவரமூர்த்தி அவளுடைய சொப்பனத்திற்றோன்றியருளி "கன்னிகையே, எமது உள்ளமுருக எம் முன்னிலையில் இன்று பகல் நீ நின்று இசை பாடியதன் பயனாக, நின் பெயரோடொத்த பெயருள்ள அரசகுமாரனொருவன் நின்னைச் சொப்பனாவத்தையில் வந்து கலந்து பின்னர் நினக்கு நாயகனாவான் எனக்கூறி மறைந்தருளினர்; விடிந்தபின் இறைவன் தனக்கருளிய வரத்தை இரத்தினாவல்லி தன் பாங்கியருக்கு நாணமீதூர மெல்லமெல்லச் சொல்ல, அவர்கள் கேட்டு மகிழ்ந்து "இவையெல்லாம் நீ செய்த தவத்தின் விளைவு" என்றுகூறி மகிழந்தார்கள்;

கனவு நனவானமை

இரத்தினாவல்லி இறைவன் தனக்குச் சொப்பனத்திலே தோன்றி உதவியருளிய வரத்தை நினைந்தவளாய்க் காதல்மீதூரப் பஞ்சணையிற் படுத்துறங்கும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தினசூட னெனப்படும் உத்தம இலக்கணம் வாய்ந்த நாகருலக அரசகுமாரன் சொப்பனாவத்தையிலேயே தன்னை வந்து கலந்ததாகவுணர்ந்து கண்விழித்து கனவிற் கூடப்பெற்றாள்போல் மதித்துப் பிரிவாற்றாது கலங்கி வேதனையுற்றுச் சோர்ந்தாள்; படுத்த படுக்கைவிட் டெழுதலின்றி வாடிய பூங்கொடியெனக் கிடந்தாள்; சேடியர் மூவரும் அதிகாலையில் அவள் சோகமுற்றுக் கிடத்தலைக் கண்டு உளம் பதைபதைத்து அவள் பக்கலிலிருந்து சோகத்திற்குக் காரண மென்னவென ஆவலுடன் வினவினர்; இரத்தினாவல்லி காரணங்கூற நாணியவளாய்ச் சொல்லுதலின்றித் தன் தோழியருடன் காசித்தலத்தை யடைந்தாள்; கங்கையில் மூழ்கி நித்திய கடன்களை முடித்தாள், இரத்தினேஸ்வரமூர்த்தி சந்நிதியை யடைந்து யாழ்வாசித்து இசை பாடித் துதித்துப் பஞ்சாங்கமாக வீழ்ந்து வணங்கினாள்; பின்னர் தன் சேடியர் புடைசூழ அயலிலுள்ள பூஞ்சோலையை யடைந்தாள்; அப்பூஞ்சோலையின் கணுள்ள ஒரு மரநிழலிலே மலர்களால் மூடுண்டு கிடக்கும் வெண்மணலின் மீது, இரத்தினாவல்லி தன் சேடியர்சூழ இருந்தாள்; முந்திய இரவு கண்ட கனவினைச் சிந்தித்துச்சிந்தித்து உள்ளமுருகினாள்; அந்த நேரத்திற் சிறு தென்றலும் மெல்ல வீசியது; தன் சேடியருளொருத்தியின் மடிமிசை தலை வைத்தபடி அயர்ச்சியடைந்தாள் இரத்தினாவல்லி; அதுகண்ட பாங்கியர் பதைத்துச் சிறங்கையிற் கங்கைநீர் அள்ளிக்கொண்டு இராசகுமாரியின் முகத்திலே தெளித்துச் சைத்தியோபசாரஞ் செய்ய, உறங்கி யெழுவாள் போன்று கண்விழித்து மெல்ல எழுந்திருந்தாள்; கலக்கங்கொண்ட பாங்கியர் மூவரும் ஒருவாறு தேறி அரசகுமாரி கொண்ட கலக்கத்தின் காரணத்தைத் தங்களுக்கு ஒளியாமல் வெளி யிடும்படி பரிவுடன் கேட்டார்கள்; இரத்தினாவல்லி இறைவனுடைய வாக்கின்படி இரத்தினசூடன் தன்னைக் கனவில்வந்து கலந்த இரகசியத்தை உளங்கூச வாய்கூச ஒருவாறு வெளியிட்டு, உள்ளத்தில் வைராக்கியம் பூண்டவளாய்த் தன் பாங்கியர் மூவரையும் நோக்கி;

"உள்ளங் கவர்ந்தென் உளத்தூடு புக்கொளித்த
கள்ளன்றனை யெனக்குக் காட்டா தொழிவீரேல்
துள்ளுங் கடல்போல் துணைவிழியீர் இவ்வுலகம்
எள்ளும் படியான் இறந்து பாடெய்துவனால்"

என் ஆருயிர்ப் பாங்கிமீர்! சொப்பனத்தில் வந்து என்னுடைய அரிய உயிரைக் கொள்ளை கொண்டுபோன அந்தப் புருஷோத்தமனை நீங்கள் எவ்விதத்திலேனும் எனக்குக் காட்டிவைக்க வேண்டும்; செய்யத் தவறுவீரேல், உயிர் மாய்ப்பேன்; இது சத்தியம்" என்று சொல்லி மீளவும் அறிவு சோர்ந்தாள்.

தோழியர் செய்த சூழ்ச்சி

தங்கள் அரசகுமாரியின் தீர்க்கமான சபதத்தைக் கேட்ட மூவரும் சற்றுநேரங் கலங்கினார்கள்; கனவிற்றோன்றியவனை நனவிற் கொண்டு வந்து காட்டுவ தெவ்வாறு என்று சிந்தித்தார்கள்; உபாயஞ் சூழ்ந்து தேறுதலடைந்தார்கள்; அந்த மூவரும் தங்கள் அரசகுமாரியைத் தேறச் செய்து "எங்கள் ஆருயிர் நிகர்த்த குமாரியே கலங்குவதொழிக, கனவிற் கணவனைக் கூட்டிவைத்த கடவுளே, அவனை நனவிலும் உனக்கு நாயகனாகக் கூட்டிவைத்தருளுவார்; நாங்கள் இப்பொழுது, சுவர்க்க மத்திய பாதல மென்று சொல்லப்படும் மூன்று உலகங்களிலுள்ள அரசர்களின் வடிவங்களைச் சித்திரமாகத் தீட்டி உனக்குக் காட்டுவோம்; அவற்றுள் உன் காதலன் வடிவைக் கண்டு தெளிகுதி" என்று ஆதரவுடன் பகர, இரத்தினா வல்லியும் தன் கவலை ஒருவாறு நீங்கப் பெற்றாள். சந்திரலேகை யென்னுந் தோழி இந்திரன் முதலாகச் சொல்லப்பட்ட தேவர்களுடைய வடிவங்களைத் தீட்டிக் காட்டினாள்; அனங்கலேகை யென்னும் பாங்கி பூவுலகிலுள்ள வேந்தர்கள் வடிவினை வரைந்து காட்டினாள்; சித்திரலேகை யென்னுஞ் சேடியானவள் பாதலத்துள்ள அரசர்களின் உருவங்களைச் சித்திரித்துக் காட்டினாள்; முந்திய தோழியரிருவரும் எழுதிக் காட்டிய சித்திரங்களில் தன் காதலன் வடிவினைக் காணாது கலங்கிய இரத்தினாவல்லி சித்திரலேகை வரைந்த பாதல மன்னர் படங்களை ஒவ்வொன்றாகப் பார்த்த போது கடைசியில், தன்னைக் கனவில் வஞ்சித்து மறைந்த காதலனாகிய இரத்தினசூடனுடைய வனப்பு வாய்ந்த வடிவத்தைக் கண்டாள்; தன் கண்களாரப் பார்த்தாள்; தன் இரு கரங்களிலும் ஏந்தி இமைத்தலின்றி இரத்தினாவல்லி தன்னையே மறந்து பார்த்துக்கொண் டிருந்த இரத்தினசூடனுடைய படத்தை, இவனே இவள் விரும்பிய உத்தமபுருஷ னென்றயிர்த்த தோழியருள் ஒருத்தி இரத்தினாவல்லியின் கரத்திலிருந்த படத்தை அகற்றுதலும், அவள் நாணிச் சோகமுற்றாள்; பாங்கியர் மூவரும் பழையபடி அவள் கரத்திற் சித்திரத்தைக் கொடுத்து "அரசிளங் குமாரியே, உன் காதலனை இன்னானென அறிந்து கொண்டோம்; கவலை கொள்ளற்க; உன் குலதெய்வமே அவனை விரைவில் உன்னுடன் கூட்டிவைக்கும், மனந் தளரேல்" என்று தேற்றினார்கள்;

இரத்தினேஸ்வரப் பெருமானே! உனக்கடைக்கலம்!

இவ்வாறு அவர்கள் அவளைத் தேற்றிக் கொண்டு காசியை விட்டகன்று தம் நாட்டை நோக்கிச் செல்லும் மார்க்கத்திலே, சுவா என்னும் ஒரு கொடிய அசுரன் அவர்களைக் கண்டு காற்றெனச் சமீபத்தில் வந்து காமாவேசங் கொண்டானாய் அந்தக் கன்னியர் நால்வரையும் அள்ளிக்கொண்டு விரைந்து போவானாயினான்; அந்த நேரத்திலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தினாவல்லி செய்வதின்னதென அறியாளாய்ச் சஞ்சலமுற்று "இரத்தினேசுவரப் பெருமானே! உனக்கு அடைக்கலம்!! அடைக்கலம்!!!" என்று ஓல மிட்டாள்; அவள் தன் தோழியருடன் சேர்ந்திட்ட ஓலமானது, தன் செவியிற் பட்ட மாத்திரத்தே நாகலோகத் தரசகுமாரன் காற்றென விரைந்து அங்கேவந்து அக்கன்னியர்களை அவன் கொண்டு அப்பாற் செல்ல வொட்டாது தடுத்து "ஏ பேதாய், வீணே என் வாளுக்கு இரையாகாதே, உந்தப் பெண்களை உடனே விடுதலை செய்து உன்னுயிரை மாத்திரங் கொண்டு தப்பிப் போ" என்று கடிந்து கூறினான்; அதற்கு அசுரன் பதிலுத்தரஞ் சொல்லானாய் கன்னியர்களைத் தப்பவிடானாய்த் தன் கரத்திலிருந்த கதாயுத மொன்றைச் சுழற்றி அந்த நாகருலகவீரன் மார்புக்கு இலக்காக எறிந்தான். தனக்கெதிரே வேகமாக வருந் தண்டாயுதத்தை அந்த அரசகுமாரன் தன் கரத்திலுள்ள வாளினால் தடுத்து வெட்டிச் சிதைத்தான்; தான் எறிந்த தண்டாயுதத்தைப் பகைவன் சிதைத்தமையைக் கண்ட அசுரன் நாகம் போலச்சீறித் தன் அதரங்களை வக்கிர தந்தங்களினால் அதுக்கிக் கொண்டு, தன் கரத்திற் கொண்ட வில்லை உறவளைத்து நாணொலி செய்து பல பாணங்களை ஏககாலத்திலே தொடுத்துச் செலுத்தினான்; அது கண்ட நாகருலக அரசகுமாரன் தன் கரத்திலுள்ள வில்லிற் பல வெவ்விய அம்புகளை அநுசந்தித்துச் செலுத்தி அரக்கன் ஏவிய பாணங்களைனைத்தையுந் துண்டங்கண்டு சுவா எனப்படும் அரகனுடைய உயிரையுங் கவர்ந்தான். மாண்ட அரசனுடைய கையிலிருந்து விடுதலைபெற்ற கன்னியர் நால்வரும், தங்கள் மானத்தையும் ஆருயிரையுங் காத்த வீரனுடைய கால்களில் பஞ்சாங்கமாக வீழ்ந்து வணங்குதலும், அவன் அவர்களை எழச்செய்து. உங்கள் நாமதேயமென்ன? இக் கொடியவன் கையில் அகப்பட்டதெவ்வாறு" என்று வினாவ, இரத்தினாவல்லியை யொழிந்த தோழியர் மூவரும் வரலாறு முழுவதையும் எடுத்துச்சொன்னார்கள்; கேட்ட இராசகுமாரன், "கொடிய அசுரன் உங்களைப் பற்றியபோது இரத்தினேசுவரன் பெயரைச் சொல்லி நீவீர் ஓலமிட்ட ஏது என்ன" என்று வினவலும். தங்கள் தலைவி காசியிலுள்ள இரத்தினேசுவர இலிங்கத்தைக் குலதெய்வமாகக் கொண்டு பூசித்துவரும் வரலாற்றைத் தோழியர் அவ் வீரனுக்குச் சொன்னார்கள்; இதற்கிடையில் அந்த வீரனுடைய நாமத்தை யறியும்படி இரத்தினாவல்லி தன் சேடியர்க்குக் குறிப்பால் தெரிவிக்க, அவர்கள் விநயத்தோடு அவன் நாமத்தை வினவ, அவன் என்னை "இரத்தின சூடன் என அழைப்பார்கள்" என்றான்.

* * *

உலகம் பலவிதம்: 1948 ஜனவரி 23 (முற்றொடர் - 49)

இவையெல்லாம் திருவருட் செயலாகும்

அவன் தன் பெயரைச் சொல்லக் கேட்ட இரத்தினாவல்லி அற்புதமடைந்து நாணமீதூரத் தன் காற்பெரு விரலைப் பார்த்தபடி ஒருபுறத் தொதுங்கி நின்றாள். இங்ஙனமாக, திரிலோக சஞ்சாரியாகிய நாரத முனிவர் மூலமாக இந் நிகழ்ச்சியை அறிந்து, இரத்தினாவல்லியின் பிதாவாகிய வசுபூதி யெனப்படுங் கந்தருவராசன் அங்கு வந்துசேர்ந்து அற்புதவயத்தனாய் நின்றான்; இரத்தினாவல்லியும் பாங்கியரும் அவனை வணங்கி விநயமாக நின்றனர்; இரத்தினாவல்லி அப்பொழுது நிகழ்ந்த வரலாறு முழுவதையும் தன் பிதாவுக்குச் சொல்லும்படி தன் பாங்கியருக்குக் குறிப்பாகத் தெரிவிக்க, சந்திரலேகை யென்பாள் நடந்த செய்தி யனைத்தையுஞ் சொன்னாள்; கேட்ட வசுபூதி ஆச்சரியமடைந்தானாய் இறைவன் திருவருளைப் பாராட்டி இரத்தினசூடனுக்கு நன்றி கூறி அவனுடைய வரலாற்றைத் தனக்குச் சொல்லும்படி கேட்டான்; அப்போது இரத்தினசூடன் தன் வரலாற்றைப் பின்வருமாறு சொல்வானாயினான்; "நான் நாகருலகத்து அரசனுடைய புதல்வன்; என்னை இரத்தினசூடன் என்று சொல்வார்கள்; காசித் தலத்திற் கோயில் கொண்டருளிய இரத்தினேஸ்வரலிங்கப் பெருமானை அநுதினமுஞ் சென்று வழிபடும் நியமம் பூண்டுள்ளேன்; சென்ற இரவு அந்தப் பெருமான் என் சொப்பனத்திலே தோன்றி, "அன்பனே, நாளைத்தினம் கந்தருவ கன்னியர் நால்வரை அசுரனொருவன் கவர்ந்து செல்வான்; அந்த நேரத்தில் நீ அங்கே சென்று வழிமறித்து அந்த அசுரனைக் கொன்று, எம்மிடத்திற் பத்தி பூண்டவர்களாகிய நான்கு கன்னியரையும் மீட்குதி எனக் கட்டளையிட்டார்; பெருமானுடைய திருவாக்கைச் சிரமேற்கொண்டு பெருமான் வெளியிட்டருளிய குறிப்பின்படி இந்த மார்க்கமாக வரும்போது, "இரத்தினேஸ்வரப் பெருமானே உனக்கடைக்கலம்" என்று இப் பெண்கள் இட்ட ஓலத்தைக் கேட்டு ஓடிவந்து அக் கொடிய அசுரனைக் கொன்று இவர்களை மீட்டு எம்பெருமானுடைய ஆக்ஞையை நிறைவேற்றி நிற்கின்றேன்; இது தான் என் வரலாறு" என்று உள்ளமுருகச் சொல்லி இரத்தினேஸ்வரப் பெருமானை வழுத்தி நின்றான்; இப்படி அவன் சொல்லக்கேட்ட வசுபூதி யென்னுங் கந்தருவ மன்னன், இரத்தினசூடனும் தன் குமாரியும் இரத்தினேசுவரப் பெருமான் மீது கொண்ட பத்தித் திறத்தையும் அப்பெருமான் இவர்கள் மீது வைத்துள்ள அருளின் திறத்தையும் எண்ணி யெண்ணிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தையுருகி இறைவனை வழுத்தி இரத்தினசூடனை ஆர்வத்துடன் நோக்கி "நாகருலகத்து அரசிளங் குமரனே! இவை யெல்லாம் திருவருட் செயலாகும்; இந்த இரத்தினாவல்லி யென்பவள் என் புதல்வி, இங்கு நிற்கும் மற்றை மூவரும் இவளுடைய பாங்கியர்; இவர்களையும் நான் பெற்ற மக்களாகவே பாவித்து வருகிறேன்; இந் நால்வரும் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தறியார்கள்; அந்தக் கொடிய அசுரனிடமிருந்து இந்நால்வரையும் மீட்டு இவர்களுடைய மானத்தைக் காத்தமையினால் இந்நால்வரும் உனக்கே மனைவியாதற் குரியர்; திருவருட் செயலும் இப்படியென்றுதான் எண்ணுகிறேன்; ஆதலினால் திருவருட் சம்மதப்படி, நீ இப்பொழுது என் மாளிகைக்கு வந்து இந்நால்வரையும் முறைப்படி மணஞ் செய்து ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்" என்றான்; இரத்தினசூடனும் "இதுவும் திருவருட் செயல்" எனத் தன்னுள்ளத்தில் மதித்து அதற்கு உடன்படுதலும், வசுபூதி தன் புதல்வியர் நால்வரையும் இரத்தினசூடனையும் தன் மாளிகைக்கு அழைத்து சென்று அங்குள்ளாரனைவர்க்கும் தைவீகமாவுள்ள இந்த வரலாறு முழுவதையுஞ் சொல்லி முறைப்படி அந்நான்கு கன்னியரையும் இரத்தினசூடனுக்குத் தாராதத்தஞ் செய்து, தன் தகுதிக்கேற்ப மருமகனுக்குப் பல வரிசைகள் சந்மானங்களை யெல்லாங் கொடுத்தான். இரத்தினசூடன் அப் பெண்களுடன் சிலநாள் அங்கிருந்து வாழ்ந்து பின்னர் தன் மாமன் முதலானோரிடம் விடை பெற்றுக்கொண்டு தன் தேவியருடன் காசிக்குச் சென்று கங்கையில் மூழ்கி இரத்தினேசுவரப் பெருமானை வணங்கி, அப்பெருமானுடைய அருளைப்பெற்றுத் தன்னுலகத்தை யடைந்து அங்கே தனது தந்தை தாய் முதலானோர் தன்னையும் தன் தேவியரையும் ஆதரவோடு உபசரித்து இனிது வாழ்ந்தான்" என்று புரோகிதர் இரத்தினாவல்லியின் கதையைக் கண்ணகியம்மை முதலானோர்க்கு எடுத்துக் கூறிவிட்டுச் சிவபாக்கியத்தின் சாதகத்தை அவதானமாகக் கணித்துப் பார்த்தார்.

"ஆங்காலம் மெய்வருந்தவேண்டா"

அரை மணிவரை புரோகிதர் அச் சாதகத்தை அவதானமாகக் கணித்துப் பார்த்து விட்டுப் புன்னகையுடன் கண்ணகியம்மை முதலானோரை நோக்கி "இது அதிர்ஷ்டமான சாதகம்; இந்தச் சாதகத்திற்குரியவர்க்குக் காசி யாத்திரை செய்ய வேண்டுமென்ற பலன் இருக்கிறதெனினும் இப்போதைக்கு அப்படியான பலனில்லை; மேலும் கன்னியாகக் காசி யாத்திரை செய்தலின்றி, இன்னும் ஓராண்டு கழித்துச் சதிபதிகளாகவே காசி முதலாந் தலங்களுக்குங் கங்கை முதலாம் புண்ணிய தீர்த்தங்களுக்கும் யாத்திரை செய்யும் பலனுண்டு; இனி, இச் சாதகருக்கு வெகு சீக்கிரத்தில் விவாகம் நிறைவேறவேண்டி யிருக்கிறது; இந்தச் சமயந் தப்பினால், பின்னர் இப்போதைக்கு விவாக மில்லையாகும்..." என்று சொல்வதற்கிடையில் கண்ணகியம்மை புரோகிதரை நோக்கி, "சுவாமி, இப்போதைக்கு அப்படியான சுபகருமம் ஏதும் நடப்பதாகக் காணவில்லை யென்பதுதான் எங்களுக்குத் தீராக்கவலை; அப்படி நிறைவேறுவதானால்? மாப்பிள்ளை சொந்தத்துள்ளோ, புறத்தியோ, எந்தத் திக்கிலிருந்து பேச்சுக்கால் வரும்" என்று ஆவலுடன் வினாவ, புரோகிதர் "சொந்தமென்ன, புறத்தியென்ன திக்கென்ன இந்தச் சாதகருக்குச் சொந்தத்துட் சிறுபிராயந்தொட்டே ஒருவரனை நிச்சயித்திருக்கிறீர்கள்; இந்தப் பெண்ணுக்கும் தான் அந்த வரனையே கணவனாக அடைய வேண்டுமென்ற வைராக்கியம் உண்டு; அப்படியே அந்த வரனுக்கும் இக்கன்னிகையை யல்லாத வேறு எவரையும் மனஞ்செய்வ தில்லையென்ற பிடிவாதமுண்டு; இவர்களிருவரும் ஒருவரை யொருவர் எந்தநேரமுஞ் சிந்தித்துப் பரஸ்பரம் கவலைப்படுகிறார்கள் ... ..." என்று இப்படிப் புரோகிதர் சொல்லி முடிப்பதற்கிடையில், அந்த இடத்தில் நின்ற சிவபாக்கியம் மெல்ல நழுவி, தன்னை அவர்கள் பாராதவண்ணம், ஆனாற் புரோகிதர் சொல்லும் பலன் தனக்குக் கேட்கத் தக்கதாகிய ஒரு மறைவான இடத்தில் நின்றாள் பின்னரும் புரோகிதர் "நீங்கள் கவலைப்பட வேண்டாம்; இருவருக்கும்முள்ள சில தீக்கிரகங்கள் இவர்களை இவ்வளவு காலமும் இவர்களுடைய மங்கலகருமம் நிறைவேற வொட்டாது இவர்களைப் பிரித்து வைத்திருக்கின்றன; இவர்களிருவரும் ஒருவரை யொருவர் கண்டுங் காணாதவர் போல் இருக் கிறார்கள்; நீங்கள் இந்தப் பெண்ணுக்கு முந்தியே நியமித்து வைத்த சொந்த மாப்பிள்ளைதாம் வந்து சேர்வார்; "ஆங்காலம் மெய்வருந்த வேண்டாம் அந்த நேரம் ஏதோ, எம்மையும் மறந்து விடாதீர்கள்" என்று முகமலர்ச்சியோடு கூறினார்; கேட்டவர்களும் பெரும் ஆநந்தமடைந்தார்கள்; "சாமீ, ஆரை மறந்தாலும் உங்களை மறப்போமோ; நீங்கள்தாம் எங்கள் பிள்ளைக்கு நல்ல கருமம் நடக்கும்போது நிறைவேற்றி வைக்கவேண்டும்" என்றாள் கண்ணகியம்மை; புரோகிதருக்கு ஆகவேண்டிய சந்மானஞ் செய்து விடைகொடுத் தனுப்பினார்கள்; சிவகுருநாதன், சிவபாக்கியம், கண்ணகியம்மை முதலியோர் பின்னருஞ் சிலநாள் அங்கே தங்கியிருந்து, விஜயரத்தினம் பாக்கியலட்சுமி தனபாக்கிய மென்னுமிவர்களிடத்தில் விடை பெற்றுக்கொண்டு தாயும் மக்களும் தங்கள் வாசஸ்தானத்திற்கு மீண்டனர்.

"பொருந்துவன போமினென்றாற் போகா"

சிவகுருநாதன் முதலியோர் தங்கள் வாசஸ்தானத்திற்கு மீண்டு ஒருவாரஞ் சென்ற பின் ஒருநாள் சிவகுருநாதன் தன் உத்தியோகத் தானத்திற் கடமை பார்த்துவிட்டு மீண்டு வரும்போது வெகு ஆநந்தத்துடன் கூடியவனாய் ஒரு கடிதத்தைத் தன் சகோதரி கையிற் கொடுத்து, தாயையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கையையும் நோக்கி "அம்மா, தங்காய், எங்களை நீடித்தநாட் பீடித்த கவலையெல்லாம் இன்றோடு அறவே தொலைந்துவிட்டன. தங்கைச்சி உந்தக் கடிதத்தைப் படித்துப்பாரம்மா" எனலும் தங்கையும் முகமலர்ந்து அக்கடிதத்தைத் திறந்து பார்த்தாள்; ஒன்று சிவகுருநாதனுக்கு விஜயரத்தினமெழுதியதாகும்; அதற்குளுள்ள மற்றது சிவபாக்கியத்திற்குப் பாக்கியலட்சுமி எழுதிய கடிதமாகும்; அதனை ஆவலோடு பார்த்தாள் கண்ணகியம்மை; கடிதத்திலுள்ள செய்தியை யறியவேண்டுமென்ற பேராவலோடு நின்றாள்; சிவபாக்கியம் அக் கடிதத்தின் முதற் பகுதியைத் தாயும் தமயனும் கேட்கும் வண்ணம் படித்தவள், இடையில் மெல்ல வாசித்து அப்பால் வாசிக்காதவளாய், "அம்மா, எல்லா விஷயத்தையும் எங்கள் அண்ணனிடம் கேட்டறியுங்கள்" என்று சொல்லிவிட்டுத் தன் அறையுட் சென்று கடிதத்தை ஆனந்தம்மீதூர ஒருமுறை இருமுறை மும்முறை ஆர்வத்தோடு வாசித்தாள்; இதற்கிடையிற் சிவகுருநாதன் அக்கடிதங்களிலுள்ள சாரத்தைத் தங்கள் தாய்க்குச் சொல்ல அவள் அப்பிள்ளைகளைப் பெற்ற காலங்களில் அடைந்த உவகையைக் காட்டிலும் பன்மடங்கு உவகை யடைந்தாள்; "ஆண்டவன் எங்களைக் கைவிடமாட்டான்" என்று சொல்லி மகிழச்சி பொங்க, இறைவனைச் சிந்தித்து மேலே நோக்கித் தொழுதாள்; சிவபாக்கியமும் அக்கடிதத்தைப் படித்த பின் தன் மார்பிலுள்ள உடையுட் சொருகி வைத்துக் கொண்டு தங்கள் தாயும் தமயனும் நிற்குமிடத்திற்குச் சிந்தை களிகூர வந்தாள்; "மகளே, நீ தெய்வத்தைக் கையெடுத்த பலன் வீண்போகவில்லை" என்றாள் தாய்; "அம்மா, வருந்தியழைத்தாலும் வாராத வாரா - பொருந் துவன போமினென்றாற் போகா"; கருப்பத்திற் குழவியிருக்கும் போதே அக்குழந்தை பிறந்தவுடன் குடிக்கும் வண்ணம் தாயிடத்திற் பால் சுரக்கும்படி யமைக்கும் இறைவன் எல்லா வுயிர்கட்கும் ஆக வேண்டியன செய்து காத்து அருள் புரிவாரம்மா" என்று சிந்தையுருகச் சொன்னான் சிவகுருநாதன்.

* * *

உலகம் பலவிதம்: *1948* ஜனவரி *30* *(முற்றொடர் - 50)*

பாக்கியலட்சுமி எழுதிய கடிதம்

"எல்லாம் வல்ல இறைவன் கிருபையால் இனிதுவாழும் என் அருமையான தாயாருக்கும், அன்பான அண்ணாவுக்கும், ஆதரவான அக்கா வுக்கும் வணக்கத்துடன் எழுதிக்கொள்வது; இங்கு நாங்களெல்லோமும் ஆண்டவனருளாலும், உங்கள் அன்பு ஆதரவினாலும் சுகமே யிருக்கின்றோம்; சிலநாட்களாக நீங்கள் இங்கு வந்து நின்றபோது எங்கள் இல்லம் பொலிவாக விளங்க, நாங்களும் உங்களுடன் ஆநந்தமாகக் காலங் கழித்தோம்; நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தபின், எங்கள் வீடு காடுபோற்புலப்பட, நாங்களும் உங்கள் பிரிவால் வருந்திக் கொண்டிருந்தோம்; இப்படியிருக்கும்போது, என் அருமையான அக்கா! எங்களெல்லாருக்கும் சந்தோஷமான நிகழ்ச்சி இப்பொழுது நிகழ விருக்கிறதென்பதை உங்களுக்குப் பணிவுடன் தெரிவிக்கிறேன்; உங்கள் அருமை மைத்துனர் நேற்றிரவு எங்கள் வீடுதேடி இங்கே வந்திருக்கிறார்; அவர் உங்கள் மைத்துனரென்பதை நாங்கள் முந்தியறியோம்; அவரே சகல வரலாறுகளையும் தாமாகச் சொன்னார்; அவரைச் சிலகாலமாகக் காணாமையால் அவருடைய பெற்றாரும் நீங்களும் படுந் துயரத்தை யெல்லாம் விபரமாக எடுத்துச் சொன்னோம்; அவரும் உள்ளமுருகினார் உங்களுக்கும் எங்களுக்குமுள்ள தொடர்பையும் அன்பையும் அவருக்குச் சொன்னோம்; கேட்டு மகிழ்ச்சி யடைந்தார்; என்னுடைய இவரைக் கொண்டு உங்களுடைய விவாக விஷயமாக அவரைக் கேட்பித்தேன்; அது முந்தியே நிச்சயம் பண்ணிவைத்த விஷயந்தானே யென்று பதில் சொன்னார்; நீங்கள் இங்கு வந்திருந்தபோது உங்களுடைய சாதகத்தைப் பார்த்து எங்கள் புரோகிதர் சொன்ன சோதிட பலன் முழுவதையும் அவருக்கு விபரமாகச் சொன்னோம்; புரோகிதர் சோதிடத்தில் நிபுணர்போற் காணப்படுகிறார் என்று சொன்னார்; இவ்வளவுகாலமும் பெற்றார் உற்றாருக்கு நீங்கள் கடிதமெழுதவில்லையாமே, ஏன் அப்படி எழுதாமல் விட்டீர்கள் என்று கேட்டதற்கு, அவைகளுக்குக் காரணத்தைப் பிறகு சொல்லுவேன் என்கிறார்; சண்டைக் காலத்தில் நீங்கள் அதிக கஷ்டப்பட்டு விட்டீர்கள் போலும் என்று என்னுடைய இவர் கேட்க, படவேண்டியதைப் பட்டுத்தானே தீர வேண்டும் என்கிறார்; நீங்கள் இங்கு வந்திருப்பதாகிய சந்தோஷமான செய்தியை உங்கள் மாமியாருக்கும் என் அண்ணனுக்கும் அக்காளுக்குந் தெரிவிக்கலாமோ ஐயா, என்று கேட்டேன்; "தெரிவிக்கலாந் தங்கைச்சி" என்று எனக்குச் சொன்னார்; அவர் எங்களோடு ஊடாடும் முறைக்கும் பாராட்டும் அன்பிற்கும் எங்கள் அண்ணர் எங்களோடு ஊடாடும் முறைக்கும் பாராட்டும் அன்பிற்கும் எவ்வகையான வித்தி யாசமுமில்லை அக்கா அவரோடு வார்த்தையாடும் போதெல்லாம் எங்கள் அண்ணருடைய ஞாபகமே வருகிறது, அவருக்கும் அண்ணாவுக்கும் பேச்சிலே தோற்றத்திலே அதிக வித்தியாசமில்லை; "ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை - இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே" என்று நான் சிறுவயசிற் படித்த பாட்டின் பயனை இப்பொழுதுதான், அக்கா, கண்டேன்; "ஐயா, உங்கள் விவாக விஷயமாக உங்கள் தாயாருக்கும் அண்ணாவுக்கும் நான் ஏதும் எழுதலாமோ" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைக் கேட்டேன்; "அந்த விஷயமாக, என்ன அம்மா எழுதப்போகிறீர்? என்று அவர் கேட்டார்; நான் அதற்குப் பதில் சொல்வதற்கிடையில் என் பக்கத்தில் நின்ற தங்கைச்சி தனபாக்கியம் "ஐயா, எழுதுவது வேறென்ன? நீங்கள் இங்கே வந்து சேர்ந்துவிட்டீர்கள்; உங்களுக்கும், எங்கள் பெரிய அக்காவுக்கும் விவாகத்திற்கு நாள் குறிப்பது எப்போது? என்றுதான் அவர்களுக்கு எழுதிக் கேட்கப்போகிறோம்" எனச் சொல்ல, அவர் புன்னகை செய்து "மகளே, என்னை எவரும் விரும்பிக் கணவனாகக் கொள்ளக்கூடிய நிலைமையில் நான் இப்பொழுது இருக்கவில்லை" என்று பதில் சொன்னார்; உடனே நான் மனம் வருந்தி "ஏன்? ஐயா, அப்படிச் சொல்லுகிறீர்கள்" என்று கேட்டேன்; அப்பொழுது அவர் கவலைப்பட்டு எங்களைப் பார்த்து "நீங்கள் உலகத்தின் இயல்பு அறியாச் சிறுபெண்கள்; நான் யுத்த காலத்திலே உத்தியோகமிழந்து அரிச்சந்திரன் படாத பாடெல்லாம் பட்டுக் கையில் மடியில் பணம் பண்டமற்றவனாய், ஆனால் எங்கள் சாதிக்குரிய மானத்தை மாத்திரங் கைவிடாமல் ஓட்டாண்டிபோல் வந்து, உங்களைப்பற்றிக் கேள்விப்பட்டு இப்பொழுது உங்களிடம் வந்து ஒதுங்கி நிற்கிறேன்; இந்த நேரத்தில் எனக்கும் விவாகத்திற்கும் இல்லறத்திற்கும் வெகுதூரம்" என்று சொல்லுகிறார்; இப்படி அவர் சொன்ன போது என்னுடைய இவரும் நானும் அவரைப் பார்த்து, "ஐயா, ஏன் இப்படிச் சொல்லுகிறீர்கள்? உங்களுக்கு ஒரு குறையுமில்லை; நீங்கள் புதிதாக எங்கேனும் சம்பந்தஞ் செய்யவேண்டி நேர்ந்தாலல்லவோ உப்படிப் பணமில்லை, பொருள் பண்டமில்லை, உத்தியோகமில்லை, என்றெல்லாம் யோசிக்கவேணும்; இந்தச் சம்பந்தம் சொந்தத்துக்குள்ளேதானே என் அருமை அக்காளெனிலோ உங்களைத் தான் சின்ன வயசிலேயே மனத்தில் வரித்துக்கொண்டதாகவும், வேறு சம்பந்தம் செய்யக் கனவிலும் நினைப்பதில்லை யென்றும் வைராக்கியம் பூண்டு, சதா உங்கள் தியானமாகவே இருக்க, நீங்கள் இப்படிச் சொல்லலாமா? என்றெல்லாம் சொன்னேம்; அதற்கு அவர் தாமும் விவாகஞ்செய்வதானால், உங்களையே விவாகஞ் செய்வதெனவும், இல்லையேல் துறவியாகக் காலங் கழிப்பதென்றவர், ஒருவன் இல்வாழ்க்கையுட் புகமுன் போதிய பொருளை நீதியான வழியில் ஈட்டிக்கொள்ளல் வேண்டு மெனவும், இல்லையேல் இல்லறத்தைக் காட்டிலும் துறவறமே சிறந்ததெனவும், மனைவியாய் வர விருப்பவளின் சீதனத்தை நம்பியும், பிறர் பொருளுதவி செய்வாரென எண்ணியும் இல்லறத்திலே புகுதல் மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவது போலாகுமெனவும், எக்காலத்திலும் ஏற்பதிகழ்ச்சி யெனவும், நளமகாராசன் சூதாடி நாடுநகரைப் பறிகொடுத்துச் செல்வமெல்லாமிழந்து உடுக்கத் துணிதானுமின்றித் தன் மனைவிமக்களுடன் நாட்டை விட்டுக் காட்டகத்தே போனபோது, அவனுடைய தேவியாகிய தமயந்தி சிந்தை வருந்தி, அவனை நோக்கி, "அரசே, உங்கள் மாமனார் மாளிகைக்குப் போவோம் வருகிர்" என இரந்து கேட்டபோது அவனைப் பார்த்து:

"தினக்கதிவேற் கண்மடவாய் செல்வர் பாற்சென்று(ஈ)
எனக்கேன்னுமிம் மாற்றம் கண்டாய் - தனக்குரிய
தானந் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து
மானந் துடைப்பதோர் வாள்."

என அக்காலத்திற் சொன்னது பொய்யாமோ எனவும் நியாயம் பேசுகிறார்; எங்கள் சாமியாரைக் கொண்டு உங்கள் மைத்துனருக்குப் புத்தி சொல்லுவிக்கலாமோ என்றால், சாமியார் எங்கள் வித்தியாசாலையில் மூன்றுவார விடுமுறைநாள் பெற்றுக்கொண்டு சிதம்பர தரிசனத்தின் பொருட்டுப் போய்விட்டார்; இதனால் இன்று அதிகாலையில் என்னுடைய இவர் எங்கள் புரோகிதரிடம் போய் அவரை யழைத்துவந்து உங்களுடைய மைத்துனரையும் புரோகிதரையும் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தினார்; புரோகிதர் தீமையான காலமெல்லாம் கழிந்துவிட்டதெனவும் இனிமேல் நல்ல காலம் பிறக்கப்போகிறதெனவும் பலன் கூறிப் பலவகையான புத்தி சொன்ன பிறகுதான் உங்கள் அருமை மைத்துனர் விவாகஞ்செய்ய ஒருவாறு உடன்பட்டிருக்கிறார். வருகிற வெள்ளிக்கிழமை யிரவு 8 மணிக்குமேல் விவாகத்திற்காகிய நாளெனவும் எங்கள் புரோகிதர் நிச்சயம்பண்ணி யிருக்கிறார்; ஆனதால் உவ்விடத்தில் ஆகவேண்டியன செய்யுங்கள்; கடவுளருளால் எல்லாம் இனிது நிறைவேறும்; மாப்பிள்ளை செய்யவேண்டிய ஆயத்தங்களை யெல்லாம் நாங்கள் இங்கே செய்து, புரோகிதரையும் உடனழைத்துக் கொண்டு மாப்பிள்ளையோடு உவ்விடம் வெள்ளிக்கிழமை அதிகாலை உங்கேவந்து சேரத்தக்கதாய்ப் புறப்படுவோமென எழுதும்படி என்னுடைய இவர் எனக்குச் சொன்னார்; அதன்படியே இக்கடிதத்தை எழுதலானேன்; அண்ணாவுக்கு இவர் எழுதிய கடிதமும் இதற்குளிருக்கிறது; இன்னும் இங்கே எங்களால் ஆகவேண்டியவை யிருந்தால் உடனே தெரிவியுங்கள்; எல்லாருக்கும் நமஸ்காரம்;

இங்ஙனம்,
உங்கள் அன்புள்ள தங்கை,
வி. பாக்கியலட்சுமி

இக்கடிதமே கண்ணகியம்மை சிவகுருநாதன் பாக்கியலட்சுமி இராமன் என்னு மிவர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியை விளைத்ததாகும்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1948 பெப்ரவரி 06 (முற்றொடர் - 52)

விவாகத்திற்காகிய ஆயத்தங்கள்

விவாகமுகூர்த்தத்திற்குச்சிலநாட்கள் மாத்திரமிருந்தமையினால், மாப்பிள்ளை, பெண் பிள்ளையின் வாசஸ்தானங்களில் விவாகத்திற்காகிய முயற்சிகள் செய்யப்படலாயின; சிவபாக்கியமும் சிவகுருநாதனும் முறையே பாக்கியலட்சுமிக்கும் விஜயரத்தினத்திற்கும் பதிற் கடிதத்தை உடனே யெழுதியனுப்பினர்; சிவகுருநாதன் தன்னுடன் உத்தியோகம் பார்க்கும் நண்பர்களுக்கும் தனக்கறிமுகமானவர்களுக்கும் மங்கலச் செய்தியைத் தெரிவித்து, அவர்களைப் பத்தினி சுற்றமித்திரர் முதலானோருடன் விவாகவேளையிற் சமுகஞ் செய்து, தம்பதிகளை ஆசீர்வதிக்கும் வண்ணம் கேட்டுக்கொண்டான்; அப்படியே மாப்பிள்ளை பகுதியிலும் விஜயரத்தினம் தன் சுற்றமித்திரர்கட்கும், பாக்கியலட்சுமி தன்னுடன் கலாசாலையிற் படிப்பிக்கும் உபாத்தியாயர்கள், மாணாக்கர்களுக்கும், தன்னுடன் பழகியுள்ள பெண்களுக்கும் திருமணச் செய்தியைத் தெரிவித்தனர். அந்த நேரத்திலே சாமியார் அங்கு இல்லாமை பாக்கியலட்சுமிக்கும் தனபாக்கியத்திற்கும் கவலையாகவிருந்தது; யாழ்ப்பாணத்திலுள்ள மாப்பிள்ளையின் பெற்றார், மரகதம் அவள் கணவன் என்னுமிவர்கட்கும்; அங்குள்ள நெருங்கிய உறவினர்க்கும் மணவோலை யனுப்பப்பட்டன. முகூர்த்த தினத்தன்று காலையே பெண்வீட்டிற் போய்ச் சேரத்தக்கமுறையில்; சுபநேரம் பார்த்து மாப்பிள்ளை பகுதியார் பயணம் புறப்பட்டனர்; மாப்பிள்ளையோடு விஜயரத்தினம், பாக்கியலட்சுமி, தனபாக்கியம், புரோகிதர் என்னுமிவர்களுடன் விஜயரத்தினத்தின் உற்ற நண்பர்கள் சிலர் தத்தம் மனைவி மக்களுடனும் கலாசாலை உபாத்தியாயர் சிலரும் பெண்களும் புறப்பட்டு வரலாயினர்; அவர்கள் தம் வரவைப் புறப்படும்போதே தந்திமூலமாகத் தெரிவித்திருந்தமை யினால் பெண்வீட்டார் அதற்குத்தக்க வேறொரு வீட்டினைச் சமயோசிதமாக ஒழுங்குசெய்து தம்மிடம் வந்த மாப்பிள்ளையையும் அவருடன் வந்தவர்களையும் எதிர்கொண்டு உபசரித்து அழைத்துப்போய் அந்த இல்லத்தில் அமரச் செய்தனர்; பாக்கியலட்சுமியையும் தனபாக்கியத்தையும் அவர்களுடன் வந்த பெண்களையும் பெண்வீட்டுக்காரர் உடனே தங்கள் வீட்டிற்கு அழைத்துச்சென்றனர்; கல்யாண வீட்டிற்கென்று வந்தவர்களெல்லாருக்கும் ஸ்நானம் போசனம் மென்னு மிவைகளுக்காகிய ஒழுங்குகளும் செய்யப்பட்டிருந்தன.

விவாகம்

முகூர்த்தஞ் சமீபித்தலும் மணமகள்வீட்டிலுள்ளவர்களும், அங்கு வந்து சேர்ந்தவர்களுமாகிய மங்கலமான ஆடவர்களும் மகளிர்களும் மங்கலவாத்தியத்துடன் மணமகனுடைய வாசஸ்தானத்தை யடைந்து அங்கே விருந்தருந்தி, மணமகனையும் அங்குள்ள ஏனையவரையும் அழைத்துவரலாயினர்; புரோகிதர் சற்று முந்தியே மணக்கிரியை ஆரம்பித்தற் பொருட்டுப் பெண்வீட்டிற்குச் சென்றிருந்தார்; மாப்பிள்ளை மணப்பந்தரை யடைதலும், பெண் வீட்டினர் முறைப்படி உபசரித்து அழைத்துக் கொண்டுபோய் மணவறையிலிருத்தினர்; விவாகக் கிரியைகள் முழுவதும் வைதிகமுறைப்படி நிறைவேறின; சிவகுருநாதன் சிவபாக்கிய மென்னுமிவர்களின் சொந்தக்காரராய் அந்த நாட்டிற் பலவருட காலமாக வாசஞ்செய்த புத்திரபாக்கியம் முதலிய செல்வங்களோடு கூடிய முருகேசபிள்ளை யென்னும் பெரியோரும் அவர் மனைவியும் தங்களைப் பெண்ணின் பெற்றாராகப் பாவித்துக் கன்னிகாதானஞ் செய்ய விஜயரத்தினமும் பாக்கியலட்சுமியுமே மணமகன் சார்பாகவிருந்து ஏற்றனர்; அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல் முதலாங் கிரியைகளெல்லாம் நிறைவேறியபின் மணப்பந்தரிலுள்ள மங்கலமான ஆண்களும் பெண்களும் தம்பதிகளை ஆசீர்வதித்தனர்; மணமக்களை வாழ்த்தியபடி தந்திச் செய்திகளும், அந்தநேரத்தில் அங்கு வந்தன; மணவீட்டிற்கு வந்தோர் விருந்துண்டு கொண்டாடித் தத்தம் இடங்களுக்கு மீண்டனர்; மணமக்கள் சகல ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும்வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக என்ற வாழ்த்துச்செய்தி பத்திரிகைகளில் வெளிவந்தன.

* * *

உலகம் பலவிதம்: 1948 பெப்ரவரி 13 (முற்றொடர் - 53)

"எந்தப்புற்றில் எந்தப் பாம்புண்டோ"

விவாகம் நிறைவேறியபின் இரண்டு தினம் மணமக்கள் வீட்டிலே தங்கியிருக்க புரோகிதரும் மணமகனோடு வந்தவர்களும் தத்தம் ஊருக்கு மீண்டார்கள்; விவாகம் நிறைவேறிச் சிலநாட் சென்றபின் ஒருநாள் நமசிவாயமும் சிவபாக்கியமும் அன்புடன் வார்த்தையாடிக் கொண்டிருக்கும்போது, சடுதியிற் சிவபாக்கியஞ் சிறிது கவலையோடு காணப்பட்டாள்; அதனை அவதானித்த நமசிவாயம் "என்ன முகவாட்டம்" என்று அன்புடன் கேட்க, "ஒன்றுமில்லை, எங்களுக்கு விவாகம் நடந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தில், எங்கள் சாமியார் சமுகஞ் செய்யவில்லையே யென்பதையிட்டுத் தான் சிந்திக்கிறேன்" எனலும் விசுவநாதன் சிரித்தான்; "ஏன் சிரிக்கிறீர்கள், நான் சொன்னதில் ஏதுந் தவறுண்டோ" என்று ஊடாடினாள் சிவபாக்கியம்; "மங்கலகருமம் நடக்கும் நேரத்திலே ஆண்டி பரதேசிகளுடைய சமுகம் ஆகாதென்றல்லவா, கண்ணே, சொல்வார்கள்; ஆனதால் அவர் அந்த மங்கல வேளையில் இல்லாமற்போனது நல்லதென்றல்லவா, கண்ணே, சொல்வார்கள்; ஆனதால் அவர் அந்த மங்கல வேளையில் இல்லாமற் போனது நல்லதென்றல்லவா நான் நினைக்கிறேன்" என்றான் கணவன்; "எங்கள் சாமியாரை ஆண்டியென்றும் பரதேசியென்றும் நாங்கள் எண்ணுவது சரியல்ல, பாருங்கள், அவரை நாங்கள் எங்கள் குரு என்று மதித்திருக்கிறோம்; அவர் அறிவுடையவர், ஒழுக்கமுடையவர், தெய்வசிந்தனை யுடையவர்; தீர்த்தயாத்திரை தலயாத்திரை செய்பவர்; எங்களிடத்து நல்ல அன்புடையவர்; அவருடைய உபதேசத்தைக் கேட்டு நடந்தால் நாங்கள் நல்லாய் வாழலாம்; நீங்கள் அவருடன் இன்னமும் ஊடாடவில்லை; ஊடாடத் தொடங்கினால், பின்பு அவர் போன்ற பெரியாருடைய பிரிவு கவலையைத் தரும்" என்று அன்புகூரச் சொன்னாள் காதலி "அப்படியா? அவருடைய பெருமையை நான் முந்தியறியேன்; அவர் இல்லறத்திலிருந்து பின் துறவியானவரா? இல்லையேல் இல்லறத்திற் புகாது துறவியானவரா? தனபாக்கியம் அவருடைய சொந்த மகளல்லவா" என்று வினாவினான் கணவன்; "அவர் இல்லறத்திற் புகாமலே துறவியானவராம்; தங்கைச்சி தனபாக்கியம் அவருடைய சுவீகார புத்திரியாம்" என்றாள் வாழ்க்கைத் துணைவி; "என் அன்பே, சொல்லுகிறேனென்று கவலைப்பட வேண்டாம், இந்தக்காலத்திற் காணப்படும் சுவாமிகள் சந்நியாசிகள் துறவிகளில் எனக்கு அதிக நம்பிக்கையில்லை; இவர்கள் ஒவ்வொரு நோக்கம்பற்றித் துறவிகளென்றுஞ் சாமிகளென்றுஞ் சந்நியாசிகளென்றுஞ் சஞ்சரிக்கிறார்க ளென்பதுதான் எனது கொள்கை; எந்தப்புற்றில் எந்தப் பாம்பிருக்கிறதோ, ஆர் அறிவார்" என்றான் நமசிவாயம்; கேட்ட சிவபாக்கியத்தின் முகத்திற் சிறிது வாட்டங் காணப்பட்டதே யல்லாமல், அவளுடைய வாயிலிருந்து ஏதும் பதில் பிறந்திலது.

"பெண்டிர்க்கழகு எதிர்பேசாதிருத்தல்"

தான் சொன்னவார்த்தை தன் காதலியின் உள்ளத்தைப் புண்படுத்தி விட்டதெனவுணர்ந்த கணவன் அவளை அன்புடன் பார்த்து "ஏன் பேசாதிருக்கின்றீர், என்னுடன் கோபமா" என்று இதமுறக் கேட்டான்; கோபமுமில்லை, மன வாட்டமுமில்லை, "பெண்டிர்க்கழகு எதிர்பேசாதிருத்தல்" என்று கனிவுறப் பன்னிவிட்டு வாளாவிருந்தாள் காதலி. "இது எதிர்பேசுவதல்லவே, அபிப்பிராயபேதந்தானே, நீரும் உம்முடைய எண்ணத்தைச் சொல்லலாமே" என்று கணவன் இதமுறக்கூற "உங்களுக்கும் எனக்குமிடையில் அபிப்பிராயபேத மில்லையே, இனிமேல் எனக்கென்று தனியேயொரு அபிப்பிராயமுண்டோ" என்றாள் இல்லக்கிழத்தி; "கண்ணே, உம்முடைய அபிப்பிராயமும் எம்முடைய அபிப்பிராயமும் ஒன்றாயின், நீர் பேசுவன எவையும் எதிர்பேசுவனவாகா; ஆதலால் உமது எண்ணத்தைக் கூசாமற் பேசும்" என்றான் நமசிவாயம்; "வேறொன்றுமல்ல, பாருங்கள், சிலர் போலித் துறவிகளாய்ச் சந்நியாசிகளாய்ச் சாமிகளாய் நடித்தனரென்ற காரணத்தினால், துறவிகள் பெரியார் எல்லாரையும் நாம் விபரீதமாக எண்ணியிட வொண்ணாதென நினைக்கிறேன்; போலிவேடம் பூண்டவரிடத்தும், நாம் உண்மையான பெரியாரென்றெண்ணி விசுவாசத்தோடு நடந்தாற் சிலவேளை, அந்தப் போலிப் பெரியாரும் தம்மேல் மக்கள் வைக்கும் மதிப்போடு கூடிய நம்பிக்கையை யுணர்ந்து உண்மையான பெரியாராய்த் திருந்துதலுங் கூடுமென்று சொல்லி, அரசனாய் வருதற்கு ஆண்டிவேடம் பூண்ட ஒருவன் பின்னர் அந்த அரசபதவியை வெறுத்து உண்மைத் துறவியான கதையுஞ் சொல்லக் கேட்டிருக்கிறேன், நீங்கள் அறியாதவல்ல" என்றாள் சிவபாக்கியம்; "என் பாக்கியமே, அக்கதையை நான் அறியேன், சொல்லும்" என்று ஆர்வத்துடன் நாயகன் கேட்க, நாயகி சொல்லுவாளாயினள்:-

"தூயவை துணிந்தபோது பழிவந்து தொடர்வதுண்டோ"

"புத்திரப்பேறில்லாத அரசனொருவன் தன் அந்தியகாலத்தில் தன்னுடைய மந்திரிமாரை விளித்து "மதி மந்திரிகளே, சந்ததி சந்ததியாக இந்நாட்டை யாளுவதற்கு எமக்கோ பிள்ளைப் பேறில்லாமையினால், நான் இவ்வுலக வாழ்வை யொருவினவுடனே, நீங்கள் எமது பட்டத்து யானையைத் திட்டஞ்செய்து இப்பட்டினத்து வீதிவழியே நடத்திச் செல்லுங்கள்; அப்படிச் செலுத்தும்போது தெய்வபத்தியுடையவ னெவன் முதல் எதிர்ப்படுகிறானோ, அவனையே யானை மீது ஏற்றி யழைத்துக்கொண்டு வந்து சிம்மாசனத்திலிருத்தி மகுடாபிஷேகஞ்செய்து அரசனாகக் கொண்டு இராச்சியத்தை நடத்துங்கள்" என்று சொல்லிவிட்டு உயிர் நீங்கினான்" இந்த அரசனுடைய ஈமக்கிரியைகளை முடித்துவிட்டு மந்திரிமார் அப்படியே பட்டத்து யானையை அலங்கரித்து நடத்திக்கொண்டு போவாராயினர்; அரசன் சொன்ன இந்த இரகசியத்தை முந்தியே யறிந்த ஒருவன், யானை புறப்பட்டுப் போவதை யுணர்ந்து, காவியுடை விபூதி உருத்திராக்க மென்னு மிவைகளைத் தரித்துத் துறவி போல் வேடம் பூண்டு, பட்டினத்தின் எல்லையிலுள்ள ஆற்றங்கரையில் நிற்கும் ஒரு அரசமர நீழலிற் சிவயோகத்திலிருப்பவன்போல் இருந்தான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஆற்றங்கரைவரை யானையை நடத்திச் சென்ற அமைச்சர் அந்தப் போலிச் சந்நியாசியைக் கண்டு அவன் முன்னிலையில் யானையைச் செலுத்திக்கொண்டுபோய், அத்துறவியை வணங்கி, விஷயத்தை விண்ணப்பஞ் செய்து யானைமேல் எழுந்தருளி மாளிகைக்கு வரும்படி இரந்தார்கள். துறவி தொடக்கத்தில் அரசனாதற்கு மறுத்தனனேனும் பின்னர் மந்திரிமார் வேண்டு கோளுக்கு ஒருவாறு இசைந்து யானைமீதேறிக் கொண்டு அரசமாளிகையை யடைதலும், மந்திரிமார் பிரதானிகள் முதலானோர் அவனை அரியணைமேல் இருத்திப் பட்டாபிஷேகஞ் செய்து முடிசூட்டித் தங்கள் அரசனாகக்கொண்டு அவனுடைய ஆஞ்ஞைப்படி நடப்பாராயினர். அந்த நாட்டிலுள்ள மக்களும் அவனைத் தங்கள் அரசனாக மதித்து அன்பும் வணக்கமும் பாராட்டி யொழுகுவாராயினர்; போலித் துறவியாகிய தான் அரசபதவியைப் பெற்றமையையும், தனக்கு மக்கள் செய்யும் வணக்கத்தையும்பற்றி ஒரு நாள் இரவு அந்த அரசன் தன் படுக்கையிற் கிடக்கும்போது சிந்தித்தான்; அவனுடைய உள்ளத்தில் உடனே ஞானம் பிறந்தது. "தடித்த உலகப்பற்றேயொழிய எள்ளளவும் தெய்வப் பற்றில்லாதேனாகிய நான் போலியாகச் சந்நியாசி வேடம் பூண்டமையினாலே இந்த நாட்டிற்கு அரசனானேன்; சகல செல்வங்களையும் அதிகாரத்தையும் மக்கள் மதிப்பையும் பெற்றேன்; போலி வேடத்தைப் பூண்டமையினால் இப்படியான பெருமைகளைப் பெற்ற நான் மனப் பூர்வமான துறவியாக மாறுவேனேல், உலகத்திலுள்ள மன்னரும் தேடிவந்து என் அடி பணிவார்களல்லரோ! உண்மைத் தவத்தையீட்டி நானும் மறுமையில் இறைவனடி சேரலாகுமல்லவா? இந்த மாயப் பிரபஞ்சமாகிய சேற்றிற் கிடந்து அழுந்துவதை விடுத்து இறைவனருளால்; நான் நிசமான துறவியாதல் வேண்டும்" என்று நிச்சயித்தான்; அன்றிரவு முழுவதும் அவன் உறங்கிலன்; விடிதலும் அவன் எழுந்து தன் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு போசன மருந்தி வழக்கம்போல் அத்தாணி மண்டபத்தை யடைந்து, அங்குவந்து கூடிய மந்திரிகள் பிரதானிகள் மற்றைப் பரிவாரங்களிலுள்ளா ரெல்லாருக்கும் தன்னுடைய பூர்வ வரலாற்றையும் தான் அப்பொழுது கொண்டுள்ள மேலான நோக்கத்தையும் உள்ளபடி யெடுத்துச்சொல்லி, இராச்சியபாரத்திலிருந்து தன்னை மீட்டுவிடும்படி கேட்டான். கேட்டோரனைவரும் ஆச்சரியமடைந் தனர்; அதன் பின்னரும் சிலகாலமேனும் இராச்சியப் பொறுப்பை நிர்வகித்துக் கொள்ளும்படி அவனை வேண்டினார்கள். "தூயவை துணிந்தபோது வழிவந்து தொடர்வதுண்டோ" என்று சொல்லி அவன் ஒரு கணமேனும் அரசனாகவிருக்க உடன்படாது மறுத்துவிட்டுத் துறவுபூண்டு அந்த நதிதீரத்திலுள்ள அரச மரத்தின் கீழிருந்து தெய்வத்தைத் தியானிப் பானாயினான்; மந்திரிகள் அதுகண்டு முந்திய அரசவமிசத்திலேயுள்ள வேறொருவனைத் தங்கள் அரசனாக்கி அந்நாட்டின் பரிபாலனத்தை நன்கு நடாத்தினார்கள்; அரசியல் விஷயமாகவும் வேறு விஷயமாகவும் தங்களுக்கு நேரும் சந்தேகங்களை யெல்லாம் ஆற்றங் கரையிலிருக்கும் அத் துறவியிடம் போய்ப்போய் முறையிட்டு அவன் சொல்லும் புத்தியைக் கேட்டு இனிது நடந்தார்கள் என்பது கதை. என்னுயிர்த் துணைவரே, எதற்காக இதைச் சொன்னே னென்றால். அகத்திலே தூய குணம் ஒழுக்கமில்லாது புறத்தே மாத்திரம் நடித் தொழுகுபவரையும் நாம் அகமும் புறமும் தூயரென்று நம்பி நடந்தால், எங்கள் நம்பிக்கை மூலமாக அவர்கள் உண்மையான தூயராதலுங் கூடுமென்பதற்கு உதாரணமாகச் சொன்னேன்; தங்களுக்கு நான் கதை சொல்ல முற்பட்ட தாகிய என் துணிவைப் பொறுத்துக் கொள்ளுங்கள்" என்று இன்புறச் சொல்லி முடித்தாள் இல்லக் கிழத்தி.

* * *

உலகம் பலவிதம்: 1948 பெப்ரவரி 20 (முற்றொடர் - 54)

"அவர்தாம் இவர்"

"என் அன்பே, நீர் சொல்வதும் நிசம்; ஆனால் அருச்சுன சந்நியாசி போன்றவர்களும் உலகத்திற் சஞ் சரிக்கிறார்களல்லவா; அதனாற்றான் ஆண்டிவேடம் பூண்டோர் எல்லாரையும் நம்பவொண்ணாதென்றேன்" என இதமுறச் சொன்னான் நமசிவாயம்; "அருச்சுனன் சந்நியாசி வேடம் பூண்டு ஆருக்குத் தீமை செய்தான்? அருச்சுனன் சந்நியாசிவேடம் பூண்டு அரிய தவத்தைச் செய்து பரமசிவனுடன் வாதாடிப் போர்புரிந்து அப்பெருமானுடைய திருவருளாற் சிவப்படைக்கலத்தைப் பெற்றுப் பகைவரை வென்றானென்றல்லவோ பாரதத்திற் சொல்லப் பட்டிருக்கிறது; அந்தச்செயல் அவனுக்குப் புகழ்ச்சியை யன்றி இகழ்ச்சியைத் தந்ததல்லவே" என்று பணிவுடன் சொன்னாள் சிவபாக்கியம். "காண்டீபன் பூண்ட தவவேடத்தைப்பற்றி நாம் குறைசொல்ல முடியாது; அந்த விஷயமாக நீர் சொன்னவை நிசம்; ஆனால் அவன் பூண்ட சந்நியாச வேடத்தினால் துரியோதனனும் பலராமனும் சுபத்திரையும் ஏமாந்தனரென்று பாரதத்திற் சொல்லப்பட்டிருக்கிறதே; அதையிட்டே நான் குறைசொன்னேன்" என்றான் நமச்சிவாயம். "உங்கள் வார்த்தைக்கு எதிர் வார்த்தை சொல்லுகிறேனென்று குறையெண்ணாதீர்கள், பார்த்தன் பூண்ட சந்நியாச வேடத்திலே பரசுராமன் துரியோதனன் முதலிய சிலர் ஏமாந்தன ரெனலாம்; ஆனாற் சுபத்திரை ஏமாந்தாளென்று நாம் எப்படிச் சொல்லமுடியும்; அந்த உத்தமி தான் வரித்த கணவனாக அருச்சுனனைப் பெறுவதற்கு அவன் பூண்ட துறவிவேடந்தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையாயிருந்தது; இல்லாவிட்டால், பாவம்! சுபத்திரை அதிக சஞ்சலப்பட்டிருப்பாளே அந்த விஷயத்தில் அருச்சுனனாக, சுபத்திரையையாக நாங்கள் குறைசொல்வது முறையல்லவே; என்னுயிர்த் தலைவரே" என்று கனிவுறச் சமாதானஞ் சொன்னாள் காதலி. "என் பாக்கியமே, அருச்சுன சந்நியாசி செய்தது முறையென்றால். உங்கள் சாமியாரை நான் குறைசொன்னது தவறு இவரும் பெரிய சாமியார்தாம்" என்று புன்னகையுடன் சொன்னான் புருஷன்; கேட்ட சிவபாக்கியம் சிறிதுநேரஞ் சிந்தித்தாள், தன்னுள்ளத்தில் ஏதோ அயிர்த்தாள்; அருகிலிருந்தவள் உடனே யெழுந்தாள்; நாணினாள், மனங் கோணினாள், அற்புதமடைந்தாள்; நிலத்தைப் பார்த்தவண்ணம் பூங்கொடியென்ன ஏங்கி ஒதுங்கி நின்றாள்; முக மலந்தாள், புன்முறுவல் பூத்தாள்; தன் கணவனை இருகரமுங் கூப்பி நமஸ்காரஞ் செய்தாள். சமீபத்தில் வந்து விநயத்தோடு நின்று "என்னைச் சோதிக்கின்றீர்களா? உண்மையைச் சொல்லுங்கள், எங்கள் சாமியார் இப்பொழுது எங்கேயிருக்கின்றார்" என்று கனிவாய் திறந்து இனிவுற வினாவினாள்; கணவன் சிரித்துக் கொண்டு "உம்மை முந்தியே சோதித்து விட்டேன்; சோதனையில் நீர் பூரண சித்தியடைந்து விட்டீர்; உண்மையைத்தான் சொல்லுகிறேன்; உங்கள் சுவாமியார் இருக்குமிடம் எனக்கெப்படித் தெரியும்" என்று பதில் சொன்னான் கணவன், கேட்ட நாயகி சிறிது ஊடினாள்போல "எனக்கு நீங்கள் உண்மையைச் சொல்லமாட்டீர்களா" எனப் பன்னுதலும் "உமக்கல்லாமல் வேறு யாருக்கு நான் உண்மையைச் சொல்வது" என்று புன்னகை பொருந்தப் புகன்றான் நாயகன்.

சிவபாக்கியம்: அப்படியானால், எங்கள் சாமியார் எங்கேயென்று உண்மையைச் சொல்லுங்கள்?

நமசிவாயம்: சொல்லுவேன்; ஆனால் எனக்கு ஆருடந் தெரியாதே, என்ன செய்வேன்.

சிவபா: (சிறிது தியங்கிப் பின்னர்க் கணவனை அன்பொழுகப் பார்த்து) நீங்கள்தாம் அந்தச் சாமியாரென்று நான் நினைக்கிறேன்.

நம: நீர் நினைத்தால் நான் அதற்கு என்ன செய்யலாம்.

சிவபா: நீங்கள் எனக்கு உள்ளதைச் சொல்ல மறுக்கிறீர்கள், ஆனதால் நான் உங்களோடு கோபம்.

நம: நீர் கோபித்தாலும் நான் உம்மோடு கோபிக்கவில்லை; ஒருவர் பொறை இருவர் நட்பல்லவா?

சிவபா: நான் சும்மா சொன்னேன்; உங்களோடு நான் எப்போதாயினும் கோபிப்பேனா, என் அருமை நாயகரே, என்மனஞ் சஞ்சலப்படுகிறது; அது உங்களுக்குப் பிரியமானால், உண்மையைச் சொல்லாது மறைத்துவைத்துக் கொள்ளுங்கள்; (என்று கண்களில் நீர் ததும்பச் சொல்லி யிரந்தாள்.)

நம: கண்ணே, நீர் சஞ்சலப்படவேண்டாம்; "அவர்தாம் இவர்" என்று தன் மார்பில் அவள் கரத்தைப் பற்றிவைத்துச் சொல்லிப் பரிவுடன் தன் காதலியைப் பக்கத்தில் இருத்தினான். கேட்ட சிவபாக்கியம் தன்னையுங் கடந்த ஆநந்தமடைந்தாள்; தன் கொழுநனை தலைமுதற் பாதம் வரையில் உற்றுப்பார்த்தாள்; இன்னமுஞ் சந்தேகமா" என்று புன்னகையுடன் கணவன் கேட்க, "இல்லை, இம்மியத்தனையுஞ் சந்தேகமில்லை" என்று சொல்லிப் பேருவகை யடைந்தாள் சிவபாக்கியம். அவள் பின்னர்த் தன் கணவனை அன்புகூர நோக்கி "நீங்கள், நல்ல ஆள்" என்றாள்; "நீரும் நல்லாள் என்றெண்ணியே உம்மைத் தேடி இங்கு வந்தேன்" என்று சொல்லி சிரித்தான் கணவன்; தன் கணவனுக்குச் சொல்லிக்கொண்டு சந்தோஷத்துடன் அவ்விடத்தை விட்டகன்றாள் சிவபாக்கியம்.

சாமியாருக்கு வணக்கம்

வந்த சிவபாக்கியம் மகிழ்ச்சியும் நாணமும் மீதூரப் பாக்கியலட்சுமிக்கு இந்த இரகசியத்தை வெளியிட்டாள்; பாக்கியலட்சுமி ஆச்சரியமுந் சந்தேகமுங் கொண்டாளாய் அச் செய்தியைத் தனபாக்கியத்திற்குச் சொல்ல, தனபாக்கியம் அதில் நம்பிக்கையற்றவளாய்ச் சஞ்சலமடைந்தாள்; உடனே பாக்கியலட்சுமி கண்ணகியம்மைக்கும் விஜயரத்தினத்திற்கும் சிவகுருநாதனுக்கும் இவ் விஷயத்தை வெளியிட, அவர்களெல்லாரும் ஆச்சரியமடைந்தனர், "அந்தச் சாமியார் எங்கள் வீட்டில் வந்து தங்கி நின்ற போது அவர் எங்கள் தங்கைச்சியோடு ஊடாடிய முறையும் பேசிய வார்த்தைகளும் அந்த நேரத்தில் எனக்குச் சிறிது சந்தேகத்தை விளைத்தன, ஆனாலும் பின்னர் அப்படியல்ல, அவர் நிசமான சாமியாரா யிருக்கலாமென நான் நம்பிவிட்டேன், என்றான் சிவகுருநாதன்; "அண்ணா", எங்கள் சாமியார் உங்களுடைய வீட்டிற்கு வருவதற்கு மூன்றுநாள் முந்தியே தாம் யாத்திரை போவதாகச் சொல்லிப் புறப்பட்டு விட்டார்; இப்பொழுதுதான் அண்ணா, சாமியார் செய்த சூழ்ச்சி எனக்குப் புலப்படுகின்றது" என்று பாக்கியலட்சுமி புன்சிரிப்போடு சொன்னாள்; "என்னை வளர்த்த சாமியார் ஐயாவா இப்பொழுது எங்கள் பெரியக்காவின் மாப்பிள்ளையாய் வந்திருப்பவர்" என்று சிறிது கவலையோடு கேட்டாள் தனபாக்கியம்; "ஓம் தங்கைச்சி அதனாலுமக்கென்ன? ஏன் கவலைப்படுகிறீர்; பெற்ற தாயையும் தந்தையாரையும் இழந்த உமக்குச் சாமியார் தகப்பன் போலிருந்தார்; இப்பொழுது தகப்பனோடு என் அருமையான அக்காள் உமக்குத் தாயாகவும் வந்துவிட்டபடியால் உமக்கென்ன குறை" என்று பாக்கியலட்சுமி சொல்ல, உள்ளந் தேறி உவகை கொண்டாள் தனபாக்கியம்; பின்னர்ச் சிவகுருநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னே செல்ல விஜயரத்தினமும் பாக்கியலட்சுமியும் தனபாக்கியமும் பின் சென்று நமசிவாயமிருக்குமிடத்தை யடைந்தவுடனே, "சாமியாருக்கு வணக்கம்" என்று புன்னகையோடு சிவகுருநாதன் நமஸ்காரஞ் செய்ய, நமசிவாயமும் சிரித்துக் கொண்டு பிரதி நமஸ்காரஞ் செய்தான்; "தங்கைச்சி தனபாக்கியம் தன்னுடைய அபிமானத் தந்தையாரைக் காணவில்லை யெனக் கவலைப் படுகிறாள்" என்று தனபாக்கியத்தைச் சுட்டிக் காட்டிப் பாக்கியலட்சுமி சொல்ல, நமசிவாயம் தன் அருகில் தனபாக்கியத்தைக் கூப்பிட்டிருத்தி "மகளே, கவலைப்படாதே, சாமியார்தான் நான், உமக்கு ஒரு குறையுமில்லை, உம்முடைய விவாகமும் விரைவில் நிறைவேறும்" என்று சொல்லி அவளைத் தேற்ற அவளுந் தேறி மகிழ்ச்சியடைந்தாள்; அச்சமயத்தில் கணவனிருக்கு மிடத்திற்குச் சிவபாக்கியம் வருதலும், "சாமியம்மா வருகிறார்" என்று வேடிக்கையாகச் சொல்லிச் சிரித்துக் கொண்டாடினார்கள். பாக்கியலட்சுமியும் அங்கே நின்ற மற்றையோரும், இச்செய்திகளெல்லாம் சொந்த வூரிலிருக்கும் நமசிவாயத்தின் பெற்றார் சுற்றத்தார் முதலானோருக்குக் கடிதமூலமாக எழுதப்பட்டன; அக்கடிதங்களை ஏற்று வாசித்துச் சந்தோஷங்கொண்டு அத்தம்பதிகளை வாழ்த்திக் கடிதங்களெழுதினார்கள். சுற்றத்தோர், மகனையும் மருமகளையும் விரைவில் விடுமுறைநாள் பெற்றுக்கொண்டு ஊருக்கு வந்து சில காலந் தங்கியிருந்து பின்னர் வேணுமானால் மீண்டு போகலா மென்னுங் கருத்துப்பட நமசிவாயத்தின் பெற்றார் கடிதமெழுதியிருந்தனர்; இங்ஙனமாக, விஜயரத்தினமும் பாக்கியலட்சுமியும் தனபாக்கியத்தையும் தங்களுடன் கூட்டிக்கொண்டு தாங்கள் வசிக்கும் தானத்திற்கு மீண்டார்கள்; தம்பதிகள் சிலநாட் சென்றபின் அவர்களுடைய வாசஸ்தானத்திற்கு வந்து கொண்டாடிப் போவதாகப் பாக்கியலட்சுமிக்கும் கணவனுக்கும் வாக்களித்தார்கள்.

* * *

உலகம் பலவிதம்: *1948* பெப்ரவரி *27*
(முற்றொடர் - 55)

"ஏன்? அம்மா சிந்தனையோடிருக்கிறீர்கள்"

முந்தியே தெரிவித்துவிட்டு, ஒரு சனிக்கிழமை காலையில் தம்பதிகளாகிய நமசிவாயமும் சிவபாக்கியமும் கண்ணகியம்மையுடன் வருதலும், விஜயரத்தினமும் பாக்கியலட்சுமியும் புகைரதஸ்தானத்திற்கு மோட்டார் ரதங்களுடன் சென்று அவர்களை வரவேற்று அழைத்துவந்து தங்கள் வாசஸ்தானத்தில் இருத்தி மகிழ்ச்சியோடு உபசரித்தனர்; இங்ஙனமாக, அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தலை வாசலில் விஜயரத்தினமும் நமசிவாயமும் பல விஷயங்களையிட்டுப் பேசிக்கொண்டிருப்ப, அந்தப்புரத்தில் (பெண்கள் பக்கத்தில் கண்ணகி யம்மையும் சிவபாக்கியமும் ஒருங்கிருக்கும் வேளையில், பாக்கியலட்சுமி கண்ணகியம்மையைப் பார்த்து "அம்மா, என் அக்காளும் அக்காளின் புருஷனும் யோசித்துச் செய்ய வேண்டிய கருமமாயிருந்தாலும், பிள்ளை எங்களோடிருக்கிறபடியால், நாங்களும் முயற்சி பண்ண வேண்டியது முறைதானே, எங்கள் தங்கைச்சி தனபாக்கியத்தின் கருமத்தை இனி முயற்சிசெய்து நிறைவேற்றி வைக்கலாமே" என்று மெல்லச் சொன்னாள்; இப்படிச் சொல்லும் போது, அவர்களோடிருந்த தனபாக்கியம் மெல்ல அந்த இடத்தைவிட்டு அடுத்த அறையுட் போய்விட்டாள்; பாக்கியலட்சுமி சொன்னவைகளைக் கேட்ட சிவபாக்கியம் "ஓம், தங்கைச்சி அந்த விஷயமாக அவரும் நானும் அன்றொரு நாள் யோசித்தோம்; இந்த மாசத்திலே மங்கலகருமஞ் செய்யும் வழக்கமில்லையாத லால் அடுத்துவரும் மாசத்தில் ஒரு நல்லநாட்பார்த்து, ஆகவேண்டிய முயற்சிகளைச் செய்து எங்கள் அண்ணா தனபாக்கிய மிவர்களின் காரியத்தை நிறைவேற்றி வைப்பதுதான் செய்யவேண்டியது; தனபாக்கியத் தங்கைச்சியோ தாய் தகப்பனில்லாப்பிள்ளை; எங்களுக்குத் தாய்மாராயினு முண்டு, என்று பரிவுடன் சொன்னாள்; "அக்கா, சொல்லுகிறேனென்று குறையெண்ணாதீர்கள்; தனபாக்கியத் திற்குத் தாய் தகப்பனில்லா விட்டாலும், நீங்களிரண்டு பேருந்தானே இப்பொழுது சிற்றப்பனும் சிறியதாயுமாக விருக்கிறீர்கள், ஆனதனாற் கூடிய சீக்கிரத்தில் எங்கள் அண்ணாவுக்கும் விஷயத்தைச் சொல்லி, முயற்சி செய்வது நல்லது அக்கா" என்று அன்புடன் சொன்னாள் பாக்கியலட்சுமி; இப்படிச் சொல்லிவிட்டு இருவரும் கண்ணகியம்மையின் முகத்தைப் பார்த்தார்கள்; கண்ணகியம்மை அதற்கு ஏதும் நல்லபதில் சொல்லுவாளென்று எதிர்பார்த்தார்கள், கண்ணகியம்மை ஆமென்றேனும் அல்லவென்றேனும் சொல்வதன்றிச் சிந்தனையோடிருத்தலை அந்த இரு பெண்களும் அவதானித்தார்கள். "ஏன்? அம்மா, இந்த விஷயமாக ஏதும் பேசாமற் சிந்தனையோடிருக்கிறீர்கள்" என்று சிவபாக்கியம் தாயை வினாவ, இதற்கிடையில் பாக்கியலட்சுமி "அக்கா, எங்கள் அம்மாவின் பொறுப்பு எங்கள் கல்யாணத்தோடும் உங்கள் கல்யாணத்தோடும் நிறைவேறிவிட்டது; இனி நீங்களும் நாங்களுமல்லவோ தனபாக்கியத்தின் கருமத்தைப் பார்க்கவேண்டிய முறையாகும்" என்றாள்.

"ஆனால்"

மக்காள், என்னுடைய அவர் போனபிறகு உங்கள் கருமங்களைப் பார்க்கவேண்டியவள் நான்தான்; அந்தப் பிள்ளையினுடைய விஷயத்தில் முழுமுயற்சி செய்யவேண்டியவளும் நான்தான்; உங்கள் விஷயத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுடைய அண்ணன் சிவகுருநாதனுடைய உதவியுமுண்டு; ஆனால் அந்தப்பிள்ளை விஷயத்தில் என்மகன் எப்படி முயற்சி செய்யமுடியும், அந்தப்பிள்ளையின் கருமத்தை நானும் நீங்களும் என் மருமக்களும் சேர்ந்துதான் பார்க்கவேண்டும், ஆனால்...” என்று கண்ணகி சொல்வதற்கிடையில் “என்ன? அம்மா, ஆனால் என்கிறீர்கள்” என்று ஆவலோடுஞ் சஞ் சலத்தோடுந் தாயைக் கேட்டாள் சிவபாக்கியம்; “மகளே, அப்படி யொன்று மில்லையடியம்மா நீங்கள் கவலைப்பட வேண்டாம்; உங்கள் அண்ணனுக்கு அந்த அருமையான பெண் தனபாக்கியத்தை விவாகஞ் செய்து வைக்கவேண்டு மென்பதுதான் என் பூரண விருப்பம். அப்படியொரு பெண் என் மகனுக்கு இலகுவிற் கிட்டமாட்டா ளென்பது நிசம்; என் மக்களாகிய உங்களோடு நான் உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவேனோ, ஆனால் ஒரு விஷயத்தையிட்டு மாத்திரம் யோசிக்கிறேன். நாங்கள் பிறந்த நாட்டிலுள்ளவர்கள் பேச்சளவில் சாதியென்ன? சமயமென்ன? எல்லாருடைய உடம்பிலும் செறிந்து ஓடுவது ஒரே இரத்தந்தானே; சாதிசமய மென்பதெல்லாம் முன்னோர் கட்டிவைத்த மூடக் கொள்கைகளாகும்; மனுஷனுக்கு மனுஷன் அடிமையா? காலத்திற்கேற்ற கோலமாக நடந்துகொள்ள வேண்டும்; இந்தக் காலத்திலே குலத்தைக்காட்டிலும் குணநலத்தைக் காட்டிலும் படிப்பைக் காட்டிலும் பணமல்லவா பாராட்டப்படுவது பணம் பந்தியிலும் குலம் குப்பையிலுமென்பது பழமொழி; இந்தக் காலத்திலென்ன, அந்தக்காலத்திலும் அப்படித் தானே; “கல்லானே யானாலும் கைப்பொரு ளொன்றுண்டாயின், எல்லாரும் வந்தங் கெதிர் கொள்வர் - இல்லானை இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய் வேண்டாள், செல்லாதவன் வாயிற் சொல்” என்று சொல்லிப் பணத்தைத்தான் பாராட்டிப் பேசுவார்கள். இவைகளெல்லாம் பேச்சளவிலும் எழுத்தளவிலும்தான்; இப்படி யெல்லாம் பிரசங்கம் பண்ணும் நம்மவர்களிடத்தில் ஒரு சம்பந்தம் பேசிப் போனால், பெண் பேசிப் போனால் என்ன சொல்லுவார்கள்; “நீர் பேசிவரும் மாப்பிள்ளை பகுதியாருக்கும் எங்கள் குடும்பத்திற்கும் முந்தி எவ்வகையான தொடர்புமில்லை; அவர்கள் இடையிட்டுப் பணம்படைத்துக் கொண்டமை யினால் எங்கள் குடும்பத்திலே சம்பந்தம் பேசவும் துணிந்து விட்டார்கள் நாங்கள் அதற்கு உடன்படமாட்டோம்” என்று கல்யாணம் பேசிவந்த தரகனுக்குச் சொல்லுவார்கள்; தரகனும் வாயாடியல்லவா? அவனும் இவர்களைச் சும்மா விடமாட்டான். “ஐயா, நீங்கள் பேசும்போது இந்தக்காலத்திலே சாதிகுல வித்தியாசம் பார்க்கக்கூடாது; சமயபேதம் பாராட்ட வொண்ணாது எல்லாருஞ் சமம் எல்லாஞ் சமம்; ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரேவிதமான சமத்துவமும் உரிமையுமுண்டு; புருஷனுக்கும் பெண்டாட்டிக்கும் ஒரேவகையான உரிமைகளுண்டல்லவா? எங்கள் தாய் நாடாகிய இந்தியாவில் நடப்பதைப் பார்க்கவில்லையா? பார்க்காவிட்டாலும் பத்திரிகைகளிற் படிக்க வில்லையா? தீண்டாதார் ஆலயப் பிரவேசம் முதலியனவெல்லாம் அந்த நாட்டில் நடக்க, நாங்கள் மாத்திரம் “பழைய குருடி கதவைத் திறவடி” என்று பழைய முறைகளை இன்னமும் கைவிடாமலிருக்க முடியுமா?” என்றெல்லாம் பேசுகிறீர்களே, எழுதுகிறீர்களே. நான் நல்ல உத்தியோகமுள்ள மாப்பிள்ளையை உங்கள் பெண்ணுக்குக் கல்யாணம் பேசிவந்த இந்த நேரத்திலே மாத்திரம் சாதிகுலம் பேசலாகுமா? சம்மதமில்லையென்று சொல்லலாகுமா? பேச்சொன்று செயல் வேறொன்றா!” என்று கேட்டால். அந்தத் தரகனுக்கு என்ன சொல்லுவார்கள்; அவர் சிறிது யோசித்துவிட்டு “ஓம், ஓம், நான் இவைகளொன்றையும் பொருட்படுத்துவதில்லை ஒரு ஆணுக்கு ஒரு பெண்வேணும், இல்லையேல் ஒரு பெண்ணுக்கு ஒரு மாப்பிள்ளை வேணு மென்பதுதான் என்னுடைய கொள்கை, ஆனால், நம்முடைய வீட்டுக்காரியெனிலோ, பழைய பத்ததியை கையாளுபவள்; இப்படியான சம்பந்தத்திற்கு அவள் ஒருபோதுஞ் சம்மதியாள்; இனி, அவளுடைய விருப்பத்திற்கு மாறாக நான் ஏதுஞ் செய்யப்போனால், சொல்லப்போனால் வீட்டிலே எந்நேரமும் எங்களுக்கிடையே பிணக்காக முடியும்” என்று இப்படி யெல்லாங் காரணங் காட்டிக் கலியாணத்தரகனைப் போக்கி விடுவார்கள்; ஆனபடியினாலேதான் மக்காள். இந்தக் கருமத்திலே நான் கொஞ்சம் யோசிக்கவேண்டி யிருக்கிறது; சொல்லுகிறேனென்று என்னைச் சினவாதீர்கள்”

“பகலில் பார்த்துப்பேசு
இரவில் அப்படியும் பேசாதே”

“தனபாக்கியம் அருமையான பிள்ளை, நல்ல குணமானபிள்ளை. என் மகனுக்கு ஏற்ற பெண், எனக்கு வாய்க்கக்கூடிய மருமகள். என் மருமகன் வளர்த்தபெண், ஆனால் இந்தப் பிள்ளையினுடைய பெற்றாரைப்பற்றி இன்னானியாரென்றறியாமற் கல்யாணஞ் செய்தால், நாங்கள் எங்கள் சொந்தவூருக்கு மீண்டு போகும்போது அங்கே இருக்கும் நம்முடைய உற்றார் உறவினர் குறைசொல்வர்; ஊரார் அயலவர் வசை பேசுவர். அது எங்கள் சந்ததிக்குத் தீரா வசையாக வந்து சேருமோ என்று பயப்படுகிறேன்; எனக்கும் ஆண்பிள்ளை உங்கள் அண்ணனவன் தானே; என்று கண்ணகி நீடித்தநேரம் நியாயம் பேசினாள்; கேட்ட சிவபாக்கியம் தாய்மீது வெறுப்புக்கொண்டாள்; பாக்கியலட்சுமி மனவருத்தப்பட்டாள்; அடுத்த அறையிலிருந்த தனபாக்கியத்தின் காதிலும் தன்னைப்பற்றிக் கண்ணகியம்மை பேசிய வார்த்தைகள் பட்டன; இதுபற்றியல்லவா, “பகலென்றாற் பார்த்துப்பேசு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவில் அப்படியும் பேசாதே" என்று எங்கள் நாட்டிலுள்ளவர்கள் சொல்லுவார்கள்.

* * *

உலகம் பலவிதம்: 1948 மார்ச் 05 (முற்றொடர் - 56)

"தாழ்ந்தவருணத் துதித்தோரும் தக்கோராவர் ஒழுக்கத்தால்"

"அம்மா, எல்லாமறிந்த நீங்கள், நாங்கள் அறியாமையால் ஏதும் பிழை செய்தால், அப் பிழைகளைத் திருத்தி எங்களை நல்லவழியில் நடக்கச்செய்ய வேண்டிய நீங்கள், இப்படி யெல்லாம் விபரீதப்பட சொல்லலாமா? எங்கள் அருமைத் தங்கச்சி தனபாக்கியத்தின் குணம் நடை அடக்கம் போறை இதமான ஊடாட்டம் இனிய வார்த்தை, வனப்பு முதலானவைகளை அவதானிக்கும்போது, எங்கள் தனபாக்கியம் உயர்குடிப் பிறந்தவளென்பதை நாங்கள் ஊகித்தறிந்து கொள்ளலாம். அம்மா, "நடையும் நடைப்பழக்கம், நட்புந் தயையும் பிறவிக் குணம்" என்றல்லவா சொல்லப்பட்டிருக்கின்றது; பிறப்பினும் ஒழுக்கம் பெரியதம்மா, குலத்தளவேயாகுங் குணம்; "தாழ்ந்தவருணத் துதித்தோரும் தக்கோராவர் ஒழுக்கத்தால்" என்றபடி, எங்கள் தனபாக்கியம் சாதிமரபில் ஒருபோது குறைந்து தானிருந்தாலும் அந்ததங்கச்சியின் குணமும் ஒழுக்கமும் அவளுக்கு எல்லா மதிப்பையும் தருமே; குலத்தைக் காட்டிலும் குணமே ஒருவரை மேலானநிலையில் வைக்கும்; பிறப்பைப் பொருட்படுத்தவொண்ணா தம்மா; எங்கள் தங்கைச்சி மேலான பிறப்பென்பதிற் சந்தேகமில்லை; நீங்கள் சந்தேகப்படுவது போல், அப்படியில்லாவிட்டாலும் தாழ்ந்த இடத்திற் பிறந்தனவும் பிறந்தவரும் மேலான நிலையை அடைவது உலகத்திலே சகசம்தானே;

சேற்றிற் பிறந்திடுங் கமலமலர் கடவுளது
திருமுடியின் மேலிருக்குந்
திகழ்ச்சிப்பியுடலிற்சனித்தமுத்தரசரது
தேகத்தின் மேலிருக்கும்
போற்றியிடு பூச்சியின் வாயினூல் பட்டென்று
பூசைக்கு நேசமாகும்
புகலரிய வண்டெச்சி லானதேன் றேவர்கொள்
புனிதவபி டேக மாகும்
சாற்றிய புலா லொடு பிறந்தகோ ரோசனை
சவா துபுழு கனைவர்க்கு மாஞ்
சாதியீனத்திற் பிறக்கினுங் கற்றோர்கள்
சபையின்மேல் வட்ட மன்றோ
மாற்றிச் சுரத்தினை விபூதியா லுடல்குளிர
வைத்தமெய்ஞ் ஞான முதலே!
மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு
மலைமேவு குமரேசனே

என்றல்லவா பாடியிருக்கிறார்கள். தனபாக்கியம் எங்களுக்கு அரிதிற் கிடைக்கும் பொருள் அம்மா" என்று சிவபாக்கியந் தாய்க்கு உறைக்கச் சொன்னாள். கேட்ட தாயும் தான் சொன்னது தவறென்பதை உடனே உணர்ந்து, தன் மகளைப் பார்த்து நான் அறியாமையினாற் சொல்லிவிட்டேன். இப்பொழுது சொன்னதை, மக்காள் உங்கள் அண்ணனுக்காயினும், அந்தப் பிள்ளைக்காயினுஞ் சொல்லிவிடாதீர்கள்; உலகம் ஏதுங் குறை சொல்லுமென்று பயந்து சொன்னேனே யொழிய, அந்தப் பிள்ளையை உங்கள் அண்ணனுக்குக் கல்யாணஞ் செய்து வைப்பது எனக்குப் பூரண சம்மதம்" என்று சமாதானஞ் சொன்னாள்.

"அன்னையில்லாப்பிள்ளை இருப்பது அவமானம்"

இவர்கள் விஷயம் இங்ஙனமாக, கண்ணகியம்மை சொன்ன வார்த்தைகள் அடுத்த அறையிற் கேட்டுக்கொண்டிருந்த தனபாக்கியத்தின் உள்ளத்தைப் பெரிதும் புண்படுத்தி விட்டன; அவள் தனக்குள்ள குறையையிட்டுக் கண்ணகியம்மையையேனும் வேறு எவரையேனுங் பழி யெண்ணினாளல்லள்; தன் பொல்லா விதியை நினைந்து நினைந்து உள்ளம் நொந்தாள்; "ஆ! தெய்வமே! உடலை விட்டு உயிரைப்பிரிப்பதுபோல், என்னைத் தன்னந் தனியே விட்டு என் பெற்றோரையும் பிரித்துவிட்டாயே! நான் என்ன செய்வேன்! எங்கள் சொந்தவூரிலே பெற்றாரை, பாவியாகிய நான் பிரிந்தாலும் என் உற்றார் அயலாரிடத்திற் போய் ஒதுங்கலாம்; செய்வ தென்னவென்றறியாது தாமரையிலையில் நீர்த்துளிபோல் தனியே நின்று கலங்குகின்றேனே! என்னைப் பெற்றவர்கள் தங்கள் பேரையொழிய, இந்தவூரில் வந்திருக்கும் தங்கள் நண்பர் சுற்றத்தார் பெயரை, அவர்களிருக்கும் இடத்தை எனக்கு முந்திச் சொல்லி வைத்தார்களில்லையே; ஐயோ! பாவம்! என் அருமைப் பெற்றாரை நான் குறைசொல்வது அநியாயம்; இப்படி மின்னாமல் முழங்காமல் வெள்ளிடி தங்களுக்கும் எனக்கும் விழுமென்று அவர்கள் கனவிலும் காத்திருந்ததில்லையே! கண்ணகியாச்சியையும் நான் குறைசொல்லக்கூடாது இந்த ஆச்சி உண்மையை மறைக்காமற் சொல்லியது குற்றமா! இன்ன சாதி இன்ன மரபு என்பதை அறியாமல் எவராயினும் ஒரு பெண்ணையாக ஆணையாகத் தம் வீட்டில் ஏற்றுக் கொள்வார்களோ! கன்னன் தன் வரலாற்றை யறியாமல் நித்திய சஞ்சலத்துடன் வாழ்ந்தவாறல்லவா நானுங் காலங்கழிக்க நேர்ந்துவிட்டது. தாய் தந்தையரில் ஒருவராயினும் எனக்குத் துணையாகவிருந்தால் நான் இப்படிக் கலங்கமாட்டேனே! பிள்ளை அதிலும் பெண் பிள்ளை, இந்தப் பிராயத்திலே தாயில்லாமல் எப்படிக் காலம்போக்க முடியும்! அறியாமலா அன்னையில்லாப் பிள்ளை இருப்பது அவம் என்று சொல்லுகிறார்கள். ஐயோ! பொல்லா விதியே! என்பெற்றார் இறந்துவிட்டனரென்று நான் எண்ணுவதா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையேற் பிரிந்து விட்டார்கள்; இனியொருபோது என்னைத் தேடிவரினும் வருவார்களென்று ஒருவாறு மனந்தேறியிருப்பதா? என்னைப் பெற்றவர்கள் இன்னமும் உயிருட னிருப்பார்களேயானால், நான் கலங்குவது போலவே, என்னையிட்டு அவர்களுங் கலங்கித் தேடித்திரிவார்கள்; அம்மா, பராசத்தியே, உலக மாதாவே! இதுவும் உன் சோதனையா? நீ படைத்துக் காத்தருளும் அளவில்லாத மக்களுள் நானும் ஒருத்தியல்லவா? இந்த உலக அன்னையர்கள் பிரிந்துவிட உன் பிள்ளைகளெல்லாம் உன்னையல்லவா உலக மாதாவென்று நம்பியிருக்கிறார்கள்; பெற்ற நீயும் பிள்ளையைக் காவாதொழிந்தால் வேறு ஆரம்மா காக்கப்போகிறார்கள்.....” என்றிப்படி யெல்லாம் எண்ணியெண்ணி மனம் புண்ணாக, அயலிலேயுள்ள ஒரு படுக்கையில் மெல்லப் படுத்து உறங்கிவிட்டாள்.

“ஊரறிந்த பார்ப்பான்”

இங்ஙனமாக, தம்பதிகள் விஜயரத்தினத்தின் வீட்டிற்கு வந்திருக்கின்றார்களென்பதைக் கேள்வியுற்று, இவர்களுடைய புரோகிதராகிய இராமசாமி ஐயர் அங்கே வருதலும், அங்குள்ளா ரெல்லாரும் அவரை வரவேற்று உபசரித்திருத்தினர்; புரோகிதர் தம்மை வந்து வணங்கிய தம்பதிகட்கும், அங்குள்ள ஏனையோர்க்கும் ஆசிசொல்லிக்கொண்டே விபூதி வழங்கிச் சுகம் விசாரித்தார். தனபாக்கியம் அங்கே வராமை கண்டு பாக்கியலட்சுமி, அவள் கிடக்கும் அறையுட் சென்று “இந்த நேரத்திலும் உறங்க லாமா தங்கைச்சி” என்று சொல்லி யெழுப்பி முகங் கால் கை கழுவச்செய்து புரோகிதர் முன்னிலையிற் கொண்டுவந்து விடுதலும், அவள் அவரைப் பஞ்சாங்கமாக வீழ்ந்து வணங்கி எழுந்து விநயமாக நின்று, அவர் ஆசி சொல்லி வழங்கிய விபூதியைப் பணிவுடன் ஏற்று விதிப்படி பூசினாள். சற்றுநேரஞ் செல்ல, மற்றையெல்லோரும் தலைவாசற் பக்கத்தை விட்டுப் போய்விட, சிவபாக்கியமும் பாக்கியலட்சுமியும் மாத்திரம் தலைவாசற்பக்கலில் நிற்க, புரோகிதர் “நான் போய்வர உத்தரவு தருவீர்களா” என்று கேட்டார்; “போய் வரலாம், சாமி, ஆனால் ஒரு சந்தேகத்தைச் சாமியிடங் கேட்டு அறிந்து கொள்ளலாமோ என்று யோசிக்கிறோம்” என்று சிவபாக்கியம் பணிவுடன் கேட்க, “எதனையும் என்னிடம் கூசாமற் கேட்கலாம்” என்று புரோகிதர் சொன்னார்; “சாமி, எங்கள் தனபாக்கியம் எங்களிடம் வந்த வரலாற்றை முந்தியே உங்களுக்குச் சொல்லியிருக்கிறோம், அந்தப் பிள்ளையின் தாய் தகப்பனுடைய பெயரையும், பிள்ளை சொன்னபடி உங்களுக்குச் சொல்லி யிருக்கிறோம், நீங்களும் எங்களூரிலே யிருந்துதானே இங்கு வந்திருக்கிறீர்கள்; ஆனதினால் தனபாக்கியத் தங்கைச்சியின் பெற்றார் மூதாதையர், அவர்களுடைய மரபு இவைகளைப் பற்றி அறிய விரும்புகிறோம். தெரிந்தாற் சொல்லுங்கள்” என்று விநயத்துடன் வினாவினாள் பாக்கியலட்சுமி. “நல்லாயறிவேன், இதற்காகவா நீங்கள் யோசிக்கிறீர்கள்; என்னை ஊரறிந்த பார்ப்பானென்றல்லவா எங்கள் சொந்த வூரிலே சொல்லுவார்கள்; அந்தப்பிள்ளையின் முழு வரலாறும் உங்களுக்குத் தெரியுமென்றல்லவா, நான் இதுகாறும் அதைப்பற்றி ஏதுஞ் சொல்லாமல் விட்டேன்; எங்களுடைய மூதாதையரும் நாங்களுந்தாம், அந்தவூரில் அவர்களுக்குப் புரோகிதர்களாயுள்ளோம்; இந்தப் பிள்ளையின் பெற்றார் இருமரபுந் தூய வேளாண் குலத்தினர்; தனபாக்கியத்தின் தாய் தகப்பனுக்குக் கல்யாணம் நிகழ்ந்தபோது எங்கள் பெரிய தகப்பனார்தாம் ஆசாரியராக விருந்து ஹோமக்கிரியைகள் செய்தவர்.....” என்று இப்படிப் புரோகிதர் சொல்லும்போது, சிவபாக்கியம் உடனே போய்த் தங்கள் தாயைக் கூட்டிக்கொண்டு வந்து “சுவாமி, எங்கள் தாயாருக்கு இந்த வரலாற்றைத் தயவு செய்து ஆதியோடந்தமாகச் சொல்லுங்கள்” என்றாள்; புரோகிதர் முழு வரலாற்றையும் சொல்லி, ஈற்றில் இப்பிள்ளையின் தாய் வழியாருக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் முந்தியே தொடர்பிருக்கிறதென நினைக்கிறேன்; எனச் சொல்லிமுடித்தார். இங்ஙனஞ் சொல்லிவிட்டுப் புரோகிதர் அவர்களிடம் அநுமதி பெற்றுக் கொண்டு தம் வீட்டிற்கு மீண்டார்; கேட்ட கண்ணகியம்மையும் மற்றையோரும் அற்புதத்தோடு மகிழ்ச்சியுமடைந்தனர். பின்னர்ச் சிவபாக்கியமும் பாக்கியலட்சுமியும் ஒருங்கு இருக்குஞ் சமயத்திலே கண்ணகியம்மை தனபாக்கியத்தைக் கூப்பிட்டுத் தங்களுடனிருத்தி, புரோகிதர் சொன்ன வரலாறு முழுவதையும் சொல்லி, தான் அறியாமையினால் முந்திச் சொன்னதைப்பற்றி மனம் வருத்த வேண்டாமென்று தனபாக்கியத்திற்குச் சொல்ல, அவளும் மனம் தேறினாள். பின்னருஞ் சிலநாள் அங்கே தங்கியிருந்து நமசிவாயம் சிவபாக்கியம் கண்ணகியம்மை யென்னுமிவர்கள் விஜயரத்தினம் பாக்கியலட்சுமி தனபாக்கிய மென்னுமிவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு தங்கள் பட்டினத்திற்கு மீண்டனர்.

* * *

உலகம் பலவிதம்: *1948* மார்ச் *12* *(முற்றொடர் - 57)*

ஏன் அவசரப்படுவான்?

பாக்கியலட்சுமியும் விஜயரத்தினமும், சிவகுருநாதன் தனபாக்கிய மென்னுமிவர்களுடைய விவாக கருமத்தை அடுத்த மாசத்தில் வரும் ஒரு சுப தினத்திலே நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று கண்ணகியம்மை சிவபாக்கிய மென்னு மிவர்களுக்கு ஒரு கடிதமெழுதினர்; அக்கடிதத்தை அவர்களிருவரும் சிவகுருநாத னுக்குக் காட்டி அப்படிச் செய்வதுதான் நல்லது என்றுஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னார்கள்; சிவகுருநாதன், "செய்யத்தான் வேண்டும், ஆனால் ஏன் அவசரப்படுவான்" என்ற கேள்வியைக் கேட்டான்; அப்பொழுது சிவபாக்கியம் தமயனை நோக்கி "அண்ணா நீங்கள் தனபாக்கியத்தை உங்கள் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்வீர்க ளென்பதிற் சந்தேகமில்லை; ஆனாலும் தனபாக்கிய மெனிலோ அநாதப்பிள்ளை, அவளுடைய கருமத்தில் நாங்கள் பாராமுகமாக விருந்தால், தவணையிட்டு வந்தால் அவள் ஆரிடம்போய் முறையிடுவதென்பதை நாங்கள் சிந்திக்க வேண்டுமல்லவா? இனி என்னுடைய அவரும் தாம் வளர்த்த மகளென்ற நியாயம் பற்றி இவ்விஷயமாக எதனையும் வெளியிட முடியாத நிலைமையிலிருக்கிறார்; அதற்காகச் சொல்லுகிறேனே யொழிய, அண்ணா நீங்கள் அறியாத விஷயத்தை நான் உங்களுக்குத் தெரிவிக்கிறேனென்று என்னை விபரீதமாக எண்ணிவிடாதீர்கள்" என்று விநயத்தோடு சொன்னாள்; தங்கை சொன்ன நியாயத்தைக் கேட்ட தமயன் மகிழ்ச்சி யடைந்தானேனும், புறத்தே காட்டானாய், "தங்கைச்சி, தனபாக்கியத்தை நான் தாரமாகக் கொள்வது முறையல்லவே" என்றான்; கேட்ட சிவபாக்கியந் திடுக்குற்றாள்; ஏங்கினாள், செய்வதின்னதென்ற றியாதவளாய்க் கலங்கினாள்; "அண்ணா, அப்படியேன் சொல்லுகிறீர்கள்" என்று சஞ் சலத்துடன் சிவகுருநாதனைக் கேட்டாள்; தான் சொன்ன வார்த்தையினால் தங்கை கலங்குவதை அவதானித்த தமயன், "அருமைத்தங்காய், கவலைப்படாதே இப்பொழுது தனபாக்கியத்தின் தகப்பனாக மதிக்க வேண்டியது ஆரை" எனலும், "என்னுடைய இவரைத்தாம் அண்ணா" என்று பதில் சொன்னாள் சிவபாக்கியம்; "ஆம், அபிமானப் பிதாவென்று கொண்டாலும், வளர்த்த பிதாவென்று கொண்டாலும் எனது மைத்துனர் தாம் தனபாக்கியத்திற்கு இப்பொழுது பிதா; அவர் பிதாவானால், அவருடைய மனைவி தானே அந்தப்பெண்ணுக்குத் தாய்" என்று சொல்லிச் சிரித்தான் சிவகுருநாதன்; இப்படிச் சொன்னவுடனே "என் அண்ணா வேடிக்கையாகச் சொன்னதை நிசமென்றலவோ நான் நம்பி விட்டேன்" என்று மகிழ்ச்சியோடு சொல்லி மனமாறினாள் சிவபாக்கியம்; சிவபாக்கியமும் கண்ணகியம்மையும் அப்படியே அடுத்த மாசத்தில் விவாகம் நடத்தலாமென்னுங் கருத்துப்பட ஒரு கடிதத்தை விஜயரத்தினம் பாக்கியலட்சுமி யென்னு மிருவருக்கும் எழுதியனுப்பினர்.

* * *

உலகம் பலவிதம்: *1948 மார்ச் 19*
(முற்றொடர் - 58)

விவாக விஞ்ஞாபனம்

விவாக முகூர்த்தத்திற்குச் சில வாரங்கள் முந்தியே விவாக விஞ்ஞாபனங்கள் அச்சிட்டு, அவரவர்க்கு விலாசமெழுதி அனுப்பப்பட்டன; யாழ்ப்பாணத்திலுள்ள தங்கள் சுற்றமித்திரர்களுக்கும் மாப்பிள்ளை பெண்பிள்ளை பகுதியார் விவாக விஞ்ஞாபனங்கள் அனுப்பினார்கள்; நமசிவாயமும் சிவபாக்கியமும் மாப்பிள்ளை வீட்டுக் கருமங்களையும், விஜயரத்தினமும் பாக்கியலட்சுமியும் பெண்வீட்டுக் கருமங்களையும் நிர்வகித்து நடத்துவராயினர்; விஞ்ஞாபனம் அனுப்பியதோடு மாத்திரம் அமையாது, மலாய் நாட்டிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளிலும், யாழ்ப்பாணத்தில் வெளிவரும் இந்துசாதனம் போன்ற பத்திரிகைகளிலும், கொழும்பிலுள்ள தினவர்த்தமானிப் பத்திரிகைகள் சிலவற்றிலும் இந்த விவாக விஷயமாக விளம்பரஞ் செய்யப்பட்டது; இப்படி அவர்கள் விஞ்ஞாபனஞ் செய்வதற்கு ஒரு காரணமுண்டு; விவாக முகூர்த்தத்திற்காகிய நாள் சமீபிக்கச் சமீபிக்க, பெண்ணின் முகத்திற் கவலையும் அதிகப்பட்டு வருதலைப் பாக்கியலட்சுமி அவதானித்தாள்; ஒருநாள் அவள் தனபாக்கியத்தைத் தனியிடத்திற் கூட்டிக்கொண்டுபோயிருத்தி, அவள் கவலைப் படுதற்குக் காரணமென்ன வென்று பரிவுடன் கேட்டாள்; "அக்கா, நீங்களெல்லீரும் இருக்கும் போது எனக்கு வேறு கவலை யொன்றுமில்லை; என் பெற்றாரைக் காட்டிலும் நீங்கள் என்னை அதிக அன்போடும் ஆதரவோடும் பாதுகாத்து வருகிறீர்கள்; நீங்கள் எனக்குச் செய்துவரும் நன்மையை நான் சீவபரியந்தம் மறக்க நியாயமில்லை; என் கவலையை உங்களுக்குச் சொல்லாமல் வேறு ஆருக்கு முறையிடுவேன்; என் கல்யாண காலத்திலாயினும் என்னைப் பெற்றவர்களைப்பற்றி யறியாமலிருக்கிறேனே யென்றதுதான், என் அருமையான அக்கா, இப்பொழுது எனக்குத் தீராக்கவலையாக விருக்கிறது" என்று மேலும் அதிக கவலையோடு பதில் சொன்னாள்; பாக்கியலட்சுமி பல ஏதுக்களைக் கூறித்தேற்ற ஒருவாறு தனபாக்கியந் தேறியிருந்தாள்.

பெற்றாரைப் பெற்றாள் பெண்

விவாகத்திற்கென நிச்சயிக்கப்பட்ட சுப தினத்திற்கு முந்தியே மாப்பிள்ளையும் அவருடைய தாய் சகோதரி மைத்துனர் சுற்றமித்திர ரெல்லாரும் நல்லநாட் பார்த்துப் புறப்பட்டு விவாக தினத்தன்று காலை, பெண்ணிருக்கும் ஊருக்கு வருதலும், பெண்வீட்டுக்காரர் அவர்களை எதிர் சென்று உபசரித்தழைத்து வந்து, மாப்பிள்ளை தங்கியிருப்பதற்காக முந்தியே தாங்கள் ஒழுங்கு செய்து வைத்துள்ள ஒரு சிறந்த வீட்டில் இருக்கச் செய்தார்கள்; கல்யாண முகூர்த்த நேரம் அன்று இரவு பத்தரை மணிவரையிலாகும்; அதற்குச் சில மணிநேரம் முந்தியே பெண்வீட்டுக்காரர் தம் சுற்றமித்திரருடன் மங்கலவாத்திய மொலிப்ப மாப்பிள்ளையின் வாசஸ்தானத்திற்கு வந்து, விருந்தருந்தி, மணமகனையும் மணமகனோடு வந்துள்ளவர்களையும் மங்கலமாக அழைத்துச் செல்வாராயினர். மாப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணப்பந்தரைச் சென்றடைந்தவுடனே பெண்வீட்டார் மணமகனையும் உடன் வந்தோரையும் தக்கவாறு உபசரித்து, மணமகனை மணவறையின்கண்ணே யழைத்துக் கொண்டுபோயிருத்தினர்; இவ்விவாக விஷயமாக விஞ்ஞாபனம் அனுப்பியும் பத்திரிகைகளில் வெளியிட்டும் முந்தியே விளம்பரஞ் செய்திருந்த மையால் அனேகர் அந்தவேளை அங்கே குழுமி யிருந்தனர். பிரமஶ்ரீ இராமசாமிக்குருக்களே ஆசாரியராக இருந்து மணக்கிரியைகளைச் செய்யத் தொடங்கிப் பின்னர் மணமகளையும் அங்கே யழைத்து வந்திருக்கச் செய்தார். பெண்ணைத் தாராதத்தஞ் செய்யவேண்டிய சமயம் வருதலும், குருக்கள் பெண்ணின் பெற்றாரில்லாமையினால், வேறிருவர் பெண்ணின் பெற்றாராகத் தம்மைப் பாவித்துப் பெண்ணைத் தத்தஞ் செய்ய வேண்டுமென்றார்; அங்ஙனஞ் செய்தற்காக, உடனே விஜயரத்தினமும் பாக்கியலட்சுமியும், பெண்ணுக்குச் சமீபமாக வந்திருந்தனர்; இதற்கிடையில் "பெண்ணின் சொந்தப் பெற்றார் இங்கே வந்திருக்கிறோம், நாங்கள் தாராதத்தஞ் செய்யலாமோ? சாமீ" என்று சொல்லிக்கொண்டு அச்சபையிலிருந்து ஒரு ஆண்பிள்ளை எழுந்து முற்பட்டு வர, அவர் பிறகே யொரு பெண்ணும் வருவாளாயினள்; இதற்கிடையில் செய்யலாம், செய்யலாம், அதுதான் உத்தமம்" என்றார் புரோகிதர்; சபையிலிருந்தவர்க ளெல்லாருடைய கண்களும் அந்த இருவர்மீதும் போய்ப்படிந்தன; மணமகனும் அவர்களை உற்றுப்பார்த்தான், தலைகுனிந்த வண்ணம் நாணத்தோடிருந்த மணமகளும் ஆவலோடு அவர்களை அவதானமாகப் பார்த்த வண்ணமிருந்தாள்; புரோகிதருக்குச் சமீபமாக அவ்விருவரும் வந்து நிற்பதற்கிடையில், மணமகளாகிய தனபாக்கியம் தன்னை மறந்து தான் அந்தநேரம் இருந்த நிலைமையையும் மறந்து "என் அருமையான அப்பா, என்னைப் பெற்ற அம்மா, வந்துவிட்டீர்களா" என்று சொல்லியபடி விரைந்துசென்று, அவர்களுடைய காலிற் பஞ்சாங்கமாக வீழ்ந்து பணிந்தாள்; பணிந்த மணமகளை அந்த இருவரும் தங்கள் கரங்களினால் வாரியெடுத் தணைத்து, கண்களில் நீர்சிந்த உச்சிமோந்து முதுகைத் தடவி உள்ளமுருகி நிற்றலும், புரோகிதர். "இது தெய்வச் செயல், காலதாமதஞ் செய்யாமல், பெற்றாரே தம்பெண்ணைத் தத்தஞ்செய்க" என்று சொல்லுதலும், அவர்களிருவரும் முறையே இருந்து தம் மகளை மடியில் வைத்த பாவனையாகத் தாராதத்தஞ் செய்ய, மணமகன் சார்பாக நமசிவாயமும் சிவபாக்கியமும் மணமகனருகிலிருந்து பெண்ணை ஏற்றனர்; மங்கல்ய தாரணம் முதலாம் கிரியைகளெல்லாம் விதிப்படி இனிது நிறைவேறலாயின; மணக்கிரியைகள் நடக்கும் போதும் அங்குள்ள சனங்கள் பெண்ணின் பெற்றாரென வந்த இருவரையுமே இமைத்த லின்றிப் பார்த்தவண்ண மிருந்தனர்; கைம்மை யென்ற காரணத்தினால், மணப்பந்தரில் முற்பட்டு நிற்கமுடியாத கண்ணகியம்மையும் சற்று ஒதுங்கி நின்று, அந்த இருவரையும் அவதானித்தாள்; அம்மிமிதித்தல் அருந்ததி பார்த்தல் முதலிய கிரியைகளெல்லாம் நிறைவேறியபின், அங்கு வந்தவர்கள் விருந்துண்டு கொண்டாடி புதியராய்த் தோன்றிய அவர்களிடத்தும் விடைபெற்றுக் கொண்டு தத்தம் வீட்டிற்கு மீண்டனர்; மணமகனுடன் வந்தவர்களும் பலர், தங்களுக்கென ஒழுங்கு செய்யப்பட்டதாகிய வீட்டிற்குப் போயி ருந்தார்கள்.

* * *

உலகம் பலவிதம்: *1948* மார்ச் *26*
(முற்றொடர் - 59)

"கெட்டாலும்
மேன்மக்கள், மேன்மக்களே"

தனபாக்கியம் பாராட்டிய அன்பைக் கொண்டும் அபிமானத்தைக் கொண்டும், அவர்கள் அவளிடத்திற் காட்டிய பாசத்தைக் கொண்டும், பரிவைக் கண்டும் தனபாக்கியத்தின் நிசமான பெற்றார் அந்த இருவருந்தாமென்பதை அச்சமயத்தில் அங்கிருந்தோரனைவரும் நிச்சயித்துக் கொண்டனர், விவாக கருமங்கள் நிறைவேறி விருந்துண்டபின் அங்குள்ளவர்களும், அந்த மங்கல கருமத்திற்கு வந்து மீண்டவர்களுமாகிய எல்லோரும் தனபாக்கியத்தின் பெற்றார் முந்தி மறைந்தமை முதலாகிய வரலாறுகளை அறியஆவலாயிருந்தார்கள்; அதனால் தனபாக்கியத்தின் தகப்பனார் அடுத்தநாட்காலை, பலர் சமுகத்திலே தங்கள் வரலாற்றை வெளியிடுவதாகச் சொல்லியிருந்தார்; அங்ஙனமே அந்த மணவீட்டிலுள்ளவர்களும், அங்கு முதனாள் வந்து மீண்டவர் பலரும் அடுத்தநாட்காலை 9 மணி வரையில் ஆவலுடன் அங்கு வந்து சேர்ந்தார்கள்; மணமகனுடன் வந்து அங்கே ஒரு வீட்டிலே தங்கியிருந்தவர்களும் மணம் நிகழ்ந்த இந்த வீட்டில் வந்து சேர்ந்தார்கள்; தனபாக்கியத்திற்குத் தன் பெற்றார் தன்னைப் பிரிந்த பின்னர் என்ன என்ன கஷ்டங்களை யெல்லாம் அனுபவித்தனரோ என்ற சிந்தனையினால் அவர்கள் வரலாற்றை அறிய ஆவல்கொண்டாள்; அவர்கள் மருமகனாகிய சிவகுருநாதன் தன் மாமன் மாமி யென்னுமிவர்களின் குலங்குடி செல்வஞ் செல்வாக்கு எப்படிப்பட்டனவோ என்பதையறிய ஆவல் கொண்டான். கண்ணகியம்மை "ஒருபோது இவர்கள் தம்மோடொத்த மரபினரல்லாமல் தாழ்ந்த மரபினராயிருந்தால் தங்கள் குடும்பத்திற்குத் தீராவசை நேருமேயென்று பயந்தாள்; சிவபாக்கியம் அவர்களுடைய தோற்றம் இன்சொல் இனிய ஊடாட்டம் பெருந்தன்மை யென்னுமிவைகளை அவதானித்து, "குலத்தளவே யாகுங் குணம்" என்று திடங் கொண்டாள்; அப்படியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமசிவாயமும் மதித்துக் கொண்டான்; பாக்கியலட்சுமி விஜயரத்தினம் முதலானோரனைவரும், தனபாக்கியத்தின் பெற் றார் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்களென்றே அயிர்த்தார்கள்; அவர்களுடைய வரலாற்றை அறிய விருப்பங்கொண்டவராய்ப் புரோகிதராகிய இராமசாமி ஐயரும் அந்தநேரம் அங்கே வந்து சேர்ந்தார்; அங்கிருந்தவர்களுலொருவர் இராமசாமி ஐயரை நோக்கி "சாமீ, இவர்களை முந்தியே உங்களுக்குத் தெரியுமோ" என்று விநயமாக மெல்ல வினவ, "ஆம், நான் அவர்களை முந்தியும் நன்கறிவேன்; இவர்கள் நல்ல வேளாண்மரபினர்; எங்கள் புரோகிதத்திற் சேர்ந்தவர்கள்; நல்லாயிருந்து காலவித்தியாசத் தினாற் கெட்டுப்போனார்கள்; ஆனாற் கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே என்பது அவர்களுடைய முகத்தில் விளங்குகிறதல்லவா" என்று சொன்னார்.

"பட்டபாடுகளோ பரிதாபமானவை"

எல்லோரும் அங்கு வந்து வரலாறு கேட்கும் ஆவலுடன் கூடியிருக்கும் போது கண்ணகியம்மை சிவபாக்கியம் பாக்கியலட்சுமி தனபாக்கியம் இன்னும் அயலிலுள்ள பல பெண்கள் ஒருபுறத்தேயிருந்தனர்; தனபாக்கியத் தின் தாயும் அவர்களுடனே யிருந்தாள்; தனபாக்கியத்தின் தகப்பனார் பின்வருமாறு தம் வரலாற்றை யெடுத்துச் சொல்வாராயினர்; "எங்கள் வரலாற்றை நீங்களெல்லீரும் அறிய ஆசைப்படுகிறீர்கள்; ஆனாற் சிலகாலம் நாங்கள் பட்டபாடுகளோ மிகவும் பரிதாபகரமானவை; இதனைச் சொல்லி உங்களுள்ளத்தையும் ஏன் வருந்தச் செய்வானென்று யோசித்தே சொல்லக் கூசினேன்; ஆனால் நீங்களெனிலோ அறிய வேண்டுமென்ற ஆவல் கொண்டுவிட்டீர்கள், ஆனதால் நான் சொல்லாம லிருந்தாலும் முடியாது; எங்கள் வரலாற்றை ஆதியோடந்தமாகச் சொல்லுகிறேன் கேளுங்கள், நான் யாழ்ப்பாணத்திலே பரம்பரையான வேளாண் குடியிலே பிறந்து, அங்குள்ள ஒரு பாதிரி பள்ளிக்கூடத்திலே தமிழும் ஆங்கிலமும் படித்து ஆங்கிலத்தில் 7ம் வகுப்பிற் சித்தியடைந்து, அங்கே எனக்குப் பிழைப்பில்லாமையினால், மலாய்நாட்டில் ஏதும் உத்தியோகங் கிடைக்கு மென்றெண்ணி இந்நாட்டில் வந்து சேர்ந்து, யாழ்ப்பாணத்தவராய், இந்நாட்டில் வந்து செல்வஞ் செல்வாக்கோடு கூடியிருந்த ஒருவருடைய உதவியினால் அரசாங்கத்தில் அற்ப வேதனத்துடன் ஒரு உத்தியோகம் பெற்றேன்; நான் இந்தவூரில் கடமை பார்த்துக் கொண்டிருக்கும்போது, முதல் என் தந்தையாரும் பின்னர்ச் சில மாசங்கள் செல்லத் தாயாரும் தங்கள் சொந்தவூரில் மோசம்போயினர்; நான் என் பெற்றோர்க்கு ஒரேயொரு மகனாயிருந்தும் அவர்களை அந்திய காலத்திற் பார்த்துப் பராபரிக்கவும், பின்னர் அவர்களுக்கு அந்திய கிரியைகள் செய்யவும் நான் கொடுத்துவைக்கவில்லை; அந்த நாட்களில் நான் சொந்தவூருக்குப் போகவேணுமென்று காரணஞ் சொல்லிக்கேட்டபோது, மேலதிகாரிகள் மறுத்து விட்டார்கள்; என் பெற்றாருக்குச் செய்யவேண்டிய கடமைகளை அவர்களுடைய இனசனத்தார் செவ்வனே செய்தார்களென்று பின்னர் அறிந்தேன்; சில வருடங்கள் சென்றபின்னர் சொந்தவூருக்குப் போதற்கு விடுமுறை நாள் உதவுவதாக, என்னுடைய மேலதிகாரிகள் சொன்னபோது, நான் அங்கே போக உடன்படவில்லை; என் பெயர் கதிரவேலன்; காலஞ்செல்லச் செல்ல என் உத்தியோக பதவியும் உயர உயர என் மாசவேதனமும் அதிகப்பட்டது; இப்படியாக என் மாமனாரொருவர் தம்முடைய மகளை எனக்கு விவாகஞ்செய்து தர நிச்சயித்திருப்பதாகவும், ஆனதால் தங்களூருக்கு நான் வரவேண்டுமெனவும் கடிதமெழுதினார்; பெற்றோர்க்குக் கடமைசெய்ய ஊருக்கு மீண்டு போகாதவனாகிய நான், இப்பொழுது கல்யாணஞ் செய்வதற்கு மீண்டுபோவது முறையல்ல வென்றெண்ணி நான் ஊருக்குப் போக மறுத்துவிட்டேன்; ஆனால் உங்கள் மகளை இங்கே நீங்கள் கூட்டிக் கொண்டு வந்தால், இங்கே தானே ஆகவேண்டிய ஆயத்தங்களைச் செய்து மணம்முடிக்கச் சித்தமாயிருக்கிறேனென்று என் மாமனாருக்கு எழுதினேன்; அவர் அதற்கு உடன்பட்டு அப்படியே தமது கன்னிகையைத் தம்முடைய மனைவியோடு அதாவது பெண்ணின் தாயுடன் இங்கே கூட்டிக்கொண்டு வந்தார்; இங்கேதான் இருவருக்கும் விவாகம் நிறைவேறியது; அந்தப் பெண்தான் இப்பொழுது இங்கு வந்திருப்பவள்; தனபாக்கியத்தின் தாய்; பெயர் வேதநாயகி; என் மாமன் மாமியரும் சிலவாரங்கள் எங்களுடன் இந்தவூரிலிருந்து பின்னர் தம்மூருக்கு மீண்டார்கள்; அவர்கள் இறந்து பலவருடங்களாயின; நாங்கள் பத்துவருட காலம் பிள்ளையில்லாமையினால், தானதருமஞ் செய்து விரதம் அநுட்டித்துத் தவங்கிடந்து, அல்லும் பகலுங் கோயிலுக்குப் போய்த் தெய்வத்தை வழிபட்டுப் பெற்ற தவக்குழந்தை தான், இந்தத் தனபாக்கியம்; கண்ணை இமை காப்பதுபோல் இப்பிள்ளையைக் காத்துப் பேணி வளர்த்து, தமிழும் ஆங்கிலமும் ஒரு அளவிற்குப் படிப்பித்து வரலானோம்.

* * *

உலகம் பலவிதம்: 1948 மே 07
(முற்றொடர் - 60)

இனம் இனத்தைச் சேரும்

தனபாக்கியத்தின் தகப்பனார் தம் வரலாறு முழுவதையுஞ் சொல்லி முடித்தபின் கண்ணகியம்மை அவர் தங்களுக்கு இனத்தவரென்றும், நீடித்தகாலம் மலாய்நாட்டிலே அவர்கள் இருந்தமையினால் தாங்கள் அவர்களோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாடுதல் முடியாமற் போய்விட்ட தென்றும் "இனம் இனத்தைச் சேரும்" என்றபடி தனபாக்கியம் தொன்மைதவறாமல் தங்கள் குடும்பத்தில் வந்து சேர்ந்தமை தங்களுக்கு மகாசந்தோஷமென்றும் தனபாக்கியத்தின் பெற்றோருக்கும் மற்றோருக்கும் சகல வரலாறுகளையுஞ் சொல்லித் தொன்மை பாராட்டினாள்; இவ்வரலாறுகளை யறிந்தோரெல்லாரும் மகிழ்ச்சியடைந்து பரஸ்பரம் அன்பு பாராட்டினார்கள்; சிலநாட்கள் பெண்ணின் வாசஸ்தானத்திற்றானே தம்பதிகள் தங்கிநின்றார்கள்; பின்னர் கண்ணகியம்மை, சிவபாக்கியம் நமசிவாயம் என்னும் மணமக்களையழைத்துக் கொண்டு தங்கள் தானத்திற்கு மீண்டனர்; விஜயரத்தினமும் பாக்கியலட்சுமியும் சிலவாரங்கள் கழித்துத் தம்பதிகளிருக்குமிடத்திற்குச் சென்று அவர்களோடு சிலநாள் தங்கியிருந்து அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு மீண்டனர்; சுருங்கச் சொல்லுகில் நமசிவாயம் - சிவபாக்கியம், விஜயரத்தினம் - பாக்கியலட்சுமி, சிவகுருநாதன் - தனபாக்கிய மென்னும் இம்மூன்று குடும்பத் தினரும் தங்கள் கடமைகளைச் செய்யும் பொருட்டு இடையிடையே பிரிந்திருந்தாலும் ஒரே குடும்பத்தினர் போலவே ஐக்கியப்பட்டு ஊடாடி வந்தனர்; இவர்கள் இந்த விசேஷங்களை யெல்லாம் தங்கள் சொந்தவூரில் வசிக்கும் தம் உறவினருக்கும் மரகதம் போன்ற நண்பினருக்கும் கடிதமூலமாகத் தெரிவிக்க, அவர்களும் அறிந்து மகிழ்ந்து பதிற் கடிதங்கள் எழுதிவரலாயினர். தனபாக்கியம் தன் பெற்றோரைத் தன்னில்லத் திற்றானே இருக்கச்செய்து பேணிவந்தாள்.

"பிறந்த இடத்தை நாடுதே பேதை மடநெஞ்சம்"

இம் மூன்று குடும்பத்தினரும் தாங்கள் பிறந்தவூரை விட்டு வந்து வெகு காலமாய்விட்ட தென்ற காரணத்தினால், "பிறந்த இடத்தை நாடுதே பேதைமட நெஞ்சம்" என்றபடி தங்கள் சென்மபூமிக்கு மீண்டுபோக வேண்டுமென்ற விருப்பங்கொண்டு ஒருவரோடொருவர் கலந்து பேசி, சில மாசங்களுள் விடுமுறைநாள் பெற்று ஒருங்கு மீண்டுபோதல் வேண்டுமென நிச்சயித்துக் கொண்டார்கள்; இதற்கிடையில் சிவபாக்கியம் தான் காசியாத்திரை செய்த பின்புதான் ஊருக்கு மீள வேண்டுமென்ற நியதியுண்டென்று தன் கணவனுக்குத் தெரிவிக்க, அவன் அதற்கு உடன்பட, சிவபாக்கியம் தங்கள் தாயையும் பெண் துணையாக இட்டுக்கொண்டு கணவனுடன் காசியாத்திரை புறப்பட்டுக் கங்கையில் மூழ்கி, விசாலாட்சி சமேத விசுவநாதப் பெருமானையும் ஏனைய மூர்த்திகளையும் தரிசனஞ் செய்து கொண்டு மீண்டு தங்கள் உத்தியோகத் தானத்தை யடைந்து அங்கிருந்து மற்றையவர்களுடன் தங்கள் சந்ம நாட்டினையடைந்து சிலகாலம் வாழ்ந்திருந்தனர்; விடுமுறை நாட்கள் கழிதலும் மூன்று குடும்பத்தினரும் கண்ணகியம்மையும் இராமனும் பழையபடி மலாய் நாட்டிற்கு மீண்டனர்; ஆண்கள் தங்கள் உத்தியோகக் கடமையை நன்கு நடாத்திவர, பெண்கள் மூவரும் தத்தம் கணவருக்குத் தனித்தனி வாழ்க்கைத்துணைவியராக விருந்து இல்லறத்தை இனிது நடாத்திப் புத்திரப்பேறு முதலிய சகல பேறுகளையும் பெற்று வாழ்வாராயினர்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனசாட்சி

உலகம் பலவிதம்: *1951* ஏப்ரல் *06*

"நிதியுங்கணவனும் நேர்படினுந்தத்தம் விதியின் பயனே பயன்"

இப்படியுஞ் செய்யலாமா! இட்டமில்லை யென்றால் முந்தியே தெரிவித்திருக்கலாம்; இந்த மாப்பிள்ளையை நாங்களாகத் தேடிப் போனோமா? இல்லையே! தாங்களே அந்த நாள் தொட்டு எங்கள் பெண்ணுக்கு வேறெங்கேனும் கல்யாணம் பேச வேண்டாம், வெண்ணெய் வைத்துக்கொண்டு நெய் தேடுவானேன்; சொந்த மைத்துனன்; B.A. பரீட்சையிற் சித்திபெற்றவன்; அல்லாமலும் ஒரு பெரிய கல்லூரியில் உயர்தர வகுப்பு உபாத்தியாயராகக் கடமை பார்க்கிறான்; உங்கள் பெண்ணும் ஆங்கிலமும் தமிழும் நல்லாகப் படித்திருக்கிறாள்; கல்யாணமானால் கல்வியைக்கொண்டு இரண்டுபேரும் பிழைப்புத் தேடிக் கொள்ளலாம் என்று இப்படியெல்லாம் உனது தமயனார் சொன்னாரே, வருகிற புதன் கிழமை கல்யாணத்திற்கு நாள் நிச்சயித்திருக்க ஆகவேண்டிய ஆயத்தமெல்லாஞ் செய்திருக்க, கடைசி நேரத்தில் உன் அண்ணன் மகன், தனக்கு விடுமுறை நாள் கிடைக்கவில்லை, கல்யாணத்தைத் தவணையிடலாம் என்று கடித மெழுதினால், அது சரியா? முறையா? கல்யாணம் நடத்துவதென்றாற் சின்னக் கருமமா? நினைத்தவுடனே செய்யத்தக்கதா? எனக்கு ஒன்றும் புலப்படவில்லை" என்று கவலையோடு ஏகாம்பர நாதர் தமது மனைவியாகிய காமாட்சிக்குச் சொல்லிக் கலங்கினார். "எல்லாமறிந்த நீங்கள் இப்படிக் கவலைப்பட்டால், பெண்ணாகப் பிறந்த நான் இன்னும் அதிகமாகவல்லவோ துயரப்படவேண்டும்; அல்லாமலும் எங்கள் மகள் உலக விவகாரம் ஒன்றும் அறியாதவள்; அவள் இதையறிய நேர்ந்தால் இன்னமும் அதிகமாகக் கவலைப்படுவாளே இந்த நாளுக்குச் சந்தியா விட்டால், இன்னுமொரு நாளைப் பார்ப்பித்து நிச்சயித்துக் கல்யாணத்தை நடத்தலாமே! இதற்கெல்லாம் ஏன் கவலைப்படுகிறீர்கள்; இப்பொழுது என்ன கெட்டுப்போய் விட்டது? எங்கள் மகளை மணஞ் செய்ய மருமகன் மறுத்து விட்டானா? அப்படியானால் உண்மையாகக் கவலைப்பட வேண்டுந்தான்; ஆண்டவன் கிருபையால் அப்படி யொன்றும் நேரவில்லையே; நாங்கள்தாம் அந்த மாப்பிள்ளை வேண்டாமென்று விட்டாலும், அந்தப்பிள்ளை தன் மச்சாளையல்லாமல் வேறு எந்தப்பெண்ணையுங் கல்யாணஞ் செய்யச் சம்மதிக்கமாட்டான்; அப்படியே எங்கள் மகளும் அந்தப் பிள்ளையை யல்லாமல் வேறு எந்த மாப்பிள்ளைக்கும் உடன்படாள்; "நிதியுங் கணவனும் நேர்படினுந் தத்தம் விதியின் பயனே பயன்" என்பது நீங்கள் அறியாததல்ல; கவலைப்படாதீர்கள்" என்று தன் கணவனுக்குத் தேறுதல் சொன்னாள் காமாட்சி.

"மனந்தடுமாறேல்"

"என்னவோ, நீ இப்படியெல்லாஞ் சமாதானஞ் சொல்லுகிறாய்; என்னைத் தேற்றப் பார்க்கிறாய்; ஆனால் என்மனம் என்னை யறியாமல் இந்தக் கருமத்திற் சஞ்சலப்படுகிறது; இந்தச் சம்பந்தத்திற்கு ஏதும் இடையூறு நேருமோ என்று உள்ளம் பயப்படுகிறது; இந்தக் காலத்து வாலிபரை எப்படி நம்பியிருக்கலாம்? கன்னிகைகள் எவ்வாறு காத்திருக்க முடியும்? ஒரு கூட்டத்திலேயோ, இல்லையேல் ஒரு சங்கீதக் கச்சேரியிலேயோ, இல்லாவிட்டால் ஒரு பரிசளிப்புக் கூட்டத்திலேயோ, அதுவுமில்லையானால், ஒரு காணிவல் கொண்டாட்டத்திலேயோ பாடக்கூடிய ஆடக்கூடிய ஆங்கிலம் நல்லாய்ப் பேசக்கூடிய கூச்சமிலாமல் ஊடாடக்கூடிய ஒரு கன்னிகையை இக்கால வாலிபன் ஒருவன் காண நேர்ந்தால், கண்டு பேச நேர்ந்தால்; அவனுக்கும் அவளுக்குஞ் சம்மதமானால், அவர்களே தங்களுட் கல்யாணத்தை நிச்சயித்துக் கொண்டு மெல்ல மெல்லத் தங்கள் நோக்கத்தைப் பெற்றோருக்கு வெளியிடுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமல்லவோ, பெண்ணே இந்தக் காலம்" என்று பெருமூச்சுடன் சொன்னார் ஏகாம்பரம்; "அப்படியும் இந்தக் காலத்தில் உண்டுதான்; ஆனால் என் அண்ணன் மகன் அப்படிப்பட்டவனல்லன்; கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ எங்கள் பிள்ளையை யல்லாமல் வேறொரு கன்னிகையைக் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டான்; அவன் சற்குணன்; பொறுமை, அடக்கம், தெய்வபத்தி யுடையவன்; அல்லாமலும் எங்கள் மகளைத் தன்னுயிர்போற் பாவித்து அன்பு பாராட்டி நடக்கிறான்; இவளும் அந்தப்பிள்ளை யிடத்தில் அப்படியே அன்பும் விசுவாசமும் வைத்திருக் கிறாள்; நாங்கள் இப்படிச் சந்தேகப்படுகிறோ மென்பதை எங்கள் மகள் அறிய நேர்ந்தாலும் அவள் பெரிதுங் கவலைப்படுவாள்; இப்படி யெல்லாமிருக்க நீங்கள் ஏன் வீணாகக் கவலைப்படுகிறீர்கள்? யோசிக்கிறீர்கள்? இல்லாததை இருக்கிறதென்றும், நடவாததை நடந்ததென்றும் நினைத்துக் கவலைப்படலாமா? எல்லாம் எங்கள் எண்ணத்திலேயா தங்கியிருக்கின்றன? பரமசிவனெண்ணப்படிதான் எதுவும் நடக்கும். இவ்வளவு காலமும் பொறுத்த நாங்கள் இன்னும் ஒரு கிழமை, இரண்டு கிழமை பொறுத்திருக்க வொண்ணாதா, "மனந் தடுமாறேல்" என்ற முதுமொழி நீங்கள் அறியாததா?" என்று மீட்டுஞ் சமாதானஞ் சொன்னாள் காமாட்சி; கேட்ட ஏகாம்பரம் ஒருவாறு மனம் ஆறியிருந்தார்.

ஒரு நல்ல மனுஷன்

இப்படியிருக்க, அன்று மத்தியானத்தின் மேல், காமாட்சியினுடைய தமயன், பேசி நிச்சயித்த மாப்பிள்ளையாகிய பத்மநாதனுடைய தகப்பன் விசுவலிங்கம் தன் மைத்துனன் வீட்டிற்கு வந்தார்; அவர் வரவைக்கண்ட ஏகாம்பரமும் காமாட்சியும் அவரை வழக்கம்போல் உபசரித்து ஆசனமுதவி யிருக்கச் செய்தார்கள்; விசுவலிங்கம் ஒரு நல்ல மனுஷன்; பெருந்தன்மையானவர்; படித்தவர்; பழைய கொள்கை பூண்டவர்; செல்வஞ் செல்வாக்கோடு கூடியவர். ஈதல், இரக்கம், பிறர்க்குதவி செய்தல், முதலிய சுகுணங்களும் நற்செயல்களு முடையவர்; எந்த வேளையுங் கந்தவேளை வழிபடும் நியதி பூண்டவர்; இவருடைய மனைவியின் பெயர் விசாலாட்சி; பத்மநாதன் இவர்களுக்கு ஒரேயொரு மகன்; தங்களுக்கு ஒரு பெண் குழந்தை யில்லையே யென்று கவலைப்பட்டுக்கொண்டிருந்த இவர்க ளிருவரும் காலகதியில் தங்கள் சொந்த மருமகளாகிய வனசாட்சியைத் தம் மகளாகப் பாவித்து அவளிடத்து அன்பு பாராட்டித் தங்கள் மகனுக்கு அப்பெண்ணை விரைவிற் கல்யாணஞ் செய்து வைக்கவேண்டுமென்று யோசித்தே கல்யாணத்திற்கு அடுத்த புதன்கிழமையைச் சுபமுகூர்த்தமாக நிச்சயஞ் செய்து, ஆகவேண்டிய ஆயத்தங்களையுஞ் செய்தார்கள்; இதற்கிடையில் இவர்களுடைய மகனாகிய பத்மநாதன் தான் படிப்பிக்குங் கல்லூரியில் வருடாந்தப்பரீட்சை சமீபித்து விட்டதால் தனக்கு விடுமுறை நாள் கிடைக்கவில்லை யென்று காரணங்காட்டி யெழுதி யிருந்தான். அதையிட்டு யோசித்தே ஏகாம்பரம் கவலைப்படக் காமாட்சி சமாதானஞ் சொல்லித் தன் கணவனை யொருவாறு தேறச் செய்தாள்; இப்படியிருக்கும் போதுதான் மாப்பிள்ளையின் தகப்பன் விசுவலிங்கம் அங்கே வந்தார்; என்றும் முகமலர்ச்சியோடு வரும் விசுவலிங்கம் அன்று மாத்திரம் முகவாட்டத்தோடு வரக் காணப்பட்டார். தன் மாமனார் தலைவாசலில் வந்திருப்பதை யறிந்த வனசாட்சியும் வந்து தலைவாசலுக்கு அடுத்தவறையின் வாசலில் ஒதுங்கி நின்றாள்.

* * *

உலகம் பலவிதம்: 1951 ஏப்ரல் 24

"உள்ளதைச் சொல்லுங்கள்"

விசுவலிங்கம் வந்து தம் மைத்துனன் சகோதரி யென்னுமிவர்களுடன் நானா வார்த்தைகளும் பேசிய பின், ஏகாம்பரநாதர் கல்யாண விஷயமாகத் தம் மைத்துனரை விசாரிக்கும்படி தன்மனைவியாகிய காமாட்சிக்குக் கட்சாடை காட்டிவிட்டு அந்த இடத்தைவிட்டு மெல்ல அகன்றார், காமாட்சி தன் தமயனைப் பார்த்து "அண்ணா, எங்கள் மருமகன் இந்த நாட்களில் உங்களுக்கு ஏதுங் கடிதமெழுதினாரோ? நாங்கள் இப்பொழுது கல்யாணம் நியமித்த நாளுக்குத் தாம்வர முடியாது, கல்லூரியில் வேலையதிகம், விடுமுறை நாள் கிடையாதென்றெல்லாம் எழுதி யிருப்பதாக அறிந்தோம்; அது நிசந்தானா? அப்படியென்றாற் பெருஞ் சங்கடம் நேருமே! செய்யவேண்டிய ஆயத்தங்கள் ஏறக்குறையச் செய்தாய் விட்டனவே; ஏதும் இராசீகம் தெய்வீகமாக இடையூறு நேர்ந்தால் என்ன செய்வதென்று கல்யாணத்தைத் தவணையிடலாம்; விடுமுறை நாள் கிடைக்கவில்லை யென்ற காரணங் காட்டிக் கல்யாணத்திற்கு தவணை யிடலாமா? கல்யாணமென்றால், அரச சேவையிலாக, வேறு எந்த உத்தியோகத்திலாக, மாப்பிள்ளைக்கு விடுமுறை நாள் அதிகாரிகள் கொடுப்பார்களே அதிகநாள் வேண்டாம், ஒரு கிழமைக்கு விடுமுறை நாள் பெற்றுக்கொண்டு வரமுடியாதா? இந்த ஞாயத்தை நாங்கள் சொன்னால் எவரும் நம்பமாட்டார்களே! எங்களுக்கும் இடையிடையே கடிதமெழுதி வந்த மருமகன் இப்பொழுது சில வாரங்களாகக் கடிதமெழுதாமல் விட்டுவிட்டார்; இதில் ஏதோ இரகசியமிருப்பதுபோல் புலப்படுகிறது; நீங்களும் இன்று எந்நாளுமில்லாத முகவாட்டத்தோடு வந்திருக்கிறீர்கள்; என்னையறியாமல் என்மனஞ் சஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலப்படுகிறது; அண்ணா, ஒன்றையும் ஒழியாமல் உள்ளதைச் சொல்லுங்கள் என்று சஞ்சலத்துடன் கேட்டாள் காமாட்சி.

மலைபோல் வருந்துன்பம் அணுப்போலாகி விடும்

கல்யாண விஷயமாகத் தாய் பேசத் தொடங்கவே, அறையின் வாசலில் நின்ற வனசாட்சி அந்த இடத்தை விட்டகன்று தன்னுடைய அறையினுள் போய்விட்டாள்; தன் தங்கை சொல்லச் சொல்ல அவைகளை யெல்லாம் அவதானமாகக் கேட்ட விசுவலிங்கம் தீராச் சிந்தனையில் ஆழ்ந்தவராகக் காணப் பட்டாரேயொழிய, உடனே ஏதும் பதில் சொன்னாரல்லர்; அவர் அப்படி வாளாவிருந்தமை காமாட்சி மனத்திலெழுந்த சந்தேகத்தை அதிகப்படுத்தி விட்டது "என்ன? அண்ணா! பேசாமலிருக்கிறீர்கள்? மருமகனுக்கு இப்போது வர சௌகரியப்படாவிட்டால், கல்யாணத்தைத் தவணையிட்டுச் செய்யலாந்தானே! ஏதோ தலையோ போகுங் காரியமா? ஏன் யோசிக்கின்றீர்கள்; காலம் வந்தாற்றானே கல்யாணமும் கைகூடும்" என்று தேறுதல் கூறுவாள்போற் சொன்னாள் தங்கை காமாட்சி; தங்காய், நாம் ஒன்றை நினைக்கத் தெய்வம் பிறிதொன்றை நினைத்துவிட்ட தென்றெண்ணவேண்டிக்கிடக்கிறது; என் மகனிடமிருந்து நேற்று ஒரு கடிதம் வந்தது; அந்தக் கடிதத்தை ஒருமுறை இருமுறை மும்முறை புரட்டிப் புரட்டிப் படித்து பார்த்தேன்; அதில் அவன் எழுதிய எழுத்து நல்லாயில்லை; அவனுடைய உள்ளத்தை யாரோ வஞ்சகர்கள் பேதித்துவிட்டார்க ளென்றெண்ண வேண்டி யிருக்கிறது; அதிகஞ் சொல்வதென்ன, தான் இப்போதைக்குக் கல்யாணஞ் செய்வதில்லை யென்ற கருத்துப்பட எழுதியிருக்கிறான்; அந்தக் கடிதத்தைப் படித்தநேரந் தொடக்கம் என் மனம் குழம்பிவிட்டது; புத்தி தடுமாறுகின்றது; தன் மைத்துனியைத் தனது ஆருயிர்போல் மதித்து அருமை பாராட்டி நடந்த இவன் மனம் இப்படி வலித்ததோ, மாறுபட்டதோ என்றதுதான் எனக்கும் தீராக்கவலை; இதனை என் மனைவிக்குத்தானும் வெளியிடாமல் நான் மறைத்து வைத்தேன்; ஆனால் என்னுள்ளக்கவலை என்னை அவளுக்குக் காட்டிக்கொடுத்துவிட, அவள் கவலையின் காரணத்தையறிய ஆவல் கொண்டு பலமுறை என்னை யிரந்து கேட்டாள்; நான் காகிதத்தை அவளுக்குக் காட்டினேன், அவள் அந்தநேரந் தொட்டு அன்னாகாரமின்றிக்கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறாள்; என்னை மகனிடம் போகச் சொல்லி நெருக்குகிறாள்; உங்களுக்கு இந்த விஷயத்தைச் சொல்லாமல் இரகசியமாக வைத்துக்கொண்டு மகனிடம் போய் வந்தபின் முடிவை வெளியடலாமென்று; சென்ற இரவு முழுவதும் படுத்துக்கிடந்தபடி நித்திரையின்றி யோசித்தேன்; ஆனால் மனங் கேட்கவில்லை, அதனால் இங்கே புறப்பட்டு வந்தேன்; ஆனால் மனங் கேட்கவில்லை, அதனால் இங்கே புறப்பட்டு வந்தேன்; இதையிட்டுத் தங்காய், நீயாக, என் மைத்துனராக ஏதும் யோசிக்கவேண்டியதில்லை; ஆனால் என் மருமகள் மாத்திரம் இதைப்பற்றி எள்ளளவும் அறியாமலிருக்கட்டும்; அனுபவமற்ற பிள்ளை; பேதைமையினால் ஏதும் எண்ணக் கூடும், புத்தியீனமாய் வைராக்கியங்கொண்டு ஏதுஞ் செய்துவிடவுங் கூடும்; மலைபோல் வருந் துன்பமெல்லாம் கந்தனருளால் அணுப்போலாக நீங்கிவிடும்" என்று கண்களில் நீர்ததும்பக் கலக்கத்தோடு மெல்லச் சொன்னார் விசுவலிங்கம்.

"ஆங்காலம் தானேயாகும்"

"அண்ணா, கலங்காதீர்கள், கவலைப் படாதீர்கள்; ஏதோ பொல்லாத காலத்தால் இந்த நேரத்தில் இப்படியான இடையூறு நேர்ந்தது; உங்கள் மருமகளுக்கு ஒருபோதும் இதனை நான் வெளியிடமாட்டேன்; இப்போதைக்கு அவருக்கும் இதைப்பற்றிப் பேசமாட்டேன்; நீங்கள் உடனே புறப்பட்டு மகனிடம் போகவேண்டாம், அங்கு வருவதாக முந்தியே கடிதமெழுதிவிட்டு மகனுடைய கடிதத்தைக் கண்டபின் போக வேண்டுமானாற் போவதே புத்தியாகும்; கல்யாணம் குழம்பினதென்ற செய்திதானும் வெளியில் வரவொண்ணாது; ஆங்காலம் ஏதும் தானே ஆகும்; நீங்கள் இப்பொழுதே உங்கள் வீட்டிற்கு மீண்டுபோய் என் மச்சாளையுந் தேற்றி விஷயத்தை வெளியில்விட வேண்டாமென்று புத்தியாய்ச் சொல்லுங்கள்; உங்கள் மைத்துனருக்கு நான் ஏற்ற சமாதானஞ் சொல்லிக்கொள்ளுகிறேன்; நீங்கள் போய் வாருங்கள்" என்று விடை கொடுத்துத் தன் தமயனை அவர் வீட்டிற்கனுப்பினாள் காமாட்சி.

* * *

உலகம் பலவிதம்: 1951 மே 01

என்ன விசேஷம்!

காமாட்சி அவ்வாறு தமயனுக்குச் சமாதானஞ் சொல்லி அவரை ஒருவாறு தேற்றி யனுப்பினாளெனினும் அவள் மனம் பெரிதும் வேதனைப்பட்டது; தன் மருமகன் மனம் மாறுபட, கல்யாணம் முடிப்பதில்லை யென்று சொல்லக் காரணமில்லையே; இது என்ன விபரீதம் என்று யோசித்தாள். தன் கணவனுக்கு இதனைச் சொல்வதும் புத்தியல்ல, சொல்லாமல் விடுவதும் நல்லதல்ல என்று இருதலைக் கொள்ளி யெறும் பொத்துப் பெரிதும் இடர்ப்பட்டாள். சற்றுநேரந் தன்னந்தனியேயிருந்து காமாட்சி சிந்தித்தாள். இதற்கிடையில் ஏகாம்பரநாதர் தம் மனையாளிருக்கு மிடத்திற்கு வந்தார்; சிந்தனையில் மூழ்கியபடியிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் மனையாளைக் கண்டு, கல்யாணத்திற்கு ஏதோ இடையூறு நேர்ந்திருக்க வேண்டுமென்று ஏகாம்பரநாதர் தம்மளவில் அயிர்த்துக்கொண்டு, தம் மனையாளைப் பார்த்துத் "தமயனார் போய்விட்டாரா? என்ன விசேஷம்? எனக்குஞ் சொல்லாமற் போய் விட்டார்" என்று சொல்ல, காமாட்சி என்ன பதில் சொல்வதென்றறியாமற் சிறிது நேரம் மயங்கினாள். "என்ன பாருங்கள், கேட்ட நேரந்தொட்டு மனம் ஏங்குகின்றது; நாங்கள் கட்டியிருந்த மனக்கோட்டை யெல்லாம் சிதைந்துவிட்டது; தம்முடைய மகன் கல்யாண விஷயமாக ஏதோ தமக்கு எழுதியதாக என்னண்ணா சொல்லிக் கவலைப்படுகிறார்; அதனாற்றான் உங்களையுங் காணாமல், உங்களுக்குச் சொல்லாமற் கவலையோடு தம் வீட்டிற்குப் போய்விட்டார்....." என்று காமாட்சி சொல்லி முடிப்பதற்கிடையில், ஏகாம்பரம், "அதிலென்ன, இப்பொழுது கல்யாணஞ் செய்ய இயலாது, விடுமுறை நாள் கிடைக்கவில்லையென்றால், அடுத்து அடுத்த மாசங்களில் மாப்பிள்ளையின் சௌகரியத்தையும் உத்தேசித்து நல்ல நாளொன்று பார்த்துக் கல்யாணத்தை நடத்தலாகுமே; அதற்கேன் இப்படிக் கவலைப்படு கிறாய்; மாப்பிள்ளையும் பெண்பிள்ளையும் கைக்குளிருக்கும்போது என்ன கவலை?" என்று சொன்னார்.

"கெடுவார் கேடு சூழ்வர்"

"அப்படியென்றாற் கவலையில்லையே இது விஷயம் அப்படியல்ல; அதற்கும் மேற்பட்டு விட்டது; மாப்பிள்ளைதான் இப்போது கல்யாணமே செய்வதில்லையென்று கடித மெழுதியிருக்கிறாராம்; அதையிட்டுத்தான் கவலைப்பட்டு என் தமயனார் இங்குவந்து சொல்லித் தீராத் துயரத்தோடு மீண்டுபோகிறார்" என்றாள் காமாட்சி; இப்படி மனையாள் சொல்லக்கேட்ட ஏகாம்பரநாதர் திடுக்கிட்டார்; ஏங்கினார்; நீ சொல்வது நிசந்தானா?" என்று மனையாளை மீளவுங் கேட்டார்; "இப்படியான கருமத்தில் நிசத்தைச் சொல்லாமல் வேடிக்கையாகப் பேசமுடியுமோ" என்றாள் காமாட்சி; சற்றுநேரம் மௌனமாயிருந்து யோசித்தார் ஏகாம்பரநாதர்; "மருமகனுடைய மனம் இப்படி மாறுபட்டதற்குக் காரணமென்ன என்று உனது தமயன் ஏதுஞ் சொன்னாரோ?" என்று கணவன் கேட்க, மனையாள் "அவருக்கும் நிசமான காரணம் என்னவென்று தெரியவில்லையாம்; ஆரோ கெடுவார் கேடுசூழ்வரென்றபடி, மருமகனுடைய கூட்டாளிமார் யாரோ ஏதோ சொல்லி அவர் மனத்தைப் பேதப்படுத்தியிருக்க வேண்டுமென்றுதான் என் அண்ணன் எண்ணுகிறார். "ஆரும் ஏன் கோட் சொல்லப்போகிறார்கள்; குழப்பப்போகிறார்கள்; மேலும் சொல்வார் சொன்னாலுங் கேட்பார்க்கு மதியென்ன என்றபடி ஆரும் ஏதும் அப்படித்தான் சொன்னாலும்; உன் மருமகன் அதனைக் கேட்டுக் கொள்ள நியாயமில்லையே; இது என்ன வேற்றுச் சம்பந்தமா? நேற்று இன்று பேசி ஒழுங்கு செய்த கல்யாணமா? சின்ன வயசு தொடங்கி ஒழுங்கு செய்த கருமத்தை இடையில் யாரும் குழப்பிவிட முடியுமா? இதில் ஏதோ சூதிருக்க வேண்டும்? என்று மனக் கலக்கத்துடன் சொன்னார்; "நானும் அப்படித்தான் நினைக்கிறேன்" என்றாள் காமாட்சி.

"நீ சொல்வதுஞ் சரிதான்"

"நாங்களிருவோமுங் கவலைப்பட்டுக் கொண்டிருப்பத னால் ஆகப்போவதேதுமில்லை; இந்த மாறுபாட்டுக்கு காரண மென்னவென்பதை அறியவேண்டும்; மேலும் எங்கள் மகள் இதனை யறிய நேர்ந்தால் பெரும்பிழை வரும். இவள் தன் மைத்துனனையே எதற்கும் நம்பிக் காத்திருக்கிறாள்; ஆனதால் இவளுக்கு மாத்திரம் சொல்லேனும் சொல்லாய் இதனை வெளியிடவிடாதே; நீடித்தநாட் பேசி ஒழுங்கு பண்ணி நிச்சயித்திருக்க கல்யாணம் இடையிற் குழம்புவதும், பின்னர் நிறைவேறுவதுமுண்டு; ஆனதால் மனத்திடத்தைக் கைவிடாதே; எதற்கும் தெய்வத்தை வேண்டு; வருவது தானே வரும்" என்று ஒருவாறு தேறுதல் சொன்னார் ஏகாம்பரநாதர். "அப்படியே செய்கிறேன்; ஆனால் நாம் காரணத்தையறிய முயற்சி செய்ய வேண்டியதில்லை; என் அண்ணரே உடனே தம் மகனிருக்குமிடத்திற்குப் போகப்புறப்பட்டார்; ஆனாலும் நானே இப்பொழுது போகவேண்டாம்; ஒரு கடிதத்தையெழுதிக் காரணத்தையறிந்து கொண்டு அதன்பின் போக வேண்டுமெனக் கண்டபின் போகலாமென்றேன்; நான் சொன்னதை அவரும் ஏற்றுக்கொண்டார். அண்ணர் இந்த விஷயமாகத் தம் மகனிடம் போயறிவதே யொழிய, நாங்கள் போவது அவ்வளவு உசிதமல்ல என்றாள் காமாட்சி; "நீ சொல்வதுஞ் சரிதான்" என்றார் ஏகாம்பரம், ஆனால் அந்தக் கருமத்தைத் தன் மகள் அறியாமல் எத்தனை நாளைக்கு மறைத்து வைத்திருக்க முடியும் என்பதையிட்டு இருவருங் கவலைப்பட்டார்கள்.

* * *

உலகம் பலவிதம்: 1951 மே 08

"பலகற்றுங் கல்லார்"

கவலையோடு வீட்டிற்கு மீண்டுபோன விசுவலிங்கம் தமது தங்கை சொன்ன புத்தியை யுத்தேசித்து உடனே மகனிருக்கு மிடத்திற்குப் போகும் நோக்கத்தை விடுத்து, மகனுக்கு ஒரு கடிதம் எழுதினார்; அக்கடிதத்தில் மகன் கல்யாணஞ் செய்ய மறுப்பது முறையல்ல வென்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது மைத்துனனாக, சகோதரியாக, மருமகளாக தங்கள் குடும்பத்தில் என்றும் அன்பு பாராட்டி வருகிறார்களே யொழியப் பிழையொன்றுஞ் செய்திலரெனவும், ஆதலால் அவர்கள் மனத்தை வருந்த வைப்பது முறையல்ல எனவும், அப்படிச் செய்தல் நம்பிக்கைத் துரோகமாய் முடியுமெனவும், சொந்த மருமகளைப் புறக்கணித்து வேற்றுக் குடும்பத்திற் பெண்கொள்ளும் விஷயத்தில் தாங்களிருவரும் சம்மதப்படமுடியா தெனவும், வனசாட்சியைக் கல்யாணஞ் செய்ய உடன்பட்டு, அவளிடத்திலே அன்று தொடக்கம் நீடித்த காலம் அன்பு பாராட்டிய மகன் இடையிலே மாறுபடுவதற்குக் காரணமென்ன வெனவுங் கருத்துப்பட, ஒரு நீண்ட இதமான கடிதத்தைத் தம் மகனுக்கு எழுதினார்; விரைவிற் பதில் கிடைக்காவிட்டால் தாம் உடனே புறப்பட்டு மகனிருக்குமூருக்கு வருவதாகவும் அக்கடிதத்தில் எழுதியிருந்தார். எழுதியனுப்பி விட்டு இரண்டு மூன்று தினத்துட் பதில் தமக்குக் கிடைக்கு மெனவும் விசுவலிங்கம் ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணமிருந்தார்; நான்காநாட் பதில் கிடைத்தது; ஆனாற் பதிலோ சுருக்கமாக விருந்தது; "அருமையான தந்தையாரே, நான் எனது சொந்த மைத்துனியைப் புறக்கணித்து, வேறொரு பெண்ணைக் கல்யாணஞ் செய்ய நோக்கங் கொண்டிருந்தாலல்லவோ, நீங்கள் இப்படியான நீண்ட கடிதம் எழுதவேண்டி நேர்ந் திருக்கும்; நான் கல்யாணமே செய்வதில்லையென நிச்சயித்துக்கொண்டேன்; அதற்காக என்னைப் பழிசொல்வதும் மனவருத்தப்படுவதும் முறையல்லவே; வனசாட்சி என்னைக் காத்திருக்காமல் வேறு வரனுக்கு மாலை சூட்டட்டும் என்பதைத் தெரிவிக்கவே முந்திய கடிதத்தை உங்களுக்கு எழுதினேன்; குறையெண்ணாதீர்கள் என்னுங் கருத்துப்படப் பத்மநாதன் எழுதியிருந்தான்; விசுவலிங்கம் அக்கடிதத்தைப் படித்துச் சிரித்துவிட்டுத் தம் மனைவிக்கும் படித்துக்காட்டிவிட்டு, "எங்கள் மகன் ஏதோ இங்கிலீசு படித்து பீ. ஏ. பட்டம் பெற்றவுடன் கல்வியிலும் விவேகத்திலும் தனக்கொப்பார் தன்னிலும் மிக்கார் எவருமில்லை யென்றெண்ணிக் கொண்டான்;

"உலகத்தோடொட்ட ஒழுகல் பலகற்றுங்
கல்லார் அறிவிலாதார்"

என்ற ஒரு குறளைப் படித்திருந்தாலும் இப்படி அகந்தை கொள்ளவும் கெட்டுப்போகவும் நேர்ந்திராதே" என்று பெருமூச்சுடன் சொன்னார்; கேட்ட மனையாளாகிய விசாலாட்சி "நீங்கள் இப்பொழுது சொன்ன குறட் பாட்டின் கருத்து எனக்கு விளங்கவில்லை யெனினும், "கருத்து வேறொன்றுமல்ல உலகத்திலுள்ள பெரியவர் கொண்ட ஒழுக்கத்திற்கு ஏற்க நடக்கப் பழகிக் கொள்ளாதவர், பல நூல்களையும் படித்தாரேனும் அறிவில்லாதவராவர் என்பதுதான் கருத்து; சரி நான் அவனுக்கு உடனுக்குடன் ஒரு கடிதமெழுதி விடுகிறேன் என்று சொல்லிக்கொண்டு, "அருமை மகனே, கடிதங் கிடைத்தது நீ கொண்ட புதிய நோக்கத்தை என் மைத்துனர் சகோதரி மருமகள் யாகியவர்களுக்கு நான் வெளிவிடுவது கஷ்டமான காரியம்; ஆனதால் அவர்களுக்கு நீயே இடையிட்டுக்கொண்ட புது நோக்கத்தை நேரில் எழுதி அவர்களைச் சமாதானப்படுத்திவிடு; அவர்கள் மனச்சமாதானப்பட்டால் எங்களுக்கும் எவ்வகையான கவலையுமில்லை" என்னும் கருத்தமைய விசுவலிங்கம் ஒரு கடிதமெழுதியிட்டார்.

"பொறையுள்ளவள் நிறையுள்ளவள்"

இரண்டு மூன்று தினங்கள் சென்றபின் பத்மநாதனிட மிருந்து ஒரு கடிதம் ஏகாம்பரத்திற்கு கிடைத்தது; அதில் அக்கடிதத்தைத் தான் அவர்கட்கு எழுத நேர்ந்தமை தனக்குத் தீராக் கவலையென்றும், அக்கடிதம் அவர்களுக்குத் தீராத் துயரம் தருமென்றும் ஏதோ இடையில் எக்காரணமுமின்றித் தன் மனத்தில் இல்லறத்தில் புகும் விஷயத்தில் வெறுப்பு தொட்டுவிட்ட தென்றும், ஆதலால் வனசாட்சியை விவாகஞ் செய்யும் விஷயத்தில் தன்னை நம்பியிருக்க வொண்ணாதென்றும், ஒரு ஆடவன் விவாகமின்றி உலகத்திலே சஞ்சரிக்கலாம், ஆரும் ஒரு கன்னிகை அப்படி யொன்றியாக சஞ் சரித்தல் அரிதெனவும், ஆதலால் வனசாட்சிக்குச் சீக்கிரத்தில் ஒரு தக்க வரனைத் தேடிக் கல்யாணம் செய்வதே முறையாகு மென்றும் தான் அப்படி மறுத்துக் கடிதமெழுதியமையை மாமன் மாமி மச்சாள் மூவரும் பொறுத்துக் கொள்ள வேண்டுமென அவர்களை இரந்து கேட்பதாகவுங் கருத்துப்பட அக்கடிதம் எழுதப்பட்டிருந்தது; அக்கடிதத்தை ஒருமுறை இருமுறை மும்முறை கவலையோடு வாசித்துப் பார்த்தார் ஏகாம்பரம்; அதன் பின் தம் மனைவியிடம் படித்துப் பார்க்கும்படி சொல்லிப் பெருமூச்சோடு நீட்ட அவள் வாங்கி வாசித்துவிட்டு ஏங்கி திகைத்தாள்; இதற்கு என்ன செய்வது என்று தன் கணவனைப் பரிவுடன் கேட்டாள்; "என்ன செய்வதென்பதை யிட்டுத்தான் நானும் யோசிக்கின்றேன்" என்றார் ஏகாம்பரம்; "மகளுக்கு இன்னமும் மறைத்து வைப்பதா" என்று மனையாள் கேட்க, "அவளுக்கும் விஷயத்தை வெளியிடும் படி தானே அவன் எழுதியிருக்கிறான். ஆனதால் கடிதத்தைக் காட்டுவோம்" என்றார் ஏகாம்பரம்; அவள் இதனைக்கண்டால் ஏங்குவாள், கவலைப்படுவாள், உண்ணாமல் உறங்காமலிருப்பாள், தன்னுயிருக்கு முடிவு தேடவுந் துணிவாள்; எந்த நேரமுந் தன் மைத்துனனே சதமென்று நம்பியிருந்தவள்; படித்துவிட்டு என்ன செய் வாளோ, என்ன சொல்வாளோ நான் அறியேன்" என்று சொல்லிக் கலங்கினாள் காமாட்சி; "நீ ஒன்றுக்கும் பயப்படாதே; ஏதோ நடப்பதுதானே நடக்கும்; மேலும் எங்கள் மகள் புத்தியீனமானவளல்லள்; பொறையுற்றவள், நிறையுள்ளவள், கல்வியறிவுள்ளவள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வநம்பிக்கையுள்ளவள், யோசியாமல் எதனையுஞ் செய்யாள்; நீ பயப்படாமற் கொண்டுபோய்க் கொடு" என்று சொல்லிக் கொடுக்க காமாட்சி தீராக் கவலையோடு யாதும் பேசாமல் மெல்ல மெல்லப் போய்த் தன் மகளிடம் அக்கடிதத்தைக் கொடுத்தாள்; தாயிடம் மகள் கடிதத்தை இரு கைகளையும் நீட்டி வாங்கினாள்; வாங்கிக் கடிதத்தின் முடிவை அவதானித்தாள் "பத்மநாதன்" என்று கைச்சாத்திட்டிருப்பக் கண்டாள்; தாய் கவலையோடு நிற்பதையுங் கண்டாள்; கடிதத்தைத் தன்னளவிற் படித்தாள்.

"விதியை யார் விலக்க வல்லார்"

ஒருமுறையல்ல இருமுறை அவதானமாகப் படித்தாள்; கோபக்குறியான சிரிப்புச் சிரித்தாள்; "அம்மா, ஏன் கவலைப்படுகிறீர்கள்? அவர் தம்முடைய நோக்கத்தை வெளிப்படையாக எழுதினார்; அதற்கு நாம் ஏன் கவலைப்படுவான்? ஏன் குறைசொல்வான்? எல்லாம் விதியின் விளையாட்டம்மா! இந்தக் கடிதத் திற்கு என் அருமைத் தகப்பனார் என்ன பதிலெழுத உத்தேசித்திருக்கிறாரென்று உங்களுக்குத் தெரியுமா அம்மா? "என்று தாயைக் கேட்டாள் வனசாட்சி; "அவர் கடிதங் கிடைத்த நேரந்தொட்டு ஏங்கியபடி இருக்கிறார். அவர் என்ன பதில் எழுதுவது, அயலட்டத்திலுள்ளவர் கல்யாணத்தைப்பற்றிக் கேட்டால் நான் என்ன பதில் சொல்வது" என்று கவலையுடன் சொன்னாள் காமாட்சி; "அம்மா, நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாதீர்கள்; அப்பரையுங் கவலைப்பட விடாதீர்கள்; இப்பொழுது என்னதான் மூழ்கிவிட்டது; நிலையிற் பிரியேல் என்ற வாக்கியத்தை இடர் நேர்ந்த நேரத்திற்றான் கடைப்பிடித்து நடக்கவேண்டும்; அப்பரை அவருக்குப் பதிலெழுத வேண்டாமென்று சொல்லிவிட்டு அவருக்கு நான் நேரிற் பதிலெழுத அநுமதியுங் கேட்டு வாருங்கள் அம்மா" என்றாள் வனசாட்சி; உடனே தாய்போய்ச் சொல்ல, ஏகாம்பரநாதன் "நான் இந்த நேரத்தில் எழுதினால் இந்தத் தொடர்பு தெறிக்கும்படியாகத்தான் எழுதிவிடுவேன்; மகளையே எழுதச் சொல்லு" என்று சொல்லுதலும், தந்தை சொன்னதை உடனே போய் மகளுக்குத் தெரிவித்தாள் காமாட்சி; வனசாட்சி பின்வருங் கருத்தமைய ஒரு கடிதத்தைப் பத்மநாதனுக்கு எழுதுவாளா யினாள்;-

"என் அருமையான அத்தான் எழுதிய கடிதத்தை நானும் படிக்க நேர்ந்தது; அக்கடிதத்திற்கு என் பெற்றார் பதிலெழுதக் கூசிப் பயந்திருக் கிறார்கள்; அதனாலும், அக்கடிதவிஷயத்தை எனக்குத் தெரிவிக்கவேண்டுமென்று தாங்கள் குறிப்பிட்டிருப்பதாலும், இக் கடிதத்தைத் தங்களுக்கு நேரில் எழுதத் துணிந்தேன்; என் முறையற்ற துணிவைப் பொறுத்துக்கொள்ளுங்கள்; இல்லறத்தில் தங்களுக்கு வெறுப்புத் தொட்டதற்குக்காரணம் என்ன என்பதைச் சற்று வெளிப்படையாய் எழுதியிருந்தால் எங்களெல்லார்க்கும் ஒரு அளவிற்கு மனம் ஆறும்; அதனையும் எழுதா தொழிந்தீர்கள்; இல்லறத்தில் இதுகாறும் இருந்த விருப்பம் இடையிற் கெட்டு, துறவறத்தில் ஆசை தொட்டதுபோலவே, இன்னுஞ் சிலகாலஞ் செல்லத்துறவறத்தில் ஆசை கெட்டு, இல்லறத்தில் மீண்டு விருப்பம் வருதலுங் கூடும். கௌசிகன் காசிபன் போன்ற மகா முனிவர்களையும் இடையில் வந்து பங்கப்படுத்திய பெண்ணாசை உங்களை மாத்திரம் அறவே விட்டகன்ற தென்பதை எப்படி நம்பியிருக்கலாம், இனி ஆண்கள் விவாகமில்லாமலிருக்க முடியும்; பெண்கள் விவாகமில்லாமலிருப்பது கஷ்டமென்று கருத்துப்பட உங்கள் கடிதத்தில் எழுதியிருந்தீர்கள்; தமிழ்ப்பெண்கள் சைவப் பெண்களுக்கெல்லாம் தெய்வம் போன்ற திலகவதியார் தனியே வாழ்ந்தமையினால் அம் மூதாட்டியாருடைய ஒழுக்கத்திற்கு ஏதும் இடையூறு நேர்ந்ததுண்டோ? இல்லையே; பெண்ணாகப் பிறந்தவளுக்கு உலகத்திலே தலைவனில்லையானால், சகல உலக நாயகராகிய பரமபதியே தலைவராகக் கொள்ளப்படுவர்; கொண்டான் குறிப்பறிந்து தொண்டாற்றுங் கற்புடை மகளிர், கணவனில்லா வழி அந்தப் பெருமனுக்கு நூல்களிலே சொல்லப்பட்ட திருத்தொண்டை அவதானித்து அப்படித் தொண்டாற்றி ஈடேறல் முடியும்; ஆதலால் பெண்கள் ஏகாந்தமாயிருத்தல் இலகுவென்பது என்னெண்ணம்; தாங்கள் எழுதிய கடிதத்திலுள்ள ஏனையவை என் மனத்தை

"சகடக்கால் போல மாறி நிகழ்வது
உலக இயல்பு"

வருத்தவில்லை; ஆனால் ஒரு வசனம் மாத்திரம் என்னுள்ளத்தை உபாதிக்கின்றது. அது வேறொன்று மல்ல, வனசாவிற்கு என்னைக் காத்திருக்க வேண்டாம்; தக்க வரனைத் தேடி மணஞ்செய்து வைப்பது நல்லதென்னுங்கருத்துப்பட நீங்கள் அக் கடிதத்தில் எழுதிய வாக்கியமே என்னுள்ளத்தைப் பெரிதும் உபாதிக்கின்றது; ஆனால் இந்த மன வேதனையும் காலகதியில் இறைவனருளால் நீங்கும்; உங்களுடைய உள்ளத்தில் இல்லறத்தில் வெறுப்பு இடையிட்டு எப்படி வந்ததோ, உங்கள் கடிதத்தைக் கண்டவுடனே எனக்கும் அப்படியான வெறுப்புத் தொட்டுவிட்டது; அதனால் நீங்கள் தயவுசெய்து என் விஷயமாகக் கவலைப்படவேண்டாம் "விதியை யார் விலக்க வல்லார்" என்ற பெரியார் வாக்குத் தாங்கள் அறியாததல்ல; நான் உங்களுக்குக் கடிதமெழுதத் துணிந்தமையைப் பொறுத்துக் கொள்ளும்படி இரண்டாமுறையுங் கேட்டுக்கொள்ளுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம்,

உங்கள் அன்புக்குரிய
வனசாட்சி

அம்மா, இந்தக் கடிதத்தை தந்தையாருக்குக் காட்டிவிட்டு மேல்விலாசமெழுதிப் போடும்படி சொல்லுங்கள்" என்று தாயிடஞ் சொல்லிக் கொடுக்க, தாய் வாங்கிக் கொண்டு போய்த் தந்தையிடங் கொடுக்க அவர் வாங்கிப் படித்து மகிழ்ந்து உடனே உறையுள் வைத்து ஒட்டி மேல்விலாசமிட்டு அனுப்பினார்.

* * *

உலகம் பலவிதம்: 1951 மே 15

"திக்கற்றவர்கட்குத் தெய்வந்துணை"

வனசாட்சி அக்கடிதத்தை யெழுதித் தன் மைத்துனனுக்கு அனுப்பச் செய்துவிட்டு மன ஆறுதலுடையவளாய் ஊடாட முயன்றனளெனினும், உண்மையில் அவள்மனஞ் சமாதானப்படவில்லை; தன் மைத்துனன் தன்னைப் புறக்கணித்தமைக்குக் காரணமென்ன என்பதை அறியவேண்டுமென்று அவளுடைய உள்ளம் அவாவியது; "என்னிடத்தில் நிசமான விசுவாச முள்ளவர், அன்புள்ளவர்; நான் மனம் வருந்தத் தாம் சகிக்கமாட்டார்; இப்படிப்பட்டவருடைய மனம் இடையிற் பேதப்பட்டமைக்கு ஏதோ அந்தரங்க காரணமிருத்தல் வேண்டும்; அந்தக் காரணத்தை யறிந்தாலல்லாமல் என்மனமும் ஆறுதலடையப் போவதில்லை; ஆனால் எப்படி அறிதல் முடியும்; நாம் அவரை நேரிற் கேட்டறிவதா, அது முடியாது, யாரையும் அவரிடம் அனுப்பியறியலாமோ என்றால், அவர் பிறருக்குக் காரணத்தை வெளியிடப்போவது மில்லை; இதற்கு என்ன செய்வேன்; திக்கற்றவர்க்குத் தெய்வந்துணை யென்பார்களே என் விஷயத்திலே தெய்வமுங் கண் மூடிக்கொண்டிருக்கிறதே" என்றிப்படிக் கலங்கினாள். "பசி வந்திடப்பத்தும் பறந்திடும்" என்பர்; ஆனால் மனக்கிலேசம் அதிகப்பட்டால், அந்தப் பசியும் வரமாட்டாது, கண்ணுமுறங்காது என்பது அனுபவத்தில் எவருங் காணத்தக்கது; கவலை மேலீட்டினால், வனசாட்சி ஊணுறக்கங் குன்றிச் சரீரம் மெலியப் பெற்றாள்; இதனை அவள் பெற்றாரும் அவதானித்துக் கவலைப்பட்டனர்; தேறுதல் கூறினர்; தங்கள் மகள் நாள்தோறும் மெலிவடைந்து வருவதையும், அதன் காரணத்தையும் உணர்ந்த காமாட்சி கவலையுற்று, மகளைப்பார்த்து "கண்ணே, வனசா, ஏனடியம்மா தீராக்கவலை? கவலைப்பட்டு ஊணுறக்கமில்லாமல் தேகம் மெலிவதே யல்லாமல் வேறு கண்ட பயனென்ன? நீயோ நல்லாய்ப் படித்த பிள்ளை, படிப்புக்குத் தக்க அறிவு, அறிவுக்கேற்ற ஆறுதல் இருக்க வேண்டாமா? ஏதோ நடக்கவேண்டியது நடந்துதானே தீரும்; ஆதலால் எது வந்தாலும் ஊழால் என்று நாமிருத்தல் வேண்டும்; கொண்ட கவலையை விடு; துன்பம் வந்தாலும் இன்பம் போல் மதித்து மன ஆறுதலோடு வாழ்வது தான் உன்னைப்போலப் படித்தவர்கட்கு முறை" என்று இப்படியெல்லாந் தேற்றினாள்.

"தணலை உள்ளங்கையில்
வைத்துக்கொண்டு
ஜலக்கட்டியென்று பாவிக்க முடியுமா"

பெற்றவள் சொன்னவையெல்லாம் உற்றுக் கேட்டுக்கொண்டு சற்று நேரஞ் சிந்தித்தபடியிருந்த வனசா, தாயைப்பார்த்து "அம்மா, நீங்கள் சொல்வது முழுவதும் நிசம்; எனக்கு வேறொரு கவலையுமில்லையம்மா, என்னைத் தம் ஆருயிர் போல் மதித்து அன்பு பாராட்டி இவ்வளவு காலமும் நடந்து வந்த என் மைத்துனர், என்னை வெறுத்தமைக்கு, புறக்கணித்தமைக்கு ஏது என்னவென்பதை உள்ளபடி யறிந்தா லொழிய என்மனம் ஆறாது; துன்பத்தையும் இன்பம்போல மதிக்கச் சொல்லுகிறீர்களம்மா; அப்படி மதித்தல் மகாஞானிகளால், முற்றுந்துறந்த முனிவர்களால் முடியுமொழிய, சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய எங்களால், எங்களுள்ளும் அநுபவமற்ற, நல்லறிவற்ற பேதையாகிய என் போன்ற சின்னஞ்சிறு பெண்களால் முடியுமா? தாயே! உள்ளங் கையிலே நெருப்புத் தணலை வைத்துக்கொண்டு, ஜலக்கட்டியென்று மனத்திற் பாவனை பண்ண என்னால் முடியுமா, அன்னையே" என்று கவலை மீதூரச் சொன்னாள்; கேட்ட தாய் பதிலொன்றும் பகர இயலாளாய்ப் பெருமூச்சுடன் அவ்விடத்தை விட்டகன்றாள்; தங்கள் ஒரேயொரு மகளுக்கு நேர்ந்த உள்ளக்கவலையை நீக்கியருளல் வேண்டுமென்று விசாலாட்சி எந்த நேரமும் தங்கள் குலதெய்வமாகிய புவனேசுவரியைப் பிரார்த்தித்து வருவாளாயினாள். வனசாவும் உலக மாதாவாகிய ஈசுவரியே தன் கவலையை நீக்கித் தன் மனோரதம் நிறைவேறச்செய்தருள வேண்டுமென்று தேவியைச் சிந்தித்து அந்தரங்கமாக வழிபட்டாள்.கவலையாக மகிழ்ச்சியாக, இன்பமாக துன்பமாக, செல்வமாக வறுமையாக, வாழ்வாக தாழ்வாக ஒருவரிடத்து நீடித்து நிற்பனவல்ல; இவை சகடக்கால் போல் மாறிமாறி நிகழ்வது உலகியல்பு; வனசாட்சி இவ்வாறு தீராக் கவலையோடு காலங்கழிக்கும்போது, ஒருநாட் பிற்பகல், கமலாட்சி அவளைக் காணும்படி அவள் வீட்டிற்கு வந்தாள்; கமலாட்சி தன் வீட்டிற்கு வரக்கண்ட வனசாட்சி கொண்ட ஆநந்தத்திற்கு ஒரு எல்லையில்லை யெனலாம்; அவள் வரக்கண்ட வனசாட்சி எழுந்து விரைந்து நடந்து அவளையெதிர் கொண்டு முகமலர்ச்சி காட்டி இன்சொற் கூறி அவள் கரத்தைத் தன் கரத்தால் மிருதுவாகப்பற்றி யழைத்துக் கொண்டுவந்து தங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுத் தலைவாசலிலுள்ள ஒரு "ஸோபா" வில் அவளை யிருத்தித் தானும் பக்கலில் மருவியபடி யிருந்தாள்; கமலாட்சி இந்தக் குடும்பத்தினருக்கு அந்நியளல்லள்; நெருங்கிய சுற்றத்தவள், பத்மநாதனுக்குத் தங்கை முறைபூண்டவள்; வனசாவிற்கு மைத்துனமுறை பூண்டவள்; படிக்குங்காலத்திலே கமலாட்சி மேல் வகுப்பிலும், வனசாட்சி கீழ் வகுப்பிலுமாக ஒரே கலாசாலையில், ஒரே விடுதிச்சாலையில் ஒருங்கிருந்து இருவருங் கல்விகற்றவர்கள். அதனால் உறவினரென்ற தொடர்பில் மாத்திரமல்லாமல், சகபாடிகளென்ற முறையிலும் இருவருக்குமிடையே பெரும் ஒற்றுமையுண்டாயிற்று; இரண்டு ஆண்டுகட்கு முந்திக் கமலாட்சியை அக்குடும்பத்திற்கு இனமான காசிலிங்கமென்பவன் கல்யாணஞ் செய்து, தனது உத்தியோகதானத்தில் அரசினர் பொறுப்பில் உதவப்பட்ட வாசஸ்தானத்தில் வசித்தாள்; கமலாட்சி ஒருகால் தன்னூருக்குப் போய் மீண்டுவர வேண்டுமென்று விரும்பியமையினால் நாயகன் அநுமதி கொடுக்க அவள் தான் பிறந்த வீட்டில் வந்து சிலதினந் தங்கியிருந்தாள்; அப்பொழுது வனசாவைக்கண்டு சுகம் விசாரித்துக்கொண்டு அவளுடைய கல்யாண விஷயம் எவ்வளவிலிருக்கிறதென்று அறியும்படியாகவே அந்த நேரம் வனசாட்சி வீட்டிற்குக் கமலாட்சி வந்தாள்.

* * *

உலகம் பலவிதம்: 1951 மே 29

"ஆரிடஞ்சொல்லி ஆறுவேன்?"

வந்த கமலாட்சி தன் பக்கலிலிருந்த வனசாட்சியைத் தலை தொடக்கம் காலடி வரையில் ஒருமுறை இருமுறை மும்முறை யவதானித்துப் பார்த்தாள்; "வனசா, இது என்ன கோலம்! அலரவேண்டிய நேரத்திற் கூம்பியபூப் போற் காணப்படுகின்றாய்! இப்படி வாடியிருக்கக் காரணமில்லையே! உனக்கு என்ன குறையம்மா" என்று வனசாவின் முதுகையும் முகத்தையுந் தடவிக்கொண்டு பரிவுடன் கேட்டாள்; வனசாவின் முகத்தில் வாட்டம் அதிகப்பட்டது; கண்களில் நீர் ததும்பியது; மனத்திலே தடுமாற்றம் பிறந்தது; சந்தோஷம் அதிகப்பட்டாலும் துக்கம் அதிகப் பட்டாலும் நினைத்த மாத்திரத்தே வாய்திறந்து பேசுதல் கஷ்டமென்பார்களே வனசா பதில் சொல்ல முட்டுப்பட்டாள்; கண்ணீர் முத்துப் போலுதிர்ந்து, அவள் முகத்தைத் தடவிக் கொண்டிருந்த கமலாவின் புறங்கையிற் சிந்தியது; உடனே கமலாட்சியுஞ் சஞ்சலப்பட்டு, வனசாவின் கவலைக்குக் காரணம் அவளுள்ளத்தின் அடிப்படையிலே தடித்துக் குடிகொண்டிருக்கிறதென அயிர்த்தாள்; அவள் கண்ணீரைத் தன் மிருதுவான கரத்தால் மெல்லத் துடைத்தாள்; தேறுதல் கூறி வனசாவினுள்ளத்தைச் சிறிது ஆறுதலாக்கினாள்; "என்ன வனசா! உனை வந்து கண்டு மகிழ்ச்சியோடு மீண்டு போகலா மென்றெண்ணி வந்த எனக்குச் சோக ரசத்தோடு கூடிய இந்தக் காட்சியையா அளிக்கின்றாய்; உள்ளதை உள்ளபடி உடனே எனக்குச் சொல்லடியம்மா; உன் கவலைப்பாரங் குறையும், என் மனத்திலுள்ள ஆவலும் ஒழியும்; கவலை வேண்டாம்" என்று பரிவுடன் சொல்ல, "அக்கா, நெஞ்சையொளித்தொரு வஞ்சகமில்லை, உங்களுக்கல்லாமல் என்னுள்ளக் கவலை வேறெவருக்கும் வெளியிடத் தக்கதல்ல; கவலை யென்னும் ஆற்றுப் பெருக்கில் அள்ளுண்டு போகும் என்னை மீட்கும்படி, அக்கா, நீங்களாக இந்த நேரத்தில் இங்கே வந்தீர்களென்று நான் எண்ணவில்லை; நான் பழிபோட்டுக் கொண்டிருக்குந் தேவி, என்னாத்தாள் கையெடுக்குந் தெய்வந்தான் உங்களை இந்த நேரத்தில் இங்கே கொண்டுவந்ததென்று நான் துணிகிறேன்; உங்களிடமல்லாமல் என் கவலையை ஆரிடஞ் சொல்லி ஆறுவேன், அக்கா" என்று கண்களில் நீர்ததும்பப் பரிவுடன் சொன்னாள்; "ஒன்றற்கும் யோசிக்கவேண்டாம் வனசா; கூசாமற் சொல்லு; இயன்றவரையிற் பார்ப்போம்" என்று கமலாட்சி தேற்றத்துடன் கேட்க, வனசா ஒருவாறு சொல்லத் துணிந்தாள்.

"வழுக்கி விழுபவர்க்கு
ஊன்றுகோல் அகப்பட்டாற்போல்"

அக்கா நீங்கள் தூரித்தவூரில் வசிக்கிறபடியினால், என் விவாக விஷயமாக நேர்ந்துள்ள குழப்பங்கள் உங்களுக்குத் தெரியா. நான் இரண்டொரு முறை என் விஷயத்தை உங்களுக்கு மெல்லத் தெரிவிக்கலாமென யோசித்தேன்; ஆனாலும் எழுத்திலே தெரிவிக்க மனந் துணியவில்லை அக்கா அதிகஞ் சொல்வதென்ன, உங்கள் அண்ணன் என் அருமையான மைத்துனர், ஏதோ காரணத்தினால் என்னை வெறுக்கவோ புறக்கணிக்கவோ தலைப்பட்டுக் கொண்டாரென அறியக்கிடக்கிறது. எங்கள் விவாகத்திற்கு அவர் தவணையிடுகின்றார்; அதனை அறிந்த நேரந்தொட்டு என்மனம் ஏங்குகிறது, அவர் என்னை வாழ்க்கைத் துணையாகக் கொள்ளாவிட்டாலும், நான் வேறு ஆடவனுக்குப் பெண்டாட்டியாகப் போவதில்லை, தமிழ் மூதாட்டியர்களாகிய திலகவதியார், மங்கையர்கரசியார், காரைக்காலம்மையார் என்னு முத்தமிழர்களின் வழித்தோன்றல்கள்தாமே நாங்களும், ஆதலாற் பிழையொன்றுஞ் செய்யப்போவதில்லை, மனந்தடுமாறப் போவதில்லை, துறவிபோற் காலங்கழிக்க எங்கள் இறைவனின் அருள் கிடைக்கும்; அதனையிட்டு எனக்கு எள்ளளவுங் கவலையில்லை. என் மைத்துனர் என்மேல் வெறுப்புக் கொண்டமைக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமென்ன என்பதை உள்ளபடி நான் அறிந்தாற்றான் என் மனம் ஆறும். எப்படி அறியலாம் என்று சதா சிந்தித்துக் கொண்டிருக்கும் நேரத்திலேயே வழுக்கி விழுபவர்களுக்கு ஊன்றுகோல் அகப்பட்டாற் போல் நீங்களும் இந்த வேளையில் இங்கு வந்து சேர்ந்தீர்கள்" என்று கண்களில் நீர் சிந்த முறையிட்டாள்; கேட்ட கமலாட்சி உள்ளந் திகைத்தபடியாற் பேசமுடியாமற் சிறிது நேரமிருந்தாள்.

* * *

உலகம் பலவிதம்: *1951 ஜூன் 05*

"எனையாளும் ஈசன் செயல்"

"வனசா,

ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட் டொன்றாகும்,
அன்றி அதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்

என்றபடி, இவைகளெல்லாம் மக்களாகிய எங்களைப் பொறுத்தனவுமல்ல; நாங்கள் நினைத்தபடி நடப்பனவுமல்ல; எக்கருமங்களையும் நிர்வகித்து நடத்துவதற்கு மேலே யொருவனிருக்கிறான்; நாம் நினைப்பவனைக் கூடவேண்டுமானால் அந்த ஈசனருளை இராப் பகலாக யாசிக்க வேண்டும்; நீயோ தேவி பத்தியிற் சிறந்துள்ளனை; அத்தேவியின் பூரண அநுக்கிரகம் உனக்கும் உங்கள் குடும்பத்தினருக்குமுண்டு; இன்னும் அத்தேவியை அல்லும் பகலும் தியானித்து வழிபடு; அவனருளாலே அனைத்துங் கைகூடும்; நிற்க என்னண்ணா, உன்னருமை மைத்துனர் உன்னை வெறுக்கிறார், புறக்கணிக்கிறா ரென்பதை என் மனம் ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கின்றிலது; ஆனாலும், நீ சொல்வதனால், நான் ஒரு அளவிற்கு உண்மையென நம்பவும்வேண்டி யிருக்கிறது; உன் மைத்துனரை நான் சந்திக்கும்போது, என்னண்ணர் என்னைக் காணும் போதெல்லாம் உன்னைப்பற்றியே பாராட்டிப் பேசுவார்; உன் அருமையான குணத்தையும். இதமான நடையையும், இனிமையான பேச்சையும், உள்ளக் கனிவையும்பற்றி எனக்கு அண்ணர் எடுத்தெடுத்துச் சொல்லுவார், உள்ளம் உருகுவார்; இப்படியெல்லாமிருந்தவர் மனத்திலே இப்பொழுது உன் விஷயமாக வெறுப்பு புறக்கணிப்பு வந்து புகுந்ததென்றால், என் அருமையான வனசா, நான் அதை எப்படி நம்புவேன்; வனசா, கேட்கிறேனென்று குறை யெண்ணாதே, நீ அவருக்கு அபுத்தி பூர்வமாய் அதாவது பிழையென்று நீ விளங்காமல் ஏதும் பிழை செய்ததுண்டோ" என்று இதமுற வினாவினாள் கமலாட்சி.

* * *

"இனியர் என்சொலினும் இன்சொல்லே"

இப்படிக் கமலாட்சி வினாவ, வனசா திடுக்குற்றாள்; தியங்கினாள், கவலைப்பட்டாள்; "அக்கா, நீங்கள் எனக்கு மைத்துனி முறை பூண்டிருந்தாலும், சகோதரத்தோடு கூடிப் பிறக்கும் பேற்றைப் பெறாத நான் உங்களை என்னுடன் பிறந்த தமக்கை யென்றே எந்த நாளும் பாவித்துப் பயபத்தியாய் உங்களுடன் ஊடாடி வருகிறேன்; ஆதலினாற்றான் உங்களை அன்று தொடக்கம் என்றும் "அக்கா" என்று அன்புடன் அழைத்து வருகிறேன்; அக்கா, நீங்கள் என்னை இப்பொழுது கேட்ட கேள்வி என்னுள்ளத்தைப் பெரிதும் புண்படுத்துகின்றது; நெஞ்சையொளித்தொரு வஞ்சகமில்லை யென்பர்; அப்படியே, அக்கா, உங்களை யொளித்து எனக்கு ஒரு இரகசியமில்லை யென்பதை நம்புங்கள்; என் மனமெனிலோ எந்த நேரமும் அவரிடத்துள்ள குணாதிசயங்களையும் அவர் என்மீது பாராட்டும் அன்பையும், அவருடைய கல்வித்திறனையும், கட்டழகையும் பற்றிச் சிந்திப்பதோடு, அவரையும் என்னையும் எவ்வகையான இடையூறுமின்றி இனிது கூட்டி வைக்கவேண்டுமென்று தேவியையுந் தியானிக்கும்; என் வாக்கெனிலோ அவருக்கு எவ்வகையான இடையூறும் நேராமற் காப்பாற்ற வேண்டுமென்று அந்தத் தேவியையே எந்த நாளுந் தோத்திரம் பண்ணும்; என் காயமெனிலோ அப்படியே, இறைவியை வேண்டிக் கைகூப்பியும் பஞ்சாங்கமாக வீழ்ந்தும் வணங்கும்; அக்கா, இப்படி நான் திரிகரணங்களாலும் அவர் வாழ்க்கையையும் என் வாழ்க்கையையுங் குறித்துச் சிந்தித்தும், வாழ்த்தியும், வணங்கியும் வர, நீங்கள் அவருக்கு நான் அறிந்தோ அறியாதோ பிழை செய்ததுண்டோ என்று வினாவினால், என் மனம் வருந்தாமலிருக்குமா? ஆனாலும் "இனியவர் என் சொலினும் இன் சொல்லே" என்ற பிரகாரம், என்னிடத்தில் எல்லையில்லா அன்பு கொண்ட நீங்கள், எது சொன்னாலும் அது என் நன்மைக்கே யாகுமென்பதை நான் அறிவேன்" என்று சிறிது கலக்கத்தோடு சமாதானஞ் சொன்னாள் வனசாட்சி.

"கோட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு"

"என் அருமைத் தங்காய் வனசா, கலங்காதே; என் கேள்வி உன்னுள்ளத்தைச் சஞ்சலப்படுத்தி விட்டது; ஆனாலும் உன் மேல் கொண்ட அன்பு மேலீட்டினால்றானே நான் அப்படிக் கேட்டேன்; என்பது உனக்கும் விளங்கும்; நீ அதையிட்டுக் கவலைப்பட வேண்டாம்; நீ அறியாதிருத்தல் போலவே உன்னை என்னண்ணர் ஏன் வெறுக்கின்றார் புறக்கணிக்கின்றாரென்பதற்கு எனக்கு ஒரு ஞாயமும் புலப்படவில்லை; ஆனால் என் மனத்தில் இந்த நேரத்தில் ஒன்று புலப்படுகின்றது; "கோட்செவிக் குறளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றுடன் நெருப்பு" என்று சொல்லுவார்களல்லவா, யாரேனும் உங்களிருவருக்கும் நடக்கவிருக்கும் விவாகத்தின் மேற் பொறாமையுற்று, அதனைக் குழப்ப நோக்கங்கொண்டு உமக்கு மாறாக உன் மைத்துனருக்கு ஏதுங் கோள்சொல்லி உன்மேல் அவர் கொண்ட அன்பிற்குப் பங்கம் செய்திருக்கக் கூடுமோ என்று சங்கடப்படுகிறேன்" எனக் கமலாட்சி சிந்தனையுடன் சொல்லுதலும், கேட்டுக்கொண்டிருந்த வனசா "அக்கா அப்படி யெல்லாம் ஏன் சந்தேகப்படுகிறீர்கள்; என் பொல்லாத காலத்தினால் நான் தன்னந்தனியே யிருந்து கவலைப்படுகிறேன்; தாந்தாம் முன் செய்தவினை தாமே அனுபவிப்பார்; நான் செய்த தீவினையின் பயனை நான் இப்பொழுது அனுபவிக்கின்றேனென்றெண்ணி நான் கவலையைச் சகித்துக்கொண்டிருப்பதே யொழிய, அக்கா, அவரை நோவதும், பிறர்மேற் சந்தேகப்படுவதுந் தோஷமல்லவா" என்று கவலை கூரச் சொன்னாள்; "என் அருமைத் தங்காய், நீ சொல்வதும் நிசம்; பொல்லாத ஊழின் பயனாகவே எவருக்குந் துன்பமுஞ் சஞ்சலங்களும் நேருகின்றன; அப்படியானாலும், என்ன காரணத்தினால் இந்த இன்னல் எனக்கு நேர்ந்ததென்று, நல்ல ஞானமில்லா மக்களாகிய எங்களால் ஆராயாமலிருக்க முடியாது; மேலும், உலகத்திலே தீயோர் நல்ல கருமங்கள் நிறை வேற வொட்டாது இடையூறு செய்வதும் இயல்பு; கைகேகியின் பணிப்பெண்ணாகிய கூனி யென்பவள், அக் கைகேகிக்குக் கோள் சொல்லி அவளது உள்ளத்தைப் பேதித்து, அவள் மூலமாக இராமர் பட்டாபிஷேகத்தைக் குழப்பி அவரைக் காட்டிற்குப் போகவும், தசரதரை மாளவும், இராமாயண யுத்தம் நடக்கவும் காரணியாயிருக்கவில்லையா? வனசா, ஊழின்படி நடப்பதென்பது நிசமானாலும், அங்ஙனம் நடக்கச் செய்வதற்கு ஏதுக்களுங் காரணங்களுமுண்டு; ஆதலினாற் சந்தேகப்படுகிறேன்" என்றாள்.

"கவலை வேண்டாம்"

இவர்களிருவரும் இவ்வாறு கவலை யோடு வார்த்தையாடிக் கொண்டிருக்கும்போது, காமாட்சி அவர்களிருக்கு மிடத்திற்கு வந்து "என்ன மகளே, வந்த கமலாட்சியை உள்ளே கூட்டிக்கொண்டு வந்து ஆகாரங்கொடுத்து, தாகமிருந்தால் தாகத்திற்கேதும் கொடுத்து உபசரித்து ஆறுதலாயிருந்து பேசுவதை விட்டு, வந்த நேரந்தொடக்கம் இடைவிடாமல் வார்த்தையாடிக் கொண்டிருக்கின்றாயே" என்று சொல்லி, இருவரையும் அடுக்களைப் பக்கத்திற்கு அழைத்துக்கொண்டு போய் இருவருக்கும் ஆகாரம் பரிமாறினாள்; பரிமாறும்போது வனசாவின் விஷயத்தைக் கமலாட்சிக்குக் காமாட்சி சொல்லிக் கவலைப்படுதலும், "மாமீ, நீங்கள் கவலைப்படாதீர்கள், இந்த நேரத்தில் ஏதோ இடையூறு நேர்வதுபோற் காணப்பட்டாலும், அந்த ஈசுவரியின் அருளினால் இடையூறெல்லாம் நீங்கிக் கருமம் இனிது கைகூடும்" என்று மனத்திடத்தோடு சொன்னாள் கமலாட்சி; கேட்ட தாயும் மகளுஞ் சிறிது மன ஆறுதலடைந்தனர். "எங்கள் அருமை மருமகளே, இந்த நேரத்தில் நீ இங்கே வந்தது பெரும் நன்மையாகும்; உன் மச்சாளுக்குச் சின்ன வயசு தொட்டு இற்றை வரையில் உன்னிடத்திலே தான் அதிக விசுவாசம்; ஆனதால் இவளுக்கு நீயே தேறுதல் சொல்லு; மேலும் உன் அண்ணனை நீ நேரிற் போய்க்கண்டு கருமங்களை அவருக்குச் சொல்லி விளங்கப்படுத்தி இந்தக் கல்யாணத்திற்கு இன்னமுந் தவணையிடாமல், கூடிய விரைவிலே இதனை நிறைவேற்றப்பார்" என்று பரிவுடன் சொன்னாள் காமாட்சி; "மாமி, எங்களால் என்ன ஆகப்போகிறது; எல்லாம் அந்த ஆண்டவன் செயலாகும்; ஆனாலும், நீங்கள் சொன்னபடி நான் இயன்ற வரையில் விரைவாக அண்ணரிடம் போய், இவ் விஷயங்களை யெல்லாம் அவருடன் கலந்துபேசி, அவரிடத்தில் ஏதும் மனஸ்தாபமிருந்தால், அதனையும் மாற்றிச் சமாதானப்படுத்திச் சம்மதிக்கச் செய்கிறேன்; எதற்கும் அந்த அகிலாண்ட நாயகியின் அநுக்கிரகம் வேண்டும்" என்று சொன்னாள் கமலாட்சி. ஆகாரம் முடித்துக் கொண்டு, இருவரும் தாங்கள் முன்னிருந்து பேசிய அந்த அறையுள் வந்து சிறிதுநேரம் ஆறியிருந்தார்கள், அப்போது, வனசாட்சி மகிழ்ச்சியுடன் கமலாட்சியைப் பார்த்து "அக்கா, எப்போதைக்கு அவரிடம் போக உத்தேசித்திருக்கிறீர்கள்" என்று ஆவலுடன் வினாவுதலும், "வனசா, கவலை வேண்டாம்; நான் வருகிற செவ்வாய்க்கிழமைக்கிடையில் அவரிடம் போக யோசித்துவிட்டேன்; ஏதோ எல்லாம் நன்மையாகவே நிறைவேறுமென்று என் மனத்தில் நம்பிக்கை பிறக்கிறது; நான் அண்ணனிடம் போய் மீண்டு இங்கு வந்து உங்களைக் காணுவேன்" என்று சொல்லி வனசாவிடத்திலும் அவள் தாயிடத்திலும் விடைபெற்றுத் தன் வீட்டிற்குச் சென்றாள் கமலாட்சி.

* * *

உலகம் பலவிதம்: *1951* ஜூன் *12*

"கண்டு வெகுகாலம்"

தங்கள் வீட்டிற்கு மீண்ட கமலாட்சி உடனே தன் கணவனுக்கு ஒரு கடிதமெழுதினாள்; அக் கடிதத்தில், தான் தனது தமயனிடம் போக விருப்பதற்குக் காரணத்தையும், அதற்கு அநுமதி தரல் வேண்டுமென்பதையும் விபரமாக எடுத்துக் காட்டியிருந்தாள்; கமலாட்சியின் பெருந் தன்மையையும் நாயக பத்தியையும் அவள் கணவன் உள்ளபடி யுணர்ந்தவனாதலால், ஒரு தடையுஞ் சொல்லாமல், அவள் தமயனிடம் போதற்கு அநுமதி கொடுத்ததோடு, இயன்ற வரையில் அந்தச் சம்பந்தத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கு பண்ணிக் கொண்டே மீண்டு வருதல் வேண்டுமெனவுந் தன் மனையாட்கு எழுதினான்; கமலாட்சி தான் தமயனை ஒருமுறை போய்ப் பார்க்க விரும்புவதாகச் சொன்னாளேயொழிய, அவனிடம் போதற்குக் காரணமென்ன வென்பதை வேறு எவர்க்கும் வெளியிட்டிலள்; தான் முன்னிட்டுச் செல்லுங் கருமம் எவ்வகை யிடையூறுமில்லாது நிறைவேற வேண்டுமென்று தங்கள் குலதெய்வமாகிய இறைவியை வழிபட்டாள்; ஒரு சுப தினம் பார்த்து, தங்கள் பணிப்பெண்ணாகிய இலட்சுமியோடு புறப்பட்டாள்; முதனாள் அந்திக் காலத்திற் புகைரதமார்க்கமாகப் புறப்பட்ட கமலாட்சி அடுத்த நாள் விடிதலும் தனக்குத் தமயன் முறை பூண்ட பத்மநாதனுடைய வாசஸ்தானத்தை யடைந்தாள்; பத்மநாதன் கல்வி பயிற்றுங் கலாசாலைக் கணித்தாகச் சிறிய ஒரு இல்லத்தை ஒழுங்கு செய்து சுயம்பாகி யொருவனை வைத்துச் சமைப்பித்துக்கொண்டு வசித்தமையினால், கமலாட்சி அந்த வாசஸ்தானத்திலே போய்த் தங்குவதற்கான சௌகரியங்க ளெல்லாமிருந்தன; எதிர்பார்த்திரா வண்ணம் தங்கையைக் கண்ட மாத்திரத்தே பத்மநாதன் ஆநந்தமடைந்தான், "தங்கைச்சி, வாருங்கள், வாருங்கள், கண்டு வெகுகாலம்" என்று முகம் மலர்ச்சியோடு நன்சொற் சொல்லிக் கமலாட்சியை வரவேற்றான்; கமலாட்சியும் அவனைக் கண்டபோது அன்பும் மகிழ்ச்சியு மடைந்தாள்; தன் தங்கையை அன்புடன் அழைத்துக் கொண்டுபோய் ஒரு "ஸோபா" வில் இருக்கச் சொல்ல, அவள் "உந்த நாற்காலியில் நீங்கள் இருங்கள் அண்ணா, நான் இப்படி யிருக்கிறேன்" என்று இதமுறச் சொல்ல, அவன் அப்படியே இருக்க அவளுமிருந்தாள்; "அண்ணா இன்றைக்கு நீங்கள் பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டியதில்லையே" என்று கமலா வினாவ, "ஓம், தங்கைச்சி, இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை யாதலால், எனக்கு எவ்வகையான வேலையுமில்லை; ஆறுதலுண்டு" என்று பதில் சொன்னான்; பத்மநாதன் அவளுடைய கணவனைப் பற்றிய சுகத்தை விசாரித்த போது, அவர் உத்தியோகதானத்தில் இருப்பதாகவும், தானும் பல மாசங்களாக அங்கிருந்து விட்டுச் சில தினங்கட்கு முந்தித்தான் ஊருக்கு மீண்டுவந்து ஊரிலிருப்பதாகவுஞ் சொன்னாள். சொல்லிவிட்டு, "அண்ணா, நீங்கள் ஊருக்கு வருவீர்கள் என்று எதிர்பார்த்தேன்; வரவுமில்லை; முந்தி நீங்கள் ஊருக்கு வந்ததாகவும் எவருஞ் சொல்லவில்லை; எனக்கும் நீங்கள் வெகு நாளாகக் கடிதமெழுத வில்லை; காரணமென்ன வென்பதை யறியேன். ஆதலினால் உங்களை ஒரு முறை நானே நேரில் வந்து கண்டுகொண்டு போகலாமென்ற நோக்கங்கொண்டு, அவருக்குத் தெரிவித்து அவருடைய அநுமதியையும் பெற்றுக்கொண்டு நேற்று அந்திவேளைப் புகைரதத்திற் புறப்பட்டு வந்தேன்" என்று பரிவுகூரச் சொல்லி முடித்தாள் கமலாட்சி.

"சனிநீராடு"

இதற்கிடையில் பத்மநாதனுடைய சமையற்காரனாகிய கந்தசாமி அவனிடம் வந்து ஏதோ மெல்லச் சொல்ல, "தங்கைச்சி, பல்விளக்கி முகங் கால் கை யலம்பி விபூதி தரித்துக்கொண்டு ஏதும் தாகத்திற்கு உட் கொள்ளலாம்; அதற்காகிய ஆயத்தங்களெல்லாமுண்டு; சற்றுச் செல்ல ஸ்நாநஞ் செய்து காலை உணவு உட்கொள்ளலாம்; எழுந்திருங்கள்" என்று பத்மநாதன் சொல்லுதலும், கமலாட்சி தன் பணிப் பெண்ணுடன் உடனே யெழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, தமயனிருக்குமிடத்திற்கு வருதலும், அவன் அவளுடன் தாகசாந்தி செய்தான்; பத்மநாதனுக்குப் பெண் சகோதரமில்லாமையினால், சிறுபிராயந்தொட்டுக் கமலாட்சியையே தன்னுடன்பிறந்தாள் போலப் பாவித்து மதித்து நடந்தான்; அவளும் அப்படியே தன்னுடற்பிறப்பு என்ற முறையில் அவனோடு அன்பு பாராட்டி ஊடாடி வருவாளாயினாள்; கமலாட்சியின் விவாகத்தையும் பத்மநாதனே பேசி ஒழுங்கு பண்ணி நிறைவேற்றி வைத்தவன்; இந்த ஏதுக்களால் இருவரும் பரஸ்பரம் சகோதர பாசமும் மதிப்பும் பூண்டவர்களாகவிருந்தார்கள்; இவர்கள் இருவரும் பேசிக்கொண்டு ஒரு முக்கால் மணி நேரம் இருப்பதற்கிடையிற் கந்தசாமி அங்கே வந்து "ஐயா, இந்த அம்மாள் குளிப்பது தண்ணீரிலோ அல்லது வெந்நீரிலோ" என்று கேட்க, பத்மநாதன் கமலாவின் முகத்தைக் குறிப்பாகப் பார்க்க, "அண்ணா நான் தண்ணீரிலேயே குளிக்கிறேன்" என்றாள்; "அப்படியானால், ஸ்நானத்திற்கு எல்லாம் ஆயத்தம்" என்று கந்தசாமி சொல்ல, "தங்கைச்சி, நீர் நித்திரை விழித்து, பிரயாணஞ்செய்த சிரமந்தீர இப்பொழுது ஸ்நாநஞ் செய்யலாமே" என்று சொல்லுதலும், "அண்ணா, நீங்கள் முதல் ஸ்நாநம் பண்ணுங்கள், அதன் பிறகு நான் செய்கிறேன்" என்றாள்; "தங்காய், நான் இன்று எண்ணெயிட்டு முழுகப்போகின்றேன் சற்றுச் செல்ல" என்றான் பத்மநாதன்; அண்ணா, நீங்கள் நேற்றுச் சனிக்கிழமை, எண்ணெயிட்டு முழுகியிருக்கலாமே; சனிநீராடு, என்று சனிக்கிழமை தானே முழுக்குக்குச் சொல்லப்பட்ட நாள்; சனிக்கிழமை முழுகச் சாத்தியப்படாவிட்டாற் புதன்கிழமை முழுகலாமே;

* * *

உலகம் பலவிதம்: 1951 ஜூன் 19

"காலத்திற் கேற்ற கோலம்"

"சனி புதன்றனில் எண்ணெய் வெந்நீரில் மூழ்குவார்....." என்று பாடியிருக்கிறார்களே உங்களுக்குச் சனியும் புதனும், பெண்களாகிய எங்களுக்குச் செவ்வாயும் வெள்ளியும், முழுக்குக்குரிய நாட்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிக்கப்பட்டிருப்ப, ஏன்? அண்ணா, எல்லாமறிந்த நீங்கள் சனி புதன் விடுத்து ஞாயிற்றுக் கிழமையில் முழுகத் தலைப்பட்டுக்கொண்டீர்கள்? மேலும் உபாத்தியாயராயிருக்கிற உங்களுக்குச் சனிக்கிழமை களிலும் பள்ளிக்கூடங்கூட யில்லாமையினால், எண்ணெயிட்டு முழுகச் சௌகரியப்படுந்தானே அண்ணா, இப்படியெல்லாம் இவள் சொல்லு கிறாளேயென்று என்மேல் குறையெண்ணாதீர்கள்; முன்னோர் கொண்ட முறையை நாங்கள் விட்டுவிட்டு நினைத்தபடி செய்தற்கு ஏதும் பிரதான ஞாயமுண்டோ என அறிந்துகொள்ளத்தான் உங்களைக் கேட்கிறேன்" என்று புன்னகையரும்பச் சொன்னாள் கமலாட்சி. "உவைகளில் உனக்கு நம்பிக்கை யுண்டோ" தங்காய், சனி புதனாகிய நாட்களில் எண்ணெயிட்டு முழுகினால் உடம்பிலுள்ள சூடு நீங்காதே எல்லாம் பழையபடி யென்றெண்ணி நடக்கமுடியாது; காலத்திற்கேற்ற கோலம் என்றும் நடக்கத்தான் வேண்டும்; நுட்பம் பார்த்துக்கொண்டு நின்றால் ஒன்றுஞ் செய்ய முடியாது; ஞாயிற்றுக்கிழமை ஓய்வான நாள், எண்ணெயிட்டு முழுகிவிட்டு எங்குஞ் செல்லாமல், சிரமப்படாமல் ஒரு இடத்தில் ஆறுதலா யிருக்கலாமென் றெண்ணினேன், ஞாயிற்றுக்கிழமையிலே எண்ணெயிட்டு முழுகு வதால் என்ன கெடுதி தங்கைச்சி" என்று பத்மநாதன் தனது தங்கையை வினாவினான். "அண்ணா, இன்ன இன்ன கிழமையில் முழுகினால் இன்ன இன்ன பயன் விளையுமென்று நான் சிறுபிள்ளையாயிருந்த காலத்தில் மனனம் பண்ணிய பாட்டொன்று அதனைத்தான் சிந்திக்கின்றேன் என்று சொல்லிக் கமலாட்சி உடனே அந்தப் பாட்டையும் பின்வருமாறு படித்தாள்:-

"வருமாதி வாரந் தலைக்கெண்ணெய் ஆகாது
வடிவம்மிகும் அழகுபோம், வளர் திங்களுக்கு அதிக
பொருள் சேரும், அங்கார வாரந்தனக் கிடர்வரும்,
திருமேவு புதனுக்கு மிகுபத்தி வந்திடும், செம்பொனுக்
கறிவுபோம், தேடிய பொருட் சேதமாம் வெள்ளி,
சனியெண்ணெய் செல்வமுண்டு, ஆயுளுண்டாம்" என்று

இப்படி ஒவ்வொரு காரணம் பற்றித்தான் அண்ணா, பெரியோர்கள் சிற்சில கருமங்களைச் சிற்சில காலத்தில் விதித்தும் விலக்கியுமிருக்கிறார்கள்; காரணத்தை எங்களால் விளங்கிக் கொள்ள முடியாதென்றால், அது எங்கள் குற்றமே யொழியச் சொன்னவர்மேற் குற்றமில்லை யண்ணா; இந்தப் பூமிக்கும் பூமியில் வசிக்கும் சீவராசிகளுக்கும், திதி நாள் கோள்களுக்குமிடையே தொடர்புகளுண்டண்ணா; "பொங்காதழற் கதிரால், தண்ணென் கதிர்வரவாற் பொங்குங் கடல்" என்று பெரியோர் பாடியிருக்கிறார்களே சூரியனைக்கண்டாற் கடல் பெருகாதாம், சந்திரனைக் கண்டாற் பெருகுமாம்; இதனை நாங்கள் நேரிற் காண்கிறோம்; ஆனதால் இவைகளுக்கெல்லாம் ஞாயமறிந்துதான் செய்யவேண்டுஞ் செய்யாமல் விடவேண்டு மென்றெண்ணினால் முடியுமா? பெரியோர் வாக்கையுங் கைக்கொள்ள வேண்டும் அண்ணா" என்று சொல்லி முடித்தாள்; கேட்ட பத்மநாதனும் சற்று நேரஞ் சித்தித்துவிட்டு, "நீ சொல்வதும் நியாயந்தான் தங்கைச்சி; மேலும் உபாத்தியாயர்களென்றிருக்கும் நாங்கள் தவறாக நடந்தாற் பிள்ளைகள் என்னதான் செய்யமாட்டார்கள்; தங்கைச்சி, இன்று தொடக்கம் ஞாயிற்றுக்கிழமைகளில் முழுகுவதை விட்டுவிட்டேன்; இனிச் சனிக்கிழமை, இல்லையேற் புதன்கிழமைகளிலேயே முழுக நிச்சயித்துக்கொண்டேன்" என்று துணிவுடன் சொன்னான்.

"வேடிக்கையுமல்ல விளையாட்டுமல்ல"

சற்று நேரங் கமலாட்சி சும்மா யிருந்து விட்டுப் பத்மநாதனைப்பார்த்து, "அண்ணா, உங்கள்கல்யாணத்தை எப்போதைக்கு நடத்த உத்தேசித்திருக்கிறீர்கள்" என்று ஆவலுடன் வினவினாள்; பத்மநாதன் சிறிது நேரம் யோசித்துவிட்டு, "தங்காய் கல்யாணத்தைப் பற்றிய சிந்தனையை நான் முற்றாக விட்டுவிட்டேன்; இப்போதைக்குக் கல்யாணஞ் செய்து கொள்ள வேண்டுமென்ற நோக்கமே என்னிடத்திலில்லை" என்று சிந்தனைகூரச் சொன்னான்; கேட்ட கமலாட்சி திடுக்குற்றாள்; "என்ன அண்ணா, வேடிக்கையாகப் பேசுகிறீர்களா" என்று மீட்டுங் கேட்டாள் கமலாட்சி; "வேடிக்கை யுமல்ல, விளையாட்டுமல்ல, நிசமாகத்தான் சொல்லுகிறேன், தங்கைச்சி" என்று முகவாட்டத் தோடு பகர்ந்தான் பத்மநாதன். "ஏன்! அண்ணா அப்படிச் சொல்லுகிறீர்கள்; நீங்கள் அப்படிச் சொல்லுதற்கு ஒரு காரணமு மில்லையே, நீங்கள் இப்படிச் சொன்னால் உங்களை நம்பியிருக்கும் வனசாட்சியின் கதியென்ன? அவளும் நித்திய கன்னிகையா யிருப்பதா" என்று சிறிது கவலை கூரக் கேட்டாள் கமலாட்சி; "கன்னிகையா யிருக்கிற வரையில் வனசா இன்னுமொரு வரனுக்கு வாழ்க்கைப்படலாந்தானே, தெய்வத்தை நம்பியிருப்பதல்லாமல், மனுஷர் ஒருவரையொருவர் நம்பியிருப்பதாலாவதென்ன" என்று சற்று ஆத்திரத்தோடு சொன்னான் பத்மநாதன்; அதனைக் கேட்ட கமலா பின் எக்கேள்வியுங் கேளாமல் அவன் சொன்னதற்குச் சமாதானமுஞ் சொல்லமுயலாமல், மௌனமாயிருந்தாள்; தான்கூறிய மறுமொழி கமலாவிற்குப் பிடிக்கவில்லையென அயிர்த்த பத்மநாதன் "ஏன் தங்காய் ஏதும் பேசாமலிருக்கிறாய்" என்று ஆதரவுடன் கேட்டான் "நீங்கள் சொல்வதெல் லாம் சரியாயிருப்பதால் நான் என்ன பேசுவதென் றெண்ணிச் சும்மாவிருக்கிறேன்" என்று புன்னகை யரும்பப் பன்னினாள் கமலா.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1951 ஜூன் 26

"கிணற்று நீரை வெள்ளம் கொண்டுபோகாது"

"அண்ணா, உங்களுக்கும் வனசாவுக்கும் விவாகம் நிச்சயிக்கப்பட்டமை நேற்றின்றல்ல; சின்னவயசிலே யானது; மேலும், நீங்கள் வனசா மீதும், வனசா உங்கள் மீதும் இந்த ஞாயத்தினால் அத்தியந்த அன்பு பாராட்டி ஒருவர் மீதொருவர் விசுவாசம் வைத்து நடந்து வந்தீர்கள்; வனசா தன்னிளமைப் பருவத்திலேயே உங்களைத் தன் அருமைக் காதலன், தானே உங்களுக்கு வாழ்க்கைத் துணைவி யென்று நிச்சயப்படுத்திக்கொண்டாள்; உங்களிருவருக்கு மிடையில் விவாகம் சில ஆண்டுகட்கு முந்தியே நிகழ்ந்திருக்க வேண்டிய ஒழுங்குகளிருந்தன; நீங்கள் கல்லூரியில் விடுமுறை நாள் கிடைக்கவில்லை யெனக் காரணங்காட்டிக் கொண்டு வந்தமையினாற்றான் கல்யாணம் இவ்வளவு காலமாகவும் இழுபட்டு வந்தது; காலதாமதமானாலும் வனசாவும் அவள் பெற்றாரும் கல்யாணம் நிச்சயமாய் விட்டதுதானே, மாப்பிள்ளையின் சௌகரியத்தை யுத்தேசித்துக் கல்யாணத்தை நிறைவேற்றி வைக்கலாந்தானே; கிணற்று நீரை வெள்ளம் அள்ளிக்கொண்டு போகமாட்டாதே யென்ற நம்பிக்கையோடிருந்தார்கள்; வனசாட்சியிடம் எனக்கும் அன்புண்டு; அவள் வாழ்க்கையை நானும் விரும்பிய வண்ணமிருக்கிறேன்; ஊருக்கு நான் வந்தவுடனே வனசாவின் கல்யாணப் பேச்சு எவ்வளவிலிருக்கிற தென்றறியும்படி அவள் வீட்டிற்குப் போனேன்; போனவிடத்தில், அவள் வாடிய முகத்துடனும் மெலிந்த மேனியோடும் சோர்ந்த நடையோடும் மனமுடைந்தவளாகக் காணப்பட்டாள்; "வனசா இது என்ன கோலம்? முகவாட்டமேன்? மனங்கோட்டமேன்? உங்கள் விவாக விஷயம் எவ்வளவிலிருக்கிறது" என்று நான் இதமாக வினாவுதற்கிடையில், அவள் கண்களிலிருந்து நீர் "பொலு பொலு" எனச் சிந்தியது என் முன்றானையால் அவள் கண்ணீரைத் துடைத்து, அவளை ஆற்றித் தேற்றி, வனசா நீ கலங்கக் காரணமென்ன? என்று பரிவுடன் கேட்டேன்; அவள் சற்றுநேரம் கலங்கியபடி மௌனஞ் சாதித்திருந்து, பின் என் நெருக்கத்தினால், உண்மையை வெளியிட்டாள்; தன்னை நீங்கள் புறக்கணித்து விட்டீர்கள் என்று முறையிட்டாள்; வனசாவின் துயரத்தைக் கண்டு மனம் பொறாமல், நானே அண்ணனிடம் போய் அவரை நேரிற்கண்டு எல்லாம் ஒழுங்கு செய்து வருகிறேன் ஆண்டவனருளும் வேண்டுமென்று வனசாவுக்குச் சமாதானஞ் சொல்லி அவளை ஒருவாறு தேறியிருக்க விட்டு, என் கணவருக்கும் உங்களிடம் போகும் விஷயத்தைக் கடிதம் மூலமாகத் தெரிவித்துவிட்டு இங்கே புறப்பட்டு வந்தேன், வந்த இடத்தில் இந்த விதமாக நீங்கள் பேசுகிறீர்கள்;

அண்ணா, நீடித்த காலமாக நிச்சயித்திருந்த ஒரு மங்கல கருமத்திற்கு மாறாக, நீங்கள் இப்படி அலட்சியமாக மறுமொழி சொன்னால், உங்களை இன்னும் நம்பியிருக்கும் அந்தக் கன்னிகையின் மனம் என்னபாடு படும்! அவள் பெற்றாருள்ளம் எவ்வளவு வருந்தும்! அப்பெண்ணிடத்தும் உங்களிடத்தும் மெய்யன்பு வைத்து ஊடாடும் என்னுள்ளம் எவ்வளவு வேதனைப்படும்" என்று மனம் பதைப்பதைப்ப வினாவினாள் கமலாட்சி.

"அவனைப்போல் உத்தமி அகப்படாள், அண்ணா"

கமலா இப்படியெல்லாஞ் சொல்லவும் வினாவவும் பத்மநாதன் சிந்தனையோடு கூடியனாய் யாதும் பதில் சொல்லாமற் சும்மா விருந்தான்; பின்னரும் கமலா மனம் பொறாமல் "அண்ணா, மேலும் மேலுங் கேட்கிறேன் என்று குறையெண்ணாதீர்கள்; உங்களைக் கேட்பதற்கு எனக்கு உரிமை யிருப்பதனாற்றான் கேட்கிறேன்; வனசாவை வெறுக்கத்தக்கதாய் அவளிடத்தில் என்ன குற்றங் கண்டீர்கள்? அதையாயினும் எனக்கு சொல்லலாமே! வனசா கல்வியறிவிற் குறைவா? கட்டழகிற் குறைவா? பெண்மைக்குரிய குணம் ஒழுக்கங்களிற் குறைவா? இரக்கம் இன்சொல் பணிவான நடை இவைகளுக்கு அவளிடத்திற் பஞ்சமுண்டா? அடக்கமற்றவளா? கூத்துப் படக்காட்சி வீண் கூட்டம் கார்ணிவலெனப்படும் உண்டாட்டுக் களியாட்ட வேடிக்கை வினோதமென்னு மிவைகளைப் பார்க்க ஆசைப்பட்டு இப்படியான இடங்களுக்குப் போபவளா? கோபங்குரோதம் பொறாமை கோட்சொல்லல் முதலிய பொல்லாதகுணங்கள் செயல்கள் கொண்டவளா? அண்ணா,

"மாசிலாக் குலத்தில் வந்தாள் வருவிருந் துவப்ப வூட்டும்
நேசமிக்குடையாள் கொங்கன் நினைத்தகொண் டொழுகுநீராள்
தேசுறுவாய்மை யுள்ளாள் சினந்திடல் என்றுமில்லாள்
பேசுதிண் கற்பு வாய்ந்தாள் பெற்றதே கொண்டுவப்பாள்"

என்ற பாட்டிற்கு எங்கள் வனசா இலக்காயுள்ளல்லவா? அண்ணா, ஆடவர்களாகிய நீங்கள் பெண்களைப்பற்றி அதிகமறிவேம் என்று உங்களளவில் எண்ணிக்கொள்ளு கிறீர்கள்; அப்படியல்ல, பாம்பின் கால் பாம்பறியும் என்றபடி பெண்களாகிய நாங்களே எங்களுக்கிடையே யுள்ள குற்றங்குறைகளை, நன்மை தீமைகளை, போக்கு வாக்குக்களை உள்ளபடியறிதல் முடியுமென்று நினைக்கிறேன்; அல்லாமலும், வனசா எனக்கு மைத்துனி முறை பூண்டவளானாலும், நான் என் உடற்பிறப்புப் போலவே பாவித்து அவளுடன் ஊடாடி வருகிறேன்; அதிகஞ் சொல்வதென்ன; அவளைப் போல் உத்தமி உங்களுக்கு அகப்படமாட்டாள் அண்ணா" என்று கமலா தன் மனத்தில் அபிமானங் கிளரச் சொல்லி முடித்தாள்; அவள் சொல்லும்வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனஞ் சாதித்துக்கொண்டு சிந்தனையில் மூழ்கியவனாயிருந்த பத்மநாதன் கமலாவைப் பார்த்து "தங்காய், வனசாவைப் பற்றி நான் ஏதுங் குற்றஞ்சொல்லி, அந்த ஞாயத்தில் அப்பெண்ணைக் கல்யாணஞ் செய்ய மாட்டேன், வேறொரு பெண்ணைக் கல்யாணஞ் செய்யப் போகின்றேனென்று சொன்னாற்றான் நீ என்னைக் குறை சொல்லலாம்; எனக்கு இல்லறத்திற் புகுதற்கு இப்பொழுது நோக்க மில்லை யென்றுதானே சொல்லுகிறேன்;...." என்று சொல்லி முடிப்பதற்கிடையிற் கமலா, "இல்லறத்திற் புகுதற்கு இப்பொழுது நோக்க மில்லையானால், வேறு எப்பொழுது அதிற் புகப் போகிறீர்கள்; அந்த ஒன்றையும் நீங்கள் சொல்லிவிட்டால் வனசாவும் அவ்வளவு காலமும் காத்துக்கொண்டிருப்பாள். அவள் அப்படி இருப்பாளே யொழிய, இன்னுமொருவனுக்கு வனசா பெண்டாட்டியாக உடன்படப் போவதில்லை; அவளுடைய மனத்திடத்தை நானறிவேன்" என்று அழுத்திச் சொன்னாள் கமலா; அதற்கு உடனே பதில்சொல்ல முடியாதவனாய் இடர்ப்பட்டான் பத்மநாதன்.

* * *

உலகம் பலவிதம்: 1951 ஜூலை 03

"நீர் பாராமல் வேறுயார் பார்ப்பது"

இப்படிப் பத்மநாதன் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவனாயிருப்ப, கமலாட்சியும் அவன் வாயிலிருந்து என்ன பதில் பிறக்குமென எதிர் பார்த்த வண்ணமிருப்ப, பத்மநாதனுடைய சமையற்காரன் வந்து "ஐயா, அந்த உபாத்தியாயரம்மாள் தலைவாசலில் வந்து நிற்கின்றாள்" என்று சொல்லுதலும் கேட்ட பத்மநாதன் திடுக்குற்றான்; ஏங்கினான்; ஆனாலும் அவற்றைப் புறத்தே அதிகங் காட்டாதவனாய், உடனே தலைவாசற் பக்கம் எழுந்துபோய் "வாருங்கள், இருங்கள்" என்று இன்சொற் கூறி உபசரித்து, வந்த உபாத்தியாயனியைத் தலைவாசலி லுள்ளதாகிய ஒரு நாற்காலியில் இருக்கச் செய்து தானும் பிறிதொரு நாற்காலியில் இருந்தான்; இருந்தானேனும் அவன் மனஞ் சுழன்றது; முகத்தில் வாட்டங் காணப்பட்டது; செயற்கைப் புன்னகை செய்தான்; இதற்கிடையில் அங்கு வந்த பெண் "என்ன, ஐயா, நீங்கள் வருவீர்கள் வருவீர்களென்று வெகுநேரம் எதிர்பார்த்தவண்ணம் விடுதியிலிருந்தேன்; வரக் கண்டிலேன், ஆதலினால் உங்களுக்கு ஏதும் அசந்தர்ப்பம் நேர்ந்ததோ என்றெண்ணி உடனே, மோட்டா ரதத்திற் புறப்பட்டு வந்தேன்; குறையெண்ணாதீர்கள்; என்ன? ஏதோ அதிகம் யோசிக்கின்றீர்கள்" என்று ஆவலுடன் வினாவினாள். "வேறொன்றுமல்ல, மிஸ் (குமாரி) ராதா, உம்முடைய வாசஸ்தானத்திற்குச் சொன்ன நேரந் தவறாமற் புறப்பட்டுவர உத்தேசித்திருந்தேன்; இதற்கிடையில் இன்று காலை என் தங்கைச்சி ஊரிலிருந்து இங்கே வந்தாள்; அதனாற்றான் உம்மிடம் வரத் தவறி விட்டேன், குறையெண்ண வேண்டாம்" என்று சொல்லி முடிவதற்கிடையில் "ராதா" ஆ! அப்படியா! உங்கள் தங்கச்சியை நான் பார்க்கலாமா" என்று ஆவலுடன் கேட்க, நீர் நூறு முறையும் பார்க்கலாம்; நீர் பாராமல் வேறு யார் பார்ப்பது" என்று சொல்லி ராதாவையுங் கூட்டிக்கொண்டு கமலா இருக்கும் அறையுட் சென்றான் பத்மநாதன்.

"நான்சொல்வது முகமனல்ல"

இருவரும் தானிருக்குமிடத்திற்கு வரக் கண்ட கமலாட்சி இருக்கை விட்டெழுந்து நல்வரவுகூறி ராதாவை அங்குள்ள ஸோபாவில் இருக்கச் சொல்ல, ராதா கமலாவின் கையை மிருதுவாகப்பற்றி அவளையும் இருக்கச் செய்து தானும் உடனிருந்தாள்; "இவர் உங்களுக்கு உடன் பிறந்த சகோதரியா? இல்லையேற் சகோதரி முறை பூண்டவரா" என்று குயிலினுமினிய மொழியிற் பத்மநாதனை வினாவினாள் ராதா; "இவள் எனக்குத் தங்கைமுறை பூண்டவரானாலும் உடன்பிறந்த சகோதரத்தைக் காட்டிலும் என்னிடத்தில் அதிக அபிமானமுள்ளவர்; நானும் இவளிடத்தில் அப்படித்தான் ஊடாடி வருகிறேன்; மேலும் இவரல்லாமல் வேறு எனக்குச் சகோதரியில்லை" என்று பரிவு கூரச் சொன்னான் பத்மநாதன்; "நாம மென்னவென நான் அறியலாமோ" என்று மெல்ல வினாவினாள் ராதா; "என்னைக் கமலா என்று சொல்லுவார்கள்" என்று கமலா பதில் சொல்ல, "முழுப்பெயர் கமலாட்சி" என்றான் பத்மநாதன்; "அண்ணா, இவர்களைப்பற்றி நான் அறியலாமோ" என்று கூச்சத்துடன் கமலா கேட்க, பத்மநாதன் "இவர்கள் எங்கள் கல்லூரிக் கயலேயுள்ள பெண்கள் கல்லூரியிற் பேராசிரியை யாயுள்ளவர்; பீ.ஏ. பரீட்சையிற் சித்திபெற்றுச் சில மாசங்கள் தாம் கழிந்தன; ஆனாற் பரீட்சையிற் பிரவேசித்தவுடன் இவர் பெண்கள் கல்லூரியில் ஒரு உபாத்தியாயராகச் சேர்ந்து கல்வி பயிற்றி வருகின்றார், கல்வி பயிற்றும் ஆற்றல் பெரிதுமுடையவர்; சங்கீதத்திற் சிறந்தவர்; கானாமிர்தமென்று பாராட்டத்தக்க முறையிற் பாட வல்லவர்; இவரிடத்துப் பல சுகுணங்களுண்டு நான் சொல்வது முகமனல்ல" என்று வாயாரச் சொன்னான் பத்மநாதன்; இப்படியெல்லாம் அவன் சொல்லும் போது நாணமுற்றுத் தன் கால்விரல்களையே பார்த்த வண்ணமிருந்த ராதா கமலாவை அன்பு பெருகப் பார்த்து "அப்படியல்ல, அக்கா, உங்கள் அண்ணர் தொடக்கத்திற் சொன்னவை சில நிசம்; பின்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப்பற்றிச் சொன்னவை யெல்லாம் மெய்யல்ல; என்னிடத்தில் உவர் வைத்த அபிமானத்தால் அப்படி யெல்லாஞ் சொல்லுகிறார்" என்று அடக்கத்தோடு பன்னினாள். "அப்படியல்ல, தங்காய் நான் சொல்வது நிசமோ, இவர் சொல்வது நிசமோ, என்பதைச் சற்று நெருங்கி நீர் இவரோடு ஊடாடினால் அறிந்து கொள்வீர்" என்றான் புன்சிரிப்புடன் பத்மநாதன்; "நெருங்கி ஊடாடுவானேன், அண்ணா, இவரைப் பற்றி நீங்கள் சொல்வதுதான் நிசமென்பது எனக்கு இப்பொழுதே புலப்படுகின்றது" என்று புன்னகை யரும்பப் பன்னினாள் கமலா "இருவருஞ் சற்று நேரம் பேசிக்கொண்டிருங்கள்" என்று சொல்லி விட்டுப் பத்மநாதன் தன் சுயம்பாகிக்கு ஏதோ சொல்லும்படி அறையை விட்டுப் போய்விட, கமலாவும் ராதாவும் ஒருவருடனொருவர் கலந்து பேசினார்கள்; கமலாவின் வரலாற்றை ராதாவும், ராதாவின் வரலாற்றைக் கமலாவும் ஒரு அளவிற்கு அறிந்து கொண்டார்கள்.

"சிலநாள் இங்கே தங்கிப்போதலாகாதோ"

ராதா மிக்க நாகரிகத்தோடு கூடிய பெண்ணாகக் கமலாவிற்குப் புலப்பட்டாள்; அவள் ஊடாடும் விநயம், இதமான வார்த்தை முதலிய செயல்களுங் குணங்களும் கமலாவை அற்புதமுறச் செய்தன; மேலும் ராதா தன்னிடத்துள்ள இயற்கையழகோடு செயற்கையாலுந் தன்னை அலங்கரிப்பவள் போற் காணப்பட்டாள்; கண்ணுக்குக் கண்ணாடி, கட்புருவத்திற்குக் கருமை, அதரங்கட்கும் கைவிரல் நகக்கண்களுக்குஞ் செம்மையிட்டிருந்தாள்; உடையும் நொய்யன; பக்கத்திலிருக்கும் கமலாவிற்கு ராதாவினுடம்பிலிருந்தோ, உடையிலிருந்தோ அறியாள், வாசனை வீசியது; இவைகள் கமலாவிற்கு விபரீதமாகப் புலப்பட்டன; இங்ஙனமாக, சுயம்பாகி ஏதோ சிற்றுண்டி, பானத்திற்காகிய பதார்த்தம் என்னுமிவைகளை ஒரு "மேசை" மீது மூன்று பிரிவாக வைத்து, மேசையைச் சூழ மூன்று நாற்காலிகளையும் இட்டு, பத்மநாதன் நிற்குமிடத்திற்குப் போய் "எல்லாம் ஆயத்தம்" என்று சொல்ல அவன் இருவரையும் அழைத்துக்கொண்டு அடுக்களைப் பக்கலிலுள்ள அந்த அறையிற் சென்று அவ்விருவரோடு தானும் இருந்து சிற்றுண்டியருந்தித் தாகசாந்தியுஞ் செய்தான். இவைகள் முடிந்தபின் ராதா, கமலாவை நோக்கி "நீங்கள் எப்போதைக்கு ஊருக்கு மீண்டு போக உத்தேசித்திருக்கிறீர்கள்; சில நாள் இங்கே தங்கிப் போகலாகாதா" என்று கேட்க, அவள் அன்று பிற்பகல் புறப்படாவிட்டாலும், அடுத்த நாள் தவறாது ஊருக்குப் புறப்பட்டுப் போதல் வேண்டுமெனத் தெரிவித்தாள்.

* * *

உலகம் பலவிதம்: 1951 ஜூலை 10

"காரணஞ் சொன்னாலன்றி என்மனம் ஆறாது"

கமலா, ராதா, பத்மநாதன் என்னும் மூவரும் பின்னருஞ் சற்று நேரம் ஒருங்கிருந்து பல விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள், பத்மநாதனும் ராதாவும் பேசும்போதும் ஊடாடும் போதும் இவ்விருவருக்குமிடையே அந்தரங்க காதலுண்டென்பதை அயிர்த்துக் கொண்டாள் கமலாட்சி; சிறிது நேரஞ் செல்ல ராதா கமலாட்சியிடத்தும் பத்மநாதனிடத்தும் தன் வீட்டிற்குப் போவதற்கு அநுமதி பெற்றுக்கொண்டு போனாள்; கமலாவும் பத்மநாதனும் ராதாவை உடன் சென்று வழிவிட்டு மீண்டு வந்தார்கள். மீண்டு வந்திருந்த கமலாட்சி சிறிதுநேரஞ் சிந்தனையோடு கூடியவளாய்த் தன்னளவிற் புன்னகை செய்ய, பத்மநாதன் அவதானித்து "தங்காய், ஏன் சிரிக்கின்றீர்" என்று இதமாக வினாவினான்; ஒன்றுமில்லை யண்ணா, உலகம் பலவிதம் என்பதை யுத்தேசித்துச் சிரிக்கிறேன்" என்றாள் கமலாட்சி; "உலகம் பலவிதமென்று சிந்தனை இந்த நேரத்தில் வந்ததென்ன? அதனை யெண்ணிச் சிரித்ததென்ன? பெண்கள் சிரிப்பினால் அநர்த்தமும் நேரக்கூடு மென்பார்கள்; பாஞ்சாலி சிரித்தமையினா லன்றோ பாரத யுத்தம் மூண்டதென்று சொல்லுவார்கள்; மேலும் பெண்கள் தக்க காரணமின்றிச் சிரியார்கள், புன்னகை புரியார்கள் என்று காலங் கண்ட பெரியோர் பகர்வர்; தங்காய், என் மனத்தைச் சஞ்சலப்படுத்தாமல், புன்னகை செய்தற்குக் காரணமென்ன என்பதை எனக்குச் சொல்லுதி; காரணஞ் சொன்னாலன்றி என் மனம் ஆறாது" என்று பரிவுடன் கேட்டான் பத்மநாதன்; இப்படிப் பத்மநாதன் பரிவுடன் வினவக் கேட்ட கமலாட்சி, தான் சிரித்த காரணத்தை மறைத்து வைத்துத் தமயன் மனத்தை வருத்துவது முறையல்லவென நினைத்து உள்ளதைச் சொல்லத் துணிந்தாள்.

"எறும்பூரக் கற்குழியும்"

"அண்ணா, நான் சிரித்தமை வேறொன் றையு மிட்டல்ல, கல்யாணஞ் செய்வதில்லை, இல்லறத்தில் புகுவதில்லை யென்ற தீர்க்கமான நோக்கங் கொண்டிருப்பவர்களுடைய வாசஸ் தானத்தில், பெண்கள், பெண்களுள்ளுங் கன்னியர், கன்னியர்களுள்ளும் கற்றவர்கள், கற்றவர்களுள்ளும் பெண்மேற் பெண்கள் ஆசை கொள்ளத்தக்க பேரழகு வாய்ந்தவர்கள், இடையிடையே வந்துபோகக் காரணமில்லையே; இதனைச் சிந்தித்துத்தான் சிரித்தேன் அண்ணா" என்றாள். "தங்காய், அப்படி விபரீதமாக என்னையும் அக் கன்னிகையையும் எண்ணிக் கொள்ள வேண்டாம்; எங்களிருவருக்கு மிடையிலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு தூயது, சகோதர பாசம் போன்றது" என்று சமாதானஞ் சொன்னான் பத்மநாதன்; "அண்ணா, நீங்கள் சொல்வதைத் தட்டிப்பேசுகிறேனென்று குறையெண்ணாதீர்கள்; சகோதரி முறை பூண்டார், தாய்முறை பூண்டார்கட் கிடையேயுள்ள காதல் தூய காதலாக விருக்குமே யொழிய, பருவமுள்ள ஆடவர் மகளிருக்கிடையே நேருங் காதல் ஆரம்பத்திலே தூயதாகுமெனினும் காலகதியிற் காமக் காதலாகவே முடியும், அறியாமலா எங்கள் பெரியோர்கள்:

"பகர்ச்சி மடவார் பயிலகோன் பாற்றல்
திகழ்ச்சி தருநெஞ்சத் திட்பம் நெகிழ்ச்சி
பெறும்பூரிக் கின்றமுலைப் பேதாய்! பலகால்
எறும்பூரக் கற்குழியுமே"

என்று பாடியிருக்கின்றார்கள்; இப்படியான சகவாசம் நாளடைவில் விபரீதமாக முடியுமென்றுதான் நினைக்கிறேன்; இப்போதைக்குக் கல்யாணமின்றி யிருப்பதே உங்கள் நோக்கமானால், இப்படியான பெண்கள் சகவாசத்தை வைத்துக்கொள்வது அழகாயிராதண்ணா அல்லாமலும் அந்தப் பெண் நீங்கள் தனியேயிருக்கும் இந்த இடத்திற்கு வந்து போவது பார்ப்பவர்களுக்குச் சந்தேகத்தை விளைத்தலுங் கூடும்; காணவே பனைக்கீழ் ஆப்பால் குடிக்கிலுங் கள்ளேயென்பார்; ஏதோ நான் உங்கள்மேல் வைத்த விசுவாசத்தினால் இப்படியெல்லாஞ் சொல்லத் துணிந்தேன்; நான் சொல்வதைக் குறையாக எண்ணமாட்டீர்களென்பதையும், எனக்கு நீங்கள் பொய்சொல்ல மாட்டீர்களென் பதையும் நான் நன்கறிவேன்; ஏதோ எதனையும் யோசித்துச் செய்யுங்கள் அண்ணா" என்று கவலையோடு கூறிமுடித்தாள் கமலா.

"தன்னெஞ்சே தன்னைச் சுடும்"

இவற்றையெல்லாம் அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த பத்மநாதன் சிறிது நேரஞ் சித்திரப்பாவைபோல யாதும்பேசாது யோசித்த வண்ணமிருந்தான்; "எனக்கு நீங்கள் பொய் சொல்லமாட்டீர்க ளென்பதை நான் அறிவேன்" எனக் கமலாட்சி சொல்லிய வார்த்தை அவனது உள்ளத்தைப் பெரிதும் உபாதித்தது; "தனக்கு நான் பொய் சொல்லமாட்டேன் எனத் தீர்க்கமாய் நம்பியிருக்கும் என் அருமையான தங்கைக்கு நான் பொய் சொல்லத் துணிவதும், உள்ளொன்றை வைத்துப் புறம்பொன்று பேசுவது மகாதுரோகமாகும்; அல்லாமலும் தன்னாயக னிருக்கும் பதியை விட்டுத் தன்னூரிலிருந்து வந்த என் சகோதரி, தனது சிரமத்தைப் பாராமல், கணவனுடைய அனுமதி பெற்றுக் கொண்டு நானிருக்குமிடந்தேடி வந்துள்ளாள்; இவளுக்கு நான் பொய் சொன்னால் என்னுள்ளமே என்னைச் சுடும், "தன்னெஞ்சறிந்தது பொய்யற்க, பொய்த்தபின், தன்னெஞ்சே தன்னைச் சுடும்" என்று வள்ளுவர் கூறியுள்ளாரல்லவா; ஆதலால் நான் என் தங்கைக்கு நிசத்தையே சொல்லிவிடல் வேண்டும்; அப்படிச் சொல்வதனால் எனக்கேதும் துன்பம் நேர்ந்தாலும் என் சகோதரி மனம் வருந்தினாலும் பாவமில்லை; நம்பினவர்களுக்கு இரண்டகஞ் செய்யவொண்ணாது" என்றிப்படி யெல்லாம் யோசித்துக்கொண்டு கமலாவைப் பார்த்து நெட்டுயிர்ப்போடு பின்வருமாறு சொல்வானாயினான்: "என் அன்பான தங்காய், உடன் பிறந்தாளைக் காட்டிலும் மேலான சகோதரியே, நீ எனக்கிளையை யெனினும் நீ என் மேல் வைத்துள்ள விசுவாசங் காரணமாக உனக்குப் பயந்து சில உண்மைகளை உனக்கு மறைத்து விடலாமென்றெண்ணினேன்; ஆனால் உன்மேல் நான் வைத்த விசுவாசமும், என்மேல் நீ கொண்டுள்ள நம்பிக்கையும் உண்மையை உனக்கு மறைக்க என்னைவிட்டில; நான் உண்மையைச் சொல்லப் புகும்போது உன்மனம் வேதனைப்படவும் நேரும்; ஆனால் அவைகளையெல்லாம் பொறுத்துக்கொள்; என்னை வெறுத்துவிடாதே சொல்லட்டுமா" என்று சிந்தனையோடு கேட்டான் பத்மநாதன். "சொல்லுங்களண்ணா, நெஞ்சையொழித்தொரு வஞ் சகமில்லை" என்றாள் கமலாட்சி.

"சீதனம் போதாது"

"தங்கைச்சி, வனசாவிடத்தில் நான் மெய்யன்பு வைத்திருந்ததுண்டு; அவளும் இன்றைக்கும் என்னையே நம்பி என் மீது தீராத விசுவாசம் வைத்துக் கொண்டிருக்கின்றாள் என்பது உண்மை; வனசாவில் நான் ஒரு குற்றமுஞ் சொல்ல முடியாது; அவள் உத்தமி; பேரழகுடையவள்; பெண்மைக்குரிய நலன்களெல்லாம் ஒருங்கமைந்தவள்; ஆனால் இரண்டொரு குறைகள்தாம் வனசாவிடத்திலுள்ளன; அவற்றை உனக்கு நான் சொன்னால் நீ யென்னை ஏசுவாய் வெறுப்பாய் என்று பயப்படுகிறேன்" என்று கூசிக்கூசிக் கூறினான் பத்மநாதன்; "அண்ணா நீங்கள் உங்களுடைய உள்ளக்கிடக்கையை, என் மேற் கொண்ட விசுவாசங் காரணமாகச் சொல்லத் துணிந்தபோது, நான் ஏன் அண்ணா உங்களை ஏசப் போகிறேன்? வெறுக்கப்போகிறேன்; ஒன்றற்கும் யோசியாமல் உள்ளதைச் சொல்லுங்கள்" என்று மனச் சஞ்சலத்துடன் சொன்னாள் கமலாட்சி; "வேறொன்றுமல்ல, தங்காய், வனசாவிடத்தில் இக்காலத்திற்கேற்ற உயர்தரக் கல்வியில்லை; அல்லாமலும் சீதனமும் போதாது; சொந்த மைத்துனியென்ற காரணத்தினாற் சீதனத்தைப் பொருட்படுத்தாமல், தருவதைப் பெற்றுக்கொண்டு கல்யாணஞ் செய்துகொண்டாலும், கல்வி காணாதே, அதற்கென்ன செய்வது; இங்கு வந்து போகும் ராதாவின் கல்வித் திறமையையும் உத்தியோக மகத்துவத்தையும் நீயே இப்பொழுது நேரிற் கேட்டறிந்து கொண்டாய்; இவை மாத்திரமல்லாமல் ராதா ஒரு செல்வந்தருடைய ஏக புத்திரி; அவர் பெரும் நாட்டாண்மையுடையவர்; இவளுக்கு இலட்சக்கணக்கிற் சீதனமாகக் கொடுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவள் தகப்பனார் சம்மதித்திருக்கிறார்; அல்லாமலும் ராதா என்னையன்றி வேறெவரையும் மணஞ் செய்வதில்லையெனப் பிடிவாதஞ் செய்கிறாள்; நான் அவளை விட்டாலும் அவள் என்னை விடாள்போற் காணப்படுகிறது; அல்லாமலும், கலைமகளும் அலர்மகளும் ஒருங்கு சேர்ந்தாற் போல வரும் ராதாவை வேண்டாமென்று வெறுக்க எந்த ஆடவனுக்குத்தான் மனம் வரும்; தங்காய் இதுதான் என் இப்போதைய நிலைமை" என்று கவலையோடு சொன்னான் பத்மநாதன்.

* * *

உலகம் பலவிதம்: *1951 ஜூலை 17*

"சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

கேட்டாள், திடுக்குற்றாள், ஏங்கினாள், கலங்கினாள், சோர்ந்தாள், நெட்டுயிர்த்தாள்; சஞ்சலமுற்றாள்; மனிதன் மனம் இப்படியும் மாறுபடுவதுண்டோ என்று சிந்தித்தாள்; என்ன பதில் சொல்வதென்றறியாது தியங்கினாள் கமலாட்சி. அவளுக்கு அந்த நேரத்தில் என்ன சொல்வதென்றும் புலப்படவில்லை; சொல்லாம லிருக்கவும் முடியவில்லை; அவள் கண்களில் நீர்ததும்ப, நாத்தடுமாற, தன் தமயனைப் பார்த்து "அண்ணா, நிசமாகச் சொல்லுகிறீர்களா? இல்லையேல் என் மனத்தைச் சோதிக்கிறீர்களா" என்று கேட்டாள்; "தங்காய், இந்த நேரத்தில் வேடிக்கையாக நான் உன்னுடன் வார்த்தையாடுவேனா, நிசமாகத்தான் சொல்லுகிறேன்" என்றான் பத்மநாதன்; "என்ன, அண்ணா, சீதனம் போதாது, கல்வியறிவு காணாது என்றா எங்கள் அருமையான வனசாவைப் புறக்கணிக்கிறீர்கள்? இந்தக்காரணங்கள்பற்றி உங்கள் சொந்த மைத்துனியை, உங்களை நம்பியிருப்பவளை, பெண்ணுக்கணிகலத்தை, பொறுமையின் அவதாரத்தை, எங்கள் அரிய வனசாவைப் புறக்கணிக்கின்றீர்களென்று, உற்றாரறிந்தால் உங்களை ஏசுவார்களே! ஊராரறிந்தாற் சிரிப்பார்களே! ஆருமற்றது தாரம் ஊரிலொருவன் தோழன் என்ற பழமொழியை அறவே மறந்து விட்டீர்களா? அண்ணா எதனை மறந்தாலும் நாங்கள் தமிழரென்பதை மறக்க முடியுமா? பெண்களைப்பற்றி எங்கள் தெய்வத் தமிழ்ப் புலவர் என்ன சொல்லுகிறார்; ஆடவனோடொத்த கல்வியறி விருக்கவேண்டும், போதிய சீதனமுடையவளாயிருக்க வேண்டுமென்றா சொல்லுகிறார்?

"இல்லதென் இல்லவன் மாண்பானால் உள்ளதென்
இல்லவன் மாணாக்கடை"

"தற்காத்துத் தற்கொண்டாற்பேணித் தலைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள்பெண்"

என்றல்லவா விதித்திருக்கின்றார்கள் அண்ணா, ஞாயத்தைப் பேசித் தெளிவதே நன்மையாகும்; கல்வியறிவிற் குறைந்தவர், நாகரிகமற்றவர், தம்மையுந் தம் குடும்பத்தையும் தாங்கி நிர்வகித்து நடத்தவியலாதவர், சோம்பர், வீணர், மானமற்றவர், சுயநம்பிக்கையற்றவர், அலிகளென்று அவமதிக்கப்படுமிவர்களல்லவா தாம் ஆடவரென்பதை அறவே மறந்து தமக்குப் பெண்டாட்டியாக வரவிருக்கும் பெண்ணுக்கு அதிக கல்விவேணும் பெருந்தொகைச் சீதனம் வேணுமென்று அழுத்தி நிற்பார்கள்; இப்படிப் பட்டவர்கள் உண்மையில் ஆடவர்களுக்கெல்லாம் ஒரு பெரு இழுக்கைத் தேடிவிடுகிறார்கள்; இவர்களைப் பெண்களும் மதியார்கள், கண்டாற் சிரிப்பார்கள்; உத்தமிகளாகிய பெண்களிடத்திலுள்ள கல்விவேறு. உங்களையொத்த ஆண்களிடத்திலேயுள்ள கல்வி வேறு கல்வியென்பதைக் குறிக்கும் இன்னொரு சொல் "கற்பு"; இது அறிவைக் குறிக்கு மென்பதற்கும் பிரமாணம் "கற்பிலா மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்" என்ற முதுமொழிக்கமைய, கல்வியில்லாத மூடர்களை மூடர்கள் விரும்புவார்கள் என்ற கருத்துப்பட ஆறுமுகநாவலர் போன்ற பெரியார் எழுதிய உத்தியால் விளங்கும். மற்றக் கருத்து பெண்களுக்குரிய சிறந்த ஒழுக்கமாகிய திண்மை; இதனைத் தான் அண்ணா, எங்கள் திருவள்ளுவனார் "பெண்ணிற் பெருந்தக்க யாதுள கற்பென்னுந் திண்மையுண்டாகப் பெறின்" என்று வரையறுத்து கூறினார். இப்படியான கற்பென்னுங் கல்வியுடையவள் தான் வாழ்க்கைக்கு ஏற்ற உத்தமியாவாள்; இந்தக் கற்பு எங்கள் வனசாவிடத்தில் இருப்பதுபோல, உங்கள் ராதாவிடத்திலும் இருக்குமென நான் நினைக்கவில்லை.

"நாற்குணமும் நாற்படையா"

"ஏன், தங்காய், ராதாவைப்பற்றி அப்படிச் சொல்லுகின்றாய் அவளிடத்தில் என்ன குறையைக் கண்டாய்?" என்று கவலையுடன் கேட்டான் பத்மநாதன்; "அண்ணா, பெண்களைப் பற்றி என் வாக்காக, நான் ஏதும் புகழ்ந்து சொன்னால், என் பாலாரை நானே பாராட்டுவதாகும்; இகழ்ந்துசொன்னால், என் பாலாருக்கு நானே வசை கூறுவதாய் முடியும்; ஆனதாற் பெண்ணின் இலக்கணத்தைப்பற்றிப் பெரியோர் கூறியதை நான் இங்கே உங்களுக்கு எடுத்துக்காட்டுகிறேன்; என்னைக் குறையெண்ணாதீர்கள்;

"நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா,
ஆர்க்குஞ் சிலம்பே யணிமுரசா, - வேற்படையும்
நாளுமே கண்ணா, வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு"

எனப் புகழேந்தியார் பெண்கட்கு வரைவிலக்கணம் வகுத்தவாறு, வேறெவரும் வகுத்திலரென்று சொல்லலாம்; அந்தப் புகழேந்திப் புலவர் என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுகிறார், அண்ணா! "நாற்குணமும் நாற்படையா" என்று சொல்லி யிருக்கிறாரல்லவா, நாற்குண மென்பவை எவை? மடம் நாணம் அச்சம் பயிர்ப்பு என்னும் நாற் குணங்களுள் ஒன்று குறைந்தாலும் பெண்மைக்குரிய பெருமையெல்லாங் கெட்டு விடுமே யண்ணா, சற்றுமுந்தி இங்கே உங்களிடம் வந்து போன ராதாவிடத்தில் மடத்தைக் காணேன், நாணத்தைக் காணேன், அச்சத்தைக் காணேன் அண்ணா, அப்படியானால் என்ன செய்வது? ஆனால் வனசாவிடத்திலே இப்படியான குறைவு ஏதுமுண்டென்று நானாக, நீங்களாக, வேறெவ ராக, சொல்ல முடியுமா?..... என்று சொல்வதற் கிடையிற் பத்மநாதன் "தங்காய், காரணமின்றி, ஒருவரை நல்லாய் அறிதற்கு முன் நாம் எவரையுங் குறைசொல்ல வொண்ணாது; அதிலும் பெண்பாலாரைக் குறைசொல்வது பெரும் பாவம் என்றெண்ணுகிறேன்; ராதாவைப் பற்றி நீ பூரணமாய் அறிதற்கு முன் அவளிடத்தில் மடமில்லை, நாணமில்லை, அச்சமில்லை என்றுகுறை சொல்வது முறையல்லவே" என்று கவலையுடன் சொன்னான். "அண்ணா. மடமுள்ள பெண்ணாயிருந்தாள், நான் இங்கு வந்திருப்பதை முந்தியறியாத அந்தக் கன்னிகை, நீங்கள் ஒரு பிரமசாரி தன்னந்தனியே வசிக்கும் ஒரு இல்லத்திற்குத் தானுந் தனியே வரத் துணிவாளா? நாணமின்றிக் கூச்சமின்றி உங்களுடன் சமாசனவகித்திருந்து பேசுவாளா? இவர்களெல்லாரும் தாங்கள் தமிழ்ப் பண்பாட்டோடுகூடிய மகளிரென்பதை முற்றாய் மறந்து ஆங்கில நாகரிகத்தைப் பின்பற்றி நடக்கத் தலைப்பட்டவர்களல்லரா? இப்படி நாணமின்றி, வெட்கமின்றி, கூச்சமின்றி ஒதுக்கமன்றி ஆண்க ளோடு, ஆண்களுள்ளும் தம்மோடொத்த காதல ரோடு ஊடாடத் தலைப்பட்ட பெண்களுக்கு, பிறகு மணவறையிலே முட்டாக்கொன்றேன் அண்ணா; இவர்களை மணப்பந்தரிலே தாங்கி அணைத்து நடத்தி வரத் தாதியர் ஏன்? இப்படியான குறைகளை யெல்லாம் இவர்களுடைய கல்வியும் உங்களுக்குப் பெண் பகுதியார் தருஞ் சீதனமுஞ் சரிபண்ணி விடுமா?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள் கமலாட்சி.

* * *

உலகம் பலவிதம்: 1951 ஜூலை 24

"தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

"தங்காய், அக்காலத்துப் பெண்களையும் இக்காலத்துப் பெண்களையும் பல விஷயங்களில் ஒப்பிட்டுச் சொல்ல முடியாது; அக் காலத்துப் பெண்களுட் பலர் "கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி" யென்ற முறையிலும் "கற்புடைய மாதர்கட்குத் தரணிவேந்தே, கணவரல்லால் வேறோர் தெய்வங் கருதவுண்டோ" என்ற முறையிலும் ஒழுகி வந்தார்கள்; ஆனால் இக்காலத்துப் பெண்கள் அந்த உன்னத நிலையை மெல்ல மெல்லக் கைவிட்டு விட்டார்கள்; அக்காலத்து மகளிருடைய வாழ்க்கை தூயது; கணவன் வழிநிற்பது; தாம் வேறு தம் கணவன் வேறென்று பேதம் பாராதது; கணவன் வாழ்வே தம் வாழ்வு, கணவன் தாழ்வே தம் தாழ்வு என்ற மேலான கொள்கையோடு கூடியது; அக்காலத்து மனையாள் தன் கணவனுக்குப் பாரமாகச் சிரமமாகக் காணப்பட்டிலளென்பது பழைய தமிழ் நூல்களைக் கொண்டறியக் கிடக்கின்றது; அக் காலத்தில் மாத்திரமல்ல, இடைக் காலத்திலும் இல்வாழ்க்கைக்குரிய தமிழ்ப் பெண்களின் மாட்சி போற்றத்தக்கதாயிருந்தது; வறுமையிற் செம்மையான வாழ்க்கையை இடைக்காலத்துப் பெண்களும் மேற்கொண் டொழுகினார்கள்; "தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" என்று வள்ளுவர் வரையறுத்துக் கூறிய பிரகாரம் வாழ்பவர்கள்; தன் கணவன் ஏரைத் தோளில் வைத்துக்கொண்டு எருத்துக்களைப் பிணைத்து நடத்திக்கொண்டு போய் அவன் பிறகே எரு நிறைத்தகூடையைச் சுமந்துகொண்டு செல்லும் மட நல்லாரையும், பின்னர் மீண்டு தன் இல்லத்திற்கு வந்து சமயல் செய்து மத்தியானப் பொழுதில் உண்ண உணவும், உட்கொள்ள நீரும், வாயிலிட வெற்றிலை பாக்கு முதலியனவுங் கொண்டுபோய் வயலோரத்திலுள்ள நிழலிலே தம் கணவனை அன்புடனிருத்தித் தாம்பூலம் வழங்கி மீண்டு மகிழ்ச்சியோடு தன்னில்லத்திற்கு வந்து தான் ஆகாரம் பண்ணும் பெண்ணும், தோட்டத்திற்குத் தன் கணவனுடனும் பிள்ளையுடனும் போய், கணவன் துலாமிதிக்க, மகள் மடைமாறத் தான் தண்ணீரிறைக்கும் பெண்ணும், தங்காய்! இன்னும் எங்கள் நாட்டுப்புறங்களில் இருக்கிறார்கள்; இப்படிப்பட்ட உத்தமியே தன்னைக் கொண்ட கணவனுக்குப் பெருஞ் செல்வமாக அமைய, இப்பெண்ணுக்குச் சீதனம் எதற்கு இப்படியான பெண்ணை வரைபவன் அவள்பொருட்டுச் சீதனமுந் தர வேண்டுமென்று கேட்பானாயின் அவனை ஆணென்று சொல்ல வொண்ணாது, அலியென்றே சொல்லவேண்டும்"

"நல்லார்க்கும் பொல்லனாம் நாடு"

"ஆனால், தங்காய், இக்காலத்து மகளிர் நிலைமை பெரும்பாலும் அப்படிப்பட்டதன்று; இக்காலத்து வாலிபர் தமக்கு மணம் பேசுங் கன்னியரின் பெற்றாரிடத்துச் சீதனங் கேட்பது, தாம் அந்தச் சீதனப் பணத்தைக்கொண்டு இடாம்பீகமாகச் சீவியஞ் செய்யலாமென்ற நோக்கங்கொண்டல்ல; அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கத்தோடு சில வாலிபர்களிருந்தால் அவர்களைப் புறநடையாகக்கொள்ள வேண்டும்; பின் எதன் பொருட்டு அதிக சீதனங் கேட்கின்றார்களென்ற காரணத்தைச் சொல்லுகிறேன் கேள்; இக் காலத்துள்ள நாரியரிற் பெரும்பாலார் அந்நிய நாகரிகத்தின்பாற்பட்டுத் தாங்கள் தமிழ்ப் பெண்கள் என்பதை அறவே மறந்து, "கண்ட பாவனையிற் கொண்டை முடிக்கத் தலைப்பட்டு" இடர்ப்படுகிறார்கள்; "தற்கொண்டான் வளத்தக் காள் வாழக்கைத்துணை" என்ற பெரியார் வாக்கை அறவே மறந்து செயலாற்றத் தொடங்கிக்கொண்டனர்; தம் கணவனுடைய மாச வருவாய் நூறு ரூபாவாக விருந்தாலும், அடுத்த வீட்டு ஆடவனின் மாசவேதனம் ஆயிரம் ரூபாவாக, அவனுடைய மனையாள் நடக்கும் அந்த முறையில், வாழும் இடாம்பீக முறையில் தானும் நடக்கவேண்டும், தன் கணவன் தன்னை வைத்து நடத்தவேண்டு மென்று ஆசைப்படுகிறாள்; அந்த ஆசை முற்றிப் பிடிவாதமாகிறது; அப்படித் தன் கணவன் தன்னை இடாம்பீகமான முறையில் வைத்து நடத்தாத பட்சத்தில், நாயகனோடு முரண்படுகிறாள்; இல்வாழ்க்கையிற் பிணக்கு வந்து புகுந்துவிடுகின்றது; இந்தப் பிணக்கைத் தவிர்க்கும் பொருட்டுக் கணவன் என்ன செய்கிறான்? தன் வருவாய் இப்படியான செலவிற்குப் போதாமையினாற் கடன்பட தலைப்படுகின்றாள்; வருவாய்க்கு மேற்படச் செலவு செய்வோனைப் பற்றி எங்கள் ஔவைப் பிராட்டி யென்ன சொல்லியிருக்கிறாள்?

"ஆன முதலில் அதிகஞ் செலவானான்
மான மழிந்து மதிகெட்டுப் - போனதிசை
எல்லார்க்குங் கள்ளனாய் ஏழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு"

என்றல்லவா சொல்லப்பட்டிருக்கிறது! கல்யாணஞ் செய்தபின் தாம் இந்த நிலையை அடைந்துவிடாமல், மரியாதையோடு இருக்க வேணும், கடன்காரனென்று அவப்பேர் கேட்க வொண்ணாது, சந்ததி பெருக நேர்ந்தாற் பொருளில்லாமல் திண்டாட வேண்டி நேரிடும் என்னமிவைகளை யெல்லாம் உத்தேசித்தே, என் அருமைத் தங்காய், இக்காலத்துள்ள வாலிபர்கள் தாம் வரைய விரும்பும் கன்னிகைக்குத் தக்க சீதனம் வேண்டும், அறிவிற்காகிய நூற் கல்வியறிவு அவளிடத்தில்லையாயினும் ஏதும் சீவனோபாயத்திற்காகிய கல்வியறிவு பரீட்சைத் சித்தி வேணுமென்று கேட்கிறார்கள்; இந் ஞாயங்களை யோசித்தே, என் தங்காய், நானும் நன்கு படித்த கன்னிகையை, இல்லையேற் சீதனம் பெருத்த பெண்ணைக் கல்யாணஞ் செய்ய வேண்டுமென நோக்கங் கொண்டேன்" என்று சொல்லி முடித்தான் பத்மநாதன்.

* * *

உலகம் பலவிதம்: 1951 ஆகஸ்ட் 07

"பொருளிலார்க்கின்பமில்லை"

இப்படியெல்லாம் தமயன் சொல்லச் சாவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த தங்கை சற்று நேரம் யோசித்தபடியிருந்து விட்டுப் பின்னர்ப் பத்மநாதனைப் பார்த்து "அண்ணா, கேட்கிறேனென்று குறையெண்ணாதீர்கள்; இப்பொழுது நீங்கள் எங்கள் வனசாவைப் புறக்கணித்து, ராதாவைக் கல்யாணஞ் செய்ய வேண்டுமென்று சொல்லும் நியாயம், வனசாவை மணந்தால் வாழ்க்கையிற் பெருஞ் செலவுண்டாகும்; கடன் காரனாகவேண்டி நேரும்; ராதாவை மணந்தாற் கடனின்றிக் கௌரவமாகச் சீவிக்கலாம். ஏனென்றால் உங்களைத் தவிர அவள் தானுந் தன் பொறுப்பிற் பணத்தை யுழைப்பவள் என்பதுதானே? அது சரி தான், ஆனால் தன் முயற்சியால், தன் கல்வியறிவாற் பணமீட்டும் ராதா, தானே பணத்தையீட்டித் தானே தனக்காகிய செலவுகளைச் செய்பவளானால், பணவிஷயமாக, இல்லையேல் தனக்கு ஏதும் பொருள் வாங்கும் விஷயமாக அவள் உங்களை எதிர்பார்க்க வேண்டியதில்லையே; உங்களை நம்பியிருக்க வேண்டியதில்லையே; பண விஷயத்தில் அதனைச் செலவிடும் விஷயத்தில் இல்லையேற் போற்றும் விஷயத்தில் உங்கள் எண்ணத்தையும் அவள்பெற வேண்டியதில்லையே; இப்படியெல்லாமிருந்தால் அதனால் உங்களுக்கு என்ன சுகம்? அண்ணா" என்று அறியாள்போல் வினாவினாள் கமலாட்சி; "சுகமென்ன என்றா கேட்கின்றாய்? தங்காய்! என் மனையாள் பொருள் பண்டம் பணமுள்ளவளாயிருந்தால், அது எனக்கு ஒரு பெருமை, அவள் பொருட்டாக, என்பொருட்டாக, நான் கடன்படவேண்டி நேரமாட்டாது; நானும் என் முயற்சியாற் பொருளீட்ட, அவளுந் தன் முயற்சியாற் பொருளீட்டினால் எங்களுக்கு என்ன குறை நேரப்போகிறது? பொருளிலார்க் கின்பமில்லை, புண்ணியமில்லை, மருவிய கீர்த்தியில்லை, மாந்தருட் பெருமையில்லை என்று பல சொல்லுவார்கள்; ஆனாற் பொருளுள்ளவர்க்கு இவைகளெல்லா முண்டுதாமே; தங்காய், பொருளினருமையை நீ உள்ளபடி யுணர்ந்திலை; பொருள் படைத்தவர் இம்மை யின்பங்களை மாத்திரமல்ல மறுமை யின்பத்தையுந் தவறாது பெறுவரென்று பெரியோர் சொல்வார்கள்; இவைகளை யெல்லாம் உத்தேசித்தே சீதனத்தோடுகூடிய, இல்லையேல் நீதியான முறையிற் கௌரவமான வழியாற் பொருளீட்டக்கூடிய பெண் வேண்டுமென்கிறேன்" என்றான் பத்மநாதன்.

நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்; ஆனால், செல்வம் நிலையற்றது, தேகசுகம் எக்காலத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதல்ல, புருஷன் மனைவி யென்றிருக்குமிருவருள் காலக்கேட்டால், ஒருவருக்கு நோயாக வேறேதும் இடைஞ்சலாக நேர்ந்துவிட, அதனால் அவர் பொருள் வருவாய் குறைந்து வறுமையினாற் கஷ்டப்பட்டால், அவர் என்ன செய்வது?

பத்மநாதன்: புருஷன் கஷ்டப்பட்டால் மனைவி பொருளுதவி செய்ய வேண்டும்; மனைவி கஷ்டப் பட்டாற் புருஷனுதவி செய்வது தானே முறையாகும்.

கமலாட்சி: முறை யென்பதை நான் மறுக்க வில்லை யண்ணா; ஆனால் ஒருவருக்கொருவர் கொடுத்துதவி செய்யாவிட்டாற் செய்வதென்ன?

பத்ம: எப்படிக் கொடுக்காமலிருக்க முடியும்? புருஷன் மனைவிக்கு ஆபத்து நேர்ந்தால் உதவத்தான் வேண்டும்; அப்படியே மனைவியுங் கணவனுக்கு உதவத்தானே வேண்டும், தங்கைச்சி.

கமலா: செய்தால் நல்லதண்ணா ஆனாற் செய்யாத பட்சத்தில்,

பத்ம: செய்யாமலிருக்க முடியுமா?

கமலா: ஏன், அண்ணா முடியாது? இஷ்டமானாற் செய்யலாம்; இல்லையேல் விடலாம்; ஏன் செய்ய வில்லையென்று யார் யாரைக் கேட்பது? புருஷன் மனைவியிலே தங்கியிருக்கவில்லை; மனைவி புருஷனிலே தங்கியிருக்கவில்லை.

பத்ம: சீதனம் முயற்சியில்லாத பெண்ணாக விருந்தால்?

கமலா: அப்படியிருந்தால் மனைவி புருஷனைத் தானே தஞ்சமென்றெண்ணி அவன் பொருட்டுத் தானும் வாழ வேண்டியவளாவள் அவ்வாறு வாழ்தலினாலே கணவன் மனைவிக்கிடையிற் பரஸ்பரம் மெய்யன்புண்டாகும்; கணவன் மனைவியின் சீதனத்தையிட்டும், மனைவி கணவனுடைய உத்தியோகம் செல்வஞ் செல்வாக்கு என்னுமிவைகளையிட்டும் ஒருவர் மீதொருவர் கொள்ளுமன்பு வியாபார முறையான அன்பாக விருக்குமே யொழிய நிசமான அன்பாக விருக்கமாட்டா தண்ணா; பணம் பண்டம் சீதனம் படைத்த பெண்களுள்ளே, கல்வியறிவு, ஒழுக்கம் உயர் குடிப்பிறப்பு தெய்வ நம்பிக்கை யென்னு மிவைகளுடைய சிலரினுஞ் சிலரொழிய, ஏனைய பெண்களுட் பெரும்பாலார் தம்மிடத்துள்ள பணச் செருக்கினால் பொருட் பெருமையால், கல்வித் திறமையினால், இயல்பாகவுள்ள மௌட்டிகத்தினால், தம் நாயகனைக்காட்டிலும் தாம் ஏதோ விசேஷமென்று நினைத்து, அவனை அவமதித்துப் புறக்கணித்துத் தாம் நினைத்தபடி நடக்கத் தலைப்படுகிறார்கள்; தம்மைத் தாமே புகழுகின்றார்கள்; மாமன் மாமியர் சுற்றத்தார் பெரியாரை மதிக்கின்றிலர்; வந்த விருந்தை உபசரிக்கின்றிலர்; யாரும் யாசகர் தம் வீடு தேடிப் பிச்சைக்கு வந்தால், அவருக்கு ஏதும் ஈயாது விடுதலோடு மாத்திரமிருந்துவிடாது, வந்த யாசகரை எள்ளிவிடுகின்றனர்; அண்ணா, "ஈதலரிதெனினும் இன் சொலினும் நல்கூர்தல் - ஓகோ! கொடிது! கொடிதம்மா!" என்றபடி இரக்க வந்தவர்க்கு ஈதற்கு நம்மிடத்தில் ஏதும் இல்லையானாலும் இன் சொல்லுக்கும் பஞ்சப்படலாமா? ஆனால், இப்படியான பெண்கள் இவற்றைச் சிந்திக்கமாட்டார்கள்; மேலும் கொடுக்கும் குணம் ஒருவரிடத்து இயல்பாகவே யிருத்தல் வேண்டுமேயொழிய, அது இடையில் வரக்கூடியதல்ல; இது பற்றியே எங்கள் மூதாட்டியும் "நடையும் நடைப் பழக்கம், நட்புந்தயையுங் கொடையும் பிறவிக்குணம்" என்று பாடியிருக்கிறார்.

"என்னைப் பார்! என் அழகைப் பார்"

"மேலும், அண்ணா, கல்வி கற்ற பெண், கல்வியறிவுள்ள கன்னிகை நாகரிகமுள்ள மகள் இப்படியான பெண்களை ஏதேதோ சொல்லிப் பெரிதும் பாராட்டுகிறீர்கள்; கல்வியென்றால், எந்தக் கல்வி யண்ணா? தொழிலுக்காகிய பிழைப்புக்காகிய கல்வியல்ல, அந்நிய மொழிக் கல்வியல்ல, எங்கள் பழைய ஆசாரங்கள் அநுட்டானங்கள், தமிழ் மகளுக்குரிய ஒழுக்கங்கள் முதலியவற்றை விட்டு, தானும் ஒரு "அழகுராணி" யாக வரவேண்டுமென்று துராசை கொண்டு "என்னைப் பார்! என்னழகைப் பார்!" என்று தன்னை ஆபாசமான முறையில் உடுத்திக்கொண்டு, தான் அழகியோ அல்லளோ என்று தீர்க்கமாக அறியும்படி பல ஆடவர் முன்னிலையில் அவர்களுடைய தயவை யாசித்து நிற்றற்கேதுவாகிய விபரீத ஆங்கிலக் கல்வியையல்ல, அண்ணா, தமிழ்ப்பெண்ணாகப் பிறந்தவள் தனது தாய்மொழியாகிய தமிழை நிரம்பக் கற்க வேண்டும்; மூதுரை முதலிய நீதிநூல்களைக் கற்றல் வேண்டும்; தன் சமய நூல்களைக் கற்க வேண்டும்; கற்க இயலாதவற்றை நல்லார் பெரியாரிடத்துக் கேட்டறிய வேண்டும்; தம்மூதாட்டியர் இல்லறம் நடாத்திய முறையைப் பார்த்துப் பயில வேண்டும்; இப்படிப்பட்ட பெண்களே இல்லறத்திற்கு இசைந்தவராவரண்ணா" என்று ஒருவாறு கூறி முடித்தாள் கமலாட்சி. "அப்படியானால், ஆங்கிலக் கல்வி பெண்கட்கு வேண்டாமென்றா தங்காய் சொல்லுகிறாய்" என்று பத்மநாதன் வினாவினான்.

* * *

உலகம் பலவிதம்: 1951 ஆகஸ்ட் 14

"பொன்மலர் நாற்றமுடைத்து"

"அண்ணா, ஆங்கிலக் கல்வி பெண்களுக்கு வேண்டாமென்று நான் ஒருபோதுஞ் சொல்ல வரவில்லை. ஆனால் தமிழ்ப் பெண்களாகிய நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவமகளிராகிய நாங்கள் முதல் எங்கள் தமிழ் மொழியையும் எங்கள் சாதி சமயங்கட்குரிய ஒழுக்கம் பழக்க வழக்கமென்னுமிவைகளையும் முறைப்படி பயில வேண்டும்; பயின்றுகொண்டு ஆங்கிலக் கல்வியைப் படிக்கத் தொடங்கினால், அப்படித் தொடங்கி அதனையும் நிரம்பக் கற்றால் அதனால் நன்மையுண்டாகும்; ஒருவர் பல பாஷையைப் படித்தல் முடியாதெனினும் இரண்டு பாஷையையாயினும் நன்கு கற்றிருந்தால் அவரைப் பேரறிவு தானே வந்தடையும். "அது பொன்மலர் நாற்ற முடைத்து" என்றவாறாகும். ஒருவன் இல்லையேல் ஒருத்தி ஒருமொழியறிவைக் கொண்டு அறிவில் உந்நத நிலையை யடையலாமென நினைத்தல், ஒரு பறவை ஒற்றைச் சிறகுடன் ஆகாயத்திலே பறக்க முயல்வதை நிகர்க்குமென்று ஏதோ ஒரு புத்தகத்திற் படித்த ஞாபகம் எனக்குண்டு அண்ணா; ஆனதால் ஆங்கில மொழியைப் படிக்கவேண்டாமென்று நான் சொல்லத் துணியவில்லை; "அற்ப கல்வி ஆபத்திற் கேது" என்று உலகத்திலே சொல்லுவார்கள்; ஆனபடியால் ஆணுக்காக பெண்ணுக்காக அற்ப கல்வி ஆபத்து அகந்தையென்னு மிவைகளைத் தேடிவிடும்; அடிப்படையிலே தம் தாய்மொழிக் கல்வி அதிகமின்றி ஆங்கிலம் முதலிய அந்நிய மொழிகளைப் பயிலுகிற அவர்கள்தாம் அண்ணா "ஞானப்பாரம்" இல்லாத தோணிபோல நிலைதடுமாறுவார்கள்; விபரீதமாக விஷயங்களை விளங்குவார்கள்; தாம் விளங்கிக்கொள்ள முடியாதனவற்றைத் தவறென்பார்கள்; தாம் நேரிற் கண்டனவே மெய்; ஏனையவெல்லாம் பொய்யென்பார்கள்; பொருந்தா நியாயம் பேசுவார்கள்; இவர்களைப் பார்க்கிலும் "கல்லாத பேர்களே நல்லவர்கள்" என்று சொல்லலாம்; இவைகளை யெல்லாம் உத்தேசித்துத்தான் தாய்மொழிக் கல்வியில்லாத் தனி ஆங்கிலக் கல்வி தமிழ்ப் பெண்களாகிய எங்களுக்கு அதிகம் பயன்படாதென்றும், சில சமயத்தில் எங்களைப் பிழையான வழியிற் கொண்டுபோய் விட்டுவிடு மென்றும் பயப்படுகிறேன்" என்று காமாட்சி சொல்லும்போது, பத்மநாதன், "தங்காய், ஆங்கிலக் கல்விக்கு முந்தித் தமிழ்க் கல்வியறி விருக்கவேண்டு மென்கிறாய்; இரண்டுமொழி யறிவிருப்பது உத்தம மென்கிறாய்; முற்காலத்திலிருந்த தமிழ்ப் புலவர்கள் தமிழும் ஆங்கிலமும் படித்த திருவள்ளுவரென்றும், ஔவையாரென்றுமா பாராட்டப்படுகிறார்கள்?" என்று வினாவினான்.

"நான் ஆண்பிள்ளையென்பதை நினைப்பூட்டி விட்டாயே"

"அண்ணா, முற்காலத்துப் புலவர்கள் ஆங்கிலம் படிக்கவில்லை யென்பது உங்களுக்குத் தெரியும். எனக்குந் தெரியுமென்று நினைக்கிறேன்; சில புலவர்கள் வடமொழியுந் தென்மொழியும் நன்கு படித்தார்களென்று சொல்லப்படுகிறது; தனித் தமிழ்ப் புலவர்களுமுண்டு; ஆனால், அவர்களெல்லாரும் தங்கள் தாய் மொழியை நன்கு கற்றவர்களென்பதிற் சந்தேகமில்லையே அண்ணா; தாய் மொழியை நன்கு பயின்று கொண்டு வேறும் மொழியைப் படிக்கலாமென்றுதானே நானுஞ் சொல்லுகிறேன்" என்றாள் கமலாட்சி; "தங்கைச்சி. நீ சொல்வது சரியென்று வைத்துக்கொள்ளுகிறேன்; உனது மைத்துனி வனசாவிடத்தில் எந்த மொழிக் கல்வி நிரம்பியிருக்கிறது" என்று சிரித்துக்கொண்டு கேட்டான் பத்மநாதன். "அண்ணா வனசா கல்வியறிவிலே சிறந்தவளென்று நான் சொல்ல வரவில்லையே; வாழ்க்கைத் துணைவியா யிருத்தற்கான குணங்கள் பல அவளிடத்தி லுண்டென்றுதானேயண்ணா நான் சொல்லு கிறேன்; நீங்கள் சீதனத்திற்கும் ஆங்கிலக் கல்விக்கும் ஆசைப்பட்டு ராதாவை விரும்புகிறீர்களென்பது பற்றியல்லவோ அண்ணா நான் ஏதோ தெரிந்ததை நீங்கள் என்மேல் வைத்த விசுவாசத்தைக் கொண்டு சொல்லத் துணிந்தேன்" என்று பரிவுடன் சொன்னாள்; "தங்காய், நீ என்மேற்கொண்ட அன்பு காரணமாகச் சொல்லுகின்றா யென்பதை நான் அறிவேன்; நான் சும்மா வேடிக்கையாகக் கேட்டேன்; குறை யெண்ணாதே" என்று பத்மநாதன் சொன்னவுடனே, சிறிது நேரம் வாட்டமுற்றிருந்த கமலாட்சியின் முகம் மலர்ந்தது; அவன் பின்னரும் அவளைப் பார்த்து "அண்ணா நான் என்ன சொன்னாலும், நீங்கள் என்னைப் பிழையாக, குற்றமாக நினைக்க மாட்டீர்களென்பதை அறிவேன்; அதுகிடக்க, அண்ணா வாலிபர்கள் பெண்களின் பொருட்டு அதிக சீதனம் வாங்குகிறதாக நினைத்து மகிழ்ச்சியடைகிறார்கள்; ஆனால் அந்த முறையிலே தம்மை அந்தப் பெண்ணுக்கு முற்றாக விற்று விடுகிறார்களென்பதைத் தாம் மறந்து விடுகின்றனர்; இந்தப் பொல்லாத சீதனத்தினால், நேரும் பிணக்குக்களையும், விவாகப்பதிவு நீக்கங்களையும் நீங்களும் அறிவீர்கள்; இன்னும் எத்தனையோ ஆடவர் இதனால் தமக்கும் மனைவிக்கும் பிணக்கு நேர, மனையாள் சீதனப் பெருமையினாற் கணவனை மதியாது நடக்க, கணவன் "என்ன செய்யலாம் என் தலைவிதி இப்படியானது" என்று, குடும்ப இரகசியத்தைப் பிறர்க்குச் சொல்ல முடியாதவனாய் "உப்புக் கண்டம் பறிகொடுத்த பார்ப்பாத்தியைப் போல்" இடைஞ்சற்படுகிறான்; சில ஆடவர்கள் சீதனம்படைத்த பெண்டாட்டிக்கும், மானத்திற்கும் பயந்து அவள் சொன்னபடியெல்லாம் செய்யத் தலைப்பட்டுக் காலகதியில் தாம் ஆணோ பெண்ணோ என்பதையும் மறந்து போகிறார்கள்; அண்ணா இந்த விஷயமாக ஒரு சின்னக்கதை சொல்லுகிறேன் கேளுங்கள்; ஒரு ஆடவன் தன் பெண்டாட்டிக்கும் பயந்தவன், அவளோடு ஏதோ பேசிக் கொண்டிருக்கும் போது, உட்கூரையிலிருந்து ஒரு சாரைப் பாம்பு தவறி அவர்களிருக்குமிடத்திற் கணித்தாகப் (பொத்தென்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்ததாம்; விழுந்ததைக் கண்டவுடனே இருவருந் திடுக்கிட்டுப் பதைபதைத் தெழுந்து தூரத்தில் நின்றனர்; புருஷன் மனைவியைப் பார்த்து "கண்ணே, என் பெண்ணே, இந்தப் பாம்பைத் தப்பவிடக் கூடாது, அயல் வீட்டில், இல்லையேல் தெருவில் ஆரும் ஆண்பிள்ளை நின்றாற் கூட்டிக்கொண்டோடி வா, பாம்படிக்க" என்று சொல்ல, ஐயோ! என் பிராண நாதா, நீங்களும் ஒரு ஆண்பிள்ளைதானே" என்று புன்னகையுடன் சொன்னாளாம். கேட்ட கணவனார் "ஆமடி என் கண்ணே, நான் ஆண்பிள்ளை யென்பதை நீ இப்பொழுது நினைப்பூட்டி விட்டாயே" என்று மகிழ்ந்து மனைவியைப் பாராட்டிக்கொண்டு தடி தேடுவதற் கிடையிற் சாரைப்பாம்பு நகர்ந்துபோய் விட்டதாம்" என்று இந்தக் கதையைச் சொல்ல, பத்மநாதன் பெருஞ் சிரிப்புச் சிரித்தான்.

* * *

உலகம் பலவிதம்: 1951 ஆகஸ்ட் 21

"காலத்திற்கேற்ற கோலம்"

சிரித்தபின்பு பத்மநாதன் தனது தங்கையை அன்புடன் பார்த்து "தங்காய், நீ வயசிற் குறைந்திருந்தாலும் புத்தியில் என்னைக் காட்டிலுஞ் சிறந்துள்ளனை; உன்னிடத்தில் அதிக விவேகமும் உலகியலறிவும் உண்டென்ற வுண்மையை இன்றுதான் உணாந்தேன்; ஆங்கிலக் கல்வியறிவு, உத்தியோகம், செல்வம், பேரழகு முதலியன இருக்கின்றன வெனினும், ராதா என்னிடத்தில் உண்மையான காதல் பாராட்டி வருகிறாள்; இதமான முறையில் ஊடாடுகிறாள்; தமிழ் மகளுக்குரிய குணங்களுஞ் செயல்களும் அவளிடத்துள்ளன; அந்நிய நாகரிகத்தை அவள் அதிகங் கைக்கொண்டிலள்; காலத்திற்கேற்ற கோலமென்று நடக்கிறாள்; அவள் எனக்குத் தாரமாவதோடு ஒரு சினேகிதை போலவும், என்னுத்தியோகக் கடமைகளில் உதவி செய்யவும் பயன்படுவாள்; நானும் அவளும் தனித்தனி உத்தியோகம் பார்த்தலினால், பொருள் வரவு அதிகமுண்டாகுமாதலினால், வீட்டுப் பணிக்குப் போதிய பணியாளரை வைத்துக் கொள்ளலாந்தானே; இவைகளை யெல்லாம் உத்தேசித்தே நான் ராதாவை மணஞ்செய்ய விரும்புகிறேன்; வனசாவிடத்திற் போதிய கல்வியறிவும் காலத்திற்கேற்ற கோலமாக நடக்கக்கூடிய ஆற்றலுமில்லையே யொழிய, வேறு எவ்வகையிலும் வனசாவை நான் குறைசொல்ல முடியாது; ஆனால் வனசா என்னையன்றி வேறெவரையுங் கல்யாணஞ் செய்வதில்லை யெனப் பிடிவாதமாக நின்றால்; நான் என்ன சொல்வதென்பது எனக்குப் புலப்படவில்லை; நானும் விவாகமின்றி நித்தியப் பிரமசாரியாக இருக்க வேண்டித்தான் நேரும் என்று நினைக்கிறேன்; ஆனால் அப்படி இருவரும் வாழ்நாளை அவமே கழிப்பதனால் ஏதும் பயனுண்டோ என்பதை நீயே யோசித்துப் பார்; இந்த விஷயத்திலே தீர்க்கமாக ஏதுஞ் சொல்ல என்னால் முடியவில்லை" என்று பெரிதுங் கவலைகூரச் சொன்னான்.

"இருதலைக் கொள்ளியுள்ளெறும்புபோலானேன்"

கமலாட்சி சற்று நேரம் யாதும் பேசாளாய்ச் சிந்தனையுடனிருந்து விட்டுப் பின் நெட்டுயிர்த்துத் தன் தமயனை நோக்கி "அண்ணா, இன்று பின்னேரம் நான் ஊருக்குப் புறப்படலாமென யோசிக்கிறேன்" என்று சொன்னாள்; "ஏன்? தங்காய், அவசரப்படுகிறாய்? வந்த நீ இன்னும் இரண்டு நாள் தங்கிப் போதற்காகிய சௌகரியங்கள் இங்கேயுண்டு; உன் கேள்விக்கு நான் உடன் படவில்லை யென்று மனத்தாபப்படுகிறாய் போலும்; என் அருமைத் தங்காய், என் அந்தரங்க நோக்கத்தை யெல்லாம் உனக்கு உள்ளபடி யெடுத்துச் சொல்லிவிட்டேன்; என் மனநிலையை நீ இப்போது நன்கறிந்து கொண்டாயென்றெண்ணுகிறேன்; இதனால் என்னை நீ வெறுப்பது ஞாயமல்ல; உன்னிடத்தில் நான் வைத்த அன்பும், என்மீது நீ கொண்டுள்ள விசுவாசமும் நேற்றின்று தொடங்கியனவல்ல; இந்த ஒரு விஷயத்தில் மாத்திரம் உன்னெண்ணப்படி நான் நடக்கா விட்டாலும், நீ அதைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்று பரிவுடன் சொன்னான் பத்மநாதன். "அண்ணா, இப்படியான கருமத்தில் ஒருவரை யொருவர் வெறுப்பதும் குறை சொல்வதும் முறையல்ல என்பதை நானும் ஏற்றுக்கொள்ளுகிறேன்; நான் அவசரப்படுவது வேறொன்றுக்குமல்ல; என் வரவை ஆவலோடு எதிர்பார்த்த வண்ணமிருப்பாள் வனசா; அவளிடம் விரைவிற்போய் நான் உள்ளதைச் சொல்லிவிட வேண்டும்; சொன்னால் அவள் மனநிலை என்னாகுமோ, கதியென்னாகுமோ நானறியேன்; வனசாவும் இலேசானவளல்லள்; அவளுடைய கண்ணிலிருந்து ஒரு துளி நீர் சிந்தினால், அது ஆரைப் போய்த் தாக்குமோ நான் அறியேன்; தெய்வத்திற்குத் தான் தெரியும்; மேலும் அவளைக் கலங்கவிட்டு, ஆவலோடிருக்கவிட்டு நான் இங்கு ஒரு நிமிஷமேனுந் தங்குவது முறையல்ல; என்னைத் தடுக்காதீர்கள், அருமையான அண்ணா அந்திவேளைப் புகைரத மார்க்கம் பயணஞ் செய்ய அநுமதி தாருங்கள்" என்று கண்களில் நீர் ததும்ப இரந்து கேட்டாள் கமலாட்சி; "ஐயோ! இருதலைக்கொள்ளியுள் ளெறும்பு போலானேன்" என்று சொல்லிக் கவலைப்பட்டான் பத்மநாதன்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1951 ஆகஸ்ட் 28

"ஏழையழுதகண்ணீர் கூரியவாளொக்கும்"

"அவளுடைய கண்களிலிருந்து ஒருதுளி நீர் சிந்தினால், அது ஆரைப்போய்த் தாக்குமோ அறியேன் என்கின்றாள் என் அருமைத் தங்கை; ஆரைப் போய்த் தாக்குவது? ஒருவரையும் போய்த் தாக்காது; என்னைத்தான் வந்து தாக்கும்; என்னைத் தாக்கினால் என் கதி யென்னாகும்; ஏழையழுத கண்ணீர் கூரிய வாளொக்கும் என்று சொல்லுவார்கள்; ஏன், வனசா எனக்குத் தான் வாழ்க்கைத் துணையாயிருக்க வேண்டுமென்று பிடிவாதஞ் செய்கிறாளென்பதும் எனக்குப் புலப்படவில்லை; உலகத்திலே ஒரு பெண்ணுக்கு நூறு மாப்பிள்ளையைப் பேசுவதும், ஒரு மாப்பிள்ளைக்கு நூறு பெண்ணைப் பேசுவதுஞ் சகசந்தானே; உலகமிப்படியிருக்க, வனசா மாத்திரம் என் விஷயத்தில் அழுத்தி நிற்கிறாள்; இதுவும் என் பொல்லாத காலந்தான்" என்று பத்மநாதன் தன்னளவிற் சிறிது நேரஞ் சிந்தித்துப் பெருமூச்சு விட்டுப் பின் கமலாட்சியைப் பார்த்து "தங்காய், வாழ்க்கைப்பட்டால் எனக்கு வாழ்க்கைப்படுவது இல்லாவிட்டாற் சும்மாயிருப்பதென்று வனசா பிடிவாதஞ் செய்வது எதற்காக?" என்று கேட்டான் பத்மநாதன்; "அண்ணா உந்த ஒரு கேள்வியையும் நீங்கள் வனசாவிடமன்றோ கேட்கவேண்டும்; கேட்டால் அவள்தான் அதற்குப் பதில் சொல்லுவாள்" என்று புன்சிரிப்புடன் சொன்னாள் கமலாட்சி, பின்னரும் வெகுநேரம் பத்மநாதன் யோசித்துவிட்டுக் கமலாட்சியைப் பார்த்து "தங்காய், நீ ஊருக்கு மீண்டு போய் வனசாவிற்கு என்ன பதில் சொல்ல உத்தேசித் திருக்கிறாய்" என்று வினாவ, அவள் "அண்ணா, என்ன பதில் சொல்வதென்றுதானே உங்களைக் கேட்கிறேன்" என்றாள். "தங்காய், என்னை நம்பிக் கவலையில்லாமல் ஊருக்குப் போ, ஒருவாரத்துள் உனக்குத் தவறாமல் இந்த விஷயமாக ஒரு கடிதமெழுதுவேன்" என்றான் பத்மநாதன்; "அப்படியானால், உங்கள் மைத்துனருக்கு நான் ஒரு கடிதமெழுதிவிட்டு ஒருவார காலத்திற்கு இங்கேதானே தங்குகிறேன்" என்றாள் கமலாட்சி.

உங்களுக்கு நமஸ்காரம்

கமலாட்சி சொன்னதற்குப் பதில் சொல்ல முடியாதவனாய், வலையில் அகப்பட்ட மான் போலவும், தூண்டிலில் அகப்பட்ட மீன் போலவுஞ் சஞ்சலப்பட்டான் பத்மநாதன்; தங்கையை போ என்று சொல்லவும் மாட்டான்; தன்னோக்கத்தை உள்ளபடி அவளுக்குச் சொல்லவும் மாட்டான்; தங்கையின் கேள்வி நீதியானதென்பதை அவன் நன்கறிவான்; அவளுக்குத் தான் சமாதானஞ் சொல்லவும் முடியாதென்று சிந்தித்தான்; அவன் தன்னுள்ளத்தை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு, கமலாவைப் பார்த்து "தங்காய், என்னை இப்பொழுது என்ன செய்யும்படி கேட்கிறாய்" என்று அழுத்திக் கேட்டான்; "அண்ணா, வேறொன்றுஞ் செய்யவேண்டாம்; வனசாவை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன் என்று ஒரு வாக்குச் சொன்னாற் போதும்" என்று கனிவுடன் சொன்னாள்; "அதனை நான் யோசித்துவிட்டுச் சொன்னால் என்ன?" என்ற தமயன் கேட்க, தங்கை "ஆருடன் அண்ணா யோசித்துவிட்டுச் சொல்லப்போகிறீர்கள்? ராதாவுடனா" என்று குத்திரமாகக் கேட்டாள். ராதாவோடல்ல தங்காய், என்னளவிற்றான் இன்னும் யோசிக்க நினைத்தேன்; ராதாவிற்கும் உண்மையைச் சொன்னால் அவள் கேட்டுக் கொள்ளுவாள்" என்றான் பத்மநாதன்; எப்படியாயினும் யோசித்து ஒரு முற்றுச் சொல்லுங்கள், அண்ணா" என்று பரிவுடன் சொன்னாள் கமலாட்சி "சரி, தங்காய், என் சொல்லைத் தட்டப் பயந்து நீ மனம் வருந்துவாயென்றஞ்சி, உன் கேள்விக்குச் சம்மதிக்கிறேன்" என்றான் பத்மநாதன்; "அண்ணா என் அருமையான அண்ணா, உங்களுக்கு நமஸ்காரம்" என்று சொல்லிக் கும்பிட்டாள் கமலாட்சி; "சொன்ன சொல் தவறமாட்டீர்களென்பதை நான் அறிவேன்" என்று பின்னும் வற்புறுத்தினாள் கமலா. அந்த நேரத்தில் அவள் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையில்லை யெனலாம்; அவள் தமயனைப் பெரிதும் பாராட்டி, அவன் தன்மீது வைத்த அன்பிற்குருகி, அன்று மாலைப் புகைரதத்தில் தான் மீண்டு ஊருக்கும் போக வேண்டுமென்ற நோக்கத்தைத் தெரிவித்தாள்; பத்மநாதன் அதற்கிசைந்து ஒரு மோட்ட ரதத்தை யொழுங்குசெய்து, தன் சகோதரியையும் அவளுக்குத் துணையாக வந்த பணிப்பெண்ணாகிய இலட்சுமியையும் இரதத்தில் ஏறச்செய்து, தானும் முன்னாசனத்திலிருந்து அவர்களுடன் போய்ப் புகைரத ஸ்தானத்தை யடைந்து, புகைரதம் வந்தவுடன் அவர்களை அதில் ஏறச்செய்து தங்கையிடம் அநுமதி பெற்றுக் கொண்டு தன் வாசஸ்தானத்திற்கு அதிக சிந்தனையோடு மீண்டான்; மீண்டவன் நித்திய கடன்களை யெல்லாம் முறைப்படி செய்தனனெனினும், அவனுடைய மனம் எந்த நேரமுஞ் சஞ்சலத்தோடு கூடியதாகக் காணப் பட்டது; ராதாவை நினைப்பான், அவள் தன்மீது வைத்த காதலையும், இதமாக ஊடாடுவதையுஞ் சிந்திப்பான்; ராதாவுக்கு என்ன சொல்வதென்று யோசிப்பான்; தனது தங்கைக்குக் கொடுத்த வாக்கையிட்டுப் பலமுறை யெண்ணுவான்; இவ்வாறு பத்மநாதன் சில தினங்களாக எண்ணாத எண்ணமெல்லா மெண்ணியெண்ணி மனம் புண்ணானான்; வயிறார உண்டிலன்; கண்ணயர்ந்து நித்திரை கொண்டிலன்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1951 செப்டெம்பர் 04

காயா? கனியா?

கமலாட்சி தங்கள் சொந்த வீட்டிற் சென்று அதிகந் தங்காமல், வனசா வீட்டிற்குப் போனாள்; அவள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த வனசாட்சி, கண்ட மாத்திரத்தே யெழுந்து விரைந்து சென்று அன்புடன் வரவேற்று அழைத்துக் கொண்டுவந்து ஆசனமிட்டு இருக்கச் செய்து இன்சொற் கூறினாள்; கமலாட்சியின் முகத்தை அவதானித்துப் பார்த்தாள்; சென்ற கருமஞ் சித்தியடைந்திருக்க வேண்டுமென்று அயிர்த்தாள்; ஆனால் ஏதும் விசாரித்திலள்; எதுவுங் கமலாவின் வாயினால் வெளி வரட்டுமென்று எதிர்பார்த்திருந்தாள்; இதற்கிடையில் கமலாவின் வரவையறிந்த வனசாட்சியுடைய தாய் அங்கே வந்து கமலாவிற்கு நல்வரவு கூறிச் சுகம் விசாரித்தாள்; "மகளே, நீ உத்தேசித்துப் போன கருமமெப்படி? காயா? கனியா? என்று ஆர்வத்துடன் கேட்க, "காயுமல்ல, கனியுமல்ல, சீக்கிரத்திற் கனியக் கூடிய நிலைமையி லிருக்கிறதென் றெண்ணுகிறேன்; இனி எல்லாம் ஆண்டவன் அருளைப் பொறுத்தவை" என்று சிந்தனையோடு சொன்னாள் கமலாட்சி "எல்லாம் நன்மையாகும்; நீங்கள் இருந்து பேசுங்கள்" என்று சொல்லிவிட்டு அடுக்களைப் பக்கம் தாய் போய்விட, வனசாட்சி கமலாட்சியைத் தன் படுக்கையறைக்கு அன்புடன் அழைத்துச் சென்று அங்குள்ள "ஸோபா" வில் அவளை யிருத்தித் தானும் பக்கலிலிருந்தாள்.

"ஊழிற் பெருவலி யாவுள....."

பின்னரும் கமலா மௌனஞ் சாதிப்பதைக் கண்ட வனசா அவளைப் பரிவுடன் பார்த்து "அக்கா, என்ன ஒன்றும் பேசாமலிருக்கிறீர்கள்" என்று மெல்லப்பன்னினாள்; "பேசாமலிருக்க முடியுமா, தங்காய், என்ன விஷயத்தைப் பற்றிப்பேசச் சொல்லுகிறீர்" என்று புன்னகையரும்பச் சொன்னாள் கமலாட்சி; "என்ன விஷயமானாலும் பேசுங்கள்" என்றாள் வனசா; கமலா சிறு நகை செய்து "தங்காய், நான் புறப்பட்டுப் போன கருமத்தைப்பற்றி என் மாமியாருக்குக் குறிப்பாகச் சொல்லிவிட்டேன்; நீருங் கேட்டுக் கொண்டுதானே நின்றீர்; உம்முடைய எண்ணம் ஆண்டவனருளாற் கைகூடுமென்றுதான் எண்ணக்கிடக்கிறது; இனி ஏதோ விதிவசம் நடக்கும்; உமது மைத்துனர் உம்மை ஒரு போதும் வெறுத்திலர்; உம்மிடத்தில் விசுவாசமுள்ளவராகவே காணப் படுகிறார்; ஆனால் இப்போதைக்கு விவாகஞ் செய்யும் நோக்கமில்லை; சில காலம் கழித்துச் செய்யலாமென்பது அவர் கருத்து; ஆனால் தங்காய் "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினுந்தான் முந்துறும்" என்ற பிரகாரம் காலம் வந்தவுடனே கல்யாணந் தானாகவே நடைபெறும். அவராலும் உம்மாலும் அந்த நோத்திலே தவணையிட முடியுமா" என்று பொய்யுடன் கலந்த மெய்யாக விஷயத்தைத் தொகுத்துச் சொன்னாள் கமலாட்சி.

* * *

உலகம் பலவிதம்: 1951 செப்டெம்பர் 11

"அவருக்குத் திருப்தி வராது, என் மனமும் ஆறுதலடையாது"

மேலுஞ் சற்றுநேரம் பேசியபின் கமலாட்சி வனசாவிடத்தும் அவள் தாயிடத்தும் அநுமதி பெற்றுக்கொண்டு, விரைவில் மீண்டு அங்கு வருவதாகச் சொல்லிவிட்டுத் தன் வீட்டிற்குச் சென்றாள்; இங்ஙனமாக அதுகாறுந் துயரக் கடலிற் படிந்து கிடந்த வனசாட்சி கமலாவின் சொற் கேட்டபின் ஒருவாறு மனந்தேறினாள்; ஆனாற், "ஊழிற் பெருவலியாவுள....." என்று கமலா தனக்கு எடுத்துக்காட்டிய குறளைச் சிந்தித்தாள்; தன்னூழ் எப்படியாகு மென்பதை அவள் அறியாளல்லவா? அதனாற் சிறிது தயங்கினாள்; தன் மைத்துனனிடத்தில் உண்மையான விசுவாசம் பூண்டிருத்தலால், அவனுடைய உள்ளமுந் தன்னையே நாடுமென்று வனசா துணிந்தாள்; அன்று தொடக்கம் வனசாட்சி "எல்லாம் ஈசன் செயல்" என்ற திடங் கொண்டவளாய் தங்கள் குல தெய்வமாகிய பிள்ளையாரை மனத்திலே தியானித்து வீட்டிலிருந்தே வழிபாடு செய்து வருவாளாயினாள்; மகள் கவலை நீங்கி ஒருவாறு சந்தோஷமாயிருப்பதைக் கண்டு தாயும் மகிழ்ச்சி யடைந்தாள்; இவ்வாறாக, ஒருவாரஞ் சென்றபின் கமலாட்சி மீண்டும் வனசா வீட்டிற்கு வர, வனசா அவளைப் பலவாறு உபசரித்திருத்தினாள்; "அக்கா, உங்கள் தமயனாரிடமிருந்து உங்களுக்கு ஏதுங் கடிதங் கிடைத்ததுண்டோ" என்று கூசிக் கூசிக் கேட்க "இல்லை, தங்காய் நான் வீடுவந்து சேர்ந்தவுடன் அவருக்குக் கடித மெழுதினேன்; ஆனால் அவருடைய பதில் இன்னமுங் கிடைக்கவில்லை; இரண்டொரு வேளையிற் கடிதம் வருமெனக் காத்திருக் கிறேன்; வந்தவுடன் உம்மிடம் வந்து தெரிவிப்பேன்; கவலை வேண்டாம்; ஆனால் இன்று நான் வேறொரு செய்தி சொல்லிப் போகும்படியாக வந்தேன்" என்றாள் கமலாட்சி. "என்ன செய்தி? அக்கா," என்று ஆவலுடன் வனஜா வினவ, "வேறொன்றுமல்ல, தங்காய், என்னுடைய அவர் வருகிற ஞாயிற்றுக்கிழமை அந்திப் புகைரதத்திற் புறப்பட்டுத் தம்மிடம் வரும்படி கடிதமெழுதி யிருக்கிறார்; நான் போகத்தான் வேண்டும்; தங்கைச்சி, நீரும் அறியத்தானே வேணும்; எவ்வளவு பொருளிருந்தாலும், என்னென்ன சௌகரியமுண்டானாலும், எத்தனை வேலைக்காரர் அங்கே நின்றாலும், நான் அந்த இடத்திலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவேண்டிய கருமங்களையும் பார்த்துக்கொண்டு, என் கையால், அவர் குறிப்பறிந்து சமையல் செய்து காலந் தவறாமல் அவருக்கு உணவு நான் பரிமாறினா லல்லாமல், அவருக்குத் திருப்திவராது; என் மனமும் ஆறுதலடையாது; இவைகளையெல்லாம் உத்தேசித்தே நான் இன்னும் இங்கே தங்கியிராமல் அவர் கடிதங் கண்டவுடன் அங்கே போய்ச் சேர நிச்சயித்து விட்டேன்" என்று உருக்கத்துடன் சொன்னாள் கமலாட்சி; கேட்ட வனசா "அக்கா, நீங்கள் சொல்வது முழுவதுஞ் சரி, ஆனால்...." என்று சொல்வதற் கிடையில் "ஆனால், என்ன தங்கைச்சி" என்று ஆவலுடன் கமலா கேட்க, வனசா சொல்லுகிறாள்.

"நிலையிற் பிரியேல்"

"அக்கா, கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் இல்லாள் அன்பு ஆதரவுடன் தன் கையாற் சமைத்து, தானே உணவு பரிமாறி கணவன் உண்டபின் தான் உண்ணுங் கொள்கையும், உறங்கும்போது தான் பின் றூங்கி முன்னெழுங் கொள்கையும், கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டியென்ற மேலான வாக்கியத்தைக் கடைப்பிடித்து நடத்தலும் தமிழ் மகளிருக்கிடையே அந்தக் காலத்திலிருந்தவென்றும், இக்காலத்தில் அருகி வருகிறவென்றுஞ் சொல்லுகிறார்களே இக்காலத்திற் செல்வக்குடியிற் பிறந்த பெண்களுக்கு, அவர்கள் விவாகமான பின், சமையலுக்கு ஒரு சுயம்பாகி வேணுமாமே; அந்தச் சுயம்பாகியே, கணவனுந் தாமும் ஒருங்கிருந்து அயிரோப்பிய முறையில் ஆகாரம் பண்ணும்போது உணவு பரிமாற வேண்டுமாமே; குழந்தை பிறந்து விட்டால் அக் குழந்தையை வளர்க்கவும், அதற்குச் செயற்கைப் பாலும் உணவுமூட்டவும் ஒரு "ஆயாள்" (செவிலித்தாய்) வேண்டுமாமே; இன்னும் இப்படியான விபரீத செயல்கள் இக் காலத்திலுண்டாமே; அக்கா, இப்படியான விபரீதங்களை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்வதென்றால், பெண்களாகிய நாங்களே எங்களைத் தூற்றுவதாய் முடியுமென்று பயப்படுகிறேன்; இப்படி யெல்லாமிருக்க, அக்கா, நீங்கள் தமிழ் மகளிராகிய எங்கள் பழைய கொள்கைகளையும், ஒழுக்கங்களையும் இன்னமுங் கைவிடவில்லையே யென்பதையிட்டு உங்களைப் பாராட்டுகிறேன்" என்று பரிவுடன் சொன்னாள்; கேட்ட கமலா புன்முறுவல் பூத்து "தங்காய் தமிழ் மகளிரென்றிருப்போருட் சிலர் இந்தக் காலத்திலே ஆங்கிலமோ தமிழோ அற்பமாகப் பயின்றுவிட்டு, தம்மை அதிகம் படித்தவர்களாக மதித்துக்கொண்டு சுயசாதி யொழுக்கத்தை மறந்து அந்நிய நாகரிகத்தைக் குருட்டுத்தனமாய் அநுசரிக்கத் தலைப்பட்டு, அன்ன நடை நடக்க முயன்று தன்னடையுங் கெட்ட காக்கைபோல் அந்த நாகரிகமுமில்லாமல், சொந்த நாகரிகமுமில்லாமற் பெரிதும் இடர்ப்படுகிறார்கள்; ஆனாற் குலங்குடியிற் பிறந்தோர் தம் பழைய மேலான கொள்கைகளை ஒரு போதுங் கைவிடமாட்டார்கள்; கொண்டானே கண்கண்ட தெய்வமெனக் கொண்டாடாத பெண் தமிழ் மகளாகமாட்டாள்; தமிழ் மகளிராகிய நாங்கள் ஒழுக வேண்டிய ஒழுக்கங்களை யெல்லாம் ஔவைப்பிராட்டியுந் திருவள்ளுவரும் நன்கு விதித்திருக்கிறார்கள்; ஆதலால் "நிலையிற் பிரியேல்" என்றபடி எங்களுக்கு என்ன இடர் நேர்ந்தாலும் எங்கள் மேலான கொள்கையை நாங்கள் ஒருபோதும் கைவிட வொண்ணாது" என்று சொல்லி முடித்துப் பின்னரும் கமலாட்சி வனசாட்சியை அன்புடன் பார்த்து "தங்காய், உன் மங்கலகருமங் கைகூடும்வரை நான் சும்மாவிருக்க மாட்டேன், முதல் ஆண்டவனருள் வேண்டும், நான் இங்கிருந்தாலும், அங்கே போயிருந்தாலும் உங்கள் விவாகம் விரைவில் நிறைவேறுவதற்காகிய முயற்சி செய்வேன்" என்று ஆதரவுடன் சொல்லி வனசாவிடம் விடைபெற்றுக் கொண்டு அவளை அரிதிற் பிரிந்து மீண்டாள்.

* * *

உலகம் பலவிதம்: *1951* செப்டெம்பர் *18*

"எனக்கு ஏன் இந்தக்கதி"

கமலாட்சி தன் நாயகன் இருக்கும் வாசஸ்தானத்தை யடைந்து பத்மநாதன் வனசாட்சி யென்னுமிவர்களுடைய விவாக விஷயத்தைப் பற்றியும் விபரமாக எடுத்துச் சொன்னான்; "கமலா, நீ சொல்வதை யோசித்தால், விவாகம் நிறைவேறியதன் பின்பே நிசமென எண்ண வேண்டியிருக்கிறது; வனசா விவாக விஷயத்தில் உன்னையே நம்பியிருப்பதால், நீயும் அந்தக்கருமத்திலே சோர்வடையாமல் உன் தமயனுக்கு இன்னமுங் கடிதம் எழுதுவது தான் புத்தியாகும்" என்றான் கணவன்; "அப்படிச் செய்யத்தான் உத்தேசித்திருக்கிறேன்" என்றாள் கமலாட்சி. இது இவ்வாறாக, கமலாட்சி தன்னை வந்து கண்டு போன நாள் முதலாகப் பத்மநாதனுடையவுள்ளஞ் சஞ்சலத்தோடு கூடியதாயிருந்தது; வனசாவைத் தான் கல்யாணஞ் செய்யாது புறக்கணிப்பது மனச்சாட்சிக்கு விரோதமெனவும், அவள் உத்தம கன்னிகை யெனவும், தன் சொந்த மைத்துனி விவாகமின்றியிருப்பத் தான் வேறொரு பெண்ணை விவாகஞ் செய்தால் அந்த இல்வாழ்க்கை மனரம்மியமாயிராதெனவும் பலவாறு சிந்தித்தான்; ஆனால் ராதா வெனிலோ தன்னையே கணவனாகக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடுந் தன்னிடம் அதிக அன்போடும் விசுவாசத்தோடும் ஊடாடுகிறாள், அவளுக்கு எப்படிச் சமாதானஞ் சொல்லிக் கழற்ற முடியுமென்பதை யிட்டும் யோசித்தான்; தொகுத்துச் சொல்லுகில், பத்மநாதன் மனநிலை தாமரையிலையின் மீதுள்ள நீர்த்துளி போலவும், இருதலைக் கொள்ளியினுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளகப்பட்ட எறும்பின் நிலை போலவுமிருந்த தெனலாம். "விவாகஞ் செய்தற்கு முந்தித்தானே மன ஆறுதலோடும் மகிழ்ச்சியோடுமிருக்கவேண்டிய காலம்; விவாகஞ் செய்தபின் இன்பமுந் துன்பமும் நன்மையுந் தீமையும் வரக்கூடுமென்று அனுபவ முள்ளோர் சொல்லுவார்களே, என் விஷயத்திற் கல்யாணஞ் செய்து கொள்வதற்கு முந்தியே மனச் சஞ்சலம் நேரலாயிற்றே! எனக்கு ஏன் இந்தக்கதி வருவான்" என்று சிறிது நேரஞ் சிந்தித்தான் பத்மநாதன். இவன் படித்தவன்; கல்வியறிவுடையவன்; இயல்பாகவே விவேகி; ஆனதால், தன் பெற்றார் பெரியோர் சுற்றத் தாருடன் யோசித்து அவர்கள் சொற்படி விவாகம் பேசி யொழுங்குபண்ணிச் செய்வதை விடுத்துத் தன்னெண்ணமாகக் கன்னிகையைத் தெரிந்து கல்யாணஞ் செய்யவுத்தேசித்தமையினாற்றான் தனக்குத் தீராக் கவலை நேரலாயிற்றென்று நிச்சயித்தான்; தான் வனசாட்சியை வாழ்க்கைத் துணையாகக் கொள்வது தன் பெற்றார் உற்றார் பெரியாரெல்லார்க்குஞ் சம்மதமாகு மென்பதை முந்தியே அறிந்தவனாதலின், பத்மநாதன் அவளைத்தான் கல்யாணஞ் செய்வதென்று தீர்க்கமாக நிச்சயித்துக்கொண்டான்.

"ஆம், இல்லையேல்,
அல்ல என்றிருக்கவேண்டும்"

இப்படி நிச்சயித்தமையினால் அவனிடத்துள்ள கவலை ஒருவாறு குறையத் தொடங்கியது; ஆனாலும் தான் அப்போதைக்குக் கல்யாணஞ் செய்வதில்லை, சில பல மாசங்களோ, சில ஆண்டுகளே கழித்துத்தான் விவாகஞ் செய்துகொள்வதெனவுந் தன் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டான். தனது உத்தியோகக் கடமையையுஞ் சிந்தனையின்றி ஊக்கத்துடன் செய்து வந்தான்; இங்ஙனமாக ஒரு சனிக்கிழமை, காலை 8 மணிவரையிலிருக்கும், பத்மநாதனுடைய வாசஸ் தானத்தின் தலைவாசலிற் கதவிலே யாரோ மெல்லத் தட்டக் கேட்டலும், பத்மநாதன் விரைந்தெழுந்து போய்க் கதவினை மெல்லத் திறந்தான்; கதவிலே தட்டியவள் இராதா எனக் கண்டான்; அகத்தே ஏங்கினான், புறத்தே மகிழ்ச்சி காட்டினான்; அவளை இன்சொற்கூறி அன்புடன் வரவேற்றுத் தலைவாசலை யடுத்துள்ள மண்ட பத்தில் ஒரு "ஸோபா" வில் இருக்கச்செய்து, அவள் சொற்படி தானும் அயலேயுள்ள ஒரு நாற்காலியில் இருந்தான்; ராதா அவனுடன் சில நிமிஷநேரம் யாதும் வார்த்தை யாடாது, பிராதக்காலச் சந்திரன் போல முகம் வாடப் பெற்றவளாய்ச் சிந்தனையோடு கூடியவளா யிருந்தாள்; அதனை அவதானித்த பத்மநாதன் கவலை கொண்டானாய் "ஏன், ராதா, மௌனஞ் சாதிக்கின்றீர், என்ன மனஸ்தாபம்?" என்று பரிவுடன் கேட்டான்; பதிலில்லை; "என்னுடன் பேசுவதில்லையென்று நிச்சயித்துக்கொண்டா? என்னிடம் வந்தீர்;" என்று பின்னரும் வினாவ, புன்னகை பூத்தவளாய் ராதா "ஓம்" என்றாள். "இப்பொழுது பேசிவிட்டீர்தாமே, இனியும் பேசலாந்தாமே" என்று சிரிப்புடன் சொன்னான் பத்மநாதன். "ஆம், பேசிவிட்டேன், இன்னமும் பேசப் போகிறேன்; பேசி ஒரு முற்றுப் பண்ணிக் கொண்டு போகும்படி தான் இப்பொழுது இங்கு வந்தேன்; ஒன்றில் ஆமென்றிருக்க வேண்டும், இல்லையேல் அல்ல என்றிருக்க வேண்டும்" என்று அழுத்திச் சொன்னாள் ராதா; அப்படிச் சொல்லும்போது அவள் முகத்திற் சீற்றக் குறியுங் கவலைக் குறியும் புலப்பட்டன. ராதா பின்னர்ச் சொன்ன வார்த்தைகள் பத்மநாதன் மனத்தைத் திடுக்குறச் செய்தன. அவன் அவளை அன்போடு நோக்கி "ராதா, என்றும் என்னுடன் பேசா வார்த்தைகளை இன்று பேசுகின்றீரே, ஏன் அப்படி? உமக்கு நான் ஏதும் பிழை செய்ய வில்லையே" என்று இதமாகக் கேட்டான். "பேசவேண்டி யேற்பட்டதாற் பேசுகின்றேன்; என்னைத் தயவு செய்து வந்து காணும்படி உங்களுக்கு ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று கடிதங்கள் ஒன்றன்பினொன்றாக ஒருவாரத்துள் எழுதியிருந்தேன்; நீங்கள் வராமல் விட்டமைக்குக் காரணம்? வருதற்குச் சௌகரியப் படாவிட்டால் ஒரு பதிலாயினும் எழுதாமல் விட்டமைக்குக் காரணம் என்ன" என்று கவலை மீதுர வினாவினாள் ராதா.

பத்மநாதன்: என் அன்பிற்குரிய ராதா ....

ராதா: அப்படிச் சொல்லாதீர்கள்; சும்மா, ராதா என்று சொல்லுங்கள்.

பத்: ஏன் அப்படிச் சொல்லுகிறீர்?

ராதா: அது என் விருப்பம் "உள்ளன்பிலாத பேர் தித்திக்கவே பேசி உறவாடும் உறவு முறவோ" என்று பெரியோர் பாடியபடி, அகத்திலன்பின்றி வாக்கில் மாத்திரம் அன்பு பாராட்டிப் பேசுவதனால் என்ன சுகம்?

* * *

உலகம் பலவிதம்: 1951 செப்டெம்பர் 25

"பிழை யொன்றிரண்டு பொறாரோ
குடியிற் பிறந்தவரே"

பத்மநாதன்: ஏன், ராதா, இன்று இப்படியெல்லாம் என்னுள்ளஞ் சுடச்சுடப் பேசுகின்றீர்? உம்மிடத்தில் எனக்கு உள்ளன்பில்லை யென்று நீர் சொல்வது என்னுள்ளத்தைப் போழ்கின்றது; ஒரு முறை கடிதமெழுதத் தாமதித்தமையினால், உம்மிடத்திற்குவரத் தவறியமையினால், என்னை உம்மிடத்தில் அன்பில்லாதவன் என்று சொல்லலாமோ? நான் உமக்கு வேணுமென்று ஏதுந் தவறு செய்தறியேன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமையினால் ஏதுஞ் செய்திருந்தாற் பொறுத்துக் கொள்ளுதிர்; "பிழை யொன்றிரண்டு பொறாரோ குடியிற் பிறந்தவரே" என்றல்லவா புகழேந்தியாரும் பாடியுள்ளார்; மேலும் நான் செய்த பிழையை நீர் பொறுக்கா விட்டால் வேறு யார் பொறுப்பது?

ராதா: (சிறிது நேரம் மௌனஞ் சாதித்து, அளவிற்கு விஞ்சினால் அமிர்தமும் நஞ்சாம் எனத் தன்னுள்ளத்திற் சிந்தித்துத் தனது மதி வதனத்திற் புன்னகையரும்ப விழிகளிற் கருணை பெருக அவனை ஆதரவுகூர நோக்கி) என்னன்பிற்குரியவரே, உங்களிடத்தில் நிசமான கோபங் கொண்டால், எனக்கு வெறுப்புண்டானால் இப்பொழுது உங்கள் வாசஸ்தானந் தேடி இங்கு வருவேனோ? வரமாட்டேன்; நான் கேட்டுக் கொண்டபடி நீங்கள் என்னிடத்திற்கு வராமையாலும், அது இயலாதாயின் அன்புடன் ஒரு கடிதம் எனக்கு வரைந்தனுப்பச் சிந்தியாமையினாலும் பெரிதுஞ் சஞ்சலமுற்றேன்; நீங்கள் இன்று வருவீர்கள், நாளை வருவீர்கள், உங்கள் கடிதம் இன்று கிடைக்கும் நாளை கிடைக்கும் என்றெல்லாம் ஆவலுடன் பார்த்த கண்ணும் பூப்ப எதிர் நோக்கிய வண்ணமிருந்தேன்; என்னை நீங்கள் அலட்சியஞ் செய்ய, வெறுக்க, புறக்கணிக்கக் காரணமில்லையே, அப்படியிருக்க இப்படியேன் மௌனஞ் சாதிக்கிறீர்களென்று எண்ணியெண்ணி மனம் புண்ணானேன், உங்கள் மேல் நான் வைத்த மெய்க்காதல் என்னுள்ளக் கட்டுப்பாட்டையும் திண்மையையுஞ் சிதைத்து விட்டமையினால், உங்களை உடனே தரிசிக்க வேண்டுமென ஆசைகொண்டு எனது நாணத்தையும் அச்சத்தையும் நழுவவிட்டு இங்குவந்து எனக்குரிய மடமென்னுங் குணத்தை மறந்து உங்களுடன் வார்த்தையாடத் துணிந்தேன்; நான் உங்கள்மீது கொண்ட உண்மைக் காதலையும் என் கற்பு நெறியையும் இன்னமுஞ் சோதிப்பது முறையல்ல, என் துரையே!

"நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை"

இப்படிச்சொல்லி முடிக்கும் போது ராதா நாணத்தினாற் சாம்பினாள்; கண்களில் நீர் ததும்பியது; அதரங்கள் துடித்தன; பூங்கொடி யென ஒசிந்து தலை குனிந்தாள். ராதா இறுதியிற் பன்னிய இனிய சொற்கள் பத்மநாதனிடத்திருந்த கவலையை அதிகப்படுத்தி விட்டன; பழகிய நாள் தொடக்கம் இதுவரையில் ஒருநாளும் "துரையே" என என்னை விளித்தறியாத ராதா, இன்று கூசாது நாவாரத் துரையேயென்று ஆகரம் பெருக விளிக்கின்றாளே இது என்ன அடாத சோதனை; இப்படியான யௌவனத்தோடு கூடிய பெண்களுடன் ஊடாடுவது, பெரும் பிழையாகும், ஆபத்திற்கேதுவாகு மென்பதை இப்பொழுதுதான் நிசமென அறிந்தேன்! ராதா இன்று ஆமோ அல்லவோ என்பதை முற்றாக்கிக் கொள்ள வேண்டுமெனச் சற்று முன்பு சொன்னதும், ஒரு பிரதானமான நோக்கங் கொண்டுதான் என்பது இன்றுதான் எனக்குப் புலப்படுகிறது; "நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை" என்பர்; ஆனதால் நானும் உண்மையை இன்றைக்கே இக் கன்னிகைக்கு வெளியிட்டு வேறாதல் வேண்டும் என்று நிச்சயித்தான்.

"குறையெண்ணாதீர்"

அவன் ராதாவைக் கவலையும் ஆதரவும் பெருகப் பார்த்து "அறிவிற் சிறந்த அருமையான ராதா, நீரெனிலோ கல்வியறிவொழுக்கம் மனக்கட்டுப்பாடென்னு மிவற்றிற் சிறந்துள்ளீரென்பதை, சில நாட்களேனும் உம்முடன் பயின்று ஊடாடியமையினால் நன்கு அறிந்துள்ளேன்; என் உள்ளக்கிடக்கையையும் எனது நிலைமை யையும் உமக்கு இன்றேனும் வெளியிடாது ஒளித்து வைத்திருப்பேனேயானாற் பெருந் துரோகியாவேன்; நான் உம்மிடத்தில் வைத்த அன்பும் விசுவாசமும் தூயவாகும்; நீரும் என்மீது அவ்வாறே வைத்துள்ளீரென எண்ணியிருக்கின்றேன்; மனத்திண்மை யில்லாமையால் ஒருபோது அவைகள் காதலாக மாற நேர்ந்தாலும், அங்ஙனம் நேரவொட்டாது தடுத்துக் கொள்ளுதிர்; கல்வியாகிய கற்பு உம்மிடத்தில் என்னைக் காட்டிலும் அதிகமிருக்கும் போது, நெறி யெனப்படும் கற்பு உமக்கு அரிதாக மாட்டாது; இப்பொழுது என்னுடன் வார்த்தையாடும் போது ஈற்றில் நீர் சொன்ன சில வார்த்தைகளும் என்னை விளித்த விதமும் எனக்குக் கவலையைத் தருகின்றன; உம்முடைய நோக்கத்தை நீர் சொல்லாமற் சொல்ல, நான் உணர்ந்து கொண்டேன்; ஆனால் உம்மை எனக்கு வாழ்க்கைத் துணைவியாகப் பெறுதற்கு நான் பூர்வ புண்ணியஞ் செய்திலேனென்றுதான் சொல்லக் கிடக்கிறது; நான் பிரமசாரியென வாழ்ந்தாலும் ஒரு கன்னிகைக்குக் கணவனாக என் பெற்றார் சுற்றத்தார் பெரியாரால் நியமிக்கப்பட்டுள்ளேன்; அக் கன்னிகையும் எனக்குப் புறத்தியாளல்லள்; என் சொந்த மைத்துனியாவள்; மேலும் அக்கன்னிகை எனக்கேயுரியவள் என்ற நியதி நேற்றின்று உண்டானதன்று; சிறு பிராயந் தொட்டுள்ளது; ஆதலால் நீர் கொண்டுள்ள அந்த ஒரு நோக்கத்திற்கும் நான் உடன்பட முடியாத நிலையிலிருக்கிறேன்; குறையெண்ணாதீர்; ஆனால் உமக்கும் எனக்கு மிடையேயுள்ள தூய அன்பு விசுவாசமென்னுமிவைகளுக்கு ஒருபோதும் பங்கம் நேராதென்பதை நம்புதிர்" என்று மனமுருகச் சொல்லி முடித்தான்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் பலவிதம்: 1951 ஒக்டோபர் 02

"கொடிகள் பக்கலில் நிற்கும் மரத்திற்றானே படரும்"

பத்மநாதன் சொன்ன வார்த்தைகள் ராதாவின் உள்ளத்தை ஊடறுத்துச் சென்றன; அவள் திகைத்தாள், பதைபதைத்தாள், சஞ்சலப்பட்டாள், வாடினாள், சோர்ந்தாள்; ஆனால் அறிவு மாத்திரஞ் சோர்ந்திலள்; ஐந்து நிமிஷ நேரம் வரை சிந்தித்தபடி மௌனஞ் சாதித்தாள்; நெட்டுயிர்த்தாள்; இருக்கை விட்டெழுந்தாள்; போய்வருகிறேன் என்றாள்; பத்மநாதன் முகத்தைக் கண்ணெடுத்துப் பார்க்கச் சகியாளாய் மெல்ல வெளியே போதற்கு அடியெடுத்தாள்; இவைகளையெல்லாம் பார்க்கப் பத்மநாதன் மனஞ் சகித்திலன்; இருந்த பத்மநாதன் விரைந்தெழுந்து ராதாவின் முன்னர்ச்சென்று "அருமை ராதா, கொண்ட கோபந் தணிதிர்; என் சொற்கள் உம்மை இப்படி வருத்துமென முந்தியறிந்திருந்தால், நான் அப்படிச் சொல்லி யிருக்கமாட்டேன்; சொல்லிய பிழையைப் பொறுத்துக் கொள்ளுதிர்; உப்படி அமருதிர்" என்று பரிந்து சொல்ல ராதா "நீங்கள் உங்கள் ஆசனத்திலிருந்தால் நானும் இருப்பேன்" என்று கனிவுடன் சொல்ல அவன் இருந்தான் அவளும் இருந்தாள்; என்னை ஏன் இருக்கும்படி சொல்லுகிறீர்கள்? எனக்குச் செய்த அவமரியாதை போதாதென்று இன்னமும் அப்படிச் செய்தற்கோ? இல்லையேல், என்னை ஏமாற்றியது போதாதென இன்னமுஞ் சிலகாலம் ஏமாற்றவோ? நீங்கள் செய்த சிறப்பெல்லாம் போதும்! நான்பட்ட சீர்கேடும் போதும்" என்று கண்களில் நீர் ததும்ப நாத்தடுமாறத் தன்காற் பெருவிரலைப் பார்த்தபடி சொன்னாள்; பத்மநாதன் சிறிது நேரம் பதில் சொல்லாமற் சிந்தித்தான்; "ராதா, நான் உம்மைப்பற்றி ஒன்றேனும் குறையாகச் சொல்லவில்லையே; என்நிலைமையைத் தானே உள்ளபடி சொன்னேன்; அதற்காக என்னைக் கோபித்தால், வெறுத்தால் நான் என்ன செய்வேன்? என்னுடைய நிலைமையில் ராதா, நீர் உம்மை வைத்து யோசித்தால் நீரும் விளங்கிக்கொள்ளுவீர்" என்று கவலையோடு இரந்து சொன்னான் பத்மநாதன்; "உங்கள் மேல் நான் ஒரு குறையும் நினைக்கவில்லை; உங்களைக் கோபிக்கவுமில்லை; இப்பொழுது எனக்குச் சொன்ன உண்மையை, நான் உங்களோடு வந்து முதன் முதற் பழகிய நேரத்திலே வெளியிட்டிருந்தால், இப்படி நான் கழிவிரக்கங் கொள்ள நேராதே; எங்களிருவருக்குமிடையே யுள்ள தூய அன்பிற்கும் விசுவாசத்திற்கும் பங்கம் நேராதென்கிறீர்கள்; தலைவன் தலைவி, காதலன் காதலி என்னுமிவர்கட்கிடையேயுள்ள அன்பும் விசுவாசமும் தூயனவே யல்லாமல் மாசுள்ளவைகளா? இல்லையே; மேலும் நாங்கள் தூய அன்போடும் விசுவாசத்தோடும் ஊடாடினாலும் உலகம் என்ன சொல்லும்? எப்படி நினைக்கும்? பனையின் கீழிருந்து பாலைப் பருகினாலும் பார்த்தவர்கள் கள்ளென்றல்லவா மதிப்பார்கள். முளைத்து நிலத்திற் சிறிது படர்ந்து வருங் கொடிகள் பக்கலில் நிற்கும் மரத்திற்றானே படரும்! பிரமச்சாரி யென்று தீர்க்கமாக அறிந்தபின் கன்னிகையாகிய நான் உங்கள் மேற் காதல் வைத்தமை பிழையல்லவே" என்று கரைந்தாள் ராதா.

"சொல்வார் சொன்னாலும் கேட்பார்க்கு மதியென்ன?"

இவற்றையெல்லாங் கேட்ட பத்மநாத னுள்ளம் பெரிதுஞ் சஞ்சலப்பட்டது; அவன் சற்று நேரஞ் சொல்வதென்ன, செய்வதென்ன என்றறியானாய் இடர்ப்பட்டான்; எங்ஙனமானாலும் யோசித்தலின்றி ஒரு கன்னிகையோடு தான் அன்பாக ஊடாடியது தவறெனச் சிந்தித்தான்; ஆனால் இந்த விஷயத்திற் பிழை பத்மநாதனி லல்லாமல், ராதாவில் இல்லையாகும்; பத்மநாதன் முந்திப் பணத்திற்கும் படிப்பிற்கும் பேரழகிற்கும் ஆசைப்பட்டே வனசாவைப் புறக்கணித்து ராதாமேற் காதல் கொண்டான்; பின்பு தன் தங்கையாகிய கமலாட்சியின் சொற்கேட்டே இவன் ராதாவைப் புறக்கணித்து வனசாவைக் கல்யாணஞ் செய்வதாகக் கமலாட்சிக்கு வாக்களித்து மனம் மாறினான்; இப்படித் தான் செய்த தவறும் தன்னுள்ளத்தை இடையிடையே வருத்துவதை அவன் உணர்ந்தான்; ராதாவுக்குப் போலி ஞாயஞ் சொல்லி அவளைச் சமாதானப் படுத்துவது இயலாதென்பதைப் பத்மநாதன் அறிவான்; அவன் சற்றுநேரம் மௌனமாக நின்று இவற்றை யெல்லாம் யோசித்துக்கொண்டு ராதாவைப் பார்த்து "ராதா, நான் உமக்குத் தவறு செய்து விட்டேன் என்பது நிசம்; ஆனால் அதனைப் பொறுத்துக்கொள்ளும்படி உம்மை வேண்டிக்கொள்கிறேன்; இப்பொழுது நான் செய்யத் தக்கது வேறொன்றுமில்லை; நான் கல்யாணத் தைப்பற்றிச் சிந்தியாமல் நித்திய பிரமசாரியாக விருந்து என் உத்தியோகக் கடமைகளையும் பார்த்துக்கொண்டு எஞ்சிய நேரத்தை இறைவனை வழிபடுவதிற் போக்க வேண்டுமென்பதே" என்றான்; கேட்ட ராதா புன்னகை செய்து "ஐயா, நன்றாகச் சொன்னீர்கள்; காலம் முழுவதையும் பிரமச்சரியத்திற் கழிப்பதும், கடவுளை வழிபடுவதும் மனம் பரிபக்குவ மடைந்தபின் செய்யத்தக்க சற்கருமங்களே யொழிய, இடையிலெழுந்த வெறுப்பினாலும், கோபத்தினாலும். வேறெதுங் காரணத்தினாலும் கைகூடுவனவல்ல; அப்படித்தான் கைகூடினாலும் அவை நெடு நாளைக்கு நில்லா; அருந்தவஞ் செய்த கௌசிக முனிவனை இடையிற் பீடித்து அவனது மேலான நிலையைக் கெடுத்த பெண்ணாசை உங்களையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய பிரமசாரியாகவிருக்க விடப் போகின்றது? சொல்வார் சொன்னாலும் கேட்பார்க்கு மதியென்ன? உவையெல்லாம் வீண்பேச்சு; மேலும் என்மீது நிசமான பற்றில்லாத உங்களுக்கு வாழ்க்கைத் துணைவியாக வேண்டுமென நான் ஆசைப்பட்டது என்மேல் தவறாகும்; அல்லாமலும் நீங்கள் கல்யாணஞ் செய்யாமல் நித்திய பிரமசாரியாக விருப்பது நிசமானால், அப்படியே நானும் விவாகமின்றி என் உத்தியோகக் கடமையைப் பார்த்துக் கொண்டு ஒழுக்கத்துடன் இருத்தல் முடியாத கருமமல்ல; ஆனால் ஒரு பெண்ணையல்ல, இரு பெண்களை நித்திய கன்னிகைகளாக காலங்கழித்து வாழும்படி விட்ட பழி யாரைப் போய்ச் சூழும் என்பதை மாத்திரம் யோசித்துப் பாருங்கள்" என்று மனத் திண்மையோடு அழுத்திச்சொன்னாள் ராதா. ஈற்றில் ராதா சொன்ன சொற்கள் பத்மநாதன் காதிற் பட்ட மாத்திரத்தே அவன் திடுக்கிட்டான், ஏங்கினான், திகைத்தான், நெட்டுயிர்த்தான்; கண் கலங்கப் பெற்றான்; "அந்தப் பழி என்னைத்தான் வந்து சூழும்" என்றான்; அவன் நிலைமையைக் கண்ட ராதா அவன் மீது பரிவுகொண்டு, கவலைப்படாதீர்கள்! இப்பொழுது ஒன்றும் கைகடந்து போகவில்லை, உந்த நாற்காலியில் இருங்கள், நானும் இதில் இருக்கிறேன்" என்று தேறுதல் சொல்ல, அவனும் அப்படியே இருந்தான்; அவளும் மீண்டு வந்திருந்தாள்.

* * *

உலகம் பலவிதம்: 1951 ஒக்டோபர் 09

"பாம்பின்கால் பாம்பறியும்"

"அன்பான ராதா, நான் விவாகமின்றி யிருந்தால், நீரும் அப்படியே விவாகஞ் செய்யாதிருக்கக் காரணமில்லையே; மேலும், ஒரு பெண்ணையல்ல, இரு பெண்களை என்று சொன்னீரே, மற்றப் பெண் யார்? நான் அறியலாமா?" என்று ஆவலுடன் கேட்டான் பத்மநாதன்; "ஐயா, என்னைக் கல்யாணஞ் செய்து ஏற்றுக்கொள்ள, இல்லையேல் ஏற்றுக் கொள்ளாமல் விட, உங்களுக்கு அதிகாரமுண்டே யொழிய, என்னை வேறொரு கல்யாணஞ் செய்து கொள்ளென்றேனும், விவாகமில்லாமல் நான் இருக்கவெண்ணாதென்றேனுஞ் சொல்வதற்கு உங்களுக்கு அதிகாரமில்லையே; மற்றப் பெண் யாரென்பது உங்களுக்கு விளங்காமலல்ல; என் வாயாற் சொல்லக் கேட்கவேண்டு மென்று விரும்புகிறீர்கள் போலும்; சொல்லி விடுகிறேன்; வேறொருத்தியுமல்லள்; உங்கள் சொந்த மைத்துனியாகிய அந்த உத்தமி வனசா தான் மற்றப்பெண்" என்று அழுத்தமாகச் சொன்னாள் ராதா; கேட்ட பத்மநாதன் திடுக்குற்றான்; சற்று நேரஞ் சிந்தித்தான்; இந்த ராதாவின் போக்கு எனக்குப் புலப்படவில்லையே என்று தன்னளவில் யோசித்தான்; பத்மநாதன் ராதாவை ஆச்சரியத்தோடு பார்த்து, "ராதா, வினாவுகிறேனென்று குறையெண்ணாதீர், வனசாவைப் பற்றி உமக்கு முந்தித் தெரியுமா? அவளை நேரிற் பார்த்ததுண்டா" என்று இதமாகக் கேட்டான்; "ஐயா, வனசாவை நான் எப்போதாயினும் நேரிற் பார்த்திலேன்; ஆனால் என்னுடன் படித்த ஒரு பிள்ளை வனசா இருக்கும் வீட்டிற்குச் சமீபத்தில் வசிப்பவள்; வனசாவிற்கு இனமானவளோ, இல்லையேற் சினேகமானவளோ நான் தீர்க்கமா யறியேன்; இந்த வனசாவைப் பற்றிப் பாராட்டிப் பலமுறையும் எனக்குச் சொல்லியதுண்டு; அந்த வனசாதான் உங்கள் மைத்துனியாக யிருக்கலாமென் றெண்ணுகிறேன்; அப்படிப்பட்ட உத்தம குணமுடைய பெண்ணை விவாகஞ் செய்து கொள்வதாக நீங்கள் முந்தி வாக்களித்துவிட்டுப் பின்பு வாக்குத் தவறினால், அந்தக் கன்னிகை போன்ற நெறியானவர்கள் விவாக மில்லாமலே காலங்கழிக்க வேண்டி நேரும்; "பாம்பின் கால் பாம்பறியும்" என்ற முறையாகப் பெண்களின் இயல்பையும் உள்ளக் கிடக்கையையும் பெண்கள் நுட்பமாய் அறிதல் முடியும்; ஆடவர்களாகிய நீங்கள் பெண்களை ஏதோ விளையாட்டிற்காகிய பாவைகளென எண்ணிக் கொண்டு, நீங்கள் நினைத்த நினைத்தபடி யெல்லாஞ் செய்யலாமெனவுந் தவறாக எண்ணிக் கொள்ளுகிறீர்கள்; பெண்களுள் தவறு செய்பவர்களும் உண்டென்பதை நான் மறுக்கவில்லை; அந்தச் சிலருக்காக எல்லாப் பெண்களையுந் தவறுடையவர்கள், இலகுவில் ஏமாந்து போகக்கூடியவர்களென்று ஆண்கள் மதித்தல் புத்தியீனமாகும்; அந்த வனசா உங்களுக்கு நிச்சயிக்கப்பட்ட கன்னிகை யென்பதை முந்தியறிந்திருந்தால், நான் உங்களுக்கு வாழ்க்கைப்பட வேண்டுமென்று கனவிலும் இச்சித்திருக்க மாட்டேன்; இது நிசம்; அந்த இரகசியத்தை நீங்கள் தொடக்கத்தில் எனக்கு மறைத்திருந்தது உங்கள் மேற் குற்றம்; உங்கள் வரலாறு முழுவதையும் முற்றாக விசாரித்தறியாமல் உங்களுக்கு நான் வாழ்க்கைத் துணைவியாக வரவேண்டுமென ஆசைப்பட்டமை என்மேற் பெருங்குற்றம்; நான் செய்த குற்றத்திற்கு நானே என்னைத் தண்டித்துக் கொள்ள நிச்சயித்துக்கொண்டேன்; அந்தத் தண்டனைதான் நான் இம்மையில் விவாகஞ் செய்யப்படுதலின்றி ஒன்றியாயிருந்து காலங்கழித்தல்; ஆனால் நீங்கள் சிறிது பிழை செய்திருந்தாலும், அந்தப் பிழையைப் பொறுக்கும்படி இறைவனை இரந்து வேண்டிக்கொண்டு, வனசா வருந்தா வண்ணம் அவளைக் கல்யாணஞ் செய்வதே முறை; இப்படி நீங்கள் செய்து கொண்டாற்றான் நான் மகிழ்ச்சி யடைவேன்" என்று கண்களில் நீர் ததும்பச் சொன்னாள் ராதா.

"என்னைச் சோதிக்கிறாளோ?"

ராதாவின் வார்த்தைகள் பத்மநாதனைத் தடுமாறச் செய்தன; "என்ன! நூதனம்! இந்த ராதா, சற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர்ப் பேசியதற்கும் இப்பொழுது பேசுவதற்கும் நேர் முரண்பாடு காணப்படுகிறதே! இந்தப் பெண் என்னைச் சோதிக்கின்றாளோ, சோதிப்பதானால் இவள் சொல்லி முடிக்கும் போது கண்கலங்கக் காரணமில்லையே; வனசாவை விட்டுத் தன்னையே பெண்ணாகக் கொள்ள வேண்டுமென்று பிடிவாதஞ் செய்த இந்த ராதா, இப்பொழுது நான் வனசாவையே விவாகஞ் செய்யவேண்டு மென்றும், தான் விவாகமின்றிக் காலங் கழிப்பதாகவும் வற்புறுத்திச் சொல்லுகிறாளே! இது தெய்வத்தின் செயலோ! ஆம், அப்படியிருக்கவுங் கூடும்! என் சகோதரி கமலா வனசாவைப்பற்றிச் சொல்லும்போது, அவள் பெரிதுந் தெய்வபத்தி யுள்ளவளென்றுஞ் சொன்னாள்; அந்த வனசா தெய்வத்தை வேண்டத் தெய்வம் இவள் மனசையும் என் மனசையும் மாற வைத்ததோ! ஒன்றுமறியேனே! மேலும் இந்த ராதா வனசாவையே விவாகஞ் செய்ய வேண்டுமென எனக்கு அழுத்திச் சொல்லிவிட்டு தான் விவாகமின்றிக் காலங் கழிப்பதாகச் சொல்லுகிறாளே! இது பெரும் பழியான சொல்லல்லவா! ஏதோ இவளுக்கு நம்மாற் சொல்லக்கூடிய சமாதானத்தைச் சொல்லிப் பார்ப்போம்" என்று சிந்தித்துக் கொண்டு அவளை அன்புடன் நோக்கி "ராதா, நீர் முன் சொல்லிய சொற்களைக் காட்டிலும் இப்பொழுது சொல்லுஞ் சொற்களே என்னுள்ளத்தை அதிகம் வருத்துகின்றன; நான் விரும்பியபடி என் மைத்துனியைக் கல்யாணஞ் செய்ய, நீர் மாத்திரம் விவாகமின்றி யிருப்பதாகச் சொல்வது முறையா? நான் அப்படிச் செய்தற்கு இசைவேனென்று நீர் எப்படிக்காத்திருக்கலாம்? நீர் செய்த பிழைக்கு நீர் உம்மைத் தண்டிக்கின்றீரென்றால், நான் செய்த பிழைக்கு என்னையும் நானே தண்டிக்க வேண்டுமென்பதல்லவா முறை; அப்படி நான் செய்தற்கு நீர் இடையூறாக நிற்பது நியாயமாகுமோ? நான் முந்தியே உண்மையைச் சொல்லாமையினாற்றானே, நீர் என்னை விவாகஞ் செய்யவேணுமென்று விரும்பி வந்தது; ஆனதால் நானல்லவோ பெருங் குற்றவாளி; ஆனதால் நீரும் உம்முடைய இஷ்டப்படி செய்யும்; நானும் என் விருப்பப்படி செய்கிறேன்; இதுதான் நீதி" என்றான் பத்மநாதன்; கேட்ட ராதா புன்னகை செய்து "ஐயா, ஞாயஞ்சொல்லி என்னைச் சமாதானப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தினாற் போலும், தவறிப்பேசுகிறீர்கள்; நான் விவாகமின்றி ஒன்றியாய்க் காலங் கழிப்பதால் நானொருத்தியே என்னைத் தண்டிக்கின்றேன்; நீர் அப்படியிருக்க முடியாது; நீர் பிரமசாரியாயிருக்கத் துணிவீரானால், உம்மை நம்பியிருக்கும் வனசாவும் விவாகமில்லாமலே யிருப்பாள்; அதுதான் பெரும்பழி" என்றாள்; யோசித்தான் பத்மநாதன்; "ராதா! நீர் இப்பொழுது என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்? என்று கேட்டான்."

ராதா: வனசாவைக் கல்யாணஞ் செய்துகொண்டு இனிது வாழ வேண்டுமென்று நான் சொல்லுகிறேன்.

பத்மநாதன்: அப்படியானால் நீர்?

ராதா: நான் இப்பொழுது என் வாசஸ்தானத்திற்குப் போகிறேன்; இனிமேல் வந்து உங்களைக் காணுவேன்; ஆனால் நான் சொன்ன பிரகாரம் நீங்கள் செய்தாற்றான் நான் உங்களைக் காணுவேன்; உங்களுடன் பேசுவேன், நீங்கள் ஒன்றியாயிருந்தால் இனிமேல் இந்த இடத்திற்கு வரமாட்டேன்; வேறு எந்த இடத்திற் கண்டாலும் உங்களுடன் பேசமாட்டேன்; என்மேற் குறையெண்ண வேண்டாம்; போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, பத்மநாதன் பதில் சொல்வதற்கு முந்தியே ராதா இரதத்திலேறிக்கொண்டு போய்விட்டாள்.

* * *

உலகம் பலவிதம்: 1951 ஒக்டோபர் 16

"மண்குதிரை கொண்டு நதிதாண்ட முடியுமா"

கமலாட்சி தனது நாயகனுடைய வாசஸ்தானத்திற்குச் சென்று வசிக்கத் தொடங்கியபின், வனசாவுக்கு அவள் விவாக விஷயமாகத் தேறுதல் சொல்லி இரண்டு கடிதங்கள் எழுதினாள்; அக் கடிதங்களை ஏற்றுப்படித்த வனசாவும் அவளுக்கு அன்போடு பதிற் கடிதங்கள் எழுதினாள்; தன் விவாக விஷயமாக வனசாட்சி கமலாட்சிக்கு எழுதும் போது "ஏதோ ஆண்டவனருளால் நடப்பது தான் நடக்கும்" என்று மாத்திரம் எழுதியிருந்தாள்; கமலாட்சி பத்மநாதனுக்கு எழுதிய கடிதத்தில், பத்மநாதன் பின்னுஞ் சில மாதங்கள் கழித்துத் தான் விவாகஞ் செய்வதைப்பற்றித் தீர்க்கமாக யோசிக்கவேண்டு மெனவும், ஆனால் வனசாட்சியையே தான் பெண்டாகக் கொள்வதென்றும் பதிலெழுதியிருந்தான்; அவன் எழுதியிருந்த பதிலைக் கமலாட்சி வனசாவுக்குத் தெரிவித்திலள்; காலதாமதத்தையிட்டு வனசா கவலைப் படுவாளென்றஞ்சியே, கமலா அந்த விஷயத்தை அவளுக்குத் தெரிவித்திலள்; வனசாட்சி தன் விவாக விஷயம் முற்றில்லாமற் கிடப்பதைத் தன் பெற்றார் உற்றார்க்குச் சொல்லி ஏதும் முயற்சி செய்விக்க, இல்லையேல் தான் கொண்ட கவலை சிறிது தணியச் செய்தற்கு அவளிடத்துள்ள நாணம் என்னுங் குணம் இடையூறா யிருந்தது; கமலாட்சி யொருத்திக் கல்லாமல் இந்த மர்மத்தை வனசா வேறு எவர்க்கேனும் வெளியிட விரும்பிலள். கவலை மேலீட்டினால் அவள் மனஞ் சோர்வுற்றாள்; தேகம் மெலியப் பெற்றாள்; மானம் முதலிய பத்தினையும் அகற்றும் பசியையும் மனக் கவலை மாற்றிவிடு மென்றால், அக்கவலை எத்துணைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லாத தென்பதைச் சொல்லவும் வேண்டுமா! அலையில் அகப்பட்ட துரும்பு போல், வனசாட்சி சஞ்சலப்பட்டுக்கொண்டு உறக்கமின்றிப் படுக்கையிற் கிடக்கும்போது, அவளுடைய உள்ளத்தில் ஒரு ஞானம் பிறந்தது; "அடியவர்க்கு நேரும் விக்கினங்களை ஒழித்தருளும் விநாயகப் பெருமான் எங்கள் குலதெய்வமாக இருப்ப, நான் அந்தப் பெருமானை மறந்து மானுடரைத் தஞ்சமென்றெண்ணி, அவர்களுடைய உதவியையும் தயவையும் வேண்டி நிற்பது என்மேற் பெருந் தவறாகும்; ஆண்டவனருளில்லையேல், இந்தச் சின்னாட் பலபிணிச் சிற்றறிவின் பாற்பட்ட மானுட சந்மத்தினால் என்ன ஆகும்! மண்குதிரை கொண்டு நதியைத் தாண்ட முடியுமா! இன்று இரவுபோக நாளை தொடக்கம் எங்கள் ஐங்கரக் கடவுளையே மனம்வாக்குக் காயமொத்து வழுத்துவேன்; அந்தப் பெருமான் செய்வதைக் கண்டுகொள்வேன்" என்று சிந்தித்துக் கொண்டு உறங்கிவிட்டாள்.

"ஆனைமுகனைத் தொழுவார்க் காகாத தொன்றில்லை"

வனசாட்சி அடுத்தநான் அதிகாலையிற் படுக்கைவிட் டெழுந்தவுடனே தன் காலைக் கடன்களை முடித்து ஒரு தூயதான அறையுளிருந்து கொண்டு ஐங்கரக் கடவுளுக்குரிய மந்திரத்தை 108 முறை உச்சரித்து அத்தெய்வத்திற்காகிய தோத்திரங்களைப் படிப்பாள்; பத்திபூர்வமாகப் பிள்ளையாருடைய திருவடிகளைத் தியானித்து இறைஞ்சுவாள்; தங்கள் வீட்டு வளவில் நின்றபடியே அயலிலுள்ள பிள்ளையார் கோவில் கோபுரத்திற் புலப்படும் விநாயகர் கடவுளைக் கண்களாரத் தரிசித்து ஆநந்தமடைந்து உடனே பஞ் சாங்கமாக வீழ்ந்து பணிந்து வணங்கியெழுந்து நின்று மனஆறுதலடைவாள்; இப்படி வனசாட்சி காலையும் மாலையும். சில சமயங்களில் உச்சிப்போதிலும் கணபதியை வணங்கித் துதித்து வந்தமையினால், அவளைச் சிலகாலம் பீடித்திருந்த மனச்சோர்வும் தேகமெலிவும் மெல்ல நீங்கின; பெற்ற தாயும் தங்கள் மகள் தேறியிருத்தலை அவதானித்துத் தன்னிடத்துள்ள தீராக்கவலை நீங்கப்பெற்றாள். ஆனைமுகனைத் தொழுவார்க்கு ஆகாத தொன்றில்லையென்பர்; வனசாட்சியின் மனம் விநாயகப் பெருமானாரிடத்தும் பத்திவழியிற் செல்ல, அவள் தங்கள் வளவுப் பூந்தோட்டத்திலுள்ள பூக்களைத் தானெடுத்து மாலையாகத் தொடுத்துத் தன் கூந்தலிற் சூடுவதை விடுத்து ஆசார சீலியாய் அந்தப் பூக்களைக் கொய்து மாலைதொடுத்துக் கணேச மூர்த்திக்குச் சாத்தும்படி அந்தப் பெருமானுக்குப் பூசை செய்யும் அந்தணருக்கு அனுப்பிவிட, அவரும் அன்புடனே விநாயகக் கடவுளுக்குப் புனைந்து பூசித்து அந்தப் பெருமானுடைய பேரழகைக் கண்டு மகிழ்வார்;

"கணபதி உன்னைக் காப்பானாக"

ஒருநாள் இரவு எட்டு மணிவரையிலிருக்கும் கணேசக் குருக்கள் என்று சொல்லப்படும் அந்தப் புரோகிதர் பிள்ளையார் கோயிற் பூசை உற்சவம் முடித்துக்கொண்டு விபூதிப் பிரசாதம் முதலியனவும், அன்று மாலைப்போதில் வனசா பிள்ளையாருக்குச் சாத்தும்படி கட்டிக்கொடுத்தனுப்பிய முல்லைமாலை நிர்மாலியமும், நிவேதித்த மோதகம் பழவர்க்கம் முதலிய சிலவற்றையும் ஒரு தட்டத்தில் வைத்துக்கொண்டு வனசா வீட்டிற்கு வருதலும், அந்தப் புரோகிதர் வரவைக் கண்ட வனசா, பிள்ளையார் தங்கள் வீட்டிற்கு எழுந்தருளினால் எத்துணை மகிழ்ச்சி யடைவாளோ, அத்துணை மகிழ்ச்சியடைந்து, அவரை எதிர்சென்று அழைத்துவந்து ஆசனத்திருக்கச்செய்து, பஞ்சாங்கமாக வீழ்ந்து வணங்கி யெழுந்து ஒதுங்கி விநயமாய் நிற்ப, அந்த முதியவேதியர், "குழந்தாய், கவலைப்படாதே, உன் மனோரத மெல்லாம் அந்த ஆனைமுகத்தா னருளால் இனிது நிறைவேறும், நிறைவேறக் கால தாமதப்பட்டாலும் அதனை யிட்டுக் கலங்கவொண்ணாது; ஐங்கரன் திருவடியை அநுதினஞ் சிந்தி, அவன் மந்திரத்தை மறவாமற் செபித்துக்கொள்" என்று சொல்லி விபூதிப்பிரசாதம் முதலியவற்றை நீட்ட, அவள் பணிவுடன் தன்னிரு கரங்களாலும் ஏற்று விபூதியை நெற்றியிற் பூசிக் சந்தனத்தாற் பொட்டிட்டு அந்த மாலையையும் தன் கூந்தலிற்சூடிக்கொண்டு. அகத்தே ஏதோ கருமம் பார்த்துக் கொண்டிருந்த தன் தாயைக் கூப்பிட, அவளும் வந்து அந்தணரை வணங்கி விபூதிப்பிரசாதம் பெற்றுப் பூசியொதுங்கி நின்றாள்; நின்றவள் புரோகிதரைப் பணிவுடன் பார்த்து "சுவாமி, இன்று தாங்கள் இங்கு வர நினைத்தது நாங்கள் செய்த புண்ணியம்; வந்த நோக்கமென்ன வென்பதை நாங்கள் அறியலாமோ" என்று கேட்க "வேறொன்றுமல்ல, உங்கள் மகள் சில நாட்களாக எங்கள் பிள்ளையாருக்குச் சாத்தும்படி நல்ல நல்ல மாலைகள் கட்டி நியதியோடு அனுப்பினாள்; நானும் பயபத்தியோடு அவைகளைச் சாத்திப் பூசை செய்தபின் பெருமானைத் தரிசித்தேன், பெருமான் விசேஷ அழகோடு காணப்படுகிறார்; அதனால் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்து, இன்று இப் பிரசாதங்களை இந்தப் பிள்ளைக்குக் கொடுக்க எண்ணி வந்தேன்" என்று சொல்லி முடித்தார். "சுவாமீ, கோயிலில் இன்று ஏதும் விசேஷமோ" என்று வனசாட்சியினது தாய் வினாவ, "ஆம், இன்று சதுர்த்திவிரத தினமல்லவா, அதனாற்றான் உற்சவம் நடைபெற்றது" என்று புரோகிதர் சொல்லுதலும், கேட்டுக்கொண்டு நின்ற வனசா "சுவாமி, பிள்ளையாருக்குரிய விரதங்களெவை, அவைகளை அநுட்டிக்க வேண்டிய காலம், முறை முதலியவற்றைச சொல்லுங்கள்" என்று கேட்க, புரோகிதர் விநாயகருக்குரிய விரதங்கள் வெள்ளிக்கிழமை, சதுர்த்தி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழிமாச சஷ்டியென்னுமிவைகள் மூன்றுமெனவும். அவைகளை யனுட்டிக்க வேண்டிய காலம் முறைகள் இன்னின்ன எனவும் அநுட்டித்துப் பேறு பெற்றோர் கந்தவேள், திருமால், அகத்தியர். சத்த கன்னியர், ஔவைப்பிராட்டி, விக்கிரமாதித்தன் முதலானோர் எனவும் விபரமாகச் சொன்னார். இவைகளைக் கேட்ட வனசாட்சி தானும் பிள்ளையாருக்குரிய விரதங்களைக் கிரமமாகக் காத்தல் வேண்டுமென்று நிச்சயித்தாள்; "சுவாமி, நான் வீட்டைவிட்டு வெளியிற் செல்ல முடியாதநிலையிலுள்ளவள்; ஆனதால் வாய்த்த நேரத்தில் இடையிடையே நீங்கள் இங்கு வந்து நல்ல விஷயங்களை எனக்குச் சொல்லித் தருகிறீர்களா" என்று வனசா பணிவுடன் கேட்க, புரோகிதர் "ஆம் மகளே, அப்படியே செய்கிறேன்; கணபதி உன்னைக் காப்பானாக" என்று ஆசிகூறி அநுமதி பெற்று அவ்விடம் விட்டகன்றார்.

* * *

உலகம் பலவிதம்: 1951 ஒக்டோபர் 23

"ஆம் என்றிருக்கவேண்டும் இல்லையேல் அல்ல என்றிருக்கவேண்டும்"

விநாயகப் பெருமானையே அல்லும் பகலுஞ் சிந்தித்து அநுதினமும் பூக்கொய்து மாலை தொடுத்துச் சாத்திக் கொடுத்து வரத் தொடங்கியபின், விவாக விஷயமாக வனசாட்சி மனத்திலிருந்த கவலை குறையத் தொடங்கியது; குறையவே அவள் முகமலர்ச்சியோடு காணப்பட்டாள்; சரீர மெலிவு நீங்கித் தேகம் பூரித்தாள்; "ஐங்கரக் கடவுளருளினால் எல்லாம் விக்கினமின்றிக் கைகூடும், நாம் ஏன் கவலைப் படுவான், கயமுகனைச் சங்கரித்துத் தேவர்கட்கு அந்த அசுரனால் நேர்ந்த இன்னல்களை யெல்லாம் தீர்த்தருளிய மூர்த்தி என்னை மாத்திரங் கைவிடுவாரா! ஒருபோதுங் கைவிட மாட்டார்" என்று வனசா எண்ணி யெண்ணி மனந்தேறுவாள்; சஞ்சலத்தோடும் வாட்டத்தோடு மிருந்த மகள் சிலநாட்களாக அவையெல்லாம் நீங்கி முகமலர்ச்சியோடும் தேகபூரிப்போடு மிருப்பதைக் கண்டு அவளது பெற்றார் மன ஆறுதலடையினர்; தங்கள் மகளுடைய மங்கள கருமம் விரைவில் நிறைவேற வேண்டுமென்று வனசாவின் பெற்றாரும் ஆனைமுகக் கடவுளை அல்லும் பகலும் தொழுதனர்; இவ்வாறு பல மாசங்கள் கழிந்தன; ஆனால் விவாக விஷயமாக ஏதும் முயற்சிகள் நடந்தில; கமலாட்சிக்கு இடையிடையே கடிதமெழுதி வந்த பத்மநாதன், பின்னர்க் கடிதமெழுதாமல் விட்டுவிட்டான்; அவன் செயல் கமலாட்சியின் மனத்தைப் புண்படுத்தியது; கல்யாண விஷயத்திலே வனசாட்சி முற்றாகத் தன்னையே நம்பியிருக்கிறா ளென்றெண்ணும் போதெல்லாம் கமலாட்சி பெரிதும் வருந்துவாள்; அவள் இந்த விஷயத்தை இடையிடையே தன் கணவனுக்குச் சொல்லிக் கவலைப்படுவாள்; அவனும் அதனைக் கேட்கும்போதெல்லாம் கவலைப்படுவான். அவன் ஒருநாள் தன் மனையாளை நோக்கி "கமலா, நீ வீணே கவலைப்படாதே; இந்த விவாக விஷயம், ஒன்றில் ஆம் என்றிருக்க வேண்டும்; இல்லையேல் அல்ல வென்றிருக்க வேண்டும்; எவ்வளவு காலத்திற்கு அந்த உத்தம கன்னிகை இதனையிட்டுக் கவலைப்பட்டுப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருப்பது; நான் உத்தரவு தருகிறேன்; நீ இன்னுமொரு தரம் ஊருக்குப் போய் வனசாவைக் கண்டு தேறுதல் சொல்லி விட்டு, உன் சகோதரனிருக்குமிடத்திற்குப் போய்க் காரியத்தைச் சொல்லி விவாகஞ் செய்வதா, அல்லவா என்று முற்றெடுத்துவா; ஒரு பெண்ணைப் படைத்த இறைவன் அவளுக்கு ஒரு நாயகனையும் முந்தியே படைத்திருப்பான் றானே" என்று சொல்லி ஊருக்குப் போவதற்கு அநுமதி கொடுத்தான்; கமலாவும் ஒரு நல்ல நேரத்தில் ஊருக்குப் புறப்பட்டாள்.

"பிரிந்தவர்கூடிடிற் பேசவேண்டுமோ"

"கமலாட்சி புறப்பட்டு வந்து தங்கள் வீட்டில் அதிகந் தங்காது உடனே வனசாட்சி வீட்டிற்குப் போனாள்; கமலாட்சியின் வரவைக் கண்ட வனசாட்சியடைந்த சந்தோஷம் எப்படிப் பட்டதென்று சொல்லவும் வேண்டுமா! கண்டாள், மகிழ்ச்சி கொண்டாள், எதிரே விரைந்து சென்றாள், அவள் கரத்தைத் தன் கரத்தாற் பற்றி "அக்கா, எப்பொழுது புறப்பட்டீர்கள்" என்று முகமன்பேசி யழைத்துக் கொண்டு வந்து நேரே தான் இருக்கும் அறையுட் கூட்டிக் கொண்டுபோய் அங்குள்ள "ஸோபா" வில் அவளை இருக்கச் செய்து தானும் அவள் பக்கலில் மருவி யிருந்தாள்; வனசாட்சி பேசும் இன்சொல்லும், பாராட்டும் அன்பும். செய்யும் உபசாரமும் கமலாட்சியின் உள்ளத்தை உருக்க, அவளுடைய கண்களில் நீர்த்ததும்பியது; அதனைக் கண்ட வனசாவுங் கண்ணீர்கலுழ்ந்தாள்; "பிரிந்தவர் கூடிடிற் பேச வேண்டுமோ" என்ற வாக்கியம் அந்த நேரத்தில் அவர்களிருவருக்குமே பொருத்தமாக விருந்த தெனலாம். ஒருவர் கண்ணீரை மற்றவர் தத்தம் முன்றானையால் ஒற்றியகற்றினார்கள்; சற்று நேரம் பேசவியலாமலிருந்தார்கள்; இதற் கிடையில் தேக மெலிவோடும் முகவாட்டத் தோடுமிருந்த வனசாட்சி, அங்ஙனமின்றிச் சரீரம் பூரிக்க முகமலர்ச்சியோ டிருப்பதை அவதானித்த கமலா மன ஆறுதலடைந்தாள்; விவாக ஒழுங்கைப் பற்றிப் பத்மநாதனிடமிருந்து ஏதுங் கடிதம் வந்திருக்க வேண்டுமெனவும், அதனாற்றான் வனசா மகிழ்ச்சியோடும் பூரிப்போடுங் காணப்படுகிறாளெனவும் கமலாட்சி தன்னுள்ளத்து மதித்தாள். அவள் அன்புகூர வனசாவை நோக்கி "என்னருமைத் தங்காய், உங்கள் அத்தானிடமிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாளில் ஏதுங் கடிதம் வந்ததுண்டோ" என்று மெல்ல வினாவ, "இல்லை அக்கா" என்று பதில் சொன்னாள் வனசா. கேட்ட கமலா மனம் பதைத்து "தங்காய், அண்ணன் எனக்கு வெகு நாளாகக் கடிதமெழு தாமல் விட்டுவிட்டார்; இங்கே உங்களுள் ஆருக்கேனும் கடிதமெழுதியிருப்பாரென்றே நான் நினைத்திருந்தேன்; இங்கும் எழுதவில்லையா" என்று ஆச்சரியம் கவலையென்னு மிவை திகழ ஆவலோடு வினாவினாள்; "எழுதவில்லை, அக்கா, எழுதினாற்றானென்ன, எழுதா விட்டாற்றானென்ன, எல்லாம் விதியின் பிரகாரந்தான் நடக்கும்" என்று மிகவும் ஆறுதலாக விடை சொன்னாள் வனசாட்சி; வனசா சொன்ன இந்த விடையின் கருத்துக் கமலாட்சிக்குப் புலப்பட வில்லை; விவாக விஷயமாக அண்ணர் செய்த அலட்சியத்தினால் இந்த வனசாவின் மனம் மாறுபட்டு வைராக்கியங் கொண்டு விட்டதோ" என்று தன்னளவிற் சிந்தித்துக் கொண்டு வனசாவை அன்புடன் பார்த்து "தங்காய், கவலைப்பட வேண்டாம், உங்கள் விவாகவிஷயத்தில், ஆண்டவனருளை முன்னிட்டுக் கூடிய சீக்கிரத்தில் நிறைவேற்றி வைக்கலாமென்ற நோக்கத்தோடு, என் கணவருக்குஞ் சொல்லி அநுமதி பெற்றுக்கொண்டு இங்கு புறப்பட்டு வந்தேன்; உம்மைக் கண்டுகொண்டு இனி அண்ணரிடம்போக உத்தேசித்திருக்கிறேன், எதற்குந் துயரப்பட வொண்ணாது தங்காய்" என்று இதமாகச் சொன்னாள் கமலாட்சி. "துயரப்பட்டென்ன, துயரப்படாமல் விட்டென்ன, நடப்பதுதான் நடக்கும்" என்று மீட்டுஞ் சொன்னாள் வனசாட்சி. கேட்ட கமலா சிந்தித்தாள்; அந்த வேளையில் வனசாவின் தாயும் அங்கே வந்து கமலாட்சியைக் கண்டு சுகம் விசாரித்தாள்.

* * *

உலகம் பலவிதம்: 1951 நவம்பர் 06

"உள்ளதைச் சொல்லுதீர்"

மகளுடைய சம்பந்த விஷயம் காலதாமதமாகின்றதே யென்பதைச் சொல்லிக் கவலைப் பட்டுவிட்டு, வனசாவின் தாய் தன் கருமம் பார்க்கப் போய்விட்டாள்; சிறிதுநேரஞ் சிந்தனையோடிருந்த கமலாட்சி வனசாவைப் பார்த்து "தங்காய் கேட்கின்றேனென்று குறையெண்ண வேண்டாம்; உமது மைத்துனருக்கும் உமக்கும் விவாகம் விரைவில் நடக்குமென்ற சந்தோஷத்தினால், நீர் கவலை நீங்கி அகமும் புறமும் பூரித்து முகமலர்ச்சியோடு இருக்கிறீரென்று இப்பொழுது உம்மைக் கண்டவுடனே நான் எண்ணிச் சந்தோஷப்பட்டேன்; ஆனால் உங்கள் விவாக விஷயமாக நான் இப்பொழுது உம்முடன் பேசியபோது, நீர், ஆனாலென்ன, ஆகாவிட்டா லென்ன, நடந்தாலென்ன, நடவாவிட்டாலென்ன? எல்லாம் விதியின் செயல், என்று ஞானம் பேசுகின்றீர்; இப்படி இப்பொழுது நீர் சொல்வதற்குக் காரணமென்ன வென்பது எனக்குப் புலப்படவில்லை; ஏன் தங்காய், விவாகத்தின்மீது ஊக்கஞ் செல்லவில்லையா? இல்லையேல் விவாகம் இனிமேல் வேண்டா மென்று வைராக்கியங் கொண்டுவிட்டீரோ, தங்காய், உம்மிடத்தில் அதிக விசுவாசமுள்ள எனக்கு உள்ளதைச் சொல்லுதிர்" என்று பரிவுடன் கேட்டாள் கமலா; கமலா சொன்னவற்றையெல்லாம் அவதானமாகக் கேட்டுக் கொண்டு அவள் பக்கலில் இருந்த வனசா புன்னகையரும்ப அவளை அன்புடன் பார்த்து, "அக்கா, சொல்லுகிறேன் என்பதையிட்டுக் கவலைப்படாதீர்கள்; இந்தப் பிரபஞ்ச வாழ்க்கை நிலையானதென்றும், இதில் மகிழ்ச்சியுண்டென்றும் என் சிறுபிள்ளைப் புத்தியினால் இவ்வளவு காலமும் எண்ணியிருந்து ஏமாந்து போனேன்; நான் நினைத்தபடி யெல்லாம் நடக்குமென்று பேய்த்தனமாய் நினைத்திருந்தேன்; அத்தான் என்னை மணந்து கொள்வாரென்றும், நான் அவருக்கு வாழ்க்கைத் துணைவியாகவிருந்து இனிது வாழலாமென்றும் ஆகாயத்திற் கோட்டை கட்டினேன்; இப்படியெல்லாம் நினைத்தமையினால் தீராக் கவலைக்கு ஆளாகி அன்னாகாரம் உறக்கம் முதலிய சுகங்களின்றி மனமுடைந்தேன்; தேகம் மெலிந்தேன்; சஞ்சலம் அதிகப்பட்டமையினால், நீடித்த காலம் மறந் திருந்த எங்கள் குலதெய்வமாகிய விநாயகக் கடவுளை மனத்தில் எண்ணினேன்; வணங்கினேன், துதித்தேன்; அப்பெருமான் என்மீது கடைக்கண் வைத்தார் போலும்; பிள்ளையாருக்குப் பூசை செய்யும் எங்கள் புரோகிதப் பிராமணரே விநாயகப் பெருமானருளால் எனக்கு ஞான குருவாய் வந்து சேர்ந்தார்; என் கவலையை ஒருவாறு அவருக்குப் புலப்படுத்த அந்தப் புரோகிதர் என்னைத் தேற்றி, குழந்தாய், உங்கள் குலதெய்வமாகிய கணபதியைக் கைதொழுதாற் கவலை முழுவதும் நீங்கும்; நினைத்த காரியஞ் சித்திக்கும் என்று இதோபதேசஞ் செய்தார்".

"ஆதலால் வானோரும் ஆனைமுகத் தானைக் காதலாற் கூப்புவர்தங் கை"

"நான் உடனே புரோகிதரைப் பணிந்து, சுவாமீ, விநாயகப் பெருமானுக்குரிய விரதங்களைப் பற்றியும், அவ்விரதங்களைக் காத்தலால் அடையக்கூடிய நன்மைகளைப் பற்றியும் சொல்லவேண்டு மென்று கேட்டேன்; புரோகிதர் அன்போடு அவை யனைத்தையும் எடுத்து விரிவாகச் சொன்னார்; கேட்டேன், விரதங்களை இயன்றவரையிற் சீலத்தோடும் நியதியோடும் அநுட்டித்து வருகிறேன்; எங்கள் வீட்டில் நின்றபடி அந்தப் பிள்ளையார் கோவிலின் தூபியைத் தரிசிக்கிறேன்; அக்கா, பிரணவப் பொருளாய் விளங்குகின்ற பிள்ளையாரின் திருவருட் பெருமையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் அறியேன்; நீங்களும் அறியீர்கள்; அந்தப் பெருமானுக்குரிய தோத்திரமொன்றைப் புரோகிதர் எனக்குப் படித்துக்காட்ட, நான் உடனே மனனம் பண்ணிக் கொண்டேன்; சொல்லுகிறேன் கேளுங்கள் அக்கா:

"திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை".

என் அருமையான அக்கா, கருணைக் கடலாகிய கணேசன் பொறுப்பில் என்னை ஒப்புவித்து விட்டேன்; அவன் செய்வதைக் கண்டுகொள்வேன்; அவன் தியானமே என்னுள்ளத்தில் வரும் ஆநந்தமாகும்; என்னை இல்வாழ்க்கையிற் புகுத்த வேண்டுமென்பது அவன் திருவுள்ளமாகிற் புகுத்திவிடுவான்; அதன்கண் ஓயாமல் என்னைத் தனக்குத் தொண்டு செய்ய வைத்து ஆட்கொள்வது அவன் திருவுள்ளத்திற்குச் சம்மதமானால் அப்படியே செய்வான்; நாம் முதல் வழிபடுங் கடவுளாகிய கணநாதனிருக்கும் போது எனக்கென்ன கலக்கம்? அக்கா, நீங்களும் அவனை அன்புடன் வழிபட்டு உங்கள் ஆன்ம லாபத்தை இனியேனும் தேடப் பாருங்கள்" என்று கண்களில் ஆநந்த அருவி சொரிய நாத் தடுமாறப் பரவசப்பட்டுச் சொன்னாள் வனசாட்சி.

"பருவத்தே பயிர் செய்"

இவைகளையெல்லாம் அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த கமலாட்சி ஆச்சரிய மடைந்தாள்; சற்று நேரம் யோசித்தாள்; நெடுநாட்பட்ட கவலை காரணமாகச் சிந்தனை மேலீட்டினால் என் தங்கை மனத்தில் வைராக்கியம் ஏற்பட்டு விட்டதோ! இல்லையேற் சித்தப்பிரமையோ! என்று சந்தேகித்தாள்; அந்த அந்தக் காலத்திலே அந்த அந்தக் கருமத்தைச் செய்து வைக்காவிட்டால் இப்படி மாறுபாடுகள் நேருதலும் சகசந்தானே; அறியாமலா எங்கள் மூதாட்டி "பருவத்தே பயிர்செய்" என்று பாடி வைத்தாள்; வனசா சாமானியமானவளல்லள்; புத்திசாலி; இப்படிப்பட்ட இவளும் தன் மனத்தையோட விட்டு மாறாட்டங்கொண்டு நிற்கின்றாளே இதற் கென்னசெய்யலாம்! இவள் பெற்றோருக்கேனும், என்னண்ணருக்கேனும் இவள் நிலைமையை வெளிவிடுவது புத்தியாகாது எனத் தன்னளவில் யோசித்துக்கொண்டு "என் அருமைத் தங்காய், நீர் சொல்லுவது எனக்குப் புலப்படவில்லை" என்று கவலைகூரச் சொன்னாள்; "அக்கா, நான் சொல்வதில் ஏதும் பிழையிருந்தால் எடுத்துக் காட்டுங்கள்" என்று பதில் சொன்னாள் வனசா. பிழையொன்றேனும் எடுத்துக்காட்ட முடியாமற் சிந்தித்தபடி சிறிது நேரமிருந்தாள் கமலாட்சி.

* * *

உலகம் பலவிதம்: 1951 நவம்பர் 13

"ஊழின் முறையிருந்தாலும் இயன்ற முயற்சி செய்தல் வேண்டும்"

சற்றுநேரம் மௌனஞ் சாதித்த கமலாட்சி வனசாவைச் சிந்தனையுடன் நோக்கி "தங்காய், நீர் சொல்லும் ஞாயங்களை நான் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்; எல்லாம் அவன் செயல் என்பது பெரியோர் கொள்கை; திருவருளின் படியும் ஊழின் படியுந்தான் எதுவும் நடக்கும்; ஆனால் திருவருட் செயல், ஊழின் வலி எப்படியென்பதை நாம் முந்தியறிதல் முடியாது; ஆனதாற்றான் மக்களாகிய நாங்களும் அந்த அந்தக் காலங்களில் எங்களாற் செய்யக்கூடிய முயற்சியைப் பலரோடு கலந்து யோசித்தும், தனித்துச் சிந்தித்துஞ் செய்கின்றேம்; தங்காய், விளக்குத் தகழி - நிறைய எண்ணெயிருந்தாலும், அதிலே திரியிடப்பட்டு அத்திரி யெரிந்து கொண்டிருந்தாலும், தீபச்சுடர் மங்கும்போது நாம் அதனைக் கண்டு திரியைச் சற்றுத் தூண்டி விடுகிறோமல்லவா? அதுபோலவே இறைவனருளிருந்தாலும், ஊழின் முறையிருந்தாலும், மக்களாகிய நாங்களும் யோசித்து எங்களால் இயன்ற முயற்சி செய்தல் வேண்டும்.

"தெய்வத்தா லாகா தெனினும்
முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்"

என்று வள்ளுவரும், "முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்" என்று பெரியோருஞ் சொல்லியிருக்கிறார்களே ஆதலால், தங்காய், நாமும் ஒரு அளவிற்கு உமது கல்யாண விஷயத்தில் முயற்சி செய்யத்தானே வேண்டும்; அண்ணர் பராமுகமாயிருத்தலினால் இன்னுமொரு முறை அவரிடம் போகலாமென யோசித்துக்கொண்டு வந்தேன்" என்று பரிவுடன் பகர்ந்தாள்; அக்கா, நீங்கள் சொல்வது ஞாயம், உங்கள் நோக்கமும் நல்லது; முயற்சியுஞ் சரியானது; என்னையிட்டுத் தான் நீங்கள் இவ்வளவு சிரமப்படுகிறீர்கள்; ஆனால், அக்கா, சொல்லுகிறேனென்று குறை யெண்ணாதீர்கள்; என்னுள்ளக் கிடக்கையை உங்களுக்கல்லாமல் என் பெற்றாருக்கும் எந்தநேரமும் வெளியிடமாட்டேன்; விவாகத்தில் எனக்கு முந்தியிருந்த விருப்பம் இப்பொழுதில்லை; அந்த விருப்பம் நாட் செல்லச் செல்லத் தேய்ந்து கொண்டு போகிறது; ஆனைமுகத்து அப்பனையே வந்தனை செய்ய வேண்டுமென்று என் சிந்தனை மாறிவிட்டது; இந்த இளமை தொட்டு மரணபரியந்தம் அந்த ஐங்கரக் கடவுளைத் தியானித்து வழுத்தி அவனுக்குத் தொண்டுசெய்து காலம் போக்கினால் ஆன்ம ஈடேற்றமுண்டு; அதுவே நாம் பெண் சன்மமெடுத்த பெரும்பயன்; மாயப் பிரபஞ்ச வாழ்க்கை எனக்கு வேண்டாம் அக்கா நீங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பொருட்டு உங்கள் தமயனாரிடம் போகவேண்டாம் அல்லாமலும் அவருக்கு என்மீது விருப்பமில்லாத போது, எனக்கு எப்படி அவர்மீது ஆர்வம் பிறக்கும்? தானாகக் கனியாத காயைத் தடி கொண்டடித்தாற் கனியுமா? அன்பில்லாதவர் மீதிலே கொள்ளும் ஆசையும் ஒரு ஆசையா? என் அருமையான அக்கா, நீங்கள் வீணாகச் சிரமப்படாதீர்கள்; ஆனால் நீங்கள் எம்மீது வைத்துள்ள அன்பை மரணபரியந்தம் மறக்க மாட்டேன் என்று கண்களில் நீர் ததும்பக் கமலாட்சியின் முகத்தைத் தன் கையினாலே தடவிக்கொண்டு சொன்னாள் வனசா; கமலாவின் கண்களும் நீர் துளித்தன.

"சந்ததிக்கழகு வந்திசெய்யாமை"

கமலாட்சி ஒருவாறு தன்னைத் தேற்றிக் கொண்டு வனசாட்சியைப் பார்த்து "தங்காய், உமது கல்யாண விஷயத்தைப்பற்றி நீர் தீர்க்கமாக இப்பொழுது ஏதுஞ் சொல்லாதீர்; இன்னும் யோசித்துச் சொல்லுதிர்; எவ்வளவு மன வைராக்கியத்தோடும் ஒழுக்கத்தோடு மிருந்தாலும் உம்மையொத்த இளம் பெண்கள் ஒன்றியாகக் காலங்கழித்தாற் பழிமொழி கேட்கவே நேரும்; அல்லாமலும் நீர் உமது பெற்றாருக்கு ஒரேயொரு மகள்; உமது பெற்றார் நீர் கொண்ட இந்த நோக்கத்தை யுணர்ந்தாற் பெரிதுங் கவலைப்படுவார்கள்; தங்கள் சந்ததி தங்கள் மகளோடு நின்று விடுமேயென்று மன முடைவார்கள்; "சந்ததிக் கழகு வந்தி செய்யாமை" என்பதல்லவா மூதாட்டி வாக்கு; ஆதலால் தங்காய், உந்த ஒரு எண்ணத்தையும் மறந்துவிடும்" என்று இரந்து கேட்டாள்; "அக்கா, பழிமொழி வந்து சேருமென்று பயப்படாதீர்கள்; எங்கள் மூதாட்டியாகிய திலகவதியார் இளம் வயதிலேயே தமக்கு நியமித்த நாயகர் தவறிவிட, கைம்மை விரதம் பூண்டு சிவதொண் டாற்றிக்கொண்டு தூய முறையிற் காலங் கழித்தார்; தமது தம்பியாராகிய திருநாவுக்கரசரைச் சமயகுரவராகச் செய்தவரும் அந்தத் திலகவதியாரல்லவோ; "காவல் தானே பார்வையர்க்கழகு" எனவும் "சிறைகாக்குங்காப்பெவன் செய்யும் மகளிர் - நிறை காக்கும் காப்பே தலை" எனவும் பெரியோர்கள் விதித்திருக்கிறார்களே ஆனதால் அபவாதம் நேருமென்று அக்கா, அஞ் சாதீர்கள்; இப்பொழுது என் மனத்திலுள்ள நோக்கத்தை உங்களுக்குச் சொன்னேனே யொழிய ஊழின் செயலை நானுமறியேன்; நீங்களும் அறியீர்கள்; விவாக விஷயமாக உங்கள் விருப்பம்போற் செய்யுங்கள்; பெற்றாரை வருத்த வைத்தலும் எனக்குப் பிரியமான செயலல்ல" என்று நெட்டுயிர்ப்போடு சொல்லி முடித்தாள்; "உங்கள் விருப்பம் போற் செய்யுங்கள்" என்று வனசா சொன்ன வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தே கமலாட்சி கவலை நீங்கி உள்ளங் குளிரப் பெற்றாள்; "இன்னும் சிறிதுநேரமிருந்து இவளுடன் வார்த்தையாடினால், ஒரு போது விவாகத்துக்கு மறுப்புஞ் சொல்லக் கூடும்" என்று கமலா தன்னளவிற் சிந்தித்துக் கொண்டு, வனசாவிடத்தும் அவள் தாயிடத்தும் அநுமதி பெற்று, அன்று மாலைக் காலத்திலேயே பத்மநாதன் இருக்கும் பட்டினத்திற்கு, இலட்சுமி யென்னும் வேலைக்காரியுடன் புகைரதமூலமாகப் புறப்பட்டாள்.

"உங்களிடந்தான் வருகிறேன்"

கமலாட்சி அடுத்த நாட் காலை பத்மநாதன் வசிக்கும் பட்டினத்தை யடைந்து அவனுடைய வாசஸ்தானத்தைச் சேர்ந்தாள்; அவன் அவளை அன்புடன் வரவேற்றான்; அன்றும் பள்ளிக்கூட விடுமுறை நாளாதலினால், பத்மநாதனுடன் கமலாட்சி எவ் விஷயத்தையும் கலந்து பேசுதற்கு நேரமிருந்தது; கல்யாண விஷயமாகக் கமலா ஆவலுடன் பேசியபோது, இராதா அவனைக் கல்யாணஞ்செய்ய மறுத்தாலும், அவன் அவளையல்லாமற் பிறரைக் கல்யாணஞ் செய்ய இசையான் எனப் புலப்பட்டது; அவள் தான் அங்கே வந்ததையிட்டுக் கவலைப்பட்டனளேனும், தன் கவலையை அவனுக்குக் காட்டாது பலவாறு யோசித்துக் கொண்டிருந்தாள்; தன் சகோதரி கவலையோடிருப்பதை அவதானித்த பத்மநாதன், கவலைக்குக் காரணமென்ன என்பதை விளங்கியும் விளங்கான் போன்று ஒரு மோட்டரதத்தைத் தன் வாசஸ்தானத்திற்கு வருவித்துப் பட்டினம் பார்க்க வரவேண்டுமென்றுசொல்லித் தன் சகோதரியையும் அந்த இரதத்தில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டுப் போனான்; சிறிதுதூரம் போக, இராதா ஒரு மோட்டா ரதத்தில் ஏறிக்கொண்டு தங்களுக்கெதிரே வரக் கண்ட பத்மநாதன், அந்த இரதத்தை நிற்கும் படியாகச் சைகை காட்டி நிற்கச்செய்து தான் உடனே இறங்கிப்போதலும், ராதாவும் தான் வந்த இரதத்தை விட்டு இறங்கி "உங்களிடந்தான் வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டு அவனுக்கெதிரே நடந்து வந்தாள்;

* * *

உலகம் பலவிதம்: 1951 நவம்பர் 16

"பெண்களோடு பெண்கள் எதனையும் பேசிக் கொள்ளலாம்"

"அப்படியானாற் சந்தோஷம்! இன்று காலை என்னிடம் வந்த சகோதரி கமலாவிற்குப் பட்டினத்தைக் காட்டலாமென்ற நோக்கத்தோடு சகோதரியுடன் புறப்பட்டு வந்தேன்; அதை நாளைக்குப் பார்க்கலாம்; நீர் ஏறிவந்த இரதத்தைத் திருப்பி அனுப்பிவிட்டு எங்களுடன் வரலாம்; பிறகு எங்கள் இரதமூலம் உம்மை உமது இடத்திற்கு அனுப்பி வைக்கலாம்" எனப் பத்மநாதன் கூறலும், ராதாவும் அப்படியே செய்துவிட்டு வந்து இரதத்திலேறிக் கமலாவின் பக்கத்தில் இருந்தாள்; இரதம் பத்மநாதன் சொற்படி மீண்டு அவன் வாசஸ்தானத்தை யடைந்தது; மாலை 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியாதற்குச் சற்று முந்தி இரதத்தை மீளக் கொண்டு வரும்படி சொல்லிச் சாரதியை அனுப்பிவிட்டு மூவரும் பத்மநாதன் வாசஸ்தானத்திற் போயிருந்தார்கள். பல விஷயங்களைப் பற்றிக் கலந்து பேசினார்கள்; இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது, பத்மநாதனைக் காணும்படி யாரோ தலைவாசலில் வந்து நிற்பதைக் கண்டு அவன் தலைவாசற்பக்கம் போய்விட, அற்றம் பார்த்திருந்த கமலாட்சி ராதாவை நோக்கி "உங்கள் விவாக விஷயம் எவ்வளவிலிருக்கிறது" என்று இதமாக வினாவ, ராதா அவளைப் பார்த்து "அக்கா பெண்களோடு பெண்கள் எதனையும் பேசிக்கொள்ளலாம்; உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; உங்கள் அண்ணருக்கு என்னை வாழ்க்கைத் துணைவியாகக் கொள்வதற்குப் பூரண சம்மதமுண்டு; எனக்கும் முந்தி அப்படியே ஒரு விருப்பமிருந்தது; ஆனால் இப்பொழுது அந்த விருப்பஞ் சில காரணத்தினாற் குறையத் தொடங்கிவிட்டது" என்று கூசிக்கூசிச் சொன்னாள்; "ஞாயமென்ன என்பதை நான் அறியலாமோ" என்று ஆவலுடன் கேட்டாள் கமலாட்சி. "அக்கா, ஞாயம் வேறொன்றுமல்ல; அவர்மீது நான் எவ்வகையான குறையுஞ் சொல்ல முடியாது; அவர் உத்தம புருஷன்; ஆனால் அவருக்கு வாழ்க்கைத் துணைவியாக அவருடைய சொந்த மைத்துனியைப் பெரியோர் பெற்றார், முந்தியே நிச்சயித்திருக்கிறார்களென்பதை நான் பிந்தியே அறிந்தேன்; அப்படியானால் நான் அவரை விரும்புவது சரியல்ல, அக்கா நான் கேள்விப்பட்டது நிசந்தானா? உள்ளதைச் சொல்லுங்கள்" என்று சொல்லி வினவினாள் ராதா. "ஏன் தங்காய், என் அண்ணர் அதைப் பற்றி இதுவரையில் ஒன்றுஞ் சொல்லவில்லையோ" என்று கமலாட்சி கேட்க, "அக்கா, அவர் சொல்லியிருந்தால் உங்களை நான் கேட்கமாட்டேனே; அவர் ஒருபோதும் அதைப்பற்றிச் சொல்லவில்லை" என்று கவலை மீதூரச் சொன்னாள் ராதா.

"இதுதான் செய்தி, தங்காய்"

"தங்காய், நீர் கேட்டது நிசம்; என்னண்ணருக்குச் சொந்த மச்சாளைச் சின்ன வயசிற்றானே விவாக நிச்சயஞ் செய்திருக்கிறார்கள் எங்கள் சுற்றத்தார்; இவரும் தமது சொந்த மைத்துனியைக் கல்யாணஞ் செய்வதாக எண்ணியிருந்தார்; ஆனால் இப்பொழுது சில காலமாக இவருடைய மனம் மாறிவிட்டதென எண்ணக் கிடக்கின்றது; இவருக்குக் கல்யாணத்தை நிறைவேற்றி வைப்பதற்கு இவருடைய பெற்றார் சுற்றத்தார் பலமுறை முயற்சி செய்தார்களேனும், அண்ணர் அதற்கு இடந்தருகின்றிலர்; ஏதுங் காரணங் காட்டித் தவணையிட்டு வருகின்றார்; இந்த விஷயமாக முந்தி நான் வந்தபோது உம்மையுஞ் சந்தித்தேன்; உம்முடைய அறிமுகம் எனக்குக் கிடைத்தது; இவர் கல்யாணத்திற்குத் தவணையிட்டு வருவதால், குறித்த பெண் மாத்திரமல்ல, இருபகுதியாருடைய பெற்றார் சுற்றத்தாரும் பெரிதும் வருந்துகின்றார்கள்; அண்ணருக்கு என்னிடத்திற் சற்று விசுவாசமுண்டு; அந்தப் பெண்ணுக்கும் என்னிடத்தில் அதிக நம்பிக்கை; ஆனதினால் நான் இதனை ஒழுங்கு செய்து விடலாமென் றெண்ணித்தான், தங்காய், முந்தியும் இங்கு வந்தேன்; இப்பொழுதும் வந்திருக்கிறேன்; இந்தமுறை இவ்விவாக விஷயமாக ஒரு முற்றுப்பண்ண வேண்டு மென்பதுதான் என்னோக்கம்; அண்ணர் என்ன சொல்லுகிறாரோ நான் அறியேன்" எனத் துயரத்தோடு சொன்னாள் கமலாட்சி; "அக்கா இவர் கடத்துவதற்குக் காரணமென்ன என்பது உங்களுக்குத் தெரியாதோ?" என்று ராதா கேட்க, "கல்வியிற் சீதனத்திற் கட்டழகிற் சிறந்த இன்னொரு கன்னிகையைக் கல்யாணஞ் செய்ய எண்ணங் கொண்டிருக்கிறார் என எங்களூரிலுள்ளவர்கள் பேசிக்கொள்ளுகிறார்கள்; அது நிசமோ, அல்லவோ, நானறியேன் தங்காய்; மேலும், எனது அண்ணர் தன்னைப் புறக்கணித்து இன்னுமொரு கன்னியைக் கல்யாணஞ் செய்யப் போகின்றார் என்று கேள்விப்பட்ட நாள்தொட்டு, அந்தப் பெண் கவலை மேலீட்டினால் மனமுடைந்து தனக்கு இனிக் கல்யாணமே வேண்டாமென்று வைராக்கியங் கொண்டு விட்டாள்; அல்லும் பகலும் தங்கள் குலதெய்வமாகிய விநாயகக் கடவுளையே வழிபட்டு அந்தத் தெய்வத்திற்குத் தொண்டு செய்து வருகிறாள்; இதுதான் செய்தி தங்காய்" என்று சொல்லி முடித்தாள் கமலாட்சி. இவைகளையெல்லாம் ஆவலோடு கேட்டுக் கொண்டிருந்த ராதா, மனக்கலக்கங் கொண்டாள்; வருந்தினாள்; அந்தக் கல்யாணங் குழம்பியதற்கும், அபலையாகிய ஒரு கன்னிகை கல்யாணம் வேண்டாமென்று கவலைப்பட்டு வைராக்கியஞ் செய்தற்கும் தானே காரணியென்று சிந்தித்தாள்; இந்தச் சிந்தனை ராதாவின் உள்ளத்தைப் பெரிதும் உபாதித்தது; பெண்ணின் பெயர் என்ன என்று ராதா கேட்க, "வனசாட்சி" என்று கமலா சொன்னாள்; "இந்தக் கல்யாணத்தை நானே முயற்சி செய்து நிறை வேற்றி வைத்தாற்றான் என்னைப் பீடித்த பழி தீரும்" என்று தன்னளவில் நிச்சயித்துக் கொண்டு ராதா கமலாட்சிக்கு ஏதோ சொல்வதற்கு வாயெடுப்பதற்கிடையில், தலைவாசற்பக்கஞ் சென்றிருந்த பத்மநாதன் மீண்டு அங்கே வந்தான்.

* * *

உலகம் பலவிதம்: 1951 நவம்பர் 20

"நல்வரவாகுக"

பத்மநாதன், கமலாட்சி ராதா என்னும் மூவரும் பல விஷயங்களைப் பற்றிக் கலந்து பேசினார்கள்; ஆனால் விவாக விஷயமாக எவரும் ஏதும் பேசிலர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குள்ள சுயம்பாகி ஏதோ இடை நேரத்திற்குரிய சிற்றுண்டியும் பானீயமுங் கொண்டு வந்து மூவருக்கும் பரிமாற மூவரும் ஒருங்கிருந்தருந்தினர்; அன்பர்கள் சம்பாஷணைப்போதில் நேரம் விரைவிற் கழிதல் போலத் தோன்றும்; பொழுதுபட்டு ஆறரை மணியாய் விட்டது; மோட்டரதம் வந்து நிற்கும் அரவங்கேட்டது; ராதா தனது வாசஸ்தானத்திற்குப் போதற்குப் பத்மநாதன் கமலாட்சி யிருவரிடத்தும் விடை கேட்டாள்; "இன்னும் உங்களுடனிருந்து பேசுதற்கு எனக்குப் பிரியந்தான்; ஆனால் இருண்டு விட்டது; இரதத்திலானாலும் இராக்காலத்தில் தனியே போகக் கூச்சமாயிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டு புறப்படும்போது, கமலாட்சி "தங்காய் ராதா, உங்கள் வாசஸ்தானத்திற்கு இப்பொழுது அண்ணருடன் நானும் வந்து, பின் இந்த ரதத்திற்றானே சற்று நேரத்தில் மீண்டுவரலாமா" என்று கேட்க, "ஆம், அக்கா, நூறு முறையும் என்னுடன் வரலாம்; பின் மீண்டு இங்கே வரலாம்; நானே, சற்று முந்திக் கேட்க விரும்பினேன்; நீங்கள் என்னிடத்திற்கு வர இசைவீர்களோ, அல்லவோ என்ற சந்தேகத்தினாற் கேளாதொழிந்தேன்; வாருங்கள், என்னுடன் புறப்படுங்கள்; உங்கள் வரவு நல்வரவாகுக" என்று ஆர்வம் பெருகச் சொன்னாள் இராதா. உடனே இருவரும் புறப் பட்டனர்; ராதாவுடன் அவள் வாசஸ்தானத்தை யடைந்தனர்; அங்கே ராதாவிற்குத் துணையாக அவளுடைய தாயும், ராதாவின் தம்பியும், ஒரு பணிப்பெண்ணும் இருந்தார்கள்; ராதாவினுடைய தாயின் பெயர் நல்லமுத்தம்மை; பழைய கொள்கைகள் பூண்ட கிழவி; வயசு அறுபது அறுபத்தைந்து வரையில் மதிக்கலாம்; ராதாவின் தம்பி பெயர் தங்கவடிவேலன்; பட்டினத்திலுள்ள கல்லூரியொன்றில் உயர்தர வகுப்பிற் படிப்பவன்; தமக்கையுடன் விடுதி விட்டுக்கொண்டும், சந்தேகங்களைக் கேட்டுப் படித்துக்கொண்டு மிருந்தான்; ராதாவின் தகப்பனார் கதிரவேற் பிள்ளை, பெருந் தனவந்தர், நிலம் புலமுடையவர்; தம்முடைய சொந்தக் கிராமத்திலேயே வசிப்பவர். அவரும் அவர் மனைவியாகிய நல்லமுத்தம்மையும் மாறிமாறி பட்டினத்துள்ள தங்கள் மக்களின் வாசஸ்தானத்திற்கு வந்து வந்து போவதுண்டு.

"வேலாயுத உடையார் சந்ததி"

"பொழுதுபட்டு இருண்டுவிட்டதே, இன்னமும் மகளைக் காணவில்லையே" என்று சற்று ஆவலோடு வரவெதிர் பார்த்தவண்ணமிருந்த கிழவி, மகளோடு இன்னுமிருவர் உடன்வந்து ரதத்திலிருந்து இறங்குவதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தாள்; பத்மநாதனைக் கிழவி முந்தியே யறிவாள்; கமலாட்சியை முன்னொரு போதும் அறியாள்; பெருந்தன்மை யுள்ளவர்கள், விருந்தினரை உபசரிக்கும் இயல்பு பூண்டவர்கள். தம்மிடம் வந்தவரை முந்தியறிந்திருந்தாலென்ன, அறியாதிருந்தாலென்ன தொன்மை பாராட்டி இன்சொற் கூறி உபசரிப்பது வழக்கமல்லவா! கிழவி அவ்விருவரையும் இன்சொற் கூறி யுபசரித்து அழைத்துக் கொண்டு போய்த் தலை வாசலிற் பத்மநாதனை ஒரு நாற்காலியில் இருக்கச்செய்து, அயலிலிருந்த ஒரு "ஸோபா" விற் கமலாட்சியை இருத்தித் தானும் பக்கலி லிருந்து அவளுடைய தலை தொடக்கம் அடிவரையில் ஆர்வத்துடன் பார்த்தாள்; பக்கலில் வந்து நின்ற ராதாவைப் பார்த்து "ராதா, இந்தப் பிள்ளை இன்னாரென்று எனக்குச் சொல்ல வொண்ணாதா" என்று ஆசையுடன் கேட்க, "அம்மா, இந்த அக்கா இவருடைய தங்கைச்சி, இங்கு வரும்படி நான் அழைத்துக்கொண்டு வந்தேன்" எனலும், கிழவி கமலாட்சியின் முதுகைத் தடவி "சந்தோஷம், பெயரென்ன" என்று சொல்லி வினாவுதலும் "கமலாட்சி" என்று மகள் சொல்ல, கிழவி மகளைப் பார்த்து "மகளே, உனக்கும் இந்தப்பிள்ளைக்கு மிடையயே எனக்கு ஒரு வித்தியாசமுந் தோன்ற வில்லை; நீ தான் இவள், இவள் தான் நீ" என்று அன்புடன் சொல்லித் தன் மகளையும் மற்றப் பக்கத்தில் இருக்கச் செய்தாள். "இன்றைக்கு என்ன கிழமை? சனிக்கிழமை" என் நல்லமுத்து தானே கேள்வி கேட்டுப் பதிலுஞ் சொல்லி விட்டு, தம்பீ, நீங்களிரண்டு பேரும் இன்றிரவு ஆகாரம் இங்கே எங்களுடன் முடித்துக் கொண்டு 8 மணி வரையிற் போகலாம்" என்று சொல்ல, பத்மநாதன் கமலாவின் முகத்தைப் பார்க்க, கமலா உடன்பாடாகத் தலையசைத்தாள். இதற்கிடையில் கிழவி தாகத்திற்கு ஏதுங்கொண்டு வரும்படி அங்குள்ள பணிப்பெண்ணுக்குச் சொல்ல, "அம்மா, நாங்களெல்லாம் இப்பொழுது தான் ஏதோ ஆகாரஞ் செய்துவிட்டு வந்தோம்; இவர்களை நெருக்காதீர்கள்" என்று தடுத்துச் சொல்ல, கிழவி "அப்படியானாற் சரி" என்று திருப்தியோடிருந்தாள்; இருந்த நல்லமுத்தம்மை கமலாட்சியைப் பார்த்து "உங்கள் சொந்தவூர் எது மகளே" என்று வினாவ, இன்னவூரென்று கமலாட்சி சொன்னாள்; ஊரைச் சொன்னவுடனே கிழவியின் அகத்தில் ஆர்வமும் முகத்தில் மகிழ்ச்சியும் புலப்பட, "அந்தவூரில் எந்தப்பகுதி" என்று ஆவலுடன் கிழவி கேட்க "நாங்கள் வேலாயுத உடையார் சந்ததி என்று எங்கள் தகப்பனார் சொல்வதுண்டு" என்றாள் கமலாட்சி; "மகளே, கேட்கிறேன் என்று குறை யெண்ணாதே, உங்கள் அப்பா பெயரென்ன" என்று கிழவியார் கேட்க, தகப்பன் பெயரைச் சொன்னாள் கமலா; "அவருக்கு நீங்களிருவருந்தானா பிள்ளைகள்" என்று கேட்க, "இவர் என் உடன்பிறந்த அண்ணரல்லர்; என் பெரிய தகப்பனாருடைய மகன், எனக்கு அண்ணர் முறை பூண்டவர்" என்று சொல்லிப் பத்மநாதனுடைய தகப்பன் பெயரையுஞ் சொன்னாள் கமலாட்சி; இவற்றையெல்லாங் கேட்டபின் வெகு நேரம் யோசித்தாள் நல்லமுத்தம்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள்வரச் சம்மதித்தது நாங்கள் செய்த பாக்கியம்"

நல்லமுத்தம்மை ராதா என்னுமிவர்களின் கேள்விக்கிசைந்து பத்மநாதனும் கமலாட்சியும் அங்கு உடனிருந்து இராப்போசனஞ் செய்தார்கள்; மோட்டரதச் சாரதிக்கும் ஆகாரம் வழங்கப் பட்டது; நேரமும் எட்டரை வரையாயிற்று; இதற்கிடையில், ராதா தன் தாயைப் பார்த்து "அம்மா, இந்த அக்காவின் சொந்தவூருக்கு ஒரு முறை நான் போக விரும்புகிறேன்; நீங்களும் எனக்குத் துணையாக வருவீர்களா?" என்று இதமாகக் கேட்க, "நான் மனத்தில் இப்பொழுது எண்ணியதே மகளே, நீயும் என்னிடங் கேட்கின்றாய்; ஒரு முறை இவர்களிருக்குமூருக்கு இருவரும் போய் வருவோம்; இதற்கிடையில் எங்கள் நோக்கத்தை உங்கள் தகப்பனாருக்கு தெரிவித்து அவருடைய சம்மதத்தையும் வாங்க வேண்டுமல்லவா? மகளே, இன்றைக்கே அவருக்கு இந்த விஷயமாக ஒரு கடிதம் எழுது" என்று நல்லமுத்தம்மை நவின்றாள்; இப்படித் தாயும் மகளும் பேசக்கேட்ட கமலாட்சி பெரும் ஆநந்தமடைந்தாள்; பத்மநாதன் மழையொழுக்கை ஏந்துவதற்கு வைத்த பாத்திரம் போற் சிந்தனையோடு அசைவற்றிருந்தான்; காமாட்சி ராதாவையும் தாயையும் நோக்கி "நீங்கள் எப்போது எங்களூருக்கு வர உத்தேசித் திருக்கிறீர்கள்" என்று ஆர்வம் பெருக வினாவ "வருகிற வெள்ளிக்கிழமை எங்கள் கல்லூரியில் விடுமுறை நாளாகும்; ஆதலால் முதனாள் மாலைப் புகைரதத்திற் புறப்பட்டால், வெள்ளிக்கிழமை அதிகாலையில் உங்களிடம் வந்து சேரலாம்" என ராதா சொல்ல, தாயும் "அப்படிச் செய்வதுதான் நல்லது, வேணுமானால் இரண்டொருநாள் உங்கள் வீட்டிலே நாங்கள் தங்கியும் வரலாகும். சம்மதந்தானே" என்றாள்; "சம்மதந்தானே என்று கேட்கவும் வேண்டுமோ! நீங்கள் எங்களிடம் வரச் சம்மதித்தது நாங்கள் செய்த பாக்கியம்" என்று மகிழ்ச்சியோடு சொன்னாள் கமலாட்சி சற்று நேரஞ் செல்ல, பத்மநாதன் காமாட்சியாகிய இருவரும் ராதா விடத்தும் தாயிடத்தும் விடை பெற்றுக்கொண்டு தங்கள் வாசஸ்தானத்தில் வந்து சேர்ந்தார்கள்; அடுத்த நாள் மாலை கமலாட்சி தன் வேலைக்காரியுடன் புகைரத மூலமாகப் புறப்பட்டுத் தங்கள் ஊருக்கு மீண்டாள்.

* * *

உலகம் பலவிதம்: 1951 நவம்பர் 23

"பருவத்தாலன்றிப்பழா"

அதிகாலையில் தனது இல்லத்தை யடைந்த கமலாட்சி அன்று பிற்பகல், வனசாட்சியின் இல்லத்திற்குச் சென்றாள்; வனசாவுந் தாயும் அவளை வழக்கம்போல் அன்புடன் உபசரித்தனர்; மகளே எங்கோ போயிருந்தாயாமே? போன இடத்தில் ஏதும் விசேஷ முண்டோ? என்று வனசாவுடைய தாயார் கேட்க, "ஆம், ஆச்சி, எங்கள் அண்ணரிடந் தான் போயிருந்தேன்; சுகமாயிருக்கிறார்; விவாக விஷயமாக அவருடன் பேசினேன்; இன்னுஞ் சிலகாலம் போகட்டும் என்று சொன்னார்; தீர்க்கமாக ஒன்றுஞ் சொல்லவில்லை" என்று நெட்டுயிர்ப்போடு சொன்னாள் கமலாட்சி. "ஆமாம், மகளே, உருவத்தால் நீண்ட உயர் மரங்களெல்லாம் பருவத்தா லன்றிப் பழா; என்று நீங்கள் தாமே படிக்கிறீர்கள்; ஆங்காலந்தான் எதுவும் ஆகும்" என்று சமாதானஞ் சொல்லிப் பெருமூச்சு விட்டாள் வனசாவின் மாதா. இருவரும் இப்படிப் பேசும்போது பக்கலிலிருந்த வனசாட்சி கவலை கூர்ந்தாளுமல்லள்; மகிழந்தாளுமல்லள்; "விநாயகப் பிரபு" என்று மெல்ல உச்சரித்து விட்டுச் சும்மாவிருந்தாள்; அவள் தாயைப் பணிவுடன் பார்த்து "அம்மா, தாகத்திற்கருந்த அக்காவுக்கு ஏதுங் கொண்டு வந்து கொடுங்கள்" என்று சொல்ல, தாய் "உன் அக்காவுக்கு மாத்திரமல்ல உனக்கும் ஏதும் கொண்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டு அடுக்களைப்பக்கம் போனாள்; அதற் கிடையிற் கமலாட்சி வனசாவிற்கு அதி சமீபத்திற் போயிருந்து கொண்டு அன்புடன் பார்த்து "ஏன்? தங்காய், என்னுடன் அதிகம் பேசுகின்றீரில்லை; ஏதும் மநஸ்தாபமோ" என்று இதமுற வினாவினாள்; "ஒரு மநஸ்தாபமுமில்லை, அக்கா, ஏன் அப்படிக் கேடகிறீர்கள்? நான் மாத்திரமல்ல, உலகத்திலே உங்களோடு எவரேனும் மநஸ்தாபப்பட முடியுமா? உங்கள் இதமான குணமும் நடையும் எல்லார்க்குங் கிடைப்பது அரிது" என்று உள்ளமுருகப் பன்னினாள் வனசா. மேலும் அவள் கமலாட்சியைப் பார்த்து "தாயாரோடு ஏதோ பேசிக் கொண்டிருந்தீர்கள்; அதனாற்றான் நான் இடையில் உங்களுடன் பேசவில்லை, அக்கா குறையெண்ணாதீர்கள்" என்று கனிவுடன் சொன்னாள்.

"விநாயகன் விட்டவழி"

"ஏதோ பேசிக்கொண்டிருந்தீர்கள்" என்று வனசாட்சி அலட்சியமாகச் சொன்னதையிட்டு வெகுவாகச் சிந்தித்துவிட்டு, கமலாட்சி பின்னரும் வனசாட்சியைப் பார்த்து "தங்காய், நான் அண்ணரிருக்கும் ஊரிற் போய் மீண்டு இன்று காலைதான் வீடுவந்து சேர்ந்தேன்; இதனாற்றான் உம்மிடம் சில தினம் நான் வரத் தவறினேன்" எனலும், "எல்லாரும் சுகமே யிருக்கிறார்களா" என்று வனசா வினாவ, ஆம் என்றாள் கமலாட்சி; வனசாட்சி சற்று பேசாமலிருந்துவிட்டு, பின்னர்க் கமலாவை மகிழ்ச்சியுடன் பார்த்து "அக்கா, இல்லறத்துட் புகுந்தால், வாழ்க்கைத் துணைவியா யுள்ளவள் அதனை இனிதுற நடத்த வேண்டும்; அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷயத்தில் முகமனல்ல, நீங்கள் சிறந்து விளங்குகிறீர்கள்; கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி யென்று பெரியார் வாக்கியத்திற்குத் தக நடந்து வருகிறீர்கள்; சொல்லுகிறேனென்று குறை யெண்ணாதீர்கள்; உங்கள் இல்லறம் இடையூறில்லாமல் இனிது நடைபெற வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தியுங்கள்; உங்கள் ஆன்மலாபத்தின் பொருட்டும் உழையுங்கள்" என்று முகத்திலே தேசஸ்விளங்கச் சொன்னாள்; "அப்படியே செய்கிறேன், தங்காய்" என்று கமலாட்சி சொல்லிவிட்டுச் சற்று நேரம் யோசித்தபின் வனசாவைப் பார்த்து "தங்காய், இல்லறமல்லது நல்லறமன்று யென்பார்களே, ஆனால் உமக்கு இல்வாழ்க்கைப்படும் நோக்கம் இப்போது இல்லையோ" என்று வினவினாள்; "அக்கா, அன்பர்களுக்கு நேரும் விக்கினங்களை நீக்கி அருள்புரியும் விநாயகன் என்னை எந்த வழியிற் செலுத்தப் போகிறானோ நான் அறியேன்; ஆனால் எனக்கு அந்த நோக்கம் இப்போது இல்லை அக்கா" என்று கூறினாள்; இப்படி வனசா சொல்லக்கேட்ட காமாட்சி பெருங் கலக்கங் கொண்டாளாய், ஆனால் அக் கலக்கத்தை வனசா அயிர்க்காதபடி வேறு விஷயங்களையிட்டுச் சில நேரம் பேசிக்கொண்டிருந்து, தான் இரண்டொரு தினத்தில் மீண்டு அங்கு வருவதாகச் சொல்லி வனசாவிடத்தும் தாயிடத்தும் விடை பெற்றுக்கொண்டு தன்னில்லத்திற்கு மீண்டாள்.

* * *

உலகம் பலவிதம்: *1951* நவம்பர் *27*

"பொன்னின் கத்தியென்று வயிற்றிற் குற்றுவதா"

"குட்டக் குட்டக் குனிகிறவனும் மூடன், குனியக் குனியக் குட்டுபவனும் மூடன் என்று ஊரிலே சொல்லுவார்கள்; எத்தனை நாளைக்கென்று, எத்தனை கிழமைக்கென்று, எத்தனை மாசத்திற்கென்று, எத்தனை வருடத்திற்கென்று, காத்துக்கொண்டிருப்பது? அவர்களுக்கென்ன! ஆண்பிள்ளைகள்; சேறு கண்டவிடத்தில் மிதித்துத் தண்ணீர் கண்டவிடத்துக் கழுவிக் கொண்டு போவார்கள்; பெண்பிள்ளை பெற்ற நாங்களும் அவர்களைப்போல இருக்க முடியுமா? மூலையிலிருந்து குமர்ப்பிள்ளை பெருமூச்சு விட்டால், அந்தப் பழி உங்களை என்னையல்லாமல் வேறு ஆரைப்போய்ச் சூழும்! சொந்த மச்சாள், சொந்த மச்சான் என்று பார்த்தால், மச்சான் வந்த பாடில்லை; உங்கள் மருமகன் சம்மதியாவிட்டால், இனி இந்தப்பிள்ளை நித்தியக் கன்னிகையாயிருந்து விடுவதா? உங்கள் மருமகனை விட ஊரிலே வேறு மாப்பிள்ளை கிடையாதா? சொந்தத்துக்குட் சம்பந்தம் நல்லதென்று நினைத்தோம்; அதற்கு மாப்பிள்ளை இடங்கொடுக்கவில்லை; இனியும் பேசாமலிருப்பதா? பொன்னின் கத்தியென்று வயிற்றிற் குற்றிக்கொள்வதா? கிட்டாதாயின் வெட்டென மற என்று நீங்கள் தானே சொல்லுவீர்கள்; இன்றைக்குப் போனபொழுது போகட்டும்; நாளை தொடக்கம் எங்கள் பிள்ளையின் கல்யாண விஷயமாக நீங்கள் ஏதும் முயற்சி செய்யாமலிருந்தால், உண்மையாகச் சொல்லுகிறேன்; நான் அடுப்பிலே நெருப்பு மூட்ட மாட்டேன்" என்று வனசாட்சியின் தாய் இராப் போசனம் முடித்துக்கொண்டு தலைவாசலிலிருந்த தன் கணவனுக்குத் தாம்பூலம் ஆயத்தம் பண்ணிக் கொடுக்கும்போது சிறிது கடுகடுத்துக் கவலையோடு சொன்னாள், மனையாள் சொல்லி முடிக்கும்வரை ஆறுதலோடு கேட்டுக்கொண் டிருந்த கணவனார் புன்சிரிப்புத் தோன்ற மனையாளைப் பார்த்து "என்னடியப்பா, ஏன் இவ்வளவு ஆரவாரம்? இப்பொழுது என்ன மோசம் போய்விட்டது? ஆத்திரப்படுகிறாய் பெண் புத்தியாலே; அல்லாமலும் நான் எங்கள் பிள்ளை விஷயமாக ஏதும் முயற்சி செய்யாமற் சும்மா யிருக்கிறேனென்று நீ எப்படிச் சொல்லலாம்; இப்போதைக்காகும் இன்னுஞ் சில நாள் கழித்தாகுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஏதும் ஆவதாகக் காணவில்லை; எனக்கு விசுவாசமான இரண்டொரு பெரிய மனுஷரிடம் எங்கேனும் தக்க வரன் அகப்பட்டாற் பேசி யொழுங்குபண்ணுங்கள் என்று சொல்லியிருக்கிறேன்; அவர்களும் இரகசியமாக அந்தக் கருமத்தில் முயற்சி செய்கிறார்கள்" என்று கணவன் சொல்லி முடிப்பதற்கிடையில், சற்றுத் தூரத்தில் நின்ற மனையாள் சமீபத்தில் வந்து நின்று "ஐயோ! அப்படியோ செய்தி? எனக்குத் தெரியாது; நீங்கள் இந்த விஷயமாகச் சிந்தனையின்றிச் சும்மா விருக்கிறீர்களென்றல்லவோ எண்ணி விட்டேன்; கடுகடுத்துப் பேசி விட்டேனென்று குறையெண்ணாதீர்கள்; ஒருநாளும் அப்படி உங்களோடு பேசாத நான் இப்போது அப்படிக் கடுகடுத்துப் பேசியமை வேறொன்றுமல்ல; எங்கள் பிள்ளை சில நாளாகக் குளிப்பதும் அநுட்டானம் பார்ப்பதும், விரதம் பிடிப்பதும், பிள்ளையாரைக் கும்பிடுவதும், தோத்திரம் பண்ணுவதும், பிள்ளையாருக்குச் சாத்தப் பூ எடுத்து மாலை தொடுத்துக் கொடுப்பதுமாகக் காலம் கழிக்கத் தலைப்பட்டுக்கொண்டாள்; எங்கள் சந்ததி வழங்கப்பிறந்த ஒரேயொரு மகள், பொல்லாத காலத்தினால் கல்யாணத்தை வெறுத்துச் சந்நியாசி ஆண்டி பரதேசியாய்ப் போய்விட்டால், பிறகு நாங்கள் என்ன செய்வது என்பதை யெல்லாம் எண்ணித்தான் நான் கொஞ்சம் கடுமையாகப் பேசிவிட்டேன்" என்று சமாதானஞ் சொன்னாள்.

"நெருப்பில்லாமற் புகையாது"

"பெண்ணே, நல்ல கருமத்தை நாமாகக் குழப்பக்கூடாது; நாமாக வேண்டாமென்று சொல்ல வொண்ணாது; நம்மால் இடையூறு நேர்ந்ததென்று மற்றையோர் சொல்ல வைக்கப்படாது என்று எண்ணியெண்ணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை காலமும் பேசாமலிருந்தேன்; மருமகன் இந்த விஷயத்தில் அலட்சியஞ் செய்கிறான்; எங்கள் பிள்ளையில் அதிக அன்புள்ள கமலாட்சியும் இரண்டொருமுறை தன் தமயனிடம் போய் இந்த விஷயமாக ஏதோ பேசியதென்றும், அதற்கு அவன் தவணையிட்டுக்கொண்டு வருகிறானென்றுங் கேள்விப்பட்டேன்; அந்தப் பிள்ளையும் என்ன செய்வாள்! பாவம்! உண்மையைச் சொல்லத் தயங்குகிறாள்; இதற்கிடையில் நான் வேறொரு விஷயங் கேள்விப்பட்டேன்; அது நிசமாகத்தானிருக்க வேண்டும்" என்று கூறுவதற்கிடையில் "என்ன விஷயம்? எனக்கு ஒளியாமற் சொல்லுங்கள்" என்று மனையாள் ஆவலுடன் வினாவக் கணவன் சொல்லுகிறார்; "ஆங்கிலம் படித்துப் பட்டம் பெற்றவளாம்; எங்கோ ஒரு கல்லூரியிற் படிப்பிப்பவளாம்; அதிக சம்பளமாம்; குலங்குடியிற் பிறந்தவளாம்; பேரழகுடையவளாம்; குணமானவளாம்; இந்தக் கால உலகப்போக்குக்கு ஏற்க ஊடாடத் தக்கவளாம்; இருவரும் பரஸ்பரம் காதல் கொண்டுவிட்டார்களாம்; மருமகன் அவளிருக்குமிடத்திற்குப் போவதாம்; அவள் இவருடைய வாசஸ்தானத்திற்கு வருவதாம்; இப்படியெல்லாம் எனக்கு வந்து சொன்னவர் என்னிடத்தில் மிக விசுவாசமுள்ளவர்; எங்கள் குடும்பம் நல்லாக வாழவேண்டுமென்ற நோக்கங் கொண்டவர்; ஆனதினால் அவர் சொன்னது நிசமென்று தான் நினைக்கிறேன்; நெருப்பில்லாமற் புகையாது; இவைகளெல்லாவற்றையும் யோசித்துவிட்டுத்தான், இந்தச் செய்தியைச் சொன்ன நண்பரிடத்தில் எங்கள் பெண்ணுக்கு ஒரு தக்க மாப்பிள்ளை பேசி வரும்படி சொன்னேன்; அவர் ஏதோ ஒழுங்கு செய்துகொண்டு நாளைக்கு எங்கள் வீட்டிற்கு வருவார்; நீ கவலைப்படாதே, ஆத்திரப்படாதே; தாரமுங் குருவுந் தலைவிதி யென்பர்" என்று தன் மனைவிக்கு ஆறுதல் கூறினார்.

"ஆணுக்கு ஆண் ஆசைப்படக்கூடிய தோற்றம்"

கல்யாணம் பேசுபவர் அடுத்த நாள் மத்தியானத்தின் மேற்றான் வனசாட்சி வீட்டில் வந்து சேர்ந்தார்; வந்தவர் புதியவரல்லர் பழைய முருகரம்மானாவர். அவரை வனசாவின் பெற்றார் பெரிதும் உபசரித்திருத்தினர்; வந்தசிரமந் தீரப் பசிதாகத்திற்கு ஏதும் அருந்தலாகுமே யென வனசாவின் தாய் ஆதரவுடன் கேட்டபோது, தமக்கு அப்போது பசியுமில்லை தாகமுமில்லை, எல்லாம் பிறகாகட்டும் என்று முருகரம்மான் சொன்னார்; "அம்மான் ஏதும் விசேஷமில்லாமல், இங்கு வரமாட்டீர்களென்பது தெரியும்; ஏதுமுண்டானாற் சொல்லுங்கள்" என்று வனசாவின் தகப்பன் கேட்க, "அந்த முருகனை முன்னிட்டுக்கொண்டு இந்த முருகன் புறப்பட்டால் முடியாத காரியமுமுண்டோ" என்று அடியிட்டுக்கொண்டு முருகரம்மான் சொல்லத் தொடங்கினார்: "தம்பீ, அதிகஞ் சொல்வதென்ன எல்லாப் படியிலும் உங்களோடு ஒத்துவரக் கூடியது; இதுபோல் நல்ல சம்பந்தம் இனிமேற் கிட்டாதென்று சொன்னாலும் பிழையல்ல; ஒரு வழியில் உங்களுக்கும் இனமானது; ஆனால் நீங்களும் அவர்களும் நீடித்த காலம் கொண்டாடாமல் விட்டுவிட்டீர்களே யொழிய, உங்களைப்போலவே அவர்களும் போகாதவிடத்திற் போகவில்லை; இறங்காத குடும்பத்தில் இறங்கவில்லை; பெற்றாருக்கு ஒரேயொரு ஆண்பிள்ளை; அதனால் அவர்கள் அதிக பணஞ் செலவிட்டுப் பிறவூருக்கு அனுப்பிப் படிப்பித்தவர்கள்; உயர்தரப்படிப்பு, பெரிய ஒரு பள்ளிக்கூடத்திலே உபாத்தியாயராகக் கடமை பார்க்கிறார்; அருமையான குணம், நல்ல ஒழுக்கம், பெருந்தன்மையான நடை, ஆணுக்கு ஆண் ஆசைப்படக்கூடிய தோற்றம்; பரம்பரையாக மற்சமாமிசம் புசிப்பதில்லை; தெய்வ வழிபாடு விரதங்காத்தல் முதலிய செய்கைகளெல்லாம் உங்களையொத்தனவாகும்; பல இடங்களிலுமிருந்து பெண்பேசி வருகிறார்கள்; பெண்பிள்ளை பெற்றவர் சிலர் என்னிடத்திலும் அந்த மாப்பிள்ளைக்கு மணம் பேசச் சொன்னார்கள்; ஆனால் ஒத்த குலம் மரபு சமயம் ஒழுக்க மென்னுமிவைகளைப் பாராமற் பணத்திற்கு ஆசைப்பட்டு, பெண்ணின் பேரழகுக்கு ஆசைப்பட்டு மாத்திரம் சம்பந்தம் பேசிச்செய்து வைத்தால், அந்தக் குடும்பம் பெரும்பாலும் ஒற்றுமையாக வாழாமற் பிரிந்து போனதையும், தாபரிப்பின் பொருட்டு வழக்காடினதையும் என் அனுபவத்தில் அறிவேன் தம்பீ" என்றார்; "மாப்பிள்ளையின் பெயரென்ன? பெற்றாரிருக்கிறார்களா" என்று வனசாவின் தாய் முருகரைக் கேட்க, "பெயர் கிருஷ்ணமூர்த்தி; பெற்றார் சுகமேயிருக்கிறார்கள்" என்று பதில் சொன்னார் முருகர். "எந்தவூர் எந்தப் பகுதி" என்று வனசாவின் பிதா வினாவ, முருகர் ஊரையும் அவர்கள் மரபு முதலியனவற்றையும் விபரமாகச் சொல்லி, தம்பீ உங்களை அவர்கள் நன்கறி வார்கள்; உங்கள் மகளிடத்துள்ள விசேஷங்களையும் உணர்வார்கள்; ஆனால் நீங்கள் உங்கள் பெண்ணைச் சின்ன வயசு தொடக்கம் சொந்த மைத்துனனுக்கே நிச்சயித்திருக்கிறீர்களென அறிந்து, இவ்வளவு காலமும் பேசாமலிருந்தார்கள்; அது நடப்பதாகக் காணவில்லையென்று அறிந்தவுடனே, எதுவிதத்திலும் இந்தச் சம்பந்தத்தை ஒழுங்குசெய்து வைக்க வேண்டு மெனக் கேட்கிறார்கள். மாப்பிள்ளையின் தகப்பனைக் காட்டிலும் தாய்தான் இந்தச் சம்பந்தத்தை அதிகம் விரும்புகிறாள்; ஏதோ விதியும் இப்படித்தான் இருக்கிறதோ யார் அறிவார்" என்று சொல்லிமுடித்தார் முருகர்; "ஆம் அம்மான், பெண் வழியார்தாம் எங்களுக்கு இனம்" என்று வனசாவின் பிதாச் சொன்னார், "அம்மான் வெயில் தணிந்த பின் பொழுதுபட நீங்கள் உங்கள் வீட்டிற்குப் போகலாந்தானே" என்று வனசாவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் கேட்க, "உங்கள் விருப்பப்படி செய்கிறேன்" என்றார் முருகர், "அம்மான் இப்பொழுது ஆவசியகம் போகவேண்டியதில்லை; அவர் இங்கிருப்பார்; ஆனால் நீ விஷயம் முழுவதையும் மகளுக்கு ஆறுதலாகச் சொல்லி, மகளின் விருப்பத்தை நல்லாய் உசாவி வந்து எனக்குச் சொல்லு" என்று மனைவிக்குச் சொல்ல, மனைவி ஓம் என்று சொல்லிவிட்டு, மகளிருக்கும் அறையுட் சென்று விஷயம் முழுவதையும் அன்போடும் ஆதரவோடும் சொல்லி மகளின் சம்மத்தைக் கேட்க, மகள் "எல்லாம் அந்த விநாயகன் திருவுளப்படி நடக்கும், அம்மா, எங்களால் ஆவதொன்றில்லை" என்று சொன்னாள்; கேட்ட தாய் உள்ளமுடைந்து "என்பிள்ளை சொல்வதைத் தகப்பனுக்கு நான் எப்படிப் போய்ச் சொல்வது" என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.

"உம்மைப் பார்க்க வேண்டுமாம்"

முதனாளே மோட்டரதத்திற்கு ஒழுங்கு பண்ணியிருந்த கமலாட்சி, வெள்ளிக்கிழமை அதிகாலையில் தங்கள் பணிப்பெண் இலட்சுமியையும் உடன் ஏற்றிக்கொண்டு மோட்டரதத்திற் புகைரதஸ்தானத்திற்குப் புறப்பட்டுப் போனாள்; புகைரதம் அன்று அரைமணி நேரம் பிந்தி வந்தது. புகைரதம் வந்து தானத்திலே தங்குவதற்கு முந்தியே ராதா கமலாட்சியைக் கண்டாள்; கமலா ராதாவை அவதானித்துக் கொண்டாள்; உடனே கமலா இலட்சுமியோடு இராதா இருக்கும் வண்டியின் வாசலை யடைந்து அவளையுந் தாயையும் இறங்கச் செய்து, அவர்கள் கொண்டுவந்த பொருள்களையும் இலட்சுமியைக் கொண்டு எடுப்பித்துக்கொண்டு இன்சொற்கூறி மகிழ்ச்சியோடு இருவரையும் இரதத்திலேற்றிச் சில நிமிஷங்களில் தங்கள் வீட்டிற் கொண்டுவந்து சேர்த்தாள்; கமலா ரதச் சாரதிக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்து விட்டு "இந்தத் தங்கச்சியும் அம்மாவும் ஊர் சுற்றிப் பார்க்கவேண்டும்; ஆனதால் இன்று பின்னேரம் மூன்று மணிக்குப் பிந்தாமல் இரதங்கொண்டு வரவேண்டும்" என்று சொல்லுதலும் "ஓம்; கொண்டு வருகிறேன், அம்மா" என்று சொல்லி உத்தரவு பெற்றுக் கொண்டு அவன் தன்னிடத்திற்கு மீண்டான்; கமலாட்சி தன் வீட்டிற்கு வந்த விருந்தினராகிய இருவருக்குஞ் செய்த உபசாரங்களைச் சொல்லப்புகின் விரியும்; ராதாவின் வருகையைக் கமலா முதனாளே தன்னயலிலுள்ள பெண்களுக்குச் சொல்லி யிருந்தமையினால், அப் பெண்களும் அன்று அங்கே வந்து ராதாவைக் கண்டு மெச்சினார்கள்; கமலா தன்னிடத்திற்கு வந்தபோது தான் இவ்வளவு உபசரணை செய்யவில்லையே என்று கவலைப்பட்டாள் ராதா. பிற்பகல் மூன்று மணியாதலும், சங்கேதப்படி மோட்டரதம் அங்கே வந்தது; விரைவிற் செய்ய வேண்டிய ஆயத்தங்களைச் செய்துகொண்டு ராதா, அவள் தாயாகிய நல்லமுத்தம்மை கமலாட்சி மூன்றுபேரும் ரதத்திலேறினார்கள்; ரதம் பட்டினப்பக்கமாகப் புறப்பட்டுப் போகும் போது, ராதா கமலாவைப்பார்த்து "அக்கா, உங்கள் மைத்துனி வனசா வீடு தூரத்திலா? சமீபத்திலா? அவரை ஒருமுறை பார்க்க நான் ஆசைப்படுகிறேன்" என்று இதமாகச் சொல்லுதலும், "தங்காய் அந்தவீடு சமீபத்திற்றான்; அங்கேதான் இப்பொழுது போகிறோம்" என்று பதில் சொல்லிவிட்டு, அந்த வீட்டு வாசலிற் போனவுடனே ரதம் நிற்கட்டும் என்று சாரதிக்குச் சொல்ல, அவன் அப்படியே கொண்டுபோய் நிறுத்தினான்; இருவரையும் இறங்கச் செய்து தானுமிறங்கி யழைத்துக்கொண்டு முற்பட்டுச் சென்றாள் கமலா; தலைவாசலில் வனசாவின் தகப்பனும் முருகரம்மானும் ஏதோ பேசிக் கொண்டிருந்தனர்; வனசாவின் தாய் அயலிலே ஒதுங்கி நின்றாள்; இந்த மூவரும் வரக் கண்ட மாத்திரத்தே அந்த இருவரும் இருக்கை விட்டெழுந்து வாருங்கள் என்று வரவேற்க, வனசாவின் தாய் அம்மூவரையும் எதிர் சென்று இன்சொற்கூறி வீட்டினுள் அழைத்துச்செல்ல, அதனைக் கண்ட வனசாட்சி மலர் முகங்காட்டி இன்சொற் கூறி அம் மூவரையும் தன்னறையிலுள்ள ஸோபாவில் இருக்கச் செய்து வந்தவர்கள் யாரென்று அறியக்கொண்ட ஆவலுடன் நிற்றலும், கமலாட்சி "இந்தத் தங்கைச்சி உம்மைப் பார்க்கவேண்டுமாம்" என்று ராதாவைக் காட்டிச்சொல்ல, ராதா எழுந்து வனசாவின் கையை மிருதுவாகப் பற்றி "நாங்கள் இப்படியிருப்போம் என்று சொல்லி அறையில் இருந்த வனசாவின் படுக்கையில் அவளையும் இருத்தித் தானும் அண்மையிலிருந்தாள்; ராதாவும் வனசாவும் ஒருவரை யொருவர் இமைத்தலின்றிச் சிறிது நேரம் அன்பு பெருக நோக்கினர்;

"உற்றது சொன்னால் அற்றது பொருந்தும்"

சற்று நேரம் சம்பாஷித்த பின் வனசாவின் தாயும் ராதாவின் தாயும் வெளியே போய்ப் பேசிக் கொண்டிருப்ப, வனசாவும் ராதாவும் கமலாவுமே அந்த அறையிலிருந்து அன்பாக வார்த்தையாடினார்கள்; இதற்கிடையில் கமலா ராதாவைப் பற்றித் தான் அறிந்த வரையில் வனசாவிற்குப் புகழ்ந்து சொன்னாள்; ஸோபாவில் வனசாவுக்கும் கமலாவிற்கும் நடுவேயிருந்த ராதா வனசாவைப் பார்த்து "தங்காய், உம்மைக் காணவேணும் காணவேணுமென்று பலநாட்காத்திருந்தேன்; இன்று கண்டு ஆனந்தமடைந்தேன்; உங்கள் அருமை மைத்துனி கமலா உங்களைப்பற்றியெல்லாம் எனக்குச் சொல்லியிருக்கிறார்; என் அறியாமையினால் உமக்கு நான் ஒரு பெருந் துரோகஞ் செய்துவிட்டேன்; உற்றது சொன்னால் அற்றது பொருந்துமென்பர்; ஆனதால் நான் உமக்குச் செய்த பிழையைச் சொல்லி உம்மிடம் பொறுதி கேட்டு உமது அன்பையுஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினேகத்தையும் பெற்றுப் போகும்படி தான் இன்று இங்கு வந்தேன்" என்று பரிவுடன் சொன்னாள்; கேட்டுக்கொண்டிருந்த வனசா திடுக்குற்றாள்; அற்புத மடைந்தாள்; மெல்ல யோசித்தாள்; அக்கா உங்களை முதன்முதல் இன்றைக்கே காணும் பாக்கியத்தைப் பெற்றேன்; ஆநந்தமுற்றேன்; இப்படியிருக்க எனக்கு நீங்கள் பிழை செய்ததென்றும் பொறுதி கேட்க வந்த தென்றுஞ் சொல்வது சற்றேனும் பொருந்தாதே! என்ன, அக்கா, என்னைச் சோதிக்கின்றீர்களா? இல்லையேல் வேடிக்கையாகப் பேசுகின்றீர்களா? உங்களுடைய அருமையான குணத்தையும் இதமான நடையையும் கல்வியறிவையும் உத்தேசிக்குமிடத்தில் எனக்கு மாத்திரமல்ல, நீங்கள் உலகத்திலே எவர்க்கேனும் எவ்வகையான குற்றமுஞ் செய்யமாட்டீர்களென்பது புலப்படுகிறது; இப்படியிருக்க, ஏன், என் அருமையான அக்கா, எனக்குக் குற்றஞ் செய்ததென்றும் பொறுதி கேட்க வேண்டுமென்றுஞ் சொல்லி என்னைப் பிரமிக்க வைக்கிறீர்கள்" என்று அன்பு பெருக வினாவினாள் வனசாட்சி.

உலகம் பலவிதம்: *1951* நவம்பர் *30*

"சிந்தனையால் வந்த தோஷம்"

"உண்மையிற் குற்றஞ் செய்தமையினாற்றான் பொறுதி கேட்கிறேன்; நெஞ்சை யொளித்தொரு வஞ் சகமில்லையல்லவா! நான் உமக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்து என்னையும் உம்முடைய சகோதரமாகப் பாவித்து என்னை இன்றுமுதல் அதிக அன்பு பாராட்டி நடக்கவேண்டும், என் அருமைத் தங்காய்" என்று உள்ளமுருகச் சொன்னாள் ராதா, "நீங்கள் குற்றஞ் செய்தாலல்லவோ நான் பொறுப்பது" என்று வனசா பரிவுடன் சொன்னாள்; "செய்த குற்றத்தை இன்னதென்று சொன்னாற்றானே பொறுக்கலாம்" என்றாள் கமலாட்சி; "என் அரிய தங்காய், சின்னவயசு தொடக்கம் உமக்கென்றே பெற்றார் பெரியோர் கல்யாணஞ் செய்ய நிச்சயித்திருந்த உமது மைத்துனருக்கு நான் வாழ்க்கைத் துணைவியாய் வர விரும்பினேன்; பின்புதான் உண்மையை யறிந்தேன்; இதன் பொருட்டுப் பச்சாத்தாபப் படுகின்றேன்; இது சிந்தனையால் வந்த தோஷம்; அறிந்த நேரந்தொடக்கம் இந்தத் தோஷம் என்னுள்ளத்தைப் போழ்கின்றது; இத்தோஷத்தை நீர் பொறுத்து அன்பு செய்தாலொழிய என் மனம் ஆறாது" என்று பரிவுடன் சொல்லி, ராதா, வனசாவின் இரு கரங்களையும் மிருதுவாகப் பற்றித் தன் கண்களில் ஒற்றும் போது, அவளுடைய கண்களிலே துளித்த கண்ணீரால் வனசாவின் கை நனைந்தது; வனசா பதைபதைத்து அவள் கரங்களைத் தான் பற்றி முத்தமிட்டு, "அக்கா, நீங்கள் குற்றஞ் செய்யாவிட்டாலும், நான் பொறுத்துக் கொண்டேன்; பொறுத்துக்கொண்டேன்; கலங்கா தீர்கள்; என்னையும் கலங்க வைக்காதீர்கள்; அன்பு உள்ளத்தை வருத்துவதல்லாமல் அன்பு மனத்தை வருத்துவதை இன்று உங்கள் விஷயத்திற் கண்டேன்" என்று சொல்லி ராதாவைத் தேற்றினாள்; இவர்கள் செயலைக் கண்டு கமலா அற்புதப்பட்டாள். பின்னரும் ராதா வனசாவைப் பரிவுடன் பார்த்து "என் அருமைத் தங்காய்; நான் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொண்டேன் என்று நீர் மனசாரச் சொன்னாலொழிய என் மனஞ் சமாதானப்படாது; ஆனதினால் அப்படிச் சொல்லும்" என்று வனசாவின் கரங்களைத் தன் கரங்களாற் பற்றியபடி கவலைகூர நின்றாள்; இதனைப் பார்த்துக்கொண்டிருந்த கமலாட்சி வனசாவைப் பார்த்து "தங்காய், உமது அக்காள் கேட்கிறபடி ஒருதரஞ் சொல்லிவிடலாமே" எனலும் வனசா சற்று நேரஞ் சஞ்சலத்துடன் நின்று யோசித்தாள்; உடனே வனசா முகத்தில் மலர்ச்சி தோன்ற புன்முறுவல் அரும்ப, அன்பு பெருக ராதாவைப் பார்த்து "அக்கா, உண்மையில் நீர் ஒரு பிழை செய்திருந்தாலும், என்னைப் பொறுதி கேட்பதும், நான் அதை ஏற்பதும் பொருந்தாது; எல்லாப் பிழையும் பொறுத்தருள்பவன் சிவனே" என்று கூறி வனசா, பின்வருமாறு தோத்திரஞ் செய்தாள்

"சொல்லால் வருங்குற்றஞ் சிந்தனையால் வருந்தோடஞ் செய்த
பொல்லாத தீவினை பார்வையிற் பாவங்கள் புண்ணிய நூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிருந் தீங்குக ளாயவுமற்
றெல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே"

என்று படித்தபின் இருவரும் மனம் ஆறினர்; கமலாட்சியுஞ் சந்தோஷப்பட்டாள்; வனசாவின் தாய் வந்தவர்களுக்குச் சிற்றுண்டி முதலியன வழங்கினாள்; ராதாவின் தாயிடமிருந்து அவர்கள் குடும்பவரலாறு முதலியனவற்றை யெல்லாம் கேட்டறிந்து கொண்டாள்; ராதா வனசாவிடந் தாங்கள் போதற்கு விடை கேட்டபோது "ஏன் அக்கா, உங்களை விட்டுப் பிரிய மனஞ்சகியேன்" என்றாள் வனசா; "இப்பொழுது உத்தரவு கொடுங்கள்; நாளைக்கு உன் அக்காளையுங் கூட்டிக்கொண்டு இங்கே வருகிறேன்" என்றாள் கமலாட்சி; "அப்படியானால் நாளைக் காலையே தவறாமல் இங்கு வந்திடுங்கள்; காத்திருப்பேன்"; என்று வனசா கனிவுடன் கூறினாள்; அடுத்தநாள் வருவதாகச் சொல்லிவிட்டு ராதா, தாய், கமலாட்சி மூவரும் அவர்களிடம் விடைபெற்று ரதத்திலேறிச் சென்றார்கள்.

"உடன்பட்டாற் கண்டுகொள்கிறேன்"

வனசாவின் தாய் தனது கணவனும் முருகரும் பேசிக்கொண்டிருக்குமிடமாகிய தலை வாசற் பக்கம் வந்தாள்; வந்தபோது கணவன் மனைவியை நோக்கிச் சம்பந்த விஷயமாக மகளின் சம்மதம் என்ன வென வினாவியபோது மகள் தனக்குக் கல்யாணமே வேண்டாம் எனப் பிடிவாதஞ் செய்கிறாள் எனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையுடன் சொன்னாள்; அப்படியானால் வேறு என்ன செய்யப் போகிறாளாம், வாழ்நாள் முழுவதும் ஒன்றியாக ஒரு இளம்பெண் இருக்க முடியுமாமோ? என்று கவலையுடன் கணவன் கேட்க, மனையாள் மனம்வருந்தி "நான் எத்தனை புத்தி சொன்னாலுங் கேட்கின்றிலள், ஏதோ பிள்ளையார் தனக்கு வழி காட்டுவார் என்று சொல்லிக்கொண்டிருக்கிறாள்" எனக் கவலையுடன் கூறினான்; அப்பொழுது அங்கிருந்த முருகர் இருவரையும் பார்த்து, "கேட்கிறேனென்று வித்தியாசமாக எண்ணாதீர்கள்; பிள்ளையின் மனம் இப்படி மாறுபட்டதற்கு ஏதுவென்ன" என்று வினாவ, ஏது வேறொன்றுமல்ல, தான் காத்திருந்த சொந்த மைத்துனன் பத்மநாதன் தன்னைக் கல்யாணஞ் செய்யாது தவணையிட்டு வருவதுதான் காரணம்" என்று கவலைகூரச் சொன்னார் வனசாவின் தகப்பனார்; "அந்த மாப்பிள்ளை மறுத்தால், நான் இப்பொழுது பேசிக்கொண்டு வந்திருக்கும் இந்த மாப்பிள்ளையைச் செய்யலாமே, மகளுக்கு விஷயத்தைச் சொல்லிப் பாருங்கள்" என்று முருகர் கூறுதலும் "அவள் வாழ்க்கைப்பட்டால் தன் சொந்த மச்சானுக்கே வாழ்க்கைப்படுவாள்; இல்லையேல் ஒன்றியாகத் தானிருப்பாள்; இதுவே அவள் கொண்ட நோக்கம், அம்மான்"! என்று கண்களில் நீர் ததும்பச் சொன்னாள் வனசாவின் தாய்; "சொந்த மச்சாளைக் கல்யாணஞ் செய்வதற்கு உங்கள் மருகன் மறுக்க ஞாயமென்ன? ஏதுந் தெரியுமோ" என்று முருகர் மீட்டும் கேட்க, "அவள் யாரோ அதிகம் படித்த ஒரு பெண்ணை, எங்கோ ஒரு கல்லூரியில் ஆசிரியையாகவிருந்து வேதனம் பெறுங் கன்னிகையைக் கல்யாணஞ் செய்யப் போகிறான் என்று கேள்விப்பட்டேன்; அதுதான் காரணம் போலும்" எனக் கவலையுடன் சொன்னார் வனசாவின் தந்தை. "அம்மான், ஊரில் ஆயிரக்கணக்கான சம்பந்தத்தைப் பொருத்திவைத்த உங்களுக்கு இது ஒரு பெரிய காரியமல்ல, எங்கள் மருமகனிருக்கு மிடத்திற்குப் போய்க் கருமங்களையெல்லாம் விபரமாகச் சொல்லி இந்தச் சம்பந்தத்தைப் பொருத்தி நிறைவேற்றி வைப்பீர்களானால் உங்களுக்குக் கோடி புண்ணியங் கிடைக்கும்" என்று பரிபவத்துடன் சொன்னாள் வனசாவின் தாய். முருகர் வெகுநேரம் யோசித்தபடி யிருந்தார், "ஏதோ, முருகனருளை முன்னிட்டுக் கொண்டு உங்கள் மருமகனிடம் போய்ப் பேசிப்பார்க்கிறேன்; உடன்பட்டாற் கண்டுகொள்கிறேன்; ஆனால் நான் இப்பொழுது பேசிவந்த மாப்பிள்ளையைப் பற்றி முற்றென்ன" என்று முருகர் கேட்க, "அந்த மாப்பிள்ளைக்கும் ஒரு பெண்ணை ஆண்டவன் படைத்திருப்பான்றானே" என்றார் வனசாவின் பிதா; பத்மநாதனிருக்கு மிடத்திற்கு அடுத்த நாட்காலை தாம் புறப்பட்டுப் போவதாகச் சொல்லிவிட்டு முருகர் தம்வீட்டிற்கு மீண்டார்.

"எந்த நேரமும் மறவாமலிருக்கவேண்டும்"

அடுத்தநாட்காலை 8 மணியாதலும் கமலாட்சியும் ராதாவும் வனசா வீட்டில் வந்து சேர்ந்தார்கள்; அவர்கள் வரவை எதிர்பார்த்த வண்ணமிருந்த வனசா விரைந்து வந்து அவர்களை யழைத்துச் சென்று உபசரித்தாள்; ராதாவின் தாயும் வனசாவின் தாயும் தங்கள் பரம்பரை வரலாறுபற்றிப் பேசிக்கொண்டு வேறாக இடத்திருப்ப, வனசா கமலா ராதா என்னும் மூவரும் வனசாவின் அறையிலிருந்து அன்பாக வார்த்தையாடினார்கள்; வனசா ராதாவிடத்துள்ள அன்பினைத் தன் கண்களாற் பருகுவாள் போல் ஆர்வம் பெருகநோக்கி "என் அருமையான அக்கா, ஒன்று சொல்லுகிறேன் கேளுங்கள், நிசமென்று நினையுங்கள்; உங்களை ஒரேயொரு நாள் மாத்திரம் கண்டு உங்களுடன் பேசினேன்; ஆனாலும், உள்ளநாள் முழுவதும் உங்களோடு பயின்று ஊடாடினால் எவ்வளவு அன்பும் விசுவாசமும் இருக்குமோ, அப்படியான அன்பும் விசுவாசமும் எனக்கு உங்கள்மேல் உண்டாகி விட்டன; காரணமென்ன என்பது எனக்குப் புலப்படவில்லை; நீங்கள் ஊருக்கு மீண்டால் நான் உங்களைப் பிரிந்து சஞ்சலத்துடன் இருக்கத்தான் நேரும்" என்று அன்புங் கவலையும் பெருகச் சொன்னாள்; கேட்ட ராதா உள்ள முருகினளாய் வனசாவின் வதனத்தைத் தன் மிருதுவான கரத்தினால் தடவிக்கொண்டு "என்னாருயிர் போன்ற தங்காய், உடன் பிறந்தார் தாம் சுற்றத்தாரென்று எப்போதும் எண்ணியிருக்க வெண்ணாது, உடன்பிறவா மாமலையிலுள்ள மருந்தே பிணிதீர்க்கும்; அம்மருந்து போல்வாரு முண்டு; உம்மைப் போன்ற உற்றவருக்கு உண்மையைச் சொல்லாவிட்டால் நான் துரோகி யாவேன்; இந்தக் கமலக்கா உம்மைப்பற்றிச் சொல்ல என்று கேட்டேனோ அன்று தொட்டு உம்மைக் காணவேணும் உம்முடன் அன்பாகப் பேசவேணுமென்ற ஆசை நேற்று மின்றுந்தான் ஒரு அளவிற்குப் பூர்த்தியானது உமக்குமாத்திர மல்ல, எனக்கும் உம்மை விட்டுப் பிரிந்து போவது இயலாமலேயிருக்கிறது; இது நிசம், நான் செய்தபிழையையும் பொறுத்துக் கொண்டீர்; தங்காய் உம்மையொன்று கேட்கின்றேன்; இசைவீரா" என இனிமையுடன் கேட்க, "அக்கா, நீங்கள் கேட்டால் நான் இசையாமலிருக்க முடியுமா? ஆனாலும் எனக்கு இசைவானதையே கேளுங்கள்" என்று கிள்ளைபோற் பன்னினாள் வனசா; "வேறொன்றுமல்ல, தங்காய், என்னை உமது உடன் பிறந்தாளாக மதித்து எந்த நேரமும் மறவாமலிருத்தல் வேண்டும்" என்று ராதா கேட்க, "அக்கா, இதற்கா இவ்வளவு அடியிட்டீர்கள்? இப்படிக் கேட்கும் நீங்கள் என்னை மறந்தாலும் நான் உங்களை மறக்கப் போவதில்லை" என்று மனமுருகச் சொன்னாள் வனசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐங்கரனருளால் மங்கலமுண்டாம்"

ராதா முகமலர்ச்சியுடையளாய்ப் புன்னகையரும்ப வனசாவைப் பின்னரும் ஆர்வம் பெருக நோக்கி, "தங்காய், இன்னும் எனக்கொரு வரந் தருவீரா" என்று இதமாகக் கேட்க "அக்கா, உங்களுக்கு வரந்தர நான் என்ன தெய்வமா? வரங்கேட்பதை விட்டு, இன்னதைச் செய்யென்று உங்கள் தங்கைக்குக் கட்டளை யிடுங்கள்" என்று கனிவுடன் பன்னினாள் வனசா; "சொன்னாற் செய்வீர்தானே தங்காய்" என்று ராதா மீளவும் வினாவ, "செய்யாமலிருக்க முடியுமா, அக்கா" என்றாள் வனசா; "என் கண்போன்ற அருமைத் தங்காய், நான் சொல்வதைத் தட்டாமல், நான் செய்த பிழையை யெல்லாம் மறந்து நீர் உமது சொந்த மைத்துனர்க்கு வாழ்க்கைத் துணைவியாக வேண்டும் இதுதான் உமது அக்கா உம்மிடம் வேண்டிக்கொள்ளுவது" என்று ராதா பகர்ந்தாள்; இதற்கிடையில் அயலிலுள்ள பிள்ளையார் கோவிற் பெரிய மணியின் ஓசை சேட்டது; "கோயில் மணியோசை கேட்கின்றது, நல்ல சகுனம்" என்றாள் கமலாட்சி. ராதா சொன்னதைக் கேட்ட மாத்திரத்தே வனசா, திடுக்கிட்டாள், ஏங்கினாள், கலங்கினாள், கண்ணீர் கலுழ்ந்தாள்; நெட்டுயிர்த்தாள்; "அக்கா, என்னைச் சோதிக்கிறீர்களா? ஒருவர்க்கு வாழ்க்கைத் துணைவியாய்ப் புகுவதில்லையென நிச்சயித்துக் கொண்டேன்; ஐங்கரக் கடவுளுக்கு அடிமையாகத் தொண்டு பூண்டு நற்கதியடைய நோக்கங் கொண்டேன்; ஆதலால், என் அரிய அக்கா, இந்த ஒரு கேள்வியையுந் தவிர வேறு எதனையுங் கேளுங்கள்; உடனே நான் செய்கிறேன்; என்னக்கா, மனம் வருந்தாதீர்கள்; என்னை வருத்தாதீர்கள்" என்று ராதாவை இரந்தாள் வனசா. பதில்சொல்ல முடியாது நின்று தயங்கினாள் ராதா; இதற்கிடையில் "வாருங்கள் மக்காள், உங்களுக்குக் கதையென்றால் உணவும் வேண்டாம் போலும், சரி, எழுந்து ஏதும் ஆகாரம் உட்கொண்டு விட்டுப் பின்பு மிருந்து அன்பாகப் பேசுங்கள்" என்று வனசாவின் தாய் கேட்க, மூவரும் எழுந்து கிணற்றண்டை சென்று முகம் கால் கை சுத்தி செய்துகொண்டு மீண்டும் வந்து விபூதி தரிக்கும் போது, பிள்ளையார் கோயிலிற் குருக்கள் விபூதிப் பிரசாரம் முதலியன கொண்டு வனசா வீட்டிற்கு வந்தார்; வந்த குருக்களை வனசாவின் தாய் உபசரித்து ஆசனமுதவி இருக்கச்செய்து தங்கள் மகளுக்குக் "குருக்களையா வந்திருக்கிறார்" என்று தெரிவிக்க, உடனே வனசா மற்றை யிருவரையும் இட்டுக்கொண்டு குருக்கள் முன்னையில் வந்து அவரை நமஸ்கரிக்க, கமலா ராதா விருவரும் அப்படியே செய்தார்கள்; குருக்கள் மூவருக்கும் விபூதி வழங்கும்போது, வனசா, ராதா இருவரையும் பார்த்து "நித்திய சுமங்கலிகளாக வாழ்க" என ஆசீர்வதித்து ஏனைய பிரசாதங்களையும் வழங்கி விட்டு "இந்தப் பிள்ளையை விளங்கவில்லை, உங்களுக்குச் சொந்தமா" என்று வினாவ "ஆம் சாமி, எங்கள் சொந்தம், இருப்பது வேலூர், எங்களைக் காணும்படி வந்திருக்கிறார்கள் தாயும் மகளும்" என்று சொன்னாள் வனசா; குருக்கள் சிறிதுநேரம் கண்களை மூடிக்கொண்டு, விநாயகரைத் தியானித்துப் பின்பு அவ்விருவரையும் பார்த்து "நீங்கள் இருவீரும் உடன் பிறந்தார் போலத் தோன்றுகிறீர்கள்; உங்களிருவருக்கும் விரைவில் விவாகம் நடக்கப்போகிறது" என்று சொல்லி முடிப்பதற்கிடையில், வனசாவின் தாய் பிள்ளையார் கோயிலிருக்குந் திக்கை நோக்கிக் கும்பிட்டாள்; ராதா அற்புதமடைந்தாள், கமலா ஆனந்தமுற்றாள்; வனசா ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினாள். "ஐங்கரன் அருளின்படி எல்லாம் இங்கிதமாக நடைபெறும், மங்கலமுண்டாகுக" என்று வாழ்த்தி குருக்கள் விடை பெற்றுக்கொண்டு மீண்டார். அன்று பகல் முழுவதும் ராதாவும் தாயுங் கமலாவும் வனசா வீட்டிலேயே தங்கியிருந்தனர் "பிள்ளையார் கட்டளைப்படி நடந்துகொள்ள எங்கள் தங்கைக்கு இனிமேல் தடையில்லையே" என்று புன்சிரிப்புடன் ராதா சொல்லுதலும், கமலாட்சி இனியொரு தடையுஞ் சொல்ல முடியாதென்றாள்; சிறிது நேரஞ் சிந்தனையில் மூழ்கியிருந்த வனசா, "அக்கா, தமக்கை கன்னிகையாயிருக்கத் தங்கை வாழ்க்கைப்படலாமோ" என்று கமலாவை நோக்கி வினாவ, "அது முறையல்ல" என்று ராதாவைப் பார்த்தபடி சிரித்துக்கொண்டு சொன்னாள் கமலா. "விநாயகப் பெருமானின் திருவருளைப் பொறுத்தது எல்லாம்" என்றாள் ராதா. அடுத்த நாளும் அங்கு வருவதாகச் சொல்லி விட்டு, ராதாவும் தாயும் கமலாவுடன் போயினர்.

"காயுமல்ல, கனியுமல்ல கற்பகக் கனிகள்"

"போன முருகரம்மான் வரக் காணவில்லையே" என்ற கவலையுடன் அவர் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த வனசாவின் பிதா அடுத்தநாட் பிற்பகல் 3 மணி வரையில் முருகர் அங்கே வரக்கண்டார்; கண்டவர் மகிழ்ச்சியடைந்து, "வாருங்கள், அம்மான், வாருங்கள், இப்படியிருங்கள்" என்று சொல்ல முருகர் அயலிலுள்ள ஆசனத்திலிருந்தார்; "சென்ற கருமம் காயா, பழமா" என்று அவர் ஆவலுடன் கேட்க, "காயுமல்ல, பழமுமல்ல, கற்பகக் கனிகளாகக் கொண்டு வந்திருக்கிறேன்" என்று முருகர் களிப்புடன் கூற, வனசாவின் பிதா மகிழ்ச்சியடைந்து, தமது மனைவியை விளிக்க, அந்த நேரத்தில் ராதாவின் தாயுடன் பேசிக்கொண்டிருந்த மனைவி தலைவாசற் பக்கம் "அம்மான் வந்துவிட்டீர்களோ" என்று சொல்லிக்கொண்டு போய் ஓதுங்கி நின்றாள்; "நேற்று இங்கே வந்திருந்த தாயார் மகள் எல்லாரும் போய்விட்டார்களா? இல்லையேல் இன்னமும் போகவில்லையா" என்று முருகர் கேட்க "இல்லை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மான் போகவில்லை; இங்கேதான் நிற்கிறார்கள்; இன்று அந்திவேளை தான் ஊருக்குப் புறப்படுவார்களாம்; அவர்கள் புறப்பட எங்கள் மகள் விடுகிறாளில்லை; வந்த நேரந்தொட்டு இருவரும் இரட்டைப் பிள்ளைகள் போல் ஒருவரை யொருவர் விட்டுப் பிரிகிறார்களில்லை" என்று சொன்னாள்; "அது நல்லது; அவர்கள் சகோதரமுறை பூண்டவர்கள் தாம்; வந்தவர்களும், உங்களுக்கு இனத்தவர்கள்; உங்கள் மருமகனிடம் போனபோது அந்த வரலாறுகளை யெல்லாம் அறிந்தேன். நான் கல்யாணம் பேசி வந்த கிருஷ்ணமூர்த்தி குடும்பத்தாரும் உங்கள் இனத்தவர்களே, அந்த விபரங்களையெல்லாம் ஆறுதலாகச் சொல்லுகிறேன்; உங்கள் மருமகனைக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டேன்; அவர் இப்பொழுது தங்கள் சொந்த வீட்டிலிருக்கிறார்; இன்று காலையில் வீடுவந்து சேர்ந்த நான், கிருஷ்ண மூர்த்தி வீட்டிற்குப் போய்ச் சில விஷயங்கள் பேசி யொழுங்கு பண்ணிக்கொண்டு அங்கிருந்து தான் இங்கு வருகிறேன்; முருகனை முன்னிட்டுக் கொண்டு முருகன் போனால் முடியாத கருமமு முண்டோ! அதிகஞ் சொல்வதென்ன, உங்கள் மருமகனுக்கும் மகளுக்கும், கிருஷ்ணமூர்த்திக்கும் ராதாவுக்கும் கல்யாணம் நிறைவேற்ற வேண்டும்; அந்தப்பிள்ளையின் தாயை இங்கு வரச்சொல்லுங்கள்" என்று சொல்ல, ராதாவின் தாயை வனசாவின் தாய் கூப்பிட, அவள் வந்து நின்றாள். முருகர் நல்லமுத்தம்மைக்கு வரலாறு முழுவதையுஞ் சொல்ல அவள் சந்தோஷப்பட்டுத் தாங்கள் அன்று பொழுதுபட ஊருக்கு மீண்டுபோவதென்றும் பிள்ளையின் பிதாவோடு யோசித்து எல்லாம் ஒழுங்கு செய்வதென்றும் முருகரையும் தங்களுடன் வரவேண்டு மென்றும் சொல்லிக் கேட்டாள். முருகரும் உடன்பட்டுக் கொண்டு அன்று மாலைப்போதில் அவர்களூருக்குப் போனார். எல்லா ஒழுங்குகளும் செய்யப்பட்டன.

திருமணம்

இதற்கிடையிற் செய்த ஒழுங்குகளின்படி குறித்த பிள்ளையார் கோயிற் குருக்கள் நிச்சயித்த முகூர்த்தத்தின் வண்ணம், அந்தப் பிள்ளையார் கோயில் மண்டபத்திலேயே திரு. கிருஷ்ணமூர்த்திக்கும் செல்வி ராதாவிற்கும், பகல் முகூர்த்தத்திலும், திரு. பத்மநாதனுக்கும் செல்வி வனசாட்சிக்கும், இரா முகூர்த்தத்திலும் மேற்படி குருக்களே ஆசாரியராக விருந்து பன்னூற்றுக்கணக்கான சுற்றமித்திரர் அயலார் முன்னிலையிற் கல்யாணத்தை முறையே நிறைவேற்றினார். திருமணத்திற்கு வந்தவர்கள் "இப்படியான சம்பந்தத்தை, கல்யாண வைபவத்தை இனிமேற் காண்டலரிது" என்று பாராட்டினார்கள்; இருபகுதித் தம்பதிகளும் இடையறா உரிமை பாராட்டிக்கொண்டு தங்கள் தங்கள் ஸ்தானங்களை யடைந்து விநாயகப் பெருமானருளினால் இனிது வாழ்வாராயினர்.

சம்பூரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு 1

த. கைலாசபிள்ளை கடிதங்கள்

இக்கடிதங்கள் தொடர்பாக, இந்துசாதனத்தில் 1935 ஜூன் 6 இலிருந்து 1935 ஜூலை 11 வரை வெளியான உலகம் பலவிதம் பத்திகளைப் பார்க்கவும்.

இந்துசாதனம், 1935 ஜூன் 03

ஆராய்ச்சி முறை

இக்காலத்திலே இங்கு நடக்கும் ஆராய்ச்சி முறைகளெல்லாம் எப்படியிருக்குமென்பதை பின் வருவனவற்றால் அறிந்துகொள்க.

நாவலரையா அவர்கள் காலகதியடைந்து 55 1/2 வருஷமே இதற்குள்:-

க. கண்ணப்ப நாயனார் புராணத்தில் நாவலரையா எழுதியிருக்கும் சூசனத்தை அந்தப்படியே ஒருவர் பிரதிபண்ணி அது காலஞ்சென்ற, இ. மாரிமுத்து உபாத்தியாயர் செய்ததென்று பல வருஷங்களின் முன் இந்துசாதனத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். இதைப் பத்திராதிபரும் ஏற்றுக்கொண்டார்.

உ. கோயிற் புராணத்தில் வரும் ஒரு செய்யுளுக்கு ஐயா அவர்கள் எழுதிய விஷேட உரையில் உள்ளவற்றைக் காலஞ்சென்ற இ. மாரிமுத்து உபாத்தியாயர் எழுதியதென்று ஒருவர் கலைமகள் எனும் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார்.

ங. நாவலரவர்களுக்கு நெருங்கிய உறவினராயும் நல்லசைவராயும் கோப்பாயிலிருந்த இன்னார், பின் கிறிஸ்தவராயிருந்து இன்ன தினத்தில் இறந்துவிட்டார் என்று போனவருஷம் உதயதாரகைப் பத்திரிகையில் ஒருவர் முழுப் பொய்யொன்று கற்பித்தெழுதியிருக்கிறார்.

ச. பவ வருடம் மாசி 28 உ வந்த இந்து சாதனத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் தின நியமனம் என்னும் நியமம் நாவலரவர்கள் கையாலெழுதியிருந்ததென்று வெளிப்பட்டது. அது அவர்கள் கையெழுத்தன்று. இது நிச்சயமான சத்தியம்.

ரு. பவ வருடம் வைகாசி 3 உ வந்த இந்து சாதனத்தில் ஆறுமுகநாவலரவர்கள் ஒரு சாமியார்பேரிற் பாடிய தென்று ஒரு பாட்டு வந்திருக்கின்றது. இதுவும் அப்படியே.

கூ. நாவலரையா அவர்கள் அறுபத்திரண்டு வருஷங்களுக்குமுன் யாழ்ப்பாணச் சமயநிலை என்னும் பத்திரத்தில் திருக்கேதீச்சரம் எனும் ஆலயமிருந்த நிலத்தை வாங்கி அதில் ஒரு சிவாலயம் கட்டவேண்டுமென்று எழுதியிருந்தார்கள். இதற்கும் இருபது வருஷங்களுக்கு பின்பே அவர்கள் மாணாக்கர்களால் அந்த நிலம் வாங்கி வேலையாரம்பிக்கப்பட்டது. இது ஸ்ரீ. மு. பசுபதிச் செட்டியார் தொடங்கியதென்று அவர் தலையில் ஒருமுறை இந்துசாதன பத்திராசிரியர் முடித்திருக்கிறார்.

இன்னுமொன்று: ஸ்ரீமத் சங்கரபண்டிதர் அவர்கள் இயற்றிய "சைவப்பிரகாசனம்" என்னும் நூல் 55 வருஷங்களுக்கு முன் அச்சிடப்பட்டபோது வித்துவான் சபாபதிப்பிள்ளை என்றொருவர் அதற்கு ஒரு சிறப்புப்பாயிரம் செய்திருக்கிறார். அந்தச் சபாபதி என்பவர் சங்கரபண்டிதருடைய மகன் சிவப்பிரகாச பண்டிதருடைய மைத்துனர். இப்போது இச்சிறப்புப் பாயிரத்தை முன் வித்துவானென்றிருந்து பின் நாவலரான கோப்பாய்ச் சபாபதிப்பிள்ளை என்று செந்தமிழ் நூற் பதிப்புக்கழகம் சொல்லுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு சொற்ப காலத்துள் நடந்த விஷயங்கள் இவ்வளவு புரட்சியடையுமானால் அந்தோ! அந்தோ! இன்னுங்காலஞ் செல்லச் செல்ல எப்படி எப்படியாமோ. இப்போது செய்யப்படுகிற ஆராய்ச்சி முறைகள் எல்லாம் இவை போன்ற பிரமாணங்களை ஆதாரமாகக்கொண்டு செய்யப்படுவனவேயாம்.

நல்லூர்.
த. கைலாசபிள்ளை
29.05.1935

இதற்குப் பதில்தருவதாக, இந்துசாதனத்தில் வெளியான உலகம்பலவிதம், *1935* ஜூன் *6*, ஜூன் *13* பத்திகளைப் பார்க்கவும்.

*****

1935 ஜூன் *20*

[ஈழகேசரியில் "நாவலர் அடியான்" என்ற பெயரில் வெளியான கடிதம் மறுபிரசுரமாக இந்து சாதனத்தில் வெளிவந்தது]

"விபரீத விளக்கம்"

(நாவலர் அடியான்)

தற்காலத்தில் செய்யப்படும் ஆராய்ச்சி முறையைக் குறித்து ஸ்ரீமான் த. கைலாசபிள்ளையவர்கள் எழுதிய கட்டுரையொன்று ஈழகேசரியிலும் இந்துசாதனத்திலும் வெளியாயிற்று. அக்கட்டுரையின் பிரதம நோக்கம் யாதெனவறியாது வழிதவறி இந்துசாதனப் பத்திராதிபரால் வீண் விவாதம் கிளப்பப்படுகிறது. இக்காலத்தில் ஆராய்ச்சிமுறையில் தலையிட்டோர் பலருளர். நூதனம் நூதனமாக எத்தனையோ விஷயங்களை அவர்கள் வெளியிடுவதைக் காண்கிறோம். அவர் சொல்வன, எழுதுவதற்குக் கூறப்படும் ஆதாரங்கள் பல. அவை பெரும்பான்மையும் யுத்தியின் நுட்பத்தின் தோற்றமாவன. உண்மை யாதென்பதை எவருமறியார். ஆராய்ச்சி செய்வோரின் விபரீத விளக்கத்தால் எழுந்த வாக்குவாதங்களும் ஆட்சேபங்களும் பல. இற்றைக்கு 55 வருடங்களுக்கு முன் வாழ்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் கூறியதாகவும் எழுதியதாகவும் சொல்லப்பட்ட விஷயங்களிலும், அவர் இயற்றியதாகச் சொல்லப்பட்ட கவிகளைக் குறித்தும் எத்தனையோ விபரீத விளக்கங்கள் ஏற்பட்டிருப்பதாக ஸ்ரீமான் கைலாசபிள்ளையவர்கள் எடுத்துக்காட்டினர். சமீபகாலத்தில் வாழ்ந்த ஆறுமுகநாவலர் விஷயத்தில் ஆராய்ச்சி முறை இவ்வளவு தவறுகளையுடையதாயிருக்கும் போது, பல்லாயிரம் வருடத்துக்கு முன்னிருந்த புலவர்களைப் பற்றியும் சமய குரவர்களைப் பற்றியும் அரசர்களைப்பற்றியும் எழுதப்படும் ஆராய்ச்சிக் கட்டுரைகளில் எத்தனையோ தவறுகள் புகுந்திருக்குமெனச் சொல்லவும் வேண்டுமா? இதை விளக்கவெழுந்த கட்டுரையை விபரீதமாக விளங்கி அது, இந்துசாதனத்தினை இடைவிடாது தாக்குகின்றதேயென்ற மனக்கொதிப்பினாலே பத்திராதிபர் பலவுங்கூற நேர்ந்ததுபற்றிப் பரிதாபங் கொள்ளுகின்றேம். மேலும் ஸ்ரீமான் கைலாசபிள்ளையவர்களுக்கு நாவலரையாவிடமிருக்கும் மதிப்பிலும் இந்துசாதனப் பத்திராதிபர்க்கு அவர்மீது கொண்டுள்ள மதிப்புக் கூடியதாம். எப்படியோ? நாவலர் விருப்பத்துக்கும் நோக்கத்துக்கும் இசைய இவர்களில் எவர் தமது வாழ்க்கையைக் கடைப்பிடித்தார்? மதிப்புப் பேச்சிலா? நாவலரவர்கள் மறுபடி வந்துதான் தம்மீது இவர்கள் காட்டும் மதிப்பை அளக்கவேண்டும். மேலும் நாவலரவர்கள் மற்றையோர்மீது கவி இயற்றுவதெனக் கூறுவது இழுக்கெனக் கைலாசபிள்ளையவர்கள் கூறாதிருக்க, அப்படியவர் அபிப்பிராயப்பட்டதாக ஆராய்ச்சிசெய்து "இரங்கற்பா பாடவில்லையா?" என்று சொல்லப்படுகிறது. குறிக்கப்பட்ட கவியினை நாவலர் பாடியதன்றெனப் பிள்ளையவர்கள் கூறினாரேயன்றி பாடும் விஷயத்தில் இறங்கினாரல்லர். நாவலரவர்களின் விரிந்த மனத்தையும், பிள்ளையவர்களின் ஒடுங்கிய மனத்தையும் பத்திராதிபர் உதாரணத்தால் விளக்கின் நலம். பிள்ளையவர்கட்குப் பத்திராதிபர்போல் விரிந்த மனமும் வாழ்வும் இல்லாததுபற்றி நாமும் துயரடைகின்றோம்."

"ஈழகேசரி - *16-6-35*"

இது தொடர்பாக, இந்துசாதனத்தில் வெளியான *1935* ஜூன் *20* உலகம் பலவிதம் பத்தியைப் பார்க்கவும்

*****

இந்துசாதனம், கடிதங்கள், *1935* ஜூன் *24*

ஆராய்ச்சி முறை

இந்துசாதனத்தில் உலகம்பலவிதம் என்பதில்வரும் "முருகேசு"வுக்கு:- நான் ஆராய்ச்சி முறைகளில் இப்போது வரும் தவறுகளை இப்போது சொல்லவந்தேனன்றி, உமது பத்திராதிபரைக் குற்றங் கூறவரவில்லை. குற்றங்கூறுங்கருத்து எனக்கு இருந்தால் உதயதாரகை, கலைமகள், சைவப்பிரகாசனம் என்பவைகளை இழுக்கமாட்டேன். நான் இதை எழுதாமல்விட்டால் நாவலரையாவுக்கு முந்தியவர் மாரிமுத்து உபாத்தியாயர் என்று பிற்காலத்தில் உள்ளவர்கள் எண்ணவுங்கூடுமல்லவா? ஆயினும் நீர் பத்திராதிபர் ஸ்ரீ திருஞானசம்பந்தப்பிள்ளையாரைக் கேட்டபடியால் நான் சொல்வதையும் காதாற்கேட்பீராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கண்ணப்ப நாயனார் சூசனவிஷயம்:- உதவியாய் இருந்தவர் ஏற்றுப்பதிப்பித்த தவறு உமது ஸ்ரீ திரு. பிள்ளையார் காலத்திற்றான் ஏற்றுப்பதிப்பித்தது.

ஒரு பாட்டை எடுத்துக்காட்டி இது ஒரு சுவாமியார் மேல் நாவலரையா பாடியது என்று உமது பத்திராதிபர் கூறியதை நான் மறுத்தேனன்றி, ஒருவர்மீதும் ஐயா பாடவில்லை என்பதை நான் மறுக்கவில்லையே. சுப்பிரமணியபிள்ளைமேற்பாடியதை நானே சரித்திரத்திற் சொல்லியிருக்கிறேன்.

2. கையெழுத்து விஷயம்:- அந்த "நியமனம்" ஐயாவுடைய கையெழுத்தன்று என்பதை இப்பொழுதுஞ் சாதிக்கிறேன்.

3. திருக்கேதீச்சர விஷயம்:- ஸ்ரீ பசுபதிச்செட்டியார் மிகப்பிரயாசப்பட்டவரென்று நானே எழுதியிருக்கிறேனே. தொடங்கியது நாவலரையாவா? பசுபதிச்செட்டியாரா? என்பதுதான் ஆராயப்படும் விஷயம். பசுபதிச்செட்டியார் தொடங்கியதென்பதை இன்னுமொருமுறை உமது பத்திராதிபரைக்கேளும், இதற்கு இவ்வளவு ஆரவாரம் ஏன்? பள்ளிக்கூடப்பிரவேசகாலத்தில் ஸ்ரீ ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை காட்டிய ஏரம்பையர் படத்தையும் இப்போது பலருங் கொண்டாடும் படத்தையும் வெறுக்கும் நான் கொண்டாடினேனென்பதும் நான் சொன்ன ஆராய்ச்சி முறைகளோடு சேரவேண்டியது.

இங்ஙனம்,

நாவலரிடத்தில் இ.ச பத்திராதிபர் வைத்த மதிப்பில் 1/10 வைத்திருக்கும்

த. கைலாசபிள்ளை

இது தொடர்பாக, இந்துசாதனத்தில் வெளியான 1935 ஜூன் 27 உலகம் பலவிதம் பத்தியைப் பார்க்கவும்

*****

இந்துசாதனம், 1935 ஜூலை 4

இதுதான் மெத்தப்பெரியதொரு ஆராய்ச்சி

சென்ற 22ம் இலக்க இந்துசாதனத்தில் நாவலரடியானைத் தாக்கவும் பத்திராதிபரைத் காக்கவும் வந்தவரே,

நீர் நல்ல விளக்கமாக எடுத்துக்காட்டி பெயர் பக்கமெல்லாம் சொல்லிய ஆவேதனத்தில் க. வேலுப்பிள்ளையென்பவர் நாவலரையா செய்த வித்தியாசாலைத்தாபனம் முதலிய சற்கருமங்கட்குத் துணையாக நின்றவர் என்று சொல்லி அதற்கு அவர்கள் எழுதிய ஆவேதனத்திலிருந்து பிரமாணம் காட்டினீரே. அதைப் பத்திராதிபரும் உவந்தேற்றுப் பிரசுரஞ் செய்திருக்கிறாரே. நல்லது நீர் நில்லும்,

பத்திராதிப,

மு. சுவாமிநாதையரோடு சேர்த்துச் சொல்லப்பட்ட க. வேலுப்பிள்ளையென்பவரை நானறிவேன். அவர் நல்லூரைச் சேர்ந்த அத்தியடியிற் பிறந்தவர். ஐயாவுடைய பழைய மாணாக்கர். அவர்களோடு உடனிருந்து பின் இந்தியாவிற்குப்போய் அங்கே பிறையாற்றில் இருந்து தரகு வேலை செய்தவர். சிதம்பர வித்தியசாலைக்கு மகமைப்பணம் அறவிட்டுக் கொடுத்தவர். அவரைப் பிறையாற்று வேலுப்பிள்ளையென்று எல்லாரும் சொல்லுகிறவர்கள். ஓகோ! அவர்தானோ தங்கள் தகப்பனார். அதைத் தாங்கள் சொல்லத்தான் அறிகிறேன். அதனாற்றான்போலும் மட்டுவில் க. வேலுப்பிள்ளை நாலு வருஷங்களின் முன் சிதம்பரத்தில் இறந்தபோது தாங்களாவது தம்பிமார் நால்வருள் ஒருவராவது கிட்டவும் போகவில்லை. அன்றியும் வித்தியாசாலைக்கட்டடம் நடந்தபோது, சுவாமிநாதையரோடு நின்று வேலைசெய்தவர் மட்டுவில் க. வேலுப்பிள்ளையல்லவே. அவர் பிறந்தது சாலிவாகன சகாப்தம் 1770க்குச் சரியான பிலவங்க வருடம் தை மாதம் 8ந் திகதி (1-1-1847). அப்போது அவருக்கு வயது ஒருவருஷமும் பத்துமாதமுந்தானே. இந்த வயசிலா மு. சுவாமிநாத ஐயருடன் வேலை செய்தவர். இது எவ்வளவு ஆச்சரியம்!!! சிதம்பர வித்தியாசாலையில் இருபத்துமூன்று வருடம் படிப்பித்த ம.க. வேலுப்பிள்ளை சும்மா படிப்பிக்கவில்லை. நாற்பது ரூபா மாசச் சம்பளமல்லவா? கோபிக்கவேண்டாம். தாங்கள் செய்த இந்த ஆராய்ச்சிமுறைப்படி தாங்கள் ம.க. வேலுப்பிள்ளையுடைய மகன் அல்லீர். பிறையாற்று வேலுப்பிள்ளையின் மகனாயினீர். இதிற் சந்தேகமில்லை.

தங்களை ஏவிவிட்டு அவமானப்படுத்துவிப்பவருடைய சொற்களை இன்னுங் கேட்டுப் பழுதடையவேண்டாம். தங்களுடைய தகப்பனார் க. வேலுப்பிள்ளை இரண்டு வயசும் நிரம்புமுன் நாவலரையாவுடைய வித்தியாசாலைத் தாபனம் முதலிய சற்கருமங்களுக்கு உதவி புரிந்தது எப்படி? ஆத்திரப்படாமற் சொல்லுங்கள்! கொல்லதெருவிலா ஊசிமாற வந்தீர்கள்! வீண் உழறல் வார்த்தை எதன் பொருட்டு! வெட்கமில்லாமல் இன்னும் நான் எழுதிய ஆராய்ச்சி முறையை மறுக்கப்போகிறீர்களா? முருகேசு! கேட்டுக்கொள்ளவும். ஆராய்ச்சிமுறையில் இதுவே தலையாயது. பிறையாற்று வேலுப்பிள்ளை செய்த காரியம் திருஞானசம்பந்தருடைய தகப்பனார் செய்ததென்று முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம்,

த. கைலாசபிள்ளை
2-07-35.

இது தொடர்பாக, இந்துசாதனத்தில் வெளியான 1935 ஜூலை 4 உலகம் பலவிதம் பத்தியைப் பார்க்கவும்

*****

இந்துசாதனம், 1935 ஜூலை 4

ஆராய்ச்சி முறை 2

இந்துசாதனத்தில் இடையிடையே வந்து தோன்றும் முருகேசுவே, நான் எழுதிய ஆராய்ச்சி முறையை நீரும், உமது பத்திராதிபரும் இன்னும் மறுக்கிறீர்கள், அது எப்படி நும்மால் மறுக்கப்பட்டது? நாவலரையா எழுதிய கண்ணப்பநாயனார் புராண சூசனம் மாரிமுத்துவால் எழுதப்பட்டதென்று இந்துசாதனத்தில் எழுதப்பட்டிருக்கின்றதென்று நான் சொன்னேன். அதை மறுக்கப்புகுந்து அது முன்னிருந்த ஒரு உதவிப் பத்திராதிபரால் வெளியிடப்பட்டதென்று உமது திருஞானசம்பந்தப்பிள்ளையார் கூறினார். இதுவுமொரு மறுப்பாகுமா? ஒத்துக்கொண்டதாகுமல்லவா? அப்படியுமன்று இந்தப் பிள்ளையார் காலத்திற்றான் அது வெளியிடப்பட்டது என்றேனே. அது எப்படி மறுக்கப்பட்டது சொல்லும்? திருக்கேதீச்சுரத்தொடக்கம் பசுபதிச்செட்டியாரால்ன்று நாவலரையாவாலானதென்று நான் சொன்னேன். அது எப்படி மறுக்கப்பட்டது. அது நாவலரையாவாற்றொடங்கப்பட்ட காலத்தில் பசுபதிச் செட்டியார் கும்பகோணத்திற் படிக்கிறார். இதைப்பற்றிப் பத்திராதிபர் ஒன்றும்பேசவில்லை. பேசாமையுமறுப்பா?

கையெழுத்து: இதில் உமது சந்தேகம் தீராதிருந்தால் இதைத்தீர்ப்பதற்கு சைவ பரிபாலனசபைத் தலைவர் ஸ்ரீ நாகநாத முதலியார் J. P. இல்லையேல் இந்துக்காலீசுப் பழைய பிரின்சிப்பல் ஸ்ரீ செல்லத்துரை J. P. தக்கவர்களென்று நான் சொல்லுகிறேன். உமக்கது சம்மதமானால் அவர்களுக்கு வசதியான நேரத்தையும் இடத்தையும் அறிந்து சொல்லும். நான் என்னிடமிருக்கும் நாவலரையாவுடைய கையெழுத்துக்களைக் கொண்டு வந்து என் கட்சியைத் தாபிக்கிறேன். "தின நியமனம்" என்று ஐயா எழுதினார்களா? தின நியமமா தின நியமனமா?

உமது பத்திராதிபர் பழைய வழக்கிலக்கங்கள் தேதிகள் விளம்பரங்கள் ஆகிய இவற்றை நுண்ணிதில் தேடி எடுத்து உமக்குச் சொல்லுகிறார்? உமது பத்திராதிபர் சொல்லுகிறபடி யாழ். வித்தியாசாலைத் தருமத்தைக் கெடுத்தது நான் மாத்திரமன்று. சைவபரிபாலன சபை அங்கத்தவருள் ஒருவராயும் "The Hindu Organ" பத்திராதிபராயும், இந்துக்காலீசு மானேசராயுமிருந்த Honourable சபாபதியுடைய தகப்பன் மு. அருணாசலமென்பவருமொருவர். ஷை சபை அங்கத்தவருள் ஒருவராகிய ஸ்ரீ அ. தில்லையம்பலம் என்பவருடைய மாமன் ஸ்ரீ இ. மூ. சம்பந்தநாத முதலியாரும் இதில் ஒரு பங்காளி. இப்படிப்பட்ட தருமத்துரோகிதான் முப்பத்தேழு வருஷகாலம் மேற்படி வித்தியாசாலையை நடாத்தி வருகிறேன். இதை உமதுபத்திராதிபர் மெஸ் மெக்கிறே துரைக்கும் அறிவித்தாற் பெரும் புண்ணியமாகும்.

"கண்ணாடி வீட்டிலிருப்பவர் கல்வீட்டிலிருப்பவருக்குக் கல்லெறியக்கூடாது" என்பது பழமொழி.

இப்படியே நாம் வாதிக்கவந்த விஷயமாகிய ஆராய்ச்சிமுறை யாழ்ப்பாண வித்தியா சாலையில் முடிந்தது. இன்னும் எங்கெங்கே முடியுமோ தெரியாது. சிதம்பர வித்தியாசாலைத் தருமத்திலா என்னுடைய குலம் குடி முதலியவற்றிலோ? இனி இதைப்பற்றி வராது.

இங்ஙனம்,
த. கைலாசபிள்ளை

29-6-35.

இது தொடர்பாக, இந்துசாதனத்தில் வெளியான 1935 ஜூலை 11 உலகம் பலவிதம் பத்தியைப் பார்க்கவும்

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு 2

"நானும் முருகேசுவும்"

(லிங்கம் வரைவது)

இந்து சாதனம் பொன்விழா மலரில் வெளியானது. பொன்விழா 1938 இல் கொண்டாடப்பட்டது. மலர் 1939 புரட்டாதியில் வெளியானது. இந்துசாதனப் பத்திராசிரியர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளைதான் உலகம் பலவிதம் பத்திகளில் வரும் "முருகேசு" என்பது இங்கு பூடகமாக வெளியாகின்றது.

முருகேசு ஓர் சிறந்த நடிகர்; நாடோடி; வயசு ஐம்பது வரையிலிருக்கும். அவர் தமிழ் உபாத்தியாயருமாவர். கலியாணம் பேசி ஒழுங்குசெய்வதில் வெகு நிபுணர். எமக்குத் தெரிந்த வரையில் காசிநாதனுக்கும் நேசமலருக்குங், கோபாலனுக்கும் நேசரத்தினத்துக்கும், துரைரத்தினத் துக்கும் நேசமணிக்கும் இன்னுமநேகருக்கும் கலியாணம் பேசி முடித்துவைத்தவர்.

இவருக்குக் குழந்தைகளுண்டு. அவற்றுடன் இந்துமதி யென்னும் அநாதைப் பெண் குழந்தையையும் எடுத்து வளர்க்கின்றார். பாருங்கள் இவரின் தயாளத்தை. உலகத்திலிருக்குந் தொல்லைகளைத் தூக்கித் தன் தலையில்வைத்துக்கொண்டு திண்டாடுகிறார். இந்துமதியின் தகப்பன் பெயர் ஆறுமுகம். அவர் ஓர் சங்கீத வித்துவான். வசனநடைக்குத் தாதா எனப் பலருங் கூறுவர். ஆனால் வைதீகம். கண்டனப் புலியென்றுஞ் சொல்வார்கள். இவளது இளவயதிலேயே ஆறுமுகம் காலகதியடைந்துவிட்டார். என்ன துரதிஷ்டம்? இவளுக்குத் தாயார் இருந்தாரோ இல்லையோ தெரியவில்லை. ஆறுமுகம் இறந்த நாள் தொட்டு இவள் அவரது நண்பரதும் உறவினரதும் உதவியைக்கொண்டே வளர்ந்து வந்தாள். இவளது வளர்ப்புத் தாதையொருவர் இறந்தவன்றே இவள் நமது முருகேசு கையில் ஒப்புவிக்கப்பட்டாள். இதுவும் அவளுக்கு ஒரு யோகந்தான்.

முருகேசர் இவளில் அதிக பிரியம்வைத்து வளர்த்து வந்தார். இவளுக்கு உணவு ஊட்டுவதிலேயும் அலங்கரிப்பதிலேயும் தன் நேரத்தில் அதிகமான பகுதியைச் செலவழித்து வந்தார். தன் வைதீகக்கொள்கைகளை ஊட்டினார். அவளும் நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியென வளர்ந்து பலகலையும் கற்றுவந்தாள். அவளது ரூபலாவண்யம் முதலியன எத்தனையோ பேரை அவளில் மயங்கச் செய்தன. பலர் அவளுக்குக் கடிதங்கள் எழுதியும் பரிசுகள் அனுப்பியும் வந்தனர். சிலர் கள்ளக் கடிதங்களும் எழுதத் தொடங்கினர். இப்படியான கடிதங்கள் முருகேசர் கையிற் சிக்கினாலோ எழுதியவர்பாடு நாசந்தான். நானும் சிலகாலம் இவளைக் காதலித்துக் கடிதங்கள் எழுதிவந்தேன். இது என் பெற்றாருக்குத் தெரிந்ததோ என்னவோ, எனக்கு உடனே ஒரு விவாகம் பேசி மணமுடித்து வைத்துவிட்டார்கள்.

முருகேசு ஓர் கனந் தனங் காத்திரங்கொண்ட குடும்பத்திற் பிறந்தபோதும், நாமகள் கடாட்சம் பெற்றதினாற்போலும் பூமகள் இவரிடம் வந்தடைய விரும்பினாளில்லை. ஆகவே ஏதோ காலத்திற்கேற்ற கோலமாகத் தமது குடும்பத்தை நடத்திவந்தார். நாட்கள் பறந்து சென்றன. இந்துமதியும் பக்குவமடைந்து நன்னிலையில் வைக்கத் தகுந்த காலம் வந்துவிட்டது. அவள் அழகு விரிந்து பரிமளித்தது. என்றாலும் என்ன! பணவெறியர் குணங் கொள்வாரா? சீதனம் வேண்டுமேயென்றதை யெண்ணியெண்ணியே முருகேசர் மூளை கூழாய்ப்போய்விட்டது.

ஒருநாட் காலை ஐந்துமணிக்கெழுந்து பல்லுத் துலக்கிக்கொண்டு நான் நிற்கும்போது வாசற் கதவில் யாரோ தட்டுஞ் சத்தங் கேட்டதும் "யார் பாபரோ" என்று கேட்டுக்கொண்டே கதவைத் திறந்தேன். முகக் கலவரத்துடன் நமது முருகேசர் நிற்கக்கண்டேன். ஏது காரணமென வினவிக்கொண்டே வாருங்கள் உட்காருங்கள் என்று அழைத்தேன். உட்கார்ந்து கொண்டதும் "நான் தம்பீ! ஓர் அநாதப் பிள்ளையை வளர்த்துவருவது உமக்குத் தெரியாத காரியமல்ல. அவளை ஓர் நன்னிலைமையில் வைக்கப் பணங் காசு ஒன்றுமில்லை. இங்குள்ளவர்களுள் சிலரைக் கண்டு ஏதாவது வாங்கிக்கொண்டுபோய் அந்தப்பிள்ளையைக் கரைசேர்க்க வேண்டும்" என்று மிகவும் மனவருத்தத்துடன் கூறினார். இவரது முகத்திற்றோன்றிய கலவரம் ஒரு விதமாக எனது மனத்தை இளகப்பண்ணியதெனினும் நமது தமிழரின், அதிலும் நம் யாழ்ப்பாணத்தவரின், குணந்தான் நமக்கு நன்றாகத் தெரிந்த விஷயமே. அவர்களிற் பலர் இத்தகைய பொதுவிஷயங்களுக்கு உதவிபுரிவதே கிடையாது. அம்மானுடைய றெயிற் செலவுக்குத்தானும் ஏதும் கிடைக்குமோ என்று யோசிக்கும்போது "நீர் நாம் சொல்பவர்களின் இல்லங்களை மாத்திரம் எனக்குக் காட்டிக் கொடுத்தாற் போதும்" என்று மேற்படியார் ஒரு போடு போட்டார். நான் அப்படிச் செய்வதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்களித்து நம் யாழ்ப்பாணத்தவர் உங்களைப் போன்ற தண்டற்காரரைத் தவிர்ப்பதற்காகவே மாசா மாசம் வீடு மாறுகிறவர்கள். எதுவோ கூடுமானவரையிற் பார்ப்போமென ஆறுதல் கூறினேன்.

ஓர் கன்னியைக் கரைசேர்ப்பது முப்பத்திரண்டு தருமங்களுளொன்றென்பர் பெரியோர். அன்று சாயந்தரமே நானும் முருகேசுவும் வீடு வீடாய்த் திரியத் தொடங்கினோம். நாங்கள் ஓர் அநாதப் பெண்ணைக் கரைசேர்க்க உங்கள் உதவியை நாடிவந்திருக்கிறோ மென்று கூறுதுகூறுமுன் சிலர் உங்கள் பெண்ணுக்கு மூஞ்சி கூடாது. அவள் சுத்த அசடு. பித்தம் பிடித்த வைதீகம். நாகரிகம் தெரியாது என்றெல்லாம் அடுக்கிக்கொண்டு போனார்கள். வேறு சிலர் நீங்களேன் அவளைக் கொழும்பிற் கொண்டுவந்து வைத்திருக்கக் கூடாது. வைத்திருந்தால் நாங்கள் எல்லோரும் எங்களாலியன்ற பொருளுதவி புரியமாட்டோமோ என்றார்கள். கொண்டு வந்து வைத்திருந்தால் வெறுங் கைதான் நீட்டுவார்கள் என்று முருகேசு அம்மானுக்குத் தெரியும். இன்னுஞ் சிலர் பெண் பிள்ளை, தமிழ்ப்பிள்ளை, அதிலும் யாழ்ப்பாணத்துப்பிள்ளை சமயஞானமல்லவோ கற்கவேண்டும். நீங்கள் அப்பிள்ளைக்கு அரசியல் ஞானம் கற்பிக்கிறீர்களாமே, அவள் அரசியற் பிரசங்கங்கள் செய்கிறாளாமே. கதைகள் படிக்கிறாளாம். உலக விநோதங்களிற் சிறந்த அனுபவசாலியாம். பெண்பிள்ளைக்குரிய அடக்கமில்லையே என்றனர். சில நேரங்களில் உடன்போன எனக்கு நாங்களேன் இப்படிப்பட்டவர்களிடம் வந்தோம் என்றாய்விடும். உடனே அம்மானுடைய முகத்தை நோக்குவேன். அதில் புன்னகை தவழ்ந்து கொண்டேயிருக்கும். புன்னகை தான் தக்க ஆயுதம் என்பது அம்மானுக்கு கைகண்ட அநுபவம். உடனே அம்மான் வீட்டுக்காரர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் கோபக்குறியைக் காட்டாது ஆறுதலாகத் தகுந்த பதிலளிப்பார். இறுதியில் வெற்றி எங்கள் பக்கமே.

முருகேசர் எவ்வளவு வித்துவானாகத்தானிருந்தாலும் ஒரு சுத்த கர்நாடகப் பேர்வழி. தண்டலுக்குப் போகும் இடங்களில் அவரது வயதை உத்தேசித்தோ என்னவோ சிலர் சோடா முதலிய பானங்களை உதவுவர். அச் சந்தர்ப்பங்களில் கிடைத்ததை விட்டால் அல்லது குடிக்க மறுத்தால் எங்கள் காரியங் கெட்டுப்போமே என்ற கவலை அம்மானுக்கு இல்லவேயில்லை. என்னை மன்னியுங்கள் என்று கெஞ்சுவார். வீட்டுக்காரர் மிஞ்சினால் போத்தலோடு தாருங்கள் என்று வாங்கி அருந்துவார்.

அம்மானிடத்தில் இன்னொரு கெட்ட குணத்தை நான் அவதானித்தேன். சில நாட்களில் அம்மானும் நானும் நாள் முழுவதும் தண்டுவது வழக்கம். அக் காலங்களில் நாள் முழுவதும் சாப்பிடாது என்னுடன் கூடித் திரிவார். லோபி என்றால் சரியான லோபி. ஏன் ஐயா! உமது லோப குணத்தைக் கொழும்பிலுமா காட்டவேண்டும்! சாப்பிடுங்களேன்! என்று சொன்னால் "இன்றைக்குத் தம்பீ கார்த்திகை விரதம். அல்லது அமாவாசை அல்லது பூரணை" என்று ஏதாவது ஒரு சாட்டுச் சொல்லுவார். நானும் தான் இவரோடு கூடத் திரிகிறேனே. இவர் பட்டினிகிடக்க எனக்கு எப்படி மனம் வரும் சாப்பிட. சிவசிவா என்று கொட்டாவி விட்டுக்கொண்டிருக்கவேண்டியதுதான். இந்த அம்மானுக்குப் புத்திகூடவில்லையா! ஐயோ! பாவம்! என்னுடன் கூடித்திரிகிறானே, நான் சாப்பிட்டாற்றானே அவனும் சாப்பிடுவான் என்று கொஞ்சமேனும் எண்ணமில்லை அவருக்கு.

ஒரு நாள் சாயந்தரம் அம்மானும் நானும் ஓரிடத்திற்குப் போக உத்தேசித்திருந்தோம். அன்று யாது காரணம்பற்றியோ எனக்கு வீட்டிலிருந்து வெளிக்கிட மனமில்லை. முருகேசரோ வந்திருந்து மிகவும் பாடுபட்டார். கடைசியில் தாம் எனக்கு "றிக்ஷோ" வண்டி பிடித்துத் தந்து விட்டு அதற்குப் பின்னால் தான் நடந்து வருவதாகவும் கூறினார். இதைக் கேட்டதும் யார் தான் அவருக்குச் சாட்டுச்சொல்லமுடியும்?

இன்னொரு முறை இப்படியான சந்தர்ப்பத்தில் எனது ரேடியோ "செட்டை"த் திறந்து விட்டேன். சென்னை நிலையத்திலிருந்து மயிலை ஸி. சுந்தரம்பிள்ளையென்பவர் தேனினுமினிய கானங்களைத் தமது நாதஸ்வரத்தால் சொரிந்து கொண்டிருந்தார். அம்மானுக்குச் சங்கீதம் என்றாற் பைத்தியம். "தங்கச்சீ, வெற்றிலைத் தட்டைக் கொண்டுவா" என்றார். அப்படியே நாற்காலியில் பரவசமாகிவிட்டார். அன்றைக்குத் தண்டலுக்குப் போனபாடேயில்லை. நானும் "அப்பாடா" வென்று ஒரு பெருமூச்சுவிட்டேன்.

இருந்தும் முருகேசர் கெட்டிக்காரன். ஒரு விதமாகக் கொஞ்சப் பணம் சேகரித்துவிட்டார். "பார் பார் ஆவணியில் சடங்குசெய்து வைக்கிறேன்" என்று சொல்லிவிட்டுச்சென்றார். சென்ற வாரம் ஒரு விவாக அழைப்புப் பத்திரமும் அனுப்பியிருந்தார். பாவம்! சைவ பரிபாலனசபை யச்சுக்கூடத்தார் அம்மானை ஏமாற்றிவிட்டார்கள். நான்கு பிழைகள் விட்டுவிட்டார்கள். இந்து மதிக்கு இந்து சாதனம் என்றும், விவாகம் என்றதற்குப் பொன்விழா என்றும், பெண்ணின் பிதாவின் பெயர் ஆறுமுகம் என்றதற்கு ஆறுமுகநாவலர் என்றும், முருகேசுவை இந்துசாதனப் பத்திரிகாசிரியர் என்றும் அச்சிட்டு விட்டார்கள். இக் கட்டுரையும் அவர்களுக்குத்தான் அச்சடிக்கும்படி அனுப்பப் போகிறேன். இதிலும் என்னென்ன பிழை விடுவார்களோ அறிகிலேன்.

'பொன்விழா மலர் (புரட்டாதி 1939)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு 3

"விடைபெற்றுக் கொள்ளுகிறேன்"

சென்ற 1912ம் ஆண்டு ஜனவரி மாசந் தொட்டு 1920ம் ஆண்டு யூன் மாசம் வரை இப்பத்திரிகையின் உதவியாசிரியனாகவும், அதன் மேல் இற்றைவரை பிரதான ஆசிரியனாகவும் தொடர்பாக 40 வருடகாலங் கடமையாற்றி வரலானேன்; இந்துசாதனத்தை இன்னுஞ் சிறந்த முறையில் நடத்தவேண்டுமென நோக்கங்கொண்ட யாழ்ப்பாணஞ் சைவபரிபாலன சபையார் வழக்கறிஞரும் இந்துசாதன ஆங்கிலப் பிரசுரத்தின் ஆசிரியருமாகிய திரு. M. N. சிவப்பிரகாசமவர்களையே இத்தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியராகவும் நாளைத் தினம் (1.12.51) தொட்டு நியோகித்துள்ளனர். இச்சபையார் தாம் வெளியிட்டுவரும் நூல்களைக் காலந்தோறும் பரிசோதித்துத் திருத்தவும். புதிய நூல்களை எழுதவும் என்னை ஏற்படுத்தியுள்ளனர். ஆதலால் இப் பத்திரிகைக்கும் எனக்குமுள்ள நீடித்த தொடர்பு இன்றோடு நின்றுவிட்டதென்பதை அபிமானிகட்கும் ஏனையோருக்கும் விநயத்துடன் தெரிவிக்கின்றேன்; இந்த 40 வருட காலத்திலே எவர்க்கேனும், எந்த வேளையேனும் தெரிந்தோ தெரியாமலோ தமியேன் ஏதும் பிழை செய்திருந்தால் அதனைப்பொறுத்து, என்னை நல்லவனாக்குக.

இந்துசாதனம் இனிது ஓங்குக.

ம. வே. திருஞானசம்பந்தன்,

வண்ணார்பண்ணை
30.11.51

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை (1885-1955), யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நீண்டகாலம் (1912-1947) ஆசிரியராகப் பணிபுரிந்தவர். அதேநேரத்தில், அன்றைய யாழ்ப்பாணத்தின் முன்னணிப் பத்திரிகைகளுள் ஒன்றான இந்து சாதனத்திற்கு 1912 இலிருந்து உதவி ஆசிரியராக வும், 1921 இலிருந்து 1951 வரை பிரதம ஆசிரியராகவும் இருந்து அதனை வழிநடத்தி யவர்.

திருஞானசம்பந்தப்பிள்ளை ஈழத்தமிழ் பத்திரிகை எழுத்தின் மூத்தவர்களுள் ஒருவர். ஒருகாலகட்டத்தின் கருத்துருவாக்கத்தில் அவரது பங்கு கணிசமானது. இதற்கும் மேலாக, ஈழத்தமிழ் நாவல் இலக்கியத்தின் முன்னோடி களுள் சிறப்பிடம் பெற்றவர் என்று இலக்கிய வரலாற்றில் பேசப்படுபவர்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், ஈழத்தமிழர்களின், குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்களின், சமூகவியல், மானுடவியல், ஊட கவியல், அரசியல், தேசியம், புலப்பெயர்வு, இலக்கிய ஓட்டம், தமிழ்நடை போன்றவற்றை வரலாற்றுப்பார்வையுடன் ஆராயவிரும்பு வோருக்கு திருஞானசம்பந்தப்பிள்ளை யின் எழுத்துக்கள் அரியதொரு ஆவணம். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமிழ்கற்கும் மாணவருக்கு, ஈழத்தமிழ் உரைநடை - படைப் பிலக்கிய வளர்ச்சியின் ஒரு காலகட்டத்தைத் தரிசிக்க தரமான பயிற்சிநூல். ஏனையோருக்குச் சுவையான வாசிப்பு.

பழைய இந்துசாதன இதழ்களிலிருந்து திருஞான சம்பந்தப்பிள்ளையின் எழுத்துக்களைத் தொகுத்துத் தந்திருப்பவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையைச் சேர்ந்த சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 125ஆம் ஆண்டுவிழா வெளியீடு

ISBN 9558506028

9 789558 506028

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org